## முன்னுரை

யோவான் எழுதின சுவிசேஷம் எங்கு, எப்பொழுது எழுதப்பட்டது என்பதைக் குறித்து வேதபண்டிதர்கள் இன்னும் விரிவாக ஆய்வு செய்துகொண்டிருக்கிறார்கள். இந்த சுவிசேஷத்தை எழுதியவர் யோவான் என்பதில் மாற்று கருத்து எதுவுமில்லை. இவர் இயேசுகிறிஸ்துவின் பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஒருவர். யாக்கோபுடைய சகோதரர். இவர் இயேசுகிறிஸ்துவுக்கு பிரியமாக இருந்த சீஷன் என்று அழைக்கப்படுகிறார். பன்னிரண்டு அப்போஸ்தலர்களின் வாழ்க்கை வரலாற்றை ஆராய்ந்து பார்க்கும்போது, அவர்கள் எல்லோரையும் விட யோவானே அதிக வருஷங்கள் இந்த பூமியில் உயிரோடு வாழ்ந்தார் என்று வரலாறு கூறுகிறது. யூதாஸ்காரியோத்து நான்று கொண்டு செத்தான். மற்ற சீஷர்கள் எல்லோரும் இரத்தசாட்சியாக மரித்தார்கள். யோவானுக்கு மாத்திரமே இயற்கையான மரணம் உண்டாயிற்று.

எபேசு பட்டணத்தில் யோவான் இந்த சுவிசேஷத்தை எழுதியிருக்க வேண்டுமென்று வேதபண்டிதர்களில் அநேகர் கூறுகிறார்கள். இந்த பட்டணத்தில் எபியோனியர் மூலமாக வேதப்புரட்டு அதிகரித்திருந்தது. இவர்கள் இயேசுகிறிஸ்துவை சாதாரண மனுஷன் மாத்திரமே என்று உபதேசம் பண்ணினார்கள். இயேசுகிறிஸ்துவின் தெய்வத்துவத்தை இவர்கள் அங்கீகரிக்கவில்லை. இவர்களுடைய வேதப்புரட்டுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலும், இயேசுகிறிஸ்துவைப்பற்றிய மெய்யான சத்தியத்தை வெளிப்படுத்தும் வகையிலும் யோவான் இந்த சுவிசேஷத்தை எழுதியிருக்கிறார்.

நான்கு சுவிசேஷங்களிலும், இந்த சுவிசேஷமே கடைசியாக எழுதப்பட்டிருக்கிறது. தங்களுடைய சுவிசேஷத்தில் மற்ற சுவிசேஷகர்கள் எழுதாமல் விட்டுவிட்ட சத்தியங்களை யோவான் இந்த சுவிசேஷத்தில் எழுதியிருக்கிறார். இந்த சுவிசேஷத்தில் யோவான் வேதத்தின் ரகசியங்கள் பலவற்றை தெளிவுபடுத்தியிருக்கிறார். மற்ற சுவிசேஷங்களில் இந்த ரகசியங்கள் ஒரு வரலாறு போலவே எழுதப்பட்டிருக்கிறது. மற்ற சுவிசேஷங்கள் இயேசுகிறிஸ்துவின் சரீரப்பிரகாரமான காரியங்களை அதிகமாக எழுதியிருக்கிறார்கள். ஆனால் யோவானோ சுவிசேஷத்தின் ஆவிக்குரிய காரியங்களை விளக்கிக் கூறியிருக்கிறார்.

# அதிகாரம் - 1

இயேசுகிறிஸ்து தேவனுடைய நித்திய குமாரன். அவரே மெய்யான மேசியா. இயேசுகிறிஸ்து இந்த உலகத்தின் ரட்சகர். இயேசுகிறிஸ்துவைப்பற்றிய மெய்யான சத்தியங்களில் நமது விசுவாசம் நிலைத்திருக்க வேண்டும் என்னும் நோக்கத்தில் இந்த அதிகாரம் எழுதப்பட்டிருக்கிறது. இந்த சுவிசேஷத்தின் அடிப்படை நோக்கம் (யோவா 1:1-5). இயேசுகிறிஸ்துவைப்பற்றி யோவான் ஸ்நானனுடைய சாட்சி (யோவா 1:6-9). இந்த சுவிசேஷத்தின் அடிப்படை நோக்கம் மறுபடியும் விவரிக்கப்படுகிறது (யோவா 1:10-14). இயேசுகிறிஸ்துவைக் குறித்து யோவான்ஸ்நானன் மேலும் கொடுத்த சாட்சி (யோவா 1:15). இந்த சுவிசேஷத்தில் இயேசுகிறிஸ்துவைப் பற்றி வெளிப்படுத்தப்பட்டிருக்கும் சத்தியம் (யோவா 1:16-18). இயேசுகிறிஸ்துவைப்பற்றி யோவான்ஸ்நானன் மேலும் விரிவாக கூறியது (யோவா 1:19-37). அந்திரேயாவுக்கும் பேதுருவுக்கும் இயேசுகிறிஸ்து தம்மை வெளிப்படுத்தியது (யோவா 1:38-42). பிலிப்புவுக்கும் நாத்தான்வேலுக்கும் இயேசுகிறிஸ்து தம்மை வெளிப்படுத்தியது (யோவா 1:43-51).

## இயேசுகிறிஸ்து தேவனாகயிருக்கிறார் யோவா 1 : 1-5

**யோவா 1:1. ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது.**

**யோவா 1:2. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார்.**

**யோவா 1:3. சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை.**

**யோவா 1:4. அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது.**

**யோவா 1:5. அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது அதைப் பற்றிக் கொள்ளவில்லை.**

**வார்த்தை**

**ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது (யோவா 1:1).** இயேசுகிறிஸ்து தேவனாகயிருக்கிறார். அவர் பிதாவாகிய தேவனோடு ஒருவராக இருக்கிறார். இந்த சத்தியம் மிகவும் முக்கியமானது. இந்த சுவிசேஷத்தில் யோவான் இயேசுகிறிஸ்துவின் தெய்வத்துவத்தைப் பற்றிய சத்தியத்தை விரிவாக எழுதுகிறார்.

ஆதியிலே வார்த்தை இருந்தது. வார்த்தை என்பதற்கான கிரேக்க சொல் "லோகோஸ்" என்பதாகும். யோவானுடைய சுவிசேஷத்தில் "வார்த்தை" என்னும் சொல் ஒரு விசேஷித்த பொருளில் கையாளப்பட்டிருக்கிறது. யூதர்கள் மத்தியிலே "வார்த்தை" என்னும் சொல் தேவனைக்குறிக்கும் சொல்லாகும். "தேவனுடைய வார்த்தை" என்று சொல்லும்போது யூதர்கள் தேவனையும் "தேவனுடைய வார்த்தையையும்" வேறுபிரித்து வித்தியாசமாக பார்ப்பதில்லை. யூதர்களுக்கு "வார்த்தையும்" "தேவனும்" ஒன்றுதான். யோவான் இந்த சுவிசேஷத்தில் "ஆதியிலே வார்த்தை இருந்தது" என்று எழுதும்போது, "ஆதியிலே தேவன் இருந்தார்" என்று பொருள்படுமாறு எழுதியிருக்கிறார். யூதர்கள் இந்த வசனத்தை வாசிக்கும்போது இந்த அர்த்தத்தையே புரிந்துகொள்வார்கள்.

யோவான் இயேசுகிறிஸ்துவை "வார்த்தை" என்று அழைப்பதற்கான காரணத்தையும் இந்த சுவிசேஷத்தில் குறிப்பிடுகிறார். "இயேசுகிறிஸ்து தேவனுடைய ஒரே பேறான குமாரன். அவர் பிதாவின் மடியிலிருக்கிறார். பிதவாகிய தேவனே இயேசுகிறிஸ்துவை வெளிப்படுத்தினார்" (யோவா 1:18). இந்த சத்தியத்தை மனதில் வைத்துதான் யோவான் இயேசுகிறிஸ்துவை "வார்த்தை" என்று குறிப்பிடுகிறார்.

"வார்த்தை" என்னும் சத்தியத்தில் இரண்டு அம்சங்கள் உள்ளன. அவையாவன : 1. உண்டான வார்த்தை 2. சொல்லப்பட்ட வார்த்தை.

உண்டான வார்த்தை என்பதற்கு, வார்த்தையை நாம் உச்சரிப்பதற்கு முன்பு ஏற்படும் சிந்தனை என்று பொருள் கூறலாம். பேசுவதற்கு முன்பாக, நாம் பேசப்போகும் வார்த்தையைப்பற்றிய சிந்தனை நமது மனதிற்குள் இருக்கும். இது மனுஷருடைய ஆத்துமாவிலும் இருதயத்திலும் உண்டாகிறது. இருதயத்தின் நினைவுகளை வாய் பேசுகிறது. திரித்துவத்தின் இரண்டாவது நபராகிய இயேசுகிறிஸ்து "வார்த்தை" என்று அறிவிக்கப்படுகிறார். இவர் தேவனுடைய ஒரே பேறான குமாரன். பேச்சுக்கு முன்பாக சிந்தனை இருந்ததுபோல, குமாரனாகிய இயேசுகிறிஸ்துவும் "உண்டான வார்த்தை" யாக அதாவது "சிந்தனை" யாக இருக்கிறார். இவர் தேவனுடைய முதற்பேறானவர்.

## அதிகாரம் - 1

நாம் எதை சிந்திக்கிறோம் என்பதும், எப்படி சிந்திக்கிறோம் என்பதும் நமக்குத் தெளிவாகத் தெரியாது. இது இன்னும் நமக்கு ஒரு மறைபொருளான ரகசியமாகவே இருக்கிறது. இதுபோலவே தெய்வத்துவத்தின் ரகசியங்களையும், தேவரகசியங்களின் ஆழங்களையும் நம்மால் தெளிவாக புரிந்துகொள்ள முடியாது. நாம் எவ்வளவுதான் ஆழமாக யோசனைபண்ணினாலும், தேவனுடைய ரகசியங்களை தெளிவாக புரிந்துகொள்வது கடினம். ஆழத்தின் மேல் இருள் இருக்கிறது.

"வார்த்தை" என்னும் சத்தியத்தின் இரண்டாவது அம்சம் "சொல்லப்பட்ட வார்த்தை" ஆகும். இதை "பேச்சு" என்று கூறலாம். மனதின் சிந்தனை பேச்சாக வெளிப்படுகிறது. இயேசுகிறிஸ்து "வார்த்தையாக" இருக்கிறார் என்று சொல்லும்போது, பிதாவாகிய தேவன் இயேசுகிறிஸ்துவின் மூலமாக இந்தக் கடைசி நாட்களில் நம்மோடு "பேசுகிறார்" என்பது பொருளாகும். தேவனுடைய சிந்தையை இயேசுகிறிஸ்து நமக்கு வெளிப்படுத்துகிறார். மனுஷனுடைய சிந்தனை அவனுடைய வார்த்தை அல்லது பேச்சின் மூலமாக வெளிப்படுகிறது. அதுபோல தேவனுடைய சிந்தனை, "வார்த்தையாகிய" இயேசுகிறிஸ்துவின் மூலமாக நமக்கு அறிவிக்கப்படுகிறது. யோவான்ஸ்நானன் வனாந்தரத்திலே பேசுகிற "சத்தமாக" இருந்தான். ஆனால் இயேசுகிறிஸ்துவோ "வார்த்தையாக" இருக்கிறார்.

ஆதியிலே வார்த்தை இருந்தது. வார்த்தையாகிய இயேசுகிறிஸ்து ஆதியிலேயே இருக்கிறார். எல்லா காலங்களுக்கும் முன்பாகவே அவர் இருக்கிறார். இந்த பூமியில் அவர் மனுஷனாக அவதரிப்பதற்கு முன்பாகவே, இயேசுகிறிஸ்து இந்த உலகத்தோற்றத்திற்கு முன்பாகவே இருக்கிறார். இந்த உலகம் ஆதியில் இருந்து இருக்கிறது. ஆனால் வார்த்தையோ ஆதியில் இருக்கிறது. இந்த உலகம் ஆரம்பமாவதற்கு முன்பாகவே, வார்த்தை இருந்தது. ஆதியிலே இருந்தவருக்கு ஆரம்பமில்லை. அவர் எப்போதும் இருக்கிறவர். நித்திய காலமாக இருக்கிறவர். ஆகையினால் இயேசுகிறிஸ்துவை "நித்திய தேவன்" என்று அழைக்கிறோம்.

**தேவனோடிருந்தார்**

**அவர் ஆதியிலே தேவனோடிருந்தார் (யோவா 1:2).**

குமாரனாகிய இயேசுகிறிஸ்து பிதாவாகிய தேவனோடு இருந்தார். ஆதியிலே இயேசுகிறிஸ்துவாகிய "வார்த்தை" இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்தில் இருந்தது. அந்த வார்த்தை தேவனாகயிருந்தது. முதல் வசனத்தில் யோவான் எழுதியுள்ள இந்த சத்தியத்தை, இரண்டாவது வசனத்திலும் எழுதுகிறார். "அவர் ஆதியிலே தேவனோடிருந்தார்" என்று குறிப்பிடுகிறார். அவர் நித்திய காலமாக இருந்தார் என்பது இந்த வார்த்தையின் பொருளாகும். ஆதியிலே இந்த உலகம் தேவனிடத்திலிருந்து இருந்தது. ஆனால் இந்த வார்த்தையோ தேவனோடிருந்தது. இதன் மூலமாக வார்த்தையாகிய இயேசுகிறிஸ்து, பிதாவாகிய தேவனோடு சதாகாலங்களிலும் நித்திய காலமாக இருந்தார் என்னும் சத்தியம் தெளிவுபடுத்தப்படுகிறது.

அந்த வார்த்தை தேவனோடு இருந்தது என்று சொல்லும்போது, அந்த வார்த்தையின் "சாரமும் அம்சமும்" வெளிப்படுத்தப்படுகிறது. ஏனெனில் தேவனிடத்திலிருந்த அந்த வார்த்தையே தேவனாகயிருந்தது. இயேசுகிறிஸ்து தேவனுடைய ஒரே பேறான குமாரன் என்று குறிப்பிடப்பட்டிருக்கிற போதிலும், பிதாவும் குமாரனும் ஒன்றாகவே இருக்கிறார்கள். இருவரும் ஆதியிலிருக்கிறார்கள். பிதா தேவனாக இருப்பதுபோல, குமாரனும் தேவனாக இருக்கிறார். இந்த சத்தியத்தை வெளிப்படுத்துவதற்கு "அந்த வார்த்தை தேவனாயிருந்தது" என்று யோவான் எழுதுகிறார்.

தேவனோடிருந்த வார்த்தையின் உன்னதத்தையும் மகத்துவத்தையும் யோவான் தெளிவுபடுத்துகிறார். பிதாவாகிய தேவனோடு குமாரனாகிய இயேசுகிறிஸ்து ஆதியிலே இருந்தபோது, குமாரனுக்கு மகிமையும் சந்தோஷமும் இருந்தது. இந்த மகிமை உலகத்தோற்றத்திற்கு முன்பாகவே இருந்தது. இந்த சத்தியத்தை இயேசுகிறிஸ்து தம்முடைய ஜெபத்தில் குறிப்பிடுகிறார் "பிதாவே உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமை" என்று இயேசுகிறிஸ்து கூறுகிறார் (யோவா 17:5).

ஆதியிலே வார்த்தை இருந்தது என்றும், அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது என்றும், அந்த வார்த்தை தேவனாயிருந்தது என்றும் கூறும்போது, வார்த்தையாகிய இயேசு கிறிஸ்துவின் தெய்வீக ஆலோசனையும் தெய்வீக திட்டமும் இதில் தெளிவுபடுத்தப்படுகிறது. மனுஷன் பாவம் செய்து தேவனுடைய சமுகத்தைவிட்டு விலக்கப்பட்டிருக்கிறான்.

## அதிகாரம் - 1

இவன் தேவனோடு ஒப்புரவாக வேண்டும். இந்த ஒப்புரவாகுதலின் திட்டத்தை பிதாவும் குமாரனும், ஆதியிலே, தம்முடைய நித்தியத்திலே ஆலோசனை செய்து திட்டமிட்டிருக்கிறார்கள்.

**அவர் மூலமாய் உண்டாயிற்று**

**சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை (யோவா 1:3).**

இந்த உலகம் எவ்வாறு உண்டாயிற்று என்பதை யோவான் இங்கு விவரிக்கிறார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று. இயேசுகிறிஸ்து ஆதியிலே தேவனோடிருந்தார். பூர்வகாலங்களிலிருந்தே, பிதாவாகிய தேவனுடைய ஒவ்வொரு தெய்வீக கிரியையிலும், குமாரனாகிய இயேசுகிறிஸ்து பங்கு பெற்றிருக்கிறார். ஆகையினால் சகலமும் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உண்டாயிற்று என்றும், உண்டானது ஒன்றும் இயேசுகிறிஸ்துவாலே அல்லாமல் உண்டாகவில்லையென்றும் யோவான் கூறுகிறார்.

ஒரு மனுஷன் தன் கோடரியினால் ஒரு மரத்தை வெட்டும்போது, அந்த மனுஷனும் கோடரியும் மரத்தை வெட்டுவதற்கு கிரியை செய்கிறார்கள். இந்த உலகம் எவ்வாறு உண்டாயிற்று என்பதை விவரிக்கும்போது, குமாரனாகிய இயேசுகிறிஸ்து பிதாவாகிய தேவனுடைய கையில் இருந்த கோடரியைப்போன்று செயல்படவில்லை. மரத்தை வெட்டுகிற அந்த மனுஷன், தன் கையிலுள்ள கோடரியை பயன்படுத்தும்போது, தன் கண்ணால் மரத்தையும் கோடரியையும் கவனித்துப் பார்க்கிறான். அதுபோலவே பிதாவாகிய தேவன் இந்த உலகத்தை சிருஷ்டித்தபோது, குமாரனாகிய கிறிஸ்து பிதாவாகிய தேவனுடைய சரீரத்திலுள்ள கண்ணைப்போல செயல்படுகிறார். ஏனெனில் பிதாவும் குமாரனும் ஒன்றாகவே இருக்கிறார்கள். பிதா வேறு, குமாரன் வேறு என்று வெவ்வேறாக பிரிக்கக்கூடாது.

சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று என்று சொல்லும்போது, சகலமும் பிதா, குமாரன் ஆகியோர் மூலமாய் உண்டாயிற்று என்றே பொருள்கொள்ள வேண்டும். உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை என்று சொல்லும்போது, உண்டானதொன்றும் பிதா, குமாரன் ஆகியோராலேயல்லாமல் உண்டாகவில்லை என்று பொருள் கொள்ள வேண்டும். ஏனெனில் இயேசுகிறிஸ்து ஆதியிலே தேவனோடிருந்தார்.

உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. சிருஷ்டிகளில் மேன்மையான சிருஷ்டிகளாகிய தேவதூதர்களாக இருந்தாலும், சாதாரண சிருஷ்டிகளாகிய புழுக்களாக இருந்தாலும், அவராலேயல்லாமல் இவை உண்டாகவில்லை. இவற்றை உண்டுபண்ணும்போது பிதவாகிய தேவனும் குமாரனாகிய தேவனும் இணைந்து கிரியை நடப்பிக்கிறார்கள். தம்முடைய ஒவ்வொரு கிரியையிலும், பிதாவாகிய தேவன் குமாரனாகிய தேவன் இல்லாமல், ஒன்றும் செய்வதில்லை. "அந்த வார்த்தை தேவனாயிருந்தது" என்னும் சத்தியம் உறுதி பண்ணப்படுகிறது. குமாரனாகிய அந்த வார்த்தை தேவனாகயிருந்தது. பிதா தேவனாகயிருக்கிறார். குமாரனும் தேவனாயிருக்கிறார். கிறிஸ்தவ மார்க்கத்தில் ஒரு விசேஷித்த சத்தியமுள்ளது. இந்த உலகத்தை உண்டுபண்ணின தேவனே, கிறிஸ்தவ மார்க்கத்தையும் உண்டுபண்ணியிருக்கிறார். ஏனெனில் உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. எல்லாவற்றையும் உண்டுபண்ணுவதற்கு தகுதிபெற்றிருக்கும் குமாரனாகிய இயேசுகிறிஸ்து, நம்முடைய மீட்பையும் இரட்சிப்பையும் நிறைவேற்றுவதற்கு தகுதிபெற்றவராக இருக்கிறார். நம்மை உண்டாக்குவதற்கு நியமிக்கப்பட்டிருக்கிற இயேசுகிறிஸ்து, நம்மை ஆசீர்வதிக்கவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

**மனுஷருக்கு ஒளி**

**அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது (யோவா 1:4).**

ஆதி ஜீவனும் ஆதி ஒளியும் அவருக்குள் இருந்தது. "அவருக்குள் ஜீவன் இருந்தது". இயேசுகிறிஸ்துவுக்கு யாரும் ஜீவனைக் கொடுக்கவில்லை. அவர் ஆதியிலேயே ஜீவனோடிருந்தார். அவருடைய தேவத்துவத்திற்கு இதுவும் ஒரு சாட்சியாகும். அவருக்குள் ஜீவன் இருந்ததினால், அவர் மெய்யான தேவனாக இருப்பதோடு, அவர் ஜீவனுள்ள தேவனாகவும் இருக்கிறார். சர்வலோகத்திலுமுள்ள எல்லா ஜீவ ராசிகளின் ஜீவனும் அவருக்குள் இருக்கிறது. சர்வ ஜீவராசிகளும் சிருஷ்டிக்கப்படும்போது, அவரிடத்திலிருந்தே தங்களுடைய ஜீவனைப் பெற்றுக்கொள்கின்றன. குமாரனாகிய தேவன் வார்த்தையாக இருக்கிறார். ஆகையினால் மனுஷன் அப்பத்தினால் மாத்திரமல்லாமல் அந்த வார்த்தையினாலும் விசேஷமாக பிழைக்கிறான் (மத் 4:4).

## அதிகாரம் - 1

பகுத்தறிவுள்ள ஜீவராசிகளெல்லாம் அவரிடமிருந்தே தங்கள் ஜீவனை பெற்றுக்கொள்கின்றன. மனுஷருக்கு ஒளியாக இருக்கும் அந்த ஜீவன் இயேசுகிறிஸ்துவிடமிருந்தே வருகிறது. மனுஷனில் இருக்கிற ஜீவன் மிகவும் விசேஷமானது. மனுஷனுடைய ஜீவனே அவனை மற்ற ஜீவராசிகளிடமிருந்து வேறு பிரித்து உயர்த்திக் காண்பிக்கிறது. மனுக்குலத்திற்கு சிந்திக்கும் ஆற்றல் உள்ளது. மனுஷன் பகுத்தறியக்கூடியவன். அவன் மிருகமல்ல. மிருகத்தினால் பகுத்தறிய முடியாது.

மனுஷனுடைய ஆவி கர்த்தருடைய ஒளி இருக்கிறது. நித்திய வார்த்தையே இந்த ஒளியை பிரகாசம் கொடுக்குமாறு ஏற்றுகிறது. பகுத்தறியும் ஒளியையும், உணர்வுள்ள ஜீவனையும் மனுக்குலம் இயேசுகிறிஸ்துவிடமிருந்தே பெற்றுக் கொள்கிறது. எல்லா மனுஷருக்குமே பகுத்தறிவு உள்ளது. இந்த பகுத்தறிவை இயேசுகிறிஸ்துவிடமிருந்து மனுக்குலம் பெற்றிருக்கிறது. நமக்கு பகுத்தறிவைக் கொடுக்கும் வார்த்தையாகிய இயேசுகிறிஸ்துவிடமிருந்து, தெய்வீக வெளிப்பாட்டின் ஒளியையும் பெற்றுக்கொள்ளலாம். குமாரனாகிய தேவனால் மாத்திரமே தேவனுடைய ரகசியங்களை மனுஷருக்கு வெளிப்படுத்த முடியும்.

**ஒளி இருளிலே பிரகாசிக்கிறது**

**அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது அதைப் பற்றிக் கொள்ளவில்லை (யோவா 1:5).**

வார்த்தையாகிய இயேசுகிறிஸ்து மனுபுத்திரருக்கு தம்மை வெளிப்படுத்தியிருக்கிறார். இயேசுகிறிஸ்து மனுஷருக்கு ஒளியாக இருக்கிறார். ஆனால் மனுக்குலமோ அந்த ஒளியை சரியாக புரிந்துகொள்ளவில்லை. அந்த ஒளிக்குரிய முக்கியத்துவமும் மதிப்பும் தரவில்லை. யோவான் இதை எழுதும்போது "அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது, இருளானது அதைப்பற்றிக் கொள்ளவில்லை" என்று குறிப்பிடுகிறார்.

இயேசுகிறிஸ்து மாம்சத்தில் வெளிப்படுவதற்கு முன்பாகவே, இந்த உலகத்தில் நித்திய வார்த்தையாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறார். குமாரனாகிய அந்த ஒளி இருளிலே பிரகாசித்தது. நித்திய வார்த்தையாகிய தேவன் மனுஷருடைய இயற்கையான மனச்சாட்சியின் இருளில் பிரகாசிக்கிறார். மனுக்குலத்திலுள்ள எல்லோருக்குமே மனச்சாட்சி உண்டு. கிறிஸ்துவாகிய வார்த்தையினுடைய வல்லமையின் ஒரு பகுதி மனுஷருடைய மனச்சாட்சியில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களும் வாக்குத்தத்தங்களும் ஒரு இருளைப்போல உள்ளன. நித்திய வார்த்தையின் ஒளி அந்த இருளில் பிரகாசித்தது. ஒளியானது இருளிலே பிரகாசிக்க வேண்டுமென்று தேவன் தாமே கட்டளையிட்டிருக்கிறார். ஒளியாகிய தேவனே இருளிலே பிரகாசிக்கிறார்.

இந்த உலகம் இருளிலிருக்கிறது. இருளில் இருக்கிற இந்த உலகத்தினால் தேவனுடைய ஒளியை புரிந்துகொள்ள முடியவில்லை. இருளானது அந்த ஒளியைப் பற்றிக்கொள்ளவில்லை. மனுஷருடைய பாவங்களும் தப்பிதங்களும் இருளாக இருக்கிறது. இந்த இருள் அதிகமாகி, மனுஷருடைய மனக்கண்களை மூடிப்போடுகிறது. ஆகையினால் அவர்களால் ஒளியின் பிரகாசத்தைக் காணமுடியவில்லை. யூதர்களிடம் பழைய ஏற்பாட்டின் ஒளி இருந்தது. ஆனால் அவர்களால் அந்த ஒளியில் இயேசுகிறிஸ்துவை கண்டுகொள்ள முடியவில்லை. அவர்கள் ஒளியாகிய இயேசுகிறிஸ்துவை பற்றிக்கொள்ளவில்லை.

ஒளியாகிய கிறிஸ்து இந்த பூமிக்கு வந்து தம்முடைய ஒளியை மனுஷர் மத்தியிலே பிரகாசிக்கச் செய்வது அவசியமாயிற்று. புறஜாதி உலகத்தாரின் தப்பிதங்களை திருத்துவதற்கும், யூதருடைய சத்தியங்களை மேம்படுத்துவதற்கும் ஒளியாகிய இயேசுகிறிஸ்து இந்த பூமிக்கு வருவது அத்தியாவசியமாயிற்று. இதற்காகவே தேவனுடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்து, ஒளியாக இருக்கிற இயேசுகிறிஸ்து இந்த பூமியில் மனுஷனாக அவதரித்தார்.

### யோவான்ஸ்நானன்
### யோவா 1 : 6-14

**யோவா 1:6. தேவனால் அனுப்பப்பட்ட ஒரு மனுஷன் இருந்தான், அவன் பேர் யோவான்.**

## அதிகாரம் - 1

**யோவா 1:7. அவன் தன்னால் எல்லாரும் விசுவாசிக்கும்படி, அந்த ஒளியைக் குறித்துச் சாட்சி கொடுக்கச் சாட்சியாக வந்தான்.**

**யோவா 1:8. அவன் அந்த ஒளியல்ல, அந்த ஒளியைக் குறித்துச் சாட்சி கொடுக்க வந்தவனாயிருந்தான்.**

**யோவா 1:9. உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி.**

**யோவா 1:10. அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று, உலகமோ அவரை அறியவில்லை.**

**யோவா 1:11. அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை.**

**யோவா 1:12. அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்.**

**யோவா 1:13. அவர்கள், இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள்.**

**யோவா 1:14. அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.**

### தேவனால் அனுப்பப்பட்ட ஒரு மனுஷன்

**தேவனால் அனுப்பப்பட்ட ஒரு மனுஷன் இருந்தான், அவன் பேர் யோவான் (யோவா 1:6).**

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைக்குறித்து மேன்மையாக சாட்சி கொடுப்பதற்கு யோவான்ஸ்நானன் அனுப்பப்பட்டிருக்கிறான். இவன் கொடுக்கவேண்டிய சாட்சியைக் குறித்து அப்போஸ்தலர் யோவான் இந்த சுவிசேஷத்தின் ஆரம்பத்தில் அறிமுகம் செய்து வைக்கிறார்.

அவனுடைய பெயர் யோவான். "கிருபையுள்ளவன்" என்பது இந்தப் பெயரின் பொருளாகும். இவனைப்பற்றி குறிப்பிடும்போது "இவன் தேவனால் அனுப்பப்பட்ட மனுஷன்" என்று எழுதப்பட்டிருக்கிறது. இவன் ஒரு மனுஷன் மாத்திரமே. சாதாரண மனுஷன்தான். வேறு யாருமல்ல. நம்மைப்போன்ற சாதாரண மனுஷர் மூலமாக, தேவன் தம்முடைய சித்தத்தைப் பேசுவதற்கு சித்தமுள்ளவராக இருக்கிறார். மனுஷர் மூலமாக பேசுவது தேவனுக்குப் பிரியமாயிற்று.

யோவான்ஸ்நானன் தேவனால் அனுப்பப்பட்ட மனுஷன். இவன் தேவனுடைய செய்தியை அறிவிக்கிறவன். கர்த்தர் தம்முடைய ஊழியத்தையும் தம்முடைய செய்தியையும் இவனுக்குக் கொடுத்திருக்கிறார். யோவான் ஒரு அற்புதமும் செய்யவில்லை. ஆனால் இவனுடைய ஜீவியமும் உபதேசமும் பரிசுத்தமாகவும் ஒழுக்கமாகவும் இருக்கிறது. இவன் தேவனால் அனுப்பப்பட்ட மனுஷன் என்பதற்கு இவனுடைய ஜீவியமும் உபதேசமும் சாட்சி பகருகிறது.

### சாட்சி

**அவன் தன்னால் எல்லாரும் விசுவாசிக்கும்படி, அந்த ஒளியைக் குறித்துச் சாட்சி கொடுக்கச் சாட்சியாக வந்தான் (யோவா 1:7).**

இந்த சுவிசேஷத்தில் இவனுடைய ஊழியத்தைப்பற்றி விவரிக்கப்பட்டிருக்கிறது. இவன் இயேசுகிறிஸ்துவாகிய ஒளியைக்குறித்து சாட்சி கொடுக்க சாட்சியாக வந்திருக்கிறான். யூதருடைய ஜெபாலயங்களில் தேவனைக்குறித்து சாட்சிக்கொடுக்கிறவர்கள் இருப்பார்கள். யூதருடைய நியாயவிசாரணை சங்கங்களிலும் சாட்சிகளுக்கு முக்கிய பங்கு உண்டு. ஏனெனில் எந்தக் காரியமாக இருந்தாலும், அது இரண்டு அல்லது மூன்று சாட்சிகள் மூலமாக நிரூபிக்கப்பட வேண்டும்.

யூதர் மத்தியிலே சாட்சிக்கு முக்கியத்துவம் உண்டு. ஆனால் தேவனுடைய தெய்வீக வெளிப்பாடோ வேறு வழியில் நிரூபிக்கப்படுகிறது. யோவான்ஸ்நானன் இயேசுகிறிஸ்துவைக் குறித்து சாட்சிக்கொடுக்க சாட்சியாக வரும் வரையிலும், கிறிஸ்துவாகிய ஒளியைக் குறித்து ஒரு அமைதி நிலவிற்று. இயேசுகிறிஸ்துவைப் பற்றி யோவான்ஸ்நானனுக்கு முன்பாக யாரும் சாட்சியாக பேசவில்லை. யோவான்ஸ்நானனே அவரைக் குறித்து சாட்சிக்கொடுப்பதற்காக வந்திருக்கும் முதலாவது சாட்சியாக இருக்கிறான்.

## அதிகாரம் - 1

யோவான்ஸ்நானன் அந்த ஒளியைக் குறித்து சாட்சிக்கொடுப்பதற்கு வந்தவன். ஒளிக்கு சாட்சி தேவையில்லை. ஏனெனில் ஒளி பிரகாசிக்கும்போது அது ஒளி என்பதை எல்லோரும் புரிந்துகொள்வார்கள். இயேசுகிறிஸ்துவும் ஒளியாக இருக்கிறார். ஒளியாகிய இயேசுகிறிஸ்துவை நிரூபிப்பதற்கு மனுஷருடைய சாட்சி தேவையில்லை. அவரே ஒளியாக இருப்பதினால், அவருடைய பிரகாசமே அவரைக் குறித்து சுயசாட்சியாக இருக்கும். ஆனால் இந்த உலகமோ இருளிலே இருக்கிறது. கிறிஸ்துவாகிய ஒளி இருளில் இருக்கும் உலகத்தில் பிரகாசிக்கிறது. ஆனால் இருளான இந்த உலகமோ ஒளியாகிய இயேசுகிறிஸ்துவை பற்றிக்கொள்ளவில்லை. இருள் அதிகமாக இருப்பதினால், ஒளியாகிய கிறிஸ்து உலகத்தாருடைய பார்வைக்கு மறைவாகயிருக்கிறது. ஒளியைப் பார்க்கக்கூடாதவாறு இருள் மனுஷருடைய கண்களை மூடிப்போட்டிருக்கிறது.

யோவான்ஸ்நானன் ஒரு ஜாமக்காரனைப்போல இருக்கிறான். இவன் இரவுவேளையில் காவல்புரிகிறவன். ஜாமக்காரன் நகரம் முழுவதும் சுற்றி வந்து, ஒவ்வொரு மணி வேளையிலும் அது எத்தனையாவது ஜாமம் என்பதை ஜனங்களுக்கு அறிவிப்பான். அதிகாலை வேளையில் ஜனங்கள் தூங்கிக்கொண்டிருக்கும்போது, பொழுது விடிந்துவிட்டது என்பதையும் இந்த ஜாமக்காரன் ஜனங்களிடத்தில் சந்தோஷமாக கூறுவான். அப்போது ஜனங்கள் தங்கள் நித்திரையைவிட்டு எழும்பி, அதிகாலை வெளிச்சத்தின் பிரகாசத்தில், தங்களுடைய வேலைகளைச் செய்ய ஆரம்பிப்பார்கள்.

யோவான்ஸ்நானனை தேவன் ஒரு ஜாமக்காரனைப்போலவே அனுப்பியிருக்கிறார். இருளில் இருக்கும் ஜனங்களுக்கு ஒளியைக் குறித்து சொல்லுவதற்காக தேவன் இவனை அனுப்பியிருக்கிறார். கிறிஸ்துவே அந்த மெய்யான ஒளி. ஜனங்கள் ஜீவனில்லாமல் தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் மரித்தவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒளியாகிய இயேசுகிறிஸ்துவின் ஜீவனையும் பிரகாசத்தையும் அறிவிப்பதற்காக தேவன் யோவான்ஸ்நானனை அனுப்பியிருக்கிறார். இருளில் இருக்கும் ஜனங்களுக்கு வெளிச்சம் உதயமாயிற்று என்னும் நற்செய்தியை அறிவிப்பதற்காக யோவான்ஸ்நானன் தேவனால் அனுப்பப்பட்ட மனுஷன்.

எல்லா ஜனங்களும் தன் மூலமாக அந்த ஒளியை விசுவாசிக்க வேண்டும் என்பதே இவனுடைய ஊழியத்தின் நோக்கமும் திட்டமும் ஆகும். ஜனங்கள் தன்னையல்ல, அந்த ஒளியை விசுவாசிக்க வண்டும் என்பதே யோவான்ஸ்நானனுடைய ஊழியம். இவன் ஒளியல்ல. இவன் அந்த ஒளியைக்குறித்து சாட்சிக்கொடுக்க வந்த சாட்சி மாத்திரமே. ஜனங்கள் இயேசுகிறிஸ்துவின் மூலமாக நோக்கிப்பார்க்கும்போது அவர்கள் தேவனை காணலாம் என்று யோவான்ஸ்நானன் ஜனங்களுக்கு உபதேசம்பண்ணி வருகிறான்.

தேவனைக்குறித்து சாட்சிக்கொடுக்க வந்திருக்கும் யோவான்ஸ்நானன் என்னும் மனுஷனை ஜனங்கள் ஏற்றுக்கொள்ளும்போது, தேவனுடைய சாட்சியானது மிகவும் உயர்ந்தது என்பதையும் ஜனங்கள் புரிந்துகொள்வார்கள். யோவான்ஸ்நானன் மூலமாக எல்லோரும் ஒளியாகிய கிறிஸ்துவை கண்டுகொள்ள வேண்டும் என்பது தேவனுடைய திட்டம். எல்லோரும் என்று சொல்லும் போது இதில் எந்த மனுஷரும் சேர்க்கப்படாமல் விலக்கி ஒதுக்கி வைக்கப்படவில்லை. எல்லோரும் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

**அவன் அந்த ஒளியல்ல**

**அவன் அந்த ஒளியல்ல, அந்த ஒளியைக் குறித்துச் சாட்சி கொடுக்க வந்தவனாயிருந்தான் (யோவா 1:8).**

யோவான்ஸ்நானனே அந்த ஒளி என்று ஜனங்கள் தவறுதலாக நினைத்துவிடக்கூடாது. ஆகையினால் இந்த சுவிசேஷத்தில் இதைப்பற்றி எச்சரித்து எழுதப்பட்டிருக்கிறது. யோவான்ஸ்நானன் அந்த ஒளியல்ல. கிறிஸ்துவே அந்த ஒளி. யோவான்ஸ்நானன் அந்த ஒளியாகிய கிறிஸ்துவைக்குறித்து சாட்சிக்கொடுக்க வந்தவன். யோவான்ஸ்நானன் ஒளியல்ல. ஆனால் அவன் ஒரு நட்சத்திரம். அதிகாலையில் தோன்றும் நட்சத்திரத்தைப் போன்றவன். இயேசுகிறிஸ்து குழந்தையாக இருந்தபோது கிழக்கில் தோன்றிய நட்சத்திரம், சாஸ்திரிகளை இயேசுகிறிஸ்துவினிடத்தில் வழிநடத்திற்று. அதுபோலவே யோவான்ஸ்நானன் ஜனங்களை இயேசுகிறிஸ்துவிடம் வழிநடத்தும் ஒரு நட்சத்திரம் போலயிருக்கிறான். இவன் நட்சத்திரமேயல்லாமல் சூரியனல்ல. யோவான்ஸ்நானன் நட்சத்திரத்தைப்போல இருக்கிறான் என்றால், கிறிஸ்து நீதியின் சூரியனாக இருக்கிறார்.

## அதிகாரம் - 1

யோவான்ஸ்நானனைப்பற்றி இந்த சுவிசேஷத்தில் மேன்மையாக எழுதப்பட்டிருக்கிறது. ஆயினும் இவன் இயேசுகிறிஸ்துவுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறான். யோவான்ஸ்நானன் தீர்க்கதரிசிகளில் உயர்ந்தவன். ஆயினும் இவன் உன்னதமானவனல்ல. இயேசுகிறிஸ்துவே உன்னதமானவர். யோவான்ஸ்நானனைப்பற்றி இந்த சுவிசேஷத்தில் எழுதும்போது, அவனைப்பற்றி உயர்வாக எழுதப்பட்டாலும், தேவன் இவனைவிட உயர்ந்தவர் என்னும் சத்தியம் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கு உரிய மரியாதையைக் கொடுக்கவேண்டும். அவர்களுக்கு மரியாதை கொடுக்காமல் அவமானப்படுத்தக்கூடாது. அதே வேளையில் ஊழியக்காரர்களை அதிகமாக கனப்படுத்தி, அவர்களை கர்த்தருடைய ஸ்தானத்தில் தேவனைப்போல உயர்த்திவிடக்கூடாது. ஊழியக்காரர்கள் நம்முடைய ஆண்டவரோ அல்லது கர்த்தரோ அல்ல. இவர்கள் கர்த்தருக்காக ஊழியம் செய்கிறவர்கள். இந்த ஊழியக்காரர்கள் மூலமாக நாம் கர்த்தரைப்பற்றிய சத்தியங்களைத் தெரிந்துகொண்டு, கர்த்தரை விசுவாசிக்கிறோம்.

கிறிஸ்துவின் ஊழியக்காரராக ஊழியம் செய்வது மிகவும் மேன்மையானது. இது மனுஷருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சிலாக்கியம். இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யவே யோவான்ஸ்நானன் அனுப்பப்பட்டிருக்கிறான். ஆனால் இவனோ தன்னை வெகுவாக தாழ்த்தி, கிறிஸ்துவை வெகுவாக உயர்த்துகிறான். தான் அந்த ஒளியல்ல என்றும், இயேசுகிறிஸ்துவே அந்த ஒளி என்றும் தெளிவுபடுத்துகிறான். ஒளியாகிய கிறிஸ்துவைக்குறித்து சாட்சிக்கொடுப்பதற்காக தான் அனுப்பப்பட்டிருக்கும் சாதாரண மனுஷன் என்று தன்னைத் தாழ்த்துகிறான்.

கர்த்தருடைய ஊழியக்காரர்களில் சிலர் ஊழியத்தில் வல்லமையாக பயன்படுத்தப்படுகிறார்கள். அவர்களுக்கு மனுஷர் மத்தியில் அதிக மரியாதையும், மதிப்பும், செல்வாக்கும், விளம்பரமும் இருக்கும். கர்த்தருடைய ஊழியர்கள் மத்தியிலும், ஊழியங்கள் மத்தியிலும் இவர்கள் பிரகாசமாக இருப்பார்கள். இவர்கள் எவ்வளவுதான் பிரகாசமாக ஊழியம் செய்தாலும், இவர்கள் ஒளியல்ல. இயேசுகிறிஸ்துவே மெய்யான ஒளி. இவர்களுடைய பிரகாசம் ஒளியாகிய இயேசுகிறிஸ்துவிடமிருந்து இரவலாக பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

### மெய்யான ஒளி

**உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி (யோவா 1:9).**

இயேசுகிறிஸ்துவே மெய்யான ஒளியாக இருக்கிறார். அவர் மகா பிரதான ஒளி. ஆகையினால் அவரை மாத்திரமே நாம் ஒளி என்று அழைக்க வேண்டும். அவர் மாத்திரமே ஒளி என்று அழைக்கப்படுவதற்கு பாத்திரராக இருக்கிறார். மற்ற ஒளிகளெல்லாம் மெய்யான ஒளியாகிய கிறிஸ்துவுக்கு கீழானவையே. சிலர் தங்களை ஒளியைப்போல காண்பித்துக்கொள்வார்கள். அவர்கள் ஒளியைப்போல இருந்தாலும், ஒளிக்கு ஒப்பாக இருந்தாலும், அவர்கள் மெய்யான ஒளியல்ல. இயேசுகிறிஸ்து மாத்திரமே மெய்யான ஒளியாக இருக்கிறார். என்றாலும் ஒளியாகிய இயேசுகிறிஸ்து, இந்த உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிறார்.

இயேசுகிறிஸ்துவிடம் சிருஷ்டிக்கும் வல்லமை இருக்கிறது. இந்த வல்லமையினால் ஒவ்வொரு மனுஷனுக்கும் பகுத்தறியும் வெளிச்சத்தைக் கொடுக்கிறார். மனுஷரிடத்திலுள்ள ஞானம், உலக அறிவு, பகுத்தறிவு ஆகிய அனைத்தும் இயேசுகிறிஸ்துவிடமிருந்தே வந்திருக்கிறது.

இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் சகல தேசத்தாருக்கும் பிரசங்கம்பண்ணப்படுகிறது. தம்முடைய சுவிசேஷ பிரபல்யத்தின் மூலமாக இயேசுகிறிஸ்து தம்முடைய ஒளியை உலகம் முழுவதிலுமுள்ள மனுஷருடைய இருதயங்களில் பிரகாசிக்கச் செய்கிறார்.

யோவான்ஸ்நானன் மெய்யான ஒளியல்ல. ஒளியைக்குறித்து சாட்சியாக கொடுக்க வந்த சாட்சி. இவனை இயேசுகிறிஸ்துவோடு ஒப்பிடும்போது, யோவான்ஸ்நானனை ஒரு சிறிய ஒளி என்று அழைக்கலாம். இவனுடைய ஒளி எருசலேமிலும், யூதேயாவிலுமுள்ள ஜனங்களை மாத்திரமே பிரகாசிப்பிக்கச் செய்கிறது. இவனால் உலகத்திலுள்ள எல்லா மனுஷரையும் பிரகாசிக்கச் செய்ய முடியாது. அது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் மாத்திரமே ஆகும். யோவான்ஸ்நானன் ஒரு சிறிய மெழுகுவர்த்தியைப் போன்றவன். இது ஒரு சிறிய அறைக்கு மாத்திரமே பிரகாசம் கொடுக்கும். ஆனால் இயேசுகிறிஸ்துவோ மெய்யான ஒளியாக இருக்கிறார். இந்த ஒளியாகிய இயேசுகிறிஸ்து உலகத்திலுள்ள புறஜாதியார் எல்லோரையும் பிரகாசிப்பிக்கிறார்.

## அதிகாரம் - 1

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் தேவனுடைய வெளிப்பாடு ஒரு குறிப்பிட்ட ஜனங்களுக்கு மாத்திரம் என்று வரையறுக்கப்பட்டிருந்தது. ஆனால் இப்போதோ உலகம் முழுவதிலுமுள்ள ஜனங்களுக்கு கர்த்தருடைய சத்தியம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. "இருளில் இருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள். மரண இருளில் திசையில் இருக்கிறவர்களுக்கு வெளிச்சம் உதித்தது" (மத் 5:15) என்று இயேசுகிறிஸ்துவின் ஒளியைக் குறித்து ஏசாயா தீர்க்கதரிசி முன்னறிவித்திருக்கிறார்.

ஒரு மனுஷனிடத்தில் எவ்வளவு வெளிச்சம் இருந்தாலும், அந்த வெளிச்சம் கிறிஸ்துவிடமிருந்து மாத்திரமே வந்திருக்கிறது என்பதை அவன் அங்கீகரிக்க வேண்டும். அது இயற்கையான வெளிச்சமாக இருந்தாலும் சரி, அல்லது தெய்வீக வெளிச்சமாக இருந்தாலும் சரி, எல்லா வெளிச்சமும் ஒளியாகிய கிறிஸ்துவிடமிருந்து மாத்திரமே வருகிறது. ஏனெனில் இயேசுகிறிஸ்து மாத்திரமே மெய்யான ஒளியாக இருக்கிறார்.

**அவர் உலகத்திலிருந்தார்**

**அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று, உலகமோ அவரை அறியவில்லை (யோவா 1:10).**

இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் இருந்தார். நம்முடைய மனுஷ சுபாவத்தை இயேசுகிறிஸ்து தம்மீது ஏற்றுக்கொண்டபோது, அவர் இந்த உலகத்தில் இருந்தார். அவர் நம் மத்தியில் வாசம்பண்ணினார். "நான் இந்த உலகத்திற்கு வந்தேன்" என்று இயேசுகிறிஸ்துவே திருவுள்ளம் பற்றியிருக்கிறார். இந்த பூமிக்கு வருவதற்கு முன்பாக, அவர் ஆசீர்வாதமும் மகிமையும் நிறைந்திருந்த பரலோகத்திலிருந்தார். பரலோகத்திலிருந்து பாடுகள் நிறைந்த, துக்கமும் துயரமும் நிறைந்த இந்த உலகத்திற்கு அவர் வந்தார். அவர் இந்த உலகத்தில் இருந்தாலும், அவர் இந்த உலகத்திற்கு உரியவரல்ல.

இந்த உலகத்திற்கு ஒரு பெரிய மேன்மையும் மகத்துவமும் உள்ளது. இந்த மேன்மை இந்த உலகத்தின் சுபாவத்தினால் உண்டானதல்ல. தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் இருந்ததினால், இந்த உலகத்திற்கு ஒரு மேன்மை கிடைத்திருக்கிறது. கிறிஸ்து இல்லாமல் இந்த உலகத்திற்கு மேன்மையில்லை. இயேசுகிறிஸ்து ஒரு சமயம் இந்த உலகத்தில் இருந்தார் என்னும் சிந்தனையோடு, நாமும் நம்முடைய ஜீவிய நாட்களில் பயபக்தியோடு ஜீவிக்க வேண்டும். நாம் தற்போது வாசம்பண்ணும் இந்த உலகத்தில், ஒரு காலத்தில் தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்து, வாசம்பண்ணினார் என்பதை நினைவுகூர்ந்து நம்முடைய உள்ளம் பரிசுத்தமடையவேண்டும்.

இயேசுகிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தபோது, இந்த உலகம் அவரை வரவேற்றிருக்க வேண்டும். அவருக்குரிய மரியாதையையும் கனத்தையும், மகிமையையும் கொடுத்திருக்க வேண்டும். இவையெல்லாவற்றையும் பெற்றுக்கொள்வதற்கு தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்து பாத்திரராக இருக்கிறார். ஏனெனில் உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று.

இயேசுகிறிஸ்துவினால் உண்டாக்கப்பட்ட இந்த உலகமோ, தன்னுடைய பாவத்தினால் தேவனை விட்டுப் பிரிந்துபோயிற்று. கர்த்தரைவிட்டு பிரிந்துபோயிருக்கும். இந்த உலகத்தை இரட்சிப்பதற்காக தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்து இந்த பூமிக்கு வந்தார். இந்த உலகம் அவர் மூலமாய் உண்டானபடியினாலே, இந்த உலகம் அவரை மரியாதையோடு வரவேற்க வேண்டும். ஆனால் இந்த உலகமோ அவரை அறியவில்லை. அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. ஒரு ஆடு தன் மேய்ப்பனை அறியாததுபோல, இந்த உலகம் கிறிஸ்துவை அறியாமல் போயிற்று. உலகம் அவரை தங்களுக்கு சொந்தமானவராக ஏற்றுக்கொள்ளவில்லை, அவரை வரவேற்கவுமில்லை. அவரை அறியவுமில்லை. இந்த உலகத்தை சிருஷ்டித்த இயேசுகிறிஸ்து, மனுக்குலத்தை நியாயந்தீர்க்கிறவராக மறுபடியும் வரப்போகிறார். அப்போது இந்த உலகம் அவரை அறிந்துகொள்ளும்.

**தமக்கு சொந்தமானது**

**அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை (யோவா 1:11).**

## அதிகாரம் - 1

உலகம் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உண்டாயிற்று. ஆகையினால் இது அவருக்குச் சொந்தமானது. இந்த உலகம் மாத்திரமல்ல இஸ்ரவேல் ஜனங்களும் அவருக்குச் சொந்தமானவர்கள். அவர்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட விசேஷித்த ஜனங்கள். தேவன் இஸ்ரவேல் ஜனங்களை தம்முடைய சொந்த ஜனமாக அங்கீகரித்திருக்கிறார். ஆகையினால் இஸ்ரவேலர்கள் கர்த்தருக்குச் சொந்தமானவர்கள். இயேசுகிறிஸ்து முதலில் அவர்களிடத்திற்கே அனுப்பப்பட்டார். தமக்குச் சொந்தமானதிலே அவர் வந்தார். காணாமற்போன அவர்களை தேடிக் கண்டுபிடிக்கவும், அவர்களை இரட்சிக்கவும் வந்தார். ஏனெனில் இஸ்ரவேலர்கள் அவருக்குச் சொந்தமானவர்கள். ஆனால் அவருக்குச் சொந்தமான இஸ்ரவேலர்களோ அவரை புறக்கணித்துவிட்டார்கள். அவருக்குச் சொந்தமானவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை.

தமக்குச் சொந்தமானவர்கள் தம்மை வரவேற்று, ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இயேசுகிறிஸ்து எதிர்பார்க்கிறார். இயேசுகிறிஸ்துவின் எதிர்பார்ப்பு நியாயமானது. தமக்குச் சொந்தமானவர்களிடத்தில் வரும்போது அவர் சாதாரணமாக வராமல் அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் தம்மை அறிமுகம் செய்துகொண்டு வந்தார். அவரே சர்வ வல்லமையுள்ள தேவன் என்பது அவருடைய வார்த்தையினாலும், அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும் உறுதியாயிற்று. உலகம் அவர் மூலமாய் உண்டானபோதிலும், அவர் இந்த உலகத்தில் அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்து தம்மை தேவகுமாரனாக உறுதிபண்ணிய போதிலும், இந்த உலகமோ அவரை அறியவில்லை.

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்குச் சொந்தமானவர்கள். அவர்கள் அவரை அறிந்திருப்பது மாத்திரமல்ல, அவரை ஏற்றுக்கொள்ளவும் வேண்டும். ஆனால் அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. கர்த்தருடைய ஊழியத்தை செய்கிறவர்கள் அவருக்குச் சொந்தமானவர்கள். ஊழியக்காரர்களில் சிலர் கூட இன்னும் கர்த்தரை அறிந்துகொள்ளவில்லை, அவரை தங்களுடைய கர்த்தராக ஏற்றுக்கொள்ளவுமில்லை.

இவர்கள் கர்த்தருடைய உண்மையான ஊழியக்காரர்கள் அல்ல. தங்களுடைய பாவங்களிலிருந்து இந்த ஊழியக்காரர்கள் இன்னும் விலகி வராததினாலும், இயேசுகிறிஸ்து தங்களை ஆளுகை செய்ய பூரணமாக ஒப்புக்கொடுக்காததினாலும், இவர்கள் கர்த்தருக்காக ஊழியம் செய்தாலும், இன்னும் இவர்கள் கர்த்தரை முழுவதுமாக ஏற்றுக்கொள்ளவில்லை.

### அவரை ஏற்றுக்கொண்டவர்கள்

**அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார் (யோவா 1:12).**

கர்த்தருக்குச் சொந்தமானவர்களில் அநேகர் அவரை அறியாமல், அவரை ஏற்றுக்கொள்ளாமல் போனாலும், மீதமுள்ளவர்கள் கர்த்தரை தங்களுக்குச் சொந்தமானவர்களாக ஏற்றுக்கொள்கிறார்கள். இஸ்ரவேலின் காணியாட்சிக்கு புறம்பாக உள்ள ஏராளமான ஜனங்கள் இயேசுகிறிஸ்துவின் நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொள்கிறார்கள். இவ்வாறு அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்.

ஒரு மெய்யான விசுவாசி இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள வேண்டும். அவருடைய நாமத்தின்மேல் விசுவாசம் வைக்கவேண்டும். இதுவே ஒரு விசுவாசியின் அடிப்படை குணாதிசயம். இயேசுகிறிஸ்துவின்மேல் விசுவாசம் வைப்பது என்பதற்கு, அவரை தேவனிடத்திலிருந்து கொடுக்கப்பட்டுள்ள ஒரு ஈவாக அங்கீகரித்து, அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும். இயேசுகிறிஸ்துவின் உபதேசங்களை மெய்யானது என்றும், நல்லது என்றும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவருடைய கிருபையின் சாயலை நாம் தரித்துக்கொள்ள வேண்டும். நம்முடைய செயல்களிலும் சிந்தைகளிலும் கிறிஸ்துவின் அன்பு ஆளுகை செய்யவேண்டும். அவருடைய அன்பே நம்மை ஆளுகை செய்யும் பிரமாணமாக இருக்க வேண்டும்.

இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கும் மெய்யான விசுவாசிகளுக்கு இரண்டு சிலாக்கியங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவையாவன: 1. புத்திரசுவீகாரத்தின் சிலாக்கியம் 2. மறுபிறப்பின் சிலாக்கியம்.

## அதிகாரம் - 1

தம்முடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய், தம்மை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி இயேசுகிறிஸ்து அவர்களுக்கு அதிகாரங்கொடுத்திருக்கிறார். இது புத்திரசுவீகாரத்தின் அதிகாரமாகும். இதுவரையிலும் இந்த சிலாக்கியம் யூதருக்கு மாத்திரமே கொடுக்கப்பட்டிருந்தது. யூதர்கள் மாத்திரமே தேவனுடைய காணியாட்சிக்கு உட்பட்டவர்களாகயிருந்தார்கள். மற்ற புறஜாதியார்கள் எல்லோருமே தேவனுடைய காணியாட்சிக்கு புறம்பானவர்கள். ஆனால் புறஜாதியார்கள் இப்போது இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதன் மூலமாக, அவர்களும் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறார்கள்.

தம்முடைய நாமத்தின்மேல் விசுவாசம் வைத்து தம்மை ஏற்றுக்கொள்கிறவர்களுக்கு தேவன் ஒரு அதிகாரங்கொடுக்கிறார். இந்த அதிகாரம் எல்லா பரிசுத்தவான்களுக்கும் கொடுக்கப்படுகிறது. இது கர்த்தருடைய பிள்ளைகளுக்குக் கொடுக்கப்படும் மிகப்பெரிய சிலாக்கியமாகும். இஸ்ரவேலின் காணியாட்சிக்கு உட்பட்டவர் களாகயிருந்தாலும், புறம்பானவர்களாகயிருந்தாலும், அவர்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து, அவரைத் தங்களுடைய இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்போது, அவர்கள் தேவனுடைய பிள்ளைகளாகிறார்கள். விசுவாசிகள் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறார்களென்றால், அவர்கள் தேவனால் தம்முடைய பிள்ளைகளாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள் என்று பொருள்.

"நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்; உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை. பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்" (1யோவா 3:1,2).

தேவன் தம்முடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய், தம்மை ஏற்றுக்கொண்டவர்களை "தம்முடைய பிள்ளைகள்" என்று அழைக்கிறார். அவருடைய பிள்ளைகளோ அவரை "அப்பா, பிதாவே" என்று கூப்பிடுகிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் புத்திரசுவீகாரத்தின் சிலாக்கியம் இயேசுகிறிஸ்துவினால் உண்டாயிற்று. தம்முடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய், தம்மை ஏற்றுக்கொள்கிறவர்களுக்கு, இயேசுகிறிஸ்து இந்த அதிகாரத்தைக் கொடுக்கிறார். தேவகுமாரன் மனுஷகுமாரன் ஆனார். இதனால் மனுஷகுமாரர்களும் மனுஷகுமாரத்திகளும், சர்வ வல்லமையுள்ள தேவனுடைய குமாரர்களாகவும், குமாரத்திகளாகவும் ஆவதற்கு சிலாக்கியம் உண்டாயிற்று.

### தேவனாலே பிறந்தவர்கள்

**அவர்கள், இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள் (யோவா 1:13).**

இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கும் மெய்யான விசுவாசிகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் முதலாவது சிலாக்கியம் புத்திரசுவீகாரத்தின் சிலாக்கியமாகும். மற்றொரு சிலாக்கியம் மறுபிறப்பின் சிலாக்கியமாகும். தேவனுடைய பிள்ளைகள் எல்லோருமே மறுபடியும் பிறந்தவர்கள். புத்திசுவீகாரத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள தேவனுடைய பிள்ளைகள் எல்லோரும் மறுபடியும் பிறக்கிறார்கள். யோவான் இந்த புதிய பிறப்பைக் குறித்து இந்த வசனத்தில் விவரிக்கிறார். தேவனால் பிறப்பது என்றால் எது என்று விவரிப்பதற்குப் பதிலாக, எது தேவனால் பிறப்பது ஆகாது என்று எதிர்மறையாக கூறி, விசுவாசிகளின் மறுபிறப்பைக் குறித்து விவரிக்கிறார்.

தேவனுடைய பிள்ளைகள் இரத்தத்தினாலாவது, மாம்ச சித்தத்தினாலாவது, புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறப்பதில்லை. நாம் நம்முடைய பெற்றோருக்கு பிள்ளைகளாக பிறப்பதுபோல, தேவனுடைய பிள்ளைகளாக ஆவதில்லை. பாவசுபாவம் மனுஷருடைய இரத்தத்தில் எளிதாக கலந்துவிடும். ஆதாமின் பாவம் அவருடைய சந்ததி முழுவதையுமே பாவத்திற்குள்ளாக்கிவிட்டது. இதை வேதபண்டிதர்கள் "ஜென்மபாவம்" என்று அழைக்கிறார்கள். இது தவிர ஒவ்வொரு தனி மனுஷனும் பாவம் செய்கிறான்.

## அதிகாரம் - 1

வேதபண்டிதர்கள் இந்தப் பாவத்தை "சுபாவ பாவம்" என்று அழைக்கிறார்கள். மனுக்குலத்திற்குள்ளே பாவம் தானாக கலந்துவிடுவதுபோல தேவனுடைய கிருபை மனுஷருடைய இரத்தத்தில் தானாக கலந்துவிடுவதில்லை. மனுஷனுடைய மறுபிறப்பு என்பது, மனுஷ இரத்தத்தினாலோ மாம்ச சித்தத்தினாலோ, புருஷனுடைய சித்ததினாலோ உண்டாவதில்லை. மனுக்குலத்தின் மறுபிறப்பு தேவனாலே உண்டாயிற்று.

நம்முடைய சுயசித்தத்தின் பிரகாரம் நம்மால் மறுபடியும் பிறக்க முடியாது. நம்முடைய வல்லமையினாலோ அல்லது நம்முடைய விருப்பத்தினாலோ நம்மால் மறுபடியும் பிறக்க முடியாது. ஏனெனில் நம்முடைய மறுபிறப்பு நம்முடைய இரத்தத்திற்கோ அல்லது நம்முடைய மாம்ச சித்தத்திற்கோ உரியது அல்ல. மனுஷன் தான் விரும்பினால் மறுபடியும் பிறந்துவிடலாம் என்று எதிர்பார்க்கக்கூடாது. ஏனெனில் மனுஷனுடைய மறுபிறப்பு தேவனால் மாத்திரமே உண்டாகும். தேவனாலே பிறந்தவர்கள் மாத்திரமே தேவனுடைய பிள்ளைகளாக ஆவார்கள். தேவனுடைய கிருபை நமக்கு கொடுக்கப்பட்டால் மாத்திரமே, நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருக்க வேண்டும் என்னும் ஆர்வம் நமக்குள் உண்டாகும். நம்முடைய மறுபிறப்பின் சித்தங்கூட தேவனுடைய கிருபையினால் மாத்திரமே உண்டாகிறது.

நம்முடைய மறுபிறப்பு தேவனாலே உண்டாகிறது. நாம் தேவனால் பிறக்கும்போது மாத்திரமே மறுபடியும் பிறக்கிறோம். இது ஒரு புதிய பிறப்பு. நம்முடைய மறுபிறப்பு தேவனுடைய வார்த்தையின் பிரகாரம் உண்டாகிறது. நம்முடைய மறுபிறப்புக்கு தேவ ஆவியானவரே காரண கர்த்தாவாக இருக்கிறார்.

"பாவஞ் செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்; ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான், பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார். தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான், ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது; அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யமாட்டான். இதினாலே தேவனுடைய பிள்ளைகள் இன்னாரென்றும், பிசாசின் பிள்ளைகள் இன்னாரென்றும் வெளிப்படும்; நீதியைச் செய்யாமலும் தன் சகோதரனில் அன்புகூராமலும் இருக்கிற எவனும் தேவனால் உண்டானவனல்ல" (1யோவா 3:8-10).

"இயேசுவானவரே கிறிஸ்து என்று விசுவாசிக்கிற எவனும் தேவனால் பிறந்திருக்கிறான்; பிறப்பித்தவரிடத்தில் அன்புகூருகிற எவனும் அவரால் பிறக்கப்பட்டவனிடத்திலும் அன்புகூருகிறான். நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளும்போது, தேவனுடைய பிள்ளைகளிடத்தில் அன்புகூருகிறோமென்று அறிந்து கொள்ளுகிறோம். நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்பு கூருவதாம்; அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல. தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்" (1யோவா 5:1-4).

**வார்த்தை மாம்சமாயிற்று**

**அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது (யோவா 1:14).**

வேதாகமத்திலுள்ள வசனங்களிலெல்லாம் இந்த வசனம் மிகவும் விசேஷமானதாகும். இயேசுகிறிஸ்துவின் மனுஷ அவதாரத்தை இந்த வசனம் மிகவும் தெளிவாக விவரிக்கிறது. காலம் நிறைவேறினபோது, தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்து இந்த பூமியிலே ஒரு கன்னிகையினிடத்தில் பிறக்கிறார்.

இது வரையிலும் இயேசுகிறிஸ்துவினுடைய மாம்ச சுபாவம் நமக்கு மறைவாயிருந்தது. வார்த்தை மாம்சமாயிற்று. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாக இருக்கிறோம். இயேசுகிறிஸ்துவும் நம்மைப்போல மனுஷரில் ஒருவராக அவதரிக்க வேண்டும் என்பதற்காக, அவரும் நம்மைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார் (எபி 2:14). யோவான் இயேசுகிறிஸ்துவின் மனுஷ சுபாவத்தை விவரிக்கும்போது அவர் தேவனாக இருந்தார் என்றும், அதே வேளையில் அவர் மாம்சமானார் என்றும் எழுதுகிறார். இயேசுகிறிஸ்து தம்மைத் தாமே மனுஷவர்க்கத்தின் பாடுகளுக்கும் துன்பங்களுக்கும், வேதனைகளுக்கும் தம்மை உட்படுத்திக்கொள்கிறார்.

## அதிகாரம் - 1

மனுஷனுடைய மாம்சம் பாவமாம்சம் என்று விவரிக்கப்படுகிறது. இது பாவத்தினால் கறைப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவும் தம்மை மனுஷனாக வெளிப்படுத்தும்போது இந்த பாவமாம்சத்தின் சாயலாகவே வெளிப்படுத்தியிருக்கிறார் (ரோம 8:3). அவர் பாவம் அறியாதவர். ஆயினும் அவர் நமக்காக பாவமானார் (2கொரி 5:21). தம்முடைய மாம்சத்தில் இயேசுகிறிஸ்து பாவத்தை ஆக்கினைக்குள்ளாக தீர்த்திருக்கிறார் (ரோம 8:3).

கர்த்தருடைய வார்த்தை மாம்சமாயிற்று. இயேசுகிறிஸ்து நித்திய காலமாக வாசம்பண்ணுகிறவர். அவர் மாம்சமாக ஆனபோதிலும், அவர் வார்த்தையாக இருப்பதிலிருந்து விலகிச் சென்றுவிடவில்லை. அவர் வார்த்தையாகவும் இருக்கிறார். மாம்சமாகவும் இருக்கிறார். அவர் நம் மத்தியிலே வாசம்பண்ணுகிறார்.

இயேசுகிறிஸ்து தம்மீது மனுஷசுபாவத்தை ஏற்றுக்கொள்ளும்போது, அவர் இந்த உலகத்திலுள்ள மற்ற மனுஷரைப்போலவே வாழ்வதற்காக இந்த பூமிக்கு வந்தார். மனுஷருடைய சூழ்நிலைகளுக்கும், வரையறைகளுக்கும் அவர் தம்மை உட்படுத்திக்கொண்டார். மனுஷருடைய சரீரத்திற்கும் இயேசுகிறிஸ்துவின் சரீரத்திற்கும் வித்தியாசம் எதுவுமில்லை. அவர் நம்மைப்போன்ற சரீரத்தை உடையவரானார். அவர் இந்த பூமியில் இருந்தபோது நம்மைப்போன்ற சரீரத்திலேயே இருந்து, நாம் வாசம்பண்ணுகிற இந்த உலகத்தில், மற்ற மனுஷர்கள் மத்தியில் ஜீவித்தார்.

இந்த உலகம் தேவனுக்கு விரோதமாக கலகம்பண்ணி கறைபட்டிருக்கிறது. தன்னுடைய பாவத்தினால் தேவனைவிட்டு பிரிந்துபோயிற்று. மனுஷராகிய நாமோ இந்த பூமியில் புழுக்களைப்போல இருக்கிறோம். பரலோகத்தில் வாசம்பண்ணுகிற இயேசுகிறிஸ்து, இந்த பூமியில் ஒரு மனுஷனாக, நம்மோடு வாசம்பண்ண வேண்டும் என்பதற்காக அவர் நம்மைப்போல மனுஷசாயலை ஏற்றுக்கொண்டார்.

நம்முடைய கண்களை ஏறெடுத்து பரலோகத்தை நோக்கிப் பார்க்கும்போது, இந்த பிரபஞ்சத்தின் பாவமும், சாபமும் நமக்குத் தெரியவரும். நம்முடைய மாம்சம் பாவத்தில் சீரழிந்திருப்பதை நாம் உணர முடியும். நம்முடைய மாம்சத்திற்கு எந்தவிதமான மேன்மையுமில்லை. இந்த பூமியில் வாசம்பண்ணுவதற்காகவே நாம் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம். ஆனால் இயேசுகிறிஸ்துவோ பரலோகத்திற்குரியவர். இந்த பூமியிலுள்ள மனுஷருடைய மாம்சம் பாவமானதாக இருக்கிறபோதிலும், அவர் நம்மோடுகூட வாசம்பண்ண வேண்டும் என்பதற்காக, மனுஷருடைய பாவமாம்சத்தை அவர் தம்மீது ஏற்றுக்கொண்டார்.

கர்த்தராகிய வார்த்தை நித்தியமானது. இந்த வார்த்தை மாம்சமாயிற்று. தம்முடைய மனுஷ சாயலில் இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் வாசம்பண்ணினார். தேவன் நமக்கு முன்மாதிரியாக ஜீவித்துக் காண்பித்ததுபோலவே நாமும் ஜீவிக்க வேண்டும். இயேசுகிறிஸ்து இந்த பூமியில் வாசம்பண்ணியபோது அவர் யூதர்கள் மத்தியிலே வாசம்பண்ணுவதைத் தெரிந்துகொண்டார். ஆனால் அவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்மீது பிரியமாக இருக்கவில்லை. என்றாலும், இந்த சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் அவர் யூதர்கள் மத்தியிலே தொடர்ந்து வாசம்பண்ணினார்.

இயேசுகிறிஸ்து நம் மத்தியிலே வாசம்பண்ணினார். அவர் இந்த உலகத்தில் வாசம்பண்ணினார். ஆயினும் அவர் இந்த உலகத்திற்குரியவரல்ல. நமக்குள்ளே வாசம்பண்ணினார் என்னும் வார்த்தைக்கு வியாக்கியானம் கூறும்போது, அவர் ஒரு ஆசரிப்புக் கூடாரத்தில் வாசம்பண்ணுவதுபோல நம் மத்தியிலே வாசம்பண்ணினார் என்று பொருள் கூறவேண்டும். மேய்ப்பர்கள் கூடாரங்களில் தங்கியிருப்பார்கள். கூடாரம் தங்குவதற்கு வசதியான இடமல்ல. கூடாரம் மிகவும் சாதாரணமான, எளிமையான வாசஸ்தலம். இயேசுகிறிஸ்துவும், பரலோகத்திற்குரியவராக இருக்கிறபோதிலும், இந்த பூமியில் மனுஷனாக அவதரித்தபோது, அவர் தம்மையே தாழ்த்தி, ஒரு மேய்ப்பன் தன் ஆடுகளுக்காக கூடாரத்தில் தங்கியிருப்பதுபோல, இயேசுகிறிஸ்துவும் தம்முடைய பிள்ளைகளுக்காக, ஒரு கூடாரத்தில் தங்கியிருப்பதுபோல இந்த உலகத்தில் நம் மத்தியிலே தங்கியிருந்தார்.

## அதிகாரம் - 1

இந்த உலகம் அவருக்கு மேன்மையான வாசஸ்தலமோ, அல்லது மகிமையான வாசஸ்தலமோ அல்ல. இது அவருக்கு கூடாரம் போன்றது. ஆயினும் நமக்காகவே இந்த கூடாரத்தில் தங்குவதற்கு இயேசுகிறிஸ்து சித்தங்கொண்டார். இயேசுகிறிஸ்து இந்த பூமியிலிருந்தபோது, அவர் ஒரு பெரிய மாளிகையில் வாசம்பண்ணுவதுபோல வாசம்பண்ணாமல், சாதாரண கூடாரத்தில் தங்கியிருப்பதுபோலவே இந்த உலகத்தில் மனுஷர் மத்தியில் வாசம்பண்ணினார். இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்தில் பிரயாணம் பண்ணியபோது, கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம் மோசே ஆசரிப்புக் கூடாரத்தை நிறுவினார். தேவனுடைய ஷேக்கைனா மகிமை ஆசரிப்புக் கூடாரத்தை நிரப்பிற்று. தேவன் தமது கூடாரத்தில் வந்து வாசம்பண்ணினார். பழைய ஏற்பாட்டுக்காலத்தில் கர்த்தர் ஆசரிப்புக்கூடாரத்தில் தங்கியிருந்ததுபோல, புதிய ஏற்பாட்டுக்காலத்தில் தேவனாகிய கர்த்தர் இயேசுகிறிஸ்துவினுடைய மாம்ச சுபாவத்தில் இந்த பூமியில் வாசம்பண்ணுகிறார். ஆகையினால்தான் தேவனிடத்தில் நாம் விண்ணப்பம்பண்ணும்போது, நம்முடைய விண்ணப்பங்கள் எல்லாவற்றையும் இயேசுகிறிஸ்துவின் மூலமாகவே ஏறெடுக்கிறோம்.

இயேசுகிறிஸ்து இந்த பூமியில் வந்து மனுஷனாக வாசம்பண்ணினாலும், அவருடைய தெய்வீக மகிமை, இயேசுகிறிஸ்துவின் மாம்ச சரீரத்தையும் ஊடுருவிச்சென்று வெளிப்பட்டது. இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையை ஜனங்கள் கண்டார்கள். அந்த மகிமை பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது. இயேசுகிறிஸ்து இந்த பூமியில் நமக்குள்ளே வாசம்பண்ணியபோது, அவர் தம்முடைய மாம்சத்தில் கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம்பண்ணினார்.

இந்த பூமிக்கு சூரியன் மூலமாகவே வெளிச்சம் வருகிறது. வானத்தில் மேகங்கள் சூழ்ந்திருந்தாலும், நமக்குக் கிடைக்கும் வெளிச்சம் சூரியன் மூலமாகவே வருகிறது. அதுபோலவே இயேசுகிறிஸ்துவே தம்முடைய பிதாவினுடைய மகிமையின் பிரகாசமாகயிருக்கிறார்.

ஆகையினால்தான் இயேசுகிறிஸ்துவை தேவனுடைய மகிமைப் பிரகாசம் என்று அழைக்கிறோம். இயேசுகிறிஸ்து தம்முடைய மாம்ச சரீரத்தில் இருந்தபோது, இந்த மகிமைப்பிரகாசத்தை சிலர் கண்டு அதற்கு சாட்சி கொடுத்திருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவினுடைய மாம்சம் என்னும் திரையின் வழியாக, அவருடைய மகிமைப்பிரகாசத்தை அவருடைய சீஷர்களும், அவரோடுகூட வாசம்பண்ணியவர்களும் கண்டார்கள். இயேசுகிறிஸ்துவின் மகிமைக்கு முன்பாக தாங்கள் பலவீனமானவர்கள் என்பதை அவரோடு கூடயிருந்தவர்கள் புரிந்துகொண்டார்கள். இயேசுகிறிஸ்துவோ மனுஷர் மத்தியிலே இருந்தபோது, அவருடைய மகிமைப்பிரகாசம் ஒருபோதும் குறைந்துபோகவில்லை. அது பலவீனப்படவில்லை. இயேசுகிறிஸ்துவோடு கூடயிருந்தவர்கள் அவருடைய மகிமையில் பல அம்சங்களைக் கண்டார்கள். அவருடைய தெய்வத்துவத்தின் மகிமையை அவருடைய சீஷர்கள் கண்டபோது, அவரோடு கூடயிருந்த மற்றவர்களோ அவருடைய மனுஷ சுபாவத்தை மாத்திரமே கண்டார்கள். இயேசுகிறிஸ்துவின் மகிமையை கணக்கூடாதவாறு அவருடைய மாம்ச சரீரம் அவர்களுக்கு ஒரு திரையைப்போல இருந்தது. இந்த திரையை ஊடுருவிப்பார்த்து, அவருடைய தெய்வத்துவத்தை காண்பதற்கு அவர்களுடைய மனக்கண்கள் பிரகாசமுள்ளதாக இல்லை.

இயேசுகிறிஸ்துவின் மகிமையைக் குறித்து எழுதும்போது, யோவான் "அவருடைய மகிமையைக் கண்டோம்" என்று எழுதுகிறார். மற்றவர்கள் மூலமாக இயேசுகிறிஸ்துவின் மகிமையை யோவானும், இயேசுகிறிஸ்துவின் மற்ற சீஷர்களும் தங்கள் காதுகளால் பிறர் மூலமாக கேள்விப்படவில்லை. இவர்கள் தங்களுடைய சொந்தக்கண்களால் கிறிஸ்துவின் மகிமையைக் கண்டார்கள். "கண்டோம்" என்னும் வார்த்தைக்கு பயன்படுத்தப்பட்டிருக்கும் கிரேக்க வார்த்தைக்கு பொருள் கூறும்போது, "பார்வையை தொடர்ந்து ஒரு காரியத்தின்மேல் பதித்திருப்பது" என்று அர்த்தம் சொல்ல வேண்டும். இயேசுகிறிஸ்துவின் மகிமையை சீஷர்கள் ஒரே ஒரு தரம் பார்த்துவிட்டு, அதன்பின்பு அந்த மகிமையை அவர்களால் காணமுடியவில்லையென்று இதற்கு பொருள் கூறக்கூடாது. அவர்கள் கிறிஸ்துவின் மகிமையோடுகூட வாசம்பண்ணினார்கள் ஒவ்வொரு நாளும் கிறிஸ்துவின் மகிமையை தங்கள் கண்களால் கண்டார்கள்.

## அதிகாரம் - 1

இயேசுகிறிஸ்துவைக் குறித்து யோவான் சாட்சியாக அறிவிக்கும்போது "ஆதிமுதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப்பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற ஜீவவார்த்தையைக்குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம்" (1யோவா 1:1) என்று எழுதுகிறார்.

இயேசுகிறிஸ்துவின் மகிமை, பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது. வார்த்தையின் மகிமை மாம்சமாயிற்று. இந்த மகிமை தேவனுடைய ஒரே பேறானவருடைய மகிமையாயிற்று. இந்த மகிமைக்கு ஒப்பான மகிமை வேறு எதுவுமல்ல. இது வேறு யாருடைய மகிமையுமல்ல. இது பிதாவின் ஒரே பேறானவருடைய மகிமை மாத்திரமே ஆகும். இயேசுகிறிஸ்துவே பிதாவின் ஒரே பேறான குமாரனாக இருக்கிறார். ஆகையினால் சீஷர்கள் கண்ட இந்த மகிமை இயேசுகிறிஸ்துவின் மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.

கர்த்தரை விசுவாசிக்கிறவர்கள் கர்த்தருடைய பிள்ளைகளாகுமாறு சிலாக்கியம் பெற்றிருக்கிறார்கள். இது புத்திர சுவீகார சிலாக்கியத்தினால் உண்டாயிற்று. விசுவாசிகள் தங்கள் மறுஜென்மத்தினால் தேவனுடைய பிள்ளைகளாகிறார்கள். விசுவாசிகள் தேவனுடைய பிள்ளைகளாகும்போது, தேவனுடைய சுபாவத்திற்கு ஏற்ற சுபாவத்தை பெற்றுக்கொள்கிறார்கள். தேவனுடைய பரிபூரணத்தின் சாயலை பெற்றுக்கொள்ளும் சிலாக்கியம் பெறுகிறார்கள்.

ஆனால் இயேசுகிறிஸ்துவோ எப்போதுமே தேவனுடைய சாயலாகவே இருக்கிறார். தேவனுடைய பரிபூரணத்தைப் பெற்றுக்கொள்வதற்காக அவர் மறுபடியும் பிறக்க வேண்டிய அவசியமில்லை. தேவனுடைய பிள்ளையாவதற்காக இயேசுகிறிஸ்துவுக்கு புத்திர சுவீகாரத்தின் சிலாக்கியம் தேவைப்படவில்லை. ஏனெனில் அவர் இந்த பூமியில் மனுஷராக இருந்தாலும், அவர் தேவனாகவும் இருக்கிறார்.

மறுபடியும் பிறக்காமலேயே அவர் தேவனுடைய பரிபூரணத்தில் இருக்கிறார். புத்திர சுவீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமலேயே அவர் தேவனுடைய ஒரே பேறான குமாரனாக இருக்கிறார்.

இயேசுகிறிஸ்துவுக்கு இப்படிப்பட்ட விசேஷித்த சுபாவங்கள் இருப்பதை அவரோடு கூடவேயிருந்த அவருடைய சீஷர்கள் கண்டார்கள். தாங்கள் கண்டது தேவனுடைய மகிமை என்று அவர்கள் சாட்சி கூறுகிறார்கள். இயேசுகிறிஸ்துவின் மகிமையைக் கண்டபோது அவர் தேவனுடைய ஒரே பேறான குமாரன் என்று அவர்கள் சாட்சி கொடுக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் உபதேசத்திலும், அவர் நடப்பித்த அற்புதங்களிலும், அவருடைய பரிசுத்தத்திலும், அவருடைய தெய்வீக மகிமை வெளிப்பட்டது. தேவனுடைய மகிமை பரிசுத்தத்திலும், நன்மையிலும், ஜனங்களுக்கு பிரயோஜனமாக வெளிப்பட்டது அவருடைய மகிமை பரிபூரண மகிமையாக இருந்தது.

தேவனுடைய நன்மையே அவருடைய மகிமை. ஆகையினால் அவர் எல்லா இடங்களுக்கும் நன்மை செய்கிறவராகவே சுற்றித் திரிந்தார். இயேசுகிறிஸ்து மறுரூப மலையில் மறுரூபமானபோது, அந்த சம்பவத்திற்கு யோவானும் சாட்சியாக இருந்தார். அவர் மறுரூபமான மகிமையை தன்னுடைய கண்களால் கண்டார். "அவருடைய மகிமையைக் கண்டோம்" என்று யோவான் இங்கு குறிப்பிடும்போது, அது ஒருவேளை இயேசுகிறிஸ்து மறுரூபமானபோது சீஷர்கள் கண்ட அவருடைய மகிமையாக இருக்கலாம்.

இயேசுகிறிஸ்து இந்த பூமியில் மனுஷர் மத்தியில் வாசம்பண்ணுவதினால் மனுக்குலத்திற்கு மிகப்பெரிய ஆசீர்வாதம் கிடைத்திருக்கிறது. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவன் ஆசரிப்புக் கூடாரத்தில் வாசம்பண்ணினார். அப்போது அவர் தம்மை பிரமாணங்கள் மூலமாகவும், கற்பனைகள் மூலமாகவும், கட்டளைகள் மூலமாகவும் தம்மை வெளிப்படுத்தினார். ஆனால் புதிய ஏற்பாட்டுக் காலத்திலோ, இயேசுகிறிஸ்து மனுஷ சரீரமாகிய கூடாரத்தில் வாசம்பண்ணியபோது அவர் தம்மை தேவ கிருபையின் மூலமாக வெளிப்படுத்துகிறார். பழைய ஏற்பாட்டில் அடையாளமாக இருந்தது, புதிய ஏற்பாட்டில் சத்தியமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

## அதிகாரம் - 1

வார்த்தை மாம்சமாயிற்று. அந்த மாம்சமாகிய இயேசுகிறிஸ்து கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராயிருந்தார். மனுஷர் மத்தியில் அவர் வாசம்பண்ணியபோது அவரிடத்தில் இவ்விரண்டு சுபாவங்களும் பரிபூரணமாக இருந்தது. ஆனால் மனுஷரோ கிருபையிலும் சத்தியத்திலும் குறைவுள்ளவர்களாக இருக்கிறார்கள். நமக்கு இவ்விரண்டுமே தேவைப்படுகிறது. ஆனால் இயேசுகிறிஸ்துவோ சத்தியமும் கிருபையும் பரிபூரணமாக நிறைந்தவராக இருக்கிறார். அவர் கிருபை நிறைந்தவராக இருப்பதினால், அவர் நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசும் தகுதியுடைவராக இருக்கிறார். அவர் சத்தியம் நிறைந்தவராக இருந்ததினால் நமக்கு உபதேசம் பண்ணுவதற்கு அவர் தகுதியுடையவராக இருக்கிறார். அவரிடத்தில் அறிவின் நிறைவும் உள்ளது. இரக்கத்தின் நிறைவுமுள்ளது.

### யோவான் கொடுத்த சாட்சி
### யோவா 1 : 15-18

**யோவா 1:15. யோவான் அவரைக்குறித்துச் சாட்சி கொடுத்து: எனக்குப் பின்வருகிறவர் எனக்கு முன்னிருந்தவர், ஆகையால் அவர் என்னிலும் மேன்மையுள்ளவர் என்று நான் சொல்லியிருந்தேனே, அவர் இவர்தான் என்று சத்தமிட்டுக் கூறினான்.**

**யோவா 1:16. அவருடைய பரிபூரணத்தினால் நாம் எல்லாரும் கிருபையின்மேல் கிருபை பெற்றோம்.**

**யோவா 1:17. எப்படியெனில் நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின.**

**யோவா 1:18. தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்.**

**எனக்கு முன்னிருந்தவர்**

**யோவான் அவரைக்குறித்துச் சாட்சி கொடுத்து: எனக்குப் பின்வருகிறவர் எனக்கு முன்னிருந்தவர், ஆகையால் அவர் என்னிலும் மேன்மையுள்ளவர் என்று நான் சொல்லியிருந்தேனே, அவர் இவர்தான் என்று சத்தமிட்டுக் கூறினான் (யோவா 1:15).**

இயேசுகிறிஸ்துவைக் குறித்து யோவான்ஸ்நானன் சாட்சி கொடுக்கும் சம்பவம் இந்த சுவிசேஷத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அவரைப்பற்றி சாட்சி கொடுக்கும்போது யோவான்ஸ்நானன் "சத்தமிட்டுக் கூறுகிறான். இவனைப்பற்றி குறிப்பிடும்போது இவன் வனாந்தரத்தில் கூப்பிடுகிற ஒருவனுடைய சத்தம்" என்று எழுதப்பட்டிருக்கிறது. அதற்கு ஏற்ற பிரகாரம் இவன் இயேசுவைப்பற்றி சாட்சி கூறும்போது, அதை மெதுவாக கூறாமல், சத்தமிட்டுக் கூறுகிறான்.

பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் கர்த்தர் தங்களுக்கு வெளிப்படுத்திய வார்த்தைகளை சத்தமிட்டுக் கூறினார்கள். ஜனங்களுடைய பாவங்களை அவர்களுக்கு உணர்த்துவதற்கு சத்தமிட்டு பேசினார்கள். அவர்களைப்போலவே புதிய ஏற்பாட்டு தீர்க்கதரிசியாகிய யோவான்ஸ்நானனும் ஜனங்களிடத்தில் சத்தமிட்டுக் கூறுகிறான். பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் ஜனங்களுக்கு அவர்களுடைய பாவங்களைக் காண்பித்தார்கள். யோவான்ஸ்நானனோ ஜனங்களுக்கு அவர்களுடைய இரட்சகரைக் காண்பிக்கிறான்.

இயேசுகிறிஸ்துவைப் பற்றி யோவான்ஸ்நானன் சாட்சி கூறும்போது ஒழிவு மறைவாக கூறவில்லை. எல்லோரும் கேட்கும் விதத்தில் வெளிப்படையாகவே கூறுகிறான். சமுதாயத்தில் எல்லா சூழ்நிலைகளிலுமுள்ள ஜனங்கள் தன்னுடைய சாட்சியை கேட்கும் வண்ணமாக, யோவான்ஸ்நானன் சத்தமிட்டு வெளிப்படையாகவே கூறுகிறான். இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சாட்சியை அறிவிப்பதற்கு இவன் இருதய வாஞ்சையுள்ளவனாகவும், விடுதலை உள்ளவனாகவும் இருக்கிறான்.

யோவான்ஸ்நானன் இயேசுகிறிஸ்துவைக் குறித்து சாட்சி கூறும்போது, தான் கூறும் சத்தியம் மெய்யானது, உறுதியானது என்பதை அறிவித்து, அந்த சத்தியத்தில் தனக்குள்ள வாஞ்சையையும் வெளிப்படுத்துகிறான்.

யோவான்ஸ்நானன் தன்னுடைய ஊழியத்தின் ஆரம்பகாலத்தில், தனக்குப் பின்னாக வருகிற ஒருவரைப்பற்றி சாட்சியாக அறிவித்தான். தன்னுடைய வார்த்தையைக் கேட்கும் ஜனங்கள் அவருடைய வருகைக்காக எதிர்பார்க்க வேண்டுமென்றும், தான் அவருக்கு வழியை ஆயத்தம்பண்ணுகிறவன் என்றும் ஏற்கெனவே அறிவித்திருக்கிறான். தான் ஏற்கெனவே கூறியது இயேசுகிறிஸ்துவைப்பற்றித்தான் என்று இப்போது யோவான்ஸ்நானன் சாட்சி கூறுகிறான். யோர்தான் நதியில் இயேசுகிறிஸ்து யோவான்ஸ்நானனால் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்.

## அதிகாரம் - 1

"நான் சொல்லியிருந்தேனே, அவர் இவர் தான்" என்று எல்லா ஜனங்களுக்கும் கேட்கும் வண்ணமாக இயேசுகிறிஸ்துவைக் குறித்து வெளிப்படையாகவே சாட்சி கூறுகிறான். பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் வரப்போகிற மேசியாவைக் குறித்து முன்னறிவித்தார்கள். ஆனால் அவர்களுடைய முன்னறிவிப்பு பொதுவானதாக இருந்தது. இவர்தான் மேசியா என்று எந்த தீர்க்கதரிசியும் ஒரு நபரைக் குறிப்பிட்டு முன்னறிவிக்கவில்லை. ஆனால் யோவான்ஸ்நானனோ, இயேசுகிறிஸ்துவை குறிப்பிட்டு "நான் சொல்லியிருந்தேனே, அவர் இவர்தான்" என்று மிகவும் தெளிவாக மேசியாவைப்பற்றி அறிவிக்கிறான்.

இயேசுகிறிஸ்து தனக்குப் பின்வருகிறவர் என்று யோவான்ஸ்நானன் கூறியிருந்தாலும், அவரைப்பற்றி மிகவும் மேன்மையாகப் பேசுகிறான். அவர் தனக்கு முன்னிருந்தவர் என்றும், தன்னிலும் மேன்மையுள்ளவர் என்றும் சொல்கிறான். தான் அவருக்கு வழியை ஆயத்தம்பண்ணுகிறவன் மாத்திரமே என்று கூறி தன்னையே தாழ்த்துகிறான். தேவதூதன் மரியாளிடம் இயேசுகிறிஸ்துவின் பிறப்பை குறித்து முன்னறிவித்தபோது "அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்" (லூக் 1:32) என்று கூறினான். யோவான்ஸ்நானனுடைய தகப்பனாகிய சகரியா பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, யோவான்ஸ்நானனைப்பற்றி தீர்க்கதரிசனமாக கூறும்போது "நீயோ பாலகனே, உன்னதமானவருடைய தீர்க்கதரிசி என்னப்படுவாய்; நீ கர்த்தருக்கு வழிகளை ஆயத்தம்பண்ணவும், நமது தேவனுடைய உருக்கமான இரக்கத்தினாலே அவருடைய ஜனத்துக்குப் பாவமன்னிப்பாகிய இரட்சிப்பைத் தெரியப்படுத்தவும், அவருக்கு முன்னாக நடந்துபோவாய்" (லூக் 1:76,77) என்று முன்னறிவித்தார்.

ஸ்திரீகளில் பிறந்தவர்களில் யோவான்ஸ்நானன் பெரியவன். ஆயினும் இவன் தன்னை பெரியவனாக காண்பிக்காமல், இயேசுகிறிஸ்து தன்னிலும் மேன்மையுள்ளவர் என்று கூறி கிறிஸ்துவை மகிமைப்படுத்துகிறான். தன்னைத் தாழ்த்துகிறான். தன்னுடைய சொந்த விருப்பம், ஆசை, திட்டம் ஆகிய எல்லாவற்றையும்விட இயேசுகிறிஸ்துவின் சித்தத்தை செய்வதே தனக்குப் பிரியமானது என்பதை யோவான்ஸ்நானன் தெளிவுபடுத்துகிறான்.

கிறிஸ்துவின் ஊழியக்காரர்களாகிய நாமும் கூட, நமக்கு சொந்தமான விருப்பம், ஆசை, திட்டம் ஆகியவை இருந்தாலும், இவையெல்லாவற்றையும்விட கிறிஸ்துவின் சித்தத்தையும் திட்டத்தையும் நிறைவேற்றுவதற்கு நாம் பூரணமாக ஊழியம் செய்யவேண்டும்.

இயேசுகிறிஸ்து யோவான்ஸ்நானனுக்கு பின் வருகிறவர். ஆயினும் அவர் அவனுக்கு முன்னிருந்தவர். தேவன் தம்முடைய வரங்களை தம்முடைய விருப்பத்தின் பிரகாரம் பகிர்ந்து கொடுக்கிறார். வேதாகம வரலாற்றில் பிந்தி வந்தவர்களில் அநேகர், தங்களுக்கு முந்தி வந்தவர்களைவிட அதிகமாக ஆசீர்வதிக்கப் பட்டிருக்கிறார்கள். அப்போஸ்தலர் பவுல், மற்ற அப்போஸ்தலர்களைவிட, கர்த்தருடைய ஊழியத்திற்கு பிந்தி வந்திருந்தாலும், அவர் மற்றவர்களைவிட அதிகமாக ஆசீர்வதிக்கப்பட்டார்.

இயேசுகிறிஸ்து தனக்கு முன்னிருந்தவர் என்பதை யோவான்ஸ்நானன் தெளிவுபடுத்துகிறார். இயேசுகிறிஸ்து அநாதி காலமாக இந்த பூமியில் இருக்கிறவர். அவருக்குத் தோற்றமும் முடிவுமில்லை. "ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நானிருக்கிறேன்" (யோவா 8:58) என்று இயேசுகிறிஸ்து தம்மைப்பற்றி வெளிப்படுத்துகிறார். புதிய ஏற்பாட்டுக்காலத்தில், யோவான்ஸ்நானன் பிறந்தற்கு பின்னாக, இயேசுகிறிஸ்து கன்னி மரியாளிடத்தில் பிறக்கிறார். ஆகையினால் இயேசு யோவானுக்குப் பின்வருகிறவர். ஆயினும் இயேசுகிறிஸ்துவோ நித்தியகாலமாக இருக்கிறவர். அதிகாரத்தையும் வல்லமையையும் பொறுத்தளவில் இயேசுகிறிஸ்து சர்வவல்லமையுள்ளவர். இயேசுவை யோவான் தன்னுடைய ஆண்டவர் என்றும், தான் அவருக்கு ஊழியம் செய்ய வந்திருக்கும் அவருடைய ஊழியக்காரனென்றும், அவருடைய செய்தியை சத்தமிட்டு அறிவிக்கிறவன் என்றும் தன்னைப்பற்றி கூறுகிறார். இயேசுவே பெரியவர். இயேசு உயர்ந்திருக்கவும், தான் தாழ்ந்திருக்கவும் வேண்டுமென்பது யோவான்ஸ்நானனின் இருதய வாஞ்சை.

**கிருபையின் மேல் கிருபை**

**அவருடைய பரிபூரணத்தினால் நாம் எல்லாரும் கிருபையின்மேல் கிருபை பெற்றோம் (யோவா 1:16).**

## அதிகாரம் - 1

அப்போஸ்தலர் யோவான் இயேசுகிறிஸ்துவைப்பற்றி இன்னும் தொடர்ந்து விவரிக்கிறார். யோவான்ஸ்நானனைக்குறித்து இந்த சுவிசேஷத்தில் மறுபடியும் யோவா 1:19-ஆவது வசனத்திலிருந்து எழுதுகிறார். அதுவரையிலும் யோவா 1:16-18 ஆகிய மூன்று வசனங்களிலும், இயேசுகிறிஸ்துவின் தெய்வத்துவத்தை விவரிக்கிறார்.

குமாரனாகிய வார்த்தை மாம்சமாகி கிருபையினாலும், சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம்பண்ணினார் என்று இந்த சுவிசேஷத்தில் எழுதப்பட்டிருக்கிறது (யோவா 1:14). இயேசுகிறிஸ்துவின் கிருபையை அப்போஸ்தலனாகிய யோவான் இங்கு விவரிக்கிறார். அவருடைய பரிபூரணத்தினால் நாம் எல்லாரும் கிருபையின் மேல் கிருபை பெற்றோம் என்று தெளிவுபடுத்துகிறார். வார்த்தை இயேசுவாக மாம்சமாகி கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்திருந்தார். பரிபூரணமான ஆசீர்வாதங்கள் அனைத்திற்கும் அவரே ஆதாரமாக இருக்கிறவர். அவரிடமிருந்தே நாம் சகலவற்றையும் பெற்றுக்கொள்கிறோம்.

விசுவாசிகள் எல்லோரும் இயேசுகிறிஸ்துவை தங்களுடைய ஆண்டவராகவும், இரட்சகராகவும் பெற்றிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் அவரிடமிருந்து கிருபைகளையும் ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்வார்கள். அவருடைய பரிபூரணத்திலிருந்தே மெய்யான விசுவாசிகள் எல்லோரும் எல்லாவற்றையும் பெற்றுக்கொள்கிறோம். ஒருவர் எவ்வளவு பிரசித்திப் பெற்ற ஊழியக்காரராக இருந்தாலும் இயேசுகிறிஸ்து இல்லாமல் அவரால் ஒன்றும் செய்யமுடியாது. இயேசு இல்லாமல் அவரால் ஜீவிக்கவே முடியாது. அதேவேளையில் ஒரு விசுவாசி எவ்வளவு பலவீனமானவனாகவும், சாதாரணமானவனாகவும் இருந்தாலும் அவன் இயேசுகிறிஸ்துவினால் பிழைப்பான்.

நமக்குள் பெருமை உண்டாகக்கூடாது என்று இந்த வசனம் நம்மை எச்சரிக்கிறது. நமக்குள் எவ்வளவு மேன்மையான காரியங்கள் இருந்தாலும் அது நமது சுயமுயற்சியினால் நமக்குக் கிடைத்ததல்ல.

நம்மிடத்தில் உள்ளது எல்லாவற்றையும் நாம் இயேசு கிறிஸ்துவினிடத்திலிருந்தே பெற்றுக் கொள்கிறோம். அவர் தனது பரிபூரணத்திலிருக்கிறார்.

அவரிடத்தில் கேட்கும்போது நாம் பெற்றுக்கொள்வோமா அல்லது பெற்றுக்கொள்ளமாட்டோமா என்னும் சந்தேகமோ, பயமோ நமக்குத் தேவையில்லை. ஏனெனில் கேட்கிறவன் எவனும் அவரிடத்திலிருந்து பெற்றுக்கொள்கிறான். அவரிடத்தில் கேட்கும்போது அவர் நம்முடைய குறைவுகளையெல்லாம் நீக்கி, நம்முடைய தேவைகள் அனைத்தையும் தம்முடைய பரிபூரணத்தினால் நிரப்புவார்.

நாம் எல்லோருமே இயேசு கிறிஸ்துவினுடைய பரிபூரணத்தினால் கிருபையின் மேல் கிருபை பெற்றிருக்கிறோம். நாம் இயேசுகிறிஸ்துவிடமிருந்து பெற்றுக் கொள்ளும் அனைத்தையும் "கிருபை" என்னும் ஒரே வார்த்தையினால் விவரிக்கலாம். தேவன் நமக்குக் கொடுக்கும் மிகப்பெரிய ஈவு கிருபை. இதில் விலைமதிக்க முடியாத எல்லா ஐசுவரியங்களும் அடங்கியிருக்கிறது. நாம் தேவனிடத்தில் பெற்றுக்கொள்ளும்போது, கிருபைக்கு குறைவாக ஒன்றையும் பெற்றுக்கொள்வதில்லை. ஆகையினால்தான் அப்போஸ்தலனாகிய யோவான் இந்த வசனத்தில் "கிருபையின்மேல் கிருபை" என்னும் வார்த்தையை பயன்படுத்துகிறார்.

நாம் தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் ஆசீர்வாதம் "கிருபை" என்று அழைக்கப்படுகிறது. தேவன் நம்மீது வைத்திருக்கும் அவருடைய நல்ல சித்தமும், அவர் நமக்குச் செய்திருக்கும் நல்ல கிரியையும் "கிருபை" என்று அழைக்கப்படுகிறது. தேவனுடைய நல்ல சித்தம் நமக்கு நற்கிரியைகளைச் செய்கிறது. தேவனுடைய நன்மைகளை நமக்குள் பெற்றுக்கொள்ளும்போது, அவர் நம்மீது வைத்திருக்கும் அன்பும், கரிசனையும் நமக்கு வெளிப்படுத்தப்படுகிறது. தேவனுடைய நன்மையை நாம் ஒருமுறை பெற்றுக்கொள்ளும்போது, அவர் நம்மை ஒரு குறைவுமில்லாமல் மறுபடியும் நன்மையினால் நிரப்புவார் என்னும் எதிர்பார்ப்பு நமக்குள் உண்டாகும். நாம் தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு நன்மையும் நாம் இனிமேல் அவரிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்போகும் ஏராளமான நன்மைகளுக்கு அச்சாரமாயிற்று.

## அதிகாரம் - 1

ஒரு நிறைவான ஊற்றிலிருந்து புறப்பட்டு வரும் தண்ணீரினால் ஒரு குளம் நிரம்பும். இந்த குளத்திலிருந்து அந்த தண்ணீர் சிறிய நீரோடைகள் வழியாக பல இடங்களுக்கும் புறப்பட்டுப்போகும். எல்லா கிளை நதிகளும் ஆரம்பத்தில் ஒரு ஊற்றிலிருந்து உற்பத்தியாவதுபோல, நாம் பெற்றுக்கொள்ளும் எல்லா கிருபைகளும் இயேசுகிறிஸ்துவின் பரிபூரணத்திலிருந்தே நமக்கு வருகிறது. சூரியனிடத்திலிருந்து புறப்பட்டு வரும் ஒளிக்கதிர்கள் மூலமாக நாம் வெளிச்சத்தைப் பெற்றுக்கொள்வதுபோல, இயேசுகிறிஸ்துவினுடைய பரிபூரணத்திலிருந்து நாம் கிருபையின்மேல் கிருபையை பெற்றுக்கொள்கிறோம்.

"கிருபையின்மேல் கிருபை" என்னும் வார்த்தை ஒருமையில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இது ஒரு பன்மை சொல் அல்ல. கிருபையின் மேல் கிருபை என்று சொல்லும்போது, இதில் கிருபையின் பல்வேறு விதமான அம்சங்கள் நிறைந்துள்ளன என்று பொருள். கிறிஸ்துவினுடைய கிருபையில் அளவிட முடியாத ஐசுவரியங்கள் உள்ளன. தேவனுடைய கிருபைக்கு விசேஷித்த குணாதிசயங்கள் உள்ளன. அவையாவன :

1. தேவன் தமது கிருபையை இலவச ஈவாக தருகிறார். தமது கிருபையின் நிமித்தமாகவே தேவன் நமக்கு கிருபையைத் தருகிறார். நம்முடைய நற்குணத்தின் நிமித்தம் நாம் தேவனுடைய கிருபையை பெற்றுக்கொள்வதில்லை. கிறிஸ்துவின் நிமித்தமாகவே தேவன் நமக்கு தமது கிருபையை அருள்கிறார்.

2. தேவனுடைய கிருபை பரிபூரணமானது. கிருபையின் மேல் கிருபை என்று சொல்லும்போது அதற்கு பரிபூரணமான கிருபை என்று பொருள். இது கிருபையின்நிமித்தம் கொடுக்கப்படும் கிருபையாகும். இந்தக் கிருபை கொடுக்கப்படும்போது, ஒரு நீரூற்று தண்ணீரை தொடர்ந்து கொடுப்பதுபோல, தேவனுடைய கிருபை தொடர்ந்து கொடுக்கப்படும். கிருபையின்மேல் கிருபை கொடுக்கப்படும். கிருபையினால் நமக்கு ஆசீர்வாதங்கள் கொடுக்கப்படும். இந்த ஆசீர்வாதங்களை முழுவதுமாக சேமித்து வைப்பதற்கு நம்முடைய பாத்திரம் போதுமானதாகயிராது. ஏனெனில் ஒரு கிருபை மற்றொரு கிருபைக்கு அச்சாரமாக இருக்கும்.

3. தேவனுடைய கிருபை நமக்கு நன்மை செய்கிறது. கிருபையின்மேல் கிருபை என்னும் வார்த்தையில், ஒரு கிருபையானது மற்றொரு கிருபையை நமக்குத் தரும் என்னும் பொருள் உள்ளது. தேவனுடைய ஒவ்வொரு கிருபையும் நம்முடைய ஜீவியத்தில் கிருபை நிறைந்த கிரியைகளை நடப்பிக்கும். தேவனுடைய கிருபையினாலேயே நாம் தாலந்துகளைப் பெற்றுக்கொள்கிறோம். தேவகிருபை நமக்குள் வரும்போது அது நமக்குக் கொடுக்கப்படும் தாலந்தாக கிரியை செய்கிறது.

4. கிருபையின்மேல் கிருபை என்பது தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு புதிய ஏற்பாட்டுக்காலத்தில் கொடுக்கும் கிருபையாகும். பழைய ஏற்பாட்டுக் காலத்திலும் தேவகிருபை வெளிப்பட்டது. ஆனால் அப்போது அது ஒரு அடையாளமாக மாத்திரமே இருந்தது. அந்த கிருபை புதிய ஏற்பாட்டுக்காலத்தில் உறுதிபண்ணப்பட்டிருக்கிறது. புதிய ஏற்பாட்டில் கிருபை சத்தியத்திலிருக்கிறது. பழைய ஏற்பாட்டில் கிருபை அடையாளத்திலிருந்தது. கிருபையின்மேல் கிருபை என்று சொல்லும்போது, இதை "கிருபைக்குப் பதிலாக கிருபை" என்று சொல்லலாம். அதாவது பழைய ஏற்பாட்டுக் கிருபைக்குப் பதிலாக புதிய ஏற்பாட்டுக் கிருபை என்று பொருள் கூறலாம்.

5. கிருபையின்மேல் கிருபை என்னும் வார்த்தைக்கு நிறுத்தப்படாமல் தொடர்ந்து கொடுக்கப்படும் கிருபை என்று பொருள். தேவனிடத்திலிருந்து நாம் கிருபையின் மேல் கிருபையைப் பெற்றுக்கொள்ளும்போது ஒரு கிருபை மற்றொரு கிருபையை உறுதிபண்ணுகிறது. ஒரு கிருபை மற்றொரு கிருபையை பரிபூரணப்படுத்துகிறது. ஒரு கிருபை மற்றொரு கிருபையை மேம்படுத்துகிறது.

6. கிருபையின்மேல் கிருபை என்பது தேவன் நமக்குக் கொடுக்கும் விசேஷித்த கிருபையாகும். தேவனிடத்தில் நாம் கிருபை பெற்றிருக்கிறோம் என்பதற்கு நமக்குள் இருக்கும் கிருபையானது சாட்சி பகருகிறது. இயேசுகிறிஸ்துவினிடத்திலிருந்து நாம் பெற்றுக்கொள்ளும் கிருபை, அவருடைய சாயலுக்கு ஏற்றவிதமாக நம்மை மாற்றுகிறது. இயேசுகிறிஸ்துவின் விசேஷித்த கிருபையின் மூலமாகவே நாம் கிறிஸ்துவின் சாயலைப் பெற்றுக்கொள்கிறோம்.

**கிருபையும் சத்தியமும்**

**எப்படியெனில் நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின (யோவா 1:17).**

## அதிகாரம் - 1

இயேசுகிறிஸ்து கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராயிருந்தார் என்று யோவான் இயேசுவைப்பற்றி குறிப்பிடுகிறார் (யோவா 1:14). இப்போது கிருபையும் சத்தியமும் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நமக்கு உண்டாயின என்று குறிப்பிடுகிறார். இயேசுகிறிஸ்துவின் மூலமாகவே நாம் கிருபையைப் பெற்றுக்கொள்கிறோம். இயேசுகிறிஸ்துவோடு இந்தக் கிருபை நிறைந்திருக்கிறது. இயேசுகிறிஸ்துவையும் அவருடைய கிருபையையும் ஒருபோதும் பிரிக்க முடியாது. இயேசுகிறிஸ்து ஒருபோதும் தம்முடைய கிருபையை விட்டு விலகிப்போய்விடுவதில்லை.

இயேசுகிறிஸ்துவின் இந்தக் கிருபையைக் குறித்து யோவான் இரண்டு காரியங்களைக் குறிப்பிடுகிறார். அவையாவன: 1. மோசேயின் நியாயப்பிரமாணத்தைவிட கிறிஸ்துவின் கிருபை மேன்மையானது. 2. தெய்வீக சத்தியத்தோடு கிறிஸ்துவின் கிருபை தொடர்புடையது.

நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய் நமக்குக் கொடுக்கப்பட்டது. இது மிகவும் மகிமையான வெளிப்பாடாகும். ஆயினும் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் நியாயப்பிரமாணத்தைவிட மிகவும் தெளிவான வெளிப்பாடாக இருக்கிறது. மோசேயின் மூலமாய் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணம் மனுஷரை பயமுறுத்துகிறது. ஆனால் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வெளிப்பட்ட சத்தியமோ நம்மை பயமுறுத்தவில்லை. ஏனெனில் இது கிருபையாக இருக்கிறது. தேவனுடைய சத்தியத்தில் அவருடைய தெய்வீக அன்பு கலந்திருப்பது சுவிசேஷத்தின் மகத்துவமாகும். நியாயப்பிரமாணம் மனுஷரை பயமுறுத்துகிறது. மனுஷருக்கு சாபத்தை அறிவிக்கிறது. ஆனால் கிறிஸ்துவின் சுவிசேஷமோ மனுஷரை தேவனுடைய அன்புக்கு உட்படுத்துகிறது.

இயேசுகிறிஸ்துவின் மூலமாய் கிருபையும் சத்தியமும் நமக்கு உண்டாயிற்று. சுவிசேஷத்தின் மூலமாக நாம் சத்தியத்தை அறிந்துகொள்கிறோம். அதேவேளையில் இந்த சுவிசேஷம் தேவனுடைய கிருபையையும் வெளிப்படுத்துகிறது. இந்த வசனத்தில் யோவான் மோசேயின் நியாயப்பிரமாணத்தை இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தோடு ஒப்பிட்டுக் கூறுகிறார்.

பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள வாக்குத்தத்தங்கள் எல்லாம் சுவிசேஷத்தின் மூலமாய் நிறைவேறிற்று. சுவிசேஷத்தின் சத்தியத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, பழைய ஏற்பாட்டின் நியாயப் பிரமாணங்களெல்லாம் அடையாளங்களாகவும் நிழலாகவும் இருந்தன.

பழைய ஏற்பாட்டில் பஸ்கா ஆட்டுக்குட்டியைப்பற்றியும், போக்காடைப்பற்றியும், மன்னாவைப்பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவே நமக்கு மெய்யான பஸ்கா ஆட்டுக்குட்டியாகவும், மெய்யான போக்காடாகவும், மெய்யான மன்னாவாகவும் இருக்கிறார். பழைய ஏற்பாட்டுக்காலத்தில் இருந்தவர்கள் கிருபையை அடையாளத்தில் பெற்றுக்கொண்டார்கள். ஆனால் புதிய ஏற்பாட்டுக்காலத்தில் ஜீவிக்கும் நமக்கோ இயேசுகிறிஸ்துவில் தேவகிருபை வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டு ஜனங்கள் பஸ்கா ஆட்டுக்குட்டியிலும், போக்காட்டிலும், மன்னாவிலும் தேவனுடைய கிருபையை அடையாளமாக பார்த்தார்கள். ஆனால் புதிய ஏற்பாட்டுக்காலத்தில் ஜீவிக்கும் நாமோ, தேவகிருபையை இயேசுகிறிஸ்துவில் பிரத்தியட்சமாக காண்கிறோம்.

இயேசுகிறிஸ்துவே எல்லாவற்றையும் உண்டாக்கினார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று. உண்டானதொன்றும் அவராலே அல்லாமல் உண்டாகவில்லை. கிருபையும் சத்தியமும் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நமக்கு உண்டாயிற்று. இவற்றை உண்டாக்கியவர் இயேசுகிறிஸ்துவே. இயேசுகிறிஸ்துவின் மூலமாகவே கிருபையும் சத்தியமும் நமக்குள் நிலைத்திருக்கிறது.

### தேவனை வெளிப்படுத்தியவர்

**தேவனை ஒருவனும் ஒருக்காலுங் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார் (யோவா 1:18).**

தேவனைப்பற்றிய வெளிப்பாட்டை நாம் இயேசுகிறிஸ்துவின் மூலமாக பெற்றுக்கொள்கிறோம். அவரே நமக்கு தேவனை அறிவித்திருக்கிறார். தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை. மனுஷன் தன்னுடைய அறிவுத் திறமையினால் ஏராளமான காரியங்களை கண்டுபிடித்திருக்கிறான். ஆயினும் இன்னும் அவனால் தேவனை கண்டுபிடிக்க முடியவில்லை. மனுஷனுடைய கண்டுபிடிக்கும் அறிவு குறைவுள்ளதாகவே இருக்கிறது.

## அதிகாரம் - 1

தேவன் ஆவியாக இருக்கிறார். ஆவியாக இருக்கும் தேவனை மனுஷருடைய மாம்ச கண்களினால் காணமுடியாது. தேவனைக் காணவேண்டுமானால் நாம் விசுவாசத்தில் பார்க்க வேண்டும். அப்போதுதான் காணமுடியாத தேவனை நம்மால் காணமுடியும். விசுவாசத்தினால் மோசே அதரிசனமானவரை தரிசித்தான் என்று எபிரெயருக்கு எழுதின நிருபத்தில் எழுதப்பட்டிருக்கிறது (எபி 11:27).

பழைய ஏற்பாட்டில் தேவன் தம்மைத்தாமே வெளிப்படுத்தியிருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் மூலமாக தேவன் வெளிப்படுத்தப்பட்டிருப்பதை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அதில் தேவனைப்பற்றிய வெளிப்பாடு மிகவும் குறைவாகவும் பூரணமில்லாமலும் உள்ளது. தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை. ஆதேவேனையில் தேவனைக்கண்ட இயேசுகிறிஸ்து அவரை நமக்கு பூரணமாக வெளிப்படுத்துகிறார். தேவனுடைய சிந்தையை இயேசுகிறிஸ்து அறிந்திருப்பதுபோல வேறு யாரும் அறிந்திருக்கவில்லை.

பிதாவின் மடியில் இருக்கிற ஒரே பேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்து அவரை நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். இவர் தேவனுடைய ஒரே பேறான குமாரன். ஒரு மகன் தன் தகப்பனை அறிந்திருப்பதுபோல, குமாரனாகிய இயேசுகிறிஸ்து பிதாவாகிய தேவனை அறிந்திருக்கிறார். பிதாவாகிய தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனில் வெளிப்பட்டிருப்பதுபோல, வேறு எந்த உபாயத்தின் மூலமாகவும் தம்மை வெளிப்படுத்தவில்லை. "பிதா தவிர வேறொருவனும் குமாரனை அறியான். குமாரனும், குமாரன் எவனுக்கு அவரை வெளிப்படுத்த சித்தமாயிருக்கிறாரோ அவனும் தவிர, வேறொருவனும் பிதாவை அறியான்" (மத் 11:27).

குமாரனாகிய இயேசுகிறிஸ்து பிதாவின் மடியில் இருக்கிறார். பிதாவினுடைய விசேஷித்த அன்பின் மடியில் குமாரன் இருக்கிறார். இவரில் பிதா பிரியமாக இருக்கிறார். பிதாவினுடைய விசேஷித்த ஆலோசனைகளின் மடியில் குமாரன் இருக்கிறார்.

இயேசுகிறிஸ்து பிதாவின் மடியில் இருப்பதினால், பிதாவின் சிந்தையை குமாரன் அறிந்திருப்பதுபோல வேறு யாரும் அறிந்திருக்கவில்லை. ஆகையினால் பிதாவை வெளிப்படுத்துவதற்கு குமாரன் மாத்திரமே தகுதியானவர். குமாரனைப்போல பிதாவை வெளிப்படுத்துவதற்கு வேறு யாரும் தகுதியானவரல்ல.

தேவனைப்பற்றிய ரகசியம் மறைவாகயிருந்தது. இந்த ரகசியத்தை குமாரன் வெளிப்படுத்தியிருக்கிறார். "வெளிப்படுத்தியிருக்கிறார்" என்னும் வார்த்தைக்கு, தெளிவாக, பூரணமாக, முழுமையாக அறிவித்திருக்கிறார் என்பது பொருள். இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற நமக்கு தேவனுடைய சித்தமும், அவருடைய இரட்சிப்பின் வழியும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இதுவே கிருபையும் சத்தியமுமாகும். இவை இயேசு கிறிஸ்துவின் மூலமாய் நமக்கு உண்டாயிற்று.

### ஆசாரியரும் லேவியரும்
### யோவா 1:19-28

**யோவா 1:19. எருசலேமிலிருந்து யூதர்கள் ஆசாரியரையும் லேவியரையும் யோவானிடத்தில் அனுப்பி: நீர் யார் என்று கேட்ட பொழுது,**

**யோவா 1:20. அவன் மறுதலியாமல் அறிக்கையிட்டதுமன்றி, நான் கிறிஸ்து அல்ல என்றும் அறிக்கையிட்டான்.**

**யோவா 1:21. அப்பொழுது அவர்கள்: பின்னை யார்? நீர் எலியாவா என்று கேட்டார்கள். அதற்கு: நான் அவன் அல்ல என்றான். நீர் தீர்க்கதரிசியானவரா என்று கேட்டார்கள். அதற்கும் அல்ல என்றான்.**

**யோவா 1:22. அவர்கள் பின்னும் அவனை நோக்கி: நீர் யார்? எங்களை அனுப்பினவர்களுக்கு நாங்கள் உத்தரவு சொல்லும்படிக்கு, உம்மைக்குறித்து என்ன சொல்லுகிறீர் என்று கேட்டார்கள்.**

**யோவா 1:23. அதற்கு அவன்: கர்த்தருக்கு வழியைச் செவ்வைபண்ணுங்கள் என்று ஏசாயா தீர்க்கதரிசி சொன்னபடியே, நான் வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தமாயிருக்கிறேன் என்றான்.**

**யோவா 1:24. அனுப்பப்பட்டவர்கள் பரிசேயராயிருந்தார்கள்.**

**யோவா 1:25. அவர்கள் அவனை நோக்கி: நீர் கிறிஸ்துவுமல்ல, எலியாவுமல்ல, தீர்க்கதரிசியானவருமல்லவென்றால், ஏன் ஞானஸ்நானங் கொடுக்கிறீர் என்று கேட்டார்கள்.**

## அதிகாரம் - 1

**யோவா 1:26. யோவான் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நான் ஜலத்தினாலே ஞானஸ்நானங்கொடுக்கிறேன்; நீங்கள் அறியாதிருக்கிற ஒருவர் உங்கள் நடுவிலே நிற்கிறார்.**

**யோவா 1:27. அவர் எனக்குப் பின்வந்தும் என்னிலும் மேன்மையுள்ளவர்; அவருடைய பாதரட்சையின் வாரை அவிழ்ப்பதற்கும் நான் பாத்திரனல்ல என்றான்.**

**யோவா 1:28. இவைகள் யோர்தானுக்கு அக்கரையில் யோவான் ஞானஸ்நானங்கொடுத்த பெத்தாபராவிலே நடந்தன.**

**நீர் யார்**

**எருசலேமிலிருந்து யூதர்கள் ஆசாரியரையும் லேவியரையும் யோவானிடத்தில் அனுப்பி: நீர் யார் என்று கேட்ட பொழுது, (யோவா 1:19)**

யூதர்கள் எருசலேமிலிருந்து ஆசாரியரையும் லேவியரையும் யோவானிடத்தில் அனுப்புகிறார்கள். அவர்கள் யோவானிடத்தில் வந்து சில கேள்விகளைக் கேட்கிறார்கள். யோவான் இயேசுகிறிஸ்துவைக் குறித்து சாட்சி கொடுத்த விவரம் இந்த வசனப்பகுதியில் எழுதப்பட்டிருக்கிறது.

எருசலேமிலிருந்த யூதர்கள் ஆசாரியரையும் லேவியரையும் யோவானிடத்திற்கு அனுப்புகிறார்கள். ஆசாரியரும் லேவியரும் வேதவாக்கியத்தைக் கற்று தெளிவு பெற்றவர்கள். ஆகையினால் மேசியாவின் வருகை சமீபமாயிற்று என்றும், அவரை ஏற்றுக்கொள்வதற்கு தாங்கள் ஆயத்தமாக இருக்கவேண்டும் என்றும் இவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். மேசியாவிற்கு பாதைகளை யோவான்ஸ்நானன் செம்மைபண்ணுகிறான் என்பதும் இவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். ஆனால் எருசலேமிலுள்ள யூதர்களோ ஆசாரியரையும் லேவியரையும் யோவான் ஸ்நானனிடத்தில் ஒரு சில கேள்விகளைக் கேட்பதற்காக அனுப்புகிறார்கள்.

ஆசாரியரிடத்திலும் லேவியரிடத்திலும் வேதவாக்கியத்தைப்பற்றிய அறிவு இருந்தாலும், அவர்களிடத்தில் தேவனுடைய வெளிப்பாடு எதுவுமில்லை. தங்கள் சுயமுயற்சியினால் இவர்கள் ஒரு சில வேதவசனங்களைக் கற்றிருக்கிறார்கள். மனுஷனுடைய சுயமுயற்சியினால் கற்ற கல்வியும், பெற்ற வல்லமையும் தேவனுடைய ஞானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு பிரயோஜனமற்றவை. யோவான் ஸ்நானனிடத்தில் அனுப்பப்பட்ட ஆசாரியரும் லேவியரும் வேதவாக்கியத்தை கற்றிருந்தபோதிலும் அதன் ஆவிக்குரிய வியாக்கியானத்தை புரிந்து கொள்ளாதிருக்கிறார்கள்.

யோவான் ஸ்நானனிடத்தில் அனுப்பப்பட்டவர்கள் சாதாரண யூதர்களல்ல. அவர்கள் ஆசாரியரும் லேவியரும் ஆவார்கள். யோவான்ஸ்நானனும் ஆரோனுடைய சந்ததியிலிருந்து வந்த ஆசாரியராக இருக்கிறார். ஒரு ஆசாரியரை மற்ற ஆசாரியர்கள் வந்து விசாரிக்க வேண்டிய அவசியமில்லை. இவர்கள் பரிசேய மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள். மனுஷர் மனந்திருந்த வேண்டிய அவசியமில்லை என்று உபதேசம் பண்ணுகிறவர்கள். யோவான்ஸ்நானனோ "மனந்திரும்புங்கள், தேவனுடைய ராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்று பிரசங்கம்பண்ணுகிறான். மனந்திரும்பத் தேவையில்லை என்று சாதிக்கும் பரிசேயர்கள், மனந்திரும்ப வேண்டுமென்று வலியுறுத்தும் யோவான்ஸ்நானனிடம் போகவேண்டும் என்னும் தேவையேயில்லை.

யோவான்ஸ்நானனையும், அவன் கொடுக்கும் ஞானஸ்நானத்தையும் பற்றி சில கேள்விகள் கேட்பதற்காக ஆசாரியரும் லேவியரும் எருசலேமிலிருந்து அனுப்பப்பட்டிருக்கிறார்கள். மெய்யாகவே யோவான்ஸ்நானனைப்பற்றி தெரிந்துகொள்ள வேண்டும் என்னும் ஆர்வம் இவர்களிடத்தில் இல்லை. அவனை தங்களை விட்டு தூரத்திலேயே வைத்திருக்க வேண்டும் என்று இவர்கள் விரும்புகிறார்கள். அதற்காக தங்கள் உள்ளத்தில் வஞ்சனையான எண்ணத்தோடு இவர்கள் யோவான்ஸ்நானனிடம் வருகிறார்கள்.

எருசலேமிலுள்ள யூதர்கள் யோவான்ஸ்நானனைப்பற்றி பல்வேறு விதமாக கேள்விப்பட்டிருக்கிறார்கள். அவனைப்பற்றி தெரிந்துகொள்ளவேண்டும் என்னும் ஆவலினால் அவனிடத்திற்கு வருகிறார்கள். அவன் மனந்திரும்புதலின் அவசியத்தைப்பற்றி உபதேசிக்கிறான். பரிசேயருக்கு மனந்திரும்புதல் என்பது ஒரு விநோதமான உபதேசம். நூதன உபதேசத்தை அவன் போதிக்கிறான் என்று கூறி, அவனை கட்டுப்படுத்தவேண்டுமென்பது இவர்களுடைய உள்ளான நோக்கம். அவன்மீது தங்களுக்குள்ள அதிகாரத்தை காண்பிக்க வேண்டும் என்பதற்காகவும் ஆசாரியரும் லேவியரும் யோவான்ஸ்நானனிடத்திற்கு வருகிறார்கள்.

## அதிகாரம் - 1

அவர்கள் யோவானிடம் "நீர் யார்" என்று கேட்கிறார்கள். யோவான்ஸ்நானன் இந்த உலகத்தில் இருப்பது அவர்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறது. அவனுடைய ஆவியும், அவனுடைய பேச்சும் அவனுடைய உபதேசமும் புதுமையாக இருக்கிறது. அவன் அதிகாரத்தோடு பிரசங்கம்பண்ணுகிறான். ஜனங்கள் அவனுடைய வார்த்தையைக் கேட்பதற்கு ஆர்வத்தோடு அவனிடத்தில் கூடி வருகிறார்கள். அவனை ஏராளமான ஜனங்கள் பின்பற்றினாலும், அவன் தன்னை உயர்ந்தவனாக காண்பித்துக்கொள்ளவில்லை. அவனிடத்தில் பெருமையில்லை. மற்றவர்களுக்கு முன்பாக தான் ஒரு பெரியவன் என்று காண்பித்துக்கொள்வதற்குப் பதிலாக, நன்மை செய்வதில் அதிக ஆர்வத்தோடு ஈடுபடுகிறான். தன்னிடத்தில் "நீர் யார்" என்று கேட்ட ஆசாரியரிடத்திலும் லேவியரிடத்திலும் தனக்குத் தெரிந்ததை மறுதலியாமல் மறைக்காமல் கூறுகிறான்.

**நான் கிறிஸ்து அல்ல**

**அவன் மறுதலியாமல் அறிக்கையிட்டதுமன்றி, நான் கிறிஸ்து அல்ல என்றும் அறிக்கையிட்டான் (யோவா 1:20).**

ஜனங்கள் எதிர்பார்க்கிற பிரகாரம் தான் பெரியவன் அல்ல என்று யோவான்ஸ்நானன் தன்னுடைய உண்மை நிலமையை அங்கீகரித்துக் கூறுகிறான். கர்த்தருடைய உண்மையான ஊழியக்காரர்கள் தங்களுக்குத் தகுதியில்லாத பெருமைகளிலிருந்து தங்களைக் காத்துக்கொள்ளவேண்டும். சில வேளைகளில் நம்முடைய தகுதிக்கு ஏற்ற பிரகாரம் நாம் புகழப்படுகிறபோதிலும், "போதும் என்கிற மனப்பக்குவம்" நம்மிடத்தில் காணப்படவேண்டும். அளவுக்கு அதிகமாக தாழ்மையோடிருப்பது தவறல்ல. ஆனால் சிறிதளவு பெருமைகூட நமக்குள் வந்துவிடக்கூடாது.

"நான் கிறிஸ்து அல்ல" என்று யோவான்ஸ்நானன் அறிக்கையிடுகிறான். தன்னுடைய வார்த்தையில் உறுதியாக இருக்கிறான். தான் கிறிஸ்து அல்ல என்று மறுப்பது மாத்திரமல்ல, அதை அறிக்கையாகவும் சமர்ப்பிக்கிறான். தன்னுடைய உள்ளத்தில் தான் கிறிஸ்து என்னும் எண்ணம் இவனிடத்தில் சிறிதும் இல்லை.

"நான் கிறிஸ்து அல்ல" என்று யோவான்ஸ்நானன் அறிக்கையிடும்போது, "வேறொருவர் கிறிஸ்துவாக இருக்கிறார்" என்னும் பொருளும் அவனுடைய வார்த்தையில் அடங்கியிருக்கிறது. தான் கிறிஸ்து அல்ல என்று அறிக்கையிடும்போது, யோவான்ஸ்நானன் தன்னுடைய அறிக்கையைத்தான் சமப்பிக்கிறானே அல்லாமல், அவன் கிறிஸ்துவை மறுதலிக்கவில்லை.

**நீர் எலியாவா**

**அப்பொழுது அவர்கள்: பின்னை யார்? நீர் எலியாவா என்று கேட்டார்கள். அதற்கு: நான் அவன் அல்ல என்றான். நீர் தீர்க்கதரிசியானவரா என்று கேட்டார்கள். அதற்கும் அல்ல என்றான் (யோவா 1:21).**

எலியா பரலோகத்திலிருந்து மறுபடியும் திரும்பி வருவாரென்று யூதர்கள் எதிர்பார்க்கிறார்கள். யோவான்ஸ்நானனுடைய உபதேசம், ஞானஸ்நானம், சுபாவம் ஆகியவற்றை கேள்விப்படும்போது, இவன் ஒருவேளை வானத்திலிருந்து வந்திருக்கும் எலியாவாக இருக்கலாமோ என்னும் சந்தேகம் யூதர்கள் மத்தியில் உண்டாயிற்று. யோவான்ஸ்நானன் தன்னை எலியா என்று கூறினால், அதை அங்கீகரிக்க யூதர்கள் ஆயத்தமாக இருக்கிறார்கள். ஆனால் யோவான்ஸ்நானனோ இந்த மேன்மையைக்கூட தன்மீது ஏற்றுக்கொள்ள மறுத்துவிடுகிறான்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில், மல்கியா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில், எலியா தீர்க்கதரிசி அனுப்பப்படப்போவதாக முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது. "இதோ, கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்கு முன்னே நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன். நான் வந்து பூமியைச் சங்காரத்தால் அடிக்காதபடிக்கு, அவன் பிதாக்களுடைய இருதயத்தைப் பிள்ளைகளிடத்திற்கும், பிள்ளைகளுடைய இருதயத்தை அவர்கள் பிதாக்களிடத்திற்கும் திருப்புவான்" (சக 4:5,6).

## அதிகாரம் - 1

யோவான்ஸ்நானன் இந்த பூமியில் ஊழியம் செய்தபோது, அவன் எலியாவின் ஆவியும் பலமும் உடையவனாய் இயேசுகிறிஸ்துவுக்கு முன்னே நடப்பான் என்று கர்த்தருடைய தூதன் யோவான்ஸ்நானனுடைய தகப்பனாகிய சகரியாவிடம் கூறினான். "தூதன் அவனை நோக்கி: சகரியாவே, பயப்படாதே, உன் வேண்டுதல் கேட்கப்பட்டது; உன் மனைவியாகிய எலிசபெத்து உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள், அவனுக்கு யோவான் என்று பேரிடுவாயாக. உனக்குச் சந்தோஷமும் மகிழ்ச்சியும் உண்டாகும், அவன் பிறப்பினிமித்தம் அநேகர் சந்தோஷப்படுவார்கள். அவன் கர்த்தருக்கு முன்பாகப் பெரியவனாயிருப்பான், திராட்சரசமும் மதுவும் குடியான், தன் தாயின் வயிற்றிலிருக்கும்போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருப்பான். அவன் இஸ்ரவேல் சந்ததியாரில் அநேகரை அவர்கள் தேவனாகிய கர்த்தரிடத்திற்குத் திருப்புவான். பிதாக்களுடைய இருதயங்களைப் பிள்ளைகளிடத்திற்கும், கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களுடைய ஞானத்திற்கும் திருப்பி, உத்தமான ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தும்படியாக, அவன் எலியாவின் ஆவியும் பலமும் உடையவனாய் அவருக்கு முன்னே நடப்பான் என்றான்" (லூக் 1:13-17).

இயேசுகிறிஸ்து யோவான்ஸ்நானனைப் பற்றி குறிப்பிடும்போது "நீங்கள் ஏற்றுக்கொள்ள மனதாயிருந்தால் வருகிறவனாகிய எலியா இவன் தான்" (மத் 11:14) என்று கூறுகிறார். இவன் எலியா அல்ல. இவன் வருகிறவனாகிய எலியா. தேவன் வாக்குத்தத்தம் பண்ணிய எலியா இவன்தான். ஆனால் யூதர்களோ பழைய ஏற்பாட்டுக்காலத்தில் தீர்க்கதரிசன ஊழியம் செய்த எலியா மறுபடியும் உயிர்பெற்று வருவானென்று தவறுதலாக எதிர்பார்க்கிறார்கள். முன்னறிவித்த பிரகாரம் எலியா வந்தாயிற்று (மத் 17:18). ஆனால் யூதர்களோ அவனை அறியவில்லை. தங்கள் இஷ்டப்படி அவனுக்குச் செய்தார்கள். கர்த்தர் தங்களுக்கு வாக்குப்பண்ணாத எலியா தங்கள் மத்தியில் வருவாரென்று, வேதவாக்கியத்தின் பிரகாரம் எந்தவிதமான ஆதாரமுமில்லாமல், யூதர்கள் தவறுதலாக எதிர்பார்க்கிறார்கள்.

முன்னறிவித்த பிரகாரம் எலியாவின் ஆவியோடும் பலத்தோடும் யோவான்ஸ்நானன் யூதர்கள் மத்தியில் வந்தபோது, அவர்கள் அவனை தீர்க்கதரிசியாக ஏற்றுக்கொள்ளவில்லை. இதற்கு மூன்று காரணங்கள் உள்ளன.

1. பழைய ஏற்பாட்டுக்காலத்தில் "கர்த்தர் தங்கள் மத்தியில் ஒரு சகோதரரை எழுப்புவார்" என்று மோசே முன்னறிவித்திருந்தார். மோசே முன்னறிவித்த சகோதரன் யோவான்ஸ்நானன் அல்ல என்று யூதர்கள் தீர்மானமாக இருக்கிறார்கள்.

2. யூதர்கள் எதிர்பார்த்த பிரகாரம் யோவான்ஸ்நானன் ஊழியம் செய்யவில்லை. தாங்கள் எதிர்பார்க்கும் எலியா ரோமப்பேரரசின் பிடியிலிருந்து தங்களை விடுதலை செய்வார் என்று எதிர்பார்க்கிறார்கள். ஆனால் யோவான்ஸ்நானனோ பட்டணத்திலுள்ள ஜனங்களிடம் சஞ்சரியாமல், வனாந்தர வாசியாக இருக்கிறான்.

3. தாங்கள் எதிர்பார்க்கும் எலியா மரித்தோரிலிருந்து எழுந்திருந்து வருவாரென்று யூதர்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் யோவான்ஸ்நானனோ மரித்தோரிலிருந்து எழும்பி வரவில்லை. தன்னுடைய தாயாகிய எலிசபெத்தின் கர்ப்பத்திலிருந்து வந்திருக்கிறான். ஆகையினால் யூதர்கள் யோவான்ஸ்நானனை தாங்கள் எதிர்பார்க்கும் எலியாவாக ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இல்லை.

**உம்மைக்குறித்து என்ன சொல்லுகிறீர்**

**அவர்கள் பின்னும் அவனை நோக்கி: நீர் யார்? எங்களை அனுப்பினவர்களுக்கு நாங்கள் உத்தரவு சொல்லும்படிக்கு, உம்மைக்குறித்து என்ன சொல்லுகிறீர் என்று கேட்டார்கள். அதற்கு அவன்: கர்த்தருக்கு வழியைச் செவ்வை பண்ணுங்கள் என்று ஏசாயா தீர்க்கதரிசி சொன்னபடியே, நான் வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தமாயிருக்கிறேன் என்றான் (யோவா 1:22,23).**

எருசலேமிலிருந்து யூதர்களால் அனுப்பப்பட்ட ஆசாரியரும் லேவியரும் யோவான்ஸ்நானனைக் குறித்து திட்டமாய் அறிந்துகொள்ள விரும்புகிறார்கள். தங்களை இவனிடத்தில் அனுப்பியவர்களுக்கு தாங்கள் மாறுத்தரம் சொல்ல வேண்டுமென்றும், அவர்களுக்கு என்ன உத்தரவு சொல்வது என்றும் இவர்கள் யோவான்ஸ்நானிடமே கேட்கிறார்கள். "உம்மைக்குறித்து என்ன சொல்கிறீர்" என்று அடிப்படைக் கேள்வியைக் கேட்கிறார்கள்.

## அதிகாரம் - 1

யோவான்ஸ்நானன் தன்னுடைய வார்த்தையிலும் செய்கையிலும் உண்மையுள்ளவனாக இருக்கிறான். ஆகையினால் அவன் தன்னைப்பற்றி பொய் கூறமாட்டான் என்று இவர்கள் நம்புகிறார்கள். இவனுடைய வார்த்தையை நம்பலாமென்றும், அந்த வார்த்தையை தங்களை அனுப்பியவர்களுக்கு உத்தரவாக சொல்லாமென்றும் இவர்கள் தீர்மானம் பண்ணுகிறார்கள். இவர்களுடைய கேள்வியும் "உம்மைக் குறித்து என்ன சொல்கிறீர்" என்று மிகவும் தெளிவாக உள்ளது. அவர்களிடம் யோவான்ஸ்நானன் "நான் வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தமாயிருக்கிறேன்" என்று கூறுகிறான்.

யோவான்ஸ்நானன் இந்த வார்த்தையை தன் சுயமாய் பேசாமல், வேதவாக்கியத்தை ஆதாரமாக வைத்துப் பேசுகிறான். இதன் வாயிலாக வேதவாக்கியம் தன்னிடத்தில் நிறைவேறியுள்ளதையும் அவர்களுக்கு எடுத்துக்காண்பிக்கிறான். மிகவும் பணிவாகவும், தாழ்மையாகவும், தன்னைப்பற்றி எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமலும், அமைதியாக பதில் கூறுகிறான்.

வேதவாக்கியம் இவனைப்பற்றி மிகவும் சாதாரணமாகவே கூறியிருக்கிறது. இவனை பெரியவனாக காண்பிக்கவில்லை. இவன் மேன்மையுள்ளவனுமல்ல. "நான் சத்தமாக இருக்கிறேன்" என்று தன்னைப்பற்றி கூறுகிறான். இவன் வெறும் சத்தம்தான். இவன் வார்த்தையல்ல. குமாரனாகிய இயேசுகிறிஸ்துவே வார்த்தையாக இருக்கிறார். யோவான்ஸ்நானனோ அந்த வார்த்தையைப் பேசும் வெறும் சத்தமாக மாத்திரமே இருக்கிறான்.

ஏசாயா தீர்க்கதரிசி யோவான்ஸ்நானனுடைய ஊழியத்தைப்பற்றி ஏற்கெனவே முன்னறிவித்திருக்கிறார். "கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள், அவாந்தரவெளியிலே நம்முடைய தேவனுக்குப் பாதையைச் செவ்வை பண்ணுங்கள் என்றும், பள்ளமெல்லாம் உயர்த்தப்பட்டு, சகலமலையும் குன்றும் தாழ்த்தப்பட்டு, கோணலானது செவ்வையாகி, கரடுமுரடானவை சமமாக்கப்படும் என்றும்,

கர்த்தரின் மகிமை வெளியரங்கமாகும், மாம்சமான யாவும் அதை ஏகமாய்க் காணும், கர்த்தரின் வாக்கு அதை உரைத்தது என்றும் வனாந்தரத்திலே கூப்பிடுகிற சத்தம் உண்டாயிற்று" (ஏசா 40:3-5).

ஏசாயா தீர்க்கதரிசியின் பெயரையும், அவர் கூறிய வார்த்தையையும் இவர்களிடம் பேசினால், இவர்கள் தன்னுடைய சத்தத்திற்கு செவிகொடுப்பார்கள் என்று நினைத்து யோவான்ஸ்நானன் இங்கு ஏசாயா தீர்க்கதரிசி சொன்னதை கூறுகிறான். யோவான்ஸ்நானனுடைய சத்தம் எச்சரிப்பின் சத்தமாகும். அவர்களுக்கு உபதேசம்பண்ணும் சத்தமாகும். கர்த்தருடைய ஊழியக்காரர்களும் அவருக்காக பேசும் சத்தமாகவே இருக்கிறார்கள். நம்முடைய சத்தத்தின் மூலமாக தேவனுடைய சிந்தையை வெளிப்படுத்தும்போது தேவன் நம்மீது பிரியமாக இருக்கிறார்.

யோவான்ஸ்நானனுடைய சத்தம் மனுஷசத்தம் மாத்திரமே ஆகும். இது தேவனுடைய சத்தமல்ல. நியாயப்பிரமாணம் இடிமுழக்க சத்தத்தோடு வெளிப்படுத்தப்படும்போது அதை ஏற்றுக்கொள்ள ஜனங்கள் ஆயத்தமாக இருக்கிறார்கள். பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் எதிர்பார்க்கும் இந்த ஜனங்கள், நம்மூலமாக சுவிசேஷத்தின் சத்தம் வெளிப்படும்போது அதையும் ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இருக்கிறார்கள். இது நம்முடைய சத்தத்தின் மேன்மை அல்ல. இது நாம் பேசும் வார்த்தையாகிய இயேசுகிறிஸ்துவின் மேன்மையாகும். நாம் மெல்லிய சத்தத்தில் சுவிசேஷச் செய்தியை பேசும்போதுகூட ஜனங்கள் அதற்கு செவிகொடுக்கிறார்கள். யோவான்ஸ்நானன் தேவனுடைய வார்த்தையை அறிவிக்கும் நம்மைப் போன்ற சாதாரண மனுஷனாகவே இருக்கிறான்.

யோவான்ஸ்நானனுடைய சத்தம் கூப்பிடுகிறவனுடைய சத்தமாகும். "கூப்பிடுதல்" என்னும் வார்த்தைக்கு சத்தமிட்டு அழைத்தல் என்றும், வலியுறுத்திக் கூப்பிடுதல் என்றும், யாரையும் விட்டுவிடாமல் எல்லோரையும் விரும்பி அழைத்தல் என்றும் பொருள்படும். கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நாமும், சுவிசேஷத்தைப் பேசும்போது உண்மையான மனதோடும், வாஞ்சையோடும், உற்சாகத்தோடும் பேசவேண்டும். கர்த்தருடைய வார்த்தை அதைக் கேட்போரின் இருதயத்தை மென்மையாக்கும். பேசுகிறவரின் உதடுகளை உறைய வைக்கும். தான் பிரசங்கம்பண்ணும் உபதேசத்தை யோவான்ஸ்நானன் ஒழிவு மறைவில்லாமல் தெளிவுபடுத்துகிறான்.

## அதிகாரம் - 1

யோவான்ஸ்நானன் தன்னைப்பற்றி குறிப்பிடும்போது, "நான் வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தமாக இருக்கிறேன்" என்று அறிக்கையிடுகிறான். வனாந்தரம் என்பது தனிமையான இடம், அமைதியான இடம். உலகத்தின் சந்தடிகளும், வியாபாரம் சம்பந்தமான வார்த்தைகளும் வனாந்தரத்தில் இருக்காது. அப்படிப்பட்ட அமைதியான இடத்தில்தான் யோவான்ஸ்நானன் சத்தமாக இருக்கிறான்.

யோவான்ஸ்நானன் வனாந்தரத்தில் கூப்பிடுகிறவனுடைய சத்தமாக இருந்தாலும், அவன் குறிக்கோள் இல்லாமல் அங்கு புலம்பிக்கொண்டிருக்கவில்லை. மிகவும் தெளிவாக பேசுகிறான். "கர்த்தருக்கு வழியை செவ்வை பண்ணுங்கள்" என்று ஏசாயா தீர்க்கதரிசி சொன்னபடியே, இவன் கூப்பிடுகிறவனுடைய சத்தமாக இருக்கிறான். தேவனுடைய சமுகத்திற்கு செல்லும் வழி தெரியாமல் ஜனங்கள் தவறான பாதையில் சென்றுகொண்டிருக்கிறார்கள். இவனோ ஜனங்களுடைய தவறுகளைத் திருத்தி, அவர்கள் கர்த்தரிடத்தில் செல்லும் வழியை செம்மைப்பண்ணுகிறான்.

வேதபாரகரும் பரிசேயரும் ஜனங்களுக்கு ஒன்றும் தெரியாது என்று நினைக்கிறார்கள். அவர்கள் தேவனைவிட்டு வழிவிலகி செல்வதற்கு இவர்கள் காரணமாக இருக்கிறார்கள். ஜனங்கள் வேதத்தின் அறிவை பெற்றுக்கொள்ளாதவாறு இவர்கள் தடைக்கற்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய அறியாமையில் வேதபாரகரும் பரிசேயரும் தங்களை மேன்மைபடுத்துகிறார்கள். ஆனால் யோவான்ஸ்நானனோ கர்த்தருடைய சமுகத்திற்கு திரும்பி வரவேண்டும் என்று ஆதியிலே சொல்லப்பட்ட உபதேசத்தை இப்போது உபதேசம்பண்ணுகிறான்.

### ஏன் ஞானஸ்நானம் கொடுக்கிறீர்

**அனுப்பப் பட்டவர்கள் பரிசேயராயிருந்தார்கள். அவர்கள் அவனை நோக்கி: நீர் கிறிஸ்துவுமல்ல, எலியாவுமல்ல, தீர்க்கதரிசியானவருமல்லவென்றால், ஏன் ஞானஸ்நானங் கொடுக்கிறீர் என்று கேட்டார்கள் (யோவா 1:24,25).**

தான் கொடுக்கும் ஞானஸ்நானத்தைப்பற்றி யோவான்ஸ்நானன் சாட்சி கொடுக்கிறான். எருசலேமிலிருந்து யூதர்களால் அனுப்பப்பட்ட ஆசாரியரும் லேவியரும் பரிசேயராயிருக்கிறார்கள். அவர்கள் யோவான்ஸ்நானனிடம் "நீர் கிறிஸ்துவுமல்ல, எலியாவுமல்ல, தீர்க்கதரிசியானவருமல்லவென்றால் ஏன் ஞானஸ்நானம் கொடுக்கிறீர்" என்று கேட்கிறார்கள். பரிசேயர்கள் ஞானஸ்நான சடங்குக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுக்கிறவர்கள். ஞானஸ்நானத்தை சரியாகவும் முறைப்படியும் பயன்படுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கிறவர்கள். ஏனெனில் ஞானஸ்நான சடங்கு பரிசேயருக்கு மிகவும் புனிதமானது. தாங்கள் இது வரையிலும் இருந்த அசுத்தத்திலிருந்து, ஞானஸ்நானம் தங்களை சுத்திகரிப்பதாக பரிசேயர் நம்புகிறார்கள்.

ஞானஸ்நானம் ஒரு அடையாளமாகும். இதே அடையாளம் கிறிஸ்தவ சபையிலும் பயன்படுத்தப்படுகிறது. இயேசுகிறிஸ்து புதுமையாக செய்யவேண்டும் என்று நினைத்து, பழையது அனைத்தையும் அங்கீகரியாமல் அப்புறப்படுத்திவிடவில்லை. இயேசுகிறிஸ்துவின் ஊழியத்திற்கு முன்பாக யூதர் மத்தியிலே ஞானஸ்நான சடங்கு கைக்கொள்ளப்பட்டது. இயேசுகிறிஸ்து அந்த பாரம்பரியத்தை அங்கீகரித்து, தாமும் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார். கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நாமும் எல்லாவற்றையும் புதுமையாக செய்யவேண்டும் என்று நினைத்து, பழையதையெல்லாம் ஒழித்துவிட வேண்டும் என்னும் ஆர்வத்தில், நமக்குத் தேவையானதையும் பிரயோஜனமானதையும் ஒழித்துவிடக்கூடாது. இதில் மிகுந்த கவனத்தோடு இருக்கவேண்டும்.

மேசியாவின் நாட்களில் ஞானஸ்நானம் கொடுக்க வேண்டுமென்று யூதர்கள் எதிர்பார்க்கிறார்கள். கிறிஸ்துவோ அல்லது எலியாவோ அல்லது தீர்க்கதரிசியானவரோ ஞானஸ்நானம் கொடுக்கவேண்டுமென்பது இவர்களுடைய எதிர்பார்ப்பு. இவர்கள் கறைபடிந்திருக்கும் இந்த உலகத்தை சுத்திகரிப்பதற்காக வந்திருக்கிறவர்கள். ஆகையினால் இவர்கள் மூலமாகவே ஞானஸ்நானம் நடைபெறவேண்டும் என்று யூதர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

## அதிகாரம் - 1

இந்த புதிய உலகத்தை சுத்திகரிப்பதற்காக தேவனுடைய கிருபை நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது பரிசேயருக்குத் தெரிந்திருக்க வேண்டும். இந்த சத்தியம் தெரிந்திருந்தால், யோவான்ஸ்நானன் ஞானஸ்நானம் கொடுக்கும்போது, அவன் எந்த அதிகாரத்தினால் ஞானஸ்நானம் கொடுக்கிறான் என்பதையும் அவர்கள் அறிந்திருப்பார்கள். யோவான்ஸ்நானன் தன்னை கிறிஸ்து அல்ல என்றும், எலியா அல்ல என்றும், தீர்க்கதரிசி அல்ல என்றும் அறிவிக்கிறான். இந்த வார்த்தையைக் கேட்ட பரிசேயர்கள் அவனிடம் "ஏன் ஞானஸ்நானம் கொடுக்கிறீர்" என்று கேட்கிறார்கள்.

### நீங்கள் அறியாத ஒருவர்

**யோவான் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நான் ஜலத்தினாலே ஞானஸ்நானங்கொடுக்கிறேன்; நீங்கள் அறியாதிருக்கிற ஒருவர் உங்கள் நடுவிலே நிற்கிறார். அவர் எனக்குப் பின்வந்தும் என்னிலும் மேன்மையுள்ளவர்; அவருடைய பாதரட்சையின் வாரை அவிழ்ப்பதற்கும் நான் பாத்திரனல்ல என்றான். இவைகள் யோர்தானுக்கு அக்கரையில் யோவான் ஞானஸ்நானங்கொடுத்த பெத்தாபராவிலே நடந்தன (யோவா 1:26-28).**

தான் கிறிஸ்து அல்ல என்றும், கிறிஸ்துவின் ஊழியக்காரன் மாத்திரமே என்றும் யோவான்ஸ்நானன் தன்னை வெளிப்படுத்துகிறான். தண்ணீரில் ஞானஸ்நானம் கொடுப்பது ஒருவருடைய மனமாற்றத்திற்கு வெளிப்படையான அடையாளம். அப்படிப்பட்ட ஞானஸ்நானத்தை மாத்திரமே தான் கொடுப்பதாக கூறுகிறான். "நான் ஜலத்தினால் ஞானஸ்நானம் கொடுக்கிறேன்". இந்த ஞானஸ்நானம் ஒரு அடையாளம் மாத்திரமே. இந்த தண்ணீர் ஞானஸ்நானத்திற்கு அடையாளமாக இருக்கும் ஆவிக்குரிய கிருபை தன் மூலமாக உண்டாகவில்லை என்பதையும் யோவான் அறிவிக்கிறான்.

தன்னிடத்தில் ஞானஸ்நானத்தைப் பற்றி கேள்வி கேட்கும் பரிசேயரை, யோவான்ஸ்நானன் இயேசுகிறிஸ்துவிடம் வழிநடத்துகிறான். அவர் தன்னைவிட பெரியவரென்றும், தன்னால் செய்ய முடியாத பெரிய காரியங்களை அவரால் செய்ய முடியுமென்றும் அவர்களிடம் கூறுகிறான்.

யோவான்ஸ்நானன் இயேசு கிறிஸ்துவைக் குறித்து ஜனங்களிடம் சாட்சி கொடுத்தபோது "எனக்கு பின்வருகிறவர் எனக்கு முன்னிருந்தவர். ஆகையால் அவர் என்னிலும் மேன்மையுள்ளவர்" (யோவா 1:15) என்று கூறியிருந்தான். அதே சாட்சியையே இப்போது பரிசேயரிடமும் கூறுகிறான். தான் சாட்சியாக சொல்லியிருந்தவர் இவர்தான் என்று இயேசுகிறிஸ்துவைக் குறித்து அவர்களிடம் கூறுகிறான்.

இயேசுகிறிஸ்து அவர்கள் நடுவிலே நிற்கிறார். ஆனால் அவர்களோ அவரை இயேசு என்று அறியாதிருக்கிறார்கள். சாதாரண ஜனங்கள் மத்தியில், அவர்களில் ஒருவராக இயேசுகிறிஸ்து நிற்கிறார். இயேசுகிறிஸ்துவைப்போலவே இந்த உலகத்தில் மெய்யான சத்தியங்கள் பல மறைந்துள்ளன. தங்கள் மத்தியில் இந்த சத்தியங்கள் இருந்தாலும் ஜனங்கள் அதை அறிந்துகொள்ளவில்லை. மனுஷருடைய அறியாமை தேவனுடைய ரகசியங்களை அறிய முடியாதபடி அதை மூடுகிற மூடியாக இருக்கிறது. நாம் எதிர்பார்பதற்கும் அதிகமாக தேவன் நமக்கு அருகாமையில் இருக்கிறார்.

தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே என்று இயேசுகிறிஸ்து தம்முடைய ராஜ்யத்தைப்பற்றி வெளிப்படுத்துகிறார் (லூக் 17:21). இயேசுகிறிஸ்து தனக்குப் பின்வந்தும் தன்னிலும் மேன்மையுள்ளவர் என்று யோவான்ஸ்நானன் சாட்சியாக அறிவிக்கிறான். அவருடைய பாதரட்சையின் வாரை அவிழ்ப்பதற்கும் தான் பாத்திரனல்ல என்று தன்னைத் தாழ்த்துகிறான். யோவான்ஸ்நானனைப்போல பெரிய ஊழியக்காரனே, தேவனுடைய சமுகத்திற்கு முன்பாக தன்னைப் "பாத்திரனல்ல" என்று தாழ்த்தும்போது, நாமும் நம்மை உயர்த்தாதபடி, நம்மைத் தாழ்த்தி மிகுந்த எச்சரிப்போடு இருக்கவேண்டும். தேவனுக்கு முன்பாக நம்மை தாழ்த்தவேண்டும். தன்னைத்தான் உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான்.

## அதிகாரம் - 1

யோவான்ஸ்நானன் இயேசு கிறிஸ்துவைப்பற்றி இவ்வாறு உயர்வாக கூறும்போது அவரிடத்தில் வந்திருக்கும் ஆசாரியரும் லேவியரும், "அந்த இயேசுகிறிஸ்து யார், அவர் எங்கே இருக்கிறார்" என்று கேள்வி கேட்டிருப்பார்கள் என நாம் பொதுவாக நினைப்போம். ஆனால் அவர்களுக்கு இயேசுகிறிஸ்துவைப்பற்றி தெரிந்துகொள்ளும் ஆர்வம் சிறிதும் இல்லை. அவர்கள் யோவான்நானனுக்கு பிரச்சனைக் கொடுத்து அவனை துன்புறுத்துவதற்காகவே வந்தவர்கள். அவனிடமிருந்து ஆலோசனைகளையும் உபதேசங்களையும் கேட்பதற்காக இவர்கள் அங்கு வரவில்லை. அவர்களுக்கு ஒருவேளை கிறிஸ்துவைத் தெரிந்திருக்கலாம். அல்லது தெரியாமலும் இருக்கலாம். இதில் எல்லாம் அவர்களுக்கு அக்கறையில்லை.

இந்த சம்பவம் நடைபெற்ற இடம் யோர்தானுக்கு அக்கரையிலுள்ள பெத்தாபாரா என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதற்கு "பாதையின்வீடு" அல்லது "வழியின் வீடு" என்று பொருள். இயேசுகிறிஸ்துவின் மூலமாக சுவிசேஷத்திற்கு பாதை திறக்கப்பட்டிருக்கிறது. இயேசுவே வழியாக இருக்கிறார். இப்படிப்பட்ட பாதையில்தான் யோவான்ஸ்நானன் ஞானஸ்நானம் கொடுத்து வருகிறான். தான் ஞானஸ்நானம் கொடுத்துக்கொண்டிருக்கும் இடத்தில்தான், தன்னைப்பற்றியும் இயேசுகிறிஸ்துவைப்பற்றியும் சாட்சியாக அறிவிக்கிறான். இதனால் இவனிடத்தில் ஞானஸ்நானம் பெற வருகிற யாவருக்கும் இவனுடைய வார்த்தை சாட்சியாக அறிவிக்கப்படுகிறது.

### இயேசுகிறிஸ்துவைப்பற்றி யோவான்ஸ்நானன் கூறியது யோவா 1 : 29-36

**யோவா 1:29. மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு: இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக் குட்டி.**

**யோவா 1:30. எனக்குப்பின் ஒருவர் வருகிறார், அவர் எனக்கு முன்னிருந்தபடியால் என்னிலும் மேன்மையுள்ளவரென்று நான் சொன்னேனே, அவர் இவர்தான்.**

**யோவா 1:31. நானும் இவரை அறியாதிருந்தேன்; இவர் இஸ்ரவேலுக்கு வெளிப்படும் பொருட்டாக, நான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுக்கவந்தேன் என்றான்.**

**யோவா 1:32. பின்னும் யோவான் சாட்சியாகச் சொன்னது: ஆவியானவர் புறாவைப் போல வானத்திலிருந்திறங்கி, இவர்மேல் தங்கினதைக் கண்டேன்.**

**யோவா 1:33. நானும் இவரை அறியாதிருந்தேன்; ஆனால் ஜலத்தினால் ஞானஸ்நானங் கொடுக்கும்படி என்னை அனுப்பினவர்: ஆவியானவர் இறங்கி யார்மேல் தங்குவதை நீ காண்பாயோ, அவரே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானங்கொடுக்கிறவர் என்று எனக்குச் சொல்லியிருந்தார்.**

**யோவா 1:34. அந்தப்படியே நான் கண்டு, இவரே தேவனுடைய குமாரன் என்று சாட்சி கொடுத்துவருகிறேன் என்றான்.**

**யோவா 1:35. மறுநாளிலே யோவானும் அவனுடையசீஷரில் இரண்டுபேரும் நிற்கும் போது,**

**யோவா 1:36. இயேசு நடந்து போகிறதை அவன் கண்டு: இதோ, தேவ ஆட்டுக்குட்டி என்றான்.**

**உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவஆட்டுக்குட்டி**

**மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு: இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக் குட்டி. (யோவா 1:29).**

இந்த வசனப்பகுதியில் இயேசுகிறிஸ்துவைக் குறித்து யோவான்ஸ்நானன் சாட்சியாக கூறுகிறான். யோவானுடைய சீஷர்களில் இரண்டுபேர் இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுகிறார்கள். அவர்களிடத்தில் யோவான்ஸ்நானன் இயேசுவைப்பற்றி சாட்சியாக அறிவிக்கிறான். இயேசுகிறிஸ்து யோர்தான் நதியில் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்கிறார். அதன்பின்பு ஆவியானவர் அவரை சோதிப்பதற்காக வனாந்தரத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு சாத்தான் அவரை சோதிக்கிறான். இயேசுகிறிஸ்து வனாந்தரத்தில் நாற்பது நாட்கள் ஒன்றும் புசியாது உபவாசம்பண்ணுகிறார்.

## அதிகாரம் - 1

இந்தக் காலத்தில், இயேசுகிறிஸ்து யோவான்ஸ்நானனோடு இல்லாதபோதிலும், அவன் இயேசுவைக்குறித்து தொடர்ந்து சாட்சி கூறி வருகிறான். இந்த சமயத்தில் ஒரு நாள் இயேசுகிறிஸ்து யோவான்ஸ்நானனிடத்தில் வருகிறார். தன்னிடத்தில் இயேசுவானவர் வருகிறதைக் கண்டு யோவான்ஸ்நானன் அவரைக்குறித்து இரண்டு காரியங்களை சாட்சியாக அறிவிக்கிறான். இவை இரண்டுமே ஒன்றுக்கொன்று தொடர்புடையவை.

இயேசுகிறிஸ்துவைப் பற்றி யோவான்ஸ்நானன் சாட்சியாக அறிவிக்கும்போது, தன்னுடைய சாட்சியின் நான்கு காரியங்களை குறிப்பிடுகிறான். அவையாவன: 1. இயேசுகிறிஸ்து உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவஆட்டுக்குட்டி 2. இயேசுகிறிஸ்து யோவான்ஸ்நானனுக்குப் பின்வருகிறார். ஆயினும் அவர் அவனுக்கு முன்னிருந்தபடியால் அவனிலும் மேன்மையுள்ளவர் 3. ஆவியானவர் புறாவைப்போல வானத்திலிருந்து இறங்கி இயேசுகிறிஸ்துவின்மேல் தங்கினார் 4. இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரன்.

இயேசுகிறிஸ்துவைப் பற்றி யோவான்ஸ்நானன் சாட்சியாகக் கூறும்போது, அவன் அறிவிக்கும் முதலாவது காரியம் அவர் "உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவஆட்டுக்குட்டி" என்பதாகும். இயேசுகிறிஸ்து தேவஆட்டுக்குட்டியாக இருக்கிறார். அவர் பிரதான பலியாக இருக்கிறார் என்பது இந்த வாக்கியத்தின் பொருள். இந்த பலியின் மூலமாக மனுஷருடைய பாவத்திற்கு நிவாரணம் உண்டாயிற்று. மேலும் இந்த பலியின் மூலமாக மனுஷன் தேவனோடு ஒப்புரவாகும் சிலாக்கியத்தைப் பெற்றுக்கொள்கிறான்.

பழைய ஏற்பாட்டில் பலவிதமான மிருகங்களை தேவனுக்குப் பலியாக செலுத்தினார்கள். இந்த மிருகங்கள் எல்லாவற்றிலும் தேவன் ஆட்டுக்குட்டிகளை தமக்கு சுகந்த வாசனையான பலிகளாக தெரிந்துகொண்டார். அன்றாடக பலியில் கர்த்தருடைய பலிபீடத்தில் ஆட்டுக்குட்டி பலியிடப்பட்டது. அந்தசந்தி வேளையில் ஆட்டுக்குட்டி பலியிடப்பட்டதாக மோசேயின் பிரமாணத்தில் எழுதப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய சந்நிதானத்தில் ஆட்டுக்குட்டியே பிரதானமாக பலியிடப்படும் மிருகமாகும். எகிப்து தேசத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் அடிமைகளாக இருந்தார்கள். கர்த்தர் அவர்களை தம்முடைய பலத்த புயத்தினால் விடுவித்து, எகிப்து தேசத்திலிருந்து வெளியேற்றி கானான் தேசத்திற்கு வழிநடத்திச் சென்றார். எகிப்து தேசத்தைவிட்டு அவர்கள் புறப்படும் முன்பு, இரவுவேளையில் இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் ஆட்டுக்குட்டியை அடித்து, தங்கள் வீட்டு நிலைக்கால்களில் அந்த ஆட்டுக்குட்டியின் இரத்தத்தைத் தெளித்து, பஸ்காவை புசித்தார்கள். இந்த ஆடு பஸ்கா ஆடு என அழைக்கப்படுகிறது. சங்கார தூதன் தலைச்சன் பிள்ளைகளை சங்கரிப்பதற்காக அனுப்பப்பட்டான். அவன் பஸ்கா ஆட்டின் இரத்தம் பூசப்பட்ட வீட்டிலுள்ளவர்களை ஒன்றும் சேதம் பண்ணாமல், மற்ற வீடுகளிலுள்ள தலைச்சன் பிள்ளைகளையும் தலையீற்றுக்களையும் சங்காரம்பண்ணினான்.

இயேசுகிறிஸ்துவே நம்முடைய பஸ்காவாக இருக்கிறார். நம்முடைய பாவத்திற்கு நிவாரணம் உண்டுபண்ணுவதற்காக அவர் பலியிடப்பட்டார். இயேசுகிறிஸ்து தேவனுடைய ஆட்டுக்குட்டி என்று அழைக்கப்படுகிறார். அவர் சாதாரண ஆட்டுக்குட்டியல்ல. உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி. ஜனங்கள் தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டுமென்று யோவான்ஸ்நானன் பிரசங்கம்பண்ணி வந்தான். மனந்திரும்புவதன் மூலமாகவே பாவமன்னிப்பு உண்டாகும் என்பது இவனுடைய உபதேசம். இப்போது அந்த பாவமன்னிப்பு யார் மூலமாக உண்டாகும் என்பதை இங்கு விவரித்துக் காண்பிக்கிறான்.

நாம் இயேசுகிறிஸ்துவை தேவனுடைய ஆட்டுக்குட்டியாக விசுவாசிக்கிறோம். இயேசுகிறிஸ்து தேவனுடைய ஆட்டுக்குட்டியாக இருக்கிறார் என்று கூறும்போது அதில் மூன்று ஆவிக்குரிய சத்தியங்கள் அடங்கியுள்ளன. அவையாவன :

1. அவர் பாவத்தை சுமந்து தீர்க்கிறவர். தம்முடைய மரணத்தின் மூலமாக, பாவத்தின் குற்றவுணர்வுகளை தீர்ப்பதற்காக இயேசுகிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்திருக்கிறார். தம்முடைய கிருபையின் ஆவியினால் அவர் பாவத்தின் வல்லமையை நீக்கிப்போடுகிறார். இந்த உலகத்தின் பாவத்தை அவர் சுமந்து தீர்க்கிறார். இந்த வாக்கியம் தொடர்வினையில் எழுதப்பட்டிருக்கிறது. இதற்கு "அவர் உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்த்துக்கொண்டிருக்கிறார்" என்று பொருள் சொல்லவேண்டும். அவர் பாவத்தை எப்போதுமே சுமந்து தீர்த்துக்கொண்டிருக்கிறவர்.

## அதிகாரம் - 1

2. இயேசுகிறிஸ்து உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிறவர். இந்த உலகத்திலுள்ள எல்லா தேசங்கள், ஜாதிகள், பாஷைகள் ஆகியவற்றை சேர்ந்த எல்லா ஜனங்களுடைய பாவங்களை சுமந்து தீர்ப்பதற்காக, தம்முடைய சுயஇரத்தத்தை மீட்பின் கிரயமாக செலுத்தியிருக்கிறார். இந்த முழு உலகத்தின் பாவத்தை நிவர்த்தி செய்வதற்காக தேவஆட்டுக்குட்டியானவர் பலியாக செலுத்தப்படுகிறார். "நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே. நம்முடைய பாவங்களை மாத்திரமல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்" (1யோவா 2:2). இயேசுகிறிஸ்து சர்வலோகத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்கிறபோது, நம்முடைய பாவங்களையும் நிவிர்த்தி செய்வது நிச்சயமாமே.

3. இயேசுகிறிஸ்து உலகத்தின் பாவத்தை தம்மீது சுமந்து தீர்க்கிறார். இவர் தேவஆட்டுக்குட்டி. இந்த ஆட்டுக்குட்டி உலகத்தின் பாவத்தை தம்மீது சுமந்துதீர்க்கிறது. நாம் சுமக்கும் பாவங்களை இயேசுகிறிஸ்து தம்மீது சுமக்கிறார். பழைய ஏற்பாட்டுக்காலத்தில் அநேகருடைய பாவங்களை சுமந்து தீர்க்கும் போக்காடைப்போல, இயேசுகிறிஸ்து நம் எல்லோருடைய பாவங்களையும் சுமந்து தீர்க்கிறார்.

"ஆரோன் இப்படிப் பரிசுத்த ஸ்தலத்துக்கும் ஆசரிப்புக் கூடாரத்துக்கும் பலிபீடத்துக்கும் பிராயச்சித்தஞ்செய்து தீர்ந்தபின்பு, உயிரோடிருக்கிற வெள்ளாட்டுக்கடாவைச் சேரப்பண்ணி, அதின் தலையின்மேல் ஆரோன் தன் இரண்டு கைகளையும் வைத்து, அதின்மேல் இஸ்ரவேல் புத்திரருடைய சகல அக்கிரமங்களையும் அவர்களுடைய எல்லாப் பாவங்களினாலும் உண்டான அவர்களுடைய சகல மீறுதல்களையும் அறிக்கையிட்டு, அவைகளை வெள்ளாட்டுக்கடாவினுடைய தலையின்மேல் சுமத்தி, அதை அதற்கான ஆள்வசமாய் வனாந்தரத்துக்கு அனுப்பிவிடக்கடவன்" (லேவி 16:20,21).

தேவன் மனுஷருடைய பாவங்களை தீர்ப்பதற்கு ஒரு உபாயத்தை உண்டுபண்ணியிருக்கிறார். பாவத்தை அழித்துவிட்டு, பாவியை தப்ப விடுவது தேவனுடைய திட்டம். இதற்காகவே தம்முடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை நமக்காக பாவமாக்கினார்.

இயேசுகிறிஸ்து உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவஆட்டுக்குட்டியாக இருப்பதினால், அவரை நோக்கிப் பார்ப்பது நம்முடைய கடமையாகும். நம்முடைய பாவத்தை அவர் சுமந்து தீர்ப்பவர். நாம் அவரை இவ்வாறு தரிசிக்க வேண்டும். அப்போதுதான் பாவத்தைக்குறித்த வெறுப்பும், கிறிஸ்துவைக் குறித்த அன்பும் நமக்குள் அதிகரிக்கும்.

**நானும் இவரை அறியாதிருந்தேன்**

**எனக்குப்பின் ஒருவர் வருகிறார், அவர் எனக்கு முன்னிருந்தபடியால் என்னிலும் மேன்மையுள்ளவரென்று நான் சொன்னேனே, அவர் இவர்தான். நானும் இவரை அறியாதிருந்தேன்; இவர் இஸ்ரவேலுக்கு வெளிப்படும் பொருட்டாக, நான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுக்கவந்தேன் என்றான் (யோவா 1:30,31).**

இயேசுகிறிஸ்துவைக் குறித்து யோவான்ஸ்நானன் ஏற்னெவே சொல்லியிருக்கிறான். "எனக்குப் பின் ஒருவர் வருகிறார்" என்று இவன் ஏற்கெனவே சொல்லியிருந்தான். இந்த சத்தியத்தை யோவான்ஸ்நானன் வெளிப்படுத்தியதினால், மற்ற தீர்க்கதரிசிகள் எல்லோரையும்விட இவன் உயர்ந்தவனாக இருக்கிறான். அவர்களெல்லோரும் வரப்போகிற ஒருவரைப்பற்றி முன்னறிவித்தார்கள். ஆனால் யோவான்ஸ்நானனோ அவர் ஏற்கெனவே வந்துவிட்டதை தன்னுடைய கண்களினால் பிரத்தியட்சமாக காண்கிறான். தற்காலத்து விசுவாசத்திற்கும் வருங்காலத்து தரிசனத்திற்கும் இடையில் இதுபோன்று பெரிய வித்தியாசமுள்ளது.

இதற்கு முன்பு யோவான்ஸ்நானன் இயேசு கிறிஸ்துவைப்பற்றி அறிவித்திருக்கிறான். யூதர்கள் எதிர்பார்த்த பிரகாரமாக இயேசுகிறிஸ்து ஆடம்பரமாகவோ ஆரவாரமாகவோ தம்மை வெளிப்படுத்தவில்லை. மிகவும் அமைதியாக, ஜனங்களில் ஒருவராக அவர் தம்மை வெளிப்படுத்தினார். அந்த இயேசுகிறிஸ்துவைக் குறித்து சாட்சி கூறுவதற்கு யோவான்ஸ்நானன் வெட்கப்படவில்லை. "எனக்குப் பின் ஒருவர் வருகிறார், அவர் எனக்கு முன்னிருந்தபடியால், என்னிலும் மேன்மையுள்ளவர்" என்று யோவான்ஸ்நானன் இயேசுகிறிஸ்துவைப்பற்றி சொல்கிறான்.

## அதிகாரம் - 1

யோவான்ஸ்நானன் இயேசுகிறிஸ்துவின் ஆள்தத்துவத்தைக்குறித்து வெளிப்படுத்துவது மிகவும் அத்தியாவசியமாக இருக்கிறது. ஏனெனில் இவன் இயேசுகிறிஸ்துவைக்குறித்து மிகவும் உயர்வாக பேசுகிறான். ஆனால் இயேசுகிறிஸ்துவோ தம்மையே தாழ்த்தி, ஜனங்களில் ஒருவராக, சாதாரண மனுஷரைப்போல காண்பிக்கிறார். இயேசுகிறிஸ்துவை பார்க்கிற ஜனங்கள், அவர் யோவான் கூறியதுபோல மேன்மையுள்ளவராக தோற்றமளிக்கவில்லையே என்று நினைப்பதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால் இயேசுவை தன்னிடத்தில் வரக்கண்டவுடனே, அவரைக்குறித்து தான் ஏற்கெனவே சொன்னதை மறுபடியுமாக சாட்சியாக கூறுகிறான். இதனால் இங்கு வந்திருக்கிறவர் இயேசுகிறிஸ்துதான் என்பதை ஜனங்கள் புரிந்துகொள்வதற்கு வாய்ப்பு உண்டாயிற்று.

இயேசுகிறிஸ்துவைக்குறித்து யோவான் சாட்சி சொல்லும்போது "நானும் இவரை அறியாதிருந்தேன்" என்று அறிவிக்கிறான். தங்கள் இருவருக்கும் இதற்கு முன்பு நெருங்கிய பழக்கம் இல்லாததுபோன்று அறிவிக்கிறான். இயேசுகிறிஸ்து தன்னிடத்தில் ஞானஸ்நானம் பெற வந்ததற்கு முன்பாக, தனக்கு அவரைப்பற்றி எந்தவிதமான வெளிப்பாடும் இல்லையென்றும் மறைக்காமல் கூறிவிடுகிறான். தாங்கள் காணாத ஒருவரை விசுவாசிக்க வேண்டுமென்றும், அவரைக்குறித்து சாட்சி கூறவேண்டுமென்றும் இவர்களுக்கு யோவான்ஸ்நானன் உபதேசம்பண்ணி வந்திருக்கிறான். இந்த ஜனங்கள் இதுவரையிலும் இயேசுகிறிஸ்துவை தங்கள் கண்களால் காணவில்லை. ஆயினும் அவரை தேவனுடைய குமாரனாக விசுவாசிப்பதினால் அவர்கள் பாக்கியவான்கள்.

யோவான்ஸ்நானனுடைய ஊழியத்தின் முக்கிய நோக்கமும், அவன் ஜலத்தினால் ஞானஸ்நானம் கொடுத்து வந்ததன் அடிப்படைத் திட்டமும் இயேசுகிறிஸ்துவை அறிமுகம் செய்து வைக்கவேண்டும் என்பதற்காகத்தான். இயேசுகிறிஸ்து இஸ்ரவேலுக்கு வெளிப்படவேண்டும். இதன் பொருட்டாகவே யோவான்ஸ்நானன் ஜலத்தினால் ஞானஸ்நானம் கொடுத்து வந்தான். இவன் இயேசுகிறிஸ்துவின் முகத்தில் தரிசிக்காத போதிலும், இவர் இஸ்ரவேலுக்கு வெளிப்பட வேண்டியவர் என்பதை அறிந்திருந்தான்.

யோவான்ஸ்நானன் ஜலத்தினால் ஞானஸ்நானம் கொடுத்து வந்ததன் நோக்கம் நமக்கு உறுதியாக வெளிப்படுத்தப்படவில்லையென்றாலும், அதன் காரணம் இங்கு விவரிக்கப்படுகிறது. இயேசுகிறிஸ்து வெளிப்படுத்தப்பட வேண்டும். தன்னுடைய ஞானஸ்நானக் கிரியையின் மூலமாக கிறிஸ்து வெளிப்படவேண்டும் என்பதே இவனுடைய நோக்கம். இதற்காகவே தான் ஜலத்தினாலே ஞானஸ்நானம் கொடுக்க வந்ததாக அறிக்கை செய்கிறான்.

தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு தம்மை ஒரே வேளையில் முழுவதுமாக வெளிப்படுத்துவதற்குப் பதிலாக, பகுதி பகுதியாக, பங்கு பங்காக வெளிப்படுத்துகிறார். முதலில் இயேசு கிறிஸ்துவைப்பற்றி யோவான்ஸ்நானனுக்கு அதிகமாக தெரியாது. அவர் இஸ்ரவேலுக்கு வெளிப்பட வேண்டியவர் என்பது மாத்திரமே அவனுக்குத் தெரிந்திருந்தது. ஆனால் இப்போதோ யோவான்ஸ்நானன் அவரைக் காணும் சிலாக்கியத்தை பெற்றிருக்கிறான்.

### இவரே தேவனுடைய குமாரன்

**பின்னும் யோவான் சாட்சியாகச் சொன்னது: ஆவியானவர் புறாவைப் போல வானத்திலிருந்திறங்கி, இவர்மேல் தங்கினதைக் கண்டேன். நானும் இவரை அறியாதிருந்தேன்; ஆனால் ஜலத்தினால் ஞானஸ்நானங் கொடுக்கும்படி என்னை அனுப்பினவர்: ஆவியானவர் இறங்கி யார்மேல் தங்குவதை நீ காண்பாயோ, அவரே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானங்கொடுக்கிறவர் என்று எனக்குச் சொல்லியிருந்தார். அந்தப்படியே நான் கண்டு, இவரே தேவனுடைய குமாரன் என்று சாட்சி கொடுத்துவருகிறேன் என்றான் (யோவா 1:32-34).**

ஆவியானவர் புறாவைப்போல வானத்திலிருந்து இறங்கி இயேசுகிறிஸ்துவின்மேல் தங்கினார். இயேசுகிறிஸ்துவைக்குறித்து தான் கூறும் சாட்சியை உறுதிபண்ணும்விதமாக, யோவான்ஸ்நானன் இந்த சம்பவத்தை விவரித்து கூறுகிறான். இயேசுகிறிஸ்துவுக்கு இவன் ஞானஸ்நானம் கொடுக்கும்போது, தேவன் தாமே இயேசுவைக்குறித்து சாட்சியாக அறிவித்தார்.

## அதிகாரம் - 1

ஆவியானவர் புறாவைப்போல வானத்திலிருந்து இறங்கி இயேசுவின்மேல் தங்கினதை யோவான்ஸ்நானன் தன்னுடைய கண்களால் பிரத்தியட்சமாக கண்டான். ஆகையினால் அவரைக் குறித்து சாட்சியாக அறிவிக்கிறான். ஆவியானவரை யோவான்ஸ்நானன் பார்த்திருக்க முடியாது. ஆயினும் ஆவியானவருக்கு அடையாளமாகவும் பிரதிநிதியாகவும் இருக்கும் புறாவை இவன் கண்டான். ஆவியானவர் புறாவைப்போல வானத்திலிருந்து இறங்கினார். புறா தாழ்மை, மென்மை ஆகியவற்றிற்கு அடையாளம். ஜலப்பிரளயத்தின்போது நோவா அனுப்பிய புறா சாயங்காலத்தில் அவனிடத்தில் வந்து சேர்ந்தது. அது கொத்திக்கொண்டு வந்த ஒரு ஒலிவமரத்தின் இலை அதின் வாயிலிருந்தது (ஆதி 8:11). ஒலிவ இலை சமாதானத்திற்கு அடையாளம். ஆவியானவர் வானத்திலிருந்து இறங்கி இயேசுகிறிஸ்துவின்மேல் தங்கினார். தேவஆவியானவர் எப்போதோ ஒரு தடவை இயேசுகிறிஸ்துவின்மீது தங்கியிராமல், எப்போதுமே தங்கியிருக்கிறார்.

யோவான்ஸ்நானனும் இயேசு கிறிஸ்துவை அறியாதிருக்கிறான். ஆனாலும் தேவன் இவனுக்கு ஒரு அடையாளத்தைக் காண்பித்திருக்கிறார். தேவனே யோவான்ஸ்நானனை ஜலத்தினால் ஞானஸ்நானம் கொடுக்கும்படி அனுப்பினவர். "ஆவியானவர் இறங்கி யார்மேல் தங்குவதை நீ காண்பாயோ அவரே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுக்கிறவர்" என்று இயேசுகிறிஸ்துவைக் குறித்து தேவன் யோவான்ஸ்நானனுக்கு ஒரு அடையாளத்தைக் கூறியிருக்கிறார். தேவன் தன்னிடத்தில் கூறிய அடையாளத்தின் அடிப்படையில்தான் யோவான்ஸ்நானன் இயேசுகிறிஸ்துவைக் குறித்து சாட்சியாக அறிவிக்கிறான்.

இவன் தன்னிச்சையாக எதையும் செய்யவில்லை. இவன் ஞானஸ்நானம் கொடுப்பதுகூட தேவனுடைய திட்டத்தினால் நடைபெறுகிறது. ஜலத்தினால் ஞானஸ்நானம் கொடுக்கும்படி தேவனே இவனை அனுப்பியவர். இவன் அனுப்பப்படாமல் புறப்பட்டுப் போகவில்லை. தேவ உத்தரவில்லாமல் இவன் ஞானஸ்நானம் கொடுக்கவில்லை. தான் செய்யும் கிரியைக்கு பரலோகத்திலிருந்து உத்தரவு பெற்றிருக்கிறான்.

கர்த்தருக்கு ஊழியம் செய்யுமாறு நமக்கும் பரலோகத்திலிருந்து அழைப்பு கொடுக்கப்படுகிறது. தேவனிடமிருந்து நாம் பெற்றுக்கொள்ளும் அழைப்பு உறுதியானது. சில வேளையில் ஊழியங்களில் சில சூழ்நிலைகளில் ஜெயங்கிடைக்காமல் போகலாம். ஆனாலும் நம்மை அழைத்த தேவன் உண்மையுள்ளவர். நம்முடைய அழைப்பு உறுதியானது. மாறாதது.

ஜலத்தினாலே ஞானஸ்நானம் கொடுக்கும்படி தேவன் யோவான்ஸ்நானனை அனுப்பியிருக்கிறார். அப்போது பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுக்கிறவரைப்பற்றி தேவன் இவனிடத்தில் பேசுகிறார். இந்த சம்பவம் கர்த்தருடைய ஊழியக்காரருக்கு ஆறுதலைக் கொடுக்கும். கர்த்தருக்காக உண்மையோடு ஊழியம் செய்கிறவர்களுடைய வாயில் கர்த்தர் தாமே வார்த்தைகளைக் கொடுக்கிறார். ஜனங்களிடத்தில் பேசவேண்டிய செய்தியை தேவனே வெளிப்படுத்துகிறார். உலர்ந்த எலும்புகளிடத்தில் பேசவேண்டிய தீர்க்கதரிசன வார்த்தைகளை தேவன் தாமே தம்முடைய ஊழியக்காரர்களின் இருதயத்தில் ஊதுகிறார்.

இயேசுகிறிஸ்துவைக் குறித்த அடையாளத்தை தேவன் தாமே யோவான்ஸ்நானனுக்கு வெளிப்படுத்துகிறார். "ஆவியானவர் இறங்கி யார்மேல் தங்குவதை நீ காண்பாயோ, அவரே இயேசுகிறிஸ்து" என்பதை வெளிப்படுத்துகிறார்.

இயேசுகிறிஸ்துவைப்பற்றி தான் சாட்சியாக கூறுவது தவறாக இருக்குமோ என்னும் சந்தேகம் யோவான்ஸ்நானனுடைய உள்ளத்தில் உண்டாகவில்லை. தன்னுடைய சாட்சியை முழு நிச்சயத்தோடு அறிவிப்பதற்கு தேவன் தாமே இவனுக்கு தைரியத்தையும் கொடுக்கிறார். தேவனிடத்திலிருந்து இவனுக்கு உறுதியான வார்த்தை கிடைத்ததினால், தேவனுடைய சத்தியத்தை இவனால் முழு நிச்சயத்தோடு பேச முடிகிறது.

இயேசுகிறிஸ்துவைக் குறித்து யோவான்ஸ்நானன் சாட்சியாக அறிவிக்கும்போது "இவரே தேவனுடைய குமாரன்" என்று கூறுகிறான். யோவான்ஸ்நானனுடைய பிரசங்கமெல்லாம் இந்த ஒரே வாக்கியத்தில் அடங்கியிருக்கிறது. இயேசுகிறிஸ்துவே தேவனுடைய குமாரனென்று தான் கண்டதாக யோவான்ஸ்நானன் சாட்சி கூறுகிறான். சத்தியம் இங்கு உறுதிபண்ணப்படுகிறது. இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரன் தான் என்பது சாட்சியாக அறிவிக்கப்படுகிறது.

## அதிகாரம் - 1

இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரன் என்பது கிறிஸ்தவ விசுவாசிகளின் விசுவாசப் பிரமாணமாகும். "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" (மத் 16:16) என்று சீமோன் பேதுரு இயேசு கிறிஸ்துவைக் குறித்து சாட்சி கூறினான். யோவான்ஸ்நானன் இயேசுகிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று கண்டு அவருக்கு சாட்சி கொடுத்து வருகிறான். தான் சாட்சி கொடுப்பதை இவன் தன் கண்களால் கண்டிருக்கிறான். இவன் கண்டதும், இவன் சாட்சியாக அறிவிப்பதும் ஒன்றுதான். கிறிஸ்துவை கண்ணாரக் கண்டவர்கள் மாத்திரமே அவருக்கு சாட்சியாக இருக்கிறார்கள்.

**இதோ, தேவஆட்டுக்குட்டி**

**மறுநாளிலே யோவானும் அவனுடைய சீஷரில் இரண்டுபேரும் நிற்கும் போது, இயேசு நடந்து போகிறதை அவன் கண்டு: இதோ, தேவ ஆட்டுக்குட்டி என்றான் (யோவா 1:35,36).**

மறுநாளிலே யோவான்ஸ்நானன் இயேசுகிறிஸ்துவைக்குறித்து மறுபடியும் சாட்சி கூறுகிறான். இயேசு நடந்துபோகிறதை அவன் காண்கிறான். தன்னுடைய சீஷர்கள் இரண்டு பேரோடு யோவான்ஸ்நானன் பேசிக்கொண்டிருப்பதுபோல தெரிகிறது. அந்த சமயத்தில் இயேசுகிறிஸ்து நடந்து போகிறதை அவன் காண்கிறான். இது சாதாரணமாக பார்க்கும் பார்வையல்ல. நம்முடைய கண்களை ஒரு காரியத்தின்மீது நிலைவரப்படுத்தி, கூர்ந்து கவனிப்பது போன்ற பார்வையாகும். இது போலவே யோவான்ஸ்நானன் தன் கண்களின் பார்வையை இயேசுவின்மீது பதிக்கிறான். மற்றவர்களை இயேசுகிறிஸ்துவிடம் வழிநடத்துகிறவர்கள் இயேசுவோடு நெருங்கிய ஐக்கியத்தில் இருக்கவேண்டும். தங்களுடைய ஆவியில் அவருக்கு அருகாமையில் இருக்கவேண்டும். தங்களுடைய பிரகாசமுள்ள மனக்கண்களினால் அவரை எப்போதும் தரிசித்துக் கொண்டேயிருக்க வேண்டும்.

ஒரு நாளுக்கு முன்பு இயேசுகிறிஸ்துவைக் குறித்து யோவான்ஸ்நானன் கூறிய அதே சாட்சியை இப்போது இங்கு மறுபடியும் கூறுகிறான். உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்ப்பதற்காக இயேசுகிறிஸ்து பலியாக செலுத்தப்பட்டிருக்கிறார். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் எல்லோரும் இந்த சத்தியத்தை வலியுறுத்திக் கூறவேண்டும்.

இயேசுகிறிஸ்து தேவஆட்டுக்குட்டியாக இருக்கிறார். நம்முடைய பாவங்களை சுமந்து தீர்ப்பதற்காக அவர் கல்வாரி சிலுவையில் தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்தார். நம்மை மீட்பதற்காக இயேசுகிறிஸ்து தம்முடைய சுயஇரத்தத்தை சிந்தினார்.

தன்னுடைய சீஷர்களில் இரண்டுபேர் இப்போது இயேசுகிறிஸ்துவோடு நிற்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் இயேசுகிறிஸ்துவைப்பற்றிய நற்சாட்சியை யோவான்ஸ்நானன் தன்னுடைய சீஷர்களிடம் கூறுகிறான். அவர்கள் இருவரையும் இயேசுகிறிஸ்துவின் ஆளுகைக்கும் வழிநடத்துதலுக்கும் ஒப்புக்கொடுக்க ஆயத்தமாக இருக்கிறான். தன்னுடைய சீஷர்கள் இயேசுவைப் பின்பற்றி போய்விட்டால் தனக்கு சீஷர்களின் எண்ணிக்கையில் இழப்பு நேரிடுமே என்று யோவான்ஸ்நானன் சிறிதும் வருத்தப்படவில்லை.

தன்னிடம் படிக்கும் மாணவர்கள் மேற்படிப்புக்காக பெரிய கல்லூரிகளுக்கு செல்லும்போது, ஆசிரியர்கள் அவர்களை சந்தோஷமாக அனுப்பி வைப்பதுபோல, யோவான்ஸ்நானனும் தன்னுடைய இரண்டு சீஷர்களை இயேசுவோடுகூட அனுப்பி வைக்கிறான்.

யோவான்ஸ்நானன் தனக்காக சீஷர்களை கூட்டிச்சேர்க்கவில்லை. இயேசுகிறிஸ்துவுக்காகவே அவன் தன்னிடத்தில் சீஷர்களை கூட்டிச்சேர்த்திருக்கிறான். ஆகையினால் வாய்ப்பு வரும்போது தன் சீஷர்களை இயேசுகிறிஸ்துவிடம் சந்தோஷமாக அனுப்பி வைக்கிறான். இருதயத்தில் தாழ்மையுள்ளவர்கள் உதாரத்துவ குணமுள்ளவர்களாயிருப்பார்கள். எந்தவித பயமுமில்லாமல் மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டிய மரியாதையைக் கொடுப்பார்கள். இதனால் தங்களுக்கு இழப்பு நேரிட்டாலும் அதை இழப்பாக கருதமாட்டார்கள்.

### யோவானுடைய சீஷர்
### யோவா 1 : 37-42

**யோவா 1:37. அவன் அப்படிச் சொன்னதை அவ்விரண்டு சீஷருங்கேட்டு, இயேசுவுக்குப் பின்சென்றார்கள்.**

**யோவா 1:38. இயேசு திரும்பி, அவர்கள் பின் செல்லுகிறதைக் கண்டு: என்னதேடுகிறீர்கள் என்றார். அதற்கு அவர்கள்: ரபீ, நீர் எங்கே தங்கியிருக்கிறீர் என்று கேட்டார்கள்; ரபீ என்பதற்குப் போதகரே என்று அர்த்தமாம்.**

## அதிகாரம் - 1

**யோவா 1:39. அவர்: வந்து பாருங்கள் என்றார். அவர்கள் வந்து அவர் தங்கியிருந்த இடத்தைக் கண்டு, அன்றையத்தினம் அவரிடத்தில் தங்கினார்கள். அப்பொழுது ஏறக்குறையப் பத்துமணி வேளையாயிருந்தது.**

**யோவா 1:40. யோவான் சொன்னதைக் கேட்டு, அவருக்குப் பின்சென்ற இரண்டு பேரில் ஒருவன் சீமோன் பேதுருவின் சகோதரனாகிய அந்திரேயா என்பவன்.**

**யோவா 1:41. அவன் முதல்ாவது தன் சகோதரனாகிய சீமோனைக் கண்டு: மேசியாவைக் கண்டோம் என்று சொன்னான்; மேசியா என்பதற்குக் கிறிஸ்து என்று அர்த்தமாம்.**

**யோவா 1:42. பின்பு, அவனை இயேசுவினிடத்தில் கூட்டிக் கொண்டுவந்தான். இயேசு அவனைப் பார்த்து: நீ யோனாவின் மகனாகிய சீமோன், நீ கேபா எனப்படுவாய் என்றார்; கேபா என்பதற்குப் பேதுரு என்று அர்த்தமாம்.**

### இயேசுவுக்குப் பின்சென்றார்கள்

**அவன் அப்படிச் சொன்னதை அவ்விரண்டு சீஷருங்கேட்டு, இயேசுவுக்குப் பின்சென்றார்கள் (யோவா 1:37).**

யோவான்ஸ்நானன் தங்களுடைய சீஷர்களில் இரண்டுபேரை இயேசுகிறிஸ்துவோடு அனுப்பி வைக்கிறான். அவர்களில் ஒருவன் மேலும் ஒரு சீஷனை இயேசுகிறிஸ்துவிடம் அழைத்து வருகிறான். இவர்களே இயேசுகிறிஸ்துவினுடைய சீஷர்களில் முதற்பலனாக இருக்கிறார்கள். அந்திரேயாவும், மற்றொரு சீஷனும் யோவான்ஸ்நானனுடைய சீஷர்களாக இருந்தார்கள். இவர்கள் இருவரையும் யோவான்ஸ்நானன் இயேசுவோடு அனுப்பி வைக்கிறான். மற்றொரு சீஷனுடைய பெயர் வேத வசனத்தில் குறிப்பிடப்படவில்லை.

இயேசு கிறிஸ்துவைக்குறித்து யோவான்ஸ்நானன் "இதோ, தேவஆட்டுக்குட்டி" என்று கூறுகிறான். அப்படிச்சொன்னதை அவனுடைய சீஷர்களில் இவ்விரண்டு பேரும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவஆட்டுக்குட்டி என்று யோவான்ஸ்நானன் அவரைக்குறித்து சாட்சியாக அறிவிக்கிறான். இதைக்கேட்ட அவனுடைய சீஷரில் இவ்விரண்டு பேரும் இயேசுவுக்குப் பின் செல்கிறார்கள்.

### என்ன தேடுகிறீர்கள்

**இயேசு திரும்பி, அவர்கள் பின் செல்லுகிறதைக் கண்டு: என்னை தேடுகிறீர்கள் என்றார். அதற்கு அவர்கள்: ரபீ, நீர் எங்கே தங்கியிருக்கிறீர் என்று கேட்டார்கள்; ரபீ என்பதற்குப் போதகரே என்று அர்த்தமாம் (யோவா 1:38).**

தம்மோடு இவ்விரண்டு சீஷர்களும் பின்வருவதை இயேசுகிறிஸ்து கவனிக்கிறார். திரும்பிப்பார்த்து அவர்கள் இருவரும் தமக்குப் பின்செல்கிறதைக் காண்கிறார். ஒரு ஆத்துமா தம்மை நோக்கி வரும்போது இயேசுகிறிஸ்து அதை உடனடியாக கவனிக்கிறார். நாம் அவரோடு முதலில் பேசவேண்டுமென்று அவர் ஒருபோதும் காத்திருக்கமாட்டார். அவரே நம்மிடத்தில் முதலாவதாகப் பேசுவதற்கு முன்வருவார். ஒரு ஆத்துமாவுக்கும் கிறிஸ்துவுக்கும் இடையே சம்பாஷணை நடைபெறும்போது, இதில் இயேசுகிறிஸ்துவே சம்பாஷணையை துவக்குகிறவராக இருப்பார். இங்கும் இதுபோன்ற பொதுவான நிலமையே காணப்படுகிறது. இயேசுகிறிஸ்து இவ்விரண்டு சீஷர்களையும் கண்டு "என்ன தேடுகிறீர்கள்" என்று கேட்கிறார்.

இயேசுகிறிஸ்துவின் வார்த்தை அவர்களை தம்மிடத்தில் அன்போடு அழைப்பது போன்றுள்ளது. தம்மிடத்தில் நெருங்கி பழகுமாறும், தம்மோடு தயக்கமில்லாமல் பேசுமாறும் இயேசு அவர்களுக்கு அழைப்புக் கொடுக்கிறார். அவர்களுடைய மனதில் தோன்றும் எண்ணங்கள் எல்லாவற்றையும் அவர்கள் தயக்கமில்லாமல் இயேசுகிறிஸ்துவோடு பகிர்ந்து கூறலாம்.

இயேசுகிறிஸ்துவுக்காக ஆத்தும ஆதாயம் செய்கிறவர்கள் இயேசுகிறிஸ்துவின் இந்த முன்மாதிரியைப் பின்பற்றவேண்டும். தங்களுடைய சுபாவங்களை தாழ்மையோடும், மென்மையாகவும், மற்றவர்கள் தங்களோடு எளிதில் நெருங்கிப் பழகும் விதத்திலும் அமைத்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் மற்ற ஆத்துமாக்கள் நம்மிடத்தில் தயக்கமில்லாமல் வருவார்கள்.

## அதிகாரம் - 1

இயேசுகிறிஸ்து இவ்விரண்டு சீஷர்களிடம் "என்ன தேடுகிறீர்கள்" என்று கேட்டதுபோலவே, நாமும் இயேசுகிறிஸ்துவை பின்பற்றும்போது இதே கேள்வியை நம்மிடத்தில் கேட்டுக்கொள்ள வேண்டும். "நாம் என்ன தேடுகிறோம்" என்னும் கேள்வியை நம்முடைய உள்ளத்தில் கேட்டுக்கொண்டேயிருக்க வேண்டும். இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுவதினால் நம்முடைய நோக்கம் என்ன, நம்முடைய திட்டம் என்ன, நம்முடைய ஆவல் என்ன. நாம் ஒரு போதகரைத் தேடுகிறோமா, ஒரு ஆண்டவரைத் தேடுகிறோமா, நம்முடைய பாவங்களை மன்னிப்பதற்கு ஒரு இரட்சகரைத் தேடுகிறோமா? இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றும்போது தேவனுடைய ஆசீர்வாதங்களையும், கிருபைகளையும், சிலாக்கியங்களையும் தேடுகிறோமா, நம்முடைய ஆத்துமாக்களுக்கு நித்திய ஜீவனைத் தேடுகிறோமா? இது போன்ற கேள்விகளை நமக்குள்ளே கேட்டுக்கொள்ள வேண்டும்.

யோவானுடைய சீஷர்கள் இயேசுகிறிஸ்துவிடம் மிகவும் கண்ணியமாக அவருடைய வாசஸ்தலத்தைக் குறித்து கேட்கிறார்கள். "ரபீ, நீர் எங்கே தங்கியிருக்கிறீர்" என்பது இவர்களுடைய கேள்வி. இவ்விரண்டு சீஷர்களும் இயேசுகிறிஸ்துவை "ரபீ" என்று அழைப்பதன் மூலமாக அவரை தங்களுடைய போதகராக அங்கீகரிக்கிறார்கள். அவருடைய உபதேசத்தை கேட்பதற்காகவும், அவரிடத்திலிருந்து கற்றுக்கொள்வதற்காகவும் தாங்கள் வந்திருப்பதாக அறிவிக்கிறார்கள். இயேசுவை "ரபீ" என்று அழைக்கும்போது அவரை தங்கள் ஆண்டவராகவும் அங்கீகரிக்கிறார்கள். இயேசுகிறிஸ்து அவர்களுக்கு போதகராகவும் ஆண்டவராகவும் இருக்கிறார். இவர்கள் இருவரும் இயேசுகிறிஸ்துவின் மாணாக்கராக அவரிடம் வருகிறார்கள். இவர்களிடத்தில் கற்றுக்கொள்ளும் ஆவி இருக்கிறது. இவர்களைப்போலவே இயேசுகிறிஸ்துவிடம் வரும் நம் அனைவரிடத்திலும் கற்றுக்கொள்ளும் ஆவி இருக்கவேண்டும். நாம் அவருடைய மாணாக்கராக இருக்கவேண்டும். அவருடைய பாதபடியில் அமர்ந்திருந்து அவருடைய உபதேசங்களைக் கேட்கவேண்டும்.

இயேசுகிறிஸ்து எங்கே தங்கியிருக்கிறார் என்று இவர்கள் இருவரும் கேட்கும்போது, அவரோடு இவர்கள் நெருங்கிப் பழக ஆவலாக இருப்பது தெரியவருகிறது. அவர் அங்கீகரிக்கும் காலத்தில், இவ்விரண்டு சீஷர்களும் அவரோடுகூட தங்கியிருந்து, அவருடைய உபதேசத்தை கேட்டு, அவரிடமிருந்து கற்றுக்கொள்ள விரும்புகிறார்கள். இவ்விருவரும் மிகவும் கண்ணியமாகவும், பணிவாகவும், நாகரீகமாகவும் பழகுகிறார்கள். இவர்களிடத்தில் நல்ல குணாதிசயங்கள் காணப்படுகிறது. இயேசுகிறிஸ்துவை பின்பற்றகிறவர்கள் இவர்களைப்போலவே நல்ல பண்புள்ளவர்களாக இருக்க வேண்டும்.

தாங்கள் தற்போது யோவான்ஸ்நானனிடமிருந்து பெற்றுக் கொள்ளும் ஆவிக்குரிய சத்தியங்களைவிட, இயேசுகிறிஸ்துவிடமிருந்து அதிகமான சத்தியங்களை பெற்றுக் கொள்ளலாமென்று எதிர்பார்க்கிறார்கள். இவர்கள் இயேசுகிறிஸ்துவோடு, பொழுதுபோக்கிற்காக, ஏதோ பேசவேண்டுமே என்பதற்காக பேசவில்லை. தங்கள் உள்ளத்தில் ஒரு உன்னதமான குறிக்கோளோடு இவர்கள் இருவரும் இயேசுகிறிஸ்துவிடம் பேசிக்கொண்டு வருகிறார்கள். நாமும் இயேசுகிறிஸ்துவோடு பேசும்போது தெளிந்த சிந்தனையோடு பேசவேண்டும்.

இயேசுகிறிஸ்துவிடமிருந்து ஆவிக்குரிய ரகசியங்களையும் வெளிப்பாடுகளையும் கற்றுக்கொள்ள வேண்டும் என்னும் நோக்கத்தோடு நம்முடைய ஐக்கியம் அமைந்திருக்க வேண்டும். அவரோடு இன்னும் அதிக ஐக்கியத்தோடு இருக்கவேண்டுமென்று நாம் விரும்ப வேண்டும். இயேசுகிறிஸ்துவோடு பேசிக்கொண்டிருக்கும்போது, நம்முடைய சொந்த அலுவல்களை பார்த்துக்கொண்டிராமல், நம்முடைய மனதை அலைபாயவிடாமல், நம்முடைய கால்கள் அங்குமிங்கும் ஓடிக்கொண்டிராமல், அவருடைய பாதபடியில் அமர்ந்திருந்து அவரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். ஏதோ சிறிது நேரம் பொழுது போவதற்காக இயேசுகிறிஸ்துவோடு கூடயிருந்துவிட்டு, அதன்பின்பு அவரை விட்டு சீக்கிரமாக ஓடிப்போய்விடலாம் என்னும் சிந்தனை நமக்குள் வரவேகூடாது. நாம் இயேசுகிறிஸ்துவோடு நிலைத்திருக்க வேண்டும். ஒரு கொடியானது செடியோடு நிலைத்திருந்தால்தான் ஜீவனோடிருக்கும். அதுபோலவே நாமும் கிறிஸ்துவோடு நிலைத்திருக்க நாடவேண்டும்.

## அதிகாரம் - 1

### வந்து பாருங்கள்

**அவர்: வந்து பாருங்கள் என்றார். அவர்கள் வந்து அவர் தங்கியிருந்த இடத்தைக் கண்டு, அன்றையத்தினம் அவரிடத்தில் தங்கினார்கள். அப்பொழுது ஏறக்குறையப் பத்தாமணி வேளையாயிருந்தது (யோவா 1:39).**

"ரபீ நீர் எங்கே தங்கியிருக்கிறீர்" என்று கேட்ட சீஷர்களிடம் இயேசுகிறிஸ்து மிகவும் அன்போடு பேசுகிறார். தாம் தங்கியிருக்கும் இடத்திற்கு அவர்களை அன்புடன் அழைக்கிறார். "வந்து பாருங்கள்" என்று அவர்களுக்கு மெய்யான அழைப்புக் கொடுக்கிறார். தாம் தங்கியிருக்கும் இடத்திற்கே வந்து, அந்த இடத்தையும் தம்மையும் வந்து பார்க்குமாறு அழைக்கிறார். நாம் இயேசுகிறிஸ்துவோடு எவ்வளவு அருகாமையில் வருகிறோமோ, அவ்வளவு அதிகமாக அவருடைய அழகை நாம் காணமுடியும்.

ஏமாற்றுக்காரர்களும் மாய்மாலக்காரர்களும் தங்களுடைய சீஷர்களை தங்களுக்கு அருகாமையில் வர அனுமதிக்கமாட்டார்கள். தங்களுக்கு நெருக்கமாக வந்தால் தங்களுடைய ஏமாற்றுத்தனமும், மாய்மாலமும் வெளிப்பட்டுவிடுமோ என்று பயந்து, தங்களுடைய சீஷர்களை சற்று தூரத்தில் விலக்கியே வைத்திருப்பார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவிடமோ ஒளிவு மறைவு எதுவுமில்லை. அவர் உள்ளதை உள்ளது என்றும், இல்லாததை இல்லாதது என்றும் அறிவிக்கிறவர். தாம் சொல்வதை செய்கிறவர். செய்வதை சொல்கிறவர். தம்மிடத்தில் ஒளிவு மறைவு எதுவுமில்லாததினால், சீஷர்களை தம்மிடத்திற்கு வந்து பார்க்குமாறு அன்புடன் அழைக்கிறார்.

அவர்கள்மீது தமக்குள்ள அன்பை இயேசுகிறிஸ்து வெளிப்படுத்துகிறார். காலதாமதம் பண்ணாமல் தம்மோடு உடனடியாக வருமாறு அழைக்கிறார். இயேசுகிறிஸ்துவோடு கூடயிருக்கும் நேரம் நல்லநேரமாகவே இருக்கிறது. அவரை கிட்டிச் சேர்வதற்கு வாய்ப்புக் கிடைக்கும் நேரம் நல்லநேரமாகவே இருக்கும். அதைவிட வேறு நல்லநேரம் இனிமேல் வரப்போவதில்லை. ஆகையினால் இயேசுகிறிஸ்து நமக்குக் கொடுக்கும் வாய்ப்பை காலதாமதம் பண்ணாமல் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். ஆத்தும ஆதாயம் செய்கிறவர்கள், ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படுவதற்கு வாய்ப்பு இருக்கும்போதே அவர்களை இரட்சிப்புக்குள் வழிநடத்திவிடவேண்டும். இரும்பை சூடாக இருக்கும்போதே அடித்து வளைப்பதுபோல, ஒவ்வொரு காரியத்தையும் காலதாமதம் பண்ணாது அதற்குரிய நேரத்தில் செய்து முடித்துவிடவேண்டும். தற்போது நமக்கு கிடைத்திருக்கும் வாய்ப்புக்களை நல்லமுறையில் பயன்படுத்திக்கொள்வது ஞானமுள்ள செயல். இதுவே அநுக்கிரக காலம்.

இயேசுகிறிஸ்துவின் அழைப்பை இவ்விரண்டு சீஷர்களும் அன்போடு ஏற்றுக்கொள்கிறார்கள். அவர்கள் வந்து அவர் தங்கியிருந்த இடத்தைக் கண்டு, அன்றைய தினம் அவரோடு தங்குகிறார்கள். இயேசுகிறிஸ்துவோடு உடன் செல்வதற்கு இவ்விருவரும் ஆயத்தமாக இருக்கிறார்கள். கிருபையுள்ள ஆத்துமாக்கள் இயேசுகிறிஸ்துவின் கிருபையுள்ள அழைப்புக்களை சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளும். இயேசுகிறிஸ்து எங்கே இருந்தாலும் அவர் இருக்கும் இடமே நமக்கு நல்ல இடம்.

இவ்விரு சீஷர்களும் அன்றைய தினம் இயேசுகிறிஸ்துவிடம் தங்குகிறார்கள். இயேசுகிறிஸ்துவின் அழைப்பின் பேரில் இவ்விருவரும் அவரிடத்தில் தங்கியிருக்கிறார்கள். அவரோடு தங்கும்போது, அவரோடு கூடயிருப்பது நல்லது என்பதை அவர்கள் புரிந்துகொள்கிறார்கள். அப்போது ஏறக்குறைய பத்துமணி வேளையாயிருந்தது.

### மேசியாவைக் கண்டோம்

**யோவான் சொன்னதைக் கேட்டு, அவருக்குப் பின்சென்ற இரண்டுபேரில் ஒருவன் சீமோன் பேதுருவின் சகோதரனாகிய அந்திரேயா என்பவன். அவன் முதல்வது தன் சகோதரனாகிய சீமோனைக் கண்டு: மேசியாவைக் கண்டோம் என்று சொன்னான்; மேசியா என்பதற்குக் கிறிஸ்து என்று அர்த்தமாம் (யோவா 1:40,41).**

இயேசுவுக்குப் பின்சென்ற யோவான்ஸ்நானனுடைய இரண்டு சீஷர்களில் ஒருவனுடைய பெயர் அந்திரேயா. அவனுடைய சகோதரனின் பெயர் சீமோன் பேதுரு. இவன் தன் சகோதரன் சீமோனை இயேசுகிறிஸ்துவிடம் அழைத்து வருகிறான். இயேசுகிறிஸ்துவோடு முதலாவதாக பழகும் வாய்ப்பு அந்திரேயாவுக்குக் கிடைத்தது. பேதுருவை இயேசுகிறிஸ்துவிடம் அழைத்து வருவதற்கு அந்திரேயா ஒரு கருவியாக செயல்படுகிறான்.

## அதிகாரம் - 1

அந்திரேயா முதலாவதாக தன் சகோதரனாகிய சீமோனை கண்டுபிடிக்கிறான். "கண்டுபிடிக்கிறான்" என்னும் வார்த்தைக்கு அவனைத் "தேடிக்கண்டுபிடிக்கிறான்" என்று பொருள். சீமோன் ஒருவேளை யோவான்ஸ்நானனுடைய உபதேசத்தைக் கேட்பதற்காக அங்கு வந்திருக்கலாம். அந்த கூட்டத்திற்கு மத்தியில் அந்திரேயா தன் சகோதரன் சீமோனை தேடிக் கண்டுபிடிக்கிறான். அந்திரேயா யோவானைப்பார்ப்பதற்கு வந்திருந்தாலும், இப்போது இயேசுகிறிஸ்துவைக் கண்டுகொண்டான்.

தான் இயேசுகிறிஸ்துவைக் கண்டதை அந்திரேயா தனக்குள் மறைத்து வைக்க விரும்பவில்லை. தன் சகோதரன் சீமோனைக் கண்டுபிடித்து, மிகவும் மனத்தாழ்மையோடு, "மேசியாவைக் கண்டோம்" என்று கூறுகிறான். "நான் மேசியாவைக் கண்டேன்" என்று சுயபெருமையில், ஒருமை வார்த்தையில் பேசவில்லை. "கண்டோம்" என்று தன்னோடு கூடயிருந்த மற்றொரு சீஷனையும் சேர்த்து சொல்கிறான். தாங்கள் பெற்றுக்கொண்ட சந்தோஷத்தை, அந்திரேயா மற்றவரிடமும் பகிர்ந்து கூறவிரும்புகிறான்.

தன் சகோதரனிடத்தில் பேசும்போது அந்திரேயாவின் வார்த்தையில் உறுதியும் சந்தோஷமும் வெளிப்படுகிறது. தான் பேசும் வார்த்தை மிகவும் பிரயோஜனமுள்ளது என்னும் எண்ணம் அவனுக்குள் உண்டாயிற்று. அவன் உலககாரியத்தைக் குறித்து பேசவில்லை. ஆவிக்குரிய காரியத்தையும், அதற்கு ஆதாரமாக இருக்கும் இயேசுகிறிஸ்துவையும் குறித்துப் பேசுகிறான். மிகவும் ஞானமாக பேசுகிறான். "நாங்கள் மேசியாவைக் கண்டோம்" என்று கூறுகிறான். இக்காலத்தில் எல்லோரும் மேசியாவைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கிறார்கள். யோவான்ஸ்நானன் கூட தன்னுடைய சீஷர்களுக்கு மேசியாவைக் குறித்து இவ்வளவு தெளிவாக உபதேசம் பண்ணவில்லை. ஆனால் அந்திரேயாவோ தன் சகோதரனிடத்தில் மேசியாவைக் குறித்து மிகவும் தெளிவாக பேசுகிறான்.

### நீ கேபா என்னப்படுவாய்

**பின்பு, அவனை இயேசுவினிடத்தில் கூட்டிக் கொண்டுவந்தான். இயேசு அவனைப் பார்த்து: நீ யோனாவின் மகனாகிய சீமோன், நீ கேபா என்னப்படுவாய் என்றார்; கேபா என்பதற்குப் பேதுரு என்று அர்த்தமாம் (யோவா 1:42).**

அந்திரேயா மேசியாவைக்குறித்து பேசிக்கொள்வதோடு நிறுத்திவிடவில்லை. மிகவும் ஞானமாக செயல்படுகிறான். தன் சகோதரனை, தான் கண்ட மேசியாவிடத்தில் அழைத்து வருகிறான். தன் சகோதரனை கர்த்தரிடத்தில் அழைத்து வருவதே மெய்யான சகோதர அன்பாகும். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும் பிறர்மீது இது போலவே அன்புகூரவேண்டும். நம்முடைய உற்றார் உறவினர்கள், நண்பர்கள், சுற்றத்தார்கள் ஆகியோரை இயேசுகிறிஸ்துவிடம் அழைத்து வந்து, அவர்களுக்கு ஆவிக்குரிய நன்மை கிடைக்க உதவிபுரியவேண்டும். பிறருடைய ஆத்துமாக்களுக்கு நன்மை செய்ய வாய்ப்பு கிடைக்கும்போது அந்த வாய்ப்பை பயன்படுத்துவது நமது கடமை.

இயேசுகிறிஸ்து இந்த பூமியில் ஊழியம் செய்து வந்த நாட்களில் அவரோடு சம்பாஷணை பண்ணும் சிலாக்கியம் சீஷர்களுக்கு உண்டாயிற்று. அந்திரேயா இயேசுகிறிஸ்துவோடு கூடயிருப்பதினால், அவனுடைய உள்ளம் முழுவதும் இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சிந்தனையினால் நிறைந்திருக்கிறது. இயேசுகிறிஸ்து அவனுக்கு போதுமானவராக இருக்கிறார். தன்னுடைய ஜீவியத்தின் எல்லா அம்சங்களுக்கும் அவர் போதுமானவர் என்பதை அந்திரேயா புரிந்துகொள்கிறான்.

தான் பெற்ற இந்த ஆசீர்வாதத்தை தனக்கு நெருக்கமானவர்களும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறான். இவன் சுயநலவாதியல்ல. மெய்யான அன்புக்கு சுயநலமில்லை. பிறரிடத்தில் நாம் மெய்யாகவே அன்பு கூரும்போது, நாம் பெற்றிருக்கிற ஆசீர்வாதங்களை அவர்களிடத்தில் பகிர்ந்துகொள்வோம். பிறர் பசியாக இருக்கும்போது நாம் மாத்திரம் தனித்து திருப்தியாக புசிப்பது சுயநலம்.

அந்திரேயா தன் சகோதரன் சீமோனை இயேசுகிறிஸ்துவினிடத்தில் கூட்டிக்கொண்டு வருகிறான். இயேசுகிறிஸ்து அவனை பார்த்தபோது "நீ யோனாவின் மகனாகிய சீமோன்" என்று கூறுகிறார். அவனை பெயர் சொல்லி அழைக்கிறார். ஒரு சிலர் இந்த பெயரிலுள்ள அர்த்தத்திற்கு ஆவிக்குரிய வியாக்கியானம் கூறுகிறார்கள். "சீமோன்" என்னும் பெயருக்கு "கீழ்ப்படிதலுள்ளவன்" என்று பொருள். "யோனா" என்னும் பெயருக்கு "புறா" என்று பொருள். நம்மிடத்தில் புறாவைப்போல கீழ்ப்படிதலுள்ள ஆவி இருக்கவேண்டும். நம்முடைய கீழ்ப்படிதலே இயேசுகிறிஸ்துவின் சீஷராக இருப்பதற்கு நம்மைத் தகுதிப்படுத்தும்.

## அதிகாரம் - 1

இயேசுகிறிஸ்து சீமோனைப்பார்த்த போது, அவனுக்குப் புதிய பெயர் கொடுக்கிறார். "நீ யோனாவின் மகனாகிய சீமோன், நீ கேபா என்னப்படுவாய்" என்று கூறுகிறார். இயேசுகிறிஸ்து இவனுக்கு புதிய பெயர் கொடுப்பதினால் தம்முடைய விசேஷித்த அன்பையும், சிலாக்கியத்தையும் இவனுக்குத் தெரியப்படுத்துகிறார். தம்முடைய ஆவிக்குரிய குடும்பத்தில் சீமோனையும் ஒரு அங்கத்தினராக ஏற்றுக்கொள்கிறார். "கேபா" என்னும் பெயர் இயேசுகிறிஸ்துவின்மீது சீமோன் வைத்திருக்கும் உறுதியுள்ள விசுவாசத்தை வெளிப்படுத்துகிறது. "கேபா" என்பது எபிரெய வார்த்தை இதற்கு "கல்" என்று பொருள். கேபா என்னும் பெயருக்கு பேதுரு என்று இயேசுகிறிஸ்து வியாக்கியானம் கொடுக்கிறார்.

பேதுரு இயற்கையாகவே கடின சுபாவம் கொண்டவன். தான் எடுத்த காரியத்தில் வைராக்கியமாக இருந்து அதை நிறைவேற்றுகிறவன். அவனை எந்த காரியமும் எளிதில் அசைத்துவிடாது. ஆகையினால்தான் இயேசுகிறிஸ்து சீமோனை "கல்" என்று அர்த்தங்கொள்ளும் "கேபா" என்னும் பெயரினால் அழைக்கிறார்.

இதற்கு பின்பு இயேசுகிறிஸ்து இவனுக்காக ஜெபித்தபோது, இயேசுகிறிஸ்துவில் இவன் வைத்திருக்கும் விசுவாசம் உறுதியாக நிலைத்திருக்க வேண்டும் என்று ஜெபிக்கிறார். இவனை "கேபா" என்று இயேசுகிறிஸ்து அழைத்து, அவனை "கேபாவாகவே" அதாவது கல்லைப்போன்று உறுதியான விசுவாசமுள்ளவனாகவே ஆக்குகிறார். இயேசுகிறிஸ்துவினிடத்தில் வருகிறவர்களின் நடை தள்ளாடக்கூடாது. அவர்களுடைய நடை உறுதியாக இருக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவின் மீது பக்திவைராக்கியத்தோடு இருக்கவேண்டும். இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் தள்ளாடுகிறான். கர்த்தரைப் பின்பற்றுகிற மெய்யான விசுவாசி ஒரு கல்லைப்போல அசைக்க முடியாமல் உறுதியாக இருக்கவேண்டும். மனுஷருடைய முயற்சியினால் இந்த சுபாவத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது. தேவனால் கூடாதகாரியம் ஒன்றுமில்லை. இயேசுகிறிஸ்துவின் கிருபையினால் இந்த திவ்வியசுபாவத்தை நாம் பெற்றுக் கொள்ளலாம்.

### பிலிப்பும் நாத்தான்வேலும்
### யோவா 1 : 43-51

**யோவா 1:43. மறுநாளிலே இயேசு கலிலேயாவுக்குப் போக மனதாயிருந்து, பிலிப்புவைக் கண்டு: நீ எனக்குப் பின்சென்று வா என்றார்.**

**யோவா 1:44. பிலிப்பென்பவன் அந்திரேயா பேதுரு என்பவர்களுடைய ஊராகிய பெத்சாயிதா பட்டணத்தான்.**

**யோவா 1:45. பிலிப்பு நாத்தான்வேலைக் கண்டு: நியாயப்பிரமாணத்திலே மோசேயும் தீர்க்கதரிசிகளும் எழுதியிருக்கிறவரைக் கண்டோம்; அவர் யோசேப்பின் குமாரனும் நாசரேத்தூரானுமாகிய இயேசுவே என்றான்.**

**யோவா 1:46. அதற்கு நாத்தான்வேல்: நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை உண்டாகக் கூடுமா என்றான். அதற்குப் பிலிப்பு: வந்து பார் என்றான்.**

**யோவா 1:47. இயேசு நாத்தான்வேலைத் தம்மிடத்தில் வரக்கண்டு அவனைக் குறித்து: இதோ, கபடற்ற உத்தம இஸ்ரவேலன் என்றார்.**

**யோவா 1:48. அதற்கு நாத்தான்வேல்: நீர் என்னை எப்படி அறிவீர் என்றான். இயேசு அவனை நோக்கி: பிலிப்பு உன்னை அழைக்கிறதற்குமுன்னே, நீ அத்திமரத்தின் கீழிருக்கும்போது உன்னைக் கண்டேன் என்றார்.**

**யோவா 1:49. அதற்கு நாத்தான்வேல்: ரபீ, நீர் தேவனுடைய குமாரன், நீர் இஸ்ரவேலின் ராஜா என்றான்.**

**யோவா 1:50. இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: அத்திமரத்தின் கீழே உன்னைக் கண்டேன் என்று நான் உனக்குச் சொன்னதினாலேயா விசுவாசிக்கிறாய்; இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய் என்றார்.**

**யோவா 1:51. பின்னும், அவர் அவனை நோக்கி: வானம் திறந்திருக்கிறதையும், தேவதூதர்கள் மனுஷகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையும் நீங்கள் இதுமுதல் காண்பீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.**

## அதிகாரம் - 1

**பிலிப்பு**

**மறுநாளிலே இயேசு கலிலேயாவுக்குப் போக மனதாயிருந்து, பிலிப்புவைக் கண்டு: நீ எனக்குப் பின்சென்று வா என்றார். பிலிப்பென்பவன் அந்திரேயா பேதுரு என்பவர்களுடைய ஊராகிய பெத்சாயிதா பட்டணத்தான் (யோவா 1:43,44).**

இயேசுகிறிஸ்து பிலிப்புவைக் கண்டு அவனை தமக்குப் பின்சென்று வருமாறு அழைக்கிறார். நாத்தாவேலின் அழைப்பு வித்தியாசமானது. யோவான்ஸ்நானன் நாத்தான்வேலை இயேசுகிறிஸ்துவிடம் வழிநடத்துகிறான். பேதுருவை அவனுடைய சகோதரனாகிய அந்திரேயா இயேசுகிறிஸ்துவிடம் அழைத்து வருகிறான். தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை தம்மிடத்தில் அழைத்து வருவதற்கு இயேசுகிறிஸ்து பல்வேறு உபாயங்களை பயன்படுத்துகிறார்.

இயேசுகிறிஸ்து பிலிப்புவை காண்கிறார். இயேசுகிறிஸ்து நம்மைத் தேடிக்கண்டுபிடிக்கிறார். அவரைப்பற்றி நாம் விசாரித்து அறிந்துகொள்வதற்கு முன்பாக, அவர் நம்மைத் தேடிகண்டுபிடிக்கிறார். "பிலிப்பு" என்னும் பெயர் கிரேக்க வார்த்தையாகும். புறஜாதியார் மத்தியில் "பிலிப்பு" என்னும் பெயர் பிரசித்திபெற்ற பொதுவான பெயர். ஆயினும் இயேசுகிறிஸ்து பிலிப்புவின் பெயரை மாற்றவில்லை.

பேதுரு இயேசுகிறிஸ்துவிடம் வந்து சேர்ந்த மறுநாளிலே, பிலிப்புவை கண்டு, தம்மை பின்பற்றி வருமாறு அழைக்கிறார். இயேசுகிறிஸ்து தமக்கு நியமிக்கப்பட்ட சிறிது நேரத்தைக்கூட விரயம் செய்யவில்லை. மறுநாளிலே உடனடியாக பிலிப்புவை தம்மோடு சேர்த்துக்கொள்கிறார். கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நாமும் எந்த ஒரு நாளையும் வீணாக்கிவிடக்கூடாது. ஏனெனில் கர்த்தருக்காக செய்யவேண்டிய ஊழியம் ஏராளமாய் இருக்கிறது.

இயேசுகிறிஸ்து கலிலேயாவுக்குப்போக மனதாயிருக்கிறார். தமக்கு கொடுக்கப்பட்ட எல்லோரையும் இயேசுகிறிஸ்து தேடிகண்டுபிடிக்கிறார். "நீ எனக்கு பின் சென்றுவா" என்னும் வார்த்தையை இயேசுகிறிஸ்து பிலிப்புவிடம் கூறுகிறார். இயேசுகிறிஸ்துவின் வார்த்தை வல்லமையுள்ளது. அவருடைய வல்லமையினால் பிலிப்பு இயேசுவினிடத்தில் வந்து சேருகிறான்.

இவன் பெத்சாயிதா பட்டணத்தைச் சேர்ந்தவன். பேதுருவும் அந்திரேயாவும் இதே பட்டணத்தைச் சேர்ந்தவர்கள். பெத்சாயிதா துன்மார்க்கம் நிறைந்த பட்டணம். இயேசுகிறிஸ்து இந்தப் பட்டணத்தில் அநேக பலத்த செய்கைகளை செய்தார். இந்த பட்டணத்து ஜனங்கள் இவற்றையெல்லாம் கண்டு மனந்திரும்பாமல் போனார்கள். ஆகையினால் இயேசுகிறிஸ்து இந்தப் பட்டணத்தைப் பார்த்து "பெத்சாயிதாவே உனக்கு ஐயோ" என்று சபித்துவிடுகிறார் (மத் 11:21). பெத்சாயிதா பட்டணம் துன்மார்க்கம் நிறைந்ததாக இருந்தாலும், தேவனுடைய கிருபையினால் கர்த்தருக்காக ஒரு கூட்டம் ஜனம் இந்த பட்டணத்திலும் மீதமாக இருக்கிறார்கள். இதுவே தேவனுடைய தெரிந்தெடுக்கும் கிருபை.

**நாத்தான்வேல்**

**பிலிப்பு நாத்தான் வேலைக் கண்டு: நியாயப்பிரமாணத்திலே மோசேயும் தீர்க்கதரிசிகளும் எழுதியிருக்கிறவரைக் கண்டோம்: அவர் யோசேப்பின் குமாரனும் நாசரேத்தூரானுமாகிய இயேசுவே என்றான் (யோவா 1:45).**

பிலிப்பு நாத்தான்வேலை இயேசுகிறிஸ்துவினிடத்தில் அழைத்து வருகிறான். தான் இயேசுகிறிஸ்துவைக் கண்டுகொண்ட நற்செய்தியை பிலிப்பு நாத்தான்வேலிடம் அறிவிக்கிறான். பிலிப்பு ஒரு புதிய விசுவாசி. இப்போதுதான் இயேசுகிறிஸ்துவோடு நெருக்கமாக வர ஆரம்பித்திருக்கிறான். இவன் புதிய விசுவாசியாக இருந்தாலும் ஆத்தும ஆதாயம் செய்வதற்கு விரும்புகிறான். நாத்தான்வேலை தேடிகண்டுபிடித்து "நியாயப்பிரமாணத்திலே மோசேயும் தீர்க்கதரிசிகளும் எழுதியிருக்கிறவரைக் கண்டோம்" என்று இயேசுகிறிஸ்துவைப்பற்றி சாட்சியாக அறிவிக்கிறான்.

## அதிகாரம் - 1

இயேசுகிறிஸ்துவோடு கூடயிருப்பது பிலிப்புவுக்கு மிகவும் சந்தோஷமான அனுபவமாக இருக்கிறது. தான் இதுவரையிலும் பார்க்க வேண்டுமென்று ஆசையோடு காத்திருந்தவரை இப்போது பார்த்துவிட்டதாக கூறுகிறான். பிலிப்புவுக்கு பழைய ஏற்பாட்டில் எழுதப்பட்டிருக்கும் நியாயப்பிரமாணம் தெரிந்திருக்கிறது. அதன் அர்த்தத்தை புரிந்து வைத்திருக்கிறான். இயேசுகிறிஸ்துவோடு நெருங்கி வந்தவுடன், வேதவாக்கியத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் சத்தியங்களை அவன் இயேசுகிறிஸ்துவில் காண்கிறான்.

இவனுக்கு நியாயப்பிரமாணத்தில் ஞானம் இருந்தாலும், இவனிடத்தில் பெருமையில்லை. "நியாயப்பிரமாணத்திலே எழுதியிருக்கிறவரை கண்டேன்" என்று தன்னுடைய வேத அறிவை மிகைப்படுத்திக் கூறுவதற்குப் பதிலாக, மிகவும் மனத்தாழ்மையாக "நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறவரை கண்டோம்" என்று தன்னோடு கூட இருக்கும் சீஷனையும் சேர்த்துக் கூறுகிறான். ஆனால் மெய்யாகவே இவர்கள் இயேசுகிறிஸ்துவை காண்பதற்கு முன்பாகவே, இயேசுகிறிஸ்து இவர்களை கண்டார். இயேசு நம்மைக் காணும்போது நம்முடைய மனக்கண்களை பிரகாசமுள்ள மனக்கண்களாக மாற்றுகிறார். அந்தக் கண்களால் இயேசுகிறிஸ்துவை நம்மால் காணமுடிகிறது.

**வந்து பார்**

**அதற்கு நாத்தான்வேல்: நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை உண்டாகக் கூடுமா என்றான். அதற்குப் பிலிப்பு: வந்து பார் என்றான் (யோவா 1:46).**

பிலிப்புவின் வார்த்தை நாத்தான்வேலுக்கு மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. நியாயப்பிரமாணத்திலே மோசேயும் தீர்க்கதரிசிகளும் எழுதியிருக்கிறவர், யோசேப்பின் குமாரனும் நாசேரத்து ஊரானுமாகிய இயேசுவே என்று பிலிப்பு கூறுகிறான்.

நாத்தான்வேலுக்கு நாசரேத்து ஊரைப்பற்றியும், அந்த ஊரிலுள்ள ஜனங்களைப்பற்றியும் நன்றாகத் தெரியும். ஆகையினால் நாத்தான்வேல் பிலிப்புவிடம் "நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை உண்டாகக்கூடுமோ" என்று கேட்கிறான். எல்லாவற்றையும் சோதித்து நிரூபிக்க வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். தன்னுடைய அறியாமையினாலேயே நாத்தான்வேல் இந்தக் கேள்வியைக் கேட்கிறான். மேசியா மெய்யாகவே நாசரேத்து ஊரிலிருந்து வரமாட்டார். அவர் நாசரேத்தில் பிறந்தவரல்ல. இயேசுகிறிஸ்து பெத்லகேமில் பிறந்தவர். பிலிப்பு இயேசுகிறிஸ்துவைப்பற்றி சரியாகத் தெரிந்துகொள்ளாமல், தன் அறியாமையினால் அவரை நாசரேத்து ஊரானாகிய இயேசு என்று கூறுகிறான். இயேசுகிறிஸ்து மெய்யாகவே பெத்லகேம் ஊரைச் சேர்ந்தவர்.

நாத்தான்வேல் தன்னிடத்தில் கேள்வி கேட்கும்போது அவனுக்கு உரிய பதில்கூறி விளக்கம் கொடுக்க பிலிப்புவிற்கு விருப்பமில்லை. ஆகையினால் அவன் நாத்தான்வேலிடம் "வந்து பார்" என்று கூறுகிறான். சில சமயங்களில் சில சத்தியங்களைப்பற்றி நமக்கு ஓரளவு திருப்தியாகத் தெரியும். ஆயினும் நமக்குத் தெரிந்த சத்தியத்தை மற்றவர்களுக்கு தெளிவுபடுத்திக் கூற நமக்குத் தெரியாமல் போகலாம். அப்படிப்பட்ட சூழ்நிலைகளில், ஆவிக்குரிய காரியங்களில் சரியான விளக்கம் கொடுப்பதற்கு ஜனங்களை சபையின் போதகரிடத்தில் அழைத்து வரவேண்டும்.

தன்னிடம் கேள்வி கேட்ட நாத்தான்வேலுக்கு பிலிப்பு ஞானத்தோடு பதில் கூறுகிறான். தனக்குத் தெரிந்த பதிலை சொல்லி அவனுக்கு விளக்கம் கொடுக்கப்பதற்குப் பதிலாக, அவனை இயேசுகிறிஸ்துவிடம் நேரடியாக வருமாறு அழைக்கிறான். தம்மிடத்தில் வருகிற யாரையும் இயேசுகிறிஸ்து புறம்பே தள்ளவில்லை. நாத்தான்வேல் மீது பிலிப்பு அன்பு கூருகிறான் ஆகையினால்தான் "போய் பார்" என்று கூறுவதற்குப் பதிலாக, "வந்து பார்" என்று அழைக்கிறான். "வா, நானும் உன்னோடு கூடவருகிறேன்" என்று பொருள்படுமாறு கூறுகிறான். நாத்தான்வேல் இயேசுகிறிஸ்துவைப்பார்க்க வரவிரும்பினால், தானும் அவனோடு கூடவந்து அவனை இயேசுகிறிஸ்துவிடம் அழைத்துச் செல்லும் பொறுப்பை ஏற்றுக்கொள்வதாக கூறுகிறான்.

## அதிகாரம் - 1

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் ஆத்துமாக்களை கர்த்தரிடத்தில் அழைத்துச் செல்லும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒரு சில சுயநலத்திற்காகவோ அல்லது தேவையில்லாத பெருமையினாலோ இந்த பொறுப்பை தட்டிக்கழித்துவிடக்கூடாது. இதனால் நமக்கு என்ன லாபம் என்று லாபநஷ்ட கணக்கு பார்த்துக்கொண்டிருக்கக் கூடாது. ஒரு சில புறஜாதியார்கள் சில காரணங்களுக்காக சபைக்கு வர தயங்குவார்கள். சமுதாய சூழ்நிலைகளினிமித்தம் தாங்களாகவே சபைக்கு வரமாட்டார்கள். தங்களுடைய புறஜாதி சமுதாயத்தில் தங்களுக்கு ஏதாவது பிரச்சனை வருமோ என்று யோசிப்பார்கள். சபைக்குப் போவது கிறிஸ்தவர்களுடைய வேலை என்றும், அங்கு நமக்கு என்ன வேலையென்றும் நினைத்து சபைக்குப் போகாமல் ஒதுங்கியே இருப்பார்கள். இப்படிப்பட்டவர்களை சபைக்கு வருவதற்கு அழைக்கும்போது, அவர்களை சபைக்கு அழைத்துச் செல்லும் பொறுப்பை நாமே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

### கபடற்ற உத்தம இஸ்ரவேலன்

**இயேசு நாத்தான்வேல் தம்மிடத்தில் வரக்கண்டு அவனைக் குறித்து: இதோ, கபடற்ற உத்தம இஸ்ரவேலன் என்றார் (யோவா 1:47).**

இயேசுகிறிஸ்துவிடம் வருகிறவர்கள் யாரும் வெறுமையாக திரும்பிப்போவதில்லை. தம்மிடத்தில் வரும் நாத்தான்வேலை இயேசுகிறிஸ்துவும் காண்கிறார். அவனைப்பற்றி கூறும்போது "இதோ கபடற்ற உத்தம இஸ்ரவேலன்" என்று அறிவிக்கிறார். அவனை ஒரு இஸ்ரவேலனாகவே பார்க்கிறார். இந்த வார்த்தை நாத்தான்வேலை புகழும் வார்த்தையாகும். இயேசுகிறிஸ்து அவனை இஸ்ரவேலன் என்று கூறி அவமதிக்கவில்லை. அவன் கபடற்றவன் என்பது இயேசுகிறிஸ்துவுக்குத் தெரியும்.

சற்று நேரத்திற்கு முன்புதான் நாத்தான்வேல் இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாக பேசினான். "நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை உண்டாகக்கூடுமா" என்று கேட்டான். ஆனால் இயேசுகிறிஸ்துவோ அவனுடைய தப்பிதத்தை மன்னிக்கிறார். அவனுடைய வார்த்தை தப்பிதமானதுதான். ஆயினும் அவனுடைய இருதயம் கபடற்றதாகவும் உத்தமமானதாகவும் இருக்கிறது. மனுஷன் நம்முடைய முகத்தையும் வார்த்தையையும் பார்க்கிறான். ஆனால் இயேசுகிறிஸ்துவோ நம்முடைய இருதயத்தைப் பார்க்கிறார்.

நாத்தான்வேலின் நற்குணத்தை இயேசுகிறிஸ்து புகழ்ந்து கூறுகிறார். அவனை கபடற்ற உத்தம இஸ்ரவேலன் என்று அழைக்கிறார். இஸ்ரவேல் தேசத்தை சேர்ந்தவர்கள் எல்லோரும் இஸ்ரவேலர்களல்ல. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை ஆராதித்து, அவருடைய உடன்படிக்கைக்கு தங்களை உட்படுத்திக் கொண்டவர்கள் மாத்திரமே மெய்யான இஸ்ரவேலர்கள். நாத்தான்வேல் ஒரு மெய்யான இஸ்ரவேலனாக இருக்கிறான். ஒரு இஸ்ரவேல் தேசத்தான் எப்படியிருக்க வேண்டுமோ அப்படியிருந்து அதற்கு ஒரு நல்ல முன்மாதிரியாக இருக்கிறான். இவன் யாக்கோபின் குமாரரில் ஒருவன். யாக்கோபின் சந்ததியைச் சேர்ந்தவன். இஸ்ரவேலின் விசுவாசத்தை மெய்யாகவே கைக்கொள்கிறவன். பார்ப்பதற்கு நல்லவனாக தெரிகிறதுபோல இவனுடைய இருதயமும் உத்தமமாக இருக்கிறது. இவனுடைய கையின் பிரயாசங்கள் சமாதானத்தை உண்டுபண்ணுகிறது.

இஸ்ரவேலர்கள் யூதமார்க்கத்தைச் சேர்ந்தவர்கள். இவன் உள்ளாக யூதனாக இருந்தாலும், இவனுடைய இருதயமோ இயேசுகிறிஸ்துவை பின்பற்ற வேண்டும் என்னும் வாஞ்சையுடன் இருக்கிறது. இவனிடத்தில் கபடம் எதுவும் காணப்படவில்லை. எந்த மனுஷனுக்கும் இவன் கபடு செய்யவில்லை. இவனை நம்பலாம். யாருக்கும் தீங்கு செய்யமாட்டான். தேவனுக்கு விரோதமாக தீங்கு நினைக்கமாட்டான். தன்னுடைய பாவங்களுக்காக இவன் மெய்யாகவே மனம்வருந்தி, கர்த்தருடைய சமுகத்தில் உத்தமனாக இருக்கிறான். இவனிடத்தில் சில குற்றவுணர்வுகள் காணப்படலாம். இது இவனுடைய உள்ளான எண்ணம். ஆனால் இயேசுகிறிஸ்து இவனைப்பார்த்தபோது, இவனை கபடற்றவனாகவும் உத்தமனாகவும் காண்கிறார். ஒருவன் கபடற்ற உத்தம இஸ்ரவேலனாக இருக்கவேண்டுமானால் அது தேவனுடைய தெய்வீக கிருபையினால் மாத்திரமே ஆகும்.

## அதிகாரம் - 1

**நீர் என்னை எப்படி அறிவீர்**

**அதற்கு நாத்தான்வேல்: நீர் என்னை எப்படி அறிவீர் என்றான். இயேசு அவனை நோக்கி: பிலிப்பு உன்னை அழைக்கிறதற்குமுன்னே, நீ அத்திமரத்தின் கீழிருக்கும்போது உன்னைக் கண்டேன் என்றார் (யோவா 1:48).**

தன்னைப்பற்றி இயேசுகிறிஸ்து கூறுவது நாத்தான்வேலுக்கு மிகுந்த ஆச்சரியமாயிற்று. சந்தோஷத்தினாலும், ஆச்சரியத்தினாலும், மிகவும் மனத்தாழ்மையோடும் கண்ணியத்தோடும் "நீர் என்னை எப்படி அறிவீர்" என்று இயேசுகிறிஸ்துவிடம் கேட்கிறான். நீர் என்னைக் காணுமளவுக்கு நான் பாத்திரவானல்ல. உம்முடைய பாராட்டை பெற்றுக்கொள்ளும் அளவுக்கு நான் கபடற்றவனோ அல்லது உத்தமனோ அல்ல என்று தன்னை தாழ்த்துகிறான். இதுவே இவனுடைய நற்குணத்திற்கு எடுத்துக்காட்டு. தன்னை இயேசுகிறிஸ்து புகழ்ந்து கூறும்போது தான் அந்த புகழ்ச்சிக்கு பாத்திரவானல்ல என்று தன்னையே தாழ்த்துகிறான். இயேசுகிறிஸ்து நம்மையும் அறிந்து வைத்திருக்கிறார். ஆகையினால் நாமும் அவரை அறிந்துகொள்ள விருப்பப்படவேண்டும்.

இயேசுகிறிஸ்து நாத்தான்வேலிடம் அவனைப்பற்றி மேலும் சில காரியங்களைக் கூறுகிறார். "பிலிப்பு உன்னை அழைக்கிறதற்கு முன்னே நான் உன்னைக் கண்டேன்" என்று இயேசு அவனிடம் கூறுகிறார். முதலாவதாக தமக்கு அவனை தெரியும் என்பதை அவனுக்கு வெளிப்படுத்துகிறார். இயேசுகிறிஸ்துவுக்கு மறைவான காரியம் எதுவுமில்லை. இது அவருடைய தேவத்துவத்தின் சுபாவம். தம்முடைய தெய்வீக தன்மையை இயேசுகிறிஸ்து இதன் மூலமாக வெளிப்படுத்துகிறார்.

பிலிப்பு நாத்தான்வேலை இயேசுகிறிஸ்துவிடம் வருமாறு அழைத்தான் அவனை பிலிப்பு அழைக்கிறதற்கு முன்னே, அவன் ஒரு அத்திமரத்தின் கீழ் இருந்தான். இயேசுகிறிஸ்து அப்போதே அவனைக் கண்டார். இயேசுகிறிஸ்துவைப்பற்றி நாம் அறிந்துகொள்வதற்கு முன்பாகவே அவர் நம்மைப்பற்றி அறிந்து வைத்திருக்கிறார்.

நாத்தான்வேல் அத்திமரத்தின் கீழ் இருக்கும்போதே இயேசுகிறிஸ்துவின் கண்கள் அவனை நோக்கிப்பார்க்கிறது.தான் அத்திமரத்தின் கீழ் இருந்தது தனக்கு மாத்திரமே தெரியும் என்று நாத்தான்வேல் நினைக்கிறான். அவனுக்கு மாத்திரமே தெரிந்த இந்த ரகசியத்தை இயேசுகிறிஸ்து அவனுக்கு வெளிப்படுத்துகிறார். அவன் அத்திமரத்தின் கீழ் ஒய்வெடுத்துக் கொண்டிருந்தபோது, இயேசுகிறிஸ்துவின் கண்கள் அவனை நோக்கிப் பார்த்தது. அவன் ஒரு கபடற்ற உத்தம இஸ்ரவேலன் என்பதை இயேசுகிறிஸ்து அப்போதே தெரிந்துகொண்டார்.

நாத்தான்வேல் அத்திமரத்தின் கீழ் ஒருவேளை வேதவாக்கியத்தை தியானம் பண்ணுவதற்காகவோ, அல்லது ஜெபம்பண்ணுவதற்காகவோ இருந்திருக்கலாம். அத்திமரத்தின் கீழ் இருப்பது அமைதியான ஆவியையும் ஜெபசிந்தனையையும் குறிப்பிடுகிறது. தேவனோடு ஜெபத்தில் ஐக்கியமாக இருப்பதற்கு அத்திமரத்தின் கீழுள்ள நிழல் நிறைந்த இடம் சாதகமான இடமாக இருக்கும்.

**ரபீ, நீர் தேவனுடைய குமாரன்**

**அதற்கு நாத்தான்வேல்: ரபீ, நீர் தேவனுடைய குமாரன், நீர் இஸ்ரவேலின் ராஜா என்றான் (யோவா 1:49).**

இயேசுகிறிஸ்து நாத்தான்வேலை கண்டவிதத்தை அவனுக்குக் கூறுகிறார். பிலிப்பு அவனை அழைக்கிறதற்கு முன்னே, அவன் அத்திமரத்தின் கீழிருக்கும்போது, இயேசுகிறிஸ்து அவனைக் கண்டதாக கூறுகிறார். இதைக் கேட்டவுடன் நாத்தான்வேலுக்கு இயேசுகிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசம் உறுதியாயிற்று. அவன் இயேசுவை நோக்கி "ரபீ நீர் தேவனுடைய குமாரன், நீர் இஸ்ரவேலின் ராஜா" என்று அறிக்கை செய்கிறான். இந்த வாக்கியத்தை சுருக்கமாக சொல்லவேண்டுமென்றால் "நீர் மெய்யான மேசியா" என்று கூறலாம்.

நாத்தான்வேல் தன்னுடைய இருதயத்தில் இயேசுகிறிஸ்துவே மெய்யான மேசியா என்பதை உறுதியாக நம்புகிறான். இயேசுகிறிஸ்து இவனை கபடற்ற உத்தம இஸ்ரவேலன் என்று கூறுகிறார். இவனோ இயேசுகிறிஸ்துவை "நீர் இஸ்ரவேலின் ராஜா" என்று கூறி அவரை மகிமைப்படுத்துகிறான்.

## அதிகாரம் - 1

சற்று நேரத்திற்கு முன்பு "நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை உண்டாகக்கூடுமா" என்று கேள்வி கேட்டவன், இப்போது எந்தக் கேள்வியும் கேட்காமல் அமைதியாக இருக்கிறான். இயேசுகிறிஸ்து தம்மை அவனுக்கு வெளிப்படுத்துகிறார். இப்போது "அவர் யார்" என்பதை நாத்தான்வேல் தன் வாயினாலே அறிக்கை செய்கிறான்.

இயேசுகிறிஸ்துவின் தீர்க்கதரிசன ஊழியத்தை அறிக்கையிடும் விதமாக, அவரை "ரபீ" என்று அழைக்கிறான். அவருடைய தெய்வீக சுபாவத்தையும், தெய்வீக ஊழியத்தையும் அங்கீகரிக்கும் விதமாக அவரை "நீர் தேவனுடைய குமாரன்" என்று அறிக்கையிடுகிறான். இயேசுகிறிஸ்துவைப்பற்றி தான் அறிக்கையிடுவதை இத்துடன் நிறுத்திக்கொள்ளாமல், "நீர் இஸ்ரவேலின் ராஜா" என்று மேலும் கூறுகிறான். இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரனாக இருக்கிறாரென்றால், அவர் இஸ்ரவேலின் ராஜாவாகவும் இருக்கிறார்.

**பெரிதானவைகளைக் காண்பாய்**

**இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: அத்திமரத்தின் கீழே உன்னைக் கண்டேன் என்று நான் உனக்குச் சொன்னதினாலேயா விசுவாசிக்கிறாய்; இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய் என்றார். பின்னும், அவர் அவனை நோக்கி: வானம் திறந்திருக்கிறதையும், தேவதூதர்கள் மனுஷகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையும் நீங்கள் இதுமுதல் காண்பீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் (யோவா 1:50,51).**

இயேசுகிறிஸ்து நாத்தான்வேலுடைய விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணுகிறார். தம்மைப்பற்றி இதுவரையிலும் அவன்கண்டதை விட, இன்னும் பெரிதானவைகளை அவன் காண்பான் என்று கூறி அவனை உற்சாகப்படுத்துகிறார். நாத்தான்வேல் இயேசுகிறிஸ்துவை தன்னுடைய இரட்சகராக ஏற்றுக்கொள்கிறான். இயேசுகிறிஸ்துவும் நாத்தான்வேலின் விசுவாசத்தை அங்கீகரிக்கிறார். இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதற்கு நாத்தான்வேலின் இருதயம் ஏற்கெனவே ஆயத்தமாக இருக்கிறது.

இயேசுகிறிஸ்து தன்னை அத்திமரத்தின் கீழிருக்கும்போது கண்டதாக கூறியது நாத்தான்வேலுக்கு ஆச்சரியமாக இருக்கிறது. அந்த ஆச்சரியத்தினால் இவனுடைய விசுவாசம் மேலும் அதிகரிக்கிறது. ஒருவருக்கு இயேசுகிறிஸ்துவின்மீது ஓரளவு விசுவாசம் இருக்கும்போது, அவருடைய விசுவாசத்தை வர்த்திக்கச் செய்வது எளிதாக இருக்கும். தேவனுடைய மகத்துவமான கிரியை விசுவாசமேயில்லாத ஒருவருக்கு திடீரென்று வெளிப்படுத்தப்படும்போது, அந்த நபரிடத்தில் ஆச்சரியமும் அதிர்ச்சியுமே அதிகரிக்கும்.

நாத்தான்வேலின் விசுவாசத்தை உறுதிபண்ணவும், வர்த்திக்கப்பண்ணவும் இயேசுகிறிஸ்து வாக்குப்பண்ணுகிறார். "இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய்" என்று அவனிடத்தில் கூறுகிறார். இயேசுகிறிஸ்துவின் அற்புதங்களையும், அவருடைய உயிர்த்தெழுதலையும் நாத்தான்வேல் இனிமேல் காணப்போகிறான். இவற்றையே இயேசுகிறிஸ்து "பெரிதானவைகள்" என்று குறிப்பிடுகிறார். சுவிசேஷத்தை மெய்யாக விசுவாசிக்கிறவர்களுக்கு, கர்த்தருடைய வார்த்தை அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் உறுதிபண்ணப்படும்.

இந்த உலகத்தில் இயேசுகிறிஸ்து தம்மை பல உபாயங்கள் மூலமாக வெளிப்படுத்துவதற்கு சித்தங்கொண்டிருக்கிறார். இந்த உபாயங்களைவிட இன்னும் பெரிதான உபாயங்கள் மூலமாக அவர் தம்மை நமக்கு வெளிப்படுத்த பிரியமுள்ளவராக இருக்கிறார்.

இயேசுகிறிஸ்து இந்த வார்த்தைகளைக் கூறும்போது, அதை நாத்தான்வேலுக்கு என்று தனிப்பட்ட முறையில் கூறினாலும், எல்லா சீஷருக்கும் இதை பொதுவானதாகவும் கூறுகிறார். வானம் திறந்திருக்கிறதை, நாத்தான்வேல் மாத்திரமல்ல, தம்முடைய சீஷர்கள் எல்லோருமே காண்பார்கள் என்று அறிவிக்கிறார். இயேசுகிறிஸ்து இந்த சத்தியத்தை கூறும்போது "மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன்" என்னும் வாக்கியத்தை பயன்படுத்துகிறார். அவருடைய வார்த்தை உறுதியானது என்பதையும், சந்தேகத்திற்கு இடமில்லாமல் இது மெய்யாகவே நிறைவேறும் என்பதையும் இந்த வாக்கியம் தெளிவுபடுத்துகிறது. இயேசுகிறிஸ்துவைத் தவிர வேறு யாரும் இது போன்ற வாக்கியத்தை இதுவரையிலும் பயன்படுத்தியதில்லை. சில சமயங்களில் யூதர்கள் தங்களுடைய ஜெபத்தின் முடிவில் "மெய்யாகவே மெய்யாகவே" என்னும் வாக்கியத்தை பயன்படுத்துகிறார்கள். இந்த வாக்கியம் நாம் சொன்னதை உறுதிப்படுத்தும் வார்த்தையாகும்.

## அதிகாரம் - 1

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு சில காரியங்களை உறுதிப்படுத்திக் கூறுகிறார். தம்முடைய சீஷர்கள் இதுமுதல் வானம் திறந்திருக்கிறதைக் காண்பார்கள். இயேசுகிறிஸ்து தேவகுமாரனாக இருக்கிறார். யோவான் எழுதின சுவிசேஷத்தில் இயேசுகிறிஸ்து தம்மைப்பற்றி குறிப்பிடும்போது "மனுஷகுமாரன்" என்றே குறிப்பிடுகிறார். இந்த சுவிசேஷத்தில் தேவகுமாரன் என்னும் வார்த்தையைவிட, மனுஷகுமாரன் என்னும் வார்த்தையே அதிகமாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது. எல்லா சமயங்களிலும் இயேசுகிறிஸ்து மாத்திரமே, தம்மை மனுஷகுமாரன் என்று குறிப்பிடுகிறார். வேறுயாரும் அவரை மனுஷகுமாரன் என்று கூறவில்லை.

நாத்தான்வேல் இயேசுகிறிஸ்துவைப் பற்றி கூறும்போது, அவரை தேவனுடைய குமாரனென்றும், இஸ்ரவேலின் ராஜா என்றும் கூறுகிறான். ஆனால் இயேசுகிறிஸ்துவோ தம்மைப்பற்றி கூறும்போது "மனுஷகுமாரன்" என்றே குறிப்பிடுகிறார். இது அவருடைய தாழ்மையைக் காண்பிக்கிறது. தம்முடைய மனுஷத்துவத்தை இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு வெளிப்படுத்த விரும்புவதைக் காண்பிக்கிறது.

இதுமுதல் அவர்கள் காணப்போகும் பெரிதான காரியங்களைப்பற்றி இயேசுகிறிஸ்து இங்கு முன்னறிவிக்கிறார். "வானம் திறந்திருக்கிறதையும், தேவதூதர்கள் மனுஷகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையும் நீங்கள் இதுமுதல் காண்பீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன்" என்று கூறுகிறார். நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்கு தேவதூதர்கள் பல சமயங்களில் பணிவிடை செய்தார்கள். அந்த சமயத்திலும், இயேசுகிறிஸ்து பரமேறிப்போன சமயத்திலும் வானம் அவரை ஏற்றுக்கொள்வதற்காக திறக்கப்பட்டது. தேவதூதர்கள் மனுஷகுமாரனிடத்திலிருந்து ஏறினார்கள், இறங்கினார்கள். இயேசுகிறிஸ்து முன்னறிவித்த இந்த பெரிதான காரியங்களை அவருடைய சீஷர்கள் தங்கள் கண்களால் பிரத்தியட்சமாக கண்டார்கள்.

இயேசுகிறிஸ்து பரமேறிப்போனது அவருடைய தெய்வீக ஊழியத்திற்கு மிகப்பெரிய சான்றாகும். சீஷர்களுடைய விசுவாசத்தை இயேசுகிறிஸ்து பரமேறிப்போன சம்பவம் உறுதிபண்ணிற்று. கிறிஸ்துவின் அற்புதங்கள் எல்லாமே அவருடைய சீஷர்களின் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணிற்று. இயேசுகிறிஸ்து தம்மைப்பற்றி வெளிப்படுத்திய இந்த சம்பவத்தைத் தொடர்ந்து, அற்புதங்களைச் செய்ய ஆரம்பிக்கிறார்.

## அதிகாரம் - 2

கலிலேயாவிலுள்ள கானா ஊரிலே இயேசுகிறிஸ்து தம்முடைய முதலாவது அற்புதத்தைச் செய்கிறார் (யோவா 2:1-11). இயேசுகிறிஸ்து கப்பர்நகூமில் இருக்கிறார் (யோவா 2:12). தம்முடைய ஊழியத்தை ஆரம்பித்த பின்பு, இயேசுகிறிஸ்து எருசலேமிலே ஆசரிக்கிற முதலாவது பஸ்காவைப்பற்றிய விவரம். தேவாலயத்திலிருந்து விற்கிறவர்களையும் கொள்ளுகிறவர்களையும் துரத்துகிறார் (யோவா 2:13-17). தம்மோடு விவாதம் பண்ணுகிறவர்களுக்கு இயேசுகிறிஸ்து கூறும் அடையாளம் (யோவா 2:18-22). எருசலேமிலுள்ள விசுவாசிகளின் நிலமை (யோவா 2:23-25).

### இயேசுவின் முதலாம் அற்புதம் யோவா 2 : 1-11

**யோவா 2:1. மூன்றாம்நாளிலே கலிலேயாவிலுள்ள கானா ஊரிலே ஒரு கலியாணம் நடந்தது; இயேசுவின் தாயும் அங்கேயிருந்தாள்.**

**யோவா 2:2. இயேசுவும் அவருடைய சீஷரும் அந்தக் கலியாணத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள்.**

**யோவா 2:3. திராட்சரசங்குறைவுபட்ட போது, இயேசுவின் தாய் அவரை நோக்கி: அவர்களுக்குத் திராட்சரசம் இல்லை என்றாள்.**

**யோவா 2:4. அதற்கு இயேசு: ஸ்திரீயே, எனக்கும் உனக்கும் என்ன, என் வேளை இன்னும் வரவில்லை என்றார்.**

**யோவா 2:5. அவருடைய தாய் வேலைக்காரரை நோக்கி: அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதின்படி செய்யுங்கள் என்றாள்.**

**யோவா 2:6. யூதர்கள் தங்களைச் சுத்திகரிக்கும் முறைமையின்படியே, ஒவ்வொன்று இரண்டு மூன்று குடம் தண்ணீர் கொள்ளத்தக்க ஆறு கற்சாடிகள் அங்கே வைத்திருந்தது.**

**யோவா 2:7. இயேசு வேலைக்காரரை நோக்கி: ஜாடிகளிலே தண்ணீர் நிரப்புங்கள் என்றார்; அவர்கள் அவைகளை நிறைய நிரப்பினார்கள்.**

**யோவா 2:8. அவர் அவர்களை நோக்கி: நீங்கள் இப்பொழுது மொண்டு, பந்தி விசாரிப்புக்காரனிடத்தில் கொண்டுபோங்கள் என்றார்; அவர்கள் கொண்டுபோனார்கள்.**

**யோவா 2:9. அந்தத் திராட்சரசம் எங்கேயிருந்து வந்ததென்று தண்ணீரை மொண்ட வேலைக்காரருக்குத் தெரிந்ததேயன்றி பந்தி விசாரிப்புக்காரனுக்குத் தெரியாததினால், அவன் திராட்சரசமாய் மாறின தண்ணீரை ருசிபார்த்தபோது, மணவாளனை அழைத்து:**

**யோவா 2:10. எந்த மனுஷனும் முன்பு நல்ல திராட்சரசத்தைக் கொடுத்து, ஜனங்கள் திருப்தியடைந்தபின்பு, ருசிகுறைந்ததைக் கொடுப்பான், நீரோ நல்ல ரசத்தை இதுவரைக்கும் வைத்திருந்தீரே என்றான்.**

**யோவா 2:11. இவ்விதமாக இயேசு இந்த முதலாம் அற்புதத்தைக் கலிலேயாவிலுள்ள கானா ஊரிலே செய்து, தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார்; அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள்.**

**கலியாணம்**

**மூன்றாம்நாளிலே கலிலேயாவிலுள்ள கானா ஊரிலே ஒரு கலியாணம் நடந்தது; இயேசுவின் தாயும் அங்கேயிருந்தாள் (யோவா 2:1).**

கலிலேயாவிலுள்ள கானா ஊரிலே ஒரு கலியாணம் நடைபெறுகிறது. அங்கு இயேசுகிறிஸ்து தண்ணீரை திராட்சரசமாக மாற்றி அற்புதம் செய்கிறார். இதற்கு முன்பே அவரால் அற்புதம் செய்திருக்க முடியும். ஆயினும் இயேசுகிறிஸ்து நடப்பித்த இந்த அற்புதமே, அவர் செய்த முதலாவது அற்புதம் என்று வேதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தம்முடைய உபதேசத்தை உறுதிபண்ணுவதற்காக இயேசுகிறிஸ்து அற்புதம் நடப்பிக்கிறார். ஒவ்வொன்றுக்கும் ஏற்றவேளை வரும்போது, இயேசுகிறிஸ்து ஒவ்வொரு காரியத்தையும் செய்ய ஆரம்பிக்கிறார். தம்முடைய உபதேசத்தை ஆரம்பிப்பதற்கு முன்பாக, அவர் அற்புதம் செய்ய ஆரம்பிக்கவில்லை. முதலாவது உபதேசமும் அதற்கு பின்பாகவே அற்புதமும் நடைபெறுகிறது. இயேசுகிறிஸ்துவின் வார்த்தை அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் உறுதி பண்ணப்படுகிறது. அற்புதங்களையும் அடையாளங்களையும் வார்த்தையினால் உறுதிபண்ண முயற்சிப்பது விநோதமாக இருக்கும்.

## அதிகாரம் - 2

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டு வனாந்தரத்திலே பிரயாணம் பண்ணியபோது மோசே பல அற்புதங்களை நடப்பித்தார். இவையெல்லாமே ஜனங்களுடைய தேவைகளை சந்திப்பதற்காக நடைபெற்ற அற்புதங்களாகும். அவர்களுக்கு உணவு தேவைப்பட்டது. தேவன் வானத்திலிருந்து அவர்களுக்கு மன்னாவைக் கொடுத்தார். புதிய ஏற்பாட்டுக்காலத்தில் இயேசுகிறிஸ்து தம்முடைய அற்புத வல்லமையினால் நம்முடைய தேவைகளைச் சந்திக்கிறார். தம்முடைய வார்த்தையாகிய மன்னாவினால் நமக்கு ஆவிக்குரிய போஜனம் கொடுக்கிறார்.

இயேசுகிறிஸ்து மூன்றாம் நாளிலே கலிலேயாவிலுள்ள கானா ஊருக்கு வருகிறார். இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை யோவான் எழுதுகிறபோது, அவருடைய வாழ்வில் நடைபெற்ற ஒவ்வொரு சம்பவத்தையும் வரிசை கிரமமாக எழுதிக்கொண்டு வருகிறார். இயேசுகிறிஸ்து தமக்கு கொடுக்கப்பட்டிருக்கும் காலத்தை மிகவும் ஞானமாக திட்டமிட்டு, சிறிது காலத்தைக்கூட வீணாக்காமல், காலத்தை பிரயோஜனப்படுத்திக்கொண்டு வருகிறார். எல்லா நாளுமே இயேசுகிறிஸ்துவுக்கு முக்கியமான நாளாகும். அந்தந்த நாளில், அன்று செய்யவேண்டிய தமது கடமைகளை இயேசுகிறிஸ்து நேர்த்தியாக செய்து முடிக்கிறார். ஒரு நாளில்கூட, இந்த நாளில் தாம் ஒன்றும் செய்யவில்லையே என்றும், இந்தநாள் வீணாய் போயிற்றே என்றும் இயேசுகிறிஸ்து வருத்தமடைந்ததில்லை.

மூன்றாம் நாளிலே இயேசுகிறிஸ்து கலிலேயாவிலுள்ள கானா ஊரிலே இருக்கிறார். இது தேசத்தின் மூலையிலுள்ள ஒரு சிறிய ஊர். இந்த ஊரில்தான் தம்முடைய முதலாவது அற்புதத்தை செய்வதற்கு இயேசுகிறிஸ்து சித்தங்கொண்டிருக்கிறார். கலிலேயாவிலுள்ள ஜனங்களுக்கும் எருசலேமிலுள்ள ஜனங்களுக்கும் ஏராளமான வித்தியாசங்கள் உள்ளன. கலிலேயாவிலுள்ள ஜனங்கள் எளிமையானவர்கள். இவர்கள் தங்கள் ஆவியில் எளிமையுள்ளவர்கள். ஆகவே இவர்கள் பாக்கியவான்களாக இருக்கிறார்கள். ஆவிக்குரிய காரியங்களில் தேவையில்லாத கேள்விகளைக் கேட்டு விவாதம்பண்ணிக்கொண்டிருக்கமாட்டார்கள். இருதயத்தில் பெருமையில்லாதவர்கள். மனத்தாழ்மையுள்ளவர்கள்.

எருசலேமிலுள்ள ஜனங்களோ தங்கள் ஆவியில் பெருமையுள்ளவர்கள். ஆவிக்குரிய காரியங்கள் தங்களுக்கு அதிகமாக தெரியும் என்று பெருமைப்படுகிறவர்கள். பிரதான ஆசாரியரும், வேதபாரகரும், பரிசேயரும், சதுசேயரும் எருசலேமில் இருக்கிறார்கள். எருசலேமில்தான் தேவாலயம் இருக்கிறது. யூதருடைய ஆலோசனைச்சங்கம் இங்குதான் இருக்கிறது. தங்களுக்கு எல்லாம் தெரியும் என்று இவர்கள் பெருமைப்படுவதோடு மற்ற ஊரிலுள்ளவர்களுக்கு ஒன்றும் தெரியாது என்றும் ஆணவமாக இருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து தம்முடைய முதலாவது அற்புதத்தை நடத்தவேண்டுமென்று சித்தம் கொள்கிறபோது, அவர் அதை பிரசித்திபெற்ற எருசலேமில் செய்யாமல் சாதாரணமான கானா ஊரிலே செய்கிறார். கானா ஊரிலுள்ள ஜனங்கள் இயேசுகிறிஸ்துவையும் அவருடைய வார்த்தையும் ஏற்றுக்கொள்வதற்கு ஆயத்தமாக இருக்கிறார்கள்.

கானா ஊரிலே ஒரு கலியாணம் நடைபெறுகிறது. இயேசுகிறிஸ்துவின் தாயும் அங்கேயிருந்ததாக வேதவாக்கியம் கூறுகிறது. இயேசுகிறிஸ்து திருமண ஐக்கியத்தை கனப்படுத்துகிறார். திருமண உறவுக்கு இயேசுகிறிஸ்து சத்துருவல்ல. தம்முடைய பிள்ளைகள் எல்லோரும் திருமணம் செய்துகொள்ளாமல் அன்னகர்களாக இருக்க வேண்டுமென்பது இயேசுகிறிஸ்துவின் சித்தமல்ல. திருமண உறவை அங்கீகரிக்கும் விதமாகவும், அதை கனப்படுத்தும் விதமாகவும் இயேசுகிறிஸ்து அந்த கலியாணத்தில் கலந்துகொள்கிறார். அத்துடன் தமது முதலாவது அற்புதத்தையும் அந்த கலியாண வீட்டில் நடப்பித்து, திருமண உறவை மேன்மைப்படுத்துகிறார். திருமண வீட்டில், திருமணத்தோடு திருமண விருந்தும் நடைபெறுகிறது. திருமண நிகழ்ச்சியை பல நாட்களுக்கு சந்தோஷமாக கொண்டாடுவது யூதருடைய வழக்கம்.

### அழைக்கப்பட்டிருந்தார்கள்

**இயேசுவும் அவருடைய சீஷரும் அந்தக் கலியாணத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள் (யோவா 2:2).**

கானா ஊரிலே நடைபெற்ற கலியாணத்தில் இயேசுகிறிஸ்துவும் அவருடைய தாயாரும், சீஷர்களும் சிறப்பு விருந்தினர்களாக பங்குபெறுகிறார்கள். இயேசுவின் தாய் அங்கே இருந்ததாக வேதவசனம் கூறுகிறது. யோசேப்பைப்பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. ஆகையினால் இந்த சம்பவம் நடைபெறுவதற்கு முன்பாகவே, மரியாளின் கணவராகிய யோசேப்பு மரித்துப்போயிருக்க வாய்ப்புள்ளதென்று வேதபண்டிதர்கள் கூறுகிறார்கள்.

## அதிகாரம் - 2

கலியாணத்திற்கு இயேசுகிறிஸ்து அழைக்கப்பட்டிருக்கிறார். அழைக்கப் பட்டதினால்தான் இயேசுகிறிஸ்து அங்கு வந்து, திருமண விருந்தில் பங்குபெறுகிறார். இயேசுகிறிஸ்துவின் வருகைக்கும் யோவான்ஸ்நானனுடைய வருகைக்கும் வித்தியாசமுள்ளது. யோவான்ஸ்நானன் புசியாதவனாகவும் பானம்பண்ணாதவனாகவும் வருகிறான். இயேசுகிறிஸ்துவோ புசித்து பானம் பண்ணுகிறவராக வருகிறார்.

கலியாணத்திற்கு இயேசுகிறிஸ்துவை அழைப்பது மிகவும் ஆசீர்வாதமானது. நம்முடைய குடும்பங்களில் கலியாணங்கள் நடைபெறும்போது இயேசுகிறிஸ்துவின் பிரசன்னம் கலியாண நிகழ்ச்சிகளில் இருக்கவேண்டும் என்றும், ஒவ்வொரு நிகழ்ச்சியையும் இயேசுகிறிஸ்து ஆசீர்வதிக்க வேண்டுமென்றும் நாம் ஜெபிக்கவேண்டும். திருமண மஞ்சம் கனமுள்ளது.

கலியாணத்திற்கு அழைக்கும்போது விருந்தினர்களுக்கு அழைப்பிதழ் கொடுப்பதுபோல, இயேசுகிறிஸ்துவை ஜெபத்தின் மூலமாக அழைக்கவேண்டும். நாம் ஜெபிக்கும்போது இயேசுகிறிஸ்துவின் பிரசன்னம் கலியாண வீட்டிலும், கலியாண நிகழ்ச்சிகளிலும் நம்மோடு கூடவேயிருக்கும்.

கலியாண வீட்டில் இயேசுகிறிஸ்து தண்ணீரை திராட்சரசமாக மாற்றுகிறார். கலியாணத்திற்கு இயேசுகிறிஸ்துவோடு அவருடைய சீஷர்களும் அழைக்கப் பட்டிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவுக்கு பணிவிடை செய்வதற்காகவும் இயேசுகிறிஸ்துவோடு கூடவேயிருந்து அவருக்கு ஊழியம் செய்வதற்காகவும், அவருடைய சீஷர்கள் அவரோடு கூடயிருக்கிறார்கள். தங்களுடைய பராமரிப்பிற்கு சீஷர்கள் இயேசுகிறிஸ்துவையே சார்ந்திருக்கிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவிடமோ ஐசுவரியம் எதுவுமில்லை. அவர் ஐசுவரிய சம்பன்னர் என்று அழைக்கப்படுகிறபோதிலும், அவருக்கென்று அசையும் சொத்துக்களோ, அசையா சொத்துக்களோ எதுவுமில்லை. உலகத்தின் ஐசுவரியம் அவரிடத்தில் இல்லாவிட்டாலும், அவருக்கு அநேக சிநேகிதர்கள் இருக்கிறார்கள்.

இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் அவரோடுகூட போஜனம்பண்ணுவார்கள். விருந்து சாலைகளில் அவர்களுக்கு விருந்து பரிமாறப்படும். போஜனத்தைவிட்டு இயேசுகிறிஸ்து எழுந்திருந்து புறப்பட்டுப்போகும் போது, அவருடைய சீஷர்களும் அவரோடுகூட புறப்பட்டுப் போய்விடுவார்கள். கலியாண வீட்டுக்காரர்கள் இயேசுகிறிஸ்துவை நேசிக்கிறார்கள். ஆகையினால் கலியாணத்திற்கு அவரை அழைக்கப்படுகிறார்கள். அவரை மாத்திரம் அழைத்துவிட்டு அவருடைய சீஷர்களை கலியாண வீட்டுக்காரர் அழைக்காமல் விட்டுவிடவில்லை. சீஷர்களையும் அழைக்கிறார். இயேசுகிறிஸ்துவின்மீது அன்பு கூருகிறவர்கள் அவருக்குரியவர்களிடமும் அன்புகூருவார்கள்.

### திராட்சரசம்

**திராட்சரசங்குறைவுபட்ட போது, இயேசுவின் தாய் அவரை நோக்கி: அவர்களுக்குத் திராட்சரசம் இல்லை என்றாள் (யோவா 2:3).**

கலியாண வீட்டில் விருந்து பரிமாறப்படுகிறது. விருந்தில் திராட்சரசமும் கொடுக்கப்படுகிறது. விருந்து பரிமாறுவதற்கு போதுமான அளவு திராட்சரசம் தயாரித்திருக்கிறார்கள். ஆனால் தயாரித்து வைக்கப்பட்டிருக்கிற திராட்சரசம் குறைந்துபோயிற்று. நாம் இந்த உலகத்தில் ஜீவிக்கும்போது, நம்முடைய வாழ்க்கையில்கூட சில சமயங்களில் குறைவு உண்டாகலாம். நமக்கு எல்லாமே குறைவில்லாமல் திருப்தியாக இருக்கிறது என்று நினைக்கும்போதுகூட, நமக்கு சில குறைகள் உண்டாகலாம். வரவில்லாமல் தொடர்ந்து செலவுசெய்து கொண்டே போனால் குறைவு வரத்தான் செய்யும். எல்லாம் செலவழிந்த பின்புதான் நமக்கு குறைவு உண்டாயிற்று என்பதையே நாம் தெரிந்துகொள்வோம். அதுவரையிலும் நமது குறைவைப்பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது. தாறுமாறாக செலவு பண்ணினால் குறைவு வரும். ஒவ்வொரு காரியத்தை செய்யும்போதும் நாம் செல்லும் செலவை கணக்குப் பார்க்கவேண்டும்.

திருமண விருந்தில் ஒரு குறைவு உண்டாயிற்று. இந்தக் குறைவு உண்டானபோது இயேசுகிறிஸ்துவும் அவருடைய சீஷர்களும் கலியாணம் நடைபெறும் இடத்தில் இருக்கிறார்கள். உலகக்காரியங்களில் நமக்கு குறைவு உண்டாகலாம். இயேசுகிறிஸ்துவே நமக்குப் போதும் என்று நினைக்கும்போது நமக்கு ஒரு குறைவும் உண்டாகாது. அவர் நமக்கு எல்லா காலத்திலும் எல்லா சூழ்நிலையிலும் போதுமானவராக இருப்பார்.

## அதிகாரம் - 2

அவர்களுக்கு திராட்சரம் இல்லையென்று இயேசுகிறிஸ்துவின் தாயார் அவரிடம் கூறுகிறார். அங்கு ஏற்பட்டுள்ள குறைவை இயேசுகிறிஸ்துவுக்கு தெரியப்படுத்துகிறார். இயேசுகிறிஸ்து இதுவரையிலும் எந்த அற்புதமும் செய்யவில்லை. ஆகையினால் இயேசுகிறிஸ்து இங்கு அற்புதம் செய்வாரென்று அவருடைய தாயார் எதிர்பார்க்கவில்லை என்று சிலர் வியாக்கியானம் கூறுகிறார்கள். ஆனால் மெய்யாகவே, அவருடைய தாயார், இயேசுகிறிஸ்துவினிடத்தில் ஒரு அற்புதத்தை எதிர்பார்த்துதான் "அவர்களுக்கு திராட்சரமில்லை" என்று அவரிடம் கூறுகிறார்.

திருமண விருந்திற்கு தேவையான திராட்சரசத்தைப் பெற்றுக்கொண்டுவருமாறு, மணவாளன் தன்னுடைய வேலைக்காரரை பல இடங்களுக்கும் அனுப்பியிருப்பான். இயேசுகிறிஸ்துவின் தாயாரோ, ஆசீர்வாதத்தின் ஊற்றாக இருக்கும் இயேசுகிறிஸ்துவிடமே வருகிறாள். நம்முடைய சிநேகிதர்களுக்கு குறைவு உண்டாகும்போது நாம் அதைக் குறித்து கரிசனையோடிருக்க வேண்டும். அவர்களுடைய பிரச்சனைகளை நம்முடைய பிரச்சனைகள் போல பாவித்து அவர்களுக்கு உதவிபுரிய முன்வரவேண்டும். இயேசுகிறிஸ்துவின் தாயார், அவர்களுக்கு திராட்சரசமில்லையென்று அவரிடம் விண்ணப்பம்பண்ணியதுபோல, நாமும் நம்முடைய சிநேகிதர்களுக்கு ஏற்பட்டிருக்கும் குறைவுகளை இயேசுகிறிஸ்துவிடம் ஜெபத்தின் மூலமாக விண்ணப்பம்பண்ணவேண்டும். இயேசுகிறிஸ்துவிடம் ஜெபிக்கும்போது அவரிடத்தில் அதிகாரத்தோரணையோடு கட்டளையிடக்கூடாது. மிகவும் அடக்கத்துடனும் பயபக்தியுடனும், மனத்தாழ்மையுடனும் நம்முடைய வேண்டுதல்களையும் விண்ணப்பங்களையும் இயேசுகிறிஸ்துவிடம் ஏறெடுக்க வேண்டும்.

**என் வேளை**

**அதற்கு இயேசு: ஸ்திரீயே, எனக்கும் உனக்கும் என்ன, என் வேளை இன்னும் வரவில்லை என்றார் (யோவா 2:4).**

இயேசுவின் தாயார் அவரை நோக்கி "அவர்களுக்கு திராட்ச ரசம் இல்லை" என்று கூறுகிறார். ஆனால் இயேசு கிறிஸ்து தம்முடைய தாயாருக்கு உடனடியாக சாதகமான பிரதியுத்தரம் கூறவில்லை. அதற்குப் பதிலாக, மென்மையான வார்த்தைகளினால் தமது தாயாரை கடிந்து கொள்கிறார். "ஸ்திரீயே, எனக்கும் உனக்கும் என்ன, என் வேளை இன்னும் வரவில்லை" என்று கூறி தம்முடைய தாயாரை கடிந்து கொள்கிறார். இயேசு கிறிஸ்து யார் மீது அன்பாக இருக்கிறாரோ அவர்களை அவர் கடிந்து கொண்டு திருத்துகிறார். ஒரு தகப்பன் தன் மகனை சிட்சிப்பதுபோல, இயேசு நம்மை சிட்சிக்கிறார்.

இயேசு தம்முடைய தாயாரை, "தாயார்" என்று அழைக்காமல், "ஸ்திரீயே" என்று அழைக்கிறார். பல வேளைகளில் நாம் நம்மைப் பற்றி நினைப்பதற்கு அதிகமாக நினைத்துக் கொள்வோம். சில நேரங்களில் நம்மைப் பற்றி அதிக உயர்வாகவோ, அல்லது அதிக தாழ்வாகவோ நினைத்துக் கொள்வோம். பல சமயங்களில் நமக்கு போதுமான அளவு ஞானம் இல்லாதிருந்தும் நம்மை தேறிய ஞானியாக நினைத்துக் கொள்வோம். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் எல்லாம் இயேசு கிறிஸ்து நம்முடைய மெய்யான நிலைமையை நமக்கு நினைவுபடுத்துகிறார்.

இயேசு கிறிஸ்துவின் தாயார், அவரை தன்னுடைய குமாரனாகவே நினைக்கிறார். தன்னுடைய குமாரன் மீது தனக்கு உரிமை இருப்பதாக நினைத்து உரிமை பாராட்டுகிறார். இயேசு கிறிஸ்துவினுடைய ஆள்தத்துவ பண்பில், மனுஷத்துவமும், தேவத்துவமும் சேர்த்து இருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் மனுஷத்துவத்திற்கு மரியாள் தாயாராக இருக்கிறார். அதற்குரிய உரிமை மரியாளுக்கு நிச்சயமாகவே உண்டு. ஆனால் இயேசு கிறிஸ்துவின் தெய்வத்துவத்தில் மரியாளுக்கு எவ்வித உரிமையும் இல்லை.

தம்முடைய தெய்வத்துவத்தை பொறுத்தவரையில், இயேசு கிறிஸ்து தமக்கும் தம்முடைய தாயாராகிய மரியாளுக்கும் சம்மந்தம் இல்லாதவராகவே இருக்கிறார். இயேசு கிறிஸ்துவின் தெய்வத்துவத்திற்கு மரியாள் தாயார் அல்ல. இதை நினைவு படுத்துவதற்காகவும், மரியாள் தன்னைப் பற்றி சிந்திப்பதற்கு அதிகமாக சிந்திக்காமல் தடைபண்ணுவதற்காகவும், இயேசு கிறிஸ்து தம்முடைய தாயாரை இங்கு "ஸ்திரீயே" என்று அழைக்கிறார்.

## அதிகாரம் - 2

மனுஷருக்கு மிகப்பெரிய தேவை உண்டாகும்வேளையே, இயேசு கிறிஸ்து தம்முடைய மகிமையை வெளிப்படுத்துவதற்காக அற்புதம் நடப்பிக்கும் வேளையாகும். நாம் ஒன்றும் இல்லாமல் போகும்போது, நம்மால் இனிமேல் ஒன்றும் செய்ய முடியாமல் போகும்போது, அந்த வேளையை இயேசு கிறிஸ்து தம்முடைய வேளையாக கருதி, நமக்கு உதவி புரிகிறார். பல சமயங்களில் நம்முடைய ஜெபத்திற்கு பதில் கிடைக்க தாமதம் உண்டாகலாம். காலதாமதம் உண்டாவதினால் தேவன் நம்முடைய ஜெபத்திற்கு பதில் கொடுக்க மறுத்துவிட்டார் என்று நினைக்கக் கூடாது. இயேசு கிறிஸ்துவை பொறுத்த வரையில் காலதாமதம் என்பது மறுப்பு அல்ல. ஏற்ற வேளை வரும்வரையிலும் காத்திருப்பது என்பதாகும்.

**அதன்படி செய்யுங்கள்**

**அவருடைய தாய் வேலைக்காரரை நோக்கி: அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதின்படி செய்யுங்கள் என்றாள் (யோவா 2:5).**

இயேசுகிறிஸ்துவின் தாயாகிய மரியாள், "அவர்களுக்கு திராட்சரசமில்லை" என்று அவரிடத்தில் கூறியபோது, இது சம்பந்தமாக அவர் ஏதாவது உதவிசெய்வார் என்று எதிர்பார்த்தே கூறுகிறார். தன்னுடைய விண்ணப்பத்திற்கு இயேசுகிறிஸ்து சாதகமான பதிலை உடனடியாக கூறாவிட்டாலும், வேலைக்காரரை நோக்கி "அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ அதன்படி செய்யுங்கள்" என்று கூறுகிறார்.

இயேசுகிறிஸ்து தன்னை "ஸ்திரீயே எனக்கும் உனக்கும் என்ன, என் வேளை இன்னும் வரவில்லை" என்று கூறி மென்மையாக கடிந்துகொண்டபோதிலும், மரியாள் அதற்காக வருத்தப்படவில்லை. கோபத்தோடு மறுமொழி பேசவில்லை. இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளை கீழ்ப்படிதலோடு ஏற்றுக்கொள்கிறார்.

இயேசுகிறிஸ்துவிடமிருந்து நமக்கு கண்டித்து உணர்த்து வார்த்தைகள் வரும்போது, மனத்தாழ்மையோடு அந்த வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளவேண்டும். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் மிகவும் அமைதியாக இருக்கவேண்டும். இயேசுகிறிஸ்து நம்மீது அன்பாக இருப்பதினால்தான் நம்மை கண்டித்து உணர்த்துகிறார் என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

இயேசுவின் தாயாகிய மரியாள் அவருடைய கிருபையிலும் இரக்கத்திலும் நம்பிக்கை வைத்திருக்கிறார். நாமும் பல சமயங்களில் இயேசுகிறிஸ்துவின் கிருபையையும் இரக்கத்தையும் பெற்றுக்கொள்வதற்காக ஜெபம் பண்ணுகிறோம். ஜெபிக்கும்போது, பொதுவாக சில காரியங்கள் நமக்கு சோர்வைக் கொடுக்கும். அவையாவன: இயேசுகிறிஸ்துவைக்குறித்து நம்முடைய உள்ளத்திலே நாம் கொண்டிருக்கும் தவறான எண்ணம். நம்முடைய குறைகளைப்பற்றி நாம் அதிகமாக சிந்திப்பது. பல சமயங்களில் நாம் ஞானமாக செயல்படாமல் தவறு செய்திருப்பது. இத்துடன் சேர்த்து கர்த்தர் நம்மை கடிந்துகொள்ளும் வார்த்தைகள் நம்முடைய உள்ளத்தில் ஆழமாக பதிந்திருப்பது. இவையெல்லாம் சேர்ந்து நம்மை தெளிவாக சிந்திக்கவிடாமல் குழப்பிவிடும். ஜெபிக்கும்போது நம்மை சோர்வடையச்செய்யும்.

இயேசுகிறிஸ்துவிடம் அவருடைய கிருபைக்கும் இரக்கத்திற்கும் ஜெபம்பண்ணும்போது, அது நமக்கு கிடைக்குமோ அல்லது கிடைக்காதோ என்னும் சந்தேகம் நமக்குள் வந்துவிடும். சில சமயங்களில் நம்முடைய பாடுகளிலிருந்து உடனடியாக விடுதலை கிடைக்காமல் அது தொடரும். ஜெபத்திற்கு பதில்கிடைக்க தாமதம் உண்டாகலாம். நம்முடைய பாடுகளிலிருந்து விடுதலை கிடைப்பதில் தாமதம் உண்டாகலாம். நாம் ஜெபிக்கும்போது கர்த்தர் ஒருவேளை நம்மீது கோபமாக இருக்கிறாரோ என்னும் சிந்தனை நமக்குள் ஏற்படலாம்.

இயேசுகிறிஸ்துவின் தாயாகிய மரியாளுக்கு இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை உண்டாயிற்று. இதில் அவர் மனம் தளர்ந்துவிடவில்லை. விசுவாசத்தில் சோர்வடைந்துவிடவில்லை. தன்னுடைய விண்ணப்பத்திற்கு இயேசுகிறிஸ்து எப்படியும் பதில் கொடுப்பார் என்று கிருபையின்மீதும் இரக்கத்தின்மீதும் விசுவாசத்தோடிருக்கிறார். அவருடைய விசுவாசம் அவரை தேற்றி உற்சாகப்படுத்துகிறது.

## அதிகாரம் - 2

சூழ்நிலைகள் நமக்கு சாதகமாக இல்லாத வேளைகளிலும், ஜெபத்திற்கு உடனடியாக பதில்கிடைக்காமல் தாமதமாகும் வேளைகளிலும், நாம் சோர்ந்துபோகாமல் விசுவாசத்தோடு தொடர்ந்து ஜெபிக்கவேண்டும். நம்முடைய ஜெபம் தேவனோடு போராடும் அனுபவத்தைப்போல இருக்கலாம். நம்முடைய வாழ்க்கையில் நமக்கு நேரிடும் காரியங்கள் ஒன்றுகூட நமக்கு சாதகமாகயில்லாமல் எல்லாமே நமக்கு பாதகமாக இருக்கலாம். இருந்தாலும் இயேசுகிறிஸ்துவின்மீது நாம் வைத்திருக்கும் நம்பிக்கையை விட்டு விலகிப்போய்விடகூடாது. ஜெபத்தில் சோர்வடைந்துவிடக் கூடாது.

தம்முடைய தாயாகிய மரியாளிடம் இயேசுகிறிஸ்து "ஸ்திரீயே எனக்கும் உனக்கும் என்ன" என்று கூறியபோதிலும், மரியாள் இயேசுகிறிஸ்துவின்மீது இன்னும் நம்பிக்கையோடிருக்கிறாள். இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள் தனக்கு சாதகமாக இல்லாதபோதிலும், தன்னுடைய விசுவாசத்தில் உறுதியாக இருக்கிறாள். வேலைக்காரரிடம் விசுவாச வார்த்தைகளைக் கூறுகிறாள். தன்னை நோக்கிப்பார்க்காமல் இயேசுகிறிஸ்துவையே நோக்கிப் பார்க்குமாறு அவர்களுக்கு கூறுகிறாள். அவரைப்பார்ப்பது மாத்திரமல்ல, அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து செயல்படுமாறும் ஆலோசனை கூறுகிறாள். "அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ அதன்படி செய்யுங்கள்" என்று ஒரு ஆசீர்வாதத்தை எதிர்பார்த்து விசுவாச வார்த்தைகளைக் கூறுகிறாள்.

இயேசு கிறிஸ்துவிடமிருந்து நன்மைகளையும் ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ள விரும்புகிறவர்கள் அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து செயல்பட வேண்டும். கடமையின் பாதையே தேவனுடைய இரக்கத்தை பெற்றுக்கொள்ளும் பாதை. கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல், அவர் நமக்குக் கொடுக்கும் கடமைகளை நிறைவேற்றாமல், அவருடைய ஆசீர்வாதத்தை மாத்திரம் எதிர்பார்ப்பது சரியல்ல.

இயேசுகிறிஸ்து தம்முடைய தாயாகிய மரியாளிடம், தற்போது ஒன்றும் செய்வதற்கு இல்லை, ஏனெனில் தம்முடைய வேளை இன்னும் வரவில்லை என்று கூறியபோதிலும், அவர் அங்கு ஏற்பட்டுள்ள தேவையை சந்திப்பதற்கு அற்புதம் நடப்பிக்க சித்தங்கொள்கிறார்.

தம்முடைய வார்த்தையைவிட இயேசுகிறிஸ்து அதிகமாக நன்மைசெய்கிறவர். ஒருபோதும் தம்முடைய வார்த்தைக்கு முரணாக அவர் யாருக்கும் தீங்கு செய்வதில்லை.

இயேசுகிறிஸ்து தண்ணீரை திராட்சரசமாக மாற்றி தமது முதலாம் அற்புதத்தைச் செய்கிறார். தண்ணீர் நிறமோ, மணமோ, சுவையோ அற்றது. தம்முடைய அற்புதத்தின் மூலமாக இயேசுகிறிஸ்து தண்ணீரின் சுபாவத்தை மாற்றி, அதற்கு புதிய நிறத்தையும், மணத்தையும் சுவையையும் கொடுத்து, அதை திராட்சரசமாக மாற்றுகிறார். ஒரு நேர்த்தியான திராட்சரசத்தில் இருக்கவேண்டிய எல்லா குணமும் இந்த தண்ணீருக்கு உண்டாயிற்று. இயற்கையின்மீது தமக்கு அதிகாரமுண்டு என்பதை இயேசுகிறிஸ்து இங்கு வெளிப்படுத்துகிறார்.

பொதுவான இயற்கையின் பிரகாரம், பூமியில் விளையும் திராட்சைச்செடியில் இருந்து பறிக்கப்படும் திராட்சப்பழங்களின் மூலமாகவே திராட்சரசம் தயாரிக்கப்படும். ஆனால் இயேசுகிறிஸ்துவோ இயற்கையின் இந்த பிரமாணத்தை தம்முடைய அற்புத வல்லமையினால் மாற்றுகிறார். தண்ணீரை திராட்சரசமாக மாற்றியது இயேசுகிறிஸ்து செய்த முதலாவது அற்புதமாகும்.

சுவிசேஷத்தின் ஆசீர்வாதம் தண்ணீரை திராட்சரமாக மாற்றுகிறது. தண்ணீரின் சுவையைவிட திராட்சரசத்தின் சுவை நேர்த்தியாக இருக்கும். தண்ணீரும் திராட்சரசமும் இயேசுகிறிஸ்துவினாலேயே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. இந்த இயற்கையின் மூலமாக நமக்குக் கிடைக்கும் ஆசீர்வாதங்களை இயேசுகிறிஸ்து தம்முடைய அற்புத வல்லமையினால் மேம்படுத்துகிறார். தம்முடைய பிள்ளைகளுக்கு மிகுந்த ஆசீர்வாதத்தையும் ஆறுதலையும் கொடுக்கிறார். கலியாண வீட்டில் தண்ணீர் திராட்சரசமாக மாற்றப்பட்டதினால், அங்கு ஏற்பட்ட குறை நீங்கி அங்கு நிறைவு உண்டாயிற்று. இயேசுகிறிஸ்து நம்முடைய குறைகளையும் நீக்கி நம்முடைய ஜீவியத்தில் நிறைவை உண்டுபண்ண வல்லவராக இருக்கிறார். சுவையற்ற நம்முடைய ஜீவியத்தை சுவையுள்ள ஜீவியமாக மாற்ற வல்லவர் நம் இயேசு.

**ஆறு கற்சாடிகள்**

**யூதர்கள் தங்களைச் சுத்திகரிக்கும் முறைமையின்படியே, ஒவ்வொன்று இரண்டு மூன்று குடம் தண்ணீர் கொள்ளத்தக்க ஆறு கற்சாடிகள் அங்கே வைத்திருந்தது (யோவா 2:6).**

## அதிகாரம் - 2

இயேசுகிறிஸ்து இந்த அற்புதத்தை ஒளிவுமறைவாக செய்யவில்லை. அங்கு கூடியிருக்கும் வேலைக்காரருக்கும், அவருடைய தாயாருக்கும், அவருடைய சீஷருக்கும் முன்பாக அற்புதம் செய்கிறார். தண்ணீர் திராட்சரசமாக மாறினதை தங்கள் கண்களால் பார்த்தவர்கள், இது மெய்யாகவே இயேசுகிறிஸ்து நடப்பித்த அற்புதம் என்பதற்கு சாட்சி பகருவார்கள். ஏனெனில் இது சந்தேகத்திற்கு இடமில்லாமல், ஒளிவுமறைவு இல்லாமல், வெளிப்படையாக செய்யப்பட்ட ஓர் அற்புதமாகும்.

அந்த இடத்தில் ஆறுகற்சாடிகள் வைக்கப்பட்டிருக்கிறது. யூதர்களுக்கு சுத்திகரிப்பு முறைமை உண்டு. அவர்கள் முன்னோரின் பாரம்பரியத்திற்கு அதிக மதிப்பு கொடுக்கிறவர்கள். தங்களை தண்ணீரினால் பலமுறை கழுவி சுத்திகரித்துக்கொள்வார்கள். ஒவ்வொரு முறை தங்களை சுத்திகரிக்கும்போதும் அதற்கு தண்ணீர் அதிகம் தேவைப்படும். அதற்காகத்தான் இங்கு ஆறுகற்சாடிகள் வைக்கப்பட்டிருக்கிறது. இவை அளவில் பெரியவை. ஒவ்வொன்றும் இரண்டு அல்லது மூன்று குடம் தண்ணீர் கொள்ளத்தக்கது. யூதர்கள் மத்தியில் ஒரு பாரம்பரிய பழமொழி உண்டு. "சுத்திகரிப்பதற்கு அதிகமான தண்ணீரை செலவுபண்ணுகிறவன், இந்த உலகத்தில் அதிகமான செல்வத்தை சேர்ப்பான்" என்பதே அந்த பழமொழி. இதற்கு ஏற்ற பிரகாரம் யூதர்கள் தங்களை சுத்திகரித்துக்கொள்ளும் முறைமையில் அதிக கவனம் செலுத்துவார்கள்.

தங்களை சுத்திகரித்துக்கொள்வதற்கு யூதர்கள் பயன்படுத்தும் இந்த கற்சாடிகளை, இயேசுகிறிஸ்து தம்முடைய அற்புதத்தைச் செய்வதற்கு பயன்படுத்துகிறார். சுவிசேஷத்தின் கிருபையை மனுக்குலத்திற்கு அறிவிப்பதற்காகவே இயேசுகிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தார். சுவிசேஷம் திராட்சரசத்தைப்போல இருக்கிறது. தண்ணீரோ நியாயப்பிரமாணத்தின் நிழலைப்போல இருக்கிறது. இயேசுகிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் நிழலை அகற்றி, சுவிசேஷத்தின் ஆசீர்வாதத்தை கொடுக்க வந்திருக்கிறவர்.

இந்த கற்சாடிகளில் இதுவரையிலும் பொதுவாக தண்ணீர் மாத்திரமே நிரப்பப்பட்டிருந்தது. இதுவரையிலும் இவர்கள் இந்த சாடிகளில் திராட்சரசத்தை நிரப்பி வைத்திருக்கவில்லை. இது நல்ல உலோகத்தினால் செய்யப்பட்ட ஜாடி அல்ல. கற்சாடி. இதற்கு முன்பு இதில் திராட்சரசம் சேகரிக்கப்பட்டிருந்தாலும், இது கற்சாடியாக இருப்பதினால், அதன் மணமும் குணமும் இதில் தொடர்ந்து தங்கியிருக்காது. திராட்சரசத்தின் ருசியை தக்கவைத்துக்கொள்ளும் குணம் கற்சாடிக்கு இல்லை.

இந்த கற்சாடிகள் ஒவ்வொன்றும் இரண்டு அல்லது மூன்று குடம் தண்ணீர் கொள்ளத்தக்கது. எத்தனை குடம் என்று தெளிவாக குறிப்பிடப்படவில்லை. என்றாலும் இரண்டு அல்லது மூன்று குடம் கொள்ளத்தக்கது என்று சொல்லும்போது, அது அளவில் பெரிய கற்சாடியாகவே இருக்கவேண்டும். இயேசுகிறிஸ்து தம்முடைய ஆசீர்வாதத்தை நமக்கு கொடுக்கும்போது குறைந்த அளவில் கொடுக்காமல் நிறைந்த அளவில் கொடுக்கிறார். அவர் நமக்கு கொடுப்பது எப்போதுமே போதுமானதாகவே இருக்கும். அமுக்கி குலுக்கி அதிக அளவில் கொடுப்பார். அவர் தம்மையே நமக்காக கொடுத்தவர். தம்முடைய மகிமையின் ஐசுவரியத்தின் பிரகாரம் நம்முடைய தேவைகளையெல்லாம் சந்தித்து அவர் நம்மை ஆசீர்வதிக்கிறவர்.

**தண்ணீர் நிரப்புங்கள்**

**இயேசு வேலைக்காரரை நோக்கி: ஜாடிகளிலே தண்ணீர் நிரப்புங்கள் என்றார்; அவர்கள் அவைகளை நிறைய நிரப்பினார்கள். அவர் அவர்களை நோக்கி: நீங்கள் இப்பொழுது மொண்டு, பந்தி விசாரிப்புக்காரனிடத்தில் கொண்டுபோங்கள் என்றார்; அவர்கள் கொண்டுபோனார்கள் (யோவா 2:7,8).**

இயேசுகிறிஸ்து வேலைக்காரருக்கு ஓர் எளிய கட்டளையை கொடுக்கிறார். "ஜாடிகளிலே தண்ணீர் நிரப்புங்கள்" என்று கூறுகிறார். இயேசுகிறிஸ்துவின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, வேலைக்காரர்கள் ஜாடிகளை தண்ணீரினால் நிறைய நிரப்புகிறார்கள். இயேசுவின் வார்த்தைக்கு அவர்கள் கீழ்ப்படிந்து செயல்பட்டபோது அங்கு அற்புதம் நடைபெறுகிறது. அது உடனடியாக நடைபெற்ற அற்புதம். இயேசுகிறிஸ்துவின் அற்புத வல்லமை அங்கு கிரியை நடப்பிக்கிறது. தண்ணீர் திராட்சரசமாக மாறிற்று.

## அதிகாரம் - 2

வேலைக்காரர் கற்சாடிகளை தண்ணீரினால் நிறைய நிரப்பியவுடன் "நீங்கள் இப்பொழுது மொண்டு, பந்திவிசாரிப்புக்காரனிடத்தில் கொண்டுபோங்கள்" என்று கூறுகிறார். வேலைக்காரர்கள் ஜாடிகளில் தண்ணீரை நிரப்பினார்கள். இப்போது ஜாடிகளிலிருந்து மொண்டு கொள்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் கட்டளைக்கு வேலைக்காரர் உடனடியாக கீழ்ப்படிகிறார்கள்.

"தண்ணீர் திராட்சரசமாக மாறக்கடவது" என்று இயேசுகிறிஸ்து கூறவில்லை. அற்புதம் நடைபெறுவதற்கு இங்கு வேறு எந்த சடங்குகளும் மேற்கொள்ளப்படவில்லை. இயேசுகிறிஸ்து வேறு வார்த்தை ஒன்றும் பேசாமல் அங்கு அமைதியாக நிற்கிறார். அவர் அமைதியாக இருந்தாலும் அவருடைய சித்தம் நிறைவேறுகிறது.

இயேசுகிறிஸ்து பல சமயங்களில் இதுபோல எந்தவித ஆரவாரமுமில்லாமல், மிகவும் அமைதியாக அற்புதங்களைச் செய்திருக்கிறார். மாவு புளிப்பதுபோல, இயேசுகிறிஸ்துவின் அற்புதங்கள் பல சமயங்களில் அமைதியாக நடைபெற்றிருக்கிறது. இயேசுகிறிஸ்து அற்புதத்தைச் செய்யும்போது, இந்த அற்புதம் நடக்குமா அல்லது நடக்காதா என்னும் சந்தேகம் அவருடைய இருதயத்தில் சிறிதும் இல்லை. ஆகையினால்தான் வேலைக்காரர் ஜாடிகளை தண்ணீரினால் நிரப்பியவுடன் "நீங்கள் இப்பொழுது மொண்டு, பந்திவிசாரிப்புக்காரனிடத்தில் கொண்டுபோங்கள்" என்று கூறுகிறார். இயேசுகிறிஸ்துவின் வார்த்தையில் உறுதியிருக்கிறது. அவருடைய சித்தம் நிறைவேறும்.

தண்ணீரை திராட்சரசமாக மாற்றியது இயேசுகிறிஸ்து செய்த முதலாவது அற்புதமாகும். இதற்கு முன்பு அவர் அற்புதம் செய்யாதபோதிலும், இதுவே அவருடைய முதலாவது அற்புதமாக இருக்கிறபோதிலும், அற்புதம் நடப்பிக்கும் தம்முடைய வல்லமையில் அவர் உறுதியோடிருக்கிறார்.

தாம் செய்த அற்புதம் பூரணமானது, நேர்த்தியானது என்பதை சோதித்துப் பார்ப்பதற்காக, ஜாடியில் மொண்டு அதை பந்திவிசாரிப்புக்காரனிடத்தில் கொடுக்குமாறு கூறுகிறார்.

பந்திவிசாரிப்புக்காரனுக்கு பந்தியில் பரிமாறப்படும் ஒவ்வொரு பதார்த்தத்தின் சுவை நன்றாக தெரிந்திருக்கும். அவன் இந்த திராட்சரசத்தை சோதித்துப் பார்த்து இதன் சுவையை உறுதிபண்ண வேண்டுமென்று இயேசு விரும்புகிறார். தாம் என்ன செய்யவேண்டுமென்பதும், தம்மால் என்ன செய்யமுடியும் என்பதும், அதை எப்படி செய்ய வேண்டும் என்பதும் இயேசுகிறிஸ்துவுக்கு நன்றாகத் தெரியும். இயேசுகிறிஸ்து செய்யும் காரியமெல்லாம் ஆதியிலிருந்தே மிகவும் நன்றாகவே இருக்கிறது. தேவன் ஆதியிலே வெளிச்சம் உண்டாகக்கடவது என்று கூறியவுடன் வெளிச்சம் உண்டாயிற்று. வெளிச்சம் நல்லது என்று தேவன் கண்டார் (ஆதி 1:3,4). இதுபோலவே இயேசுகிறிஸ்துவின் கிரியைகள் அனைத்தும் பூரணமாகவும், நேர்த்தியாகவும், மிகவும் நல்லதாகவும் இருக்கும்.

இயேசுகிறிஸ்து வேலைக்காரருக்கு கூறும்போது "ஜாடியிலிருந்து மொண்டு கொள்ளுங்கள்" என்கிறார். ஜாடியிலிருந்து மொண்டு அவர்கள் அதை பந்திவிசாரிப்புக்காரனிடத்தில் கொண்டு போகவேண்டும். அது பந்தியில் அமர்ந்திருக்கும் விருந்தினர்களுக்கு பரிமாறப்படும். அவர்கள் அதை பருகுவார்கள். இயேசுகிறிஸ்துவின் அற்புதங்கள் எல்லாமே பிரயோஜனமுள்ளதாகவே இருக்கும். தண்ணீரை திராட்சரசமாக மாற்றி அந்த ரசத்தை கீழே கொட்டிவிடுமாறு இயேசுகிறிஸ்து ஒருபோதும் கூறமாட்டார். தாம் செய்யும் அற்புதம் தம்முடைய பிள்ளைகளுக்கு பிரயோஜனமுள்ளதாக இருக்கவேண்டுமென்பது அவருடைய தெய்வீக சித்தம்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திலும் இயேசுகிறிஸ்து தண்ணீரை திராட்சரசமாக மாற்றுகிறார். நமக்கு தெய்வீக ஞானத்தையும் கிருபையையும் கொடுக்கிறார். நம்முடைய ஜீவியத்தில் அவருடைய அற்புதத்தினால் நாம் பெற்றிருக்கும் திராட்சரசம் முழுவதுமே நமக்கு பிரயோஜனமாக இருக்கும். ஆகையினால் அவர் அற்புதமாக கொடுத்திருக்கும் திராட்சரசத்தை "இப்பொழுது மொண்டு கொள்ள வேண்டும்".

## அதிகாரம் - 2

இயேசுகிறிஸ்து நல்லவர். அவர் நல்லவரென்பதை நாம் சோதித்துப் பார்க்கலாம். இயேசுகிறிஸ்துவை அறிந்திருக்கிற எல்லோருக்குமே அவர் நல்லவரென்பதை சோதித்துப் பார்க்கும் சிலாக்கியம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்து தண்ணீரை திராட்சரசமாக மாற்றி, அதை பந்திவிசாரிப்புக்காரனிடத்தில் கொண்டுபோய் கொடுக்குமாறு கூறுகிறார். பந்திவிசாரிப்புக்காரன் அந்த விருந்துக்கு எஜமானல்ல. என்றாலும் இயேசுகிறிஸ்து இந்த பந்திவிசாரிப்புக்காரனை இந்த பந்தியின் சிநேகிதனாக அங்கீகரிக்கிறார். நடைபெறும் கலியாண விருந்திற்கு, இந்த பந்திவிசாரிப்புக்காரன் காரண கர்த்தா அல்ல. விருந்து நல்லமுறையில் நடைபெற வேண்டும் என்பதற்காக இவன் பொறுப்புடன் பணிபுரிகிறான்.

கலியாணத்திற்கு வரும் விருந்தினர்கள் அனைவரையும் பந்தியில் முறைப்படி, ஒழுங்கும் கிரமமுமாக அமருவதற்கு இவன் உதவிபுரிகிறான். பந்தியில் அமர்ந்திருக்கும் விருந்தினர்கள் அனைவருக்கும் முறைப்படி போஜனமும் திராட்சரசமும் பரிமாறுவதற்கு இவனே பொறுப்புள்ளவன். யாரும் ஒரு குறைவுமில்லாமல் திருப்தியாக புசித்து பானம்பண்ணுவதை இவன் மேற்பார்வையிடுகிறான். பந்தியில் ஒரு குழப்பமும் ஏற்படாதவாறு, பந்தி சம்மந்தமான எல்லா காரியங்களையும் இவனே பொறுப்போடு கவனித்துக்கொள்கிறான்.

யூதர்களுடைய கலியாணங்களில் விருந்தினர்களுக்கு விருந்து பரிமாறப்படும்போது, அவர்கள் பந்திவிசாரிப்புக்காரரை நியமித்திருப்பார்கள். அழைக்கப்பட்டிருக்கிறவர்கள் ஏராளமான பேராக இருக்கிறபடியினால், அவர்களை ஒழுங்குபடுத்துவதற்கு விசாரிப்புக்காரர் தேவைப்படுகிறார். ஆட்கள் அநேகராக இருக்கும்போது அவர்கள் தங்களைத்தாங்களே ஆளுகை செய்துகொள்ள முடியாது. அவர்களுக்கு ஒரு விசாரிப்புக்காரன் தேவை.

பந்திவிசாரிப்புக்காரனைப்பற்றி சிலர் வியாக்கியானம் கூறும்போது இவன் ஒரு ஆசாரியனாகவோ அல்லது லேவியனாகவோ இருக்கவேண்டும் என்று கூறுகிறார்கள். விருந்து நடைபெறும்போது இவன் ஜெபம்பண்ணுவதற்காக அழைக்கப்பட்டிருக்கிறவன் என்றும், விருந்தில் பரிமாறப்படும் போஜனத்தையும் திராட்சரசத்தையும் ஸ்தோத்திரம்பண்ணி ஜெபம்பண்ணுவது இவனுடைய ஊழியம் என்றும் வியாக்கியானம் கூறுகிறார்கள்.

இயேசுகிறிஸ்து ஒரு சமயம் இராப்போஜனம்பண்ணியபோது, அவர் பாத்திரத்தை எடுத்து ஸ்தோத்திரம் பண்ணுகிறார். தமக்கு போஜனமும் பானமும் கொடுத்ததற்காக தேவனைத் துதிக்கிறார். நாமும் புசிக்கும்போது, கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செய்துவிட்டுத்தான் போஜனம்பண்ண வேண்டும். இயேசுகிறிஸ்துவினுடைய பிரசன்னம் நம்மோடுகூட இருக்கவேண்டுமென்று ஜெபிக்கவேண்டும். நமக்குக் கிடைத்திருக்கும் போஜனம் கர்த்தருடைய கரத்திலிருந்து நமக்கு வந்திருக்கிறது என்று அங்கீகரித்து அவரை துதிக்கவேண்டும்.

கலியாண விருந்தில் லேவியர் அல்லது ஆசாரியராகிய பந்திவிசாரிப்புக்காரரும் இருக்கிறார். இயேசுகிறிஸ்துவும் இருக்கிறார். திராட்சரசத்தை இயேசுகிறிஸ்துவிடம் கொண்டுவந்தால் அவரே அதை ஆசீர்வதித்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதை பரிமாறுவதற்கு கொடுத்திருப்பார். ஆயினும் யூதருடைய முறைமையின்படி லேவியர் அல்லது ஆசாரியர் மாத்திரமே திராட்சரசத்தை ஆசீர்வதிப்பது பாரம்பரிய வழக்கம். அந்த பாரம்பரிய வழக்கத்தை மீறிவிடாமல், தமது அற்புதத்தினால் தண்ணீர் திராட்சரசமாக மாறியபோதிலும், அதை ஆசீர்வதிப்பதற்கு ஆசாரியனாகிய பந்திவிசாரிப்புக்காரனிடத்தில் இயேசுகிறிஸ்து கொடுக்கச்சொல்கிறார் என்று சிலர் வியாக்கியானம் கூறுகிறார்கள். இதன் மூலமாக அவர் கலியாண வைபவத்தில் கலந்துகொண்டாலும், யூதருடைய பாரம்பரிய முறைமைக்கு இயேசுகிறிஸ்து முரண்படவில்லையென்று சிலர் வியாக்கியானம் கூறுகிறார்கள்.

**பந்திவிசாரிப்புக்காரன்**

**அந்தத் திராட்சரசம் எங்கேயிருந்து வந்ததென்று தண்ணீரை மொண்ட வேலைக்காரருக்குத் தெரிந்ததேயன்றி பந்தி விசாரிப்புக்காரனுக்குத் தெரியாததினால், அவன் திராட்சரசமாய் மாறின தண்ணீரை ருசிபார்த்தபோது, மணவாளனை அழைத்து: எந்த மனுஷனும் முன்பு நல்ல திராட்சரசத்தைக் கொடுத்து, ஜனங்கள் திருப்தியடைந்தபின்பு, ருசிகுறைந்ததைக் கொடுப்பான், நீரோ நல்ல ரசத்தை இதுவரைக்கும் வைத்திருந்தீரே என்றான் (யோவா 2:9,10).**

## அதிகாரம் - 2

இயேசுகிறிஸ்து தண்ணீரை திராட்சரசமாக மாற்றுகிறார். இயேசுகிறிஸ்துவின் அற்புத வல்லமையினால் மாறியுள்ள திராட்சரசம் ருசிநிறைந்ததாகவும், நேர்த்தியான குணமுள்ளதாகவும் இருக்கிறது. இதை பந்திவிசாரிப்புக்காரனே அங்கீகரித்து சாட்சி கூறுகிறான். இயேசுகிறிஸ்து தண்ணீரை திராட்சரசமாகத்தான் மாற்றியிருக்கிறார் என்பது இதனால் உறுதியாயிற்று. பந்திவிசாரிப்புக்காரன் திராட்சரசமாய் மாறின தண்ணீரை ருசிபார்த்து அது திராட்சரசம்தான் என்று திட்டமாக கூறுகிறான். ஆனால் இந்த திராட்சரசம் எங்கேயிருந்து வந்தது என்று பந்திவிசாரிப்புக்காரனுக்குத் தெரியாது. தண்ணீரை மொண்ட வேலைக்காரருக்கு இந்த திராட்ரசம் எங்கேயிருந்து வந்தது என்பது தெரியும். ஆனாலும் இந்த வேலைக்காரர் இன்னும் இந்த திராட்சரசத்தை ருசிபார்க்கவில்லை.

இந்த திராட்சரசம் ருசிநிறைந்த நல்ல ரசமாக இருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் கிரியைகள் எப்போதுமே மிகவும் நல்லதாகவே இருக்கும். திராட்சரசம் எங்கேயிருந்து வந்தது என்று தெரியாத பந்திவிசாரிப்புக்காரன் கூட , இது நல்ல ரசம் என்று சாட்சி கொடுக்கிறான். அதுபோலவே இயேசுகிறிஸ்துவைப்பற்றி தெரியாதவர்கள்கூட, அவருடைய அற்புத வல்லமையைப்பற்றி புரிந்துகொள்ளாதவர்கள்கூட, அவருடைய கிரியைகள் எல்லாமே மிகவும் நல்லது என்று சாட்சி பகருவார்கள். இயேசுகிறிஸ்து நடப்பிக்கிற அற்புதத்தினால் உண்டாகும் முடிவான விளைவு எப்போதுமே மிகவும் நன்றாக இருக்கும்.

பந்திவிசாரிப்புக்காரன் திராட்சரசமாய் மாறின தண்ணீரை ருசிபார்த்து, இது நல்ல ரசம் என்று மணவாளனிடம் கூறுகிறான். பந்தியில் திராட்சரசம் பரிமாறப்படும்போது பொதுவாக நல்ல திராட்சரசத்தை முதலாவது கொடுத்து, அதன்பின்பு ருசிகுறைந்த திராட்சரசத்தைக் கொடுப்பது வழக்கம். நல்ல ரசத்தை பருகிய பின்பு ஜனங்கள் திருப்தியடைந்துவிடுவார்கள். அதன்பின்பு மேலும் திராட்சரம் பருகவேண்டும் என்னும் ஆவல் அவர்களுக்கு இராது. அப்படியே பருகினாலும் திராட்சரசத்தின் ருசியை நிதானித்துப்பார்க்கும் நிலமையில் அவர்கள் இருக்கமாட்டார்கள்.

ஆகையினால் முதலாவது நல்ல திராட்சரசத்தை கொடுத்துவிட்டு, ஜனங்கள் திருப்தியடைந்த பின்பு, ருசிகுறைந்த திராட்சரசத்தை கொடுப்பது வழக்கம். ஆனால் இங்கு நடப்பது நேர்மாறாக இருக்கிறது என்று பந்திவிசாரிப்புக்காரன் மணவாளனிடம் கூறுகிறான்.

மனுஷருடைய சந்தோஷம் மாயையாக இருக்கிறது. அது விரைவில் குறைந்துபோகிறது. மனுஷருடைய சந்தோஷம் ஒருபோதும் திருப்தியடைவதில்லை. ஏதாவது ஒரு காரியத்தை அதிகமாக அனுபவித்தால், அதனால் உண்டாகும் சந்தோஷம் குறைந்துபோகிறது. தித்திக்கும் தேனைப்பருகினாலும், அதுவும் அளவுக்கு அதிகமாக பருகினால் கசப்பாக மாறும் என்பது பழமொழி. அதுபோலவே ஒருவர் ஒரு காரியத்தை அதிகமாக அனுபவிக்கும்போது, அதனால் உண்டாகும் சந்தோஷம் அதிகரிப்பதற்குப் பதிலாக குறைந்துபோகிறது.

பந்திவிசாரிப்புக்காரன் மணவாளனிடம் "நீரோ நல்ல ரசத்தை இதுவரைக்கும் வைத்திருந்தீரே" என்று கூறுகிறான். இந்த நல்ல ரசம் எப்படி உண்டாயிற்று என்று இருவருக்குமே தெரியாது. நல்ல ரசத்திற்காக இவன் மணவாளனுக்கு நன்றி சொல்கிறான். உண்மையில் பந்திவிசாரிப்புக்காரன் இயேசு கிறிஸ்துவுக்குத்தான் நன்றி சொல்லவேண்டும். உண்மை தெரியாமல், இவன் மணவாளனுக்கு நன்றிசொல்கிறான். இதுபோலத்தான் இன்று கர்த்தருடைய பிள்ளைகளில் சிலர், கர்த்தரிடத்தில் நன்மைகளைப் பெற்றுக்கொண்டு, கர்த்தருக்கு நன்றி சொல்வதற்குப் பதிலாக, தங்களுக்குப் பிடித்தமான ஊழியக்காரர்களுக்கு நன்றி சொல்கிறார்கள்.

கலியாண விருந்தில் இயேசுகிறிஸ்து விருந்தினர்கள் அனைவருக்கும் தாராளமாக திராட்சரசம் கிடைப்பதற்கு அற்புதம் செய்கிறார். ஏற்கெனவே திராட்சரசம் பருகி திருப்தியடைந்தவர்களும், இந்த நல்ல திராட்சரசத்தை பருகுகிறார்கள். அதேவேளையில் பந்தியில் திராட்சரசம் குறைவுபட்டதினால், இதுவரையிலும் பருகுவதற்கு திராட்சரசமே கிடைக்காதவர்கள்கூட, இப்போது அற்புதமான திராட்சரசத்தைப் பருகி திருப்தியடைகிறார்கள்.

கர்த்தருடைய பரிசுத்தமான நாளை பற்றி நெகேமியா குறிப்பிடும்போது "நீங்கள் போய் கொழுமையானதை புசித்து மதுரமானதை குடியுங்கள்" என்றும், "இந்தநாள் நம் ஆண்டவருக்கு பரிசுத்தமான நாள், விசாரப்படவேண்டாம். கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன்" (நெகே 8:10) என்றும் கூறுகிறார்.

## அதிகாரம் - 2

கலியாண வீட்டில் தண்ணீரை திராட்சரசமாக மாற்றி இயேசுகிறிஸ்து தமது முதலாவது அற்புதத்தை செய்திருக்கிற போதிலும், அதிகமாக திராட்சரசம் பருகி வெறித்திருப்பதைக் குறித்து அவர் தம்முடைய பிள்ளைகளை எச்சரித்துக்கூறுகிறார். நம்முடைய இருதயங்கள் பெருந்திண்டியினாலும், வெறியினாலும், லௌகீக கவலைகளினாலும் பாரமடையாதபடிக்கு நாம் எச்சரிக்கையாயிருக்கவேண்டும் (லூக் 21:34). கலியாண விருந்தில் பங்குபெறுவது தவறல்ல. ஆனால் பெருந்திண்டியினாலும் வெறியினாலும் பாரமடைந்துவிடக்கூடாது. இதில் நமக்கு கவனமும் எச்சரிப்பும் தேவை.

அளவுக்கு அதிகமாக புசித்து பெருந்திண்டி உண்பதும், அளவுக்கு அதிகமாக குடித்து வெறிப்பதும் கர்த்தருக்கு விரோதமான பாவம். கர்த்தர் நமக்குக் கொடுக்கும் ஆசீர்வாதங்களை முறையில்லாமல் தாறுமாறாக பயன்படுத்துவது தீயசுபாவம். தேவன் நமக்கு தம்முடைய தெய்வீக பராமரிப்புக்களைக் கொடுக்கும்போது, அதை எந்த அளவுக்கு பயன்படுத்த வேண்டுமென்றும், அதை எவ்வாறு பயன்படுத்த வேண்டுமென்றும் நிதானித்து அறிவதற்கு தம்முடைய ஞானத்தை நமக்குத் தருகிறார். இச்சையடக்கத்தோடு இருப்பது ஆவியின் கனிகளில் ஒன்று. லௌகீக காரியங்களில் இச்சையடக்கத்துடன் இருக்கிறவன் கர்த்தரைத் துதிக்கிறான்.

திராட்சரசம் பருகுவதைப்பற்றி நாம் சில காரியங்களைத் தெரிந்துகொள்ளவேண்டும். எந்த ஒரு காரியத்தின்மீதும் அளவுக்கு அதிகமாக ஆசைப்படக்கூடாது. நம்முடைய போஜனமும் பானமும் நாம் தேவனிடத்திலிருந்து பெற்றிருக்கும் ஈவு. இதை கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் அவருடைய நாம மகிமைக்காகவும், நம்முடைய சரீரத்தின் பிரயோஜனத்திற்காகவும் பயன்படுத்தவேண்டும். அளவுக்கு அதிகமாக புசிப்பது நம்முடைய சரீர ஆரோக்கியத்திற்கு கேடுவிளைவிக்கும். ஆகையினால் பெருந்தீனி உண்கிறவனும், குடித்து வெறிக்கிறவனும் கர்த்தருடைய பராமரிப்புக்களுக்காக அவருக்கு நன்றி சொல்லாமல், கர்த்தருடைய கிருபைகளை அவமானப்படுத்துகிறான்.

நாம் எந்த இடத்தில் இருந்தாலும் இயேசுகிறிஸ்துவின் கண்கள் நம்மேல் நோக்கமாகவே இருக்கிறது. அவருக்கு மறைவான காரியம் ஒன்றுமில்லை. போஜனம்பண்ணும்போது, நாம் எப்படி போஜனம்பண்ண வேண்டும் என்றும், எப்படி பானம்பண்ணவேண்டும் என்றும் இயேசுகிறிஸ்து நமக்கு ஒரு முன்மாதிரியை நியமித்து வைத்திருக்கிறார்.

ஐந்து அப்பத்தையும் இரண்டு மீன்களையும் ஐயாயிரம் புருஷருக்கு பரிமாறியபோதுகூட, மீதியான துணிக்கைகளை பன்னிரண்டு கூடை நிறைய எடுத்தார்கள். இயேசுகிறிஸ்து இராப்போஜனம்பண்ணியபோது, அவர் பிட்ட அப்பம் அவருக்கும், பன்னிரண்டு சீஷருக்கும் போதுமானதாக இருந்தது. நம்முடைய பெருந்திண்டியினால், நம்மோடுகூட பந்தியிருக்கிறவர்களுக்கு போஜனம் கிடைக்காமல் செய்துவிடக்கூடாது. பிறருக்குரியதை நாம் புசிப்பது, பிறர் பொருளை இச்சிப்பதற்கு சமம். நாம் போஜனம்பண்ணும்போது நம்முடைய நலனை பார்ப்பதோடு, பிறருடைய நலனையும் பார்க்கவேண்டும்.

தேவன் தம்முடைய ஆசீர்வாதங்களை நம்மிடத்தில் நம்பி ஒப்புக்கொடுத்திருக்கிறார். பிறர்மீது நாம் கரிசனையில்லாமல், சுயநலத்தோடு, தேவனுடைய ஆசீர்வாதங்களை நாமே அனுபவிக்கவேண்டுமென்று ஆசைப்படுவது, பெருந்தீனி உண்பதற்கும், குடித்து வெறிப்பதற்கும் சமமான பாவம். பாவத்தில் சந்தோஷப்படுகிறவன் எல்லாவற்றையும் தானே சுயமாக அனுபவிக்கவேண்டுமென்று பேராசைப்படுகிறான். பரிசுத்தத்தில் சந்தோஷப்படுகிறவன் இயேசுகிறிஸ்துவின் ஆசீர்வாதங்களையும், அதனால் உண்டாகும் சந்தோஷங்களையும் எல்லோருக்கும் பகிர்ந்து கொடுக்க வேண்டும்.

**மகிமையை வெளிப்படுத்தினார்**

**இவ்விதமாக இயேசு இந்த முதலாம் அற்புதத்தைக் கலிலேயாவிலுள்ள கானா ஊரிலே செய்து, தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார்; அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள் (யோவா 2:11).**

## அதிகாரம் - 2

தண்ணீரை திராட்சரசமாக மாற்றியது இயேசுகிறிஸ்து செய்த முதலாம் அற்புதம் என்று இந்த சுவிசேஷத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எல்லா அற்புதங்களைவிட இயேசுகிறிஸ்துதாமே பிரதான அற்புதமாக இருக்கிறார். அவர் அற்புதமானவர். இது அற்புதமானவர் செய்த முதலாவது அற்புதம். இயேசுகிறிஸ்துவிடம் அற்புதம் செய்யும் வல்லமை ஆதிகாலத்திலிருந்தே அநாதிகாலமாக இருக்கிறது. ஆயினும் தம்முடைய அற்புத வல்லமையை வெளிப்படுத்துவதற்கு இந்த காலத்தையே தமது தெய்வீக சித்தத்தின் பிரகாரம் தெரிந்தெடுத்திருக்கிறார். எல்லாவற்றிற்கும் ஒரு காலமுண்டு. இயேசுகிறிஸ்துவுக்கு தம்முடைய அற்புதத்தை வெளிப்படுத்துவதற்கும் ஒரு காலமுண்டு. அதை மறைத்து வைப்பதற்கும் ஒரு காலமுண்டு.

இயேசுகிறிஸ்து இந்த அற்புதத்தைச் செய்து தம்முடைய மகிமையை வெளிப்படுத்துகிறார். தாம் தேவனுடைய குமாரன் என்பதை இந்த அற்புதத்தின் மூலமாக உறுதிபண்ணுகிறார். இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் அவரிடத்தில் விசுவாசம் வைக்கிறார்கள். இயேசுகிறிஸ்து தம்மைப் பின்பற்றி வருமாறு சீஷர்களை அழைத்தார். அழைக்கப்பட்டவர்கள் இப்போது அவருடைய அற்புத வல்லமையைக் காண்கிறார்கள். அந்த அற்புதத்தில் இவர்களும் பங்குபெறுகிறார்கள். இதன் மூலமாக இவர்களுடைய விசுவாசம் உறுதிபண்ணப்படுகிறது.

பெலமான விசுவாசம் கூட ஆரம்பத்தில் பலவீனமாக இருப்பதற்கு வாய்ப்புள்ளது. இப்போது பலமுள்ளவனாக இருக்கிறவன்கூட ஒரு காலத்தில் குழந்தையாக இருந்தவன்தான். அதுபோலவே இன்று கர்த்தருக்காக பெரிய ஊழியங்களைச் செய்கிற பெரிய ஊழியக்காரர்கள்கூட ஒரு காலத்தில் ஆவிக்குரிய குழந்தைகளாக இருந்தவர்கள்தான்.

ஆகையினால் நம்முடைய பலவீனங்களை நினைத்தும், ஆவிக்குரிய வளர்ச்சியில் நாம் குழந்தைகளாக இருப்பதை நினைத்தும் சோர்ந்துபோய்விடக்கூடாது. இயேசுகிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சிக்குத்தக்கதாக பூரண வளர்ச்சி அடையவேண்டுமென்று நாம் எல்லோரும் கர்த்தருடைய சமுகத்தில் வாஞ்சையோடு ஜெபிக்கவேண்டும். வளர்ச்சி ஒரே நாளில் உண்டாகிவிடாது. கர்த்தரிடத்திலிருந்து நாம் நீடிய பொறுமையை பெற்றுக்கொண்டு, விசுவாசத்திலும் ஆவிக்குரிய காரியங்களிலும் வளர்ச்சி பெறவேண்டும்.

### தேவாலயத்தில் இயேசு
### யோவா 2 : 12-22

**யோவா 2:12. அதன்பின்பு அவரும் அவருடைய தாயாரும் அவருடைய சகோதரரும் அவருடைய சீஷரும் கப்பர்நகூமுக்குப்போய், அங்கே சிலநாள் தங்கினார்கள்.**

**யோவா 2:13. பின்பு யூதருடைய பஸ்காபண்டிகை சமீபமாயிருந்தது; அப்பொழுது இயேசு எருசலேமுக்குப் போய்,**

**யோவா 2:14. தேவாலயத்திலே ஆடுகள் மாடுகள் புறாக்களாகிய இவைகளை விற்கிறவர்களையும், காசுக்காரர் உட்கார்ந்திருக்கிறதையும் கண்டு,**

**யோவா 2:15. கயிற்றினால் ஒரு சவுக்கையுண்டு பண்ணி, அவர்கள் யாவரையும் ஆடுமாடுகளையும் தேவாலயத்துக்குப் புறம்பே துரத்திவிட்டு, காசுக்காரருடைய காசுகளைக் கொட்டி, பலகைகளைக் கவிழ்த்துப் போட்டு,**

**யோவா 2:16. புறாவிற்கிறவர்களை நோக்கி: இவைகளை இவ்விடத்திலிருந்து எடுத்துக் கொண்டு போங்கள்; என் பிதாவின் வீட்டை வியாபார வீடாக்காதிருங்கள் என்றார்.**

**யோவா 2:17. அப்பொழுது உம்முடைய வீட்டைக் குறித்து உண்டான பக்திவைராக்கியம் என்னைப் பட்சித்தது என்று எழுதியிருக்கிறதை அவருடைய சீஷர்கள் நினைவுகூர்ந்தார்கள்.**

**யோவா 2:18. அப்பொழுது யூதர்கள் அவரை நோக்கி: நீர் இவைகளைச் செய்கிறீரே, இதற்கு என்ன அடையாளத்தை எங்களுக்குக் காண்பிக்கிறீர் என்று கேட்டார்கள்.**

**யோவா 2:19. இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன் என்றார்.**

## அதிகாரம் - 2

**யோவா 2:20. அப்பொழுது யூதர்கள்: இந்த ஆலயத்தைக் கட்ட நாற்பத்தாறு வருஷம் சென்றதே, நீர் இதை மூன்று நாளைக்குள்ளே எழுப்புவீரோ என்றார்கள்.**

**யோவா 2:21. அவரோ தம்முடைய சரீரமாகிய ஆலயத்தைக் குறித்துப் பேசினார்.**

**யோவா 2:22. அவர் இப்படிச் சொன்னதை அவர் மரித்தோரிலிருந்தெழுந்தபின்பு அவருடைய சீஷர்கள் நினைவுகூர்ந்து, வேதவாக்கியத்தையும் இயேசு சொன்ன வசனத்தையும் விசுவாசித்தார்கள்.**

**கப்பர்நகூம்**

**அதன்பின்பு அவரும் அவருடைய தாயாரும் அவருடைய சகோதரரும் அவருடைய சீஷரும் கப்பர்நகூமுக்குப்போய், அங்கே சிலநாள் தங்கினார்கள் (யோவா 2:12).**

கானா ஊரிலே இயேசுகிறிஸ்து தமது முதலாவது அற்புதத்தைச் செய்தபின்பு, அவரும் அவருடைய தாயாரும், அவருடைய சகோதரரும், அவருடைய சீஷரும் கப்பர்நகூமிற்குப் போகிறார்கள். அங்கு ஒரு சில நாட்கள் தங்குகிறார்கள். இந்த பட்டணம் இயேசுகிறிஸ்துவின் பட்டணமாகும். "தம்முடைய பட்டணத்திற்கு வந்தார்" (மத் 9:1) என்று மத்தேயு இந்தப் பட்டணத்தைப்பற்றி எழுதுகிறார். இயேசுகிறிஸ்து கலிலேயாவிலே ஊழியம் செய்தபோது, கப்பர்நகூம் பட்டணம் அவருடைய தலைமைச் செயலகமாக விளங்கிற்று.

இயேசுகிறிஸ்து எல்லா இடங்களுக்கும் சுற்றி அலைந்து நன்மை செய்கிறார். அவருக்கு தலைசாய்க்கக்கூட இடமுமில்லை நேரமுமில்லை. இயேசுகிறிஸ்து தமது முதலாவது அற்புதத்தை கானா ஊரிலே செய்திருப்பதினால் அவருடைய மகிமை சுற்றிலுமுள்ள ஜனங்களுக்கு பரவிற்று. அவருடைய உபதேசத்தின் வல்லமையையும், அற்புதத்தின் வல்லமையையும் ஜனங்கள் அறிந்துகொள்ள ஆரம்பிக்கிறார்கள். கானா ஊர் கலியாணத்திலே இயேசுகிறிஸ்து அற்புதம் செய்ததினால், அவர்கள் ஒருவேளை இயேசுவின் உபதேசத்தைக் கேட்கவேண்டுமென்று அவர் இருக்கும் இடத்தை தேடி வருவதற்கு வாய்ப்புள்ளது.

ஆகையினால் இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரோடு கப்பர்நகூமிலே சில நாள் தங்குகிறார்.

இயேசுகிறிஸ்துவோடு, அவருடைய தாயாரும், அவருடைய சகோதரரும், அவருடைய சீஷரும் கப்பர்நகூமிற்கு வருகிறார்கள். இயேசுகிறிஸ்து எங்கே போனாலும் தனியாக போவதில்லை. தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை வழிநடத்துவதற்காக, இயேசு எப்போதும் அவர்களை தம்மோடு கூடவே அழைத்துச் செல்வது வழக்கம்.

இயேசுகிறிஸ்து எங்குமே தனியாக போகமுடியாது. அவர் எங்கு சென்றாலும் ஜனங்கள் அவரோடுகூடவே செல்வார்கள். இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தை கேட்பதற்காகவோ, அல்லது அவரால் செய்யப்படும் அற்புதங்களை காண்பதற்காகவோ, அல்லது அப்பம் புசித்து திருப்தியானதினாலேயோ, அவர்கள் இயேசுவின் பின்னால் வருவார்கள் (யோவா 6:26). இயேசுகிறிஸ்துவின் தாயாரும் அவரோடுகூட வருகிறார். இங்கு அவர் இயேசுவுக்கு ஆலோசனை எதுவும் கூறவில்லை. கானா ஊர் கலியாணத்திலே "அவர்களுக்கு திராட்சரசம் இல்லை" என்று மரியாள் கலியாண வீட்டின் பிரச்சனையைப்பற்றி இயேசுகிறிஸ்துவிடம் கூறினார். அதுபோல இங்கு எதுவும் கூறவில்லை. இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்பதற்காகவும், ஆவிக்குரிய சத்தியத்தை கற்றுக்கொள்வதற்காகவும் அவருடைய தாயாரும் இயேசுகிறிஸ்துவோடு கூடவருகிறார்.

இயேசுகிறிஸ்துவின் சகோதரரும், அவருடைய சீஷரும் கானா ஊர் கலியாணத்திலே அவரோடு கூடயிருந்தவர்கள். இயேசுகிறிஸ்து எங்கே போனாலும் அவர்களும் அவரை பின்பற்றிச் செல்கிறார்கள். இயேசுகிறிஸ்து தமது முதலாவது அற்புதத்தைச் செய்தபோது, ஜனங்களுக்கு மிகுந்த ஆச்சரியம் உண்டாயிற்று. அவர்கள் இதுவரையிலும் இதுபோன்ற அற்புதத்தை பார்த்ததேயில்லை. ஆகையினால் ஆரம்பத்தில் அதிக ஆர்வத்தோடு இயேசுவின்பின்னே எல்லோரும் வருகிறார்கள். இதற்கு பின்பும் இயேசுகிறிஸ்து பல அற்புதங்களைச் செய்கிறார். இயேசுகிறிஸ்துவின் தாயாருக்கும், அவருடைய சகோதரருக்கும் அவருடைய அற்புதத்தைப் பார்த்து பழகிப் போயிற்று. அவர் செய்த அற்புதத்தை காணவேண்டும் என்னும் ஆர்வமும் அவர்களுக்கு குறைந்துபோயிற்று. ஆகையினால் இதற்கு பின்பு இயேசுகிறிஸ்து அற்புதம் செய்த சம்பவங்களில் இவர்கள் அவரோடுகூட அதிகமாக காணப்படவில்லை.

## அதிகாரம் - 2

இயேசுகிறிஸ்து கப்பர்நகூமிற்கு வந்து ஒரு சில நாட்கள் மாத்திரமே அங்கு தங்குகிறார். அவர் ஒருபோதும் ஒரே இடத்தில் தங்கியிருப்பதில்லை. ஏனெனில் எல்லா இடங்களிலும் இருக்கிற ஜனங்களுக்கும் இயேசுகிறிஸ்து தேவைப்படுகிறார். தம்முடைய உபதேசங்களையும் ஆசீர்வாதங்களையும் ஒரே இடத்தில் அவர் ஒருபோதும் விதைப்பதில்லை. எல்லா இடங்களுக்கும் சென்று பரவலாக விதைக்கவேண்டுமென்பது இயேசுகிறிஸ்துவின் கொள்கை. இயேசுகிறிஸ்து கப்பர்நகூமிற்கு போன நாட்களில் யூதருடைய பஸ்கா பண்டிகையின் சமீபமாயிற்று. அதை ஆசரிப்பதற்காக இயேசுகிறிஸ்து எருசலேமுக்குப் போக சித்தமுள்ளவராக இருக்கிறார்.

**பஸ்கா பண்டிகை**

**பின்பு யூதருடைய பஸ்காபண்டிகை சமீபமாயிருந்தது; அப்பொழுது இயேசு எருசலேமுக்குப் போய், (யோவா 2:13)**

யூதர்கள் பஸ்கா பண்டிகையை எருசலேமில் ஆசரிப்பது வழக்கம். இயேசுகிறிஸ்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட பின்பு வருகிற முதலாவது பஸ்கா பண்டிகை. இயேசுகிறிஸ்து தம்மை நியாயப்பிரமாணத்திற்கு உட்படுத்தியிருக்கிறார். ஆகையினால் அவர் பஸ்காவை எருசலேமில் ஆசரிக்க வேண்டுமென்று சித்தங்கொள்கிறார். யூதருடைய பஸ்கா பண்டிகை சமீபமாயிருந்தபோது இயேசுகிறிஸ்து எருசலேமுக்குப் போகிறார். பஸ்காவை ஆசரிப்பதற்கு எருசலேமுக்கு முதலாவதாக வந்த யூதர்களில் இயேசுகிறிஸ்துவும் ஒருவராக இருக்கிறார். சபைக்கு முதலாவதாக வருகிற விசுவாசிகளில் நாமும் ஒருவராக இருப்பது நல்லது.

இயேசுகிறிஸ்துவுக்கு பன்னிரண்டு வயது ஆனதிலிருந்து அவர் ஒவ்வொரு வருஷமும் எருசலேமிலே பஸ்காவை ஆசரித்து வருகிறார். இப்போது அவர் ஞானஸ்நானம் பெற்று தம்முடைய ஊழியத்தை வெளிப்படையாக செய்ய ஆரம்பிக்கிறார். ஆகையினால் இதற்கு முன்பு அவர் செய்த காரியங்களுக்கும், இப்போதும் இதற்கு பின்பும் இயேசுகிறிஸ்து செய்கிற காரியங்களுக்கும் வித்தியாசம் இருக்க வாய்ப்புள்ளது.

அவர் இப்போது எருசலேமிலுள்ள தேவாலயத்திற்கு வந்து, இதுவரையிலும் செய்திராத இரண்டு காரியங்களை செய்கிறார். அவையாவன : 1. தேவாலயத்தை சுத்திகரிக்கிறார் (யோவா 2:14-17). 2. தாம் செய்கிற அதிகாரத்தைக் குறித்து யூதர்கள் அடையாளத்தை காண்பிக்க வேண்டுமென்று கேட்டபோது, தம்முடைய அதிகாரத்தை நிரூபிப்பதற்கு அடையாளத்தைக் கூறுகிறார் (யோவா 2:18-21).

**தேவாலயத்திலே**

**தேவாலயத்திலே ஆடுகள் மாடுகள் புறாக்களாகிய இவைகளை விற்கிறவர்களையும், காசுக்காரர் உட்கார்ந்திருக்கிறதையும் கண்டு, கயிற்றினால் ஒரு சவுக்கையுண்டு பண்ணி, அவர்கள் யாவரையும் ஆடுமாடுகளையும் தேவாலயத்துக்குப் புறம்பே துரத்திவிட்டு, காசுக்காரருடைய காசுகளைக் கொட்டி பலகைகளைக் கவிழ்த்துப் போட்டு, (யோவா 2:14,15)**

பஸ்காவை ஆசரிப்பதற்கு இயேசுகிறிஸ்து எருசலேமுக்குப் போனவுடன், அவரை தேவாலயத்தில்தான் நாம் முதலாவதாக காண்கிறோம். அவர் தேவாலயத்திற்கு வரும்வரையிலும் தம்முடைய பொதுவான தரிசனத்தை அவர் யாருக்கும் வெளிப்படுத்தவில்லை என்பது தெரியவருகிறது.

இயேசுகிறிஸ்து தேவாலயத்திற்கு வந்தவுடன் முதலாவது காரியமாக அதை சுத்தப்படுகிறார். தேவாலயத்திலே எல்லாம் குழப்பமாக இருக்கிறது. அங்கு தேவையில்லாத காரியங்கள் ஏராளமாக நடைபெறுகிறது. இயேசுகிறிஸ்து முதலாவதாக அவையெல்லாவற்றையும் தேவாலயத்திற்கு புறம்பே துரத்திவிடுகிறார். அதன்பின்புதான் இயேசுகிறிஸ்து அவர்களுக்கு தேவாலயம் எப்படியிருக்க வேண்டுமென்று உபதேசம் பண்ணுகிறார். தம்முடைய ஆலயத்திற்கு வருகிறவர்களின் இருதயங்களும் ஜீவியமும் சுத்திகரிக்கப்பட்டதாக இருக்கவேண்டும். இயேசுகிறிஸ்து தேவாலயத்தை சுத்திகரிப்பதன் மூலமாக, அவர் நமக்கும் இந்த சத்தியத்தை உபதேசம் பண்ணுகிறார்.

## அதிகாரம் - 2

சுத்திகரிக்கப்பட வேண்டிய அளவுக்கு தேவாலயத்திலே அசுத்தமும், குழறுபடிகளும் நிறைந்துள்ளது. தேவாலயத்தின் ஒரு பகுதியில் சந்தைபோல வியாபாரம் நடைபெறுகிறது. இந்த இடம் புறஜாதியாரின் பிரகாரம் என்று அழைக்கப்படுகிறது. இங்கு தேவாலயத்தில் பலியிடுவதற்காக மாடுகள், ஆடுகள், புறாக்கள் ஆகியவற்றை விற்பனை செய்கிறார்கள். வீட்டில் பயன்படுத்துவதற்காக இங்கு இவை விற்கப்படவில்லை. தேவாலயத்தில் பலியிடுவதற்காகவே விற்கிறார்கள். எருசலேமிலுள்ள தேவாலயத்திற்கு பல ஊர்களிலிருந்தும் ஜனங்கள் வருவார்கள். தங்களுடைய பிரயாணத்தின்போது பலியிடுவதற்காக ஆடுகளையும் மாடுகளையும் புறாக்களையும் தங்களோடு கொண்டு வருவது இவர்களுக்குச் சிரமமாக இருக்கும். இவர்களுடைய சிரமத்தைப் போக்குவதற்காக, தேவாலயத்தின் பிரகாரத்திலேயே ஒரு சிலர் கடைகளைப்போட்டு அவர்களுக்கு மாடுகளையும் ஆடுகளையும் விற்பனை செய்கிறார்கள்.

தேவாலயத்திற்குள்ளேயே இதுபோல வியாபாரம் நடைபெறுவதினால், புறஜாதியாரின் பிரகாரம் என்று அழைக்கப்படும் வெளிப்பிரகார பகுதி ஒரு சந்தைபோல இருக்கிறது. தேவாலயத்திலுள்ள பிரதான ஆசாரியர்கள், இந்த வியாபாரிகளிடம் பணத்தைப் பெற்றுக்கொண்டு, தேவாலயத்திலேயே கடைகளைப்போட்டு வியாபாரம் செய்வதற்கு அனுமதி கொடுத்திருக்கிறார்கள். இவர்களுடைய பணத்தாசையினால் தேவாலயம் மாசுபட்டிருக்கிறது. இதுபோலத்தான் இன்றைய சபையிலும், ஒரு சிலருடைய பண ஆசையினால், தேவனுடைய சபையானது அசுத்தமடைவதற்கு வாய்ப்புள்ளது.

பலியிடுவதற்கு ஆடு மாடுகள் புறாக்கள் இவைகளை விற்கிறவர்களோடு காசுக்காரரும் உட்கார்ந்திருக்கிறார்கள். தேவாலயத்திற்கு வருகிறவர்கள் பல ஊர்களிலிருந்தும், பல தேசங்களிலிருந்தும் வருவார்கள். அவர்களுடைய ஊர்களின் பணத்திற்கும், தேவாலயத்தின் பணத்திற்கும் வித்தியாசமுள்ளது.

தேவாலயத்திலே சேக்கல் என்று அழைக்கப்படும் பணபரிவர்த்தனை இருந்தது. தேவாலயத்தின் காணிக்கைகளுக்கும், தேவாலயத்தில் நடைபெறும் ஆராதனைகளுக்கும், தேவாலயத்திற்கு வருகிறவர்கள் சேக்கல் என்று அழைக்கப்படும் பணத்தையே கொடுக்கவேண்டும். காசுக்காரரிடத்தில் இவர்கள் தங்கள் ஊர் பணத்தைக் கொடுத்து சேக்கலாக மாற்றிக்கொள்வார்கள். பணமாற்று பரிவர்த்தனை செய்வதற்காக அங்கு காசுக்காரரும் அமர்ந்திருக்கிறார்கள்.

தேவாலயத்தில் ஆராதனை செய்வதற்கு ஒவ்வொருவரும் அரைசேக்கல் காணிக்கையாக செலுத்த வேண்டும். தேவாலயத்தில் பரிவர்த்தனை செய்யப்படும் காசாகிய இந்த அரைசேக்கலை காசுக்காரர்கள் அவர்களுக்குக் கொடுத்து, அவர்களுடைய பணத்தை வாங்கிக்கொண்டு இதை ஒரு வியாபாரமாக செய்துகொண்டிருக்கிறார்கள். பிரதான ஆசாரியருடைய பார்வையில் காசுக்காரர்களுடைய பரிவர்த்தனை நியாயமானதாக தெரிகிறபோதிலும், இயேசுகிறிஸ்துவின் பார்வையில் இது அசுத்தமாக இருக்கிறது. இயேசுகிறிஸ்து காசுக்காரரைக் குறித்து பிரதான ஆசாரியரிடம் முறையிடவில்லை. ஏனெனில் இந்த பரிவர்த்தனையில் அவர்களுக்கும் பங்குள்ளது என்பது இயேசுகிறிஸ்துவுக்குத் தெரியும்.

இயேசுகிறிஸ்து கயிற்றினால் ஒரு சவுக்கை உண்டுபண்ணி, தேவாலயத்திலே ஆடுகள் மாடுகள் புறாக்களாகிய இவைகளை விற்கிறவர்களையும், அவர்களுடைய ஆடுமாடுகளையும் தேவாலயத்திற்கு புறம்பே துரத்திவிடுகிறார். காசுக்காரருடைய காசுகளைக் கொட்டி பலகைகளை கவிழ்த்துப்போடுகிறார்.

தேவாலயத்திற்குள் ஜனங்களை அழைத்து வருவதற்காக, இயேசுகிறிஸ்து இதுபோல சவுக்கை உண்டுபண்ணி, யாரையும் பலவந்தமாக தேவாலயத்திற்குள் அழைத்து வரவில்லை. தேவாலத்திற்குள் அசுத்தப்படுத்துகிறவர்களை புறம்பே துரத்துவதற்குத்தான் இதுபோன்று சவுக்கை பயன்படுத்துகிறார்.

## அதிகாரம் - 2

இயேசுகிறிஸ்து கயிற்றினால் ஒரு சவுக்கை உண்டுபண்ணுகிறார். ஒருவேளை ஆடுமாடுகளை விற்கிறவர்கள் அவற்றை அழைத்து வருவதற்கும், ஓரிடத்தில் கட்டிப்போடுவதற்கும் இந்த கயிறுகளை பயன்படுத்தியிருக்கலாம். இதுவரையிலும் பாவிகள் தங்களுடைய பாவச்செயலுக்கு பயன்படுத்திய கயிறுகளை, இயேசுகிறிஸ்து பரிசுத்தப்படுத்துவதற்குப் பயன்படுத்துகிறார். எந்த கயிற்றினால் இவர்கள் ஆடுகளையும் மாடுகளையும் தேவாலயத்திற்குள் கட்டிக்கொண்டு வந்து, அதை அசுத்தப்படுத்தினார்களோ, அதே கயிற்றினாலே இயேசுகிறிஸ்து ஒரு சவுக்கை உண்டுபண்ணி அவர்களையும் அவர்கள் கொண்டுவந்த ஆடுமாடுகளையும் தேவாலயத்திற்கு புறம்பே துரத்திவிடுகிறார்.

இவர்களை துரத்திவிட்ட பின்பு காசுக்காரருடைய காசுகளைக் கொட்டி, அவர்களுடைய பலகைகளையும் கவிழ்த்துப்போடுகிறார். காசுகளை கீழே கொட்டுவதினால் இயேசுகிறிஸ்துவிற்கு காசுகளின்மேல் ஆசையில்லை என்பது தெரியவருகிறது. அவர்களுடைய பலகைகளை கவிழ்த்துப்போடுவதினால், அவர்களுடைய வியாபாரத்தில் இயேசுகிறிஸ்து பிரியப்படவில்லை என்பது தெரியவருகிறது. தேவாலயத்தின் பக்தியுள்ள ஆராதனையை உலக பிரகாரமான ஆதாயத்திற்காக வியாபாரமாக மாற்றிவிடக்கூடாது. தேவாலயத்தின் காணிக்கை பெட்டி மாத்திரமே, கர்த்தருக்காக காணிக்கை சேகரிக்கப்படும் பரிசுத்த ஸ்தலமாக இருக்கவேண்டும். மற்ற இடங்களில் தேவாலயத்தின் பெயரைச் சொல்லியோ, தேவனுடைய பெயரைச் சொல்லியோ காசு சம்பந்தமான பரிவர்த்தனை எதுவும் இருக்கக்கூடாது. காசுக்காரர்கள் தேவாலயத்தின் பரிசுத்தத்தை தங்களுடைய வியாபாரத்தினால் அசுத்தப்படுத்துகிறார்கள்.

இயேசுகிறிஸ்து ஆடுமாடுகளை விற்கிறவர்களை துரத்திவிடுகிறார். அவர்களுடைய ஆடுகளையும் மாடுகளையும் தேவாலயத்திற்கு புறம்பே துரத்திவிடுகிறார். காசுக்காரருடைய காசுகளை கொட்டிவிடுகிறார். அவர்களுடைய பலகைகளை கவிழ்த்துப்போடுகிறார்.

ஆனால் அங்கு புறா விற்கிறவர்களும் இருக்கிறார்கள். ஏழைகள் பலியிடுவதற்காக அங்கு புறா விற்கப்படுகிறது. ஆடுமாடுகள் வாங்க பணவசதியில்லாதவர்கள் புறாக்களை வாங்கி அவற்றை காணிக்கையாக செலுத்துவது வழக்கம். இயேசுகிறிஸ்து புறா விற்கிறவர்களையும், புறாக்களையும் தேவாலயத்திற்கு புறம்பே துரத்திவிடவில்லை. புறா விற்கிறவர்களை நோக்கி "இவைகளை இவ்விடத்திலிருந்து எடுத்துக்கொண்டு போங்கள்" என்று கூறுகிறார்.

"என் ராஜாவும் என் தேவனுமாகிய சேனைகளின் கர்த்தாவே, உம்முடைய பீடங்கள் அண்டையில், அடைக்கலான் குருவிக்கு வீடும், தகைவிலான் குருவிக்கு தன் குஞ்சுகளை வைக்கும் கூடும் கிடைத்ததே" (சங் 84:3) என்று சங்கீதக்காரன் பாடுகிறான். இங்கு அடைக்கலான் குருவியையும், தகைவிலான் குருவியையும் மாத்திரமே சங்கீதக்காரன் குறிப்பிடுகிறான். அவன் புறாக்களைப்பற்றி எதுவும் சொல்லவில்லை. புறாக்கள் மனுஷருடைய ஆதாயத்திற்காக இங்கு விற்பனை செய்யப்படுகிறது. தேவனுடைய ஆலயம் புறாக்கூடு ஆகிவிடக்கூடாது. ஆகையினால்தான் இயேசுகிறிஸ்து புறா விற்கிறவர்களை நோக்கி "என் பிதாவின் வீட்டை வியாபார வீடாக்காதிருங்கள்" என்று கூறுகிறார். இயேசுகிறிஸ்து கூறிய இந்த வார்த்தை ஆடுமாடுகளை விற்கிறவர்களுக்கும், காசுக்காரர்களுக்கும் சேர்த்தே கூறப்படுகிறது.

### என் பிதாவின் வீடு

**புறாவிற்கிறவர்களை நோக்கி: இவைகளை இவ்விடத்திலிருந்து எடுத்துக் கொண்டு போங்கள்; என் பிதாவின் வீட்டை வியாபார வீடாக்காதிருங்கள் என்றார் (யோவா 2:16).**

தம்முடைய செய்கைக்கு இயேசுகிறிஸ்து காரணம் கூறுகிறார். என் பிதாவின் வீட்டை வியாபார வீடாக்காதிருங்கள் என்று கூறுகிறார். தேவாலயம் தேவனுடைய வீடு. ஆகையினால் நாம் இதை அசுத்தப்படுத்தக் கூடாது. வியாபாரம்பண்ணுவது அதற்குரிய இடத்தில் நடைபெறவேண்டும். தேவாலயம் வியாபாரம் பண்ணுகிற இடமல்ல. இது பரிசுத்தமான இடம். இங்கு வியாபாரம் பண்ணி லாபம் சம்பாதிக்கலாம் என்று நினைப்பது தேவனைக் கொள்ளையிடுவதற்குச் சமம்.

## அதிகாரம் - 2

தேவாலயத்தில் நடைபெறும் ஒவ்வொரு காரியமும் தேவனுடைய நாம மகிமைக்காக பயபக்தியுடன் நடைபெறவேண்டும். கர்த்தரைத் துதிக்கும் ஸ்தோத்திரபலிகளின் சப்தம் மாத்திரமே இங்கு ஒலிக்கவேண்டும். இதற்குப் பதிலாக இங்கு வியாபாரம் பண்ணுவதும், பேரம்பேசி சந்தடிபண்ணுவதும், பரிசுத்த குலைச்சலான காரியங்கள். தேவனுடைய ஊழியத்தில் பணத்திற்கு பங்கு உண்டு. இதை காணிக்கை என்றுதான் கூறவேண்டும். வியாபாரத்தில் கிடைப்பது காணிக்கையல்ல. இது லாபம். காணிக்கைக்கும் லாபத்திற்கும் வித்தியாசமுள்ளது. ஆகையினால் காணிக்கை சேகரிக்க வேண்டிய இடத்தில், தேவனுடைய பெயரை பயன்படுத்தி, லாபம் சம்பாதிக்க நினைப்பது அசுத்தமான செயல்.

தேவாலயம் தேவனுடைய வீடு. இதை வியாபார வீடாக மாற்றிவிடக்கூடாது. வியாபாரம் பண்ணுகிறவர்களின் மனது வியாபார காரியங்களினால் நிறைந்திருக்கும். தேவாலயத்திற்குரிய காரியங்களில் தாங்கள் ஈடுபடுகிறோம் என்று இவர்கள் கூறினாலும், இவர்கள் செய்கிற காரியம் வியாபாரமே. மார்க்க சம்பந்தமான காரியங்களை இவர்கள் வியாபாரம் செய்து, இதன் மூலமாக லாபம் சம்பாதிக்க நினைக்கிறார்கள். தேவனுக்கடுத்த காரியங்களை செய்யும்போது நம்முடைய உள்ளத்திலும், எண்ணத்திலும், செயலிலும் பரிசுத்தம் காணப்படவேண்டும்.

தேவாலயம் தம்முடைய பிதாவின் வீடாக இருப்பதினால் இயேசுகிறிஸ்து இதை சுத்திகரிக்க விரும்புகிறார். தம்முடைய வீட்டை சுத்திகரிக்கும் உரிமை தேவனுடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவுக்கு உண்டு. இயேசுகிறிஸ்து சுத்திகரிப்பதற்கு அதிகாரமுள்ளவர். கர்த்தருடைய வீட்டைக் குறித்து இயேசுகிறிஸ்துவிடம் பக்தி வைராக்கியமுள்ளது. கர்த்தருடைய வீடு அசுத்தமாக இருக்கும்போது, அந்த வீட்டைக்குறித்துஉண்டான பக்திவைராக்கியம் இயேசுகிறிஸ்துவை பட்சித்திருக்கிறது.

தேவனுடைய ஆலயம் அசுத்தப் படுத்தப்படுவதையும் அவமதிக்கப் படுவதையும் இயேசுகிறிஸ்துவினால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

இயேசுகிறிஸ்து தம்முடைய ஊழியக்காலத்தில் பல அற்புதங்களைச் செய்திருக்கிறார். அவர் தேவாலயத்தை சுத்திகரித்த சம்பவத்தை அவருடைய அற்புதமான கிரியைகளில் ஒன்றாகவே நாம் கருதவேண்டும். ஏனெனில் தம்முடைய சிநேகிதர் யாருடைய உதவியையும் எதிர்பாராமல், இயேசுகிறிஸ்து தாமே தனியாக நின்று தேவாலயத்தை சுத்திகரிக்கிறார். தாம் ஒருவராகவே ஆடுமாடுகளை விற்கிறவர்களையும், ஆடுமாடுகளையும் தேவாலயத்திற்கு புறம்பே துரத்துகிறார். தாம் ஒருவராகவே காசுக்காரருடைய காசுகளைக் கொட்டி, பலகைகளை கவிழ்த்துப்போடுகிறார்.

இயேசுகிறிஸ்து இந்த அற்புதமான கிரியைகளைச் செய்யும்போது அவருடைய சத்துருக்களிடமிருந்து அவருக்கு எதிர்ப்பு எதுவும் உண்டாகவில்லை. ஆடுமாடுகளை விற்கிறவர்களுடைய அநியாயமும், காசுக்காரருடைய அநியாயமும், பிரதான ஆசாரியருடைய அநியாயமும் எல்லோருக்கும் வெளிப்படையாகத் தெரியும். ஆகையினால் இயேசுகிறிஸ்து இந்த அற்புத காரியத்தைச் செய்கிறபோது, அவர் நியாயமாகவே செய்கிறார் என்று எல்லோருமே நினைக்கிறார்கள். அவருடைய செய்கையை நியாயப்படுத்துகிறார்கள்.

பாவிகளுடைய குற்றமனச்சாட்சியே அவர்கள் செய்யும் குற்றத்தை அவர்களுடைய உள்ளத்தில் உணர்த்துகிறது. இது மாத்திரமல்ல, இயேசுகிறிஸ்துவிடமுள்ள தெய்வீக வல்லமை இங்கே கிரியை நடப்பிக்கிறது. தேவனுடைய வல்லமைக்கு முன்பாக மனுஷருடைய ஆவியினால் எதிர்த்து நிற்க முடியாது. ஆகையினால் இயேசுகிறிஸ்து இந்த பலத்த செய்கையை செய்கிறபோது அவரோடு யாரும் எதிர்த்து நிற்க வரவில்லை.

**பக்தி வைராக்கியம்**

**அப்பொழுது: உம்முடைய வீட்டைக் குறித்து உண்டான பக்திவைராக்கியம் என்னைப் பட்சித்தது என்று எழுதியிருக்கிறதை அவருடைய சீஷர்கள் நினைவுகூர்ந்தார்கள் (யோவா 2:17).**

## அதிகாரம் - 2

இயேசுகிறிஸ்து தேவாலயத்தை சுத்திகரிப்பதை அவருடைய சீஷர்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அப்போது வேதவாக்கியம் அவர்களுடைய மனதின் நினைவிற்கு வருகிறது. "உம்முடைய வீட்டைக்குறித்து உண்டான பக்திவைராக்கியம் என்னைப் பட்சித்தது" என்று எழுதியிருக்கிற வேதவாக்கியத்தை அவருடைய சீஷர்கள் நினைவுகூருகிறார்கள். இயேசுகிறிஸ்து தேவனுடைய ஆட்டுக்குட்டியைப்போல சாதுவான சுபாவமுள்ளவராக இருக்கிறார். அதேவேளையில் அவர் இஸ்ரவேலின் ராஜாவுக்குரிய ராஜ கம்பீரத்தோடும் இருக்கிறார். இயேசு கிறிஸ்துவின் சீஷர்கள் அவருடைய இவ்விரண்டு சுபாவத்தையும் சிந்தித்துப்பார்க்கிறார்கள். மேசியாவைப்பற்றி தாவீது குறிப்பிடும்போது தேவனுடைய வீட்டைக்குறித்து உண்டான தன்னுடைய பக்திவைராக்கியத்தைப்பற்றி குறித்து எழுதுகிறார். அந்த பக்திவைராக்கியம் தாவீதை பட்சித்துப்போடுகிறது.

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் வேதப்பகுதியில் எழுதப்பட்டிருக்கும் இந்த வேதவாக்கியத்தை நினைவுகூருகிறார்கள். தேவனுடைய வார்த்தையும் அவருடைய கிரியையும் ஒன்றுக்கொன்று இசைவாக இருக்கும். ஒன்றையொன்று விளக்கிக் கூறும். தேவாலயத்திலே இயேசுகிறிஸ்து செய்த அற்புதமான கிரியையை பார்த்து, அவருடைய சீஷர்கள் வேதவாக்கியத்தை நினைவுகூர்ந்து அதன் பொருளை புரிந்துகொள்கிறார்கள். வேதவாக்கியங்களில் சீஷர்கள் தெளிவுள்ளவர்களாக இருக்கிறார்கள். அவற்றை மறந்துவிடாமல் நினைவுகூருகிறார்கள். ஒருவர் சத்திய வசனத்தில் நிலைத்திருக்கும்போது அவருடைய ஆவிக்குரிய ஜீவியம் வல்லமையுள்ளதாக இருக்கும். நம்முடைய ஜீவியத்தில் நடைபெறும் ஒவ்வொரு சம்பவத்திலும், நாம் அதற்குரிய வேதவாக்கியங்களை நினைவுகூரவேண்டும்.

"உம்முடைய வீட்டைக்குறித்து உண்டான பக்திவைராக்கியம் என்னை பட்சித்தது" என்னும் வேதவாக்கியம் மிகவும் முக்கியமானது. பழைய ஏற்பாட்டுக்காலத்து பரிசுத்தவான்களின் ஜீவியத்தில் தேவனுடைய கிருபைகள் வெளிப்பட்டது.

அந்த கிருபைகளெல்லாம் இயேசுகிறிஸ்துவில் பூரணமாக வெளிப்படுவதை நாம் புதிய ஏற்பாட்டில் காண்கிறோம். பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளும், பரிசுத்தவான்களும் தேவனுடைய வீட்டைக்குறித்து பக்திவைராக்கியமாக இருந்தார்கள்.

நம்மிடத்தில் தேவனுடைய வீட்டைக்குறித்த பக்திவைராக்கியம் இருக்கும்போது நாம் சுயபெருமையுடன் இருக்கமாட்டோம். நம்முடைய சுயபாதுகாப்புக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் தேவனுடைய வீட்டைக்குறித்து பக்திவைராக்கியமாக இருப்போம். புதிய ஏற்பாட்டுக்காலத்தில் கர்த்தருடைய பிள்ளைகளாக இருக்கும் சிலாக்கியம் நமக்குக் கிடைத்திருக்கிறது.

இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தில் நாம் பக்திவைராக்கியத்தோடு இருக்கவேண்டும். நம்முடைய ஊழியத்திற்கு தடையாக அல்லது போட்டியாக ஏதாவது ஒரு காரியம் குறிக்கிடுமானால், நாம் பக்தி வைராக்கியத்தோடு இயேசுகிறிஸ்துவுக்காக ஊழியம் செய்யவேண்டும். சில சமயங்களில் கர்த்தருடைய ஊழியத்தை செய்யும்போது நமக்கு இரத்தசேதம் கூட உண்டாகலாம். நம்முடைய ஆத்துமா கர்த்தருக்காக ஊழியம் செய்யவேண்டுமென்று வைராக்கிய வாஞ்சையோடு இருக்கும்போது, நம்முடைய சரீரம் ஆத்துமாவோடு ஒத்துழைப்புக் கொடுத்து இணைந்து செயல்பட முடியாமல் போகலாம். நம்முடைய பக்திவைராக்கியம் நம்முடைய சரீரத்தை பட்சித்துப்போடலாம். இயேசுகிறிஸ்து தேவாலயத்தை சுத்திகரிக்கும்போது சீஷர்கள் தேவாலயத்தைக் குறித்த அவருடைய பக்திவைராக்கியத்தைக் காண்கிறார்கள். அந்த பக்திவைராக்கியம் அவரை பட்சித்துப்போடுவதற்கு வாய்ப்புள்ளதையும் காண்கிறார்கள். ஆகையினால்தான் சீஷர்களுடைய மனதில் இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் வேதவாக்கியம் நினைவுக்கு வருகிறது.

**அடையாளம்**

**அப்பொழுது யூதர்கள் அவரை நோக்கி: நீர் இவைகளைச் செய்கிறீரே, இதற்கு என்ன அடையாளத்தை எங்களுக்குக் காண்பிக்கிறீர் என்று கேட்டார்கள் (யோவா 2:18).**

## அதிகாரம் - 2

இயேசுகிறிஸ்து தேவாலயத்தை சுத்திகரிக்கும்போது, அதை யூதர்களும் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஏராளமான ஜனங்களும், ஜனத்தின் மூப்பரும் அவர் தேவாலயத்தை சுத்திகரிப்பதை கவனித்துப் பார்க்கிறார்கள். அவருடைய செய்கையை யாராலும் குறைகூற முடியவில்லை. அவருடைய பலத்த செய்கைக்கு இவர்களால் எதிர்த்து நிற்க முடியவில்லை. ஆகையினால் அவருடைய செய்கையைப்பற்றி கேள்விகேட்காமல், அவர் எந்த அதிகாரத்தினால் இதை செய்கிறார் என்று அவரிடத்தில் கேட்கிறார்கள். தம்முடைய அதிகாரத்தை நிரூபிப்பதற்கு அவர் ஒரு அடையாளத்தைக் காண்பிக்கவேண்டும் என்றும் எதிர்பார்க்கிறார்கள்.

"நீர் இவைகளைச் செய்கிறீரே, இதற்கு என்ன அடையாளத்தை எங்களுக்குக் காண்பிக்கிறீர்" என்று அவரிடத்தில் கேட்கிறார்கள். தம்முடைய அதிகாரத்தை நிரூபிப்பதற்கு இயேசுகிறிஸ்து அவர்களுக்கு புதிதாக எந்த ஒரு அடையாளத்தையும் காண்பிக்க வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் அவர் தேவாலயத்தை சுத்திகரிப்பதே அவர்களுக்கு ஒரு அடையாளமாக இருக்கிறது. இயேசுகிறிஸ்து தேவாலய அதிகாரிகளில் ஒருவரல்ல. பிரதான ஆசாரியரோ அல்லது யூதருடைய ஆலோசனைச்சங்கத்தாரோ, தேவாலயத்தை சுத்திகரிக்கும் பொறுப்பை அவருக்குக் கொடுக்கவில்லை. என்றாலும் தம்முடைய பிதாவின் வீட்டைக்குறித்து உண்டான பக்திவைராக்கியத்தினால் இயேசுகிறிஸ்து தேவாலயத்தைச் சுத்திகரிக்கிறார். அதிகார பொறுப்பில் இல்லாத ஒருவர், தமது தெய்வீக அதிகாரத்தினால், தேவாலயத்தை சுத்திகரிப்பது அவர்களுக்கு ஒரு அடையாளமாயிற்று. ஆனால் அதை அவர்கள் புரிந்துகொள்ளாமல், தங்களுக்கு அவர் ஒரு அடையாளத்தைக் காண்பிக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள்.

**மூன்றுநாளைக்குள்ளே**

**இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன் என்றார் (யோவா 2:19).**

தம்மிடத்தில் அடையாளத்தைக் காண்பிக்குமாறு கேட்கும் ஜனங்களுக்கு இயேசுகிறிஸ்து ஒரு அடையாளத்தைக் கூறுகிறார். இது இனிமேல் வரப்போகிற அடையாளம். இனிமேல் நடைபெறப்போகும் சம்பவமே அவர்களுக்கு அடையாளமாக கொடுக்கப்படுகிறது. தம்முடைய மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் இயேசுகிறிஸ்து அவர்களுக்கு அடையாளமாக கூறுகிறார்.

தம்முடைய மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் இயேசுகிறிஸ்து பிரத்தியட்சமாகவும் தெளிவாகவும் அவர்களுக்கு முன்னறிவிக்காமல், அதைக்குறித்து உருவக நடையில் வெளிப்படுத்துகிறார். "இந்த ஆலயத்தை இடித்துப்போடுங்கள், மூன்றுநாளைக்குள்ளே இதை எழுப்புவேன்" என்று கூறுகிறார். இவர்கள் கண்டும் காணாதவர்களாயும், கேட்டும் கேளாதவர்களாயும் உணர்ந்து கொள்ளாதவர்களாயும் இருக்கிறபடியினால் இயேசுகிறிஸ்து இவர்களோடே உவமைகளாகப் பேசுகிறார். இவர்கள் காதாரக்கேட்டும் உணராதிருக்கிறார்கள் கண்ணாரக்கண்டும் அறியாதிருக்கிறார்கள் இவர்கள் இருதயம் கொழுத்திருக்கிறது. தங்கள் காதால் மந்தமாய் கேட்டு, தங்கள் கண்களை தாங்களே மூடிக்கொள்கிறார்கள் (மத் 13:13-15).

கண்களினால் காணாதவர்களால் காண முடியாது. இயேசுகிறிஸ்து அடையாளமாக கூறிய இந்த வார்த்தைகளை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. இயேசுகிறிஸ்துவை பிரதான ஆசாரியனிடத்தில் இழுத்து வந்து, அவரை விசாரித்தபோது, இயேசுகிறிஸ்து அன்று கூறிய வார்த்தையை, அவருக்கு விரோதமாக கூறி அவர்மீது குற்றம் சுமத்துகிறார்கள். "தேவனுடைய ஆலயத்தை இடித்துப்போடவும், மூன்றுநாளைக்குள்ளே அதைக் கட்டவும் என்னாலே ஆகும் என்று இவன் சொன்னான்" என்று இரண்டு பொய்ச்சாட்சிகள் இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாக சாட்சி கூறினார்கள் (மத் 26:60,61).

இயேசுகிறிஸ்து தம்முடைய மரணத்தைக் குறித்து இங்கு முன்னறிவிக்கிறார். தம்முடைய சரீரமாகிய ஆலயத்தை யூதர்கள் துன்புறுத்தி, பாடுகளுக்கு உட்படுத்தி, அவர்கள் அழித்துப் போடுவார்கள் என்று கூறுகிறார். இந்த ஆலயம் அவர்களால் இடித்துப்போடப்படும் என்று முன்னறிவிக்கிறார். தம்முடைய ஊழியத்தின் ஆரம்ப காலத்திலேயே தமக்கு வரப்போகும் பாடுகள் அனைத்தையும் இயேசுகிறிஸ்து முன்னறிந்தவராக இருக்கிறார். தமக்கு மரணம் நியமிக்கப்பட்டிருக்கிறது என்று தெரிந்தபோதிலும் இயேசுகிறிஸ்து அதை எதிர்கொள்வதற்கு சந்தோஷமாக முன்னேறிச்செல்கிறார்.

## அதிகாரம் - 2

தம்முடைய மரணத்தைக்குறித்து முன்னறிவிக்கும் அதே வேளையில், இயேசுகிறிஸ்து தம்முடைய உயிர்த்தெழுதலைக் குறித்தும் முன்னறிவிக்கிறார். "மூன்றுநாளைக்குள்ளே இதை எழுப்புவேன்" என்று அவர்களிடம் கூறுகிறார். அவருடைய சொந்த வல்லமையினால், யூதர்களால் இடித்துப்போடப்பட்ட அவருடைய ஆலயம், மூன்றுநாளைக்குள்ளே எழுப்பப்படும்.

மரித்து உயிர்த்தெழுந்த ஒரு சிலரைப்பற்றி வேதத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அவர்களில் ஒருவரும் தங்கள் சுயவல்லமையினால் உயிரோடு எழும்பவில்லை. இயேசுகிறிஸ்துவே அவர்களை உயிரோடு எழுப்பினார். இந்த சத்தியத்தை அவர்களுக்கு வெளிப்படுத்துவதற்காக தேவாலயத்தை இடித்துப்போடுவதையும், தம்முடைய வல்லமையினால் அதை எழுப்பப்போவதையும் குறித்து இயேசுகிறிஸ்து இங்கு அடையாளமாக பேசுகிறார்.

இயேசுகிறிஸ்து தேவாலயத்தை சுத்திகரிக்கிறார். தேவாலயத்தை விற்கிறவர்களும் கொள்ளுகிறவர்களும் அசுத்தப்படுத்தியிருக்கிறார்கள். ஆகையினால் தேவாலயத்திற்கு சுத்திகரிப்பு அவசியமாயிற்று. ஒரு தேவாலயத்தை அசுத்தப்படுத்தும் இவர்கள் மற்றொரு தேவாலயத்தை நிச்சயமாகவே இடித்துப்போடுவார்கள். இயேசுகிறிஸ்துவுக்கு தெய்வீக வல்லமையும் அதிகாரமுமுள்ளது. அவர்கள் அசுத்தப்படுத்தியதை சுத்திகரித்தும், அவர்கள் இடித்துப்போட்டதை எழுப்பியும் இயேசுகிறிஸ்து தம்முடைய தெய்வீக வல்லமையை வெளிப்படுத்துகிறார்.

**நாற்பத்தாறு வருஷம்**

**அப்பொழுது யூதர்கள்: இந்த ஆலயத்தைக் கட்ட நாற்பத்தாறு வருஷம் சென்றதே, நீர் இதை மூன்று நாளைக்குள்ளே எழுப்புவீரோ என்றார்கள் (யோவா 2:20).**

தேவாலயம் கட்டுவது எப்போதுமே மெதுவாகவே நடைபெறும். இதை விரைவாக கட்டி முடிக்க வேண்டுமென்று எவ்வளவுதான் முயற்சி பண்ணினாலும், அது மெதுவாகத்தான் முடியும். எருசலேமிலுள்ள தேவாலயத்தைக் கட்ட நாற்பத்தாறு வருஷம் சென்றது. இந்த தேவாலயத்தின் வரலாற்றைக் குறித்து தங்களுக்கு ஓரளவு தெரியும் என்பதை இந்த யூதர்கள் காண்பித்துக்கொள்கிறார்கள். இந்த தேவாலயத்தைக் கட்டிமுடிக்க எத்தனை வருஷம் ஆயிற்று என்பதை தங்களால் சொல்ல முடியும் என்று நினைக்கிறார்கள்.

இவர்களுடைய நினைப்பு அடிப்படையிலேயே தவறு. முதலாவதாக இயேசுகிறிஸ்துவினுடைய வார்த்தையின் பொருளை இவர்கள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. இரண்டாவதாக இவர்கள் இயேசுகிறிஸ்துவினுடைய சர்வவல்லமையின் அதிகாரத்தையும் புரிந்துகொள்ளவில்லை. இயேசுகிறிஸ்துவின் மனுஷத்துவம் மாத்திரமே இவர்களுக்குத் தெரிந்திருக்கிறது. அவரால் ஒரு மனுஷனைப்போல மாத்திரமே கிரியை செய்யமுடியும் என்று நினைக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் தெய்வத்துவத்தைப்பற்றி இவர்களுக்குத் தெரியவில்லை. ஆகையினால் அவருடைய தெய்வீக வல்லமையையும் இவர்கள் புரிந்துகொள்ளாமல் வரலாற்றுக் காரியங்களைப்பற்றி பேசுகிறார்கள்.

**சரீரமாகிய ஆலயம்**

**அவரோ தம்முடைய சரீரமாகிய ஆலயத்தைக் குறித்துப் பேசினார் (யோவா 2:21).**

இயேசுகிறிஸ்து தம்முடைய சரீரமாகிய ஆலயத்தைக்குறித்து பேசுகிறார். அவர் "இந்த ஆலயத்தை இடித்துப்போடுங்கள்" என்று கூறியபோது அவர் மெய்யாகவே தம்முடைய சரீரமாகிய ஆலயத்தைக் குறித்தே பேசுகிறார். தேவாலயத்தைப்போலவே இயேசுகிறிஸ்துவின் சரீரமும் தேவனுடைய ஆலோசனையின் பிரகாரம் கட்டப்பட்டிருக்கிறது. தேவாலயத்தைப்போலவே இயேசுகிறிஸ்துவின் சரீரமும் தேவனுடைய பரிசுத்தமான வீடு ஆகும். "இது பரிசுத்தமுள்ளது" என்று இயேசுகிறிஸ்துவின் சரீரத்தைக்குறித்து தேவதூதன் ஏற்கெனவே மரியாளிடம் கூறியிருக்கிறான்.

இயேசுகிறிஸ்துவின் சரீரம் ஒரு தேவாலயத்தைப்போல, தேவனுடைய மகிமை தங்கியிருக்கும் வாசஸ்தலத்தைப்போல இருக்கிறது. இந்த ஆலயத்தில் நித்திய வார்த்தையாகிய, தேவனுடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்து வாசம்பண்ணுகிறார். இயேசுகிறிஸ்து இம்மானுவேல் என்று அழைக்கப்படுகிறார். இம்மானுவேல் என்னும் பெயருக்கு "தேவன் நம்மோடிருக்கிறார்" என்று அர்த்தமாம். கர்த்தரை ஆராதிக்கிறவர்கள் தேவனுடைய வீட்டை நோக்கிப்பார்க்க வேண்டும். நாம் தேவனை ஆராதிக்கும்போது நம்முடைய கண்கள் இயேசுகிறிஸ்துவின்மீதே நோக்கமாயிருக்க வேண்டும்.

## அதிகாரம் - 2

**மரித்தோரிலிருந்து எழுந்த பின்பு**

**அவர் இப்படிச் சொன்னதை அவர் மரித்தோரிலிருந்தெழுந்தபின்பு அவருடைய சீஷர்கள் நினைவுகூர்ந்து, வேதவாக்கியத்தையும் இயேசு சொன்ன வசனத்தையும் விசுவாசித்தார்கள் (யோவா 2:22).**

இந்த ஆலயத்தை இடித்துப்போடுங்கள், மூன்றுநாளைக்குள்ளே இதை எழுப்புவேன் என்று இயேசுகிறிஸ்து சொன்ன வாக்கியத்தை அவருடைய சீஷரும் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. என்றாலும் இயேசுகிறிஸ்து கூறிய இந்தவாக்கியம் அவர்களுடைய உள்ளத்தின் நினைவில் பல நாட்களாக பதிந்திருக்கிறது. இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தபின்பு, அவருடைய சீஷர்கள் அவர் சொன்ன இந்த வார்த்தைகளை நினைவுகூருகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவினுடைய சீஷர்களின் ஞாபகசக்தி பொக்கிஷத்தை சேகரித்து வைத்திருக்கும் வீட்டு எஜமானைப்போல இருக்கவேண்டும். அவன் தன் பொக்கிஷத்திலிருந்து புதியவைகளையும் பழையவைகளையும் எடுத்துக் கொடுக்கிறதுபோல, இயேசுகிறிஸ்துவின் சீஷர்களும் தாங்கள் கேட்ட கர்த்தருடைய வார்த்தையிலிருந்து புதியவைகளையும் பழையவைகளையும் பிறருக்கு எடுத்துச்சொல்லக் கூடியவர்களாக இருக்கவேண்டும் (மத் 13:52).

இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்த பின்பு அவருடைய சீஷர்கள் அவர் சொன்ன வசனத்தை நினைவுகூர்ந்து விசுவாசிக்கிறார்கள். இயேசுகிறிஸ்து சொன்ன வசனம் இவர்களுடைய இருதயத்தில் பதிந்திருக்கிறது. இதன்பின்பு இருதயத்திலுள்ள வசனம் அவ்வப்போது கிரியை செய்து அவர்களுக்கு பிரயோஜனமுள்ளதாக இருக்கிறது. நாமும் ஆவிக்குரிய காரியங்களிலே குழந்தைகளாக இருந்தாலும் வேதவசனங்களை ஆர்வத்தோடு கேட்கவேண்டும். அதன் ஆவிக்குரிய அர்த்தம் இப்போது சரியாக புரியவில்லையென்றாலும், வசனங்களை நம்முடைய இருதயத்தில் பதியவைத்துக்கொள்ளவேண்டும்.

காலம் வரும்போது ஆவியானவர் தம்முடைய வார்த்தைகளை நமக்கு விளங்கச் செய்வார். ஆவிக்குரிய காரியங்களில் நாம் வளர்ச்சி பெறும்போது, ஏற்கெனவே நம்முடைய இருதயங்களில் பதிந்துள்ள வசனம் நமக்குள் கிரியை செய்யும். நம்மோடு பேசும். அதன் ஆவிக்குரிய அர்த்தத்தை நாம் புரிந்துகொள்வோம்.

இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்த பின்பு அவர் கூறின வார்த்தைகளை சீஷர்கள் நினைவுகூருகிறார்கள். அதுவரையிலும் இயேசுகிறிஸ்து தம்முடைய ஆலயத்தைப்பற்றி கூறிய வாக்கியம் அவர்களுக்கு சரியாக புரியவில்லை. இயேசுகிறிஸ்து பரமேறிப்போன பின்பு சீஷர்கள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள். ஆவியானவர் அவர்களை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துகிறார். இயேசுகிறிஸ்து அவர்களுக்கு ஏற்கெனவே சொன்ன வார்த்தைகளை ஆவியானவர் அவர்களுக்கு நினைவுபடுத்துகிறார்.

இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த அதே நாளில்தானே அவர் வேதவாக்கியங்களை அறிந்துகொள்ளும்படி தம்முடைய சீஷர்களுடைய மனதை திறக்கிறார் (லூக் 24:45). அவர் உயிர்த்தெழுந்த போது இயேசுகிறிஸ்து கூறின வார்த்தை நிறைவேறிற்று. இயேசுகிறிஸ்துவின் சரீரமாகிய ஆலயத்தை யூதர்கள் இடித்துப்போட்டார்கள். ஆனால் அவரோ மூன்று நாளைக்குள்ளே அதை மறுபடியும் எழுப்புகிறார். மூன்றாவது நாளிலே இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள், அவர் தம்முடைய சரீரமாகிய ஆலயத்தைக் குறித்து பேசியதை நினைவுகூருகிறார்கள்.

வசனத்தை நினைவுகூருவது மாத்திரமல்ல வேதவாக்கியத்தையும் அவர் சொன்ன வசனத்தையும் விசுவாசிக்கிறார்கள். தீர்க்கதரிசிகள் சொன்ன யாவையும் விசுவாசிக்கிறதற்கு சீஷர்கள் புத்தியில்லாத மந்த இருதயமுள்ளவர்களாக இருக்கிறார்கள் (லூக் 24:25). அவர்கள் புரிந்துகொள்வதில் மந்தமாக இருந்தாலும், ஏற்ற வேளை வரும்போது அதை முழுவதுமாக புரிந்துகொண்டு, தங்களுடைய இருதயங்களில் அதை முழுநிச்சயத்தோடு விசுவாசிக்கிறார்கள். இங்கு வேதவாக்கியமும் இயேசு சொன்ன வசனமும் சேர்த்துக் கூறப்பட்டிருக்கிறது. ஏனெனில் இவை இரண்டும் ஒன்றுக்கொன்று இணைந்து சத்தியத்தை தெளிவுபடுத்துகிறது. ஒன்றையொன்று வலுப்படுத்துகிறது.

## அதிகாரம் - 2

### எருசலேம் ஜனங்கள்
### யோவா 2 : 23-25

**யோவா 2:23. பஸ்கா பண்டிகையிலே அவர் எருசலேமிலிருக்கையில், அவர் செய்த அற்புதங்களை அநேகர் கண்டு, அவருடைய நாமத்தில் விசுவாசம் வைத்தார்கள்.**

**யோவா 2:24. அப்படியிருந்தும், இயேசு எல்லாரையும் அறிந்திருந்தபடியால், அவர்களை நம்பி இணங்கவில்லை.**

**யோவா 2:25. மனுஷருள்ளத்திலிருப்பதை அவர் அறிந்திருந்தபடியால், மனுஷரைக் குறித்து ஒருவரும் அவருக்குச் சாட்சி கொடுக்க வேண்டியதாயிருக்கவில்லை.**

**எல்லாரையும் அறிந்திருக்கிறார்**

**பஸ்கா பண்டிகையிலே அவர் எருசலேமிலிருக்கையில், அவர் செய்த அற்புதங்களை அநேகர் கண்டு, அவருடைய நாமத்தில் விசுவாசம் வைத்தார்கள். அப்படியிருந்தும், இயேசு எல்லாரையும் அறிந்திருந்தபடியால், அவர்களை நம்பி இணங்கவில்லை (யோவா 2:23,24).**

பஸ்கா பண்டிகையின்போது இயேசுகிறிஸ்து எருசலேமில் இருக்கிறார். அங்கு அவர் சத்தியத்தை உபதேசம்பண்ணி அற்புதங்களைச் செய்கிறார். இந்தக் காலம் மிகவும் பரிசுத்தமான காலமாகும். எருசலேமிலே இந்த பரிசுத்தமான காலத்தில் பஸ்கா பண்டிகை கொண்டாடப்படுகிறது. பண்டிகை நாளாக இருப்பதினால் எருசலேமில் திரளான ஜனங்கள் கூடிவந்திருக்கிறார்கள். இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இயேசுகிறிஸ்து திரளான ஜனங்களுக்கு சத்தியத்தை உபதேசம்பண்ணி, தம்முடைய வார்த்தையை அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் உறுதிபண்ணுகிறார்.

இயேசுகிறிஸ்து செய்த அற்புதங்களை அநேகர் கண்டு அவருடைய நாமத்திலே விசுவாசம் வைக்கிறார்கள். நிக்கொதேமு கூறியதுபோல இவர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அங்கீகரிக்கிறார்கள்.

அப்படியிருந்தும் இயேசுகிறிஸ்து அவர்களை நம்பி இணங்கவில்லை. அவர் எல்லாரையும் அறிந்திருக்கிறார். மனுஷன் முகத்தைப் பார்க்கிறான்.

ஆனால் கர்த்தரோ மனுஷனுடைய இருதயத்தைப் பார்க்கிறார். எருசலேமிலே ஏராளமான ஜனங்கள் அவர் செய்த அற்புதங்களைக் காண்கிறார்கள். அவர்களில் அநேகர் அவருடைய நாமத்தில் விசுவாசம் வைக்கிறார்கள். இவர்கள் எருசலேமிலுள்ள புதிய விசுவாசிகள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ அவர்களை நம்பி இணங்கவில்லை.

எருசலேமிலுள்ள விசுவாசிகளில் சிலர் மெய்யான விசுவாசிகளல்ல. அவர்கள் ஏதோ ஒரு உள்நோக்கத்திற்காக இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் விசுவாசம் வைத்திருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து அவர்களுடைய இருதயத்தின் உள் நோக்கங்களையெல்லாம் அறிந்திருக்கிறபடியினால் அவர்களை நம்பி இணங்கவில்லை. கலிலேயாவில் இயேசுகிறிஸ்துவுக்கு அநேக சீஷர்கள் உண்டு. இயேசுகிறிஸ்து அவர்களை நம்புகிறார். எருசலேமிலுள்ள விசுவாசிகளை நம்புவதைப் பார்க்கிலும், கலிலேயாவிலுள்ள விசுவாசிகளை நம்பி இணங்குகிறார்.

எருசலேமிலுள்ள புதிய விசுவாசிகள் ஒருவேளை தங்கள் விசுவாசத்தில் பலவீனமானவர்களாக இருக்கலாம். இவர்களுடைய விசுவாசத்தில் பக்திவைராக்கியமும் பெலனுமில்லை. இவர்கள் அஞ்சி நடுங்குகிறவர்கள். நூதன உபதேசத்தை யார் பேசினாலும் அவர்கள் பக்கமாக சாய்ந்துவிடுவார்கள். ஆபத்து வேளைகளில் இவர்களை நம்பமுடியாது. துன்பம் வரும்போது இவர்கள் விசுவாசத்தில் உறுதியாக இருக்கமாட்டார்கள். கோழைகளாக இருப்பார்கள்.

இவர்கள் ஆரவாரம் மிகுந்தவர்கள் உணர்ச்சிவசப்பட்டு கூக்குரலிடுகிறவர்கள். இவர்களுடைய ஆவேசத்தை தடுக்கமுடியாது. இவர்களை எப்போதும் யாராவது ஆளுகை செய்துகொண்டேயிருக்க வேண்டும். யாராவது ஒருவர் இவர்களை வழிநடத்திக்கொண்டேயிருக்க வேண்டும். இவர்களை மேற்பார்வை செய்யவில்லையென்றால் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் இஷ்டத்திற்கு பேசுவார்கள், செயல்படுவார்கள். ஒருமனப்பாட்டின் ஆவி இவர்களிடத்தில் இராது.

**மனுஷரைக்குறித்து**

**மனுஷருள்ளத்திலிருப்பதை அவர் அறிந்திருந்தபடியால், மனுஷரைக் குறித்து ஒருவரும் அவருக்குச் சாட்சி கொடுக்க வேண்டியதாயிருக்கவில்லை (யோவா 2:25).**

## அதிகாரம் - 2

இயேசுகிறிஸ்து மனுஷருடைய உள்ளத்திலிருப்பதை அறிந்திருக்கிறார். ஆகையினால் அவர் அவர்களை நம்பி இணங்கவில்லை. ஒரு சிலருடைய உள்ளத்திலிருக்கும் துன்மார்க்கமான தீயசிந்தனைகளையும், வேறுசிலருடைய உள்ளத்திலிருக்கும் பலவீனங்களையும் பயங்களையும் அவர் அறிந்திருக்கிறார். இயேசுகிறிஸ்து சர்வ ஞானமுள்ளவர். அவர் எல்லாரையும் அறிந்திருக்கிறார். மனுஷருடைய பெயர்களையும், நாமங்களையும் மாத்திரமல்ல, அவர்களுடைய உள்ளத்திலிருப்பதையும் அவர் அறிந்திருக்கிறார்.

நமக்கு பலரைப்பற்றி தெரிந்திருக்கலாம். ஆனால் அவர்களுடைய மெய்யான சுபாவமோ, அவர்களுடைய உள்ளத்தின் சிந்தனையோ, அவர்களுடைய திட்டங்களோ நமக்கு உறுதியாக தெரிவதற்கு வாய்ப்பில்லை. மற்ற மனுஷரை மாத்திரமல்ல, பல சமயங்களில் நம்மையே நமக்கு சரியாகத் தெரியாது. நம்மையே நம்மால் சரியாக புரிந்துகொள்ள முடியாது.

இயேசுகிறிஸ்து மெய்யாகவே தமக்குரியவர்களை அறிந்திருக்கிறார். தம்பிடத்தில் அவர்கள் வைத்திருக்கும் விசுவாசத்தின் உறுதியையும், தம்மீது அவர்கள் அன்பாகவும், பக்திவைராக்கியமாக இருப்பதையும் இயேசுகிறிஸ்து அறிந்திருக்கிறார். மனுஷரைக்குறித்து ஒருவரும் அவருக்கு சாட்சி கொடுக்க வேண்டியதில்லை. மற்றவர்களுடைய சாட்சிகளை வைத்து அவர் யாரையும் தெரிந்துகொள்ள வேண்டுமென்னும் அவசியமும் அவருக்கில்லை. அவர் சர்வஞானமுள்ளவர். அவர் தம்முடைய குறைவில்லாத ஞானத்தினால் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார். மனுஷருடைய உள்ளத்தில் இருப்பதையும், மனுஷன் செய்கிற காரியங்களையும் அவர் நன்றாகவே அறிந்திருக்கிறார்.

இயேசுகிறிஸ்து மனுக்குலத்திற்கு இரட்சகராக இருக்கிறார். மனுக்குலத்தைப்பற்றி சரியாக அறிந்திருக்க முடியவில்லையென்றால் அவரால் அவர்களை இரட்சிக்க முடியாது. இயேசு மனுஷருடைய பரம வைத்தியராக இருக்கிறார். ஒரு வைத்தியருக்கு அவருடைய நோயாளியின் நோயைப்பற்றி விவரமும், நோயாளியின் சரீரத்தைப்பற்றிய விவரமும் நன்றாகத் தெரிந்திருக்கும். அத்துடன் நோயாளியின் மனநிலைமையையும் வைத்தியர் நன்கு அறிந்திருப்பார். அந்த நோயாளிக்குள் இருக்கும் பிரச்சனை வைத்தியருக்குத் தெரியும்.

நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து நமக்கு பரம வைத்தியராக இருக்கிறார். நம்முடைய சரீரத்தை மாத்திரமல்ல, நம்முடைய உள்ளத்திலிருப்பதைகூட அவர் அறிந்திருக்கிறார். ஆகையினால்தான் இயேசுகிறிஸ்து மனுக்குலத்தார் அனைவருக்கும் நியாயாதிபதியாக இருக்கிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய ஆலயத்திற்கு வந்திருக்கிறார். அவரை துதிப்பதற்கு அங்கு யாரும் வரவில்லை. பிரதான ஆசாரியரோ, வேதபாரகரோ, ஜனத்தின் மூப்பரோ யாரும் தேவாலயத்திற்கு வந்திருக்கும் தேவனுடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை பயபக்தியோடு ஆராதிக்கவில்லை. விசுவாசத்தில் பலவீனமானவர்களும், பயப்படுகிறவர்களும் அவருடைய அற்புதங்களைக்கண்டு அவருடைய நாமத்தில் விசுவாசம் வைத்திருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து இவர்களை நம்பி இணங்கவில்லை. இவர்கள் தமக்கு மெய்யான சீஷர்களாக இருக்கமாட்டார்கள் என்று இயேசுகிறிஸ்து அறிந்திருக்கிறார். ஆகையினால் இயேசு இவர்களை நம்பவில்லை.

## அதிகாரம் - 2

இயேசுகிறிஸ்து மனுஷருடைய உள்ளத்திலிருப்பதை அறிந்திருக்கிறார். ஆகையினால் அவர் அவர்களை நம்பி இணங்கவில்லை. ஒரு சிலருடைய உள்ளத்திலிருக்கும் துன்மார்க்கமான தீயசிந்தனைகளையும், வேறுசிலருடைய உள்ளத்திலிருக்கும் பலவீனங்களையும் பயங்களையும் அவர் அறிந்திருக்கிறார். இயேசுகிறிஸ்து சர்வ ஞானமுள்ளவர். அவர் எல்லாரையும் அறிந்திருக்கிறார். மனுஷருடைய பெயர்களையும், நாமங்களையும் மாத்திரமல்ல, அவர்களுடைய உள்ளத்திலிருப்பதையும் அவர் அறிந்திருக்கிறார்.

நமக்கு பலரைப்பற்றி தெரிந்திருக்கலாம். ஆனால் அவர்களுடைய மெய்யான சுபாவமோ, அவர்களுடைய உள்ளத்தின் சிந்தனையோ, அவர்களுடைய திட்டங்களோ நமக்கு உறுதியாக தெரிவதற்கு வாய்ப்பில்லை. மற்ற மனுஷரை மாத்திரமல்ல, பல சமயங்களில் நம்மையே நமக்கு சரியாகத் தெரியாது. நம்மையே நம்மால் சரியாக புரிந்துகொள்ள முடியாது.

இயேசுகிறிஸ்து மெய்யாகவே தமக்குரியவர்களை அறிந்திருக்கிறார். தம்மிடத்தில் அவர்கள் வைத்திருக்கும் விசுவாசத்தின் உறுதியையும், தம்மீது அவர்கள் அன்பாகவும், பக்திவைராக்கியமாக இருப்பதையும் இயேசுகிறிஸ்து அறிந்திருக்கிறார். மனுஷரைக்குறித்து ஒருவரும் அவருக்கு சாட்சி கொடுக்க வேண்டியதில்லை. மற்றவர்களுடைய சாட்சிகளை வைத்து அவர் யாரையும் தெரிந்துகொள்ள வேண்டுமென்னும் அவசியமும் அவருக்கில்லை. அவர் சர்வஞானமுள்ளவர். அவர் தம்முடைய குறைவில்லாத ஞானத்தினால் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார். மனுஷருடைய உள்ளத்தில் இருப்பதையும், மனுஷன் செய்கிற காரியங்களையும் அவர் நன்றாகவே அறிந்திருக்கிறார்.

இயேசுகிறிஸ்து மனுக்குலத்திற்கு இரட்சகராக இருக்கிறார். மனுக்குலத்தைப்பற்றி சரியாக அறிந்திருக்க முடியவில்லையென்றால் அவரால் அவர்களை இரட்சிக்க முடியாது. இயேசு மனுஷருடைய பரம வைத்தியராக இருக்கிறார். ஒரு வைத்தியருக்கு அவருடைய நோயாளியின் நோயைப்பற்றி விவரமும், நோயாளியின் சரீரத்தைப்பற்றிய விவரமும் நன்றாகத் தெரிந்திருக்கும். அத்துடன் நோயாளியின் மனநிலைமையையும் வைத்தியர் நன்கு அறிந்திருப்பார். அந்த நோயாளிக்குள் இருக்கும் பிரச்சனை வைத்தியருக்குத் தெரியும்.

நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து நமக்கு பரம வைத்தியராக இருக்கிறார். நம்முடைய சரீரத்தை மாத்திரமல்ல, நம்முடைய உள்ளத்திலிருப்பதைகூட அவர் அறிந்திருக்கிறார். ஆகையினால்தான் இயேசுகிறிஸ்து மனுக்குலத்தார் அனைவருக்கும் நியாயாதிபதியாக இருக்கிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய ஆலயத்திற்கு வந்திருக்கிறார். அவரை துதிப்பதற்கு அங்கு யாரும் வரவில்லை. பிரதான ஆசாரியரோ, வேதபாரகரோ, ஜனத்தின் மூப்பரோ யாரும் தேவாலயத்திற்கு வந்திருக்கும் தேவனுடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை பயபக்தியோடு ஆராதிக்கவில்லை. விசுவாசத்தில் பலவீனமானவர்களும், பயப்படுகிறவர்களும் அவருடைய அற்புதங்களைக்கண்டு அவருடைய நாமத்தில் விசுவாசம் வைத்திருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து இவர்களை நம்பி இணங்கவில்லை. இவர்கள் தமக்கு மெய்யான சீஷர்களாக இருக்கமாட்டார்கள் என்று இயேசுகிறிஸ்து அறிந்திருக்கிறார். ஆகையினால் இயேசு இவர்களை நம்பவில்லை.

## அதிகாரம் - 3

இயேசுகிறிஸ்து நிக்கொதேமு என்பவரோடு உரையாடும் சம்பவம் (யோவா 3:1-21). யோவான்ஸ்நானன் இயேசுகிறிஸ்துவைக்குறித்து தன்னுடைய சீஷரோடு உரையாடும் சம்பவம். யோவான்ஸ்நானன் இயேசுகிறிஸ்துவை உயர்த்தி, அவரை கனப்படுத்தி, தன்னை தாழ்த்துகிறார் (யோவா 3:22-36).

### இயேசுவும் நிக்கொதேமுவும் யோவா 3 : 1,2

**யோவா 3:1 யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு என்னப்பட்ட பரிசேயன் ஒருவன் இருந்தான்.**

**யோவா 3:2 அவன் இராக்காலத்திலே இயேசுவினிடத்தில் வந்து: ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்ய மாட்டான் என்றான்.**

### நிக்கொதேமு

**யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு என்னப்பட்ட பரிசேயன் ஒருவன் இருந்தான் (யோவா 3:1).**

இயேசுகிறிஸ்து பஸ்கா பண்டிகையின்போது எருசலேமிலிருக்கிறார். அங்கு அவர் ஜனங்களுக்கு உபதேசம்பண்ணி, அற்புதங்களைச் செய்கிறார். அவருடைய நாமத்தில் அநேகர் விசுவாசம் வைக்கிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ எல்லோரையும் அறிந்திருக்கிறபடியினால் அவர்களை நம்பி இணங்கவில்லை.

இப்படிப்பட்ட சம்பவத்தில் நிக்கொதேமு என்பவர் இயேசுகிறிஸ்துவை பார்ப்பதற்காக அவரிடத்தில் வருகிறார். சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்தில் இருக்கிற பிரபுக்களும் அதிகாரிகளும் மார்க்க காரியங்களில் தங்களை பொதுவாக ஈடுபடுத்திக் கொள்ளமாட்டார்கள். நிக்கொதேமு யூதருக்குள்ளே அதிகாரியாக இருக்கிறார். இவர் ஒரு பரிசேயன். யூதருடைய ஆலோசனைச்சங்கத்தில் நிக்கொதேமுவும் ஒரு அங்கத்தினராக இருக்கிறார். இயேசுகிறிஸ்து நிக்கொதேமுவின் மீது தமது கிருபையை வெளிப்படுத்துகிறார்.

யூதருடைய மார்க்க பிரமாணங்களை நிக்கொதேமு கற்று தேர்ச்சிப்பெற்றவர். வேதபண்டிதர். இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் எல்லோருமே பேதைகள் என்றும், ஒன்றும் அறியாதவர்கள் என்று கூறமுடியாது. கர்த்தரைப் பின்பற்றுகிறவர்களில் பிரபுக்களும், அதிகாரிகளும், கல்வி அறிவு பெற்ற பண்டிதர்களும் இருக்கிறார்கள். நிக்கொதேமு யூதருடைய ஆலோசனைச்சங்கத்தில் ஒரு அங்கத்தினராக இருப்பதினால், இவருக்கு எருசலேம் நகரத்தில் தனி செல்வாக்கு உள்ளது. இவர் தன்னுடைய ஸ்தானத்திலிருந்து தன்னால் செய்ய முடிந்த எல்லா நன்மைகளையும் செய்துகொண்டிருக்கிறார்.

### இராக்காலத்திலே

**அவன் இராக்காலத்திலே இயேசுவினிடத்தில் வந்து: ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்ய மாட்டான் என்றான் (யோவா 3:2).**

நிக்கொதேமு இராக்காலத்திலே இயேசுவினிடத்தில் வருகிறான். பகல்வேளையில் இயேசுகிறிஸ்து தேவாலயத்தில் உபதேசம் பண்ணிக் கொண்டிருந்தார். அந்த உபதேசத்தை நிக்கொதேமுவும் கேட்டிருக்கலாம். ஒருவேளை இயேசுவின் உபதேசத்தை இன்னும் அதிகமாக கேட்கவேண்டும் என்னும் வாஞ்சையில் நிக்கொதேமு இராக்காலத்திலே அவரிடத்தில் வந்திருக்கலாம். இரவுவேளையில் ஜனங்களுடைய தொந்தரவு இல்லாமல், ஜனக்கூட்டமில்லாமல், தனியாக இயேசுவோடு பேசலாமென்று நினைத்து அந்த நேரத்தில் வந்திருக்கலாம்.

நிக்கொதேமு இரவுவேளையில் இயேசுவைப்பார்க்க வந்திருப்பது அவனுடைய புத்தி கூர்மையை வெளிப்படுத்துகிறது. இவன் சகலவற்றையும் ஆராய்ந்து அறிந்து பார்க்கிறவன். பகல்வேளை முழுவதிலும் இயேசுகிறிஸ்து பல இடங்களிலும் உபதேசம் பண்ணிக்கொண்டிருக்கிறார். அப்போது தன்னுடைய உள்ளத்தில் ஏற்படும் சந்தேகத்தை இயேசுவிடத்தில் கேட்பதற்கு வாய்ப்பு இல்லை. எல்லோருக்கும் முன்பாக இடையில் பேசினால் அது இயேசுவின் பிரசங்கத்திற்கு இடையூறாக இருக்கும். ஆகையினால் இயேசு ஓய்வாக இருக்கும் வேளை எது என்பதை அறிந்து, அந்த குறிப்பிட்ட நேரத்தில் நிக்கொதேமு இயேசுவிடத்தில் வருகிறான்.

## அதிகாரம் - 3

இயேசுகிறிஸ்துவுக்கு பல சத்துருக்கள் இருக்கிறார்கள். தேவாலயத்தின் பிரதான ஆசாரியர் இயேசுவுக்கு விரோதமாக சதிஆலோசனை பண்ணுகிறார்கள். நிக்கொதேமு ஆலோசனைச்சங்கத்தில் ஒரு உறுப்பினர். யூதருக்குள் இவன் ஒரு அதிகாரி. யூதர் மத்தியிலே முக்கியமான ஒருவர் இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தை விரும்பி கேட்பது தெரியவந்தால், இயேசுகிறிஸ்துவின் மீது பிரதான ஆசாரியருடைய கோபம் அதிகரிக்கலாமென்று நிக்கொதேமு சிந்தித்துப் பார்க்கிறான். ஆகையினால் எல்லோருக்கும் முன்பாக பகல்வேளையில் இயேசுவைப் பார்ப்பதற்குப் பதிலாக, இராக்காலத்திலே இயேசுவினிடத்தில் வருகிறான்.

நிக்கொதேமு இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்கவேண்டுமென்று வைராக்கிய வாஞ்சையோடிருக்கிறான். இயேசுவின் உபதேசத்தை கேட்காமல் அந்த ஆசீர்வாதத்தை இழந்துபோவதைவிட, அது இரவுவேளையோ, அல்லது பகல்வேளையோ, எந்த வேளையாக இருந்தாலும் இயேசுவினிடத்தில் வந்து அவருடைய போதகத்தை கேட்கவேண்டுமென்று விரும்புகிறான். மற்றவர்கள் உறங்கிக் கொண்டிருக்கும்போது, பரிசேயனாகிய இந்த நிக்கொதேமுவோ விழித்திருக்கிறான். கர்த்தரிடத்திலிருந்து தெய்வீக ஞானத்தைப் பெற்றுக்கொள்ள வாஞ்சையாய் அவரிடத்திற்கு வருகிறான்.

இயேசுகிறிஸ்து எருசலேமில் எத்தனை நாள் இருப்பாரென்று நிக்கொதேமுவுக்குத் தெரியாது. ஒருவேளை அவர் அடுத்த பஸ்கா பண்டிகையின்போதுதான் எருசலேமுக்கு திரும்பி வருவாரா, அல்லது இடைப்பட்ட நாட்களில் இங்கு வருவாரா என்பது அவனுக்குத் தெரியாது. இயேசுவின் உபதேசத்தைக் கேட்பதற்கு இவன் நீண்ட காலமாக காத்திருக்க விரும்பவில்லை. ஆகையினால் காலத்தை பிரயோஜனப்படுத்திக் கொண்டு, இயேசுகிறிஸ்துவைப்பார்க்க இராக்காலத்திலே வருகிறான். இரவுவேளையில் பிறருடைய தொந்தரவு குறைவாக இருக்கும். இயேசுகிறிஸ்துவோடு அந்நியோன்யமாக பேசிப் பழகுவதற்கு நல்ல வாய்ப்பு கிடைக்கும். இவையெல்லாவற்றையும் தன்னுடைய மனதில் நினைத்து, நிக்கொதேமு இயேசுவைப்பார்க்க இராக்காலத்திலே வந்திருக்கலாம்.

ஒருவேளை நிக்கொதேமு பயத்தினாலும் கோழைத்தனத்தினாலும் நிறைந்திருக்கலாம். எல்லோருக்கும் முன்பாக பகல்வேளையில் இயேசுகிறிஸ்துவைப் பார்ப்பதற்கு வெட்கப்பட்டு, யாரும் இல்லாத இரவுவேளையில் தனியாக வந்திருக்கலாம். தான் இயேசுவோடு கூடயிருப்பதை காட்டிக்கொள்ள மனதற்றவனாக இருக்கலாம். இவன் இரவுவேளையில் வந்தாலும் இயேசுகிறிஸ்து அந்த வேளையிலும் அவனை வரவேற்கிறார். அவனுடைய குறைகள் எதுவாக இருந்தாலும் அதை அவர் மன்னித்து, அவனை அன்போடு ஏற்றுக்கொள்கிறார்.

இயேசுகிறிஸ்து தனிமையில் இருக்கும் இரவுவேளையில் அவரைத் தொந்தரவு பண்ணுவது முறையல்ல. இங்கிதம் தெரியவில்லை. பிறரோடு பேசிப்பழகும் விஷயத்தில் இவனுக்கு பூரண தேர்ச்சியில்லை. என்றாலும் இயேசுகிறிஸ்து இவனை புறம்பே தள்ளிவிடாமல் ஏற்றுக்கொள்கிறார். அதுபோலவே ஊழியங்களின் தலைவர்களும் தங்களுக்குக் கீழ் ஊழியம் செய்பவர்களை எல்லா வேளைகளிலும் பொறுமையோடு ஏற்றுக்கொள்ளவேண்டும். அவர்களுடைய பலவீனங்களினிமித்தம் அவர்களை புறம்பே தள்ளிவிடக்கூடாது. புதிய ஊழியக்காரர்களை உற்சாகப்படுத்த வேண்டும். ஊழியக்காரர்கள் புதிய விசுவாசிகளை நேரம் காலம் பார்க்காமல், தங்களுடைய சுயவசதிகளை பார்க்காமல், ஏற்றுக்கொண்டு உற்சாகப்படுத்த வேண்டும்.

நிக்கொதேமு இப்போது இயேசுகிறிஸ்துவைப் பார்ப்பதற்கு இரவுவேளையில் தனியாக வந்தாலும், இதன்பின்பு அவன் இயேசுகிறிஸ்துவை எல்லோருக்கும் முன்பாக அங்கீகரித்து ஏற்றுக்கொள்கிறான் (யோவா 7:50; 19:39) இயேசுகிறிஸ்துவின் கிருபை ஆரம்பத்தில் கடுகுவிதையளவு சிறியதாக இருந்தாலும், பின்பு அந்த கிருபை ஒரு பெரிய மரத்தைப்போல பெரிதாக வளர்ச்சி பெறுகிறது.

நிக்கொதேமு இராக்காலத்திலே இயேசுகிறிஸ்துவினிடத்தில் வந்து, சிறிது நேரத்தையும் வீணாக்காமல், உடனடியாக அவரோடு பேச ஆரம்பித்துவிடுகிறான். இயேசுகிறிஸ்துவை "ரபீ" என்று அழைக்கிறான். அவர் பெரியவரென்பதை தன்னுடைய வார்த்தையினால் அங்கீகரிக்கிறான். நாம் இயேசுகிறிஸ்துவுக்கு உரிய மரியாதை கொடுக்கும்போது அவருடைய கிருபையை பெற்றுக்கொள்வதற்கு நமக்கு சிலாக்கியம் உண்டாகும். நாம் இயேசுகிறிஸ்துவைக்குறித்து மேன்மையாக சிந்திக்க வேண்டும். மகிமையாக பேசவேண்டும்.

## அதிகாரம் - 3

இயேசுகிறிஸ்துவைக் குறித்து தன்னுடைய மனதில் நினைத்திருக்கும் காரியத்தை நிக்கொதேமு வெளிப்படுத்துகிறான். "நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர்" என்பதை அறிந்திருப்பதாக கூறுகிறான். உலகத்தில் ஏராளமான போதகர்கள் இருக்கிறார்கள். அவர்களில் இயேசுகிறிஸ்து விசேஷித்தவர். ஏனெனில் இவர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர். இயேசுகிறிஸ்துவின் தெய்வீக அதிகாரத்தை நிக்கொதேமு அங்கீகரிக்கிறான். இயேசுகிறிஸ்து நம்மை பட்டயத்தின் வல்லமையினால் ஆளுகை செய்யாமல், சத்தியத்தின் வல்லமையினால் ஆளுகை செய்கிறார்.

இயேசுகிறிஸ்துவைப்பற்றி தான் கூறும் வார்த்தையை நிக்கொதேமு உறுதிபண்ணுகிறான். தான் மாத்திரமல்ல, தன்னோடு சேர்ந்து மேலும் சிலரும் இயேசுகிறிஸ்துவை தேவனிடத்திலிருந்து வந்த போதகரென்று அறிந்திருப்பதாக கூறுகிறான். "அறிந்திருக்கிறேன்" என்று கூறாமல் "அறிந்திருக்கிறோம்" என்று கூறுகிறான். இயேசுகிறிஸ்து தேவனிடத்திலிருந்து வந்த போகதர் என்பதை நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை என்றும், அது எல்லோருக்கும் தெரிந்த தெளிவான சத்தியம் என்றும் நிக்கொதேமு தன் வார்த்தையினால் உறுதிபண்ணுகிறான்.

தான் இயேசுகிறிஸ்துவைப்பற்றி இவ்வாறு கூறுவதற்கு நிக்கொதேமு காரணத்தையும் கூறுகிறான். "ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவனிராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களை செய்யமாட்டான்" என்று காரணம் கூறுகிறான். நிக்கொதேமு சாதாரண மனிதனல்ல. யூதருடைய ஆலோசனைச் சங்கத்தில் முக்கியமான அங்கத்தினர். வேதபண்டிதர். எந்தக் காரியத்தையும் தெளிவாக சிந்தித்து முடிவு பண்ணுகிறவர். நீதியாகவும் நேர்மையாகவும் நடக்கிறவர். சுத்த மனச்சாட்சியோடு இருக்கவேண்டுமென்று விரும்புகிறவர். இயேசுகிறிஸ்து செய்கிற ஒவ்வொரு அற்புதத்தையும் ஆராய்ந்து பார்த்து, இயேசுகிறிஸ்துவுடனே தேவன் இருக்கிறார் என்பதை நிச்சயித்துக் கூறுகிறான்.

ஆலோசனைச்சங்கத்திலுள்ள மற்ற அங்கத்தினர்கள் இயேசுகிறிஸ்துவின் தெய்வத்துவத்தை அங்கீகரியாமல், அவர் சாதாரண மனுஷன் என்று கூறும்போது, நிக்கொதேமுவோ அவர் தேவனிடத்திலிருந்து வந்த போதகரென்றும், அவருடனே தேவன் இருக்கிறார் என்றும் அறிவிக்கிறான். இயேசுகிறிஸ்துவின் அற்புதங்களை நாம் பார்க்கும்போது, அவருடனே தேவன் இருப்பதை நாம் பார்க்கவேண்டும். அற்புதத்தை மாத்திரம் பார்த்து பரவசமடையாமல், இயேசுகிறிஸ்துவின் தெய்வத்துவத்தையும் அவருடைய மகிமையையும் அவருடைய அற்புதங்களில் பார்க்கவேண்டும். இயேசுகிறிஸ்துவை நம்முடைய உள்ளத்தில் ஏற்றுக் கொள்ளும்போது அவரை தேவனிடத்திலிருந்து வந்த போதகராக ஏற்றுக்கொள்ளவேண்டும்.

**மறுபடியும் பிறப்பது**
**யோவா 3 : 3-8**

**யோவா 3:3. இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.**

**யோவா 3:4. அதற்கு நிக்கொதேமு: ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக் கூடுமோ என்றான்.**

**யோவா 3:5. இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்.**

**யோவா 3:6. மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்.**

**யோவா 3:7. நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும் என்று நான் உனக்குச் சொன்னதைக் குறித்து அதிசயப்பட வேண்டாம்.**

**யோவா 3:8. காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது, அதின் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்துக்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது; ஆவியினால் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான் என்றார்.**

## அதிகாரம் - 3

**மறுபடியும் பிறவாவிட்டால்**

**இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார் (யோவா 3:3).**

இயேசுகிறிஸ்து நிக்கொதேமுவோடு உரையாடும்போது நான்கு காரியங்களை அவனிடம் வலியுறுத்திக் கூறுகிறார். அவையாவன : 1. தேவனுடைய ராஜ்யத்தைக் காண்பதற்கு ஒருவன் மறுபடியும் பிறக்க வேண்டும். 2. சுவிசேஷத்தின் சத்தியங்கள் மெய்யானவை, உறுதியானவை, நிச்சயமாக நிறைவேறப்போகிறவை 3. தாம் இந்த உலகத்தில் வந்திருப்பதன் நோக்கமும், தம்மிடத்தில் விசுவாசம் வைக்கிறவர்களுக்கு கிடைக்கும் ஆசீர்வாதமும் 4. தம்முடைய நாமத்தில் விசுவாசமில்லாதவர்கள் ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்படுவார்கள்.

நிக்கொதேமு இயேசு கிறிஸ்துவினிடத்தில் வந்து தன்னுடைய உரையாடலைத் துவங்குகிறான். அவரை தேவனிடத்திலிருந்து வந்த போதகரென்றும், அவருடனே தேவன் இருக்கிறாரென்றும் சாட்சியிடுகிறான். இயேசுகிறிஸ்து அவனுக்கு பிரதியுத்தரமாக ஆவிக்குரிய சத்தியங்களை விளக்கிக் கூறுகிறார். இயேசுகிறிஸ்துவின் அற்புதங்களை பார்த்தது பரவசமடைந்தால் மாத்திரம் போதாது. இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தை அங்கீகரித்தால் மாத்திரம் போதாது. தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதற்கு ஒருவன் மறுபடியும் பிறக்க வேண்டும். தேவனுடைய ராஜ்யம் விரைவில் வரப்போகிறது என்று நிக்கொதேமு எதிர்பார்த்து அதன்மீது நம்பிக்கையாயிருக்கிறான். அந்த நாள் விரைவில் வரப்போகிறது என்று யூதர்களில் அநேகர் எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

அரசியல் மாற்றம் உண்டாகும்போது தேவனுடைய ராஜ்யம் வரும் என்பது யூதருடைய எதிர்பார்ப்பு. ரோமப்பேரரசின் ஆளுகையிலிருந்து யூததேசம் விடுதலைபெறுவதே தங்களுக்கு அவசியம் என்று யூதர்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ அவர்களுடைய எதிர்பார்ப்புக்கு வித்தியாசமாக உபதேசம் பண்ணுகிறார். ஒருவனுடைய ஆவியில் மாற்றம் உண்டாகவில்லையென்றால், அவனுடைய தேசத்தில் எந்த மாற்றம் உண்டானாலும் அதனால் அவனுக்குப் பிரயோஜனமில்லை. ஆவியில் மாற்றம் உண்டாவது என்பதற்கு மறுபடியும் பிறப்பது என்று பொருள். தேவனுடைய ராஜ்யத்தை காணவேண்டுமென்றால் ஒருவன் மறுபடியும் பிறக்க வேண்டுமென்று இயேசுகிறிஸ்து வலியுறுத்திக் கூறுகிறார்.

நிக்கொதேமு இயேசுகிறிஸ்துவைப்பற்றி கூறும்போது அவர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அங்கீகரிக்கிறான். தேவனுடைய சத்தியங்களை இயேசுகிறிஸ்து தனக்கு வெளிப்படுத்திக் காண்பிக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறான். அவன் எதிர்பார்க்கிற பிரகாரமாகவே இயேசுகிறிஸ்து அவனிடத்தில் தேவனுடைய சத்தியத்தை வெளிப்படுத்துகிறார்.

தம்முடைய சத்திய வார்த்தையை கூறும்போது "மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்கிறேன்" என்னும் வாக்கியத்தை இயேசுகிறிஸ்து பயன்படுத்துகிறார். தாம் கூறுவது உறுதியானது என்றும், நிச்சயமானது என்றும் இந்த வாக்கியத்தின் மூலமாக இயேசுகிறிஸ்து தெளிவுபடுத்துகிறார். "ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்கிறேன்" என்று இயேசுகிறிஸ்து தாம் சொல்வதை வலியுறுத்திக் கூறுகிறார்.

## அதிகாரம் - 3

மனுஷன் மறுபடியும் பிறக்க வேண்டும். நாம் புதிய ஜீவனைப் பெற்றுக்கொண்டு அதன் பிரகாரம் ஜீவிக்க வேண்டும். நம்முடைய பிறப்பு நம்முடைய ஜீவியத்தின் ஆரம்பமாக இருக்கிறது. மறுபடியும் பிறப்பது என்பது மறுபடியும் புதிதாக ஆரம்பிப்பதைக் குறிப்பிடுகிறது. புதிய பிறப்பு என்று சொல்லும்போது பழைய பிறப்பை பழுதுபார்த்து சரிசெய்வது என்று பொருளாகாது. ஒரு பழைய கட்டிடத்தை செப்பனிட்டு அதில் சில மாற்றங்களைச் செய்து, அதை எப்படித்தான் ஜோடித்தாலும் அது புதிய கட்டிடமாக ஆகாது. பழைய கட்டிடம் பழைய கட்டிடம்தான். ஒரு கட்டிடம் புதிதாக இருக்கவேண்டுமென்றால், அதை அஸ்திபாரத்திலிருந்து கட்ட ஆரம்பிக்க வேண்டும்.

அதுபோலவே நாம் மறுபடியும் பிறப்பது அல்லது புதிய ஜீவனை பெற்றுக்கொள்வது என்பது புதிய அஸ்திபாரத்தின்மீது புதிதாக கட்டப்படும் கட்டிடத்தைப்போல எல்லாமே புதிதாக இருக்கவேண்டும். நம்மிடத்தில் புதிய சுபாவங்களும், புதிய கொள்கைகளும், புதிய கோட்பாடுகளும், புதிய நோக்கங்களும், புதிய விருப்புகளும் வெறுப்புகளும் உண்டாக வேண்டும். மறுபடியும் பிறப்பது என்பது பரலோகத்திலிருந்து மறுபடியும் பிறப்பதைக் குறிப்பிடுகிறது. நாம் மறுபடியும் பிறக்கும்போது புது சிருஷ்டியடைகிறோம். நம்முடைய ஆத்துமா புதுப்பிக்கப்படுகிறது. இது பூமிக்குரிய பிறப்பு அல்ல. பரலோகத்திலிருந்து பிறப்பதே மறுபிறப்பு. புதிய பிறப்பு அல்லது மறுபிறப்பின் மூலமாக நாம் பரலோகத்தின் ஜீவனையும் தெய்வீக ஜீவனையும் பெற்றுக்கொள்கிறோம்.

"ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான்" என்று இயேசுகிறிஸ்து கூறுகிறார். நாம் பரலோகத்திலிருந்து பிறவாவிட்டால் நம்மால் அதைக் காணமுடியாது என்பது இதன் பொருளாகும். நாம் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தின் சுபாவத்தை நம்மால் புரிந்துகொள்ள முடியாது. அதன் ஆறுதலையும், ஆசீர்வாதத்தையும் நம்மால் பெற்றுக்கொள்ள முடியாது.

இந்த பிரபஞ்சத்திலும், இனிமேல் வரப்போகிற நித்திய ஜீவனிலும் நாம் சந்தோஷத்தையும் சமாதானத்தையும் அனுபவிக்க வேண்டுமானால் நாம் மறுபடியும் பிறந்து புதிய ஜீவனைப் பெற்றுக்கொள்வது அவசியம். நாம் பரிசுத்தமாக இல்லையென்றால் நம்மால் சந்தோஷமாக இருக்க முடியாது. இப்போது நாம் பாவசுபாவத்திலிருக்கிறோம். நாம் மறுபடியும் பிறக்கும்போது நம்முடைய மாம்ச பிரகாரமான பாவசுபாவம் நம்மைவிட்டு நீங்கும். நாம் பரிசுத்தமான ஆவியின் சுபாவத்தைப் பெற்றுக்கொள்வோம். இயேசுகிறிஸ்து தம்முடைய கிருபை நிறைந்த வார்த்தையின் மூலமாக நாம் மறுபடியும் பிறக்க வேண்டியதன் அவசியத்தை இங்கு வலியுறுத்திக் கூறுகிறார்.

**இரண்டாந்தரம் பிறக்கக்கூடுமோ**

**அதற்கு நிக்கொதேமு: ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக் கூடுமோ என்றான் (யோவா 3:4).**

இயேசுகிறிஸ்துவின் வார்த்தையை நிக்கொதேமுவினால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இவன் உலகப்பிரகாரமாக சிந்திக்கிறான். உலக ஞானத்தில் இவன் தேர்ச்சிபெற்றவன். இயேசுகிறிஸ்துவின் வார்த்தையை உலகப்பிரகாரமாக சிந்தித்துப்பார்த்து "ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படி பிறப்பான்" என்று உலகப்பிரகாரமான கேள்வியைக் கேட்கிறான். அத்துடன் "அவன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்து பிறக்கக்கூடுமோ" என்று மேலும் ஒரு கேள்வியைக் கேட்கிறான்.

நிக்கொதேமுவுக்கு ஆவிக்குரிய காரியங்களில் போதுமான அளவு ஞானமில்லை. தேவனுடைய காரியங்களைப் பற்றிய அறிவில் இவன் பலவீனமாக இருக்கிறான். இயேசுகிறிஸ்து ஆவிக்குரிய காரியங்களை பேசிக்கொண்டிருக்கிறார். இவனோ அவருடைய வார்த்தைக்கு உலகப்பிரகாரமாக வியாக்கியானம் பண்ணுகிறான். ஆவிக்குரிய காரியங்களை மாம்ச பிரகாரமாக சிந்தித்துப் பார்க்கிறான். ஆத்துமாவுக்கும் சரீரத்திற்கும் உள்ள தொடர்பை இவனால் விளங்கிக்கொள்ள முடியவில்லை. ஒருவனுடைய இருதயம் புதுப்பிக்கப்பட வேண்டுமென்றால், அவனுடைய எலும்புகளும் சரீரத்தின் மற்ற அவயவங்களும் புதுப்பிக்கப்பட்டு மறுபடியும் உண்டாகவேண்டும் என்பது நிக்கொதேமுவின் மாம்ச பிரகாரமான சிந்தனை.

## அதிகாரம் - 3

நிக்கொதேமு இதுவரையிலும் மறுபடியும் பிறப்பது என்னும் வார்த்தையை கேள்விப்பட்டதேயில்லை. இயேசுகிறிஸ்துவின் உபதேசம் இவனுக்கு முற்றிலும் புதுமையாக இருக்கிறது. இவன் தற்போது இஸ்ரவேலனாக பிறந்திருக்கிறான். புறஜாதி ஜனங்களைவிட இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்று யூதர்கள் எல்லோரும் நம்புகிறார்கள். அப்படியிருக்கும்போது, இஸ்ரவேலனாக இருக்கும் தான், மறுபடியும் பிறக்க வேண்டியதன் அவசியமென்ன என்று யோசிக்கிறான். தான் பிறப்பினால் இஸ்வேலனாக இருப்பதற்காக பெருமைப்படுகிறான்.

தன்னுடைய பிறப்பின் பெருமையினால் இயேசுகிறிஸ்து கூறும் ஆவிக்குரிய சத்தியங்களை இவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. இவனைப்போலவே இக்காலத்திலும் சிலர் தங்களுடைய பிறப்பைக்குறித்து பெருமை பாராட்டுகிறார்கள். தங்களுடைய பிறப்பின் பெருமையினால் தேவன் கிருபையாகக் கொடுக்கும் புதிய பிறப்பை பெற்றுக்கொள்ள முடியாமல் போகிறார்கள்.

இயேசுகிறிஸ்து சொன்ன உபதேசம் நிக்கொதேமுவுக்கு முதலில் புரியவில்லை. ஆனாலும் இவன் சோர்ந்து போகவில்லை. கற்றுக்கொள்ளும் ஆவி இவனிடத்தில் இருக்கிறது. தேவனுடைய ரகசியங்களை எப்படியாவது கற்றுக்கொள்ள வேண்டுமென்று ஆவலோடிருக்கிறான். இயேசுகிறிஸ்து தனக்கு புரியாதவிதத்தில் பேசுவதினால், அவரை விட்டு விலகிப்போய்விடவில்லை.

தன்னுடைய அறியாமையை பக்குவமாக வெளிப்படுத்துகிறான். "ஆண்டவரே, நீர் சொல்லும் வேதத்தின் ரகசியம் எனக்கு மறைபொருளாகயிருக்கிறது. நான் உலகப்பிரகாரமாக சிந்திக்கிறவன். மறுபடியும் பிறப்பது என்பதை சிந்தித்துப் பார்க்கும்போது, தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்து பிறப்பதைத் தவிர, வேறு எதையும் என்னால் சிந்திக்க முடியவில்லை. என்னுடைய அறியாமை நீங்க எனக்கு உதவிபுரியும்" என்னும் பொருளில் பணிவோடு விண்ணப்பம்பண்ணுகிறான்.

தேவனுடைய சத்தியங்கள் சில சமயங்களில் நமக்கு மறைபொருளாக இருக்கலாம். நம்மால் எளிதில் புரிந்துகொள்ள முடியாத அளவிற்கு கடின உபதேசமாகக்கூட இருக்கலாம். தேவரகசியம் பொக்கிஷம் போல புதைந்திருக்கலாம். எந்த சூழ்நிலை வந்தாலும் நாம் இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தை கேட்பதை நிறுத்திவிடக்கூடாது. கவனித்துக் கேட்கவேண்டும். அப்போது தான், ஏற்றவேளையில் தேவன் தம்முடைய மகத்துவத்தையும், வேதத்தின் மறைபொருளையும் நமக்கு வெளிப்படுத்துவார்.

**ஜலத்தினாலும் ஆவியினாலும்**

**இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் (யோவா 3:5).**

மறுபடியும் பிறப்பதைக் குறித்து இயேசுகிறிஸ்து நிக்கொதேமுவிடம் இன்னும் அதிகமாக விளக்கிக்கூறுகிறார். ஏற்கனவே "மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்கிறேன்" என்னும் வாக்கியத்தைப் பயன்படுத்தி, உறுதியோடு கூறியதுபோல, அதே வாக்கியத்தை மறுபடியும் கூறுகிறார். மறுபிறப்பின் ரகசியத்தை நிக்கொதேமுவினால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவனுக்கு அது புரியாத ரகசியமாக இருந்தாலும், மறுபிறப்பு அவனுக்கு அவசியமாகவே இருக்கிறது.

ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தை காணமாட்டான் என்று இயேசுகிறிஸ்து அவனிடம் கூறுகிறார். அவனுக்கு இதன் சத்தியம் புரியவில்லை என்பதற்காக, இதன் முக்கியத்துவம் குறைந்துபோய்விடாது. நாமும் ஆவிக்குரிய உபதேசங்கள் ஏராளமானவற்றை கேட்கிறோம். அவற்றில் சில நமக்குப் புரிகிறது. பல புரியவில்லை. நமக்கு புரியவில்லை என்பதற்காக அவை நமக்கு முக்கியமானதல்ல என்று முடிவு பண்ணிவிடக்கூடாது. நமக்கு புரியாத ரகசியத்தையும், புரிந்துகொள்ள உதவிபுரியுமாறு தேவனிடத்தில் பணிவுடன் விண்ணப்பம்பண்ணவேண்டும். ஞானத்தில் குறைவுள்ளவன் சம்பூரணமாக கொடுக்கிற தேவனிடத்தில் விண்ணப்பம்பண்ணும்போது, அவர் அவனுக்கு தேவையான ஞானத்தைக் கொடுப்பார். வேதத்தின் ரகசியங்களை விளக்கிக் காண்பிப்பார்.

## அதிகாரம் - 3

ஒரு மனுஷனுக்கு தேவனே புதிய பிறப்பைக் கொடுக்கிறவர். தேவனே இந்த மாற்றத்திற்கு ஆதாரமாக இருக்கிறவர். தேவனே இந்த மாற்றத்தை உண்டுபண்ணுகிறவர். மறுபடியும் பிறப்பதைக் குறித்து இயேசுகிறிஸ்து விவரிக்கும்போது இதை "ஆவியினால் பிறப்பது" என்று குறிப்பிடுகிறார். மறுபடியும் பிறக்கும் மாற்றம் நம்முடைய சொந்த வல்லமையினாலோ, நம்முடைய சுயபுத்தியினாலோ, சுய சக்தியினாலோ உண்டாவதில்லை. இது பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையினாலும் கிருபையினாலும் நமக்குள் உண்டாகிறது. ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறப்பதுதான் மறுபடியும் பிறப்பது. மறுபடியும் பிறவாதவன் தேவனுடைய ராஜ்யத்தை காணவுமாட்டான், தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவுமாட்டான்.

**மாம்சத்தினால் பிறப்பது**

**மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும் (யோவா 3:6).**

மறுபடியும் பிறந்தவர்கள் ஆவியினால் பிறந்திருக்கிறார்கள். இவர்களுடைய ஆத்துமா மாம்சத்தினால் ஆளுகை செய்யப்படாமல் ஆவியனால் ஆளுகை செய்யப்படும். இதுபோன்ற மாற்றம் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதற்கு அவசியமாகும். மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாக இருக்கும். நாம் இப்போது மாம்சமாக இருக்கிறோம். நம்முடைய ஆத்துமா ஆவிக்குரியதாக இருக்கிறபோதிலும், இது நம்முடைய மாம்சத்தோடு இணைந்திருக்கிறது. இப்போது நம்முடைய ஆத்துமாவை நம்முடைய மாம்சமே ஆளுகை செய்கிறது. மாம்சத்தின் கூடாரத்தில் ஆவி வாசம்பண்ணுகிறது. ஆகையினாலே நம்முடைய சரீரம் "மாம்ச சரீரம்" என்று அழைக்கப்படுகிறது. தேவன் ஆவியாக இருக்கிறார். நம்முடைய ஆவியோ மாம்சத்திலிருக்கிறது. மாம்சத்திலிருக்கிற ஆவியினால், ஆவியாக இருக்கும் தேவனோடு ஐக்கியமாக இருப்பது இயலாத காரியம்.

மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும். நாம் மாம்சத்தினால் பிறந்திருக்கிறதினால் மாம்சமாக இருக்கிறோம். நம்முடைய மாம்சத்தின் எலும்புகளிலும், சரீரத்தின் மற்ற அவயவங்களிலும் மாம்ச சுபாவம் நிறைந்திருக்கிறது. நம்முடைய மாம்ச பிறப்பாகிய முதல் பிறப்பில், நாம் மாம்சமாகவே இருக்கிறோம். நம்முடைய மறுபிறப்பின்போது, நாம் ஆவியினால் பிறக்கிறபடியினால் ஆவியாக இருக்கிறோம்.

நிக்கொதேமு மறுபடியும் பிறப்பதைப்பற்றி கூறும்போது, ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படி பிறப்பான் என்றும், அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக்கூடுமோ என்றும் கேட்கிறான். இவன் கேட்பதுபோல, தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்து பிறந்தாலும், அதனால் பிரயோஜனம் ஒன்றுமில்லை. தாயின் கர்ப்பத்தில் மறுபடியும் மறுபடியும் பிரவேசித்து நூறு தரம் பிறந்தாலும் அதனால் ஒரு பிரயோஜனமுமில்லை. ஏனெனில் எத்தனை தரம் பிறந்தாலும் மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாகவே இருக்கும்.

நம்முடைய மாம்ச சுபாவத்தில் பாவம் கலந்திருக்கிறது. நம்முடைய தாயின் கர்ப்பத்தில் நாம் உருவாகும்போதே மாம்ச சரீரத்தில், பாவசுபாவத்துடன் உருவாகிறோம். ஒரு புதிய வஸ்திரத்தை நாம் தரித்துக்கொள்வதினால் நம்மால் புதிய மனிதனாக மாறமுடியாது. நாம் புதிய மனிதனை தரித்துக்கொண்டால் மாத்திரமே நம்மால் புதிய மனிதனாக மாறமுடியும். இதை விளக்குவதற்காகவே "மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்" என்று இயேசுகிறிஸ்து கூறுகிறார்.

**மறுபடியும் பிறக்கவேண்டும்**

**நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும் என்று நான் உனக்குச் சொன்னதைக் குறித்து அதிசயப்பட வேண்டாம் (யோவா 3:7).**

## அதிகாரம் - 3

ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தை காணமாட்டான் என்று இயேசுகிறிஸ்து கூறுகிறார். நாம் மறுபடியும் பிறக்கவேண்டுமென்று இயேசுகிறிஸ்து நமக்குச் சொன்னதைக் குறித்து நாம் அதிசயப்பட வேண்டாம் என்றும் கூறுகிறார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே நம்முடைய ஆத்துமாவின் பிரதான வைத்தியராக இருக்கிறார். நம்முடைய மெய்யான நிலமை அவருக்கு மாத்திரமே நன்றாகத் தெரியும். நம்மைக் குணப்படுத்துவதற்கு என்ன செய்யவேண்டுமென்பதும் அவருக்குத் தெரியும். அவர் சர்வ ஞானமுள்ளவர். நம்முடைய நிலமையை அவர் பூரணமாக அறிந்திருக்கிறதினால் "நாம் மறுபடியும் பிறக்க வேண்டும்" என்று கூறுகிறார். அத்துடன் அவர் கூறியதைக் கேட்டு நாம் அதிசயப்படவும் கூடாது என்றும் கூறுகிறார்.

இயேசுகிறிஸ்து நிக்கொதேமுவோடு ஆவிக்குரிய காரியங்களைப் பற்றி உரையாடிக்கொண்டிருக்கிறார். தேவனுடைய பரிசுத்தத்தில் நாம் பங்குபெறவேண்டும். நம்முடைய மாம்ச சுபாவம் பாவத்தன்மையுள்ளது. பாவசுபாவம் நம்மைவிட்டு அகலவேண்டும். நம்மைவிட்டு இந்த பாவசுபாவத்தை அகற்றுவதற்காக "நாம் மறுபடியும் பிறக்கவேண்டும்" என்று இயேசுகிறிஸ்து வலியுறுத்திக் கூறுகிறார். நாம் மறுபடியும் பிறக்கவில்லையென்றால் நம்முடைய மாம்ச சுபாவத்திலிருந்து நம்மால் விடுதலைபெற்று ஆவிக்குரிய சுபாவத்தை பெற்றுக்கொள்ள முடியாது.

### ஆவியினால் பிறந்தவன்

**காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது, அதின் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்துக்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது; ஆவியினால் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான் என்றார் (யோவா 3:8).**

நம்முடைய மறுபிறப்பைப்பற்றி விளக்கிக் கூறுவதற்கு இயேசுகிறிஸ்து இரண்டு ஒப்புமைகளை பயன்படுத்துகிறார். முதலாவதாக, ஆவியானவரின் மறுஜென்மமாக்கும் கிரியையை ஜலத்துடன் ஒப்பிடுகிறார். மறுபடியும் பிறப்பது என்றால் ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறப்பதாகும். ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று இயேசுகிறிஸ்து கூறும்போது, நம்முடைய ஆத்துமாவை ஆவியானவர் சுத்திகரிப்பதைப்பற்றி விளக்கிக்கூறுகிறார்.

ஜலமானது அழுக்கை அகற்றி சுத்தப்படுத்துவதுபோல ஆவியானவர் நம்முடைய ஆத்துமாவை சுத்திகரிக்கிறார். ஜலமானது சரீரத்திற்கு குளிர்ச்சியைத் தருவதுபோல, ஆவியானவர் களைத்துப்போன ஆத்துமாவுக்கு இளைப்பாறுதலைத் தருகிறார். இதை கூறும்போது இயேசுகிறிஸ்து ஜலத்தினால் ஞானஸ்நானம் கொடுப்பதையும் நினைவுகூர்ந்து கூறியிருக்கலாம்.

நாம் ஜலத்தினால் ஞானஸ்நானம் எடுக்கும்போது, நாம் மறுபடியும் பிறந்திருப்பதை பிறருக்கு சாட்சியாக அறிவிக்கிறோம். ஜலத்தினால் ஞானஸ்நானம் பெறுவது நம்முடைய ஆத்துமாவில் ஏற்பட்டிருக்கும் உள்ளான மாற்றத்திற்கு வெளிப்படையான அடையாளமாக இருக்கிறது.

நாம் மறுபடியும் பிறப்பதை இயேசுகிறிஸ்து காற்றோடு ஒப்பிட்டுக் கூறுகிறார். காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது. அதுபோலவே ஆவியினால் பிறந்தவன் எவனோ அவனும் அப்படியே இருக்கிறான். காற்றானது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்திற்கு போகிறதென்றும் நமக்குத் தெரியாது. அதுபோலவே ஆவியினால் பிறந்தவன் எவனோ அவனும் அப்படியே இருக்கிறான்.

காற்றை ஒருவரும் கட்டுப்படுத்த முடியாது. அதுபோலவே மறுஜென்மமாக்கும் கிரியையில் ஆவியானவரையும் ஒருவராலும் கட்டுப்படுத்த முடியாது. காற்றானது தனக்கு இஷ்டமான இடத்தில் வீசுகிறதுபோல, ஆவியானவரும் தமக்கு இஷ்டமான பிரகாரம், தமக்கு இஷ்டமான நபர்மீது, தமக்கு இஷ்டமான அளவின்படி கிரியை நடப்பிக்கிறார். மறுஜென்மமாக்கும் கிரியையில் ஆவியானவர் தன்னிச்சையாக கிரியை செய்கிறார். ஆவியானவரின் கிரியை வல்லமையாக இருக்கும்.

## அதிகாரம் - 3

காற்று வீசும்போது அதன் சத்தத்தை மாத்திரமே நாம் கேட்கிறோம். இந்த சத்தமானது காற்று வீசுவதினால் உண்டாகும் விளைவு. அதுபோலவே ஆவியானவரும் தமது பலத்த வல்லமையினால் கிரியை செய்து ஆத்துமாவை மறுஜென்மமாக்குகிறார். காற்றைக் காணமுடியாது. ஆனால் காற்று வீசுவதினால் உண்டாகும் விளைவாகிய அதன் சத்தத்தைக் கேட்கமுடிகிறது. அதுபோலவே ஆவியானவரை காணமுடியாது. ஆனாலும் ஆவியானவரின் மறுஜென்மமமாக்கும் கிரியையினால் ஒரு ஆத்துமாவில் உண்டாகும் மறுபடியும் பிறக்கும் அனுபவத்தை நம்மால் காணமுடிகிறது.

காற்றின் கிரியை நம்மால் புரிந்துகொள்ள முடியாத அளவிற்கு ரகசியமாக இருக்கிறது. அதை புரிந்துகொள்ள முடியாவிட்டாலும் அதன் கிரியை அற்புதமானது. அதுபோலவே ஆவியானவரின் கிரியையும் நம்மால் புரிந்துகொள்ள முடியாத அளவிற்கு ரகசியமாகவே இருக்கிறது. இதன் கிரியை மறைவிடத்தில் செய்யப்படுவதுபோல நமக்கு ரகசியமாகவே இருக்கிறது. காற்று இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்திற்கு போகிறதென்றும் நமக்குத் தெரியாது. அதுபோலவே ஆவியானவரின் கிரியையும் நம்மால் முழுமையாக புரிந்துகொள்ள முடியாது. காற்று வீசுவது வித்தியாசமாக இருக்கும். சிலவேளையில் அது தென்றலாகவும், சில வேளையில் அது புயலாகவும் வீசும். தென்றல் எப்போது புயலாக மாறிற்று என்று நம்மால் அறிந்துகொள்ள முடியாது. அதுபோலவே ஆவியானவரின் கிரியையும் நம்மால் புரிந்துகொள்ள முடியாத ரகசியமாகவே இருக்கிறது.

### நிக்கொதேமுவின் கேள்வியும் இயேசுவின் பதிலும்

### யோவா 3 : 9-13

**யோவா 3:9. அதற்கு நிக்கொதேமு; இவைகள் எப்படி ஆகும் என்றான்.**

**யோவா 3:10. இயேசு அவனை நோக்கி: நீ இஸ்ரவேலில் போதகனாயிருந்தும் இவைகளை அறியாமலிருக்கிறாயா?**

**யோவா 3:11. மெய்யாகவே மெய்யாகவே நான் உனக்குச் சொல்லுகிறேன், நாங்கள் அறிந்திருக்கிறதைச் சொல்லி, நாங்கள் கண்டதைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறோம்; நீங்களோ எங்கள் சாட்சியை ஏற்றுக் கொள்ளுகிறதில்லை.**

**யோவா 3:12. பூமிக்கடுத்த காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லியும் நீங்கள் விசுவாசிக்கவில்லையே, பரமகாரியங்களை உங்களுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்?**

**யோவா 3:13. பரலோகத்திலிருந்திறங்கினவரும் பரலோகத்திலிருக்கிறவருமான மனுஷகுமாரனேயல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை.**

**எப்படி ஆகும்**

**அதற்கு நிக்கொதேமு; இவைகள் எப்படி ஆகும் என்றான் (யோவா 3:9).**

காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறதுபோல ஆவியினால் பிறந்தவன் எவனோ அவனும் அப்படியே இருக்கிறான் என்று இயேசுகிறிஸ்து கூறுகிறார். ஆனால் இயேசுகிறிஸ்துவின் உபதேசம் நிக்கொதேமுவுக்கு புரியவில்லை. ஒருவேளை இயேசுகிறிஸ்து கூறுவது நடைமுறையில் சாத்தியமில்லை என்று அவன் நினைத்திருக்கலாம். தன்னுடைய சந்தேகத்தை நிவிர்த்தி செய்யும் வண்ணமாக அவன் இயேசுகிறிஸ்துவிடம் "இவைகள் எப்படி ஆகும்" என்று கேள்வி கேட்கிறான்.

ஒருவன் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டுமென்றால் அவன் மறுபடியும் பிறக்கவேண்டியது அவசியம் என்னும் உபதேசத்தை இயேசுகிறிஸ்து வலியுறுத்திக் கூறுகிறார். இதன் சத்தியம் நிக்கொதேமுவுக்கு தெளிவாக புரியவில்லை. மனுஷனுடைய சுபாவம் பாவத்தினால் கறைபடிந்திருக்கிறது. ஆகையினால் மனுஷனிடத்தில் எதைச் சொன்னாலும், அது இயற்கையின் பிரகாரம் சாத்தியமானதா என்று சிந்தித்துப் பார்க்கிறான். ஆவியினால் பிறந்தவனோ ஆவிக்குரிய காரியங்களை ஆவிக்குரிய மனதோடு சிந்தித்துப் பார்ப்பான். மனுஷனால் சில காரியங்களை செய்ய முடியாது. ஆயினும் தேவனால் எல்லாம் கூடும் என்று விசுவாசிப்பான்.

## அதிகாரம் - 3

மனுஷன் பாவசுபாவத்தில் இருப்பதினால் அவன் மறுபடியும் பிறப்பது அவசியமாயிற்று. தன் சுயமுயற்சியினால் மனுஷனால் மறுபடியும் பிறக்க முடியாது. ஆவியானவர் மூலமாகவே மனுஷருக்கு மறுபிறப்பு உண்டாகும். ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும். மறுபடியும் பிறப்பதை ஆவியானவர் மனுஷனுக்கு நடைமுறையில் சாத்தியமாக்குகிறார். மறுபடியும் பிறப்பது நிக்கொதேமுவுக்கு புரிந்துகொள்ள முடியாத ஒரு ரகசியமாகவே இருக்கிறது.

நிக்கொதேமுவைப் போலவே இக்காலத்திலும் ஏராளமான ஜனங்கள் தேவனுடைய சத்தியங்களை புரிந்து கொள்வதுமில்லை, அதற்கு கீழ்படிவதுமில்லை. காரணம் கேட்டால், தங்களுக்கு அந்த சத்தியம் புரியவில்லை என்றும், ஆகையினால் தாங்கள் அதற்கு கீழ்படியவில்லை என்றும் கூறுவார்கள். மனுஷனுக்கு கீழ்படியும் சுபாவம் மிகவும் குறைவு. தன்னுடைய மனம் விரும்பியபடி ஜீவிக்கவே விரும்புகிறான்.

இயேசுகிறிஸ்து நம்முடைய போதகராக இருக்கவேண்டுமென்று நாம் விரும்புகிறோம். ஆனால் நமக்கு கற்றுக்கொடுக்க வேண்டிய பாடத்தை நாமே தெரிந்தெடுக்க வேண்டுமென்றும் இயேசுகிறிஸ்து தெரிந்தெடுக்கக் கூடாது என்றும், எதிர்பார்க்கிறோம். நிக்கொதேமு இயேசுகிறிஸ்துவிடம் எதையோ எதிர்பார்த்து வந்தான். தான் விரும்பும் பாடத்தை அவர் தனக்கு கற்றுக்கொடுப்பாரென்று எதிர்பார்த்தான். ஆனால் இயேசுகிறிஸ்துவோ மறுபடியும் பிறப்பதைப்பற்றி அவனுக்கு உபதேசம்பண்ணுகிறார். இயேசுகிறிஸ்துவின் உபதேசம் அவனுக்கு கொஞ்சமும் புரியவில்லை. ஆகையினால் "இவைகள் எப்படி ஆகும்" என்று தனக்கு உபதேசம்பண்ணுகிற போதகரிடத்திலேயே கேள்வி கேட்கிறான்.

நிக்கொதேமு இயேசுகிறிஸ்துவிடம் தன்னுடைய அறிவின் குறைவை வெளிப்படுத்துகிறான். இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைப் புரிந்துகொள்ளும் அளவுக்கு தன்னுடைய ஞானம் போதாது என்பதை அங்கீகரிக்கிறான். இயேசுகிறிஸ்துவின் உபதேசம் மெய்யாகவே அவனுக்குப் புரியவில்லை. ஆகையினால்தான் அவருடைய உபதேசத்தின் சத்தியத்தைக் குறித்து கேள்வி கேட்கிறான். இவனைப்போலவே இன்றைக்கும் அநேகர் தாங்கள் எதையாவது விசுவாசிக்க வேண்டுமென்றால் அதை நிரூபிக்க வேண்டுமென்று கூறுகிறார்கள். நிரூபிக்க முடியாததை இவர்கள் விசுவாசிக்க மாட்டார்கள். விசுவாசம் என்பது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது.

### இஸ்ரவேலில் போதகன்

**இயேசு அவனை நோக்கி: நீ இஸ்ரவேலில் போதகனாயிருந்தும் இவைகளை அறியாமலிருக்கிறாயா? (யோவா 3:10)**

"இவைகள் எப்படி ஆகும்" என்று கேள்வி கேட்கும் நிக்கொதேமுவை இயேசுகிறிஸ்து கடிந்துகொள்கிறார். சத்தியத்தை உணரமுடியாத அவனுடைய மந்த புத்தியையும் அறியாமையையும் கடிந்துகொள்கிறார். நிக்கொதேமு இஸ்ரவேலில் போதகனாக இருக்கிறான். இருந்தும் மறுபிறப்பின் உபதேசத்தைக் குறித்து இவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. இயேசுகிறிஸ்து இவனைப் பார்த்து "நீ இஸ்ரவேலில் போதகனாயிருந்தும் இவைகளை அறியாமலிருக்கிறாயா" என்று கேட்கிறார்.

நிக்கொதேமு மற்றவர்களுக்கு யூதமார்க்கத்தின் சத்தியங்களை கற்றுக்கொடுக்கிறவன் கற்றுக்கொடுக்கும் ஆசிரியருக்கு பாடத்தைக் குறித்து தெளிந்த ஞானம் இருக்கவேண்டும். ஆனால் நிக்கொதேமுவோ, மற்றவர்களுக்கு கற்றுக்கொடுக்கிறவனாக இருந்தாலும் சத்தியத்தைக் குறித்து அறியாதவனாக இருக்கிறான்.

ஒரு சிலர் யூதமார்க்கத்தின் சடங்குகளிலும், பண்டிகைகளிலும், வேதவாக்கியத்தை தர்க்கம்பண்ணுவதிலும் தேறினவர்களாக இருப்பார்கள். ஆனால் வேதத்திலிருந்து தாங்கள் எதை தெரிந்து வைத்திருக்கவேண்டுமோ அதை தெரிந்து வைத்திருக்க மாட்டார்கள். அறியாமையிலிருப்பார்கள். நிக்கொதேமு இவர்களைப்போலவே இருக்கிறான். யூதமார்க்கத்தில் தேறினவன். ஆனால் கிறிஸ்துவின் உபதேசத்தை புரிந்துகொள்ள முடியாதவன்.

## அதிகாரம் - 3

நிக்கொதேமுவுக்கு இஸ்ரவேலில் பிறக்கும் சிலாக்கியம் கிடைத்திருக்கிறது. தேவனுடைய தெய்வீக வெளிப்பாடு இஸ்ரவேல் ஜனங்களுக்கு விசேஷித்த வழியில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டிலிருந்து நிக்கொதேமு தேவனுடைய சத்தியங்களை கற்று தெரிந்திருக்கிறான். இயேசுகிறிஸ்து மறுபடியும் பிறப்பதைக்குறித்து கூறிய உபதேசம் பழைய ஏற்பாட்டில் தெளிவாக விளக்கப்படவில்லை. ஆயினும், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பதற்கு நாம் மறுபடியும் பிறக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. இந்த உபதேசம் தேவையானது, முக்கியமானது, பெரியது. ஆனால் நிக்கொதேமுவோ தேவையான இந்த உபதேசத்தை அறியாதவனாக இருக்கிறான்.

### சாட்சி கொடுக்கிறோம்

**மெய்யாகவே மெய்யாகவே நான் உனக்குச் சொல்லுகிறேன், நாங்கள் அறிந்திருக்கிறதைச் சொல்லி, நாங்கள் கண்டதைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறோம்; நீங்களோ எங்கள் சாட்சியை ஏற்றுக் கொள்ளுகிறதில்லை (யோவா 3:11).**

இயேசுகிறிஸ்து சுவிசேஷத்தின் சத்தியங்களை வலியுறுத்திக் கூறுகிறார். இந்த சத்தியம் நமக்கு புரிந்தாலும் புரியாவிட்டாலும், இதற்கு நாம் கீழ்ப்படிய வேண்டியதன் அவசியத்தை தெளிவுபடுத்துகிறார். ஏனெனில் ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தை காணமாட்டான். மறுபடியும் பிறப்பது என்றால் என்ன என்று நமக்கு புரியவில்லையென்றாலும், நாம் மறுபடியும் பிறந்தால் மாத்திரமே தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியும்.

தம்முடைய உபதேசத்தைக் குறித்து இயேசுகிறிஸ்து விவரிக்கும்போது "நாங்கள் அறிந்திருக்கிறதை சொல்லுகிறோம்" என்று கூறுகிறார். இயேசுகிறிஸ்துவின் சத்தியம் நிச்சயமானது. சந்தேகத்திற்கு இடமற்றது. உறுதியானது. இயேசுகிறிஸ்துவின் உபதேசங்கள் மெய்யானது என்று நிரூபிப்பதற்கு இந்த உலகத்தில் ஏராளமான ஆதாரங்கள் உள்ளன. நம்முடைய ஆத்துமா இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தினால் நிரப்பப்பட்டிருக்க வேண்டும். இயேசுகிறிஸ்து எதை பேசினாலும் அவர் தம்முடைய தெய்வீக ஞானத்திலிருந்து எடுத்துப் பேசுகிறார். "நாங்கள் கண்டதைக்குறித்து சாட்சி கொடுக்கிறோம்" என்று இயேசு தமது சாட்சியை விவரிக்கிறார். இயேசுகிறிஸ்துவின் சாட்சி தெளிவானது, நிச்சயமானது, உறுதியானது. ஏனெனில் தம்முடைய சாட்சியை அவர் அறிந்திருக்கிறார், அவர் கண்டிருக்கிறார். ஆனால் அவருடைய மெய்யான சாட்சியை ஜனங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

### பரமகாரியங்கள்

**பூமிக்கடுத்த காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லியும் நீங்கள் விசுவாசிக்கவில்லையே, பரமகாரியங்களை உங்களுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்? (யோவா 3:12)**

ஆவிக்குரிய சத்தியங்களை விளக்குவதற்கு இயேசுகிறிஸ்து பூமிக்குரிய காரியங்களை எடுத்துக்காட்டுக்களாக பயன்படுத்துகிறார். நமக்குப் புரியவேண்டும் என்பதற்காக பொதுவான எளிய மொழி நடையையும், நமக்கு ஏற்கெனவே புரிந்திருக்கும் பூமிக்கடுத்த காரியங்களையும் பயன்படுத்திப் போதிக்கிறார். அவர் பூமிக்குரிய காரியங்களை சொன்னாலும் அவை மெய்யாகவே பரலோகத்திற்குரியவை. பரலோகத்தின் ரகசியங்களை பூமிக்குரிய காரியங்கள் மூலமாக விளக்கிக் கூறுகிறார்.

"பூமிக்கடுத்த காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லியும் நீங்கள் விசுவாசிக்கவில்லையே" என்று கேட்கிறார். தேவனுடைய மகத்துவமான காரியங்களை நமக்கு விளங்க வைக்கவேண்டும் என்பதற்காக, பூமிக்குரிய காரியங்களை எடுத்துக்காட்டுக்களாகவும், உவமைகளாகவும் சொல்லி விளக்குகிறார். புதிய பிறப்பு, காற்று ஆகியவை பூமிக்கடுத்த காரியங்கள் நம்முடைய அன்றாட உரையாடலில் நாம் இந்த வார்த்தைகளை பயன்படுத்துகிறோம். மறுபடியும் பிறப்பதைப்பற்றிய சத்தியத்தை பூமிக்கடுத்த காரியங்கள் மூலமாக இயேசுகிறிஸ்து விளக்கிக் கூறியும், இந்த சத்தியத்தின் பொருளை அறியாதவர்களாகவே இருக்கிறோம்.

## அதிகாரம் - 3

நாம் ஆவிக்குரிய சத்தியங்களை கேள்விப்படும்போது, நமக்குள் ஏற்கெனவே பூமிக்குரிய காரியங்கள், நிரம்பியிருக்கிறது. இவை ஆவிக்குரிய காரியங்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறது. ஆவிக்குரிய காரியங்களை பூமிக்குரிய காரியங்கள் மூலமாக சிந்தித்து நிரூபிக்க வேண்டுமென்று முயற்சி பண்ணுகிறோம். ஆகையினால் பல சமயங்களில் பூமிக்கடுத்த காரியங்கள், பரமகாரியங்களை அறிந்து கொள்வதற்கு தடைகளாகவே உள்ளன.

மனுஷன் தன்னுடைய சுயபுத்தியினாலோ, சுயசித்தத்தினாலோ, சுயஅறிவினாலோ சிந்தித்துப் பார்த்தால் சுவிசேஷத்தின் சத்தியம் அவனுக்கு கடின உபதேசமாகவே இருக்கும். தன்னுடைய சுயபுத்தியினால் சுவிசேஷத்தை விளங்கவும் முடியாது, விளக்கவும் முடியாது. சுயபுத்தியில் சிந்திக்கிறவன் தன்னுடைய சுயசிந்தனையின் பிரகாரமாகவே ஆவிக்குரிய காரியங்களை புரிந்துகொள்ள முயற்சிபண்ணுகிறான். ஆவிக்குரிய சத்தியங்களை புரிந்துகொள்வதற்கு தடையாக இருக்கும் நம்முடைய பலவீனங்களை இயேசுகிறிஸ்து அறிந்து வைத்திருக்கிறார். ஆகையினால் தம்முடைய தெய்வீக உபதேசத்தை நமக்கு புரிய வைப்பதற்காக பூமிக்கடுத்த காரியங்களை நமக்குச் சொல்லி விளங்க வைக்கிறார்.

நாம் பூமிக்குரியவர்கள். நாம் இந்த பூமியில் வாசம்பண்ணுகிறோம். நமக்கு பூமிக்குரிய காரியங்கள்தான் தெரியும். ஆகையினால் இயேசுகிறிஸ்து நம்மிடம் பேசும்போது பூமிக்கடுத்த காரியங்களையே நமக்குச் சொல்லுகிறார். இதைச் சொல்லும்போது நாம் ஆவிக்குரிய காரியங்களை புரிந்துகொள்ள வேண்டும் என்பதே அவருடைய நோக்கம். நமக்கு எளிதாக புரிந்துகொள்ளக் கூடியதையும், நமக்கு பழக்கமானதையும் இயேசுகிறிஸ்து நமக்குச் சொல்லி ஆவிக்குரிய சத்தியங்களை விளங்கச் செய்கிறார்.

பூமிக்கடுத்த காரியங்கள் குறைவுள்ளது. ஆவிக்குரிய காரியங்கள் பூரணமானது. பூரணமானதை குறைவுள்ள காரியத்தினால் ஒருபோதும் தெளிவாக விளக்கிக் கூறமுடியாது. ஆகையினால் ஆவிக்குரிய காரியங்களை விளக்குவதற்கு நாம் எந்த முறையை பயன்படுத்தினாலும், ஆவிக்குரிய சத்தியங்கள் சிலவற்றை தெளிவாக விளக்க முடியாது. ஏனெனில் மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாகவே இருக்கும். ஆவியினால் பிறப்பது மாத்திரமே ஆவியாயிருக்கும்.

**பரலோகத்திற்கு ஏறினவர்**

**பரலோகத்திலிருந்தி றங்கினவரும் பரலோகத்திலிருக்கிறவருமான மனுஷ குமாரனேயல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை (யோவா 3:13).**

இயேசுகிறிஸ்து ஒருவர் மாத்திரமே நமக்கு தெய்வீக சத்தியத்தை உறுதியோடும் உத்தரவாதத்தோடும் வெளிப்படுத்தக்கூடியவர். ஏனெனில் மனுஷகுமாரனாகிய இயேசுகிறிஸ்து மாத்திரமே பரலோகத்திலிருந்து இறங்கினவரும், பரலோகத்தில் இருக்கிறவரும், பரலோகத்திற்கு ஏறினவருமாக இருக்கிறார். வேறு யாரும் இந்த சிலாக்கியத்தைப் பெற்றிருக்கவில்லை. ஆகையினால் நம்முடைய இரட்சிப்பைக் குறித்த தேவனுடைய சித்தத்தை இயேசுகிறிஸ்துவினால் மாத்திரமே நமக்கு வெளிப்படுத்த முடியும். வேறு ஒருவராலும் முடியாது.

நிக்கொதேமு இயேசுகிறிஸ்துவை தீர்க்கதரிசிகளில் ஒருவராக அங்கீகரிக்கிறான். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஏராளமான தீர்க்கதரிசிகள் இருந்தார்கள். அவர்கள் எல்லோரிலும் இயேசுகிறிஸ்துவே பெரியவர் என்பதை நிக்கொதேமு அறிந்திருக்க வேண்டும். ஏனெனில் இயேசுகிறிஸ்துவைத் தவிர வேறு எந்த தீர்க்கதரிசியும் பரலோகத்திற்கு ஏறவில்லை. தேவனைப்பற்றியும், பரலோகத்தின் காரியங்களைப்பற்றியும் இயேசுகிறிஸ்துவுக்கு தெரிந்திருப்பதுபோல வேறு எந்த தீர்க்கதரிசிக்கும் தெரியவில்லை.

## அதிகாரம் - 3

பரலோகத்தின் காரியங்களை தெரிந்துகொள்வதற்கு நாம் பரலோகத்திற்கு ஏறிப்போகவேண்டிய அவசியமில்லை. பரலோகத்திலிருந்து நமக்கு அனுப்பப்படும் தெய்வீக சத்தியங்களை ஏற்றுக்கொள்வதற்கு, நாம் இந்த பூமியிலேயே காத்துக் கொண்டிருக்கவேண்டும். இயேசுகிறிஸ்து பரலோகத்திலிருந்து இறங்கினவரும், பரலோகத்தில் இருக்கிறவருமாக இருக்கிறார். இவரால் தேவனுடைய சித்தத்தை நமக்கு வெளிப்படுத்த முடியும். "பரமகாரியங்களை உங்களுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்" என்று இயேசுகிறிஸ்து கேட்கிறார். இதைச் சொல்லும்போது பரலோகத்தின் காரியங்களில் ஒன்றை அவர்களுக்கு வெளிப்படுத்துகிறார். மனுஷகுமாரன் பரலோகத்திலிருந்து இறங்கினவர் என்பதே இயேசுகிறிஸ்து வெளிப்படுத்தும் பரலோகத்தின் சத்தியமாகும். அவர் பரலோகத்திலிருந்து இறங்கினவராக இருந்தாலும் அவர் மனுஷகுமாரனாகவும் இருக்கிறார்.

மனுஷனுடைய ஆத்துமா மறுபடியும் பிறக்கிறது. மனுஷனுடைய மறுஜென்ம அனுபவம் எளிதில் விளக்க முடியாத ஒரு ரகசியமாகவே இருக்கிறது. மனுஷனுடைய ஆத்துமாவே நமக்கு ரகசியமாக இருக்குமென்றால், தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் மனுஷ அவதாரம் அதைவிட பெரிய ரகசியமாக இருக்கும்.

இயேசுகிறிஸ்து ஒரே நபராக இருக்கிறபோதிலும் அவருக்குள் இரண்டு வெவ்வேறு ஆள்தத்துவ பண்புகள் இருப்பது இந்த வசனத்தில் தெளிவுபடுத்தப்படுகிறது. பரலோகத்தின் காரியங்களை பேசுவதற்கு இயேசுகிறிஸ்து மாத்திரமே தகுதியுள்ளவர். இயேசுகிறிஸ்துவின் இந்த தகுதி மூன்று காரியங்களினால் உறுதிபண்ணப்படுகிறது. அவையாவன: 1. அவர் பரலோகத்திலிருந்து இறங்கினவர் 2. அவர் மனுஷகுமாரனாக இருக்கிறவர் 3. அவர் பரலோகத்தில் இருக்கிறவர்.

இயேசுகிறிஸ்து பரலோகத்திலிருந்து இறங்கினவராக இருக்கிறபடியினால் அவருடைய தெய்வீக ஆள்தத்துவ பண்பு உறுதிபண்ணப்படுகிறது. தேவனுக்கும் மனுஷனுக்கும் இடையிலே ஒப்புரவாக வேண்டிய காரியம் பரலோகத்திலேயே ஆரம்பித்துவிடுகிறது. நாம் தேவனை நேசிக்கிறோம். அவர் நம்மை நேசிக்கிறார். அவரே நம்மை முதலாவதாக நேசித்தவர். ஆகையினால் அவர் நமக்கு தம்முடைய ஒரே பேறான குமாரனையே அனுப்பியிருக்கிறார்.

இயேசுகிறிஸ்து பரலோகத்திலிருந்து இறங்கினவராக இருக்கிறபடியினால் அவருடைய தெய்வீகத்தன்மை வெளிப்படுவதோடு, பரலோகத்தின் தெய்வீக ஆலோசனைகளில் அவருக்குள்ள நெருக்கமான ஈடுபாடும் வெளிப்படுத்தப்படுகிறது. இயேசுகிறிஸ்துவே தேவனுடைய வெளிப்பாடாக இருக்கிறார். நமக்கு தேவனுடைய சத்தியத்தை உபதேசம் பண்ணுவதற்காகவும், நம்மை இரட்சிப்பதற்காகவும் தேவன் பரலோகத்திலிருந்து இறங்கி வந்திருக்கிறார் என்று புதிய ஏற்பாடு நமக்கு விளக்கிக் காண்பிக்கிறது. இதன் மூலமாக தேவன் நம்மீது தமது அன்பை வெளிப்படுத்தியிருக்கிறார்.

இயேசுகிறிஸ்து இந்த வசனத்தில் மனுஷகுமாரனென்று அழைக்கப்படுகிறார். அவரை மனுஷகுமாரன் என்று குறிப்பிடும்போது, யூதர்கள் இந்த வார்த்தைக்கு "அவர் மேசியா" என்று அர்த்தம் கூறுவார்கள். மனுஷகுமாரனை அவர்கள் "மேசியா" என்றே எப்போதும் புரிந்து கொள்வார்கள். இயேசுகிறிஸ்து இப்போது நிக்கொதேமுவிடம் பேசிக்கொண்டிருக்கிறார். இவர்கள் இருவருமே பூமியில்தான் இருக்கிறார்கள். என்றாலும் இப்போது பூமியில் இருக்கிற இயேசுகிறிஸ்து பரலோகத்திலும் இருக்கிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய தெய்வத்துவப் பண்பினால், ஒரே வேளையில் பூமியிலும் பரலோகத்திலும் இருக்கக்கூடியவர். ஆகையினால் இயேசுவை "சர்வ வியாபகர்" என்று அழைக்கிறோம்.

## அதிகாரம் - 3

**நித்திய ஜீவன்**
**யோவா 3 : 14-18**

**யோவா 3:14. சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும்**

**யோவா 3:15. தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, உயர்த்தப்படவேண்டும்.**

**யோவா 3:16. தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.**

**யோவா 3:17. உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்.**

**யோவா 3:18. அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்; விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராத படியினால், அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று.**

**உயர்த்தப்பட்ட சர்ப்பம்**

**சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும் தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, உயர்த்தப்படவேண்டும் (யோவா 3:14,15).**

தாம் இந்த உலகத்திற்கு வந்ததற்கான தெய்வீக நோக்கத்தை இயேசுகிறிஸ்து இங்கு தெளிவுபடுத்துகிறார். தம்மை விசுவாசிக்கிறவர்கள் ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ளும்படியாகவே இயேசுகிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்திருக்கிறார். இயேசுகிறிஸ்து இங்கு கூறும் சத்திய வார்த்தையில் முழு சுவிசேஷத்தின் சாரமும் அடங்கியிருக்கிறது. மரணத்தின் பாதையில் சென்று கொண்டிருக்கிறவர்களைத் தேடி, அவர்களை மீட்டு, அவர்கள் தங்கள் ஜீவனை திரும்பவும் பெற்றுக்கொள்வதற்காகவே இயேசுகிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்திருக்கிறார். அவர் இரட்சிப்பதற்காகவே வந்திருக்கிறார். யாரையும் ஆக்கினைக்குள்ள தீர்ப்பதற்கு அவர் வரவில்லை.

இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்தில் பிரயாணம் பண்ணியபோது கொள்ளிவாய்சர்ப்பம் அவர்களை கடித்தது. அவர்களுக்கு இதனால் உயிர்ச்சேதாரம் உண்டாயிற்று. தேவனுடைய ஆலோசனையின் பிரகாரம் மோசே ஒரு வெண்கல சர்ப்பத்தைச் செய்து, அதை வனாந்தரத்திலே உயர்த்தினார். அந்த வெண்கல சர்ப்பத்தை தங்கள் கண்களால் பார்த்தவர்கள் எல்லோரும் கொள்ளிவாய்சர்ப்பத்தினால் உண்டான மரணத்திலிருந்து மீட்கப்பட்டார்கள்.

வனாந்தரத்தில் இஸ்ரவேல் ஜனங்களை கடித்த சர்ப்பம் மரணத்தை விளைவிக்கும் விஷத்தன்மையுடையது. பாவத்தின் விஷத்தன்மையை விவரிப்பதற்காக இயேசுகிறிஸ்து இங்கு வனாந்தரத்தில் இஸ்ரவேல் ஜனங்களை தீண்டிய சர்ப்பத்தைப் பற்றி குறிப்பிடுகிறார். பாவத்தின் சுபாவம் மனுஷனுடைய ஜீவனை அழித்துப்போடும். மனுஷனுக்கு மரணத்தை உண்டுபண்ணும். பாவத்தின் சம்பளம் மரணம். பாவத்தின் குற்றவுணர்வு சர்ப்பத்தின் விஷத்தைப் போன்றது. சர்ப்பம் தீண்டினால் சரீரத்தில் வேதனை உண்டாவதுபோல, பாவம் செய்த ஆத்துமா வேதனையில் துடிக்கும். பாவத்தின் விஷத்தன்மை மனுஷனுடைய ஆத்துமாவை அழித்துப்போடும். நியாயப்பிரமாணத்தின் சாபங்கள் கொள்ளிவாய்சர்ப்பங்களின் விஷத்தைப்போல உள்ளன. இவையெல்லாமே தேவனுடைய கோபாக்கினைக்கு அடையாளங்களாகும்.

## அதிகாரம் - 3

தேவனுடைய பிள்ளைகளை கொள்ளிவாய்சர்ப்பம் கடித்தாலும் தேவனுடைய வல்லமையினால் சர்ப்பம் தீண்டிய விஷத்திலிருந்து, இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஒரு விடுதலை உண்டாயிற்று. வனாந்தரத்தில் இஸ்ரவேல் ஜனங்களால் கொள்ளிவாய்சர்ப்பத்தை எதிர்த்து ஒன்றும் செய்யமுடியவில்லை. ஏற்கெனவே எகிப்தின் அடிமைத்தனத்தில் பல வருஷங்களாக உபத்திரவத்தை அனுபவித்தவர்கள், வனாந்தரத்தில் இப்போது செயலிழந்தவர்களாக, இருக்கிறார்கள். இவர்களுக்கு தெய்வீக உதவி தேவைப்படுகிற இந்த வேளையில் தேவன் மோசேயின் மூலமாக தம்முடைய ஜனங்களை மரணத்திலிருந்து மீட்டுக்கொள்ள சித்தங்கொண்டார்.

வனாந்தரத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் வலுவிழந்து, செயலிழந்து இருந்ததுபோலவே, இக்காலத்தில் பாவிகளாகிய ஜனங்களும் பாவத்தின் பிடியில் சிக்கி செயலிழந்தவர்களாக, தங்கள் மரணத்தை நோக்கி போய்க்கொண்டிருக்கிறார்கள். பாவம் அவர்களை இழுத்துச் செல்கிறது. பாவியான மனுஷன் செயலிழந்து போன இந்த வேளையில், தேவன் மனுஷர் மீது அன்புகூர்ந்து தம்முடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை இந்த உலகத்திற்கு அனுப்பி, பாவத்தின் பிடியிலுள்ள ஜனங்களை மீட்டுக்கொள்ள சித்தங்கொண்டிருக்கிறார். வெண்கல சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும் உயர்த்தப்பட வேண்டும் என்பது தேவனுடைய சித்தம்.

வனாந்தரத்தில் கொள்ளிவாய் சர்ப்பத்தினால் கடிக்கப்பட்டவர்களை குணப்படுத்துவதற்காக வெண்கல சர்ப்பம் உயர்த்தப்பட்டது. வெண்கல சர்ப்பத்தின் உருவம் கொள்ளிவாய்சர்ப்பம் போலவே இருந்தது. இது மெய்யான சர்ப்பமல்ல. வெண்கல சர்ப்பம். இது ரூபத்தில் கொள்ளிவாய்சர்ப்பம் போல இருந்தாலும், இந்த வெண்கல சர்ப்பத்தில் விஷமில்லை. இது யாரையும் கடிக்கப்போவதுமில்லை. இந்த வெண்கல சர்ப்பம் இயேசுகிறிஸ்துவுக்கு அடையாளமாக இங்கு கூறப்பட்டிருக்கிறது.

வெண்கல சர்ப்பம் யாருக்கும் தீங்கு விளைவிக்காது. வனாந்தரத்திலே உயர்த்தப்பட்ட அந்த வெண்கல சர்ப்பத்தை பார்த்தவர்கள் எல்லோரும் குணமடைந்தார்கள். அதுபோலவே உயர்த்தப்பட்ட இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடைவான்.

வனாந்தரத்திலே வெண்கல சர்ப்பம் ஒரு கம்பத்தின்மீது தூக்கி உயர்த்தப்பட்டது. அதுபோலவே இயேசுகிறிஸ்துவும் உயர்த்தப்படுகிறார். மனுஷகுமாரன் உயர்த்தப்படுவதைக் குறித்து வேதபண்டிதர்கள் மூன்றுவிதமாக வியாக்கியானம் கூறுகிறார்கள். அவையாவன: 1. இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் போது அவர் கல்வாரி சிலுவையில் அறையப்பட்டு உயர்த்தப்பட்டது 2. இயேசுகிறிஸ்து பரமேறிப்போனபோது வானத்திற்கு உயரே எடுத்துக்கொள்ளப்பட்டது 3. தம்முடைய நித்திய சுவிசேஷத்தை இயேசுகிறிஸ்து பிரசங்கம்பண்ணுவது.

இயேசுவை சிலுவையில் அறைந்தபோது, அவரை சிலுவை மரத்தில் தூக்கினார்கள். இயேசுகிறிஸ்து தம்முடைய சிலுவை மரணத்தை "உயர்த்தப்பட்டிருப்பது" என்று குறிப்பிடுகிறார். "நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்வேன் என்றார் தாம் இன்னவிதமான மரணமாய் மரிக்கப்போகிறார் என்பதை குறிக்கும்படி இப்படிச் சொன்னார்" (யோவா 12:32,33).

இயேசுகிறிஸ்து மரித்து அடக்கம்பண்ணப்பட்ட பின்பு மூன்றாம் நாளிலே தாம் சொன்ன பிரகாரம் உயிர்த்தெழுந்தார். அதன்பின்பு நாற்பது நாட்கள் இந்த பூமியிலே தம்மை விசுவாசிக்கிறவர்களுக்கு தரிசனம் கொடுத்தார். பின்பு தம்முடைய பிதாவின் வலதுபாரிசத்தில் இருப்பதற்காக வானத்திற்கு உயரே எடுத்துக்கொள்ளப்பட்டார். முதலாவதாக சிலுவைக்கு உயர்த்தப்பட்ட இயேசுகிறிஸ்து, அதன்பின்பு, பரலோகத்தில் மேன்மையான கிரீடத்தைப் பெற்றுக்கொள்வதற்காக மேலும் உயர்த்தப்படுகிறார்.

## அதிகாரம் - 3

இயேசுகிறிஸ்து தம்முடைய நித்திய சுவிசேஷத்தை வெளிப்படுத்தி, அதை உபதேசம் பண்ணும்போது உயர்த்தப்படுகிறார். இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் மனுஷருடைய ஆத்துமாவையும் சரீரத்தையும் குணப்படுத்துவதற்காக பிரசங்கிக்கப்படுகிறது. இஸ்ரவேல் ஜனங்களுக்கு வாதைகளை அனுப்பிய நம்முடைய தேவன், அந்த வாதையிலிருந்து அவர்களை குணப்படுத்துவதற்கு உதவியையும் உபாயத்தையும் அனுப்புகிறார். எல்லா மனுஷரும் பாவத்தில் விழுந்திருந்து மரணத்திற்கு ஏதுவாக போய்க்கொண்டிருக்கும்போது, அவர்களை மீட்பதற்கான மீட்கும்பொருளை தேவன் தாமே கண்டுபிடித்திருக்கிறார். நாம் யாரை கல்வாரி சிலுவையில் அறைந்து கொன்றோமோ, அவரே நமக்கு சமாதான பிரபுவாக இருக்கிறார். அவரே நம்மை மீட்பதற்கு மீட்பின்கிரயத்தை நமக்காக செலுத்தினார்.

இயேசுகிறிஸ்து உயர்த்தப்பட்டாலும், அவரை விசுவாசிக்கிறவர்கள் மாத்திரமே கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடைவார்கள். மோசே தான் உண்டாக்கின வெண்கல சர்ப்பத்தை ஒரு கம்பத்தின்மேல் தூக்கி வைத்தான். சர்ப்பம் ஒருவனை கடித்தபோது அவன் அந்த வெண்கல சர்ப்பத்தை நோக்கிப்பார்த்து பிழைத்தான்.

"அப்பொழுது கர்த்தர் கொள்ளிவாய்ச் சர்ப்பங்களை ஜனங்களுக்குள்ளே அனுப்பினார்; அவைகள் ஜனங்களைக் கடித்ததினால் இஸ்ரவேலருக்குள்ளே அநேக ஜனங்கள் செத்தார்கள். அதினால் ஜனங்கள் மோசேயினிடத்தில் போய்: நாங்கள் கர்த்தருக்கும் உமக்கும் விரோதமாய்ப் பேசினதினால் பாவஞ் செய்தோம்; சர்ப்பங்கள் எங்களைவிட்டு நீங்கும்படி கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணவேண்டும் என்றார்கள்; மோசே ஜனங்களுக்காக விண்ணப்பம் பண்ணினான். அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ ஒரு கொள்ளிவாய்ச் சர்ப்பத்தின் உருவத்தைச் செய்து, அதை ஒரு கம்பத்தின்மேல் தூக்கிவை; கடிக்கப்பட்டவன் எவனோ அவன் அதை நோக்கிப்பார்த்தால் பிழைப்பான் என்றார். அப்படியே மோசே ஒரு வெண்கலச் சர்ப்பத்தை உண்டாக்கி, அதை ஒரு கம்பத்தின்மேல் தூக்கிவைத்தான்; சர்ப்பம் ஒருவனைக் கடித்தபோது, அவன் அந்த வெண்கலச் சர்ப்பத்தை நோக்கிப்பார்த்துப் பிழைப்பான்" *(எண் 21:6-9).*

வெண்கல சர்ப்பத்தை நோக்கிப்பார்த்தவன் மாத்திரமே பிழைத்தான். சர்ப்பத்தினால் கடிக்கப்பட்டும், ஒருவன் வெண்கல சர்ப்பத்தை நோக்கிப் பார்க்கவில்லையென்றால், அவன் பிழைக்கமாட்டான். அதுபோலவே இயேசுகிறிஸ்து உயர்த்தப்பட்டாலும், அவரை விசுவாசிக்கிறவன் மாத்திரமே கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடைவான். "பூமியின் எல்லையெங்குமுள்ளவர்களே என்னை நோக்கிப்பாருங்கள். அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்" *(ஏசா 45:22)* என்று கர்த்தர் கூறுகிறார்.

தாம் உயர்த்தப்படும்போது, தம்மை விசுவாசிக்க வேண்டுமென்று இயேசுகிறிஸ்து மனுக்குலத்தை உற்சாகப்படுத்துகிறார். இயேசுகிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைத்திருக்கும் நமக்கு கர்த்தர் இந்த வார்த்தையை ஆசீர்வாதமாக கூறுகிறார். இயேசுகிறிஸ்துவை பின்பற்றுகிறவர்கள் இரட்சிக்கப்பட வேண்டுமென்பதற்காகவே அவர் உயர்த்தப்பட்டிருக்கிறார். இரட்சிப்பை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு எல்லோருக்கும் பொதுவாக கொடுக்கப்படுகிறது. தாம் கொடுக்கும் இரட்சிப்பிலிருந்து இயேசுகிறிஸ்து யாரையும் விலக்கி, ஒதுக்கி வைத்துவிடவில்லை. இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடைவான். இயேசுகிறிஸ்து கொடுக்கும் இரட்சிப்பு பூரணமானது. இயேசுகிறிஸ்துவின் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்கிறவர்கள் கெட்டுப்போகமாட்டார்கள். நித்திய ஜீவனை அடைவார்கள்.

### விசுவாசிக்கிறவன் எவனோ

**தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார் (யோவா 3:16).**

நாம் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு இயேசுகிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் மனுக்குலத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் நற்செய்தியாகும். பரலோகத்திலிருந்து இந்த பூமிக்கு ஏராளமான செய்திகள் வந்திருந்தாலும், இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷமே நமக்கு பரிபூரணமான நற்செய்தியாக இருக்கிறது.

## அதிகாரம் - 3

இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தில் தேவனுடைய அன்பு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அவர் இந்த உலகத்தின்மேல் அன்புகூர்ந்து தம்முடைய ஒரே பேறான குமாரனை தந்தருளியிருக்கிறார். சுவிசேஷத்தின் மகா ரகசியம் இங்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. தேவன் இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்து தம்முடைய ஒரே பேறான குமாரனை தந்தருளியிருக்கிறார் என்பதே அந்த ரகசியமாகும். இயேசுகிறிஸ்துவே தேவனுடைய ஒரே பேறான குமாரனாக இருக்கிறவர். தம்முடைய ஒரே பேறான குமாரனாகிய இவரை தேவன் நமக்கு தந்தருளியிருப்பதன் மூலமாக, தேவன் நம்மை நேசிக்கிறார் என்பதை நாம் அறிந்துகொள்கிறோம்.

மனுஷன் கெட்டுப்போகாமல் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே, தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை தந்தருளியிருக்கிறார். தம்முடைய ஒரே பேறான குமாரனை நமக்காக தந்தருளியிருப்பது தேவனுக்கு பிரியமாயிற்று. நமக்காக பாடுகளை அனுபவித்து, கல்வாரி சிலுவையில் தமது இரத்தத்தை சிந்தி மரிப்பதற்காக தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை தந்தருளியிருக்கிறார். பிதா தம்முடைய குமாரனை தந்தருளவில்லையென்றால், அவருடைய சத்துருக்களினால் அவரை சிலுவையில் அறைந்து கொன்றிருக்க முடியாது. தேவன் தந்தருளினதால் மாத்திரமே, கிறிஸ்துவின் சத்துருக்கள் அவரை கல்வாரி சிலுவையில் அறைந்து கொன்றார்கள்.

தம்முடைய ஒரே பேறான குமாரனை தேவன் தந்தருளியிருப்பதன் மூலமாக, தாம் இந்த உலகத்தின்மேல் வைத்திருக்கும் அன்பை வெளிப்படுத்துகிறார். தேவன் இவ்வளவாய் இந்த உலகத்தில் அன்பு கூர்ந்தார் என்பதற்கு, இந்த உலகத்தின்மீது அளவில்லாமல், தாராளமாய் அன்பு கூர்ந்தார் என்பது பொருளாகும். தேவனுடைய அன்பு மெய்யான அன்பு. இது மாய்மாலமற்றது. தேவனுடைய அன்பை பெற்றுக்கொள்வதற்கு இந்த உலகத்திற்கு எந்தவிதமான தகுதியுமில்லை. தகுதியில்லாத இந்த உலகத்தின்மீது, தேவன் இவ்வளவாய் அன்புகூர்வது அவருடைய மகா பெரிய அன்பை விளக்கிக் காண்பிக்கிறது. பரிசுத்தமான தேவன் துன்மார்க்கமான இந்த உலகத்தின்மீது இவ்வளவாய் அன்பு கூர்ந்திருக்கிறார்.

தங்களுடைய இஸ்ரவேல் தேசத்தை மாத்திரம் இரட்சிப்பதற்காக தேவன் தம்முடைய மேசியாவை அனுப்பி, யூதர்களாகிய தங்கள்மீது மாத்திரம் தேவன் தம்முடைய அன்பை வெளிப்படுத்துவாரென்று யூதர்கள் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ யூதர்களுடைய எதிர்பார்ப்பின் பிரகாரம் பேசாமல், தாம் இந்த முழு உலகத்தின்மீதும் அன்புகூர்ந்து, இந்த உலகத்திற்கு வந்திருப்பதாக கூறுகிறார். முழு உலகம் என்று சொல்லும்போது, இதில் புறஜாதியாரும் இருக்கிறார்கள். யூதர்களும் இருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் மூலமாக மனுக்குலத்தார் எல்லோருக்கும் இரட்சிப்பு சாத்தியமாயிற்று. உலகத்திலுள்ள எல்லோருமே கெட்டுப்போகாமல், நித்திய ஜீவனை அடையும்படியாக இயேசுகிறிஸ்து வந்திருக்கிறார்.

தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை தந்தருளும்போது, அவர் ஒரு நிபந்தனையையும் வைக்கிறார். தம்முடைய குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் நித்திய ஜீவனை அடையவேண்டும் என்பது தேவனுடைய இரட்சிப்பின் திட்டம். இதுவரையிலும் இரட்சிப்பு யூதருக்கு மாத்திரம் சாத்தியமாயிற்று. ஆனால் இப்போதோ இயேசுகிறிஸ்துவின் மூலமாக முழு உலகத்தாருக்கும் இரட்சிப்பு வாக்குப் பண்ணபட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைக்கிறவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனைபேர்களும் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையலாம். நாம் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கவேண்டும் என்னும் ஒரே காரியத்தை மாத்திரமே சுவிசேஷம் நம்மிடத்திலிருந்து எதிர்பார்க்கிறது. இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் கெட்டுப்போகமாட்டார்கள் என்பது சுவிசேஷத்தின் மூலமாய் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் மிகப்பெரிய ஆசீர்வாதமாகும். தேவன் நம்முடைய பாவங்களை அகற்றிப்போடுவதினால் நமக்கு ஆத்தும மரணம் உண்டாவதில்லை. இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையில் சிந்திய தம்முடைய இரத்தத்தினால் நமக்கு மீட்பின் கிரயத்தை செலுத்தியிருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்கப்பட்டிருக்கும் நம் எல்லோருக்குமே பரலோகத்தின் சந்தோஷங்கள் வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. நாம் இந்த பூமியில் கெட்டுப்போகாமல் இருப்பது மாத்திரமல்ல, இயேசுவை விசுவாசிப்பதினால் நாம் நித்திய ஜீவனையும் பெற்றுக்கொள்வோம்.

## அதிகாரம் - 3

**உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே**

**உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார் (யோவா 3:17).**

தம்முடைய ஒரே பேறான குமாரனை தேவன் இந்த பூமிக்கு அனுப்பியதற்கு அவருக்கு ஒரு தெய்வீக திட்டம் உள்ளது. தம்முடைய குமாரனாலே உலகம் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே தேவனுடைய தெய்வீக திட்டம். இயேசுகிறிஸ்து இந்த பூமிக்கு வந்தபோது தம்முடைய கண்களில் இரட்சிப்போடும், தம்முடைய கரங்களில் இரட்சிப்போடும் வந்திருக்கிறார். தேவன் தாமே தம்முடைய குமாரனை இந்த உலகத்திற்கு அனுப்பினார். அவரை தம்முடைய பிரதிநிதியாக, தூதுவராக, மனுக்குலத்தை இரட்சிப்பவராக அனுப்பியிருக்கிறார்.

இயேசுகிறிஸ்து வருவதினால் நமக்கு சமாதானம் கிடைக்குமா என்று சிலர் கேட்கிறார்கள். இயேசுகிறிஸ்து சமாதான பிரபுவாக இருக்கிறார். இயேசு இந்த உலகத்தை ஆக்கினைக்குள்ளாக தீர்க்கும்படி வரவில்லை. இந்த உலகமோ துன்மார்க்கத்தினால் நிறைந்திருக்கிறது. ஆகையினால் தேவன் தமது தெய்வீக நியாயத்தினால் இந்த உலகத்தை ஆக்கினைக்குள்ளாக தீர்க்கவேண்டும். ஆனால் தேவனோ இந்த உலகத்தின்மீது இவ்வளவாய் அன்பு கூர்ந்ததினால், இந்த உலகத்தை ஆக்கினைக்குள்ளாக தீர்க்கும்படி சித்தங்கொள்ளவில்லை.

மனுஷரை நியாயத்தீர்ப்பு செய்யும் அதிகாரம் இயேசுகிறிஸ்துவுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. "பிதாவானவர் மரித்தோரை எழுப்பி உயிர்ப்பிக்கிறதுபோல, குமாரனும் தமக்குச் சித்தமானவர்களை உயிர்ப்பிக்கிறார். அன்றியும் பிதாவைக் கனம்பண்ணுகிறதுபோல எல்லாரும் குமாரனையும் கனம்பண்ணும்படிக்கு, பிதாவானவர் தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமல், நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்" (யோவா 5:21,22).

"ஏனெனில், பிதாவானவர் தம்மில் தாமே ஜீவனுடையவராயிருக்கிறதுபோல, குமாரனும் தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கும்படி அருள் செய்திருக்கிறார். அவர் மனுஷகுமாரனாயிருக்கிற படியால், நியாயத்தீர்ப்புச் செய்யும்படிக்கு அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத்திருக்கிறார்" (யோவா 5:26,27). ஆயினும் தேவனோ உலகத்தை ஆக்கினைகுள்ளாக தீர்க்கும்படி, தம்முடைய ஒரே பேறான குமாரனை உலகத்திற்கு அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பியிருக்கிறார்.

உலகத்தை நியாயந்தீர்க்கும் பூரண அதிகாரம் இயேசுகிறிஸ்துவிடமுள்ளது. ஆனால் இயேசுகிறிஸ்துவோ இந்த உலகத்தை ஆக்கினைக்குள்ளாக தீர்க்கவில்லை. இயேசுகிறிஸ்து நியாயாசனத்தில் அமர்ந்திருந்து, உலகத்தை நியாயம் விசாரித்து ஆக்கினைக்குள்ளாக தீர்ப்பதற்குப் பதிலாக, அவர் கிருபாசனத்தில் அமர்ந்திருந்து இந்த உலகத்தை இரட்சிக்கிறார். தம்மாலே உலகம் இரட்சிக்கப்பட வேண்டுமென்பதே இயேசுகிறிஸ்துவின் சித்தம்.

இயேசுகிறிஸ்துவின் மூலமாக இந்த உலகம் தேவனோடு ஒப்புரவாகிறது. இயேசுகிறிஸ்து ஒப்புரவாகுதலின் ஊழியத்தைச்செய்து மனுக்குலத்தை இரட்சிக்கிறார். தங்களுடைய பாவங்களினிமித்தம் மனச்சாட்சியில் குத்தப்பட்டிருக்கும் மனுஷருக்கு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் நற்செய்தியாகவே இருக்கும். இயேசுகிறிஸ்துவின் நற்செய்தி முறிந்துபோன எலும்புகளை குணமாக்கும். இரத்தம் வடியும் காயங்களுக்கு காயம்கட்டும். நம்முடைய நியாயாதிபதியாகிய இயேசுகிறிஸ்து நம்மை ஆக்கினைக்குள்ளாக தீர்க்கும்படிக்கு வராமல், நம்மை இரட்சிக்கும்படியாகவே வந்திருக்கிறார் என்னும் சுவிசேஷச் செய்தி நமக்கு மெய்யாகவே நற்செய்தியாக கொடுக்கப்பட்டிருக்கிறது.

**ஆக்கினைத்தீர்ப்பு**

**அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்; விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராத படியினால், அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று (யோவா 3:18).**

## அதிகாரம் - 3

இயேசுகிறிஸ்துவை மெய்யாகவே விசுவாசிக்கிறவர்களுக்கு மாத்திரமே சந்தோஷமும் சமாதானமும் வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. அவரை விசுவாசிக்கிறவர்கள் மாத்திரமே ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்படமாட்டார்கள். ஆகையினால் அவரை விசுவாசியாதவர்கள் நிச்சயமாகவே ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்படுவார்கள். இந்த வாக்கியம் மனுக்குலத்தை குற்றப்படுத்துவதற்காகவோ அல்லது மனுக்குலத்தின்மீது தண்டனையை அறிவிப்பதற்காகவோ கூறப்பட்டுள்ள வாக்கியமல்ல.

மனுக்குலத்தை ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து விடுவித்து இரட்சிப்பதற்காகவே இந்த எச்சரிப்பின் வார்த்தை கூறப்பட்டிருக்கிறது. ஏனெனில் ஒருவன் ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்படவில்லையென்றால் அவன் இரட்சிக்கப்படுவது உறுதியாகிவிடும். இயேசுகிறிஸ்துவே உலகத்தை ஆக்கினைக்குள்ளாக தீர்க்கிறவர். இவரே மனுக்குலத்தின் பாவத்திற்காக கல்வாரி சிலுவையில் தம்முடைய இரத்தத்தை சிந்தி, நம்முடைய ஆத்தும இரட்சிப்புக்காக தமது ஜீவனை ஒப்புக்கொடுத்தவர். இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்படும்போது, சிலுவை மரம் அவர்மீது மிகப்பெரிய பாரமாக சுமத்தப்பட்டிருக்கலாம். நம்முடைய பாவசுமைகளை நம்மைவிட்டு அகற்றவேண்டும் என்பதற்காகவே, இயேசுகிறிஸ்து தம்மீது சிலுவையின் பாரசுமையை சுமந்துகொண்டார்.

ஆனபடியினால் நாம் கிறிஸ்து இயேசுவுக்கு உட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களாக இருப்போமென்றால் நமக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை (ரோம 8:1). இயேசுகிறிஸ்துவின் பிள்ளைகளை இந்த உலகம் ஆக்கினைக்கு உட்படுத்தலாம். ஆனால் அவரை விசுவாசிக்கிற நாமோ இந்த உலகத்தோடு ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்படமாட்டோம்.

இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் மிகவும் தெளிவாக அறிவிக்கப்பட்டாலும், மனுஷரில் சிலர் இன்னும் தேவனுடைய ஒரே பேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசம் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் ஏற்கெனவே ஆக்கினைத்தீர்ப்புக்கு உட்பட்டாயிற்று. அவிசுவாசிகளுடைய பாவம் மிகவும் பயங்கரமானது. தேவகுமாரன் நித்தியமானவர். அவர் மெய்யான தேவன். நம்முடைய விசுவாசத்திற்கு அவர் பாத்திரர். அவர் நல்லவர். அவரை விசுவாசித்து இரட்சகராக ஏற்றுக்கொள்வதற்கு அவர் பூரண பாத்திரராக இருக்கிறார். இருந்தும், ஒருவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் விசுவாசம் வைக்கவில்லையென்றால் அவருக்கு ஆக்கினைத்தீர்ப்பு ஏற்கெனவே உண்டாயிற்று.

தமக்கு நெருக்கமானவர்களை இரட்சிக்க வேண்டும் என்பதற்காக தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை இந்த உலகத்திற்கு அனுப்பியிருக்கிறார். அந்த குமாரனாகிய இயேசுகிறிஸ்து நமக்கு நெருக்கமானவராக இருக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவை விசுவாசியாமல் அவருடைய சமுகத்தைவிட்டு தூரவிலகி ஓடிப்போய்விடக்கூடாது.

இயேசு கிறிஸ்துவை விசுவாசியாதவர்களுக்கு மிகப்பெரிய வேதனை உண்டாகும். அவிசுவாசிகள் ஏற்கெனவே ஆக்கினைத்தீர்ப்புக்கு உட்பட்டாயிற்று. அவருடைய ஆக்கினைத்தீர்ப்பு அவர்களுக்கு நிச்சயமாகவே நடைபெற்றுவிட்டது. இந்த ஆக்கினைத்தீர்ப்பிலிருந்து அவர்கள் விடுதலை பெறுவதற்கு வாய்ப்பேயில்லை. அவர்கள் மரித்தபின்பு ஆக்கினைத்தீர்ப்பு அடைவார்கள் என்று கூறப்படாமல், அவர்கள் ஆக்கினைத்தீர்ப்புக்கு உட்பட்டாயிற்று என்று கூறப்பட்டிருக்கிறது. ஆகையினால் அவிசுவாசிகள் இந்த பூமியில் உயிரோடிருக்கும் காலத்திலேயே ஆக்கினைத்தீர்ப்புக்கு உட்பட்டிருக்கிறார்கள்.

துன்மார்க்கரின் இருதயங்களே அவர்களை ஆக்கினைக்குட்படுத்தும். அவர்கள் செய்த பாவங்களின் குற்றவுணர்வு அவர்களை வருத்தும். அவிசுவாசிகள் இயேசுகிறிஸ்துவை தேவனுடைய குமாரனாக விசுவாசியாமற் போனதினால் அவர்கள் ஏற்கெனவே ஆக்கினைத்தீர்ப்புக்கு உட்பட்டிருக்கிறார்கள். அவிசுவாசம் மிகப்பெரிய பாவம். இரட்சிப்பின் உபாயத்தை நாம் விசுவாசிக்கவில்லையென்றால் நமக்கு இரட்சிப்பு கிடைப்பதற்கே வாய்ப்பில்லை.

## அதிகாரம் - 3

**ஒளியும் இருளும்**
**யோவா 3 : 19-21**

**யோவா 3:19. ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிற படியினால் அவர்கள் ஒளியைப் பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத் தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது.**

**யோவா 3:20. பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான், தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு, ஒளியினிடத்தில் வராதிருக்கிறான்.**

**யோவா 3:21. சத்தியத்தின்படி செய்கிறவனோ, தன் கிரியைகள் தேவனுக்குள்ளாய்ச் செய்யப் படுகிறதென்று வெளியாகும்படிக்கு, ஒளியினிடத்தில் வருகிறான் என்றார்.**

**பொல்லாத கிரியைகள்**

**ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிற படியினால் அவர்கள் ஒளியைப் பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத் தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது (யோவா 3:19).**

மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறது. அவர்கள் ஒளியை விரும்பாமல் இருளை விரும்புகிறார்கள். இதுவே அவர்களுடைய ஆக்கினைத்தீர்ப்புக்கு காரணமாயிற்று. சுவிசேஷம் ஒளியாக இருக்கிறது. சுவிசேஷம் இந்த உலகத்திற்கு வந்திருக்கும்போது, இந்த உலகத்திற்கு ஒளி வந்திருக்கிறது. ஒளியில் எதுவும் மறைவாகயிராது. எல்லாம் வெளிச்சத்திற்கு வரும். அதுபோலவே சுவிசேஷத்தின் வெளிச்சத்தில் எதுவும் மறைவாகயிராது.

வெளிச்சத்தை யாரும் நிரூபிக்க வேண்டியதில்லை. தான் வெளிச்சம் என்று ஒளி தன்னைதானே நிரூபித்துவிடும். அதுபோலவே சுவிசேஷமும் தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறது என்பதை வேறு யாரும் நிரூபிக்க வேண்டியதில்லை. அது தானாகவே நிரூபித்துக்கொள்ளும்.

ஒளியில் மறைந்திருக்கும் காரியங்கள் வெளிச்சத்திற்கு வரும். மெய்யாகவே ஒளியானது இனிமையானது. இந்த உலகத்தில் இருளான இடங்களில் ஒளியில்லை. இந்த உலகத்திலுள்ள ஜனங்களில் சிலர் சுவிசேஷத்தின் ஒளியை நேசிக்காமல், உலகத்தின் இருளை நேசிக்கிறார்கள். பாவிகள் இருளோடு ஐக்கியமாக இருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் சத்தியங்களை நேசிப்பதற்குப் பதிலாக, தங்களுடைய தவறுகளையும், அறியாமையையும் நேசித்து, தங்கள் சுய ஆசையில் மூழ்கியிருக்கிறார்கள்.

ஒளியை விரும்பாதவர்கள் பரிதாபத்திற்குரியவர்கள். ஒருவன் தன் ஆரோக்கியத்தை விரும்பாமல் நோயை விரும்புவதுபோல இவர்கள் இருளை விரும்புகிறார்கள். ஒருவன் விடுதலையை விரும்பாமல் அடிமைத்தனத்தை விரும்புவதுபோல இவர்கள் ஒளியை விரும்பாமல் இருளை விரும்புகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் ஒருபோதும் விடுதலை பெறமாட்டார்கள். ஒருபோதும் குணமடையமாட்டார்கள். இவர்களுடைய கிரியைகள் பொல்லாதவைகளாய் இருக்கிற படியினால், இவர்கள் ஒளியைப்பார்க்கிலும் இருளை விரும்புகிறார்கள். இவர்களுடைய நிலமை மிகவும் பரிதாபமானது. ஏனெனில் பொல்லாத கிரியைகளைச் செய்ய வேண்டுமென்று தங்கள் உள்ளத்தில் தீர்மானம்பண்ணி, பொல்லாத காரியங்களை ஆவலாய் செய்கிறார்கள். வேண்டுமென்றே செய்கிறார்கள். வேண்டுமென்றே பாவம் செய்கிறவர்கள் பாவமன்னிப்பை விரும்பமாட்டார்கள். இவர்களுடைய கிரியைகள் பாவம் நிறைந்தவை. ஆகையினால் இவர்கள் ஆக்கினைத்தீர்ப்புக்கு பாத்திரவான்களாக இருக்கிறார்கள்.

தங்களைச் சுற்றிலும் ஒளி பிரகாசமாக ஒளிக்கதிர்களை வீசும்போது, இவர்கள் அந்த ஒளியைப் பார்க்கக்கூடாதவாறு தங்கள் கண்களை மூடிக்கொள்கிறார்கள். கிறிஸ்துவை நோக்கிப் பார்க்கக்கூடாது என்றும், சுவிசேஷத்தைக் கேட்கக்கூடாது என்றும் தங்கள் உள்ளத்தில் தீர்மானம் செய்து, தங்களுடைய கண்களையும் செவிகளையும் அடைத்துக்கொள்கிறார்கள். நியாயத்தீர்ப்பு நாளின்போது இவர்கள் ஆக்கினைத்தீர்ப்புக்கு உட்படுத்தப்படுவார்கள். இவர்கள் செய்த பாவத்திற்கு மாத்திரமல்ல, பாவத்தைவிட்டு விலகுவதற்கு இவர்களுக்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டும், அந்த வாய்ப்பை பயன்படுத்த தவறியதற்காகவும் இவர்கள் ஆக்கினைத்தீர்ப்புக்கு உட்படுத்தப்படுவார்கள். பொல்லாத கிரியைகளைச் செய்கிறவர்கள் ஒளியைப் பகைத்து இருளை விரும்புவது உலக இயல்பு.

## அதிகாரம் - 3

### பொல்லாங்கு செய்கிறவன்

**பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான், தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு, ஒளியினிடத்தில் வராதிருக்கிறான் (யோவா 3:20).**

பொல்லாங்கு செய்கிறவன் தன்னையும், தன்னுடைய பொல்லாத கிரியைகளையும் மூடி மறைத்துக்கொள்ள முயற்சி பண்ணுகிறான். தன்னுடைய கிரியைகளே இவனுக்கு வெட்கத்தை உண்டுபண்ணுகிறது. இவன் நியாயத்தீர்ப்பின் தண்டனைக்கு பயப்படுகிறான். ஆகையினால் இவன் ஒளியினிடத்தில் வராதிருக்கிறான். தன்னால் முடிந்த வரையிலும் ஒளியைவிட்டு விலகியே இருக்கிறான். ஒளியைப் பகைக்கிறான். தன்னுடைய பொல்லாத கிரியைகள் கண்டிக்கப்படக்கூடாது என்று எதிர்பார்க்கிறான். பாவிகளின் பொல்லாத கிரியைகளை கண்டித்து உணர்த்துவதற்காகவே சுவிசேஷத்தின் ஒளி இந்த உலகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

சுவிசேஷத்தின் ஒளியில் யாரும் தங்களுடைய பாவங்களை மறைக்க முடியாது. சுவிசேஷம் பாவத்தையும் மீறுதலையும் தெளிவாக காண்பிக்கும். மனுஷருடைய பொல்லாத கிரியைகளை வெளிப்படுத்தும். எந்தெந்த காரியங்களிலெல்லாம் மனுஷர்கள் தேவனுடைய பிரமாணத்தை மீறியிருக்கிறார்கள் என்பதை சுவிசேஷம் தெளிவுபடுத்தும். தாங்கள் செய்வது பாவம் என்று அறியாமலேயே சிலர் பாவம் செய்கிறார்கள். ஒரு சிலர் தாங்கள் செய்கிறது பாவம் என்று அறிந்திருந்தும், வேண்டுமென்றே துணிகரமாக பாவம் செய்கிறார்கள். சுவிசேஷத்தின் ஒளி இவர்களுடைய பொல்லாத கிரியைகளை கண்டித்து உணர்த்துகிறது. ஒளிக்கு முன்பாக யாரும் மறைவாக இருக்க முடியாது. ஆகையினால்தான் பொல்லாங்கு செய்கிறவன் சுவிசேஷத்தின் ஒளியைப் பகைக்கிறான்.

ஒரு சிலர் பாவம் செய்து, தாங்கள் செய்த பாவத்திற்காக மனம்வருந்துவார்கள். இப்படிப்பட்டவர்கள் ஒளியைப் பகைக்காமல் அதை விரும்புவார்கள். ஆயக்காரரும் பாவிகளும் தங்களுடைய துன்மார்க்கமான கிரியைகளுக்காக மனம்வருந்தி இயேசுகிறிஸ்துவிடம் மன்னிப்பு கேட்கிறார்கள். சுவிசேஷத்தின் ஒளியில் தங்களுடைய பொல்லாத கிரியைகளுக்காக மனம்வருந்துகிறார்கள். ஆனால் பொல்லாதவர்களோ, பொல்லாத கிரியைகளைச் செய்தும், ஒளியினிடத்தில் வராமல், ஒளியைப் பகைத்து, தங்களுடைய பொல்லாத கிரியைகளை மூடி மறைத்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறார்கள். தன் பாவத்தை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான். அதை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ தேவனுடைய இரக்கத்தைப் பெறுவான்.

இந்த உலகம் பாவத்தை நேசிப்பதினால் கிறிஸ்துவைப் பகைக்கிறது. சுவிசேஷத்தின் ஒளியினிடத்திற்கு வரவிருப்பமில்லாதவர்கள் இந்த ஒளியைப் பகைக்கிறார்கள். இவர்களுடைய இருதயத்தில் பொல்லாத சிந்தனைகளும் பொல்லாத கிரியைகளும் நிரம்பியிருக்கிறது. ஒருவன் ஒளியினிடத்தில் வரவிரும்பவில்லையென்றால் அவன் தன் உள்ளத்தில் வெளிப்படையாகவோ அல்லது ரகசியமாகவோ ஒளியைப் பகைக்கிறான் என்பதே பொருள். அதே வேளையில் தன் இருதயத்தில் சுத்தமுள்ளவன் ஒளியை விரும்புகிறான். அந்த ஒளியினிடத்திற்கு வருகிறான்.

### சத்தியத்தின்படி செய்கிறவன்

**சத்தியத்தின்படி செய்கிறவனோ, தன் கிரியைகள் தேவனுக்குள்ளாய்ச் செய்யப்படுகிறதென்று வெளியாகும்படிக்கு, ஒளியினிடத்தில் வருகிறான் என்றார் (யோவா 3:21).**

சத்தியத்தின்படி செய்கிறவன் ஒளியினிடத்தில் வருகிறான். பொல்லாங்கு செய்கிறவன் ஒளியினிடத்தில் வராமல் போகும்போது, சத்தியத்தின்படி செய்கிறவனோ ஒளியினிடத்தில் வருகிறான். சத்தியத்தின்படி செய்கிறவனுடைய கிரியைகள் தேவனுக்குள்ளாய் செய்யப்படுகிறது. தன்னுடைய நற்கிரியைகள் வெளியாகும் படியாக இவன் ஒளியினிடத்தில் வருகிறான். பொல்லாங்கு செய்கிறவனோ தன்னுடைய கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு ஒளியினிடத்தில் வராதிருக்கிறான். ஒளியின் வெளிச்சத்தில் நடக்கிறவனுடைய நடை உறுதியாக இருக்கும். தள்ளாடமாட்டான். சமாதானமாக நடப்பான். தேவனுடைய ஆறுதலைப் பெற்றுக்கொள்வான். இதுவே நல்லவனுடைய குணாதிசயம். இவன் செய்வது எல்லாம் சத்தியத்தின்படி இருக்கும்.

## அதிகாரம் - 3

சில சமயங்களில் சத்தியத்தின்படி செய்கிறவன் சிறிய தவறுகளைச் செய்துவிட்டாலும், தன்னுடைய தவறுகளுக்காக அவன் மனம்வருந்தி, தேவனுடைய மன்னிப்பைப் பெற்றுக்கொள்வான். நன்மை செய்யும்போது இவன் சிறிய தவறு செய்தாலும், இவனுடைய உள்ளான நோக்கம் நன்மை செய்யவேண்டும் என்பதாகவே இருக்கும். இவனுடைய நோக்கம் கண்ணியமானது. தன்னுடைய செய்கைகள் அனைத்தையும் மறைவாக செய்யாமல் வெளியரங்கமாக செய்வான். சத்தியத்தின்படி தான் செய்யும் காரியங்கள் வெளியாகும்படிக்கு ஒளியினிடத்தில் வருகிறான்.

ஒளியினிடத்திற்கு வருகிறவன் சத்தியத்தின்படி செய்கிறவன். தான் செய்கிறது சத்தியமானது என்று இவனுக்குத் தெரியும். தன்னுடைய கிரியைகளை இவன் யாருக்கும் மறைக்க விரும்பமாட்டான். தன்னுடைய கிரியைகளை ஒருவரும் கண்டிக்கமாட்டார்கள் என்னும் எண்ணம் இவனுடைய உள்ளத்தில் இருக்கும். ஆகையினால் தன்னுடைய செய்கைகள் வெளியாகும்படிக்கு ஒளியினிடத்தில் வருகிறான். தன்னிடத்தில் பலவீனம் காணப்பட்டாலும், தேவனுடைய பலத்தினால் இவன் தன்னை இடைக்கட்டிக்கொள்வான். தேவனுடைய சித்தத்தை அறிந்து, அதை மனப்பூர்வமாக செய்யவேண்டுமென்று செயல்படுவான். சில சமயங்களில் இவனுடைய சித்தமும், விருப்பமும் தேவனுடைய சித்தத்திற்கு மாறுபட்டிருந்தாலும், தேவனுடைய சித்தத்தையே நிறைவேற்ற வேண்டுமென்று தன்னை ஒப்புக்கொடுப்பான். இவ்வாறு செயல்படுகிறவனே சத்தியத்தின்படி செய்கிறவன். ஏனெனில் இவனுடைய கிரியைகள் தேவனுக்குள்ளாய் செய்யப்படுகிறது.

நம்முடைய சுயசித்தத்தை தேவனுடைய சித்தம் ஆளுகை செய்யும்போது நாமும் சத்தியத்தின்படி கிரியை செய்வோம். தேவனுடைய நாம மகிமைக்காக தேவனுடைய சித்தத்தின் பிரகாரம் செயல்படுவோம். நம்முடைய சுயசித்தத்திற்கும், சுயவிருப்பத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்காமல், தேவனுடைய சித்தமே நமக்கு பிரதானமானது என்று தீர்மானம் செய்து, தேவனுடைய சித்தத்திற்கு நம்மை பூரணமாக ஒப்புக்கொடுப்போம். நம்முடைய சுயவிருப்பத்தைவிட தேவனுடைய சித்தமே நமக்கு முக்கியமானதாக தெரியும்.

இயேசுகிறிஸ்துவின் உபதேசம் நிக்கொதேமுவுக்கு ஆரம்பத்தில் சற்று புரியாத புதிராகவும், விநோதமாகவும் இருந்தது. இதன்பின்பு தேவன் இவனுடைய உள்ளத்தின் கதவைத்திறந்து தம்முடைய ரகசியத்தை புரிந்துகொள்வதற்கு உதவிபுரிகிறார். அதன்பின்பு இயேசுகிறிஸ்துவை மெய்யாக பின்பற்றிய சீஷர்களில் நிக்கொதேமுவும் ஒருவனாக மாறுகிறான்.

### யூதேயா தேசத்தில் இயேசு
### யோவா 3 : 22-25

**யோவா 3:22. இவைகளுக்குப் பின்பு, இயேசுவும் அவருடைய சீஷரும் யூதேயா தேசத்திற்கு வந்தார்கள்; அங்கே அவர் அவர்களோடே சஞ்சரித்து, ஞானஸ்நானங் கொடுத்து வந்தார்.**

**யோவா 3:23. சாலிம் ஊருக்குச் சமீபமான அயினோன் என்னும் இடத்திலே தண்ணீர் மிகுதியாயிருந்தபடியினால், யோவானும் அங்கே ஞானஸ்நானங்கொடுத்துவந்தான்; ஜனங்கள் அவனிடத்தில் வந்து ஞானஸ்நானம் பெற்றார்கள்.**

**யோவா 3:24. அக்காலத்தில் யோவான் காவலில் வைக்கப்பட்டிருக்கவில்லை.**

**யோவா 3:25. அப்பொழுது யோவானுடைய சீஷரில் சிலருக்கும் யூதருக்கும் சுத்திகரிப்பைக் குறித்து வாக்குவாதமுண்டாயிற்று.**

**ஞானஸ்நானம்**

**இவைகளுக்குப் பின்பு, இயேசுவும் அவருடைய சீஷரும் யூதேயா தேசத்திற்கு வந்தார்கள்; அங்கே அவர் அவர்களோடே சஞ்சரித்து, ஞானஸ்நானங் கொடுத்து வந்தார் (யோவா 3:22).**

## அதிகாரம் - 3

இயேசுகிறிஸ்து எருசலேமில் ஊழியம் செய்தபின்பு அவரும் அவருடைய சீஷரும் யூதேயா தேசத்திற்கு வருகிறார்கள். தம்முடைய ஊழியக்காலத்தில் இயேசுகிறிஸ்து பல இடங்களுக்கு பிரயாணம் பண்ணுகிறார். செல்லும் இடங்களுக்கெல்லாம் அவர் நன்மை செய்கிறவராகவே சுற்றி வருகிறார். பல வேளைகளில் அவர் களைப்படைந்தவராக இருந்தாலும், ஆத்துமாக்களுக்கு நன்மை செய்வதில் அவர் ஒருபோதும் களைப்படையவில்லை. சூரியனின் வெளிச்சம் வானங்களின் ஒரு முனையிலிருந்து புறப்பட்டு அவைகளின் மறுமுனை வரைக்கும் சுற்றி ஓடுகிறது. அதின் காந்திக்கு மறைவானது ஒன்றுமில்லை (சங் 19:6). அதுபோலவே நீதியின் சூரியனாகிய இயேசுகிறிஸ்து ஒவ்வொரு இடமாக சுற்றிப்போகிறார். அவருடைய மகிமை பிரகாசத்திற்கு மறைவானது ஒன்றுமில்லை.

எருசலேமில் அவர் நீண்டகாலம் தங்கியிருக்க வேண்டுமென்று விரும்பவில்லை. "இவைகளுக்குப் பின்பு" இயேசுகிறிஸ்து யூதேயா தேசத்திற்கு போகிறார். இவைகளுக்குப் பின்பு என்று கூறும்போது, இயேசுகிறிஸ்து நிக்கொதேமுவோடு உரையாடிய பின்பு என்று பொருள்படும். யூதேயா தேசத்தில் இயேசுகிறிஸ்துவினால் மறைவாக இருக்க முடியாது. அவர் எல்லோருக்கும் நன்மை செய்யவேண்டும் என்பதற்காக யூதேயா தேசத்தின் பல பகுதிகளுக்கும் பிரயாணம் பண்ணுகிறார்.

இயேசுகிறிஸ்துவின் உபதேசமும் அவர் செய்த அற்புதங்களும் எருசலேமில் அமைதியாக நடைபெறவில்லை. அவருடைய செய்கை அங்கு அதிகமான சந்தடியை உண்டுபண்ணிற்று. இயேசுகிறிஸ்து தேவாலயத்தை சுத்திகரித்தபோது அங்கு பிரச்சனை உண்டாயிற்று. இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தினால் தங்களுக்கு பிரயோஜனம் இல்லை என்று யூதர்கள் நினைத்தார்கள். யூதர்கள் இயேசுகிறிஸ்துவை தேவனுடைய குமாரனாக ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக "நீர் இவைகளைச் செய்கிறீரே இதற்கு என்ன அடையாளத்தை எங்களுக்குக் காண்பிக்கிறீர்" என்று அவரிடத்தில் கேள்வி கேட்கிறார்கள். தம்முடைய ஊழியத்தினால் எருசலேமில் அதிக நன்மை உண்டாகாததினால் இயேசுகிறிஸ்து எருசலேமைவிட்டு யூதேயா தேசத்திற்கு போகிறார். அவரோடுகூட அவருடைய சீஷரும் யூதேயா தேசத்திற்கு போகிறார்கள்.

யூதேயா தேசத்தில் இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரோடு சஞ்சரிக்கிறார். இயேசுகிறிஸ்துவோடு உடன் செல்ல விரும்புகிறவர்கள். அவரோடு சஞ்சரிக்கவும் அதாவது தங்கியிருக்கவும் ஆயத்தமாக இருப்பார்கள். அங்கு அவர் ஞானஸ்நானம் கொடுத்து வந்தார் என்று யோவான் எழுதுகிறார். யூதேயா தேசத்தில் யோவான்ஸ்நானன் தன்னுடைய ஞானஸ்நான ஊழியத்தை ஆரம்பித்தான் (மத் 3:1). அந்த தேசத்திலேயே இயேசுகிறிஸ்துவும் ஞானஸ்நானம் கொடுக்க ஆரம்பிக்கிறார். இயேசுதாமே தம்முடைய சொந்தக் கரத்தினால் ஞானஸ்நானம் கொடுக்கவில்லையென்றும், அவருடைய சீஷர்கள் ஞானஸ்நானம் கொடுத்தார்கள் என்றும் யோவான் எழுதுகிறார் (யோவா 4:3). ஞானஸ்நானம் இயேசுகிறிஸ்துவின் பரிசுத்தமான பிரமாணம். பலவீனமான மனுஷர்கள் இந்த பிரமாணங்களை நிறைவேற்றினாலும் இது தேவனுடைய பரிசுத்தமான பிரமாணமாகவே இருக்கிறது.

**யோவான்ஸ்நானன்**

**சாலிம் ஊருக்குச் சமீபமான அயினோன் என்னும் இடத்திலே தண்ணீர் மிகுதியாயிருந்தபடியினால், யோவானும் அங்கே ஞானஸ்நானங்கொடுத்துவந்தான்; ஜனங்கள் அவனிடத்தில் வந்து ஞானஸ்நானம் பெற்றார்கள். அக்காலத்தில் யோவான் காவலில் வைக்கப்பட்டிருக்கவில்லை (யோவா 3:23,24).**

தனக்கு ஊழிய வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் யோவான்ஸ்நானன் தனக்கு கொடுக்கப்பட்டிருக்கும் ஊழியத்தை தொடர்ந்து செய்து கொண்டு வருகிறான். யோவான் ஞானஸ்நானம் கொடுத்து வந்தான் என்று இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஜலத்தினால் ஞானஸ்நானம் கொடுப்பது மனந்திரும்புதலுக்கு அடையாளமாகும். இயேசுகிறிஸ்து கொடுத்து வந்த ஞானஸ்நானமும் மனந்திரும்புதலின் அடையாளத்திற்காகவே கொடுக்கப்பட்டது. ஆகையினால் யோவான் கொடுத்த ஞானஸ்நானமும், இயேசுகிறிஸ்து கொடுத்த ஞானஸ்நானமும் ஒன்றுக்கொன்று முரண்படவில்லை. அவற்றிற்கு இடையே உபதேச பேதம் உண்டாகவில்லை.

## அதிகாரம் - 3

யோவான்ஸ்நானன் தான் கொடுத்து வந்த ஞானஸ்நானத்தை நிறுத்திவிடுவதற்கு முன்பாகவே, இயேசுகிறிஸ்து பிரசங்கம்பண்ணி ஞானஸ்நானம் கொடுக்க ஆரம்பித்துவிடுகிறார். இதனால் ஊழியம் தடைபடாமல், நின்று போகாமல் தொடர்ந்து நடைபெறுகிறது. கர்த்தருடைய ஊழியம் எப்போதுமே நின்றுபோகாமல் தொடர்ந்து நடைபெறவேண்டும். ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் ஒரு ஊழியக்காரர் தன்னுடைய ஊழியத்திலிருந்து ஓய்வுபெறும்போது, அவருடைய ஸ்தானத்தில் வேறொருவர் வந்து அந்த ஊழியத்தை தொடர்ந்து நடத்த வேண்டும். தேவன் தம்முடைய ஊழியக்காரர்களை அனுப்புவார்.

மோசே இஸ்ரவேல் ஜனங்களை எகிப்து தேசத்திலிருந்து விடுவித்து வனாந்தரத்தின் வழியாக கானான் தேசத்திற்கு வழிநடத்திச் சென்றார். ஆனால் அவரால் கானான் தேசத்திற்கு போக முடியவில்லை. அங்கு போவதற்கு முன்பாகவே மோசே மரித்துப்போனார். மோசே மரித்தாலும், தேவன் யோசுவாவை தெரிந்தெடுத்தார். யோசுவா மோசேயின் ஸ்தானத்தில் தலைமைப் பொறுப்பு ஏற்று, இஸ்ரவேல் ஜனங்களை கானான் தேசத்திற்குள் வழிநடத்திச் சென்றார்.

யோவான்ஸ்நானன் ஜலத்தினால் ஞானஸ்நானம் கொடுத்துக் கொண்டிருக்கும்போதே, இயேசுகிறிஸ்துவும் ஞானஸ்நானம் கொடுக்க ஆரம்பித்து விடுகிறார். யோவான்ஸ்நானனுடைய ஊழியம் இன்னும் முடிவடையவில்லை. அவன் இன்னும் காவலில் வைக்கப்படவில்லை. ஆகையினால் யோவான்ஸ்நானன் செய்ய வேண்டிய ஊழியம் இன்னும் இருக்கிறது. இக்காலத்தில் இயேசுகிறிஸ்து யோவான்ஸ்நானனைப்போல, ஜனங்கள் மத்தியிலே பிரபல்யமாக அறியப்படவில்லை. ஜனங்களும் மனந்திரும்பி இரட்சிக்கப்படுவதற்கு பூரண ஆயத்தத்தோடு இல்லை. ஆகையினால் யோவான்ஸ்நானன் "மனந்திரும்புங்கள், தேவனுடைய ராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்று தொடர்ந்து பிரசங்கம்பண்ணி, மனந்திரும்பியவர்களுக்கு ஜலத்தினால் ஞானஸ்நானம் கொடுத்து வருகிறான். தனக்கு ஊழிய வாய்ப்பு இருக்கும் வரையிலும் அவன் தன் ஊழியத்தை நிறுத்திவிடவில்லை.

நம்முடைய ஊழியத்தில் நாமும் தொடர்ந்து ஊழியம் செய்ய வேண்டும். தேவன் நம்மை ஊழியம் செய்வதற்கு அனுமதிக்கும் வரையிலும் தொடர்ந்து ஊழியம் செய்து கொண்டேயிருக்க வேண்டும். மற்ற ஊழியக்காரர்களுக்கு அதிகமான வரங்களும், அதிகமான தாலந்துகளும் கொடுக்கப்பட்டாலும், நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வரங்களையும், தாலந்துகளையும் பயன்படுத்தி ஊழியத்தை நாம் தொடர்ந்து செய்யவேண்டும். மற்றவர்கள் நன்றாக ஊழியம் செய்கிறார்கள் என்று அவர்களைப்பார்த்து நம்முடைய ஊழியத்தை நிறுத்திவிடக்கூடாது. மற்றவர்கள் மேன்மையான ஊழியங்களைச் செய்யும்போது நம்முடைய ஊழியம் தேவையற்றது என்றோ, பயனற்றது என்றோ முடிவு செய்து, ஊழியத்தைவிட்டு ஓடிப்போய்விடக்கூடாது.

கர்த்தர் தம்முடைய பிள்ளைகள் எல்லோருக்குமே ஊழியப்பொறுப்புக்களை பகிர்ந்துகொடுக்கிறார். எல்லோருக்கும் கொடுக்குமளவுக்கு அவரிடத்தில் ஊழியம் ஏராளமாக உள்ளது. மற்றவர்கள் நன்றாக ஊழியம் செய்கிறார்களே என்று நினைத்து, நாம் ஒன்றுமே செய்யாமல் சும்மாயிருப்போமென்றால், நாம் ஆவிக்குரிய சோம்பேறிகளாக இருப்போம். யோவான்ஸ்நானன் சோம்பேறியாக இராமல் தொடர்ந்து ஊழியம் செய்கிறான். ஜலத்தினால் தொடர்ந்து ஞானஸ்நானம் கொடுத்து வருகிறான்.

சாலிம் ஊருக்குச் சமீபமான அயினோன் என்னுமிடத்திலே யோவான் ஞானஸ்நானம் கொடுத்து வந்ததாக இந்த வசனம் கூறுகிறது. இங்கு தண்ணீர் மிகுதியாக இருந்தது. இந்த இடத்தைப்பற்றி வேதாகமத்தில் வேறு எங்கும் குறிப்பிடப்படவில்லை. இது எங்கு இருக்கிறது என்னும் விவரமும் தெளிவாக தெரியவில்லை. இது எங்கு இருக்கிறபோதிலும், யோவான்ஸ்நானனுடைய ஊழியத்தில் ஒரு ஊழிய முறைமை வெளிப்படுகிறது. அவன் எல்லா வேளையிலும் ஒரே இடத்தில் இருப்பதில்லை. ஒவ்வொரு இடமாக கடந்துசென்று ஊழியம் செய்து வருகிறான்.

கர்த்தருடைய ஊழியக்காரர்களும் தங்களுக்குக் கொடுக்கப்படும் எல்லா வாய்ப்புக்களையும் பயன்படுத்த வேண்டும். நாம் இருந்த இடத்திலேயே இருக்கவேண்டுமென்றும் வாய்ப்புக்கள் நம்மைத் தேடி வரவேண்டுமென்றும் ஒரே இடத்தில் நிலையாக இருந்துவிடக்கூடாது. தேவைப்படும்போது ஒவ்வொரு இடமாக பிரயாணம்பண்ண ஊழியக்காரர்கள் ஆயத்தமாக இருக்கவேண்டும்.

## அதிகாரம் - 3

ஜலத்தினால் ஞானஸ்நானம் கொடுப்பதற்கு யோவான்ஸ்நானன் அயினோன் என்னும் இந்த இடத்தை தெரிந்தெடுத்திருக்கிறான். ஏனெனில் இந்த இடத்தில் தண்ணீர் மிகுதியாக இருக்கிறது. ஒருவேளை மிகுதியான தண்ணீர் ஓடும் பெரிய நீரோடைகள் இந்த பகுதியில் இருந்திருக்கலாம். தண்ணீர் மிகுந்திருக்கும் இந்த பகுதியை யோவான்ஸ்நானன் தெரிந்தெடுத்து ஊழியம் செய்கிறான். தன்னுடைய பிரசங்கத்தின் மூலமாக மனந்திரும்பியவர்களுக்கு தண்ணீரினால் ஞானஸ்நானம் கொடுப்பதற்கு இந்த இடம் வசதியாக இருக்கிறது. மனந்திரும்பியவர்களை ஞானஸ்நானம் கொடுப்பதற்காக தூர இடத்திற்கு அழைத்துச் செல்லாமல், தான் ஊழியம் செய்யும் இடத்திலேயே மிகுதியான தண்ணீர் இருக்கிறபடியினால், அங்கு ஞானஸ்நானம் கொடுத்து வருகிறான்.

ஜனங்கள் எல்லோரும் அயினோன் என்னும் இடத்தில் ஊழியம் செய்து கொண்டிருக்கும் யோவான்ஸ்நானனிடத்தில் வந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொள்கிறார்கள். இந்த இடத்தில் இயேசுகிறிஸ்துவும் யோவான்ஸ்நானனும் சேர்ந்து ஊழியம் செய்ததாக வேதபண்டிதர்களில் சிலர் கூறுகிறார்கள். இவர்கள் இருவரும் கொடுக்கும் ஞானஸ்நானம் ஒன்றுதான். இவர்கள் இருவருடைய இருதயமும் ஏற்ற இருதயமாக இருக்கிறது. ஜனங்கள் இந்த இடத்திற்கு வரும்போது சிலர் யோவான்ஸ்நானனிடத்திலும், சிலர் இயேசுவினிடத்திலும் வந்து ஞானஸ்நானம் பெற்றார்கள் என்று வேதபண்டிதர்களில் சிலர் வியாக்கியானம் கூறுகிறார்கள்.

யோவான்ஸ்நானன் இக்காலத்தில் காவலில் வைக்கப்பட்டிருக்கவில்லை. தான் விடுதலையோடு இருக்கும் காலத்தை ஊழியம் செய்வதற்காக பயன்படுத்துகிறான். தனக்கு வாய்ப்பு கிடைக்கும் வரையிலும் ஓய்வில்லாமல் ஊழியம் செய்கிறான்.

**வாக்குவாதம்**

**அப்பொழுது யோவானுடைய சீஷரில் சிலருக்கும் யூதருக்கும் சுத்திகரிப்பைக் குறித்து வாக்குவாதமுண்டாயிற்று (யோவா 3:25).**

அயினோனில் யோவானுடைய சீஷரில் சிலருக்கும் யூதருக்கும் சுத்திகரிப்பைக் குறித்து வாக்குவாதம் உண்டாயிற்று. இந்த யூதர்கள் யோவான்ஸ்நானனுடைய பிரசங்கத்தைக் கேட்டு மனந்திரும்பி, அவன் மூலமாக ஜலத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளாதவர்கள். பாவம் நிறைந்த இந்த உலகத்தில் பக்தியுள்ளவர்களுக்கும் பக்தியில்லாதவர்களுக்கும் இடையே பிரிவினைகள் உண்டாகும். இவர்கள் சுத்திகரிப்பைக் குறித்து வாக்குவாதம் பண்ணுகிறார்கள். சுத்திகரிப்பு யூதருடைய சடங்காச்சாரங்களில் ஒன்று.

யோவான்ஸ்நானன் ஞானஸ்நானம் கொடுக்கும்போது, அவனுடைய சீஷர்களில் சிலர் இந்த ஞானஸ்நானத்தைக் குறித்து மேன்மையாக விளம்பரம் செய்திருக்கலாம். யூதருடைய சுத்திகரிப்பு முறைமைகளைவிட, யோவான்ஸ்நானன் கொடுக்கும் ஞானஸ்நானமே சிறந்தது என்று யூதர்களோடு தர்க்கம் பண்ணியிருந்திருக்கலாம். சத்தியத்தின் பிரகாரம் யோவான்ஸ்நானனுடைய சீஷர்கள் கூறுவது சரியானதுதான்.

யூதர்கள் தங்களுடைய மார்க்க காரியங்களிலும், முன்னோர்களின் பாரம்பரியங்களிலும் அதிக கவனம் செலுத்துகிறார்கள். தங்கள் மத்தியிலே பாரம்பரியமாக வழக்கத்திலிருக்கும் யூதமார்க்கத்து முறைமையிலான சுத்திகரிப்பே மிகவும் சிறந்தது என்பது இவர்களுடைய கருத்து. யோவானுடைய சீஷர்களுக்காக இவர்கள் தங்கள் சொந்தக் கருத்துக்களை விட்டுக்கொடுக்க விரும்பவில்லை.

யோவான்ஸ்நானன் கொடுக்கும் ஞானஸ்நானம் சிறந்ததுதான் என்பது யூதருக்கு நன்றாகத் தெரியும். ஆகையினால் இவனுடைய ஞானஸ்நானத்தின் முக்கியத்துவத்தை இவர்கள் மறுதலித்திருக்கமாட்டார்கள். ஒருவேளை இந்த யூதர்கள் இயேசுகிறிஸ்து கொடுக்கும் ஞானஸ்நானத்திற்கும், யோவான்ஸ்நானன் கொடுக்கும் ஞானஸ்நானத்திற்கும் வித்தியாசம் கண்டுபிடித்து, அதைக்குறித்து வாக்குவாதம் செய்திருக்கலாம். இயேசுகிறிஸ்துவிடத்தில் ஏராளமான ஜனங்கள் போகிறார்கள். இதைக்குறித்து யோவான்ஸ்நானனுடைய சீஷர்கள் சந்தோஷப்படவில்லை. இயேசுவினிடத்தில் போகிறவர்களைப்பற்றி யோவானிடம் முறையிடுகிறார்கள்.

## அதிகாரம் - 3

குழந்தைப்பருவமும், வாலிபப்பருவமும் ஒன்றொக்கொன்று முரண்படாமல் இசைந்திருக்க வேண்டும். அஸ்திபாரத்தின் மீதுதான் கட்டிடம் கட்டி எழுப்பப்படவேண்டும். கட்டிடத்திற்கும் அஸ்திபாரத்திற்கும் ஒரு இசைவு இருக்க வேண்டும். இந்த இசைவு இல்லையென்றால் கட்டிடம் அஸ்திபாரத்தின் மீது நிலைத்து நிற்காது. யோவான் கொடுக்கும் ஞானஸ்நானம் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு முரண்படக்கூடாது. ஜனங்கள் இயேசுகிறிஸ்துவிடத்தில் வரவேண்டுமென்பதே சுவிசேஷத்தின் நோக்கம். ஆனால் இயேசுவினிடத்தில் போகிறவர்களைக் குறித்து சிலர் யோவான்ஸ்நானனிடத்தில் முறையிடுகிறார்கள். கிறிஸ்துவுக்கு வழியை ஆயத்தம் பண்ணுவதுதான் யோவான்ஸ்நானனின் ஊழியம். யோவான்ஸ்நானன் ஜனங்களை கிறிஸ்துவிடம் வழிநடத்தவேண்டுமேயல்லாமல், ஜனங்கள் அவரிடம் போவதற்கு தடைபண்ணக்கூடாது. ஆனால் யோவான்ஸ்நானனுடைய சீஷருக்கு அவனுடைய ஊழியத்தின் அஸ்திபாரமோ, ஆதாரமோ, சாரமோ தெரியவில்லை.

### யோவான்ஸ்நானனுடைய சாட்சி யோவா 3 : 26-30

**யோவா 3:26. அவர்கள் யோவானிடத்தில் வந்து: ரபீ, உம்முடனேகூட யோர்தானுக்கு அக்கரையில் ஒருவர் இருந்தாரே; அவரைக் குறித்து நீரும் சாட்சிகொடுத்தீரே, இதோ, அவர் ஞானஸ்நானங்கொடுக்கிறார், எல்லாரும் அவரிடத்தில் போகிறார்கள் என்றார்கள்.**

**யோவா 3:27. யோவான் பிரதியுத்தரமாக: பரலோகத்திலிருந்து ஒருவனுக்குக் கொடுக்கப் பட்டாலொழிய, அவன் ஒன்றையும் பெற்றுக் கொள்ளமாட்டான்.**

**யோவா 3:28. நான் கிறிஸ்துவல்ல, அவருக்கு முன்னாக அனுப்பப்பட்டவன் என்று நான் சொன்னதற்கு நீங்களே சாட்சிகள்.**

**யோவா 3:29. மணவாட்டியை உடையவனே மணவாளன்; மணவாளனுடைய தோழனோ, அருகே நின்று, அவனுடைய சொல்லைக் கேட்கிறவனாய் மணவாளனுடைய சத்தத்தைக்குறித்து மிகவும் சந்தோஷப்படுகிறான்; இந்தச் சந்தோஷம் இப்பொழுது எனக்குச் சம்பூரணமாயிற்று.**

**யோவா 3:30. அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்.**

**யோவான்ஸ்நானன் தன்னைப்பற்றி கூறுவது**

**அவர்கள் யோவானிடத்தில் வந்து: ரபீ, உம்முடனேகூட யோர்தானுக்கு அக்கரையில் ஒருவர் இருந்தாரே; அவரைக் குறித்து நீரும் சாட்சிகொடுத்தீரே, இதோ, அவர் ஞானஸ்நானங்கொடுக்கிறார், எல்லாரும் அவரிடத்தில் போகிறார்கள் என்றார்கள் (யோவா 3:26).**

யோவான்ஸ்நானனுடைய சீஷரில் சிலர் இயேசுவைக்குறித்தும் அவர் கொடுக்கும் ஞானஸ்நானத்தைக் குறித்தும் யோவானிடம் முறையிடுகிறார்கள். "ரபீ, உம்முடனேகூட இருந்தாரே அவர் ஞானஸ்நானம் கொடுக்கிறார். எல்லாரும் அவரிடத்தில் போகிறார்கள்" என்று யோவானிடத்தில் கூறுகிறார்கள். யோவான்ஸ்நானன் ஞானஸ்நானம் கொடுப்பதுபோல இயேசுகிறிஸ்து ஞானஸ்நானம் கொடுக்காமல், வித்தியாசமாக கொடுத்திருப்பதற்கு வாய்ப்புள்ளது என்று வேதபண்டிதர்களில் சிலர் இந்த வசனத்திற்கு வியாக்கியானம் கூறுகிறார்கள். யோவான்ஸ்நானன்தான் ஞானஸ்நானம் முறைமையை ஆரம்பித்து வைத்தவன் என்றும், ஆகையினால் யார் ஞானஸ்நானம் கொடுத்தாலும், யோவான்ஸ்நானனைப்போலவே, அவனுடைய முறைமையை பின்பற்றி ஞானஸ்நானம் கொடுக்கவேண்டுமென்றும், இவனுடைய சீஷர்களில் சிலர் எதிர்பார்த்திருக்கக் கூடுமென்று வேதபண்டிதர்கள் கூறுகிறார்கள்.

## அதிகாரம் - 3

"உம்முடனேகூட யோர்தானுக்கு அக்கரையில் ஒருவர் இருந்தாரே, அவர் ஞானஸ்நானம் கொடுக்கிறார்" என்று யோவானிடத்தில் அவனுடைய சீஷர்கள் கூறுகிறார்கள். இயேசுகிறிஸ்து ஞானஸ்நானம் கொடுப்பதினால் யோவான்ஸ்நானனுடைய பேருக்கும் புகழுக்கும் களங்கம் உண்டானதுபோல இந்த சீஷர்கள் நினைக்கிறார்கள். ஏனெனில் யோவான்ஸ்நானன் யாரைக்குறித்து சாட்சி கொடுத்தாரோ, அவர் இப்போது ஞானஸ்நானம் கொடுக்கிறார் என்று யோவானுடைய சீஷர்கள் வருத்தப்படுகிறார்கள். இயேசுகிறிஸ்து ஞானஸ்நானம் கொடுப்பதினால் வரக்கூடிய பேரும் புகழும் யோவானையே சேரவேண்டுமென்பது இவர்களுடைய எதிர்பார்ப்பு.

இயேசுகிறிஸ்துவைக்குறித்து யோவான் சாட்சி கொடுத்ததினால், இயேசு யோவானுக்கு நன்றியுள்ளவராக இருக்க வேண்டுமென்று அவனுடைய சீஷர்கள் எதிர்பார்க்கிறார்கள். இயேசுகிறிஸ்துவுக்கு யோவானுடைய சாட்சி அவசியமில்லை. "யோவானுடைய சாட்சியைப்பார்க்கிலும் மேன்மையான சாட்சி எனக்கு உண்டு; அதென்னவெனில், நான் நிறைவேற்றும்படிக்குப் பிதாவானவர் எனக்குக் கற்பித்ததும் நான் செய்துவருகிறதுமான கிரியைகளே பிதா என்னை அனுப்பினார் என்று என்னைக்குறித்துச் சாட்சி கொடுக்கிறது. என்னை அனுப்பின பிதா தாமே என்னைக்குறித்துச் சாட்சி கொடுத்திருக்கிறார்" (யோவா 5:36,37) என்று இயேசு கூறுகிறார்.

யோவான்ஸ்நானன் மூலமாக இயேசுகிறிஸ்து பெற்றுக்கொண்ட கனமகிமையைவிட, யோவான்ஸ்நானன் இயேசுகிறிஸ்துவிடமிருந்து பெற்றுக்கொண்ட மரியாதை அதிகமாகும். இயேசுகிறிஸ்து யோவானைக்குறித்து நல்ல சாட்சி கொடுத்திருக்கிறார். அவன் எரிந்து பிரகாசிக்கிற விளக்காக இருந்தானென்று அவனைப்பற்றி புகழ்ந்து கூறியிருக்கிறார். இயேசுகிறிஸ்துவைக் குறித்து சாட்சி பகருவதில் யோவான் உண்மையுள்ளவனாக இருக்கிறான். இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தினால் யோவான்ஸ்நானனுடைய ஊழியம் குறைந்து போய்விடவில்லை.

இயேசுகிறிஸ்து அவரைக்குறித்து நல்ல சாட்சி கொடுத்ததினால், மெய்யாகவே யோவான்ஸ்நானனுடைய ஊழியம் சிறப்பு மிகுந்ததாயிற்று. ஆனால் யோவானுடைய சீஷர்களோ அப்படி நினைக்கவில்லை. "எல்லாரும் இயேசுவிடத்தில் போகிறார்கள்" என்று யோவானிடம் முறையிடுகிறார்கள்.

ஊழியக்காரர்களில் அநேகர் தங்களுக்கு மதிப்பும் மரியாதையும், பெருமையும் இருப்பதாக நினைக்கிறார்கள். எல்லா மரியாதையும் தங்களுக்கே கொடுக்கப்பட வேண்டும் என்று பேராசைப்படுகிறார்கள். ஜனங்கள் தங்களைத் தவிர வேறு யாரையும் உயர்வாக பேசக்கூடாது என்று ஊழியக்காரர்களில் சிலர் எதிர்பார்க்கிறார்கள். இந்தப் பிரச்சனை சபை வரலாற்றில் பல காலமாக தொடர்ந்து வருகிறது. கிறிஸ்துவின் ஊழியர்களுக்குள்ளும், விசுவாசிகளுக்குள்ளும் இதுபோன்று பெருமை வரக்கூடாது. அழிவுக்கு முன்னானது பெருமை.

இயேசுகிறிஸ்துவிடத்தில் எல்லா ஜனங்களும் போவதினால், யோவான்ஸ்நானனுடைய ஊழியம் மங்கிப்போகும் என்று அவனுடைய சீஷர்கள் தவறாக நினைக்கிறார்கள். இந்த விஷயத்தில் கர்த்தருடைய ஊழியக்காரர்கள் மிகுந்த எச்சரிப்போடு இருக்கவேண்டும். நம்மைவிட மற்றவர்களிடத்தில் அதிகமான வரங்களும், தாலந்துகளும், தேவகிருபையும் இருப்பதினால் நம்முடைய ஊழியம் மங்கிப்போகும் என்று நினைக்கக்கூடாது. மற்றவர்களுடைய பெரிய ஊழியங்களை நம்முடைய சிறிய ஊழியத்தோடு ஒப்பிட்டுப் பார்த்து சோர்வடைந்து விடக்கூடாது.

தேவன் ஒவ்வொருவருக்கும் தம்முடைய சித்தத்தின்படி தமது கிருபைகளையும் வரங்களையும் கொடுத்திருக்கிறார். நமக்கு எவ்வளவு கொடுக்கவேண்டுமென்று அவர் தீர்மானம் பண்ணியிருக்கிறாரோ, அந்த அளவில் குறைவில்லாமல் நிச்சயமாகவே நமக்குக் கொடுப்பார். தேவன் நமக்குக் கொடுக்கும் தாலந்துகளை அவருடைய நாம மகிமைக்காக உண்மையான இருதயத்தோடு பயன்படுத்த வேண்டும். நம்மை எப்படிப்பட்ட கருவியாக பயன்படுத்த வேண்டுமென்று தேவனுக்குத் தெரியும்.

## அதிகாரம் - 3

தேவனுடைய சித்தத்தை அறிந்துகொண்டு அதற்கு கீழ்ப்படிந்து, அதன்பிரகாரமாக நாம் ஊழியம் செய்யவேண்டும். தேவனுக்கு நாம் கட்டளையிடக்கூடாது. தீர்மானம்பண்ணுகிற பொறுப்பை தேவனிடத்தில் ஒப்புக்கொடுத்துவிட்டு, அவருடைய பாதபடியில் மனத்தாழ்மையோடு அமர்ந்திருந்து, நம்மைக் குறித்த அவருடைய சித்தத்தைத் தெரிந்துகொண்டு, அதன் பிரகாரம் ஊழியம் செய்யவேண்டும். தேவன் தமக்குப் பிரியமான பிரகாரம் தம்முடைய பாத்திரங்களை பயன்படுத்துகிறார். உயர்த்துகிறார். கனப்படுத்துகிறார்.

**பரலோகத்திலிருந்து**

**யோவான் பிரதியுத்தரமாக: பரலோகத்திலிருந்து ஒருவனுக்குக் கொடுக்கப் பட்டாலொழிய, அவன் ஒன்றையும் பெற்றுக் கொள்ளமாட்டான் (யோவா 3:27).**

தன்னுடைய சீஷர்கள் தன்னிடத்தில் இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தைக்குறித்து முறையிட்டது யோவான்ஸ்நானனை எந்தவிதத்திலும் பாதிக்கவில்லை. தான் நினைப்பதும், எதிர்பார்ப்பதும் நடைபெறுவதற்காக யோவான் சந்தோஷப்படுகிறான். ஆகையினால் தன்னுடைய சீஷர்களை இதற்கு மேல் முறையிடவிடாமல் அவர்களுக்கு உடனடியாக பிரதியுத்தரம் கூறுகிறான். இயேசுகிறிஸ்துவைக்குறித்து தன்னுடைய மனதில் தான் நினைப்பதையும், அவரைக்குறித்து தான் ஏற்கெனவே சாட்சி கொடுத்ததையும் அவர்களிடத்தில் மறுபடியுமாக உறுதிபண்ணுகிறான். யோவான்ஸ்நானன் ஒருபோதும் தன்னை இயேசுகிறிஸ்துவைவிட உயர்த்தியதில்லை. அவர் பெருகவும் தான் சிறுகவும் வேண்டும் என்பதுதான் யோவான்ஸ்நானனுடைய உள்ளத்தின் வாஞ்சை.

தன்னை இயேசுகிறிஸ்துவோடு ஒப்பிட்டு யோவான்ஸ்நானன் தன்னை வெகுவாக தாழ்த்துகிறான். பரலோகத்திலிருந்து ஒருவனுக்குக் கொடுக்கப்பட்டாலொழிய அவன் ஒன்றையும் பெற்றுக்கொள்ளமாட்டான் என்று சாட்சியாக அறிவிக்கிறான். தேவனுடைய தெய்வீக சித்தத்திற்கு யோவான்ஸ்நானன் தன்னை ஒப்புக்கொடுக்கிறான். தேவனுடைய தெய்வீக ஆதீனத்தின் பிரகாரம், தம்முடைய ஊழியக்காரர்களுக்கு தேவன் தமது சித்தத்தின் பிரகாரம் ஊழியங்களை பிரித்துக்கொடுக்கிறார். தேவனுடைய தெய்வீக கிருபையானது அவருடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரம் மனுஷருக்குக் கொடுக்கப்படுகிறது.

நம்மைவிட மற்றவர்களுக்கு மேன்மையான வரங்களும் கிருபைகளும் கொடுக்கப்பட்டிருப்பதைப் பார்க்கும்போது, அவர்களைப் பார்த்து நாம் பொறாமைப்படக்கூடாது. மற்றவர்கள் நம்மைவிட அதிகமாக ஊழியம் செய்தாலோ, அல்லது பல தேசங்களுக்கும் பிரயாணம் செய்து உலகம் முழுவதும் சென்று ஊழியம் செய்தாலோ அவர்களைப் பார்த்து நாம் பொறாமைப்படக்கூடாது. தேவன் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக தம்முடைய ஊழியக்காரர்களை பயன்படுத்துகிறார் என்னும் சிந்தனை நம்முடைய உள்ளத்தில் இருக்கவேண்டும்.

இயேசு கிறிஸ்துவுக்கு பரலோகத்திலிருந்து இந்த மேன்மை கொடுக்கப்பட்டிருக்கிறது. அவருக்கு அங்கிருந்து கொடுக்கப்படவில்லையென்றால் அவர் ஒன்றையும் பெற்றுக்கொள்ளமாட்டார் என்று யோவான் தன் சீஷருக்கு நினைவுபடுத்துகிறான். தேவன் அவருக்கு தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார் (யோவா 3:34) என்று இயேசுகிறிஸ்துவைக் குறித்து யோவான் சாட்சி கூறுகிறான். தேவன் இயேசுகிறிஸ்துவுக்கு தமது ஆவியை அளவில்லாமல் கொடுக்கும்போது, அதைப் பார்த்து பொறாமைப்படுவதற்கோ, வருத்தப்படுவதற்கோ, சோர்வடைவதற்கோ தனக்கு எந்தவித உரிமையுமில்லையென்று யோவான்ஸ்நானன் தன்னுடைய சீஷரிடத்தில் கூறுகிறான்.

## அதிகாரம் - 3

போதுமென்ற பக்தியே மிகுந்த ஆதாயம். நம்மைவிட மற்றவர்களுக்கு தேவன் அதிக வரங்களைக் கொடுக்கும் போது, தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் வரங்கள் போதுமானது என்னும் திருப்தியான எண்ணம் நமக்குள் இருக்கவேண்டும். தேவன் மற்றவர்களை அதிக வல்லமையாக பயன்படுத்தும்போது, அவர் நம்மை இம்மட்டுமாக பயன்படுத்துவதற்காக நாம் திருப்தியடைய வேண்டும். பெரிய ஊழியங்களின் பார்வையில் நம்முடைய சிறிய ஊழியம் மங்கிப்போனாலும், தேவனுக்கு மறைவானது ஒன்றுமில்லை. நாம் மங்கியெறிந்தாலும், நம்முடைய திரியை தேவன் ஒருபோதும் அணைத்துவிடமாட்டார்.

ஜனங்களெல்லாரும் இயேசு கிறிஸ்துவினிடத்தில் போவதற்கு தேவனுடைய கிருபையே காரணம் என்பதை யோவான்ஸ்நானன் தெளிவுபடுத்துகிறான். தேவன் தமது கிருபையையும் ஆவியையும் இயேசுவுக்கு அளவில்லாமல் கொடுத்திருப்பதினால், ஜனங்கள் அவரை அதிகமாக நேசிக்கிறார்கள். ஜனங்களெல்லோரும் அவரிடத்தில் போகிறார்கள் என்று யோவான்ஸ்நானன் சாட்சியாக கூறுகிறான்.

இதுவரையிலும் தன்னிடத்தில் வந்த ஜனங்கள் இப்போது இயேசுவினிடத்தில் போகும்போது, தன்னுடைய ஊழியம் மங்கிப்போனாலும், தேவனுடைய சித்தம் நிறைவேறுகிறது என்று யோவான் உறுதியோடிருக்கிறான். தன்னுடைய ஊழியத்தை தேவனே ஆரம்பித்து வைத்தவர் என்றும், ஏற்றவேளை வரும்போது தன்னுடைய ஊழியத்தை அவரே முடித்து வைக்கிறவர் என்றும் யோவான் விசுவாசிக்கிறான். ஆகையினால் இதுவரையிலும் தன்னிடத்தில் வந்த ஜனங்கள், இப்போது இயேசுவினிடத்தில் போவதைப் பார்க்கும்போது, தன்னுடைய ஊழியம் முடிந்துவிட்டது என்று யோவான் பூரண திருப்தியோடிருக்கிறான்.

**நான் கிறிஸ்துவல்ல**

**நான் கிறிஸ்துவல்ல, அவருக்கு முன்னாக அனுப்பப்பட்டவன் என்று நான் சொன்னதற்கு நீங்களே சாட்சிகள் (யோவா 3:28).**

இயேசுகிறிஸ்துவைக்குறித்து தான் ஏற்கெனவே கூறிய சாட்சிக்கு தன்னுடைய சீஷர்கள் தனக்கு சாட்சி கூறவேண்டுமென்று யோவான்ஸ்நானன் எதிர்பார்க்கிறான். "நான் கிறிஸ்துவல்ல, அவருக்கு முன்னாக அனுப்பப்பட்டவன்" என்று யோவான் தன்னுடைய சீஷர்களிடம் ஏற்கெனவே பலமுறை சொல்லியிருக்கிறான். பிரதான ஆசாரியர்கள் தன்னுடைய ஊழியத்தைப்பற்றி பலவிதமான கேள்விகளை கேட்டபோதிலும் யோவான் தன்னைக் கிறிஸ்து என்று கூறவில்லை. அதுபோலவே தன்னுடைய சீஷர்கள் தன்னைப்பற்றி பெருமையாக நினைத்தபோது கூட, யோவான் தன்னை கிறிஸ்து என்று கூறி பெருமைப்படவில்லை. யோவான்ஸ்நானனுடைய நிலமையில் ஒருபோதும் மாற்றம் உண்டாகவில்லை.

இயேசுகிறிஸ்துவைப்பற்றி சாட்சி கூறும்போது, யோவான்ஸ்நானன் தன்னுடைய உள்ளத்தில் உள்ளதை வெளிப்படையாக கூறுகிறான். எல்லோரும் இயேசுகிறிஸ்துவிடத்தில் போகிறார்களே என்று தன்னுடைய சீஷர்கள் வருத்தப்பட்டபோதுகூட, யோவான் தன்னை உயர்த்துவதற்கு எந்தவித முயற்சியும் மேற்கொள்ளவில்லை. தான் கிறிஸ்துவல்ல என்று ஏற்கெனவே கூறியதற்கு தன்னுடைய சீஷர்களையே சாட்சியாக ஏற்படுத்துகிறான். இயேசுகிறிஸ்துவுக்கு முன்னாக, அவருக்கு பாதையை செவ்வைபண்ணும்படி தான் அனுப்பப்பட்டவன் என்று தான் ஏற்கெனவே கூறியதை தன்னுடைய சீஷரிடம் மறுபடியும் நினைவுபடுத்துகிறான்.

இயேசுகிறிஸ்துவுக்கு வழியை ஆயத்தம்பண்ண தான் வந்திருப்பதினால், அவருடைய பாதையில் யோவான்ஸ்நானன் ஒருபோதும் தடையாக குறுக்கே நிற்க விரும்பவில்லை. தன்னுடைய சீஷர்களில் அநேகர் இயேசுகிறிஸ்துவிடத்தில் போனபோது யோவான்ஸ்நானன் அதைக்குறித்து வருத்தப்படவில்லை. இயேசுவிடத்தில் போனவர்களை கண்டிக்கவில்லை. அதற்கு மாறாக, இயேசுகிறிஸ்துவிடத்தில் ஜனங்களை வழிநடத்துவதற்காகவே, தான் அவருக்கு முன்னாக அனுப்பப்பட்டதாக சாட்சி கொடுக்கிறான்.

## அதிகாரம் - 3

இயேசுகிறிஸ்துவைப்பற்றி கூறும்போது யோவான்ஸ்நானனுடைய இருதயத்தில் ஒரு சமாதானம் உண்டாயிற்று. ஏனெனில் இவன் ஒருபோதும் இயேசுகிறிஸ்துவுக்கு போட்டியாக எந்தக் காரியத்தையும் இதுவரையிலும் செய்யவில்லை. தன்னுடைய சீஷரிடத்தில் யோவான்ஸ்நானன் தன்னைப்பற்றி பெருமையாகவோ, அல்லது இயேசுகிறிஸ்துவைப்பற்றி சிறுமையாகவோ இதுவரையிலும் பேசவில்லை. இயேசுகிறிஸ்து பெருகவும் தான் சிறுகவும் வேண்டும் என்பதுதான் யோவான்ஸ்நானனுடைய விருப்பம். ஆனால் யோவான்ஸ்நானனுடைய சீஷர்களிடத்திலோ மாறுபாடான குணம் இருக்கிறது. இயேசுகிறிஸ்துவிடத்தில் எல்லா ஜனங்களும் போகும்போது யோவானுடைய சீஷர்கள் அவனுடைய ஊழியம் குறைவுபடுவதற்காக வருத்தப்படுகிறார்கள். இயேசுவின்மீது பொறாமைப்படுகிறார்கள். தன்னுடைய சீஷர்களின் தவறை யோவான்ஸ்நானன் எச்சரித்துத் திருத்துகிறான்.

யூதர்கள் எதிர்பார்க்கிற மேசியா தானே என்று யோவான் ஒருபோதும் தன்னுடைய சீஷர்களிடத்தில் கூறியதில்லை. இவ்வாறு கூறுவதற்குப் பதிலாக, தான் கிறிஸ்துவல்ல என்றும், இயேசுவே கிறிஸ்து என்றும் அறிவிக்கிறான். இக்காலத்து ஊழியர்களில் யோவான்ஸ்நானனைப்போல தங்களைத் தாங்களே தாழ்த்தும் ஊழியக்காரர்களை பார்ப்பது மிகவும் அரிதாகயிருக்கிறது. ஜனங்கள் தங்களை கனப்படுத்தினால் தாங்கள் என்ன செய்யமுடியுமென்று ஊழியக்காரர்கள் சாக்குப்போக்கு சொல்கிறார்கள். இவர்கள் ஜனங்களை வஞ்சிக்கிறவர்கள். தேவனுக்கு கொடுக்கவேண்டிய மகிமையில் தாங்களும் ஒரு பங்கை பெற்று, அந்த மகிமையை சந்தோஷமாக அனுபவிக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள்.

நாம் கர்த்தருக்காக ஊழியம் செய்யும்போது, நம்முடைய உண்மையான நிலைமைக்கு அதிகமாக யாராவது நம்மை உயர்த்திப் பேசினாலோ, அல்லது புகழ்ந்து பேசினாலோ, அந்த புகழ்ச்சியையும் உயர்வையும் நாம் அங்கீகரிக்கக்கூடாது. நமக்கு அவற்றை உரியதாக ஏற்றுக்கொள்ளக்கூடாது. நம்மைப் பெருமைக்குப் பாத்திரவான்களாக எண்ணக்கூடாது. நாம் பெருமையை நாடினால் நமக்கு அழிவு நிச்சயம். ஜனங்கள் ஏமாறக் கூடியவர்களாக இருக்கிறார்கள் என்பதற்காக அவர்களை ஏமாற்றும் ஊழியத்தை செய்யக்கூடாது.

### மணவாளனுடைய தோழன்

**மணவாட்டியை உடையவனே மணவாளன்; மணவாளனுடைய தோழனோ, அருகே நின்று, அவனுடைய சொல்லைக் கேட்கிறவனாய் மணவாளனுடைய சத்தத்தைக்குறித்து மிகவும் சந்தோஷப்படுகிறான்; இந்தச் சந்தோஷம் இப்பொழுது எனக்குச் சம்பூரணமாயிற்று (யோவா 3:29).**

இயேசுகிறிஸ்துவின் ஊழியம் வளர்ச்சி பெறுவதற்காக யோவான்ஸ்நானன் சந்தோஷப்படுகிறான். தன்னுடைய சீஷர்களெல்லோரும் இயேசுகிறிஸ்துவிடத்தில் போவதற்காக யோவான்ஸ்நானன் மிகுந்த திருப்தியடைகிறான். தன்னுடைய சந்தோஷத்தை ஒரு உவமையினால் யோவான் இங்கு விளக்குகிறான். இயேசுகிறிஸ்துவை மணவாளனாகவும், தன்னை மணவாளனுடைய தோழனாகவும் பாவித்து தன்னுடைய சந்தோஷத்தை விவரிக்கிறான். மணவாட்டியை உடையவனே மணவாளன். எல்லோரும் மணவாளனிடத்தில் வருவது இயல்பு. இயேசுகிறிஸ்து மணவாளனாக இருப்பதினால் எல்லோரும் அவரிடத்தில் போகிறார்கள். இது சரியானதே என்றும், இதனால் தன்னுடைய சந்தோஷம் சம்பூரணமாயிற்று என்றும் கூறுகிறான்.

ஆத்துமாக்கள் விசுவாசத்தினாலும் அன்பினாலும் இயேசுகிறிஸ்துவிடம் தங்களை ஒப்புக்கொடுக்கிறார்கள். இந்த ஆத்துமாக்களே இயேசுகிறிஸ்துவின் மணவாட்டியாக இருக்கிறார்கள். யோவான்ஸ்நானன் தன்னை மணவாளனுடைய தோழனாக பாவிக்கிறான். மணவாளனுக்கு மணவாட்டியை தேர்ந்தெடுப்பதற்கு இந்த தோழன் உதவிபுரிவான். மணவாளனைப்பற்றி மணவாட்டியிடம் உயர்வாக பேசுவான். மணவாளனுக்கு மணவாட்டி கிடைக்கும்போது மணவாளனுடைய தோழனுக்கு மிகுந்த சந்தோஷம் உண்டாகும். அப்படிப்பட்ட சந்தோஷம் இப்போது தனக்கு உண்டாயிருப்பதாகவும், அந்த சந்தோஷம் பரிபூரணமாக இருப்பதாகவும் யோவான்ஸ்நானன் விவரிக்கிறான்.

## அதிகாரம் - 3

இயேசுகிறிஸ்துவுக்காக உண்மையோடு ஊழியம் செய்கிறவர்கள் மணவாளனுடைய தோழர்களாக இருக்கிறார்கள். மனுஷர் மத்தியிலே மணவாளனாகிய இயேசுகிறிஸ்துவைப்பற்றி உயர்வாக பேசுகிறார்கள். மணவாளனை அறிமுகம் செய்து வைக்கிறார்கள். மணவாளனிடத்திலிருந்து கடிதங்களையும் செய்திகளையும் கொண்டு வந்து கொடுக்கிறார்கள். பொதுவாக இவர்கள் மணவாளனுடைய சார்பில், மணவாளனுக்காக செயல்படுகிறார்கள்.

மணவாளனுடைய தோழர்கள் அவருக்கு அருகே நின்று அவருடைய சொல்லை கேட்கிறவர்களாய் இருக்கவேண்டும். அவரிடத்திலிருந்து கட்டளைகளைப் பெற்றுக்கொண்டு அவற்றை சந்தோஷமாக நிறைவேற்ற வேண்டும். மணவாளனுடைய தோழர்களாகிய ஊழியக்காரர்கள் ஆத்துமாக்களை விசுவாசத்தினாலும் அன்பினாலும் இயேசுகிறிஸ்துவிடத்தில் அழைத்து வருகிறார்கள். இயேசுகிறிஸ்துவே விசுவாசிகளுக்கு மணவாளனாக இருக்கிறார். மணவாளனுடைய தோழன் அவருக்கு அருகே நின்று, அவருடைய சொல்லை கேட்கும்போது, அவருடைய சத்தத்தைக் குறித்து மிகவும் சந்தோஷப்படுகிறான். இந்த தோழனைப் போலவே கர்த்தருடைய ஊழியக்காரர்களும், அவர் தங்களுக்குக் கொடுத்திருக்கும் ஊழியத்தை சந்தோஷமாக செய்ய வேண்டும். இந்த சந்தோஷம் பரிபூரணமான சந்தோஷமாகயிருக்கும்.

**அவர் பெருகவும் நான் சிறுகவும்**

**அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும் (யோவா 3:30).**

இயேசுகிறிஸ்துவின் பேரும், புகழும், ஊழியமும் பெருகவேண்டுமென்றும், அதே வேளையில் தன்னுடைய பேரும் புகழும் ஊழியமும் சிறுகவேண்டுமென்றும் யோவான்ஸ்நானன் விரும்புகிறான். இயேசுகிறிஸ்து பெருகுவதும் தான் சிறுகுவதும் நீதியானது என்றும், அங்கீகரிக்கப்படத்தக்கது என்றும் அறிவிக்கிறான். இதனால் தனக்கு பூரண திருப்தி உண்டாயிருப்பதாகவும், பூரண சந்தோஷம் உண்டாயிருப்பதாகவும் அறிவிக்கிறான். இயேசுகிறிஸ்துவின் ராஜ்யம் இந்த பூமியிலே ஸ்தாபிக்கப்படுவதைக் காணும்போது யோவான்ஸ்நானனுடைய சந்தோஷம் பரிபூரணமாயிற்று.

இயேசுகிறிஸ்துவின் ராஜ்யம் எப்போதுமே வளரும் ராஜ்யமாக இருக்கிறது. அதிகாலை வேளையில் சூரியனின் வெளிச்சம் குறைவாக இருந்து, மதியவேளையில் அந்த வெளிச்சம் அதிகரிப்பதுபோல தேவனுடைய ராஜ்யமும் அதிகரிக்கும். ஒரு கடுகுவிதையானது விதைக்கப்படும்போது அளவில் சிறியதாக இருந்தாலும், அது பெரிய மரமாக வளர்வதுபோல தேவனுடைய ராஜ்யமும் வளர்ந்து பெருகும். தன்னுடைய ஊழியம் வளர்ச்சி பெறாமல் குறைவதற்காக யோவான்ஸ்நானன் வருத்தப்படவில்லை. இயேசுகிறிஸ்து பெருகவேண்டும் என்பதும், தான் சிறுக வேண்டுமென்பதும் யோவான்ஸ்நானனுடைய விருப்பம்.

இயேசுகிறிஸ்துவின் மகிமைப் பிரகாசம் வெளிப்படும்போது மற்ற எல்லா மகிமைகளும் அவருடைய மகிமைக்கு முன்பாக மங்கிப்போகும். அதிகாலை வேளையில் சூரியனின் வெளிச்சம் தோன்றும்போது, விடிவெள்ளி நட்சத்திரத்தின் வெளிச்சம் மங்கிப்போவதுபோல, நீதியின் சூரியனாகிய இயேசுகிறிஸ்துவின் வெளிச்சத்திற்கு முன்பாக நட்சத்திரங்களாக இருக்கும் மற்ற வெளிச்சங்கள் எல்லாமே மங்கிப்போகும். தேவனுடைய சமுகத்தில் நாம் எப்படியிருந்தாலும் அதற்காக அவரைத் துதித்து நம்முடைய நிலமையில் திருப்தியடைய வேண்டும். நாம் ஒன்றுமில்லாமல் போனாலும், கிறிஸ்து நமக்கு எல்லாமாக இருப்பதற்காக நாம் சந்தோஷப்பட வேண்டும். இயேசுகிறிஸ்துவே எல்லாவற்றிற்கும் எல்லாமாக இருக்கிறவர். இதையெல்லாம் உணர்ந்துதான் யோவான்ஸ்நானன் "இயேசுகிறிஸ்து பெருகவும் தான் சிறுகவும் வேண்டுமென்று" கூறுகிறான்.

## அதிகாரம் - 3

**கிறிஸ்துவைப்பற்றிய சாட்சி**
**யோவா 3 : 31-36**

**யோவா 3:31. உன்னதத்திலிருந்து வருகிறவர் எல்லாரிலும் மேலானவர்; பூமியிலிருந்துண்டானவன் பூமியின் தன்மையுள்ளவனாயிருந்து, பூமிக்கடுத்தவைகளைப் பேசுகிறான்; பரலோகத்திலிருந்து வருகிறவர் எல்லாரிலும் மேலானவர்.**

**யோவா 3:32. தாம் கண்டதையும் கேட்டதையும் சாட்சியாகச் சொல்லுகிறார்; அவருடைய சாட்சியை ஒருவனும் ஏற்றுக் கொள்ளுகிறதில்லை.**

**யோவா 3:33. அவருடைய சாட்சியை ஏற்றுக் கொள்ளுகிறவன் தேவன் சத்தியமுள்ளவரென்று முத்திரைபோட்டு நிச்சயப்படுத்துகிறான்.**

**யோவா 3:34. தேவனால் அனுப்பப்பட்டவர் தேவனுடைய வார்த்தைகளைப் பேசுகிறார்; தேவன் அவருக்குத் தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார்.**

**யோவா 3:35. பிதாவானவர் குமாரனில் அன்பாயிருந்து எல்லாவற்றையும் அவர் கையில் ஒப்புக் கொடுத்திருக்கிறார்.**

**யோவா 3:36. குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை; தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும் என்றான்.**

**உன்னதத்திலிருந்து வருகிறவர்**

**உன்னதத்திலிருந்து வருகிறவர் எல்லாரிலும் மேலானவர்; பூமியிலிருந் துண்டானவன் பூமியின் தன்மையுள்ளவனாயிருந்து, பூமிக்கடுத்தவைகளைப் பேசுகிறான்; பரலோகத்திலிருந்து வருகிறவர் எல்லாரிலும் மேலானவர் (யோவா 3:31).**

யோவான்ஸ்நானன் தன்னுடைய சீஷர்களிடத்தில் இயேசுகிறிஸ்துவைப்பற்றி மிகவும் உயர்வாக பேசுகிறான். அவருடைய தெய்வத்துவ பண்பைக்குறித்து அவர்களிடத்தில் அறிவிக்கிறான். உன்னதத்திலிருந்து வருகிறவர் எல்லாரிலும் மேலானவர். இயேசுகிறிஸ்து தெய்வத்துப் பண்பில் இருக்கிறபடியினால் அவர் உன்னதத்திலிருந்து வந்திருக்கிறவர். உன்னதம் என்பது பரலோகத்தைக் குறிக்கும் வார்த்தையாகும். இயேசுகிறிஸ்து மாத்திரமே பரலோகத்திலிருந்து வந்திருக்கிறார். ஆகையினால் அவரால் மாத்திரமே பரலோகத்தின் சித்தத்தையும், பரலோகத்திற்குப் போகும் வழியையும் நமக்குக் காண்பிக்க முடியும்.

இயேசுகிறிஸ்து சர்வ அதிகாரமுடையவர். அவர் எல்லாரிலும் மேலானவர். இயேசுகிறிஸ்து எல்லா காரியங்களுக்கும், எல்லா ஜனங்களுக்கும் மேலானவராக இருக்கிறார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மகிமையைப்பற்றி நாம் பேசும்போது "அவர் எல்லாரிலும் மேலானவர்" என்று கூறவேண்டும். அவரை மேலானவர் என்று நாம் அறிவிக்கும்போது, நம்மை நாமே தாழ்த்துகிறோம். இந்த உலகத்தில் இயேசுகிறிஸ்துவுக்கு பல சத்துருக்கள் இருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவை உயர்த்தும்போது அவருடைய சத்துருக்கள் தாழ்த்தப்படுவார்கள்.

பூமியிலிருந்து உண்டானவன் பூமியின் தன்மை உள்ளவனாக இருக்கிறான். இவன் பூமிக்கடுத்தவைகளைப் பேசுகிறான். இவன் பூமிக்குரிய காரியங்களைப்பற்றி கரிசனையோடிருக்கிறான். தீர்க்கதரிசிகளும் அப்போஸ்தலர்களும் பூமிக்குரியவர்கள். இந்த உலகத்திலுள்ள மற்ற மனுஷர்களைப்போலவே இவர்களும் பூமியிலிருந்து உண்டானவர்கள். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் எல்லோரும் பூமியின் தன்மையுள்ள மண்பாத்திரங்களாகவே இருக்கிறார்கள். இந்த மண்பாத்திரங்களில்தான் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய மகிமையின் ஐசுவரியத்தை வைத்திருக்கிறார். இதைக்குறித்து மண்பாத்திரங்களாகிய நாம் பெருமைப்படுவதற்கு ஒன்றுமேயில்லை.

## அதிகாரம் - 3

இயேசுகிறிஸ்துவின் உபதேசம் மேன்மையானது. நிச்சயமானது. உறுதியானது. பூமியிலிருந்து உண்டானவன் பூமிக்கடுத்தவைகளைப் பேசுகிறான். பூமிக்குரிய காரியங்களை மாத்திரமே இவன் செய்வான். தீர்க்கதரிசிகள் எல்லோரும் பூமிக்குரிய மனுஷர்கள். இவர்களால் பூமிக்கடுத்தவைகளை மாத்திரமே பேசமுடியும். இயேசுகிறிஸ்துவோ பரலோகத்திலிருந்து வந்திருக்கிறவர். அவர் பரலோகத்திற்கடுத்தவைகளை பேசுகிறார். ஆகையினால் தீர்க்கதரிசிகளின் பிரசங்கமும், யோவான்ஸ்நானனுடைய பிரசங்கமும், இயேசுகிறிஸ்துவின் பிரசங்கத்தோடு ஒப்பிடப்படும்போது அது மிகவும் தாழ்ந்த நிலையிலேயே இருக்கும்.

பரலோகம் பூமியிலிருந்து மேலேயிருக்கிறது. இயேசுகிறிஸ்து பரலோகத்திலிருந்து வந்திருக்கிறவர். ஆகையினால் இவருடைய சிந்தனையும், பேச்சும், செயலும் பரலோகத்திற்குரிய மேன்மையுள்ளதாகவே இருக்கும். இந்த பூமியில் இதுவரையிலும் வாசம்பண்ணியிருக்கும் எல்லா தீர்க்கதரிசிகளுமே இந்த பூமியிலிருந்து உண்டானவர்கள். இவர்களெல்லோரையும்விட பரலோகத்திலிருந்து வந்திருக்கும் இயேசுகிறிஸ்துவானவர் மேலானவர். இவருடைய உபதேசமும் பூமிக்கடுத்தாக இராமல், பரலோகத்திற்கடுத்ததாக இருக்கும்.

### சாட்சியாக சொல்கிறார்

**தாம் கண்டதையும் கேட்டதையும் சாட்சியாகச் சொல்லுகிறார்; அவருடைய சாட்சியை ஒருவனும் ஏற்றுக் கொள்ளுகிறதில்லை (யோவா 3:32).**

இயேசுகிறிஸ்துவின் உபதேசம் பிழையற்றது. நிச்சயமுள்ளது. உறுதியானது. தாம் கண்டதையும் கேட்டதையும் இயேசுகிறிஸ்து சாட்சியாக சொல்கிறார். இயேசுகிறிஸ்து தெய்வீக ஞானமுள்ளவர். ஆகையினால் அவர் தாம் கண்டதையும் கேட்டதையும் மாத்திரமே சாட்சியாக கூறுகிறார். இயேசுகிறிஸ்து உபதேசம் பண்ணும் தெய்வீக சத்தியங்கள் அவர் கண்டவையாகும். இயேசுகிறிஸ்து வெளிப்படுத்தும் தேவனுடைய சிந்தை, தேவனிடத்திலிருந்து அவர் கேட்டவையாகும்.

தீர்க்கதரிசிகள் சொப்பனங்கள் மூலமாகவும், தரிசனங்கள் மூலமாகவும் தங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டதைக் குறித்து சாட்சியாக அறிவிக்கிறார்கள். இவர்கள் தாங்கள் கண்டதையும் கேட்டதையும் சாட்சியாக கூறுவதில்லை. இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் சந்தேகத்திற்குரியதல்ல. இது மனுஷரால் ஏற்படுத்தப்பட்ட ஒரு கொள்கையோ அல்லது ஒரு கோட்பாடோ அல்ல. சுவிசேஷத்தில் அறிவிக்கப்பட்டிருக்கும் சத்தியங்களை நிறைவேறுமா அல்லது நிறைவேறாதா என்று சோதித்துப் பார்க்கவேண்டிய அவசியமில்லை. இது மனுஷருடைய சிந்தனையினால் உண்டான தத்துவமுமல்ல. சுவிசேஷத்திலுள்ள ஒவ்வொரு வார்த்தையும் தேவனுடைய சிந்தையை வெளிப்படுத்தும் வெளிப்பாடாகும். ஆகையினால் சுவிசேஷம் நித்திய சத்தியமாக இருக்கிறது.

இயேசுகிறிஸ்து தம்முடைய தெய்வீக கிருபையையும் நன்மையையும் குறித்து சாட்சியாக சொல்கிறார். இயேசுகிறிஸ்துவின் பிரசங்கம் இந்த வசனத்தில் "சாட்சியாக சொல்வது" என்று எழுதப்பட்டிருக்கிறது. சாட்சி என்பதற்கு நிரூபிக்கப்பட்ட உண்மை என்று பொருள். இயேசுகிறிஸ்துவின் வார்த்தை பொய்ச்சாட்சியல்ல. அவருடைய வார்த்தை மெய்யானது. இயேசுகிறிஸ்துவின் சாட்சியை சோதித்துப் பார்த்து நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை. இது மனுஷருடைய கட்டுக்கதையல்ல. மனுஷருக்குப் பிரயோஜனப்படாத துர்உபதேசங்களை இயேசுகிறிஸ்து சாட்சியாக அறிவிக்கவில்லை. தம்முடைய சாட்சி மெய்யாக இருப்பதினால், இந்த சாட்சியை மனஉற்சாகத்தோடும், சந்தோஷத்தோடும் நமக்கு அறிவிக்கிறார்.

### தேவன் சத்தியமுள்ளவர்

**அவருடைய சாட்சியை ஏற்றுக் கொள்ளுகிறவன் தேவன் சத்தியமுள்ளவரென்று முத்திரைபோட்டு நிச்சயப்படுத்துகிறான் (யோவா 3:33).**

## அதிகாரம் - 3

இயேசுகிறிஸ்துவின் உபதேசம் சத்தியமானது. தாம் கண்டதையும் கேட்டதையும் மாத்திரமே அவர் சாட்சியாக சொல்கிறார். ஆயினும் அவருடைய சாட்சியை ஒருவனும் ஏற்றுக்கொள்கிறதில்லையென்று யோவான்ஸ்நானன் புலம்புகிறான். ஜனங்கள் இயேசுவின் உபதேசத்திற்கு செவிகொடுப்பதுமில்லை, அதை மதிப்பதுமில்லை, அதை ஏற்றுக்கொள்வதுமில்லை. இயேசுவின் உபதேசத்தை ஜனங்கள் ஏற்றுக்கொள்ளாமல் போவது யோவான்ஸ்நானனுக்கு ஆச்சரியமாகவும் வருத்தமாகவும் இருக்கிறது. எல்லோரும் இயேசுகிறிஸ்துவிடத்தில் போகிறார்கள் என்று யோவானுடைய சீஷர்கள் வருத்தப்பட்டார்கள் (யோவா 3:26). யோவானுடைய சீஷர்கள் அநேகர் என்று அவர்கள் நினைத்தார்கள். ஆனால் யோவான்ஸ்நானனோ இயேசு கிறிஸ்துவிடத்தில் ஒருவனும் போகவில்லையென்றும், அவருடைய சாட்சியை ஒருவனும் ஏற்றுக்கொள்கிறதில்லையென்றும் வருத்தப்படுகிறான். பாவிகளுடைய அவிசுவாசம் பரிசுத்தவான்களுக்கு மிகுந்த துக்கத்தைக் கொடுக்கிறது.

இயேசுகிறிஸ்துவின் சாட்சியை அநேகர் ஏற்றுக்கொள்ளாமல் போனாலும், அவருடைய சாட்சியை ஏற்றுக்கொள்கிறவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவருடைய சாட்சியை ஏற்றுக்கொள்கிறவன் தேவன் சத்தியமுள்ளவர் என்று முத்திரைபோட்டு நிச்சயப்படுத்துகிறான். தேவன் சத்தியமுள்ளவர். அவர் சத்தியமுள்ளவர் என்பதற்கு நாம் யாரும் முத்திரைபோட்டு நிச்சயப்படுத்த வேண்டிய அவசியம் எதுவுமில்லை. அவர் சத்தியமுள்ளவர் என்பதை நாம் நிச்சயப்படுத்தினாலும், நிச்சயப்படுத்தாமல் போனாலும் அவர் சத்தியமுள்ளவராகவே இருக்கிறார். நம்முடைய விசுவாசத்தினால் அவர் சத்தியமுள்ளவர் என்பதை உறுதிபண்ண வேண்டிய அவசியம் எதுவுமில்லை. என்றாலும் நம்முடைய விசுவாசத்தினால் அவர் சத்தியமுள்ளவர் என்பதை உணர்ந்து தேவனையும் அவருடைய நீதியையும் மகிமைப்படுத்துகிறோம்.

தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் ஆம் என்றும், ஆமென் என்றும் இருக்கிறது. நம்முடைய விசுவாசத்தினால் தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கு ஆமென் என்று கூறுகிறோம். நாம் இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதினால் தேவன் தம்முடைய வாக்குத்தத்தங்கள் அனைத்திற்கும் சத்தியமுள்ளவராக இருக்கிறார் என்பதை முத்திரையிடுகிறோம். இயேசுகிறிஸ்துவைக் குறித்து தேவன் முன்னறிவித்திருக்கும் வாக்குத்தத்தங்களெல்லாம் மெய்யாகவே நிறைவேறிற்று. கிறிஸ்துவில் தேவன் கொடுத்துள்ள வாக்குத்தத்தங்கள் எல்லாமே சத்தியமானவை. தேவன் சத்தியமுள்ளவர் என்னும் விசுவாசம் நம்மிடத்தில் இருக்கும்போது நம்முடைய பூரண நம்பிக்கையை அவர்மீது வைப்பதற்கு நாம் ஆயத்தமாக இருக்கிறோம்.

### தேவனால் அனுப்பப்பட்டவர்

**தேவனால் அனுப்பப்பட்டவர் தேவனுடைய வார்த்தைகளைப் பேசுகிறார்; தேவன் அவருக்குத் தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார் (யோவா 3:34).**

இயேசுகிறிஸ்துவின் உபதேசம் தெய்வீகமானது என்பதை யோவான்ஸ்நானன் சாட்சியாக அறிவிக்கிறான். தேவனால் அனுப்பப்பட்டவர் தேவனுடைய வார்த்தைகளைப் பேசுகிறார் என்றும், தேவன் அவருக்குத் தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார் என்றும் யோவான் சாட்சியாக கூறுகிறான். இயேசுகிறிஸ்து தேவனுடைய வார்த்தைகளைக் பேசுகிறார். இயேசுகிறிஸ்துவின் கருத்தும் வார்த்தையும் தெய்வீகமானது. இதனால் தாம் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் (யோவா 3:2) என்பதை இயேசுகிறிஸ்து உறுதிபண்ணுகிறார். இயேசுகிறிஸ்து தேவனிடத்திலிருந்து வந்த போதகராக இருக்கிறபடியினால், அவருடைய வார்த்தைகளை, தேவனுடைய வார்த்தைகளாக நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

## அதிகாரம் - 3

இதுவரையிலும் வேறு எந்த தீர்க்கதரிசியும் பேசியிருக்காத பிரகாரமாக இயேசுகிறிஸ்து தேவனுடைய வார்த்தைகளைப் பேசுகிறார். தேவன் அவருக்கு தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார். பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளும் தேவனுடைய ஆவியை பெற்றிருந்தார்கள். ஆனால் அவர்கள் ஒரு குறிப்பிட்ட அளவு மாத்திரமே பெற்றிருந்தார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவுக்கோ தேவன் தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார். ஒரு பாத்திரத்தில் தண்ணீர் இருப்பதுபோல தேவனுடைய ஆவியானவர் இயேசுகிறிஸ்துவிடத்தில் தங்கியிருக்கவில்லை. வற்றாத நீரூற்றிலிருந்து புறப்படும் நீரைப்போல, தேவஆவியானவர் இயேசுகிறிஸ்துவிடமிருந்து நிறைந்து வழிகிறார். ஆழும் காணமுடியாத சமுத்திரத்தைப்போல, தேவனுடைய ஆவியானவர் இயேசுகிறிஸ்துவினிடத்தில் அளவில்லாமல் தங்கியிருக்கிறார்.

**பிதாவானவர் குமாரனில் அன்பாயிருக்கிறார்**

**பிதாவானவர் குமாரனில் அன்பாயிருந்து எல்லாவற்றையும் அவர் கையில் ஒப்புக் கொடுத்திருக்கிறார் (யோவா 3:35).**

இயேசுகிறிஸ்துவின் தெய்வீக வல்லமையையும் அதிகாரத்தையும் குறித்து யோவான்ஸ்நானன் சாட்சியாக அறிவிக்கிறான். இயேசுகிறிஸ்து பிதாவானவரின் அன்பான குமாரன். பிதா குமாரனில் அன்பாயிருக்கிறார். பழைய ஏற்பாட்டுக்காலத்து தீர்க்கதரிசிகள் தேவனுடைய ஊழியக்காரர்களாக ஊழியம் செய்தார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ தேவனுடைய குமாரனாக இருக்கிறார். இயேசுகிறிஸ்து மனுஷ அவதாரம் எடுத்து இந்த பூமிக்கு வந்தபோது அவர் தாழ்மையையும், ஏழ்மையையும், அவமானத்தையும், பாடுகளையும், வேதனைகளையும் தம்மீது ஏற்றுக்கொண்டார். அந்த சூழ்நிலையில்கூட இயேசுகிறிஸ்துவின் மீது பிதாவின் அன்பு சிறிதும் குறைந்துபோய்விடவில்லை. ஏனெனில் இயேசுகிறிஸ்து எல்லாவற்றிற்கும் ஆண்டவராக இருக்கிறார். அவர் எல்லாரிலும் மேலானவர்.

பிதாவாகிய தேவன் எல்லாவற்றையும் தம்முடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் கையில் ஒப்புக்கொடுத்திருக்கிறார். பிதாவின் அன்புக்கு அளவில்லை. பிதாவின் அன்பு தாராளமாக இயேசுகிறிஸ்துவுக்கு கொடுக்கப்படுகிறது. தேவன் தமது ஆவியை இயேசுகிறிஸ்துவுக்கு அளவில்லாமல் கொடுத்ததுபோல, எல்லாவற்றையும் அவர் கையில் ஒப்புக்கொடுத்திருக்கிறார். சர்வ அதிகாரமும் அவரிடத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது" (மத் 28:18) என்று இயேசுகிறிஸ்து தம்முடைய சர்வ அதிகாரத்தைக் குறித்து சாட்சியாக கூறுகிறார். மாம்சமான யாவர்மீதும் இயேசுகிறிஸ்துவுக்கு அதிகாரமுள்ளது.

புறஜாதியார் அவருக்கு சுதந்தரமாக கொடுக்கப்பட்டிருக்கிறார்கள். பொற் செங்கோலும், இரும்புத்தடியும் அவருடைய கரத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. எல்லா கிருபையும் அவருடைய கரத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்து தம்முடைய சித்தத்தின் பிரகாரம், தமக்கு இஷ்டமானபடி, தமக்கு இஷ்டமான மனுஷருக்கு, தமது கிருபைகளை பகிர்ந்துகொடுக்கிறார்.

பிதாவாகிய தேவன் நம்முடைய கையில் எல்லாவற்றையும் ஒப்புக்கொடுப்பதற்கு நாம் அபாத்திரவான்களாக இருக்கிறோம். ஆகையினால் தேவன் நமக்காக நியமித்து வைத்திருக்கும் எல்லாவற்றையும், அவர் நம்முடைய கையில் கொடுப்பதற்குப் பதிலாக, தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் கையில் ஒப்புக்கொடுத்திருக்கிறார். ஏனெனில் இயேசுகிறிஸ்து மாத்திரமே பிதாவினிடத்தில் எல்லாவற்றையும் பெற்றுக்கொள்வதற்கு பாத்திரர். அவையெல்லாம் அவருடைய கையில் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்து மூலமாக அவை நமக்குக் கொடுக்கப்படும். புதிய உடன்படிக்கையின் எல்லா ஆசீர்வாதங்களும், ஐசுவரியங்களும் இயேசுகிறிஸ்துவின் கையில் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. அவருடைய கை கிருபை நிறைந்தது. அன்பு நிறைந்தது. தம்முடைய கையினால் அவர் புதிய உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களை நமக்காக கிரயமாக பெற்றிருக்கிறார்.

## அதிகாரம் - 3

### குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன்

**குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை; தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும் என்றான் (யோவா 3:36).**

நித்திய ஜீவனே நமக்கு நித்திய சந்தோஷத்தைத் தரும். இந்த நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கு மிகப்பெரிய நிபந்தனை ஒன்று இங்கு நியமிக்கப்பட்டிருக்கிறது. விசுவாசமே அந்த நிபந்தனை. குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான். இந்த சத்தியமே சுவிசேஷத்தின் முகவுரையும் முடிவுரையுமாகும். இயேசுகிறிஸ்துவினுடைய சாட்சியின் மூலமாக தேவன் நமக்கு எல்லா நன்மைகளையும் கொடுக்கிறார். அவர் கொடுக்கும் சாட்சியில் நாம் விசுவாசம் வைத்து, தேவனுடைய சிலாக்கியங்களில் பங்குபெறுகிறோம். கொடுப்பதே பெற்றுக்கொள்வதற்கு மெய்யான வழி.

சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கிக்க வேண்டுமென்று இயேசுகிறிஸ்து நமக்கு கட்டளை கொடுத்திருக்கிறார். சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கடமை மாத்திரமல்ல, அது நமக்குக் கிடைத்திருக்கும் சிலாக்கியமுமாகும்.

இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களுக்கு தேவன் உன்னதமான ஆசீர்வாதத்தைக் கொடுத்திருக்கிறார். குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான். இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பது மாத்திரமல்ல, அவரிடத்தில் நாம் விசுவாசமாக இருக்க வேண்டும். அவரிடத்தில் நமது விசுவாசம் தங்கியிருக்கவேண்டும். அவருடைய சாட்சியை மெய்யானது என்று விசுவாசிக்க வேண்டும். மெய்யான விசுவாசிக்கு கர்த்தர் நித்திய ஜீவனை வாக்குப்பண்ணியிருக்கிறார். நித்திய ஜீவனுக்குக் குறைவாக வேறு எந்த ஆசீர்வாதத்தையும் தேவன் தம்மை விசுவாசிப்பவர்களுக்கு கொடுக்க விரும்பவில்லை. நித்திய ஜீவன் என்பது இனிமேல் நாம் பெற்றுக்கொள்ளப்போகிற ஆசீர்வாதம் மாத்திரமல்ல, அந்த ஆசீர்வாதத்தை நாம் இப்போதே பெற்று அனுபவிக்கிறோம். தேவனுடைய குமாரனை உடையவர்கள் அவரில் நித்திய ஜீவனை உடையவர்களாக இருக்கிறார்கள். தேவனுடைய கிருபை நமக்குக் கொடுக்கப்படும் நித்திய ஜீவனில் ஆரம்பமாகிறது.

அவிசுவாசிகளுக்கு தேவனுடைய கோபாக்கினை நியமிக்கப்பட்டிருக்கிறது. குமாரனை விசுவாசியாதவனோ நித்திய ஜீவனைக் காண்பதில்லை. விசுவாசியாதவன் என்னும் வார்த்தைக்கு கீழ்ப்படியாதவன் என்றும், மீறுகிறவன் என்றும் பொருள் கூறவேண்டும். குமாரனை விசுவாசியாதவர்கள் இந்த உலகத்திலும் சந்தோஷமாக இருக்கமுடியாது. இனிமேல் வரப்போகிற உலகத்திலும் அவர்களால் சந்தோஷமாக இருக்க முடியாது. ஏனெனில் அவர்கள் ஜீவனைக் காணமாட்டார்கள்.

நித்திய ஜீவனைக் கொடுப்பதற்காகவே இயேசுகிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தார். இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கவில்லையென்றால் அவர் கொடுக்கும் ஜீவனையும் காணமுடியாது. இயேசுகிறிஸ்துவை விசுவாசியாதவர்கள் நித்திய ஜீவனை காணமுடியாமற் போவதோடு, இப்பிரபஞ்சத்திலும் அவர்களுடைய ஜீவன் மிகவும் பரிதாபமாக இருக்கும். குமாரனை விசுவாசியாதவர்கள்மீது தேவனுடைய கோபம் நிலைநிற்கும். ஒவ்வொரு அவிசுவாசியின்மேலும் தேவனுடைய கோபம் நிலைநிற்கும்போது, அவனால் தேவகோபத்தை தாங்கிக்கொள்ள முடியாது. அவனுடைய ஜீவனே பரிதாபமாக முடிவடையும். கிறிஸ்துவை விசுவாசியாதவர்களின் நிலைமையை யோவான்ஸ்நானன் வருத்தத்தோடு சாட்சியாக அறிவிக்கிறான்.

## அதிகாரம் - 4

இயேசுகிறிஸ்து யூதாவை விட்டு கலிலேயாவுக்குப் போகிறார் (யோவா 4:1-3). சமாரியா நாட்டின் வழியாக கலிலேயாவுக்குப் போகிறார். சமாரியா நாட்டுக்கு வந்தபோது நடைபெற்ற சம்பவம் (யோவா 4:4-6). சமாரியா நாட்டாளாகிய ஒரு ஸ்திரீயோடு, ஒரு கிணற்றின் அருகே இயேசுகிறிஸ்து உரையாடிய சம்பவம் (யோவா 4:7-26). இந்த ஸ்திரீ ஊருக்குள்ளேபோய் இயேசுகிறிஸ்துவைப் பற்றி அறிவித்த சம்பவம் (யோவா 4:27-30). இந்த இடைவெளி சமயத்தில் இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரோடு உரையாடிய சம்பவம் (யோவா 4:31-38). அந்த ஊரிலுள்ள சமாரியர் அநேகர் இயேசுகிறிஸ்துவின்மேல் விசுவாசமுள்ளவர்களாகிறார்கள் (யோவா 4:39-42). இயேசுகிறிஸ்து சிறிதுகாலம் கலிலேயாவிலே தங்கியிருக்கிறார் (யோவா 4:43-46). ராஜாவின் மனுஷரில் ஒருவனுடைய குமாரனை இயேசுகிறிஸ்து சொஸ்தமாக்குகிறார் (யோவா 4:46-54).

### யூதேயாவை விட்டு யோவா 4:1-3

**யோவா 4:1. யோவானைப்பார்க்கிலும் இயேசு அநேகம் பேரைச் சீஷராக்கி ஞானஸ்நானங் கொடுக்கிறாரென்று பரிசேயர் கேள்விப்பட்டதாகக் கர்த்தர் அறிந்தபோது,**

**யோவா 4:2. யூதேயாவைவிட்டு மறுபடியுங் கலிலேயாவுக்குப் போனார்.**

**யோவா 4:3. இயேசு தாமே ஞானஸ்நானங் கொடுக்கவில்லை, அவருடைய சீஷர்கள் கொடுத்தார்கள்.**

**அநேகம்பேரை சீஷராக்கி**

**யோவானைப்பார்க்கிலும் இயேசு அநேகம் பேரைச் சீஷராக்கி ஞானஸ்நானங் கொடுக்கிறாரென்று பரிசேயர் கேள்விப்பட்டதாகக் கர்த்தர் அறிந்தபோது, (யோவா 4:1)**

அறுப்புக்காலம் வருகிறதற்கு இன்னும் நாலுமாதம் இருக்கும்போது இயேசுகிறிஸ்து யூதேயாவைவிட்டு மறுபடியும் கலிலேயாவுக்குப் போகிறார். யூதேயாவிலே இயேசுகிறிஸ்துவின் ஊழியம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அங்கு அவருக்கு ஒரு சில எதிர்ப்புக்கள் ஏற்பட்ட போதிலும் ஊழியத்தில் நல்ல பலன் கிடைத்தது. இயேசுகிறிஸ்து தம்மை விசுவாசிக்கிற ஜனங்களை சீஷராக்குகிறார். தம்முடைய சித்தத்தைப் புரிந்துகொண்டு அதன் பிரகாரமாக செயல்படுவதற்கு தம்முடைய விசுவாசிகளுக்குப் பயிற்சி கொடுக்கிறார். சீஷர்கள் சீஷர்களாக பிறப்பதில்லை. அவர்கள் சீஷர்களாக ஆக்கப்படுகிறார்கள்.

**மறுபடியும் கலிலேயாவுக்கு**

**யூதேயாவைவிட்டு மறுபடியுங் கலிலேயாவுக்குப் போனார் (யோவா 4:2).**

யூதேயாவிலே இயேசுகிறிஸ்துவின் ஊழியம் சிறப்பாக நடைபெற்றாலும், அங்கு அவருக்கு எதிராக எதிர்ப்பும் வலுத்தது. அவருடைய சத்துருக்கள் அவரை மரணத்துக்கேதுவாக துன்பப்படுத்த ஆயத்தமாக இருந்தார்கள். ஆகையினால் இயேசுகிறிஸ்து அந்த தேசத்தைவிட்டு வெளியேறிப்போய்விடுகிறார். தம்முடைய ஊழியத்திற்கு எதிர்ப்பு எங்கு குறைவாக இருக்கிறதோ, அந்த இடத்தில் ஊழியம் செய்யலாமென்று புறப்பட்டுப்போகிறார். மரிப்பதற்கு இயேசுகிறிஸ்துவின் வேளை இன்னும் வரவில்லை. தம்முடைய சாட்சியை அவர் இன்னும் அறிவித்து முடிக்கவில்லை. ஆகையினால் இந்த வேளையில் அவர் தம்மை மரணத்துக்கு ஒப்புக்கொடுக்க முன்வரவில்லை.

யூதேயாவில் இயேசுகிறிஸ்துவுக்கு சில சீஷர்கள் இருந்தார்கள். அநேகர் அவரிடத்தில் கூடிவந்தார்கள். ஆனால் அவர்களுடைய விசுவாசம் உறுதியாக இல்லை. சோதனைகளையும், வேதனைகளையும், உபத்திரவங்களையும் தாங்கிக்கொள்ள அவர்கள் பெலனற்றவர்களாக இருந்தார்கள். அப்படிப்பட்டவர்கள் மத்தியில் இயேசுகிறிஸ்து தம்மை முழுவதுமாக வெளிப்படுத்தவில்லை.

## அதிகாரம் - 4

தம்முடைய ஊழியத்தில் இயேசுகிறிஸ்து ஒரு ஒழுங்குமுறையை நியமித்திருக்கிறார். நாம் கர்த்தருக்காக ஊழியம் செய்யும்போது, ஒரு பட்டணத்திலுள்ளவர்கள் நம்மைத் உபத்திரவப்படுத்தினால், நாம் அந்த பட்டணத்தைவிட்டு வேறு பட்டணத்திற்கு புறப்பட்டுப்போய்விட வேண்டும். தம்முடைய ஊழியக்காரர்களுக்கு இயேசுகிறிஸ்து இந்த உபதேசத்தைக் கூறுகிறார். தேவையில்லாமல் பாடுகளை அனுபவிப்பதற்கு நாம் அழைக்கப்படவில்லை. பாவம் செய்யாமல் ஒரு பிரச்சனையிலிருந்து விலகிவிட முடியுமென்றால், அதிலிருந்து விலகிப்போய்விட வேண்டும். இதில் தவறு ஒன்றுமில்லை.

ஓரிடத்தில் நாம் ஊழியம் செய்யும்போது நமக்கு எதிர்ப்பு அதிகமாக இருக்குமென்றால், நம்முடைய ஊழிய ஸ்தலத்தை வேறு இடத்திற்கு மாற்றிக்கொள்வதில் தவறு ஒன்றுமில்லை. நம்மை எதிர்த்தவர்களுக்காக நாம் தொடர்ந்து ஜெபிக்கவேண்டும். ஏற்றவேளை வரும்போது கர்த்தர் நமக்கு எதிராக இருந்தவர்கள் மத்தியில் ஊழியம் செய்ய வாசலைத் திறந்துகொடுப்பார். அப்போது அந்த ஊழிய வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இயேசுகிறிஸ்து இந்த தத்துவத்தின் பிரகாரமாக யூதேயாவைவிட்டு கலிலேயாவுக்குப் புறப்பட்டுப்போகிறார். ஏனெனில் யூதேயாவில் ஊழியம் செய்வது மிகவும் கடினமாக இருக்கிறது. அங்கு அதிக எதிர்ப்பு உண்டாயிற்று. அங்கு சத்துருக்கள் அதிகமாகவும் சிநேகிதர்கள் குறைவாகவும் இருக்கிறார்கள். கலிலேயாவிலோ நிலமை சற்று வித்தியாசமாக இருக்கிறது. அங்கு ஊழியம் செய்வதற்கு சாதகமான சூழ்நிலை நிலவிற்று. கலிலேயாவிலே சிநேகிதர் அதிகமாகவும் சத்துருக்கள் குறைவாகவும் இருக்கிறார்கள்.

**இயேசு தாமே ஞானஸ்நானம் கொடுக்கவில்லை**

**இயேசு தாமே ஞானஸ்நானங் கொடுக்கவில்லை, அவருடைய சீஷர்கள் கொடுத்தார்கள் (யோவா 4:3).**

யூதேயாவிலே இயேசுகிறிஸ்து அநேகம் பேரை சீஷராக்கி ஞானஸ்நானம் கொடுத்து வருகிறார். இயேசு தாமே ஞானஸ்நானம் கொடுக்கவில்லை. அவருடைய சீஷர்களே ஞானஸ்நானம் கொடுக்கிறார்கள். இயேசுகிறிஸ்து கொடுக்கும் ஞானஸ்நானத்திற்கும், யோவான்ஸ்நானன் கொடுக்கும் ஞானஸ்நானத்திற்கும் வித்தியாசமுள்ளது. யோவான்ஸ்நானன் தன்னிடத்தில் வருகிற எல்லோருக்கும் அவனே ஞானஸ்நானம் கொடுக்கிறான். ஆனால் இயேசுகிறிஸ்துவோ அநேகம் பேரை சீஷராக்கினாலும், அவர்களுக்கு அவரே ஞானஸ்நானம் கொடுக்காமல், அவருடைய சீஷர்களை ஞானஸ்நானம் கொடுக்க வைக்கிறார்.

இதன் மூலமாக இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் ஊழியத்தில் பயிற்சி பெறுகிறார்கள். அவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் கிடைக்கிறது. இயேசுகிறிஸ்து தம்முடைய ஊழியக்காரர்களுக்கு எப்போதும் பயிற்சி கொடுத்து வருகிறார். தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக நாம் செயல்படுவதற்கு அவர் நமக்கு உபதேசம் பண்ணுகிறார். பயிற்சி கொடுக்கிறார். அவருடைய சார்பில் நாம் ஊழியம் செய்தாலும், ஊழியம் கர்த்தருடையது. நாம் செய்யும் ஊழியத்தை இயேசுகிறிஸ்து தம்முடைய ஊழியமாகவே அங்கீகரிக்கிறார்.

யோவான்ஸ்நானனைப் பார்க்கிலும் இயேசுகிறிஸ்து அநேகம் பேரை சீஷராக்குகிறார். யோவான்ஸ்நானனுடைய ஊழியத்தின் மூலமாக மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டவர்களைவிட, இயேசு கிறிஸ்துவின் மூலமாக மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டவர்கள் அநேகர். இந்தச் செய்தியை பரிசேயர் கேள்விப்படுகிறார்கள். அவர்களுக்கு யோவான்ஸ்நானனைப் பிடிக்காது. யோவான்ஸ்நானனுடைய ஊழியம் முடிவுக்கு வந்துவிட்டது என்று பரிசேயர் ஆறுதலடைந்திருக்கிறார்கள். ஆனால் யோவான்ஸ்நானன் ஊழியம் செய்கிறபோதே, இயேசுகிறிஸ்து தம்முடைய ஊழியத்தை செய்ய ஆரம்பித்துவிடுகிறார். இதனால் பரிசேயர் இயேசுவின்மீது கோபமடைகிறார்கள். யோவான்ஸ்நானனைப் பார்க்கிலும் இயேசுகிறிஸ்து அநேகம்பேரை சீஷராக்கி ஞானஸ்நானம் கொடுத்து வருவதினால், இயேசுகிறிஸ்துவின்மீது பரிசேயரின் கோபம் அதிகரிக்கிறது. சுவிசேஷத்தின் வெற்றி அதன் சத்துருக்களை மூர்க்கமடையச் செய்யும்.

## அதிகாரம் - 4

தம்மைக்குறித்து பரிசேயர் கேள்விப்பட்டதை இயேசுகிறிஸ்துவும் அறிந்திருக்கிறார். அவருக்கு மறைவான காரியம் ஒன்றுமேயில்லை. நாம் இந்த பூமியிலே எவ்வளவு ஆழமான குழியை தோண்டி அங்கு போய் பதிந்து ஒழிந்திருந்து ஆலோசனை பண்ணினாலும், நம்முடைய ஆலோசனை கர்த்தருக்கு மறைவாகயிராது.

**சமாரியா**
**யோவா 4 : 4-6**

**யோவா 4:4. அவர் சமாரியா நாட்டின் வழியாய்ப் போகவேண்டியதாயிருந்தபடியால்,**

**யோவா 4:5. யாக்கோபு தன் குமாரனாகிய யோசேப்புக்குக் கொடுத்த நிலத்துக்கு அருகே இருந்த சமாரியாவிலுள்ள சீகார் என்னப்பட்ட ஊருக்கு வந்தார்.**

**யோவா 4:6. அங்கே யாக்கோபுடைய கிணறு இருந்தது; இயேசு பிரயாணத்தினால் இளைப்படைந்தவராய் அந்தக் கிணற்றினருகே உட்கார்ந்தார்; அப்பொழுது ஏறக்குறைய ஆறாம்மணி வேளையாயிருந்தது.**

**சமாரியா நாட்டின் வழியாய்**

**அவர் சமாரியா நாட்டின் வழியாய்ப் போக வேண்டியதாயிருந்த படியால், யாக்கோபு தன் குமாரனாகிய யோசேப்புக்குக் கொடுத்த நிலத்துக்கு அருகே இருந்த சமாரியாவிலுள்ள சீகார் என்னப்பட்ட ஊருக்கு வந்தார் (யோவா 4:4,5).**

இயேசுகிறிஸ்து சமாரியாவில் ஊழியம் செய்கிறார். சமாரியர்கள் ஓரளவு யூதர்களைப்போன்றவர்கள். தங்களுடைய இரத்தத்திலும், மார்க்க உபதேசங்களிலும் அவர்கள் யூதர்களைப்போலவே இருப்பார்கள். இவர்களும் இஸ்ரவேலின் தேவனையே ஆராதிக்கிறார்கள். ஆனால் தங்கள் தேவனை இவர்கள் எருசலேமில் ஆராதிக்காமல் கெரிசீம் மலையில் ஆராதிக்கிறார்கள். அங்கு கர்த்தருக்கு ஒரு ஆலயத்தைக்கட்டி அவரை ஆராதிக்கிறார்கள். எருசலேம் ஊராரும் சமாரியா நாட்டாரும் ஒருபோதும் ஒத்துப்போகமாட்டார்கள். ஒரு சமயம் இயேசுகிறிஸ்து சமாரியருடைய கிராமத்திலே பிரவேசிக்கிறார். அவர் எருசலேமுக்குப் போக நோக்கமாய் இருக்கிறார் என்பதை அந்த ஊரார் அறிந்துகொண்டபோது, அவரை தங்கள் கிராமத்தில் ஏற்றுக்கொள்ளவில்லை (லூக் 9:53). சமாரியர்கள் யூதர்கள்மீது இந்த அளவுக்கு வெறுப்புணர்ச்சியோடு இருக்கிறார்கள். யூதர்களும் சமாரியரை நேசிப்பதில்லை. அவர்களைக் குறித்து மிகவும் தாழ்வாக நினைக்கிறார்கள். யூதர்கள் ஒருவனை கடினமான வார்த்தையினால் திட்டவேண்டுமென்றால் "நீ ஒரு சமாரியன்" என்று கூறுவார்கள். அந்த அளவுக்கு யூதர்கள் சமாரியர்களை மிகவும் தாழ்வாக நினைக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து இப்போது சமாரியா நாட்டிற்கு வந்திருக்கிறார். தம்முடைய பன்னிரண்டு சீஷர்களை ஊழியத்திற்கு அனுப்பியபோது "நீங்கள் புறஜாதியார் நாடுகளுக்குப் போகாமலும், சாமாரியர் பட்டணங்களில் பிரவேசியாமலும், காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு போங்கள்" என்று கூறினார் (மத் 10:5,6). தம்முடைய ஆரம்ப ஊழியத்தில் இயேசுகிறிஸ்து சமாரியா நாட்டில் வெளிப்படையாக ஊழியம் செய்யவில்லை. இவர்கள் மத்தியில் எந்த அற்புதத்தையும் செய்யவில்லை. காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரை தேவனுடைய ராஜ்யத்தில் கூட்டிச் சேர்க்க வேண்டுமென்பதே இயேசுகிறிஸ்துவின் பிரதான ஊழியமாக இருந்தது.

ஆனால் இயேசுகிறிஸ்து இப்போது சமாரியா நாட்டிற்கே வந்திருக்கிறார். தங்கள் எஜமானுடைய மேஜையிலிருந்து விழும் சிறு துணிக்கைகள் கூட தங்களுடைய பிள்ளைகளின் பசியைப்போக்கும் என்று நினைத்து, இயேசுகிறிஸ்து சமாரியா தேசத்தாருக்கு தம்முடைய சுவிசேஷத்தை அறிவிக்க வந்திருக்கிறார்.

இயேசுகிறிஸ்து யூதேயாவைவிட்டு கலிலேயாவுக்குப் போய்க்கொண்டிருக்கிறார். கலிலேயாவுக்குப் போகவேண்டுமென்றால் சமாரியா நாட்டின் வழியாக போவதுதான் சரியான பாதை. சமாரியா நாட்டின் வழியாக போகவில்லையென்றால், மிகவும் சுற்றுப்பாதையில் சென்று, யோர்தானுக்கு அக்கரைப்பக்கமாக போய், கலிலேயாவுக்குப் போகவேண்டும். சுற்றிப்போகாமல், சமாரியா நாட்டின் வழியாக போவதை இயேசுகிறிஸ்து தெரிந்தெடுக்கிறார்.

## அதிகாரம் - 4

சோதனைகள் இருக்குமிடத்திற்கு போகாமல் நம்முடைய பிரயாணத்தை தவிர்ப்பது நல்லது. என்றாலும் தேவைப்படும்போது அங்கு போய்த்தான் ஆகவேண்டும். அங்கு போகும்போது சோதனையுள்ள இடத்தில் தங்கிவிடக்கூடாது. அந்த இடத்தின் வழியாக விரைந்து கடந்து சென்றுவிட வேண்டும். இயேசுகிறிஸ்து சமாரியா நாட்டின் வழியாய் போகவேண்டியதாயிருந்தபடியால், அந்த நாட்டின் வழியாக கடந்துசெல்கிறார். இயேசுகிறிஸ்து போகும் வழியில் சமாரியா நாடு இருப்பது சமாரியருக்கு மிகுந்த ஆசீர்வாதம்.

தம்முடைய பிரயாணத்தினால் இளைப்படைந்தவராக இயேசுகிறிஸ்து சமாரியா நாட்டின் வழியாக வருகிறார். சமாரியாவிலுள்ள சீகார் என்னப்பட்ட ஊருக்கு வந்ததாக இந்த சுவிசேஷத்தில் எழுதப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டில் சீகேம் என்னப்பட்ட ஊர், புதிய ஏற்பாட்டுக்காலத்தில் சீகார் என்னப்படுகிறது. பழைய ஏற்பாட்டுக்காலத்தில் சீகேம் பட்டணத்தில் வசித்தவர்கள் புறஜாதியார்கள். இவர்களே யூதமார்க்கத்தை ஏற்றுக்கொண்ட முதலாவது புறஜாதியார்கள். இவர்களுடைய ஆண்மக்கள் யாவரும் யூதமார்க்கத்து முறைமையின் பிரகாரம் விருத்தசேதனம் பெற்றுக்கொண்டார்கள் (ஆதி 34:24).

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் இஸ்ரவேலின் காணியாட்சியிலிருந்து சீகேம் என்னப்பட்ட சீகார் ஊரில்தான் முதன்முதலாக இஸ்ரவேலரல்லாதோருக்கு சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது. பழைய ஏற்பாட்டுக்காலத்தில் அபிமெலேக்கு இங்கு ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டார். யெரொபெயாம் சீகேமிலிருந்து ஆட்சிபுரிந்தான். பழைய ஏற்பாட்டுக்காலத்தில் சீகேம் பட்டணத்திற்கு இப்படிப்பட்ட வரலாற்றுச் சிறப்புக்கள் இருந்தாலும், இந்த சுவிசேஷத்தில் யாக்கோபின் வரலாறு மாத்திரமே இந்தப் பட்டணத்தோடு தொடர்புபடுத்திக் கூறப்பட்டிருக்கிறது. இஸ்ரவேலில் ராஜாக்களாக அபிஷேகம் பண்ணப்பட்டவர்களைப் பற்றி குறிப்பிடுவதைவிட, இஸ்ரவேலின் முற்பிதாக்களைப்பற்றி குறிப்பிடுவது சிறப்பாக இருக்குமென்று நினைத்து இந்த சுவிசேஷத்தில், சீகார் என்னப்பட்ட ஊரில் யாக்கோபுடைய கிணறு இருந்ததாகவும், இயேசுகிறிஸ்து தம்முடைய பிரயாணத்தினால் இளைப்படைந்தவராய், அந்தக் கிணற்றின் அருகே உட்கார்ந்ததாகவும் இந்த சுவிசேஷத்தில் விசேஷமாக குறிப்பிடப்பட்டிருக்கிறது.

**யாக்கோபுடைய கிணறு**

**அங்கே யாக்கோபுடைய கிணறு இருந்தது; இயேசு பிரயாணத்தினால் இளைப்படைந்தவராய் அந்தக் கிணற்றினருகே உட்கார்ந்தார்; அப்பொழுது ஏறக்குறைய ஆறாம்மணி வேளையாயிருந்தது (யோவா 4:6).**

யாக்கோபு தன் குமாரனாகிய யோசேப்புக்கு ஒரு நிலத்தைக் கொடுத்திருந்தார். அந்த நிலத்திற்கு அருகே சமாரியாவிலுள்ள சீகார் என்னப்பட்ட ஊர் இருக்கிறது. இந்த ஊரில் யாக்கோபுடைய கிணறு இருக்கிறது. இயேசுகிறிஸ்து பிரயாணத்தினால் இளைப்படைந்தவராய் இந்தக் கிணற்றின் அருகே உட்காருகிறார். சாதாரணமாக பிரயாணம் பண்ணும் மற்ற மனுஷரைப்போலவே இயேசுகிறிஸ்துவும் பிரயாணம் பண்ணுகிறார். நமக்கு பிரயாணக்களைப்பு உண்டாவதுபோல இயேசுகிறிஸ்துவுக்கும் பிரயாணக்களைப்பு உண்டாயிற்று. சரீரத்தில் களைப்பு ஏற்பட்டாலும், இளைப்பு ஏற்பட்டாலும் இயேசுகிறிஸ்து தம்முடைய ஊழியத்தை தொடர்ந்து செய்கிறார். ஏறக்குறைய ஆறாம்மணி வேளையாயிற்று. யூதருக்கு ஆறாம்மணி வேளை என்பது உச்சிப்பகல் பொழுதைக்குறிக்கும். சூரியன் நடுவானில் இருப்பதினால் வெயில் அதிகரித்து அதிக உஷ்ணமாக இருக்கும். அதிக வெயிலில் பிரயாணம் பண்ணுவதினால் இயேசுகிறிஸ்து அதிகமாக இளைப்படைந்திருக்கிறார்.

இயேசுகிறிஸ்து இந்த பூமியில் மனிதனாக அவதரித்தபோது, அவருடைய மனுஷத்துவம் பூரணமாக இருக்கிறது. அவர் நம்மைப்போல ஒரு மனுஷரானார். மனுஷருடைய சரீரத்தில் காணப்படுகிற எல்லா பொதுவான அம்சங்களும் இயேசுகிறிஸ்துவிடமும் இருந்தது. ஆகையினால் அவருக்கு பிரயாணக்களைப்பு உண்டாயிற்று. சமுதாயத்தில் அவர் ஒரு ஐசுவரியவானுமல்ல. ஒட்டகங்களிலோ, அல்லது குதிரைகளிலோ அல்லது ரதங்களிலோ பிரயாணம் பண்ணுவதற்கு அவரிடத்தில் பணவசதி இல்லை. இயேசுகிறிஸ்து சாதாரண ஒரு ஏழை மனுஷனாக இருந்து, எல்லா கிராமங்களுக்கும் தன் கால்களால் நடந்து சென்று ஊழியம் செய்கிறார்.

## அதிகாரம் - 4

நம்முடைய ஊழியப்பாதையில் நாம் களைப்படையும்போது, இயேசுகிறிஸ்து நமக்காக பிரயாணக்களைப்படைந்ததை நினைவுகூரவேண்டும். இயேசுகிறிஸ்துவின் சரீரம் உலோகத்தினால் செய்யப்பட்டதல்ல. அவர் ஒரு இரும்பு மனிதரல்ல. நம்மைப்போலவே அவருடைய சரீரத்திலும் எலும்புகளும், இரத்தமும், தசையும் இருந்தது. இயேசுகிறிஸ்து பிரயாணத்தினால் களைப்படைந்த போதிலும் அவருடைய சீஷர்கள் இன்னும் களைப்படையவில்லை. அவர்கள் எந்தக் களைப்புமில்லாமல், போஜன பதார்த்தங்களைக் கொள்ளும்படி சீகார் ஊருக்குள்ளே போயிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் சரீரம் மென்மையானது. பிரயாணத்தினால் இளைப்படைந்து போகக்கூடியது. பிரயாண பாரத்தை அவரால் அதிகமாக சுமக்க முடியவில்லை. ஆகையினால் சாதாரணமாக பிரயாணம் பண்ணுகிற மற்ற மனுஷரைப்போலவே, இயேசுகிறிஸ்து சற்று ஒய்வெடுப்பதற்காக கிணற்றின் அருகே உட்கார்ந்திருக்கிறார்.

### ஜீவத்தண்ணீர்
### யோவா 4 : 7-15

**யோவா 4:7.** அவருடைய சீஷர்கள் போஜன பதார்த்தங்களைக் கொள்ளும்படி ஊருக்குள்ளே போயிருந்தார்கள்.

**யோவா 4:8.** அப்பொழுது சமாரியா நாட்டாளாகிய ஒரு ஸ்திரீ தண்ணீர் மொள்ள வந்தாள். இயேசு அவளை நோக்கி: தாகத்துக்குத்தா என்றார்.

**யோவா 4:9.** யூதர்கள் சமாரியருடனே சம்பந்தங்கலவாதவர்களானபடியால், சமாரியா ஸ்திரீ அவரை நோக்கி: நீர் யூதனாயிருக்க, சமாரியா ஸ்திரீயாகிய என்னிடத்தில், தாகத்துக்குத்தா என்று எப்படிக் கேட்கலாம் என்றாள்.

**யோவா 4:10.** இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: நீ தேவனுடைய ஈவையும் தாகத்துக்குத்தா என்று உன்னிடத்தில் கேட்கிறவர் இன்னார் என்பதையும் அறிந்திருந்தாயானால், நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய், அவர் உனக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுத்திருப்பார் என்றார்.

**யோவா 4:11.** அதற்கு அந்த ஸ்திரீ: ஆண்டவரே, மொண்டுகொள்ள உம்மிடத்தில் பாத்திரமில்லையே, கிணறும் ஆழமாயிருக்கிறதே, பின்னை எங்கேயிருந்து உமக்கு ஜீவத்தண்ணீர் உண்டாகும்.

**யோவா 4:12.** இந்தக் கிணற்றை எங்களுக்குத் தந்த நம்முடைய பிதாவாகிய யாக்கோபைப்பார்க்கிலும் நீர் பெரியவரோ? அவரும் அவர் பிள்ளைகளும் அவர் மிருகஜீவன்களும் இதிலே குடித்ததுண்டே என்றாள்.

**யோவா 4:13.** இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: இந்தத் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு மறுபடியும் தாகமுண்டாகும்.

**யோவா 4:14.** நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார்.

**யோவா 4:15.** அந்த ஸ்திரீ அவரை நோக்கி: ஆண்டவரே, எனக்குத் தாகமுண்டாகாமலும், நான் இங்கே மொண்டுகொள்ள வராமலுமிருக்கும்படி, அந்தத் தண்ணீரை எனக்குத் தரவேண்டும் என்றாள்.

### இயேசுவின் சீஷர்கள்

**அவருடைய சீஷர்கள் போஜன பதார்த்தங்களைக் கொள்ளும்படி ஊருக்குள்ளே போயிருந்தார்கள் (யோவா 4:7).**

இயேசுகிறிஸ்துவும் அவருடைய சீஷர்களும் சீகார் என்னப்பட்ட ஊருக்கு வந்திருக்கிறார்கள். யாக்கோபுடைய கிணற்றின் அருகே இயேசுகிறிஸ்து உட்கார்ந்திருக்கிறார். அவர் பிரயாணத்தில் இளைப்படைந்தவராய் இருக்கிறார். அப்போது அவருடைய சீஷர்கள் போஜனபதார்த்தங்களை கொள்ளும்படி ஊருக்குள்ளே போகிறார்கள். இந்த சமயத்தில் சமாரியா நாட்டாளாகிய ஒரு ஸ்திரீ தண்ணீர் மொள்வதற்காக அந்த கிணற்றிற்கு வருகிறாள். தண்ணீர் எடுத்துக்கொடுத்து உதவிபுரிவதற்கு இந்த ஸ்திரீக்கு வேலைக்காரர்கள் யாருமில்லை. எல்லா வேலையையும் இவளே செய்யவேண்டும்.

## அதிகாரம் - 4

சமாரியா நாட்டாளாகிய இந்த ஸ்திரீ எதேச்சையாக இந்தக் கிணற்றிற்கு வருவதுபோல தோன்றினாலும், இவள் தேவனுடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாகவே அங்கு வந்திருக்கிறாள். இவளுடைய ஜீவியத்தில் தேவனுடைய கிருபை கிரியை செய்யும்படியாக இந்த வேளை நியமிக்கப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் சீஷரும் போஜனபதார்த்தங்களைக் கொள்ளும்படி ஊருக்குள்ளே போயிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரோடு போஜனம்பண்ண ஊருக்குள்ளே போகவில்லை. இயேசுகிறிஸ்துவின் போஜனங்களை அவருடைய சீஷர்களே வாங்கிக்கொண்டு வந்து, அவரிடம் போஜனம்பண்ணக் கொடுப்பார்கள்.

சமாரியருடைய ஊருக்கு யூதர்கள் பொதுவாக போகமாட்டார்கள். அவர்கள் சமாரியரோடு எந்த சம்பந்தமும் கலவாமல் விலகியேயிருப்பார்கள். இயேசுகிறிஸ்துவும் ஒரு யூதராக இருப்பதினால், அவர் சமாரியரோடு சம்பந்தம் கலக்கக்கூடாது என்று நினைத்து, சமாரியருடைய ஊருக்கு போகவில்லை என்று நினைக்கக்கூடாது. வேறு காரணங்களுக்காக இயேசுகிறிஸ்து போஜனம்பண்ணுவதற்கு ஊருக்குள்ளே போகாமல், இந்தக் கிணற்றண்டையில் தங்கியிருந்திருக்க வேண்டும்.

தம்முடைய தெய்வீக ஞானத்தினால், இந்தக் கிணற்றிற்கு சமாரியா நாட்டாளாகிய ஸ்திரீ தண்ணீர் மொள்வதற்காக வரப்போகிறாள் என்பதை இயேசு அறிந்திருக்கிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய சுவிசேஷத்தை அவளுக்கு அறிவிக்க சித்தங்கொண்டிருக்கலாம். ஒருவேளை பிரயாணத்தில் இளைப்படைந்திருப்பதினால், ஓய்வெடுக்க வேண்டுமென்று விரும்பி ஊருக்குள்ளே போகாமல் அவர் கிணற்றண்டையில் தங்கியிருக்கலாம். இது அமைதியான சூழ்நிலை. வசதியாக இருக்கிறது. அங்கு யாருமில்லை. ஓய்வெடுப்பதற்கு போஜனமும் அவருக்கு அங்கே வந்துவிடுகிறது. இவையெல்லாவற்றையும் மனதில் நினைத்து, இயேசுகிறிஸ்து ஒருவேளை போஜனம்பண்ண சமாரியருடைய ஊருக்குள்ளே போகாமல், இந்தக் கிணற்றண்டையிலேயே தங்கியிருக்கலாம்.

இயேசுகிறிஸ்து விரும்பியிருந்தால், சமாரியருடைய ஊருக்குள்ளே போய், அங்குள்ள வசதியான ஒரு சத்திரத்தில் ஓய்வாக அமர்ந்து நேர்த்தியான போஜனத்தைப் புசித்திருக்கலாம். அவருக்குத் தேவையான பணிவிடைகளைச் செய்ய சத்திரத்தில் வேலையாட்கள் இருந்திருப்பார்கள். ஊருக்குள்ளே திரளான ஜனங்கள் கூடியிருப்பார்கள். இயேசுகிறிஸ்து விரும்பியிருந்தால் ஊரிலுள்ள திரளான ஜனங்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கம் செய்திருக்கலாம். பொதுவாக அவர் திரளான ஜனங்களுக்கு பிரசங்கம்பண்ணுவது வழக்கம்.

ஆனால் இந்த சூழ்நிலையிலோ, இயேசுகிறிஸ்து அவள் ஒரே ஒரு நபராக இருந்தாலும், அவளுக்கு சமாரியா ஸ்திரீக்கு, ஊழியம் செய்ய வேண்டுமென்று சித்தங்கொள்கிறார். இவள் ஒரு அந்நிய ஸ்திரீ. ஏழை. என்றாலும் இயேசுகிறிஸ்து இவளையும் மறந்துவிடாமல், இவளுக்கும் சுவிசேஷம் அறிவிக்க வேண்டுமென்று சித்தங்கொண்டிருக்கிறார். கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நாமும் இயேசுகிறிஸ்துவின் இந்த முன்மாதிரியை பின்பற்றி ஊழியம் செய்யவேண்டும். திரளான ஜனங்களுக்கு ஊழியம் செய்வது நல்லதுதான். என்றாலும் ஏதாவது ஒரு ஏழை ஆத்துமா, மரணப்படுக்கையிலோ, அல்லது வியாதிப்படுக்கையிலோ, ஆதரவில்லாத அனாதையோலிருந்தாலும், அந்த தனி ஆத்துமாவுக்கும் ஊழியம் செய்ய தவறிவிடக்கூடாது.

### தாகத்துக்குத் தா

**அப்பொழுது சமாரியா நாட்டாளாகிய ஒரு ஸ்திரீ தண்ணீர் மொள்ள வந்தாள். இயேசு அவளை நோக்கி: தாகத்துக்குத்தா என்றார் (யோவா 4:8).**

சமாரியா நாட்டாளாகிய ஒரு ஸ்திரீ தண்ணீர் மொள்ள கிணற்றிற்கு வந்தபோது, இயேசுகிறிஸ்து தாமே அந்த ஸ்திரீயோடு உரையாடலை துவக்கி வைக்கிறார். தன்னுடைய தாகத்திற்கு தண்ணீர் கொடுத்து உதவிபுரியுமாறு கேட்கிறார். இயேசு அந்த ஸ்திரீயைப்பார்த்து "தாகத்துக்குத் தா" என்று கேட்கிறார். நம்மை ஐசுவரியவான்களாக ஆக்குவதற்காக தம்மையே தரித்திரராக்கிக் கொண்ட இயேசுகிறிஸ்து, இப்போது தம்மை ஒரு பிச்சைக்காரர்போல பாவித்து, தமக்கு தண்ணீர் கொடுத்து உதவிபுரியுமாறு கேட்கிறார். அந்த ஸ்திரீயோடு உரையாடலை தொடரவேண்டும் என்பதற்காக இயேசுகிறிஸ்து தம்முடைய தாகத்தைப்பற்றி பேசுகிறார்.

## அதிகாரம் - 4

இயேசுகிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் அவருடைய சிறியவருக்கு ஒரு கலசம் தண்ணீர் குடிக்க கொடுத்தாலும், நாம் அதன் பலனை அடைவோம். ஒவ்வொரு சிறியவரும் நம்மிடம் ஏதாவது உதவி கேட்கும்போது, இயேசுகிறிஸ்துவே அவர்கள் சார்பாக நம்மிடத்தில் உதவி கேட்பது போன்று அவர்களுக்கு நாம் உதவி செய்யவேண்டும். இயேசுகிறிஸ்து தன்னோடு பேசுவதை நினைத்து இந்த ஸ்திரீ ஆச்சரியப்படுகிறாள். ஏனெனில் யூதரும் சமாரியரும் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளமாட்டார்கள். விலகியேயிருப்பார்கள். யூதர்கள் சமாரியரை மதிப்பதேயில்லை. ஆனால் இயேசுகிறிஸ்துவோ, ஒரு யூதராக இருந்தாலும், சமாரியா நாட்டாளாகிய தன்னிடம், தாகத்துக்குத் தா என்று கேட்பது இவளுக்கு மிகுந்த ஆச்சரியமாயிற்று.

### எப்படி கேட்கலாம்

**யூதர்கள் சமாரியருடனே சம்பந்தங்கலவாதவர்களானபடியால், சமாரியா ஸ்திரீ அவரை நோக்கி: நீர் யூதனாயிருக்க, சமாரியா ஸ்திரீயாகிய என்னிடத்தில், தாகத்துக்குத்தா என்று எப்படிக் கேட்கலாம் என்றாள் (யோவா 4:9).**

சமாரியா நாட்டாளாகிய இந்த ஸ்திரீயிடம் இயேசுகிறிஸ்து "தாகத்துக்குத் தா" என்று கேட்டவுடன், அந்த ஸ்திரீ ஒரு சண்டைக்காரியைப்போல பேச ஆரம்பித்து விடுகிறாள். "என்னிடம் எப்படி கேட்கலாம்" என்று இயேசுகிறிஸ்துவிடம் சண்டை போடுவது போல கேட்கிறாள். யூதர்கள் சமாரியருடனே சம்பந்தங்கலவாதவர்கள். ஆகையினால் "நீர் யூதனாயிருக்க சமாரியா ஸ்திரீயாகிய என்னிடத்தில், தாகத்துக்குத் தா என்று எப்படி கேட்கலாம்" என்று இயேசுவிடம் கேட்கிறாள்.

இந்த உலகத்தில் ஏராளமான பிரச்சனைகளும், சண்டை சச்சரவுகளும், யுத்தங்களும் நடைபெறுகின்றன. இவற்றுக்கெல்லாம் அடிப்படை காரணம் மார்க்க பேதங்கள் தான். மத அடிப்படையில் ஏற்படும் பிரச்சனைகளை சமாதானம் பண்ணுவதற்கு கடினமாக இருக்கும். சண்டைபோடுகிறவர்கள் தங்களுடைய மதத்தைக் குறித்து எப்படித்தான் மேன்மையாக பேசினாலும், தங்களுடைய மார்க்கம்தான் மெய்யான மார்க்கம் என்று சாதித்தாலும், சண்டைபோடுகிறவர்கள் மெய்யான மார்க்கவாதிகளல்ல. ஒருவர் தேவன்மீது அன்புள்ளவராக இருப்பாரென்றால் அவர் சண்டைபோடாமல் சமாதானம் பண்ணுகிறவராகவே இருப்பார்.

இயேசுகிறிஸ்து தன்னுடன் பேச ஆரம்பித்தவுடனேயே, இந்த ஸ்திரீ யூதர்களைப்பற்றி குறை கூற ஆரம்பித்துவிடுகிறாள். யூதர்களுடைய தவறான மனப்பாங்கு, தவறான அணுகுமுறை ஆகியவற்றை, ஒழிவு மறைவில்லாமல், தன் உள்ளத்தில் இருப்பதை அப்படியே கூறிவிடுகிறாள். நீர் யூதனாயிருக்க, சமாரியா ஸ்திரீயாகிய என்னிடத்தில் தாகத்துக்குத் தா என்று எப்படிக் கேட்கலாம் என்று யூதருக்கும் சமாரியருக்கும் இடையிலிருக்கும் பிரச்சனைகளை முன்வைத்துப் பேசுகிறாள். யூதமார்க்கத்திலும், சமாரிய மார்க்கத்திலும் வைராக்கியமாக இருப்பவர்களுக்கு இந்த ஸ்திரீயின் பேச்சு நியாயமானதாக தெரியும். ஆனால் சமாதானத்தோடு இருக்கவேண்டும் என்று விரும்புகிறவர்களுக்கோ இந்த ஸ்திரீயின் பேச்சு மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுக்கும்.

இயேசுகிறிஸ்து தன்னிடத்தில் தாகத்துக்குத் தா என்று கேட்பது சமாரியா நாட்டாளாகிய இந்த ஸ்திரீக்கும் மிகுந்த ஆச்சரியமாக இருந்திருக்கும். ஏனெனில் இயேசுகிறிஸ்து இவளிடத்தில் உதவி கேட்கிறார். பொதுவாக யூதர்கள் இருதயத்தில் பெருமையுள்ளவர்கள். தங்களுக்கு எந்த உதவி தேவைப்பட்டாலும் அவர்கள் சமாரியரிடத்தில் உதவிபுரியுமாறு கேட்கவேமாட்டார்கள். தாகமாகயிருந்தாலும், தாகத்துக்குத் தா என்று சமாரியரிடம் கேட்பதற்குப் பதிலாக, தாகத்தின் கொடுமையை தாங்கிக்கொள்வது உத்தமமானது என்று வைராக்கியமாக இருப்பார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ யூதராக இருந்தாலும், யூதமார்க்கத்தின் பெருமை அவரிடத்தில் சிறிதுமில்லை.

## அதிகாரம் - 4

இயேசுகிறிஸ்துவைப் போலவே அவருடைய பிள்ளைகளாகிய நம்மிடத்திலும் பெருமை இருக்கக்கூடாது. நம்முடைய தேசம், நம்முடைய இனம், நிறம் என்று எந்தவிதமான பெருமையோ, வைராக்கியமோ நம்மிடத்தில் காணப்படக்கூடாது. இயேசுகிறிஸ்து நன்மையும் கிருபையும் நிறைந்தவராக இருக்கிறார். நம்மிடத்திலும் நன்மையும் கிருபையும் நிறைந்திருக்க வேண்டுமேயல்லாமல், பெருமையும் பொறாமையும் நிறைந்திருக்கக்கூடாது.

இயேசுகிறிஸ்து மற்ற யூதர்களைப்போல, தன்னுடைய யூதமார்க்கத்தில் வைராக்கியமுள்ள ஒரு சாதாரண யூதரைப்போல இருப்பார் என்று இந்த ஸ்திரீ எதிர்பார்க்கிறாள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ இவளுடைய எதிர்பார்ப்புக்கு முற்றிலும் மாறுபட்டவராக இருக்கிறார். சமாரியா நாட்டாளாகிய இந்த ஸ்திரீயைப்பார்த்து விலகிப்போய்விடாமல், அவளிடத்தில் தாகத்துக்குத் தா என்று இயேசுகிறிஸ்து உதவி கேட்கிறார். அவள் சமாரியா ஸ்திரீயாக இருந்தாலும் அவள் கொடுக்கும் உதவியை ஏற்றுக்கொள்ள இயேசு ஆயத்தமாக இருக்கிறார்.

**இன்னார் என்பதை அறிந்திருந்தாயானால்**

**இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: நீ தேவனுடைய ஈவையும் தாகத்துக்குத்தா என்று உன்னிடத்தில் கேட்கிறவர் இன்னார் என்பதையும் அறிந்திருந்தாயானால், நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய், அவர் உனக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுத்திருப்பார் என்றார் (யோவா 4:10).**

சமாரியா நாட்டாளாகிய இந்த ஸ்திரீயிடம் தண்ணீர் வாங்கி தம்முடைய தாகத்தை தீர்த்துக்கொள்ள வேண்டுமென்பது இயேசுகிறிஸ்துவின் நோக்கமல்ல. அவளுக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுக்க வேண்டுமென்பதே இயேசுகிறிஸ்துவின் சித்தம். இதற்காகவே இயேசு அந்த ஸ்திரீயோடு தம்முடைய உரையாடலை ஆரம்பித்திருக்கிறார். இந்த சூழ்நிலையைப் பயன்படுத்தி இயேசுகிறிஸ்து அவளுக்கு ஆவிக்குரிய காரியங்களை உபதேசம் பண்ணுகிறார்.

"நீ தேவனுடைய ஈவை அறிந்திருந்தாயானால் நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய்" என்று கூறுகிறார். யூதருக்கும் சமாரியருக்கும் இடையிலுள்ள வேறுபாட்டைப்பற்றி இயேசுகிறிஸ்து இங்கு ஒரு வார்த்தை கூட பேசவில்லை. "நீர் யூதனாயிருக்க சமாரியா ஸ்திரீயாகிய என்னிடத்தில் தாகத்துக்குத் தா என்று எப்படி கேட்கலாம்" என்று அந்த ஸ்திரீ இயேசுவிடம் கேட்கிறாள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ யூதருக்கும் சமாரியருக்கும் இடையிலுள்ள பிரச்சனையைப்பற்றி பேசுவதை தவிர்த்துவிடுகிறார். நமக்கு பிறரோடு ஏதாவது பிரச்சனை இருக்குமென்றால், கருத்து வேறுபாடு இருக்குமென்றால், அதைப்பற்றி பேசாமலிருந்தாலேயே, அந்தப் பிரச்சனை தானாக தீர்ந்துவிடுவதற்கு அதிக வாய்ப்புள்ளது. பிரச்சனையைப்பற்றி அதிகமாக பேச பேச பிரச்சனையின் உக்கிரம் அதிகரிக்கும்.

யூதருக்கும் சமாரியருக்கும் இடையிலுள்ள பிரச்சனையைப்பற்றி பேசி அவளுடைய மனக்குழப்பதை தீர்த்து வைப்பது இயேசுகிறிஸ்துவின் நோக்கமல்ல. தனக்கு இரட்சகர் தேவையென்று அந்த ஸ்திரீ உணரவேண்டும். இந்த ஸ்திரீ மனந்திரும்பி இரட்சிக்கப்பட வேண்டும் இதுவே இயேசுகிறிஸ்துவின் நோக்கம். சமாரியா நாட்டாளாகிய இந்த ஸ்திரீக்கு இப்பொழுது தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொள்ள மிகப்பெரிய சிலாக்கியம் கிடைத்திருக்கிறது. இது கிருபையின் காலம். இந்தக் காலத்தை விரயம் செய்துவிடாமல் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

சமாரியா நாட்டாளாகிய இந்த ஸ்திரீ தனக்குத் தெரிந்ததைப் பேசுகிறாள். யூதரும் சமாரியரும் சம்பந்தங்கலவமாட்டார்கள் என்பது இந்த ஸ்திரீக்குத் தெரியும். ஆனால் இயேசுகிறிஸ்துவோ இந்த ஸ்திரீக்கு இதுவரையிலும் தெரிந்திராத ஒரு சத்தியத்தை தெளிவுபடுத்த விரும்புகிறார். இயேசுகிறிஸ்து கூறும் இந்த சத்தியத்தைக் குறித்து சமாரியா நாட்டாளாகிய இந்த ஸ்திரீ இதுவரையிலும் அறியாமலிருக்கிறாள். "நீ தேவனுடைய ஈவையும், தாகத்துக்குத் தா என்று உன்னிடத்தில் கேட்கிறவர் இன்னாரென்பதையும் அறிந்திருந்தாயானால்" என்று இயேசுகிறிஸ்து அந்த ஸ்திரீயிடம் கூறுகிறார். இந்த ஸ்திரீயின் பார்வையில் இயேசுகிறிஸ்து ஒரு சாதாரண யூதராவே தெரிகிறார். பிரயாணத்தில் இளைப்படைந்தவராய் கிணற்றின் அருகே உட்கார்ந்திருக்கும் யூதராகவே தெரிகிறார். ஆனால் இயேசுகிறிஸ்துவோ தம்மைப்பற்றிய மெய் சத்தியத்தை அந்த ஸ்திரீ அறிந்துகொள்ள வேண்டுமென்று விரும்புகிறார்.

## அதிகாரம் - 4

இயேசுகிறிஸ்து தேவனுடைய ஈவாக இருக்கிறார். தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் அளவில்லாத அன்பின் அடையாளமே இயேசுகிறிஸ்து. தேவனுடைய ஈவாகிய இயேசுகிறிஸ்துவை நம்முடைய இரட்சகராகவும் ஆண்டவராகவும் பெற்றிருப்பது நம்முடைய ஜீவியத்தில் நாம் பெற்றிருக்கும் மிகப்பெரிய சிலாக்கியமாகும். தேவனுடைய ஈவை நாம் கேட்டுப் பெற்றுக்கொள்ளவேண்டும். தாகத்துக்குத் தா என்று கேட்கிற இயேசுகிறிஸ்துவிடம் தேவனுடைய ஈவை நாம் பணிவோடும் பயபக்தியோடும் கேட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும். தாகத்துக்குத் தா என்று இயேசுகிறிஸ்து கேட்பதினால் அவர் குறைவுடையவரல்ல. அவர் சம்பூரணர். எல்லோருடைய தாகத்தையும் தீர்ப்பதற்குப் போதுமானவர்.

தாம் இன்னாரென்பதை இந்த ஸ்திரீ அறிந்துகொள்ள வேண்டுமென்று இயேசுகிறிஸ்து விரும்புகிறார். தன்னிடத்தில் தாகத்துக்குத் தா என்று கேட்கிறவர் இன்னாரென்பதை அந்த ஸ்திரீ அறிந்திருந்தால், அவளே இயேசு கிறிஸ்துவினிடத்தில் "எனக்கு தாகத்துக்குத் தாருங்கள்" என்று கேட்டிருப்பாள். இயேசுகிறிஸ்துவும் அவளுக்கு தாகத்துக்குத் தண்ணீரைக் கொடுத்திருப்பார். அது சாதாரண தண்ணீரல்ல. இயேசுகிறிஸ்து கொடுப்பது ஜீவத்தண்ணீராயிருக்கும்.

இயேசுகிறிஸ்துவின் மூலமாக நமக்கு ஒரு நன்மை உண்டாகவேண்டுமானால் நாம் அவரிடத்தில் பணிவோடும், பயபக்தியோடும் கேட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும். இயேசுகிறிஸ்துவைப்பற்றிய மெய்யான ஞானமுள்ளவர்கள் அவரைத் தேடுவார்கள். தேடுகிறவர்கள் மாத்திரமே இயேசுவைக் கண்டடைய முடியும். இயேசுகிறிஸ்துவைப் பற்றிய மெய்யான ஞானம் இருக்கிறவர்கள் எதையெல்லாம் அவரிடத்தில் கேட்டு பெற்றுக்கொள்வார்கள் என்பது அவருக்குத் தெரியும். தம்முடைய பிள்ளைகளுக்கு என்ன கொடுக்க வேண்டுமென்பதும், எவ்வளவு கொடுக்கவேண்டுமென்பதும் எப்படி, எப்பொழுது கொடுக்கவேண்டுமென்பதும் இயேசுவுக்குத் தெரியும்.

சமாரியா நாட்டாளாகிய ஸ்திரீ இயேசுகிறிஸ்துவிடம் கேட்டால், அவர் அவளுக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுத்திருப்பார். இயேசுகிறிஸ்து இந்த வசனத்தில் ஜீவத்தண்ணீர் என்று குறிப்பிடுவது பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கும் வார்த்தையாகும். ஆவியானவர் கிணற்றின் அடியில் தேங்கியிருக்கும் தண்ணீரைப் போன்றவர் அல்ல. அவர் ஜீவனுள்ள நீரோடையைப் போன்றவர். ஆவியானவரின் கிருபை ஜீவத்தண்ணீரைப் போல இருக்கிறது. தம்மிடத்தில் கேட்கிறவர்களுக்கு இயேசுகிறிஸ்துவினால் பரிசுத்த ஆவியானவரை கொடுக்க முடியும். தம்மிடத்தில் கேட்கிறவர்களுக்கு அவர் ஆவியானவரைக் கொடுக்கிறார்.

### உம்மிடத்தில் பாத்திரமில்லையே

**அதற்கு அந்த ஸ்திரீ: ஆண்டவரே, மொண்டுகொள்ள உம்மிடத்தில் பாத்திரமில்லையே, கிணறும் ஆழமாயிருக்கிறதே, பின்னை எங்கேயிருந்து உமக்கு ஜீவத்தண்ணீர் உண்டாகும் (யோவா 4:11).**

இயேசுகிறிஸ்துவின் உரையாடல் இந்த ஸ்திரீக்கு புரியவில்லை. இவள் உலகப்பிரகாரமான சிந்தனையில் இருக்கிறாள். இயேசுகிறிஸ்து இவளுக்கு தம்முடைய கிருபையை வெளிப்படுத்துகிறார். தேவனுடைய சத்தியத்தை கூறுகிறார். ஆனால் இவளோ கிணற்றைப்பற்றியும், கிணற்றிலுள்ள தண்ணீரைப்பற்றியும் சிந்தித்துக் கொண்டிருக்கிறாள். தன்னுடைய அறியாமையினால் இந்த ஸ்திரீ இயேசுகிறிஸ்துவிடம் இரண்டு கேள்விகளைக் கேட்கிறாள். அவையாவன: 1. உம்மிடத்தில் பாத்திரமில்லையே 2. யாக்கோபைப்பார்க்கிலும் நீர் பெரியவரோ.

இயேசுகிறிஸ்து தெய்வீக சத்தியத்தை அடையாளமாகவும், உருவகமாகவும் பேசுகிறார். ஆனால் இந்த ஸ்திரீயோ இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தை உலகப்பிரகாரமாக சிந்தித்துப் பார்க்கிறாள். இயேசுகிறிஸ்து நிக்கொதேமுவிடம் மறுபடியும் பிறப்பதைப்பற்றி பேசியபோது, அவனும் இந்த ஸ்திரீயைப்போலவே உலகப்பிரகாரமாக சிந்தனை பண்ணினான்.

## அதிகாரம் - 4

இயேசுகிறிஸ்துவின் வல்லமை என்ன என்பது இந்த ஸ்திரீக்குத் தெரியாது. அவரால் எல்லாம் ஆகும் என்பதை இவள் இன்னும் தெரிந்திருக்கவில்லை. அறியாமையிலிருக்கிறாள். தன்னிடத்தில் தாகத்துக்குத் தா என்று கேட்கும் இயேசுகிறிஸ்துவினால், இந்த உலகத்திற்கே ஜீவத்தண்ணீரைக் கொடுக்க முடியும் என்னும் சத்தியம் இந்த ஸ்திரீக்குத் தெரியவில்லை. இயேசுகிறிஸ்துவின் மேன்மையும் மகத்துவமும் அவளுக்குப் புரியவில்லை. ஆகையினால் "யாக்கோபைப்பார்க்கிலும் நீர் பெரியவரோ" என்று எல்லோருக்கும் பெரியவராகிய இயேசுகிறிஸ்துவைப்பார்த்தே இந்த ஸ்திரீ இந்தக் கேள்வியைக் கேட்கிறாள்.

இயேசுகிறிஸ்து எல்லோருக்கும் ஜீவத்தண்ணீரைக்கொடுக்க போதுமானவர். அவரால் எல்லாம் ஆகும். அவருக்கு யாருடைய உதவியும் தேவையில்லை. ஆனால் இந்த ஸ்திரீயோ இயேசுகிறிஸ்துவை ஒரு சாதாரண யூதமனுஷனாக மாத்திரமே காண்கிறாள். இயேசுகிறிஸ்து இன்னாரென்பதை அந்த ஸ்திரீ அறிந்திருந்தால், ஜீவத்தண்ணீரைக் கொடுக்குமாறு அவளே அவரிடத்தில் கேட்டிருப்பாள் ஆனால் அந்த ஸ்திரீயோ இயேசுவின் வார்த்தையைப் புரிந்துகொள்ளாமல் "ஆண்டவரே மொண்டு கொள்ள உம்மிடத்தில் பாத்திரமில்லையே, கிணறும் ஆழமாயிருக்கிறதே" என்று கூறுகிறாள். இயேசுகிறிஸ்து ஒரு காரியத்தைச் செய்யவேண்டுமென்றால், அதை செய்யக்கூடிய ஆற்றல் அவரிடத்திலுள்ளது என்பதை தன்னுடைய கண்களால் காணவேண்டுமென்று இந்த ஸ்திரீ எதிர்பார்க்கிறாள். தான் காணாததை இவளால் விசுவாசிக்க முடியவில்லை.

சமாரியா நாட்டாளாகிய இந்த ஸ்திரீயைப்போலவே இக்காலத்தில் ஏராளமான ஜனங்கள் இருக்கிறார்கள். தங்கள் கண்களால் காணாவிட்டால், இவர்கள் இயேசுகிறிஸ்துவின் வாக்குத்தத்தங்களை விசுவாசிக்கமாட்டார்கள். அற்புதங்களும் அடையாளங்களும் நடைபெறுவதற்கு முன்பாகவே அதை தங்களுக்கு நிரூபித்துக் காட்டவேண்டுமென்று இப்படிப்பட்டவர்கள் விவாதம் பண்ணுவார்கள். தங்கள் கண்களால் பார்ப்பதை மாத்திரமே இவர்கள் நம்புவோம் என்று சொல்வார்கள். சில சமயங்களில் தேவனுடைய கிருபையினால் அற்புதங்களும் அடையாளங்களும் நடைபெறும்போது, வேண்டுமென்றே தங்கள் கண்களை மூடிக்கொண்டு, தாங்கள் அற்புதங்களை காணவில்லையென்று சாதிப்பார்கள். தூங்குகிறவர்களை எளிதாக எழுப்பிவிடலாம். ஆனால் தூங்குகிறவர்கள்போல நடித்து பாசாங்கு பண்ணுகிறவர்களை எழுப்புவது கடினம்.

சமாரியா நாட்டாளாகிய இந்த ஸ்திரீயிடம் இயேசுகிறிஸ்து ஜீவத்தண்ணீரைப் பற்றி சொன்னபோது "எங்கேயிருந்து உமக்கு ஜீவத்தண்ணீர் உண்டாகும்" என்று அதை அறிந்துகொள்ள விரும்புகிறாள். ஜீவத்தண்ணீர் இயேசுகிறிஸ்துவில் இருக்கிறது. அது அவருக்குள் மறைவாயிருக்கிறது. அவரிடத்திலுள்ள ஜீவத்தண்ணீர் மனக்குலத்தார் அனைவருக்குமே போதுமானது. ஜீவத்தண்ணீரை அவர் எங்கு வைத்திருக்கிறார் என்று நமக்குத் தெரியாவிட்டாலும், அவரிடத்தில் ஜீவத்தண்ணீர் அளவில்லாமல் இருக்கிறது.

### யாக்கோபைப்பார்க்கிலும் நீர் பெரியவரோ

**இந்தக் கிணற்றை எங்களுக்குத் தந்த நம்முடைய பிதாவாகிய யாக்கோபைப் பார்க்கிலும் நீர் பெரியவரோ? அவரும் அவர் பிள்ளைகளும் அவர் மிருகஜீவன்களும் இதிலே குடித்ததுண்டே என்றாள் (யோவா 4:12).**

சமாரியா நாட்டாளாகிய இந்த ஸ்திரீக்கு இதுவரையிலும் தெரிந்ததெல்லாம் இந்தக் கிணற்று தண்ணீர் மாத்திரமே. இந்த கிணற்றைப்பற்றியும், இதிலுள்ள தண்ணீரைப் பற்றியும் இவள் பெரிதாக நினைத்துக் கொண்டிருக்கிறாள். இதைவிட சிறப்பான தண்ணீரை இயேசுகிறிஸ்துவினால் கொடுக்க முடியுமென்று அவளால் நினைத்துப் பார்க்கமுடியவில்லை. ஆகையினால் அவள் இயேசுவிடம் "இந்தக் கிணற்றை எங்களுக்குத் தந்த நம்முடைய பிதாவாகிய யாக்கோபைப் பார்க்கிலும் நீர் பெரியவரோ" என்று கேட்கிறாள்.

## அதிகாரம் - 4

இந்தக் கிணற்றில் யாக்கோபும், அவர் பிள்ளைகளும், அவர் மிருக ஜீவன்களும் தண்ணீர் குடித்திருக்கிறார்கள். வரலாற்றுப் பிரகாரமாக இது மெய்தான். தேவனுடைய பராமரிப்பு யாக்கோபுக்கும் அவருடைய சந்ததியாருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. தேவனுடைய வல்லமையினால் இந்தக் கிணற்றிலிருந்து பல சந்ததிகளுக்கு தண்ணீர் கிடைத்திருக்கிறது. யாக்கோபின் சந்ததியில் வந்திருக்கும் ஏராளமான ஜனங்களும், அவர்களுடைய மிருக ஜீவன்களும் இந்தக் கிணற்றில் இதுவரையிலும், இன்றும் தண்ணீர் குடித்து வருகிறார்கள். தேவனுடைய வல்லமை அற்புதமானது.

சமாரியா நாட்டாளாகிய இந்த ஸ்திரீ யாக்கோபைப்பற்றியும், இந்தக் கிணற்றைப்பற்றியும் கூறுவது பல விஷயங்களில் சரியாக இருந்தாலும், அவள் மேலும் பல காரியங்களை இன்னும் அறியாதவளாகவே இருக்கிறாள். யாக்கோபை இவள் தன்னுடைய பிதாவாக அழைக்கிறாள். சமாரியர்கள் தங்களையும் யாக்கோபின் சந்ததியார் என்று அழைக்கிறார்கள். ஆகையினால் யாக்கோபு இந்தக் கிணற்றை சமாரியருக்கு ஈவாக கொடுத்தார் என்று உரிமை கொண்டாடுகிறார்கள். பிதாவாகிய தேவனே இந்தக் கிணற்றிலுள்ள தண்ணீரை சமாரியருக்கு கிருபையாகக் கொடுத்திருக்கிறார். இது தேவனுடைய ஈவு. யாக்கோபுடைய ஈவு அல்ல.

இக்காலத்திலும் ஏராளமான ஜனங்கள் தேவனுடைய கிருபையையும் வரங்களையும் சமாரியா நாட்டாளாகிய ஸ்திரீயைப்போல தவறாகப் புரிந்து வைத்திருக்கிறார்கள். தேவனுடைய ஊழியக்காரர்களை தேவனுடைய ஈவாக நினைக்கிறார்கள். இவர்கள் மூலமாக நடைபெறும் அற்புதங்களெல்லாவற்றிற்கும் இவர்களே காரண கர்த்தாக்கள் என்று நினைத்து இந்த ஊழியக்காரர்களை மேன்மைப்படுத்துகிறார்கள். வரங்கள் மெய்யாகவே எங்கிருந்து வந்திருக்கிறது என்பதை இவர்கள் சிந்தித்துப் பார்க்கவில்லை. தேவன் ஒருவருக்கு தம்முடைய வரத்தை ஈவாக கொடுக்கவில்லையென்றால், அவரால் ஒன்றும் செய்ய முடியாது. தேவனுடைய கிருபையில்லாமல் யாராலும் ஊழியம் செய்யமுடியாது.தேவன் அனுமதிக்காவிட்டால் அற்புதங்களும் அடையாளங்களும் நடைபெறாது. ஆனால் இக்காலத்திலோ ஏராளமான ஜனங்கள் தேவனுடைய சமுகத்தில் கூட்டமாய் வருவதற்குப் பதிலாக, தங்களுக்குப் பிடித்த ஊழியக்காரர்களிடத்தில் கூட்டம் கூட்டமாய் கூடிவருகிறார்கள். தேவனால் எல்லாம் ஆகும் என்று விசுவாசிப்பதற்குப் பதிலாக, தங்களுக்குப் பிடித்த ஊழியக்காரர்களால் எல்லாம் ஆகும் என்று தவறாக விசுவாசிக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவை யாக்கோபோடு ஒப்பிட்டுப் பேசுவதே தவறு. இயேசுகிறிஸ்துவும் யாக்கோபும் சரிசமமானவர்களல்ல. ஒப்பிடத்தக்கவர்களல்ல. இயேசுகிறிஸ்து தெய்வத்துவப் பண்புடையவர். யாக்கோபு மனுஷத்துவப் பண்புடையவர். தேவனையும் மனுஷனையும் ஒருபோதும் சமமாக ஒப்பிடக்கூடாது. ஆனால் இந்த ஸ்திரீயோ தங்களுடைய பிதாவாகிய யாக்கோபை பெரியவராக நினைத்து, இயேசுகிறிஸ்து யாக்கோபைவிட பெரியவரா என்று அவரிடத்திலேயே கேள்வி கேட்கிறாள். யாக்கோபைப்பற்றி இவள் பெருமையாக நினைக்கும் நினைப்பு இவளுடைய கண்களை மூடி மறைத்திருக்கிறது. இவள் இதுவரையிலும் யாக்கோபையே பார்த்துக்கொண்டிருந்ததினால், இவளால் தேவனைப்பார்க்க முடியவில்லை. இவளைப்போலவே ஊழியக்காரர்களையே பார்த்துக்கொண்டிருக்கும் விசுவாசிகளினால், இயேசுகிறிஸ்துவை பார்க்கவே முடியாது.

**மறுபடியும் தாகம் உண்டாகும்**

**இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: இந்தத் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு மறுபடியும் தாகமுண்டாகும் (யோவா 4:13).**

தாம் கொடுக்கும் ஜீவத்தண்ணீர், யாக்கோபுடைய கிணற்றிலிருந்து மொண்டு கொள்ளப்படும் தண்ணீரைவிட மேலானது என்பதை இயேசுகிறிஸ்து இங்கு விவரித்துக் கூறுகிறார். சமாரியா ஸ்திரீ இயேசுகிறிஸ்துவிடம் யாக்கோபைப்பார்க்கிலும் நீர் பெரியவரோ என்றும், அவரும், அவர் பிள்ளைகளும், அவர் மிருக ஜீவன்களும் இந்தக் கிணற்றுத் தண்ணீரை குடித்ததுண்டே என்றும் சொன்னபோது, இயேசுகிறிஸ்து அவளைக் கடிந்து கொள்ளவில்லை. அவளுடைய உரையாடலை அத்துடன் நிறுத்திக்கொள்ளுமாறு கட்டளையிடவுமில்லை. அதற்கு மாறாக அவளை உற்சாகப்படுத்துகிறார்.

## அதிகாரம் - 4

யாக்கோபுடைய கிணற்றுத்தண்ணீர் மிகவும் நல்லதுதான் என்றும், அந்த தண்ணீரை யாக்கோபும், அவருடைய பிள்ளைகளும், அவருடைய மிருக ஜீவன்களும் குடித்ததினால் அந்தக் கிணற்றுத் தண்ணீருக்கு ஒரு பெருமை உண்டாயிற்று என்றும் இயேசுகிறிஸ்து அங்கீகரிக்கிறார். யாக்கோபுடைய கிணற்றுத் தண்ணீரைக் குடிக்கும்போது தாகம் தீரும். ஆயினும் அதைக் குடிக்கிறவனுக்கு மறுபடியும் தாகம் உண்டாகும். "இந்தக் கிணற்றுத் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு மறுபடியும் தாகம் உண்டாகும்" என்று இயேசுகிறிஸ்து அந்த ஸ்திரீயிடம் கூறுகிறார்.

இந்தக் கிணற்றுத் தண்ணீரும் மற்ற கிணற்றுத் தண்ணீரைப்போல சாதாரணமான தண்ணீர்தான். ஒருவேளை சுவையில் ஒவ்வொரு கிணற்றுத் தண்ணீருக்கும் வித்தியாசமிருக்கலாம். என்றாலும் அடிப்படையில் இந்தத் தண்ணீர் எல்லாமே ஒன்றுபோலவே இருக்கிறது. இதைக் குடிக்கிறவனுக்கு அவனுடைய தாகம் தற்காலிகமாகத் தீரும். ஆயினும் அவனுக்கு மறுபடியும் தாகம் உண்டாகும்.

தற்போதுள்ள நம்முடைய சரீரம் குறைபாடுடையது. தண்ணீரை எவ்வளவுதான் குடித்தாலும் திருப்தியடையாது. மறுபடியும் தாகம் எடுத்துக்கொண்டேயிருக்கும். தண்ணீர் தாகம் மட்டுமல்ல, நம்முடைய சரீரத்தில் எல்லாவிதமான ஆசைகளும் உள்ளன. எவ்வளவுதான் நமக்கு இருந்தாலும் நம்முடைய சரீரம் திருப்தியடைவதில்லை. ஜீவன் எரிகிற அக்கினியைப்போன்றது. அக்கினி தொடர்ந்து எரியவேண்டுமென்றால் அதில் விறகுக் கட்டைகளை தொடர்ந்து போட்டுக்கொண்டேயிருக்க வேண்டும். இதை எரிகிற விளக்கோடும் ஒப்பிடலாம். விளக்கு தொடர்ந்து எரியவேண்டுமென்றால் அதில் தொடர்ந்து எண்ணெய் வார்த்துக் கொண்டேயிருக்க வேண்டும். எண்ணெய் குறைந்தால் திரி மங்கியெரியும். எண்ணெய் தீர்ந்துபோனால் விளக்குத்திரி எரியாது.

இந்த உலகத்தில் நம்முடைய ஆறுதல்களும் திருப்திகளும் குறைபாடுடையவை. இவை நித்தியமாக நிலைத்திருப்பதில்லை. நேற்று புசித்த போஜனமும், நேற்று பருகிய பானமும் இன்றைய தினத்திற்கு உதவாது. அன்றன்று மறுபடியும் புசித்து பானம்பண்ணவேண்டும். உலகப்பிரகாரமான போஜனத்தைப் புசிக்கிறவனுக்கு மறுபடியும் பசியுண்டாகும். உலகப்பிரகாரமான தண்ணீரை குடிக்கிறவனுக்கு மறுபடியும் தாகம் உண்டாகும். ஆனால் இயேசுகிறிஸ்து கொடுக்கும் ஜீவத்தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகம் உண்டாகாது.

### ஒருக்காலும் தாகம் உண்டாகாது

**நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார் (யோவா 4:14).**

இயேசுகிறிஸ்து கொடுக்கும் ஜீவத்தண்ணீர் பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கிறது. பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்கிறவர்கள் ஆவியானவரின் கிருபையைப் பெற்றுக்கொள்கிறார். இயேசுகிறிஸ்துவிடமிருந்து ஜீவத்தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு மறுபடியும் தாகம் உண்டாகாது. இவனுடைய ஜீவியத்தில் தேவனைத்தவிர வேறு எதன்மீதும் தாகம் இருக்காது. தனக்கு தேவனைப்பற்றிய வெளிப்பாடு இன்னும் அதிகமாக வேண்டும் என்னும் தாகம் மாத்திரமே இவனிடத்தில் இருக்கும்.

உலகப்பிரகாரமான தண்ணீரைக் குடித்தால் மறுபடியும் தாகம் உண்டாவதுபோல, ஜீவத்தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு தேவனைப்பற்றிய தாகம் உண்டாகாது. தண்ணீர் குடிக்கிறவனுக்கு அந்தத் தண்ணீரின் சாரம் அவனுடைய சரீரத்தில் வற்றிப்போவதினால், அவனுக்கு மறுபடியும் தாகம் உண்டாகிறது. ஜீவத்தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ தேவனுடைய கிருபையின் சாரம் வற்றிப்போவதில்லை. ஆகையினால் அவனுக்கு மறுபடியும் தாகம் உண்டாவதில்லை. தேவனுடைய கிருபையைப் பற்றியும், அவருடைய வெளிப்பாடுகளைப் பற்றியும் மேலும் அதிகமாக தெரிந்துகொள்ள வேண்டும் என்னும் ஆவல் அவனிடத்தில் காணப்படும்.

## அதிகாரம் - 4

என்றாலும் அவனுடைய உள்ளத்தில் தேவனுடைய கிருபையோ அல்லது தேவனுடைய வெளிப்பாடோ ஒருபோதும் வற்றிப்போவதில்லை. அவனுக்குள் இருக்கும் ஆவியானவர் தேவனுடைய கிருபையை அவனுக்குத் தொடர்ந்து கொடுத்துக் கொண்டேயிருப்பார்.

இயேசுகிறிஸ்து கொடுக்கும் தண்ணீரை குடிக்கிறவனுக்கு ஒருக்காலும் தாகம் உண்டாகாது. ஏனெனில் இயேசுகிறிஸ்து அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே தண்ணீர் கிணறாகவே இருக்கும். அவர் குடிக்க கொடுக்கும்போது சிறிதளவு தண்ணீரை கொடுக்காமல், தண்ணீர் கிணற்றையே கொடுக்கிறார். இந்தக் கிணற்றில் தண்ணீர் எப்போதும் வற்றாத நீரூற்றாக ஊறிக்கொண்டேயிருக்கும். இந்த நீரூற்று அவனுக்குள்ளே இருக்கிறது. அவனுக்கு எப்பொதெல்லாம் தேவைப்படுகிறதோ அப்போதெல்லாம் அவனுக்குள்ளே இருக்கும் நீரூற்றிலிருந்து தண்ணீரைப் பெற்றுக்கொள்ளலாம். ஆகையினால் அவனுக்கு மறுபடியும் தாகம் உண்டாவதற்கு வாய்ப்பில்லை.

தேவன் கொடுக்கும் சந்தோஷமும் சமாதானமும், ஆசீர்வாதங்களும் அவனுக்கு போதுமானதாக இருக்கும். சந்தோஷத்தையும் நிம்மதியையும் தேடி அவன் உலகத்திற்குள் சுற்றி அலையவேண்டிய அவசியமில்லை. சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடிய பரிசுத்த ஆவியானவர் அவனுக்குள்ளே இருக்கிறார். விசுவாசிகளுக்குள் இருக்கும் ஜீவத்தண்ணீரின் நீரூற்று எப்போதுமே அவனுக்குள் நிரம்பி வழிந்து கொண்டிருக்கிறது. இது ஒரு கிணற்றுக்குள் கெட்டுப்போன பழைய தண்ணீரல்ல. இது எப்போதுமே ஒரு நீரூற்றிலிருந்து புறப்பட்டு வரும் புதிய தண்ணீராகவே இருக்கும்.

தேவனுடைய சத்தியங்கள் நம்முடைய ஜீவியத்தில் கெட்டுப்போன பழைய தண்ணீரைப்போல இருக்கக்கூடாது. புதிதாக சுரக்கும் நீரூற்றைப்போல இருக்கவேண்டும். கெட்டுப்போன தண்ணீரினால் நமக்குத் திருப்தி கிடைக்காது. நீரூற்றை அடைப்பதற்கு நாம் முயற்சி பண்ணக்கூடாது. அப்போது இயேசுகிறிஸ்துவிடமிருந்து நாம் பெற்றுக்கொண்ட ஜீவத்தண்ணீரின் நீரூற்று நமக்கு நித்திய ஜீவனைத்தரும்.

ஜீவத்தண்ணீரை தொடர்ந்து பருகும்போது, நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக பரிசுத்தமாகும். அதை தொடர்ந்து பரிபூரணமடையும். நாம் நித்திய ஜீவனைப்பெற்றுக்கொள்ளும் வரையிலும் நமக்குள் சுரக்கும் ஜீவத்தண்ணீர் நம்மை சுத்திகரித்துக்கொண்டேயிருக்கும். நாம் பரிபூரணமடையும் வரையிலும் அது நம்மை சுத்திகரிக்கும். யாக்கோபுடைய கிணற்றுத் தண்ணீரோ நம்முடைய சரீரத்தின் தாகத்தை தற்காலிகமாக தீர்த்து வைக்கும். இயேசுகிறிஸ்து கொடுக்கும் ஜீவத்தண்ணீரோ நமக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும். சமாரியா ஸ்திரீக்கு ஜீவத்தண்ணீரைப்பற்றித் தெரியாது. ஆகையினால் யாக்கோபின் கிணறு பெரியது என்று அவள் நினைத்துக்கொண்டிருக்கிறாள்.

### அந்தத் தண்ணீரை எனக்கும் தரவேண்டும்

**அந்த ஸ்திரீ அவரை நோக்கி: ஆண்டவரே, எனக்குத் தாகமுண்டாகாமலும், நான் இங்கே மொண்டுகொள்ள வராமலுமிருக்கும்படி, அந்தத் தண்ணீரை எனக்குத் தரவேண்டும் என்றாள் (யோவா 4:15).**

தாம் கொடுக்கும் தண்ணீரை குடிக்கிறவனுக்கு ஒருக்காலும் தாகம் உண்டாகாது என்று இயேசுகிறிஸ்து கூறுகிறார். மேலும் அந்தத் தண்ணீர் அவனுக்குள்ளே ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றும் இயேசுகிறிஸ்து விளக்கம் கொடுக்கிறார். சமாரியா ஸ்திரீக்கு அந்த தண்ணீரைக் குடிக்க வேண்டுமென்று விருப்பமுண்டாயிற்று. "ஆண்டவரே எனக்கு தாகம் உண்டாகாமலிருக்க அந்தத் தண்ணீரை எனக்குத் தரவேண்டும்" என்று இயேசுகிறிஸ்துவிடம் கேட்கிறாள். ஜீவத்தண்ணீர் என்று இயேசுகிறிஸ்து கூறுவது பரிசுத்த ஆவியானவரைப்பற்றிய சத்தியம் என்பதை இந்த ஸ்திரீ புரிந்துகொள்ளவில்லையென்று ஒரு சிலர் கருத்துக் கூறுகிறார்கள். எந்த தண்ணீரைக் குடித்தாலும் தாகம் உண்டாகும் என்றும், ஒருக்காலும் தாகம் உண்டாகாத தண்ணீர் எதுவுமில்லை என்றும் நினைத்து, இந்த ஸ்திரீ இயேசுகிறிஸ்துவை இந்த வார்த்தையினால் பரியாசம்பண்ணுவதாக ஒரு சிலர் கருத்துக் கூறுகிறார்கள்.

## அதிகாரம் - 4

ஒவ்வொரு நாளும் தண்ணீர் மொண்டு கொள்ள இந்தக் கிணற்றுக்கு வருவது சமாரியா ஸ்திரீக்கு வேதனை நிறைந்த அனுபவமாக இருக்கும். கிணற்றிலிருந்து தண்ணீர் இறைக்கவேண்டும். இறைத்த தண்ணீரை வீட்டிற்கு சுமந்து செல்லவேண்டும். இயேசுகிறிஸ்து கொடுக்கும் தண்ணீரைக் குடிப்பதினால், தனக்கு ஒருக்காலும் தாகம் உண்டாகாமல் போனால், அது தனக்கு மிகவும் நல்லது என்று நினைக்கிறாள். தாகம் உண்டாகவில்லையென்றால், தண்ணீர் மொண்டு கொள்ளும்படி அவள் இந்தக் கிணற்றிற்கு நடந்துவர வேண்டிய அவசியமில்லை. ஆகையினால் இந்தக் கிணற்றிற்கு வராமலிருக்கும்படி இயேசுகிறிஸ்து குறிப்பிடும் தண்ணீரை தனக்குத் தரவேண்டுமென்று அவள் இயேசுகிறிஸ்துவிடம் கேட்கிறாள்.

இந்த ஸ்திரீ மிகவும் விவேகமாக சிந்திப்பதாக ஒரு சிலர் கருத்துக் கூறுகிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவின் சத்திய உபதேசத்தை இவள் சரியாக புரிந்துகொள்ளவில்லை. தாகம் உண்டாகாமல் போனால், கிணற்றிற்கு வராமல் இருப்பதுதான் தனக்கு ஆதாயமென்று நினைக்கிறாள். இயேசுகிறிஸ்துவோ நித்திய ஜீவனைப்பற்றி பேசுகிறார். இது இவளுக்கு சரியாக புரியவில்லை. இயேசுகிறிஸ்து கூறுவது எந்த தண்ணீராக இருந்தாலும், அது புதுமையான தண்ணீராக இருப்பதினால், தனக்கும் வேண்டுமென்று கேட்கிறாள். வேலைப்பளுவை எளிதாக்குவது உழைப்பாளிகள் எல்லோருமே விரும்பும் காரியம். எப்படியாவது தனக்கு வேலை குறைந்தால் அது தனக்கு நல்லதுதான் என்று நினைக்கிறாள். இந்த ஸ்திரீயைப்போலவே இக்காலத்தில் ஏராளமான ஜனங்கள், இயேசுகிறிஸ்துவின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறார்கள். அவருடைய உபதேசம் புரியவில்லையென்றாலும், அவர் செய்கிற அற்புதத்தின் நோக்கம் என்ன என்று தங்களுக்குத் தெரியவில்லையென்றாலும், தங்களுக்கு ஆசீர்வாதமும் அற்புதமும் வேண்டுமென்று ஏராளமான ஜனங்கள் விரும்புகிறார்கள். இயேசுகிறிஸ்துவைப்பற்றிய வெளிப்பாடு தங்களுக்கு புரியாமல் போனாலும் அவர் மூலமாக நடைபெறும் அற்புதத்தை பெற்று அனுபவிக்க வேண்டுமென்று சிலர் விரும்புகிறார்கள்.

இயேசுகிறிஸ்து கொடுக்கும் வரங்களை வைத்துக்கொண்டு என்ன செய்வதென்று தெரியாமல் போனாலும், தங்களுக்கும் வரம் வேண்டுமென்று நினைக்கிறார்கள். எதற்காக ஊழியம் செய்யவேண்டும், எப்படி ஊழியம் செய்யவேண்டும் என்று தெரியாமல் போனாலும், எல்லோரும் ஊழியம் செய்கிறார்களே என்று ஆசைப்பட்டு ஒரு சிலர் ஊழியத்திற்கு வருகிறார்கள். தாங்கள் விசுவாசத்தில் பலவீனமானவர்களாக இருந்தாலும், தங்கள் மூலமாக இயேசுகிறிஸ்துவின் அற்புதங்களைச் செய்யும் வரம், குணமாக்கும் வரம் மேலும் எல்லா வரங்களும் கிரியை செய்யவேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள்.

### சமாரிய ஸ்திரீயின் புருஷன்
### யோவா 4 : 16-18

**யோவா 4:16. இயேசு அவளை நோக்கி: நீ போய், உன் புருஷனை இங்கே அழைத்துக் கொண்டுவா என்றார்.**

**யோவா 4:17. அதற்கு அந்த ஸ்திரீ: எனக்குப் புருஷன் இல்லை என்றாள். இயேசு அவளை நோக்கி: எனக்குப் புருஷன் இல்லையென்று நீ சொன்னது சரிதான்.**

**யோவா 4:18. எப்படியெனில், ஐந்து புருஷர் உனக்கிருந்தார்கள், இப்பொழுது உனக்கிருக்கிறவன் உனக்குப் புருஷனல்ல, இதை உள்ளபடி சொன்னாய் என்றார்.**

**உன் புருஷனை இங்கே அழைத்துக்கொண்டு வா:இயேசு அவளை நோக்கி: நீ போய், உன் புருஷனை இங்கே அழைத்துக் கொண்டுவா என்றார் (யோவா 4:16).**

சமாரியா நாட்டாளாகிய ஸ்திரீயின் புருஷனைப்பற்றி இயேசுகிறிஸ்து பேசுகிறார். இதுவரையிலும் இயேசுகிறிஸ்து ஜீவத்தண்ணீரைப்பற்றி பேசினார். ஆனால் அவளுக்கோ அதைப்பற்றி சரியாக புரியவில்லை. அவள் உலகப்பிரகாரமான கிணற்றுத் தண்ணீரைப்பற்றியே நினைத்துக்கொண்டிருக்கிறாள். ஜீவத்தண்ணீரைப்பற்றி அவளுக்கு எப்படியாவது புரிய வைக்கவேண்டுமென்று இயேசுகிறிஸ்து சித்தங்கொள்கிறார். இதற்காக அந்த ஸ்திரீயின் புருஷனைப்பற்றி இயேசுகிறிஸ்து பேசுகிறார்.

## அதிகாரம் - 4

ஜீவத்தண்ணீரைப்பற்றி இதுவரையிலும் பேசியவர், இப்போது அந்த ஸ்திரீயின் புருஷனைப்பற்றி பேசுவதினால், இயேசுகிறிஸ்து ஜீவத்தண்ணீரின் சத்தியத்தை பற்றி பேசுவதை நிறுத்திக் கொண்டார் என்று பொருள் கூறமுடியாது. ஜீவத்தண்ணீரின் சத்தியத்தைப்பற்றி விளக்குவதற்காகவே இயேசுகிறிஸ்து அந்த ஸ்திரீயின் புருஷனைப்பற்றி பேசுகிறார். இது தேவனுடைய கிருபையுள்ள திட்டம்.

ஜீவத்தண்ணீரைப்பற்றி பேசுவதற்குப் பதிலாக, அந்த ஸ்திரீயின் புருஷனைப்பற்றி பேசும்போது, இயேசுகிறிஸ்து அவளுடைய மனச்சாட்சியோடு பேசுகிறார். இதுவரையிலும் தூங்கிக்கொண்டிருக்கும் அவளுடைய மனச்சாட்சியை தட்டி எழுப்புகிறார். மனச்சாட்சி கூர்மையாக இருந்தால்தான் நமக்கு பாவத்தைப்பற்றிய உணர்வு உண்டாகும். பாவத்திற்கு பரிகாரம் வேண்டும் என்னும் ஆவலும் உண்டாகும். மனச்சாட்சி கூர்மையாக இருக்கிறவர்கள் தேவனுடைய கிருபையை சந்தோஷமாக ஏற்றுக்கொள்வார்கள்.

இயேசுகிறிஸ்து அந்த ஸ்திரீயின் மனச்சாட்சியோடு பேசும்போது, அவளுடைய ஆத்துமாவில் கிரியை செய்கிறார். இப்போது அவளுடைய ஆத்துமா பாவத்தினால் வருத்தப்பட்டு பாரம் சுமக்க ஆரம்பிக்கிறது. இதுவரையிலும் தன்னுடைய பாவத்தைப்பற்றி சிந்தித்துப் பார்க்காதவள், இப்போது அதைக்குறித்து சிந்தித்துப் பார்க்கிறாள். இயேசுகிறிஸ்துவின் உரையாடல் அவளை சிந்திக்கச் செய்கிறது. தன்னுடைய பாவத்தின் பாரம் அதிக சுமையாக இருப்பதை உணருகிறாள். தனக்கு இந்த பாவபாரத்திலிருந்து இளைப்பாறுதல் தேவையென்பதை அறிந்து கொள்கிறாள். இந்த இளைப்பாறுதலை இயேசுகிறிஸ்துவிடம் மாத்திரமே பெற்றுக்கொள்ள முடியும்.

பாவத்தின் பாரசுமையை வருத்தப்பட்டு சுமக்கிறவர்கள், இயேசுகிறிஸ்து கொடுக்கும் ஜீவத்தண்ணீரை பருகி இளைப்பாறுதல் அடைவார்கள். தங்கள் ஆத்தும தாகத்தைத் தீர்த்துக்கொள்வார்கள். இயேசுகிறிஸ்துவின் மூலமாக தங்கள் ஆத்துமாவில் இரட்சிக்கப்பட்டு, நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வார்கள்.

இயேசுகிறிஸ்து இங்கு இந்த ஸ்திரீயிடம் ஒவ்வொரு காரியமாக பேசி தமது சுவிசேஷத்தை அறிவிக்கிறார். கேட்கிறவர்களுக்கு புரியும் விதத்தில் நாம் பேசப்பழகிக்கொள்ள வேண்டும். கேட்போருக்குப் புரியவில்லையென்றால் நாம் எப்படித்தான் சாதுரிய வார்த்தைகளைப் பயன்படுத்தினாலும், சத்தத்தை உயர்த்தி வல்லமையாய் பேசினாலும் அதினால் அவர்களுக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகாது.

இயேசுகிறிஸ்து அந்த ஸ்திரீயின் புருஷனைப்பற்றி பேசும்போது மிகவும் கண்ணியமாக தமது உரையாடலை ஆரம்பிக்கிறார். "நீ போய் உன் புருஷனை இங்கே அழைத்துக்கொண்டு வா" என்று கூறுகிறார். இவளுக்கு ஜீவத்தண்ணீரைப்பற்றி புரியவில்லை. ஒருவேளை இவளுடைய புருஷன் இவள் ஜீவத்தண்ணீரின் உபதேசத்தை புரிந்துகொள்வதற்கு உதவிபுரியலாம். அதற்காக "உன் புருஷனை இங்கே அழைத்துக் கொண்டுவா" என்று இயேசுகிறிஸ்து கூறியிருக்கலாம். அத்துடன் ஜீவத்தண்ணீரைப்பற்றி இவளுக்கு உபதேசம்பண்ணியதுபோல, இவளுடைய புருஷனுக்கும் உபதேசம் பண்ண வேண்டுமென்று இயேசுகிறிஸ்து விரும்பியிருக்கலாம்.

இந்த ஸ்திரீ தன்னை ஆபிரகாமின் சந்ததியை சேர்ந்தவளாக எண்ணிக் கொண்டிருக்கிறாள். இவள் மாத்திரமல்ல இவளோடு சேர்ந்து இவளுடைய புருஷனும் ஆபிரகாமின் சந்ததியைச் சேர்ந்தவனாகலாம். தேவனுடைய கிருபையின் ஜீவனுக்கு இவர்கள் இருவரும், கணவனும் மனைவியுமாக, குடும்பமாக சுதந்தரவாளிகளாகலாம். "நீ போய் உன் புருஷனை இங்கே அழைத்துக்கொண்டு வா" என்று இயேசுகிறிஸ்து கூறியபோது, இந்த உரையாடலை கேட்கிறவர்கள் அவருடைய பேச்சைப்பற்றித்தான் இப்படித்தான் நினைப்பார்கள்.

## அதிகாரம் - 4

இயேசுகிறிஸ்து மெய்யாகவே இந்த ஸ்திரீக்கும், அவளுடைய குடும்பத்திற்கும் நன்மை செய்ய விரும்புகிறார். தேவனுடைய நன்மையை அவள் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால் முதலாவதாக அவளுடைய பாவத்தைக்குறித்து அவள் உணரவேண்டும். இயேசுகிறிஸ்துவின் வார்த்தை அவளுடைய பாவத்தை உணர்த்துகிறது. ஒருவருடைய பாவத்தை உணர்த்துவது சாதாரண காரியமல்ல. ஞானமான வார்த்தைகளை பயன்படுத்தவில்லையென்றால், நன்மை உண்டாவதற்குப் பதிலாக தீமை உண்டாகிவிடும். தங்களுடைய பாவத்தை அவர்கள் உணருவதற்குப் பதிலாக, கோபப்பட்டு சண்டைக்கு வந்துவிடுவார்கள்.

இயேசுகிறிஸ்துவோ மிகவும் ஞானமான வார்த்தைகளைப் பேசி, அந்த ஸ்திரீயின் பாவங்களை அவளுக்கு உணர்த்துகிறார். இயேசுகிறிஸ்து சர்வஞானமுள்ளவர். அவருடைய ஊழியக்காரர்களாகிய நாமும் அபிஷேகம்பண்ணப்பட்ட, ஞானமுள்ள வார்த்தைகளைப் பேசி ஜனங்களுடைய பாவங்களை அவர்களுக்கு உணர்த்த வேண்டும்.

### எனக்கு புருஷன் இல்லை

**அதற்கு அந்த ஸ்திரீ: எனக்குப் புருஷன் இல்லை என்றாள். இயேசு அவளை நோக்கி: எனக்குப் புருஷன் இல்லையென்று நீ சொன்னது சரிதான் (யோவா 4:17).**

இயேசுகிறிஸ்து அந்த ஸ்திரீயின் புருஷனைப்பற்றி பேசியது அவளுக்கு நன்றாக புரிகிறது. அதேவேளையில் தன்னுடைய புருஷனைப்பற்றிய பிரச்சனையும் அவளுக்குத் தெரிகிறது. தன்னுடைய பாவத்தைக் குறித்து உள்ளத்தில் உணர்த்தப்படுவதை இந்த ஸ்திரீ ஆரம்பத்தில் தவிர்த்துவிடலாம் என்று நினைக்கிறாள். அதற்காக இயேசுகிறிஸ்து சொன்ன வார்த்தைக்கு மறுமொழியாக "எனக்கு புருஷன் இல்லை" என்று கூறிவிடுகிறாள். இயேசுகிறிஸ்து அவளிடம் "நீ போய் உன் புருஷனை இங்கே அழைத்துக்கொண்டு வா" என்று கூறுகிறார். இவளோ "எனக்கு புருஷனே இல்லை, புருஷன் இருந்தால்தானே அவனை இங்கு அழைத்துக்கொண்டு வரமுடியும்" என்னும் பொருளில் இயேசுவுக்கு பதில் கூறுகிறாள்.

தம்முடைய வார்த்தையினாலும், அந்த ஸ்திரீயின் வார்த்தையினாலும் இயேசுகிறிஸ்து அவளுடைய பாவத்தை அவளுக்கு உணர்த்துகிறார். "எனக்கு புருஷன் இல்லை" என்று அந்த ஸ்திரீ சொன்னவுடன், இயேசுகிறிஸ்து அவளை கடினமான வார்த்தைகளினால் கடிந்துகொள்ளவில்லை. அவள் பேசுவதை அங்கீகரிப்பதுபோல பேசுகிறார். "எனக்கு புருஷன் இல்லையென்று நீ சொன்னது சரிதான்" என்று கூறுகிறார். தன்னுடைய புருஷனைப்பற்றிய பிரச்சனை இத்தோடு முடிந்துவிட்டது என்று அந்த ஸ்திரீ நினைத்திருக்கலாம். ஆனாலும் இந்த ஸ்திரீயின் உள்ளத்தில் இப்போது இவளுடைய பாவத்தைக் குறித்த குற்றவுணர்வு, இவளுடைய இருதயத்திற்குள் உணர்த்த ஆரம்பித்திருக்கிறது.

இந்த வசனத்தில் இயேசுகிறிஸ்து அவளிடம் "எனக்கு புருஷன் இல்லையென்று நீ சொன்னது சரி தான்" என்று கூறியதாக மாத்திரமே எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் இயேசுகிறிஸ்துவோ இந்த வாக்கியத்தோடு, அவளுடைய வரலாற்றையே அவளிடம் பேசுகிறார். அவளுடைய அந்தரங்க பாவங்கள் எல்லாவற்றையும் அவளுக்கு நினைவுபடுத்துகிறார். அவள் செய்த எல்லாவற்றையும் இயேசுகிறிஸ்து அவளிடம் சொல்கிறார் (யோவா 4:29). இவையெல்லாவற்றையும் சொல்லிய பின்பு "இப்பொழுது உனக்கு இருக்கிறவன் உனக்கு புருஷனல்ல" என்று அவள் செய்த தவறுகளையெல்லாம் இயேசுகிறிஸ்து வெளிப்படுத்துகிறார்.

### ஐந்து புருஷர்

**எப்படியெனில், ஐந்து புருஷர் உனக்கிருந்தார்கள், இப்பொழுது உனக்கிருக்கிறவன் உனக்குப் புருஷனல்ல, இதை உள்ளபடி சொன்னாய் என்றார் (யோவா 4:18).**

## அதிகாரம் - 4

இயேசுகிறிஸ்து இந்த ஸ்திரீயிடம் பேசிக்கொண்டிருக்கும்போது, அவள் சற்றும் எதிர்பார்க்காத ஒரு காரியத்தை, இயேசுகிறிஸ்து அவளிடம் கூறுகிறார். "ஐந்து புருஷர் உனக்கிருந்தார்கள்" என்னும் ரகசியத்தை அவளுக்கு வெளிப்படுத்துகிறார். அவளுடைய கடந்தகால வாழ்க்கையைப்பற்றி இயேசுகிறிஸ்து கூறுவது அவளுக்கு மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. அவளுடைய கடந்தகால பாவவாழ்க்கையை வெளிப்படுத்திய இயேசுகிறிஸ்து, இப்போது அவள் நடத்திக்கொண்டிருக்கும் தற்கால பாவ வாழ்க்கையையும் வெளிப்படுத்துகிறார். "இப்பொழுது உனக்கிருக்கிறவன் உனக்கு புருஷனல்ல" என்று அறிவிக்கிறார். இயேசுகிறிஸ்து கூறிய இந்த வார்த்தைக்கு விளக்கம் கொடுக்க வேண்டுமென்றால், "அவள் விபசாரபாவத்தில் ஜீவித்துக் கொண்டிருக்கிறாள்" என்று கூறவேண்டும்.

இயேசுகிறிஸ்து இந்த ஸ்திரீயின் பாவவாழ்க்கையை அவளுக்கு மென்மையாக கண்டித்து உணர்த்துகிறார். "இப்பொழுது உனக்கிருக்கிறவன் உனக்கு புருஷனல்ல". "உனக்கு ஏற்கெனவே ஐந்து புருஷர்கள் இருந்தார்கள்" என்று இயேசுகிறிஸ்து அவளைப்பற்றி கூறியபோது, அவளுடைய உள்ளத்தில் அவளுடைய பாவம் உணர்த்தப்படுகிறது. இயேசுகிறிஸ்து அவளுடைய பாவவாழ்க்கையைப்பற்றி இதற்குமேல் ஒன்றும் பேசவில்லை. இதுவரையிலும் தூங்கிக்கொண்டிருந்த அவளுடைய மனச்சாட்சி, இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளைக் கேட்டவுடன் விழித்துக் கொள்கிறது. இனிமேல் அவளுடைய மனச்சாட்சியே, அவளுடைய பாவத்தைக் குறித்து அவளிடத்தில் தொடர்ந்து உணர்த்த ஆரம்பிக்கிறது.

"எனக்கு புருஷன் இல்லை" என்று கூறிய அந்த ஸ்திரீயிடம், "இதை உள்ளபடி சொன்னாய்" என்று இயேசுகிறிஸ்து கூறுகிறார். அவருக்கு மறைவான காரியம் எதுவுமில்லை. அவள் செய்த பாவத்தையெல்லாம் இயேசு அவளிடத்தில் வெளிப்படுத்தி பேசுகிறார். ஒருவேளை தன்னுடைய பாவம் யாருக்கும் தெரியாது என்று இவளுடைய மனச்சாட்சி கிரியை செய்யாமல் தூங்கிக் கொண்டிருந்திருக்கலாம். ஆனால் இயேசுகிறிஸ்து அவளைப்பார்த்து "இதை உள்ளபடி சொன்னாய்" என்று கூறியவுடன் அவளுடைய மனச்சாட்சி விழித்துக் கொள்கிறது.

சமாரியா ஸ்திரீ தன்னைப்பற்றி ஒரு பொய்யான சாட்சியைக் கூறுகிறாள். "எனக்கு புருஷன் இல்லை" என்று அறிவிக்கிறாள். இயேசுகிறிஸ்துவோ அவளுடைய பாவங்களை அவளுக்கு உணர்த்தி, அவள் சொன்னது சரிதான் என்று அங்கீகரிக்கும் விதத்தில் "இப்பொழுது உனக்கிருக்கிறவன் உனக்கு புருஷனல்ல, இதை உள்ளபடி சொன்னாய்" என்று அறிவிக்கிறார்.

ஆத்தும ஆதாய ஊழியம் செய்கிறவர்கள் இயேசுகிறிஸ்துவைப்போல மிகவும் கவனமாக ஞானமுள்ள வார்த்தைகளைப் பேசவேண்டும். பாவிகளுடைய மனதை புண்படுத்த வேண்டுமென்பது நம்முடைய நோக்கமல்ல. அவர்களுடைய பாவங்களை அவர்களுக்கு உணர்த்தவேண்டும். இந்த பாவங்களிலிருந்து விடுதலை பெற தங்களுக்கு ஒரு இரட்சகர் தேவையென்பதை அவர்கள் உணரவேண்டும். இயேசுகிறிஸ்துவே அவர்களுக்குத் தேவையான ஆத்தும இரட்சகர் என்பதை நாம் அவர்களுக்கு விளக்கிக் கூறவேண்டும். இதுவே ஆத்தும ஆதாய ஊழியம்.

ஒருவருடைய பாவத்தை நாம் தொடர்ந்து கண்டித்து உணர்த்திக் கொண்டேயிருந்தால், அவர் தன்னுடைய பாவத்தை குறித்து உணருவதற்குப் பதிலாக, அதைப்பற்றி தன்னிடம் பேசுவோர்மீது கோபப்பட ஆரம்பித்துவிடுவார். தன்னுடைய இருதயத்தை பாவத்தின் குற்றவுணர்வுக்கு விரோதமாக கடினப்படுத்திவிடுவார். ஆகையினால் ஊழியம் செய்யும்போது முடிந்தவரையிலும் எதிர்மறையான பேச்சுக்களையெல்லாம் தவிர்த்துவிட்டு, நேர்மறையான பேச்சுக்களை அதிகமாக பயன்படுத்த வேண்டும்.

### தொழுதுகொள்ளுகிற ஸ்தலம்
### யோவா 4 : 19-24

**யோவா 4:19. அப்பொழுது அந்த ஸ்திரீ அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் தீர்க்கதரிசி என்று காண்கிறேன்.**

## அதிகாரம் - 4

**யோவான் 4:20. எங்கள் பிதாக்கள் இந்த மலையிலே தொழுதுகொண்டுவந்தார்கள்; நீங்கள் எருசலேமிலிருக்கிற ஸ்தலத்திலே தொழுதுகொள்ளவேண்டும் என்கிறீர்களே என்றாள்.**

**யோவான் 4:21. அதற்கு இயேசு: ஸ்திரீயே, நான் சொல்லுகிறதை நம்பு, நீங்கள் இந்த மலையிலும் எருசலேமிலும் மாத்திரமல்ல, எங்கும் பிதாவைத் தொழுது கொள்ளுங்காலம் வருகிறது.**

**யோவான் 4:22. நீங்கள் அறியாததைத் தொழுது கொள்ளுகிறீர்கள்; நாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுது கொள்ளுகிறோம்; ஏனென்றால் இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது.**

**யோவான் 4:23. உண்மையாய்த் தொழுது கொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும் படி பிதாவானவர் விரும்புகிறார்.**

**யோவான் 4:24. தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ளவேண்டும் என்றார்.**

### ஆண்டவரே நீர் தீர்க்கதரிசி

**அப்பொழுது அந்த ஸ்திரீ அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் தீர்க்கதரிசி என்று காண்கிறேன் (யோவான் 4:19).**

இயேசுகிறிஸ்து சமாரியா நாட்டாளாகிய ஸ்திரீயிடம், முதலாவதாக தாகத்துக்குத் தா என்று கேட்டார். அதன்பின்பு ஜீவத்தண்ணீரைப்பற்றி பேசினார். அந்த ஸ்திரீயினால் ஜீவத்தண்ணீரின் உபதேசத்தை புரிந்துகொள்ள முடியவில்லை. இதைப் புரியவைப்பதற்காக இயேசுகிறிஸ்து அவளுடைய புருஷனைப்பற்றி பேசி, அவளுடைய பாவவாழ்க்கையை அவளுக்கு வெளிப்படுத்தி, அவளுடைய பாவத்தைக் குறித்து அவளுக்கு உணர்த்துகிறார். இயேசுகிறிஸ்து தன்னுடைய பாவவாழ்க்கையைப்பற்றி பேசும்போது, அவர் ஒரு தீர்க்கதரிசியென்பதை இந்த ஸ்திரீ புரிந்துகொள்கிறாள். என்றாலும் தன் பாவத்தைப்பற்றி அதிகமாக பேசாமல், வேறு ஏதாவது ஒரு காரியத்தைப்பற்றி பேசி, இந்த உரையாடலை திசை திருப்பவேண்டுமென்று இந்த ஸ்திரீ விரும்புகிறாள். இதற்காக யூதரும் சமாரியரும் தொழுதுகொள்ளும் ஸ்தலங்களிலிருக்கும் வித்தியாசத்தைப்பற்றி பேச ஆரம்பிக்கிறாள்.

தன்னுடைய ரகசிய வாழ்க்கையை இயேசுகிறிஸ்து வெளிப்படுத்தியவுடன், இந்த ஸ்திரீ இயேசுவை நோக்கி "ஆண்டவரே நீர் தீர்க்கதரிசி என்று காண்கிறேன்" என்று கூறுகிறாள். தன்னுடைய பாவவாழ்க்கையைப்பற்றி இயேசுகிறிஸ்து வெளிப்படுத்தி கூறியவுடன், அவளுடைய பாவவாழ்க்கை அவளுக்கு உணர்த்தப்படுகிறது. சாதாரண மனுஷனால் தன்னைப்பற்றியும், தான் செய்த எல்லாவற்றையும் பற்றி சொல்ல முடியாது என்பதை இவள் அறிந்திருக்கிறாள். இயேசுகிறிஸ்து தன்னைப்பற்றிய காரியத்தை சொல்லியபோது, இவள் அவற்றில் எதையும் மறுக்கவில்லை. இயேசுவின்மீது கோபப்படவுமில்லை. இதற்குப் பதிலாக அவள் பக்தியுள்ள காரியங்களை சிந்திக்க ஆரம்பிக்கிறாள். இதுவரையிலும் இயேசுகிறிஸ்துவை ஒரு சாதாரண யூதராக பார்த்தவள், இப்போது அவரை ஒரு தீர்க்கதரிசியாக காண்கிறாள்.

வைத்தியருக்கு எப்படி வைத்தியம் பண்ணவேண்டுமென்று தெரிந்திருக்க வேண்டும். நாடித்துடிப்பை எப்படி பார்ப்பது என்பதெல்லாம் தெரிந்திருக்கவேண்டும். இயேசுகிறிஸ்து நம்முடைய பரமவைத்தியர். நம்முடைய சரீரத்திற்கு மாத்திரமல்ல, அவர் நம்முடைய ஆத்துமாவிற்கும் வைத்தியர். நம்முடைய இருதயத்தின் எந்தப்பகுதியைத் தொட்டால், அதுவரையிலும் கல்லாக இருக்கும் இருதயம் சதையாக மாறும் என்பது அவருக்குத் தெரியும். நம்மோடு எதை பேசினால் நம்முடைய மனச்சாட்சி விழிப்படைந்து, நம்முடைய பாவத்தைக்குறித்த குற்றவுணர்வு நமக்குள் உண்டாகும் என்பது அவருக்குத் தெரியும்.

## அதிகாரம் - 4

ஒரு வைத்தியர் காயத்தில் காயம் கட்டும்போது நமக்கு வேதனை உண்டாகும். ஆயினும் ஒரு குறிப்பிட்ட அளவு வேதனை மாத்திரமே நமக்கு உண்டாகும். அந்த வேதனையும் நம்மால் தாங்கிக்கொள்ளக் கூடியதாக இருக்கும். நம்மால் தாங்க முடியாத வேதனையை எந்த வைத்தியரும் வியாதியஸ்தருக்குக் கொடுக்கமாட்டார். வேதனை அளவுக்குமீறி அதிகரித்தால் அதனால் விளைவு விபரீதமாகிவிடும். ஆத்தும வைத்தியராகிய இயேசுகிறிஸ்து இங்கு மிகவும் பக்குவமாக சமாரியா ஸ்திரீயிடம் பேசுகிறார். அவளுடைய பாவத்தைக் குறித்து எந்த அளவுக்கு வெளிப்படுத்த வேண்டுமோ அந்த அளவுக்கு மாத்திரமே வெளிப்படுத்துகிறார். அவளும் தன்னுடைய பாவத்தின் வேதனைகளை தாங்கிக்கொண்டு, ஆவிக்குரிய காரியங்களை பேச ஆரம்பிக்கிறாள்.

தன்னுடைய பாவத்தை தனக்கு உணர்த்திய இயேசுகிறிஸ்துவை பார்த்து, அவரை "ஆண்டவரே" என்று மரியாதையோடு அழைக்கிறாள். இயேசுகிறிஸ்து எந்தவிதமான ஆடம்பரமுமில்லாமல், ஆரவாரமுமில்லாமல் மிகவும் அமைதியாக ஊழியம் செய்கிறார். மிகுந்த மனத்தாழ்மையோடு அந்த ஸ்திரீயின் பாவத்தை கடிந்து கூறுகிறார். அவளைக் கண்டித்து உணர்த்துவதற்கு கடினமான வார்த்தைகள் எதையும் இயேசுகிறிஸ்து பயன்படுத்தவில்லை. இதன்விளைவாக அந்த ஸ்திரீ தன் பாவத்தைக் குறித்து தன்னுடைய உள்ளத்தில் உணர்த்தப்படுகிறாள். இயேசுகிறிஸ்துவிடம் அவள் பேசும்போது, அவளும் கோபமான கடின வார்த்தையைப் பேசாமல், அவரை "ஆண்டவரே" என்று அழைக்கிறாள். இயேசுகிறிஸ்துவை அவள் ஒரு தீர்க்கதரிசியாக அங்கீகரிக்கிறாள். அவரிடமிருந்து ஆவிக்குரிய உபதேசங்களை இன்னும் அதிகமாக பெற்றுக்கொள்ள வேண்டும் என்னும் ஆவல் அவளுடைய உள்ளத்தில் உண்டாயிற்று.

**எங்கள் பிதாக்கள் இந்த மலையிலே**

**எங்கள் பிதாக்கள் இந்த மலையிலே தொழுதுகொண்டுவந்தார்கள்; நீங்கள் எருசலேமிலிருக்கிற ஸ்தலத்திலே தொழுதுகொள்ளவேண்டும் என்கிறீர்களே என்றாள் (யோவா 4:20).**

சமாரியா ஸ்திரீ பாவியான ஸ்திரீயாக இருந்தாலும், தேவனை ஆராதிக்க வேண்டும் என்பதை அவளும் அறிந்திருக்கிறாள். ஆவிக்குரிய காரியங்களைக்குறித்து அவளுடைய உள்ளத்தில் பலவிதமான சந்தேகங்கள் உள்ளன. இவற்றையெல்லாம் எப்படி தீர்த்துவைப்பது, யாரிடத்தில் போய் விளக்கம் கேட்பது என்று அவள் பலகாலமாக யோசித்திருக்க வேண்டும். இப்போது இயேசுகிறிஸ்துவை ஒரு தீர்க்கதரிசியாக காண்பதினால், அவரிடத்திலேயே ஆவிக்குரிய காரியங்களுக்கு விளக்கம் கேட்கலாம் என்று தீர்மானம்பண்ணுகிறாள்.

முதலாவதாக தேவனை எந்த ஸ்தலத்தில் தொழுதுகொள்ள வேண்டும் என்று இயேசுவிடத்தில் அந்த ஸ்திரீ விளக்கம் கேட்கிறாள். தேவனைத் தொழுது கொள்ள வேண்டுமென்று அவளுக்குத் தெரிந்தாலும், அவரைத் தொழுது கொள்வதற்கு எந்த ஸ்தலம் சரியான ஸ்தலம் என்று அவளுக்குத் தெரியவில்லை. ஏனெனில் யூதர்கள் எருசலேமில் தேவனைத் தொழுதுகொள்ள வேண்டுமென்றும், சமாரியர்கள் தேவனை கெரிசீம் மலையில் தொழுதுகொள்ள வேண்டுமென்றும் கூறுகிறார்கள். இதனால் இவள் குழப்பமடைந்திருக்கிறாள். இப்போது இயேசுகிறிஸ்துவை ஒரு தீர்க்கதரிசியாக காண்பதினால், அவரிடத்தில் இந்த குழப்பத்திற்கு தெளிவு பெற விரும்புகிறாள்.

யூதரும் சமாரியரும் தேவனைத் தொழுதுகொள்ளவேண்டும் என்று தான் கூறுகிறார்கள். தேவனே இல்லையென்று சாதிப்பவர்களைவிட, தேவன் உண்டு என்றும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டுமென்றும் கூறுகிறவர்கள் ஞானவான்கள். ஆனால் அந்த தேவனை எங்கு தொழுதுகொள்ள வேண்டுமென்பதில் யூதருக்கும் சமாரியருக்கும் இடையே கருத்து வேறுபாடு பல காலமாக இருந்து வருகிறது.

தங்கள் பிதாக்கள் இந்த மலையிலே தொழுதுகொண்டு வந்தார்கள் என்று சமாரியா ஸ்திரீ கூறுகிறாள். சன்பல்லாத் இங்கு சமாரியருக்கு தேவாலயத்தை கட்டினான். இந்த மலை கெரிசீம் மலை என்று அழைக்கப்படுகிறது. இந்த மலையிலிருந்துதான் ஆசீர்வாதமான வார்த்தைகள் அறிவிக்கப்பட்டன. தேவாலயம் எங்கிருந்தாலும், தேவாலயம் பரிசுத்தமான இடம் என்று தேவபக்தியுள்ளவர்கள் பொதுவாக சொல்வார்கள். ஆனால் இந்த விஷயத்தில் யூதருக்கும் சமாரியருக்கும் இடையே கருத்து வேறுபாடு உண்டாயிற்று. தங்களுடைய பிதாக்கள் கெரிசீம் மலையிலே தேவனைத் தொழுதுகொண்டு வந்தார்கள் என்று சமாரியா ஸ்திரீ கூறுகிறாள். தங்களுடைய பிதாக்கள் என்று சொல்லும்போது, சமாரியராகிய தங்களுக்கு அதிக பாரம்பரியமும், நீண்டகால வரலாறும் இருப்பதாக இந்த ஸ்திரீ நினைக்கிறாள்.

## அதிகாரம் - 4

சமாரியா ஸ்திரீ இயேசுவைப்பார்த்து யூதர்களாகிய "நீங்கள் எருசலேமிலிருக்கிற ஸ்தலத்திலே தொழுதுகொள்ள வேண்டும் என்கிறீர்களே" என்று கூறுகிறாள். சமாரியர்கள் மோசேயின் பஞ்சாகமத்தை தங்களுடைய வேதாகமமாக அங்கீகரித்திருக்கிறார்கள். மோசேயின் பிரமாணத்தின்படி இவர்கள் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டிருக்கிறவர்கள். பஞ்சாகமத்தில் தேவனைத் தொழுதுகொள்ள வேண்டிய ஸ்தலத்தைப்பற்றி பல இடங்களில் கூறப்பட்டிருந்தாலும், அவரை எந்த இடத்தில் தொழுதுகொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை. ஆகையினால் சமாரியர்கள் தங்களுக்கு இஷ்டமான இடத்தில் தேவனைத் தொழுது கொள்ளலாமென்று நினைத்து, கெரிசீம் மலையில் தேவனுக்கு ஆலயத்தைக்கட்டி, அந்த ஸ்தலத்தில் தேவனைத் தொழுதுவருகிறார்கள்.

### எங்கும் பிதாவை தொழுதுகொள்ளும் காலம்

**அதற்கு இயேசு: ஸ்திரீயே, நான் சொல்லுகிறதை நம்பு, நீங்கள் இந்த மலையிலும் எருசலேமிலும் மாத்திரமல்ல, எங்கும் பிதாவைத் தொழுது கொள்ளுங்காலம் வருகிறது (யோவா 4:21).**

தேவனை எங்கு ஆராதிப்பது சரியானது என்பதற்கு இயேசுகிறிஸ்து விளக்கம் கொடுக்கிறார். தம்முடைய வார்த்தையைக் கூறும் முன்பாக "ஸ்திரீயே, நான் சொல்லுகிறதை நம்பு" என்று கூறிவிட்டு, தம்முடைய விளக்கத்தைக் கொடுக்கிறார். இந்த ஸ்திரீக்கு இதுவரையிலும் சமாரியருடைய பாரம்பரியத்தின் பிரகாரம் தவறான உபதேசம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்து இப்போது அவளுக்கு மெய்யான உபதேசத்தை கூறுகிறார். இந்த உபதேசம் அவளுக்கு புதியது. தான் இதுவரையிலும் பழக்கப்பட்ட பழைய உபதேசத்தை மறந்துவிட்டு, இயேசுகிறிஸ்து கூறும் புதிய விசுவாசத்திற்கு வரவேண்டும். அவருடைய வார்த்தையை நம்பினால் மாத்திரமே, அவருடைய உபதேசத்தை ஏற்றுக்கொள்ள முடியும். ஆகையினால் தம்முடைய உபதேசத்தைக் கூறுவதற்கு முன்பாக "ஸ்திரீயே நான் சொல்லுகிறதை நம்பு" என்று கூறுகிறார்.

"நீங்கள் இந்த மலையிலும், எருசலேமிலும் மாத்திரமல்ல, எங்கும் பிதாவை தொழுதுகொள்ளும் காலம் வருகிறது" என்று இயேசுகிறிஸ்து கூறுகிறார். கர்த்தரைத் தொழுதுகொள்ளும் ஸ்தலத்தைப்பற்றி பலவிதமான கருத்து வேறுபாடுகளும், பலவிதமான போட்டி பொறாமைகளும் இருக்கின்றன. இவையெல்லாம் முடிவு பெறும் காலம் வரப்போகிறது. நாம் எந்த இடத்தில் கர்த்தரை தொழுதுகொள்கிறோம் என்பது முக்கியமல்ல. நாம் ஒரு குறிப்பிட்ட ஸ்தலத்திற்கு ஆதரவாளர்களாக இருக்கக்கூடாது. ஒரு சிலர் தங்களுடைய சபை சிறந்தது என்றும், மற்றவர்களுடைய சபைகளில் கர்த்தருடைய பிரசன்னம் இருக்காது என்றும் கூறுகிறார்கள். ஆனால் கர்த்தரோ, எங்கே இரண்டு பேர் மூன்று பேர் தம்முடைய நாமத்தினாலே கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்கள் மத்தியில் வாசம்பண்ணுவதாக வாக்குப்பண்ணியிருக்கிறார்.

கர்த்தரை இங்கு ஆராதிக்க வேண்டுமா அல்லது அங்கு ஆராதிக்க வேண்டுமா என்பது முக்கியமல்ல. ஏனெனில் கர்த்தரை இங்கும் ஆராதிக்க வேண்டும், அங்கும் ஆராதிக்கவேண்டும், எங்கும் ஆராதிக்க வேண்டும். மனுஷன் கர்த்தருக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்குப் பதிலாக, சம்பந்தமேயில்லாத பல காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறான். பிதாவைத் தொழுதுகொள்வதுதான் முக்கியம். அவரை எங்கு தொழுதுகொள்கிறோம் என்பது முக்கியமல்ல. ஏனெனில் எங்கும் பிதாவைத் தொழுதுகொள்ளும் காலம் வரப்போகிறது. தேவன் சர்வ வியாபகர். அவர் எல்லா இடத்திலும் ஒரே வேளையில் இருக்கக்கூடியவர். ஆகையினால் நம்முடைய உலகப்பிரகாரமான சிந்தனைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்காமல், ஆவிக்குரிய காரியங்களுக்கே முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

### அறியாததை தொழுதுகொள்கிறீர்கள்

**நீங்கள் அறியாததைத் தொழுது கொள்ளுகிறீர்கள்; நாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுது கொள்ளுகிறோம்; ஏனென்றால் இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது (யோவா 4:22).**

## அதிகாரம் - 4

சமாரியர்கள் கர்த்தரை கெரிசீம் மலையில் தொழுதுகொள்கிறார்கள். யூதர்கள் அவரை எருசலேமில் தொழுதுகொள்கிறார்கள். இவ்விரண்டு ஸ்தலங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, பழையஏற்பாட்டுக்காலத்தில், கெரிசீமில் கர்த்தரைத் தொழுதுகொள்வதைவிட, எருசலேமில் அவரைத் தொழுதுகொள்வதுதான் சரியானது. சமாரியர்கள் தவறான ஸ்தலத்தில் கர்த்தரைத் தொழுதுகொள்கிறார்கள். இவர்களுடைய ஆராதனையில் கர்த்தருக்கு முக்கியத்துவம் இல்லை. இவர்களுடைய ஆராதனையும் ஆவிக்குரிய ஆராதனையல்ல. தாங்கள் அறியாததை இவர்கள் தொழுதுகொள்கிறார்கள்.

ஒருவன் எவ்வளவுதான் பக்தியுள்ளவனாக இருந்தாலும், அவன் அறியாமையில் நிறைந்திருந்தால், அவனால் ஆவிக்குரிய சத்தியங்களைப் புரிந்துகொள்ள முடியாது. யாரை ஆராதிக்கிறோம் என்பதும் இவனுக்குத் தெரியாது. தாங்கள் ஆராதிக்கிறவர் இன்னாரென்பதும் இவர்களுக்குத் தெரியாது. அவரை ஏன் ஆராதிக்க வேண்டும் என்பதும் தெரியாது. இவர்கள் அறியாமையில் முழுவதுமாக மூழ்கியிருக்கிறார்கள்.

யூதர்கள் கர்த்தரை எருசலேமில் தொழுதுகொள்கிறார்கள். அவரைத் தொழுதுகொள்வதற்கு இதுவே சரியான ஸ்தலம். இவர்கள் தாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுதுகொள்கிறார்கள். இவர்கள் கர்த்தரைப்பற்றியும், அவரை ஆராதிக்க வேண்டிய முறைமைகளைப்பற்றியும், ஆராதனை ஸ்தலத்தைப்பற்றியும் அறிந்திருக்கிறார்கள். வேதவாக்கியத்தின் மூலமாக தேவனைப்பற்றிய அறிவை பெற்றிருக்கிறவர்கள் பாக்கியவான்கள். இவர்கள் ஆறுதலடைந்திருப்பார்கள். ஆராதனையைப் பற்றி இவர்களுக்குள் குழப்பம் இருக்காது. கர்த்தர் அங்கீகரிக்கிற பிரகாரமாக அவரை ஆராதிப்பார்கள். ஏனெனில் தாங்கள் ஆராதிக்கிறவர் இன்னாரென்பதை இவர்கள் அறிந்திருக்கிறார்கள். தாங்கள் அறிந்திருக்கிறதையே தொழுது கொள்கிறார்கள்.

சில சமயங்களில் நம்முடைய ஆராதனை மெய்யான ஆராதனையாக இருக்கலாம். அதேவேளையில் அது பரிசுத்தமான ஆராதனையாகவும் பூரணமான ஆராதனையாகவும் இல்லாமலும் போகலாம். தேவனை ஆராதிப்பவர்களைக் குறித்து இயேசுகிறிஸ்து இங்கு விவரிக்கிறார். அவர்களோடு இயேசு தம்மையும் சேர்த்துக் கொள்வதினால் "தொழுதுகொள்கிறோம்" என்று தன்னிலைப் பன்மை வாக்கியத்தில் பேசுகிறார். தேவனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவே பிதாவை பக்தியோடு தொழுதுகொள்ளும்போது, சாதாரண மனுஷராகிய நாம் கர்த்தரைத் தொழுதுகொள்ள வெட்கப்படக்கூடாது, சோம்பேறியாக இருக்கக்கூடாது. ஒரு சிலர் தங்களை பெரியோர்களாக நினைத்து, கர்த்தருக்கு முக்கியத்துவம் தரமாட்டார்கள். அவரைத் தொழுதுகொள்ள முன்வரமாட்டார்கள். இயேசுகிறிஸ்துவே கர்த்தரை தொழுதுகொள்கிறபோது, நாம் அவரை தொழுதுகொள்ளாமல் போவது தவறு.

இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது. ஆகையினால் தாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுதுகொள்கிறார்கள். கர்த்தரை எப்படி, எங்கு, ஏன் ஆராதிக்க வேண்டுமென்றும், தாங்கள் ஆராதிக்கிறவர் இன்னாரென்றும் அவர்கள் அறிந்திருக்கிறார்கள். நமக்கு நித்திய ஜீவனைக்கொடுப்பதற்காக வந்திருக்கிற இயேசுகிறிஸ்து, யூதருடைய கோத்திரத்திலிருந்தே வந்திருக்கிறார். யூதர்களை ஆசீர்வதிப்பதற்காகவே அவர் முதலாவதாக அனுப்பப்பட்டார். இரட்சிப்பின் சிலாக்கியம் யூதர்களுக்கே முதன்முதலாக அருளப்பட்டது. இரட்சிப்பின் வார்த்தை யூதர்கள் வழியாகவே வந்திருக்கிறது. ஆகையினால் கர்த்தரை எங்கு ஆராதிக்கிறோம் என்பது முக்கியமல்ல. யாரை ஆராதிக்கிறோம் என்பதும், அவரை எப்படி ஆராதிக்கிறோம் என்பதும் முக்கியமானது. கர்த்தரை ஆராதிக்கிறவர்கள் அவரை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும்.

**பிதாவை ஆவியோடும் உண்மையோடும்**

**உண்மையாய்த் தொழுது கொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப் பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ளவேண்டும் என்றார் (யோவா 4:23,24).**

## அதிகாரம் - 4

கர்த்தரை ஆராதிக்கும்போது நம்முடைய மனதும் இருதயமும் எப்படியிருக்க வேண்டும் என்பதை இயேசுகிறிஸ்து விவரிக்கிறார். நாம் எந்த ஸ்தலத்தில் கர்த்தரை ஆராதிக்கிறோம் என்பதைவிட, அவரை எப்படி ஆராதிக்கிறோம் என்பது முக்கியமானது. இயேசுகிறிஸ்து கூறும் இந்த சத்தியம் கர்த்தரை உண்மையாய் தொழுதுகொள்கிறவர்களுக்கு விசேஷமாக கூறப்படுகிறது. இயேசுகிறிஸ்து கூறுகிற காலம் இப்பொழுதுதே வந்திருக்கிறது. இது ஒரு பரிபூரணமான காலமாகும். கர்த்தரை உண்மையாய் தொழுதுகொள்ளும் காலம் இப்போது விடிந்து புலருகிறது.

கர்த்தரை உண்மையாய் தொழுதுகொள்கிறவர்கள், அவரை எந்த இடத்தில் தொழுதுகொள்கிறோம் என்பதற்கு முக்கியத்துவம் தராமல், பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும். பிதாவாகிய தேவன் எல்லோருக்கும் பிதாவாக இருக்கிறார். அவர் எல்லோரையும், எல்லாவற்றையும் சிருஷ்டித்த சர்வசிருஷ்டிகர். ஆகையினால் சர்வ சிருஷ்டிகளும் பிதாவைத் தொழுதுகொள்ளவேண்டும். அவர் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாக இருக்கிறார். இயேசு கிறிஸ்துவை தேவனுடைய ஒரே பேறான குமாரனாக விசுவாசிக்கிற நாம், பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும்.

பிதாவை எப்படித் தொழுதுகொள்ளவேண்டும் என்பதைப்பற்றி இயேசுகிறிஸ்து இங்கு விளக்கிக் கூறுகிறார். மோசேயின் பிரமாணத்தின்படி ஆசரிப்புக் கூடாரத்திலும், தேவாலயத்திலும், ஆராதனை ஒழுங்கு முறைகள் நியமிக்கப்பட்டுள்ளன. தேவாலய ஆராதனை அதன் பிரகாரமாகவே நடைபெறும். இயேசுகிறிஸ்துவின் பிள்ளைகளாகிய நாமோ பிதாவை பாரம்பரிய சடங்காச்சாரங்களின் பிரகாரமாக தொழுதுகொள்ளாமல், ஆவிக்குரிய நியமனத்தின்படி தொழுதுகொள்ளவேண்டும். கர்த்தரை உண்மையாய் தொழுதுகொள்ளுகிறவர்களுடைய உள்ளத்தில் உண்மையும் பரிசுத்தமும் நிறைந்திருக்கவேண்டும். தேவன் ஆவியாயிருக்கிறார். ஆகையினால் அவரை ஆவியோடும் தொழுதுகொள்ளவேண்டும்.

கர்த்தரை உண்மையாய் தொழுது கொள்கிறவர்கள் என்பது இவர்களுடைய சுபாவத்தைக் குறிப்பிடுகிறது. இவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ள வேண்டும் என்பது இவர்களுடைய கடமையைக் குறிப்பிடுகிறது. பிதாவை யாரெல்லாம் ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ள வேண்டுமென்றால், அவரைத் தொழுதுகொள்ளுகிற எல்லோருமே ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ள வேண்டும். அவரைத் தொழுதுகொள்வதற்கு இதுவே நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பிரமாணம். நாம் மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிராமல் ஆவியினாலே தேவனுக்கு ஆராதனை செய்யவேண்டுமென்று அப்போஸ்தலர் பவுல் குறிப்பிடுகிறார் (பிலி 3:3). நம்முடைய பெலத்திற்கும் உதவிக்கும் நாம் தேவனுடைய ஆவியானவரையே சார்ந்திருக்கவேண்டும்.

நாம் பிதாவைத் தொழுதுகொள்ளும் போது நம்முடைய மனது அங்கும் இங்கும் அலைபாயக்கூடாது. நமது மனதை பிதாவாகிய தேவன்மீது ஒரு நிலைப்படுத்த வேண்டும். கர்த்தரை ஆராதிக்கும்போது அவர்மீது நாம் வைத்திருக்கும் அன்பும் பக்தியும் பற்றியெரியவேண்டும். நம்முடைய ஆத்துமாவும், நம்முடைய முழு உள்ளமும் கர்த்தரை ஆராதிக்கவேண்டும். பிதாவை உண்மையாய் தொழுதுகொள்வது என்பதற்கு அவரை மாய்மாலமில்லாமல் தொழுது கொள்வது என்று பொருள். நாம் பக்தியின் வேஷத்தைத் தரித்து அவரைத் தொழுதுகொள்ளக்கூடாது. நம்முடைய மனது உண்மையைத் தரித்திருக்கவேண்டும்.

தேவனை உண்மையாய் ஆராதிக்கிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ள வேண்டுமென்று இயேசுகிறிஸ்து வலியுறுத்துகிறார். இவ்வாறு தொழுது கொள்கிறவர்கள் மாத்திரமே தேவனை உண்மையாய் தொழுதுகொள்கிறவர்கள். நம்முடைய ஆராதனை ஆவிக்குரிய ரீதியாக எப்படியிருக்க வேண்டும் என்று சுவிசேஷம் நமக்கு விளக்கிக் கூறுகிறது. சுவிசேஷ ஊழியர்கள் தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளவில்லையென்றால் அவர்களால் சுவிசேஷத்தில் கூறப்பட்டிருக்கும் உபதேசத்திற்கு ஏற்ற பிரகாரமாக ஜீவிக்க முடியாது.

## அதிகாரம் - 4

தம்மை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்கிற தம்முடைய பிள்ளைகள்மீது தேவன் கண்ணோக்கமாக இருக்கிறார். ஆனால் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்கிறவர்கள் எண்ணிக்கையில் குறைவாகவே இருக்கிறார்கள். ஆவிக்குரிய ஆராதனையின் வாசல் குறுகியதாக இருக்கிறது. வாசல் சிறியதாக இருந்தாலும் நாம் இப்படிப்பட்ட குறுகிய வாசல் வழியாக பிரவேசித்து பிதாவைத் தொழுதுகொள்ளவேண்டும். நாம் இப்படித்தான் ஆராதிக்க வேண்டுமென்று பரலோகத்தின் தேவன் நமக்குக் கட்டளைக்கொடுக்கிறார்.

நாம் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்கிறபோது அவர் நம்முடைய ஆராதனையை அங்கீகரிக்கிறார். நாம் அவரை உண்மையாய் தொழுதுகொள்கிறவர்கள் என்று நம்மையும் அங்கீகரிக்கிறார். நாம் இப்படிப்பட்டவர்களாய் இருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். நாம் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ள வேண்டும் என்று விரும்பும்போது, ஆவியானவர் நம்மை பலப்படுத்தி, பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ள வழிநடத்துகிறார்.

பிதாவை வெளிப்படுத்துவதற்காகவே குமாரனாகிய இயேசுகிறிஸ்து இந்த பூமிக்கு வந்திருக்கிறார் (யோவா 1:18). இயேசுகிறிஸ்து இங்கு சமாரியா ஸ்திரீயிடம் பேசிக்கொண்டிருக்கும்போது, பிதாவாகிய தேவனைப்பற்றி அவளுக்கு வெளிப்படுத்திக் கூறுகிறார். சமுதாயத்தில் இவள் சாதாரண ஸ்திரீயாக இருக்கிறபோதிலும், தேவனுடைய ரகசியம் இவளுக்கு மறைக்கப்படவில்லை. இவளும் தேவனை அறிந்து கொள்ளவேண்டுமென்று தேவன் சித்தங்கொண்டிருக்கிறார். "தேவன் ஆவியாயிருக்கிறார்" என்னும் சத்தியமே இயேசுகிறிஸ்து தம்முடைய பிதாவாகிய தேவனைப்பற்றி இங்கு வெளிப்படுத்திக் கூறும் மகிமையுள்ள சத்தியமாகும்.

தேவன் எப்படியிருக்கிறார் என்று கூறுவதைவிட, அவர் எப்படி இருக்கமாட்டார் என்று கூறுவது மிகவும் எளிது. ஆனால் இயேசுகிறிஸ்துவோ தேவன் எப்படியிருக்கிறார் என்று அறிவிக்கிறார். தேவன் ஆவியாக இருப்பதினால், அவரைத் தொழுது கொள்கிறவர்கள் ஆவியோடு தொழுதுகொள்ளவேண்டும். தேவனுடைய தெய்வீக அம்சத்தில் ஆவிக்குரிய குணாதிசயம் இருப்பதினால், நம்முடைய ஆராதனையிலும் ஆவிக்குரிய குணாதிசயம் காணப்படவேண்டும். ஆவியாயிருக்கிற தேவனை நாம் ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளவில்லையென்றால், நாம் மெய்யான ஆராதனையின் ஆசீர்வாதத்தை இழந்துவிடுவோம்.

### மேசியா வருகிறார்
### யோவா 4 : 25,26

**யோவா 4:25 அந்த ஸ்திரீ அவரை நோக்கி: கிறிஸ்து என்னப்படுகிற மேசியா வருகிறார் என்று அறிவேன், அவர் வரும்போது எல்லாவற்றையும் நமக்கு அறிவிப்பார் என்றாள்.**

**யோவா 4:26 அதற்கு இயேசு: உன்னுடனே பேசுகிற நானே அவர் என்றார்.**

**கிறிஸ்து என்னப்படுகிற மேசியா**

**அந்த ஸ்திரீ அவரை நோக்கி: கிறிஸ்து என்னப்படுகிற மேசியா வருகிறார் என்று அறிவேன், அவர் வரும்போது எல்லாவற்றையும் நமக்கு அறிவிப்பார் என்றாள் (யோவா 4:25).**

இயேசுகிறிஸ்துவும் சமாரியா ஸ்திரீயும் உரையாடிக்கொண்டிருக்கும்போது, அவர்கள் கடைசியாக மேசியாவைப்பற்றி பேசுகிறார்கள். இந்த ஸ்திரீ வரப்போகிற மேசியாவின்மீது நம்பிக்கை வைத்திருக்கிறாள். அவரை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கிறாள். "கிறிஸ்து என்னப்படுகிற மேசியா வருகிறார் என்று அறிவேன்" என்று இயேசுகிறிஸ்துவிடம் கூறுகிறாள். மேசியா வரும்போது அவர் எல்லாவற்றையும் தங்களுக்கு அறிவிப்பதாகவும் கூறுகிறாள்.

## அதிகாரம் - 4

இயேசுகிறிஸ்து சொன்ன சத்தியத்திற்கு இந்த ஸ்திரீ மறுப்பு எதுவும் சொல்லவில்லை. தேவன் ஆவியாயிருக்கிறார் என்பதையும், அவரைத் தொழுதுகொள்கிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும் என்பதையும் குறித்து இந்த ஸ்திரீ மறுத்துப் பேசவில்லை. தேவனைப்பற்றிய இந்த சத்தியத்தை, இயேசுகிறிஸ்து தனக்கு அறிவிப்பதற்குப் பதிலாக, இனிமேல் வரப்போகிற மேசியா அறிவித்தால் அது நலமாக இருக்குமென்று இந்த ஸ்திரீ அறிவிக்கிறாள். அதுவரையிலும் தேவனைப்பற்றிய சத்தியத்தை இயேசுகிறிஸ்துவின் மூலமாக கேள்விப்பட இவள் விரும்பவில்லை.

இந்த ஸ்திரீயைப்போலவே இக்காலத்தில் ஒரு சிலர் தங்களுக்கு அறிவிக்கப்படும் சத்தியத்தை ஏற்றுக்கொள்ள மறுத்துவிடுகிறார்கள். பெரிய ஊழியக்காரர்கள் பேசினால்தான் இவர்கள் கேட்பார்கள். தாங்கள் பெரிய காரியங்களை எதிர்பார்ப்பதாக கூறுகிறார்கள். தற்பொழுது கையில் இருப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்காமல், தாங்கள் கற்பனை செய்து பார்ப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். இருப்பதை பயன்படுத்தாமல் இல்லாததை நினைத்து ஏங்குகிறார்கள். "மேசியா வருகிறார் என்று அறிவேன்" என்று இந்த ஸ்திரீ கூறுகிறாள். இந்த விஷயத்தில் சமாரியரும் யூதரும் ஒத்துப்போகிறார்கள். இவ்விரு பிரிவினருமே மேசியா வரப்போகிறார் என்பதையும், தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படப்போகிறது என்பதையும் நம்புகிறார்கள்.

யூதமார்க்கத்தில் எல்லோருமே மேசியாவைப்பற்றி அறிந்திருக்கிறார்கள். அவர் வரப்போகிறார் என்று எதிர்பார்க்கிறார்கள். மேசியா கிறிஸ்து என்னப்படுவார் என்றும் புரிந்திருக்கிறார்கள். கிறிஸ்து என்னும் பெயருக்கு "அபிஷேகம் பண்ணப்பட்டவர்" என்று பொருள். "மேசியா" என்பது எபிரெய வார்த்தை. "கிறிஸ்து" என்பது கிரேக்க வார்த்தை. இந்த சுவிசேஷத்தில் யோவான் இயேசுகிறிஸ்துவைக் குறிப்பதற்கு எபிரெய வார்த்தையையும் கிரேக்க வார்த்தையையும் சேர்த்து "கிறிஸ்து என்னப்படுகிற மேசியா" என்று குறிப்பிடுகிறார்.

வரப்போகிற மேசியாவிடத்திலிருந்து யூதர்கள் சில காரியங்களை எதிர்பார்க்கிறார்கள். "அவர் வரும்போது எல்லாவற்றையும் நமக்கு அறிவிப்பார்" என்று இந்த ஸ்திரீ எதிர்பார்க்கிறாள். தேவனுடைய மனதை வரப்போகிற மேசியா முழுவதுமாகவும் தெளிவாகவும் அறிவிப்பார் என்றும், அவர் ஒன்றையும் மறைக்காமல் தேவனைப்பற்றிய சகல ரகசியத்தையும் தங்களுக்கு அறிவிப்பார் என்றும் இந்த ஸ்திரீ கூறுகிறாள்.

சமாரியா ஸ்திரீயைப்போலவே சமாரியர் அனைவரும் மேசியா இனிமேல் வருவார் என்று எதிர்பார்க்கிறார்கள். அவர் தங்களுக்கு எல்லாவற்றையும் அறிவிப்பார் என்று காத்திருக்கிறார்கள். இதன் மூலமாக தங்களுக்கு தேவனைப்பற்றியும், தேவனுடைய சித்தத்தைப்பற்றியும் சரியாகத் தெரியாது என்பதை அங்கீகரிக்கிறார்கள். அத்துடன் தேவனை எப்படி தொழுதுகொள்ள வேண்டும் என்பதும், எந்த ஸ்தலத்தில் தொழுதுகொள்ள வேண்டுமென்பதும் தங்களுக்கு நிச்சயமாகத் தெரியாது என்பதையும் அங்கீகரிக்கிறார்கள்.

அத்துடன், மேசியா வரும்போது, அவரால் தங்களுக்கு எல்லாவற்றையும் அறிவிக்க முடியும் என்றும் நம்புகிறார்கள். தாங்கள் இதுவரையிலும் உண்மைக்குப் புறம்பாக எதையாவது நம்பியிருந்தாலும், செய்திருந்தாலும், அவையெல்லாவற்றையும் மாற்றுவதற்கு வரப்போகிற மேசியா போதுமானவர் என்று நினைக்கிறார்கள். தாங்கள் தெரிந்துகொள்ளவேண்டிய எல்லாவற்றையும் மேசியா தங்களுக்கு அறிவிப்பார் என்பது இவர்களுடைய எதிர்பார்ப்பு.

நம்முடைய ஜீவியத்திலும் நமக்குத் தெரியாத காரியங்களை கர்த்தர் நமக்கு அறிவிப்பார் என்று எதிர்பார்த்து அவரிடம் விண்ணப்பம்பண்ணவேண்டும். ஆவிக்குரிய காரியங்களில் நாம் நமக்குப் புரியாத இருளில் இருக்கும்போது, இயேசுகிறிஸ்து நமக்கு வெளிச்சத்தைக் கொடுப்பார் என்று எதிர்பார்த்து, அதற்காக அவரிடத்தில் விண்ணப்பம்பண்ணவேண்டும்.

## அதிகாரம் - 4

**நானே அவர்**

**அதற்கு இயேசு: உன்னுடனே பேசுகிற நானே அவர் என்றார் (யோவா 4:26).**

இயேசுகிறிஸ்து தம்முடைய கிருபையினால் சமாரியா ஸ்திரீக்கு தம்மைப்பற்றி வெளிப்படுத்துகிறார். "உன்னுடனே பேசுகிற நானே அவர்" என்று தம்முடைய தெய்வத்துவத்தை அவளுக்கு வெளிப்படுத்திக் காண்பிக்கிறார். இயேசுகிறிஸ்து இரண்டு சமயங்களில் மாத்திரமே தம்முடைய தெய்வத்துவத்தை இவ்வளவு தெளிவாக, வெளிப்படையாக வெளிப்படுத்திக் காண்பித்திருக்கிறார். ஒன்று, இந்த சம்பவத்தில் சமாரியா ஸ்திரீக்கு தம்மைப்பற்றி வெளிப்படுத்துகிறார். மற்றொரு சமயத்தில் பிறவிக்குருடன் ஒருவனிடம் "நீ அவரைக் கண்டிருக்கிறாய், உன்னுடனே பேசுகிறவர் அவர் தான்" (லூக் 9:37). என்று கூறி அவனுக்குத் தம்முடைய தெய்வத்துவத்தை வெளிப்படுத்திக் கூறியிருக்கிறார். சமுதாயத்தில் புறக்கணிக்கப் பட்டவர்களையும், தரித்திரர்களையும் இயேசுகிறிஸ்து புறக்கணிக்கவில்லை. தம்மை அறிந்துகொள்ளும் சிலாக்கியத்தை இயேசுகிறிஸ்து அவர்களுக்கும் கொடுத்திருக்கிறார்.

சமாரியா ஸ்திரீக்கு இயேசுகிறிஸ்து செய்த அற்புதத்தைக் காண்பதற்கு இதுவரையிலும் எந்த ஒரு சிலாக்கியமும் கிடைக்கவில்லை. தம்முடைய வார்த்தையினாலே அவளுக்கு தம்முடைய தெய்வத்துவத்தை உணர்த்துகிறார். சில சமயங்களில் சுவிசேஷத்தின் வெளிச்சம் பிரத்தியட்சமாக தெரியாமல் போகலாம். அற்புதங்களும் அடையாளங்களும் நடைபெறாமல் போகலாம். அப்படிப்பட்ட சூழ்நிலையில்கூட தேவனுடைய கிருபையின் வெளிச்சமானது நம்முடைய இருதயத்திற்குள் ஊடுருவிச் சென்று, அதை பிரகாசிப்பிக்கப்பண்ணுகிறது. இயேசுகிறிஸ்து இங்கு ஒரு அற்புதமும் செய்யாமலேயே, தம்மை கிறிஸ்துவாகிய மேசியா என்று தம்முடைய வார்த்தையினால் அறிவித்த போது, அவள் அவருடைய வார்த்தையை நம்புகிறாள். அவரை தன்னுடைய இருதயத்தில் கிறிஸ்துவாக அங்கீகரிக்கிறாள். தம்முடைய உரையாடல் மூலமாக இயேசுகிறிஸ்து இவளுடைய உள்ளத்தை ஆயத்தப்படுத்துகிறார்.

ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள். இந்த ஸ்திரீயிடத்தில் எந்தவித பெருமையுமில்லை. சமுதாயத்திலும் இவள் புறக்கணிக்கப்பட்டவள். உண்மையான மனதோடு இவள் தேவனைத் தேடுகிறாள். ஆவியில் எளிமையுள்ள இந்த ஸ்திரீயிடம் "உன்னுடனே பேசுகிற நானே அவர்" என்று கூறி இயேசுகிறிஸ்து தம்மை வெளிப்படுத்திக் காண்பிக்கிறார். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஒரு சமயம் யாக்கோபு நித்திரை தெளிந்து விழித்தபோது "மெய்யாகவே கர்த்தர் இந்த ஸ்தலத்தில் இருக்கிறார். இதை நான் அறியாதிருந்தேன்" என்று கூறுகிறான் (ஆதி 28:16). யாக்கோபைப்போலவே இந்த சமாரியா ஸ்திரீக்கு இயேசுகிறிஸ்து அருகாமையில் இதுவரையிலும் இருந்தபோதிலும், அவரை கிறிஸ்து என்று இந்த ஸ்திரீ அறியாதிருந்தாள். ஆயினும் இயேசுகிறிஸ்து தமது கிருபையினால் அவளுக்கு தம்மை வெளிப்படுத்திக் காண்பிக்கிறார்.

இந்த ஸ்திரீயைப்போலவே இக்காலத்தில் ஏராளமானோர் கர்த்தருடைய பிரசன்னத்தை காணமுடியவில்லையென்று ஏங்குகிறார்கள். புலம்புகிறார்கள். ஆனால் கர்த்தரோ அவர்களோடு கூடவேயிருக்கிறார். அவர்களோடு பேசுகிறார். தங்களோடு இருக்கிறவர், தங்களோடு பேசுகிறவர் இன்னாரென்பதை ஜனங்கள் அறியாமலிருக்கிறார்கள். ஆனால் கர்த்தரோ நம்மோடு தொடர்ந்து பேசி "உன்னுடனே பேசுகிற நானே அவர்" என்று தம்மை வெளிப்படுத்துகிறார். தேவனுடைய வார்த்தையை நமது காதுகளால் கேட்கும்போது, நமது இருதயமும் அவருடைய சத்தத்தைக் கேட்பதற்கு திறக்கப்படவேண்டுமென்று நாம் ஜெபிக்கவேண்டும்.

### கிறிஸ்து தானோ

### யோவா 4 : 27-30

**யோவா 4:27. அத்தருணத்தில் அவருடைய சீஷர்கள் வந்து, அவர் ஸ்திரீயுடனே பேசுகிறதைப் பற்றி ஆச்சரியப்பட்டார்கள். ஆகிலும் என்ன தேடுகிறீரென்றாவது, ஏன் அவளுடனே பேசுகிறீரென்றாவது, ஒருவனும் கேட்கவில்லை.**

**யோவா 4:28. அப்பொழுது அந்த ஸ்திரீ, தன் குடத்தை வைத்துவிட்டு, ஊருக்குள்ளே போய், ஜனங்களை நோக்கி:**

## அதிகாரம் - 4

**யோவா 4:29. நான் செய்த எல்லாவற்றையும் ஒரு மனுஷன் எனக்குச் சொன்னார்; அவரை வந்து பாருங்கள்; அவர் கிறிஸ்துதானோ என்றாள்.**

**யோவா 4:30. அப்பொழுது அவர்கள் ஊரிலிருந்து புறப்பட்டு அவரிடத்தில் வந்தார்கள்.**

### இயேசுவின் சீஷர்

**அத்தருணத்தில் அவருடைய சீஷர்கள் வந்து, அவர் ஸ்திரீயுடனே பேசுகிறதைப் பற்றி ஆச்சரியப்பட்டார்கள். ஆகிலும் என்ன தேடுகிறீரென்றாவது, ஏன் அவளுடனே பேசுகிறீரென்றாவது, ஒருவனும் கேட்கவில்லை (யோவா 4:27).**

இயேசுகிறிஸ்து சமாரியா தேசத்து ஸ்திரீயோடு, ஆவியோடும் உண்மையோடும் கர்த்தரைத் தொழுதுகொள்ளவேண்டும் என்று பேசிக்கொண்டிருக்கிறார். அத்தருணத்தில் ஊருக்குள் போயிருந்த அவருடைய சீஷர்கள் இயேசுகிறிஸ்துவிடம் திரும்பி வருகிறார்கள். இவர்களுடைய வருகையினால் இயேசுகிறிஸ்து அந்த ஸ்திரீயோடு நடத்திய உரையாடல் நின்றுபோயிற்று. இயேசுகிறிஸ்து இதுவரையிலும் ஜீவத்தண்ணீரைப்பற்றி பேசி விட்டு, இப்போதுதான் தேவன் ஆவியாயிருக்கிறார் என்றும், அவரை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ள வேண்டுமென்றும் சொல்ல ஆரம்பித்திருக்கிறார். இத்தருணத்தில் சீஷர்களின் வருகையால் இந்த உரையாடல் நின்றுபோயிற்று.

சீஷர்கள் கிணற்றண்டைக்கு வந்தவுடன், இயேசுகிறிஸ்து அந்த ஸ்திரீயுடனே பேசிகிறதைக்குறித்து ஆச்சரியப்படுகிறார்கள். அவள் ஒரு அந்நிய ஸ்திரீ. முன்பின் பழக்கமில்லாதவள். அத்துடன் அவள் ஒரு சமாரியா தேசத்து ஸ்திரீயாகவும் இருக்கிறாள். அந்த ஸ்திரீயோடு இயேசுகிறிஸ்து அக்கரையாய் பேசுகிறாரே என்று சீஷர்கள் ஆச்சரியப்படுகிறார்கள்.

இந்த ஸ்திரீ ஐசுவரியம் மிகுந்தவளல்ல. சாதாரண ஏழை ஸ்திரீ. இயேசுகிறிஸ்து ஐசுவரிய சம்பன்னராக இருந்தாலும், கர்த்தாதி கர்த்தராக இருந்தாலும், இப்படிப்பட்ட சாதாரண ஸ்திரீயோடும் பேசுகிறாரே என்று ஆச்சரியப்படுகிறார்கள். இயேசுகிறிஸ்து இந்த சீஷர்களை, தம்மைப் பின்பற்றி வருமாறு அழைப்பதற்கு முன்பாக, அவர்களும் சாதாரண ஜனங்களாகத்தான் இருந்தார்கள். தங்களுடைய பழைய வாழ்க்கையை மறந்துவிட்டு, இயேசுகிறிஸ்து இந்த ஏழை ஸ்திரீயோடு பேசுவதைப்பார்த்து ஆச்சரியமடைகிறார்கள்.

ஆனாலும் ஏன் அவளுடன் பேசிகிறீரென்று ஒருவரும் இயேசுவிடத்தில் கேட்கவில்லை. ஏதோ ஒரு நல்ல காரியத்திற்காகத்தான் இயேசுகிறிஸ்து அவளோடு பேசிக்கொண்டிருப்பார் என்பது சீஷர்களுக்குத் தெரியும். ஆகையினால் என்ன தேடுகிறீர் என்றாவது, ஏன் அவளுடனே பேசுகிறீர் என்றாவது ஒருவனும் அவளிடத்தில் கேட்கவில்லை. இயேசுகிறிஸ்து பேசுவதும் செய்வதும் நன்மையானதாகவே இருக்கும். அவர் எப்போதுமே நன்மை செய்கிறவர். சீஷர்களுடைய உள்ளத்தில் ஆச்சரியமும், பலவிதமான சிந்தனைகளும் இருக்கிற போதிலும், அவர்கள் இயேசுகிறிஸ்துவிடம் அதைப்பற்றி ஒன்றும் பேசவில்லை.

### தன் குடத்தை வைத்துவிட்டு

**அப்பொழுது அந்த ஸ்திரீ, தன் குடத்தை வைத்துவிட்டு, ஊருக்குள்ளே போய், ஜனங்களை நோக்கி: (யோவா 4:28)**

சமாரியா ஸ்திரீ தண்ணீர் மொண்டு கொள்வதற்காக கிணற்றிற்கு வந்திருக்கிறாள். வந்த இடத்தில்தான் இயேசுகிறிஸ்துவுக்கும் அந்த ஸ்திரீக்கும் உரையாடல் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. சீஷர்களின் வருகையால் அந்த உரையாடல் தடைபெறுகிறது. தண்ணீர் மொண்டு கொள்ள வந்த ஸ்திரீ, இயேசுகிறிஸ்துவோடு உரையாடிக்கொண்டிருக்கும்போது, தன் வந்த வேலையை மறந்துவிடுகிறாள். தான் கொண்டு வந்த குடத்தை அங்கேயே வைத்துவிட்டு ஊருக்குள்ளே போகிறாள். தண்ணீர் மொண்டு கொள்வதற்காக, ஊரிலிருந்து குடத்துடன் கிணற்றிற்கு வந்தவள், இப்போது குடத்தை அங்கேயே வைத்துவிட்டு ஊருக்குள் திரும்பிப்போகிறாள்.

## அதிகாரம் - 4

ஊருக்குள் போயிருந்த இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் அவருக்கு போஜனம் கொண்டு வந்திருக்கிறார்கள். ஒருவேளை அவர்கள் போஜனம்பண்ணும்போது தொந்தரவாக அங்கு இருக்கக்கூடாது என்று நினைத்து, அந்த இடத்தைவிட்டு சமாரியா ஸ்திரீ ஊருக்குள்ளே போயிருக்கலாம். இயேசுகிறிஸ்துவின் உரையாடலை அவள் ஆர்வத்தோடு கேட்கிறாள். ஆயினும் அவருக்கு தொந்தரவாக இருக்க விரும்பவில்லை. போஜனம்பண்ணி முடிந்தவுடன், இயேசுகிறிஸ்து அந்த கிணற்றைவிட்டு தன்னுடைய பிரயாணத்தை மறுபடியும் ஆரம்பித்துவிடுவார் என்று அந்த ஸ்திரீ எதிர்பார்க்கிறாள். அவர் அந்த ஊரை விட்டு போவதற்குள், தன்னுடைய உற்றார் உறவினர், ஊரார் எல்லோருக்கும் இயேசுகிறிஸ்துவைப்பற்றி அறிவிக்க வேண்டுமென்று விரைந்து செயல்படுகிறாள்.

தனக்கு கிடைத்திருக்கும் காலத்தை இந்த ஸ்திரீ சிறிதும் வீணாக்கவில்லை. நன்மையைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் நமக்குக் குறையும்போது, நன்மை செய்வதற்கான வாய்ப்புக்கள் ஏதாவது இருக்கிறதா என்று தேடிப்பார்க்க வேண்டும். இயேசுகிறிஸ்துவோடே உரையாடியதன் மூலமாக இந்த ஸ்திரீ நன்மையைப் பெற்றுக்கொண்டாள். சீஷர்கள் அங்கு வந்ததினால் உரையாடல் நின்றுபோயிற்று. இயேசுகிறிஸ்துவிடமிருந்து அவள் நன்மையைப்பெற்றுக்கொள்வதும் அத்துடன் நின்றுபோயிற்று. என்றாலும் தனக்குக் கிடைக்க வேண்டிய நன்மை குறைந்துபோன சமயத்தில், தான் பெற்ற நன்மையை மற்றவர்களுக்குக் கொடுக்க சமாரியா ஸ்திரீ விரைந்து செயல்படுகிறாள்.

தண்ணீர் மொண்டு கொள்வதற்காக தான் கொண்டு வந்த குடத்தை அந்த ஸ்திரீ இயேசுவண்டையில் வைத்துவிட்டு ஊருக்குள் போகிறாள். குடத்திலுள்ள தண்ணீர் இயேசுகிறிஸ்துவுக்குப் பயன்படும் என்று நினைத்து குடத்தை அவர் அருகிலேயே விட்டுவிட்டுச் செல்கிறாள். இயேசுகிறிஸ்துவும் சீஷர்களும் போஜனம்பண்ணும்போது ஒருவேளை அவர்களுக்கு குடிக்க தண்ணீர் தேவைப்படலாம்.

அத்தோடு இந்த ஸ்திரீ ஊருக்குப்போகும் குடத்தையும் தூக்கிக்கொண்டு போனால், அதன் பாரத்தினால் விரைந்து ஊருக்குள் போகமுடியாது. குடத்தை அங்கேயே விட்டுவிட்டுப்போய்விட்டால், பாரமில்லாமல் வேகமாக போகலாம் என்று நினைத்து, குடத்தை இயேசுவண்டையில் வைத்துவிட்டு போயிருக்கலாம்.

சமாரியா ஸ்திரீக்கு இப்போது கிணற்றுத் தண்ணீர்மீது அதிக அக்கரையோ ஆர்வமோயில்லை. இவள் இயேசுகிறிஸ்து கொடுக்கும் ஜீவத்தண்ணீரைப்பற்றி கவனமாயிருக்கிறாள். மேன்மையான காரியத்தைப் பெற்றுக்கொள்வதற்காக, சாதாரண காரியமான தண்ணீர்மீது கவனம் செலுத்தாமல், அந்தக் குடத்தை அங்கே வைத்துவிட்டு ஊருக்குள் போகிறாள்.

**வந்துபாருங்கள்**

**நான் செய்த எல்லாவற்றையும் ஒரு மனுஷன் எனக்குச் சொன்னார்; அவரை வந்து பாருங்கள்; அவர் கிறிஸ்துதானோ என்றாள் (யோவா 4:29).**

தன்னுடைய ஊராருக்கு தான் சொல்ல வேண்டிய செய்தி ஒன்று தன்னிடத்தில் இருக்கிறது என்னும் தீர்மானத்தோடு, இவள் ஊருக்குள் விரைந்து போகிறாள். ஊருக்குள்ளே போய், தெருவில் வருவோரையும் போவோரையும் பார்த்து தன்னிடத்திலுள்ள செய்தியை அறிவிக்கிறாள். "நான் செய்த எல்லாவற்றையும் ஒரு மனுஷன் எனக்குச் சொன்னார் அவரை வந்து பாருங்கள்" என்று எல்லா மனுஷரையும் அழைக்கிறாள். "அவர் கிறிஸ்துதானோ" என்று வந்து பாருங்கள் என்றும் ஜனங்களைக் கூப்பிடுகிறாள்.

தன்னுடைய உற்றார் உறவினரும், ஊராரும் இயேசுகிறிஸ்துவைப்பற்றி அறிந்துகொள்ள வேண்டுமென்று சமாரியா ஸ்திரீ விரும்புகிறாள். ஒரு பொக்கிஷத்தை கண்டெடுத்திருப்பதுபோல இந்த ஸ்திரீ இப்போது இயேசுவை கண்டுபிடித்திருக்கிறாள். ஒரு ஸ்திரீ காணாமற்போன ஒரு வெள்ளிக்காசை, ஜாக்கிரதையாய் தேடி, கண்டுபிடித்த பின்பு, தன் சிநேகிதிகளையும், அயல்வீட்டுக்காரிகளையும் கூடவரவழைத்து தன்னோடே சந்தோஷப்படுங்கள் என்று கூறுவதுபோல. (லூக் 15:9), சமாரிய ஸ்திரீ தன் ஊராரை தன்னோடு சந்தோஷப்படுங்கள் என்று கூறுகிறாள்.

## அதிகாரம் - 4

சமாரியா ஸ்திரீ நல்ல எண்ணத்தோடு தன் ஊராரிடத்தில் இயேசுகிறிஸ்துவைப்பற்றி அறிவிக்கிறாள். தன்னோடுகூட சந்தோஷப்பட்டால் மாத்திரம் போதாது, தன்னுடைய ஊரார் தன்னுடைய சந்தோஷத்தில் பங்கு பெறவும் வேண்டுமென்று விரும்புகிறாள். தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்து, தமது கிருபையினால் தம்மைத்தாமே நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். நமக்கு தம்மை வெளிப்படுத்திய இயேசுகிறிஸ்துவை கனப்படுத்தும் விதத்தில், நாமும் மற்றவர்களுக்கு அவரைக்குறித்து வெளிப்படுத்த வேண்டும். நாம் இயேசுகிறிஸ்துவுக்குச் செய்கிற மிகப்பெரிய ஆராதனை அவரைக்குறித்து சாட்சி கூறி அவரை பிறருக்கு அறிவிப்பதுதான். இதனால் நமக்கும் தேவனுடைய ஆசீர்வாதம் கிடைக்கும்.

சமாரியா ஸ்திரீ இப்போது ஒரு அப்போஸ்தலரைப்போல செயல்படுகிறாள். இயேசுகிறிஸ்துவைப்பற்றி அறிவிப்பதற்கு தனக்கு மிகப்பெரிய வாய்ப்பு கிடைத்திருப்பதாக தீர்மானம் செய்து, அவரைப்பற்றி அறிவிப்பது தன்மேல் விழுந்த கடமையென்று முடிவுசெய்து, இயேசுகிறிஸ்துவைப்பற்றி தன்னுடைய ஊரிலுள்ள ஜனங்களுக்கு அறிவித்து அவர்களுக்கு நன்மை செய்கிறாள்.

சமாரியா ஸ்திரீக்கு இயேசுகிறிஸ்துவைப்பற்றி இதுவரையிலும் ஒன்றும் தெரியாது. இவளைப் பொறுத்தவரையில் இயேசுகிறிஸ்து இவளுக்கு ஒரு அந்நியராகவே இருந்திருக்கிறார். தனக்கு அறிமுகமில்லாத இயேசுவைப்பற்றி தன்னுடைய ஊர் ஜனங்களிடம் பாராட்டி பேசுகிறாள். "நான் செய்த எல்லாவற்றையும் ஒரு மனுஷன் எனக்குச் சொன்னார்" என்று சொல்கிறாள். இந்த ஸ்திரீயின் புருஷர்களைப்பற்றி மாத்திரமே இயேசுகிறிஸ்து இவளிடத்தில் சொன்னார். வேறு எதையும் சொன்னாரா என்று தெரியவில்லை. வேதவசனத்தில் அப்படிப்பட்ட செய்திகளைப்பற்றி ஆதாரம் எதுவுமில்லை. தன்னுடைய மனச்சாட்சிக்கும், தேவனுக்கும் மாத்திரமே தெரிந்திருக்கிற ரகசிய காரியங்களை இயேசுகிறிஸ்து தன்னிடத்தில் வெளிப்படுத்திவிட்டதாக இந்த ஸ்திரீ கூறுகிறாள்.

இரண்டு காரியங்கள் சமாரியா ஸ்திரீயின் உள்ளத்தில் ஆழமாக பதிந்திருக்கிறது. அவையாவன :
1. இயேசுகிறிஸ்துவின் சர்வஞானம்.
2. அவருடைய வார்த்தையின் சர்வவல்லமை.
அவர் சர்வத்தையும் அறிந்திருக்கிறபடியினால், அவர் எல்லாவற்றையும் தெளிவாக வெளிப்படுத்தி விடுகிறார். அவருக்கு மறைவான காரியம் எதுவுமில்லை. நம்மால் நம்முடைய காரியங்களைக்கூட சரியாக விவரிக்க முடியாது. ஆனால் இயேசுகிறிஸ்துவோ நம்முடைய காரியங்களையும், சர்வ சிருஷ்டிகளின் காரியங்களையும் முழுவதுமாக வெளிப்படுத்திவிடுவார். இயேசு கிறிஸ்துவினுடைய வார்த்தை வல்லமையுடையது. இவளுடைய ரகசிய பாவங்கள் அனைத்தையும், இவள் செய்த எல்லாவற்றையும் இயேசுகிறிஸ்து இவளிடம் சொல்லிவிடுகிறார். அப்படிப்பட்ட மனுஷரை எல்லாரும் வந்து பாருங்கள் என்று இந்த ஸ்திரீ தன்னுடைய ஊர் ஜனங்களை அழைக்கிறாள்.

தான் செய்த எல்லாவற்றையும் இயேசுகிறிஸ்து சொன்னார் என்று மாத்திரமே சமாரியா ஸ்திரீ கூறுகிறாள். இவளுடைய செய்கைகளெல்லாம் பாவம் நிறைந்ததாக இருக்கிறபடியினால், இந்த ஸ்திரீ வெட்கப்பட்டு அதைப்பற்றி விரிவாக எதையும் கூறாமல், தான் செய்த எல்லாவற்றையும் என்று பொதுவாக கூறுகிறாள். தான் செய்த எல்லாவற்றையும் தன் வாயினால் மறுபடியும் சொல்ல இவளுக்கு மனதில்லை.

நாம் செய்த ரகசிய பாவங்கள் ரகசியமாகவே இருக்கும், யாருக்கும் தெரியாது என்று இறுமாப்பாக இருக்கலாம். ஆனால் தேவனுக்கு மறைவான காரியம் எதுவுமேயில்லை. நாம் செய்த பாவங்களெல்லாம் தேவனுடைய கண்களுக்கு முன்பாக மறைவாகயிராமல் வெளிச்சமாயிருக்கிறது என்னும் எண்ணம் நமக்குள் உண்டாக வேண்டும். அப்போதுதான் நாம் செய்த பாவங்களைக் குறித்து நமக்கு குற்றவுணர்வு உண்டாகும். நாம் செய்த பாவங்களுக்காக நாம் மனம் வருத்தப்படுவோம். நம்முடைய குற்றவுணர்வு நம்மை இயேசுகிறிஸ்துவிடம் வழிநடத்தும். தம்மிடத்தில் வருகிற யாரையும் இயேசுகிறிஸ்து புறம்பே தள்ளுவதில்லை.

## அதிகாரம் - 4

தான் செய்த எல்லாவற்றையும் தனக்குச் சொன்ன இயேசுகிறிஸ்துவைக் குறித்து சமாரியா ஸ்திரீ மிகவும் ஆச்சரியப்படுகிறாள். அவரை வந்து பாருங்கள் என்று தன்னுடைய ஊராரை அழைக்கிறாள். இயேசுகிறிஸ்துவை ஒரு காட்சிப் பொருளாக பார்ப்பதற்கு அவள் தன்னுடைய ஊராரை அழைக்கவில்லை. இயேசுகிறிஸ்து இருக்கும் இடத்திற்கு வந்து, அவரோடு உரையாடுவதற்கும், அவருடைய உரையாடலைக் கேட்பதற்கும், அவருடைய ஞானமுள்ள உபதேசத்தைக் கேட்பதற்கும், தான் பெற்றுக்கொண்ட நன்மைகளைப்போல தன்னுடைய ஊர் ஜனங்களும் நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் சமாரியா ஸ்திரீ தன்னுடைய ஊர் ஜனங்களை அழைக்கிறாள்.

இயேசுகிறிஸ்து சமாரியா ஸ்திரீயிடம் ஜீவத்தண்ணீரைப்பற்றி பேசியபோது, இவள் இயேசுகிறிஸ்துவிடம் பல கேள்விகளைக் கேட்கிறாள். தன்னுடைய சந்தேகங்களெல்லாம் நிவிர்த்தி பெறும் விதத்தில் அவற்றை நிரூபிக்கவேண்டுமென்று எதிர்பார்க்கிறாள். தன்னுடைய சந்தேகங்களெல்லாம் நிரூபிக்கப்பட்டால்தான் இயேசுவை கிறிஸ்துவாக அங்கீகரிக்க முடியுமென்று தன் உள்ளத்தில் நினைக்கிறாள். ஆனால் இதே ஸ்திரீ தன்னுடைய ஊருக்குள் வந்து, தன்னுடைய ஊர் ஜனங்களை இயேசுகிறிஸ்துவிடம் வருமாறு அழைத்தபோது, அந்த ஜனங்களிடம் எந்தக் காரியத்தையும் நிரூபிக்க முன்வரவில்லை.

இயேசு கிறிஸ்துவிடமிருந்து அற்புதங்களையும் அடையாளங்களையும் சில சமயங்களில் நாம் எதிர்பார்க்கிறோம். நாம் மற்றவர்களுக்கு இயேசுகிறிஸ்துவைப்பற்றி அறிவிக்கும்போது, அவர்கள் அவரை விசுவாசிக்க அற்புதங்களையும் அடையாளங்களையும் எதிர்பார்க்கும்போது, நம்மால் எந்த அற்புதத்தையும் செய்ய முடிவதில்லை. நம்முடைய விசுவாசம் உறுதிப்பட அற்புதங்களை எதிர்பார்க்கிறோம். ஆனால் மற்றவர்களோ அற்புதங்கள் நடைபெறாவிட்டாலும் இயேசுகிறிஸ்துவை உறுதியாக விசுவாசிக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம்.

இயேசுகிறிஸ்து சமாரியாவிலுள்ள சீகார் ஊருக்கு வெளியிலுள்ள கிணற்றண்டையில் இருக்கிறார். சமாரியா ஸ்திரீ ஊருக்குள் வந்து ஜனங்களை அழைத்துக்கொண்டிருக்கிறாள். பழைய ஏற்பாட்டுக்காலத்தில் தீர்க்கதரிசிகளும் ராஜாக்களும் இந்த மேசியாவைப் பார்ப்பதற்கு மிகவும் ஆவலாக இருந்தார்கள். அந்த கிறிஸ்துவைப் பார்ப்பதற்குத்தான் சமாரியா ஸ்திரீ தன்னுடைய ஊர் ஜனங்களை அழைக்கிறாள். "அவர் கிறிஸ்துதானோ" என்று தன் ஊர் ஜனங்களிடம் கூறுகிறாள்.

கிணற்றண்டையில் உட்கார்ந்திருப்பது கிறிஸ்துவாகிய மேசியா தான் என்று சமாரியா ஸ்திரீயினால் உறுதியாக சொல்ல முடியவில்லை. தன்னுடைய விசுவாசத்தை ஊர் ஜனங்களிடத்தில் வலுக்கட்டாயமாக திணிக்கவில்லை. இயேசுகிறிஸ்துவை தான் மேசியா என்று நினைப்பதை இவள் தன் ஊர் ஜனங்களுக்கு அறிவிக்கிறாள். தன்னுடைய விசுவாசத்தை அவர்களுக்கு ஒரு ஆலோசனையாக கூறுகிறாள். இவளுடைய சாட்சி மென்மையாக இருந்தபோதிலும், இயேசுகிறிஸ்துவை தேடுகிறவர்கள் நிச்சயமாகவே கண்டுபிடிப்பார்கள். மனம் இருக்கும்பொழுது மார்க்கம் உண்டாகும். இவளுடைய வார்த்தை ஊர் ஜனங்களுடைய உள்ளத்தில் பதிகிறது. இவள் தன் ஊர் ஜனங்களுடைய மனச்சாட்சியோடு பேசுகிறாள். அப்பொழுது அந்த ஊர் ஜனங்கள் ஊரிலிருந்து புறப்பட்டு இயேசுகிறிஸ்துவிடம் வருகிறார்கள்.

**அவரிடத்தில் வந்தார்கள்**

**அப்பொழுது அவர்கள் ஊரிலிருந்து புறப்பட்டு அவரிடத்தில் வந்தார்கள் (யோவா 4:30).**

சமாரியா ஸ்திரீயின் அழைப்புக்கு நல்ல பிரதிபலன் உண்டாயிற்று. ஜனங்கள் தங்கள் ஊரிலிருந்து புறப்பட்டு இயேசுகிறிஸ்துவிடத்தில் வருகிறார்கள். தங்கள் ஊருக்கு இயேசுகிறிஸ்துவை அழைத்துக்கொண்டு வருவதற்கு ஆட்களை அனுப்பாமல், அந்த ஊர் ஜனங்களே இயேசுகிறிஸ்துவிடத்தில் வருகிறார்கள். இயேசுகிறிஸ்துவின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறவர்கள் அவர் இருக்கும் இடத்தில் அவரைச் சந்திப்பதற்கு வர ஆயத்தமாக இருக்கவேண்டும். தம்முடைய நாமத்தை எந்த ஸ்தலத்தில் பிரஸ்தாபப்படுத்துகிறாரோ அந்த ஸ்தலத்தில் அவரைச் சந்திக்கவேண்டும்.

## அதிகாரம் - 4

### சீஷரோடு சம்பாஷணை
### யோவா 4 : 31-38

**யோவா 4:31. இப்படி நடக்கையில் சீஷர்கள் அவரை நோக்கி: ரபீ, போஜனம்பண்ணும் என்று வேண்டிக்கொண்டார்கள்.**

**யோவா 4:32. அதற்கு அவர்: நான் புசிப்பதற்கு நீங்கள் அறியாத ஒரு போஜனம் எனக்கு உண்டு என்றார்.**

**யோவா 4:33. அப்பொழுது சீஷர்கள் ஒருவரையொருவர் பார்த்து: யாராவது அவருக்குப் போஜனம் கொண்டுவந்திருப்பானோ என்றார்கள்.**

**யோவா 4:34. இயேசு அவர்களை நோக்கி: நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது.**

**யோவா 4:35. அறுப்புக்காலம் வருகிறதற்கு இன்னும் நாலுமாதம் செல்லும் என்று நீங்கள் சொல்லுகிறதில்லையா? இதோ, வயல்நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.**

**யோவா 4:36. விதைக்கிறவனும் அறுக்கிறவனுமாகிய இருவரும் ஒருமித்துச் சந்தோஷப்படத்தக்கதாக, அறுக்கிறவன் கூலியை வாங்கி, நித்திய ஜீவனுக்காகப் பலனைச் சேர்த்துக் கொள்ளுகிறான்.**

**யோவா 4:37. விதைக்கிறவன் ஒருவன் அறுக்கிறவன் ஒருவன் என்கிற மெய்யான வழக்கச்சொல் இதினாலே விளங்குகிறது.**

**யோவா 4:38. நீங்கள் பிரயாசப்பட்டுப் பயிரிடாததை அறுக்க நான் உங்களை அனுப்பினேன், மற்றவர்கள் பிரயாசப்பட்டார்கள், அவர்களுடைய பிரயாசத்தின் பலனை நீங்கள் பெற்றீர்கள் என்றார்.**

### ரபீ, போஜனம்பண்ணுங்கள்

**இப்படி நடக்கையில் சீஷர்கள் அவரை நோக்கி: ரபீ, போஜனம்பண்ணும் என்று வேண்டிக்கொண்டார்கள் (யோவா 4:31).**

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் ஊரிலிருந்து போஜனபதார்த்தங்களை வாங்கிக்கொண்டு அவரிடத்தில் வந்தபோது, சமாரியா ஸ்திரீ தண்ணீர் குடத்தை வைத்துவிட்டு ஊருக்குள்ளே போகிறாள். அந்த நேரத்தில் இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரோடு உரையாடுகிறார். தமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு மணித்துளியையும் இயேசுகிறிஸ்து ஆவிக்குரிய காரியங்களுக்காக பயன்படுத்துகிறார். இயேசுகிறிஸ்துவின் பிரசன்னத்திற்கு முன்பாக வர நமக்கு சிறிது நேரம் மாத்திரமே கிடைத்தாலும், நாம் அதையும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரோடு உரையாடும்போது இரண்டு சத்தியங்களை நாம் கவனிக்கலாம். அவையாவன: 1. தம்முடைய கிரியையில் இயேசுகிறிஸ்து சந்தோஷப்படுகிறார். 2. தம்முடைய சீஷர்களும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஊழியங்களில் கவனமாக இருக்கவேண்டுமென்று இயேசுகிறிஸ்து விரும்புகிறார்.

இயேசுகிறிஸ்து பிரயாணத்தினால் இளைப்படைந்தவராய் யாக்கோபுடைய கிணற்றுக்கு அருகே உட்காருகிறார். அவருக்கு சற்று ஓய்வும் போஜனமும் தேவைப்படுகிறது. சரீரத்தில் களைப்பும் பசியும் இருந்தாலும், இயேசுகிறிஸ்து அதையெல்லாம் பொருட்படுத்தாமல் ஆத்தும ஆதாயம் செய்வதற்கு தம்முடைய நேரத்தை பயன்படுத்துகிறார். இயேசுகிறிஸ்துவின் களைப்பை பார்த்து, சீஷர்கள் அவரை போஜனம் பண்ணுமாறு வேண்டிக்கொள்கிறார்கள். ஆனால் அவரோ "நான் புசிப்பதற்கு நீங்கள் அறியாத ஒரு போஜனம் எனக்கு உண்டு" என்று தம்முடைய சீஷர்களிடம் கூறிவிடுகிறார்.

## அதிகாரம் - 4

தங்களுடைய ஆண்டவர்மீது உண்டான அன்பினால் சீஷர்கள் இயேசுகிறிஸ்துவை போஜனம்பண்ணுமாறு வேண்டிக் கொள்கிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ தம்முடைய சரீரத்தின் தேவைவையக் கவனிப்பதைவிட அழிந்துபோகிற ஆத்துமாக்களின் தேவையை அதிகமாக கவனிக்கிறார். போஜனம்பண்ண தமக்கு அழைப்புக்கொடுப்பதைவிட, ஆத்துமாக்கள் தம்மிடத்தில் வருவதற்கு அழைப்புக்கொடுக்க வேண்டுமென்று விரும்புகிறார். பிரயாணத்தில் இளைப்படைந்தவராக இருந்தாலும், தாம் புசிப்பதற்கு வேறொரு போஜனமுள்ளது என்று இயேசுகிறிஸ்து கூறியபோது, சீஷர்களில் யாராவது ஒருவர் அவருக்கு போஜனம் கொண்டு வந்திருப்பாரோ என்று அவர்கள் தங்களுக்குள் சந்தேகப்படுகிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ அதைப்பற்றி கவலைப்பட்டவராக தெரியவில்லை.

**நீங்கள் அறியாத ஒரு போஜனம்**

**அதற்கு அவர்: நான் புசிப்பதற்கு நீங்கள் அறியாத ஒரு போஜனம் எனக்கு உண்டு என்றார் (யோவா 4:32).**

தம்முடைய வேலையே இயேசுகிறிஸ்துவுக்கு போஜனமாக இருக்கிறது. சமாரியா ஸ்திரீக்கு சத்தியத்தை உபதேசம்பண்ணியது, ஊரிலிருந்து தம்மை பார்க்க வந்திருக்கும் சமாரியருக்கு ஊழியம் செய்வது ஆகியவையே இயேசுகிறிஸ்துவுக்கு போஜனபானமாக இருக்கிறது. ஒரு மனுஷன் நேர்த்தியான போஜனத்தினால் திருப்தியடைவதுபோல, இயேசுகிறிஸ்து ஆத்துமாக்களுக்கு நன்மைசெய்து திருப்தியடைகிறார். இந்த போஜனத்தைப்பற்றி இயேசுகிறிஸ்துவின் சீஷர்களுக்குப் புரியவில்லை. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும் உலகப்பிரகாரமான போஜனத்தினால் மாத்திரம் திருப்தியடைய வேண்டுமென்று எண்ணக்கூடாது. உலகப்பிரகாரமான ஜனங்களுக்குத் தெரியாத ஒரு போஜனம் நமக்கு உண்டு. ஆத்துமாக்களுக்கு ஊழியம் செய்வதே தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் போஜனம். சரீரப்பிரகாரமாக நாம் பசியாகவும் பட்டினியாகவும் இருந்தாலும், ஆத்தும ஆதாயம் செய்து தேவனுடைய போஜனத்தை புசிக்க வேண்டும்.

**என்னுடைய போஜனம்**

**அப்பொழுது சீஷர்கள் ஒருவரையொருவர் பார்த்து: யாராவது அவருக்குப் போஜனம் கொண்டுவந்திருப்பானோ என்றார்கள். இயேசு அவர்களை நோக்கி: நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது (யோவா 4:33,34).**

பிதாவாகிய தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை இந்த பூமிக்கு அனுப்பியிருக்கிறார். தம்முடைய சித்தத்தின்படி செய்து நிறைவேற்றுவதற்காகவே இயேசுகிறிஸ்து இந்த பூமிக்கு அனுப்பப்பட்டிருக்கிறார். பிதாவின் சித்தத்தின்படி செய்து, அவருடைய கிரியையை முடிப்பதே இயேசுகிறிஸ்துவின் போஜனமாகும். தம்முடைய போஜனத்தைப்பற்றி இயேசுகிறிஸ்து கூறுவது சீஷர்களுக்கு புரியவில்லை. ஆகையினால் அவர்கள் ஒருவரையொருவர் பார்த்து "யாராவது அவருக்கு போஜனம் கொண்டுவந்திருப்பானோ" என்று தங்களுக்குள் பேசிக்கொள்கிறார்கள்.

பாவிகளுடைய இரட்சிப்பே தேவனுடைய சித்தம். அவர்களை இரட்சிப்புக்குள் வழிநடத்துவது தேவனுடைய கிரியை. இந்த சித்தத்தின்படி செய்து, இந்த கிரியையை முடிப்பதே இயேசுகிறிஸ்துவுக்கு போஜனமாக இருக்கிறது. இயேசுகிறிஸ்து தம்முடைய பிதாவின் சித்தத்தின்படி செய்து, அவருடைய கிரியையை முடிப்பதில் மிகுந்த சந்தோஷமடைகிறார். தேவனுடைய சித்தத்தை மிகவும் ஆர்வத்தோடு செய்கிறார். மிகுந்த ஈடுபாட்டோடு தேவனுடைய கிரியையை செய்து முடிக்கிறார். தமக்கு நியமிக்கப்பட்டிருக்கும் ஊழியத்திலிருந்து இயேசுகிறிஸ்து ஒருபோதும் சோர்ந்துபோய், ஊழியம் செய்யாமல் நிறுத்திவிடவில்லை. "எல்லாம் முடிந்தது" என்று தம்முடைய வாயினால் அறிக்கை செய்யும் வரையிலும் இயேசுகிறிஸ்து தம்மை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து, அவருடைய கிரியையை முடிக்கிறார்.

கர்த்தருடைய ஊழியக்காரர்களில் அநேகர் ஆரம்பத்தில் உற்சாகமாகவும், சுறுசுறுப்பாகவும், விறுவிறுப்பாகவும் ஊழியம் செய்வார்கள். ஆனால் போகப்போக ஊழியத்தில் சோர்வடைந்துவிடுவார்கள். உற்சாகம், சுறுசுறுப்பு, விறுவிறுப்பு எல்லாம் சிறிது சிறிதாக குறைந்துபோகும். ஊழியத்தை ஆரம்பிக்கிறவர்களில் அநேகர் முடிவு வரையிலும் ஊழியத்தில் நிலைத்திருப்பதில்லை. நாம் ஒவ்வொரு நாளும் திருப்தியாய் புசிப்பதுபோல, கர்த்தருடைய ஊழியத்தையும் திருப்தியாய் செய்யவேண்டும்.

## அதிகாரம் - 4

**இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறது**

**அறுப்புக்காலம் வருகிறதற்கு இன்னும் நாலுமாதம் செல்லும் என்று நீங்கள் சொல்லுகிறதில்லையா? இதோ, வயல்நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் (யோவா 4:35).**

தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வேலைகளை சீஷர்கள் ஆர்வத்தோடு செய்யவேண்டும். ஊழியத்தில் அக்கறை காண்பிக்க வேண்டும். இயேசுவின் சீஷர்கள் அவரோடுகூட ஊழியம் செய்கிற உடன்ஊழிக்காரர்கள். ஆகையினால் தங்களுடைய சுபாவத்தின்படி ஊழியம் செய்யாமல், இயேசுகிறிஸ்துவைப்போல ஊழியம் செய்யவேண்டும். சுவிசேஷத்தை பிரசங்கம் பண்ணுவதே அவர்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கும் ஊழியம். இந்த ஊழியம் விளைந்திருக்கிற கதிர்களை அறுவடை செய்யும் வேலைக்கு ஒப்புமையாக இங்கு கூறப்பட்டிருக்கிறது.

அறுவடைக்காலத்தில் அறுக்கிறவர்கள் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருப்பார்கள். அறுக்கிறவர்களின் எல்லா கைகளும் அறுவடை செய்யும் வேலையில் சுறுசுறுப்பாக ஈடுபட்டுக்கொண்டிருக்கும். அறுவடைக்காலம் சிறிதுகாலமாகவே இருக்கும். ஒரு பயிர் மூன்று மாதம் விளைந்தாலும், அதை ஒரே நாளில் அறுவடை செய்துவிடுவார்கள். சுவிசேஷ ஊழியமும் அறுவடை செய்கிற ஊழியத்தைப்போன்றது. எப்பொதெல்லாம் ஆத்துமா இரட்சிக்கப்படுவதற்கு ஆயத்தமாக இருக்கிறதோ, அதுவே அந்த ஆத்துமாவின் அறுவடை காலமாகும். அந்தக் காலத்தை ஊழியக்காரர்கள் தவற விட்டுவிடக்கூடாது. அறுக்கிறவர்கள் மிகுந்த கவனத்தோடு அறுவடைக்காலத்தில் தானியங்களை அறுப்பதுபோல, ஊழியக்காரர்களும் மிகுந்த கவனத்தோடு ஊழியம் செய்து, ஆத்துமாக்களை கர்த்தருக்காக அறுவடை செய்யவேண்டும். குறிப்பிட்ட காலத்தில் அறுவடை செய்யவில்லையென்றால் தானியங்கள் பாழாய்ப்போகும். அதுபோலவே ஆத்துமாக்களை ஏற்றவேளையில் ஆதாயம் பண்ணவில்லையென்றால் அந்த ஆத்துமாக்களும் பாழாய்ப்போகும்.

அறுவடை செய்கிற வேலை மிகவும் அவசியமான வேலை. நாம் கட்டாயம் அறுவடை செய்தே ஆகவேண்டும். அறுவடைக்கு ஆயத்தமாக இருக்கும் தானியங்களை அறுவடை செய்யவில்லையென்றால் ஒரு பிரயோஜனம் நமக்கு உண்டாகாது. ஆகையினால் விவசாயம் பண்ணுகிறவர்கள், அறுவடை செய்யவேண்டிய காலத்தை மனதில் சிந்தித்துக்கொண்டே இருப்பார்கள். "அறுப்புக்காலம் வருகிறதற்கு இன்னும் நாலுமாதம் செல்லும்" என்று மாதத்தை எண்ணிக்கொண்டேயிருப்பார்கள்.

அறுப்புக்காலம் வருகிறதற்கு இன்னும் நாலுமாதம் செல்லும் என்று அவர்கள் சொன்னாலும், இயேசுகிறிஸ்துவோ காலத்தை வித்தியாசமாக பார்க்கிறார். "இதோ வயல் நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறது" என்று இயேசுகிறிஸ்து அறிவிக்கிறார். இதை சாதாரணமாக பார்த்தால் தெரியாது. கண்களை ஏறெடுத்துப் பார்த்தால்தான் தெரியும். வயல் நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறது என்று ஒவ்வொரு ஊழியக்காரரும் தங்கள் கண்களை ஏறெடுத்துப் பார்த்து தெரிந்துகொள்ளவேண்டும்.

இஸ்ரவேல் ஜனங்கள் விதை விதைக்கும்போது, விதைக்கிறவர்களை உற்சாகப்படுத்துவதற்காக, விதைக்கும் காலத்திலேயே அறுவடைக்காலத்தைப்பற்றி பேசுவது வழக்கம். விதை விதைத்து நாலுமாதம் கழித்துத்தான் அறுப்புக்காலம் வரும். இந்த அறுப்புக் காலத்தைப்பற்றி விதைக்கும் காலத்திலேயே பேசி, இஸ்ரவேலர்கள் ஒருவரையொருவர் உற்சாகப்படுத்திக் கொள்வார்கள்.

நம்முடைய அறுவடையில் கர்த்தரும் பிரியமாக இருக்கிறார். ஒவ்வொரு வருஷமும் நமக்கு அறுப்புக்காலம் உண்டாகுமென்று கர்த்தர் வாக்குப்பண்ணியிருக்கிறார். அதற்காக அவர் அறுப்பின் வாரப்பண்டிகையை நியமனம் செய்திருக்கிறார். அறுப்புக்காலம் எப்போது வரும் என்பதை, அறுப்பின் பண்டிகையை கணக்கிட்டு நாம் புரிந்துகொள்ளலாம்.

## அதிகாரம் - 4

இயேசுகிறிஸ்து இங்கு அறுப்புக்காலத்தைப்பற்றி பேசுவது, சுவிசேஷத்தின் அறுப்புக்காலத்தைப் பற்றியதாகும். ஒவ்வொரு ஆத்துமாவும் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறது என்று நம்முடைய கண்களை ஏறெடுத்துப் பார்க்கவேண்டும். இயேசுகிறிஸ்து கிணற்றண்டையில் இளைப்படைந்தவராக இருக்கும்போது, அவர் சமாரியரின் ஆத்தும அறுவடையைப்பற்றித்தான் யோசித்துக் கொண்டிருக்கிறார். அந்த சமயத்தில்தான் சீஷர்கள் அவரை போஜனம்பண்ணும் என்று வேண்டிக்கொள்கிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ போஜனம் பண்ணுவதைவிட, தமக்கு ஆத்தும அறுவடை செய்யவேண்டிய வேலை காத்திருப்பதாக கூறுகிறார். போஜனம்பண்ணுவதைவிட ஆத்தும அறுவடை செய்யும் வேலையே மிகவும் முக்கியமானது.

சமாரியர்கள் ஊரிலிருந்து புறப்பட்டு இயேசுகிறிஸ்துவிடம் வருகிறார்கள். தம்மிடத்தில் வருகிற அந்த சமாரியரை, இயேசுகிறிஸ்து, தம்முடைய கண்களை ஏறெடுத்துப் பார்க்கிறார். அவர்களெல்லோரும் அறுப்புக்கு விளைந்திருக்கிறார்கள். இதுவே அவர்களுடைய ஆத்தும அறுவடைக்காலம். சீஷர்களுக்கு ஆத்தும அறுவடையைப்பற்றித் தெரியவில்லை. ஆகையினால் இயேசுகிறிஸ்து அவர்களிடம், தம்மிடத்தில் வந்துகொண்டிருக்கும் சமாரியர்களை, இவர்கள் தங்கள் கண்களை ஏறெடுத்துப் பார்த்து, அவர்களுடைய ஆத்துமாக்கள் அறுப்புக்கு விளைந்திருக்கிறது என்பதை பார்க்கவேண்டும் என்று கூறுகிறார்.

கர்த்தருடைய ஊழியக்காரர் சுவிசேஷச் செய்தியை பிரசங்கம்பண்ணும்போது, அந்தச் செய்தியைக் கேட்பதற்காக ஏராளமான ஜனங்கள் கூடிவருவதைப் பார்க்கும்போதும், அவர்கள் தங்கள் இருதயத்தில் இயேசுகிறிஸ்துவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டு, தங்கள் ஜீவியத்தை கர்த்தரிடத்தில் அர்ப்பணிப்பதற்கு ஒப்புக்கொடுப்பதற்காக திரளாக முன்வருவதை பார்க்கும்போதும், ஊழியக்காரருக்கு மிகுந்த சந்தோஷமாக இருக்கும். ஊழியக்காரர் இதைப்பார்த்து உற்சாகமடைவார்.

இயேசுகிறிஸ்து வயல்நிலங்கள் இப்பொழுதுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறது என்று கூறுகிறார். சமாரியர்கள் திரளாக வந்து இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை கேட்கிறார்கள். அவர்களுடைய ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படுவதற்கு ஆயத்தமாக இருக்கிறது. இந்த சம்பவத்தைப்போலவே, இக்காலத்தில் நாம் சுவிசேஷச் செய்தியை பிரசங்கிக்கும்போது, வயல்நிலங்கள் அறுப்புக் விளைந்திருக்கிறது போல, திரளான ஜனங்கள் தங்கள் ஆத்தும இரட்சிப்பைப் பெற்றுக்கொள்வதற்கு கூடிவருகிறார்கள்.

கர்த்தருடைய ஊழியத்தில் நாம் எந்தப் பகுதியைச் செய்தாலும், வயல்நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறது என்பதை நம்முடைய கண்களை ஏறெடுத்துப் பார்த்து புரிந்துகொள்ளவேண்டும். இயேசுகிறிஸ்து கூறும் இந்த வாக்கியம், அவருடைய ஊழியத்தைச் செய்யும் எல்லோருக்குமே அதிக உற்சாகத்தைக் கொடுக்கக்கூடிய வாக்கியமாகும். ஒவ்வொரு வேலையை செய்வதற்கும் தேவன் ஒரு காலத்தை நியமித்திருக்கிறார். அந்தந்த வேலையை அதனதன் காலத்தில் செய்யும்போது மிகுந்த ஆசீர்வாதமும் பிரயோஜனமும் உண்டாகும். ஒவ்வொரு வேலைக்கும் ஒரு காலம் இருப்பதுபோல, விளைந்திருக்கிற தானியத்தை அறுவடை செய்கிறதற்கும் ஒரு காலமுண்டு. இதுவே அந்தக்காலம். ஏனெனில் வயல்நிலங்கள் இப்பொழுதே அறுவடைக்கு விளைந்திருக்கிறது.

யோவான்ஸ்நானன் கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்தினான். இயேசுகிறிஸ்துவை சந்திப்பதற்கு யோவான்ஸ்நானன் ஜனங்களை ஆயத்தம் செய்தான். தேவனுடைய ராஜ்யத்தைப்பற்றி அவன் பிரசங்கம்பண்ண ஆரம்பித்தான். யோவான்ஸ்நானனுடைய காலம் முதல் தேவனுடைய ராஜ்யம் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிறது. யாவரும் பலவந்தமாய் அதில் பிரவேசிக்கிறார்கள் (லூக் 16:16). வயல்நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறபடியினால், அறிவாளில் கைவைத்து இப்போதே அறுவடை செய்ய ஆரம்பித்துவிடவேண்டும். காலதாமதம் பண்ணாமல் அறுவடை செய்கிற வேலையை உடனடியாக ஆரம்பிக்கவேண்டும்.

## அதிகாரம் - 4

விளைந்திருக்கிற தானியங்களை ஏற்றக்காலத்தில் அறுவடை செய்யவில்லையென்றால், அந்தத் தானியம் நிலத்தில் விழுந்து வீணாய்போய்விடும். அதுபோலவே இரட்சிக்கப்படுவதற்கு ஆயத்தமாக இருக்கிற ஆத்துமாக்களை உடனடியாக இரட்சிப்புக்குள் வழிநடத்தவேண்டும். அவர்களுடைய ஆத்துமாக்களுக்குத் தேவையான எல்லா ஆலோசனைகளையும் உதவிகளையும் செய்யவேண்டும். ஆத்துமாக்களுக்கு ஏற்றக்காலத்தில் இரட்சிப்புக்கு ஏதுவான உதவிகளைச் செய்யவில்லையென்றால், அந்த ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படாமல் அழிந்துபோகும்.

**அறுக்கிறவன் கூலியை வாங்கி**

**விதைக்கிறவனும் அறுக்கிற வனுமாகிய இருவரும் ஒருமித்துச் சந்தோஷப்படத்தக்கதாக, அறுக்கிறவன் கூலியை வாங்கி, நித்திய ஜீவனுக்காகப் பலனைச் சேர்த்துக் கொள்ளுகிறான் (யோவா 4:36).**

அறுவடை செய்கிற வேலை மிகுந்த ஆசீர்வாதமான வேலை. அறுவடை செய்வதினால் மிகுந்த பிரயோஜனமும் ஆதாயமும் உண்டாகும். அறுவடை செய்கிறவர்களுக்கு அதிக பலன் கிடைக்கும். அவர்களுக்கு மாத்திரமல்ல விதைக்கிறவர்களுக்கும் பலன் உண்டாகும். அறுக்கிறவன் கூலியை வாங்குகிறான். கிறிஸ்துவுக்காக ஆத்துமாக்களை அறுவடை செய்கிறவர்கள் ஆவியின் கனியை பெற்றுக்கொள்வார்கள். ஆத்துமாக்கள் இரட்சிப்படுவதே ஊழியக்காரர்களுக்கு கிடைக்கிற பலன். ஆத்தும ஆதாய ஊழியத்தில் பங்கு பெறுகிறவர்கள், நித்திய ஜீவனுக்காக பலனை சேர்த்துக்கொள்கிறார்கள். இவர்களும் இரட்சிக்கப்படுகிறார்கள். இவர்கள் பிரசங்கம்பண்ணும் சுவிசேஷச் செய்தியை கேட்கிறவர்களும் இரட்சிப்படுகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் உண்மையுள்ள ஊழியக்காரர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள். அவர்கள் தேவனுடைய ஆறுதலைப் பெற்றுக்கொள்வார்கள். விலைமதிக்க முடியாத, விலையேறப்பெற்ற ஆத்துமாக்கள் நித்திய ஜீவனை பெற்றுக்கொள்வதற்காக கர்த்தருடைய ஊழியக்காரர்கள் ஊழியம் செய்கிறார்கள். இவர்களுடைய ஊழியம் உலகத்திற்குரியதல்ல. பரலோகத்திற்குரியது.

விளைந்த தானியங்களை அறுவடைசெய்யும்போது, விதைக்கிறவனும் அறுக்கிறவனுமாகிய இருவரும் ஒருமித்து சந்தோஷப்படுவார்கள். சுவிசேஷச் செய்தியை பிரசங்கித்து, கர்த்தருடைய ஊழியத்தை ஆரம்பித்து வைக்கிறவர்கள் விதைக்கிறவர்களைப் போன்றவர்கள். இவர்கள் கர்த்தருடைய வசனத்தை மனுஷருடைய ஆத்துமாக்களில் விதைக்கிறார்கள். ஆத்துமாக்களில் விதைக்கப்பட்டிருக்கும் வசனங்கள் முளைத்து வளருவதற்கு உதவியாக உபதேசம் பண்ணுகிறவர்களும், போதகம் பண்ணுகிறவர்களும், ஆத்துமாக்களை அறுவடை செய்கிறார்கள்.

ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டு தேவனுடைய ராஜ்யத்தில் சேர்க்கப்படும்போது அந்த ஆத்தும இரட்சிப்பில் பங்குபெற்றுள்ள எல்லா ஊழியக்காரர்களுக்கும் மிகுந்த சந்தோஷம் உண்டாகும். அறுவடையின்போது விதைக்கிறவனும் அறுக்கிறவனுமாகிய இருவரும் ஒருமித்து சந்தோஷப்படுவார்கள். அதுபோலவே ஒரு ஆத்துமா இரட்சிக்கப்படும்போது, அந்த ஆத்துமாவுக்கு சுவிசேஷத்தை அறிவித்த ஊழியக்காரரும், அந்த ஆத்துமா ஆவிக்குரிய ரீதியாக வளர்ச்சிபெற்று ஆவிக்குரிய கனிதருவதற்கு உதவியாக ஊழியம் செய்த ஊழியக்காரரும் ஒருமித்து சந்தோஷப்படுவார்கள். அறுக்கிறவர்கள் அறுவடையின் சந்தோஷத்தில் பங்குபெறுவார்கள்.

**விதைக்கிறவன் ஒருவன், அறுக்கிறவன் ஒருவன்**

**விதைக்கிறவன் ஒருவன் அறுக்கிறவன் ஒருவன் என்கிற மெய்யான வழக்கச்சொல் இதினாலே விளங்குகிறது. நீங்கள் பிரயாசப்பட்டுப் பயிரிடாததை அறுக்க நான் உங்களை அனுப்பினேன், மற்றவர்கள் பிரயாசப்பட்டார்கள், அவர்களுடைய பிரயாசத்தின் பலனை நீங்கள் பெற்றீர்கள் என்றார் (யோவா 4:37,38).**

## அதிகாரம் - 4

விளைந்த தானியத்தை அறுவடை செய்கிறவனுடைய வேலை மிகவும் எளிதான வேலை. அறுக்கிறவன் விதைக்கவில்லை. தண்ணீர் பாய்ச்சவில்லை. கொத்தி எருபோடவில்லை. இவையெல்லாம் செய்தால்தான் தானியம் அறுவடைக்கு ஆயத்தமாக இருக்கும். அந்த வேலையை வேறொருவன் செய்துவிட்டான். அறுவடை செய்கிறவன் தன்னுடைய வேலையை ஆரம்பிப்பதற்கு முன்பாக, மற்ற வேலைகள் அனைத்தையும் வேறு சிலர் அவனுக்கு முன்பாகவே செய்து முடித்திருக்கிறார்கள்.

விதைக்கிறவன் ஒருவன், அறுக்கிறவன் ஒருவன் என்பது யூதருடைய வழக்கச்சொல். மோசே, தீர்க்கதரிசிகள், யோவான்ஸ்நானன் ஆகியோர் சுவிசேஷத்திற்கு பாதையை செம்மைப்படுத்திக் கொடுத்தார்கள். "நீங்கள் பிரயாசப்பட்டு பயிரிடாததை அறுக்க நான் உங்களை அனுப்பினேன்" என்று இயேசுகிறிஸ்து தம்முடைய ஊழியக்காரர்களுக்கு அறிவிக்கிறார். இயேசுகிறிஸ்து கூறும் இந்த வாக்கியத்தில் பழைய ஏற்பாட்டு ஊழியத்தைப்பற்றிய இரண்டு காரியங்கள் தெளிவுபடுத்தப்படுகிறது.

புதிய ஏற்பாட்டு ஊழியத்தைவிட பழைய ஏற்பாட்டு ஊழியம் மிகவும் சிறியது. மோசேயும் மற்ற தீர்க்கதரிசிகளும் விதைத்தார்கள். ஆனால் அறுவடை செய்யவேண்டும் என்னும் கட்டளை அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. அவர்கள் தங்கள் தீர்க்கதரிசன செய்திகளை ஆகமங்களாக எழுதினார்கள். அவர்களுடைய எழுத்துக்கள் இக்காலம் வரையிலும் தொடர்ந்து பிரயோஜனமுள்ளதாக இருக்கிறது. அக்காலத்தில் கர்த்தருடைய செய்தியை பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் தீர்க்கதரிசனமாக அறிவித்தார்கள். தேவனுடைய செய்தியை பிரசங்கம் பண்ணினார்கள்.

அவர்கள் கொடுத்த பிரசங்கச் செய்தியைவிட, அவர்கள் எழுதியுள்ள ஆகமங்கள் நமக்கு மிகுந்த பிரயோஜனமுள்ளதாக இருக்கிறது. புதிய ஏற்பாட்டு ஊழியத்திற்கு, பழைய ஏற்பாட்டு ஊழியங்கள் பாதையை செம்மைப்பண்ணி கொடுக்கிறது. பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய வார்த்தையை ஜனங்களுடைய உள்ளத்தில் விதைத்திருக்கவில்லையென்றால், இந்த சமாரியா ஸ்திரீயினால் "கிறிஸ்து என்னப்படுகிற மேசியா வருகிறாரென்று அறிவேன்" என்று சொல்லியிருக்கவே முடியாது.

"நீங்கள் பிரயாசப்பட்டு பயிரிடாததை அறுக்க நான் உங்களை அனுப்பினேன்" என்று இயேசுகிறிஸ்து சொல்லும்போது, அவருடைய அப்போஸ்தலர்களுடைய ஊழியத்தின் இரண்டு காரியங்கள் தெளிவுபடுத்தப்படுகிறது. முதலாவதாக அப்போஸ்தலர்களுடைய ஊழியம் கனிகொடுக்கக்கூடிய ஊழியம். அறுக்கிறவர்கள் தாங்கள் அறுவடை செய்ததை ஓரிடத்தில் சேர்த்து வைக்கிறார்கள். யாரோ ஒருவர் விதைத்து, நீர்பாய்ச்சி, கொத்தி எருப்போட்டு வளர்த்ததை, அறுவடை செய்கிறவர்கள் இப்போது அறுக்கிறார்கள்.

பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய வார்த்தையை கண்ணீரோடு விதைத்தார்கள். வீணாக பிரயாசப்பட்டோமே என்று அவர்கள் பல சமயங்களில் வருத்தப்பட்டு புலம்பியிருக்கிறார்கள். ஆனால் புதிய ஏற்பாட்டுக்காலத்தில், ஆத்துமாக்களை அறுவடை செய்கிற அப்போஸ்தலர்களோ சந்தோஷமாய் அறுவடை செய்கிறார்கள். "எங்களுக்கு எப்போதுமே வெற்றி கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்" என்று ஆனந்த கெம்பீரமாக பாடி அறுவடை செய்கிறார்கள். விதைத்தவர்களோ கண்ணீரோடு விதைத்தார்கள். அறுவடை செய்கிறவர்களோ ஆனந்த சந்தோஷத்தோடு அறுவடை செய்கிறார்கள்.

நம்முடைய காலத்திற்கு முன்பு ஏராளமான ஊழியக்காரர்கள் இரத்த சாட்சிகளாக மரித்திருக்கிறார்கள். பலவிதமான உபத்திரவங்களையும், பாடுகளையும் அனுபவித்து கடினமான பகுதிகளிலும் ஊழியம் செய்திருக்கிறார்கள். தங்கள் கண்களால் அவர்கள் கனியைக் காணவில்லை. அவர்களுடைய ஊழியக்காலத்தில் ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படவில்லை. அவர்களுக்கு பின்வந்த தற்காலத்து ஊழியர்கள் அவர்களுடைய பிரயாசத்தின் பலனைப் பெற்றுக்கொள்கிறார்கள். அவர்கள் அக்காலத்தில் கண்ணீரோடு விதைத்ததை, இக்காலத்து ஊழியக்காரர்கள் ஆனந்த சந்தோஷத்தோடு அறுவடை செய்கிறார்கள். நம்முடைய காலத்திற்கு முன்பு கர்த்தருடைய ஊழியத்தை செய்த பரிசுத்தவான்களுக்காக நாம் கர்த்தரைத் துதிக்கவேண்டும். ஏனெனில் அவர்களுடைய பிரயாசத்தின் பலனை நாம் இப்போது பெற்றுக்கொண்டிருக்கிறோம்.

## அதிகாரம் - 4

### சமாரியாவில் ஊழியம்
### யோவா 4 : 39-42

**யோவா 4:39. நான் செய்த எல்லாவற்றையும் எனக்குச் சொன்னார் என்று சாட்சி சொன்ன அந்த ஸ்திரீயினுடைய வார்த்தையினிமித்தம் அந்த ஊரிலுள்ள சமாரியரில் அநேகர் அவர்மேல் விசுவாசமுள்ளவர்களானார்கள்.**

**யோவா 4:40. சமாரியர் அவரிடத்தில் வந்து, தங்களிடத்தில் தங்கவேண்டுமென்று அவரை வேண்டிக் கொண்டார்கள்; அவர் இரண்டு நாள் அங்கே தங்கினார்.**

**யோவா 4:41. அப்பொழுது அவருடைய உபதேசத்தினிமித்தம் இன்னும் அநேகம்பேர் விசுவாசித்து,**

**யோவா 4:42. அந்த ஸ்திரீயை நோக்கி: உன் சொல்லினிமித்தம் அல்ல, அவருடைய உபதேசத்தை நாங்களே கேட்டு, அவர் மெய்யாய்க் கிறிஸ்துவாகிய உலகரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கிறோம் என்றார்கள்.**

**அந்த ஸ்திரீயினுடைய வார்த்தையினிமித்தம்**

**நான் செய்த எல்லாவற்றையும் எனக்குச் சொன்னார் என்று சாட்சி சொன்ன அந்த ஸ்திரீயினுடைய வார்த்தையினிமித்தம் அந்த ஊரிலுள்ள சமாரியரில் அநேகர் அவர் மேல் விசுவாசமுள்ளவர்களானார்கள் (யோவா 4:39).**

இயேசுகிறிஸ்து சமாரியருடைய ஊருக்கு வந்ததினால் அவர்களுக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதம் உண்டாயிற்று. சமாரியா ஸ்திரீ இயேசுகிறிஸ்துவைக்குறித்து தன்னுடைய ஊரிலுள்ள ஜனங்களுக்கு சாட்சி கூறுகிறாள். அவள் மிகவும் எளிமையாகப் பேசுகிறாள். இயேசுகிறிஸ்துவைப்பற்றி அவளுக்கு அதிகமாகத் தெரியாது. என்றாலும் அவரைப்பற்றி தனக்குத் தெரிந்ததை அந்த ஊரிலுள்ள ஜனங்களிடம் கூறுகிறாள். "நான் செய்த எல்லாவற்றையும் எனக்குச் சொன்னார்" என்று மாத்திரமே அவள் இயேசுவைப்பற்றி கூறுகிறாள்.

இந்த ஸ்திரீயினுடைய வார்த்தையினிமித்தம் அந்த ஊரிலுள்ள சமாரியரில் அநேகர் இயேசுகிறிஸ்துவின்மேல் விசுவாசமுள்ளவர்களாகிறார்கள். இவர்கள் சமாரியர்கள். இஸ்ரவேலின் வீட்டார்களல்ல. யூதரைப் பொறுத்தவரையில் சமாரியர்கள் புறஜாதியாரைப் போன்றவர்கள். அப்படிப்பட்டவர்கள் கூட இயேசு கிறிஸ்துவின்மீது விசுவாசம் வைக்கிறார்கள். அதிலும் இந்த ஸ்திரீயினுடைய வார்த்தையினிமித்தம் அவர்கள் இயேசுவை விசுவாசிக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து தம்முடைய ஊழியத்தை செய்வதற்கு பல சமயங்களில் மிகவும் பலவீனமான, எளிய, சாதாரணமான பாத்திரங்களைக்கூட பயன்படுத்துகிறார். பல சமயங்களில் நல்ல வேலைகள் சாதாரண ஜனங்களால் ஆரம்பிக்கப்படுகிறது. நடைபெற்றுக்கொண்டிருக்கும் நல்ல வேலைகளை சாதாரண ஜனங்களே பொறுப்பெடுத்து அதை தொடர்ந்து செய்கிறார்கள்.

சிறிய நெருப்பாக இருந்தாலும் அது ஒரு காட்டையே கொளுத்திவிடும். இயேசுகிறிஸ்து ஒரேவொரு சமாரியா ஸ்திரீக்கு மாத்திரமே ஆவிக்குரிய சத்தியங்களை உபதேசம் பண்ணினார். ஒரு ஸ்திரீயிடம் ஆரம்பித்த நற்செய்தி இப்போது அந்த ஊர் முழுவதும் பரவிற்று. நாமும் கர்த்தருடைய வார்த்தைகளை பிரசங்கிக்கும்போது இந்த சம்பவத்தை நினைவுகூரவேண்டும். நம்முடைய பிரசங்கத்தைக் கேட்பதற்கு வந்திருப்போரின் எண்ணிக்கை குறைவாகயிருந்தாலும், நாம் சோர்ந்துபோய்விடக்கூடாது. கொஞ்சம்பேரே பிரசங்கத்தைக் கேட்கிறார்கள் என்பதற்காக ஏனாதானோவென்று கவனக்குறைவாக பிரசங்கம்பண்ணிவிடக்கூடாது. பிரசங்கத்தைக் கேட்கிறவர்கள் சாதாரண ஜனங்களாகவும், சில சமயங்களில் நல்ல குணமில்லாத, குணப்படாத இருந்தாலும் ஜனங்களாக அதற்காகவும் சோர்ந்துவிடக்கூடாது. அவர்களுக்கு நன்மை செய்யும்போது, அந்த நன்மை பலருக்கும் பரவலாக கிடைப்பதற்கு வாய்ப்புள்ளது. இயேசுகிறிஸ்து தமக்குக் கிடைத்த வாய்ப்பை பயன்படுத்தி சமாரியா ஸ்திரீக்கு சுவிசேஷத்தை அறிவிக்கிறார். தன்னுடைய ஆத்துமாவில் இந்த ஸ்திரீ ஆசீர்வாதம் பெற்றதினால், தான் பெற்ற ஆசீர்வாதத்தை மற்றவர்களுக்கும் பகிர்ந்து கூறுகிறாள்.

## அதிகாரம் - 4

### சமாரியாவிலே இரண்டு நாள்

**சமாரியர் அவரிடத்தில் வந்து, தங்களிடத்தில் தங்கவேண்டுமென்று அவரை வேண்டிக் கொண்டார்கள்; அவர் இரண்டு நாள் அங்கே தங்கினார் (யோவா 4:40).**

சமாரியருடைய ஊர் ஜனங்கள் இயேசுகிறிஸ்துவிடம் வருகிறார்கள். தங்களிடத்தில் தங்கவேண்டுமென்று இயேசுகிறிஸ்துவை வேண்டிக்கொள்கிறார்கள். சமாரியா ஸ்திரீயின் வார்த்தையைக் கேட்டு, இயேசுகிறிஸ்து ஒரு தீர்க்கதரிசியாக இருக்கிறார் என்று இவர்கள் விசுவாசிக்கிறார்கள். ஏனெனில் அந்த ஸ்திரீ செய்த எல்லாவற்றையும் இயேசுகிறிஸ்து அவளுக்கு வெளிப்படுத்தி சொல்லியிருக்கிறார். அப்படிப்பட்ட தீர்க்கதரிசியைப் பார்க்கவேண்டும் என்பதற்காக சமாரியர்கள் இயேசுகிறிஸ்துவிடம் வருகிறார்கள். இயேசுகிறிஸ்துவைப் பார்க்கும்போது, இயேசுவின்மீது அவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் உண்டாயிற்று. அவரை ஒரு தீர்க்கதரிசியாக அங்கீகரித்து தங்களுடைய மதிப்பையும் மரியாதையையும் காண்பிக்கிறார்கள். தங்களிடத்தில் தங்கவேண்டுமென்று அவர்கள் வேண்டிக்கொள்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து தங்களோடு தங்கினால் ஒரு தீர்க்கதரிசிக்கு கொடுக்கவேண்டிய மரியாதையைக் கொடுப்பதற்கு தங்களுக்கு ஒரு வாய்ப்புண்டாகும் என்று சமாரியர்கள் எதிர்பார்க்கிறார்கள். மேலும் அவர் தங்களோடு தங்கியிருக்கையில் அவர் மூலமாக ஆவிக்குரிய உபதேசங்களை கேட்பதற்கும் வாய்ப்புண்டாகும் என்று நினைக்கிறார்கள்.

இக்காலத்தில்கூட தங்களுடைய எதிர்காலம் எப்படி ஆசீர்வாதமாக இருக்கும் என்று தீர்க்கதரிசனமாக சொல்லக்கூடிய ஊழியக்காரர்களிடத்தில் தான் ஜனங்கள் கூடிவருகிறார்கள். ஆனால் ஏதாவது ஒரு ஊழியக்காரர் தன்னிடத்தில் வரும் ஜனங்களுடைய குறைகளையும் பாவங்களையும் சுட்டிக்காட்டி கடிந்து கூறினால், அந்த ஊழியக்காரர்களிடத்தில் தான் போகவேமாட்டார்கள். ஆனால் இந்த சமாரியா ஜனங்களோ தங்களுடைய குற்றத்தை வெளிப்படுத்திக் காண்பிக்கும் ஒரு தீர்க்கதரிசியினிடத்தில் கூடிவருகிறார்கள்.

யூதர்கள் தங்களைவிட்டு போய்விடுமாறு இயேசுகிறிஸ்துவிடம் கூறினார்கள். ஆனால் சமாரியர்களோ அவரை தங்களிடத்தில் வந்து தங்கவேண்டுமென்று வரவேற்கிறார்கள். சுவிசேஷத்தை எத்தனைபேர் கேட்கவருகிறார்கள் என்னும் எண்ணிக்கையை வைத்து ஊழியத்தின் வெற்றியை கணக்கிட முடியாது. அதே வேளையில் தாங்கள் எதிர்பார்த்ததெல்லாம் நடக்கிறது என்று கூறுவதும் சுவிசேஷ ஊழியத்தின் வெற்றிக்கு ஆதாரமாக இராது. தாங்கள் எதிர்பார்த்தது நடந்தாலும் நடக்காவிட்டாலும் கர்த்தரை பற்றிக்கொள்ளும்போதுதான் சுவிசேஷம் மெய்யாகவே வெற்றி பெறுகிறது.

இயேசுகிறிஸ்து சமாரியருடைய விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்கிறார். அவர் இரண்டு நாள் அவர்களோடு அங்கு தங்குகிறார். அவர்களுக்கு நன்மை செய்வதற்கும், ஆவிக்குரிய உபதேசங்களை பிரசங்கம்பண்ணுவதற்கும் தமக்கு நல்ல வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்பதை அறிந்து, இயேசுகிறிஸ்து அங்கு அவர்களோடு இரண்டு நாள் தங்கியிருக்கிறார்.

### கிறிஸ்துவாகிய உலக இரட்சகர்

**அப்பொழுது அவருடைய உபதேசத்தினிமித்தம் இன்னும் அநேகம்பேர் விசுவாசித்து, அந்த ஸ்திரீயை நோக்கி: உன் சொல்லினிமித்தம் அல்ல, அவருடைய உபதேசத்தை நாங்களே கேட்டு, அவர் மெய்யாய்க் கிறிஸ்துவாகிய உலகரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கிறோம் என்றார்கள் (யோவா 4:41,42).**

## அதிகாரம் - 4

இயேசுகிறிஸ்து சமாரியருக்கு உபதேசம் பண்ணுகிறார். அவருடைய உபதேசத்தினிமித்தம் இன்னும் அநேகம்பேர் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறார்கள். தாமே கிறிஸ்துவாகிய மேசியா என்பதை அவருடைய வார்த்தையும் கிரியையும் உறுதிபண்ணிற்று. நாம் கர்த்தருக்கு மெய்யாகவே ஊழியம் செய்யும்போது அதனால் நல்ல விளைவுகள் உண்டாகும். ஊழியத்தில் நல்ல கனிகளை எதிர்பார்க்கலாம். இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தை கேட்கிற சமாரியர்கள் இப்போது அவரைக் காண்கிறார்கள். இதுவரையிலும் இயேசுகிறிஸ்துவைப்பற்றி சமாரியா ஸ்திரீயின் மூலமாக கேள்விப்பட்டவர்கள், இப்போது அவருடைய உபதேசத்தை நேரடியாகவே கேட்கிறார்கள்.

இயேசு கிறிஸ்துவின் உபதேசத்தினிமித்தம் இன்னும் அநேகம்பேர் விசுவாசிகளாகிறார்கள். விசுவாசிகளின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. அத்துடன் அவர்களுடைய விசுவாசமும் வளர்ச்சி பெறுகிறது. ஸ்திரீயின் வார்த்தையைக் கேட்டு இயேசுகிறிஸ்துவைப் பார்க்க வந்தவர்கள், இப்போது இயேசுவின் வார்த்தையைக் கேட்டு அவரிடத்தில் விசுவாசம் வைக்கிறார்கள். சமாரியா ஸ்திரீயின் வார்த்தையைக்கேட்டு இயேசுகிறிஸ்துவை ஒரு தீர்க்கதரிசியென்று விசுவாசித்தவர்கள், இப்போது இயேசுகிறிஸ்துவின் வார்த்தையைக்கேட்டு அவரை கிறிஸ்து என்று விசுவாசிக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து உலக ரட்சகர் என்பதையும் அவர்கள் அறிந்துகொள்கிறார்கள். அவர் யூதருக்கு மாத்திரமல்ல, முழு உலகத்திற்கும் அவர் ரட்சகராக இருக்கிறார். தாங்கள் சமாரியராக இருக்கிறதினால் யூதர்கள் தங்களை வெறுத்து ஒதுக்கினாலும், இயேசுகிறிஸ்து தங்களை புறக்கணித்துவிடாமல் அங்கீகரித்து, தங்களோடு தங்கி தங்களுக்கு ஆவிக்குரிய உபதேசம் கொடுப்பதினால் அவரை "மெய்யாய் கிறிஸ்து" என்று மாத்திரம் கூறுவதற்குப் பதிலாக, "அவர் மெய்யாய் கிறிஸ்துவாகிய உலக ரட்சகர்" என்று சாட்சி கொடுக்கிறார்கள்.

சமாரியருடைய விசுவாசம் வளர்ச்சி பெறுகிறது. அவர்களுடைய விசுவாசத்தில் உறுதி காணப்படுகிறது. இயேசுகிறிஸ்துவை கிறிஸ்துவாகிய உலக ரட்சகரென்று தாங்கள் அறிந்து விசுவாசிப்பதாக சமாரியர்கள் கூறுகிறார்கள். இதற்கு முன்பு சமாரியா ஸ்திரீயின் வார்த்தையைக் கேட்டு அவர் ஒரு தீர்க்கதரிசியென்று விசுவாசித்தார்கள். இப்போதோ அவளுடைய சொல்லின் நிமித்தமல்ல, தாங்களே அவருடைய உபதேசத்தைக் கேட்டு, அவரை மெய்யாய் கிறிஸ்துவாகிய உலக ரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கிறார்கள். தங்களுக்கு உபதேசம் பண்ணுகிறவர் கிறிஸ்து தான் என்பதை இவர்கள் பூரணமாக விசுவாசிக்கிறார்கள். திருப்தியோடு விசுவாசிக்கிறார்கள்.

விசுவாசம் கேள்வியினால் வரும். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கும், போதகர்கள் தங்கள் சபையின் விசுவாசிகளுக்கும் சத்தியத்தை அறிவிக்க வேண்டும். நமக்கு அறிமுகமானவர்கள் அனைவருக்கும் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும். இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தை நமக்குத் தெரிந்தவரையிலும் மற்றவர்களுக்கு எளிமையாக கூறவேண்டும். சமாரியருடைய விசுவாசம் இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்டு வளர்ச்சி பெறுகிறது. அவருடைய உபதேசத்தை அங்கீகரிக்கிறார்கள். அவரை உலக ரட்சகராகிய கிறிஸ்து என்று அறிந்து கொள்கிறார்கள்.

நித்திய ஜீவனைப்பற்றி நமக்கு பல ஊழியக்காரர்கள் உபதேசம் செய்திருக்கலாம். தங்களுடைய இரட்சிப்பின் அனுபவத்தை நம்மோடு பலர் சாட்சியாக அறிவித்திருக்கலாம். இவையெல்லாமே இயேசுகிறிஸ்துவை நம்முடைய இரட்சகராக விசுவாசிப்பதற்கு உதவிபுரியும். அதேவேளையில் நாம் இயேசுகிறிஸ்துவை நம்முடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றால், நம்முடைய ஜீவியத்தில் இயேசுகிறிஸ்துவையும் அவருடைய உபதேசத்தையும் அறிந்து கொண்டு விசுவாசிக்க வேண்டும்.

மனுஷருடைய ஞானத்தினால் நம்முடைய விசுவாசம் கட்டியெழுப்பப்படுவதில்லை. தேவனுடைய வல்லமையினால் மாத்திரமே நமக்குள் விசுவாசம் உண்டாகும். நமக்கு எத்தனைபேர் சுவிசேஷத்தை அறிவித்தாலும், நாம் இயேசுகிறிஸ்துவின் பாதபடியில் அமர்ந்திருந்து, அவர் மூலமாக சுவிசேஷத்தை கேட்கவேண்டும். இதுவே நமக்கு மிகப்பெரிய ஆசீர்வாதமாக இருக்கும். சுவிசேஷத்தின் விதை சமாரியா தேசத்தில் இவ்வாறாக விதைக்கப்படுகிறது.

## அதிகாரம் - 4

### கலிலேயாவில் ஊழியம்
### யோவா 4 : 43-47

**யோவா 4:43. இரண்டுநாளைக்குப்பின்பு அவர் அவ்விடம்விட்டுப் புறப்பட்டு, கலிலேயாவுக்குப் போனார்.**

**யோவா 4:44. ஒரு தீர்க்கதரிசிக்குத் தன் சொந்த ஊரிலே கனமில்லையென்று இயேசு தாமே சொல்லியிருந்தார்.**

**யோவா 4:45. அவர் கலிலேயாவில் வந்தபோது, எருசலேமில் பண்டிகையிலே அவர் செய்த எல்லாவற்றையும் பார்த்திருந்த கலிலேயர் அவரை ஏற்றுக் கொண்டார்கள்; அவர்களும் பண்டிகைக்குப் போயிருந்தார்கள்.**

**யோவா 4:46. பின்பு, இயேசு தாம் தண்ணீரைத் திராட்சரசமாக்கின கலிலேயாவிலுள்ள கானா ஊருக்கு மறுபடியும் வந்தார்; அப்பொழுது கப்பர்நகூமிலே ராஜாவின் மனுஷரில் ஒருவனுடைய குமாரன் வியாதியாயிருந்தான்.**

**யோவா 4:47. இயேசு யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு வந்தாரென்று அந்த மனுஷன் கேள்விப்பட்டபோது, அவரிடத்திற்குப் போய், தன் மகன் மரண அவஸ்தையாயிருந்த படியினாலே, அவனைக் குணமாக்கும்படிக்கு வரவேண்டுமென்று அவரை வேண்டிக் கொண்டான்.**

### கலிலேயாவுக்குப் போனார்

**இரண்டுநாளைக்குப்பின்பு அவர் அவ்விடம்விட்டுப் புறப்பட்டு, கலிலேயாவுக்குப் போனார். ஒரு தீர்க்கதரிசிக்குத் தன் சொந்த ஊரிலே கனமில்லையென்று இயேசு தாமே சொல்லியிருந்தார் (யோவா 4:43,44).**

இயேசுகிறிஸ்து சமாரியருடைய ஊரிலே இரண்டு நாட்களுக்குத் தங்கியிருக்கிறார். அவர் மற்ற ஊர்களிலும் தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்து பிரசங்கிக்க வேண்டும் (லூக் 4:43). ஆகையினால் சமாரியருடைய ஊரில் நிரந்தரமாக தங்கிவிடாமல், மற்ற ஊர்களிலும் பிரசங்கம்பண்ணுவதற்காக, இயேசுகிறிஸ்து அவ்விடம் விட்டுப் புறப்பட்டு கலிலேயாவுக்குப் போகிறார்.

இயேசுகிறிஸ்து கலிலேயாவுக்குப் போனாலும், தம்முடைய சொந்த ஊராகிய நாசரேத்துக்குப் போகவில்லை. கலிலேயாவிலுள்ள கிராமப்பகுதிகள் வழியாக இயேசுகிறிஸ்து ஊழியம் செய்கிறார். ஆனாலும் தம்முடைய சொந்த ஊராகிய நாசரேத்துக்கு ஊழியம் செய்யப்போகவில்லை. இதற்கான காரணத்தையும் இயேசுகிறிஸ்து தாமே கூறிவிடுகிறார். "ஒரு தீர்க்கதரிசிக்கு தன் சொந்த ஊரிலே கனமில்லை". கர்த்தருடைய தீர்க்கதரிசிகளுக்கு நியாயமாக கொடுக்கப்படவேண்டிய மரியாதை பொதுவாக கொடுக்கப்படுவதில்லை. அதிலும் தீர்க்கதரிசிகளுடைய சொந்த தேசத்தில் அவர்களுக்கு சிறிதுகூட மரியாதை கொடுக்கப்படுவதில்லை.

இயேசுகிறிஸ்துவுக்கும் இப்படிப்பட்ட நிலமையே உண்டாயிற்று. அவருடைய சகோதரர்கூட அவருக்கு மரியாதை கொடுக்கவில்லை. தங்கள் ஊரைவிட்டு யூதேயாவுக்கு போகுமாறு அவர்கள் இயேசுவைத் துரத்துகிறார்கள். பிரபலமாயிருக்க விரும்புகிற எவனும் அந்தரங்கத்தில் ஒன்றையும் செய்யமாட்டான் என்று, அவருடைய சகோதரர் அவரை விசுவாசியாமல், அவரை அவமதித்துப் பேசுகிறார்கள் (யோவா 7:3-5).

மனுஷன் தன் சுயபெருமையினால் ஆளுகை செய்யப்படுகிறான். பொறாமை நிறைந்தவனாக இருக்கிறான். தன்னுடன் படித்தவர்களோ, அல்லது சிறுபிள்ளையாக இருக்கும்போது தன்னோடு கூட விளையாடியவர்களோ, பிற்காலத்தில் தங்களுக்கு ஆலோசனை சொன்னால், அதை மனுஷன் ஏற்றுக்கொள்ளமாட்டான். அவனுடைய பெருமையான சுபாவம் தனக்கு நெருங்கியவர்களின் ஆலோசனைகளை கேட்பதற்கு தடையாக இருக்கும். அதுபோலவே இயேசுகிறிஸ்துவையும் அவருடைய சுவிசேஷத்தையும் நாசரேத்து ஊரிலுள்ள ஜனங்கள் ஏற்றுக்கொள்ள மறுத்துவிடுகிறார்கள். கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கும் இதே சம்பவம்தான் நடைபெறும். ஊழியக்காரர்களை பரியாசம் பண்ணுகிறவர்கள், அவர்கள் மூலமாக பிரசங்கிக்கப்படும் சுவிசேஷத்தின் ஆசீர்வாதங்களை இழந்துபோவார்கள்.

### கலிலேயர் அவரை ஏற்றுக்கொண்டார்கள்

**அவர் கலிலேயாவில் வந்தபோது, எருசலேமில் பண்டிகையிலே அவர் செய்த எல்லாவற்றையும் பார்த்திருந்த கலிலேயர் அவரை ஏற்றுக் கொண்டார்கள்; அவர்களும் பண்டிகைக்குப் போயிருந்தார்கள் (யோவா 4:45).**

## அதிகாரம் - 4

இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் ஒருபோதும் வீணாய்ப்போவதில்லை. ஓர் ஊரிலுள்ள ஜனங்கள் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாமல் போனாலும், மற்றொரு ஊரிலுள்ள ஜனங்கள் அவரை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இருக்கிறார்கள். கலிலேயர் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்கிறார்கள். இயேசுகிறிஸ்து எருசலேமில் பஸ்கா பண்டிகையிலே கலந்து கொள்வதற்காக போயிருந்தார். அப்போது அங்கு அவர் பல அற்புதங்களைச் செய்தார். பஸ்கா பண்டிகைக்கு கலிலேயரும் வந்திருந்தார்கள். அவர் செய்த அற்புதங்கள் எல்லாவற்றையும் அந்த பண்டிகைக்கு வந்திருந்த கலிலேயர் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

கலிலேயர்கள் பஸ்கா பண்டிகைக்கு எருசலேமுக்கு வந்ததினால் அவர்களுக்கு இயேசுகிறிஸ்துவோடு பழக்கம் உண்டாயிற்று. நாம் ஆவிக்குரிய கூட்டங்களில் தொடர்ந்து பங்குபெறும்போது, பல சமயங்களில் நாம் எதிர்பார்த்திராத ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்புள்ளது. கலிலேயர்கள் பல வருஷங்களாக எருசலேமில் பஸ்கா பண்டிகையை ஆசரித்திருக்கலாம். அந்த பண்டிகைகளைவிட, இந்த வருஷத்துப் பண்டிகை இவர்களுக்கு மிகவும் விசேஷமானது. ஏனெனில் இந்த பண்டிகையில் இயேசுகிறிஸ்துவையும் அவர் செய்த அற்புதங்களையும் காண்பதற்கு இவர்களுக்கு சிலாக்கியம் உண்டாயிற்று. எதிர்பாராத அற்புதத்தை கலிலேயர்கள் பெற்று அனுபவிக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து எருசலேமில் அற்புதம் செய்ததை கலிலேயர்கள் பார்த்தார்கள். எருசலேமிலுள்ள ஜனங்கள் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே இயேசுகிறிஸ்து அங்கு அற்புதங்களைச் செய்தார். ஆனால் எருசலேம் நகரத்து ஜனங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களைவிட, அந்த பண்டிகைக்கு அங்கு வந்திருந்த கலிலேயர்கள் அதிக ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டார்கள். இயேசுகிறிஸ்து செய்த அற்புதங்கள் கலிலேயருக்கு விசேஷமாக செய்யப்பட்ட அற்புதங்கள் போல நடைபெற்றிருக்கிறது. இயேசுகிறிஸ்து அற்புதம் செய்த இடத்திற்கு இந்த கலிலேயர்கள் தற்சமயமாக வந்திருக்கலாம். ஆனாலும் இவர்கள் தேவஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டார்கள்.

நாம் திரளான ஜனங்களுக்கு சுவிசேஷச் செய்தியைப் பிரசங்கிக்கிறோம். அற்புத சுகமளிக்கும் கூட்டங்களை நடத்துகிறோம். இதில் திரளான ஜனங்கள் கலந்துகொள்கிறார்கள். இந்த ஜனங்களில் பலர் எல்லா கூட்டங்களிலும் தவறாமல் கலந்துகொள்வார்கள். எங்கு கூட்டம் நடந்தாலும் இவர்கள் போவார்கள். ஒரு சிலர் இப்படிப்பட்ட கூட்டத்திற்கு அப்போதுதான் முதன்முறையாகக் கூட வந்திருப்பார்கள். சில சமயங்களில் எல்லா கூட்டங்களுக்கும் வருகிறவர்களைவிட, ஏதாவது ஒரு கூட்டத்திற்கு, எப்போதாவது ஒருமுறை வருகிறவர்கள் தேவனுடைய ஆசீர்வாதங்களை அதிகமாக பெற்றுக்கொள்வார்கள். சுவிசேஷத்தின் செய்தி இப்படிப்பட்டவர்களுடைய உள்ளத்தில் அதிகமாய் கிரியை செய்யும்.

**கானா ஊர்**

**பின்பு, இயேசு தாம் தண்ணீரைத் திராட்சரசமாக்கின கலிலேயாவிலுள்ள கானா ஊருக்கு மறுபடியும் வந்தார்; அப்பொழுது கப்பர்நகூமிலே ராஜாவின் மனுஷரில் ஒருவனுடைய குமாரன் வியாதியாயிருந்தான் (யோவா 4:46).**

இயேசுகிறிஸ்து கலிலேயாவிலுள்ள கானா ஊருக்கு மறுபடியும் வருகிறார். இங்கு ஏற்கெனவே ஒரு கலியாண வீட்டில் தண்ணீரை திராட்சரசமாக மாற்றி தமது முதலாவது அற்புதத்தைச் செய்திருக்கிறார். இந்த சுவிசேஷத்தில் இயேசுகிறிஸ்து செய்த முதலாம் அற்புதம் விசேஷமாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் கிரியைகளை நாம் மறந்துவிடாமல் நினைவில் வைத்திருக்கவேண்டும் என்பதற்காக, இந்த அற்புத சம்பவம் இந்த வசனத்தில் மறுபடியும் எழுதப்பட்டிருக்கிறது.

**ராஜாவின் மனுஷரில் ஒருவனுடைய குமாரன்**

**இயேசு யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு வந்தாரென்று அந்த மனுஷன் கேள்விப்பட்டபோது, அவரிடத்திற்குப் போய், தன் மகன் மரண அவஸ்தையாயிருந்த படியினாலே, அவனைக் குணமாக்கும்படிக்கு வரவேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டான் (யோவா 4:47).**

## அதிகாரம் - 4

இயேசுகிறிஸ்து கலிலேயாவிலுள்ள கானா ஊருக்கு வருகிறார். அந்த ஊருக்கு அருகில் கப்பர்நகூம் என்று ஒரு ஊர் உள்ளது. இந்த ஊரிலே ராஜாவின் மனுஷரிலே ஒருவனுடைய குமாரன் வியாதியாயிருக்கிறான். இயேசுகிறிஸ்து வியாதியாயிருக்கிற அந்த பிள்ளையை சொஸ்தமாக்குகிறார். இந்த சம்பவம் மற்ற சுவிசேஷங்கள் எதிலும் எழுதப்படவில்லை. யோவான் எழுதின சுவிசேஷத்தில் மாத்திரமே இந்த அற்புத சம்பவம் எழுதப்பட்டிருக்கிறது. ராஜாவின் மனுஷன் ஒருவன் இயேசுகிறிஸ்துவிடம் வருகிறான். தன் மகனை குணமாக்கும்படியாக தன்னுடைய வீட்டிற்கு வரவேண்டுமென்று அவரை வேண்டிக்கொள்கிறான். இவனுடைய மகன் ஜூரத்தினால் வியாதிப்பட்டு மரண அவஸ்தையிலிருக்கிறான்.

இந்த மனுஷன் ராஜாவின் மனுஷரில் ஒருவன். அந்த தேசத்தில் முக்கியமான பதவி வகிக்கிறவன். செல்வந்தன். இவனுக்கு பல பட்டங்களும், அரண்மனையில் பாதுகாப்பும் உண்டு. எவ்வளவுதான் பாதுகாப்பாக இருந்தாலும், எவ்வளவுதான் உயர்பதவிவகித்தாலும் வியாதிக்கும் மரணத்திற்கும் பாதுகாப்பேயில்லை. மரணமும் வியாதியும் எல்லோருக்கும் வருவதற்கு வாய்ப்புள்ளது. இவை ஏழைக்கும் வரும். செல்வந்தனுக்கும் வரும். இப்போது இந்த மரண வியாதி ராஜாவின் மனுஷரில் ஒருவனாகிய அவனுடைய குமாரனுக்கு வந்திருக்கிறது. இந்த மனுஷன் கப்பர்நகூமில் இருக்கிறான். இயேசுகிறிஸ்து கானா ஊரிலே இருக்கிறார். இவ்விரண்டு ஊர்களுக்கும் இடையே பதினைந்து மைல் தூரமுள்ளது. இயேசுகிறிஸ்து இவ்வளவு தூரத்தில் இருந்தாலும், தன்னுடைய குமாரன் மரண அவஸ்தையில் இருப்பதினால், இந்த மனுஷன் இயேசுவைப்பார்ப்பதற்கு கப்பர்நகூமிலிருந்து கானா ஊருக்கு வருகிறான்.

இவன் ராஜாவின் மனுஷரில் ஒருவனாக இருந்தாலும், இயேசு கிறிஸ்துவைப் பார்ப்பதற்கு வேறு யாரையும் அனுப்பாமல், இவனே அவரிடத்திற்குப் போகிறான். தன் மகன் மரண அவஸ்தையாயிருக்கிறபடியினால், அவனை குணமாக்கும்படிக்கு வரவேண்டுமென்று இயேசுகிறிஸ்துவிடம் வேண்டிக்கொள்கிறான். தன் மகன் மீது இவன் மிகுந்த அன்பும் பாசமும் வைத்திருக்கிறான். தன் மகன் மரண அவஸ்தையிலிருக்கும்போது இவனால் அவனுக்கு உதவிபுரிய முடியவில்லை. தன்னால் முடிந்த எல்லாவற்றையும் செய்து பார்த்துவிட்டான். வியாதி இன்னும் குணமடையவில்லை. அப்போது இயேசு யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு வந்திருக்கிறார் என்று இந்த மனுஷன் கேள்விப்படுகிறான்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மீது இந்த மனுஷன் அதிக மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறான். இவன் அரசாங்கத்தில் மிகப்பெரிய பொறுப்பில் இருந்தாலும், இவனுடைய கட்டளைக்கு பல பேர் கீழ்ப்படிந்தாலும், இவன் இயேசுகிறிஸ்துவிடம் வந்து அவரை பணிவுடன் வேண்டிக்கொள்கிறான். இந்த உலகத்தில் எவ்வளவு பெரிய மனுஷராக இருந்தாலும், அவர்கள் கர்த்தருடைய சமுகத்தில் வரும்போது தங்களைத் தாங்களே தாழ்த்திக்கொள்ள வேண்டும்.

இயேசுகிறிஸ்துவினால் தன்னுடைய மகனை குணமாக்க முடியுமென்று இந்த மனுஷன் விசுவாசிக்கிறான். இவனுக்கு இயேசுகிறிஸ்துவின் வல்லமையைப்பற்றி சரியாகத் தெரியாது. அவர் ஒரு வார்த்தை மாத்திரம் சொன்னாலே போதுமானது. இவனுடைய குமாரன் சொஸ்தமாவான். இயேசுவின் வல்லமை தெரியாமல் "தன் மகனை குணமாக்கும்படிக்கு வரவேண்டும்" என்று இயேசுகிறிஸ்துவிடம் வேண்டிக் கொள்கிறான். தன் வீட்டிற்கு வந்தால்தான் தன் மகனை அவரால் குணமாக்க முடியும் என்பது இவனுடைய நம்பிக்கை.

நாம் கர்த்தருடைய சமுகத்தில் வந்து ஜெபிக்கவேண்டும். ஆனால் அவர் இப்படித்தான் கிரியை செய்யவேண்டுமென்று அவருக்கு நாம் கட்டளையிடக்கூடாது. கர்த்தருக்கு ஆலோசனை சொல்லும் அளவுக்கு நாம் ஆலோசனையில் சிறந்தவர்களல்ல. அவரே யோசனையில் பெரியவர். நாம் ஜெபிக்கும்போது "ஆண்டவரே உம்முடைய சித்தம் நிறைவேறுவதாக" என்று கூறி பணிவோடு ஜெபிக்கவேண்டும். ஆண்டவரே, என்னைக் குணமாக்கும் என்று நாம் பணிவோடு விண்ணப்பம் பண்ணலாம். என்னைத் தொட்டு குணமாக்குமென்றோ அல்லது உம்முடைய வார்த்தையினால் குணமாக்குமென்றோ அவருக்குக் கட்டளையிடக்கூடாது. "உம்முடைய சித்தம் எதுவாக இருந்தாலும் அதன் பிரகாரமாக என்னைக் குணமாக்கும் ஆண்டவரே" என்று பணிவோடு விண்ணப்பம்பண்ணவேண்டும்.

## அதிகாரம் - 4

**மரண அவஸ்தை**
**யோவா 4 : 48-54**

**யோவா 4:48. அப்பொழுது இயேசு அவனை நோக்கி: நீங்கள் அடையாளங்களையும் அற்புதங்களையும் காணாவிட்டால் விசுவாசிக்கமாட்டீர்கள் என்றார்.**

**யோவா 4:49. அதற்கு ராஜாவின் மனுஷன்: ஆண்டவரே, என் பிள்ளை சாகிறதற்குமுன்னே வரவேண்டும் என்றான்.**

**யோவா 4:50. இயேசு அவனை நோக்கி: நீ போகலாம், உன் குமாரன் பிழைத்திருக்கிறான் என்றார். அந்த மனுஷன், இயேசு சொன்ன வார்த்தையை நம்பிப் போனான்.**

**யோவா 4:51. அவன் போகையில், அவனுடைய ஊழியக்காரர் அவனுக்கு எதிர்கொண்டு வந்து, உம்முடைய குமாரன் பிழைத்திருக்கிறான் என்று அறிவித்தார்கள்.**

**யோவா 4:52. அப்பொழுது: எந்த மணிநேரத்தில் அவனுக்குக் குணமுண்டாயிற்று என்று அவர்களிடத்தில் விசாரித்தான். அவர்கள்: நேற்று ஏழாமணிநேரத்தில் ஜுரம் அவனை விட்டது என்றார்கள்.**

**யோவா 4:53. உன் குமாரன் பிழைத்திருக்கிறான் என்று இயேசு தன்னுடனே சொன்ன மணிநேரம் அதுவே என்று தகப்பன் அறிந்து, அவனும் அவன் வீட்டாரனைவரும் விசுவாசித்தார்கள்.**

**யோவா 4:54. இயேசு யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்குத் திரும்பிவந்தபின்பு, இது அவர் செய்த இரண்டாம் அற்புதம்.**

**அடையாளங்களையும் அற்புதங்களையும்**

**அப்பொழுது இயேசு அவனை நோக்கி: நீங்கள் அடையாளங்களையும் அற்புதங்களையும் காணாவிட்டால் விசுவாசிக்கமாட்டீர்கள் என்றார் (யோவா 4:48).**

இயேசுகிறிஸ்துவினிடத்தில் தன் மகனுக்காக வேண்டிக்கொள்கிறவன் ராஜாவின் மனுஷரில் ஒருவன். தன் குமாரன் மரண அவஸ்தையாக இருப்பதினால் இவன் மிகவும் வருத்தத்தோடு இருக்கிறான். சமுதாயத்தில் உயர்ந்த மதிப்பும் மரியாதையும் உடையவன். அரசாங்கத்தில் உயர் அதிகாரிகளில் ஒருவன். ஆனாலும் இயேசுகிறிஸ்து இவனையும் மென்மையாக கடிந்துகொள்கிறார். "நீங்கள் அடையாளங்களையும் அற்புதங்களையும் காணாவிட்டால் விசுவாசிக்கமாட்டீர்கள்" என்று கூறுகிறார். தம்முடைய இரக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அவனை ஆயத்தம்பண்ணும்விதமாக, அவனுடைய பாவத்தையும் பலவீனத்தையும் வெளிப்படுத்திக் காண்பிக்கிறார். அதன்பின்பு அவனுடைய வேண்டுதலுக்குச் செவிகொடுக்கிறார்.

தேவனுடைய கிருபையையும், சிலாக்கியத்தையும், ஆசீர்வாதத்தையும் நாம் பெற்றுக்கொள்ள விரும்பும்போது, அவர் முதலாவதாக நம்மைத் தாழ்த்துகிறார். பெருமையுள்ளவர்கள் தேவனுடைய சிலாக்கியங்களைப் பெற்றுக்கொள்ள முடியாது. இயேசுகிறிஸ்து மற்ற இடங்களில் அற்புதம் செய்திருக்கிறதை இவர்கள் கேள்விப்பட்டிருக்கிறார்கள். ஆனாலும் அவர் செய்யும் அற்புதங்களை தங்கள் கண்களால் பார்த்தால் மாத்திரமே இவர்கள் விசுவாசிப்பார்கள். கிறிஸ்துவின் அற்புதத்தைக் காணும் சிலாக்கியமும் மேன்மையும் தங்களுக்கும் கிடைக்கவேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள்.

தங்களைக் கனப்படுத்த வேண்டும், தங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும், தங்களைப் பாராட்டும் நல்ல வார்த்தைகளைப் பேசவேண்டுமென்று இவர்கள் எதிர்பார்க்கிறார்கள். தங்களுக்கு இவையெல்லாம் நடைபெறவில்லையென்றால் இவர்கள் எதையுமே ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். மற்ற இடங்களில் அற்புதம் நடைபெற்றாலும், தங்களுக்கும் ஏதாவது கிடைக்க வேண்டுமென்று இவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து தேவனிடத்திலிருந்து வந்திருக்கும் போதகர். தாம் செய்த பல்வேறு விதமான அற்புதங்கள் மூலமாக இயேசுகிறிஸ்து இந்த சத்தியத்தை போதுமான அளவு நிரூபித்திருக்கிறார். ஆனாலும் இவர்கள் இயேசுகிறிஸ்துவை தேவனிடத்திலிருந்து வந்திருக்கும் போதகர் என்று விசுவாசிக்க இப்போது ஆயத்தமாக இல்லை. மற்ற இடங்களில் அற்புதங்கள் செய்தாலும், அவர் செய்த அற்புதங்களை மற்றவர்கள் மூலமாக கேள்விப்பட்டாலும், தங்கள் கண்களாலும் அதைப் பார்க்கவேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். அற்புங்களையும் அடையாளங்களையும் இவர்கள் காணாவிட்டால் இயேசுகிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று இவர்கள் விசுவாசிக்கமாட்டார்கள்.

## அதிகாரம் - 4

இயேசுகிறிஸ்து பேசிய வார்த்தையும் ஆவிக்குரிய வல்லமையும் இவர்களுக்குப் போதுமானதாக இல்லை. மற்ற இடங்களில் அவர் செய்த அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் இவர்கள் பரவசமடையவில்லை. அந்த அற்புதங்களை தாங்களும் காணவேண்டும், தாங்களும் அனுபவிக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். அற்புதங்களின் உண்டாகும் உணர்வு சம்பந்தப்பட்ட வல்லமையையே இவர்கள் பெரிதும் விரும்புகிறார்கள். வார்த்தையினால் பரவசமடையாமல் உணர்ச்சியினால் பரவசமடைய விரும்புகிறார்கள்.

**வரவேண்டும்**

**அதற்கு ராஜாவின் மனுஷன்: ஆண்டவரே, என் பிள்ளை சாகிறதற்குமுன்னே வரவேண்டும் என்றான் (யோவா 4:49).**

இயேசுகிறிஸ்துவிடம் தன் மகனுக்காக வேண்டிக்கொள்கிற மனுஷன், அவரை இன்னும் வாஞ்சையோடு வேண்டிக் கொள்கிறான். "ஆண்டவரே என் பிள்ளை சாகிறதற்கு முன்னே வரவேண்டும்" என்று அவரிடம் மிகவும் பணிவோடு விண்ணப்பம்பண்ணுகிறான். இயேசுகிறிஸ்து தம்முடைய வார்த்தையினால் தன்னை கடிந்து கூறுவதை பொறுமையோடு ஏற்றுக்கொள்கிறான். அதன்பின்பும், மிகுந்த மரியாதையோடு இயேசுகிறிஸ்துவிடத்தில் பேசுகிறான். இயேசுகிறிஸ்து கூறிய கடிந்து கொள்ளும் வார்த்தைகள் இவனுடைய மனதை புண்படுத்தவில்லை. இவன் கோபமடையவில்லை. இயேசுகிறிஸ்துவிடத்தில் வேண்டிக்கொள்வதை நிறுத்திக்கொள்ள வேண்டுமென்று முடிவுபண்ணவில்லை.

இந்த மனுஷன் தன்னுடைய விண்ணப்பத்தை தொடர்ந்து ஏறெடுக்கிறான். தன்னுடைய வேண்டுதலுக்கு இயேசுகிறிஸ்து செவிகொடுத்து, அதற்கு சாதகமாக பதில்கொடுக்கும் வரையிலும் இவன் மிகுந்த பணிவோடு வேண்டுகொள்கிறான். இவனுடைய மனது முழுவதும் மரண அவஸ்தையிலிருக்கும் இவனுடைய பிள்ளையைப் பற்றிய சிந்தனையினால் நிரம்பியிருக்கிறது. அவனைக்குறித்த கவலையும் கரிசனையும் இவனுக்கு முக்கியமானதாக தெரிகிறது. வேறு எதிலும் இவன் கவனம் செலுத்த ஆயத்தமாகஇல்லை.

இயேசுகிறிஸ்துவின் வல்லமையை இவன் பூரணமாக விசுவாசிக்கவில்லை. "என் பிள்ளை சாகிறதற்கு முன்னே வரவேண்டும்" என்று இயேசுவை அழைக்கிறான். தம்மை அழைக்கும்போது இயேசுகிறிஸ்து இவனுடைய விசுவாசத்தின் பலவீனத்தைக் காண்கிறார். இயேசுகிறிஸ்து வந்தால் மாத்திரமே தன்னுடைய குமாரன் சொஸ்தமாவான் என்று இவன் எதிர்பார்க்கிறான். அவருடைய வார்த்தையின் வல்லமை இவனுக்குப் புரியவில்லை. இயேசுகிறிஸ்து தன்னோடு வந்தால் மாத்திரமே, அவர் தன்னுடைய மகனுக்கு இரங்குகிறார் என்று பொருள்படும் என்று நினைக்கிறான். இவன் தன் விசுவாசத்தில் பலவீனமாக இருக்கிறான். அவர் தன்னோடு வரவில்லையென்றால் அவரால் தன் மகனுக்கு ஒன்றும் செய்ய முடியாது என்று அவிசுவாசத்தோடு இருக்கிறான்.

மரண அவஸ்தையில் வியாதியாக இருக்கும் தன்னுடைய குமாரனை சொஸ்தமாக்க இயேசுகிறிஸ்துவினால் ஆகும் என்று விசுவாசிக்கிறான். அவன் செத்துப்போனால், அவனை உயிரோடு எழுப்ப இயேசுவால் ஆகாது என்று நினைக்கிறான். ஆகையினால்தான் "என் பிள்ளை சாகிறதற்கு முன்னே வரவேண்டும்" என்று விண்ணப்பம்பண்ணுகிறான். என் பிள்ளை செத்துப்போய்விட்டால், இயேசுகிறிஸ்து வந்தாலும் ஒரு பிரயோஜனமுமில்லை என்பது இவனுடைய எண்ணம். இயேசுகிறிஸ்து காலதாமதமாக வந்தால் அவரால் ஒன்றும் செய்ய முடியாது என்று தன் விசுவாசத்தில் பலவீனமாக சிந்திக்கிறான்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் எலியாவும் எலிசாவும் மரித்தோரை பிழைக்க வைத்திருக்கிறார்கள். அந்த சம்பவத்தையெல்லாம் இவன் மறந்துவிட்டான். இயேசுகிறிஸ்துவின் வல்லமை பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளுடைய வல்லமையைவிட சிறிதும் குறைந்துவிடவில்லை. இயேசுகிறிஸ்து சர்வ வல்லமையுள்ளவர். ஆனால் இவனோ இயேசுவின் வல்லமையை சரியாகப் புரிந்துகொள்ளாமல் "என் பிள்ளை சாகிறதற்கு முன்னே வரவேண்டும்" என்று கூறி அவரை அவசரப்படுத்துகிறான். இயேசுகிறிஸ்து தாமதம் செய்தால் அதனால் தனக்கு மிகப்பெரிய பாதிப்பும், இழப்பும் உண்டாகுமென்று நினைக்கிறான்.

## அதிகாரம் - 4

**நீ போகலாம்**

**இயேசு அவனை நோக்கி: நீ போகலாம், உன் குமாரன் பிழைத்திருக்கிறான் என்றார். அந்த மனுஷன், இயேசு சொன்ன வார்த்தையை நம்பிப் போனான் (யோவா 4:50).**

தம்மை அவசரப்படுத்தும் மனுஷனிடம் "நீ போகலாம், உன் குமாரன் பிழைத்திருக்கிறான்" என்று இயேசுகிறிஸ்து சமாதானமான வார்த்தையைக் கூறுகிறார். இந்த சம்பவத்தில் இயேசுகிறிஸ்து தம்முடைய வல்லமையின் ஒரு அம்சத்தை வெளிப்படுத்துகிறார். இயேசுகிறிஸ்துவினால் வியாதியை குணமாக்க முடியும். அது மாத்திரமல்ல அவரால் அவசரப்படாமல் மிகவும் நிதானமாக, பொறுமையோடும் குணப்படுத்த முடியும். இந்த சம்பவத்தில் இயேசுகிறிஸ்து ஒன்றும் சொல்லவில்லை, ஒன்றும் செய்யவில்லை. எந்தக் காரியமும் நடைபெறவேண்டுமென்று கட்டளையிடவும் இல்லை. ஆயினும் சரீர சுகமாதல் உண்டாயிற்று.

இயேசுகிறிஸ்து வந்து தன்னுடைய குமாரனை சொஸ்தமாக்குவார் என்று இந்த மனுஷன் எதிர்பார்க்கிறான். இவன் எதிர்பார்க்கும் பிரகாரமாக இயேசுகிறிஸ்து அவனுடைய குமாரனை சொஸ்தமாக்குகிறார். ஆனால் அவன் கேட்டுக்கொண்ட பிரகாரமாக, இயேசுகிறிஸ்து அவனுடைய குமாரனை வந்து குணமாக்காமல், தாம் இருந்த இடத்திலேயே குணமாக்குகிறார். இயேசுகிறிஸ்து வந்த பின்புதான் தன் மகன் சொஸ்தமாவான் என்று இந்த மனுஷன் எதிர்பார்க்கிறான். ஆனால் இயேசுகிறிஸ்துவோ, அவன் எதிர்பார்ப்பதற்கும் வேகமாக, அவன் தன் வீட்டிற்கு போவதற்கு முன்பாகவே, இப்பொழுதே அவனுடைய குமாரனை சொஸ்தமாக்குகிறார்.

நாம் இயேசுகிறிஸ்துவிடம் ஜெபிக்கும்போது அவருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து ஜெபிக்க வேண்டும். நம்முடைய ஆசைகளின்படியும் விருப்பங்களின் படியும் அவர் நமக்கு செய்து தரவேண்டுமென்று அவருக்குக் கட்டளையிடக்கூடாது. இயேசுகிறிஸ்துவின் சித்தத்தின் பிரகாரம் நடப்பதுதான் நமக்கு எப்போதுமே ஆசீர்வாதம். இந்த மனுஷன் தன் தவற்றை உணர்ந்து திருந்துகிறான். தன்னுடைய விசுவாசத்தில் உறுதியடைகிறான். சில சமயங்களில் நாம் கேட்கிற காரியத்தை இயேசுகிறிஸ்து நமக்கு கொடுக்காமல் போகலாம். அதனால் அவர் நம்மீது அன்பாகயில்லை என்பது பொருளல்ல. நாம் கேட்டுக்கொள்வதைவிட நமக்கு மிகவும் அதிகமான நன்மை கொடுக்கக்கூடிய வேறொன்றைக் கொடுப்பதற்காகத்தான், இயேசுகிறிஸ்து நாம் கேட்பதை சில சமயங்களில் கொடுக்காமல் இருக்கிறார்.

இந்த மனுஷன் தன் மகன் மரண அவஸ்தையிலிருப்பதினால் மனமுடைந்து போயிருக்கிறான். இயேசுகிறிஸ்து இவனுடைய இருதயத்தின் பாரத்தை அறிந்திருக்கிறார். ஆகையினால் அதிக கடினமான வார்த்தைகளைக் கூறி அவனைக் கடிந்துகொள்ளாமல், அவனுடைய குமாரனை சொஸ்தமாக்குவதற்கு தம்முடைய அற்புதத்தை வெளிப்படுத்துகிறார். ஒரு தகப்பன் தன்னுடைய பிள்ளைகள்மீது எவ்வளவு இரக்கமாக இருப்பான் என்பது இயேசுகிறிஸ்துவுக்கு நன்றாகத் தெரியும். இயேசுகிறிஸ்து ஒருபோதும் தேவையில்லாமல் நம்மைக் கண்டிப்பதில்லை. நம்மை தண்டிப்பதில்லை. அவருடைய ஒவ்வொரு வார்த்தைக்கும், செயலுக்கும் தெய்வீக நோக்கம் ஒன்று இருக்கும்.

இந்த மனுஷன் இயேசு சொன்ன வார்த்தையை நம்பிப்போகிறான். "நீ போகலாம் உன் குமாரன் பிழைத்திருக்கிறான்" என்று இயேசுகிறிஸ்து இவனிடம் கூறினார். அவருடைய வார்த்தையை இவன் இப்போது நம்புகிறான். இயேசுகிறிஸ்துவின் அணுகுமுறை இவனுக்கு மிகவும் திருப்தியாக இருக்கிறது. இவன் இப்போது அடையாளத்தையோ, அற்புதத்தையோ பார்க்கவில்லை. ஆனாலும் இயேசுகிறிஸ்து அற்புதம் செய்வார் என்று இவன் விசுவாசிக்கிறான். "உன் குமாரன் பிழைத்திருக்கிறான்" என்று இயேசு சொல்கிறார். இந்த மனுஷன் இயேசு சொன்ன வார்த்தையை நம்புகிறான். "நீ போகலாம்" என்று இயேசு சொல்கிறார். இந்த மனுஷன் தன்னுடைய நம்பிக்கையை உறுதிபண்ணும்விதமாக, இயேசுவின் வார்த்தையை நம்பி போகிறான்.

## அதிகாரம் - 4

**உம்முடைய குமாரன் பிழைத்திருக்கிறான்**

**அவன் போகையில், அவனுடைய ஊழியக்காரர் அவனுக்கு எதிர்கொண்டு வந்து, உம்முடைய குமாரன் பிழைத்திருக்கிறான் என்று அறிவித்தார்கள் (யோவா 4:51).**

இயேசுகிறிஸ்துவின் வார்த்தையை நம்பி போகிறவனுடைய விசுவாசம் மறுபடியும் உறுதிபண்ணப்படுகிறது. அவன் போகையில் அவனுடைய ஊழியக்காரர் அவனுக்கு எதிர்கொண்டு வருகிறார்கள். அவனுடைய குமாரன் பிழைத்திருக்கிற நல்ல செய்தியை அவர்கள் அவனுக்கு அறிவிக்கிறார்கள். "உன் குமாரன் பிழைத்திருக்கிறான்" என்று இயேசு இவனுக்குச் சொன்னார். அவர் சொன்ன வார்த்தையை இந்த மனுஷன் நம்புகிறான். இப்போது இவனுடைய ஊழியக்காரர் இயேசுகிறிஸ்துவின் வார்த்தையை தங்களுடைய சாட்சியினால் உறுதி பண்ணுகிறார்கள். இயேசுகிறிஸ்துவின் வார்த்தையை நம்புகிறவர்களை நற்செய்தி சந்திக்கும். விசுவாசிக்கிறவர்களுடைய காதுகளில் அவர்களுடைய விசுவாசத்தை உறுதிப்படுத்தும் நற்செய்திகள் தொனிக்கும்.

**எந்த மணி நேரத்தில்**

**அப்பொழுது: எந்த மணிநேரத்தில் அவனுக்குக் குணமுண்டாயிற்று என்று அவர்களிடத்தில் விசாரித்தான். அவர்கள்: நேற்று ஏழாமணிநேரத்தில் ஜூரம் அவனை விட்டது என்றார்கள் (யோவா 4:52).**

தன் மகன் எந்த மணிநேரத்தில் குணமடைய ஆரம்பித்தான் என்பதை இந்த மனுஷன் தெரிந்துகொள்ள விரும்புகிறான். தன்னுடைய விசுவாசம் உறுதிபண்ணப்பட வேண்டுமென்று இவன் ஆவலோடிருக்கிறான். தன்னுடைய ஊழியக்காரரிடம் "எந்த மணி நேரத்தில் அவனுக்கு குணமுண்டாயிற்று" என்று விசாரிக்கிறான். இயேசுகிறிஸ்துவின் வார்த்தையை அவருடைய கிரியைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நம்முடைய விசுவாசம் உறுதியடையும். நமக்கு ஆவிக்குரிய பிரயோஜனம் உண்டாகும்.

தன்னுடைய விசுவாசத்தை உறுதிபண்ணுவதற்காகவே இந்த மனுஷன் தன் ஊழியக்காரரிடத்தில் தன்னுடைய குமாரன் குணமடைந்த நேரத்தை தெரிந்துகொள்ள விரும்புகிறான். அவர்கள் அவனிடம் "நேற்று ஏழாம் மணி நேரத்தில் ஜூரம் அவனை விட்டது" என்று பதில் கூறுகிறார்கள். இவனுடைய விசுவாசம் மிகவும் அற்புதமாக உறுதிபண்ணப்படுகிறது. இயேசுகிறிஸ்து தம்முடைய வாயினால் "உன் குமாரன் பிழைத்திருக்கிறான்" என்று கூறிய அதே நேரத்தில்தானே, இவனுடைய குமாரனுக்கு ஜூரம் அவனை விட்டு நீங்கிற்று. இயேசுகிறிஸ்து சொன்ன வேளையும், இவனுடைய குமாரன் சொஸ்தமான வேளையும் ஒரே வேளையாக இருக்கிறது.

தன்னுடைய ஊழியக்காரர், தன் குமாரன் குணமடைந்த வேளையைச் சொன்னபோது, "உன் குமாரன் பிழைத்திருக்கிறான்" என்று இயேசு தன்னுடனே சொன்ன மணிநேரம் அதுவே என்று இவன் அறிந்துகொள்கிறான். இவனுடைய விசுவாசத்தை இரண்டு காரியங்கள் உறுதிபண்ணுகிறது. இயேசுகிறிஸ்து ஒரு வியாதியை சொஸ்தமாக்கும்போது, உடனடியாக பூரண குணம் உண்டாயிற்று. அவர் தவணை முறையில் கொஞ்சம் கொஞ்சமாக வியாதியை குணப்படுத்துவதில்லை.

இந்த மனுஷனுடைய ஊழியக்காரர், அவனுடைய குமாரன் குணமான நேரத்தை மிகவும் துள்ளியமாக, அறிவிக்கிறார்கள். "நேற்று ஏழாம் மணி நேரம்" சுகமாதல் நடைபெற்றது என்று கூறுகிறார்கள். சுமாராக ஏழாம் மணி நேரத்தில் சுகமாதல் நடைபெற்றது என்றோ, அல்லது நேற்று நடைபெற்றது என்றோ பொதுவாக கூறாமல், நேற்று ஏழாம் மணி நேரத்தில் அவனுடைய குமாரனுக்கு ஜூரம் விட்டது என்று துள்ளியமாக அறிவிக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் வேலை ஒரு மந்திரவாதியின் வேலையைப் போல் இருப்பதில்லை. மந்திரவாதி மந்திரம் ஓதி ஒரு காரியமும் செய்யாமல் காலத்தைக் கடத்திக்கொண்டிருப்பான். அவனுடைய மந்திரத்தினால் ஒன்றும் நடக்காது. ஆனால் சீக்கிரமாக நடக்கப்போகிறது என்று சொல்லிக் கொண்டேயிருப்பான். மந்திரவாதியின் பேச்சைக் கேட்கிறவர்களும் அவனுடைய வார்த்தையை நம்பி காத்துக்கொண்டிருப்பார்கள். சில சமயங்களில் அவர்களுடைய எதிர்பார்ப்பினால் உளவியல் ரீதியாக அவர்களுக்கு ஏதாவது நன்மை உண்டாகலாம். அல்லது காலதாமதம் உண்டாவதினால், இயற்கையாகவே அவர்களுடைய வியாதி நீங்கி குணமடையலாம். இயேசுகிறிஸ்து இப்படிப்பட்ட மாயமந்திர வேலை எதையும் செய்வதில்லை.

## அதிகாரம் - 4

இயேசுகிறிஸ்து ஒரு வார்த்தை சொன்னால் போதும். அது அப்படியே அப்பொழுதே நடக்கும். இயேசுகிறிஸ்துவின் வார்த்தை சர்வ வல்லமையுள்ளது. "உன் குமாரன் பிழைத்திருக்கிறான்" என்று கூறிய அதே வேளையில், அவனுடைய குமாரனுக்கு ஜுரம் விட்டிருக்கிறது. இதில் மந்திர வல்லமை எதுவுமில்லை. இயேசுகிறிஸ்து மாயம் பண்ணவில்லை. அவர் ஒரு வார்த்தையைச் சொல்லும்போது, அந்த வார்த்தை வல்லமையாய் கிரியை செய்கிறது.

நம்முடைய வாழ்க்கையில் சில காரியங்கள் ஏற்றவேளையில் ஒன்றுபோல் நடைபெறலாம். இது ஏதோ எதேச்சையாக நடைபெறும் சம்பவம் என்று விசுவாசிகளாகிய நாம் நினைக்கக்கூடாது. இவ்வாறு நடப்பது தேவனுடைய தெய்வீக பராமரிப்பின் காரியம். இது இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களுக்குக் கிடைக்கும் சிலாக்கியம்.

நம்முடைய உலகப்பிரகாரமான ஜீவியத்தில் நாம் பல இடங்களில் பல வேலைகளைச் செய்கிறோம். ஓரிடத்திலிருந்து தூரமான ஓரிடத்தில் ஒரு காரியத்தைச் செய்யும்போது நமக்குக் காலதாமதம் உண்டாகும். ஆனால் இயேசுகிறிஸ்துவின் கிரியையிலோ தூரத்தின் அடிப்படையில் காலதாமதம் உண்டாவதில்லை. ஏனெனில் அவர் சர்வ வல்லவர் மாத்திரமல்ல. அவர் சர்வ வியாபகரும் ஆவார். அவர் எல்லா இடங்களிலும் ஒரே வேளையில் இருக்கும் வல்லமையுள்ளவர். ஆகையினால் கானா ஊரிலிருந்து "உன் குமாரன் பிழைத்திருக்கிறான்" என்று இயேசுகிறிஸ்து சொன்னபோது, அதே வேளையில் கப்பர்நகூமில் இருக்கும் அந்த மனுஷனுடைய குமாரன் குணமடைகிறான்.

**அவனும் அவன் வீட்டாரனைவரும்**

**உன் குமாரன் பிழைத்திருக்கிறான் என்று இயேசு தன்னுடனே சொன்ன மணிநேரம் அதுவே என்று தகப்பன் அறிந்து, அவனும் அவன் வீட்டாரனைவரும் விசுவாசித்தார்கள் (யோவா 4:53).**

தன்னுடைய குமாரன் சொஸ்தமானதினால் இந்த மனுஷனுக்கும் இவனுடைய வீட்டாருக்கும் மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று. இவர்கள் குடும்பத்தோடு இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறார்கள். இதற்கு முன்பு இந்த மனுஷன் இயேசுகிறிஸ்துவின் வார்த்தையை விசுவாசித்தான். இப்போது இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறான். இயேசுகிறிஸ்து பல உபாயங்கள் மூலமாக மனுஷருடைய இருதயங்களை சந்திக்கிறார். பல சமயங்களில் அவ்வப்போது மனுஷருக்குத் தேவைப்படும் உதவிகளை தமது கிருபையினாலும் இரக்கத்தினாலும் செய்து மனுஷருடைய இருதயத்தை தமக்கு ஆதாயம் பண்ணுகிறார்.

இந்த மனுஷனும் அவன் வீட்டார் அனைவரும் இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைக்கிறார்கள். இயேசுகிறிஸ்து செய்த அற்புதத்தை இவனும் இவனுடைய வீட்டாரும் தங்கள் கண்களால் காண்கிறார்கள். இது சாதாரண அற்புதமல்ல. இயேசுகிறிஸ்து கானா ஊரிலிருந்து "உன் குமாரன் பிழைத்திருக்கிறான்" என்று சொன்ன மணி நேரமும், கப்பர் நகூமிலே இந்த மனுஷனுடைய குமாரன் சொஸ்தமான மணிநேரமும் ஒன்றுபோல் இருக்கிறது. இதை அறிந்து முழு வீட்டாரும் இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து செய்த அற்புதத்தை இவனுடைய வீட்டில் உள்ளவர்கள் அனைவரும் தங்கள் இருதயத்தில் உணருகிறார்கள். இயேசுகிறிஸ்துவின்மீது இவர்களுக்கு அன்பும் பிரியமும் உண்டாயிற்று. இந்த மனுஷன் ராஜாவின் மனுஷரில் ஒருவனாக இருக்கிறபடியினால், இவனுடைய குடும்பம் மிகவும் பெரியதாக இருந்திருக்கும். தன்னுடைய வீட்டில் எத்தனைபேர் இருந்தாலும் அத்தனைபேருக்கும் இயேசுகிறிஸ்துவின் வார்த்தையைக்குறித்து இவன் சாட்சி கூறுகிறான்.

இவன் இயேசுகிறிஸ்துவின் பாடசாலைக்கு வரும்போது தன்னோடு தன் வீட்டார் அனைவரையும் அழைத்து வருகிறான். இந்த வீட்டில் இவனுடைய குமாரன் ஜுரமாய் படுத்திருந்ததினால் இந்த வீட்டாரனைவருக்கும் மிகுந்த வேதனை உண்டாயிற்று. வேதனை கொடுக்கக்கூடிய இந்த சம்பவத்தை, இயேசுகிறிஸ்து அந்த குடும்பத்திற்கு ஆசீர்வாதம் கொடுக்கும் சம்பவமாக மாற்றுகிறார். அவர் நம்முடைய துக்கத்தை சந்தோஷமாக மாற்றுகிறவர். நமக்கும் பலசமயங்களில் வேதனைகளும் துக்கங்களும் உண்டாகலாம். கவலையும் கண்ணீரும் நம்மை நிரப்பலாம். நம்முடைய வாழ்வில் இப்படிப்பட்ட சோக சம்பவம் எது நடந்தாலும், இதைத் தொடர்ந்து தேவனுடைய நன்மை கொடுக்கக்கூடிய சம்பவம் நடைபெறப்போகிறது என்று விசுவாசத்தோடு காத்திருக்கவேண்டும்.

## அதிகாரம் - 4

**இரண்டாம் அற்புதம்**

**இயேசு யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்குத் திரும்பிவந்தபின்பு, இது அவர் செய்த இரண்டாம் அற்புதம் (யோவா 4:54).**

இயேசுகிறிஸ்து செய்த இந்த அற்புதம் இந்த சுவிசேஷத்தில் இரண்டாம் அற்புதம் என்று எழுதப்பட்டிருக்கிறது. முதலாவது அற்புதம் கானா ஊரிலே கலியாண வீட்டிலே நடைபெற்றது (யோவா 2:11). யூதேயாவிலே அவர் பல அற்புதங்களைச் செய்தார். இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளைக் கேட்பதற்கும், அற்புதங்களைக் காண்பதற்கும் யூதேயாவிலுள்ள ஜனங்களுக்கே முதலாவது வாய்ப்பு கொடுக்கப்பட்டது. ஆனால் அவர்களோ இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாமல் அவரை அங்கிருந்து துரத்திவிடுகிறார்கள். அதன்பின்பு அவர் கலிலேயாவுக்கு வந்து அற்புங்களைச் செய்கிறார்.

இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் ஜனங்கள் ஏதாவது ஒரு ஊரில் இருக்கத்தான் செய்வார்கள். ஒரு ஊரிலுள்ள ஜனங்கள் அவரை ஏற்றுக்கொள்ளாமற்போனாலும், மற்றொரு ஊரிலுள்ள ஜனங்கள் அவரை அன்போடு ஏற்றுக்கொள்வார்கள். சூரியனின் வெளிச்சம் தங்களுக்கு தேவையில்லையென்று நினைத்தால், தங்களுடைய வீடுகளின் கதவைகளை அடைத்துக்கொள்ளலாம். ஆனால் இந்த உலகத்திலிருந்து சூரியனின் வெளிச்சத்தை அகற்ற எந்த மனுஷனாலும் முடியாது.

அதுபோலவே நீதியின் சூரியனாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை தங்களுக்குத் தேவையில்லையென்று சிலர் தீர்மானம் பண்ணினால், அவர்கள் தங்கள் இருதயத்தின் கதவை இயேசுகிறிஸ்துவுக்கு திறக்காமல் அடைத்துக்கொள்ளலாம். அதேவேளையில் இயேசுகிறிஸ்துவின் கிருபை மற்ற இடங்களில் வெளிப்படுவதையும், கிரியை நடப்பிப்பதையும் இவர்களால் தடுத்து நிறுத்த முடியாது.

ராஜாவின் மனுஷரில் ஒருவனுடைய குமாரனை குணமாக்கிய சம்பவம் இரண்டாவது அற்புதம் என்று இந்த சுவிசேஷத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இவ்வாறு கூறுவதினால் அவர் செய்த முதலாவது அற்புதம் நமக்கு நினைவுபடுத்தப்படுகிறது. நாம் இயேசுகிறிஸ்துவிடமிருந்து புதிய கிருபைகளையும் இரக்கங்களையும் பெற்றுக்கொள்ளும்போது, நாம் அவரிடமிருந்து ஏற்கெனவே பெற்றுக்கொண்ட முந்திய கிருபைகளையும் இரக்கங்களையும் நினைவுகூரவேண்டும். முந்திய கிருபைகளைப்பற்றிய நினைவு, புதிய கிருபைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நம்மை உற்சாகப்படுத்தும்.

இந்த மனுஷன் சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்துடையவனாகவும், நற்குணம் மிகுந்தவனாகவும் இருக்கவேண்டும். ஆகையினால்தான் இவன் இயேசுகிறிஸ்துவின்மீது விசுவாசம் வைத்தபோது அவனுடைய வீட்டாரனைவரும் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறார்கள். இவனைப் பின்பற்றி ஏராளமானோர் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறார்கள். சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்துடையவர்களும், நற்குணசாலிகளும் இரட்சிப்படும்போது, இதனால் பலருக்கு ஆவிக்குரிய நன்மை கிடைப்பதற்கு வாய்ப்புண்டாகும்.

## அதிகாரம் - 5

இயேசுகிறிஸ்து செய்யவும் உபதேசிக்கவும் தொடங்கின எல்லா காரியங்களும் சுவிசேஷத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் உபதேசங்களும் அவர் செய்த அற்புதங்களும் சுவிசேஷங்களில் பின்னிப்பிணைத்து கோர்க்கப்பட்டிருக்கிறது. அவர் செய்த அற்புதங்களை அவர் செய்த உபதேசங்கள் விவரித்தன. அதே வேளையில் அவர் செய்த உபதேசங்களை அவர் செய்த அற்புதங்கள் உறுதிபண்ணின. இதன் பிரகாரமாக இந்த அதிகாரத்தில் இயேசுகிறிஸ்து செய்த ஒரு அற்புதமும், அவர் கூறிய ஒரு உபதேசமும் இடம் பெற்றிருக்கிறது.

பெதஸ்தா குளத்தில் முப்பத்தெட்டு வருஷமாக வியாதி கொண்டிருந்த ஒரு மனுஷனை இயேசுகிறிஸ்து சொஸ்தமாக்கிய சம்பவம் (யோவா 5:1-16). இயேசுகிறிஸ்து இந்த மனுஷனை ஓய்வுநாளில் சொஸ்தமாக்கினபடியினால் அவருடைய சத்துருக்கள் அவருக்கு விரோதமாக எழும்புகிறார்கள். தமக்கு உண்டான எதிர்ப்புக்கள் மத்தியில் இயேசுகிறிஸ்து தம்முடைய தெய்வீக அதிகாரத்தை உறுதிபண்ணுகிறார் (யோவா 5:17-29). யூதர்களுடைய அவிசுவாசத்தினிமித்தம் இயேசுகிறிஸ்து அவர்களை கடிந்துகொள்கிறார்.

### பெதஸ்தா குளம்
### யோவா 5 : 1-4

**யோவா 5:1. இவைகளுக்குப்பின்பு யூதருடைய பண்டிகை ஒன்று வந்தது; அப்பொழுது இயேசு எருசலேமுக்குப் போனார்.**

**யோவா 5:2. எபிரெய பாஷையிலே பெதஸ்தா என்னப்பட்ட ஒரு குளம் எருசலேமில் ஆட்டுவாசலினருகே இருக்கிறது, அதற்கு ஐந்து மண்டபங்களுண்டு.**

**யோவா 5:3. அவைகளிலே குருடர், சப்பாணிகள், சூம்பின உறுப்புடையவர்கள் முதலான வியாதிக்காரர் அநேகர் படுத்திருந்து, தண்ணீர் எப்பொழுது கலங்கும் என்று காத்துக் கொண்டிருப்பார்கள்.**

**யோவா 5:4. ஏனெனில் சில சமயங்களிலே தேவதூதன் ஒருவன் அந்தக் குளத்தில் இறங்கி, தண்ணீரைக் கலக்குவான்; தண்ணீர் கலங்கினபின்பு யார் முந்தி அதில் இறங்குவானோ அவன் எப்பேர்ப்பட்ட வியாதியஸ்தனாயிருந்தாலும் சொஸ்தமாவான்.**

**யூதருடைய பண்டிகை**

**இவைகளுக்குப்பின்பு யூதருடைய பண்டிகை ஒன்று வந்தது; அப்பொழுது இயேசு எருசலேமுக்குப் போனார் (யோவா 5:1).**

இயேசுகிறிஸ்து எருசலேமிலுள்ள பெதஸ்தா குளத்தின் அருகே படுத்திருக்கும் திமிர்வாதக்காரனை சொஸ்தமாக்குகிறார். இந்த சம்பவம் யோவான் எழுதின சுவிசேஷத்தில் மாத்திரமே குறிப்பிடப்பட்டிருக்கிறது. மற்ற சுவிசேஷங்களில் பொதுவாக கலிலேயாவில் நடைபெற்ற சம்பவங்கள் எழுதப்பட்டிருக்கும். ஆனால் யோவானோ எருசலேமில் நடைபெற்ற சம்பவத்திற்கு இந்த சுவிசேஷத்தில் முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்.

இயேசுகிறிஸ்து திமிர்வாதக்காரனை சொஸ்தமாக்கிய சம்பவம் யூதருடைய பண்டிகை காலத்தின்போது நடைபெறுகிறது. இது பஸ்கா பண்டிகையாக இருக்கவேண்டும். யூதருக்கு இதுவே பிரதான பண்டிகை. இயேசுகிறிஸ்து கலிலேயாவிலே வாசம்பண்ணினாலும், பஸ்கா பண்டிகையை ஆசரிப்பதற்காக எருசலேமுக்குப் போகிறார். பண்டிகை காலத்தில் எருசலேமுக்கு திரளான ஜனங்கள் கூடிவருவார்கள். தேசத்தின் எல்லா பாகங்களிலிருந்தும் பஸ்கா பண்டிகையின்போது ஜனங்கள் எருசலேமுக்கு வருவது வழக்கம். யூதமார்க்கத்தைத் தழுவிய புறஜாதியார்கூட பிற தேசங்களிலிருந்து பஸ்கா பண்டிகையின்போது எருசலேமுக்கு வருவார்கள். பஸ்கா பண்டிகை காலத்தில் தேவனை ஆராதிப்பதற்காக யூதர்கள் வருவதினால், அவர்களுடைய இருதயம் தேவபக்தியினாலும் தேவபயத்தினாலும் நிரம்பியிருக்கும். தேவனைப்பற்றிய சத்தியத்தில் அதிக கவனம் செலுத்துவார்கள். பண்டிகை காலமாக இருப்பதினால் தேவாலயத்தில் விசேஷித்த ஆராதனைகள் நடைபெறும். யூதஜனங்கள் தேவனுடைய சமுகத்தில் பயபக்தியோடு சஞ்சரிப்பார்கள்.

## அதிகாரம் - 5

**பெதஸ்தா**

**எபிரெய பாஷையிலே பெதஸ்தா என்னப்பட்ட ஒரு குளம் எருசலேமில் ஆட்டுவாசலினருகே இருக்கிறது, அதற்கு ஐந்து மண்டபங்களுண்டு (யோவா 5:2).**

இயேசுகிறிஸ்து திமிர்வாதக்காரனை பெதஸ்தா குளத்தின் அருகே சொஸ்தமாக்குகிறார். இந்தக் குளம் எருசலேமிலே ஆட்டுவாசலின் அருகே இருக்கிறது. இது தேவாலயத்திற்கு அருகில் இருப்பதாக வேதபண்டிதர்கள் சிலர் கூறுகிறார்கள். பஸ்கா பண்டிகை காலத்தில் தேவாலயத்திற்கு தேவனை ஆராதிக்கச் செல்கிறவர்கள், ஆலயத்திலிருந்து பெதஸ்தா குளத்தை பார்க்க முடியும். இது தேவாலயத்திற்கு அருகிலேயே உள்ளது.

இந்தக் குளத்திற்கு பெதஸ்தா என்று பெயரிட்டிருக்கிறார்கள். பெதஸ்தா என்பது ஒரு எபிரெய வார்த்தை. இதற்கு "இரக்கத்தின் வீடு" என்று பொருள். இந்தக் குளத்தில் வியாதியஸ்தருக்கு தேவனுடைய இரக்கம் வெளிப்படுத்தப்படுகிறது. ஆகையினால் இது இரக்கத்தின் வீடு என்று பொருள்படும் "பெதஸ்தா" குளம் என்று அழைக்கப்படுகிறது. இக்காலத்தில்கூட பலவிதமான துன்பங்களும், வேதனைகளும் இந்த உலகம் முழுவதும் நிறைந்துள்ளன. துயரத்தில் இருப்போருக்கு எருசலேமிலுள்ள பெதஸ்தா குளத்தைப்போல, இரக்கத்தின் வீடுகள் சில உள்ளன. இந்த வீடுகளில் நாம் தேவனுடைய பிரசன்னத்தையும், அவருடைய அன்பையும், கிருபையையும், இரக்கத்தையும் ருசித்துப்பார்க்கலாம்.

இந்தக் குளத்தைச் சுற்றிலும் ஐந்து மண்டபங்கள் கட்டப்பட்டிருக்கிறது. இங்கு வியாதியஸ்தர்கள் படுத்திருப்பார்கள். தர்ம சிந்தையுள்ளவர்கள் வியாதியஸ்தருக்கு உதவிபுரிவதற்காக இந்த மண்டபங்களைக் கட்டியிருக்கிறார்கள். தேவனுடைய இரக்கத்தை பெற்றுக்கொள்ள வரும் வியாதியஸ்தர்களுக்கு, இந்த மண்டபங்களும் ஆறுதலாக இருக்கிறது. மழை வந்தால் நனையாமல் இருப்பதற்கும், வெயில் காலத்தில் நிழலில் தங்கியிருப்பதற்கும் இந்த மண்டபங்கள் பேருதவியாக இருக்கிறது. இயற்கையின் மூலமாக நமக்கு பலவிதமான ஆசீர்வாதங்கள் கிடைக்கிற போதிலும், மனுஷராகிய நாம் தான் அந்த ஆசீர்வாதங்களை முறைப்படி பயன்படுத்தி அதிக நன்மைகளை பெற்றுக்கொள்ள வேண்டும். இயற்கையாக மூலிகைச் செடிகள் வனங்களில் வளர்ந்தாலும், நாம்தான் அந்த மூலிகைச் செடிகளை சேகரித்து மருந்தாக்க வேண்டும். வியாதியினால் அவஸ்தைபடுவோர் தங்கி மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக மருத்துவமனைகளை கட்டிக்கொடுக்க வேண்டும். இதன் அடிப்படையிலேயே பெதஸ்தா குளத்தைச் சுற்றிலும் ஐந்து மண்டபங்கள் கட்டப்பட்டுள்ளன.

**வியாதிக்காரர் அநேகர்**

**அவைகளிலே குருடர், சப்பாணிகள், சூம்பின உறுப்புடையவர்கள் முதலான வியாதிக்காரர் அநேகர் படுத்திருந்து, தண்ணீர் எப்பொழுது கலங்கும் என்று காத்துக்கொண்டிருப்பார்கள் (யோவா 5:3).**

பெதஸ்தா குளத்தின் மண்டபங்களிலே வியாதியஸ்தர் அநேகர் படுத்திருப்பார்கள். இக்காலத்தில்கூட இந்த உலகத்தில் இவர்களைப்போல வியாதியஸ்தர்கள் ஏராளமானோர் இருக்கிறார்கள். உதவி தேவைப்படுகிற இவர்களுக்கு நம்மால் முடிந்த அனைத்து உதவிகளையும் செய்யவேண்டும். அவர்களுக்கு ஆறுதலான வார்த்தை கூறவேண்டும். மருத்துவமனைகளுக்குச் சென்று, வியாதியஸ்தர்களைச் சந்தித்து, அவர்களுக்கு ஆறுதலான வார்த்தைகளைக் கூறி ஜெபம்பண்ணவேண்டும்.

உலகத்தில் வியாதியஸ்தர் அநேகர் இருக்கும்போது, கர்த்தர் நமக்கு ஆரோக்கியமான சரீரத்தை கொடுத்திருப்பதற்காக கர்த்தரைத் துதிக்க வேண்டும். சரீர ஆரோக்கியம் கர்த்தரிடத்திலிருந்து வரும் வரம். பெதஸ்தா குளத்து மண்டபத்தில் குருடர், சப்பாணிகள், சூம்பின உறுப்புடையவர்கள் முதலான வியாதியஸ்தர்கள் படுத்திருக்கிறார்கள். பெதஸ்தா குளத்தின் தண்ணீர் கலங்கின பின்பு, அதில் முதலாவதாக இறங்குகிற, அந்த வியாதியஸ்தரின் வியாதி குணமடையும். இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் வியாதியஸ்தர்களுக்கு தண்ணீருக்குள் இறங்க உதவி தேவைப்படுகிறது. பார்வை தெரியாதவர்களாகவும், கைகால்கள் செயலிழந்தவர்களாகவும் இருக்கிறபடியினால், இவர்களால் தாங்களாகவே தண்ணீருக்குள் போகமுடியாது. ஆகையினால் அந்த மண்டபங்களில் இவர்கள் நீண்டகாலமாக சொஸ்தமடைவதற்கு காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

## அதிகாரம் - 5

நம்முடைய ஆத்துவை ஆரோக்கியமாக வைத்திருக்கவேண்டும். ஆத்தும வியாதிகள் ஏதாவது நம்மிடத்தில் காணப்படுமானால் விரைவில் குணமடைய கர்த்தரிடத்தில் ஜெபிக்கவேண்டும். அவரே நம்முடைய ஆத்தும நேசர். நம்முடைய ஆத்துமாவின் பரிகாரியானவர்.

**தேவதூதன்**

**ஏனெனில் சில சமயங்களிலே தேவதூதன் ஒருவன் அந்தக் குளத்தில் இறங்கி, தண்ணீரைக் கலக்குவான்; தண்ணீர் கலங்கினபின்பு யார் முந்தி அதில் இறங்குவானோ அவன் எப்பேர்ப்பட்ட வியாதியஸ் தனாயிருந்தாலும் சொஸ்தமாவான் (யோவா 5:4).**

பெதஸ்தா குளத்தில் அற்புதம் நடைபெறுமாறு நியமிக்கப்பட்டிருக்கிறது. சில சமயங்களில் தேவதூதன் ஒருவன் அந்த குளத்தில் இறங்கி தண்ணீரைக் கலக்குவான். தண்ணீர் கலங்கின பின்பு யார் முந்தி அதில் இறங்குவானோ அவன் எப்பேர்ப்பட்ட வியாதியஸ்தனாயிருந்தாலும் சொஸ்தமாவான். தேவனுடைய வல்லமையினால் பெதஸ்தா குளத்தில் இந்த அற்புதம் நடைபெறுகிறது.

தேவதூதன் வியாதியஸ்தரை குணப்படுத்துவதற்கு மருந்தை ஆயத்தம்பண்ணுகிறான். இது உலகப்பிரகாரமான மருந்தல்ல. அவன் குளத்தில் இறங்கி தண்ணீரைக் கலக்குகிறான். தேவனுடைய பரிசுத்த தூதர்களுக்கு குளத்தின் தண்ணீரைக் கலக்குகிற சாதாரண வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. தேவதூதன் எந்தவித பெருமையுமில்லாமல், கர்த்தர் தனக்குக் கொடுத்திருக்கும் வேலையை கவனமாக செய்கிறான். குளத்தின் தண்ணீரை கலக்குகிற வேலையாக இருந்தாலும், அதற்காக அவன் கவலைப்படவில்லை. சோர்வடைந்துவிடவில்லை. இந்த தேவதூதனைப்போலவே, நாமும் கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கும் வேலை எதுவோ அதை உண்மையாகவும், மனப்பூர்வமாகவும், உற்சாகமாகவும் செய்யவேண்டும். பாவத்தில் ஈடுபடுகிற வேலையைத் தவிர, வேறு எந்த வேலையை வேண்டுமானாலும் விசுவாசிகள் செய்யலாம்.

குளத்தின் தண்ணீர் கலக்கப்படுவது, தேவதூதன் வானத்திலிருந்து இறங்கி வந்திருக்கிறான் என்பதற்கு அடையாளமாக இருக்கிறது. குளத்தின் தண்ணீர் கலங்காமல் நிலையாக இருக்கும்போது அது யாரையும் சொஸ்தமாக்குவதில்லை.

கலக்கப்படும்போதுதான் குணமாதல் நடைபெறுகிறது. நம்மிடத்திலுள்ள ஜீவத்தண்ணீர் செயலிழந்து கெட்டிக்கிடக்கும் தண்ணீர்போல இருக்கக்கூடாது. அது எப்போதும் ஆடுகிற, அசைகிற, ஓடுகிற, செயல்படுகிற தண்ணீராக இருக்கவேண்டும். அப்போதுதான் நம்முடைய ஆத்துமா சொஸ்தமாகும்.

ஊழியக்காரர்களுக்கு கர்த்தர் வரங்களைக் கொடுத்திருக்கிறார். அதை பயன்படுத்தாமல் வைத்திருப்போமென்றால் அதனால் பிரயோஜனமில்லை. அது அசைவில்லாமல் குளத்தில் நீண்டகாலமாக கெட்டிக்கிடக்கும் தண்ணீரைப்போல இருக்கும். ஆகையினால் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வரம் பிரயோஜனமுள்ளதாக இருக்கவேண்டுமென்றால், அந்த வரத்தை நாம் கலக்கவேண்டும். செயல்படுத்த வேண்டும். அப்போதுதான் வரங்களினால் பிரயோஜனம் உண்டாகும்.

வரங்கள் செயல்படுத்தப்படாமல், அனலுமில்லாமல் குளிருமில்லாமல் இருக்கும்போது, ஊழியமும் விறுவிறுப்பாக நடைபெறாது. எல்லாம் சோர்வு நிலையில் இருக்கும். கலக்கப்படாத தண்ணீர் வியாதியை சொஸ்தமாக்காது. அதுபோலவே பயன்படுத்தப்படாத வரங்கள் ஒரு பிரயோஜனத்தையும் உண்டுபண்ணாது. தேவதூதன் சில சமயங்களில் குளத்தில் இறங்கி அதன் தண்ணீரை கலக்குகிறான். பிரயோஜனமில்லாத தண்ணீரை பிரயோஜனமுள்ள தண்ணீராக மாற்றுகிறான்.

தண்ணீர் கலங்கின பின்பு வியாதியஸ்தர் எல்லோரும் அந்தக் குளத்தில் விழுவார்கள். ஆனால் குளத்தில் விழுந்த எல்லோரும் குணமடைவதில்லை. தண்ணீர் கலங்கினபின்பு யார் முந்தி அதில் இறங்குவானோ அவன் மாத்திரமே எப்பேர்ப்பட்ட வியாதியஸ்தனாக இருந்தாலும் சொஸ்தமாவான். இயற்கையினால் குணப்படுத்த முடியாத வியாதியை, தேவனுடைய அற்புத வல்லமை குணப்படுத்துகிறது. முதலாவது வருகிறவனுக்கு ஆசீர்வாதம் வாக்குப்பண்ணப்படுகிறது. சோம்பலாக வருகிறவனுக்கோ, நடை தடுமாறி ஆடி அசைந்து தாமதமாக வருகிறவனுக்கோ ஒரு ஆசீர்வாதமும் கிடைக்காது. கர்த்தர் நமக்கு நியமித்திருக்கும் காரியத்தில் காலதாமதம் பண்ணக்கூடாது. நமக்குக் கிடைக்கும் வாய்ப்புக்களை தாமதம்பண்ணாமல் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். வாய்ப்புக்களை தவறவிட்டுவிட்டால் அந்த வாய்ப்புக்கள் நமக்கு மறுபடியும் கிடைக்காமலேயே போய்விடலாம்.

## அதிகாரம் - 5

பழைய ஏற்பாட்டுக்காலத்திலிருந்து, புதிய ஏற்பாட்டுக்காலம் வரையிலும் நடைபெற்ற சம்பவங்களை பற்றி வேதாகமத்தில் அதிகமாக எழுதப்படவில்லை. அக்காலத்தில் அற்புதங்கள் நடைபெற்றதா, கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் தீர்க்கதரிசன ஊழியம் செய்தார்களா என்பதெல்லாம் தெளிவாக தெரியவில்லை. அப்படிப்பட்ட காலத்தில் தேவன் தம்முடைய பிள்ளைகள்மீது கிருபையாக இறங்கியிருக்கிறார் என்பதற்கு பெதஸ்தா குளத்தில் வியாதியஸ்தர் அற்புதமாக சுகமாவது ஓர் அடையாளமாக இருக்கிறது. கர்த்தர் அற்புதம் செய்கிறார். நன்மை செய்கிறார். தம்முடைய குணமாக்கும் வல்லமையினால் வியாதியஸ்தரை குணப்படுத்துகிறார். அக்காலத்தில் தீர்க்கதரிசிகள் அநேகர் இல்லாமற்போனாலும், கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை கைவிட்டுவிடவில்லை. மேசியா தம்முடைய செட்டைகளின் கீழ் ஆரோக்கியத்தோடு வந்திருக்கிறார் என்பதற்கு பெதஸ்தா குளத்தில் நடைபெறும் அற்புதம் சம்பவம் ஓர் அடையாளமாயிற்று.

### இயேசு சொஸ்தமாக்குகிறார் யோவா 5:5-9

**யோவா 5:5. முப்பத்தெட்டு வருஷம் வியாதி கொண்டிருந்த ஒரு மனுஷன் அங்கே இருந்தான்.**

**யோவா 5:6. படுத்திருந்த அவனை இயேசு கண்டு, அவன் வெகுகாலமாய் வியாதியஸ்தனென்று அறிந்து, அவனை நோக்கி: சொஸ்தமாகவேண்டுமென்று விரும்புகிறாயா என்று கேட்டார்.**

**யோவா 5:7. அதற்கு வியாதியஸ்தன்: ஆண்டவரே, தண்ணீர் கலக்கப்படும்போது என்னைக் குளத்தில் கொண்டுபோய் விடுகிறதற்கு ஒருவருமில்லை, நான் போகிறதற்குள்ளே வேறொருவன் எனக்கு முந்தி இறங்கிவிடுகிறான் என்றான்.**

**யோவா 5:8. இயேசு அவனை நோக்கி: எழுந்திரு, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட என்றார்.**

**யோவா 5:9. உடனே அந்த மனுஷன் சொஸ்தமாகி, தன் படுக்கையை எடுத்துக்கொண்டு, நடந்துபோனான். அந்த நாள் ஓய்வுநாளாயிருந்தது. முப்பத்தெட்டு வருஷ வியாதி**

**முப்பத்தெட்டு வருஷம் வியாதி கொண்டிருந்த ஒரு மனுஷன் அங்கே இருந்தான் (யோவா 5:5).**

பெதஸ்தா குளத்து மண்டபம் ஒன்றில் முப்பத்தெட்டு வருஷம் வியாதி கொண்டிருந்த ஒரு மனுஷன் இருக்கிறான். திமிர்வாத வியாதியினால் கைகளும் கால்களும் செயலிழந்தவனாக பரிதாபமாக படுத்துக்கிடக்கிறான். நம்முடைய ஆத்துமா நமது சரீரத்தில் வாசம்பண்ணுகிறது. இந்த சரீரம் செயலிழந்து போகும்போது ஆத்துமாவின் வேதனை அதிகரிக்கும். ஆத்துமாவுக்கு கருவியாக செயல்படவேண்டிய சரீரம் இந்த மனுஷனுக்கு செயலிழந்து போயிற்று. அதனால் இந்த உலகத்தின் வாழ்க்கையே இவனுக்கு பாரமாகவும் கசப்பாகவும் ஆயிற்று.

கர்த்தர் நமக்கு நல்ல சரீர ஆரோக்கியத்தை கொடுத்திருப்பதற்காக நாம் அவரைத் துதிக்கவேண்டும். நமது சரீரத்தின் அவயவங்கள் முறைப்படி செயல்படுவதற்காக நம்முடைய உள்ளத்தின் ஆழத்திலிருந்து அவரைப் போற்றிப் புகழவேண்டும். பெதஸ்தா குளத்து மண்டபத்தில் படுத்திருக்கும் மனுஷன் முப்பத்தெட்டு வருஷமாக வியாதிகொண்டவனாக இருக்கிறான். முப்பத்தெட்டு வருஷம் வியாதியோடிருப்பது என்பது மிகவும் தாங்க முடியாத வேதனை. அவனுக்குத் தெரிந்த பலருக்கு முப்பத்தெட்டு வயதுகூட நிரம்பியிருக்காது. ஆனால் இவனுடைய திமிர்வாத வியாதிக்கோ முப்பத்தெட்டு வயதாயிற்று.

சில சமயங்களில் நமக்கு ஒரு மணி நேரம் தலைவலியோ, அல்லது ஜுரமோ வந்தால்கூட புலம்புகிறோம். நம்முடைய விசுவாசம் குறைந்துபோகிறது. முறுமுறுக்கிறோம். ஒரு இரவு முழுவதும் நம்மால் தூங்க முடியவில்லையென்றால் அதிக வேதனைப்படுகிறோம். இந்த மனுஷனோ முப்பத்தெட்டு வருஷமாக வியாதியாக இருக்கிறான். வியாதியோடு வாழ்ந்து பழகிவிட்டான். தனக்கு மரணம் வந்தால் நன்றாயிருக்குமென்று அதன் வருகையின் நாளை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறான். வாழ்க்கையில் நம்பிக்கையிழந்தவனாக, பிறருடைய ஆதரவற்றவனாக, பரிதாபமாக பெதஸ்தா குளத்தின் மண்டபத்தில் படுத்திருக்கிறான். தான் குணமாவதற்கு வாய்ப்பேயில்லை என்று இவனுக்குத் தெரிந்திருக்கிறபோதிலும், என்றாவது ஒருநாள் குணமடைந்துவிடமாட்டோமா என்று முப்பத்தெட்டு வருஷமாக காத்துக்கொண்டிருக்கிறான்.

## அதிகாரம் - 5

**சொஸ்தமாகவேண்டுமென்று விரும்புகிறாயா**

**படுத்திருந்த அவனை இயேசு கண்டு, அவன் வெகுகாலமாய் வியாதியஸ்தனென்று அறிந்து, அவனை நோக்கி: சொஸ்தமாகவேண்டுமென்று விரும்புகிறாயா என்று கேட்டார் (யோவா 5:6).**

இயேசுகிறிஸ்து பெதஸ்தா குளத்து மண்டபத்தில் படுத்திருக்கும் இந்த மனுஷனைக் காண்கிறார். இயேசு எருசலேமுக்கு வரும்போது அங்குள்ள அரண்மனைகளுக்கோ, மாடமாளிகைகளுக்கோ போகாமல், வியாதியஸ்தர்கள் நிறைந்திருக்கும் இந்தக் குளத்திற்கே வருகிறார். அவர் இந்த உலகத்திற்கு வந்த தெய்வீக நோக்கமும் இதுதான். காணாமல்போனவர்களை தேடி கண்டுபிடித்து இரட்சிக்கவும், காயமடைந்திருக்கிறவர்களுக்கு காயம்கட்டவும் இயேசு இந்த பூமிக்கு வந்திருக்கிறார். பெதஸ்தா குளத்து கரையில் ஏராளமான வியாதியஸ்தர்கள் இருந்தாலும், இயேசுகிறிஸ்துவின் பார்வை இந்த குறிப்பிட்ட வியாதியஸ்தன் மேல் படுகிறது. உதவியில்லாதவர்களுக்கு உதவிபுரிய கர்த்தர் விரும்புகிறார்.

இந்த திமிர்வாதக்காரன் பெதஸ்தா குளத்து மண்டபத்தில் படுத்திருந்த காலத்தில் தேவதூதன் பலமுறை குளத்தில் இறங்கி தண்ணீரைக் கலக்கியிருக்கிறான். ஒவ்வொரு முறையும் யாரோ ஒருவர் அதில் முந்தி இறங்கி சொஸ்தமடைந்திருக்கிறார்கள். ஒவ்வொரு முறையும் இவனால் குளத்திற்குள் இறங்க முடியவில்லை. ஏமாற்றமடைந்தவனாக அங்கு படுத்திருக்கிறான். யாரும் இவனுக்கு உதவிபுரியவில்லை. இப்படிப்பட்ட வியாதியஸ்தனை குணப்படுத்த வேண்டுமென்று இயேசுகிறிஸ்து சித்தங்கொள்கிறார். அவர் பலவீனருக்காக பரிந்துபேசி அவர்களை பலப்படுத்துகிறவர். கைவிடப்பட்ட வியாதியஸ்தர்களை தமது குணமாக்கும் கரத்தினால் தொட்டு சொஸ்தமாக்குகிறவர்.

இயேசுகிறிஸ்து அந்த மனுஷனை பார்த்தபோதே அவன் வெகுகாலமாய் வியாதியஸ்தன் என்று அறிந்துகொள்கிறார். அவனை நோக்கி "சொஸ்தமாக வேண்டுமென்று விரும்புகிறாயா" என்று கேட்கிறார்.

இந்தக் கேள்வியே வியாதியஸ்தனுக்கு விநோதமாக இருந்திருக்கும். ஏனெனில் இவன் நீண்டகாலமாக வியாதியஸ்தனாக இருக்கிறான். இதுவரையிலும் இவனிடம் யாரும் இப்படிப்பட்ட கேள்வியைக் கேட்டதில்லை. சிலர் நீண்டகாலமாக வியாதியாயிருக்கும்போது, தாங்கள் குணமடைய மாட்டோமென்று தீர்மானித்துவிடுவார்கள். குணமடைய வேண்டும் என்னும் எதிர்பார்ப்புகூட இப்படிப்பட்டவர்களிடம் இருக்காது. குணமடைவதைப்பற்றி இவர்களிடம் யாரும் ஆறுதலாகக்கூட பேசமாட்டார்கள். இப்படிப்பட்ட மனுஷனிடத்தில்தான் இயேசுகிறிஸ்து வருகிறார்.

முப்பத்தெட்டு வருஷமாக வியாதிகொண்டிருந்த மனுஷனிடம் இயேசுகிறிஸ்து தம்முடைய கரிசனையையும் இரக்கத்தையும் வெளிப்படுத்துகிறார். அவனிடத்தில் அன்போடு விசாரிக்கிறார். அவன் குணமடைய விரும்புகிறானா என்று கேட்கிறார். ஏனெனில் தேவனுடைய இரக்கத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால், அவருடைய இரக்கத்தை நாம் விரும்பவேண்டும். தேவனுடைய இரக்கத்திற்கு நாம் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். இந்த சத்தியத்தை அவனுக்கு உபதேசம்பண்ணும் விதத்தில் "சொஸ்தமாகவேண்டுமென்று விரும்புகிறாயா" என்று கேட்கிறார்.

ஆவிக்குரிய ஜீவியத்தில் பலர் தங்களுடைய பாவ வாழ்க்கையில் ஜீவிக்கிறார்கள். பாவங்களைவிட்டு விடுதலை பெறவேண்டும் என்னும் விருப்பம் இவர்களுக்கு இராது. இப்படிப்பட்டவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படாது. தங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டுமென்று விரும்பினால் மாத்திரமே அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கு வாய்ப்புண்டாகும்.

நாம் சொஸ்தமாகவேண்டுமென்று விரும்பும்போது, நமக்கு பாதி சுகம் கிடைத்ததுபோல இருக்கும். நம்முடைய மனவிருப்பமே நம்முடைய வியாதியின் ஒரு பகுதியை குணப்படுத்திவிடும். குணப்படுத்த வேண்டிய மீதி பகுதியை இயேசுகிறிஸ்து தமது தெய்வீக வல்லமையினால் குணப்படுத்துவார். நாம் சொஸ்தமாக வேண்டுமென்று விரும்பும்போது, இயேசுகிறிஸ்துவும் நம்மை சொஸ்தமாக்க விரும்புகிறார்.

## அதிகாரம் - 5

**ஒருவருமில்லை**

**அதற்கு வியாதியஸ்தன்: ஆண்டவரே, தண்ணீர் கலக்கப்படும்போது என்னைக் குளத்தில் கொண்டுபோய் விடுகிறதற்கு ஒருவருமில்லை, நான் போகிறதற்குள்ளே வேறொருவன் எனக்கு முந்தி இறங்கிவிடுகிறான் என்றான் (யோவா 5:7).**

சொஸ்தமாக வேண்டுமென்று விரும்புகிறாயா என்று இயேசுகிறிஸ்து இவனிடம் கேட்டபோது, இவன் தன்னுடைய மனவருத்தம் அனைத்தையும் இயேசுவிடம் கூறுகிறான். தன்னை குளத்தில் கொண்டுபோய் விடுகிறதற்கு ஒருவனுமில்லையென்று புலம்புகிறான். தனக்கு ஒரு நண்பரும் இல்லையென்றும், தனக்கு உதவிபுரிய யாருமேயில்லாமல் தான் ஒரு அநாதை போல இங்கு இருப்பதாகவும் வருத்தத்தோடு கூறுகிறான். வியாதியஸ்தர்கள் பொதுவாக இப்படிப்பட்ட மனநிலைமையில்தான் இருப்பார்கள். தங்களுடைய பரிதாபமான நிலைக்காக யாராவது இரங்கி தங்களுக்கு இரக்கம் காண்பிக்கவேண்டுமென்று எதிர்பார்ப்பார்கள். இப்படிப்பட்ட வியாதியஸ்தர்களை நாம் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே சந்தித்து, அவர்களுக்கு ஆறுதலான வார்த்தைகளைக்கூறி, நம்மால் முடிந்த எல்லா உதவிகளையும் அவர்களுக்குச் செய்யவேண்டும்.

தான் இந்தக் குளத்தில் பலமுறை ஏமாற்றமடைந்திருப்பதை இவன் இயேசுவிடம் அறிவிக்கிறான். தான் போகிறதற்குள்ளே வேறொருவன் தனக்கு முந்தி குளத்தின் தண்ணீரில் இறங்கிவிடுகிறான் என்று புலம்புகிறான். இப்படிப்பட்ட சம்பவம் பலமுறை நடைபெற்றிருக்கிறது. இவனுக்கும் சொஸ்மாதலுக்கும் இடையில் சிறிது தூரம்தான் இருக்கிறது. ஆனால் அந்த தூரத்தைக்கூட கடக்கமுடியாமல் இவன் திமிர்வாதமாக இருக்கிறான். இந்த சிறிய உதவியைக்கூட இவனுக்கு ஒருவரும் செய்யவில்லை. ஒவ்வொரு வேளையிலும் வேறொருவன் குணமாகிவிடுவதாகவும், தான் மாத்திரம் குணமாகாமல் இதே இடத்தில் வியாதியோடு படுத்திருப்பதாகவும் வருத்தப்படுகிறான்.

தோல்விக்குமேல் தோல்வி உண்டாகும்போது மனச்சோர்வு வந்துவிடும். ஏமாற்றம் பெரிதாக இருக்கும். இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் இயேசுகிறிஸ்து இவனுக்கு உதவிபுரிய முன்வருகிறார். முப்பத்தெட்டு வருஷமாக இவன் பெதஸ்தா குளத்து மண்டபத்தில் படுத்திருக்கிறான்.

இதுவரையிலும் இவனுக்கு யாரும் உதவிபுரியவில்லை. இனிமேலாவது யாராவது தனக்கு உதவிபுரிவார் என்னும் எதிர்பார்ப்போடு இங்கு படுத்திருக்கிறான். யாரோ ஒருவர், ஏதோ ஒரு நாளில் தனக்கு உதவிபுரிய வருவார்கள் என்று இதுவரையிலும் காத்திருந்தவன், இனிமேலும் காத்திருக்கலாமென்று நினைத்து சோர்வோடு படுத்திருக்கிறான்.

**எழுந்திரு**

**இயேசு அவனை நோக்கி: எழுந்திரு, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட என்றார் (யோவா 5:8).**

இயேசுகிறிஸ்து வியாதியஸ்தனைப்பார்த்து "சொஸ்தமாக வேண்டுமென்று விரும்புகிறாயா" என்று கேட்கிறார். அதை தொடர்ந்து "எழுந்திரு, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட" என்றுஅவனிடத்தில் கூறுகிறார். முப்பத்தெட்டு வருஷமாக திமிர்வாதமாக படுத்திருக்கும் இந்த வியாதியஸ்தனிடம் இயேசுகிறிஸ்து ஒரு விநோதமான கட்டளையைக் கொடுக்கிறார். நீண்டகாலமாகஎழுந்திருக்க முடியாமல், நடக்க முடியாமல் இருந்தவனைப்பார்த்து, இப்போது "எழுந்து நட" என்று கட்டளையிடுகிறார். இவன் தன் சொந்த வல்லமையினால் எழுந்து நடக்கமுடியாது. ஆனால் தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. இயேசு கிறிஸ்துவின் வார்த்தை வல்லமையுள்ளது. அவர் சொல்ல ஆகும். அவர் இந்த மனுஷனைப்பார்த்து "எழுந்துநட"என்றுசொல்லும்போது, அதற்குரிய வல்லமையை,அதை சொன்ன இயேசு கிறிஸ்து விடமிருந்து இவன் பெற்றுக்கொள்ளலாம்.

இந்த வியாதியஸ்தன் இதுவரையிலும் மற்றவருடைய உதவியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். இப்போது இயேசுகிறிஸ்து இவனை எழும்பி நடக்குமாறு கூறுகிறார். இயேசுவின் வார்த்தையைக் கேட்டு, யாருடைய உதவியும் இல்லாமல், இயேசு சொன்ன பிரகாரமாக எழும்பி நடக்க முயற்சி பண்ணவேண்டும். முயற்சி பண்ணவில்லையென்றால் இவனால் குணமடைய முடியாது. இதற்கு முன்பு இவன் பல சமயங்களில் தன் சொந்த பலத்தினால் எழுந்து நடக்க முயற்சி செய்திருப்பான். அந்த முயற்சிக்கும், இப்போது எடுக்கும் முயற்சிக்கும் வித்தியாசமுண்டு. அது அவனுடைய சொந்த பலத்தினால் மேற்கொண்ட முயற்சி. இப்போது இவனுடைய சொந்த பலத்தினால் அல்ல, இயேசுகிறிஸ்துவின் வல்லமையினால் இப்போது எழுந்து நடக்க இவன் முயற்சி பண்ண வேண்டும். பழைய தோல்விகளை நினைத்து முயற்சி பண்ணாமல் இருந்துவிடக்கூடாது. இயேசுகிறிஸ்துவின் வார்த்தையை விசுவாசித்து கிரியை செய்யவேண்டும்.

## அதிகாரம் - 5

இயேசுகிறிஸ்து முப்பத்தெட்டு வருஷமாக திமிர்வாத வியாதியினால் படுத்திருக்கும் அவனை நோக்கி "எழுந்திரு, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட" என்று கூறுகிறார். இந்த மனுஷன் எழுந்திருந்தால் மட்டும் போதாது. அவன் தன் படுக்கையையும் எடுத்துக்கொள்ள வேண்டும். இவனுக்கு பரிபூரண குணம் உண்டாயிற்று என்பதை உறுதிபண்ணுவதற்காக, இயேசுகிறிஸ்து இவனிடம் இவனுடைய படுக்கையையும் எடுத்துக்கொண்டு நடக்குமாறு கூறுகிறார். இதுவும் மிகப்பெரிய அற்புதமாகும். முப்பத்தெட்டு வருஷமாக ஒரே இடத்தில் படுத்திருப்பதினால் இவனுடைய சரீரத்தில் பெலனில்லை. ஆனால் இயேசுகிறிஸ்து இவனைக் குணமாக்கிய உடனேயே, அவனுக்குள் பெலன் உண்டாயிற்று. ஒன்றும் செய்யமுடியாமல் இதுவரையிலும் பலவீனமாக இருந்தவன், இப்போது சரீர பலத்தை பெற்றுக்கொள்கிறான். இதுவரையிலும் இவனால் இவனுடைய படுக்கையில் திரும்பிக்கூட படுக்க முடியாது. ஆனால் இப்போதோ இவனுடைய படுக்கையையே எடுத்துக்கொண்டு நடக்கும் பெலன் இவனுக்குள் உண்டாயிற்று.

இயேசுகிறிஸ்து இந்த மனுஷனை யாரும் அறியாமல் மறைவாக சொஸ்மாக்க விரும்பவில்லை. எல்லோருக்கும் முன்பாக, ஒளிவு மறைவில்லாமல், அவனை "எழுந்திரு, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட" என்று கூறுகிறார். இது ஒரு ஓய்வுநாள். இந்நாளில் யாராவது ஒருவர் தன்னுடைய படுக்கையை எடுத்துக்கொண்டு நடந்தால், அது ஜனங்கள் மத்தியில் விநோதமாக இருக்கும். படுக்கையை எடுத்துக்கொண்டு நடக்கும் இவனை எல்லோரும் பார்ப்பார்கள். இதன் பொருள் என்ன என்று அவனிடம் கேட்பார்கள். ஏனெனில் ஓய்வுநாளில் யூதர்கள் யாரும் ஒரு வேலையும் செய்யமாட்டார்கள். தங்களுடைய படுக்கையை எடுத்துக்கொண்டு நடக்கமாட்டார்கள். இது முன்னோர்களின் பாரம்பரியம். இயேசுகிறிஸ்து முன்னோர்களின் இந்த பாரம்பரியத்திற்கு விரோதமாக சாட்சி கொடுக்கிறார்.

இதுவரையிலும் திமிர்வாதமாக இருந்தவன் இப்போது தன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடந்துபோவது நல்ல காரியம் தான்.

ஆனால் யூதர்கள் தங்களுடைய முன்னோர்களின் பாரம்பரியத்தின் பிரகாரம், இதை ஓய்வுநாள் பிரமாணத்திற்கு மீறிய செயலாகவே வியாக்கியானம் பண்ணுவார்கள். ஒரு சிலர் இவன் மீது இரக்கப்பட்டு, இது ஓய்வுநாளாக இருந்தாலும், தன் படுக்கையை எடுத்துக்கொண்டு போவது இவனுக்கு செய்யவேண்டிய அத்தியாவசியமான வேலை என்று வியாக்கியானம் பண்ணுவார்கள். மனுஷர் இதை எப்படி வியாக்கியானம் பண்ணினாலும், இயேசுகிறிஸ்துவின் கிருபையினாலும், இரக்கத்தினாலும், மனதுருக்கத்தினாலும் முப்பத்தெட்டு வருஷமாக திமிர்வாதமாக இருந்த மனுஷன் குணமடைந்து, இப்போது தானாகவே எழுந்து தன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடந்து போகிறான். இவனுடைய விசுவாசத்தையும், கீழ்ப்படிதலையும் இயேசுகிறிஸ்து அங்கீகரித்து இவனைக் குணப்படுத்துகிறார். இயேசுகிறிஸ்துவின் வார்த்தையினால் குணமடைகிறவர்கள், அவருடைய வார்த்தையினால் ஆளுகை செய்யப்படவும் வேண்டும்.

**உடனே சொஸ்தமானான்**

**உடனே அந்த மனுஷன் சொஸ்தமாகி, தன் படுக்கையை எடுத்துக்கொண்டு, நடந்துபோனான். அந்த நாள் ஓய்வுநாளாயிருந்தது (யோவா 5:9).**

திமிர்வாதக்காரன் உடனடியாக சொஸ்தமாகிறான். மருத்துவ சிகிச்சையினால் இவன் ஒரு வேளை கொஞ்சம் கொஞ்சமாக குணமடைந்திருப்பான். ஆனால் இயேசுகிறிஸ்து தமது வார்த்தையினால் இவனை சொஸ்தமாக்குகிற போது, இவன் உடனடியாக சொஸ்தமாகிறான். இதுவரையிலும் இவனுக்கு யாரும் உதவி செய்ய முன்வரவில்லை. தனக்குத்தானே உதவி செய்ய முடியாத திமிர்வாத வியாதியினால் முப்பத்தெட்டு வருஷமாக வேதனையை அனுபவித்திருக்கிறான். இயேசுகிறிஸ்துவின் வார்த்தையினால் உடனே சொஸ்தமானவுடன் அவனுக்கு மிகப்பெரிய ஆச்சரியமும் சந்தோஷமும் உண்டாயிற்று. இதுவரையிலும் நம்பிக்கையில்லாமல் தன் படுக்கையில் படுத்திருந்தவன், இப்போது ஒரு புது நம்பிக்கையோடு, புது தெம்போடு தன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடந்துபோகிறான். இது ஓய்வுநாளாக இருந்தாலும் தன்னுடைய செயலை யாராவது குறை கூறுவார்களோ என்னும் பயம் இவனிடத்தில் சிறிதுமில்லை. இயேசுகிறிஸ்து ஒருவனை சொஸ்தமாக்கும்போது அவனுக்குள் பயத்திற்குப் பதிலாக சந்தோஷம் உண்டாகும்.

## அதிகாரம் - 5

**ஓய்வுநாள்**
**யோவா 5 : 10-13**

**யோவா 5:10. ஆதலால் யூதர்கள் குணமாக்கப்பட்டவனை நோக்கி: இது ஓய்வுநாளாயிருக்கிறதே, படுக்கையை எடுத்துக்கொண்டு போகிறது உனக்கு நியாயமல்ல என்றார்கள்.**

**யோவா 5:11. அவன் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: என்னைச் சொஸ்தமாக்கினவர், உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடவென்று எனக்குச் சொன்னார் என்றான்.**

**யோவா 5:12. அதற்கு அவர்கள்: உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடவென்று உன்னுடனே சொன்ன மனுஷன் யார் என்று அவனிடத்தில் கேட்டார்கள்.**

**யோவா 5:13. சொஸ்தமாக்கப்பட்டவன் அவர் இன்னாரென்று அறியவில்லை; அவ்விடத்தில் ஜனங்கள் கூட்டமாயிருந்தபடியினால் இயேசு விலகியிருந்தார்.**

**ஓய்வுநாளாயிருக்கிறதே**

**ஆதலால் யூதர்கள் குணமாக்கப்பட்டவனை நோக்கி: இது ஓய்வுநாளாயிருக்கிறதே, படுக்கையை எடுத்துக்கொண்டு போகிறது உனக்கு நியாயமல்ல என்றார்கள் (யோவா 5:10).**

முப்பத்தெட்டு வருஷமாக திமிர்வாதமாக இருந்தவன் இயேசுகிறிஸ்துவின் வார்த்தையினால் சொஸ்தமாக்கப் பட்டிருக்கிறான். இது அவனுக்கு மிகுந்த சந்தோஷமாயிற்று. ஆனால் இவன் சொஸ்தமானதினாலோ, இவனுடைய படுக்கையை எடுத்துக்கொண்டு இவன் நடந்துபோனதினாலோ பலருக்கு சந்தோஷத்திற்குப் பதிலாக கோபம் உண்டாயிற்று. இவன் தன் படுக்கையை எடுத்துக்கொண்டு போகும்போது, யூதர்கள் அவனை நோக்கி "இது ஓய்வுநாள் ஆயிற்றே, படுக்கையை எடுத்துக்கொண்டு போகிறது உனக்கு நியாயமல்ல" என்று கோபத்தோடு கூறுகிறார்கள்.

இயேசுகிறிஸ்து எந்த அதிகாரத்தினால் இந்த அற்புதத்தைச் செய்கிறார் என்று இவர்கள் கேட்கவில்லை. அந்த அளவிற்கு இங்கு நிலமை மோசமாகயில்லை. மிகவும் சாதாரணமாக, ஓய்வு நாளை மீறுவது குற்றம் என்று மட்டும் கூறுகிறார்கள். ஆனால் குணமாக்கப்பட்ட மனுஷனோ அவர்களுடைய பேச்சைக்கேட்டு கவலைப்படவில்லை, பயப்படவில்லை.

**என்னை சொஸ்தமாக்கினவர்**

**அவன் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: என்னைச் சொஸ்தமாக்கினவர், உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடவென்று எனக்குச் சொன்னார் என்றான் (யோவா 5:11).**

தான் சொஸ்தமாக்கப்பட்டதினால் இவன் மிகுந்த சந்தோஷமடைந்து முப்பத்தெட்டு வருஷத்திற்குப் பின்பு இப்போதுதான் நடந்து போய்கொண்டிருக்கிறான். மற்றவர்கள் பேச்சைக்கேட்பதைவிட தான் நடப்பது இவனுக்கு முக்கியமானதாக இருக்கிறது. ஆனாலும் "ஓய்வுநாளில் படுக்கையை எடுத்துக்கொண்டு போகிறது உனக்கு நல்லதல்ல" என்று தன்னிடம் சொன்ன அவர்களுக்குப் பிரதியுத்தரமாக "என்னை சொஸ்தமாக்கினவர் உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட என்று எனக்குச் சொன்னார்" என்று கூறுகிறான். தன்னை சொஸ்தமாக்கி தனக்கு இந்த அற்புதத்தைச் செய்தவர், தன்னுடைய படுக்கையை எடுத்துக்கொண்டு நடக்குமாறு கட்டளை கொடுத்திருக்கிறார். அவருடைய கட்டளைக்கு கீழ்ப்படிவது அவசியம் என்று இவன் அறிவிக்கிறான்.

தமது கிருபையினால் தன்னை சொஸ்தமாக்கினவர், நிச்சயமாகவே தன்னை பாவத்தில் இடறி விழுவதற்கு அனுமதிக்கமாட்டார் என்று பொருள்படுமாறு இவன் பேசுகிறான். ஓய்வுநாளில் தன்னுடைய படுக்கையை எடுத்துக்கொண்டு போவது தனக்கு நியாயமல்ல என்பது மெய்யானால், தன்னை சொஸ்தமாக்கினவர் நிச்சயமாகவே "உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட" என்று தனக்கு கட்டளையிட்டிருக்கமாட்டார் என்று அறிவிக்கிறான்.

**சொன்ன மனுஷன் யார்**

**அதற்கு அவர்கள்: உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடவென்று உன்னுடனே சொன்ன மனுஷன் யார் என்று அவனிடத்தில் கேட்டார்கள் (யோவா5:12).**

## அதிகாரம் - 5

குணமாக்கப் பட்டவனுடைய பேச்சைக்கேட்டு யூதர்கள் அமைதியாக இருந்துவிடவில்லை. அவனிடத்தில் மேலும் சில கேள்விகளைக் கேட்டு, சில காரியங்களை தெரிந்துகொள்ள வேண்டுமென்று விரும்புகிறார்கள். "உன்னுடனே சொன்ன மனுஷன் யார்" என்று அவனிடத்தில் கேட்கிறார்கள். யூதர்கள் இயேசுவை கிறிஸ்து என்று அங்கீகரிக்காமல், அவரை சாதாரண மனுஷனாகவே அங்கீகரித்திருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதை தவிர்த்துவிட்டு, அவரை சாதாரண மனுஷனாகப் பாவித்துப் பேசுகிறார்கள். ஆகையினால்தான் "உன்னுடனே சொன்ன மனுஷன் யார்" என்று சொஸ்தமாக்கப்பட்டவனிடம் கேட்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவை இந்த யூதர்கள் தேவகுமாரனாக அங்கீகரிக்கவில்லை. அவரை நல்லவரென்றோ, பக்தியுள்ளவரென்றோ அங்கீகரியாமல், ஒரு மோசமான மனுஷனாக, முன்னோரின் பாரம்பரியத்தை மீறுகிற மனுஷனாக தீர்மானம் பண்ணுகிறார்கள். ஓய்வுநாளில் இந்த மனுஷனை, அவனுடைய படுக்கையை எடுத்துக்கொண்டு நடக்கவேண்டுமென்று கூறியவர், நிச்சயமாகவே ஒரு நல்ல மனுஷனாக இருக்க முடியாது என்பது இவர்களுடைய எண்ணம். ஆனால் சொஸ்தமாக்கப்பட்ட இந்த மனுஷனுக்கோ அவர்களுடைய கேள்விக்கு தெளிவான பதிலைக் கூறமுடியவில்லை.

### அறியவில்லை

**சொஸ்தமாக்கப்பட்டவன் அவர் இன்னாரென்று அறியவில்லை; அவ்விடத்தில் ஜனங்கள் கூட்டமாயிருந்தபடியினால் இயேசு விலகியிருந்தார் (யோவா 5:13).**

இயேசுகிறிஸ்து இந்த மனுஷனை சொஸ்தமாக்கியபோது, இவன் அவரை இன்னாரென்று அறியவில்லை. அப்போது இயேசுகிறிஸ்து இவனுக்கு தம்முடைய தெய்வத்துவத்தை வெளிப்படுத்திக் காண்பிக்கவில்லை. தம்மை அறியாத பலருக்கு இயேசுகிறிஸ்து பல நன்மைகளைச் செய்திருக்கிறார். நாம் அவரை அறியாமலிருந்த காலத்திலேயே அவர் நம்மை ஆறுதல்படுத்தி, பெலப்படுத்தி, பாதுகாத்து, பராமரித்து வழிநடத்தி வந்திருக்கிறார்.

இயேசுகிறிஸ்து திமிர்வாதக்காரனை சொஸ்தமாக்கியபோது அவரிடத்தில் ஜனங்கள் கூட்டமாய் கூடிவருகிறார்கள். ஆனால் இயேசுவோ அந்த கூட்டத்திலிருந்து விலகியிருக்கிறார். ஜனங்களுக்கு தம்மை அறிவியாமல் இயேசு விலகியே காணப்படுகிறார். ஒருவேளை அங்கு கூடியிருக்கும் திரளான ஜனங்களைப்போல, இயேசுகிறிஸ்துவும் ஒரு சாதாரண மனுஷரைப்போல இருந்திருக்கலாம். இயேசுவுக்கும் மற்ற ஜனங்களுக்கும் உருவத்தில், தோற்றத்தில் எந்தவிதமான வித்தியாசமும் இல்லாமல் இருந்திருக்கலாம். ஆகையினால் இவரை யார் என்று சொஸ்தமாக்கப்பட்டவனால் அறிந்துகொள்ள முடியாமல் போயிற்று.

இந்த இடத்தில் மிகப்பெரிய அற்புதம் நடைபெற்றிருக்கிறது. ஆகையினால் திரளான ஜனங்கள் இங்கு கூடிவந்து, இயேசுகிறிஸ்துவையும் அவர் செய்த அற்புதத்தையும் புகழ்ந்து பேசுவதற்கு வாய்ப்புள்ளது. இதனால் ஜனங்கள் மத்தியில் குழப்பமும் பிரச்சனையும் உண்டாகலாம். ஒரு சிலர் இயேசுவை புகழ்ந்து பேசுவார்கள். வேறு சிலரோ ஓய்வுநாள் பிரமாணத்தை மீறுகிறவர் என்று இயேசுவை இகழ்ந்து பேசுவார்கள். ஒருவேளை இப்படிப்பட்ட பிரச்சனையை தவிர்ப்பதற்காக இயேசுகிறிஸ்து ஜனங்கள் மத்தியில் தம்மை வெளிப்படுத்தாமல் விலகியிருந்திருக்கலாம்.

மனுஷர்கள் இயேசுவின் ஊழியத்தை பாராட்டாமல் போனாலும், அவர் செய்த அற்புதங்களே அவருடைய தெய்வத்துவத்திற்கும், கிருபைக்கும், இரக்கத்திற்கும், மனஉருக்கத்திற்கும் சாட்சியாயிருக்கிறது. இயேசுகிறிஸ்துவைக் குறித்து எல்லோரும் சாட்சி சொல்லவில்லையென்றாலும், சொஸ்தமாக்கப்பட்டவன் அவரைப்பற்றியும், அவருடைய வல்லமையுள்ள வார்த்தையைப்பற்றியும், சொஸ்தமாக்கும் அவருடைய அற்புத வல்லமையைப்பற்றியும் சாட்சி கூறவேண்டும்.

### தேவாலயத்தில் இயேசு
### யோவா 5 : 14-16

**யோவா 5:14. அதற்குப்பின்பு இயேசு அவனை தேவாலயத்திலே கண்டு: இதோ, நீ சொஸ்தமானாய், அதிக கேடானதொன்றும் உனக்கு வராதபடி இனிப் பாவஞ்செய்யாதே என்றார்.**

## அதிகாரம் - 5

**யோவா 5:15. அந்த மனுஷன் போய், தன்னைச் சொஸ்தமாக்கினவர் இயேசு என்று யூதர்களுக்கு அறிவித்தான்.**

**யோவா 5:16. இயேசு இவைகளை ஓய்வுநாளில் செய்தபடியால், யூதர்கள் அவரைத் துன்பப்படுத்தி, அவரைக் கொலைசெய்ய வகைதேடினார்கள்.**

### இனி பாவம் செய்யாதே

**அதற்குப்பின்பு இயேசு அவனை தேவாலயத்திலே கண்டு: இதோ, நீ சொஸ்தமானாய், அதிக கேடானதொன்றும் உனக்கு வராதபடி இனிப் பாவஞ்செய்யாதே என்றார் (யோவா 5:14).**

இயேசுகிறிஸ்து சொஸ்தமாக்கப்பட்டவனை தேவாலயத்தில் காண்கிறார். இயேசுகிறிஸ்துவும் தேவாலயத்திற்குப் போயிருக்கிறார். சொஸ்தமாக்கப்பட்டவனும் தேவாலயத்திற்குப் போயிருக்கிறான். அங்குதான் இயேசு அவனைக் காண்கிறார். முப்பத்தெட்டு வருஷமாக இவன் திமிர்வாத வியாதியினால் வேதனைப்பட்டதினால் இத்தனை வருஷங்களாக இவனால் தேவாலயத்திற்குப் போகமுடியவில்லை. தான் குணமாக்கப்பட்டவுடன் முதல் வேலையாக தேவாலயத்திற்குப் போகவேண்டுமென்று நினைத்து, சொஸ்தமாக்கப்பட்டவன் தேவாலயத்திற்கு போயிருக்கலாம்.

தன்னுடைய வாழ்க்கையில் முப்பத்தெட்டு வருஷமாக இவன் செயல்பட முடியாமல் திமிர்வாதமாக இருந்திருக்கிறான். இயேசுகிறிஸ்து தம்முடைய அற்புத வல்லமையினால் இவனைக் குணப்படுத்தியிருக்கிறார். தான் சொஸ்தமானதற்கு தேவனை ஸ்தோத்திரம் பண்ணுவதற்காக இவன் தேவாலயத்திற்குப் போயிருக்கலாம்.

ஓய்வுநாளில் இவன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடந்து போகிறான். ஆகையினால் இவன் ஓய்வுநாள் பிரமாணத்தை மீறிவிட்டதாக யூதர்கள் இவன்மீது குற்றம் சுமத்துகிறார்கள். ஆனால் இவனோ தான் சொஸ்தமானதற்காக தேவனை மகிமைப்படுத்துகிறான்.

நம்முடைய வாழ்க்கையில்கூட நாமும் அத்தியாவசியமான காரியங்களை விட்டுவிடாமல் அவற்றை நிச்சயமாகவே நிறைவேற்றவேண்டும். இரக்கம் காண்பிக்க வேண்டிய இடத்தில் இரக்கம் காண்பிக்க வேண்டும். இவையெல்லாம் முடிந்தபின்பு காலதாமதம் பண்ணாமல் ஆலயத்திற்குச் சென்று கர்த்தரைத் துதிக்க வேண்டும்.

இயேசுகிறிஸ்து சொஸ்தமாக்கப்பட்ட திமிர்வாதக்காரனை நோக்கி "நீ சொஸ்தமானாய்" என்று கூறுகிறார். அவனுடைய ஆத்துமா சொஸ்தமாகியிருப்பதை இயேசுகிறிஸ்து இங்கு குறிப்பிடுகிறார். அவன் ஒரு வேளை தன் சரீர சுகத்தை மாத்திரம் எதிர்பார்த்திருக்கலாம். ஆனால் இயேசுகிறிஸ்துவோ அவனுடைய ஆத்தும சுகத்தைப்பற்றி இங்கு குறிப்பிடுகிறார். நம்முடைய ஜீவியத்தில் இயேசுகிறிஸ்து நம்மைக் குணப்படுத்தும்போது, அவர் நம்முடைய சரீரத்தையும், ஆத்துமாவையும் சொஸ்தமாக்குகிறார் என்னும் சிந்தனை நமக்குள் நிரம்பியிருக்க வேண்டும்.

சொஸ்தமானவனைப்பார்த்து "நீ சொஸ்தமானாய், அதிக கேடானது ஒன்றும் உனக்கு வராதபடி இனி பாவம் செய்யாதே" என்றும் எச்சரித்துக் கூறுகிறார். ஒருவேளை இவனுடைய பாவத்திற்கு தண்டனையாக இவனுக்கு இந்த திமிர்வாதம் வந்திருக்கலாம். ஒரு சிலர் பாவத்திலேயே ஜீவிப்பார்கள். தங்கள் சரீரத்தை பாவக்கிரியைகளுக்கு ஒப்புக்கொடுப்பார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு திமிர்வாதம் வந்துவிட்டால் அவர்களுடைய சரீரம் செயலிழந்துபோகும். செயலிழந்து போன சரீரத்தினால் வெளிப்படையான பல பாவங்களை செய்ய முடியாது. அதிக பாவம் செய்யக்கூடாது என்பதற்காக கர்த்தர் ஒரு சிலருக்கு இப்படிப்பட்ட வியாதியை அனுமதித்திருக்கலாம்.

நம்முடைய திமிர்வாதம் நம்மைவிட்டு நீங்கவேண்டும். அதை விட முக்கியமாக அதிக கேடு ஒன்றும் நமக்கு வராதபடி, பாவம் செய்யாதபடி நம்மைக் காத்துக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாக இருக்கிறது. கடல் அலைகள் தரையில் மோதும்போது, கடல் தண்ணீர் கடற்கரைக்கு வந்து, மறுபடியும் கடலுக்குள்ளே போய்விடும். தண்ணீர் அலைகள் பழைய நிலைக்கே திரும்பும். மனுஷருடைய சுபாவமும் இது போல அலைபாயக்கூடியது. மனுஷன் தன் ஜென்ம சுபாவத்தின்படி பாவம் செய்கிறவனாகவே இருக்கிறான். தன் பாவத்தை உணர்ந்து, பாவத்தைவிட்டு விலகி அவன் ஜீவித்தாலும், மறுபடியும் அவன் பாவம் செய்வதற்கு அதிக வாய்ப்புள்ளது. பழைய பாவசுபாவத்திற்கு திரும்பி வருவதற்கு வாய்ப்புள்ளதினால், நாம் மிகுந்த எச்சரிப்போடு இருக்கவேண்டும்.

## அதிகாரம் - 5

ஒரு சிலர் வியாதியாக இருக்கும்போது அதிக பயபக்தியோடிருப்பார்கள். அதிகமாக ஜெபிப்பார்கள். எப்படியாவது தங்களுடைய வியாதி குணமடைய வேண்டுமென்று பக்தி வைராக்கியத்தோடிருப்பார்கள். அதிகமான பொருத்தனைகளைச் செய்வார்கள். ஆனால் இவர்களுடைய வியாதி குணமடைந்த பின்போ, எல்லாவற்றையும் மறந்து போவார்கள். தேவபயமும் இருக்காது. தேவ பக்தியும் இருக்காது. பக்தி வைராக்கியம் சிறிதும் இருக்காது. இப்படிப்பட்டவர்களுக்கு தேவனுடைய எச்சரிப்பு தேவை.

சொஸ்தமாக்கப்பட்ட திமிர்வாதக்காரனை இயேசுகிறிஸ்து தேவாலயத்தில் கண்டு "நீ சொஸ்தமானாய், அதிக கேடானது ஒன்றும் உனக்கு வராதபடி இனி பாவம் செய்யாதே" என்று எச்சரித்துக் கூறுகிறார். இயேசு இவனுடைய உள்ளத்தை அறிந்திருக்கிறார். ஒரு வேளை இவன் சொஸ்தமான பின்பு பாவம் செய்ய வேண்டுமென்று விரும்பியிருக்கலாம். ஏற்கெனவே முப்பத்தெட்டு வருஷமாக திமிர்வாதமாக இருந்து கஷ்டப்பட்டவன். இவன் மறுபடியும் பாவம் செய்தால், இவனுக்கு அதிக கேடுவரும்.

சரீர வியாதியிலிருந்து தேவன் நம்மை சுகப்படுத்தியிருக்கும்போது, நாம் நம்முடைய ஆரோக்கியத்தைக் காத்துக்கொள்ள வேண்டும். பாவத்தைவிட்டு விலகி பரிசுத்தமாக ஜீவிக்க வேண்டும். உள்ளத்தில் பயபக்தி இருக்கவேண்டும். ஏனோதானோவென்று ஜீவித்தால் தேவனுடைய கிருபை நம்மை விட்டு அகன்றுபோகும். நமக்கு அதிக கேடு வந்துவிடும்.

### யூதர்களுக்கு அறிவிக்கிறான்

**அந்த மனுஷன் போய், தன்னைச் சொஸ்தமாக்கினவர் இயேசு என்று யூதர்களுக்கு அறிவித்தான். இயேசு இவைகளை ஓய்வுநாளில் செய்தபடியால், யூதர்கள் அவரைத் துன்பப்படுத்தி, அவரைக் கொலைசெய்ய வகைதேடினார்கள் (யோவா 5:15,16).**

இயேசுகிறிஸ்துவின் வார்த்தை சொஸ்தமாக்கப்பட்டவனுடைய உள்ளத்தில் உணர்த்தப்படுகிறது. இதுவரையிலும் தன்னை சொஸ்தமாக்கினவரை இன்னாரென்று அறியவில்லையென்று கூறியவன், இப்போது அவரை அறிந்துகொள்கிறான். தன்னை சொஸ்தமாக்கினவர் இயேசு என்று யூதர்களுக்கு அறிவிக்கிறான். யூதருடைய சமுதாயத்தில் இவன் ஒரு சாதாரண மனுஷன். ஆனாலும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தை பிரஸ்தாபப்படுத்தும் கிருபை இவனுக்குக் கிடைத்திருக்கிறது.

யூதர்கள் இயேசுகிறிஸ்துவின்மீது பிரியமாகயில்லை. அவர் திமிர்வாதக்காரனை சொஸ்தமாக்கினாலும், யூதர்கள் அவருக்கு மதிப்பும் மரியாதையும் கொடுக்கவில்லை. அவர்மீது கோபப்படுகிறார்கள். அவரைத் துன்பப்படுத்தி, அவரைக் கொலை செய்ய வகைதேடுகிறார்கள். இயேசுகிறிஸ்துவின்மீது அவர்கள் இந்த அளவுக்கு விரோதமாக இருக்கிறார்கள். இஸ்ரவேலில் இயேசுகிறிஸ்து நன்மை செய்கிறார். முப்பத்தெட்டு வருஷமாக திமிர்வாதமாக இருந்த மனுஷனை அவர் சொஸ்தமாக்கியிருக்கிறார். அவர் செய்த நன்மைக்கு பிரதிபலனாக, யூதர்கள் அவரை துன்பப்படுத்துகிறார்கள். இயேசுகிறிஸ்துவின் சத்துருக்கள் அவருக்கு விரோதமாக கொலைவெறியோடிருக்கிறார்கள். அவரை கொலைசெய்ய வகை தேடுகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவை இவர்களுக்குப் பிடிக்கவில்லை. அவருக்கு பேரும் புகழும் மகிமையும் சேர்வதில் இவர்களுக்கு விருப்பமில்லை. ஆனால் தங்களுடைய விரோதத்தை வெளிப்படையாக சொல்லாமல், ஓய்வுநாள் பிரமாணத்தை காரணமாக சொல்கிறார்கள். இயேசுகிறிஸ்து ஓய்வுநாளில் அந்த மனுஷனை சொஸ்தமாக்கினபடியினால், அவரை கொலை செய்ய வகை தேடுவதாக கூறுகிறார்கள். ஓய்வுநாளை தாங்கள் மதிப்பதாக கூறுகிற இவர்கள், தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவை மதிக்கவில்லை.

தேவபக்திக்கு விரோதமாக கிரியை செய்கிறவர்கள் மாய்மாலக்காரராக இருப்பார்கள். இவர்கள் பக்தியின் வேஷத்தைத் தரித்து தேவனுக்கும் அவருடைய உபதேசத்திற்கும், அவருடைய பிள்ளைகளுக்கும் எதிர்த்து நிற்பார்கள். இங்கு யூதர்கள் ஓய்வுநாள் பிரமாணத்தின் போர்வையில் ஒளிந்து கொண்டு, இயேசுகிறிஸ்துவை கொலைசெய்ய வகை தேடுகிறார்கள்.

### பிதாவும் குமாரனும்
### யோவா 5 : 17-23

**யோவா 5:17. இயேசு அவர்களை நோக்கி: என் பிதா இதுவரைக்கும் கிரியைசெய்துவருகிறார், நானும் கிரியைசெய்துவருகிறேன் என்றார்.**

## அதிகாரம் - 5

**யோவான் 5:18. அவர் ஓய்வுநாள் கட்டளையை மீறினதுமல்லாமல், தேவனைத் தம்முடைய சொந்தப் பிதா என்றுஞ்சொல்லித் தம்மை தேவனுக்குச் சமமாக்கினபடியினாலே, யூதர்கள் அவரைக் கொலைசெய்யும்படி அதிகமாய் வகைதேடினார்கள்.**

**யோவான் 5:19. அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி, வேறொன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார்; அவர் எவைகளைச் செய்கிறாரோ, அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார்.**

**யோவான் 5:20. பிதாவானவர் குமாரனிடத்தில் அன்பாயிருந்து, தாம் செய்கிறவைகளையெல்லாம் அவருக்குக் காண்பிக்கிறார்; நீங்கள் ஆச்சரியப்படத்தக்கதாக இவைகளைப் பார்க்கிலும் பெரிதான கிரியைகளையும் அவருக்குக் காண்பிப்பார்.**

**யோவான் 5:21. பிதாவானவர் மரித்தோரை எழுப்பி உயிர்ப்பிக்கிறதுபோல, குமாரனும் தமக்குச் சித்தமானவர்களை உயிர்ப்பிக்கிறார்.**

**யோவான் 5:22. அன்றியும் பிதாவைக் கனம்பண்ணுகிறதுபோல எல்லாரும் குமாரனையும் கனம்பண்ணும்படிக்கு, பிதாவானவர் தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமல், நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்.**

**யோவான் 5:23. குமாரனைக் கனம்பண்ணாதவன் அவரை அனுப்பின பிதாவையும் கனம் பண்ணாதவனாயிருக்கிறான்.**

**என் பிதா**

**இயேசு அவர்களை நோக்கி: என் பிதா இதுவரைக்கும் கிரியைசெய்துவருகிறார், நானும் கிரியைசெய்துவருகிறேன் என்றார் (யோவான் 5:17).**

இயேசுகிறிஸ்து ஓய்வுநாள் பிரமாணத்தை மீறிவிட்டதாக யூதர்கள் அவர்மீது குற்றம் சுமத்துகிறார்கள். தம்மைக் குற்றப்படுத்தும் யூதர்களுக்கு இயேசுகிறிஸ்து தேவனுடைய சத்தியத்தை உபதேசம் பண்ணுகிறார். தாம் ஓய்வுநாளில் செய்ததை இயேசுகிறிஸ்து இங்குநியாயப்படுத்துகிறார். "என் பிதா இது வரைக்கும் கிரியை செய்து வருகிறார், நானும் கிரியை செய்து வருகிறேன்" என்று அவர்களிடத்தில் கூறுகிறார். குமாரனாகிய இயேசுகிறிஸ்து பிதாவாகிய தேவனோடு இங்கு தம்மை இணைத்துக் கூறுகிறார். "மனுஷகுமாரன் ஓய்வுநாளுக்கும் ஆண்டவராயிருக்கிறார்" (மத் 12:8) என்று இயேசுகிறிஸ்து தம்மைப்பற்றி ஏற்கெனவே வெளிப்படுத்தியிருக்கிறார். தம்மை தேவனுடைய குமாரனென்று ஏற்கெனவே அறிக்கை செய்தவர், இப்போது பிதாவாகிய தேவனை "என் பிதா" என்று அறிக்கை செய்கிறார்.

தாம் தேவனோடு இணைந்து கிரியை நடப்பிப்பதாக இயேசுகிறிஸ்து இங்கு வெளிப்படுத்துகிறார். "என் பிதா இதுவரைக்கும் கிரியை செய்து வருகிறார், ஆகையினால் நானும் அவரோடு கிரியை செய்து வருகிறேன்" என்று பொருள்படுமாறு இயேசுகிறிஸ்து யூதர்களுக்கு அறிவிக்கிறார். தேவன் எல்லாவற்றையும் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் சிருஷ்டித்திருக்கிறார். கிறிஸ்துவின் மூலமாகவே தேவன் சர்வசிருஷ்டிகளையும் ஆதரித்து, பராமரித்து, பாதுகாத்து, ஆளுகை செய்கிறார். எல்லாவற்றையும் செய்கிறவர் எல்லாவற்றிற்கும் ஆண்டவராக இருக்கிறார். ஆகையினால் அப்பேர்ப்பட்டவர் ஓய்வுநாளுக்கும் ஆண்டவராக இருக்கிறார்.

**கொலைசெய்யும்படி**

**அவர் ஓய்வுநாள் கட்டளையை மீறினதுமல்லாமல், தேவனைத் தம்முடைய சொந்தப் பிதா என்றுஞ்சொல்லித் தம்மை தேவனுக்குச் சமமாக்கினபடியினாலே, யூதர்கள் அவரைக் கொலைசெய்யும்படி அதிகமாய் வகைதேடினார்கள் (யோவான் 5:18).**

இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தினால் யூதர்கள் பக்திவிருத்தியடையவில்லை. பக்திவிருத்திக்குப் பதிலாக அவர்களுக்கு இயேசுவின் மீது கோபமுண்டாயிற்று. அவரைக் கொலைசெய்யும்படி அதிகமாய் வகை தேடுகிறார்கள். தம்முடைய தேவத்துவத்தை உறுதிபண்ணுவதற்காக இயேசுகிறிஸ்து அவர்களுக்குச் சொன்ன உபதேசமே, இப்போது அவரை கொலைசெய்வதற்கு காரணமாயிற்று.

## அதிகாரம் - 5

இரண்டு காரியங்களுக்காக யூதர்கள் இயேசுகிறிஸ்துவை கொலைசெய்ய வகைதேடுகிறார்கள். அவையாவன : 1. அவர் ஓய்வுநாள் பிரமாணத்தை மீறி இருக்கிறார். 2. அவர் தம்மை தேவனுக்கு சமமாக்கி இருக்கிறார்.

இதுவரையிலும் ஓய்வுநாள் பிரமாணத்தை தாங்கள் மதிப்பதாக சொன்ன யூதர்கள், இப்போது தேவனுடைய நாம மகிமையில் தாங்கள் பக்திவைராக்கியமாக இருப்பதாக சொல்கிறார்கள். உண்மையில் இவர்களுக்கு தேவபக்தியுமில்லை, தேவனைக்குறித்த பக்திவைராக்கியமுமில்லை. மாய்மாலமாக நடிக்கிறார்கள். தேவனை மகிமைப்படுத்துவது என்னும் போர்வையில் மறைந்துகொண்டு தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவைக் கொலைசெய்ய வகைதேடுகிறார்கள். இயேசுகிறிஸ்து தம்மை தேவனுக்கு சமமாக்கினபடியினால், அவர் மரணத்திற்கு ஏதுவான குற்றம் செய்துவிட்டதாக யூதர்கள் அவர்மீது குற்றம் சுமத்துகிறார்கள்.

இயேசுகிறிஸ்து தம்முடைய உபதேசத்தை ஒளிவுமறைவாக கூறவில்லை. தம்மை அவர் "தேவனுடைய குமாரன்" என்று கூறியதும், பிதாவை "என் பிதா" என்று கூறியதும் மெய்யான சத்தியமாகும். தேவனுடைய ரகசியத்தை இயேசுகிறிஸ்து இங்கு வெளிப்படுத்துகிறார். பிதாவோடு தாமும் கிரியை செய்து வருவதாக இயேசுகிறிஸ்து கூறும்போது, அவர் மெய்யாகவே தம்மை தேவனுக்கு சமமாக்குகிறார். இதுவும் மெய்யான சத்தியமே. ஆனால் யூதர்கள் இந்த சத்தியத்தை அங்கீகரிக்க ஆயத்தமாக இல்லை. இயேசுகிறிஸ்து தம்மை தேவனுக்கு சமமாக்கினதை மிகப்பெரிய குற்றம் என்று யூதர்கள் அவர்மீது குற்றம் சுமத்துகிறார்கள். தம்முடைய வார்த்தையை அவர்கள் நம்பவில்லையென்றாலும், தாம் செய்த அற்புதத்தின் மூலமாக, வல்லமையிலும் மகிமையிலும் தாம் தேவனுக்கு சமமாக இருப்பதை நிரூபிக்கிறார்.

இயேசுகிறிஸ்து யூதர்களோடு தம்முடைய தெய்வத்துவத்தைக் குறித்து உபதேசம் பண்ணும்போது, தாம் தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியில் மத்தியஸ்தராக இருந்து, மத்தியஸ்தரின் ஊழியத்தை செய்வதை உறுதிபண்ணுகிறார். இப்படிப்பட்ட மத்தியஸ்தரின் ஊழியத்தை செய்வதற்கு தம்மைத் தவிர வேறு யாரும் பாத்திரவான்களல்ல என்பதை இயேசு இங்கு விவரித்துக் கூறுகிறார். இந்த ஊழியத்தைப் பெற்றுக்கொள்வதற்கு வேறு எந்த சிருஷ்டியும் தகுதியானவர்களல்ல. மத்தியஸ்தரின் ஊழியம் இயேசுவிடம் மாத்திரமே ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கும் மத்தியஸ்தரின் ஊழியத்தை வேறு எந்த சிருஷ்டியாலும் செய்யமுடியாது. இந்த ஊழியத்தை செய்வதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் பாதையின் வழியாக இயேசுவைத் தவிர வேறு எந்த சிருஷ்யாலும் பிரவேசிக்க முடியாது. இந்த உபதேசத்தைக்கூறி தாம் தேவனாக இருப்பதை இயேசுகிறிஸ்து உறுதிபண்ணுகிறார்.

### குமாரனும் அந்தப்படியே செய்கிறார்

**அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி, வேறொன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார்; அவர் எவைகளைச் செய்கிறாரோ, அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார் யோவா 5:19).**

இயேசுகிறிஸ்து மத்தியஸ்தராக இருந்து தாம் செய்கிற எல்லாவற்றிலும், அவர் பிதாவோடு ஒன்றாகவே இருக்கிறார். இந்த சத்தியத்தை விவரித்துக் கூறும்போது "மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்கிறேன்" என்னும் வாக்கியத்தோடு ஆரம்பிக்கிறார். இந்த வாக்கியத்தை இயேசுகிறிஸ்து கூறுவதினால் இந்த உபதேசம் எல்லோருக்கும் முக்கியமானது. அவசியமானது. நிச்சயமானது. இது தெய்வீக வெளிப்பாட்டினால் கூறப்படுகிற உபதேசம். தேவனுடைய வெளிப்பாடு இல்லையென்றால் இந்த ரகசியத்தை நம்மால் விளங்கிக்கொள்ளவே முடியாது.

தாம் பிதாவோடு கிரியை செய்து வருவதாக இயேசுகிறிஸ்து கூறும்போது அவர் இரண்டு காரியங்களைத் தெளிவுபடுத்துகிறார். அவையாவன: 1. குமாரன் பிதாவின் சித்தத்தின்படியே செய்கிறார். 2. பிதா குமாரனுக்குக் காண்பிக்கிறார்.

## அதிகாரம் - 5

மத்தியஸ்தராகிய நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய பிதாவின் சித்தத்திற்கு கீழ்ப்படிந்தவராக இருக்கிறார். பிதாவானவர் செய்ய குமாரன் காண்கிறது எதுவோ, அதையே அன்றி, வேறொன்றையும் தாமாய் செய்யமாட்டார். பிதாவின் சித்தத்திற்கு இயேசுகிறிஸ்து தம்மை முற்றிலுமாக அர்பணித்திருக்கிறார். ஆகையினால் பிதாவின் சித்தத்திற்கு மாறாக குமாரனால் வேறு எதையும் செய்யமுடியாது. தம்முடைய பிதாவின் ஆலோசனையை கவனித்துக் கேட்டு, குமாரன் அதையே செய்கிறார். பிதாவானவர் செய்ய குமாரன் காண்கிறது எதுவோ அதை மாத்திரமே குமாரன் செய்கிறார்.

தேவனுடைய கிரியையை ஒரு மனுஷனாலும் காணமுடியாது. ஆனால் தேவனுடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோ பிதாவானவருடைய கிரியையை காண்கிறார். பிதாவானவர் என்ன செய்கிறார் என்பதை குமாரன் காணும்போது, அவருடைய நோக்கங்களையும், திட்டங்களையும் குமாரன் புரிந்துகொள்கிறார். பிதா தம்முடைய ஆலோசனையில் செய்கிற ஒவ்வொரு காரியத்தையும், குமாரன் காண்கிறார். எப்போதுமே பிதாவின் செய்கையை குமாரன் பார்த்துக்கொண்டிருக்கிறார். தம்முடைய கிரியையில் குமாரன் பிதாவோடு சமமாகவே இருக்கிறார். பிதா எவைகளைச் செய்கிறாரோ, அவைகளை குமாரனும் அந்தப்படியே செய்கிறார். பிதாவின் கிரியைகளைப் போன்றவற்றை குமாரன் செய்யாமல், அவருடைய கிரியைகளை அந்தப்படியே செய்கிறார். பிதாவின் அதே அதிகாரத்தோடும், அதே பெலத்தோடும், அதே வல்லமையோடும், அதே ஆற்றலோடும் குமாரன் கிரியை செய்கிறார்.

**பிதா குமாரனிடத்தில் அன்பாயிருக்கிறார்**

**பிதாவானவர் குமாரனிடத்தில் அன்பாயிருந்து, தாம் செய்கிறவைகளையெல்லாம் அவருக்குக் காண்பிக்கிறார்; நீங்கள் ஆச்சரியப்படத்தக்கதாக இவைகளைப் பார்க்கிலும் பெரிதான கிரியைகளையும் அவருக்குக் காண்பிப்பார் (யோவா 5:20).**

பிதாவானவர் குமாரனிடத்தில் அன்பாயிருக்கிறார். மனுஷர் இயேசுகிறிஸ்துவை பகைக்கிறார்கள். இந்த விரோதத்திற்கு மத்தியில், பிதாவானவர் தம்மிடத்தில் அன்பாயிருக்கிறதை நினைவுகூர்ந்து, இயேசுகிறிஸ்து தம்மைத் தாமே ஆறுதல்படுத்திக்கொள்கிறார். பிதாவானவர் குமாரனிடத்தில் அன்பாயிருக்கிறபடியினால், தாம் செய்கிறவைகளையெல்லாம் அவருக்குக் காண்பிக்கிறார். பிதாவானவர் செய்கிறவைகளை குமாரன் அப்படியே செய்கிறார். ஆகையினால் குமாரன் எவைகளைச் செய்கிறாரோ அவைகளை பிதாவானவர் குமாரனுக்குக் காண்பிக்கிறார். பிதாவானவருடைய கட்டளையின் பிரகாரமாகவே குமாரன் கிரியை செய்கிறார். பிதாவானவர் செய்ய குமாரன் காண்கிறது எதுவோ, அதை மாத்திரமே குமாரன் செய்வார். அதையன்றி குமாரன் வேறொன்றையும் தாமாய் செய்யமாட்டார். தாம் செய்கிறவைகள் எல்லாவற்றையும் பிதாவானவர் குமாரனுக்குக் காண்பிக்கிறார்.

பிதாவானவர் தாம் செய்கிற இவைகளைப்பார்க்கிலும் பெரிதான கிரியைகளையும் குமாரனுக்குக் காண்பிப்பார். இந்த சம்பவத்தில் முப்பத்தெட்டு வருஷமாக தீர்வாத வியாதியினால் படுக்கையில் கிடந்த மனுஷன் தேவவல்லமையினால் சொஸ்தமாக்கப்பட்டிருக்கிறான். இந்த வல்லமையைவிட பெரிய வல்லமைகளை பிதாவானவர் குமாரனுக்குக் காண்பிப்பார். இதைவிட பெரிய காரியங்களை குமாரன் செய்வார். வியாதியஸ்தர்களை குணப்படுத்துவது மாத்திரமல்ல, மரித்தவர்களையும் குமாரன் உயிரோடு எழுப்புவார். அத்துடன் குமாரன் தம்மையும் மரணத்திலிருந்து உயிர்த்தெழச் செய்வார்.

இயேசுகிறிஸ்துவின் கிரியைகளைப் பார்த்து அநேகர் ஆச்சரியப்படுவார்கள். தம்முடைய கிரியைகளின் மூலமாக இயேசுகிறிஸ்துவுக்கு மகிமை உண்டாகும். தேவனுடைய அற்புத வல்லமையினால் ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்வதற்காக யூதர்கள் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். தெரிந்தெடுக்கப்பட்டிருக்கும் இவர்களோ தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கவில்லை.

**மரித்தோரை உயிர்ப்பிக்கிறது**

**பிதாவானவர் மரித்தோரை எழுப்பி உயிர்ப்பிக்கிறதுபோல, குமாரனும் தமக்குச் சித்தமானவர்களை உயிர்ப்பிக்கிறார் (யோவா 5:21).**

## அதிகாரம் - 5

பிதாவானவர் எவைகளைச் செய்கிறாரோ, அவைகளை குமாரனும் அந்தப்படியே செய்கிறார் என்பதை உறுதிபண்ணுவதற்கு, இயேசுகிறிஸ்து இந்த வசனத்தில் ஒரு கிரியையை குறிப்பிடுகிறார். தம்முடைய கிரியையில் குமாரனாகிய இயேசுகிறிஸ்து பிதாவாகிய தேவனுடைய கிரியைக்கு ஒப்பானவராக இருக்கிறார். பிதாவானவர் மரித்தோரை எழுப்பி உயிர்ப்பிக்கிறதுபோல, குமாரன் தமக்குச் சித்தமானவர்களை உயிர்ப்பிக்கிறார். மத்தியஸ்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு மரித்தோரை எழுப்பவும், அவர்களுக்கு மறுபடியும் உயிர்கொடுக்கவும் அதிகாரம் உள்ளது. மரித்தோரை உயிர்ப்பிக்கிறது தேவனுடைய தெய்வீக சித்தம். தமக்குச் சித்தமானவர்களை மாத்திரம் தேவன் உயிர்ப்பிக்கிறார்.

மரித்தோர் மறுபடியும் உயிர்ப்பிக்கப்படுவது இயற்கையின் பிரமாணத்தின்படி நடப்பதில்லை. இயற்கையின் வல்லமையை ஒரு சிலர் ஆராய்ந்து பார்த்து, எல்லாமே இயற்கையின் பிரமாணத்தினாலேயே நடைபெறுகிறது என்று கூறுகிறார்கள். இவர்கள் கூறும் இயற்கையின் வல்லமையினால் மரித்தோரை எழுப்பி உயிர்ப்பிக்க முடியாது. மரித்தோரை எழுப்பி உயிர்ப்பிப்பது தெய்வீக வல்லமையின் கிரியை. தேவனுடைய வெளிப்பாட்டின் மூலமாகவே இதைப்பற்றிய சத்தியத்தை மனுஷர் புரிந்துகொள்ள முடியும்.

மத்தியஸ்தராகிய இயேசுகிறிஸ்து, மரித்தோரை எழுப்பி உயிர்ப்பிக்கிற காரியத்திலும், பிதா அதை எப்படி செய்கிறாரோ, குமாரனும் அதை அந்தப்படியே செய்கிறார். குமாரன் பிதாவானவர் செய்கிறதை மாத்திரமே செய்கிறார். தாமாக வேறொன்றையும் செய்யமாட்டார். தமக்கு சித்தமானவர்களை குமாரன் உயிர்ப்பிக்கிறார். மரித்தோரை உயிர்ப்பிக்கும் காரியத்தில் குமாரன் தமக்குச் சித்தமான பிரகாரம் கிரியை செய்தாலும், பிதாவின் சித்தமும் குமாரனின் சித்தமும் ஒன்றாயிருக்கிறது. அதே வேளையில் குமாரன் தமக்குச் சித்தமானவர்களை உயிர்ப்பிக்கிறதன் மூலமாக அவர் தம்முடைய தெய்வீக ஞானத்தினாலும், தெய்வீக வல்லமையினாலும், தெய்வீக அதிகாரத்தினாலும் தாமாகவே கிரியை செய்கிறார். மரணத்தின் திறவுகோல் குமாரனிடத்தில் இருக்கிறது.

### நியாயத்தீர்ப்பு செய்யும் அதிகாரம்

**அன்றியும் பிதாவைக் கனம்பண்ணுகிறதுபோல எல்லாரும் குமாரனையும் கனம்பண்ணும்படிக்கு, பிதாவானவர் தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமல், நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார் (யோவா 5:22).**

நியாயத்தீர்ப்பு செய்யும் அதிகாரம் முழுவதும் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. தேவனுக்கும் மனுஷருக்கும் இடையே மத்தியஸ்தராக இருக்கும் இயேசுகிறிஸ்து மனுஷருக்கு நியாயத்தீர்ப்பு செய்கிறார். இயேசுகிறிஸ்துவிடம் சர்வ வல்லமையுள்ள அதிகாரமுள்ளது. மனுஷருக்கு நியாயத்தீர்ப்பு செய்யும் ஆளுகையும் அதிகாரமும் இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

தம்முடைய நியாயத்தீர்ப்பு செய்கிற அதிகாரத்தைப்பற்றி இயேசுகிறிஸ்து இந்த அதிகாரத்தில் இரண்டு முறை குறிப்பிடுகிறார். "நியாயத்தீர்ப்பு செய்யும் அதிகாரம் முழுவதையும் பிதாவானவர் குமாரனுக்குக் கொடுத்திருக்கிறார்" (யோவா 5:22). "அவர் மனுஷகுமாரனாயிருக்கிற படியினால், நியாயத்தீர்ப்பு செய்யும்படிக்கு அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத்திருக்கிறார்" (யோவா 5:27).

பிதாவானவர் தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்பு செய்வதில்லை. குமாரனாகிய இயேசுகிறிஸ்து நியாயத்தீர்ப்பு செய்வதில் பிதாவானவர் பிரியமாக இருக்கிறார். சிருஷ்டிப்பினுடைய பிரமாணத்தின் பிரகாரமாக தேவன் நம்மை ஆளுகை செய்யவில்லை. அவர் தம்முடைய சித்தத்தின் பிரகாரம் மனுஷரை சிருஷ்டித்திருக்கிறார். ஆகையினால் தமக்குப் பிரியமானபடி மனுஷரை ஆளுகை செய்யும் அதிகாரம் தேவனுக்கு உள்ளது. ஒரு குயவனுக்கு மண்ணின்மீது அதிகாரம் உள்ளது போல, தேவனுக்கு நம்மீது அதிகாரமுள்ளது. ஆயினும் தேவன் தம்முடைய அதிகாரத்தை தவறாக பயன்படுத்துவதில்லை.

நியாயத்தீர்ப்பு செய்யும் அதிகாரம் முழுவதையும் பிதாவானவர் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார். தேவன் குமாரன் மூலமாகவே இந்த உலகத்தோடு ஒப்புரவாகிறார். ஆகையினால் தமக்குச் சித்தமானவர்களுக்கு நித்திய ஜீவனை கொடுக்கும் அதிகாரத்தையும் பிதாவானவர் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்.

## அதிகாரம் - 5

ஜீவப்புஸ்தகமானது ஆட்டுக்குட்டியானவருடைய புஸ்தகமாகும். நியாயத்தீர்ப்பு நாளின்போது இயேசுகிறிஸ்துவின் வார்த்தையினால் நாம் நியாயம் தீர்க்கப்படுவோம். நமக்கு நித்திய ஜீவனை கொடுக்கும் அதிகாரமும், நம்மை நித்திய அழிவுக்குத் தள்ளும் அதிகாரமும் இயேசுகிறிஸ்துவிடம் உள்ளது. ஆகையினால் நியாயத்தீர்ப்பு நாளின்போது இயேசுகிறிஸ்துவின் நீதியான தீர்ப்பினால் நாம் எழும்பி நிற்போம். அல்லது கீழே விழுவோம். மகா நாளின் நியாயத்தீர்ப்புக்கு குமாரனாகிய இயேசுகிறிஸ்து பூரண அதிகாரமுள்ளவராக இருக்கிறார். இறுதி நியாயத்தீர்ப்பு கொடுக்கும் அதிகாரம் மனுஷகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவிடம் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது.

**குமாரனை கனம்பண்ணாதவன்**

**குமாரனைக் கனம்பண்ணாதவன் அவரை அனுப்பின பிதாவையும் கனம் பண்ணாதவனாயிருக்கிறான்(யோவா 5:23).**

எல்லா மனுஷரும் குமாரனை கனம்பண்ணவேண்டும். குமாரனைக் கனம்பண்ணுவது மனுஷருடைய கடமை. மனுஷர் எல்லோரும் இயேசுகிறிஸ்துவை கனம்பண்ண வேண்டுமென்பது தேவனுடைய பிரதான திட்டமாகும். நாம் குமாரனை கனம்பண்ணும்போது, அவரை நம்முடைய கர்த்தரென்று அறிக்கை செய்யவேண்டும். அவரை ஆராதிக்க வேண்டும். நமக்காக அவமானப்படுத்தப்பட்டவரை நாம் மகிமைப்படுத்த வேண்டும். பிதாவைக் கனம்பண்ணுவது போல நாம் குமாரனையும் கனம்பண்ணவேண்டும். பிதாவைக் கனம்பண்ணுவது நம்முடைய கடமை. பிதாவைக் கனம்பண்ணுகிற நாம் குமாரனையும் கனம்பண்ணவேண்டுமென்று தேவன் சித்தங்கொண்டிருக்கிறார்.

தேவனைக் கனம்பண்ணும் பிரமாணத்தைப்பற்றி இயேசுகிறிஸ்து விவரிக்கும்போது "குமாரனைக் கனம்பண்ணாதவன் அவரை அனுப்பின பிதாவையும் கனம் பண்ணாதவனாயிருக்கிறான்" என்று கூறுகிறார். ஒரு சிலர் சிருஷ்டிகர்மீது பக்தியாக இருப்பார்கள். சிருஷ்டிகரை போற்றித் துதிப்பார்கள். ஆனால் இரட்சகரையோ மதிக்கமாட்டார்கள். இரட்சகரைப்பற்றி கனமுள்ள வார்த்தைகளை பேசுவதற்குப் பதிலாக சாதாரணமான வார்த்தைகளையே பேசுவார்கள். இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவை கனம் பண்ணாதவர்கள் சிருஷ்டிகராகிய தேவனையும் கனம்பண்ணமாட்டார்கள். குமாரனைக் கனம்பண்ணாதவன் பிதாவைக் கனம்பண்ணாதவன். பிதாவானவரே குமாரனை அனுப்பியிருக்கிறார். ஆகையினால் குமாரனை நாம் கனப்படுத்தவில்லை யென்றால், அவரை அனுப்பியிருக்கிற பிதாவையும் கனப்படுத்தவில்லை என்று தான் பொருள். ஒரு தேசத்தின் தூதரை மற்றொரு தேசம் கனப்படுத்தவில்லையென்றால், அந்த தேசமானது அந்த தூதரை அனுப்பிய அந்த தேசத்தின் ராஜாவை கனப்படுத்தவில்லையென்று தான் பொருள்.

**மரித்தோரின் உயிர்த்தெழுதல்**
**யோவா 5 : 24-30**

**யோவா 5:24. என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குட்படாமல், மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.**

**யோவா 5:25. மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.**

**யோவா 5:26. ஏனெனில், பிதாவானவர் தம்மில் தாமே ஜீவனுடையவராயிருக்கிறது போல, குமாரனும் தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கும் படி அருள்செய்திருக்கிறார்.**

**யோவா 5:27. அவர் மனுஷ குமாரனாயிருக்கிறபடியால், நியாயத்தீர்ப்புச் செய்யும்படிக்கு அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத்திருக்கிறார்.**

**யோவா 5:28. இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்;**

**யோவா 5:29. அப்பொழுது, நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்.**

## அதிகாரம் - 5

**யோவா 5:30. நான் என் சுயமாய் ஒன்றுஞ் செய்கிறதில்லை; நான் கேட்கிறபடியே நியாயந்தீர்க்கிறேன்; எனக்குச் சித்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறபடியால் என் தீர்ப்பு நீதியாயிருக்கிறது.**

**நித்திய ஜீவன்**

**என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் (யோவா 5:24).**

பிதாவானவர் குமாரனுக்கு நியாயத்தீர்ப்பு செய்யும் அதிகாரம் முழுவதையும் ஒப்புக்கொடுத்திருக்கிறார். இந்த அதிகாரத்தை தாம் பயன்படுத்தப்போகும் வழிமுறையைக் குறித்து இயேசுகிறிஸ்து விவரிக்கிறார். "என் வசனத்தைக்கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு". இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் அவருடைய வார்த்தையை கேட்கிறவர்களாக இருக்கவேண்டும். அவருடைய வார்த்தையை கேட்டால் மாத்திரம் போதாது, அதைக் கேட்டு அதற்கு கீழ்ப்படிகிறவர்களாகவும் இருக்க வேண்டும். நம்முடைய விசுவாசத்திற்கும், செயல்களுக்கும் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷமே அடிப்படை ஆதாரமாக இருக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவின் வார்த்தையின் பிரகாரம் நாம் ஜீவிக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவன் அவரை அனுப்பிய பிதாவை விசுவாசிக்கிறான். பிதாவாகிய தேவனிடத்தில் நம்மை அழைத்துச் செல்லவேண்டுமென்பதே கிறிஸ்துவின் தெய்வீக திட்டம். இயேசுகிறிஸ்துவே நமக்கு வழியாக இருக்கிறார். தேவன் நம்முடைய நித்திய ஆறுதலாக இருக்கிறார்.

கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களுக்கு பாவமன்னிப்பு கிடைக்கும். இயேசுகிறிஸ்துவின் வசனத்தைக் கேட்டு, அவரை அனுப்பினவரை விசுவாசிக்கிறவர்கள் ஆக்கினைத்தீர்ப்புக்கு உட்படமாட்டார்கள். சுவிசேஷத்தின் கிருபை நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து நம்மை முற்றிலுமாக விடுவிக்கிறது. ஆக்கினைத்தீர்ப்புக்கு உட்படாமல் தப்பித்துக்கொள்ளும் பாக்கியம் கிறிஸ்துவை விசுவாசிக்கிற ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் மிகப்பெரிய சிலாக்கியமாகும்.

நாம் இயேசுகிறிஸ்துவின் வசனத்தைக் கேட்டு, அவரை அனுப்பினவரை விசுவாசிக்கும்போது, நாம் மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோம். ஆக்கினைத்தீர்ப்புக்கு உட்படாமல் ஜீவனுக்குட்பட்டிருப்பது கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு கொடுக்கப்படும் மிகப்பெரிய சிலாக்கியமாகும். நம்முடைய ஆத்துமா கிறிஸ்துவின் வசனத்தைக்கேட்டு அதன் பிரகாரம் ஜீவிக்கவேண்டும். கிறிஸ்துவை விசுவாசித்து ஜீவிக்கவேண்டும். வசனத்தைக் கேட்பதும், அதன்படி ஜீவிப்பதும் ஆத்துமாவுக்கு ஆரோக்கியத்தைத் தரும்.

**தம்மில்தாமே ஜீவனுடையவர்**

**மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், பிதாவானவர் தம்மில் தாமே ஜீவனுடையவராயிருக்கிறது போல, குமாரனும் தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கும் படி அருள்செய்திருக்கிறார் (யோவா 5:25,26).**

பிதாவானவர் மரித்தோரை எழுப்பி உயிர்ப்பிக்கிறதுபோல, குமாரனும் தமக்குச் சித்தமானவர்களை உயிர்ப்பிக்கிறார். இயேசுகிறிஸ்துவினால் மரித்தோரை எழுப்பி உயிர்ப்பிக்க முடியும். ஏனெனில் பிதாவானவர் தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கிறதுபோல குமாரனும் தம்மில் தாமே ஜீவனுடையவராயிருக்கிறார். பிதாவானவர் தம்மில் தாமே ஜீவனுடையவராயிருக்கிறார் என்பது மெய்யான சத்தியம். தம்முடைய சர்வ ஆளுகையினால் பிதாவானவர் சர்வ சிருஷ்டிக்கும் ஜீவனைக்கொடுத்திருக்கிறார். தம்மில்தாமே ஜீவனுடையவரால் மாத்திரமே ஜீவனைக்கொடுக்க முடியும். தம்முடைய சர்வ சிருஷ்டிக்கும் தேவனே ஜீவனுள்ள நீரூற்றாக இருக்கிறவர்.

## அதிகாரம் - 5

குமாரனாகிய இயேசுகிறிஸ்துவும் தம்மில்தாமே ஜீவனுள்ளவராய் இருக்கும்படி, தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கிற பிதாவானவர் அருள்செய்திருக்கிறார். மீட்பராகிய குமாரன் ஆவிக்குரிய எல்லா ஜீவனுக்கும் ஆதாரமாக இருக்கிறவர். சபையின் ஜீவனுக்கு இயேசுகிறிஸ்துவே ஆதாரமாக இருக்கிறார். அவரே ஊற்றுத்தண்ணீராக இருக்கிறார். கிருபையின் ராஜ்யமும், இந்த ராஜ்யத்திலுள்ள எல்லா ஜீவனும் மீட்பராகிய இயேசுகிறிஸ்துவிடம் ஒப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. சிருஷ்டிகருடைய கரத்தில் பராமரிப்பின் ராஜ்யம் பூரணமாக ஒப்புக்கொடுக்கப்பட்டிருப்பதுபோல, கிருபையின் ராஜ்யம் குமாரனுடைய கரத்தில் பூரணமாக ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது.

**நியாயத்தீர்ப்பு செய்கிற அதிகாரம்**

**அவர் மனுஷகுமாரனாயிருக்கிறபடியால், நியாத்தீர்ப்புச் செய்யும்படிக்கு அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத்திருக்கிறார் (யோவா 5:27).**

பிதாவானவர் தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்பு செய்கிறதில்லை. நியாயத்தீர்ப்பு செய்யும் அதிகாரம் முழுவதையும் பிதாவானவர் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார். இயேசுகிறிஸ்து மனுஷகுமாரனாயிருக்கிறபடியால், நியாயத்தீர்ப்பு செய்யும்படிக்கு அதிகாரத்தையும் பிதாவானவர் அவருக்குக் கொடுத்திருக்கிறார். மனுஷரை நியாயந்தீர்க்கிற இயேசுகிறிஸ்து, மனுஷருக்கு இரட்சிப்பையும் வாய்க்கப்பண்ணியிருக்கிறார்.

இயேசுகிறிஸ்துவின் கரத்தில் சர்வ அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர் துதி, கனம், மகிமை ஆகிய அனைத்திற்கும் பாத்திரராக இருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் மகிமை அவரை விசுவாசிக்கிறவர்களுக்கு ஆறுதலாக இருக்கிறது. தம்மை விசுவாசிக்கிறவர்களுக்கு, தாம் வாக்குப்பண்ணும் சர்வ காரியங்களையும் கொடுக்கிறதற்கு, இயேசுகிறிஸ்து சர்வ அதிகாரமுள்ளவராக இருக்கிறார்.

நியாயத்தீர்ப்பு செய்யும்படிக்கு அதிகாரத்தை பிதாவானவர் குமாரனுக்குக் கொடுத்திருக்கிறார். இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. அவையாவன: 1. அவர் மனுஷகுமாரனாக இருக்கிறார். 2. எல்லா மனுஷரும் குமாரனை கனம்பண்ணவேண்டும்.

இயேசுகிறிஸ்து மனுஷகுமாரனாக இருக்கிறார் என்று அறிவிக்கும்போது அதில் ஆவிக்குரிய சத்தியங்கள் பல உள்ளன. தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்து மனுஷகுமாரனாக இருப்பதினால் அவர் தம்மைத்தாமே தாழ்த்தியிருக்கிறார். கிருபை நிறைந்தவராக இருக்கிறார். பரலோகத்திலுள்ள சிங்காசனத்தில் வீற்றிருக்க வேண்டியவர், நம்மில் ஒருவராக இந்த பூமியில் மனுஷகுமாரனாக அவதரித்திருக்கிறார்.

"அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார். (பிலி 2:6-11).

இயேசுகிறிஸ்து நம்மிடத்தில் பாசமுள்ளவராகவும், நெருங்கிய சிநேகமுள்ளவராகவும் இருக்கிறார். அவர் மனுஷகுமாரனாக இருக்கிறபடியினால், நம்மைப்போலவே மனுஷரூபம் உடையவராக இருக்கிறார். இயேசுகிறிஸ்து மனுஷகுமாரனாக இருந்தாலும், அவர் இயேசுகிறிஸ்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கும் மேசியாவாகவும் இருக்கிறார். அவர் மேசியாவாக இருக்கிறபடியினால் இந்த அதிகாரம் எல்லாவற்றையும் பிதாவானவர் அவருக்குக் கொடுத்திருக்கிறார்.

இயேசுகிறிஸ்து தம்மைப்பற்றி கூறும்போது, தம்மை மனுஷகுமாரன் என்றே குறிப்பிடுகிறார். இது அவருடைய தாழ்மையான சுபாவத்தைக் காண்பிக்கிறது. அவர் தம்மை மனுஷகுமாரன் என்று கூறினாலும், அவர் ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் இருக்கிறார். யூததேசத்தாரை மட்டும் இரட்சிப்பதற்கு தாம் வந்திருப்பதாக இயேசுகிறிஸ்து தம்மை மட்டுப்படுத்திக் கொள்ளாமல், மனுக்குலத்திலுள்ள அனைவரையும் இரட்சிப்பதற்காக வந்திருக்கிறார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே உலக இரட்சகர்.

## அதிகாரம் - 5

**எழுந்திருக்கிறவர்கள்**

**இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்; அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள் (யோவா 5:28,29).**

இயேசுகிறிஸ்து தமக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தை பிதாவின் சித்தத்தின் பிரகாரம் செயல்படுத்துகிறார். இயேசுகிறிஸ்துவினுடைய வல்லமையுள்ள வார்த்தையினால் உயிர்த்தெழுதல் நடைபெறுகிறது. இந்த வசனத்தில் இரண்டுவிதமான உயிர்த்தெழுதலைப்பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்பிரபஞ்சத்தில் நாம் ஜீவனுள்ளவர்களாக இருக்கும்போது இயேசுகிறிஸ்து நம்மை உயிர்ப்பிக்கிறார். நம்முடைய பாவத்திற்கு நம்மை மரிக்கச் செய்து, நீதிக்கு நம்மை பிழைக்கச் செய்கிறார். இந்த உயிர்த்தெழுதலின் காலம் இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்த உயிர்த்தெழுதலும், மரணத்திலிருந்து உயிர்த்தெழுதலும் இங்கு வேறுபடுத்திக் காண்பிக்கப்பட்டிருக்கிறது.

பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும். இது மரித்தோர் உயிர்த்தெழும் காலமாகும். வேதபண்டிதர்களில் சிலர் இந்த வாக்கியத்திற்கு வேறுவிதமாக வியாக்கியானம் கூறுகிறார்கள். இயேசுகிறிஸ்துவின் அற்புத வல்லமையினால், இப்பிரபஞ்சத்தில் மரித்தபின்பு உயிரோடு எழுப்பப்பட்டவர்களை இந்த வாக்கியம் குறிப்பதாக கூறுகிறார்கள். மரித்துப்போன லாசருவை இயேசுகிறிஸ்து உயிரோடு எழுப்பினார். பிரேக்குழியில் இருந்த லாசரு இயேசுகிறிஸ்துவின் சத்தத்தைக் கேட்டு உயிரோடு எழும்பினான். இப்படிப்பட்ட சம்பவத்தை இந்த வாக்கியம் குறிப்பதாக வேதபண்டிதர்களில் சிலர் வியாக்கியானம் கூறுகிறார்கள்.

இந்த வாக்கியத்திற்கு வேறுவிதமாக வியாக்கியானம் கூறும் வேதபண்டிதர்களும் இருக்கிறார்கள்.

"அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார்" (எபே 2:1) என்று பவுல் எழுதியுள்ள வசனத்தை இவர்கள் தங்களுடைய வியாக்கியானத்திற்கு ஆதாரமாக கூறுகிறார்கள். மரித்தோரின் உயிர்த்தெழுதல் என்பது பாவங்களினாலும் அக்கிரமங்களினாலும் மரித்தவர்கள் நீதிக்கு உயிர்த்தெழுந்திருப்பதை குறிக்கும் என்பது இவர்களுடைய வியாக்கியானம். இப்படிப்பட்ட காலம் இப்பொழுது வந்திருக்கிறது.

மரித்துப்போன ஆத்துமாக்கள் சுவிசேஷத்தின் சத்தத்தைக்கேட்டு உயிரோடு எழுந்திருப்பார்கள். இயேசுகிறிஸ்து இந்த பூமியில் ஊழியம் செய்த நாட்களில் இந்த உயிர்த்தெழுதல் ஆரம்பமாயிற்று. இப்படிப்பட்ட உயிர்த்தெழுதல் இக்காலத்திலும் சுவிசேஷத்தின் மூலமாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது. யூதர்களும் புறஜாதியார்களும் தங்கள் பாவங்களுக்கும் அக்கிரமங்களுக்கும் மரித்து, இப்போது சுவிசேஷத்தின் வார்த்தையினால் நீதிக்குப் பிழைத்திருக்கிறார்கள். இந்தக் காலம் கர்த்தர் அனுமதிக்கும் காலம் வரையிலும் தொடர்ந்து இருக்கும்.

பாவிகள் ஆவிக்குரிய ரீதியாக மரித்துப்போயிருக்கிறார்கள். இந்த மரணத்திலிருந்து இவர்களால் தங்களைத் தாங்களே உயிர்த்தெழச் செய்ய முடியாது. மிகவும் பரிதாபமான நிலமையில் இருக்கிறார்கள். ஒரு ஆத்துமா தேவனிடத்தில் மனந்திரும்பி வரும்போது அது மரணத்திலிருந்து ஜீவனுக்கு உயிர்த்தெழுகிறது. இது ஒரு புதிய ஜீவன். தங்கள் பாவங்களுக்கு மரித்து நீதிக்குப் பிழைத்திருக்கிறவர்கள் தேவனுக்காக ஜீவிப்பார்கள். தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் சத்தத்தினாலேயே மரித்துப்போன ஆத்துமாக்கள் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு உயிரோடு எழுப்பப்படுகின்றன. மரித்துப்போனவர்கள் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்பார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும் இயேசுகிறிஸ்துவின் சத்தத்தைக் கேட்க வேண்டும். அவருடைய வார்த்தையினால் நாம் பிழைக்கவேண்டும். நமக்கு ஒரு உயிர்த்தெழுதல் இனிமேல் வரப்போகிறது. இந்த வசனப்பகுதியில் உயிர்த்தெழுதலைப்பற்றி குறிப்பிடப்பட்டிருப்பது, இனிமேல் நமக்கு வரப்போகிற உயிர்த்தெழுதலைக் குறிப்பதாக வேதபண்டிதர்களில் பலர் வியாக்கியானம் கூறுகிறார்கள். அந்த உயிர்த்தெழுதல் இன்னும் வரவில்லை. அந்தக் காலம் இனிமேல் வரப்போகிறது.

## அதிகாரம் - 5

"மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தை கேட்கும் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது, அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள்" என்று இயேசுகிறிஸ்து கூறியிருக்கிறார் (யோவா 5:25). இந்தக் காலம் இப்போதுள்ள கிருபையின் காலமாகும். இந்தக் காலத்தில் நாம் இயேசுகிறிஸ்துவினுடைய சுவிசேஷச் செய்தியை கேட்டுக்கொண்டிருக்கிறோம். நம்முடைய பாவத்தில் நாம் மரித்தவர்களாக இருந்தால், இயேசுகிறிஸ்துவின் வார்த்தையைக் கேட்டு நாம் நீதிக்குப் பிழைப்போம்.

பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் இயேசுகிறிஸ்துவின் சத்தத்தை கேட்கும் காலம் வரும் என்பது (யோவா 5:28,29) நாம் சரீரப்பிரகாரமாக மரித்தப் பின்பு தேவனுடைய வார்த்தையினால் உயிர்த்தெழப்போவதைக் குறிப்பிடுகிறது. இந்தக் காலம் இனிமேல் வரப்போகிறது. அது நிச்சயமாகவே வரும். ஒவ்வொரு நாளும் இந்தக் காலத்தின் வருகை சமீபமாகிக்கொண்டே வருகிறது. ஆனால் இந்தக் காலம் எப்பொழுது வரும் என்பது மெய்யாகவே நமக்குத் தெரியாது.

யாரெல்லாம் எழுப்பப்படுவார்கள் என்பதை இயேசுகிறிஸ்து இங்கு விவரிக்கிறார். பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் எழுப்பப்படுவார்கள். நாம் எல்லோருமே நியாயாதிபதியாகிய இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாக வந்து நிற்கவேண்டும். பிரேதக்குழிகளிலிருந்தால் தேவனுடைய பிரசன்னத்திற்கு முன்பாக வரமுடியாது. நியாயத்தீர்ப்பை அடைவதற்காக மரித்துப்போன எல்லோரும் எழுப்பப்படுவார்கள். பிரேதக்குழிகள் மரித்துப்போன சரீரங்களை அடைத்து வைத்திருக்கும் சிறைச்சாலைகளைப்போல இருக்கிறது. துன்மார்க்கருக்கு அது சிறைச்சாலையாக இருந்தாலும், பரலோகத்திற்குப் போகப்போகிற நமக்கோ, அது நமக்கு படுக்கைகளாக இருக்கிறது. தூக்கத்தில் இருக்கிறவர் எழுப்படுவதுபோல, பிரேதக்குழிகளில் மரித்து படுத்துக்கொண்டிருக்கும் பரிசுத்தவான்கள் மறுபடியும் எழுப்பபடுவார்கள்.

மரித்தோரின் உயிர்த்தெழுதல் நடைபெறும்போது, பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் இயேசுகிறிஸ்துவின் சத்தத்தைக் கேட்பார்கள். அவருடைய சத்தத்தோடு தெய்வீக வல்லமையும் கலந்திருக்கும். இந்த வல்லமையு ம்சத்தமும் மரித்துப் போனவர்களுக்கு மறுபடியும் ஜீவனைக்கொடுக்கும்.

இயேசுகிறிஸ்துவின் வார்த்தைக்கு அவர்கள் எல்லோரையும் கீழ்ப்படியச்செய்யும். இதன் விளைவாக பிரேதக்குழிகளில் உள்ள அனைவரும் அதிலிருந்து எழுந்திருந்து புறப்படுவார்கள். கிறிஸ்துவின் நியாயசனத்திற்கு முன்பாக இவர்கள் எல்லோருமே நிற்கவேண்டும்.

மரித்தோரின் உயிர்த்தெழுதலுக்கு தெய்வீக நோக்கமுள்ளது. உயிரோடு எழுப்பப்படுகிறவர்கள் சந்தோஷத்தையோ அல்லது துக்கத்தையோ பெற்றுக்கொள்வார்கள். இவர்கள் பூமியில் எப்படி ஜீவித்தார்கள் என்பதன் அடிப்படையில், இவர்கள் சந்தோஷப்பெற்றுக்கொள்வார்களா அல்லது துக்கத்தைப்பெற்றுக்கொள்வார்களா என்பது முடிவு பண்ணப்படும்.

நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாக புறப்படுவார்கள். இவர்கள் மறுபடியும்ஜீவிப்பார்கள். நித்தியகாலமாக ஜீவிப்பார்கள். நியாயத்தீர்ப்பு நாளின்போது இப்பிரபஞ்ச ஜீவியத்தில் நன்மை செய்தவர்கள் மாத்திரமே ஜீவனை அடைவார்கள். இவர்கள் தேவனுடைய பிரசன்னத்திற்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்படுவார்கள். இதுவே இவர்களுக்கு நித்தியஜீவன். இப்பிரபஞ்சத்தின் ஜீவனைவிட, தேவனுடைய சமுகத்தில் நித்திய காலமாக ஜீவிப்பதே மிகப்பெரிய சிலாக்கியம். இப்பிரபஞ்சத்தில் தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாக புறப்பட்டுப்போவார்கள். இவர்களும் மறுபடியும் ஜீவிப்பார்கள். ஆனால் இவர்களோ நித்திய காலமாக ஆக்கினையை அனுபவித்துக் கொண்டிருப்பார்கள். இவர்களுடைய வேதனைக்கு முடிவேயிராது.

### என் தீர்ப்பு நீதியாயிருக்கிறது

**நான் என் சுயமாய் ஒன்றுஞ் செய்கிறதில்லை; நான் கேட்கிறபடியே நியாயந்தீர்க்கிறேன்; எனக்குச் சித்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறபடியால் என் தீர்ப்பு நீதியாயிருக்கிறது (யோவா 5:30).**

## அதிகாரம் - 5

இயேசுகிறிஸ்துவின் நியாயத்தீர்ப்பு நீதியாயிருக்கிறது. மனுஷரை நியாயந்தீர்க்கும்போது இயேசுகிறிஸ்து தம்முடைய சுயமாய் ஒன்றும் செய்யவில்லை. பிதாவின் ஞானத்தின் பிரகாரமாகவே இயேசுகிறிஸ்து நியாயத்தீர்ப்பு செய்கிறார். பிதாவிடத்திலிருந்து தாம் கேட்கிறபடி மாத்திரமே இயேசுகிறிஸ்து நியாயம் தீர்ப்பாரேயல்லாமல், அவர் தம்முடைய சுயமாய் ஒன்றும் செய்கிறதில்லை. "பிதாவானவர் செய்ய குமாரன் காண்கிறது எதுவோ, அதையேயன்றி, வேறொன்றையும் தாமாய் செய்யமாட்டார்" (யோவா 5:19). பிதாவினுடைய கிரியையை கண்டு குமாரன் செயல்படுகிறார் என்று இயேசுகிறிஸ்து ஏற்கெனவே கூறியுள்ளார். இப்போது பிதாவானவர் சொல்லுகிறதை தாம் கேட்கிறபடியே கிரியை செய்வதாக கூறுகிறார்.

பிதாவின் நித்திய ஆலோசனையை குமாரன் காண்கிறார், கேட்கிறார். அதன் பிரகாரமாகவே குமாரன் நியாயத்தீர்ப்பு செய்கிறார். ஆகையினால் இப்பிரபஞ்சத்தில் நாம் ஜீவிக்கும்போது இயேசுகிறிஸ்துவின் வார்த்தையைக் கேட்பது நமக்கு மிகவும் அவசியமானதாகும். குமாரன் பிதாவின் வார்த்தையைக் கேட்பதுபோல, நாமும் கிறிஸ்துவின் வார்த்தையைக் கேட்கவேண்டும். பிதா சொன்னதை குமாரன் கேட்டு, அதை மாத்திரமே அவர் செய்கிறார். அதுபோலவே நாமும் இயேசுகிறிஸ்துவின் வார்த்தையைக்கேட்டு அதன் பிரகாரமாகவே ஜீவிக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்துவின் சித்தமும் பிதாவின் சித்தமும் எப்போதுமே ஒன்றாயிருக்கும். இது ஒருபோதும் முரண்படுவதில்லை. இயேசுகிறிஸ்து கிரியைசெய்யும்போது, தம்முடைய ஒவ்வொரு கிரியையிலும் வேதவாக்கியத்தை ஆதாரமாக வைத்திருக்கிறார். "எழுதியிருக்கிறபடி" என்று பலமுறை கூறி, இயேசுகிறிஸ்து பழைய ஏற்பாட்டு வசனங்களின்படி தாம் கிரியை செய்வதை உறுதிபண்ணுகிறார். இயேசுகிறிஸ்து ஒருபோதும் தமக்குச் சித்தமானதை தேடுவதில்லை. அவர் எப்போதுமே தம்மை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே தேடுகிறார். ஆகையினால் இயேசுகிறிஸ்துவின் தீர்ப்பு நீதியாயிருக்கிறது.

இயேசுகிறிஸ்து இந்த பூமியில் மனுஷனாக அவதரித்தபோது அவர் மனுஷகுமாரனாகவே இருந்தார். மனுஷீகத்தின் சுபாவங்களான வேதனை, சந்தோஷம், ஜீவனை பற்றிக்கொள்வது, மரணத்தை வெறுப்பது ஆகிய மனுஷசுபாவங்கள் அனைத்தும் அவரிடத்திலிருந்தது, என்றாலும் இயேசுகிறிஸ்து ஒருபோதும் தமக்குப் பிரியமானதை செய்வதில்லை. பிதாவின் சித்தத்தையே இயேசுகிறிஸ்து தேடுகிறபடியினால், பிதாவுக்குப் பிரியமானது மாத்திரமே குமாரனுக்கும் பிரியமாயிருக்கிறது. நம்முடைய மத்தியஸ்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு சுயசித்தம் என்று எதுவுமில்லை. பிதாவின் சித்தமே அவருடைய சித்தமாயிற்று. பிதாவின் சித்தத்தின் பிரகாரமாகவே அவர் ஒவ்வொரு காரியத்தையும் நிறைவேற்றுகிறார்.

### மெய்யான சாட்சி
### யோவா 5 : 31-38

**யோவா 5:31. என்னைக்குறித்து நானே சாட்சி கொடுத்தால் என் சாட்சி மெய்யாயிராது.**

**யோவா 5:32. என்னைக்குறித்து சாட்சிகொடுக்கிறவர் வேறொருவர் இருக்கிறார், அவர் என்னைக்குறித்துக் கொடுக்கிற சாட்சி மெய்யான சாட்சியென்று அறிந்திருக்கிறேன்.**

**யோவா 5:33. நீங்கள் யோவானிடத்தில் ஆளனுப்பி விசாரித்தீர்கள், அவன் சத்தியத்திற்கு சாட்சிகொடுத்தான்.**

**யோவா 5:34. நான் ஏற்றுக்கொள்ளுகிற சாட்சி மனுஷருடைய சாட்சியல்ல, நீங்கள் இரட்சிக்கப்படுவதற்காகவே இவைகளைச் சொல்லுகிறேன்.**

**யோவா 5:35. அவன் எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருந்தான்; நீங்களும் சில்காலம் அவன் வெளிச்சத்திலே களிகூர மனதாயிருந்தீர்கள்.**

**யோவா 5:36. யோவானுடைய சாட்சியைப்பார்க்கிலும் மேன்மையான சாட்சி எனக்கு உண்டு; அதென்னவெனில், நான் நிறைவேற்றும்படிக்குப் பிதாவானவர் எனக்குக் கற்பித்ததும் நான் செய்துவருகிறதுமான கிரியைகளே பிதா என்னை அனுப்பினார் என்று என்னைக்குறித்துச் சாட்சி கொடுக்கிறது.**

## அதிகாரம் - 5

**யோவா 5:37. என்னை அனுப்பின பிதா தாமே என்னைக்குறித்துச் சாட்சிகொடுத்திருக்கிறார்; நீங்கள் ஒருக்காலும் அவர் சத்தத்தைக் கேட்டதுமில்லை, அவர் ரூபத்தைக் கண்டதுமில்லை.**

**யோவா 5:38. அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசியாதபடியால் அவருடைய வசனம் உங்களில் தரித்திருக்கிறதுமில்லை.**

**வேறொருவர்**

**என்னைக்குறித்து நானே சாட்சி கொடுத்தால் என் சாட்சி மெய்யாயிராது. என்னைக்குறித்து சாட்சிகொடுக்கிறவர் வேறொருவர் இருக்கிறார், அவர் என்னைக்குறித்துக் கொடுக்கிற சாட்சி மெய்யான சாட்சியென்று அறிந்திருக்கிறேன் (யோவா 5:31,32).**

இயேசுகிறிஸ்து தம்மைக்குறித்து தாமே சாட்சி கொடுப்பதில்லை. அவரைக் குறித்து அவரே சாட்சி கொடுத்தாலும் அது மெய்யாகவே இருக்கும். இயேசுகிறிஸ்துவின் வார்த்தை ஒருபோதும் தவறுவதில்லை. "என்னைக்குறித்து நானே சாட்சி கொடுத்தாலும் என் சாட்சி உண்மையாயிருக்கிறது" (யோவா 8:14) என்று இயேசுகிறிஸ்து தம்மைக் குறித்து, தாமே சாட்சி கொடுப்பதைப்பற்றி கூறியிருக்கிறார். இயேசுகிறிஸ்து யூதர்களிடம் தம்மைக்குறித்து தாமே சாட்சி கொடுக்கிறார். ஆனால் அவர்களோ அவருடைய சாட்சியை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகையினால் தாம் தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறவர் என்பதை உறுதிபண்ணுவதற்காக, இயேசுகிறிஸ்து இங்கு வேறொரு சாட்சியைப் பற்றி கூறுகிறார்.

பிதாவானவர் தாமே இயேசுகிறிஸ்துவைப் பற்றி சாட்சி கொடுக்கிறார். "என்னைக் குறித்து சாட்சி கொடுக்கிறவர் வேறொருவர் இருக்கிறார்" என்று பிதாவைப்பற்றி இயேசு குறிப்பிடுகிறார். குமாரனுடைய ஊழியத்தை பிதாவானவர் அங்கீகரித்து முத்திரை பதித்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவைக் குறித்து பிதாவானவர் கொடுக்கிற சாட்சி மெய்யான சாட்சியாக இருக்கிறது.

இயேசுகிறிஸ்து ஞானஸ்நானம் பெற்றபோது வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று. அந்த சத்தத்தின் மூலமாக பிதாவானவர் இயேசுகிறிஸ்துவை தம்முடைய ஒரே பேறான குமாரனாக அங்கீகரித்து சாட்சி கொடுத்திருக்கிறார்.

பிதாவாகிய தேவன் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடு இருப்பதற்கு அடையாளமாக, பிதாவானவர் இன்னும் சாட்சி கொடுத்துக்கொண்டிருக்கிறார். இந்த சாட்சியில் இயேசுகிறிஸ்து திருப்தியடைந்திருக்கிறார். தம்மைக்குறித்து பிதாவானவர் கொடுக்கிற சாட்சி மெய்யான சாட்சியென்று தாம் அறிந்திருப்பதாக இயேசுகிறிஸ்து இங்கு விவரிக்கிறார்.

**யோவானுடைய சாட்சி**

**நீங்கள் யோவானிடத்தில் ஆளனுப்பி விசாரித்தீர்கள், அவன் சத்தியத்திற்கு சாட்சிகொடுத்தான் (யோவா 5:33).**

யோவான்ஸ்நானனும் இயேசு கிறிஸ்துவுக்கு சாட்சிகொடுத்தான். அந்த ஒளியைக்குறித்து சாட்சி கொடுக்க யோவான்ஸ்நானன் சாட்சியாக வந்தான் (யோவா 1:7). யோவான்ஸ்நானனுடைய சாட்சி எல்லோருக்கும் முன்பாக கொடுக்கப்பட்டது. அவனுடைய வார்த்தைகளில் பக்தி நிறைந்திருந்தது. யூதர்கள் யோவான் ஸ்நானனிடத்தில் ஆசாரியர்களையும் லேவியர்களையும் அனுப்பி, அவனைப்பற்றியும், கிறிஸ்துவைப்பற்றியும் விசாரித்தார்கள். தன்னிடத்தில் யூதமார்க்கத்து தலைவர்கள் வந்ததினால் இயேசுகிறிஸ்துவைப்பற்றி சாட்சி கொடுக்க யோவான்ஸ்நானனுக்கு நல்ல வாய்ப்பு உண்டாயிற்று. அவன் சத்தியத்திற்கு சாட்சி கொடுத்தான். அவனுடைய சாட்சி மெய்யாயிருக்கிறது. யோவான்ஸ்நானன் தனக்கு சாட்சி கொடுத்ததாக இயேசுகிறிஸ்து அறிவிக்காமல், அவன் சத்தியத்திற்கு சாட்சி கொடுத்தாகவே அறிவிக்கிறார்.

**மனுஷருடைய சாட்சி**

**நான் ஏற்றுக்கொள்ளுகிற சாட்சி மனுஷருடைய சாட்சியல்ல, நீங்கள் இரட்சிக்கப்படுவதற்காகவே இவைகளைச் சொல்லுகிறேன் (யோவா 5:34).**

யோவான்ஸ்நானனுடைய சாட்சியைப் பற்றி இங்கு மேலும் இரண்டு காரியங்கள் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவையாவன: 1. இயேசுகிறிஸ்து மனுஷருடைய சாட்சியை ஏற்றுக்கொள்வதில்லை 2. யோவானுடைய சாட்சி மனுஷருடைய சாட்சியாகும்.

## அதிகாரம் - 5

இயேசுகிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று நிரூபிப்பதற்கு அவருக்கு எந்த மனுஷருடைய சாட்சியும் தேவையில்லை. அவருடைய சொந்த மகிமையும், வல்லமையுமே அவரை தேவனுடைய குமாரனென்று சாட்சி கொடுக்கும். இயேசுகிறிஸ்துவின் தெய்வத்துவமும், அவருடைய தெய்வீக கிரியைகளும் அவர் தேவனுடைய குமாரன் என்பதற்கு சாட்சி கொடுக்கும். என்றாலும் இயேசுகிறிஸ்து இந்த பகுதியில் யோவான்ஸ்நானனுடைய சாட்சியைப்பற்றி குறிப்பிடுகிறார்.

ஜனங்கள் இரட்சிக்கப்பட வேண்டுமென்பதே இயேசுகிறிஸ்துவின் பிரதான நோக்கம். இதற்காகவே இந்த சத்தியத்தை இயேசுகிறிஸ்து யூதர்களிடம் சொல்கிறார். தம்முடைய சொந்த ஜீவனை காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்பதற்காக இயேசுகிறிஸ்து இந்த உபதேசங்களை ஜனங்களுக்குக் கூறவில்லை. மற்றவர்களுடைய ஆத்துமாக்களை இரட்சிக்கவேண்டுமென்பதற்காகவே இயேசுகிறிஸ்து இவைகளைச் சொல்கிறார். தம்முடைய சத்துருக்களும், தம்மைத் துன்பப்படுத்துகிறவர்களும் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதே இயேசுகிறிஸ்துவின் ஆவலும் திட்டமும் ஆகும்.

### எரிந்து பிரகாசிக்கிற விளக்கு

**அவன் எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருந்தான்; நீங்களும் சிலகாலம் அவன் வெளிச்சத்திலே களிகூர மனதாயிருந்தீர்கள் (யோவா 5:35).**

ஜனங்கள் யோவான்ஸ்நானன்மீது அதிக மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார்கள். ஆகையினால் யோவான்ஸ்நானனுடைய சாட்சி மனுஷனுக்குக் கொடுக்கப்பட்ட சாட்சியாகும். யோவான்ஸ்நானன் எரிந்து பிரகாசிக்கிற விளக்காகயிருக்கிறான். இவன் ஒரு சாதாரணமான விளக்குதான். இயேசுகிறிஸ்துவே பிரதான விளக்காகயிருக்கிறார்.

யோவான் ஸ்நானனுடைய விளக்கு இயேசுகிறிஸ்துவின் விளக்கைப்போல பிரகாசமாகயிராது. இயேசுகிறிஸ்துவே பிரதான மெய்யான விளக்காகயிருக்கிறவர்.

யோவான்ஸ்நானன் எரிகிற விளக்காகயிருக்கிறான். ஒரு விளக்கு எரியும்போது அது தன்னுடைய கடமையைச் செய்கிறது. அதுபோலவே யோவான்ஸ்நானன் தனக்கு நியமிக்கப்பட்டிருக்கும் ஊழியத்தை உண்மையாக செய்து வருகிறான். ஒரு அக்கினியிலிருந்து தெரித்து சிதறும் அக்கினிப்பிளம்புகளும் பிரகாசமாக வெளிச்சம் தரும் ஆனாலும் அது அக்கினி அல்ல. மெய்யாக எரிவது மாத்திரமே அக்கினியாக இருக்கும்.

யோவான்ஸ்நானன் எரிந்து பிரகாசிக்கிற விளக்காகயிருக்கிறான் என்று கூறும்போது, அவனுடைய பக்தி வைராக்கியத்தை இந்த வாக்கியம் விளக்குகிறது. அக்கினி எப்போதும் எரிந்துகொண்டிருக்கும். எரிந்தால்தான் அது அக்கினி. எரியாததை அக்கினி என்று கூறுவதில்லை. அதுபோலவே யோவான்ஸ்நானன் எப்போதும் எரிகிற அக்கினியாக இருக்கிறான். நல்ல ஊழியக்காரனாக, தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஊழியத்தை, தொடர்ந்து செய்து வருகிறான்.

யோவான்ஸ்நானனை சாதாரண விளக்கு என்று குறிப்பிடாமல் அவன் எரிந்து பிரகாசிக்கிற விளக்காக இருக்கிறான் என்று இயேசுகிறிஸ்து குறிப்பிடுகிறார். பிரகாசமாக எரிகிற விளக்கு என்பது யோவான்ஸ்நானனுடைய நேர்த்தியான பிரசங்கத்தைக் குறிப்பிடலாம். நம்முடைய வெளிச்சம் மனுஷர் முன்பாக பிரகாசிக்க வேண்டும் (மத் 5:16). வெளிச்சம் பிரகாசமாகயில்லையென்றால் எல்லாம் மங்கலாக இருக்கும்.

யூதர்கள் யோவான்ஸ்நானனிடத்தில் பிரியமாகயிருக்கிறார்கள். இவர்கள் அவன் வெளிச்சத்திலே சிலகாலம் களிகூர மனதாயிருந்திருக்கிறார்கள். யோவான் ஸ்நானனைப்பார்த்த போதும், அவனுடைய பிரசங்கத்தைக் கேட்டபோதும் ஜனங்கள் அவன் பக்கமாக ஈர்க்கப்பட்டிருக்கிறார்கள். அவனுடைய வெளிச்சத்தில் களிகூர மனதாயிருந்திருக்கிறார்கள். தங்கள் மத்தியில் இப்படிப்பட்ட ஒரு மனுஷன் இருக்கிறான் என்று நினைத்து அவர்கள் பெருமையடைந்திருக்கிறார்கள்.

## அதிகாரம் - 5

ஆனால் அவர்களுடைய மகிழ்ச்சி நீடித்து நிலைக்கவில்லை. சிலகாலம் மாத்திரமே யோவான்ஸ்நானனுடைய வெளிச்சத்தில் அவர்கள் களிகூர்ந்தார்கள். ஒரு புதிய பொருளைப்பார்க்கும்போது சிறு பிள்ளைகள் சிறிது காலம் சந்தோஷப்படுவதைப்போல, யூதர்கள் யோவான்ஸ்நானனை பார்த்தபோது சிறிது காலம் சந்தோஷமாக இருந்தார்கள். அந்த சந்தோஷம் நிலைக்கவில்லை. யோவான்ஸ்நானனுடைய உபதேசத்தை கேட்பதற்கு ஜனங்கள் ஆரம்பத்தில் ஆர்வத்தோடிருந்தார்கள். அதன்பின்பு அந்த ஆர்வம் குறைந்துபோயிற்று. அவனுடைய வெளிச்சத்தில் சிறிது காலம் களிகூர்ந்தவர்கள், அதன்பின்பு அவனை வெறுக்க ஆரம்பித்துவிட்டார்கள். யோவான்ஸ்நானனை பிசாசு பிடித்தவன் என்று கூறி அவமானப்படுத்தி, இப்போது அவனை சிறைச்சாலையில் அடைத்துவிட்டார்கள்.

ஆரம்பத்தில் வேகமாகவும் விறுவிறுப்பாகவும், ஆடம்பரமாகவும் நடைபெறுகிற ஊழியம் இப்படித்தான் முடிவில் முடிந்துபோகும். இந்த ஜனங்கள் யோவான்ஸ்நானனுடைய வெளிச்சத்தில் களிகூர்ந்தார்கள். ஆனால் அந்த வெளிச்சத்தில் அவர்கள் ஒருபோதும் நடக்கவில்லை. சிறிதுகாலம் அவர்கள் யோவான்ஸ்நானன் மீது மரியாதையோடு நடந்துகொண்டார்கள். ஆனால் இப்போதோ அவனுக்கு விரோதமாக எழும்பியிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து ஜனங்களுடைய இந்த சுபாவத்தை கடிந்துகொள்கிறார். அவர்கள் யோவான் ஸ்நானனுடைய வெளிச்சத்தில் தொடர்ந்து நடந்திருப்பார்களென்றால், இப்போது தம்மை தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்து என்று அங்கீகரித்திருப்பார்கள்.

**மேன்மையான சாட்சி**

**யோவானுடைய சாட்சியைப் பார்க்கிலும் மேன்மையான சாட்சி எனக்கு உண்டு; அதென்னவெனில், நான் நிறைவேற்றும்படிக்குப் பிதாவானவர் எனக்குக் கற்பித்ததும் நான் செய்துவருகிறதுமான கிரியைகளே பிதா என்னை அனுப்பினார் என்று என்னைக்குறித்துச் சாட்சி கொடுக்கிறது (யோவா 5:36).**

இயேசுகிறிஸ்துவின் கிரியைகளே அவருக்குச் சாட்சி கொடுக்கிறது. யோவானுடைய சாட்சியைப்பார்க்கிலும் மேன்மையான சாட்சி இயேசுகிறிஸ்துவுக்கு உண்டு. நாம் மனுஷருடைய சாட்சியை ஏற்றுக்கொண்டால், அதைப்பார்க்கிலும் தேவனுடைய சாட்சி அதிகமாயிருக்கிறது (1யோவா 5:9). நம்முடைய விசுவாசத்தை உறுதிபண்ணுவதற்கு தேவன் கொடுத்திருக்கும் எல்லாவிதமான காரியங்களுக்காகவும் நாம் அவருக்கு நன்றி கூறவேண்டும்.

அவருடைய கிரியைகள் அனைத்தையும் ருசிபார்ப்பதற்கு நமக்கு வாய்ப்பு கிடைக்காமல் போகலாம். என்றாலும் இயேசுகிறிஸ்து தம்முடைய கிருபையினாலும் கிரியையினாலும் தம்மை நமக்கு வெளிப்படுத்துகிறார். பிதாவானவர் இயேசுகிறிஸ்துவுக்கு சில கிரியைகளைக் கொடுத்து, அவற்றை அவர் நிறைவேற்றவேண்டுமென்று சித்தங் கொண்டிருக்கிறார். அந்தக் கிரியைகளே பிதா அவரை அனுப்பியிருக்கிறார் என்று அவரைக் குறித்து சாட்சி கொடுக்கிறது. அவருடைய கிரியைகள் என்று சொல்லும்போது அது இயேசுகிறிஸ்துவினுடைய ஜீவியம் முழுவதையும், அத்துடன் அவருடைய ஊழியம் முழுவதையும் குறிப்பிடும்.

தமக்குக் கொடுக்கப்பட்டுள்ள எல்லா கிரியைகளையும் செய்து முடித்து, இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையில் தமது ஜீவனை ஒப்புக்கொடுத்தபோது "எல்லாம் முடிந்தது" என்று கூறினார். இயேசுகிறிஸ்து சொன்னதும் செய்ததும் பரிசுத்தமானது. பரலோகத்திற்குரியது. இயேசுகிறிஸ்துவின் கிரியைகள் அனைத்திலும் தெய்வீக பரிசுத்தமும், தெய்வீக கிருபையும், தெய்வீக வல்லமையும் நிரம்பியுள்ளது. இவையெல்லாமே பிதாவானவர் இயேசுகிறிஸ்துவை அனுப்பினார் என்று அவரைக் குறித்து சாட்சி கொடுக்கிறது. அதிலும் சிறப்பாக இயேசுகிறிஸ்து செய்த அற்புதங்களும் அடையாளங்களும் அவருடைய தெய்வீக ஊழியத்தை சாட்சியாய் நிரூபிக்கிறது.

## அதிகாரம் - 5

இயேசுகிறிஸ்து செய்து வருகிற கிரியைகள் அனைத்தும் பிதாவானவர் அவருக்குக் கொடுத்திருக்கிறார். இந்தக் கிரியைகளைச் செய்யுமாறு பிதாவானவர் இயேசுகிறிஸ்துவை நியமித்திருக்கிறார், அவரை பெலப்படுத்தியிருக்கிறார். பிதாவானவர் குமாரனுக்குக் கொடுத்திருக்கும் கிரியைகள் அனைத்தையும் குமாரன் நிறைவேற்றவேண்டும். குமாரன் தமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கிரியைகளை நிறைவேற்றுவதே அவருடைய தெய்வீக வல்லமையை உறுதிபண்ணுகிறது. இந்தக் கிரியைகள் இயேசுகிறிஸ்துவைக்குறித்து சாட்சி கொடுக்கிறது. இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரனென்றும், அவர் தேவனால் அனுப்பப்பட்டவரென்றும் அவரைக் குறித்து அவருடைய கிரியைகள் சாட்சி கொடுக்கிறது.

பிதாவானவர் குமாரனை அனுப்பியபோது, ஒரு பிதாவின் ஸ்தானத்திலிருந்து அவர் தம்முடைய குமாரனை அனுப்பியிருக்கிறார். ஒரு எஜமான் தன்னுடைய வேலைக்காரனை அனுப்புவதுபோல பிதாவானவர் இயேசுகிறிஸ்துவை அனுப்பவில்லை. அதற்குப் பதிலாக தம்முடைய சுதந்தரத்தை சுதந்தரித்துக்கொள்ளுமாறு ஒரு தகப்பன் தன் குமாரனை அனுப்புவதுபோல, பிதாவாகிய தேவன் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை அனுப்பியிருக்கிறார்.

### பிதாவின் சத்தமும் ரூபமும்

**என்னை அனுப்பின பிதா தாமே என்னைக்குறித்துச் சாட்சிகொடுத்திருக்கிறார்; நீங்கள் ஒருக்காலும் அவர் சத்தத்தைக் கேட்டதுமில்லை, அவர் ரூபத்தைக் கண்டதுமில்லை (யோவா 5:37).**

தம்மைக்குறித்து பிதா கொடுக்கும் சாட்சியை இயேசுகிறிஸ்து இங்கு முழுமையாக விவரிக்கிறார். தம்மை அனுப்பின பிதா தாமே தம்மைக்குறித்து சாட்சி கொடுத்திருக்கிறார் என்று இயேசுகிறிஸ்து தெளிவாக கூறுகிறார். தம்முடைய குமாரனைக்குறித்து சாட்சி கொடுப்பதில் பிதாவாகிய தேவன் பிரியமாக இருக்கிறார். இயேசுகிறிஸ்து ஞானஸ்நானம் பெற்றபோது பிதாவின் சத்தம் வானத்திலிருந்து உண்டாயிற்று.

"இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்" (மத் 3:17) என்று பிதாவாகிய தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவைக் குறித்து சந்தோஷமாகவும் பிரியமாகவும் சாட்சி கொடுத்திருக்கிறார்.

தேவன் யாரை அனுப்புகிறாரோ அவரைக் குறித்து அவர் சாட்சியும் கொடுப்பார். ஒரு கிரியையை செய்து நிறைவேற்றுமாறு பிதா யாரிடத்தில் ஒப்புக்கொடுக்கிறாரோ, அவரை நிச்சயமாகவே உறுதிபண்ணி முத்திரையிடுவார். எப்பொழுதெல்லாம் தேவன் நம்மிடத்திலிருந்து விசுவாசத்தை எதிர்பார்க்கிறாரோ, அப்பொழுதெல்லாம் விசுவாசத்திற்கு தேவையான ஆதாரங்களையும் அவர் நிச்சயமாக கொடுப்பார். அதுபோலவே இயேசுகிறிஸ்து தம்முடைய குமாரனைக் குறித்து எந்தவிதத்திலும் குறைவில்லாமல் நிறைவாக சாட்சி கொடுத்திருக்கிறார்.

இயேசுகிறிஸ்துவைக் குறித்து தேவன் சாட்சி கொடுத்திருக்கும்போது, யூதர்கள் அவரை தேவனுடைய குமாரனென்று அங்கீகரிக்காமல் போனதும், ஏற்றுக் கொள்ளாமற்போனதும் மிகவும் வேதனையான விஷயம். ஒரு வேளை யூதர்களுக்கு, இதுவரையிலும்,தேவனுடைய வெளிப்பாட்டைக் குறித்து பிரத்தியட்சமான அடையாளங்கள் எதையும் பெற்றுக்கொள்வதற்கு, வாய்ப்பு கிடைத்திருக்காமலிருக்கலாம். தேவனுடைய தெய்வீக சித்தத்தை புரிந்துகொள்வதற்கு அவர்கள் இதுவரையிலும் தங்களுடைய மனதை பக்குவப்படுத்தாமலிருந்திருக்கலாம். இதைக்குறித்து இயேசுகிறிஸ்து மேலும் விவரிக்கும்போது, "நீங்கள் ஒருக்காலும் அவர் சத்தத்தை கேட்டதுமில்லை, அவர் ரூபத்தை கண்டதுமில்லை" என்று கூறுகிறார்.

யூதர்கள் தேவனைக் குறித்து அறியாமையிலிருக்கிறார்கள். ஒரு மனுஷன் இதுவரையிலும் காணாதவனாகவும் கேட்காதவனாகவும், அதாவது குருடனாகவும் செவிடனாகவும் இருந்தால், அவன் ஒரு காரியத்தை அறிந்துகொள்ள வேண்டிய பிரகாரம் அறிந்துகொள்ளமாட்டான். அதுபோலவே யூதர்கள் தேவனைக்குறித்து அறியாமையிலிருக்கிறார்கள். தம்முடைய குமாரனைக்குறித்து பிதாவானவர் தெளிவாக சாட்சி கொடுத்த போதிலும், அவர்கள் ஆவிக்குரிய குருடர்களாகவும் செவிடர்களாகவும் இருக்கிறபடியினால், அவர்கள் இயேசுகிறிஸ்துவை தேவனுடைய குமாரனாக காணவில்லை, கேட்கவில்லை, அங்கீகரிக்கவில்லை, ஏற்றுக்கொள்ளவில்லை. இயேசுகிறிஸ்துவைப் புறக்கணித்து விடுகிறார்கள்.

## அதிகாரம் - 5

**பிதாவின் வசனம்**

**அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசியாததினால் அவருடைய வசனம் உங்களில் தரித்திருக்கிறதுமில்லை (யோவா 5:38).**

மிகவும் சாதாரண வழிகளில் பிதாவாகிய தேவன் தம்மைப்பற்றி ஜனங்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். ஆனால் அவர்களோ அவருடைய சத்தத்தைக் கேட்டதுமில்லை. அவருடைய ரூபத்தைக் கண்டதுமில்லை. தேவனுடைய வசனம் அவர்களில் தரித்திருக்கிறதுமில்லை. தேவனுடைய வார்த்தை யூதர்கள் மத்தியிலே அறிவிக்கப்பட்டது. அது அவர்கள் மத்தியில் இருந்தாலும், அந்த வசனம் அவர்களுக்குள் இல்லை. அவர்களுடைய இருதயத்தில் கர்த்தருடைய வசனம் இடம் பெறவில்லை. அவர்களுடைய ஆத்துமாக்களை தேவனுடைய வார்த்தை ஆளுகை செய்யவில்லை. அவர்களுடைய காதுகளில் தேவனுடைய வசனம் ஒலிக்கவில்லை. தேவனுடைய வசனத்தின் பிரகாசம் அவர்கள் கண்களுக்குத் தெரியவில்லை.

தேவனுடைய வாக்கியங்கள் யூதர்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்டது விசேஷித்த மேன்மையாகும் (ரோம 3:2). அந்த வாக்கியங்களை அவர்கள் விசுவாசியாமற்போனாலும், அவர்களுடைய அவிசுவாசம் தேவனுடைய உண்மையை அவமாக்காது.

தேவனுடைய வசனம் அவர்களுடைய இருதயத்தை நிரப்பியிருக்குமானால், அவர்கள் இயேசுகிறிஸ்துவை தேவனுடைய குமாரனாக அங்கீகரித்திருப்பார்கள். ஆனால் தேவனுடைய வசனமோ அவர்களில் தரித்திருக்கிறதில்லை. ஒரு சிலர் தேவனுடைய வசனத்தைக் கேட்கிறார்கள். ஒரு சில வசனங்கள் அவர்களுக்கு மிகவும் பிடித்திருக்கிறது. சிறிது காலம் அதைப்பற்றி தியானிக்கிறார்கள். ஆனால் அந்த வசனம் அவர்களுக்குள் தரித்திருக்காதபடியினால், அவர்கள் அந்த வசனத்தை விரைவில் மறந்துவிடுகிறார்கள். ஒரு வீட்டிற்கு வந்துபோகும் விருந்தாளியைப்போல தேவனுடைய வசனம் அவர்களுடைய இருதயத்திற்குள் அவ்வப்போது வந்துபோகிறது. ஒரு வீட்டிற்கு சொந்தக்காரர் அந்த வீட்டில் தங்கியிருப்பதுபோல, தேவனுடைய வசனம் அவர்களுடைய உள்ளத்தில் தங்கியிருக்கவில்லை. தரித்திருக்கவில்லை. பிதாவானவர் அனுப்பினவரை அவர்கள் விசுவாசியாததினால், அவருடைய வசனம் அவர்களில் தரித்திருக்கிறதில்லை.

நமக்குள் தேவனுடைய வசனமும், தேவனுடைய ஆவியானவரும், தேவனுடைய கிருபையும் தங்கியிருக்கவேண்டும். அப்போதுதான் தேவன் நமக்கு எதை அனுப்புகிறாரோ அதை விசுவாசத்தோடும், பயபக்தியோடும் ஏற்றுக்கொள்ள முடியும். தேவனுடைய வசனம் நமக்குள் தரித்திருந்தால் மாத்திரமே, தேவன் அனுப்பியிருக்கிற அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை நாம் விசுவாசிப்போம். யூதர்களுக்கு மத்தியில் தேவனுடைய வசனம் அதிகமாக பிரசங்கிக்கப்பட்டாலும், அவருடைய வசனம் அவர்களுடைய உள்ளத்தில் தரித்திருக்கவில்லை. ஆகையினால் தேவன் அனுப்பியிருக்கிற அவருடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை அவர்கள் விசுவாசிக்கவில்லை.

**வேதவாக்கியங்கள்**
**யோவா 5 : 39-47**

**யோவா 5:39. வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே.**

**யோவா 5:40. அப்படியிருந்தும் உங்களுக்கு ஜீவன் உண்டாகும்படி என்னிடத்தில் வர உங்களுக்கு மனதில்லை.**

**யோவா 5:41. நான் மனுஷரால் மகிமையை ஏற்றுக்கொள்ளுகிறதில்லை.**

**யோவா 5:42. உங்களில் தேவ அன்பு இல்லையென்று உங்களை அறிந்திருக்கிறேன்.**

**யோவா 5:43. நான் என் பிதாவின் நாமத்தினாலே வந்திருந்தும், நீங்கள் என்னை ஏற்றுக்கொள்ளவில்லை, வேறொருவன் தன் சுய நாமத்தினாலே வந்தால் அவனை ஏற்றுக்கொள்வீர்கள்.**

**யோவா 5:44. தேவனாலேமாத்திரம் வருகிற மகிமையைத் தேடாமல், ஒருவராலொருவர் மகிமையை ஏற்றுக்கொள்ளுகிற நீங்கள் எப்படி விசுவாசிப்பீர்கள்?**

## அதிகாரம் - 5

**யோவா 5:45. பிதாவினிடத்தில் நான் உங்கள்மேல் குற்றஞ்சாட்டுவேன் என்று நினையாதிருங்கள்; நீங்கள் நம்புகிற மோசேயே உங்கள்மேல் குற்றஞ்சாட்டுவான்.**

**யோவா 5:46. நீங்கள் மோசேயை விசுவாசித்தீர்களானால், என்னையும் விசுவாசிப்பீர்கள்; அவன் என்னைக்குறித்து எழுதியிருக்கிறானே.**

**யோவா 5:47. அவன் எழுதின வாக்கியங்களை நீங்கள் விசுவாசியாமலிருந்தால் நான் சொல்லுகிற வசனங்களை எப்படி விசுவாசிப்பீர்கள் என்றார்.**

**ஆராய்ந்து பாருங்கள்**

**வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே (யோவா 5:39).**

இயேசுகிறிஸ்து தம்மைப்பற்றி சாட்சி கூறும்போது அவர் பழைய ஏற்பாட்டைப்பற்றி குறிப்பிடுகிறார். "வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்" என்னும் வாக்கியத்திற்கு இரண்டுவிதமாக பொருள் கூறலாம். யூதர்கள் வேதவாக்கியங்களை வாசிக்கிறார்கள். அவர்கள் அதை ஆராய்ந்தும் பார்க்கிறார்கள். ஆனால் தங்கள் சுயமகிமைக்காகவே அவர்கள் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கிறார்கள். ஒரு மனுஷனுக்கு வேதவாக்கியத்தில் ஏராளமான ஞானம் இருக்கலாம். அதேவேளையில் அவனுடைய ஜீவியத்தில் வேதவாக்கியம் இடம்பெறாமலும் போகலாம். கர்த்தருடைய வார்த்தையின் வல்லமைக்கு இவர்கள் அந்நியராகவும் இருக்கலாம். யூதர்கள் இப்படித்தான் இருக்கிறார்கள். அவர்கள் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கிறார்கள். ஆனால் கர்த்தருடைய வார்த்தையின் சாரம் அவர்களுடைய இருதயத்தை நிரப்பவில்லை. தேவனுடைய வசனத்தின் வல்லமை அவர்களுடைய ஜீவியத்தில் கிரியை செய்யவில்லை.

நாம் வேதவாக்கியங்களை வாசிக்கும்போது அதை ஆராய்ந்து பார்க்கவேண்டும். இயேசுகிறிஸ்து யூதர்களுக்கு இந்த வாக்கியத்தை கூறும்போது, அவர்களிடத்தில் இதை ஒரு வேண்டுகோளாகவே கூறுகிறார். வேதவாக்கியங்களைக் குறித்து அவர்களிடத்தில் இயேசுகிறிஸ்து இவ்வாறு கூறும்போது, இயேசுவின் வார்த்தைக்கு அவர்கள் முக்கியத்துவம் கொடுத்து, வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கவேண்டும். வேதவாக்கியத்தை அங்கொன்றும் இங்கொன்றுமாக வாசிக்கக் கூடாது. வேதாகமம் முழுவதையும் வாசித்து, எல்லா வசனங்களையும் ஆராய்ந்து பார்க்கவேண்டும். ஒரு வாக்கியத்தை மற்றொரு வாக்கியத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். ஒரு வசனத்தின் பொருளை மற்றொரு வசனத்தின் ஆதாரத்தில் வியாக்கியானம் பண்ணவேண்டும். ஒவ்வொரு வசனத்தையும் அதன் ஆழத்திற்குச் சென்று, வேதத்தின் ரகசியங்களை அறிந்துகொள்ள வேண்டும்.

இயேசுகிறிஸ்து யூதர்களிடம் "வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்" என்று கூறும்போது, அவர்கள் "நாங்களும் ஆராய்ந்துதானே பார்க்கிறோம்" என்றுதான் கூறுவார்கள். யூதர்களுக்குக் கூறும் இந்த வாக்கியத்தை இயேசுகிறிஸ்து நமக்கும் கூறுகிறார். இதை நமக்கு ஒரு ஆலோசனையாக கூறுகிறார். இயேசுகிறிஸ்துவை யாரெல்லாம் கண்டுகொள்கிறார்களோ, அவர்களெல்லாரும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கும்போது, அதில் மறைந்துள்ள ரகசியங்களை மிகவும் கவனத்தோடு தேடிப்பார்க்கவேண்டும். நமது முழு மனதையும் வேதவசனத்தில் பதித்து, மனதை அலைபாயவிடாமல் காத்துக்கொள்ள வேண்டும். வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கும்போது, அதிலுள்ள ரகசியங்களை கண்டுபிடிக்க வேண்டும் என்னும் ஆவலும் திட்டமும் நம்மிடத்தில் காணப்படவேண்டும்.

## அதிகாரம் - 5

வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கும்போது, "வேதத்தில் நான் எதை ஆராய்ந்து பார்க்கிறேன்", என்னும் கேள்விக்கும், "வேதத்தில் நான் எதை தேடிக்கொண்டிருக்கிறேன்" என்னும் கேள்விகளுக்கும் நம்மிடத்தில் பதில் இருக்கவேண்டும். தங்கச்சுரங்கத்தில், தங்கத்தை வெட்டியெடுப்பதற்காக, ஒருவன் அந்த சுரங்கத்தின் ஒவ்வொரு பகுதியிலும் தேடிப்பார்ப்பதுபோல, நாமும் வேத வசனங்கள் அனைத்திலும் கர்த்தருடைய சத்தியத்தை தேடிப்பார்க்கவேண்டும். ஒரு முத்தைக் கண்டுபிடிப்பதற்கு ஒருவன் கடலில் குதித்து தேடுவதுபோல, நாமும் வசனத்தின் ரகசியத்தை கண்டுபிடிப்பதற்கு வசனங்களுக்குள் மூழ்கித் தேடிப்பார்க்க வேண்டும்.

வேதவாக்கியங்களை ஆராய்ந்துபார்க்கும்போது, நமது மனதில் இரண்டு காரியங்கள் தெளிவாக இருக்கவேண்டும். அவையாவன: 1. பரலோகமே நமது முடிவு 2. அங்கு செல்ல இயேசுகிறிஸ்துவே நமக்கு வழியாக இருக்கிறார்.

வேதவாக்கியங்களால் நமக்கு நித்திய ஜீவன் உண்டு. வேதவாக்கியம் நமக்கு நித்திய ஜீவனை விளக்கி காண்பிக்கிறது. அது நமக்கு நித்திய ஜீவனையும் கொடுக்கிறது. ஆனால் யூதர்களைப்பார்த்து இயேசுகிறிஸ்து கூறும்போது "வேதவாக்கியங்களால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே" என்று மாத்திரமே கூறுகிறார். அவர்கள் வேதத்தை வாசிக்கும்போது, ஆழமாக ஆராய்ந்து பார்க்காமல், மேலோட்டமாக வாசிக்கிறார்கள். அவர்களுடைய வேதவாசிப்பில் ஒழுங்குமுறை எதுவுமில்லை. பயபக்தியுமில்லை. ஏனோதானோவென்று தங்களுடைய சுயமகிமைக்காகவும், சுயபெருமைக்காகவும் வேதவாக்கியங்களை வாசிக்கிறார்கள். நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகள் யாரிடத்தில் இருக்கிறதோ அவர்களுக்கு நித்திய ஜீவன் உண்டு என்பது யூதர்களுடைய பொதுவான நம்பிக்கை.

நாம் வேதவாக்கியங்களை ஆராய்ந்துபார்க்கும்போது, இயேசுகிறிஸ்துவை வசனங்களில் கண்டுபிடிக்க வேண்டும் என்னும் நோக்கத்தோடு, வசனங்களை ஆராய்ந்து பார்க்கவேண்டும். பரலோகத்திற்கு நம்மை அழைத்துச் செல்வதற்கு வேதவாக்கியங்களில் கொடுக்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளையும், நாம் எவ்வாறு ஆவிக்குரிய ஜீவியத்தில் ஜீவனம் பண்ணவேண்டுமென்று வசனங்களில் கொடுக்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளையும் தேடிக்கண்டுபிடித்து ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

வேத வாக்கியங்கள் இயேசுகிறிஸ்துவைக்குறித்து சாட்சி கொடுக்கின்றன. புதிய ஏற்பாட்டு வசனங்கள் மாத்திரமல்ல, பழைய ஏற்பாட்டு வசனங்களும் இயேசுகிறிஸ்துவைக் குறித்து சாட்சி கொடுக்கின்றன. பழைய ஏற்பாட்டு வசனங்கள் மூலமாக பிதாவாகிய தேவன் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவைக் குறித்து சாட்சி கொடுக்கிறார். பழைய ஏற்பாட்டில் மேசியாவைப்பற்றி சாட்சியாக கூறப்பட்டிருக்கிறது என்பது யூதருக்கு நன்றாகத் தெரியும். ஆனால் மேசியாவைப்பற்றிய வசனப்பகுதிகளை வாசிக்கும்போது, யூதர்கள் அதில் அதிக கவனம் செலுத்துவதில்லை. தங்களுடைய சுயவிருப்பத்தின் பிரகாரமாக அந்த வசனங்களுக்கு வியாக்கியானம் கொடுக்கிறார்கள். மேசியாவைக் குறித்து எந்தவிதமான கவனமும் அக்கறையுமில்லாமல் பரிதாபமாக ஜீவிக்கிறார்கள்.

நாம் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கும்போது, நம்முடைய சுயபெருமைக்காகவோ, அல்லது சுயமேன்மைக்காகவோ வாசிக்கக்கூடாது. வேதவாக்கியங்கள் இயேசுகிறிஸ்துவைக்குறித்து சாட்சி கொடுக்கிறபடியினால், அவரைக் கண்டுபிடிக்கும் நோக்கத்தோடு வேதவாக்கியங்களை வாசிக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவை அறிவதே நமக்கு நித்திய ஜீவன். வேதவாக்கியங்களில் இயேசுகிறிஸ்து மறைபொருளாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறார். கிணற்றிலுள்ள ஊற்றுத்தண்ணீரைப்போல இயேசுகிறிஸ்து ஜீவஊற்றாக இருக்கிறார். அவரைக் கண்டுபிடிப்பதே நம்முடைய வேதஆராய்ச்சியின் முக்கியமான நோக்கமாக இருக்கவேண்டும்.

**மனதில்லை**

**அப்படியிருந்தும் உங்களுக்கு ஜீவன் உண்டாகும்படி என்னிடத்தில் வர உங்களுக்கு மனதில்லை (யோவா 5:40).**

## அதிகாரம் - 5

தம்மைப்பற்றிய சாட்சியை இயேசுகிறிஸ்து விவரிக்கும்போது, யூதர்கள் தம்மை விசுவாசிக்காதபடியினால், அவர்களிடத்தில் கடிந்து கூறும் வார்த்தைகளைப் பேசுகிறார். அவர்கள் இயேசுகிறிஸ்துவையும் அவருடைய உபதேசத்தையும் ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணித்துவிடுகிறார்கள். தங்களுக்கு ஜீவன் உண்டாகும்படி இயேசுகிறிஸ்துவிடத்தில் வர அவர்களுக்கு மனதில்லை. யூதர்கள் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கும்போது அவர்களுக்கு வசனத்தின் மறைபொருள் நன்றாக விளங்குகிறது. வசனத்தை அவர்கள் புரிந்துகொள்கிறார்கள். புரிந்திருந்தும், தாங்கள் புரிந்துகொண்டிருக்கும் சத்தியத்தை, தங்கள் உள்ளத்தில் ஏற்றுக்கொள்ள அவர்களுக்கு மனதில்லை. இயேசுகிறிஸ்து யூதர்களுக்கு நித்திய ஜீவனை வாக்குப்பண்ணுகிறார். ஆனால் அவர்களோ அவர் கொடுக்கும் ஜீவனை ஏற்றுக்கொள்ள மனதில்லாதவர்களாக இருக்கிறார்கள்.

தாகமுள்ள ஆத்துமாக்களுக்கு இயேசுகிறிஸ்து ஜீவனைக்கொடுக்கிறார். அவர் கொடுப்பது நித்திய ஜீவன். அது பரிபூரண ஜீவன். இயேசுகிறிஸ்துவே நம்முடைய ஜீவனாக இருக்கிறார். இயேசுகிறிஸ்து கொடுக்கும் நித்திய ஜீவனில் சந்தோஷம் சமாதானமும் நிறைந்திருக்கும். இந்த ஜீவனை பெற்றுக்கொள்ள விரும்புகிறவர்கள் இயேசுகிறிஸ்துவிடம் வந்துதான் இதைப்பெற்றுக்கொள்ளவேண்டும். பாவிகள் தங்கள் பாவத்தில் மரித்துப்போவதற்கு ஒரே காரணம், அவர்கள் இயேசுகிறிஸ்துவிடத்தில் வராமல் போவதுதான். பாவிகளால் இரட்சிக்கப்பட முடியாது என்று இயேசுகிறிஸ்து கூறவில்லை. ஆனால் இரட்சிப்படைய அவர்கள் மனதில்லாதவர்களாக இருக்கிறார்கள். ஒரு வியாதியஸ்தன் தன் வியாதிலிருந்து குணமடையவேண்டுமென்றால், அதற்குரிய மருத்துவ சிகிச்சை முறைகளை ஏற்றுக்கொள்ள மனதுள்ளவனாக இருக்கவேண்டும். முறைப்படி மருத்துவ சிகிச்சை பெற்றுக்கொள்ளவில்லையென்றால், தன் வியாதியிலிருந்து வியாதியஸ்தன் குணமடைவதற்கு வாய்ப்பில்லை.

### மனுஷரால் மகிமை

**நான் மனுஷரால் மகிமையை ஏற்றுக்கொள்ளுகிறதில்லை (யோவா 5:41).**

தம்மிடத்தில் எல்லோரும் வரவேண்டுமென்று இயேசுகிறிஸ்து கூறுவதினால், அவர் ஒருவேளை மனுஷரால் வரும் மகிமையை விரும்புகிறார் என்று யூதர்கள் நினைக்க வாய்ப்புள்ளது. இந்த விஷயத்தில் தம்முடைய நிலமையை தெளிவுபடுத்துவதற்காக "நான் மனுஷரால் மகிமையை ஏற்றுக்கொள்கிறதில்லை" என்று இயேசுகிறிஸ்து அறிவிக்கிறார். மனுஷருடைய பாராட்டு வார்த்தைகளையோ, புகழ்ச்சியான வார்த்தைகளையோ, முகஸ்துதிகளையோ இயேசுகிறிஸ்து ஏற்றுக்கொள்கிறதில்லை. யூதர்கள் தம்மை கைதட்டி பாராட்ட வேண்டுமென்று இயேசுகிறிஸ்து எதிர்பார்க்கவில்லை.

தேவனுடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்து, இந்த பூமியில், மனுஷகுமாரனாக அவதரித்ததினால், அவருக்கு மனுஷரால் மகிமை உண்டாயிருக்க வேண்டும். ஆனால் அவருக்கு மகிமை உண்டாவதற்குப் பதிலாக, அவருக்கு அவமரியாதையும், தீங்குகளும், பாடுகளும், வேதனைகளுமே உண்டாயிற்று. மனுஷர் இயேசுகிறிஸ்துவை மகிமைப்படுத்துவதினால், அவருடைய மகிமை அதிகரிக்கப் போவதில்லை. மனுஷர் அவரை மகிமைப் படுத்துவது அவருடைய மகிமையைக் கூட்டாது. ஏனெனில் இயேசுகிறிஸ்து எப்போதும் பூரண மகிமையோடிருக்கிறார். அவர் ஒருபோதும் தம்முடைய மகிமையிலிருந்து குறைந்திருக்கவில்லை. மனுஷரால் அவருடைய மகிமையோடு, மேலும் மகிமையை கூட்டவோ அல்லது குறைக்கவோ முடியாது.

### தேவ அன்பு

**உங்களில் தேவ அன்பு இல்லையென்று உங்களை அறிந்திருக்கிறேன் (யோவா 5:42).**

யூதர்களிடத்தில் தேவஅன்பு இல்லை. ஜனங்கள் தேவனை வெறுப்பதற்கும், அவரை விட்டு விலகிப்போவதற்கும், அவர்களிடத்தில் தேவஅன்பு இல்லாததே காரணமாகும். யூதர்கள் தேவனைப்பற்றி அறியாமலிருக்கிறார்கள். அவர்கள் ஒருக்காலும் தேவனுடைய சத்தத்தை கேட்டதுமில்லை, அவர் ரூபத்தை கண்டதுமில்லை (யோவா 5:37). அவர்கள் தேவனைப்பற்றி அறியாமலிருப்பதினால் அவர்களிடத்தில் தேவஅன்பு இல்லை. அத்துடன்தேவனைப்பற்றி அறிந்துகொள்ளவும், அவரிடத்தில் வரவும் யூதர்களுக்கு மனதில்லை. அவர்களிடத்தில் தேவஅன்பு இல்லாமற் போனதுதான் இவையெல்லாவற்றிற்கும் அடிப்படைக் காரணம்.

## அதிகாரம் - 5

தாங்கள் தேவனிடத்தில் அன்புகூருவதாக நடிக்கிறார்கள். இது வெளிவேஷம். நியாயப்பிரமாணத்தின் மீது தாங்கள் பக்தி வைராக்கியமாக இருப்பதினால், தேவனிடத்திலுள்ள தங்களுடைய அன்பு நிரூபணமாவதாக கூறுகிறார்கள். அவர்கள் நியாயப்பிரமாணத்தின்மீது வைராக்கியமாக இருந்தாலும், தேவஅன்பு அவர்களிடத்தில் இல்லை.

இக்காலத்தில்கூட மிக பிரசித்திப்பெற்ற ஊழியக்காரர்கள் இருக்கிறார்கள். பெரிய பெரிய ஊழியங்களையெல்லாம் பொறுப்பெடுத்து செய்கிறார்கள். பல ஊழிய ஸ்தாபனங்களுக்கு இவர்கள் தலைவர்களாக செயல்படுகிறார்கள். இருந்தும் இவர்களிடத்திலும் தேவஅன்பு இல்லாமற்போவதற்கு வாய்ப்புள்ளது. இயேசுகிறிஸ்துவை தங்கள் இருதயத்தில் ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணித்துவிட்டால், தேவஅன்பு இவர்களிடத்தில் இல்லாமற் போய்விடும்.

இவர்கள் தேவனுடைய பரிசுத்தத்தை விரும்புவதில்லை. அவருடைய நன்மையை குறைத்து மதிப்பிடுகிறார்கள். இயேசுகிறிஸ்து கூறுகிற தேவனுடைய அன்பு நம்மிடத்தில் காணப்படவேண்டும். நம்முடைய இருதயத்தில் தேவஅன்பு வாசம்பண்ணவேண்டும். தேவன் இப்படிப்பட்ட தேவஅன்பைத்தான் அங்கீகரிக்கிறார்.

இயேசுகிறிஸ்து யூதர்களிடத்தில் தேவஅன்பு இல்லை என்று கூறும்போது, இதைதாம் அறிந்திருப்பதாகவும் அறிவிக்கிறார். இயேசுகிறிஸ்து மெய்யாகவே இந்த யூதர்களை அறிந்திருக்கிறார். அவர்களுடைய இருதயத்தின் சிந்தனைகள் எல்லாவற்றையும் அவர் அறிந்திருக்கிறார். அவருக்கு மறைவானது ஒன்றுமில்லை. நம்மைப்பற்றி நமக்கு தெரிவதைவிட, இயேசுகிறிஸ்துவுக்கு நம்மைப்பற்றி நன்றாகத்தெரியும். நம்முடைய உற்றார் உறவினர் நம்மை அறிந்திருப்பதைவிட இயேசுகிறிஸ்து நம்மை நன்றாகவே அறிந்திருக்கிறார். நம்மை நாமே வஞ்சித்துவிடலாம். ஏமாற்றிவிடலாம். ஆனால் மனுஷனால் தேவனை வஞ்சிக்கவோ ஏமாற்றவோ முடியாது.

**பிதாவின் நாமம்**

**நான் என் பிதாவின் நாமத்தினாலே வந்திருந்தும், நீங்கள் என்னை ஏற்றுக்கொள்ளவில்லை, வேறொருவன் தன் சுய நாமத்தினாலே வந்தால் அவனை ஏற்றுக்கொள்வீர்கள் (யோவா 5:43).**

யூதர்கள் தேவனுடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை தேவகுமாரனாக அங்கீகரிக்கவில்லை. ஆனால் அவர்கள் கள்ளக்கிறிஸ்துக்களையும், கள்ளத்தீர்க்கதரிசிகளையும் அங்கீகரிக்க எப்போதுமே ஆயத்தமாக இருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து தம்முடைய பிதாவின் நாமத்தினால் யூதர்கள் மத்தியிலே வந்திருக்கிறார். ஆனால் அவர்களோ இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவில்லை. வேறொருவன் தன் சுயநாமத்தினாலே வந்தால் அவனை ஏற்றுக்கொள்கிறார்கள்.

தன்னுடைய நாமத்தை விளம்பரம் செய்து, பிரஸ்தாபப்படுத்தி, ஆடம்பரமாகவும், ஆரவாரமாகவும், அலங்காரமாகவும் எதையாவது பேசினால் அவனுடைய வார்த்தையை யூதர்கள் செவிகொடுத்து கேட்கிறார்கள். இயேசுகிறிஸ்துவை அங்கீகரிக்காமல் போனதினால், தங்களுக்கு வாக்குப்பண்ணப்பட்டிருக்கும் தேவனுடைய கிருபையையும் இரக்கத்தையும் அவர்கள் புறக்கணித்துவிடுகிறார்கள். அவர்கள் அழிந்துபோவதற்கு தேவகிருபையை புறக்கணிப்பதே பொதுவான காரணம். மெய்யான கிறிஸ்துவை விசுவாசிப்பதற்குப் பதிலாக, கள்ளக்கிறிஸ்துக்களையும், மாயமான சத்தியங்களையும் அவர்கள் விசுவாசிப்பதினால், அவர்களுடைய அழிவு பேரழிவாக இருக்கும்.

கள்ளத்தீர்க்கதரிசிகள் தங்களுடைய சுயநாமத்தினால் வருகிறார்கள். சத்தியத்தை ஏற்றுக்கொள்ளாமல், கள்ளத் தீர்க்கதரிசிகளினால் வஞ்சிக்கப்படுகிறவர்கள், தேவனுடைய நீதியின் பிரகாரமாக பாடுகளை அனுபவிப்பார்கள். வெளிச்சத்தைக் காணக்கூடாதவாறு அவர்கள் தங்களுடைய கண்களை தாங்களே மூடிக்கொள்கிறார்கள். மாயையான வெளிச்சத்தை அவர்கள் பின்பற்றிப்போவதினால், அவர்களுக்கு பாதையும் தெரியாது, எங்கு போகிறோம் என்பதும் தெரியாது. இலக்கை இழந்தவர்களாக பாதை தடுமாறி அலைந்துகொண்டிருப்பார்கள். தெய்வீக மன்னாவை வேண்டாமென்று ஒதுக்கித்தள்ளுகிறார்கள். அதேவேளையில் சாம்பலை புசிப்பதற்கு ஆயத்தமாக இருக்கிறார்கள்.

## அதிகாரம் - 5

**தேவனாலே மாத்திரம் வருகிற மகிமை**

**தேவனாலே மாத்திரம் வருகிற மகிமையைத் தேடாமல், ஒருவராலொருவர் மகிமையை ஏற்றுக்கொள்ளுகிற நீங்கள் எப்படி விசுவாசிப்பீர்கள்? (யோவா 5:44)**

யூதர்கள் பெருமையினாலும், அவிசுவாசத்தினாலும், மாயையான மகிமையினாலும் நிறைந்திருக்கிறார்கள். இதனால் அவர்களுக்கு பலவிதமான துன்பங்களும் பாடுகளும் உண்டாயிற்று. அவர்கள் தங்களைத்தாங்களே மேன்மைப்படுத்திக்கொள்கிறார்கள். தங்களைப்பற்றி நினைக்க வேண்டியதற்கு மிஞ்சி அதிகமாக நினைத்து பெருமைப்படுகிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவையோ அவர்கள் நினைக்க வேண்டிய பிரகாரம் நினைக்காமல், தாழ்மையாக நினைத்து, அவரை அவமானப்படுத்துகிறார்கள்.

யூதர்கள் உலகப்பிரகாரமான மகிமையின்மீது ஆவலாயிருக்கிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ மனுஷரால் மகிமையை ஏற்றுக்கொள்கிறதில்லை. யூதர்களுடைய இருதயம் மனுஷரால் வரும் மகிமையின்மீது பற்றுதலாயிருக்கிறது. ஒருவரால் ஒருவர் மகிமையை ஏற்றுக்கொள்கிறார்கள். மனுஷரால் வரும் மகிமையை ஏற்றுக்கொள்வதே இவர்களுடைய பிரதான நோக்கம். இவர்கள் மற்ற மனுஷர்களை மகிமைப்படுத்துகிறார்கள். அவர்களைப் பாராட்டி பேசுகிறார்கள். இதற்கு இவர்களிடத்தில் உள்ளான காரணம் ஒன்றும் உள்ளது. அவர்களும் தங்களை மகிமைப்படுத்தி, பாராட்டி பேச வேண்டுமென்பதே இவர்களுடைய விருப்பம். மற்றவர்களிடத்திலிருந்து பாராட்டுதலைப் பெறவேண்டுமென்பதற்காகவே இவர்கள் மற்றவர்களை பாராட்டுகிறார்கள். இவர்கள் பெற்றுக்கொள்கிற மகிமை மனுஷரிடத்திலிருந்து மாத்திரமே வருகிறது. இந்த மகிமை தேவனிடத்திலிருந்து வரவில்லை.

தேவனாலே மாத்திரம் வரும் மகிமையை யூதர்கள் தேடுவதில்லை. கர்த்தருடைய மெய்யான பரிசுத்தவான்கள் எல்லோருக்கும் தேவனாலே மகிமை உண்டாகும். ஆனால் யூதர்களோ ஆவிக்குரிய இந்த மகிமையை புறக்கணித்துவிடுகிறார்கள். இயேசு கிறிஸ்துவிடத்தில் விசுவாசமாயிருக்கிற எல்லோருமே, தேவனிடத்திலிருந்து வரும் மகிமையை பெற்றுக்கொள்வார்கள். நாமும் மனுஷனாலே வருகிற மகிமையைத் தேடாமல், தேவனாலே மாத்திரம் வருகிற மகிமையைத் தேடவேண்டும். பரிசேயர் மனுஷரால் புகழப்படுவதை விரும்புகிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமோ தேவனால் புகழப்படுவதையே விரும்பவேண்டும்.

யூதர்கள் ஒருவரால் ஒருவர் மகிமையை ஏற்றுக்கொள்கிறபடியினால், இவர்கள் இயேசுகிறிஸ்துவை தேவனுடைய குமாரனாக விசுவாசிப்பதில்லை. யூதர்களுக்கு இயேசுகிறிஸ்துவினிடத்தில் விசுவாசம் வைப்பதற்கு மனுஷரால் உண்டாகும் மேன்மை தடையாக இருக்கிறது. மாம்சத்தை பிரியப்படுத்த வேண்டும் என்று விரும்புகிறவர்கள் கர்த்தரை விசுவாசிக்கமாட்டார்கள். இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் தங்களுடைய மாம்சத்தை தேவனுடைய சித்தத்திற்கு பூரணமாக ஒப்புக்கொடுப்பார்கள்.

**மோசே குற்றஞ்சாட்டுவான்**

**பிதாவினிடத்தில் நான் உங்கள்மேல் குற்றஞ்சாட்டுவேன் என்று நினையாதிருங்கள்; நீங்கள் நம்புகிற மோசேயே உங்கள்மேல் குற்றஞ்சாட்டுவான் (யோவா 5:45).**

யூதர்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசியாமல் இருப்பதற்காக, அவர்கள் தேவனுக்கு முன்பாக குற்றம் சாட்டப்படுவார்கள். மோசே அவர்கள்மேல் குற்றஞ்சாட்டுவான். இயேசுகிறிஸ்து இங்கு மோசேயைப்பற்றி குறிப்பிடுவதினால், அவர் நியாயப்பிரமாணத்திற்கும் சுவிசேஷத்திற்கும் இடையிலுள்ள வேற்றுமையை தெளிவுபடுத்துகிறார். மோசே என்பது இங்கு நியாயப்பிரமாணத்தைக் குறிப்பிடும் வார்த்தையாகும். நியாயப்பிரமாணத்தின் மூலமாக பாவத்தைப்பற்றிய அறிவு உண்டாயிற்று. அவர்கள் நம்பும் நியாயப்பிரமாணமே பிதாவுக்கு முன்பாக அவர்களைக் குற்றப்படுத்தும்.

நம்மைக் குற்றப்படுத்த வேண்டுமென்பது கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் திட்டமல்ல. இயேசுகிறிஸ்து பிதாவினிடத்தில் யூதர்கள்மேல் குற்றம்சாட்டமாட்டார். இயேசுகிறிஸ்து இந்த உலகத்திற்கு குற்றம்சாட்டுகிறவராக வரவில்லை. அவர் நமக்காக பரிந்து பேசுகிறவராகவே வந்திருக்கிறார். தேவனுக்கும் மனுஷனுக்கும் நடுவே மத்தியஸ்தம் பண்ணும் ஊழியத்தை செய்வதும், மனுஷனை தேவனோடு ஒப்புரவாக்குவதும் இயேசுகிறிஸ்துவின் பிரதான ஊழியமாகும்.

## அதிகாரம் - 5

இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாக யூதர்கள் பலவிதமான தீயகாரியங்களைச் செய்தார்கள். அவரை உபத்திரவப்படுத்தினார்கள். பாடுகளுக்கு உட்படுத்தினார்கள். பாவமறியாத அவரை காயப்படுத்தினார்கள். அவரை சிலுவையிலும் அறைந்தார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ தம்மை சிலுவையில் அறைந்தவர்களுக்கு விரோதமாக, பிதாவினிடத்தில் அவர்களைக் குற்றப்படுத்தமாட்டார். "அவர்களை மன்னியும்" என்றே அவர்களுக்காக பரிந்து பேசி ஜெபிப்பார்.

யூதர்கள் மோசேயை விசுவாசிக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவை தேவனுடைய குமாரனாக அங்கீகரிக்காமல், அவரைப் புறக்கணித்துவிட்டாலும், தாங்கள் விசுவாசிக்கும் மோசே தங்கள் பக்கமாக இருந்து, தங்களுக்கு சாதகமாக பேசுவார் என்று இவர்கள் நம்புகிறார்கள். ஆனால் இவர்களுடைய நம்பிக்கை தவறானது. இவர்கள் நம்புகிற மோசேயே இவர்கள்மீது குற்றஞ்சாட்டுவான். மோசேயின் நியாயப்பிரமாணங்களும், சடங்குகளும் தங்களை இரட்சிக்கும் என்று இவர்கள் நம்பிக்கையாயிருக்கிறார்கள். ஆனால் மோசேயின் நியாயப்பிரமாணம் இவர்களை இரட்சிப்பதற்குப் பதிலாக, இவர்கள்மீது குற்றம்சாட்டும். மோசேயின் நியாயப்பிரமாணம் தங்களுக்குக் கிடைத்திருப்பது பெரிய சிலாக்கியம் என்று நினைத்து அதை நம்புகிறார்கள். ஆனால் எதை தங்களுடைய சிலாக்கியம் என்று நம்பினார்களோ அதுவே அவர்கள்மேல் குற்றம்சாட்டும்.

**மோசே எழுதின வாக்கியங்கள்**

**நீங்கள் மோசேயை விசுவாசித்தீர்களானால், என்னையும் விசுவாசிப்பீர்கள்; அவன் என்னைக்குறித்து எழுதியிருக்கிறானே. அவன் எழுதின வாக்கியங்களை நீங்கள் விசுவாசியாமலிருந்தால் நான் சொல்லுகிற வசனங்களை எப்படி விசுவாசிப்பீர்கள் என்றார் (யோவா 5:46,47).**

மோசே இயேசுகிறிஸ்துவுக்கும், அவருடைய உபதேசத்திற்கும் சாட்சியாக இருந்தான். அவன் கிறிஸ்துவைக்குறித்து எழுதியிருக்கிறான். மோசேயின் நியாயப்பிரமாணத்தைப் பற்றிய சடங்குகளெல்லாம், இனிமேல் சம்பவிக்கப்போகிற காரியங்களுக்கு அடையாளமாயிருக்கிறது.

மோசே இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாக எதுவும் எழுதவில்லை. இயேசுகிறிஸ்துவைக்குறித்தும், அவருடைய சார்பாகவுமே மோசே எழுதியிருக்கிறான். யூதர்கள் மோசேயை விசுவாசிப்பதாக கூறுகிறார்கள். ஆனால் அவர்கள் மோசேயை விசுவாசிக்கவில்லையென்று இயேசுகிறிஸ்து அவர்கள்மீது குற்றம் சுமத்துகிறார்.

யூதர்கள் மோசேயை நம்புகிறார்கள் என்று இயேசுகிறிஸ்து கூறும்போது (யோவா 5:45), அவர்கள் மோசேயின் நாமத்தை மாத்திரமே நம்புகிறார்கள் என்று பொருள்படுமாறு இயேசு கூறுகிறார். மோசேயின் நாமத்தை நம்புகிற யூதர்கள் அவனுடைய உபதேசத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. மோசேயினுடைய உபதேசத்தின் மெய்யான அர்த்தத்தையும், அதன் சாரத்தையும் யூதர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் மோசேயை விசுவாசிக்கவில்லை என்பதை உறுதிபடுத்துவதற்கு, அவர்கள் தம்மை விசுவாசிக்காமலிருப்பதையே இயேசு கிறிஸ்து காரணமாக கூறுகிறார்.

யூதர்கள் மோசேயை விசுவாசிப்பார்களானால், இயேசுகிறிஸ்துவையும் விசுவாசிப்பார்கள். இக்காலத்தில்கூட பலர் கிறிஸ்துவை விசுவாசிப்பதாக கூறுகிறார்கள். ஆனால் அவர்களுடைய கிரியைகளோ, அவர்கள் கிறிஸ்துவை விசுவாசிப்பதாக கூறுவது பொய்யென்பதை நிரூபிக்கிறது. அவர்களுடைய வார்த்தையும் கிரியையும் முரண்பட்டிருக்கிறது. வேதவாக்கியத்தின் ஒரு பகுதியை சரியாக புரிந்துகொண்டு, சரியாக விசுவாசிக்கிறவர்கள், வேதவாக்கியத்தின் எல்லா பகுதிகளையும் விசுவாசிப்பார்கள்.

யூதர்கள் மோசேயின் உபதேசத்தை விசுவாசிக்காமல் இருப்பதினால், அவர்கள் இயேசுகிறிஸ்துவையும் விசுவாசிக்காமல் புறக்கணித்துவிடுகிறார்கள். அவர்கள் மோசே எழுதின வாக்கியங்களை விசுவாசியாமலிருக்கும்போது, இயேசுகிறிஸ்து சொல்கிற வசனங்களையும் விசுவாசிக்கமாட்டார்கள். தாங்கள் விசுவாசிக்கிறோம் என்று சொல்கிற மோசேயின் பிரமாணத்தை யூதர்கள் மெய்யாகவே விசுவாசிக்கவில்லை. தங்களுடைய புனித நூல் என்று கருதும் மோசேயின் பிரமாணத்தை அவர்கள் விசுவாசிக்காமலிருப்பதினால், அவர்கள் இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளையும் விசுவாசிக்கவில்லை.

## அதிகாரம் - 5

பேசப்படும் வார்த்தைகளைவிட எழுதப்பட்டிருக்கும் வார்த்தைகளுக்கு யூதர்கள் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். மோசே இயேசுகிறிஸ்துவைப்பற்றி பேசியிருக்கிறார், எழுதியிருக்கிறார். அதை யூதர்கள் விசுவாசிக்கவில்லையென்றால், அவர்கள் இயேசுகிறிஸ்துவையும், அவருடைய ஊழியத்தையும் விசுவாசிக்கமாட்டார்கள். முன்னுரையை ஏற்றுக்கொள்ளாதவர்கள் முடிவுரையை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினாலே அருளப்பட்டிருக்கிறது என்பதை விசுவாசிக்காதவர்கள், இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தை நிச்சயமாகவே விசுவாசிக்கமாட்டார்கள்.

இவ்வாறாக இயேசுகிறிஸ்து தம்மைப்பற்றிய சத்தியத்தை யூதர்களுக்கு வெளிப்படுத்துகிறார். இதற்குமேல் யூதர்களால் இயேசுகிறிஸ்துவிடம் தேவையில்லாத கேள்விகள் எதையும் கேட்கமுடியவில்லை. இயேசுகிறிஸ்து அவர்களுடைய வாய்களை அடைத்துவிடுகிறார். ஆனால் அவர்களுடைய இருதயங்களோ கடினமாயிற்று.

## அதிகாரம் - 6

ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கொண்டு ஏறக்குறைய ஐயாயிரம் புருஷரை போஷித்த அற்புத சம்பவம் (யோவா 6:1-14). இயேசுகிறிஸ்து கடலின்மேல் நடந்துவருகிறார் (யோவா 6:15-21). கப்பர்நகூமில் ஜனங்கள் இயேசு கிறிஸ்துவிடத்தில் கூடிவருகிறார்கள் (யோவா 6:22-25). இயேசுகிறிஸ்து அவர்களோடு நடத்திய உரையாடல் (யோவா 6:26,27). அவர்கள் ஆவிக்குரிய போஜனத்தை பெற்றுக்கொள்ள பிரயாசப்படவேண்டுமென்று இயேசுகிறிஸ்து உபதேசம்பண்ணுகிறார் (யோவா 6:28,29). ஆவிக்குரிய போஜனம் எது என்பதை இயேசுகிறிஸ்து விவரிக்கிறார் (யோவா 6:30-51). இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தை சீஷரில் அநேகர் கடினமான உபதேசம் என்று கூறுகிறார்கள் (யோவா 6:60-65). இயேசுகிறிஸ்துவின் சீஷரில் அநேகர் அவருடனேகூட நடவாமல் பின்வாங்கிப்போகிறார்கள் (யோவா 6:66-71).

### திபேரியா கடல்
### யோவா 6 : 1-4

**யோவா 6:1. இவைகளுக்குப்பின்பு இயேசு திபேரியாக்கடல் என்னப்பட்ட கலிலேயாக் கடலின் அக்கரைக்குப் போனார்.**

**யோவா 6:2. அவர் வியாதிக்காரரிடத்தில் செய்த அற்புதங்களைத் திரளான ஜனங்கள் கண்டபடியால் அவருக்குப் பின்சென்றார்கள்.**

**யோவா 6:3. இயேசு மலையின்மேல் ஏறி, அங்கே தம்முடைய சீஷருடனேகூட உட்கார்ந்தார்.**

**யோவா 6:4. அப்பொழுது யூதருடைய பண்டிகையாகிய பஸ்கா சமீபமாயிருந்தது.**

**கலிலேயா கடலின் அக்கரை**

**இவைகளுக்குப்பின்பு இயேசு திபேரியாக்கடல் என்னப்பட்ட கலிலேயாக் கடலின் அக்கரைக்குப் போனார் (யோவா 6:1).**

இயேசுகிறிஸ்து ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் ஆசீர்வதித்து, ஏறக்குறைய ஐயாயிரம் புருஷருக்கு அற்புதமாக போஜனம்கொடுக்கிறார். இயேசுகிறிஸ்து செய்த இந்த அற்புதம் நான்கு சுவிசேஷங்களிலும் எழுதப்பட்டிருக்கிறது. அதிலும் விசேஷமாக,

இந்த சம்பவம் மாத்திரமே நான்கு சுவிசேஷங்களிலும் எழுதப்பட்டிருக்கும் ஒரே சம்பவம் ஆகும். இந்த அற்புதத்தைத் தொடர்ந்து இயேசுகிறிஸ்து தமது சீஷரிடமும், அங்கு கூடியிருக்கும் திரளான ஜனங்களிடமும் உரையாடுகிறார். இந்த உரையாடல் மூலமாக இயேசுகிறிஸ்து உபதேசிக்கும் உபதேசத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து யோவான் இந்த சம்பவத்தை இந்த சுவிசேஷ புஸ்தகத்தில் எழுதியிருக்கலாம்.

இயேசுகிறிஸ்து கலிலேயா கடலின் அக்கரைக்குப் போகிறார். இக்கரையில் இருக்கிற இயேசுகிறிஸ்து, படவில் ஏறி, கடலைக்கடந்து அக்கரைக்குப் போகிறார். கலிலேயா கடலுக்கு திபேரியா கடல் என்னும் மறுபெயருமுள்ளது.

**திரளான ஜனங்கள்**

**அவர் வியாதிக்காரரிடத்தில் செய்த அற்புதங்களைத் திரளான ஜனங்கள் கண்டபடியால் அவருக்குப் பின்சென்றார்கள் (யோவா 6:2).**

திரளான ஜனங்கள் இயேசுகிறிஸ்துவுக்கு பின்செல்கிறார்கள். இயேசு வியாதிக்காரரிடத்தில் செய்த அற்புதத்தை இவர்கள் கண்டபடியினால், இந்த ஜனங்களெல்லோரும் அவருக்குப் பின்செல்கிறார்கள். இயேசுகிறிஸ்து எங்கு சென்றாலும் அவர் நன்மை செய்கிறவராகவே சுற்றி அலைகிறார். ஆகையினால் அவரைச் சுற்றிலும் எப்போதும் திரளான ஜனங்கள் கூடியிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவும் கூட்டத்திற்கு நடுவே வாசம்பண்ணி பழகிவிடுகிறார்.

ஒருவர் பிரயோஜனமுள்ள நல்ல வேலைகளை தொடர்ந்து செய்யும்போது, அவரைச் சுற்றிலும் திரளான ஜனங்கள் கூடிவருவார்கள். அவருக்கும் அதிகமான வேலைப்பளு இருக்கும். பல வேலைகளை காலதாமதம்பண்ணாமல் உடனடியாக செய்யவேண்டியதுவரும். பொது வாழ்வில் ஈடுபட்டு பிறருக்கு நன்மை செய்கிறவர்கள் சோர்ந்துபோய்விடக்கூடாது. அதிக வேலை இருக்கிறது என்று அங்கலாய்க்கவும் கூடாது. கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கும் ஊழியம் அதிகமாக இருக்கும். அதற்காக ஊழியக்காரரும் சோர்ந்துவிடக்கூடாது.

## அதிகாரம் - 6

தேவனுடைய சமுகத்தில் நாம் சந்தோஷமாக இருப்பதே பிரதான காரியம். தேவன் நமக்குக் கொடுக்கும் சந்தோஷத்தை நாம் அனுபவிக்கவேண்டும். போதுமான அளவு ஓய்வு நேரம் கிடைக்கவில்லையென்றாலும், வேலைப்பளு அதிகமாகயிருந்தாலும், கர்த்தருக்குள் சந்தோஷமாக இருக்க கற்றுக்கொள்ளவேண்டும். இயேசுகிறிஸ்து செய்த அற்புதங்களைக் கண்டு திரளான ஜனங்கள் அவரிடத்தில் கூடிவருகிறார்கள். ஆனால் இவர்களில் அநேகர் இயேசுகிறிஸ்துவின் அடிச்சுவடுகளை பின்பற்றவில்லை. சுவிசேஷ பொதுக்கூட்டங்களுக்கு திரளான ஜனங்கள் கூடி வந்தாலும், அவர்களெல்லோரும் இயேசுகிறிஸ்துவை பின்பற்றுவார்கள் என்று சொல்லமுடியாது.

**மலையின்மேல் ஏறி**

**இயேசு மலையின்மேல் ஏறி, அங்கே தம்முடைய சீஷருடனேகூட உட்கார்ந்தார் (யோவா 6:3).**

தம்மிடத்தில் கூடிவருகிற திரளான ஜனங்களுக்கு இயேசுகிறிஸ்து நன்மை செய்கிறார். அவர்களுக்கு உதவிபுரிய இயேசு எப்போதுமே ஆயத்தமாகயிருக்கிறார். அவர் ஒரு மலையின்மேல் ஏறி, அங்கே தம்முடைய சீஷருடனேகூட உட்காருகிறார். இப்போது இயேசுகிறிஸ்து திறந்தவெளி பிரசங்கியாராக ஊழியம் செய்கிறார். வனாந்தரமாக இருந்தாலும், உயரமான மலைப்பகுதியாக இருந்தாலும், இயேசுகிறிஸ்துவின் வார்த்தை எல்லா இடத்திலுமே வல்லமையுள்ளது. ஒருவேளை இயேசுகிறிஸ்துவோடு மலையில் ஏறுவது இருதய வியாதியுள்ளவர்களுக்கு சிரமமாக இருக்கலாம். என்றாலும் இயேசுகிறிஸ்து இருக்கும் இடத்தில்தான் மெய்யான ஆரோக்கியமுள்ளது. யாரெல்லாம் இயேசுவைத் தேடுகிறார்களோ அவர்களெல்லோருமே அவரைக் கண்டுகொள்வார்கள். இயேசுகிறிஸ்து மலையின்மீது ஏறி தம்முடைய சீஷருடனேகூட உட்கார்ந்திருக்கிறார்.

**பஸ்கா சமீபமாயிருந்தது**

**அப்பொழுது யூதருடைய பண்டிகையாகிய பஸ்கா சமீபமாயிருந்தது (யோவா 6:4).**

பஸ்கா யூதருக்கு முக்கியமான பண்டிகை. பஸ்கா பண்டிகை நெருங்கி வருகிறது. பஸ்கா பண்டிகை வருவதற்கு முப்பது நாட்களுக்கு முன்பே யூதர்கள் அந்தப்பண்டிகைக்கு தங்களை மார்க்கபிரகாரமாக ஆயத்தம்பண்ண ஆரம்பித்துவிடுவார்கள். பஸ்கா பண்டிகை நெருங்கி வரும்போது இயேசுகிறிஸ்து எருசலேமுக்குப் போவார் என்று எல்லோருக்கும் தெரியும். பண்டிகை காலத்தில் இயேசுகிறிஸ்துவை மற்ற இடங்களில் காணமுடியாது. ஆகையினால் பஸ்காவுக்கு முன்பாக இயேசுகிறிஸ்துவை காணவேண்டுமென்று அவரிடத்தில் திரளான ஜனங்கள் கூடிவந்திருக்கிறார்கள். நம்முடைய வாழ்க்கையில்கூட எல்லா வேளையிலும், எல்லா வாய்ப்புக்களும் நமக்கு கிடைக்காது. ஒரு சில வாய்ப்புக்கள் நம்மைவிட்டு விலகிப்போவதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால் நமக்குக் கிடைத்திருக்கும் வாய்ப்புக்களை ஜெபத்துடனும், உறுதியுடனும், உத்வேகத்துடனும், ஞானத்துடனும் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

**கொஞ்சம் கொஞ்சம்**
**யோவா 6 : 5-10**

**யோவா 6:5. இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து, திரளான ஜனங்கள் தம்மிடத்தில் வருகிறதைக் கண்டு, பிலிப்புவை நோக்கி: இவர்கள் சாப்பிடத்தக்கதாக அப்பங்களை எங்கேகொள்ளலாம் என்று கேட்டார்.**

**யோவா 6:6. தாம் செய்யப்போகிறதை அறிந்திருந்தும், அவனைச் சோதிக்கும்படி இப்படிக்கேட்டார்.**

**யோவா 6:7. பிலிப்பு அவருக்குப் பிரதியுத்தரமாக: இவர்களில் ஒவ்வொருவன் கொஞ்சங்கொஞ்சம் எடுத்துக்கொண்டாலும், இருநூறு பணத்துக்கு அப்பங்களும் இவர்களுக்குப் போதாதே என்றான்.**

**யோவா 6:8. அப்பொழுது அவருடைய சீஷரிலொருவனும், சீமோன் பேதுருவின் சகோதரனுமாகிய அந்திரேயா அவரை நோக்கி:**

**யோவா 6:9. இங்கே ஒரு பையன் இருக்கிறான், அவன் கையில் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களும் உண்டு, ஆனாலும் அவைகள் இத்தனை ஜனங்களுக்கு எம்மாத்திரம் என்றான்.**

## அதிகாரம் - 6

**யோவான் 6:10. இயேசு: ஜனங்களை உட்காரவையுங்கள் என்றார். அந்த இடம் மிகுந்த புல்லுள்ளதாயிருந்தது. பந்தியிருந்த புருஷர்கள் ஏறக்குறைய ஐயாயிரம்பேராயிருந்தார்கள்.**

### எங்கே கொள்ளலாம்

**இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து, திரளான ஜனங்கள் தம்மிடத்தில் வருகிறதைக் கண்டு, பிலிப்புவை நோக்கி: இவர்கள் சாப்பிடத்தக்கதாக அப்பங்களை எங்கேகொள்ளலாம் என்று கேட்டார் (யோவான் 6:5).**

திரளான ஜனங்கள் இயேசுவுக்குப் பின்செல்கிறார்கள். இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்துப்பார்க்கிறார். திரளான ஜனங்கள் தம்மிடத்தில் வருவதைக்காண்கிறார். தம்முடைய உபதேசத்தைக்கேட்க திரளான ஜனங்கள் நம்மிடத்தில் கூடிவரும்போது நமக்கு மிகுந்த சந்தோஷமாயிருக்கும். இயேசுகிறிஸ்துவுக்கும் திரளான ஜனங்களைப் பார்த்து சந்தோஷம் உண்டாயிற்று. இயேசுகிறிஸ்து எப்போதுமே தம்மிடத்தில் வருகிறவர்களின் நன்மைகளை விசாரிக்கிறவர். ஏழைக்கு இரங்கவேண்டும் என்பதே இயேசுகிறிஸ்துவின் உபதேசம்.

மிகுந்த தரித்திரத்தில் இருக்கிறவர்களுக்கு நம்மால் இயன்ற உதவிகளை உற்சாகமாக செய்யவேண்டும். நம்முடைய வீண் பெருமையினாலும், மேட்டிமையான சிந்தனையினாலும், மந்தையிலிருக்க வேண்டிய ஆடுகளை ஒநாய்கள் மத்தியில் துரத்திவிடக்கூடாது.

ஜனங்களை பார்த்தவுடன், அவர்களுக்கு போஜனம் கொடுக்கவேண்டுமென்று இயேசுகிறிஸ்து தீர்மானம்பண்ணுகிறார். தமக்கு அருகில் நிற்கும் பிலிப்புவை நோக்கி "இவர்கள் சாப்பிடத்தக்கதாக அப்பங்களை எங்கே கொள்ளலாம்" என்று கேட்கிறார். இயேசுகிறிஸ்து தமது ஊழியத்தை ஆரம்பித்த ஆரம்பகாலத்திலிருந்தே பிலிப்பு அவரோடுகூடயிருக்கிறான். அவர் செய்த அற்புதங்களையெல்லாம் தன் கண்களால் பார்த்திருக்கிறான். கானா ஊரிலே தண்ணீரைத் திராட்சரசமாக மாற்றின அற்புத சம்பவத்தின்போது பிலிப்புவும் அங்கு கூடவேயிருந்திருக்கிறான்.

இயேசுகிறிஸ்துவின் கிரியைகளுக்கு நாம் சாட்சியாக இருக்கும்போது, அவருடைய கிரியைகளின் நன்மைகளை மற்றவர்களுக்கும் பகிர்ந்துகொடுக்க வேண்டும். இயேசுகிறிஸ்து செய்த அற்புங்களைக் குறித்து நாம் மற்றவர்களுக்கு விசுவாசத்தோடு சாட்சி கொடுக்கவேண்டும். விசுவாச வார்த்தைகளை பேசவேண்டிய நாம், அவிசுவாச வார்த்தைகளைப் பேசக்கூடாது. "இவர்கள் சாப்பிடத்தக்கதாக அப்பங்களை எங்கே கொள்ளலாம்" என்று இயேசுகிறிஸ்து கேட்கும்போது, "இந்த வனாந்தரத்தில் இவர்கள் சாப்பிடுவதற்கு அப்பங்களை எங்கும் கொள்ளமுடியாது" என்று அவிசுவாசத்தோடு பேசக்கூடாது.

பிலிப்பு பெத்சாயிதா ஊரைச் சேர்ந்தவன். இயேசுகிறிஸ்து இப்போது இருக்கும் இந்த ஊருக்கு அருகிலேயே பெத்சாயிதா ஊர் இருக்கிறது. ஆகையினால் மற்ற சீஷர்களைவிட பிலிப்புவிற்கு இந்த ஊரைப்பற்றியும், இவர்களெல்லோரும் சாப்பிடத்தக்கதாக அப்பங்களை எங்கே கொள்ளலாம் என்பது பற்றியும் தெரிந்திருப்பதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால்தான் இயேசுகிறிஸ்து இதைப்பற்றி மற்ற சீஷர்களிடம் கேட்காமல், பிலிப்புவை நோக்கி "இவர்கள் சாப்பிடத்தக்கதாக அப்பங்களை எங்கே கொள்ளலாம்" என்று கேட்கிறார்.

தம்மிடத்தில் கூடியிருக்கும் திரளான ஜனங்ளெல்லோரும் தம்மோடுகூட போஜனம் பண்ணவேண்டுமென்று இயேசுகிறிஸ்து விரும்புகிறார். இயேசுகிறிஸ்து சத்தியத்தை உபதேசம்பண்ணிவிட்டு, ஒரு சில வியாதியஸ்தர்களை குணப்படுத்திவிட்டு, தம்முடைய கடமை முடிந்துவிட்டது என்று, அந்த ஜனங்களை அப்படியே விட்டுவிட்டு, அந்த இடத்தை விட்டு போய்விடுகிறவரல்ல. அவர்களுடைய எல்லா தேவைகளையும் சந்தித்து அவர்களுக்கு ஒரு குறைவுமில்லாமல், அவர்களை ஆசீர்வதிக்க விரும்புகிறவர். இயேசுகிறிஸ்துவின் ஆவிக்குரிய வரங்களை பெற்றுக் கொள்கிறவர்கள் அதற்குரிய கிரயத்தை அவருக்கு செலுத்த வேண்டியதில்லை. அதற்குப் பதிலாக அந்த வரங்களைப் பெற்றுக்கொண்டதற்காக, இயேசுகிறிஸ்து அவர்களுக்கு சன்மானம் கொடுப்பார்.

## அதிகாரம் - 6

இவர்கள் சாப்பிடத்தக்கதாக அப்பங்களை எங்கே கொள்ளலாம் என்று இயேசுகிறிஸ்து கேட்கும்போது, மற்றவர்களுக்கு நாம் உதவிபுரிய வேண்டும் என்னும் உபதேசத்தையும் இங்கு கூறுகிறார். மற்றவர்களுக்கு உதவிபுரியுமளவுக்கு நமக்கு வருமானம் இருக்கவேண்டும். இதற்காக நாம் பிறரை வஞ்சித்து பொருள் சேர்க்கக்கூடாது. "திருடுகிறவன் இனி திருடாமல், குறைச்சல் உள்ளவனுக்குக் கொடுக்கத்தக்கதாக தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலை செய்து பிரயாசப்படக்கடவன்" (எபே 4:28) என்று அப்போஸ்தலர் பவுல் தன் நிருபத்தில் எழுதுகிறார்.

**சோதிக்கும்படி**

**தாம் செய்யப்போகிறதை அறிந்திருந்தும், அவனைச் சோதிக்கும்படி இப்படிக்கேட்டார் (யோவா 6:6).**

தாம் என்ன செய்யப்போகிறோம் என்பது இயேசுகிறிஸ்துவுக்கு ஏற்கெனவே தெரியும். பிலிப்புவும் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறான். ஆயினும் அவனுடைய விசுவாசத்தை சோதிக்கும்படியாக இயேசுகிறிஸ்து அவனிடம் இந்தக் கேள்வியைக் கேட்கிறார். தாம் செய்யப்போகிறதை இயேசுகிறிஸ்து அறிந்திருக்கிறார். ஆனால் நமக்கோ, நாம் செய்யப்போவது என்ன என்பதும் நமக்குத் தெரியாது, அதுபோலவே இயேசுகிறிஸ்து என்ன செய்யப்போகிறார் என்பதும் நமக்குத் தெரியாது. இயேசுகிறிஸ்து தம்முடைய பிள்ளைகளை சோதிப்பதற்கு பிரியப்படுகிறார். அவர்களை வருத்தப்பட வைக்கவேண்டும் என்பதற்காக அல்ல, அவர்களை விசுவாசத்தில் தேர்ச்சி பெறச்செய்யவேண்டும் என்பதற்காகவே அவர் தம்முடைய பிள்ளைகளை சோதிக்கிறார்.

**போதாதே**

**பிலிப்பு அவருக்குப் பிரதியுத்தரமாக: இவர்களில் ஒவ்வொருவன் கொஞ்சங்கொஞ்சம் எடுத்துக்கொண்டாலும், இருநூறு பணத்துக்கு அப்பங்களும் இவர்களுக்குப் போதாதே என்றான் (யோவா 6:7).**

இயேசுவின் கேள்விக்கு பிலிப்பு தனக்குத் தெரிந்த பதிலைக் கூறுகிறான். "இருநூறு பணத்து அப்பங்களும் இவர்களுக்குப் போதாதே" என்று பிலிப்பு கூறுகிறான். நம்மிடம் இருநூறு பணம் இருந்தாலும், இந்தக் கிராமத்தில் அத்தனை பணத்திற்கும் அப்பங்கள் வாங்குவதற்கு, போதுமான அப்பங்கள் இருக்காது. ஒருவேளை இந்தக் கிராமத்தில் போதுமான அப்பங்கள் இருந்தாலும், அவற்றை இருநூறு பணம் கொடுத்து வாங்குவதற்கு நம்மிடத்திலும் அவ்வளவு பணமும் இருக்காது.

பிலிப்பு தன்னுடைய சிந்தனையில்கூட தாராளமாக சிந்திக்காமல், கஞ்சத்தனமாக சிந்திக்கிறான். "இவர்களில் ஒவ்வொருவனும் கொஞ்சம் கொஞ்சம் எடுத்துக்கொண்டாலும்" என்று தன்னுடைய சிந்தனையின் அளவையே சிறிதுபடுத்துகிறான். இயேசுகிறிஸ்து நம்மை பரிபூரணமாக ஆசீர்வதிக்க விரும்புகிறார். ஆனால் பிலிப்புவோ அந்த ஆசீர்வாதத்தை கொஞ்சம் கொஞ்சமாக கொடுக்க திட்டம் போடுகிறான்.

இயேசுகிறிஸ்து இத்தனை காலம் சீஷர்களோடு இருந்தபோதிலும், அவர்கள் இன்னும் அவரை சரியாக அறிந்துகொள்ளவில்லை. நம்முடைய ஜீவியத்திலும், இயேசுகிறிஸ்துவின் வல்லமையை நம்முடைய சுயசிந்தனையினால் மட்டுப்படுத்த முயற்சிபண்ணுகிறோம். சூழ்நிலை சரியில்லையென்றாலும், நாம் எடுக்கும் முயற்சி வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு நம்முடைய கண்களுக்கு பிரத்தியட்சமாக தெரியவில்லையென்றாலும், நம்முடைய முயற்சிகள் தோல்வியடைந்தாலும், நாம் தேவனுடைய வல்லமையை சரியாக விசுவாசிக்காமல், மட்டுப்படுத்த முயற்சி செய்கிறோம். நம்முடைய கண்களால் காணக்கூடிய அளவு மாத்திரமே நம்முடைய விசுவாசத்தின் அளவு இருக்கும். காணக்கூடாததை நம்மால் விசுவாசிக்க முடியாமல் போய்விடும். விசுவாசம் என்பது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமும் ஆகும்.

**எம்மாத்திரம்**

**அப்பொழுது அவருடைய சீஷரிலொருவனும், சீமோன் பேதுருவின் சகோதரனுமாகிய அந்திரேயா அவரை நோக்கி: இங்கே ஒரு பையன் இருக்கிறான், அவன் கையில் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களும் உண்டு, ஆனாலும் அவைகள் இத்தனை ஜனங்களுக்கு எம்மாத்திரம் என்றான் (யோவா 6:8,9).**

## அதிகாரம் - 6

இயேசுகிறிஸ்து பிலிப்புவிடத்தில் கேட்ட கேள்வியையும், பிலிப்பு இயேசுகிறிஸ்துவிடம் சொன்ன பதிலையும், சீஷர்களில் ஒருவனாகிய அந்திரேயா கவனித்துக் கேட்டுக்கொண்டிருக்கிறான். இவன் சீமோன் பேதுருவின் சகோதரன். இங்கு கூடியிருக்கிற ஜனங்களிடம் எத்தனை அப்பங்களும், எத்தனை மீன்களும் உள்ளன என்பது இவனுக்குத் தெரிந்திருக்கிறது.

இயேசுகிறிஸ்து தம்மிடத்தில் கூடிவந்திருக்கும் திரளான ஜனங்களிடத்தில் மனதுருக்கதோடு இருக்கிறார். அவர்கள்மீது இயேசுகிறிஸ்து வைத்திருக்கும் அன்பை அந்திரேயா புரிந்துகொள்கிறான். தங்களிடத்தில் உள்ளது எல்லாவற்றையும் இயேசுகிறிஸ்துவிடம் கொண்டு வந்து கொடுக்க அந்திரேயா ஆர்வமுள்ளனாக இருக்கிறான். கூடியிருக்கும் ஜனங்கள் பசியோடிருக்கிறார்கள். அவர்களிடத்திலுள்ளது அவர்களுக்கே போதாது. ஆனாலும் தங்களிடத்திலுள்ளதை இயேசுகிறிஸ்துவிடம் கொண்டு வந்து கொடுக்க அந்திரேயா ஆயத்தத்தோடிருக்கிறான். பிறருக்கு உதவிபுரிவது நம்முடைய வீட்டிலிருந்துதான் ஆரம்பமாகவேண்டும். மற்றவர்களிடமிருந்து வசூலித்து, பிறருக்கு உதவி செய்வதற்கு முன்பாக, நம்மால் முடிந்த உதவிகளை முதலாவதாக செய்ய ஆரம்பிக்க வேண்டும்.

தங்களிடத்திலுள்ளதை அந்திரேயா மறைக்க விரும்பவில்லை. பெரிய தேவை வரும்போது, தங்களிடத்திலுள்ள சிறிய பொருளும் தங்களுடைய கைகளைவிட்டு போய்விடுமோ என்று அந்திரேயா வருத்தப்படவில்லை. தங்களிடத்திலுள்ளதை இயேசுகிறிஸ்துவிடம் கொடுக்க அந்திரேயா முன்வருகிறான். இந்தக் கூட்டத்தில் ஒரு சிறு பையன் இருக்கிறான். அவன் கையில் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களும் உண்டு. ஜனங்கள் திரளாக இருந்தாலும் அங்கு மொத்தமே இவ்வளவுதான் இருக்கிறது. இவ்வளவு திரளான ஜனங்களுக்கு இது போதாது.

இவர்களிடத்தில் இருக்கும் போஜனமும் மிகவும் சாதாரண போஜனம்தான். இது வாற்கோதுமை அப்பம் என்று இங்கு குறிப்பிடப்பட்டிருக்கிறது. பொதுவாக இது ஏழை எளியவர்கள் புசிக்கும் அப்பம். கிறிஸ்துவும் அவர்களுடைய சீஷர்களும் வாற்கோதுமை அப்பத்தை சந்தோஷமாக புசித்திருக்கிறார்கள். இது சாதாரண போஜனமாக இருந்தாலும் அதற்காக அவர்கள் கர்த்தருக்கு நன்றி கூறி அதைப் புசிப்பது வழக்கம். நம்முடைய கைகளில் கர்த்தர் எந்த போஜனத்தைக் கொடுத்தாலும், அதை பயபக்தியோடு ஏற்றுக்கொண்டு, அந்த போஜனத்தைக் கொடுத்ததற்காக கர்த்தரைத் துதிக்கவேண்டும். வாற்கோதுமை அப்பத்தை இயேசுகிறிஸ்து புசித்திருக்கிறார். தேவகுமாரனாக இருந்தாலும் அவருக்கு இந்த பூமியில் சாதாரண போஜனமே கிடைத்திருக்கிறது. இதை சிந்தித்துப் பார்த்து, நாம் புசிக்கும் நேர்த்தியான போஜனத்திற்கு, நாம் தகுதியானவர்களல்ல என்பதை நினைவுகூர்ந்து, நமக்கு கிடைத்திருக்கும் இந்த போஜனத்தை கர்த்தர் நமக்கு திருப்தியாக கொடுத்ததற்காக அவரை நாம் நன்றியோடு துதிக்கவேண்டும்.

வனாந்தரத்தில் மிகவும் சிறிதளவு போஜனமே இருக்கிறது. வாற்கோதுமை அப்பமாக இருந்தாலும், அங்கு மொத்தம் ஐந்து அப்பங்கள் மாத்திரமே உள்ளது. ஒரு சிறு பையன்கூட ஐந்து அப்பத்தையும் மொத்தமாக, அவன் ஒருவனே புசித்து விடுவான். வாற்கோதுமை அப்பம் அளவில் சிறியது, மிகவும் மெல்லியதாக இருக்கும். இது தவிர அங்கு இரண்டு மீன்களும் உண்டு. இதுவும் பெரிய மீன்களல்ல. சிறு பையன் புசிக்கக்கூடிய சாதாரண சிறிய மீன்கள்தான். ஒவ்வொரு அப்பத்திற்கும் ஒரு மீன் என்று கணக்கிட்டாலும், மீதமுள்ள மூன்று அப்பங்களை மீன் இல்லாமல், வெறும் அப்பமாகத்தான் புசிக்க வேண்டும்.

இதுதான் இங்குள்ள நிலமை. அந்திரேயாவுக்கு இங்குள்ள நிலமை நன்றாக புரிந்திருக்கிறது. இந்த அப்பங்களும் மீன்களும் இங்குள்ள ஜனங்களுக்கு பிரயோஜனமுள்ளதாக இருக்கவேண்டுமென்று அந்திரேயா விரும்புகிறான். இயேசுகிறிஸ்து இதை வைத்து எத்தனை பேருக்கு போஜனம் கொடுத்தாலும், அது தங்களுக்கு ஆசீர்வாதமாக இருக்குமென்று விசுவாசிக்கிறான். பல சமயங்களில் நாம் நம்முடைய குறைகளையே சிந்தித்துப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். நமக்கு குறைவு வந்துவிடுமோ என்று பயந்து பிறருக்கு உதவிசெய்வதைப்பற்றி சிந்தித்துக்கூட பார்க்கமாட்டோம். நம்முடைய குறைவைப்பற்றிய பயம் நாம் பிறருக்கு உதவிபுரிவதற்கு நமக்குத் தடையாக இருக்கக்கூடாது.

## அதிகாரம் - 6

அந்திரேயா தங்களிடதிலுள்ளதை இயேசுகிறிஸ்துவிடம் கொடுக்க முன்வந்தாலும், அவனிடத்திலும் விசுவாசம் போதுமான அளவு இல்லை. "அவைகள் இத்தனை ஜனங்களுக்கு எம்மாத்திரம்" என்று அவிசுவாசத்தோடு கேட்கிறான். பிலிப்பும் அந்திரேயாவும் இயேசுகிறிஸ்துவோடு கூடவே இருக்கிறவர்கள். அவர் செய்கிற அற்புதங்களை தங்கள் கண்களால் பிரத்தியட்சமாக காண்கிறவர்கள். இயேசுகிறிஸ்துவோடு இவ்வளவு நெருக்கமாக இருக்கிறவர்களிடத்தில் இப்படிப்பட்ட அவிசுவாசம் இருக்கக்கூடாது.

### ஜனங்களை உட்காரவையுங்கள்

**இயேசு: ஜனங்களை உட்காரவையுங்கள் என்றார். அந்த இடம் மிகுந்த புல்லுள்ளதாயிருந்தது. பந்தியிருந்த புருஷர்கள் ஏறக்குறைய ஐயாயிரம்பேராயிருந்தார்கள் (யோவா 6:10).**

பிலிப்புவும் அந்திரேயாவும் அவிசுவாச வார்த்தைகளைக் கூறினாலும், இயேசுகிறிஸ்து தாம் செய்யப்போகிறதை அறிந்திருந்து, அதில் உறுதியாக இருக்கிறார். "ஜனங்களை உட்கார வையுங்கள்" என்று தம்முடைய சீஷர்களிடம் கூறுகிறார். இயேசுகிறிஸ்துவின் கட்டளை மிகவும் விநோதமானது. நாம் சந்தையில் பொருள் வாங்கவேண்டுமென்றால் நம்மோடு போதுமான அளவு பணத்தை எடுத்துச் செல்லவேண்டும். கையில் பணமே இல்லாமல் சந்தைக்கு போனால் ஒரு பொருளும் வாங்க முடியாது. இயேசுகிறிஸ்து இங்கு கூறுவது, கையில் பணமில்லாமல் சந்தையில் பொருள் வாங்கப்போவது போன்றுள்ளது. கையில் இருப்பதோ ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும் தான். பசியாக இருக்கிறவர்களோ திரளான ஜனங்கள்.

ஜனங்கள் அமர்ந்து புசிப்பதற்கு மேஜைகளோ, நாற்காலிகளோ இந்த வனாந்தரத்திலில்லை. அந்த இடம் மிகுந்த புல்லுள்ளதாயிருக்கிறது. இயேசுகிறிஸ்து பிரசங்கம்பண்ணும் இடத்தில் ஜனங்கள் திரளாக இருக்கிறார்கள். மிகுந்த புல் இருக்கிறது. ஆனால் போஜனம் குறைவாக இருக்கிறது. இந்த இடத்தில் மிகுந்த புல் இருப்பது மிகப்பெரிய ஆசீர்வாதம்.

இந்த புல் தரையின்மீது ஜனங்கள் அமர்ந்து புசிக்கலாம். இவர்கள் கூடியிருக்கும் இடம் வனாந்தரமாக இருந்தாலும், அமர்ந்து புசிக்கும் தரை குளிர்ச்சியாக இருக்கிறது.

இயேசுகிறிஸ்து இப்படிப்பட்ட காட்டுப் புல்லைப்பற்றி ஏற்கெனவே உபதேசம் பண்ணியிருக்கிறார். " உடைக்காகவும் நீங்கள் கவலைப் படுகிறதென்ன? காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப்பாருங்கள்; அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை; என்றாலும், சாலொமோன் முதலாய் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப்போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன். அற்ப விசுவாசிகளே! இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப் புல்லுக்கு தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா? ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று, கவலைப்படாதிருங்கள்" (மத் 6:28-31). உண்பதைப்பற்றி நாம் கவலைப்படாதிருக்க வேண்டும் என்று இயேசுகிறிஸ்து உபதேசம்பண்ணும்போது, இந்தக் காட்டுப்புல்லை ஒரு எடுத்துக்காட்டாக கூறினார். இப்போது அப்படிப்பட்ட புல்லின் மீதே அவர்களை பந்தியிருக்கச் செய்து, அவர்களுக்கு அற்புதமாக போஜனம்கொடுக்கிறார்.

பந்தியிருந்தவர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய ஐயாயிரம்பேர். இவர்கள் புருஷர்கள். ஆகையினால் இவர்களைத் தவிர இத்தனை திரளான ஸ்திரீகளும், பிள்ளைகளும் அங்கு இருப்பதற்கு வாய்ப்புள்ளது. "சேனைகளின் கர்த்தர் இந்த மலையிலே சகல ஜனங்களுக்கும் ஒரு விருந்தை ஆயத்தப்படுத்துவார்" (ஏசா 25:6) என்று ஏசாயா தீர்க்கதரிசி ஏற்கெனவே முன்னறிவித்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் சகல ஜனங்களுக்கும் ஆயத்தப்படுத்தப்பட்டிருக்கும் விருந்தைப்போன்றிருக்கிறது. தம்மிடத்தில் வருகிற யாரையும் இயேசுகிறிஸ்து புறம்பே தள்ளிவிடாமல், அவர்களுக்கு தமது மன்னாவைக் கொடுக்கிறார்.

### ஐயாயிரம் புருஷர்கள்
### யோவா 6 : 11-14

**யோவா 6:11. இயேசு அந்த அப்பங்களை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, சீஷர்களிடத்தில் கொடுத்தார்; சீஷர்கள் பந்தியிருந்தவர்களுக்குக் கொடுத்தார்கள்; அப்படியே மீன்களையும் அவர் எடுத்து அவர்களுக்கு வேண்டியமட்டும் கொடுத்தார்.**

## அதிகாரம் - 6

**யோவா 6:12. அவர்கள் திருப்தியடைந்தபின்பு, அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒன்றும் சேதமாய்ப் போகாதபடிக்கு மீதியான துணிக்கைகளைச் சேர்த்துவையுங்கள் என்றார்.**

**யோவா 6:13. அந்தப்படியே அவர்கள் சேர்த்து, வாற்கோதுமை அப்பங்கள் ஐந்தில் அவர்கள் சாப்பிட்டு மீதியான துணிக்கைகளினாலே பன்னிரண்டு கூடைகளை நிரப்பினார்கள்.**

**யோவா 6:14. இயேசு செய்த அற்புதத்தை அந்த மனுஷர் கண்டு: மெய்யாகவே இவர் உலகத்தில் வருகிறவரான தீர்க்கதரிசி என்றார்கள்.**

**ஸ்தோத்திரம்பண்ணி**

**இயேசு அந்த அப்பங்களை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, சீஷர்களிடத்தில் கொடுத்தார்; சீஷர்கள் பந்தியிருந்தவர்களுக்குக் கொடுத்தார்கள்; அப்படியே மீன்களையும் அவர் எடுத்து அவர்களுக்கு வேண்டியமட்டும் கொடுத்தார் (யோவா 6:11).**

தம்மிடத்தில் கொடுக்கப்பட்ட ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் இயேசுகிறிஸ்து பகிர்ந்து கொடுக்கிறார். அந்த அப்பங்களை எடுத்து ஸ்தோத்திரம்பண்ணி சீஷர்களிடத்தில் கொடுக்கிறார். நம்முடைய போஜனத்திற்காக நாமும் கர்த்தருக்கு ஸ்தோத்திரம் பண்ணவேண்டும். தேவனுடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும் நாம் நம்முடைய அன்றாட போஜனத்தைப் பெற்றுக்கொள்கிறோம். நம்முடைய போஜனம் குறைவாக இருந்தாலும், நேர்த்தியாக இல்லாமல் போனாலும், நமக்குக் கொடுக்கப்படும் போஜனத்திற்காக நாம் தேவனுக்கு நன்றியுள்ளவர்களாக இருக்கவேண்டும். ஏனெனில் நம்முடைய போஜனங்கள் அனைத்தையும் நாம் தேவனிடத்திலிருந்தே பெற்றுக்கொள்கிறோம்.

இயேசுகிறிஸ்து அப்பங்களை எடுத்து ஸ்தோத்திரம்பண்ணி சீஷர்களிடத்தில் கொடுக்கிறார். இயேசுகிறிஸ்துவின் கைகளிலிருந்து, ஸ்தோத்திரம் பண்ணப்பட்ட அப்பங்கள், சீஷர்களின் கைகளில் கொடுக்கப்படுகிறது.

நமக்கு யாரிடத்திலிருந்து ஆசீர்வாதம் வந்தாலும், அதற்கு மூலகாரணமாக இருக்கிறவர் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துதான். எல்லா ஆசீர்வாதங்களும், எல்லா ஆறுதல்களும் தேவனிடத்திலிருந்தே நமக்கு புறப்பட்டு வருகிறது. நமக்கு நன்மைகளைக் கொடுப்பது யாராக இருந்தாலும், அந்த நன்மைகளை அனுப்புகிறவர் நம்மீது மனதுருகுகிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தான்.

இயேசுகிறிஸ்து தம்முடைய பிள்ளைகளாகிய நமக்கு ஆசீர்வாதங்களைக் கொடுக்கும்போது, குறைவாக கொடுப்பதில்லை. நமக்கு வேண்டிய மட்டும் கொடுக்கிறார். நமக்குத் திருப்தியுண்டாகும் வரையிலும் தேவனுடைய ஆசீர்வாதம் வந்துகொண்டேயிருக்கும். ஜனங்கள் சாதாரணமாக புசிப்பதற்கும், இங்கு புசிப்பதற்கும் மிகுந்த வேறுபாடுள்ளது. இயேசுகிறிஸ்து ஸ்தோத்திரம்பண்ணி கொடுத்துள்ள அப்பங்களும் மீன்களும் சாதாரண போஜனமல்ல. இது அற்புதமான போஜனம்.

தம்மை விசுவாசித்து தம்மிடத்தில் வருகிற அனைவருக்கும் இயேசுகிறிஸ்து ஜீவஅப்பத்தைக் கொடுக்கிறார். நமக்கு வேண்டிய மட்டும் கொடுக்கிறார். அவர் ஒருபோதும் நம்மை பசியாக விட்டுவிடுவதில்லை. ஜனங்களிடத்தில் இரண்டு சிறு மீன்கள் மாத்திரமே இருந்தது. இந்த சிறிய மீன்களைக்கூட, இயேசுகிறிஸ்து ஆசீர்வதித்து கொடுக்கும்போது, அது அவர்களுக்கு வேண்டிய மட்டும் போதுமானதாயிற்று. ஒரு குறைவுமில்லாமல் நம்மை திருப்தியாக ஆசீர்வதிக்கிற இயேசுகிறிஸ்து, இங்கு தம்முடைய வார்த்தையின் பிரகாரம் புல்லின்மேல் பந்தியிருக்கிற திரளான ஜனங்களுக்கு, திருப்தியாக போஜனம்கொடுக்கிறார். இது நிறைவான போஜனம்.

**மீதியான துணிக்கைகள்**

**அவர்கள் திருப்தியடைந்தபின்பு, அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒன்றும் சேதமாய்ப் போகாதபடிக்கு மீதியான துணிக்கைகளைச் சேர்த்துவையுங்கள் என்றார். அந்தப்படியே அவர்கள் சேர்த்து, வாற்கோதுமை அப்பங்கள் ஐந்தில் அவர்கள் சாப்பிட்டு மீதியான துணிக்கைகளினாலே பன்னிரண்டு கூடைகளை நிரப்பினார்கள் (யோவா 6:12,13).**

## அதிகாரம் - 6

இயேசுகிறிஸ்து அப்பங்களையும் மீன்களையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி சீஷர்களிடத்தில் கொடுக்கிறார். அவர்களும் அவற்றை பந்தியிருக்கிறவர்களுக்குக் கொடுக்கிறார்கள். அவர்கள் வேண்டிய மட்டும் பெற்றுக்கொண்டு, அப்பங்களையும் மீன்களையும் புசித்து திருப்தியடைகிறார்கள். தம்மிடத்தில் வருகிறவர்களை திருப்தியாக போஷிக்கவேண்டும் என்பதில் இயேசுகிறிஸ்து அக்கரையோடிருக்கிறார். அதேவேளையில் அவர்களுக்கு பரிமாறப்பட்ட அப்பமும் மீனும் ஒன்றும் சேதமாய் போகாதபடிக்கு, மீதியான துணிக்கைகளைக் குறித்தும் இயேசுகிறிஸ்து மிகுந்த அக்கரையோடுள்ளவராக, "மீதியான துணிக்கைகளை சேர்த்து வையுங்கள்" என்று கூறுகிறார். தேவன் நமக்கு கிருபையாக கொடுக்கும் எதையும் சேதப்படுத்திவிடக் கூடாது. தேவனுடைய நல்ல சிருஷ்டிகள் எதையும் நாம் வீணாக்காதவாறு மிகுந்த எச்சரிப்போடு இருக்கவேண்டும். தேவன் நமக்கு பராமரிப்பாகக் கொடுக்கும் ஒவ்வொரு காரியத்திலும் நாம் மிகுந்த அக்கரை செலுத்த வேண்டும்.

தேவன் நமக்குக் கொடுப்பதில் மீதியாக இருப்பவற்றை சேர்த்து வைக்கவேண்டுமென்பது அவருடைய நீதியாக இருக்கிறது. நாம் திருப்தியடையும்போது, தேவையுள்ள மற்றவர்களைப்பற்றியும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நமக்கும் இனிமேல் தேவைகள் உண்டாகலாம். நாம் சேர்த்து வைத்தவற்றை இனிமேல் தேவை உண்டாகும்போது பயன்படுத்திக்கொள்ள அக்கரையோடிருக்க வேண்டும்.

மற்றவர்களுக்கு உதவிபுரிகிறவர்கள், அவற்றை பயபக்தியோடு செய்யவேண்டும். ஏனோதானோவென்று பிறருக்கு உதவிபுரிவது தேவனுடைய பிரமாணமல்ல. மிகுந்த அக்கரையோடும், கரிசனையோடும் நாம் பிறருக்கு உதவிபுரியவேண்டும். பந்தியிருந்தவர்களுக்கு சீஷர்கள் போஜனத்தைப் பரிமாறுகிறார்கள். எல்லோரும் திருப்தியடையும் வரையிலும் இயேசுகிறிஸ்து பொறுமையோடு காத்துக்கொண்டிருக்கிறார். அதன் பின்பே ஒன்றும் சேதமாய் போகாதபடிக்கு மீதியான துணிக்கைகளை சேர்த்து வையுங்கள் என்று தம்முடைய சீஷர்களுக்குக் கட்டளையிடுகிறார்.

பிறருக்கு உதவிபுரிய நம்மிடத்தில் வாய்ப்பு இருக்கும்போது, அதை பயன்படுத்துவதற்கு முன்பாகவே, சேர்த்து வைக்கவேண்டுமென்று பிரயாசப்படக்கூடாது. தேவன் நம்மிடத்தில் என்ன நோக்கத்திற்காக ஒரு ஆசீர்வாதத்தைக் கொடுத்திருக்கிறாரோ, அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு நாம் முதலாவதாக பிரயாசப்படவேண்டும். அதன்பின்பே சேர்த்து வைப்பதைப்பற்றி யோசிக்கவேண்டும். மீதியானவற்றை சேர்த்து வைக்கவேண்டுமென்பது இயேசுகிறிஸ்துவின் பிரமாணம். தேவன் நம்மிடத்தில் கிருபையாகக் கொடுத்திருக்கும் ஒன்றும் சேதமாய் போகாதபடிக்கு மிகுந்த எச்சரிக்கையோடு நிர்வாகம்பண்ணவேண்டும்.

இயேசுகிறிஸ்துவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, சீஷர்கள் மீதியான துணிக்கைகளைச் சேர்த்துவைக்கிறார்கள். எல்லோரும் வேண்டிய மட்டும் புசித்து திருப்தியடைந்த பின்பும் போஜனம் மீதமாக இருக்கிறது. இது தேவனுடைய தாராளமான கிருபையைக் காண்பிக்கிறது. தேவன் நமக்கு உதவி செய்யும்போது அவர் தம்முடைய கரங்களை சுருக்கிக் கொள்வதில்லை. தாராளமாக திறந்து நம்மை அவருடைய நன்மையினாலும் கிருபையினாலும் நிரப்புகிறார். ஏராளமான ஜனங்கள் பந்தியிருக்கும்போது அவர்களுடைய தேவைகளுக்கு அதிகமாகவே அவர்களுக்கு போஜனம்கொடுக்கிறார். அவர்கள் திருப்தியடைந்தால் மாத்திரம் போதாது என்று, தம்முடைய பராமரிப்பு மீதமாக இருக்கும் அளவுக்கு அங்கு அதிகமாக ஆசீர்வதிக்கிறார். நாம் கேட்டுக் கொள்வதற்கும், வேண்டிக்கொள்வதற்கும், நினைப்பதற்கும் அதிகமாக இயேசுகிறிஸ்து நம்மை ஆசீர்வதிக்கிறார்.

தேவனுடைய தெய்வீக ஆசீர்வாதம் இங்கு தாராளமாக அருளப்படுகிறது. நம்முடைய பிதாவின் வீட்டில் நமக்குப் போதுமான அளவு போஜனமுள்ளது. நாம் வேண்டிய மட்டும் புசித்து திருப்தியடைந்தது போக பிதாவின் களஞ்சியத்தில் மீதமுள்ளதும் இருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் கட்டளையின் பிரகாரம் சீஷர்கள் மீதியான துணிக்கைகளை சேகரித்து, அவைகளை பன்னிரண்டு கூடைகளில் நிரப்புகிறார்கள். ஒவ்வொரு சீஷருக்கும் ஒரு கூடை என்னும் வீதத்தில் இங்கு பன்னிரண்டு கூடைகளில் மீதியான துணிக்கைகள் நிரப்பப்படுகிறது. பந்தியிலிருந்த ஜனங்களுக்கு சீஷர்கள் பரிமாறுகிறார்கள். அவர்கள் செய்த ஊழியத்திற்கு இயேசுகிறிஸ்து இந்த பன்னிரண்டு கூடைகள் நிறைய துணிக்கைகளைக் கொடுத்து அவர்களை ஆசீர்வதிக்கிறார். இயேசுகிறிஸ்து எப்போதுமே தம்முடைய ஊழியக்காரர்களின் நன்மைகளை விசாரிக்கிறவர்.

## அதிகாரம் - 6

**தீர்க்கதரிசி**

**இயேசு செய்த அற்புதத்தை அந்த மனுஷர் கண்டு: மெய்யாகவே இவர் உலகத்தில் வருகிறவரான தீர்க்கதரிசி என்றார்கள் (யோவா 6:14).**

ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கொண்டு ஏறக்குறைய ஐயாயிரம் புருஷரைப் போஷித்த அற்புத சம்பவம், ஜனங்களுடைய உள்ளத்தில் பதிகிறது. இயேசு செய்த அற்புதத்தை அந்த மனுஷர் கண்டு "மெய்யாகவே இவர் உலகத்தில் வருகிறவரான தீர்க்கதரிசி" என்று கூறுகிறார்கள். யூதமார்க்கத்தைச் சேர்ந்தவர்கள் இயேசுகிறிஸ்துவுக்கு சத்துருக்களாக இருந்தாலும், இந்த உலகத்திற்கு மேசியா வருவாரென்று அவர்களும் எதிர்பார்க்கிறார்கள். அந்த மேசியா பிரதான தீர்க்கதரிசியாக இருப்பாரென்றும் அவர்கள் நம்புகிறார்கள். பரிசேயர்கள் இந்த ஜனங்களைப்பற்றி கூறும்போது "இவர்கள் நியாயப்பிரமாணத்தை அறியாதவர்கள்" என்று கூறுகிறார்கள். ஆனால் இவர்களுக்கோ பரிசேயருக்குத் தெரிந்திருக்கும் சத்தியத்தைவிட அதிகமாக தெரிந்திருக்கிறது. நியாயப்பிரமாணத்தின் ஆரம்பத்தை மாத்திரமே பரிசேயர்கள் தெரிந்திருக்கிறார்கள். ஆனால் இந்த ஜனங்களோ நியாயப்பிரமாணத்தின் முடிவையே தெரிந்துவைத்திருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவே வாக்குப்பண்ணப்பட்டிருக்கிற மேசியா என்பதை அவர் செய்த அற்புதங்கள் தெளிவாக நிரூபிக்கிறது. இயேசுகிறிஸ்துவே தேவனிடத்திலிருந்து வந்திருக்கும் போதகர் என்பதையும், பெரிய தீர்க்கதரிசி என்பதையும் அவருடைய அற்புதங்கள் உறுதிபண்ணுகிறது. இயேசுகிறிஸ்து மெய்யாகவே உலகத்தில் வருகிறவரான தீர்க்கதரிசியென்பதை ஏராளமானோர் அறிந்து வைத்திருக்கிறார்கள். என்றாலும் அவருடைய உபதேசத்தை இவர்கள் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வதில்லை. இயேசுகிறிஸ்துவை தீர்க்கதரிசியென்று புரிந்துகொள்ளும் ஞானம் பலருக்கு இருக்கிறது. ஆனால் அவர்கள் அந்த தீர்க்கதரிசியின் வார்த்தைகளை கேட்க மனதில்லாதவாறு தங்களுடைய செவிகளை அடைத்துக்கொள்கிறார்கள்.

### இயேசு கடலின்மேல் நடக்கிறார்
### யோவா 6 : 15-21

**யோவா 6:15. ஆதலால் அவர்கள் வந்து, தம்மை ராஜாவாக்கும்படிப் பிடித்துக் கொண்டுபோக மனதாயிருக்கிறார்களென்று இயேசு அறிந்து, மறுபடியும் விலகி, தனியே மலையின்மேல் ஏறினார்.**

**யோவா 6:16. சாயங்காலமானபோது அவருடைய சீஷர்கள் கடற்கரைக்குப் போய்,**

**யோவா 6:17. படவில் ஏறி, கடலின் அக்கரையிலுள்ள கப்பர்நகூமுக்கு நேராய்ப்போனார்கள்; அப்பொழுது இருட்டாயிருந்தது, இயேசுவும் அவர்களிடத்தில் வராதிருந்தார்.**

**யோவா 6:18. பெருங்காற்று அடித்தபடியினாலே கடல் கொந்தளித்தது.**

**யோவா 6:19. அவர்கள் ஏறக்குறைய மூன்று நாலுமைல்தூரம் தண்டுவலித்துப்போனபொழுது, இயேசு கடலின்மேல் நடந்து, படவுக்குச் சமீபமாய் வருகிறதைக் கண்டு பயந்தார்கள்.**

**யோவா 6:20. அவர்களை அவர் நோக்கி: நான் தான், பயப்படாதிருங்கள் என்றார்.**

**யோவா 6:21. அப்பொழுது அவரைப் படவில் ஏற்றிக்கொள்ள மனதாயிருந்தார்கள்; உடனே படவு அவர்கள் போகிற கரையைப் பிடித்தது.**

**ராஜாவாக்கும்படி**

**ஆதலால் அவர்கள் வந்து, தம்மை ராஜாவாக்கும்படிப் பிடித்துக்கொண்டுபோக மனதாயிருக்கிறார்களென்று இயேசு அறிந்து, மறுபடியும் விலகி, தனியே மலையின்மேல் ஏறினார் (யோவா 6:15).**

இயேசுகிறிஸ்து மெய்யாகவே உலகத்தில் வருகிறவரான தீர்க்கதரிசியென்பதை இந்த ஜனங்கள் அறிந்துகொள்கிறார்கள். ஆகையினால் அவர்கள் இயேசுகிறிஸ்துவை ராஜாவாக்கும்படி பிடித்துக்கொண்டு போக மனதாயிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின்மீது இவர்கள் அன்பாகவும் பக்திவைராக்கியமாகவும் இருக்கிறார்கள். ஆனால் இவர்களுடைய வைராக்கியம் தவறான பாதையில் இவர்களைச் சிந்திக்க வைக்கிறது. இயேசுகிறிஸ்துவின் தெய்வீக சித்தத்தை புரிந்துகொள்வதற்குப் பதிலாக அவரை ஒரு ராஜாவாக ஆக்கவேண்டுமென்று மனதாயிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின்மீது இவர்கள் அதிக மரியாதை வைத்திருப்பதன் விளைவினால், இவர்களுடைய உள்ளத்தில் இப்படிப்பட்ட பக்திவைராக்கியம் உண்டாயிற்று.

## அதிகாரம் - 6

இந்த உலகத்தில் இயேசுகிறிஸ்துவைப் போல தங்களுக்கு நன்மை செய்யக்கூடிய ஒரு ராஜா வேண்டுமென்று இவர்கள் விரும்புகிறார்கள். பரலோகத்திலுள்ள போஜனத்தைப்போல, தங்களுக்கு அற்புதமான போஜனத்தைக்கொடுத்த இயேசுகிறிஸ்துவை இந்த ஜனங்கள் கனப்படுத்த விரும்புகிறார்கள். அவரை தங்களுக்கு ராஜாவாக்கி சிம்மாசனத்தில் அமரச் செய்யவேண்டுமென்று மனதாயிருக்கிறார்கள். தங்களுக்கு அற்புதமாக போஜனம்கொடுத்த இயேசுகிறிஸ்துவை கனப்படுத்த வேண்டுமென்று முயற்சி செய்கிறார்கள். இந்த ஜனங்கள் இயேசுகிறிஸ்துவை தங்கள் தேசத்தின் சிம்மாசனத்தில் அமர வைப்பதற்குப் பதிலாக, தங்களுடைய இருதயங்களின் சிம்மாசனத்தில் அவரை அமர வைக்கவேண்டும். அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து அவருடைய சித்தத்தைச் செய்ய இவர்கள் தங்களை ஒப்புக்கொடுக்க வேண்டும். இப்படிச் செய்வதற்குப் பதிலாக அவர்கள் உலகப்பிரகாரமாக சிந்திக்கிறார்கள். உலகப்பிரகாரமான பக்திவைராக்கியம் தவறானது.

இவர்கள் இயேசுகிறிஸ்துவின் ராஜ்யத்தை சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. அவருடைய ராஜ்யம் இந்த உலகத்திற்குரியதல்ல. அப்படியிருந்திருக்குமானால் தேவனுடைய ராஜ்யம் ஆடம்பரமாகவும் ஆரவாரமாகவும் இந்த பூமியில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும். இந்த உலகத்தில் இயேசுகிறிஸ்து ஸ்தாபிக்கப்போகும் ராஜ்யம் பரலோக ராஜ்யமாகவே இருக்கும். இந்த ராஜ்யம் இந்த உலகத்திற்குரியதல்ல. இது பரலோகத்திற்குரியது. தேவனுடைய சித்தத்தை இந்த ஜனங்கள் சரியாக புரிந்துகொள்ளவில்லை. சிங்காசனத்தினாலும், கிரீடங்களினாலும் இவர்கள் தேவனை மகிமைப்படுத்த வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ தம்முடைய ஜீவனை கல்வாரி சிலுவையில் ஒப்புக்கொடுத்து மகிமையடைந்திருக்கிறார்.

கிறிஸ்துவின் ராஜ்யத்தை நாம் சரியாக புரிந்துகொண்டால் மாத்திரமே, அவருடைய ராஜ்யத்தை ஸ்தாபிப்பதிலும், விஸ்தாரம் பண்ணுவதிலும் அவருடைய ஊழியக்காரர்களாக ஊழியம் செய்ய முடியும். இந்த ஜனங்கள் இயேசுகிறிஸ்துவை ராஜாவாக்க வேண்டுமென்று மனதாயிருப்பது அவர்களுடைய மாம்சத்தின் விருப்பம்.

தாங்கள் எந்த வேலையும் செய்யாமல், தங்களுக்கு இலவசமாகவும் திருப்தியாகவும் யாராவது நேர்த்தியான போஜனத்தைக் கொடுத்தால், அவரைத் தங்கள் தலைவராக ஏற்றுக்கொண்டு அவரைத் தங்களுக்கு ராஜாவாக ஆக்க விரும்புவது மனுஷருடைய சுபாவம்.

ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்தில் கர்த்தருக்கு கீழ்ப்படியாமற் போனார்கள். இதனால் அவர்களுக்கு உண்டான சாபத்தினிமித்தம் அவர்கள் நிலத்தில் பிரயாசப்பட்டு, வியர்வை சிந்தி போஜனம்பண்ண வேண்டிய நிலமை அவர்களுக்கு உண்டாயிற்று. இயேசுகிறிஸ்து அற்புதமாக போஜனம் கொடுத்ததினிமித்தம் அந்த சாபம் தங்களைவிட்டு நீக்கப்பட்டதாக இவர்கள் நினைக்கிறார்கள். இது உலகப்பிரகாரமான சிந்தனை. இக்காலத்தில் யூதர்கள் ரோமப்பேரரசின் ஆளுகைக்கு உட்பட்டிருக்கிறார்கள். இந்த பேரரசின் மூலமாக யூதர்கள் பல பாடுகளையும் உபத்திரவங்களையும் அனுபவிக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவை ராஜாவாக்கினால் ரோமப்பேரரசை அசைத்துவிடலாமென்றும், ரோமப்பேரரசின் ஆளுகையிலிருந்து இயேசுகிறிஸ்து தங்களுக்கு பூரண விடுதலையைக் கொடுப்பாரென்றும் இந்த ஜனங்கள் எதிர்பார்க்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் ஆவிக்குரிய ஊழியத்தை இந்த ஜனங்கள் உலகப்பிரகாரமான காரியங்களுக்கு பயன்படுத்திக்கொள்ள மனதாயிருக்கிறார்கள். இவர்கள் செய்கிற தவறை இக்காலத்தில் ஏராளமான விசுவாசிகளும் செய்கிறார்கள். ஆவிக்குரிய காரியங்களையும் உலகப்பிரகாரமான காரியங்களையும் ஒன்றாக பாவித்து, இவ்விரண்டிற்கும் வித்தியாசம் காண முடியாதவாறு ஆவிக்குரிய குருடர்களாக இருக்கிறார்கள்.

இந்த பூமியில் ஒரு உலகப்பிரகாரமான ராஜ்யத்தை ஸ்தாபிக்கவேண்டுமென்பது இயேசுகிறிஸ்துவின் சித்தமல்ல. இயேசுகிறிஸ்துவின் சித்தமும் இந்த ஜனங்களுடைய விருப்பமும் முரண்பட்டிருக்கிறது. விசுவாசிகளாகிய நம்மிடத்தில் இயேசுகிறிஸ்துவிடத்தில் இருக்கும் சிந்தையே காணப்படவேண்டும். தங்களுடைய விருப்பத்தை இயேசுகிறிஸ்து நிறைவேற்றுவாரோ, அல்லது நிறைவேற்றாமல் போய்விடுவாரோ என்னும் சந்தேகம் இந்த மனுஷருக்குள் வந்தபடியினால், அவரை பலவந்தமாக பிடித்துக் கொண்டுபோய் ராஜாவாக்கிவிடலாமென்று மனதாயிருக்கிறார்கள்.

## அதிகாரம் - 6

இயேசுகிறிஸ்துவும் மனுஷரால் வரும் மேன்மையை தேடுகிறவரல்ல. இந்த உலகத்தில் ராஜாவாக வேண்டும் என்பது இயேசுகிறிஸ்துவின் சித்தமுமல்ல. அவர் மனத்தாழ்மையுள்ளவர். பெருமையில்லாதவர். ராஜாவாவது தம்முடைய சித்தமில்லாதபடியினால் இயேசுகிறிஸ்து மறுபடியும் ஜனங்களைவிட்டு விலகி, தனியே மலையின்மீது ஏறிப்போகிறார். மனுஷரால் வரும் மேன்மையில் இயேசுகிறிஸ்து பிரியப்படவில்லை.

இயேசுகிறிஸ்துவின் இந்தச் செய்கை அவருடைய ஊழியத்தை செய்கிறவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக இருக்கவேண்டும். உலகப்பிரகாரமான மகிமையையோ மேன்மையையோ நாம் தேடிப்போகக்கூடாது. மனுஷர் நம்மை புகழவேண்டுமென்று எதிர்பார்க்கக்கூடாது. திரளான ஜனங்களுக்கு முன்பாக நாம் ஒரு முக்கியமான நபராக இருக்கவேண்டுமென்று ஆசைப்படக்கூடாது. வீணான மகிமையில் பிரியப்பட்டு நம்முடைய ஊழியத்தை இழந்துபோகக்கூடாது.

இயேசுகிறிஸ்து ஜனங்களைவிட்டு விலகி தனியே மலையின்மேல் ஏறிப்போகிறார். அந்த மலையின்மேல்தான் சற்று நேரத்திற்கு முன்பு தம்முடைய சீஷருடனே கூட உட்கார்ந்திருந்தார் (யோவா 6:3). அதே மலைக்கு இயேசுகிறிஸ்து தனியாக இருக்கும்படிக்கு போகிறார். பிதாவாகிய தேவனோடு ஐக்கியமாக இருப்பதற்காக, ஜெபம்பண்ணுவதற்காக இயேசுகிறிஸ்து இதுபோன்ற தனிமையான சூழ்நிலைகளை விரும்புவது வழக்கம். நாமும் தேவனுடைய சமுகத்தில் தனிமையாக இருக்கும்போது நம்முடைய ஆத்துமா தனித்துவிடப்படுவதில்லை. ஏனெனில் நாம் தேவனுடைய சமுகத்தில் இருக்கும்போது தேவனுடைய பிரசன்னம் நம்முடைய ஆத்துமாவில் நம்மோடு கூடவே இருக்கும்.

### இருட்டும் கடல் கொந்தளிப்பும்

**சாயங்காலமானபோது அவருடைய சீஷர்கள் கடற்கரைக்குப் போய், படவில் ஏறி, கடலின் அக்கரையிலுள்ள கப்பர்நகூமுக்கு நேராய்ப்போனார்கள்; அப்பொழுது இருட்டாயிருந்தது, இயேசுவும் அவர்களிடத்தில் வராதிருந்தார். பெருங்காற்று அடித்தபடியினாலே கடல் கொந்தளித்தது (யோவா 6:16-18).**

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் சாயங்காலமானபோது, கடற்கரைக்குப்போய், ஒரு படவில் ஏறுகிறார்கள். பகல் வேளையில் தங்களுக்கு நியமிக்கப்பட்ட எல்லா வேலைகளையும் செய்து முடித்த பின்பு, சாயங்காலத்தில் தங்கள் வீட்டை நோக்கிப்போகிறார்கள். அவர்களுடைய வீடு திபேரியா கடலின் அக்கரையிலுள்ள கப்பர்நகூம் பட்டணத்திலுள்ளது.

அவர்கள் கடலில் பிரயாணம்பண்ணுகிறபோது புயல்காற்று வீசுகிறது. சற்று நேரத்திற்கு முன்பு அவர்கள் இயேசுகிறிஸ்துவோடும் திரளான ஜனங்களோடும் பந்தியில் அமர்ந்து போஜனம்பண்ணினார்கள். இப்போது புயல்காற்று வீசுகிறது. நம்முடைய வாழ்வில்கூட புயலுக்குப் பின் அமைதியும், அமைதிக்குப் பின் புயலும் வருவதற்கு வாய்ப்புள்ளது. பிரகாசமான சூரிய வெளிச்சத்திற்குப் பின்பு நாம் இருட்டான வேளையை எதிர்பார்க்கவேண்டும். அதுபோலவே சமாதானமான ஆறுதலான வேளைக்குப் பின்பு புயல்காற்றைப்போல கொந்தளிக்கும் வேளையும் வருவதற்கு வாய்ப்புள்ளது என்று எதிர்பார்க்க வேண்டும்.

சீஷர்கள் கடலில் பிரயாணம் பண்ணுகிறபோது இருட்டாயிருக்கிறது. சில சமயங்களில் தேவனுடைய பிள்ளைகளுக்கு பாடுகளும் உபத்திரவங்களும் வரும்போது, அதிலிருந்து எப்படி தப்பித்துக்கொள்வது என்று வழி தெரியாமல் தவிப்பார்கள். இருட்டாக இருக்கிறபடியினால் கடல் கொந்தளிப்புக்கு காரணம் என்ன என்று அவர்களால் சரியாக புரிந்துகொள்ள முடியவில்லை. கடல் கொந்தளிப்பின் வேகம் எவ்வளவு இருக்குமென்றும், இதன் முடிவு எப்படியிருக்குமென்றும் அவர்களால் நிதானித்துப் பார்க்க முடியவில்லை.

சீஷர்கள் கடலில் பிரயாணம் பண்ணுகிற போது இயேசுகிறிஸ்து அவர்களிடத்தில் வராதிருக்கிறார். விசுவாசிகளாகிய நம்முடைய வாழ்க்கையில், இயேசுகிறிஸ்து நம்மோடுகூட இருக்கவில்லையென்றால், அது நமக்கு மிகப்பெரிய பிரச்சனையாகவே இருக்கும். இங்கு பெருங்காற்று அடித்தபடியினாலே கடல் கொந்தளிக்கிறது. சீஷர்கள் படவில் ஏறி தங்கள் பிரயாணத்தை ஆரம்பித்தபோது காற்று தென்றலாக இருந்தது. கடல் அமைதியாக இருந்தது. ஆனால் அவர்கள் கடலில் ஏறக்குறைய மூன்று நாலு மைல் தூரம் போனபோதோ கடல் கொந்தளிக்க ஆரம்பிக்கிறது.

## அதிகாரம் - 6

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் எப்படித்தான் சமாதானமாக இருந்தாலும், நமக்கும் பிரச்சனை வருவதற்கு வாய்ப்புள்ளது என்று எதிர்பார்த்து, அதை சந்திப்பதற்கு ஆயத்தமாக இருக்கவேண்டும். ஏனெனில் நாம் நினையாத வேளையில் பெருங்காற்று அடிக்கலாம். கடல் கொந்தளிக்கலாம். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் வெளிச்சத்தின் பிள்ளைகளாக இருக்கிறோம். பகலின் பிள்ளைகளாக இருக்கிறோம். இப்பேர்ப்பட்ட நம்மைக்கூட சில சமயங்களில் மேகங்களும் இருட்டும் சூழ்ந்துகொள்வதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால் நம்முடைய ஆவிக்குரிய பிரயாணம் மிகுந்த எச்சரிப்போடிருக்கவேண்டும்.

**நான்தான், பயப்படாதிருங்கள்**

**அவர்கள் ஏறக்குறைய மூன்று நாலுமைல்தூரம் தண்டுவலித்துப்போன பொழுது, இயேசு கடலின்மேல் நடந்து, படவுக்குச் சமீபமாய் வருகிறதைக் கண்டு பயந்தார்கள். அவர்களை அவர் நோக்கி: நான் தான், பயப்படாதிருங்கள் என்றார் (யோவா 6:19,20).**

சீஷர்கள் கடலில் ஏறக்குறைய மூன்று நாலு மைல் தூரம் தண்டுவலித்துப் போயிருக்கிறார்கள். இது கலிலேயா கடலில் சுமார் பாதி தூரமாகும். நடுக்கடலுக்கு வந்திருக்கிறார்கள். அப்போது இயேசு கடலின்மேல் நடந்து படவுக்கு சமீபமாய் வருகிறார். சீஷர்கள் அவர் வருகிறதைக் கண்டு பயப்படுகிறார்கள். இயேசுகிறிஸ்துவின் வல்லமை இயற்கையின் பிரமாணங்களுக்கு அப்பாற்பட்டது. சாதாரண தரையில் நடப்பதுபோல இயேசுகிறிஸ்து கடலின்மேல் நடந்துவருகிறார். பெருங்காற்று அடித்தபடியினால் கடல் கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் மிகவும் வேதனையோடு, அதிக பிரயாசப்பட்டு, கொந்தளிப்பான கடலில் தண்டுவலித்துக்கொண்டிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து தம்முடைய பிள்ளைகளைக் குறித்து எப்போதும் கரிசனையுள்ளவராகவே இருக்கிறார். கடல் கொந்தளித்துக் கொண்டிருக்கிற வேளையில் இயேசு கடலின்மேல் நடந்து, தமது சீஷருக்கு உதவிபுரிவதற்காக, படவுக்கு சமீபமாய் வருகிறார்.

தம்முடைய சீஷர்கள் கொந்தளிக்கிற கடலில் கஷ்டப்படும்போது இயேசுகிறிஸ்து அவர்களுக்கு உதவிபுரியாமல் அப்படியே கைவிட்டுவிடமாட்டார். பெருங்காற்று அடிக்கும்போதும், கடல்கொந்தளிக்கும்போதும் இயேசுகிறிஸ்து அவர்களுக்கு நிச்சயமாகவே உதவிசெய்ய முன்வருவார். ஆனால் படவுக்கு சமீபமாய் வருகிற இயேசுகிறிஸ்துவைப் பார்த்து சீஷர்கள் பயப்படுகிறார்கள். அவர்கள் பெருங்காற்றைக் கண்டு பயப்படவில்லை. கொந்தளிக்கிற கடல் அலைகளைக் கண்டு பயப்படவில்லை. ஆனால் தங்கள் படவுக்கு சமீபமாய் வருகிற இயேசுவைக்கண்டு பயப்படுகிறார்கள்.

ஒரு கடல் பிசாசு தங்களை வேட்டையாட வந்திருப்பதாக நினைத்து சீஷர்கள் பயப்படுகிறார்கள். சாதாரண காரியத்தை பெரிதாக சிந்தித்துப் பார்த்து, ஒன்றுமில்லாத காரியத்திற்காக சீஷர்கள் பயப்படுகிறார்கள். இவர்களைப்போலத்தான் நாமும் பல சமயங்களில் ஒன்றுமில்லாத காரியங்களுக்காக பயப்படுகிறோம். தேவையில்லாமல் கற்பனைபண்ணுகிறோம். முடிவில் நம்முடைய விபரீதமான கற்பனைகளே நம்மை பயமுறுத்துகிறது. பெருங்காற்றுக்கும் கடல் கொந்தளிப்புக்கும் சீஷர்கள் பயப்படவில்லை. இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு உதவிபுரிய படவுக்கு அருகில் வருகிறார். தங்களுக்கு உதவி அருகாமையில் வரும்போதுதான் சீஷர்கள் பயப்படுகிறார்கள். நம்முடைய வாழ்க்கையில்கூட நம்முடைய பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக கர்த்தர் தமது தெய்வீக உபாயங்களை உண்டுபண்ணும்போதுதான் நமக்கு பயமுண்டாகிறது.

தாம் கடலின்மேல் நடந்து, படகுக்கு சமீபமாய் வருகிறதை சீஷர்கள் கண்டு பயப்படுவதை, இயேசுகிறிஸ்து கரிசனையோடு பார்க்கிறார். தம்முடைய கிருபை நிறைந்த வார்த்தையினால் அவர்களுடைய பயத்தைப் போக்குகிறார். "நான் தான், பயப்படாதிருங்கள்" என்று ஆறுதலாக அவர்களிடம் கூறுகிறார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு இயேசுகிறிஸ்துவின் ஆறுதலான வார்த்தைகளே, நம்முடைய பயங்களிலிருந்தும், கவலைகளிலிருந்தும், கண்ணீர்களிலிருந்தும் விடுதலைபண்ணும். நம்முடைய வாழ்க்கையில் பெருங்காற்று அடிக்கும்போது, கடல் கொந்தளிக்கும்போது, புயல்காற்று நம்மை நெருங்கி வரும்போது, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் நமக்கு உதவிபுரிவதற்காக, நம்மிடத்தில் நெருங்கி வருகிறார்.

## அதிகாரம் - 6

### படவு கரையைப் பிடித்தது

**அப்பொழுது அவரைப் படவில் ஏற்றிக்கொள்ள மனதாயிருந்தார்கள்; உடனே படவு அவர்கள் போகிற கரையைப் பிடித்தது (யோவா 6:21).**

இயேசுகிறிஸ்துவின் கிருபை நிறைந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் சீஷர்களுடைய பயம் அவர்களைவிட்டு நீங்கிற்று. அவர்கள் இயேசுகிறிஸ்துவை படவில் ஏற்றிக்கொள்ள மனதாயிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து சற்று நேரம் தம்முடைய சீஷர்களோடு கூடயிராமல் அவர்களை விட்டு தனிமையாக விலகியிருந்தார். ஆனால் அவர்களுக்கு துன்பம் நெருங்கும்போதோ, இயேசுகிறிஸ்து அவர்களுக்கு உதவிபுரிய அவர்களை நெருங்கி வருகிறார். இயேசுகிறிஸ்துவின் வருகையினால் சீஷர்களுடைய பயம் அவர்களைவிட்டு நீங்கிற்று. அவர்களுக்குள் ஆறுதல் உண்டாயிற்று. இயேசுகிறிஸ்து அவர்களை பாதுகாப்பாக அக்கரையில் கொண்டு வந்து சேர்க்கிறார். இயேசுகிறிஸ்துவை படவில் ஏற்றிக்கொள்ள சீஷர்கள் மனதாயிருந்த உடனேயே, படவு அவர்கள் போகிற கரையை பிடிக்கிறது. இயேசுகிறிஸ்துவை தங்களுடைய படவில் ஏற்றிக்கொள்ள மனதாயிருக்கும் வரையிலும், அவர்கள் பிரயாசப்பட்டு தண்டுவலித்து கடலில் பிரயாணம்பண்ணுகிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவை தங்கள் படவில் ஏற்றுக்கொள்ள மனதாயிருக்கும்போதோ, அந்த படவை செலுத்துகிற பொறுப்பை அவரே ஏற்றுக்கொள்கிறார்.

இந்தப் படவைப்போல சபைகளுக்கு பல சமயங்களில் பிரச்சனைகள் உண்டாகலாம். சபையில் பெருங்காற்று வீசலாம். சபையில் கொந்தளிப்பு உண்டாகலாம். எல்லா சூழ்நிலைகளிலும் நம்முடைய சபையில் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள நாம் மனதாயிருக்க வேண்டும். அப்போதுதான் சபையில் பிரச்சனைகள் வந்தாலும், முடிவில் சமாதானம் உண்டாகும். சபை தத்தளித்துக் கொண்டிருந்தாலும், இயேசுகிறிஸ்துவின் பிரசன்னத்தினால் சபையில் அமைதியான சூழ்நிலை உண்டாகும்.

சீஷர்கள் கடலில் கடினப்பட்டு தண்டுவலித்துப் போய்கொண்டிருக்கிறார்கள். அவர்களால் மூன்று நாலு மைல் தூரமே போக முடிகிறது. தங்களது சொந்த முயற்சியினால் அவர்களால் கரையை பிடிக்க முடியவில்லை. தங்களுடைய படவில் இயேசுகிறிஸ்துவை ஏற்றிக்கொள்ள மனதாயிருக்கும் வரையிலும் அவர்களுக்கு கொந்தளிப்பினாலும், பெருங்காற்றினாலும் பிரச்சனை உண்டாயிற்று. ஆனால் அவர்கள் இயேசுகிறிஸ்துவை தங்கள் படவில் ஏற்றிக்கொள்ள மனதாயிருக்கிறபோதோ, அந்த படகு உடனே அவர்கள் போகவேண்டிய கரைக்குப் போய் சேர்ந்துவிடுகிறது. அவர்கள் தண்டுவலிக்கவில்லை. இயேசுகிறிஸ்துவை தங்கள் படவில் ஏற்றிக்கொண்டிருக்கிறார்கள். இருட்டு வேளையாக இருந்தாலும், பெருங்காற்று அடித்தாலும், கடல் கொந்தளிப்பாக இருந்தாலும், இயேசுகிறிஸ்து அவர்களோடு கூடயிருப்பதினால் படவு கரையைப்பிடிக்கிறது. சீஷர்கள் தண்டுவலிக்காமலேயே படவு கரையைப்பிடித்து விடுகிறது.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு உதவிபுரிந்த இந்த சம்பவம், அவர்களுடைய பிள்ளைகளாகிய நமக்கு மிகுந்த ஆறுதலைக்கொடுக்கிறது. நம்முடைய வாழ்க்கையில் புயல் அடித்தாலும், கொந்தளிப்பு உண்டானாலும், இயேசுகிறிஸ்துவை நம்முடைய உள்ளத்தில் ஏற்றுக்கொள்ள மனதாயிருக்கும்போது, நம்முடைய வாழ்க்கை பயணத்தை இயேசுகிறிஸ்துவே பொறுப்பேற்று நடத்துகிறார். பெருங்காற்று மத்தியிலும், கொந்தளிப்பான கடலிலும், இருட்டு வேளையிலும் "எப்போது அக்கரைக்கு சேர்வோம்" என்று சீஷர்கள் வருத்தப்பட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்கள் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட போதோ, அவர்கள் படவு உடனே கரையைப்பிடிக்கிறது.

அதுபோலவே நம்முடைய வாழ்க்கையிலும் நமக்கு ஏற்பட்டுள்ள பிரச்சனை எப்போது தீருமோ என்று நாம் யோசித்துக் கலங்கிக்கொண்டிருக்கலாம். இப்படிப்பட்ட சூழ்நிலையில்கூட, நாம் இயேசுகிறிஸ்துவை நம்முடைய இருதயத்தில் ஏற்றுக்கொள்ள மனதாயிருக்கும்போது, நாம் எதிர்ப்பார்ப்பதற்கு முன்பாகவே, நாம் நினைப்பதற்கு முன்பாகவே நம்முடைய பிரச்சனையை இயேசுகிறிஸ்து தீர்த்து வைப்பார். பிரச்சனைகள் உடனே முடிவுக்கு வரும்.

## அதிகாரம் - 6

### நிலைத்திருக்கிற போஜனம்
### யோவா 6:22-27

யோவா 6:22. மறுநாளில் கடலின் அக்கரையிலே நின்ற ஜனங்கள் அவருடைய சீஷர் ஏறின அந்த ஒரே படவுதவிர அங்கே வேறொரு படவும் இருந்ததில்லையென்றும், இயேசு தம்முடைய சீஷருடனேகூடப் படவில் ஏறாமல் அவருடைய சீஷர்மாத்திரம் போனார்களென்றும் அறிந்தார்கள்.

யோவா 6:23. கர்த்தர் ஸ்தோத்திரஞ் செய்தபின்பு அவர்கள் அப்பம் சாப்பிட்ட இடத்துக்குச் சமீபமாய்த் திபேரியாவிலிருந்து வேறே படவுகள் வந்தது.

யோவா 6:24. அப்பொழுது இயேசுவும் அவருடைய சீஷரும் அங்கே இல்லாததை ஜனங்கள் கண்டு, உடனே அந்தப் படவுகளில் ஏறி, இயேசுவைத் தேடிக்கொண்டு, கப்பர்நகூமுக்கு வந்தார்கள்.

யோவா 6:25. கடலின் அக்கரையிலே அவர்கள் அவரைக் கண்டபோது: ரபீ, நீர் எப்பொழுது இவ்விடம் வந்தீர் என்று கேட்டார்கள்.

யோவா 6:26. இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நீங்கள் அற்புதங்களைக் கண்டதினால் அல்ல, நீங்கள் அப்பம் புசித்துத் திருப்தியானதினாலேயே என்னைத் தேடுகிறீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

யோவா 6:27. அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல, நித்தியஜீவன்வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள்; அதை மனுஷகுமாரன் உங்களுக்குக் கொடுப்பார்; அவரைப் பிதாவாகிய தேவன் முத்திரித்திருக்கிறார் என்றார்.

**மறுநாளில் கடலின் அக்கரையிலே**

மறுநாளில் கடலின் அக்கரையிலே நின்ற ஜனங்கள் அவருடைய சீஷர் ஏறின அந்த ஒரே படவுதவிர அங்கே வேறொரு படவும் இருந்ததில்லையென்றும், இயேசு தம்முடைய சீஷருடனேகூடப் படவில் ஏறாமல் அவருடைய சீஷர்மாத்திரம் போனார்களென்றும் அறிந்தார்கள். கர்த்தர் ஸ்தோத்திரஞ்செய்தபின்பு அவர்கள் அப்பம் சாப்பிட்ட இடத்துக்குச் சமீபமாய்த் திபேரியாவிலிருந்து வேறே படவுகள் வந்தது (யோவா 6:22,23).

மறுநாளிலே இயேசுகிறிஸ்துவைத் தேடி ஜனங்கள் வருகிறார்கள். இயேசுகிறிஸ்து தனித்திருந்து ஜெபம்பண்ணுவதற்காக மலையின்மேல் ஏறிப்போனதை ஜனங்கள் கண்டார்கள். மறுநாள் காலையில் அவர் திரும்பி வருவாரென்று ஜனங்கள் அவருக்காக காத்திருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து எங்கே போனாரென்றோ, அவருக்கு என்ன ஆயிற்று என்றோ அவர்களுக்குத் தெரியவில்லை. கடற்கரையில் ஒரு படகும் இல்லை. இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் ஒரு படவில் ஏறிப்போனதை இவர்கள் அறிந்திருக்கிறார்கள். அது மாத்திரமல்ல இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷருடனேகூட படவில் ஏறவில்லை என்பதும் இவர்களுக்குத் தெரிந்திருக்கிறது. சீஷர்கள் மாத்திரம் தனியாக போனார்களென்றும் இவர்கள் அறிந்திருக்கிறார்கள்.

ஜனங்கள் இயேசுகிறிஸ்துவை மிகுந்த அக்கரையோடு தேடுகிறார்கள். அவர் எங்கெல்லாம் இருந்தாரோ அங்கெல்லாம் போய் பார்க்கிறார்கள். இயேசுகிறிஸ்துவும் அவருடைய சீஷர்களும் அங்கு இல்லையென்பதை அறிந்தவுடன், அவரை வேறு இடங்களில் தேடலாமென்று தீர்மானம் பண்ணுகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் ஜீவ அப்பத்தைப் போஷித்து திருப்தியடைந்தவர்கள், அவரைத் தேடி கண்டுபிடிக்க வேண்டும். அவர்களுடைய ஆத்துமாக்களில் தேவனைப்பற்றிய தாகம் இருக்கவேண்டும். தேவனோடு ஐக்கியமாக இருக்கவேண்டும் என்னும் வாஞ்சையும் இவர்களிடத்தில் காணப்படவேண்டும். இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் எங்கே போனார்களென்பது இந்த ஜனங்களுக்குத் தெரிந்திருக்கிறது. தம்முடைய சீஷர்களைவிட்டு இயேசுகிறிஸ்து அதிககாலம் பிரிந்திருக்கமாட்டார் என்பதையும் இவர்கள் அறிந்திருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவோடு கூட அப்பம் சாப்பிட்ட இடத்திற்கு ஜனங்கள் கூடிவருகிறார்கள். அந்த இடத்திற்கு சமீபமாய் திபேரியாவிலிருந்து வேறே படவுகள் வருகிறது. தேவனுடைய தெய்வீக பராமரிப்பினாலேயே இந்தப் படவுகள் அங்கு வருகிறது. இயேசுகிறிஸ்துவை மெய்யாய் தேடுகிறவர்களுக்கு, இதுபோன்ற தெய்வீக உதவிகள் அவர்களைத் தேடி வரும். இயேசுவைத் தேடும்போது, அவரைக் கண்டுபிடிப்பதற்கு உதவியாக தெய்வீக பராமரிப்புக்கள் கொடுக்கப்படும்.

## அதிகாரம் - 6

ஜனங்கள் அப்பம் சாப்பிட்ட இடத்தைப்பற்றி இந்த சுவிசேஷத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இந்த வார்த்தையில் "கர்த்தர் ஸ்தோத்திரஞ்செய்த பின்பு அவர்கள் அப்பம் சாப்பிட்ட இடம்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்து அப்பத்தை எடுத்து ஸ்தோத்திரம்பண்ணிய சம்பவம் ஜனங்களுடைய இருதயத்தில் ஆழமாய் பதிந்திருக்கிறது. அவர்கள் புசித்த போஜனத்தின் விசேஷம் இதுதான். அந்த போஜனம் தேவகிருபையினால் அவர்களுக்குக் கிடைத்தது. அப்பத்தை புசித்தபோது அவர்களுடைய இருதயம் கொழுந்துவிட்டு எரிகிறது. கர்த்தரைத் துதிக்கும் ஸ்தோத்திர வார்த்தைகள் அவர்களுடைய இருதயத்திலிருந்து புறப்பட்டு வருகிறது.

### இயேசுவைத் தேடி

**அப்பொழுது இயேசுவும் அவருடைய சீஷரும் அங்கே இல்லாததை ஜனங்கள் கண்டு, உடனே அந்தப் படவுகளில் ஏறி, இயேசுவைத் தேடிக்கொண்டு, கப்பர்நகூமுக்கு வந்தார்கள் (யோவா 6:24).**

இயேசுவும் அவருடைய சீஷர்களும் அந்த இடத்தில் இல்லையென்பதை ஜனங்கள் அறிந்துகொள்கிறார்கள். அப்போது திபேரியாவிலிருந்து வேறே படவுகள் அங்கே வருகிறது. உடனடியாக ஜனங்கள் அந்த படவுகளில் ஏறி, இயேசுவைத் தேடிக்கொண்டு, கப்பர்நகூமிற்கு வருகிறார்கள். இயேசுகிறிஸ்துவை எப்படியாவது தேடிக் கண்டுபிடித்து விடவேண்டும் என்னும் வைராக்கிய வாஞ்சையில் இருக்கிறார்கள். இந்த வாஞ்சையோடு அவரைத் தொடர்ந்து தேடிக்கொண்டுபோகிறார்கள்.

நம்முடைய உள்ளத்தில் வைராக்கியம் இருக்கும்போது அதற்குரிய காரியங்களை செய்ய வேண்டிய நேரத்தில் செய்து முடித்து விடவேண்டும். காலதாமதம் பண்ணுவோமென்றால் நம்முடைய வைராக்கிய வாஞ்சை குறைந்துபோவதற்கு வாய்ப்புள்ளது. ஒரு காரியத்தை ஏற்றவேளையில் செய்து முடிக்கவில்லையென்றால், அது நற்காரியமாக இருந்தாலும், நிறைவேறாமலேயே போய்விடும். இங்குள்ள ஜனங்கள் இயேசுவைத் தேட வேண்டும் என்னும் வாஞ்சையில், சோர்வடைந்துவிடாமல், படவில் ஏறி, இயேசுவைத்தேடி, கப்பர்நகூமிற்கே போகிறார்கள்.

ஜனங்கள் திபேரியாவிலிருந்து வந்த படவுகளில் கப்பர்நகூமிற்கு போனபோது காற்று அமைதலாக இருக்கிறது. கடலும் கொந்தளியாமல் அமைதலாக இருக்கிறது. ஆனால் இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் இதே கடலில் பிரயாணம் பண்ணியபோதோ பெருங்காற்று அடித்து கடல்கொந்தளித்தது. இதுபோலத்தான் இந்த துன்மார்க்கமான உலகத்தில் துன்மார்க்கரைவிட, நல்லவர்களுக்கும் பக்தியுள்ளவர்களுக்கும் சோதனைகளும்வேதனைகளும் உண்டாகிறது.

### அக்கரையிலே இயேசு

**கடலின் அக்கரையிலே அவர்கள் அவரைக் கண்டபோது: ரபீ, நீர் எப்பொழுது இவ்விடம் வந்தீர் என்று கேட்டார்கள் (யோவா 6:25).**

கடலின் அக்கரையிலே, கப்பர்நகூமிலே, ஜனங்கள் இயேசுவைக் காண்கிறார்கள். இயேசுவைத்தேடி கடலையும் தாண்டிப்போகலாம். இயேசுவைத் தேடிக் கண்டுபிடிப்பதற்காக நாம் எந்தப் பிரயாணம் மேற்கொண்டாலும் அது வீணான பிரயாணமல்ல. அது மிகவும் பிரயோஜனமுள்ளது. இயேசுகிறிஸ்துவை எப்படியாவது தேடிக் கண்டுபிடிக்க வேண்டும் என்பதே நம்முடைய இறுதி இலக்காக இருக்கவேண்டும். அவரைக் கண்டுபிடிக்கும் வரையிலும் தொடர்ந்து தேடிக்கொண்டிருக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்துவைத் தேடி அக்கரையிலுள்ள கப்பர்நகூமிற்கு வந்திருக்கும் ஜனங்கள் மிகவும் சாதாரணமானவர்கள். வேதபண்டிதர்களல்ல. விசுவாச வீரர்களுமல்ல. ஆனாலும் எப்படியாவது இயேசுவைக் கண்டுபிடிக்க வேண்டும் என்னும் வைராக்கிய வாஞ்சை அவர்களுக்குள் காணப்படுகிறது. இக்காலத்தில் கர்த்தருடைய பிள்ளைகளில் அநேகர், இயேசுகிறிஸ்துவின் மீதுள்ள தங்களுடைய அன்பை எப்படி வெளிப்படுத்துவது என்று தெரியாமல் தவிக்கிறார்கள். ஏராளமான நற்செய்திக்கூட்டங்களுக்குப் போகிறார்கள், சுகமளிக்கும் கூட்டங்களுக்குப் போகிறார்கள். அங்கும் இங்கும் ஓடி ஓடி அலைகிறார்கள். இவர்களுடைய பக்தி வைராக்கியத்தைவிட, இயேசுகிறிஸ்துவைத் தேடி அக்கரையிலுள்ள கப்பர்நகூமிற்கு வந்த சாதாரண இந்த ஜனங்களுடைய பக்தி வைராக்கியம் மிகவும் சிறந்தது. இந்த ஜனங்கள் ஒருவேளை துன்மார்க்கராக இருக்கலாம். இயேசுகிறிஸ்து இவர்களுடைய இருதயத்தை அறிந்திருக்கிறார். இவர்களுடைய ஜீவியம் எப்படியிருந்தாலும் இயேசுவைத் தேடிக் கண்டுபிடிக்கவேண்டும் என்னும் வாஞ்சை இவர்களுடைய இருதயத்தில் ஆழமாக பதிந்திருக்கிறது.

## அதிகாரம் - 6

கப்பர்நகூமில் அவர்கள் இயேசுவைக் கண்டபோது "ரபீ, நீர் எப்பொழுது இவ்விடம் வந்தீர்" என்று அவரிடத்தில் கேட்கிறார்கள். அவர்கள் இயேசுகிறிஸ்துவை கப்பர்நகூமிலுள்ள ஜெபாலயத்திலே கண்டுபிடித்திருக்கவேண்டும் (யோவா 6:59). அவரைப் பார்த்தவுடன் இந்த ஜனங்கள் அவரிடத்தில் கேட்ட ஒரே கேள்வி "ரபீ, நீர் எப்பொழுது இவ்விடம் வந்தீர்" என்பதுதான். எப்பொழுது என்று இங்கு வந்த நேரத்தைக் கேட்பதோடு, அவர் இங்கு எப்படி வந்தார் என்பதையும் அவர்கள் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறார்கள். இயேசுகிறிஸ்துவின் செயல்களை அறிந்துகொள்ள விரும்பும் ஜனங்கள், தங்களுடைய செயல்களை ஆராய்ந்து பார்ப்பதில்லை. இதுபோலத்தான் இக்காலத்தில் ஜனங்கள் பிறருடைய காரியங்களில் தலையிட்டு அவர்களைப்பற்றி ஆராய்ச்சி செய்கிறார்கள். ஆனால் தங்களைப்பற்றி இவர்கள் சிந்தித்துப் பார்ப்பதில்லை.

### அற்புதங்களைக் கண்டதினாலல்ல

**இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நீங்கள் அற்புதங்களைக் கண்டதினால் அல்ல, நீங்கள் அப்பம் புசித்துத் திருப்தியானதினாலேயே என்னைத் தேடுகிறீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் (யோவா 6:26).**

ஜனங்கள் இயேசுகிறிஸ்துவை மிகுந்த ஆர்வத்தோடு தேடி வந்திருக்கிறார்கள். ஆனால் தம்மைப் பார்க்க அவர்கள் வந்திருப்பதன் நோக்கத்தை இயேசுகிறிஸ்து வெளிப்படுத்தி, அவர்களை மென்மையாக கடிந்துகொள்கிறார். தங்களுடைய வார்த்தையை உறுதிபடக் கூறுவதற்காக "மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன்" என்று இயேசு கூறுகிறார். "என்னைத் தேடுகிறீர்கள்" என்பது மெய்தான், அது நல்லதுதான். ஆனாலும் அவர்களுடைய நோக்கம் சரியானதல்ல என்று பொருள்படும் விதத்தில் இயேசுகிறிஸ்து அவர்களிடத்தில் கூறுகிறார். இயேசுகிறிஸ்துவுக்கு நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்தைப்பற்றியும் தெரியும். அதே வேளையில் அவற்றை நாம் ஏன் செய்கிறோம் என்பதும் அவருக்குத் தெரியும்.

இயேசுகிறிஸ்து தம்மைத் தேடி வந்திருக்கும் ஜனங்களைப்பார்த்து "நீங்கள் அற்புதங்களைக் கண்டதினால் அல்ல" என்று கூறுகிறார். மேலும் "நீங்கள் அப்பம் புசித்து திருப்தியானதினாலேயே என்னைத் தேடுகிறீர்கள்" என்றும் அவர்களிடத்தில் கூறுகிறார். இயேசுகிறிஸ்து அவர்களுக்கு போஜனம் கொடுத்தபோது எல்லோரும் புசித்து திருப்தியடைந்தார்கள். அங்கு பந்தியிருந்தவர்களில் சிலர் செல்வந்தர்களாக இருந்திருக்கலாம். இவர்கள் பலசமயங்களில் புசித்து திருப்தியடைந்திருக்கலாம். ஒரு சிலர் தரித்திரராகவும் இருந்திருக்கலாம். கொடிய தரித்திரமுள்ளவர்களுக்கு திருப்தியாக புசிப்பது என்றால் என்ன என்று தெரியாது. திருப்தியாக புசிக்கும் அனுபவம் அவர்களுடைய தரித்திரமான வாழ்க்கையில் இதுவரையிலும் உண்டாயிருந்திருக்காது. ஒரு வேளை இயேசுகிறிஸ்து கொடுத்த இந்த போஜனத்தை புசிப்பதுதான், இந்த தரித்திரர்கள் தங்கள் வாழ்க்கையில் முதன்முறையாக புசித்து திருப்தியடைந்த முதல் அனுபவமாக இருந்திருக்கும்.

இயேசுகிறிஸ்து கொடுத்த போஜனத்தைப் புசிப்பதற்கு இவர்கள் எந்த பிரயாசமும் மேற்கொள்ளவில்லை. இவர்களுக்கு ஒரு செலவும் இல்லை. வந்தார்கள், பந்தியில் அமர்ந்தார்கள், அப்பமும் மீனும் இவர்களுக்கு போதுமான அளவு பரிமாறப்பட்டது. இவர்களும் வேண்டிய மட்டும் பெற்றுக் கொண்டு புசித்து திருப்தியடைந்திருக்கிறார்கள். எளிய உணவுதான். ஆனாலும் இலவசமான உணவு. இந்த அப்பங்களுக்காகவே ஒரு சிலர் இயேசுகிறிஸ்துவை தேடி வந்திருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் அவர்மீதுள்ள அன்பினால் அவரைத் தேடி வரவில்லை.

இயேசுகிறிஸ்துவை தேடி வந்திருக்கிறவர்கள் அவரை "ரபீ" என்று அழைக்கிறார்கள். ஆனால் இவர்களுடைய வார்த்தையோ மாய்மாலமானது என்பது இயேசுகிறிஸ்து ஆரம்பத்திலேயே கூறிவிடுகிறார். இந்த சம்பவம் கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கு எச்சரிப்பின் வார்த்தையாக இருக்கவேண்டும். இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் உண்மையில்லாத, மாய்மாலமான வார்த்தைகளை பெருமைக்காக பேசக்கூடாது. இயேசுகிறிஸ்துவிடம் எதைக் கூறவேண்டுமோ அதை மாத்திரம் மெய்யான வார்த்தைகளினால் கூறவேண்டும். மாய்மாலமான வார்த்தைகளை நாம் பேசினால், இயேசு நம்மையும் இப்படித்தான் கடிந்துகொள்வார். அவருக்கு மறைவானது ஒன்றுமேயில்லை.

## அதிகாரம் - 6

**அழிந்துபோகிற போஜனம்**

**அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல, நித்தியஜீவன்வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள்; அதை மனுஷகுமாரன் உங்களுக்குக் கொடுப்பார்; அவரைப் பிதாவாகிய தேவன் முத்திரித்திருக்கிறார் என்றார் (யோவா 6:27).**

இயேசுகிறிஸ்து தம்மைத் தேடிவந்திருப்பவர்களை கடிந்து கூறியபோது, அவர்களைக் கடிந்து கூறியதோடு தம்முடைய வார்த்தைகளை நிறுத்திக்கொள்ளவில்லை. அவர்களுக்குத் தேவையான தெய்வீக ஆலோசனைகளையும் கூறுகிறார். அவர்களிடம் "நித்திய ஜீவன் வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள்" என்று கூறுகிறார். மனுஷன் உலகப்பிரகாரமான காரியங்களில் அதிக அக்கரையோடிருக்கிறான். அழிந்துபோகிற போஜனத்தின்மீது பிரியமாயிருக்கிறான். அதற்காகவே கிரியை நடப்பிக்கிறான். ஆனால் நம்முடைய வாழ்க்கையில் இப்பிரபஞ்சத்தின் காரியங்கள் நமக்கு பிரதான காரியமாக இருக்கக்கூடாது. இந்த உலகத்தின் காரியங்கள் அழிந்துபோகும். உலகப்பிரகாரமான சம்பத்துக்களும், ஐசுவரியங்களும், பேரும் புகழும், கனமும் மகிமையும், சந்தோஷமும் உலகப்பிரகாரமான போஜனம் என்றழைக்கப்படுகிறது. அழிந்துபோகிற இந்த போஜனத்தினால் ஜனங்கள் தங்களுடைய வயிற்றை நிரப்பிக்கொள்ள ஆவலாயிருக்கிறார்கள். வயிற்றுப் போஜனத்தை புசிப்பதற்கு பசியாயிருப்பதுபோல, உலகப்பிரகாரமான இந்த போஜனங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று பசியோடும் தாகத்தோடும் அலைகிறார்கள்.

அழிந்துபோகிற உலகப்பிரகாரமான போஜனத்திற்காக சிலர் கிரியை நடப்பித்து, அதில் சிலவற்றை அடைந்தும் இருப்பார்கள். தாங்கள் ஜீவிக்கும் காலத்தில் பேரோடும், புகழ்ச்சியோடும், ஐசுவரியத்தோடும், உலகப்பிரகாரமான சந்தோஷத்தோடும் இருப்பார்கள். ஆனால் இவர்கள் மரிக்கும்போதோ இவையெல்லாமே இவர்களைவிட்டு போய்விடும். மரித்தபின்பு இவர்களோடு இவைகளில் ஒன்றும் கூடவராது.

ஆகையினால் அழிந்துபோகிற போஜனத்திற்காக கிரியை நடப்பிப்பது புத்தியீனமான செயல். நம்முடைய வாழ்க்கையில் அழிந்துபோகிற போஜனத்தைத் தேடுவது பிரதான நோக்கமாக இருக்கக்கூடாது.

நாம் நித்திய ஜீவன் வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பிக்கவேண்டும். நம்முடைய ஆத்துமாவை போஷிக்கும் போஜனத்திற்காக நாம் கிரியை நடப்பிக்கவேண்டும். இந்தக் கிரியையை நடப்பிப்பதில் நாம் மிகுந்த வாஞ்சையோடிருக்க வேண்டும். இந்த போஜனம் அழிந்துபோவதில்லை. நித்திய ஜீவன் வரைக்கும் நிலைநிற்கும். இதனால் உண்டாகும் சந்தோஷம் நித்திய சந்தோஷமாக இருக்கும். நம்முடைய நித்திய ஜீவனுக்கு ஏதுவான காரியங்களைச் செய்யும்போது, அதனால் கிடைக்கும் ஆசீர்வாதம் நமக்கு நித்திய காலமாக நிலைத்திருக்கும்.

நித்திய ஜீவன்வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்தை மனுஷகுமாரனாகிய இயேசுகிறிஸ்து நமக்குக் கொடுப்பார். நமக்கு நித்திய ஜீவனை கொடுப்பதற்கு இயேசுகிறிஸ்து வல்லமையுள்ளவர். நம்முடைய நித்திய ஜீவனுக்குத் தேவையான எல்லா ஆதாரங்களும் இயேசுகிறிஸ்துவிடத்தில் உள்ளது. இதைப் பெற்றுக்கொள்வதற்கு நாம் கிரியை நடப்பிக்கவேண்டும் என்று இயேசுகிறிஸ்து இங்கு வலியுறுத்திக் கூறுகிறார். நித்திய ஜீவன் வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்தை நாம் கிரியை நடப்பித்து பெற்றுக்கொள்ளவேண்டும்.

நாம் எவ்வளவுதான் கிரியை செய்தாலும் நித்திய ஜீவன் நமக்கு கிரியைக்குரிய கூலியாக கொடுக்கப்படுவதில்லை. நித்திய ஜீவனை பெற்றுக்கொள்ளும் அளவுக்கு யாராலும் கிரியை நடப்பிக்க முடியாது. ஆனாலும் நித்திய ஜீவன் வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காக நாம் கிரியை நடப்பிக்கும்போது, மனுஷகுமாரனாகிய இயேசுகிறிஸ்து இதை நமக்கு ஈவாக தருகிறார். இது இலவசமான ஈவு. நாம் நித்திய ஜீவனை பெற்றுக்கொள்வதற்காக கிரியை நடப்பிக்கும்போது, மனுஷகுமாரனாகிய இயேசுகிறிஸ்து அதைப்பார்த்து, நமக்கு நித்திய ஜீவனை தம்முடைய கிருபையினால் இலவச ஈவாக கொடுக்கிறார்.

## அதிகாரம் - 6

நமக்கு நித்திய ஜீவனைக்கொடுக்கும் அதிகாரம் மனுஷகுமாரனாகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பிதாவாகிய தேவன் தமது குமாரனாகிய இயேசுகிறிஸ்துவுக்கு நித்திய ஜீவனைக்கொடுக்கும் அதிகாரம் முழுவதையும் கொடுத்து அவரை முத்திரித்திருக்கிறார். தேவனுக்கும் மனுஷருக்கும் இடையில் மத்தியஸ்தராக இருந்து ஒப்புரவாதலின் ஊழியத்தை செய்வதற்கு பிதாவானவர் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை முத்திரித்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவே நமக்காக தேவனோடு பரிந்துபேசுகிறார். தேவனுடைய ஸ்தானிகராக இயேசுகிறிஸ்து மனுஷரிடத்தில் அனுப்பப்பட்டிருக்கிறார். தம்முடைய ஊழியத்தை இயேசுகிறிஸ்து அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் உறுதிபண்ணுகிறார்.

### ஜீவ அப்பம்
### யோவா 6 : 28-36

**யோவா 6:28. அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி: தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பிக்கும்படி நாங்கள் என்னசெய்ய வேண்டும் என்றார்கள்.**

**யோவா 6:29. இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது என்றார்.**

**யோவா 6:30. அதற்கு அவர்கள்: அப்படியானால் உம்மை விசுவாசிக்கும்படிக்கு நாங்கள் காணத்தக்கதாக நீர் என்ன அடையாளத்தைக் காண்பிக்கிறீர்? என்னத்தை நடப்பிக்கிறீர்?**

**யோவா 6:31. வானத்திலிருந்து அவர்களுக்கு அப்பத்தைப் புசிக்கக் கொடுத்தார் என்று எழுதியிருக்கிறபடி, நம்முடைய பிதாக்கள் வனாந்தரத்தில் மன்னாவைப் புசித்தார்களே என்றார்கள்.**

**யோவா 6:32. இயேசு அவர்களை நோக்கி: வானத்திலிருந்து வந்த அப்பத்தை மோசே உங்களுக்குக் கொடுக்கவில்லை; என் பிதாவோ வானத்திலிருந்து வந்த மெய்யான அப்பத்தை உங்களுக்குக் கொடுக்கிறார் என்று, மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.**

**யோவா 6:33. வானத்திலிருந்திறங்கி, உலகத்துக்கு ஜீவனைக் கொடுக்கிற அப்பமே தேவன் அருளிய அப்பம் என்றார்.**

**யோவா 6:34. அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி: ஆண்டவரே, இந்த அப்பத்தை எப்பொழுதும் எங்களுக்குத் தரவேண்டும் என்றார்கள்.**

**யோவா 6:35. இயேசு அவர்களை நோக்கி: ஜீவ அப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்.**

**யோவா 6:36. நீங்கள் என்னைக் கண்டிருந்தும் விசுவாசியாமலிருக்கிறீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன்.**

### தேவனுக்கேற்ற கிரியைகள்

**அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி: தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பிக்கும்படி நாங்கள் என்னசெய்ய வேண்டும் என்றார்கள். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது என்றார் (யோவா 6:28,29).**

இயேசுகிறிஸ்து தம்மிடத்தில் வந்திருக்கும் ஜனங்களிடம் "கிரியை நடப்பியுங்கள்" என்று கூறுகிறார். அவர்களோ இயேசுகிறிஸ்துவிடம் "நாங்கள் என்ன செய்யவேண்டும்" என்று கேட்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் உபதேச வார்த்தைகளை தங்களுடைய வார்த்தைகளினால் இவர்கள் தடைபண்ணுவது போன்று தெரிகிறது. ஆனால் இயேசுகிறிஸ்து இவர்கள் கேள்வி கேட்பதை தடைபண்ணாமல், அதை அங்கீகரிக்கிறார். நல்ல ஆசிரியர் கேட்பதற்கும், தன்னிடத்தில் கேட்கப்படும் கேள்விகளுக்கு பதில் கூறுவதற்கும் ஆயத்தமுள்ளவராக இருக்கவேண்டும். கற்றுக்கொடுக்கிற ஆசிரியர் தொடர்ந்து கற்றுக்கொள்ளவும்வேண்டும்.

இயேசுகிறிஸ்துவைத் தேடி வந்தவர்கள் அவரிடம் "தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பிக்கும்படி நாங்கள் என்ன செய்யவேண்டும்" என்று கேட்கிறார்கள். மிகவும் எளிமையாக தங்களைத் தாழ்த்தி கேட்கிறார்கள். இவர்களுடைய கேள்வியில் நேர்மையும் நாணயமும் உள்ளது. நல்ல மனதோடு கேட்கிறார்கள். தாங்கள் செய்யவேண்டிய கடமைகளைப்பற்றி தெரிந்துகொள்ளவும், அவற்றை செய்யவும் இவர்கள் ஆயத்தமாக இருக்கிறார்கள்.

## அதிகாரம் - 6

நித்திய ஜீவன் வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்தை பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால் தாங்கள் கிரியை நடப்பிக்க வேண்டுமென்பதை இந்த ஜனங்கள் அங்கீகரிக்கிறார்கள். பெரிய காரியத்தை செய்வதற்கு முயற்சி பண்ணவேண்டும். பெரிய காரியங்களை எதிர்பார்க்கிறவர்கள்தான், பெரிய காரியங்களை முயற்சி பண்ணி செய்வார்கள். இயேசுகிறிஸ்து இந்த வசனப்பகுதியில் உலகப்பிரகாரமான காரியங்களுக்கும், தேவனுக்கேற்ற காரியங்களுக்கும் வித்தியாசம் காண்பித்துக் கூறுகிறார். தேவனுடைய வார்த்தைகளை நாம் பேசினால் மாத்திரம் போதாது. தேவனுக்கேற்ற கிரியைகளை நாம் செய்யவும் வேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் தேவனுக்கேற்ற கிரியை எதுவாக இருந்தாலும் அதை செய்வதற்கு ஆயத்தமாக இருக்கவேண்டும். இந்த ஜனங்கள் இயேசுகிறிஸ்துவிடம் கேட்டதுபோல, நாமும் "என்ன செய்யவேண்டும்" என்று அவரிடத்தில் கேட்டுத் தெரிந்துகொண்டு, அவர் கூறுகிற கிரியையை காலதாமதமில்லாமல் பயபக்தியோடு செய்யவேண்டும். "ஆண்டவரே நீர் எனக்கு எந்த ஊழியத்தைக் கொடுத்தாலும் அதை செய்வதற்கு ஆயத்தமாக இருக்கிறேன்" என்று நம்மை அவருடைய கரங்களில் மறுபடியும் பிரதிஷ்டை பண்ணவேண்டும்.

இயேசுகிறிஸ்து தம்மிடத்தில் கேள்வி கேட்கிற ஜனங்களுக்கு மிகவும் எளிமையாக பிரதியுத்தரம் கூறுகிறார். "நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியை" என்று இயேசு தெளிவாக பதில் கூறுகிறார். விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது. அவர்கள் இயேசுகிறிஸ்துவிடம் கேள்வி கேட்டபோது "தேவனுக்கேற்ற கிரியைகள்" என்று கிரியைகளை பன்மையில் கூறுகிறார்கள். அவர்கள் பல கிரியைகளை செய்வதற்கு ஆயத்தமாக இருக்கிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ அவர்கள் செய்யவேண்டிய கிரியை ஒன்றே ஒன்றுதான் என்று அவர்களுக்கு தெளிவுபடுத்தி "விசுவாசிக்கவேண்டும்" என்று கூறுகிறார். பிதாவாகிய தேவன் அனுப்பினவரை அவர்கள் விசுவாசிக்கவேண்டும். விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம். விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியை. விசுவாசத்தின் மூலமாகவே நாம் இயேசுகிறிஸ்துவினிடத்தில் நெருக்கமாக கிட்டிச் சேரமுடியும். அவருடைய ஆறுதலைப்பெற்றுக்கொண்டு அவரிடத்தில் இளைப்பாற முடியும். இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கும்போது, அந்த விசுவாசமே நம்மை ஆளுகை செய்யும்.

### என்ன அடையாளம்

**அதற்கு அவர்கள்: அப்படியானால் உம்மை விசுவாசிக்கும்படிக்கு நாங்கள் காணத்தக்கதாக நீர் என்ன அடையாளத்தைக் காண்பிக்கிறீர்? என்னத்தை நடப்பிக்கிறீர்? (யோவா 6:30)**

நித்திய ஜீவன் வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காக கிரியை நடப்பியுங்கள், அப்போது மனுஷகுமாரன் அந்த போஜனத்தை உங்களுக்குக் கொடுப்பார் என்று இயேசுகிறிஸ்து கூறுகிறார். அவர்கள் "என்ன செய்யவேண்டும்" என்று இயேசுவிடத்தில் கேட்கிறார்கள். அதற்கு இயேசுவும் "விசுவாசிக்கவேண்டும்" என்று பதில் கூறுகிறார். இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதற்கு தாங்கள் காணத்தக்கதாக அவர் அடையாளத்தைக் காண்பிக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். இதுவரையிலும் சரியாகப் பேசியவர்கள், இப்போது அடையாளத்தை எதிர்பார்க்கிறார்கள். அடையாளத்தைக் கேட்பது தவறல்ல. ஆனால் இயேசுகிறிஸ்து ஏற்கெனவே தம்மை தேவகுமாரன் என்று நிரூபிப்பதற்கு பல அடையாளங்களைக் காண்பித்திருக்கிறார். அவற்றை இவர்கள் மறந்துவிடுகிறார்கள். இன்னும் அதிகமாக அடையாளத்தை எதிர்பார்க்கிறார்கள்.

கப்பர்நகூம் பட்டணத்தில் அவர் பலத்த செய்கைகளை செய்திருக்கிறார். அப்படிப்பட்ட ஊரில், அவர் இதுவரையிலும் செய்த பலத்த செய்கைகளை காணாமல், அவரிடத்தில் "நீர் என்ன அடையாளத்தை காண்பிக்கிறீர், என்னத்தை நடப்பிக்கிறீர்" என்று கேட்கிறார்கள். ஒருவேளை கப்பர்நகூமில் இயேசுகிறிஸ்து செய்த பலத்த செய்கைகளை இவர்கள் அறியாமலிருந்திருக்கலாம். ஆனால் இயேசுகிறிஸ்து நேற்றுதான் ஐந்து வாற்கோதுமை அப்பங்களையும் இரண்டு மீன்களையும் வைத்து ஏறக்குறைய ஐந்தாயிரம் பேருக்கு அற்புதமாக போஜனம்கொடுத்தார். அந்த போஜனத்தை இவர்கள் திருப்தியாக புசித்திருந்தும், மேலும் அடையாளத்தை காண்பிக்கவேண்டுமென்று கேட்கிறார்கள். கண்கள் இருந்தும் காணக்கூடாத குருடர்களாக இருக்கிறார்கள்.

## அதிகாரம் - 6

**வனாந்தரத்தில் மன்னாவை புசித்தார்கள்**

**வானத்திலிருந்து அவர்களுக்கு அப்பத்தைப் புசிக்கக்கொடுத்தார் என்று எழுதியிருக்கிறபடி, நம்முடைய பிதாக்கள் வனாந்தரத்தில் மன்னாவைப் புசித்தார்களே என்றார்கள் (யோவா 6:31).**

வனாந்தரத்தில் இவர்களுடைய பிதாக்கள் அப்பத்தைப் புசித்தது மெய்தான். இயேசுகிறிஸ்து இந்த பூமியில் பல அற்புதங்களைச் செய்தார். இந்த அற்புதங்கள் எல்லாவற்றையும்விட, இவர்களுடைய பிதாக்கள் வனாந்தரத்திலே அப்பம் புசித்த அற்புதம் இவர்களுக்கு மிகவும் விசேஷமாக தோன்றுகிறது. "நம்முடைய பிதாக்கள் வனாந்தரத்தில் மன்னாவை புசித்தார்களே" என்று இவர்கள் இயேசுகிறிஸ்துவிடம் விவாதம்பண்ணுகிறார்கள்.

இதற்காக இவர்கள் ஒரு வேதவாக்கியத்தையும் மேற்கோளாக கூறுகிறார்கள். "வானத்திலிருந்து அவர்களுக்கு அப்பத்தைப் புசிக்கக்கொடுத்தார்" என்று வேதவாக்கியத்தில் எழுதியிருப்பதை இவர்கள் நினைவுபடுத்திப்பேசுகிறார்கள். எழுதியிருக்கும் வேதவாக்கியத்தை இவர்கள் நினைவுகூருகிறார்கள். ஆனால் அந்த வார்த்தைக்கு தவறாக வியாக்கியானம் கூறுகிறார்கள். சத்தியத்தை புரட்டுகிறார்கள். தங்களுக்கு சாதமாக இந்த வார்த்தைக்கு வியாக்கியானம் கூறுகிறார்கள்.

ஆனால் இயேசுகிறிஸ்துவோ இவர்களுக்கு அழிந்துபோகிற போஜனத்தைக் கொடுக்க விரும்பவில்லை. சத்தியத்தை இவர்களுக்கு தெளிவுபடுத்த விரும்புகிறார். இவர்கள் அழிந்துபோகிற போஜனத்திற்காக இயேசுகிறிஸ்துவை தேடிவந்திருக்கிறார்கள். அவரோ நித்திய ஜீவன் வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்தைப்பற்றி அவர்களோடு பேசுகிறார். இவர்கள் மோசே செய்த அற்புதங்களை மேன்மைப்படுத்தி, இயேசுகிறிஸ்துவின் அற்புதங்களை அற்பமாய் நினைக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கொண்டு இவர்களுக்கு ஒரே ஒரு தரம் மாத்திரமே அற்புதமாக போஜனம் கொடுத்தார். அதன் பின்பு அப்பம் புசித்து திருப்தியானதினாலேயே தம்மை இவர்கள் தேடி வருவதாக கடிந்துகொள்கிறார். தாம் செய்த அற்புதங்களைக் கண்டதினால் இவர்கள் தம்மிடத்தில் வரவில்லை என்பதையும் அவர்களிடத்தில் தெளிவுபடுத்துகிறார்.

மோசே இஸ்ரவேல் ஜனங்களுக்கு வனாந்தரத்திலே நாற்பது வருஷங்களாக போஜனம்கொடுத்தார். அன்றன்று அவர்களுக்குத் தேவையான போஜனம் கொடுக்கப்பட்டது. மோசே அவர்களுக்கு வானத்திலிருந்து அப்பத்தைப் புசிக்கக் கொடுத்தார் என்று இந்த ஜனங்கள் கூறுகிறார்கள். இந்த ஜனங்களுடைய பிதாக்கள் வனாந்தரத்தில் மன்னாவை புசித்தார்கள். அவர்களுக்கு அன்றாடம் மன்னா கிடைத்தது. அவர்களுக்கு அன்றன்று தேவைப்பட்ட போஜனம் அற்புதமாக கிடைத்தது.

இயேசுகிறிஸ்துவோ வாற்கோதுமை அப்பங்களினாலும் சிறிய மீன்களினாலும் ஏறக்குறைய ஐயாயிரம் பேருக்கு போஜனம் கொடுக்கிறார். வாற்கோதுமை இந்த பூமியிலிருந்து வருகிறது. மீன்கள் இந்த சமுத்திரத்திலிருந்து வருகிறது. ஆனால் மோசேயோ தேவதூதரின் போஜனமான, வானத்திலிருந்து வந்த அப்பத்தினால் அவர்களுக்குப் போஜனம் கொடுத்தார்.

தங்களுடைய பிதாக்கள் புசித்த மன்னாவைப்பற்றி யூதர்கள் இன்றும் பெருமையாக பேசிக்கொள்கிறார்கள். மன்னா அற்புதமான உணவுதான். ஆனால் அது "அற்பமான உணவு" என்றும் வேதத்தில் எழுதப்பட்டிருக்கிறது (எண் 21:5). இந்த ஜனங்களைப்போலத்தான் விசுவாசிகளில் அநேகர் பழங்கதைகளைப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அந்தக்காலத்தில் ஒரு சில பெரிய ஊழியக்காரர்கள் மூலமாக நடைபெற்ற அற்புதங்களை புகழ்ந்து பேசுகிறார்கள். தற்காலத்தில் தங்கள் மத்தியில் தேவனுடைய கிருபையும் வல்லமையும் வெளிப்படுவதை காணவிரும்பாமல் தங்கள் கண்களை மூடிக்கொள்கிறார்கள். பழங்காலத்தில் நடைபெற்ற அற்புதங்களையும் தியானிக்க வேண்டும். அதே வேளையில் நம்முடைய காலத்தில் நம் மத்தியில் நடைபெறும் அற்புதங்களையும் கவனித்து அதற்காக தேவனைத் துதிக்கவேண்டும்.

**மோசே கொடுக்கவில்லை**

**இயேசு அவர்களை நோக்கி: வானத்திலிருந்து வந்த அப்பத்தை மோசே உங்களுக்குக் கொடுக்கவில்லை; என் பிதாவோ வானத்திலிருந்து வந்த மெய்யான அப்பத்தை உங்களுக்குக் கொடுக்கிறார் என்று, மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் (யோவா 6:32).**

## அதிகாரம் - 6

தம்மைத் தேடி வந்திருக்கும் ஜனங்களுக்கு இயேசுகிறிஸ்து சத்தியத்தை தெளிவுபடுத்துகிறார். அவர்கள் கேட்ட கேள்விக்கு பிரதியுத்தரம் கூறுகிறார். இவர்களுடைய பிதாக்கள் வனாந்தரத்திலே மன்னாவை புசித்தது மெய்யான சம்பவம்தான். ஆனால் இந்த மன்னாவை மோசே இவர்களுக்குக் கொடுக்கவில்லை. வானத்திலிருந்து இவர்களுக்கு அப்பம் கிடைப்பதற்கு மோசே ஒரு கருவியாக மாத்திரமே பயன்படுத்தப்பட்டார். வானத்திலிருந்து மோசே தங்களுக்கு அப்பத்தைக் கொடுத்தார் என்று இவர்கள் மோசேயை நோக்கிப் பார்க்கக்கூடாது. இவர்கள் தங்கள் கண்களை ஏறெடுத்து, மோசேயையும் தாண்டி, பரலோகத்திலிருக்கும் தேவனை நோக்கிப் பார்க்கவேண்டும். பிதாவாகிய தேவனே வானத்திலிருந்து வந்த அப்பத்தை இஸ்ரவேல் ஜனங்களுக்கு வனாந்தரத்திலே புசிக்கக்கொடுத்தார். மோசே வனாந்தரத்தில் அவர்களுக்கு அப்பமோ அல்லது தண்ணீரோ கொடுக்கவில்லை. தேவனே இவற்றைக் கொடுத்தவர்.

இயேசுகிறிஸ்து மன்னாவைப்பற்றி பேசும்போது மெய்யான அப்பத்தைப்பற்றியும் பேசுகிறார். "என் பிதாவோ வானத்திலிருந்து வந்த மெய்யான அப்பத்தை உங்களுக்குக் கொடுக்கிறார்" என்று அவர்களிடத்தில் கூறுகிறார். இந்த மெய்யான அப்பம் இவர்களுடைய பிதாக்களுக்குக் கொடுக்கப்படவில்லை. ஆனால் இவர்களுக்கே இப்பொழுது கொடுக்கப்படுகிறது. இவர்களுக்காக மேன்மையான ஆசீர்வாதங்கள் இதுவரையிலும் ஆயத்தப்படுத்தப்பட்டிருக்கிறது. மோசேயின் காலத்தில் தேவன் அவர்களுக்கு வானத்திலிருந்து அப்பத்தைக் கொடுத்தார். இப்போதோ அதே தேவன் வானத்திலிருந்து நமக்கு மெய்யான அப்பத்தைக் கொடுக்கிறார்.

**ஜீவ அப்பம் நானே**

**வானத்திலிருந்திறங்கி, உலகத்துக்கு ஜீவனைக் கொடுக்கிற அப்பமே தேவன் அருளிய அப்பம் என்றார். அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி: ஆண்டவரே, இந்த அப்பத்தை எப்பொழுதும் எங்களுக்குத் தரவேண்டும் என்றார்கள். இயேசு அவர்களை நோக்கி: ஜீவ அப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான். நீங்கள் என்னைக் கண்டிருந்தும் விசுவாசியாமலிருக்கிறீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன் (யோவா 6:33-36).**

இயேசுகிறிஸ்து தம்முடைய தெய்வத்துவத்தை இவர்களுக்கு விளக்கிக் காண்பிக்கிறார். அப்பத்தை ஒரு உருவகமாக பயன்படுத்தி, தம்மைப்பற்றிய சத்தியத்தை அவர்களுக்கு எடுத்துக் கூறுகிறார். புசிப்பதையும் பானம்பண்ணுவதையும் உருவகமாக பயன்படுத்தி தம்முடைய மாம்சத்திலும், இரத்தத்திலும் பங்கு பெறவேண்டியதன் அவசியத்தை எடுத்துக்கூறுகிறார். இந்த ஜனங்களோ இயேசுகிறிஸ்துவை அழிந்து போகிற போஜனத்திற்காக தேடி வந்திருக்கிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ அவர்களுக்கு நித்திய ஜீவன் வரைக்கும் நிலைத்திருக்கிற போஜனத்தைப்பற்றி விவரித்துக் கூறுகிறார்.

இயேசுகிறிஸ்து தம்மைப்பற்றி அவர்களிடத்தில் எடுத்துக்கூறும்போது, தம்மை தேவனுடைய பிரதான ஈவாகவும், மெய்யான அப்பமாகவும் விவரித்துக் கூறுகிறார். இந்த வசனப் பகுதியில் இதன் சத்தியத்தை விவரித்துக் கூறி உறுதிபண்ணுகிறார். தாமே மெய்யான அப்பம் என்று இயேசுகிறிஸ்து கூறும் உபதேசம் மறுபடியும் மறுபடியுமாக இந்த சுவிசேஷத்தில் எழுதப்பட்டிருக்கிறது (யோவா 6:33; 35; 48-51).

மனுஷருடைய சரீரத்திற்கு அப்பம் எவ்வாறு அவசியமாக இருக்கிறதோ அதுபோல இயேசுகிறிஸ்துவாகிய மெய்யான அப்பம் நம்முடைய ஆத்துமாவுக்கு அவசியமாக இருக்கிறது. அப்பம் நம்முடைய சரீர பசியைப் போக்கும். சில சமயங்களில் நமக்கு அப்பம் இல்லாவிட்டாலும் நம்முடைய சரீரம் ஜீவனோடு இருக்கமுடியும். ஆனால் இயேசுகிறிஸ்து இல்லாமல் நம்முடைய ஆத்துமா ஜீவனோடிருக்க முடியாது. இயேசு இல்லையென்றால் நம்முடைய ஆத்துமா மரித்துப்போகும்.

இயேசுகிறிஸ்து தேவன் அருளிய அப்பமாக இருக்கிறார். இவர் தெய்வீக அப்பம். இவர் தேவனுடைய குடும்பத்தின் அப்பமாகவும், அவருடைய பிள்ளைகளின் அப்பமாகவும் இருக்கிறார். இவர் ஜீவனைக் கொடுக்கிற ஜீவஅப்பமாக இருக்கிறார் (யோவா 6:35; 48). இயேசுகிறிஸ்து ஜீவவிருட்சத்தின் கனியாக இருப்பதினால் இவரே ஜீவ அப்பமாக இருக்கிறார். சாதாரணமான அப்பத்திற்கு ஜீவன் இருக்காது. ஆனால் இயேசுகிறிஸ்துவோ ஜீவ அப்பமாகவும் இருக்கிறார். ஜீவனைக் கொடுக்கிற அப்பமாகவும் இருக்கிறார். தம்முடைய சுயவல்லமையினால் இயேசுகிறிஸ்து தமக்குத் தாமே ஜீவனுடையவர். இவர் நித்திய காலமாக ஜீவிக்கிறவர். ஆகையினால் இயேசுகிறிஸ்து நித்திய அப்பமாகிய ஜீவஅப்பமாக இருக்கிறார்.

## அதிகாரம் - 6

இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையில் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்தார். கல்வாரி சிலுவையின் உபதேசத்தை இந்த வசனப்பகுதியில், இயேசுகிறிஸ்து மிகவும் தெளிவாக விளக்கிக் கூறுகிறார். உலகத்திற்கு ஜீவனைக்கொடுக்கிற அப்பமாக இயேசுகிறிஸ்து தம்மைப்பற்றி கூறுகிறார். வனாந்தரத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் வானத்திலிருந்து வந்த அப்பத்தைப் புசித்தார்கள். உயிரோடிருக்கிறவர்கள் மாத்திரமே அந்த அப்பத்தை புசிக்க முடியும். உயிரோடிருக்கிறவர்கள் அதைப் புசித்தால், அவர்கள் ஜீவிப்பதற்கு மேலும் கொஞ்சம் பெலன் உண்டாகும். ஆனால் இயேசுகிறிஸ்து கொடுக்கிற அப்பமோ ஜீவனைக்கொடுக்கிற அப்பம். மரித்தோரும் இதைப் புசிக்கலாம் பாவத்தில் மரித்திருக்கிறவர்கள், இந்த ஜீவஅப்பத்தைப் புசித்தால், அவர்களுக்கு ஜீவன் கொடுக்கப்படும். பாவத்தில் மரித்திருக்கிறவர்கள் நீதிக்குப் பிழைப்பார்கள். வனாந்தரத்தில் கொடுக்கப்பட்ட மன்னா இஸ்ரவேல் ஜனங்களுக்கு மாத்திரமே கொடுக்கப்பட்டது. ஆனால் இயேசுகிறிஸ்துவோ முழு உலகத்திற்கும் ஜீவனைக்கொடுக்கிற ஜீவ அப்பமாக தம்மையே கொடுக்கிறார்.

இயேசுகிறிஸ்து தம்மைப்பற்றி விவரிக்கும்போது "வானத்திலிருந்திறங்கி, உலகத்திற்கு ஜீவனைக்கொடுக்கிற அப்பம்" என்று குறிப்பிடுகிறார். இவர் வானத்திலிருந்து இறங்கினவர். இந்த சத்தியம் பல வசனங்களில் மறுபடியும் கூறப்பட்டிருக்கிறது (யோவா 6:33; 50; 51; 58). இயேசுகிறிஸ்து வானத்திலிருந்து இறங்கின அப்பமாக இருக்கிறபடியினால் அவர் தெய்வத்துவமுள்ளராக இருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் மூலமாகவே நன்மையான எல்லா ஈவுகளும் நமக்குக் கொடுக்கப்படுகிறது. எல்லா ஆசீர்வாதங்களுக்கும் அவர் ஆதாரமாகவும் ஜீவஊற்றாகவும் இருக்கிறவர்.

இயேசுகிறிஸ்துவே மெய்யான அப்பம். இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்தில் புசித்த மன்னா இந்த மெய்யான அப்பத்திற்கு ஒரு அடையாளம் மாத்திரமே ஆகும். அது மெய்யான அப்பமல்ல. அப்பத்திற்கு அடையாளம். வனாந்தரத்தில் எல்லோருக்குமே போதுமான அளவு மன்னா கிடைத்தது. அதுபோலவே இயேசுகிறிஸ்துவில் எல்லா விசுவாசிகளுக்கும் அவருடைய கிருபையின் பரிபூரணமான நிறைவு கிடைத்திருக்கிறது. வனாந்தரத்தில் மன்னாவை அதிகமாக சேகரித்தவர்களினால், அதை மறுநாளில் பயன்படுத்த முடியவில்லை. மற்றவர்களுக்கும் கொடுத்து உதவிபுரிய முடியவில்லை.

இயேசுகிறிஸ்துவின் ஜீவஅப்பத்தை புசிக்கிறவர்களுக்கோ மிகுந்த ஆசீர்வாதம் உண்டாகும். அவருடைய ஜீவஅப்பத்தில் சிறிதளவு பெற்றுக்கொண்டால் கூட, அவருடைய கிருபையினால் அது பூரணமாக்கப்படும். இயேசுகிறிஸ்துவை பெற்றுக்கொள்கிறவர்களுக்கு ஒரு நன்மையும் குறைவுபடாது. இயேசுகிறிஸ்துவே ஜீவஅப்பமாக இருக்கிறார். அவரிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான். அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்.

### பிதாவின் சித்தம்
### யோவா 6:37-40

**யோவா 6:37. பிதாவானவர் எனக்குக் கொடுக்கிறயாவும் என்னிடத்தில் வரும்; என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை.**

**யோவா 6:38. என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கிவந்தேன்.**

**யோவா 6:39. அவர் எனக்குத் தந்தவைகளில் ஒன்றையும் நான் இழந்துபோகாமல், கடைசி நாளில் அவைகளை எழுப்புவதே என்னை அனுப்பின பிதாவின் சித்தமாயிருக்கிறது.**

**யோவா 6:40. குமாரனைக் கண்டு, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்தியஜீவனை அடைவதும், நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவதும், என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது என்றார்.**

**கடைசி நாளில் எழுப்புவது**

**பிதாவானவர் எனக்குக் கொடுக்கிறயாவும் என்னிடத்தில் வரும்; என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை. என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கிவந்தேன். அவர் எனக்குத் தந்தவைகளில் ஒன்றையும் நான் இழந்துபோகாமல், கடைசி நாளில் அவைகளை எழுப்புவதே என்னை அனுப்பின பிதாவின் சித்தமாயிருக்கிறது (யோவா 6:37-39).**

## அதிகாரம் - 6

மனுஷர் மத்தியிலே தமக்கு நியமிக்கப்பட்டிருக்கும் ஊழியத்தை இயேசுகிறிஸ்து இங்கு விவரித்துக் கூறுகிறார். தம்மை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே இயேசுகிறிஸ்து வானத்திலிருந்து இறங்கி வந்திருக்கிறார். இயேசுகிறிஸ்து மெய்யாகவே வானத்திலிருந்து இறங்கி வந்திருக்கிறார். அவர் வானத்திலிருந்து இறங்கி இந்த பூமிக்கு வந்திருப்பதற்கு ஒரு தெய்வீக நோக்கமுள்ளது. தம்முடைய சித்தத்தின்படி செய்வதற்காக இயேசுகிறிஸ்து இந்த பூமிக்கு இறங்கி வரவில்லை. தம்முடைய பிதாவின் சித்தத்தின்படி செய்வதற்காகவே அவர் இந்த பூமிக்கு இறங்கி வந்திருக்கிறார். இந்த உலகத்திற்கு தேவனுடைய பிரதான பிரதிநிதியாகவும், இந்த உலகத்தின் பரம வைத்தியராகவும் இயேசுகிறிஸ்து வானத்திலிருந்து இந்த உலகத்திற்கு இறங்கி வந்திருக்கிறார். பிதாவாகிய தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்துவதும், மனுஷருக்கு நன்மை செய்வதுமே இயேசுகிறிஸ்துவின் பிரதான ஊழியம். பிதாவின் சித்தத்தை நமக்கும் எடுத்துக் கூறி, அந்த சித்தத்தைக் குறித்து நாமும் அறிந்து கொள்ளவேண்டும் என்று இயேசுகிறிஸ்து பிரியமாயிருக்கிறார்.

தெரிந்தெடுக்கப்பட்டவர்களில் மீதமானவர்கள் அனைவரையும் இரட்சிக்க வேண்டுமென்பது பிதாவாகிய தேவன் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவுக்கு கொடுத்திருக்கும் கட்டளையாகும். இதுவே பிதாவுக்கும் குமாரனுக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் இரட்சிப்பின் உடன்படிக்கை. குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை அனுப்பிய பிதாவாகிய தேவனுடைய சித்தம். பிதாவாகிய தேவன் குமாரனுக்கு தந்தவைகளில் ஒன்றையும் குமாரன் இழந்துபோகாமல் கடைசிநாளில் அவைகளை எழுப்புவதே, குமாரனை அனுப்பின பிதாவின் சித்தமாயிருக்கிறது. மனுக்குலத்தாரில், ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள மனுஷரை பிதாவாகிய தேவன் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவிடம் ஒப்புக்கொடுத்திருக்கிறார். குமாரனுடைய பராமரிப்புக்கு இவர்கள் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

தம்முடைய விசேஷித்த அன்புக்கு பாத்திரமானவர்கள் எல்லோரையும் பிதாவாகிய தேவன் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் கரங்களில் ஒப்புக்கொடுத்திருக்கிறார். அவர்களில் யாரையும் இழந்துபோகக்கூடாது என்பதில் குமாரன் அதிக கவனத்தோடிருக்கிறார். ஏனெனில் இவர்களை பிதா தாமே குமாரனிடத்தில் ஒப்புக்கொடுத்திருக்கிறார். தம்மிடத்தில் ஒப்புவிக்கப்பட்டுள்ள ஆத்துமாக்களை பாதுகாத்து பராமரிப்பது இயேசுகிறிஸ்துவின் ஊழியம். அவர்கள் நித்திய ஜீவனை அடையுமாறு இயேசுகிறிஸ்து அவர்களை வழிநடத்துகிறார். அவர்களை கடைசி நாளில் எழுப்பும் வரையிலும் குமாரனாகிய இயேசுகிறிஸ்து அவர்களை பராமரிக்கிறார். மரித்தோரின் உயிர்த்தெழுதல் நடைபெறும் வரையிலும் இயேசுகிறிஸ்துவின் ஊழியம் முடிவுபெறுவதில்லை. இதுவே பிதாவாகிய தேவனுடைய தெய்வீக திட்டம்.

### நித்திய ஜீவனை அடைவது

**குமாரனைக் கண்டு, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்தியஜீவனை அடைவதும், நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவதும், என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது என்றார் (யோவா 6:40).**

பிதாவாகிய தேவன் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவுக்கு மேலும் ஒரு ஊழியத்தை ஒப்புக்கொடுத்திருக்கிறார். தேவனுடைய சுவிசேஷத்தின் நற்செய்தியை ஜனங்களுக்கு அறிவிக்க வேண்டுமென்பதே அந்த ஊழியம். குமாரனாகிய இயேசுகிறிஸ்துவைக் கண்டு, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்கள் எல்லோரும் நித்திய ஜீவனை அடைவார்கள் என்பதே இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷச்செய்தி. இது தேவனுக்கும் மனுஷருக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் கிருபையின் உடன்படிக்கையாகும். இயேசுகிறிஸ்துவிடம் யாரெல்லாம் ஒப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது தேவனுடைய ரகசியம். அவர்களுடைய பெயர்கள் ரகசியமாக பாதுகாக்கப்பட்டாலும், அவர்களுடைய சுபாவங்கள் இங்கு வெளிப்படையாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

பிதாவானவர் குமாரனுக்குக் கொடுத்திருக்கிற யாவரும் அவரிடத்தில் வருவார்கள். தம்மிடத்தில் வருகிறவர்களை இயேசுகிறிஸ்து புறம்பே தள்ளமாட்டார். குமாரனாகிய இயேசுகிறிஸ்துவைக்கண்டு, அவரிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவர்கள் எல்லோருக்கும் இயேசுகிறிஸ்து நித்திய ஜீவனைக்கொடுக்கிறார். இயேசுகிறிஸ்து இவர்களை கடைசிநாளில் எழுப்புவார். இதுவே இயேசுகிறிஸ்துவை வானத்திலிருந்து இந்த பூமிக்கு அனுப்பியுள்ள, பிதாவின் சித்தமாக இருக்கிறது.

## அதிகாரம் - 6

நித்திய ஜீவனை பெற்றுக்கொள்கிறவர்களின் பெயர் அட்டவணை வேதாகமத்தில் வெளிப்படுத்தப்படவில்லை. ஆனால் அவர்களிடத்தில் காணப்படவேண்டிய குணாதிசயம் தெளிவாக வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவை தேவனுடைய ஒரே பேறான குமாரனாகவும் தங்களுடைய சொந்த இரட்சகராகவும் இவர்கள் ஏற்றுக்கொள்வார்கள். இதுவே இவர்களிடத்தில் காணப்படும் குணாதிசயம். இந்தச் செய்தி உலகத்திலுள்ள எல்லோருக்கும் அறிவிக்கப்படும் நற்செய்தியாகும். நாமும் கூட இயேசுகிறிஸ்துவை விசுவாசித்தால், அவர் நமக்கும் நித்திய ஜீவனைக்கொடுப்பார். நாம் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளவில்லையென்றால் அதற்கு நம்முடைய தவறே காரணம். தேவனுடைய இரட்சிக்கும் கிருபை ஒருபோதும் குறைந்து போவதில்லை.

மகிமையின் கிரீடம் நமக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய உன்னத அழைப்புக்கு இது வெகுமதியாக நமக்கு முன்பாக நிற்கிறது. நாம் இதைப்பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால் விசுவாச ஓட்டத்தை ஓடவேண்டும் ஓடித்தான் பெற்றுக்கொள்ளவேண்டும். இயேசுகிறிஸ்துவை தேவனுடைய ஒரே பேறான குமாரனென்றும், நம்முடைய ஒரே இரட்சகரென்றும் விசுவாசித்தால், நாம் இந்த மகிமையின் கிரீடத்தை பெற்றுக்கொள்ளலாம். எல்லோரும் பெற்றுக்கொள்ளலாம்.

தம்மிடத்தில் வருகிற யாரையும் இயேசுகிறிஸ்து புறம்பே தள்ளமாட்டார். இயேசுகிறிஸ்துவில் யாரெல்லாம் விசுவாசம் வைக்கிறார்களோ அவர்களெல்லோருமே நித்திய ஜீவனை நிச்சயமாக பெற்றுக்கொள்வார்கள். குமாரனைக்கண்டு அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனெவனோ அவன் நித்திய ஜீவனை அடைவான்.

குமாரனைக்காண்கிற எல்லோரும், குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிற எல்லோரும், அவரை தங்களுடைய விசுவாசத்தின் கண்களாலேயே காண்பார்கள். இந்த வசனப்பகுதியில் "குமாரனைக்கண்டு" என்னும் வார்த்தைக்கு "குமாரனை விசுவாசித்து" என்று பொருள் கூறவேண்டும். இயேசுகிறிஸ்து ஜனங்களிடமிருந்து குருட்டுத்தனமான விசுவாசத்தை எதிர்பார்க்கவில்லை.

ஜனங்கள் தங்களுடைய கண்களை விசுவாசத்தோடு ஏறிட்டுப்பார்க்க ஆயத்தமாக இருக்கவேண்டும். அதன் பின்பு இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றவேண்டும். விசுவாசத்தில் இயேசுகிறிஸ்துவிடம் வரவேண்டும். இவ்வாறு இயேசுகிறிஸ்துவைக்கண்டு, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்களை, அவர் தம்முடைய தெய்வீக வல்லமையினால் கடைசி நாளில் எழுப்புவார். இவ்வாறு செய்வது தம்மை அனுப்பின பிதாவின் சித்தமாயிருக்கிறது என்பதை இயேசுகிறிஸ்து இங்கு தெளிவுபடுத்துகிறார். இரட்சிக்கப்பட்டவர்களை கடைசிநாளில் எழுப்புவது பிதாவின் சித்தமாக இருந்தாலும், அவருடைய சித்தத்தின் பிரகாரம், குமாரனாகிய இயேசுகிறிஸ்துவே அவர்களை கடைசிநாளில் எழுப்புவார்.

### வானத்திலிருந்து வந்த அப்பம்
### யோவா 6:41-51

**யோவா 6:41. நான் வானத்திலிருந்து வந்த அப்பம் என்று அவர் சொன்னதினிமித்தம் யூதர்கள் அவரைக்குறித்து முறுமுறுத்து:**

**யோவா 6:42. இவன் யோசேப்பின் குமாரனாகிய இயேசு அல்லவா, இவனுடைய தகப்பனையும் தாயையும் அறிந்திருக்கிறோமே; அப்படியிருக்க, நான் வானத்திலிருந்திறங்கிவந்தேன் என்று இவன் எப்படிச் சொல்லுகிறான் என்றார்கள்.**

**யோவா 6:43. இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: உங்களுக்குள்ளே முறுமுறுக்க வேண்டாம்.**

**யோவா 6:44. என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்; கடைசிநாளில் நான் அவனை எழுப்புவேன்.**

**யோவா 6:45. எல்லாரும் தேவனாலே போதிக்கப்பட்டிருப்பார்கள் என்று தீர்க்கதரிசிகளின் ஆகமத்தில் எழுதியிருக்கிறதே; ஆகையால் பிதாவினிடத்தில் கேட்டுக் கற்றுக்கொள்ளுகிறவன் எவனும் என்னிடத்தில் வருகிறான்.**

**யோவா 6:46. தேவனிடத்திலின்று வந்தவரே தவிர வேறொருவரும் பிதாவைக் கண்டதில்லை, இவரே பிதாவைக் கண்டவர்.**

**யோவா 6:47. என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டென்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்,**

## அதிகாரம் - 6

**யோவா 6:48. ஜீவ அப்பம் நானே.**

**யோவா 6:49. உங்கள் பிதாக்கள் வனாந்தரத்திலே மன்னாவைப் புசித்திருந்தும் மரித்தார்கள்.**

**யோவா 6:50. இதிலே புசிக்கிறவன் மரியாமலிருக்கும்படி வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவே.**

**யோவா 6:51. நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார்.**

**யூதர்களின் முறுமுறுப்பு**

**நான் வானத்திலிருந்து வந்த அப்பம் என்று அவர் சொன்னதினிமித்தம் யூதர்கள் அவரைக்குறித்து முறுமுறுத்து: இவன் யோசேப்பின் குமாரனாகிய இயேசு அல்லவா, இவனுடைய தகப்பனையும் தாயையும் அறிந்திருக்கிறோமே; அப்படியிருக்க, நான் வானத்திலிருந்திறங்கிவந்தேன் என்று இவன் எப்படிச் சொல்லுகிறான் என்றார்கள் (யோவா 6:41,42).**

இயேசுகிறிஸ்து தம்மை வானத்திலிருந்து இறங்கி வந்த ஜீவஅப்பம் என்று கூறுகிறார். அவருடைய வார்த்தையை கேட்ட யூதர்கள் அவரைக்குறித்து முறுமுறுக்கிறார்கள். சற்று நேரத்திற்கு முன்பாக இயேசுகிறிஸ்து தம்மைக்குறித்து "வானத்திலிருந்து இறங்கி உலகத்திற்கு ஜீவனைக்கொடுக்கிற அப்பமே தேவன் அருளிய அப்பம்" (யோவா 6:33) என்று கூறினார். அதைக்கேட்டபோது ஜனங்கள் அவரை நோக்கி "ஆண்டவரே, இந்த அப்பத்தை எப்பொழுதும் எங்களுக்கு தரவேண்டும்" (யோவா 6:34) என்று அவரிடத்தில் வேண்டிக்கொண்டார்கள். தாங்கள் வேண்டிக்கொண்டதன் பொருள் என்னவென்று தெரியவில்லையென்றாலும், அவர்களுடைய ஜெபம் மிகவும் நேர்த்தியானது. அறியாமையில் செய்த விண்ணப்பமும் செம்மையாக உள்ளது. மிகவும் அர்த்தம் மிகுந்த ஜெபவார்த்தையை பயன்படுத்துகிறார்கள். தெய்வீக காரியங்களில் சில சமயங்களில் நமக்கு குழப்பம் உண்டாகலாம். அதை தெளிவாக புரிந்துகொள்ளாமல் பொதுவாக மேலோட்டமாகப் புரிந்துகொள்ளலாம். அப்படிப்பட்ட சிந்தனைகள்கூட தேவனுடைய தெய்வீக காரியங்களை அறிந்துகொள்ள வேண்டுமென்றும், பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் ஆவலை உண்டுபண்ணும். தேவனுடைய காரியங்களில் சில சமயங்களில் சிலருக்கு தெளிந்த ஞானம் ஏற்படுவதில்லை. அவர்கள் நடக்கிற மனுஷரை மரங்கள் நடப்பதுபோல காண்பார்கள். அப்படிப்பட்டவர்கள்கூட ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்காக ஜெபம்பண்ணுவார்கள். தேவனுடைய சிலாக்கியம் ஒரு நன்மையான ஆசீர்வாதம் என்றும், பரலோகம் என்பது நேர்த்தியான ஸ்தலமென்றும் அவர்கள் பொதுவாக விசுவாசிக்கிறார்கள். அதை விரும்புகிறார்கள். ஆசீர்வாதத்தை விரும்புகிற இந்த ஜனங்கள், அதைப்பெற்றுக்கொள்வதற்கு அடிப்படைத் தேவையான பரிசுத்தத்தைப்பற்றி சிறிதும் சிந்தித்துப் பார்ப்பதில்லை.

ஜீவஅப்பம் என்று இயேசுகிறிஸ்து தம்மைத்தாமே குறிப்பிடுகிறார். ஆனால் இதைக்கேட்கிற யூதர்களோ அவருடைய வார்த்தைகளை அசட்டைபண்ணுகிறார்கள். அவரைக்குறித்து முறுமுறுக்கிறார்கள். இயேசுகிறிஸ்து தேவனுடைய சித்தத்தைப் பற்றியும், மனுஷருடைய இரட்சிப்பைப்பற்றியும் கூறியவுடன் யூதர்களுக்கு முறுமுறுப்பு உண்டாயிற்று. இயேசுகிறிஸ்து மெய்யாகவே மனுஷருடைய இரட்சிப்பைக்குறித்து கிருபை நிறைந்த வார்த்தைகளைப் பேசியிருக்கிறார். இந்த வார்த்தைகளுக்காக அவர்கள் இயேசுகிறிஸ்துவுக்கு நன்றி கூறவேண்டும். இயேசுகிறிஸ்துவின் மூலமாக பிதாவாகிய தேவன் தங்களை சந்திக்க வந்திருப்பதற்காக அவர்கள் சாஷ்டாங்கமாய் கீழே விழுந்து இயேசுகிறிஸ்துவைத் தொழுதுகொள்ளவேண்டும். ஆனால் அவர்களோ அவரைக்குறித்து முறுமுறுக்கிறார்கள். அவர் கூறிய வார்த்தைக்கு விரோதமாக வாக்குவாதம்பண்ணுகிறார்கள்.

இக்காலத்தில்கூட ஏராளமான ஜனங்கள் இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்கிறார்கள். அந்த உபதேசத்திற்கு விரோதமாக வெளிப்படையாக எதுவும் பேசமாட்டார்கள். ஆனாலும் இயேசுவின் உபதேசம் தங்களுக்குப் பிடிக்கவில்லையென்று தங்களுடைய இருதயத்திற்குள் சொல்லிக்கொள்வார்கள். இயேசுகிறிஸ்து பரலோகத்திலிருந்து வந்திருக்கிறார் என்னும் சத்தியத்தை யூதர்கள் அங்கீகரிக்க ஆயத்தமாகயில்லை. தேவனை தம்முடைய பிதாவென்றும், பிதாவானவர் தம்மை அனுப்பியிருக்கிறாரென்றும், தாம் வானத்திலிருந்து இறங்கி வந்திருப்பதாகவும் இயேசுகிறிஸ்து கூறிய வார்த்தைகளினால் யூதர்கள் அவர்மீது கோபமடைகிறார்கள்.

## அதிகாரம் - 6

"நான் வானத்திலிருந்து இறங்கி வந்தேன்" என்று இயேசுகிறிஸ்து எப்படி சொல்லலாம் என்பது யூதர்களுடைய கோபமான கேள்வி. இந்த பூமியில் இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றை அவர்கள் அறிந்து வைத்திருக்கிறார்கள். அவர் யோசேப்பின் குமாரனாகிய இயேசு என்பது மாத்திரமே அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது. அவருடைய தகப்பனையும் தாயையும் அறிந்திருப்பதாக கூறுகிறார்கள். இயேசுகிறிஸ்து சாதாரண மனிதர் என்றும், தங்களைப் போன்றவர் என்றும், தங்களில் ஒருவர் என்றும் யூதர்கள் நினைக்கிறார்கள். அப்படியிருக்கும்போது, இயேசுகிறிஸ்து தம்மை வானத்திலிருந்து இறங்கி வந்திருப்பதாக கூறுவது, அவர்களுக்கு கோபத்தை உண்டுபண்ணிற்று.

**என்னிடத்தில் வருகிறவன்**

**இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: உங்களுக்குள்ளே முறுமுறுக்க வேண்டாம். என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்; கடைசிநாளில் நான் அவனை எழுப்புவேன் (யோவா 6:43,44).**

மனுஷர் தேவனால் போதிக்கப்படும்போது, தேவனிடத்திலிருந்து கற்றுக்கொள்வார்கள். இதன் மூலமாக அவர்கள் தேவனைப்பற்றிய வெளிப்பாட்டைப் பெற்றுக்கொண்டு, இயேசுகிறிஸ்துவினிடத்தில் வருவார்கள். ஒவ்வொரு மனுஷனுக்கும் சுயசிந்தையும், சுயசித்தமும் இருக்கிறது. மனுஷருடைய சித்தங்கள் தேவனுடைய சித்தத்திற்கு முன்பாக கீழ்ப்படுத்தப்படும். மனுஷன் பாவம் செய்து தன்னுடைய உன்னதமான ஸ்தானத்திலிருந்து கீழே விழுந்துவிட்டான். எப்போது மனுஷன் பாவம் செய்தானோ அப்போதே தேவனுடைய சித்தத்திற்கு விரோதமாக கலகம்பண்ணுகிற குணம் அவனுக்குள் வந்துவிடுகிறது. தேவன் போதிப்பதற்கு விரோதமாக, மனுஷனுடைய சுயசித்தம் கீழ்ப்படியாமல் கலகம்பண்ணுகிறது.

மனுஷன் தேவனிடத்தில் வர வேண்டுமானால், அவனுடைய கலகம் பண்ணுகிறசித்தம்கட்டுப்படுத்தப்பட வேண்டும். மனுஷருடைய சித்தத்திற்குமேல் தேவனுடைய தெய்வீக சித்தம் ஆளுகை செய்யவேண்டும். தேவன் தம்முடைய கிருபையினால் மனுஷருடைய சித்தங்களை கீழ்ப்படுத்தி அவர்களை தம்மிடமாக இழுத்துக்கொள்கிறார். ஆகையினால் இயேசுகிறிஸ்து "என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக் கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்" என்று கூறுகிறார்.

யூதர்கள் இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்டு முறுமுறுக்கிறார்கள். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக "உங்களுக்குள்ளே முறுமுறுக்கவேண்டாம்" என்று கூறுகிறார். தங்களுடைய அவிசுவாசத்தையும், கலக குணத்தையும், தேவன்மீதுள்ள விரோதத்தையும் வெறுப்பையும் இவர்கள் மற்றவர்கள்மீது சுமத்துகிறார்கள். ஆகையினால்தான் இயேசு இவர்களைப்பார்த்து உங்களுக்குள்ளே முறுமுறுக்க வேண்டாமென்று கூறுகிறார்.

இவர்களுடைய முறுமுறுப்பு மிகவும் பெரிதாக இருக்கிறது. தேவனுக்கு விரோதமான கலகக்குணம் இவர்களுக்குள் வல்லமையாக கிரியை செய்கிறது. தேவனுடைய சத்தியத்திற்கு விரோதமாக இவர்கள் எழும்பி நின்று கிரியை செய்கிறார்கள். இந்த கலகக்குணத்தை சாதாரண வல்லமையினால் அடக்க முடியாது. இவர்களுடைய மாம்ச சித்தங்களையும், மாம்ச கிரியைகளையும் தேவனுடைய வல்லமையினால் மாத்திரமே அடக்கி, அதை மேற்கொண்டு, ஆளுகை செய்யமுடியும். மனுஷருடைய சித்தத்தை அடக்குவது பிதாவின் சித்தம் என்பதை விவரிப்பதற்காக இயேசுகிறிஸ்து இங்கு "என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்" என்று கூறுகிறார்.

பிதா ஒரு மனுஷனை இழுத்துக்கொள்கிறார். "இழுத்துக் கொள்ளுதல்" என்பதற்கு, ஒருவனுடைய விருப்பத்திற்கு மாறாக அவனை பலவந்தமாக இழுத்துக்கொண்டு போதல் என்பது பொருளல்ல. இழுத்துக்கொள்ளுதல் என்பதற்கு ஒருவனுடைய "சித்தத்தில் மாற்றத்தை உண்டுபண்ணுதல்" என்று பொருள். மனுஷன் தன்னுடைய ஆத்துமாவில் தேவனுக்கு விரோதமாக சிந்திக்கிறான். பிதாவாகிய தேவன் அந்த ஆத்துமாவில் ஒரு மாற்றத்தை உண்டுபண்ணுகிறார். இதனால் அவனுக்குள் தேவனுக்கு விரோதமான சிந்தனைக்குப் பதிலாக, தேவனை நேசிக்கும் சிந்தனை அவனுக்குள் உண்டாகிறது. இதுவரையிலும் தேவனை விட்டு விலகிப்போனவன், இப்போது தேவனை நோக்கி நெருங்கி வருகிறான். மனுஷனுக்குள் தம்முடைய சுவாசத்தை ஊதி அவனை ஜீவ ஆத்துமாவாக்கிய தேவனால், அவனுடைய ஆத்துமாவை மறுரூபப்படுத்த முடியும்.

## அதிகாரம் - 6

மனுஷன் பலவீனமானவன். அவனுடைய சொந்த பலத்தினால் அவனால் தேவனிடத்தில் வரமுடியாது. அவனுக்கு தேவனுடைய உதவியும் ஒத்தாசையும் தேவைப்படுகிறது. தேவன் மனுஷனை இழுத்துக்கொள்ளாவிட்டால், அவனால் தன் சுயமுயற்சியினால் தேவனிடத்தில் வரவேமுடியாது. மனுஷனை இழுத்துக்கொள்ளும் கிரியையை பிதாவாகிய தேவனே செய்கிறார். இவரே குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை இந்த பூமிக்கு மனுஷர் மத்தியில் அனுப்பியவர். பிதாவானவர் குமாரனை எந்த வேலையுமில்லாமல் சும்மா பொழுது போக்குவதற்காக இந்த பூமிக்கு அனுப்பவில்லை. ஒரு முக்கியமான ஊழியத்தை அவரிடத்தில் ஒப்புக்கொடுத்து இந்த பூமிக்கு அனுப்பியிருக்கிறார். இயேசுகிறிஸ்து இந்த பூமிக்கு வந்து ஆத்துமாக்களை இரட்சிக்க வேண்டும் என்பதற்காகவும், தம் மூலமாக இரட்சிக்கப்பட்ட ஆத்துமாக்களை பிதாவினிடத்தில் அழைத்துக்கொண்டு வரவேண்டுமென்பதற்காகவும், பிதாவானவர் குமாரனை அனுப்பியிருக்கிறார்.

பிதாவானவர் இயேசுகிறிஸ்துவுக்குக் கொடுத்திருக்கும் ஊழியம் ஒரு நாளில் பரிபூரணமாக நிறைவடையும். அந்த கடைசிநாளில், இயேசுகிறிஸ்து தம்மிடத்தில் பிதாவானவர் ஒப்புக்கொடுத்தவர்களை எழுப்புவார். இதுவே இயேசுகிறிஸ்துவிடம் பிதாவானவர் ஒப்புக்கொடுத்திருக்கும் ஊழியம். இயேசுகிறிஸ்து இந்த சத்தியத்தை, இந்த உரையாடல் பகுதியில் நான்கு முறை குறிப்பிட்டிருக்கிறார். குமாரனாகிய இயேசுகிறிஸ்துவினால் இந்த ஊழியத்தை செய்யமுடியுமானால், அவரால் எல்லாவற்றையும் செய்யமுடியும். அவரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் தேவனிடத்திலிருந்து பல காரியங்களை எதிர்பார்க்கிறோம். அவற்றில் அநேக காரியங்கள் உலகப்பிரகாரமானவை. இவையெல்லாம் ஒருபுறம் இருந்தாலும், நம்முடைய சந்தோஷம் உலகப்பிரகாரமான ஆசீர்வாதத்தினால் கட்டியெழுப்பப்படக்கூடாது. கடைசிநாளில் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நம்மை எழுப்புவார் என்னும் சிந்தனையே நம்முடைய சந்தோஷத்திற்கு ஆதாரமாக இருக்கவேண்டும்.

### தீர்க்கதரிசிகளின் ஆகமம்

**எல்லாரும் தேவனாலே போதிக்கப்பட்டிருப்பார்கள் என்று தீர்க்கதரிசிகளின் ஆகமத்தில் எழுதியிருக்கிறதே; ஆகையால் பிதாவினிடத்தில் கேட்டுக் கற்றுக்கொள்ளுகிறவன் எவனும் என்னிடத்தில் வருகிறான். தேவனிடத்திலிருந்து வந்தவரே தவிர வேறொருவரும் பிதாவைக் கண்டதில்லை, இவரே பிதாவைக் கண்டவர் (யோவா 6:45,46).**

பிதாவானவர் இயேசுகிறிஸ்துவுக்குக் கொடுக்கிற யாவும் அவரிடத்தில் வரும். இந்த சம்பவம் நிச்சயமாகவே நிறைவேறும் என்று இயேசுகிறிஸ்து வாக்குப்பண்ணுகிறார். ஆயினும் ஒரு சிலர் இயேசுவைக் கண்டிருந்தும் விசுவாசியாமலிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில், தம்முடைய சித்தத்தின்படியல்ல, தம்மை அனுப்பின பிதாவானவருடைய சித்தத்தின்படி செய்யவே தாம் வானத்திலிருந்து இறங்கி வந்திருப்பதாக இயேசுகிறிஸ்து கூறுகிறார். பிதாவானவர் இயேசுகிறிஸ்துவுக்குத் தந்தவைகளில் ஒன்றையும் அவர் இழந்து போகமாட்டார். கடைசிநாளில் அவைகளை எழுப்புவார். இதுவே இயேசுகிறிஸ்துவை அனுப்பின பிதாவின் சித்தமாயிருக்கிறது. பிதாவானவர் குமாரனுக்குக் கொடுக்கிற யாவும் அவரிடத்தில் வரும். இயேசுகிறிஸ்துவினிடத்தில் ஆத்துமாக்கள் வருவதற்கு இரண்டு காரியங்கள் நடைபெறும். அவையாவன: 1. தேவனைப்பற்றிய அவர்களுடைய அறிவு விருத்தியடையும். 2. அவர்களுடைய சித்தங்கள் தேவனுடைய சித்தத்திற்கு கீழ்ப்படுத்தப்படும்.

"எல்லோரும் தேவனாலே போதிக்கப்பட்டிருப்பார்கள்" என்று தீர்க்கதரிசிகளின் ஆகமத்தில் எழுதியிருக்கிறது. நாம் இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைக்கவேண்டுமானால், நாம் தேவனால் போதிக்கப்பட்டிருப்பது அவசியம். தேவன் நமக்குப் போதித்தால் மாத்திரமே அவருடைய தெய்வீக வெளிப்பாடு நமக்கு வெளிப்படுத்தப்படும். சில காரியங்களை இந்த உலகத்தில் இயற்கையாக உள்ள காரியங்களே நமக்குக் கற்றுக்கொடுக்கும். ஆயினும் இயற்கையின் வெளிச்சத்தில் தேவனை பூரணமாக புரிந்துகொள்ள முடியாது. நாம் இயேசுகிறிஸ்துவிடத்தில் வரவேண்டுமானால், நமக்கு இயற்கையாக உள்ள ஞானத்தைவிட தெய்வீக வெளிப்பாடு தேவைப்படுகிறது. நமக்குள் தெய்வீக ஞானம் கிரியை நடப்பிக்கவேண்டும். இதற்கு நாம் தேவனால் போதிக்கப்படவேண்டும்.

## அதிகாரம் - 6

இந்த உலகத்தில் மிருகங்களுக்குக் கிடைத்திராத சிலாக்கியம் நமக்குக் கிடைத்திருக்கிறது. தேவன் நமக்கு சிந்திக்கும் ஆற்றலைக் கொடுத்திருக்கிறார். அவர் மிருகங்களுக்கு போதிப்பதில்லை. ஆனால் பாவிகளான நமக்கோ தேவன் தமது சத்தியத்தை போதிக்கிறார். தேவன் நமக்குப் போதிக்கும்போது, அவர் சாதாரண மனுஷரைப்போல நமக்குப் போதிப்பதில்லை. தேவன் போதிக்கும்போது, அவர் போதிக்கும் சத்தியத்தை நாம் விசுவாசிப்பதற்கு, நமக்குள்ளே விசுவாசத்தையும் கொடுக்கிறார். தேவனால் போதிக்கப்படுவது எல்லாமே சத்தியமாக இருக்கிறது. நமக்கு போதிக்கும் முழுபொறுப்பையும் தேவனே ஏற்றுக்கொண்டிருக்கிறார். ஆகையினால் யாரெல்லாம் பிதாவின் போதகத்தைக் கேட்டு கற்றுக் கொள்கிறார்களோ, அவர்களெல்லோரும் இயேசுகிறிஸ்துவிடத்தில் வருகிறார்கள்.

தேவனுடைய கிருபை நமக்குக் கொடுக்கப்படவில்லையென்றால், தேவனுடைய வெளிப்பாடுகளை நம்மால் புரிந்துகொள்ள முடியாது. தேவனுடைய தெய்வீக கிருபையே நம்முடைய சிந்தையை புதுப்பிக்கிறது. தேவன் நமக்கு சத்தியத்தை சாதாரணமாக பேசுவதுபோல பேசவில்லை. அவர் நமக்கு சத்தியத்தை போதிக்கிறார். நாம் சத்தியத்தை கற்றுக்கொள்ளும் வண்ணமாக அவர் நமக்கு தெளிவாக போதிக்கிறார். இயேசுகிறிஸ்துவில் உள்ள சத்தியத்தை நாம் புரிந்துகொள்ளவில்லையென்றால், நாம் இயேசுகிறிஸ்துவிடத்தில் வரமாட்டோம். இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கமாட்டோம்.

இயேசுகிறிஸ்துவிடத்தில் வராதவர்கள் பிதாவினிடத்திலிருந்து கேட்பதுமில்லை. கற்றுக்கொள்வதுமில்லை. அவர்கள் பிதாவினிடத்தில் கேட்டு கற்றுக்கொண்டிருந்தால், அவர்கள் நிச்சயமாகவே இயேசுகிறிஸ்துவிடத்தில் வருவார்கள். ஒரு சிலர் இயேசுகிறிஸ்துவை விசுவாசியாமலேயே, தேவனால் போதிக்கப்பட்டிருப்பதாக மாய்மாலம் பண்ணுகிறார்கள். இது வீணான மாய்மாலம். இதனால் ஒரு பிரயோஜனமுமில்லை. தங்களுடைய மாய்மாலமான வார்த்தையினால் தேவனைக் கண்டதாகவும் கூறுகிறார்கள். இதைப்பற்றி இயேசுகிறிஸ்து மிகவும் தெளிவாக இங்கு விளக்கிக் கூறுகிறார்.

இயேசுகிறிஸ்துவைத்தவிர, வேறு எந்த ஒரு மனுஷனும் பிதாவைக் கண்டதில்லை. தேவன் மனுஷருடைய மனக்கண்களை பிரகாசமுள்ளதாக்குகிறார், அவர்களுக்குப் போதிக்கிறார். ஆவிக்குரிய ரீதியாக அவர்களுக்குள் கிரியை செய்கிறார். ஆவிகளின் பிதாவானவர் மனுஷருடைய ஆவிகளில் கிரியை நடப்பிக்க வல்லவராகயிருக்கிறார். நம்முடைய ஆவிகளை தேவனால் பகுத்தறிய முடியும். நாம் ஒருவேளை தேவனுடைய முகத்தை தரிசிக்காமலிருக்கலாம். ஆனாலும் அவருடைய வல்லமையை உணருகிறோம். பிதாவினிடத்திலிருந்து கற்றுக்கொள்கிறவன் இயேசு கிறிஸ்துவிடத்திலிருந்தும் கற்றுக்கொள்வான். இயேசுகிறிஸ்துவே தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறவர். இவர் மாத்திரமே பிதாவைக் கண்டவர். இப்படிப்பட்ட இயேசுகிறிஸ்துவிடமிருந்து நாம் கற்றுக் கொள்ளும்போது, தேவனைப்பற்றிய வெளிப்பாடுநமக்குதெளிவாக கொடுக்கப்படும்.

**ஜீவ அப்பம் நானே**

**என்னிடத்தில் விசுவாசமாயிருக் கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டென்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், ஜீவ அப்பம் நானே. உங்கள் பிதாக்கள் வனாந்தரத்திலே மன்னாவைப் புசித்திருந்தும் மரித்தார்கள். இதிலே புசிக்கிறவன் மரியாமலிருக்கும்படி வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவே. நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார் (யோவா 6:47-51).**

அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல, நித்திய ஜீவன் வரைக்கும் நிலை நிற்கிற போஜனத்திற்காகவே நாம் கிரியை நடப்பிக்க வேண்டும். பிதாவானவர் அனுப்பினவரை நாம் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது (யோவா 6:27-29). இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைப்பது என்றால் என்ன என்பதை இயேசு விளக்கிக் கூறுகிறார். தம்மிடத்தில் வருகிறவனே தம்மில் விசுவாசம் வைக்கிறவன் என்பதை இயேசு இரண்டுமுறை தெளிவாக கூறியிருக்கிறார். இயேசுகிறிஸ்துவிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான். அவரிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான் (யோவா 6:35). தம்மிடத்தில் வருகிறவனை இயேசுகிறிஸ்து புறம்பே தள்ளுவதில்லை (யோவா 6:37). இயேசுகிறிஸ்துவை அனுப்பின பிதா, ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் அவரிடத்தில் வரமாட்டான். பிதாவினிடத்தில் கேட்டு கற்றுக்கொள்கிறவன் எவனும் இயேசுகிறிஸ்துவிடத்தில் வருகிறான் (யோவா 6:44,45).

## அதிகாரம் - 6

தேவனிடத்தில் மனந்திரும்பி வருவதே நம்முடைய பயபக்தியான கிரியையாக இருக்கவேண்டும். நாம் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவிடத்தில் விசுவாசத்தோடு வரும்போது அவரை நம்முடைய இரட்சகராகவும், ராஜாதி ராஜாவாகவும், பிதாவிடத்திற்குச் செல்லும் வழியாகவும் விசுவாசித்து, அங்கீகரித்து, அவரிடத்தில் வரவேண்டும். இயேசுகிறிஸ்து இந்த பூமியிலிருக்கும்போது, அவரிடத்தில் வருவது என்பது, அவரிடத்தில் சாதாரணமாக நடந்து வருவதைவிட மேலான அனுபவமாகும். நாம் இயேசுகிறிஸ்துவிடத்தில் வருவது என்பதற்கு இயேசுகிறிஸ்துவாகிய ஜீவஅப்பத்தை புசிப்பது என்று பொருள். "இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்" (யோவா 6:51) என்று இயேசுகிறிஸ்து தம்மைப்பற்றி குறிப்பிடுகிறார். இதற்கு முன்பு இயேசுகிறிஸ்துவிடம் நம்மை அர்ப்பணிப்பதைப்பற்றி கூறியவர், இப்போது அவர் தம்மையே நமக்காக அர்ப்பணிப்பதைப்பற்றி கூறுகிறார்.

இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதினால் நமக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதம் கிடைக்கும். இயேசுகிறிஸ்துவாகிய அப்பத்தைப் புசிப்பதினால் நமக்கு ஆவிக்குரிய ஜீவன் உண்டாகும். நம்முடைய வாழ்க்கையில் பசியும் மரணமும் நம்மை வருத்துகின்றன. ஆனால் நாம் இயேசுகிறிஸ்துவிடத்தில் வருகிறபோது ஒருக்காலும் பசியடையமாட்டோம். அவரிடத்தில் நாம் விசுவாசமாக இருக்கும்போது நாம் ஒருக்காலும் தாகமடையமாட்டோம் (யோவா 6:35).

நாம் இயேசுகிறிஸ்துவிடம் வரும்போது நமக்கு பசியும் தாகமும் உண்டாகாது. இந்த உபதேசத்தை இயேசுகிறிஸ்து சற்று விரிவுபடுத்தி, தம்மிடத்தில் வருகிறவர்களுக்கும், தம்மை விசுவாசிக்கிறவர்களுக்கும் பசியும் தாகமும் உண்டாகாது என்பது மட்டுமல்ல, ஜீவஅப்பமாகிய தம்மை புசிக்கிறவர்கள் என்றென்றைக்கும் பிழைப்பார்கள் என்றும் கூறுகிறார். ஜீவஅப்பத்தைப் புசிக்கிறவர்கள் என்றென்றைக்கும் மரிக்கமாட்டார்கள். என்றென்றைக்கும் பிழைப்பார்கள். நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வார்கள். இயேசு கிறிஸ்துவிடத்தில்விசுவாசமாயிருக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு (யோவா 6:47).

இயேசுகிறிஸ்துவோடு ஐக்கியமாக இருப்பதும், இயேசுகிறிஸ்துவில் பிதாவாகிய தேவனோடு ஐக்கியமாக இருப்பதும் நித்திய ஜீவனின் ஆரம்பம். இஸ்ரவேல் புத்திரர்கள் வனாந்தரத்தில் மன்னாவை புசித்தார்கள். புசித்திருந்தும் அவர்கள் மரித்துப்போனார்கள். இயேசுகிறிஸ்துவோ ஜீவஅப்பமாக இருக்கிறார். இந்த அப்பத்தைப் புசிக்கிறவர்கள் என்றென்றைக்கும் பிழைப்பார்கள். ஜீவஅப்பத்தைப் புசிக்கிறவர்கள் என்றென்றைக்கும் மரிக்கமாட்டார்கள் (யோவா 6:49,50).

இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்தில் புசித்த மன்னாவையும், ஜீவஅப்பமாகிய தம்மையும் இயேசுகிறிஸ்து ஒப்பிட்டுக்கூறுகிறார். வனாந்தரத்து அப்பத்திலுள்ள ஒரு சில குறைகளை இங்கு எடுத்துக்காண்பிக்கிறார். இவர்களுடைய பிதாக்கள் வனாந்தரத்திலே மன்னாவை புசித்திருந்தும் மரித்துப்போனார்கள். மன்னா என்பது தேவதூதருடைய போஜனம். அப்படிப்பட்ட மன்னாவை புசித்தவர்கள்கூட சாதாரண மனுஷர்களைப்போல மரித்துப்போனார்கள். அவர்களில் அநேகர் அவர்களுடைய அவிசுவாசத்தினிமித்தமாகவும், முறுமுறுப்பினிமித்தமாகவும் மரித்துப் போனார்கள். அவர்கள் மன்னாவை புசித்தபோதிலும், அது தேவனுடைய கோபாக்கினையிலிருந்து அவர்களை பாதுகாக்கவில்லை. ஆனால் இயேசுகிறிஸ்துவில் நாம் விசுவாசம் வைக்கும்போதோ, அந்த விசுவாசம் தேவனுடைய கோபாக்கினியிலிருந்து நம்மை பாதுகாக்கிறது.

வனாந்தரத்தில் தேவனுடைய கோபாக்கினையினால் மரித்தவர்களைத் தவிர, மற்றவர்கள் இயற்கையாக முதுமையடைந்ததினால் மரித்துப்போனார்கள். அவர்களுடைய பிரேதங்கள் அந்த வனாந்தரத்தில் விழுந்து கிடந்தது. எந்த வனாந்தரத்தில் அவர்கள் மன்னாவை புசித்தார்களோ, அந்த வனாந்தரத்திலேயே அவர்கள் மரித்துப்போனார்கள். அந்த வனாந்தரத்திலேயே அவர்களுடைய பிரேதங்கள் விழுந்தது. ஆகையினால் குறைபாடுள்ள அந்த மன்னாவைக்குறித்து யூதர்கள் பெருமை பாராட்டக்கூடாது.

## அதிகாரம் - 6

இயேசுகிறிஸ்துவே வானத்திலிருந்து இறங்கி வந்த மெய்யான அப்பம். இவரே மெய்யான மன்னா. இந்த மன்னாவை புசிக்கிறவன் "மரியாமலிருப்பான்". இவரே வானத்திலிருந்து இறங்கின ஜீவஅப்பம். இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான். மரியாமலிருப்பான் என்னும் வார்த்தைக்கு "அழிந்துபோகாமல் இருப்பான்" என்று பொருள். வனாந்தரத்தில் மரித்துப்போனவர்களால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானான் தேசத்திற்குள் பிரவேசிக்க முடியவில்லை. ஆனால் ஜீவஅப்பமாகிய இயேசுகிறிஸ்துவை புசிக்கிறவர்களோ, எந்தவித குறைவுமில்லாமல் பரலோக கானானுக்குள் பிரவேசிப்பார்கள். இவர்கள் மரிக்கமாட்டார்கள். ஏனெனில் இவர்கள் வானத்திலிருந்து இறங்கின ஜீவஅப்பத்தை புசித்திருக்கிறார்கள். இவர்கள் மரியாமல் என்றென்றைக்கும் பிழைத்திருப்பார்கள்.

மரியாமலிருப்பதைக்குறித்து இயேசுகிறிஸ்து இங்கு உபதேசம்பண்ணுகிறார். ஆனால் இயேசுவே மரித்துப்போனார். நமக்கு மரணம் உண்டாகாமல் இருக்கும்பொருட்டு, இயேசுகிறிஸ்து நமக்காக மரணத்தை ருசிபார்த்திருக்கிறார். என்றென்றைக்கும் பிழைப்பது என்பதற்கு இந்த பூமியில் என்றென்றைக்கும் உயிரோடிருப்பது என்பது பொருளல்ல. தேவனுடைய சமுகத்தில் என்றென்றைக்கும் சந்தோஷமாகயிருப்பது என்பதே இதன் பொருளாகும்.

தம்மிடத்தில் விசுவாசம் வைத்திருக்கிறவர்களை இயேசுகிறிஸ்து உற்சாகப்படுத்துகிறார். ஒரு சிலர் இயேசுகிறிஸ்துவைக் கண்டிருந்தும் அவரை விசுவாசியாமலிருக்கிறார்கள் (யோவா 6:36). நாம் காண்பதின் விளைவாக நமக்கு விசுவாசம் வருவதில்லை. இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்ததை, அவருடைய கல்லறையை காவல்காத்த சேவகர்களும் தங்கள் கண்களால் கண்டார்கள். ஆனால் அவர்களோ இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கவில்லை.

நாம் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து அவரிடத்தில் வரும்போது அவர் நம்மை அன்போடு ஏற்றுக்கொள்கிறார். தம்மிடத்தில் வருகிறவனை அவர் ஒருபோதும் புறம்பே தள்ளுவதில்லை.

நம்முடைய ஆத்துமா இயேசுகிறிஸ்துவின் சமுகத்தைத் தேடிச்செல்லும்போது, அவர் நம்முடைய ஆத்துமாவை அன்போடு வரவேற்று, அங்கீகரித்து ஏற்றுக்கொள்கிறார். நாம் நித்திய ஜீவனைப்பெற்றுக்கொள்வதற்கு தேவன் நம்மிடத்திலிருந்து எதிர்பார்க்கிற ஒரே காரியம் "நாம் அவரிடத்தில் வரவேண்டும்" என்பது மாத்திரமே. இதுவே சுவிசேஷத்தின் மையச்செய்தி.

நாம் இயேசுகிறிஸ்துவின் மூலமாக தேவனிடத்தில் வருகிறோம். இயேசுகிறிஸ்துவின் அன்பும், கிருபையும் இரக்கமும் நம்மை அவரிடத்தில் இழுத்து வரவேண்டும். நாம் இயேசுகிறிஸ்துவிடத்தில் வரவேண்டும் என்னும் தேவையை நம்முடைய உள்ளம் உணரவேண்டும். அதேவேளையில் இயேசுகிறிஸ்துவிடம் வராவிட்டால், நமக்கு நித்திய ஜீவனுக்குப் பதிலாக நித்திய மரணம் உண்டாகும் என்னும் பயமும் நம்முடைய உள்ளத்திலிருக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்துவின் மீதுள்ள அன்போ, நம்முடைய தேவைகளைப்பற்றி கரிசனையோ அல்லது நித்திய மரணத்தைப்பற்றிய பயமோ, எது வேண்டுமானாலும் நம்மை இயேசுகிறிஸ்துவிடத்தில் அழைத்து வரலாம். இயேசுகிறிஸ்துவிடத்தில் வருகிற நம் எல்லோருக்கும், பொதுவான வாக்குத்தத்தம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. "என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை" என்று இயேசுகிறிஸ்து கூறுகிறார். இந்த வார்த்தைகளே நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வாக்குத்தத்தம்.

தம்மிடத்தில் வருகிறவனை இயேசுகிறிஸ்து புறம்பே தள்ளுவதில்லை என்று உறுதியாக கூறுகிறார். இது நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சிலாக்கியம். நம்முடைய பாவத்தினிமித்தமாகவும், அக்கிரமத்தினிமித்தமாகவும், இயேசுகிறிஸ்து நம்மை புறம்பே தள்ளிவிடுவாரோ என்னும் பயம் நம்மிடத்தில் இயல்பாகவே இருப்பதற்கு வாய்ப்புள்ளது. நம்மை ஏற்றுக்கொள்ளாமல், நம்மை புறம்பே தள்ளி, தம்முடைய கதவுகளை அடைத்துக்கொள்வாரோ என்று ஒருவேளை நாம் பயப்படலாம். அந்த பயத்தைப்போக்குவதற்காகவே இயேசுகிறிஸ்து இங்கு உறுதியான வார்த்தைகளைக் கூறுகிறார். "என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை" என்று இயேசுகிறிஸ்து கூறும் வார்த்தைகள் உறுதியானது, நிச்சயமானது. நாம் பாவிகளாகயிருந்தாலும் இயேசுகிறிஸ்து நம்மை புறம்பே தள்ளிவிடமாட்டார்.

## அதிகாரம் - 6

இந்த வாக்கியத்தில் இயேசுகிறிஸ்து கூறியிருக்கும் வார்த்தைகள் மூலமாகவும், இந்த வார்த்தையில் மறைந்திருக்கும் கருத்துக்கள் மூலமாகவும் நமக்கு மிகுந்த ஆறுதலும், ஆசீர்வாதமும் வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. நாம் இயேசுகிறிஸ்துவிடத்தில் வரும்போது, அவர் நம்மை புறம்பே தள்ளமாட்டார் என்பதற்கு, அவர் நம்மை அங்கீகரித்து ஏற்றுக்கொள்வார் என்பது பொருளாகும். பிதாவாகிய தேவன் தமக்குத் தந்தவைகளில் குமாரனாகிய இயேசுகிறிஸ்து ஒன்றையும் இழந்துபோகமாட்டார். ஏற்றவேளை வரும்போது பிதாவானவர் தம்மிடத்தில் தந்தவர்கள் ஒவ்வொருவரையும் அவர் ஏற்றுக்கொள்வார்.

தம்மிடத்தில் யாரெல்லாம் வருவார்கள் என்பதையும் இயேசுகிறிஸ்து தெளிவுபடுத்துகிறார். பிதாவானவர் இயேசுகிறிஸ்துவுக்கு கொடுக்கிற எல்லோரும் அவரிடத்தில் வருவார்கள். ஏராளமானோர் இயேசுகிறிஸ்துவைக் கண்டிருந்தும் அவரை விசுவாசியாமலிருக்கிறார்கள். அவிசுவாசிகளைப்பற்றி இயேசுகிறிஸ்து கூறும்போது, தம்மிடத்தில் வருகிறவர்களைப்பற்றியும் தெளிவாக கூறுகிறார். நாம் இந்த உலகத்தில், மாம்சப் பிரகாரமாக ஜீவிக்கும்போது, பிதாவானவர் நம்மை இயேசுகிறிஸ்துவிடத்தில் கொடுத்திருக்கிறாரா, இல்லையா என்னும் சந்தேகம் நம்முடைய உள்ளத்தில் ஏற்படலாம்.

இயேசுகிறிஸ்துவைக் கண்டிருந்தும் பலர் அவரை விசுவாசியாமல் போனபடியினால், தம்மைத் தாமே ஆறுதல்படுத்தி உற்சாகப்படுத்தும் வண்ணமாக இயேசுகிறிஸ்து இந்த வார்த்தைகளைக் கூறுகிறார். "பிதாவானவர் எனக்கு கொடுக்கிற யாவும் என்னிடத்தில் வரும்" என்று கூறி இயேசுகிறிஸ்து தம்மைத்தாமே ஆறுதல்படுத்தி உற்சாகப்படுத்துகிறார்.

யாரெல்லாம் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என்பதற்கு இங்கு ஒரு விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பிதாவாகிய தேவன் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவிடத்தில் கொடுத்திருக்கிற எல்லோருமே தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். அவர்களும், அவர்களுக்குரியவைகளும், அவர்களுடைய ஊழியங்களும், அவர்களுடைய வாஞ்சைகளும் இயேசுகிறிஸ்துவிடத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. குமாரனுக்குரியதெல்லாம் பிதாவினால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்குரியது. அதுபோலவே இவர்களுக்குரியதெல்லாமே குமாரனுக்குமுரியது. பிதாவானவர் ஜாதிகளை குமாரனுக்கு சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளை அவருக்கு சொந்தமாகவும் கொடுத்திருக்கிறார் (சங் 2:8). யூதர்கள் அவரைக் கண்டிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைக்கவில்லை. இயேசுகிறிஸ்து தம்முடையவைகளை அறிந்திருக்கிறார். அவருடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறார். யூதர்களாகிய இந்த தொழுவத்தில் உள்ளவைகள் அல்லாமல் வேறே ஆடுகளும் இயேசுகிறிஸ்துவுக்கு உண்டு. அவைகளையும் அவர் கொண்டு வரவேண்டும். அவைகள் அவருடைய சத்தத்திற்குச் செவிகொடுக்கும் (யோவா 10:15,16).

பிதாவானவர் குமாரனுக்குக் கொடுக்கிற யாவும் அவரிடத்தில் வரும். இது ஒரு சாதாரணமான வாக்குத்தத்தமல்ல. இது ஒரு முன்னறிவிப்பு. பிதாவானவர் குமாரனுக்குக் கொடுக்கிற யாவும் புறம்பே தள்ளப்படமாட்டாது. தேவனுடைய தானியக்கதிரிலுள்ள ஒரு தானியம்கூட காணாமல்போய்விடாது. அவர்கள் ஒருவேளை இப்போது கிறிஸ்துவின் காணியாட்சிக்கு புறம்பானவர்களாக இருக்கலாம். அப்படிப்பட்டவர்கள்கூட இயேசுகிறிஸ்துவிடத்தில் வருவார்கள். அவர்கள் இயேசுகிறிஸ்துவிடத்திலிருந்து புறம்பே தள்ளப்படமாட்டார்கள். அதற்குப் பதிலாக அவர்கள் இயேசுகிறிஸ்துவிடம் வரும்போது அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படுவார்கள்.

### மாம்சமும் இரத்தமும்
### யோவா 6 : 52-59

**யோவா 6:52. அப்பொழுது யூதர்கள்: இவன் தன்னுடைய மாம்சத்தை எப்படி நமக்குப் புசிக்கக் கொடுப்பான் என்று தங்களுக்குள்ளே வாக்குவாதம் பண்ணினார்கள்.**

**யோவா 6:53. அதற்கு இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.**

**யோவா 6:54. என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன்.**

## அதிகாரம் - 6

**யோவா 6:55. என் மாம்சம் மெய்யான போஜனமாயிருக்கிறது, என் இரத்தம் மெய்யான பானமாயிருக்கிறது.**

**யோவா 6:56. என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான், நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன்.**

**யோவா 6:57. ஜீவனுள்ள பிதா என்னை அனுப்பினதுபோலவும், நான் பிதாவினால் பிழைத்திருக்கிறதுபோலவும், என்னைப் புசிக்கிறவனும் என்னாலே பிழைப்பான்.**

**யோவா 6:58. வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவே; இது உங்கள் பிதாக்கள் புசித்த மன்னாவைப்போலல்ல, அவர்கள் மரித்தார்களே; இந்த அப்பத்தைப் புசிக்கிறவனோ என்றென்றைக்கும் பிழைப்பான் என்றார்.**

**யோவா 6:59. கப்பர்நகூமிலுள்ள ஜெபஆலயத்திலே அவர் உபதேசிக்கையில் இவைகளைச் சொன்னார்.**

**மாம்சத்தை எப்படி புசிக்கக்கொடுப்பான்**

**அப்பொழுது யூதர்கள்: இவன் தன்னுடைய மாம்சத்தை எப்படி நமக்குப் புசிக்கக் கொடுப்பான் என்று தங்களுக்குள்ளே வாக்குவாதம் பண்ணினார்கள் (யோவா 6:52).**

"ஜீவஅப்பம் நானே" என்று இயேசுகிறிஸ்து தம்மைப்பற்றி குறிப்பிடுகிறார். "நானே வானத்திலிருந்து இறங்கின ஜீவஅப்பம்" என்றும் தம்மைப்பற்றி மேலும் கூறுகிறார். தாம் இவ்வாறு கூறுவதன் பொருள் என்ன என்பதை இயேசுகிறிஸ்து இங்கு தெளிவுபடுத்துகிறார். ஆவிக்குரிய சத்தியத்தை விளக்குவதற்கு, உலகப்பிரகாரமான போஜனத்தை ஓர் உருவகமாக பயன்படுத்துகிறார். "நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் மாம்சமே" (யோவா 6:51). "மனுஷகுமாரனுடைய மாம்சமும் அவருடைய இரத்தமும்" (யோவா 6:53). மனுஷகுமாரனுடைய மாம்சத்தை புசிப்பதும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணுவதும்" (யோவா 6:53; 54). "என்னைப் புசிக்கிறவன் என்னாலே பிழைப்பான்" (யோவா 6:56; 57). இயேசுகிறிஸ்து இந்த வசனங்களிலெல்லாம் தம்மை புசிக்க வேண்டிய ஒரு போஜனமாகவும், பானம்பண்ணவேண்டிய ஒரு பானமாகவும் உருவகப்படுத்திக் கூறுகிறார்.

இயேசுகிறிஸ்துவின் இந்த உபதேசத்தை மிகவும் கவனமாக தியானிக்கவேண்டும். உலகப்பிரகாரமாக அவருடைய உபதேசத்திற்கு வியாக்கியானம் சொல்லக்கூடாது. இயேசுகிறிஸ்துவின் உபதேசம் ஆவிக்குரியது. ஆகையினால் இதை ஆவிக்குரிய ரீதியாகவே சிந்தித்து வியாக்கியானம் பண்ணவேண்டும். இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிற யூதர்களினால் இதன் சத்தியத்தை புரிந்துகொள்ள முடியவில்லை. அவர்கள் மாம்சபிரகாரமாக சிந்திப்பதினால், அவருடைய வார்த்தைக்கு மாம்ச பிரகாரமாக வியாக்கியானம் கூறுகிறார்கள். "இவன் தன்னுடைய மாம்சத்தை எப்படி நமக்கு புசிக்கக்கொடுப்பான்" (யோவா 6:52) என்று யூதர்கள் தங்களுக்குள் வாக்குவாதம் பண்ணுகிறார்கள்.

இயேசுகிறிஸ்து தம்முடைய "மாம்சத்தை நமக்கு புசிக்கக் கொடுப்பது" என்பதற்கு, அவர் நமக்காக பாடுகளை அனுபவித்து, கல்வாரி சிலுவையில் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்து மரித்ததை வியாக்கியானமாக கூறவேண்டும். ஆனால் யூதர்களோ அவர் தம்மை நமக்கு புசிக்கக் கொடுப்பதை, மாம்ச பிரகாரமாக சிந்தித்து, அவருடைய பிரத்தியட்சமான, சரீரப்பிரகாரமான மாம்சத்தை அவர் நமக்கு புசிக்கக் கொடுப்பார் என்று சிந்திக்கிறார்கள். இந்த யூதர்களை போலத்தான் இக்காலத்தில் ஏராளமானோர் இயேசுகிறிஸ்துவின் மாம்சத்தையும் இரத்தத்தையும் பற்றிய உபதேசத்தை தவறாக புரிந்துகொள்கிறார்கள். இந்த தவறான சிந்தனையின் விளைவாக ஒரு சிலர் தாங்கள் மரிக்கும்போது திருவிருந்து எடுக்க ஆசைப்படுகிறார்கள். ஏனெனில் தாங்கள் மரிக்கும்போது திருவிருந்து எடுத்தால், தாங்கள் நிச்சயமாகவே பரலோகத்திற்குப் போய்விடலாமென்று நம்புகிறார்கள்.

தம்முடைய உபதேசத்தைக் கேட்கிறவர்கள், தம்முடைய மாம்சத்தையும் இரத்தத்தையும் பற்றிய சத்தியத்தை புரிந்துகொள்ள வேண்டுமென்பதில் இயேசுகிறிஸ்து மிகுந்த கவனம் செலுத்துகிறார். இயேசுகிறிஸ்துவின் மாம்சமும் இரத்தமும், "மனுஷகுமாரனுடைய மாம்சமும், அவருடைய இரத்தமும்" என்று அழைக்கப்படுகிறது. இயேசுகிறிஸ்து கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக அவர் கொடுக்கும் அவருடைய மாம்சமாகும். இந்த உலகம் பாவத்தினால் சீரழிந்துபோய்விட்டது. நீதிக்கு மரித்துவிட்டது. இயேசுகிறிஸ்து தம்முடைய சொந்த மாம்சத்தையே கொடுத்து, இந்த உலகத்தை மீட்பதற்கு மீட்பின் கிரயமாக செலுத்தியிருக்கிறார்.

## அதிகாரம் - 6

இயேசுகிறிஸ்துவினுடைய மாம்சத்தின் மூலமாக இந்த உலகத்திற்கு ஜீவன் உண்டாயிருக்கிறது. இந்த உலகத்திலுள்ள எல்லோரும் இரட்சிக்கப்பட்டு, நித்திய ஜீவனை பெற்றுக்கொள்வதற்கு, இயேசுகிறிஸ்து தம்முடைய மாம்சத்தையே கிரயமாக செலுத்தியிருக்கிறார். மனுஷகுமாரனுடைய இரத்தமும் மாம்சமும் என்பது இயேசுகிறிஸ்துவையும், கல்வாரி சிலுவையில் அவர் அறையப்பட்டதையும், அவர் மூலமாக இந்த உலகத்திற்கு உண்டாயிருக்கும் மீட்பையும் குறிப்பிடுகிறது.

உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்களும், நித்திய ஜீவனும் இயேசுகிறிஸ்துவின் மாம்சமும் இரத்தமும் என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில் இயேசுகிறிஸ்துவின் சரீரம் பிட்கப்பட்டதினாலும், அவருடைய இரத்தம் சிந்தப்பட்டதினாலும் இவை கிரயத்திற்கு கொள்ளப்பட்டிருக்கிறது.

நம்முடைய ஆத்துமாக்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சரீரமும் இரத்தமும், போஜனமாகவும் பானமாகவும் இருக்கிறது. இதற்கு முன்பு இயேசுகிறிஸ்து தம்மை அப்பத்துடன் ஒப்பிட்டு பேசியிருக்கிறார். ஒவ்வொருவருக்கும் அப்பம் அத்தியாவசியமான போஜனம். நம்முடைய மாம்சம் சோர்வடைந்துவிடாமல் ஜீவனுடன் இருக்கவேண்டுமானால் போஜனம் நமக்கு அவசியம் தேவை. அதுபோலவே நம்முடைய ஆத்துமா ஜீவனோடிருக்க வேண்டுமானால் இயேசுகிறிஸ்துவின் மாம்சம் நமக்குத் தேவை. இந்த உலகத்தில் நாம் புசிக்கும் போஜனம் அழிந்துபோகிற அப்பம். ஆனால் இயேசுகிறிஸ்துவின் மாம்சமோ நித்திய ஜீவன் வரைக்கும் நிலைநிற்கிற போஜனம். அழிந்துபோகிற மாம்சப்பிரகாரமான போஜனம், நித்திய ஜீவன் வரைக்கும் நிலைத்திருக்கிற போஜனமாகிய இயேசுகிறிஸ்துவின் மாம்சத்திற்கு அடையாளமாக இருக்கிறது. இயேசுகிறிஸ்துவே மெய்யான போஜனம்.

இயேசுகிறிஸ்து தம்முடைய மாம்சத்தையும் இரத்தத்தையும் விவரித்துக் கூறும்போது, தம்முடைய மாம்சத்தை புசிப்பது, தம்முடைய இரத்தத்தை பானம்பண்ணுவது என்றால் என்ன என்று இங்கு விவரிக்கிறார். இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதே, இயேசுகிறிஸ்துவின் மாம்சத்தைப் புசிப்பதும் அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணுவதுமாகும்.

இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைப்பது என்பதில் நான்கு சத்தியங்கள் உள்ளன. அவையாவன : 1. இயேசுகிறிஸ்துவின்மீது பசிதாகமாகயிருப்பது 2. நம்முடைய ஜீவனில் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்வது 3. இயேசுகிறிஸ்துவிலும் அவருடைய இரட்சிப்பிலும் சந்தோஷப்படுவது 4. நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு அவர் கொடுக்கும் போஜனத்தையே சார்ந்திருப்பது.

நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் திருப்தியடைவார்கள். (மத் 5:6). ஆகையினால் நாம் இயேசுகிறிஸ்துவின்மேல் பசிதாகமுள்ளவர்களாக இருக்கவேண்டும். நமக்கு இயேசுகிறிஸ்து கொடுக்கப்படவில்லையென்றால், நாம் மரித்துப்போவோம் என்னும் உணர்வு நமக்குள் காணப்படவேண்டும்.

இயேசுகிறிஸ்துவை நம்முடைய சொந்த ஜீவியத்தில் முழுவதுமாக அங்கீகரித்துக்கொள்ள வேண்டும். போஜனத்தை நம்முடைய கண்களால் பார்த்தால் மாத்திரம் நம்முடைய பசி அடங்குவதில்லை. பார்ப்பதினால் நமக்கு திருப்தி ஏற்படுவதில்லை. போஜனத்தைப் புசித்தால்தான் பசி நீங்கும். திருப்தி ஏற்படும். அதுபோலவே நம்முடைய ஆவிக்குரிய தாகம் நீங்கி நமக்கு திருப்தி உண்டாக வேண்டுமானால், இயேசுகிறிஸ்துவை நம்முடைய வாழ்க்கையின் முன்மாதிரியாக அங்கீகரிக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டதைப்பற்றிய உபதேசம் நமக்கு போஜனமாகவும் பானமாகவும் இருக்கவேண்டும். இந்த போஜனம் மிகவும் ருசியுள்ளதாகவும் சந்தோஷத்தையும் திருப்தியையும் கொடுக்கக்கூடியதாகவும் இருக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவிலும் அவருடைய இரட்சிப்பிலும் நாம் சந்தோஷப்படவேண்டும்.

நம்முடைய ஆத்தும பசிக்குத் தேவையான போஜனத்தை நாம் இயேசுகிறிஸ்துவிடமிருந்தே பெற்றுக் கொள்ளவேண்டும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தின் ஆதரவுக்கும் ஆறுதலுக்கும் நாம் அவரையே சார்ந்திருக்கவேண்டும். நாம் இரட்சிக்கப்பட்டு புது ஜீவனைப் பெற்றுக்கொண்டு, புது மனுஷனாகும்போது நம்முடைய பெலமும், வளர்ச்சியும், இயக்கமும் இயேசுகிறிஸ்து கொடுக்கும் போஜனத்தின் சாரத்திலேயே கிடைக்கவேண்டும்.

## அதிகாரம் - 6

இப்பிரபஞ்சத்தில் நம்முடைய சரீரத்திற்குத் தேவையான போஜனத்திற்காகவே நாம் பல காரியங்களைச் செய்கிறோம். அதுபோலவே நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில், இயேசுகிறிஸ்துவை முழுவதுமாக பெற்றுக்கொள்வதற்கு கிரியை நடப்பிக்கவேண்டும். நம்முடைய போஜனத்தின் பலனால் நமது சரீரம் ஜீவிப்பதுபோல, இயேசுகிறிஸ்துவின் பலனால் நம்முடைய ஆத்துமாவும் ஆவியும் ஜீவிக்கும்.

### நித்திய ஜீவன் உண்டு

**அதற்கு இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன். என் மாம்சம் மெய்யான போஜனமாயிருக்கிறது, என் இரத்தம் மெய்யான பானமாயிருக்கிறது (யோவா 6:53-55).**

இயேசுகிறிஸ்து தம்முடைய மாம்சத்தையும் இரத்தத்தையும் பற்றி உபதேசம்பண்ணுவதை, நாம் இரண்டு பிரிவாக பிரித்து தியானிக்கலாம். அவையாவன: 1. இயேசுகிறிஸ்துவின் மாம்சத்தைப் புசிப்பது நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு மிகவும் அவசியமானது. 2. இயேசுகிறிஸ்துவின் மாம்சத்தைப் புசிப்பதினால் நமக்கு உண்டாகும் ஆதாயமும் பிரயோஜனமும்.

நாம் மனுஷகுமாரனுடைய மாம்சத்தை புசியாமலும், அவருடைய இரத்தத்தை பானம்பண்ணாமலும் இருந்தால் நமக்குள் ஜீவனில்லை. இயேசுகிறிஸ்துவின்மீது நமக்கு பசிதாகம் இல்லையென்றாலும், அவரிடத்தில் நாம் பிரியப்படவில்லையென்றாலும் நமக்குள் ஜீவனிருக்காது. ஒரு ஆத்துமா பசிதாகமில்லாமல் இருக்குமானால் அந்த ஆத்துமாவில் ஜீவனில்லை என்று தான் பொருள்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு தேவையான போஜனத்தை, இயேசு கிறிஸ்துவிடமிருந்து நாம் விசுவாசத்தினால் பெற்றுக் கொள்ளவில்லையென்றால், நமக்கு ஆவிக்குரிய ஜீவனில்லை. ஆவிக்குரிய ரீதியாக நாம் மரித்தவர்களாக இருப்போம். இயேசுகிறிஸ்துவை விட்டு பிரிந்திருப்போம். அவராலேயல்லாமல் நம்மால் ஒன்றும் செய்ய முடியாது. நம்முடைய சரீரம் போஜனமில்லாமல் ஜீவிப்பதைப்போலவே, நம்முடைய ஆத்துமா இயேசுகிறிஸ்து இல்லாமல் ஜீவித்துக்கொண்டிருக்கும். இது பரிபூரணமான ஜீவனல்ல. சீக்கிரத்தில் மரித்துப்போகிற ஜீவன்.

### என்னிலே நிலைத்திருக்கிறவன்

**என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான், நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன் (யோவா 6:56).**

இயேசுகிறிஸ்துவின் மாம்சத்தைப் புசித்து அவருடைய இரத்தத்தில் பானம்பண்ணுவதினால் நமக்கு இரண்டு விதங்களில் ஆசீர்வாதம் கிடைக்கும். அவையாவன : 1. நாம் இயேசுகிறிஸ்துவோடு நிலைத்திருப்போம். 2. நாம் நித்திய காலமாக பிழைத்திருப்போம்.

இயேசுகிறிஸ்துவின் மாம்சத்தைப் புசித்து, அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவன் அவரில் நிலைத்திருக்கிறான். இயேசுகிறிஸ்துவும் அவனில் நிலைத்திருக்கிறார். விசுவாசத்தின் மூலமாக இயேசுகிறிஸ்துவோடு நமக்கு மிகவும் நெருக்கமான அந்நியோன்னியமான ஐக்கியம் உண்டாயிருக்கிறது. இயேசுகிறிஸ்து நம்மில் நிலைத்திருக்கிறார். நாம் அவரில் நிலைத்திருக்கிறோம். இயேசுகிறிஸ்துவுக்கும் அவரை விசுவாசிக்கிறவர்களுக்கும் இப்படிப்பட்ட அந்நியோன்னிய ஐக்கியம் உண்டாயிருக்கிறது. இயேசுகிறிஸ்து நம்முடைய துக்கங்களில் பங்குபெறுகிறார். நாமும் அவருடைய கிருபைகளிலும் சந்தோஷங்களிலும் பங்குபெறுகிறோம். நம்முடைய கசப்பான அனுபவங்களில் இயேசுகிறிஸ்து பங்குபெறுகிறார். அவரில் நிலைத்திருக்கிறவர்கள் அவருடைய திருப்தியான போஜனங்களைப் புசித்து சந்தோஷப்படுவார்கள்.

## அதிகாரம் - 6

### என்றென்றைக்கும் பிழைப்பான்

**ஜீவனுள்ள பிதா என்னை அனுப்பினதுபோலவும், நான் பிதாவினால் பிழைத்திருக்கிறதுபோலவும், என்னைப் புசிக்கிறவனும் என்னாலே பிழைப்பான். வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவே; இது உங்கள் பிதாக்கள் புசித்த மன்னாவைப்போலல்ல, அவர்கள் மரித்தார்களே; இந்த அப்பத்தைப் புசிக்கிறவனோ என்றென்றைக்கும் பிழைப்பான் என்றார் (யோவா 6:57,58).**

இயேசுகிறிஸ்துவின் மூலமாக நாம் நித்திய காலமாக ஜீவிப்போம். ஜீவனுள்ள பிதா இயேசுகிறிஸ்துவை அனுப்பியிருக்கிறார், இயேசுகிறிஸ்து பிதாவினால் பிழைத்திருக்கிறது போல, இயேசுகிறிஸ்துவை புசிக்கிறவனும் அவராலே பிழைப்பான். மெய்யான விசுவாசிகள் இயேசுகிறிஸ்துவோடு ஐக்கியமாக இருப்பதன் நீதியினால் இந்த தெய்வீக ஜீவனை பெற்றுக்கொள்கிறார்கள். இயேசுகிறிஸ்துவை புசிக்கிறவன் அல்லது இயேசுகிறிஸ்துவினால் போஷிக்கப்படுகிறவன் அவராலே பிழைப்பான். இயேசுகிறிஸ்து பிழைத்திருப்பதினால் நாமும் பிழைத்திருப்போம். அவரால் நாம் நித்திய காலமாக பிழைத்திருப்போம். இயேசுகிறிஸ்துவின் மாம்சத்தை புசிக்கிறவர்களும், அவருடைய இரத்தத்தை பானம்பண்ணுகிறவர்களும் இயேசுகிறிஸ்துவில் நிலைத்திருப்பார்கள். அவர்கள் நித்திய ஜீவனைப்பெற்றுக்கொள்வார்கள். அவர்கள் என்றென்றைக்கும் பிழைப்பார்கள்.

### கப்பர்நகூமிலுள்ள ஜெபாலயம்

**கப்பர்நகூமிலுள்ள ஜெபஆலயத்திலே அவர் உபதேசிக்கையில் இவைகளைச் சொன்னார் (யோவா 6:59).**

இயேசுகிறிஸ்து யூதர்களோடு எந்த இடத்தில் உரையாடுகிறார் என்பதை யோவான் இந்த சுவிசேஷத்தில் குறிப்பிடுகிறார். கப்பர்நகூமிலுள்ள ஜெபாலயத்தில் இயேசுகிறிஸ்து உபதேசிக்கையில் இந்த சத்தியங்களை யூதர்களுக்குச் சொல்லுகிறார். இயேசுகிறிஸ்து விசாரிக்கப்படும்போது "நான் வெளியரங்கமாய் உலகத்துடனே பேசினேன்; ஜெபஆலயங்களிலேயும் யூதர்களெல்லாரும் கூடிவருகிற தேவாலயத்திலேயும் எப்பொழுதும் உபதேசித்தேன்; அந்தரங்கத்திலே நான் ஒன்றும் பேசவில்லை. நீர் என்னிடத்தில் விசாரிக்கவேண்டியதென்ன? நான் சொன்னவைகளைக் கேட்டவர்களிடத்தில் விசாரியும்; நான் பேசினவைகளை அவர்கள் அறிந்திருக்கிறார்களே" (யோவா 18:20,21) என்று கூறுகிறார்.

### கடினமான உபதேசம்
### யோவா 6:60-71

**யோவா 6:60. அவருடைய சீஷரில் அநேகர் இவைகளைக் கேட்டபொழுது, இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள் என்றார்கள்.**

**யோவா 6:61. சீஷர்கள் அதைக்குறித்து முறுமுறுக்கிறார்களென்று இயேசு தமக்குள்ளே அறிந்து, அவர்களை நோக்கி: இது உங்களுக்கு இடறலாயிருக்கிறதோ?**

**யோவா 6:62. மனுஷகுமாரன் தாம் முன்னிருந்த இடத்திற்கு ஏறிப்போகிறதை நீங்கள் காண்பீர்களானால் எப்படியிருக்கும்?**

**யோவா 6:63. ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது.**

**யோவா 6:64. ஆகிலும் உங்களில் விசுவாசியாதவர்கள் சிலர் உண்டு என்றார்; விசுவாசியாதவர்கள் இன்னாரென்றும், தம்மைக் காட்டிக்கொடுப்பவன் இன்னானென்றும் ஆதிமுதலாக இயேசு அறிந்திருந்தபடியால், அவர் பின்னும்:**

**யோவா 6:65. ஒருவன் என்பிதாவின் அருளைப் பெறாவிட்டால் என்னிடத்திற்கு வரமாட்டான் என்று இதினிமித்தமே உங்களுக்குச் சொன்னேன் என்றார்.**

**யோவா 6:66. அதுமுதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனேகூட நடவாமல் பின்வாங்கிப்போனார்கள்.**

**யோவா 6:67. அப்பொழுது இயேசு பன்னிருவரையும் நோக்கி: நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ என்றார்.**

**யோவா 6:68. சீமோன் பேதுரு அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்தியஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே.**

**யோவா 6:69. நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நாங்கள் விசுவாசித்தும் அறிந்தும் இருக்கிறோம் என்றான்.**

## அதிகாரம் - 6

**யோவா 6:70. இயேசு அவர்களை நோக்கி: பன்னிருவராகிய உங்களை நான் தெரிந்து கொள்ளவில்லையா? உங்களுக்குள்ளும் ஒருவன் பிசாசாயிருக்கிறான் என்றார்.**

**யோவா 6:71. சீமோனின் குமாரனாகிய யூதாஸ்காரியோத்து பன்னிருவரிலொருவனாயிருந்தும், தம்மைக் காட்டிக் கொடுக்கப்போகிறவனாயிருந்த படியினால் அவனைக் குறித்து இப்படிச் சொன்னார்.**

### யார் இதைக் கேட்பார்கள்

**அவருடைய சீஷரில் அநேகர் இவைகளைக் கேட்டபொழுது, இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள் என்றார்கள் (யோவா 6:60).**

இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்டு எல்லோரும் சந்தோஷப்படவில்லை. அவருடைய சீஷரில் அநேகர் இது கடினமான உபதேசம் என்று சொல்கிறார்கள். யூதர்களுக்கு மாத்திரமல்ல, அவருடைய சீஷர்களில் அநேகருக்கு இயேசுகிறிஸ்துவின் உபதேசம் கடினமானதாக இருக்கிறது. அவருடைய வார்த்தைகள் இவர்களுக்கு மரணத்திற்கேதுவான வார்த்தைகள் போல் தெரிகிறது. ஆனால் மெய்யாகவே இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள் ஆவியாயும் ஜீவனாயுமிருக்கிறது.

இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தை கேட்டபோது ஜனங்கள் முறுமுறுக்கிறார்கள். ஒரு சிலரல்ல, அநேகர் முறுமுறுக்கிறார்கள். அவருடைய வார்த்தையைக் கேட்டு இடறலடைகிறார்கள். இது கடினமான உபதேசமென்றும், யார் இதைக் கேட்பார்களென்றும் அவிசுவாசமாக பேசுகிறார்கள். மற்றவர்களுக்கு இயேசுவின் உபதேசம் பிடித்திருக்கிறதோ இல்லையோ, இவர்களுக்குப் பிடிக்கவில்லை.

இயேசுவின் உபதேசம் கடினமானது என்றாலும், தங்களால் விளங்கிக்கொள்ள முடியவில்லையென்றாலும், "ஆண்டவரே இந்த உவமையை எங்களுக்கு விளக்கிக் கூறவேண்டும்" என்று அவரிடத்தில் பணிவுடன் விண்ணப்பம்பண்ணவேண்டும்.

அப்போது தம்முடைய உபதேசத்தின் மறைபொருளை இயேசுகிறிஸ்து அவர்களுக்கு விளக்கிக் காண்பிப்பார். சத்திய வசனங்களை அவர்கள் புரிந்துகொள்வதற்கு உதவிபுரிவார். ஆனால் இந்த சீஷர்களோ, இயேசுவின் உபதேசத்தை யாராலும் புரிந்துகொள்ள முடியாது என்று மொத்தமாக புறக்கணித்துவிடுகிறார்கள். "யார் இதைக் கேட்பார்கள், ஒருவரும் கேட்கமாட்டார்கள்" என்று கூறிவிடுகிறார்கள்.

இக்காலத்தில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்போது, ஒரு சிலர் சத்தியத்தை இதை ஏற்றுக்கொள்கிறார்கள். சிலர் ஏற்றுக்கொள்வதில்லை. சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்கிறவர்கள் அமைதியாக இருப்பார்கள். ஏற்றுக்கொள்ளாதவர்களோ, எல்லா ஜனங்களையும் தங்களோடு சேர்த்துக்கொண்டு, சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ள ஒருவருக்கும் மனதில்லையென்று எல்லார் சார்பாகவும் பேசிவிடுவார்கள். சீஷர்கள் இங்கு கூறியதுபோல இயேசுகிறிஸ்துவின் உபதேசம் கடினமான உபதேசமல்ல. மிகவும் எளிமையான, தெளிவான உபதேசம். கேட்பதற்கும் இனிமையானது. ஜீவிப்பதற்கும் ஆசீர்வாதமானது.

### உங்களுக்கு இடறலாயிருக்கிறதோ

**சீஷர்கள் அதைக்குறித்து முறுமுறுக்கிறார்களென்று இயேசு தமக்குள்ளே அறிந்து, அவர்களை நோக்கி: இது உங்களுக்கு இடறலாயிருக்கிறதோ? (யோவா 6:61)**

தம்முடைய உபதேசத்தைக் கேட்டு சீஷர்கள் முறுமுறுக்கிறார்கள் என்பதை இயேசுகிறிஸ்து அறிந்திருக்கிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களை அறிந்திருக்கிறார். அவர்களைப் பார்க்கிறார். அவர்கள் பேசுவதைக் கேட்கிறார். அவர்களைப்பற்றி இயேசுகிறிஸ்துவிடம் யாரும் சொல்லிக்கொடுக்க வேண்டிய அவசியமில்லை. அவர் தாமாகவே எல்லோரையும், எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார். மற்றவர்களைப்பற்றி அறிவிப்பதற்கு அவருக்கு யாரும் தேவைப்படவில்லை. அவர் தம்முடைய தெய்வீக ஞானத்தினால் சகலவற்றையும் அறிந்திருக்கிறார். அவர் சர்வ ஞானமுள்ளவர். மனுஷருடைய சிந்தனைகளே இயேசுகிறிஸ்துவுக்கு வார்த்தைகளாக இருக்கும். ஆகையினால் நம்முடைய பேச்சைக் குறித்து மாத்திரமல்ல, நம்முடைய சிந்தனைகளைக் குறித்தும் நாம் மிகுந்த எச்சரிப்போடிருக்கவேண்டும். அவர் நம்முடைய வார்த்தைகளையும் சிந்தனைகளையும் அறிந்திருக்கிறார்.

## அதிகாரம் - 6

சீஷர்கள் முறுமுறுக்கிறார்கள் என்று இயேசுகிறிஸ்து தமக்குள்ளே அறிந்து, அவர்களை நோக்கி "இது உங்களுக்கு இடறலாயிருக்கிறதோ" என்று கேட்கிறார். ஒரு சிறிய காரணத்திற்காக இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்டு இவர்கள் இடறலடைந்திருக்கிறார்கள். இவர்கள் இடறலடைந்திருப்பது இயேசுகிறிஸ்துவுக்கும் ஆச்சரியமாக இருக்கிறது. ஆகையினால்தான் மிகுந்த ஆச்சரியத்தோடு "இது உங்களுக்கு இடறலாயிருக்கிறதோ" என்று சீஷரிடம் கேட்கிறார்.

**எப்படியிருக்கும்**

**மனுஷகுமாரன் தாம் முன்னிருந்த இடத்திற்கு ஏறிப்போகிறதை நீங்கள் காண்பீர்களானால் எப்படியிருக்கும்? (யோவா 6:62)**

இயேசுகிறிஸ்துவின் உபதேசம் மெய்யானது. அவர் தம்முடைய வார்த்தைகளை அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் உறுதிபண்ணுகிறார். தம்முடைய உபதேசம்மெய்யானது என்பதை நிரூபிப்பதற்காக, இயேசுகிறிஸ்து இனிமேல் நடக்கப்போகும் ஒரு சம்பவத்தை இங்கு வெளிப்படுத்துகிறார். மனுஷகுமாரன் பரலோகத்திற்கு ஏறிப்போகப்போகிறார். தாம் முன்னிருந்த இடத்திற்கு ஏறிப்போகிறதை இவர்கள் காண்பார்கள். அப்போது இவர்களுக்கு "எப்படியிருக்கும்" என்று அவர்களிடம் கேட்கிறார்.

இயேசுவின் உபதேசம் கடினமான உபதேசமென்றும், இதை ஒருவரும் கேட்கமாட்டார்களென்றும் சீஷர்களில் அநேகர் முறுமுறுக்கிறார்கள். சாதாரண சத்தியத்தையே கடினமான உபதேசமென்று இவர்கள் கூறுகிறார்கள். இயேசுகிறிஸ்து பரலோகத்திலிருந்து இந்த பூமிக்கு வந்திருக்கிறவர். அவர் மறுபடியும் தாம் முன்னிருந்த பரலோகத்திற்கு ஏறிப்போகப்போகிறார்.

அந்த சம்பவத்தை இவர்கள் காணப்போகிறார்கள். இந்த சத்தியத்தை இவர்களால் எப்படி தாங்கிக்கொள்ள முடியும் என்று இயேசுகிறிஸ்து இவர்களிடமே கேட்கிறார்.

ஒரு சிலர் சிறிய பிரச்சனைகளில்கூட இடறலடைந்து விடுவார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு பெரிய பிரச்சனைகளும், பெரிய தடைக்கற்களும் வந்தால் அவர்களால் தாங்கிக்கொள்ளவே முடியாது. இயேசுகிறிஸ்து தம்மை வானத்திலிருந்து வந்த அப்பம் என்று குறிப்பிட்டார். அவர் அப்படி சொன்னதினிமித்தம் யூதர்கள் அவரைக்குறித்து முறுமுறுத்தார்கள். இதை இயேசுகிறிஸ்து எப்படி சொல்லலாமென்று அவரிடத்தில் வாக்குவாதம் பண்ணினார்கள் (யோவா 6:41,42). இயேசுகிறிஸ்து வானத்திலிருந்து இறங்கி வந்ததையே விவாதம்பண்ணுகிறவர்கள், அவர் மறுபடியும் வானத்திற்கு ஏறிப்போவதைக் காணும்போது, அவர்களுக்கு எப்படியிருக்குமென்று இயேசுகிறிஸ்து கேள்விகேட்கிறார்.

இயேசுகிறிஸ்து தம்மைப்பற்றி வெளிப்படுத்தும்போது ஒவ்வொரு சத்தியத்தையும் இது போலவே நிரூபிக்கிறார். தம்முடைய சத்தியத்தை புரிந்துகொள்வதற்கு சில வழிமுறைகளை கூறுகிறார். இயேசுகிறிஸ்துவின் உபதேசம் ஆவிக்குரியது. ஆகையினால் அவருடைய வார்த்தைகளை நாம் ஆவிக்குரிய ரீதியாகவே புரிந்துகொள்ளவேண்டும். ஆவி உயிர்ப்பிக்கும்.

**ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது**

**ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது (யோவா 6:63).**

ஆவி உயிர்ப்பிக்கிறது. மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது. இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்கும்போது தேவனுடைய ஆவியானவர் நமக்குள் கிரியை நடப்பிக்கவேண்டும். நம்முடைய ஆத்துமாவை தேவன் தம்முடைய ஆவியினால் உயிர்ப்பிக்கவேண்டும். அப்போதுதான் இயேசுகிறிஸ்துவின் உபதேசம் நமக்கு பிரயோஜனமுள்ளதாக இருக்கும். உயிருள்ள மனுஷனுக்குத்தான் போஜனம் பிரயோஜனமுள்ளது. செத்துப்போன மனுஷனுக்கு எந்த போஜனத்தினாலும் ஒரு பிரயோஜனமுமில்லை.

## அதிகாரம் - 6

இயேசுகிறிஸ்து தம்முடைய மாம்சத்தைப் புசிப்பதையும், தம்முடைய இரத்தத்தைப் பானம்பண்ணுவதையும் குறித்து உபதேசம்பண்ணினார். அவர்கள் இந்த உபதேசத்தை ஆவிக்குரிய ரீதியாக புரிந்துகொள்ளாமல் உலகப்பிரகாரமாக புரிந்துகொண்டார்கள். ஆகையினால் இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தினால் இவர்களுக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகவில்லை. அவருடைய உபதேசத்தின் ஆவிக்குரிய பொருள் நம்முடைய ஆத்துமாவை உயிர்ப்பிக்கும். நம்முடைய ஆத்துமாவுக்கு ஜீவனைக்கொடுக்கும். இயேசுகிறிஸ்து நமக்கு சொல்கிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது.

இயேசுகிறிஸ்து நமக்காக மரித்தார் என்று விசுவாசிப்பது மிகவும் பிரயோஜனமுள்ளது. இந்த சத்தியத்திலிருந்து நாம் ஆறுதலையும் பெலனையும் பெற்றுக்கொள்கிறோம். இதுவே நமக்கு ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் உபதேசங்களை ஆவிக்குரிய ரீதியாக புரிந்துகொள்ளும்போது நமக்கு அதிக பிரயோஜனம் உண்டாகும். ஆனால் யூதர்களோ இயேசுகிறிஸ்துவின் வசனங்களை விரும்பவில்லை. அவருடைய வார்த்தைகள் கடினமான உபதேசம் என்று முறுமுறுக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தில் ஒரு பிழையுமில்லை. அவருடைய வார்த்தைகளெல்லாம் மெய்யானவை, சத்தியமுள்ளவை. ஆனால் யூதர்களோ இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல் தவறாகப் புரிந்துகொள்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து ஒரு சத்தியத்தை உவமையினால் விளக்கிக் கூறும்போது, அதன் ஆவிக்குரிய வியாக்கியானத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும். உவமையினால் விளக்கப்படும் சத்தியத்தின் கருப்பொருளை புரிந்துகொண்டால்தான், அதில் கூறப்பட்டிருக்கும் சத்தியம் நமக்கு விளங்கும். உவமையில் பயன்படுத்தப்பட்டிருக்கும் வார்த்தைகளை மேலோட்டாக தியானித்தால் நமக்கு ஒரு நன்மையும் உண்டாகாது. தேவனுடைய வார்த்தைகள் எல்லாவற்றையும் புரிந்துகொள்வதற்கு நம்முடைய மனுஷ ஞானம் போதாது. ஆகையினால்தான் அவர் தம்முடைய சத்தியங்களை உவமையினால் விளக்குகிறார். நம்முடைய மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது. ஆவி மாத்திரமே நம்மை உயிர்ப்பிக்கும்.

இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்டு, சீஷரில் அநேகர் முறுமுறுக்கிறார்கள். அவருடைய உபதேசம் கடினமானது என்று கூறி அவரிடத்தில் தப்பிதம் காண்கிறார்கள். தப்பிதம் இயேசுகிறிஸ்துவிடத்தில் இல்லை. இவர்களிடத்தில்தான் இருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தில் குறையில்லை. இவர்களிடத்தில்தான் குறை இருக்கிறது. ஆவிக்குரிய காரியங்களை மாம்சபிரகாரமாக சிந்தித்துப் பார்த்தால் ஒன்றும் புரியாது. ஆவிக்குரிய சத்தியம் கடினமான உபதேசமாகத்தான் இருக்கும். அதை ஆவிக்குரிய ரீதியாக வியாக்கியானம் பண்ணினால்தான் அதன் மெய்ப்பொருள் விளங்கும்.

"ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக் கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றப் பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப் படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான். ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்; ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான்" (1கொரி 2:14,15) என்று அப்போஸ்தலர் பவுல் எழுதுகிறார்.

### விசுவாசியாதவர்கள் சிலர் உண்டு

**ஆகிலும் உங்களில் விசுவாசியாதவர்கள் சிலர் உண்டு என்றார்; விசுவாசியாதவர்கள் இன்னாரென்றும், தம்மைக் காட்டிக்கொடுப்பவன் இன்னானென்றும் ஆதிமுதலாக இயேசு அறிந்திருந்தபடியால், அவர் பின்னும்: ஒருவன் என்பிதாவின் அருளைப் பெறாவிட்டால் என்னிடத்திற்கு வரமாட்டான் என்று இதினிமித்தமே உங்களுக்குச் சொன்னேன் என்றார் (யோவா 6:64,65).**

இயேசுகிறிஸ்து தம்முடைய உபதேசத்தைக் குறித்து முறுமுறுக்கிறவர்களை தமக்குள்ளே அறிந்திருக்கிறார். அவர்கள் சீஷர்கள் என்று அழைக்கப்பட்டாலும், அவர்களுடைய பலவீனம் என்னவென்பது இயேசுவுக்குத் தெரியும். அவர்களிடத்தில் எந்த அளவுக்கு எதிர்பார்க்க வேண்டுமோ அந்த அளவுக்கு மாத்திரமே இயேசுகிறிஸ்து எதிர்பார்ப்பார். ஏனெனில் அவருடைய சீஷர்களில் சிலர் இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தை விசுவாசிக்கவில்லை.

## அதிகாரம் - 6

இக்காலத்தில்கூட தங்களை விசுவாசிகளென்று கூறிக்கொள்கிற ஜனங்கள் மத்தியில், ஏராளமான அவிசுவாசிகள் இருக்கிறார்கள். மாய்மாலக்காரரின் அவிசுவாசம் இயேசுகிறிஸ்துவின் கண்களுக்கு முன்பாக பிரதியட்சமாக இருக்கும். அவருக்கு மறைவானது ஒன்றுமில்லை. தம்மை விசுவாசியாதவர்கள் இன்னாரென்று இயேசுகிறிஸ்து ஆதிமுதலாய் அறிந்திருக்கிறார். தம்மை காட்டிக்கொடுப்பவனும் இன்னானென்பது இயேசுவுக்குத் தெரியும். தம்மை விசுவாசிப்பவர்கள் இன்னாரென்பதையும் இயேசுகிறிஸ்து ஆதிமுதலாய் அறிந்திருக்கிறார். நாத்தான்வேல் இயேசுகிறிஸ்துவிடத்தில் வந்தபோது, அவனைக்குறித்து "இதோ கபடற்ற உத்தம இஸ்ரவேலன்" என்று கூறினார் (யோவா 1:47). யாரெல்லாம் கபடற்றவர்கள் என்பதும், யாரெல்லாம் கபடமுள்ளவர்கள் என்பதும் இயேசுவுக்குத் தெரியும்.

மனுஷருடைய இருதயங்களை இயேசுகிறிஸ்து அறிந்திருக்கிறார். நம்முடைய இருதயங்களை அறிந்துகொள்ளும் விசேஷித்த உரிமை இயேசுவுக்கு உண்டு. தம்மை யாரெல்லாம் விசுவாசிப்பார்களென்றும், யாரெல்லாம் விசுவாசிக்கமாட்டார்களென்றும் இயேசுகிறிஸ்துவுக்குத் தெரியும். என்றாலும் இயேசுகிறிஸ்து ஒருபோதும் மனுஷருடைய சுயசித்தத்தில் தலையிடுவதில்லை.

இயேசுகிறிஸ்துவால் மாத்திரமே மனுஷருடைய இருதயங்களை அறிந்துகொள்ள முடியும். நாம் மனுஷருடைய இருதயங்களை அறிந்துகொள்வதுபோல நடித்தால், நாம் தேவனுடைய ஆளுகையில் தலையிடுகிறவர்களாக இருப்போம். மனுஷருடைய இருதயத்தை நம்மால் புரிந்துகொள்ள முடியாது. அவர்கள் நம்மை வஞ்சித்துவிடுவார்கள். இருதயத்தை ஆராய்ந்து பார்க்கும்போது நமக்கு ஏமாற்றமே உண்டாகும். ஏனெனில் ஒரு மனுஷனை ஆராய்ந்து பார்க்கும் முன்பாக, அவனைப்பற்றிய சிந்தனை நமது உள்ளத்தில் ஏற்கெனவே உண்டாயிருக்கும். அந்த சிந்தனையின் பிரகாரமாகவே நாம் பிறரை நிதானிப்போம்.

இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தை சிலர் ஏற்றுக்கொள்ளாமல் போவதற்கு முக்கியமான காரணம் உள்ளது. அவர்களுக்கு தேவனுடைய கரம் வெளிப்படுத்தப்படவில்லை. ஒருவன் பிதாவாகிய தேவனுடைய அருளை பெறாவிட்டால் அவன் இயேசுகிறிஸ்துவிடத்திற்கு வரமாட்டான். பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் இயேசுகிறிஸ்துவிடத்தில் வரமாட்டான் (யோவா 6:44).

பிதா ஒருவனை இழுத்துக் கொள்ளாவிட்டால் அவன் தம்மிடம் வரமாட்டானென்று இயேசுகிறிஸ்து ஏற்கெனவே கூறியிருக்கிறார். அதன் தொடர்ச்சியாக இங்கு ஒருவன் பிதாவின் அருளை பெறாவிட்டால் தம்மிடத்தில் வரமாட்டானென்று கூறுகிறார். தேவன் ஆத்துமாக்களுக்கு கிருபையையும், பெலத்தையும், தேவனிடத்தில் வரவேண்டுமென்னும் வாஞ்சையுள்ள இருதயத்தையும் கொடுத்து, அந்த ஆத்துமாக்களை தம்மிடத்தில் இழுத்துக் கொள்கிறார்.

### அநேகர் பின்வாங்கிப்போனார்கள்

**அதுமுதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனேகூட நடவாமல் பின்வாங்கிப்போனார்கள் (யோவா 6:66).**

இயேசுகிறிஸ்து தெய்வீக சத்தியங்களை தெளிவாக உபதேசம் பண்ணிக் கொண்டிருக்கிறார். ஆனால் அதைக் கேட்டுக்கொண்டிருக்கிற சீஷரில் அநேகர் "இது கடினமான உபதேசம், யார் இதைக்கேட்பார்கள்" என்று முறுமுறுக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவை விட்டு பின்வாங்கிப்போய்விடுகிறார்கள். அவருடைய சீஷரில் அநேகர், அதுமுதல் அவருடனேகூட நடவாமல் பின்வாங்கிப்போகிறார்கள். அவருடைய சீஷர்கள் இயேசுகிறிஸ்துவின் உபதேசங்களைக் கற்றுக்கொள்வதற்காக அவருடைய பாடசாலைக்கு வந்தார்கள். ஆனால் இப்போதோ அந்த பாடசாலையை விட்டு விலகிப்போய்விடுகிறார்கள். இயேசுகிறிஸ்துடனே கூட நடக்க மனதில்லாதவர்களாக அவரைவிட்டு போய்விடுகிறார்கள்.

இந்த வசனத்தில் "ஒரு சிலர்" என்று குறிப்பிடப்படுவதற்குப் பதிலாக, "சீஷரில் அநேகர்" என்று எழுதப்பட்டிருக்கிறது. விசுவாசிகள் கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப்போகும்போது இப்படித்தான் நடைபெறும். ஒரு சிலர் இயேசுவைவிட்டு பின்வாங்கிப்போகும்போது, அவர்களோடு சேர்ந்து மேலும் பலர் பின்வாங்கிப் போய்விடுவார்கள். பின்வாங்கிப்போவது ஒரு தொற்றுநோயைப்போல பரவும்.

## அதிகாரம் - 6

சீஷரில் அநேகர் அதுமுதல் அவரைவிட்டு பின்வாங்கிப்போகிறார்கள். இயேசுகிறிஸ்து தம்மை ஜீவஅப்பமாக கூறி உபதேசம்பண்ணிய வேளையிலிருந்து, இவர்கள் அவரைவிட்டுப் பின்வாங்கிப்போகிறார்கள். ஜீவஅப்பத்தின் உபதேசம் மிகவும் அற்புதமானது. நமது ஆத்துமாவுக்கு ஆரோக்கியமானது. விசுவாசத்தினால் நாம் ஜீவஅப்பத்தைப் புசிக்கும்போது, நாம் இயேசுகிறிஸ்துவினால் பிழைப்போம். இது நமக்கு ஆறுதலான உபதேசம். ஆனால் மனுஷனுடைய இருதயமோ கபடும் திருக்குள்ளதுமாய் இருக்கிறது. தனக்கு ஆறுதலாகவும் ஆசீர்வாதமாகவும் கொடுக்கப்படும் உபதேசத்தை, மனுஷனுடைய பொல்லாத இருதயம் தனக்கு விரோதமான உபதேசமாக திருப்பிவிடுகிறது.

இயேசுகிறிஸ்துவின் வார்த்தை சத்தியமுள்ளது. நாம் அவருடைய வார்த்தையை பிரசங்கம்பண்ணும்போது விசுவாசத்தோடு உண்மையாய் பிரசங்கம்பண்ணவேண்டும். அவருடைய வார்த்தை ஜனங்களுடைய மனதை புண்படுத்திவிடுமோ என்று தயங்கிக்கொண்டிருக்கக்கூடாது. சத்தியத்தை தெளிவாகவும் கலப்படமில்லாமலும் உபதேசம்பண்ணவேண்டும். தேவனுடைய வார்த்தையின் பிரகாரம் மனுஷன் தன்னுடைய ஜீவியத்தை அமைத்துக்கொள்ள வேண்டும். இது தான் தேவனுடைய சித்தம். மனுஷன்தான் தேவனுடைய வார்த்தைக்கு ஏற்ற பிரகாரம் தன்னை வளைத்து, வசனத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். இதற்கு பதிலாக தேவனுடைய வார்த்தையை மனுஷனுடைய இஷ்டத்தின் பிரகாரம் வளைக்கவோ, மாற்றியமைக்கவோ, கலப்படம்பண்ணவோ கூடாது. சீஷரில் அநேகர் இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்டு அதுமுதல் அவருடனேகூட நடவாமல் பின்வாங்கிப்போய்விடுகிறார்கள். அதன் பின்பு அவர்கள் இயேசுவின் ஊழியத்தில் பங்குபெறவில்லை. அவருடைய உபதேசத்தையும் கேட்கவரவில்லை.

### நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ

**அப்பொழுது இயேசு பன்னிருவரையும் நோக்கி: நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ என்றார் (யோவா 6:67).**

சீஷரில் அநேகர் இயேசுகிறிஸ்துவுடனே கூட நடவாமல் பின்வாங்கிப்போனாலும், எல்லா சீஷரும் அவரைவிட்டுப் பின்வாங்கிப்போய்விடவில்லை. அவருடைய உபதேசம் ஒரு சிலருக்கு மரணத்திற்கேதுவான துர்க்கந்தக உபதேசமாக இருந்தாலும், வேறு சிலருக்கு அது ஜீவனுக்கேதுவான நற்கந்தக உபதேசமாக இருக்கிறது. இயேசுகிறிஸ்து தம்முடைய பன்னிரண்டு சீஷர்களை நோக்கி "நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ" என்று அன்போடு கேட்கிறார். தம்முடனேகூட நடவாமல் பின்வாங்கிப்போனவர்களைப்பற்றி இயேசுகிறிஸ்து ஒன்றும் பேசவில்லை. அவர்கள் அவரைவிட்டுப் போனதினால் அவருக்கு இழப்பு ஒன்றுமில்லை. பிதாவானவர் அவர்களை இயேசுவுக்குக் கொடுக்கவில்லை. பிதாவானவர் இயேசுவுக்குத் தந்தவைகளில் ஒன்றையும் அவர் இழந்துபோகமாட்டார். இப்படிப்பட்டவர்கள் ஏனோதானோவென்று வருவார்கள். வந்ததுபோலவே ஏனோதானோவென்று போய்விடுவார்கள்.

இயேசுகிறிஸ்துவின் பன்னிரண்டு சீஷர்களும் அவர்மீது அன்பாகயிருக்கிறார்கள். சீஷரில் அநேகர் தம்முடனேகூட நடவாமல் பின்வாங்கிப்போன சம்பவத்தின் தொடர்ச்சியாக, பயன்படுத்தி, இயேசுகிறிஸ்து பன்னிரண்டு சீஷரோடே பேசுகிறார். "நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ" என்று அவர்களிடம் கேட்கிறார். இயேசுகிறிஸ்துவோடுகூட நடப்பதும், நடக்காமல் பின்வாங்கிப்போவதும் சீஷர்களுடைய சொந்த விருப்பம். இந்த விஷயத்தில் இயேசுகிறிஸ்து அவர்களை கட்டாயப்படுத்தமாட்டார். இயேசுவைப் பின்பற்ற வேண்டுமா, அல்லது அவரைவிட்டு விலகிப்போய்விட வேண்டுமா என்று சீஷர்கள்தான் தீர்மானம்பண்ணவேண்டும்.

இப்போது சீஷரில் அநேகர் அவருடனேகூட நடவாமல் அவரைவிட்டு பின்வாங்கிப் போய்விடுகிறார்கள். இயேசுகிறிஸ்துவின் பன்னிரண்டு சீஷர்களும் அவருடனேகூட நடவாமல், அவரைவிட்டு பின்வாங்கிப்போய்விட வேண்டுமென்று விரும்பினால் அதற்கு இதுவே ஏற்றவேளை. ஏனெனில் சீஷரில் அநேகர் அவரைவிட்டுப் போகும்போது, இந்த பன்னிரண்டு சீஷர்களும் அவர்களோடு சேர்ந்து, கூட்டத்தோடு கூட்டமாக அவரைவிட்டுப் பின்வாங்கிப்போய்விடலாம்.

## அதிகாரம் - 6

நம்முடைய சுயவிருப்பத்திற்கு விரோதமாக இயேசுகிறிஸ்து ஒருபோதும் நம்மை கட்டாயப்படுத்தமாட்டார். நாம் விரும்பவில்லையென்றால், இயேசுகிறிஸ்து நம்மை தம்மிடத்தில் கைதிகளைப்போல சிறைப்பிடிக்கமாட்டார். இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் எல்லோருமே சுயாதீனமாக தீர்மானம்பண்ணி அவரோடு சேர்ந்திருக்கிறவர்கள். யாரும் கட்டாயப்படுத்தப்பட்டு அவருடனே சேர்க்கப்படவில்லை. இப்போது இயேசுவின் பன்னிரண்டு சீஷர்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுக்கப்படுகிறது. இயேசுகிறிஸ்துவையும் அவருடைய உபதேசத்தையும் அவர்கள் விரும்புகிறார்களா, அல்லது விரும்பவில்லையா என்பதை இப்போது அவர்கள் தீர்மானம்பண்ணிக்கொள்ளலாம். இயேசுவின் உபதேசம் கடினமானது என்று தீர்மானம்பண்ணினால், அவர்கள் இயேசுவைவிட்டு தாராளமாக விலகிப்போய்விடலாம். அவர்கள்தான் தீர்மானம்பண்ண வேண்டும். ஆகையினால்தான் இயேசு தம்முடைய பன்னிரண்டு சீஷர்களையும் நோக்கி "நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களா" என்று கேட்கிறார்.

சீஷர்கள் இயேசுவைவிட்டுப் போய்விட்டால் அவர்களுக்கு அழிவு உண்டாகும். இயேசுவைவிட்டு பின்வாங்கிப்போன சீஷர்களின் நிலமை வேறு. இந்த பன்னிரண்டு சீஷர்களின் நிலமை வேறு. இந்த பன்னிரண்டு பேரும் இயேசுகிறிஸ்துவோடு எப்போதும் கூடவேயிருக்கிறார்கள். அவரோடு நெருங்கிய ஐக்கியத்திலிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சிலாக்கியம் மற்ற சீஷர்களுக்குக் கிடைக்கவில்லை. இயேசுகிறிஸ்துவிடமிருந்து இந்த பன்னிரண்டு பேரும் பல ஆசீர்வாதங்களைப் பெற்றிருக்கிறார்கள். மற்ற சீஷர்களுக்கு இவ்வளவு ஆசீர்வாதம் கிடைக்கவில்லை. ஆகையினால் அவர்கள் போய்விட்டார்கள்.

சீஷரில் அநேகர் போனதினால் இந்த பன்னிரண்டு பேரும் தம்மைவிட்டுப்போய்விட மனதாயிருக்கிறீர்களா என்று இயேசுகிறிஸ்து அவர்களிடம் கேட்கிறார். நாம் இயேசுகிறிஸ்துவோடு நெருக்கமாக இருந்துவிட்டு, அவருடைய ஆசீர்வாதங்களையும், கிருபைகளையும் அதிகமாக பெற்றுக்கொண்ட பிறகு, இயேசுகிறிஸ்துவை நீண்டகாலமாக பின்பற்றிய பிறகு, நாம் அவரைவிட்டு போய்விட்டால் நம்முடைய பாவம் பெரிதாயிருக்கும்.

தம்முடைய சீஷரில் அநேகர் தம்மோடுகூட நடவாமல் பின்வாங்கிப்போனாலும், இந்த பன்னிரண்டு சீஷர்களும் தம்மைவிட்டு பின்வாங்கிப் போகமாட்டார்களென்று இயேசுகிறிஸ்து உறுதியோடிருக்கிறார். தம்மோடுகூட இருக்கிறவர்களுக்கு இயேசு அநேக ஆசீர்வாதங்களை வைத்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவுக்கு நேரிட்ட சோதனைகளில் இவர்களே அவரோடுகூட நிலைத்திருக்கிறவர்கள் (லூக் 22:28). இயேசு கிறிஸ்துவும் அவருடைய விசுவாசிகளும் ஒருவரையொருவர் நன்றாகப் புரிந்து வைத்திருக்கிறார்கள். ஆகையினால் விசுவாசிகள் இயேசுகிறிஸ்துவைவிட்டு விலகிப்போகாமல்அவரோடுகூட நடக்கிறார்கள். ஏதாவது ஒரு சூழ்நிலையில் அவர்கள் பின்வாங்கிப்போனாலும் இயேசுகிறிஸ்து அவர்களை தம்பக்கமாக அன்போடு சேர்த்துக்கொள்கிறார்.

### யாரிடத்தில் போவோம்

**சீமோன் பேதுரு அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்தியஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே. நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நாங்கள் விசுவாசித்தும் அறிந்தும் இருக்கிறோம் என்றான் (யோவா 6:68,69).**

சீமோன் பேதுரு இயேசுகிறிஸ்துவுக்கு விசுவாசத்தோடு பதில் கூறுகிறான். மற்ற சீஷர்கள் சார்பாகவும் பேதுரு பேசுகிறான். மற்ற சீஷர்களைவிட சீமோன் இயேசுவின் உபதேசத்தை அதிகமாக கேட்பதில்லை. ஆனால் அதிகமாக பேசக்கூடியவன். மற்ற சீஷர்கள் சார்பாக இவனே முன்னின்று பேசுவான். சில சமயங்களில் சீமோன் பேதுருவின் பேச்சு அங்கீகரிக்கப்படும். சில சமயங்களில் நிராகரிக்கப்படும்.

"இயேசுகிறிஸ்து, ஒரு சமயம், தம்முடைய சீஷர்களிடம்" நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார். சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக: நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான். இயேசு அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்" (மத் 16:15-17). என்று கூறி, பேதுருவின் வார்த்தையை அங்கீகரிக்கிறார்.

## அதிகாரம் - 6

இயேசு தம்முடைய சீஷரிடம், தாம் அனுபவிக்கப் போகும் பாடுகளைப் பற்றி பேசுகிறார். "அதுமுதல் இயேசு, தாம் எருசலேமுக்குப்போய், மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் பல பாடுகள் பட்டு, கொலையுண்டு, மூன்றாம் நாளிலே எழுந்திருக்கவேண்டும் என்பதைத் தம்முடைய சீஷர்களுக்குச் சொல்லத் தொடங்கினார். அப்பொழுது, பேதுரு அவரைத் தனியே அழைத்துக்கொண்டுபோய்: ஆண்டவரே, இது உமக்கு நேரிடக்கூடாதே, இது உமக்குச் சம்பவிப்பதில்லை என்று அவரைக் கடிந்துகொள்ளத்தொடங்கினான். அவரோ திரும்பிப் பேதுருவைப் பார்த்து: எனக்குப் பின்னாகப்போ, சாத்தானே, நீ எனக்கு இடறலாயிருக்கிறாய்; தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய்" (மத் 16:21-23). என்று கூறி பேதுருவின் வார்த்தையை நிராகரிக்கிறார்.

வழக்கம் போலவே சீமோன் பேதுரு மற்ற சீஷர்கள் பேசுவதற்கு முன்பாக, அவர்கள் சார்பாக பேசுகிறான். "ஆண்டவரே யாரிடத்தில் போவோம்" என்று கேட்கிறான். சீஷர்களில் அநேகர் இயேசுகிறிஸ்துவோடு கூட நடவாமல் அவரைவிட்டு பின்வாங்கிப்போனாலும், பன்னிரண்டு சீஷர்களாகிய தாங்கள் அவரோடு கூட நடக்க தீர்மானம்பண்ணுவதாக பேதுரு கூறுகிறான். தாங்கள் இயேசுவோடு கூடப்போகவில்லையென்றால், வேறு யாரோடும் தங்களால் போகமுடியாது என்று அறிவிக்கிறான். இயேசுகிறிஸ்துவைவிட்டுப் பின்வாங்கிப்போகிறவர்கள், அவரைவிட்டுப் போகும் முன்பாக, எங்கு போகப்போகிறோம் என்பதையும், யாரோடு போகப்போகிறோம் என்பதையும் தீர்மானம்பண்ண வேண்டும். கண்ணை மூடிக்கொண்டு எங்காவது போகலாமென்று தீர்மானம்பண்ணக்கூடாது. இந்த உலகம் நம்மை வஞ்சித்துவிடும்.

நாம் பாவத்தைவிட்டு விலகி இயேசுகிறிஸ்துவிடம் வந்திருக்கிறோம். அப்படிப்பட்ட நாம் இயேசுகிறிஸ்துவை விட்டு விலகிப்போய்விட்டால் மறுபடியும் பாவத்தில் சிக்கிக்கொள்வதற்கு வாய்ப்புள்ளது. பாவம் நம்மை அழித்துவிடும். இயேசுகிறிஸ்து நமக்கு ஜீவனைக்கொடுக்கிறார்.

அவர் நமக்கு வற்றாத ஜீவநீரூற்றாக இருக்கிறவர். அவரை விட்டு விட்டு உடைந்துபோன தண்ணீர் தொட்டிகளின்மீது ஆசைப்பட்டுப்போனால் அழிந்துபோவோம்.

சீஷர்கள் இயேசுகிறிஸ்துவோடு கூட தொடர்ந்து நடக்க தீர்மானம்பண்ணுகிறார்கள். அதில் தங்களுக்கு சந்தோஷம் இருப்பதாக உறுதிபண்ணுகிறார்கள். தங்களுடைய ஜீவியகாலம் முழுவதும் இயேசுகிறிஸ்துவின் அடிச்சுவடுகளை பின்பற்றி வருவதற்கு தீர்மானம் பண்ணுகிறார்கள். இயேசுகிறிஸ்துவை தங்களுடைய ஜீவனுக்கு வழிகாட்டியாக அங்கீகரிக்கிறார்கள். சந்தோஷத்தையும், சமாதானத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால், இயேசுகிறிஸ்துவை பின்பற்றினால் மாத்திரமே அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை இந்த பன்னிரண்டு சீஷர்களும் அறிந்து வைத்திருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தில் குற்றம் கண்டுபிடித்து, விசுவாசத்தை விட்டு விலகிப்போய்விட விரும்புகிறவர்கள், விலகிப்போவதற்கு முன்பாக அவருடைய உபதேசத்தைவிட நேர்த்தியான நல்ல உபதேசம் வேறு எங்காவது இருக்கிறதா என்று தேடிப்பார்க்க வேண்டும். எங்கு தேடினாலும் இயேசுவின் உபதேசத்தைப்போல நல்ல உபதேசத்தை இவர்களால் எங்கும் காணமுடியாது. இயேசுகிறிஸ்துவின் வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது. இயேசுவின் உபதேசம் நமக்கு ஜீவனைக்கொடுக்கும். மற்ற உபதேசங்கள் நம்முடைய ஜீவனை எடுக்கும்.

இயேசுகிறிஸ்துவோடு கூட நடக்கும்போது கண்ணை மூடிக்கொண்டு நடக்க வேண்டும் என்னும் அவசியமில்லை. அவர் நல்லவரென்பதை ருசிபார்த்து, கண்களைத் திறந்துகொண்டு, அவரோடு கூட நடக்கலாம். இயேசுகிறிஸ்துவின் உபதேசங்களினால் ஜீவனைப்பெற்றுக் கொண்டவர்கள் அவரோடுகூட வழிவிலகாமல் நடப்பார்கள். சீஷர்கள் இயேசுவோடுகூட நடக்கவேண்டுமென்று தீர்மானம் பண்ணுகிறார்கள். ஏனெனில் இயேசு கிறிஸ்துவின் மூலமாக இவர்களுக்கு அநேக ஆசீர்வாதங்கள் வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. நித்திய ஜீவ வசனங்கள் இயேசு கிறிஸ்துவிடத்தில் உள்ளது. இயேசு கிறிஸ்துவின் உபதேசம் நித்திய ஜீவனுக்கு வழியைக் காண்பிக்கிறது. நித்திய ஜீவனை சுதந்தரித்துக்கொள்ள நாம் என்ன செய்யவேண்டுமென்று அவருடைய உபதேசம் நம்மை வழிநடத்துகிறது.

## அதிகாரம் - 6

நித்திய ஜீவ வசனங்களை உடைய இயேசுகிறிஸ்துவுக்கு, நித்திய ஜீவனைக் கொடுக்கும் அதிகாரமும் வல்லமையும் உள்ளது. தம்மைப் பின்பற்றுகிறவர்களுக்கு நித்திய ஜீவன் கொடுக்கப்படுமென்று இயேசுகிறிஸ்து வாக்குப்பண்ணியிருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தை இந்த பன்னிரண்டு சீஷர்களும் அப்படியே விசுவாசித்து, அவரோடு கூட இருக்கவேண்டுமென்று தீர்மானிக்கிறார்கள். சீஷர்களில் அநேகர் இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தை கடினமான உபதேசமென்று கூறி அவருடனேகூட நடவாமல் பின்வாங்கிப்போனாலும், இந்த பன்னிரண்டு சீஷர்களும் அவருடனேகூட நடக்கவேண்டுமென்றும், அவரில் நிலைத்திருக்க வேண்டுமென்றும் தீர்மானம்பண்ணுகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் உபதேசம் எளிமையானது. ஆவிக்குரியது. அவருடைய உபதேசங்களில் ஏராளமானவற்றை நாம் எளிதாக புரிந்துகொள்ளலாம். ஒரு சில உபதேசங்கள் நாம் புரிந்துகொள்ள முடியாதபடி ரகசியமாகக் கூடயிருக்கலாம். அவருடைய உபதேசம் எப்படியிருந்தாலும், அவருடைய வார்த்தைகள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது. இயேசுவின் உபதேசம் நித்திய ஜீவனுக்கேதுவான வார்த்தைகளாகும். ஆகையினால் விசுவாசிகள் ஒவ்வொருவரும் அவருடைய வார்த்தையின் பிரகாரமாக நாம் ஜீவிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். நாம் மரித்துப்போவதாக இருந்தாலும் அவருடைய வார்த்தையின் பிரகாரமாகவே மரித்துப்போகவேண்டும்.

இயேசுகிறிஸ்துவைக்குறித்து சீஷர்கள் உறுதியான நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அவர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று அவர்கள் விசுவாசித்தும் அறிந்தும் இருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தை இவர்கள் விசுவாசிக்கிறார்கள். பிதாக்களுக்கு வாக்குப்பண்ணப்பட்ட மேசியா இவர்தான் என்பதையும், இவர் சாதாரண மனுஷர் மாத்திரமல்ல, ஜீவனுள்ள தேவனுடைய குமாரனானவர் என்பதையும் விசுவாசிக்கிறார்கள். இவர்களுடைய விசுவாசம் உறுதியாக இருக்கிறது. ஆகையினால் தாங்கள் இந்த சத்தியத்தை விசுவாசித்தும் அறிந்தும் இருப்பதாக அறிவிக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை நாம் விசுவாசித்தும் அறிந்தும் இருப்போமென்றால், நாமும் நம்முடைய ஆத்துமாக்களை இந்த சுவிசேஷ வார்த்தைகளின்மீது தைரியமாக கட்டியெழுப்பி ஸ்தாபிக்க வேண்டும். இப்படிப்பட்ட உறுதியான விசுவாசம் நம்மிடத்தில் ஏற்படும் வரையிலும் நம்மால் இயேசுகிறிஸ்துவுக்கு வல்லமையாக, முழுமையாக ஊழியம் செய்ய முடியாது. இயேசுவுக்கு நம்மை முழுமையாக ஒப்புக்கொடுக்க ஆயத்தமாக இல்லையென்றால், எல்லா சூழ்நிலைகளிலும் நம்முடைய சிலுவையை எடுத்துக்கொண்டு அவரைப்பின்பற்றிச் செல்ல தயக்கம் காண்பிப்போம். உறுதியான விசுவாசமுள்ளவர்களால் மாத்திரமே இயேசுகிறிஸ்துவை உறுதியாக பின்பற்ற முடியும்.

### ஒருவன் பிசாசாயிருக்கிறான்

**இயேசு அவர்களை நோக்கி: பன்னிருவராகிய உங்களை நான் தெரிந்து கொள்ளவில்லையா? உங்களுக்குள்ளும் ஒருவன் பிசாசாயிருக்கிறான் என்றார். சீமோனின் குமாரனாகிய யூதாஸ்காரியோத்து பன்னிருவரிலொருவனாயிருந்தும், தம்மைக் காட்டிக்கொடுக்கப் போகிறவனாயிருந்த படியினால் அவனைக் குறித்து இப்படிச் சொன்னார் (யோவா 6:70,71).**

இயேசுகிறிஸ்து பன்னிருவரையும் நோக்கி "நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ" என்று கேட்கிறார். சீமோன் பேதுரு அவருக்குப் பிரதியுத்தரமாக "யாரிடத்தில் போவோம்" என்று கூறுகிறான். பேதுருவின் பிரதியுத்தரத்தைக் கேட்டு கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இருதய பாரத்தோடு "பன்னிருவராகிய உங்களை நான் தெரிந்து கொள்ளவில்லையா? உங்களுக்குள்ளும் ஒருவன் பிசாசாயிருக்கிறான்" என்று கூறுகிறார். அவர் சீமோனின் குமாரனாகிய யூதாஸ்காரியோத்தைப்பற்றி இவ்வாறு கூறுவதாக யோவான் இந்த சுவிசேஷத்தில் எழுதியிருக்கிறார்.

## அதிகாரம் - 6

பன்னிரு சீஷர்களாகிய தாங்கள் எல்லோருமே தங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்கு உண்மையுள்ளவர்களாகவும் விசுவாச முள்ளவர்களாகவும் இருப்பதாகவும், அவரை பின்பற்றுவதாகவும் பேதுரு வாக்குப்பண்ணுகிறான். அவனுடைய நல்ல வார்த்தையை இயேசுகிறிஸ்து கடிந்து கொள்ளவில்லை. நம்முடைய வார்த்தைகள் எப்போது இதுபோல நல்வார்த்தைகளாகவே இருக்கவேண்டும். பேதுரு தன்னோடு கூடயிருக்கும் மற்ற எல்லா சீஷர்களையும் நம்புகிறான். ஆனால் இயேசுகிறிஸ்துவோ அவனுடைய நம்பிக்கையை திருத்துகிறார்.

நம்முடைய வாழ்க்கையில் நாமும் பிறரை நம்பவேண்டும். ஆனால் அளவுக்கு மீறி யாரையும் நம்பிவிடக்கூடாது. எல்லா மனுஷரும் குறைபாடுடையவர்கள். யாரெல்லாம் தமக்குரியவர்கள் என்பது தேவனுக்குத் தெரியும். ஆனால் இந்த ரகசியம் நமக்குத் தெரியாது. மாய்மாலக்காரர்களும், இயேசுகிறிஸ்துவை காட்டிக் கொடுக்கிறவர்களும் பிசாசுகளைவிட மோசமானவர்கள். சாத்தான் யூதாஸ்காரியோத்திற்குள் புகுந்து தன் வஞ்சனையான எண்ணத்தினால் அவனை நிரப்புகிறான். ஆகையினால் தான், இயேசுகிறிஸ்து யூதாஸ்காரியோத்தை பிசாசு என்று அழைக்கிறார்.

இக்காலத்தில்கூட பலர் பார்வைக்குப் பரிசுத்தவான்களாக இருக்கிறார்கள். ஆனால் உண்மையில் அவர்கள் பிசாசுகளாகவே இருக்கிறார்கள். "நான் உங்களை தெரிந்துகொள்ளவில்லையா" என்று இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் கூறுகிறார். இந்த வார்த்தை துக்கம் நிறைந்த வார்த்தையாகும். தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களில் ஒருவனே தம்மை காட்டிக்கொடுக்கப்போகிறான் என்பது இயேசுவுக்கு மிகவும் துக்கமாயிருக்கிறது.

மாய்மாலக்காரர்கள் பலவிதமான வேஷந்தரித்து மனுஷரை வஞ்சிக்கலாம். ஆனால் இயேசுகிறிஸ்துவை ஒருவனாலும் வஞ்சிக்க முடியாது. இயேசுகிறிஸ்துவின் தெய்வீக பார்வை மிகவும் கூர்மையானது. அவருக்கு மறைவானது ஒன்றுமில்லை. அவர் நம்முடைய உள்ளங்களை அறிந்திருக்கிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய விசேஷித்த ஊழியத்திற்காக இந்த பன்னிரண்டு பேரையும் தெரிந்துகொண்டார். அப்படிப்பட்ட இவர்களில்கூட ஒருவன் அவரைக் காட்டிக்கொடுப்பதற்கு ஆயத்தமாக இருக்கிறான்.

இக்காலத்தில் சபைகளிலும், ஊழியங்களிலும் யூதாஸ்காரியோத்தைப்போல சிலர் பிசாசுகளாக இருக்கிறார்கள். இவர்கள் மாய்மாலக்காரர்கள். வஞ்சிக்கிறவர்கள். துன்மார்க்கர்கள். ஆவிக்குரிய வட்டாரத்தில், பிசாசுக்கு ஊழியம் செய்கிற வஞ்சகர்கள் இருப்பது புதுமையான காரியமல்ல. இயேசுகிறிஸ்துவோடு கூடயிருந்த பன்னிருவரில் ஒருவன் பிசாசாயிருந்தான். இந்த பன்னிருவரில் யூதாஸ்காரியோத்துதான் இயேசுகிறிஸ்துவை காட்டிக்கொடுக்கப் போகிறான் என்று இந்த சுவிசேஷத்தில் யோவான் தெளிவாக எழுதியிருக்கிறார். ஒருவன் பிசாசாக இருக்கிறான் என்பதற்காக, ஒட்டுமொத்தமாக எல்லா சீஷர்களையும் புறக்கணித்துவிட முடியாது. நல்லோர் மத்தியில் இப்படி ஒரு துன்மார்க்கன் இருக்கிறான். நம்முடைய சமுதாயம் எப்படித்தான் பாதுகாக்கப்பட்டாலும் அதில்கூட ஒரு சில அசுத்தமான காரியங்கள் பிரவேசித்துவிடும்.

## அதிகாரம் - 7

இயேசுகிறிஸ்து யூதேயாவில் சஞ்சரிக்க மனதில்லாமல் கலிலேயாவிலே சஞ்சரித்து வருகிறார் (யோவா 7:1). கூடார பண்டிகை சமீபமாயிருக்கும்போது, இயேசுகிறிஸ்துவின் சகோதரர் அவரை எருசலேமுக்குப் போகுமாறு கூறுகிறார்கள். இது தொடர்பாக இயேசுகிறிஸ்துவின் உரையாடல் (யோவா 7:2-13). கூடாரப்பண்டிகையின்போது இயேசுகிறிஸ்து தேவாலயத்தில் பிரசங்கம் பண்ணுகிறார். பாதிப்பண்டிகையானபோது இயேசுகிறிஸ்துவின் பிரசங்கம் (யோவா 7:14,15). தம்முடைய உபதேசத்தைப் பற்றி இயேசுகிறிஸ்து விவரிக்கிறார் (யோவா 7:16-18). ஓய்வுநாள் பிரமாணத்தை மீறியதாக தம்மீது குற்றம் சாட்டப்பட்டபோது, இயேசுகிறிஸ்து அதைப்பற்றி விவரிக்கிறார் (யோவா 7:19-24). தாம் எங்கிருந்து வந்திருக்கிறோம் என்பதையும், தாம் எங்கு போகிறோம் என்பதையும் இயேசு தெளிவுபடுத்துகிறார் (யோவா 7:25-36). பண்டிகையின் கடைசிநாளாகிய பிரதான நாளில் உபதேசம். தம்மிடத்தில் வருமாறு இயேசுகிறிஸ்து ஆத்துமாக்களை அன்போடு அழைக்கிறார் (யோவா 7:37-39). ஜனங்களில் அநேகர் இயேசுவை விசுவாசிக்கிறார்கள் (யோவா 7:40). வேறு சிலர் இயேசுவைக்குறித்து வாக்குவாதம் பண்ணுகிறார்கள் (யோவா 7:40-44). பிரதான ஆசாரியர் இயேசுவைப் பிடிக்க மனதாயிருக்கிறார்கள் (யோவா 7:45-49). நிக்கொதேமுவின் ஆலோசனை (யோவா 7:50-53).

### கலிலேயாவிலே
### யோவா 7:1-9

**யோவா 7:1. இவைகளுக்குப் பின்பு, யூதர்கள் இயேசுவைக் கொலைசெய்ய வகைதேடினபடியால், அவர் யூதேயாவிலே சஞ்சரிக்க மனதில்லாமல் கலிலேயாவிலே சஞ்சரித்துவந்தார்.**

**யோவா 7:2. யூதருடைய கூடாரப்பண்டிகை சமீபமாயிருந்தது.**

**யோவா 7:3. அப்பொழுது அவருடைய சகோதரர் அவரை நோக்கி: நீர் செய்கிற கிரியைகளை உம்முடைய சீஷர்களும் பார்க்கும்படி, இவ்விடம்விட்டு யூதேயாவுக்குப் போம்.**

**யோவா 7:4. பிரபலமாயிருக்க விரும்புகிற எவனும் அந்தரங்கத்திலே ஒன்றையும் செய்யமாட்டான்; நீர் இப்படிப்பட்டவைகளைச் செய்தால் உலகத்துக்கு உம்மை வெளிப்படுத்தும் என்றார்கள்.**

**யோவா 7:5. அவருடைய சகோதரரும் அவரை விசுவாசியாதபடியால் இப்படிச் சொன்னார்கள்.**

**யோவா 7:6. இயேசு அவர்களை நோக்கி: என்வேளை இன்னும் வரவில்லை, உங்கள் வேளையோ எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கிறது.**

**யோவா 7:7. உலகம் உங்களைப் பகைக்கமாட்டாது; அதின் கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறதென்று நான் சாட்சிகொடுக்கிறபடியினாலே அது என்னைப் பகைக்கிறது.**

**யோவா 7:8. நீங்கள் இந்தப் பண்டிகைக்குப் போங்கள்; என் வேளை இன்னும் வராதபடியால் நான் இந்தப் பண்டிகைக்கு இப்பொழுது போகிறதில்லை என்றார்.**

**யோவா 7:9. இவைகளை அவர்களுடனே சொல்லி, பின்னுங் கலிலேயாவிலே தங்கினார்.**

**யூதேயாவிலே சஞ்சரிக்க மனதில்லாமல்**

**இவைகளுக்குப் பின்பு, யூதர்கள் இயேசுவைக் கொலைசெய்ய வகைதேடினபடியால், அவர் யூதேயாவிலே சஞ்சரிக்க மனதில்லாமல் கலிலேயாவிலே சஞ்சரித்துவந்தார் (யோவா 7:1).**

இயேசுகிறிஸ்து யூதேயாவில் ஊழியம் செய்வதைவிட கலிலேயாவில் அதிகமாக ஊழியம் செய்திருக்கிறார். இதற்கான காரணம் இந்த வசனத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது. எருசலேமிலும் யூதேயாவிலுமுள்ள யூதர்கள் இயேசுவைக் கொலைசெய்ய வகைதேடிக் கொண்டிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து திமிர்வாதமாக இருந்த மனுஷனை ஒரு ஓய்வுநாளில் சொஸ்தமாக்கினார் (யோவா 5:16). இதனால் இயேசுவின்மீது யூதர்களுக்கு கோபம் உண்டாயிற்று.

## அதிகாரம் - 7

தம்மைக் கொலை செய்ய யூதர்கள் வகைதேடினபடியினால் இயேசு யூதேயாவிலே சஞ்சரிக்க மனதில்லாதவராக இருக்கிறார். இதற்காக அவர் பயப்படவில்லை. இயேசுகிறிஸ்து மரணத்திற்குப் பயப்படுகிற கோழையல்ல. ஆயினும் தம்முடைய தெய்வீக ஞானத்தினால், தம்முடைய வேளை இன்னும் வரவில்லை என்பதை அறிந்து, இயேசுகிறிஸ்து யூதேயாவிலே சஞ்சரிக்க மனதில்லாதவராக, கலிலேயாவிலே சஞ்சரித்து வருகிறார். தம்மை வரவேற்காத ஜனங்கள் மத்தியிலும், தம்மை துரத்துகிற ஜனங்கள் மத்தியிலும் இயேசுகிறிஸ்து ஒருபோதும் வாசம்பண்ணுவதில்லை. அவர் நமக்குள் வாசம்பண்ணவேண்டுமென்றால் நாம் அவரை வரவேற்கவேண்டும்.

நமக்கு ஆபத்து நேரிடும்போது, அல்லது ஊழியத்திற்கு பல பிரச்சனைகள் உண்டாகும்போது, அந்த சூழ்நிலைகளை விட்டும், ஸ்தலங்களைவிட்டும் விலகிப்போவது தவறல்ல. அவ்வாறுதான் செய்யவேண்டும். எந்த இடத்தில் நமக்கு எதிர்ப்பு குறைவாக இருக்கிறதோ அந்த இடத்தில் நாம் ஊழியம் செய்யவேண்டும். எதிர்ப்பு அதிகமாக இருக்கிற ஸ்தலங்களை தேடிப்பார்த்து, அங்குபோய் ஊழியம் செய்கிறேன் என்று சொல்லிக்கொண்டு, தேவையில்லாத ஆபத்துக்களில் சிக்கிக்கொள்ளக்கூடாது (மத் 10:23). அப்படிப்பட்ட கஷ்டமான இடங்களுக்கு கர்த்தர் வழிநடத்தினால் மாத்திரமே போகவேண்டும். நம்முடைய சுயசித்தத்தினாலோ, சுயவிருப்பத்தினாலோ ஆபத்துக்களைத் தேடிப்போகக்கூடாது. தம்மைக் கொலைசெய்ய யூதேயாவிலே இருக்கிற யூதர்கள் வகைதேடுவதை அறிந்தபோது, இயேசுகிறிஸ்து அவர்கள் மத்தியிலே யூதேயாவிலே சஞ்சரிக்க மனதில்லாமல், அவர்களையும் அந்த தேசத்தையும் விட்டுப் புறப்பட்டு, கலிலேயாவுக்குப் போய்விடுகிறார்.

நாம் ஊழியம் செய்யும் பகுதியில் நமக்கு வரவேற்பு இல்லையென்றாலும், நாம் அங்கீகரிக்கப்படவில்லையென்றாலும், நம்முடைய ஊழியத்தில் அதிகமான கனி கிடைக்கவில்லையென்றாலும், நாம் சோர்ந்து போய்விடக்கூடாது. இயேசுகிறிஸ்துவின் ஊழியத்திலும் கலிலேயாவிலே இப்படிப்பட்ட சம்பவம்தான் நடைபெற்றது. யூதேயாவிலே இருக்கிறவர்கள், அவரை கொலைசெய்ய மனதாயிருக்கிறார்கள். கலிலேயாவிலே இருக்கிறவர்களோ, அவரை சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளவில்லை. யூதேயாவிலே எதிர்ப்பு. கலிலேயாவிலே வரவேற்பு இல்லை. இதற்காக இயேசுகிறிஸ்து சோர்ந்துபோய் சும்மாயிருந்துவிடவில்லை. அவர் கலிலேயாவிலே சஞ்சரித்து வருகிறார். சஞ்சரித்தல் என்பதற்கு நடப்பது என்று பொருள். அவர் செல்லும் இடங்களிலெல்லாம் நன்மை செய்கிறவராக சுற்றி அலைகிறார். நாம் விரும்புகிற ஊழியத்தை, நாம் விரும்புகிற இடத்தில் செய்ய முடியவில்லையென்றாலும், நம்மால் செய்ய முடிகிற ஊழியத்தை, செய்ய முடிகிற இடத்தில் செய்யவேண்டும்.

### கூடாரப்பண்டிகை

**யூதருடைய கூடாரப்பண்டிகை சமீபமாயிருந்தது (யோவா 7:2).**

யூதர் மத்தியிலே கூடாரப்பண்டிகை மிகவும் முக்கியமானது. யூதர்கள் தங்களுடைய மார்க்க ரீதியாக மூன்று பண்டிகைகளை மிகவும் முக்கியமாக ஆசரிப்பார்கள். இந்த மூன்று பண்டிகைகளிலும் கூடாரப்பண்டிகை மிகவும் முக்கியமானது. இந்த பண்டிகையின்போது யூதமார்க்கத்தைச் சேர்ந்த எல்லா புருஷர்களும், எருசலேமிற்கு வருவது வழக்கம். இக்காலத்திலும்கூட இஸ்ரவேல் தேசத்தில் யூதர்கள் கூடாரப்பண்டிகையை ஆசரித்து வருகிறார்கள். தேவனால் ஸ்தாபிக்கப்படுகிற எதுவும் அழிந்துபோவதில்லை. பழையதாய் போவதுமில்லை. எத்தனை காலமானாலும், தேவனால் ஸ்தாபிக்கப்படுவது நிலைத்து நிற்கும்.

## அதிகாரம் - 7

யூதர்கள் எகிப்து தேசத்தில் அடிமைகளாக இருந்தார்கள். தேவன் தம்முடைய பலத்த கரத்தினால் எகிப்து தேசத்திலிருந்து விடுவித்து, வனாந்தரத்தின் வழியாக கானான் தேசத்திற்கு அழைத்து வந்தார். வனாந்தரப் பிரயாணத்தில் தேவன் தங்களுடைய முற்பிதாக்களுக்குக் காண்பித்த கிருபைகளையும் இரக்கங்களையும் யூதர்கள் ஒருபோதும் மறந்துபோகவில்லை. நாமும் நம்முடைய வாழ்வின், கடினமான சூழ்நிலைகளில், தேவன் நமக்குக் காண்பித்த அவருடைய அன்பையும், இரக்கத்தையும், கிருபையையும் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது.

### இயேசுவின் சகோதரர்

**அப்பொழுது அவருடைய சகோதரர் அவரை நோக்கி: நீர் செய்கிற கிரியைகளை உம்முடைய சீஷர்களும் பார்க்கும்படி, இவ்விடம்விட்டு யூதேயாவுக்குப் போம். பிரபல்மாயிருக்க விரும்புகிற எவனும் அந்தரங்கத்திலே ஒன்றையும் செய்யமாட்டான்; நீர் இப்படிப்பட்டவைகளைச் செய்தால் உலகத்துக்கு உம்மை வெளிப்படுத்தும் என்றார்கள். அவருடைய சகோதரரும் அவரை விசுவாசியாதபடியால் இப்படிச் சொன்னார்கள் (யோவா 7:3-5).**

இயேசுகிறிஸ்து கலிலேயாவிலே சஞ்சரித்துக்கொண்டிருக்கிறார். அங்கு அவருடைய சகோதரர், உற்றார் உறவினர்கள் எல்லோரும் இருக்கிறார்கள். ஆனால் அவர்களோ இயேசுகிறிஸ்துவின் ஊழியத்திற்கு ஆதாரவாக இருக்கவில்லை. யூதேயாவிலே யூதர்கள் தம்மைக் கொலைசெய்ய வகைதேடுவதினால் இயேசுகிறிஸ்து யூதேயாவை விட்டு கலிலேயாவுக்கு வந்திருக்கிறார். ஆனால் கலிலேயாவிலுள்ள அவருடைய சகோதரரோ, இயேசுவை கலிலேயாவைவிட்டு யூதேயாவுக்குப் போகுமாறு கட்டாயப்படுத்துகிறார்கள்.

இயேசுகிறிஸ்து இதுவரையிலும் செய்து வந்த ஊழியத்தைவிட, இன்னும் விளம்பரமாக ஊழியம் செய்யவேண்டுமென்று அவருடைய சகோதரர்கள் விரும்புகிறார்கள். இயேசுகிறிஸ்து பிரபலமாகும்போது, அதன் மூலமாக தாங்களும் பிரபலமாகலாம் என்று ஒருவேளை அவருடைய சகோதரர்கள் மாம்ச பிரகாரமாக சிந்தித்ருக்கலாம். ஆகையினால் "இவ்விடம் விட்டு யூதேயாவுக்குப்போம்" என்று இயேசுவிடம் கூறுகிறார்கள்.

இயேசுகிறிஸ்து கலிலேயாவைவிட்டு யூதேயாவுக்கு ஏன் போகவேண்டும் என்பதற்கு அவருடைய சகோதரர் இரண்டு காரணங்களைக் கூறுகிறார்கள். அவையாவன : 1. இயேசுகிறிஸ்து செய்கிற கிரியைகளை, அவருடைய சீஷர்களும் பார்க்கவேண்டும் 2. பிரபலமாகயிருக்க விரும்புகிற எவனும் அந்தரங்கத்திலே ஒன்றையும் செய்யமாட்டான்.

எருசலேமிலும், அதை சுற்றிமுள்ள பகுதியிலும் யூதமார்க்கம் சம்பந்தமான காரியங்கள் மிகவும் சிறப்பாக நடைபெறும். ஆகையினால் மார்க்ககாரியங்களில் ஈடுபடுவோர் எல்லோரும் எருசலேமுக்குப் போகவே விரும்புவார்கள். இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் எருசலேமில் இருக்கிறார்கள். தம்முடைய சீஷர்களை விட்டுவிட்டு இயேசுகிறிஸ்து கலிலேயாவுக்கு வந்திருக்கிறார். கலிலேயாவிலுள்ள சீஷர்களோ விசுவாசத்தில் பலவீனமானவர்கள். இவர்கள் மத்தியிலே ஊழியம் செய்தாலும், அற்புதம் செய்தாலும் இதனால் ஒரு பிரயோஜனமும் உண்டாகாது. ஆகையினால் எருசலேமுக்குப் போவதுதான் நல்லது என்று பொருள்படுமாறு இயேசுவின் சகோதரர் அவரிடத்தில் கூறுகிறார்கள்.

கலிலேயாவிலே அற்புதம் செய்தாலும், அந்த அற்புதங்களை யூதேயாவிலுள்ள சீஷர்கள் பார்த்தால்தான் இயேசுகிறிஸ்துவின் ஊழியம் பிரபலமடையும். இயேசுகிறிஸ்துவின் பெயர் பிரஸ்தாபமாகும். பிரபலமாயிருக்க விரும்புகிற எவனும் அந்தரங்கத்திலே ஒன்றையும் செய்யமாட்டான். ஆகையினால் எருசலேமிலேபோய் இயேசு தம்முடைய ஊழியத்தை செய்து பிரபலமடைய வேண்டுமென்று பொருள்படுமாறு அவருடைய சகோதரர் கூறுகிறார்கள். இயேசுகிறிஸ்து பிரபலமடைவதற்காகவே இந்த பூமியில் ஊழியம் செய்கிறார் என்று அவருடைய சகோதரர் அவரைக்குறித்து தவறாக சிந்திக்கிறார்கள்.

## அதிகாரம் - 7

"நீர் இப்படிப்பட்டவைகளைச் செய்தால் உலகத்திற்கு உம்மை வெளிப்படுத்தும்" என்று அவர்கள் கூறுகிறார்கள். எருசலேமிலே கூடாரப்பண்டிகை நடைபெற்றுக் கொண்டிருப்பதால், அங்கு திரளான ஜனங்கள் வருவார்கள். அவர்கள் மத்தியில் அற்புதங்களைச் செய்தால் இயேசுகிறிஸ்துவின் பெயர் பிரபலமாகும். ஆகையினால் உலகமே எருசலேமுக்கு வரும்போது, அந்த உலகத்திற்கு இயேசு தம்மை வெளிப்படுத்த வேண்டுமென்று அவருடைய சகோதரர் கூறுகிறார்கள்.

இயேசுவின் சகோதரர் அவரிடத்தில் இவ்வாறு கூறுவதற்கான காரணத்தை யோவான் இங்கு எழுதுகிறார். "அவருடைய சகோதரரும் அவரை விசுவாசியாதபடியால் இப்படிச் சொன்னார்கள்" என்று எழுதியிருக்கிறார். தம்முடைய வார்த்தையைக் கேட்டு அதன்பிரகாரமாக நடக்கிறவர்களே தம்முடைய சகோதரர்களாக இருக்கிறார்கள் என்று இயேசு ஏற்கெனவே அறிவித்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் இந்த சகோதரர்கள் அவருக்கு மாம்சப் பிரகாரமாக உறவினர்களாக இருக்கிறார்கள். இவர்கள் மாம்சப் பிரகாரமாக இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறார்கள். ஆனால் அவருடைய வார்த்தைகளைக் கேட்டு அதன் பிரகாரமாக ஜீவிக்கிறவர்களோ, இயேசுகிறிஸ்துவை ஆவிக்குரிய பிரகாரமாக விசுவாசிக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவினால் தம்மைத்தாமே வழிநடத்திக்கொள்ள தெரியவில்லை என்று நினைத்து, அவருடைய சகோதரர் அவரை கலிலேயாவிலிருந்து யூதேயாவுக்கு வழிநடத்த முயற்சிசெய்கிறார்கள். தம்மையே வழிநடத்த தெரியாத இயேசுகிறிஸ்துவினால், தங்களை வழிநடத்த முடியாது என்று நினைத்து, அவருடைய சகோதரர் அவரை விசுவாசிக்கவில்லை.

இயேசுகிறிஸ்துவின் ஜீவனுக்கு எருசலேமிலே பாதுகாப்பு இல்லை என்பதும், அங்குள்ள யூதர்கள் அவரை கொலைசெய்ய வகைதேடுகிறார்கள் என்பதும் அவருடைய சகோதரருக்கு தெரிந்திருக்கிறது. இயேசு யூதேயாவுக்குப்போனால் அங்குள்ள யூதர்கள் அவரை கொலைசெய்து விடுவார்கள் என்பதும் அவருடைய சகோதரருக்குத் தெரியும். தெரிந்திருந்தும் அவர்கள் இயேசுவிடம் "இவ்விடம் விட்டு யூதேயாவுக்குப்போம்" என்று வற்புறுத்துகிறார்கள்.

ஒருவேளை இயேசுகிறிஸ்து கலிலேயாவிலே இருப்பதை இவர்கள் விரும்பாமலிருக்கலாம். இயேசுகிறிஸ்துவினால் தங்களுக்கும் பிரச்சனை வரலாம் என்று நினைத்து இவர்கள் ஒருவேளை பயத்தோடிருக்கலாம். அல்லது இயேசுகிறிஸ்துவினால் தங்களுடைய பெயருக்கு களங்கம் உண்டாகும் என்று தங்களைப் பற்றியே இவர்கள் நினைத்திருக்கலாம். எப்படியாவது இயேசுகிறிஸ்துவை கலிலேயா கடற்கரை பிரதேசத்தை விட்டே துரத்திவிட வேண்டுமென்று அவருடைய சகோதரர் விரும்புகிறார்கள்.

மிகவும் தந்திரமாக அவர்கள் இயேசுகிறிஸ்துவை நிந்திக்கிறார்கள். அவர் பயந்த ஆவியுள்ளவரென்றும், உயிருக்குப் பயந்து யூதேயாவை விட்டு கலிலேயாவுக்கு வந்திருக்கிறாரென்றும் அவரைக்குறித்து ஏளனமாகப் பேசுகிறார்கள். தம்முடைய ஊழியத்தை எல்லோருக்கும் முன்பாக செய்யுமளவுக்கு இயேசுகிறிஸ்துவிடம் துணிச்சல் இல்லை என்றும், மனுஷருக்குப் பயப்படுவதினால் அவர் அந்தரங்கத்தில் தம்முடைய ஊழியத்தை செய்வதாகவும் அவரை ஏளனம் பண்ணுகிறார்கள். தம்முடைய ஜீவனைவிட, ஆத்துமாவே முக்கியமானது என்று இயேசுகிறிஸ்து நினைத்திருந்தால், அவர் யூதேயாவைவிட்டு கலிலேயாவுக்கு பயந்து ஓடிவந்திருக்கமாட்டாரென்று கூறி, அவருடைய சகோதரர் அவரை வார்த்தையினால் பரியாசம்பண்ணுகிறார்கள்.

இயேசுகிறிஸ்து செய்த அற்புதங்களைக்கூட அவருடைய சகோதரர் விசுவாசிக்கவில்லை. "நீர் செய்கிற கிரியைகளை" என்று அவருடைய அற்புத கிரியைகளை சாதாரண வார்த்தைகளினால் பேசுகிறார்கள். அவர் செய்வது அற்புதமாக இருக்குமானால், அதை எல்லோரும் பார்க்கும்படி செய்யவேண்டும் என்று அவருடைய சகோதரர் அவரை கட்டாயப்படுத்துகிறார்கள். இவர்கள் இயேசுவைத் தங்களைப்போல ஒருவராக நினைத்துக் கொள்கிறார்கள். இயேசு கிறிஸ்துவின் தெய்வத்துவம் அவர்களுக்குத் தெரியவில்லை.

இயேசு மாம்சத்தில் பிரபலமாக இருக்க விரும்புவதாக அவர்கள் நினைக்கிறார்கள். அவருடைய சகோதரருக்கும் பிரபலமாக இருக்கவேண்டுமென்னும் ஆசையிருக்கிறது. இயேசுகிறிஸ்து பிரபலமாயிருந்தால், அந்தப் பிரபலத்தில், அவருடைய சகோதராகிய தங்களுக்கும் ஒரு பங்கு இருக்கும் என்று எதிர்பார்க்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் மேன்மையில் பங்கு பெற விரும்புகிற இவர்கள், அவருடைய பாடுகளில் பங்கேற்க விரும்பவில்லை.

## அதிகாரம் - 7

இவர்களைப்போலத்தான் இன்று ஒருசிலர் தங்களுடைய பெயர் பிரபலமடைய வேண்டும் என்பதற்காகவும், தங்களுடைய பெயரும் புகழும் உயரவேண்டும் என்பதற்காகவும் ஊழியம் செய்கிறார்கள். தங்களுடைய சுயபிரபலமே இவர்களுடைய நோக்கமேயல்லாமல் சுவிசேஷ பிரபல்யம் இவர்களுடைய நோக்கமல்ல.

**என் வேளை இன்னும் வரவில்லை**

**இயேசு அவர்களை நோக்கி: என்வேளை இன்னும் வரவில்லை, உங்கள் வேளையோ எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கிறது (யோவா 7:6).**

இயேசுகிறிஸ்து சர்வ ஞானமுள்ளவர். நம்முடைய வாயில் வார்த்தைகள் புறப்படுவதற்கு முன்னமே, நம்முடைய இருதயத்திலுள்ள சிந்தனைகளை அவர் அறிந்து வைத்திருக்கிறார். இயேசுகிறிஸ்து ஒருபோதும் பெருமைப்படுவதில்லை. அவர் பிரபலமடையவேண்டும் என்று விரும்புவதுமில்லை. அவர் மிகுந்த மனத்தாழ்மையுள்ளவர். தம்முடைய சகோதரரின் வார்த்தையில் பொய்யும், வஞ்சகமும், சுயஆசைகளும் இருந்தாலும் இயேசுகிறிஸ்து அவர்களைக் கடிந்துகொள்ளவில்லை. மிகுந்த பொறுமையோடு பிரதியுத்தரம் கூறுகிறார். நம்முடைய வாழ்க்கையில் நம்மிடம் ஒருசிலர் முறைகேடாக பேசும்போது, நாமும் இயேசுகிறிஸ்துவைப்போலவே அவர்களிடத்தில் மிகுந்த பொறுமையோடும் மனத்தாழ்மையோடும் பேசக்கற்றுக் கொள்ளவேண்டும்.

இயேசுகிறிஸ்துவுக்கும் அவருடைய சகோதரருக்கும் பல வித்தியாசங்கள் உள்ளது. அவற்றில் இரண்டை மாத்திரம் இயேசுகிறிஸ்து இங்கு குறிப்பிடுகிறார். அவையாவன: 1. இயேசுகிறிஸ்துவின் வேளை ஏற்கெனவே தீர்மானப்பண்ணப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்களுடைய வேளை இதுபோல தீர்மானம் பண்ணப்படவில்லை. 2. இயேசுகிறிஸ்துவை இந்த உலகம் பகைத்து அவரைக்கொல்ல வகைதேடுகிறது. ஆனால் இயேசுகிறிஸ்துவின் சகோதரரை இந்த உலகம் பகைக்கவில்லை. அவர்களைக் கொல்ல வகைதேடவுமில்லை.

"என்வேளை இன்னும் வரவில்லை" என்று இயேசுகிறிஸ்து தம்முடைய சகோதரரிடம் கூறுகிறார். ஆனால் அவர்களுடைய வேளையோ எப்பொழுதும் ஆயத்தமாயிக்கிறது. எந்தவித பிரயோஜனமுமில்லாமல் ஜீவிக்கிறவர்கள், தாங்கள் விரும்புகிற நேரத்தில், தாங்கள் விரும்புகிற வேலையை செய்வார்கள். ஒரு குறிப்பிட்ட வேளையில் ஒரு குறிப்பிட்ட வேலையை செய்யவேண்டுமென்னும் கட்டுப்பாடு எதுவும் அவர்களுக்கு இல்லை. தாங்கள் விரும்பிய பிரகாரம், விரும்பிய நேரத்தில் போவார்கள், வருவார்கள். ஆனால் தங்களுடைய கடமைகளை குறிப்பிட்ட வேளையில் செய்ய வேண்டும் என்று தீர்மானம்பண்ணுகிறவர்கள் மிகுந்த கவனத்தோடு, தங்கள் காலத்தை பிரயோஜனப்படுத்திக் கொள்வார்கள். ஒவ்வொரு வேலையையும் அதற்கு நியமிக்கப்பட்டிருக்கும் வேளையில் செய்து முடிக்க முயற்சிபண்ணுவார்கள். மற்றவர்கள் எந்த வேலையையும் எப்பொழுது வேண்டுமானாலும் செய்துகொள்ளலாம் என்று ஓய்வாக இருக்கும்போது, கடமை உணர்வு உள்ளவர்களால் அவர்களைப்போன்று ஏனோதானோவென்று ஜீவிக்க முடியாது.

ஒரு வேலையும் செய்யாமல் சும்மாயிருப்பதைவிட, நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வேலையை, அதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் காலத்தில், பொறுப்போடும் பொறுமையோடும் செய்வது நல்லது. ஏதாவது ஒரு வேலையை ஒழுங்காக செய்யவேண்டும். அந்த வேலையை ஒழுங்காக செய்து கொண்டு, மற்ற வேலைகளில் தலையிடாமல் இருப்பதினால் தவறல்ல. இயேசுகிறிஸ்துவின் சகோதரருக்கு சரியான தரிசனமில்லை. இயேசுகிறிஸ்துவின் வேளையைக்குறித்து அவர்கள் அறியாதவர்களாக இருக்கிறார்கள். ஆகையினால்தான் எருசலேமுக்குப்போகுமாறு அவருக்குக் கட்டளைகொடுக்கிறார்கள்.

நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் இந்த காலம் மாத்திரமே நம்முடைய வேளை. நம்முடைய காலத்தில் நமக்குரியதை நாம் செய்யவேண்டும். மற்றவர்களை நியாயந்தீர்க்கக்கூடாது. இயேசுகிறிஸ்து மாத்திரமே நம்மை நியாயந்தீர்ப்பதற்கு பாத்திரராயிருக்கிறார். அவருக்கு மாத்திரமே அவருடைய வேளையைப்பற்றி தெரியும். அவரோ எருசலேமுக்குப்போக இன்னும் தம்முடைய வேளை வரவில்லை என்று பொறுமையோடிருக்கிறார்.

## அதிகாரம் - 7

**உலகம் என்னை பகைக்கிறது**

**உலகம் உங்களைப் பகைக்க மாட்டாது; அதின் கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறதென்று நான் சாட்சிகொடுக்கிறபடியினாலே அது என்னைப் பகைக்கிறது (யோவா 7:7).**

இயேசுகிறிஸ்துவின் சகோதரரை உலகம் பகைக்கவில்லை. இவர்கள் தாங்கள் செய்கிற கிரியைகளை உலகத்திற்கு வெளிப்படுத்துகிறார்கள். ஆனாலும் உலகம் அவர்களை பகைக்கவில்லை. ஏனெனில் இவர்கள் உலகத்திற்குரியவர்கள். அவர்களுடைய ஆத்துமாக்கள் பரிசுத்தமில்லாமல் இருக்கிறது. பரிசுத்தமுள்ள தேவன் பரிசுத்தமில்லாத ஆத்துமாக்களை நேசிப்பதில்லை. இந்த உலகமோ பொல்லாதவைகளாக இருக்கிறபடியினால், பரிசுத்தமில்லாதவர்களை இந்த உலகம் நேசிக்கிறது. ஆனால் இயேசுகிறிஸ்துவோ பரிசுத்தமுள்ளவராக இருக்கிற படியினாலும், உலகத்தின் கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறதென்று சாட்சி கொடுக்கிறபடியினாலும், இந்த உலகம் அவரைப் பகைக்கிறது. இயேசுகிறிஸ்து தம்மை இந்த உலகத்திற்கு வெளிப்படுத்தினபடியால் அவருக்கு மிகப்பெரிய ஆபத்து உண்டாயிற்று. ஏனெனில் இந்த உலகம் அவரைப் பகைக்கிறது.

இந்தப் பொல்லாத உலகத்தின் கிரியைகளும் பொல்லாதவைகளாகவே இருக்கிறது. இதன் பொல்லாத கிரியைகளைக் குறித்து இயேசுகிறிஸ்து சாட்சி கொடுக்கிறார். ஆகையினால் இந்த உலகம் அவரைப் பகைக்கிறது. ஒரு மரம் எப்படியிருக்கிறதோ அதன் கனியும் அப்படியேயிருக்கும். அதுபோலவே இந்த உலகம் பொல்லாததாக இருப்பதினால் அதன் கிரியைகளும் பொல்லாததாகவே இருக்கிறது. பொல்லாத கிரியைகளை வெளிப்படுத்தும் இந்த உலகத்திடம், அதன் கிரியைகள் பொல்லாதவை என்று சாட்சி கொடுக்கும்போது, இந்த உலகத்திற்கு கோபம் உண்டாகிறது. தன்னுடைய பொல்லாத குணங்களைவிட்டு திருந்துவதற்குப் பதிலாக, தன்னுடைய மெய்யான சுபாவத்தை வெளிப்படுத்தியவர்மீது கோபப்படுகிறது.

இந்த உலகம் தன்னை நல்லபடியாகக் காண்பித்துக்கொண்டாலும், இது சுவிசேஷத்திற்கு விரோதமாகவே செயல்படுகிறது. பாவத்தையும் பாவிகளையும் சுவிசேஷம் கண்டித்து உணர்த்துவதினால், இந்த உலகம் சுவிசேஷத்தைப் பகைக்கிறது. இந்த உலகம் நம்மைப் பகைத்தாலும், பாவத்தைக்குறித்து கண்டித்து உணர்த்துவது ஆசீர்வாதமான கிரியை. உலகம் போகிற போக்கில் போவதற்குப் பதிலாக, கர்த்தருடைய ஊழியக்காரர்கள் உலகத்தைப் பார்த்து, அதன் பாவங்களையும் பொல்லாத கிரியைகளையும் குறித்து சாட்சி கொடுக்கவேண்டும். உலகம் நம்மை பகைக்குமே என்று பயப்படக்கூடாது. உலகம் நம்மைப் பகைத்தாலும் கர்த்தர் நம்மீது பிரியமாக இருப்பார்.

**கலிலேயாவிலே தங்கினார்**

**நீங்கள் இந்தப் பண்டிகைக்குப் போங்கள்; என் வேளை இன்னும் வராதபடியால் நான் இந்தப் பண்டிகைக்கு இப்பொழுது போகிறதில்லை என்றார். இவைகளை அவர்களுடனே சொல்லி, பின்னுங் கலிலேயாவிலே தங்கினார் (யோவா 7:8,9).**

தம்முடைய சகோதரரின் ஆலோசனையை இயேசுகிறிஸ்து ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் சொன்ன பிரகாரமாக இயேசுகிறிஸ்து உடனே யூதேயா தேசத்திற்குப் போகவில்லை. தம்முடைய வேளை இன்னும் வராதபடியினால் தாம் இந்தப் பண்டிகைக்கு இப்பொழுது போகிறதில்லையென்று அறிவித்துவிடுகிறார். தாம் போகவில்லையென்றாலும், தம்முடைய சகோதரரை இந்தப் பண்டிகைக்குப் போகுமாறு கூறுகிறார். அவர்களோடு எருசலேமுக்குப் போக இயேசு பிரியப்படவில்லை. மாம்சப் பிரகாரமான ஆசைகளை நிறைவேற்றுவதற்காக யாராவது ஊழியம் செய்தால் கர்த்தருடைய பிரசன்னம் அவர்களோடு இருக்காது. பக்தியின் வேஷத்தைத் தரித்து ஆராதனை செய்கிறவர்கள் மத்தியில் கர்த்தர் இருக்கமாட்டார். இயேசுவின் சகோதரர்கள் உலகப்பிரகாரமான விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக எருசலேமுக்குப் போகிறார்கள். ஆகையினால் இயேசுகிறிஸ்து அவர்களோடு சேர்ந்து போக மறுத்துவிடுகிறார்.

## அதிகாரம் - 7

இயேசுகிறிஸ்து நம்மோடு எப்போதும் கூடயிருக்கவேண்டும். இதுவே விசுவாசிகளாகிய நமக்கு மிகுந்த ஆசீர்வாதம். இயேசுவின் பிரசன்னம் இல்லாமல் நம்மால் ஒன்றும் செய்யமுடியாது. இயேசு நம்மோடு கூடயிராமல் நாம் எந்த வேலை செய்தாலும் அதனால் ஒரு பிரயோஜனமும் உண்டாகாது.

நாம் ஆவிக்குரிய காரியங்களைப்பற்றி பேசினாலும், ஊழியக்காரியங்களில் பங்குபெற்றாலும் யாரோடு ஐக்கியமாக இருக்கிறோம் என்பதில் மிகுந்த கவனமாக இருக்கவேண்டும். ஊழியமாக இருந்தாலும், ஆராதனையாக இருந்தாலும் கர்த்தருக்குப் பிரியமான பிள்ளைகளோடு மாத்திரமே ஐக்கியமாக இருக்கவேண்டும். தவறானவர்களோடு நாம் ஐக்கியமாக இருந்தால், நமது நோக்கம் சரியாக இருந்தாலும், அவர்கள் நம்முடைய நோக்கத்தை திசை திருப்பிவிடுவார்கள்.

இயேசுகிறிஸ்துவுக்கு இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை உண்டானபோது, அவர் தம்முடைய சகோதரரோடேகூட பண்டிகைக்குப் போக மறுத்துவிடுகிறார். தாம் இனிமேல் எருசலேமுக்கு போகப்போவதில்லை என்று இயேசு கூறவில்லை. இப்போது அவர்களோடு சேர்ந்து எருசலேமுக்குப் போகவில்லை என்றுதான் கூறுகிறார். தம்முடைய வேளை இன்னும் வரவில்லை என்பதைக் காரணமாகக் கூறி இயேசுகிறிஸ்து அவர்களோடு பண்டிகைக்குப்போக மறுத்துவிடுகிறார்.

இதன் பின்னும் இயேசுகிறிஸ்து கலிலேயாவிலே தங்கியிருக்கிறார். அவருடைய வேளை வரும் வரையிலும் இயேசு அங்கிருக்கிறார். தம்முடைய சகோதரர் தம்மை எருசலேமுக்குப் போகுமாறு வலியுறுத்திக் கூறினாலும், தாம் எடுத்த தீர்மானத்தில் இயேசுகிறிஸ்து உறுதியாக இருக்கிறார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும் நம்முடைய தீர்மானங்களில் உறுதியாக இருக்கவேண்டும். நிலையில்லாமலும் நிச்சயமில்லாமலும் அங்கும் இங்கும் அலையக்கூடாது.

### எருசலேமிலே
### யோவா 7:10-13

**யோவா 7:10. அவருடைய சகோதரர் போனபின்பு, அவர் வெளியரங்கமாய்ப் போகாமல் அந்தரங்கமாய்ப் பண்டிகைக்குப் போனார்.**

**யோவா 7:11. பண்டிகையிலே யூதர்கள் அவரைத் தேடி: அவர் எங்கேயிருக்கிறார் என்றார்கள்.**

**யோவா 7:12. ஜனங்களுக்குள்ளே அவரைக் குறித்து முறுமுறுப்புண்டாயிற்று. சிலர்: அவர் நல்லவர் என்றார்கள். வேறுசிலர்: அப்படியல்ல, அவன் ஜனங்களை வஞ்சிக்கிறவன் என்று சொல்லிக்கொண்டார்கள்.**

**யோவா 7:13. ஆனாலும் யூதருக்குப் பயந்திருந்ததினாலே, ஒருவனும் அவரைக்குறித்துத் தாராளமாய்ப் பேசவில்லை.**

**அந்தரங்கமாய் போனார்**

**அவருடைய சகோதரர் போனபின்பு, அவர் வெளியரங்கமாய்ப் போகாமல் அந்தரங்கமாய்ப் பண்டிகைக்குப் போனார் (யோவா 7:10).**

தம்முடைய வேளை வந்தபோது இயேசுகிறிஸ்து பண்டிகைக்கு எருசலேமுக்குப்போகிறார். அவர் போவதற்கு முன்பாகவே அவருடைய சகோதரர்கள் பண்டிகைக்குப் போய்விடுகிறார்கள். அவர்கள் போனபின்புதான் இயேசுகிறிஸ்து எருசலேமுக்குப் போகிறார். அவருடைய உலகப்பிரகாரமான சகோதரர்கள் பண்டிகைக்கு முந்திப்போய்விடுகிறார்கள். ஆனால் தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவோ அவர்களுக்குப் பிந்தித்தான் போகிறார். ஆகையினால் ஆவிக்குரிய காரியங்களில் யார் முந்தி வருகிறார்கள் என்பது முக்கியமல்ல. யார் தகுதியுள்ளவர்களாக வருகிறார்கள் என்பதுதான் முக்கியம். நாம் எங்கு போனாலும் நம்முடைய இருதயம் சுத்தமாக இருக்கவேண்டும். நம்முடைய முழு மனதோடு நாம் கர்த்தருடைய காரியமாக முன்னேறிச் செல்லும்போது, நமக்கு முன்பாக யார் முந்திப்போனாலும் நமக்கு அது ஒரு பிரச்சனையாகயிராது.

## அதிகாரம் - 7

இயேசுகிறிஸ்து பண்டிகைக்குப் போகும்போது வெளியரங்கமாய்ப் போகாமல் அந்தரங்கமாய்ப் போகிறார். தேவனுடைய ஊழியத்தை அமைதியாகச் செய்தாலும், பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையினால் செய்யவேண்டும். ஊழியத்தை ஆரவாரமாக செய்தாலும், தேவனுடைய ஆவியானவர் அங்கு கிரியை நடப்பிக்கவில்லையென்றால் அதனால் பிரயோஜனமில்லை. இயேசுகிறிஸ்து அந்தரங்கமாகப் பண்டிகைக்குப்போனாலும், அவருடைய இருதயம் பரிசுத்தமாக இருக்கிறது. அவர் முழுமனதோடும் முழுஆத்துமாவோடும், முழுஇருதயத்தோடும் பண்டிகைக்குப்போகிறார். தேவனுடைய ஊழியத்தை நாம் ஆரவாரமில்லாமல், அதிக விளம்பரமில்லாமல் தனிமையாக, அந்தரங்கமாகச் செய்துகொண்டிருக்கலாம். இதில் தவறில்லை. ஆனால் நம்முடைய ஊழியத்தில் ஏமாற்றுத்தனம் இருக்கக்கூடாது. ஆரவாரமாக வெளியரங்கமாக ஏமாற்றுவதைவிட, ஆரவாரமில்லாமல், அமைதியாக, அந்தரங்கமாகக் கர்த்தருக்கு ஊழியம் செய்வது நல்லது.

### அவர் எங்கேயிருக்கிறார்

**பண்டிகையிலே யூதர்கள் அவரைத் தேடி: அவர் எங்கேயிருக்கிறார் என்றார்கள் (யோவா 7:11).**

எருசலேமிலுள்ள யூதர்களினால் இயேசுகிறிஸ்துவை மறக்க முடியவில்லை. இயேசுகிறிஸ்துவைக் காணவேண்டும் என்னும் பெரிய எதிர்பார்ப்பு அவர்களுடைய உள்ளத்தில் உண்டாயிற்று. ஆகையினால் யூதர்கள் பண்டிகையிலே இயேசுவைத் தேடுகிறார்கள். "அவர் எங்கேயிருக்கிறார்" என்று ஒருவரையொருவர் கேட்டுக் கொள்கிறார்கள். அவரைப்பற்றி விசாரிக்கிறார்கள். எருசலேமில் கூடாரப்பண்டிகை வருவதினால், இயேசுகிறிஸ்து நிச்சயமாகவே அந்தப் பண்டிகைக்கு எருசலேமுக்கு வருவார் என்று யூதர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

இயேசு எருசலேமுக்கு வரும்போது அவரைப் பார்க்கவேண்டுமென்று யூதர்கள் ஆவலாயிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவோடு ஐக்கியமாக இருப்பதற்கு ஒரு வாய்ப்பு தங்களைத் தேடி வரும்போது, அந்த நல்ல வாய்ப்பை அவர்கள் விரும்புகிறார்கள். பண்டிகையிலே யூதர்கள் இயேசுவைத் தேடுகிறார்கள். இயேசுகிறிஸ்துவைப் பண்டிகையில் பார்க்கவேண்டுமென்றால், அவரைத் தேடித்தான் பார்க்கவேண்டும். இந்த யூதர்கள் ஒருவேளை இயேசுகிறிஸ்துவின் சத்துருக்களாக இருக்கலாம். பண்டிகையின்போது இயேசுவைப் பிடித்துக் கொள்ளலாமென்று அவர்கள் வஞ்சனையான எண்ணத்தோடு காத்துக்கொண்டிருக்கலாம்.

"அவர் எங்கேயிருக்கிறார்" என்று அவர்கள் கேட்பது மரியாதையில்லாத வார்த்தையாகும். இயேசுகிறிஸ்துவைப்பற்றி குறிப்பிடும்போது, சாதாரணமாக "அவர்" அல்லது "இவர்" என்று குறிப்பிடாமல், "தேவகுமாரனாகிய கிறிஸ்து" என்றோ, அல்லது "கர்த்தராகிய இயேசுகிறிஸ்து" என்றோ மிகுந்த மரியாதையோடும் பயபக்தியோடும் கூப்பிடவேண்டும். ஆனால் இவர்களோ மரியாதை குறைவாக, சாதாரண மனுஷரைப்பற்றிப் பேசுவதுபோல "அவர் எங்கேயிருக்கிறார்" என்று கேட்கிறார்கள். பண்டிகை வரும்போது தேவனுக்கு ஊழியம் செய்ய ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்று யூதர்கள் சந்தோஷப்படவேண்டும். ஆனால் இவர்களோ பண்டிகையின்போது இயேசுவைப்பிடித்து அவரைத் துன்பப்படுத்துவதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்திருப்பதாக நினைத்து சந்தோஷப்படுகிறார்கள்.

### முறுமுறுப்புண்டாயிற்று

**ஜனங்களுக்குள்ளே அவரைக் குறித்து முறுமுறுப்புண்டாயிற்று. சிலர்: அவர் நல்லவர் என்றார்கள். வேறுசிலர்: அப்படியல்ல, அவன் ஜனங்களை வஞ்சிக்கிறவன் என்று சொல்லிக் கொண்டார்கள். ஆனாலும் யூதருக்குப் பயந்திருந்ததினாலே, ஒருவனும் அவரைக்குறித்துத் தாராளமாய்ப் பேசவில்லை (யோவா 7:12,13).**

## அதிகாரம் - 7

யூதமார்க்கத்துத் தலைவர்கள் இயேசு கிறிஸ்துவுக்கு விரோதமாகயிருக்கிறார்கள். ஜனங்கள் மத்தியில் அதைப்பற்றிய பேச்சு அதிகமாக நடைபெறுகிறது. அவர்கள் வெளிப்படையாகப் பேசவில்லை. ஜனங்களுக்குள்ளே இயேசுகிறிஸ்துவைக் குறித்து முறுமுறுப்புண்டாயிற்று. இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் பொதுவாக அவருடைய பிள்ளைகளினால் பிரசங்கிக்கப்படும். வேறு சில சமயங்களில் அவருடைய சத்துருக்கள் மூலமாகக் கூட கிறிஸ்துவைப்பற்றிய சுவிசேஷம் விளம்பரமாகும். இங்கு அவருடைய சத்துருக்களினால் இயேசுகிறிஸ்துவைப்பற்றிய செய்தி பரவுகிறது. எல்லா இடங்களிலும் ஜனங்கள் இயேசுகிறிஸ்துவைக் குறித்துப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஜனங்களுக்குள்ளே அவரைக்குறித்து முறுமுறுப்புண்டாயிற்று.

இந்த முறுமுறுப்பு இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாக உண்டாகவில்லை. அவரைக்குறித்து மாத்திரமே முறுமுறுப்புண்டாயிற்று. ஒரு சிலர் யூதமார்க்கத்துத் தலைவரைக்குறித்து முறுமுறுக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவை ஏன் இன்னும் பிடிக்கவில்லையென்றும், அவருக்கு ஏன் இன்னும் தண்டனை கொடுக்கவில்லையென்றும் யூதமார்க்கத்து தலைவர்கள்மீது முறுமுறுக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவும் அவருடைய மார்க்கமும் அவருடைய சத்துருக்களுக்கு எப்போதுமே பிரச்சனையாகத்தான் இருக்கும். தாம் இந்த உலகத்தில் பிரிவினையை உண்டாக்க வந்ததாக இயேசுகிறிஸ்துவே கூறியிருக்கிறார். "நான் பூமியிலே சமாதானத்தை உண்டாக்கவந்தேன் என்று நினைக்கிறீர்களோ? சமாதானத்தையல்ல, பிரிவினையையே உண்டாக்கவந்தேன் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். எப்படியெனில், இதுமுதல் ஒரே வீட்டிலே ஐந்துபேர் பிரிந்திருப்பார்கள், இரண்டுபேருக்கு விரோதமாய்ப் மூன்றுபேரும், மூன்றுபேருக்கு விரோதமாய் இரண்டுபேரும் பிரிந்திருப்பார்கள். தகப்பன் மகனுக்கும் மகன் தகப்பனுக்கும், தாய் மகளுக்கும் மகள் தாய்க்கும், மாமி, மருமகளுக்கும் மருமகள் மாமிக்கும் விரோதமாய்ப் பிரிந்திருந்திருப்பார்கள் என்றார்" (லூக் 12:51-53).

ஜனங்கள் இயேசுகிறிஸ்துவைக்குறித்து வெவ்வேறு விதமாகப் பேசிக்கொள்கிறார்கள். ஒரு சிலர் "அவர் நல்லவர்" என்கிறார்கள். இது மெய்யான வார்த்தை. ஆயினும் இயேசுகிறிஸ்துவை நல்லவர் என்று கூறினால் மாத்திரம் போதாது. அவர் தேவனுடைய குமாரன். ஒரு சிலருக்கு இயேசுகிறிஸ்துவின்மீது தவறான எண்ணம் எதுவும் இருக்காது. ஆயினும் அவர் மீது நம்முடைய பக்தியை வெளிப்படுத்துவதற்கு இது போதாது. இயேசுகிறிஸ்துவைப்பற்றி சொல்லவேண்டிய விதமாக நாம் சொல்லவில்லையென்றால் நம்முடைய வார்த்தைகள் குறைவுள்ளதுதான். இயேசுகிறிஸ்துவின்மீது நமக்கு தவறான சிந்தனைகள் எதுவும் இல்லையென்றாலும், நம்முடைய சிந்தனையும் குறைபாடுடையதுதான். ஏனெனில் நாம் அவரை சிந்திக்கவேண்டிய பிரகாரமாக சிந்திப்பதில்லை. இயேசுகிறிஸ்துவை மேசியா என்று விசுவாசிக்காதவர்கள்கூட அவரை நல்லவரென்று கூறுகிறார்கள்.

வேறு சிலர் இயேசுவைப்பற்றிச் சொல்லும்போது "அவன் ஜனங்களை வஞ்சிக்கிறவன்" என்று சொல்கிறார்கள். இவர்களுடைய வார்த்தை மெய்யானதாக இருக்குமானால், இயேசு ஒரு மோசமான நபராகவே இருப்பார். மனுஷருடைய உள்ளத்தின் ஆழத்தில் இயேசுகிறிஸ்துவைப் பற்றி இதைப்போன்று ஒரு தவறான அபிப்பிராயம் உண்டாயிருக்கிறது. இயேசு கிறிஸ்துவுக்கு சத்துருக்களாக இருக்கும் பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் அவருக்கு விரோதமாக இப்படிப்பட்ட விஷவிதைகளை மக்கள் மத்தியில் தூவியிருக்கிறார்கள். அந்த விதை முளைத்து இயேசுவுக்கு விரோதமாக மக்கள் உள்ளத்தில் கசப்பான உணர்வு உண்டாயிருக்கிறது.

இயேசுகிறிஸ்துவைப்பற்றி சிலர் நல்லவரென்றும், வேறு சிலர் ஜனங்களை வஞ்சிக்கிறவரென்றும் கூறினாலும், இதற்குமேல் ஒருவரும் இயேசுவைப்பற்றி அதிகமாகவோ, தாராளமாகவோ பேசவில்லை. ஏனெனில் அவர்கள் யூதமார்க்கத்துத் தலைவர்களுக்குப் பயந்திருக்கிறார்கள். தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவைக் குறித்து நல்ல வார்த்தைகளைக் கூறுவதற்குக் கூட ஜனங்கள் பயப்படுகிறார்கள். தங்கள் உள்ளத்தில் உள்ளதை இவர்களால் வெளிப்படையாகப் பேசமுடியவில்லை. அவரைப்பற்றி என்னவெல்லாம் பேசவேண்டுமோ அதையெல்லாம் அவர்களால் தாராளமாகப் பேசமுடியவில்லை. இயேசுவுக்கு விரோதமாக யாராலும் நீதியாகக் குற்றம்சாட்ட முடியாது. அவரைப்பற்றி அதிகமாகப் பேசினால் யூதமார்க்கத்துத் தலைவர்கள் பேசியவர்கள்மீதே கோபப்படுகிறார்கள். ஆகையினால் ஜனங்கள் தங்களுடைய வார்த்தைகளை அடக்கிக்கொண்டு தாராளமாய்ப் பேசாமல் அமைதியாயிருக்கிறார்கள்.

## அதிகாரம் - 7

**பாதிப்பண்டிகையானபோது**
**யோவா 7 : 14-24**

**யோவா 7:14. பாதிப்பண்டிகையானபோது, இயேசு தேவாலயத்துக்குப்போய், உபதேசம் பண்ணினார்.**

**யோவா 7:15. அப்பொழுது யூதர்கள்: இவர் கல்லாதவராயிருந்தும் வேத எழுத்துக்களை எப்படி அறிந்திருக்கிறார் என்று ஆச்சரியப்பட்டார்கள்.**

**யோவா 7:16. இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: என் உபதேசம் என்னுடையதாயிராமல், என்னை அனுப்பினவருடையதாயிருக்கிறது.**

**யோவா 7:17. அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்துகொள்ளுவான்.**

**யோவா 7:18. சுயமாய்ப் பேசுகிறவன் தன் சுயமகிமையைத் தேடுகிறான், தன்னை அனுப்பினவரின் மகிமையைத் தேடுகிறவனோ உண்மையுள்ளவனாயிருக்கிறான், அவனிடத்தில் அநீதியில்லை.**

**யோவா 7:19. மோசே நியாயப்பிரமாணத்தை உங்களுக்குக் கொடுக்கவில்லையா? அப்படியிருந்தும் உங்களில் ஒருவனும் அந்த நியாயப்பிரமாணத்தின்படி நடக்கிறதில்லை; நீங்கள் ஏன் என்னைக் கொலைசெய்யத் தேடுகிறீர்கள் என்றார்.**

**யோவா 7:20. ஜனங்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: நீ பிசாசுபிடித்தவன்; உன்னைக் கொலைசெய்யத் தேடுகிறவன் யார் என்றார்கள்.**

**யோவா 7:21. இயேசு அவர்களை நோக்கி: ஒரே கிரியையைச் செய்தேன், அதைக்குறித்து எல்லாரும் ஆச்சரியப்படுகிறீர்கள்.**

**யோவா 7:22. விருத்தசேதனம் மோசேயினால் உண்டாகாமல், பிதாக்களால் உண்டாயிற்று; பின்பு மோசே அதை உங்களுக்கு நியமித்தான்; நீங்கள் ஓய்வுநாளிலும் மனுஷனை விருத்தசேதனம் பண்ணுகிறீர்கள்.**

**யோவா 7:23. மோசேயின் நியாயப்பிரமாணம் மீறப்படாதபடிக்கு ஓய்வுநாளில் மனுஷன் விருத்தசேதனம் பெறலாமென்றால், நான் ஓய்வுநாளில் ஒரு மனுஷனை முழுவதும் சுகமாக்கினதினாலே என்மேல் எரிச்சலாயிருக்கலாமா?**

**யோவா 7:24. தோற்றத்தின்படி தீர்ப்பு செய்யாமல், நீதியின்படி தீர்ப்புசெய்யுங்கள் என்றார்.**

**தேவாலயத்திற்குப் போனார்**

**பாதிப்பண்டிகையானபோது, இயேசு தேவாலயத்துக்குப்போய், உபதேசம் பண்ணினார் (யோவா 7:14).**

இயேசுகிறிஸ்து தேவாலயத்திற்குப்போய் அங்கு உபதேசம்பண்ணுகிறார். அவருடைய உபதேச வார்த்தைகள் இந்த சுவிசேஷத்தில் எழுதப்படவில்லை. என்றாலும் கூடாரப்பண்டிகையில் பாதிப்பண்டிகையான போது இயேசுகிறிஸ்து தேவாலயத்திற்குப்போய் பிரசங்கம்பண்ணினார் என்று எழுதப்பட்டிருக்கிறது. பண்டிகையின் ஆரம்பத்திலேயோ அல்லது இதற்கு முன்போ இயேசுகிறிஸ்து ஏன் பிரசங்கம்பண்ணவில்லை என்று ஒரு சிலர் கேள்வி கேட்கிறார்கள். கூடாரப்பண்டிகையின் ஆரம்பத்தில் ஜனங்கள் பலவிதமான வேலைகளில் தங்களை ஈடுபடுத்தியிருப்பார்கள். கூடாரங்களை அமைப்பது, தங்களுக்கு தங்குமிடங்களையும் மற்ற காரியங்களையும் ஒழுங்கு செய்வது போன்ற வேலைகளை பண்டிகையின் ஆரம்பத்தில் செய்வார்கள். கூடாரத்தில் ஒரு சில நாட்கள் ஜனங்கள் தங்கிய பிறகு இயேசுகிறிஸ்து தேவாலயத்துக்குப் போய் பிரசங்கம்பண்ணுகிறார்.

கூடாரப்பண்டிகைக்கு இயேசு கிறிஸ்துவின் சிநேகிதர்களும் வந்திருக்கிறார்கள். அவருடைய சத்துருக்களும் வந்திருக்கிறார்கள். அவர்களெல்லோரும் இயேசு கிறிஸ்துவைத் தேடிக்கொண்டிருந்தார்கள். இப்போது அவர்களுடைய தேடுதலெல்லாம் முடிந்து போயிற்று. பண்டிகையின் ஆரம்பத்தில் இயேசுகிறிஸ்து அவர்கள் மத்தியில் தென்படவில்லை. ஒருவேளை இயேசுகிறிஸ்து பயந்துபோய் பண்டிகைக்கு வராமலிருந்திருப்பார் என்று அவருடைய சத்துருக்கள் நினைத்திருக்கலாம். ஆனால் இயேசுவோ அவர்களை வெட்கப்படுத்தும் விதமாக பாதிப்பண்டிகையானபோது எருசலேமுக்கு வருகிறார்.

## அதிகாரம் - 7

பண்டிகைக்கு வெளியரங்கமாய் வராமல் அந்தரங்கமாய் வந்தவர், இப்போது வெளியரங்கமாய், எல்லோரும் காணும்பொருட்டு தேவாலயத்திற்கே போய் அங்கு உபதேசம்பண்ணுகிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய சத்துருக்களைக்கண்டு பயப்படவில்லை என்பது இதன் மூலமாகத் தெளிவாகிறது. இயேசு அவர்கள் மத்தியில் இருந்தாலும் அவர்களால் அவரை ஒன்றும் செய்யமுடியவில்லை.

பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் கூடாரப்பண்டிகையின்போது தேவாலயத்திற்கு வந்து ஜனங்களுக்கு உற்தேசம்பண்ண வேண்டும். ஆனால் அவர்களோ தங்களுடைய ஊழியத்தையெல்லாம் விட்டுவிட்டு, இயேசுகிறிஸ்துவைப் பிடித்து அவரைக் கொலைசெய்யவேண்டுமென்று மனதாயிருக்கிறார்கள். ஊழியத்தைச் செய்யவேண்டியவர்கள் ஊழியத்தை செய்யவில்லை. ஆகையினால் இயேசுகிறிஸ்து தேவாலயத்திற்குப் போய் பிரசங்கம்பண்ணுகிறார். அவர்கள் மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதிக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவோ தேவனுடைய வார்த்தையைப் போதிக்கிறார். அவர் தேவாலயத்தில் போதித்துக்கொண்டிருந்தாலும் யூதமார்க்கத்தலைவர்களினால் அவர்மீது கைபோட முடியவில்லை. இயேசுகிறிஸ்துவின் அனுமதியில்லாமல் அவரை யாரும் தொடமுடியாது. அவரை ஒன்றும் செய்யமுடியாது. தம்முடைய பிள்ளைகளாகிய நமக்கும் தேவன் இப்படிப்பட்ட பெரிய சிலாக்கியத்தைக் கொடுத்திருக்கிறார். கர்த்தருடைய அனுமதியில்லாமல் நம்மையும் யாரும் தொடமுடியாது.

**வேத எழுத்துக்களை அறிந்திருக்கிறார்**

**அப்பொழுது யூதர்கள்: இவர் கல்லாதவராயிருந்தும் வேத எழுத்துக்களை எப்படி அறிந்திருக்கிறார் என்று ஆச்சரியப்பட்டார்கள் (யோவா 7:15).**

இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்டு யூதர்கள் ஆச்சரியப்படுகிறார்கள். அவர் கல்லாதவர் என்பதை இந்த ஜனங்கள் அறிந்திருக்கிறார்கள். ஆனால் இயேசுவோ கல்லாதவராகயிருந்தும் வேதஎழுத்துக்களை அறிந்திருக்கிறார். இதனால் யூதர்களுக்கு மிகுந்த ஆச்சரியமுண்டாயிற்று.

இயேசுகிறிஸ்து தீர்க்கதரிசிகளின் பாடசாலையில் படிக்கவில்லை. ரபீமார்களின் பாதபடியில் அமர்ந்து வேதவாக்கியங்களைக் கற்றுக்கொள்ளவில்லை. தேவன் அவருக்கு பரிசுத்த ஆவியானவரை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார். ஆகையினால் இயேசுவுக்கு மனுஷரிடமிருந்தோ அல்லது மனுஷர் மூலமாகவோ ஞானத்தைப் பெற்றுக் கொள்ளவேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

இயேசு கிறிஸ்து கல்லாதவராகயிருந்தாலும் அவர் வேதஎழுத்துக்களை அறிந்திருக்கிறார். இதனால் கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் வேதாகமக் கல்லூரிக்கு போகவேண்டிய அவசியமில்லை என்று தீர்மானம் பண்ணிவிடக்கூடாது. கர்த்தருடைய பிள்ளைகள் வேதாகமத்தைப் படிக்கவேண்டும். வாய்ப்பு கிடைத்தால் வேதாகமக் கல்லூரியில் சேர்ந்து வேதபாடங்களை முறைப்படி கற்றுக்கொள்ளவேண்டும். மனுஷருடைய அறிவு குறைவுள்ளது. ஆகையினால் நாம் முயற்சிசெய்து வேதவாக்கியங்களைக் கற்றுக்கொள்ளவேண்டும். அப்போது வேதத்தின் ரகசியங்களைப் பரிசுத்த ஆவியானவர் நமக்குக் கற்றுக்கொடுப்பார்.

இயேசுகிறிஸ்து கல்லாதவராகயிருந்தாலும் வேதஎழுத்துக்களை அறிந்திருப்பது அவருடைய தெய்வத்துவத்திற்குச் சான்றாக இருக்கிறது. அவர் அற்புதமானவர். மெய்யாகவே பெரியவர். இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்டு, ஒரு சிலர் அவருடைய ஞானத்தைப்பார்த்து ஆச்சரியப்படுகிறார்கள். ஆனால் வேறு சிலரோ அவர்மீது குற்றம் சுமத்துகிறார்கள். இயேசுகிறிஸ்துவின்மீது குற்றம் சுமத்துவதே இவர்களுடைய முழு நேர வேலை. இதைத் தவிர இவர்களுக்கு வேறு வேலை எதுவுமில்லை.

இயேசுகிறிஸ்து வேதஎழுத்துக்களை எந்த அளவுக்கு அறிந்திருந்தாலும், அந்த அறிவை அவர் எந்தப் பாடசாலையிலும் கற்றிருப்பதற்கு வாய்ப்பில்லை. அவர் வேதாகமக் கல்லூரியில் படித்து பட்டம் பெறவில்லை. மந்திர வல்லமையினால் அவர் வேதஎழுத்துக்களை அறிந்திருக்கிறார் என்று ஒரு சிலர் தவறாக சிந்திக்கிறார்கள். அவர்களுடைய ஆச்சரியத்தினிமித்தமாக, அவர்கள் தங்கள் மனதில் தோன்றிபடியெல்லாம் பேசுகிறார்கள். இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரன். அவர் சர்வஞானமுள்ளவர். அவருடைய ஞானத்திற்கு அளவேயில்லை. அவர் சர்வத்தையும் அறிந்து வைத்திருக்கிறார். தேவாலயத்தில் சத்தியத்தை உபதேசம்பண்ணுகிற இயேசுகிறிஸ்துவே வார்த்தையாக இருக்கிறார். வார்த்தையாக இருக்கிறவர் வேத எழுத்துக்களை அறிந்திருக்கிறார். இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமேயில்லை.

## அதிகாரம் - 7

**என் உபதேசம்**

**இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: என் உபதேசம் என்னுடையதாயிராமல், என்னை அனுப்பினவருடையதாயிருக்கிறது (யோவா 7:16).**

இயேசுகிறிஸ்துவின் உபதேசம் தெய்வீகமானது. தம்முடைய உபதேசம், தம்முடையதாயிராமல் தம்மை அனுப்பினவருடையதாயிருக்கிறது என்று இயேசுகிறிஸ்து கூறுகிறார். இயேசுகிறிஸ்து கல்லாதவராயிருந்தும் சத்தியத்தை உபதேசம்பண்ணுகிறார். இதனால் யூதர்கள் அவரைக்குறித்து இடறலடைகிறார்கள். ஆச்சரியப்படுகிறார்கள். அவர்களுடைய ஆச்சரியத்தையும் சந்தேகத்தையும் நீக்கும் விதமாக இயேசுகிறிஸ்து தம்முடைய உபதேசத்தின் கருத்தைப்பற்றி இங்கு கூறுகிறார். இயேசுவின் உபதேசம் தெய்வீக வெளிப்பாடாகும். அவர் தம்மை மையமாக வைத்து சத்தியத்தை உபதேசம்பண்ணவில்லை. எல்லோரும் தம்மிடத்தில் வரவேண்டுமென்பது இயேசுகிறிஸ்துவின் முடிவான பிரசங்கமுமல்ல. தம்மை அனுப்பினவரிடத்தில் எல்லோரும் வரவேண்டுமென்பதே இயேசுகிறிஸ்துவின் பிரதான உபதேசமாகும். பிதாவே குமாரனை அனுப்பினவர்.

**அவருடைய சித்தத்தின்படி செய்கிறவன்**

**அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்துகொள்ளுவான் (யோவா 7:17).**

இயேசுகிறிஸ்துவின் உபதேசம் எப்படிப்பட்டது என்பதை எல்லோராலும் நியாயம் தீர்க்க முடியாது. தேவனுடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவர்களும், அதன்படி செய்கிறவர்களும் மாத்திரமே இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தை நிதானித்து அறியமுடியும். இயேசுவின் உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதா அல்லது அவர் சுயமாய் பேசுகிறாரா என்று தேவனுடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவர்கள் மாத்திரமே அறிந்துகொள்வார்கள்.

இயேசுகிறிஸ்துவின் உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதா என்பதை முதலாவதாக யூதர்கள் அறிந்துகொள்ள வேண்டும். இயேசுகிறிஸ்து தாமே தம்முடைய உபதேசத்தைப்பற்றி மற்றவர்கள் விசாரித்து அறிந்து கொள்வதற்கு மனதுள்ளவராயிருக்கிறார். தம்முடைய உபதேசத்தை நிதானித்து அறிந்துகொள்ளுமாறு கூறுகிறார். அவருடைய ஊழியக்காரர்களாகிய நாமும், நம்முடைய உபதேசத்தைக்குறித்து ஜனங்களுக்கு ஒளிவுமறைவில்லாமல் விளக்கமாக கூறவேண்டும். மற்றவர்கள் நம்மை நிதானித்து அறிய அனுமதிக்க வேண்டும்.

இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தை எல்லோராலும் நிதானித்து அறியமுடியாது. தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவர்கள் மாத்திரமே அல்லது அவருடைய சித்தத்தின்படி செய்ய குறைந்தபட்சம் மனதுள்ளவர்கள் மாத்திரமே, இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தை நிதானித்து அறிந்துகொள்ள முடியும். எல்லோரும் தேவனுடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவர்களல்ல. தேவனுடைய கிருபையினால் மாத்திரமே அவருடைய சித்தம் என்ன என்பதை நாம் அறிந்துகொள்ள முடியும். அவருடைய சித்தத்தை அறிந்துகொண்ட பின்பு நம்முடைய சித்தத்தை அவரிடத்தில் ஒப்புக்கொடுத்து, அவருடைய சித்தத்தின்படி நாம் செய்ய மனதுள்ளவர்களாகயிருக்க வேண்டும்.

இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தை அறிந்துகொள்ள வேண்டுமென்றால் நமக்கு விசேஷித்த ஞானம் தேவைப்படுகிறது. இயேசுகிறிஸ்து தாமே நமக்கு இந்த ஞானத்தைக் கொடுப்பதாக வாக்குப்பண்ணியிருக்கிறார். தேவனுடைய கிருபையும் ஞானமும் நமக்குக் கிடைக்கும்போது, நாம் இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தை அறிந்துகொள்வோம். தேவனுடைய கிருபையினால் நாம் வெளிச்சத்தில் நடக்கிறோம். இந்த வெளிச்சம் பிரகாசமாகும்போது நாம் இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தை தெளிவாக அறிந்துகொள்ளலாம். தேவனுடைய தெய்வீக பிரமாணத்திற்கு தங்களை ஒப்புக்கொடுக்கிறவர்கள் மாத்திரமே, அவருடைய தெய்வீக வெளிச்சத்தில் நடப்பதற்கு மனதுள்ளவர்களாக இருப்பார்கள். தேவனுடைய சித்தத்தின்படி செய்ய மனதில்லாதவர்கள் இருளில் நடக்கிறவர்களாக இருப்பார்கள்.

## அதிகாரம் - 7

### பிதாவின் மகிமையைத் தேடுகிறவன்

**சுயமாய்ப் பேசுகிறவன் தன் சுயமகிமையைத் தேடுகிறான், தன்னை அனுப்பினவரின் மகிமையைத் தேடுகிறவனோ உண்மையுள்ளவனாயிருக்கிறான், அவனிடத்தில் அநீதியில்லை (யோவா 7:18).**

இயேசுகிறிஸ்து தம்முடைய உபதேசத்தில் தம்மைப்பற்றி எதுவும் பேசுவதில்லை. அவர் தம்முடைய சுயமகிமையை ஒருபோதும் தேடுவதில்லை. ஆனால் மாய்மாலக்காரர்களோ தங்களுடைய சுயமகிமையைத் தேடுகிறார்கள். அவர்கள் தங்களைப்பற்றி மாத்திரமே பேசுவார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ தம்முடைய சுயமகிமையைத் தேடாமல், தம்மை அனுப்பினவரின் மகிமையையே தேடுகிறார். மாய்மாலக்காரர்கள் தங்களைப்பற்றி பேசி ஜனங்களை வஞ்சிக்கிறார்கள். இவர்களால் தங்களைப்பற்றி மாத்திரமே பேசமுடியும். ஏனெனில் இவர்கள் தேவனிடத்திலிருந்து எந்தச் செய்தியையும் பெற்றுக்கொள்ளவில்லை. தேவனும் இவர்களை தம்முடைய செய்தியை அறிவிப்பதற்கு அங்கீகரிக்கவில்லை.

மாம்சப்பிரகாரமாக பிரசங்கிக்கிறவர்கள் தங்களுடைய சுயசித்தத்தைப் பிரசங்கிப்பார்கள். இவர்களுக்கு தேவனுடைய வெளிப்பாடு கிடைக்காது. இவர்கள் பேசுவது எல்லாமே இவர்களுடைய சொந்தக் கற்பனையாகவே இருக்கும். இவர்கள் தங்களுடைய சுயமகிமையை மாத்திரமே தேடுவார்கள். சுயமகிமையைத் தேடுகிறவர்கள் எப்போதும் தங்களைப்பற்றி மாத்திரமே பேசுவார்கள். தேவனிடத்திலிருந்து செய்தியைப் பெற்றுக்கொண்டு பேசுகிறவர்கள் தேவனைப்பற்றிப் பேசுவார்கள், தேவனுக்காகப் பேசுவார்கள், அவருடைய மகிமைக்காகப் பேசுவார்கள்.

இயேசுகிறிஸ்து தம்மைப்பற்றியும் தம்முடைய உபதேசத்தைப்பற்றியும் இங்கு விவரிக்கிறார். தம்மை அனுப்பினவரின் மகிமையைத் தேடுகிறவன் உண்மையுள்ளவனாகயிருக்கிறான் என்று இயேசுகிறிஸ்து கூறுகிறார். இவரே தேவனால் அனுப்பப்பட்டிருக்கிறவர். தேவனால் அனுப்பப்பட்ட ஊழியக்காரர்களை மாத்திரமே நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். அவர்களுடைய செய்திகளை மாத்திரமே நாம் கேட்கவேண்டும். ஏனெனில் அவர்கள் தங்களுடைய சுயமகிமையைத் தேடாமல், தங்களை அனுப்பினவரின் மகிமையைத் தேடுகிறார்கள். கர்த்தருடைய மெய்யான ஊழியக்காரர்கள் தேவனுடைய மகிமையையே தேடுவார்கள்.

தேவனை மகிமைப்படுத்துவதே இயேசுகிறிஸ்துவின் பிரதான ஊழியம். அவருடைய உபதேசத்தின் மையச்செய்தி தேவனை மகிமைப்படுத்தும். இயேசுகிறிஸ்து எப்போதுமே பிதாவின் மகிமையைத் தேடுகிறார். ஆகையினால் இவர் உண்மையுள்ளவர். கள்ளப்போதகர்களிடத்தில் அநீதி காணப்படும். இவர்கள் தேவனுடைய நாமத்தைத் தூஷிப்பார்கள். மனுஷருடைய ஆத்துமாக்களை வஞ்சித்துவிடுவார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவிடமோ அநீதியில்லை. அவர் உண்மையுள்ளவர். தம்மைப்பற்றி இயேசுகிறிஸ்து என்ன கூறவேண்டுமோ அதை மாத்திரமே கூறுகிறவர்.

### மோசே நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தான்

**மோசே நியாயப்பிரமாணத்தை உங்களுக்குக் கொடுக்கவில்லையா? அப்படியிருந்தும் உங்களில் ஒருவனும் அந்த நியாயப்பிரமாணத்தின்படி நடக்கிறதில்லை; நீங்கள் ஏன் என்னைக் கொலைசெய்யத் தேடுகிறீர்கள் என்றார் (யோவா 7:19).**

இயேசுகிறிஸ்து ஒரு ஓய்வுநாளில் திமிர்வாதக்காரன் ஒருவனைச் சொஸ்தமாக்கினார். தன்னுடைய படுக்கையை எடுத்துக்கொண்டு நடக்குமாறு அவனிடம் கூறினார். அந்த மனுஷனும் சொஸ்தமாகி, ஓய்வுநாளில் தன் படுக்கையை எடுத்துக்கொண்டு போனான். இது ஓய்வுநாள் பிரமாணத்தை மீறிய செய்கை என்று யூதர்கள் இவர்மீது குற்றம் சுமத்துகிறார்கள். அவர்களுக்கு பிரதியுத்தரம் கூறும்விதமாக, இயேசுகிறிஸ்து இங்கு மோசேயின் பிரமாணத்தைப்பற்றிக் கூறுகிறார்.

## அதிகாரம் - 7

மோசே இஸ்ரவேல் ஜனங்களுக்கு நியாயப்பிரமாணத்தைக் கொடுத்திருக்கிறார். ஆனால் அவர்களில் ஒருவனும் அந்தப் பிரமாணத்தின்படி நடக்கிறதில்லை. எல்லோரும் மோசேயின் பிரமாணத்தை மீறிவிடுகிறார்கள். யூதர்களில் ஒரு சிலர் மாத்திரம் மோசேயின் பிரமாணத்தை மீறினார்கள் என்று சொல்வதற்குப் பதிலாக, எல்லோருமே அந்தப் பிரமாணத்தை மீறியதாக இயேசுகிறிஸ்து குறிப்பிடுகிறார். ஆம், மெய்யாகவே யூதர்களெல்லோரும் மோசேயின் பிரமாணத்தை மீறிவிடுகிறார்கள்.

மோசேயின் பிரமாணத்தின்படி தாங்கள் நடக்கவில்லையென்றாலும், அந்தப் பிரமாணத்தைக் குறித்து யூதர்கள் பெருமையோடிருக்கிறார்கள். மோசேயின் பிரமாணத்தின்மீது பக்திவைராக்கியமாக இருக்கிறார்கள். ஆனால் ஒருவரும் அந்த நியாயப்பிரமாணத்தின்படி நடக்கிறதில்லை. பக்திவைராக்கியம் இருக்கிறது. ஆனால் கிரியையில்லை. இப்படித்தான் இக்காலத்தில் ஒரு சில விசுவாசிகள் இருக்கிறார்கள். தங்களுக்கு சபையின்மீது பக்திவைராக்கியம் இருப்பதாகக் கூறுவார்கள். ஆனால் இவர்களோ சபையின் ஆராதனைகளில் பங்குபெறமாட்டார்கள்.

மோசேயின் பிரமாணத்தை யூதர்கள் மீறி நடந்தாலும், அவர்கள் இயேசுகிறிஸ்துவைக் கொலைசெய்யத் தேடுகிறார்கள். இயேசுகிறிஸ்து மோசேயின் பிரமாணத்தை மீறிவிட்டார் என்பது இவர்களுடைய குற்றச்சாட்டு. இயேசுவின்மீது குற்றம் சுமத்துகிற இவர்களே மோசேயின் பிரமாணத்தை மீறியவர்கள். அப்படியிருக்கும்போது இயேசுகிறிஸ்துவை கொலைசெய்யத் தேடுவது இவர்களுடைய துன்மார்க்கமான கிரியை. தங்களிடத்திலுள்ள குற்றம் குறைகளைக் காணாமல், மற்றவர்கள்மீது குற்றம் பார்க்கிறார்கள். இது உலகத்தில் காணப்படும் பொதுவான சுபாவம். மற்றவர்களை அதிகமாகக் குற்றப்படுத்துகிறவர்கள், பொதுவாக, தாங்களே பெரிய குற்றவாளிகளாக இருப்பார்கள். கலகத்தினாலும், உபத்திரவத்தினாலும் தங்களை பக்திமான்கள்போல யூதர்கள் காண்பித்துக் கொள்கிறார்கள். மோசேயின் பிரமாணத்தை மீறியவர்களைத் தண்டிப்பதாகக் கூறுகிறார்கள். இவையெல்லாமே மாய்மாலம். வெளிவேஷம். ஏனெனில் இவர்களில் ஒருவனும் மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி நடக்கிறதில்லை. எல்லோருமே நியாயப்பிரமாணத்தை மீறியவர்கள். தங்களுடைய தீர்ப்பின்படி தாங்களே தண்டிக்கப்பட வேண்டியவர்கள்.

### நீ பிசாசுபிடித்தவன்

**ஜனங்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: நீ பிசாசுபிடித்தவன்; உன்னைக் கொலைசெய்யத் தேடுகிறவன் யார் என்றார்கள் (யோவா 7:20).**

யூதர்கள் தம்மைக் கொலைசெய்யத் தேடுகிறார்கள் என்று இயேசுகிறிஸ்து கூறியவுடன் அவர்களுக்கு கோபமுண்டாயிற்று. இயேசுகிறிஸ்துவைப் பிசாசு பிடித்தவனென்று கூறிவிடுகிறார்கள். பிசாசு பிடித்தவரை யார் கொலை செய்யத் தேடுவார்கள் என்றும் இயேசுவைக்குறித்து ஏளனமாக பேசுகிறார்கள். தங்களுடைய யூதமார்க்கத்துத் தலைவர்கள்மீது இந்த ஜனங்கள் மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறார்கள். தங்களுடைய தலைவர்கள் இயேசுவைக் கொலை செய்வதற்கு ஒருபோதும் தேடமாட்டார்கள் என்பது இவர்களுடைய எண்ணம். தங்கள் தலைவர்களைப்பற்றி மேன்மையாக சிந்திக்கிறவர்கள், இயேசுகிறிஸ்துவைப்பற்றி மிகவும் கீழ்த்தரமாகச் சிந்திக்கிறார்கள். "நீ பிசாசு பிடித்தவன்" என்று இயேசுவிடம் கூறுகிறார்கள். பொய் சொல்லுகிற ஆவி இயேசுவைப்பிடித்திருக்கிறது என்றும், அவர் மிகவும் மோசமானவர் என்றும், அவருடைய பேச்சில் உண்மை எதுவும் இல்லையென்றும் பொருள்படுமாறு கூறுகிறார்கள்.

இயேசுகிறிஸ்து தம்முடைய ஜீவனைக்குறித்து பயப்படுவதாகவும், அவர் தம் உள்ளத்தில் பலவீனமாக இருப்பதாகவும், ஆகையினால் தேவையில்லாத காரியங்களைக்குறித்து அவர் பயந்துகொண்டிருப்பதாகவும் யூதர்கள் இயேசுவின்மீது குற்றம் சுமத்துகிறார்கள். சில சமயங்களில் நாம் அமைதியாகயிருந்தாலும், சாத்தான் நம்முடைய அமைதியை நமக்கு எதிராகத் திருப்பிவிடுவான். நாம் அதிகமாகப் பேசினாலும் சாத்தான் நம்முடைய பேச்சையும் நமக்கு எதிராகத் திருப்பிவிடுவான். ஆகையினால் சாத்தானின் சதி ஆலோசனைகளைக்குறித்து நாம் மிகுந்த எச்சரிப்போடிருக்க வேண்டும்.

## அதிகாரம் - 7

தெளிந்த சிந்தனையுள்ள இயேசுகிறிஸ்துவை பிசாசு பிடித்தவனென்று ஜனங்கள் கூறுகிறார்கள். துன்மார்க்கமான இந்த உலகத்தில் இதுபோலப் பேசுவது புதுமையல்ல. நல்லவர்களைத் தீயவர்களென்று இந்த உலகம் சாதிக்கும். நம்முடைய ஜீவியத்தில் நாம் இயேசுகிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி ஜீவிக்கவேண்டும். நமக்கு விரோதமாகப் பொய்யாய் குற்றம் சுமத்தும்போது, நாம் அவர்களைப் பதிலுக்குப் பதில் பழிவாங்கிவிடக்கூடாது. நீடிய பொறுமையோடு அவர்களுடைய பேச்சுக்களைச் சகித்துக்கொள்ள வேண்டும். தம்மைப் பிசாசு பிடித்தவன் என்று ஜனங்கள் கூறியபோது இயேசுகிறிஸ்து அவர்களை உடனே சபித்துவிடவில்லை.

### ஒரே கிரியையை செய்தேன்

**இயேசு அவர்களை நோக்கி: ஒரே கிரியையைச் செய்தேன், அதைக்குறித்து எல்லாரும் ஆச்சரியப்படுகிறீர்கள் (யோவா 7:21).**

இயேசுகிறிஸ்து தாம் செய்த அற்புதத்தை இங்கு சாதாரண "கிரியை" என்று குறிப்பிடுகிறார். ஜனங்களும் இயேசு கிறிஸ்துவின்மீது பக்தியில்லாதவர்களாக இருக்கிறார்கள். அவரைத் தேவனுடைய குமாரனென்று அங்கீகரிக்காமல், தங்களைப்போன்ற சாதாரண மனுஷன் என்று நினைக்கிறார்கள். இயேசுகிறிஸ்து செய்த அற்புதங்கள் அவர்களுக்குச் சாதாரண கிரியைகளாகத் தெரிகிறது. அவர்களோடு பேசும்போது இயேசுகிறிஸ்துவும் தாம் செய்த அற்புதத்தைக், கிரியை என்றே குறிப்பிடுகிறார்.

இயேசுகிறிஸ்து ஓய்வுநாளில் ஒரே ஒரு கிரியை மாத்திரமே செய்தார். திமிர்வாதக்காரன் ஒருவனைச் சொஸ்தமாக்கினார். இதைக்குறித்து யூதர்களெல்லோரும் ஆச்சரியப்படுகிறார்கள். அவர் செய்த அற்புதத்தைக் குறித்தல்ல, அவர் ஓய்வுநாளில் கிரியை செய்ததைக் குறித்தே ஆச்சரியப்படுகிறார்கள். சாதாரண காரியத்தைக்கூட இவர்கள் பெரிதுபடுத்திவிடுகிறார்கள். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில்கூட இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறுவதற்கு வாய்ப்புள்ளது. நாம் செய்கிற சிறிய காரியத்தைக்கூட ஒரு சிலர் பெரிதுபடுத்திவிடுவார்கள்.

யூதர்கள் ஓய்வுநாளில் விருத்தசேதனம் பண்ணுகிறார்கள். அது அவர்களுக்கு நியாயமாகப்படுகிறது. விருத்தசேதனம் பண்ணும்போது உண்டாகும் காயத்திற்கு காயம் கட்டுவது நியாயமானது என்று நினைக்கிறார்கள். ஓய்வுநாளாக இருந்தாலும் இதில் தவறு ஒன்றுமில்லை என்பது இவர்களுடைய எண்ணம். இயேசுகிறிஸ்து ஒரு ஓய்வுநாளில் திமிர்வாதக்காரன் ஒருவனைச் சொஸ்தமாக்கினார். அவர் செய்த கிரியை இவர்களுக்கு மிகப்பெரிய தவறாகத் தெரிகிறது. ஓய்வுநாளில் தாங்கள் ஒரு கிரியை செய்தால் அது குற்றமில்லையென்றும், இயேசுகிறிஸ்து அதுபோல ஒரு கிரியை செய்தால் அது மாபெரும் குற்றம் என்றும் தீர்மானிக்கிறார்கள். இவர்களுடைய தீர்ப்பில் நீதியோ நியாயமோ இல்லை.

### விருத்தசேதனம் பிதாக்களால் உண்டாயிற்று

**விருத்தசேதனம் மோசேயினால் உண்டாகாமல், பிதாக்களால் உண்டாயிற்று; பின்பு மோசே அதை உங்களுக்கு நியமித்தான்; நீங்கள் ஓய்வுநாளிலும் மனுஷனை விருத்தசேதனம் பண்ணுகிறீர்கள் (யோவா 7:22).**

விருத்தசேதனப்பிரமாணம் எப்போது உண்டாயிற்று என்று இயேசுகிறிஸ்து அதன் வரலாற்றை இங்கு விவரிக்கிறார். மோசே விருத்தசேதனப்பிரமாணத்தை ஜனங்களுக்கு நியமித்தான். மோசே கொடுத்த பிரமாணத்தை இவர்கள் பெற்றிருக்கிறார்கள். தேவனுடைய பிரமாணங்களெல்லாம் முத்திரையிடப்பட்ட உடன்படிக்கைகளாக இருக்கிறது. தேவனுடைய பிரமாணங்களை இப்படிப்பட்ட சிந்தனையுடன்தான் நாம் பெற்றுக்கொள்ள வேண்டும். விருத்தசேதனத்தின் பிரமாணம் மோசேயினால் உண்டாயிற்று என்று யூதர்கள் நினைக்கிறார்கள். ஆனால் அது அப்படியல்ல. மோசே தங்களுக்கு விருத்தசேதனத்தின் பிரமாணத்தை கொடுத்ததாக யூதர்கள் விசுவாசிக்கிறார்கள். இதை மோசே இவர்களுக்குக் கொடுக்கவில்லை. இந்தப்பிரமாணத்தை தேவனே யூதர்களுக்குக் கொடுத்திருக்கிறார். விருத்தசேதனம் மோசேயினால் உண்டாகாமல் பிதாக்களால் உண்டாயிற்று.

## அதிகாரம் - 7

மோசேயின் காலத்திற்கு முன்பே விருத்தசேதனத்தின் பிரமாணம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. விசுவாசத்தின் நீதியை முத்திரையிடும்விதமாக தேவன் விருத்தசேதனத்தின் பிரமாணத்தை ஸ்தாபித்திருக்கிறார். இது ஆபிரகாமினுடைய ஆசீர்வாதத்தின் ஒரு பகுதியாகும். இந்த ஆசீர்வாதம் புறஜாதியார்களுக்கும் வந்திருக்கிறது.

ஓய்வுநாள் பிரமாணத்தைவிட விருத்தசேதனத்திற்கு யூதர்கள் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். ஒரு குழந்தை ஓய்வுநாளில் பிறந்தாலும், அந்தக் குழந்தைக்கு அதே நாளில் விருத்தசேதனம்பண்ணுகிறார்கள்.

**ஓய்வுநாளில் விருத்தசேதனம் பெறலாம்**

**மோசேயின் நியாயப்பிரமாணம் மீறப்படாதபடிக்கு ஓய்வுநாளில் மனுஷன் விருத்தசேதனம் பெறலாமென்றால், நான் ஓய்வுநாளில் ஒரு மனுஷனை முழுவதும் சுகமாக்கினதினாலே என்மேல் எரிச்சலாயிருக்கலாமா? (யோவா 7:23)**

ஓய்வுநாளில் இயேசுகிறிஸ்து திமிர்வாதக்காரனைச் சொஸ்தமாக்கினார். தம்முடைய செய்கையை நியாயப்படுத்தும் விதமாக இயேசுகிறிஸ்து யூதர்களுக்கு உபதேசம்பண்ணுகிறார். ஓய்வுநாளில் ஆண்குழந்தை விருத்தசேதனம் பெறுகிறது. இதில் மோசேயின் நியாயப்பிரமாணம் மீறப்படவில்லை. இதை யூதர்கள் அங்கீகரிக்கிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்து ஓய்வுநாளில் ஒரு மனுஷனை முழுவதும் சுகமாக்கியிருக்கிறார். ஆனால் யூதர்கள் இயேசுகிறிஸ்துவின் கிரியையை அங்கீகரிக்காமல் அவர்மீது எரிச்சலாகயிருக்கிறார்கள். தாங்கள் செய்தால் நியாயம் என்றும், அதையே இயேசுகிறிஸ்து செய்தால் அநியாயம் என்று கூறுகிறார்கள். இவர்களுடைய தீர்ப்பில் நீதியுமில்லை, நியாயமுமில்லை.

இயேசுகிறிஸ்து இங்கு இரண்டு காரியங்களை ஒப்பிடுகிறார். அவையாவன : 1. ஓய்வுநாளில் ஆண்குழந்தைக்கு விருத்தசேதனம் கொடுப்பது 2. ஓய்வுநாளில் ஒரு மனுஷனை முழுவதுமாக சொஸ்தமாக்குவது. விருத்தசேதனம் பண்ணுவது யூதமார்க்கத்தின் சடங்காச்சாரம். இயேசுகிறிஸ்து செய்த அற்புதம் ஒரு நற்கிரியை. விருத்தசேதனம்பண்ணும்போது வேதனையுண்டாகும். இயேசுகிறிஸ்து திமிர்வாதக்காரனை குணப்படுத்தியபோதோ அவன் முழுவதும் சுகமாகிறான்.

ஆண்குழந்தைக்கு விருத்தசேதனம் பண்ணும்போது, விருத்தசேதனம்பண்ணப்பட்ட உறுப்புக்கு மாத்திரமே காயம் கட்டப்பட்டு அது குணமாக்கப்படும். இந்தக் காயத்தைக்கட்டினாலும் அந்தக்குழந்தைக்கு வேறு வியாதிகள் இருப்பதற்கு வாய்ப்புள்ளது. ஆனால் இயேசுகிறிஸ்து திமிர்வாதக்காரனைக் குணப்படுத்தியபோது அவன் முழுவதும் சுகமாகிறான். எல்லா வியாதியும் நீங்கி பூரண சுகமடைகிறான். அவனுடைய முழுசரீரமும் சொஸ்தமாகிறது. இயேசுகிறிஸ்து அவனுடைய சரீரத்தை சுகமாக்கியதோடு, அவனுடைய ஆத்துமாவையும் சொஸ்தமாக்குகிறார். "போ, இனி பாவம் செய்யாதே" என்று அவனுக்கு ஆலோசனை கூறி அனுப்புகிறார். இதனால் சரீரத்தில் முழுவதும் சுகமான மனுஷனுக்கு ஆத்தும சுகமும் கிடைக்கிறது.

**நீதியின்படி, தீர்ப்பு செய்யுங்கள்**

**தோற்றத்தின்படி, தீர்ப்புசெய்யாமல், நீதியின்படி, தீர்ப்புசெய்யுங்கள் என்றார் (யோவா 7:24).**

இயேசுகிறிஸ்து தம்முடைய உபதேசத்தின் முடிவில் "தோற்றத்தின்படி தீர்ப்பு செய்யாமல், நீதியின்படி தீர்ப்பு செய்யுங்கள்" என்று கூறுகிறார். யூதர்கள் பட்சபாதமாக தீர்ப்பு செய்யக்கூடாது. முகதாட்சணியம் பார்க்கக்கூடாது. ஆண்குழந்தைக்கு விருத்தசேதனம் பண்ணுவதையும், இயேசுகிறிஸ்து ஒரு மனுஷனை சொஸ்தமாக்குவதையும் நிதானித்து அறிந்து தீர்ப்பு செய்யவேண்டும்.

## அதிகாரம் - 7

இயேசு கிறிஸ்துவின் ஆள்தத்துவத்தையும் அவருடைய உபதேசத்தையும் இவர்கள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. அவருடைய வார்த்தையில் இவர்கள் இடறல் அடைந்திருக்கிறார்கள். தோற்றத்தின்படி தீர்ப்பு செய்யும்போது, நம்முடைய தீர்ப்பு தவறாக இருப்பதற்கு வாய்ப்புள்ளது. ஆரம்பத்தில் தவறாகத் தெரிவது பின்பு சரியாகத் தெரியலாம். சில சமயங்களில் ஆரம்பத்தில் சரியாகத் தெரிவது பின்பு தவறாகத் தெரியலாம். பரிசேயர்கள் ஜனங்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் பெற்றிருக்கிறார்கள். மனுஷருக்கு இவர்கள் நீதிமான்களாக காணப்படுகிறார்கள். ஆனால் உள்ளத்திலோ மாயத்தினாலும் அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறார்கள்.

"மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள், அவைகள் புறம்பே அலங்காரமாய்க் காணப்படும், உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளினாலும் சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும். அப்படியே நீங்களும் மனுஷருக்கு நீதிமான்கள் என்று புறம்பே காணப்படுகிறீர்கள்; உள்ளத்திலோ மாயத்தினாலும் அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறீர்கள்" (மத் 23:27,28).

ஒரு சிலர் பார்வைக்கு பக்திமான்களாக இருப்பார்கள். பரிசுத்தவான்களைப்போல தோற்றமளிப்பார்கள். வெளித்தோற்றத்தின் பிரகாரமாக நாம் அவர்களைத் தீர்ப்பு செய்யக்கூடாது. இயேசுகிறிஸ்துவை அவருடைய தோற்றத்தின்படி பார்த்து, அவரைத் தேவனுடைய குமாரனா இல்லையா என்று தீர்ப்பு செய்யக்கூடாது. நீதியின் பிரகாரமாகவே தீர்ப்பு செய்யவேண்டும். அவரிடத்தில் தெய்வீக வல்லமையிருக்கிறதா என்பதைப் பார்க்கவேண்டும். தேவன் அவரைக்குறித்து சாட்சி கொடுக்கிறாரா என்பதைக் கவனிக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவில் வேதவாக்கியங்கள் நிறைவேறியிருக்கிறதா என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டும். இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்கிறவர்கள் அவரை விசுவாசத்தினால் நியாயம் தீர்க்கவேண்டும். கண்களின் பார்வையினால் நாம் யாரையும் நியாயம்தீர்க்கக்கூடாது.

ஒரு சிலருக்கு பதவிகளும் பட்டங்களும் இருக்கலாம். வெளித்தோற்றத்திற்கு அவர்கள் கண்ணியமானவர்கள்போல தெரியலாம். சில சமயங்களில் இவையெல்லாம் வெளிவேஷமாகக் கூடயிருக்கலாம். இவர்கள் உலகத்திற்கு ஒத்தவேஷம் தரித்திருக்கிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு பதவிகளும் பட்டங்களும் இல்லாமற்போகலாம். ஐசுவரியம் நம்மிடத்தில் குறைவாக இருக்கலாம் ஆனால் நமக்குள் பரிசுத்த ஆவியானவரின் நிறைவும், தேவனுடைய கிருபைகளும் வரங்களும் நிரம்பியிருக்கவேண்டும். தேவன் நம்முடைய தோற்றத்தின்படி நம்மை தீர்ப்பு செய்யாமல் நீதியின்படி தீர்ப்பு செய்வார்.

### எருசலேம் நகரத்தார்
### யோவா 7 : 25-31

**யோவா 7:25. அப்பொழுது எருசலேம் நகரத்தாரில் சிலர்: இவனையல்லவா கொலைசெய்யத் தேடுகிறீர்கள்?**

**யோவா 7:26. இதோ, இவன் தாராளமாய்ப் பேசுகிறானே, ஒருவரும் இவனுக்கு ஒன்றும் சொல்லுகிறதில்லையே, மெய்யாய் இவன் கிறிஸ்துதான் என்று அதிகாரிகள் நிச்சயமாக அறிந்திருக்கிறார்களோ?**

**யோவா 7:27. இவன் இன்ன இடத்திலிருந்து வந்தவனென்று நாம் அறிந்திருக்கிறோம், கிறிஸ்து வரும்போதோ, அவர் இன்ன இடத்திலிருந்து வருகிறவரென்று ஒருவனும் அறியமாட்டானே என்றார்கள்.**

**யோவா 7:28. அப்பொழுது இயேசு தேவாலயத்தில் உபதேசிக்கையில் சத்தமிட்டு: நீங்கள் என்னை அறிவீர்கள், நான் எங்கேயிருந்து வந்தேனென்றும் அறிவீர்கள்; நான் என் சுயமாய் வரவில்லை, என்னை அனுப்பினவர் சத்தியமுள்ளவர், அவரை நீங்கள் அறியாதிருக்கிறீர்கள்.**

**யோவா 7:29. நான் அவரால் வந்திருக்கிறபடியினாலும், அவர் என்னை அனுப்பியிருக்கிறபடியினாலும், நானே அவரை அறிந்திருக்கிறேன் என்றார்.**

**யோவா 7:30. அப்பொழுது அவரைப் பிடிக்க வகைதேடினார்கள்; ஆனாலும் அவருடைய வேளை இன்னும் வராதபடியினால் ஒருவனும் அவர்மேல் கைபோடவில்லை.**

**யோவா 7:31. ஜனங்களில் அநேகர் அவரை விசுவாசித்து: கிறிஸ்து வரும்போது, இவர் செய்கிற அற்புதங்களைப்பார்க்கிலும் அதிகம் செய்வாரோ என்றார்கள்.**

## அதிகாரம் - 7

### தாராளமாய் பேசுகிறானே

**அப்பொழுது எருசலேம் நகரத்தாரில் சிலர்: இவனையல்லவா கொலைசெய்யத் தேடுகிறார்கள்? இதோ, இவன் தாராளமாய்ப் பேசுகிறானே, ஒருவரும் இவனுக்கு ஒன்றும் சொல்லுகிறதில்லையே, மெய்யாய் இவன் கிறிஸ்துதான் என்று அதிகாரிகள் நிச்சயமாக அறிந்திருக்கிறார்களோ? (யோவா 7:25,26)**

இயேசுகிறிஸ்து எருசலேமிலுள்ள யூதர்களிடம் தாம் எங்கிருந்து வந்திருப்பதாகவும், எங்கு போகப்போவதாகவும் உபதேசம்பண்ணுகிறார். இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தை எருசலேம் நகரத்தார் எல்லோரும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஒருசிலர் இயேசுகிறிஸ்துவின்மீது விரோதமாக இருக்கிறார்கள். அவர்கள் அவரை அன்போடு ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் ஒரு சிலர் அவரை அங்கீகரித்து ஏற்றுக்கொள்கிறார்கள். தம்முடைய ஊழியப் பாதையில் இயேசுகிறிஸ்து எல்லாவிதமான ஜனங்களையும் சந்திக்கிறார். ஒரு சிலர் அவரை ஏற்றுக்கொள்ளாமல் துரத்திவிடுகிறார்கள். வேறு சிலர் அவரை வரவேற்கிறார்கள். இயேசுவை ஏற்றுக்கொள்ளாதவர்கள் மத்தியில்கூட, யாராவது ஒரு சிலர் அவரை ஏற்றுக் கொள்வதற்கு வாய்ப்புள்ளது. எருசலேமில் தேவாலயம் உள்ளது. யூதமார்க்கத்திற்கு இதுவே பிரதான நகரம். ஆனால் இந்த ஜனங்களோ தேவனைவிட்டு தூரமாகயிருக்கிறார்கள். சபைக்கு அருகாமையிலிருக்கிறவர்கள் தேவனைவிட்டு தூரவிலகியிருப்பார்கள் என்று ஒரு பழமொழி உள்ளது. எருசலேம் நகரத்தார் இந்தப் பழமொழிக்கு ஏற்ற பிரகாரம் ஜீவிக்கிறார்கள்.

யூதமார்க்கத்து அதிகாரிகள் இயேசுகிறிஸ்துவைக் கொலைசெய்யாமல் அவரை இன்னும் உபதேசம் பண்ணுவதற்கு அனுமதித்திருக்கிறார்கள். இதைக்குறித்து எருசலேம் நகரத்தார் தங்களுக்குள் விவாதம்பண்ணுகிறார்கள். "இவனையல்லவா கொலை செய்யத் தேடுகிறார்கள்" என்றும் "ஒருவனும் இவனுக்கு ஒன்றும் செய்கிறதில்லையே" என்றும் பேசிக்கொள்கிறார்கள். இயேசுகிறிஸ்து தாராளமாய் பேசுகிறாரே, அப்படியிருந்தும் இவரை அனுமதிக்கிறார்களே என்று எருசலேம் நகரத்தார் தங்களுக்குள் பேசிக்கொள்கிறார்கள். இவர் கிறிஸ்துதான் என்று அதிகாரிகள் நிச்சயமாய் அறிந்திருக்கிறார்களோ என்றும் சந்தேகப்படுகிறார்கள்.

தங்களுடைய கபட வார்த்தைகளின் மூலமாக இவர்கள் இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாக யூதமார்க்கத்துத் தலைவர்களைத் தூண்டிவிடுகிறார்கள். இயேசுகிறிஸ்து அவர்களுடைய அதிகாரத்தைத் தூஷிப்பதாக அவர்மீது குற்றம் சுமத்துகிறார்கள். இயேசுகிறிஸ்து தாராளமாகப் பேசினாலும் அதிகாரிகள் அவரைத் தடுப்பதற்கு ஒன்றும் செய்யவில்லையே என்று அவர்கள்மீது குற்றம் சுமத்துகிறார்கள்.

அதிகாரத்திற்கும் அரசாங்கத்திற்கும் ஆதரவு கொடுக்கிறோம் என்னும் போர்வையில்தான் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களை உலகத்தார் உபத்திரவப்படுத்துகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவுக்கு கடுமையான தீர்ப்பு வழங்கப்படவேண்டுமென்று எருசலேம் நகரத்தார் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் தாங்கள் எதிர்பார்க்கிற பிரகாரம் அதிகாரிகள் இயேசுவை அடக்கவில்லை. ஆகையினால் இயேசுவை கிறிஸ்து என்று அதிகாரிகள் நிச்சயமாய் அறிந்திருக்கிறார்களோ என்று ஏளனமாய் பேசுகிறார்கள். இயேசு கிறிஸ்துவைத் தண்டிக்கவேண்டியவர்கள் அவரைக் கிறிஸ்து என்று அங்கீகரித்து, அவருக்கு அடங்கிப்போய்விட்டார்களோ என்று அதிகாரிகளை ஏளனம் பண்ணுகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தை இவர்கள் ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. இயேசுவின்மீது இவர்களுக்கு மதிப்போ மரியாதையோ இல்லை. ஆகையினால் இயேசுகிறிஸ்துவை எப்படி வேண்டுமானாலும் துன்பப்படுத்தலாமென்று இவர்கள் தங்களுக்குள் சிந்தனைபண்ணுகிறார்கள். இயேசுவின்மீது இவர்களுக்கு சிறிதளவு கூட பாசம் இல்லை. அவருடைய உபதேசத்தைக் கேட்கவேண்டும் என்னும் ஆர்வம் இவர்களிடத்தில் சிறிதுமில்லை.

யூதமார்க்கத்து அதிகாரிகள் இயேசுகிறிஸ்துவின்மீது மிகுந்த கோபத்தோடு இருக்கிறார்கள். ஆயினும் அவர்கள் இயேசுகிறிஸ்துவைப் பிடிக்கவில்லை. அவருடைய வேளை இன்னும் வரவில்லை. இயேசுகிறிஸ்துவைச் சுற்றிலும் தேவன் வேலியடைத்துப் பாதுகாக்கிறார். மனுஷருடைய கைகள் இயேசுவின்மீது படாதவாறு தேவன் அவற்றை கட்டிப்போட்டுவிட்டார். துன்மார்க்கருடைய கைகளைக் கட்டிப்போடுகிற தேவன், அவர்களுடைய இருதயங்களை மாற்றுவதற்கு கட்டாயப்படுத்தவில்லை.

## அதிகாரம் - 7

**இன்ன இடத்திலிருந்து வந்தவன்**

**இவன் இன்ன இடத்திலிருந்து வந்தவனென்று நாம் அறிந்திருக்கிறோம், கிறிஸ்து வரும்போதோ, அவர் இன்ன இடத்திலிருந்து வருகிறவரென்று ஒருவனும் அறியமாட்டானே என்றார்கள் (யோவா 7:27).**

மேசியாவின் வருகையை யூதர்கள் எதிர்பார்க்கிறார்கள். மேசியா இன்ன இடத்திலிருந்து வருவாரென்பதை ஒருவனும் அறிந்திருக்கமாட்டான் என்பது இவர்களுடைய நம்பிக்கை. ஆனால் இவர்கள் இயேசுகிறிஸ்துவைப் பற்றி அறிந்திருக்கிறார்கள். அவர் இன்ன இடத்திலிருந்து வந்திருக்கிறார் என்பதையும் அறிந்திருக்கிறார்கள். ஆகையினால் அவர் கிறிஸ்துவாக இருக்கமுடியாது என்பது இவர்களுடைய விவாதம். இயேசுகிறிஸ்து இவர்களுக்கு மிகவும் நெருக்கமாக இருப்பதினால் இவர்கள் இயேசுவை மதிக்கவில்லை. ஒருவேளை இயேசு இவர்களுக்கு தூரத்தில் இருந்தால், இவர்கள் இயேசுவை மதித்தாலும் மதிக்கலாம். வாழ்க்கையில் ஒருவர் முன்னேறியிருந்தால், அவருடைய கடந்தகால வாழ்க்கையைப்பற்றி அறிந்திருந்தவர்கள் அவரை மதிக்கமாட்டார்கள்.

இயேசுகிறிஸ்து தமக்குச் சொந்தமானவர்கள் மத்தியில் வந்திருக்கிறார். ஆனால் அவர்களோ இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவில்லை. அவரை நேசிக்கவுமில்லை. தாங்கள் எதிர்பார்க்கிற மேசியா இவரல்ல என்று நினைத்து, இயேசுவை கிறிஸ்துவாக ஏற்றுக்கொள்ள மறுத்துவிடுகிறார்.

**நான் என் சுயமாய் வரவில்லை**

**அப்பொழுது இயேசு தேவாலயத்தில் உபதேசிக்கையில் சத்தமிட்டு: நீங்கள் என்னை அறிவீர்கள், நான் எங்கேயிருந்து வந்தேனென்றும் அறிவீர்கள்; நான் என் சுயமாய் வரவில்லை, என்னை அனுப்பினவர் சத்தியமுள்ளவர், அவரை நீங்கள் அறியாதிருக்கிறீர்கள். நான் அவரால் வந்திருக்கிறபடியினாலும், அவர் என்னை அனுப்பியிருக்கிறபடியினாலும், நானே அவரை அறிந்திருக்கிறேன் என்றார் (யோவா 7:28,29).**

தம்மை கிறிஸ்துவாக ஏற்றுக்கொள்ள மறுக்கும் ஜனங்களிடம் இயேசுகிறிஸ்து தாராளமாகவும் தைரியமாகவும் பேசுகிறார். அவர் தேவாலயத்தில் உபதேசிக்கையில் சத்தமிட்டு பேசுகிறார். யூதர்கள் சத்தியத்தை வேண்டுமென்றே புறக்கணிக்கிறார்கள். சத்தியத்தை மறுதலிக்கும் இவர்களிடம் மெதுவாகப் பேசக்கூடாது என்று தீர்மானம்பண்ணி, இயேசுகிறிஸ்து சத்தமிட்டு உபதேசம்பண்ணுகிறார். நம்முடைய பிரசங்கத்தில்கூட சில சமயங்களில் சத்தமிட்டு பிரசங்கம்பண்ண வேண்டிய சூழ்நிலைகள் வரலாம். நம்முடைய சத்தம் உயரலாம். ஆனால் சுயபெருமை உயர்ந்துவிடக்கூடாது. கர்த்தருடைய வார்த்தையை எப்போதும் மனத்தாழ்மையோடு பிரசங்கம் பண்ணவேண்டும்.

காதுள்ளவர்கள் எல்லோரும் தம்முடைய பிரசங்கத்தைக் கேட்கவேண்டுமென்பதற்காக இயேசுகிறிஸ்து சத்தமிட்டு உபதேசம்பண்ணுகிறார். அவர்களுடைய முரண்பாடான விவாதத்திற்கு தெளிவான பதில் கூறுகிறார். "நீங்கள் என்னை அறிவீர்கள், நான் எங்கேயிருந்து வந்தேன் என்றும் அறிவீர்கள்" என்று கூறுகிறார். தாங்கள் இயேசுகிறிஸ்துவை அறிந்திருப்பதாக யூதர்கள் நினைக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய எண்ணம் தவறானது. இயேசு தச்சனுடைய குமாரனென்றும், நாசரேத்து ஊரில் பிறந்தவர் என்று மாத்திரமே யூதர்கள் நினைக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவோ தேவனுடைய குமாரனாக இருக்கிறார். இந்த சத்தியத்தை அவர்கள் இன்னும் அறியவில்லை.

இயேசுகிறிஸ்துவைக்குறித்து தாங்கள் பார்த்ததையும், கேள்விப்பட்டதையும் யூதர்கள் அறிந்திருக்கிறார்கள். அவர்களுக்கு இயேசுவைப்பற்றி இவ்வளவுதான் அறிந்துகொள்ள முடியும். அவர் நாசரேத்து ஊரிலிருந்து வந்திருக்கிறார் என்பதை இவர்கள் அறிந்திருக்கிறார்கள். ஆனால் இயேசுவை அனுப்பியது யார் என்பது இவர்களுக்குத் தெரியாது. இயேசுகிறிஸ்து தம்முடைய சுயமாய் வரவில்லை. பிதாவாகிய தேவனே அவரை இங்கு அனுப்பியிருக்கிறார். பிதாவானவர் தம்மை அனுப்பியிருப்பதாக இயேசுகிறிஸ்து இங்கு இரண்டுமுறை குறிப்பிடுகிறார். இயேசுகிறிஸ்துவை அனுப்பினவர் சத்தியமுள்ளவர். யூதர்கள் அவரை அறியாதிருக்கிறார்கள். சூரியனிலிருந்து ஒளிக்கதிர்கள் வருவதுபோல இயேசுகிறிஸ்து பிதாவிடத்திலிருந்து வந்திருக்கிறார்.

## அதிகாரம் - 7

மேசியாவை அனுப்புவதாக பிதாவானவர் வாக்குப்பண்ணியிருக்கிறார். வாக்குப்பண்ணியவர் சத்தியமுள்ளவர். தம்முடைய வாக்குத்தத்தத்தை இப்போது நிறைவேற்றியிருக்கிறார். பிதாவானவரே தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை இப்போது அனுப்பியிருக்கிறார். புறஜாதியாரை அழைக்கும் விஷயத்திலும் பிதாவானவர் தம்முடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுகிறார்.

யூதர்கள் பிதாவாகிய தேவனை விசுவாசிக்கவில்லை. அவர்கள் பிதாவை அறியாதிருக்கிறார்கள். அந்தப் பிதாவானவரே இயேசுகிறிஸ்துவை அனுப்பியிருக்கிறார். இந்த ஜனங்கள் எருசலேமில்தான் இருக்கிறார்கள். தேவாலயத்திற்கு அருகிலிருக்கிறார்கள். ஆனாலும் தேவனைக்குறித்த ஞானத்தில் குறைவுள்ளவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் பிதாவாகிய தேவனை அறியாமலிருப்பதே, இவர்கள் இயேசுகிறிஸ்துவை அங்கீகரியாமல் புறக்கணிப்பதற்கு பிரதான காரணமாகும்.

தம்மை அனுப்பின பிதாவாகிய தேவனை இயேசுகிறிஸ்து அறிந்திருக்கிறார். அவரோடு நெருங்கிய ஐக்கியத்திலிருக்கிறார். பிதாவிடமிருந்து தாம் பெற்றுக்கொண்ட ஊழியத்தைக்குறித்து இயேசுகிறிஸ்துவுக்கு எந்தவிதமான சந்தேகமுமில்லை. தாம் செய்யவேண்டிய ஊழியத்தைக்குறித்தும் இயேசுகிறிஸ்து தெளிந்த சிந்தனையோடிருக்கிறார். அவர் ஒருபோதும் இருளில் நடப்பதில்லை. அவரே வெளிச்சமாக இருக்கிறார்.

**ஒருவனும் அவர்மேல் கைபோடவில்லை**

**அப்பொழுது அவரைப் பிடிக்க வகைதேடினார்கள்; ஆனாலும் அவருடைய வேளை இன்னும் வராதபடியினால் ஒருவனும் அவர்மேல் கைபோடவில்லை (யோவா 7:30).**

இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்டு யூதர்கள் அவர்மீது கோபப்படுகிறார்கள். அவரைப் பிடிக்க மனதாயிருக்கிறார்கள். ஆனாலும் ஒருவனும் அவர்மேல் கைபோடவில்லை. ஏனெனில் அவருடைய வேளை இன்னும் வரவில்லை. தேவன் துன்மார்க்கரை சங்கிலிகளினால் கட்டியிருக்கிறார். துன்மார்க்கருடைய சதிஆலோசனைகள் தேவனுடைய சமுகத்தில் முறியடிக்கப்படும். அவை பலனற்றுப்போகும். சாத்தான் துன்மார்க்கருடைய இருதயத்தைத் தன்னுடைய வஞ்ச எண்ணங்களினால் நிரப்புகிறான். ஆனால் தேவனோ அவர்களுடைய கைகளை கட்டிப்போட்டுவிடுகிறார். அவர்கள் செயலிழந்துபோகிறார்கள்.

கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கு பல சமயங்களில் ஆபத்தான சூழ்நிலைகள் வரலாம். அந்த வேளைகளில் தேவன் தம்முடைய ஊழியக்காரர்களை மிகவும் அற்புதமாகப் பாதுகாத்துக்கொள்கிறார். தம்முடைய பலத்த கரத்தினாலும், தெய்வீக உபாயங்களினாலும் தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு எந்தத் தீங்கும் நேரிடாதவாறு பாதுகாக்கிறார். கிறிஸ்துவின் வேளை நியமிக்கப்பட்டிருக்கிறது. அதுபோலவே அவருடைய பிள்ளைகளின் வேளையும், அவருடைய ஊழியக்காரரின் வேளையும் நியமிக்கப்பட்டிருக்கிறது. பாதாளத்தின் அந்தகார வல்லமையினால் கர்த்தருடைய பிள்ளைகளை மேற்கொள்ளமுடியாது. பூமியும் நமக்கு விரோதமாக எழும்பி வெற்றி பெறாது. நம்முடைய ஓட்டத்தை முடிக்கும் வரையிலும் யாராலும் நம்மை அழிக்க முடியாது.

**ஜனங்களில் அநேகர் விசுவாசித்து**

**ஜனங்களில் அநேகர் அவரை விசுவாசித்து: கிறிஸ்து வரும்போது, இவர் செய்கிற அற்புதங்களைப்பார்க்கிலும் அதிகம் செய்வாரோ என்றார்கள் (யோவா 7:31).**

இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தினால் நல்ல பலன் உண்டாயிற்று. ஜனங்களில் அநேகர் அவரை விசுவாசிக்கிறார்கள். சுவிசேஷத்திற்கு எதிர்ப்பு உண்டானாலும், அந்த எதிர்ப்புக்கு மத்தியிலும் ஒரு சிலர் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்கிறார்கள். தேவாலயத்தில் இயேசு சத்தமிட்டு உபதேசம்பண்ணுகிறார். அவருடைய உபதேசம் பலருடைய உள்ளத்தைத் தொடுகிறது. ஒரு சிலர் மாத்திரம் இரட்சிக்கப்பட்டார்கள் என்னும் நிலமைக்குப் பதிலாக, அநேகர் இங்கு இரட்சிக்கப்பட்டிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவில் அநேகர் விசுவாசம் வைக்கிறார்கள். இயேசுவுக்கு விரோதமாக ஏராளமான சத்துருக்கள் பெரும்வெள்ளம்போல புரண்டு வந்தாலும், அவர்களுக்கு மத்தியிலும் ஏராளமான ஜனங்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறார்கள்.

## அதிகாரம் - 7

கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் ஒருவேளை சாதாரணமான ஜனங்களாக இருக்கலாம். சமுதாயத்தில் இவர்கள் உயர்ந்த அந்தஸ்தில் இல்லாதவர்களாகக் கூட இருக்கலாம். நாம் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்போது ஆத்துமாக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். இரட்சிக்கப்பட்டவர்களில் எத்தனைபேர் செல்வந்தர்களென்று கணக்குப் பார்க்கக்கூடாது. நம்முடைய ஊழியம் ஒருபோதும் வீணாய்ப் போவதில்லை. கர்த்தருக்குச் சித்தமானவர்கள் நிச்சயமாகவே இரட்சிக்கப்படுவார்கள். செல்வந்தர்கள் இரட்சிக்கப்படாமல் போனாலும், தரித்திரர்கள் இரட்சிக்கப்படாமல் போனாலும், யார் இரட்சிக்கப்பட்டிருக்கிறர்களோ அவர்களே தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களென்று தீர்மானம் செய்து, அவர்களுக்கு சீஷத்துவ பயிற்சி கொடுக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்து செய்த அற்புதங்களை இவர்கள் பார்த்திருக்கிறார்கள். ஆனால் இவர்களுடைய விசுவாசம் பலவீனமாக இருக்கிறது. இயேசுவே மெய்யான கிறிஸ்து என்பது இவர்களுக்குத் தெரியவில்லை. சமாரியர்கள்கூட இயேசுவை கிறிஸ்து என்று கண்டுகொண்டார்கள். ஆனால் இவர்களால் இயேசுவை கிறிஸ்து என்று உறுதியாக சொல்ல முடியவில்லை. கிறிஸ்து வரும்போது இவர் செய்கிற அற்புதங்களைப் பார்க்கிலும் அதிகம் செய்வாரோ என்று பேசிக்கொள்கிறார்கள். இவர்கள் இயேசுகிறிஸ்து செய்த அற்புதங்களை விசுவாசிக்கிறார்கள். ஆனால் இந்த அற்புதங்களைச் செய்கிறவர் இயேசுகிறிஸ்துதான் என்று இவர்களால் நிச்சயமாக சொல்ல முடியவில்லை. இவர்களுடைய விசுவாசம் பலவீனமாக இருந்தாலும், மெய்யான விசுவாசமாக இருக்கிறது. இயேசுகிறிஸ்து விசுவாசத்தில் பலவீனமானவர்களைக்கூட தம்மிடத்தில் சேர்த்துக்கொள்கிறார்.

### பரிசேயரும் பிரதான ஆசாரியரும் யோவா 7 : 32-36

**யோவா 7:32. ஜனங்கள் அவரைக்குறித்து இப்படி முறுமுறுக்கிறதைப் பரிசேயர் கேட்டபொழுது, அவரைப் பிடித்துக்கொண்டு வரும்படிக்குப் பரிசேயரும் பிரதான ஆசாரியரும் சேவகரை அனுப்பினார்கள்.**

**யோவா 7:33. அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: இன்னுங் கொஞ்சக்காலம் நான் உங்களுடனேகூட இருந்து, பின்பு என்னை அனுப்பினவரிடத்திற்குப் போகிறேன்.**

**யோவா 7:34. நீங்கள் என்னைத் தேடுவீர்கள், ஆனாலும் என்னைக் காணமாட்டீர்கள்; நான் இருக்கும் இடத்திற்கு நீங்கள் வரவுங் கூடாது என்றார்.**

**யோவா 7:35. அப்பொழுது யூதர்கள்: இவரை நாம் காணாதபடிக்கு எங்கே போவார், கிரேக்கருக்குள்ளே சிதறியிருக்கிறவர்களிடத்திற்குப் போய், கிரேக்கருக்கு உபதேசம் பண்ணுவாரோ?**

**யோவா 7:36. நீங்கள் என்னைத் தேடுவீர்கள், ஆனாலும் என்னைக் காணமாட்டீர்கள் என்றும், நான் இருக்கும் இடத்துக்கு நீங்கள் வரக்கூடாதென்றும், இவர் சொன்ன வார்த்தையின் கருத்து என்னவென்று தங்களுக்குள்ளே சொல்லிக்கொண்டார்கள்.**

### இயேசுவைப் பிடித்துக்கொண்டு வரும்படி.

**ஜனங்கள் அவரைக்குறித்து இப்படி முறுமுறுக்கிறதைப் பரிசேயர் கேட்டபொழுது, அவரைப் பிடித்துக்கொண்டு வரும்படிக்குப் பரிசேயரும் பிரதான ஆசாரியரும் சேவகரை அனுப்பினார்கள் (யோவா 7:32).**

இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாக பரிசேயரும் பிரதான ஆசாரியரும் சதிஆலோசனை பண்ணுகிறார்கள். இயேசுகிறிஸ்துவைக் குறித்து விசாரிப்பதற்கு இவர்களுக்கென்று தனியாக வேவுகாரர்கள் இருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவைக்குறித்து ஜனங்கள் முறுமுறுக்கிறார்கள் என்று பரிசேயரும் வேதபாரகரும் தங்கள் வேவுகாரர் மூலமாக கேட்டுத் தெரிந்துகொள்கிறார்கள். எருசலேம் நகரத்தாரில் இயேசுகிறிஸ்துவைக் குறித்து ஒரு சிலர் முறுமுறுத்தாலும், அநேகர் அவரை விசுவாசித்து அவர்மீது மரியாதை வைத்திருக்கிறார்கள்.

## அதிகாரம் - 7

எருசலேம் நகரத்தாரில் ஒரு சிலர் மாத்திரமே இயேசுகிறிஸ்துவைக்குறித்து முறுமுறுத்திருக்கவேண்டும். ஆனால் பரிசேயரோ இந்த சிறிய முறுமுறுப்பைக்கூட ஊதி ஊதி பெரிதாக்குகிறார்கள். சிறிய காரியத்தைக்கூட இயேசுகிறிஸ்துவுக்கு எதிராக பெரிய காரியமாக திருப்பிவிடுகிறார்கள். இயேசுகிறிஸ்துவுக்கு பேரும் புகழும் அதிகரித்தால், தங்களுடைய பேரும் புகழும் குறைந்துபோகும் என்பது பரிசேயருக்குத் தெரியும். ஆகையினால் இயேசுகிறிஸ்துவைப் பிடித்து வந்து தங்களுடைய காவலில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று தீர்மானிக்கிறார்கள். இதற்காக இயேசுவைப் பிடித்துக்கொண்டு வரும்படி சேவகரை அனுப்புகிறார்கள்.

ஒரு மந்தையைச்சிதறடிக்க வேண்டுமென்றால் அதன் மேய்ப்பனை வெட்டிக் கொன்றுபோடவேண்டும். மேய்ப்பனில்லாத ஆடுகள் சிதறிப்போகும். யூதமார்க்கத்தில் பரிசேயருக்கு எந்த அதிகாரமுமில்லை. ஆகையினால் இயேசுவுக்கு விரோதமான தங்களுடைய சதி திட்டத்தில் இவர்கள் பிரதான ஆசாரியரையும் சேர்த்துக்கொள்கிறார்கள். இந்த உலகம் தன் ஞானத்தினால் தேவனை அறிந்து கொள்ளவில்லை. அதுபோலவே யூதர்களும் தங்களுடைய ஞானத்தினால் கிறிஸ்துவை அறிந்துகொள்ளவில்லை.

**இன்னும் கொஞ்சகாலம்**

**அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: இன்னுங் கொஞ்சக்காலம் நான் உங்களுடனேகூட இருந்து, பின்பு என்னை அனுப்பினவரிடத்திற்குப் போகிறேன் (யோவா 7:33).**

இயேசுகிறிஸ்து தம்மிடத்தில் கூடிவந்திருக்கிறவர்களிடம் உரையாடிக் கொண்டிருக்கிறார். இன்னும் கொஞ்சகாலம் இயேசுகிறிஸ்து அவர்களுடனேகூட இருப்பார். அதன்பின்பு தம்மை அனுப்பியவரிடத்திற்கு போய்விடுவார். அவர்கள் இயேசுவைத் தேடுவார்கள். ஆனால் அவரைக் காணமாட்டார்கள். அவர் இருக்கும் இடத்திற்கு அவர்கள் வரவும் கூடாது. இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள் அக்கினி ஸ்தம்பம் போலவும், மேகஸ்தம்பம் போலவும் இருக்கிறது. ஒரு புறம் பிரகாசமான அக்கினியும் மற்றொரு புறம் மேகத்தின் அந்தகாரமும் உள்ளது.

இயேசுகிறிஸ்து தம்முடைய வார்த்தைகளினால் தம்மை வெளிப்படுத்துகிறார். தம்மை ஆறுதல் படுத்திக்கொள்கிறார். பாடுகள் நிறைந்த இந்த உலகத்தில் இயேசுகிறிஸ்து இன்னும் கொஞ்சக்காலம் மாத்திரமே இருக்கப்போகிறார். யுத்தம் விரைவில் முடிவுக்கு வரப்போகிறது. நாம் இந்த உலகத்தில் இருக்கும்போது நமக்கு சிநேகிதர்களும் விரோதிகளும் இருப்பார்கள். ஆனால் இவையெல்லாமே கொஞ்ச காலம்வரையில்தான். கொஞ்ச காலம் மாத்திரமே நாம் இந்த பூமியில் இவர்களோடு கூடயிருப்போம். நம்முடைய விரோதிகள் நமக்கு முட்களாக இருந்து நம்மை துன்புறுத்தலாம். ஆனால் இந்த பாடுகளெல்லாமே கொஞ்ச காலம்தான்.

இயேசுகிறிஸ்து தம்மை அனுப்பின பிதாவிடத்திற்கு திரும்பிப் போகப்போகிறார். இயேசுகிறிஸ்துவுக்காக பாடுகளை அனுபவிக்கிறவர்கள் இந்த வார்த்தைகளினால் தங்களை தேற்றிக்கொள்ளவேண்டும். நாம் தேவனிடத்திற்குப் போகப்போகிறோம். அவரோடுகூட நித்தியகாலமாக இருக்கப்போகிறோம். நம்முடைய பாடுகள் கொஞ்ச காலம்தான். இந்த உலகத்தைவிட்டு போனபின்பு நமக்கு ஒரு பாடு இருக்காது.

இயேசு கிறிஸ்துவை துன்பப்படுத்துகிறவர்கள் யாரும் அவர் இருக்கும் இடத்திற்கு வரமுடியாது. அவரைத் தேடுவார்கள். ஆனால் அவரைக் காணமாட்டார்கள். மகிமையடைந்த பரிசுத்தவான்களுக்கு இந்த சத்தியம் சந்தோஷத்தைக்கொடுக்கும். பரிசுத்தவான்கள் பரலோகத்திற்குப் போனபின்பு பிசாசானவனால் அவர்களைத் தொடமுடியாது. அவனுடைய துன்மார்க்கமான ஆயுதங்கள் எதுவும் பரலோகத்திலுள்ள பரிசுத்தவான்களை ஒன்றும் செய்யாது.

**என்னைத் தேடுவீர்கள்**

**நீங்கள் என்னைத் தேடுவீர்கள், ஆனாலும் என்னைக் காணமாட்டீர்கள்; நான் இருக்கும் இடத்திற்கு நீங்கள் வரவுங் கூடாது என்றார் (யோவா 7:34).**

## அதிகாரம் - 7

இயேசுகிறிஸ்து பிதாவிடத்திற்கு போனபின்பு ஜனங்கள் அவரைத் தேடுவார்கள். ஆனால் அவரைக் காணமாட்டார்கள். இயேசுகிறிஸ்துவை துன்பப்படுத்தியவர்களுக்கு இந்த வாக்கியம் மேகஸ்தம்பத்தின் காரிருளைப் போலிருக்கிறது. இப்போது இயேசுகிறிஸ்துவை தங்கள் மத்தியிலிருந்து துரத்திவிடவேண்டுமென்று யூதர்கள் விரும்புகிறார்கள். இது அவர்களே தெரிந்தெடுத்துக்கொண்ட முடிவு. தங்களுடைய சொந்தத் தீர்மானத்தினால் இவர்கள் தங்களுக்கு அழிவை வருவித்துக்கொண்டார்கள். இயேசுகிறிஸ்துவும் இவர்களோடு நீண்டகாலம் இருந்து போராடமாட்டார். கொஞ்ச காலம் மாத்திரமே அவர் இந்த உலகத்திலிருப்பார். அதன்பின்பு இவர்களைவிட்டுப் போய்விடுவார்.

ஒரு சிலர் இப்போது இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்பதற்கு பிரியமில்லாமல் இருக்கலாம். இயேசுகிறிஸ்துவின்மீது இவர்களுக்கு அன்பு இல்லாமலிருக்கலாம். இவர்கள் இயேசுவுக்கு விரோதமாக நீண்டகாலம் போராட வேண்டியதில்லை. ஏனெனில் இயேசுகிறிஸ்து இவர்களை விட்டுப்போய்விடுவார். அவர் போன பின்பு அவருடைய உபதேசத்தைக் கேட்கவேண்டுமென்று இவர்கள் இயேசுவைத் தேடுவார்கள். ஆனால் அவரைக் காணமாட்டார்கள். காலம் கடந்துவிட்டது. இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றால் அதற்குரிய காலத்திற்குள் அவரை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

காலம் கடந்த பின்பு, இயேசுவைத் தேடுவது வீணான காரியமாக இருக்கும். ஏனெனில் இயேசு அவர்களைவிட்டு பிதாவிடத்திற்கு போய்விடுவார். ஜனங்கள் இயேசுவைத் தேடினாலும் அவரைக் காணமாட்டார்கள். இப்போது இயேசுவைத் தேடுகிறவர்கள் அவரைக் கண்டுகொள்வார்கள். தேடுங்கள் கண்டடைவீர்கள் என்று இயேசுகிறிஸ்து வாக்குப்பண்ணியிருக்கிறார். ஆனால் ஒரு நாள் வரப்போகிறது. அந்த நாளில், இயேசுகிறிஸ்துவைத் தேடுகிறவர்கள்கூட அவரைக் கண்டுபிடிக்கமாட்டார்கள். பரலோகத்தில் தங்களுக்கு ஒரு இடம் இருக்குமென்று நம்புவார்கள். ஆனால் அவர்களுடைய நம்பிக்கை வீணாய்போகும். ஏனெனில் அவர்களுக்கு பரலோகத்தில் எந்த ஸ்தலமும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்காது.

தாம் இருக்குமிடத்திற்கும், தம்முடைய விசுவாசிக்கள் இருக்குமிடத்திற்கும் இவர்களால் வரமுடியாது என்று இயேசுகிறிஸ்து திட்டவட்டமாக அறிவித்து விடுகிறார். தங்களுடைய துன்மார்க்கத்தினாலும், அவிசுவாசத்தினாலும் இவர்கள் இயேசுவோடு கூடயிருக்கும் நல்ல சிலாக்கியத்தை இழந்துபோவார்கள். இயேசுகிறிஸ்து இருக்குமிடத்திற்கு இப்போது இவர்கள் வரவில்லை. ஆகையினால் இனிமேல் இவர்கள் வரமாட்டார்கள். பரலோகம் இருக்கும். ஆனால் அது அவர்களுடைய பரலோகமாக இருக்காது. பரிசுத்தவான்களுக்கே அது பரலோகமாக இருக்கும்.

**என்னைக் காணமாட்டீர்கள்**

**அப்பொழுது யூதர்கள்: இவரை நாம் காணாதபடிக்கு எங்கே போவார், கிரேக்கருக்குள்ளே சிதறியிருக்கிறவர்களிடத்திற்குப் போய், கிரேக்கருக்கு உபதேசம் பண்ணுவாரோ? நீங்கள் என்னைத் தேடுவீர்கள், ஆனாலும் என்னைக் காணமாட்டீர்கள் என்றும், நான் இருக்கும் இடத்துக்கு நீங்கள் வரக்கூடாதென்றும், இவர் சொன்ன வார்த்தையின் கருத்து என்னவென்று தங்களுக்குள்ளே சொல்லிக்கொண்டார்கள் (யோவா 7:35,36).**

இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்டு ஜனங்கள் தங்களுக்குள் பேசிக்கொள்கிறார்கள். "இயேசு எங்கே போவார்" என்று தங்களுக்குள்ளே கேட்டுக்கொள்கிறார்கள். இவர்கள் அறியாமையிலிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவைக் காணமுடியாத குருடர்களாக இருக்கிறார்கள். தாம் எங்கு போகப்போகிறோம் என்பதை இயேசுகிறிஸ்து மிகவும் தெளிவாக இவர்களிடத்தில் கூறியிருக்கிறார். தம்மை அனுப்பினவரிடத்திற்கு இயேசுகிறிஸ்து போகப்போகிறார். பரலோகத்திலிருக்கிற பிதாவாகிய தேவனே இயேசுகிறிஸ்துவை இந்த பூமிக்கு அனுப்பியிருக்கிறார். ஏற்கெனவே இயேசுகிறிஸ்துவின் செய்தியைக் கேட்டிருந்தும் "இவரை நாம் காணாதபடிக்கு எங்கே போவார்" என்று யூதர்கள் கேட்கிறார்கள். இவர்கள் மெய்யாகவே அறியாமயிலிருக்கிறார்கள்.

## அதிகாரம் - 7

யூதர்கள் இயேசுவின்மீது விரோதம் காண்பிக்கிறார்கள். அவருக்கு விரோதமாகப் பேசி, அவருக்கு விரோதமாக செயல்படுகிறார்கள். தங்களைவிட்டு இயேசுகிறிஸ்து போய்விடுவார் என்பதை இவர்களால் சரியாக சிந்திக்க முடியவில்லை. தங்களுடைய அதிகார வரம்புக்கு உட்பட்ட எல்லைப்பகுதியிலிருந்து வெளியேறிப் போய்விடுவாரோ என்று உலகப்பிரகாரமாக சிந்திக்கிறார்கள். ஆகையினால் அவர் போகும் இடத்தை தங்களால் காணமுடியாமல் போய்விடுமோ என்று தங்களுக்குள்ளே சொல்லிக்கொள்கிறார்கள்.

யூதர்கள் தங்கள் இருதயத்தில் பெருமையுள்ளவர்களாக இருக்கிறார்கள். புறஜாதியாரை இவர்கள் சிறிதும் மதிப்பதில்லை. அவர்களை சிதறியிருக்கிறவர்கள் என்று கூறுகிறார்கள். இயேசுகிறிஸ்து புறஜாதியார் மத்தியில்போய் அவர்களுக்கு உபதேசம்பண்ணுவாரோ என்று இயேசுகிறிஸ்துவைக் குறித்து ஏளனமாகப் பேசுகிறார்கள். தேவனைப்பற்றி உபதேசம் பண்ணும் உரிமையும், அவரைப்பற்றிய உபதேசத்தைக் கேட்கும் உரிமையும் தங்களுக்கு மாத்திரமே இருக்கிறது என்று யூதர்கள் நினைக்கிறார்கள். தங்களுடைய அதிகாரம் தங்களைவிட்டுப் போனபின்பு, தேவனைப்பற்றி யாரும் பேசக்கூடாது என்று மற்றவர்கள்மீது அதிகாரம்பண்ணுகிறார்கள். தேவன் தங்களுக்கே உரியவரென்றும், தேவனுடைய உபதேசத்தை தங்கள் மத்தியில் மாத்திரமே கொடுக்க வேண்டுமென்றும் எதிர்பார்க்கிறார்கள். ஆகையினால் இயேசுகிறிஸ்து புறஜாதியார் மத்தியில் உபதேசம் பண்ணப்போவாரோ என்று ஏளனமாகப் பேசுகிறார்கள். இதன்பின்பு கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அப்போஸ்தலர்களையும், மற்ற ஊழியக்காரர்களையும், புறஜாதியார் மத்தியில் ஊழியம் செய்ய அனுப்பி, அவர்களை வல்லமையாக பயன்படுத்தியிருக்கிறார்.

**பண்டிகையின் கடைசிநாள்**
**யோவா 7 : 37-39**

**யோவா 7:37. பண்டிகையின் கடைசி நாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன்.**

**யோவா 7:38. வேதவாக்கியம் சொல்லுகிறபடி, என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்.**

**யோவா 7:39. தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்து இப்படிச் சொன்னார். இயேசு இன்னும் மகிமைப் படாதிருந்தபடியினால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை.**

**ஒருவன் தாகமாயிருந்தால்**

**பண்டிகையின் கடைசிநாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம் பண்ணக்கடவன் (யோவா 7:37).**

இயேசு கிறிஸ்துவின் உபதேசத்தைக்கேட்டு ஜனங்கள் பலவிதமான கருத்துக்களைத் தங்களுக்குள்ளே சொல்லிக்கொள்கிறார்கள். அப்போது கூடாரப்பண்டிகையின் கடைசிநாள் வருகிறது. இது பண்டிகையின் பிரதான நாளாகும். இது முக்கியமான நாள். தாம் இதுவரையிலும் யூதஜனங்களுக்கு உபதேசித்த சத்தியத்தை இயேசுகிறிஸ்து இங்கு விரிவாக எடுத்துக்கூறுகிறார். சுவிசேஷத்தின் மொத்த சாரமும் இந்த உபதேசத்தில் அடங்கியிருக்கிறது. இயேசுகிறிஸ்துவிடத்தில் நாம் வரவேண்டும் என்பது சுவிசேஷத்தின் அழைப்பு. இயேசு கிறிஸ்துவிடத்தில் சந்தோஷமும் ஆறுதலும் உள்ளது என்பது சுவிசேஷத்தின் வாக்குத்தத்தம்.

கூடாரப்பண்டிகையின் கடைசி நாள் பிரதான நாளாக இருக்கிறபடியினால் ஏராளமான ஜனங்கள் எருசலேமுக்கு கூடிவந்திருக்கிறார்கள். திரளான ஜனங்களுக்கு முன்பாக அழைப்புக் கொடுக்கும்போது குறைந்த பட்சம் ஒரு சிலராவது அந்த அழைப்பை ஏற்றுக்கொள்வார்கள். கூடாரப்பண்டிகையை ஆசரித்து முடித்துவிட்டு, இப்போது ஜனங்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பிப்போய் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சமயத்தில் இயேசுகிறிஸ்து தம்முடைய உபதேசத்தை அவர்களுக்கு கூறுகிறார். இதனால் வீடுகளுக்குத் திரும்பிப்போகும் ஜனங்கள் தங்களோடு இயேசுகிறிஸ்துவின் வார்த்தையையும் சுமந்து செல்வார்கள்.

## அதிகாரம் - 7

திரளான ஜனங்கள் கூடாரப்பண்டிகையை ஆசரிப்பதற்காக எருசலேமில் கூடிவந்திருக்கிறார்கள். இவர்களெல்லோரும் பண்டிகை முடிந்து தங்கள் வீடுகளுக்குத் திரும்பிப்போகிறார்கள். மறுபடியும் இவர்கள் இப்படி ஒன்று கூடுவார்களா என்பது தெரியாது. ஒரு சிலர் அடுத்த பண்டிக்கைக்கு வரலாம். ஒரு சிலர் வரமுடியாமல் வீட்டிலேயே தங்கிவிடலாம். ஒரு சிலர் முதுமையடைந்து அல்லது வியாதியாய்பட்டு மரித்துப்போகலாம். எல்லோரும் மறுபடியும் எருசலேமுக்கு இதுபோல வருவார்களென்று உறுதியாகக் கூறமுடியாது. ஆகையினால் இயேசுகிறிஸ்து தமக்குக் கிடைத்திருக்கும் இந்த நல்ல வாய்ப்பை பயன்படுத்தி திரளான ஜனங்களுக்கு சத்தமிட்டு சுவிசேஷத்தை அறிவிக்கிறார்.

நம்முடைய ஊழியப்பாதையிலும் நமக்கு வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் ஜனங்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கவேண்டும். அவர்களும் பரலோகம் போவதற்கு நம்மால் முடிந்த ஆவிக்குரிய ஆலோசனைகள் அனைத்தையும் அவர்களுக்குக் கொடுக்கவேண்டும். ஏனெனில் அவர்களை மறுபடியும் நாம் சந்திப்போமா என்பதில் ஒரு நிச்சயமுமில்லை. ஒரு காரியத்தை செய்து முடிக்கும்போது பொதுவாக அதில் வேகமும் விருவிருப்பும் காணப்படும். பண்டிகை நாளின் கடைசிநாளாக இருப்பதினால் எருசலேமில் எல்லாமே வேகமாகவும் விறுவிறுப்பாகவும் நடைபெறுகிறது. இந்தப் பிரதான நாளில் இயேசுகிறிஸ்துவும் விறுவிறுப்பாக சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுகிறார்.

ஜனங்கள் விரும்பினால் இயேசுகிறிஸ்து அவர்களுக்கு மறுபடியும் சத்தியத்தை உபதேசம் பண்ணுவார். எருசலேமில் மேலும் சில நாள் அவர்கள் தங்குவதற்கு ஆயத்தமாக இருக்கவேண்டும். ஆனால் எல்லா ஜனங்களும் பண்டிகை முடிந்து தங்கள் வீட்டிற்குப்போக ஆயத்தமாக இருக்கிறார்கள். அது மாத்திரமல்ல இயேசுகிறிஸ்துவின் பிரசங்கத்தை இப்போது கேட்கிறவர்களில் எத்தனைபேருக்கு மறுபடியும் அதைக் கேட்பதற்கு வாய்ப்பு கிடைக்கும் என்று தெரியவில்லை. இயேசுவின் பிரசங்கத்தைக் கேட்கும் வரையிலும் எத்தனைபேர் உயிரோடிருப்பார்களென்றும், எத்தனைபேர் மரித்துப்போவார்களென்றும் தெரியாது. அடுத்த பண்டிகை வருவதற்கு முன்பாக இவர்களில் அநேகர் மரித்துப்போகலாம். கல்லறைகளில் அடக்கம்பண்ணப்படலாம். மரித்துப்போனவர்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணமுடியாது. ஆகையினால் இதுவே அநுக்கிரக காலமாக இருக்கிறது.

பண்டிகையின் கடைசிநாளாகிய பிரதான நாளிலே இயேசுகிறிஸ்து நின்று ஜனங்களை தம்மிடத்தில் வருமாறு சத்தமிட்டு அழைக்கிறார். இயேசுகிறிஸ்துவின் அழைப்பில் ஆர்வமும் ஜீவனும் இருக்கிறது. அவர் மனுஷருடைய ஆத்துமாக்கள் மீது பிரியமாயிருக்கிறார். ஆத்துமாக்களை நேசிக்கிறவர்கள் ஜீவனோடு பிரயங்கம் பண்ணுவார்கள். தம்முடைய அழைப்பை எல்லோரும் கேட்கவேண்டுமென்றும், அழைப்பை ஏற்றுக்கொண்டு எல்லோரும் தம்மிடத்தில் வரவேண்டுமென்றும் இயேசுகிறிஸ்து விரும்புகிறார்.

இயேசுகிறிஸ்து எழுந்து நின்று சத்தமிட்டுக் கூறுவதினால், அவரை எல்லோரும் பார்க்க முடியும். அவருடைய அழைப்பின் சத்தத்தை எல்லோரும் தெளிவாகக் கேட்க முடியும். புறஜாதி ஜனங்கள் மந்திரங்களைக் காதுகளில் ஓதுவார்கள். மற்றவர்களுக்கு கேட்கக்கூடாது என்பதற்காக மந்திரங்களை மௌனமாக முனங்குவார்கள். ரகசியம் போல காத்துக்கொள்கிறார்கள். ஆனால் சுவிசேஷத்தின் செய்தியையோ நின்று சத்தமிட்டு அறிவிக்கவேண்டும். சுவிசேஷத்தை எல்லோரும் ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட்டு பரலோகத்திற்கு வரவேண்டுமென்பதுதான் இயேசுகிறிஸ்துவின் நோக்கம். ஆகையினால் இயேசுகிறிஸ்துவின் நற்செய்தியை மௌனமாக முனங்கவேண்டியதில்லை. எழுந்து நின்று, தலைகளை உயர்த்தி, சத்தமிட்டு, விசுவாசத்தோடும் ஜீவனோடும் அறிவிக்கவேண்டும்.

## அதிகாரம் - 7

இந்த உலகத்தில் ஜனங்கள் பலவிதமான தாகத்தோடிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து தாகமுள்ளவர்களை தம்மிடத்தில் வருமாறு அழைக்கிறார். ஒரு சிலருடைய வாழ்க்கையில் தரித்திரமும், பாடுகளும், துன்பங்களும் இருக்கும். இந்தப் பிரச்சனைகளெல்லாம் தங்களைவிட்டு நீங்கிப்போகாதா என்று சிலர் தாகத்தோடிருப்பார்கள். இவர்கள் இயேசுகிறிஸ்துவிடத்தில் வந்தால் இவர்களுடைய தாகம் தீர்க்கப்படும். பிரச்சனைகள் இவர்களைவிட்டு விலகிப்போகும். ஒரு சிலருக்கு ஆவிக்குரிய காரியங்களில் தாகம் இருக்கும். அவர்கள் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ள வேண்டுமென்று தாகத்தோடிருப்பார்கள். தங்களுடைய ஆத்துமாக்களைக் குறித்தும், ஆவிக்குரிய சந்தோஷங்களைக் குறித்தும் தாகத்தோடிருப்பார்கள். இவர்களும் இயேசுகிறிஸ்துவிடம் வரலாம். சிலர் நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்களாக இருப்பார்கள். இவர்களும் இயேசுகிறிஸ்துவிடம் வரும்போது இவர்களுடைய பசிதாகம் தீர்த்துவைக்கப்படும்.

தாகமுள்ளவர் எல்லோரும் தம்மிடத்தில் வருமாறு இயேசுகிறிஸ்து அழைக்கிறார். தாகமுள்ளவர்களை அவர் மற்றவர்களிடத்தில் வழிநடத்தவில்லை. இயேசுகிறிஸ்து ஜீவத்தண்ணீரின் ஜீவஊற்றாக இருக்கிறார். தாகமாயிருக்கிற ஒருவன் இந்த ஜீவஊற்றிற்கு வரும்போது, அவனுடைய தாகம் ஜீவத்தண்ணீரினால் தீர்த்து வைக்கப்படும். தாகமாயிருக்கிறவன் இயேசுகிறிஸ்துவிடம் வந்தால் மாத்திரம் போதாது. அவரிடத்தில் பானம்பண்ணவும் வேண்டும். பானம்பண்ணினால்தான் தாகம் தீரும். உற்சாகமும், தெம்பும், பெலனும் உண்டாகும். இவையெல்லாவற்றையும் கொடுப்பதற்கு இயேசுகிறிஸ்து போதுமானவராக இருக்கிறார்.

**ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்**

**வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார் (யோவா 7:38).**

தாகமுள்ள ஆத்துமாக்கள் இயேசுகிறிஸ்துவிடத்தில் வரும்போது அவர்கள் பானம்பண்ணுகிறார்கள். வனாந்தரத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் பிரயாணம் பண்ணியபோது அவர்கள் கற்பாறையிலிருந்து தண்ணீரைப் பானம்பண்ணினார்கள். தேவன் அவர்களை தொடர்ந்து வந்தார். அவரிடத்திலிருந்து இஸ்ரவேல் ஜனங்கள் ஆசீர்வாதத்தை பெற்றுக்கொண்டார்கள். இயேசுகிறிஸ்துவின் விசுவாசிகளாகிய நமக்கு அதைவிட பெரிய சிலாக்கியம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஜீவக்கன் மலையாகிய இயேசுகிறிஸ்து நமக்குள்ளே இருக்கிறார். நமக்குள்ளே இயேசுகிறிஸ்து இருக்கிறபடியினால், நம்முடைய உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்.

இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணியபோது, அவர்களுடைய தாகத்திற்கு ஏற்ப அவ்வப்போது தண்ணீரைப் பருகினார்கள். அந்தத் தண்ணீர் அவர்களுடைய தாகத்தை தற்காலிகமாகத்தான் தீர்த்து வைத்தது. ஆனால் நாம் இயேசுகிறிஸ்துவிடம் வந்து ஜீவத்தண்ணீரைப் பானம்பண்ணும்போது, நம்முடைய தாகம் நித்தியமாக தீர்க்கப்படும். நமக்கு பூரண ஆறுதலும் சந்தோஷமும், திருப்தியும் எப்போதும் நித்தியமாய் உண்டாயிருக்கும்.

ஜீவத்தண்ணீர், ஓடுகிற தண்ணீர் ஆகியவை எபிரெய பாஷையில் "ஜீவனுள்ளது" என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில் இந்தத் தண்ணீர் அசைகிறது, ஓடுகிறது, ஒரே இடத்தில் கெட்டிக்கிடக்கிற தண்ணீரைப்போல இந்தத் தண்ணீர் இருக்காது. பரிசுத்த ஆவியானவரின் ஆறுதல்களும் கிருபைகளும் ஜீவத்தண்ணீரோடு ஒப்பிடப்பட்டிருக்கிறது. ஜீவத்தண்ணீர் என்பதற்கு நிறைந்து ஓடுகிற தண்ணீர் என்று பொருள். இந்தத் தண்ணீர் ஜீவத்தண்ணீருள்ள நதிகள் என்று அழைக்கப்படுகிறது. பரிசுத்த ஆவியானவர் மூலமாக நம்முடைய உள்ளத்தில் உண்டாயிருக்கும் ஆறுதலும், சந்தோஷம், சமாதானமும் தாராளமாக இருக்கும். ஒரு நதியைப்போல தொடர்ந்து ஓடிக்கொண்டிருக்கும்.

## அதிகாரம் - 7

நதி வல்லமையாகப்பிரவாகித்து ஓடும்போது, அதற்கு எதிரேயிருக்கும் எல்லா தடைகளையும் கடந்து ஓடும். அதுபோலவே பரிசுத்த ஆவியானவரின் ஜீவத்தண்ணீருள்ள நதிகள் நம்முடைய உள்ளத்திலிருந்து ஓடும்போது, நம்முடைய சந்தோஷத்திற்கும் ஆறுதலுக்கும் தடையாகயிருக்கிற சந்தேகங்களும் பயங்களும் விலகிப்போகும். நதியின் வேகம் அதிகரிக்கும்போது அதற்குத் தடையாக இருக்கக்கூடிய எல்லா தடைகளும் நதியின் நீரோட்டத்தில் அடித்துக்கொண்டு போய்விடும். அந்தத் தடைகளால் பிரவாகித்து வருகிற வெள்ளத்தை எதிர்த்து நிற்கக்கூடாது.

ஜீவத்தண்ணீருள்ள நதிகள் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களுடைய உள்ளங்களிலிருந்து அல்லது ஆத்துமாக்களிலிருந்து ஓடுகிறது. பரிசுத்த ஆவியானவரின் கிருபைகளும் ஆசீர்வாதங்களும் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களின் உள்ளங்களில் ஸ்தாபிக்கப்படுகிறது. அவர்களுடைய உள்ளங்களில் பரிசுத்த ஆவியானவர் வாசம்பண்ணுகிறார். ஆகையினால் அவர்கள் உள்ளங்களிலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடுகிறது.

கிருபையின் ஊற்றுக்களும் ஆறுதலின் ஊற்றுக்களும் ஒரு ஆத்துமாவில் உற்பத்தியாகும்போது, அங்கிருந்து அவை நதிகளாக வெளியேறும். கிருபைக்கும் ஆறுதலுக்கும் சாட்சி தேவையில்லை. அவை சுயசாட்சிகளை உடையதாக இருக்கிறது. ஒரு இருதயம் பரிசுத்தமாக இருந்தால், அந்த நபரின் ஜீவயமும் பரிசுத்தமாக இருக்கும். ஒரு மரத்தின் சுபாவம் அதன் கனியினால் அறியப்படுகிறது. அதுபோல ஒரு ஊற்றின் சுபாவத்தை அதன் நதியினால் நாம் அறிந்துகொள்ளலாம். நம்முடைய நதி ஜீவத்தண்ணீருள்ள நதிகளாக இருக்குமென்றால் அது நமக்கும் பிரயோஜனமாக இருக்கும். மற்றவர்களுக்கும் பிரயோஜனமாக இருக்கும். ஜீவத்தண்ணீருள்ள நதி நம்முடைய தாகத்தையும் தணிக்கும். மற்றவர்களுடைய தாகத்தையும் தணிக்கும். நல்லவன் ஒருவன் எல்லோருக்குமே பொதுவான நன்மைகளைச் செய்வான். அதுபோலவே ஜீவத்தண்ணீருள்ள நதிகள் நம்முடைய உள்ளத்திலிருந்து புறப்பட்டு ஓடுகிறபோது, நம்மிடத்தில் உற்பத்தியாயிருக்கிற ஆவியின்கனி ஏராளமானோருக்கு ஆசீர்வாதத்தைத் தரும்.

"வேதவாக்கியம் சொல்லுகிறபடி" என்னும் வாக்கியம் பழைய ஏற்பாட்டில் எழுதப்பட்டிருக்கிற வாக்குத்தத்தங்களை குறிப்பிடலாம். பழைய ஏற்பாட்டில் ஏராளமான ஆசீர்வாதங்களும், வாக்குத்தத்தங்களும் எழுதப்பட்டிருக்கிறது. யூதருடைய பாரம்பரிய வழக்கத்தின் பிரகாரம், கூடாரப் பண்டிகையின் கடைசிநாளின்போது, ஒரு முக்கியமான சடங்கை அனுசரிப்பார்கள். இது "தண்ணீரை ஊற்றுதல்" என்று அழைக்கப்படுகிறது. சீலோவாம் குளத்திலிருந்து பொன் குடத்தில் தண்ணீர் எடுத்துவந்து தேவாலயத்திற்குக் கொண்டுவருவார்கள். அப்போது எக்காளம் முதலிய வாத்தியக் கருவிகள் ஒலிக்கப்படும். பலவிதமான சுத்திகரிப்பு சடங்குகளைச் செய்வார்கள். அந்தத் தண்ணீரை கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக பலிபீடத்தின்மீது ஊற்றுவார்கள். இந்தத் தண்ணீர் ஊற்றப்படும்போது யூதஜனங்கள் சந்தோஷத்தினால் ஆர்ப்பரிப்பார்கள்.

இயேசுகிறிஸ்து இந்தத் தண்ணீரை தொடர்புபடுத்தி, ஜீவத்தண்ணீருள்ள நதிகளைப்பற்றி உபதேசம்பண்ணுகிறார். இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களுக்கு சீலோவாம் குளத்திலிருந்து ஒரு கலசம் தண்ணீர் கொடுக்கப்படுவதில்லை. ஆனால் அவர்களுடைய உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்.

### பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை

**தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்து இப்படிச் சொன்னார். இயேசு இன்னும் மகிமைப் படாதிருந்தபடியினால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை (யோவா 7:39).**

இயேசுகிறிஸ்து ஜீவத்தண்ணீருள்ள நதியைப்பற்றி பேசும்போது அவர் பரிசுத்த ஆவியானவரைப்பற்றி பேசுகிறார். பரிசுத்த ஆவியானவரின் கிருபைகளையும், வரங்களையும், ஆறுதல்களையும் குறித்து இயேசுகிறிஸ்து இங்கு வெளிப்படுத்துகிறார். இயேசுகிறிஸ்துவிடத்தில் விசுவாசமாக இருக்கிறவர்கள் பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்வார்கள். தேவனுடைய இரட்சிக்கும் கிருபை எல்லோருக்கும் கொடுக்கப்படுகிறது. ஆனால் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களுக்கு மாத்திரமே பரிசுத்த ஆவியானவர் கொடுக்கப்படுவார்.

## அதிகாரம் - 7

இந்த நதியைப்போலவே பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளுடைய உள்ளங்களிலிருந்து தாராளமாகப் புறப்பட்டு வருவார். அவர்களைச் சுத்திகரிப்பார். அவர்கள் வறண்டிருக்கும்போது அவர்களுக்குக் குளிர்ச்சியைக்கொடுப்பார். அவர்களைக் கனிதரச் செய்வார். அவர்கள் மூலமாக மற்றவர்களுக்கு சந்தோஷம் உண்டாகும். இதுவே பரிசுத்த ஆவியானவரின் வாக்குத்தத்தம்.

பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் விசுவாசிகளுக்கு இன்னும் அருளப்படவில்லை. இந்த அபிஷேகம் இன்னும் வாக்குத்தத்தமாகவே இருக்கிறது. ஏனெனில் இயேசுகிறிஸ்து இன்னும் மகிமைப்படாதிருக்கிறார். அவர் மகிமைப்படப்போவது உறுதியான சம்பவம். இப்போது அவர் தாழ்மையிலிருக்கிறார். அவரை யூதர்கள் துன்பப்படுத்துகிறார்கள். தம்முடைய மகிமைக்காக இயேசுகிறிஸ்து காத்துக்கொண்டிருக்கிறார். கல்வாரி சிலுவையில் இயேசுகிறிஸ்து தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்து மகிமையடைந்தார். பரிசுத்த ஆவி அருளப்படும்போது நமக்கு மகிமை உண்டாகாது. இயேசுகிறிஸ்து மகிமையடையும்போது நமக்குப் பரிசுத்த ஆவியானவர் அருளப்படுவார். பரிசுத்த ஆவியானவர் அருளப்படுவது நம்முடைய மகிமைக்காக காத்துக்கொண்டிருக்கவில்லை. இயேசுகிறிஸ்து மகிமையடைவதற்காகவே இது காத்துக்கொண்டிருக்கிறது.

பரிசுத்த ஆவியானவர் இன்னும் அருளப்படவில்லை. அப்போஸ்தலர்களின் வாழ்க்கை வரலாற்றை நாம் வாசிக்கும்போது, பெந்தெகொஸ்தே நாளில் அவர்கள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்டார்கள் என்று அறிந்துகொள்கிறோம். ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முன்பு சீஷர்கள் விசுவாசத்தில் பலவீனர்களாக இருந்தார்கள், தேவனைப்பற்றிய வெளிப்பாடுகளை அறிந்துகொள்வதில் குறைவுள்ளவர்களாக காணப்பட்டார்கள். ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்ற பின்போ தேவனுடைய கிருபை இவர்களிடத்தில் அதிகமாக வெளிப்பட்டது. சத்தியத்தை தெளிவாக அறிந்திருந்தார்கள். பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்பு பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் சீஷர்களுக்கு அருளப்படவில்லை. ஆனால் ஆவியானவரின் முதற்கனிகளும், அச்சாரங்களும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. முழுமையான அறுவடை அவர்களுக்கு அந்த நாளில் இன்னும் அருளப்படாதிருந்தது.

பரிசுத்த ஆவியானவர் அருளப்படும்போது ஆவியானவரின் அருள்மாரி ஜீவத்தண்ணீருள்ள நதிகளைப்போல ஓடும். இந்தத் தண்ணீர் உலகம் முழுவதும் ஓடும். புறஜாதியாரின் தேசத்திற்கும் ஓடும். ஆனாலும் இயேசுகிறிஸ்து இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்த ஆவியானவர் இன்னும் அருளப்படவில்லை. இயேசுகிறிஸ்துவின் மரணம் அவருடைய மகிமையென்று அழைக்கப்படுகிறது. தம்முடைய சிலுவையில் இயேசுகிறிஸ்து வெற்றி சிறந்தார். இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் பரிசுத்த ஆவியானவரின் வரம் கிரயத்திற்குக் கொள்ளப்பட்டிருக்கிறது. கல்வாரியில் அவர் தமது இரத்தத்தை சிந்தும் வரையிலும் பரிசுத்த ஆவியானவர் அருளப்படவில்லை.

இயேசுகிறிஸ்து இக்காலத்தில் இந்த உலகத்திலிருந்தபடியினால், பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னம் அவர்களுக்கு அதிகமாக தேவைப்படவில்லை. ஆனால் இயேசுகிறிஸ்து அவர்களைவிட்டு எடுத்துக்கொள்ளப்பட்ட பின்போ ஆவியானவரின் பிரசன்னம் அவர்களுக்கு நிச்சயமாக தேவைப்படுகிறது. பரிசுத்த ஆவியானவர் அக்காலத்தில் அருளப்படவில்லையென்றாலும், ஆவியானவர் வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறார். நம்முடைய வாழ்க்கையில் வாக்குப்பண்ணப்பட்டிருக்கிற பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும். இயேசுகிறிஸ்துவின் வாக்குத்தத்தம் நமக்கு ஜீவனைத்தரும்.

### ஜனங்களில் அநேகர்
### யோவா 7 : 40-44

**யோவா 7:40. ஜனங்களில் அநேகர் இந்த வசனத்தைக் கேட்டபொழுது: மெய்யாகவே, இவர் தீர்க்கதரிசியானவர் என்றார்கள்.**

**யோவா 7:41. வேறுசிலர்: இவர் கிறிஸ்து என்றார்கள். வேறுசிலர்: கிறிஸ்து கலிலேயாவிலிருந்தா வருவார்?**

## அதிகாரம் - 7

**யோவான் 7:42. தாவீதின் சந்ததியிலும், தாவீது இருந்த பெத்லகேம் ஊரிலுமிருந்து கிறிஸ்து வருவார் என்று வேதவாக்கியம் சொல்லவில்லையா என்றார்கள்.**

**யோவான் 7:43. இவ்விதமாக அவரைக்குறித்து ஜனங்களுக்குள்ளே பிரிவினையுண்டாயிற்று.**

**யோவான் 7:44. அவர்களில் சிலர் அவரைப் பிடிக்க மனதாயிருந்தார்கள்; ஆகிலும் ஒருவனும் அவர்மேல் கைபோடவில்லை.**

### தீர்க்கதரிசியானவர், கிறிஸ்து

**ஜனங்களில் அநேகர் இந்த வசனத்தைக் கேட்டபொழுது: மெய்யாகவே, இவர் தீர்க்கதரிசியானவர் என்றார்கள். வேறுசிலர்: இவர் கிறிஸ்து என்றார்கள். வேறுசிலர்: கிறிஸ்து கலிலேயாவிலிருந்தா வருவார்? (யோவான் 7:40,41)**

இயேசுகிறிஸ்துவின் உரையாடலைக் கேட்டு ஜனங்களுக்குள் பிரிவினை உண்டாயிற்று. இயேசுகிறிஸ்துவைக்குறித்து ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாகப் பேசிக்கொள்கிறார்கள். இயேசுகிறிஸ்துவோ சமாதானம் பண்ணுவதற்காக இந்த உலகத்திற்கு வந்தார். ஆனால் அவருடைய உபதேசத்தைக்கேட்ட ஜனங்களுக்குள்ளேயோ பிரிவினை உண்டாயிற்று. ஒரு சிலர் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு ஆதரவாகவும், வேறு சிலர் அதற்கு விரோதமாகவும் ஒன்று கூடுகிறார்கள்.

ஜனங்களுக்குள் பிரிவினை உண்டானதற்கு சுவிசேஷம் காரணமல்ல. சுவிசேஷத்தில் தவறு ஒன்றுமில்லை. சரீரத்தில் வியாதி ஏற்படும்போது மருந்து சாப்பிடுகிறோம். சில சமயங்களில் வியாதி குணமடைவதற்கு முன்பாக சரீரத்தில் ஒரு சில விளைவுகள் உண்டாகும். இவையெல்லாம் உண்டானால்தான் வியாதி குணமாகும். அதுபோலத்தான் சுவிசேஷமும் ஜனங்கள் மத்தியில் இங்கு கிரியை நடப்பிக்கிறது. இயேசுவின் சுவிசேஷத்தைக் கேட்டு ஜனங்களுக்குள் பிரிவினை உண்டாயிற்று. குழப்பம் உண்டானால்தான் தெளிவு பிறக்கும்.

ஜனங்களில் அநேகர் இயேசுகிறிஸ்துவின் வசனத்தைக்கேட்டு அவரைத் தீர்க்கதரிசியென்று கூறுகிறார்கள். இயேசுவைத் தேவனுடைய குமாரன் என்று இவர்களால் அங்கீகரிக்க முடியவில்லை. அவரைக்குறித்து எண்ண வேண்டிய பிரகாரமாக எண்ணாமல், சற்று குறைவாகவே எண்ணுகிறார்கள். “மெய்யாகவே இவர் தீர்க்கதரிசியானவர்” என்று கூறுகிறார்கள். தீர்க்கதரிசியானவர் மேசியாவின் வருகையை முன்னறிவிக்கிறவர். ஆனால் இயேசுகிறிஸ்துவோ மேசியாவாகயிருக்கிறார். ஆகையினால் இயேசுவை தீர்க்கதரிசியென்று கூறுவது தவறு.

இயேசுவின் வசனத்தைக்கேட்ட வேறு சிலர் “இவர் கிறிஸ்து” என்று கூறுகிறார்கள். இயேசுவை மேசியா என்று அங்கீகரிக்கிறார்கள். இயேசுவைக் கிறிஸ்து என்று கூறியவர்கள் அவருடைய சீஷர்களானார்களா என்பது தெரியவில்லை. இயேசுகிறிஸ்துவைக்குறித்து சிலருக்கு நல்ல அபிப்பிராயம் இருக்கலாம். இவர்கள் இயேசுகிறிஸ்துவின்மீது சிறிது காலம் விசுவாசம் வைப்பார்கள். ஆனால் விரைவில் இவர்கள் விசுவாசம் மறைந்துபோகும். இக்காலத்தில்கூட ஏராளமான ஜனங்கள் இயேசுகிறிஸ்துவை நல்ல வார்த்தையினால் புகழ்ந்து பேசுகிறார்கள். பேசுவது மட்டும்தான். இப்படிப்பட்டவர்கள் இயேசுகிறிஸ்துவைத் தங்களுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளாமலேயே போய்விடுவார்கள்.

### ஜனங்களுக்குள் பிரிவினை

**தாவீதின் சந்ததியிலும், தாவீது இருந்த பெத்லகேம் ஊரிலுமிருந்து கிறிஸ்து வருவார் என்று வேதவாக்கியம் சொல்லவில்லையா என்றார்கள். இவ்விதமாக அவரைக் குறித்து ஜனங்களுக்குள்ளே பிரிவினையுண்டாயிற்று (யோவான் 7:42,43).**

இயேசுவைக்குறித்து சிலர் “இவர் கிறிஸ்து” என்று கூறியவுடன், வேறு சிலர் அவரைக்குறித்து தர்க்கம்பண்ணுகிறார்கள். இயேசுவைக் கிறிஸ்து என்று கூறுவது சரியான சத்தியம். இது உண்மையுள்ள வார்த்தை. ஆனால் இந்த சத்தியத்தை ஜனங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. மேசியாவைக்குறித்து உடனே விவாதம்பண்ணுகிறார்கள். இயேசுகிறிஸ்து கலிலேயாவிலிருந்து வந்திருப்பதாக நினைக்கிறார்கள். மேசியா கலிலேயாவிலிருந்து வரமாட்டார் என்பது இவர்களுடைய நம்பிக்கை. மேசியாவைக்குறித்து இவர்களுக்கு இது மாத்திரமே தெரிந்திருக்கிறது.

## அதிகாரம் - 7

கிறிஸ்து தாவீதின் சந்ததியிலும், தாவீது இருந்த பெத்லகேம் ஊரிலுமிருந்தும் வருவார் என்று வேதவாக்கியம் சொல்லுவதை இவர்கள் அறிந்திருக்கிறார்கள். இவர்களுக்கு மெய்யாகவே வேதவாக்கியத்தில் நல்ல அறிவு இருக்கிறது. யூதமார்க்கத்தைச் சேர்ந்த சாதாரண ஜனங்கள்கூட, தங்களுடைய முன்னோர்களின் பாரம்பரியத்தினால் வேதவாக்கியத்தை நல்லமுறையில் அறிந்து வைத்திருக்கிறார்கள். வேதபாரகர்கள் இவர்களுக்கு வேதவாக்கியத்தைக் கற்றுக்கொடுத்திருக்கிறார்கள்.

தேவனைப்பற்றி தவறான உபதேசத்தைக் கூறுபவர்கள்கூட வேதவாக்கியத்தை உடனடியாக மேற்கோள்காட்டுவார்கள். சத்தியத்தை புரட்டுவதற்காகவே இவர்கள் வேதவாக்கியத்தைப் படிக்கிறார்கள். தங்களுக்கு தெரிந்த வேத அறிவைக்கொண்டு இவர்கள் தங்களையும் குழப்புவார்கள், மற்றவர்களையும் குழப்பிவிடுவார்கள். இப்படிப்பட்டவர்கள் சத்திய உபதேசத்தில் தெளிவில்லாமல் இருக்கிறார்கள்.

கிறிஸ்து கலிலேயாவிலிருந்தா வருவார் என்று கூறி, இயேசுகிறிஸ்து கலிலேயா தேசத்தவர் என்பதை உறுதிபண்ணுகிறார்கள். இதன்பின்பு அவர்கள் இயேசுகிறிஸ்துவைப் பற்றி விசாரித்துப் பார்த்திருப்பார்கள். அவர் தாவீதின் குமாரனென்றும், பெத்லகேம் ஊரைச் சேர்ந்தவரென்றும் அவர்களுக்குத் தெரிந்திருக்கும். வேதவாக்கியம் சொல்லுகிறபடி இயேசுகிறிஸ்து தாவீதின் சந்ததியில் வந்திருக்கிறவர். பெத்லகேம் ஊரில் பிறந்திருக்கிறவர். வேதவாக்கியம் சொல்லுகிறபடியே இயேசுகிறிஸ்துவின் பிறப்பும் சந்ததியும் இருந்தாலும், அவர்கள் இயேசுவைக் கிறிஸ்து என்று ஏற்றுக்கொள்ள மனதாயில்லை.

**ஒருவனும் அவர்மேல் கைபோடவில்லை**

**அவர்களில் சிலர் அவரைப் பிடிக்க மனதாயிருந்தார்கள்; ஆகிலும் ஒருவனும் அவர்மேல் கைபோடவில்லை (யோவா 7:44).**

இயேசுகிறிஸ்துவின் வசனத்தைக்கேட்டு ஜனங்களுக்குள் பிரிவினை உண்டாயிற்று. அவர்களில் சிலர் இயேசுகிறிஸ்துவைப்பிடிக்க மனதாயிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் உபதேசம் கிருபை நிறைந்தது. அவர்களுக்கு ஆசீர்வாதத்தைக் கொடுக்கக்கூடியது. ஆனால் இந்த ஜனங்களோ அவருடைய வசனத்தைக்கேட்டு அவர்மீது கோபமாக இருக்கிறார்கள். அவர்களில் சிலர் இயேசுகிறிஸ்துவைப் பிடிக்க மனதாயிருக்கிறார்கள். ஆயினும் ஒருவனும் அவர்மேல் கைபோடவில்லை. இயேசுகிறிஸ்துவின்மீது யாராலும் கைபோட முடியாது. ஏனெனில் அவருடைய வேளை இன்னும் வரவில்லை. கிறிஸ்துவுக்கு சத்துருக்களாக இருக்கிறவர்கள் இப்படித்தான் காரணமில்லாமல் அவரைப் பகைக்கிறார்கள். ஆனாலும் தங்களுடைய பகையை அவர்களால் செயல்படுத்த முடியவில்லை.

**பிரதான ஆசாரியரும் பரிசேயரும்**
**யோவா 7 : 45-53**

**யோவா 7:45. பின்பு அந்தச் சேவகர் பிரதான ஆசாரியரிடத்திற்கும் பரிசேயரிடத்திற்கும் திரும்பிவந்தார்கள்; இவர்கள் அவர்களை நோக்கி: நீங்கள் அவனை ஏன் கொண்டுவரவில்லை என்று கேட்டார்கள்.**

**யோவா 7:46. சேவகர் பிரதியுத்தரமாக: அந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை என்றார்கள்.**

**யோவா 7:47. அப்பொழுது பரிசேயர்: நீங்களும் வஞ்சிக்கப்பட்டீர்களா?**

**யோவா 7:48. அதிகாரிகளிலாவது பரிசேயரிலாவது யாதாமொருவர் அவனை விசுவாசித்ததுண்டா?**

**யோவா 7:49. வேதத்தை அறியாதவர்களாகிய இந்த ஜனங்கள் சபிக்கப்பட்டவர்கள் என்றார்கள்.**

**யோவா 7:50. இராத்திரியிலே அவரிடத்திற்கு வந்தவனும் அவர்களிலொருவனுமாகிய நிக்கொதேமு என்பவன் அவர்களை நோக்கி:**

**யோவா 7:51. ஒரு மனுஷன் சொல்வதைக் கேட்டு, அவன் செய்கைகளை அறிகிறதற்கு முன்னே, அவனை ஆக்கினைக்குட்படுத்தலாமென்று நம்முடைய நியாயப்பிரமாணம் சொல்லுகிறதா என்றான்.**

**யோவா 7:52. அதற்கு அவர்கள்: நீரும் கலிலேயனோ? கலிலேயாவிலிருந்து ஒரு தீர்க்கதரிசியும் எழும்புகிறதில்லை என்பதை ஆராய்ந்துபாரும் என்றார்கள்.**

## அதிகாரம் - 7

**யோவா 7:53. பின்பு அவரவர் தங்கள் தங்கள் வீட்டுக்குப் போனார்கள்.**

**சேவகர்**

**பின்பு அந்தச் சேவகர் பிரதான ஆசாரியரிடத்திற்கும் பரிசேயரிடத்திற்கும் திரும்பிவந்தார்கள்; இவர்கள் அவர்களை நோக்கி: நீங்கள் அவனை ஏன் கொண்டுவரவில்லை என்று கேட்டார்கள் (யோவா 7:45).**

பண்டிகையின் கடைசி நாள் பிரதான நாள் என்று அழைக்கப்படுகிறது. பிரதான ஆசாரியரும் பரிசேயரும் இந்தப் பிரதான நாளில் தேவாலயத்து ஊழியத்தில் கவனம் செலுத்தவேண்டும். ஆனால் இவர்களோ இயேசுகிறிஸ்துவைப் பிடித்து காவலில் வைப்பதில் அதிக கவனம் செலுத்துகிறார்கள். தேவாலயத்தில் அமர்ந்திருந்து ஆராதனைக்கடுத்த காரியங்களில் கவனம் செலுத்தாமல், ஆலோசனைச்சங்கத்து மண்டபத்தில் அமர்ந்திருக்கிறார்கள். ஏற்கெனவே இயேசுகிறிஸ்துவைப் பிடித்துக்கொண்டு வரும்படிக்கு பரிசேயரும் பிரதான ஆசாரியரும் சேவகரை அனுப்பியிருக்கிறார்கள் யோவா 7:32). இயேசுகிறிஸ்துவைத் தங்களுடைய சேவகர்கள் கைதியாக பிடித்து அழைத்து வருவார்களென்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் சேவகர்களோ இயேசுகிறிஸ்துவைப் பிடிக்காமல் பிரதான ஆசாரியரிடத்திற்கும் பரிசேயரிடத்திற்கும் திரும்பி வருகிறார்கள். அவர்களிடத்தில் "நீங்கள் அவனை ஏன் கொண்டு வரவில்லை" என்று பரிசேயர் கேட்கிறார்கள். சதி ஆலோசனை பண்ணுகிறவர்களுக்கு ஏமாற்றம் உண்டானால் இப்படித்தான் கோபப்படுவார்கள். பிரதான ஆசாரியரும் பரிசேயரும் தங்கள் ஏமாற்றத்தையும் கோபத்தையும் சேவகர்மீது காண்பிக்கிறார்கள்.

**அந்த மனுஷன் பேசுகிறதுபோல**

**சேவகர் பிரதியுத்தரமாக: அந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை என்றார்கள் (யோவா 7:46).**

இயேசுவை ஏன் கொண்டு வரவில்லை என்று பிரதான ஆசாரியரும் பரிசேயரும் தங்களிடத்தில் கேட்டபோது "அந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை" என்று சேவகர்கள் பதில் கூறுகிறார்கள். இவர்களுடைய வார்த்தையில் உண்மை நிறைந்திருக்கிறது. மெய்யாகவே இயேசுகிறிஸ்துவைப்போல ஞானத்தோடும், வல்லமையோடும், கிருபையோடும், தெளிவாகவும், அன்பாகவும் இதுவரையிலும் ஒருவனும் ஒருக்காலும் மெய்யாகவே பேசினதில்லை. இயேசுகிறிஸ்துவைப் பிடித்து வருவதற்காக அனுப்பப்பட்ட இந்த சேவகர்கள், இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்டு, அவருடைய வசனத்திற்குச் சாட்சி கூறுகிறார்கள். மோசேயின் ஆசனத்தில் அமர்ந்திருக்கும் பிரதான ஆசாரியருக்கு முன்பாக இயேசுகிறிஸ்துவைப்பற்றி தங்களுடைய கருத்தை சாட்சியாக அறிவிக்கிறார்கள்.

தேவனுடைய வல்லமையினால் இயேசுகிறிஸ்து வசனத்தைப் பேசுகிறார். ஜனங்களுடைய மனச்சாட்சியில் இயேசுகிறிஸ்து நல்ல இடத்தைப் பிடித்திருக்கிறார். நல்லோரும் தீயோரும் இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்டு தங்களுடைய இருதயங்களில் உணர்த்தப்பட்டிருக்கிறார்கள். ஆனால் பிரதான ஆசாரியரும் பரிசேயரும் இயேசுகிறிஸ்துவைப்பற்றி நல்ல வார்த்தைகளைக் கேட்க விரும்பவில்லை. அவர்கள் இயேசுகிறிஸ்துவைக் கனப்படுத்தக்கூடாது என்று தீர்மானமாக இருக்கிறார்கள். ஆனால் இந்த சேவகர்களோ அவர்களுக்கு முன்பாகவே இயேசுகிறிஸ்துவைப்பற்றி நல்வார்த்தைகளை அறிவிக்கிறார்கள். இந்த நல்வார்த்தைகளை பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் கேட்காமல் தவிர்க்க முடியவில்லை. இவர்களுடைய சேவகர்களே இயேசுகிறிஸ்துவுக்கு ஆதரவாகப் பேசுகிறார்கள். தங்கள் எஜமான்களுக்கு விரோதமாக சாட்சி கொடுக்கிறார்கள். சத்தியம் எப்போதும் ஜெயம் பெறும்.

**நீங்களும் வஞ்சிக்கப்பட்டீர்களா**

**அப்பொழுது பரிசேயர்: நீங்களும் வஞ்சிக்கப்பட்டீர்களா? (யோவா 7:47)**

## அதிகாரம் - 7

தங்கள் சேவகர் கூறிய வார்த்தைகளை பரிசேயர்கள் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தினால் இவர்கள் வஞ்சிக்கப்பட்டதாக நினைக்கிறார்கள். தங்கள் சேவகர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அங்கீகரித்தால் அவர்கள் மெய்யாகவே தங்களைத் தாங்களே வஞ்சித்துக்கொண்டதாக நினைக்கிறார்கள். ஆகையினால்தான் பரிசேயர் சேவகர்களைப் பார்த்து "நீங்களும் வஞ்சிக்கப்பட்டீர்களா" என்று கேட்கிறார்கள். ஆதித்திருச்சபைக் காலத்திலிருந்தே, இயேசுகிறிஸ்துவின் உபதேசம் ஜனங்களை வஞ்சிக்கிற உபதேசமாகவே கருதப்பட்டு வருகிறது. இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தை ஏற்றுக் கொண்டவர்கள் வஞ்சிக்கப்பட்டவர்களென்று கூறி இந்த உலகம் அவர்களைத் தூஷிக்கிறது. இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள் இந்த உலகத்தையும் இந்த உலகத்திலுள்ள ஜனங்களையும் வஞ்சிப்பதாக கிறிஸ்துவின் சத்துருக்கள் பொய்க்குற்றம் சாட்டுகிறார்கள்.

ஏராளமான ஜனங்கள் இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்டு, அதை ஏற்றுக்கொள்வதை பரிசேயரும் அங்கீகரிக்கிறார்கள். "நீங்களும் வஞ்சிக்கப்பட்டீர்களா" என்று கேட்கும்போது, ஏற்கெனவே ஏராளமானோர் இயேசுவின் உபதேசத்தை அங்கீகரித்திருக்கிறார்கள், அவர்களோடு சேர்ந்து நீங்களும் அதை அங்கீகரித்திருக்கிறீர்களா என்று பொருள்படுமாறு பேசுகிறார்கள். தங்கள் சேவகர்களுக்கு சுயமாய் சிந்திக்கும் ஆற்றல் இல்லையென்றும், ஆகையினால் அவர்கள் வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் பரிசேயர் கூறுகிறார்கள். தங்களுடைய சுயசிந்தனையில் சேவகர்கள் சரியாக சிந்திக்க வேண்டுமென்றும், இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாக இவர்கள் சிந்தித்துச் செயல்படவேண்டுமென்றும் அவர்களை வற்புறுத்துகிறார்கள்.

தங்களுடைய சேவகர்கள் இயேசுகிறிஸ்துவைப்பற்றி நல்வார்த்தைகளைப் பேசியபோது பரிசேயர் அதை அங்கீகரிக்கவில்லை. பரிசேயர் தங்களைத் தங்கள் சேவகரோடு ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள். அவர்கள் இயேசுகிறிஸ்துவின் வார்த்தையைப் புகழ்ந்து பேசினாலும், தாங்கள் அவர்களைப்போல இயேசுவைப் புகழ்ந்துபேச ஆயத்தமாக இல்லை என்பதை அறிவிக்கிறார்கள். இக்காலத்தில் ஏராளமான ஜனங்கள் தங்களைத் தங்களுடைய தலைவர்களோடு ஒப்பிட்டுப் பேசிக்கொள்கிறார்கள். தலைவர்களைப்போல பேசவேண்டுமென்றும், அவர்களைப்போலவே செயல்பட வேண்டுமென்றும் முயற்சி செய்கிறார்கள். மார்க்க காரியங்களில் தங்களுக்கு உபதேசம்பண்ணும் குருமார்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, அவர்களுடைய அடிச்சுவடுகளைத் தாங்களும் பின்பற்றவேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறார்கள். பரிசேயருடைய சேவகர்கள் இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தை ஏற்றுக்கொண்டு, அதைப் பின்பற்ற வேண்டுமென்று விரும்புகிறார்கள். நித்திய ஜீவனுக்கு வழியைக் கண்டுபிடித்திருக்கும் இவர்கள் மெய்யாகவே பாக்கியவான்கள். ஆனால் பரிசேயரின் பார்வைக்கு இவர்கள் வஞ்சிக்கப்பட்டவர்களாக தெரிகிறார்கள்.

### அவனை விசுவாசித்ததுண்டா

**அதிகாரிகளிலாவது பரிசேயரிலாவது யாதாமொருவர் அவனை விசுவாசித்ததுண்டா? (யோவா 7:48)**

இதுவரையிலும் பரிசேயரின் சேவகர்கள் யாரும் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்ததில்லை. இந்த சேவகர்கள்தான் முதன்முதலாக இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளைப் புகழ்ந்து பேசி அவரை விசுவாசிக்கிறார்கள். மார்க்கத்தின் தலைமைப் பொறுப்பிலிருக்கிறவர்களும், அதிகாரப் பொறுப்பிலிருக்கிறவர்களும் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும் வழக்கமில்லை. இது அவர்களுடைய அந்தஸ்துக்கும், அதிகாரத்திற்கும், தகுதிக்கும் முரண்பட்ட செயல் என்று பரிசேயர் விளக்குகிறார்கள். "அதிகாரிகளிலாவது, பரிசேயரிலாவது யாதாமொருவர் இயேசுவை விசுவாசித்ததுண்டா" என்று கேட்கிறார்கள். ஆனால் அதிகாரிகளில் சிலர் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவரை விசுவாசித்திருக்கிறார்கள். தங்களுடைய விசுவாசத்தை அறிக்கை செய்வதற்கு அவர்களுக்குப் பெலனும் தைரியமும் தேவைப்படுகிறது (யோவா 12:42).

## அதிகாரம் - 7

இயேசுகிறிஸ்துவின் உபதேசம் இந்த உலகத்தில் தாழ்மையான நிலமையிலிருக்கும்போது, அவருடைய சத்துருக்கள் அதை இன்னும் அதிகமாகத் தாழ்த்துவதற்கு பிரயாசம் மேற்கொள்கிறார்கள். ஒரு காரியம் தங்களுக்குப் பிடிக்கவில்லையென்றால் அதை எந்த அளவுக்கு தூஷிக்க வேண்டுமோ அந்த அளவுக்கும், அதற்கு மேலும் இவர்கள் தூஷிப்பார்கள். பரிசேயரும் அதிகாரிகளும் சுயபெருமையுள்ளவர்கள். அதிகார அந்தஸ்தை அனுபவிப்பவர்கள். இவர்களுக்கு சுயத்தை வெறுப்பது, சிலுவையை சுமப்பது ஆகிய உபதேசங்கள் மிகவும் கடினமானவை. இந்த உபதேசங்கள் இவர்களுடைய சுபாவத்திற்கு ஏற்றதல்ல.

இயேசுகிறிஸ்துவின் உபதேசம் பரிசேயருக்கும் அதிகாரிகளுக்கும் ஒருபோதும் பிடிக்காது. ஆகையினால்தான் இவர்களில் யாரும் இயேசுகிறிஸ்துவுக்கு சிநேகிதராக இல்லை. இவர்கள் எப்போதுமே இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாகவே செயல்படுகிறார்கள். இயேசுகிறிஸ்துவை பரிசேயருக்கும் அதிகாரிகளுக்கும் பிடிக்கவில்லையென்றால், பொதுவாக ஜனங்களுக்கும் இயேசுவைப் பிடிக்காது. இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவருடைய உபதேசத்தை பின்பற்றி ஜீவிக்கிறவர்கள் சொற்ப எண்ணிக்கையுள்ள ஜனங்களாகவே இருப்பார்கள்.

பொதுவாக ஜனங்கள் உலகம் போகிற போக்கில் ஜீவிப்பதுதான் வழக்கம். ஏராளமான ஜனங்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்தால் சாதாரண ஜனங்களும் கூட்டத்தோடு கூட்டமாக இயேசுவை விசுவாசிப்பார்கள். அதேவேளையில் பெருவாரியான ஜனங்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ளாமல் அவருக்கு விரோதமாக கிரியை செய்தால், சாதாரண ஜனங்களும் அவர்களோடு சேர்ந்துகொண்டு இயேசுவுக்கு விரோதமாக செயல்படுவார்கள்.

### வேதத்தை அறியாதவர்கள்

**வேதத்தை அறியாதவர்களாகிய இந்த ஜனங்கள் சபிக்கப்பட்டவர்கள் என்றார்கள் (யோவா 7:49).**

இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுகிற ஜனங்கள் வேதத்தை அறியாதவர்கள் என்று பரிசேயர்கள் கூறுகிறார்கள். தங்களுடைய ஜனங்களையே இவர்கள் குற்றப்படுத்துகிறார்கள். சீஷர்களைக் குறிப்பிடுவதற்கு "இந்த ஜனங்கள்" என்னும் சாதாரண வார்த்தையையே பயன்படுத்துகிறார்கள். இயேசுகிறிஸ்துவை பின்பற்றுகிறவர்களை இவர்கள் மிகவும் தாழ்வாகவும் ஏளனமாகவும் நினைக்கிறார்கள்.

தேவனுடைய ஞானம் சாதாரண ஜனங்களுக்கே கொடுக்கப்படுகிறது. உலகத்தில் பைத்தியமானவர்களாய்த் தெரிகிற ஜனங்களை இயேசுகிறிஸ்து தெரிந்தெடுத்து, அவர்களுக்கு தம்முடைய ஞானத்தை வெளிப்படுத்துகிறார். இந்த உலகத்தினால் வெறுத்து ஒதுக்கப்பட்ட பாவியான ஜனங்களை இயேசுகிறிஸ்து தம்முடைய ஜனங்களாக தெரிந்துகொண்டார். இயேசுவைப் பின்பற்றுகிறவர்கள் தங்களோடு இல்லையென்பதற்காக பரிசேயர்கள் அவர்களை மிகவும் இழிவாகப் பேசுகிறார்கள்.

பரிசேயரின் குற்றச்சாட்டில் நியாயமில்லை. இயேசுவைப் பின்பற்றுகிறவர்கள் வேதத்தை அறியாத ஜனங்களென்று அவர்கள்மீது குற்றம் சுமத்துகிறார்கள். தங்களுக்கு யாரையாவது பிடிக்கவில்லையென்றால் அவர்கள்மீது பரிசேயர் இப்படித்தான் குற்றம் சுமத்துவார்கள். யாரை வேதத்தை அறியாத ஜனங்களென்று இவர்கள் கூறுகிறார்களோ அவர்கள் வேதத்தை அறிந்திருக்கிறார்கள். இவர்களைவிட ஞானத்தில் சிறந்திருந்த தீர்க்கதரிசிகளைக்கூட பரிசேயர் மதிப்பதில்லை. அவர்களிடத்தில் தேவனுடைய ஞானமில்லையென்று அவர்களைக்குறித்தும் குற்றம் சுமத்தினார்கள்.

## அதிகாரம் - 7

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் சாதாரண ஜனங்களாகவோ, கல்வி அறிவுயில்லாதவர்களாகவோ இருக்கலாம். ஆனால் அவர்கள் உண்மையுள்ளவர்கள். கண்ணியமுள்ளவர்கள். தேவனுடைய வார்த்தையில் தெளிந்த ஞானமுடையவர்கள். தேவனுடைய வார்த்தையைத் தங்களுடைய ஆத்துமாவின் பிரயோஜனத்திற்கு இவர்கள் நேர்த்தியாக பயன்படுத்திக்கொள்கிறவர்கள். இந்த உலகத்திலுள்ள பெரிய ஞானிகளைவிட கர்த்தருடைய பிள்ளைகள் வேத வசனத்தைப்பற்றிய அறிவில் தேறினவர்களாக இருக்கிறார்கள்.

உலகப்பிரகாரமான ஞானிகளுக்கு உலக ஞானம் இருக்கலாம். தேவனுடைய பிள்ளைகளுக்கோ, உலக ஞானம் குறைவாகயிருந்தாலும், தேவஞானம் அதிகமாயிருக்கிறது. இந்த ஜனங்கள் வேதத்தை அறியாதவர்களாக இருப்பார்களென்றால் இது இவர்களுடைய தவறல்ல. இவர்களுக்கு முறைப்படி கற்றுக்கொடுக்கத் தவறிய வேதபாரகருடைய தவறுதான். இவர்கள் கற்றுக் கொடுக்கவில்லை. ஆகையினால் அவர்கள் கற்றுக்கொள்ளவில்லை. இதனால் அவர்கள் வேதத்தை அறியாத ஜனங்களாக இருக்கிறார்கள் என்றுதான் பொருள் கூறவேண்டும்.

இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களை வேதத்தை அறியாதவர்கள் என்று கூறுவதோடு பரிசேயர் நிறுத்திக்கொள்ளவில்லை. அவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பையும் வழங்குகிறார்கள். இந்த ஜனங்கள் சபிக்கப்பட்டவர்களென்று கூறுகிறார்கள். நாம் மற்றவர்களை பரிசேயரைப்போல நியாயம் தீர்க்கக்கூடாது. மற்றவர்களைச் சபிக்க நமக்குத் தகுதியில்லை. நம்முடைய வார்த்தைகள் சபிக்கும் வார்த்தைகளாகயிராமல் ஆசீர்வதிக்கிற வார்த்தைகளாகவே இருக்கவேண்டும். பரிசேயர்களோ வேதத்தின் பிரமாணத்திற்கு முரணாக சிந்திக்கிறார்கள். வசனத்திற்கு விரோதமாக பேசுகிறார்கள். இயேசுகிறிஸ்துவின் சீஷர்களை "சபிக்கப்பட்டவர்கள்" என்று கூறுகிறார்கள். அவர்கள் மீதுள்ள வெறுப்பினால் பரிசேயர் இவ்வாறு தகாத வார்த்தைகளைப் பேசுகிறார்கள். அவர்களோடு யாராவது சேர்ந்துகொண்டால் அவர்களையும் சபிப்பார்கள். தங்களுடைய அதிகாரிகளிடத்தில் இயேசுகிறிஸ்துவின் சீஷர்களைக் குறித்து சாபவார்த்தைகளைக் கூறி, அவர்களோடு எந்தத் தொடர்பும் வைத்துக்கொள்ள வேண்டாமென்று அவர்களை பயமுறுத்துகிறார்கள்.

### நிக்கொதேமு

**இராத்திரியிலே அவரிடத்திற்கு வந்தவனும் அவர்களிலொருவனுமாகிய நிக்கொதேமு என்பவன் அவர்களை நோக்கி: (யோவா 7:50)**

யூதருடைய ஆலோசனைச்சங்கத்தில் நிக்கொதேமுவும் ஒரு அங்கத்தினராக இருக்கிறான். இவன் ஒரு பரிசேயன். ஆனாலும் பரிசேயருக்கு விரோதமாகவே பேசுகிறான். ஒரு சமயம் இயேசுகிறிஸ்துவைப் பார்க்கும்படிக்கு நிக்கொதேமு இராத்திரியிலே வந்தான். இயேசுகிறிஸ்து அவனுக்கு மறுபடியும் பிறப்பதைக் குறித்து உபதேசம்பண்ணினார். இவன் இயேசுகிறிஸ்துவோடு பேசியிருந்தாலும், அவருடைய உபதேசத்தைக் கேட்டிருந்தாலும், அவரைத் தன்னுடைய போதகராக அங்கீகரித்திருந்தாலும், இவன் இன்னும் யூதருடைய ஆலோசனைச்சங்கத்தில் அங்கத்தினராகவே இருக்கிறான். ஆலோசனைச்சங்கத்தார் எடுக்கும் தீர்மானத்தில் இவனுக்கும் சட்டப்படி பொறுப்பு இருக்கிறது.

நிக்கொதேமு யூதருடைய ஆலோசனைச்சங்கத்தில் அங்கத்தினராக இருப்பதைக்குறித்து வேதபண்டிதர்கள் வெவ்வேறு விதமாக தங்கள் கருத்துக்களைக் கூறுகிறார்கள். அவன் விசுவாசத்தில் பலவீனமானவனென்றும் அவன் ஒரு கோழை என்றும் கூறுகிறார்கள். வேறு சிலர் இவனைப்பற்றி கூறும்போது இவன் ஞானத்தில் சிறந்தவனென்று கூறுகிறார்கள். ஒரு முக்கியமான காரணத்திற்காகத்தான் இவன் இன்னும் யூதருடைய ஆலோசனைச்சங்கத்தில் அங்கத்தினராக இருக்கிறான். அந்த சங்கத்தைவிட்டு இன்னும் விலகிவரவில்லை. ஆலோசனைச்சங்கத்தில் பரிசேயரோடு இருந்தால்தான், இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யும் வாய்ப்பு தனக்குக் கிடைக்குமென்று எதிர்பார்க்கிறான் என்று சிலர் கூறுகிறார்கள்.

## அதிகாரம் - 7

பரிசேயர்கள் இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாக கொதித்து எழும்போது, தன்னுடைய அந்தஸ்தினால் அவர்களை அமைதிப்படுத்த முடியுமென்று நிக்கொதேமு எதிர்பார்க்கிறான். ஆகையினால்தான் இவன் இன்னும் யூதருடைய ஆலோசனைச்சங்கத்தில் அங்கத்தினராக இருக்கிறானென்று வேதபண்டிதர்களில் சிலர் கருத்துக் கூறுகிறார்கள்.

தேவன் தம்முடைய மீதியானவர்களை எல்லா இடங்களிலும் வைத்திருக்கிறார். அவர்கள் எல்லாவிதமான ஜனங்கள் மத்தியிலும் இருக்கிறார்கள். சமுதாயத்தின் மோசமான இடங்களில்கூட கர்த்தருடைய பிள்ளைகள் அவருக்கு ஊழியம் செய்கிறார்கள். துன்மார்க்கர்கள் இருக்கக்கூடிய இடங்களில் இவர்கள் தங்கியிருந்து நன்மை செய்கிறார்கள்.

நிக்கொதேமு ஆரம்பத்தில் இயேசுவைப் பார்க்க வந்தபோது இரவு வேளையில் வந்தான். தன்னை யாரும் இயேசுவோடு பார்த்துவிடக்கூடாது என்னும் பயத்தில் இரவில் தனிமையாக வந்தான். ஆனால் ஏற்ற வேளை வந்தபோதோ, பரிசேயர் முன்பாக, மிகவும் தைரியமாக இயேசுகிறிஸ்துவை ஆதரித்துப் பேசுகிறான். ஆலோசனைச்சங்கத்தார் எல்லோரையும் இயேசுவின் நிமித்தமாக எதிர்த்துப் பேசுகிறான். நிக்கொதேமுவைப் போலத்தான், விசுவாசிகள் ஆரம்பத்தில் கர்த்தருக்காக சாட்சி கூறப் பயப்படுவார்கள். அதன்பின்பு தேவனுடைய கிருபையினால், அவர்கள் ஆவிக்குரிய காரியங்களில் வளர்ச்சி பெறும்போது, கர்த்தருக்கு தைரியமாகச் சாட்சி சொல்வார்கள்.

நிக்கொதேமுவைப்போல, ஆரம்ப காலத்தில் விசுவாசத்தில் பலவீனமாக இருக்கிறவர்களைக் குறித்து நாம் தர்க்கம்பண்ணக்கூடாது. அவர்களிடம் கடின வார்த்தைகளைப் பேசி, விசுவாசிகளின் கூட்டத்திலிருந்து அவர்களைத் துரத்திவிடக்கூடாது. விசுவாசத்தில் பலவீனமாக இருக்கிறவர்களையும் நாம் சேர்த்துக்கொள்ள வேண்டும். நிக்கொதேமுவைப்போல இவர்களும் ஒரு காலத்தில் இயேசுகிறிஸ்துவுக்காக, திரளான சத்துருக்களுக்கு முன்பு, தனியாக நின்று யுத்தம்பண்ணுவார்கள். ஆரம்பத்தில் ஒரு ராத்திரியில் இயேசுவிடத்தில் தனிமையில் வந்திருந்த நிக்கொதேமுதான், இயேசுகிறிஸ்துவின் சரீரத்தை அடக்கம் பண்ணுவதற்காக வெள்ளைப்போளமும் கரியபோளமும் கலந்து ஏறக்குறைய நூறு ராத்தல் கொண்டுவந்தான் (யோவா 19:39).

### நம்முடைய நியாயப்பிரமாணம்

**ஒரு மனுஷன் சொல்வதைக் கேட்டு, அவன் செய்கைகளை அறிகிறதற்கு முன்னே, அவனை ஆக்கினைக் குட்படுத்தலாமென்று நம்முடைய நியாயப்பிரமாணம் சொல்லுகிறதா என்றான் (யோவா 7:51).**

பரிசேயர் இயேசுகிறிஸ்துவைப்பற்றியும், அவரைப் பின்பற்றுகிற சீஷர்களைப்பற்றியும் தூஷண வார்த்தைகளினால் பேசுகிறார்கள். அவர்களை அநியாயமாக நியாயந்தீர்த்து சபிக்கிறார்கள். இவர்களுடைய ஆக்கினைத்தீர்ப்பு யூதமார்க்கத்தினுடைய நியாயப்பிரமாணத்தின்படி சரியானதல்ல என்று நிக்கொதேமு ஆலோசனைச்சங்கத்தாரிடம் தைரியமாகப் பேசுகிறான். "ஒரு மனுஷன் சொல்வதைக் கேட்டு, அவன் செய்கைகளை அறிகிறதற்கு முன்னே, அவனை ஆக்கினைக்குட்படுத்தலாமென்று நம்முடைய நியாயப்பிரமாணம் சொல்லுகிறதா" என்று நிக்கொதேமு பரிசேயரிடம் கேட்கிறான். தங்களுடைய சொந்த நியாயப்பிரமாணத்தின் அடிப்படையில் ஞானமாக விவாதம்பண்ணுகிறான். நியாயப்பிரமாணத்தில் ஒவ்வொரு காரியமும் நேர்த்தியாக எழுதப்பட்டிருக்கிறது. ஒருவனுடைய செய்கைகளை அறிகிறதற்கு முன்பாக அவனை ஆக்கினைக்கு உட்படுத்தக்கூடாது. ஆனால் பரிசேயர்களோ இயேசுகிறிஸ்துவை பின்பற்றுகிற ஜனங்களைக்குறித்து "இந்த ஜனங்கள் சபிக்கப்பட்டவர்கள்" என்று கூறி அவர்களை ஆக்கினைக்குட்படுத்துகிறார்கள். இவர்கள் வேதத்தை அறியாதவர்களென்றும் அவர்கள்மீது குற்றம் சுமத்துகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள்மீது பரிசேயர்கள் கூறிய குற்றச்சாட்டை, நிக்கொதேமு மிகவும் ஞானமாக பரிசேயர்மீதே திருப்புகிறான். பரிசேயர்கள் யூதருடைய நியாயப்பிரமாணத்தை அறியாதவர்களென்று அவர்களைப்பற்றி குறிப்பிடுகிறான். அவர்கள் நியாயப் பிரமாணத்தை அறிந்திருந்தால், ஒருவனுடைய செய்கைகளை அறிகிறதற்கு முன்னே அவனை ஆக்கினைக்குட்படுத்தமாட்டார்கள்.

## அதிகாரம் - 7

யூதருடைய நியாயப்பிரமாணத்தில் ஒருவனை எவ்வாறு நியாயம் விசாரிக்கவேண்டும் என்று எழுதப்பட்டிருக்கிறது. குற்றச்சாட்டுக்களை கேட்கவேண்டும், குற்றம்சாட்டப்பட்டவரின் செய்கைகளை அறிந்துகொள்ளவேண்டும். அதன்பின்பு தான் தீர்ப்புக்கொடுக்கவேண்டும். யூதருடைய நியாயப்பிரமாணம் மிகவும் நீதியானது. குற்றத்தை விசாரிக்காமல் ஒருவனைத் தண்டிப்பது நீதியாகாது. தீர விசாரித்தபின்பே, குற்றம் நிரூபிக்கப்படுமானால், குற்றவாளிக்குத் தண்டனை கொடுக்கலாம்.

நியாயம் விசாரிக்கிறவர்கள் தங்களுடைய இரண்டு செவிகளையும் பயன்படுத்த வேண்டும். இருதரப்பாரும் தங்களைப்பற்றி கூறுவதை கவனித்துக் கேட்கவேண்டும். ஒருவர்மீது சுமத்தப்படும் குற்றத்தை வைத்து அவரை குற்றவாளியென்று தீர்த்துவிடக்கூடாது. குற்றம் சுமத்தப்பட்டவரின் செய்கைகளையும் அறிந்துகொள்ளவேண்டும். முகத்தைப்பார்த்து தீர்ப்பு வழங்கக்கூடாது. உண்மைக்கும் நீதிக்கும் நேராக தீர்ப்பு வழங்கவேண்டும். நீதியின் பட்டயத்தைப் பயன்படுத்துவதற்கு முன்பாக, நீதியின் தாராசுக்கோலை நேர்மையாகப் பயன்படுத்த வேண்டும்.

**நீரும் கலிலேயனோ**

**அதற்கு அவர்கள்: நீரும் கலிலேயனோ? கலிலேயாவிலிருந்து ஒரு தீர்க்கதரிசியும் எழும்புகிறதில்லை என்பதை ஆராய்ந்துபாரும் என்றார்கள் (யோவா 7:52).**

நிக்கொதேமுவின் ஆலோசனையை பரிசேயர்கள் அங்கீகரிக்காமல் நிராகரித்துவிடுகிறார்கள். தங்களுக்கு நீதியான வார்த்தையைச் சொன்ன நிக்கொதேமுவையே குற்றப்படுத்துகிறார்கள். அவனுடைய ஆலோசனையை ஆராய்ந்து பார்ப்பதற்குப் பதிலாக, தங்களுடைய உள்ளத்திலுள்ள வெறுப்பையும் கோபத்தையும் அவன்மீது காண்பிக்கிறார்கள். தங்களுக்குச் சாதகமாக பேசாதவர்களெல்லோரும் தங்களுடைய சத்துருக்களென்று மொத்தமாக தீர்மானித்துவிடுகிறார்கள். இதனால் தங்களுக்கு நல்ல ஆலோசனை கூறிய நிக்கொதேமுவிடம் "நீரும் கலிலேயனோ" என்று கேட்கிறார்கள்.

பரிசேயரின் வார்த்தைகளில் உண்மையில்லை. இயேசுகிறிஸ்து கலிலேயர் என்று இவர்கள் நினைக்கிறார்கள். இது தவறானது. இயேசுகிறிஸ்துவின் சீஷர்களில் அநேகர் கலிலேயர். ஆகையினால் இயேசுகிறிஸ்துவும் ஒரு கலிலேயர் என்று பரிசேயர்கள் தவறான சிந்தனையோடிருக்கிறார்கள். கலிலேயாவிலிருந்து ஒரு தீர்க்கதரிசியும் வருகிறதில்லையென்று பரிசேயர்கள் சாதிக்கிறார்கள். தாங்கள் சொன்ன வார்த்தையை ஆராய்ந்து பார்க்குமாறு நிக்கொதேமுவிடம் கூறுகிறார்கள். ஆனால் இந்த வார்த்தையும் தவறானதுதான்.

பரிசேயரின் விவாதத்தில் அஸ்திபாரமேயில்லை. தேவன் தம்முடைய தீர்க்கதரிசியை எந்த தேசத்திலிருந்தும் எழுப்புவார். ஒருவர் ஏழையாக இருந்தாலும், செல்வந்தராக இருந்தாலும், தேவன் தமக்குச் சித்தமானவர்களை, தம்முடைய தீர்க்கதரிசிகளாக பயன்படுத்துவார். கலிலேயாவிலிருந்து எந்த தீர்க்கதரிசியும் இதுவரையிலும் எழும்பவில்லையென்பதற்காக, இனிமேல் கலிலேயாவிலிருந்து வேறு தீர்க்கதரிசி யாரும் எழும்பமாட்டார்கள் என்பது பொருளல்ல. தேவனிடத்தில் பட்சபாதமில்லை. தமக்குச் சித்தமானால் அவர் நிச்சயமாகவே கலிலேயாவிலிருந்து தீர்க்கதரிசிகளை எழுப்புவார். தங்களுக்கு கலிலேயாவையும், கலிலேயரையும் பிடிக்கவில்லை என்பதற்காக பரிசேயர்கள் அவர்களைப்பற்றி தூஷணவார்த்தைகளைப் பேசுகிறார்கள்.

**தங்கள் வீட்டிற்குப்போனார்கள்**

**பின்பு அவரவர் தங்கள் தங்கள் வீட்டுக்குப் போனார்கள் (யோவா 7:53).**

ஒரு சிறிய விவாதத்திற்குப் பின்பு, யூதருடைய ஆலோசனைச்சங்கத்தாரின் ஆலோசனைக்கூட்டம் நிறைவடைந்தது. அவர்கள் எந்த ஒரு தீர்மானமும் எடுக்கவில்லை. அவர்களுடைய விவாதத்தினால் பொதுவான கருத்து எதுவும் உண்டாகவில்லை. ஆலோசனைச்சங்கம் முடிவில் குழப்பத்துடன் கலைந்து செல்கிறது. ஆலோசனைச்சங்கத்தார் எல்லோரும் குழப்பத்தோடு தங்கள் தங்கள் வீட்டிற்குத் திரும்பிப் போகிறார்கள். இவர்களுடைய துன்மார்க்கமான ஆலோசனை நிக்கொதேமுவின் ஞானமுள்ள வார்த்தையினால் நிறைவேறாமல் போகிறது. நிக்கொதேமுவின் ஆலோசனையை ஏற்றுக்கொள்ளவும் இவர்களுக்கு மனதில்லை. ஏனெனில் அவனுடைய கேள்விக்கு ஆலோசனைச்சங்கத்தாரால் சரியான பதிலைக் கூறமுடியவில்லை.

## அதிகாரம் - 8

விபசாரத்திலே கண்டுபிடிக்கப்பட்ட ஸ்திரீயை இயேசுகிறிஸ்துவிடத்தில் கொண்டு வருகிறார்கள் (யோவா 8:1-11). இயேசுகிறிஸ்து தேவாலயத்தில் தருமப்பெட்டி இருக்கிற இடத்தில் யூதர்களுக்குச் சொன்ன உபதேசங்கள். இயேசுகிறிஸ்து இந்த உலகத்திற்கு ஒளியாயிருக்கிறார் (யோவா 8:12-20). இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்காத யூதர்கள் அழிந்துபோவார்கள் (யோவா 8:21-30). அடிமைத்தனமும் விடுதலையும் (யோவா 8:31-37). தம்முடைய பிதாவும் அவர்களுடைய பிதாவும் (யோவா 8:38-47). யூதர்களுடைய தூஷணமான நிந்தனைகளுக்கு இயேசுகிறிஸ்து கூறிய பிரதியுத்தரம் (யோவா 8:48-50). இயேசுகிறிஸ்துவின் வார்த்தையை கைக்கொண்டவர்களுக்கு கிடைக்கும் ஆசீர்வாதங்கள்(யோவா 8:51-59).

**விபசாரத்திலே கண்டுபிடிக்கப்பட்ட ஸ்திரீ**
**யோவா 8 : 1-11**

**யோவா 8:1. இயேசு ஒலிவமலைக்குப் போனார்.**

**யோவா 8:2. மறுநாள் காலையிலே அவர் திரும்பி தேவாலயத்திற்கு வந்தபோது, ஜனங்களெல்லாரும் அவரிடத்தில் வந்தார்கள். அவர் உட்கார்ந்து அவர்களுக்கு உபதேசம்பண்ணினார்.**

**யோவா 8:3. அப்பொழுது விபசாரத்திலே கண்டுபிடிகப்பட்ட ஒரு ஸ்திரீயை வேதபாரகரும் பரிசேயரும் அவரிடத்தில் கொண்டு வந்து, அவளை நடுவே நிறுத்தி:**

**யோவா 8:4. போதகரே, இந்த ஸ்திரீ விபசாரத்தில் கையும் மெய்யுமாய்ப் பிடிக்கப்பட்டாள்.**

**யோவா 8:5. இப்படிப்பட்டவர்களைக் கல்லெறிந்து கொல்லவேண்டுமென்று மோசே நியாயப்பிரமாணத்தில் நமக்குக் கட்டளையிட்டிருக்கிறாரே, நீர் என்ன சொல்லுகிறீர் என்றார்கள்.**

**யோவா 8:6. அவர்மேல் குற்றஞ்சுமத்துவதற்கான காரணம் உண்டாகும்பொருட்டு அவரைச் சோதிக்கும்படி இப்படிச் சொன்னார்கள். இயேசுவோ குனிந்து, விரலினால் தரையிலே எழுதினார்.**

**யோவா 8:7. அவர்கள் ஓயாமல் அவரைக் கேட்டுக் கொண்டிருக்கையில், அவர் நிமிர்ந்து பார்த்து: உங்களில் பாவமில்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக்கடவன் என்று சொல்லி,**

**யோவா 8:8. அவர் மறுபடியும் குனிந்து, தரையிலே எழுதினார்.**

**யோவா 8:9. அவர்கள் அதைக் கேட்டு, தங்கள் மனச்சாட்சியினால் கடிந்து கொள்ளப்பட்டு, பெரியோர்முதல் சிறியோர்வரைக்கும் ஒவ்வொருவராய்ப் போய்விட்டார்கள். இயேசு தனித்திருந்தார், அந்த ஸ்திரீ நடுவே நின்றாள்.**

**யோவா 8:10. இயேசு நிமிர்ந்து அந்த ஸ்திரீயைத் தவிர வேறொருவரையுங் காணாமல்: ஸ்திரீயே, உன்மேல் குற்றஞ்சாட்டினவர்கள் எங்கே? ஒருவனாகிலும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவில்லையா என்றார்.**

**யோவா 8:11. அதற்கு அவள்: இல்லை ஆண்டவரே, என்றாள். இயேசு அவளை நோக்கி: நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை; நீ போ, இனிப் பாவஞ் செய்யாதே என்றார்.**

**ஒலிவமலைக்குப்போனார்**

**இயேசு ஒலிவமலைக்குப் போனார் (யோவா 8:1).**

மாலைவேளையிலே இயேசுகிறிஸ்து எருசலேம் நகரத்தைவிட்டு ஓய்வெடுப்பதற்காக ஒலிவமலைக்குப் போகிறார். எருசலேம் நகரத்தில் ஒருவேளை இயேசுகிறிஸ்துவுக்கு யாரும் சிநேகிதராக இல்லாமல் இருக்கலாம். அல்லது இயேசுகிறிஸ்துவை தங்கள் வீட்டில் தங்க வைத்து விருந்து உபசரிப்பதற்கு கருணை உள்ளம் கொண்டவர்கள் அங்கு இல்லாமல் இருக்கலாம். அல்லது இயேசுகிறிஸ்துவை தங்கள் வீடுகளில் தங்க வைப்பதினால் ஆலோசனைச்சங்கத்தார் மூலமாக தங்களுக்கு பிரச்சனைகள் உண்டாகலாம் என்று பயந்து அவர்கள் இயேசுவை தங்கள் வீடுகளில் ஏற்றுக்கொள்ளாமல் இருந்திருக்கலாம்.

## அதிகாரம் - 8

இயேசு கிறிஸ்துவை துன்பப்படுத்துகிறவர்கள் எல்லோரும் தங்கள் தங்கள் வீடுகளுக்குப் போகிறார்கள் (யோவா 7:53). ஆனால் துன்பப்படுத்தப்படும் இயேசுகிறிஸ்துவோ தங்குவதற்கு வீடு இல்லாதவராக ஒலிவமலைக்குப் போகிறார். பகல்வேளையில் இயேசுகிறிஸ்து தேவாலயத்தில் எல்லோருக்கும் முன்பாக, வெளிப்படையாக ஊழியம் செய்கிறார். தம்மை மனப்பூர்வமாக யூதருக்கு வெளிப்படுத்துகிறார். ஆனால் இரவு வேளையிலோ, அவர் நகரத்தைவிட்டு வெளியேறி, ஒலிவமலையில் தனிமையில் தங்கியிருக்கிறார்.

### தேவாலயத்தில் உபதேசம்

**மறுநாள் காலையிலே அவர் திரும்பி தேவாலயத்திற்கு வந்தபோது, ஜனங்களெல்லாரும் அவரிடத்தில் வந்தார்கள். அவர் உட்கார்ந்து அவர்களுக்கு உபதேசம்பண்ணினார் (யோவா 8:2).**

மறுநாள் காலையில் இயேசுகிறிஸ்து தேவாலயத்திற்கு திரும்பி வருகிறார். அதிகாலை வேளையிலேயே அவருடைய ஊழியம் ஆரம்பமாயிற்று. ஓய்வில்லாமல், தலைசாய்க்க நேரமில்லாமல் இயேசுகிறிஸ்து ஊழியம் செய்துகொண்டிருக்கிறார். இயேசுகிறிஸ்து ஜனங்களுக்கு உபதேசம் பண்ணுவதில் மூன்று காரியங்களை கவனித்துப் பார்க்கவேண்டும். அவையாவன : 1. நேரம் 2. இடம் 3. விதம்.

இயேசுகிறிஸ்து அதிகாலையில் உபதேசம்பண்ணுகிறார். நாம் அன்றாட வாழ்க்கையை ஆரம்பிப்பதற்கு முன்பாக, தேவனுடைய சமுகத்தில் அமர்ந்திருக்கவேண்டும். நம்முடைய சரீரத்திற்காக வேலை செய்வதற்கு முன்பாக, நம்முடைய ஆத்துமாவைத் தேவனுடைய பிரசன்னத்தில் சமர்ப்பிக்க வேண்டும். யூதர்கள் அதிகாலை வேளையிலேயே, தங்களுடைய அன்றாட வேலைகளை ஆரம்பிப்பதற்கு முன்பாகவே, தேவாலயத்திற்கு வருகிறார்கள்.

இயேசுகிறிஸ்து தேவாலயத்தில் உபதேசம் பண்ணுகிறார். இது புனிதமான இடம். அதுமாத்திரமல்ல தேவாலயத்தில் ஏராளமான ஜனங்கள் அமர்ந்து இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்க முடியும். அவர் உபதேசம்பண்ணும்போது உட்கார்ந்து அவர்களுக்கு உபதேசம்பண்ணுகிறார். உட்கார்ந்து உபதேசம்பண்ணுவது இயேசுகிறிஸ்துவின் அதிகாரத்தைக் காண்பிக்கிறது.

இயேசுகிறிஸ்து அதிகாலையிலே தேவாலயத்திற்கு வந்தபோது, ஜனங்களெல்லோரும் அவரிடத்தில் வருகிறார்கள். இயேசுகிறிஸ்துவையும், அவருடைய பிரசங்கத்தையும், அவருடைய வார்த்தைகளை கேட்பவர்களையும் பரிசேயரும் பிரதான ஆசாரியரும் விரும்பவில்லை. ஆனால் ஜனங்களோ எதிர்ப்புக்கு மத்தியிலும் இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்பதற்கு கூடிவருகிறார்கள். இயேசு அவர்களுக்கு உபதேசம் பண்ணுகிறார். இந்த ஜனங்கள் தம்மீது கோபமாக இருந்தாலும் இயேசுகிறிஸ்து தம்முடைய கிருபையுள்ள வார்த்தைகளை அவர்களுக்கு அன்போடு உபதேசம்பண்ணுகிறார்.

### வேதபாரகரும் பரிசேயரும்

**அப்பொழுது விபசாரத்திலே கண்டுபிடிக்கப்பட்ட ஒரு ஸ்திரீயை வேதபாரகரும் பரிசேயரும் அவரிடத்தில் கொண்டு வந்து, அவளை நடுவே நிறுத்தி: (யோவா 8:3)**

இயேசுகிறிஸ்து தேவாலயத்தில் ஜனங்களுக்கு உபதேசம்பண்ணிக் கொண்டிருக்கும்போது, விபசாரத்திலே கண்டுபிடிக்கப்பட்ட ஒரு ஸ்திரீயை வேதபாரகரும் பரிசேயரும் அவரிடத்தில் கொண்டுவந்து அவளை நடுவே நிறுத்துகிறார்கள். இயேசுகிறிஸ்துவின்மேல் குற்றம் சுமத்துவதற்கான காரணம் உண்டாகும் பொருட்டு, அவரைச் சோதிக்கும்படி இப்படிச் செய்கிறார்கள்.

## அதிகாரம் - 8

யூதருடைய பிரமாணத்தின்படி விபசாரத்திலே கண்டுபிடிக்கப்பட்ட ஒரு ஸ்திரீயைக் கல்லெறிந்து கொல்ல வேண்டும். இந்த ஸ்திரீக்கு என்ன தண்டனை கொடுக்கவேண்டும் என்று இவர்களுக்குத் தெரியும். என்றாலும் தேவாலயத்திலே இயேசுகிறஸ்து ஏராளமான ஜனங்களுக்கு உபதேசம் பண்ணிக்கொண்டிருக்கும்போது, இவர்கள் இந்த ஸ்திரீயை அவரிடத்தில் கொண்டுவந்து, அவளை நடுவே நிறுத்துகிறார்கள். இயேசுகிறிஸ்துவின் தீர்ப்புக்கு இந்த ஸ்திரீயை ஒப்புக் கொடுப்பதுபோல அவளை இங்கு அழைத்து வந்திருக்கிறார்கள்.

**போதகரே**

**போதகரே, இந்த ஸ்திரீ விபசாரத்தில் கையும் மெய்யுமாய்ப் பிடிக்கப்பட்டாள். (யோவா 8:4,).**

பரிசேயரும் வேதபாரகரும் இயேசுகிறிஸ்துவை "போதகரே" என்று அழைக்கிறார்கள். ஒரு நாளுக்கு முன்புதான் அவரை "வஞ்சிக்கிறவர்" என்று தூஷித்தார்கள். இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாக நிறுத்தப்பட்டிருக்கிற ஸ்திரீ விபசாரத்தில் கையும் மெய்யுமாய் பிடிக்கப்பட்டிருக்கிறாள். பாவத்திற்கு விரோதமாக தாங்கள் பக்திவைராக்கியமாக இருப்பதாக பரிசேயர்கள் காண்பிக்கிறார்கள். ஆனால் தங்களுடைய ஜீவியத்திலோ இவர்களும் பாவம் செய்கிறவர்கள் தான். இவர்கள் பாவத்தைவிட்டு விலகி ஜீவிப்பதில்லை. இப்படித்தான் இக்காலத்தில் அநேகர் மற்றவர்கள்மீது குற்றம் சுமத்துகிறார்கள். ஆனால் தங்களிடத்திலுள்ள குற்றங்களை இவர்கள் சிந்தித்துப் பார்ப்பதில்லை.

இந்த ஸ்திரீ விபசாரம் செய்திருக்கிறாள் என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. விபசாரத்தில் இவள் கையும் மெய்யுமாய்ப் பிடிக்கப்பட்டிருக்கிறாள். ஒரு சிலர் மறைவாக யாருக்கும் தெரியாமல் பாவம் செய்து கொண்டிருப்பார்கள். அவர்களை பாவம் வெளிச்சத்திற்கு வரும்போதுதான் அவர்களுடைய நிலமை மிகவும் பரிதாபமாக இருக்கும். தங்களுக்கு பிரச்சனை உண்டாகும்போதுதான் தேவனுடைய கிருபையையும் இரக்கத்தையும் விரும்புவார்கள். ஒருவேளை நாம் செய்த பாவத்தினிமித்தமாக நாம் வெட்கப்படலாம். ஆனாலும் நாம் பாவத்தில் அழிந்து போகக்கூடாது. தங்களுடைய பாவத்தைக்குறித்து வெட்கப்படுகிறவர்கள் மனந்திருந்த வேண்டும். இனிமேல் அதுபோன்று பாவம் செய்யக்கூடாது என்று தீர்மானிக்கவேண்டும்.

**கல்லெறிந்து கொல்ல வேண்டும்**

**இப்படிப்பட்டவர்களைக் கல்லெறிந்து கொல்லவேண்டுமென்று மோசே நியாயப்பிரமாணத்தில் நமக்குக் கட்டளையிட்டிருக்கிறாரே, நீர் என்ன சொல்லுகிறீர் என்றார்கள் (யோவா 8:5).**

பரிசேயரும் வேதபாரகரும் விபசாரத்தில் பிடிக்கப்பட்ட ஸ்திரீயை இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாக கொண்டு வந்தது மட்டுமல்லாமல், அவளுக்கு என்ன தண்டனை கொடுக்க வேண்டும் என்றும் ஆலோசனை கூறுகிறார்கள். இப்படிப்பட்டவளை கல்லெறிந்து கொல்ல வேண்டுமென்று மோசே நியாயப்பிரமாணத்தில் தங்களுக்கு கட்டளையிட்டிருப்பதாக அறிவிக்கிறார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் மத்தியில் விபசாரம் மிகவும் கொடிய பாவமாகக் கருதப்படுகிறது. இது தேவன் நியமித்துள்ள தெய்வீக விவாக ஐக்கியத்திற்கு விரோதமான பாவம். மனுஷன் விபசாரம் செய்து தன்னுடைய ஆவியையும், ஆத்துமாவையும், சரீரத்தையும் கெடுத்துப்போடுகிறான்.

மோசே விபசாரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஸ்திரீக்கு இப்படிப்பட்ட தண்டனையை நியமித்திருக்கிறார். இவளுக்கு இயேசுகிறிஸ்து என்ன தீர்ப்புக் கொடுக்கப்போகிறார் என்பதை அறிந்துகொள்வதில் இவர்கள் ஆவலாயிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவிடம் "நீர் என்ன சொல்லுகிறீர்" என்று கேட்கிறார்கள்.இயேசுகிறிஸ்து பழைய பிரமாணங்களையெல்லாம் நீக்கிப்போட்டு, புதிய பிரணமாணங்களை கொடுப்பாரோ என்று எதிர்பார்க்கிறார்கள். இயேசுகிறிஸ்துவிடம் இவர்கள் இந்தக் கேள்வியை உண்மையான மனதோடு கேட்டிருந்தால், மெய்யாகவே இவர்களுடைய கேள்வி நல்ல கேள்விதான். ஆனால் இவர்களோ உள்ளத்தில் வஞ்சனையோடு, இயேசுவின்மீது குற்றம் சுமத்தவேண்டும் என்பதற்காகவே இப்படிப்பட்ட கேள்வியைக் கேட்கிறார்கள்.

## அதிகாரம் - 8

### இயேசுவைச் சோதிக்கும்படி.

**அவர்மேல் குற்றஞ்சுமத்துவதற்கான காரணம் உண்டாகும்பொருட்டு அவரைச் சோதிக்கும்படி இப்படிச் சொன்னார்கள். இயேசுவோ குனிந்து, விரலினால் தரையிலே எழுதினார் (யோவா 8:6).**

வேதபாரகரும் பரிசேயரும் உண்மையான மனதோடு இயேசுகிறிஸ்துவிடம் கேள்வி கேட்கவில்லை அவர்மேல் குற்றம் சுமத்துவதற்கான காரணம் உண்டாகும் பொருட்டு அவரைச் சோதிக்கும்படி இப்படி கேட்கிறார்கள். இயேசுகிறிஸ்து மோசேயின் பிரமாணத்தில் கூறப்பட்டுள்ள தண்டனையை அங்கீகரிப்பாரென்றால், இயேசு தம்முடைய உபதேசத்தில் முரண்பாடுள்ளவரென்று அவர்மேல் குற்றம் சுமத்துவார்கள். ஏனெனில் இயேசுகிறிஸ்து ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் சிநேகிதராக இருக்கிறார்.

இயேசுகிறிஸ்துவிடம் மேசியாவின் சுபாவம் இருக்கிறது. அவர் மனத்தாழ்மையுள்ளவர். கிருபையும் இரக்கமும் நிறைந்தவர். மனந்திரும்புகிற பாவிகளுக்கு இரட்சிப்பைக் கொடுக்கிறவர். விபசாரத்தில் பிடிக்கப்பட்ட ஸ்திரீயை இயேசுகிறிஸ்து தண்டிக்காமல் விடுதலை செய்து விட்டுவிட்டால், இயேசு மோசேயின் பிரமாணத்திற்கு சத்துருவாக இருக்கிறார் என்று கூறுவார்கள். அவர் பாவிகளுக்கு சிநேகிதராக இருக்கிறபடியினால், அவர்களுடைய பாவத்தையும் சிநேகிக்கிறார் என்று அவர்மீது குற்றம் சுமத்துவார்கள். நாம் பரிசுத்தமாக ஜீவித்து தேவனுடைய ஊழியத்தை செய்யும்போது, நம்முடைய வார்த்தைகளைக் குறித்து மிகவும் கவனமாக இருக்கவேண்டும். சாத்தான் நம்மை கண்ணியில் விழ வைப்பதற்கு இதுபோல முயற்சிபண்ணுவான்.

வேதபாரகரும் பரிசேயரும் தம்மிடத்தில் கூறுவதை இயேசுகிறிஸ்து கவனித்துக் கேட்கிறார். ஆனால் அவர்களுக்குப் பதில் ஒன்றும் சொல்லவில்லை. அவர்கள் கூறுவதை இயேசுகிறிஸ்து கவனித்துக் கேட்காமல் தம்முடைய செவியை அடைத்துக் கொள்வதுபோல தெரிகிறது. இயேசு அவர்களுக்குப் பதில் ஒன்றும் சொல்லாமல் குனிந்து விரலினால் தரையிலே எழுதுகிறார். இயேசுகிறிஸ்து தரையிலே என்ன எழுதினார் என்று இங்கு வெளிப்படுத்தப்படவில்லை. ஆகையினால் இதைப்பற்றி தேவையில்லாமல் ஆராய்ச்சி செய்ய வேண்டிய அவசியமில்லை. இயேசுகிறிஸ்து தரையிலே எழுதிய சம்பவம் இந்த சுவிசேஷத்தில் மாத்திரமே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

நமக்கு முன்பாக கடினமான கேள்விகள் கேட்கப்படும்போது நாம் உடனடியாக பிரதியுத்தரம் கூறக்கூடாது. அமைதி காக்கவேண்டும். பேசுவதற்குத் தாமதமாய் இருக்கவேண்டும். அவசரப்பட்டு வார்த்தைகளைக் கொட்டிவிடக்கூடாது. நாம் ஒருமுறை பேசுவதற்கு முன்பாக இருமுறை யோசிக்கவேண்டும். விபசாரத்தில் பிடிக்கப்பட்ட ஸ்திரீக்கு என்ன தண்டனை கொடுக்கவேண்டுமென்று பரிசேயரும் வேதபாரகரும் இயேசுவிடத்தில் கேட்டபோது, அவர் காதுகேளாததுபோல இருப்பதாக தெரிகிறது. ஆனால் நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் காதுகள் செவிட்டுக் காதுகளல்ல. அவர் செவிடர்களுக்குக் கேட்கும் திறமையைக் கொடுக்கிறவர். பரிசேயரும் வேதபாரகரும் தம்மிடத்தில் கேட்பதற்கு முன்பாகவே, அவர்கள் வாயிலிருந்து வார்த்தைகள் புறப்படுவதற்கு முன்பாகவே, அவர்களுடைய இருதயத்தின் எண்ணங்களை இயேசுகிறிஸ்து அறிந்து வைத்திருக்கிறார்.

### உங்களில் பாவமில்லாதவன்

**அவர்கள் ஓயாமல் அவரைக் கேட்டுக் கொண்டிருக்கையில், அவர் நிமிர்ந்து பார்த்து: உங்களில் பாவமில்லாதவன் இவன்மேல் முதலாவது கல்லெறியக்கடவன் என்று சொல்லி, (யோவா 8:7)**

குற்றம் சாட்டப்பட்டிருக்கும் ஸ்திரீக்கு தண்டனை கொடுக்கும் பொறுப்பை குற்றம் சாட்டியவர்களிடமே இயேசுகிறிஸ்து கொடுத்துவிடுகிறார். அந்த ஸ்திரீக்கு என்ன தண்டனை கொடுக்கலாமென்று வேதபாரகரும் பரிசேயரும் இயேசுவிடத்தில் கேட்கிறார்கள். இயேசுவோ பதில் ஒன்றும் பேசாமல் குனிந்து விரலினால் தரையிலே எழுதிக் கொண்டிருக்கிறார். ஆனால் அவர்களோ சும்மாயிருக்காமல், ஓயாமல் அவரைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். தாங்கள் கேட்கும் கேள்விக்கு இயேசுகிறிஸ்து பதில் பேசாமல் அமைதியாக இருப்பது இவர்களுக்குப் பிடிக்கவில்லை. அவரிடத்தில் எப்படியாவது ஒரு பதிலைப் பெற்றுக் கொண்டு அவர்மேல் குற்றம் சுமத்துவதற்கான காரணத்தை உண்டாக்க வேண்டுமென்று வைராக்கியத்தோடிருக்கிறார்கள்.

## அதிகாரம் - 8

இயேசுகிறிஸ்துவோ அவர்களுடைய எண்ணங்களை அறிந்திருக்கிறார். ஓயாமல் கேட்டுக்கொண்டிருக்கும்போது, அதற்குமேலும் அவர்கள் தம்மிடத்தில் கேட்கக்கூடாதவாறு, இயேசுகிறிஸ்து தம்முடைய வார்த்தையை அங்கு அறிவிக்கிறார். இயேசுகிறிஸ்துவின் வார்த்தையினால் அவர்களுடைய துன்மார்க்கமான திட்டத்திற்கு பிரச்சனை உண்டாயிற்று. அவர்களுடைய மாய்மாலமான உள்மனது இப்போது இயேசுவின் வார்த்தையினால் வெளிப்படுத்தப்படுகிறது.

இயேசுகிறிஸ்து தம்முடைய வாயின் ஒரே வார்த்தையினால், தம்மிடத்தில் ஓயாமல் கேட்டுக்கொண்டிருந்த பரிசேயரையும் வேதபாரகரையும் வாயடைக்கச் செய்கிறார். இயேசுகிறிஸ்து நிமிர்ந்து பார்த்து "உங்களில் பாவமில்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக்கடவன்" என்று அவர்களிடம் கூறுகிறார். மோசேயின் நியாயப்பிரமாணத்தையும் இயேசுகிறிஸ்து குறைவாக மதிப்பிட்டுக் கூறவில்லை. அதே வேளையில் விபசாரத்தில் பிடிக்கப்பட்ட ஸ்திரீயையும் உடனே மன்னித்து அனுப்பிவிடவில்லை. அதற்குப் பதிலாக குற்றம் சாட்டப்பட்டவளுக்கு தண்டனையை அறிவிக்கிறார். ஆனால் தண்டனையை யார் நிறைவேற்றுவது என்பதில் பிரச்சனை உண்டாயிற்று. குற்றம் சாட்டியவர்களின் வேகம் குறைந்துபோயிற்று.

நாம் ஒரு காரியத்தைக்குறித்து நேர்மையாக பேசும்போது, அதற்கு அதிக தடைகளும் எதிர்ப்புக்களும் உண்டானால், அதை நேரடியாய் பேசாமல், சற்று சுற்றி வளைத்து பேசவேண்டும். அப்படிப் பேசுவதினால் தவறில்லை. நாம் பேச வேண்டிய செய்தியை எப்படியாவது தெளிவாகவும் குழப்பமில்லாமலும் பேசவேண்டும். இயேசுகிறிஸ்துவின்மீது குற்றம் சுமத்தவேண்டும் என்னும் நோக்கத்தோடு வேதபாரகரும் பரிசேயரும் அவரிடத்தில் வந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களோ இயேசுகிறிஸ்துவின் வார்த்தையினால் அவர்கள் தங்களைத் தாங்களே குற்றப்படுத்திக்கொள்கிறார்கள்.

மோசேயின் பிரமாணத்தில் குற்றவாளிக்கு என்ன தண்டனை நியமிக்கப்பட்டிருக்கிறதோ அதைக் கொடுக்கலாம் என்று இயேசுகிறிஸ்து அங்கீகரிக்கிறார். குற்றவாளிக்கு எப்படி தண்டனை கொடுக்கவேண்டுமென்று மோசே தெளிவாகக் கூறியிருக்கிறார். "சாவுக்குப் பாத்திரமானவன் இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினால் கொலைசெய்யப்படக் கடவன்; ஒரே சாட்சியினுடைய வாக்கினால் அவன் கொலைசெய்யப்படலாகாது. அவனைக் கொலைசெய்கிறதற்குச் சாட்சிகளுடைய கைகள் முந்தியும் எல்லா ஜனங்களுடைய கைகள் பிந்தியும் அவன் மேல் இருப்பதாக; இப்படியே தீமையை உன் நடுவிலிருந்து விலக்கக்கடவாய்" (உபா 17:6,7).

குற்றவாளியின்மீது கல்லெறிவதற்கு சாட்சிகளுடைய கைகள் முந்தியிருக்க வேண்டும். ஸ்தேவானை கல்லெறிந்து கொன்றபோது, சாட்சிகளின் கைகள் முந்தி நின்றது (அப் 7:58). அதுபோலவே விபசாரத்தில் பிடிக்கப்பட்ட இந்த ஸ்திரீயின்மீது கல்லெறியும்போது, சாட்சியின் கைகள் முந்தியிருக்க வேண்டுமென்று, மோசேயின் பிரமாணத்தின்படி இயேசுகிறிஸ்து கூறுகிறார்.

மோசே தங்களுக்குக் கூறிய நியாயப்பிரமாணத்தின்படியே, வேதபாரகரும் பரிசேயரும் விபசாரத்தில் பிடிக்கப்பட்ட ஸ்திரீக்கு தண்டனை கொடுக்கவேண்டும் என்று கூறுகிறார்கள். தங்களுடைய கைகளினால் அந்த ஸ்திரீயை கொல்ல வேண்டுமென்று இவர்கள் கூடிவந்தார்கள். ஆனால் இப்போதோ தங்களுடைய நாவின் வார்த்தையினால் கைகள் கட்டப்பட்டவர்களாக இருக்கிறார்கள். ஒருவர்மீது குற்றம் சுமத்துவது எளிது. ஆனால் குற்றமில்லாமல் ஜீவிப்பதுதான் கடினம். மற்றவர்களைக் குற்றவாளிகளாகத் தீர்க்கிறவர்கள், தாங்களும் குற்றமற்றவர்களாக இருக்கவேண்டும். பரிசேயரும் வேதபாரகரும் மற்றவர்கள்மீது குற்றம் சுமத்துகிறார்கள். ஆனால் இவர்களோ அதே குற்றங்களைத் தாங்களும் செய்து குற்றவாளிகளாக இருக்கிறார்கள்.

## அதிகாரம் - 8

இயேசுகிறிஸ்து அவர்களைப்பார்த்து "உங்களில் பாவமில்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக்கடவன்" என்று கூறுகிறார். நாம் எப்போதெல்லாம் மற்றவர்கள்மீது குற்றம் சுமத்துகிறோமோ, அப்போதெல்லாம் நம்முடைய இருதயத்தையும் ஆராய்ந்து பார்க்கவேண்டும். பல சமயங்களில் மற்றவர்கள்மீது நாம் குற்றம் சுமத்தும்போது, அவர்களுடைய குற்றங்கள் வெளிப்படுவதைவிட, நம்முடைய குற்றங்களே வெளிப்படுத்தப்படும். நாம் பாவத்தை சிநேகிக்கக்கூடாது. ஆனால் பாவிகளை சிநேகிக்கவேண்டும். நம்முடைய பாவசுபாவத்தைச் சிந்தித்துப் பார்த்து, பாவிகள்மீது நாமும் மனதுருக்கமாக இருக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவின் இந்த வார்த்தை நமக்கும் எச்சரிப்பாகக் கூறப்பட்டிருக்கிறது. மற்றவர்கள்மீது நாம் குற்றம் சுமத்தும்போது, இயேசுவின் இந்த வார்த்தைகளை நமது இருதயத்தில் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

மற்றவர்களைக் குற்றப்படுத்துகிறவர்கள் பொதுவாகத் தங்களைப் பரிசுத்தவான்களாக நினைத்துக் கொள்வார்கள். மற்றவர்களைப் போலத் தாங்கள் தஸ்று செய்யவில்லையென்றும், தாங்கள் பரிசுத்தமாக ஜீவிப்பதாகவும் தங்களுக்குத் தாங்களே பெருமையாக நினைத்துக் கொள்வார்கள். இருதயத்தில் சுயபெருமையோடும், சுயபரிசுத்தத்தோடும் சிந்தித்துக்கொண்டிருக்கும் ஜனங்களைப் பார்த்து "உங்களில் பாவமில்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக்கடவன்" என்று இயேசு கூறுகிறார். அவள்மீது கல்லெறிய முடியவில்லையென்றால், அந்த ஸ்திரீயைப்போலவே அவர்களும் குற்றவாளிகளாகவே இருக்கிறார்கள். அந்த ஸ்திரீயைப்போல இவர்களுக்கும் தண்டனை கொடுக்கப்படவேண்டும். அந்த ஸ்திரீயைப்போலவே குற்றம் செய்திருக்கிற இவர்கள் தண்டனையிலிருந்து தப்பித்து சுதந்தரமாக அலைந்துகொண்டிருக்கிறார்கள். ஆகையினால் இவர்கள் அந்த ஸ்திரீயையும், இவர்களுடைய நியாயத்தின் பிரகாரம் தண்டிக்காமல் தங்களைப்போலவே சுதந்தரமாக விட்டுவிடவேண்டும்.

குற்றம் செய்தவன் மனந்திருந்த வேண்டும் என்பதையும், பாவியின்மீது தாம் கிருபையும் இரக்கமும் காண்பிப்பதையும் இயேசுகிறிஸ்து தம்முடைய வார்த்தையின் மூலமாக இங்கு தெளிவுபடுத்துகிறார். குற்றம் சுமத்தப்பட்ட ஸ்திரீயின்மீது மாத்திரமல்ல, குற்றம் சாட்டிய பரிசேயர்மீதும் வேதபாரகர்மீதும் இயேசுகிறிஸ்து இரக்கம் மிகுந்தவராக இருக்கிறார். அவர்கள் இயேசுகிறிஸ்துவைக் கண்ணியில் சிக்க வைக்கவேண்டுமென்று முயற்சி செய்கிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ அவர்களுடைய பாவங்களை அவர்களுக்கு உணர்த்தி, தங்கள் பாவங்களிலிருந்து மனந்திருந்துவதற்கு உதவிசெய்கிறார்.

### மறுபடியும் தரையில் எழுதினார்

**அவர் மறுபடியும் குனிந்து, தரையிலே எழுதினார் (யோவா 8:8).**

விபசாரத்திலே கண்டுபிடிக்கப்பட்ட ஸ்திரீயைத் தம்மிடத்தில் கொண்டு வந்தவர்களை நோக்கி "உங்களில் பாவமில்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக்கடவன்" என்று இயேசு கூறுகிறார். தம்முடைய வார்த்தையை யோசித்துப் பார்ப்பதற்கு இயேசுகிறிஸ்து அவர்களுக்கு சிறிது நேரம் அவகாசம் கொடுக்கிறார். அப்போது மறுபடியும் குனிந்து தரையிலே எழுதுகிறார். இயேசுகிறிஸ்து எழுதிய எழுத்துக்கள் அவர்களுடைய இருதயத்தின் ஆழத்தில் எழுதப்படுகிறது.

இயேசுவின் எழுத்துக்கள் அவர்களுடைய மனச்சாட்சியோடு பேசுகிறது. இயேசுகிறிஸ்து தரையில் எழுதியதன் விவரம் தமிழ்மொழியிலுள்ள வேதாகமத்தில் அறிவிக்கப்படவில்லை. ஆயினும் கிரேக்க பாஷையில் எழுதப்பட்டிருக்கும் ஒரு சில சுவடிகளில், இந்த சம்பவம் மேலும் விவரமாக எழுதப்பட்டிருக்கிறது. அங்கு கூடியிருக்கிற ஒவ்வொருவருடைய பாவங்களையும் இயேசுகிறிஸ்து தரையிலே எழுதினார் என்று கிரேக்க பாஷை புதிய ஏற்பாட்டில் நாம் வாசிக்கலாம். மனுஷருடைய பாவங்களை மணலின்மீது எழுதப்படுவதில்லை. "யூதாவின் பாவம் இரும்பு எழுத்தாணியினாலும், வைரத்தின் நுனியினாலும் எழுதப்பட்டிருக்கிறது" (எரே 17:1). இந்தப் பாவங்கள் மன்னிக்கப்படும் வரையிலும் தேவன் இவற்றை ஒருபோதும் மறந்துபோகமாட்டார்.

## அதிகாரம் - 8

**மனச்சாட்சி**

**அவர்கள் அதைக் கேட்டு, தங்கள் மனச்சாட்சியினால் கடிந்துகொள்ளப்பட்டு, பெரியோர்முதல் சிறியோர்வரைக்கும் ஒவ்வொருவராய்ப் போய்விட்டார்கள். இயேசு தனித்திருந்தார், அந்த ஸ்திரீ நடுவே நின்றாள் (யோவா 8:9).**

இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள் பரிசேயருடைய உள்ளத்திலும் வேதபாரகருடைய உள்ளத்திலும் பதிந்துள்ளது. இவர்கள் இயேசுகிறிஸ்துவைச் சோதித்து அவர்மீது குற்றம் சுமத்துவதற்காக வந்தார்கள். ஆனால் இவர்களோ இப்போது இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளினால் குற்றவாளிகளாக தலைகுனிந்து நிற்கிறார்கள். தங்களுடைய மனச்சாட்சியினால் கடிந்து கொள்ளப்படுகிறார்கள். விபசாரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஸ்திரீயைக் கல்லெறிந்து கொல்லவேண்டுமென்று கோபத்தோடு வந்தவர்கள், இப்போது தாங்களே குற்றவாளிகளாகக் திரும்பிப்போகிறார்கள். அந்த ஸ்திரீயின்மீது கல்லெறிவதற்கு ஒருவரும் முயற்சிபண்ணவில்லை. அவர்கள் எல்லோரும், பெரியோர் முதல் சிறியோர் வரைக்கும் ஒவ்வொருவராய்த் திரும்பிப் போகிறார்கள்.

ஒருவேளை இயேசுகிறிஸ்து தரையிலே எழுதிய எழுத்துக்கள் அவர்களுக்கு பயத்தைக் கொடுத்திருக்கலாம். தேவனுடைய விரல் சுவற்றிலே எழுதியபோது பெல்ஷாத்சார் ராஜா மிகவும் பயப்பட்டான். பாவம் செய்தவர்களுக்குத்தான் பயம் உண்டாகும். மடியில் கனம் இருந்தால்தான் வழியில் பயம் உண்டாகும். கர்த்தருடைய எழுத்துகளைக் குறித்துப் பயப்படுவதற்கு காரணமும் அவசியமுமில்லாதவர்கள் மெய்யாகவே பாக்கியவான்கள்.

இயேசுகிறிஸ்து பேசிய வார்த்தையும், அவர் எழுதிய எழுத்தும் ஜனங்களுடைய மனச்சாட்சியை உணர்த்துகிறது. தங்களுடைய பாவங்களினால் இவர்கள் தங்கள் மனச்சாட்சியினால் கடிந்து கொள்ளப்படுகிறார்கள். இயேசுகிறிஸ்து இவர்களை நேரடியாகக் கடிந்து கொள்ளவில்லையென்றாலும், இவர்களுடைய சொந்த மனச்சாட்சியே இவர்களைக் கடிந்துகொள்கிறது. இயேசுகிறிஸ்து குனிந்து தரையிலே எழுதுவதை, அங்கு கூடியிருக்கும் ஜனங்கள் வாசித்தபோது அவர்களுக்கு மிகுந்த பயமுண்டாயிற்று. தாங்கள் ரகசியமாக செய்த பாவங்களை இயேசுகிறிஸ்து உலகத்திற்கு வெளியரங்கமாக அறிவித்துவிடுவாரோ என்னும் பயம் அவர்களுக்கு உண்டாயிற்று. ஆகையினால் அவர்கள் ஒவ்வொருவராக அந்த இடத்தை விட்டுப் போகிறார்கள். வெட்கமடைந்தவர்களாக, அவமானத்தைச் சுமக்கிறவர்களாக, அந்த இடத்தைவிட்டு மிகவும் அமைதியாக தலை குனிந்தவாறு போகிறார்கள்.

அவர்கள் ஒவ்வொருவராகப் போகும்போது, முதலில் பெரியோர் போவதாகவும், அவர்களைத் தொடர்ந்து சிறியோர் போவதாகவும் எழுதப்பட்டிருக்கிறது. பெரியோர் முதல் சிறியோர் வரைக்கும் ஒவ்வொருவராக அவ்விடத்தை விட்டுப் போகிறார்கள். ஓரிடத்திலிருந்து பெரியோர்கள் விலகிப்போகும்போது, சிறியோர்கள் அவர்களைப் பின்தொடர்ந்து போவது இயல்பு.

இயேசுகிறிஸ்துவின் வார்த்தை வல்லமையும் அதிகாரமும் உள்ளது. அவருடைய வார்த்தை பாவிகளை உணர்த்துகிறது. இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளைக் கேட்டு ஜனங்கள் தங்கள் மனச்சாட்சியினால் கடிந்து கொள்ளப்படுகிறார்கள். மனுஷனுடைய ஆத்துமாவில் தேவன் மனச்சாட்சியை வைத்திருக்கிறார். தேவனுடைய பிரதிநிதியாக நம்முடைய மனச்சாட்சி நம்மோடு பேசுகிறது. "தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது" (எபி 4:12). இயேசுகிறிஸ்துவினுடைய வார்த்தையின் வல்லமையினால் பரிசேயரும் வேதபாரகரும் அவமானமடைந்து அந்த இடத்தைவிட்டுப் போய்விடுகிறார்கள்.

## அதிகாரம் - 8

இயேசுகிறிஸ்துவின் வார்த்தையினால் பரிசேயரும் வேதபாரகரும் தங்களுடைய மனச்சாட்சியினால் கடிந்துகொள்ளப்படும்போது இவர்களுடைய பாவத்தின் காயம் வெளிப்படுத்தப்படுகிறது. இவர்கள்தான் தங்களுடைய பாவங்களை ஆராய்ந்து பார்த்து, தாங்கள் குணமடைவதற்கு, பரம வைத்தியராகிய இயேசுகிறிஸ்துவிடம் சிகிச்சை பெற்றுக்கொள்ளவேண்டும். நாம் மனச்சாட்சியினால் கடிந்துகொள்ளப்படும்போது இயேசுகிறிஸ்துவின் பிரசன்னத்தைவிட்டு விலகிப்போய்விடாமல், அவருடைய பாதபடியில் நம்மை ஒப்புக்கொடுக்கவேண்டும். இயேசு கிறிஸ்துவால் மாத்திரமே நம்முடைய மனச்சாட்சியினால் உண்டான காயங்களைக் குணப்படுத்த முடியும். அவரே பரம வைத்தியர். பரம வைத்தியரை விட்டு விலகிப்போய்விட்டால் காயத்திற்கு சிகிச்சை கிடைக்காது. சிகிச்சை இல்லாமல் நம்முடைய பாவங்களிலிருந்து நாம் இரட்சிப்பட முடியாது.

மனச்சாட்சியினால் கடிந்து கொள்ளப்பட்டவர்கள் அந்த இடத்தைவிட்டுப் போய்விடுகிறார்கள். விபசாரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஸ்திரீயோ அந்த இடத்திலேயே நின்றுகொண்டிருக்கிறாள். எல்லோரும் போன பின்பு அங்கு இயேசு தனித்திருக்கிறார். அந்த ஸ்திரீ நடுவே நிற்கிறாள். தப்பித்துப் போவதற்கு இந்த ஸ்திரீ எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை. இந்த ஸ்திரீயைக் குறித்து வேதபாரகரும் பரிசேயரும் இயேசுகிறிஸ்துவிடம் வந்து முறையிட்டார்கள். இப்போது அவரைவிட்டு எல்லோரும் ஒவ்வொருவராக போய்விடுகிறார்கள். தன்னைப்பற்றி யாரிடத்தில் குற்றம் கூறினார்களோ, அந்த இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாக இந்த ஸ்திரீ நின்றுகொண்டிருக்கிறாள்.

ஒரு காரியத்தை விசாரிக்கும்படி நாம் இயேசுகிறிஸ்துவின் சமுகத்திற்கு வந்து ஒப்புக்கொடுக்கும்போது, அந்தக் காரியம் அவருடைய விசாரணையிலிருந்து ஒருபோதும் விலகிப்போவதில்லை. தேவன் நீதியாய் நியாயம் விசாரிக்கிறவர். அவருடைய தீர்ப்பு நீதியாயும் நியாயமாயும் இருக்கும். சுவிசேஷத்தின் விசாரணை மண்டபத்தில் நாமும் இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாக நிறுத்தப்படுவோம். அவருக்கு முன்பாக நாம் தனியாக நிற்போம். அவரோடு மட்டும்தான் நம்முடைய வழக்குகளை நம்மால் முறையிட முடியும். இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் நம்மை ஆளுகை செய்யவேண்டும். இயேசுகிறிஸ்துவே நம்மை இரட்சிக்கிறவர். அவருடைய வார்த்தை ஜீவனும் பெலனுமுள்ளது. தம்மிடத்தில் வருகிற யாரையும் இயேசுகிறிஸ்து புறம்பே தள்ளிவிடாமல் இரட்சிக்கிறார்.

### நீ போ, இனிப் பாவஞ்செய்யாதே

**இயேசு நிமிர்ந்து அந்த ஸ்திரீயைத் தவிர வேறொருவரையுங் காணாமல்: ஸ்திரீயே, உன்மேல் குற்றஞ்சாட்டினவர்கள் எங்கே? ஒருவனாகிலும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவில்லையா என்றார். அதற்கு அவள்: இல்லை ஆண்டவரே, என்றாள். இயேசு அவளை நோக்கி: நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை; நீ போ, இனிப் பாவஞ் செய்யாதே என்றார் (யோவா 8:10,11).**

விசாரணை முடிவுக்கு வருகிறது. ஸ்திரீயின்மீது குற்றம் சுமத்தியவர்கள் யாரும் அங்கில்லை. அவர்களால் குற்றம் சுமத்தப்பட்ட ஸ்திரீ மாத்திரமே அங்கு இருக்கிறாள். தனக்கு என்ன நேரிடுமோ என்னும் பயத்தில் அவள் நடுங்கிக்கொண்டிருக்கிறாள். இயேசுகிறிஸ்து பாவமில்லாதவர். "உங்களில் பாவமில்லாதவன் இவள் மேல் முதலாவது கல்லெறியக்கடவன்" என்று தாம் கூறிய வார்த்தையின் பிரகாரம், இயேசுகிறிஸ்துவே அந்த ஸ்திரீயின்மீது முதலாவது கல்லெறிய தகுதியுள்ளவராக இருக்கிறார். ஏனெனில் இயேசுகிறிஸ்துவிடத்தில் ஒரு பாவமுமில்லை. அவரிடத்தில் பாவம் உண்டு என்று யாரும் அவர்மீது குற்றம் சுமத்தமுடியாது. இயேசுகிறிஸ்து பாவத்தை வெறுக்கிறார். ஆனால் பாவியையோ அவர் நேசிக்கிறார். இயேசுகிறிஸ்துவைப்போல பாவத்தை வெறுக்கிறவர்களும் இந்த உலகத்தில் இல்லை, அவரைப்போல பாவிகளை சிநேகிக்கிறவரும் இந்த உலகத்தில் இல்லை. அவர் பாவியின்மீது அளவில்லாத கிருபையும் இரக்கமுமுள்ளவர். இயேசுகிறிஸ்துவின் கிருபையுள்ள சுபாவத்தை குற்றம் சுமத்தப்பட்டிருக்கும் இந்த ஸ்திரீயும் அறிந்துகொள்கிறாள்.

## அதிகாரம் - 8

இயேசுகிறிஸ்து நிமிர்ந்து தமக்கு முன்பாக நிற்கும் ஸ்திரீயைப் பார்க்கிறார். அங்கு அந்த ஸ்திரீயைத்தவிர வேறொருவரையும் காணவில்லை. "ஸ்திரீயே, உன்மேல் குற்றம் சாட்டினவர்கள் எங்கே? ஒருவனாகிலும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவில்லையா" என்று இயேசுகிறிஸ்து அந்த ஸ்திரீயிடம் கேட்கிறார். ஸ்திரீயின்மீது குற்றம் சுமத்தியவர்கள் எல்லோரும் அந்த இடத்தைவிட்டுப் போய்விட்டார்கள். இயேசுகிறிஸ்துவும் அந்த ஸ்திரீயை ஆக்கினைக்குள்ளாக தீர்க்கவில்லை. "ஒருவனாகிலும் உன்னை ஆக்கினைக்குள்ளாக தீர்க்கவில்லையா" என்று இயேசுகிறிஸ்து கேட்டபோது, அவருடைய வார்த்தைக்குப் பதில்கூற, அந்த ஸ்திரீயின்மீது குற்றம் சுமத்தியவர் ஒருவர் கூட அங்கு இல்லை.

குற்றம் சுமத்தப்பட்ட ஸ்திரீ தன்மேல் குற்றம் சாட்டினவர்கள் ஒருவரும் அங்கு இல்லை என்பதைக் காண்கிறாள். அவள் இயேசுகிறிஸ்துவிடம் "இல்லை ஆண்டவரே" என்று பதில் கூறுகிறாள். இயேசுகிறிஸ்துவை மிகவும் மரியாதையாகவும், பயபக்தியோடும் "ஆண்டவரே" என்று அழைக்கிறாள். பாவியாகிய ஸ்திரீ இயேசுவை "ஆண்டவரே" என்று அழைக்கும்போது, அவள்மீது குற்றம் சுமத்தியவர்கள் வாயடைத்துப்போய், ஒரு வார்த்தையும் பேசமுடியாமல், அந்த இடத்தைவிட்டு அமைதியாகப் போய் விடுகிறார்கள். அவர்களெல்லோரும் அந்த இடத்தைவிட்டு போய்விட்டதினால், இந்த ஸ்திரீக்கு மகிழ்ச்சி எதுவும் உண்டாகவில்லை. தன்மீது குற்றம் சாட்டியவர்கள் பெரியோர் முதல் சிறியோர் வரை ஒவ்வொருவராக போய்விட்டாலும், இவள் இந்த வழக்கில் இன்னும் வெற்றி பெறவில்லை.

அவர்கள் அந்த இடத்தைவிட்டு ஒவ்வொருவராக விலகிப்போனதினால், தங்கள் பாவங்களினிமித்தம் தங்களுடைய மனச்சாட்சியினால் கடிந்து கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய மனச்சாட்சி அவர்களுக்கு விரோதமாகவே சாட்சி கூறுகிறது. அவர்கள் அந்த இடத்தைவிட்டுப் போனாலும், இந்த ஸ்திரீ இன்னும் பாவம் செய்தவளாகவே அங்கு நிற்கிறாள். அவர்கள் அந்த இடத்தை விட்டுப் போனதினால் இவளுடைய பாவம் மன்னிக்கப்படப்போவதில்லை.

அப்போது இயேசுகிறிஸ்து "ஒருவனாகிலும் உன்னை ஆக்கினைக்குள்ளாக தீர்க்கிறதில்லையா" என்று அவளிடம் கேட்கிறார். உண்மையாக மனந்திரும்புகிறவர்கள் இயேசுகிறிஸ்துவிடம் மாத்திரம் தங்களுடைய பாவங்களைக் குறித்து கணக்கு ஒப்புவித்தால் போதுமானது. மற்ற ஜனங்களிடம் தங்கள் பாவங்களைக்குறித்து விரிவாகப் பேசி கணக்கு ஒப்புவிக்கவேண்டும் என்னும் அவசியமில்லை. இயேசுகிறிஸ்து அந்த ஸ்திரீயைப்பார்த்து ஒருவனாகிலும் உன்னை ஆக்கினைக்குள்ளாக தீர்க்கவில்லை என்று கூறி "நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாக தீர்க்கிறதில்லை" என்று தமது நீதியான தீர்ப்பைக் கூறிவிடுகிறார்.

இயேசுகிறிஸ்து அந்த ஸ்திரீயை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்காமல் போனதினால் இவளுக்கு தண்டனையிலிருந்து தற்காலிகமாக விடுதலை கிடைத்திருக்கிறது. கல்லெறிந்து கொல்லவேண்டுமென்று இவள்மேல் குற்றம் சாட்டியவர்கள் அங்கு ஒருவருமில்லை. ஆகையினால் இயேசுகிறிஸ்து தாமும் அவளை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவில்லை என்று கூறிவிடுகிறார். இயேசுகிறிஸ்து இந்த ஸ்திரீயை குற்றப்படுத்தவில்லை.

வேதபாரகரும் பரிசேயரும் விபசாரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த ஸ்திரீயை இயேசுகிறிஸ்துவிடத்தில் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த ஸ்திரீயின்மீது குற்றம் சுமத்துகிற இவர்களே மிகப்பெரிய பாவிகளாக இருக்கிறார்கள். இவளை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவேண்டுமென்று கூறுகிற அவர்களெல்லோருமே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட வேண்டியவர்களாகவே இருக்கிறார்கள். இவள்மீது குற்றம் சுமத்துகிறவர்கள் பாவமற்றவர்களல்ல. அவர்களும் பாவிகள்தான். இந்த ஸ்திரீயை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவேண்டுமென்று கோபத்தோடு வந்திருக்கிற ஜனங்கள் எல்லோருமே, தங்களுடைய பாவங்களினிமித்தம் ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்பட வேண்டியவர்களாகவே இருக்கிறார்கள்.

## அதிகாரம் - 8

இயேசுகிறிஸ்து அந்த ஸ்திரீயை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்காமல் அந்த இடத்தைவிட்டு அனுப்பும்போது "நீ போ, இனிப் பாவஞ்செய்யாதே" என்று கூறுகிறார். பாவங்களிலிருந்து விடுதலை பெறுகிறவர்களுக்கு, இனி பாவம் செய்யக்கூடாது என்னும் கட்டளையும் கொடுக்கப்படுகிறது. பாவம் மன்னிக்கப்படுகிறது என்பது எப்படி நியாயமான வார்த்தையோ அதுபோலவே "இனிப் பாவம் செய்யாதே" என்னும் எச்சரிப்பின் வார்த்தையும் நியாயமான வார்த்தையாகும். குற்றவாளிகளுடைய வாழ்க்கையில் உதவிபுரிகிறவர்கள், இயேசுகிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின்பற்றி, அவர்களுடைய ஆத்துமாவை இரட்சிப்பதற்கு உதவிபுரியும் எச்சரிப்பின் வார்த்தையையும் கூறவேண்டும்.

இயேசுகிறிஸ்து இந்த ஸ்திரீயை நித்திய ஆக்கினையிலிருந்து விடுவிக்கிறார். "நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாக தீர்க்கிறதில்லை" என்று இயேசுகிறிஸ்து கூறுவதற்கு "நான் உன்னை மன்னிக்கிறேன்" என்பது பொருளாகும். மனுஷகுமாரனுக்கு இந்த பூமியிலே பாவங்களை மன்னிப்பதற்கு அதிகாரமுண்டு. ஒரு குற்றவாளி உண்மையாக மனந்திரும்புவதை இயேசுகிறிஸ்து அறிந்திருக்கிறார். இந்த ஸ்திரீ மெய்யாகவே தன் பாவங்களுக்காக மனம் வருத்தப்பட்டு, மனந்திரும்பியிருப்பதை இயேசுகிறிஸ்து அறிந்திருக்கிறார். இயேசுகிறிஸ்து யாரை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்காமலிருக்கிறாரோ அவர்கள் மெய்யாகவே பாக்கியவான்களாக இருக்கிறார்கள். நாம் பாவம் செய்தவர்களாக இருந்தாலும், நம்முடைய பாவங்களுக்கு மனம்வருந்தி, மனந்திரும்பி இயேசுகிறிஸ்துவிடம் பாவமன்னிப்பு கேட்கும்போது, அவர் நம்மை ஆக்கினைக்குள்ளாக தீர்க்காமல் "நீ போ இனி பாவம் செய்யாதே" என்று கூறுகிறார். இயேசுகிறிஸ்து நம்மை மன்னித்து விடுவிப்பது அவருடைய கிருபையும் இரக்கமும் நிறைந்த சுபாவம். நம்முடைய பாவமன்னிப்பு நமக்குக் கிடைத்திருக்கும் சிலாக்கியம். இயேசுகிறிஸ்துவின் எச்சரிப்பை நம்முடைய இருதயத்தில் ஏற்றுக்கொண்டு, அவருடைய வார்த்தையின் பிரகாரம் இனிமேல் பாவம் செய்யாமல் ஜீவிக்கவேண்டும்.

**தருமப்பெட்டி இருக்கிற இடத்தில் உபதேசம்**
**யோவா 8 : 12-20**

**யோவா 8:12. மறுபடியும் இயேசு ஜனங்களை நோக்கி: நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான் என்றார்.**

**யோவா 8:13. அப்பொழுது பரிசேயர் அவரை நோக்கி: உன்னைக்குறித்து நீயே சாட்சி கொடுக்கிறாய்; உன்னுடைய சாட்சி உண்மையானதல்ல என்றார்கள்.**

**யோவா 8:14. இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: என்னைக்குறித்து நானே சாட்சி கொடுத்தாலும், என் சாட்சி உண்மையாயிருக்கிறது; ஏனெனில் நான் எங்கேயிருந்து வந்தேனென்றும், எங்கே போகிறேனென்றும் அறிந்திருக்கிறேன்; நீங்களோ நான் எங்கேயிருந்து வருகிறேனென்றும், எங்கே போகிறேனென்றும் அறியீர்கள்.**

**யோவா 8:15. நீங்கள் மாம்சத்துக்கேற்றபடி நியாயந்தீர்க்கிறீர்கள், நான் ஒருவனையும் நியாயந்தீர்க்கிறதில்லை;**

**யோவா 8:16. நான் நியாயந்தீர்த்தால், என் தீர்ப்பு சத்தியத்தின்படியிருக்கும்; ஏனெனில் நான் தனித்திருக்கவில்லை, நானும் என்னை அனுப்பின பிதாவுமாக இருக்கிறோம்.**

**யோவா 8:17. இரண்டுபேருடைய சாட்சி உண்மையென்று உங்கள் நியாயப் பிரமாணத்திலும் எழுதியிருக்கிறதே.**

**யோவா 8:18. நான் என்னைக்குறித்துச் சாட்சி கொடுக்கிறவனாயிருக்கிறேன், என்னை அனுப்பின பிதாவும் என்னைக்குறித்துச் சாட்சி கொடுக்கிறார் என்றார்.**

**யோவா 8:19. அப்பொழுது அவர்கள்: உம்முடைய பிதா எங்கே என்றார்கள். இயேசு பிரதியுத்தரமாக: என்னையும் அறியீர்கள், என் பிதாவையும் அறியீர்கள்; நீங்கள் என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிவீர்கள் என்றார்.**

**யோவா 8:20. தேவாலயத்திலே இயேசு உபதேசம் பண்ணுகிறபோது, தருமப்பெட்டியிருக்கும் இடத்தில் இந்த வசனங்களைச் சொன்னார். அவருடைய வேளை இன்னும் வராதபடியினால் ஒருவனும் அவரைப் பிடிக்கவில்லை.**

## அதிகாரம் - 8

### நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்

**மறுபடியும் இயேசு ஜனங்களை நோக்கி: நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான் என்றார் (யோவா 8:12).**

இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைப் பரிசேயர்கள் அங்கீகரிக்கவில்லை. அவரோடு விவாதம்பண்ணுகிறார்கள். இருதயத்தில் பெருமையுள்ளவர்களாக, தங்களுக்கு எல்லாம் தெரியும் என்னும் ஆணவத்தோடு பரிசேயர்கள் இயேசுகிறிஸ்துவிடம் தர்க்கம் பண்ணுகிறார்கள். சுவிசேஷத்தின் மிகவும் முக்கியமான உபதேசத்தை இயேசுகிறிஸ்து இங்கு வெளிப்படுத்துகிறார். இயேசுகிறிஸ்து இந்த உலகத்திற்கு ஒளியாக இருக்கிறார் என்பதே சுவிசேஷத்தின் பிரதான தத்துவம்.

இயேசுகிறிஸ்து மறுபடியும் ஜனங்களிடம் பேசுகிறார். அவருடைய உபதேசத்திற்கு ஜனங்கள் தங்களுடைய செவிகளை அடைத்துக்கொள்கிறார்கள். ஆனாலும் இயேசுகிறிஸ்து அவர்களிடத்தில் தம்முடைய கிருபையுள்ள உபதேசத்தை தொடர்ந்து கூறுகிறார். இயேசுவின் உபதேசத்தைக் கேட்பதற்கு ஜனங்கள் பிரியமில்லாமலிருந்தாலும், அவர்களோடு இயேசுகிறிஸ்து தொடர்ந்து உபதேசம் பண்ணுவது அவருடைய ஆத்தும பாரத்தை வெளிப்படுத்துகிறது.

"நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்" என்று இயேசு அவர்களிடத்தில் கூறுகிறார். இயேசுகிறிஸ்து பிறந்தபோது, சிமியோன் தேவாலயத்திலே இயேசு பாலகனை தம்முடைய கைகளில் ஏந்திக்கொண்டு, தேவனை ஸ்தோத்திரித்து, இயேசுகிறிஸ்துவை புறஜாதிகளுக்கு பிரகாசிக்கிற ஒளியாக விவரித்துக் கூறுகிறார் (லூக் 2:30). மேசியா வரும்போது அவர் புறஜாதிகளுக்கு பிரகாசிக்கிற ஒளியாக இருப்பாரென்று பரிசுத்தவான்கள் எதிர்ப்பார்த்தார்கள். இயேசுகிறிஸ்துவோ புறஜாதியாருக்கு மாத்திரமல்ல, அகில உலகத்திலுள்ள ஜனங்களுக்கும் ஒளியாக இருக்கிறார்.

இந்த உலகத்தில் சூரியனே பிரத்தியட்சமாக காணப்படுகிற ஒளியாக இருக்கிறது. சூரியன் முழு உலகத்திற்கும் வெளிச்சத்தைக் கொடுக்கிறது. அதுபோலவே இயேசுகிறிஸ்துவும் முழு உலகத்திற்கும் வெளிச்சத்தைக் கொடுக்கிறார். இந்த உலகம் முழுவதற்கும் இயேசுகிறிஸ்துவின் வெளிச்சம் மாத்திரமே போதுமானது. வேறு வெளிச்சம் எதுவும் தேவையில்லை. சூரியன் வெளிச்சம் கொடுக்கவில்லையென்றால் இந்த உலகம் எப்படி இருளில் இருக்குமோ, அதுபோலவே இயேசுகிறிஸ்துவின் வெளிச்சம் நமக்குக் கிடைக்கவில்லையென்றால் நாமும் இருளில் இருப்போம். இயேசுகிறிஸ்துவின் மூலமாகவே இந்த உலகத்திற்கு வெளிச்சம் உண்டாயிற்று.

இயேசுகிறிஸ்து தம்மை உலகத்திற்கு ஒளியாயிருப்பதாக கூறிவிட்டு, மேலும் "என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான்" என்று கூறுகிறார். இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுவது நம்முடைய கடமை. இயேசுகிறிஸ்துவே மெய்யான ஒளியாக இருக்கிறார். இந்த ஒளியைப் பார்த்தால் மாத்திரம் போதாது. ஒளியைப்பார்த்து ஆச்சரியப்பட்டு பரவசமடைந்தால் மாத்திரம் போதாது. நாம் அந்த ஒளியைப் பின்பற்ற வேண்டும். அந்த ஒளியினிடத்தில் விசுவாசம் வைக்கவேண்டும். அந்த ஒளியின் வெளிச்சத்தில் நாம் நடக்கவேண்டும். ஏனெனில் இயேசுகிறிஸ்துவாகிய ஒளி நம்முடைய கண்களுக்கு மாத்திரமல்ல, நம்முடைய கால்களுக்கும் தீபமாயிருக்கிறது.

இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களுக்கு மிகுந்த ஆசீர்வாதம் உண்டு. அவர்கள் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பார்கள். ஜீவஒளியானது இந்த உலகத்தில் நமக்கு ஆவிக்குரிய ஜீவனையும், பரலோகத்தில் நமக்கு நித்திய ஜீவனையும் தருகிறது. நாம் இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றும்போது, பரலோகம் வரையிலும் அவரைப் பின்பற்றிச் செல்கிறோம்.

### உன்னுடைய சாட்சி உண்மையானதல்ல

**அப்பொழுது பரிசேயர் அவரை நோக்கி: உன்னைக்குறித்து நீயே சாட்சி கொடுக்கிறாய்; உன்னுடைய சாட்சி உண்மையானதல்ல என்றார்கள் (யோவா 8:13).**

## அதிகாரம் - 8

இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைப் பரிசேயர் அங்கீகரிக்கவில்லை. இயேசுகிறிஸ்து தம்மைக்குறித்து தாமே சாட்சி கொடுப்பதாக கூறுகிறார்கள். "உன்னைக்குறித்து நீயே சாட்சி கொடுக்கிறாய். உன்னுடைய சாட்சி உண்மையானதல்ல" என்று கூறுகிறார்கள். இவர்களுடைய குற்றச்சாட்டில் நீதியில்லை. இது அநியாயமான குற்றச்சாட்டு. இயேசுகிறிஸ்துவே தெய்வீக காரியங்களை நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். இயேசுகிறிஸ்து நமக்கு பரலோகத்தின் ரகசியத்தை வெளிப்படுத்தவில்லையென்றால், நமக்கு அதைப்பற்றி ஒன்றும் தெரியாது. ஆகையினால் இயேசுகிறிஸ்து தம்மைக்குறித்து சாட்சி கூறியே ஆகவேண்டும். இயேசுகிறிஸ்துவின் சாட்சி அவசியமானது. தவிர்க்க முடியாதது.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் மோசேயும் மற்ற தீர்க்கதரிசிகளும் கர்த்தருடைய வார்த்தையைப் பேசியபோது, அவர்கள் தங்களைக்குறித்து தாங்களே சாட்சி கூறினார்கள். தேவனிடத்திலிருந்து அவருடைய செய்தியைப்பெற்றுக்கொண்டு தாங்கள் பேசுவதாகக் கூறினார்கள். அவர்களுடைய சாட்சியைப் பரிசேயர்கள் அங்கீகரிக்கிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவின் சாட்சியையோ இவர்கள் அங்கீகரிக்க மறுத்துவிடுகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனென்று நிரூபிப்பதற்குப் பல சாட்சிகள் உள்ளன. அவர் நடப்பித்த அற்புதங்களும் அடையாளங்களும் அவரைத் தேவனுடைய குமாரனாக, எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி, நிரூபித்துக் காண்பிக்கிறது. ஆனால் இந்த பரிசேயர்கள் அந்தச் சாட்சிகளையெல்லாம் கவனித்துப் பார்ப்பதில்லை. தங்கள் கண்களை மூடிக்கொள்கிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்து தம்மைக்குறித்துத் தாமே சாட்சி கூறும்போது, பரிசேயர்கள் தங்கள் கண்களையும், செவிகளையும் விரிவாய்த் திறக்கிறார்கள். அவருடைய சாட்சி உண்மையானதல்ல என்று தங்கள் வாய்களை விரிவாய்த் திறந்து மறுதலிக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் சாட்சியில் இவர்களுக்கு சந்தேகம் இருக்கிறது.

**என் சாட்சி உண்மையாயிருக்கிறது**

**இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: என்னைக்குறித்து நானே சாட்சி கொடுத்தாலும், என் சாட்சி உண்மையாயிருக்கிறது; ஏனெனில் நான் எங்கேயிருந்து வந்தேனென்றும், எங்கே போகிறேனென்றும் அறிந்திருக்கிறேன்; நீங்களோ நான் எங்கேயிருந்து வருகிறேனென்றும், எங்கே போகிறேனென்றும் அறியீர்கள் (யோவா 8:14).**

இயேசுகிறிஸ்து பரிசேயரின் மறுப்புக்கு பதில் கூறுகிறார். இயேசுகிறிஸ்துவே இந்த உலகத்திற்கு ஒளியாக இருக்கிறவர். ஒளிக்கு யாரும் சாட்சி கொடுக்கவேண்டிய அவசியமில்லை. ஒளி தனக்குத்தானே சாட்சியாக இருக்கும். தம்மைப்பற்றி தாம் கூறும் சாட்சியை நிரூபிப்பதற்கு இயேசுகிறிஸ்து மூன்று காரியங்களை இங்கு குறிப்பிடுகிறார். அவையாவன: 1. தாம் எங்கேயிருந்து வந்தார் என்றும், எங்கே போகிறார் என்றும் இயேசுகிறிஸ்து அறிந்திருக்கிறார். 2. தாம் எங்கேயிருந்து வருகிறாரென்றும், எங்கே போகிறாரென்றும் பரிசேயர்கள் அறியாதிருக்கிறார்கள். 3. இயேசுகிறிஸ்து தனித்திருக்காமல், அவரும் அவரை அனுப்பின பிதாவுமாக இருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் சாட்சி மெய்யானது. தம்முடைய அதிகாரத்தைக் குறித்து இயேசுகிறிஸ்து அறிந்து வைத்திருக்கிறார். எந்தக் காரியத்தையும் அவர் நிச்சயமில்லாமல் பேசமாட்டார். அவர் சர்வஞானமுள்ளவர். தாம் எங்கேயிருந்து வந்தாரென்றும், தாம் எங்கே போகிறாரென்றும் இயேசுகிறிஸ்து அறிந்திருக்கிறார். தாம் பிதாவினிடத்திலிருந்து வந்திருப்பதையும், அவரிடத்திற்குப் போகப்போவதையும் இயேசுகிறிஸ்து அறிந்திருக்கிறார். இயேசுகிறிஸ்து மகிமையிலிருந்து வந்திருக்கிறவர். மறுபடியும் அந்த மகிமைக்கு போகப்போகிறவர்.

## அதிகாரம் - 8

இயேசு கிறிஸ்துவை நியாயந்தீர்க்கிறவர்கள் உண்மையற்றவர்களாக இருக்கிறார்கள். அவரை நியாயந்தீர்ப்பதற்குப் பரிசேயருக்கு எந்தத் தகுதியுமில்லை. அவர்களுக்குத் தேவனுடைய காரியங்களில் சிறிதும் ஞானமில்லை. அவர்கள் தேவனைப்பற்றி அறியாதவர்களாக இருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து எங்கேயிருந்து வருகிறாரென்றும், எங்கே போகிறாரென்றும் பரிசேயர் அறியாதிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவைப்பற்றி அறியாதவர்களினால் அவரை நியாயந்தீர்க்க முடியாது. அவரை நியாயந்தீர்க்கும் தகுதி இவர்களுக்கு இல்லை. தாம் பரலோகத்திலிருந்து வந்திருப்பதையும், பரலோகத்திற்கு போகப்போவதையும் இயேசுகிறிஸ்து அவர்களிடத்தில் கூறுகிறார். ஆனால் இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளோ அவர்களுக்குப் பரியாச வார்த்தைகளாக இருக்கிறது. அவர்கள் இயேசுகிறிஸ்து கூறிய வார்த்தையை விசுவாசிக்கவுமில்லை. ஏற்றுக்கொண்டு அங்கீகரிக்கவுமில்லை. தங்களுக்குப் புரியாததை இவர்கள் நியாயம் தீர்க்கவேண்டுமென்று முன்வந்திருக்கிறார்கள்.

**மாம்சத்துக்கேற்றபடி நியாயந்தீர்க்கிறீர்கள்**

**நீங்கள் மாம்சத்துக்கேற்றபடி நியாயந்தீர்க்கிறீர்கள், நான் ஒருவனையும் நியாயந்தீர்க்கிறதில்லை; (யோவா 8:15)**

பரிசேயர்கள் பட்ச பாதத்தோடிருக்கிறார்கள். தங்கள் மாம்சத்திற்கேற்றபடி அவர்கள் நியாயந்தீர்க்கிறார்கள். சட்ட திட்டங்கள் தவறாக இருக்குமென்றால், தீர்ப்பும் தவறாகத்தான் இருக்கும். சட்டம் சரியாக இருந்தால்தான் தீர்ப்பும் சரியாக இருக்கும். யூதர்கள் இயேசுகிறிஸ்துவையும், அவருடைய சுவிசேஷத்தையும் வெளிப்பிரகாரமான தோற்றத்தின் பிரகாரம் தீர்ப்பு செய்கிறார்கள். இது மாம்சத்திற்கேற்றபடி செய்கிற நியாயத்தீர்ப்பு. இயேசுகிறிஸ்துவால் இந்த உலகத்திற்கு ஒளியாக இருக்க முடியாது என்று அவர்கள் தங்கள் இருதயத்தில் தவறான சிந்தனையோடிருக்கிறார்கள். சூரியன் மேகத்திற்குள் இருக்கும்போது, சூரியனே அங்கு இல்லை என்று இவர்கள் மதியீனமாக நினைக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின்மீது இவர்கள் அநியாயம் தீர்ப்பு செய்கிறார்கள். இயேசுகிறிஸ்து ஒருவனையும் நியாயந்தீர்க்கிறதில்லை. ஆனால் இவர்களோ தங்களுடைய மாம்சத்திற்கேற்றபடி நியாயந்தீர்க்கிறார்கள்.

**என் தீர்ப்பு சத்தியத்தின்படியிருக்கும்**

**நான் நியாயந்தீர்த்தால், என் தீர்ப்பு சத்தியத்தின்படியிருக்கும்; ஏனெனில் நான் தனித்திருக்கவில்லை, நானும் என்னை அனுப்பின பிதாவுமாக இருக்கிறோம் (யோவா 8:16).**

இயேசுகிறிஸ்து தம்மைப்பற்றிக் கூறுகிற சாட்சி உண்மையாயிருக்கும். ஏனெனில் இயேசுவின் தீர்ப்பு சத்தியத்தின்படி இருக்கும். இயேசுகிறிஸ்துவும் அவரை அனுப்பின பிதாவுமாகச் சேர்ந்திருப்பதினால், இயேசுகிறிஸ்துவின் தீர்ப்பு எப்போதுமே சத்தியத்தின்படி இருக்கிறது. பிதாவாகிய தேவன் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவைக் குறித்து சாட்சி கொடுக்கிறார்.

இயேசுகிறிஸ்து தம்மைத் தீர்ப்புக் கொடுக்கிற நியாயதிபதியாகவும், சாட்சியாகவும் வெளிப்படுத்துகிறார். "நான் நியாயந்தீர்த்தால், என் தீர்ப்பு சத்தியத்தின் படியிருக்கும்" என்று கூறுகிறார். இயேசுகிறிஸ்து நியாயந்தீர்ப்பாரென்றால், அந்தத் தீர்ப்பு மெய்யாகவே சத்தியத்தின்படியிருக்கும். ஆகையினால் இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாகத் தீர்ப்பு செய்கிறவர்கள் எல்லோரும் ஆக்கினைக்குட் படுத்தப்படுவார்கள். இயேசு கிறிஸ்துவின் சாட்சியைப் பிதாவாகிய தேவன் அங்கீகரிக்கிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய தீர்ப்பை தனியாகக் கொடுப்பதில்லை. அவர் தனித்திருப்பதில்லை. இயேசுகிறிஸ்துவும் அவரை அனுப்பின பிதாவுமாக, குமாரனும் பிதாவும் சேர்ந்தேயிருக்கிறார்கள். பிதா குமாரன் இல்லாமல் தனியாகச் செயல்படுவதில்லை. ஆனாலும் குமாரன் தம்முடைய நாமத்தினால், தம்முடைய பிதாவின் சித்தத்தைச் செய்கிறார். பிதாவாகிய தேவனே குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை அனுப்பியிருக்கிறார். ஆகையினால் குமாரனுடைய தீர்ப்பு சத்தியத்தின்படியிருக்கிறது.

**இரண்டு பேருடைய சாட்சி**

**இரண்டுபேருடைய சாட்சி உண்மையென்று உங்கள் நியாயப் பிரமாணத்திலும் எழுதியிருக்கிறதே. நான் என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறவனாயிருக்கிறேன், என்னை அனுப்பின பிதாவும் என்னைக்குறித்துச் சாட்சி கொடுக்கிறார் என்றார் (யோவா 8:17,18).**

## அதிகாரம் - 8

இயேசுகிறிஸ்து தம்மை நியாயாதிபதியாக வெளிப்படுத்துவதோடு, தம்மைச் சாட்சியாகவும் வெளிப்படுத்துகிறார். இயேசுகிறிஸ்துவின் சாட்சி மெய்யான சாட்சியாக இருக்கிறது. இரண்டு பேருடைய சாட்சி உண்மையென்று நியாயப்பிரமாணத்தில் எழுதப்பட்டிருக்கிறது. தம்முடைய சாட்சியை உண்மையானதென்று நிரூபிப்பதற்காக இயேசுகிறிஸ்து யூதருடைய நியாயப்பிரமாணத்தை இங்கு மேற்கோளாகக் கூறுகிறார்.

"இரண்டு பேருடைய சாட்சி உண்மை" என்று யூதருடைய நியாயப்பிரமாணத்தில் எழுதப்பட்டிருக்கிறது. ஏதாவது ஒரு காரியத்தைக் குறித்து இரண்டு சாட்சிகள் முரண்படாமல், இசைவாக சாட்சி கொடுத்தால், அந்தக் காரியம் மெய்யானது என்று ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதாக யூதருடைய நியாயப்பிரமாணத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இந்தப் பிரமாணத்தைத் தம்மைப்பற்றி நிரூபிப்பதற்கு இயேசுகிறிஸ்து பயன்படுத்துகிறார். இயேசுகிறிஸ்து தம்மைப்பற்றி சாட்சி கொடுக்கிறார். அதேவேளையில் இயேசுகிறிஸ்துவை அனுப்பின பிதாவும் அவரைக்குறித்து சாட்சி கொடுக்கிறார். இரண்டு பேருமே இசைவாகச் சாட்சி கொடுக்கிறார்கள்.

இருவருமே தேவத்துவமுடையவர்கள். சில சமயங்களில் இரண்டு மனுஷர்கள் ஒரு காரியத்தைக்குறித்து சாட்சி கூறலாம். இரண்டு சாட்சிகளும் முரண்படாமல் ஒன்றுபோல் பேசலாம். ஆனாலும் இவ்விரண்டு பேருடைய சாட்சியிலும் உண்மையில்லாமல் போவதற்கும் வாய்ப்புள்ளது. இரண்டு சாட்சிகளும் உண்மைக்குச் சாட்சி கூறுவதற்குப் பதிலாக, பொய்க்குச் சாட்சி கூறி வஞ்சிக்கலாம். ஆகையினால் மனுஷருடைய சாட்சியை மெய்யான சாட்சியென்று நாம் அங்கீகரிக்க முடியாது.

இயேசுகிறிஸ்துவைப்பற்றி சாட்சி கூறுவது சாதாரண மனுஷனல்ல. தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்து தாமே தம்மைப்பற்றி சாட்சி கூறுகிறார். இயேசு தம்மைப்பற்றிக் கூறிய சாட்சியை, அவரை அனுப்பின பிதாவும், அவரைக்குறித்து முரண்படாமலும் அதுபோலவே சாட்சி கூறுகிறார். பிதாவின் சாட்சி குமாரனுடைய சாட்சிக்கு ஆதரவாக இருக்கிறது. இந்த சாட்சி மனுஷருடைய வார்த்தையல்ல. இது தேவனுடைய வார்த்தை. ஆகவே இயேசுகிறிஸ்து தம்மைக்குறித்துக் கூறிய தீர்ப்பு சத்தியத்தின்படியிருக்கிறது.

**உம்முடைய பிதா எங்கே**

**அப்பொழுது அவர்கள்: உம்முடைய பிதா எங்கே என்றார்கள். இயேசு பிரதியுத்தரமாக: என்னையும் அறியீர்கள், என் பிதாவையும் அறியீர்கள்; நீங்கள் என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிவீர்கள் என்றார் (யோவா 8:19).**

பரிசேயருடைய வாய் கட்டவிழ்க்கப்பட்டிருக்கிறது. ஆகையினால் இவர்கள் உண்மைக்குப் புறம்பாக, தாறுமாறாகப் பேசுகிறார்கள். இவர்களுடைய வார்த்தையில் கட்டுப்பாடு எதுவுமில்லை. இயேசுகிறிஸ்துவோடு தொடர்ந்து விவாதம்பண்ணுகிறார்கள். "உம்முடைய பிதா எங்கே" என்று அவரிடத்தில் கேட்கிறார்கள். இயேசுகிறிஸ்து தம்முடைய பிதாவைப்பற்றிக் கூறுவது, பிதாவாகிய தேவனைப்பற்றித்தான் என்பதைப் பரிசேயர்கள் எளிதாகப் புரிந்துகொள்ளலாம். ஆனாலும் இயேசுகிறிஸ்துவின் வார்த்தையை இவர்கள் புரியாதவர்கள் போல நடிக்கிறார்கள். தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவை சாதாரண மனுஷனாக நினைக்கிறார்கள்.

தம்மைக்குறித்து பிதாவாகிய தேவன் சாட்சி கொடுப்பதாக இயேசுகிறிஸ்து கூறுகிறார். அந்த சாட்சி எங்கேயிருக்கிறாரென்றும், அவரை இங்கு அழைத்து வரவேண்டுமென்றும் பரிசேயர் இயேசுகிறிஸ்துவிடம் விவாதம் பண்ணுகிறார்கள். ஆகையினால்தான் இயேசுகிறிஸ்து இவர்களைப்பார்த்து "நீங்கள் மாம்சத்திற்கேற்றபடி நியாயந்தீர்க்கிறீர்கள்" என்று கூறுகிறார்.

இயேசுகிறிஸ்து பரிசேயரின் விவாதத்திற்கு தொடர்ந்து பிரதியுத்தரம் கூறுகிறார். அவர்களுடைய அறியாமையை அவர்களுக்கு விளக்கிக் காண்பிக்கிறார். "என்னையும் அறியீர்கள், என் பிதாவையும் அறியீர்கள்" என்று அவர்களுடைய அறியாமையைப்பற்றி பேசுகிறார். தேவனுடைய தெய்வீக காரியங்களை அறிந்துகொள்ள முடியாதவர்களிடத்தில் அதைப்பற்றிப் பேசி ஒரு பிரயோஜனமுமில்லை. குருடர்களிடம் பல்வேறு நிறங்களைப்பற்றிப் பேசினால் அவர்களால் புரிந்துகொள்ள முடியாது. அதுபோலவே பரிசேயராலும் தேவனுடைய சத்தியத்தைப் புரிந்துகொள்ள முடியாது.

## அதிகாரம் - 8

பரிசேயர்கள் தேவனைப்பற்றி அறியாமலிருக்கிறார்கள். அவர்கள் இயேசுகிறிஸ்துவின் பிதாவை அறியார்கள். அவர்களுடைய கண்கள் இருளடைந்திருக்கிறது. தேவனுடைய மகிமை இயேசுகிறிஸ்துவின் முகத்தில் பிரகாசிப்பதை அவர்களால் காணமுடியவில்லை. அவர்களால் ஒளியைக் காணமுடியவில்லை. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்மால் பிதாவாகிய தேவனை அறிந்துகொள்ள முடிகிறது. ஆனால் யூதமார்க்கத்தின் தலைவர்களான பரிசேயராலோ பிதாவாகிய தேவனை அறிந்துகொள்ள முடியவில்லை. ஏனெனில் அவர்கள் இயேசுகிறிஸ்துவைத் தேவனுடைய குமாரன் என்றும், பிதாவாகிய தேவனே தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை இந்தப் பூமிக்கு அனுப்பினார் என்றும் அறியாதிருக்கிறார்கள்.

பரிசேயர்கள் தேவனை அறியாமலிருப்பதற்கான மெய்யான காரணத்தை இயேசுகிறிஸ்து இங்கு வெளிப்படுத்துகிறார். "நீங்கள் என்னை அறிந்தீர்களானால், என் பிதாவையும் அறிவீர்கள்" என்று இயேசுகிறிஸ்து அவர்களிடத்தில் கூறுகிறார். ஜனங்கள் தேவனைப்பற்றி அறியாதிருக்கிறார்கள் என்றால் அதற்கு ஒரே காரணம் அவர்கள் இயேசுகிறிஸ்துவை அறியாமலிருப்பதே. நாம் இயேசுகிறிஸ்துவை அறியும்போது, அவரை அனுப்பின பிதாவையும் அறிந்துகொள்கிறோம். நாம் இயேசுகிறிஸ்துவை இன்னும் அதிகமாக அறிந்துகொள்ளும்போது, அவரை அனுப்பின பிதாவாகிய தேவனை இன்னும் அதிகமாக அறிந்துகொள்வோம்.

**அவருடைய வேளை இன்னும் வராதபடியினால்**

**தேவாலயத்திலே இயேசு உபதேசம் பண்ணுகிறபோது, தருமப்பெட்டியிருக்கும் இடத்தில் இந்த வசனங்களைச் சொன்னார். அவருடைய வேளை இன்னும் வராதபடியினால் ஒருவனும் அவரைப் பிடிக்கவில்லை (யோவா 8:20).**

பரிசேயரின் நாவு கட்டவிழ்க்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்களுடைய கைகளோ கட்டப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்து இந்த உபதேசத்தை, தேவாலயத்திலே, தருமப்பெட்டியிருக்கிற இடத்திலே சொல்லுகிறார். பிரதான ஆசாரியரும், வேதபாரகரும், பரிசேயரும் தேவாலயத்திற்கு அதிகாரிகளாக இருக்கிறார்கள். பிரதான ஆசாரியர்களுடைய சேவகர்கள் ஏராளமானோர் தேவாலயத்தில் பணிபுரிகிறார்கள். ஆசாரியர்கள் நினைத்திருந்தால் சேவகருடைய துணையோடு இயேசுகிறிஸ்துவை எளிதாகக் கைது பண்ணியிருக்கலாம். அல்லது இயேசுவுக்கு விரோதமாக ஜனங்களைத் தூண்டிவிட்டு தேவாலயத்திற்குள்ளேயே ஒரு கலகத்தை உண்டுபண்ணலாம். தங்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி இயேசுகிறிஸ்துவை மேலும் பேசவிடாமல் வாயடைக்கச் செய்யலாம். ஆனால் அவர்களால் இயேசுகிறிஸ்துவை ஒன்றும் செய்ய முடியவில்லை.

இயேசுகிறிஸ்து தேவாலயத்திலிருக்கிற போதிலும், அதிலும் விசேஷமாகத் தேவாலயத்தின் மையப்பகுதியான, தருமப்பெட்டியிருக்கிற இடத்தில் இருக்கிறபோதிலும் அவர்களால் இயேசுவைப் பிடிக்க முடியவில்லை. இயேசுகிறிஸ்து அவர்களுக்கு அருகாமையில் இருக்கிற போதிலும் இயேசுவின்மீது ஒருவனாலும் கைபோட முடியவில்லை. ஏனெனில் இயேசுகிறிஸ்துவின் வேளை இன்னும் வரவில்லை.

தேவனுடைய தெய்வீக வல்லமை இயேசுகிறிஸ்துவைச் சுற்றிலும் வேலியடைத்துப் பாதுகாக்கிறது. இந்தத் தெய்வீகப் பாதுகாப்பை பரிசேயர்களால் காணமுடியவில்லை. தம்முடைய ஊழியக்காரர்களுக்குப் பிரச்சனைகள் வரும்போது, தேவன் தம்முடைய பிள்ளைகளைத் தம்முடைய இரத்தக்கோட்டைக்குள் வேலியடைத்துப் பாதுகாத்துப் பராமரிக்கிறார். நாம் தேவனுடைய சமுகத்திலிருக்கும்போது நமக்கு தெய்வீக பாதுகாப்பு உண்டு.

## அதிகாரம் - 8

இயேசுகிறிஸ்துவின் வேளை இன்னும் வராதபடியினால் ஒருவனும் அவரைப் பிடிக்கவில்லை. இந்த வாக்கியம் சுவிசேஷங்களில் பலமுறை எழுதப்பட்டிருக்கிறது. நம்முடைய பிறப்பின் வேளையும், மரணத்தின் வேளையும் தேவனுடைய பலத்த கரத்தில்தான் இருக்கிறது. நாம் இந்த உலகத்தைவிட்டு பிரிந்துபோகப்போவது தேவனுடைய தெய்வீக ஆலோசனையின் பிரகாரமாக, அவருக்குச் சித்தமான வேளையில் நடைபெறும். நம் ஒவ்வொருவருக்குமே மரணம் நியமிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய மரணநாள் நம்மை நெருங்கிக்கொண்டிருக்கிறது. நம்முடைய வேளை தேவனுடைய கரத்திலுள்ளது. இது நம்முடைய சொந்தக் கரத்தில் இல்லாமல், தேவனுடைய கரத்தில் இருப்பதே நமக்கு நல்ல பாதுகாப்பு.

### அநேகர் இயேசுவிடத்தில் விசுவாசம் வைக்கிறார்கள்
### யோவா 8 : 21-30

**யோவா 8:21. இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி: நான் போகிறேன், நீங்கள் என்னைத்தேடி, உங்கள் பாவங்களிலே சாவீர்கள்; நான் போகிற இடத்துக்கு வர உங்களால் கூடாது என்றார்.**

**யோவா 8:22. அப்பொழுது யூதர்கள்: நான் போகிற இடத்துக்கு வர உங்களால் கூடாது என்கிறானே, தன்னைத்தான் கொலைசெய்துகொள்வானோ என்று பேசிக் கொண்டார்கள்.**

**யோவா 8:23. அவர் அவர்களை நோக்கி: நீங்கள் தாழ்விலிருந்துண்டானவர்கள், நான் உயர்விலிருந்துண்டானவன்; நீங்கள் இந்த உலகத்திலிருந்துண்டானவர்கள், நான் இந்த உலகத்திலிருந்துண்டானவனல்ல.**

**யோவா 8:24. ஆகையால் நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன்; நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார்.**

**யோவா 8:25. அதற்கு அவர்கள்: நீர் யார் என்றார்கள். இயேசு அவர்களை நோக்கி: நான் ஆதிமுதலாய் உங்களுக்குச் சொல்லியிருக்கிறவர்தான்.**

**யோவா 8:26. உங்களைக்குறித்துப் பேசவும் நியாயந்தீர்க்கவும் எனக்கு அநேக காரியங்களுண்டு. என்னை அனுப்பினவர் சத்தியமுள்ளவர்; நான் அவரிடத்தில் கேட்டவைகளையே உலகத்துக்குச் சொல்லுகிறேன் என்றார்.**

**யோவா 8:27. பிதாவைக்குறித்துப் பேசினாரென்று அவர்கள் அறியாதிருந்தார்கள்.**

**யோவா 8:28. ஆதலால் இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷகுமாரனை உயர்த்தின பின்பு, நானே அவரென்றும், நான் என் சுயமாய் ஒன்றும் செய்யாமல், என் பிதா எனக்குப் போதித்தபடியே இவைகளைச் சொன்னேன் என்றும் அறிவீர்கள்.**

**யோவா 8:29. என்னை அனுப்பினவர் என்னுடனேகூட இருக்கிறார், பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால் அவர் என்னைத் தனியேயிருக்கவிடவில்லை என்றார்.**

**யோவா 8:30. இவைகளை அவர் சொல்லுகையில், அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள்.**

### நான் போகிற இடத்திற்கு வர உங்களால் கூடாது

**இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி: நான் போகிறேன், நீங்கள் என்னைத்தேடி, உங்கள் பாவங்களிலே சாவீர்கள்; நான் போகிற இடத்துக்கு வர உங்களால் கூடாது என்றார் (யோவா 8:21).**

யூதர்கள் இயேசுகிறிஸ்துவின்மீது விசுவாசமில்லாதவர்களாகவும், தங்களுடைய நித்திய ஜீவனைக்குறித்து கவலையில்லாதவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களுடைய அவிசுவாசத்தினிமித்தமாகவும், பாவங்களினிமித்தமாகவும் அவர்களுக்கு வரப்போகும் அழிவை இயேசுகிறிஸ்து எச்சரிப்பாகக் கூறுகிறார். பாவம் செய்கிறவர்கள்மீது தேவனுடைய கோபாக்கினை வந்து இறங்கும். தம்மிடத்தில் விவாதம்பண்ணும் யூதர்களைக் கைவிட்டுவிட மனதில்லாதவராக இயேசுகிறிஸ்து அவர்களுக்கு மறுபடியும் உபதேசம் பண்ணுகிறார். தம்முடைய உபதேசத்தை ஒரு சிலரே ஏற்றுக்கொண்டாலும் அவர்களுக்கு இயேசு தொடர்ந்து உபதேசம்பண்ணுகிறார்.

## அதிகாரம் - 8

இயேசுகிறிஸ்துவின் உபதேச ஊழியம் அவருடைய ஊழியக்காரராகிய நமக்கு ஒரு முன்மாதிரியாக இருக்கிறது. நம்முடைய ஊழியத்திற்கு எதிர்ப்பு வந்தாலும், நமக்கு நியமிக்கப்பட்டிருக்கும் ஊழியத்தை எதிர்ப்புக்களின் மத்தியிலும் நாம் தொடர்ந்து நிறைவேற்ற வேண்டும். ஏனெனில் இரட்சிப்புக்காக நியமிக்கப்பட்டிருக்கிறவர்கள், இஸ்ரவேலில் மீதமுள்ளவர்கள் இரட்சிக்கப்பட வேண்டியது அவசியமாக இருக்கிறது.

இயேசுகிறிஸ்து இதுவரையிலும் கிருபை நிறைந்த வார்த்தைகளினால் அவர்களோடு பேசினார். அவர்களுக்கு குழல் ஊதுவதுபோல ஊதினார். ஆனால் அவர்களோ நடனமாடவில்லை. ஆகையினால் இப்போது தம்முடைய கிருபையின் வார்த்தைகளினால் அவர்களோடு பேசுவதற்குப் பதிலாக, தம்முடைய கோபாக்கினையின் வார்த்தைகளை அவர்களுக்கு அறிவிக்கிறார். மனந்திருந்தவில்லையென்றால் அவர்களுக்கு நித்திய அழிவு உண்டாகும். பாவம் செய்தவர்கள் இரட்சிக்கப் படவில்லையென்றால் தங்கள் பாவங்களில் சாவார்கள். இயேசு கிறிஸ்துவிடத்தில் நித்திய சந்தோஷம் உண்டு. பாவத்தின் முடிவில் நித்திய புலம்பலும், அழுகையும், பற்கடிப்பும் உண்டு.

இயேசுகிறிஸ்து அவர்களைப்பார்த்து "நான் போகிறேன் நீங்கள் என்னைத் தேடி உங்கள் பாவங்களில் சாவீர்கள். நான் போகிற இடத்திற்கு வர உங்களால் கூடாது" என்று கூறுகிறார். இயேசுகிறிஸ்து இங்கு கூறும் ஒவ்வொரு வார்த்தையும் மிகவும் பயங்கரமானது. அவர்கள்மீது ஆவிக்குரிய நியாயத்தீர்ப்பை இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள் அறிவிக்கிறது. எல்லா நியாயத்தீர்ப்புக்களிலும் ஆவிக்குரிய நியாயத்தீர்ப்பே மிகவும் பயங்கரமானது. இயேசுகிறிஸ்து யூதர்களுக்கு விரோதமாக நான்கு காரியங்களைக் கூறுகிறார். அவையாவன: 1. இயேசுகிறிஸ்து அவர்களைவிட்டுப் போகப்போகிறார். 2. அவர் போனபின்பு அவர்கள் இயேசுகிறிஸ்துவைத் தேடுவார்கள். 3. தங்கள் பாவங்களில் அவர்கள் சாவார்கள். 4. இயேசுகிறிஸ்து போகிற இடத்திற்கு வர அவர்களால் கூடாது.

நம்மைவிட்டு இயேசுகிறிஸ்து விலகிப்போய்விடுவாரென்றால் நம்முடைய நிலமை மிகவும் பரிதாபமாக இருக்கும். அவர் பல சமயங்களில் ஜனங்களை விட்டு போகப்போவதாகக் கூறியிருக்கிறார். ஆயினும் நம்முடைய உள்ளத்தில் வந்து வாசம் பண்ணுமாறு அவரை அன்போடு அழைக்கும்போது, அவர் நம்மிடத்தில் வாசம் பண்ணுவார். ஆனால் இந்த ஜனங்களோ இயேசுகிறிஸ்துவையும் அவருடைய உபதேச வார்த்தைகளையும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகையினால் இயேசுகிறிஸ்து இவர்களைவிட்டு கடந்துபோகப்போகிறார்.

இயேசுகிறிஸ்து போனபின்பு இந்த ஜனங்கள் அவரைத் தேடுவார்கள். மெய்யான மேசியாவின்மீது இவர்கள் விரோதத்தோடிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவை இவர்கள் இரண்டு காரணங்களுக்காகத் தேடலாம். அவையாவன: 1. மெய்யான இயேசு கிறிஸ்துவின் மீது அவர்களுக்கு இருக்கும் விரோதத்தினிமித்தமாக அவர்கள் இயேசுவைத் தேடலாம். 2. ஒருவேளை இவர்கள் மெய்யான கிறிஸ்துவைத்தேடாமல் கள்ளக்கிறிஸ்துக்களைத் தேடலாம்.

இயேசுகிறிஸ்துவை அழிக்க வேண்டுமென்றும் அவரைப் பின்பற்றுகிறவர்களை உபத்திரவப்படுத்த வேண்டுமென்றும் இவர்கள் இயேசுவைத் தேடலாம். இயேசுகிறிஸ்துவின் உபதேசங்களை அவமாக்கிப்போடவேண்டும் என்பதற்காகவும் இவர்கள் இயேசுவைத் தேடலாம். தங்களிடத்தில் மேசியா வருவாரென்று யூதர்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். வாக்குப்பண்ணப்பட்ட பிரகாரம் இயேசுகிறிஸ்து இந்த பூமிக்கு, யூதர்கள் மத்தியில் ஏற்கெனவே வந்திருக்கிறார். ஆனால் அவர்களோ மெய்யான இயேசு கிறிஸ்துவை அறியாதவர்களாக, கள்ளக்கிறிஸ்துக்களைக் தேடிப்போவார்கள்.

யூதர்கள் இயேசுகிறிஸ்துவின் உபதேசத்திற்கு செவிகொடுக்காதபடியினால் தங்கள் பாவங்களில் ஜீவிக்கிறார்கள். பாவம் செய்கிறவர்கள் தங்கள் பாவங்களில் சாவார்கள். அவிசுவாசமே யூதர்களுடைய பிரதான பாவம். இவர்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை மேசியா என்று விசுவாசிக்கவில்லை. அவிசுவாசத்தோடு ஜீவிக்கிறவர்கள் தங்கள் அவிசுவாசத்திலேயே மரித்துப்போவார்கள். பாவத்தில் ஜீவிக்கிறவர்கள் தங்கள் பாவங்களுக்காக மனம்வருந்தி, மனந்திரும்பும்போது தேவனுடைய கிருபையினால் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள முடியும். இரட்சிக்கப்பட்டவர்கள் பாவத்தில் மரித்துப் போகமாட்டார்கள். ஆனால் இரட்சிக்கப்படாதவர்களோ தங்கள் பாவங்களில் சாவார்கள்.

## அதிகாரம் - 8

பாவிகள் தேவனைவிட்டு நித்திய காலமாகப் பிரிந்திருப்பார்கள். இயேசுகிறிஸ்து போகிற இடத்திற்கு வர பாவிகளால் கூடாது. இயேசுகிறிஸ்து இந்த உலகத்தைவிட்டு போனபோது அவர் பரலோகத்திற்குப் போனார். மனந்திரும்பிய கள்ளனையும் இயேசுகிறிஸ்து தம்மோடு பரதீசுக்கு அழைத்துச் சென்றார். சிலுவையில் மரித்துக்கொண்டிருந்த கள்ளன் தன் பாவங்களுக்காக மனம் வருந்தினான். இயேசுகிறிஸ்து அவனை இரட்சித்தார். ஆகையினால் அவன் தன் பாவங்களில் சாகவில்லை. மனந்திரும்பாதவர்கள் இயேசுகிறிஸ்துவோடு பரலோகத்திற்குப் போகமாட்டார்கள். அவர்களால் அங்கு போகவே முடியாது. பரிசுத்தமில்லாமல் பாவத்தில் மரித்துப் போகிறவர்கள் யாரும் பரலோகத்திற்குப் போகமுடியாது. பரலோகம் பரிசுத்தவான்களுக்காகவே ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ஸ்தலம்.

### தன்னைத்தானே கொலை செய்து கொள்வானோ

**அப்பொழுது யூதர்கள்: நான் போகிற இடத்துக்கு வர உங்களால் கூடாது என்கிறானே, தன்னைத்தான் கொலை செய்துகொள்வானோ என்று பேசிக் கொண்டார்கள் (யோவா 8:22).**

இயேசுகிறிஸ்து யூதர்களிடம் எச்சரிப்பின் வார்த்தைகளைக் கூறுகிறார். ஆனால் அவர்களோ இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளைப் பரியாசம்பண்ணுகிறார்கள். தாம் போகும் இடத்திற்கு வர அவர்களால் கூடாது என்று அவர்களை எச்சரிக்கிறார். ஆனால் அவர்களோ இயேசுகிறிஸ்து தன்னைத்தான் கொலைசெய்து கொள்வாரோ என்று பரியாசம்பண்ணுகிறார்கள். இயேசுகிறிஸ்துவின் எச்சரிப்பின் வார்த்தைகள் அவர்களுக்கு விளையாட்டாகத் தெரிகிறது. எச்சரிப்பின் சத்தத்தைக் கேட்டு பயந்து நடுங்கவேண்டியவர்கள் தங்களை எச்சரிக்கிற இயேசுவைப் பார்த்து பரியாசம்பண்ணுகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் ஜீவியத்தைப்பற்றி இவர்கள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. இயேசுகிறிஸ்து ஒருபோதும் தம்மைத்தாமே கொலைசெய்யப் போவதில்லை. அவர் ஜீவனைக்கொடுப்பதற்காகவே இந்த உலகத்திற்கு வந்திருக்கிறார். ஆனால் இவர்களோ அவர் ஜீவனை எடுக்க வந்திருப்பதாகப் பரியாசம்பண்ணுகிறார்கள். இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்காதவர்கள் அவருடைய வார்த்தைகளையும் விசுவாசிக்கமாட்டார்கள்.

அவர்களைவிட்டு தாம் போகப்போவதைக் குறித்து இயேசுகிறிஸ்து ஏற்கெனவே அவர்களிடத்தில் பேசியிருக்கிறார். "அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: இன்னும் கொஞ்சக்காலம் நான் உங்களுடனேகூட இருந்து, பின்பு என்னை அனுப்பினவரிடத்திற்குப் போகிறேன். நீங்கள் என்னைத் தேடுவீர்கள், ஆனாலும் என்னைக் காணமாட்டீர்கள்; நான் இருக்கும் இடத்திற்கு நீங்கள் வரவுங் கூடாது என்றார். அப்பொழுது யூதர்கள்: இவரை நாம் காணாதபடிக்கு எங்கே போவார், கிரேக்கருக்குள்ளே சிதறியிருக்கிறவர்களிடத்திற்குப்போய், கிரேக்கருக்கு உபதேசம் பண்ணுவாரோ? நீங்கள் என்னைத் தேடுவீர்கள், ஆனாலும் என்னைக் காணமாட்டீர்கள் என்றும், நான் இருக்கும் இடத்துக்கு நீங்கள் வரக்கூடாதென்றும், இவர் சொன்ன வார்த்தையின் கருத்து என்னவென்று தங்களுக்குள்ளே சொல்லிக்கொண்டார்கள்" *(யோவா 7:33-36).*

இயேசுகிறிஸ்துவின்மீது யூதர்களுடைய கோபம் நாளுக்குநாள் அதிகரிக்கிறது. கிரேக்கருக்குள்ளே சிதறியிருக்கிறவர்களிடத்திற்குப் போய், கிரேக்கருக்கு உபதேசம்பண்ணுவாரோ என்று முன்பு கூறியவர்கள், இப்போது அவர் தம்மைத்தாமே கொலைசெய்து கொள்வாரோ என்று அவர்மீது வெறுப்போடும் கோபத்தோடும் பேசுகிறார்கள்.

### நான் உயர்விலிருந்து உண்டானவன்

**அவர் அவர்களை நோக்கி: நீங்கள் தாழ்விலிருந்துண்டானவர்கள், நான் உயர்விலிருந்துண்டானவன்; நீங்கள் இந்த உலகத்திலிருந்துண்டானவர்கள், நான் இந்த உலகத்திலிருந்துண்டானவனல்ல (யோவா 8:23).**

## அதிகாரம் - 8

தாம் போகிற இடத்திற்கு இவர்களால் ஏன் வரக்கூடாது என்பதற்கான காரணத்தையும் இயேசுகிறிஸ்து அவர்களுக்குத் தெளிவுபடுத்துகிறார். அவர்கள் தாழ்விலிருந்து உண்டானவர்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ உயர்விலிருந்து உண்டானவர். அவர்கள் இந்த உலகத்திலிருந்து உண்டானவர்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ இந்த உலகத்திலிருந்து உண்டானவரல்ல. இந்த ஜனங்களெல்லோரும் தாழ்விலுள்ள காரியங்களாக இருக்கிறார்கள். இவர்களுடைய ஆவி இயேசுகிறிஸ்துவின் ஆவியோடு முற்றிலும் முரண்பட்டிருக்கிறது. இவர்கள் இந்த உலகத்திற்குரியவர்கள். இயேசுகிறிஸ்துவோ பரலோகத்திற்குரியவர். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் ஆவியானவர் இந்த உலகத்திற்குரியவரல்ல. அவர் உயர்விலிருந்து உண்டானவர். பரலோகத்திலிருந்து வந்திருக்கிறவரால் மாத்திரமே பரலோகத்தின் காரியங்களைக் குறித்து அறிவிக்க முடியும். ஆனால் இந்த ஜனங்களோ தாழ்விலிருந்து உண்டானவர்கள். இவர்களுடைய ஆவியும் தாழ்விலிருந்து உண்டாயிருக்கிறது. ஆகையினால் இயேசுகிறிஸ்து போகிற இடத்திற்கு இவர்களால் வரக்கூடாது.

**உங்கள் பாவங்களிலே சாவீர்கள்**

**ஆகையால் நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன்; நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார் (யோவா 8:24).**

தாம் போகும் இடத்திற்கு அவர்களால் ஏன் வரக்கூடாது என்பதற்கான காரணத்தை இயேசுகிறிஸ்து அவர்களிடம் கூறுகிறார். அதன் பின்பு தம்முடைய எச்சரிப்பின் வார்த்தைகளினால் "நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள்" என்று கூறி எச்சரிக்கிறார். இதற்கான காரணத்தையும் அவர்களுக்குத் தெளிவுபடுத்துகிறார். "நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களில் சாவீர்கள்" என்பதே அவர்கள் தங்கள் பாவங்களில் சாகப்போவதற்குக் காரணமாகும்.

நம்முடைய பாவங்களில் நாம் சாகக்கூடாது என்றால் "நானே அவர்" என்று இயேசுகிறிஸ்து கூறியதை விசுவாசிக்க வேண்டும். இயேசுவே வரப்போகிற மேசியா என்பதை யூதர்கள் விசுவாசிக்கவேண்டும். மேசியா வருவாரென்று யூதர்கள் விசுவாசிக்கிறார்கள். ஆனால் இயேசுவே மேசியா என்பதை அவர்கள் விசுவாசிக்கவில்லை. ஆகையினால் அவர்கள் "இயேசுவே மேசியா" என்று விசுவாசிக்கவேண்டும். நமக்குள் உண்மையான விசுவாசம் இருக்குமென்றால் நம்முடைய ஆத்துமா சத்திய வார்த்தைகளை அங்கீகரிக்கும். மெய்யான சத்தியம் நம்முடைய ஆத்துமாவிற்குள் கிரியை நடப்பிக்கும். சத்திய வார்த்தைகள் சாதாரண ஒலி ஓசைகளாக இருக்காது. அது ஜீவனுள்ள வார்த்தைகளாக இருக்கும்.

இயேசுகிறிஸ்துவை மேசியா என்று நாம் அவசியம் விசுவாசித்தே ஆகவேண்டும். நம்மிடத்தில் இந்த விசுவாசம் இல்லையென்றால் நம்முடைய பாவங்களில் நாம் செத்துப்போவோம். நாம் இந்த பூமியில் ஜீவிக்கும்போது பாவத்தின் வல்லமையிலிருந்து நம்மால் விடுதலைபெற முடியாது. இந்தப்பாவம் நாம் சாகும் வரையிலும் நம்மைத் தொடரும். இயேசுகிறிஸ்துவை நம்முடைய இரட்சகராக விசுவாசித்து ஏற்றுக்கொண்டால் நம்முடைய பாவங்களிலிருந்து நாம் இரட்சிக்கப்படுவோம். பாவங்களில் மரிக்கமாட்டோம். இயேசுகிறிஸ்துவின் ஆவியானவரே தம்முடைய இரட்சிக்கும் கிருபையினாலும் வல்லமையினாலும் நம்முடைய பாவங்களிலிருந்து நம்மை விடுவித்து தேவனிடத்தில் அழைத்துச் செல்ல வல்லவராகயிருக்கிறார்.

இயேசுகிறிஸ்து நம்முடைய பாவங்களிலிருந்து நம்மை விடுவிக்கவில்லையென்றால் நமக்கு விடுதலை இல்லை. நம்முடைய நிலமை மிகவும் பரிதாபமாக இருக்கும். நம்முடைய பாவங்களில் நாம் சாவோம். நாம் விசுவாசமில்லாமல், மரிக்கும்போது, பாவத்தின் தண்டனையிலிருந்து நம்மால் இரட்சிக்கப்பட முடியாது. இயேசுகிறிஸ்துவை நம்முடைய இரட்சகராக விசுவாசித்து ஏற்றுக்கொள்ள வேண்டும். இதுவே சுவிசேஷத்தின் வாக்குத்தத்தம். இயேசுகிறிஸ்துவை நம்முடைய இரட்சகர் என்று நாம் விசுவாசித்தால், நம்முடைய பாவங்களில் நாம் சாகமாட்டோம். விசுவாசிகள் பாவத்தில் மரிக்காமல் இயேசுகிறிஸ்துவில் மரிப்பார்கள். அவருடைய அன்பிலும், அவருடைய கரங்களிலும் மரிப்பார்கள். தங்கள் பாவங்களில் மரிக்கமாட்டார்கள்.

## அதிகாரம் - 8

**நீர் யார்**

**அதற்கு அவர்கள்: நீர் யார் என்றார்கள். இயேசு அவர்களை நோக்கி: நான் ஆதிமுதலாய் உங்களுக்குச் சொல்லியிருக்கிறவர்தான் (யோவா 8:25).**

இயேசுகிறிஸ்துவின் வார்த்தையைக் கேட்டு அவர்களுக்கு பயமும் கோபமும் உண்டாயிற்று. அவர்கள் இயேசுவைப்பார்த்து "நீர் யார்" என்று கேட்கிறார்கள். இயேசு ஏற்கெனவே அவர்களிடம் "நானே அவர்" என்பதை நீங்கள் விசுவாசிக்கவேண்டும் என்று கூறியிருக்கிறார். ஆனால் தாம் யார் என்பதை இயேசு தங்களுக்குத் தெளிவுபடுத்தவில்லை என்று யூதர்கள் நினைக்கிறார்கள். தம்மைப்பற்றி வெளிப்படுத்தாமலேயே, தம்மை விசுவாசிக்க வேண்டுமென்று இயேசு கூறுவதினால் ஜனங்கள் அவரை நிந்திக்கிறார்கள். தாம் யார் என்று அவருக்கு கூறத்தெரியாதோ என்று இயேசுவின்மீது சந்தேகப்படுகிறார்கள். அவர் யார் என்பதைத் தெளிவுபடுத்திக்கொள்ளவேண்டும் என்னும் எண்ணத்தில், ஜனங்கள் அவரிடத்தில் "நீர் யார்" என்று கேட்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து தாம் யார் என்பதை அவர்களுக்கு வெளிப்படுத்திக் கூறுகிறார். தம்முடைய பிரதியுத்தரத்தில் இயேசுகிறிஸ்து தம்மைப்பற்றி மூன்று காரியங்களை வெளிப்படுத்துகிறார். அவையாவன:
1. இயேசுகிறிஸ்து ஆதிமுதலாய் அவர்களுக்குச் சொல்லியிருக்கிறவர்தான். 2. அவர்களைக்குறித்துப் பேசவும் நியாயந்தீர்க்கவும் இயேசுகிறிஸ்துவுக்கு அநேக காரியங்கள் உண்டு. 3. தம்முடைய பிதா தமக்குப் போதித்தபடியே தாம் இவர்களிடம் சொன்னதாக இவர்கள் அறிவார்கள்.

யூதர்கள் இயேசுகிறிஸ்துவிடம் "நீர் யார்" என்று கேட்கிறார்கள். தம்மைப்பற்றி இயேசுகிறிஸ்து இதுவரையிலும் பல சத்தியங்களை வெளிப்படுத்தியிருக்கிறார். அவையெல்லாவற்றையும் தங்கள் காதுகளால் கேட்டிருந்தும், இவர்கள் இன்னும் இயேசுவிடம் "நீர் யார்" என்று கேட்கிறார்கள். தம்மைப்பற்றி ஏற்கெனவே அவர்களுக்கு எப்படி வெளிப்படுத்தியிருக்கிறாரோ, அப்படியே தாம் இருப்பதாக இயேசுகிறிஸ்து அவர்களுக்கு பிரதியுத்தரம் கூறுகிறார். "நான் ஆதிமுதலாய் உங்களுக்கு சொல்லியிருக்கிறவர்தான்" என்று அறிவிக்கிறார்.

பழைய ஏற்பாட்டு வேதவசனங்களில் ஆதிமுதலாய் தம்மைப்பற்றி தாம் எப்படி வெளிப்படுத்தியிருக்கிறாரோ அப்படியே தாம் இருப்பதாக அவர்களுக்குக் கூறுகிறார். ஆதிமுதலாய் என்னும் வாக்கியத்திற்கு, பழைய ஏற்பாட்டு காலத்திலிருந்து என்றும், இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காலத்தின் ஆரம்பத்திலிருந்து என்றும் பொருள் கூறலாம். இயேசுகிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர். தம்மைப்பற்றி எப்படி வெளிப்படுத்தியிருக்கிறாரோ அப்படியே மாறாமலிருக்கிறவர். தம்முடைய வார்த்தையின் பிரகாரமாக ஜீவிக்கிறவர். "நீர் யார்" என்னும் கேள்விக்கு, தம்மைப்பற்றி இதுவரையிலும் தாம் எப்படி கூறியிருக்கிறாரோ, அப்படியே தாம் இருப்பதாக இயேசுகிறிஸ்து கூறுகிறார்.

**என்னை அனுப்பினவர் சத்தியமுள்ளவர்**

**உங்களைக்குறித்துப் பேசவும் நியாயந்தீர்க்கவும் எனக்கு அநேக காரியங்களுண்டு. என்னை அனுப்பினவர் சத்தியமுள்ளவர்; நான் அவரிடத்தில் கேட்டவைகளையே உலகத்துக்குச் சொல்லுகிறேன் என்றார். பிதாவைக்குறித்துப் பேசினாரென்று அவர்கள் அறியாதிருந்தார்கள் (யோவா 8:26,27).**

## அதிகாரம் - 8

"நீர் யார்" என்று தம்மிடத்தில் கேட்ட ஜனங்களுக்கு, இயேசுகிறிஸ்து தம்மைப்பற்றி மேலும் வெளிப்படுத்தும் விதமாக, தம்முடைய பிதாவின் நியாயத்தீர்ப்பைப்பற்றி அவர்களிடத்தில் கூறுகிறார். "உங்களைக்குறித்து பேசவும் நியாயந்தீர்க்கவும் எனக்கு அநேக காரியங்கள் உண்டு" என்று அவர்களிடத்தில் கூறுகிறார். தம்மை அனுப்பினவர் சத்தியமுள்ளவரென்றும், தாம் அவரிடத்தில் கேட்டவைகளையே உலகத்திற்கு சொல்வதாகவும் இயேசுகிறிஸ்து அறிவிக்கிறார். இந்த ஜனங்களைக் குறித்து பேசவும் நியாயந்தீர்க்கவும் இயேசுகிறிஸ்துவுக்கு அநேக காரியங்கள் உண்டு. ஆயினும் இப்போது இயேசுகிறிஸ்து அவைகளைப் பேச விரும்பவில்லை. தற்பொழுது எவ்வளவு பேசவேண்டுமோ அவ்வளவு பேசிவிட்டதாக இயேசுகிறிஸ்து தீர்மானிக்கிறார்.

இவர்களுக்கு விரோதமான குற்றச்சாட்டுக்களை இயேசுகிறிஸ்து தம்மை அனுப்பின பிதாவுக்குத் தெரியப்படுத்துகிறார். ஏனெனில் பிதாவாகிய தேவனே குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை இந்த பூமிக்கு அனுப்பியவர். இயேசுகிறிஸ்துவுக்கு இரண்டு காரியங்கள் ஆறுதலைத் தருகிறது. தம்முடைய பிதாவுக்கு தாம் உண்மையுள்ளவராக இருப்பது இயேசுவுக்கு ஆறுதலைத் தரும் முதலாவது காரியம். தம்மிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட காரியத்திற்கு இயேசுகிறிஸ்து உண்மையுள்ளவராக இருக்கிறார். சர்வ சிருஷ்டிக்கும் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட வேண்டும். தாம் பிதாவிடத்தில் கேட்டவைகளை இயேசுகிறிஸ்து உலகத்திற்குச் சொல்வதாகக் கூறுகிறார். தாம் பிதாவுக்கு உண்மையுள்ளவராக இருப்பதுபோலவே, பிதாவும் தமக்கு சத்தியமுள்ளவராக இருப்பது இயேசுகிறிஸ்துவுக்கு ஆறுதலைக் கொடுக்கிற இரண்டாவது காரியமாகும். தம்முடைய உபதேசத்தைக் கேட்காத ஜனங்களைப்பற்றி இயேசுகிறிஸ்து தமது பிதாவிடத்தில் குற்றப்படுத்தமாட்டார். ஆனால் குமாரனை அனுப்பின பிதாவாகிய தேவனோ சத்தியமுள்ளவராக இருக்கிறார். ஆகையினால் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்காத ஜனங்கள்மீது பிதாவானவரின் கோபாக்கினை வந்து இறங்கும்.

இந்த ஜனங்கள்மீது இயேசுகிறிஸ்து குற்றம் சுமத்த வேண்டிய அவசியமில்லை. இவர்களைக் குறித்து பேசவும், நியாயந்தீர்க்கவும் இயேசுகிறிஸ்துவுக்கு அநேக காரியங்கள் உண்டு. ஆனாலும் அவர் அவர்களைக்குறித்து பேசவோ, நியாயந்தீர்க்கவோ மாட்டார். இயேசுகிறிஸ்துவை அனுப்பின பிதாவானவர் சத்தியமுள்ளவர். ஆகையினால் இயேசுகிறிஸ்து இவர்களைக்குறித்து நியாயந் தீர்க்கவில்லையென்றாலும், பிதாவானவர் அவர்களைக்குறித்து நியாயந்தீர்ப்பார்.

யோவான் இந்த சுவிசேஷத்தில் இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தை மிகவும் விரிவாக எழுதிக்கொண்டு வருகிறார். இந்த உபதேசத்தின் முடிவுரையில் இயேசுகிறிஸ்துவின் பிரசங்கத்தை ஜனங்கள் அறியாதிருப்பதையும் மிகவும் சோகமாக "பிதாவைக்குறித்து பேசினாரென்று அவர்கள் அறியாதிருந்தார்கள்" என்று குறிப்பிடுகிறார். இயேசுகிறிஸ்து தேவனைப்பற்றி வெளிப்படுத்தும்போது, பரலோகத்திலுள்ள தம்முடைய பிதாவாக அவரை வெளிப்படுத்துகிறார். ஆனால் அவர் பிதாவைக்குறித்து பேசினாரென்று அவர்கள் அறியாதிருக்கிறார்கள். அவருடைய உபதேசத்தின் கருத்தை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை.

பகலும் இரவும் குருடனுக்கு ஒன்றுபோலத்தான் இருக்கும். இரண்டுக்கும் அவனால் வித்தியாசம் காணமுடியாது. அதுபோலவே ஜனங்கள் இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தை அறிந்துகொள்ள முடியாத ஆவிக்குரிய குருடர்களாக இருக்கிறார்கள்.

### மனுஷகுமாரனை உயர்த்தின பின்பு

**ஆதலால் இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷகுமாரனை உயர்த்தின பின்பு, நானே அவரென்றும், நான் என் சுயமாய் ஒன்றும் செய்யாமல், என் பிதா எனக்குப் போதித்தபடியே இவைகளைச் சொன்னேன் என்றும் அறிவீர்கள் (யோவா 8:28).**

## அதிகாரம் - 8

இயேசுகிறிஸ்துவே தேவனுடைய குமாரனென்றும், அவரே தாங்கள் எதிர்பார்க்கும் மேசியா என்றும் யூதர்கள் அறிந்துகொள்ளவேண்டும். ஆனால் இப்போது அவர்கள் இயேசுகிறிஸ்துவை மேசியாவாக அறிந்துகொள்ளவில்லை. இயேசுகிறிஸ்து தம்மைக்குறித்து அவர்களுக்கு ஒன்றையும் மறைக்கவில்லை. தம்முடைய சுயமாய் அவர் ஒன்றும் செய்யாமல், தம்முடைய பிதா தமக்குப் போதித்தபடியே, அவர்களுக்குத் தம்மைப்பற்றிய எல்லா காரியங்களையும் சொல்கிறார்.

கள்ளத்தீர்க்கதரிசிகள் தங்கள் சொந்த இருதயங்களிலிருந்து, தங்கள் சொந்த ஆவியினால், தங்களுடைய சொந்தக் கருத்துக்களை தீர்க்கதரிசனமாகக் கூறுகிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ தம்முடைய சுயமாய் ஒன்றும் பேசவும் இல்லை செய்யவும் இல்லை. இயேசுகிறிஸ்து தமக்குத்தாமே சுயமாய் போதித்துக் கொள்ளவுமில்லை. பிதாவாகிய தேவனே குமாரனாகிய இயேசுகிறிஸ்துவுக்கு எல்லாவற்றையும் போதித்திருக்கிறார். தமக்குப் போதித்தபடியே இயேசுகிறிஸ்து தம்மைப்பற்றிய சத்தியங்களை ஜனங்களுக்கு சொல்கிறார்.

ஜனங்கள் மனுஷகுமாரனை உயர்த்துவார்கள். வனாந்தரத்தில் சர்ப்பம் கம்பத்தில் உயர்த்தப்பட்டதுபோல அவர்கள் இயேசுகிறிஸ்துவை சிலுவையில் உயர்த்துவார்கள் (யோவா 3:14). இயேசுகிறிஸ்துவை உயர்த்துவது என்பது கல்வாரியில் அவர் சிலுவையில் அறையப்பட்ட சம்பவத்தைக் குறிக்கலாம். அல்லது தம்முடைய மரணத்தின் மூலமாக இயேசுகிறிஸ்து உயர்த்தப்பட்டு மகிமையடைந்ததையும் குறிக்கலாம்.

அவர்கள் இயேசுகிறிஸ்துவை சிலுவை மரத்திலே உயர்த்தினார்கள். அதன்பின்பு இயேசுகிறிஸ்து தம்மைத்தாமே தம்முடைய பிதாவிடத்திற்கு உயர்த்திக்கொள்கிறார். தம்மை இவர்கள் சிலுவையில் அறைந்து கொலைபண்ணப்போகிறார்கள் என்பதை இயேசுகிறிஸ்து அறிந்திருக்கிறார். அறிந்திருந்தும் இயேசு அவர்களோடு மிகவும் அன்பாகவும் மென்மையாகவும் பேசுகிறார்.

யூதர்கள் இயேசுகிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கவில்லை. அவர்களிடத்தில் தம்முடைய மரணத்தைப்பற்றிக் கூறி, தாமே தேவனுடைய குமாரன் என்னும் சத்தியத்தை அவர்களுடைய உள்ளத்தில் உணர்த்துகிறார். அவர்கள் மனுஷகுமாரனை உயர்த்தினபின்பு இயேசுகிறிஸ்துவே மேசியா என்பதை அறிந்துகொள்வார்கள். இப்போது ஜனங்கள் அறியாமையிலிருக்கிறார்கள். மேசியாவைப்பற்றி சிந்திக்கவேண்டிய பிரகாரமாக அவர்கள் சிந்திக்கவில்லை. தங்களுக்கு கிருபையில்லாமல் போகும்போதுதான் கிருபையின் மதிப்பு என்ன என்பதை இவர்கள் கற்றுக்கொள்வார்கள்.

இயேசுகிறிஸ்துவை சிலுவையில் அறைந்த பின்பு யூதர்களுடைய மனச்சாட்சி அவர்களோடு பேசும். அவர்களுடைய குற்றத்தை உணர்த்தும். மனச்சாட்சியில் குத்தப்பட்ட பின்பு அவர்கள் இரட்சகரைப்பற்றி விசாரிப்பார்கள். அப்போதுதான் அவர்களுக்குப் புத்திதெளியும். இயேசுகிறிஸ்துவே தங்களை இரட்சிப்பதற்காக வந்திருக்கிற உலக இரட்சகர் என்பதை அப்போது அறிந்துகொள்வார்கள். தேவனுடைய குமாரனை சிலுவையில் அறைந்த தங்களுடைய பாவமான கைகளை உயர்த்தி, தாங்கள் என்ன செய்யவேண்டுமென்று தேவனிடத்தில் கதறுவார்கள். தாங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துமாக்கினார் என்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறிவார்கள் அப்போது இவர்கள் இருதயத்தில் குத்தப்பட்டவர்களாகி "நாங்கள் என்ன செய்யவேண்டும்" என்று கேட்பார்கள் (அப் 2:36,37).

இயேசுகிறிஸ்துவை மேசியா என்று நிரூபிப்பதற்கு அவருடைய மரணத்தைத் தொடர்ந்து பல அற்புதங்களும் அடையாளங்களும் உண்டாகும். இதுவரையிலும் அவர்களுக்கு காண்பிக்கப்பட்ட அடையாளங்களைவிட, இயேசுகிறிஸ்துவின் மரணம் வல்லமையான சாட்சியாக இருக்கும். இயேசுவே கிறிஸ்து என்னும் சத்தியத்தை அவருடைய மரணம் நிரூபிக்கும். இயேசுகிறிஸ்து மரணத்தின் மூலமாக தம்முடைய பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைக் கிரயத்திற்கு வாங்கியிருக்கிறார். இயேசுவே கிறிஸ்து என்னும் சத்தியத்தை பரிசுத்த ஆவியானவர் இந்த உலகத்திற்கு உணர்த்துவார்.

## அதிகாரம் - 8

இயேசுகிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்ததினால் யூதர்கள் தங்களுக்குத் தாங்களே, தங்கள்மீது நியாயத்தீர்ப்பை வருவித்துக்கொண்டார்கள். தேவனுடைய நியாயத்தீர்ப்பும் ஆக்கினைத்தீர்ப்பும் தங்கள்மீது வரும்போது, கல்லான இருதயமுடையவர்கள்கூட, தங்களுடைய இருதயங்களில் குத்தப்பட்டு, இயேசுவே கிறிஸ்து என்பதை அறிவார்கள்.

**என்னை அனுப்பினவர் என்னுடனே கூட இருக்கிறார்**

**என்னை அனுப்பினார் என்னுடனேகூட இருக்கிறார், பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால் அவர் என்னைத் தனியேயிருக்கவிடவில்லை என்றார் (யோவா 8:29).**

பிதாவாகிய தேவன் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடு எப்போதும் கூடவே இருக்கிறார். பிதாவின் பிரசன்னம் தம்மோடு கூடயிருக்கிறது என்னும் நிச்சயம் இயேசுகிறிஸ்துவிடமுள்ளது. ஆகையினால் தம்மை அனுப்பினவர் தம்முடனே கூடயிருப்பதாக இயேசுகிறிஸ்து உறுதியுள்ள வார்த்தைகளினால் அறிவிக்கிறார். இயேசு எப்பொழுதும் பிதாவுக்குப் பிரியமானவைகளையே செய்கிறார். பிதாவானவரே இயேசுகிறிஸ்துவை அனுப்பினவர். அவர் இயேசுகிறிஸ்துவை தனியே இருக்கவிடாமல், அவரும் இயேசுவோடு கூடவேயிருக்கிறார். இயேசுகிறிஸ்துவில் நாம் விசுவாசம் வைத்து, அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்கும்போது, நம்மையும் தேவன் தனியே இருக்கவிடமாட்டார். இயேசுகிறிஸ்துவின் பிரசன்னத்தில் நாம் எப்போதும் கூடவேயிருப்போம்.

ராஜாதி ராஜாவாகிய தேவன், தாம் அனுப்பின குமாரனை தனியே இருக்கவிடவில்லை. குமாரன் தனியே இருந்து ஒருபோதும் பலவீனமடைவதில்லை. இயேசுகிறிஸ்து தனியாக இருக்கிறாரென்று யூதர்கள் அவரை ஏளனமாக நினைக்கிறார்கள். அவரைத் துன்பப்படுத்துகிறார்கள். ஆனால் இயேசுவோ தனியாக இல்லை. பிதாவானவர் அவரோடு கூடவேயிருக்கிறார். இயேசுகிறிஸ்துவை விரோதிக்கிறவர்கள் அவரோடு கூடயிருக்கும் பிதாவையும் விரோதிக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து தம்மை அனுப்பின பிதாவுக்குப் பிரியமானவைகளையே எப்பொழுதும் செய்கிறார். கர்த்தருக்குச் சித்தமானது இயேசுகிறிஸ்துவின் கையினால் வாய்க்கும். இயேசுகிறிஸ்துவின் ஜீவியத்தில் நடைபெற்ற ஒவ்வொரு சம்பவமும் கர்த்தருக்குச் சித்தமானதாகவும், அவருக்குப் பிரியமானதாகவும் இருக்கிறது (ஏசா 53:10). குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் செய்கைகள் அனைத்திலும் பிதாவாகிய தேவன் பிரியமாயிருக்கிறார். அவருடைய செய்கை எதுவும் பிதாவுக்கு வருத்தத்தைக் கொடுக்கவில்லை.

இயேசுகிறிஸ்து எல்லா நீதியினாலும் நிறைந்திருக்கிறார். தேவனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து நீதிபரராகவே தம்மை வெளிப்படுத்துகிறார். தேவனுடைய ஊழியக்காரர்களாகிய நாமும் அவருக்குப் பிரியமானதையே தெரிந்தெடுத்து, அவற்றைச் செய்யவேண்டும். அப்போது தேவனுடைய பிரசன்னம் நம்மோடு கூடவேயிருக்கும்.

**அநேகர் விசுவாசிக்கிறார்கள்**

**இவைகளை அவர் சொல்லுகையில், அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள் (யோவா 8:30).**

இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தினால் யூதர்கள் மத்தியில் நல்ல பெலன் உண்டாயிற்று. இயேசுகிறிஸ்து தம்மைப்பற்றியும், பிதாவைப்பற்றியும் சொல்லுகையில் அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைக்கிறார்கள். இஸ்ரவேல் ஜனங்களில் தேவனுக்கென்று ஒரு கூட்டம் ஜனங்கள் மீதியாக இருக்கிறார்கள். இவர்கள் தங்களுடைய ஆத்தும இரட்சிப்புக்காக கர்த்தரிடத்தில் விசுவாசம் வைத்திருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்பதற்கு இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோரும் அங்கு கூடிவராமற்போனாலும், அங்கு அவருடைய உபதேசத்தைக் கேட்டவர்களில் அநேகர் இயேசுகிறிஸ்துவிடத்தில் விசுவாசம் வைக்கிறார்கள்.

## அதிகாரம் - 8

தம்மை விசுவாசிக்காதவர்கள் தங்களுடைய பாவங்களில் சாவார்களென்று இயேசுகிறிஸ்து அவர்களிடம் எச்சரித்துக் கூறுகிறார். இயேசுவின் வார்த்தையைக் கேட்ட ஜனங்கள், தங்கள் இருதயங்களில் குத்தப்பட்டவர்களாக, தங்களுடைய ஆத்துமாவைக்குறித்து சிந்திக்கத் தொடங்குகிறார்கள். இயேசுவுக்கு விரோதமாக அநேகர் பேசினாலும், அங்கு ஏராளமான ஜனங்கள் அவரையும் அவருடைய வார்த்தையையும் விசுவாசிக்கிறார்கள். கர்த்தருடைய ஊழியத்தில் இப்படிப்பட்ட சம்பவங்கள் ஏராளமாய் பல சமயங்களில் நடைபெறுகின்றன. சில இடங்களில் ஊழியத்திற்கு அதிகமான எதிர்ப்புக்கள் இருக்கும். இவற்றிற்கு மத்தியிலும் கர்த்தர் திறந்த வாசலைக் கட்டளையிடுவார். பலரை இரட்சிப்பின் பாதையில் வழிநடத்துவார். பெரிய எதிர்ப்புக்கள் இருக்கிற இடங்களில் சுவிசேஷம் வல்லமையாகப் பிரசங்கிக்கப்பட்டு, ஏராளமான ஜனங்கள் இரட்சிக்கப்படுவார்கள்.

ஆகையினால் நம்முடைய ஊழியப்பாதையில் பல எதிர்ப்புக்களும் பிரச்சனைகளும் வருகிறபோதிலும், கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கும் ஊழியத்தை உண்மையாகச் செய்யவேண்டும். கர்த்தருக்காக நாம் ஏறெடுக்கிற எந்தப் பிரயாசமும் வீணாகப்போவதில்லை. இயேசுகிறிஸ்துவுக்கு சத்துருக்களாக இருந்த யூதர்களில் அநேகர் அவருக்கு விரோதமாக தூஷணவார்த்தைகளை வெளிப்படையாக பேசுகிறார்கள். இந்த சூழ்நிலையிலும் ஏராளமான ஜனங்கள் இயேசுகிறிஸ்துவின் பிரசன்னத்தைத் தங்களுடைய இருதயங்களில் பெற்றுக்கொண்டு, சந்தோஷமாகவும் சமாதானமாகவும் தங்கள் வீடுகளுக்குத் திரும்பிப்போகிறார்கள்.

### சத்தியம் உங்களை விடுதலையாக்கும்
### யோவா 8 : 31-37

**யோவா 8:31. இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்;**

**யோவா 8:32. சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்.**

**யோவா 8:33. அவர்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: நாங்கள் ஆபிரகாமின் சந்ததியாயிருக்கிறோம், நாங்கள் ஒருக்காலும் ஒருவனுக்கும் அடிமைகளாயிருக்கவில்லை; விடுதலையாவீர்களென்று நீர் எப்படிச் சொல்லுகிறீர் என்றார்கள்.**

**யோவா 8:34. இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: பாவஞ்செய்கிறவன் எவனும் பாவத்துக்கு அடிமையாயிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.**

**யோவா 8:35. அடிமையானவன் என்றைக்கும் வீட்டிலே நிலைத்திரான்; குமாரன் என்றைக்கும் நிலைத்திருக்கிறார்.**

**யோவா 8:36. ஆகையால் குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்.**

**யோவா 8:37. நீங்கள் ஆபிரகாமின் சந்ததியாரென்று அறிவேன்; ஆனாலும் உங்களுக்குள்ளே என் உபதேசம் இடம்பெறாதபடியால், என்னைக் கொலைசெய்யத் தேடுகிறீர்கள்.**

### என் உபதேசத்தில் நிலைத்திருந்தால்

**இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்; (யோவா 8:31)**

இயேசு கிறிஸ்துவின் உபதேசத்தைக்கேட்டு அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைக்கிறார்கள். இவர்கள் புதிய விசுவாசிகள். இயேசுகிறிஸ்துவின் சீஷர்களுக்கு ஆவிக்குரிய விடுதலை வாக்குப் பண்ணப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்கிறவர்கள் புதிய விசுவாசிகளாகவும், விசுவாசத்தில் பலவீனமுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். ஆனாலும் இவர்களுக்கும் ஆவிக்குரிய உபதேசம் தேவைப்படுகிறது. இயேசுகிறிஸ்து இவர்களுக்குத் தேவையான உபதேசத்தை ஒவ்வொன்றாக உபதேசம்பண்ணுகிறார்.

## அதிகாரம் - 8

இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்காவிட்டால் ஜனங்கள் தங்கள் பாவத்தில் செத்துப்போவார்கள். இயேசுவின் இந்த வார்த்தையைக் கேட்ட ஜனங்கள் பயந்து, நடுங்கி, இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இருக்கிறார்கள். இவர்கள் இயேசுகிறிஸ்துவிடத்தில் விசுவாசம் வைக்கிறார்கள். தம்மிடத்தில் வருகிற யாரையும் இயேசுகிறிஸ்து புறம்பே தள்ளமாட்டார். தம்மை விசுவாசிக்கிறவர்கள் யாருக்கும் இயேசு சத்தியத்தை உபதேசம்பண்ணாமல், அவர்களை வெறுமையாக அனுப்பிவிடமாட்டார்.

தம்முடைய உபதேசத்தைக் கேட்பவர்களுக்கு இயேசு தேவனுடைய கிருபையைப்பற்றி உபதேசிக்கிறார். விசுவாசிக்கிறவர்களுடைய உள்ளத்தில் தேவனுடைய கிருபை கிரியை செய்ய ஆரம்பிக்கிறது. இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்கிற யூதர்கள் அவரை விசுவாசிக்கிறார்கள். தம்மை விசுவாசிக்கிறவர்களுக்கு இயேசுகிறிஸ்து இரண்டு ஆசீர்வாதங்களை வாக்குத்தத்தமாகக் கூறுகிறார். அவையாவன: 1. அவர்கள் இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே அவருடைய சீஷராயிருப்பார்கள். 2. அவர்கள் சத்தியத்தை அறிவார்கள். சத்தியம் அவர்களை விடுதலையாக்கும்.

தம்முடைய சீஷர்கள் யார் என்பதை இயேசுகிறிஸ்து இங்கு தெளிவுபடுத்துகிறார். அவருடைய உபதேசத்தில் நிலைத்திருக்கிறவர்கள் மாத்திரமே இயேசுகிறிஸ்துவுக்கு சீஷர்களாக இருப்பார்கள். இவர்கள் விசுவாசத்தில் பெலமுள்ளவர்களல்ல. ஆயினும் இயேசுகிறிஸ்து இவர்களுடைய விசுவாசத்தை உற்சாகப்படுத்துகிறார். இவர்கள் எதை விசுவாசிக்க வேண்டுமென்று தெளிவுபடுத்துகிறார். இவர்கள் இயேசுகிறிஸ்துவின் தெய்வீக வல்லமையில் விசுவாசம் வைத்திருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைக்கும்போது, நம்முடைய விசுவாசம் தற்காலிகமானதாக இருக்கக்கூடாது. அவரை நாம் தொடர்ந்து விசுவாசிக்க வேண்டும். அவருடைய உபதேசத்தில் நிலைத்திருக்க வேண்டும். சாதாரணமாக பாடசாலைக்கு படிக்கப்போகிறவர்கள் அங்கு ஒரு சில வருஷங்கள் மாத்திரமே படிப்பார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவின் பாடசாலையிலோ, நாம் நம்முடைய ஜீவியகாலம் முழுவதும் படிக்க வேண்டும்.

இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்க வேண்டுமென்று வாஞ்சிக்கிறவர்கள் மாத்திரமே அவருடைய சீஷர்களாக இருக்க முடியும். நம்முடைய ஜீவியகாலம் முழுவதும் இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்க வேண்டுமென்று நாம் தீர்மானம்பண்ணவேண்டும். அப்போது நாம் மெய்யாகவே இயேசுகிறிஸ்துவுக்கு சீஷராகயிருப்போம். இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருப்பது என்பதற்கு அவருடைய வார்த்தையில் வாசம்பண்ணுவது என்பது பொருள். ஒரு மனுஷனுக்கு அவனுடைய வீடு இளைப்பாறும் ஸ்தலமாக இருப்பதுபோல, தேவனுடைய வார்த்தை நமக்கு இளைப்பாறும் ஸ்தலமாக இருக்கும்.

### சத்தியத்தையும் அறிவீர்கள்

**சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார் (யோவா 8:32).**

இயேசுகிறிஸ்துவின் மெய்யான சீஷராக இருக்கிறவர்களுக்கு விசேஷித்த சிலாக்கியம் உண்டு. இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு இரண்டு முக்கியமான வாக்குத்தத்தங்களை கூறியிருக்கிறார். அவையாவன: 1. அவர்கள் சத்தியத்தை அறிவார்கள். 2. சத்தியம் அவர்களை விடுதலையாக்கும். இயேசு கிறிஸ்துவை மெய்யாக விசுவாசிக்கிறவர்கள்கூட, தாங்கள் அறிந்திருக்கவேண்டிய விஷயங்களை சரியாக அறிந்துகொள்ளாமல் இருளில் இருக்கிறார்கள். தேவனுடைய பிள்ளைகள் சிறு குழந்தைகளைப்போல இருக்கிறார்கள். ஆகையினால் அவர்கள் சிறுபிள்ளைகளைப்போலவே சத்தியங்களைப் புரிந்து கொள்கிறார்கள். சிறு பிள்ளைகளைப்போலவே சத்தியங்களைப் பேசுகிறார்கள். நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்காகத்தான் இயேசுகிறிஸ்து நமக்கு போதகம்பண்ணுகிறார். நாம் இயேசுகிறிஸ்துவின் சீஷராக இருந்தால் மாத்திரமே அவருடைய போதகத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். அவருடைய உபதேசத்தில் நாம் நிலைத்திருந்தால் மாத்திரமே அவருக்கு சீஷராகயிருக்க முடியும்.

## அதிகாரம் - 8

சத்தியத்தை அறிந்துகொள்வது நம்முடைய வாழ்க்கையில் நமக்குக் கிடைத்திருக்கும் பெரிய சிலாக்கியம். இயேசுகிறிஸ்துவின் சீஷர்களெல்லோருமே அவரால் நன்றாகப் போதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அறிந்திருக்கிற சத்தியம் அவர்களை விடுதலையாக்கும். மனுஷரை விடுவிப்பதற்காகவே இயேசுகிறிஸ்து சத்தியத்தைப் போதகம்பண்ணுகிறார். சிறைப்பட்டவர்களுக்கு சுவிசேஷத்தை

நம்முடைய ஆவிக்குரிய சத்துருக்களிடமிருந்து சத்தியம் நம்மை விடுதலையாக்கும். தேவனுக்காக ஊழியம் செய்வதற்கு சத்தியம் நம்மை விடுதலையாக்கும். தேவனுடைய புத்திரராக அங்கீகரிக்கப்பட்டு, அதற்குரிய சிலாக்கியங்களைப் பெற்றுக்கொள்வதற்கு சத்தியம் நம்மை விடுதலையாக்கும். நாம் இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தை விசுவாசிக்கும்போது சத்தியத்தை அறிந்துகொள்கிறோம். நாம் அறிந்துகொள்கிற சத்தியம் மெய்யாகவே நம்மை விடுதலையாக்குகிறது. நம்முடைய தவறுகளிலிருந்தும், தவறான எண்ணங்களிலிருந்தும், காம விகாரங்களிலிருந்தும், பேராசைகளிலிருந்தும் சத்தியம் நம்முடைய ஆத்துமாவை விடுவிக்கிறது.

சத்தியம் நம்முடைய பாவங்களிலிருந்து நம்முடைய ஆத்துமாவை விடுவித்து, தேவனுடைய ஆவியானவரால் நம்முடைய ஆத்துமா ஆளுகை செய்யப்படுவதற்கு நம்முடைய ஆத்துமாவை மீட்டுக்கொள்கிறது. இயேசுகிறிஸ்துவின் சத்தியத்தை நம்முடைய சிந்தையில் ஏற்றுக்கொள்ளும்போது நம்முடைய சிந்தை தெளிவடைகிறது, விசாலமடைகிறது. கர்த்தரே ஆவியானவர். கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையும் உண்டு (2கொரி 3:17). நாம் இதுவரையிலும் நம்முடைய மாம்சத்தின் பிரகாரமாக சிந்தித்துக்கொண்டிருக்கலாம். சத்தியம் நம்மை விடுவிக்கும்போது, கர்த்தருடைய ஆவியானவர் நம்மை ஆளுகை செய்வார். அப்போது நமக்கு பரிபூரணமான விடுதலை கிடைக்கும்.

### ஒருவனுக்கும் அடிமைகளாயிருக்கவில்லை

**அவர்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: நாங்கள் ஆபிரகாமின் சந்ததியாயிருக்கிறோம், நாங்கள் ஒருக்காலும் ஒருவனுக்கும் அடிமைகளாயிருக்கவில்லை; விடுதலையாவீர்களென்று நீர் எப்படிச் சொல்லுகிறீர் என்றார்கள் (யோவா 8:33).**

யூதர்கள் தங்கள் இருதயத்தில் பெருமையோடிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து அவர்களிடம் சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்று கூறுகிறார். இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தை யூதர்கள் தவறாகப் புரிந்துகொண்டு "நாங்கள் ஆபிரகாமின் சந்ததியாயிருக்கிறோம். நாங்கள் ஒருக்காலும் ஒருவனுக்கும் அடிமைகளாயிருக்கவில்லை. விடுதலையாவீர்கள் என்று எப்படிச் சொல்லுகிறீர்" என்று இயேசுகிறிஸ்துவிடம் கோபத்தோடு கேட்கிறார்கள்.

மெய்யாகவே யூதர்கள் தங்களுடைய உண்மையான நிலமையைப் புரிந்து கொள்ளாமல் பேசுகிறார்கள். "விடுதலையாவீர்கள்" என்று இயேசுகிறிஸ்து சொன்ன வார்த்தை அவர்களைக் கோபப்படுத்துகிறது. தாங்கள் ஒருக்காலும் ஒருவனுக்கும் அடிமையாயிருந்ததில்லையென்று பெருமையோடு பேசுகிறார்கள். ஆனால் இதைப் பேசுகிற யூதர்கள் இப்போது ரோமப்பேரரசின் அடிமைத்தனத்திற்குள் இருக்கிறார்கள்.

தாங்கள் ஆபிரகாமின் சந்ததியாராக இருப்பதிலும் பெருமையோடிருக்கிறார்கள். ஒருகாலத்தில் நன்றாக வாழ்ந்து, அதன்பின்பு நொடித்துப்போனவர்கள், இப்படித்தான் தங்களுடைய பழைய கதைகளைப் பெருமையோடு பேசிக்கொள்வார்கள். தங்களுடைய முன்னோர்களின் மேன்மையைப் பெருமையோடு விவரிப்பார்கள். தாங்கள் இப்போது அவமானத்தோடு வாழ்ந்தாலும், தங்களுடைய முன்னோர்களின் பெருமையைப்பற்றி பேசி, தங்களுடைய அவமானத்தை மறைத்துக்கொள்ள முயற்சிபண்ணுவார்கள். யூதர்கள் தங்களை ஆபிரகாமின் சந்ததியாயிருக்கிறோம் என்று கூறுவது இப்படித்தான் இருக்கிறது.

## அதிகாரம் - 8

நம்முடைய முன்னோர்களின் பக்தி நம்முடைய இரட்சிப்புக்கு உதவாது. நம்முடைய முன்னோர்கள் கல்வியறிவில் சிறந்து விளங்கியதினால் நமக்கு கல்வியறிவு தானாக வந்துவிடாது. ஆகையினால் நம்முடைய முன்னோர்களின் பெருமைகளை பேசி பிரயோஜனமில்லை. நாம் இரட்சிப்பட வேண்டுமென்றால் நம்மிடத்தில் விசுவாசம் காணப்படவேண்டும். நமக்கு கல்வியறிவு வேண்டுமென்றால் நாம்தான் பாடங்களைப் படிக்கவேண்டும். நம்முடைய முன்னோர்கள் பரிசுத்தமாக இருந்தார்கள் என்பதினால் நாம் பரிசுத்தமாகிவிடுவதில்லை. நம்முடைய பரிசுத்தத்திற்கு நாமே உத்திரவாதம் கொடுக்கவேண்டும்.

நம்முடைய இரட்சிப்பு நமது பரம்பரைச் சொத்தாக நமக்குக் கிடைப்பதில்லை. நாம் பரலோகத்திற்குப் போவதற்கு நம்முடைய முன்னோர்கள் யாரும் உத்திரவாதம் கொடுக்க முடியாது. ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் இரட்சிக்கப்பட வேண்டும். விசுவாசிகளின் குடும்பத்தில் பிறக்கிற எல்லோருமே விசுவாசிகளாகிவிடுவதில்லை. விசுவாசிக்கிறவர்கள் மாத்திரமே விசுவாசிகளாகயிருக்கிறார்கள். அதுபோலவே இஸ்ரவேல் தேசத்தார் எல்லோருமே மெய்யான இஸ்ரவேலர்கள் அல்ல. தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனத்தார் மாத்திரமே மெய்யான இஸ்ரவேலர்களாக இருக்கிறார்கள்.

"நாங்கள் ஒருக்காலும் ஒருவனுக்கும் அடிமைகளாயிருக்கவில்லை" என்று யூதர்கள் இயேசுகிறிஸ்துவிடம் பெருமையோடு பேசுகிறார்கள். இவர்களுடைய பேச்சு அடிப்படையிலேயே தவறானது. பொய்யை மெய்யைப்போல பேசுகிறார்கள். பொய் பேசும்போது ஒருமனப்பட்டு ஒன்றுபோல பொய் பேசுகிறார்கள். இயேசுகிறிஸ்துவிடம் பேசுகிற இந்த யூதர்கள் மாத்திரமல்ல, யூதேயா தேசத்திலுள்ள யூதர்கள் எல்லோருமே இப்போது ரோமப்பேரரசின் அடிமைத்தனத்தில்தான் இருக்கிறார்கள். தங்களுடைய விடுதலைக்காக ஏங்கி தவித்துக்கொண்டிருக்கிறார்கள். தாங்கள் அடிமைகளாக இருந்தாலும் அடிமைகளாக இருக்கவில்லை என்று பெருமையோடு கூறுகிறார்கள். சண்டையில் தோற்றுப்போய் கீழே விழுந்துவிட்டாலும், தன் மீசையில் மண் ஒட்டவில்லை என்று பெருமைப்படுகிற ஏமாற்றுக்காரரைப்போல இவர்கள் பேசுகிறார்கள்.

இயேசுகிறிஸ்து இவர்களிடம் மெய்யான விடுதலையைப்பற்றி பேசுகிறார். இவர்கள் சத்தியத்தை அறிவார்கள். சத்தியம் அவர்களை விடுதலையாக்கும் என்று அவர்களுக்கு உபதேசம் பண்ணுகிறார். இயேசுகிறிஸ்து கூறுவது உலகப்பிரகாரமான விடுதலை அல்ல. அவர் ஆவிக்குரிய விடுதலையைப்பற்றி உபதேசம் பண்ணிக்கொண்டிருக்கிறார். சத்தியம் நம்முடைய மனதை விடுதலைபண்ணும். நம்முடைய இருதயம் சாத்தானுடைய சிந்தனைகளினால் நிறைந்திருக்கும்போது சத்தியம் நம்முடைய இருதயத்தை அவனுடைய பிடியிலிருந்து விடுவிக்கும். நாம் சாத்தானுக்கு அடிமைகளாக இருப்போமென்றால், சத்தியம் நம்மை அவனிடத்திலிருந்து விடுதலை பண்ணும். நாம் துர்க்குணங்களுக்கு அடிமைகளாக இருக்கும்போது துர்க்குணங்களிலிருந்து சத்தியம் நம்மை விடுவிக்கும்.

மாம்சப்பிரகாரமான இருதயம் மாம்சப்பிரகாரமான காரியங்களை மாத்திரமே சிந்தனைபண்ணும். பாவத்தின் அடிமைத்தனத்தைக் குறித்தும், சாத்தானுக்கு அடிமைகளாக இருப்பதைக்குறித்தும் அவர்களுக்கு உபதேசம்பண்ணுவதற்கு, தம்மால் உண்டாகும் விடுதலையைக்குறித்தும் இயேசுகிறிஸ்து அவர்களுக்கு உபதேசம்பண்ணுகிறார். ஆனால் இந்த உபதேசம் அவர்களுக்கு நூதன உபதேசமாக இருக்கிறது. இவர்களுடைய காதுகளில் இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள் புதுமையான காரியங்களாகத் தெரிகிறது. ஏனெனில் இவர்கள் இதுவரையிலும் மாம்சப்பிரகாரமாக மாத்திரமே சிந்தனை செய்திருக்கிறார்கள். ஆவிக்குரிய ரீதியாக, ஆவிக்குரிய காரியங்களைக்குறித்து இவர்கள் இதுவரையிலும் சிந்தித்ததேயில்லை. இயேசுகிறிஸ்து இப்போது இவர்களிடம் ஆவிக்குரிய காரியங்களைக்குறித்து பேசும்போது இவர்களால் அவர் பேசுவது ஒன்றையும் ஆவிக்குரிய ரீதியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை.

**பாவத்துக்கு அடிமையாயிருக்கிறான்**

**இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: பாவஞ்செய்கிறவன் எவனும் பாவத்துக்கு அடிமையாயிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் (யோவா 8:34).**

## அதிகாரம் - 8

இயேசுகிறிஸ்து பாவத்தைக்குறித்தும், பாவம் செய்கிறவர்கள் பாவத்திற்கு அடிமையாக இருப்பதைக்குறித்தும் உபதேசம்பண்ணுகிறார். இந்த உபதேசத்தில் அவர் நான்கு காரியங்களை விசேஷமாகக் குறிப்பிடுகிறார். அவையாவன : 1. பாவஞ்செய்கிறவன் எவனும் பாவத்திற்கு அடிமையாயிருக்கிறான். 2. அடிமையானவன் என்றைக்கும் வீட்டிலே நிலைத்திரான். 3. குமாரன் விடுதலையாக்கினால் அவர்கள் மெய்யாகவே விடுதலையாவார்கள். 4. அவர்கள் ஆபிரகாமின் சந்ததியாரென்று இயேசு அறிந்திருக்கிறார்.

தாங்கள் ஆபிரகாமின் சந்ததியாக இருப்பதாகவும், தாங்கள் ஒருக்காலும் ஒருவனுக்கும் அடிமைகளாயிருக்கவில்லை என்றும் யூதர்கள் இயேசுகிறிஸ்துவிடம் விவாதம்பண்ணுகிறார்கள். அவர்கள் அடிமைத்தனத்திலிருப்பதற்கு வாய்ப்புள்ளது என்பதை இயேசுகிறிஸ்து இங்கு தெளிவுபடுத்துகிறார். பாவம் செய்கிறவன் எவனும் பாவத்திற்கு அடிமையாயிருக்கிறான் என்று இயேசு அவர்களிடத்தில் உபதேசம்பண்ணுகிறார். அவர்களுடைய பக்திவிருத்திக்காகவே இயேசுகிறிஸ்து இந்த சத்தியத்தை அவர்களுக்கு கூறுகிறார். மேலும் இதை சொல்லும்போது "மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று தம்முடைய உபதேச வார்த்தைகளை உறுதிபண்ணுகிறார்.

பழைய ஏற்பாட்டுக்காலத்து தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லும்போது "கர்த்தர் சொல்லுகிறார்" என்று கூறுவார்கள். அவர்கள் கர்த்தருடைய உண்மையுள்ள ஊழியக்காரர்களாக, கர்த்தருடைய வார்த்தையைப்பேசுகிறார்கள். இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரனாக இருக்கிறார். ஆகையினால் இவர் தம்முடைய நாமத்தினாலேயே சத்திய உபதேசத்தை அறிவிக்கிறார். இந்த உபதேசத்தைச் சொல்லும்போது "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று கூறுகிறார். இயேசுகிறிஸ்துவின் வார்த்தையில் தெய்வத்துவத்தின் அதிகாரம் வெளிப்படுகிறது. "கர்த்தர் சொல்லுகிறார்" என்று தீர்க்கதரிசிகளைப்போல பேசாமல், "நான் சொல்லுகிறேன்" என்று தெய்வீக அதிகாரமுள்ள தேவகுமாரனாக இயேசுகிறிஸ்து பேசுகிறார்.

இயேசுகிறிஸ்து இங்கு கூறும் சத்தியம் உலகத்திலுள்ள எல்லோருக்கும் பொதுவானது. "பாவம் செய்கிறவன் எவனும் பாவத்திற்கு அடிமையாயிருக்கிறான்" என்று அறிவிக்கிறார். பாவம் செய்கிறவன் யாராக இருந்தாலும் அவன் விடுதலைபெறவேண்டும். அடிமையானவனால் தன் சுயமுயற்சியினால் விடுதலை பெறமுடியாது. யாராவது ஒருவர் இவனை விடுதலைபண்ணினால்தான் இவனால் விடுதலை பெறமுடியும். பாவம் செய்கிறவன் இப்படிப்பட்ட பரிதாபமான அடிமைத்தனத்தில் சிக்கியிருக்கிறான். பாவம் செய்கிறவர்கள் எல்லோரும் பாவத்திற்கு அடிமைகளாகயிருக்கிறார்கள். இந்த பூமியில் நீதிமான் ஒருவனுமில்லை. தன்னிடத்தில் பாவமில்லையென்று ஒரு மனுஷனாலும் சொல்லமுடியாது. எல்லோரும் பாவம் செய்கிறபடியினால், எல்லோரும் பாவத்திற்கு அடிமைகளாக இருக்கிறபடியினால், தேவனுக்கு ஊழியம் செய்ய எல்லாருமே தகுதியில்லாதவர்கள். ஏனெனில் எல்லோரும் பாவத்திற்கு அடிமைகளாகயிருக்கிறார்கள்.

பாவம் செய்கிறவன் தன் மாம்சத்தின் பிரகாரம் சிந்தித்துச் செயல்படுகிறான். மனுஷன் பாவத்தைவிட்டு விலகிவரவேண்டும். தேவனிடத்தில் தன்னைப்பரிபூரணமாக ஒப்புக்கொடுக்க வேண்டும். அப்போது தேவன் அவனுடைய பாவங்களை மன்னிப்பார். பாவங்கள் மன்னிக்கப்பட்ட பின்பு அவன் பாவத்திற்கு அடிமையாகயிருக்கமாட்டான். தன்னுடைய பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து இயேசுகிறிஸ்து இவனை விடுதலைபண்ணியிருக்கிறார்.

பாவம் செய்ய வேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறவன் தன் மாம்ச இச்சையின் பிரகாரம் பாவம் செய்கிறான். ஒருவன் பாவம் செய்துவிட்டால் அதன்பின்பு அந்தப் பாவத்திற்கு அவன் அடிமையாகவே இருப்பான். பாவம் செய்கிறவனுக்கு தண்டனை உண்டு. பாவத்தின் சம்பளம் மரணம் "மரணத்துக்கேதுவான பாவத்துக்கானாலும், நீதிக்கேதுவான கீழ்ப்படிதலுக்கானாலும், எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்களென்று அறியீர்களா?" (ரோம 6:16) என்று அப்போஸ்தலர் பவுல் தனது நிருபத்தில் எழுதுகிறார்.

## அதிகாரம் - 8

**வீட்டிலே நிலைத்திரான்**

**அடிமையானவன் என்றைக்கும் வீட்டிலே நிலைத்திரான்; குமாரன் என்றைக்கும் நிலைத்திருக்கிறார் (யோவா 8:35).**

யூதர்கள் தங்களுக்குத் தேவனுடைய ஆலயத்திலே பங்கு இருப்பதாக நினைக்கிறார்கள். தேவனுடைய ஆலயத்திற்குச் செல்வதினால் இவர்கள் தேவன் கொடுக்கும் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ள முடியாது. தேவனுடைய வீட்டில் தங்குகிறவர்கள் எல்லோரும், குமாரருக்குரிய சுதந்தரத்தைச் சுதந்தரித்துக் கொள்ள முடியாது. அடிமையானவன் என்றைக்கும் வீட்டிலே நிலைத்திரான். ஆனால் குமாரனோ என்றைக்கும் வீட்டிலே நிலைத்திருக்கிறார்.

இயேசுகிறிஸ்து இந்த உபதேச வாக்கியத்தின் மூலமாக யூதருடைய தேசத்தையும், அவர்களுடைய ஆலோசனைச் சங்கத்தையும் பிரயோஜனமற்றவை என்று கூறுகிறார். தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு இவர்கள் பாத்திரவான்களல்ல என்று இவர்களைப் புறக்கணித்துவிடுகிறார். இஸ்ரவேல் ஆரம்பத்தில் தேவனுடைய சேஷ்டபுத்திரனாக இருந்தது. சேஷ்டபுத்திரனுக்குரிய ஆசீர்வாதம் இஸ்ரவேலுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருந்தது. ஆனால் இவர்களோ தேவனுக்குத் தங்களைப் பூரணமாக ஒப்புக்கொடுக்காமல், பாவம் செய்து பாவத்திற்கு அடிமைகளாகிவிட்டார்கள். அடிமைகள் தேவனுடைய வீட்டில் என்றென்றைக்கும் நிலைத்திருப்பதில்லை.

மோசேயின் பிரமாணத்தில் எழுதப்பட்டிருக்கிற கட்டளைகளின் பிரகாரமும் சடங்குகளின் பிரகாரமும் தங்களுடைய பாவங்களிலிருந்து விடுதலை பெறலாம் என்று யூதர்கள் தங்கள் முன்னோர்களின் பாரம்பரியத்தின் மீது நம்பிக்கையாயிருக்கிறார்கள். மோசே தேவனல்ல. அவன் தேவனுடைய ஊழியக்காரர்களில் ஒருவன். அவனால் இஸ்ரவேல் ஜனங்களை விடுதலை பண்ணமுடியாது. தேவனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவினால் மாத்திரமே இஸ்ரவேல் ஜனங்களை அவர்களுடைய பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பண்ணமுடியும். அவர்களைக் குமாரன் விடுதலையாக்கினால் மாத்திரமே அவர்கள் விடுதலையாவார்கள்.

**குமாரன் விடுதலையாக்கினால்**

**ஆகையால் குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள் (யோவா 8:36).**

இந்த ஜனங்கள் தங்கள் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறுவதற்கு இயேசுகிறிஸ்து ஒரு வழியைக் காண்பிக்கிறார். பாவத்திற்கு அடிமைகளாகயிருக்கிறவர்களின் நிலமை மிகவும் பரிதாபமானது. ஆனாலும் அவர்களுக்கு ஒரு நம்பிக்கை உண்டு. அவர்களை விடுதலைபண்ண அவர்களுக்கு உதவி உண்டு. தேவனுடைய குமாரனாக இருக்கும் இயேசுகிறிஸ்துவுக்கு பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து ஜனங்களை விடுதலைபண்ணும் அதிகாரமும், அவர்களை தம்முடைய சுவீகார புத்திரர்களாக அங்கீகரிக்கும் அதிகாரமும் உள்ளது. ஆகையினால் இயேசுகிறிஸ்து ஜனங்களிடம் "குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்" என்று கூறுகிறார்.

சுவிசேஷத்தில் இயேசுகிறிஸ்து நமக்கு விடுதலை கொடுக்கிறவராக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறார். அவரே நமக்கு விடுதலையாக இருக்கிறார். பாவத்தின் அடிமைத்தனத்திலிருப்பவர்களை விடுதலை பண்ணும்போது, இயேசுகிறிஸ்து தம்முடைய "நீதிமானாக்குதல்" என்று பிரமாணத்தைப் பயன்படுத்துகிறார். இந்தப் பிரமாணத்தின் மூலமாக நம்முடைய குற்றங்கள் நீக்கப்படுகிறது. பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறுவதற்கு நாம் செலுத்த வேண்டிய கிரயம் செலுத்தப்படுகிறது. இயேசுகிறிஸ்துவே நம்முடைய இரட்சிப்புக்காக செலுத்தவேண்டிய மீட்பின் கிரயத்தை முழுவதுமாக செலுத்தியிருக்கிறார். நம்முடைய பாவங்களிலிருந்து விடுதலைபெற்று, நம்மை நீதிமானாக்குவதற்கு, தேவனுடைய நீதியின் பிரகாரம், செய்ய வேண்டிய எல்லா காரியங்களையும் இயேசுகிறிஸ்து செய்து நிறைவேற்றியிருக்கிறார்.

அடிமைத்தனத்தில் கட்டப்பட்டிருக்கிறவர்களையும் விடுதலை பண்ணுவதற்கு இயேசுகிறிஸ்துவுக்கு அதிகாரமுள்ளது. தம்முடைய "பரிசுத்தமாக்குதல்" என்னும் பிரமாணத்தின் மூலமாக கட்டப்பட்டிருக்கிற அடிமைகளை இயேசுகிறிஸ்து விடுதலைபண்ணுகிறார். பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் ஆத்துமாவிலுள்ள அசுத்தத்தை அகற்றி, ஆத்துமாவை சுத்திகரிக்கிறார். நம்முடைய ஆத்துமா விடுதலைபெறுவதற்கு செய்ய வேண்டிய எல்லா காரியங்களையும் இயேசுகிறிஸ்து பரிசுத்த ஆவியானவர் மூலமாக வல்லமையாகச் செய்கிறார்.

## அதிகாரம் - 8

இஸ்ரவேலின் காணியாட்சிக்கு புறம்பானவர்களையும் அதன் காணியாட்சிக்கு உள்ளே கொண்டுவருவதற்கு இயேசுகிறிஸ்துவுக்கு வல்லமையுள்ளது. புறஜாதியாரை விடுவித்து தம்முடைய ராஜ்யத்திற்குள் அவர்களை பிரவேசிக்கச் செய்கிறார். இதைத் தம்முடைய "சுவீகாரம்" என்னும் பிரமாணத்தினால் நிறைவேற்றுகிறார். இதுவும் தேவனுடைய கிருபையே. தேவன் தம்முடைய கிருபையினால் நம்முடைய பாவங்களை மன்னித்து, பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து நம்மை விடுவித்து, நமக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் தந்து, நம்மைத் தம்முடைய பிள்ளைகளாக அங்கீகரித்துக்கொள்கிறார். ஒரு காலத்தில் பாவத்திற்கு அடிமைகளாகயிருந்த நாம், இயேசுகிறிஸ்துவின் இரட்சிக்கும் கிருபையினால், இப்போது அவருடைய சுவீகார புத்திரர்களாக இருக்கிறோம்.

தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்து நம்மை விடுதலையாக்கினால் நாம் மெய்யாகவே விடுதலையாவோம். தம்முடைய வாக்குத்தத்தம் உண்மையானது, உறுதியானது என்பதை இயேசுகிறிஸ்து தம்முடைய வார்த்தையினால் உறுதி பண்ணுகிறார். யூதர்கள் வீண் பெருமையிலிருக்கிறார்கள். தாங்கள் விடுதலையோடிருப்பதாக கற்பனை செய்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் உண்மையில் அடிமைத் தனத்திலிருக்கிறார்கள். அவர்களுடைய கற்பனை வேறு, அவர்கள் இருக்கும் உண்மை நிலை வேறு. ஆனால் இயேசுகிறிஸ்து நம்மை விடுதலைபண்ணும்போதோ, நம்முடைய விடுதலை மெய்யான விடுதலையாக இருக்கும்.

பாவத்திற்கு அடிமை களாகயிருக்கிறவர்கள் தங்களுக்குத் தாங்களே விடுதலைகளையும் வாக்குத்தத்தங்களையும் அறிவித்துக் கொள்கிறார்கள். இது கற்பனை தான். அடிமைக்கு உரிமையில்லை. அவனுடைய வார்த்தைக்கு மதிப்பில்லை. அப்படியிருக்கும் போது எந்த அடிமையாலும், தன்னுடைய சுயமுயற்சியினால் விடுதலைபெற முடியாது. ஒரு அடிமை தன்னைத்தான் விடுதலைபண்ணிக்கொள்ள வேண்டும் என்று பேசுவதும், கற்பனை பண்ணுவதும் வீணான காரியம். இவன் தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்கிறான். பாவம் செய்கிறவன் பாவத்திற்கு அடிமையாகயிருக்கிறான். தங்கள் சுயமுயற்சியினால் ஒருவனும் விடுதலையாவதில்லை. இயேசுகிறிஸ்து இந்த அடிமைகளை விடுதலைபண்ணும்போது, இவர்கள் மெய்யாகவே விடுதலையாவார்கள்.

அடிமைத் தனத்திலிருக்கிறவர்களை விடுதலைபண்ணுவதற்கு இயேசுகிறிஸ்து மாத்திரமே போதுமானவர். நம்மை விடுதலைபண்ண அவருக்கு வேறு யாருடைய உதவியும் ஒத்தாசையும் தேவையில்லை. அவர் சர்வ அதிகாரமுள்ளவர். தம்முடைய ராஜரீக மகிமையினால் இயேசுகிறிஸ்து பாவத்தின் அடிமைத்தனத்திலிருக்கும் நம்மை, தாம் ஒருவராகவே விடுதலைபண்ணுகிறார். நமக்குக் கிடைத்திருப்பது மகிமையுள்ள விடுதலை. இதுவே மெய்யான விடுதலை. இந்த உலகத்தில் நாம் விடுதலையென்று பேசுவது, சிந்திப்பது எல்லாமே உலகப்பிரகாரமான அடையாளங்கள் தான். மெய்யான விடுதலையை இயேசு கிறிஸ்துவினால் மாத்திரமே கொடுக்க முடியும். அவர் நம்மை விடுதலையாக்கினால் மாத்திரமே நாம் மெய்யாக விடுதலையாவோம்.

### ஆபிரகாமின் சந்ததியார்

**நீங்கள் ஆபிரகாமின் சந்ததியாரென்று அறிவேன்; ஆனாலும் உங்களுக்குள்ளே என் உபதேசம் இடம்பெறாதபடியால், என்னைக் கொலை செய்யத் தேடுகிறீர்கள் (யோவா 8:37).**

தாங்கள் ஆபிரகாமின் சந்ததியாராயிருப்பதாக யூதர்கள் பெருமையோடிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து இந்தச் சத்தியத்தைக் குறித்தும் அவர்களுக்கு உபதேசம்பண்ணுகிறார். "நீங்கள் ஆபிரகாமின் சந்ததியாரென்று அறிவேன்" என்று அவர்களிடத்தில் அறிவிக்கிறார். அவர்கள் ஆபிரகாமின் சந்ததி என்பதை இயேசுகிறிஸ்து அங்கீகரிக்கிறார். தாங்கள் ஆபிரகாமின் சந்ததியாராக இருப்பதினால் யூதர்கள் தங்கள் இருதயத்தில் பெருமையோடிருக்கிறார்கள். ஆபிரகாமின் சந்ததியாராக இருப்பதினால், இவர்கள் ஆபிரகாமைப்போல, தங்களுடைய விசுவாசத்தில் உண்மையுள்ளவர்களாக இருக்கவேண்டும். இவர்களுடைய கிரியைகள் மூலமாக ஆபிரகாமுக்கு நற்பெயர் உண்டாகவேண்டும். ஆனால் இவர்களோ பாவம் செய்து, துன்மார்க்கத்தில் ஜீவித்து, பாவத்திற்கு அடிமைகளாக இருக்கிறார்கள். தங்களுடைய பாவமான கிரியைகளினால் இவர்கள் ஆபிரகாமின் சந்ததியார் என்று நற்பெயர் எடுக்கவில்லை. தாங்கள் ஆபிரகாமின் சந்ததியார் என்னும் பெருமையில் நற்கிரியைகளைச் செய்வதற்குப் பதிலாக, மிகவும் துணிகரமாக துர்க்கிரியைகளைச் செய்கிறார்கள்.

## அதிகாரம் - 8

ஆபிரகாமின் சந்ததியாராகயிருப்பது ஒரு சிலாக்கியம். இவர்களுடைய ஜீவியமும் ஆபிரகாமைப்போல இருக்கவேண்டும். ஆனால் இவர்களுடைய நடத்தைக்கும் ஆபிரகாமின் நடத்தைக்கும் முரண்பாடு இருக்கிறது. இவர்கள் இயேசுகிறிஸ்துவைக் கொலை செய்யத் தேடுகிறார்கள். பல சமயங்களில் இவர்கள் இயேசுகிறிஸ்துவைக் கொலை செய்ய மனதாயிருந்திருக்கிறார்கள். இந்த சம்பவத்திற்குப் பின்பு அவர்கள் "அவர்மேல் கல்லெறியும்படி கல்லுகளை எடுத்துக் கொண்டார்கள்" (யோவா 8:59). தங்களுடைய துன்மார்க்கமான எண்ணத்திற்கு செயல் வடிவம் கொடுக்கிறார்கள். ஆபிரகாமின் சுபாவம் இவர்களுக்குள் இருந்தால் இவர்கள் இயேசுகிறிஸ்துவை கொலை செய்ய வகைதேடமாட்டார்கள். தங்களை ஆபிரகாமின் சந்ததியென்று கூறிக்கொண்டு, பாவமான கிரியைகளில் ஈடுபடுகிறார்கள்.

இவர்கள் ஆபிரகாமின் சந்ததியாராக இருப்பதும், இவர்களுடைய கிரியைகளும் முரண்பாடாக இருக்கிறது. இவர்களுக்குள்ளே தம்முடைய உபதேசம் இடம்பெறாததே இந்த முரண்பாட்டிற்குக் காரணம் என்று இயேசுகிறிஸ்து இவர்களிடம் கூறுகிறார். "உங்களுக்குள்ளே என் உபதேசம் இடம்பெறாதபடியால்" என்னும் வாக்கியத்திற்கு "என்னுடைய வார்த்தை உங்களுக்குள் ஊடுருவிப் பாயாததினால்" என்று வேதபண்டிதர்களில் சிலர் வியாக்கியானம் கூறுகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் வார்த்தை இவர்கள்மீது மழைபோல பொழிகிறது. ஆனால் இந்த மழை பாறையின்மீது விழுந்த மழையைப்போல இருக்கிறது. இவர்கள்மீது தங்கவில்லை. மழைத்தண்ணீர் பாறையில் தங்காது. வழிந்து ஓடிவிடும். அதுபோலவே இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள் இவர்களுடைய இருதயங்களில் தங்கவில்லை. இயேசுகிறிஸ்துவின் வார்த்தை இவர்களுடைய கல்லான இருதயத்தை நனைக்கவில்லை.

இயேசுகிறிஸ்துவின் உபதேசம் இவர்களுக்குள் இடம்பெறவில்லை. அவருடைய வார்த்தைக்கு நம்முடைய இருதயத்தில் ஒரு விசேஷித்த இடம் இருக்கவேண்டும். அந்த இடம் நமக்கு மேன்மையான இடமாகவும், முதன்மையான இடமாகவும் இருக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவின் வார்த்தை நமக்குள் வாசம்பண்ணவேண்டும். அவருடைய வார்த்தைக்கு நாம் வாசஸ்தலமாக இருக்கவேண்டும். நம்முடைய வீடு நமக்கு வாசஸ்தலமாக இருப்பதுபோல இயேசுகிறிஸ்துவின் வார்த்தைக்கு நாம் வாசஸ்தலமாக இருக்கவேண்டும். அவருடைய வார்த்தை நமக்குள் தங்கியிருக்கவேண்டும்.

வழிப்போக்கர்களும், விருந்தினர்களும் நம்முடைய வீட்டிற்கு வரும்போது, சிறிது நேரம் நம் வீட்டில் இருந்துவிட்டு அதன்பின்பு வீட்டை விட்டு வெளியேறிப்போய்விடுவார்கள். இதைப்போல கர்த்தருடைய வார்த்தை நம்முடைய உள்ளத்தில் தற்காலிகமாக தங்கும் நிலமை உண்டாகிவிடக்கூடாது. நாம் கர்த்தருடைய வார்த்தைக்குத் தற்காலிக ஸ்தலமாக இருக்கக்கூடாது. நிரந்தர ஸ்தலமாக இருக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்துவின் வார்த்தை நமக்குள் வரும்போது, அந்த வார்த்தை நமக்குள் கிரியை செய்கிற "வேலை ஸ்தலம்" ஆக இருக்கவேண்டும். நம்முடைய இருதயத்தில் வார்த்தை கிரியை செய்வதற்கு இடம் இருக்கவேண்டும். நமக்குள் இருந்து கர்த்தருடைய வார்த்தை பாவங்களை வெளியேற்றும். தேவனுடைய கிருபையை நமக்குள்ளே கொண்டுவரும். இயேசுகிறிஸ்துவின் வார்த்தை நம்மை ஆளுகை செய்வதற்கு அதற்கு ஒரு ஸ்தலத்தைக் கொடுக்கவேண்டும். நம் உள்ளத்தின் சிங்காசனத்தில் கர்த்தருடைய வார்த்தை வீற்றிருக்கவேண்டும். கர்த்தருடைய வார்த்தையை ஒருபோதும் கீழே எறிந்துவிடக்கூடாது. அதை நம்முடைய சிங்காசனத்தில் ஏற்றி வைத்து, அதன் கட்டளையின் பிரகாரம் நாம் கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும்.

தங்கள் இருதயங்களில் கர்த்தருடைய வார்த்தைக்கு அதற்குரிய இடம் கொடுக்காமலேயே இக்காலத்தில் ஒரு சிலர் ஊழியம் செய்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் வார்த்தைக்கு தங்களுடைய இருதயத்தில் இடம் கொடுக்க இப்படிப்பட்டவர்களுக்கு விருப்பமில்லை. ஆகையினால்தான் தேவவார்த்தைக்கு தங்கள் உள்ளத்தில் இடம் கொடுக்க மறுத்துவிடுகிறார்கள். இயேசுகிறிஸ்துவின் வார்த்தை இருக்க வேண்டிய நம்முடைய இருதயத்தில், வேறு சில காரியங்கள் குடியிருக்கிறது. கர்த்தருடைய வார்த்தைக்கு இடமில்லையென்றால் அங்கு நற்கிரியை எதுவும் நடைபெறாது. தேவனுடைய வார்த்தை இருந்தால்தான் அது நற்கிரியையை வெளிப்படுத்தும். நம்முடைய இருதயத்தில் கர்த்தருடைய வார்த்தைக்குப் பதிலாக, மாம்சப்பிரகாரமான சிந்தனைகளும், துன்மார்க்கமான ஆசைகளும் நிரம்பியிருக்குமானால், நமக்குளிருந்து பாவமான கிரியைகளும், துன்மார்க்கமான செயல்களுமே வெளிப்படும்.

## அதிகாரம் - 8

### தேவனால் உண்டானவன்
### யோவா 8 : 38-47

**யோவா 8:38. நான் என் பிதாவினிடத்தில் கண்டதைச் சொல்லுகிறேன், நீங்களும் உங்கள் பிதாவினிடத்தில் கண்டதைச் செய்கிறீர்கள் என்றார்.**

**யோவா 8:39. அதற்கு அவர்கள்: ஆபிரகாமே எங்கள் பிதா என்றார்கள். இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் ஆபிரகாமின் பிள்ளைகளாயிருந்தால் ஆபிரகாமின் கிரியைகளைச் செய்வீர்களே.**

**யோவா 8:40. தேவனிடத்தில் கேட்டிருக்கிற சத்தியத்தை உங்களுக்குச் சொன்ன மனுஷனாகிய என்னைக் கொல்லத் தேடுகிறீர்கள், ஆபிரகாம் இப்படிச் செய்யவில்லையே.**

**யோவா 8:41. நீங்கள் உங்கள் பிதாவின் கிரியைகளைச் செய்கிறீர்கள் என்றார். அதற்கு அவர்கள்: நாங்கள் வேசித்தனத்தினால் பிறந்தவர்களல்ல; ஒரே பிதா எங்களுக்குண்டு, அவர் தேவன் என்றார்கள்.**

**யோவா 8:42. இயேசு அவர்களை நோக்கி: தேவன் உங்கள் பிதாவாயிருந்தால் என்னிடத்தில் அன்பாயிருப்பீர்கள். ஏனெனில் நான் தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறேன்; நான் சுயமாய் வரவில்லை, அவரே என்னை அனுப்பினார்.**

**யோவா 8:43. என் வசனத்தை நீங்கள் ஏன் அறியாமலிருக்கிறீர்கள்? என் உபதேசத்தைக் கேட்க மனதில்லாதிருக்கிறதினால் அல்லவா?**

**யோவா 8:44. நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்; அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான்; சத்தியம் அவனிடத்திலில்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை; அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய் பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான்.**

**யோவா 8:45. நான் உங்களுக்குச் சத்தியத்தைச் சொல்லுகிறபடியினாலே நீங்கள் என்னை விசுவாசிக்கிறதில்லை.**

**யோவா 8:46. என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக் கூடும்? நான் சத்தியத்தைச் சொல்லியிருக்க, நீங்கள் ஏன் என்னை விசுவாசிக்கிறதில்லை.**

**யோவா 8:47. தேவனால் உண்டானவன் தேவனுடைய வசனங்களுக்குச் செவிகொடுக்கிறான்; நீங்கள் தேவனால் உண்டாயிராதபடியினால் செவிகொடாமலிருக்கிறீர்கள் என்றார்.**

### என் பிதாவினிடத்தில் கண்டது

**நான் என் பிதாவினிடத்தில் கண்டதைச் சொல்லுகிறேன், நீங்களும் உங்கள் பிதாவினிடத்தில் கண்டதைச் செய்கிறீர்கள் என்றார் (யோவா 8:38).**

இயேசுகிறிஸ்துவும் யூதர்களும் தொடர்ந்து சம்பாஷணை பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். தம்முடைய உபதேசத்தின் தொடர்ச்சியாக இயேசுகிறிஸ்து தாம் சொல்வதற்கும் அவர்கள் செய்வதற்கும் இடையிலுள்ள வேறுபாட்டைப்பற்றிப் பேசுகிறார். அவற்றின் ஆரம்பம், தொடர்ச்சி ஆகியவற்றைப்பற்றி இயேசுகிறிஸ்து விவரிக்கிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய பிதாவினிடத்தில் கண்டதைச் சொல்கிறார். யூதர்களோ தங்கள் பிதாவினிடத்தில் கண்டதைச் செய்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் உபதேசம் பரலோகத்திலிருந்து வந்திருக்கிறது. பரலோகத்திலுள்ள பிதாவினிடத்தில் தாம் கண்டதை இயேசுகிறிஸ்து ஜனங்களுக்கு உபதேசம்பண்ணுகிறார். இயேசுகிறிஸ்து மனுஷரிடத்தில் பேசுவதெல்லாம் தேவனைப்பற்றிய சத்தியமும் பரலோகத்தைப் பற்றிய சத்தியமுமே ஆகும். இது மனுஷருடைய கற்பனைகளோ அல்லது தேவதூஷணமோ அல்ல. இயேசுகிறிஸ்து பேசுவது பிதாவாகிய தேவனுடைய வார்த்தை. தாம் பிதாவினிடத்தில் கண்டதை மாத்திரமே இயேசுகிறிஸ்து சொல்லுகிறார்.

## அதிகாரம் - 8

இயேசுகிறிஸ்துவின் உபதேசம் மனுஷருடைய கற்பனைக்கதையல்ல. அவருடைய உபதேசத்தில் பிழை எதுவுமில்லை. இயேசுகிறிஸ்துவின் உபதேசம் மெய்யானது என்று பரிபூரணமாக நிரூபிக்கப் பட்டிருக்கிறது. பிதாவினிடத்திலிருந்து கேட்டதை மாத்திரமல்ல, தமது பிதாவினிடத்தில் கண்டதையும் இயேசுகிறிஸ்து உபதேசம் பண்ணுகிறார். தாம் கண்டதை மாத்திரமே இயேசுகிறிஸ்து பேசுகிறார். இயேசுகிறிஸ்து காண்பதும் பேசுவதும் முரண்படாமல் ஒன்றாயிருக்கும்.

இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாக எதிர்த்து நிற்கும் யூதஜனங்களுடைய செய்கைகள் நரகத்திலிருந்து வந்திருக்கிறது. இவர்கள் தங்கள் பிதாவினிடத்தில் கண்டதை செய்கிறார்கள். ஒரு குழந்தை தன் தகப்பனுடைய பழக்க வழக்கங்கள் அனைத்தையும் கற்று அவனைப்போலவே ஆகும். தாயைப்போல பிள்ளை என்றும், நூலைப்போல சேலை என்றும் ஒரு பழமொழி உள்ளது. அதுபோலவே பெற்றோரைப்போலவே பிள்ளைகள் இருப்பார்கள். இயேசுவுக்கு விரோதமாக எதிர்த்து நிற்கும் யூதர்கள் தங்களுடைய பிதாவாகிய பிசாசைப்போலவே இருக்கிறார்கள். பிசாசின் முன்மாதிரியைப் பின்பற்றி அவனைப்போலவே பேசுகிறார்கள், செயல்படுகிறார்கள்.

**ஆபிரகாமே எங்கள் பிதா**

**அதற்கு அவர்கள்: ஆபிரகாமே எங்கள் பிதா என்றார்கள். இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் ஆபிரகாமின் பிள்ளைகளாயிருந்தால் ஆபிரகாமின் கிரியைகளைச் செய்வீர்களே (யோவா 8:39).**

இயேசுகிறிஸ்து ஜனங்களிடம் அவர்களுடைய பிதாவைப்பற்றி பேசியவுடன், அவர்கள் "ஆபிரகாமே எங்கள் பிதா" என்று பெருமையோடு கூறுகிறார்கள். ஆபிரகாமைப் தங்கள் பிதா என்று கூறுவதினால் தங்களுக்குப் பெருமை உண்டு என்று நினைக்கிறார்கள். ஆபிரகாமையும் தங்களையும் இணைத்து தங்களைத்தாங்களே பெருமைப்படுத்திக்கொள்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து இந்த ஜனங்களிடம் அவர்களுடைய பிதாவைப்பற்றி பேசியபோது, அவர் யூதருடைய முற்பிதாக்களுக்கு விரோதமாகப் பேசுவதாக ஒரு கற்பனையைச் சித்தரிக்கிறார்கள். தாங்கள் தீமையான காரியங்களைச் செய்வதாகவும், இவற்றை தங்கள் முற்பிதாவாகிய ஆபிரகாமிடம் கற்றுக்கொண்டதாகவும், இயேசுகிறிஸ்து தங்களைக் குற்றப்படுத்துவதாகக் கோபப்படுகிறார்கள். ஜனங்கள் கோபத்தோடு இயேசுகிறிஸ்துவிடம் "ஆபிரகாமே எங்கள் பிதா" என்று அறிவிக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து அவர்களோடு மேலும் பொறுமையோடு பேசுகிறார். ஆபிரகாமின் பிள்ளைகள் ஆபிரகாமின் கிரியைகளைச் செய்வார்களென்றும், ஆனால் இவர்களோ ஆபிரகாமின் கிரியைகள் எதையும் செய்யவில்லையென்றும் அவர்களிடத்தில் கூறுகிறார். ஆபிரகாமின் வித்து இவர்களிடத்தில் காணப்படுமானால், ஆபிரகாமைப்போல இவர்களும் விசுவாசத்திலும் கீழ்ப்படிதலிலும் சிறந்து விளங்குவார்கள். ஆபிரகாமின் பிள்ளைகள் என்று தங்களைப் பெருமையோடு கூறிக்கொள்கிறவர்கள், ஆபிரகாமின் விசுவாசத்தைப் பெற்றிருப்பதோடு, ஆபிரகாமின் கிரியைகளையும் செய்வார்கள்.

"நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கைப் பலிபீடத்தின் மேல் செலுத்தினபோது, கிரியைகளினாலே அல்லவோ, நீதிமானாக்கப்பட்டான்? விசுவாசம் அவனுடைய கிரியைகளோடேகூட முயற்சிசெய்து, கிரியைகளினாலே விசுவாசம் பூரணப்பட்டதென்று காண்கிறாயே. அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான்; அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்கிற வேதவாக்கியம் நிறைவேறிற்று; அவன் தேவனுடைய சிநேகிதனென்னப்பட்டான். ஆதலால், மனுஷன் விசுவாசத்தினாலே மாத்திரமல்ல, கிரியைகளினாலேயும் நீதிமானாக்கப்படுகிறானென்று நீங்கள் காண்கிறீர்களே" (யாக் 2:21-24).

**ஆபிரகாம் இப்படிச் செய்யவில்லையே**

**தேவனிடத்தில் கேட்டிருக்கிற சத்தியத்தை உங்களுக்குச் சொன்ன மனுஷனாகிய என்னைக் கொல்லத் தேடுகிறீர்கள், ஆபிரகாம் இப்படிச் செய்யவில்லையே (யோவா 8:40).**

## அதிகாரம் - 8

இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தை ஏற்றுக்கொள்ளாத யூதர்கள் அவரைக் கொல்லத் தேடுகிறார்கள். ஆனால் அவர்கள் தங்களை ஆபிரகாமின் பிள்ளைகள் என்று கூறி பெருமைப்படுகிறார்கள். இயேசுகிறிஸ்து இவர்களிடம் ஆபிரகாமின் கிரியைகள் காணப்படவில்லை என்று தெளிவுபடுத்துகிறார். இயேசுகிறிஸ்து தேவனிடத்தில் கேட்டிருக்கிற சத்தியத்தை இவர்களுக்குச் சொல்கிறார். அப்படிப்பட்ட தம்மை இவர்கள் கொல்லத்தேடுவதாக கூறி, ஆபிரகாம் அப்படிச் செய்யவில்லையே என்றும் கூறுகிறார்.

இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தை ஏற்றுக்கொள்ளாத யூதர்கள் இப்போது அவரைக் கொல்ல வகைதேடுகிறார்கள். இயேசுகிறிஸ்து இவர்களுக்கு ஒரு தீங்கும் செய்யவில்லை. இயேசு தம்மை ஒரு "மனுஷன்" என்றே குறிப்பிடுகிறார். இவர்களுக்கு ஒரு தீங்கும் செய்யாத மனுஷனாகிய தம்மை இவர்கள் கொல்லத்தேடுவதாக கூறுகிறார். இயேசுகிறிஸ்து இவர்களுக்கு சத்தியத்தைச் சொல்லுகிறார். தேவனிடத்தில் கேட்டிருக்கிற சத்தியத்தையே இயேசுகிறிஸ்து இவர்களுக்குச் சொல்லுகிறார். ஆனால் இவர்களோ தங்களுக்குச் சத்தியத்தைச் சொல்லும் இயேசுகிறிஸ்துவையே கொல்லத் தேடுகிறார்கள். இவர்களிடத்தில் தேவபயமோ, தேவபக்தியோ இல்லை. ஆபிரகாமின் பிள்ளைகளிடத்தில் இப்படிப்பட்ட பாவமான கிரியைகள் காணப்படாது. ஆபிரகாமும் இப்படிச் செய்யமாட்டான். ஆனால் இந்த ஜனங்கள் ஆபிரகாமைப்போல கிரியை செய்யாமல், வித்தியாசமாகக் கிரியை செய்வதினால் இவர்கள் ஆபிரகாமின் பிள்ளைகளாக இருக்க முடியாது என்று இயேசுகிறிஸ்து இவர்களிடத்தில் விவரித்துக் கூறுகிறார்.

ஆபிரகாம் மனுஷரிடத்தில் தயவு காண்பித்தான். தேவனிடத்தில் பக்தியோடிருந்தான். தேவனை விசுவாசித்தான். ஆனால் இந்த ஜனங்களிடத்திலோ மனுஷதயவும் இல்லை. தேவபக்தியும் இல்லை. தேவனை விசுவாசிக்கும் விசுவாசமும் இல்லை. ஆபிரகாம் இப்போது ஜீவனோடிருப்பாரென்றால், இந்த ஜனங்களைப்போல, அவர் இயேசு கிறிஸ்துவைக் கொலைசெய்யத் தேடமாட்டார்.

### ஒரே பிதா எங்களுக்கு உண்டு

**நீங்கள் உங்கள் பிதாவின் கிரியைகளைச் செய்கிறீர்கள் என்றார். அதற்கு அவர்கள்: நாங்கள் வேசித்தனத்தினால் பிறந்தவர்களல்ல; ஒரே பிதா எங்களுக்குண்டு, அவர் தேவன் என்றார்கள் (யோவா 8:41).**

இயேசுகிறிஸ்து தம்முடைய உபதேசத்தின் முடிவுரையில் இந்த ஜனங்கள் ஆபிரகாமின் பிள்ளைகளல்ல என்று கூறிவிடுகிறார். இவர்கள் ஆபிரகாமின் குடும்பத்தைச் சேராமல் வேறு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். ஆகையினால் இவர்கள் ஆபிரகாமின் கிரியைகளைச் செய்யாமல் வேறு பிதாவின் கிரியைகளைச் செய்கிறார்கள். இவர்களுடைய பிதாவை இயேசுகிறிஸ்து இன்னும் "பிசாசு" என்று அறிவிக்கவில்லை. தங்களுடைய மனச்சாட்சியில் இந்த ஜனங்கள் உணர்த்தப்படட்டும் என்று விட்டுவிடுகிறார். இயேசுகிறிஸ்துவின் வார்த்தை இவர்களுடைய இருதயத்தைக் குத்துகிறது.

இதுவரையிலும் ஆபிரகாமைத் தங்களுடைய பிதாவாகக் கூறியவர்கள் இப்போது தேவனையே தங்களுடைய பிதாவாகக் கூறுகிறார்கள். வேசித்தனத்தினால் தாங்கள் பிறந்தவர்களல்ல என்றும், ஒரே பிதா தங்களுக்கு உண்டு என்றும், தேவனே தங்களுடைய பிதா என்றும் அறிக்கை செய்கிறார்கள்.

யூதர்கள் இயேசுகிறிஸ்துவிடம் கூறிய வார்த்தைக்கு பிரத்தியட்சமாகவும் பொருள் கூறலாம், அடையாளமாகவும் பொருள் கூறலாம். இவர்கள் எபிரெய வம்சத்தைச் சேர்ந்தவர்கள். தேவனுடைய உடன்படிக்கைக்கு இவர்கள் சுதந்தரவாளிகள். ஆகையினால் தேவனை தங்கள் பிதா என்று அழைக்கக்கூடிய சிலாக்கியம் யூதர்களுக்கு உண்டு.

இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிற யூதர்கள், அவர் ஆவிக்குரிய பிதாவைப்பற்றிப் பேசியதாகப் புரிந்துகொள்கிறார்கள். தங்களுடைய மார்க்கத்திற்கு ஆவிக்குரிய பிதாவே பிதாவாக இருக்கிறார். இவர்கள் விக்கிரகாராதனையின் சந்ததியைச் சேர்ந்தவர்களல்ல. விக்கிரகாராதனை என்பது வேசித்தனம் என்று வேதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. விக்கிரகாராதனை ஆவிக்குரிய வேசித்தனமாகும். தாங்கள் விக்கிரகாராதனை செய்கிற முன்னோர்களுக்கு பிறந்தவர்களல்ல என்று தங்களைப்பற்றி பெருமையோடு பேசுகிறார்கள்.

## அதிகாரம் - 8

வேசித்தனம் என்பதும், விக்கிரகாராதனை என்பதும் பாவங்களில் ஒரு பிரிவு தான். வேசித்தனம் பண்ணாதவன் வேறு ஏதாவது பாவம் செய்வதற்கு வாய்ப்புள்ளது. அதுபோலவே விக்கிரகாராதனை செய்யாதவனும் வேறு பாவத்தைச் செய்வதற்கு வாய்ப்புள்ளது. தாங்கள் விக்கிரகாராதனை செய்கிறவர்களல்ல என்றும், தாங்கள் வேசித்தனத்தினால் பிறந்தவர்களல்ல என்றும் யூதர்கள் பெருமையோடு பேசுகிறார்கள். மெய்யான தேவனைத் தாங்கள் மெய்யாக ஆராதனை செய்வதாகவும் கூறுகிறார்கள். புறஜாதியாருக்குப் பல பிதாக்கள் இருக்கிறார்கள். தங்களுக்குப் புறஜாதியாரைப்போல பல பிதாக்கள் இல்லையென்றும், ஒரே பிதா மாத்திரமே தங்களுக்கு உண்டு என்றும், தேவனே அந்தப் பிதா என்றும் யூதர்கள் கூறுகிறார்கள். ஆகையினால் தங்களிடத்தில் பாவமில்லையென்றும், தாங்கள் பாவத்திற்கு அடிமைப்பட்டவர்களல்ல என்றும் யூதர்கள் பெருமைப்படுகிறார்கள்.

**தேவன் உங்கள் பிதாவாயிருந்தால்**

**இயேசு அவர்களை நோக்கி: தேவன் உங்கள் பிதாவாயிருந்தால் என்னிடத்தில் அன்பாயிருப்பீர்கள். ஏனெனில் நான் தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறேன்; நான் சுயமாய் வரவில்லை, அவரே என்னை அனுப்பினார் (யோவா 8:42).**

இயேசுவுக்கு விரோதமாக எதிர்த்து நிற்கிறவர்கள் தேவனைத் தங்கள் பிதா என்று கூறுகிறார்கள். ஆனால் தேவனைத் தங்களுடைய பிதா என்று கூறுவதற்கு இவர்களுக்கு எந்தவித உரிமையுமில்லை. ஏனெனில் 1. இவர்கள் இயேசுகிறிஸ்துவிடம் அன்பாயிருக்கவில்லை. 2. இயேசுகிறிஸ்துவின் வசனத்தை இவர்கள் அறியவில்லை.

தேவன் இவர்களுக்குப் பிதாவாயிருந்தால், இவர்கள் இயேசு கிறிஸ்துவினிடத்தில் அன்பாயிருப்பார்கள். இவர்கள் இயேசுகிறிஸ்துவைக் கொல்லத்தேடுகிறார்கள். ஆகையினால் ஆபிரகாம் இவர்களுடைய பிதாவாக இருக்க முடியாது. அதே சமயத்தில் இவர்கள் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவர்மீது அன்பாயிருக்கவில்லை. ஆகையினால் தேவனும் இவர்களுடைய பிதாவாக இருக்க முடியாது. தேவனைத் தங்களுடைய பிதாவாக பெற்றிருக்கிறவர்கள் இயேசு கிறிஸ்துவினிடத்தில் அன்பாயிருப்பார்கள்.

தம்மைப்பற்றியும் பரலோகத்தைப்பற்றியும் நமக்கு விளங்கச் செய்வதற்காக தேவன் பல உபாயங்களைத் தெரிந்தெடுத்திருக்கிறார். தம்முடைய ஒரே பேறான குமாரனைப் பிதாவாகிய தேவன் இந்த உலகத்திற்கு அனுப்பியது, தேவன் இந்த உலகத்திற்கு தம்மை வெளிப்படுத்துவதற்காகத் தெரிந்து கொண்ட உபாயங்களில் ஒன்றாகும். தேவன் தம்முடைய குமாரனை இந்த உலகத்திற்கு அனுப்பியிருப்பதினால், தேவனைத் தங்களுடைய பிதா என்று கூறுகிறவர்கள், அவர் அனுப்பின குமாரனை ஏற்றுக்கொள்வார்கள். அவரிடத்தில் அன்பாயிருப்பார்கள். ஆனால் இந்த ஜனங்களோ இயேசுகிறிஸ்துவிடத்தில் அன்பாயிராமல் விரோதமாக இருக்கிறார்கள். ஆகையினால் இவர்கள் தேவனுடைய பிள்ளைகளல்ல. இவர்கள் தேவனுடைய பிள்ளைகளாக இருப்பார்களென்றால், தேவன் அனுப்பின குமாரனிடத்தில் அன்பாயிருப்பார்கள்.

இயேசுகிறிஸ்து தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறார். இயேசுகிறிஸ்து இந்த உலகத்திற்கு சுயமாய் வரவில்லை. தேவனே அவரை அனுப்பியிருக்கிறார். யூதஜனங்களுக்காக மாத்திரமல்ல, சிதறியிருக்கிற தேவனுடைய பிள்ளைகளை ஒன்றாகச் சேர்க்கிறதற்காகவும் பிதாவாகிய தேவனானவர் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை அனுப்பியிருக்கிறார் (யோவா 11:52). தேவனுடைய பிள்ளைகள் எல்லோரும் தேவனிடத்திலிருந்து வந்திருக்கும், தேவனால் அனுப்பப்பட்டிருக்கும், தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவைப் பயபக்தியோடு வரவேற்கவேண்டும். அவரிடத்தில் அன்பாயிருக்கவேண்டும்.

**உபதேசத்தைக் கேட்க மனதில்லை**

**என் வசனத்தை நீங்கள் ஏன் அறியாமலிருக்கிறீர்கள்? என் உபதேசத்தைக் கேட்க மனதில்லாதிருக்கிறதினால் அல்லவா? (யோவா 8:43)**

## அதிகாரம் - 8

யூதர்கள் தங்களை ஆபிரகாமின் சந்ததியாரென்றும், தேவனுடைய பிள்ளைகளென்றும் கூறிக்கொள்கிறார்கள். ஆனால் தேவனுடைய குடும்பத்தில் பேசப்படும் பாஷை இவர்களுக்குப் புரியவில்லை. தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் வசனத்தை இவர்கள் அறியாதிருக்கிறார்கள். நாம் தேவனோடு நெருங்கிய ஐக்கியத்தில் இருக்கும்போது, தேவனுடைய வார்த்தை நமக்குப் புரியும். அவருடைய வார்த்தை நமக்குப் புரியாமல் அவரோடு நெருங்கிய ஐக்கியத்தில் இருப்பதற்கு வாய்ப்பில்லை.

இந்த ஜனங்கள் இயேசுகிறிஸ்துவின் வசனத்தை அறியாமலிருக்கிறார்கள். இதற்குக் காரணம் அவர்கள் அவருடைய உபதேசத்தைக் கேட்க மனதில்லாதிருக்கிறார்கள். தெளிந்த சிந்தனையோடு இயேசுவின் உபதேசத்தைக் கேட்பதற்குப் பதிலாக, உள்ளத்தில் சுயபெருமையோடும், வஞ்சனையான எண்ணத்தோடும் இயேசுவின் வசனத்தைக் கேட்கிறார்கள். அது அவர்களுக்குப் புரியவில்லை. இருதயத்தில் சுத்தமுள்ளவர்களால் மாத்திரமே தேவனுடைய வசனத்தைக் கேட்க முடியும். இவர்களுக்குத் தேவனுடைய வசனத்தைக் கேட்க வேண்டும் என்னும் ஆர்வமில்லை. இவர்கள் தேவனுடைய வசனத்தில் பிரியமாயிருக்கவில்லை. ஆகையினால் தேவனுடைய வார்த்தை இவர்களுக்குப் புரியவில்லை. தேவனுடைய வார்த்தையைக் கேட்கக்கூடாதவாறு இவர்கள் தங்கள் செவிகளை அடைத்துக் கொள்கிறார்கள். செவிகள் அடைக்கப்பட்டிருப்பதினால் இவர்களால் தேவனுடைய வசனத்தைக் கேட்க முடியாமற்போயிற்று.

**உங்கள் பிதாவாகிய பிசாசு**

**நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்; அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான்; சத்தியம் அவனிடத்திலில்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை; அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய் பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான் (யோவா 8:44).**

யூதர்கள் தங்களை ஆபிரகாமின் சந்ததியாரென்றும், தேவனுடைய பிள்ளைகளென்றும் பெருமையோடு கூறுகிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ இவர்களிடம் "நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்" என்று கூறுகிறார். இவர்கள் தேவனால் உண்டாகவில்லையென்றால் பிசாசான வனால்தான் உண்டானவர்கள். தேவன் இவர்களுடைய பிதா இல்லையென்றால், பிசாசானவன்தான் இவர்களுடைய பிதா. இயேசுகிறிஸ்து மிகவும் கடினமான வார்த்தைகளினால் இந்த ஜனங்களோடு உரையாடுகிறார். வார்த்தை கடினமாக இருந்தாலும் அதைத் தெளிவாக உறுதிபண்ணுகிறார்.

இவர்கள் தங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறார்கள். பிசாசானவனுடைய இச்சைகளை இவர்கள் நிறைவேற்றுகிறார்கள். பிசாசானவன் தன்னுடைய இச்சையைத் தன்னுடைய பிள்ளைகளாகிய இவர்கள் மூலமாக நிறைவேற்றுகிறான். தன்னுடைய சித்தத்தைச் செய்யுமாறு பிசாசானவன் இவர்களை அடிமைப்படுத்தியிருக்கிறான். இவர்களை ஆவிக்குரிய துன்மார்க்கத்தில் கிரியை செய்ய வைப்பதே பிசாசானவனுடைய பிரதான இச்சையாகும். இதன்பிரகாரம் பிசாசின் பிள்ளைகள் பெருமை, கோபம், பொறாமை, துர்குணம், வேசித்தனம் ஆகிய துர்செயல்களுக்கு தங்களை ஒப்புக்கொடுத்து அவற்றை நிறைவேற்றுகிறார்கள். பிசாசின் பிள்ளைகளாகிய இவர்கள் இப்படிப்பட்ட துர்செயல்களைச் செய்வதோடு, மற்றவர்களையும் தங்களுடைய துர்செய்கைகளுக்குப் பங்காளிகளாக ஆக்குகிறார்கள். இவ்வாறாகப் பிசாசானவன் தன்னுடைய ஆசை இச்சைகளை இவர்கள் மூலமாக நிறைவேற்றுகிறான்.

இவர்கள் தங்கள் பிதாவாகிய பிசாசானவனுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறார்கள். இச்சை எங்கே அதிகமாக இருக்கிறதோ அங்கே பிசாசும் இருக்கிறான். பிசாசுக்குத் தங்களை ஒப்புக்கொடுத்திருக்கிறவர்கள் இச்சையான காரியங்களைச் செய்வதில் பிரியப்படுவார்கள். தங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருப்பார்கள்.

## அதிகாரம் - 8

பிசாசானவனுடைய இரண்டு கிரியைகளைப்பற்றி இயேசுகிறிஸ்து இங்கு குறிப்பிடுகிறார். அவையாவன: 1. கொலைபாதகம் 2. பொய் பேசுதல். பிசாசானவன் மனுஷகொலைபாதகனாக இருக்கிறான். மனுஷனை விரோதிக்கிறான். தன்னுடைய இச்சையின் பிரகாரம் மனுஷனைச் சோதிக்கிறான். பிசாசின் பாவத்தினால் இந்த உலகத்தில் மரணம் உண்டாயிற்று. சோதிக்கிற பிசாசானவன் அழிக்கிறவனாகவும் இருக்கிறான். யூதர்கள் பிசாசை "மரண தூதன்" என்று அழைக்கிறார்கள். ஆதியிலே பிசாசு காயினுடைய உள்ளத்தில் பலமாக கிரியை நடப்பிக்கவில்லையென்றால், காயின் தன் சொந்த சகோதரனாகிய ஆபேலைக் கொலை செய்திருக்கமாட்டான். ஆதிமுதற்கொண்டு பிசாசானவன் மனுஷகொலைபாதகனாக இருக்கிறான்.

யூதர்கள் கர்த்தரைப் பின்பற்றுவதற்குப் பதிலாக பிசாசானவனைப் பின்பற்றுகிறார்கள் அவனைப்போலவே மனுஷகொலைபாதகராக இருக்கிறார்கள். மனுஷருடைய ஆத்துமாக்களைக் கொலைசெய்கிறார்கள். இயேசுகிறிஸ்துவுக்குச் சத்துருக்களாக இருக்கிறார்கள். இப்போது இயேசுகிறிஸ்துவைக் காட்டிக்கொடுக்கவும், அவரைக் கொலைசெய்யவும் ஆயத்தமாக இருக்கிறார்கள். ஆகையினால்தான் யூதர்கள் இயேசுவைக் கொல்லத்தேடுகிறார்கள்.

ஆதிமுதற்கொண்டு பிசாசானவன் மனுஷகொலைபாதகனாக இருப்பதுபோலவே, அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாக இருக்கிறான். சத்தியத்திலிருந்து தூர விலகியிருக்கிறான். உண்மையில்லாதது எதுவோ அதில் வாசம்பண்ணுகிறான். இயேசுகிறிஸ்து இங்கு சத்தியத்தை பிரசங்கம்பண்ணுகிறார். பிசாசின் பிள்ளைகளாகிய யூதர்கள் அவருடைய சத்திய வார்த்தைக்கு எதிர்த்து நிற்கிறார்கள். இவர்கள் பிசாசானவனால் உண்டானவர்கள். தங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறவர்கள். பிசாசினிடத்தில் உண்மையில்லை. இவனுடைய பேச்சிலும் செய்கையிலும் உண்மையிருக்காது. இவன் பொய்க்குச் சிநேகிதனாக இருக்கிறான். பொய்யை உற்பத்தி பண்ணுகிறான்.

பிசாசானவன் பொய் பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான். பிசாசானவனையும் அவனுடைய பொய் பேசுகிற குணத்தையும் பற்றி இயேசுகிறிஸ்து மூன்று காரியங்களைக் குறிப்பிடுகிறார். அவையாவன: 1. பிசாசு ஒரு பொய்யன். 2. அவன் பொய்பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான். 3. அவன் பொய்க்குப் பிதாவாக இருக்கிறான்.

பொய் பேசுவதே பிசாசின் குணம். இவனுடைய கள்ளத்தீர்க்கதரிசிகளும் பொய்பேசுகிறார்கள். அவர்கள் கள்ளப்போதகர்களாகப் பொய்யை உபதேசம் பண்ணுகிறார்கள். ஜனங்களைச் சோதிப்பதற்குப் பிசாசானவன் பொய்களையே பயன்படுத்துகிறான். இவன் நன்மையைத் தீமையென்பான். தீமையை நன்மையென்பான். இவன் பேசுகிற பொய்கள் யாவையும் தன் சொந்தத்தில் எடுத்து சுயமாய்ப் பேசுகிறான். எல்லா பொய்களுக்கும் இவனே காரண கர்த்தாவாக இருக்கிறான். ஒவ்வொரு பொய்யனுக்கும் இவனே தகப்பன்.

தேவன் மனுஷனை உண்டாக்கியபோது மனுஷன் சத்தியத்திற்கு சாட்சி கொடுக்கவேண்டும் என்னும் நோக்கத்தோடு அவனை உண்டுபண்ணினார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும் சத்தியத்தையே பேசவேண்டும். ஆனால் பிசாசானவனோ பொய்க்கும், பொய்யர்களுக்கும் தகப்பனாக இருக்கிறபடியினால் அவன் ஏராளமான பொய்யையும், ஏராளமான பொய்யர்களையும் உற்பத்தி பண்ணுகிறான். அவர்களுக்குப் பொய்பேசுவது எப்படியென்று பயிற்சி கொடுக்கிறான். பிசாசின் பிள்ளைகளும் தங்கள் பிதாவாகிய பிசாசுக்குக் கீழ்ப்படிந்து அவனைப்போலவே பொய்பேசுகிறார்கள்.

**சத்தியத்தைச் சொல்லுகிறபடியினால்**

**நான் உங்களுக்குச் சத்தியத்தைச் சொல்லுகிறபடியினாலே நீங்கள் என்னை விசுவாசிக்கிறதில்லை (யோவா 8:45).**

கொலைபாதகர்களும் பொய்யர்களும் பிசாசின் பிள்ளைகள் என்று இயேசுகிறிஸ்து நிரூபித்துவிட்டு, தம்முடைய உபதேசத்தைக் கேட்கிறவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதையும் அவர்களுக்கு உணர்த்துகிறார். இயேசுகிறிஸ்து அவர்கள்மீது இரண்டு குற்றச்சாட்டுக்களைக் கூறுகிறார். அவையாவன: 1. அவர்கள் சத்திய வார்த்தைகளை விசுவாசிக்கிறதில்லை. 2. அவர்கள் தேவனுடைய வசனங்களுக்குச் செவிக்கொடுக்கிறதில்லை.

## அதிகாரம் - 8

இயேசுகிறிஸ்து இவர்களுக்குச் சத்தியத்தைச் சொல்லுகிறார். ஆனால் இவர்களோ இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறதில்லை. அவர் சொல்லுவது சத்தியமான வார்த்தை என்பதையும் இவர்கள் விசுவாசிக்கவில்லை. பொதுவாகவே சத்திய வார்த்தைகளுக்கு ஜனங்கள் முக்கியத்துவம் கொடுப்பதில்லை. கட்டுக்கதைகளையும், நூதன உபதேசங்களையும் கேட்பதற்கே ஜனங்கள் பிரியப்படுகிறார்கள். இவர்கள் வெளிச்சத்தைப் பகைக்கிறார்கள். ஆகையினால் இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளைச் சத்தியமான வார்த்தைகளென்று இவர்கள் விசுவாசிக்கிறதில்லை.

இயேசுகிறிஸ்து சத்தியத்தைச் சொல்லுகிறபடியினால் இவர்கள் இயேசுகிறிஸ்துவையும் விசுவாசிக்கிறதில்லை. இயேசுகிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனாக அங்கீகரித்து இவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஜனங்களுடைய உள்ளத்தில் நிறைந்திருக்கும் பாவங்களையும் அசுத்தங்களையும் இயேசுகிறிஸ்து வெளிப்படுத்திக் காண்பிப்பதினால் அவர்மீது ஜனங்கள் பிரியப்படவில்லை. அவரை ஒரு தீர்க்கதரிசியாகக் கூட ஜனங்கள் அங்கீகரிக்கவில்லை. தேவனுடைய சத்தியம் இவர்களுடைய உள்ளத்திற்கு சந்தோஷத்தைத் தரவேண்டும். ஆனால் இவர்களோ பாவத்திற்கு அடிமைகளாகயிருப்பதினால் தேவனுடைய சத்தியத்தில் இடறிவிழுகிறார்கள். தேவனுடைய சத்திய வார்த்தைகள் இவர்களுக்கு ஆசீர்வாதமாக இருப்பதில்லை. இப்படிப்பட்டவர்களுடைய நிலைமை மிகவும் பரிதாபமாக இருக்கும்.

**என்னிடத்தில் பாவம் உண்டென்று**

**என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக் கூடும்? நான் சத்தியத்தைச் சொல்லியிருக்க, நீங்கள் ஏன் என்னை விசுவாசிக்கிறதில்லை (யோவா 8:46).**

ஜனங்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கவில்லை. அவருடைய வார்த்தையையும் விசுவாசிக்கவில்லை. அவர்மீது அன்பாயிருப்பதற்குப் பதிலாக விரோதமாய் இருக்கிறார்கள். ஒருவேளை இயேசுகிறிஸ்துவிடத்தில் பாவம் உண்டென்று இவர்கள் நினைத்திருக்கலாம். அவரிடத்தில் ஏதாவது பாவம் இருக்குமென்றால், அதை அவர்கள் அவரிடத்தில் சுட்டிக்காண்பிக்குமாறு தாராளமாகக் கேட்கலாம். "என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக்கூடும்" என்று இயேசுகிறிஸ்து தம்முடைய பரிசுத்தத்தை வெளிப்படுத்துகிறார்.

ஜனங்கள் இயேசுகிறிஸ்துவின்மீது கூறும் குற்றச்சாட்டுக்களுக்கு அடிப்படைக்காரணமோ, அல்லது அடிப்படை ஆதாரமோ இல்லை. அவர்மீது தவறான குற்றச்சாட்டுக்களைக் கூறுகிறார்கள். இயேசுகிறிஸ்து இவர்களை நியாயம் விசாரிக்கிற நியாயாதிபதியாக இருக்கிறார். இயேசுகிறிஸ்துவிடத்தில் யாரும் எந்தப் பாவத்தையும் காணமுடியாது. தம்மிடத்தில் பாவம் இல்லாதபடியினால்தான் இயேசுகிறிஸ்து ஜனங்களுடைய பாவத்தைக் கண்டித்து உணர்த்துகிறார். அவர் கூறுவது அனைத்துமே சத்தியம். ஆயினும் இந்த ஜனங்களோ சத்தியத்தைச் சொல்லுகிற இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறதில்லை.

இயேசுவினிடத்தில் பாவம் உண்டு என்று அவர்களால் நிரூபிக்க முடியவில்லையென்றால், அவரிடத்தில் ஒரு பாவமும் இல்லை என்பதுதான் பொருள். ஆகையினால் இயேசுகிறிஸ்து சொல்லுவது அனைத்தும் மெய்யான சத்தியம் என்பது நிரூபணமாகிறது. பாவமில்லாத இயேசுகிறிஸ்து சத்தியத்தை மாத்திரமே பேசுகிறார். ஜனங்கள் சத்தியத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும். ஆனால் அவர்களோ சத்தியத்தைச் சொல்லுகிற இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கவில்லை.

நம்முடைய பாவங்களைவிட்டு விலகிப்போக நமக்கு மனதில்லையென்றால், சத்தியத்தைப் பேசுகிறவர்களை நாம் விசுவாசிக்கமாட்டோம். தேவனை உண்மையாக சேவிக்க நம்மிடத்தில் மனதில்லையென்றாலும், அல்லது நம்மை நாமே வெறுத்து இயேசுகிறிஸ்துவின் சிலுவையைச் சுமப்பதற்கு நமக்கு ஆர்வமில்லையென்றாலும், நாம் இயேசுகிறிஸ்துவின் சத்திய வார்த்தைகளையும், இயேசுகிறிஸ்துவையும் விசுவாசிக்கமாட்டோம். ஏனெனில் இயேசுகிறிஸ்துவின் சத்திய வார்த்தைகளும் நம்முடைய பாவ ஜீவியமும் ஒன்றுக்கொன்று முரண்பட்டிருக்கிறது.

## அதிகாரம் - 8

### தேவனால் உண்டானவன்

**தேவனால் உண்டானவன் தேவனுடைய வசனங்களுக்குச் செவிகொடுக்கிறான்; நீங்கள் தேவனால் உண்டாயிராதபடியினால் செவிகொடாமலிருக்கிறீர்கள் என்றார் (யோவா 8:47).**

ஜனங்கள் இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்க மனதில்லாதிருக்கிறார்கள். அவர்கள் சத்திய வார்த்தையை விசுவாசியாமல் இருப்பதும், அவர்கள் தேவனால் உண்டாயிராமல் இருப்பதுமே இதற்கு காரணமாகும். தேவனால் உண்டானவன் தேவனுடைய வசனங்களுக்குச் செவிகொடுக்கிறான். தேவனுடைய வசனத்தை ஆர்வமாகவும் மனப்பூர்வமாகவும் கேட்க விரும்புகிறவன், தேவனுடைய சிந்தையையும் சித்தத்தையும் அறிந்துகொள்ள விரும்புகிறான். தேவன் தனக்கு கட்டளையிடும் எல்லா கட்டளைகளுக்கும் இவன் மனப்பூர்வமாக கீழ்ப்படிகிறான். தேவனுடைய வசனம் தன்னிடத்தில் அறிவிக்கப்படும்போது, அந்த வசனத்தை தேவனுடைய சப்தமாக அங்கீகரித்து, அதை பயபக்தியோடு தன் இருதயத்திலே ஏற்றுக்கொள்கிறான்.

மந்தையிலுள்ள ஆடுகள் மேய்ப்பனுடைய சத்தத்திற்குச் செவிகொடுக்கும். தன்னுடைய இருதயத்தின் கதவை இயேசுகிறிஸ்து தட்டும்போது, தட்டுகிறவர் இயேசுகிறிஸ்துதான் என்பதை அறிந்துகொண்டு, அவரை விசுவாசிக்கிறவன் அவருக்குத் தன்னுடைய இருதயத்தின் கதவைத் திறந்துகொடுப்பான். தேவனால் உண்டானவன் மாத்திரமே தேவனுடைய வசனங்களுக்குச் செவிகொடுக்கிறான்.

தேவனால் உண்டாயிராதவர்கள் தேவனுடைய வசனங்களுக்குச் செவிகொடுக்கமாட்டார்கள். தேவனுடைய வார்த்தைக்குத் தங்கள் செவிகளை அடைத்துக்கொள்வார்கள். இவர்கள் மரித்தவர்களைப்போல இருந்து தேவனுடைய வார்த்தையைத் தங்கள் உள்ளத்தில் ஏற்றுக்கொள்ளவேமாட்டார்கள். தேவனுடைய வார்த்தைக்கு இவர்கள் செவிகொடாமல் இருப்பதே, இவர்கள் தேவனால் உண்டானவர்களல்ல என்பதை நிரூபிக்கிறது. தேவனுடைய வார்த்தையையே இயேசுகிறிஸ்து பேசுகிறார். ஆனால் இந்த ஜனங்களோ தேவனால் உண்டாயிராதபடியினால், இயேசுகிறிஸ்துவின் வசனங்களுக்கும் செவிகொடுக்கிறதில்லை.

தேவனுடைய ராஜ்யத்தைப்பற்றிய வசனம் கனிகொடுக்கவில்லையென்றால், விதையைக் குற்றம் சொல்லக்கூடாது. நிலத்தைத்தான் குற்றம் சொல்லவேண்டும். தேவனுடைய ராஜ்யத்தின் விதை இந்த நிலத்தில் முளைப்பதற்கு, இந்த நிலம் தகுதியற்றதாக இருக்கிறது. இது பண்படுத்தப்பட வேண்டும். இதில் கொத்தி எருப்போடவேண்டும். விதையின்மீது குற்றம் சொல்வது எளிது. ஆனால் விதையில் ஒரு குற்றமும் இல்லை.

### நியாயந்தீர்க்கிறவர் ஒருவர் இருக்கிறார் யோவா 8 : 48-50

**யோவா 8:48. அப்பொழுது யூதர்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: உன்னைச் சமாரியனென்றும், பிசாசு பிடித்தவனென்றும் நாங்கள் சொல்லுகிறது சரிதானே என்றார்கள்.**

**யோவா 8:49. அதற்கு இயேசு: நான் பிசாசுபிடித்தவனல்ல, நான் என் பிதாவைக் கனம் பண்ணுகிறேன், நீங்கள் என்னைக் கனவீனம்பண்ணுகிறீர்கள்.**

**யோவா 8:50. நான் எனக்கு மகிமையைத் தேடுகிறதில்லை; அதைத்தேடி நியாயந்தீர்க்கிறவர் ஒருவர் இருக்கிறார்.**

### நாங்கள் சொல்லுகிறது சரிதானே

**அப்பொழுது யூதர்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: உன்னைச் சமாரியனென்றும், பிசாசு பிடித்தவனென்றும் நாங்கள் சொல்லுகிறது சரிதானே என்றார்கள் (யோவா 8:48).**

இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்கிறவர்கள் இதுவரையிலும் அவருடைய உபதேசத்தைப்பற்றித்தான் குற்றம் கூறினார்கள். ஆனால் அவர்கள் தேவனால் உண்டானவர்களல்ல என்று இயேசுகிறிஸ்து சொல்லியபோது, அவர்களுக்கு இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைத் தொடர்ந்து கேட்பதற்கு மனதில்லாமற் போயிற்று. தங்களுக்கு சத்திய வார்த்தைகளை உபதேசம்பண்ணுகிற இயேசுகிறிஸ்துவையே குற்றப்படுத்துகிறார்கள். பரிசேயரும் வேதபாரகரும் இயேசுகிறிஸ்துவைப் பார்த்து "உன்னைச் சமாரியன் என்றும், பிசாசு பிடித்தவன் என்றும் நாங்கள் சொல்லுகிறது சரிதானே" என்று கேட்கிறார்கள்.

## அதிகாரம் - 8

துன்மார்க்கமுள்ள யூதர்கள் மத்தியில் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப்பற்றி தேவதூஷணமான வார்த்தைகள் பரப்பப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவை அவர்கள் "சமாரியன்" என்று கூறுகிறார்கள். யூதர்கள் சமாரியர்களை நேசிப்பதில்லை. இயேசுகிறிஸ்துவை "சமாரியன்" என்று கூறுவதினால், யூதர்கள் இயேசுவின்மீது விரோதமாக இருக்கிறார்கள். யூதர்கள் மத்தியில் ஒருவனைக் கடினமான வார்த்தைகளினால் பேசவேண்டுமென்றால் அவனை "சமாரியன்" என்று கூறுவார்கள். யூதர்கள் மத்தியில் "சமாரியன்" என்னும் வார்த்தை ஒரு வசைச்சொல்லாகப் பயன்படுத்தப்படுகிறது.

ஜனங்கள் இயேசுகிறிஸ்துவைப் பொதுவாக "கலிலேயன்" என்று அழைக்கிறார்கள். எருசலேம் நகரத்திலுள்ளவர்கள் "முரட்டுக் குணமுள்ளவர்களை" கலிலேயன் என்று அழைப்பது வழக்கம். இப்போது இயேசுகிறிஸ்துவை சமாரியன் என்று அழைத்து அவரை "மோசமானவர்" என்று கூறுகிறார்கள். வரலாற்றுக்காலத்தில் இதுபோன்ற சம்பவம் ஏராளமாய் நடைபெற்று வருகிறது. மிகவும் நல்லவர்களுக்கு இதுபோன்று தீய பெயர்களைச் சூட்டி அவர்களை அவமானப்படுத்துவது வழக்கம்.

இயேசுகிறிஸ்துவின்மீது இப்படிப்பட்ட பழிச்சொல்லைக் கூறி, அவரைப் பழிப்பதோடு, அவருடைய உபதேசத்தைக் கேட்கிறவர்களையும் பழிக்கிறார்கள். இதனால் இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்பதற்கு கூடுகிற கூட்டம் குறைந்துபோகும் என்பது இவர்களுடைய எண்ணம்.

இயேசுகிறிஸ்துவை "சமாரியன்" என்று சொன்னதோடு, அவரை "பிசாசு பிடித்தவன்" என்றும் சொல்கிறார்கள். பிசாசுக்குத் தலைவனென்றும் இயேசுவைக் குற்றப்படுத்தியிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து சரியாகச் சிந்திப்பதில்லையென்றும், அவரைப் பிசாசு பிடித்திருப்பதினால் அவர் ஒரு பைத்தியக்காரனைப்போல சிந்திப்பதாகவும் அவர்மீது குற்றம்சுமத்துகிறார்கள். ஆகையினால் இயேசுகிறிஸ்து கூறும் வசனங்களை விசுவாசிக்கவேண்டியதில்லை என்றும், அந்த வசனங்கள் எல்லாமே பிசாசு பிடித்த ஒருவனுடைய பேச்சுத்தான் என்றும் பரிசேயரும் வேதபாரகரும் இயேசுகிறிஸ்துவின் மீது தூஷண வார்த்தைகளைப் பேசுகிறார்கள்.

இயேசுவின்மீது தாங்கள் கூறும் குற்றச்சாட்டுக்களை நியாயப்படுத்தும்விதமாக "நாங்கள் சொல்லுகிறது சரிதானே" என்றும் கேட்கிறார்கள். இவர்களுடைய இருதயம் கடினமாகயிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின்மீது இவர்கள் அன்பாயிராமல் கோபமாயிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவை விரோதிப்பது நல்லது என்றும் நியாயமானது என்றும் தங்கள் இருதயங்களில் முடிவு செய்திருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவைப்பற்றி பேசுவதற்கு இவர்களுக்கு ஒரு நல்ல வார்த்தைகூட கிடைக்கவில்லை. தங்களுடைய இழிவான வார்த்தைகளினால், தூஷண வார்த்தைகளினால் இயேசுகிறிஸ்துவை எப்படியெல்லாம் அவமானப்படுத்த முடியுமோ அப்படியெல்லாம் அவமானப்படுத்துகிறார்கள்.

ஒருவர்மீது தூஷண வார்த்தைகளைப் பேசுவது தவறு. ஒருவருக்கு விரோதமாக குற்றம் புரிவதும் தவறு. இந்தத் தவறுகள் எல்லாவற்றையும்விட, தாங்கள் செய்த தவறுகளின்மீது தீர்மானமாக, உறுதியாக நிலைத்து நிற்பதுதான் மிகப்பெரிய தவறு. யூதர்கள் இப்படிப்பட்ட தவறைத்தான் இங்கு செய்கிறார்கள். இயேசுகிறிஸ்துவைச் "சமாரியன்" என்றும், "பிசாசு பிடித்தவன்" என்றும் கூறிவிட்டு, அவரிடத்தில் "நாங்கள் சொல்லுகிறது சரிதானே" என்றும் கூறி தங்களுடைய தவறை உறுதிபண்ணுகிறார்கள்.

### நான் பிதாவைக் கனம்பண்ணுகிறேன்

**அதற்கு இயேசு: நான் பிசாசுபிடித்தவனல்ல, நான் என் பிதாவைக் கனம் பண்ணுகிறேன், நீங்கள் என்னைக் கனவீனம்பண்ணுகிறீர்கள் (யோவா 8:49).**

தம்மீது தூஷண வார்த்தைகளைப்பேசும் யூதர்களுக்கு இயேசுகிறிஸ்து கிருபையும் தாழ்மையும் நிறைந்த வார்த்தைகளினால் பிரதியுத்தரம் கூறுகிறார். முதலாவதாகத் தாம் பிசாசு பிடித்தவன் என்று இவர்கள் சொல்லுகிறதை இயேசு மறுக்கிறார். "நான் பிசாசு பிடித்தவன் அல்ல" என்று மிகவும் தெளிவாகக் கூறுகிறார். இயேசுகிறிஸ்துவின்மீது யூதர்கள் கூறும் குற்றச்சாட்டு அநியாயமானது. அதில் நீதி எதுவுமில்லை. இயேசுகிறிஸ்து பிசாசு பிடித்தவரும் அல்ல. அவர் பிசாசுகளுக்குத் தலைவரும் அல்ல.

இயேசுகிறிஸ்து பிசாசு பிடித்தவராக இருப்பாரென்றால் அவர் பிதாவாகிய தேவனைக் கனம்பண்ணமாட்டார். அவர் பிசாசு பிடித்தவரல்ல. ஆகையினால் இயேசுகிறிஸ்து "நான் என் பிதாவைக் கனம்பண்ணுகிறேன்" என்று கூறுகிறார்.

## அதிகாரம் - 8

இயேசுகிறிஸ்து தம்மைப்பற்றிக் கூறும்போது அவர்கள் தமக்கு விரோதமாகச் செய்கிற தவறுகளையும் அவர்களுக்குச் சுட்டிக்காண்பிக்கிறார். "நீங்கள் என்னை கனவீனம்பண்ணுகிறீர்கள்" என்று அவர்களிடத்தில் சொல்லுகிறார். மனுஷகுமாரனாகிய இயேசுகிறிஸ்து கிருபையும் இரக்கமும் நிறைந்தவராக இருக்கிறார். ஆனால் இந்த ஜனங்களோ அவரை எந்த அளவுக்கு துன்புறுத்த முடியுமோ அந்த அளவுக்குத் துன்புறுத்துகிறார்கள். தங்கள் வார்த்தைகளினாலும் செயல்களினாலும் இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாகத் துன்மார்க்கமாக நடந்துகொள்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து தம்முடைய பிதாவைக் கனம்பண்ணுகிறார். இயேசு பிதாவைக் கனம்பண்ணுவதுபோல வேறு எந்த மனுஷனும் அவரைக் கனம்பண்ணவில்லை. தம்மைக் கனம் பண்ணுகிறவனைத் தாமும் கனம் பண்ணுவதாக தேவன் வாக்குப்பண்ணியிருக்கிறார். தம்மைக் கனம்பண்ணுகிறவர்களை மற்ற மனுஷர்கள் கனம்பண்ணுவார்கள் என்று தேவன் எந்த வசனத்திலும் வாக்குப்பண்ணவில்லை. ஆகையினால் பிதாவைக் கனம்பண்ணுகிற குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை, இந்த ஜனங்கள் கனவீனம்பண்ணுகிறார்கள்.

**எனக்கு மகிமையைத் தேடுகிறதில்லை**

**நான் எனக்கு மகிமையைத் தேடுகிறதில்லை; அதைத்தேடி நியாயந்தீர்க்கிறவர் ஒருவர் இருக்கிறார் (யோவா 8:50).**

மகிமையில் தமக்குப் பிரியமில்லை என்பதையும், தாம் அந்த மகிமையைத் தேடுகிறதில்லை என்பதையும் இயேசுகிறிஸ்து இங்கு தெளிவுபடுத்துகிறார். உலகப்பிரகாரமான மகிமையை இயேசு ஒருபோதும் தேடுகிறதில்லை. "நான் எனக்கு மகிமையைத் தேடுகிறதில்லை" என்று இயேசுகிறிஸ்து அறிவிக்கிறார். இந்த உலகப்பிரகாரமான பெருமையில் இயேசுகிறிஸ்துவுக்குச் சிறிதும் ஆர்வமில்லை. உலகத்தின் பெருமைக்காக இயேசுகிறிஸ்து ஊழியம் செய்யவில்லை. இந்த ஜனங்கள் இயேசுகிறிஸ்துவைக் கனவீனம் பண்ணுகிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ இவர்கள் மூலமாக தமக்கு மகிமையைத் தேடுகிறதில்லை. ஆகையினால் இவர்கள் இயேசுவை கனவீனம்பண்ணுவது அவரை எந்தவிதத்திலும் பாதிக்கவில்லை. மனுஷருடைய துஷணவார்த்தைகளுக்கும், துதிவார்த்தைகளுக்கும் மரித்தவர்களைப்போல இருக்கிறவர்கள், தங்கள்மீது அவர்கள் கூறும் தூஷண வார்த்தைகளையும் கனவீனமான வார்த்தைகளையும் தாங்கிக்கொள்வார்கள்.

இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் உலகப்பிரகாரமாக கனவீனப்படுத்தப்படுகிறார். இப்படிப்பட்ட இந்த உலகத்தில்கூட தமக்கு ஒரு ஆறுதல் இருப்பதாக இயேசுகிறிஸ்து இங்கு அறிவிக்கிறார். "அதைத் தேடி நியாயந்தீர்க்கிறவர் ஒருவர் இருக்கிறார்" என்று இயேசுகிறிஸ்து ஆறுதலோடு கூறுகிறார். இயேசுகிறிஸ்து மனுஷரிடமிருந்து தமக்கு மகிமையைத் தேடுகிறதில்லை. ஆனால் ஒருவர் தமக்கு மகிமையைத்தேடி, நியாயந்தீர்க்கப்போகிறார் என்று அறிவிக்கிறார். தம்முடைய மகிமையை தேடாத இயேசுவின் மகிமையைத் தேவன் தேடுகிறார். மேன்மைக்கு முன்னானது தாழ்மை.

மனுஷர் தம்மைக் கனவீனப்படுத்தினாலும் இயேசுகிறிஸ்து அவர்களை நியாயந்தீர்க்கமாட்டார். தாம் நியாயந்தீர்க்காமல், இவர்களை நியாயந்தீர்க்கிறவர் ஒருவர் இருக்கிறார் என்று இயேசுகிறிஸ்து அறிவிக்கிறார். அவர் இயேசுகிறிஸ்துவின் மகிமையைத் தேடுகிறார். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நம்மை சிலர் தூஷிக்கலாம், கனவீனம்பண்ணலாம். இவற்றை பொறுமையோடும் மனத்தாழ்மையோடும் சகித்துக்கொள்ள வேண்டும். இவையெல்லாவற்றையும் நியாயந்தீர்க்கிறவர் ஒருவர் இருக்கிறார் என்னும் சிந்தனையினால் நம்மைநாமே ஆறுதல்படுத்திக்கொள்ளவேண்டும்.

**இயேசுவின் வார்த்தையைக் கைக்கொண்டால்**
**யோவா 8 : 51-59**

**யோவா 8:51. ஒருவன் என் வார்த்தையைக் கைக்கொண்டால், அவன் என்றென்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.**

## அதிகாரம் - 8

**யோவா 8:52. அப்பொழுது யூதர்கள் அவரை நோக்கி: நீ பிசாசுபிடித்தவனென்று இப்பொழுது அறிந்திருக்கிறோம்; ஆபிரகாமும் தீர்க்கதரிசிகளும் மரித்தார்கள். நீயோ: ஒருவன் என் வார்த்தையைக் கைக்கொண்டால் என்றென்றைக்கும் மரணத்தை ருசிபார்ப்பதில்லை என்கிறாய்.**

**யோவா 8:53. எங்கள் பிதாவாகிய ஆபிரகாமிலும் நீ பெரியவனோ? அவர் மரித்தார், தீர்க்கதரிசிகளும் மரித்தார்கள்; உன்னை நீ எப்படிப்பட்டவனாக்குகிறாய் என்றார்கள்.**

**யோவா 8:54. இயேசு பிரதியுத்தரமாக: என்னை நானே மகிமைப்படுத்தினால் அந்த மகிமை வீணாயிருக்கும், என் பிதா என்னை மகிமைப்படுத்துகிறவர், அவரை உங்கள் தேவனென்று நீங்கள் சொல்லுகிறீர்கள்.**

**யோவா 8:55. ஆயினும் நீங்கள் அவரை அறியவில்லை, நான் அவரை அறிந்திருக்கிறேன்; அவரை அறியேன் என்று சொல்வேனாகில் உங்களைப்போல நானும் பொய்யனாயிருப்பேன்; அவரை நான் அறிந்து, அவருடைய வார்த்தையைக் கைக்கொண்டிருக்கிறேன்.**

**யோவா 8:56. உங்கள் பிதாவாகிய ஆபிரகாம் என்னுடைய நாளைக் காண ஆசையாயிருந்தான்; கண்டு களிகூர்ந்தான் என்றார்.**

**யோவா 8:57. அப்பொழுது யூதர்கள் அவரை நோக்கி: உனக்கு இன்னும் ஐம்பது வயதாகவில்லையே, நீ ஆபிரகாமைக் கண்டாயோ என்றார்கள்.**

**யோவா 8:58. அதற்கு இயேசு: ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.**

**யோவா 8:59. அப்பொழுது அவர்மேல் எறியும்படி கல்லுகளை எடுத்துக் கொண்டார்கள். இயேசு மறைந்து, அவர்கள் நடுவிலே கடந்து, தேவாலயத்தை விட்டுப்போனார்.**

**என்றென்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை**

**ஒருவன் என் வார்த்தையைக் கைக்கொண்டால், அவன் என்றென்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் (யோவா 8:51).**

இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் ஒருபோதும் மரிப்பதில்லை. விசுவாசிகளுடைய நித்திய ஜீவனைப்பற்றி இயேசுகிறிஸ்து இங்கு உபதேசம்பண்ணுகிறார். "ஒருவன் என் வார்த்தையைக் கைக்கொண்டால் அவன் என்றென்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை" என்பது இயேசுகிறிஸ்துவின் உபதேசம். தம்முடைய உபதேசத்தை உறுதிபண்ணுவதற்காக, "மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றும் கூறுகிறார்.

நாம் இயேசுகிறிஸ்துவின் வார்த்தையைக் கேட்கிறவர்களாக மாத்திரமல்ல, அதை கைக்கொள்ளுகிறவர்களாகவும் இருக்க வேண்டும். இயேசுகிறிஸ்து இந்த உபதேசத்தில் மிகவும் தெளிவாக "என் வார்த்தை" என்று குறிப்பிடுகிறார். இயேசுவின் வார்த்தையை நம்முடைய இருதயத்தில் பெற்றிருந்தால் மாத்திரம் போதாது. அந்த வார்த்தையின் பிரகாரம் நாம் ஜீவிக்கவும் வேண்டும். நம்முடைய சிந்தையிலும் ஞாபகத்திலும் இயேசுகிறிஸ்துவின் வார்த்தை பூரண இடம்பெற்றிருக்க வேண்டும். இயேசுகிறிஸ்துவின் வார்த்தையை நமக்கு வழிகாட்டியாகவும், நம்மை ஆளுகை செய்கிற நீதிபதியாகவும் அங்கீகரிக்க வேண்டும். அவருடைய வார்த்தையைக் கைக்கொள்ளும்போது நாம் அதை அன்போடும், பணிவோடும், பூரண மனதோடும் கைக்கொள்ளவேண்டும்.

இயேசுகிறிஸ்துவின் வார்த்தையை நாம் கைக்கொள்ளும்போது அவர் நமக்கு விசேஷித்த சிலாக்கியத்தை வாக்குப் பண்ணியிருக்கிறார். "ஒருவன் இயேசுவின் வார்த்தையைக் கைக்கொண்டால் அவன் என்றென்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை" என்பதே அந்தச் சிலாக்கியமாகும். இயேசுகிறிஸ்து இங்கு சரீரப்பிரகாரமான மரணத்தைப்பற்றி குறிப்பிடவில்லை. எல்லோருக்கும் மரணம் நியமிக்கப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் வார்த்தையைக் கைக்கொள்ளுகிறவர்களும், அதைக் கைக்கொள்ளாதவர்களும் தங்கள் சரீரத்தில் மரித்துப்போவார்கள். ஆனாலும் தம்முடைய வார்த்தையைக் கைக்கொள்கிறவன் "என்றென்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை" என்று இயேசுகிறிஸ்து குறிப்பிடுவது ஆவிக்குரிய மரணமாகும்.

## அதிகாரம் - 8

விசுவாசிகள் தங்கள் சரீரத்தில் மரிக்கும்போது, தங்கள் சரீர மரணத்தை அவர்கள் மரணமாகக் காண்பதில்லை. விசுவாசிகளுடைய இருதயத்தில் மரணபயம் இருக்காது. நம்முடைய ஜீவனைக்குறித்து நாம் சிந்தித்துப் பார்க்கும்போது, நம்முடைய மரணத்தோடு நம்முடைய ஜீவன் முடிவுபெற்று விடுவதில்லை. நம்முடைய சரீர மரணத்திற்குப் பின்பு நடைபெறப்போகும் மறுஉலகத்தின் காரியங்களையும் விசுவாசிகளாகிய நாம் சிந்தித்துப் பார்க்கிறோம். நம்முடைய பார்வை மிகவும் தெளிவாக இருக்கும். நாம் மரணத்தின் வழியாக, மரணத்திற்குப் பின்பு நடைபெறப்போகும் காரியங்களையும் காண்போம். இம்மைக்குப்பின்பு மறுமையையும் காண்போம். ஆகையினால்தான் இயேசுகிறிஸ்து, தம்முடைய வார்த்தையைக் கைக்கொள்கிறவர்கள் என்றென்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை என்று கூறுகிறார்.

விசுவாசிகளாகிய நமக்கு ஒரு விசேஷித்த நாள் நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்த நாளில் நாம் நம்முடைய மரணத்தை ஜெயிப்போம். நம்முடைய நித்திய மரணத்திலிருந்து பரிபூரணமாக விடுதலை பெறுவோம். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமக்கு நித்திய ஜீவனைக்கொடுப்பார். அதன்பின்பு நமக்கு ஒருபோதும் மரணம் இருக்காது. நித்திய ஜீவனைப் பெற்றுக்கொண்ட பின்பு நாம் மரித்துப் போவதற்கு வாய்ப்பில்லை.

**ஆபிரகாம் மரித்தார்**

**அப்பொழுது யூதர்கள் அவரை நோக்கி: நீ பிசாசுபிடித்தவனென்று இப்பொழுது அறிந்திருக்கிறோம்; ஆபிரகாமும் தீர்க்கதரிசிகளும் மரித்தார்கள். நீயோ: ஒருவன் என் வார்த்தையைக் கைக்கொண்டால் என்றென்றைக்கும் மரணத்தை ருசிபார்ப்பதில்லை என்கிறாய். எங்கள் பிதாவாகிய ஆபிரகாமிலும் நீ பெரியவனோ? அவர் மரித்தார், தீர்க்கதரிசிகளும் மரித்தார்கள்; உன்னை நீ எப்படிப்பட்டவனாக்குகிறாய் என்றார்கள் (யோவா 8:52,53).**

இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்டு யூதர்கள் மேலும் கோபமடைகிறார்கள். அவரைத் தூஷிப்பதற்கு சமயம் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். தம்முடைய வார்த்தையைக் கைக்கொள்கிறவன் என்றென்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை என்று இயேசுகிறிஸ்து கூறியவுடன், யூதர்கள் அவரை நோக்கி "நீ பிசாசு பிடித்தவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறோம்" என்று கூறி தூஷிக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து தேவனிடத்திலிருந்து வந்திருக்கிற போதகர். இந்தச் சத்தியத்தை அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் இயேசுகிறிஸ்து பல சமயங்களில் போதுமான அளவு உறுதிபண்ணியிருக்கிறார். ஆனால் யூதர்களோ இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தை அங்கீகரியாமல் அவரைப் பரியாசம் பண்ணுகிறார்கள். இயேசுகிறிஸ்து மிகுந்த பொறுமையோடும், ஆத்தும பாரத்தோடும் அவர்களோடு பேசிக்கொண்டிருக்கிறார். ஆனால் அவர்களோ இயேசுகிறிஸ்துவை "பிசாசு பிடித்தவன்" என்று கூறி பரியாசம் பண்ணுகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் உபதேசம் தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறது. அவருடைய வார்த்தைகளில் தெய்வத்துவம் நிறைந்திருக்கிறது. தம்முடைய வார்த்தைகளை இயேசுகிறிஸ்து அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் உறுதிபண்ணுகிறார். இப்படிப்பட்ட ஒரு தீர்க்கதரிசியை எதிர்பார்க்க வேண்டுமென்றும், அவரை விசுவாசிக்க வேண்டுமென்றும் யூதமார்க்கம் ஜனங்களுக்கு போதிக்கிறது. தங்களுடைய மார்க்கத்தில் பெருமையோடிருக்கிற யூதர்கள், இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.

இயேசுகிறிஸ்து தம்முடைய வார்த்தையினால் பாவம் செய்துவிட்டதாக யூதர்கள் அவர்மீது குற்றம் சுமத்துகிறார்கள். ஒருவன் தம்முடைய வார்த்தையைக் கைக்கொண்டால் அவன் என்றென்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை என்று இயேசுகிறிஸ்து கூறுகிறார். ஆனால் யூதர்களோ இயேசுவின் உபதேசத்தை ஆவிக்குரிய ரீதியாகப் புரிந்துகொள்ளாமல், சரீரப்பிரகாரமாக சிந்திக்கிறார்கள். ஆபிரகாமைவிடவும், தீர்க்கதரிசிகளைவிடவும் இயேசுகிறிஸ்து தம்மை உயர்த்துவதாக அவர்மீது குற்றம் சுமத்துகிறார்கள். ஆபிரகாமும் தீர்க்கதரிசிகளும் மரித்துப்போனார்கள். ஆகையினால் எல்லோருமே மரித்துப்போவார்கள். யாராலும் என்றென்றைக்கும் மரணத்தைக் காணாமல் இருக்கமுடியாது. ஆபிரகாமும் தீர்க்கதரிசிகளும் மரணத்தைக் கண்டதினால், எல்லோருமே மரணத்தைக் கட்டாயம் காணவேண்டும் என்று யூதர்கள் அவரிடத்தில் விவாதம் பண்ணுகிறார்கள்.

## அதிகாரம் - 8

ஆபிகாமும் தீர்க்கதரிசிகளும் விசேஷித்தவர்கள் என்பது மெய்தான். இவர்கள் தேவனுடைய கிருபையை விசேஷமாகப் பெற்றுக்கொண்டார்கள். சாதாரண மனுஷர்களைவிட இவர்கள் விசேஷித்தவர்கள், உயர்ந்தவர்கள், தேவனுடைய கிருபையை அதிகமாய்ப் பெற்றுக் கொண்டவர்கள். இவர்கள் தேவனுடைய வார்த்தையைக் கைக்கொண்டார்கள் என்பதும் மெய்தான். இவர்கள் தங்கள் சரீரத்தில் மரித்துப்போனார்கள் என்பதும் மெய்தான். இவர்கள் ஒருபோதும் நித்திய ஜீவனைப்பற்றி உபதேசம்பண்ணவில்லை. தாங்கள் என்றென்றைக்கும் மரணத்தைக் காணாமல் நித்திய காலமாக ஜீவிப்போம் என்றும் இவர்கள் சொல்லவில்லை.

ஆபிரகாமும் தீர்க்கதரிசிகளும் தங்கள் விசுவாசத்தில் மரித்துப்போனார்கள். சரீரப்பிரகாரமாக எல்லோருமே மரிக்கவேண்டியவர்கள்தான். அதன்பிரகாரம் இவர்களும் மரித்துப்போனார்கள். ஆனால் இவர்கள் விசுவாசித்து மரித்துப்போனது இவர்களுக்குக் கிடைத்த மேன்மை. ஆபிரகாமும் தீர்க்கதரிசிகளும் மரித்துப்போனதுபோல நாம் எல்லோருமே மரித்துப் போகப்போகிறோம். அப்படியிருக்கும்போது நம்முடைய மரணத்தைக் குறித்து நாம் ஏன் பயப்படவேண்டும். துன்மார்க்கர்கள் ஒருவேளை தங்கள் மரணத்தைக்குறித்து பயப்படலாம். ஆனால் தேவனுடைய வார்த்தையைக் கைக்கொள்கிறவர்கள் தங்களுடைய சரீர மரணத்தைக்குறித்து பயப்படவேண்டிய அவசியமேயில்லை. ஆபிரகாமும் தீர்க்கதரிசிகளும் மரணப்பள்ளத்தாக்கின் வழியாக கடந்து சென்றார்கள். நமக்கு முன்மாதிரியாக இருந்தவர்கள் மரித்துப்போனதுபோலவே நாமும் மரித்துப்போகப்போகிறோம். ஆகையினால் மரணபயம் நம்மிடத்தில் இருக்கவேண்டிய அவசியமில்லை.

இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்கிற யூதர்கள் அதைத் தவறாகப் புரிந்துகொள்கிறார்கள். "ஒருவன் என் வார்த்தையைக் கைக்கொண்டால் அவன் என்றென்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை" என்று இயேசுகிறிஸ்து தெளிவாக உபதேசம்பண்ணுகிறார். ஆனால் இவர்களோ தங்கள் மாம்ச சிந்தையில் இயேசுவின் ஆவிக்குரிய உபதேசத்திற்கு உலகப்பிரகாரமான வியாக்கியானத்தைக் கொடுக்கிறார்கள். யூதர்களுடைய வியாக்கியானத்தில் இரண்டு பிழைகள் உள்ளன. அவையாவன: 1. இயேசுகிறிஸ்து சரீரப்பிரகாரமான மரணத்தை குறிப்பிடுவதாக இவர்கள் நினைக்கிறார்கள். 2. ஆபிரகாம், தீர்க்கதரிசிகள் ஆகியோரைவிட வேறு யாரும் பெரியவர்களல்ல என்று இவர்கள் நினைக்கிறார்கள்.

நித்திய ஜீவனைப்பற்றிய உபதேசத்தில், இயேசுகிறிஸ்து சரீரப்பிரகாரமான மரணத்தைக் குறிப்பிடவில்லை. ஆவிக்குரிய மரணத்தையே குறிப்பிடுகிறார். பிதாவாகிய தேவனானவர் இன்னும் ஆபிரகாமின் தேவனாகவும், பரிசுத்தமான தீர்க்கதரிசிகளின் தேவனாகவும் இருக்கிறார். நம்முடைய தேவன் மரித்தோரின் தேவனல்ல. ஜீவனுள்ளோரின் தேவன். ஆகையினால் ஆபிரகாமும், தீர்க்கதரிசிகளும் மரித்துப்போகாமல் இன்னும் ஜீவனோடிருக்கிறார்கள். அவர்கள் என்றென்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை என்று பொருள்படுமாறு இயேசுகிறிஸ்து இங்கு உபதேசம்பண்ணுகிறார். இவர்கள் சரீரப்பிரகாரமாக மரித்தாலும், தங்கள் மரணத்தை என்றென்றைக்கும் காணாமல், நித்திய ஜீவனைப் பெற்றிருக்கிறார்கள்.

ஆபிரகாம், தீர்க்கதரிசிகள் ஆகியோரைவிட பெரியவர்கள் யாரும் இல்லையென்பது யூதர்களுடைய தவறான வியாக்கியானம். ஏனெனில் இவர்கள் எதிர்பார்க்கிற மேசியா ஆபிரகாமைவிடவும் தீர்க்கதரிசிகளைவிடவும் பெரியவர் என்பது இவர்களுக்கே தெரியும். தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்து இவர்கள் மத்தியில் இருக்கிறார். அவர் ஆபிரகாமைவிடவும், தீர்க்கதரிசிகளைவிடவும் பெரியவர். அப்படிப்பட்டவரைப் போற்றிப் புகழுவதற்குப் பதிலாக, இயேசுகிறிஸ்துவைப் பிசாசு பிடித்தவன் என்று தூஷிக்கிறார்கள்.

## அதிகாரம் - 8

இவர்கள் ஆவிக்குரிய ரீதியாக குருடர்களாக இருக்கிறார்கள். ஆகையினால் தங்களுக்கு முன்பாக நிற்கும் இயேசுவைக் கிறிஸ்து என்று இவர்களால் காணமுடியவில்லை. அவர்கள் இயேசுகிறிஸ்துவிடமே "உன்னை நீ எப்படிப்பட்டவனாக்குகிறாய்" என்று கேட்கிறார்கள்.

**என் பிதா என்னை மகிமைப்படுத்துகிறவர்**

**இயேசு பிரதியுத்தரமாக: என்னை நானே மகிமைப்படுத்தினால் அந்த மகிமை வீணாயிருக்கும், என் பிதா என்னை மகிமைப்படுத்துகிறவர், அவரை உங்கள் தேவனென்று நீங்கள் சொல்லுகிறீர்கள் (யோவா 8:54).**

தம்மிடத்தில் விவாதம்பண்ணுகிற யூதர்களுக்கு இயேசுகிறிஸ்து இன்னும் பொறுமையோடு பிரதியுத்தரம் கூறுகிறார். இந்த நாள் அவருக்கு அவருடைய பொறுமையின் நாளாக இருக்கிறது. ஆவியின் கனியாகிய நீடிய பொறுமையை வெளிப்படுத்தி இயேசுகிறிஸ்து நிதானமாகப் பிரதியுத்தரம் கூறுகிறார். தம்மைப்பற்றி தாமே சாட்சி கூறினால் அது போதுமானதாக இருக்காது என்று இயேசு தீர்மானம்பண்ணுகிறார். ஆகையினால் "என்னை நானே மகிமைப்படுத்தினால் அந்த மகிமை வீணாயிருக்கும்" என்று கூறிவிடுகிறார். சுயமகிமையினால் ஒரு பிரயோஜனமுமில்லை. நம்மை நாமே பெருமைப்படுத்திக்கொள்வதினால் நமக்குப் பெருமை உண்டாகாது. இது சுயவிளம்பரமாகத்தான் இருக்கும். இப்படிப்பட்ட மகிமை வீணான மகிமையாக இருக்கும். தங்களைத் தாங்களே மகிமைப்படுத்திக் கொள்கிறவர்கள், தங்களைத் தாங்களே வஞ்சித்துக்கொள்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து தம்முடைய பிதாவாகிய தேவனைப்பற்றியும், அவர்களுடைய பிதாவாகிய ஆபிரகாமைப்பற்றியும் இங்கு குறிப்பிடுகிறார். தம்முடைய பிதா தம்மை மகிமைப்படுத்துகிறவர் என்று அவர்களுக்கு வெளிப்படுத்துகிறார். தமக்குள்ள மகிமை அனைத்தையும் இயேசுகிறிஸ்து தம்முடைய பிதாவாகிய தேவனிடத்திலிருந்தே பெற்றிருக்கிறார். தாம் எதிர்பார்க்கும் எல்லா மகிமைக்கும் குமாரனாகிய இயேசுகிறிஸ்து பிதாவாகிய தேவனையே சார்ந்திருக்கிறார். கிறிஸ்துவும் அவருடையவர்கள் அனைவரும் தங்களுடைய மகிமைக்காக பிதாவாகிய தேவனையே சார்ந்திருக்கிறார்கள். இந்த ஜனங்கள் தம்மை மகிமைப்படுத்தினாலும், மகிமைப்படுத்தாவிட்டாலும் பிதாவாகிய தேவன் தம்மை மகிமைப்படுத்துவார் என்று இயேசுகிறிஸ்து நிச்சயத்தோடிருக்கிறார்.

**நான் அவரை அறிந்திருக்கிறேன்**

**ஆயினும் நீங்கள் அவரை அறியவில்லை, நான் அவரை அறிந்திருக்கிறேன்; அவரை அறியேன் என்று சொல்வேனாகில் உங்களைப்போல நானும் பொய்யனாயிருப்பேன்; அவரை நான் அறிந்து, அவருடைய வார்த்தையைக் கைக்கொண்டிருக்கிறேன் (யோவா 8:55).**

இயேசுவை இந்த ஜனங்கள் கிறிஸ்து என்று அங்கீகரித்து அவரை மகிமைப்படுத்தவில்லை. அவர்கள் தேவனை அறியாமலிருப்பதினாலேயே, இயேசு கிறிஸ்துவை மகிமைப் படுத்தாமலிருக்கிறார்கள். ஆனால் பிதாவாகிய தேவனை யூதர்கள் தங்கள் தேவன் என்று சொல்லுகிறார்கள். அவரைத் தேவன் என்று சொல்லியும் அவரை அறியாதிருக்கிறார்கள். தங்கள் வாயினால் மாத்திரமே தேவனுக்கு ஊழியம் செய்கிறார்கள். இவர்களுடைய உள்ளத்திலோ மெய்யான தேவபக்தியில்லை.

இவர்களைப்போலத்தான் இக்காலத்தில் சில ஏமாற்றுக்காரர்கள் கர்த்தருக்காக ஊழியம் செய்வதாகச் சொல்கிறார்கள். தேவனுடைய ஊழியத்தில் தங்களுக்கு ஆர்வம் இருப்பதுபோல நடிக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவை தங்கள் தேவன் என்று தங்கள் வாயினால் சொல்லிக்கொள்கிறார்கள். ஆனால் இவர்களோ இயேசுவைக் கிறிஸ்து என்றும், இரட்சகர் என்றும், ஆண்டவர் என்றும் அறியாமலிருக்கிறார்கள். நாம் இயேசுகிறிஸ்துவை நம்முடைய தேவன் என்று வாயினால் சொல்லியும், நாம் அவருக்கு உண்மையான பிள்ளைகளாக ஜீவிக்கவில்லையென்றால், நம்முடைய வாயின் வார்த்தைகளினால் ஒரு பிரயோஜனமுமில்லை.

## அதிகாரம் - 8

யூதர்கள் பிதாவாகிய தேவனைத் தங்கள் தேவன் என்று தங்கள் வாயினால் சொன்னாலும், தேவனைப்பற்றிய மெய்யான வெளிப்பாடு இல்லாதவர்களாகவே இருக்கிறார்கள். அவர்கள் தேவனைப்பற்றி கொஞ்சம்கூட அறிந்திருக்கவில்லை. இவர்களுடைய நிலமை மிகவும் பரிதாபமானது. தேவனைப்பற்றி அறியாமலேயே, இவர்கள் இயேசுகிறிஸ்துவிடம் தேவனைப்பற்றி விவாதம்பண்ணுகிறார்கள். இப்படித்தான் இக்காலத்தில்கூட ஏராளமானோர் இயேசுகிறிஸ்துவைப்பற்றி அறியாமலேயே, அவரைப்பற்றி விவாதம்பண்ணுகிறார்கள். இவர்களுக்கு இயேசுகிறிஸ்துவின் பெயர் மாத்திரமே தெரிந்திருக்கிறது. அவருடைய மெய்யான சுபாவம் எப்படிப்பட்டது என்பது இவர்களுக்குத் தெரியாது. தேவனுடைய சாயல் என்ன என்பதும் இவர்களுக்குத் தெரியாது. தேவனுடைய வசனம் இயேசுகிறிஸ்துவில் வெளிப்படுவதும் இவர்களுக்குத் தெரியாது. நாம் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்போது சிலர் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்வதில்லை. இதற்கு ஒரே காரணம் அவர்கள் தேவனைப்பற்றி அறியாமலிருப்பதுதான்.

தம்முடைய பிதா தம்மை மகிமைப்படுத்துவார் என்று இயேசுகிறிஸ்து உறுதிபண்ணுகிறார். அதற்கான காரணத்தையும் தெரியப்படுத்துகிறார். குமாரனாகிய இயேசுகிறிஸ்து பிதாவாகிய தேவனை அறிந்திருக்கிறார். தம்முடைய வார்த்தையில் இயேசுகிறிஸ்து நிச்சயத்தோடிருக்கிறார். பிதாவாகிய தேவனைத் தாம் அறிந்திருப்பதை உறுதிபண்ணும் விதமாக "அவரை அறியேன் என்று சொல்வேனாகில் உங்களைப்போல நானும் பொய்யனாயிருப்பேன்" என்று கூறுகிறார்.

பிதாவுக்கும் தமக்கும் உள்ள தொடர்பை இயேசுகிறிஸ்து மறுதலிக்கவில்லை. யூதர்கள் பிதாவாகிய தேவனையும் அறியவில்லை, குமாரனாகிய இயேசுகிறிஸ்துவையும் அறியவில்லை. ஆனால் இயேசுகிறிஸ்துவோ பிதாவாகிய தேவனைத் தாம் அறிந்திருப்பதை மறுதலியாமல், சாட்சியாக அறிவிக்கிறார். பிதாவைத் தாம் அறியவில்லை என்று இயேசுகிறிஸ்து சொல்வாராகில் அவரும் பொய்யராகவே இருப்பார். அப்போது பிதாவைக்குறித்தும் தம்மைக்குறித்தும் இயேசுகிறிஸ்துவின் சாட்சி பொய்யாகவே இருக்கும். பிதாவைத் தாம் அறிந்திருப்பதை உறுதிபண்ணும்விதமாக "அவரை நான் அறிந்து, அவருடைய வார்த்தையைக் கைக்கொண்டிருக்கிறேன்" என்று கூறுகிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய பிதாவின் வார்த்தையையும் கைக்கொண்டிருக்கிறார். அதேவேளையில் பிதாவுடன் தம்முடைய சொந்த வார்த்தையையும் கைக்கொண்டிருக்கிறார். இயேசுகிறிஸ்து பிதாவினிடத்தில் கூறியிருக்கிற தம்முடைய வார்த்தையிலும் உண்மையுள்ளவராக நிலைத்திருக்கிறார். நாமும் இயேசுகிறிஸ்துவின் வார்த்தையைக் கைக்கொள்ளவேண்டும் (யோவா 8:51). இயேசுகிறிஸ்துவே இந்த விஷயத்தில் நமக்கு முன்மாதிரியாக இருக்கிறார். இயேசுகிறிஸ்து பிதாவின் வார்த்தையைக் கீழ்ப்படிதலோடு கைக்கொண்டிருக்கிறார். அவரைப்போலவே நாமும் இயேசுகிறிஸ்துவின் வார்த்தையைக் கீழ்ப்படிதலோடு கைக்கொள்ள கற்றுக்கொள்ள வேண்டும். தாம் பிதாவை அறிந்திருப்பதை உறுதிபண்ணும் விதமாக இயேசுகிறிஸ்து இந்த உபதேசத்தைச் சொல்லுகிறார்.

### கண்டு களிகூர்ந்தான்

**உங்கள் பிதாவாகிய ஆபிரகாம் என்னுடைய நாளைக் காண ஆசையாயிருந்தான்; கண்டு களிகூர்ந்தான் என்றார் (யோவா 8:56).**

யூதர்களுடைய பிதாவாகிய ஆபிரகாமைக்குறித்து இயேசுகிறிஸ்து இங்கு பேசுகிறார். தேவனை அவர்களுடைய பிதா என்று கூறாமல் ஆபிரகாமையே அவர்களுடைய பிதா என்று கூறுகிறார். "உங்கள் பிதாவாகிய ஆபிரகாம் என்னுடைய நாளைக்காண ஆசையாயிருந்தான். கண்டுகளிகூர்ந்தான்" என்று இயேசுகிறிஸ்து யூதர்களிடம் கூறுகிறார். வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட மேசியாவையும், யூதர்களுடைய முற்பிதாக்களில் ஒருவரையும் குறிப்பிடும்போது இயேசுகிறிஸ்து இரண்டு சம்பவங்களைப்பற்றி பேசுகிறார். அவையாவன: 1. மேசியாவின் நாளைக்காண ஆபிரகாம் ஆசையாயிருந்தான். 2. ஆபிரகாம் மேசியாவின் நாளைக்கண்டு களிகூர்ந்தான்.

## அதிகாரம் - 8

ஆபிரகாம் மேசியாவின் நாளைக்காண "ஆசையாயிருந்தான்" என்று குறிப்பிடும்போது, இந்த வாக்கியத்திற்கு "ஆவலாக எதிர்பார்ப்போடு இருந்தான்" என்று பொருள் கூறவேண்டும். ஆவலாக இருந்தவன் அந்த நாளைக்கண்டு களிகூர்ந்தான். ஆபிரகாமின் மனதில் மேசியாவைக் காணவேண்டும் என்னும் ஆவல் உண்டாயிற்று. அந்த ஆவல் நாளுக்குநாள் அதிகரித்தது. ஒவ்வொரு நாளும் ஆபிரகாம் மேசியாவின் நாளை காணவேண்டும் என்று அதிகம் அதிகமாக ஆவலாக இருந்தான். அந்த நாளை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.

இயேசுகிறிஸ்துவைப் பற்றி அறிந்துகொள்ளவேண்டுமென்று ஆவலாக இருக்கிறவர்களால் மாத்திரமே அவரைப்பற்றி அறிந்துகொள்ள முடியும். நீதியின் சூரியனுடைய அதிகாலை வெளிச்சத்தைக் காணவேண்டுமென்று விரும்புகிறவர்கள், சூரியன் உதிப்பதைக் காண்பதற்கு ஆவலாக இருக்கவேண்டும். ஆபிரகாம் இயேசுகிறிஸ்துவின் நாளைக்காண ஆசையாயிருந்தான். அந்த நாள் வருவதற்கு நீண்டகாலமாகும். அது வெகு தூரத்தில் இருந்தது. ஆனால் ஆபிரகாமின் சந்ததியில் வந்திருக்கும் யூதர்களோ மேசியாவின் நாளைக்காண ஆவலாக இல்லை. மேசியா வந்தபின்பும் அவரை வரவேற்பதற்கு ஆயத்தமாக இல்லை.

ஆபிரகாம் இயேசுகிறிஸ்துவின் நாளைக்கண்டு களிகூர்ந்தான். தேவனிடத்தில் ஆபிரகாம் மிகுந்த பக்தியுள்ளவன். அவனுடைய ஆசையைத் தேவன் அங்கீகரித்து நிறைவேற்றியிருக்கிறார். அவன் கிறிஸ்துவின் நாளைக்காண ஆசையாயிருந்தான். தேவன் அவனுடைய ஆசையை அங்கீகரித்து, அவன் அந்த நாளைக்காண்பதற்கு ஆவன செய்தார். கிறிஸ்துவின் நாளின் ஒரு பகுதியை ஆபிரகாம் ஆரம்பத்தில் கண்டான். அவன் ஆரம்பத்தில் கண்டதைவிட, அந்த நாளின் அதிகமான பகுதியை அதற்குப் பின்பு கண்டான். இயேசுகிறிஸ்துவைப்பற்றிய அறிவில் வளரவேண்டும் என்று வாஞ்சையோடு ஜெபிக்கிறவர்களின் விண்ணப்பத்தை தேவன் அங்கீகரிப்பார். அவர்களுக்கு கிறிஸ்துவைப்பற்றிய வெளிப்பாடு அதிகமாக கிடைக்கும்.

ஆபிரகாம் மேசியாவின் நாளை எவ்வாறு கண்டான் என்பதைப்பற்றி வேதபண்டிதர்கள் பலவிதமாக வியாக்கியானம் கூறுகிறார்கள். ஒருவேளை அவன் மறுஉலகத்தைப்பற்றி தன்னுடைய தரிசனத்தில் கண்டிருக்கலாம் என்று ஒரு சிலர் கூறுகிறார்கள். ஏராளமான ஆத்துமாக்கள் இயேசுகிறிஸ்துவைக் காண வேண்டுமென்று தாகத்தோடிருக்கிறார்கள். அவர்கள் பரலோகத்திற்கு வரும்போது தான், இயேசுகிறிஸ்துவைக் காணவேண்டும் என்னும் அவர்களுடைய ஆவல் பூர்த்தியாகும். அப்போதுதான் இயேசுவைக் கண்டு அவர்கள் திருப்தியடைவார்கள். அதுவரையிலும் அவர்களுக்கு ஆத்தும திருப்தி உண்டாகாது.

இந்த உலகத்தில் கிறிஸ்துவின் நாளின் ஒரு பகுதியை ஆபிரகாம் கண்டதாக வேதபண்டிதர்கள் பொதுவான கருத்தைக் கூறுகிறார்கள். வாக்குத்தத்தைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் அவற்றைத் தூரத்திலிருந்து தரிசித்தார்கள். ஆபிரகாம் கிறிஸ்துவையும் அவருடைய நாளையும் தரிசித்திருக்க வேண்டும் என்று ஒரு கருத்து பொதுவாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஆபிரகாமின் வரலாற்றில் இந்த சம்பவம் எழுதப்படவில்லை.

கிறிஸ்துவின் நாளைக்கண்டு ஆபிரகாம் களிகூர்ந்தான். தன்னிடத்தில் தேவனுடைய கிருபையும் சிலாக்கியமும் வெளிப்பட்டதைக்கண்டு ஆபிரகாம் களிகூர்ந்தான். இந்த உலத்திற்கு தேவனுடைய இரக்கம் இன்னும் அதிகமாக வெளிப்படப்போவதை ஆபிரகாம் கண்டு களிகூர்ந்தான். கிறிஸ்துவையும் அவருடைய நாளையும் நாம் விசுவாசத்தோடு காணவேண்டும். அப்போது அந்த தரிசனம் நம்முடைய இருதயத்திற்கு சந்தோஷத்தைக் கொடுக்கும். விசுவாசத்தின் சந்தோஷத்தைப்போல விசுவாசிகளுக்கு வேறு எந்த சந்தோஷமுமில்லை. நாம் இயேசுகிறிஸ்துவின் பிரசன்னத்தில் அவரோடுகூட இருக்கும்வரையிலும் நம்முடைய சந்தோஷம் ஒருபோதும் பரிபூரணமடையாது. இயேசுவோடு நித்திய காலமாக நாம் ஜீவிக்கும்போதுதான் நமக்கு பரிபூரண சந்தோஷம் உண்டாகும்.

## அதிகாரம் - 8

**இன்னும் ஐம்பது வயதாகவில்லையே**

**அப்பொழுது யூதர்கள் அவரை நோக்கி: உனக்கு இன்னும் ஐம்பது வயதாகவில்லையே, நீ ஆபிரகாமைக் கண்டாயோ என்றார்கள் (யோவா 8:57).**

இயேசுகிறிஸ்து ஆபிரகாமைப்பற்றி பேசியதைக்கேட்டு யூதர்கள் குழப்பமடைகிறார்கள். கோபமடைகிறார்கள். அவர்கள் இயேசுகிறிஸ்துவிடம் "உனக்கு இன்னும் ஐம்பது வயதாகவில்லையே. நீ ஆபிரகாமைக் கண்டாயோ" என்று கேட்கிறார்கள். இயேசுகிறிஸ்து பிறப்பதற்கு முன்பாக, பல வருஷங்களுக்கு முன்பாகவே ஆபிரகாம் மரித்துப்போனார். ஆகையினால் ஆபிரகாமை இயேசுகிறிஸ்து பார்த்திருப்பதற்கு வாய்ப்பேயில்லை என்று யூதர்கள் நினைக்கிறார்கள். இயேசுகிறிஸ்து தற்பொழுது வாலிப வயதில் இருப்பதினால் யூதர்கள் அவரை ஏளனம்பண்ணுகிறார்கள். அவருடைய வயதிற்கு, அவருக்கு ஒன்றும் தெரியாது என்று ஏளனமாகப் பேசுகிறார்கள். அவருக்கு இன்னும் ஐம்பது வயதுகூட ஆகவில்லையென்றும், பல நூறு வருஷங்களுக்கு முன்பாக இந்த பூமியில் வாழ்ந்த ஆபிரகாமை இயேசுகிறிஸ்து கண்டிருப்பதற்கு வாய்ப்பில்லை என்றும் ஏளனம் பண்ணுகிறார்கள்.

**ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே**

**அதற்கு இயேசு: ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் (யோவா 8:58).**

தாம் ஆபிரகாமுக்கும் முந்தியவர் என்பதை இயேசுகிறிஸ்து இங்கு தெளிவுபடுத்துகிறார். ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் இருக்கிறார். இந்த சத்தியத்தை வலியுறுத்துவதற்காக, தமது வழக்கத்தின் பிரகாரம், இயேசுகிறிஸ்து "மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்னும் வாக்கியத்தையும் பயன்படுத்துகிறார். ஆபிரகாம் இருப்பதற்கு முன்பாகவே இயேசுகிறிஸ்து இருக்கிறார். ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே அல்லது ஆபிரகாம் பிறக்கிறதற்கு முன்னமே இயேசுகிறிஸ்து இருக்கிறார்.

ஆபிரகாமைப்பற்றிக் குறிப்பிடும்போது, இயேசுகிறிஸ்து அவரை உண்டானவர் என்று குறிப்பிடுகிறார். அவர் ஒரு சிருஷ்டி. சிருஷ்டிக்கப்பட்டவர். ஆனால் இயேசுகிறிஸ்துவோ சிருஷ்டிக்கிறவர். இயேசுவே சிருஷ்டி கர்த்தா. ஆபிரகாம் உண்டாவதற்கு முன்பாகவே இயேசுகிறிஸ்து தேவனாகயிருக்கிறார். "இருக்கிறவராகவே இருக்கிறேன்" என்பது இயேசுகிறிஸ்துவின் நாமம். "நான் இருந்தேன்" என்று இயேசுகிறிஸ்து தம்மைக் குறிப்பிடாமல், "நான் இருக்கிறேன்" என்று குறிப்பிடுகிறார். இயேசுகிறிஸ்து ஆதியும் அந்தமுமாக இருக்கிறார். ஆபிரகாமின் காலத்திற்கு முன்பாகவே இயேசுகிறிஸ்து வாக்குப்பண்ணப்பட்ட மேசியாவாக இருக்கிறார்.

**இயேசுவின்மேல் கல்லெறியும்படி**

**அப்பொழுது அவர்மேல் எறியும்படி கல்லுகளை எடுத்துக்கொண்டார்கள். இயேசு மறைந்து, அவர்கள் நடுவிலே கடந்து, தேவாலயத்தை விட்டுப்போனார் (யோவா 8:59).**

இயேசுகிறிஸ்துவின் உபதேசம் அப்படியே பாதியில் நின்றுபோயிற்று. அவருடைய உபதேசத்தைக் கேட்பதற்கு யூதர்கள் இதற்கு மேலும் ஆயத்தமாகயில்லை. அவருடைய வார்த்தைகளை யூதர்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. தங்களிடத்தில் அவர் இதற்குமேல் ஒரு வார்த்தையும் பேசக்கூடாது என்று தீர்மானமாக இருக்கிறார்கள். பரிசுத்தமான ஆவிக்குரிய உபதேசத்திற்கும், இயேசுகிறிஸ்துவின் பிரமாணத்திற்கும் இவர்கள் பிரத்தியட்சமாக எதிர்த்து நிற்கிறார்கள். இயேசுகிறிஸ்து இவர்களுக்கு கிருபையும் இரக்கமும் நிறைந்தவராக, நீடிய பொறுமையோடு உபதேசம் பண்ணுகிறார். ஆனால் இவர்களோ இயேசுகிறிஸ்துவின் வசனங்களைத் தங்கள் இருதயத்தில் ஏற்றுக்கொள்ளாமல் அவருக்கு விரோதமாகச் சிந்தித்துச் செயல்படுகிறார்கள். இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள் யூதர்களுக்கு கோபத்தை உண்டாக்கிற்று. அப்பொழுது இயேசுகிறிஸ்துவின்மேல் எறியும்படி கல்லுகளை எடுத்துக் கொள்கிறார்கள்.

## அதிகாரம் - 8

தேவதூஷணம் சொல்லுகிறர்கள்மீது கல்லுகளை எறிவது யூதருடைய வழக்கம். ஒருவேளை இயேசுகிறிஸ்துவின் உபதேசம் இவர்களுக்குத் தேவதூஷணமாகத் தெரிந்திருக்கலாம். ஆனால் கல்லெறிவதற்கு முன்பாக, யூதருடைய மார்க்க வழக்கத்தின் பிரகாரம், அவரை முறைப்படி விசாரிக்க வேண்டும். இரண்டு சாட்சிகள் மூலமாக குற்றம் நிரூபிக்கப்பட வேண்டும். அதற்குப் பின்புதான் அவர்மீது கல்லெறிய முடியும். ஆனால் நீதியில்லாத இடத்தில் எதுவும் நீதியாக நடக்காது. ஒவ்வொருவரும் தங்களுக்கு இஷ்டமான பிரகாரம் நியாயந்தீர்க்க ஆரம்பித்துவிடுவார்கள். நியாயத்தை நிலைநிறுத்துகிறோம் என்னும் பெயரில், தங்களுக்குப் பிடித்த மானதையெல்லாம் நிறைவேற்றிவிடுவார்கள்.

எந்த மனுஷனுடைய உள்ளத்தில், எப்படிப்பட்ட துன்மார்க்கமான சிந்தனையுள்ளது என்று நமக்குத் தெரியாது. ஆனால் இயேசுகிறிஸ்துவோ மனுஷருடைய இருதயங்களை அறிந்து வைத்திருக்கிறார். ஆகையினால் தம்மேல் எறியும்படி அவர்கள் கல்லுகளை எடுத்துக்கொண்டவுடன், இயேசு மறைந்து, அவர்கள் நடுவே கடந்து, தேவாலயத்தை விட்டுப் போய்விடுகிறார். இயேசுகிறிஸ்து மனுஷரைப்பார்த்து பயப்படுகிற கோழையல்ல. தாம் சொன்ன உபதேசத்தைக் குறித்து இயேசுகிறிஸ்து ஒருபோதும் வெட்கமடையமாட்டார். வருத்தமடையமாட்டார். அவருடைய வேளை இன்னும் வரவில்லை. ஆகையினால் அவர்களைவிட்டு மறைந்து, அவர்கள் நடுவே கடந்துபோய்விடுகிறார்.

இயேசுகிறிஸ்துவின் இந்தச் செய்கை அவருடைய ஊழியக்காரர்களாகிய நமக்கு ஒரு முன்மாதிரியாக இருக்கவேண்டும். தேவையில்லாமல் பிரச்சனைகளில் சிக்கி, உபத்திரவங்களை வரவழைத்துக்கொள்ளக் கூடாது. எதிர்ப்புகள் அதிகமாக இருக்கும்போது, தேவனுடைய சமுகத்தில் ஜெபம்பண்ணி, அவருடைய ஆலோசனையின் பிரகாரம் செயல்படுவதற்கு ஆயத்தமாக இருக்கவேண்டும். சுயபெருமையை நிலைநாட்டுவதற்காக உபத்திரவங்களுக்கு எதிர்த்து நின்று அதில் அழிந்து போய்விடக்கூடாது. இயேசுகிறிஸ்துவின் உயிருக்கு ஆபத்து வந்தபோது, அவர் மறைந்து, அவர்கள் நடுவே கடந்து, தேவாலயத்தைவிட்டு போய்விடுகிறார். இயேசுகிறிஸ்துவை அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. அவர் அவர்களை விட்டு மறைந்து கடந்துபோய்விடுவது கோழைத்தனமான செயல் அல்ல. இயேசுகிறிஸ்து தோற்றுப்போய் புறமுதுகிட்டு ஓடிப்போய்விடவில்லை. இயேசுகிறிஸ்துவிடம் பயமோ, நடுக்கமோ இல்லை.

பிதாவின் சித்தமில்லாமல் இயேசுகிறிஸ்துவின்மீது ஒருவரும் கைபோட முடியாது. யூதர்கள் அவர்மேல் எறியும்படி கல்லுகளை எடுத்துக்கொண்டாலும், இயேசுகிறிஸ்துவின் சித்தமில்லாமல் அவர்மீது அவர்களால் ஒரு கல்லைக்கூட எறியமுடியாது. அவர்கள் கைகளில் கல்லுகள் இருந்தாலும், இயேசுகிறிஸ்துவின் வல்லமை அவர்களுடைய கைகளைக் கட்டி வைத்திருக்கிறது. இயேசுகிறிஸ்து எந்த அளவுக்கு அனுமதிக்கிறாரோ அந்த அளவுக்கு மாத்திரமே அவர்களால் அவரை உபத்திரவப்படுத்த முடியும். இயேசுகிறிஸ்து மறைந்து அவர்கள் நடுவே கடந்து, தேவாலயத்தைவிட்டு போகும்போது, யூதர்கள் ஒருவராலும் அவரைப் பின்தொடர்ந்து வரமுடியவில்லை. தாங்கள் இயேசுகிறிஸ்துவைப் பிடித்துவிட்டோம் என்றும், அவரை கல்லெறிந்து நிச்சயமாகவே கொன்றுபோடலாம் என்றும் யூதர்கள் நினைக்கிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ மறைந்து அவர்கள் நடுவே கடந்துபோகிறார்.

இயேசு தங்கள் மத்தியில் இருப்பதாக யூதர்கள் நினைக்கிறார்கள். ஆனால் இயேசுவோ அவர்களைவிட்டு கடந்து போய்விடுகிறார். அவர் கடந்துபோவதை அவர்கள் அறியாதிருக்கிறார்கள். தம்முடைய பாதுகாப்புக்கும் இயேசுகிறிஸ்து தமது தெய்வீகப் பராமரிப்பையும் பாதுகாப்பையும் கொடுக்கிறார். இது இயேசுகிறிஸ்து தமக்குத்தாமே வழுத்துக் கொண்ட பிரமாணம். ஒருவர் நம்மை ஒரு பட்டணத்தில் துன்புறுத்தும்போது மறுபட்டணத்திற்கு ஓடிப்போகவேண்டும் என்பது இயேசுகிறிஸ்துவின் ஆலோசனை.

தம்மீது கல்லெறிய வேண்டும் என்று கூடியிருக்கும் ஜனங்கள் மத்தியில், இயேசுகிறிஸ்து மறைந்து அவர்கள் நடுவே கடந்துபோவது தேவனுடைய நீதியாகும். தங்களைவிட்டுப் போய்விடுமாறு வற்புறுத்துகிற கூட்டத்தார் மத்தியில் இயேசுகிறிஸ்து நீண்டகாலம் தங்கியிருக்கமாட்டார். அவர் அவர்கள் நடுவே கடந்துபோகும்போது, அவர்களில் ஒருவர்கூட தங்களிடத்தில் தங்குமாறு அவரை வேண்டிக்கொள்ளவில்லை. அதேவேளையில் அவரைப் பிடிக்கவும் அவர்களால் முடியவில்லை. அவர் தங்கள் நடுவே கடந்துபோவதை அவர்களால் தடுக்கவும் முடியவில்லை.

## அதிகாரம் - 8

தம்மிடத்தில் வருகிற யாரையும் இயேசுகிறிஸ்து ஒருபோதும் புறம்பே தள்ளிவிடுவதில்லை. யாரையும் புறக்கணிப்பதில்லை. ஆனால் தங்களோடு தங்கக்கூடாது என்றும், தங்களைவிட்டுப் போய்விடவேண்டுமென்றும் தொடர்ந்து வற்புறுத்திக்கொண்டிருந்தால் இயேசுகிறிஸ்து நிச்சயமாகவே அவர்களோடுகூட இருக்கமாட்டார். இயேசுகிறிஸ்து தம்மீது கல்லெறிவதற்காக கூடியிருக்கும் ஜனங்கள் நடுவே அமைதியாகக் கடந்துபோய்விடுகிறார். அவர் போவதை யாராலும் காணமுடியவில்லை. அவர் தங்கள் மத்தியில் இருக்கிறாரா அல்லது தங்களைவிட்டு கடந்துபோய்விட்டாரா என்பதும் அவர்களுக்குத் தெரியவில்லை.

ஒரு ஸ்தலத்தைவிட்டு, அல்லது ஒரு நபரைவிட்டு அல்லது ஒரு சபையைவிட்டு இயேசுகிறிஸ்து கடந்துபோவது இதுபோலவே அமைதியாகத்தான் நடைபெறும். இயேசு கிறிஸ்து தங்களோடு இருக்கிறாரென்று ஜனங்களும், சபையும் நினைத்துக் கொண்டிருப்பார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ மறைந்து அவர்கள் நடுவே அமைதியாகக் கடந்துபோய்விடுவார்.

தேவனுடைய ராஜ்யம் வரும்போதும் போகும்போதும் அமைதியாகத்தான் வரும், அமைதியாகத்தான் போகும். ஆரவாரமாக எதுவும் நடைபெறாது. இயேசுகிறிஸ்து யூதஜனங்களுக்காகவே அவர்கள் மத்தியில் வந்தார். ஆனால் அவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணித்து விடுகிறார்கள். இயேசுகிறிஸ்து அவர்களைவிட்டுக் கடந்துபோய்விடுகிறார். ஆனால் அவர்களோ அதற்காக வருத்தப்படவில்லை. அவரைத் தேடிக் கண்டுபிடிக்கவில்லை. ருதவ பயமற்றவர்களாகவும், தெய்வ நம்பிக்கையற்றவர்களாகவும், தங்களுடைய ஆத்துமாவைக் குறித்து கவலையற்றவர்களாகவும், தங்களுடைய சுயவிருப்பத்தின் பிரகாரம் இவர்கள் ஜீவிக்கிறார்கள். ஆகையினால்தான் தங்களைவிட்டு மறைந்து தங்கள் நடுவே கடந்துபோன இயேசுகிறிஸ்துவை இவர்கள் தேடிப்பார்க்கவில்லை. அவர் தங்களை விட்டுப்போனதற்காக கவலைப்படவுமில்லை.

## அதிகாரம் - 9

பிறவிக்குருடனாகிய ஒரு மனுஷனை இயேசுகிறிஸ்து அற்புதமாக சொஸ்தமாக்குகிறார் (யோவா 9:1-7). இந்த சம்பவம் தொடர்பான உரையாடல்கள். குருடனுடைய அயலகத்தார் தங்களுக்குள்ளும், மற்றவர்களோடும் பேசிக்கொண்ட சம்பவம் (யோவா 9:8-12). பரிசேயரும் சொஸ்தமாக்கப்பட்ட குருடனும் பேசிக்கொண்ட சம்பவம் (யோவா 9:13-34). கிறிஸ்துவும் குணமாக்கப்பட்ட குருடனும் பேசிக்கொண்ட சம்பவம் (யோவா 9:35-38). கிறிஸ்துவும் பரிசேயரும் பேசிக்கொண்ட சம்பவம் (யோவா 9:39-41).

### பிறவிக்குருடன் பார்வையடைகிறான் யோவா 9 : 1-7

**யோவா 9:1. அவர் அப்புறம் போகையில் பிறவிக்குருடனாகிய ஒரு மனுஷனைக் கண்டார்.**

**யோவா 9:2. அப்பொழுது அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: ரபீ, இவன் குருடனாய்ப் பிறந்தது யார் செய்த பாவம், இவன் செய்த பாவமோ, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமோ என்று கேட்டார்கள்.**

**யோவா 9:3. இயேசு பிரதியுத்தரமாக: அது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல, தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான்.**

**யோவா 9:4. பகற்காலமிருக்குமட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்யவேண்டும்; ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது.**

**யோவா 9:5. நான் உலகத்திலிருக்கையில் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் என்றார்.**

**யோவா 9:6. இவைகளைச் சொல்லி, அவர் தரையிலே துப்பி, உமிழ்நீரினால் சேறுண்டாக்கி, அந்தச் சேற்றைக் குருடனுடைய கண்களின்மேல் பூசி:**

**யோவா 9:7. நீ போய், சீலோவாம் குளத்திலே கழுவு என்றார். சீலோவாம் என்பதற்கு அனுப்பப்பட்டவன் என்று அர்த்தமாம். அப்படியே அவன் போய்க் கழுவி, பார்வையடைந்தவனாய்த் திரும்பிவந்தான்.**

### பிறவிக்குருடனாகிய ஒரு மனுஷன்

**அவர் அப்புறம் போகையில் பிறவிக்குருடனாகிய ஒரு மனுஷனைக் கண்டார் (யோவா 9:1).**

இயேசுகிறிஸ்து எருசலேமிலே யூதர்களுக்கு உபதேசம் பண்ணும்போது, அவர்கள் அவருடைய உபதேசத்தை ஏற்றுக்கொள்ளாமல், அவர்மேல் எறியும்படி கல்லுகளை எடுத்துக்கொள்கிறார்கள். இயேசுகிறிஸ்து மறைந்து, அவர்கள் நடுவே கடந்து, தேவாலயத்தைவிட்டுப் போகிறார். போகிற வழியில் பிறவிக்குருடனாகிய ஒரு மனுஷனைக் காண்கிறார். யூதர்கள் எந்தவித அடிப்படைக் காரணமுமில்லாமல் இயேசுகிறிஸ்துவைப் பகைக்கிறார்கள். அவர்மீது தூஷண வார்த்தைகளைப் பேசுகிறார்கள். ஆயினும் யூதர்கள் மத்தியிலே யாராவது ஒருவருக்கு நல்லது செய்ய வாய்ப்புக் கிடைக்கும்போது, இயேசுகிறிஸ்து அந்த வாய்ப்பைத் தவறவிட்டுவிடாமல் பயன்படுத்தி அந்த நபருக்கு நன்மை செய்கிறார்.

இயேசுகிறிஸ்து பிறவிக்குருடனைச் சொஸ்தமாக்குவது அவனுக்கும், அவனுடைய குடும்பத்தாருக்கும், அவனுடைய உற்றார் உறவினருக்கும் செய்கிற நன்மையாகும். இதுவரையிலும் இந்தக் குருடன் தன்னுடைய வேலைகளைத் தானே செய்ய முடியாதவனாக இருந்தவன். தனக்கும் தன் பெற்றோருக்கும், உற்றார் உறவினருக்கும் இவன் இதுவரையிலும் பாரமாக இருந்திருக்கிறான். ஆனால் இயேசுகிறிஸ்து இவனைச் சொஸ்தமாக்கின பின்போ இவன் யாருக்கும் பாரமில்லாமல் தன்னுடைய தேவைகளைத் தானே சந்தித்துக்கொள்வான்.

இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுகிற நாம் அவருடைய சுபாவங்களையும் பெற்றுக்கொள்ள வேண்டும். அவர் ஜனங்களுக்கு நன்மை செய்ய ஆயத்தமாயிருக்கிறார். அதுபோலவே நாமும் சமயம் வாய்க்கும்போதெல்லாம் ஜனங்களுக்கு நன்மை செய்ய ஆயத்தமாகயிருக்க வேண்டும். இயேசுகிறிஸ்து இப்போது தம்மீது கல்லெறியும்படி கோபத்தோடு கூடியிருக்கும் ஜனங்கள் மத்தியிலிருந்து மறைந்து, தம்முடைய ஜீவனைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அவர்கள் நடுவே கடந்து போய்க்கொண்டிருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் ஜீவனுக்கு ஆபத்து உண்டாயிருக்கிறது. இப்படிப்பட்ட ஆபத்தான வேளையில்கூட, அவர் தம்முடைய ஜீவனைக்கூடப் பார்க்காமல், பிறவிக்குருடனைக்கண்டு, நின்று அவனுக்கு உதவிபுரிய முன்வருகிறார்.

## அதிகாரம் - 9

தம்முடைய கிருபையை அவனுக்கு காண்பிக்கிறார். பிறருக்கு நன்மை செய்ய நமக்கு வாய்ப்பு கிடைக்கும்போது, அந்த நன்மையை செய்ய முன்வராமல், அந்த இடத்தை விட்டு வேகமாக ஓடிவிடக்கூடாது.

இயேசுகிறிஸ்து இந்த வழியாக அப்புறம் போகையில், பிறவிக்குருடனைக்கண்டு, அவனை சொஸ்தப்படுத்துகிறார். இயேசுகிறிஸ்துவைப்போலவே நாமும் எந்த வேலையைச் செய்துகொண்டிருந்தாலும், எந்த இடத்தில் இருந்தாலும், எப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்தாலும், பிறருக்கு உதவிபுரிய வேண்டிய ஒரு சூழ்நிலையை நாம் காணும்போது, நம்முடைய இருதயம் இரக்கத்தினால் நிரம்பியிருக்க வேண்டும். நாம் உதவிபுரிய முன்வரவேண்டும்.

பிறவிக்குருடனுடைய நிலமை மிகவும் பரிதாபமானது. தன் தாயின் கர்ப்பத்திலிருந்து பிறந்தது முதலாகவே இவன் குருடனாகயிருக்கிறான். பாதியில் குருடானவர்களினால் வெளிச்சத்தைக்கண்டு அனுபவிக்க முடியாது. ஆனால் இவனோ பிறவிக்குருடன். இவனுக்கு வெளிச்சம் என்றால் என்ன என்றே தெரியாது. பல்வேறு நிறங்களைப்பற்றி இவனுக்கு ஒன்றும் புரியாது. இதுவரையிலும் இவன் உலகத்திலுள்ள எந்தப் பொருளையும் தன் கண்களால் பார்த்ததில்லை. நாம் கர்த்தரைத் துதிக்கும்போது, அவர் நமக்கு பார்வை கொடுத்திருப்பதற்காக அவரை நன்றியோடு துதிக்கவேண்டும். நம்முடைய சரீரத்தின் அவயவங்களில் கண்ணானது மிகவும் முக்கியமான அவயவம். கர்த்தர் நமக்கு நல்ல கண்களைக் கொடுத்திருப்பதற்காக அவரைத் துதிக்கவேண்டும். கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாகவும், திட்டத்தின் பிரகாரமாகவும் நம்முடைய கண்களைப் பயன்படுத்தப் பழகிக்கொள்ள வேண்டும்.

ஒரு சிலர் வியாதியினாலோ அல்லது விபத்துக்களினாலோ கண் பார்வை இழந்துவிடுகிறார்கள். அப்படிப்பட்டவர்களையெல்லாம் இயேசுகிறிஸ்து குணப்படுத்தியிருக்கிறார். ஆனால் இந்தக் குருடனோ பிறவிக்குருடனாக இருக்கிறான்.

இவனுடைய நிலமை மிகவும் பரிதாபமாக இருக்கிறது. இவனுடைய நிலமையை மாற்றி இவனுக்கு உதவிபுரிவதற்காக இயேசுகிறிஸ்து தம்முடைய தெய்வீக வல்லமையைப் பயன்படுத்தி இவனுக்கு கண்பார்வையைக் கொடுக்கிறார்.

இயேசுகிறிஸ்து பிறவிக்குருடனைக் குணப்படுத்துவதன் மூலமாக அவருடைய கிருபை வெளிப்படுகிறது. பாவிகளுடைய ஆத்துமாக்கள்மீதும் இயேசுகிறிஸ்து கிருபையுள்ளவராக இருக்கிறார். இவர்களுக்கு உலகப்பிரகாரமாக பார்வையிருக்கிறது. ஆனால் இவர்கள் ஆவிக்குரிய குருடர்களாகயிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கும் இயேசுகிறிஸ்து ஆவிக்குரிய பார்வை கொடுத்து இவர்களைக் குணப்படுத்துகிறார். இவர்களுக்கு பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்கிறார்.

மனக்கண்கள் திறக்கப்பட்டபின்பு, தங்கள் இருதயத்தில் நிரம்பியிருக்கும் பாவங்களையும் அசுத்தங்களையும் காண்கிறார்கள். தங்களுடைய ஆத்துமாவைச் சுத்திகரிக்குமாறு இயேசுகிறிஸ்துவிடம் விண்ணப்பம்பண்ணுகிறார்கள். கர்த்தரும் இவர்களைச் சுத்திகரிக்கிறார்.

இயேசுகிறிஸ்து பிறவிக்குருடனைக் குணப்படுத்துகிறபோது அவர் மனதுருக்கமுள்ளவராக இருக்கிறார். அவனைக் காண்கிறார். மிகுந்த கரிசனையோடு அவனுக்கு உதவிபுரிகிறார். மற்றவர்களும் இந்தப் பிறவிக்குருடனைக் காண்கிறார்கள். ஆனால் இவர்கள் யாரும் இயேசுகிறிஸ்துவைப்போல அந்தக் குருடனுக்கு உதவிபுரிய முன்வரவில்லை. தம்மைத் தேடுகிறவர்களுக்கு இயேசுகிறிஸ்து தம்மை வெளிப்படுத்திக் காண்பிக்கிறார். தம்மைக் காணமுடியாதபடி குருடராக இருக்கிறவர்களுக்கு பார்வையைக் கொடுத்து அவர்களும் தம்மைக் காண்பதற்கு உதவிபுரிகிறார்.

### யார் செய்த பாவம்

**அப்பொழுது அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: ரபீ, இவன் குருடனாய்ப் பிறந்தது யார் செய்த பாவம், இவன் செய்த பாவமோ, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமோ என்று கேட்டார்கள் (யோவா 9:2).**

## அதிகாரம் - 9

இயேசுகிறிஸ்துவின் சீஷர்களும் பிறவிக்குருடனைக் காண்கிறார்கள். இவன் ஏன் குருடனாய்ப் பிறந்தான் என்னும் சந்தேகம் சீஷர்களுக்கு உண்டாயிற்று. தங்களுடைய சந்தேகத்தைச் சீஷர்கள் இயேசுகிறிஸ்துவிடம் கேட்கிறார்கள். இயேசுகிறிஸ்து பிறவிக்குருடனைப் பார்க்கிறபோது, அந்தக் குருடன்மீது அவருக்கு மனதுருக்கம் உண்டாயிற்று. சீஷர்கள் அந்தக் குருடனைப் பார்க்கிறபோது அவர்களுடைய மனதிற்குள் சந்தேகங்களும் கேள்விகளும் உண்டாயிற்று. தேவையுள்ளவர்களைப் பார்க்கும்போது நம்முடைய பார்வை இயேசுகிறிஸ்துவின் பார்வையைப்போல மனதுருக்கமுள்ளதாக இருக்கவேண்டும். கிருபை நிறைந்ததாக இருக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவின் கிருபையும் மனதுருக்கமும் நம்முடைய இருதயத்தையும் நிரப்பவேண்டும்.

சீஷர்கள் அந்தக் குருடனைக்கண்டு அவனுக்காக இயேசுகிறிஸ்துவிடம் பரிந்து பேசவில்லை. அதற்கு மாறாக அவன் ஏன் குருடனாகப் பிறந்தான் என்று இயேசுகிறிஸ்துவிடம் கேள்வி கேட்கிறார்கள். "ரபீ, இவன் குருடனாய்ப் பிறந்தது யார் செய்த பாவம். இவன் செய்த பாவமோ, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமோ" என்று கேட்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவிடம் சீஷர்கள் இந்தக் கேள்வியைக் கேட்கும்போது இவர்களுடைய உள்ளத்தில் குருடனைப்பற்றி ஒரு கற்பனை உண்டாயிருக்கிறது. ஒரு பாவத்திற்குக் கிடைத்த தண்டனையாகவே இவன் குருடனாக கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறான் என்று இவர்கள் நினைக்கிறார்கள். மனுஷனுக்கு வரும் எல்லாத் தீங்குகளும், துன்பங்களும் துயரங்களும், அவர்களுடைய துன்மார்க்கமான கிரியைகளுக்குக் கிடைக்கும் தண்டனை என்பது இவர்களுடைய கற்பனை. ஆனால் இந்தக் கற்பனை தவறானது. இந்த உலகத்தில் அதிகமாகப் பாடு அனுபவிக்கிறவர்கள் அதிகமாக பாவம் செய்திருக்கிறார்கள் என்று நாம் தீர்மானித்துவிடக்கூடாது.

நம்முடைய பாவங்களுக்கெல்லாம் தேவன் தண்டனை கொடுத்தால் நாம் அதிக பாடுகளை அனுபவிக்க வேண்டியது இருக்கும். ஆனால் நம்முடைய தேவனோ நம்மீது கிருபையும் இரக்கமுமுள்ளவராக, நம்முடைய பாவங்களை மன்னித்து, நமக்குக் கிடைக்கவேண்டிய தண்டனைகளிலிருந்து நம்மை மீட்டுக்கொள்கிறார். கர்த்தர் நமக்கு உதவிசெய்வது போலவே, மற்றவர்களுக்கும் உதவிபுரிகிறார். ஆகையினால் மற்றவர்கள் வேதனைப்படும்போது, அந்த வேதனை பாவத்தினால் உண்டாயிருக்கிற தண்டனை என்று தீர்மானம்பண்ணாமல், இயேசுகிறிஸ்துவைப்போல அவர்களுக்கு உதவிபுரிய வரவேண்டும். நம்முடைய சுயசித்தத்தின் பிரகாரமாகவும், சுயவிருப்பத்தின் பிரகாரமாகவும் மற்றவர்களை நியாயந்தீர்க்கக்கூடாது.

சீஷர்கள் இயேசுகிறிஸ்துவிடம் "இவன் செய்த பாவமோ, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமோ" என்று கேட்கிறார்கள். இதைத் தெரிந்துகொள்வதில் அதிக ஆர்வத்தோடிருக்கிறார்கள். இதைத் தெரிந்துகொள்வதினால் இவர்களுக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகப்போவதில்லை. தேவையில்லாத காரியங்களில் நாம் அதிக ஈடுபாடு காண்பிக்கக்கூடாது. தேவையில்லாத காரியங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று அதிக ஆர்வத்தோடு இருக்கக்கூடாது. மற்றவர்களுடைய பாவங்களைப்பற்றி தெரிந்து கொள்வதில் ஆர்வத்தோடு இருப்பதற்குப் பதிலாக, நம்முடைய பாவங்களைப்பற்றித் தெரிந்துகொள்வதில் அதிக ஆர்வம் காண்பிக்கவேண்டும். நம்மை நாமே நியாயந்தீர்ப்பது நம்முடைய கடமை. அதேவேளையில் மற்றவர்களை நியாயந்தீர்ப்பது நாம் செய்கிற பாவம்.

பிறவிக்குருடன் பாவம் செய்ததினால், அதற்கு தண்டனையாகக் குருடனாக இருக்கிறானா அல்லது இவன் பிறப்பதற்கு முன்பாகவே, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவத்திற்குத் தண்டனையாக இவன் குருடனாகப் பிறந்திருக்கிறானா என்பதை அறிந்துகொள்ள சீஷர்கள் ஆர்வத்தோடிருக்கிறார்கள். பரிசேயர்களிடம் இப்படிப்பட்ட உபதேசம் அதிகமாக காணப்படுகிறது. இந்தக் குருடன் குணமாக்கப்பட்ட பின்பு, பரிசேயர் இவனைப்பார்த்து "முழுவதும் பாவத்தில் பிறந்தவன்" (யோவா 9:34) என்று கூறுகிறார்கள்.

## அதிகாரம் - 9

பெற்றோர்கள் செய்த பாவத்திற்கான தண்டனை அவர்களுடைய பிள்ளைகளுக்கும் வருவதற்கு வாய்ப்புள்ளது. தேவன் பல சமயங்களில் பெற்றோர்களின் பாவங்களை அவர்களுடைய பிள்ளைகளிடத்தில் விசாரிக்கிறார். ஆகையினால் பெற்றோர் பாவத்தை வெறுத்து பரிசுத்தமாக ஜீவிப்பதில் மிகுந்த எச்சரிக்கையோடிருக்கவேண்டும். தங்களைப்பற்றியோ, தங்களுடைய பிள்ளைகளைப்பற்றியோ பெற்றோர் எந்தவிதமான அக்கரையுமில்லாமல், தொடர்ந்து பாவத்தில் ஜீவிப்பார்களென்றால், பாவத்தினால் வரும் சாபம் அவர்களுடைய பிள்ளைகளிடத்தில் வெளிப்படுவதற்கு வாய்ப்புள்ளது.

பிறவிக்குருடன் யார் செய்த பாவத்தினால் பிறவியிலேயே குருடனாகப் பிறந்திருக்கிறான் என்பதைத் தெரிந்துகொள்வதில் இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் மிகுந்த ஆர்வத்தோடிருக்கிறார்கள். தேவன் தம்முடைய நீதியினால் பாவிகளைத் தண்டிக்கிறார். அதேவேளையில் அவர் தம்முடைய கிருபையினால் பாவிகளை மன்னிக்கிறார். தேவனை நாம் நியாயந்தீர்க்க முடியாது. தேவனுடைய கிருபை நமக்கு வேண்டுமானால் நாம் அவருடைய சமுகத்திற்கு வந்து அவருடைய கிருபைக்காக பயபக்தியோடும் பணிவோடும் விண்ணப்பம் பண்ணவேண்டும். மற்றவர்களைக் குறித்து நியாயந்தீர்க்கும்போது, அதே நியாயத்தீர்ப்பினால் நாமும் நியாயந்தீர்க்கப்படுவோம்.

**தேவனுடைய கிரியைகள் வெளிப்படும்படி**

**இயேசு பிரதியுத்தரமாக: அது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல, தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான் (யோவா 9:3).**

சீஷர்களின் கேள்விக்கு இயேசுகிறிஸ்து பிரதியுத்தரம் கூறுகிறார். அவர்கள் இயேசுவிடம் "இவன் செய்த பாவமோ, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமோ" என்று கேட்கிறார்கள்.

அதற்கு இயேசுகிறிஸ்து "அது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல" என்று பதில் கூறுகிறார். இத்துடன் "தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான்" என்று அவன் பிறவியிலேயே குருடனாகப் பிறந்ததற்கான காரணத்தையும் இயேசுகிறிஸ்து வெளிப்படுத்துகிறார்.

பிறவிக்குருடன் அதிக பாடுகளை அனுபவித்து வருகிறான். மனுஷருக்கு ஏற்படும் எல்லாப் பாடுகளையும், அவர்கள் செய்த பாவத்திற்கான தண்டனை என்று தீர்மானம் பண்ணிவிடக்கூடாது. ஒரு சிலர் ஏராளமான பாடுகளைத் தங்கள் வாழ்க்கையில் அனுபவிப்பார்கள். மற்றவர்களைவிட இவர்களுடைய பாடுகள் மிகவும் அதிகமாகயிருக்கும். ஆனாலும் இவர்களைவிட மற்றவர்கள் அதிகமாகப் பாவம் செய்திருப்பார்கள். ஆகையினால் மனுஷர் அனுபவிக்கும் எல்லாப் பாடுகளையும் அவர்களுடைய பாவங்களுக்கான தண்டனை என்று தீர்மானம்பண்ணுவது சரியாகாது.

பல சமயங்களில் மனுஷர் அனுபவிக்கும் பாடுகள் மூலமாக தேவனுடைய நாமம் மகிமைப்படுவதற்கு வாய்ப்புள்ளது. தேவனுடைய கிரியைகள் வெளிப்படும் பொருட்டாகவும் ஒரு சிலர் பாடுகளை அனுபவிக்கலாம். அப்படிப்பட்ட காரணத்தையே இயேசுகிறிஸ்து இங்கு கூறுகிறார். தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு, இவன் பிறவியிலேயே குருடனாகப் பிறந்திருப்பதாக இயேசுகிறிஸ்து கூறுகிறார்.

தேவனுடைய குணாதிசயம் இந்தப் பிறவிக்குருடன் மூலமாக வெளிப்படவேண்டுமென்று தேவன் சித்தங்கொண்டிருக்கிறார். நம் மூலமாக தேவனுடைய நாமம் மகிமைப்படுமானால், நாம் வீணாக உண்டாகப்படவில்லை. நம்முடைய பாடுகள் மூலமாக தேவனுடைய கிரியைகள் வெளிப்பட்டு, அவருடைய நாமம் மகிமைப்படுமானால், நாம் வீணாகப் பாடுகளை அனுபவிப்பதில்லை. பிறவிக்குருடனிடத்தில் தேவனுடைய கிரியைகள் வெளிப்படும் பொருட்டாக இவன் இப்படிப் பிறந்திருக்கிறான். இவன் செய்த பாவத்தினாலோ அல்லது இவனுடைய பெற்றோர் செய்த பாவத்தினாலோ இவன் குருடனாகப் பிறக்கவில்லை என்பதை இயேசுகிறிஸ்து தெளிவுபடுத்துகிறார்.

## அதிகாரம் - 9

தேவனுடைய வல்லமையும் நன்மையும் இந்தக் குருடனிடத்தில் வெளிப்படுகிறது. இயேசுகிறிஸ்து இவனைச் சொஸ்தமாக்குவதன் மூலமாக இது வெளிப்படுத்தப்படுகிறது. பல சமயங்களில் நாம் ஏன் பாடுகளை அனுபவிக்கிறோம் என்று நமக்கே புரியாமல் இருக்கலாம். காரணமில்லாமல் நமக்கு பல தீங்குகள் உண்டாகலாம். இப்படிப்பட்ட வருத்தமான வேளைகளில், கர்த்தருடைய கிரியைகள் நம் மூலமாக வெளிப்படும் பொருட்டு, நாம் பாடுகளை அனுபவிக்கிறோம் என்று நினைத்து, நம்மை நாமே தேற்றிக்கொள்ளவேண்டும். ஆனால் நம்மில் சிலர் சாதாரண காரியங்களைக்கூட பெரிதுபடுத்திவிடுகிறார்கள். நம்முடைய வாழ்க்கையில் நமக்கு அன்றாடம் ஏற்படும் ஒவ்வொரு காரியத்திற்கும் நாம் செய்த நன்மைகளையோ அல்லது பாவங்களையோ காரணமாக்கிவிடுகிறார்கள். இப்படிப்பட்ட காரியங்களில் நம்முடைய நினைவு ஒன்றாகவும், தேவனுடைய சித்தம் வேறொன்றாகவும் இருப்பதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால் தேவனுடைய சிந்தையைப் புரிந்துகொள்வதற்கு நாம் பிரயாசப்படவேண்டும்.

இந்த மனுஷன் பிறவியிலேயே குருடனாகப் பிறந்திருப்பதினால் தேவனுடைய ஆலோசனைகள் இவனில் வெளிப்படுத்தப்படுகிறது. இயேசுகிறிஸ்து இந்தக் குருடனைச் சொஸ்தமாக்கி, தாம் இந்த உலகத்திற்கு மெய்யான ஒளியாக இருப்பதையும் பிதாவாகிய தேவன் தம்மை இதற்காகவே அனுப்பியிருப்பதையும் நிரூபிக்கிறார். இந்த மனுஷன் பிறந்ததிலிருந்து குருடனாகவே இருக்கிறான். ஆனால் இவன் ஏன் குருடனாகப் பிறந்தான் என்னும் காரணம் இதுவரையிலும் யாருக்கும் தெரியவில்லை. இயேசுகிறிஸ்து இதற்கான காரணத்தை வெளிப்படுத்தும் வரையிலும் ஜனங்கள் தங்கள் இஷ்டம்போல இதற்கு காரணம் கூறினார்கள். இயேசுகிறிஸ்துவோ இவன் குருடனாகப் பிறந்ததற்கு மெய்யான காரணம் என்ன என்பதைத் தெளிவுபடுத்துகிறார்.

தேவனுடைய கிரியைகள் ஏன் இந்தக் குருடனுடைய வாழ்க்கையில் இவ்வளவு தாமதமாக வெளிப்படுத்தப்பட்டது என்பதற்கான காரணம் இங்கு குறிப்பிடப்படவில்லை. இதுவே தேவனுக்கு ஏற்ற வேளை என்று நாம் சிந்திக்கவேண்டும். தேவனுடைய தெய்வீக ஆதீனத்தில் சில காரியங்கள் உடனடியாகவும், வேறு சில காரியங்கள் காலதாமதமாகவும் நடைபெறும். ஆனாலும் நடைபெறும் எல்லாக் காரியங்களும் தேவன் நியமித்திருக்கும் காலத்திலேயே நடைபெறும். இதுவே கர்த்தருக்கு ஏற்ற வேளை. ஆகையினால் நாம் ஒரு காரியத்தை நியாயந்தீர்ப்பதற்கு முன்பாக, தேவனுடைய சித்தத்தையும், தேவனுடைய வேளையையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

**பகற்காலமிருக்கு மட்டும்**

**பகற்காலமிருக்குமட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்யவேண்டும்; ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது (யோவா 9:4).**

இயேசுகிறிஸ்து பிறவிக்குருடனைச் சொஸ்தமாக்குவதற்கு இப்போது ஆயத்தமாகயிருக்கிறார். அவனுக்கு உதவிபுரியவும், அவனைச் சொஸ்தமாக்கவும் இயேசுகிறிஸ்து முன்னேறி வருகிறார். ஏனெனில் பகற்காலமிருக்கு மட்டும், குமாரனாகிய இயேசுகிறிஸ்து, தம்மை அனுப்பின பிதாவாகிய தேவனுடைய கிரியைகளைச் செய்ய வேண்டும் ஒருவரும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது என்று இயேசுகிறிஸ்து எச்சரித்துக் கூறுகிறார். இயேசுகிறிஸ்து பிறவிக்குருடனைக் கண்ட இந்த நாள் யூதருக்கு ஓய்வுநாளாயிருக்கிறது. ஓய்வுநாளில் மிகவும் அத்தியாவசியமாகச் செய்ய வேண்டிய வேலைகளை மாத்திரமே செய்யலாம். இந்தக் குருடனுடைய கண்களைத் திறப்பது ஒரு அத்தியாவசியமான வேலை என்பதை இயேசுகிறிஸ்து இங்கு நிரூபிக்கிறார்.

இந்தக் குருடனுடைய கண்களைத் திறப்பது பிதாவானவருடைய சித்தம். "பகற்காலமிருக்கு மட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளை செய்ய வேண்டும்" என்று இயேசுகிறிஸ்து கூறுகிறார். பிதாவானவர் குமாரனை இந்த பூமியில் சும்மாயிருப்பதற்காக அனுப்பவில்லை. அவர் செய்யவேண்டிய கிரியைகளைப் பிதாவானவர் நியமித்திருக்கிறார். பிதவானவரோடு சேர்ந்து குமாரன் கிரியை நடப்பிக்க வேண்டும். பிதாவின் கிரியைகளைச் செய்வதில் குமாரன் பிரியப்படுகிறார். ஆகையினால்தான் இயேசுகிறிஸ்து "நான் கிரியைகளைச் செய்யவேண்டும்" என்று கூறி ஓய்வில்லாமல் பிதாவானவருடைய கிரியைகளைச் செய்து வருகிறார். தாம் செய்யும் ஒவ்வொரு வேலையிலும் இயேசுகிறிஸ்து வேகமாகவும், விருவிருப்பாகவும், உற்சாகமாகவும், மனப்பூர்வமாகவும் ஈடுபடுகிறார். அவற்றை நேர்த்தியாக செய்து முடிக்கிறார்.

## அதிகாரம் - 9

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும் தேவன் நமக்கு நியமித்து வைத்திருக்கும் வேலைகளைத் தரிசனத்தில் கண்டால் மாத்திரம் போதாது. அவற்றைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தால் மாத்திரம் போதாது. இயேசுகிறிஸ்துவைப்போல நாமும் கிரியை செய்யவேண்டும். தேவன் நமக்கு நியமித்திருக்கும் வேலைகளை நாம்தான் செய்யவேண்டும்.

பிறவிக்குருடனுடைய கண்களை இந்த வேளையில் திறக்கவேண்டுமென்று இயேசுகிறிஸ்து சித்தமுள்ளவராயிருக்கிறார். இதுவே பிதாவின் கிரியைகளைச் செய்வதற்கு தமக்குக் கிடைத்திருக்கும் வேளை என்பதை குமாரன் அறிந்திருக்கிறார். பகற்காலமிருக்கு மட்டும் இயேசுகிறிஸ்து கிரியை செய்யவேண்டும். பிதாவின் கிரியைகளைச் செய்வதற்கு தமக்கு எவ்வளவு காலம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்தக் காலம் இயேசுகிறிஸ்துவுக்கு பகற்காலமாக இருக்கிறது. பிதாவானவர் தமது கிரியைகளைச் செய்வதற்கு குமாரனுக்கு ஒரு காலத்தை நியமித்து வைத்திருக்கிறார். இந்தக் கிரியையைச் செய்வதற்கு இந்த நாளே இயேசுகிறிஸ்துவின் நாளாகும். பிதாவானவர் இயேசுகிறிஸ்துவுக்குக் தமக்குக் கொடுத்திருக்கும் எல்லா கிரியைகளையும், அவர் மரிப்பதற்கு முன்பாகச் செய்து முடிக்கவேண்டும். இயேசுகிறிஸ்து இந்த பூமியில் மனுஷனாக ஜீவிக்கிற காலமே அவருக்கு பகற்காலம்.

அதுபோலவே நம்முடைய ஜீவியக்காலமே நமக்கு பகற்காலமாக இருக்கிறது. வேலைகளைச் செய்வதற்கு பகற்காலமே நேர்த்தியான காலம். நம்முடைய ஜீவியக்காலத்தில் நாம் காலத்தை விரயம் செய்துவிடாதவாறு உற்சாகமாகக் கிரியை நடப்பிக்கவேண்டும். பகற்காலத்தில் சும்மாயிருந்துவிட்டால், இராக்காலத்தில் நம்மால் ஒரு கிரியையும் செய்யமுடியாது. நாம் ஓய்வு எடுப்பதற்கு தேவன் ஒரு காலத்தை நியமித்திருக்கிறார். அது வரையிலும் தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் ஊழியத்தைச் செய்யவேண்டும்.

தம்மை அனுப்பின பிதாவானவருடைய கிரியையைச் செய்வதற்கு இந்தக் காலமே ஏற்றகாலமாக இருக்கிறது. ஆகையினால் நியமிக்கப்பட்ட பகற்காலத்தில் இயேசுகிறிஸ்து தம்முடைய கிரியைகளைச் செய்கிறார். ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது. நிச்சயமாகவே அந்த இராக்காலம் வரப்போகிறது. அது ஒருவேளை திடீரென்று வரலாம். ஒவ்வொரு நாளும் அந்த இராக்காலம் நம்மை நெருங்கிக்கொண்டே வருகிறது. நமக்கு எவ்வளவுநாள் பகற்காலமாக இருக்கும் என்று நமக்குத் தெரியாது. நம்முடைய ஜீவன் முடிந்துபோனால் நம்முடைய பகற்காலமும் முடிந்துபோகும். தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் ஜீவியகாலமாகிய பகற்காலத்தில் சோர்ந்துபோகாமல், நமக்கு நியமிக்கப்பட்டிருக்கும் ஊழியத்தை உற்சாகமாகச் செய்து நிறைவேற்றவேண்டும். இராக்காலம் வரும்போது நம்மால் ஒரு கிரியையும் செய்யமுடியாது.

நம்முடைய ஜீவியகாலம் முடிந்தவுடன், நம்முடைய பகற்காலத்தில் நாம் செய்த வேலைகளைக் குறித்து தேவனிடத்தில் கணக்கு ஒப்புவிக்கவேண்டும். இராக்காலம் வரும்போது தேவன் தம்முடைய ஊழியர்களை தம்மிடமாக அழைத்துக்கொள்வார். அப்போது பகற்காலத்தில் நாம் செய்த கிரியைகளையெல்லாம் அவரிடத்தில் அறிவிக்கவேண்டும். நாம் செய்த கிரியைகளுக்குத் தக்க பலனைத் தேவன் நமக்குக் கொடுப்பார். பகற்காலத்தில் ஒரு கிரியையும் செய்யாமல், வாய்ப்பை தவறவிட்டுவிட்டு, இராக்காலம் வரும்போது கிரியை செய்ய முடியவில்லையே என்று வருத்தப்படுவதினால் ஒரு பிரயோஜனமும் உண்டாகாது. கண்ணீரோடு விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடு அறுப்பார்கள். விதைக்கிற காலத்தில் விதைத்தால்தான் அறுவடைக்காலத்தில் அறுவடை செய்ய முடியும். விதைக்கிற காலத்தில் விதைக்காமல் சும்மாயிருந்துவிட்டு, அறுவடைக்காலத்தில் அறுப்பதற்கு ஒன்றுமில்லையே என்று வருத்தப்படுவதினால் ஒரு பிரயோஜனமுமில்லை.

**உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்**

**நான் உலகத்திலிருக்கையில் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் என்றார் (யோவா 9:5).**

## அதிகாரம் - 9

இயேசுகிறிஸ்து இந்த உலகத்திற்கு ஒளியாயிருக்கிறார். உலகத்திற்கு வெளிச்சத்தைக் கொடுப்பதே இயேசுகிறிஸ்துவின் ஊழியம். இந்த ஊழியத்தைப்பற்றி இயேசுகிறிஸ்து ஏற்கெனவே கூறியிருக்கிறார் (யோவா 8:12). குருடாயிருக்கும் இந்த உலகத்திற்கு பிறவிக்குருடன் பிரதிநிதியாக இருக்கிறான். இயேசுகிறிஸ்துவால் இந்தக் குருடனைச் சொஸ்தமாக்க முடியும். ஏனெனில் இந்த உலகத்திற்கு ஒளியாயிருப்பதற்காகவே இயேசுகிறிஸ்து வந்திருக்கிறார். இந்த உலகத்திற்கு வெளிச்சத்தைக் கொடுப்பதற்காக மாத்திரமல்ல, பார்வையைக் கொடுப்பதற்காகவும் இயேசுகிறிஸ்து வந்திருக்கிறார்.

உலகத்திலுள்ள ஜனங்களில் அநேகர் இயேசுகிறிஸ்துவாகிய ஒளியைக் காண்பதற்கு மனதில்லாமல் தங்கள் கண்களை மூடிக்கொள்கிறார்கள். ஆனால் விசுவாசிகளாகிய நாமோ இயேசுகிறிஸ்துவாகிய ஒளியைக்காண பிரியமாயிருக்கவேண்டும். இயேசுகிறிஸ்து இந்த உலகத்திலிருக்கையில் உலகத்திற்கு வெளிச்சமாகயிருக்கிறார் என்று இயேசுகிறிஸ்து கூறியிருக்கும் வார்த்தைகள் நம்மை உற்சாகப்படுத்த வேண்டும்.

சூரிய வெளிச்சத்தினால் எல்லோருக்கும் ஆசீர்வாதம் கிடைக்கிறது. சூரியனின் வெளிச்சம் நமக்கு இலவசமாகக் கிடைக்கிறது. அதுபோலவே இயேசு கிறிஸ்துவின் கிருபையும் நமக்கு இலவசமாகக் கிடைக்கிறது. இயேசுகிறிஸ்துவின் கிருபையை நாம் கிரயம் செலுத்தாமல், இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம். தாம் இந்த உலகத்திற்கு ஒளியாகயிருப்பதாக இயேசுகிறிஸ்து கூறுகிறார். இயேசுகிறிஸ்துவைப்போலவே அவருடைய பிள்ளைகளாகிய நாமும் இந்த உலகத்திற்கு வெளிச்சமாக இருக்கிறோம். நம்முடைய வெளிச்சம் பிரகாசிக்கவேண்டும். வெளிச்சம் கொடுப்பதற்காகத்தான் விளக்கு ஏற்றப்படுகிறது. வெளிச்சம் கொடுக்காத விளக்கினால் ஒரு பயனுமில்லை.

**சேற்றை குருடனுடைய கண்களின்மேல் பூசி**

**இவைகளைச் சொல்லி, அவர் தரையிலே துப்பி, உமிழ்நீரினால் சேறுண்டாக்கி, அந்தச் சேற்றைக் குருடனுடைய கண்களின்மேல் பூசி: (யோவா 9:6)**

இயேசுகிறிஸ்து இந்த சம்பவத்தில் இந்தக் குருடன் ஒருவனை மாத்திரமே சொஸ்மாக்குகிறார். இயேசுகிறிஸ்து இவனைக் குணப்படுத்தும் இந்தச் சம்பவம் மிகவும் நேர்த்தியாக இங்கு விவரிக்கப்பட்டிருக்கிறது. பகற்காலமிருக்கு மட்டும் தாம் பிதாவின் கிரியைகளைச் செய்யவேண்டுமென்றும், தாம் உலகத்திலிருக்கையில் உலகத்திற்கு ஒளியாகயிருப்பதாகவும் சொல்லிவிட்டு இயேசுகிறிஸ்து இந்தக் குருடனுடைய கண்களை திறக்கும் கிரியையைச் செய்கிறார்.

இந்த நாள் ஓய்வுநாளாக இருக்கிறது. ஓய்வுநாள் முடியட்டும் என்று இயேசுகிறிஸ்து காத்திருக்கவில்லை. ஓய்வுநாள் முடிந்தபின்பு இயேசுகிறிஸ்து இவனுடைய கண்களைத் திறந்தால் யூதர்கள் இவர்மீது குற்றம் சுமத்தமாட்டார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ தமக்கு நியமிக்கப்பட்டிருக்கும் வேளையில், வாய்ப்பு கிடைக்கும்போது நன்மை செய்யவேண்டுமென்று சித்தமுள்ளவராகயிருக்கிறார்.

தாம் செய்கிற கிரியைகளை, எதிர்ப்பு இல்லாமல் இருக்கும்போதுதான் செய்யவேண்டும் என்று இயேசுகிறிஸ்து தீர்மானம் செய்திருப்பாரென்றால், அவர் பல அற்புதங்களையும் அதிசயங்களையும் செய்திருக்கமாட்டார். ஜனங்களுக்கு பல நன்மைகளைச் செய்திருக்கமாட்டார். ஆனால் இயேசுகிறிஸ்துவோ எதிர்ப்புக்களைக் கண்டு தம்முடைய கிரியைகளை நிறுத்திக்கொள்ளவில்லை. தமக்கு சமயம் கிடைக்கும் போதெல்லாம் தம்மை அனுப்பின பிதாவாகிய தேவனுடைய கிரியைகளைச் செய்கிறார்.

இயேசுகிறிஸ்து தரையிலே துப்பி உமிழ்நீரினால் சேறுண்டாக்குகிறார். தம்முடைய உமிழ்நீரையே பயன்படுத்தி இயேசுகிறிஸ்து சேறுண்டாக்குகிறார். ஏனெனில் அந்த இடத்தில் வேறு தண்ணீர் எதுவுமில்லை. நம்முடைய ஊழியத்தில் நமக்கு அருகாமையில் கிடைக்கும் வாய்ப்புக்களை பயன்படுத்தி ஊழியம் செய்யவேண்டும். நமக்கு தூரமாக உள்ள வாய்ப்புக்களுக்காக ஏக்கத்தோடு காத்துக்கொண்டிருந்துவிட்டு, ஒன்றும் செய்யாமல் இருப்பதைவிட, நமக்கு அருகாமையில் கிடைக்கும் வாய்ப்புக்களை ஏற்றவேளையில் பயன்படுத்துவது மிகவும் நல்லது. நமக்கு அருகாமையிலுள்ள வாய்ப்புக்களே நல்ல வாய்ப்புக்களாக இருக்கும்போது, வாய்ப்புக்களுக்காக அங்கும் இங்கும் தேடி அலைவதினால் ஒரு பிரயோஜனமும் உண்டாகாது. வீண் அலைச்சல்தான் உண்டாகும்.

## அதிகாரம் - 9

இயேசுகிறிஸ்து உமிழ்நீரினால் சேறுண்டாக்கி, அந்தச் சேற்றை குருடனுடைய கண்களின்மேல் பூசுகிறார். ஒரு மருத்துவரைப்போல காயத்திற்கு மருந்து கட்டுகிறார். குருடனாக இருக்கிறவன் தரித்திரனாகவும், பிச்சைக்காரனாகவும் இருக்கிறான். ஆயினும் இயேசுகிறிஸ்து தாமே தம்முடைய சொந்தக் கரங்களினால் அவனுடைய கண்களின்மேல் தாம் உண்டாக்கிய சேற்றைப் பூசுகிறார். இயேசுகிறிஸ்து தரித்திரருக்கும் ஊழியம் செய்கிறவர். குருடனுடைய கண்களின்மேல் சேற்றைப்பூசும்போது, அவனுடைய கண்கள் திறக்கப்படுவதற்குப் பதிலாக அவை சேற்றினால் அடைக்கப்படுகிறது. இது இயற்கையின் பிரமாணம். ஆனால் தேவனுடைய பிரமாணம் வேறு விதமாக கிரியை செய்கிறது. இயேசுகிறிஸ்து இவனுடைய கண்களின்மேல் சேற்றைப் பூசும்போது, அவனுடைய கண்கள் அடைக்கப்படுவதற்குப் பதிலாக திறக்கப்படுகிறது.

தேவனுடைய வல்லமை பல சமயங்களில் இப்படித்தான் வித்தியாசமாகக் கிரியை நடப்பிக்கும். மனுஷருடைய ஆவிக்குரிய கண்களைத் திறப்பதே சுவிசேஷத்தின் திட்டம். குருடனுடைய கண்களின்மேல் பூசப்பட்ட சேறு இப்போது கிரியை நடப்பிக்க ஆரம்பிக்கிறது. இவனுடைய கண்கள் திறக்கப்படுவதற்கு இயேசுகிறிஸ்து இங்கு ஆயத்த வேலைகளைச் செய்கிறார்.

நம்முடைய கண்களும் திறக்கப்படுவதற்கு நாமும் இயேசுகிறிஸ்துவினிடத்தில் வரவேண்டும். நம்முடைய கண்களின்மேலும் அவர் சேற்றைப்பூசவேண்டுமென்றும், இதன் மூலமாக தேவனுடைய தெய்வீக வல்லமை நமக்குள் கிரியை செய்து, நம்முடைய ஆவிக்குரிய கண்கள் திறக்கப்படவேண்டுமென்றும் நாம் எதிர்பார்க்கவேண்டும். இயேசுகிறிஸ்துவினால் மாத்திரமே நம்முடைய ஆவிக்குரிய கண்களைத் திறக்கமுடியும். நம்முடைய கண்களைத் திறப்பதற்கு பிதாவாகிய தேவன் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை மாத்திரமே நியமித்திருக்கிறார்.

இயேசுகிறிஸ்து குருடனுடைய கண்களின்மேல் சேற்றைப்பூசுகிறார். தரையிலே துப்பி உமிழ்நீரினால் அந்தச் சேற்றை உண்டுபண்ணியிருக்கிறார். இது மிகவும் சாதாரணமான காரியம். ஆனாலும் இயேசுகிறிஸ்துவின் வல்லமையினால், இந்தச் சாதாரண காரியம்கூட, பெரிய காரியத்தைச் செய்கிறது. நம்முடைய வாழ்கையில்கூட இயேசுகிறிஸ்து நடப்பிக்கிற கிரியை ஆரம்பத்தில் சாதாரணமானதாகத் தெரியலாம். இயேசுகிறிஸ்துவை நம்முடைய இரட்சராக ஏற்றுக்கொள்கிறபோது ஆவிக்குரிய காரியங்களை காணமுடியாத குருடர்களைப்போல நாம் இருக்கலாம். ஆனாலும் இயேசுகிறிஸ்து நம்முடைய ஆவிக்குரிய கண்களைத் திறப்பார். நமக்கு பார்வை கிடைக்கச் செய்வார்.

**சீலோவாம் குளம்**

**நீ போய், சீலோவாம் குளத்திலே கழுவு என்றார். சீலோவாம் என்பதற்கு அனுப்பப்பட்டவன் என்று அர்த்தமாம். அப்படியே அவன் போய்க் கழுவி, பார்வையடைந்தவனாய்த் திரும்பிவந்தான் (யோவா 9:7).**

இயேசுகிறிஸ்து குருடனுடைய கண்களின்மேல் சேற்றைப்பூசி, அவனைச் சீலோவாம் குளத்திலே கழுவுமாறு கூறுகிறார். இந்தக் குருடன் தம்முடைய வார்த்தைக்கு கீழ்ப்படிகிறானா என்பதை இதன் மூலமாக சோதிக்கிறார். இயேசுகிறிஸ்துவைப்பற்றி இவன் இதுவரையிலும் கேள்விப்படவில்லை. ஆயினும் இயேசுகிறிஸ்துவின் வார்த்தைக்குக் கீழ்ப்படியவேண்டும் என்னும் விசுவாசம் இவனிடத்தில் உள்ளதா அல்லது இல்லையா என்பதை இவன் தன் செய்கையினால் நிரூபித்துக் காண்பிக்கவேண்டும். ஓய்வுநாளிலே ஒருவேலையும் செய்யக்கூடாது என்பது யூதருடைய முன்னோர்களின் பாரம்பரிய பழக்கம். இந்தப் பழக்கத்தின்படி ஓய்வுநாளில் சீலோவாம் குளத்திலே கழுவக்கூடாது என்று முன்னோர்களின் பாரம்பரியத்திற்கு கீழ்ப்படிகிறானா அல்லது தம்முடைய வார்த்தைக்கு கீழ்ப்படிகிறானா என்பதை இயேசுகிறிஸ்து சோதித்தறிய விரும்புகிறார்.

## அதிகாரம் - 9

இயேசுகிறிஸ்து ஒருவனைக் குணப்படுத்தும்போது தம்முடைய வல்லமையினாலும் கிருபையினாலும் மாத்திரமே குணப்படுத்துகிறார். அது சரீரப்பிரகாரமான வியாதியாக இருந்தாலும் அல்லது ஆவிக்குரிய வியாதியாக இருந்தாலும் இயேசுகிறிஸ்துவின் வல்லமையினால் மாத்திரமே சொஸ்தமுண்டாகும்.என்றாலும் இயேசுகிறிஸ்து நம்மைக் குணப்படுத்துவதற்காக நமக்கு நியமிக்கப்பட்டிருக்கும் கடமைகளையும் நாம் நிறைவேற்றவேண்டும். இயேசுகிறிஸ்து இதன் மூலமாக இந்தச் சத்தியத்தை வலியுறுத்துகிறார். வேதவாக்கியங்களைத் தியானித்துப் பார்ப்பது, இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தில் பங்குபெறுவது, ஞானிகளுடைய வார்த்தையைக்கேட்பது ஆகியவையெல்லாம் நம்முடைய கடமைகளாகும். இதைப்போலவே சீலோவாம் குளத்தில் கழுவுவது பிறவிக் குருடனுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் கடமை.

தேவன் வேதாகமத்தில் நமக்குப் பல வாக்குத்தத்தங்களை கொடுத்திருக்கிறார். இந்த வாக்குத்தத்தங்களெல்லாம் நம்முடைய ஜீவியங்களில் சித்திக்க வேண்டுமானால், அதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் பிரமாணங்களுக்கு நாம் கீழ்ப்படியவேண்டும். எருசலேமிலுள்ள சீலோவாம் குளத்திற்கு சீயோன் மலையிலிருந்து தண்ணீர் வருகிறது. ஜீவத்தண்ணீராகிய இயேசுகிறிஸ்துவிடமிருந்து சரீர சுகமாதல் வருகிறது. இயேசுகிறிஸ்து சீலோவாம் குளத்தின் பெயரை ஆவிக்குரிய அர்த்தத்தோடு குறிப்பிடுகிறார். சீலோவாம் என்பதற்கு "அனுப்பப்பட்டவன்" என்று அர்த்தமாம். இயேசுகிறிஸ்து தேவனால் அனுப்பப்பட்டிருக்கிறவர். சீலோவாம் குளத்திலே போய் கழுவு என்று இயேசுகிறிஸ்து இந்தக் குருடனிடம் கூறும்போது, அவர் இவனை மெய்யாகவே தம்மிடத்தில்தான் அனுப்புகிறார். ஏனெனில் இயேசுகிறிஸ்துவே பிதாவினால் அனுப்பப்பட்டவராக அதாவது சீலோவாமாக இருக்கிறார்.

நம்முடைய ஆவிக்குரிய வியாதி குணமடையவேண்டுமென்றால் நாம் எந்தக் குளத்திலும் போய் ஸ்நானம்பண்ண வேண்டியதில்லை. ஜீவநீரூற்றாகிய இயேசுகிறிஸ்துவிடமே நாம் வரவேண்டும். நமக்காகத் திறக்கப்பட்ட ஜீவத்தண்ணீராகிய இயேசுகிறிஸ்துவிடம் வந்து நம்மைக் கழுவவேண்டும். இயேசுகிறிஸ்துவே நமக்காக திறக்கப்பட்ட ஜீவஊற்றாக இருக்கிறார்.

அந்தக் குருடன் இயேசுகிறிஸ்துவின் வார்த்தைக்குக் கீழ்ப்படிகிறான். அவர் சொன்ன பிரகாரமாகவே போய் தன் கண்களைக் கழுவுகிறான். இயேசுகிறிஸ்துவின் வல்லமையை இவன் விசுவாசிக்கிறான். அதேவேளையில் அவருடைய கட்டளைக்கும் கீழ்ப்படிகிறான். விசுவாசமும் கீழ்ப்படிதலும் இணைந்தவனாக இவன் சீலோவாம் குளத்திற்குப்போய் தன் கண்களைக் கழுவுகிறான்.

இயேசுகிறிஸ்துவின் வல்லமையை நம்பி, அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து சீலோவாம் குளத்திற்குப்போய் தன் கண்களைக் கழுவி, இவன் பார்வையடைந்தவனாகத் திரும்பி வருகிறான். பிறவிக்குருடனாக இருந்தவன் இப்போது பார்வையடைந்தவனாக திரும்பி வருகிறான். இயேசுகிறிஸ்துவின் இரட்சிக்கும் கிருபையினால் நாம் மறுபடியும் பிறக்கும்போது, நம்முடைய பழைய பாவக்கறைகளெல்லாம் நம்மைவிட்டு நீங்கும். ஆவிக்குரிய விடுதலையும் நம்முடைய பாதைகளுக்கு வெளிச்சமும் கிடைக்கும். இயேசுகிறிஸ்து நம்முடைய மனக்கண்களைப் பிரகாசமுள்ளதாக மாற்றுகிறார். இயேசுகிறிஸ்துவின் வல்லமை இந்தக் குருடனுக்குப் பார்வை கிடைக்கச் செய்திருக்கிறது.

தேவனால் கூடாதகாரியம் ஒன்றுமேயில்லை. அவர் மாறாத தேவனாகயிருந்தாலும், மாற்றுகிற தேவனாயிருக்கிறார். இயேசுகிறிஸ்துவுக்குச் சித்தமானதை பிறவிக்குருடன் செய்கிறான். அவருடைய வார்த்தை அனைத்திற்கும் கீழ்ப்படிகிறான். அவருடைய சொஸ்தமாக்கும் வல்லமையினால் குணமடைந்து தன் கண்களில் பார்வையைப் பெற்றுக்கொள்கிறான். இயேசுகிறிஸ்து நம்மையும் சொஸ்தமாக்க வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். ஜெபிக்கிறோம். இயேசுகிறிஸ்துவினால் குணமாக்கப்பட வேண்டுமென்று விரும்புகிறவர்கள், அவரால் ஆளுகை செய்யப்படவும்வேண்டும் என்று விரும்பவேண்டும்.

## அதிகாரம் - 9

குருடனாக இருந்தவன் சீலோவாம் குளத்திலிருந்து பார்வையடைந்தவனாக, மிகுந்த ஆச்சரியத்தோடு திரும்பி வருகிறான். இயேசுகிறிஸ்துவின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்கும்போது நம்முடைய ஜீவியத்திலும் ஆச்சரியப்படத்தக்க மாற்றம் உண்டாகும். இவனுடைய கண்கள் இதுவரையிலும் செயலிழந்திருந்தது. இப்போது அவனால் பார்க்க முடிகிறது. நாமும் இயேசுகிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியும்போது இதுவரையிலும் செயலிழந்து போன காரியங்களெல்லாம் தேவனுடைய நாம மகிமைக்காகவும் நம்முடைய பிரயோஜனத்திற்காகவும் செயல்பட ஆரம்பிக்கும். ஆகையினால் இயேசுகிறிஸ்துவின் வார்த்தைக்கும் அவருடைய பிரமாணத்திற்கும் கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டியது மிகவும் அவசியமானது.

இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் நடுக்கத்தோடு போனாலும் ஜெயகம்பீரத்தோடு திரும்பி வருவார்கள். இயேசுவுக்குக் கீழ்ப்படிந்து முன்செல்கிறவர்கள் குருடர்களாகப் போனாலும் பார்வையடைந்தவர்களாகத் திரும்பி வருவார்கள். இயேசுகிறிஸ்துவின் வார்த்தையின் பிரகாரம் வருத்தத்தோடு சென்றவர்கள் சந்தோஷ கீதங்களைப் பாடிக்கொண்டு திரும்பி வருவார்கள்.

### அயலகத்தாரின் சம்பாஷணை
### யோவா 9 : 8-12

**யோவா 9:8. அப்பொழுது அயலகத்தாரும், அவன் குருடனாயிருக்கையில் அவனைக் கண்டிருந்தவர்களும்: இவன் உட்கார்ந்து பிச்சை கேட்டுக்கொண்டிருந்தவனல்லவா என்றார்கள்.**

**யோவா 9:9. சிலர்: அவன்தான் என்றார்கள். வேறு சிலர்: அவனுடைய சாயலாயிருக்கிறான் என்றார்கள். அவனோ: நான்தான் அவன் என்றான்.**

**யோவா 9:10. அப்பொழுது அவர்கள் அவனை நோக்கி: உன் கண்கள் எப்படித் திறக்கப்பட்டது என்றார்கள்.**

**யோவா 9:11. அவன் பிரதியுத்தரமாக: இயேசு என்னப்பட்ட ஒருவர் சேறுண்டாக்கி, என் கண்களின்மேல் பூசி, நீ போய் சீலோவாம் குளத்திலே கழுவு என்றார். அப்படியே நான் போய்க் கழுவி, பார்வையடைந்தேன் என்றான்.**

**யோவா 9:12. அப்பொழுது அவர்கள்: அவர் எங்கே என்றார்கள். அவன்: எனக்குத் தெரியாது என்றான்.**

### பிச்சை கேட்டுக்கொண்டிருந்தவனல்லவா

**அப்பொழுது அயலகத்தாரும், அவன் குருடனாயிருக்கையில் அவனைக் கண்டிருந்தவர்களும்: இவன் உட்கார்ந்து பிச்சை கேட்டுக்கொண்டிருந்தவனல்லவா என்றார்கள் (யோவா 9:8).**

பிறவிக்குருடன் பார்வையடைந்த அற்புதமான சம்பவத்தைப்பற்றி எருசலேமிலுள்ள ஜனங்களெல்லோரும் ஆச்சரியத்தோடு பேசிக்கொள்கிறார்கள். உற்றார் உறவினரும், இவனுடைய அயலகத்தாரும் இவன் பார்வையடைந்தது மெய்தானா என்பதை உறுதிபண்ணிக்கொள்கிறார்கள். இவர்களுக்கு கண்ணால் காண்பதும், காதால் கேட்பதும் பொய்யாயிருக்கிறது. தீர விசாரித்தறிவதையே மெய் என்று நினைக்கிறார்கள். சந்தேகமில்லாமல் தீர விசாரித்து, பிறவிக்குருடன் மெய்யாகவே பார்வையடைந்திருக்கிறானா என்பதை அவனுடைய அயலகத்தார் உறுதிபண்ணிக்கொள்கிறார்கள்.

குருடனாயிருக்கையில் இவர்களெல்லோரும் இவனைக் கண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் பிறவிக்குருடன் இதுவரையிலும் பிச்சை கேட்டுக்கொண்டிருந்திருக்கிறான். அவன்தான் இவனா என்பதுதான் இவர்களுடைய சந்தேகம். பிறவிக்குருடன் இப்போது பார்வையடைந்தவனாக இவர்கள் மத்தியிலே உலாவிக்கொண்டிருக்கிறான். இவனைப் பார்க்கிறபோது அவர்களுக்கு மிகுந்த ஆச்சரியமுண்டாயிற்று. "இவன் உட்கார்ந்து பிச்சை கேட்டுக்கொண்டிருந்தவனல்லவா" என்று ஒருவருக்கொருவர் விசாரித்துக்கொள்கிறார்கள்.

இவன் குருடனாயிருந்தபோது இவனால் ஒருவேலையும் செய்ய முடியவில்லை. இவனுடைய பெற்றோராலும் இவனைப் பராமரிக்க முடியவில்லை. ஆகையினால் தன்னுடைய பசியைப் போக்குவதற்காகவும், தன்னைப் பராமரிப்பதற்காகவும், அநுதினமும் இவன் ஓரிடத்தில் உட்கார்ந்து பிச்சை கேட்டுக் கொண்டிருக்கிறான். தனக்கு கிடைத்ததை வைத்து, இதுவரையிலும் தன் பொழுதைப் போக்கியிருக்கிறான். வேறு வழியில்லாமல் இவன் பிச்சை கேட்டவன்.

## அதிகாரம் - 9

பிச்சை கேட்பது தவறல்ல. தங்களுக்கு வேறு வழியேயில்லை என்னும் சூழ்நிலையில் பிறருடைய உதவியைக் கேட்பதற்காக வெட்கப்படக்கூடாது. நாம் பாவம் செய்வதற்குத்தான் வெட்கப்பட வேண்டும். வேறு எதற்கும் வெட்கப்பட வேண்டிய தேவையில்லை.

ஒரு சில பிச்சைக்காரர்களுக்கு நாம் மெய்யாகவே இரக்கம் காண்பிக்கவேண்டும். ஆனாலும் பிச்சை கேட்கிற எல்லோருக்கும் இரக்கம் காண்பிக்க வேண்டிய அவசியமில்லை. அவர்களை நிதானித்து அறியவேண்டும். மெய்யாகவே உதவி தேவைப்படுகிறவர்களுக்கு நாம் உதவி செய்யவேண்டும். வேலை செய்வதற்கு அவர்களால் முடியுமானால் அவர்கள் வேலை செய்து பிழைப்பது நல்லது. சோம்பேறித்தனமாக ஒருவேலையும் செய்யாமல் பிச்சை கேட்கிறவர்களுக்கு இரக்கம் காண்பிக்க வேண்டியதில்லை. பிச்சைக்காரர்கள் மத்தியில் சோம்பேறிகளும் இருக்கிறார்கள். ஒரு சில சோம்பேறிகளை நினைத்துப் பார்த்து எல்லா பிச்சைக்காரர்களுக்கும் உதவி செய்ய மறுத்துவிடக்கூடாது.

பிறவிக்குருடனை இயேசுகிறிஸ்து சொஸ்தமாக்கியிருப்பது மிகப்பெரிய அற்புதம். இந்த அற்புதம் பலருடைய சாட்சியினால் உறுதிபண்ணப்படவேண்டும். யூதர்கள் இயேசுவின்மீது விரோதமாக இருக்கிறார்கள். அவருடைய உபதேசத்தை விசுவாசித்து ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். இயேசுவைக் கொலைசெய்யவேண்டுமென்று அவரைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சத்துருக்கள் இயேசுகிறிஸ்துவையும் அவர் செய்கிற அற்புதங்களையும் போதுமான அளவு சாட்சிகள் இல்லையென்றால் நிச்சயமாகவே நம்பமாட்டார்கள். ஆகையினால் பிறவிக்குருடன் பார்வையடைந்ததற்கு பல சாட்சிகள் தேவைப்படுகிறது.

இயேசுகிறிஸ்து அற்புதம் செய்யும்போது, யாருக்கு அற்புதம் செய்யவேண்டும் என்பதையும் தீர்மானம் பண்ணுகிறார். ஐசுவரியவான்களுக்கோ, எருசலேம் நகரத்திலுள்ள பிரபுக்களுக்கோ, பிரபல்யமானவர்களுக்கோ இயேசுகிறிஸ்து அற்புதம் செய்யவில்லை. சமுதாயத்தாலும், குடும்பத்தினாராலும் புறக்கணிக்கப்பட்டு ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிற ஒரு தரித்திரனுக்கு இயேசுகிறிஸ்து அற்புதம் செய்கிறார். இயேசுகிறிஸ்து செய்த அற்புதத்தினால் பிறவிக்குருடனாக இருந்து, தன் வாழ்நாள் முழுவதும் பாடுகளை அனுபவித்துக்கொண்டிருந்த இவனுக்கு வருத்தமும் வேதனையும் நீங்குகிறது. தான் பார்வையடைந்தவனாக பிறருடைய உதவியில்லாமல் தன்னுடைய வேலையை தானே செய்து கொள்ளக்கூடிய சுகமாதலைப் பெற்றுக்கொள்கிறான். தான் பார்வையடைந்தது தனக்கு மிகப்பெரிய ஆசீர்வாதம் என்று நினைக்கிறான்.

இயேசுகிறிஸ்து அற்புதம் செய்யும்போது நம்முடைய அந்தஸ்தைப் பார்ப்பதில்லை. நம்முடைய பணபலத்தையோ, பதவிகளையோ, செல்வாக்கையோ பார்ப்பதில்லை. அவர் நம்முடைய இருதயத்தையே பார்க்கிறார். இயேசுகிறிஸ்துவின் சமுகத்தில் நாம் இருதயம் உடைந்தவர்களாக, அவருடைய உதவியைக் கண்ணீர்விட்டு கேட்கும்போது நிச்சயமாகவே அவர் நமக்கு உதவிசெய்வார்.

### அவனோ, நான் தான் என்றான்

**சிலர்: அவன்தான் என்றார்கள். வேறு சிலர்: அவனுடைய சாயலாயிருக்கிறான் என்றார்கள். அவனோ: நான்தான் அவன் என்றான் (யோவா 9:9).**

பிறவிக்குருடனுடைய அயலகத்தார், அவன் குருடனாக உட்கார்ந்து பிச்சை கேட்டுக்கொண்டிருந்தபோது, அவனை அநுதினமும் பார்த்திருக்கிறார்கள். இப்போது அவன் பார்வையடைந்தவனாக அவர்கள் மத்தியில் நடந்துகொண்டிருக்கிறான். அவனை அவர்களால் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. ஒரு சிலர் பார்வையடைந்த இவனைப்பார்த்து "அவன் தான்" என்று கூறுகிறார்கள். இவன் பிறவியிலிருந்தே குருடனாக இருந்தது இவர்களுக்கு நன்றாகத் தெரியும். இப்போது இயேசுகிறிஸ்துவின் அற்புத வல்லமையினால் இவன் பார்வையடைந்திருப்பதற்கு இவர்கள் சாட்சி கூறுகிறார்கள்.

வேறு சிலருக்கு இவனைப்பற்றிச் சரியாகத் தெரியவில்லை. "இவன் அவனுடைய சாயலாக இருக்கிறான்" என்று சந்தேகத்தோடு சொல்கிறார்கள். அற்புதம் நடந்திருப்பதற்கு இவர்களும் சாட்சி கூறுகிறார்கள். ஆனால் பிறவிக்குருடனும், பார்வையடைந்திருக்கிற இவனும் ஒரே ஆள்தானா என்பதை இவர்களால் உறுதியாகச் சொல்ல முடியவில்லை.

## அதிகாரம் - 9

இந்த உலகத்தில் கோடிக்கணக்கான ஜனங்கள் இருக்கிறார்கள். கர்த்தர் நம் ஒவ்வொருவருக்கும் முகத்தில் ஒரு வேறுபாட்டைக் கொடுத்திருக்கிறார். நம்முடைய முகம் போல வேறு யாருக்கும் முகம் இருக்காது. ஒவ்வொருவருடைய முகத்திலும் ஏதாவது ஒரு வேறுபாடு இருக்கும். நம்முடைய முகச்சாயலில் வேறுபாடு இருப்பது கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கும் ஆசீர்வாதம். இந்த வேறுபாடு இல்லையென்றால் மனுஷர் மத்தியிலே சர்வ குழப்பம் உண்டாகிவிடும். எல்லோருடைய முகமும் ஒன்றுபோல் இருந்தால் தவறு செய்தவனுக்குத் தண்டனை கொடுப்பது மிகவும் சிரமமாக இருக்கும்.

இயேசுகிறிஸ்து நம்மை மாற்றுகிறவர். நம்முடைய முகசாயலை மாற்றவில்லையென்றாலும், நம்முடைய பழைய ஜீவியத்தை மாற்றுகிறார். பாவம் நிறைந்து அசுத்தங்களில் ஜீவித்த நம்மை பரிசுத்த கிரியைகளைச் செய்யும் பரிசுத்தவான்களாக மாற்றுகிறார். இதற்கு முன்பு துன்மார்க்கராகயிருந்த நம்மை பரிசுத்தவான்களாக மாற்றுகிறார். இயேசுகிறிஸ்துவின் கிருபையினால் நாம் இரட்சிக்கப்பட்டு புதிய ஜீவனைப் பெற்றுக்கொள்ளும்போது, நம்முடைய முகசாயல் மாறவில்லையென்றாலும், நம்முடைய அகசாயல் மறுரூபமடைகிறது. பழையவை ஒழிந்துபோய் எல்லாம் புதிதாகிறது.

தன்னைக்குறித்து ஜனங்கள் வெவ்வேறுவிதமாக பேசிக்கொண்டிருப்பதை பார்வையடைந்திருக்கும் குருடனும் கேள்விப்படுகிறான். அவன் தனக்குத்தானே சாட்சி சொல்கிறான். "நான் தான் அவன்" என்று தன்னைப்பற்றி பேசிக்கொண்டிருக்கிற ஜனங்களுக்கு சாட்சி கூறுகிறான். குருடனாக இருந்தபோது அநுதினமும் இங்கு உட்கார்ந்து பிச்சை கேட்டுக்கொண்டிருந்தவனும் தான் தான் என்றும், இப்போது அவர்கள் மத்தியில் பார்வையடைந்தவனாக பேசிக் கொண்டிருப்பவனும் தான் தான் என்றும் தன்னைப்பற்றி சாட்சி சொல்கிறான். தேவனுடைய கிருபைக்கும் இரக்கத்திற்கும் இவன் சாட்சியாக இருக்கிறான்.

இயேசுகிறிஸ்துவின் கிருபையினால் இரட்சிக்கப்பட்டிருக்கிறவர்களும், சரீரத்திலும் ஆத்துமாவிலும் சுகமடைந்திருக்கிறவர்களும் தங்களுடைய பழைய நிலமையை மறந்துவிடக்கூடாது. தேவனுடைய நாம மகிமைக்காகவும் பிறருடைய பக்திவிருத்திக்காகவும் பிரயோஜனத்திற்காகவும், வாய்ப்பு கிடைக்கும்போதும், தேவைப்படும்போதும் சாட்சி பகர ஆயத்தமாகயிருக்கவேண்டும். நாம் இன்று நிர்மூலமாகாதிருப்பது தேவனுடைய சுத்தகிருபை என்பதை அநுதினமும் நினைவுகூரவேண்டும்.

**உன் கண்கள் எப்படி திறக்கப்பட்டது**

**அப்பொழுது அவர்கள் அவனை நோக்கி: உன் கண்கள் எப்படித் திறக்கப்பட்டது என்றார்கள். அவன் பிரதியுத்தரமாக: இயேசு என்னப்பட்ட ஒருவர் சேறுண்டாக்கி, என் கண்களின்மேல் பூசி, நீ போய் சீலோவாம் குளத்திலே கழுவு என்றார். அப்படியே நான் போய்க் கழுவி, பார்வையடைந்தேன் என்றான் (யோவா 9:10,11).**

குருடனாயிருந்தவனுடைய அயலகத்தார் இவன் பார்வையடைந்த விதத்தை அறிந்துகொள்ள வேண்டுமென்று விரும்புகிறார்கள். இவன் மூலமாக இரண்டு காரியங்களை தெரிந்துகொள்ள விரும்புகிறார்கள். அவையாவன: 1. உன் கண்கள் எப்படித் திறக்கப்பட்டது. 2. அவர் எங்கே.

குருடனாயிருந்தவன் இப்போது எப்படி பார்வையடைந்தவனாக இருக்கிறான் என்பதைத் தெரிந்துகொள்வதில் அயலகத்தார் அதிக ஆவலோடிருக்கிறார்கள். தேவனுடைய கிரியைகள் எப்போதுமே இப்படித்தான் ஆச்சரியப்படும் விதமாக இருக்கும். அவர் அற்புதமானவர். அற்புதமான கிரியைகளைச் செய்கிறவர். அயலகத்தாரின் கேள்விக்கு குருடனாகயிருந்தவன் மிகவும் எளிமையாக பதில் கூறுகிறான். "இயேசு என்னப்பட்ட ஒருவர் சேறுண்டாக்கி, என் கண்களின்மேல் பூசி, நீ போய் சீலோவாம் குளத்திலே கழுவு என்றார். அப்படியே நான் போய் கழுவி பார்வையடைந்தேன்" என்று தன்னுடைய அனுபவத்தை இவன் அப்படியே கூறுகிறான்.

## அதிகாரம் - 9

இவனைப்போலவே தேவனுடைய நன்மைகளையும் ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொண்டவர்கள் தங்களுடைய அனுபவங்களை சாட்சியாக அறிவிக்கவேண்டும். தேவன் நமக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைக் கொடுத்திருந்தாலும், உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களைக் கொடுத்திருந்தாலும் அதற்காகத் தேவனைத் துதித்து அவருடைய நாம மகிமைக்காகப் பிறருக்கு சாட்சி கூறவேண்டும். கர்த்தருக்காக சாட்சி கூற, நாம் கர்த்தருக்கும், நம்முடைய சகோதரருக்கும் கடனாளிகளாக இருக்கிறோம். தேவனுடைய கிருபைகளைப் பெற்றுக்கொண்டிருக்கிற நாம், கிருபையுள்ளவர்களாக இருக்கவேண்டும். நம்முடைய வார்த்தையிலும் கிரியையிலும் அன்பையும் கிருபையையும் வெளிப்படுத்தவேண்டும் நாம் இல்லையென்றால், நமக்கு தேவனுடைய கிருபை தொடர்ந்து கொடுக்கப்படாது. நாம் தேவகிருபையை இழந்துபோவோம்.

**அவர் எங்கே**

**அப்பொழுது அவர்கள்: அவர் எங்கே என்றார்கள். அவன்: எனக்குத் தெரியாது என்றான் (யோவா 9:12).**

குருடனாயிருந்தவன் இயேசு கிறிஸ்துவைப்பற்றியும், அவர் தனக்குச் சொன்ன காரியத்தைப்பற்றியும், அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தபோது தான் பார்வையடைந்ததைப்பற்றியும் தன் அயலகத்தாருக்கும் சாட்சியாக அறிவிக்கிறான். இவனுடைய சாட்சியைக் கேட்ட அவர்களுக்கு மிகுந்த ஆச்சரியமுண்டாயிற்று. "அவர் எங்கே" என்று ஆர்வத்தோடு அவனிடத்தில் கேட்கிறார்கள். ஒரு வேளை இவர்களுக்கும் இயேசுகிறிஸ்துவைக் காணவேண்டும் என்னும் ஆர்வம் உண்டாயிருக்கலாம். நல்ல மனதோடு இவர்கள் "இயேசு எங்கே இருக்கிறார்" என்று இவனிடத்தில் கேட்டிருக்கலாம்.

"அவர் எங்கே" என்று குருடனாயிருந்தவனிடம் கேட்டவர்களில் சிலர் தீயநோக்கத்தோடும் கேட்டிருக்கலாம். அவர் எங்கேயிருக்கிறார் என்று தெரிந்தால் அவரைப் பிடித்து அவருக்கு தண்டனை கொடுக்கலாமே என்னும் வஞ்சக எண்ணத்தோடு கேள்வி கேட்டிருக்கலாம். ஓய்வுநாளிலே இயேசுகிறிஸ்து பிறவிக்குருடனை சொஸ்தமாக்கியிருப்பதினால் அவர் முன்னோர்களின் பாரம்பரியத்தை மீறிவிட்டார் என்பது இவர்களுடைய குற்றச்சாட்டு. அதற்காக அவர் இருக்கும் இடம் தெரிந்தால் அவரைப்பிடித்து அவருக்குத் தண்டனை கொடுக்கலாம் என்பது இவர்களுடைய வஞ்சக எண்ணம். இயேசுகிறிஸ்துவின் சத்துருக்கள் அவர்மீது எப்போதுமே வஞ்சக எண்ணத் தோடிருக்கிறார்கள். அவரை விரோதிக்கிறார்கள். அதே சமயத்தில் ஒரு சிலர் இயேசுவின்மீது பிரியமாகவும் இருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து எங்கேயிருக்கிறார் என்று தெரிந்தால் நாமும் அங்கு சென்று அவருடைய கிருபையைப் பெற்றுக்கொள்ளலாமே என்று நல்ல மனதோடு "அவர் எங்கே" என்று சிலர் கேட்கிறார்கள்.

தன் அயலகத்தாரின் கேள்விக்கு குருடனாகயிருந்தவனால் சரியான பதிலைச் சொல்ல முடியவில்லை. அவர்களுடைய கேள்விக்கு "எனக்குத் தெரியாது" என்று பதில் கூறுகிறான். இயேசுகிறிஸ்து பிறவிக்குருடனுடைய கண்களின்மேல் சேற்றைப்பூசி, அவனைச் சீலோவாம் குளத்திலே கழுவுமாறு கூறுகிறார். இயேசுவின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து பிறவிக்குருடன் சீலோவாம் குளத்திற்குப் போகிறான். அவன் குளத்திலே தன் கண்களைக் கழுவி பார்வையடைந்தவனாகத் திரும்பி வருவதற்குள் இயேசுகிறிஸ்து அந்த இடத்தைவிட்டு புறப்பட்டுப் போய்விடுகிறார். பிறவிக்குருடனாகயிருந்தவன் இதுவரையிலும் இயேசுகிறிஸ்துவைப் பார்த்ததேயில்லை. சீலோவாம் குளத்திலிருந்து இவன் பார்வையடைந்தவனாக திரும்பி வந்தபோது, இவன் இயேசுகிறிஸ்துவை அந்த இடத்தில் காணவில்லை.

தன் கண்களால் பார்ப்பது எல்லாமே குருடனாகயிருந்தவனுக்கு புதிதாகவும் ஆச்சரியமானதாகவும் இருக்கிறது. தான் பார்வையடைந்ததற்காக இயேசுகிறிஸ்துவுக்கு நன்றியுள்ள இருதயத்தோடு நடந்து வந்து கொண்டிருக்கிறான். தனக்கு பார்வையைக்கொடுத்த இயேசுகிறிஸ்துவைக் காணவேண்டுமென்று ஆசையோடு வருகிறான். ஆனால் "அவர் இயேசு என்னப்பட்ட ஒருவர்" என்பதைத் தவிர, அவனுக்கு அவரைப்பற்றி வேறு எதுவும் தெரியவில்லை. அவர் எப்படியிருப்பாரென்றோ, அவர் எங்கேயிருக்கிறாரென்றோ இவனுக்குத் தெரியவில்லை. இயேசுகிறிஸ்து தம்முடைய கிருபையினால் நம்முடைய ஆத்துமாவில் கிரியை செய்யும்போது இப்படித்தான் மாற்றம் உண்டாகும். நம்முடைய ஆத்துமாவில் ஏற்பட்டிருக்கும் மாற்றத்தை நாம் காண்போம். ஆனால் இப்படிப்பட்ட மாற்றத்தை உண்டுபண்ணிய இரட்சகரின் கரத்தை நம்மால் பார்க்க முடியாது.

## அதிகாரம் - 9

### பரிசேயரின் விசாரணை
### யோவா 9 : 13-17

**யோவா 9:13. குருடனாயிருந்த அவனைப் பரிசேயரிடத்திற்குக் கொண்டுபோனார்கள்.**

**யோவா 9:14. இயேசு சேறுண்டாக்கி, அவன் கண்களைத் திறந்த நாள் ஓய்வுநாளாயிருந்தது.**

**யோவா 9:15. ஆகையால் பரிசேயரும் அவனை நோக்கி: நீ எப்படிப் பார்வையடைந்தாய் என்று மறுபடியும் கேட்டார்கள். அதற்கு அவன்: அவர் என் கண்களின்மேல் சேற்றைப் பூசினார், நான் கழுவினேன், காண்கிறேன் என்றான்.**

**யோவா 9:16. அப்பொழுது பரிசேயரில் சிலர்: அந்த மனுஷன் ஓய்வுநாளைக் கைக்கொள்ளாததினால் அவன் தேவனிடத்திலிருந்து வந்தவனல்ல என்றார்கள். வேறுசிலர்: பாவியாயிருக்கிற மனுஷன் இப்படிப்பட்ட அற்புதங்களை எப்படிச் செய்வான் என்றார்கள். இவ்விதமாய் அவர்களுக்குள்ளே பிரிவினையுண்டாயிற்று.**

**யோவா 9:17. மறுபடியும் அவர்கள் குருடனை நோக்கி: உன் கண்களைத் திறந்தானே, அவனைக்குறித்து நீ என்ன சொல்லுகிறாய் என்றார்கள். அதற்கு அவன்: அவர் தீர்க்கதரிசி என்றான்.**

**பரிசேயரிடத்திற்குக் கொண்டுபோனார்கள்**

**குருடனாயிருந்த அவனைப் பரிசேயரிடத்திற்குக் கொண்டுபோனார்கள் (யோவா 9:13).**

இயேசுகிறிஸ்து பிறவிக்குருடனுக்குப் பார்வை கொடுத்தது மிகப்பெரிய அற்புதம். இயேசுகிறிஸ்துவின் அற்புத வல்லமையைப் பார்த்து அவருடைய சத்துருக்கள் எல்லோரும் அடங்கிப்போயிருக்க வேண்டும். இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாக அவர்கள் தூஷண வார்த்தைகளைப் பேசாமல் அவருடைய உபதேசத்தை ஏற்றுக்கொண்டு அவரிடத்தில் விசுவாசம் வைத்திருக்க வேண்டும். ஆனால் இந்த ஜனங்களோ தங்கள் இருதயத்தை மேலும் கடினப்படுத்துகிறார்கள். இயேசு கிறிஸ்துவிடத்தில் விசுவாசம் வைப்பதற்குப் பதிலாக அவர்மீது மேலும் அதிகமாகக் கோபமடைகிறார்கள். அவரைத் தீர்க்கதரிசியாக அங்கீகரித்து அவருடைய வார்த்தையை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக, அவரை ஒரு குற்றவாளியைப்போலத் துன்புறுத்துகிறார்கள்.

குருடனாயிருந்தவனை ஜனங்கள் பரிசேயரிடத்திற்கு கொண்டுபோகிறார்கள். ஒருவேளை இவர்கள் நல்ல நோக்கத்தோடு இவனைப் பரிசேயரிடத்திற்கு கொண்டு போயிருக்கலாம். பரிசேயர்கள் இயேசுகிறிஸ்துவின்மீது குற்றம் சுமத்துகிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ மனுஷருக்கு நன்மை செய்கிறாரென்பதை நிரூபிப்பதற்காக, இவர்கள் குருடனாயிருந்தவனைப் பரிசேயரிடத்திற்கு கொண்டுபோயிருக்கலாம். இதன் மூலமாக இயேசுகிறிஸ்து தேவனால் அனுப்பப்பட்டவர் என்பதை இவர்கள் நிரூபிக்க விரும்பியிருக்கலாம்.

குருடனாயிருந்தவனைப் பரிசேயரிடத்திற்கு கொண்டு போனதில் ஜனங்களுக்கு தீய எண்ணம் இருப்பதற்குக்கூட வாய்ப்புள்ளது. இயேசுகிறிஸ்துவை இப்படியே விட்டுவிடக்கூடாது என்றும், அவரை விரைவில் பிடித்துத் தண்டிக்க வேண்டுமென்றும், இல்லையென்றால் இயேசுகிறிஸ்துவின் மூலமாக ஜனங்கள் மத்தியிலே இப்படிப்பட்ட குழப்பம் உண்டாகும் என்பதை பரிசேயருக்குக் காண்பிப்பதற்காக இவர்கள் குருடனாயிருந்தவனை அவர்களிடத்திற்கு கொண்டுபோயிருக்கலாம்.

**ஓய்வுநாளாயிருந்தது**

**இயேசு சேறுண்டாக்கி, அவன் கண்களைத் திறந்த நாள் ஓய்வுநாளாயிருந்தது (யோவா 9:14).**

இயேசுகிறிஸ்து செல்லும் இடங்களுக்கெல்லாம் நன்மை செய்கிறவராகவே சுற்றித் திரிகிறார். ஆனால் ஜனங்களோ தீய எண்ணத்தோடு அவர் செய்த நன்மைகளையெல்லாம் தீமைகளாக சித்தரிக்க முயற்சிபண்ணுகிறார்கள். இயேசுகிறிஸ்து எதைச் செய்தாலும் அதில் குற்றம் கண்டுபிடிக்கிறார்கள். இயேசுகிறிஸ்து சேறுண்டாக்கி குருடனுடைய கண்களைத் திறந்த நாள் ஓய்வுநாளாயிருக்கிறது. யூதருடைய முன்னோர்களின் பாரம்பரியத்தின்படி ஓய்வுநாளில் யாரும் ஒரு வேலையும் செய்யக்கூடாது. இயேசுவின் கிரியை ஓய்வுநாள் பிரமாணத்தை மீறிய செயலாக அவர்களுக்குத் தெரிகிறது. பிறவிக்குருடனுடைய கண்களைத் திறந்தது மிகவும் நன்மையான வேலை. ஆனால் அவர்களோ இதைத் தங்களுக்குச் சாதகமாக, இயேசுவுக்கு விரோதமாக வியாக்கியானம் பண்ணுகிறார்கள்.

## அதிகாரம் - 9

இயேசுகிறிஸ்து இந்த அற்புதத்தை ஏன் ஓய்வுநாளில் செய்யவேண்டும் என்பது இவர்களுடைய கேள்வி. ஓய்வுநாளில் வேலை செய்ததினால் இயேசுகிறிஸ்து யூதருடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படியாமல் போய்விடுகிறார் என்பது இவர்கள் அவர்மீது கூறும் குற்றச்சாட்டு. இயேசு உமிழ்நீரினால் சேறுண்டாக்கி, குருடனுடைய கண்களின்மேல் பூசுகிறார். அதையும் ஓய்வுநாளில் செய்கிறார். இயேசுகிறிஸ்து ஓய்வுநாளில் ஏன் சேறுண்டாக்கி அவனுடைய கண்களின்மேல் பூசவேண்டும் என்றும், சேறுண்டாக்காமல், அதை அவனுடைய கண்களின்மேல் பூசாமல், அவனுடைய கண்களைத் திறந்திருக்கக்கூடாதா என்றும், யூதர்கள் இயேசுவுக்கு விரோதமாகக் கேள்வி எழுப்புகிறார்கள்.

இயேசுகிறிஸ்து தம்மை அனுப்பின பிதாவுக்கு மாத்திரமே கீழ்ப்படிகிறவர். அவருடைய சித்தத்தின்படி மாத்திரமே செயல்படுகிறவர். பரிசேயர், வேதபாரகர் ஆகியோரின் அதிகாரத்திற்கு இயேசுகிறிஸ்து ஒருபோதும் கீழ்ப்படிகிறவரல்ல. இயேசுகிறிஸ்து தேவனுடைய பிரமாணத்தின்படியே கிரியை நடப்பிக்கிறார். யூதர்களுடைய பிரமாணத்தின்படி இயேசு கிரியை செய்யவில்லை. ஓய்வுநாளில் பிறவிக்குருடனுடைய கண்களைத் திறந்ததினால், இயேசுகிறிஸ்து ஓய்வுநாள் பிரமாணத்தை மீறிவிடவில்லை. ஓய்வுநாளில் அத்தியாவசியமான வேலைகளைச் செய்யலாமென்றும், கிருபையும் இரக்கமும் நிறைந்த கிரியைகளை நிறைவேற்றலாமென்றும் யூதருடைய பிரமாணம் அங்கீகரிக்கிறது. ஓய்வுநாளை ஆசரிப்பதினால் நாம் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யாமல் விட்டுவிடக்கூடாது. மனுஷனுக்காகவே ஓய்வுநாள் உண்டாக்கப்பட்டிருக்கிறது. ஓய்வுநாளுக்காக மனுஷன் உண்டாக்கப்படவில்லை.

**நீ எப்படிப் பார்வையடைந்தாய்**

**ஆகையால் பரிசேயரும் அவனை நோக்கி: நீ எப்படிப் பார்வையடைந்தாய் என்று மறுபடியும் கேட்டார்கள். அதற்கு அவன்: அவர் என் கண்களின்மேல் சேற்றைப் பூசினார், நான் கழுவினேன், காண்கிறேன் என்றான் (யோவா 9:15).**

குருடனாயிருந்தவனிடம் பரிசேயர்கள் கேள்விக்குமேல் கேள்விகேட்டு அவனை விசாரிக்கிறார்கள். பரிசேயருடைய இருதயத்தில் அன்போ, இரக்கமோ, நற்குணமோ எதுவுமில்லை. குருடனாயிருந்து பார்வையடைந்தவன்மீது இவர்களுக்கு சிறிதும் அக்கறையில்லை. அவன் பார்வையடைந்ததற்காக பரிசேயர்கள் கொஞ்சமும் சந்தோஷப்படவில்லை. இவர்கள் கிறிஸ்துவின்மீது கோபத்தோடிருக்கிறார்கள். தெய்வத்துவத்தை விடவும், மனுஷ நேயத்தைவிடவும் இவர்களுக்கு இயேசுகிறிஸ்துவின் மீதுள்ள கோபமே பெரிதாயிருக்கிறது. இயேசுவைத் தண்டிப்பதற்காக வாய்ப்புக்களைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள்.

"நீ எப்படிப் பார்வையடைந்தாய்" என்று குருடனாயிருந்தவனிடம் பரிசேயர் கேட்கிறார்கள். இதே கேள்வியைத்தான் சற்று நேரத்திற்கு முன்பு இவனுடைய அயலகத்தார் இவனிடத்தில் கேட்டார்கள். "உன் கண்கள் எப்படித் திறக்கப்பட்டது" (யோவா 9:10) என்று அவர்கள் கேட்டார்கள். உண்மையைக் கண்டுபிடிக்கவேண்டும் என்னும் ஆர்வம் பரிசேயரிடத்தில் இல்லை. இவன் எப்படிப் பார்வையடைந்தான் என்பதை தெரிந்துகொள்வதில் அவர்களுக்கு அக்கறை எதுவுமில்லை. இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாகக் குற்றம் கண்டுபிடிக்க வேண்டும் என்பதே இவர்களுடைய பிரதான நோக்கம். அதற்கான சமயத்தையும் காரணத்தையும் தேடிக்கொண்டிருக்கிறார்கள்.

குருடனாயிருந்தவன் தன் அயலகத்தாருக்கு பதில் கூறியதுபோலவே, பரிசேயருக்கும் பதில் கூறுகிறான். "அவர் என் கண்களின்மேல் சேற்றைப் பூசினார், நான் கழுவினேன், காண்கிறேன்" என்று கூறுகிறான். தன் அயலகத்தாரிடம் கூறும்போது "இயேசு என்னப்பட்ட ஒருவர் சேறுண்டாக்கி, என் கண்களின்மேல் பூசி சீலோவாம் குளத்திலே கழுவு என்றார். அப்படியே நான் போய் கழுவி பார்வையடைந்தேன்" (யோவா 9:11) என்று கூறினான். தன் அயலகத்தாரிடம் இரண்டு சம்பவங்களைக் கூறுகிறான். "நான் போய் கழுவி, பார்வையடைந்தேன்" என்று கூறினான். இப்போதோ தனக்குப் பார்வை கிடைத்ததை பரிசேயரிடம் உறுதியாகக் கூறுகிறான். "நான் கழுவினேன், காண்கிறேன்" என்று அறிவிக்கிறான். தனக்கு முற்றிலும் பார்வை கிடைத்திருப்பதை குருடனாயிருந்தவன் சாட்சியாய் அறிவிக்கிறான்.

## அதிகாரம் - 9

**அவர்களுக்குள்ளே பிரிவினை உண்டாயிற்று**

**அப்பொழுது பரிசேயரில் சிலர் அந்த மனுஷன் ஓய்வுநாளைக் கைக்கொள்ளாததினால் அவன் தேவனிடத்திலிருந்து வந்தவனல்ல என்றார்கள். வேறுசிலர் பாவியாயிருக்கிற மனுஷன் இப்படிப்பட்ட அற்புதங்களை எப்படிச் செய்வான் என்றார்கள். இவ்விதமாய் அவர்களுக்குள்ளே பிரிவினையுண்டாயிற்று (யோவா 9:16).**

இயேசுகிறிஸ்து பிறவிக்குருடனுடைய கண்களைத் திறக்கிறார். இந்தச் சம்பவம் மிகவும் அற்புதமானது. ஆயினும் ஒரு சிலர் இந்தச் சம்பவத்தையும் பயன்படுத்தி இயேசுகிறிஸ்துவைக் குற்றப்படுத்த முயற்சி செய்கிறார்கள். "அந்த மனுஷன் ஓய்வுநாளைக் கைக்கொள்ளாததினால் அவன் தேவனிடத்திலிருந்து வந்தவனல்ல" என்று பரிசேயரில் சிலர் இயேசுகிறிஸ்துவைக் குற்றப்படுத்துகிறார்கள். பரிசேயரின் உபதேசம் இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாக இருக்கிறது. ஓய்வுநாளைக் கைக்கொள்ளாதவர்கள் தேவனிடத்திலிருந்து வந்தவர்களல்ல என்பதே பரிசேயரின் அடிப்படை உபதேசம்.

ஓய்வுநாளை பரிசுத்தமாக ஆசரிக்க வேண்டும் என்பது தேவனுடைய கட்டளை. ஆனால் இந்தக் கட்டளையைப் பயன்படுத்தி இயேசுகிறிஸ்துவின்மீது எந்தவித நியாயமுமில்லாமல் குற்றம் சுமத்துகிறார்கள். இயேசுகிறிஸ்து தேவனுடைய கட்டளையை அங்கீகரிக்கிறார். ஓய்வுநாளை யூதமார்க்கத்தின் பிரகாரமாக ஆசீர்வதிக்கிறார். ஓய்வுநாளில் நன்மை செய்வது தவறல்ல, இது ஓய்வுநாள் பிரமாணத்தை மீறும் செயலாக ஆகாது என்பதே இயேசுகிறிஸ்துவின் உபதேசம். ஆனால் பரிசேயரோ ஓய்வுநாளில் யாரும் எந்த வேலையும் செய்யக்கூடாது என்றும், நன்மையான காரியத்தைக்கூட செய்யக்கூடாது என்றும் உபதேசம்பண்ணுகிறார்கள்.

இயேசுகிறிஸ்து முன்னோர்களின் பாரம்பரியத்தின் பிரகாரமாக ஓய்வுநாளை ஆசரிக்கவில்லை. தேவனுடைய கட்டளையின் பிரகாரமாகவே ஓய்வுநாளை ஆசரிக்கிறார். மார்க்கத்தலைவர்கள் இந்தப் பரிசேயரைப்போல தேவனுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் தங்கள் பாரம்பரியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துவிடுகிறார்கள். மனுஷர்மீது எந்தவித அன்புமில்லாமல், மார்க்கம் என்னும் பெயரில், தங்களுக்கு ஆதாயமாக இருக்கிற காரியங்களை, தேவனுடைய பிரமாணம் என்று அறிவித்து, இவற்றை மனுஷர் கைக்கொள்ள வேண்டுமென்று கட்டாயப்படுத்துகிறார்கள்.

தேவன் ஒரு கட்டளையை கடைப்பிடிக்கச் சொல்லும்போது நம்மீது அன்போடு கூறுகிறார். ஆனால் பரிசேயர்களோ எந்தவித அன்புமில்லாமல், மனுஷ நேயமுமில்லாமல், தேவன் எதிர்பார்ப்பதைவிட அவருடைய கட்டளைகளைக் கடினப்படுத்துகிறார்கள். தேவனுடைய கட்டளைகளோடு தங்களுடைய சுயவிருப்பங்களையும் சேர்த்துக்கொள்கிறார்கள். முன்னோர்களின் பாரம்பரியத்தில் சொல்லப்பட்டிருக்கிற எல்லாக் கட்டளைகளும் தேவனுடைய கட்டளைகள் என்று விவாதம்பண்ணக்கூடாது. நாம் கடைப்பிடிக்கிற பழக்க வழக்கங்கள் எல்லாமே நீதியானவை என்றும், நியாயமானவை என்றும் வழக்காடக்கூடாது. தேவனுடைய பிரமாணம் மாத்திரமே நீதியானது. அவருடைய கட்டளை மாத்திரமே நியாயமானது.

பரிசேயர்களில் சிலர் இயேசுகிறிஸ்துவின்மீது குற்றப்படுத்திப் பேசினாலும், வேறு சிலர் அவருக்கு ஆதரவாகவும், சாதகமாகவும் பேசுகிறார்கள். "பாவியாயிருக்கிற மனுஷன் இப்படிப்பட்ட அற்புதங்களை எப்படிச் செய்வான்" என்று கேட்கிறார்கள். இயேசுகிறிஸ்துவுக்கு இவர்கள் சாட்சியாக இருக்கிறார்கள். அவருடைய சத்துருக்கள் மத்தியிலும் இப்படிப்பட்ட நல்லவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். பிறவிக்குருடனுடைய கண்கள் திறக்கப்பட்டிருப்பது எல்லோருக்கும் பிரத்தியட்சமாகத் தெரிகிறது. இது மெய்யாகவே ஓர் அற்புதமான கிரியை. இப்படிப்பட்ட அற்புதத்தைப் பாவியாயிருக்கிற எந்த மனுஷனாலும் செய்ய முடியாது. தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறவரால் மாத்திரமே இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமுடியும்.

## அதிகாரம் - 9

பாவிகள் மாய்மாலமான காரியங்களைச் செய்வார்கள். ஜனங்களை ஏமாற்றுவதற்காக எதையாவது செய்து மோசடி வேலை பண்ணுவார்கள். ஆனால் இயேசுகிறிஸ்து செய்வதோ மெய்யான அற்புதம். இது தேவனுடைய வல்லமைக்கு அடையாளம். தேவனிடத்திலிருந்து வந்திருக்கிற இயேசுகிறிஸ்துவினால் மாத்திரமே இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமுடியும். இவ்வாறாக இயேசுகிறிஸ்துவைக்குறித்து ஒரு சிலர் தவறாகவும், வேறு சிலர் அவருக்கு ஆதரவாகவும் பேசுகிறார்கள். இவ்விதமாய் அவர்களுக்குள்ளே பிரிவினை உண்டாயிற்று. தம்முடைய சத்துருக்களின் ஆலோசனைகளைத் தேவன் முறியடிக்கிறார். அவர்களுக்குள் ஒற்றுமையில்லாமல் செய்து, அவர்கள் மத்தியில் பிரிவினை உண்டாக்கி, அவர்களுடைய துன்மார்க்கமான ஆலோசனைகளை அழித்துப்போடுகிறார்.

**அவர் தீர்க்கதரிசி**

**மறுபடியும் அவர்கள் குருடனை நோக்கி: உன் கண்களைத் திறந்தானே, அவனைக்குறித்து நீ என்ன சொல்லுகிறாய் என்றார்கள். அதற்கு அவன்: அவர் தீர்க்கதரிசி என்றான் (யோவா 9:17).**

பரிசேயருக்குள் பிரிவினை உண்டானாலும், பிறவிக்குருடன் எப்படிப் பார்வையடைந்தான் என்பதை அறிந்துகொள்வதில் ஆவலாயிருக்கிறார்கள். அவர்கள் மறுபடியும் குருடனாயிருந்தவனை நோக்கி "உன் கண்களைத் திறந்தானே, அவனைக்குறித்து நீ என்ன சொல்லுகிறாய்" என்று கேட்கிறார்கள். குருடனாயிருந்தவன் தங்களுக்குச் சாதகமாகப் பேசுவான் என்று பரிசேயர் எதிர்பார்க்கிறார்கள். பரிசேயரின் கூட்டம் அதிகமாயிருப்பதினால், குருடனாயிருந்தவன் பரிசேயருக்குப் பயந்து, இவர்களைப் பிரியப்படுத்தும் விதமாக, இயேசுகிறிஸ்துவைப்பற்றி மேன்மையான வார்த்தை ஒன்றும் சொல்லமாட்டான் என்றும் எதிர்பார்க்கிறார்கள்.

குருடனாயிருந்தவன் இயேசு கிறிஸ்துவைப் புகழ்ந்துபேசினால் பரிசேயர் அவனைத் தண்டிப்பார்கள். இந்த தண்டனையைப்பார்த்து, மற்றவர்களும் பயந்துபோய், இயேசுகிறிஸ்துவைப் புகழ்ந்துபேசமாட்டார்கள் என்று பரிசேயர் எதிர்பார்க்கிறார்கள்.

பரிசேயரில் மற்றொரு பிரிவினர் இயேசுகிறிஸ்துவைப்பற்றி அறிந்துகொள்ள விரும்புகிறார்கள். அவர் எப்படிப்பட்டவர் என்பது குருடனாயிருந்தவனுக்கு நன்றாகத் தெரியும் என்று எதிர்பார்க்கிறார்கள். ஆகையினால் இயேசுகிறிஸ்துவைப்பற்றி குருடனாயிருந்தவன் என்ன சொல்லுகிறான் என்பதை அறிந்துகொள்ள ஆவலாயிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து யாருடைய கண்களைத் திறந்திருக்கிறாரோ, அவர்களால் அவரைப்பற்றி நன்றாகச் சொல்லமுடியும். தங்கள் கண்களைத் திறந்தவர் யார் என்றும், அவர் எப்படிப்பட்டவரென்றும் அவர்களால் சாட்சி கூறமுடியும்.

பரிசேயரின் கேள்விக்கு குருடனாயிருந்தவன் மிகவும் சுருக்கமான, எளிமையான, நேரடியான பதிலைக் கூறுகிறான். "அவர் தீர்க்கதரிசி" என்று அறிவிக்கிறான். இயேசுகிறிஸ்துவே மேசியா என்றும், அவரே பிரதான தீர்க்கதரிசியென்றும் இவனுக்குத் தெரியாது. பிறவியிலிருந்தே இவன் குருடனாகவே இருந்திருக்கிறான். இதுவரையிலும் இவன் இயேசுகிறிஸ்துவைப்பற்றிய உபதேசத்தைக் கேள்விப்பட்டதுமில்லை, அவரைப்பற்றிச் சிந்தித்துத் தியானம்பண்ணியதுமில்லை. இவனுடைய கண்கள் இப்போது திறக்கப்பட்டிருக்கிறது. தனக்குக் கிடைத்திருக்கும் அனுபவத்தின் அடிப்படையில், இவன் தன்னுடைய கண்களைத் திறந்த இயேசுகிறிஸ்துவைப்பற்றிச் சிந்தித்துப் பார்க்கிறான். இவனால் நன்றாகச் சிந்திக்க முடியவில்லையென்றாலும், அவரைப்பற்றிப் போதுமான அளவு சிந்திக்கிறான்.

குருடனாயிருந்த பிச்சைக்காரன் தேவனுடைய ராஜ்யத்தைப்பற்றிய காரியங்களைத் தெளிவாக அறிந்திருக்கிறான். யூதமார்க்கத்தின் தலைவர்களைவிட, பரிசேயர்களையும் வேதபாரகர்களையும்விட இவன் தேவனுடைய ராஜ்யத்தைப்பற்றியும், இயேசுகிறிஸ்துவைப் பற்றியும் தெளிவாகப் பேசுகிறான். அவர் ஒரு தீர்க்கதரிசி என்று சத்தியத்தை வார்த்தையை அறிவிக்கிறான். பரிசேயர்களோ தேவனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவைப் பிசாசு பிடித்தவனென்றும், பாவியென்றும், பைத்தியக்காரனென்றும் தங்கள் வாய்க்கு வந்தபடியெல்லாம் பேசுகிறார்கள். இவர்களுக்கு கண்கள் இருந்தும் தேவனுடைய காரியங்களை காணமுடியாத குருடர்களாயிருக்கிறார்கள்.

## அதிகாரம் - 9

### தாய் தகப்பன்மாரிடம் விசாரணை

### யோவா 9 : 18-23

**யோவா 9:18. அவன் குருடனாயிருந்து பார்வையடைந்ததை யூதர்கள் நம்பாமல், பார்வையடைந்தவனுடைய தாய்தகப்பன்மாரை அழைப்பித்து,**

**யோவா 9:19. அவர்களை நோக்கி: உங்கள் குமாரன் குருடனாய்ப் பிறந்தான் என்று சொல்லுகிறீர்களே, அவன் இவன்தானா? இவனானால், இப்பொழுது இவன் எப்படிப் பார்வையடைந்தான் என்று கேட்டார்கள்.**

**யோவா 9:20. தாய்தகப்பன்மார் பிரதியுத்தரமாக: இவன் எங்கள் குமாரன்தான் என்றும், குருடனாய்ப் பிறந்தான் என்றும் எங்களுக்குத் தெரியும்.**

**யோவா 9:21. இப்பொழுது இவன் பார்வையடைந்த வகை எங்களுக்குத் தெரியாது; இவன் கண்களைத் திறந்தவன் இன்னான் என்பதும் எங்களுக்குத் தெரியாது; இவன் வயதுள்ளவனாயிருக்கிறான், இவனைக் கேளுங்கள், இவனே சொல்லுவான் என்றார்கள்.**

**யோவா 9:22. அவனுடைய தாய்தப்பன்மார் யூதர்களுக்குப் பயந்ததினால் இப்படிச் சொன்னார்கள். ஏனெனில் இயேசுவைக் கிறிஸ்து என்று எவனாவது அறிக்கை பண்ணினால் அவனை ஜெபஆலயத்துக்குப் புறம்பாக்கவேண்டுமென்று யூதர்கள் அதற்குமுன்னமே கட்டுப்பாடு செய்திருந்தார்கள்.**

**யோவா 9:23. அதினிமித்தம்: இவன் வயதுள்ளவனாயிருக்கிறான், இவனையே கேளுங்கள் என்று அவன் தாய்தகப்பன்மார் சொன்னார்கள்.**

### அவன் இவன்தானா

**அவன் குருடனாயிருந்து பார்வையடைந்ததை யூதர்கள் நம்பாமல், பார்வையடைந்தவனுடைய தாய்தகப்பன்மாரை அழைப்பித்து, அவர்களை நோக்கி: உங்கள் குமாரன் குருடனாய்ப் பிறந்தான் என்று சொல்லுகிறீர்களே, அவன் இவன்தானா? இவனானால், இப்பொழுது இவன் எப்படிப் பார்வையடைந்தான் என்று கேட்டார்கள் (யோவா 9:18,19).**

குருடனாயிருந்தவன்பார்வையடைந்ததை யூதர்களில் அநேகர் நம்பவில்லை. இவன் உண்மையிலேயே பார்வையடைந்திருப்பானானால், அவன் பார்வையடைந்த விதத்தை அறிந்துகொள்ள வேண்டுமென்று இவர்கள் விரும்புகிறார்கள். சத்தியத்தை அறிந்துகொள்ள வேண்டும் என்னும் ஆவல் இவர்களிடத்தில் இல்லை. தேவபக்தியற்றவர்களாக, இயேசுகிறிஸ்துவின் மீது நம்பிக்கையற்றவர்களாக, தங்கள் மனதில் தோன்றியிருப்பதை உறுதிபண்ணவே விரும்புகிறார்கள். குருடனாயிருந்தவன் பார்வையடைந்ததை இவர்கள் சந்தேகப்படுகிறார்கள். தமது சந்தேகத்தை நிவிர்த்தி பண்ணவேண்டுமென்று இவர்கள் விசாரிப்பது ஒரு நல்ல காரியம்தான்.

இவர்கள் பார்வையடைந்தவனுடைய தாய் தகப்பன்மாரை அழைப்பித்து, அவர்களிடத்தில், அவர்களுடைய மகனைப்பற்றி விசாரிக்கிறார்கள். அற்புதம் நடைபெறவில்லை என்பதை நிரூபிக்க வேண்டும் என்பதே இவர்களுடைய விருப்பம். இயேசுகிறிஸ்துவோ இவர்களுடைய துன்மார்க்கமான ஆலோசனைகளை அதம்பண்ணிப்போடுகிறார். தம்முடைய வார்த்தையை அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் உறுதிபண்ணுகிறார். இவர்கள் குருடனுடைய பெற்றோர்களிடம் "குருடனாய் பிறந்தான் என்று சொல்லுகிறீர்களே அவன் இவன்தானா என்றும், அப்படியானால் இப்பொழுது இவன் எப்படிப் பார்வையடைந்தான்" என்றும் கேட்கிறார்கள். இப்படிப்பட்ட அற்புதம் நடப்பதற்கு வாய்ப்பேயில்லை, ஆகையினால் இவன் உங்களுடைய மகன் அல்ல என்று கூறிவிடுமாறு அவனுடைய பெற்றோர்களிடம் கட்டாயப்படுத்துவது போலப் பேசுகிறார்கள்.

### இவன் எங்கள் குமாரன்தான்

**தாய்தகப்பன்மார் பிரதியுத்தரமாக: இவன் எங்கள் குமாரன்தான் என்றும், குருடனாய்ப் பிறந்தான் என்றும் எங்களுக்குத் தெரியும் (யோவா 9:20).**

பரிசேயர்கள் சத்தியத்தின் வெளிச்சத்தைக் காணமுடியாத குருடர்களாக இருக்கிறார்கள். இவர்கள் இருட்டில் இருக்கும் இருளின் பிள்ளைகள். தங்கள் கண்களை மூடிக்கொண்டு, வெளிச்சத்தைக் காணாமல், எல்லாம் இருளாயிருக்கிறது என்று கூறுகிறவர்கள். பரிசேயரின் கேள்விக்கு குருடனுடைய பெற்றோர் தெளிவான பதிலைக் கூறுகிறார்கள். தங்களுக்குத் தெரிந்ததையும், தாங்கள் நம்புவதையும் இவர்கள் அறிவிக்கிறார்கள். "இவன் எங்கள் குமாரன்தான் என்றும், குருடனாய்ப் பிறந்தான் என்றும் எங்களுக்குத் தெரியும்" என்று சாட்சி கூறுகிறார்கள்.

## அதிகாரம் - 9

தங்களுடைய குமாரன் பிறவியிலேயே குருடனாய்ப் பிறந்ததை இவர்களால் மறக்கவே முடியாது. அது சோகம் நிறைந்த சம்பவம். அதைப்பற்றிய வருத்தமான நினைவுகள் இவர்களுடைய இருதயத்தில் ஆழமாகப் பதிந்திருக்கும். அவன் சிறு பிள்ளையாக இருக்கும்போது கண்பார்வையற்றவனாக கீழே தடுமாறி விழுந்ததை இவர்கள் மறக்கவேமாட்டார்கள். மற்ற பிள்ளைகளுக்கெல்லாம் கண்பார்வை நன்றாக இருக்கும்போது, தங்கள் மகன் மட்டும் பார்வையில்லாத குருடனாயிருப்பதை நினைத்து அதிகமாய் வருத்தப்பட்டிருப்பார்கள்.

பரிசேயரின் கேள்விக்கு குருடனுடைய பெற்றோர் "இவன் எங்கள் குமாரன்தான்" என்று பதில் கூறுகிறார்கள். அத்துடன் "இவன் குருடனாய்ப் பிறந்தான் என்று எங்களுக்குத் தெரியும்" என்றும் கூறுகிறார்கள். குருடனாயிருந்தவன் தங்களுடைய மகன்தான் என்று உறுதியாகச் சொன்னாலும், அவன் பார்வையடைந்த வகை தங்களுக்குத் தெரியாது என்பதை மிகவும் கவனமாக மறுதலித்துவிடுகிறார்கள்.

**இவனையே கேளுங்கள்**

**இப்பொழுது இவன் பார்வையடைந்த வகை எங்களுக்குத் தெரியாது; இவன் கண்களைத் திறந்தவன் இன்னான் என்பதும் எங்களுக்குத் தெரியாது; இவன் வயதுள்ளவனாயிருக்கிறான், இவனைக் கேளுங்கள், இவனே சொல்லுவான் என்றார்கள் (யோவா 9:21).**

பிறவிக்குருடனுடைய கண்களை இயேசுகிறிஸ்து எப்படித் திறந்தார் என்பது இவர்களுக்குத் தெரியாது. இந்தச் சம்பவத்தை இவனுடைய பெற்றோர் தங்கள் கண்களால் கண்ட சாட்சியில்லை. தங்கள் சுயபுத்தியினாலோ, சுயஞானத்தினாலோ இந்த சம்பவத்தைப்பற்றி இவர்களால் எதுவும் உறுதியாகச் சொல்லமுடியாது. ஆகையினால் மிகவும் கவனமாக "இவன் பார்வையடைந்த வகை எங்களுக்குத் தெரியாது, இவன் கண்களைத் திறந்தவன் இன்னான் என்பதும் எங்களுக்குத் தெரியாது" என்று கூறிவிடுகிறார்கள்.

பிறவிக்குருடனாகயிருந்த தங்களுடைய மகனின் கண்களை இயேசுகிறிஸ்து திறந்திருக்கிறார். இவர்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைக் கனப்படுத்த வேண்டும். இருதயத்தில் நன்றியுள்ளவர்களாக அவருக்குச் சாட்சி சொல்லவேண்டும். ஆனால் பரிசேயர் மத்தியில் இயேசுகிறிஸ்துவைக்குறித்து சாட்சி சொல்ல இந்தப் பெற்றோருக்குத் தைரியமில்லை. அதேவேளையில் இயேசுகிறிஸ்துவை விட்டுக்கொடுக்கவோ, அவரை மறுதலிக்கவோ இவர்களுக்கு மனதில்லை. தாங்கள் சொன்னால் தங்களுக்குப் பிரச்சனை உண்டாகும் என்று பயந்து, இயேசுகிறிஸ்துவைப்பற்றி இவர்கள் எதுவும் பேசவில்லை. அதேவேளையில் இயேசுவைப்பற்றி பேசுவதற்கு தங்களுடைய மகனை ஒப்புக்கொடுக்கிறார்கள்.

தங்களுடைய மகன் வயதுள்ளவனாயிருக்கிறான் என்றும், இவனைக் கேட்டால், இவனே தான் பார்வையடைந்த வகையை அவர்களுக்குச் சொல்லுவான் என்றும் அவனுடைய பெற்றோர் அறிவிக்கிறார்கள். இவன் குருடனாகப் பிறந்திருந்தாலும், மற்ற மனுஷர்களைவிட காரியங்களைச் சரியாகப் புரிந்துகொள்கிறான். இவனுடைய பெற்றோர் பிரச்சனையில் சிக்கிக்கொள்ள விரும்பவில்லை. ஆகையினால் தங்களுக்குத் தெரிந்த உண்மையைக்கூட இவர்கள் சாட்சியாகக் கூறப் பயப்படுகிறார்கள்.

பிறவிக்குருடன் கண் பார்வையற்றவனாக இருந்தபோதிலும் மற்றவர்களைவிட காரியங்களைத் தெளிவாகப் புரிந்துகொள்கிறான். இதுவும் தேவனுடைய கிருபையே. நம்முடைய சரீரத்தின் அவயவங்களில் ஒன்று பலவீனமாக இருந்தாலும், மற்றொன்று அதிக பலமுள்ளதாகயிருக்கிறது. இவன் இதுவரையிலும் குருடனாகயிருந்தாலும் இப்போது வயதுள்ளவனாக இருக்கிறானென்று இவனுடைய பெற்றோர் கூறுகிறார்கள். இவன் குருடனாகயிருந்தாலும் இவனுடைய வயதிற்குத் தகுந்த ஞானமும் தெளிவும் இவனிடத்தில் உள்ளது என்பதை இவனுடைய பெற்றோர் சாட்சியாக கூறுகிறார்கள். யூதர்கள் மூலமாகத் தங்களுக்கு எந்தவிதமான பிரச்சனையும் வந்துவிடக்கூடாது என்று பயந்து, தங்களுடைய மகனை பரிசேயருடைய விசாரணைக்கு ஒப்புக்கொடுத்துவிடுகிறார்கள்.

## அதிகாரம் - 9

### கட்டுப்பாடு செய்திருந்தார்கள்

**அவனுடைய தாய்தகப்பன்மார் யூதர்களுக்குப் பயந்ததினால் இப்படிச் சொன்னார்கள். ஏனெனில் இயேசுவைக் கிறிஸ்து என்று எவனாவது அறிக்கை பண்ணினால் அவனை ஜெபஆலயத்துக்குப் புறம்பாக்கவேண்டுமென்று யூதர்கள் அதற்குமுன்னமே கட்டுப்பாடு செய்திருந்தார்கள். அதினிமித்தம்: இவன் வயதுள்ளவனாயிருக்கிறான், இவனையே கேளுங்கள் என்று அவன் தாய்தகப்பன்மார் சொன்னார்கள் (யோவா 9:22,23).**

குருடனாயிருந்தவனுடைய தாய் தகப்பன்மார் யூதர்களுக்குப் பயப்படுகிறார்கள். அவர்கள் மூலமாகத் தங்களுக்கு எந்தவிதமான தீமையும் வந்துவிடக்கூடாது என்று மிகவும் எச்சரிப்போடு இருக்கிறார்கள். இவர்களுக்கு இவர்களுடைய மகன் முக்கியம்தான். அதைவிட தாங்கள்தான் இவர்களுக்கு முக்கியமானவர்களாக இருக்கிறார்கள். முதலாவதாக தங்களுடைய பாதுகாப்பையே அதிகமாகச் சிந்திக்கிறார்கள்.

யூதருடைய ஆலோசனைச்சங்கத்தார் அவ்வப்போது சில தீர்மானங்களை இயற்றுவது வழக்கம். இயேசுவைக் கிறிஸ்து என்று எவனாவது அறிக்கைபண்ணினால் அவனை ஜெபாலத்திற்கு புறம்பாக்க வேண்டுமென்று யூதர்கள் ஏற்கெனவே கட்டுப்பாடு செய்திருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியாவாக யாரும் அங்கீகரிக்கக்கூடாது. நாசரேத்து ஊராராகிய இயேசுகிறிஸ்துவை யாரும் பின்பற்றக்கூடாது. அவரைக் கிறிஸ்து என்று யாராவது அறிக்கை செய்தால், யூதருடைய ஆலோசனைச்சங்கத்தார் அவர்களுக்குத் தண்டனை கொடுப்பார்கள்.

மேசியா வரப்போகிறாரென்று யூதர்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆனாலும் இயேசுகிறிஸ்துதான் தாங்கள் எதிர்பார்க்கிற மேசியா என்று அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. அவையாவன: 1. இயேசுகிறிஸ்து முன்னோர்களின் பாரம்பரியத்தை முழுவதுமாக அங்கீகரிக்கவில்லை. 2. இயேசுகிறிஸ்துவின் வெளித்தோற்றம் இவர்கள் எதிர்பார்க்கிற தோற்றத்தின் பிரகாரமாக இல்லை.

முன்னோர்களின் பாரம்பரியத்திற்கு யூதர்கள் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ ஆவிக்குரிய ஆராதனைக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார். முன்னோர்களின் பாரம்பரியத்தில் இயேசுகிறிஸ்து அதிக கவனம் செலுத்தவில்லை. தாழ்மை, மனந்திரும்புதல், சுயத்தை வெறுப்பது ஆகிய உபதேசங்களெல்லாமே ஆலோசனைச் சங்கத்தாருக்குப் புதுமையாக இருக்கிறது. இப்படிப்பட்ட உபதேசம் எதையும் இவர்கள் இதுவரையிலும் கேட்டதேயில்லை. மனத்தாழ்மைக்குப் பதிலாக பெருமையோடு இருக்கவேண்டும் என்பதே இவர்களுடைய விருப்பம்.

இயேசுகிறிஸ்துவின் வாக்குத் தத்தங்களும், அவருடைய தோற்றமும் யூதர்களுடைய பாரம்பரிய நம்பிக்கைகளுக்கு முற்றிலும் முரண்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்து மனத்தாழ்மையுள்ளவராக இருக்கிறார். தரித்திரருக்கும், பாவிகளுக்கும், ஆயக்காரருக்கும் சிநேகிதராகயிருக்கிறார். இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் தங்களைத்தாங்களே வெறுத்து தங்கள் சிலுவைகளை எடுத்துக்கொண்டு இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றிச் செல்லவேண்டும். கிறிஸ்துவுக்காகப் பாடுகளையும், சோதனைகளையும், வேதனைகளையும் சகித்துக்கொள்ள வேண்டும். இயேசுகிறிஸ்துவின் உபதேசம் யூதமார்க்கத்துத் தலைவர்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தைக் கொடுக்கிறது. பரிசேயரால் இயேசுவின் உபதேசத்தை சிறிதளவும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இயேசுவின் உபதேசம் சரியானதா அல்லது தவறானதா என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்ப்பதற்குக்கூட ஆயத்தமாகயில்லை. இயேசுகிறிஸ்துவையும் அவருடைய உபதேசத்தையும் அழித்துப் போடவேண்டுமென்று சதிஆலோசனை பண்ணுகிறார்கள்.

இயேசுவைக் கிறிஸ்து என்று எவனாவது அறிக்கைபண்ணினால் அவனுக்கு தண்டனை கொடுக்கவேண்டும் என்றும் ஆலோசனைச்சங்கத்தார் தீர்மானம் செய்திருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவுக்கு யாராவது சீஷராக இருந்தால் அவரை ஜெபாலயத்திற்கு புறம்பாக்கிவிடுவார்கள். இவ்வாறு ஒருவர் ஜெபாலத்திலிருந்து வெளியேற்றப்பட்டுவிட்டால், யூதர் மத்தியில் அவருக்கு மதிப்பும் மரியாதையும் கிடைக்காது. ஜெபாலயங்களில் அவருக்கு ஒரு சலுகையும் காண்பிக்கப்படமாட்டாது. ஜெபாலயத்தில் மாத்திரமல்ல, சமுதாயத்திலும் இவர்கள் ஒதுக்கி வைக்கப்படுவார்கள்.

## அதிகாரம் - 9

இயேசுகிறிஸ்துவின் பரிசுத்தமான மார்க்கத்திற்கு ஆரம்பத்திலிருந்தே இப்படித்தான் எதிர்ப்புக்கள் உண்டாயிற்று. இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றி அவருடைய உபதேசத்தை ஏற்றுக்கொள்கிறவர்கள் துன்புறுத்தப்பட்டார்கள். சபைக்கு நல்லவர்கள்தான் மூப்பராக இருக்கவேண்டும். துன்மார்க்கர் சபையின் ஆளுகைக்குள் நுழைந்துவிட்டால் சபையின் செயல்பாடுகள் சீர்கெட்டுப்போகும். துன்மார்க்கர்கள் தங்களுக்குப் பிரியமான காரியங்களை, தேவனுடைய பெயராலும் மார்க்கத்தின் பெயராலும் செய்துவிடுவார்கள்.

யூதர்களைப் பொறுத்தளவில் ஜெபாலயத்திற்குப் புறம்பாக்குவது ஒரு தண்டனையாக இருக்கலாம். ஆனால் கர்த்தருக்காக நாம் பாடுகளை அனுபவிக்கும்போது, அந்தப் பாடுகளே நமக்கு ஆசீர்வாதமாக இருக்கும். மனுஷருடைய தயவைவிட தேவனுடைய தயவே நமக்கு அதிகமாகத் தேவை. இயேசுவே கிறிஸ்து என்று அறிக்கை பண்ணுகிறவனை ஜெபாலத்திற்குப் புறம்பாக்க வேண்டுமென்று அதற்கு முன்னமே யூதர்கள் கட்டுப்பாடு செய்திருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் உபதேசம் ஜனங்கள் மத்தியில் வேகமாகப் பரவுவதைக் கண்டு ஆலோசனைச்சங்கத்தார் பயப்படுகிறார்கள். அதை எப்படியாவது ஒடுக்கிப்போட வேண்டுமென்று ஒட்டுமொத்தமாக முயற்சிபண்ணுகிறார்கள்.

யூதருடைய கட்டுப்பாட்டைக் கண்டு குருடனாயிருந்தவனுடைய தாய் தகப்பன்மார் பயப்படுகிறார்கள். அவர்கள் யூதர்களுக்குப் பயந்ததினால் இயேசுகிறிஸ்துவைப்பற்றி ஒன்றும் பேசாமலிருக்கிறார்கள். இவர்களுடைய மகனுக்கு இயேசுகிறிஸ்து மிகப்பெரிய நன்மையைச் செய்திருக்கிறார். ஆனால் இவர்களோ தங்களுடைய மகனுக்கு உதவிசெய்த இயேசுகிறிஸ்துவை மகிமைப்படுத்தாமல் அமைதியாக இருக்கிறார்கள்.

### இரண்டாந்தரம் விசாரணை யோவா 9 : 24-29

**யோவா 9:24. ஆதலால் அவர்கள் குருடனாயிருந்த மனுஷனை இரண்டாந்தரம் அழைத்து: நீ தேவனை மகிமைப்படுத்து; இந்த மனுஷன் பாவியென்று நாங்கள் அறிந்திருக்கிறோம் என்றார்கள்.**

**யோவா 9:25. அவன் பிரதியுத்தரமாக: அவர் பாவியென்று எனக்குத் தெரியாது; நான் குருடனாயிருந்தேன், இப்பொழுது காண்கிறேன்; இது ஒன்றுதான் எனக்குத் தெரியும் என்றான்.**

**யோவா 9:26. அவர்கள் மறுபடியும் அவனை நோக்கி: உனக்கு என்னசெய்தான், உன் கண்களை எப்படித் திறந்தான் என்றார்கள்.**

**யோவா 9:27. அவன் பிரதியுத்தரமாக: முன்னமே உங்களுக்குச் சொன்னேன், நீங்கள் கேளாமற்போனீர்கள்; மறுபடியும் கேட்க வேண்டியதென்ன? அவருக்குச் சீஷராக உங்களுக்கும் மனதுண்டோ என்றான்.**

**யோவா 9:28. அப்பொழுது அவர்கள் அவனைவைது: நீ அவனுடைய சீஷன், நாங்கள் மோசேயினுடைய சீஷர்.**

**யோவா 9:29. மோசேயுடன் தேவன் பேசினாரென்று அறிவோம், இவன் எங்கேயிருந்து வந்தவனென்று அறியோம் என்றார்கள்.**

### தேவனை மகிமைப்படுத்து

**ஆதலால் அவர்கள் குருடனாயிருந்த மனுஷனை இரண்டாந்தரம் அழைத்து: நீ தேவனை மகிமைப்படுத்து; இந்த மனுஷன் பாவியென்று நாங்கள் அறிந்திருக்கிறோம் என்றார்கள் (யோவா 9:24).**

குருடனாயிருந்தவனுடைய பெற்றோர் மிகவும் சாமர்த்தியமாக யூதருடைய ஆலோசனைச்சங்கத்திற்கு தப்பித்துக் கொள்கிறார்கள். இயேசுகிறிஸ்துவைப்பற்றி ஒன்றும் பேசாமல் அமைதியாக இருக்கிறார்கள். ஆனால் பரிசேயரோ இயேசுகிறிஸ்துவை எப்படியாவது குற்றப்படுத்தவேண்டுமென்று தீர்மானமாக இருக்கிறார்கள். இதற்காக குருடனாயிருந்த மனுஷனை இரண்டாந்தரம் அழைத்து, அவனிடத்தில் இயேசுகிறிஸ்துவைப்பற்றி விசாரிக்கிறார்கள். இயேசுகிறிஸ்து இந்தக் குருடனுடைய கண்களைத் திறந்து மிகப்பெரிய அற்புதம் செய்திருக்கிறார். இது பிரத்தியட்சமாக நடைபெற்றிருக்கிற ஒருசம்பவம். இயேசுகிறிஸ்து செய்த அற்புதத்தை யாரும் மறுதலிக்கமுடியாது. இயேசுகிறிஸ்து இவனுடைய கண்களைத் திறந்திருப்பதினால் ஜனங்களுக்கு அவர்மீது மதிப்பும் மரியாதையும் உண்டாயிற்று. அதை எப்படியாவது கெடுத்துவிட்டு, ஜனங்கள் மத்தியில் இயேசுகிறிஸ்துவுக்கு கெட்ட பெயர் உண்டாகவேண்டுமென்று பரிசேயர்கள் முயற்சிசெய்கிறார்கள்.

## அதிகாரம் - 9

குருடனாயிருந்தவனிடம் "நீ தேவனை மகிமைப்படுத்து. இந்த மனுஷன் பாவியென்று நாங்கள் அறிந்திருக்கிறோம்" என்று கூறுகிறார்கள். அவனுக்குத் தங்களுடைய வார்த்தைகளை ஓர் ஆலோசனையாகக் கூறுகிறார்கள். குருடனாயிருந்தவன் தான் குணமானதற்காக தேவனை மாத்திரமே மகிமைப்படுத்த வேண்டுமென்றும், பாவியான மனுஷனாகிய இயேசுகிறிஸ்துவை மகிமைப்படுத்தக்கூடாது என்றும் அவனுக்கு ஆலோசனை சொல்லுகிறார்கள்.

சில சமயங்களில் தேவன் பாவிகளை ஒரு கருவியாகப் பயன்படுத்தி நமக்கு நன்மையைக் கொடுக்கலாம். எல்லா சூழ்நிலைகளிலும் நாம் தேவனைத்தான் மகிமைப்படுத்த வேண்டும். அதேவேளையில் நம்மை ஆசீர்வதிப்பதற்கு தேவன் பயன்படுத்திய பாத்திரங்களிடத்திலும் நாம் நன்றியுள்ளவர்களாக இருக்கவேண்டும். "தேவனை மகிமைப்படுத்து" என்பது மிகவும் அற்புதமான வாக்கியம். ஆனால் பரிசேயர்கள் இந்த வாக்கியத்தை தங்கள் சுயநலத்திற்காகப் பயன்படுத்துகிறார்கள். இந்த வாக்கியத்தைச் சொல்லும்போதே "இந்த மனுஷன் பாவியென்று நாங்கள் அறிந்திருக்கிறோம்" என்றும் கூறுகிறார்கள். ஆகையினால் இயேசுகிறிஸ்துவை மகிமைப்படுத்தாமல் தேவனை மகிமைப்படுத்த வேண்டும் என்பதே பரிசேயரின் ஆலோசனை. இயேசுகிறிஸ்துவும் தேவனும் வெவ்வேறானவர்கள் அல்ல. இயேசுவே தேவன். தேவனே இயேசு.

பரிசேயர்கள் இயேசுகிறிஸ்துவைக் குறிப்பிடுவதற்கு மிகவும் சாதாரண வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார்கள். தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவை "பாவியான மனுஷன்" என்று அழைக்கிறார்கள். பரிசேயர்கள் இயேசுகிறிஸ்துவை இவ்வாறு அழைப்பது அவர்களுடைய அவிசுவாசத்தையும், அவபக்தியையும், மேட்டிமையையும், பெருமையையும் காண்பிக்கிறது. இயேசுகிறிஸ்துவிடத்தில் பாவம் உண்டென்று யாராலும் கூறமுடியாது. "என்னிடத்தில் பாவம் உண்டென்று யார் என்னைக் குற்றப்படுத்தக்கூடும்" (யோவா 8:46) என்று இயேசுகிறிஸ்து யூதர்களிடம் ஏற்கெனவே கேட்டிருக்கிறார். ஆனால் அவர்களால் இதுவரையிலும் இயேசுகிறிஸ்துவைப் பாவியென்று குற்றப்படுத்த முடியவில்லை. இயேசுகிறிஸ்துவின் முதுகுக்கு பின்புறமாக இருந்து அவரைப் பாவியான மனுஷன் என்று அழைக்கிறார்கள்.

இயேசு கிறிஸ்துவைக் குற்றப்படுத்துவதற்கு இவர்களுக்கு எந்தவித முகாந்தரமுமில்லை. இவர்களுடைய பேச்சுக்கு ஆதாரம் எதுவுமில்லை. பொய்க்குற்றம் சாட்டுகிறவர்கள் இப்படித்தான் எந்தவித ஆதாரமுமில்லாமல் தங்கள் மனதிற்குத் தோன்றியபடியெல்லாம் பேசுவார்கள். கர்த்தாதி கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை யூதர்கள் தங்கள் வாயின் வார்த்தைகளினால் மகிமைப்படுத்துவதற்குப் பதிலாகத் தூஷிக்கிறார்கள். இயேசுகிறிஸ்து மனுஷரூபம் எடுத்தபோது, அவர் நமக்கு ஊழியம் செய்கிறவராக ஆனது மாத்திரமல்ல, நமக்காக அவர் பாவமானார். இந்த அவமானத்தையும் இயேசுகிறிஸ்து நமக்காக தம்மீது ஏற்றுக்கொள்கிறார்.

பரிசேயருக்கும்குருடனாயிருந்தவனுக்கும் உரையாடல் நடைபெற்றுக்கொண்டிக்கிறது. இயேசுகிறிஸ்து ஒரு பாவியான மனுஷன் என்று பரிசேயர் கூறுகிறார்கள். இவனோ அவர் ஒரு தீர்க்கதரிசியென்று கூறுகிறான். இவனைப்போலவே இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரர்களாகிய நாம், நம்முடைய இரட்சகரைக்குறித்து தைரியமாக சாட்சி சொல்லவேண்டும். ஒவ்வொரு சூழ்நிலையிலும் நாம் என்ன வார்த்தைகளைப் பேசவேண்டும் என்பதை இயேசுகிறிஸ்து அறிந்திருக்கிறார். நாம் பேசுவதற்கு ஏற்ற வார்த்தைகளை அவரே அப்போது நமக்குக் கொடுப்பார்.

### இது ஒன்றுதான் எனக்குத் தெரியும்

**அவன் பிரதியுத்தரமாக: அவர் பாவியென்று எனக்குத் தெரியாது; நான் குருடனாயிருந்தேன், இப்பொழுது காண்கிறேன்; இது ஒன்றுதான் எனக்குத் தெரியும் என்றான் (யோவா 9:25).**

தன்னிடத்தில் எத்தனைபேர் கேள்விகேட்டாலும் குருடனாயிருந்தவன் மிகவும் தெளிவாகப் பேசுகிறான். இயேசுகிறிஸ்துவின்மீது இவன் வைத்திருக்கும் விசுவாசத்தை பரிசேயர்களால் அசைக்க முடியவில்லை. இவனுடைய விசுவாசம் உறுதியாயிருக்கிறது. தனக்குத் தெரிந்த காரியத்தில் இவன் தெளிவாகயிருக்கிறான். தன்னிடத்தில் இயேசுகிறிஸ்துவைப்பற்றி கேட்கிற பரிசேயருக்கு பிரதியுத்தரமாக "அவர் பாவியென்று எனக்குத் தெரியாது" என்று அறிவித்துவிடுகிறான். தனக்குத் தெரியாததை தெரியாது என்று தெளிவாகப் பேசுகிறான்.

## அதிகாரம் - 9

அதேவேளையில் தனக்குத் தெரிந்ததை இவன் மறைக்கவில்லை. அவர்களிடம் "நான் குருடனாயிருந்தேன். இப்பொழுது காண்கிறேன். இது ஒன்றுதான் எனக்குத் தெரியும்" என்று தனக்குத் தெரிந்த உண்மையைப்பேசுகிறான். ஆகையினால் இயேசுகிறிஸ்து ஒரு தீர்க்கதரிசியாக இருக்கவேண்டுமென்பது இவனுடைய நம்பிக்கை. இயேசுகிறிஸ்துவைப்பற்றி இவன் நல்லவார்த்தைகளைப் பேசுகிறான். தன்னுடைய கண்கள் திறக்கப்பட்டதைக் குறித்து மறைக்காமல் சாட்சி கூறுகிறான். பரிசேயர்கள் இயேசுகிறிஸ்துவைப் பாவியான மனுஷனென்று குற்றப்படுத்துகிறார்கள். குருடனாயிருந்தவனோ மிகவும் ஞானமாக அதைப்பற்றிப் பேச மறுத்துவிடுகிறான். அவர் பாவியென்று தனக்குத் தெரியாது என்று அறிவித்துவிடுகிறான். தனக்குத் தெரியாததை தெரிந்ததுபோல பேசி ஜனங்கள் மத்தியில் இவன் நல்ல பெயர் எடுப்பதை விரும்பவில்லை. தன்னை மனுஷர் புகழவேண்டுமென்றும் இவன் ஆசைப்படவில்லை.

இயேசுகிறிஸ்துவின் வல்லமையையும் கிருபையையும், இரக்கத்தையும் இவன் ருசித்துப் பார்த்திருக்கிறான். இவனால் தன்னுடைய சொந்த அனுபவத்தை மாத்திரமே சாட்சியாகக் கூறமுடியும். இவன் பார்வையடைந்ததை யாரும் மறுக்கவில்லை. அதைக்குறித்து இங்கு விவாதம் நடைபெறவில்லை. இயேசுகிறிஸ்துவின் அற்புதம் இப்படித்தான் பூரணமாக நடைபெறும். சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிறைவான அற்புதம் உண்டாகும். தேவனுடைய இரக்கம் தவணை முறையில் வெளிப்படுத்தப்படுவதில்லை. இயேசுகிறிஸ்துவின் இரக்கத்தைப் பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு அவர் இரக்கமுள்ளவர் என்பது தெரியாது. ஆனால் அவருடைய இரக்கத்தை பெற்றுக்கொண்டவர்களாலோ, அந்த இரக்கத்தைப்பற்றி சாட்சி கூறாமல் இருக்க முடியாது. இயேசுகிறிஸ்துவின் கிருபையும் இரக்கமும் அந்த அளவுக்குத் தாராளமாய் நிரம்பி வழியுமாறு நமக்குக் கொடுக்கப்படும்.

இயேசுகிறிஸ்து நம்முடைய ஆத்துமாவில் கிரியை நடப்பிக்கிறார். அவருடைய கிருபை கிரியை செய்யும்போது அது எப்படிக் கிரியை செய்கிறது என்பதை நம்மால் விவரிக்க முடியாது. நம்மால் விவரிக்க முடியாவிட்டாலும் அவருடைய கிருபை நமது ஆத்துமாவில் கிரியை செய்கிறது. இதன் விளைவாக நம்முடைய ஆத்துமாவில் நல்ல மாற்றம் உண்டாகிறது. ஆத்துமாவிற்கு சந்தோஷமும் சமாதானமும் ஆறுதலும் உண்டாகிறது. இதுவே தேவனுடைய கிருபை.

### உன் கண்களை எப்படித் திறந்தான்

**அவர்கள் மறுபடியும் அவனை நோக்கி: உனக்கு என்னசெய்தான், உன் கண்களை எப்படித் திறந்தான் என்றார்கள் (யோவா 9:26).**

பரிசேயர்கள் குருடனாயிருந்தவனிடம் திரும்ப திரும்ப அதே கேள்வியைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். "உனக்கு என்ன செய்தான், உன் கண்களை எப்படித் திறந்தான்" என்று ஏற்கெனவே கேட்ட கேள்வியை மறுபடியும் கேட்கிறார்கள். இயேசுகிறிஸ்து பிரத்தியட்சமான அற்புதத்தைச் செய்திருந்தாலும், பரிசேயர்களால் அமைதியாயிருக்க முடியவில்லை. எதையாவது பேசவேண்டும் என்று நினைக்கிறார்கள். ஒருவேளை குருடனாயிருந்தவனிடம் பல கேள்விகளைக் கேட்டு அவனைத் தங்களுடைய கண்ணியில் சிக்க வைத்துவிடலாம் என்று நினைத்து, இவர்கள் அவனிடம் ஒரே கேள்வியை திரும்ப திரும்பக் கேட்கலாம். கர்த்தரை உறுதியாய் பற்றிக்கொள்கிற பிள்ளைகள் தடுமாறமாட்டார்கள். தங்கள் நடைகளில் சீராய் நடப்பார்கள். தங்கள் வார்த்தைகளைத் தெளிவாகவும் உறுதியாகவும் பேசுவார்கள். ஏனெனில் பேசுகிறவர்கள் நாமல்ல. கர்த்தரே நம்மூலமாகப் பேசுகிறவர்.

### முன்னமே உங்களுக்குச் சொன்னேன்

**அவன் பிரதியுத்தரமாக: முன்னமே உங்களுக்குச் சொன்னேன், நீங்கள் கேளாமற்போனீர்கள்; மறுபடியும் கேட்க வேண்டியதென்ன? அவருக்குச் சீஷராக உங்களுக்கும் மனதுண்டோ என்றான் (யோவா 9:27).**

பரிசேயர்கள் இயேசுவைக் கர்த்தராக ஏற்றுக்கொள்ளாமல், தங்கள் இருதயத்தில் பெருமையுள்ளவர்களாக அவருக்கு எதிர்த்து நிற்கிறார்கள். இயேசுகிறிஸ்து குருடனுடைய கண்களைத் திறந்தது அவருடைய தெய்வத்துவத்திற்குச் சாட்சி பகருகிறது. ஆனால் பரிசேயர் வேண்டுமென்றே இந்த அற்புத சாட்சிக்கு எதிர்த்து நிற்கிறார்கள். குருடனாயிருந்தவனோ பரிசேயரின் கேள்வியைக் கேட்டு பயப்படவில்லை. அவர்களிடத்தில் தைரியமாக "முன்னமே உங்களுக்குச் சொன்னேன் நீங்கள் கேளாமற்போனீர்கள், மறுபடியும் கேட்க வேண்டியதென்ன" என்று கூறுகிறான்.

## அதிகாரம் - 9

குருடனாயிருந்தவன் தன்னுடைய பிரதியுத்தரத்தை இத்துடன் நிறுத்திக்கொள்ளாமல், "அவருக்குச் சீஷராக உங்களுக்கும் மனதுண்டோ" என்றும் கேட்கிறான். இந்த வாக்கியத்தை இவன் விளையாட்டுக்காகக் கேட்கவில்லை. அவர்களும் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவருடைய சீஷராக வேண்டுமென்று இவன் மெய்யாகவே எதிர்பார்க்கிறான். இயேசுகிறிஸ்து இந்த உலகத்திற்கு ஒளியாக இருக்கிறார். ஆனால் பரிசேயரோ இந்த ஒளியைக் காணக்கூடாது என்று தங்களுடைய கண்களை மூடிக்கொள்கிறார்கள். இக்காலத்தில்கூட ஒரு சிலர் பரிசேயர்களைப்போல இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கேட்கக்கூடாது என்று தங்கள் செவிகளை அடைத்துக்கொள்கிறார்கள்.

குருடனாயிருந்தவனிடம் பரிசேயர்கள் தேவையில்லாமல் ஒரே கேள்வியைத் திரும்பத் திரும்ப கேட்கவேண்டிய அவசியம் எதுவுமில்லை. ஒரே காரியத்தை மறுபடியும் மறுபடியும் பேசுவதினால் இவர்களுக்கு வேறு எந்தக் காரியத்தைப்பற்றியும் பேசமுடியவில்லை என்பது தெளிவாகிறது. குருடனாயிருந்தவனும் இவர்களுடைய கேள்விக்கு தன்னுடைய பதிலைக் கூறிவிட்டான். அதே பதிலைத்தான் எத்தனை தரம் கேட்டாலும் சொல்லுவான். பரிசேயர்கள் யூதமார்க்கத்திற்குத் தலைவர்களாக இருந்தாலும், இவர்கள் தேவனுடைய கிருபையை விருதாவாய்ப் பெற்றிருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் அற்புதமான கிரியைகளைப்பற்றி விசாரிக்கிறவர்கள், அவரைப்பற்றி தெரிந்துகொள்வதற்காகவே விசாரிக்க வேண்டும். தங்களுக்கும் அப்படிப்பட்ட அற்புதம் நடைபெறவேண்டுமென்று விரும்பி அதை விசாரிக்கலாம். ஆனால் பரிசேயர்களோ இயேசுகிறிஸ்துவைப்பற்றி அறிந்துகொள்ள மனதில்லாதவர்களாக, அவரைப்பற்றி மேலும் மேலும் கேட்டுக்கொண்டேயிருக்கிறார்கள். ஆகையினால்தான் குருடனாயிருந்தவன் அவர்களிடம் "அவருக்குச் சீஷராக உங்களுக்கும் மனதுண்டோ" என்று கேட்கிறான்.

பரிசேயருக்கு இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள மனதில்லை. அவருடைய சீஷர்களோடு சேர்ந்துகொள்ளவும் விருப்பமில்லை. இயேசுகிறிஸ்துவை விரோதிப்பதற்கும், துன்புறுத்துவதற்கும் காரணம் தேடிக்கொண்டிருக்கிறார்கள்.

### நாங்கள் மோசேயினுடைய சீஷர்

**அப்பொழுது அவர்கள் அவனைவைது: நீ அவனுடைய சீஷன், நாங்கள் மோசேயினுடைய சீஷர் (யோவா 9:28).**

குருடாயிருந்தவனுடைய பிரதியுத்தரம் பரிசேயருக்கு கோபத்தை உண்டுபண்ணிற்று. அவன் அதிக ஞானத்தோடு பிரதியுத்தரம் கூறுகிறான். பரிசேயரால் அவனுடைய வார்த்தைக்கு எதிர்த்துப் பேசமுடியவில்லை. பரிசேயருக்கு ஞானம் போதவில்லை. ஆகையினால் அவன்மீது கோபப்படுகிறார்கள். இவர்களுக்கு சத்தியத்தை ஏற்றுக்கொள்ள மனதில்லை. நிதானமாக விவாதம்பண்ணத் தெரியவில்லை. ஆவிக்குரிய ரீதியாக பேசுவதற்கு இவர்களுடைய ஞானம் போதுமானதாக இல்லை. தங்களால் ஒன்றும் முடியாமல் போகும்போது கோபப்படுவது மனுஷருடைய இயல்பு. பரிசேயரும் சாதாரி மனுஷரைப்போலவே அவன்மீது கோபப்படுகிறார்கள்.

குருடனாயிருந்தவன் இயேசு கிறிஸ்துவின்மீது பிரியமாயிருக்கிறான். இதற்காக அவனைக் கடிந்துகொள்கிறார்கள். "நீ அவனுடைய சீஷன்" என்று கூறுகிறார்கள். லத்தீன் மொழியில் எழுதப்பட்டுள்ள புதிய ஏற்பாட்டில் "அவர்கள் அவனைச் சபித்தார்கள்" என்பதாக இந்த வசனம் எழுதப்பட்டிருக்கிறது. "நீ அவனுடைய சீஷனாகவே இரு" என்பதே பரிசேயரின் சாபம். இயேசுகிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்தபோது, அந்த சாபம் தங்கள்மீதும் தங்கள் பிள்ளைகள்மீதும் வரட்டும் என்று யூதர்கள் கூறினார்கள். பரிசேயர்கள் பிறரைச் சபிப்பதில் தேறினவர்கள். தங்களுக்கு யாரையாவது பிடிக்கவில்லையென்றால் உடனே அவர்களைச் சபித்துவிடுவார்கள். இயேசுகிறிஸ்துவின் பிள்ளைகளாகிய நாமோ பரிசேயரைப்போல மற்றவர்களை சபிக்கக்கூடாது. நம்மை சபிக்கிறவர்களையும் நாம் ஆசீர்வதிக்க வேண்டும். இதுவே இயேசுகிறிஸ்துவின் உபதேசம்.

பரிசேயர்கள் குருடனாயிருந்தவனை "இயேசுகிறிஸ்துவின் சீஷன்" என்று அழைப்பதற்குக் காரணமேயில்லை. இவன் இயேசுகிறிஸ்துவைப்பற்றி சாதகமாக பேசினான். அவர் தனக்குச் செய்த நன்மைகளைச் சாட்சியாக அறிவித்தான். பரிசேயரால் இதைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. உடனே கோபத்தோடு இவனைச் சபித்துவிடுகிறார்கள்.

## அதிகாரம் - 9

குருடனாயிருந்தவனை இயேசுவின் சீஷன் என்று சபித்ததோடு, தாங்கள் மோசேயினுடைய சீஷர் என்று கூறி பெருமைப்படுகிறார்கள். பரிசேயர்கள் எப்போதுமே தங்களுடைய முற்பிதாக்களைப் பற்றிப் பேசி பெருமைப்படுவார்கள். தாங்கள் ஆபிரகாமின் சந்ததியில் வந்தவர்களென்று ஏற்கெனவே பெருமையோடு கூறியிருக்கிறார்கள். தங்களை மோசேயின் சீஷன் என்று கூறும்போது, தங்களுடைய வேதஅறிவை பெருமையாகப் பேசுகிறார்கள். மோசேயால் இவர்களை இரட்சிக்க முடியாது. மோசேக்கும் இயேசுகிறிஸ்துவுக்கும் அநேக ஒற்றுமையுள்ளது. இவர்கள் மோசேயினுடைய சீஷராக இருந்தாலும், இவர்களால் இயேசுகிறிஸ்துவின் சீஷராகவும் இருக்க முடியும். ஆனால் இவர்களால் மோசேக்கும் இயேசுவுக்கும் இடையிலுள்ள ஒற்றுமையைக் காணமுடியவில்லை. இவ்விருவரும் ஒருவருக்கொருவர் சத்துருக்களாக இருப்பதாக நினைக்கிறார்கள்.

தேவனையும், அவருடைய வார்த்தையையும், அவருடைய சத்தியத்தையும் நாம் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். தேவனுடைய கிருபையும் மனுஷருடைய கடமையும் ஒருபோதும் முரண்படுவதில்லை. ஒன்றுக்கொன்று இணைந்து செயல்படவேண்டும். இதுவே இயேசுகிறிஸ்துவின் உபதேசம்.

**எங்கேயிருந்து வந்தவனென்று அறியோம்**

**மோசேயுடன் தேவன் பேசினாரென்று அறிவோம், இவன் எங்கேயிருந்து வந்தவனென்று அறியோம் என்றார்கள் (யோவா 9:29).**

பரிசேயர்கள் மோசேயை இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாகச் சித்தரித்துப் பேசுகிறார்கள். தாங்கள் மோசேயினுடைய சீஷராக இருப்பதற்கு என்ன காரணம் என்பதையும் அறிவிக்கிறார்கள். தேவன் மோசேயுடனே பேசினதை இவர்கள் அறிந்திருப்பதாகக் கூறுகிறார்கள். அதே சமயத்தில் இயேசுகிறிஸ்து எங்கேயிருந்து வந்தவனென்று தாங்கள் அறியவில்லையென்றும் கூறுகிறார்கள். ஒரு தீர்க்கதரிசியை இவர்கள் எதிர்பார்க்க வேண்டும் என்பது இவர்களுக்குத் தெரியவில்லை. தேவனுடைய மனதைப்பற்றிய வெளிப்பாடுகளை மோசேயைத்தவிர மேலும் ஒரு தீர்க்கதரிசிதான் யூதர்களுக்கு வெளிப்படுத்தவேண்டும். இயேசுகிறிஸ்துவே அந்தத் தீர்க்கதரிசி.

வேத வாக்கியங்களில் குறிப்பிட்டிருக்கிற பிரகாரம் இயேசுகிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்திருக்கிறார். ஆனால் யூதஜனங்களோ அவரை ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணித்துவிடுகிறார்கள். மோசேயுடனே தேவன் பேசினாரென்பதை தாங்கள் அறிந்திருப்பதாகக் கூறுகிறார்கள். இந்த சத்தியத்தை நாமும் அறிந்திருக்கிறோம். தேவன் மெய்யாகவே மோசேயுடனே பேசினார். மோசே ஒரு தீர்க்கதரிசி. இதுவும் மெய்யான சத்தியம்தான். மோசே தீர்க்கதரிசியாக இருப்பதினால் இயேசுகிறிஸ்துவும் ஏன் தீர்க்கதரிசியாக இருக்கக்கூடாது என்று இவர்களால் சிந்திக்க முடியவில்லை.

பரிசேயர்கள் இயேசுகிறிஸ்துவைக் குறிப்பிடும்போது "இவன்" என்னும் வார்த்தையைப் பயன்படுத்துகிறார்கள். தேவனால் அனுப்பப்பட்டிருக்கிற தேவகுமாரனை மரியாதையுள்ள வார்த்தையினால் அழைக்கவேண்டும். ஆனால் இவர்களோ ஆசீர்வதிக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவை அவமரியாதை செய்கிறார்கள். தாங்கள் எதிர்பார்க்கும் மேசியாவை எப்படி மேன்மைப்படுத்த வேண்டுமென்று இவர்களுக்குத் தெரியவில்லை.

இயேசுகிறிஸ்து எங்கேயிருந்து வந்தாரென்பதை இவர்கள் அறியவில்லை என்று கூறுகிறார்கள். இதுவும் ஒரு பொய்யான வார்த்தை. ஏனெனில் சற்று நேரத்திற்கு முன்பு இவர்கள் இயேசுகிறிஸ்துவோடு விவாதம்பண்ணும்போது "இவன் இன்ன இடத்திலிருந்து வந்தவனென்று நாம் அறிந்திருக்கிறோம்" (யோவா 7:27) என்று கூறினார்கள். கிறிஸ்து வரும்போதோ அவர் இன்ன இடத்திலிருந்து வருகிறவனென்று ஒருவனும் அறியமாட்டானே என்றும் கூறினார்கள்.

பரிசேயர்கள் ஒன்றுக்குப்பின் ஒன்றாக முரண்பட்டுப் பேசுகிறார்கள். முதலில் இயேசுகிறிஸ்து எங்கேயிருந்து வந்திருக்கிறவர் என்பதை தெரியுமென்றவர்கள், இப்போது அவர் எங்கேயிருந்து வந்திருக்கிறவர் என்பதைத் தெரியாது என்று கூறுகிறார்கள். தங்களுக்குத் தாங்களே முரண்பட்டுப் பேசுகிறார்கள். இவர்களால் தாங்கள் ஏற்கெனவே பேசிய ஒரு காரியத்தை அங்கீகரிக்கவோ அல்லது மறுக்கவோ முடியவில்லை. சூழ்நிலைக்குத் தகுந்தபடி மாறி மாறிப்பேசுகிறார்கள். இயேசுவை கிறிஸ்து என்று விசுவாசிக்க இவர்களுக்கு மனதில்லை. தங்களுடைய சொந்த அபிப்பிராயங்களை வாய்க்கு வந்தபடியெல்லாம் முரண்பாடாகப் பேசுகிறார்கள்.

## அதிகாரம் - 9

இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தை விசுவாசிக்காதவர்களால் அவருடைய உபதேசத்தை புரிந்துகொள்ளவே முடியாது. தங்களுக்கு இயேசுகிறிஸ்துவின் உபதேசம் புரியவில்லை. ஆகையினால் அதை விசுவாசிக்கவில்லையென்று கூறுகிறார்கள். சத்தியத்தை தங்களுக்குச் சாதகமாகத் திருப்புகிறார்கள். மனுஷருடைய சாதுரிய பேச்சு தேவனுடைய ஞானத்திற்கு முன்பாக எடுபடாது. நம்மை நாமே தாழ்த்தி தேவனுடைய சமுகத்தில் நம்மை ஒப்புக்கொடுத்தால்தான் தேவனுடைய ரகசியத்தைப் புரிந்துகொள்ள முடியும்.

### குருடனாயிருந்தவன் சொன்னது யோவா 9 : 30-34

**யோவா 9:30. அதற்கு அந்த மனுஷன்: அவர் என் கண்களைத் திறந்திருந்தும், அவர் எங்கேயிருந்து வந்தவரென்று நீங்கள் அறியாதிருக்கிறது ஆச்சரியமான காரியம்.**

**யோவா 9:31. பாவிகளுக்கு தேவன் செவிகொடுக்கிறதில்லையென்று அறிந்திருக்கிறோம்; ஒருவன் தேவபக்தியுள்ளவனாயிருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவிகொடுப்பார்.**

**யோவா 9:32. பிறவிக்குருடனுடைய கண்களை ஒருவன் திறந்தானென்று உலகமுண்டானது முதல் கேள்விப்பட்டதில்லையே.**

**யோவா 9:33. அவர் தேவனிடத்திலிருந்து வராதிருந்தால் ஒன்றும் செய்யமாட்டாரே என்றான்.**

**யோவா 9:34. அவர்கள் அவனுக்குப் பிரதியுத்தரமாக: முழுவதும் பாவத்தில் பிறந்த நீ எங்களுக்குப் போதிக்கிறாயோ என்று சொல்லி, அவனைப் புறம்பே தள்ளிவிட்டார்கள்.**

**ஆச்சரியமான காரியம்**

**அதற்கு அந்த மனுஷன்: அவர் என் கண்களைத் திறந்திருந்தும், அவர் எங்கேயிருந்து வந்தவரென்று நீங்கள் அறியாதிருக்கிறது ஆச்சரியமான காரியம் (யோவா 9:30).**

தன்னுடைய வார்த்தையில் உண்மையிருப்பதையும், பரிசேயருடைய வார்த்தையில் பொய்யிருப்பதையும் குருடனாயிருந்தவன் புரிந்துகொள்கிறான். இதனால் பரிசேயரிடம் பேசுவதற்கு இவனுக்குள் மேலும் தைரியம் உண்டாயிற்று. அவர்களுடைய அவிசுவாசத்தைக் குறித்து ஆச்சரியப்படுகிறான். "அவர் எங்கேயிருந்து வந்தவரென்று நீங்கள் அறியாதிருக்கிறது ஆச்சரியமான காரியம்" என்று பரிசேயரிடத்தில் தைரியமாகக் கூறுகிறான். ஏனெனில் இயேசுகிறிஸ்து இவனுடைய கண்களைத் திறந்திருக்கிறார். இவனுக்கு இரண்டு காரியங்கள் ஆச்சரியமாயிருக்கிறது. அவையாவன : 1. பிரபலமாகயிருக்கிற இயேசுகிறிஸ்துவை இவர்கள் அறியாமலிருக்கிறார்கள். 2. இயேசுகிறிஸ்து தெய்வீக அற்புதம் செய்திருந்தும் அவருடைய தெய்வீக ஊழியத்தை இவர்கள் அறியாதிருக்கிறார்கள்.

பிறவிக்குருடனுடைய கண்களைத் திறந்தவரால் ஜனங்கள் மத்தியில் மறைவாக இருக்க முடியாது. ஊரிலுள்ள ஜனங்களெல்லோரும் இந்த அதிசயத்தைப்பற்றியும், இந்த அதிசயத்தைச் செய்தவரைப்பற்றியும் பேசிக் கொண்டிருப்பார்கள். இயேசுகிறிஸ்துவைப் பற்றி இப்போது எல்லோரும் அறிந்திருக்கிறார்கள். அதேவேளையில் இதே ஊரிலிருக்கிற பரிசேயர் மாத்திரம் அவரை அறியாதிருப்பதாகக் கூறுகிறார்கள். இந்த பரிசேயர்களைப்போலவே இக்காலத்தில் கல்வி கற்றவர்களும், உலக அறிவில் சிறந்தவர்களும் இயேசுகிறிஸ்துவே நம்முடைய ஆத்தும இரட்சகர் என்பதை அறியாதிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து கொடுக்கும் ஆசீர்வாதங்களை நோக்கிப்பார்ப்பதற்கு தேவதூதர்களும் ஆசையாயிருந்தார்கள். சாதாரண தரித்திரருக்கு புரிகிற இரட்சிப்பின் சத்தியம்கூட கல்வியில் சிறந்தவர்களுக்குப் புரியவில்லை.

இயேசுகிறிஸ்து குருடனுடைய கண்களைத் திறந்திருக்கிறார். இது ஒரு தெய்வீக அற்புதம். தேவனுடைய வல்லமையை உடையவரால் மாத்திரமே இப்படிப்பட்ட தெய்வீக அற்புதத்தைச் செய்ய முடியும். இந்த அற்புதத்தைப்பற்றி தெரிந்தவர்களெல்லோரும் இயேசுகிறிஸ்துவை தேவனுடைய குமாரனாக விசுவாசிக்கிறார்கள். ஆனால் பரிசேயரோ இந்த உலகத்திற்கு வெளிச்சமாக இருக்கும் இயேசுகிறிஸ்துவை காணக்கூடாதவாறு தங்கள் கண்களை மூடிக்கொள்கிறார்கள். பிறவிக்குருடனுடைய கண்களைத் திறந்ததுபோல, இயேசுகிறிஸ்து பரிசேயருடைய கண்களையும் திறக்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் இயேசுகிறிஸ்துவைத் தீர்க்கதரிசியாகக் காண்பார்கள்.

## அதிகாரம் - 9

இயேசுகிறிஸ்து ஒரு பாவியல்ல என்றும் (யோவா 9:31), அவர் தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறவரென்றும் (யோவா 9:33) குருடனாயிருந்தவன் நிச்சயமாகக் கூறுகிறான். இவன் பிறவியிலிருந்தே குருடனாகயிருந்தவன். மோசேயின் ஆகமங்களை இவனால் இதுவரையிலும் படித்திருக்க முடியாது. ஆனாலும் வேதவாக்கியங்களில் இவன் மிகவும் தெளிவாக இருக்கிறான். விசுவாசம் கேள்வியினால் வரும். இயேசுகிறிஸ்துவை அதிகமாக விசுவாசிப்பதினால் இவனுக்கு தேவனுடைய வெளிப்பாடு கிடைத்திருக்கிறது. மிகவும் உற்சாகமாக இவன் இயேசுகிறிஸ்துவை மகிமைப்படுத்துகிறான். மிகவும் தைரியமாக இவன் இயேசுவுக்குச் சாட்சி கூறுகிறான்.

தேவனிடமிருந்து ஆசீர்வாதங்களையும் சிலாக்கியங்களையும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறவர்கள், மனுஷருடைய எதிர்ப்புக்களுக்குப் பயப்படக்கூடாது. சங்கீதக்காரன் தாவீதைப்போல இவனும் இயேசுகிறிஸ்துவை துதிக்கிறான். "என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தேனானால், ஆண்டவர் எனக்குச் செவிகொடார். மெய்யாய் தேவன் எனக்குச் செவிகொடுத்தார், என் ஜெபத்தின் சத்தத்தைக் கேட்டார். என் ஜெபத்தைத் தள்ளாமலும், தமது கிருபையை என்னைவிட்டு விலக்காமலும் இருந்த தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக" (சங் 66:18-20) என்பது தாவீது பாடிய துதியின் கீதம்.

### தேவன் செவி கொடுப்பார்

**பாவிகளுக்கு தேவன் செவி கொடுக்கிறதில்லையென்று அறிந்திருக்கிறோம்; ஒருவன் தேவபக்தியுள்ளவனாயிருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவிகொடுப்பார் (யோவா 9:31).**

தேவன் எல்லோருக்கும் செவிகொடுக்கமாட்டார். பாவிகளுக்கு தேவன் செவி கொடுக்கிறதில்லையென்பதை எல்லோரும் அறிந்திருக்கிறார்கள். ஒருவன் தேவபக்தியுள்ளவனாயிருந்து, தேவனுக்குச் சித்தமானதைச் செய்தால், தேவன் அவனுக்குச் செவிகொடுப்பார் என்று குருடனாயிருந்தவன் கூறுகிறான்.

இவனுடைய வார்த்தை மெய்யானது. துன்மார்க்கருக்கு தேவன் செவிகொடுப்பதில்லை. இது துன்மார்க்கருக்கு விரோதமாக அறிவிக்கப்படும் பயங்கரமான வார்த்தையாகும். பாவிகள் மனந்திருந்தி தேவனிடத்திற்குத் திரும்பி வர பயப்படவேண்டியதில்லை. தங்களுடைய பாவத்தில் நிலைத்திருக்கிறவர்களுக்கு மாத்திரமே தேவன் செவிகொடுக்கமாட்டார்.

நல்லவர்களுக்குத் தேவன் செவிகொடுப்பாரென்பது நமக்கு ஆறுதலான வார்த்தை. நாம் தேவபக்தியுள்ளவர்களாக இருக்கவேண்டும். தேவனுக்குச் சித்தமானதைச் செய்யவேண்டும். அப்போது தேவன் நமக்குச் செவிகொடுப்பார். ஒரு நல்லவன் எப்படியிருக்க வேண்டுமென்பதை குருடனாயிருந்தவன் தெளிவாகவும் சுருக்கமாகவும் கூறுகிறான். அவன் தேவபக்தியுள்ளவனாக இருக்கவேண்டும். அத்துடன் தேவனுக்குச் சித்தமானதையும் செய்யவேண்டும். இப்படிப்பட்டவனுக்குத் தேவனுடைய ஆறுதல் உண்டாயிருக்கும். இவனுடைய விண்ணப்பத்திற்குத் தேவன் பதில்கொடுப்பார்.

### கேள்விப்பட்டதில்லையே

**பிறவிக்குருடனுடைய கண்களை ஒருவன் திறந்தானென்று உலகமுண்டானது முதல் கேள்விப்பட்டதில்லையே (யோவா 9:32).**

இயேசுகிறிஸ்து தன்னுடைய கண்களைத் திறந்த அற்புத சம்பவத்தை இவன் அருமையாக விவரிக்கிறான். தன்னுடைய விவாதத்திற்கு இந்த சம்பவத்தைச் சாட்சியாகப் பயன்படுத்துகிறான். பிறவிக்குருடனுடைய கண்களை ஒருவன் திறந்தானென்று உலகம் உண்டானது முதல் யாரும் கேள்விப்பட்டதில்லை. இது ஒரு மெய்யான அற்புதம். இது இயற்கையின் சக்திக்கு அப்பாற்பட்ட செய்கை. இப்படிப்பட்ட ஒரு அற்புதத்தை இதுவரையிலும் ஒருவரும் கேள்விப்பட்டதில்லை. இயற்கையான வைத்தியத்தின் பிரகாரம் யாராலும் பிறவிக்குருடனுடைய கண்களைத் திறக்க முடியாது. இது ஒரு விசேஷித்த அற்புதம். இதற்கு முன்பு நடைபெற்றிருக்கும் எல்லா அற்புதங்களையும்விட இது மிகவும் விசேஷமானது. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் மோசே எகிப்து தேசத்தின்மீது அற்புதமான வாதைகளைக் கொண்டு வந்தார். இயேசுகிறிஸ்துவோ புதிய ஏற்பாட்டுக்காலத்தில் அற்புதமாகச் சுகமாதலைக் கொண்டுவருகிறார்.

## அதிகாரம் - 9

**தேவனிடத்திலிருந்து வராதிருந்தால்**

**அவர் தேவனிடத்திலிருந்து வராதிருந்தால் ஒன்றும் செய்யமாட்டாரே என்றான் (யோவா 9:33).**

குருடனாயிருந்தவன் தன் விவாதத்தின் முடிவுரையாக "இயேசுகிறிஸ்து தேவனிடத்திலிருந்து வராதிருந்தால் ஒன்றும் செய்யமாட்டாரே" என்று கூறுகிறான். இயேசுகிறிஸ்து இந்த பூமியில் பல அற்புதங்களையும் அதிசயங்களையும் செய்திருக்கிறார். அவர் தேவனிடத்திலிருந்து வந்தவரென்பதற்கு இந்த சம்பவங்களே போதுமான ஆதாரமாகும். இயேசுகிறிஸ்து செய்த அற்புதங்களின் மூலமாக அவர் தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறாரா, இல்லையா என்பதை நம்மால் உறுதியாகச் சொல்லமுடியும். இதுவரையிலும் அவர் செய்த அற்புதங்களே, அவர் தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறாரென்பதை உறுதி செய்வதற்கு போதுமானது. இந்தச் சத்தியத்தை உறுதிபண்ண இதற்குமேல் வேறு அற்புதம் எதுவும் தேவையில்லை.

**முழுவதும் பாவத்தில் பிறந்த நீ**

**அவர்கள் அவனுக்குப் பிரதியுத்தரமாக: முழுவதும் பாவத்தில் பிறந்த நீ எங்களுக்குப் போதிக்கிறாயோ என்று சொல்லி, அவனைப் புறம்பே தள்ளிவிட்டார்கள் (யோவா 9:34).**

குருடனாயிருந்தவன் பரிசேயரிடத்தில் மிகவும் உற்சாகமாகப் போதித்துக்கொண்டிருக்கிறான். அவன் பேசப் பேச பரிசேயருக்கு அவன்மீது கோபம் உண்டாயிற்று. அவனுடைய உரையாடலை உடனடியாக முடித்துவிடவேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறார்கள். அவனுடைய விவாதத்திற்குப் பரிசேயர்களால் பதில் எதுவும் பேசமுடியவில்லை. ஆகையினால் அவனைப்பற்றியும் அவனுடைய ஆள்தத்துவத்தைப் பற்றியும் குற்றப்படுத்துகிறார்கள். அவன் முழுவதும் பாவத்தில் பிறந்தவனென்று அவனைத் தூஷிக்கிறார்கள்.

எல்லோருமே பாவத்தில்தான் பிறந்திருக்கிறோம். நம்முடைய ஆத்துமாவும் சரீரமும் ஜென்மபாவத்தினால் கறைபட்டிருக்கிறது. பரிசேயருக்குத் தங்களுடைய பாவத்தைப்பற்றித் தெரியவில்லை. குருடனாயிருந்தவனுடைய பாவம் மட்டுமே அவர்களுக்குப் பெரியதாய்த் தெரிகிறது. அவன் பிறவிக்குருடனாயிருந்தபடியினால், அவன் முழுவதும் பாவத்தில் பிறந்தவனென்று கூறுகிறார்கள்.

அவன் குருடனாய்ப் பிறந்ததற்கு அவனுடையபாவத்தை காரணமாக்குகிறார்கள். எல்லா வேதனைகளும் பாவத்தின் தண்டனையினால் ஏற்படுவதில்லை. சில சமயங்களில் தேவனுடைய கிரியை வெளிப்படுவதற்காகக்கூட நாம் பாடுகளை அனுபவிக்கிறோம். பரிசேயர் குருடனாயிருந்தவனை முழுவதும் பாவத்தில் பிறந்தவன் என்று கூறுவது நியாயமில்லாத குற்றச்சாட்டு. இயேசுகிறிஸ்து பிறவிக்குருடனுடைய கண்களைத் திறந்து, அவனுக்குப் பார்வையைக் கொடுக்கிறார். அதே சமயத்தில் சமுதாயத்தில் அவனுக்கு உண்டாயிருந்த சாபத்தையும் நீக்குகிறார். சமுதாயத்தினால் வெறுத்து ஒதுக்கப்பட்டவன் இப்போது பரலோகத்தில் நேசிக்கப்பட்டவனாக இருக்கிறான்.

குருடனாயிருந்தவனுடைய உபதேசத்தைக் கேட்க பரிசேயர்கள் விரும்பவில்லை. அவனிடமிருந்து கற்றுக்கொள்ள இவர்களுக்கு மனதில்லை. "நீ எங்களுக்குப் போதிக்கிறாயோ" என்று அவனிடத்தில் கோபமாகக் கூறுகிறார்கள். அவன் படிப்பறிவில்லாதவன் என்றும், வேதத்தை அறியாதவனென்றும் அவனை இகழ்ந்து பேசுகிறார்கள். அவன் மோசேயின் ஆசனத்தில் அமர்ந்து தங்களுக்குப் போதிப்பதுபோல அவனைக் குற்றப்படுத்துகிறார்கள்.

பரிசேயர்கள் தங்கள் இருதயத்தில் பெருமையுள்ளவர்கள். இவர்களுக்கு யாரும் கற்றுக்கொடுக்க முடியாது. அதிலும் இவர்களைவிட கீழான நிலமையிலுள்ளவர்களால் இவர்களுக்கு ஒன்றும் சொல்லமுடியாது. அவர்களுடைய பேச்சைக் கேட்கமாட்டார்கள். தாங்கள் பரிசேயராக இருப்பதினால் தங்களுக்கு எல்லாம் தெரியுமென்று இறுமாப்பாக இருக்கிறார்கள். இப்படித்தான் இக்காலத்தில் சிலர் தங்களுக்கு எல்லாம் தெரியுமென்றும், தாங்கள் அறிவில் சிறந்தவர்களென்றும் இறுமாப்பாக இருக்கிறார்கள். மூத்த வயதுடையவர்கள் இள வயதுடையவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளமாட்டார்கள். அதிகம் படித்தவர்கள் சாதாரண படிப்பு படித்தவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள விரும்பமாட்டார்கள். கற்பதற்கு வயதில்லை. நாம் எல்லா வயதிலும் கற்றுக்கொள்ள வேண்டும். கற்றுக் கொடுக்கிறவர்களும் கற்றுக்கொள்ள வேண்டும்.

## அதிகாரம் - 9

பெரிய செல்வந்தன் இன்னும் அதிகமாக செல்வம் சேகரிக்கவேண்டுமென்று ஆசைப்படுவான். அதுபோலவே நாம் எவ்வளவுதான் ஞானத்தில் சிறந்தவர்களாக இருந்தாலும், நம்முடைய ஞானத்தை இன்னும் அதிகரிக்கச் செய்யவேண்டுமென்று ஆசைப்படவேண்டும்.

குருடனாயிருந்தவன்மீது பரிசேயர் கோபப்பட்டு அவனை புறம்பே தள்ளிவிடுகிறார்கள். ஒருவேளை யூதர்களுடைய ஆலோசனைச் சங்கத்திலிருந்து அவனை வெளியேற்றியிருக்கலாம். யூதமார்க்கத்து சட்டத்தின் பிரகாரம் அவனைத் தண்டித்து, யூதசமுதாயத்திலிருந்து அவனை வெளியேற்றி ஒதுக்கி வைத்திருக்கலாம். இயேசுகிறிஸ்துவின் மூலமாக நன்மையைப் பெற்றுக்கொண்ட பிறவிக்குருடன், இப்போது இயேசுகிறிஸ்துவுக்காக பாடுகளை அனுபவிக்கும் சிலாக்கியத்தைப் பெற்றுக்கொள்கிறான்.

### இயேசுவின் கரிசனை
### யோவா 9 : 35-38

**யோவா 9:35. அவனை அவர்கள் புறம்பே தள்ளி விட்டதை இயேசு கேள்விப்பட்டு, அவனைக் கண்டபோது: நீ தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறாயா என்றார்.**

**யோவா 9:36. அதற்கு அவன்: ஆண்டவரே, அவரிடத்தில் நான் விசுவாசமாயிருக்கும்படிக்கு அவர் யார் என்றான்.**

**யோவா 9:37. இயேசு அவனை நோக்கி: நீ அவரைக் கண்டிருக்கிறாய், உன்னுடனே பேசுகிறவர் அவர்தான் என்றார்.**

**யோவா 9:38. உடனே அவன்: ஆண்டவரே, விசுவாசிக்கிறேன் என்று சொல்லி, அவரைப் பணிந்துகொண்டான்.**

**விசுவாசமாயிருக்கிறாயா**

**அவனை அவர்கள் புறம்பே தள்ளி விட்டதை இயேசு கேள்விப்பட்டு, அவனைக் கண்டபோது: நீ தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறாயா என்றார் (யோவா 9:35).**

குருடனாயிருந்தவன் இயேசு கிறிஸ்துவுக்கு சாட்சி கூறுகிறான். இதனால் கோபமடைந்த பரிசேயர் அவனை யூதருடைய ஆலோசனைச்சங்கத்திலிருந்து புறம்பே தள்ளிவிடுகிறார்கள். இவன் மற்ற ஜனங்களிடமிருந்து புறம்பே தள்ளிவிடப்பட்டதை இயேசு கேள்விப்படுகிறார். அவனைக்கண்டு தம்முடைய அன்பான வார்த்தைகளினால் அவனுக்கு ஆதரவு கொடுக்கிறார்.

இவன் குருடனாயிருந்தபோது இயேசுகிறிஸ்து இவனுடைய கண்களில் சேற்றைப்பூசி சீலோவாம் குளத்தில்போய் கழுவுமாறு கூறினார். இயேசுகிறிஸ்துவின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து அவன் சீலோவாம் குளத்தில் தன் கண்களைக் கழுவி பார்வையடைந்தவனாகத் திரும்பி வந்தான். அப்போது இயேசு அங்கு இல்லை. இயேசுகிறிஸ்து ஒருவேளை தம்முடைய ஊழியக்காரியமாக வேறு இடத்திற்குச் சென்றிருக்கலாம். அவர் எங்கு போனாலும் பிறவிக்குருடனைப்பற்றிய கரிசனை அவருடைய உள்ளத்தில் இருக்கிறது. அவனைத் தேடிப்பார்த்து, அவனுக்கு ஆறுதலான வார்த்தைகளைக் கூறவேண்டுமென்று, இயேசுகிறிஸ்துவும் வாஞ்சையோடிருக்கிறார்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான், யூதர்கள் அவனைப் புறம்பே தள்ளிவிட்டதை இயேசுகிறிஸ்து கேள்விப்பட்டு, அவனைத் தேடிக் கண்டுபிடிக்கிறார். அவனிடத்தில் ஆறுதலான வார்த்தைகளையும், அவனை உற்சாகப்படுத்தும் வார்த்தைகளையும் பேசுகிறார். இயேசுகிறிஸ்து இவன்மீது விசேஷித்த அன்பு காண்பிக்கிறார். இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. அவையாவன: 1. குருடனாயிருந்தவன் பரிசேயரிடம் இயேசுகிறிஸ்துவைக்குறித்து தைரியமாகச் சாட்சி சொன்னான். 2. பரிசேயர்கள் இவனைப் புறம்பே தள்ளிவிட்டார்கள்.

பரிசேயருக்கு முன்பாக குருடனாயிருந்தவன் இயேசுகிறிஸ்துவைப்பற்றி மிகவும் தெளிவாகப் பேசுகிறான். தன்னுடைய கண்கள் திறக்கப்பட்ட சம்பவத்தை ஒளிவு மறைவில்லாமல் அவர்களிடத்தில் பேசுகிறான். இயேசுகிறிஸ்துவின் தெய்வத்துவத்திற்குத் தன்னுடையச் சாட்சியாக அறிவிக்கிறான். பரிசேயர்கள் இயேசுகிறிஸ்துவைக்குறித்து தூஷண வார்த்தைகளைப் பேசினாலும், இவன் அவரைக்குறித்து நல்ல வார்த்தைகளைப் பேசி இயேசுவைத் துதிக்கிறான்.

## அதிகாரம் - 9

தமக்காக சாட்சி கூறுகிறவர்களை இயேசுகிறிஸ்து ஆசீர்வதிக்கிறார். தம்மை ஏற்றுக்கொள்கிறவர்களை இயேசுகிறிஸ்துவும் ஏற்றுக்கொள்கிறார். தம்முடைய சத்தியத்தையும் வழிகளையும் ஏற்றுக்கொள்கிறவர்களை இயேசுகிறிஸ்து கரம்பிடித்து வழிநடத்துகிறார். நாம் இயேசுகிறிஸ்துவுக்காக உண்மையாய் ஊழியம் செய்யும்போது அவர் நமக்கு ஆலோசனைக் கர்த்தராக இருந்து நம்மைப் பாதுகாத்து பராமரிக்கிறார். இயேசுகிறிஸ்து நம்மோடு கூடயிருப்பது நமக்குக் கிடைத்திருக்கும் சிலாக்கியமும் ஆறுதலும் ஆகும்.

இயேசு கிறிஸ்துவுக்காக குருடனாயிருந்தவன் தைரியமாகச் சாட்சி சொல்லுவதைப்பார்த்து பரிசேயர்கள் இவன்மீது கோபப்படுகிறார்கள். இவனைப் புறம்பே தள்ளிவிடுகிறார்கள். இயேசுகிறிஸ்துவிடமிருந்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டவன், இப்போது பாடுகளை அனுபவிக்கிறான்.

கர்த்தருக்காக நாம் பாடுகளை அனுபவிக்கும்போது அவருடைய ஆறுதல்கள் நம்முடைய பாடுகளைவிடப் பெரிதாயிருக்கும். கர்த்தர் ஒருபோதும் நம்மைக் கைவிடமாட்டார். நம்முடைய சிநேகிதராகயிருந்து, எல்லா வேளைகளிலும் அவர் நம்மோடு கூடவேயிருப்பார். குருடனாயிருந்தவன் பாடுகளை அனுபவிக்கிறான். இயேசுகிறிஸ்துவோ அவனுடைய பாடுகளை அறிந்து அவனைத் தேடிக்கண்டுபிடிக்கிறார். இயேசுகிறிஸ்துவுக்காகப் பாடுகளைச் சகித்துக் கொள்கிறவர்களைக் கர்த்தர் தேடிக்கண்டுபிடித்து ஆசீர்வதிக்கிறார்.

இயேசு கிறிஸ்து குருடனாயிருந்தவனைக்கண்டு அவனிடத்தில் ஆறுதலாகப் பேசுகிறார். தேவனுடைய சத்தியத்தை அவனுக்கு உபதேசம்பண்ணுகிறார். இவன் கொஞ்சத்தில் உண்மையுள்ளவனாக இருக்கிறான். ஆகையினால் இவனை அநேகத்தின்மேல் அதிகாரியாக்கவேண்டுமென்று இயேசுகிறிஸ்து சித்தங்கொண்டிருக்கிறார். "உள்ளவன் எவனோ அவனுக்குக் கொடுக்கப்படும். அவன் பரிபூரணமும் அடைவான்" (மத் 13:12).

குருடனாயிருந்தவனுடையவிசுவாசத்தை இயேசுகிறிஸ்து சோதித்துப் பார்க்கிறார். "நீ தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறாயா" என்று அவனிடத்தில் கேட்கிறார்.

மேசியா தம்மை இந்த வசனத்தில் "தேவனுடைய குமாரன்" என்று அழைத்துக்கொள்கிறார். இயேசுகிறிஸ்துவின் ராஜ்யம் இந்த உலகத்திற்குரியதல்ல. இது ஆவிக்குரியது. இது தெய்வத்துவமுடையது. ஆகையினால்தான் இயேசுகிறிஸ்து தம்மைத் தாமே தேவனுடைய குமாரனென்று அழைக்கிறார்.

**அவர் யார்**

**அதற்கு அவன்: ஆண்டவரே, அவரிடத்தில் நான் விசுவாசமாயிருக்கும்படிக்கு அவர் யார் என்றான் (யோவா 9:36).**

தேவனுடைய குமாரனை விசுவாசிப்பதற்கு குருடனாயிருந்தவன் ஆயத்தமாயிருக்கிறான். ஆர்வமாகவும் இருக்கிறான். ஆனால் அவர் யார் என்பது அவனுக்குத் தெரியவில்லை. தம்மிடத்தில் தேவனுடைய குமாரனைப்பற்றிக் கூறிய இயேசுகிறிஸ்துவிடமே "ஆண்டவரே, அவரிடத்தில் நான் விசுவாசமாயிருக்கும்படிக்கு அவர் யார்" என்று கேட்கிறான். தம்மைக் குணப்படுத்தியது இயேசுகிறிஸ்துதான் என்றும், அவரே தேவனுடைய குமாரனென்றும் ஒருவேளை இவனுக்குத் தெரிந்திருக்கலாம். ஆனால் இயேசுகிறிஸ்துவை இதுவரையிலும் இவன் பார்த்ததில்லை. அவரைப் பார்க்கவேண்டுமென்று விரும்புகிறான். தன்னிடத்தில் தேவனுடைய குமாரனைப்பற்றி அறிவிக்கிறவர், தன்னைத் தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவிடம் வழிநடத்துவார் என்று இவன் எதிர்பார்க்கிறான்.

குருடனாயிருந்தவனுக்கு ஒருவேளை இயேசுவைப்பற்றி ஓரளவு மாத்திரமே தெரிந்திருப்பதற்கும் வாய்ப்புள்ளது. தன்னிடத்தில் பேசுகிறவர் இயேசு என்பதை இவன் அறிந்திருக்கலாம். இவர் நல்லவரென்றும், பெரியவரென்றும், ஒரு தீர்க்கதரிசியென்றும் இவன் அறிந்து வைத்திருக்கலாம். அதேவேளையில் இயேசுகிறிஸ்துதான் தேவனுடைய குமாரனென்பது இவனுக்கு இதுவரையிலும் தெரியாமல் கூடயிருந்திருக்கலாம். ஆகையினால் இவன் இயேசுகிறிஸ்துவிடம் "எனக்குப் பார்வையைக்கொடுத்த ஆண்டவரே, தேவகுமாரன் யார் என்பதையும், அவர் எங்கேயிருக்கிறார் என்பதையும் எனக்குச் சொல்லும்" என்று பொருள்படுமாறு கூட இவன் இயேசுவிடத்தில் கேட்டிருக்கலாம். இவனுடைய கேள்வி நியாயமானது. தேவனுடைய குமாரனை எப்படியாவது தெரிந்துகொள்ள வேண்டும் என்னும் ஆர்வத்தில் "ஆண்டவரே, அவரிடத்தில் நான் விசுவாசமாயிருக்கும்படிக்கு அவர் யார்" என்று கேட்கிறான்.

## அதிகாரம் - 9

**நீ அவரைக் கண்டிருக்கிறாய்**

**இயேசு அவனை நோக்கி: நீ அவரைக் கண்டிருக்கிறாய், உன்னுடனே பேசுகிறவர் அவர்தான் என்றார் (யோவா 9:37).**

இயேசுகிறிஸ்து கிருபை மிகுந்தவர். குருடனாயிருந்தவனிடம் தம்முடைய கிருபையினால், "தாமே தேவனுடைய குமாரன்" என்பதை வெளிப்படுத்துகிறார். "நீ அவரைக் கண்டிருக்கிறாய், உன்னுடனே பேசுகிறவர் அவர்தான்" என்று கிருபை நிறைந்த வார்த்தைகளினால் கூறுகிறார். இயேசுகிறிஸ்து இதுவரையிலும் தம்மைப்பற்றி இதுபோல பிரத்தியட்சமாக வெளிப்படுத்திப் பேசவில்லை. குருடனாயிருந்த இவனுக்கும், சமாரியா ஸ்திரீக்கும் மாத்திரமே இயேசுகிறிஸ்து தம்மை இவ்வளவு பிரத்தியட்சமாக வெளிப்படுத்திக் காண்பித்திருகிறார். மற்றவர்களோ இயேசுகிறிஸ்து எப்படியிருக்கிறார் என்பதைத் தேடிக்கண்டுபிடிக்க வேண்டும். அவரைப்பற்றித் தியானித்துப் புரிந்துகொள்ளவேண்டும். ஆனால் இங்கோ இயேசுகிறிஸ்துவே தேடிவந்து, குருடனாயிருந்தவனுக்குத், தம்மைப்பற்றிப் பிரத்தியட்சமாக வெளிப்படுத்துகிறார்.

இயேசுகிறிஸ்து குருடனாயிருந்தவனிடம் தம்மைப்பற்றிப் பேசும்போது இரண்டு காரியங்களைக் கூறுகிறார். அவையாவன: 1. நீ அவரைக் கண்டிருக்கிறாய் 2. உன்னுடனே பேசுகிறவர் அவர்தான்.

பிறவிக்குருடனாகயிருந்த இவனுடைய கண்களை இயேசுகிறிஸ்து திறந்திருக்கிறார். இது இயேசுகிறிஸ்துவின் கிருபையும் இரக்கமும் மிகுந்த செயல். தேவகுமாரனாகிய தம்மை இவனுக்கு வெளிப்படுத்துவது அதைவிட பெரிய அற்புதம். குருடனாயிருந்தவன் இப்போது தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவைக் காண்கிறான். நம்முடைய சரீரத்தின் கண்களினால் இந்த உலகத்திலுள்ள பல காரியங்களைப் பார்த்து சந்தோஷப்படுகிறோம். நம்முடைய பார்வை நம்முடைய விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணவேண்டும். அது நம்முடைய ஆத்துமாவின் வளர்ச்சிக்கு உதவிபுரிவதாக இருக்கவேண்டும். பிறவிக் குருடனாகயிருந்தவன் பார்வையடைந்து இப்போது பல காட்சிகளைப் பார்க்கிறான். அந்தக் காட்சிகள் எல்லாவற்றையும்விட, தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவை இவன் தன் கண்களால் பார்ப்பது இவனுக்குக் கிடைத்திருக்கும் மிகப்பெரிய பிலாக்கியமாகும்.

இக்காலத்தில் இயேசுகிறிஸ்துவை நம்முடைய கண்களினால் பிரத்தியட்சமாகப் பார்க்க முடியாமல் போகலாம். ஆயினும் அவரை நம்முடைய மனக்கண்களினால் பார்க்க முடியும். இயேசுகிறிஸ்துவிடம் நம்முடைய மனக்கண்களைப் பிரகாசமுள்ளதாக ஆக்குமாறு விண்ணப்பம் பண்ணவேண்டும். அப்போது அவர் நம்முடைய மனக்கண்களைத் திறப்பார். நாமும் இயேசுகிறிஸ்துவை நம்முடைய விசுவாசத்தினால் தரிசிப்போம். அவரைப்பார்க்கும்போது அவருடைய அழகையும் மகிமையையும் தரிசித்து அவரை நாம் போற்றித் துதிக்கவேண்டும். நம்முடைய மனக்கண்களைத் திறந்திருக்கிற இயேசுகிறிஸ்துவுக்கு நாம் எப்போதும் நன்றியுள்ளவர்களாக ஜீவிக்கவேண்டும்.

இக்காலத்தில் நாம் பல தலைவர்களைப்பார்க்கிறோம். சில சமயங்களில் கூட்டம் அதிகமாயிருந்தாலும் தூரத்திலிருந்தாவது பெரிய தலைவர்களைப் பார்த்துவிடுகிறோம். இதனால் நமக்கு மிகுந்த சந்தோஷம் உண்டாகிறது. தலைவர்களும் இதைத்தான் விரும்புகிறார்கள். தாங்கள் செல்லும் இடங்களிலெல்லாம் திரளான ஜனங்கள் தங்களைப் பார்ப்பதற்காக கூடியிருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். ஆனால் இந்த தலைவர்கள் கூட்டத்திலுள்ள ஒருவரிடத்தில்கூட நேரில் வந்து பேசமாட்டார்கள். தூரத்திலேயே தங்களுடைய முகத்தைக் காண்பித்துவிட்டு அந்த இடத்தைவிட்டுக் கடந்துபோய்விடுவார்கள்.

நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவோ உலகப்பிரகாரமான தலைவரைப் போன்றவரல்ல. தம்மைத்தேடி, தம்மைப் பார்ப்பதற்காக, தம்மிடத்தில் வந்திருக்கும் தம்முடைய பிள்ளைகளிடத்தில் இயேசுகிறிஸ்து பேசுகிறார். இயேசுகிறிஸ்து குருடனாயிருந்தவனிடம் தம்மைப்பற்றி வெளிப்படுத்தும்போது "உன்னுடனே பேசுகிறவர் அவர்தான்" என்று கூறுகிறார். அவர் நம்மைக் காண்கிறவர் மாத்திரமல்ல. அவர் நம்மோடு பேசுகிறவராகவும் இருக்கிறார். தம்மைக் காணவேண்டுமென்றும், தம்மிடத்தில் பேசவேண்டுமென்றும் வாஞ்சையோடு இருக்கிற தம்முடைய பிள்ளைகளுக்குத் தம்மை வெளிப்படுத்தி, அவர்களோடு பேசுகிறார்.

## அதிகாரம் - 9

எம்மாவு ஊருக்குப் போகும் வழியில் உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்து இரண்டு சீஷர்களோடு பேசிக்கொண்டு நடந்து சென்றார். அப்போது தங்களுடைய இருதயம் கொழுந்துவிட்டு எரிந்ததாக அந்த இரண்டு சீஷர்களும் சாட்சி கூறினார்கள் (லூக் 24:32). இயேசுகிறிஸ்து நம்மோடு பேசும்போது, நம்முடைய செவிகளில் பேசுவதற்குப் பதிலாக, நம்முடைய இருதயத்தில் பேசுவதையே விரும்புகிறார். இயேசுகிறிஸ்து நம்முடைய இருதயத்தில் பேசும்போது நம்முடைய இருதயமும் கொழுந்துவிட்டு எரியும்.

குருடனாயிருந்தவன் "தேவனுடைய குமாரன் யார்" என்று இயேசுகிறிஸ்துவிடம் கேட்கிறான். அவன் கேட்கிற அதே வேளையில் தானே அவன் இயேசுவைக் காண்கிறான். அவரோடு பேசுகிறான். அவரும் அவனோடு பேசுகிறார். இயேசுகிறிஸ்துவைத் தேடுகிற ஆத்துமாக்களுக்கு அவர் சமீபமாக இருக்கிறார். அவர் இந்த அளவுக்கு நமக்கு சமீபமாக இருக்கிறாரென்பதைப் பல சமயங்களில் நாமே புரிந்துகொள்வதில்லை. அவர் நம்மோடு கூடவேயிருக்கிறவர். நமக்குள்ளே இருக்கிறவர்.

### ஆண்டவரே விசுவாசிக்கிறேன்

**உடனே அவன்: ஆண்டவரே, விசுவாசிக்கிறேன் என்று சொல்லி, அவரைப் பணிந்துகொண்டான் (யோவா 9:38).**

இயேசுகிறிஸ்து குருடனாயிருந்தவனிடம் தம்மைப்பற்றி வெளிப்படுத்துகிறார். இந்த ஆச்சரியமான வெளிப்பாட்டிற்கு இவன் உடனடியாகக் கீழ்ப்படிகிறான். "ஆண்டவரே விசுவாசிக்கிறேன்" என்று தன்னுடைய விசுவாசத்தை உறுதிபண்ணுகிறான். இயேசுகிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனாக விசுவாசிக்கிறபோது, அவன் அவரைப் பணிந்துகொள்கிறான். இயேசுகிறிஸ்துவோடு இவன் எந்தவாக்குவாதமும் பண்ணவில்லை. இவனுடைய ஜீவியத்தில் இயேசுகிறிஸ்து பெரிய அற்புதத்தைச் செய்திருக்கிறார். பிறவிக்குருடனாக இருந்த இவனுடைய கண்களை இயேசுகிறிஸ்து அற்புதமாகத் திறந்திருக்கிறார்.

தன்னுடைய ஜீவியத்தில் இயேசுகிறிஸ்து செய்த அற்புதங்களும் அடையாளங்களுமே, இயேசுகிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனாக அங்கீகரித்து ஏற்றுக்கொள்வதற்கு போதுமானது என்று நினைக்கிறான். ஆகையினால் குருடனாயிருந்தவன் இதற்குமேல் இயேசுகிறிஸ்துவிடம் எந்தக் கேள்வியும் கேட்கவில்லை. எந்தக் காரியத்தைப்பற்றியும் அவரிடத்தில் வாக்குவாதம்பண்ணவுமில்லை. இயேசுகிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனாகத் தன்னுடைய இருதயத்தில் விசுவாசித்து, தான் விசுவாசிப்பதைத் தன்னுடைய நாவினால் அறிக்கைபண்ணுகிறான். இதுவரையிலும் நெறிந்த நாணலைப்போல இருந்தவன் இப்போது கேதுரு மரத்தைப்போல நிமிர்ந்து நிற்கிறான்.

தம்மைப் பிரத்தியட்சமாக வெளிப்படுத்திக் காண்பித்திருக்கும் தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவைக் குருடனாயிருந்தவன் பணிந்துகொள்கிறான். இயேசுகிறிஸ்துவை இவன் பணிந்துகொள்வதற்கு, "அவரைத் தன்னுடைய ஆண்டவராக அங்கீகரித்திருக்கிறான்" என்பது பொருளாகும். இயேசுகிறிஸ்துவிடத்தில் விசுவாசம் வைத்திருக்கிறவர்கள் அவரைத் தங்களுடைய ஆண்டவராக அங்கீகரித்துத் தொழுதுகொள்ளவேண்டும். அவரை ஆராதிக்கவேண்டும். வேதாகமத்தில் குருடனாயிருந்த இந்த மனுஷனைப்பற்றி இதற்குமேல் வேறு எங்கும் எழுதப்படவில்லை.

### நியாயத்தீர்ப்புக்கு வந்தவர்
### யோவா 9 : 39-41

**யோவா 9:39. அப்பொழுது இயேசு: காணாதவர்கள் காணும்படியாகவும், காண்கிறவர்கள் குருடராகும்படியாகவும் நியாயத்தீர்ப்புக்கு நான் இந்த உலகத்தில் வந்தேன் என்றார்.**

**யோவா 9:40. அவருடனேகூட இருந்த பரிசேயரில் சிலர் இவைகளைக் கேட்டபொழுது: நாங்களும் குருடரோ என்றார்கள்.**

**யோவா 9:41. இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் குருடராயிருந்தால் உங்களுக்குப் பாவமிராது; நீங்கள் காண்கிறோம் என்று சொல்லுகிறபடியினால் உங்கள் பாவம் நிலைநிற்கிறது என்றார்.**

## அதிகாரம் - 9

**காணாதவர்கள் காணும்படியாகவும்**

**அப்பொழுது இயேசு: காணாதவர்கள் காணும்படியாகவும், காண்கிறவர்கள் குருடராகும்படியாகவும் நியாயத்தீர்ப்புக்கு நான் இந்த உலகத்தில் வந்தேன் என்றார் (யோவா 9:39).**

இயேசுகிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்திருப்பதற்கு ஒரு தெய்வீக நோக்கமுள்ளது. நியாயத்தீர்ப்புக்குத் தாம் இந்த உலகத்தில் வந்திருப்பதாக இயேசுகிறிஸ்து கூறுகிறார். இதுவே அவருடைய தெய்வீகத் திட்டம். இந்த சம்பவத்தை இயேசுகிறிஸ்து கூறும்போது, ஒரு பிரசங்க பீடத்தில் பிரசங்கியார் பிரசங்கம்பண்ணுவபோலப் பேசவில்லை. ஒரு ராஜா தன்னுடைய சிங்காசனத்தில் அமர்ந்திருந்து, தன்னுடைய தீர்ப்பை வழங்குவதுபோல, இயேசுகிறிஸ்து மிகவும் கம்பீரமாகத் தம்முடைய நியாயத்தீர்ப்பைப் பற்றிப் பேசுகிறார்.

இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் செய்யவேண்டிய ஊழியம் மிகவும் பெரியது. அவர் நியாயத்தீர்ப்புக்காக இந்த உலகத்தில் வந்திருக்கிறார். தேவனுடைய சத்தியத்தையும், அவருடைய பிரமாணத்தையும் ஜனங்களுக்கு உபதேசம்பண்ணுகிறார். இவை மனுஷரைச் சோதித்தறியும். மனுஷருடைய உண்மையான குணாதிசயத்தை இவை கண்டுபிடிக்கும். முடிவில் இயேசுகிறிஸ்துவின் உபதேசமும் நீதியும் நல்லோரையும் தீயோரையும் வேறுபிரிக்கும். மனுஷருடைய இருதயத்திலுள்ள எண்ணங்களையெல்லாம் இயேசுகிறிஸ்து வெளிப்படுத்துகிறார். இதுவரையிலும் மறைவாகயிருந்த மனுஷருடைய உண்மையான சுபாவங்களை இயேசுகிறிஸ்து வெளிச்சத்திற்குக் கொண்டுவருகிறார்.

தம்முடைய ஊழியத்தின் நோக்கத்தை தெளிவுபடுத்தி விவரிப்பதற்காக இயேசுகிறிஸ்து இந்த உபதேச வார்த்தையைக் கூறுகிறார். "காணாதவர்கள் காணும்படியாகவும் காண்கிறவர்கள் குருடராகும்படியாகவும்" இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் வந்திருக்கிறார். இயேசு கிறிஸ்துவின் இந்தச் சத்திய வாக்கியம் ஜனங்களுக்கும் பொருந்தும், தேசங்களுக்கும் பொருந்தும். புறஜாதி ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் காண்கிறார்கள். அதே சமயத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் காண முடியாதபடி குருடராயிருக்கிறார்கள். புற ஜாதியாருடைய கண்கள் திறக்கப்படுகிறது. இஸ்ரவேல் ஜனத்தாருடைய கண்கள் அடைக்கப்படுகிறது.

இயேசுகிறிஸ்துவின் இந்த உபதேசத்தைத் தேசங்களுக்கும், ஜனங்களுக்கும் வியாக்கியானம்பண்ணிக் கூறும்போது, இதைத் தனிநபர்களுக்கும் பொருந்துமாறு வியாக்கியானம்பண்ணலாம். யாரெல்லாம் ஆவிக்குரிய ரீதியாக குருடனாயிருக்கிறார்களோ அவர்களுக்குப் பார்வையைக்கொடுப்பதற்காக இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் வந்திருக்கிறார். இதுவரையிலும் ஆவிக்குரிய குருடராயிருந்தவர்கள் இப்போது சத்தியத்தைக் காண்கிறார்கள். குருடாயிருக்கும் நம்முடைய மனக்கண்களைக் தம்முடைய பரிசுத்த ஆவியானவரால் குணப்படுத்தித் திறக்கிறார். நம்முடைய கண்களைப் பிரகாசமுள்ளதாக மாற்றுகிறார். இதுவரையிலும் இருளிலிருந்த ஏராளமான ஆத்துமாக்கள் இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தினால் வெளிச்சத்திற்குத் திரும்பி வருகிறார்கள்.

காணாதவர்களைக் காணச்செய்வது இயேசுகிறிஸ்துவின் ஊழியம். அதேவேளையில் காண்கிறவர்களைக் குருடராகும்படியாகச் செய்வதும் அவருடைய ஊழியமாயிருக்கிறது. தங்களுடைய சுயஞானத்திலும், சுயபெருமையிலும் பெருமைப்படுகிறவர்கள் ஆவிக்குரிய சத்தியங்களைக் காணமாட்டார்கள். தேவனுடைய தெய்வீக வெளிப்பாட்டை இவர்களால் காணமுடியாது. உலகப்பிரகாரமான ஞானம் இவர்களிடத்தில் அதிகமாயிருந்தாலும் ஆவிக்குரிய காரியங்களை இவர்கள் அறியாதவர்களாகவே இருக்கிறார்கள். இவர்களுக்கு சரீரப்பிரகாரமான கண்கள் இருக்கிறது. ஆனால் இவர்களுடைய ஆவிக்குரிய கண்களையோ இவர்களுடைய பாவங்களும் பெருமைகளும் அடைத்துப்போடுகிறது.

இயேசுகிறிஸ்துவைப்பற்றிய உபதேசம் உலகப்பிரகாரமான ஜனங்களுக்கு பைத்தியமாகத் தோன்றுகிறது. இப்படிப்பட்ட ஜனங்கள் இயேசுகிறிஸ்துவைத் தங்கள் சுயஞானத்தினால் அறிந்துகொள்ளலாம் என்று முயற்சிசெய்கிறார்கள். ஆனால் இவர்களுடைய உலகஞானமே இவர்களுடைய ஆவிக்குரிய கண்களைக் குருடாக்கிவிடுகிறது. இவர்கள் உலகக்காரியங்களைக் காண்கிறார்கள். ஆவிக்குரிய காரியங்களைக் காணமுடியாத குருடராயிருக்கிறார்கள்.

**நாங்களும் குருடரோ**

**அவருடனேகூட இருந்த பரிசேயரில் சிலர் இவைகளைக் கேட்டபொழுது: நாங்களும் குருடரோ என்றார்கள் (யோவா 9:40).**

## அதிகாரம் - 9

இயேசுகிறிஸ்து இந்த உபதேசத்தை கூறும்போது அங்கு ஒருசில பரிசேயரும் அவருடனே கூடயிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் வார்த்தையினால் அவர்களுக்குக் கோபம் உண்டாயிற்று. "காண்கிறவர்கள் குருடராகும்படியாக நியாயத்தீர்ப்புக்கு நான் இந்த உலகத்தில் வந்தேன்" என்று இயேசுகிறிஸ்து தங்களைப்பற்றித்தான் கூறுகிறார் என்று நினைத்து இந்தப் பரிசேயர்கள் தங்கள் இருதயத்தில் குத்தப்படுகிறார்கள்.

ஜனங்களோ பரிசேயர்களைத் தீர்க்கதரிசிகளாக மதிக்கிறார்கள். தேவனுடைய ரகசியங்களை இவர்கள் தங்களுக்காகப் பார்த்து தங்களிடத்தில் அறிவிக்கிறவர்கள் என்று ஜனங்கள் பரிசேயரைப் போற்றிப் புகழுகிறார்கள். இவர்களே தங்களுடைய தீர்க்கதரிசனம் என்றும், இவர்களே உள்ளான காரியங்களையும் புறம்பான காரியங்களையும் தங்களுக்காகப் பார்க்கிறவர்கள் என்றும் ஜனங்கள் பரிசேயரைப் பெருமைப்படுத்துகிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவின் வார்த்தையோ தங்களைச் சிறுமைப்படுத்துவதாக நினைத்து "நாங்களும் குருடரோ" என்று கோபத்தோடு கேட்கிறார்கள்.

வேதஅறிவில்லாத சாதாரண ஜனங்கள் ஆவிக்குரிய குருடராகயிருப்பதை பரிசேயரும் அங்கீகரிக்கிறார்கள். ஆனால் தாங்களோ வேதஅறிவில் சிறந்தவர்களென்றும், தங்களுடைய ஆவிக்குரிய கண்கள் பிரகாசமானதாக இருக்கிறது என்றும் நினைத்துப் பரிசேயர்கள் பெருமையோடிருக்கிறார்கள். ஆகையினால்தான் இவர்கள் இயேசுவிடம் "நாங்களும் குருடரோ" என்று கோபத்தோடு கேட்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து பரிசேயர்களை அடிக்கடி கடிந்துகொள்கிறார். இவர்கள் மெய்யாகவே கடிந்துகொள்ளப்பட வேண்டியவர்கள்தான். ஏனெனில் இவர்களுடைய சிந்தனையும் சரியில்லை, செயலும் சரியில்லை. பக்தியின் வேஷத்தைத் தரித்திருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து தம்முடைய கிருபையினால்தான் இவர்களைக் கடிந்துகொள்கிறார். இவர்கள்மீது இயேசுவுக்கு ஒரு கோபமும் இல்லை. இவர்களும் மனந்திரும்பி தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டுமென்பதே இயேசுகிறிஸ்துவின் சித்தம். ஆனால் தங்களைக் கடிந்துகொள்கிறவர் நீதியுள்ளவர் என்பதை ஏற்றுக்கொள்ளப் பரிசேயருக்கு மனதில்லை. இயேசுகிறிஸ்து தங்களுக்குக் கூறும் ஆலோசனைகளை, இவர்கள் தங்களுக்கு விரோதமாகக் கூறும் குற்றச்சாட்டுக்களாகக் காண்கிறார்கள். இயேசுவின் வார்த்தையைக் கேட்டு மனந்திரும்புவதற்குப் பதிலாக, தங்கள் இருதயத்தை கடினப்படுத்தி, இயேசுவுக்கு விரோதமாக எதிர்த்து நிற்கிறார்கள்.

**உங்கள் பாவம் நிலைநிற்கிறது**

**இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் குருடராயிருந்தால் உங்களுக்குப் பாவமிராது; நீங்கள் காண்கிறோம் என்று சொல்லுகிறபடியினால் உங்கள் பாவம் நிலைநிற்கிறது என்றார் (யோவா 9:41).**

"நாங்களும் குருடரோ" என்று பரிசேயர் இயேசுகிறிஸ்துவிடம் கோபத்தோடு கேட்கிறார்கள். இயேசுகிறிஸ்து கூறிய பிரதியுத்தரம் அவர்களுக்குத் திருப்தியாக இல்லை. ஆனாலும் அதற்குமேல் இயேசுவிடம் பேசமுடியாமல் பரிசேயர் அமைதியாக இருந்துவிடுகிறார்கள். இயேசுகிறிஸ்து அவர்களிடம் "நீங்கள் குருடராயிருந்தால் உங்களுக்கு பாவமிராது" என்று கூறுகிறார். அதோடு சேர்த்து "நீங்கள் காண்கிறோம் என்று சொல்லுகிறபடியினால் உங்கள் பாவம் நிலைநிற்கிறது" என்றும் அவர்களிடம் கூறுகிறார்.

தாங்கள் குருடர்களல்ல என்று பரிசேயர்கள் தங்களைப்பற்றி பெருமையாக நினைக்கிறார்கள். தங்கள் சரீரத்தின் கண்களால், உலகத்தின் காரியங்களை மாத்திரமே இவர்களால் பார்க்க முடியும். இதை மாத்திரம் பார்த்தாலே போதுமானது என்றும், உலகப்பிரகாரமான பார்வையே தங்களை வழிநடத்தும் என்றும் இவர்கள் சுயதிருப்தியுடனும் சுயபெருமையுடனும் இருக்கிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ பரிசேயர்கள் எதில் நம்பிக்கை வைத்திருக்கிறார்களோ, எதில் பெருமைப்படுகிறார்களோ அதுவே அவர்களை அழித்துப்போடும் என்று எச்சரிக்கிறார். எது தங்களுக்கு மேன்மை என்று நினைக்கிறார்களோ அதுவே அவர்களை அவமானப்படுத்திவிடும் என்று சத்தியத்தை அறிவிக்கிறார்.

## அதிகாரம் - 9

அவர்கள் குருடராயிருந்தால் அவர்களுக்குப் பாவமிராது இது மெய்யான சத்திய வார்த்தை. இவர்கள் குருடராகயிருப்பார்களென்றால், இப்போது இவர்களிடத்தில் இருக்கிற பாவங்களைப்போல அதிகமான பாவம் இருக்காது. தங்களுக்குக் கண்கள் இருப்பதினால் இவர்கள் அதிகமான பாவங்களைச் செய்கிறார்கள். தேவனும் அறியாமையின் காலங்களைக் காணாததுபோல விட்டுவிடுகிறார். கண்பார்வையில்லாதவர்கள் செய்கிற தவறுகளைத் தேவன் பொறுத்துக்கொள்கிறார். ஆனால் இவர்களோ வெளிச்சத்திற்கு விரோதமாக கலகம்பண்ணுகிறார்கள்.

தாங்கள் குருடர்கள் என்பதை இவர்கள் அங்கீகரித்தால், தங்களை வழிநடத்துவதற்கு இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்வார்கள். இயேசுகிறிஸ்து இவர்களை வழிநடத்தும்போது இவர்களுக்குப் பாவம் இருக்காது.

தங்களுக்கு வியாதியிருக்கிறது என்று அங்கீகரிக்கிறவர்கள் மாத்திரமே மருத்துவ சிகிச்சையை ஏற்றுக்கொள்வார்கள். வியாதி நீங்கி விரைவில் குணமடைவார்கள். தங்களுக்கு வியாதியிருந்தும், தங்கள் சரீரத்தில் ஒரு வியாதியும் இல்லையென்று வீண்பெருமையாகச் சாதிக்கிறவர்கள் மருத்துவ சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளமாட்டார்கள். வியாதி முற்றிப்போய் அநேக பாடுகளை அனுபவிப்பார்கள்.

நாம் இரட்சிக்கப்படுவதற்கு நம்முடைய பெருமையே நமக்குத் தடையாக இருக்கும். "நான் ஒன்றுமில்லை ஆண்டவரே" என்று நம்மை ஆண்டவரிடத்தில் தாழ்த்தும்போது, அவருடைய உதவிகளையும் ஒத்தாசைகளையும் நாம் ஏற்றுக்கொள்வோம். "எனக்கு எல்லாம் தெரியும், என்னிடத்தில் எல்லாம் இருக்கிறது" என்று ஆணவமாகப் பேசினால், நாம் தேவனுடைய உதவிகளையும் ஒத்தாசைகளையும் எதிர்பார்க்கமாட்டோம். அவற்றைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்றும் வாஞ்சையோடு இருக்கமாட்டோம். சுயபெருமையே ஆத்தும இரட்சிப்புக்கு மிகப்பெரிய தடையாக இருக்கிறது. தனக்கு எல்லாம் தெரியும் என்று கூறுகிறவன் மெய்யாகவே ஒன்றும் தெரியாதவனாகவே இருக்கிறான்.

இயேசுகிறிஸ்து பரிசேயரிடம் "நீங்கள் காண்கிறோம் என்று சொல்லுகிறபடியினால் உங்கள் பாவம் நிலைநிற்கிறது" என்று கூறுகிறார். பரிசேயரிடத்தில் வேதஅறிவு உள்ளது. அவர்கள் வேதவாக்கியங்களில் போதிக்கப்பட்டிருக்கிறார்கள். மற்றவர்களைவிட தங்களுக்கு வேதஅறிவு அதிகமாகயிருப்பதாக சுயபெருமையோடிருக்கிறார்கள். தங்களுடைய பாவத்தைக்குறித்து யாரும் தங்களுக்கு உணர்த்தவேண்டியதில்லையென்றும், தாங்கள் எப்போதுமே பரிசுத்தமாக இருப்பதாகவும் பெருமையோடு நினைத்துக்கொள்கிறார்கள். ஆகையினால் இவர்களுடைய பாவம் அகற்றப்படாமல் அப்படியே இவர்களுக்குள் நிலைநிற்கிறது.

குருடனாகயிருக்கிறவன் தன்னுடைய உண்மைநிலையை அறிந்து, மிகவும் ஜாக்கிரதையாக நடப்பான். நன்றாகக் கண்தெரிகிறவன் தன் கண்களை மூடிக்கொண்டு, தனக்கு கண்தெரியும் என்று இறுமாப்போடு நடந்தால், எங்கேயாவது ஆபத்தில் விழுந்துவிடுவான். அஞ்ஞானிகளுக்கும், ஆயக்காரருக்கும், பாவிகளுக்கும், வேசிகளுக்கும்கூட இயேசுகிறிஸ்துவின் இரட்சிப்பு சமீபமாயிருக்கிறது. ஆனால் தங்களுக்கு எல்லாம் தெரியுமென்று இறுமாப்பாக இருக்கிற பரிசேயருக்கோ இரட்சிப்பு தூரமாயிருக்கிறது. அவர்களுடைய பாவம் அவர்களுக்குள் நிலைநிற்கிறது.

## அதிகாரம் - 10

இயேசுகிறிஸ்து தம்மைப்பற்றி உவமையினால் விளக்கிக் காண்பிக்கிறார். தாமே ஆடுகளுக்கு வாசலாகயிருப்பதாகவும், தாமே ஆடுகளுக்கு மேய்ப்பராகயிருப்பதாகவும் இயேசுகிறிஸ்து தம்மைப்பற்றிக் கூறுகிறார் (யோவா 10:1-18). இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைக்கேட்டு யூதர்களுக்குள் பிரிவினை உண்டாயிற்று (யோவா 10:19-21). எருசலேமிலே தேவாலயப் பிரதிஷ்டைப் பண்டிகையின்போது இயேசுகிறிஸ்துவுக்கும் யூதர்களுக்கும் இடையே நடைபெறும் உரையாடல் (யோவா 10:22-39). இயேசுகிறிஸ்து எருசலேமைவிட்டு யோர்தானுக்கு அக்கரையிலே வருகிறார் (யோவா 10:40-42).

### மேய்ப்பனும் ஆடுகளும்
### யோவா 10 : 1-5

**யோவா 10:1. மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆட்டுத்தொழுவத்துக்குள் வாசல்வழியாய்ப் பிரவேசியாமல், வேறுவழியாய் ஏறுகிறவன் கள்ளனும் கொள்ளைக்காரனுமாயிருக்கிறான்.**

**யோவா 10:2. வாசல்வழியாய்ப் பிரவேசிக்கிறவனோ ஆடுகளின் மேய்ப்பனாயிருக்கிறான்.**

**யோவா 10:3. வாசலைக் காக்கிறவன் அவனுக்குத் திறக்கிறான்; ஆடுகளும் அவன் சத்தத்துக்குச் செவிகொடுக்கிறது. அவன் தன்னுடைய ஆடுகளைப் பேர்சொல்லிக் கூப்பிட்டு, அவைகளை வெளியே நடத்திக் கொண்டுபோகிறான்.**

**யோவா 10:4. அவன் தன்னுடைய ஆடுகளை வெளியே விட்டபின்பு, அவைகளுக்கு முன்பாக நடந்துபோகிறான், ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவனுக்கு பின்செல்கிறது.**

**யோவா 10:5. அந்நியருடைய சத்தத்தை அறியாதபடியினால் அவைகள் அந்நியனுக்குப் பின் செல்லாமல், அவனை விட்டோடிப்போம் என்றார்.**

### ஆட்டுத்தொழுவம்

**மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆட்டுத்தொழுவத்துக்குள் வாசல்வழியாய்ப் பிரவேசியாமல், வேறுவழியாய் ஏறுகிறவன் கள்ளனும் கொள்ளைக் காரனுமாயிருக்கிறான் (யோவா 10:1).**

யூதஜனங்களுக்குத் தாங்கள் போதகர்களைப்போல இருப்பதாகவும், இயேசுகிறிஸ்து ஜனங்கள் மத்தியிலே குழப்பத்தை உண்டுபண்ணுவதற்கு வந்திருப்பதாகவும் பரிசேயர்கள் தங்களுக்குள்ளே யோசனை பண்ணுகிறார்கள். இயேசுவுக்கு விரோதமான தங்கள் யோசனையை ஜனங்கள் மத்தியில் உபதேசமாகப் பிரசங்கம்பண்ணுகிறார்கள். யூதஜனங்கள் தங்களுடைய உபதேசத்திற்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டுமென்றும், இயேசுகிறிஸ்துவின் உபதேசத்திற்குச் செவிகொடுக்காமல் அவருக்கு எதிர்த்து நிற்கவேண்டுமென்றும் பரிசேயர் போதகம்பண்ணுகிறார்கள். இப்படிப்பட்ட கள்ள உபதேசத்தின் மத்தியில், இயேசுகிறிஸ்து உண்மையான மேய்ப்பர்கள் யார் என்றும், கள்ள மேய்ப்பர்கள் யார் என்றும் விவரித்துக் கூறுகிறார். இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்டு பரிசேயர்கள் தங்களைப்பற்றி நிதானித்து அறிந்துகொள்ளலாம்.

தம்முடைய உபதேசத்தை ஆரம்பிக்கும்போதே இயேசுகிறிஸ்து "மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்னும் வாக்கியத்தைக் கூறுகிறார். இயேசுகிறிஸ்துவின் வார்த்தையில் உண்மையும் உறுதியும் இருப்பதை இந்த வாக்கியம் தெளிவுபடுத்துகிறது.

இயேசுகிறிஸ்து கூறுகிற உவமையில் கள்ளனைப்பற்றியும் கொள்ளைக்காரனைப் பற்றியும் கூறுகிறார். இவன் ஆட்டுத்தொழுவத்திற்குள் வந்து மந்தைகளைத் திருடிச்செல்கிறவன். மேய்ப்பனுக்குச் சேதாரத்தை உண்டு பண்ணுகிறவன். கள்ளன் வாசல் வழியாய்ப் பிரவேசிக்கமாட்டான். வாசல் வழியாக பிரவேசிப்பதற்கு கள்ளனுக்கு அனுமதியில்லை. எப்படியாவது தொழுவத்திற்குள் பிரவேசிக்கவேண்டும் என்று ஆசைப்பட்டு இவன் வேறு வழியாய் ஏறுகிறான். இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாக உபதேசம்பண்ணுகிற பரிசேயர்கள் கள்ளர்களாகவும் கொள்ளைக்காரர்களாகவும் இருக்கிறார்கள். துன்மார்க்கர்கள் சுறுசுறுப்பாகச் செயல்படுகிறார்கள். கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிற நாம் சோம்பேறிகளாகவோ கோழைகளாகவோ இருக்கக்கூடாது.

## அதிகாரம் - 10

**வாசல்வழியாய்ப் பிரவேசிக்கிறவன்**

**வாசல்வழியாய்ப் பிரவேசிக்கிறவனோ ஆடுகளின் மேய்ப்பனாயிருக்கிறான். வாசலைக் காக்கிறவன் அவனுக்குத் திறக்கிறான்; ஆடுகளும் அவன் சத்தத்துக்குச் செவிகொடுக்கிறது. அவன் தன்னுடைய ஆடுகளைப் பேர்சொல்லிக் கூப்பிட்டு, அவைகளை வெளியே நடத்திக் கொண்டுபோகிறான். அவன் தன்னுடைய ஆடுகளை வெளியே விட்டபின்பு, அவைகளுக்கு முன்பாக நடந்துபோகிறான், ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவனுக்கு பின்செல்கிறது (யோவா 10:2-4).**

ஆடுகளுக்குச் சொந்தக்காரன் வாசல்வழியாய்ப் பிரவேசிக்கிறான். இவனே ஆடுகளின் மேய்ப்பன். இவன் ஆடுகளுக்கு நன்மை செய்வதற்காகவே தொழுவத்திற்குள் வருகிறான். மேய்ப்பனுடைய பாதுகாப்பும் பராமரிப்பும் ஆடுகளுக்குத் தேவைப்படுகிறது. தன்னை மேய்க்கிற மேய்ப்பனுக்கு ஆடுகள் பால்கொடுக்கிறது. ஆடுகளின் ரோமம் கம்பளியாகப் பயன்படுகிறது. தங்களைப் போஷிக்கிற மேய்ப்பனுக்கு ஆடுகள் தங்களால் எதைக் கொடுக்க முடியுமோ அதைக்கொடுத்து அவனை ஆசீர்வதிக்கிறது.

மேய்ப்பன் தன் ஆட்டுத்தொழுவத்திற்குள் எப்போது வேண்டுமானாலும் வரலாம். இவனுக்கு முழு உரிமையிருக்கிறது. வாசலைக்காக்கிறவன் மேய்ப்பனுக்குத் தொழுவத்தின் கதவைத் திறந்துகொடுப்பான். ஆடுகளும் மேய்ப்பனுடைய சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது. மேய்ப்பன் தன்னுடைய ஆடுகளைப் பேர் சொல்லிக் கூப்பிடுவான். தன் தொழுவத்திலுள்ள எல்லா ஆடுகளைப்பற்றிய முழுவிவரமும் மேய்ப்பனுக்குத் தெரியும். மேய்ப்பன் தன்னுடைய ஆடுகளை மேய்ச்சலுக்காக வெளியே நடத்திக்கொண்டு போகிறான்.

மேய்ப்பன் தன்னுடைய ஆடுகளைத் துரத்திவிடமாட்டான். அவைகளை நடத்திக்கொண்டு போகிறான். அவைகளைத் தொழுவத்திற்கு வெளியேவிட்ட பின்பு மேய்ப்பன் தன் ஆடுகளுக்கு முன்பாக நடந்துபோகிறான். ஆடுகள் தங்கள் மேய்ப்பனுடைய சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவனுக்குப் பின்செல்கிறது. மேய்ப்பனுக்குப் பின்செல்வதுதான் ஆடுகளுக்கு பாதுகாப்பானது. மேய்ப்பனைவிட்டு அங்குமிங்கும் ஓடிப்போனால் ஆடுகளுக்கு எந்த நேரத்திலும் ஆபத்து வரலாம்.

**அந்நியருடைய சத்தம்**

**அந்நியருடைய சத்தத்தை அறியாதபடியினால் அவைகள் அந்நியனுக்குப் பின் செல்லாமல், அவனை விட்டோடிப்போம் என்றார் (யோவா 10:5).**

ஆடுகள் தங்கள் மேய்ப்பனுடைய சத்தத்திற்கும் அந்நியருடைய சத்தத்திற்கும் வித்தியாசம் கண்டுபிடிக்கும். தங்கள் மேய்ப்பனுடைய சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் ஆடுகள் அவனுக்குப் பின்செல்லும். அந்நியருடைய சத்தத்தை அறியாதபடியினால் ஆடுகள் அந்நியனுக்குப் பின்செல்லாமல் அவனைவிட்டு ஓடிப்போகும்.

நல்லவர்கள் ஆடுகளோடு ஒப்பிட்டுக் கூறப்பட்டிருக்கிறார்கள். சிருஷ்டிக்கப்பட்டிருக்கிற மனுஷர்கள் தங்களுடைய சிருஷ்டிகரை சார்ந்து ஜீவிக்கவேண்டும். நாம் எல்லோருமே தேவனுடைய மந்தையின் ஆடுகளாக இருக்கிறோம். தேவனுடைய சபையானது இந்த உலகத்தில் ஒரு ஆட்டுத்தொழுவத்தைப்போல் இருக்கிறது. சிதறடிக்கப்பட்டிருக்கும் ஆடுகளெல்லாம் இந்தத் தொழுவத்திற்குள் கூட்டிச் சேர்க்கப்படும். இயேசுகிறிஸ்து யூதஜனங்களுக்காக மாத்திரமல்ல, சிதறியிருக்கிற தேவனுடைய பிள்ளைகள் எல்லோரையும் ஒன்றாகச் சேர்க்கிறதற்காகவும் மரிக்கப்போகிறார் (யோவா 11:52).

ஆட்டுத்தொழுவத்திற்குள் மேய்ப்பனும் பிரவேசிக்கலாம். கள்ளனும் பிரவேசிக்கலாம். மேய்ப்பன் வாசல் வழியாக வருகிறான். கள்ளன் வேறு வழியாக ஏறுகிறான். வேறு வழியாய் தொழுவத்திற்குள் ஏறுகிறவர்கள் கள்ளனும் கொள்ளைக்காரனுமாயிருக்கிறான். இவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டிருக்கும் ஓநாய்களைப் போன்றவர்கள். கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு நாம் எச்சரிக்கையாயிருக்கவேண்டும். அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு நம்மிடத்தில் வருவார்கள். வெளியே அவர்கள் ஆடுகளைப்போலத் தோற்றமளித்தாலும் உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள் (மத் 7:15).

## அதிகாரம் - 10

பிரதான மேய்ப்பனாகிய நம்முடைய தேவன், தம்முடைய பிள்ளைகளாகிய ஆடுகளை அற்புதமாகப் போஷிக்கிறார், பராமரிக்கிறார். தமக்குச் சொந்தமான எல்லா ஆடுகளையும் பிரதான மேய்ப்பர் கூட்டிச் சேர்த்து, அவைகளைப் போஷித்து, பாதுகாத்துப் பராமரிக்கிறார். தேவனே நம்முடைய பிரதான மேய்ப்பன் என்று சங்கீதத்தில் எழுதப்பட்டிருக்கிறது. "கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்" (சங் 23:1) என்று தாவீது பாடுகிறார்.

பிரதான மேய்ப்பருக்குக் கீழே பணிபுரிகிற சாதாரண மேய்ப்பர்கள், தேவனுடைய தொழுவத்திலுள்ள ஆடுகளுக்கு போஜனம்கொடுக்கவேண்டும். தமக்குச் சொந்தமான ஆடுகளைப் போஷிக்கும் வேலையைப் பிரதான மேய்ப்பர், சாதாரண மேய்ப்பர்களிடம் பொறுப்பாக ஒப்புக்கொடுத்திருக்கிறார். தங்களை நம்பி ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கும் இந்த வேலையை மேய்ப்பர்கள் உண்மையாகவும் கவனமாகவும் உத்திரவாதத்தோடும் செய்யவேண்டும். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் கர்த்தருடைய பிள்ளைகளை ஆவிக்குரிய ரீதியாகப் போஷித்துப் பராமரிக்கும் மேய்ப்பர்களாகயிருக்கிறார்கள். விசுவாசிகளின் ஆவிக்குரிய காரியங்களை மேய்ப்பர்கள் பராமரித்துக் கொடுக்கவேண்டும். தேவனுடைய வார்த்தையினால் விசுவாசிகளின் ஆத்துமாக்களை போஷிக்க வேண்டும்.

மேய்ப்பர்களுக்குத் தங்கள் சபையிலுள்ள விசுவாசிகளின் பெயர்கள் தெரிந்திருக்கவேண்டும். மேய்ப்பன் தன்னுடைய ஆடுகளைப் பெயர் சொல்லிக் கூப்பிடுவதுபோல, ஊழியக்காரர்களும் தங்கள் சபையிலுள்ள விசுவாசிகளைப் பெயர் சொல்லிக் கூப்பிடுமளவுக்கு, மேய்ப்பர்கள் விசுவாசிகளின் பெயர்களைத் தெரிந்து வைத்திருக்கவேண்டும். விசுவாசிகளைப் பாதுகாக்கவேண்டும். மேய்ப்பன் தன் ஆடுகளை வெளியே நடத்திக்கொண்டு போவதுபோல, ஊழியக்காரர்களும் விசுவாசிகளை வெளியே நடத்திச் செல்லவேண்டும். தேவனுக்கும் விசுவாசிகளுக்கும் நடுவே ஊழியக்காரர்கள் மத்தியஸ்தராக இருக்கவேண்டும். விசுவாசிகளின் தேவைகளைத் தேவனிடத்திலும், தேவனுடைய வார்த்தைகளை விசுவாசிகளிடத்திலும் பேசுகிற வாயாக ஊழியக்காரர்கள் செயல்புரியவேண்டும்.

இயேசுகிறிஸ்துவுக்கு மெய்யான ஆடுகளாயிருக்கிற அவருடைய பிள்ளைகள், தங்களுடைய மேய்ப்பராகிய இயேசுகிறிஸ்துவைக் கவனத்தோடு பார்த்துக்கொண்டிருப்பார்கள். இவர்களுக்குத் தங்கள் மேய்ப்பனுடைய சத்தம் நன்றாகத் தெரியும். அந்நியருடைய சத்தத்தை அடையாளம் கண்டுகொள்வார்கள். தங்கள் மேய்ப்பருடைய சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் விசுவாசிகள் மேய்ப்பருக்குப் பின்செல்வார்கள். கள்ளப்போதகருடைய சத்தத்தை விசுவாசிகள் அறியாதபடியினால் அவர்களுக்குப் பின்செல்லமாட்டார்கள். விசுவாசிகளிடத்தில் மேய்ப்பருடைய சத்தத்தை நிதானித்து அறியும் செவியும், கீழ்ப்படிதலுள்ள இருதயமும் இருக்கவேண்டும். கள்ளப்போதகர்களுக்குப் பின்செல்லாமல் அவர்களைவிட்டு ஓடிப்போய்விடவேண்டும். சத்தத்தை வைத்தே அவர் நல்லப் போதகரா அல்லது கள்ளப்போதகரா என்பதை விசுவாசிகள் அடையாளம் கண்டுகொள்ளவேண்டும்.

### நானே வாசல்
### யோவா 10 : 6-9

**யோவா 10:6. இந்த உவமையை இயேசு அவர்களுடனே சொன்னார்; அவர்களோ அவர் சொன்னவைகளின் கருத்தை அறியவில்லை.**

**யோவா 10:7. ஆதலால் இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி: நானே ஆடுகளுக்கு வாசல் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.**

**யோவா 10:8. எனக்கு முன்னே வந்தவர்களெல்லாரும் கள்ளரும் கொள்ளைக் காரருமாயிருக்கிறார்கள்; ஆடுகள் அவர்களுக்குச் செவிகொடுக்கவில்லை.**

**யோவா 10:9. நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும் சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான்.**

**நானே ஆடுகளுக்கு வாசல்**

**இந்த உவமையை இயேசு அவர்களுடனே சொன்னார்; அவர்களோ அவர் சொன்னவைகளின் கருத்தை அறியவில்லை. ஆதலால் இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி: நானே ஆடுகளுக்கு வாசல் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். எனக்கு முன்னே வந்தவர்களெல்லாரும் கள்ளரும் கொள்ளைக்காரருமாயிருக்கிறார்கள்; ஆடுகள் அவர்களுக்குச் செவிகொடுக்கவில்லை (யோவா 10:6-8).**

## அதிகாரம் - 10

இயேசுகிறிஸ்து உவமையின் மூலமாக ஆவிக்குரிய சத்தியத்தைப் பரிசேயரிடம் பேசுகிறார். ஆனால் அவர்களோ இதன் பொருளை அறியாதிருக்கிறார்கள். தங்களுக்கு எல்லாம் தெரியுமென்று பரிசேயர்கள் சுயபெருமையோடிருக்கிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்து சொன்னவைகளின் கருத்தை அவர்கள் அறியவில்லை. அவர்களுடைய அறிவு குறைவுள்ளது. ஆனாலும் தங்களுக்கு எல்லாம் தெரியுமென்று நடிக்கிறார்கள். தேவனுடைய காரியங்களைக்குறித்துப் போதுமான அளவு ஞானம் இல்லாதவர்களாகவே இருக்கிறார்கள்.

தம்முடைய வார்த்தையைப் புரிந்துகொள்ள முடியாத பரிசேயரிடம் இயேசுகிறிஸ்து அதன் கருத்தை விவரித்துக் கூறுகிறார். தம்முடைய உவமையின் மூலமாக இயேசுகிறிஸ்து மேய்ப்பனுக்கும் கள்ளனுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை விவரிக்கிறார். மேய்ப்பன் வாசல் வழியாய்ப் பிரவேசிக்கிறான். வாசல் வழியாய் பிரவேசியாமல் வேறு வழியாய் ஏறுகிறவன் கள்ளனும் கொள்ளைக்காரனுமாயிருக்கிறான். இயேசு கிறிஸ்து தம்மை மேய்ப்பனாகவும், வாசலாகவும் குறிப்பிடுகிறார். மேய்ப்பன் உட்பிரவேசிக்கிற வாசலாக இயேசுகிறிஸ்து இருக்கிறார். அதே சமயத்தில் வாசல் வழியாக உட்பிரவேசிக்கிற மேய்ப்பனாகவும் இயேசுகிறிஸ்து இருக்கிறார்.

இயேசுகிறிஸ்துவே வாசல். தாங்கள் மாத்திரமே தேவனுடைய மெய்யான ஆடுகள் என்று யூதர்கள் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். தாங்கள் மாத்திரமே மெய்யான மேய்ப்பர்கள் என்று பரிசேயர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட யூதர்களுக்கும், பரிசேயர்களுக்கும்தான் இயேசுகிறிஸ்து இந்த உபதேசத்தைக் கூறுகிறார். அவர்களிடம் "நானே ஆடுகளுக்கு வாசல்" என்று கூறுகிறார்.

ஆட்டுத்தொழுவத்திற்குள் கள்ளனும் கொள்ளைக்காரனும் பிரவேசித்துவிடாதவாறு வாசல் அடைக்கப்பட்டிருக்கும். தம்முடைய ஆடுகளைப் பாதுகாப்பதற்காக, இயேசுகிறிஸ்து அடைக்கப்பட்டிருக்கும் வாசலாக இருக்கிறார்.

மேய்ப்பர்கள் மாத்திரமே இந்த வாசல் வழியாகப் பிரவேசிக்க முடியும். தொழுவத்திற்குள் பிரவேசிக்க அனுமதியில்லாதவர்களுக்கு இந்த வாசல் அடைத்தேயிருக்கும்.

தொழுவத்திற்குள் செல்வதற்கும், ஆடுகளைப் பெயர் சொல்லிக் கூப்பிடுவதற்கும் மேய்ப்பனுக்கு இந்த வாசல் திறக்கப்பட்ட வாசலாக இருக்கும். இயேசுகிறிஸ்து நமக்கு, மேய்ப்பராகவும் திறக்கப்பட்ட வாசலாகவும் இருக்கிறார். இந்த வாசல் வழியாகத்தான் தேவனுடைய தொழுவத்திற்குள் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை நாம் பெற்றிருக்கிறோம். இயேசுகிறிஸ்துவின் மூலமாகவே தேவன் தம்முடைய சபைக்குள் பிரவேசித்திருக்கிறார். இயேசுகிறிஸ்து மூலமாகவே பிதாவானவர் சபையில் எழுந்தருளியிருக்கிறார். இயேசுகிறிஸ்து மூலமாகவே தேவன் சபையாரோடு பேசுகிறார். இயேசுகிறிஸ்து நமக்கு வாசலாகயிருப்பதினால், அவருடைய மந்தையிலுள்ள ஆடுகளாகிய நாம், இந்த வாசல் வழியாகப் பரலோக ராஜ்யத்திற்குள், பிரவேசிக்கிற சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம்.

இயேசுகிறிஸ்து சாதாரண மேய்ப்பர்களுக்கும் வாசலாகயிருக்கிறார். பிரதான மேய்ப்பருக்கு கணக்கு ஒப்புவிக்கிற ஊழியத்தைச் செய்யும் மேய்ப்பர்களுக்கு மாத்திரமே இந்த வாசல் வழியாகப் பிரவேசிக்கிற சிலாக்கியம் கிடைக்கும். கள்ளப்போதகர்களுக்கு இந்த வாசல் வழியாகப் பிரவேசிக்க அனுமதியில்லை. இவர்கள் மேய்ப்பர்களைப்போல வேஷம்போட்டிருப்பார்கள். ஆனால் ஆடுகளோ கள்ளப்போதகர்களின் சத்தத்தை அறியாதிருக்கும். இவர்கள் ஆடுகளை மேய்க்கிற மேய்ப்பர்களல்ல. இவர்கள் ஆடுகளைத் திருடிச்செல்கிற கள்ளரும் கொள்ளைக்காரருமாயிருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாக இப்படிப்பட்ட கள்ளப்போதகர்கள்தான் ஜனங்களைச் சந்திப்பதற்காக வந்தார்கள். இயேசுகிறிஸ்துவைவிட தாங்கள் மேலானவர்கள் என்றும், அவருக்கு முந்தியவர்கள் என்றும் மாய்மாலமான வார்த்தைகளைப் பேசினார்கள். இரட்சராகிய இயேசுகிறிஸ்துவைக் கள்ளப்போதகர்கள் "கள்ளர் என்றும் கொள்ளைக்காரர் என்றும்" சொல்லித் தூஷித்தார்கள். ஏனெனில் இயேசுகிறிஸ்து பரிசேயர் என்னும் வாசல் வழியாக யூதர்களைச் சந்திக்க வரவில்லை. இப்படிப்பட்ட யூதர்களிடத்தில் "நானே மெய்யான வாசல்" என்று கூறி இயேசு கிறிஸ்து தம்மைத்தாமே வெளிப்படுத்துகிறார்.

## அதிகாரம் - 10

கள்ளப்போதகர்களிடமிருந்து நம்முடைய பிரதான மேய்ப்பர் தேவனுடைய தொழுவத்திலுள்ள ஆடுகளாகிய நம்மைப் பாதுகாக்கிறார். ஆடுகள் கள்ளருக்கும் கொள்ளைக்காரருக்கும் செவிக்கொடுக்காது. ஆவிக்குரியவர்களும் பரலோகத்திற்குரியவர்களும் முன்னோர்களின் பாரம்பரியத்தினால் அங்கீகரிக்கப்பட வேண்டியதில்லை. தேவன் நம்மை அங்கீகரித்தாலே போதுமானது. பிதாவாகிய தேவனே குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை இந்தப் பூமிக்கு அனுப்பியிருக்கிறார். இயேசுகிறிஸ்துவை இங்கு அனுப்புவதற்கு, தேவன் அவருக்குப் பரிசேயருடைய அனுமதி எதுவும் தேவையில்லை. தேவன் தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாகவே செயல்படுகிறவர். பரிசேயர்கள் தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படியவேண்டுமேயல்லாமல், இயேசுகிறிஸ்து பரிசேயருடைய விருப்பத்திற்கு கீழ்ப்படிய வேண்டும் என்னும் அவசியமில்லை.

**மேய்ச்சலைக் கண்டடைவான்**

**நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும் சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான் (யோவா 10:9).**

இயேசுகிறிஸ்துவே ஆடுகளுக்கு வாசலாகயிருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால் அவன் இரட்சிக்கப்படுவான். அவன் உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடைவான். ஆட்டுத்தொழுவத்திற்குள் நாம் எப்படி வரவேண்டும் என்று இயேசுகிறிஸ்து தெளிவுபடுத்துகிறார். ஆடுகளுக்கு வாசலாகயிருக்கும் இயேசுகிறிஸ்துவின் வழியாகவே நாம் பிரவேசிக்க வேண்டும். இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைத்து தேவனுடைய உடன்படிக்கைக்கு நம்மை உட்படுத்திக்கொள்ள வேண்டும். இயேசுகிறிஸ்துவின் மூலமாகவே நாம் தேவனோடு ஐக்கியம் கொண்டிருக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்துவாகிய வாசல் வழியாக உட்பிரவேசிக்கிறவர்களுக்குத் தேவன் மேன்மையான வாக்குத்தத்தங்களை வைத்திருக்கிறார். அவர் வழியாய் உட்பிரவேசிக்கிறவன் இரட்சிக்கப்படுவான். இயேசுகிறிஸ்துவின் வீடு இரட்சிக்கப்பட்டவர்களின் வீடாக இருக்கும். அங்கு இரட்சிக்கப்பட்டவர்கள் எப்போதும் சந்தோஷமாக இருப்பார்கள். இயேசுகிறிஸ்துவின் தொழுவத்திலிருக்கும் போது உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடையும் வாய்ப்பு நமக்குக் கொடுக்கப்படும். இயேசுகிறிஸ்துவை வாசலாகப் பெற்றிருக்கிறவர்களுக்கு மாத்திரமே இப்படிப்பட்ட மேன்மையான சிலாக்கியம் கிடைக்கும்.

இயேசுகிறிஸ்துவை உண்மையாக விசுவாசிக்கிறவர்கள் இயேசுகிறிஸ்துவில் அவருடைய வாசஸ்தலத்தில் இருக்கிறார்கள். அவர்கள் புறம்பே போகும்போது அவர்களுக்கு வாசஸ்தலத்தின் கதவு மறுபடியும் திறக்கப்படும். அந்நியர்களைப்போல அவர்கள் மறுபடியும் உள்ளே வரமுடியாமல் தவித்துக் கொண்டிருக்கமாட்டார்கள். இயேசுகிறிஸ்துவின் வாசஸ்தலத்திற்குள் மறுபடியும் பிரவேசிக்கிற சிலாக்கியம் விசுவாசிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் தொழுவத்திற்குள் வரும்போது, அவர்கள் வாசல் வழியாக தாராளமாய்ப் பிரவேசிக்கலாம். அந்நியர்களுக்கு வாசல் அடைக்கப்படுவதுபோல, கர்த்தருடைய பிள்ளைகளுக்கு வாசல் அடைக்கப்படுவதில்லை.

அவர்களுக்கு உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடையும் சிலாக்கியம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய பிள்ளைகள் காலைவேளையில் மேய்ச்சலைக் காண்பதற்காக வயல்வெளிக்குச் செல்வார்கள். மாலைவேளையில் இருட்டு வருவதற்கு முன்பாக தங்கள் மந்தைக்குத் திரும்பி வருவார்கள். அவர்களுக்கு தொழுவத்திற்குள்ளும் மேய்ச்சல் கிடைக்கும். வயல்வெளியிலும் மேய்ச்சல் கிடைக்கும். வயல்வெளியில் அவர்களுக்குப் புல் கிடைக்கும். தொழுவத்திற்குள் அவர்களுக்குத் தீவனம் கொடுக்கப்படும்.

**நல்ல மேய்ப்பன்**
**யோவா 10 : 10,11**

**யோவா 10:10. திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்.**

**யோவா 10:11. நானே நல்ல மேய்ப்பன்: நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்.**

## அதிகாரம் - 10

**பரிபூரணப்பட வந்தேன்**

**திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன் (யோவா 10:10).**

இயேசுகிறிஸ்து நம்முடைய பிரதான மேய்ப்பர். நமக்கு மேய்ப்பராக இருக்குமாறு பிதாவாகிய தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை நியமித்திருக்கிறார். பல சமயங்களில் இயேசுகிறிஸ்து தம்முடைய பிள்ளைகளுக்கு மேய்ப்பராயிருப்பதைத் தம்முடைய வார்த்தையினாலும் செய்கையினாலும் உறுதிபண்ணுகிறார். ஆடுகள் தங்கள் மேய்ப்பனுக்கு எப்படிச் செவிகொடுக்கிறதோ, அதுபோலவே கர்த்தருடைய மந்தையிலுள்ள ஆடுகளாகிய நாம், நம்முடைய பிரதான மேய்ப்பராகிய இயேசுகிறிஸ்துவின் சத்தத்திற்குச் செவிகொடுக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்து நம்முடைய மேய்ப்பர். அவர் நமக்குக் கள்ளரோ அல்லது கொள்ளைக்காரரோ அல்ல. கள்ளரும் கொள்ளைக்காரரும் தீயநோக்கத்தோடு நம்மிடத்தில் வருவார்கள். திருடன் திருடவும், கொல்லவும், அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். கர்த்தருடைய பிள்ளைகளிடத்திலிருந்து கள்ளன் அவர்களுடைய இருதயத்தைத் திருடிவிடுகிறான். இயேசுகிறிஸ்துவின்மீது விசுவாசிகள் வைத்திருக்கும் அன்பைத் திருடிவிடுகிறான். கர்த்தருடைய பிள்ளைகளின் மேய்ச்சலையும், போஜனத்தையும் திருடிவிடுகிறான். இறுதியாக விசுவாசிகளை ஆவிக்குரிய ரீதியாகக் கொன்று அழித்துப்போடுகிறான். ஆத்துமாக்களை வஞ்சிக்கிறவர்கள் ஆத்துமாக்களைக் கொன்று போடுகிறவர்களாக இருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து நம்முடைய பிரதான மேய்ப்பராகயிருக்கிறார். நமக்காக அவர் இரண்டு காரியங்களைச் செய்கிறார். அவையாவன:

1. ஆடுகளுக்கு ஜீவனைக்கொடுக்கிறார்.
2. ஆடுகளுக்காக தம் ஜீவனைக்கொடுக்கிறார்.

இயேசுகிறிஸ்து மனுஷர் மத்தியிலே வந்திருக்கிறார். நமக்கு ஜீவன் உண்டாயிருப்பதற்காகவே அவர் நம் மத்தியிலே வந்திருக்கிறார். அவருடைய மந்தைக்கு இயேசுகிறிஸ்துவின் மூலமாய் ஜீவன் உண்டாயிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் சபைக்கு அவர் மூலமாய் ஜீவன் உண்டாயிருக்கிறது. இயேசுகிறிஸ்து இல்லையென்றால் நாம் பள்ளத்தாக்கிலுள்ள உலர்ந்த எலும்புகளைப்போலவே இருப்போம். அப்படிப்பட்ட நமக்கு இயேசுகிறிஸ்து ஜீவனைக்கொடுத்து நம்மை உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடையச் செய்கிறார். விசுவாசிகளுக்கு ஜீவனைக் கொடுப்பதற்காகவே இயேசுகிறிஸ்து இந்தப் பூமிக்கு வந்திருக்கிறார். ஜீவன் என்று சொல்லும்போது அதில் எல்லா நன்மையும் அடங்கியிருக்கிறது.

இயேசுகிறிஸ்து கொடுக்கிற ஜீவன் பரிபூரண ஜீவனாகயிருக்கும். நமக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அந்த ஜீவன் பரிபூரணப்படவும் இயேசுகிறிஸ்து வந்திருக்கிறார். பரிபூரண ஜீவன் என்று சொல்லும்போது, அவர் கொடுக்கிற ஜீவனுக்கு மேல் நாம் எதையும் எதிர்பார்க்கவும்மாட்டோம். கேட்கவும்மாட்டோம். அவருடைய கிருபையும் ஜீவனும் நமக்குப் போதுமானதாயிருக்கும். இதுவே பரிபூரண ஜீவன். நம்மால் எந்த அளவு கேட்க முடியுமோ, எந்த அளவு சிந்திக்க முடியுமோ, அந்த அளவைவிட அவர் நமக்கு அதிகமாகவே ஜீவனைக்கொடுக்கிறார். அவர் நமக்கு ஜீவனைக்கொடுப்பதினால் அந்த ஜீவன் நமக்குள் பரிபூரணப்படுகிறது.

இயேசுகிறிஸ்து நமக்கு ஜீவன் உண்டாயிருப்பதற்காக மாத்திரமல்ல, அதைவிட மேலானது நமக்கு உண்டாயிருப்பதற்காகவும் அவர் இந்த பூமிக்கு வந்திருக்கிறார். இயேசுகிறிஸ்து நமக்குக் கொடுப்பது சாதாரண ஜீவன் அல்ல. அது பரிபூரண ஜீவன். அது நித்திய ஜீவன். பரிபூரண ஜீவன் என்பதற்கு "ஜீவனும் அதற்கு மேலும்" என்று பொருள். "அதற்கு மேலும்" என்று சொல்லும்போது, அது அளவிட முடியாத அளவைக் குறிப்பிடுகிறது.

**தன் ஜீவனைக்கொடுக்கிறான்**

**நானே நல்ல மேய்ப்பன்: நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான் (யோவா 10:11).**

## அதிகாரம் - 10

நல்ல மேய்ப்பன் தன் ஆடுகளுக்காக ஜீவனைக் கொடுக்கிறான். ஆடுகளுக்கு ஜீவனைக் கொடுக்கிறவன், ஆடுகளுக்காகவும் தன் ஜீவனைக் கொடுக்கிறான். இது நல்ல மேய்ப்பனிடம் காணப்படும் நற்குணமாகும். தன்னுடைய ஜீவன் தன் ஆடுகளுக்கே உரியது என்று நினைத்து, தன்னுடைய ஜீவனையும் பாராமல், தன் ஜீவனையே தன்னுடைய ஆடுகளுக்காகக் கொடுத்துவிடுகிறான். நம்முடைய பிரதான மேய்ப்பராகிய இயேசுகிறிஸ்து, தம்முடைய மந்தையாகிய நம்மைக் கிரயத்திற்கு வாங்குவதற்காக, தம்முடைய ஜீவனையே முழுக்கிரயமாக செலுத்தியிருக்கிறார்.

இயேசுகிறிஸ்து நல்ல மேய்ப்பராகயிருக்கிறார். அவர் கூலியாள் அல்ல. எல்லோரையும் கள்ளர் என்றும், கொள்ளைக்காரர் என்றும் குற்றம் சொல்லிவிடமுடியாது. மேய்ப்பர்களில் சிலர் நல்லவர்களாக இருப்பார்கள். வேறுசிலர் பொறுப்பில்லாதவர்களாக இருப்பார்கள். இவர்கள் தங்களிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கும் வேலைகளைக் கவனத்தோடு செய்யமாட்டார்கள். இவர்களுடைய கவனக்குறைவினால் மந்தைக்கு பெரிய சேதாரம் உண்டாகும். இவர்கள் கூலியாள்கள். இவர்கள் மேய்ப்பர்களல்ல. கூலிக்காக வேலை செய்கிறவர்கள்.

இயேசுகிறிஸ்துவோ நல்ல மேய்ப்பராக இருக்கிறார். "நானே நல்ல மேய்ப்பன்" என்று யோவான் 10:11-ஆவது வசனத்திலும், மறுபடியும் யோவான் 10:14-ஆவது வசனத்திலும் இயேசுகிறிஸ்து தம்மைத்தாமே அழைத்துக்கொள்கிறார். இயேசுகிறிஸ்துவே பிரதான மேய்ப்பர். எல்லா மேய்ப்பர்களைவிட அவரே நல்ல மேய்ப்பர். அவரைப்போல உண்மையுள்ளவர்கள், அன்புள்ளவர்கள், விவேகமுள்ளவர்கள் வேறு யாருமில்லை.

### கூலியாள்

### யோவா 10 : 12,13

**யோவா 10:12. மேய்ப்பனாயிராதவனும், ஆடுகள் தனக்குச் சொந்தமல்லாதவனுமான கூலியாள் ஓநாய் வருகிறதைக் கண்டு ஆடுகளை விட்டு ஓடிப்போகிறான்; அப்பொழுது ஓநாய் ஆடுகளைப்பீறி, அவைகளைச் சிதறடிக்கும்.**

**யோவா 10:13. கூலியாள் கூலிக்காக வேலை செய்கிறவனாதலால் ஓடிப்போகிறான், ஆடுகளுக்காக அவன் கவலைப்படான்.**

ஒரு சிலர் கூலிக்காக மந்தைகளை மேய்க்கிறார்கள். இவர்கள் உண்மையில்லாதவர்களாகவும், அக்கரையில்லாதவர்களாகவும் இருப்பார்கள். மந்தையிலுள்ள ஆடுகள் இவனுக்குச் சொந்தமானதல்ல. ஆகையினால் ஓநாய் வருகிறதைக்கண்டு, கூலியாள் ஆடுகளை பாதுகாக்காமல், தன்னை காப்பாற்றிக்கொள்வதற்காக ஆடுகளைவிட்டு ஓடிப்போய்விடுகிறான். இவனுக்கு ஆடுகளைக்குறித்து மெய்யான அக்கரையில்லை. தன் கூலியின்மீதே அக்கரையோடிருப்பான்.

துன்மார்க்கமான ஊழியக்காரர்கள் மேய்ப்பர்களாகயிராமல் கூலிக்காரர்களாய் வேயிருக்கிறார்கள். இவர்களுடைய எண்ணங்களும் தீமையானது. செயல்களும் தீமையானது. இவர்களுடைய இருதயத்தில் மோசமான சிந்தனைகள் இருக்கும். தங்களுக்கு மோசமான கொள்கைகளை வகுத்துக்கொள்வார்கள். இதன் விளைவாக இவர்களுடைய கிரியைகளும் மோசமாவே இருக்கும்.

கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர்களிடம் விசுவாசிகளின் ஆத்துமாக்களைப் பொறுப்பாக ஒப்புக் கொடுத்திருக்கிறார். ஆத்துமாக்களுக்குப் பிரச்சனைகளும் சோதனைகளும், வேதனைகளும் வரும்போது ஊழியக்காரர்கள் அவர்களுக்கு உதவிபுரிய முன்வரவேண்டும். ஆனால் கூலிக்காக ஊழியம் செய்கிறவர்களோ, விசுவாசிகள் மூலமாக வரும் வருமானத்தில் மாத்திரமே அக்கரையோடிருப்பார்கள். ஆத்துமாக்களைக் குறித்து எந்த அக்கரையும் இருக்காது. ஆத்துமாக்களுக்கு பிரச்சனைகள் வரும்போது அவர்களை அக்கரையோடு பராமரிப்பதற்குப் பதிலாக அவர்களைவிட்டு ஓடிப்போய்விடுவார்கள். இவர்கள் மேய்ப்பர்களல்ல. இவர்கள் கூலியாள்கள். ஆடுகள் இவர்களுக்குச் சொந்தமானதல்ல.

## அதிகாரம் - 10

கள்ளப் போதகர்களுக்கு ஆத்துமாக்களைக் குறித்து அதிக அக்கரையிருக்காது. உலகத்தின் ஐசுவரியத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்பதே இவர்களுடைய பிரதான விருப்பமாக இருக்கும். இவர்கள் கூலியாள்களாக இருக்கிறபடியினால், தங்களுக்குக் கிடைக்கும் கூலியின்மீதே கவனத்தோடிருப்பார்கள். கள்ளப்போதகர்கள் ஊழியப்பொறுப்புக்கு வரும்போது ஆத்தும பாரத்தோடு வருவதில்லை. போதகர் என்னும் போர்வையில் விசுவாசிகளுக்கு ஊழியம் செய்தால் தங்களுக்கு அதிக வருமானம் கிடைக்குமென்றும், இதன் மூலமாகத் தாங்கள் செல்வந்தர்களாகிவிடலாம் என்றும் பேராசையோடு ஊழியக்காரியங்களில் ஈடுபடுகிறார்கள். பணத்தாசையும், தங்கள் சுயஆசையுமே இவர்களுக்குப் பிரதான காரியம். இதற்காக எதை வேண்டுமானாலும் செய்வார்கள். தங்களிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கும் ஆடுகளைக்கூட பணத்திற்காக விற்றுப்போடுவார்கள். கூலியாள் தன் வேலையைவிட தன்னுடைய கூலியையே அதிகமாக விரும்புகிறான்.

கூலியாள் கூலிக்காக வேலை செய்கிறவன். ஆகையினால் ஆடுகளுக்காக அவன் கவலைப்படான். கள்ளப்போதகர்கள் விசுவாசிகளின் ஆத்துமாக்களைக் குறித்துக் கவலைப்படமாட்டார்கள். இவர்கள் தங்களுடைய சுயமான காரியங்களைக்குறித்தே அக்கரையோடிருப்பார்கள். பணவருமானத்தில் மாத்திரமே குறியாயிருப்பார்கள். ஓநாய்கள் வரும்போது கூலியாள் ஆடுகளைப் பாதுகாக்கவேண்டும். இதற்காகத்தான் இவன் கூலிக்கு அமர்த்தப்பட்டிருக்கிறான். ஆனால் இவனுக்கு ஆடுகள்மீது கவலையில்லை. ஆடுகள் இவனுக்குச் சொந்தமானதல்ல. ஆகையினால் ஓநாய்கள் வரும்போது இவன் ஆடுகளைவிட்டு ஓடிப்போய்விடுகிறான். பொறுப்பில்லாமல் ஓடிப்போவது இவனுடைய தீயசுபாவம்.

ஆடுகளை மேய்ப்பதற்காக கூலியாள் கூலிக்கு அமர்த்தப்பட்டிருக்கிறான். தன்னுடைய கூலிக்குத் தகுந்த வேலையை இவன் செய்யவேண்டும். ஆனால் தன்னுடைய வேலையில் இவன் கவனக்குறைவாகவே இருப்பான். தன்னுடைய சுயபாதுகாப்புக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பான். ஓநாய்கள் வருகிறதைக்கண்டு ஆடுகளைவிட்டு ஓடிப்போய்விடுவான். நல்ல மேய்ப்பனோ ஓநாய்கள் வரும்போது ஆடுகளைவிட்டு ஓடிப்போகமாட்டான். ஏனெனில் ஆடுகள் இவனுக்குச் சொந்தமானவை. ஓநாய்களிடமிருந்து தன் ஆடுகளைப் பாதுகாப்பான். தேவைப்பட்டால் தன்னுடைய ஆடுகளுக்காக மேய்ப்பன் தன் ஜீவனையும் கொடுக்க ஆயத்தமாகயிருப்பான்.

கூலியாள் தன்னுடைய பாதுகாப்பையே பெரிதாக நினைப்பதினால் ஆடுகளின் பாதுகாப்பைப்பற்றி அக்கரை காண்பிப்பதில்லை. இப்படிப்பட்ட சுயநலக்காரர்கள் சாத்தானுடைய சோதனையில் எளிதாகச் சிக்கிவிடுவார்கள். கூலியாளுடைய தவறினால் ஆடுகளுக்கு மிகுந்த சேதம் உண்டாகும். ஓநாய்கள் ஆடுகளைப் பீறி அவைகளை சிதறடிக்கும். கூலியாள் ஓடிப்போகும்போது ஆடுகளும் சிதறடிக்கப்படுகிறது. ஆனால் நம்முடைய நல்ல மேய்ப்பராகிய இயேசுகிறிஸ்துவோ நம்மீது கிருபையும் இரக்கமும் உள்ளவர். அவர் நம்முடைய ஆண்டவராகவும், கர்த்தராகவும், இரட்சகராகவும் இருக்கிறார். அவர் மாறாத தேவன். எல்லா சூழ்நிலைகளிலும் அவர் நம்முடைய இரட்சகராகவே இருக்கிறார். நமக்கு சோதனைகளும், வேதனைகளும், ஆபத்துக்களும் வந்தாலும், நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவே நமக்கு இரட்சகராக இருக்கிறவர். அவரே நமக்கு உதவிபுரிகிறவர்.

**நானே நல்ல மேய்ப்பன்**
**யோவா 10:14,15**

**யோவா 10:14. நானே நல்ல மேய்ப்பன்; பிதா என்னை அறிந்திருக்கிறதுபோலவும், நான் பிதாவை அறிந்திருக்கிறதுபோலவும்,**

**யோவா 10:15. நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்; ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன்.**

## அதிகாரம் - 10

இயேசுகிறிஸ்துவே நல்ல மேய்ப்பர். இயேசு தம்முடைய ஆடுகளை அறிந்திருக்கிறார். "நான் என்னுடையவைகளை அறிந்தும், என்னுடையவைகளால் அறியப்பட்டும் இருக்கிறேன்" என்று இயேசுகிறிஸ்து தன்னைப்பற்றிக் கூறுகிறார். மேய்ப்பரும் ஆடுகளும் ஒருவரையொருவர் நன்றாக அறிந்திருக்கிறார்கள். அந்நியோன்யமாக அறிந்து பழகுவதினால் இருவருக்கும் இடையே அன்பு மிகுந்திருக்கிறது. இயேசுகிறிஸ்து தம்முடைய ஆடுகளை அறிந்திருக்கிறார். யாரெல்லாம் தம்முடைய ஆடுகள் என்பதும், யாரெல்லாம் தம்முடைய ஆடுகள் இல்லை என்பதும் இயேசுகிறிஸ்துவுக்குத் தெரியும். தம்முடைய ஆடுகளுக்கு என்னென்ன பிரச்சனைகளெல்லாம் வரும் என்பதும், அவை அனுபவித்து வரும் பாடுகளும் வேதனைகளும் எவை என்பதும் இயேசுகிறிஸ்துவுக்குத் தெரியும். இயேசுகிறிஸ்து தம்முடைய ஆடுகளை அறிந்து, அவற்றை அங்கீகரித்து, அவற்றை ஏற்றுக்கொள்கிறார். அதுபோலவே அவருடைய ஆடுகளும் அவரை அறிந்திருக்கிறது.

இயேசுகிறிஸ்துவின் பிள்ளைகள் தங்களுடைய விசுவாசத்தின் கண்களினால் அவரைக் கவனித்துப் பார்க்கிறார்கள். நாம் இயேசுகிறிஸ்துவை அறிந்திருப்பதினால் நமக்கு உண்டாயிருக்கும் சந்தோஷத்தைவிட, அவர் நம்மை அறிந்திருப்பதினால் நமக்கு உண்டாகும் சந்தோஷமே மிகவும் மேன்மையானது. அவர் நம்மை அறிந்திருக்கிறதை விவரிப்பதற்காகத் தாமும் பிதாவும் ஒருவரையொருவர் அறிந்திருப்பதை இங்கு ஒரு ஒப்புமையாகக் கூறுகிறார். "பிதா என்னை அறிந்திருக்கிறதுபோலவும், நான் பிதாவை அறிந்திருக்கிறதுபோலவும், நான் என்னுடையவைகளை அறிந்தும், என்னுடையவைகளால் அறியப்பட்டும் இருக்கிறேன்" என்பதே இயேசுகிறிஸ்துவின் அற்புதமான உபதேசம். தமக்கும் தம்முடைய பிள்ளைகளுக்கும் இடையிலுள்ள ஐக்கியத்தை இந்த வார்த்தைகளினால் தெளிவுபடுத்துகிறார்.

இயேசு கிறிஸ்துவுக்கும் விசுவாசிகளுக்கும் இடையில் ஒரு அந்நியோன்னிய ஐக்கியம் உண்டாயிருக்கிறது. பிதாவாகிய தேவனுக்கும் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவுக்கும் இடையே இருக்கும் அற்புத ஐக்கியத்தைப்போல, இயேசுகிறிஸ்துவுக்கும் நமக்கும் இடையிலுள்ள ஐக்கியம் அற்புதமாக இருக்கிறது.

தாம் தெரிந்துகொண்டவர்களை இயேசுகிறிஸ்து அறிந்திருக்கிறார் (யோவா 13:18). தம்மிடத்தில் ஒப்புக்கொடுத்ததை இயேசுகிறிஸ்து காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறார் (2தீமோ 1:12). இந்த ஐக்கியத்திற்கு அடிப்படைக்காரணம் இருவரும் ஒருவரையொருவர் அறிந்திருப்பதுதான். விசுவாசிகளும் இயேசுகிறிஸ்துவை அறிந்திருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவும் விசுவாசிகளை அறிந்திருக்கிறார். பிதாவாகிய தேவனும் குமாரனாகிய தேவனும் ஒருவரையொருவர் அறிந்திருப்பதுபோல, விசுவாசிகளும் இயேசுகிறிஸ்துவும் ஒருவரையொருவர் அறிந்திருப்பது பரிபூரணமாக இருக்கிறது.

விசுவாசிகளும் தாமும் ஒருவரையொருவர் அறிந்திருப்பதைப்பற்றி இயேசுகிறிஸ்து கூறும்போது, தங்களுடைய ஐக்கியத்தின் நெருக்கத்தைப்பற்றியும் குறிப்பிடுகிறார். இந்த ஐக்கியம் மிகவும் அந்நியோன்னியமானது. பிதாவாகிய தேவன் குமாரனாகிய தேவனை அறிந்து, ஒருவருக்கொருவர் அன்பாயிருக்கிறார்கள். குமாரன் பிதாவை அறிந்து, அவரிடத்தில் அன்பாயிருந்து, அவருக்குக் கீழ்ப்படிகிறார். அதுபோலவே விசுவாசிகளாகிய நாமும் இயேசுகிறிஸ்துவை அறிந்து, அவர்மீது அன்பாயிருந்து, இயேசுகிறிஸ்துவின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும்.

### வேறே ஆடுகள்
### யோவா 10 : 16-18

**யோவா 10:16. இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டுவர வேண்டும், அவைகள் என் சத்தத்துக்குச் செவிகொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்.**

**யோவா 10:17. நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்துகொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார்.**

**யோவா 10:18. ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளமாட்டான்; நானே அதைக் கொடுக்கிறேன், அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு. இந்தக் கட்டளையை என் பிதாவினிடத்தில் பெற்றுக்கொண்டேன் என்றார்.**

# அதிகாரம் - 10

## ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனும்

**இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டுவர வேண்டும், அவைகள் என் சத்தத்துக்குச் செவிகொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும் (யோவா 10:16).**

இயேசுகிறிஸ்து யாரையெல்லாம் அறிந்திருக்கிறாரோ அவர்கள் எல்லோரும் இயேசுகிறிஸ்துவையும் அறிந்திருப்பார்கள். அவர்கள் இயேசுகிறிஸ்துவின் மந்தையில் சேர்க்கப்படுவார்கள். இவர்கள் அல்லாமல், தேவனுடைய ராஜ்யத்தில் சேர்க்கப்பட வேண்டியவர்கள் இன்னும் ஏராளமானோர் இருக்கிறார்கள். அவர்களைப்பற்றி இயேசுகிறிஸ்து குறிப்பிடும்போது "இந்த தொழுவத்தில் உள்ளவைகள் அல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு, அவைகளையும் நான் கொண்டு வரவேண்டும்" என்று கூறுகிறார்.

இயேசுகிறிஸ்து யூதஜனங்கள் மத்தியில் ஊழியம் செய்தாலும், அவர் புறஜாதி ஜனங்கள்மீதும் கரிசனையோடிருக்கிறார். அவர்களையும் இரட்சித்து தம்முடைய ராஜ்யத்திற்குள் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்பது இயேசுகிறிஸ்துவின் திட்டம். இஸ்ரவேல் வீட்டாரில் காணாமல்போன ஆடுகளிடத்தில் இயேசுகிறிஸ்து விசேஷித்த அக்கரை காண்பிக்கிறார். அதேவேளையில் அவருக்கு இந்தத் தொழுவத்திலுள்ளவைகள் அல்லாமல் வேறே ஆடுகளும் உண்டு. இஸ்ரவேல் ஜனத்தார் அல்லாமல், வேறே புறஜாதியாரும் அவருக்கு உண்டு.

புறஜாதியார் மத்தியிலிருந்து, காலம் வரும்போது ஏராளமான ஜனங்கள் இயேசுகிறிஸ்துவை தங்களுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்வார்கள். அவர்களையும் இயேசு இங்கு "ஆடுகள்" என்றே அழைக்கிறார். இயேசுகிறிஸ்துவுக்கு இன்னும் ஏராளமான ஆத்துமாக்கள்மீது உரிமையுள்ளது. அந்த ஆத்துமாக்கள் இயேசுகிறிஸ்துவின் காணியாட்சிக்குள் இன்னும் கொண்டுவரப்படவில்லை. அப்படிப்பட்ட ஆத்துமாக்களையே அவர் இங்கு "வேறே ஆடுகள்" என்று குறிப்பிடுகிறார்.

யூதஜனங்கள் புறஜாதியாரை மதிப்பதில்லை. அவர்கள்மீது அன்பாயிருப்பதில்லை. புறஜாதியார் இஸ்ரவேலின் காணியாட்சிக்கு புறம்பானவர்கள் என்று கூறி இஸ்ரவேலர்கள் அவர்களைப் புறக்கணித்து ஒதுக்கி தள்ளிவிடுகிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ புறஜாதியாரையும் தம்மிடத்தில் சேர்த்துக் கொள்ள சித்தமுள்ளவராகயிருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் தொழுவத்தில் இப்போது சிறிதளவு ஆடுகள் மாத்திரமே இருக்கலாம். இயேசுகிறிஸ்து நல்ல மேய்ப்பர். சிறிய ஆட்டுத்தொழுவத்திற்கு இப்போது மேய்ப்பராக இருக்கிறார். ஆனாலும் இப்போதுள்ள ஆடுகள் மாத்திரமல்லாமல் இன்னும் வேறே ஆடுகளும் அவருக்கு உண்டு.

புறஜாதியாரைப்பற்றி இயேசுகிறிஸ்து கரிசனையோடிருக்கிறார். அவர்களையும் இரட்சிக்க வேண்டுமென்பதே இயேசுகிறிஸ்துவின் தெய்வீக திட்டம். வேறே ஆடுகளாகயிருக்கும் புறஜாதியாரையும், இயேசுகிறிஸ்து தம்முடைய காணியாட்சிக்குள் கொண்டு வரவேண்டும். வேறே ஆடுகளையும் தம்முடைய தொழுவத்தில் சேர்க்கவேண்டுமென்று இயேசுகிறிஸ்து சித்தங்கொண்டிருக்கிறார்.

ஆடுகளை ஏன் கொண்டுவரவேண்டும், அவற்றைக் கொண்டுவரவேண்டியதன் அவசியமென்ன என்றெல்லாம் ஒரு சிலர் விவாதம்பண்ணுகிறார்கள். புறஜாதி ஜனங்களும் ஆடுகளைப்போலவே இருக்கிறார்கள். ஆடுகளுக்குப் பொதுவான சுபாவம் ஒன்றுள்ளது. மேய்ச்சலுக்கு வெளியே செல்லும் ஆடுகள் தொழுவத்திற்குத் தாங்களாகவே திரும்பி வராது. ஆடுகளின் மேய்ப்பன்தான் அவற்றை தொழுவத்திற்குள் அழைத்துக்கொண்டு வரவேண்டும். புறஜாதி ஜனங்களும் தாங்களாக இயேசுகிறிஸ்துவின் தொழுவத்திற்குள் வரமாட்டார்கள். இயேசுகிறிஸ்து அவர்களுக்கும் மேய்ப்பராக இருக்கிறபடியினால், அவர் புறஜாதி ஜனங்களையும் தமது தொழுவத்திற்குள் அழைத்துக்கொண்டு வரவேண்டும் என்று சித்தங்கொண்டிருக்கிறார். புறஜாதி ஆடுகளை இயேசுகிறிஸ்து தம்முடைய தொழுவத்திற்கு அழைத்துக்கொண்டு வரவேண்டும் என்பது பிதாவாகிய தேவன் இவரை நம்பி ஒப்படைத்திருக்கும் ஊழியமாகும். இயேசுகிறிஸ்து இந்த ஊழியத்தைச் செய்யவில்லையென்றால், தம்மை நம்பி ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கும் ஊழியத்திற்கு இவர் உண்மையுள்ளவராக இருக்கமாட்டார்.

## அதிகாரம் - 10

இயேசுகிறிஸ்து தம்முடைய தொழுவத்தில் உள்ளவைகள் அல்லாமல் வேறே ஆடுகளை அழைத்துக்கொண்டு வரும்போது ஆசீர்வாதமான சம்பவங்கள் பல நடைபெறும். அந்த ஆடுகளும் இயேசுகிறிஸ்துவின் சத்தத்திற்குச் செவிகொடுக்கும். இயேசுகிறிஸ்து புறஜாதி ஜனங்களிடத்திலும் தம்முடைய சுவிசேஷத்தை அறிவிப்பார். அவர்களும் அவருக்குச் செவிகொடுப்பார்கள். விசுவாசம் கேள்வியினால் வருகிறது. அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனும் ஆகும். மேய்ப்பன் ஒருவராகத்தான் இருக்கிறார். அதுபோலவே மந்தையும் ஒன்றாகத்தான் இருக்கும். யூதரும் புறஜாதியாரும் தேவனுடைய சபையில் ஒன்றாக இணைக்கப்பட்டிருப்பார்கள். இயேசுகிறிஸ்துவோடு இணைப்பட்டிருக்கிறவர்கள் அவருக்குள்ளும் இணைக்கப்பட்டிருப்பார்கள். இரண்டு கோல்கள் கர்த்தருடைய கரத்தில் ஒரே கோலாக இணைக்கப்படும்.

### பிதா என்னில் அன்பாயிருக்கிறார்

**நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்துகொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார் (யோவா 10:17).**

இயேசுகிறிஸ்து தம்முடைய ஜீவனையே ஆடுகளுக்காகக் கொடுக்கிறார். தம்முடைய ஆடுகளுக்காகத் தாம் ஜீவனைக் கொடுப்பதற்கான காரணத்தையும் இயேசுகிறிஸ்து இங்கு வெளிப்படுத்துகிறார். ஆடுகளுக்கு நன்மை உண்டாவதற்காக இயேசுகிறிஸ்து தம்முடைய ஜீவனைக்கொடுப்பதோடு, தம்முடைய ஆடுகளுக்குப் பதிலாகவும் தம்முடைய ஜீவனைக் கொடுக்கிறார். மேய்ப்பர்கள் பாவநிவாரண பலியைச் செலுத்துவதற்காக ஆயிரக்கணக்கான ஆடுகளைப் பலியாகச் செலுத்தியிருக்கிறார்கள். இங்கோ இயேசுகிறிஸ்துவின் உபதேசம் முற்றிலும் வித்தியாசமாக இருக்கிறது. ஆடுகள்தான் தங்கள் மேய்ப்பருக்காக பலியாகச் செலுத்தப்படும். ஆனால் இங்கோ மேய்ப்பர் ஆடுகளுக்காகப் பலியாகச் செலுத்தப்படுகிறார்.

மேய்ப்பர் வெட்டப்படும்போது தொழுவத்திலுள்ள ஆடுகள் சிதறடிக்கப்படும். ஆனாலும் சிதறடிக்கப்பட்ட ஆடுகள் மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்படும். ஆடுகள் சிதறுவது தற்காலிகமான சம்பவமே. ஒரே மந்தையும், ஒரே மேய்ப்பனுமாக இருக்கப்போவதுதான் முடிவான சம்பவம்.

இயேசுகிறிஸ்து மனுக்குலத்திற்காகத் தம்முடைய ஜீவனை கல்வாரி சிலுவையில் ஒப்புக்கொடுக்கப்போகிறார். தம்முடைய சிலுவை மரணத்தைக்குறித்து இங்கு நான்கு காரியங்களைக் குறிப்பிடுகிறார். அவையாவன: 1. ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன். 2. என் ஜீவனை மறுபடியும் அடைந்துகொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறேன். 3. நானே அதைக்கொடுக்கிறேன். அதைக்கொடுக்கவும் எனக்கு அதிகாரமுண்டு அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரமுண்டு. 4. இந்தக் கட்டளையை என் பிதாவினிடத்தில் பெற்றுக்கொண்டேன்.

இயேசுகிறிஸ்து தம்முடைய ஆடுகளுக்காகத் தமது ஜீவனையே கொடுக்கிறார். இயேசுகிறிஸ்துவில் பிதா அன்பாயிருக்கிறார். தம் ஜீவனை மறுபடியும் அடைந்துகொள்ளும்படிக்கு இயேசுகிறிஸ்து தமது ஜீவனைக்கொடுக்கிறார். ஆடுகளுக்காக இயேசுகிறிஸ்து தமது ஜீவனைக்கொடுப்பதினால் பிதாவானவர் அவரிடத்தில் அன்பாயிருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் எல்லா பாடுகளுக்கும், வேதனைகளுக்கும், ஊழியங்களுக்கும் பிதாவின் அன்பே ஈடாக கொடுக்கப்படுகிறது. நாமும் இயேசுகிறிஸ்துவுக்காக பாடுகளை அனுபவித்து ஊழியம் செய்யும்போது அவர் நம்மிடத்தில் அன்பாயிருந்தால் அதுவே நமக்குப் போதுமென்று இருக்கவேண்டும்.

தம்முடைய ஜீவனை மறுபடியும் அடைந்துகொள்ளும்படிக்கு இயேசுகிறிஸ்து அதைக் கொடுக்கிறார். சிலுவையில் மரித்து கல்லறையில் அடக்கப்பண்ணப்பட்ட இயேசுகிறிஸ்து மறுபடியும் ஜீவனைப் பெற்றுக்கொள்கிறார். பிதாவானவர் அவரை கல்லறையிலேயே மரித்தவராக விட்டுவிடவில்லை. இயேசுகிறிஸ்து தம்மை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார். ஆனாலும் மரணத்தை ஜெயித்தவராக அவர் மறுபடியும் உயிரோடு எழும்பியிருக்கிறார்.

### கொடுக்கவும் எடுக்கவும் அதிகாரம்

**ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளமாட்டான்; நானே அதைக் கொடுக்கிறேன், அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு. இந்தக் கட்டளையை என் பிதாவினிடத்தில் பெற்றுக்கொண்டேன் என்றார் (யோவா 10:18).**

## அதிகாரம் - 10

பாடுகளை அனுபவிக்கவும், மரிக்கவும் இயேசுகிறிஸ்து தாமாகவே ஒப்புக்கொடுத்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவை யாரும் கட்டாயப்படுத்த முடியாது. தம்முடைய மரணத்தைப்பற்றிக் குறிப்பிடும்போது "நானே அதைக்கொடுக்கிறேன். அதைக்கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு" என்று இயேசு விவரிக்கிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய ஜீவனுக்கும் ஆண்டவராக இருக்கிறார். இதுவே இயேசுகிறிஸ்துவின் வல்லமை. தம்முடைய ஜீவனைத் தம்மிடத்தில் வைத்துக்கொள்ளும் அதிகாரம் இயேசுகிறிஸ்துவுக்கு உண்டு. இயேசுகிறிஸ்துவின் அனுமதியில்லாமல் இந்த உலகத்திலுள்ள எந்த அதிகாரத்தினாலும் அவருடைய ஜீவனை எடுத்துக்கொள்ள முடியாது. "ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளமாட்டான்" என்று இயேசுகிறிஸ்து தம்முடைய ஜீவன்மீது தமக்கு இருக்கும் அதிகாரத்தைக் குறித்து தெளிவுபடுத்துகிறார்.

இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றை வாசிக்கும்போது, யூதமார்க்கத்துத் தலைவர்கள் அவர்மீது பொய்க்குற்றம் சுமத்தி, கலகத்தை உண்டுபண்ணி, அவரைச் சிலுவையில் அறைந்து கொன்றுபோட்டதுபோல தெரிகிறது. ஆனால் உண்மையில் இயேசுகிறிஸ்து தாமே, தம்முடைய விருப்பத்தின் பிரகாரம், தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்திருக்கிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுக்கவில்லையென்றால், அதை அவரிடத்திலிருந்து ஒருவராலும் எடுத்துக்கொள்ள முடியாது. தம்முடைய ஜீவனை கொடுக்காமல் வைத்துக்கொள்ளும் வல்லமை இயேசுவுக்கு உண்டு.

இயேசுகிறிஸ்து சர்வ வல்லமையுள்ள தேவன். தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும், அதை மறுபடியும் எடுக்கவும் அவருக்கு வல்லமை உண்டு. தம்முடைய சித்தத்தின் பிரகாரமாகவும், விருப்பத்தின் பிரகாரமாகவும், தமக்குப் பிரியமான வேளையில், தம்முடைய ஆத்துமாவையும் சரீரத்தையும் இணைத்திருக்கும் ஜீவனைக்கொடுக்கிறார், தாம் கொடுத்ததை அவர் மறுபடியும் எடுத்துக்கொள்கிறார். அவரால் தாமாகவே சரீரத்தை எடுத்துக்கொள்ள முடியும். அதுபோலவே அவரால் தாமாகவே சரீரத்தைக் கொடுக்கவும் முடியும்.

இயேசுகிறிஸ்துவுக்கு மாத்திரமே அவருடைய ஜீவனைக் கொடுக்கும் அதிகாரமுள்ளது. எந்த மனுஷருக்கும் இந்த அதிகாரம் கொடுக்கப்படவில்லை. இயேசுகிறிஸ்து தம்முடைய ஜீவனைக் கொடுக்கவில்லையென்றால், உலகத்திலுள்ள எல்லா வல்லமைகளும் சேர்ந்தாலும், அவருடைய ஜீவனை யாராலும் எடுக்கவே முடியாது. ஆனால் இயேசுகிறிஸ்துவோ தம்முடைய தெய்வீக ஆதீனத்தினுடைய அதிகாரத்தின் பிரகாரமாக, தமக்குப் பிரியமானபடி, தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுக்கிறார்.

தாம் ஒப்புக்கொடுத்திருக்கும் தம்முடைய ஜீவனை, மறுபடியும் எடுத்துக்கொள்ளும் அதிகாரம் இயேசுகிறிஸ்துவுக்கு உண்டு. மனுஷராகிய நமக்கோ இப்படிப்பட்ட அதிகாரமில்லை. நாம் மரித்துப்போனால் மறுபடியும் நம்முடைய ஜீவனை திரும்பப் பெற்றுக்கொள்ளும் அதிகாரம் நமக்குக் கிடையாது. மனுஷராகிய நாமோ, மரிக்கும்போது தரையில் கொட்டப்பட்டிருக்கும் தண்ணீரைப்போல ஊற்றப்படுகிறோம். தரையில் கொட்டிய தண்ணீரை மறுபடியும் அள்ளிச் சேர்க்க முடியாது. அதுபோலத்தான் மனுஷருடைய ஜீவன். அவன் மரித்துப்போனால் மரித்துப்போனதுதான். மரித்துப்போனவன் தன்னுடைய வல்லமையினாலோ அல்லது அதிகாரத்தினாலோ மறுபடியும் தன்னுடைய ஜீவனை எடுத்துக்கொள்ள முடியாது.

இயேசுகிறிஸ்துவோ தம்முடைய ஜீவன்மீது சர்வ அதிகாரமுள்ளவராக இருக்கிறார். தம்முடைய ஜீவனைக் கொடுத்தபோது, அந்த ஜீவன் அவருக்கு அருகாமையிலேயே இருக்கிறது. அவருக்குப் பிரியமான வேளையில் அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளும் அதிகாரம் அவரிடத்தில் உள்ளது. இதுவே கிறிஸ்துவின் கிருபை. நம்முடைய பாவங்களிலிருந்து நாம் மீட்கப்படவேண்டும் என்பதற்காக இயேசுகிறிஸ்து தம்முடைய ஜீவனையே ஒப்புக்கொடுத்திருக்கிறார். நம்மை பாவத்திலிருந்து மீட்கும் இரட்சகராகத் தம்மையே அர்ப்பணித்திருக்கிறார்.

இயேசுகிறிஸ்துவின் ஊழியமெல்லாம் பிதாவின் சித்தத்தின் பிரகாரம் நிறைவேறுகிறது. இயேசுகிறிஸ்து பிதாவிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட கட்டளைகளை நிறைவேற்றுகிறார். தம்முடைய ஜீவனைக்கொடுக்கவும், அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் பிதாவாகிய தேவனே இயேசுகிறிஸ்துவுக்கு கட்டளை கொடுத்திருக்கிறார். தாம் பெற்றுக்கொண்ட கட்டளையை இயேசுகிறிஸ்து நிறைவேற்றுகிறார்.

## அதிகாரம் - 10

**பிரிவினையுண்டாயிற்று**
**யோவா 10 : 19-21**

**யோவா 10:19. இந்த வசனங்களினிமித்தம் யூதருக்குள்ளே மறுபடியும் பிரிவினையுண்டாயிற்று.**

**யோவா 10:20. அவர்களில் அநேகர்: இவன் பிசாசு பிடித்தவன், பயித்தியக்காரன்; ஏன் இவனுக்குச் செவிகொடுக்கிறீர்கள் என்றார்கள்.**

**யோவா 10:21. வேறே சிலர்: இவைகள் பிசாசுபிடித்தவனுடைய வசனங்களல்லவே. குருடருடைய கண்களைப்பிசாசு திறக்கக்கூடுமோ என்றார்கள்.**

**வசனங்களினிமித்தம் பிரிவினை**

**இந்த வசனங்களினிமித்தம் யூதருக்குள்ளே மறுபடியும் பிரிவினையுண்டாயிற்று (யோவா 10:19).**

இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைக்குறித்து ஜனங்களுக்குள் பிரிவினை உண்டாயிற்று. ஒரு சிலர் அவருடைய உபதேசத்தை ஏற்றுக்கொள்கிறார்கள். வேறு சிலர் அவருடைய உபதேசத்தைத் தேவதூஷணமாகக் கருதி ஏற்றுக்கொள்ள மறுத்துவிடுகிறார்கள். ஏற்கெனவே இதற்கு முன்பு இயேசுவின் உபதேசத்தைக்குறித்து ஜனங்களுக்குள் பிரிவினைகள் வந்திருக்கிறது (யோவா 7:43; 9:16). ஜனங்கள் மத்தியிலே ஒரு தடவை பிரிவினை வந்தால், அது திரும்பத் திரும்ப வந்துகொண்டேயிருக்கும். பிரிவினை தொற்றுநோயைப்போல தொடரும். பிரிவினையை உடனடியாகச் செம்மைப்படுத்த வேண்டும். இல்லையென்றால் பிரிவினை பெரிதாகி ஜனங்களுக்குள் குழப்பம் ஏற்பட்டுவிடும். பாவம் செய்வதில் ஜனங்கள் ஒற்றுமையாக இருப்பதைவிட, இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைக் குறித்து ஜனங்களுக்குள்ளே பிரிவினை உண்டாவது பரவாயில்லை.

**இவன் பிசாசு பிடித்தவன்**

**அவர்களில் அநேகர்: இவன் பிசாசு பிடித்தவன், பயித்தியக்காரன்; ஏன் இவனுக்குச் செவிகொடுக்கிறீர்கள் என்றார்கள் (யோவா 10:20).**

ஜனங்களுக்குள் பிரிவினை உண்டானபோது, ஒரு சிலர் இயேசுகிறிஸ்துவையும், அவருடைய உபதேசத்தையும் தூஷிக்கிறார்கள். இயேசுகிறிஸ்து பிசாசு பிடித்தவரென்றும், பயித்தியக்காரனென்றும் கூறி அவரை நிந்திக்கிறார்கள். பயித்தியக்காரனுடைய பேச்சை யாரும் கேட்கவேண்டியதில்லை என்றும் ஜனங்களுக்கு ஆலோசனை கூறுகிறார்கள். ஒரு சிலர் இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தை ஏற்றுக்கொண்டு அவருக்குச் செவிகொடுக்கிறார்கள். அவர்களைக் கூட "பயித்தியக்காரனுக்குச் செவிகொடுக்கிறவர்கள்" என்று கூறி அவர்களையும் நிந்திக்கிறார்கள். இயேசுகிறிஸ்து பயித்தியக்காரரல்ல. யூதஜனங்கள்தான் புத்திதெளிவில்லாமல், சத்தியமானவருடைய வார்த்தைகளைப் பயித்தியக்காரருடைய வார்த்தைகள் என்று தடுமாற்றத்தோடு பேசுகிறார்கள்.

**பிசாசு பிடித்தவனுடைய வசனங்களல்லவே**

**வேறே சிலர்: இவைகள் பிசாசுபிடித்தவனுடைய வசனங்களல்லவே. குருடருடைய கண்களைப்பிசாசு திறக்கக்கூடுமோ என்றார்கள் (யோவா 10:21).**

இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாக ஒரு சிலர் பேசினாலும், யூதர்கள் மத்தியில் அவருக்கு ஆதரவாகப் பேசுகிறவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். வெள்ளம் காட்டாறுபோல பிரவாகித்து ஓடும்போது அதிலும் சிலர் எதிர்நீச்சல் போடுகிறார்கள். இயேசுகிறிஸ்துவைக் காரணமில்லாமல் தூஷிப்பதை இவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தையும், அவருடைய அற்புதங்களையும் இவர்கள் அங்கீகரிக்கிறார்கள். பிசாசு பிடித்தவரால் இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமுடியாது என்பது இவர்களுடைய விவாதம். இயேசுகிறிஸ்து கிருபை நிறைந்தவரென்றும், அவர் பயித்தியக்காரரல்ல என்றும் அவருக்குச் சாதகமாக பேசுகிறார்கள்.

இவர்கள் இயேசுவுக்குச் சாதகமாக இரண்டு காரியங்களைக் கூறுகிறார்கள். அவையாவன: 1. இவைகள் பிசாசு பிடித்தவனுடைய வசனங்களல்லவே 2. குருடனுடைய கண்களைப் பிசாசு திறக்கக்கூடுமா.

## அதிகாரம் - 10

இயேசுகிறிஸ்துவின் வார்த்தை தெளிவாகயிருக்கிறது. அது சத்திய வார்த்தை. பிசாசு பிடித்தவர்களால் தெளிந்த சிந்தனையோடு பேசமுடியாது. இயேசுகிறிஸ்துவின் வார்த்தையில் தெய்வீக ஞானம் வெளிப்படுகிறது. அவர் பரிசுத்தர். அவருடைய வார்த்தையும் பரிசுத்தமாயிருக்கிறது. பிசாசுகளாலும், பிசாசு பிடித்திருக்கிறவர்களாலும் பரிசுத்தமாக பேசமுடியாது. ஆகையினால் இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள் பிசாசு பிடித்தவனுடைய வசனங்கள் அல்ல என்றும், இவை தேவனால் அனுப்பப் பட்டிருக்கிறவருடைய வசனங்களென்றும் கூறுகிறார்கள்.

இயேசுகிறிஸ்து செய்த அற்புதங்களை இவர்கள் பார்த்திருக்கிறார்கள். தெய்வீக வல்லமையினால் இயேசு அற்புதங்களைச் செய்கிறார். பிறவிக்குருடனுடைய கண்களை இயேசு திறந்திருக்கிறார். குருடருடைய கண்களைப் பிசாசு திறக்கக்கூடுமா என்று கேட்கிறார்கள். பயித்தியக்காரனாலோ அல்லது பிசாசு பிடித்திருக்கிறவனாலோ இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமுடியாது. பிசாசு மனுஷருடைய கண்களைத் திறக்காது. திறந்திருக்கிற கண்களைக்கூட அடைத்துவிடும். இயேசுகிறிஸ்து பிசாசு பிடித்தவரல்ல என்பது இவர்களுடைய விவாதம்.

### மந்தையின் ஆடுகள்
### யோவா 10 : 22-30

**யோவா 10:22. பின்பு எருசலேமிலே தேவாலயப்பிரதிஷ்டைபண்டிகை வந்தது; மாரிகாலமுமாயிருந்தது.**

**யோவா 10:23. இயேசு தேவாலயத்தில் சாலொமோனுடைய மண்டபத்திலே உலாவிக்கொண்டிருந்தார்.**

**யோவா 10:24. அப்பொழுது யூதர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டு: எதுவரைக்கும் எங்கள் ஆத்துமாவுக்குச் சந்தேகம் உண்டாக்குகிறீர், நீர் கிறிஸ்துவானால் எங்களுக்குத் தெளிவாய்ச் சொல்லும் என்றார்கள்.**

**யோவா 10:25. இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: அதை உங்களுக்குச் சொன்னேன், நீங்கள் விசுவாசிக்கவில்லை; என் பிதாவின் நாமத்தினாலே நான் செய்கிற கிரியைகளே என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறது.**

**யோவா 10:26. ஆனாலும், நான் உங்களுக்கு சொன்னபடியே, நீங்கள் என் மந்தையின் ஆடுகளாயிராதபடியினால் விசுவாசியாமலிருக்கிறீர்கள்.**

**யோவா 10:27. என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப்பின்செல்லுகிறது.**

**யோவா 10:28. நான் அவைகளுக்கு நித்தியஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் கெட்டுப் போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை.**

**யோவா 10:29. அவைகளை எனக்குத் தந்த என் பிதா எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார்; அவைகளை என் பிதாவின் கையிலிருந்து பறித்துக்கொள்ள ஒருவனாலும் கூடாது.**

**யோவா 10:30. நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்றார்.**

### தேவாலயப்பிரதிஷ்டை பண்டிகை

**பின்பு எருசலேமிலே தேவாலயப்பிரதிஷ்டைபண்டிகை வந்தது; மாரிகாலமுமாயிருந்தது (யோவா 10:22).**

யூதர்கள் மத்தியிலே இயேசுகிறிஸ்துவின் வார்த்தையைக்குறித்து பிரிவினை உண்டாயிற்று. இது மாரிகாலமாக இருக்கிறது. இந்த சமயத்தில் எருசலேமிலே தேவாலயப்பிரதிஷ்டை பண்டிகை வருகிறது. ஒவ்வொரு வருஷமும் இந்தப் பண்டிகையை யூதர்கள் ஆசரிப்பார்கள். யூதாஸ்மக்கபியஸ் என்பவர் எருசலேமிலுள்ள தேவாலயத்தில் புதிய பலிபீடத்தைப் பிரதிஷ்டைபண்ணி தேவாலயத்தைச் சுத்திகரித்தார். இதை நினைவுகூரும் வண்ணமாக யூதர்கள் ஒவ்வொரு வருஷமும் எருசலேமிலே தேவாலயப்பிரதிஷ்டை பண்டிகையை ஆசரிப்பது வழக்கம். தேவாலயம் பிரதிஷ்டை பண்ணப்பட்டபோது யூதர்களுக்கு அடிமைத்தனத்திலிருந்து விடுதலை உண்டாயிற்று. மரணத்திலிருந்து உயிர்பெற்றதுபோல யூதர்கள் சந்தோஷப்பட்டு இந்த நாளைப் பண்டிகை நாளாகக் கொண்டாடுகிறார்கள். இது டிசம்பர் மாதத்தில் துவக்கத்தில் வரும். பொதுவாக ஒரு வாரம் முழுவதும் இந்தப் பண்டிகையை கொண்டாடுவார்கள்.எருசலேமில் மாத்திரமல்ல, யூதர்கள் எங்கெல்லாம் இருக்கிறார்களோ அங்கெல்லாம் அவர்கள் தேவாலயப்பிரதிஷ்டை பண்டிகையை கொண்டாடுவது வழக்கம். இந்தப் பண்டிகைக்காலம் யூதருக்கு மார்க்கப்பிரகாரமாக பரிசுத்த காலமல்ல. தங்கள் விடுதலையைக் கொண்டாடும் சந்தோஷமான காலம்.

## அதிகாரம் - 10

**சாலொமோனுடைய மண்டபம்**

**இயேசு தேவாலயத்தில் சாலொமோனுடைய மண்டபத்திலே உலாவிக்கொண்டிருந்தார் (யோவா 10:23).**

பண்டிகை நாளின்போது இயேசுகிறிஸ்து தேவாலயத்தில் சாலொமோனுடைய மண்டபத்திலே உலாவிக்கொண்டிருக்கிறார். தம்மிடத்தில் கேள்வி கேட்கிறவர்களுக்கு பிரதியுத்தரம் கூற ஆயத்தமாக அங்கும் இங்கும் உலாவிக்கொண்டிருக்கிறார். ஜனங்களுக்கு தேவையான ஊழியங்களைச் செய்வதற்கு இயேசுகிறிஸ்து மண்டபத்தில் உலாவிக்கொண்டிருக்கிறார். இயேசுகிறிஸ்துவோடு பேசவேண்டுமென்று விரும்புகிறவர்கள் அவரைத் தேடி எங்கும் போகவேண்டியதில்லை. அவர் தேவாலயத்திலே இருப்பார். அங்கு போனால் இயேசுவைப் பார்க்கலாம்.

**எங்களுக்குத் தெளிவாய்ச் சொல்லும்**

**அப்பொழுது யூதர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டு: எதுவரைக்கும் எங்கள் ஆத்துமாவுக்குச் சந்தேகம் உண்டாக்குகிறீர், நீர் கிறிஸ்துவானால் எங்களுக்குத் தெளிவாய்ச் சொல்லும் என்றார்கள் (யோவா 10:24).**

யூதர்கள் இயேசுவைத்தேடி சாலொமோனுடைய மண்டபத்திற்கே வந்துவிடுகிறார்கள். அங்கு வந்து இயேசுவைச் சூழ்ந்துகொள்கிறார்கள். இயேசு ஜனங்களுக்கு நன்மை செய்ய ஆயத்தமாயிருக்கிறார். ஆனால் யூதஜனங்களோ அவரைத் தூஷிக்கவும், அவரை கிரியை செய்யவிடாமல் தடைபண்ணவும் அங்கு வருகிறார்கள். இயேசுகிறிஸ்து நல்ல மனதோடு தேவாலயத்திலிருக்கிறார். இவர்களோ தீயமனதோடு அவரைத்தேடி தேவாலயத்திற்கு வருகிறார்கள்.

யூதர்கள் இயேசுவைச் சூழ்ந்துகொண்டு, தங்களை நல்லவர்கள் போலவும், பட்சபாதமில்லாதவர்கள் போலவும் காண்பித்துக்கொள்கிறார்கள். சத்தியத்தை விசாரிப்பதுபோலவும், அவரைப் பின்பற்ற விரும்புவதுபோலவும் நடிக்கிறார்கள்.

ஆனால் அவருடைய உள்ளத்திலோ வஞ்சக எண்ணம் நிரம்பியிருக்கிறது. இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமான சிந்தனைகளோடு அவரைச் சூழ்ந்துகொள்கிறார்கள்.

"எதுவரைக்கும் எங்கள் ஆத்துமாவுக்கு சந்தேகம் உண்டாக்குகிறீர் நீர் கிறிஸ்துவானால் எங்களுக்குத் தெளிவாய்ச் சொல்லும்" என்று இயேசுகிறிஸ்துவிடம் கேட்கிறார்கள். இயேசுகிறிஸ்துவைப் பார்க்கும்போதெல்லாம் அவர் கிறிஸ்துதானா என்று யூதர்கள் அவரிடத்தில் விவாதம்பண்ணுகிறார்கள். தொடர்ந்து விவாதம்பண்ணுவதினால் அவர்களுக்கு சலிப்பு உண்டாயிற்று. இயேசுகிறிஸ்து தம்மைப்பற்றி இன்னும் தெளிவாக வெளிப்படுத்தவில்லையென்று அவர்மீது குற்றம் சுமத்துகிறார்கள். "எதுவரைக்கும் எங்கள் ஆத்துமாவுக்கு சந்தேகம் உண்டாக்குகிறீர்" என்று கோபத்தோடு கேட்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து தம்மைப்பற்றி தெளிவாகவும், சந்தேகமில்லாமலும் வெளிப்படுத்தியிருக்கிறார். ஆனால் இவர்களோ விசுவாசமில்லாமல், சுயபெருமையில் இருக்கிறார்கள். அவிசுவாசமும் சுயபெருமையும் இவர்களுடைய செவிகளை அடைத்துப்போடுகிறது. இருதயத்தைக் கடினமாக்குகிறது. இயேசுகிறிஸ்து கூறுவது உண்மையென்று இவர்களுடைய மனச்சாட்சி கூறுகிறது. ஆனால் இவர்களுடைய அவிசுவாசமும் பெருமையும் சத்தியத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கிறது.

யூதர்கள் மேசியாவை எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் எதிர்பார்க்கிற மேசியா தாமே என்று இயேசுகிறிஸ்து வெளிப்படுத்துகிறார். இவர்கள் எதிர்பார்க்கிற பிரகாரம் இயேசுகிறிஸ்துவுக்கு முகத்தோற்றம் இல்லை. மேலும் இவர்கள் எதிர்பார்க்கிற பிரகாரம் இயேசுகிறிஸ்து பேசவுமில்லை, கிரியை நடப்பிக்கவுமில்லை. ஆகையினால் இவர்களால் இயேசுவைக் கிறிஸ்து என்று அங்கீகரிக்க முடியவில்லை. இவர்களுடைய மனச்சாட்சியில் போராட்டமும் சந்தேகமும் உண்டாயிற்று. இந்தச் சந்தேகத்திற்கு இயேசுகிறிஸ்துவே காரணமென்று அவரைக் குற்றப்படுத்துகிறார்கள். விசுவாசம் சகலத்தையும் நம்பும். இவர்களிடத்தில் விசுவாசமில்லை. ஆகையினால் இவர்களுடைய ஆத்துமா இயேசுவைக் கிறிஸ்து என்று நம்பாமல் சந்தேகிக்கிறது.

## அதிகாரம் - 10

தங்களுடைய சந்தேகத்தைத் தெளிவாக நிவிர்த்திபண்ணுமாறு இயேசுகிறிஸ்துவிடம் கூறுகிறார்கள். "நீர் கிறிஸ்துவானால் எங்களுக்குத் தெளிவாய்ச் சொல்லும்" என்று கேட்கிறார்கள். யோவான்ஸ்நானனைக் குறித்துயூதர்களுக்குச் சந்தேகம் உண்டாயிற்று. அவனிடத்தில் "நீர் யார்" என்று கேட்டபோது, அவன் மறுதலியாமல் அறிக்கையிட்டதுமன்றி, "நான் கிறிஸ்து அல்ல" என்றும் அறிக்கையிட்டான் (யோவா 1:20). இயேசுகிறிஸ்து யோவான்ஸ்நானனைப்போலத் தெளிவாக அறிக்கையிட வேண்டும் என்று யூதர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

யூதர்களுடைய எதிர்பார்ப்பு வெளிப்பார்வைக்கு நல்லதுபோலத்தான் தெரிகிறது. ஆனால் இவர்களுடைய உள்ளத்திலோ வஞ்சனையான எண்ணம் இருக்கிறது. மேசியா தங்களுக்கு ராஜாவாகயிருப்பார் என்பது யூதர்கள் எல்லோருக்குமே தெரிந்த காரியம். ஆகையினால் யாராவது ஒருவர் தன்னை மேசியா என்று கூறினால், அவரைத் தேவதூஷணம் கூறுகிறவராகக் குற்றப்படுத்தித் தண்டித்துவிடுவார்கள். இயேசுகிறிஸ்துவைத் தண்டிக்க வேண்டுமென்பது இவர்களுடைய விருப்பம். இயேசு தம்மைக் கிறிஸ்து என்று கூறினால், அவர் தேவதூஷணம் கூறுவதாக அவர்மீது குற்றம் சுமத்தி, அவரைத் தண்டிக்க விரும்புகிறார்கள்.

### அதை உங்களுக்குச் சொன்னேன்

**இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: அதை உங்களுக்குச் சொன்னேன், நீங்கள் விசுவாசிக்கவில்லை; என் பிதாவின் நாமத்தினாலே நான் செய்கிற கிரியைகளே என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறது (யோவா 10:25).**

இயேசுகிறிஸ்து தம்மைத் தேவனுடைய குமாரனாக நிரூபிக்கிறார். தாம் தேவனால் அனுப்பப்பட்டிருக்கிறதை இயேசுகிறிஸ்து அவர்களுக்கு ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். தாமே தேவகுமாரனென்றும், தாமே கிறிஸ்து என்றும், தாமே அவர்கள் எதிர்பார்க்கிற மேசியா என்றும் இயேசுகிறிஸ்து யூதர்களுக்குச் சொல்லியிருந்தும், அவர்கள் அவருடைய வார்த்தையை விசுவாசிக்கவில்லை.

தங்களுடைய ஆத்துமாவுக்கு இயேசுகிறிஸ்துவைக்குறித்து சந்தேகம் உண்டாயிருப்பதாக யூதர்கள் கூறுகிறார்கள். அவர்களுடைய ஆத்துமாவில் இருப்பது சந்தேகமல்ல. அது அவிசுவாசம். இயேசுவின் வார்த்தையை, அவர்களுடைய ஆத்துமாவில் அவிசுவாசம் இருப்பதில், அவர்களால் நம்ப முடியவில்லை. இயேசுகிறிஸ்து நமக்கு எப்படி உபதேசம் பண்ணவேண்டுமென்று நாம் அவருக்குக் கட்டளையிட முடியாது. தேவன் தம்மைப்பற்றி இம்மட்டுமாக, நமக்கு வெளிப்படுத்தியிருக்கிற தெய்வீக வெளிப்பாடுகளுக்காக நாம் அவருக்கு நன்றியுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்து தாம் செய்கிற கிரியைகளைக்குறித்து இங்கு பேசுகிறார். அவர் செய்கிற கிரியைகளே அவரைக்குறித்து சாட்சிக்கொடுக்கிறது. இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரன் என்பதற்கும், அவர் தேவனால் அனுப்பட்டிருக்கிறவர் என்பதற்கும், அவரே மேசியாவாகிய கிறிஸ்து என்பதற்கும், அவர் செய்கிற கிரியைகளே போதுமான சாட்சிகளாகும். அவர் தமது வார்த்தைகளை அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் உறுதிபண்ணுகிறார். ஒருவரோடு தேவன் இல்லையென்றால், யாராலும் இப்படிப்பட்ட அற்புங்களைச் செய்ய முடியாது. தேவன் துன்மார்க்கருடைய கிரியைகளை அங்கீகரிக்கமாட்டார். மாய்மாலம் பண்ணுகிறவர்களுடைய வார்த்தைகளைக் கர்த்தர் தம்முடைய அற்புதங்களினால் உறுதிபண்ணமாட்டார்.

### விசுவாசியாமலிருக்கிறீர்கள்

**ஆனாலும், நான் உங்களுக்கு சொன்னபடியே, நீங்கள் என் மந்தையின் ஆடுகளாயிராதபடியினால் விசுவாசியாமலி ருக்கிறீர்கள் (யோவா 10:26).**

யூதர்கள் இயேசுவைக் கிறிஸ்து என்று விசுவாசிக்கவில்லை. அவர்களுடைய அவிசுவாசத்திற்கான காரணத்தையும் இயேசுகிறிஸ்து இங்கு விவரிக்கிறார். "நீங்கள் என் மந்தையின் ஆடுகளாயிராதபடியினால் விசுவாசியாமலிருக்கிறீர்கள்" என்று அவர்களிடத்தில் கூறுகிறார். பிதாவாகிய தேவன் இயேசுகிறிஸ்துவை விசுவாசியாத இந்த ஜனங்களை இயேசுகிறிஸ்துவின் மந்தையில் ஒப்புக்கொடுக்கவில்லை. தம்முடைய மந்தையிலுள்ள ஆடுகளை இயேசுகிறிஸ்து கூட்டிச்சேர்த்து மேய்ச்சலைக் கண்டடைவதற்கு வழிநடத்துகிறார்.

## அதிகாரம் - 10

ஆனால் இவர்களோ அவருடைய மந்தையில் சேராத ஆடுகள். இவர்களை இயேசுகிறிஸ்து வழிநடத்தமாட்டார். இவர்களை வந்து பார்க்கமாட்டார். இவர்களோடு பேசமாட்டார். இவர்களுடைய சத்தத்தை அறியமாட்டார். இயேசுகிறிஸ்துவின் சத்தத்தை இவர்களும் அறியமாட்டார்கள். இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு ஒருவன் தொடர்ந்து எதிர்த்து நின்றால் அவனுடைய இருதயம் கடினமாகவிடும். அவிசுவாசம் அவனுக்குள் வளரும். தேவனைவிட்டுத் தூர விலகிச் சென்றுவிடுவான். பரலோக ராஜ்யம் அவனுக்கு சமீபமாயிருக்காது தூரமாயிருக்கும்.

**என் ஆடுகள் எனக்குப் பின் செல்கிறது**

**என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப்பின்செல்லுகிறது (யோவா 10:27).**

இயேசுகிறிஸ்துவின் மந்தையிலுள்ள ஆடுகளுக்கு அவருடைய பாதுகாப்பும் பராமரிப்பும் கிடைக்கும். அவரிடத்திலிருந்து விசேஷித்த சிலாக்கியத்தை இவர்கள் பெற்றுக்கொள்வார்கள். இயேசுகிறிஸ்துவை விசுவாசியாதவர்கள் அவருடைய மந்தையிலுள்ள ஆடுகள் அல்ல. தம்முடைய ஆடுகள் எப்படிப்பட்ட குணாதிசயங்களைப் பெற்றிருக்கும் என்று இயேசுகிறிஸ்து விவரிக்கிறார். அவை இயேசுகிறிஸ்துவின் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது. இதுதான் தங்களுடைய மேய்ப்பரின் சத்தம் என்பதை அவருடைய ஆடுகள் தெளிவாக அறிந்திருக்கும்.

ஆடுகள் தங்களுடைய மேய்ப்பனின் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவனுக்குப் பின் செல்கிறது (யோவா 10:4). மேய்ப்பன் தன்னுடைய ஆடுகளை அறிந்திருப்பதுபோல, தன்னுடைய ஆடுகளால் அறியப்பட்டும் இருப்பான் (யோவா 10:15). மேய்ப்பரின் சத்தத்தைக்கேட்டு அவனுடைய ஆடுகள் சந்தோஷப்படும். அவனுடைய சத்தத்திற்குச் செவிகொடுத்து, அதற்குக் கீழ்ப்படிந்து, அவனுக்குப் பின்செல்லும்.

இயேசுகிறிஸ்துவின் மந்தையில் சேராத ஆடுகள் அவருடைய சத்தத்திற்குச் தங்கள் செவிகளை அடைத்துக்கொள்ளும். அவரைப்பின்பற்றாது. இயேசுகிறிஸ்துவின் சத்தத்திற்கு இந்த ஆடுகள் முக்கியத்துவம் கொடுக்காது. ஏதோ விரோதமான சத்தம் என்று நினைத்துத் தங்களுக்கு இஷ்டமானதை செய்துகொண்டிருக்கும்.

ஆனால் இயேசுகிறிஸ்துவின் ஆடுகளோ அவருக்குச் செவிகொடுத்து, அவருக்குப் பின் செல்கிறது. நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில், கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், அவருடைய அடிச்சுவடுகளை பின்பற்றிச் செல்லவேண்டும். நம்முடைய ஆட்டுக்குட்டியானவர் எங்கெல்லாம் போகிறாரோ அங்கெல்லாம் நாமும் அவரைப் பின்பற்றிப் போகவேண்டும். இயேசுகிறிஸ்துவின் சத்தத்தைக் கேட்டும், நாம் அவருக்கு பின்செல்லவில்லையென்றால், நமக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகாது.

**நித்திய ஜீவனைக்கொடுக்கிறேன்**

**நான் அவைகளுக்கு நித்தியஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை (யோவா 10:28).**

இயேசுகிறிஸ்துவின் ஆடுகளாக இல்லையென்றால், அந்த ஆடுகளுக்குத்தான் நஷ்டம். அவர்களுக்குத்தான் பிரச்சனை உண்டாகும். அவர்கள் துக்கத்தோடும் வருத்தத்தோடும் இருப்பார்கள். தம்முடைய ஆடுகளுக்கு இயேசுகிறிஸ்து கொடுக்கும் ஆசீர்வாதங்களை இங்கு விவரித்துக் கூறுகிறார். இயேசுகிறிஸ்துவின் ஆடுகள் அவருடைய சத்தத்தைக்கேட்கும். இயேசுகிறிஸ்து அவைகளை அறிந்திருக்கிறார். தம்முடைய ஆடுகளிலிருந்து மற்ற ஆடுகளை அவர் வேறுபிரித்து வித்தியாசம் காண்கிறார்.

கர்த்தர் தம்முடையவர்களை அறிவார் (2தீமோ 2:19). கர்த்தருடைய பிள்ளைகள் ஏழைகளாக இருந்தாலும், நாம் கூப்பிடும்போது கர்த்தர் நம்முடைய சத்தத்தைக்கேட்டு, நம்மை நம்முடைய இடுக்கண்களுக்கெல்லாம் நீங்கலாக்கி இரட்சிப்பார் (சங் 34:6).

இயேசுகிறிஸ்து தம்முடைய பிள்ளைகளுக்கு நித்திய ஜீவனைக்கொடுக்கிறார். நம்முடைய ஆத்துமா ஜீவனுள்ளது. நம்முடைய ஜீவனுக்கு அவர் சந்தோஷத்தையும் சமாதானத்தையும் கொடுக்கிறார். மனுஷருடைய ஆத்துமா மரித்துப்போகாமல் நித்தியகாலமாக இருக்கும். நம்முடைய நித்திய ஜீவன் வரைக்கும் சந்தோஷமும் சமாதானமும் தேவைப்படுகிறது. இயேசுகிறிஸ்துவே நம்முடைய ஜீவனுக்கு சந்தோஷத்தையும் சமாதானத்தையும் நித்திய காலமாகத் தருகிறவர்.

## அதிகாரம் - 10

நம்முடைய நித்திய ஆத்துமாவிற்கு இயேசுகிறிஸ்து நித்திய ஜீவனைக்கொடுக்கிறார். இது நமக்குக் கொடுக்கப்படுகிற மிகப்பெரிய ஆசீர்வாதம். தம்முடைய இலவசமாக கிருபையினால் இயேசுகிறிஸ்து நமக்கு நித்திய ஜீவனைக்கொடுக்கிறார். "நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுப்பேன்" என்று வருங்காலத்தில் பேசாமல், "நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன்" என்று நிகழ்காலத்தில் பேசுகிறார். இயேசுகிறிஸ்து நமக்கு நித்திய ஜீவனைக்கொடுப்பது, நிகழ்காலத்தில் அவர் நமக்குக் கொடுக்கிற வெகுமதியாகும். இந்த ஆசீர்வாதத்தை இயேசுகிறிஸ்து நமக்கு உறுதிபண்ணுகிறார்.

இயேசுகிறிஸ்து நமக்கு நித்திய ஜீவனைக்கொடுக்கும்போது, இதன் சந்தோஷத்தை நாம் அனுபவிக்கவேண்டும் என்பதற்காக, நம்மைப் பாதுகாத்து பராமரிக்கும் பொறுப்பையும் தாமே ஏற்றுக்கொள்கிறார். இயேசுகிறிஸ்து கொடுக்கிற நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்கிற நாம், ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை. "நாம் ஒருக்காலும் அழிந்துபோவதில்லை" என்பது இந்த வாக்கியத்தின் பொருளாகும்.

நித்திய ஜீவன் இருப்பதுபோலவே நித்திய அழிவும் இருக்கிறது. இயேசுகிறிஸ்து நம்மை ஆக்கினைக்குட்படுத்தவில்லை. நாம் இயேசுகிறிஸ்துவிடத்தில் வரும்போது, ஆக்கினையைத் தேடிவரவில்லை. ஆசீர்வாதத்தைத் தேடியே வருகிறோம். சந்தோஷத்தையும் சமாதானத்தையும் தேடியே அவரிடத்தில் வருகிறோம்.

உலகப்பிரகாரமான மேய்ப்பர்களுக்கு ஏராளமான ஆடுகள் இருக்கும். அவற்றில் ஏதாவது சில ஆடுகள் காணாமல்போகும். மேய்ப்பனும் தேடிப்பார்ப்பான். காணாமல்போன ஆடு கண்பிடிக்கப்பட்டால் தன்னுடைய மந்தையில் சேர்த்துக்கொள்வான். அதைக்கண்டுபிடிக்க முடியவில்லையென்றால் அப்படியே விட்டுவிடுவான். எப்படியும் போகட்டும் என்று அசட்டையாகயிருந்து, அதைப்பற்றி அதிக கவலைப்படமாட்டான்.

நம்முடைய பிரதான மேய்ப்பராகிய இயேசுகிறிஸ்துவோ உலகப்பிரகாரமான மேய்ப்பரைப் போன்றவரல்ல. இயேசுகிறிஸ்துவின் மந்தையிலுள்ள ஆடுகளில் ஒன்றுகூட, ஒருக்காலத்திலும் கெட்டுப்போவதில்லை. தம்மிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கும் எந்த ஆத்துமாவையும் அழிந்துபோகாதவாறு இயேசுகிறிஸ்து பாதுகாக்கிறார். நித்திய ஜீவனைப்பெற்றுக்கொண்டிருக்கிற நாம் நித்திய சந்தோஷத்தை அனுபவிப்போம். இந்த சந்தோஷத்தை நாம் ஒருபோதும் இழந்துபோவதில்லை.

இயேசுகிறிஸ்து தம்முடைய தெய்வீக வல்லமையினால் நம்மைப் பாதுகாக்கிறார். பராமரிக்கிறார். நமக்குக் கொடுத்திருக்கும் நித்திய ஜீவன் கெட்டுப்போகாமல் காத்துக்கொள்கிறார். இயேசுகிறிஸ்துவின் கையிலிருந்து யாராலும் நம்மை பறித்துக்கொள்ள முடியாது. மேய்ப்பன் தன்னுடைய ஆடுகளின் பாதுகாப்பையும் பராமரிப்பையும் குறித்து மிகுந்த எச்சரிப்போடு இருப்பான். தனக்கு அருகாமையிலேயே தன்னுடைய ஆடுகளை மேய்த்துக்கொண்டிருப்பான். தன்னுடைய கரத்தினால் ஆடுகளுக்கு தேவையான பாதுகாப்பைக் கொடுத்துக் கொண்டேயிருப்பான்.

ஆடுகள் இருக்கும் இடத்தில் ஓநாய்கள் வரத்தான் செய்யும். மேய்ப்பனின் பராமரிப்பிலுள்ள ஆடுகளைப் பறித்துக்கொள்ள முயற்சிசெய்யும். ஆட்டுக்குட்டி சிறியதாக இருந்தால் மேய்ப்பன் அதைத் தரையிலே விடாமல் தன் கைகளில் ஏந்தி சுமப்பான். ஓநாய்கள் மேய்ப்பனின் கையிலுள்ள ஆட்டுக்குட்டியை பறித்துக்கொள்ள முயற்சிசெய்யும். ஆனால் ஓநாய்களால் இயேசுவின் கரத்திலுள்ள ஆடுகளாகிய நம்மை ஒருபோதும் பறித்துக்கொள்ள முடியாது. அது எவ்வளவு பெரிய ஓநாயாக இருந்தாலும், அல்லது அது வேறு எப்படிப்பட்ட மிருகமாக இருந்தாலும், இயேசுகிறிஸ்துவின் கைகளில் அடைக்கலமாக இருக்கும் நம்மை, யாராலும் ஒருபோதும் அவருடைய கையிலிருந்து நம்மைப் பறித்துக்கொள்ள முடியாது. நாம் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கரங்களில் பாதுகாப்பாக இருக்கிறோம். இதுவே நமக்கு மெய்யான பாதுகாப்பு.

## அதிகாரம் - 10

### எல்லாரிலும் பெரியவர்

**அவைகளை எனக்குத் தந்த என் பிதா எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார்; அவைகளை என் பிதாவின் கையிலிருந்து பறித்துக்கொள்ள ஒருவனாலும் கூடாது (யோவா 10:29).**

இயேசுகிறிஸ்து தம்முடைய ஆடுகளைப் பாதுகாப்பதுபோலவே, பிதாவாகிய தேவனும் தம்முடைய வல்லமையினால் குமாரனுடைய ஆடுகளை பாதுகாக்கிறார். பிதா எல்லாரிலும் பெரியவராக இருக்கிறார். அவர் சர்வ வல்லமையுள்ளவர். அவருடைய வல்லமை எல்லா வல்லமைகளைவிடவும் பெரியது. எல்லா ஊழியக்காரர்களைவிடவும், உலகப்பிரகாரமான எல்லா தலைவர்களைவிடவும், சபைகளின் எல்லா போதகர்களைவிடவும், மேய்ப்பர்களைவிடவும், பிதாவாகிய தேவன் எல்லாரிலும் பெரியவராக இருக்கிறார்.

உலகப்பிரகாரமான மேய்ப்பர்கள் மந்தைகளை மேய்த்து சில சமயங்களில் சோர்ந்துபோவார்கள். சில சமயங்களில் களைப்படைந்து தூங்கிவிடுவார்கள். இஸ்ரவேலைக்காக்கிற நம் தேவனோ தூங்குவதுமில்லை உறங்குவதுமில்லை. இரவும் பகலும் இயேசுகிறிஸ்து தம்முடைய ஆடுகளைப் பாதுகாக்கிறார். சபைக்குச் சத்துருக்களாக இருக்கும் எல்லா அந்தகார சக்திகளைவிடவும், சத்துருக்களைவிடவும் பிதாவானவர் பெரியவர். பூமியின் எல்லா வல்லமைகளைவிடவும், பாதாளத்தின் எல்லா வல்லமைகளைவிடவும் பிதாவானவர் பெரியவர். பிசாசும் அவனுடைய தூதர்களும் பிதாவின் கையிலுள்ள ஆடுகளைப் பறித்துக்கொள்வதற்கு பல சமயங்களில் முயற்சிபண்ணலாம். ஆனால் அவர்களுடைய முயற்சி ஒருபோதும் வெற்றி பெறாது. பிதாவின் கையிலிருந்து அவருடைய ஆடுகளை ஒருவனாலும் பறித்துக்கொள்ளக்கூடாது.

இயேசுகிறிஸ்துவிடமுள்ள ஆடுகள்மீது பிதாவானவர் மிகுந்த கரிசனையோடும் ஆர்வத்தோடும் இருக்கிறார். ஏனெனில் இந்த ஆடுகளைப் பிதாவானவரே குமாரனுக்குத் தந்திருக்கிறார். ஆகையினால் குமாரனிடத்திலுள்ள ஆடுகளைப் பிதாவானவர் இன்னும் பாதுகாத்துப் பராமரிக்கிறார்.

தேவனுடைய தெய்வீக ஆலோசனைகள் எல்லாம் நிறைவேறுவதற்காக தேவனுடைய வல்லமைகள் எல்லாம் பயன்படுத்தப்படும்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு இந்தப் பூமியில் தெய்வீகப் பாதுகாப்பு வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. மனுஷனாக இருந்தாலும், பிசாசாக இருந்தாலும், பிதாவாகிய தேவனுடைய கையிலிருந்து நம்மை யாராலும் பறித்துக்கொள்ள முடியாது. பிதாவின் வல்லமையைக் குமாரனும் அனுபவித்திருக்கிறார். பிதாவானவர் குமாரனைப் பாதுகாக்கிறார். பலப்படுத்துகிறார். ஆகையினால் தம்மைப் பின்பற்றுகிற விசுவாசிகளை, குமாரனாகிய இயேசுகிறிஸ்து, தம்முடைய பிதாவாகிய தேவனுடைய பலத்த கரத்தில் ஒப்புக்கொடுக்கிறார். மீட்பரின் மகிமையைப் பாதுகாக்கிற தேவன், மீட்கப்பட்டோராகிய நம்முடைய மகிமையையும் பாதுகாப்பார்.

### நானும் பிதாவும்

**நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்றார் (யோவா 10:30).**

இயேசுகிறிஸ்து தம்முடைய பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதிபண்ணும்போது "நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்" என்று அறிவிக்கிறார். யூதர்கள் இயேசுகிறிஸ்து கூறுகிற இந்த வாக்கியத்தை எளிதாகப் புரிந்துகொள்வார்கள். இந்த வாக்கியத்தின் மூலமாக இயேசுகிறிஸ்து தம்மைத் தேவன் என்று யூதர்களுக்கு வெளிப்படுத்துகிறார். ஆகையினால்தான் யூதர்கள் இயேசுவை "நீ மனுஷனாயிருக்க, உன்னைத் தேவன் என்று சொல்லுவதென்ன" (யோவா 10:33) என்று கேட்கிறார்கள். யூதர்கள் தம்மிடத்தில் கோபத்தோடு இந்தக் கேள்வியைக் கேட்டபோது, இயேசுகிறிஸ்து தம்மை தேவகுமாரன் என்று கூறியதை மறுதலிக்கவில்லை.

இயேசுகிறிஸ்துவை விசுவாசியாத யூதர்களுக்கு, அவர் சொல்லுவது "தேவதூஷணம் சொல்லுவதாக" தெரிகிறது. இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களுக்கோ இந்த வார்த்தை மெய்யான சத்திய வார்த்தையாகும். இயேசுகிறிஸ்துவின் கையிலிருந்து தம்முடைய பிள்ளைகளை ஒருவனாலும் பறித்துக்கொள்ள முடியாது. ஏனெனில் இயேசுகிறிஸ்துவும் பிதாவும் ஒன்றாயிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் பிள்ளைகளைப் பிதாவின் கையிலிருந்து பறித்துக்கொள்ள ஒருவனாலும் கூடாது.

## அதிகாரம் - 10

**நற்கிரியைகள்**
**யோவா 10 : 31-38**

**யோவா 10:31. அப்பொழுது யூதர்கள் மறுபடியும் அவர்மேல் கல்லெறியும்படி, கல்லுகளை எடுத்துக்கொண்டார்கள்.**

**யோவா 10:32. இயேசு அவர்களை நோக்கி: நான் என் பிதாவினாலே அநேக நற்கிரியைகளை உங்களுக்குக் காண்பித்தேன், அவைகளில் எந்தக் கிரியையினிமித்தம் என்மேல் கல்லெறிகிறீர்கள் என்றார்.**

**யோவா 10:33. யூதர்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: நற்கிரியையினிமித்தம் நாங்கள் உன்மேல் கல்லெறிகிறதில்லை; நீ மனுஷனாயிருக்க, உன்னை தேவன் என்று சொல்லி, இவ்விதமாக தேவதூஷணஞ்சொல்லுகிறபடியினால் உன்மேல் கல்லெறிகிறோம் என்றார்கள்.**

**யோவா 10:34. இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: தேவர்களாயிருக்கிறீர்கள் என்று நான் சொன்னேன் என்பதாய் உங்கள் வேதத்தில் எழுதியிருக்கவில்லையா?**

**யோவா 10:35. தேவவசனத்தைப் பெற்றுக்கொண்டவர்களை தேவர்கள் என்று அவர் சொல்லியிருக்க, வேதவாக்கியமும் தவறாததாயிருக்க,**

**யோவா 10:36. பிதாவினால் பரிசுத்தமாக்கப்பட்டும், உலகத்தில் அனுப்பப்பட்டும் இருக்கிற நான் என்னை தேவனுடைய குமாரன் என்று சொன்னதினாலே தேவதூஷணஞ் சொன்னாய் என்று நீங்கள் சொல்லலாமா?**

**யோவா 10:37. என் பிதாவின் கிரியைகளை நான் செய்யாதிருந்தால், நீங்கள் என்னை விசுவாசிக்கவேண்டியதில்லை.**

**யோவா 10:38. செய்தேனேயானால், நீங்கள் என்னை விசுவாசியாதிருந்தாலும், பிதா என்னிலும் நான் அவரிலும் இருக்கிறதை நீங்கள் அறிந்து விசுவாசிக்கும்படி, அந்தக் கிரியைகளை விசுவாசியுங்கள் என்றார்.**

**மறுபடியும் கல்லெறியும்படி.**

**அப்பொழுது யூதர்கள் மறுபடியும் அவர்மேல் கல்லெறியும்படி, கல்லுகளை எடுத்துக்கொண்டார்கள் (யோவா 10:31).**

"நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்" என்று இயேசுகிறிஸ்து கூறியபோது யூதர்கள் மறுபடியும் அவர்மேல் கல்லெறியும்படி, கல்லுகளை எடுத்துக்கொள்கிறார்கள். இந்த சம்பவத்திற்குச் சற்று முன்பு அவர்கள் "அவர்மேல் கல்லெறியும்படி கல்லுகளை எடுத்துக்கொண்டார்கள்" (யோவா 8:59) என்று எழுதப்பட்டிருக்கிறது. தமிழ்மொழியில் இவ்விரண்டு வாக்கியங்களுக்கும் ஒரே விதமான வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டிருந்தாலும், கிரேக்க மொழியில் இவ்விரண்டு வசனங்களிலும் வெவ்வேறு வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. முதலில் சிறிய கல்லுகளை எடுத்துக்கொண்டவர்கள் இப்போது தங்களோடு பெரிய கல்லுகளைக் கொண்டு வருகிறார்கள் என்பது இதன் பொருளாகும். கொடிய குற்றவாளியைக் கோபத்தோடு கல்லெறிந்து கொன்றுபோடும் வண்ணமாக இயேசுகிறிஸ்துவின்மீது கல்லெறிய வேண்டுமென்று பெரிய கற்களை எடுத்து வருகிறார்கள்.

ஆரம்பத்தில் "எதுவரைக்கும் எங்கள் ஆத்துமாவுக்கு சந்தேகம் உண்டாக்குகிறீர், நீர் கிறிஸ்துவானால் எங்களுக்குத் தெளிவாய்ச் சொல்லும்" என்று வார்த்தையினால் பேசியவர்கள், இப்போது கல்லுகளால் பேசுகிறார்கள். அவர் கிறிஸ்துவா இல்லையா என்பதை இயேசுகிறிஸ்து தங்களிடம் தெளிவாய்ச் சொல்லிவிடவேண்டும் என்று கோபத்தோடு பேசுகிறார்கள். இயேசுகிறிஸ்து தம்மை பிதாவாகிய தேவனுடைய குமாரன் என்று சொல்லுகிறபடியினால் அவர் தேவதூஷணம் சொல்லுவதாக அவர்மீது குற்றம் சுமத்துகிறார்கள்.

கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நாம் யாரையும் கடிந்து கூறாமல், அன்பான வார்த்தைகளைப் பேசி உபதேசம் பண்ணினால், நம்மைக் கோழை என்று கூறுகிறார்கள். கடினமான வார்த்தைகளைக் கூறி ஜனங்களைக் கடிந்துகொண்டால் நம்மை முரட்டுக்குணமுள்ளவர்களென்றும், அதிக பிரசங்கித்தனமுள்ளவர்களென்றும் கோபிக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்கிற ஜனங்களும் அவருடைய சத்திய வசனங்களை ஏற்றுக் கொள்ளாமல் அவர்மீது கோபப்படுகிறார்கள். ஏற்கெனவே அவர்மேல் கல்லெறியும்படி கல்லுகளை இவர்கள் எடுத்துக்கொண்டார்கள். ஆனால் இயேசுவோ அப்போது மறைந்து, அவர்கள் நடுவே கடந்து, தேவாலயத்தை விட்டுப் போகிறார் (யோவா 8:59). இயேசுவை அவர்களால் பிடிக்க முடியவில்லை. ஆனாலும் இயேசுகிறிஸ்துவின் மீது யூதர்களுக்கு அதிக கோபம் இருப்பதினால் அவர்மீது கல்லெறிய மறுபடியும் முயற்சிபண்ணுகிறார்கள்.

## அதிகாரம் - 10

துணிகரமாகப் பாவம் செய்கிறவர்கள் பரலோகத்தின்மேல் கல்லெறிகிறார்கள். வானத்தை நோக்கி எறியப்படும் கல், மறுபடியும் கீழே வந்து அவர்கள் தலையின்மேல்தான் விழும்.

**எந்தக் கிரியையினிமித்தம்**

**இயேசு அவர்களை நோக்கி: நான் என் பிதாவினாலே அநேக நற்கிரியைகளை உங்களுக்குக் காண்பித்தேன், அவைகளில் எந்தக் கிரியையினிமித்தம் என்மேல் கல்லெறிகிறீர்கள் என்றார் (யோவா 10:32).**

யூதர்கள் கையில் கல்லுகள் இருக்கிறது. ஏற்கெனவே இயேசுகிறிஸ்து இவர்களைவிட்டுக் கடந்துபோனதுபோல, இப்போது இவர்களைவிட்டுப்போய்விடவில்லை. அவர்களோடு அன்பாகப் பேசுகிறார். அவர்களுடைய கேள்விக்கு கிருபை நிறைந்த வார்த்தைகளினால் பிரதியுத்தரம் கூறுகிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய பிதாவினாலே அநேக நற்கிரியைகளை அவர்களுக்குக் காண்பித்திருக்கிறார். ஆனால் யூதர்களோ அவர்மேல் கல்லெறிய மனதாயிருக்கிறார்கள்.

தம்மீது கோபமாக இருக்கும் யூதர்களிடம் "எந்தக்கிரியையினிமித்தம் என்மேல் கல்லெறிகிறீர்கள்" என்று இயேசு கேட்கிறார். இயேசுகிறிஸ்துவின் வார்த்தை மிகவும் மென்மையாகவும் அன்பாகவும் இருக்கிறது. கல்லான இருதயத்தைக் கூட இயேசுகிறிஸ்துவின் வார்த்தை கனியச்செய்துவிடும். தம்மீது கல்லுகளை எறியும் சத்துருக்களாக இருந்தாலும் இயேசுகிறிஸ்து அவர்களுக்கும் நன்மை செய்து, அவர்களிடத்திலும் அன்பான வார்த்தைகளையே பேசுகிறார்.

இயேசுகிறிஸ்துவின் மெய்யான சுபாவம் அவருடைய கிரியைகளில் வெளிப்படுகிறது. அவர் நல்லவராக இருக்கிறபடியினால் நற்கிரியைகளைச் செய்கிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய பிதாவினாலே அநேக நற்கிரியைகளை அவர்களுக்குச் செய்வதாகக் கூறுகிறார். இந்த வாக்கியத்தில் "நற்கிரியைகள்" என்பது "நல்ல கிரியைகளையும்", "பெரிய கிரியைகளையும்" குறிக்கும் வார்த்தையாகும்.

இயேசுகிறிஸ்துவின் நற்கிரியைகளில் தேவனுடைய தெய்வீக வல்லமை வெளிப்படுகிறது. யூதர்கள் இயேசுகிறிஸ்து செய்கிற நற்கிரியைகளைப் பார்த்து அவரைத் தேவனுடைய குமாரனென்று அங்கீகரிக்கவேண்டும்.

இவையெல்லாம் தமது பிதாவினாலே செய்யப்படுகிற நற்கிரியைகளாகும். இயேசுகிறிஸ்து இந்த நற்கிரியைகளை யாருக்கும் தெரியாமல் மறைவாகவோ, இரகசியமாகவோ செய்யவில்லை. எல்லா ஜனங்களுக்கும் முன்பாக, பிரத்தியட்சமாக, பிதாவினாலே அநேக நற்கிரியைகளை அவர்களுக்குச் செய்து காண்பிக்கிறார். மெழுகுவர்த்தியின் குறைந்த வெளிச்சத்தில் இயேசுகிறிஸ்து தம்முடைய நற்கிரியைகளைக் காண்பிக்கவில்லை. இருளில் நடப்பது நாடகமாகவே இருக்கும். ஆனால் இயேசுகிறிஸ்துவோ இந்த உலகத்திற்கு முன்பாக பகற்பொழுதின் வெளிச்சத்தில், தம்முடைய பிதாவினாலே அநேக நற்கிரியைகளை அவர்களுக்குச் செய்து காண்பிக்கிறார்.

"நான் வெளியரங்கமாய் உலகத்துடனே பேசினேன், அந்தரங்கத்திலே நான் ஒன்றும் பேசவில்லை" (யோவா 18:20) என்று பிரதான ஆசாரியனிடம் இயேசுகிறிஸ்து அவனுடைய கேள்விக்கு பிரதியுத்தரமாகக் கூறுகிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய வசனங்களை அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் உறுதிபண்ணுகிறார்.

இயேசுகிறிஸ்து செய்கிற கிரியைகளில் அவருடைய தெய்வீகக்கிருபை வெளிப்படுகிறது. தேவன் நல்லவர், கிருபையுள்ளவர், இரக்கமுள்ளவர் என்னும் சுபாவங்களை அவர் செய்கிற நற்கிரியைகள் உலகத்திற்கு வெளிச்சத்தில் காண்பிக்கிறது. இயேசுகிறிஸ்துவின் அற்புத கிரியைகளைப்பார்த்து ஜனங்கள் ஆச்சரியப்படுகிறார்கள். அவர்களை ஆச்சரியப்படுத்துவதற்காக மாத்திரம் என்று இயேசுகிறிஸ்து நற்கிரியைகளைச் செய்யவில்லை. அவருடைய கிரியைகள் எல்லாமே அன்பு நிறைந்ததாகவும், கிருபை நிறைந்ததாகவும், ஜனங்களுக்கு நன்மை செய்யக்கூடியதாகவும் இருக்கிற நற்கிரியைகளாகும்.

ஆகையினால்தான் இயேசுகிறிஸ்து அவர்களைப்பார்த்து, தாம் அநேக நற்கிரியைகளை தம்முடைய பிதாவினாலே அவர்களுக்குக் காண்பித்ததாகவும், "அவைகளில் எந்தக் கிரியையினிமித்தம் என்மேல் கல்லெறிகிறீர்கள்" என்று கேட்கிறார். யூதர்கள் இயேசுகிறிஸ்துவோடு வாக்குவாதம் பண்ணவேண்டும் என்று விரும்பினால், அவர் செய்கிற நற்கிரியைகளினிமித்தமாகவே அவரோடு வாக்குவாதம்பண்ணவேண்டும். அந்த நற்கிரியைகளில் எந்தக் கிரியையினிமித்தம் தம்மோடு அவர்கள் வாக்குவாதம் பண்ணப்போகிறார்கள் என்பதை இயேசு அவர்களிடமே கேட்கிறார்.

## அதிகாரம் - 10

"எந்தக் கிரியையினிமித்தம் என்மேல் கல்லெறிகிறீர்கள்" என்று இயேசுகிறிஸ்து அவர்களிடத்தில் கேட்கும்போது, தம்முடைய கிரியைகளெல்லாமே நற்கிரியைகள்தான் என்னும் பூரணநிச்சயம் இயேசுகிறிஸ்துவின் உள்ளத்திலிருக்கிறது. தாம் செய்த நற்கிரியைகளில் இயேசுகிறிஸ்து உறுதியாகயிருக்கிறார். அவர் நற்கிரியைகளைச் செய்யும்போது யூதர்கள் அவர்மீது கல்லெறியக்கூடாது. உபகாரம்பண்ணாவிட்டாலும் உபத்திரவம் பண்ணாமலாவது இருக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவின்மீது யூதர்கள் கோபத்துடன் இருக்கிறார்கள். அவர்களுடைய கோபத்திற்கான காரணம் என்ன என்பதை இயேசுகிறிஸ்து அவர்களிடத்திலேயே கேட்கிறார்.

**தேவதூஷணஞ் சொல்லுகிறபடியினால்**

**யூதர்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: நற்கிரியையினிமித்தம் நாங்கள் உன்மேல் கல்லெறிகிறதில்லை; நீ மனுஷனாயிருக்க, உன்னை தேவன் என்று சொல்லி, இவ்விதமாக தேவதூஷணஞ் சொல்லுகிறபடியினால் உன்மேல் கல்லெறிகிறோம் என்றார்கள் (யோவா 10:33).**

யூதர்கள் இயேசுகிறிஸ்துவின்மீது பொய்யாய்க் குற்றம் சுமத்துகிறார்கள். தாங்கள் செய்கிற துர்க்கிரியைகளுக்கு நியாயம் கற்பிக்கிறார்கள். தாங்கள் நல்லவர்களென்றும், காரணமில்லாமல் தாங்கள் யாரையும் துன்புறுத்துவதில்லையென்றும் தங்களை நியாயப்படுத்துகிறார்கள். தங்களுக்கும் தங்களுடைய தேசத்திற்கும் நற்கிரியைகளைச் செய்கிறவர்கள் தங்களுடைய சத்துருக்களல்ல என்றும், இயேசுகிறிஸ்து செய்கிற நற்கிரியைகளினிமித்தம் தாங்கள் அவர்மீது கல்லெறிகிறதில்லை என்றும் கூறிவிட்டு "நீ மனுஷனாயிருக்க, உன்னைத் தேவன் என்று சொல்லி, இவ்விதமாய் தேவதூஷணஞ் சொல்லுகிறபடியினால் உன்மேல் கல்லெறிகிறோம்" என்று தங்கள் செய்கைக்கு நியாயம் இருப்பதாக விவாதம்பண்ணுகிறார்கள்.

இவர்கள் ஆவிக்குரிய குருடர்களாயிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து எந்தக் காரியத்தைச் செய்தாலும் அவர்களுடைய கண்களுக்கு அது நற்கிரியைகளாகத் தெரியாது. இயேசுகிறிஸ்து நல்லவரல்ல என்றும், அவர் பிசாசு பிடித்தவர் என்றும், அவர் பயித்தியக்காரர் என்றும் ஏற்கெனவே அவரைப்பற்றி தீர்மானம் பண்ணியிருக்கிறார்கள். ஆகையினால் அவரால் எந்த நற்கிரியையும் செய்யமுடியாது என்னும் எண்ணம் அவர்களுடைய உள்ளத்தில் ஆழமாகப் பதிந்திருக்கிறது. ஆனாலும் தங்கள் பக்கத்தில் நியாயம் இருக்கிறது என்பதை வெளிப்படுத்துவதற்காக "நற்கிரியையினிமித்தம் நாங்கள் உன்மேல் கல்லெறிகிறதில்லை" என்று சாக்குப்போக்குச் சொல்லுகிறார்கள். இவர்கள் துன்மார்க்கர்கள் மட்டுமல்ல, தங்களுடைய துன்மார்க்கத்தை நியாயப்படுத்துகிறவர்களாகவும் இருக்கிறார்கள்.

தாங்கள் தேவபக்தியுள்ளவர்களென்றும், தேவனுடைய சிநேகிதர்களென்றும், ஆகையினால் தேவதூஷணஞ் சொல்லுகிறவர்மீது தாங்கள் கோபமடைவதாகவும் இயேசுகிறிஸ்துவிடம் விவாதம் பண்ணுகிறார்கள். "நீ மனுஷனாயிருக்க, உன்னை தேவன் என்று சொல்லி, இவ்விதமாக தேவதூஷணஞ் சொல்லுகிறபடியினால் உன்மேல் கல்லெறிகிறோம்" என்று தங்களுடைய துன்மார்க்கமான செயலுக்கு காரணம் சொல்லுகிறார்கள்.

நியாயப்பிரமாணத்தின்மீது தங்களுக்கு பக்திவைராக்கியம் இருப்பதுபோல இவர்கள் காண்பித்துக்கொள்கிறார்கள். தேவனுடைய மகத்துவத்தையும் ராஜரீகத்தையும் தாங்கள் மதிப்பதாகவும், தேவனுடைய மெய்யான ஜனங்களாகத் தாங்கள் ஜீவிப்பதாகவும், தேவனுக்கும் அவருடைய வார்த்தைக்கும், அவருடைய பிரமாணத்திற்கும் தாங்கள் கீழ்ப்படிந்து ஜீவிப்பதாகவும் இந்த யூதர்கள் தங்களை வெளிப்படுத்திக் காண்பிக்கிறார்கள். "கர்த்தருடைய நாமத்தை நிந்திக்கிறவன் கொலை செய்யப்படவேண்டும். சபையாரெல்லாரும் அவனைக் கல்லெறியவேண்டும். பரதேசியானாலும் சுதேசியானாலும் கர்த்தரின் நாமத்தைத் தூஷிக்கிறவன் கொலை செய்யப்படவேண்டும்" (லேவி 24:16) என்று யூதருடைய நியாயப்பிரமாணம் கூறுகிறது.

## அதிகாரம் - 10

இயேசு கிறிஸ்துவின்மீது கல்லெறிவதற்கு ஆயத்தமாகயிருக்கிற இவர்கள், தங்களுடைய துன்மார்க்கமான செயலுக்கு வேதவசனத்திலிருந்து ஆதாரத்தைத் தேடுகிறார்கள். இக்காலத்தில்கூட இப்படித்தான் ஒரு சிலர் வேதவாக்கியங்களைத் தவறாக வியாக்கியானம்பண்ணி துன்மார்க்கமான காரியங்களைத் துணிகரமாகச் செய்துகொண்டு வருகிறார்கள். இது துணிகரமான பாவம். இவர்கள் தங்கள் மனச்சாட்சியின் சத்தத்தைக் கேட்பதில்லை. இவர்களுடைய மனச்சாட்சியும் கூர்மையாக இல்லை. இவர்களுடைய மனச்சாட்சி உண்மையைப் பேசினாலும் அதற்கு இவர்கள் கீழ்ப்படியமாட்டார்கள். ஆனால் இவர்களுடைய மனச்சாட்சியே கெட்டுப்போய் பொய்பேசுகிறது. மேலும், தங்களுடைய மனச்சாட்சி உண்மையென்றும், அதற்குத் தாங்கள் கீழ்ப்படிவதாகவும் காரணம் கூறி, இவர்கள் துன்மார்க்கமான காரியங்களை செய்ய முனைகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவைத் தேவதூஷணஞ் சொல்லுகிறவர் என்று அறிவிப்பது சுவிசேஷத்திற்கு விரோதமான பாவம். இயேசுகிறிஸ்துவைத் தூஷிக்கிறவர்கள் சுவிசேஷத்திற்குச் சத்துருக்களாக இருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து நல்லவர். ஆனால் இவர்களோ அவரைக் கெட்டவரென்றும், தேவதூஷணஞ் சொல்லுகிறவரென்றும் பொய்யாச்சொல்லி அவரைத் தூஷிக்கிறார்கள். நல்லோரைக் கெட்டவரென்று சொல்லி தூஷிப்பது வரலாற்றில் புதுமையான காரியமல்ல. இது காலகாலமாக நடந்துவருகிற தீயகாரியம்தான். நல்லவரைத் தீயவரென்று சொல்லி தூஷிப்பது மாத்திரமல்ல, தீயவருக்குக் கொடுக்கவேண்டிய தண்டனைகளையும் நல்லவருக்கு கொடுத்துவிடுகிறார்கள். இது அதைவிட அநியாயம். இயேசுகிறிஸ்துவுக்கு இந்த யூதர்கள் இப்படிப்பட்ட அநியாயத்தைச் செய்வதற்குத்தான் இங்கு கூடிவந்திருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து தேவதூஷணஞ் சொல்லுகிறவர் என்பது இவர்களுடைய குற்றச்சாட்டு. இயேசுகிறிஸ்து மனுஷனாயிருக்கும்போது தம்மைத் தேவனென்று சொல்லுவதினால் அவர் தேவதூஷணஞ்சொல்லுகிறதாக அவர்மீது குற்றம் சுமத்துகிறார்கள்.

இயேசுகிறிஸ்து மெய்யாகவே தேவனுடைய குமாரனாகயிருக்கிறார். இந்தப் பூமிக்கு இயேசுகிறிஸ்து தேவனால் அனுப்பப்பட்டிருக்கிறவர். யூதர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற மேசியா இயேசுகிறிஸ்துவே. இயேசுகிறிஸ்து மகிமையுள்ள தேவன். தேவனுக்குரிய மகிமை இயேசுகிறிஸ்துவுக்கு உண்டு. இயேசுகிறிஸ்துவைத்தவிர மகிமையுள்ள தேவன் வேறு ஒருவருமில்லை. ஆகையினால் இயேசுகிறிஸ்து தம்மைப்பற்றி கூறியிருக்கிற எல்லா வார்த்தைகளும் சத்திய வார்த்தைகளாகும்.

தாம் தேவனாகயிருப்பதை அவர்களுக்கு வெளிப்படுத்துவதற்காகத்தான் "நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்" என்று கூறியிருக்கிறார். தம்முடைய பிள்ளைகளுக்கு இயேசுகிறிஸ்து நித்திய ஜீவனைக்கொடுக்கிறார். தாம் சொன்ன வார்த்தைகளை இயேசுகிறிஸ்து மறுதலிக்கவில்லை. இயேசுவின் வசனங்களை ஜனங்கள் தவறுதலாகப் புரிந்துகொண்டாலும், அவர் சத்தியமுள்ள சத்திய வார்த்தைகளையே பேசுகிறார். இயேசுகிறிஸ்து மெய்யாகவே தம்முடைய பிள்ளைகளுக்கு நித்திய ஜீவனைக்கொடுக்கிறவர்.

இயேசுவை ஒரு சாதாரண மனுஷனாக மாத்திரம் அவர்கள் பார்த்தால், அவர் பேசுவது எல்லாமே தேவதூஷணமாகத்தான் தெரியும். இயேசுகிறிஸ்துவை அவருடைய தெய்வத்துப்பண்பில் பார்த்தால் மாத்திரமே அவருடைய தெய்வத்துவம் நமக்கு வெளிப்படுத்தப்படும். இயேசுகிறிஸ்து தம்மைப்பற்றி கூறியுள்ள வார்த்தைகளெல்லாம் சத்தியமானவை என்பதும் நமக்கு விளங்கும். இவர்கள் இயேசுவை மனுஷனாகத்தான் பார்க்கிறார்கள். அவரைத் தேவனாகப் பார்க்கவில்லை. ஆகையினால் இயேசுகிறிஸ்து தம்மைத் தேவனென்று சொல்லுவது இவர்களுக்குத் தேவதூஷணஞ் சொல்லுவதாகத் தெரிகிறது.

### தேவர்களாயிருக்கிறீர்கள்

**இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: தேவர்களாயிருக்கிறீர்கள் என்று நான் சொன்னேன் என்பதாய் உங்கள் வேதத்தில் எழுதியிருக்கவில்லையா? தேவவசனத்தைப் பெற்றுக்கொண்டவர்களை தேவர்கள் என்று அவர் சொல்லியிருக்க, வேதவாக்கியமும் தவறாததாயிருக்க, பிதாவினால் பரிசுத்தமாக்கப்பட்டும், உலகத்தில் அனுப்பப்பட்டும் இருக்கிற நான் என்னை தேவனுடைய குமாரன் என்று சொன்னதினாலே தேவதூஷணஞ் சொன்னாய் என்று நீங்கள் சொல்லலாமா? (யோவா 10:34-36)**

## அதிகாரம் - 10

யூதர்கள் இயேசுகிறிஸ்துவைத் தேவதூஷணஞ்சொல்லுகிறவர் என்று அவர்மீது குற்றம் சுமத்துகிறார்கள். இயேசுகிறிஸ்து அவர்களுடைய குற்றச்சாட்டுக்குப் பிரதியுத்தரம் கூறுவதோடு, தாம் மெய்யாகவே தேவகுமாரனாக இருப்பதை மறுபடியுமாக உறுதிபண்ணுகிறார். தாம் தேவதூஷணஞ் சொல்லவில்லையென்றும், சத்தியமான வார்த்தையை தேவநாம மகிமைக்காக சொல்லுவதாகவும் கூறுகிறார். தம்முடைய பிரதியுத்தரத்திற்கு இயேசுகிறிஸ்து இரண்டு காரியங்களை ஆதாரமாக கூறுகிறார். அவையாவன: 1. தேவனுடைய வார்த்தை 2. தேவனுடைய கிரியைகளும் இயேசுகிறிஸ்துவின் கிரியைகளும்.

இயேசுகிறிஸ்து இங்கு மேற்கோளாகக் கூறும் வாக்கியம் சங்கீதம் 82:6-ஆவது வசனத்தில் "நீங்கள் தேவர்களென்றும், நீங்களெல்லாரும் உன்னதமானவரின் மக்கள் என்றும் நான் சொல்லியிருந்தேன்" என்று எழுதப்பட்டிருக்கிறது. தம்முடைய பிரதியுத்தரத்திற்கும், தாம் தேவதூஷணம் சொல்லவில்லை என்பதை நிரூபிப்பதற்கும் இயேசுகிறிஸ்து இந்த வசனத்தை மேற்கோளாகக் கூறுகிறார். அவர்கள் தேவர்களாகயிருக்கும்போது, தாம் தேவனாக ஏன் இருக்கக்கூடாது என்பது இயேசுகிறிஸ்துவின் விவாதம்.

இயேசுகிறிஸ்து இந்த வாக்கியத்தை மிகவும் கவனமாகப் பயன்படுத்துகிறார். "தேவவசனத்தைப் பெற்றுக்கொண்டவர்களை தேவர்களென்று அவர் சொல்லியிருக்க, வேதவாக்கியமும் தவறாததாயிருக்க" என்று இந்த வாக்கியத்தை விவரிக்கிறார். மெய்யாகவே வேதவாக்கியத்தில் தவறு எதுவுமில்லை. இதில் யாரும் எந்தப் பிழையும் காணமுடியாது. தேவனுடைய வார்த்தை எல்லாமே சரியானதுதான்.

இயேசுகிறிஸ்து தாம் மேற்கோளாகக் கூறும் இந்த வாக்கியத்தைத், தம்முடைய தெய்வத்துவத்தை உறுதிபண்ணுவதற்கு, மிகவும் கவனமாகப் பயன்படுத்துகிறார். "பிதாவினால் பரிசுத்தமாக்கப்பட்டும், உலகத்தில் அனுப்பட்டும் இருக்கிற நான் என்னை தேவனுடைய குமாரன் என்று சொன்னதினாலே, தேவதூஷணஞ்சொன்னாய் என்று நீங்கள் சொல்லலாமா" என்று கேட்கிறார்.

பிதாவாகிய தேவன் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை கனப்படுத்தியிருக்கிறார். பரிசுத்தப்படுத்தியிருக்கிறார். பிதாவே குமாரனை இந்த உலகத்திற்கு அனுப்பியிருக்கிறார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே வார்த்தையாக இருக்கிறார். அவரிடத்தில் பரிசுத்த ஆவியானவர் அளவில்லாமல் அருளப்பட்டிருக்கிறார். எல்லாவற்றிற்கும் ஆண்டவராக இருக்குமாறு பிதாவாகிய தேவன் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை இந்த உலகத்திற்கு அனுப்பியிருக்கிறார். பிதாவானவர் இயேசுகிறிஸ்துவைப் பரிசுத்தப் படுத்தியிருப்பதும், இந்த உலகத்திற்கு அனுப்பியிருப்பதும், அவரைத் தேவனுடைய குமாரன் என்னும் சத்தியத்தை நிரூபிக்கிறது. ஆகையினால் இயேசுகிறிஸ்து தம்மைத் தேவனுடைய குமாரன் என்று சொல்லுவது தேவதூஷணஞ்சொல்லுவது ஆகாது.

யூதர்கள் இயேசுகிறிஸ்துவின்மீது தூஷணமான வார்த்தைகளைப்பேசி அவரை அவமரியாதை செய்கிறார்கள். இயேசுகிறிஸ்து தேவதூஷணஞ்சொல்லுகிறார் என்று கூறி அவரை நிந்திக்கிறார்கள். அவர் மனுஷனாயிருக்கிறாரென்றும், தம்மைத் தேவனென்று சொல்லித் தேவதூஷணஞ் சொல்லுகிறாரென்றும் யூதர்கள் இயேசுவுக்கு விரோதமாகப் பேசுகிறார்கள். இயேசுகிறிஸ்து தம்மைத் தேவனுடைய குமாரனென்று சொன்னது மெய்யான வார்த்தை. இது தேவதூஷணஞ்சொல்லுவது ஆகாது. தாம் பிதாவினால் பரிசுத்தமாக்கப்பட்டிருப்பதையும், உலகத்தில் அனுப்பட்டிருப்பதையும் எடுத்துக்கூறி, தாம் சத்தியமுள்ளவரென்பதையும் இயேசுகிறிஸ்து தெளிவுபடுத்துகிறார்.

சத்தியத்தின் தேவனானவர் பொய்கூறமாட்டார் என்பதை யூதர்கள் இன்னும் புரிந்துகொள்ளவில்லை. பிசாசுகள் இயேசுவின்மீது குற்றம் சுமத்தலாம். அது பிசாசுகளின் சுபாவம். ஆனால் மனுஷர் இயேசுவின்மீது தூஷணவார்த்தைகளைப் பேசக்கூடாது. ஏனெனில் மனுக்குலத்தை இரட்சிப்பதற்காகவே இயேசுகிறிஸ்து பரலோகத்திலிருந்து இந்த பூமிக்குப் பரிசுத்தமாக்கப்பட்டு, அனுப்பட்டிருக்கிறார். தங்களை இரட்சிக்க வந்திருக்கும் இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவை, யூதஜனங்கள் தங்களுடைய அறியாமையினால் "தேவதூஷணஞ் சொல்லுகிறவர்" என்று கூறி நிந்திக்கிறார்கள்.

## அதிகாரம் - 10

**பிதாவின் கிரியைகள்**

**என் பிதாவின் கிரியைகளை நான் செய்யாதிருந்தால், நீங்கள் என்னை விசுவாசிக்க வேண்டியதில்லை. செய்தேனேயானால், நீங்கள் என்னை விசுவாசியாதிருந்தாலும், பிதா என்னிலும் நான் அவரிலும் இருக்கிறதை நீங்கள் அறிந்து விசுவாசிக்கும்படி, அந்தக் கிரியைகளை விசுவாசியுங்கள் என்றார் (யோவா 10:37,38).**

தாம் தேவகுமாரன் என்பதை நிரூபிப்பதற்கு இயேசுகிறிஸ்து தம்முடைய கிரியைகளையும் சாட்சியாகக் கூறுகிறார். இயேசுகிறிஸ்துவும் பிதாவும் ஒன்றாயிருப்பதினால், அவருடைய பிதாவின் கிரியைகளை இயேசுகிறிஸ்துவும் செய்கிறார். பிதாவின் கிரியைகளை இயேசுகிறிஸ்து செய்யாதிருந்தால் அவர்கள் இயேசுவைத் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்க வேண்டியதில்லை.

இயேசுகிறிஸ்துவின் கிரியைகளில் தேவனுடைய வல்லமை காணப்படுகிறது. தம்முடைய தெய்வீக வல்லமையுள்ள கிரியைகளினால் இயேசுகிறிஸ்து தம்மை தேவனால் அனுப்பப்பட்டவர் என்பதை நிரூபிக்கிறார். இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களாகிய நாமும், அவருக்குச் சித்தமான நற்கிரியைகளைச் செய்து, நம்மைநாமே விசுவாசிகள் என்று நிரூபிக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்து செய்கிற எல்லா கிரியைகளும் அவருடைய பிதாவின் கிரியைகள் ஆகும். இந்தக் கிரியைகளைப் பிதாவினால் மாத்திரமே செய்யமுடியும். இயற்கையின் சாதாரண வல்லமையினால் இப்படிப்பட்ட மகத்துவமான அற்புத கிரியைகளைச் செய்யமுடியாது. இயேசுகிறிஸ்து மரித்து, உயிர்த்தெழுந்து, பரமேறிப்போன பின்பு, அப்போஸ்தலர்களும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே அற்புதங்களைச் செய்தார்கள். இவர்கள் செய்த அற்புதங்களும், இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரன் என்னும் சத்தியத்திற்கும், அவர் பிதாவினால் அனுப்பப்பட்டவர் என்னும் சத்தியத்திற்கும் சாட்சியாயிருக்கிறது. இயேசுகிறிஸ்து பரமேறிப்போனபின்பு, அவருடைய வசனங்கள் அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் உறுதிபண்ணப்படுகிறது.

இயேசுகிறிஸ்து தம்முடைய கிரியைகளைப்பற்றி பேசும்போது "என் பிதாவின் கிரியைகளை நான் செய்யாதிருந்தால், நீங்கள் என்னை விசுவாசிக்க வேண்டியதில்லை" என்றும் கூறுகிறார். தம்முடைய தெய்வீக ஊழியமும் கிரியைகளும் இயேசுகிறிஸ்துவின் வார்த்தைக்கு சாட்சியாயிருக்கிறது. யூதர்கள் இயேசுகிறிஸ்துவின் கிரியைகளைப் பார்த்து, அவரை விசுவாசிக்கவேண்டும். தம்முடைய கிரியைகள் எப்படியிருந்தாலும், அதையெல்லாம் பார்க்காமல், தம்மை தேவனுடைய குமாரனாக விசுவாசிக்கவேண்டுமென்று இயேசுகிறிஸ்து யூதர்களைக் கட்டாயப்படுத்தவில்லை. அவர் ஜனங்களைக் கடினமாக வேலை வாங்குகிற துர்க்குணமுள்ள எஜமானல்ல. விதைக்காத இடத்தில் அறுக்கிறவருமல்ல.

யூதர்களிடத்தில் இயேசுகிறிஸ்து தம்முடைய வார்த்தையை தெளிவாகவும் உறுதியாகவும் பேசுகிறார். "நான் பிதாவின் கிரியைகளைச் செய்தேனேயானால், நீங்கள் என்னை விசுவாசியாதிருந்தாலும், என்னுடைய கிரியைகளை விசுவாசியுங்கள்" என்று கூறுகிறார். இயேசுகிறிஸ்துவின் கிரியைகள் பிதா அவரிலும், அவர் பிதாவிலும் இருக்கிறதை உறுதிபண்ணுகிறது. யூதர்கள் இயேசுகிறிஸ்துவின் கிரியைகளைத் தங்கள் சொந்தக்கண்களால் பார்த்து, தங்கள் சுயபுத்தியினால் நிதானித்து அறிந்து, இயேசுவைத் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கவேண்டும்.

மீட்பருடைய காணமுடியாத காரியங்கள், அவருடைய அற்புதங்களினால் காணக்கூடியதாக இருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் எல்லா கிரியைகளும் கிருபையும் வல்லமையும் நிறைந்ததாக இருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளைக் கேட்டு, அவருடைய கிரியைகளையும் கண்டு, அவரைத் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கவில்லையென்றால், அவர்கள்மீது குற்றம் வரும். அவர்கள் சாக்குப்போக்குச் சொல்ல வாய்ப்பில்லை.

இயேசுகிறிஸ்துவின் கிரியைகளை அறிந்து, பிதா அவரிலும் அவர் பிதாவிலும் இருக்கிறதை யூதர்கள் அறிந்துகொள்ளலாம். இந்தச் சத்தியத்தை இயேசுகிறிஸ்து ஏற்கெனவே "நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்" (யோவா 10:30) என்று கூறியிருக்கிறார். இயேசுகிறிஸ்து கூறும் இந்தச் சத்தியத்தை நாமும் அறிந்துகொள்ள வேண்டும். அறிந்து விவாதம்பண்ணக்கூடாது. அறிந்து விசுவாசிக்கவேண்டும். தேவனுடைய ரகசியத்தின் ஆழமான பகுதியை நாம் ஒருவேளை காணமுடியாமல் போகலாம். ஆழத்தை அறிந்துகொள்ள முடியாமல் இருக்கலாம். ஆயினும், தேவனுடைய ரகசியம் எந்த அளவுக்கு நமக்கு வெளிப்படுத்தப் பட்டிருக்கிறதோ, அந்த அளவுக்கு அதை அறிந்து கொண்டு, அதற்காகக் கர்த்தரைத் துதித்து, தேவனுடைய சத்தியங்களை விசுவாசிக்கவேண்டும்.

## அதிகாரம் - 10

### யோர்தானுக்கு அக்கரையிலே
### யோவா 10 : 39-42

**யோவா 10:39. இதினிமித்தம் அவர்கள் மறுபடியும் அவரைப் பிடிக்கத் தேடினார்கள், அவரோ அவர்கள் கைக்குத் தப்பி,**

**யோவா 10:40. யோர்தானுக்கு அக்கரையிலே முன்னே யோவான் ஞானஸ்நானங்கொடுத்துக்கொண்டிருந்த இடத்துக்குத் திரும்பிப்போய், அங்கே தங்கினார்.**

**யோவா 10:41. அநேகர் அவரிடத்தில் வந்து: யோவான் ஒரு அற்புதத்தையும் செய்யவில்லை; ஆகிலும் இவரைக்குறித்து யோவான் சொன்னதெல்லாம் மெய்யாயிருக்கிறது என்றார்கள்.**

**யோவா 10:42. அவ்விடத்திலே அநேகர் அவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள்.**

### அவரோ அவர்கள் கைக்குத் தப்பி

**இதினிமித்தம் அவர்கள் மறுபடியும் அவரைப் பிடிக்கத் தேடினார்கள், அவரோ அவர்கள் கைக்குத் தப்பி, (யோவா 10:39)**

இயேசுகிறிஸ்து யூதர்களுக்குச் சத்தியத்தை உபதேசம்பண்ணுகிறார். ஆனால் அவர்களோ சத்தியத்திற்குச் செவிகொடுத்து, அவற்றைத் தங்கள் இருதயத்தில் ஏற்றுக்கொண்டு, இயேசுவை கிறிஸ்துவாக அங்கீகரிக்க ஆயத்தமாகயில்லை. அவர்கள் சத்தியத்திற்கும் எதிர்த்து நிற்கிறார்கள். அவர்களுக்கு சத்தியத்தைச்சொல்லுகிற இயேசுகிறிஸ்துவுக்கும் எதிர்த்து நிற்கிறார்கள். இதினிமித்தம் அவர்கள் மறுபடியும் இயேசுகிறிஸ்துவைப்பிடிக்கத் தேடுகிறார்கள். பலவந்தமாக அவரைப்பிடித்து அவரைத் தண்டிக்கவேண்டுமென்று வெறியோடு இருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து தம்முடைய உபதேச வார்த்தையில் உறுதியோடிருக்கிறார். யூதர்கள் சத்தியத்தை ஏற்றுக்கொண்டாலும், ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் தம்முடைய உபதேசத்தை இயேசுகிறிஸ்து சிறிதும் மாற்றிக்கொள்ளவில்லை. தம்மைக்குறித்து இயேசுகிறிஸ்து கூறிய சத்திய வார்த்தையில் அவர் சிறிதும் பிறளவில்லை.

இயேசுகிறிஸ்துதேவனுடைய குமாரனென்பதும், அவர் தேவனால் அனுப்பபட்டிருக்கிறவர் என்பதும் சத்திய வார்த்தை. இந்தச் சத்தியத்தை இயேசுகிறிஸ்து தொடர்ந்து கூறும்போது, யூதர்களுக்கும் அவர்மீது தொடர்ந்து கோபம் வருகிறது. கோபம் அதிகரிக்கிறது. இயேசுகிறிஸ்துவைக் கொலை செய்கிறதற்கு வகைதேடுகிறார்கள். அவரைக் கல்லெறிந்து கொல்லுவது நியாயமானது என்று சாதிக்கிறார்கள். அதற்காக இப்போது அவரை மறுபடியும் பிடிக்கத் தேடுகிறார்கள்.

ஆனால் இயேசுகிறிஸ்துவோ அவர்கள் கைக்குத்தப்பி, அவர்களைவிட்டுப் போய்விடுகிறார். இயேசுகிறிஸ்துவுக்கு உதவிபுரிய அவருக்கு சிநேகிதர்கள் யாரும் இல்லை. அவர்களுடைய கைகளுக்கு தப்பிப்போய்விடவேண்டுமென்று யாரும் அவருக்கு ஆலோசனை கூறவுமில்லை. உதவிபுரியவுமில்லை. தம்முடைய தெய்வீக ஞானத்தினால், இயேசுகிறிஸ்து அவர்கள் கைக்குத்தப்பிப் போய்விடுகிறார். தம்மை எப்படித் தப்புவித்துக்கொள்ளவேண்டுமென்பது இயேசுகிறிஸ்துவுக்குத் தெரியும். அவருடைய அனுமதியில்லாமல் அவருடைய ஜீவனை யாரும் அவரிடத்திலிருந்து எடுத்துக்கொள்ள முடியாது. தம்மைத் தாமே தப்புவிக்கிற இயேசுகிறிஸ்துவினால், அவரிடத்தில் அடைக்கலம் பெற்றிருக்கும் நம்மையும் தப்புவிக்க முடியும். நம்முடைய சோதனைகளிலிருந்தும், பாடுகளிலிருந்தும், வேதனைகளிலிருந்தும் இயேசுகிறிஸ்து நம்மைத்தப்புவிக்கபோதுமானவராகயிருக்கிறார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் ஆபத்துக்களிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கு, நமக்கு ஒரு வழியையும் உண்டுபண்ணுவார்.

### யோவான் ஞானஸ்நானம் கொடுத்த இடம்

**யோர்தானுக்கு அக்கரையிலே முன்னே யோவான் ஞானஸ்நானங்கொடுத்துக் கொண்டிருந்த இடத்துக்குத் திரும்பிப்போய், அங்கே தங்கினார் (யோவா 10:40).**

இயேசுகிறிஸ்து தம்மைப் பிடிக்கத் தேடுகிற யூதர்களின் கைக்குத்தப்பி, யோர்தானுக்கு அக்கரையிலே போகிறார். அங்கு முன்னே யோவான் ஞானஸ்நானம் கொடுத்துக் கொண்டிருந்தான். எருசலேமிலிருந்து புறப்பட்டுச் சென்று, யூததேசத்திலுள்ள ஓர் அமைதியான இடத்திற்கு இயேசுகிறிஸ்து போகிறார். எருசலேமில் இயேசுகிறிஸ்துவுக்கு ஓய்வு இல்லை. அங்கு அவர் தேவனுடைய வார்த்தையைத் தொடர்ந்து உபதேசம்பண்ணிக்கொண்டிருந்தார். யூதர்கள் மூலமாக அவருக்கு எதிர்ப்பு வந்துகொண்டிருந்தது. அவருடைய உயிருக்கு தொடர்ந்து ஆபத்து உண்டாயிற்று.

## அதிகாரம் - 10

யோர்தானுக்கு அக்கரையிலுள்ள இந்த இடமோ அமைதியாகயிருக்கிறது. இந்த இடத்திற்குத் திரும்பி வந்து இயேசுகிறிஸ்து இங்கே தங்குகிறார். இங்கு அவருக்கு அமைதியும் ஒய்வும் கிடைக்கிறது. இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் சாதாரண ஜனங்கள் மத்தியில் பிரசங்கிக்கப்படும்போது, அதை அவர்கள் சந்தோஷமாக ஏற்றுக்கொள்கிறார்கள். ஞானிகளும் பிரபுக்களுமோ சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளாமல் அதற்கு எதிர்த்து நிற்கிறார்கள். ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார். பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளை தெரிந்துகொண்டார். உள்ளவைகளை அவமாக்கும்படி உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும் தேவன் தெரிந்துகொண்டார் (1கொரி 1:26-28).

இயேசுகிறிஸ்து தங்கியிருக்கும் இந்த இடத்தில்தான் முன்னே யோவான்ஸ்நானன் ஞானஸ்நானம் கொடுத்துக்கொண்டிருந்தான் (யோவா 1:28). இங்குள்ள ஜனங்களுக்கு யோவான்ஸ்நானன் மூலமாக இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷ வார்த்தை ஓரளவு அறிவிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் ஞானஸ்நானத்தைப்பற்றியும் யோவான் மூலமாக கேள்விப்பட்டிருக்கிறார்கள். ஆவிக்குரிய சத்தியங்களில் ஏற்கெனவே உபதேசிக்கப்பட்டிருக்கிறவர்கள், இப்போது இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்கிறார்கள்.

**இயேசுவைக்குறித்து யோவான் சொன்னதெல்லாம்**

**அநேகர் அவரிடத்தில் வந்து: யோவான் ஒரு அற்புதத்தையும் செய்யவில்லை; ஆகிலும் இவரைக்குறித்து யோவான் சொன்னதெல்லாம் மெய்யாயிருக்கிறது என்றார்கள் (யோவா 10:41).**

அநேகர் இயேசுகிறிஸ்துவிடத்தில் வருகிறார்கள். இந்த ஜனங்களுக்கு முன்பு யோவான்ஸ்நானன் ஆவிக்குரிய ரீதியாக உபதேசம் கொடுத்துவந்தான். அவனுக்குப் பின்பு அங்கு தேவனுடைய சத்திய வார்த்தைகளை உபதேசம்பண்ணுவதற்கு யாரும் வரவில்லை. இப்போது இயேசுகிறிஸ்து அங்கு வந்திருக்கிறார். கிருபை குறைந்துபோன இடத்தில், மறுபடியும் கிருபை உண்டாகும்போது அங்கு மிகுந்த சந்தோஷம் உண்டாகும். அங்குள்ளவர்கள் தேவனுடைய கிருபையை ஆவலாய் ஏற்றுக்கொள்வார்கள். எருசலேமிலுள்ள யூதர்களைப்போல இவர்கள் தேவகிருபையை நிச்சயமாகவே அசட்டைபண்ணமாட்டார்கள். இயேசுகிறிஸ்து இவர்களிடத்தில் வந்தபோது அநேகர் இயேசுவிடத்தில் வருகிறார்கள்.

எருசலேமில் இயேசுகிறிஸ்து ஊழியம் செய்தபோது அங்குள்ள யூதர்கள் இயேசுகிறிஸ்துவின்மீது விரோதமாக இருந்தார்கள். அவரைக் கல்லெறிந்து கொல்லவேண்டுமென்று ஆயத்தமாக இருந்தார்கள். தாங்கள் இயேசுவைக் கல்லெறிந்து கொல்வதற்கான காரணத்தையும் யூதர்கள் அறிவித்தார்கள். ஆனால் யோர்தானுக்கு அக்கரையிலுள்ள சாதாரண ஜனங்களோ இயேசுகிறிஸ்துவிடத்தில் கூடிவருகிறார்கள். அவரிடத்தில் அன்பாயிருக்கிறார். தாங்கள் இயேசுகிறிஸ்துவிடத்தில் அன்பாயிருப்பதற்கும், கூடிவருவதற்கும் என்ன காரணம் என்பதையும் இவர்கள் அறிவிக்கிறார்கள். "யோவான் ஒரு அற்புதத்தையும் செய்யவில்லை. ஆகிலும் இவரைக்குறித்து யோவான் சொன்னதெல்லாம் மெய்யாயிருக்கிறது" என்று அறிவிக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவைக்குறித்து இவர்கள் இரண்டு கருத்துக்களைக் கூறுகிறார்கள். அவையாவன: 1. யோவான்ஸ்நானனுடைய வல்லமையைவிட இயேசுகிறிஸ்துவின் வல்லமை மிகப்பெரியது. 2. இயேசுகிறிஸ்துவைப்பற்றி யோவான் சொன்னது எல்லாம் மெய்யான சத்தியம்.

யோவான்ஸ்நானன் ஒரு அற்புதமும் செய்யவில்லை. ஆனால் இயேசுகிறிஸ்துவோ அநேக அற்புதங்களைச் செய்கிறார். ஆகையினால் யோவான்ஸ்நானனுடைய வல்லமையைவிட இயேசுகிறிஸ்துவின் வல்லமை மிகவும் பெரியது. இயேசுகிறிஸ்து செய்கிற அற்புதத்தைப் பார்த்து அவர் எல்லோரிலும் பெரியவர் என்பதை எளிதாகச் சொல்ல முடியும். இயேசுகிறிஸ்துவை நாம் மற்றவர்களோடு ஒப்பிட்டுப்பார்க்கும்போது, அவர் எல்லோரையும்விட மேலானவர் என்பது தெளிவாகும்.

## அதிகாரம் - 10

யோவான்ஸ்நானன் இயேசுகிறிஸ்துவைக் குறித்து ஏற்கெனவே சாட்சியாக அறிவித்திருக்கிறான். அவன் சொன்ன சாட்சியின் பிரகாரமாகவே இயேசுகிறிஸ்து தம்மைப் பிரத்தியட்சமாக வெளிப்படுத்துகிறார். இதைக்கண்ட ஜனங்கள் "இவரைக்குறித்து யோவான் சொன்னதெல்லாம் மெய்யாயிருக்கிறது" என்று சாட்சியாக அறிவிக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவைக் குறித்து யோவான் பெரிய பெரிய காரியங்களையெல்லாம் சொல்லியிருக்கிறான். அவனுடைய வார்த்தைகளைக் கேட்ட ஜனங்களுடைய உள்ளத்தில், இயேசுகிறிஸ்துவைக்குறித்து பெரிய எதிர்பார்ப்பு உண்டாயிற்று. யோவான்ஸ்நானனைப் போல இயேசுகிறிஸ்துவும் பெரியவராகவேயிருப்பார் என்று இந்த ஜனங்கள் எதிர்பார்க்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து இந்த இடத்திற்கு வந்தபின்பு, அநேகர் அவரிடத்தில் கூடிவருகிறார்கள். அவரோடு பேசிப்பழகி ஐக்கியமாக இருக்கும் சிலாக்கியம் இந்த ஜனங்களுக்குக் கிடைத்திருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்பதற்கு இவர்களுக்கு வாய்ப்பு உண்டாயிருக்கிறது. தம்முடைய வார்த்தைகளை இயேசுகிறிஸ்து அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் உறுதிபண்ணுகிறார். இந்த அற்புதங்களையெல்லாம் இந்த ஜனங்கள் தங்கள் கண்களால் பார்க்கிறார்கள். இயேசுகிறிஸ்து யோவான்ஸ்நானனைப் போலவே பெரியவராகயிருப்பார் என்று இந்த ஜனங்கள் முதலில் எதிர்பார்த்தார்கள். இயேசுகிறிஸ்து செய்த அற்புதங்களைப் பார்த்த பின்பு, இயேசுகிறிஸ்து யோவான்ஸ்நானனைவிடப் பெரியவர் என்பதை அங்கீகரிக்கிறார்கள்.

பல சமயங்களில் இயேசுகிறிஸ்துவைக் குறித்தும், அவருடைய சத்திய வசனங்களைக்குறித்தும் நாம் போதுமான அளவு கேள்விப்படுவதில்லை. அவரோடு நாம் நெருங்கிய ஐக்கியத்தில் இருக்கும்போதுதான் அவருடைய மேன்மையும் மகிமையும், பெருமையும் நமக்குத் தெரியவரும்.

அதுபோலவே யோர்தானுக்கு அக்கரையிலுள்ள ஜனங்கள் இயேசுகிறிஸ்துவைக்குறித்து ஓரளவுதான் கேள்விப்பட்டிருந்தார்கள். இப்போது அவரோடு நெருங்கிய ஐக்கியத்தில் இருக்கும்போது, அவருடைய மெய்யான மேன்மையும், மகிமையும், பெருமையும் அவர்களுக்குத் தெரியவருகிறது. பழைய ஏற்பாட்டுக்காலத்தில் சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனுடைய ஞானத்தையும், பிரஸ்தாபத்தையும் ஓரளவு கேள்விப் பட்டிருந்தாள். அவளே சாலொமோனுடைய அரண்மனைக்கு வந்து ராஜாவையும், அரண்மனையையும், அதிலுள்ள சகல காரியங்களையும் தன்னுடைய கண்களால் பார்த்தபோதுதான், தான் கேள்விப்பட்டது கொஞ்சம் தான் என்றும், இங்கு தான் கேள்விப்பட்டதைவிட எல்லாமே அதிகமாகயிருக்கிறது என்பதையும் அங்கீகரிக்கிறாள்.

"சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனுடைய சகல ஞானத்தையும், அவன் கட்டின அரமனையையும், அவன் பந்தியின் போஜனபதார்த்தங்களையும், அவன் ஊழியக்காரரின் வீடுகளையும், அவன் உத்தியோகஸ்தரின் வரிசையையும், அவர்கள் வஸ்திரங்களையும், அவனுடைய பானபாத்திரக்காரரையும், அவன் கர்த்தருடைய ஆலயத்துக்குள் பிரவேசிக்கும் நடைமண்டபத்தையும் கண்டபோது அவள் ஆச்சரியத்தால் பிரமைகொண்டு, ராஜாவை நோக்கி: உம்முடைய வர்த்தமானங்களையும் உம்முடைய ஞானத்தையும் குறித்து நான் என் தேசத்தில் கேட்ட செய்தி மெய்யாயிற்று. நான் வந்து அதை என் கண்களால் காணுமட்டும் அந்த வார்த்தைகளை நான் நம்பவில்லை; இவைகளில் பாதியாகிலும் எனக்கு அறிவிக்கப்படவில்லை என்று காண்கிறேன். நான் கேள்விப்பட்ட பிரஸ்தாபத்தைப்பார்க்கிலும், உம்முடைய ஞானமும் செல்வமும் அதிகமாயிருக்கிறது. உம்முடைய ஜனங்கள் பாக்கியவான்கள்; எப்போதும் உமக்கு முன்பாக நின்று, உம்முடைய ஞானத்தைக் கேட்கிற உம்முடைய ஊழியக்காரரும் பாக்கியவான்கள். உம்மை இஸ்ரவேலின் சிங்காசனத்தின்மேல் வைக்க, உன்மேல் பிரியங்கொண்ட உம்முடைய தேவனாகிய கர்த்தர் ஸ்தோத்திரிக்கப்படுவாராக: கர்த்தர் இஸ்ரவேலை என்றைக்கும் சிநேகிக்கிறபடியினால், நியாயமும் நீதியும் செய்கிறதற்கும் உம்மை ராஜாவாக ஏற்படுத்தினார் என்றாள்" (1இராஜா 10:4-9).

## அதிகாரம் - 10

இயேசுகிறிஸ்து யோர்தானுக்கு அக்கரையிலே, முன்னே யோவான்ஸ்நானன் ஞானஸ்நானம் கொடுத்துக்கொண்டிருந்த இடத்திற்குத் திரும்பி வந்தபோது, அவன் ஏற்கெனவே மரித்துப்போய்விட்டான். ஆனால் அங்குள்ள ஜனங்களுடைய உள்ளத்தில் யோவான்ஸ்நானனுடைய உபதேச வார்த்தைகள் பதிந்திருக்கிறது. அவர்கள் ஏற்கெனவே கேட்ட உபதேசங்கள் அவர்களுக்கு இப்போதும் ஆசீர்வாதமாக இருக்கிறது. யோவான்ஸ்நானன் ஒரு தீர்க்கதரிசியென்றும், அவன் இயேசுகிறிஸ்துவைக்குறித்து முன்னறிவித்திருக்கிறான் என்றும் இந்த ஜனங்கள் விசுவாசிக்கிறார்கள். இயேசுவே கிறிஸ்து என்னும் சத்தியத்தை விசுவாசிப்பதற்கு அவர்கள் யோவான்ஸ்நானனால் ஆயத்தப்பண்ணப் பட்டிருக்கிறார்கள்.

கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நாம் நம்முடைய ஊழியத்தின் கனிகளை, ஒருவேளை நம்முடைய ஜீவியகாலத்தில், நம்மால் காணமுடியாமல் போகலாம். கர்த்தருடைய வார்த்தை ஒருபோதும் வீணாகப்போவதில்லை. நாம் மரித்தபின்பும், நாம் உயிரோடிருந்தபோது உபதேசம்பண்ணின சத்திய வார்த்தைகள், அதைக் கேட்ட ஜனங்கள் மத்தியில் தொடர்ந்து கிரியை செய்துகொண்டிருக்கும். நாம் மரிக்கும்போது நாம் பிரசங்கம் செய்த தேவனுடைய வார்த்தை மரித்துப்போவதில்லை. வானமும் பூமியும் அழிந்துபோனாலும் கர்த்தருடைய வார்த்தையோ ஒருபோதும் அழிந்துபோவதில்லை.

### அநேகர் விசுவாசமுள்ளவர்களானார்கள்

**அவ்விடத்திலே அநேகர் அவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள் (யோவா 10:42).**

இதுவரையிலும்யோவான்ஸ்நானனுடைய சீஷராயிருந்தவர்கள், இப்போது இயேசுவைக் கிறிஸ்து என்று விசுவாசித்து, இயேசுகிறிஸ்துவுக்கு சீஷராகிறார்கள். இவர்களின் எண்ணிக்கை அநேகமாகயிருக்கிறது. இந்த இடத்தில் யோவான்ஸ்நானன் வல்லமையாக ஊழியம் செய்துகொண்டிருந்தான். ஊழியத்தில் அவனுக்குப் பெரிய வெற்றி கிடைத்தது. இதே இடத்தில்தான் இப்போது இயேசுகிறிஸ்துவிடத்தில் அநேகர் விசுவாசமுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

எங்கெல்லாம் மனந்திரும்புதலின் சத்தியம் பிரசங்கிக்கப்படுகிறதோ, அங்கெல்லாம் ஒப்புரவாகுதலின் சத்தியத்தைக் கேட்பதற்கு ஜனங்கள் ஆயத்தமாகயிருப்பார்கள். யோவான்ஸ்நானனை ஏற்றுக்கொண்ட ஜனங்கள் இயேசுகிறிஸ்துவை நிச்சயமாகவே ஏற்றுக்கொள்ளாமல் போகமாட்டார்கள். அவர்கள் இயேசுவையும் ஏற்றுக்கொள்வார்கள். இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரர்களை ஏற்றுக் கொள்கிறவர்கள், இயேசுகிறிஸ்துவையும் தங்கள் கர்த்தராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொள்வார்கள்.

## அதிகாரம் - 11

இயேசுகிறிஸ்து மரித்துப்போன லாசருவை உயிரோடு எழுப்புகிறார். இந்த சம்பவம் யோவான் சுவிசேஷத்தில் மாத்திரமே எழுதப்பட்டிருக்கிறது. மற்ற மூன்று சுவிசேஷங்களிலும் இயேசுகிறிஸ்து கலிலேயாவிலே செய்த ஊழியங்கள் மாத்திரமே பிரதானமாக விவரிக்கப்பட்டிருக்கிறது. இவற்றில் இயேசுகிறிஸ்து எருசலேமில் செய்த ஊழியம் அதிகமாக காணப்படவில்லை. அவர் சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பாக எருசலேமுக்கு வந்த சம்பவத்திலிருந்தே, மற்ற மூன்று சுவிசேஷங்களிலும் எருசலேமைப்பற்றி எழுதப்பட்டிருக்கும். ஆனால் யோவானோ இயேசுகிறிஸ்து எருசலேமில் செய்த ஊழியத்திற்கு அதிகமாய் முக்கியத்துவம் கொடுத்து, அந்த சம்பவங்களை இந்த சுவிசேஷத்தில் பிரதானமாக விவரித்து எழுதியிருக்கிறார்.

இயேசுகிறிஸ்து மரித்துப்போன லாசருவை உயிரோடு எழுப்பிய சம்பவம் மிகவும் விவரமாக எழுதப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவுக்கு மரணத்தின்மீது அதிகாரமுண்டு. மரித்து அடக்கம்பண்ணப்பட்ட இயேசுகிறிஸ்து, தம்முடைய உயிர்த்தெழுகிற வல்லமையினால் மூன்றாம்நாளில் மறுபடியும் உயிரோடு எழும்புகிறார். இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழச்செய்கிற வல்லமையை நிரூபிப்பதற்காக, லாசரு உயிரோடு எழும்பிய சம்பவம் இந்த சுவிசேஷத்தில் விவரமாக எழுதப்பட்டிருக்கிறது.

லாசரு வியாதியாயிருக்கிறான் என்னும் செய்தியை இயேசுவுக்குத் தெரியப்படுத்துகிறார்கள் (யோவா 11:1-16). லாசரு மரித்துப்போன பின்பு இயேசுகிறிஸ்து லாசருவின் உறவினர்களைப் பார்க்க வருகிறார் (யோவா 11:17-32). இயேசுகிறிஸ்து மரித்துப்போன லாசருவை உயிரோடு எழுப்பிய அற்புத சம்பவம் (யோவா 11:33-44). மரித்துப்போன லாசரு மறுபடியும் உயிரோடு எழுப்பப்பட்ட அற்புதத்தினால் ஜனங்களுடைய உள்ளத்தில் உண்டான விளைவு.

### லாசரு
### யோவா 11 : 1-6

**யோவா 11:1. மரியாளும் அவள் சகோதரியாகிய மார்த்தாளும் இருந்த பெத்தானியா கிராமத்திலுள்ளவனாகிய லாசரு என்னும் ஒருவன் வியாதிப்பட்டிருந்தான்.**

**யோவா 11:2. கர்த்தருக்குப் பரிமளதைலம் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தவள் அந்த மரியாளே; அவளுடைய சகோதரனாகிய லாசரு வியாதியாயிருந்தான்.**

**யோவா 11:3. அப்பொழுது அவனுடைய சகோதரிகள்: ஆண்டவரே, நீர் சிநேகிக்கிறவன் வியாதியாயிருக்கிறான் என்று சொல்லி, அவரிடத்திற்கு ஆள் அனுப்பினார்கள்.**

**யோவா 11:4. இயேசு அதைக் கேட்டபொழுது: இந்த வியாதி மரணத்துக்கு ஏதுவாயிராமல் தேவனுடைய மகிமை விளங்குவதற்கு ஏதுவாயிருக்கிறது; தேவனுடைய குமாரனும் அதினால் மகிமைப்படுவார் என்றார்கள்.**

**யோவா 11:5. இயேசு மார்த்தாளினிடத்திலும் அவளுடைய சகோதரியினிடத்திலும் லாசருவினிடத்திலும் அன்பாயிருந்தார்.**

**யோவா 11:6. அவன் வியாதியாயிருக்கிறதாக அவர் கேள்விப்பட்டபொழுது, தாம் இருந்த இடத்திலே பின்னும் இரண்டுநாள் தங்கினார்.**

**லாசரு வியாதியாயிருந்தான்**

**மரியாளும் அவள் சகோதரியாகிய மார்த்தாளும் இருந்த பெத்தானியா கிராமத்திலுள்ளவனாகிய லாசரு என்னும் ஒருவன் வியாதிப்பட்டிருந்தான். கர்த்தருக்குப் பரிமளதைலம் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தவள் அந்த மரியாளே; அவளுடைய சகோதரனாகிய லாசரு வியாதியாயிருந்தான் (யோவா 11:1,2).**

லாசரு என்பவன் இயேசுகிறிஸ்துவின் சிநேகிதன். இவனும் இவனுடைய சகோதரிகளாகிய மார்த்தாளும் மரியாளும் பெத்தானியா என்னும் கிராமத்தில் வசிக்கிறார்கள். இது எருசலேம் நகரத்திற்கு மிகவும் அருகிலுள்ள கிராமம். இது எருசலேமிலிருந்து இரண்டு மைல்தூரத்திலுள்ளது. இயேசுகிறிஸ்து பண்டிகைகளை ஆசரிப்பதற்காக எருசலேம் நகரத்திற்கு வரும்போது, அவர் பெத்தானியா கிராமத்தில் இவர்களுடைய வீட்டில் தங்குவது வழக்கம். மார்த்தாளும் மரியாளும் வீட்டுவேலைகளைச் செய்துகொண்டு வீட்டைக் கவனித்து பராமரித்து வருகிறார்கள். மிகவும் சந்தோஷமான குடும்பம். இவர்களுடைய குடும்பக்காரியங்கள் அனைத்தும் ஒழுங்கும் கிரமமுமாக நடைபெற்று வருகிறது. இந்தக் குடும்பத்தாரோடு இயேசுகிறிஸ்து சிநேகமாகயிருக்கிறார்.

## அதிகாரம் - 11

இவ்விரண்டு சகோதரிகளில் ஒருவராகிய மரியாள் என்பவள் இயேசுகிறிஸ்துவுக்குப் பரிமளதைலம் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தவள். இயேசுகிறிஸ்துவை அபிஷேகம் பண்ணுவதை இது குறிப்பிடுகிறது என்று யோவான் எழுதியிருக்கிறார் (யோவா 12:3). இவர்களுடைய சகோதரனாகிய லாசரு வியாதியாயிருக்கிறான். நமக்கு மிகவும் சிநேகமாகயிருக்கிறவர்கள் வியாதியாயிருந்தால் அது நமக்கு வருத்தமாக இருக்கும். நமக்கு அதிக சிநேகிதர்கள் இருக்கும்போது, இதுபோல அதிகமாக வருத்தப்பட வேண்டியதுவரும். நமக்கு ஆறுதல்களும் ஆசீர்வாதங்களும் அதிகரிக்கும்போது, நமக்குப் பாடுகளும் துன்பங்களும் அதற்கேற்றாற்போல் அதிகரிக்கும்.

**ஆள் அனுப்பினார்கள்**

**அப்பொழுது அவனுடைய சகோதரிகள்: ஆண்டவரே, நீர் சிநேகிக்கிறவன் வியாதியாயிருக்கிறான் என்று சொல்லி, அவரிடத்திற்கு ஆள் அனுப்பினார்கள் (யோவா 11:3).**

லாசரு வியாதியாயிருக்கிறான் என்னும் செய்தி கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு அனுப்பப்படுகிறது. இயேசுகிறிஸ்து எங்கேயிருக்கிறார் என்பது இவ்விரண்டு சகோதரிகளுக்கும் தெரிந்திருக்கிறது. ஒரு விசேஷித்த ஆள் மூலமாக லாசரு வியாதியாயிருக்கும் செய்தியை இவ்விரண்டு சகோதரிகளும் இயேசுகிறிஸ்துவுக்குத் தெரியப்படுத்துகிறார்கள்.

லாசருவைப்பற்றிய செய்தியை இயேசுகிறிஸ்துவுக்குச் சொல்ல இந்த சகோதரிகள் தனியாக ஒரு ஆளை அனுப்புவதன் மூலமாக இரண்டு காரியங்கள் தெரியவருகிறது. அவையாவன: 1. இவ்விரண்டு சகோதரிகளும் தங்கள் சகோதரன்மீது அன்பாகவும் கரிசனையாகவும் இருக்கிறார்கள். 2. இயேசுகிறிஸ்துவின்மீது பக்தியாகயிருக்கிறார்கள்.

லாசரு வியாதியாயிருப்பதைக்கண்டு இவ்விரண்டு சகோதரிகளும் தங்கள் உள்ளத்தில் கலங்குகிறார்கள். அவன்மீது மிகுந்த அன்பும் பாசமும் வைத்திருக்கிறார்கள். குடும்பத்தில் ஆரோக்கியமும் ஒற்றுமையும் இருக்கும்போது எல்லாமே ஆனந்தமாக இருக்கும். யாருக்காவது சரீர வியாதி வந்துவிட்டால் குடும்ப சந்தோஷம் குறைந்துபோகும். வியாதி முற்றிப்போனால் துக்கம் நிறைந்துவிடும்.

இயேசுகிறிஸ்துவின்மீது லாசருவும் அவனுடைய சகோதரிகளும் மிகுந்த அன்பு வைத்திருக்கிறார்கள். தங்கள் குடும்பத்தின் ஒவ்வொரு காரியத்தையும் இயேசுவுக்குத் தெரியப்படுத்தி வருகிறார்கள். தங்களைக்குறித்து இயேசுகிறிஸ்துவுக்கு அக்கறையும் கரிசனையும் உண்டு என்று விசுவாசிக்கிறார்கள். இவர்கள் இயேசுவுக்குச் சொல்லியனுப்பும் செய்தி மிகவும் சிறியது. "ஆண்டவரே நீர் சிநேகிக்கிறவன் வியாதியாயிருக்கிறான்" என்பதே இவர்கள் இயேசுவுக்கு ஆள் மூலமாக அனுப்புகிற செய்தி. இந்தச் செய்தி சிறியதாகயிருந்தாலும், இந்தச் செய்தியின் மூலமாக இவர்களுடைய எதிர்பார்ப்பு பெரிதாயிருக்கிறது.

இவர்கள் இயேசுவுக்குச் செய்தியனுப்பும்போது "உம்மைச் சிநேகிக்கிற லாசரு வியாதியாயிருக்கிறான்" என்று சொல்லாமல், "நீர் சிநேகிக்கிறவன் வியாதியாயிருக்கிறான்" என்றே செய்தி சொல்லியனுப்புகிறார்கள். இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாக நம்முடைய அன்பை பெரிதாகச் சொல்லமுடியாது. அவருடைய அன்புக்கு முன்பாக நம்முடைய அன்பு குறைவுள்ளதாகவே இருக்கும். ஆகையினால் இயேசுகிறிஸ்துவிடம் விண்ணப்பம் பண்ணும்போது, அவர் நம்மீது வைத்திருக்கும் அன்பைப்பற்றித்தான் மேன்மைப்படுத்த வேண்டும்.

இயேசுகிறிஸ்து நம்மீது அன்பாகயிருந்தாலும் நமக்கும் வியாதி வருவதற்கு வாய்ப்புள்ளது. நாம் கிறிஸ்துவை விசுவாசிப்பதினால் நமக்கு ஒரு வியாதியும் வராது என்று உறுதியாகக் கூறமுடியாது. விசுவாசிக்கும் அவிசுவாசிக்கும் சில காரியங்கள் ஒன்றுபோலவே நடைபெறும். அவைகளில் வியாதியும் ஒன்று. விசுவாசிகளாகிய நாம் வியாதியாகயிருந்தாலும் இயேசுகிறிஸ்துவின் மூலமாக நமக்கு ஒரு ஆறுதல் உண்டு. நம்முடைய வியாதியை இயேசுகிறிஸ்துவிடம் ஜெபத்தில் தெரியப்படுத்தலாம். நமக்கு வேண்டியவர்கள் யாராவது வியாதியாகயிருந்தால், நாம் அவர்களுக்காகவும் இயேசுகிறிஸ்துவிடம் ஜெபம்பண்ணலாம். இயேசுகிறிஸ்து நம்மை நேசித்து, நம்மைப் பராமரித்து, நம் வியாதியிலிருந்து நம்மை விடுதலை செய்வார் என்னும் நம்பிக்கை நமக்கு உண்டு.

## அதிகாரம் - 11

**மரணத்துக்கு ஏதுவாயிராமல்**

**இயேசு அதைக் கேட்டபொழுது: இந்த வியாதி மரணத்துக்கு ஏதுவாயிராமல் தேவனுடைய மகிமை விளங்குவதற்கு ஏதுவாயிருக்கிறது; தேவனுடைய குமாரனும் அதினால் மகிமைப்படுவார் என்றார்கள் (யோவா 11:4).**

மார்த்தாளும் மரியாளும் அனுப்பிய ஆள் இயேசுகிறிஸ்துவிடம் அவர்களுடைய செய்தியைக் கூறுகிறார். அந்தச் செய்தியைக் கேட்டு, இயேசுகிறிஸ்து அதைப்பற்றி கூறும் சம்பவத்தில், இரண்டு காரியங்கள் இடம்பெற்றிருக்கிறது. அவையாவன: 1. இந்த வியாதி மரணத்துக்கு ஏதுவாயில்லை. 2. தேவனுடைய மகிமை விளங்குவதற்கு இந்த வியாதி ஏதுவாயிருக்கிறது.

லாசருவுக்கு வந்திருக்கும் வியாதி மெய்யாகவே மரணத்துக்கேதுவானது. இந்த வியாதியினால் அவன் மரித்துப் போகப்போகிறான். நான்கு நாட்களாக அவன் மரித்தவனாகவேயிருப்பான் என்பது இயேசுகிறிஸ்துவுக்குத் தெரியும். வியாதியினால் மரித்தால், மரித்தப்பின்பு சரீரத்தைக் கல்லறையில் அடக்கம் பண்ணவேண்டும். லாசருவின் வியாதிக்கு மரணம் முடிவல்ல. அவன் மரிப்பான். ஆனாலும் அவன் மரிக்காமலும் இருப்பானென்று இயேசுகிறிஸ்து கூறுகிறார்.

விசுவாசிகளுக்கு சரீர மரணம் நம்முடைய வாழ்வின் முடிவல்ல. நாம் மரிக்கும்போது இந்த உலகத்திலிருந்து கடந்து சென்று, நித்திய ஜீவனைப்பெற்றுக்கொள்ளப்போகிறோம். பரிசுத்தவான்களின் வியாதி எப்போதுமே மரணத்திற்கு ஏதுவானது அல்ல. நம்முடைய சரீரம் இந்த உலகத்தில் மரிக்கும்போது, நம்முடைய ஆத்துமா மறுஉலகத்தில் பிறக்கிறது.

லாசருவின் வியாதி தேவனுடைய மகிமை விளங்குவதற்கு ஏதுவாகயிருக்கிறது. பரிசுத்தவான்களின் பாடுகள் தேவனுடைய நாம மகிமைக்காக நியமிக்கப்பட்டிருக்கிறது. நாம் பாடுகளை அனுபவிக்கும்போது, தேவன் நமக்குக் காண்பிக்கும் கிருபை மிகவும் பெரியதாகத் தெரியும். வேதனைகளின் மத்தியில்தான் தேவனுடைய இரக்கத்தை நம்மால் பூரணமாக அனுபவிக்க முடியும்.

நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் எத்தனை பாடுகள் வந்தாலும் சோர்ந்துபோய்விடக்கூடாது. அவையெல்லாம் தேவனுடைய மகிமைக்காக நம்முடைய ஜீவியத்தில் அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்று நினைத்து ஆறுதலடையவேண்டும். தேவன் மகிமைப்படுவாரென்றால் அதில் நமக்கு திருப்தியுண்டாக வேண்டும். நம்முடைய பாடுகள் மூலமாக தேவனுக்கு மகிமை உண்டாகுமென்றால், அந்தப் பாடுகளை நாம் பொறுமையோடு சகித்துக்கொண்டு ஆறுதலடையவேண்டும்.

லாசருவின் வியாதி தேவனுடைய மகிமை விளங்குவதற்கு ஏதுவாயிருக்கிறது என்று இயேசுகிறிஸ்து கூறுகிறார். தேவனுடைய அற்புதம் நடைபெறுவதற்கு லாசரு ஒரு கருவியாக இருக்கிறான். மரித்துப்போன அவனை தேவன் மறுபடியும் உயிரோடு எழுப்பி தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்துகிறார். தேவனுக்குப் பிரியமானவர்கள் வேதனைகளை அனுபவிக்கும்போது, "நம்முடைய வேதனை தேவனுடைய மகிமை விளங்குவதற்கு ஏதுவாயிருக்கிறது" என்னும் சத்திய வார்த்தையை எடுத்துச் சொல்லி நாம் ஆறுதல் பெறவேண்டும். தேவனுடைய மகிமை விளங்கும்போது, தேவனுடைய குமாரனும் அதினால் மகிமைப்படுவார்.

**பின்னும் இரண்டு நாள் தங்கினார்**

**இயேசு மார்த்தாளிடத்திலும் அவளுடைய சகோதரியினிடத்திலும் லாசருவினிடத்திலும் அன்பாயிருந்தார். அவன் வியாதியாயிருக்கிறதாக அவர் கேள்விப்பட்டபொழுது, தாம் இருந்த இடத்திலே பின்னும் இரண்டுநாள் தங்கினார் (யோவா 11:5,6).**

லாசரு வியாதியாயிருக்கிறான் என்னும் செய்தியைக் கேட்டவுடன் இயேசுகிறிஸ்து பெத்தானியா கிராமத்திற்கு உடனே புறப்பட்டுப்போய்விடாமல், தாம் இருந்த இடத்திலே பின்னும் இரண்டுநாள் தங்குகிறார். "ஆண்டவரே நீர் சிநேகிக்கிறவன் வியாதியாயிருக்கிறான்" என்னும் செய்தியை லாசருவின் சகோதரிகள் இயேசுகிறிஸ்துவுக்கு ஒரு ஆள் மூலமாக சொல்லியனுப்புகிறார்கள். அந்தச் செய்தியை இயேசுகிறிஸ்து அங்கீகரிக்கிறார். அவர் மார்த்தாளிடத்திலும் அவளுடைய சகோதரியினிடத்திலும் லாசருவினிடத்திலும் அன்பாயிருக்கிறார்.

## அதிகாரம் - 11

லாசரு வியாதியாகயிருப்பதினால் இயேசுகிறிஸ்து அவர்கள்மீது வைத்திருக்கும் அன்பு குறைந்துபோய்விடவில்லை. அவர் அன்பாகவேயிருக்கிறார். ஆகையினால் லாசரு வியாதியாகயிருக்கிறான் என்னும் செய்தியை இயேசுகிறிஸ்து கேள்விப்பட்டவுடன், தாம் இருக்கும் இடத்திலிருந்து உடனடியாக பெத்தானியாவுக்குப்போய் லாசருவைக் குணப்படுத்துவாரென்று எல்லோரும் பொதுவாக எதிர்பார்ப்பார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ தம்முடைய அன்பை வேறுவிதமாக வெளிப்படுத்துகிறார். பெத்தானியாவுக்கு இயேசுகிறிஸ்து உடனடியாகப் புறப்பட்டுப்போகாமல், தாம் இருந்த இடத்திலே பின்னும் இரண்டு நாள் தங்கி லாசருவின்மீது தாம் வைத்திருக்கும் அன்பை வேறுவிதமாய் வெளிப்படுத்துகிறார்.

இயேசுகிறிஸ்து அவர்கள்மீது அன்பாகயிருக்கிறார். ஆகையினால் அவர் அவர்களுடைய கிராமத்திற்கு உடனடியாகப் போகவில்லை. இயேசுகிறிஸ்து அவர்களுடைய விசுவாசத்தை ஒருவேளை சோதித்துப்பார்க்க வேண்டும் என்று நினைத்திருக்கலாம். அவர்களுடைய பாடுகள், வேதனைகள், வியாதிகள் மத்தியில் அவர்கள் தேவனைத் துதிக்கிறார்களா என்று இயேசுகிறிஸ்து சோதித்தறிய விரும்பியிருக்கலாம். லாசருவுக்கு வந்திருக்கும் வியாதியினால் தேவனுக்கு மகிமை உண்டாகிறது.

லாசருவின் வியாதியைக் குணப்படுத்துவதற்குப் பதிலாக, மரித்துப்போன லாசருவை உயிரோடு எழுப்பும்போது தேவனுடைய நாமம் மேலும் அதிகமாய் மகிமைப்படும். தேவன் எப்போதுமே சாதாரண காரியங்களைச் செய்வதற்குப் பதிலாக, பெரியகாரியங்களைச் செய்ய விரும்புகிறார். தேவனால் கூடாத காரியம் ஒன்றுமேயில்லை. லாசரு மரிக்கவேண்டுமென்றும், மரித்துப்போன அவனை கல்லறையில் அடக்கம்பண்ண வேண்டுமென்றும், கல்லறையில் அவனுடைய சரீரம் நான்கு நாட்கள் இருக்கவேண்டும் என்றும் இயேசுகிறிஸ்து சித்தங்கொண்டு, தாம் இருந்த இடத்திலே மேலும் இரண்டு நாள் தங்குகிறார்.

இயேசுகிறிஸ்து காலதாமதம் பண்ணுவதினால், அவருக்கு பெரிய அற்புதத்தைச் செய்வதற்கு வாய்ப்பு உண்டாயிற்று. தம்முடைய வல்லமையினால் வியாதியைச் சாதாரணமாகக் குணப்படுத்துவதற்குப் பதிலாக, மரித்துப்போனவனை உயிரோடு எழுப்பி, தம்முடைய தெய்வீக வல்லமையை வெளிப்படுத்த வேண்டுமென்று இயேசுகிறிஸ்து சித்தங்கொண்டிருக்கிறார். நம்முடைய வாழ்க்கையில்கூட, சில சமயங்களில், நம்முடைய ஜெபத்திற்கு உடனடியாகப் பதில் கிடைக்காமல் போகலாம். காலதாமதம் ஏற்படலாம். ஒவ்வொரு காலதாமதத்திற்கும் தேவன் ஒரு தெய்வீக சித்தம் வைத்திருக்கிறார். காலதாமதம் உண்டானாலும் இயேசுகிறிஸ்து நம்மை ஒருபோதும் கைவிடுவதில்லை.

இயேசுகிறிஸ்து பெத்தானியாவுக்கு உடனடியாகப் புறப்பட்டுப் போகவில்லையென்றாலும், அவருடைய உள்ளத்தில் பெத்தானியா ஊர் ஜனங்களைப்பற்றிய சிந்தனை நிறைந்திருக்கிறது. தேவன் நம்முடைய ஜெபத்திற்கு பதில் கொடுக்க தாமதம் ஏற்படும்போது, அவர் நம்மை மறந்துவிட்டார் என்று நினைக்கக்கூடாது. இஸ்ரவேலைக் காக்கிற தேவன் நம்மீது எப்போதுமே கண்நோக்கமாகயிருக்கிறார். கரிசனையாயிருக்கிறார்.

### யூதேயாவுக்குப் போவதுபற்றி சம்பாஷணை
### யோவா 11 : 7-10

**யோவா 11:7. அதன்பின்பு அவர் தம்முடைய சீஷரை நோக்கி: நாம் மறுபடியும் யூதேயாவுக்குப் போவோம் வாருங்கள் என்றார்.**

**யோவா 11:8. அதற்கு சீஷர்கள்: ரபீ, இப்பொழுது தான் யூதர் உம்மைக் கல்லெறியத்தேடினார்களே, மறுபடியும் நீர் அவ்விடத்திற்குப் போகலாமா என்றார்கள்.**

**யோவா 11:9. இயேசு பிரதியுத்தரமாக: பகலுக்குப் பன்னிரண்டு மணிநேரம் இல்லையா? ஒருவன் பகலிலே நடந்தால் அவன் இந்த உலகத்தின் வெளிச்சத்தைக் காண்கிறபடியினால் இடறமாட்டான்.**

**யோவா 11:10. ஒருவன் இரவிலே நடந்தால் தன்னிடத்தில் வெளிச்சம் இல்லாதபடியினால் இடறுவான் என்றார்.**

## அதிகாரம் - 11

### யூதேயாவுக்குப் போவோம்

**அதன்பின்பு அவர் தம்முடைய சீஷரை நோக்கி: நாம் மறுபடியும் யூதேயாவுக்குப் போவோம் வாருங்கள் என்றார் (யோவா 11:7).**

லாசரு வியாதியாயிருக்கிறான் என்னும் செய்தியைக் கேட்டபின்பு, இயேசுகிறிஸ்து தாம் இருந்த இடத்திலே பின்னும் இரண்டு நாள் தங்கியிருக்கிறார். அதன்பின்பு அவர் தம் சீஷருடனே யூதேயாவுக்குப்போக சித்தமாயிருக்கிறார். யூதேயாவுக்குப் போவதில் அவருக்கு இரண்டு பிரச்சனைகள் உண்டாயிற்று. அவையாவன: 1. யூதேயாவுக்குப்போனால் இயேசுகிறிஸ்துவுக்கு ஆபத்து உண்டாகும். 2. ஜீதேயாவுக்குப் போவதை இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் விரும்பவில்லை.

"நாம் மறுபடியும் யூதேயாவுக்குப் போவோம் வாருங்கள்" என்று இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுடனே கூறுகிறார். இயேசுகிறிஸ்துவின் இந்த முடிவுக்கு இரண்டு காரணங்கள் இருக்கலாம். அவையாவன: 1. பெத்தானியாவிலுள்ள தம்முடைய சிநேகிதருக்கு தம்முடைய அன்பை வெளிப்படுத்த விரும்புகிறார். 2. சோதனைகளைச் சந்திக்குமாறு தம்முடைய சீஷர்களை உற்சாகப்படுத்துகிறார்.

ஏற்றவேளை வரும்போது இயேசுகிறிஸ்து தம்முடைய சித்தத்தை நிறைவேற்றுகிறார். தாம் இருந்த இடத்தில் மேலும் இரண்டு நாள் தங்கியதுபோதும் என்றும், தம்முடைய மகிமையை வெளிப்படுத்த வேண்டிய வேளை வந்துவிட்டது என்றும் இயேசுகிறிஸ்து சித்தங்கொண்டு, "இப்போது நாம் மறுபடியும் யூதேயாவுக்குப் போவோம் வாருங்கள்" என்று தம்முடைய சீஷருடனே கூறுகிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய பிள்ளைகளுக்கு ஏற்றவேளையில் உதவிபுரிய முன்வருவார். அந்த வேளை வரும் வரையிலும் நாம் அவருடைய சமுகத்தில் பொறுமையோடு காத்திருக்கக் கற்றுக்கொள்ளவேண்டும்.

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் அவரை எல்லாச் சூழ்நிலைகளிலும் பின்பற்றிச் செல்லவேண்டும். தங்களுடைய சிலுவைகளை எடுத்துக்கொண்டு அவரைப்பின்பற்றிச் செல்ல ஆயத்தமாயிருக்கவேண்டும். அவர்களுடைய கீழ்ப்படிதலையும், தைரியத்தையும் இயேசுகிறிஸ்து சோதித்தறிய விரும்புகிறார்.

சில நாட்களுக்கு முன்புதான் அவர்களுக்கு எருசலேமில் மிகப்பெரிய பிரச்சனை உண்டாயிற்று. இயேசு கிறிஸ்துவைக் கல்லெறிந்து கொல்ல வேண்டுமென்று யூத ஜனங்கள் கொலைவெறியோடிருந்தார்கள். அந்த யூதேயா தேசத்திற்குத்தான் இயேசுகிறிஸ்து இப்போது "மறுபடியும் போவோம் வாருங்கள்" என்று கூறுகிறார். அங்கு போனால் தங்களுக்கு என்ன ஆகும் என்பது சீஷர்களுக்கு நன்றாகத் தெரியும். அப்படிப்பட்ட ஆபத்தான சூழ்நிலைகளிலும் சீஷர்கள் தம்மைப் பின்பற்றி வர ஆயத்தமாயிருக்கிறார்களா என்பதை இயேசுகிறிஸ்து சோதித்தறிய விரும்புகிறார்.

ஆபத்து வந்தாலும் இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களை தனியாக விட்டுவிடமாட்டார். எல்லா சூழ்நிலைகளிலும் அவர் தம்முடைய சீஷரோடு கூடவேயிருந்து அவர்களுக்கு உதவிபுரிகிறவர். தம்மை நம்புகிற பிள்ளைகளை இயேசுகிறிஸ்து ஒருபோதும் கைவிடுகிறதில்லை. நம்மை ஒருபோதும் அவர் அழிவுக்கு நேராக வழிநடத்தமாட்டார். இயேசுகிறிஸ்துவின் அடிச்சுவடுகளை நாம் பின்பற்றிச் செல்லும்போது, நாம் நித்திய ஜீவனைக் கண்டுகொள்வோம்.

### மறுபடியும் அவ்விடத்திற்குப் போகலாமா

**அதற்கு சீஷர்கள்: ரபீ, இப்பொழுது தான் யூதர் உம்மைக் கல்லெறியத்தேடினார்களே, மறுபடியும் நீர் அவ்விடத்திற்குப் போகலாமா என்றார்கள் (யோவா 11:8).**

"நாம் மறுபடியும் யூதேயாவுக்குப் போவோம் வாருங்கள்" என்று இயேசுகிறிஸ்து கொடுத்த அழைப்பை அவருடைய சீஷர்கள் உடனடியாக அங்கீகரியாமல், அதற்கு மறுப்புத் தெரிவிக்கிறார்கள். "ரபீ, இப்பொழுதுதான் யூதர் உம்மை கல்லெறியத்தேடினார்களே, மறுபடியும் நீர் அவ்விடத்திற்குப் போகலாமா" என்று கேட்கிறார்கள். எருசலேம் நகரத்திலே அவருக்கு ஏற்பட்ட ஆபத்தை நினைவுபடுத்துகிறார்கள். அந்த ஆபத்து சமீபத்தில்தான் உண்டாயிற்று. இயேசு கிறிஸ்துவைப்போல அவருடைய சீஷர்கள் பாடுகளை அனுபவிக்க ஆயத்தமாகயில்லை. அவர்கள் தங்களைக்குறித்தும் தங்களுடைய ஆண்டவரைக்குறித்தும் மிகுந்த கரிசனையோடிருக்கிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ தம்முடைய பிதாவின் சித்தத்திற்குக் கீழ்ப்படிவதிலேயே அதிக கவனத்தோடிருக்கிறார்.

## அதிகாரம் - 11

யூதர்கள் இயேசுவைப் பிடிக்கவேண்டுமென்றும், அவர்மீது கல்லெறிய வேண்டுமென்றும் நோக்கமாயிருந்தார்கள். இயேசுகிறிஸ்து அவ்விடத்தைவிட்டுக் கடந்து வந்திருக்கிறார். அங்கிருந்து இவர்களெல்லோரும் தப்பித்து வந்தது சீஷர்களுடைய மனதில் நீங்காத கசப்பு அனுபவமாகயிருக்கிறது. அங்கு தாங்கள் மறுபடியும் போகக்கூடாது என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ அங்கு மறுபடியும் போவோம் வாருங்கள் என்று இவர்களை அழைக்கிறார். சீஷர்களுக்கு இயேசுகிறிஸ்துவின் அழைப்பு மிகவும் ஆச்சரியமாகயிருக்கிறது.

தங்களுடைய ஊரைவிட்டு ஓடிப்போய்விட வேண்டுமென்று கட்டாயப்படுத்திய அந்த ஜனங்களை மறுபடியும் போய் பார்க்கலாமா என்று சீஷர்கள் யோசிக்கிறார்கள். அங்குபோனால் இயேசுகிறிஸ்துவின் ஜீவனுக்கும், சீஷர்களுடைய ஜீவனுக்கும் ஆபத்து நேரிட வாய்ப்புள்ளது. ஆகையினால் "மறுபடியும் நீர் அவ்விடத்திற்குப் போகலாமா" என்று சீஷர்கள் தங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவிடம் கேட்கிறார்கள். அங்குபோனால் அங்குள்ள யூதர்கள் இயேசுகிறிஸ்துவைப்பிடித்து உபத்திரப்படுத்துவதற்கு வாய்ப்புள்ளது.

இயேசுகிறிஸ்துவின் தெய்வீக வல்லமையின்மீது சீஷர்களுக்கு சந்தேகம் உண்டாயிற்று. தாங்கள் பாடுகள் அனுபவிப்பதை சீஷர்கள் விரும்பவில்லை. இயேசுகிறிஸ்துவைப் பாதுகாக்கவேண்டும் என்று பேசுவதுபோல, சீஷர்கள் தங்களுடைய அவிசுவாச வார்த்தைகளை வெளிப்படுத்துகிறார்கள். இயேசுகிறிஸ்துவால் தம்மையும் தம்முடைய சீஷர்களையும் பாதுகாக்க முடியுமோ என்று சந்தேகப்படுகிறார்கள். சற்று முன்புதான் இயேசுவும் சீஷர்களும் யூதர்களுடைய கையிலிருந்து பிடிபடாமல் தப்பித்து வந்திருக்கிறார்கள். மறுபடியும் அங்குபோனால் தங்களுக்கு என்ன நேரிடுமோ என்று பயத்தோடும் கவலையோடும் சீஷர்கள் யோசித்துப்பார்க்கிறார்கள். இயேசுகிறிஸ்து பாடுகளை அனுபவிக்கக்கூடாது என்பது போல பேசுகிறார்கள். ஆனால் மெய்யாகவே, சீஷர்கள் தங்களுடைய பேச்சில், தங்களுடைய உள்ளத்தில் ரகசியமாக மறைந்திருக்கும் பயத்தையே வெளிப்படுத்துகிறார்கள்.

**பகலிலே நடந்தால் இடறமாட்டான்**

**இயேசு பிரதியுத்தரமாக: பகலுக்குப் பன்னிரண்டு மணிநேரம் இல்லையா? ஒருவன் பகலிலே நடந்தால் அவன் இந்த உலகத்தின் வெளிச்சத்தைக் காண்கிறபடியினால் இடறமாட்டான். ஒருவன் இரவிலே நடந்தால் தன்னிடத்தில் வெளிச்சம் இல்லாத படியினால் இடறுவான் என்றார் (யோவா 11:9,10).**

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களின் மறுப்புக்கு பிரதியுத்தரம் கூறுகிறார். அவர்களிடம் "பகலுக்குப் பன்னிரண்டு மணி நேரம் இல்லையா" என்று கேட்கிறார். தேவனுடைய தெய்வீக பராமரிப்பினால் நமக்கு பகல் நேரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நாம் கிரியை செய்வதற்காகவே பகல் நேரம் நியமிக்கப்பட்டிருக்கிறது. மனுஷனுடைய ஜீவியக்காலம் பகல் நேரமாயிருக்கிறது. மனுஷனுடைய ஜீவியக்காலத்தில் அவனுக்கு வயதுகள், வாய்ப்புக்கள், மணிநேரங்கள் எல்லாமே உண்டு. இதையெல்லாம் சிந்தித்துப் பார்த்து, நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற ஜீவியக்காலத்தில் கிரியை செய்யவேண்டும். சுறுசுறுப்பாக இயங்கவேண்டும். நமக்கு நியமிக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு வேலையையும், நம்முடைய ஜீவியக்காலத்திற்குள் நேர்த்தியாகச் செய்து முடிக்கப் பிரயாசப்படவேண்டும்.

நாம் கிரியை செய்யும்போது நமக்குப் பல தடைகள் உண்டாகலாம். தடைகளைப் பார்த்து சோர்ந்துபோய்விடக்கூடாது. நமக்கு நியமிக்கப்பட்டிருக்கும் ஓட்டத்தை ஓடி முடிக்கவேண்டும். தேவன் நமக்கு நியமித்திருக்கும் ஊழியங்களை நாம் செய்து நிறைவேற்றும் வரையிலும் நமக்கு நிச்சயமாகவே பகற்காலம் இருக்கும். அதுவரையிலும் நமக்கு ஜீவன் கொடுக்கப்படும். நாம் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற ஊழியங்களை உண்மையாகவும் உத்தமமாகவும் செய்துகொண்டிருக்கும்போது, தேவன் நம்முடைய இருதயங்களில் ஆறுதலையும் சந்தோஷத்தையும் கொடுத்து நம்மை ஆசீர்வதிப்பார். நாம் பகலிலே நடந்தால் இடறலடையமாட்டோம். நம்முடைய நடை தள்ளாடாது. நிச்சயமுள்ளதாகயிருக்கும்.

## அதிகாரம் - 11

பகலிலே நடக்கிறவர்கள் இந்த உலகத்தின் வெளிச்சத்தைக் காண்பார்கள். ஆகையினால் பகலில் நடக்கிறவர்கள் நிதானமாகவும், சந்தோஷமாகவும் இடறாமல் நடந்துசெல்வார்கள். தங்களுக்கு முன்பாக இருக்கும் தங்களுடைய பாதையை நோக்கிப் பார்ப்பார்கள். கர்த்தரை விசுவாசிக்கிறவர்கள் அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து பயபக்தியோடு முன்னேறிச்செல்வார்கள். தங்களுடைய வாழ்க்கைப் பிரயாணத்தின் முடிவில் தேவனுடைய மகிமையைக் காண்போம் என்னும் விசுவாசத்தோடு முன்னேறிச் செல்வார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு, அவர் நியமித்திருக்கிற வழியில் நடக்கும்போது, நம்முடைய உள்ளத்தில் சில சமயங்களில் சந்தேகங்கள் உண்டாகலாம். போராட்டங்கள் உண்டாகலாம். தேவனோ தம்முடைய கிருபையினால் நம்முடைய சந்தேகங்களையெல்லாம் தீர்த்துவைத்து, நம்முடைய விசுவாசத்தை வர்த்திக்கப் பண்ணுவார். நம்முடைய போராட்டங்களைத் தேவன் தாமே நம்மோடு கூடயிருந்து நமக்காக யுத்தம்பண்ணுவார். எல்லாவித தீங்குகளிலிருந்தும் நம்மை விலக்கிப் பாதுகாத்து வழிநடத்துவார்.

இயேசுகிறிஸ்து எங்கு சென்றாலும் அவர் பகலிலே நடக்கிறார். அவரைப் பின்பற்றுகிறவர்களாகிய நாமும், அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி பகலிலே நடக்கிறவர்களாக இருக்கவேண்டும். இயேசு கிறிஸ்துவின் வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல் ஜீவிக்கிறவர்கள் இரவிலே நடக்கிறவர் களாகயிருப்பார்கள். அவர்களிடத்தில் வெளிச்சம் இருக்காது. ஆகையினால் தங்கள் நடையில் இடறிவிழுவார்கள். தங்களுடைய இருதய இச்சையின் பிரகாரமாகவும், உலகச் சிற்றின்ப ஆசைகளின் பிரகாரமாகவும் நடக்கிறவர்கள் இருளில் நடக்கிறவர்களாகவே இருக்கிறார்கள். இவர்கள் இந்த உலகத்தின் கண்ணிகளிலும் சோதனைகளிலும் சிக்குண்டு இடறிவிழுவார்கள். இவர்களிடத்தில் வெளிச்சம் இருக்காது.

தேவனுடைய வெளிச்சம் நம்மிடத்தில் இருந்தால்தான், அது நம்முடைய மனச்சாட்சியைச் சுத்திகரிக்கும். நம்முடைய நடைகளை ஸ்திரப்படுத்தும். தேவனுடைய வெளிச்சம் நம்மிடத்தில் இல்லையென்றால் நமக்குள் வெளிச்சம் இராமல் இருள் இருக்கும். இருளில் நடப்பது நம்முடைய சுயசிந்தனையின் பிரகாரமாகவும், சுயசித்தத்தின் பிரகாரமாகவும் நடப்பதாகும். நம்முடைய ஆசைகளையும் இச்சைகளையும் நிறைவேற்றுவதற்குத் தேவனுடைய உதவிகளோ ஒத்தாசைகளோ நமக்குக் கிடைக்காது. தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து அவருடைய சித்தத்தின் பிரகாரமாகச் செயல்படுகிறவர்களுக்கு மாத்திரமே தேவனுடைய உதவிகளும் ஒத்தாசைகளும் கிடைக்கும்.

### நித்திரையடைந்திருக்கிறான்
### யோவா 11 : 11-16

**யோவா 11:11. இவைகளை அவர் சொல்லிய பின்பு அவர்களை நோக்கி: நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்திருக்கிறான், நான் அவனை எழுப்பப்போகிறேன் என்றார்.**

**யோவா 11:12. அதற்கு அவருடைய சீஷர்கள்: ஆண்டவரே, நித்திரையடைந்திருந்தால் சுகமடைவான் என்றார்கள்.**

**யோவா 11:13. இயேசுவானவர் அவனுடைய மரணத்தைக்குறித்து அப்படிச்சொன்னார்; அவர்களோ நித்திரைசெய்து இளைப்பாறுகிறதைக்குறித்துச் சொன்னாரென்று நினைத்தார்கள்.**

**யோவா 11:14. அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: லாசரு மரித்துப்போனான் என்று வெளிப்படையாய்ச் சொல்லி;**

**யோவா 11:15. நான் அங்கே இராததினால் நீங்கள் விசுவாசமுள்ளவர்களாகிறதற்கு ஏதுவுண்டென்று உங்கள் நிமித்தம் சந்தோஷப்படுகிறேன்; இப்பொழுது அவனிடத்திற்குப் போவோம் வாருங்கள் என்றார்.**

**யோவா 11:16. அப்பொழுது திதிமு என்னப்பட்ட தோமா மற்றச் சீஷர்களை நோக்கி: அவரோடேகூட மரிக்கும்படி நாமும் போவோம் வாருங்கள் என்றான்.**

## அதிகாரம் - 11

**அவனை எழுப்பப்போகிறேன்**

**இவைகளை அவர் சொல்லியபின்பு அவர்களை நோக்கி: நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்திருக்கிறான், நான் அவனை எழுப்பப்போகிறேன் என்றார் (யோவா 11:11).**

லாசருவின் மரணத்தைக்குறித்து இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடம் பேசும்போது, மரித்துப்போயிருக்கிற அவனை "நித்திரையடைந்திருக்கிறான்" என்று கூறுகிறார். அவனைப்பற்றிக் குறிப்பிடும்போது "நம்முடைய சிநேகிதனாகிய லாசரு" என்று அவனை இயேசு அன்போடு அழைக்கிறார். விசுவாசிகளாகிய நாம் இயேசுகிறிஸ்துவுக்கு சிநேகிதராகயிருக்கிறோம். நம்முடைய மரணம் நமக்கு நித்திரையாகயிருக்கிறது. இயேசு கிறிஸ்துவுக்கு யாரெல்லாம் சிநேகிதர் களாகயிருக்கிறார்களோ, அவர்களெல்லோருமே நமக்கும் சிநேகிதர்களாகயிருக்க வேண்டும். இயேசுகிறிஸ்து லாசருவைப்பற்றிச் சொல்லும்போது "என்னுடைய சிநேகிதன்" என்று சொல்லாமல், "நம்முடைய சிநேகிதன்" என்று குறிப்பிடுகிறார்.

இயேசுகிறிஸ்துவுக்கும் அவருடைய விசுவாசிகளுக்கும் இடையிலுள்ள சிநேகத்தை விசுவாசிகளின் மரணம் முறித்துப் போடுவதில்லை. லாசரு மரித்துப் போயிருக்கிறான். இருந்தாலும் அவன் இன்னும் நம்முடைய சிநேகிதனாகவேயிருக்கிறான். விசுவாசிகளின் மரணத்தை இயேசுகிறிஸ்து "நித்திரை" என்று அழைக்கிறார். லாசரு மரித்துப்போயிருப்பதை அவன் "நித்திரையாயிருக்கிறான்" என்று குறிப்பிடுகிறார். மரணத்திற்கு "நித்திரை" என்று பெயர்சொல்லி அழைப்பது மிகவும் நல்லது. மனுஷருக்கு வருத்தத்தையும் வேதனையையும் கொடுக்கும் சம்பவங்களுக்கு இதுபோல நல்ல பெயர்களைச்சொல்லி அழைக்கவேண்டும். மரணம் என்று சொன்னால் வருத்தமும் வேதனையும் உண்டாகும். அதே மரணத்தை "நித்திரை" என்று சொல்லும்போது, அந்த வேதனையும் வருத்தமும் குறையும்.

நாம் மரித்துப்போன பின்பு நித்திய ஜீவனைப்பெற்றுக்கொள்வதற்கு மறுபடியும் உயிரோடு எழுப்பப்படுவோம். நித்திரை தெளிந்து எழுந்து, நம்முடைய வஸ்திரங்களை மாற்றிக்கொள்வதுபோல, விசுவாசிகளாகிய நாம் மரித்து உயிர்த்தெழுவது, நித்திரை தெளிந்து எழும்புவதுபோல சாதாரண அனுபவமாகவே இருக்கும். கர்த்தரை விசுவாசிக்கிறவர்கள் மரிக்கும்போது நித்திரையடைகிறார்கள். இந்த உலகத்தில் தாங்கள் இதுவரையிலும் செய்து வந்த வேலைகளிலிருந்து அவர்களுக்கு ஓய்வுகொடுக்கப்படுகிறது. மறுநாள் காலைப்பொழுதுக்கு நம்மை ஆயத்தப்படுத்துவதற்கு இரவில் நித்திரை செய்வதுபோல, விசுவாசிகளின் மரணம் உலகஜீவனுக்கும் நித்திய ஜீவனுக்கும் இடையிலுள்ள காலத்தில் நித்திரை செய்வதுபோலவே இருக்கிறது.

கிறிஸ்துவுக்குள் மரிக்கிறவர்கள் கல்லறைகளில் அடக்கம்பண்ணப்படும்போது, அந்தக் கல்லறைகள் அவர்களுக்கு நித்திரை செய்யும் படுக்கைகளைப்போலவே இருக்கும். அமைதியாக நித்திரை பண்ணுவதற்கு வசதியாக இந்தப் படுக்கை மென்மையானதாக இருக்கும். கலியாண வஸ்திரம் தரிப்பதற்காக நம்முடைய பழைய வஸ்திரங்களைக் களைந்துபோடுவதுபோல, ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்தில் பங்குபெறுவதற்காக, நமது சரீரங்களை மாற்றிக்கொள்கிறோம். மாம்சப் பிரகாரமான சரீரத்தைக் களைந்து ஆவிக்குரிய சரீரத்தைப் பெற்றுக்கொள்கிறோம்.

இயேசுகிறிஸ்து லாசருவைப்பற்றிப் பேசும்போது, "அவன் நித்திரையடைந்திருக்கிறான். நான் அவனை எழுப்பப்போகிறேன்" என்று கூறுகிறார். லாசரு நித்திரையடைந்திருக்கிறான் என்று இயேசுகிறிஸ்து சொன்னவுடனே, "நான் அவனை எழுப்பப்போகிறேன்" என்றும் சொல்லுகிறார். மரித்துப்போனவன் மறுபடியும் உயிரோடு எழும்புவது இயற்கையின் பிரமாணத்தின்படி இயலாத காரியம். ஆனால் இயேசுகிறிஸ்துவால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. ஒரு காரியம் நமக்கு எவ்வளவு கடினமானதாக இருந்தாலும், இயேசுகிறிஸ்துவுக்கு அது எளிதான காரியமாக இருக்கும். லாசரு மரித்துப்போயிருந்தாலும், அவன் நித்திரையாக இருப்பதாகவும், நித்திரையில் இருக்கிறவனை எழுப்புவதுபோல, தாம் அவனை எழுப்பப்போவதாகவும் இயேசுகிறிஸ்து மிகவும் சாதாரணமாகக் கூறுகிறார்.

## அதிகாரம் - 11

இயேசுகிறிஸ்து யூதேயா தேசத்திற்குப்போவதை அவருடைய சீஷர்கள் விரும்பவில்லை. யூதர்கள் இயேசுவைக் கல்லெறியத்தேடுவதாக சீஷர்கள் கூறுகிறார்கள். இயேசுவோடு யூதேயாவுக்குப்போக சீஷர்கள் பயப்படுகிறார்கள். அவர்களுடைய பயத்தை நீக்குவதற்காக, தாம் யூதேயாவுக்குப் போகவேண்டியதன் காரணத்தை, இயேசு தமது சீஷர்களுக்குத் தெரியப்படுத்துகிறார். லாசரு இவர்களுக்கு அந்நியனல்ல. இவர்களுடைய சிநேகிதன். ஒரு சிநேகிதனுக்கும் அவனுடைய குடும்பத்தாருக்கும் ஒரு நற்கிரியை செய்வதற்காகவே இயேசுகிறிஸ்து யூதேயா தேசத்திற்கு போகப்போகிறார்.

**நித்திரையடைந்திருந்தால் சுகமடைவான்**

**அதற்கு அவருடைய சீஷர்கள்: ஆண்டவரே, நித்திரையடைந்திருந்தால் சுகமடைவான் என்றார்கள். இயேசுவானவர் அவனுடைய மரணத்தைக் குறித்து அப்படிச்சொன்னார்; அவர்களோ நித்திரைசெய்து இளைப்பாறுகிறதைக் குறித்துச் சொன்னாரென்று நினைத்தார்கள் (யோவா 11:12,13).**

லாசரு நித்திரையடைந்திருக்கிறான் என்று இயேசுகிறிஸ்து சொன்னதன் பொருளை சீஷர்கள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. அவனுடைய மரணத்தைக்குறித்து இயேசுவானவர் அப்படிச் சொல்கிறார். அவர்களோ நித்திரைசெய்து இளைப்பாறுகிறதைக்குறித்து இயேசுகிறிஸ்து சொல்லுகிறார் என்று நினைக்கிறார்கள். தங்களுடைய தவறான எண்ணத்தோடு, சீஷர்கள் இயேசுவிடம் "ஆண்டவரே, நித்திரையடைந்திருந்தால் சுகமடைவான்" என்று கூறுகிறார்கள்.

இவர்களுக்கும் தங்களுடைய சிநேகிதனாகிய லாசருவின்மீது அக்கரையிருக்கிறது. அதைவிட தங்கள் சொந்த ஜீவன்மீது அதிக அக்கரையிருக்கிறது. லாசரு சுகமடைவான் என்று எதிர்பார்க்கிறார்கள். அவன் நித்திரையடைந்திருப்பதினால், வியாதி நீங்கி, சுகமடைந்து, சரீர களைப்பில் நித்திரையாயிருக்கிறான் என்று நினைக்கிறார்கள். தன் வியாதியிலிருந்து லாசரு சிறிது சிறிதாக குணமடைந்து, இப்போது நித்திரையாயிருக்கும் நிலமைக்கு வந்திருக்கிறான். ஆகையினால் சீக்கிரம் பூரண சுகமடைவான் என்று சீஷர்கள் நினைக்கிறார்கள். நன்றாக நித்திரைசெய்வது சரீரத்திற்கு சுகத்தையும் பெலனையும் ஆரோக்கியத்தையும் தரும். நித்திரை செய்வது இயற்கையின் வைத்தியம்.

விசுவாசிகளின் மரணமானது நித்திரை செய்வது போலவே இருக்கும். விசுவாசிகள் மரித்துப்போகும்போது நித்திரையடைகிறார்கள். நமக்கு இதைப்போல நல்ல நித்திரை கிடைக்க வேண்டுமென்று நாம் ஜெபிக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவின் சீஷர்களுக்கு லாசருவின்மீது இருக்கிற அக்கரையைவிட, தங்கள் சொந்த ஜீவன்மீது அதிக அக்கரையிருக்கிறது. இயேசுகிறிஸ்து இப்போது யூதேயா தேசத்திற்குப் போகவேண்டிய அவசியமில்லையென்று சீஷர்கள் நினைக்கிறார்கள். யூதர்கள் மத்தியில் இயேசுகிறிஸ்துவின்மீது கோபமும், விரோதமும், கொலைவெறியும் இருக்கிறது. ஆகையினால் இயேசு இப்போது தம்மை அவர்களுக்கு வெளிப்படையாக வெளிப்படுத்தக்கூடாது என்று சீஷர்கள் எதிர்பார்க்கிறார்கள். இயேசுகிறிஸ்து போகாமலேயே நித்திரையடைந்திருக்கிறவன் சுகமடைவான் என்று சீஷர்கள் சிந்திக்கிறார்கள்.

பலவேளைகளில் விசுவாசிகளாகிய நாம் கூட, சீஷர்களைப்போலவே சிந்திக்கிறோம். தேவன் நம்மிடத்தில் சில காரியங்களைச் செய்யுமாறு ஒப்புக்கொடுத்திருப்பார். அதைச் செய்யும்போது அநேக பிரச்சனைகளும் பாடுகளும் உண்டாகும். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் நாம் அந்த வேலையைச் செய்யாமல், அதை அப்படியே விட்டுவிடுவோம். நாம் அந்த வேலையைச் செய்யாவிட்டாலும், அந்த வேலை கர்த்தருக்குச் சித்தமான வேலையென்றால், அது தானாக நடைபெறும் என்று எதிர்பார்ப்போம். இப்படி நினைப்பது தேவனுடைய சித்தமல்ல. தேவன் நம்மை அழைத்த அழைப்புக்கு நாம் உண்மையுள்ளவர்களாக இருக்கவேண்டும். நமக்குப் பாடுகளும் வேதனைகளும் இருந்தாலும் தேவனுடைய சித்தத்தைச் செய்வதில் பின்வாங்கிப்போய்விடக்கூடாது. ஆபத்துக்கள் மத்தியிலும் ஊழியம் செய்யும்போது, கர்த்தர் நம்மைக் கைவிடாமல் பாதுகாப்பார் என்று விசுவாசித்து, உண்மையாகவும் உத்தமமாகவும் ஊழியம் செய்யவேண்டும். ஊழியத்தைப் பாதியிலேயே விட்டுவிடக்கூடாது.

## அதிகாரம் - 11

எல்லாம் தானாக நடக்கும் என்று சீஷர்கள் நினைக்கிறார்கள். இயேசுகிறிஸ்து அவர்களுடைய தவறான சிந்தனையைத் திருத்துகிறார். இயேசுவானவர் லாசருவினுடைய மரணத்தைக்குறித்துச் சொல்லுவதற்காகவே, "அவன் நித்திரையடைந்திருக்கிறான்'' என்று சொல்கிறார். ஆனால் இயேசுகிறிஸ்துவின் சீஷர்களோ அவருடைய வார்த்தையைப் புரிந்துகொள்ளாமல் இருக்கிறார்கள். பழைய ஏற்பாட்டில்கூட பரிசுத்தவான்களின் மரணம் நித்திரையென்று பல சம்பவங்களில் எழுதப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்து லாசருவின் மரணத்தை நித்திரையென்று சொன்னபோது, சீஷர்கள் அந்த வார்த்தையை ஆவிக்குரிய ரீதியாகப் புரிந்துகொள்ளவேண்டும். ஆனால் சீஷர்களோ தங்களுக்கு ஆபத்து வரும் என்று நினைப்பதினால், இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளை ஆவிக்குரிய ரீதியாகச் சிந்திக்காமல், உலகப்பிரகாரமாகச் சிந்தித்து, அந்த ஆபத்திலிருந்து தப்பித்துக்கொள்வதற்கு வகை தேடுகிறார்கள்.

மரித்துப்போயிருக்கிற லாசருவை இயேசுகிறிஸ்து "எழுப்பப்போகிறேன்" என்று கூறுகிறார். இயற்கையின் வல்லமையினால் இது சாத்தியமில்லை. ஆனால் இயேசுகிறிஸ்துவால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. ஒரு காரியத்தை இயேசுகிறிஸ்து செய்யப்போவதாகக் கூறும்போது, அதைச் செய்ய அவரால் ஆகும் என்று நாம் விசுவாசிக்கவேண்டும். அற்புதங்களையும் அதிசயங்களையும் செய்வதற்கு இயேசுகிறிஸ்து தெய்வீக வல்லமையை உடையவர். சீஷர்கள் இயேசுவின் வார்த்தையைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. ஆகையால் இயேசுகிறிஸ்து அவர்களிடம் "லாசரு மரித்துப்போனான்" என்று வெளிப்படையாகச் சொல்லி தம்முடைய கருத்தை அவர்களிடம் விளக்குகிறார்.

### லாசரு மரித்துப்போனான்

**அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: லாசரு மரித்துப்போனான் என்று வெளிப்படையாய்ச் சொல்லி; நான் அங்கே இராததினால் நீங்கள் விசுவாசமுள்ளவர்களாகிறதற்கு ஏதுவுண்டென்று உங்கள் நிமித்தம் சந்தோஷப்படுகிறேன்; இப்பொழுது அவனிடத்திற்குப் போவோம் வாருங்கள் என்றார் (யோவா 11:14,15).**

லாசரு நித்திரையடைந்திருக்கிறான் என்று இயேசு கூறியதை சீஷர்கள் மெய்யாகவே புரிந்துகொள்ளவில்லையா அல்லது பெத்தானியாவுக்குப்போனால் தங்களுக்கு ஆபத்து உண்டாகும் என்று நினைத்து, புரியாததுபோல பேசுகிறார்களா என்று விவரமாகத் தெரியவில்லை. ஆனாலும் இயேசுகிறிஸ்து அவர்களுடைய சந்தேகத்தை நிவிர்த்திசெய்து, லாசரு மரித்துப்போனான் என்றும், நாம் பெத்தானியாவுக்குப் போகிறோம் என்றும், தம்முடைய வார்த்தையைத் தெளிவாகவும் உறுதியாகவும் சொல்லுகிறார். இதற்கு முன்பு "லாசரு நித்திரையடைந்திருக்கிறான்'' என்று மறைபொருளாகப் பேசியவர், இப்போது "லாசரு மரித்துப்போனான்" என்று வெளிப்படையாகச் சொல்லுகிறார்.

பெத்தானியாவுக்குத் தாம் உடனடியாக ஏன் போகவில்லையென்றும், தாம் காலதாமதம் செய்ததற்கான காரணத்தையும் இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்குத் தெளிவுபடுத்துகிறார். "நான் அங்கேயிராததினால், உங்களினிமித்தம் சந்தோஷப்படுகிறேன்" என்று இயேசுகிறிஸ்து குறிப்பிடுகிறார். இப்போது தம்முடைய சீஷர்களோடு இயேசுகிறிஸ்து பெத்தானியாவுக்குப் போகப்போகிறார். அங்கு மரித்துப்போயிருக்கிற லாசருவை மறுபடியும் உயிரோடு எழுப்பப்போகிறார். இயேசு செய்யப்போகிற அற்புதத்தைக் கண்டு யூதர்களில் அநேகர் அவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களாகப்போகிறார்கள் (யோவா 11:45).

இயேசுகிறிஸ்துவின் அற்புதங்களை நாம் நம்முடைய கண்களினால் பிரத்தியட்சமாகப் பார்க்கும்போது, நம்முடைய அவிசுவாசம் நீங்கும். விசுவாசம் பெருகும். நம்மிடத்தில் விசுவாசக் குறைவு காணப்படுமென்றால் அது நீங்கிப்போய், நமக்குள் அதிக விசுவாசம் உண்டாகும். இயேசுகிறிஸ்துவின் சீஷர்களிடத்தில் விசுவாசக் குறைவு காணப்படுகிறது. இயேசு மரித்துப்போன லாசருவை உயிரோடு எழுப்பி அற்புதம் செய்யப்போகிறார். இந்த சம்பவத்தினால் அவர்கள் விசுவாசமுள்ளவர்களாகிறதற்கு ஏது உண்டாகும். ஆகையினால்தான் இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் "நான் அங்கேயிராததினால் நீங்கள் விசுவாசமுள்ளவர்களாகிறதற்கு ஏது உண்டென்று உங்களிமித்தம் சந்தோஷப்படுகிறேன்" என்று கூறி "இப்பொழுது அவனிடத்திற்குப் போவோம் வாருங்கள்" என்றும் தம்முடைய சீஷர்களிடத்தில் கூறுகிறார்.

## அதிகாரம் - 11

மரணம் கிறிஸ்துவின் அன்பிலிருந்து நம்மைப் பிரிப்பதில்லை. லாசரு நித்திரையாயிருப்பதினால் நாம் அங்கு போகவேண்டியதில்லை என்று கூறுகிறவர்கள், லாசரு மரித்துப்போயிருப்பதைத் தெரிந்து கொண்டால், நாம் அங்கு போவதினால் ஒரு பிரயோஜனமுமில்லை என்று விவாதம் பண்ணுவார்கள். தம்முடைய சீஷர்கள் தம்மிடத்தில் விவாதம்பண்ணுவதற்கு இயேசுகிறிஸ்து இடங்கொடுக்காமல், "இப்பொழுது அவனிடத்திற்குப் போவோம் வாருங்கள்" என்று தம்முடைய முடிவைத் தமது சீஷர்களிடம் அறிவிக்கிறார்.

**மரிக்கும்படி நாமும் போவோம்**

**அப்பொழுது திதிமு என்னப்பட்ட தோமா மற்றச் சீஷர்களை நோக்கி: அவரோடேகூட மரிக்கும்படி நாமும் போவோம் வாருங்கள் என்றான் (யோவா 11:16).**

இயேசுகிறிஸ்துவின் சீஷர்களில் தோமாவும் ஒருவன். இவனுடைய மறுபெயர் திதிமு என்பதாகும். எபிரெய பாஷையில் தோமா என்னும் பெயருக்கும், கிரேக்க பாஷையில் திதிமு என்னும் பெயருக்கும் "இரட்டையர்" என்று பொருள். ஒருவேளை தோமா இரட்டைப்பிள்ளைகளில் ஒருபிள்ளையாக இருக்கலாம். இயேசுகிறிஸ்து "இப்பொழுது லாசருவினிடத்திற்குப் போவோம் வாருங்கள்" என்று கூறும்போது, தோமா தைரியமாக மற்ற சீஷர்களை நோக்கி "அவரோடேகூட மரிக்கும்படி நாமும் போவோம் வாருங்கள்" என்று கூறுகிறான்.

லாசரு இப்போது மரித்துப் போய்விட்டான். ஆகையினால் இப்போது அவனை யாராவது அடக்கம்பண்ண வேண்டும். நாமும் அங்கு போய் லாசருவின் சரீரத்தை அடக்கம்பண்ணுவதற்கு உதவிபுரியலாம் என்னும் பொருளில் தோமா இந்த வாக்கியத்தைக் கூறியிருக்கலாம். ஒருவேளை தோமாவும் லாசருவும், மற்ற சீஷர்களைவிட அதிக சிநேகத்தோடு இருந்திருக்கலாம். லாசரு இல்லாமல் நாம் மாத்திரம் எப்படி ஜீவிப்பது என்று நினைத்து, தோமா இந்த வாக்கியத்தை உள்ளான வருத்தத்தோடு பேசியிருக்கலாம்.

நமக்கு ஒரு சிலர்மீது நெருங்கிய சிநேகம் இருக்கும். அவர்கள் இல்லாமல் நம்மால் வாழமுடியாது என்று நாம் நினைக்கலாம். அவர்கள் மரிக்கும்போது அவர்களோடு சேர்ந்து நாமும் மரித்துப்போனால் நலமாயிருக்கும் என்று கூட நினைப்போம். நம்முடைய ஜீவன் இதுபோல யாருடைய ஜீவனோடும் பிணைக்கப்பட்டிருக்கக்கூடாது. நாம் ஜீவிக்கவேண்டும் என்று இயேசுகிறிஸ்து கட்டளை கொடுக்கும்போது, நாம் ஜீவிக்க ஆயத்தமாகயிருக்கவேண்டும். நம்முடைய ஜீவனுக்கு இயேசுகிறிஸ்துவே ஆதாரமாகவும் அஸ்திபாரமாகவும் இருக்கவேண்டும். இந்த உலகத்தில் நமக்குப் பிரியமானவர்கள் மரித்துப்போனால்கூட, நாம் இயேசுகிறிஸ்துவின் சித்தத்தின் பிரகாரம், அவர் நமக்கு அனுமதிக்கிற காலம் வரையிலும், அவருக்குப் பிரியமாகவும் பிரயோஜனமாகவும் ஜீவிக்கவேண்டும்.

நாம் மரிக்கும்போது இயேசு கிறிஸ்துவோடு கூடயிருப்போம் என்னும் சந்தோஷம் நமக்குள் காணப்படவேண்டும். இதுவே நம்முடைய விசுவாசத்தின் அஸ்திபாரம். நாம் மரித்தபின்பு இயேசுகிறிஸ்துவோடு நித்தியகாலமாக கூட இருக்கப்போவதினால், நம்முடைய மரணம் நமக்கு சந்தோஷமான சம்பவமாக இருக்கவேண்டும். நமது மரணத்தைச் சந்தோஷமாக எதிர்கொள்ளவேண்டும். நமக்கு நெருக்கமானவர்களில் அநேகர் மரித்துப்போகும்போது, இந்த உலகத்தில் வாழவேண்டும் என்னும் ஆசை நமக்கும் குறைந்துபோகும். பொதுவாக ஒரு சிலர் இப்படிப்பட்ட சூழ்நிலைகளில்தான் பரலோகத்தைப்பற்றி சிந்தித்துப் பார்ப்பார்கள்.

தோமா "அவரோடே கூட மரிக்கும்படி நாமும் போவோம்" என்று கூறுவது, ஒருவேளை லாசரு மரித்துப்போனதினால், லாசருவோடு கூட நாமும் மரித்துப்போவோம் என்று துக்கத்தில் கூறியவாக்கியமாகயிருக்கலாம். தோமாவின் வாக்கியத்திற்கு வேறுவிதமாகவும் வியாக்கியானம் கூறலாம். இயேசுகிறிஸ்து பெத்தானியாவுக்குப் போகப்போகிறார். அங்கு அவருடைய உயிருக்கு ஆபத்து இருக்கிறது. யூதர்கள் அவரைக் கல்லெறிந்து கொன்றுபோடலாம். இயேசுகிறிஸ்து மரித்துப்போனால் அவரோடுகூட நாமும் மரித்துப்போகலாம் என்னும் பொருளில் தோமா இந்த வாக்கியத்தைக் கூறியிருக்கலாம்.

## அதிகாரம் - 11

இயேசுகிறிஸ்து தம் சீஷர்களிடம் "இப்பொழுது லாசருவினிடத்திற்குப் போவோம் வாருங்கள்" என்று கூறுகிறார்." இயேசுகிறிஸ்து லாசருவின் கிராமத்திற்குப் போனால் மரித்துப்போவார். அவரோடுகூட நாமும் மரித்துப்போகவேண்டியதுவரும். இயேசு அழைப்பதினால், நாமும் அங்குபோய் அவரோடு மரிப்போம்" என்னும் பொருளில் தோமா இந்த வாக்கியத்தைக் கூறியிருக்கலாம். இயேசுகிறிஸ்துவின்மீது யூதர்கள் எந்த அளவுக்கு கோபமாக இருக்கிறார்கள் என்பது தோமாவுக்கு நன்றாகத் தெரியும். அவர் யூதேயா தேசத்திற்குப்போனால் யூதர்கள் அவரைக் கொன்றுபோடுவார்கள் என்று எல்லோருமே எதிர்பார்க்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து யூதேயாவுக்குப் போவது மரிப்பதற்காகத்தான் என்று மற்றவர்களைப் போல தோமாவும் நினைக்கிறான். தன்னுடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவோடு தோமாவும் மரித்துப்போக ஆயத்தமாகயிருக்கிறான். இயேசுவின்மீது தோமாவுக்கு அதிக அன்புள்ளது. மற்ற சீஷர்களும் தன்னைப்போலவே இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றிச் சொல்லவேண்டுமென்று அவர்களுக்கு ஆலோசனை கூறுகிறான். "அவரோடேகூட மரிக்கும்படி நாமும் போவோம் வாருங்கள்" என்று அழைக்கிறான். விசுவாசிகளாகிய நாம் பிறருடைய துக்கங்களில் பங்குபெற்று, ஒருவருக்கொருவர் ஆறுதலாக இருக்கவேண்டும்.

### லாசரு மரித்துப்போனான்
### யோவா 11 : 17-20

**யோவா 11:17. இயேசு வந்தபோது அவன் கல்லறையில் வைக்கப்பட்டு நாலுநாளாயிற்றென்று கண்டார்.**

**யோவா 11:18. பெத்தானியா ஊர் எருசலேமுக்குச் சமீபமாய் ஏறக்குறைய இரண்டுமைல் தூரத்திலிருந்தது.**

**யோவா 11:19. யூதரில் அநேகர் மார்த்தாள் மரியாள் என்பவர்களுடைய சகோதரனைக் குறித்து அவர்களுக்கு ஆறுதல் சொல்லும்படி அவர்களிடத்தில் வந்திருந்தார்கள்.**

**யோவா 11:20. இயேசு வருகிறார் என்று மார்த்தாள் கேள்விப்பட்டபோது, அவருக்கு எதிர்கொண்டுபோனாள்; மரியாளோ வீட்டிலே உட்கார்ந்திருந்தாள்.**

**நாலுநாளாயிற்று**

**இயேசு வந்தபோது அவன் கல்லறையில் வைக்கப்பட்டு நாலுநாளாயிற்றென்று கண்டார். பெத்தானியா ஊர் எருசலேமுக்குச் சமீபமாய் ஏறக்குறைய இரண்டுமைல் தூரத்திலிருந்தது (யோவா 11: 17,18).**

இயேசுகிறிஸ்துவும் அவருடைய சீஷர்களும் யூதேயாவுக்குப் போக வேண்டுமென்று தீர்மானமாயிற்று. சீஷர்களும் இயேசுகிறிஸ்துவோடு போகவேண்டுமென்று தோமா ஆலோசனை கூறுகிறான். பெத்தானியாவுக்கு அருகாமையில் இயேசுகிறிஸ்து வருகிறார். இந்த ஊர் எருசலேமுக்குச் சமீபமாய் ஏறக்குறைய இரண்டு மைல் தூரத்திலுள்ளது. இயேசுகிறிஸ்து இந்த ஊரில் செய்கிற அற்புதத்தைக் குறித்து எருசலேம் நகரத்திலுள்ள ஜனங்களும் கேள்விப்படுவார்கள்.

நமக்கு நெருக்கமானவர்கள் யாராவது மரித்துப்போனால், அவருடைய குடும்பத்தில் என்னென்ன மாற்றங்களெல்லாம் ஏற்பட்டிருக்கும் என்பது நமக்குத் தெரியாது. இயேசுகிறிஸ்து இதற்கு முன்பு பெத்தானியா ஊரில் இருந்தபோது, அவருடைய சிநேகிதனாகிய லாசரு தன் வீட்டிலிருந்தான். இப்போதோ அவன் மரித்துப்போய் கல்லறையில் வைக்கப்பட்டிருக்கிறான். லாசருவின் சரீரத்தைக் கல்லறையில் வைத்து நான்கு நாளாயிற்று. சில சமயங்களில் தேவனுடைய அற்புதம் உடனடியாகவும் நடைபெறலாம், காலதாமதமாகவும் நடைபெறலாம். எப்படியிருந்தாலும் தேவனுடைய தீர்மானத்தின் பிரகாரம், அவருக்குச் சித்தமான காரியம் நிச்சயமாகவே நிறைவேறும். வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கள் சில சமயங்களில் மெதுவாக நடைபெறலாம். காலதாமதமானாலும் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டிருக்கிறவர்கள் இரட்சிக்கப்படுவது நிச்சயம்.

## அதிகாரம் - 11

### ஆறுதல் சொல்லுங்கள்

**யூதரில் அநேகர் மார்த்தாள் மரியாள் என்பவர்களுடைய சகோதரனைக் குறித்து அவர்களுக்கு ஆறுதல் சொல்லும்படி அவர்களிடத்தில் வந்திருந்தார்கள் (யோவா 11:19).**

லாசருவின் மரணத்தினால் அவனுடைய சகோதரிகள் மிகுந்த துக்கத்திலிருக்கிறார்கள். யூதரில் அநேகர் லாசருவின் சகோதரிகளாகிய மார்த்தாள் மரியாள் ஆகியோருக்கு ஆறுதல் சொல்லும்படி அவர்களிடத்தில் வந்திருக்கிறார்கள். எங்கு மரணம் இருக்கிறதோ அங்கு துக்கமும், அழுகையும், ஒப்பாரியும் இருக்கும். இப்போது மார்த்தாளின் வீட்டில் மரணம் உண்டாயிருக்கிறது. இவர்கள் தேவனுக்குப் பயந்து ஜீவிக்கிறவர்கள். இவர்களுடைய குடும்பத்தில் தேவனுடைய ஆசீர்வாதம் தங்கியிருக்கிறது. இருப்பினும் இந்த வீட்டிலும் லாசருவின் மரணத்தினால் துக்கம் நிறைந்திருக்கிறது. தேவனுடைய கிருபை நம்முடைய இருதயத்தின் கலக்கங்களை நீக்கும் (யோவா 14:1). இருதயத்திலிருந்து துக்கமும் கலக்கமும் நீங்கினாலும், துக்கவீட்டிலிருந்து வருத்தம் நீங்குவதில்லை.

துக்கப்படுகிறவர்கள் எங்கே இருக்கிறார்களோ அங்கே ஆறுதல் சொல்லுகிறவர்களும் இருக்கவேண்டும். துக்கப்படுகிறவர்களோடு நாமும் துக்கப்படவேண்டும். அழுகிறவர்களோடு நாமும் அழவேண்டும். அவர்களுக்கு ஆறுதல் சொல்லவேண்டும். இது விசுவாசிகளாகிய நமது கடமை. லாசருவின் மரணத்தினால் அவருடைய சகோதரிகள் துக்கத்தோடிருக்கிறார்கள். யூதரில் அநேகர் இந்த சகோதரிகளுக்கு ஆறுதல் சொல்லுவதற்காக அவர்களுடைய வீட்டில் கூடிவந்திருக்கிறார்கள்.

லாசரு உயிரோடிருந்தபோது அவனுக்கு நற்பெயர் இருந்திருக்கவேண்டும். ஆகையினால்தான் அநேகர் துக்கம் விசாரிப்பதற்கு வந்திருக்கிறார்கள். லாசரு மரித்துப்போனாலும் அவன் தேவனுடைய சமுகத்தில் இருப்பதற்காகவே போயிருக்கிறான். நமக்கு அறிமுகமான விசுவாசிகள் நமக்கு முன்பாக மரித்துப்போனால், அவர்கள் கர்த்தருடைய சமுகத்தில் நமக்கு முன்பாகப்போய் சந்தோஷமாக இருக்கிறார்கள் என்று விசுவாசிக்கவேண்டும். இந்த விசுவாசமே நமக்கு ஆறுதலைத் தரும்.

பெத்தானியா கிராமத்தில் லாசருவின் குடும்பத்தார் பிரபல்யமானவர்களாக இருந்திருக்கவேண்டும். ஆகையினால்தான் யூதரில் அநேகர் இந்த சகோதரிகளுக்கு ஆறுதல் சொல்ல வந்திருக்கிறார்கள். ஏராளமான ஜனங்கள் இவர்களுடைய வீட்டிற்கு வந்திருப்பதும் தேவனுடைய சித்தத்தின் பிரகாரமாகவே நடைபெறுகிறது. இயேசுகிறிஸ்து மரித்துப்போன லாசருவை உயிரோடு எழுப்பப்போகிறார். அந்த அற்புத சம்பவத்திற்கு இங்கு வந்திருக்கும் யூதர்களெல்லோரும் கண்ணாரக்கண்ட சாட்சிகளாகயிருப்பார்கள். தேவனுடைய நாமம் ஒரு சிலர் மத்தியில் மகிமைப்படுவதற்குப் பதிலாக, அநேகர் மத்தியில் மகிமைப்படப்போகிறது.

### மார்த்தாள்

**இயேசு வருகிறார் என்று மார்த்தாள் கேள்விப்பட்டபோது, அவருக்கு எதிர்கொண்டுபோனாள்; மரியாளோ வீட்டிலே உட்கார்ந்திருந்தாள் (யோவா 11:20).**

நம்முடைய சிநேகிதர்கள் நம்மோடு கூடயிருக்கும்போது அவர்களுடைய முக்கியத்துவம் நமக்குத் தெரியாது. அவர்கள் மரித்துப்போன பின்புதான் அவர்களைப்பற்றி நாம் அதிகமாக யோசிப்போம். அவர்கள் நம்மோடு கூடயிருந்தால் மிகவும் நன்றாயிருக்கும் என்று விரும்புவோம். இயேசுகிறிஸ்து பெத்தானியா ஊருக்கு வந்துகொண்டிருக்கிறார். இயேசு வருகிறார் என்று மார்த்தாள் கேள்விப்படுகிறாள். இயேசு எப்படியும் தங்கள் கிராமத்திற்கு வருவாரென்று மார்த்தாள் ஒருவேளை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கலாம். இயேசு வந்திருக்கிறாரா என்று மார்த்தாள் அநேகரிடம் விசாரித்திருக்கலாம். இயேசு வருகிறார் என்னும் செய்தியை மார்த்தாள் கேள்விப்படுகிறாள். உடனே அவள் இயேசுவுக்கு எதிர்கொண்டு போகிறாள். இயேசுவைச் சந்திப்பதற்காக மார்த்தாள் போகிறாள். அப்போது மரியாள் மார்த்தாளோடு போகாமல் வீட்டிலேயே இருக்கிறாள்.

## அதிகாரம் - 11

ஒருவேளை இயேசுகிறிஸ்து வந்திருக்கிறார் என்னும் செய்தியை மரியாள் கேள்விப்படாமல் இருந்திருக்கலாம். வீட்டுக்காரியங்களில் கவனம் செலுத்துகிற மார்த்தாளுக்கு இயேசுகிறிஸ்து வந்திருப்பதைப்பற்றிய செய்தி முதலாவதாக அறிவிக்கப்பட்டிருக்கலாம். அல்லது ஒருவேளை, மார்த்தாளைப்போலவே மரியாளுக்கும் இயேசுகிறிஸ்து வந்திருக்கிறார் என்னும் செய்தி அறிவிக்கப்பட்டிருக்கலாம். தன்னுடைய சகோதரன் மரித்துப்போன துக்கத்தில் மரியாள் வீட்டில் அழுதுகொண்டிருக்கலாம்.

லூக்கா எழுதின சுவிசேஷத்தில் மார்த்தாள் மரியாள் ஆகியோரைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறது. அப்போது, மரியாள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து அவருடைய வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தாள். மார்த்தாளோ பற்பல வேலைகளைச் செய்வதில் மிகவும் வருத்தமடைந்தாள் (லூக் 10:38-42). இப்போது இந்த சகோதரிகளுடைய மனப்பாங்கு மாறியிருக்கிறது. பொதுவாக வீட்டுவேலைகளைச் செய்வதில் அதிக கவனம் செலுத்துகிற மார்த்தாள், இப்போது இயேசுகிறிஸ்துவைப் பார்ப்பதற்கு முதலாவதாகப் போகிறாள். இயேசுகிறிஸ்துவின் பாதத்தில் அமர்ந்து அவருடைய வார்த்தைகளைக் கேட்கிற மரியாளோ, அவரைப் பார்க்கப் போகாமல் வீட்டிலேயே இருந்துவிடுகிறாள்.

மார்த்தாள் எப்போதுமே சுறுசுறுப்பாக செயல்படுகிறவள். வீட்டுவேலைகளை விறுவிறுப்பாகச் செய்வாள். இங்கும் அங்கும் ஓடி ஆடி வேலைசெய்வாள். எல்லா வேலைகளையும் தன்மேல் இழுத்துப் போட்டுக்கொண்டு, தேவனைப்பற்றியோ, சத்திய வசனங்களைப்பற்றியோ, ஆவிக்குரிய காரியங்களைப்பற்றியோ தியானிக்கமாட்டாள். சாதாரண நாட்களில் இப்படியிருக்கிற மார்த்தாள், தன் சகோதரன் மரித்துப்போனதினால் மிகவும் துக்கமடைந்திருக்கிறாள். இருதயத்தின் துக்கத்தினால் அவளுடைய உள்ளத்தில் இயேசுகிறிஸ்துவின்மீது விசுவாசமும் பக்தியும் அதிகரித்திருக்கிறது. பொதுவாக வீட்டுவேலைகளைச் செய்கிறவள், இப்போது துக்கத்திலிருப்பதினால் இயேசுகிறிஸ்துவிடம் ஆறுதல் பெறவேண்டுமென்று அவரைத் தேடிப்போகிறாள்.

மரியாளின் சுபாவம் மார்த்தாளின் சுபாவத்திற்கு நேர்மாறானது. எல்லா வேலைகளையும் மரியாள் முன்னின்று செய்யமாட்டாள். இயேசுகிறிஸ்துவின் வசனத்தைக் கேட்பதிலும், ஆவிக்குரிய காரியங்களைத் தியானம்பண்ணுவதிலும் மரியாள் அதிக கவனம் செலுத்துவாள். தன் சகோதரன் மரித்துப்போனதினால் மரியாளுக்கும் துக்கம் உண்டாயிற்று. ஆனால் மரியாளோ தன் துக்கத்தில் இயேசுகிறிஸ்துவை மறந்துவிடுகிறாள். துக்கம் இவளுக்கு கண்ணியாயிற்று. தன்னுடைய வருத்தத்தையும் பாரத்தையும் இயேசுகிறிஸ்துவின் பாதபடியில் சமர்ப்பிப்பதற்குப் பதிலாக, எல்லாவற்றையும் மரியாள் தன்மீதே சுமத்திக்கொள்கிறாள்.

ஆவிக்குரிய காரியங்களில் வளர்ச்சி பெற்றிருக்கிறவர்கள்கூட மரியாளைப்போல தவறு செய்வதற்கு வாய்ப்புள்ளது. நமக்கு சோதனைகள் வரும்போது இயேசு கிறிஸ்துவைப் பற்றிக்கொள்ளவேண்டும். நம்முடைய சொந்த உணர்ச்சிகளுக்கும், வருத்தங்களுக்கும், சோதனைகளுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்து, தேவனை மறந்து சோர்ந்துபோய்விடக்கூடாது.

### இயேசுவும் மார்த்தாளும்
### யோவா 11 : 21-27

**யோவா 11:21. மார்த்தாள் இயேசுவினிடத்தில் வந்து: ஆண்டவரே, நீர் இங்கேயிருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான்.**

**யோவா 11:22. இப்பொழுதும் நீர் தேவனிடத்தில் கேட்டுக் கொள்ளுவதெதுவோ அதை தேவன் உமக்குத் தந்தருளுவாரென்று அறிந்திருக்கிறேன் என்றாள்.**

**யோவா 11:23. இயேசு அவளை நோக்கி: உன் சகோதரன் உயிர்த்தெழுந்திருப்பான் என்றார்.**

**யோவா 11:24. அதற்கு மார்த்தாள்: உயிர்த்தெழுதல் நடக்கும் கடைசிநாளிலே அவனும் உயிர்த்தெழுந்திருப்பான் என்று அறிந்திருக்கிறேன் என்றாள்.**

## அதிகாரம் - 11

**யோவா 11:25. இயேசு அவளை நோக்கி: நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்;**

**யோவா 11:26. உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்; இதை விசுவாசிக்கிறாயா என்றார்.**

**யோவா 11:27. அதற்கு அவள்: ஆம், ஆண்டவரே, நீர் உலகத்தில் வருகிறவரான தேவகுமாரனாகிய கிறிஸ்து என்று நான் விசுவாசிக்கிறேன் என்றாள்.**

**நீர் இங்கே இருந்தீரானால்**

**மார்த்தாள் இயேசுவினிடத்தில் வந்து: ஆண்டவரே, நீர் இங்கேயிருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான். இப்பொழுதும் நீர் தேவனிடத்தில் கேட்டுக் கொள்ளுவதெதுவோ அதை தேவன் உமக்குத் தந்தருளுவாரென்று அறிந்திருக்கிறேன் என்றாள் (யோவா 11:21,22).**

லாசரு வியாதியாயிருந்தபோது இயேசுகிறிஸ்து தங்களோடு இல்லாமற் போனதற்காகவும், காலதாமதமாகத் தங்களைப் பார்க்க வருவதற்காகவும் மார்த்தாள் இயேசுகிறிஸ்துவின்மீது முதலாவதாகக் குற்றம் சுமத்துகிறாள். "நீர் இங்கேயிருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான்" என்று கூறுகிறாள்.

மார்த்தாள் இயேசுகிறிஸ்துவின் வல்லமையை விசுவாசிக்கிறாள். மார்த்தாளுடைய வார்த்தை அவளுடைய விசுவாசத்திற்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது. தன் சகோதரனுடைய மரணத்தை இயேசுகிறிஸ்துவினால் தவிர்த்திருக்க முடியும் என்று விசுவாசிக்கிறாள். லாசரு வியாதியாயிருந்தபோது இயேசுகிறிஸ்து அவனைப்பார்த்திருப்பாரென்றால், அவன்மீது இயேசுவுக்கு இரக்கம் உண்டாயிருந்திருக்கும். அவர் தமது கிருபையினால் லாசருவைக் குணப்படுத்தியிருப்பார் என்று மார்த்தாள் நம்புகிறாள்.

மார்த்தாளுடைய வார்த்தையில் அவிசுவாசமும் தெரிகிறது. இவளுடைய விசுவாசம் மெய்யானது. ஆனால் நெறிந்த நாணலைப்போல பலவீனமானது. இவள் இயேசுகிறிஸ்துவின் வல்லமையை மட்டுப்படுத்துகிறாள். இயேசுகிறிஸ்து தங்களோடு இருந்தால் மாத்திரமே அவரால் அற்புதம் செய்ய முடியுமென்று நம்புகிறாள். எந்த இடத்தில் இருந்தாலும், இயேசுகிறிஸ்து ஒரு வார்த்தை மாத்திரம் சொன்னால் போதும். அவருடைய வார்த்தையின் பிரகாரம் அற்புதம் நடைபெறும் என்பதை மார்த்தாளால் விசுவாசிக்க முடியவில்லை.

மார்த்தாள் மாம்சப் பிரகாரமாகச் சிந்திக்கிறாள். இயேசுகிறிஸ்துவின் ஞானமும் அன்பும் மற்ற மனுஷரைப்போலவே இருக்கும் என்பது இவளுடைய நம்பிக்கை. தன்னுடைய சகோதரன் வியாதியாக இருக்கிறான் என்னும் செய்தியைக் கேள்விப்பட்டவுடனே, இயேசுகிறிஸ்து மற்ற மனுஷரைப்போல வேகமாக அவனைப்பார்ப்பதற்கு வந்திருக்க வேண்டும் என்றும், இத்தனை நாள் காலதாமதமாக வரக்கூடாது என்றும் மார்த்தாள் எதிர்பார்க்கிறாள்.

தன்னுடைய துக்கத்திலும் மார்த்தாள் தனக்குத்தானே ஆறுதல் கூறுகிறாள். இயேசுகிறிஸ்துவைக் குற்றப்படுத்திப் பேசியதற்காகத் தன்மீதே குற்றம் சுமத்துகிறாள். இயேசுகிறிஸ்து காலதாமதமாக வந்தாலும், அவரால் இன்னும் அற்புதம் செய்ய முடியும் என்றும் விசுவாசிக்கிறாள். "இப்பொழுதும் நீர் தேவனிடத்தில் கேட்டுக்கொள்வதெதுவோ அதைத் தேவன் உமக்கு தந்தருளுவார் என்று அறிந்திருக்கிறேன்" என்று விசுவாசத்தோடு கூறுகிறாள்.

மார்த்தாளுடைய இருதயத்தில் இன்னும் நம்பிக்கை இருக்கிறது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய கிருபையை வெளிப்படுத்த வேண்டுமென்று அவரிடத்தில் பணிந்து விண்ணப்பம்பண்ணுகிறாள். தேவனுடைய சமுகத்தில் நாம் விண்ணப்பம்பண்ணும்போது, நமக்கு எப்படி விண்ணப்பம்பண்ணுவது என்று தெரியவில்லை என்றாலும், அல்லது தேவனிடத்திலிருந்து எதை எதிர்பார்க்க வேண்டுமென்று தெரியவில்லையென்றாலும், எல்லாவற்றையும் தேவனுடைய சமுகத்தில் அவருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்துவிடுவது மிகவும் நல்லது. "ஆண்டவரே உம்முடைய சித்தத்தின் பிரகாரமாக ஆகக்கடவது" என்று ஜெபிப்பது நல்ல ஜெபமாக இருக்கும்.

## அதிகாரம் - 11

மார்த்தாளுடைய விசுவாசம் மிகவும் பலவீனமாக இருக்கிறது. "ஆண்டவரே உம்மால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. நீர் சர்வ வல்லமையுள்ள தேவன்" என்று இயேசுகிறிஸ்துவிடத்தில் விண்ணப்பம் பண்ணுவதற்குப் பதிலாக "நீர் தேவனிடத்தில் கேட்டுக்கொள்வதெதுவோ அதைத் தேவன் உமக்குத் தந்தருளுவார்" என்று கூறுகிறாள். பிதாவைப்போலவே இயேசுகிறிஸ்துவும் சர்வவல்லமையுள்ளவர். இயேசுகிறிஸ்து பிதாவாகிய தேவனிடம் நமக்காக பரிந்து பேசுகிறவர். அதே சமயத்தில் பிதாவின் சித்தத்தின் பிரகாரம், தாமாகவே, தமது தெய்வீக வல்லமையினால் அற்புதங்களையும் அதிசயங்களையும் செய்கிறவர்.

### உயிர்த்தெழுந்திருப்பான்

**இயேசு அவளை நோக்கி: உன் சகோதரன் உயிர்த்தெழுந்திருப்பான் என்றார் (யோவா 11:23).**

தன்னிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிற மார்த்தாளுக்கு இயேசுகிறிஸ்து ஆறுதலான வார்த்தைகளைக் கூறுகிறார். "உன் சகோதரன் உயிர்த்தெழுந்திருப்பான்" என்று இயேசுகிறிஸ்து மார்த்தாளிடம் ஆறுதலாகப் பேசுகிறார். மார்த்தாள் இயேசுகிறிஸ்துவிடம் விண்ணப்பம்பண்ணும்போது, கடந்த காலத்தில் நடைபெற்ற சம்பவங்களையே முக்கியப்படுத்திப் பேசுகிறாள். நம்முடைய தோல்விகள், நம்முடைய கஷ்டங்கள், நம்முடைய பாடுகள், நம்முடைய வேதனைகள் ஆகியவற்றைப் பற்றியே நாம் தேவனிடத்தில் கண்ணீரோடு விண்ணப்பம்பண்ணுகிறோம். கடந்த காலத்தை நினைவில் வைத்திருப்பது தவறல்ல. அதே வேளையில் வருங்காலத்தில் இயேசுகிறிஸ்து நமக்கு என்ன செய்யப்போகிறார் என்பதையும் யோசித்துப் பார்த்து, அவருடைய சமுகத்தில் நாம் ஆறுதலாக அமர்ந்திருக்கவேண்டும். கடந்த காலத்தைப் பின்னோக்கிப் பார்ப்பதற்குப் பதிலாக, வருங்காலத்தை முன்னோக்கிப் பார்க்கவும் கற்றுக்கொள்ள வேண்டும்.

லாசருவுக்கு இனிமேல் நடைபெறப்போகும் காரியத்தை இயேசுகிறிஸ்து இங்கு கூறுகிறார். "உன் சகோதரன் உயிர்த்தெழுந்திருப்பான்" என்று அவனுக்கு வருங்காலத்தில் சம்பவிக்கப்போகும் காரியத்தை இயேசுகிறிஸ்து அறிவிக்கிறார். கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் எல்லோருமே உயிர்த்தெழுவார்கள். ஆனால் இயேசுகிறிஸ்து இங்கு லாசருவைப்பற்றிக் கூறுவது, அவனுக்கு விசேஷமாக நடைபெறப்போகும் சம்பவம். மரித்துப் போயிருக்கிறவன் இப்போது மறுபடியும் உயிரோடு எழும்பப்போகிறான். கிறிஸ்துவுக்குள் மரித்துப்போன நம்முடைய பெற்றோர், பிள்ளைகள், சகோதர சகோதரிகள், உற்றார் உறவினர்கள், சிநேகிதர்கள் எல்லோருமே கர்த்தருடைய நாளின்போது மறுபடியும் உயிரோடு எழும்புவார்கள்.

### உயிர்த்தெழுதல் நடக்கும் கடைசிநாள்

**அதற்கு மார்த்தாள்: உயிர்த்தெழுதல் நடக்கும் கடைசிநாளிலே அவனும் உயிர்த்தெழுந்திருப்பான் என்று அறிந்திருக்கிறேன் என்றாள் (யோவா 11:24).**

மார்த்தாள் இயேசுகிறிஸ்துவின் வார்த்தையை விசுவாசிக்கிறாள். அதே சமயத்தில் அவளுடைய விசுவாசத்தில் அவிசுவாசமும் கலந்திருக்கிறது. உயிர்த்தெழுதல் நடக்கும் கடைசிநாளிலே, இப்போது மரித்துப்போன லாசருவும் உயிர்த்தெழுந்திருப்பான் என்று மார்த்தாள் நம்புகிறாள். மரித்துப்போன தன் சகோதரனை இயேசுகிறிஸ்துவால் இப்போது, உயிரோடு எழுப்ப முடியும் என்னும் நம்பிக்கை மார்த்தாளின் உள்ளத்தில் இல்லை. லாசரு உயிர்த்தெழுவது கடைசிநாளில்தான் நடக்கும் என்றும், அது இப்போது நடைபெறுவதற்கு வாய்ப்பில்லை என்றும் நினைக்கிறாள். இது மார்த்தாளின் அவிசுவாசம்.

மார்த்தாள் இப்போது மிகுந்த துக்கத்திலிருக்கிறாள். வருத்தமும் துக்கமும் அவளுடைய மனக்கண்களை அடைத்துப்போடுகிறது. மனக்கண்களின் பார்வை மங்கியிருப்பதினால் அவளால் வருங்காலத்தைச் சரியாகப் பார்க்க முடியவில்லை. மார்த்தாளைப்போலவே விசுவாசிகளாகிய நாமும், நமக்கு அதிக பாடுகள் வரும்போது, நம்முடைய தற்காலத்துப் பாடுகளையே நினைத்துக்கொண்டிருக்கிறோம். இயேசுகிறிஸ்துவின் மூலமாக வருங்காலத்தில் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் நம்பிக்கைகளைச் சரியாகப் பார்ப்பதில்லை. அதைக் குறைவாகவே மதிப்பிடுகிறோம்.

## அதிகாரம் - 11

**மரித்தாலும் பிழைப்பான்**

**இயேசு அவளை நோக்கி: நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; (யோவா 11:25)**

இயேசுகிறிஸ்து மரியாளிடம் உயிர்த்தெழுதலைப் பற்றி பேசிக்கொண்டிருக்கிறார். "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்" என்று இயேசுகிறிஸ்து கூறும்போது, அவர் இரண்டு சத்தியங்களை முக்கியப்படுத்துகிறார். அவையாவன: 1. இயேசுகிறிஸ்துவின் தெய்வீக வல்லமை 2. புதிய உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்கள்.

இயேசுகிறிஸ்துவே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறார். இயேசுகிறிஸ்து தேவனிடத்தில் கேட்டுக்கொள்வதெதுவோ அதை தேவன் அவருக்கு தந்தருளுவார் என்று மார்த்தாள் விசுவாசிக்கிறாள். இயேசுகிறிஸ்துவிடமும் தெய்வீக வல்லமை உள்ளது என்பதையும், அவரால் கூடாதகாரியம் ஒன்றுமில்லை என்பதையும் மார்த்தாள் அறிந்துகொள்ளவேண்டும். இதை அவளுக்குத் தெரியப்படுத்துவதற்காகவே, இயேசுகிறிஸ்து அவளிடம் "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்" என்று கூறுகிறார்.

இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற விசுவாசிகள் எல்லோருக்கும், அவர் உயிர்த்தெழுதலும் ஜீவனுமாகயிருப்பது, ஒரு ஆறுதலான சத்தியமாகும். தம்முடைய வல்லமையினால் இயேசுகிறிஸ்து நமக்கு உயிர்த்தெழுதலையும் ஜீவனையும் கொடுக்கப்போகிறார். உயிர்த்தெழுதல் என்பது ஜீவனுக்குத் திரும்பி வருவதாகும். நம்முடைய ஜீவனை நாம் மறுபடியும் பெற்றுக்கொள்வதற்கு இயேசுகிறிஸ்துவே ஆதாரமாகயிருக்கிறார். நாம் மறுபடியும் உயிர்த்தெழும்போது இயேசுகிறிஸ்துவே நமக்கு ஜீவனையும் கொடுக்கிறவர். அவரே நமக்கு ஜீவனாக இருக்கிறார்.

**மரியாமலும் இருப்பான்**

**உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிற வனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்; இதை விசுவாசிக்கிறாயா என்றார் (யோவா 11:26).**

இயேசுகிறிஸ்து மார்த்தாளிடம் தமது புதிய உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்களைக் கூறுகிறார். இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைத்திருக்கிற எல்லோருக்குமே இந்த வாக்குத்தத்தம் கொடுக்கப்படுகிறது. இந்த வாக்குத்தத்தத்தை நாம் பெற்றுக்கொள்ளவேண்டுமென்றால், நமக்கு ஒரு நிபந்தனையும் கொடுக்கப்படுகிறது. "உயிரோடிருந்து நாம் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கவேண்டும்" என்பதே இயேசுகிறிஸ்து நமக்குக் கொடுக்கும் நிபந்தனையாகும்.

"உயிரோடிருந்து" என்னும் வார்த்தைக்கு, "இப்போதுள்ள ஜீவன்" அல்லது "இயற்கையான ஜீவன்" என்று பொருள் கூறலாம். இந்த உலகத்தில் உயிரோடிருந்து இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் எல்லோரும் என்றென்றைக்கும் மரியாமலிருப்பார்கள். அவர்கள் யூதராகயிருந்தாலும், புறஜாதியாராகயிருந்தாலும், அவர்கள் இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைப்பார்களென்றால், அவர்கள் இயேசுகிறிஸ்துவினால் ஜீவிப்பார்கள். இந்த ஜீவியம் ஆவிக்குரிய ஜீவியம் என்று அழைக்கப்படுகிறது.

உயிரோடிருந்து விசுவாசிக்கிறவர்கள், தங்களுடைய விசுவாசத்தினால் பரலோக ஜீவனுக்கும், ஆவிக்குரிய ஜீவனுக்கும் மறுபடியும் பிறக்கிறார்கள். இது ஒரு அற்புதமான வாக்குத்தத்தம். உயிரோடிருந்து இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் என்றென்றைக்கும் மரியாமலிருப்பார்கள். இந்த வாக்குத்தத்தத்தில் இரண்டு ஆசீர்வாதங்கள் உள்ளன. அவையாவன: 1. சரீரத்திற்குக் கொடுக்கப்படும் ஆசீர்வாதம் 2. ஆத்துமாவுக்குக் கொடுக்கப்படும் ஆசீர்வாதம்.

நாம் உயிரோடிருந்து இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும்போது, நாம் என்றென்றைக்கும் மரியாமலிருப்போம். நம்முடைய சரீரம் பாவத்தினால் மரித்தாலும் இது மறுபடியும் ஜீவிக்கும். மாம்ச சரீரம் மரித்து, மறுரூபமான மகிமையுள்ள சரீரமாக மறுபடியும் உயிர்த்தெழும். உயிர்த்தெழுதல் நமது சரீரத்திற்குக் கொடுக்கப்படும் ஆசீர்வாதமாயிருக்கும்.

## அதிகாரம் - 11

நம்முடைய ஆத்துமா மரித்துப்போகாமல் நித்தியகாலமாக ஜீவிக்கும். நாம் உயிரோடிருந்து இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கும்போது, நாம் என்றென்றைக்கும் மரியாமலிருப்போம். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் ஒருபோதும் மரித்துப்போவதில்லை. நம்முடைய ஆத்துமா மரிப்பதற்குப் பதிலாக, நித்திய ஜீவனில் பரிபூரணமடைகிறது. நம்முடைய சரீரம் மரித்துப்போகக்கூடியது. நம்முடைய ஜீவன் நம்மைவிட்டு எடுத்துக்கொள்ளப்படும்போது, நம்முடைய சரீரம் மரித்துப்போகும். நம்முடைய சரீரம் மரித்தாலும் நம்முடைய ஆத்துமாவோ நித்திய காலமாக ஜீவிக்கும்.

இயேசுகிறிஸ்து மார்த்தாளிடம் "உயிரோடிருந்து தம்மை விசுவாசிக்கிறவர்கள் என்றென்றைக்கும் மரியாமலிருப்பார்கள்" என்பதைக் கூறிவிட்டு, "இதை விசுவாசிக்கிறாயா" என்று கேட்கிறார். மார்த்தாள் லாசருவின் மாம்சப்பிரகாரமான வியாதியைப்பற்றியும், அவன் சரீரத்தில் மரித்துப்போனது பற்றியும் யோசித்துக்கொண்டிருக்கிறாள். இயேசுகிறிஸ்துவோ அவளிடம் நித்திய ஜீவனைப்பற்றி பேசி, அதன் வியாக்கியானத்தை அவளுக்கு விளக்கிக் கூறுகிறார்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் எல்லோருமே, நம்முடைய நித்திய ஜீவன்மீது நோக்கமாக இருக்கவேண்டும். இம்மையில் மாத்திரமல்ல, மறுமையிலும் இயேசுகிறிஸ்து நமக்கு ஜீவனைக்கொடுக்கப்போகிறார். அந்த ஜீவன் நித்திய ஜீவனாகயிருக்கும். இந்த உலகத்தில் நமக்கு பல பாடுகளும் வேதனைகளும் உண்டாகலாம். இவையெல்லாம் தற்காலிகமானது. நமக்கு சரீர மரணம் ஏற்படும்போது இந்தப் பாடுகளெல்லாம் முடிந்துபோகும். அதன் பின்பு நாம் மறுபடியும் உயிர்த்தெழுந்து நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வோம். அப்போது நமக்கு பாடுகளோ வேதனைகளோ இருக்காது. விசுவாசிகளாகிய நாம் நம்முடைய நித்திய ஜீவனைப்பற்றித் தியானித்து, சோதனைகளையும் வேதனைகளையும் சகித்துக்கொண்டு, நம்மை நாமே ஆறுதல்படுத்திக்கொள்ள வேண்டும்.

**தேவகுமாரனாகிய கிறிஸ்து**

**அதற்கு அவள்: ஆம், ஆண்டவரே, நீர் உலகத்தில் வருகிறவரான தேவகுமாரனாகிய கிறிஸ்து என்று நான் விசுவாசிக்கிறேன் என்றாள் (யோவா 11:27).**

இயேசுகிறிஸ்து உபதேசம்பண்ணுகிற சத்தியத்தை மார்த்தாள் விசுவாசிக்கிறாள். தன்னுடைய விசுவாசத்தை அறிக்கை செய்கிறாள். இத்துடன் இவர்களுடைய சம்பாஷணை முடிவு பெறுகிறது. மார்த்தாள் இயேசுகிறிஸ்துவை "உலகத்தில் வருகிறவரான தேவகுமாரனாகிய கிறிஸ்து" என்று விசுவாசிக்கிறாள். இதுவே மெய்யான விசுவாசம். இது தான் கிறிஸ்துவின் வார்த்தை. இயேசுகிறிஸ்து சொன்ன உபதேசத்தை மார்த்தாள் புரிந்துகொண்டு, இப்போது அவரை தேவகுமாரனாக விசுவாசிக்கிறாள். அவளுடைய விசுவாசம் வார்த்தையினால் வெளிப்படுத்தப்படுகிறது. இயேசுகிறிஸ்துவின் வார்த்தையே அவளுடைய விசுவாசத்திற்கு வழிகாட்டியாக இருக்கிறது.

இயேசுகிறிஸ்துவின் அதிகாரம் மார்த்தாளுடைய விசுவாசத்திற்கு அஸ்திபாரமாக இருக்கிறது. இயேசு கிறிஸ்துவைத் தேவகுமாரனாக விசுவாசிப்பதற்கு, கிறிஸ்துவின் அதிகாரம் அவளுக்கு ஆதரமாக உதவிபுரிகிறது. "நீர் உலகத்தில் வருகிறவரான தேவகுமாரனாகிய கிறிஸ்து" என்று மார்த்தாள் தன்னுடைய விசுவாசத்தை அறிக்கை செய்கிறாள். இயேசுவைக் கிறிஸ்து என்று விசுவாசிப்பதினால், அவருடைய வார்த்தை அதிகாரமுள்ளது என்பதையும் விசுவாசிக்கிறாள்.

இயேசுவைப்பற்றி மார்த்தாள் சொல்லும்போது அவரைக் "கிறிஸ்து" என்றும், "தேவகுமாரன்" என்றும், "உலகத்தில் வருகிறவரானவர்" என்றும் விசுவாசித்து அறிக்கை செய்கிறாள். இவையே மெய்யான ஆசீர்வாதம். இந்த ஆசீர்வாதத்தை மார்த்தாள் இப்போது பெற்றுக்கொள்கிறாள். இயேசுவைக் கிறிஸ்து என்று மார்த்தாள் விசுவாசித்தால், அவரே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாகயிருக்கிறார் என்பதை விசுவாசிப்பதற்கு, அவளுக்குக் கடினமாக இருக்காது. இயேசுகிறிஸ்துவே வெளிச்சத்திற்கும் சத்தியத்திற்கும் ஆதரமாகயிருக்கிறவர். அவருடைய வார்த்தைகளெல்லாம் சத்தியமானவை, ஆவிக்குரியவை என்று நாம் விசுவாசிக்கலாம். அவரே ஜீவனுக்கும் ஆசீர்வாதத்திற்கும் ஆதாரமாகயிருக்கிறவர். அவருடைய தெய்வீக வல்லமையை நாம் விசுவாசத்தோடு சார்ந்துகொள்ளலாம்.

## அதிகாரம் - 11

**மரியாள்**
**யோவா 11 : 28-32**

**யோவா 11:28. இவைகளைச் சொன்னபின்பு, அவள் போய், தன் சகோதரியாகிய மரியாளை இரகசியமாய் அழைத்து: போதகர் வந்திருக்கிறார், உன்னை அழைக்கிறார் என்றாள்.**

**யோவா 11:29. அவள் அதைக் கேட்டவுடனே, சீக்கிரமாய் எழுந்து, அவரிடத்தில் வந்தாள்.**

**யோவா 11:30. இயேசு இன்னும் கிராமத்துக்குள் வராமல், மார்த்தாள் தம்மைச் சந்தித்த இடத்திலே இருந்தார்.**

**யோவா 11:31. அப்பொழுது, வீட்டிலே அவளுடனேகூட இருந்து அவளுக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்த யூதர்கள், மரியாள் சீக்கிரமாய் எழுந்துபோகிறதைக் கண்டு: அவள் கல்லறையினிடத்தில் அழுகிறதற்குப் போகிறாள் என்று சொல்லி, அவளுக்குப் பின்னே போனார்கள்.**

**யோவா 11:32. இயேசு இருந்த இடத்தில் மரியாள் வந்து, அவரைக் கண்டவுடனே, அவர் பாதத்தில் விழுந்து: ஆண்டவரே, நீர் இங்கே இருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான் என்றாள்.**

**போதகர் வந்திருக்கிறார்**

**இவைகளைச் சொன்னபின்பு, அவள் போய், தன் சகோதரியாகிய மரியாளை இரகசியமாய் அழைத்து: போதகர் வந்திருக்கிறார், உன்னை அழைக்கிறார் என்றாள் (யோவா 11:28).**

இயேசுகிறிஸ்துவின் வருகையைக் குறித்து மார்த்தாள் தன் சகோதரியாகிய மரியாளுக்கு, இரகசியமாக அழைத்து அவளை தெரியப்படுத்துகிறாள். இயேசு கிறிஸ்துவிடம் மார்த்தாள் இதுவரையிலும் பேசிக்கொண்டிருக்கிறாள். பேசி முடித்தபின்பு தன் சகோதரியாகிய மரியாளை இயேசு கிறிஸ்துவிடம் அழைத்து வரப்போகிறாள். ஒரு சமயம் மரியாள் இயேசுகிறிஸ்துவின் பாதத்தருகில் அமர்ந்திருந்து அவருடைய உபதேசத்தைக் கேட்டுக்கொண்டிருந்தபோது, மரியாளை இயேசுகிறிஸ்துவிடமிருந்து அழைத்துச் செல்லவேண்டுமென்று மார்த்தாள் விரும்பினாள் (லூக் 10:40). இப்போதோ மார்த்தாள் முந்திய சம்பவத்திற்கு நேர்மாறாக செயல்படுகிறாள். வீட்டிலிருக்கிற மரியாளை இயேசுகிறிஸ்துவிடத்தில் அழைத்து வருவதற்கு வந்திருக்கிறாள்.

மரியாளை மார்த்தாள் இரகசியமாக அழைக்கிறாள். இயேசுகிறிஸ்துவிடமிருந்து மார்த்தாள் ஒரு உத்தரவு பெற்றுக்கொண்டு மரியாளை சந்திப்பதற்கு வந்திருக்கிறாள். "போதகர் வந்திருக்கிறார். உன்னை அழைக்கிறார்" என்று மார்த்தாள் மரியாளிடம் கூறுகிறாள். இயேசுகிறிஸ்துவின் வருகையினால் மார்த்தாளுக்கு சந்தோஷம் உண்டாயிற்று. ஆகையினால் அவருடைய வருகையைச் சாதாரணமாகச் சொல்லாமல், "போதகர் வந்திருக்கிறார்" என்று சந்தோஷமாகச் சொல்லுகிறாள்.

இந்தப் போதகர் வரவேண்டுமென்றுதான் இவ்விரண்டு சகோதரிகளும் ஆவலோடு காத்துக் கொண்டிருந்தார்கள். அவர் சீக்கிரம் வரவேண்டுமென்று விரும்பினார்கள். அந்தப் போதகராகிய இயேசுகிறிஸ்து இப்போது வந்திருக்கிறார். மரியாளும் மார்த்தாளும் லாசருவின் மரணத்தினால் மிகுந்த துக்கத்தோடிருக்கிறார்கள். துக்கத்தின் மத்தியில் இயேசுகிறிஸ்து இவர்களைச் சந்திக்க வந்திருப்பது இவர்களுக்கு மிகுந்த ஆறுதலாக இருக்கிறது. இயேசுகிறிஸ்துவைப் போய் சந்திக்குமாறு, மார்த்தாள் மரியாளிடம் கூறுகிறாள். "உன்னை அழைக்கிறார்" என்று இயேசுவின் அழைப்பை மார்த்தாள் தன் சகோதரிக்கு தெரியப்படுத்துகிறாள். நம்முடைய போதகராகிய இயேசுகிறிஸ்து நம்மிடத்தில் வரும்போது, அவர் நம்மைத் தம்மிடமாக அழைக்கிறார். நம் ஒவ்வொருவரையும் பெயர்சொல்லி தனித்தனியாக அழைக்கிறார். இயேசுகிறிஸ்து நம்மை அழைப்பாரென்றால் அவர் நிச்சயமாகவே நம்மைச் சொஸ்தமாக்குவார். நமக்கு ஆறுதலைக்கொடுப்பார்.

**கேட்டவுடனே**

**அவள் அதைக் கேட்டவுடனே, சீக்கிரமாய் எழுந்து, அவரிடத்தில் வந்தாள் (யோவா 11:29).**

## அதிகாரம் - 11

இயேசுகிறிஸ்து வந்திருக்கிறாரென்றும், அவர் தன்னை அழைக்கிறாரென்றும் மார்த்தாள் மூலமாகக் கேள்விப்பட்டவுடனே, மரியாள் சீக்கிரமாய் எழுந்து இயேசுகிறிஸ்துவிடத்தில் வருகிறாள். மரியாள் எப்போதுமே தன்னுடைய சிந்தனையில் இயேசுகிறிஸ்துவுக்கு சமீபமாக இருக்கிறாள். சீயோனில் புலம்புகிறவர்களுக்கு கர்த்தர் எப்போதும் சமீபமாகவேயிருக்கிறார். பல சமயங்களில் நம்முடைய துக்கமான வேளைகளில் அவர் நமக்குச் சமீபமாக இருக்கிறதை நாம் அறியாமல் போகிறோம். இயேசுகிறிஸ்து நமக்கு அருகாமையில் இருக்கிறார் என்பதை நாம் விசுவாசத்தினால் புரிந்துகொள்ளவேண்டும். இயேசு நம்மை அழைக்கும்போது சிறிதும் தாமதம் செய்யாமல் உடனடியாக அவருடைய அழைப்புக்குச் செவிகொடுத்து அவருடைய சமுகத்திற்குச் செல்லவேண்டும். இதுவே மெய்யான விசுவாசம். இதுவே மெய்யான அன்பு.

போதகர் வந்திருக்கிறார், உன்னை அழைக்கிறார் என்று மரியாள் கேள்விப்பட்டவுடன் அவள் சிறிது நேரம் கூட தாமதம்பண்ணவில்லை. தனக்கு ஆறுதல் சொல்வதற்காக தன்னுடைய வீட்டில் கூடியிருக்கும் யூதஜனங்களிடம் மரியாள் ஆலோசனை கேட்கவில்லை. அவர்களெல்லோரையும் விட்டுவிட்டு, சீக்கிரமாய் எழுந்து இயேசுகிறிஸ்துவிடத்தில் வருகிறாள்.

### இன்னும் கிராமத்திற்குள் வராமல்

**இயேசு இன்னும் கிராமத்துக்குள் வராமல், மார்த்தாள் தம்மைச் சந்தித்த இடத்திலே இருந்தார் (யோவா 11:30).**

இயேசுகிறிஸ்து மார்த்தாளைச் சந்தித்த அதே இடத்திலேயே இன்னும் இருக்கிறார். அவர் இன்னும் பெத்தானியா கிராமத்திற்குள் வரவில்லை. இயேசுகிறிஸ்து எப்போதுமே தம்முடைய ஊழியத்தைச் செய்வதற்கு ஆயத்தமாகயிருக்கிறார். அவர் இப்போது இருக்கிற இடம் லாசரு வைக்கப்பட்டிருக்கிற கல்லறைக்கு அருகாமையிலிருக்கிறது. இயேசுகிறிஸ்து கிராமத்திற்குள் போவதற்குப் பதிலாக, லாசருவின் கல்லறைக்குப்போக ஆயத்தமாகயிருக்கிறார். மரியாள் இயேசு கிறிஸ்துவிடத்தில் அன்பாகயிருக்கிறாள். அவளுடைய அன்பு குறையவில்லை. இயேசுகிறிஸ்து தங்களுடைய விண்ணப்பத்தை ஏற்று, லாசரு வியாதியாக இருக்கும்போது, தங்கள் வீட்டிற்கு வராமற்போனாலும், அவர்மீது மரியாள் இன்னும் அன்பாகவேயிருக்கிறாள். லாசரு மரித்துப்போன பின்பும் இயேசு உடனே பெத்தானியாவுக்கு வராமல், காலதாமதம் செய்தாலும், இயேசுவின்மீது மரியாள் வைத்திருக்கும் அன்பு சிறிதும் குறைந்துபோகவில்லை. இதற்காக இயேசுகிறிஸ்துவின்மீது மரியாள் சிறிதும் கோபப்படவில்லை.

### அவளுக்குப் பின்னே போனார்கள்

**அப்பொழுது, வீட்டிலே அவளுடனேகூட இருந்து அவளுக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்த யூதர்கள், மரியாள் சீக்கிரமாய் எழுந்துபோகிறதைக் கண்டு: அவள் கல்லறையினிடத்தில் அழுகிறதற்குப் போகிறாள் என்று சொல்லி, அவளுக்குப் பின்னே போனார்கள் (யோவா 11:31).**

லாசருவின் வீட்டில் யூதர்களில் அநேகர் மரியாளுக்கும் மார்த்தாளுக்கும் ஆறுதல் சொல்வதற்காகக் கூடியிருக்கிறார்கள். அப்போது மரியாள் சீக்கிரமாய் எழுந்து இயேசுவினிடத்தில் போகிறாள். அவள் ஏன் இவ்வளவு சீக்கிரமாகப் போகிறாள் என்று ஜனங்களுக்குத் தெரியவில்லை. "அவள் கல்லறையினிடத்தில் அழுகிறதற்குப் போகிறாள்" என்று நினைத்து எல்லோரும் அவளுக்குப் பின்னே போகிறார்கள்.

லாசருவின் மரணத்தினால் உண்டான துக்கத்தை மார்த்தாள் தாங்கிக்கொள்கிறாள். மரியாளால் தன் சகோதரனின் மரணத்தினால் உண்டான துக்கத்தைத் தாங்கமுடியவில்லை. மரியாள் தன் உள்ளத்தில் மென்மையானவள். இவளுடைய ஆவி துக்கத்திலிருக்கிறது. இது இவளுடைய இயல்பான சுபாவம். ஆகையினால்தான் மரியாள் சீக்கிரமாக எழுந்து போவதைக் கண்டவர்கள், அவள் கல்லறையினிடத்தில் அழுகிறதற்குப் போகிறாள் என்று நினைக்கிறார்கள்.

## அதிகாரம் - 11

துக்கவீடுகளில் ஆறுதல் சொல்ல வந்திருக்கிறவர்கள், சில சமயங்களில் துக்கத்தை ஆறுதல்பண்ணுவதற்குப் பதிலாக, அதிகரிக்கச் செய்துவிடுவார்கள். தேவனுடைய சித்தத்தின் பிரகாரம் ஒவ்வொரு காரியமும் நடைபெறுகிறது என்று சொல்லி ஆறுதல் கூறுவதற்குப் பதிலாக, தேவனுடைய கிருபையையும் அன்பையும் குற்றம் கூறி, துக்கவீட்டாரின் வருத்தத்தை அதிகரிக்கச் செய்துவிடுவார்கள். ஆறுதல் சொல்ல வந்திருக்கிறவர்கள் கிருபை நிறைந்த வார்த்தைகளைப் பேசி துக்கவீட்டாரின் துக்கத்தைக் குறைப்பதற்கு முயற்சி செய்யவேண்டும். ஞானத்தோடு பேசவேண்டும்.

மரியாள் தனியாக இருக்க வேண்டுமென்று விரும்புவதாக யூதர்கள் நினைக்கிறார்கள். அவளுக்கு ஆறுதல் சொல்ல வந்தவர்களெல்லோரும் அவளைத் தனியாக விட்டுவிடாமல், அவள் பின்னே போகிறார்கள். மரியாளும் அவர்களெல்லோரையும் இயேசு கிறிஸ்துவிடத்தில் அழைத்து வருகிறாள். இயேசுகிறிஸ்து செய்யப்போகிற அற்புதத்திற்கு அவர்களெல்லோரும் கண்ணாரக்கண்ட சாட்சிகளாக இருக்கப்போகிறார்கள்.

நம்முடைய ஆவிக்குரிய சிநேகிதர்களுக்கு துக்கம் உண்டாகும்போது நாம் அவர்களுக்கு நெருக்கமாக இருக்கவேண்டும். இதன் மூலமாக தேவன் அவர்களை அற்புதமாக ஆறுதல்செய்யும்போது, அந்த அற்புதத்தைக் காணும் சிலாக்கியம் நமக்கும் கிடைக்கும். தேவனுடைய கிருபையுள்ள வெளிப்பாடுகளை அறிந்துகொள்ளும் ஆசீர்வாதமும் நமக்கு உண்டாகும்.

**என் சகோதரன் மரிக்கமாட்டான்**

**இயேசு இருந்த இடத்தில் மரியாள் வந்து, அவரைக் கண்டவுடனே, அவர் பாதத்தில் விழுந்து: ஆண்டவரே, நீர் இங்கே இருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான் என்றாள் (யோவா 11:32).**

இயேசுகிறிஸ்து இருக்கிற இடத்திற்கு மரியாள் வருகிறாள். இயேசுவைக் கண்டவுடனே அவர் பாதத்தில் விழுந்துவிடுகிறாள். இயேசுவோடு கண்ணீர் சிந்திப் பேசுகிறாள். "ஆண்டவரே நீர் இங்கு இருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான்" என்று கண்ணீரோடு கூறுகிறாள். இதே வார்த்தைகளைத்தான் மார்த்தாளும் இயேசுகிறிஸ்துவிடத்தில் கூறினாள். ஆனால் மார்த்தாள் இயேசுவின் பாதத்தில் விழுந்து அழவில்லை. மரியாளோ இயேசுவைக் கண்டவுடன் அவருடைய பாதத்தில் விழுந்து அழுகிறாள். இதே மரியாள்தான் முன்பு ஒரு சமயம் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து அவருடைய வசனத்தைக் கேட்டுக்கொண்டிருந்தாள் (லூக் 10:39). இப்போது அதே மரியாள் இயேசுவின் பாதத்தருகே அழுதுகொண்டிருக்கிறாள்.

நாம் சமாதானமாக இருக்கிற நாட்களில், நாமும் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து அவருடைய உபதேசத்தைக் கேட்கவேண்டும். நமக்கு சோதனைகளும் வேதனைகளும், பாடுகளும் இருக்கிற நாட்களில், இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து அவருடைய கிருபையையும், ஆறுதலையும், நம்பிக்கையையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

மார்த்தாள் இயேசுகிறிஸ்துவிடத்தில் "நீர் உலகத்தில் வருகிறவரான தேவகுமாரனாகிய கிறிஸ்து" என்று அறிக்கை செய்தாள். தன் சகோதரி அறிக்கை செய்ததை, மரியாளும் விசுவாசித்து, தன்னுடைய விசுவாசத்தை கிரியையினால் வெளிப்படுத்துகிறாள். இயேசுவின் பாதத்தில் விழுந்து "ஆண்டவரே நீர் தேவகுமாரனாகிய கிறிஸ்து" என்று மரியாள் அங்கீகரிக்கிறாள். மரியாள் இயேசுவின் பாதத்தில் விழும்போது, அவளைச் சுற்றிலும் யூதர்கள் நின்றுகொண்டிருக்கிறார்கள். இவர்கள் மரியாளுக்கும் அவளுடைய குடும்பத்தாருக்கும் சிநேகிதர்களாகயிருக்கலாம். ஒருவேளை இவர்களுக்கு உறவினர்களாகக் கூடயிருக்கலாம். ஆனால் இயேசு கிறிஸ்துவுக்கோ இவர்கள் சத்துருக்களாகயிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவைக் கொலைசெய்ய வகைதேடிக் கொண்டிருக்கிறார்கள். யூதர்கள் இயேசுகிறிஸ்துவின்மீது கோபத்தோடு இருந்தாலும் மரியாள் அவருடைய பாதத்தில் விழுந்து, தான் அவரைக் கிறிஸ்துவாக விசுவாசிப்பதை அங்கீகரிக்கிறாள்.

## அதிகாரம் - 11

மரியாள் இயேசுவின் பாதத்தில் விழுந்து "ஆண்டவரே நீர் இங்கே இருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான்" என்று பரிதாபமாக விண்ணப்பம்பண்ணுகிறாள். ஒரு நற்காரியம் நடைபெறுவதற்காகவே, இயேசுகிறிஸ்து பெத்தானியாவுக்கு வருவதைத் தாமதம் பண்ணியிருக்கிறார். அந்த நற்காரியம் இப்போது நடைபெறப்போகிறது. இருந்தாலும் இதைப்புரிந்துகொள்ளாமல் இரண்டு சகோதரிகளும், இயேசுகிறிஸ்து தங்களோடு இருந்திருந்தால் தங்கள் சகோதரன் மரிக்கமாட்டான் என்று கூறுகிறார்கள். தங்கள் சகோதரன் மரித்துப்போனதற்கு இயேசுகிறிஸ்து தங்களோடு இல்லாமல்போனதுதான் காரணம் என்று அவர்மீது குற்றம் சுமத்துகிறார்கள். மரியாளைவிட மார்த்தாள் அதிக வார்த்தைகளினால் இயேசுகிறிஸ்துவைக் குற்றப்படுத்தினாள். மார்த்தாளோ வார்த்தைகளினால் அதிகமாகப் பேசாமல், அதிகமாக அழுகிறாள். பாசத்தோடு சிந்துகிற கண்ணீர் பல வார்த்தைகளுக்குச் சமம். மரியாள் சிந்துகிற கண்ணீர் இயேசுகிறிஸ்துவின் செவிகளில் ஒலிக்கிறது. இயேசுகிறிஸ்து மரியாளின் அழுகையைப்பார்த்து ஆவியிலே கலங்கி துயரமடைகிறார்.

### இயேசுவின் துயரம்
### யோவா 11 : 33-37

**யோவா 11:33. அவன் அழுகிறதையும் அவனோடே கூட வந்த யூதர்கள் அழுகிறதையும் இயேசு கண்டபோது ஆவியிலே கலங்கித் துயரமடைந்து:**

**யோவா 11:34. அவனை எங்கே வைத்தீர்கள் என்றார். ஆண்டவரே, வந்து பாரும் என்றார்கள்.**

**யோவா 11:35. இயேசு கண்ணீர் விட்டார்.**

**யோவா 11:36. அப்பொழுது யூதர்கள்: இதோ, இவர் அவனை எவ்வளவாய்ச் சிநேகித்தார் என்றார்கள்!**

**யோவா 11:37. அவர்களில் சிலர்: குருடனுடைய கண்களைத் திறந்த இவர், இவனைச் சாகாமலிருக்கப்பண்ணவும் கூடாதா என்றார்கள்.**

**ஆவியிலே கலங்கி**

**அவன் அழுகிறதையும் அவனோடே கூட வந்த யூதர்கள் அழுகிறதையும் இயேசு கண்டபோது ஆவியிலே கலங்கித் துயரமடைந்து: (யோவா 11:33)**

நம்முடைய துக்கத்தில் இயேசுகிறிஸ்துவும் பங்குபெறுகிறார். அவர் கிருபையும் இரக்கமும் நிறைந்தவர். லாசரு மரித்துப்போனதினால் மரியாளும் மார்த்தாளும் துக்கத்தோடிருக்கிறார்கள். அவர்கள் துக்கப்படும்போது இயேசுகிறிஸ்துவும் தம்முடைய துக்கத்தை மூன்று வழிகளில் வெளிப்படுத்துகிறார். அவையாவன: 1. தமது ஆவியிலே கலங்கி துயரமடைகிறார். 2. ஆறுதலாக விசாரிக்கிறார். 3. கண்ணீர் விடுகிறார்.

மரியாள் அழுகிறதையும், அவளோடே கூடவந்த யூதர்கள் அழுகிறதையும் இயேசுகிறிஸ்து கண்டபோது ஆவியிலே கலங்கி துயரமடைகிறார். மரியாளுடைய கண்ணீரும், அவளோடு கூடவந்த யூதர்களுடைய கண்ணீரும் மனுபுத்திரருடைய துக்கங்களுக்கு அடையாளமாக இருக்கிறது. இந்த உலகம் துக்கம் நிறைந்தது. இது கண்ணீரினால் நிரம்பியிருக்கிறது. இந்த உலகத்தில் அழுகிறவர்களோடு நாமும் அழவேண்டும். மரியாள் அழுகிறதைப்பார்த்து இயேசுகிறிஸ்துவும் கண்ணீர்விட்டு அழுகிறார். நாம் ஒருவர்மீது மெய்யான அன்பு வைத்திருக்கும்போது, அவர்களுடைய சந்தோஷங்களிலும் துக்கங்களிலும் பங்குபெறுவோம். சிநேகம் என்பது நம்முடைய சந்தோஷங்களையும் துக்கங்களையும் பரிமாறுகிற உறவாகும்.

தேவகுமாரனுடைய கிருபையும் இரக்கமும் அவருடைய ஊழியத்தைச் செய்கிறவர்களோடு எப்போதும் இருக்கும். தம்முடைய ஊழியக்காரர்கள் பாடுகளை அனுபவிக்கும்போதும், வேதனைகளை அனுபவிக்கும்போதும் இயேசுகிறிஸ்து அவர்கள்மீது கரிசனையோடிருக்கிறார். "அவர்களுடைய எல்லா நெருக்கத்திலும் அவர் நெருக்கப்பட்டார்" *(ஏசா 63:9)*.

எல்லோரும் அழுகிறதை இயேசுகிறிஸ்து கண்டபோது அவரும் ஆவியிலே கலங்கி துயரமடைகிறார். இது இயேசுகிறிஸ்துவின் மனுஷத்துவத்தில் வெளிப்படுகிற அவருடைய கிருபையும் இரக்கமும் ஆகும். மரணத்தின் வல்லமையையும், மனுஷஜீவியத்தின் பாடுகளையும் நினைத்து, இயேசுகிறிஸ்து தம்முடைய மனுஷத்துவத்தில் கலங்கி துயரமடைகிறார். இந்த துக்கத்தையும் கலக்கத்தையும் நீக்குவதற்காக, இயேசுகிறிஸ்து மரணத்தோடு யுத்தம்பண்ணி, மரணத்தை ஜெயித்திருக்கிறார்.

## அதிகாரம் - 11

இயேசுகிறிஸ்து தம்முடைய ஆவியிலே கலங்கி துயரமடைந்தது, அவர்கள்மீது அவர் வைத்திருக்கும் அன்பையும், இரக்கத்தையும், கரிசனையையும் காண்பிக்கிறது. அவருடைய கரிசனை சாதாரணமானது அல்ல. அவர் தம்முடைய ஆவியிலே கலங்கி துயரமடைகிறார். அவருடைய உள்ளான சுபாவம் ஜனங்களுடைய கண்ணீரைக் கண்டபோது கலங்குகிறது. இயேசுகிறிஸ்துவின் இருதயம் துயரமடைகிறது. அவர் தமக்குத்தாமே துயரத்தோடிருக்கிறார். பொதுவாக இயேசுகிறிஸ்து ஒருபோதும் கலக்கமடைவதில்லை. துயரமடைவதில்லை. அவரை யாரும் கலக்கமடையச்செய்யவோ, துயரமடையச்செய்யவோ முடியாது. ஆனால் இங்கு இயேசுகிறிஸ்து தமக்குத்தாமே, தம்முடைய ஆவியிலே கலங்கி துயரமடைகிறார். இயேசுகிறிஸ்து தமது ஆவியிலே கலங்கி துயரமடைந்தாலும், தம்முடைய சித்தத்தை நிறைவேற்றத் தவறிவிடுவதில்லை. கலக்கமும் துயரமும் அவருடைய ஊழியத்திற்கு ஒரு பாதிப்பையும் உண்டுபண்ணாது.

**கண்ணீர் விட்டார்**

**அவனை எங்கே வைத்தீர்கள் என்றார். ஆண்டவரே, வந்து பாரும் என்றார்கள். இயேசு கண்ணீர் விட்டார் (யோவா 11:34,35).**

இயேசுகிறிஸ்து அன்பான வார்த்தையினால் தமது கரிசனையை வெளிப்படுத்துகிறார். "அவனை எங்கே வைத்தீர்கள்" என்று இயேசுகிறிஸ்து அன்பாகவும் ஆறுதலாகவும் அவர்களிடம் கேட்கிறார். இந்த வார்த்தையின் மூலமாக மரியாளுடைய துக்கத்தையும், அவளோடு வந்திருக்கிற யூதர்களின் துக்கத்தையும் குறைக்கலாம் என்று இயேசுகிறிஸ்து சித்தங்கொண்டிருக்கலாம். இயேசுகிறிஸ்துவின் வார்த்தையைக்கேட்டு, அவர்கள் அவருடைய வல்லமையில் நம்பிக்கை வைக்க ஆரம்பிப்பார்கள். அவர்களுடைய விசுவாசம் இயேசுவின் வார்த்தையினால் வர்த்திக்கும். இயேசுகிறிஸ்து "லாசருவை எங்கே வைத்தீர்கள்" என்று கேட்டுவிட்டு, கண்ணீர் விடுகிறார்.

இயேசுகிறிஸ்துவுக்கு அருகில் இருக்கிற ஜனங்கள், லாசருவை எங்கே வைத்திருக்கிறார்கள் என்று பதில் கூறுவதற்குப் பதிலாக, "வந்து பாரும்" என்று கூறுகிறார்கள். அந்த இடத்தை இயேசுகிறிஸ்து வந்து பார்க்கவேண்டுமென்று விரும்புகிறார்கள். இயேசுகிறிஸ்து வந்து பார்த்தால் ஏதாவது நன்மை உண்டாகும் என்னும் எதிர்பார்ப்பு அவர்களுடைய உள்ளத்தில் உண்டாயிற்று.

இயேசுகிறிஸ்து லாசருவை வைத்திருந்த கல்லறைக்குப்போகும்போது கண்ணீர்விட்டு அழுகிறார். இந்த வசனம் மிகவும் சிறியது. என்றாலும் இதில் இயேசுகிறிஸ்துவின் கிருபையுள்ள சுபாவம் பரிபூரணமாக வெளிப்படுகிறது. மனுஷகுமாரனாக இந்த உலகத்திற்கு வந்திருக்கும் இயேசுகிறிஸ்து, தம்முடைய மனுஷத்துவத்தை இந்த வசனத்தின் மூலமாகப் பரிபூரணமாக வெளிப்படுத்துகிறார். ஒரு சராசரி மனுஷனுக்கு இருப்பதுபோல இயேசுகிறிஸ்துவுக்கும் துக்கமும் கண்ணீரும், சந்தோஷம் உண்டாயிற்று. இயேசுகிறிஸ்து கண்ணீர்விட்டு தம்முடைய மனுஷத்துவத்திற்கு சாட்சி கூறுகிறார். இயேசு மனுஷனாக இருப்பதினால் அவரால் அழமுடிகிறது. அவர் கிருபையுள்ள மனுஷனாகயிருப்பதினால், தம்முடைய தெய்வத்துவத்தை வெளிப்படுத்துவதற்கு முன்பாக, அவர் கண்ணீர் விட்டு அழுகிறார். இயேசுகிறிஸ்து துக்கம் நிறைந்தவரும் பாடுஅநுபவித்தவருமாயிருந்தார் என்று ஏசாயா தீர்க்கதரிசி தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவைப்பற்றி தீர்க்கதரிசனமாக முன்னறிவித்திருக்கிறார் (ஏசா 53:3).

இயேசுகிறிஸ்து சிரித்தார் என்றோ, நகைத்தார் என்றோ, விளையாடினார் என்றோ, விளையாட்டுக் காண்பித்தார் என்றோ வேதத்தில் எங்கும் வாசிக்க முடியாது. அவர் பல சமயங்களில் கண்ணீர்விட்டு அழுதிருக்கிறார். மற்றவர்கள் அழுகிறதைக்கண்டு இயேசுகிறிஸ்து கண்ணீர்விடும்போது, அவரைப் பின்பற்றுகிறவர்களாகிய நாமும் மற்றவர்களுடைய துக்கங்களில் பங்குபெறவேண்டும். கிறிஸ்துவின் சுபாவம் நம்மிடத்திலும் காணப்படவேண்டும்.

**சாகாமலிருக்கவும்பண்ணக்கூடாதா**

**அப்பொழுது யூதர்கள்: இதோ, இவர் அவனை எவ்வளவாய்ச் சிநேகித்தார் என்றார்கள்! அவர்களில் சிலர்: குருடனுடைய கண்களைத் திறந்த இவர், இவனைச் சாகாமலிருக்கப்பண்ணவும் கூடாதா என்றார்கள் (யோவா 11:36,37).**

## அதிகாரம் - 11

லாசரு மரித்துப்போனதினால் அவனுடைய சகோதரி மரியாளும், அவளோடே கூடவந்த யூதர்களும் அழுகிறார்கள். இதைப்பார்த்து இயேசுகிறிஸ்துவும் கண்ணீர்விட்டு அழுகிறார். இயேசு அழுவதைப்பார்த்து சிலர் அவரைப்பற்றி அன்பாகப் பேசுகிறார்கள். "இதோ இவர் அவனை எவ்வளவாய் சிநேகித்தார்" என்று கூறி ஆறுதலாகப் பேசுகிறார்கள். ஆனால் எல்லோருடைய பேச்சுக்களும் இயேசுகிறிஸ்துவுக்கு ஆறுதலாக இல்லை. ஜனங்கள் கூட்டமாக இருக்கும்போது அவர்களுடைய மனப்பாங்கு வித்தியாசமாகத்தான் இருக்கும்.

லாசரு மரித்துப்போனதற்காக இயேசுகிறிஸ்து அழுகிறார். அவன்மீது இயேசு சிநேகமாயிருந்தார். லாசரு இயேசுகிறிஸ்துவுக்கு உறவினரல்ல. ஆனாலும் லாசருவின் மீது இயேசுவுக்கு அதிக அன்பு இருக்கிறது. இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களாகிய நாமும் அவருடைய முன்மாதிரியை இந்த விஷயத்தில் பின்பற்ற வேண்டும். நம்முடைய சிநேகிதர்கள்மீது நாம் மெய்யாகவே அன்பு கூரவேண்டும். அவர்கள் வாழ்ந்து சுகித்திருந்தாலும், மரிக்கும் தருவாயிலிருந்தாலும் அவர்கள்மீது அன்புகூரவேண்டும். நாம் மரித்தோருக்காக கண்ணீர்விட்டு அழும்போது, நம்முடைய கண்ணீரினால் மரித்துப்போனவருக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகாது. மரித்துப்போனவரோடு நமக்கு இருந்த பழக்கவழக்கங்களை ஞாபகப்படுத்தி, ஒரு சில வார்த்தைகளினால் அவரைப் புகழ்ந்து பேசலாம்.

லாசருவுக்காக இயேசுகிறிஸ்து கண்ணீர் சிந்தினார். அதைப்பார்த்த யூதர்கள் உடனே "இதோ இவர் அவனை எவ்வளவாய் சிநேகித்தார்" என்று ஆச்சரியத்தோடு கூறுகிறார்கள். இயேசுகிறிஸ்து தம்முடைய ஜீவனையே கல்வாரி சிலுவையில் லாசருவுக்காக ஒப்புக்கொடுத்தார். லாசருவுக்காக மாத்திரமல்ல, மனுக்குலத்தார் எல்லாரும் இரட்சிக்கப்படும்படியாக, இயேசுகிறிஸ்து தம்முடைய ஜீவனையே கொடுத்து, நம்மீது இவ்வளவாய் அன்புகூர்ந்திருக்கிறார். கண்ணீர்சிந்தும் அன்பைவிட, ஜீவனைக் கொடுக்கும் அன்பு பெரியது.

ஒரு சிலர் இயேசுகிறிஸ்துவுக்கு ஆதரவாகப் பேசும்போது, வேறு சிலர் அவரைக் குற்றப்படுத்திப் பேசுகிறார்கள். "குருடனுடைய கண்களைத் திறந்த இவர், இவனைச் சாகாமலிருக்கப் பண்ணவும் கூடாதா" என்று கேட்கிறார்கள். லாசருவைச் சாகாமலிருக்கப்பண்ண இயேசுகிறிஸ்துவினால் கூடுமானால், அவர் நிச்சயமாக அவனை சாகாமலிருக்கப்பண்ணியிருப்பார். ஆனால் லாசரு செத்துப்போனான். ஆகையினால் அவனைச் சாகாமலிருக்கப்பண்ணுவதற்கு இயேசுகிறிஸ்துவுக்கு வல்லமையில்லை என்று அவரைத் தூஷிக்கிறார்கள்.

லாசருவின் மரணத்தைப்பற்றி பேசும்போது, இவர்கள் குருடனுடைய கண்கள் திறக்கப்பட்டதைப்பற்றியும் பேசுகிறார்கள். லாசருவைச் சாகாமலிருக்கப்பண்ண இயேசுகிறிஸ்துவினால் முடியவில்லை. ஆகையினால் இயேசுகிறிஸ்து குருடனுடைய கண்களைத் திறந்திருப்பதற்கு வாய்ப்பில்லை என்னும் அர்த்தத்தில் இவர்கள் இயேசுவின்மீது குற்றம் சுமத்துகிறார்கள். இயேசுகிறிஸ்துவால் லாசருவுக்கு இப்போது அற்புதம் செய்ய முடியவில்லை. ஆகையினால் அவர் ஏற்கெனவே குருடனுடைய கண்களைத் திறந்து அற்புதம் செய்தார் என்பது பொய்யானது. அப்படி அற்புதம் செய்வதற்கு இயேசுகிறிஸ்துவுக்கு வல்லமையில்லை என்று இவர்கள் விவாதம்பண்ணுகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவோ தம்முடைய வல்லமையை இன்னும் சிறிது நேரத்தில் வெளிப்படுத்தப்போகிறார். அப்போது அவருக்கு விரோதமாகப் பேசியவர்களெல்லோரும் மௌனமாக இருப்பார்கள். லாசருவை மரித்துப்போகாமல் இருக்கப்பண்ணுவதைவிட, மரித்துப்போன அவனை உயிரோடு எழுப்பும்போது, இயேசுகிறிஸ்துவின் தெய்வீக வல்லமை அதிகமாய் வெளிப்படும். இயேசுகிறிஸ்து தம்முடைய வார்த்தைகளை அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் உறுதிபண்ணுகிறார். அவர் நம்முடைய சித்தத்தின்படியும், விருப்பத்தின்படியும் கிரியை செய்யாமல், தம்முடைய சித்தத்தின்படியே கிரியை செய்கிறார். அவர் சர்வவல்லவர். அவர் கட்டளையிட எல்லாம் ஆகும். அவருக்குக் கட்டளையிட நமக்குத் தகுதியில்லை.

## அதிகாரம் - 11

### கல்லறையில் லாசரு
### யோவா 11 : 38-44

**யோவா 11:38. அப்பொழுது இயேசு மறுபடியும் தமக்குள்ளே கலங்கிக் கல்லறையினிடத்திற்கு வந்தார். அது ஒரு குகையாயிருந்தது; அதின்மேல் ஒரு கல் வைக்கப்பட்டிருந்தது.**

**யோவா 11:39. இயேசு: கல்லை எடுத்துப்போடுங்கள் என்றார். மரித்தவனுடைய சகோதரியாகிய மார்த்தாள் அவரை நோக்கி: ஆண்டவரே, இப்பொழுது நாறுமே, நாலுநாளாயிற்றே என்றாள்.**

**யோவா 11:40. இயேசு அவளை நோக்கி: நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்று நான் உனக்குச் சொல்லவில்லையா என்றார்.**

**யோவா 11:41. அப்பொழுது மரித்தவன் வைக்கப்பட்ட இடத்திலிருந்த கல்லை எடுத்துப்போட்டார்கள். இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து: பிதாவே, நீர் எனக்குச் செவிகொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்.**

**யோவா 11:42. நீர் எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன்; ஆனாலும் நீர் என்னை அனுப்பினதைச் சூழ்ந்துநிற்கும் ஜனங்கள் விசுவாசிக்கும்படியாக அவர்கள் நிமித்தம் இதைச் சொன்னேன் என்றார்.**

**யோவா 11:43. இவைகளைச் சொன்னபின்பு: லாசருவே, வெளியே வா என்று, உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார்.**

**யோவா 11:44. அப்பொழுது, மரித்தவன் வெளியே வந்தான். அவன் கால்களும் கைகளும் பிரேதச் சீலைகளினால் கட்டப்பட்டிருந்தது, அவன் முகமும் சீலையால் சுற்றப்பட்டிருந்தது. இயேசு அவர்களை நோக்கி: இவனைக் கட்டவிழ்த்துவிடுங்கள் என்றார்.**

**ஒரு கல் வைக்கப்பட்டிருந்தது**

**அப்பொழுது இயேசு மறுபடியும் தமக்குள்ளே கலங்கிக் கல்லறையினிடத்திற்கு வந்தார். அது ஒரு குகையாயிருந்தது; அதின்மேல் ஒரு கல் வைக்கப்பட்டிருந்தது (யோவா 11:38).**

இயேசுகிறிஸ்து கல்லறைக்கு வருகிறார். அப்போது அவர் மறுபடியும் தமக்குள்ளே கலங்குகிறார். இயேசுவோடு கூடவருகிறவர்களில் சிலர் அவருடைய தெய்வீக வல்லமையை விசுவாசிக்கவில்லை. இயேசுகிறிஸ்துவைப்பற்றி அவிசுவாசமான வார்த்தைகளையும், தூஷண வார்த்தைகளையும் பேசுகிறார்கள். லாசருவை அவர் சாகாமல் இருக்கப்பண்ணவில்லை. அதற்காக அவர்கள் இயேசுவைப் பழிக்கிறார்கள். இயேசுகிறிஸ்து இதற்கு முன்பு இதுபோல தம்முடைய ஆவியில் கலங்கியதில்லை. தம்முடைய வேதனைகளுக்காகவோ, பாடுகளுக்காகவோ அவர் ஒருபோதும் கலங்கியதுமில்லை. அழுததுமில்லை. ஆனால் மனுஷருடைய பாவங்களுக்காகவும், உலகத்தாரின் துன்மார்க்கமான கிரியைகளுக்காகவும் இயேசுகிறிஸ்து கண்ணீர்விட்டிருக்கிறார். தம்முடைய இருதயத்தில் பாவிகளுக்காக கலங்கியிருக்கிறார்.

இருதயத்தில் கலங்கியவராக இயேசுகிறிஸ்து கல்லறைக்கு வந்து கொண்டிருக்கிறார். அப்போது லாசருவின் சகோதரிகளும், மற்றும் அவர்களுடைய உற்றார் உறவினர்களும் லாசருவுக்காக அழுது புலம்பிக்கொண்டு வருகிறார்கள். கல்லறைக்கு அருகாமையில் நெருங்கி வரவர, அவர்களுடைய அழுகையும் அதிகரிக்கிறது. இயேசுகிறிஸ்து தம்முடைய ஆவியில் மென்மையானவர். அவருடைய இருதயம் அதிக மென்மையானது. அவர்கள் அழுவதைப்பார்த்து இயேசுகிறிஸ்துவின் உள்ளம் உடைந்துபோயிற்று. அவருடைய இருதயம் அவருக்குள்ளே கலங்குகிறது.

இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்கிற ஊழியக்காரர்களுக்கு மென்மையான இருதயம் இருக்கவேண்டும். சுவிசேஷத்தைப் பிரசங்கித்து மரித்துப்போயிருக்கும் ஆத்துமாக்களை உயிரோடு எழுப்புவதே ஊழியக்காரர்களின் ஊழியம். அவர்களிடத்தில் கர்த்தருடைய வார்த்தையைப் பிரசங்கம் பண்ணும்போதும், அவர்களுக்காக ஜெபிக்கும்போதும், அவர்களுடைய ஆவிக்குரிய பரிதாபமான நிலமையைப்பார்த்து ஊழியக்காரர்கள் தங்களுக்குள்ளே கலங்கவேண்டும். அவர்களுடைய ஆத்துமாக்களைக் குறித்த பாரத்தோடு ஊழியம் செய்யவேண்டும். ஆத்தும பாரமில்லாமல் நாம் என்ன செய்தாலும் அது மெய்யான ஊழியமல்ல.

# அதிகாரம் - 11

லாசரு வைக்கப்பட்டிருந்த கல்லறைக்கு இயேசுகிறஸ்துவும், லாசருவின் உறவினர்களும் வருகிறார்கள். அது ஒரு குகையாயிருக்கிறது. அதன்மேல் ஒரு கல் வைக்கப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்து மரித்து அடக்கம்பண்ணணப்பட்டபோது, அவருடைய சரீரமும் இப்படிப்பட்ட கல்லறையில்தான் வைக்கப்பட்டது. இயேசுவின் கல்லறையை ஒரு பெரிய கல்லினால் மூடினார்கள். இயேசுகிறிஸ்துவை அடக்கம்பண்ணியபோது, அவருடைய சரீரம் வைக்கப்பட்டிருந்த கல்லறையின் வாசலில் ஒரு பெரிய கல்லை வைத்து மூடியதுபோல லாசருவின் கல்லறையில், அதின்மேல் ஒரு கல்லை வைத்து, அவனுடைய அடக்க ஆராதனையை நிறைவுசெய்கிறார்கள்.

**கல்லைல் எடுத்துப்போடுங்கள்**

**இயேசு: கல்லைல் எடுத்துப்போடுங்கள் என்றார். மரித்தவனுடைய சகோதரியாகிய மார்த்தாள் அவரை நோக்கி: ஆண்டவரே, இப்பொழுது நாறுமே, நாலுநாளாயிற்றே என்றாள் (யோவா 11:39).**

லாசருவின் கல்லறையின்மேல் வைக்கப்பட்டிருக்கும் கல்லை இயேசுகிறிஸ்து பார்க்கிறார். அந்தக்கல்லை எடுத்துப் போடுமாறு கூறுகிறார். கல்லை எடுத்துப்போட்டால்தான் அங்கு கூடியிருக்கிற எல்லா ஜனங்களாலும், கல்லறைக்குள் வைக்கப்பட்டிருக்கும் லாசருவின் சரீரத்தைத் தெளிவாகப் பார்க்க முடியும். கல்லை எடுத்துப்போட்ட பின்பு, இயேசுகிறிஸ்துவின் வல்லமையினால் லாசரு மறுபடியும் உயிர்ப்பெற்று, கல்லறையிலிருந்து வெளியே வருவதற்கு அது வாய்ப்பாக இருக்கும். கல்லறைக்குள் இருப்பது லாசருவின் சரீரம்தான் என்றும், அது ஒரு ஆவியோ அல்லது பேய் பிசாசோ அல்ல என்றும் ஜனங்கள் உறுதிபண்ணிக் கொள்வார்கள்.

பாவத்தில் மரித்துப்போன ஒரு ஆத்துமாவை ஆவிக்குரிய ஜீவியத்திற்குள் எழுப்பும்போது, அந்த ஆத்துமாவில் தங்கியிருக்கும் சுயபெருமை, வீணான சிந்தனைகள், பாவங்கள் ஆகியவற்றை எடுத்துப்போடவேண்டும். தடையில்லாமல் இருந்தால்தான், ஆத்துமாவிற்குள் கர்த்தருடைய வார்த்தை ஜீவனுள்ளதாகப் பிரவேசிக்கும். பாவத்தில் மரித்துப்போன ஆத்துமா நித்திய ஜீவனுக்கு நேராக எழும்பும்.

"கல்லை எடுத்துப்போடுங்கள்" என்று இயேசுகிறிஸ்து கூறியவுடன், மார்த்தாள் அவருடைய வார்த்தைக்கு "ஆண்டவரே இப்பொழுது நாறுமே, நாலுநாளாயிற்றே" என்று மறுப்புச் சொல்கிறாள். ஒருவேளை இவர்களெல்லோரும் கல்லறைக்கு அருகாமையில் வந்திருக்கும்போது, லாசருவின் சரீரத்திலிருந்து உண்டான துர்நாற்றம் அங்கு வீசியிருக்கலாம். இயேசுவின் வார்த்தையின் பிரகாரம் அவர்கள் கல்லை எடுத்துப்போட ஆரம்பிக்கிறபோது, அங்கு நாற்றம் எடுத்திருக்கலாம். இதை உணர்ந்துதான் மார்த்தாள் இப்பொழுது நாறுமே என்று கூறுகிறாள்.

மனுஷருடைய சரீரங்கள் மரித்துப்போனால் அழுகிப்போகும். மரித்து நான்கு நாளாகிவிட்டால், அந்த சரீரத்தில் பலவிதமான ரசாயன மாற்றங்கள் ஏற்படும். சரீரம் அழிந்துபோகும். பொதுவாக மரித்து நாலாவது நாளில்தான் சரீரம் அழிந்துபோகும். ஆகையினால்தான் இயேசுகிறிஸ்து மூன்றாவது நாளிலேயே மறுபடியும் உயிரோடு எழுந்து, அவர் தம்முடைய சரீரத்தின் அழிவைக் காணாதிருந்தார்.

மார்த்தாள் ஒருவேளை தன் சகோதரனுடைய மரித்துப்போன சரீரத்தின்மீது அக்கரையோடு இந்த வார்த்தைகளைப் பேசியிருக்கலாம். தன்னுடைய சகோதரனின் சரீரத்தை வெளியே காண்பித்து, எல்லோரும் பார்க்கும் வண்ணமாக, அதை ஒரு காட்சிப்பொருளாக ஆக்க மார்த்தாளுக்கு விருப்பமில்லை. ஒருவேளை இயேசுகிறிஸ்துவின்மீதுள்ள கரிசனையால்கூட மார்த்தாள் இந்த வார்த்தைகளைப் பேசியிருக்கலாம். லாசருவின் சரீரம் நாற்றமெடுப்பதினால், இயேசுகிறிஸ்துவுக்கு ஒரு பிரச்சனையும் வரக்கூடாது என்று மார்த்தாள் விரும்புகிறாள். இயேசுகிறிஸ்துவால் அந்த நாற்றத்தை தாங்கிக்கொள்ள முடியாது என்று கூட மார்த்தாள் நினைத்திருக்கலாம்.

## அதிகாரம் - 11

ஆனால், இயேசுகிறிஸ்துவோ, மார்த்தாள் நினைக்கிற பிரகாரம் துர்நாற்றத்தைத் தாங்கிக்கொள்ள முடியாதவரல்ல. துர்நாற்றத்தைப் பார்க்கக்கூடாது என்று அவர் நினைத்திருந்தால், அவர் இந்தப் பூமிக்கு வந்திருக்கமாட்டார். இந்த உலகத்தில் பாவம் நிறைந்திருக்கிறது. பாவத்தின் துர்நாற்றம் இந்த உலகத்தில் அதிகமாக வீசுகிறது. இவற்றிற்கு மத்தியில் மனுக்குலத்தை இரட்சிப்பதற்காகவே, இயேசுகிறிஸ்து துர்நாற்றமுள்ள இந்த உலகத்திற்கு வந்திருக்கிறார்.

ஒருவேளை இயேசுகிறிஸ்துவின் அற்புத வல்லமையை மார்த்தாள் விசுவாசியாமல்கூட, இந்த வார்த்தைகளைக் பேசியிருக்கலாம். "ஆண்டவரே லாசரு மரித்துப்போய் நாலுநாளாயிற்று. கல்லறையில் வைக்கப்பட்டிருக்கிற லாசரு உயிரோடிருப்பதற்கு வாய்ப்பேயில்லை" என்று பொருள்படுமாறு மார்த்தாள் பேசியிருக்கலாம். லாசருவின் சரீரம் உயிர்பெறுவதற்கு உதவியும் செய்ய முடியாது. உயிர்பெறும் என்னும் நம்பிக்கையுமில்லை என்பதுதான் மார்த்தாளுடைய எண்ணம்.

மார்த்தாள் அவிசுவாசமான வார்த்தைகளைப் பேசுவதை அங்கு கூடியிருக்கும் யூதர்களும் கேட்கிறார்கள். மரித்துப்போன லாசருவை உயிரோடு எழுப்புவது இயலாத காரியமென்று எல்லோருமே நினைக்கிறார்கள். இவர்கள் மத்தியில் இயேசுகிறிஸ்து லாசருவை மறுபடியும் உயிரோடு எழுப்பும்போது, அந்த அற்புதம் எல்லோருக்கும் பிரத்தியட்சமாகத் தெரியும். சாத்தியமில்லாத ஒரு காரியம் நடைபெற்றுவிட்டதே என்று எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள். மார்த்தாளின் அவிசுவாச வார்த்தை, இயேசுகிறிஸ்துவின் அற்புதத்தைப் பார்ப்பதற்கு ஜனங்களை ஆயத்தப்படுத்துகிறது. லாசருவை உயிரோடு எழுப்ப முடியாது என்பதுபோல மார்த்தாள் பேசுவதினால், இயேசுகிறிஸ்து லாசருவை உயிரோடு எழுப்பும்போது, அந்த அற்புத சம்பவம் எல்லோருக்குமே மிகுந்த ஆச்சரியமாக இருக்கும். இயேசுகிறிஸ்துவின் தெய்வீக வல்லமை அவர்கள் மத்தியில் பிரத்தியட்சமாக வெளிப்படும்.

**நீ விசுவாசித்தால்**

**இயேசு அவளை நோக்கி: நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்று நான் உனக்குச் சொல்லவில்லையா என்றார் (யோவா 11:40).**

மார்த்தாளின் அவிசுவாச வார்த்தைகளை, இயேசுகிறிஸ்து தம்முடைய மென்மையான வார்த்தைகளினால் கடிந்து கொள்கிறார். "நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்று நான் உனக்குச் சொல்லவில்லையா" என்று கேட்கிறார். நாம் கர்த்தரை விசுவாசிக்கும்போது மெய்யாகவே தேவனுடைய மகிமையைக் காண்போம். நாம் விசுவாசித்துச் செயல்படும்போது, முடிவில் நமக்கு ஆசீர்வாதம் கிடைக்கும். இந்த ஆசீர்வாதத்தை ஆரம்பத்திலேயே, நம்முடைய விசுவாசத்தினால் தரிசிக்கலாம்.

நாம் இயேசுகிறிஸ்துவின் வார்த்தையைக் கேட்டு, அதை விசுவாசித்து, அவருடைய வல்லமையிலும் உண்மையிலும் சார்ந்துகொள்ளும்போது, மெய்யாகவே நாம் தேவனுடைய மகிமையைக் காண்போம். அந்த தரிசனம் நமக்கு மிகுந்த ஆனந்தமாக இருக்கும். தேவனுடைய நிச்சயமான இரக்கங்களை நாம் எப்போதுமே நினைவுகூரவேண்டும். தம்முடைய இரக்கங்களின் மூலமாகவே நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நம்மை உற்சாகப்படுத்தி வருகிறார்.

பல சமயங்களில் இயேசுகிறிஸ்து சொன்ன வார்த்தைகளை நாம் மறந்துவிடுகிறோம். பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய வார்த்தைகளை நமக்கு நினைவுபடுத்த வேண்டுமென்று ஜெபிக்கவேண்டும். ஆவியானவர் நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துவார். சத்திய வார்த்தைகளை நம்முடைய இருதயத்தில் நினைவுபடுத்துவார். இயேசுகிறிஸ்து ஏற்கெனவே சொன்ன வார்த்தைகளை மார்த்தாள் மறந்துவிட்டாள். ஆகையினால் இயேசு அவளிடம் "நான் உனக்குச் சொல்லவில்லையா" என்று கூறி, தாம் ஏற்கெனவே அவளுக்குச் சொன்ன வார்த்தைகளை நினைவுபடுத்துகிறார்.

## அதிகாரம் - 11

**கல்லை எடுத்துப்போட்டார்கள்**

**அப்பொழுது மரித்தவன் வைக்கப்பட்ட இடத்திலிருந்த கல்லை எடுத்துப்போட்டார்கள். இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து: பிதாவே, நீர் எனக்குச் செவிகொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன் (யோவா 11:41).**

மார்த்தாள் இயேசுகிறிஸ்துவிடம் அவிசுவாசமாகப் பேசினாலும், அங்கு கூடியிருக்கிறவர்கள் இயேசுகிறிஸ்துவின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, மரித்தவன் வைக்கப்பட்ட இடத்திலிருந்த கல்லை எடுத்துப்போடுகிறார்கள். நாம் தேவனுடைய மகிமையைக் காணவேண்டுமென்றால், தேவன் தமக்குச் சித்தமான வழியில் கிரியை செய்யவேண்டும். அதற்கு நாம் தடையாக இருக்கக்கூடாது. விசுவாசத்தோடு அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, அவர் நமக்குச் சொல்லுகிற காரியங்களைச் செய்யவேண்டும். அவர்கள் கல்லை எடுத்துப்போடுகிறார்கள். இதை மாத்திரமே அவர்களால் செய்யமுடியும். இயேசுகிறிஸ்துவால் மாத்திரமே மரித்துப்போன லாசருவுக்கு ஜீவனைக்கொடுக்க முடியும்.

மரித்துப்போன லாசருவை இயேசுகிறிஸ்து மறுபடியும் உயிரோடு எழுப்புகிறார். இந்த அற்புத சம்பவம் மிகவும் விரிவாக இந்தப் பகுதியில் எழுதப்பட்டிருக்கிறது. லாசருவை எழுப்பிய போது இயேசுகிறிஸ்து செய்கிற ஒவ்வொரு காரியமும் மிகவும் முக்கியமானதாகும். முதலாவதாக இயேசு தம்முடைய கண்களை ஏறெடுக்கிறார். நாம் ஜெபிக்கும்போது நம்முடைய ஆத்துமாவை தேவனுக்கு நேராக உயர்த்துகிறோம். நம்முடைய சிந்தனைகள், செயல்கள் எல்லாவற்றையும் பரலோகத்திற்கு நேராகத் திருப்புகிறோம். இயேசுகிறிஸ்து தம்முடைய கண்களை ஏறெடுத்து வானத்தை நோக்கிப்பார்க்கிறார். மரித்துப்போன லாசரு வைக்கப்பட்டிருக்கிற கல்லறையைப் பார்க்காமல், அந்தக் கல்லறையையும் தாண்டி, அங்கு இருக்கக்கூடிய தடைகள் எல்லாவற்றையும் தாண்டி, இயேசுகிறிஸ்து தமது கண்களை ஏறெடுத்துப்பார்க்கிறார்.

இயேசுகிறிஸ்து தமது கண்களை ஏறெடுத்து "பிதாவே நீர் எனக்கு செவிகொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்" என்று பிதாவிடம் ஜெபிக்கிறார். தம்முடைய முன்மாதிரியான ஜெபத்தின் மூலமாக, ஜெபம்பண்ணுவது எப்படி என்று இயேசுகிறிஸ்து இங்கு விளக்கிக் கூறுகிறார். முதலாவதாக ஜெபத்தில் தேவனை பிதா என்று அழைக்கிறார். அதுபோலவே நாமும் பிதாவாகிய தேவனிடத்தில் ஜெபம்பண்ணவேண்டும். இரண்டாவதாக இயேசுகிறிஸ்து தம்முடைய ஜெபத்தில் பிதாவைத் துதிக்கிறார். நாமும் ஜெபத்தை ஏறெடுக்கும்போது, இயேசுகிறிஸ்து நமக்கு ஏற்கெனவே செய்திருக்கும் நன்மைகளுக்காக அவரைத் துதிக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்து பிதாவைத் துதிக்கும்போது, பிதாவின்மீது தாம் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருப்பதை உறுதிபண்ணுகிறார். "பிதாவே நீர் எனக்கு செவிகொடுத்தபடியினால்" என்று சொல்லி இயேசுகிறிஸ்து துதிக்கிறார். தம்முடைய ஜெபத்திற்கு பிதாவானவர் நிச்சயமாகவே செவிகொடுப்பார் என்னும் நிச்சயம் இயேசுகிறிஸ்துவுக்கு உண்டு. ஆகையினால்தான் ஜெபிக்கும்போதே "செவிகொடுத்தபடியினால்" என்று கூறி துதிக்கிறார்.

மரித்துப்போன லாசருவைப்பற்றி இயேசுகிறிஸ்து இதற்கு முன்பு சொன்னபோது "நான் அவனை எழுப்பப்போகிறேன்" (யோவா 11:11) என்று சொன்னார். இந்த வாக்கியத்தில் இயேசுகிறிஸ்து தம்முடைய சொந்தக் கிரியையைப்பற்றிப் பேசுகிறார். ஆனால் இப்போதோ இந்த வல்லமையைத் தாம் பிதாவினிடத்திலிருந்து பெற்றுக் கொண்டதாக அங்கீகரிக்கிறார். தாம் பிதாவிடத்தில் ஜெபித்ததாகவும், தம்முடைய ஜெபத்திற்கு பிதாவானவர் செவிகொடுத்ததாகவும் இயேசுகிறிஸ்து பிதாவைத் துதிக்கிறார்.

லாசருவை உயிரோடு எழுப்புகிற அற்புதம் தம்முடைய ஜெபத்திற்கு பிதாவானவர் செவிகொடுத்ததினால் உண்டாயிற்று என்று இயேசுகிறிஸ்து அங்கீகரிக்கிறார். இதற்காக பிதாவானவரைத் துதிப்பதில் இயேசுகிறிஸ்து பிரியமாயிருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் ஜெபம் நமக்கு முன்மாதிரியாக இருக்கிறது. தேவனுடைய வல்லமையையும் கிருபையையும் நாம் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால், அவரிடத்தில் ஜெபிக்கவேண்டும், நாம் கேட்டதை அவர் கொடுப்பாரென்று விசுவாசித்து அவரைத் துதிக்கவேண்டும்.

## அதிகாரம் - 11

லாசருவை உயிரோடு எழுப்புவதற்கு முன்பாகவே, பிதாவானவர் தம்முடைய ஜெபத்திற்கு செவிகொடுத்தாகச் சொல்லி, இயேசுகிறிஸ்து அவரை ஸ்தோத்திரிகிறார். வெற்றி வருவதற்கு முன்பாகவே அந்த வெற்றியைக் கொண்டாடுகிறார். இப்படிப்பட்ட விசுவாசம் நம்மிடத்திலும் காணப்படவேண்டும். தேவனுடைய கிருபையும் இரக்கமும் நமக்குக் கொடுக்கப்படுவதற்கு முன்பாகவே, அவருடைய வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசிக்க வேண்டும். அந்த விசுவாசத்தினால் அதைப் பெற்றுக்கொண்டதாக நினைத்து, தேவனை ஸ்தோத்திரம் பண்ணவேண்டும். நம்முடைய ஜெபத்திற்கு தேவனுடைய கிருபைகளும் இரக்கங்களும் நமக்குக் கிடைக்கும்போது, அவற்றை நன்றியுள்ள இருதயத்தோடும், ஸ்தோத்திரபலிகளோடும் அங்கீகாரம்பண்ணவேண்டும்.

தேவனுடைய கிருபை நமக்குக் கிடைப்பதே மிகப்பெரிய அற்புதமும் ஆசீர்வாதமும் ஆகும். நம்முடைய எளிமையான ஜெபத்திற்குத் தேவன் செவிகொடுத்து, நம்முடைய விண்ணப்பத்தை அங்கீகரித்து, தேவன் தம்முடைய கிருபையினால் நமக்கு தெய்வீக கிருபையையும் இரக்கத்தையும் கொடுக்கிறார். நம்முடைய ஜெபத்திற்குத் தேவன் பதில் கொடுப்பது எல்லாமே, அவர் தமது கிருபையினாலும் இரக்கத்தினாலும் கொடுப்பதுதான். நாம் கேட்டுக்கொள்வதற்கு முன்பாகவே தேவன் தமது இரக்கத்தினால் நமக்குப் பதில்கொடுக்கிறார். கிருபையுள்ள தேவனை நாம் நன்றியோடு துதிக்கவேண்டும். நாம் அவரிடத்தில் வேண்டிக்கொண்டதையும் கேட்டுக்கொண்டதையும் நாம் பெற்றுக்கொள்வதற்கு முன்பாகவே, அவற்றை அவர் நமக்குத் தருவார் என்று விசுவாசித்து, அவரைத் துதித்து ஸ்தோத்திரம்பண்ணவேண்டும்.

**எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறீர்**

**நீர் எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன்; ஆனாலும் நீர் என்னை அனுப்பினதைச் சூழ்ந்துநிற்கும் ஜனங்கள் விசுவாசிக்கும்படியாக அவர்கள் நிமித்தம் இதைச் சொன்னேன் என்றார் (யோவா 11:42).**

தாம் எந்த வேளையில் பிதாவிடத்தில் விண்ணப்பம்பண்ணினாலும், அவர் குமாரனுக்கு எல்லா வேளையிலும் செவிகொடுக்கிறார் என்பதை இயேசுகிறிஸ்து உறுதியாகவும் உற்சாகமாகவும் கூறுகிறார். "நீர் எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன்" என்று கூறி ஜெபிக்கிறார். இயேசுகிறிஸ்து எப்பொழுது ஜெபம்பண்ணினாலும், எதற்கு ஜெபம்பண்ணினாலும், அவருடைய எல்லா ஜெபத்திற்கும் பிதாவானவர் பதில் கொடுக்கிறார். இயேசுகிறிஸ்துவுக்கு பிதாவானவர் எப்பொழுதும் செவிகொடுக்கிறார் என்னும் சத்தியம், விசுவாசிகளாகிய நமக்கு உற்சாகமாக இருக்கிறது. இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறார். நம்முடைய விண்ணப்பங்களெல்லாவற்றையும் நாம் இயேசுகிறிஸ்துவின் கரங்களில் ஒப்புக்கொடுக்கிறோம். நமக்காகப் பரிந்து பேசுகிற இயேசுகிறிஸ்து, நம்முடைய காரியங்களைப் பிதாவினிடத்தில் வேண்டிக்கொள்கிறபோது, பிதாவானவர் அவருக்கு எப்பொழுதும் செவிகொடுக்கிறார். நம்முடைய ஜெபத்திற்கு கிறிஸ்துவின் மூலமாக எப்பொழுதும் பதில் கிடைக்கிறது.

தம்முடைய ஜெபத்திற்குப் பிதாவானவர் எப்பொழுதும் செவிகொடுக்கிறார் என்பதை இயேசுகிறிஸ்து கூறும்போது, அதை "நான் அறிந்திருக்கிறேன்" என்றும் கூறுகிறார். தம்முடைய ஜெபத்திற்கு பிதாவின் சமுகத்தில் பதில் கிடைக்கும் என்னும் நிச்சயம் இயேசுகிறிஸ்துவிடமுள்ளது.

இதுபோலவே நம்முடைய எல்லா ஜெபங்களுக்கும் இயேசுகிறிஸ்து பதில்கொடுப்பாரா என்று நமக்கு நிச்சயமாகத் தெரியாது. ஆனாலும் ஒன்று நிச்சயம். "நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக் கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்" (1யோவா 5:14,15).

இயேசுகிறிஸ்துவின் சித்தமும் பிதாவின் சித்தமும் எப்போதுமே ஒன்றாயிருக்கிறது. ஆனால் நம்முடைய சித்தமும் இயேசுகிறிஸ்துவின் சித்தமும் பல சமயங்களில் ஒன்றாயிராமல் வேறுபட்டிருக்கிறது.

## அதிகாரம் - 11

இயேசுகிறிஸ்து லாசருவை உயிரோடு எழுப்புவதற்கு முன்பாக பிதாவிடத்தில் ஜெபிக்கிறார். தாம் அற்புதத்தைச் செய்வதற்கு முன்பாக ஜெபத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார். ஜெபத்தின் மூலமாக, பிதாவானவர் இந்த அற்புதத்தைச் செய்வதாக இயேசுகிறிஸ்து தெளிவுபடுத்துகிறார். இதற்கு ஒரு தெய்வீக காரணம் உண்டு. பிதாவானவர் இயேசுகிறிஸ்துவுக்கு எப்பொழுதும் செவிகொடுக்கிறார். இதை அவர் அறிந்திருக்கிறார். இந்த இடத்தில் இயேசுகிறிஸ்துவை ஏராளமான யூதர்கள் சூழ்ந்து நிற்கிறார்கள். அவர்கள் இயேசுகிறிஸ்துவிடத்திலும், பிதாவிடத்திலும் விசுவாசம் வைக்கவேண்டும். இதற்காகவே தாம் பிதாவிடத்தில் ஜெபிப்பதையும், பிதாவானவர் தமது ஜெபத்திற்கு எப்பொழுதும் செவிகொடுப்பதையும் இயேசுகிறிஸ்து வெளிப்படுத்துகிறார்.

பிதாவானவர் எப்பொழுதும் தமக்குச் செவிகொடுக்கிறார் என்பதை இயேசுகிறிஸ்து அறிந்திருக்கிறார். "ஆனாலும் நீர் என்னை அனுப்பினதை சூழ்ந்து நிற்கும் ஜனங்கள் விசுவாசிக்கும்படியாக அவர்கள் நிமித்தம் இதைச் சொன்னேன்" என்று இயேசுகிறிஸ்து கூறுகிறார். இயேசுகிறிஸ்துவின் சத்துருக்கள் அவருக்கு விரோதமாக எழும்பி நிற்கிறார்கள். அவருடைய உபதேசத்திற்கு எதிர்த்து நிற்கிறார்கள். இயேசுகிறிஸ்து தேவனுடைய வல்லமையினால் அற்புதங்களைச் செய்யவில்லையென்றும், பிசாசுகளின் தலைவனால் அற்புங்களைச் செய்கிறார் என்றும் அவர்மீது குற்றம் சுமத்துகிறார்கள். அவர்களுக்கு மத்தியில் தாம் தேவனால் அனுப்பப்பட்டிருக்கிறவர் என்பதையும், தாம் தேவனுடைய குமாரன் என்பதையும், தாம் தேவனுடைய வல்லமையினால் அற்புதங்களைச் செய்வதையும், இயேசுகிறிஸ்து நிரூபிக்க விரும்புகிறார். இதற்காகவே இயேசுகிறிஸ்து எல்லோருக்கும் முன்பாக, எல்லோரும் கேட்கும்விதத்தில், பிதாவினிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்.

இயேசுகிறிஸ்து அற்புதங்களைச் செய்யும்போது ஜெபம்பண்ணுகிறார். புறஜாதி ஜனங்களோ மந்திரங்களை ஓதி, மாயஜாலம் காண்பிப்பதுபோல பாசாங்கு பண்ணுகிறார்கள். இயேசுகிறிஸ்து ஜெபிக்கும்போது, தம்முடைய கண்களை ஏறெடுத்து, பரலோகத்திலிருக்கிற பிதாவினிடத்தில் தம்முடைய ஜெபத்தை ஏறெடுக்கிறார். யூதர்கள் நினைக்கிற பிரகாரமாக தாம் பிசாசுகளின் தலைவனால் அற்புதங்களைச் செய்யவில்லையென்றும், பிதாவான தேவனுடைய வல்லமையினாலேயே தாம் அற்புதங்களைச் செய்வதாகவும், தம்மைச் சூழ்ந்துநிற்கிற யூதர்கள் எல்லோருக்கும் நிரூபித்துக் காண்பிக்கிறார்.

யூதர்கள் இப்போது இயேசுகிறிஸ்துவுக்கு அருகிலேயே இருக்கிறார்கள். அவரைச் சூழ்ந்து நிற்கிறார்கள். இயேசுகிறிஸ்து தேவனால் அனுப்பப்பட்டிருக்கிறவர் என்பதை இந்த ஜனங்கள் விசுவாசிக்கவேண்டும். மரித்துப்போன லாசருவை மறுபடியும் உயிரோடு எழுப்புவதன் மூலமாக, இயேசுகிறிஸ்துவைச் சூழ்ந்து நிற்கும் ஜனங்களுக்கு, அவர் தேவனால் அனுப்பப்பட்டிருக்கிறவர் என்னும் விசுவாசம் உண்டாகும். விசுவாசிக்கும்போது அவர்கள் தேவனுடைய மகிமையைக் காண்பார்கள்.

**லாசருவே வெளியே வா**

**இவைகளைச் சொன்னபின்பு: லாசருவே, வெளியே வா என்று, உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார் (யோவா 11:43).**

இயேசுகிறிஸ்து இதுவரையிலும் தம்முடைய கண்களை ஏறெடுத்து, பரலோகத்திலிருக்கிற பிதாவினிடத்தில் ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார். இப்போது மரித்துப்போயிருக்கிற லாசருவினிடத்தில் பேசுகிறார். "லாசருவே வெளியே வா" என்று உரத்த சத்தமாய் கூப்பிடுகிறார். தம்முடைய தெய்வீக வல்லமையினால், இயேசுகிறிஸ்து மரித்துப்போன லாசருவை உரத்த சத்தமாய் கூப்பிடாமல், மெதுவாகக் கூப்பிட்டும், அவனை மறுபடியும் உயிரோடு எழுப்பியிருக்க முடியும். ஆனால் இந்த சந்தர்ப்பத்தில் உரத்த சத்தமாய் அவனைக் கூப்பிட வேண்டும் என்பது இயேசுகிறிஸ்துவின் சித்தமாயிற்று.

## அதிகாரம் - 11

மரித்துப்போன லாசருவை மறுபடியும் உயிரோடு எழுப்புவதன் மூலமாக இயேசுகிறிஸ்துவின் வல்லமை பிரத்தியட்சமாக வெளிப்படுகிறது. லாசரு தன் சரீரத்தில் மரித்துப்போனபோது, அவனுடைய ஆத்துமா அவன் சரீரத்தைவிட்டு பரதீசுக்குப் போய்விடுகிறது. மரித்துப்போன அவனுடைய சரீரம் கல்லறையில் வைக்கப்பட்டிருக்கிறது. அவனுடைய ஆத்துமா கல்லறைக்கு அருகாமையில் இல்லை. பரதீசில் இருக்கிறது. ஆகையினால் இயேசுகிறிஸ்து பரதீசில் இருக்கிற லாசருவின் ஆத்துமாவோடு உரத்த சத்தமாய் கூப்பிடுகிறார்.

தூரத்திலிருப்பவர்களை நாம் உரத்த சத்தமாய் கூப்பிடுவது வழக்கம். லாசருவின் சரீரம் நித்திரையிலிருக்கிறது. தூங்குகிறவர்களை எழுப்பும்போது சத்தமிட்டுக் கூப்பிட்டு எழுப்புவது வழக்கம். அதுபோலவே இயேசுகிறிஸ்து இப்போது உரத்த சத்தமாய் “லாசருவே வெளியே வா” என்று கூப்பிடுகிறார்.

இயேசுகிறிஸ்துவின் வல்லமை பல வழிகளில் வெளிப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்து பற்பல அற்புதங்களை, வெவ்வேறு விதமாகச் செய்திருக்கிறார். அவற்றில் உரத்த சத்தமாய் கூப்பிட்டு மரித்துப்போன லாசருவை உயிரோடு எழுப்புவதும் ஒருவகையாகும். உரத்த சத்தமாய் கூப்பிடுவது சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணுவதற்கு அடையாளமாக இருக்கிறது. பாவத்தில் மரித்துப்போயிருக்கும் ஆத்துமாக்களுக்கு நாம் சுவிசேஷச் செய்தியை உரத்த சத்தமாக அறிவிக்க வேண்டும். பாவத்தின் கல்லறையில் மரித்தவர்களாக இருக்கும் அவர்களை நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளுமாறு, உரத்த சத்தமாய் கூப்பிட்டு எழுப்பவேண்டும்.

கடைசிநாளில் பிரதான தூதன் எக்காளம் ஊதுவான். அப்போது மரித்தவர்களெல்லோரும் எக்காளச் சத்தத்தைக் கேட்டு உயிரோடு எழுந்திருப்பார்கள். இயேசுகிறிஸ்துவும் தம்முடைய தூதர்களோடு ஆரவாரத்தோடு வந்து இறங்குவார்.

இயேசுகிறிஸ்து சத்தமிட்டுக் கூப்பிட்டபோது ஒரு சில வார்த்தைகளை மாத்திரமே பயன்படுத்துகிறார். வார்த்தைகள் கொஞ்சமாக இருந்தாலும் அதில் தேவனுடைய வல்லமை அதிகமாயிருக்கிறது. மரித்துப் போனவனை “லாசருவே” என்று பெயர் சொல்லி அழைக்கிறார். அயர்ந்த நித்திரையில் இருப்பவர்களை நாமும் பெயர் சொல்லி எழுப்புவதுபோல, நித்திரையாயிருக்கிற லாசருவை இயேசுகிறிஸ்து பெயர் சொல்லி அழைக்கிறார். கல்லறையைவிட்டு வெளியே வருமாறு உரத்த சத்தமாக கூப்பிடுகிறார்.

“லாசருவே உயிர்பெற்றுக்கொள்” என்று இயேசுகிறிஸ்து கூறவில்லை. அதற்குப் பதிலாக “லாசருவே வெளியே வா” என்று கூறுகிறார். மரித்துப்போன லாசரு திரும்பவும் உயிர்பெற்றிருப்பதை, அவன் தன்னுடைய கிரியைகளினால் நிரூபிக்கவேண்டும். திரும்பவும் உயிர்பெற்றுக்கொண்டு, கல்லறையிலேயே மரித்தவன் போல படுத்திருந்தால், அவன் உயிரோடு இருக்கிறானா அல்லது இன்னும் மரித்தவன்போல இருக்கிறானா என்பது அங்கு கூடியிருக்கிற யூதர்களுக்குத் தெரியாது. ஆகையினால்தான் இயேசுகிறிஸ்து அவனைக் கல்லறையைவிட்டு வெளியே வருமாறு கூறுகிறார். தான் இப்போது உயிரோடிருப்பதை, கல்லறையைவிட்டு லாசரு தானாகவே வெளியே வந்து நிரூபிக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்துவின் கிருபையினால் நாம் புதிய ஜீவனைப்பெற்றுக்கொள்கிறோம். ஆவிக்குரிய ரீதியாக ஜீவிக்கிறோம். நமக்குள் ஆவிக்குரிய ஜீவன் இருக்கிறது என்பதை, ஆவிக்குரிய கிரியைகளைச் செய்துதான் நாம் நிரூபிக்கவேண்டும். லாசரு மறுபடியும் உயிரடைந்திருப்பதினால் இனிமேல் அவனுக்கு கல்லறை தேவையில்லை. கல்லறை அவன் இருக்க வேண்டிய இடமுமல்ல. நித்திய ஜீவனைப் பெற்றிருக்கிற நமக்கு இனிமேல் பாவத்தின் கல்லறை தேவையில்லை. இயேசுகிறிஸ்து நமக்கு மறுஜீவனை கொடுத்திருப்பதினால், நாம் இனிமேல் மரித்தவர்களைப்போல இந்தப் பாவமான உலகத்தில், எந்தக் கிரியையும் செய்யமுடியாமல், அடிமையாக இருக்க வேண்டிய அவசியமில்லை. இயேசுகிறிஸ்து நமக்கு புதிய ஜீவனைக்கொடுக்கும்போது, அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, அவர் சொன்ன பிரகாரம் கிரியை செய்ய ஆரம்பிக்கவேண்டும்.

## அதிகாரம் - 11

**மரித்தவன் வெளியே வந்தான்**

**அப்பொழுது, மரித்தவன் வெளியே வந்தான். அவன் கால்களும் கைகளும் பிரேதச் சீலைகளினால் கட்டப்பட்டிருந்தது, அவன் முகமும் சீலையால் சுற்றப்பட்டிருந்தது. இயேசு அவர்களை நோக்கி: இவனைக் கட்டவிழ்த்துவிடுங்கள் என்றார் (யோவா 11:44).**

இயேசுகிறிஸ்துவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, மரித்துப்போன லாசரு வெளியே வருகிறான். இயேசுகிறிஸ்துவின் வார்த்தை புறப்பட்டுப்போகும்போது, அதில் தேவனுடைய வல்லமை கலந்திருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் வார்த்தை வல்லமையுள்ளது. லாசருவின் சரீரத்தையும் ஆத்துமாவையும் கிறிஸ்துவின் வார்த்தை மறுபடியும் இணைக்கிறது. மரித்துப்போன அவன், கிறிஸ்துவின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, கல்லறையைவிட்டு வெளியே வருகிறான்.

இந்த அற்புதம் யாருக்கும் தெரியாமல் மறைவாய் நடைபெற்ற காரியமல்ல. எல்லோருக்கும் முன்பாகப் பிரத்தியட்சமாக நடைபெற்றிருக்கிறது. யூதர்கள் இயேசு கிறிஸ்துவிடத்தில் விசுவாசம் வைக்கவேண்டும் என்பதற்காக, இந்த அற்புதம் நடைபெற்றிருக்கிறது. லாசரு மறுபடியும் உயிரோடு எழும்பியது, நமது தாகத்தை தீர்ப்பதற்காக புறப்பட்டு வரும், மறைவான நீரூற்றைப்போல இல்லை. எல்லோரும் பார்க்கும் வண்ணமாக, பிரத்தியட்சமாக இந்த சம்பவம் நடைபெறுகிறது. அங்கு இருந்தவர்களுடைய விசுவாசம் உறுதிபண்ணப்படுகிறது. இயேசுகிறிஸ்து தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறவர் என்பதை இந்த அற்புத சம்பவம் நிரூபிக்கிறது.

மரித்துப்போன லாசரு மறுபடியும் உயிரோடு எழும்பி வந்திருக்கிறான். அவன் மரித்தபின்பு, அவனுடைய சரீரத்தைவிட்டு, அவனுடைய ஆத்துமா பரதீசுக்குப் போய்விட்டது. நான்கு நாட்களாக அவனுடைய சரீரமும் ஆத்துமாவும் பிரிந்தேயிருக்கிறது. அவனுடைய ஆத்துமாவுக்கு பரதீசைப் பார்க்கக்கூடிய சிலாக்கியம் கிடைத்திருக்கிறது. இந்த சம்பவமெல்லாம் நமக்கு வெளிப்படுத்தப்படாத இரகசியமாகவே இருக்கிறது. தேவனுடைய பிரமாணத்தின்படி, லாசருவால் தான் பார்த்த பரதீசை நம்மிடத்தில் விவரித்துக் கூறமுடியாது. ஏனெனில் தேவன் இந்த இரகசியத்தை இன்னும் நமக்கு வெளிப்படுத்தவில்லை. அறியாத காரியங்கள் கர்த்தருக்கே உரியது. எழுதப்படாததற்கு மிஞ்சி நாம் ஒன்றும் எண்ணக்கூடாது. தேவனுடைய ஞானத்தைவிட நம்முடைய ஞானத்தை உயர்த்தக்கூடாது. லாசருவின் உயிர்த்தெழுதலைப்பற்றி மிகவும் சுருக்கமாக, அதே சமயத்தில் தெளிவாக "மரித்தவன் வெளியே வந்தான்" என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்த வெளிப்பாடு நமக்குப் போதுமானது.

இயேசுகிறிஸ்து செய்கிற அற்புதம் விரைவாக நடைபெறுகிறது. அற்புதம் தவணைமுறையில், கொஞ்சம் கொஞ்சமாக நடைபெறாமல், ஒரே வேளையில் முழுவதுமாக நடைபெறுகிறது. இயேசுகிறிஸ்து மரித்துப் போன லாசருவைப்பார்த்து "லாசருவே வெளியே வா" என்று உரத்த சத்தமாய் கூப்பிட்டவுடன், "மரித்தவன் வெளியே வந்தான்". இவ்விரண்டு சம்பவத்திற்கும் இடையில் வேறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை.

இயேசுகிறிஸ்து செய்கிற அற்புதம் பூரணமாக இருக்கிறது. தேவனுடைய வல்லமையினால் லாசரு மறுபடியும் உயிர்பெற்றபோது, அவனுக்குள் ஜீவனும் பெலனும் உண்டாயிற்று. நித்திரையாயிருக்கிறவன் தன் படுக்கையை விட்டு ஆரோக்கியத்தோடு எழுந்திருப்பது போல, மறுபடியும் உயிர்பெற்ற லாசரு தன் கல்லறையிலிருந்து எழுந்து வெளியே வருகிறான். அவனுக்கு ஜீவனும் பெலனும் மறுபடியும் உண்டாயிற்று.

## அதிகாரம் - 11

இயேசுகிறிஸ்து மரித்துப்போன லாசருவை மறுபடியும் உயிரோடு எழுப்பி, அவனை ஒரு காட்சி பொருளாக வைத்திருக்கவில்லை. மற்ற மனுஷரைப்போல அவனும் வாழவேண்டுமென்றுதான் உயிரோடு எழுப்பியிருக்கிறார். அவன் கல்லறையிலிருந்து வெளியே வந்தபோது, அவன் கால்களும் கைகளும் பிரேதச் சீலைகளினால் கட்டப்பட்டிருக்கிறது. மரித்துப்போனவரின் சரீரத்தைப் பிரேதச் சீலைகளினால் கட்டி கல்லறையில் அடக்கம்பண்ணுவது யூதருடைய வழக்கம். அவன் எப்படி அடக்கம்பண்ணப்பட்டானோ அப்படியே வெளியே வருகிறான். அவனை எந்த பிரேதச் சீலையினால் கட்டியிருந்தார்களோ, அதே சீலையோடே வெளியே வருகிறான். இதனால் அவனை ஜனங்கள் எளிதாக அடையாளம் கண்டுகொள்கிறார்கள். மறுபடியும் உயிர்பெற்று கல்லறையிலிருந்து எழும்பி வருவது லாசருதான் என்றும், அது வேறு யாருமல்ல என்றும் அங்குள்ளவர்களுக்கு சந்தேகமில்லாமல் தெளிவாய்த் தெரிகிறது.

அங்கு கூடியிருக்கிற ஜனங்களிடம் இயேசுகிறிஸ்து "இவனைக் கட்டவிழ்த்துவிடுங்கள்" என்று கூறுகிறார். இயேசுகிறிஸ்துவின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து அவர்கள் அவனைக் கட்டியிருந்த பிரேதச் சீலைகளை அவிழ்த்துவிடுகிறார்கள். கைகளிலும் கால்களிலும் கட்டப்பட்டிருந்த கட்டுக்கள் இப்போது அவிழ்க்கப்படுகிறது. அவனால் இப்போது நடக்க முடியும். தொட முடியும். பேச முடியும். பார்க்க முடியும். உயிருள்ள மற்ற மனுஷர்களைப்போல லாசருவாலும் இப்போது செயல்பட முடியும். இயேசுகிறிஸ்துவின் அற்புத வல்லமைக்கு லாசரு சாட்சியாக எழுப்பப்பட்டிருக்கிறான்.

நமக்கும் ஒரு நாள் மரணம் வரும். ஒரு தரம் பிறப்பதும், பின்பு மரிப்பதும் மனுஷர் எல்லோருக்கும் நியமிக்கப்பட்டிருக்கிறது. நாம் இந்த பூமியில் பிறந்தபோது நம்மோடு ஒன்றும் கொண்டு வந்ததில்லை. போகும் போதும் ஒன்றும் கொண்டு போகப்போவதில்லை. ஒருவேளை நாம் மரித்தபின்பு லாசருவைக் கட்டியதுபோல, பிரேதச் சீலைகளினால் நம்மையும் கட்டி, நம்முடைய சரீரத்தை அடக்கம்பண்ணலாம். நாம் மரிக்கும்போது நமக்கு இதுதான் கிடைக்கும். ஒருவேளை இந்த சீலையோடு, நமக்கு ஒரு சவப்பெட்டி கிடைக்கலாம். நாம் இந்த பூமிக்கு ஒன்றுமில்லாமல் வந்ததுபோலவே, ஒன்றுமில்லாமல் போவோம். ஆகையினால் கர்த்தர் நமக்கு ஜீவனைக்கொடுத்திருக்கும் காலம் வரையிலும், உலக ஆசையில்லாமல், பண ஆசையில்லாமல், போதுமென்ற மனதோடு ஜீவித்து, கர்த்தருக்குப் பிரியமான பிள்ளையாகவும், பிரயோஜனமுள்ள பிள்ளையாகவும் ஜீவித்து, நமக்கு நியமிக்கப்பட்டிருக்கும் ஓட்டத்தைப் பொறுமையோடு ஓடி முடிக்கவேண்டும்.

லாசரு கல்லறையைவிட்டு வெளியே வரும்போது பிரேதச் சீலைகளோடு வருகிறான். சிலருக்கு பிரேதச் சீலைகளைப் பார்ப்பதற்கு பயமாக இருக்கும். சிலர் மரித்தவரின் சரீரத்தையும், பிரேதத்தைச் சுற்றியிருக்கும் சீலைகளையும் பார்ப்பதற்குப் பயப்படுவார்கள். தொடுவதற்கு அசிங்கப்படுவார்கள். லாசரு மறுபடியும் உயிர்பெற்ற பின்பு, அவன் நித்தியகாலமாகப் பிரேதச் சீலையில் கட்டப்பட்டிருக்க வேண்டுமென்று அவனை அப்படியே விட்டுவிடவில்லை. அவனுடைய கட்டுக்களை அவிழ்க்குமாறு கூறுகிறார். அவனுக்கு நல்ல வஸ்திரம் கொடுத்து, மற்றவர்களைப்போல அவனும் ஜீவிப்பதற்கு அவனை ஆசீர்வதிக்கிறார்.

### பரிசேயரின் ஆலோசனை
### யோவா 11 : 45-48

**யோவா 11:45. அப்பொழுது மரியாளிடத்தில் வந்திருந்து, இயேசு செய்தவைகளைக் கண்டவர்களாகிய யூதர்களில் அநேகர் அவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள்.**

**யோவா 11:46. அவர்களில் சிலர் பரிசேயரிடத்தில் போய், இயேசு செய்தவைகளை அவர்களுக்கு அறிவித்தார்கள்.**

**யோவா 11:47. அப்பொழுது பிரதான ஆசாரியரும் பரிசேயரும் ஆலோசனைச் சங்கத்தைக் கூடிவரச்செய்து, நாம் என்னசெய்கிறது? இந்த மனுஷன் அநேக அற்புதங்களைச் செய்கிறானே.**

**யோவா 11:48. நாம் இவனை இப்படி விட்டுவிட்டால், எல்லாரும் இவனை விசுவாசிப்பார்கள்; அப்பொழுது ரோமர் வந்து நம்முடைய ஸ்தானத்தையும் ஜனத்தையும் அழித்துப்போடுவார்களே என்றார்கள்.**

## அதிகாரம் - 11

**அநேகர் விசுவாசமுள்ளவர்களானார்கள்**

**அப்பொழுது மரியாளிடத்தில் வந்திருந்து, இயேசு செய்தவைகளைக் கண்டவர்களாகிய யூதர்களில் அநேகர் அவரிடத்தில் விசுவாசமுள்ள வர்களானார்கள் (யோவா 11:45).**

மரித்துப்போன லாசருவை இயேசுகிறிஸ்து மறுபடியும் உயிரோடு எழுப்பி அற்புதம் செய்கிறார். அங்கு மரியாளோடு வந்திருந்த யூதர்களும் இருக்கிறார்கள். அவர்களில் அநேகர் இயேசு செய்தவைகளைக்கண்டு அவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களாகிறார்கள். அழைக்கப் பட்டவர்கள் சிலர். அவர்கள் இயேசுவைக் கிறிஸ்து என்று விசுவாசிப்பார்கள். இயேசுகிறிஸ்து செய்கிற அற்புதங்களை இந்த யூதர்கள் பல சமயங்களில் கேள்விப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இதுவரையிலும் அந்த அற்புதங்களை இவர்கள் தங்கள் கண்களால் பார்த்ததில்லை. ஆகையினால் இயேசுகிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்க வேண்டுமா அல்லது விசுவாசிக்க வேண்டாமா என்னும் சந்தேகம் இவர்களுடைய உள்ளத்தில் இருந்தது.

இப்போதோ மரியாளிடத்தில் வந்திருந்த யூதர்களில் அநேகர் இயேசு செய்த அற்புதங்களைத் தங்கள் கண்களால் கண்டு, இயேசுவே கிறிஸ்து என்பதை நிச்சயமாய் நம்புகிறார்கள். இவர்களுடைய அவிசுவாசம் இவர்களை விட்டு நீங்கிப்போயிற்று. இந்த யூதர்கள் மரியாளை ஆறுதல்படுத்துவதற்காக அவளிடத்திற்கு வந்திருக்கிறார்கள். நல்லவர்களிடத்தில் வருகிறவர்களுக்கு நன்மை உண்டாகிறது. நாமும் மற்றவர்களுக்கு நன்மை செய்யும்போது, நம் மூலமாக, தேவனுடைய ஆசீர்வாதங்களை, மற்றவர்களும் பெற்றுக்கொள்ள வாய்ப்பு உண்டாகும். மரியாள் மூலமாக யூதர்களில் அநேகர் இயேசுகிறிஸ்துவிடத்தில் விசுவாசம் வைத்திருக்கிறார்கள்.

**சிலர் பரிசேயரிடத்தில் அறிவித்தார்கள்**

**அவர்களில் சிலர் பரிசேயரிடத்தில் போய், இயேசு செய்தவைகளை அவர்களுக்கு அறிவித்தார்கள் (யோவா 11:46).**

யூதர்களில் அநேகர் இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைத்திருந்தாலும், இன்னும் சிலர் அவரை விசுவாசியாமல் தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்துகிறார்கள். அவர்களுடைய உள்ளத்தில் அவிசுவாசம் நிறைந்திருக்கிறது. அவர்களில் சிலர் பரிசேயரிடத்தில்போய் இயேசு செய்தவைகளை அவர்களுக்கு அறிவிக்கிறார்கள். உள்ளத்தில் வஞ்சனையான எண்ணத்தோடு இயேசுவைப்பற்றி பரிசேயரிடத்தில் பேசுகிறார்கள். இயேசுகிறிஸ்துவின்மீது குற்றம் சுமத்தி, அவருக்குத் தண்டனை கொடுக்கவேண்டுமென்பது இவர்களுடைய திட்டம். இயேசுவைக் கிறிஸ்துவாக விசுவாசிக்கக்கூடாது என்று தங்கள் உள்ளத்தில் தீர்மானமாக இருக்கிறார்கள். இப்படிப்பட்ட அவிசுவாசிகளுக்கு தேவனுடைய வல்லமை எப்படித்தான் வெளிப்படுத்தப்பட்டாலும், இவர்கள் இயேசு கிறிஸ்துவிடத்தில் விசுவாசம் வைக்கவேமாட்டார்கள். இவர்கள் சத்தியத்திற்கு சத்துருக்களாக இருக்கிறார்கள். இவர்கள் மெய்யைப் பின்பற்றாமல், பொய்யைப் பின்பற்றுகிற பொய்யர்கள்.

இப்படிப்பட்டவர்களில் யாராவது ஒருவர் இயேசுகிறிஸ்துவை ஓரளவு விசுவாசித்தாலும், மற்ற அவிசுவாசிகள் அவர்களிடத்தில் இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி, அவர்களுடைய விசுவாசத்தை அவர்களைவிட்டு நீக்கிப்போடுவார்கள். அவர்களையும் தங்களோடு சேர்த்துக்கொண்டு இயேசுகிறிஸ்துவின்மீது கல்லெறியவேண்டுமென்று தீர்மானமாக இருப்பார்கள்.

**ஆலோசனைச்சங்கம்**

**அப்பொழுது பிரதான ஆசாரியரும் பரிசேயரும் ஆலோசனைச் சங்கத்தைக் கூடிவரச்செய்து, நாம் என்னசெய்கிறது? இந்த மனுஷன் அநேக அற்புதங்களைச் செய்கிறானே (யோவா 11:47).**

## அதிகாரம் - 11

யூதருடைய ஆலோசனைச்சங்கத்திற்கு பிரதான ஆசாரியரும் பரிசேயரும் தலைவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் குருடருக்கு வழிகாட்டுகிற குருட்டுத்தலைவர்கள். சாதாரண ஜனங்களைவிட இவர்கள் மிகவும் மோசமானவர்கள். இயேசு செய்தவைகளை ஒரு சிலர் இவர்களிடத்தில் சொன்னபோது, இயேசுவை எப்படியாவது பிடித்து அவரைத் தண்டிக்கவேண்டுமென்று வைராக்கியமாக இருக்கிறார்கள்.

தங்களுடைய திட்டத்தை நிறைவேற்றுவதற்காக இவர்கள் உடனடியாக ஆலோசனைச்சங்கத்தை கூடிவரச் செய்கிறார்கள். பொதுவாக யூதருடைய ஆலோசனைச்சங்கத்தார் கூடிவந்து பக்திவிருத்திக்கு ஏதுவான காரியங்களைப் பற்றி விவாதம் பண்ணுவார்கள். ஒருவருக்கொருவர் ஆலோசனை சொல்லி, யூதருடைய பொதுவான நன்மைகளை விசாரித்துக்கொள்வார்கள். ஆனால் இப்போதோ இயேசுகிறிஸ்துவைத் தண்டிக்கவேண்டுமென்னும் ஒரே நோக்கத்தோடு ஆலோசனைச்சங்கத்தார் கூடிவந்திருக்கிறார்கள். நன்மை செய்வதற்கு ஆலோசனை செய்வதற்குப் பதிலாக, இப்போது தீமை செய்வதற்கு ஆலோசனை செய்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின்மீது தங்களுக்கு இருக்கும் கோபத்தையும் விரோதத்தையும் ஒருவருக்கொருவர் கலந்துபேசி, புகைகிற நெருப்பை ஊதி ஊதி அதிகமாக எரியச்செய்கிறதுபோல, இயேசுவின்மீதுள்ள தங்களுடைய கோபத்தை அதிகரிக்கச் செய்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து செய்கிற அற்புதங்களை இவர்களால் சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியவில்லை. அவர் அநேக அற்புதங்களைச் செய்கிறபடியினால், யூதர்களில் அநேகர் அவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருக்கிறார்கள். ஆகையினால் இப்படிப்பட்ட சூழ்நிலையில் என்னசெய்வது என்று யூதருடைய ஆலோசனைச்சங்கத்தார் கூட்டங்கூடி விவாதம்பண்ணுகிறார்கள். இயேசுகிறிஸ்து அநேக அற்புதங்களைச் செய்கிறார் என்பதை இவர்களும் அங்கீகரிக்கிறார்கள். தங்களுக்கு விரோதமாக தாங்களே சாட்சிகளாக இருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து அற்புதம் செய்வது மெய்தான் என்பதற்கு பரிசேயரும் பிரதான ஆசாரியரும் சாட்சியாயிருக்கிறார்கள். ஒரு சில அற்புதங்களல்ல, இயேசுகிறிஸ்து அநேக அற்புதங்களைச் செய்கிறாரென்று இவர்கள் அங்கீகரிக்கிறார்கள். இதன் மூலமாக இயேசுகிறிஸ்துவினால் அற்புதம் செய்ய முடிகிறது என்பதை இவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனாலும் இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரன் என்பதையும், பிதாவானவர் இவரை இந்த உலகத்திற்கு அனுப்பியிருக்கிறார் என்றும் இவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு என்ன செய்வது என்றும், அவரை அழித்துப்போடுவதற்கு என்ன செய்வது என்றும் யூதருடைய ஆலோசனைச்சங்கத்தார் ஒருவருக்கொருவர் ஆலோசனைபண்ணுகிறார்கள். இயேசுகிறிஸ்து அநேக அற்புதங்களைச் செய்கிறபடியினால், அவரைச் சீக்கிரமாக அழித்துப்போடவேண்டும் என்பதில் இவர்கள் உறுதியாக இருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனாக ஏற்றுக்கொள்ள வேண்டுமா, தாங்கள் எதிர்பார்க்கிற மேசியா அவர்தானா என்பதைப்பற்றி எல்லாம் அவர்கள் விவாதம்பண்ணி ஒரு முடிவுக்கு வரவில்லை. அதற்குப் பதிலாக, இயேசுகிறிஸ்து தங்கள் எல்லோருக்கும் விரோதி என்றும், அவரை அழித்துப்போட வேண்டும் என்றும் தீர்மானம்பண்ணி, அதற்காக "நாம் என்ன செய்கிறது" என்று ஆலோசனை பண்ணுகிறார்கள். இயேசுவுக்கு விரோதமாகப் பேசிக்கொண்டேயிருந்தால் மாத்திரம் போதுமா, செயல்படவேண்டாமா, அதையும் விரைவில் செயல்பட்டு அவரைச் சீக்கிரத்தில் அழித்துப்போட வேண்டாமா என்று தீர்மானம்பண்ணுகிறார்கள்.

### ரோமர் அழித்துப்போடுவார்கள்

**நாம் இவனை இப்படி விட்டுவிட்டால், எல்லாரும் இவனை விசுவாசிப்பார்கள்; அப்பொழுது ரோமர் வந்து நம்முடைய ஸ்தானத்தையும் ஜனத்தையும் அழித்துப்போடுவார்களே என்றார்கள் (யோவா 11:48).**

## அதிகாரம் - 11

யூதருடைய ஆலோசனைச்சங்கத்தார் ஆவிக்குரிய காரியங்களில் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக, உலகப்பிரகாரமான காரியங்களில் கவனம் செலுத்துகிறார்கள். ஜனங்களைப் பாவபழக்கவழக்கங்களிலிருந்து விடுதலைபண்ணுவதற்கு ஆலோசனை செய்வதற்குப் பதிலாக, ரோமப்பேரரசிடமிருந்து தங்களையும் தங்கள் தேசத்தையும் விடுதலை பண்ணுவதைப்பற்றி ஆலோசனை பண்ணுகிறார்கள். இக்காலத்தில் யூதேயா தேசமும், எருசலேம் நகரமும், தேவாலயமும் ரோமப்பேரரசின் ஆளுகைக்குட்பட்டிருக்கிறது.

இயேசுகிறிஸ்துவை இப்படியே விட்டுவிட்டால் யூதர்களெல்லாரும் இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பார்களென்று ஆலோசனைச்சங்கத்தார் பயப்படுகிறார்கள். இவர்களெல்லோரும் இயேசுகிறிஸ்துவைத் தங்களுக்கு புதிய ராஜாவாக ஆக்கிவிடுவார்களென்றும், இதனால் ரோமப்பேரரசுக்கு தங்கள்மீது கோபம் உண்டாகும் என்றும், இதன் விளைவாக ரோமர் வந்து தங்களுடைய ஸ்தானத்தையும் ஜனத்தையும் அழித்துப்போடுவார்களே என்றும் பயப்படுகிறார்கள். இவர்களுக்குத் தங்களுடைய சொந்த ஸ்தானத்தைக் காப்பாற்றிக் கொள்வதில்தான் அக்கறையிருக்கிறது.

இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தை வளர்க்கவோ அல்லது தடுக்கவோ தங்களுக்கு அதிகாரம் இருப்பதுபோல ஆலோசனைச்சங்கத்தார் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். தங்களுடைய அதிகாரத்தினால் இயேசுகிறிஸ்துவை அடக்கிப்போடமுடியும் என்றும் வீணாகக் கற்பனைபண்ணுகிறார்கள். இயேசுகிறிஸ்து தங்களுடைய அதிகாரத்திற்கு உட்பட்டவர் என்றும், இயேசுகிறிஸ்துவின் அதிகாரத்தைவிட தங்களுடைய அதிகாரம் மேலானது என்றும் தவறாகச் சிந்திக்கிறார்கள். இயேசுகிறிஸ்து மரணத்தை வென்றவர். அவர் சர்வ வல்லமையுள்ளவர். அவருடைய வல்லமைக்கு முன்பாக ஆலோசனைச்சங்கத்தாரின் வல்லமை நிமிர்ந்து நிற்கமுடியாது. ஆலோசனைச்சங்கம் ஒன்றுமில்லாமல் போய்விடும்.

இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தைப் பற்றியும் அதன் வளர்ச்சியைப்பற்றியும் ஆலோசனைச்சங்கத்தார் ஓரளவு அறிந்து வைத்திருக்கிறார்கள். ஆகையினால் இயேசுகிறிஸ்துவை இப்படி விட்டுவிட்டால், எல்லாரும் இயேசுவை விசுவாசிப்பார்களென்று தீர்க்கதரிசனம் சொல்லுவதுபோலப் பேசுகிறார்கள். ஆலோசனைச்சங்கத்தின் பதவியில் தாங்கள் தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். தங்களுடைய ஸ்தானத்தைக் காப்பாற்றிக்கொள்வதற்காக என்னவெல்லாம் செய்யவேண்டுமோ அதையெல்லாம் செய்வதற்கு ஆயத்தமாகயிருக்கிறார்கள்.

எல்லோரும் இயேசுவை விசுவாசிப்பார்கள் என்று பயப்படுகிற இதே பிரதான ஆசாரியரும், பரிசேயரும் "அதிகாரிகளிலாவது, பரிசேயரிலாவது யாதாமொருவர் இயேசுவை விசுவாசித்ததுண்டா" என்று ஏற்கெனவே கேட்டவர்கள் (யோவா 7:48). இயேசுகிறிஸ்துவை யாரும் விசுவாசிக்கமாட்டார்களென்று ஆணவமாக இருந்தவர்கள், இப்போது இயேசுவை எல்லாரும் விசுவாசிப்பார்கள் என்று பயப்படுகிறார்கள்.

யூதேயா தேசத்தார் எல்லாருமே இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து அவருக்குப் பின்னால் போய்விடுவார்களென்று பரிசேயரும் பிரதான ஆசாரியரும் பயப்படுகிறார்கள். ஜனங்கள் எல்லோரும் இயேசுவைப் பின்பற்றினால் ரோமப்பேரரசருக்கு தங்கள்மீது கோபம் உண்டாகும் என்றும், அவர்கள் வந்து தங்களுடைய ஸ்தானத்தையும், ஜனத்தையும் அழித்துப் போடுவார்கள் என்றும் பயப்படுகிறார்கள். இவர்களால் சத்தியத்தைச் சந்திக்க முடியவில்லை. ஆவிக்குரிய கோழைகளாக இருக்கிறார்கள். தங்களுடைய ஒற்றுமையை இவர்களால் காத்துக்கொள்ள முடியவில்லை. யூதர்கள் ஒற்றுமையாக இருந்தால், இவர்கள் ரோமப்பேரரசுக்குப் பயப்படவேண்டியதில்லை. யூதர்கள் எல்லோரும் தங்களைக் கைவிட்டுவிட்டு, இயேசுகிறிஸ்துவின் பின்னால் போய்விட்டதுபோலப் பயப்படுகிறார்கள்.

## அதிகாரம் - 11

மனுஷன் தன் நம்பிக்கையை இழந்துபோனால் அவன் தன் தைரியத்தையும் இழந்துபோவான். இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷ ஊழியத்தினால், ரோமப்பேரரசார் வந்து யூதருடைய ஆலோசனைச்சங்கத்தையும், பிரதான ஆசாரியர், பரிசேயர் ஆகியோரின் ஸ்தானத்தையும் அழித்துப்போடுவதற்கு வாய்ப்பேயில்லை. ஆபத்து வருமென்று கற்பனைபண்ணுகிறார்கள். ராயனுக்கு வரிகொடுக்க வேண்டும் என்றுதான் இயேசுகிறிஸ்து உபதேசம்பண்ணுகிறார். ரோமப்பேரரசுக்கு விரோதமாக இயேசுகிறிஸ்து புரட்சி எதுவும் செய்யவில்லை. தீமைக்கு எதிர்த்து நிற்கவேண்டாம் என்றும் இயேசுகிறிஸ்து கூறுகிறார். இயேசுகிறிஸ்துவை விசாரணை செய்த ரோமப்பேரரசின் தேசாதிபதி அவரிடத்தில் ஒரு குற்றமும் காணவில்லை. அரண்டவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேய்களாகத் தெரிவதுபோல, பிரதான ஆசாரியரும் பரிசேயரும் எதைப்பார்த்தாலும் பயப்படுகிறார்கள். தங்களுடைய வஞ்சகமான திட்டம் தங்களுக்கு விரோதமாக கிரியை செய்யுமோ என்றும், தங்களுக்கும் தங்கள் ஸ்தானத்திற்கும் ஆபத்து உண்டாகுமோ என்றும் பயப்படுகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவுக்கும் அவருடைய சுவிசேஷத்திற்கும் எதிர்த்து நிற்கிறவர்கள் ஜனங்களுக்கு நன்மை செய்கிறோம் என்னும் பெயரிலும், தேசத்திற்கு நன்மை செய்கிறோம் என்னும் பெயரிலும், ஜனங்களையும் தேசத்தையும் பாதுகாக்கிறோம் என்னும் பெயரிலுமே எதிர்த்து நிற்கிறார்கள். இப்படிப்பட்ட சத்துருக்களால் அவர்களுடைய ஜனத்திற்கும் தேசத்திற்கும் தீமையே உண்டாகுமேயல்லாமல் நன்மை ஒருபோதும் உண்டாகப்போவதில்லை. ஜனத்திற்கு நன்மை செய்யவேண்டுமென்றால், ஜனத்தை இயேசுகிறிஸ்துவிடம் அழைத்து வரவேண்டும். இயேசுகிறிஸ்துவின் வார்த்தையை விசுவாசித்து, அவருக்குக் கீழ்ப்படிந்து நடக்க ஜனங்களை வழிநடத்த வேண்டும். இது மாத்திரமே ஜனங்களுக்குச் செய்யக்கூடிய நன்மை.

பழைய ஏற்பாட்டுக்காலத்து தீர்க்கதரிசிகளும், புதிய ஏற்பாட்டுக்காலத்து அப்போஸ்தலர்களும் உலகத்தைக் கலக்குகிறவர்களாக இருந்தார்கள். அவர்களைப் பார்த்து ஜனங்கள் கலங்கினார்கள். தங்கள் சுயவல்லமையினால் கர்த்தருடைய ஊழியக்காரர்களை இவர்களால் எதிர்த்து நிற்கமுடியவில்லை. ஆகையினால் அப்போஸ்தலர்கள் "உலகத்தைத் தலைகீழாக மாற்றுகிறவர்கள்" என்று அவர்கள்மீது குற்றம் சுமத்தினார்கள்.

ஒரு தேசத்தில் துன்மார்க்கர் ஆளுகை செய்யும்போது அங்கு நீதிக்கு இடம் இராது. சத்தியத்திற்கும், நேர்மைக்கு அங்கு மதிப்பு இருக்காது. அவனவன் தனக்கு இஷ்டமானதைச் செய்வான். துணிகரமாக பாவம் செய்கிறவர்கள் சத்தியத்திற்குப் பயப்படமாட்டார்கள். முடிவில் அவர்களுடைய பாவமே அவர்களை அழித்துப்போடும். இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாக இருக்கிறவர்கள் சத்தியத்தைப் பகைக்கிறார்கள்.

### காய்பா
### யோவா 11 : 49-53

**யோவா 11:49. அப்பொழுது அவர்களில் ஒருவனும் அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனுமாகிய காய்பா என்பவன் அவர்களை நோக்கி: உங்களுக்கு ஒன்றுந்தெரியாது;**

**யோவா 11:50. ஜனங்களெல்லாரும் கெட்டுப்போகாதபடிக்கு ஒரே மனுஷன் ஜனங்களுக்காக மரிப்பது நமக்கு நலமாயிருக்குமென்று நீங்கள் சிந்தியாமலிருக்கிறீர்கள் என்றான்.**

**யோவா 11:51. இதை அவன் சுயமாய்ச் சொல்லாமல், அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனானபடியினாலே இயேசு யூதஜனங்களுக்காக மரிக்கப்போகிறாரென்றும்,**

**யோவா 11:52. அந்த ஜனங்களுக்காக மாத்திரமல்ல, சிதறியிருக்கிற தேவனுடைய பிள்ளைகளை ஒன்றாகச் சேர்க்கிறதற்காகவும் மரிக்கப் போகிறாரென்றும், தீர்க்கதரிசனமாய்ச் சொன்னான்.**

**யோவா 11:53. அந்நாள்முதல் அவரைக்கொலை செய்யும்படிக்கு ஆலோசனைபண்ணினார்கள்.**

## அதிகாரம் - 11

**உங்களுக்கு ஒன்றுந்தெரியாது**

**அப்பொழுது அவர்களில் ஒருவனும் அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனுமாகிய காய்பா என்பவன் அவர்களை நோக்கி: உங்களுக்கு ஒன்றுந்தெரியாது; (யோவா 11:49)**

யூதருடைய ஆலோசனைச்சங்கத்தில் காய்பா என்பவன் இருக்கிறான். இவன் அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியன். இவன் ஆலோசனைச்சங்கத்தில் இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாகப் பேசினாலும், கர்த்தருடைய தீர்க்கதரிசன வார்த்தையைப் பேசுகிறான். ஆலோசனைச்சங்கத்தில் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் கருத்தைக் கூறுகிறார்கள்.

இவன் இந்த வருஷத்து பிரதான ஆசாரியனாக இருப்பதினால், அவர்களுடைய ஆலோசனைக்கு முடிவுரையாகத் தன்னுடைய தீர்ப்பைக் கூறுகிறான். ஆரம்பத்திலேயே காய்பா ஆலோசனைச்சங்கத்தாரை நோக்கி "உங்களுக்கு ஒன்றுந்தெரியாது" என்று கூறிவிடுகிறான். அதைத் தொடர்ந்து "ஜனங்களெல்லாரும் கெட்டுப்போகாதபடிக்கு ஒரே மனுஷன் ஜனங்களுக்காக மரிப்பது நமக்கு நலமாயிருக்கும்" என்றும் கூறுகிறான்.

காய்பாவின் ஆலோசனை சிறியதாக இருந்தாலும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஏதாவது ஒரு வழியில் இயேசுகிறிஸ்துவைக் கொன்றுபோட வேண்டுமென்று தீர்மானமாக இருக்கிறான். அதற்கு "என்ன வழி" என்பதை ஆலோசனைச்சங்கத்தார் யோசித்து முடிவுபண்ண வேண்டும் என்பதே இவனுடைய தீர்ப்பாக இருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தை நிறுத்திப்போடவேண்டும் என்பது காய்பாவின் ஆலோசனை அல்ல. இயேசுகிறிஸ்து மரிக்க வேண்டுமென்பதே காய்பாவின் தீர்மானம்.

காய்பா தன்னுடைய தீர்ப்பை ஆணவமாகவும், மற்றவர்களுடைய ஆலோசனையைக் கேட்காமலும் பேசுகிறான். தனக்கு எல்லாம் தெரியுமென்றும், தான் சொல்லுவதை எல்லோரும் கேட்டு அதற்கு ஒப்புதல் கொடுக்க வேண்டுமென்றும் உறுதியாயிருக்கிறான். ஆகையினால் காய்பா பேச ஆரம்பிக்கும்போதே "உங்களுக்கு ஒன்றுந்தெரியாது" என்று கூறிவிடுகிறான். ஆலோசனைச்சங்கத்தில் இருக்கிற மற்ற அங்கத்தினர்கள் பிரதான ஆசாரியராகவும் பரிசேயராகவும் இருக்கிறார்கள். அவர்கள் வேதபண்டிதர்கள். ஜீதமார்க்கத்துத் தலைவர்கள். அப்படிப்பட்டவர்களுக்கு ஒன்றுந்தெரியாது என்று காய்பா கூறிவிடுகிறான். தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி, காய்பா தன்னுடைய கருத்தை மற்றவர்கள்மீது திணிக்கிறான்.

அதிகாரத்திலிருப்பவர்கள் துன்மார்க்கர்களாக இருந்தால் காய்பாவைப்போலப் பேசுவதும் செயல்படுவதும் பொதுவாக நடக்கிற காரியந்தான். தங்களுக்கு எல்லாம் தெரியுமென்றும், எல்லோரையும்விட தாங்களே உயர்ந்தவர்களென்றும், தங்களுடைய வார்த்தைக்கு எல்லோரும் கீழ்ப்படிய வேண்டுமென்றும் காய்பாவைப்போன்ற தலைவர்கள் ஆணவமாகப் பேசுவார்கள், செயல்படுவார்கள். காய்பா தன்னுடைய துன்மார்க்கமான சிந்தனையை ஆலோசனைச்சங்கத்திலுள்ள மற்றவர்கள்மீது பலவந்தமாகத் திணிக்கிறான். இயேசுகிறிஸ்துவைப்பற்றி விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்றும், இயேசுகிறிஸ்துவினால் உண்டாகும் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு அவரைக் கொன்றுபோடுவது ஒன்றுதான் வழி என்றும் தன்னுடைய தீர்ப்பை மிகவும் சாதாரணமாகக் கூறுகிறான்.

துன்மார்க்கன் ஆட்சிபுரியும்போது நீதியும் நியாயமும் நிலைதடுமாறும். சத்தியம் தெருவில் விழுந்துவிடும். கீழே விழுந்துவிட்ட சத்தியத்தை மறுபடியும் தூக்கி நிறுத்துவது கடினமாக இருக்கும். துன்மார்க்கன் தலைமைப் பதவியிலிருந்து வெளியேறும் வரையிலும், சத்தியமும் நீதியும் தலை தூக்கமுடியாமல் தவிக்கும். காய்பா மெய்யாகவே துன்மார்க்கனாகத்தான் இருக்கிறான். அரசியலில் தன்னுடைய சுயசிந்தனையை ஆணவமான தீர்ப்பாக அறிவிக்கிறான். கொடியவர்கள் தீங்கு செய்தாலும் அதற்கும் ஒரு நியாயம் இருப்பதாக சாதிப்பார்கள். அதுபோலவே காய்பாவும் இயேசுகிறிஸ்து ஏன் சாகவேண்டும் என்பதற்கு ஒரு காரணம் கண்டுபிடித்துக் கூறுகிறான். "ஜனங்களெல்லாரும் கெட்டுப்போகாதபடிக்கு ஒரே மனுஷன் ஜனங்களுக்காக மரிப்பது நலமாயிருக்கும்" என்பது காய்பாவின் காரணம். ஜனங்களுக்கு நன்மை செய்வதுபோலப் பாவனை செய்து, இயேசுவுக்கு தீங்கு செய்கிறான்.

## அதிகாரம் - 11

காய்பா இந்த வருஷத்து பிரதான ஆசாரியனாக இருப்பதினால் யூதேயா தேசத்தைப் பாதுகாப்பது தன்னுடைய கடமை என்றும், பாதுகாக்காவிட்டால், தான் ஜீவனோடிருப்பதினால் ஒரு பிரயோஜனமும் இல்லை என்றும் துன்மார்க்கமாகச் சிந்திக்கிறான். தன்னுடைய ஆலோசனையைக் கேட்காவிட்டால் தேசமே கெட்டுப்போகும் என்பது இவனுடைய விவாதம். ரோமப்பேரரசுக்கு விரோதமாக யூதர்களெல்லோரும் யுத்தம்பண்ணினால், யூதர்கள் மத்தியில் அதிகமான ரத்தச் சேதாரம் உண்டாகும். ஜனங்களெல்லோரும் கெட்டுப்போவார்கள். எல்லோரும் இரத்தம் சிந்துவதற்குப் பதிலாக ஒரு மனுஷன் இரத்தம் சிந்தி மரிப்பதினால் தீங்கு ஒன்றும் இல்லை என்று காய்பா துன்மார்க்கமாகச் சிந்திக்கிறான்.

இயேசுகிறிஸ்துவைக் கொலைசெய்தால் யூதர்கள்மீது இரத்தப்பழி வரும் என்பதை காய்பா யோசிக்கவில்லை. தங்கள் ஜனத்தைக் காப்பாற்றுவதற்காக எப்படிப்பட்ட இரத்தப்பழி வந்தாலும் பரவாயில்லையென்று காய்பா நினைக்கிறான். இப்படித்தான் உலகப்பிரகாரமாகச் சிந்திக்கிறவர்கள் ஜனங்களெல்லோரையும் கெட்டுப்போகாமல் பாதுகாக்கிறோம் என்று சொல்லி, கடைசியில் எல்லோரும் கெட்டுப்போவார்கள். எல்லோரும் மொத்தமாக அழிந்துபோவார்கள்.

**தீர்க்கதரிசனமாய்ச் சொன்னான்**

**இதை அவன் சுயமாய்ச் சொல்லாமல், அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனானபடியினாலே இயேசு யூதஜனங்களுக்காக மரிக்கப் போகிறாரென்றும், அந்த ஜனங்களுக்காக மாத்திரமல்ல, சிதறியிருக்கிற தேவனுடைய பிள்ளைகளை ஒன்றாகச் சேர்க்கிறதற்காகவும் மரிக்கப் போகிறாரென்றும், தீர்க்கதரிசனமாய்ச் சொன்னான் (யோவா 11:51,52).**

காய்பாவின் ஆலோசனையில் தெய்வீக ரகசியம் வெளிப்படுவதுபோல ஆரம்பத்தில் எதுவும் தெரியவில்லை. ஆனால் இந்த சுவிசேஷத்தை எழுதின யோவான், காய்பாவின் ஆலோசனையையும் தேவனுடைய ரகசியத்தையும் இணைத்து எழுதியிருக்கிறார். "இதை அவன் சுயமாய்ச் சொல்லாமல், தீர்க்கதரிசனமாய்ச் சொன்னான்" என்று யோவான் எழுதுகிறார். இந்த வார்த்தைகள் தீர்க்கதரிசன வார்த்தைகளாக இருக்குமென்றால், இந்த வார்த்தையில் அடங்கியுள்ள தீர்க்கதரிசனச் செய்தி காய்பாவுக்கே தெரியாது. இயேசுகிறிஸ்து யூதஜனங்களுக்காக மரிக்கப்போகிறார் என்னும் சத்தியத்தை காய்பா அறியாதவனாகவே இருக்கிறான்.

மனுஷர்கள் எப்போதுமே பிறரைப்பற்றி தாராளமாகச் சிந்திப்பார்கள். அவர்கள் பேசுவதையும், செய்வதையும் மிகைப்படுத்திக் கூறுவார்கள். தங்களுக்குப் பிடித்தவர்களைப் புகழ்ந்து பேசுவதும், பிடிக்காதவர்களை இகழ்ந்து பேசுவதும் மனுஷருடைய இயல்பு. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் மனுஷர்மீது அன்புகூரவேண்டும். முடிந்தவரையிலும் நமக்கு நல்ல ஆலோசனைகளை யார் சொன்னாலும் அதை ஏற்றுக்கொள்ளவேண்டும். சில சமயங்களில் துன்மார்க்கர்கூட நல்லவார்த்தைகளைப் பேசுவது உண்டு. பக்தியுள்ளவர்களைச் சிட்சிப்பதற்காகவும், சீர்திருத்துவதற்காகவும், தேவன் சில சமயங்களில் துன்மார்க்கரைத் தம்முடைய கருவியாகப் பயன்படுத்துகிறார். தம்முடைய வார்த்தையைத் தேவன் சில சமயங்களில் துன்மார்க்கருடைய வாயின் மூலமாக அறிவிக்கிறார். எல்லா மனுஷருடைய இருதயங்களும் தேவனுடைய கரத்திலுள்ளது. அதுபோலவே மனுஷருடைய நாவுகளும் கர்த்தருடைய கரத்திலேயே இருக்கிறது.

காய்பாவின் வார்த்தைகளை யோவான் இந்த சுவிசேஷத்தில் விவரித்து எழுதுகிறார். காய்பா இந்த வார்த்தைகளைச் சுயமாய்ச் சொல்லவில்லை என்பது யோவானின் வியாக்கியானம். இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாக ஆலோசனைச்சங்கத்தாரைத் தூண்டிவிட வேண்டுமென்பதுதான் காய்பாவின் திட்டம். அதற்காக காய்பா தன் சொந்த வார்த்தைகளைத்தான் பேசினான். ஆனால் காய்பா பேசிய வார்த்தைகள் தீர்க்கதரிசன வார்த்தைகள் போல இருக்கிறது. அவன் தேவனுடைய திட்டத்தையும் நோக்கத்தையும் அறிவித்தபடியினால், காய்பா தன் சுயமாய்ச் சொல்லவில்லை என்று யோவான் எழுதுகிறார்.

## அதிகாரம் - 11

மனுஷருடைய வாயிலிருந்து தீர்க்கதரிசன வார்த்தைகள் புறப்பட்டு வரும்போது, அந்த வார்த்தைகள் பொய்யாகயிராது. அவை நிறைவேறாமல் தவறிப்போகாது. ஆயினும் ஒருவன் தீர்க்கதரிசனம் உரைப்பதினால், அவன் பரலோகத்திற்குப்போவான் என்னும் நிச்சயமில்லை. இயேசுகிறிஸ்துவின் நியாயத்தீர்ப்பு நாளின்போது, பலர் அவரிடத்தில் வந்து "கர்த்தாவே கர்த்தாவே, நாங்கள் உம்முடைய நாமத்தினால் தீர்க்கதரிசனம் உரைத்தோமல்லவா" என்று தாங்கள் தீர்க்கதரிசனம் உரைத்ததை மேன்மைப்படுத்திப் பேசுவார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ அவர்களை ஏற்றுக்கொள்ளாமல் புறம்பே தள்ளிவிடுவார்.

காய்பா அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனானபடியினாலே இந்த வார்த்தைகளைத் தன் சுயமாய்ச் சொல்லாமல் தீர்க்கதரிசனமாய்ச் சொன்னான். பிரதான ஆசாரியனாக இருக்கிறவனுக்கு, தீர்க்கதரிசியாக இருக்கிற தகுதி உண்டு என்று யூதர்கள் விசுவாசிக்கிறார்கள். காய்பா பிரதான ஆசாரியனாக இருப்பதினால், தேவன் தம்முடைய தீர்க்கதரிசன வார்த்தையை அவன் வாயின் மூலமாகப் பேசுவதற்கு சித்தங்கொண்டிருக்கலாம். வேறு யார் மூலமாகவாவது தம்முடைய வார்த்தையை வெளிப்படுத்துவதற்குப் பதிலாக, பிரதான ஆசாரியனுடைய வாயின் மூலமாகத் தம்முடைய வார்த்தையை வெளிப்படுத்துவது தேவனுக்குப் பிரியமாயிற்று. சாதாரண ஜனங்கள் ஒரு செய்தியைச் சொல்லும்போது யாரும் அதைக் கவனித்துக் கேட்கமாட்டார்கள். அதே வார்த்தையைப் பிரதான ஆசாரியன் சொன்னால், ஜனங்கள் அவனுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அவனுடைய வார்த்தையைக் கவனித்துக் கேட்பார்கள்.

இயேசு யூதஜனங்களுக்காக மரிக்கப்போகிறார் என்று காய்பா தீர்க்கதரிசனமாகச் சொன்னான். காய்பா யூதஜனங்களைப்பற்றிப் பேசினாலும், யோவான் அந்த வார்த்தையை மேலும் விரிவாக்கி, தம்மைப் பின்பற்றுகிற எல்லோருக்காகவும் இயேசுகிறிஸ்து மரிக்கப்போகிறார் என்னும் பொருளில், "அந்த ஜனங்களுக்காக மாத்திரமல்ல, சிதறியிருக்கிற தேவனுடைய பிள்ளைகளை ஒன்றாகச் சேர்க்கிறதற்காகவும் மரிக்கப்போகிறார்" என்று இந்த சுவிசேஷத்தில் எழுதியிருக்கிறார்.

இயேசுகிறிஸ்து ஜனங்களுக்காக மரிக்கப்போகிறார் என்னும் தீர்க்கதரிசனச் செய்தி மிகவும் முக்கியமானது. மெய்யாகவே இயேசுகிறிஸ்து மரிக்கப்போகிறார். அவர் மற்றவர்களுக்காக மரிக்கப்போகிறார். அவர்களுக்கு நன்மைகள் உண்டாகவேண்டும் என்பதற்காக மாத்திரமல்ல, ஜனங்களுக்காகவும், ஜனங்களுக்குப் பதிலாகவும் இயேசுகிறிஸ்து மரிக்கப்போகிறார். யூதஜனங்கள் எல்லோரும் இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைத்து, அவருடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து ஜீவிப்பார்களென்றால், அவர்கள் எல்லோருமே இரட்சிக்கப் பட்டிருப்பார்கள். அவர்களெல்லோருமே நித்திய ஜீவனைப் பெற்றிருப்பார்கள். யூதர்கள் தேசமாக இரட்சிக்கப்பட்டிருப்பார்கள். அவர்களுடைய எல்லா துக்கங்களிலிருந்தும், துயரங்களிலிருந்தும் இயேசுகிறிஸ்து அவர்களை இரட்சித்திருப்பார்.

### சிதறியிருக்கிற தேவனுடைய பிள்ளைகள்

**அந்த ஜனங்களுக்காக மாத்திரமல்ல, சிதறியிருக்கிற தேவனுடைய பிள்ளைகளை ஒன்றாகச் சேர்க்கிறதற்காகவும் மரிக்கப் போகிறாரென்றும், தீர்க்கதரிசனமாய்ச் சொன்னான் (யோவா 11:52).**

காய்பாவினுடைய வார்த்தையை யோவான் மேலும் அதிகமாக விவரித்து அதற்கு ஆவிக்குரிய வியாக்கியானம் கொடுக்கிறார். "இயேசுகிறிஸ்து அந்த ஜனங்களுக்காக மாத்திரமல்ல, சிதறியிருக்கிற தேவனுடைய பிள்ளைகளை ஒன்றாகச் சேர்க்கிறதற்காகவும் மரிக்கப்போகிறார்" என்று காய்பா தீர்க்கதரிசனமாகச் சொன்னதாக யோவான் எழுதுகிறார். இயேசுகிறிஸ்துவின் மரணம் யூததேசத்தாருக்கு மாத்திரம் என்று அதை மட்டுப்படுத்தக்கூடாது. தேவனுடைய பிள்ளைகள் உலகத்தின் பல பகுதிகளிலும் சிதறியிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து அவர்களுக்காகவும் மரிக்கவேண்டும்.

## அதிகாரம் - 11

"சிதறியிருக்கிற தேவனுடைய பிள்ளைகள்" என்னும் வாக்கியத்திற்கு புறஜாதி தேசத்தில் சிதறியிருக்கிற யூதஜனங்கள் என்று சிலர் வியாக்கியானம் கூறுகிறார்கள். இந்த வாக்கியமோ, ஒவ்வொரு தேசத்திலுமுள்ள தேவபக்தியுள்ளவர்களையும், தேவனுக்குப் பயந்து ஜீவிக்கிறவர்களையும், தேவனை ஆராதிக்கிறவர்களையும் குறிக்கும் என்று வேறு சிலர் வியாக்கியானம் கூறுகிறார்கள். தம்முடைய ஜனத்தார் எல்லாரையும் ஒன்றாக, ஒரே சமுதாயமாகக் கூட்டிச் சேர்ப்பதற்காக இயேசுகிறிஸ்து மரிக்கப்போகிறார்.

"சிதறியிருக்கிற தேவனுடைய பிள்ளைகள்" என்னும் வாக்கியம் தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிற ஜனங்களைக் குறிக்கிறது என்றும் ஒரு வியாக்கியானம் உள்ளது. இவர்கள் தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொள்வதற்கு தெரிந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள். தேவனுடைய பிள்ளைகளாக ஆகுமாறு அழைக்கப்பட்டிருக்கிறார்கள். எல்லா சந்ததியிலும் தேவனுக்குப் பயந்து ஜீவிக்கிற ஒரு கூட்டம் ஜனத்தார் இருக்கிறார்கள். இவர்களெல்லாரையும் இரட்சிப்பிற்குள் வழிநடத்த வேண்டுமென்று இயேசுகிறிஸ்து சித்தமுள்ளவராக இருக்கிறார். இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையில் மரிக்கும்போது, அவர் ஏறெடுத்த ஜெபத்தில் "எல்லோரும் தம்மை விசுவாசிக்கும்படியாகவும்" என்னும் வாக்கியத்தைச் சொல்லி ஜெபிக்கிறார்.

இயேசுகிறிஸ்துவின் மரணத்திற்கு ஒரு தெய்வீக நோக்கமுள்ளது. சிதறடிக்கப்பட்டவர்களை ஒன்று சேர்ப்பதற்காகவும், அலைந்து திரிகிறவர்களை கூட்டிச் சேர்ப்பதற்காகவும் இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையில் மரித்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் மரணத்தைப்பற்றிய சிந்தனை நம்முடைய இருதயங்களில் பிரதான இடத்தைப் பெற்றிருக்கவேண்டும். கல்வாரி சிலுவையில் இயேசுகிறிஸ்து உயர்த்தப்பட்டபோது, அவர் எல்லா மனுஷரையும் தம்மிடத்தில் இழுத்துக்கொள்கிறார்.

நமக்காக தம்முடைய ஜீவனையே கொடுக்குமளவுக்கு இயேசுகிறிஸ்துவின் அன்பு பெரியது. அவருடைய அன்போடு நம்முடைய அன்பை ஒப்பிட்டுப் பார்க்கவே முடியாது. மனுஷருடைய அன்பு குறைவுள்ளது. இயேசுகிறிஸ்துவின் மரணம் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம் எல்லோரையும் ஒன்றாய் கூட்டிச்சேர்க்கிறது. தம்முடைய பிள்ளைகள் எல்லோரையும் இயேசுகிறிஸ்து ஒரே மந்தையாகக் கூட்டிச் சேர்க்கிறார். எல்லா தேசங்களிலும், எல்லா காலங்களிலும் ஜீவித்த, ஜீவிக்கிற, ஜீவிக்கப்போகிற தேவனுடைய பிள்ளைகள் எல்லோருமே இயேசுகிறிஸ்துவில் சங்கமம் ஆகிறார்கள்.

**இயேசுவைக் கொலைசெய்யும்படி ஆலோசனை**

**அந்நாள்முதல் அவரைக்கொலை செய்யும்படிக்கு ஆலோசனை பண்ணினார்கள் (யோவா 11:53).**

இயேசுகிறிஸ்துவை என்ன செய்யலாம் என்று யோசனைபண்ணுவதற்காக யூதருடைய ஆலோசனைச் சங்கத்தார் கூடிவந்திருக்கிறார்கள். அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனாகிய காய்பா என்பவன், இயேசுகிறிஸ்து மரித்துப்போகவேண்டுமென்று தன்னுடைய தீர்ப்பைக்கூறுகிறான். ஆலோசனைச்சங்கத்தார் அந்நாள் முதல், இயேசுகிறிஸ்துவைக் கொலைசெய்யும்படிக்கு ஆலோசனைபண்ணுகிறார்கள். இயேசுகிறிஸ்து மரிக்கவேண்டும் என்று ஆலோசனைச் சங்கத்திலுள்ள எல்லோருமே ஒன்றுபோல தீர்மானம்பண்ணுகிறார்கள். இதற்கு முன்பு வெவ்வேறு கருத்துக்களைப் பேசியவர்கள், இப்போது இயேசுகிறிஸ்துவைக் கொலைசெய்ய வேண்டுமென்று ஒற்றுமையோடிருக்கிறார்கள். துன்மார்க்கமான இந்தச் செய்கைக்கு ஆலோசனைச்சங்கத்தார் தங்களுடைய கரங்களை ஒன்றாக இணைத்துப் பலப்படுத்துகிறார்கள்.

## அதிகாரம் - 11

துன்மார்க்கமான செயல்களைச் செய்வதற்கு துன்மார்க்கர்கள் ஒத்துப்போவார்கள். ஒருவருக்கொருவர் துன்மார்க்கம் பண்ணுவதற்கு உதவியாயிருப்பார்கள். ஒரு சில துன்மார்க்கமான காரியங்களை தங்களால் செய்வது கடினம் என்று யோசித்துக் கொண்டிருக்கும்போது, துன்மார்க்கர் எல்லோரும் கூட்டாகச் சேர்ந்து, அந்தக் காரியத்தை செய்துவிடுவார்கள். அதன்பின்பு துன்மார்க்கம் செய்வது அவர்களுக்குப் பழக்கமாகிப்போகும். துன்மார்க்கத்தைத் தவிர வேறு நல்ல சிந்தனை எதுவும் அவர்களுடைய உள்ளத்தில் வராது. தங்களுடைய துன்மார்க்கமான செய்கைக்கு நியாயம் கற்பிப்பார்கள். இயேசுகிறிஸ்துவைக் கொலைசெய்ய வேண்டுமென்று நினைப்பது துன்மார்க்கமான சிந்தனை. ஆனால் அவர்களோ ஜனங்களெல்லோரும் கெட்டுப்போகாதபடிக்கு, இயேசுகிறிஸ்து மாத்திரம் மரிப்பது தங்களுக்கு நலமாயிருக்கும் என்று சிந்தித்து, அவரைக்கொலைசெய்யும்படிக்கு ஆலோசனை பண்ணுகிறார்கள்.

### எப்பிராயீமில் இயேசு
### யோவா 11 : 54-57

**யோவா 11:54. ஆகையால் இயேசு அதன்பின்பு வெளியரங்கமாய் யூதருக்குள்ளே சஞ்சரியாமல், அவ்விடம்விட்டு வனாந்தரத்துக்குச் சமீபமான இடமாகிய எப்பிராயீம் என்னப்பட்ட ஊருக்குப்போய், அங்கே தம்முடைய சீஷருடனேகூடத் தங்கியிருந்தார்.**

**யோவா 11:55. யூதருடைய பஸ்காபண்டிகை சமீபமாயிருந்தது. அதற்கு முன்னே அநேகர் தங்களைச் சுத்திகரித்துக்கொள்ளும் பொருட்டு நாட்டிலிருந்து எருசலேமுக்குப் போனார்கள்.**

**யோவா 11:56. அங்கே அவர்கள் இயேசுவைத் தேடிக்கொண்டு தேவாலயத்தில் நிற்கையில், ஒருவரையொருவர் நோக்கி: உங்களுக்கெப்படித் தோன்றுகிறது, அவர் பண்டிகைக்கு வரமாட்டாரோ என்று பேசிக்கொண்டார்கள்.**

**யோவா 11:57. பிரதான ஆசாரியரும் பரிசேயரும் அவரைப் பிடிக்கும்படி யோசித்து, அவர் இருக்கிற இடத்தை எவனாவது அறிந்திருந்தால், அதை அறிவிக்க வேண்டுமென்று கட்டளையிட்டிருந்தார்கள்.**

### வெளியரங்கமாய் சஞ்சரியாமல்

**ஆகையால் இயேசு அதன்பின்பு வெளியரங்கமாய் யூதருக்குள்ளே சஞ்சரியாமல், அவ்விடம்விட்டு வனாந்தரத்துக்குச் சமீபமான இடமாகிய எப்பிராயீம் என்னப்பட்ட ஊருக்குப்போய், அங்கே தம்முடைய சீஷருடனேகூடத் தங்கியிருந்தார் (யோவா 11:54).**

தம்மைக் கொலைசெய்யும்படிக்கு ஆலோசனைச்சங்கத்தார் ஆலோசனை பண்ணுகிறார்கள் என்பது இயேசுகிறிஸ்துவுக்கும் தெரியும். அவருக்கு மறைவான இரகசியம் எதுவுமில்லை. தெரியவருகிறது. ஆகையால் இயேசு அதன்பின்பு வெளியரங்கமாய் யூதருக்குள்ளே சஞ்சரிக்கவில்லை. அவ்விடம் விட்டு வனாந்தரத்திற்குச் சமீபமான இடமாகிய எப்பிராயீம் என்னப்பட்ட ஊருக்குப் போகிறார். தம்மைக் கொலைசெய்யும்படிக்கு யாரும் இங்கு வரமாட்டார்கள் என்றும், தம்முடைய ஜீவனுக்கு இங்கு சத்துருக்களால் ஆபத்து ஒன்றும் வராது என்றும் நினைத்து இயேசுகிறிஸ்து வனாந்தரத்திற்குச் சமீபமான இந்த இடத்திற்கு வருகிறார். இங்கு அவர் அமைதியாக ஓய்வு எடுப்பதற்கு வாய்ப்புள்ளது. இயேசுகிறிஸ்துவோடு அவருடைய சீஷரும் வந்து இங்கு தங்கியிருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவும் அவருடைய சீஷர்களும் தங்கியிருக்கிற ஊரின் பெயர் எப்பிராயீம் என்பதாகும். சீஷர்கள் இயேசுகிறிஸ்துவைத் தனியே விட்டுவிடவில்லை. அவருக்கு ஆபத்து வந்தாலும் சீஷர்கள் அவரோடு கூடவேயிருக்கிறார்கள். தம்மோடு சீஷர்கள் இருந்தாலும் இயேசுகிறிஸ்து எருசலேமிலே வெளியரங்கமாய் யூதருக்குள்ளே சஞ்சரிக்கவில்லை. அவ்விடம் விட்டு வனாந்தரத்திற்குச் சமீபமான இடத்திற்கு வந்துவிடுகிறார். தம்முடைய சத்துருக்களின் வல்லமையைக்கண்டு இயேசுகிறிஸ்து பயப்படவில்லை. தம்முடைய தெய்வீக வல்லமையை அவர் நம்பாமலும் இல்லை. தம்மை அவர்களால் ஒன்றும் செய்யமுடியாது என்பது இயேசுவுக்கு நன்றாகத் தெரியும். ஆயினும் தம்முடைய வேளை வருவதற்கு முன்பாக யூதர்கள் தம்மைப் பிடிப்பதற்கு இயேசுகிறிஸ்து விரும்பவில்லை.

## அதிகாரம் - 11

இயேசுகிறிஸ்து எருசலேமைவிட்டும், யூதஜனங்களைவிட்டும் வெளியேறிவந்து விடுவதினால், அவர் அவர்கள்மீது பிரியமாயில்லை என்பது தெரியவருகிறது. அவர்கள் இயேசுகிறிஸ்துவையும் அவருடைய சுவிசேஷத்தையும் ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணித்துவிடுகிறார்கள். தம்மை ஏற்றுக்கொள்ளாத அவர்கள் மத்தியில் இயேசுகிறிஸ்து சஞ்சரிக்க விரும்பவில்லை. அவர்களிடமிருந்து பிரிந்து தனியே வந்துவிடுகிறார். இயேசுகிறிஸ்துவோடு அவருடைய சுவிசேஷமும் அவர்களைவிட்டுப் பிரிந்து வந்துவிடுகிறது. இயேசுகிறிஸ்துவின் இந்தச் செய்கை நீதியானது. நியாயமானது.

எருசலேமுக்கு சீக்கிரத்திலே அழிவு வரப்போகிறது. அந்த நாளை எருசலேம் அறியாதிருக்கிறது. அழியப்போகிற எருசலேமுக்கு இயேசுகிறிஸ்து தம்முடைய சுவிசேஷச் செய்தியை அறிவிப்பதற்காக வந்தார். அவர்கள் இயேசுவையும் அவருடைய சுவிசேஷத்தையும் ஏற்றுக்கொண்டிருந்தால், எருசலேம் வரப்போகிற அழிவிலிருந்து தன்னைத் தப்புவித்துக்கொள்ள முடியும். ஆனால் அவர்களோ நன்மையை விரும்பாமல் தீமையை விரும்பி, இயேசுகிறிஸ்துவைக் கொலைசெய்ய ஆலோசனைபண்ணுகிறார்கள். தங்களை இரட்சிக்க வந்திருக்கும் இயேசுகிறிஸ்துவையே தங்களைவிட்டு துரத்திவிடுவதினால், அவர்களுக்கு இரட்சிப்பு தூரமாயிற்று.

இயேசுகிறிஸ்துவின் சத்துருக்கள் அவரைப்பிடித்து கொலைசெய்ய மனதாயிருக்கிறார்கள். இவர்களுடைய பாவம் மன்னிக்க முடியாதது. ஒருவேளை இவர்களைவிட்டுக் கடந்துபோய்விட்டால், இவர்களுக்கு தம்மீதுள்ள கோபம் குறைவதற்கு வாய்ப்புள்ளது என்று நினைத்து, இயேசுகிறிஸ்து அவர்களைவிட்டு கடந்துபோயிருக்கலாம். இயேசுகிறிஸ்துவின் வேளை இன்னும் வரவில்லை. ஆகையினால் அவர் எருசலேமிலிருந்தாலும் அவருக்கு ஒரு ஆபத்தும் உண்டாகாது.

இயேசு எருசலேமைவிட்டுப் புறப்பட்டு வனாந்தரமான இடத்திற்கு அருகில் வந்தாலும், அவர் மறுபடியும் ஜெயபவனியோடு எருசலேமுக்குள் போகப்போகிறார். இயேசுகிறிஸ்துவை எருசலேமிலிருந்து துரத்திவிட்ட ஜனங்களெல்லோரும், தங்கள் கண்களால் அவரை எருசலேமில் மறுபடியும் காண்பார்கள். மறுபடியும் வெற்றியோடு வருவதற்காகவே, இயேசுகிறிஸ்து இப்போது எருசலேமைவிட்டுக் கடந்துபோயிருக்கிறார். அவர் எருசலேமுக்கு மறுபடியும் வெற்றி பவனியாக வரும்போது, அவருடைய சீஷர்களும், அவரிடத்தில் விசுவாசம் வைத்திருக்கிறவர்களும், ஆரவார சந்தோஷத்தோடு இயேசுகிறிஸ்துவை எருசலேமுக்குள் வரவேற்பார்கள்.

**பஸ்கா பண்டிகை**

**யூதருடைய பஸ்காபண்டிகை சமீபமாயிருந்தது. அதற்கு முன்னே அநேகர் தங்களைச் சுத்திகரித்துக்கொள்ளும்பொருட்டு நாட்டிலிருந்து எருசலேமுக்குப் போனார்கள் (யோவா 11:55).**

யூதருடைய பஸ்கா பண்டிகை சீக்கிரமாக வரப்போகிறது. இந்தப் பண்டிகையை ஆசரிப்பதற்காக யூதர்களெல்லோரும் எருசலேமுக்கு வருவது வழக்கம். இயேசுகிறிஸ்துவும் பஸ்கா பண்டிகைக்கு எருசலேமுக்கு வருவாரென்று ஜனங்கள் எதிர்பார்க்கிறார்கள். ஒரு சிலர் நல்லமனதோடு இயேசுகிறிஸ்துவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். வேறு சிலரோ தீயமனதோடு, இயேசுகிறிஸ்து வந்தால் அவரைப் பிடித்து கொலைசெய்யலாம் என்னும் எண்ணத்தோடு, அவரை எதிர்பார்க்கிறார்கள். பஸ்கா பண்டிகை வருவதற்கு முன்னே அநேகர் தங்களைச் சுத்திகரித்துக்கொள்ளும் பொருட்டு நாட்டிலிருந்து எருசலேமுக்கு வந்திருக்கிறார்கள். இது யூதருடைய மார்க்கத்தின் பிரகாரம் நடைபெறுகிற ஒரு சடங்கு. சடங்காச்சாரத்தின் பிரகாரமாக யாராவது ஒருவர் தீட்டுப்பட்டிருந்தால், அவர் பஸ்கா பண்டிகைக்கு முன்பு, எருசலேமுக்கு வந்து தன்னைச் சுத்திகரித்துக் கொள்ளவேண்டும்.

## அதிகாரம் - 11

ஒரு சிலர் தங்களுடைய சரீரத்தையும் ஆத்துமாவையும் சுத்திகரித்துக் கொள்ளவேண்டுமென்று தாங்களாகவே தீர்மானம்பண்ணி எருசலேமுக்கு வந்து உபவாசித்து ஜெபிப்பது வழக்கம். இதோடு யூதமார்க்கத்தின் பிரகாரம் நியமிக்கப்பட்டிருக்கிற பலிகளையெல்லாம் செலுத்தி தங்களைச் சுத்திகரித்துக் கொள்வார்கள். இப்படிப்பட்ட சுத்திகரிப்புக்கு ஏராளமான யூதர்கள் பஸ்கா பண்டிகைக்கு முன்பாகவே எருசலேமுக்கு வந்திருக்கிறார்கள்.

### இயேசுவைத் தேடிக்கொண்டு

**அங்கே அவர்கள் இயேசுவைத் தேடிக்கொண்டு தேவாலயத்தில் நிற்கையில், ஒருவரையொருவர் நோக்கி: உங்களுக்கெப்படித் தோன்றுகிறது, அவர் பண்டிகைக்கு வரமாட்டாரோ என்று பேசிக்கொண்டார்கள் (யோவா 11:56).**

தங்களைச் சுத்திகரித்துக் கொள்வதற்காக எருசலேமுக்கு வந்திருக்கிற ஜனங்கள், அங்கு இயேசுகிறிஸ்துவையும் தேடிக்கொண்டிருக்கிறார்கள். "உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது, அவர் பண்டிகைக்கு வரமாட்டாரோ" என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொள்கிறார்கள். இவர்கள் பஸ்கா பண்டிகைக்கு முன்பாகவே எருசலேமுக்கு வந்திருக்கிறவர்கள். தங்களைச் சுத்திகரித்துக் கொள்ளவேண்டும் என்னும் ஆர்வத்தில் இவர்கள் இருந்தாலும், இயேசுகிறிஸ்துவைக் காணவேண்டும் என்னும் ஆர்வமும் இவர்களுடைய உள்ளத்தில் இருக்கிறது. ஒருவேளை இதற்காகக்கூட இவர்கள் பஸ்கா பண்டிகைக்கு முன்பாக எருசலேமுக்கு வந்திருக்கலாம். எருசலேமுக்கு வந்தவுடன், இவர்கள் முதல்வேலையாக தேவாலயத்தில் இயேசுவைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். இவர்களுடைய உள்ளத்தில் இயேசுவின்மீது அன்பு இருக்கலாம். அவருடைய உபதேசத்தைக் கேட்க வேண்டும் என்னும் ஆர்வமும் இருக்கலாம்.

இயேசுகிறிஸ்துவைத் தேவாலயத்தில் தேடுகிறவர்கள் ஒருவேளை துன்மார்க்கராகக்கூட இருக்கலாம். இயேசுகிறிஸ்துவின் சிநேகிதர்களும் அவரைத் தேடுகிறார்கள். அவருடைய சத்துருக்களும் அவரைத் தேடுகிறார்கள். தங்களைச் சுத்திகரித்துக்கொள்ளும்படி ஏராளமான ஜனங்கள் எருசலேமுக்கு வந்திருப்பதினால், இவர்களுடைய உதவியைப்பெற்றுக்கொண்டு இயேசுகிறிஸ்துவைக் கண்டுபிடித்துவிடலாம் என்று சத்துருக்கள் நினைக்கிறார்கள். தங்களுடைய சதிஆலோசனையின் பிரகாரம் இயேசுகிறிஸ்துவைப்பிடித்துக் கொலைசெய்ய வேண்டுமென்று கொலை வெறியோடிருக்கிறார்கள்.

துன்மார்க்கர் தங்களுடைய காரியத்தை நிறைவேற்றுவதற்கு யாருடைய உதவியை வேண்டுமானாலும் ஏற்றுக்கொள்வார்கள். அவர்கள் நல்லவர்களா, கெட்டவர்களா என்றெல்லாம் யோசித்துப் பார்க்கமாட்டார்கள். தாங்கள் விரும்பிய காரியம் நடக்கவேண்டும். இதுவே இவர்களுடைய குறிக்கோள். இவர்கள் தங்களைச் சுத்திகரித்துக்கொள்ளுமாறு தேவாலயத்திற்கு வந்திருக்கும் ஜனங்களிடம் "உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது, அவர் பண்டிகைக்கு வரமாட்டாரோ" என்று விசாரிக்கிறார்கள்.

இதற்கு முன்பு, இயேசுகிறிஸ்து யூதருக்குள்ளே வெளியரங்கமாய் சஞ்சரியாமல், அவ்விடம்விட்டு வனாந்தரத்திற்கு சமீபமான இடத்திற்குப் போய்விட்டார். இயேசுகிறிஸ்து யூதர்களைப் பார்த்து பயந்து ஓடிப்போய்விட்டார் என்று இவர்கள் நினைக்கிறார்கள். இயேசுகிறிஸ்து தங்களைப்பார்த்து பயந்து, இயேசுகிறிஸ்து பஸ்கா பண்டிகைக்கு மறுபடியும் வரமாட்டார் என்று யூதர்கள் நினைக்கிறார்கள். ஒரு பரிசுத்தமான பண்டிகை நடைபெறும்போது கூட, இயேசுகிறிஸ்துவின் சத்துருக்கள், தங்களுடைய துன்மார்க்கமான எண்ணத்தினால், பண்டிகையின் பரிசுத்த நாளை பரிசுத்தக்குலைச்சலாக்குகிறார்கள்.

இயேசுகிறிஸ்து பண்டிகைக்கு எருசலேமுக்கு வராவிட்டால், தங்களால் அவரைப் பிடிக்க முடியாதே என்றும் ஏமாற்றத்தோடிருக்கிறார்கள். அவரைப் பிடிக்கவில்லையென்றால் தங்களுடைய சதித்திட்டம் பிரயோஜனமற்றுப்போய்விடும் என்று பயந்து, இயேசு எங்கேயாவது இருக்கிறாரா என்று ஒவ்வொரு இடமாக பதட்டத்தோடு தேடிப்பார்க்கிறார்கள். இயேசுகிறிஸ்துவை நல்லவர்களும் தேடுகிறார்கள். பொல்லாதவர்களும் தேடுகிறார்கள். இயேசுகிறிஸ்துவோ தம்மிடத்தில் வருகிற யாரையும் புறம்பே தள்ளமாட்டார். அவர் எல்லோர்மீதும் அன்புகூருகிறவர். இயேசு பாவத்தை வெறுத்தாலும் பாவிகளை சிநேகிக்கிறவர்.

## அதிகாரம் - 11

**இயேசு இருக்கிற இடம்**

**பிரதான ஆசாரியரும் பரிசேயரும் அவரைப் பிடிக்கும்படி, யோசித்து, அவர் இருக்கிற இடத்தை எவனாவது அறிந்திருந்தால், அதை அறிவிக்க வேண்டுமென்று கட்டளையிட்டிருந்தான் (யோவா 11:57).**

பஸ்கா பண்டிகையின்போது இயேசுகிறிஸ்துவை எப்படியாவது பிடித்துவிட வேண்டுமென்று ஆலோசனைச்சங்கத்தார் உறுதியோடு இருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து இருக்கிற இடத்தை யாராவது அறிந்திருந்தால், அதைத் தங்களுக்கு அறிவிக்கவேண்டுமென்று பிரதான ஆசாரியரும் பரிசேயரும் ஜனங்களுக்கு கட்டளையிட்டிருக்கிறார்கள். இந்தக் கட்டளை ஆலோசனைச் சங்கத்திடமிருந்து வந்திருக்கிறது. ஆகையினால் யூதகளெல்லோரும் இந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படியவேண்டும்.

உலகத்தை இரட்சிக்க வந்திருக்கும் இயேசுகிறிஸ்துவை எப்படியாவது பிடித்துக் கொன்றுபோட வேண்டுமென்று ஆலோசனைச் சங்கத்தார் கொலைவெறியோடிருக்கிறார்கள். தங்களுடைய இந்தப் பாவசெயலுக்கு, மற்ற யூதர்களையும் பங்காளிகளாக்குகிறார்கள். தேசத்தை துன்மார்க்கன் ஆளுகை செய்யும்போது, அவனுடைய பாவமும், அதனால் உண்டாகும் சாபமும், அந்த தேசத்து ஜனங்களையும் பாதிக்கும். தங்களுடைய அநீதிக்கு துன்மார்க்கமான தலைவர்கள் தங்களைப் பின்பற்றுகிறவர்களையும் கருவிகளாகப் பயன்படுத்துவார்கள். இவர்கள், தான் கெட்டுப்போனாலும் பரவாயில்லை, தன்னோடு சேர்ந்து எல்லோரும் கெட்டுப்போகவேண்டும் என்னும் தீயநோக்குமுடையவர்கள். இப்படிப்பட்ட தலைவர்கள்தான் யூதருடைய ஆலோசனைச்சங்கத்தை வழிநடத்துகிறார்கள். இவர்கள் மெய்யாகவே குருடருக்கு வழிகாட்டுகிற குருட்டுத்தலைவர்களாக இருக்கிறார்கள்.

## அதிகாரம் - 12

இயேசுகிறிஸ்து பாடுகளுக்கும் வேதனைகளுக்கும் மத்தியில் இருந்தாலும், பிதாவாகிய தேவன் அவரைக் கனப்படுத்துகிறார். இயேசுகிறிஸ்து தேவதூஷணம் சொல்லுகிறார் என்று ஆலோசனைச்சங்கத்தார் தூஷித்தாலும், கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் அவரைப் போற்றிப் புகழுகிறார்கள். மேன்மைப்படுத்துகிறார்கள். மகிமைப் படுத்துகிறார்கள். பெத்தானியாவில் இயேசுகிறிஸ்து இராவிருந்துபண்ணும்போது, மரியாள் தைலத்தினால் இயேசுகிறிஸ்துவின் பாதங்களில் பூசி அவரை அபிஷேகம்பண்ணி கனம்பண்ணுகிறாள் (யோவா 12:1-11). இயேசுகிறிஸ்து எருசலேமுக்குள் பவனியாக வரும்போது சாதாரண ஜனங்களும் அவரை வாழ்த்தி, போற்றிப் புகழுகிறார்கள் (யோவா 12:12-19). கிரேக்கரும் இயேசுகிறிஸ்துவைக் கனப்படுத்துவதற்காக அவரைத் தேடிக்கொண்டு வருகிறார்கள் (யோவா 12:20-26). பிதாவாகிய தேவன் வானத்திலிருந்து உண்டான சத்தத்தினால் இயேசுகிறிஸ்துவைக் கனப்படுத்துகிறார் (யோவா 12:27-36). பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் இயேசுகிறிஸ்துவைக் கனப்படுத்துகிறார்கள் (யோவா 12:37-41). அதிகாரிகளில் அநேகர் இயேசுகிறிஸ்துவைக் கனப்படுத்துகிறார்கள். ஆனாலும் ஆலோசனைச் சங்கத்தாருக்குப் பயந்தபடியினால் தங்கள் விசுவாசத்தை அறிக்கை பண்ணாதிருக்கிறார்கள் (யோவா 12:42,43). தம்முடைய தெய்வீக ஊழியத்தை இயேசுகிறிஸ்து உறுதிபண்ணி, தாமே தம்முடைய மகிமையை வெளிப்படுத்துகிறார் (யோவா 12:44-50).

### பெத்தானியாவில் இயேசு
### யோவா 12 : 1-8

**யோவா 12:1. பஸ்காபண்டிகை வர ஆறுநாளைக்கு முன்னே இயேசு தாம் மரணத்திலிருந்து எழுப்பின லாசரு இருந்த பெத்தானியாவுக்கு வந்தார்.**

**யோவா 12:2. அங்கே அவருக்கு இராவிருந்து பண்ணினார்கள்; மார்த்தாள் பணிவிடை செய்தாள்; லாசருவும் அவருடனேகூடப் பந்தியிருந்தவர்களில் ஒருவனாயிருந்தான்.**

**யோவா 12:3. அப்பொழுது மரியாள் விலையேறப்பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டுவந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள்; அந்த வீடு முழுவதும் தைலத்தின் பரிமளத்தினால் நிறைந்தது.**

**யோவா 12:4. அப்பொழுது அவருடைய சீஷரில் ஒருவனும் அவரைக் காட்டிக் கொடுக்கப் போகிறவனுமாகிய சீமோனுடைய குமாரனான யூதாஸ்காரியோத்து:**

**யோவா 12:5. இந்தத் தைலத்தை முந்நூறு பணத்துக்கு விற்று, தரித்திரருக்குக் கொடாமல் போனதென்ன என்றான்.**

**யோவா 12:6. அவன் தரித்திரரைக்குறித்துக் கவலைப்பட்டு இப்படிச் சொல்லாமல், அவன் திருடனானபடியினாலும், பணப்பையை வைத்துக்கொண்டு அதிலே போடப்பட்டதைச் சுமக்கிறவனான படியினாலும் இப்படிச் சொன்னான்.**

**யோவா 12:7. அப்பொழுது இயேசு: இவளைவிட்டுவிடு, என்னை அடக்கம் பண்ணும் நாளுக்காக இதை வைத்திருந்தாள்.**

**யோவா 12:8. தரித்திரர் எப்பொழுதும் உங்களிடத்தில் இருக்கிறார்கள்; நான் எப்பொழுதும் உங்களிடத்தில் இரேன் என்றார்.**

**லாசரு இருந்த ஊர்**

**பஸ்காபண்டிகை வர ஆறுநாளைக்கு முன்னே இயேசு தாம் மரணத்திலிருந்து எழுப்பின லாசரு இருந்த பெத்தானியாவுக்கு வந்தார் (யோவா 12:1).**

இயேசுகிறிஸ்து தம்முடைய சிநேகிதர்களின் ஊராகிய பெத்தானியாவுக்கு வருகிறார். பஸ்கா பண்டிகை வர இன்னும் ஆறுநாள் இருக்கிறது. இந்த ஊரில் மரித்துப்போன லாசருவை இயேசுகிறிஸ்து உயிரோடு எழுப்பியிருக்கிறார். அவனுடைய வீட்டில் இயேசுகிறிஸ்து தங்கியிருக்கிறார். இயேசுகிறிஸ்து பெத்தானியாவுக்கு வருவது முக்கியத்துவமுள்ள ஒரு சம்பவம்.

## அதிகாரம் - 12

பஸ்கா பண்டிகையை ஆசரிப்பதில் இயேசுகிறிஸ்து மிகுந்த கவனத்தோடிருக்கிறார். அதற்காக இன்னும் ஆறுநாள் இருக்கும்போதே இயேசுகிறிஸ்து எருசலேமுக்கு இரண்டு மைல் தூரத்திலுள்ள பெத்தானியா ஊருக்கு வந்திருக்கிறார். யூதமார்க்கத்தின் பண்டிகையை இயேசு கிறிஸ்து ஒதுக்கிப் புறக்கணித்து விடாமல் அவற்றை அக்கரையோடு ஆசரிக்கிறார்.

இயேசுகிறிஸ்துவுக்கு எருசலேமில் சத்துருக்கள் அநேகர் இருக்கிறார்கள். அவர்கள் இயேசுவைக் கொலைசெய்வதற்கு வகை தேடிக்கொண்டிருக்கிறார்கள். இயேசு அவர்கள் நடுவில் வெளியரங்கமாய் யூதருக்குள்ளே சஞ்சரியாமல், அவ்விடம் விட்டு எப்பிராயீம் என்னும் ஊருக்குப் போய்விட்டார். யூதருக்குப் பயந்ததினால் அவர் எருசலேமைவிட்டு ஓடிப்போய்விட்டார் என்று சிலர் நினைக்கிறார்கள். இயேசுகிறிஸ்து யாருக்கும் பயப்படவில்லை. அவருடைய வேளை வருவதற்கு முன்பாக அவருடைய ஜீவனை யாராலும் எடுத்துப்போட முடியாது.

எருசலேமில் தமக்கு சத்துருக்கள் இருந்தாலும், அவர்கள் மூலமாக தம்முடைய ஜீவனுக்கு ஆபத்துக்கள் இருந்தாலும், இயேசுகிறிஸ்து அவற்றைச் சந்திப்பதற்குத் தாமாகவே முன்வருகிறார். இயேசு ஒருபோதும் மனுஷருக்குப் பயப்படமாட்டார். இயேசுகிறிஸ்துவின் வேளை சமீபமாயிற்று. ஆகையினால் இப்போது மறுபடியும் பஸ்காவை ஆசரிப்பதற்காக எருசலேமுக்கு வர, இயேசுகிறிஸ்து சித்தங்கொண்டிருக்கிறார்.

தம்முடைய பாடுகளையும், வேதனைகளையும் இயேசுகிறிஸ்து தாமாகவே தம்மீது ஏற்றுக்கொண்டிருக்கிறார். இயேசு கிறிஸ்துவின் ஜீவனை யாரும் எடுத்துக்கொள்ளவில்லை. அவரை யாரும் கொலைபண்ணமுடியாது. இயேசுகிறிஸ்து தாமே கல்வாரி சிலுவையில் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவைத் துன்பப்படுத்துகிறவர்கள் என்னதான் செய்தாலும், அவரை ஒருபோதும் மேற்கொள்ள முடியாது. மரணம் அவரை மேற்கொள்ளவில்லை. மனுஷருடைய வஞ்சக எண்ணங்களும், சூதும் இயேசு கிறிஸ்துவுக்குத் தெரியாத ரகசியமல்ல. ஆகையினால்தான் தேவை ஏற்பட்டபோது, இயேசு கிறிஸ்து தம்முடைய சத்துருக்களை விட்டு விலகிப்போகிறார். அதேவேளையில், தம்முடைய வேளை வரும்போது, தம்மைப்பிடித்துக் கொலைசெய்ய விரும்புகிற சத்துருக்களைத் தேடி, இயேசுகிறிஸ்து தாமாகவே வருகிறார்.

இயேசுகிறிஸ்துவைப்போல நம்முடைய ஊழியத்திலும், ஓரிடத்தில் ஊழியத்திற்கு எதிர்ப்புக்கள் அதிகமாக இருக்கும்போது, அந்த இடத்தைவிட்டு வேறு இடத்திற்குப்போவது தவறல்ல. எங்கு இருந்தாலும் கர்த்தருக்கு ஊழியம் செய்யவேண்டும். அதே வேளையில் தேவன் அனுமதிக்கும்போது, நாம் இருக்கும் இடத்தில் எவ்வளவு எதிர்ப்புக்கள் இருந்தாலும், நாம் இரத்தச் சாட்சியாக மரிக்கவேண்டியது இருந்தாலும், தேவனுடைய நாம மகிமைக்காக அந்த இடத்தில் ஊழியம் செய்வதற்கு ஆயத்தமாக இருக்கவேண்டும். தேவனுக்காக நம்முடைய ஜீவனைக் காத்துக்கொள்ளவும், அதேவேளையில் நம்முடைய தேவனுக்காக நம்முடைய ஜீவனை ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவும் ஆயத்தமாயிருக்க வேண்டும்.

பெத்தானியாவிலுள்ள சிநேகிதர்மீது இயேசுகிறிஸ்து அன்பாயிருக்கிறார். தம்முடைய அன்பை அவர்களுக்கு வெளிப்படுத்துவதற்காக, பஸ்கா பண்டிகை வர ஆறுநாளைக்கு முன்பே இயேசுகிறிஸ்து அந்த ஊருக்கு வருகிறார். எருசலேமுக்குப் போகப்போகிற இயேசுகிறிஸ்து, பெத்தானியாவிலுள்ள தம்முடைய சிநேகிதர்களிடம் விடைபெற்றுக்கொண்டு செல்வதுபோல, அவர்களைப் பார்க்க வந்திருக்கிறார்.

பெத்தானியா ஊரைப்பற்றிச் சொல்லப்படும்போது, அவர் மரணத்திலிருந்து எழுப்பின லாசரு இருந்த ஊர் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்து இந்த ஊரில் ஓர் அற்புதம் செய்ததினால் இந்த ஊருக்கு ஒரு முக்கியத்துவம் உண்டாயிற்று. இந்த ஊரைப்பற்றிச் சொல்லும்போது, இயேசு இங்கு செய்த அற்புதத்தையும் சேர்த்தே சொல்லுகிறார்கள். இயேசுகிறிஸ்து இங்கு தம்முடைய சத்திய வசனத்தை அதிகமாக விதைத்திருக்கிறார். நம்முடைய நிலத்தில் நாம் அதிகமாக விதைத்திருக்கும்போது, விதைகள் எப்படி முளைத்திருக்கிறது என்பதைப் பார்ப்பதற்கு வருவது போல, இயேசுகிறிஸ்துவும் பெத்தானியாவுக்கு வந்திருக்கிறார். தம்முடைய வசனம் அந்த ஊரிலுள்ள ஜனங்களுடைய இருதயத்தில் எப்படி வளர்ந்திருக்கிறது என்பதைக் கண்டு சந்தோஷப்பட இயேசுகிறிஸ்து பெத்தானியாவுக்கு மறுபடியும் வந்திருக்கிறார்.

## அதிகாரம் - 12

### இராவிருந்து

**அங்கே அவருக்கு இராவிருந்து பண்ணினார்கள்; மார்த்தாள் பணிவிடை செய்தாள்; லாசருவும் அவருடனேகூடப் பந்தியிருந்தவர்களில் ஒருவனாயிருந்தான் (யோவா 12:2).**

பெத்தானியாவிலுள்ள சிநேகிதர்கள் இயேசுகிறிஸ்துவை அன்பாக உபசரிக்கிறார்கள். அவருக்கு இராவிருந்து பண்ணுகிறார்கள். மத்தேயு எழுதின சுவிசேஷத்தில் இயேசுகிறிஸ்து குஷ்டரோகியாயிருந்த சீமோனுடைய வீட்டில் இராவிருந்து பண்ணினார் என்று எழுதப்பட்டிருக்கிறது (மத் 26:6). இந்த சம்பவமும், மத்தேயு எழுதியிருக்கும் சம்பவமும், ஒரே சம்பவமாக இருக்கலாம் என்று வேதபண்டிதர்கள் கருத்துக் கூறுகிறார்கள்.

யூதர்களுடைய வீடுகளில் இரவில் சாப்பிடும் உணவு சிறப்பாக இருக்கும். இயேசுகிறிஸ்துவுக்குச் சிறப்பான போஜனம் கொடுக்கவேண்டும் என்பதற்காக அவருக்கு இராவிருந்துபண்ணுகிறார்கள். அவர்மீது தங்களுக்கு அதிக அன்பும், பாசமும், மரியாதையும் இருப்பதைக் காண்பிப்பதற்காக ஒருவேளை இவர்கள் இயேசுவுக்கு இராவிருந்து பண்ணியிருக்கலாம். இராவிருந்து பொதுவாக சிநேகிதர்களுக்கு சிநேகத்தின் அடையாளமாக பண்ணப்படும். இயேசுகிறிஸ்துவும் அவர்களுடைய சிநேகிதர். இராவிருந்து ஐக்கியத்தின் விருந்து என்றும் அழைக்கப்படுகிறது. இராவிருந்தில் பங்குபெறும்போது அவர்கள் அவசரமில்லாமல் நிதானமாகப் புசிப்பது வழக்கம். போஜனம் பண்ணிக்கொண்டிருக்கும்போதே அவர்கள் பல காரியங்களை ஒருவருக்கொருவர் தாராளமாகப் பேசிக்கொள்வார்கள்.

மார்த்தாள் இயேசுகிறிஸ்துவுக்கும், அவருடைய சீஷருக்கும், சிநேகிதர்களுக்கும் பணிவிடை செய்கிறாள். இயேசுவுக்கு பணிவிடை செய்வது தன்னுடைய கௌரவத்திற்கு ஏற்றதல்ல என்று அவள் நினைக்கவில்லை. இராவிருந்தில் இயேசுகிறிஸ்து இருப்பதினால், அவருக்கு பணிவிடை செய்வது தனக்கு கிடைத்திருக்கிற சிலாக்கியம் என்று நினைத்து, மார்த்தாள் பணிவிடை செய்கிறாள். மார்த்தாளைப்போல இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியம் செய்வதை நமக்குக் கிடைத்திருக்கும் ஒரு பெரிய சிலாக்கியமாக நாம் கருதவேண்டும். எந்த ஊழியமாக இருந்தாலும் அதைச் சந்தோஷமாகச் செய்யவேண்டும். அது நம்முடைய பேருக்கும் புகழுக்கும் களங்கம் உண்டாக்கிவிடுமோ என்று உலகப்பிரகாரமாகச் சிந்திக்கக்கூடாது. இயேசுகிறிஸ்துவுக்குப் பணிவிடை செய்வதுதான் இந்த உலகத்திலேயே மிகவும் கௌரவமான உத்தியோகம்.

லாசருவின் வீட்டில் அவனுடைய சகோதரிகளாகிய மரியாளும் மார்த்தாளும் இருக்கிறார்கள். ஒரு சமயம் இயேசுகிறிஸ்து அவர்களுடைய வீட்டிற்கு வந்தபோது, மரியாள் அவளுடைய பாதத்தருகே அமர்ந்து, அவருடைய உபதேசத்தை கேட்டுக் கொண்டிருந்தாள். மார்த்தாளோ பற்பல வீட்டுவேலைகளைச் செய்வதில் தன்னை வருத்தப்படுத்திக் கொண்டிருந்தாள். அதற்காக இயேசுகிறிஸ்து மார்த்தாளை மென்மையான வார்த்தைகளினால் கடிந்து கொண்டார். இயேசுகிறிஸ்து தன்னை அப்போது கடிந்துகொண்டார் என்று நினைத்து, தன்னுடைய உள்ளத்தில் அவர்மீது கோபப்பட்டு, இயேசுகிறிஸ்து தங்கள் ஊருக்கு வந்திருக்கும்போது, மார்த்தாள் அவருக்கு பணிவிடை செய்யாமல் ஒதுங்கிப்போய்விடவில்லை. தன்னை அவர் கடிந்துகொண்டாலும், தன்னுடைய நன்மைக்கே அவர் பேசுகிறார் என்று நினைத்து, இயேசுகிறிஸ்துவுக்கு அன்போடு பணிவிடை செய்கிறாள்.

ராஜாக்களின் பந்தியில் அமர்ந்து அவர்களோடு போஜனம்பண்ணுவதைவிட, இயேசுகிறிஸ்துவின் பந்தியில் பணிவிடை செய்வது பாக்கியமானது. இயேசுகிறிஸ்துவோடு பந்தியிருந்தவர்களில் லாசருவும் ஒருவன். லாசரு மறுபடியும் உயிரோடு எழும்பியிருக்கிறான் என்பதற்கு இந்த சம்பவம் சாட்சி பகருகிறது. இயேசுகிறிஸ்துவும் தம்முடைய உயிர்த்தெழுதலை நிரூபிப்பதற்கு, தாம் மரித்தோரிலிருந்து எழுந்தபின்பு தம்முடைய சீஷருடனே புசித்துக் குடித்தார் (அப் 10:41). தம்மை உயிரோடு எழுப்பிய இயேசுகிறிஸ்துவோடு லாசரு பந்தியிருக்கிறான். இயேசுகிறிஸ்து நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில், நம்மை மறுபடியும் எழுப்பும்போது, நாமும் அவரோடு கூடஅமர்ந்து ஆவிக்குரிய போஜனத்தைப் புசிப்போம்.

## அதிகாரம் - 12

**பரிமள தைலம்**

**அப்பொழுது மரியாள் விலையேறப் பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டுவந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள்; அந்த வீடு முழுவதும் தைலத்தின் பரிமளத்தினால் நிறைந்தது (யோவா 12:3).**

மரியாள் இயேசுகிறிஸ்துவின்மீது அதிக அன்பாயிருக்கிறாள். தன்னுடைய அன்பை விசேஷித்த வழியில் தெரியப்படுத்துகிறாள். விலையேறப்பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டுவந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைக்கிறாள். இயேசுகிறிஸ்துவின்மீது தனக்குள்ள அன்பை வெளிப்படுத்துவதற்காகவே மரியாள் இதைச் செய்கிறாள்.

மரியாளின் அன்பு மிகவும் தாராளமாக இருக்கிறது. தன்னிடத்தில் விலையேறப் பெற்றது ஏதாவது இருக்குமென்றால், அதை தானே வைத்துக்கொள்ள வேண்டும் என்று ஆசைப்படாமல், அதை இயேசுகிறிஸ்துவின் பாதத்தில் சமர்பித்து, அவர்மீது தான் வைத்திருக்கும் அன்பை மரியாள் தாராளமாக வெளிப்படுத்துகிறாள். இயேசுகிறிஸ்துவின்மீது நாம் மெய்யாகவே அன்பு வைத்திருப்போமென்றால், இந்த உலகத்தைவிட இயேசுகிறிஸ்துவே நமக்கு முக்கியமானவராக இருப்பார். இந்த உலகத்தில் நாம் பெற்றிருக்கும் மேன்மையான பதவிகளையும், பட்டங்களையும், ஐசுவரியங்களையும் இயேசுகிறிஸ்துவின் பாதத்தருகில் பணிவோடு சமர்ப்பிப்போம்.

இயேசுகிறிஸ்துவின்மீது மரியாள் வைத்திருக்கிற அன்பு பெருமையில்லாத, மனத்தாழ்மையுள்ள அன்பாக இருக்கிறது. மரியாள் விலையேறப்பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தை இயேசுகிறிஸ்துவிடத்தில் கொண்டுவந்து, அதைத் தன்னுடைய கைகளினால் இயேசுவின் பாதங்களில் பூசுகிறாள். தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைக்கிறாள். மரியாளுக்கு இருதயத்தில் பெருமை எதுவுமில்லை. மனத்தாழ்மையோடு இயேசுகிறிஸ்துவின் பாதத்தில் தைலம் பூசி அதைத் துடைக்கிறாள்.

இயேசுகிறிஸ்துவின்மீது நமக்கு மெய்யான அன்பு இருக்குமென்றால், நாமும் அவரை மேன்மைப்படுத்தத் தயங்கமாட்டோம். நமது சுயபெருமைகளை நினைத்துப் பார்க்காமல், மிகுந்த மனத்தாழ்மையோடு அவருடைய சமுகத்திற்கு முன்பாக பயபக்தியோடு ஊழியம் செய்வோம். வேதனைகளைச் சகித்துக்கொள்வோம். இயேசுகிறிஸ்துவின் நாமம் மகிமைப்படுமென்றால், அதற்காக எதையும் செய்ய ஆயத்தமாக இருப்போம்.

இயேசுகிறிஸ்துவின்மீது மரியாள் வைத்திருக்கிற அன்பு விசுவாசிக்கிற அன்பாகயிருக்கிறது. இந்த அன்பினால் விசுவாசம் கிரியை செய்கிறது. மரியாள் விசுவாசத்தினால் இயேசுவை மேசியாவாக அங்கீகரிக்கிறாள். இயேசுவைக் கிறிஸ்து என்று விசுவாசிக்கிறாள். கிறிஸ்து என்னும் பெயருக்கு அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிறவர் என்று பொருள். தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிறவர் நமக்கும் அபிஷேகம் பண்ணப்பட்டவராக இருக்கவேண்டும். நம்முடைய அன்பின் பரிமள தைலத்தினால் நாமும் இயேசுகிறிஸ்துவை அபிஷேகம் பண்ணவேண்டும். மரியாள் இயேசுவின் பாதங்களில் தைலத்தைப் பூசி, அவருடைய பாதத்தை துடைத்தபோது, அந்த வீடு முழுவதும் தைலத்தின் பரிமளத்தினால் நிரம்புகிறது. நம்முடைய இருதயங்களிலும், வீடுகளிலும் நாம் இயேசுகிறிஸ்துவை அன்பினாலும், பக்தியினாலும், விசுவாசத்தினாலும், கிரியையினாலும் அபிஷேகம்பண்ணும்போது, நம்முடைய இருதயமும் நம்முடைய வீடும் அபிஷேக தைலத்தின் பரிமளத்தினால் நிறைந்திருக்கும்.

**யூதாஸ்காரியோத்து**

**அப்பொழுது அவருடைய சீஷரில் ஒருவனும் அவரைக் காட்டிக் கொடுக்கப் போகிறவனுமாகிய சீமோனுடைய குமாரனான யூதாஸ்காரியோத்து: இந்தத் தைலத்தை முந்நூறு பணத்துக்கு விற்று, தரித்திரருக்குக் கொடாமல் போனதென்ன என்றான் (யோவா 12:4,5).**

## அதிகாரம் - 12

இயேசு கிறிஸ்துவோடு யூதாஸ்காரியோத்தும் பந்தியிருந்தவர்களில் ஒருவனாகயிருக்கிறான். மரியாள் இயேசுவின் பாதங்களில் பரிமள தைலத்தைப் பூசுவது யூதாசுக்குப் பிடிக்கவில்லை. இவன் இயேசுகிறிஸ்துவின் சீஷரில் ஒருவன். எண்ணிக்கையில்தான் சீஷரில் ஒருவனாக இருக்கிறானேயல்லாமல், குணத்தில் இயேசுவின் சீஷரில் ஒருவனாக இல்லை. யூதாஸ் ஒரு அப்போஸ்தலனாக அழைக்கப்பட்டவன். சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டியவன். ஆனால் இவனோ பணத்திற்காக இயேசுகிறிஸ்துவைக் காட்டிக்கொடுத்துவிடுகிறான்.

இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரனாக ஊழியம் செய்யவேண்டியவன், இயேசுவைக் காட்டிக்கொடுத்து நான்று கொண்டு செத்துப்போகிறான். இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்கிறவர்களாகிய நாம் மிகுந்த கவனத்தோடும், எச்சரிப்போடும் பயபக்தியோடு இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தில் பங்கு பெறவேண்டும். எந்த சூழ்நிலையிலும் நம்முடைய இருதயத்தில் சாத்தானுக்கு இடங்கொடுத்துவிடக்கூடாது. யூதாஸ்காரியோத்து சாத்தானுக்கு தன் இருதயத்தில் இடங்கொடுத்து, இயேசுவைக் காட்டிக்கொடுத்து, முடிவில் நான்றுகொண்டு செத்துப்போனான்.

மரியாள் இயேசுகிறிஸ்துவின் பாதங்களில் தைலத்தைப் பூசுவதைப் பார்த்துக்கொண்டிருக்கிற யூதாஸ்காரியோத்து, இது ஒரு வீணான வேலை என்று நினைக்கிறான். இயேசுவின் பாதத்தில் மரியாள் தைலத்தை ஊற்றி வீணாக்குவதாக நினைக்கிறான். அந்தத் தைலத்தை முந்நூறு பணத்திற்கு விற்கலாம் என்று அதற்கு கிரயமதிப்பு போடுகிறான். அந்தப் பணத்தை தரித்திரருக்குக் கொடாமல், இப்படி இயேசுவின் பாதங்களில் ஊற்றி ஏன் வீணாக்கவேண்டும் என்று பேசுகிறான். இவனிடத்தில் உலக ஞானம் இருக்கிறது. இயேசுகிறிஸ்துவின்மீது இவன் வைத்திருக்கும் பக்தியைவிட, பணத்தின்மீது இவன் வைத்திருக்கும் பக்தி அதிகமாயிருக்கிறது.

இயேசுகிறிஸ்துவின் காரியங்களைவிட, உலககாரியங்களுக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுக்கிறவர்கள், யூதாஸ் காரியோத்தைப்போலத்தான் இருப்பார்கள். இவர்களுடைய உள்ளத்தில் இயேசுகிறிஸ்துவின் ஆவி கிரியை செய்வதற்குப் பதிலாக, யூதாஸ்காரியோத்தின் ஆவியே கிரியை செய்யும். பரிசுத்த ஆவியானவர் இவர்களுக்குக் கற்றுக்கொடுப்பதற்குப் பதிலாக, யூதாஸ் காரியோத்துவின் ஆவிதான் இவர்களுக்குக் கற்றுக்கொடுப்பான்.

தரித்திரருக்குக் கொடுப்பது நல்லதுதான். ஆனால் யூதாஸோ தன்னுடைய பேராசையை மூடிமறைப்பதற்காக, தரித்திரருக்குக் கொடுப்பது என்பதை ஒரு போர்வையாகப் பயன்படுத்துகிறான். இப்படித்தான் இக்காலத்தில் அநேகர் ஏழைகளுக்கு உதவிசெய்கிறோம் என்னும் பேரில், கர்த்தருடைய ஊழியத்தைச் செய்யத் தவறிவிடுகிறார்கள். தரித்திரருக் கொடுக்கிறோம் என்று சொல்லி, கர்த்தருக்கு ஒன்றும் கொடுக்காமல் போய்விடுகிறார்கள். "இந்த தைலத்தை முந்நூறு பணத்திற்கு விற்று, தரித்திரருக்குக் கொடாமல் போனதென்ன" என்று யூதாஸ் கேட்கிறான். யூதாசுக்கு யாரும் ஆலோசனை சொல்லமுடியாது. தனக்கு எல்லாம் தெரியுமென்றும், மற்ற எல்லாரையும்விட தான் அதிகமாகத் தெரிந்து வைத்திருப்பதாகவும் யூதாஸ் நினைக்கிறான். நம்முடைய ஊழியத்தின் பாதையில் யூதாசைப்போன்றவர்கள் நமக்கு ஆலோசனைக்காரர்களாக வந்துவிடக்கூடாது. இப்படிப்பட்டவர்கள் நல்ல ஆலோசனை கொடுப்பதுபோல கொடுத்து, நம்மை கர்த்தருடைய ஊழியத்தின் பாதையிலிருந்து திசைதிருப்பிவிடுவார்கள். யூதாசின் பாதையில் போனால், யூதாசுக்கு வந்த முடிவுதான் நமக்கும் வரும்.

### பணப்பை

**அவன் தரித்திரரைக்குறித்துக் கவலைப்பட்டு இப்படிச் சொல்லாமல், அவன் திருடனானபடியினாலும், பணப்பையை வைத்துக்கொண்டு அதிலே போடப்பட்டதைச் சுமக்கிறவனானபடியினாலும் இப்படிச் சொன்னான் (யோவா 12:6).**

## அதிகாரம் - 12

யூதாஸ்காரியோத்து தரித்திரருக்கு உதவிபுரிவதுபோல பேசினாலும், அவனுடைய உள்ளான மனதிலிருக்கும் மாய்மாலம் வெளிப்படுத்தப்படுகிறது. "அவன் தரித்திரரைக் குறித்துக் கவலைப்பட்டு இப்படிச் சொல்லாமல், அவன் திருடனானபடியினாலும், பணப்பையை வைத்துக்கொண்டு அதிலே போடப்பட்டதைச் சுமக்கிறவனானபடியினாலும் இப்படிச் சொன்னான்". இவனுடைய வாயிலிருந்து வெளிப்பட்ட வார்த்தைகளுக்கும், இவனுடைய உள்ளத்திலுள்ள துன்மார்க்கமான சிந்தனைக்கும் சம்பந்தமேயில்லை. இவனுக்கு மெய்யாகவே தரித்திரர்மீது அக்கரையுமில்லை, தரித்திரருக்கு உதவிபுரியவேண்டும் என்னும் சிந்தனையுமில்லை.

தரித்திரருக்கு உதவிபுரிய வேண்டுமென்று பேசுவதினால் மாத்திரம் தரித்திரருக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகப் போவதில்லை. தரித்திரனுக்கு ஏதாவது கொடுக்கப்பட்டால்தான் அது அவனுக்கு உதவியாக இருக்கும். வெறும்பேச்சு தரித்திரனுடைய பசியைப்போக்காது. இதுபோலத்தான் இன்று அநேகர் சபையின் வல்லமையைக்குறித்தும், பரிசுத்தத்தைக் குறித்தும் பேசுகிறார்கள். ஆனால் பேசுகிற இவர்கள் பரிசுத்தவான்களாக இருப்பதில்லை. இவர்களிடத்தில் தேவனுடைய வல்லமையும் வெளிப்படுவதில்லை. சபையைப்பற்றி ஏதோ பெருமையாகப் பேசவேண்டும் என்பதற்காக இவர்கள் பேசுகிறார்கள். தங்களுக்கு அதிக பக்தியிருப்பதுபோலவும், தேவனுடைய வல்லமையினால் தாங்கள் நிறைந்து பரிசுத்தமாக ஜீவிப்பதுபோலவும் மாய்மாலம் பண்ணுகிறார்கள். இப்படிப்பட்டவர்களிடத்தில் பேச்சுத்தான் பெரிதாகயிருக்கும்.

யூதாசிடம் தரித்திரருக்கு உதவிபுரியவேண்டும் என்னும் குணமில்லை. அதேவேளையில் அவனிடத்தில் பணத்தாசை இருக்கிறது. மரியாள் பரிமள தைலத்தை முந்நூறு பணத்திற்கு விற்றால், அந்தப் பணத்தை யூதாஸ் தரித்திரருக்குக் கொடுக்கமாட்டான். பணப்பை இவனிடத்தில் இருக்கிறது. அந்த முந்நூறு பணத்தையும் தானே வாங்கி தன்னிடத்திலுள்ள பணப்பையில் போட்டுக்கொள்வான். அந்தப் பணத்தை செலவுபண்ணும் உரிமை யூதாசுக்கு வந்துவிடும். அதன்பின்பு தன்னுடைய இஷ்டம்போல யூதாஸ் பணத்தை செலவு செய்ய ஆரம்பித்துவிடுவான். தரித்திரருக்கு உதவிபுரிய வேண்டும் என்னும் பெயரில், தனக்குத்தானே உதவிசெய்து கொள்வான்.

யூதாஸைப்போலத்தான் இக்காலத்தில் சில ஊழியக்காரர்கள் கர்த்தருடைய பணத்தை தங்களுடைய கரத்தில் வைத்துக்கொண்டு, தேவனுக்குச் சித்தமான பிரகாரம் அதைச் செலவுபண்ணாமல், தங்களுக்குப் பிடித்தமான பிரகாரம் செலவு செய்கிறார்கள். ஆனாலும் இப்படிப்பட்டவர்கள் விசுவாசிகளிடமிருந்து பணத்தை வாங்குவதற்காக ஆவிக்குரிய தத்துவங்களைப் பேசுவார்கள். சாதுரிய வார்த்தைகளினால் விசுவாசிகளை மயக்குவார்கள். இவர்களிடத்தில்தான் பணப்பையும் இருக்கும். பணப்பை வைத்திருக்கிறவர்கள் தேவனுக்குப் பயந்து ஊழியம் செய்யவேண்டும். தேவனுக்கு முன்பாகவும் மனுஷருக்கு முன்பாகவும் உண்மையாக இருக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்துவின் ஊழியத்திற்கு யூதாஸ்காரியோத்து பொருளாளரைப்போல இருக்கிறான். இயேசுகிறிஸ்துவுக்கும் அவருடைய சீஷருக்கும் அதிகமான சொத்து எதுவுமில்லை. அவர்கள் எளிய வாழ்க்கையை வாழ்கிறார்கள். அவர்களிடத்தில் இருப்பது ஒரே ஒரு பணப்பைதான். இதுவும் சிறிய பை. இதிலுள்ள பணம் அவர்களுடைய அன்றாட தேவைகளுக்குத்தான் போதுமானதாக இருக்கும். அவர்களிடத்தில் அதிகமாக இருக்குமென்றால், அந்தப்பணத்தை தரித்திரருக்குக் கொடுத்து உதவிசெய்வார்கள். இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தினால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிற ஜனங்கள் அவருடைய ஊழியத்திற்கு காணிக்கைகளைக் கொண்டு வருகிறார்கள். இவையெல்லாவற்றையும் மொத்தமாகச் சேர்த்து, யூதாஸ்காரியோத்து தன்னுடைய பணப்பையில் வைத்திருக்கிறான். இந்தப் பணத்தை இயேசுகிறிஸ்துவும் அவருடைய சீஷரும் பொதுவாக வைத்து அனுபவிக்கிறார்கள். இயேசுகிறிஸ்து ஐசுவரிய சம்பன்னர். ஆனாலும் அவர் நமக்காக தரித்திரரானார்.

இயேசுகிறிஸ்துவினுடைய ஊழியத்தின் பண வரவு செலவுக்கு யூதாஸ்காரியோத்து உக்கிராணக்காரனாக இருக்கிறான். இவர்களிடத்தில் இருப்பது கொஞ்சமாக இருந்தாலும் அதையும் முறைப்படி செலவுபண்ணுகிறார்கள். தங்களுடைய காணிக்கைகளை ஒரு பணப்பையில் பொதுவாகப் போட்டுவைக்கிறார்கள். யூதாஸ்காரியோத்திடம் பணப்பை ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது.

## அதிகாரம் - 12

இயேசுகிறிஸ்துவின் பன்னிரண்டு சீஷர்களில் யூதாஸ்காரியோத்தே மிகவும் சிறியவன். தாழ்மையானவன். பேதுருவோ, யோவானோ பணப்பைக்கு உக்கிராணக்காரராக நியமிக்கப்படவில்லை. உலகப்பிரகாரமான வேலைகளும், பொறுப்புக்களும் இயேசுகிறிஸ்துவின் ஊழியத்திற்கு பாரமாகவே இருக்கும். உலகக் காரியங்களில் ஈடுபட்டிருக்கிறவர்களினால் ஆவிக்குரிய காரியங்களில் முழுமையாகக் கவனம் செலுத்த முடியாது. பேதுருவும் யோவானும் இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தில் முழுமையாக ஈடுபடவேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆகையினால் பணவிஷயத்தில் இவர்கள் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள விரும்பவில்லை.

யூதாஸ்காரியோத்திற்கோ ஆவிக்குரிய ஊழியத்தைவிட உலகப்பிரகாரமான காரியமே பெரிதாகத் தெரிகிறது. பணப்பையை வைத்திருக்கும் பொறுப்பை யூதாஸ் சந்தோஷமாக ஏற்றுக்கொள்கிறான். இவனுடைய இருதயம் பணத்தின்மீது இருக்கிறது. ஆகையினால் பணப்பை இவனிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. யூதாஸ் தான் விரும்பிய ஊழியத்தைப் பெற்றுக்கொள்கிறான். பணப்பைக்கு அருகாமையிலிருக்கிறவர்கள் பாவத்திற்கு அருகாமையிலிருக்கிறார்கள். இப்படிப் பட்டவர்களுக்குச் சோதனை கடினமாக இருக்கும். பாவத்திற்குத் தூரயிருக்கிறவர்களைவிட, பாவத்திற்கு அருகாமையிலிருக்கிறவர்கள் அதிகமாகச் சோதிக்கப்படுவார்கள். ஆகையினால் நாம் எப்போதும் தீமையைவிட்டு விலகியே இருக்கவேண்டும்.

யூதாசுக்குப் பணப்பையின்மீது ஆசையிருக்கக்கூடாது. அந்த உத்தியோகத்தில் பெருமைப்படவும் கூடாது. தன்னிடத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் பணத்திற்கு தான் எஜமானல்ல என்றும், தான் ஒரு பொறுப்புள்ள உக்கிராணக்காரன் என்றும் யூதாஸ் நினைத்திருக்கவேண்டும். ஆனால் யூதாசோ உக்கிராணக்காரனாகயில்லாமல் திருடனாக இருக்கிறான். பணப்பையை வைத்திருக்கிறவன் திருடனாகயிருப்பது மிகப்பெரிய ஆபத்து. யூதாசின் இருதயத்தில் பணத்தாசை நிரம்பியிருக்கிறது. தன்னிடத்திலுள்ள பணத்தைத் திருடுவது தன்னுடைய இருதயத்தைத்தானே கொலை பண்ணுவதற்குச் சமம். யூதாசின் இருதயம் பணத்தாசையினால் நிரம்பியிருந்ததால், அவனுடைய இருதயத்தில் நீதி, நேர்மை, கண்ணியம், உக்கிராணத்துவம் ஆகிய எதுவுமே காணப்படவில்லை. இந்த நற்குணங்கள் எல்லாவற்றையும் யூதாசு அழித்துப்போட்டான்.

பணம் எல்லாவற்றிற்கும் உதவியாயிருக்கும். கர்த்தருடைய ஊழியத்தைச் செய்வதற்குப் பணமும் தேவைப்படுகிறது. ஆகையினால் ஊழியத்திற்கான பணத்தை வைத்திருக்கிறவர்களும், பொதுவான காரியங்களுக்காகப் பணத்தை வைத்திருக்கிறவர்களும் நேர்மையான வர்களாகவும், பணத்தாசையில்லாத வர்களாகவும் இருக்கவேண்டும். இவர்கள் பணத்தாசைக்கு இடங்கொடுத்துவிடக்கூடாது. இவர்களுடைய கைகள் சுத்தமுள்ளதாக இருக்கவேண்டும். தேவனுடைய கிருபையே இவர்களுடைய கைகளை இயக்கவேண்டுமேயல்லாமல், இவர்களுடைய சுயஇச்சைகள் இவர்களுடைய கைகளை இயக்கிவிடக்கூடாது. யூதாஸ்காரியோத்திடம் பணப்பை பொறுப்பாக ஒப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தன்னிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கும் உக்கிராண ஊழியத்தைக் காட்டிக்கொடுத்து துரோகம் பண்ணிவிடுகிறான். முடிவில் தன்னுடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவையே முப்பது வெள்ளிக்காசுகளுக்காகக் காட்டிக்கொடுத்து துரோகம்பண்ணிவிடுகிறான்.

### நான் எப்பொழுதும் உங்களிடத்தில் இரேன்

**அப்பொழுது இயேசு: இவளை விட்டுவிடு, என்னை அடக்கம்பண்ணும் நாளுக்காக இதை வைத்திருந்தாள். தரித்திரர் எப்பொழுதும் உங்களிடத்தில் இருக்கிறார்கள்; நான் எப்பொழுதும் உங்களிடத்தில் இரேன் (யோவா 12:7,8).**

மரியாள் இயேசுவின் பாதங்களில் பரிமள தைலத்தைப் பூசுகிறாள். ஆனால் யூதாசோ மரியாளின் இந்தச் செய்கை அவசியமில்லாதது என்றும், அந்தத் தைலத்தைவிற்று தரித்திரருக்குக் கொடுக்கலாமென்றும் ஆலோசனை கூறுகிறான்.

## அதிகாரம் - 12

ஆனால் இயேசுகிறிஸ்துவோ யூதாசின் பேச்சை அங்கீகரிக்கவில்லை. மரியாளை விட்டுவிடுமாறு கூறுகிறார். மரியாளுடைய செய்கையை இயேசுகிறிஸ்து அங்கீகரிக்கிறார். தம்முடைய பாதங்களில் பரிமள தைலத்தைப் பூசுவதையும், மரியாள் தன்னுடைய தலைமயிரால் தம்முடைய பாதங்களைத் துடைப்பதையும் இயேசுகிறிஸ்து அங்கீகரிக்கிறார். இந்தச் செய்கையில் இயேசுகிறிஸ்து பிரியப்படுகிறார். மரியாள் நல்ல மனதோடு இந்தக் காரியங்களைச் செய்கிறாள். இயேசுகிறிஸ்துவை நல்ல மனதோடு நாம் ஆராதிக்கும்போது, நல்ல மனதோடு அவரை மகிமைப்படுத்தும்போது, அவரை மகிமைப்படுத்துகிற முறை எப்படியிருந்தாலும், இயேசுகிறிஸ்து நம்மிடத்தில் குற்றம் கண்டுபிடிக்கமாட்டார். நம்முடைய நோக்கமும் எண்ணமும் சரியானதாக இருக்கவேண்டும். நம்முடைய முறைகள் சாதாரணமானதாக இருந்தாலும், நம்முடைய நோக்கம் உயர்வானதாக இருக்கவேண்டும்.

மரியாள் இயேசுவின் பாதங்களில் பரிமள தைலத்தைப் பூசுவது யூதாஸ்காரியோத்தின் பார்வைக்குத் தேவையற்ற காரியமாக இருக்கிறது. ஆனால் மரியாளோ தன்னுடைய உள்ளத்தில் இயேசுகிறிஸ்துவை மகிமைப்படுத்த வேண்டுமென்றும், அவரை அபிஷேகம் பண்ணவேண்டுமென்றும் மெய்யான நோக்கத்தோடு, இயேசுவின் பாதத்தில் பரிமள தைலத்தைப் பூசுகிறாள். யூதாஸ்காரியோத்திற்குப் பரிமள தைலத்தின் விலைக் கிரயம் மாத்திரமே தெரிகிறது. இயேசுகிறிஸ்துவின் பாதத்தில் இந்த தைலம் ஊற்றப்பட்டு, தரையில் வடியும்போது, அந்தப் பணமெல்லாம் வீணாய் போய்க்கொண்டிருக்கிறதே என்னும் சிந்தனை மாத்திரமே யூதாஸ்காரியத்திற்கு வருகிறது. யூதாஸ் பணத்தைப்பார்க்கிறான். இயேசு கிறிஸ்துவோ மனுஷருடைய இருதயத்தைப்பார்க்கிறார். மரியாளின் தூய்மையான இருதயத்தையும், தம்மை மகிமைப்படுத்தி அபிஷேகம்பண்ண வேண்டுமென்னும் அவளுடைய இருதயத்தின் வாஞ்சையையும் இயேசுகிறிஸ்து பார்க்கிறார். அதை அறிந்து, மரியாளைக் குறை கூறும் யூதாசிடம் "இவளைவிட்டுவிடு" என்று கூறுகிறார்.

தம்முடைய பாதங்களில் மரியாள் பரிமள தைலத்தைப் பூசுவதற்கு, இயேசுகிறிஸ்து ஒரு மெய்யான சத்தியத்தை வெளிப்படுத்துகிறார். மரியாள்மீது குற்றம் சுமத்தும் யூதாஸ்காரியோத்திற்கோ, அல்லது அவனைப்போல உலகப்பிரகாரமாக சிந்திக்கிறவர்களுக்கோ, இதுவரையிலும் தெரிந்திராத ஒரு இரகசியத்தை இயேசுகிறிஸ்து அங்கு வெளிப்படுத்துகிறார். "என்னை அடக்கம்பண்ணும் நாளுக்காக இதை வைத்திருந்தாள்" என்று இயேசு கூறுகிறார்.

இயேசுகிறிஸ்து மரித்து அடக்கம்பண்ணப்படப்போகும் நாள் மிகவும் சமீபமாகயிருக்கிறது. இந்த வெளிப்பாடு மரியாளுக்குத் தெரிந்திருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் சரீரம் இப்போது உயிருள்ளதாகயிருந்தாலும், மரியாளின் பார்வைக்கு இயேசுகிறிஸ்து மரித்துப்போகப்போவதும், அடக்கம் பண்ணப்படப் போவதும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த வெளிப்பாடு கிடைத்திருப்பதினால், உயிரோடிருக்கிற இயேசுகிறிஸ்துவின் சரீரத்தை, மரித்த சரீரமாக நினைத்து, அந்த சரீரத்தின் பாதங்களில் பரிமள தைலத்தைப் பூசுகிறாள். மரித்தோரை அடக்கம் பண்ணுவதற்கு முன்பாக பரிமள தைலத்தினால் பூசி பாடம்பண்ணுவதுபோல, மரியாள் இயேசுகிறிஸ்துவின் பாதங்களில், அவர் உயிரோடிருக்கும்போதே பரிமள தைலம் பூசுகிறாள்.

நாம் கர்த்தருக்குப் பிரியமுள்ள பிள்ளைகளாக ஜீவிக்கும்போது, நமக்கு தேவனுடைய ரகசியங்கள் வெளிப்படுத்தப்படும். நன்மை செய்வதற்குப் பல வாசல்கள் நமக்குத் திறக்கப்படும். இயேசுகிறிஸ்துவின்மீதுள்ள நமது பக்தியையும் விசுவாசத்தையும் வெளிப்படுத்துவதற்கு ஏராளமான வாய்ப்புக்கள் கிடைக்கும். நம்முடைய கிரியைகள் இயேசுகிறிஸ்துவுக்கு ஏற்ற பிரகாரமாகவும், அவரால் அங்கீகரிக்கப்படக் கூடியதாகவும், அழகானதாகவும் இருக்கும். மற்றவர்களுக்குத் தெரியாத இரகசியங்கள் நமக்கு வெளிப்படுத்தப்படுவதினால், நம்முடைய செய்கைகளைப் பார்த்து மற்றவர்கள் ஆச்சரியப்படுவார்கள். ஆனால் நாமோ எந்தவித தடுமாற்றமுமில்லாமல், தேவன் நமக்கு நியமித்திருக்கும் காலங்களில், தேவனுக்குச் சித்தமான காரியங்களைச்செய்து அவரை மகிமைப்படுத்துவோம்.

## அதிகாரம் - 12

இயேசுகிறிஸ்து சீக்கிரமாக மரித்து அடக்கம்பண்ணப்படப்போகிறார் என்னும் இரகசியம், அவரோடு கூடவேயிருக்கும் யூதாஸ்காரியோத்திற்கு இன்னும் வெளிப்படுத்தப்படவில்லை. ஆனால் தன்னுடைய இருதயம் முழுவதையும் இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளினால் நிரப்பியிருக்கும் மரியாளுக்கோ, இந்த இரகசியம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் மரித்த சரீரத்தின்மீது மற்றவர்கள் பரிமள தைலம் பூசுவதற்கு முன்பாக, தான் அந்தக் காரியத்தை செய்யவேண்டும் என்பதற்காக மரியாள் இப்பொழுதே விலையேறப்பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கிரயத்திற்கு வாங்கியிருக்கிறாள். அதை இப்போது இயேசுகிறிஸ்துவின் பாதத்தில் பூசுகிறாள். மற்றவர்களுக்கு இயேசுகிறிஸ்து இப்போது உயிரோடிருப்பது மாத்திரமே தெரிகிறது. ஆனால் மரியாளுக்கோ, இயேசுகிறிஸ்து மரித்து அடக்கம்பண்ணப்போகும் நாள் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

இயேசுகிறிஸ்து தேவனுடைய ராஜ்யத்தைப்பற்றியும், இந்த ராஜ்யத்தின் பராமரிப்பு ஒழுங்குபற்றியும் விவரிக்கிறார். "தரித்திரர் எப்பொழுதும் உங்களிடத்தில் இருக்கிறார்கள். நான் எப்பொழுதும் உங்களிடத்தில் இரேன்" என்பது இயேசுகிறிஸ்து இங்கு வெளிப்படுத்துகிற ஆவிக்குரிய இரகசியமாகும். தரித்திரர் எப்போதும் நம்மிடத்தில் இருக்கிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்து எப்பொழுதும் நம்மிடத்தில் இருக்கமாட்டார். இயேசுகிறிஸ்துவின் பிரசன்னம் நம்முடைய சபைகளில் எப்பொழுதும் பிரத்தியட்சமாக இருக்காது. இயேசுகிறிஸ்து சரீரப்பிரகாரமாக நம் மத்தியில் எப்போதும் இருக்கமாட்டார்.

பொதுவாக நமக்கு வாய்ப்புக்கள் வரும்போது அவற்றை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். வாய்ப்புக்கள் எப்பொழுதும் வருவதில்லை. எப்போதாவதுதான் வரும். வாய்ப்புக்கள் வந்தாலும் அது நீண்டகாலம் நிலைத்திருப்பதில்லை. வேகமாக வருவதுபோலவே வேகமாகக் கடந்துசென்றுவிடும். நமக்கு வாய்ப்புக்கள் வரும்போது, நாம் செய்யவேண்டிய காரியங்களைக் காலதாமதம்பண்ணாமல், நேர்த்தியாகச் செய்யவேண்டும்.

இயேசுகிறிஸ்து இப்போது தம்முடைய சரீரத்தில் தம்மை பிரத்தியட்சமாக வெளிப்படுத்தியிருக்கிறார். இது நிரந்தரமான வெளிப்பாடு அல்ல. இயேசு இந்த பூமியில் சுமார் 33 1/2 ஆண்டுகள் தம்முடைய சரீரத்தில் தம்மை வெளிப்படுத்தியிருக்கிறார். இப்படிப்பட்ட காலத்தில்தான் இயேசுகிறிஸ்து இப்போது, பெத்தானியா ஊரில், தம்முடைய சீஷரோடு இராவிருந்து பண்ணுகிறார். இயேசுகிறிஸ்துவின் பாதத்தைப் பரிமள தைலத்தினால் பூசுவதற்கு மரியாளுக்கு ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இந்த வாய்ப்பை அவள் பயன்படுத்திக்கொள்கிறாள். நாம் நற்காரியங்களைச் செய்யவேண்டுமென்று விரும்பும்போது அதை உடனடியாக, காலதாமதமில்லாமல் செய்யவேண்டும். காலதாமதம்பண்ணினால் ஒருவேளை அதைச் செய்வதற்கு வாய்ப்பு கிடைக்காமலேயே போய்விடலாம். காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ள கற்றுக் கொள்ளவேண்டும்.

### யூதரில் திரளான ஜனங்கள்
### யோவா 12 : 9-11

**யோவா 12:9. அப்பொழுது யூதரில் திரளான ஜனங்கள் அவர் அங்கேயிருக்கிறதை அறிந்து, இயேசுவினிமித்தமாகமாத்திரம் அல்ல, அவர் மரித்தோரிலிருந்தெழும்பின லாசருவைக் காணும்படியாகவும் வந்தார்கள்.**

**யோவா 12:10. லாசருவினிமித்தமாக யூதர்களில் அநேகர் போய், இயேசுவினிடத்தில் விசுவாசம் வைத்தபடியால்,**

**யோவா 12:11. பிரதான ஆசாரியர்கள் லாசருவையும் கொலைசெய்ய ஆலோசனைபண்ணினார்கள்.**

**இயேசுவையும் லாசருவையும் காணும்படி.**

**அப்பொழுது யூதரில் திரளான ஜனங்கள் அவர் அங்கேயிருக்கிறதை அறிந்து, இயேசுவினிமித்தமாகமாத்திரம் அல்ல, அவர் மரித்தோரிலிருந்தெழும்பின லாசருவைக் காணும்படியாகவும் வந்தார்கள் (யோவா 12:9) .**

## அதிகாரம் - 12

இயேசுகிறிஸ்து பெத்தானியாவில் இருக்கிறார் என்னும் செய்தியை அந்த ஊரிலுள்ள ஏராளமான யூதர்கள் அறிந்திருக்கிறார்கள். அவர்கள் இயேசுகிறிஸ்து இருக்கும் இடத்திற்கு வருகிறார்கள். அவர்களின் எண்ணிக்கை திரளாக இருக்கிறது. இந்த ஊரில் இயேசுகிறிஸ்து மரித்துப்போன லாசருவை உயிரோடு எழுப்பியிருக்கிறார். இதனால் அவருடைய பெயர் இங்கு பிரஸ்தாபமாயிற்று. இப்படிப்பட்ட பெரிய அற்புதங்களைச் செய்கிற இயேசுகிறிஸ்துவை தாங்களும் காணவேண்டுமென்று யூதரில் திரளான ஜனங்கள் ஆர்வத்தோடு அவரைக் காண்பதற்காக வருகிறார்கள். இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்பதற்காக மாத்திரமல்ல, அவரையும், அவர் செய்கிற அற்புதங்களையும் காணவேண்டும் என்னும் ஆர்வத்திலும், இயேசுகிறிஸ்து இருக்கும் இடத்தில் ஜனங்கள் திரளாய் கூடிவருகிறார்கள். இயேசுகிறிஸ்து எங்கேயிருக்கிறார் என்பதை ஜனங்கள் அறிந்துகொண்டால் அங்கு திரளாய் கூடிவருகிறார்கள். அவர்கள் இயேசுகிறிஸ்துவின் நிமித்தமாக மாத்திரமல்ல, அவர் மரித்தோரிலிருந்து எழும்பின லாசருவையும் காணும்படியாக வந்திருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவில் தாங்கள் வைத்திருக்கும் விசுவாசத்தை உறுதிபண்ணிக் கொள்வதற்காக இவர்கள் ஒருவேளை அங்கு வந்திருக்கலாம். வேறு சிலர் இயேசுவையும் லாசருவையும் காணவேண்டுமென்னும் ஆர்வத்தில் வந்திருக்கலாம். லாசரு மரித்துப்போனான். இயேசுகிறிஸ்து அவனை உயிரோடு எழுப்பினார். இப்போது அந்த லாசரு இயேசுவோடு சேர்ந்து இராப்போஜனம்பண்ணுகிறான். இதைத் தாங்களும் தங்கள் கண்களால் பார்த்து, அதை மற்றவர்களிடம் சொல்லிப் பெருமைப்படுவதற்காக யூதரில் அநேகர் இங்கு திரளாய் வந்திருக்கிறார்கள். லாசரு அவர்களுக்கு ஒரு காட்சிப்பொருளைப்போல இருக்கிறான்.

### லாசருவையும் கொலைசெய்ய

**லாசருவினிமித்தமாக யூதர்களில் அநேகர் போய், இயேசுவினிடத்தில் விசுவாசம் வைத்தபடியால், பிரதான ஆசாரியர்கள் லாசருவையும் கொலைசெய்ய ஆலோசனை பண்ணினார்கள் (யோவா 12: 10,11).**

இயேசுகிறிஸ்து லாசருவை உயிரோடு எழுப்பியிருப்பதினால், அந்த லாசருவின் நிமித்தமாக யூதர்களில் அநேகர் இயேசுவினிடத்தில் விசுவாசம் வைக்கிறார்கள். ஏராளமான ஜனங்கள் இயேசுவின்மீது விசுவாசம் வைத்து அவரைப் பின்பற்றிச் செல்வதை பிரதான ஆசாரியர்கள் கண்டு கோபமடைகிறார்கள். இதற்கு லாசருவும் ஒரு காரணம் என்பதை அறிந்து, அவனையும் கொலைசெய்ய பிரதான ஆசாரியர்கள் ஆலோசனைபண்ணுகிறார்கள்.

பிரதான ஆசாரியர்களுக்கு ஏற்கெனவே இயேசுகிறிஸ்துவின்மீது கோபம் இருக்கிறது. அவரைக் கொலை செய்ய ஆலோசனைபண்ணினார்கள். ஆனால் இதுவரையிலும் அவர்களால் இயேசுகிறிஸ்துவை ஒன்றும் செய்யமுடியவில்லை. ஜனங்களிடமிருந்து இயேசுகிறிஸ்துவைத் தனிமைப்படுத்துவதற்கு தங்களால் முடிந்த எல்லாக் காரியங்களையும் பிரதான ஆசாரியர்களும் பரிசேயர்களும் செய்து பார்த்தார்கள். ஆனால் ஒரு பிரயோஜனமும் உண்டாகவில்லை. யூதரில் திரளான ஜனங்கள் இயேசுகிறிஸ்துவிடத்தில் வந்து அவரிடத்தில் விசுவாசம் வைக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து செய்த அற்புதங்களையும் அதிசயங்களையும் கண்டு யூதர்களில் அநேகர் கூட்டம் கூட்டமாக இயேசுகிறிஸ்துவுக்குப் பின்னால் போகிறார்கள். இதனால் பிரதான ஆசாரியரிடத்தில் இருக்கிற கூட்டம் குறைந்துபோயிற்று. இயேசுகிறிஸ்துவிடத்தில் வந்த கூட்டம் அதிகமாயிற்று. இயேசுவினிடத்தில் வந்தவர்கள் அவரிடத்தில் விசுவாசமும் வைக்கிறார்கள். அவர்கள் இயேசுவை விசுவாசிப்பதற்கு லாசருவும் ஒரு காரணமாக இருக்கிறான். மரித்துப்போன அவன் மறுபடியும் உயிரோடு எழும்பியதினால் யூதர்களுக்கு இயேசுவின்மீது விசுவாசம் உண்டாயிற்று. மரித்துப்போன ஒருவனை இயேசுவால் மறுபடியும் உயிரோடு எழுப்ப முடியுமென்றால், அவரால் கூடாத காரியம் ஒன்றுமேயில்லை என்று இயேசுவைக் கிறிஸ்து என்று திரளான ஜனங்கள் விசுவாசிக்கிறார்கள்.

## அதிகாரம் - 12

பிரதான ஆசாரியர்களுக்கு இயேசுகிறிஸ்துவின்மீது கோபம் அதிகரிக்கிறது. ஆனால் அவர்களால் அவரை ஒன்றும் செய்யமுடியவில்லை. ஆகையினால் இப்போது அவர்கள் தங்கள் கோபத்தை லாசருவின்மீது காண்பிக்கிறார்கள். இயேசுவுக்குப் பின்னால் திரளான ஜனங்கள் போவதற்கு லாசருவும் ஒரு காரணம் என்று நினைத்து, லாசருவையும் கொலை செய்ய ஆலோசனைபண்ணுகிறார்கள். பிரதான ஆசாரியர்கள் துன்மார்க்கராக இருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய ஊழியக்காரர்கள்போல சிந்திக்கவில்லை. செயல்படவில்லை. இவர்கள் தேவனுக்கும் பயப்படவில்லை. மனுஷரையும் மதிக்கவில்லை.

இவர்கள் தேவனுக்குப் பயந்திருப்பார்களென்றால் இயேசுகிறிஸ்துவைக் கொலைசெய்வதற்கு வகைதேடமாட்டார்கள். இயேசுகிறிஸ்து தம்முடைய அற்புதத்தினால் மரித்துப்போன லாசருவை மறுபடியும் உயிரோடு எழுப்பியிருக்கிறார். பிரதான ஆசாரியர்கள் தேவனுக்குப் பயப்படுவார்களென்றால், மறுபடியும் உயிர்பெற்ற லாசருவை வஞ்சகமாகக் கொலைசெய்ய ஆலோசனை பண்ணமாட்டார்கள். பிரதான ஆசாரியருக்கு யூதர்களில் அநேகர்மீது கோபம் இருக்கலாம். ஆனால் இப்போது அவர்களுடைய எல்லாக் கோபமும் லாசருவின்மீதே திரும்பியிருக்கிறது. தேவன் தம்முடைய தெய்வீக அன்பை வெளிப்படுத்துவதற்கு லாசருவைத் தெரிந்தெடுத்திருக்கிறார். மரித்துப்போனவனை உயிரோடு எழுப்பியிருக்கிறார். லாசரு தேவனுடைய விசேஷித்த அன்பையும் கிருபையையும் பெற்றுக்கொண்டதினால், பிரதான ஆசாரியருக்கு லாசருவின்மீது கோபம் உண்டாயிற்று.

பிரதான ஆசாரியர் மெய்யாகவே தேவனுக்கு ஊழியம் செய்கிறவர்களாகயிருந்தால், தேவனுக்குப் பயப்படுகிறவர்களாகயிருந்தால், மறுபடியும் உயிர்பெற்ற லாசருவோடு இவர்கள் சிநேகிதர்களாக இருந்திருப்பார்கள். லாசருவைக் காரணமாக வைத்து அவர்கள் இயேசுவைப் பார்க்க வந்து, அவர்களும் இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைத்திருப்பார்கள். லாசருவின் குடும்பத்தாரோடு சிநேகமாக இருந்திருப்பார்கள். தாங்கள் செய்த தவறுகளையெல்லாம் இயேசுகிறிஸ்துவிடத்தில் அறிக்கை செய்து, தங்களை மன்னித்துவிடுமாறு மன்றாடி இருப்பார்கள். ஆனால் பிரதான ஆசாரியரிடத்திலோ இப்படிப்பட்ட சுபாவம் எதுவும் காணப்படவில்லை. இயேசுகிறிஸ்துவைத் துன்பப்படுத்தியதற்காக வருத்தப்படுவதற்குப் பதிலாக அவர்மீது இன்னும் அதிகமாகக் கோபப்படுகிறார்கள். இருக்கிறார்கள். தேவபயம் இல்லை. மனுஷ நேயமும் இல்லை.

பிரதான ஆசாரியர் மனுஷர்மீதும் அன்பாகயில்லை. லாசரு ஒரு தவறும் செய்யவில்லை. மரித்துப்போனது அவனுடைய தவறல்ல. வியாதி வந்தது மரித்துப்போய்விட்டான். தான் மறுபடியும் உயிர்பெற்றதற்கு லாசரு காரணமல்ல. இயேசுகிறிஸ்து தம்முடைய தெய்வீக வல்லமையினால் லாசருவை மறுபடியும் உயிரோடு எழுப்பியிருக்கிறார். இந்த விஷயத்தில் தேவனுடைய சித்தத்தின் பிரகாரம் லாசரு உயிரோடு எழும்பியிருக்கிறானேயல்லாமல், அவன் வேறு எந்தக் கிரியையும் தானாய்ச் செய்யவில்லை. பிரதான ஆசாரியருக்கு மனுஷர்மீது அன்பு இல்லாததினால், ஒரு தவறும் செய்யாத லாசருவின்மீது கோபமாக இருக்கிறார்கள். அவனைக் கொலைசெய்து விடவேண்டுமென்று ஆலோசனை பண்ணுகிறார்கள்.

### எருசலேமில் இயேசு
### யோவா 12 : 12-19

**யோவா 12:12. மறுநாளிலே இயேசு எருசலேமுக்கு வருகிறாரென்று பண்டிகைக்கு வந்த திரளான ஜனங்கள் கேள்விப்பட்டு,**

**யோவா 12:13. குருத்தோலைகளைப் பிடித்துக்கொண்டு, அவருக்கு எதிர்கொண்டுபோகும்படி புறப்பட்டு: ஓசன்னா, கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரவேலின் ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று ஆர்ப்பரித்தார்கள்.**

**யோவா 12:14. அல்லாமலும்: சீயோன் குமாரத்தியே, பயப்படாதே, உன் ராஜா கழுதைக் குட்டியின்மேல் ஏறிவருகிறார் என்று எழுதியிருக்கிறபிரகாரமாக,**

## அதிகாரம் - 12

**யோவா 12:15. இயேசு ஒரு கழுதைக்குட்டியைக் கண்டு அதின்மேல் ஏறிப்போனார்.**

**யோவா 12:16. இவைகளை அவருடைய சீஷர்கள் துவக்கத்திலே அறியவில்லை. இயேசு மகிமையடைந்த பின்பு, இப்படி அவரைக் குறித்து எழுதியிருக்கிறதையும், தாங்கள் இப்படி அவருக்கு செய்ததையும் நினைவு கூர்ந்தார்கள்.**

**யோவா 12:17. அன்றியும் அவருடனேகூட இருந்த ஜனங்கள் அவர் லாசருவைக் கல்லறையிலிருந்து வெளியே வரவழைத்து, அவனை உயிரோடே எழுப்பினாரென்று சாட்சி கொடுத்தார்கள்.**

**யோவா 12:18. அப்படிப்பட்ட அற்புதத்தை அவர் செய்தார் என்று ஜனங்கள் கேள்விப்பட்டதினால் அவர்கள் அவருக்கு எதிர்கொண்டு போனார்கள்.**

**யோவா 12:19. அப்பொழுது பரிசேயர் ஒருவரையொருவர் நோக்கி: நீங்கள் செய்கிறதெல்லாம் வீணென்று அறிகிறதில்லையா? இதோ, உலகமே அவனுக்குப் பின்சென்று போயிற்றே என்றார்கள்.**

**பண்டிகைக்கு வந்த திரளான ஜனங்கள்**

**மறுநாளிலே இயேசு எருசலேமுக்கு வருகிறாரென்று பண்டிகைக்கு வந்த திரளான ஜனங்கள் கேள்விப்பட்டு, (யோவா 12:12).**

இயேசுகிறிஸ்து எருசலேமுக்கு வருகிறார் என்னும் செய்தி பிரபலமாகிறது. எருசலேமில் பஸ்கா பண்டிகை வரப்போகிறது. அதற்காக திரளான ஜனங்கள் எருசலேமுக்கு வந்திருக்கிறார்கள். இவர்கள் எருசலேம் ஊரைச் சேர்ந்தவர்கள் அல்ல. சுற்றிலுமுள்ள ஊரிலிருந்து எருசலேமுக்கு வந்திருக்கிறார்கள். எருசலேமிலுள்ள ஜனங்களோ இயேசுகிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாமல் அவரைக் கொலைசெய்ய ஆலோசனை பண்ணுகிறார்கள். ஆனால் பஸ்கா பண்டிகைக்காக எருசலேமில் கூடிவந்திருக்கும் வெளியூர் ஜனங்களோ இயேசு கிறிஸ்துவின்மீது பிரியமாகயிருக்கிறார்கள். எருசலேமில்தான் தேவாலயம் இருக்கிறது. எருசலேம் ஊரார் தேவாலயத்திற்கு அருகிலேயே வாசம் பண்ணினாலும், தேவாலயத்தின் கர்த்தரை விட்டுத் தூரமாக விலகியேயிருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து செல்லும் இடங்களிலெல்லாம் நன்மை செய்கிறார். வியாதியஸ்தரைச் சொஸ்தமாக்குகிறார். தம்முடைய வார்த்தைகளை அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் உறுதிபண்ணுகிறார். இவற்றையெல்லாம் எருசலேமுக்கு வெளியிலே இருக்கிற ஜனங்கள் ஏற்கெனவே கேள்விப்பட்டிருக்கிறார்கள். இதுவரையிலும் அவரைப் பார்க்காதவர்கள், இப்போது எருசலேமுக்கு இயேசு வருகிறார் என்று கேள்விப்பட்டு, அவரைப் பார்ப்பதற்கும், அவரை வரவேற்பதற்கும் ஆவலாக கூடியிருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின்மீது தங்களுக்கு இருக்கும் மதிப்பையும் மரியாதையையும் வெளியூர் ஜனங்கள் எருசலேமிலுள்ள ஜனங்களுக்கு வெளியூர் ஜனங்கள் சாட்சியாக அறிவிக்க கூடியிருக்கிறார்கள். ஒருவேளை இயேசுகிறிஸ்து இவர்களுடைய ஊரில் அற்புதங்களைச் செய்திருக்கலாம். அவற்றையெல்லாம் இவர்கள் தங்கள் கண்களால் கண்டு இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைத்திருக்கலாம். இந்த ஜனங்கள்தான் இப்போது எருசலேமுக்கு வந்து இயேசுகிறிஸ்துவின் அற்புத வல்லமையைப்பற்றி எருசலேமிலுள்ள ஜனங்களுக்கு சாட்சியாக அறிவிக்கப் போகிறார்கள்.

இயேசுகிறிஸ்து எருசலேமுக்கு வருகிறார் என்று கேள்விப்பட்ட ஜனங்கள் ஒருவேளை பக்தியுள்ள யூதர்களாக இருக்கலாம். இவர்கள் பஸ்கா பண்டிகை வருவதற்கு முன்னே, தங்களைச் சுத்தகரித்துக் கொள்ளும்பொருட்டு, நாட்டிலிருந்து எருசலேமுக்கு வந்திருக்கிற யூதர்களாக இருக்கலாம். எருசலேமிலுள்ள யூதர்களைவிட நாட்டிலிருந்து வந்திருக்கும் யூதர்கள் தேவபக்தி மிகுந்தவர்களாக இருக்கிறார்கள். தாங்கள் அசுத்தமானவர்கள் என்றும், சுத்திகரிக்கப்பட வேண்டியவர்கள் என்றும் உணர்ந்து, தங்களைச் சுத்திகரித்துக் கொள்ளும்பொருட்டு பண்டிகைக்கு முன்பாகவே எருசலேமுக்கு வந்திருக்கிறார்கள். ஆனால் எருசலேமிலுள்ள யூதர்களோ அசுத்தமுள்ளவர்களாகவும், தீட்டுள்ளவர்களாகவும் இருந்தாலும், தாங்கள் சுத்திகரிக்கப்பட வேண்டியவர்கள் என்னும் உணர்வு அவர்களிடத்தில் இல்லை.

## அதிகாரம் - 12

தேவபக்தியுள்ளவர்கள்தான் தேவனை மகிமைப்படுத்த சமயம் பார்த்துக் கொண்டிருப்பார்கள். பக்தியில்லாதவர்கள் தேவனைப்பற்றிக் கவலைப்படமாட்டார்கள். இயேசு எருசலேமுக்கு வந்திருக்கிறாரென்று தேவபக்தியுள்ள ஜனங்கள் கேள்விப்பட்டு அவரை வரவேற்று மகிமைப்படுத்தக் கூடிவருகிறார்கள்.

இந்த ஜனங்கள் அதிகாரிகளோ, பிரபுக்களோ, சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்துக்களில் உள்ளவர்களோ அல்ல. இவர்கள் சாதாரண ஜனங்கள். இவர்கள்தான் தாங்கள் விசுவாசிக்கும் இயேசுகிறிஸ்துவை மகிமைப்படுத்த வந்திருக்கிறார்கள். ஐசுவரியவான்களும், பிரபுக்களும் இயேசுகிறிஸ்துவை மகிமைப்படுத்துவதைவிட, சாதாரண ஜனங்களே அவரை அதிகமாய் மகிமைப்படுத்துகிறார்கள். மனுஷன் முகத்தைப் பார்க்கிறான். செல்வந்தர்களையும் பிரபுக்களையும் அவர்களுடைய முகத்தைப்பார்த்து மகிமைப்படுத்துகிறான். ஆனால் கர்த்தரோ மனுஷருடைய இருதயத்தையே பார்க்கிறார். தம்மைப் பின்பற்றி வருகிறவர்கள் பிரபுக்களா, ஐசுவரியவான்களா, படித்துப் பட்டம் பெற்றவர்களா, பெரிய உத்தியோகத்திலிருக்கிறவர்களா என்று பார்க்காமல் அவர்களுடைய இருதயத்தையே பார்க்கிறார். இயேசுகிறிஸ்து மனுஷருடைய வெளிப்பிரகாரமான காரியங்களுக்கு மதிப்புக்கொடுக்காமல், அவர்களுடைய ஆத்துமாக்களுக்கே மதிப்புக்கொடுக்கிறார்.

இயேசுகிறிஸ்து எருசலேமுக்கு வந்திருக்கிறார் என்று பண்டிகைக்கு வந்த திரளான ஜனங்கள் கேள்விப்படுகிறார்கள். இதற்கு முன்பு இவர்கள் எருசலேமிலே இயேசுவைத் தேடிக்கொண்டிருந்தார்கள். "உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது. இயேசு பண்டிகைக்கு வரமாட்டாரோ" என்று தங்களுக்குள்ளே பேசிக்கொண்டவர்கள், இப்போது இயேசுகிறிஸ்து எருசலேமுக்கு வருகிறார் என்று கேள்விப்படுகிறார்கள். இதனால் இவர்கள் மிகுந்த சந்தோஷமடைந்து இயேசுகிறிஸ்துவை வரவேற்பதற்கு ஆயத்தமாகயிருக்கிறார்கள்.

**ஓசன்னா**

**குருத்தோலைகளைப் பிடித்துக் கொண்டு, அவருக்கு எதிர்கொண்டு போகும்படி புறப்பட்டு: ஓசன்னா, கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரவேலின் ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று ஆர்ப்பரித்தார்கள் (யோவா 12:13).**

இயேசுகிறிஸ்து எருசலேமுக்குள் பவனியாக வருகிறார். அப்போது எருசலேமிலே பண்டிகைக்கு வந்திருந்த திரளான ஜனங்கள் குருத்தோலைகளைப் பிடித்துக்கொண்டு அவருக்கு எதிர்கொண்டு போகும்படி புறப்பட்டுப்போகிறார்கள். அப்போது "ஓசன்னா, கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரவேலின் ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர்" என்று ஆர்ப்பரிக்கிறார்கள்.

யோவான் தன்னுடைய தரிசனத்திலே சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற தேவனை தரிசித்தான். இந்தத் தரிசனம் வெளிப்படுத்தின விசேஷத்தில் இவ்வாறு விவரிக்கப்பட்டிருக்கிறது. "இவைகளுக்கு ப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன். அவர்கள் மகா சத்தமிட்டு: இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக என்று ஆர்ப்பரித்தார்கள்" (வெளி 7:9,10).

பண்டிகைக்கு வந்த திரளான ஜனங்கள் எருசலேமிலே இயேசுகிறிஸ்துவுக்கு எதிர்கொண்டு போகும்படி புறப்பட்டு, கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரவேலின் ராஜா ஸ்தோத்திரிக்கப் பட்டவரென்று, ஆர்ப்பரிக்கும்போது, இந்தத் தரிசனம் சிங்காசனத்திற்கு முன்பாக ஆர்ப்பரிக்கிற ஜனங்களைப்போல இல்லாவிட்டாலும், ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாக நின்று ஸ்தோத்திரிக்கிற தரிசனம்போல இருக்கிறது.

## அதிகாரம் - 12

இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாக ஆர்ப்பரிக்கிற ஜனங்கள் தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்துக்கொண்டு நிற்கிறார்கள். குருத்தோலைகளைப் பிடிப்பது வெற்றிக்கு அடையாளம். யுத்தத்தில் வெற்றி பெற்று தன்னுடைய தேசத்திற்குச் திரும்பி வருகிற ராஜாவை, தேசத்து ஜனங்கள் தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்துக் கொண்டு, ஆரவாரத்தோடு வரவேற்பார்கள். இயேசுகிறிஸ்து தம்முடைய மரணத்தின் மூலமாக இந்த உலகத்தின் அந்தகார சக்திகளையும் வல்லமைகளையும் ஜெயித்திருக்கிறார். உலகத்தின் அந்தகார வல்லமை இன்னும் பூரணமாக இந்த உலகத்தைவிட்டு நீங்கிப்போய்விடவில்லை. ஆனாலும் இயேசுகிறிஸ்துவிடம் அவருடைய சிலுவையில் அந்தகார சக்திகளெல்லாம் தோற்றுப்போயிற்று.

இயேசுகிறிஸ்துவை வரவேற்கிற ஜனங்கள் "ஓசன்னா, கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரவேலின் ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர்" என்று ஆர்ப்பரிக்கிறார்கள். ஓசன்னா என்னும் வார்த்தைக்கு "எங்கள் தேவனுக்கு இரட்சிப்பு" அல்லது "இரட்சிப்பின் தேவன்" (வெளி 7:10) என்று பொருள். இந்த ஜனங்களெல்லோரும் இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாக ஆர்ப்பரித்துக்கொண்டு வருகிறார்கள்.

ஓசன்னா என்னும் வார்த்தையில் இரட்சிப்பு என்னும் பொருள் இடம்பெற்றிருக்கிறது. இவர்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை இஸ்ரவேலின் ராஜாவாக அங்கீகரிக்கிறார்கள். அவர் கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறார் என்றும் அங்கீகரித்து ஆர்ப்பரிக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவைத் தங்கள் ராஜாவாக ஏற்றுக்கொள்கிறார்கள். அவரை ராஜா என்று கூறும்போது அவருடைய மகிமையும் கனமும் அந்த வார்த்தையில் வெளிப்படுகிறது. நாம் இயேசுகிறிஸ்துவை நம்முடைய ராஜாவாக அங்கீகரித்து அவரைத் துதிக்கவேண்டும். ராஜாவின் ஆளுகைக்கும் அதிகாரத்திற்கும் நாம் கீழ்ப்படியவேண்டும். ராஜாவாகிய இயேசுகிறிஸ்து கர்த்தருடைய நாமத்தினாலே வந்திருக்கிறார். இஸ்ரவேல் ஜனங்களுக்கு மேசியாவாகிய ராஜா வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிறார். பல வருஷங்களாக யூதர்கள் மேசியாவின் வருகைக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். மேசியாவாக வரப்போகிறவர் இஸ்ரவேலின் ராஜாவாகயிருப்பார் என்று யூதர்கள் விசுவாசிக்கிறார்கள்.

தேவனுடைய ராஜ்யம் வாழ்க என்றும், இஸ்ரவேலின் ராஜா ஸ்தோத்திரிக்கப் பட்டவரென்றும் ஜனங்கள் ஆர்ப்பரிக்கிறார்கள். ஓசன்னா என்று கூறும்போது இயேசுவின் ராஜ்யம் வாழ்க என்னும் பொருளும் வெளிப்படுகிறது. ஜனங்கள் ஓசன்னா என்று ஆர்ப்பரிக்கும்போது, அந்த வார்த்தையின் மூலமாக அவர்கள் மூன்று காரியங்களுக்காக ஜெபிக்கிறார்கள். அவையாவன: 1. தேவனுடைய ராஜ்யம் அதன் வெளிச்சத்திலும், அதன் ஞானத்திலும், அதன் வல்லமையிலும், அதன் ஆற்றலிலும் வருவதாக. 2. தேவனுடைய ராஜ்யம் ஜெயம் பெறுவதாக. 3. தேவனுடைய ராஜ்யம் தொடர்ந்து நிலைத்திருப்பதாக. இம்மூன்று காரியங்களுக்காகவும் ஜனங்கள் ஓசன்னா என்று கூறி ஜெபிக்கிறார்கள்.

"ஓசன்னா" என்னும் வார்த்தையில் "ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர்" அல்லது "ராஜா நித்தியகாலமாக வாழ்க" என்னும் பொருளும் உள்ளது. இயேசுகிறிஸ்துவை வரவேற்கக் கூடியிருக்கிற ஜனங்கள், அவரை எருசலேமுக்குள் வரவேற்கிறார்கள். கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரவேலின் ராஜா எருசலேமுக்குள் வருவாராக என்று கூறி அவரை ஆர்ப்பரித்து வரவேற்கிறார்கள். இவர்களைப்போலவே நாமும், நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவை நம்முடைய இருதயத்திற்குள் ஆர்ப்பரித்து வரவேற்க வேண்டும். நம்முடைய இருதயத்திற்குள் வருகிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று நம்முடைய இருதயத்தில் விசுவாசத்தோடு, அவரை வரவேற்கவேண்டும்.

**கழுதைக்குட்டி**

**அல்லாமலும்: சீயோன் குமாரத்தியே, பயப்படாதே, உன் ராஜா கழுதைக் குட்டியின்மேல் ஏறிவருகிறார் என்று எழுதியிருக்கிறபிரகாரமாக, இயேசு ஒரு கழுதைக்குட்டியைக் கண்டு அதின்மேல் ஏறிப்போனார் (யோவா 12:14,15).**

இயேசுகிறிஸ்து இஸ்ரவேலுக்குள் வரும்போது, அவர் ஒரு கழுதைக்குட்டியைக்கண்டு அதின்மேல் ஏறிப்போகிறார். கழுதைக்குட்டி ஒரு சாதாரண மிருகம். அந்தக் குட்டியின்மீது அவர் மாத்திரமே ஏறிப்போகிறார். அவரைச் சுற்றிலுமிருக்கிற ஜனங்களெல்லோரும் "ஓசன்னா" என்று ஆர்ப்பரிக்கிறார்கள். சாதாரணமாக இயேசுகிறிஸ்து தம்முடைய கால்களால் நடந்துதான் ஒவ்வொரு ஊராகப் பிரயாணம் பண்ணுவார். கால்களால் நடப்பதைவிட கழுதைக்குட்டியின் மேல் ஏறிப்போவது அவருக்கு மேன்மையான பிரயாணமாக இருக்கிறது.

## அதிகாரம் - 12

இந்த உலகப்பிரகாரமாக பார்க்கும்போது கழுதைக்குட்டியின்மேல் ஏறிப்போவது மரியாதைக்குரிய பிரயாணமல்ல. மிகவும் சாதாரணமான பிரயாணம் வேறு வழி எதுவும் இல்லையென்றால்தான் கழுதைக்குட்டியின்மீது ஏறிப்போவார்கள். இயேசுகிறிஸ்து இஸ்ரவேலின் ராஜாவாக வருகிறார். உலகப்பிரகாரமாகப் பார்க்கும்போது கழுதைக்குட்டி ராஜாவின் வாகனம் அல்ல. தேவனுடைய ராஜ்யமும் இந்த உலகத்திற்குரியதோ அல்லது உலகப்பிரகாரமானதோ அல்ல. தேவனுடைய ராஜ்யம் ஆவிக்குரியது. ராஜாவாகிய இயேசுகிறிஸ்து எருசலேமுக்கு வரும்போது உலகப்பிரகாரமான ஆடம்பரத்தோடும், ஆரவாரத்தோடும் வரவில்லை. இயேசுகிறிஸ்து தாழ்மையுள்ளவராக எருசலேமுக்கு வருகிறார்.

இயேசுகிறிஸ்து எருசலேமுக்கு கழுதைக்குட்டியின்மேல் ஏறிவருவது வேதவாக்கியத்தில் ஏற்கெனவே எழுதப்பட்டிருக்கிறது. சீயோனின் ராஜா கழுதைக்குட்டியின்மேல் ஏறிவருகிறார் என்று தீர்க்கதரிசனமாக எழுதப்பட்டிருக்கிறது. கழுதைக்குட்டி மெதுவாகத்தான் நடக்கும். குதிரையைப்போல வேகமாக ஓடாது. வேகமாக ஓடாவிட்டாலும் நிச்சயமாகவும் நிதானமாகவும் நடக்கும். கர்த்தருடைய பிள்ளைகள் தங்கள் ராஜாவின் வருகைக்காக காத்துக்கொண்டிருக்கிறார்கள். தாங்கள் விரும்புகிற பிரகாரம் ராஜா வேகமாக வராவிட்டாலும், கழுதைக்குட்டியின்மேல் வருகிறவராகிய ராஜா நிச்சயமாகவும் மெதுவாகவும் வருவார். கட்டாயம் வருவார். கர்த்தருடைய பிள்ளைகள் இதை நினைத்து ஆறுதல் பெறவேண்டும். பரலோகத்தின் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற ராஜா, இப்போது இந்தப் பூமியில் தம்மையே தாழ்த்தி, கழுதைக்குட்டியின்மீது ஏறிவருகிறார்.

ராஜா வரப்போகிறார் ஆகையினால் சீயோன் குமாரத்தி பயப்படவேண்டியதில்லை. "சீயோன் குமாரத்தியே பயப்படாதே" என்று வேதவாக்கியத்தில் எழுதப்பட்டிருக்கிறது. சீயோன் ஆர்ப்பரிக்கவேண்டும். சந்தோஷப்பட்டுக் களிகூரவேண்டும். அதேசமயத்தில் சீயோன் குமாரத்திகள் பயப்படவும் கூடாது.

விசுவாசிகளிடத்தில் பயம் இருக்கக்கூடாது. அவிசுவாசிகளிடத்தில் பயம் இருக்கும். விசுவாசிகளாகிய நம்மிடத்தில் பயம் இருந்தால், அது நம்முடைய ஆவிக்குரிய சந்தோஷத்திற்கு சத்துருக்களாக இருக்கும். இந்தச் சத்துருக்களை விசுவாசிகள் ஜெயிக்கவேண்டும். பயத்தை ஜெயிக்கும்போது சந்தோஷம் வரும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் சந்தோஷம் இல்லையென்றால், நமக்குள் அவிசுவாசமும் பயமும் இருக்கிறது என்று பொருள். இவற்றை ஜெயித்தால்தான் நமக்கு சந்தோஷம் உண்டு. கர்த்தரிடத்தில் நாம் விசுவாசமாயிருந்து சந்தோஷப்பட்டு களிகூரவேண்டும். பயப்படக்கூடாது.

### சீஷர்கள் நினைவுகூர்ந்தார்கள்

**இவைகளை அவருடைய சீஷர்கள் துவக்கத்திலே அறியவில்லை. இயேசு மகிமையடைந்த பின்பு, இப்படி அவரைக் குறித்து எழுதியிருக்கிறதையும், தாங்கள் இப்படி அவருக்கு செய்ததையும் நினைவு கூர்ந்தார்கள் (யோவா 12:16).**

இயேசுகிறிஸ்து கழுதையின்மேல் ஏறி எருசலேமுக்குப்போவதை சீஷர்களும் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர் ஏன் கழுதைக்குட்டியின்மேல் ஏறிப்போகிறார் என்பதை அவர்கள் துவக்கத்தில் அறிந்துகொள்ளவில்லை. அவர் எருசலேமில் கழுதைக்குட்டியின்மேல் ஏறிப்போனதையும், வேதவாக்கியத்தில் அவரைக்குறித்து இப்படியே எழுதியிருக்கிறதையும் நினைவுகூருகிறார்கள். மேலும் தாங்களும் மற்றவர்களும் இயேசுகிறிஸ்துவுக்கு செய்ததையும் இயேசுகிறிஸ்து மகிமையடைந்த பின்பு, சீஷர்கள் நினைவுகூருகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் துவக்கத்தில் ஆவிக்குரிய ஞானத்தில் சிறந்து விளங்கவில்லை. பல சத்தியங்களை அவர்கள் துவக்கத்தில் அறியாதவர்களாகவே இருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து எருசலேமுக்கு கழுதைக்குட்டியின்மீது ஏறிப்போகும்போது, சீஷர்களுடைய கண்கள் இயேசுகிறிஸ்துவைச் சீயோனின் ராஜாவாகக் காணவில்லை. அவர் சீயோனின் ராஜாவாக அபிஷேகம்பண்ணப்படுவதையும் அவர்கள் அப்போது புரிந்துகொள்ளவில்லை.

## அதிகாரம் - 12

வேதவாக்கியம் தேவனுடைய சித்தத்தின் பிரகாரம் ஏற்றக்காலத்தில் ஒவ்வொன்றாக நிறைவேறிக் கொண்டிருக்கிறது. வேதவாக்கியம் நிறைவேறும்போது அதில் சம்பந்தப்பட்ட ஜனங்கள்கூட, அந்தச் சம்பவங்களை வேதவாக்கியத்தின் நிறைவேற்றம் என்று அப்போது புரிந்துகொள்வதில்லை. ஆரம்பத்தில் அவர்களுடைய ஞானத்தை மறைத்திருந்த மேகம், பின்பு அவர்களைவிட்டு நீங்கிய பிறகு, அவர்களுடைய ஆவிக்குரிய கண்கள் பிரகாசமுள்ளதாகத் திறக்கப்பட்ட பிறகு, சகலமும் அவர்களுக்குத் தெளிவாகவும் பிரத்தியட்சமாகவும் தெரிகிறது. இதுவரையிலும் நடைபெற்ற காரியங்களெல்லாம் வேதவாக்கியங்களில் எழுதப்பட்ட பிரகாரமாகவே நடைபெற்றிருப்பதை அவர்கள் புரிந்து கொள்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் துவக்கத்தில் விசுவாசத்தில் குறைவுள்ளவர்களாகவும் வேதஅறிவில் குறைவுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். ஆரம்பத்தில் அவர்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் பலவீனமானவர்களாகவும், ஆவிக்குரிய சத்தியங்களை அறியாதவர்களாகவும் இருந்தார்கள். அப்போஸ்தலர் பவுல்கூட ஆரம்பத்தில் இயேசுகிறிஸ்துவையும் அவருடைய சுவிசேஷத்தையும் சரியாக அறிந்துகொள்ளவில்லை. அவர் ஒரு குழந்தையைப்போல இருந்தார். தான் குழந்தையாக இருந்தபோது குழந்தையைப்போலப் பேசியதாக பவுல் எழுதுகிறார்.

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் துவக்கத்தில் சத்தியத்தை அறியாதவர்களாக இருந்தாலும், அதன்பின்பு அவர்களுடைய ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட்டு சத்தியத்தை அறிந்துகொள்கிறார்கள். இயேசுகிறிஸ்து மகிமையடைந்தபின்பு அவருடைய சீஷர்கள் வேதவாக்கியத்தில் அவரைக்குறித்து எழுதியிருக்கிறதை அறிந்துகொள்கிறார்கள். அதுவரையிலும் அவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைப்பற்றி சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. இயேசுகிறிஸ்து மகிமையடைந்த பின்பு பரிசுத்த ஆவியானவர் அவர்கள்மீது ஊற்றப்படுகிறார். அவர்களை அபிஷேகிக்கிறார். சீஷர்களைச் சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துகிறார். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்ட பின்புதான் அவர்களால் ஆவிக்குரிய சத்தியத்தை அறிந்துகொள்ள முடிகிறது.

இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காலத்தில் அவருக்கு ஏற்பட்ட சம்பவங்களையும், வேதவாக்கியத்தில் அவரைக்குறித்து முன்னறிவிக்கப்பட்டிருக்கும் தீர்க்க தரிசனங்களையும் சீஷர்கள் ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள். அப்போது இயேசுகிறிஸ்துவைக் குறித்து எழுதியிருக்கிற பிரகாரமே தாங்களும் மற்றவர்களும் இயேசுகிறிஸ்துவுக்குச் செய்ததை நினைவுகூருகிறார்கள். வேதத்தில் எழுதப்பட்டிருக்கும் சத்தியங்களை நாம் நினைவுகூர்ந்தால், நடைபெற்ற சம்பவங்களையும் நம்மால் நினைவுகூரமுடியும். அதே சமயத்தில் நடைபெற்ற சம்பவங்களை நாம் கவனித்துப் பார்த்தால் எழுதப்பட்டிருக்கிற சத்தியத்தைப் புரிந்துகொள்வதற்கு அது உதவியாயிருக்கும். வேதவாக்கியத்தையும் ஆராய்ந்து பார்க்கவேண்டும். நம்முடைய ஜீவியத்தையும் ஆராய்ந்து பார்க்கவேண்டும். நமக்குள்ளும் நம்மைச் சுற்றிலும் நடைபெறும் காரியங்களையும் ஆராய்ந்து பார்க்கவேண்டும். அப்போதுதான் எல்லாம் தேவனுடைய சித்தத்தின் பிரகாரமாகவே நடைபெறுகிறது என்பதையும், அவருடைய சித்தத்தை மீறி எந்தக் காரியமும் நடைபெறாது என்பதையும் நம்மால் புரிந்துகொள்ள முடியும்.

### லாசருவை எழுப்பினார்

**அன்றியும் அவருடனேகூட இருந்த ஜனங்கள் அவர் லாசருவைக் கல்லறையிலிருந்து வெளியே வரவழைத்து, அவனை உயிரோடே எழுப்பினாரென்று சாட்சி கொடுத்தார்கள். அப்படிப்பட்ட அற்புதத்தை அவர் செய்தார் என்று ஜனங்கள் கேள்விப்பட்டதினால் அவர்கள் அவருக்கு எதிர்கொண்டு போனார்கள். (யோவா 12:17,18).**

## அதிகாரம் - 12

இயேசுகிறிஸ்து பெத்தானியாவிலே மரித்துப்போன லாசருவை மறுபடியும் உயிரோடு எழுப்பினார். இயேசுகிறிஸ்து லாசருவை கல்லறையிலிருந்து வெளியே வரவழைத்து, அவரை உயிரோடே எழுப்பினாரென்று அங்கு கூடியிருக்கிற ஜனங்களெல்லோரும் சாட்சி கொடுக்கிறார்கள். இயேசுகிறிஸ்து செய்த அற்புதத்தின் நிமித்தமாக ஜனங்களுக்கு அவர்மீது மிகுந்த மதிப்பும் மரியாதையும் உண்டாயிற்று. தங்களுடைய அன்பையும் மரியாதையையும் இயேசுகிறிஸ்துவுக்கு காண்பிக்கும்விதமாக, ஜனங்கள் குருத்தோலைக்களைப் பிடித்துக்கொண்டு அவருக்கு எதிர்கொண்டுபோகும்படி புறப்பட்டு வருகிறார்கள்.

இயேசுகிறிஸ்து செய்த இந்த அற்புதமான சம்பவம் ஜனங்களுடைய இருதயத்தில் ஆழமாகப் பதிந்திருக்கிறது. இந்த அற்புதத்தைப் பற்றிய செய்தி பெத்தானியா ஊரிலிருந்து எருசலேம் நகரம் வரையிலும் பரவிற்று. எல்லோரும் இந்த நற்செய்தியைக் கேள்விப்படுகிறார்கள். இயேசுகிறிஸ்துவின் தெய்வீக ஊழியத்திற்கு இந்த அற்புதசம்பவம் ஒரு சாட்சியாக இருக்கிறது என்று ஒரு சிலர் நிதானித்து அறிந்து, இயேசுவைக் கிறிஸ்து என்றும், தேவனுடைய குமாரனென்றும் விசுவாசிக்கிறார்கள். லாசருவை இயேசுகிறிஸ்து உயிரோடு எழுப்பின சம்பவத்தைத் தங்கள் கண்களால் கண்டவர்களிடம், ஜனங்கள் அந்த சம்பவத்தைப்பற்றி விசாரித்து அறிந்து உறுதிபண்ணிக்கொள்கிறார்கள். இந்த அற்புதத்தைக் கண்ணால் கண்டவர்களும், "இயேசுகிறிஸ்து லாசருவை கல்லறையிலிருந்து வெளியே வரவழைத்து அவனை உயிரோடே எழுப்பினார்" என்று சாட்சி கொடுக்கிறார்கள்.

இவர்கள் மெய்யாகவே நடைபெற்ற சம்பவத்தை, சாட்சியாக அறிவிக்கிறார்கள். இதனால் ஜனங்களுக்கு மத்தியில் இந்த அற்புதத்தைக் குறித்து மாற்றுக் கருத்து உண்டாகாது. இயேசுகிறிஸ்து மெய்யாகவே அற்புதம் செய்தாரா, அல்லது செய்யவில்லையா என்னும் விவாதம் உண்டாகாது. சந்தேகத்திற்கு இடமில்லாமல் இயேசுகிறிஸ்து செய்த அற்புதம் ஜனங்களுடைய சாட்சியினால் உறுதி பண்ணப்படுகிறது. இயேசுகிறிஸ்து செய்த அற்புதங்கள் எல்லாமே நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அவர் செய்த அற்புதங்களெல்லாம் ஏதோ ஒரு மூலையில் நடைபெற்ற சம்பவமல்ல. எல்லோருக்கும் முன்பாகவே, ஜனங்கள் பிரத்தியட்சமாக பார்க்கும் விதத்தில், இயேசுகிறிஸ்து அற்புதம் செய்திருக்கிறார்.

இப்பேர்ப்பட்ட அற்புதத்தை இயேசுகிறிஸ்து செய்தார் என்று சாட்சிக்கொடுத்தவர்கள் மூலமாக கேள்விப்பட்ட ஜனங்கள், இயேசுகிறிஸ்துவுக்கு எதிர்கொண்டு போகிறார்கள். இப்படிப்பட்ட அற்புதத்தைச் செய்தவர் யாரோ, அவர் எப்படிப்பட்டவரோ என்னும் ஆர்வம் அவர்களுடைய உள்ளத்தில் உண்டாயிற்று. ஆர்வத்தின் மிகுதியினால் இயேசுகிறிஸ்துவைக் காண்பதற்காக அவர்கள் அவருக்கு எதிர்கொண்டு போகிறார்கள். இயேசுகிறிஸ்து செய்த அற்புதம் அநேகருடைய உள்ளத்தில் கிரியை நடப்பிக்கிறது. இயேசுகிறிஸ்து தேவனால் அனுப்பப்பட்டிருக்கிறவர் என்றும், அவர் தேவனுடைய குமாரனென்றும் தங்களுடைய இருதயத்தில் உணர்த்தப்படுகிறார்கள். தங்களுடைய மனச்சாட்சிக்குக் கீழ்ப்படிந்து தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவைக் கனப்படுத்துவதற்காக அவருக்கு எதிர்கொண்டு போகிறார்கள்.

### உலகமே அவனுக்கு பின்சென்று போயிற்று

**அப்பொழுது பரிசேயர் ஒருவரையொருவர் நோக்கி: நீங்கள் செய்கிறதெல்லாம் வீணென்று அறிகிறதில்லையா? இதோ, உலகமே அவனுக்குப் பின்சென்று போயிற்றே என்றார்கள் (யோவா 12:19).**

திரளான ஜனங்கள் இயேசுகிறிஸ்துவுக்கு எதிர்கொண்டுபோவதை பரிசேயரும் பார்க்கிறார்கள். ஓசன்னா என்றும், கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரவேலின் ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்றும் ஜனங்கள் ஆர்ப்பரிப்பதையும் பரிசேயர்கள் தங்கள் காதுகளினால் கேட்கிறார்கள். இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாக தங்களால் ஒன்றும் செய்யமுடியாதோ என்னும் கலக்கம் அவர்கள் உள்ளத்தில் உண்டாயிற்று. தாங்கள் இயேசுவுக்கு விரோதமாக செய்கிறதெல்லாம் வீணாயிற்று என்பதை உணர்ந்து, "நீங்கள் செய்கிறதெல்லாம் வீணென்று அறிகிறதில்லையா" என்று பரிசேயர் ஒருவரையொருவர் நோக்கி கேட்டுக்கொள்கிறார்கள்.

## அதிகாரம் - 12

இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாக எதிர்த்து நிற்கிறவர்களினால், அவரை ஒருபோதும் ஜெயிக்கமுடியாது. இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாக எத்தனைபேர் எழும்பி வந்தாலும், அந்த எதிர்ப்புக்களுக்கு மத்தியிலும், தேவன் தம்முடைய தெய்வீக சித்தத்தை நிறைவேற்றுவார். சத்துருக்களுடைய எதிர்ப்புக்களும், இயேசுவுக்கு விரோதமான துன்மார்க்க கிரியைகளும் அதமாகிப்போகும். பரிசேயர் இதை உணர்ந்து தாங்கள் செய்கிறதெல்லாம் வீணென்று ஒருவருக்கொருவர் அறிவித்துக் கொள்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவை எதிர்ப்பதினால் பரிசேயருக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகவில்லை. தங்களுடைய எதிர்ப்புக்கு ஆதாரமுமில்லை அஸ்திபாரமுமில்லை என்பதை பரிசேயர் உணர்ந்து கொள்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் மகிமை நல்ல அஸ்திபாரத்தின்மீது கட்டப்பட்டிருப்பதையும் அறிக்கை பண்ணுகிறார்கள். "இதோ உலகமே அவனுக்குப் பின்சென்றுபோயிற்றே" என்று பரிசேயர் ஒருவரையொருவர் பார்த்து, தங்கள் தோல்வியை ஒத்துக்கொண்டு, பரிதாபமாகப் பேசுகிறார்கள். பிரதான ஆசாரியனாகிய காய்பா தீர்க்கதரிசனம் உரைத்ததுபோல, இப்போது பரிசேயர்கள் "உலகமே இயேசுவுக்குப் பின்சென்று போயிற்று" என்று தீர்க்கதரிசனமாக முன்னறிவிக்கிறார்கள்.

பரிசேயர் இயேசுகிறிஸ்துவைப்பற்றி இவ்வாறு பேசும்போது அவர்களுடைய உள்ளத்தில் இரண்டுவிதமான எண்ணங்கள் தோன்றுகிறது. அவையாவன: 1. இயேசுகிறிஸ்துவை நம்மால் ஒன்றும் செய்யமுடியாது. 2. இயேசுகிறிஸ்துவின் பின்னால் அநேகர் போவதினால், நம்முடைய திட்டங்களையும் செயல்பாடுகளையும் அதிகரித்து, தீவிரப்படுத்தி, இயேசுவை சீக்கிரத்தில் கொலைசெய்துவிடவேண்டும்.

இயேசுகிறிஸ்துவை எதிர்கொள்ள திரளான ஜனங்கள் போவதைப்பார்த்து பரிசேயர்கள் திகைக்கிறார்கள். அவர்களுடைய இருதயத்தில் ஏமாற்றமும் சோர்வும் உண்டாயிற்று. இயேசுகிறிஸ்துவின் சத்துருக்களுக்கு தோல்வி உண்டாயிற்று. சமுதாயத்தில் பரிசேயர்கள் உயர்ந்த அந்தஸ்தில் இருக்கிறார்கள். ஜனங்களெல்லோரும் இவர்களை மதிக்கிறார்கள். இவர்கள் இயேசுவின்மீது பொறாமைப்பட வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் ஜனங்கள் இயேசுவைக் கனப்படுத்தினாலும், அவர்கள் நிச்சயமாகவே பரிசேயரையும் கனப்படுத்துவார்கள். ஆனாலும் இயேசுகிறிஸ்துவின் பின்னால் எல்லா ஜனங்களும் போவதைப் பரிசேயரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

ஓசன்னா என்றும், கர்த்தருடைய நாமத்தினால் வருகிற இஸ்ரவேலின் ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்றும் ஜனங்கள் இயேசுகிறிஸ்துவைப் பார்த்து ஆர்ப்பரிக்கும்போது, அந்த ஆர்ப்பரிப்பின் ஆரவாரத்தை பரிசேயர்களால் சகித்துக்கொள்ள முடியவில்லை. இஸ்ரவேலில் தங்களுக்கு மாத்திரமே மகிமை உண்டு என்று பரிசேயர் இதுவரையிலும் பெருமையோடு இருந்தார்கள். தங்களுக்குக் கிடைக்கும் மகிமைக்கும் பெருமைக்கும் யாரும் பங்காளிகளல்ல என்று ஆணவத்தோடு இருந்தார்கள். ஆனால் இப்போதோ ஜனங்கள் இயேசுவை மகிமைப்படுத்துகிறார்கள். ஜனங்களைக் கட்டுப்படுத்தவும் பரிசேயர்களால் ஒன்றும் செய்யமுடியவில்லை. இவர்களுடைய முயற்சிகளெல்லாமே தோல்வியாயிற்று. ஆகையினால் தாங்கள் இயேசுவுக்கு விரோதமாகச் செய்கிறது வீணான வேலை என்பதை தோல்வியோடு அங்கீகரிக்கிறார்கள்.

பரிசேயரின் உள்ளத்தில் தோல்வியும், வருத்தமும், ஏமாற்றமும் இருந்தாலும், அவர்களுக்கு இயேசுகிறிஸ்துவின்மீது இன்னும் கோபம் குறையவில்லை. இயேசுகிறிஸ்துவைத் தங்களுடைய சத்துருவாகவே இன்னும் நினைத்து, அவரை எப்படியாவது கொலைசெய்ய வேண்டுமென்று ஆலோசனை செய்கிறார்கள். இதுவரையிலும் தாங்கள் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்ததினால், இன்னும் புதிய முயற்சிகளை மேற்கொண்டு, தீவிரமாக செயல்பட்டு, இயேசுவை எப்படியாவது கொலைசெய்து விடவேண்டுமென்று தங்கள் வைராக்கியத்தை உறுதிபண்ணுகிறார்கள்.

## அதிகாரம் - 12

இயேசுகிறிஸ்துவின் சத்துருக்கள் ஒருமுறை தோல்வியடைந்தால், அவர்கள் யுத்தத்தைவிட்டு ஓடிப்போய்விடமாட்டார்கள். மறுபடியும் யுத்தம்பண்ண வருவார்கள். இவர்கள் சாத்தானின் பிள்ளைகள். சாத்தானைபோலவே திரும்பத் திரும்ப வந்து இயேசுகிறிஸ்துவுக்கும், அவருடைய பிள்ளைகளுக்கும் எதிர்த்து நிற்பார்கள். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் சோதனைகளைக்கண்டு சோர்ந்து போய்விடக்கூடாது. இயேசுகிறிஸ்து நம்மைத் தம்முடைய நீதியின் பாதையில் வழிநடத்துகிறார். சத்தியம் ஜெயிக்கும். இயேசுகிறிஸ்துவின் சத்துருக்கள் தாங்கள் அனுபவிக்கும் ஒவ்வொரு தோல்வியையும் பார்த்து மனம்சோர்ந்துபோவார்கள். ஆவிக்குரிய யுத்தத்தின் முடிவில் இயேசுகிறிஸ்துவுக்கும் அவரைப் பின்பற்றுகிற அவருடைய பிள்ளைகளுக்கும் வெற்றி நிச்சயம் கிடைக்கும்.

### ஜீவனை சிநேகிப்பதும், வெறுப்பதும் யோவா 12 : 20-26

**யோவா 12:20. பண்டிகையில் ஆராதனை செய்யவந்தவர்களில் சில கிரேக்கர் இருந்தார்கள்.**

**யோவா 12:21. அவர்கள் கலிலேயாநாட்டுப் பெத்சாயிதா ஊரானாகிய பிலிப்புவினிடத்தில் வந்து: ஐயா, இயேசுவைக் காண விரும்புகிறோம் என்று அவனைக் கேட்டுக்கொண்டார்கள்.**

**யோவா 12:22. பிலிப்பு வந்து, அதை அந்திரேயாவுக்கு அறிவித்தான்; பின்பு அந்திரேயாவும் பிலிப்புவும் அதை இயேசுவுக்கு அறிவித்தார்கள்.**

**யோவா 12:23. அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: மனுஷகுமாரன் மகிமைப்படும்படியான வேளை வந்தது.**

**யோவா 12:24. மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக்கொடுக்கும்.**

**யோவா 12:25. தன் ஜீவனைச் சிநேகிக்கிறவன் அதை இழந்துபோவான்; இந்த உலகத்தில் தன் ஜீவனை வெறுக்கிறவனோ அதை நித்திய ஜீவகாலமாய்க் காத்துக்கொள்ளுவான்.**

**யோவா 12:26. ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்.**

**கிரேக்கர்**

**பண்டிகையில் ஆராதனை செய்யவந்தவர்களில் சில கிரேக்கர் இருந்தார்கள் (யோவா 12:20).**

பஸ்கா பண்டிகையை ஆசரிப்பதற்காக ஏராளமான ஜனங்கள் எருசலேமுக்கு வந்திருக்கிறார்கள். பண்டிகையில் ஆராதனை செய்ய வந்தவர்களில் சில கிரேக்கரும் இருக்கிறார்கள். அவர்கள் இயேசுகிறிஸ்துவைக் காண விரும்புகிறார்கள். இவர்கள் ஒருவேளை சிதறிப்போன யூதர்களாக இருக்கலாம். இஸ்ரவேலின் வரலாற்றில் ஏராளமான யூதர்கள் புறஜாதி தேசங்களுக்குச் சிதறிப்போயிருக்கிறார்கள். ஏராளமான புறஜாதி தேசங்கள் கிரேக்கப்பேரரசின் ஆளுகைக்குட் பட்டிருக்கிறது. ஆகையினால் சிதறிப்போன யூதர்களை எருசலேமிலுள்ள யூதர்கள் கிரேக்கர்கள் என்று அழைப்பது வழக்கம்.

இந்தக் கிரேக்கர்கள் ஒருவேளை புறஜாதியாராகவும் இருக்கலாம் என்றும் வேதபண்டிதர்களில் சிலர் கருத்து சொல்லுகிறார்கள். இவர்கள் தேவனுக்குப் பயந்து பக்தியோடு ஜீவிக்கிறவர்கள். கொர்நேலியுவைப் போன்றோர் இப்படிப்பட்ட பிரிவைச் சேர்ந்தவர்கள். இவர்களெல்லாம் இஸ்ரவேலின் காணியாட்சிக்கு புறம்பானவர்களாக இருந்தாலும், இஸ்ரவேலின் தேவனை மெய்யாகவே ஆராதனை செய்கிறார்கள்.

## அதிகாரம் - 12

இவர்கள் கிரேக்கராக இருக்கிறபடியினால், இவர்கள் விருத்தசேதனம் பண்ணாதவர்களாக இருப்பார்களென்றால் பஸ்காவில் புசிப்பதற்கு இவர்களுக்கு அனுமதி கொடுக்கப்படமாட்டாது. ஆனாலும் இவர்கள் பண்டிகையில் ஆராதனை செய்ய வரலாம். இவர்களைப்போலவே நாமும் ஒரு காலத்தில் இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பானவர்களாக இருந்தோம். தேவாலயத்தின் உட்பிரகாரத்திற்குள் பிரவேசிக்கக்கூடாதவாறு, வாசல்கள் நமக்கு அடைக்கப்பட்டிருந்தது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரட்சிக்கும் கிருபையினால், தேவன் நம்மைத் தம்முடைய பிள்ளைகளாக அங்கீகரித்திருக்கிறார். ஒரு காலத்தில் இஸ்ரவேலின் காணியாட்சிக்கு புறம்பானவர்களாக இருந்த நாம், இப்போது அவருடைய காணியாட்சிக்குள் கூட்டிச் சேர்க்கப்பட்டிருக்கிறோம்.

### இயேசுவைக் காண விரும்புகிறோம்

**அவர்கள் கலிலேயாநாட்டுப் பெத்சாயிதா ஊரானாகிய பிலிப்புவினிடத்தில் வந்து: ஐயா, இயேசுவைக் காண விரும்புகிறோம் என்று அவனைக் கேட்டுக்கொண்டார்கள் (யோவா 12:21).**

பண்டிகையில் ஆராதனை செய்ய வந்திருக்கிற கிரேக்கர்கள் இயேசுகிறிஸ்துவை மகிமைப்படுத்த விரும்புகிறார்கள். அவரோடு பேசிப்பழகி நெருங்கிய ஐக்கியத்தோடு இருக்க விரும்புகிறார்கள். அதற்காக அவர்கள் இயேசுவைக்காண விரும்புகிறார்கள். இயேசுவைப் பார்க்க வருகிறவர்கள் முறைப்படி வரவேண்டும். இவர்களுக்கு இயேசுவைக் காண வேண்டுமென்று ஆசையிருக்கிறது. தங்களுடைய உள்ளத்தில் ஆசையை வைத்துக்கொண்டு, அவரைப் பார்ப்பதற்கு எந்த முயற்சியும் பண்ணாமல் இவர்கள் சும்மாயிருந்துவிடவில்லை. இயேசுவைப் பார்க்க தங்களால் என்ன செய்யமுடியுமோ அதை விடாமுயற்சியோடு செய்கிறார்கள்.

பண்டிகையில் ஆராதனைசெய்ய வந்திருக்கிற கிரேக்கர்கள், இயேசுகிறிஸ்துவைக் காண வேண்டும் என்னும் தங்கள் விருப்பத்தை, அவருடைய சீஷர்களில் ஒருவனாகிய பிலிப்புவினிடத்தில் கூறுகிறார்கள். இந்தக் கிரேக்கர்களுக்குப் பிலிப்புவை ஏற்கெனவே தெரியும். பிலிப்புவோடு இவர்களுக்கு பழக்கம் இருக்கிறது. இயேசுகிறிஸ்துவைத் தெரிந்திருக்கிறவர்கள் நமக்கும் அறிமுகமானவர்களாக இருந்தால் அது நமக்கு ஆசீர்வாதமாக இருக்கும். பிலிப்பு இயேசுகிறிஸ்துவோடு நெருங்கிய ஐக்கியத்திலிருக்கிறான். அவரை உண்மையாகப் பின்பற்றிச் செல்கிறான். பிலிப்புவின் நல்ல சுபாவத்தைக் கிரேக்கர்கள் பார்த்து, அவன் மூலமாக இயேசுவைக் காணலாம் என்று தீர்மானிக்கிறார்கள்.

இக்காலத்தில்கூட பரலோகத்திலிருக்கிற இயேசுகிறிஸ்துவைக் காணவேண்டுமென்று விரும்புகிறவர்கள், அவரைப்பற்றி அவருடைய ஊழியக்காரர்களிடத்தில் விசாரிக்கவேண்டும். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் ஜனங்களை அவரிடத்தில் வழிநடத்துவதற்காக இந்த பூமியில் பிரதிஷ்டை பண்ணப்பட்டு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவைத் தேடிவரும் ஆத்துமாக்களை அவரிடத்தில் வழிநடத்துவதுதான் ஊழியக்காரர்களின் பிரதான ஊழியம்.

இயேசுகிறிஸ்துவைப் பற்றி அறிந்துகொள்ள, பிலிப்பு கிரேக்கர்களை அவரிடத்தில் அழைத்து வருகிறான். இந்த ஊழியம் அப்போஸ்தல ஊழியத்திற்கு முன்உதாரணமாக இருக்கிறது. அப்போஸ்தலர்கள் புறஜாதியாரிடத்தில் சென்று இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிக்கவேண்டும். இங்கு பிலிப்புவின் மூலமாக புறஜாதியாருக்கு கிறிஸ்துவின் ஊழியம் நடைபெறுகிறது. அப்போஸ்தலர்கள் புறஜாதியாரைக் கிறிஸ்துவினிடத்தில் மனந்திரும்பச்செய்வதற்கு ஊழியம் செய்யவேண்டும்.

பண்டிகையில் ஆராதனை செய்ய வந்த கிரேக்கர்கள் பிலிப்புவிடத்தில் வந்து "ஐயா, இயேசுவைக்காண விரும்புகிறோம்" என்று கேட்டுக்கொள்கிறார்கள். இவர்களுடைய விண்ணப்பத்தில் ஒரு சில வார்த்தைகள் மாத்திரமே இருக்கிறது. மிகவும் பணிவோடும் மரியாதையோடும் பிலிப்புவிடத்தில் பேசுகிறார்கள். பிலிப்புவை "ஐயா" என்று அழைக்கிறார்கள். இது மரியாதையாக அழைக்கும் வார்த்தை. இந்த மதிப்புக்கும் மரியாதைக்கும் பிலிப்பு பாத்திரவானல்ல. அவன் இயேசுகிறிஸ்துவோடு கூடயிருப்பதினால் அவனுக்கும் மரியாதை கிடைக்கிறது.

## அதிகாரம் - 12

கிரேக்கர்கள் தங்கள் நோக்கத்தில் சுறுசுறுப்பாக செயல்படுகிறார்கள். இயேசுவைக் காணவிரும்புகிறோம் என்று சொல்லுகிறார்கள். இயேசுவின் முகத்தைப் பார்ப்பதற்காக மாத்திரம் அவர்கள் வரவில்லை. இயேசுகிறிஸ்துவின் முகம் ஒரு காணட்சிப்பொருளல்ல. இயேசுகிறிஸ்துவைப் பற்றி யார் மூலமாகவோ இவர்கள் கேள்விப்பட்டிருக்கிறார்கள். தங்களுடைய வீடுகளில் வந்து அவர்கள் இயேசுகிறிஸ்து செய்த அற்புதத்தைச் சாட்சியாக சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட இயேசுகிறிஸ்துவைத் தாங்களும் பார்த்து, அவரோடு பேசவேண்டுமென்று விரும்புகிறார்கள். தாங்கள் பேசினால் மாத்திரம் போதாது என்றும், இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தையும் கேட்கவேண்டுமென்றும் கிரேக்கர்கள் விரும்புகிறார்கள். இவர்கள் பண்டிகையில் ஆராதனை செய்ய வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு இயேசுகிறிஸ்துவைக் காணும் சிலாக்கியம் கிடைத்திருக்கிறது.

விசுவாசிகளாகிய நாமும் பரிசுத்த ஆராதனைகளில் பங்குபெற்று கர்த்தரை ஆராதனை செய்யவேண்டும். கிரேக்கர்கள் இயேசுவைக் காணவேண்டுமென்று விரும்பியதுபோல, ஆராதனை வேளையில் நாமும் இயேசுவைக்காணவேண்டுமென்று விரும்பவேண்டும். இயேசுகிறிஸ்து வரும்போது நாம் அவரைக் காணவில்லையென்றால், நம்முடைய நிலமை பரிதாபமாகயிருக்கும்.

**பிலிப்பு அந்திரேயாவுக்கு அறிவித்தான்**

**பிலிப்பு வந்து, அதை அந்திரேயாவுக்கு அறிவித்தான்; பின்பு அந்திரேயாவும் பிலிப்புவும் அதை இயேசுவுக்கு அறிவித்தார்கள் (யோவா 12:22).**

கிரேக்கர்கள் பிலிப்புவிடம் "இயேசுவைக் காணவிரும்புகிறோம்" என்று கேட்டுக்கொள்கிறார்கள். அவர்களுடைய வேண்டுகோளைப் பிலிப்பு இயேசுகிறிஸ்துவின் மற்றொரு சீஷனாகிய அந்திரேயாவிடம் அறிவிக்கிறான். அந்திரேயாவும் கிரேக்கருடைய விண்ணப்பத்தை ஏற்று, இருவருமாகச் சேர்ந்து, கிரேக்கருடைய வேண்டுகோளை இயேசுகிறிஸ்துவுக்கு அறிவிக்கிறார்கள். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் எப்படி ஊழியம் செய்யவேண்டும் என்பதற்கு இந்தச் சம்பவம் ஒரு எடுத்துக்காட்டாக எழுதப்பட்டிருக்கிறது. ஆத்துமாக்களை இயேசுகிறிஸ்துவிடம் வழிநடத்தும்போது, ஊழியக்காரர்கள் ஒருவருக்கொருவர் ஒற்றுமையாக இணைந்து, ஆத்துமாக்களுக்கு உதவிசெய்யவேண்டும். இயேசுகிறிஸ்து ஜனங்களுக்கு உபதேசம் பண்ணிக் கொண்டிருக்கிறபோது, அந்திரேயாவும் பிலிப்புவும், கிரேக்கர்கள் அவரைக்காண விரும்புகிறார்கள் என்னும் செய்தியை அறிவிக்கிறார்கள் (யோவா 12:29). இயேசுகிறிஸ்து உபதேசம் பண்ணிக்கொண்டிருக்கிற இடத்தில் ஏராளமான ஜனங்கள் அவருடைய உபதேசத்தை நின்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

**மனுஷகுமாரன் மகிமைப்படும்படியான வேளை**

**அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: மனுஷகுமாரன் மகிமைப்படும்படியான வேளை வந்தது (யோவா 12:23).**

இயேசுகிறிஸ்து மகிமையுள்ளவர். ஏராளமான ஜனங்கள் கிறிஸ்துவைப் பின்பற்றுவதினால் அவருக்கு மகிமை உண்டாகிறது (யோவா 12:23,24). அந்த மகிமையை இயேசுகிறிஸ்து அங்கீகரித்துக் கொள்கிறார். இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களுக்கும் இயேசு கிறிஸ்துவினால் மகிமை உண்டாகும் (யோவா 12:25,26).

ஆத்துமாக்கள் அறுவடைக்கு ஆயத்தமாகயிருப்பதை இயேசுகிறிஸ்து முன்னறிந்திருக்கிறார். புறஜாதி ஜனங்கள் இயேசுகிறிஸ்துவைத் தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்படுகிறார்கள். இவர்கள் அறுவடையின் முதற்கனிகளாக இருக்கிறார்கள். கிரேக்கர்கள் தம்மைக் காணவேண்டுமென்று விரும்பி தம்மிடத்தில் வந்திருக்கிறதைப் பார்க்கிற இயேசுகிறஸ்து "மனுஷகுமாரன் மகிமைப்படும் வேளை வந்தது" என்று கூறுகிறார்.

## அதிகாரம் - 12

இயேசுகிறிஸ்துவின் முடிவு தேவனுடைய சித்தத்தின் பிரகாரமாகவும் திட்டத்தின் பிரகாரமாகவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. மீட்பராகிய இயேசுகிறிஸ்து மகிமைப்படவேண்டும் என்பதே தேவனுடைய திட்டம். இயேசுகிறிஸ்து யூதர்களுக்கு மாத்திரம் இரட்சகர் என்று இந்த உலகத்திற்கு வராமல், அவர் உலக இரட்சகராக வந்திருக்கிறார். யூதருக்கும் புறஜாதியாருக்கும் இயேசுகிறிஸ்து இரட்சகராக இருக்கிறார். இப்போது கிரேக்கர்கள் இயேசுகிறிஸ்துவைத் தேடிக்கொண்டு வருகிறார்கள். இந்தவேளை இயேசுகிறிஸ்துவுக்கு முக்கியமானதாகத் தெரிகிறது. கிரேக்கர்கள் தம்மைப் பார்க்க வந்திருக்கும் வேளையை, தாம் மகிமைப்படும்படியான வேளை என்று இயேசுகிறிஸ்து அறிவிக்கிறார்.

புறஜாதியார் தம்மிடத்தில் வருவது இயேசுகிறிஸ்துவுக்கு ஆச்சரியமான காரியமல்ல. ஆனால் இயேசுகிறிஸ்துவோடு கூடயிருக்கிற சிநேகிதர்களுக்கும், அவரை விரோதிக்கிற சத்துருக்களுக்கும், புறஜாதியார் அவரிடத்தில் வருவது ஆச்சரியமாயிருக்கிறது. புறஜாதியாரின் அழைப்பும், அவர்களுடைய இரட்சிப்பும் மனுஷகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் மகிமையில் முக்கியம் இடம்பெற்றிருக்கிறது. யூதர்கள் மாத்திரம் என்று இல்லாமல், புறஜாதியாரும் இரட்சிக்கப்படும்போது, இரட்சிக்கப்பட்டவரின் எண்ணிக்கை திரளாக இருக்கும். அவர்கள் எல்லோருமே மீட்பரை மகிமைப்படுத்துவார்கள். ஏராளமானோர் இயேசுவை மகிமைப்படுத்தும் போது அந்த மகிமை பெரிதாயிருக்கும். இயேசுகிறிஸ்து அப்படிப்பட்ட வேளையை அறிந்தவராக, மனுஷகுமாரன் மகிமைப்படும்படியான வேளை வந்தது என்று அறிவிக்கிறார். தேவனுடைய திட்டத்தில், இயேசுகிறிஸ்து மகிமைப்படுவதற்கு ஒருவேளை நியமிக்கப்பட்டிருக்கிறது. நியமிக்கப்பட்டிருக்கும் அந்தவேளை இப்போது வந்திருப்பதாக இயேசுகிறிஸ்து வெளிப்படுத்துகிறார்.

### கோதுமை மணி

**மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக்கொடுக்கும் (யோவா 12:24).**

மனுஷகுமாரன் மகிமைப்பட வேண்டுமென்றால், அவர் மரிக்கவும் வேண்டுமென்று இயேசுகிறிஸ்து தம்முடைய சிலுவை மரணத்தைப்பற்றி இங்கு வெளிப்படுத்திக் கூறுகிறார். "மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று கூறி தம்முடைய வார்த்தையின் நிச்சயத்தை தெளிவுபடுத்துகிறார். "கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும்". சாகாத கோதுமை மணியினால் ஒரு பிரயோஜனமும் இருக்காது. அது ஒரு பலனும் கொடுக்காது. ஆனால் "கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து செத்ததேயாகில் மிகுந்த பலனைக்கொடுக்கும்" என்றும் கூறி, இயேசுகிறிஸ்து தம்முடைய மரணத்தையும், அதன் மூலமாக தாம் மகிமைப்படப்போவதையும் வெளிப்படுத்திக் கூறுகிறார்.

இயேசுகிறிஸ்து சிலுவையில் மரிக்கவேண்டுமென்பது ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. சிலுவை மரணம் தாழ்மையான மரணமாகும். தாழ்மையின் மூலமாகவே இயேசுகிறிஸ்து மகிமையடைகிறார். சபைக்கு இயேசுகிறிஸ்துவே தலையாகவும் அஸ்திபாரமாகவும் இருக்கிறார். இயேசுகிறிஸ்து பரலோகத்திலிருந்து இந்த பூமிக்கு வரவில்லையென்றால், இந்த பூமியில் வந்து அவர் பாடுகளை அனுபவித்து சிலுவையில் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுக்கவில்லையென்றால், இயேசு கிறிஸ்துவினால் தம்முடைய சபைக்கு தலையாகவும் வேராகவும் இருக்கமுடியாது. தம்முடைய சிலுவை மரணத்தின் மூலமாகவே இயேசுகிறிஸ்து நம்முடைய இரட்சிப்பை வாய்க்கப்பண்ணியிருக்கிறார். தம்முடைய ஆத்துமாவை அவர் மரணத்திற்கு ஊற்றியிருப்பதினால்தான் மனுக்குலத்திற்கு இரட்சிப்பு உண்டாயிற்று.

## அதிகாரம் - 12

இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் அனுபவித்த பாடுகளை விவரிக்கும்போது, அவர் நிலத்தில் விழுந்து செத்துப்போன கோதுமை மணியைப்போல இருக்கிறார் என்று கூறலாம். அவர் மகிமையடையும்போது நிலத்தில் விழுகிறார். நிலத்தில் விழுவது மாத்திரமல்ல, அவர் தம்முடைய ஜீவனையே ஒப்புக்கொடுத்து செத்துப்போகிறார். கல்லறையில் இயேசுகிறிஸ்துவின் சரீரம் அடக்கம்பண்ணப்பட்டபோது, நிலத்தில் விதைக்கப்பட்டுள்ள கோதுமை மணியைப்போல இருந்தார். நிலத்தில் விழும் கோதுமை மணியானது துளிர்விட்டு முளைத்து எழும்புவதுபோல, இயேசுகிறிஸ்துவும் கல்லறையிலிருந்து மறுபடியும் உயிரோடு எழும்பியிருக்கிறார். நிலத்தில் ஒரு கோதுமை மணியை விதைத்தால், அது முளைத்து பயிராகி கனிகொடுக்கும்போது, அந்தக் கோதுமைச்செடியில் ஏராளமான கோதுமை மணிகள் இருக்கும். நிலத்தில் விழுந்து செத்துப்போன கோதுமை மணியானது முளைத்துப் பலுகிப்பெருகும்.

இந்தக் கோதுமை மணியைப்போலவே, கிறிஸ்துவிற்குள் மரிக்கிற விசுவாசிகளாகிய நம்முடைய ஊழியத்தின் மூலமாக, ஏராளமான விசுவாசிகள் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்வார்கள். ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படுவதற்கு இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணமே மூலகாரணமாயிற்று. இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுகிற விசுவாசிகளாகிய நாம், நிலத்தில் விழுந்து செத்துப்போய் முளைக்கும் கோதுமை மணியைப்போல பலன் தரவேண்டும்.

**தன் ஜீவனை சிநேகிக்கிறவன்**

**தன் ஜீவனைச் சிநேகிக்கிறவன் அதை இழந்துபோவான்; இந்த உலகத்தில் தன் ஜீவனை வெறுக்கிறவனோ அதை நித்திய ஜீவகாலமாய்க் காத்துக்கொள்ளுவான் (யோவா 12:25).**

நாம் இந்த உலகத்திற்கு ஒத்தவேஷம் தரிக்கக்கூடாது. தன்னுடைய ஜீவனை சிநேகிக்கிறவன் அதை இழந்துபோவான் என்றும், இந்த உலகத்தில் தன் ஜீவனை வெறுக்கிறவன் அதை நித்திய ஜீவகாலமாய் காத்துக்கொள்வான் என்றும் இயேசுகிறிஸ்து கூறுகிறார். இந்த உலகத்தின்மீது பற்றுவைக்காமல், மறுஉலகமான பரலோகத்தின்மீதே நாம் வாஞ்சையாயிருக்கவேண்டும் என்பது இயேசுகிறிஸ்துவின் அடிப்படை உபதேசம்.

இந்த உலகத்தில் ஜீவிக்கிற ஜனங்களில் ஏராளமானோர் தங்களுடைய உலகப்பிரகாரமான ஜீவனை நேசிக்கிறார்கள். இதன் விளைவாகத் தங்கள் ஜீவனையே இழந்துபோகிறார்கள். தங்களுடைய உலகப்பிரகாரமான ஜீவனை அதிகமாக நேசிப்பதினால், தங்களுக்கு வாக்குப்பண்ணப்பட்டிருக்கும் நித்திய ஜீவனை இவர்கள் இழந்துபோகிறார்கள். மாம்சப்பிரகாரமான ஜீவனை அதிகமாக நேசிக்கிறவர்களுக்கு, அவர்களுடைய ஆயுசுகாலம் குறைந்துபோகிறது. தாங்கள் எந்த ஜீவனை அதிகமாக நேசிக்கிறார்களோ, அந்த ஜீவன் அவர்களைவிட்டு விரைவாக நீங்கிப்போகிறது. ஆகையினால் நம்முடைய மாம்ச ஜீவனை அதிகமாய் நேசிப்பதற்குப் பதிலாக, ஆவிக்குரிய நித்திய ஜீவனை அதிகமாய் நேசிக்கவேண்டும்.

நம்முடைய சரீரப்பிரகாரமான ஜீவனில் அதிகமாக ஆசைவைத்து, இயேசுகிறிஸ்துவை மறுதலிக்கிறவர்கள் தங்கள் ஜீவனை இழந்துபோவார்கள். இவர்கள் இழந்துபோவது இந்த பூமிக்குரிய ஜீவனல்ல. இது மறுஉலகத்திற்குரிய நித்திய ஜீவன். உலகப்பிரகாரமான ஆசைகளுக்காக இவர்கள் பரலோகத்தின் சந்தோஷத்தை இழந்துபோய்விடுகிறார்கள். மாம்ச ஜீவனை நேசித்து, உலகத்தின் எல்லா இச்சைகளையும் அனுபவித்து, இது தான் வாழ்வின் ஆசீர்வாதம் என்று நினைக்கிறவர்களுக்கு, ஆசீர்வாதத்திற்குப் பதிலாக சாபமே வரும்.

இயேசுகிறிஸ்து தம்முடைய ஜீவனையே நமக்காக ஒப்புக்கொடுத்திருக்கிறார். தம்முடைய சொந்த இரத்தத்தைக் கிரயமாகச் செலுத்தி நம்முடைய ஆத்தும இரட்சிப்பைக் கிரயத்திற்குப் பெற்று, அதை நமக்கு இலவசமாகக் கொடுக்கிறார். அப்பேர்ப்பட்ட இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையில்லாமல் இருக்கக்கூடாது. மாம்ச ஜீவனை நேசிப்பதற்குப் பதிலாக, ஆவிக்குரிய ஜீவனை நேசிக்கவேண்டும். இந்த உலகத்தை நேசிப்பதற்குப் பதிலாகப் பரலோகத்தை நேசிக்கவேண்டும்.

## அதிகாரம் - 12

தேவனுடைய பரிசுத்தத்தை முன்னிட்டு, தங்களுடைய மாம்சப்பிரகாரமான ஜீவனை இந்த உலகத்தில் வெறுக்கிறவர்களுக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதம் உண்டு. தங்களுடைய ஆத்தும ஜீவனைப் பாதுகாத்துக்கொள்வதற்காக, தங்கள் மாம்சப்பிரகாரமான ஜீவனை வெறுக்கிறவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள். இயேசுகிறிஸ்துவின் சீஷர்களாக இருக்க வேண்டுமென்றால், நாம் இந்த உலகத்தில் நம்முடைய ஜீவனை வெறுக்கவேண்டும். "இந்த உலகத்தில் நம்முடைய ஜீவன்" என்னும் வாக்கியத்திற்கு "இந்த உலகத்திலுள்ள மாம்சப்பிரகாரமான ஆசைகளும் இச்சைகளும்" என்று பொருள். உலகத்தின் ஆசையும் மாம்சத்தின் இச்சையும் மாயையானது என்பதை நாம் அறிந்து, அவற்றை வெறுத்து, விட்டுவிலகி வரவேண்டும். இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்வதற்கு மாம்சப்பிரகாரமான இச்சைகள் தடையாக இருக்கக்கூடாது. கிறிஸ்துவின் ஊழியமும் உலகத்தின் ஊழியமும் நமக்குள்ளே போட்டிபோட்டுக்கொண்டு இருக்கக்கூடாது. இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய ஒருவனாலும் கூடாது.

தேவனுடைய பரிசுத்தத்தை நாம் பெற்றுக்கொள்ளும்போது, நம்முடைய மாம்சத்தின் இச்சைகளிலிருந்து நமக்கு வெற்றி கிடைக்கும். இது நம்முடைய சுயபலத்தினால் கிடைக்கிற வெற்றியல்ல. தேவனுடைய பரிசுத்தத்தின் வல்லமையினால் கிடைக்கிற வெற்றியாகும். இது பரிசுத்தத்தின் ரகசியமாக இருக்கிறது. மனுஷன் தன் சுயமுயற்சியினால் ஒருபோதும் பரிசுத்தமடைவதில்லை. தேவன் நம்முடைய பரிசுத்தத்தை விரும்புகிறார். இந்த சத்தியத்தை புரிந்துகொள்வதே சிறந்த ஞானம். நாம் தேவனுடைய பரிசுத்தத்தின் மேல் பிரியமாயிருக்கும்போது, பாவத்தைக்குறித்து நமக்குள் வெறுப்பு உண்டாகும். கிறிஸ்துவை நேசிக்கிறவர்கள் பாவத்தை வெறுப்பார்கள். கிறிஸ்துவைப் பின்பற்றவேண்டுமென்று விரும்புகிறவர்கள் இந்த உலகத்தில் தங்கள் ஜீவனை வெறுப்பார்கள்.

நம்முடைய ஜீவனை வெறுத்து அதை இழந்துபோனால், தேவன் அதை நமக்குத் திரும்பத் தருவார். தேவன் திரும்பக் கொடுப்பது சாதாரணமான ஆசீர்வாதமாக இராது. இந்த உலகத்தில் தன் ஜீவனை வெறுக்கிறவன் எவனோ அவன் அதை நித்திய ஜீவகாலமாய் காத்துக்கொள்வான். இந்த உலகத்தில் நாம் நம்முடைய மாம்சப்பிரகாரமான ஜீவனை வெறுத்து ஜீவிக்கும்போது, நீதிமான்கள் உயிர்த்தெழும்போது நாமும் உயிர்த்தெழுவோம். நம்முடைய ஜீவனை நித்திய ஜீவகாலமாய் காத்துக்கொள்வோம். மாம்ச ஜீவனை இழந்தவர்கள் நித்திய ஜீவனைப்பெற்றுக் கொள்வார்கள்.

### ஊழியஞ்செய்கிறவன்

**ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார் (யோவா 12:26).**

இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்ய விரும்புகிறவர்கள் அவரைப் பின்பற்றுகிறவர்களாக இருக்கவேண்டும். இயேசுகிறிஸ்து எங்கேயிருக்கிறாரோ அங்கே அவருடைய ஊழியக்காரர்களும் இருக்கவேண்டும். இந்த வாக்கியம் விசுவாசிகளுடைய கடமைகளைக் குறிப்பதாக சிலரும், விசுவாசிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வாக்குத்தத்தத்தைக் குறிப்பதாகச் சிலரும் வியாக்கியானம் பண்ணுகிறார்கள். இயேசுகிறிஸ்து எங்கேயிருக்கிறாரோ அங்கே அவரைப் பின்பற்றுகிறவர்கள் அவரோடுகூட அவருடைய சந்தோஷத்தில் நிலைத்திருப்பார்கள். இந்த வாக்கியத்தைச் சொல்லிவிட்டு, இயேசுகிறிஸ்து தம்முடைய ஊழியக்காரர்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கும் ஆசீர்வாதத்தையும் விவரிக்கிறார். "ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் பிதாவானவர் அவனைக் கனம்பண்ணுவார்" என்றும் வெளிப்படுத்துகிறார்.

## அதிகாரம் - 12

கிரேக்கர்கள் இயேசுகிறிஸ்துவைக் காண வேண்டுமென்று வாஞ்சையாயிருக்கிறார்கள் (யோவா 12:21). இயேசுகிறிஸ்துவைக் கண்டால் மாத்திரம் போதாது, அவருக்கு நாம் ஊழியம் செய்யவும் வேண்டும் என்று இயேசுகிறிஸ்து கிரேக்கருக்கும் நமக்கும் தம்முடைய தெய்வீகத் திட்டத்தை வெளிப்படுத்திக் கூறுகிறார். ஒரு எஜமானிடத்தில் வேலை பார்க்கிறவன் தன் வேலையிலும் கவனமாக இருப்பான், தன் கூலியிலும் கவனமாக இருப்பான். எஜமான் தனக்கு இரண்டையுமே நிர்ணயம்பண்ணித்தரவேண்டும் என்று எதிர்பார்ப்பான். நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நமக்கு நல்ல எஜமானாக இருந்து, நம்முடைய வேலையையும் அதற்குரிய கூலியையும் நிர்ணயம்பண்ணுகிறார். இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யவேண்டுமென்பது நமது எஜமான் நமக்குக் கொடுக்கும் வேலை. நாம் இவ்வாறு ஊழியம் செய்தால் பிதாவானவர் நம்மைக் கனம்பண்ணுவார் என்பதும், இயேசுகிறிஸ்து இருக்கிற இடத்தில் நாமும் அவருடைய சந்தோஷத்தில் அவரோடு கூடயிருப்போம் என்பதும் நமக்குக் கொடுக்கப்படும் கூலி.

இயேசுகிறிஸ்து தம்முடைய ஊழியக்காரர்களிடமிருந்து எதிர்பார்க்கிற வேலைகள் இங்கு விவரிக்கப்பட்டிருக்கிறது. தங்களுடைய எஜமான் எங்கெல்லாம் போகிறாரென்று அவருடைய ஊழியக்காரர் கவனமாக இருக்கவேண்டும். இயேசுகிறிஸ்து எங்கேயிருக்கிறாரோ அங்கே அவருடைய ஊழியக்காரரும் இருக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுகிற விசுவாசிகளாகிய நாம், அவர் நமக்குச் சொல்லுகிற யாவற்றையும் செய்யவேண்டும். அதே வேளையில் அவர் நடக்கிற பிரகாரம் நாம் நடக்கவும் வேண்டும். அவர் எங்கே நம்மை வழிநடத்துகிறாரோ அங்கே நாம் போகவேண்டும். அவர் எந்தப் பாதையின் வழியாக நம்மை அழைத்துச் செல்லுகிறாரோ அந்தப் பாதையின் வழியாகவும் நாம் போகவேண்டும்.

தமக்கு ஊழியம் செய்கிறவர்களைக் குறித்து இயேசுகிறிஸ்து சொல்லும்போது "ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் அவன் என்னைப் பின்பற்றக்கடவன். நான் எங்கேயிருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்" என்று சொல்லுகிறார். இயேசுகிறிஸ்து எங்கேயிருக்கிறாரோ அங்கே அவருடைய ஊழியக்காரர்களும் அவருக்கு ஊழியம்செய்ய ஆயத்தமாகயிருக்க வேண்டும். இயேசுகிறிஸ்துவின் சபை எங்கேயிருக்கிறதோ அங்கே கிறிஸ்து இருக்கிறார். இயேசுகிறிஸ்து எங்கேயிருக்கிறாரோ அங்கே அவருடைய ஊழியக்காரர்களும் இருக்கவேண்டும். ஊழியக்காரர்கள் தங்கள் எஜமானாகிய இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாக நின்று, அவர் கொடுக்கும் கட்டளைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

தமக்கு ஊழியம்செய்கிறவர்களுக்கு இயேசுகிறிஸ்து இரண்டுவிதமாகக் கூலிகொடுக்கிறார். அவையாவன: 1. அவர் எங்கே இருக்கிறாரோ அங்கே அவருடைய ஊழியக்காரர்களும் இருப்பார்கள். 2. இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியம் செய்கிறவர்களை பிதாவானவர் கனம் பண்ணுவார்.

இயேசுகிறிஸ்து இருக்கிற இடத்தில் சந்தோஷம் இருக்கும். இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியம் செய்கிறவர்கள், அவரோடுகூட அவர் இருக்கிற இடத்தில் இருக்கும்போது, அது அவர்களுக்கு பரலோகம் போல இருக்கும். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் இந்த உலகத்தில் அவருக்கு ஊழியம் செய்தாலும், பரலோகத்தின் சந்தோஷத்தை இந்த உலகத்திலேயே அனுபவிப்பார்கள். தாம் எங்கேயிருப்போம் என்பது இயேசுவுக்கு பிரத்தியட்சமாகத் தெரிந்திருக்கிறது. அங்கே அவர் போவதற்கான வேளை நெருங்கிக்கொண்டிருக்கிறது. தம்முடைய பாடுகளுக்காகவும், தம்முடைய ஊழியங்களுக்காகவும் இயேசுகிறிஸ்து சந்தோஷத்தையும் மகிமையையும் பெற்றுக்கொள்ளப்போகிறார். இதே சந்தோஷமும் மகிமையும் இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரர்களுக்கும் வாக்குப் பண்ணப்பட்டிருக்கிறது. இயேசுவுக்கு ஊழியம் செய்கிறவர்கள் அவரைப் பின்பற்றிச்செல்லவேண்டும். முடிவு வரையிலும் பின்பற்றவேண்டும். ஊழியத்தைப் பாதியிலேயே விட்டுவிட்டு ஒடிவிடக்கூடாது. முடிவு வரையிலும் நிலைத்திருக்கிறவனே இரட்சிக்கப்படுவான். முடிவு வரையிலும் அவரைப் பின்பற்றுகிறவனே, அவர் எங்கேயிருக்கிறாரோ அங்கே அவனும் இருப்பான். பிதாவானவர் அங்கு அவனைக் கனம்பண்ணுவார்.

## அதிகாரம் - 12

இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியம் செய்கிறவர்களைப் பிதாவானவர் கனம்பண்ணுவார். கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கு இந்தப் பூமியில் பலவேதனைகளும், இழப்புக்களும் உண்டாகலாம். இயேசுகிறிஸ்து நம்மைச் சந்திக்கவில்லையென்றால் நாம் ஒன்றுமில்லாத வர்களாகவும் பிரயோஜனமில்லாதவர்களாகவும் இருப்போம். அப்பிரயோஜனமான ஊழியக்காரர்களாகிய நம்மைப் பிதாவானவர் கனம்பண்ணுவது நமக்குக் கிடைத்திருக்கும் மிகப்பெரிய ஆசீர்வாதமாகும். பிதாவானவர் நம்மைக் கனம்பண்ணும்போது அது மெய்யான கனமாக இருக்கும். அந்தக் கனம் நிலைத்திருக்கும். உன்னதமானதாக இருக்கும். அது தேவனிடத்திலிருந்து வந்திருக்கும் கனமாக இருக்கும். கிறிஸ்துவுக்காக யாரெல்லாம் ஊழியம் செய்கிறார்களோ அவர்கள் எல்லோரையும் தேவன் கனம்பண்ணுவார். இந்த பூமியில் நாம் இயேசுகிறிஸ்துவுக்காக மனத்தாழ்மையோடு ஊழியம் செய்யும்போது, பிதாவானவர் நம்மை வரப்போகிற உலகத்தில் உயர்த்துவார். ஏற்றவேளையில் தேவனுடைய ஆசீர்வாதங்களை நாம் பெற்றுக்கொள்வோம்.

இயேசு கிறிஸ்துவைக் காணவேண்டுமென்று விரும்பி வந்திருக்கிற கிரேக்கர்கள், இயேசுவின் உபதேசத்தைத் தங்கள் காதுகளால் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவின் வார்த்தை அவர்களுடைய இருதயத்தை நிரப்பிற்று. அவர்களுக்குப் புதிய சிந்தையையும், புதிய ஆலோசனையையும், புதிய ஊழியத்தையும் கொடுத்திருக்கிறது. இயேசுகிறிஸ்துவைக் காணவந்தவர்கள் இப்போது பரலோகத்தையும், பரலோகத்தின் தேவனையும், பிதாவானவர் தங்களை மகிமைப்படுத்தப்போவதையும் தங்கள் விசுவாசத்தினால் காண்கிறார்கள். இயேசுவின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து அவருடைய அடிச்சுவடுகளை பின்பற்றி நடக்கிறார்கள்.

**இயேசுவின் மரணம்**
**யோவா 12 : 27-36**

**யோவா 12:27. இப்பொழுது என் ஆத்துமா கலங்குகிறது, நான் என்ன சொல்லுவேன். பிதாவே, இந்த வேளையினின்று என்னை இரட்சியும் என்று சொல்வேனோ; ஆகிலும், இதற்காகவே இந்த வேளைக்குள் வந்தேன்.**

**யோவா 12:28. பிதாவே, உமது நாமத்தை மகிமைப்படுத்தும் என்றார். அப்பொழுது: மகிமைப்படுத்தினேன், இன்னமும் மகிமைப்படுத்துவேன் என்கிற சத்தம் வானத்திலிருந்து உண்டாயிற்று.**

**யோவா 12:29. அங்கே நின்று கொண்டிருந்து, அதைக் கேட்ட ஜனங்கள்: இடிமுழக்கமுண்டாயிற்று என்றார்கள். வேறு சிலர்: தேவதூதன் அவருடனே பேசினான் என்றார்கள்.**

**யோவா 12:30. இயேசு அவர்களை நோக்கி: இந்தச் சத்தம் என்னிமித்தம் உண்டாகாமல் உங்கள் நிமித்தமே உண்டாயிற்று.**

**யோவா 12:31. இப்பொழுதே இந்த உலகத்துக்கு நியாயத்தீர்ப்பு உண்டாகிறது; இப்பொழுதே இந்த உலகத்தின் அதிபதி புறம்பாகத் தள்ளப்படுவான்.**

**யோவா 12:32. நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன் என்றார்.**

**யோவா 12:33. தாம் இன்னவிதமான மரணமாய் மரிக்கப்போகிறாரென்பதைக் குறிக்கும்படி இப்படிச் சொன்னார்.**

**யோவா 12:34. ஜனங்கள் அவரை நோக்கி: கிறிஸ்து என்றென்றைக்கும் இருக்கிறார் என்று வேதத்தில் சொல்லியதை நாங்கள் கேட்டிருக்கிறோம், அப்படியிருக்க மனுஷகுமாரன் உயர்த்தப்பட வேண்டியதென்று எப்படிச் சொல்லுகிறீர்; இந்த மனுஷகுமாரன் யார் என்றார்கள்.**

**யோவா 12:35. அதற்கு இயேசு: இன்னும் கொஞ்சக்காலம் ஒளி உங்களிடத்தில் இருக்கும்; இருளில் நீங்கள் அகப்படாதபடிக்கு ஒளி உங்களோடிருக்கையில் நடவுங்கள்; இருளில் நடக்கிறவன் தான் போகிற இடம் இன்னதென்று அறியான்.**

**யோவா 12:36. ஒளி உங்களோடிருக்கையில் நீங்கள் ஒளியின் பிள்ளைகளாகும்படிக்கு, ஒளியினிடத்தில் விசுவாசமாயிருங்கள் என்றார். இவைகளை இயேசு சொல்லி, அவர்களை விட்டு மறைந்தார்.**

**என் ஆத்துமா கலங்குகிறது**

**இப்பொழுது என் ஆத்துமா கலங்குகிறது, நான் என்ன சொல்லுவேன். பிதாவே, இந்த வேளையினின்று என்னை இரட்சியும் என்று சொல்வேனோ; ஆகிலும், இதற்காகவே இந்த வேளைக்குள் வந்தேன் (யோவா 12:27).**

## அதிகாரம் - 12

இயேசுகிறிஸ்துவின் ஆத்துமா கலங்குகிறது. இயேசுகிறிஸ்துவுக்கு இப்போது அவருடைய ஆத்துமா கலங்குகிற காலமாகயிருக்கிறது. இந்த சமயத்தில் கிறிஸ்துவானவர் பிதாவிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். திரளான ஜனங்கள் இயேசுகிறிஸ்துவை வரவேற்பதற்காக கூடிவந்திருக்கிறார்கள். கிரேக்கரும் அவரைப் பார்ப்பதற்கு வந்திருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் நாமம் அதிகமாய் பிரஸ்தாமாகியிருக்கிறது. அவருக்கு அதிக கனமும் மகிமையும் உண்டாயிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் "என் ஆத்துமா சந்தோஷமாயிருக்கிறது" என்று ஜெபம்பண்ணுவதுதான் வழக்கம். ஆனால் இயேசுகிறிஸ்துவோ "என் ஆத்துமா கலங்குகிறது" என்று கூறி ஜெபிக்கிறார்.

இயேசுகிறிஸ்துவின் வாயிலிருந்து இப்படிப்பட்ட வார்த்தை வருவது எல்லோருக்கும் ஆச்சரியமாக இருந்திருக்கும். சந்தோஷமான சூழ்நிலைகளுக்கு மத்தியில், இயேசுவோ "ஆத்துமா கலங்குகிறது" என்று கூறுகிறார். சில சமயங்களில் ஆத்துமாவுக்கு அதிக சந்தோஷம் உண்டாகும்போது, அதைத் தொடர்ந்து கலக்கமும் உண்டாகலாம். இயேசுகிறிஸ்துவின் பாடுகள் சமீபமாக வந்து கொண்டேயிருக்கிறது. ஒருவேளை தாம் அனுபவிக்கப்போகும் பாடுகளை நினைத்து இயேசுகிறிஸ்துவின் ஆத்துமா கலங்க ஆரம்பித்திருக்கலாம். முதன்முறையாக இயேசுகிறிஸ்து தம்முடைய ஆத்துமா கலங்குவதாக இங்கு கூறுகிறார்.

நம்முடைய ஆத்துமாவின் பாவம் இயேசுகிறிஸ்துவின் ஆத்துமாவைக் கலங்கச் செய்கிறது. நம்முடைய ஆத்துமாக்களிலுள்ள கலக்கங்களை நீக்கவேண்டும் என்பதற்காக இயேசுகிறிஸ்துவின் ஆத்துமா கலங்குகிறது. இந்தக் கலக்கம் அவருடைய ஆத்துமாவில் நிரந்தரமாகத் தங்கியிருக்காது. சிறிதுகாலம் மட்டுமே அவருடைய ஆத்துமாவில் கலக்கம் இருக்கும். இயேசுகிறிஸ்துவைப் போலவே, நமக்கும் கலக்கங்கள் வரலாம். இந்தக் கலக்கங்கள் நம்மிடத்தில் நிரந்தரமாகத் தங்கியிருப்பதில்லை. சிறிதுகாலம் மாத்திரமே நமக்கு கலக்கம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்து நம்முடைய துக்கத்தை சந்தோஷமாக மாற்றுவார். நம்முடைய கலக்கம் நம்மைவிட்டு நீங்கிப்போகும். நமக்குள் தெய்வீக ஆறுதல் உண்டாகும்.

இயேசுகிறிஸ்துவின் ஆத்துமா கலங்கும்போது "நான் என்ன சொல்லுவேன்" என்று பிதாவினிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். தமக்கு என்ன சொல்லுவது என்று தெரியாததுபோல இயேசுகிறிஸ்துவின் வார்த்தை வெளிப்படுகிறது. ஜெபம் பண்ணும்போது எந்த வார்த்தைகளைச் சொல்லி ஜெபிக்கவேண்டும் என்று தமக்குத் தெரியாததுபோல இயேசுகிறிஸ்து ஜெபிக்கிறார்.

இயேசுகிறிஸ்துவின் ஆத்துமாவில் ஒரு போராட்டம் உண்டாயிருக்கிறது. தமக்கு நியமிக்கப்பட்டிருக்கும் தெய்வீக ஊழியத்தைப்பற்றியும், இந்த ஊழியத்தை நிறைவேற்றுவதற்கு அவர் அனுபவிக்க வேண்டிய பாடுகளைப்பற்றியும், இந்தப் பாடுகளை அனுபவிக்கும்போது தமக்கு உண்டாகக்கூடிய சரீர வேதனைகளைப்பற்றியும் இயேசுகிறிஸ்து நினைத்துப் பார்த்து தம்முடைய ஆத்துமாவில் கலங்குகிறார். இயேசுகிறிஸ்துவின் ஊழியமும் அவர் அனுபவிக்கவேண்டிய வேதனை நிறைந்த பாடுகளும் இப்போது அவருடைய ஆத்துமாவில் போராடிக்கொண்டிருக்கிறது. இந்தப் போராட்டத்தின் மத்தியில், தாம் என்ன வார்த்தைகளைச் சொல்லி தம்முடைய பிதாவிடத்தில் ஜெபிக்கவேண்டும் என்பது, தமக்குத் தெரியாததுபோல, "நான் என்ன சொல்லுவேன்" என்று கேட்கிறார்.

இயேசுகிறிஸ்துவின் ஆத்துமா கலங்கிக்கொண்டிருக்கும்போது "பிதாவே இந்த வேளையினின்று என்னை இரட்சியும் என்று சொல்வேனோ" என்று கேட்கிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய ஜெபத்தில் இந்த வார்த்தைகளைப் பயன்படுத்துவதினால், தமக்கு வரப்போகும் பாடுகளிலிருந்து தம்மை விலக்கிக் காத்துக்கொள்ளுமாறு ஜெபிப்பதுபோல தெரிகிறது. இயேசுகிறிஸ்துவின் கள்ளம் கபடமில்லாத சுபாவம் அவருடைய ஜெபவார்த்தைகளாக வெளிப்படுகிறது. பிதாவிடத்தில் அவர் ஒன்றையும் மறைப்பதில்லை. தம்முடைய சரீரத்தின் உணர்வுகள் எப்படியிருக்கிறதோ அதை அப்படியே, சிறிதும் மறைக்காமல், பிதாவிடம் ஜெபிக்கிறார். "பிதாவே இந்த வேளையினின்று என்னை இரட்சியும்" என்று இயேசுகிறிஸ்து கள்ளம் கபடமில்லாமல், ஒரு சிறு பிள்ளையைப்போல பிதாவினிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்.

## அதிகாரம் - 12

தமக்கு நியமிக்கப்பட்டிருக்கும் எல்லா பாடுகளையும் இயேசுகிறிஸ்து தாமே மனப்பூர்வமாக முன்வந்து தம்மீது சுமந்துகொள்கிறார். ஆனாலும் இந்தப் பாடுகளிலிருந்து தம்மை இரட்சிக்குமாறு விண்ணப்பம்பண்ணுகிறார். தாம் பாடுகளை அனுபவிப்பது தேவனுடைய சித்தம் என்பதும், அதற்குத் தாம் கீழ்ப்படிய வேண்டுமென்பதும் இயேசுகிறிஸ்துவுக்குத் தெரியும். ஆனாலும் இந்தப் பாடுகள் தம்மை நெருங்கி வரும்போது, இவற்றிலிருந்து தம்மை இரட்சித்துக் கொள்ளுமாறு, இயேசுகிறிஸ்து இந்தப் பாடுகளுக்கு விரோதமாக ஜெபிக்கிறார்.

இயேசுகிறிஸ்து பாடுகளை அனுபவிக்கும் வேளையைப்பற்றி இரண்டு சத்தியங்கள் உள்ளன. அவையாவன: 1. அந்த வேளை நியமிக்கப்பட்டிருக்கிறது. 2. அந்த வேளை மிகவும் சிறிய வேளையாக இருக்கும். ஒரு மணி நேரம் விரைவில் கடந்துபோவதுபோல, இயேசுகிறிஸ்துவின் பாடுகளும் விரைவில் கடந்துபோகும். இயேசுகிறிஸ்து பாடுகளை அனுபவிக்கும்போது, தமக்கு முன்பாக நியமிக்கப்பட்டிருக்கும் சந்தோஷத்தை அவரால் நோக்கிப் பார்க்கமுடியும். நமக்கு பாடுகள் உண்டாகும்போது, அந்தப் பாடுகளை நாம் பொறுமையோடு சகித்துக்கொள்ளவும், தேவனுடைய சித்தத்திற்கு நாம் பூரணமாக கீழ்ப்படியவும், கிறிஸ்துவானவர் நம்மைப் பலப்படுத்தவும்வேண்டுமென்று ஜெபிக்கவேண்டும்.

தம்முடைய பாடுகளை நினைத்து "இந்த வேளையினின்று என்னை இரட்சியும் என்று சொல்வேனோ" என்று கூறும்போது, இயேசுகிறிஸ்துவுக்கு இந்தப் பாடுகளைக்குறித்த பிதாவின் சித்தம் மிகவும் தெளிவாகத் தெரிந்திருக்கிறது. "ஆகிலும் இதற்காகவே இந்த வேளைக்குள் வந்தேன்" என்று கூறி ஜெபித்து, தாம் பாடுகளை அனுபவிக்க வேண்டியதற்காகவே, இந்த பூமிக்கு வந்திருப்பதை இயேசுகிறிஸ்து உறுதிபண்ணுகிறார். இயேசுகிறிஸ்துவின் ஜெபத்தில் அவருடைய கள்ளம் கபடமில்லாத சுபாவம் வார்த்தைகளாக முதலாவது வெளிப்படுகிறது. அதன்பின்பு தேவனுடைய ஞானமும் அன்பும் வெளிப்படுகிறது. தம்முடைய உள்ளத்தில், தாம் அனுபவிக்கப்போகும் பாடுகளைக்குறித்து, பல்வேறு விதமான எண்ணங்கள் இயேசுகிறிஸ்துவின் இருதயத்தில் உண்டானபோதிலும், அவர் தம்முடைய சிந்தையைப் பிதாவின் சித்தத்திற்கு பூரணமாக ஒப்புக்கொடுக்கிறார். "இதற்காகவே இந்த வேளைக்குள் வந்தேன்" என்று தாம் பிதாவின் சித்தத்தைச் செய்வதற்கு ஆயத்தமாகயிருப்பதை இயேசுகிறிஸ்து மறுபடியும் உறுதிபண்ணுகிறார்.

இந்தப் பாடுகளை நினைத்து இயேசுகிறிஸ்துவினால் அமைதியாக இருக்கவும் முடியவில்லை. இந்தப் பாடுகளிலிருந்து பிதாவும் குமாரனை இரட்சிக்கவில்லை. பிதாவின் சித்தம் இயேசுகிறிஸ்துவுக்குத் தெளிவாகத் தெரிகிறது. தாம் பிதாவின் சித்தத்திற்குக் கீழ்ப்படிவதை நினைத்து இயேசுகிறிஸ்து தம்மைத்தாமே ஆறுதல்படுத்திக்கொள்கிறார். தமக்கு நியமிக்கப்பட்டிருக்கும் பாடுகள் வழியாகக் கடந்துசெல்ல தம்மை ஒப்புக்கொடுக்கிறார். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில்கூட இப்படிப்பட்ட பிரச்சனை மிகுந்த, பாடுகள் நிறைந்த இருளான வேளை வரலாம். நம்முடைய சுயசித்தமும் தேவனுடைய சித்தமும் நமக்குள் போராடிக் கொண்டிருக்கலாம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் நம்முடைய சுயசித்தத்தைத் தேவனிடத்தில் தெரியப்படுத்தினாலும், அவருடைய தெய்வீக சித்தத்திற்கு நாம் கீழ்ப்படியவேண்டும். அவருடைய சித்தம் நிறைவேற நம்மை ஒப்புக்கொடுக்கவேண்டும்.

### வானத்திலிருந்து சத்தம்

**பிதாவே, உமது நாமத்தை மகிமைப்படுத்தும் என்றார். அப்பொழுது: மகிமைப்படுத்தினேன், இன்னமும் மகிமைப்படுத்துவேன் என்கிற சத்தம் வானத்திலிருந்து உண்டாயிற்று (யோவா 12:28).**

தமக்குப் பாடுகள் நெருங்கிக்கொண்டிருந்தாலும் இயேசுகிறிஸ்து பிதாவின் நாமத்தை மகிமைப்படுத்த வேண்டுமென்று விரும்புகிறார். "பிதாவே உமது நாமத்தை மகிமைப்படுத்தும்" என்று ஜெபிக்கிறார். இயேசுகிறிஸ்துவின் இந்த வாக்கியம் "பிதாவே உமது சித்தம் செய்யப்படுவதாக" என்று அறிக்கை செய்வதுபோல இருக்கிறது. பிதாவின் மகிமையே தேவனுடைய சித்தமாக இருக்கிறது. இயேசுகிறிஸ்து பாடுகளை அனுபவிக்க தம்மை ஒப்புக்கொடுப்பது, அவர் தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிவது மாத்திரமல்ல. தம்முடைய பாடுகள் பிதாவின் நாமத்தை மகிமைப்படுத்தும் என்பதையும் அறிந்து, இயேசுகிறிஸ்து தமக்கு நியமிக்கப்பட்டிருக்கும் பாடுகளுக்குத் தம்மை ஒப்புக்கொடுக்கிறார்.

## அதிகாரம் - 12

"பிதாவே உமது நாமத்தை மகிமைப்படுத்தும்" என்று இயேசுகிறிஸ்து கூறுகிற வார்த்தைகளை நாம் ஜெபத்தோடு தியானிக்கவேண்டும். தம்முடைய பாடுகளையும், பிதாவின் சித்தத்தையும், பிதாவின் மகிமையையும் இயேசுகிறிஸ்து இங்கு இணைக்கிறார். இயேசுகிறிஸ்துவின் வார்த்தை நிச்சயமாகவும் உறுதியாகவும் இருக்கிறது. நமக்காக அவரே பலியானார். நம்முடைய பாவங்களை மன்னிப்பதற்கு நம்மை மீட்பதற்கு அவரே மீட்பின் கிரயமானார். நம்முடைய பாவங்களுக்கு தேவனுடைய சித்தத்தின் பிரகாரம் நிறைவேற்றவேண்டிய எல்லா காரியங்களையும் இயேசுகிறிஸ்து பூரணமாக செய்து முடித்திருக்கிறார்.

தேவனுடைய நாமம் மகிமைப்படுவதற்காக இயேசுகிறிஸ்து எதையெல்லாம் செய்யவேண்டுமோ அதையெல்லாம் செய்து முடித்திருக்கிறார். இயேசுகிறிஸ்து செய்தது எதையும் அவருடைய பெருமையில் செய்யவில்லை. தாம் செய்தது அனைத்தையும் அவர் தமது தாழ்மையில் செய்து முடித்திருக்கிறார். பிதாவின் நாமத்தை மகிமைப்படுத்துவதற்காக, தாம் செய்திருக்கும் தாழ்மையான காரியங்களை, பிதாவானவர் அங்கீகரித்து, அவர் தமது நாமத்தை மகிமைப்படுத்த வேண்டுமென்று இயேசுகிறிஸ்து விண்ணப்பம்பண்ணுகிறார். பிதாவின் நாமத்தை மகிமைப்படுத்துவதற்கு செய்ய வேண்டிய காரியம் இன்னும் ஏதாவது இருக்குமென்றால், அதையும் தாம் செய்வதற்கு ஆயத்தமாக இருப்பதாகவும், அந்தக் காரியங்களைத் தம்முடைய கணக்கில் வைத்துக்கொள்ளுமாறும் இயேசுகிறிஸ்து விண்ணப்பம்பண்ணுகிறார். இயேசுகிறிஸ்துவின் மூலமாகப் பிதாவின் மகிமை ஒருபோதும் குறைந்துபோவதில்லை. ஆனாலும் பிதாவின் நாமம் மகிமைப்படுவதற்கு என்னென்ன செய்யவேண்டுமோ அவையெல்லாவற்றையும் இயேசுகிறிஸ்து செய்து நிறைவேற்றுகிறார்.

இயேசுகிறிஸ்துவின் ஜெபத்திற்குப் பிதாவானவர் செவிகொடுத்து, அவருக்குப் பிரதியுத்தரம் கூறுகிறார். வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று. அந்த சத்தமே பிதாவின் பிரதியுத்தரமாயிற்று. "பிதாவே உமது நாமத்தை மகிமைப்படுத்தும்" என்று இயேசுகிறிஸ்து விண்ணப்பம்பண்ணுகிறார். அதற்குப் பிதாவானவர் "மகிமைப்படுத்தினேன், இன்னமும் மகிமைப்படுத்துவேன்" என்று பிரத்தியுத்தரம் கூறுகிறார்.

இயேசுகிறிஸ்துவின் ஜீவியத்தில் தேவனுடைய நாமம் மகிமைப்படுகிறது. இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தின் மூலமாகவும், அவர் செய்த அற்புதங்கள் மூலமாகவும், அவர் செய்த நன்மைகள் மூலமாகவும், அவருடைய பரிசுத்தத்தின் மூலமாகவும் பிதாவின் நாமம் மகிமைப்படுகிறது. இதுவரையிலும் பிதாவின் நாமம் மகிமையடைந்ததைவிட, இனிமேல் இயேசுகிறிஸ்துவின் பாடுகளினாலும், அவருடைய மரணத்தினாலும், பிதாவின் நாமம் மேலும் மகிமைப்படுத்தப்படும். பிதாவின் ஞானமும் வல்லமையும், அவருடைய நீதியும் பரிசுத்தமும், அவருடைய சத்தியமும் நன்மையும் இயேசுகிறிஸ்துவின் பாடுகள், மரணம் ஆகியவற்றின் மூலமாக இன்னும் மகிமைப்படுத்தப்படும்.

பிதாவானவர் இயேசுகிறிஸ்துவின் வார்த்தையிலும் கிரியையிலும் பிரியமாகவும் திருப்தியாகவும் இருக்கிறபடியினால், "மகிமைப்படுத்தினேன், இன்னும் மகிமைப்படுத்துவேன்" என்று அறிவிக்கிறார். தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்துவதற்காகத் தேவனானவர் இயேசுகிறிஸ்துவின் மூலமாக அற்புதமான காரியங்களைச் செய்து நிறைவேற்றியிருக்கிறார். இன்னும் செய்யப்போகிறார். பிதாவின் வார்த்தை, இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற பிள்ளைகளுக்கு உற்சாகத்தை தரும். ஏனெனில் பிதாவின் நாம மகிமைக்காக, குமாரனானவர் இன்னும் அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்யப்போகிறார். அவற்றின் மூலமாக தம்முடைய வசனங்களை நமக்கு உறுதிபண்ணப்போகிறார். தேவனுடைய நாமம் எப்போதும் மகிமையுள்ளதாகவே இருக்கும்.

### இடிமுழக்கம் உண்டாயிற்று

**அங்கே நின்றுகொண்டிருந்து, அதைக் கேட்ட ஜனங்கள்: இடிமுழக்கமுண்டாயிற்று என்றார்கள். வேறு சிலர்: தேவதூதன் அவருடனே பேசினான் என்றார்கள் (யோவா 12:29).**

## அதிகாரம் - 12

வானத்திலிருந்து சத்தம் உண்டானபோது, அங்கு கூடியிருக்கிற திரளான ஜனங்கள் அந்தச் சத்தத்தைக் கேட்கிறார்கள். அவர்களுக்கு அந்தச் சத்தம் ஆச்சரியமாக இருக்கிறது. ஒரு சிலர் "இடிமுழக்கம் உண்டாயிற்று" என்று கூறுகிறார்கள். வேறு சிலர் "தேவதூதன் அவருடனே பேசினான்" என்று கூறுகிறார்கள். மெய்யாகவே வானத்திலிருந்து சத்தம் உண்டாயிற்று என்பதை எல்லோருமே அங்கீகரிக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் தெய்வீக ஊழியத்திற்கு இந்தச் சத்தம் சாட்சியாயிருக்கிறது. ஆனால் அவர்களோ பிதாவானவர் குமாரனுடைய ஜெபத்திற்கு இந்தச் சத்தத்தின் மூலமாக பதில்கொடுத்திருக்கிறார் என்று நினைப்பதற்குப் பதிலாக, அதை இடிமுழக்கம் என்றும், தேவதூதனுடைய பேச்சு என்றும் தவறாகச் சிந்திக்கிறார்கள். எப்படிப்பட்ட அற்புதங்கள் நடந்தாலும், ஜனங்கள் விநோதமாகச் சிந்திக்கிறார்கள். இயேசுவைக் கிறிஸ்து என்று விசுவாசிக்காமற் போவதற்கு, என்னவெல்லாம் செய்யவேண்டுமோ அவையெல்லாவற்றையும் செய்கிறார்கள். இவர்கள்மீதும் இயேசுகிறிஸ்து கிருபையாகயிருக்கிறார்.

### உங்கள் நிமித்தமே உண்டாயிற்று

**இயேசு அவர்களை நோக்கி: இந்தச் சத்தம் என்னிமித்தம் உண்டாகாமல் உங்கள் நிமித்தமே உண்டாயிற்று (யோவா 12:30).**

இயேசுகிறிஸ்து வானத்திலிருந்து உண்டான சத்தத்தைத் தம்முடைய செவிகளினால் கேட்கிறார். அவருக்கு இந்தச் சத்தத்தின் பொருளும், இந்தச் சத்தம் உண்டானதற்கான காரணமும் தெரிந்திருக்கிறது. இதைச் சரியாகப்புரிந்துகொள்ளாத ஜனங்களிடம் இயேசுகிறிஸ்து "இந்தச் சத்தம் என்னிமித்தம் உண்டாகாமல், உங்கள் நிமித்தமே உண்டாயிற்று" என்று கூறுகிறார். வானத்திலிருந்து உண்டான சத்தத்தைக் கேட்கிறவர்கள், "பிதாவானவர் இயேசுகிறிஸ்துவை வானத்திலிருந்து அனுப்பினவர்" என்று விசுவாசிக்கவேண்டும். அதற்காகவே இந்தச் சத்தம் உண்டாயிற்று.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப்பற்றி வானத்திலிருந்து உண்டான சத்தம், நமக்காகவே உண்டாயிற்று. இயேசுகிறிஸ்துவின் சமூகத்தில் நாம் ஆறுதலடையவேண்டும், அவரை விசுவாசிக்கவேண்டும், அவர் கொடுக்கிற இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளவேண்டும். இதற்காவே இந்தச் சத்தம் உண்டாயிற்று. இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களுக்குப் பாடுகளும் வேதனைகளும் உண்டாகலாம். நமக்குப் பாடுகள் மத்தியில் ஆறுதல் உண்டு. இயேசுகிறிஸ்து பிதாவினால் எப்படி ஆறுதல்படுத்தப்பட்டாரோ அப்படியே நமக்கும் ஆறுதல் உண்டாகும்.

### நியாயத்தீர்ப்பு

**இப்பொழுதே இந்த உலகத்துக்கு நியாயத்தீர்ப்பு உண்டாகிறது; இப்பொழுதே இந்த உலகத்தின் அதிபதி புறம்பாகத் தள்ளப்படுவான் (யோவா 12:31).**

"மகிமைப்படுத்தினேன், இன்னமும் மகிமைப்படுத்துவேன்" என்கிற சத்தம் வானத்திலிருந்து உண்டாயிற்று. பிதாவானவர் இந்த வாக்கியத்தைக் கூறுவதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. அவையாவன: 1. இயேசுகிறிஸ்துவின் மரணத்தின் மூலமாக சாத்தான் தோற்றுப்போவான் 2. இயேசுகிறிஸ்துவின் மரணத்தின் மூலமாக ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படும். இந்த ஆத்துமாக்கள் சாத்தானுடைய பிடியிலிருந்து விடுவிக்கப்படும்.

இயேசுகிறிஸ்துவினுடைய மரணத்தின் மூலமாக சாத்தான் தோற்றுப் போய்விடுகிறான். இந்த உலகத்திற்கு இப்பொழுது நியாயத்தீர்ப்பு உண்டாயிருப்பதாக இயேசுகிறிஸ்து அறிவிக்கிறார். இந்த நியாயத்தீர்ப்பைப்பற்றி இயேசுகிறிஸ்து அறிவிக்கும்போது, ஆவிக்குரிய யுத்தத்தில் தேவனுடைய வல்லமைக்குக் கிடைத்த தெய்வீக வெற்றியைப் பிரகடனப்படுத்துவது போல அறிவிக்கிறார். இயேசுகிறிஸ்துவின் மூலமாக அநுக்கிரக வருஷம் இப்போது உண்டாயிருக்கிறது.

## அதிகாரம் - 12

மனுக்குலத்தின் பாவங்களுக்காக இயேசுகிறிஸ்து சிலுவையில் மரித்து அவர்களுக்கு இரட்சிப்பை வாய்க்கப்பண்ணவே வண்டுமென்பது தேவனுடைய ஆதீனத்தில் ஏற்கெனவே திட்டமிடப்பட்டிருக்கிறது. அந்த இரட்சிப்பின் வருஷம் இப்போது வந்திருக்கிறது. தமக்கு நியமிக்கப்பட்டிருக்கும் தேவனுடைய ஊழியத்தை இயேசுகிறிஸ்து நிறைவேற்றப்போகும் காலம் நெருங்கி வந்திருக்கிறது. இது ஒரு ஆவிக்குரிய யுத்தம். இந்த யுத்தத்தில் சாத்தானும் அவனுடைய அந்தகார சக்திகளும் தேவனுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகின்றன. இந்த யுத்தத்தில் சாத்தானும் அவனுடைய சேனையும் தோற்று ஓடிப்போவார்கள். தேவனுக்கு ஜெயமும் மகிமையும் உண்டாகும்.

இயேசுகிறிஸ்து இந்த உலகத்திற்கு உண்டாகப்போகிற நியாயத்தீர்ப்பைப்பற்றிக் குறிப்பிடும்போது, அதில் மூன்று காரியங்கள் இடம்பெற்றிருக்கின்றன. அவையாவன: 1. இந்த உலகத்திற்கு இப்பொழுதே நியாயத்தீர்ப்பு உண்டாயிருக்கிறது. 2. இந்த நியாயத்தீர்ப்பின் மூலமாக இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் நீதிமான்களாக நியாயந்தீர்க்கப்படுவார்கள். யூதர்கள் மாத்திரம் என்று இல்லாமல் புறஜாதியாரும் நீதிமான்களாக தீர்க்கப்படுவார்கள். 3. சாத்தானுடைய அந்தகார வல்லமைகள் இந்த நியாயத்தீர்ப்பின் மூலமாக அதம்பண்ணப்படும்.

இயேசுகிறிஸ்து இந்த உலகத்திற்கு உண்டாகப்போகும் நியாயத்தீர்ப்பைப்பற்றிக் கூறும்போது "அது இப்பொழுதே உண்டாயிருக்கிறது" என்று கூறுகிறார். இந்த வாக்கியம் மருத்துவ உலகத்தில் பயன்படுத்தப்படும் வாக்கியத்தைப்போல உள்ளது. அதன்பிரகாரம் இந்த உலகம் ஒரு முக்கியமான காலகட்டத்திற்கு வந்திருக்கிறது. இந்த உலகத்திலுள்ள வியாதிகளுக்கும் வேதனைகளுக்கும் சிகிச்சை நடைபெறப்போகிறது. சிகிச்சையின் முடிவில் வியாதி குணமடைந்து ஜீவன் உண்டாகலாம். அல்லது வியாதி முற்றிப்போய் ஜீவனே போய்விடலாம். இதுபோன்ற சூழ்நிலையிருப்பதினால், உலகத்திற்கு நியாயத்தீர்ப்பு உண்டாவது மனுக்குலத்தை வெகுவாகப் பாதிக்கும். நியாயத்தீர்ப்பு இந்த உலகத்திற்குள் ஏற்கெனவே பிரவேசித்திருக்கிறது.

இயேசுகிறிஸ்துவின் மரணமே இந்த உலகத்திற்கு நியாயத்தீர்ப்பு ஆகும். முதலாவதாக இந்த உலகத்தில் உள்ள கேடுகளெல்லாம் இயேசுவின் மரணத்தினால் வெளியரங்கமாகும். நன்மையிலிருந்து தீமை வேறு பிரிக்கப்படும். பரிசுத்தத்திலிருந்து பாவம் விலக்கி வைக்கப்படும். மனுஷருடைய சுபாவங்களெல்லாம் வெளியரங்கமாகத் தெரியும். ஒளிவுமறைவு எதுவும் இருக்காது.

இந்த உலகம் நியாயந் தீர்க்கப்படும்போது, இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் அடிப்படையில், இந்த உலகத்திலுள்ள மனுஷர் எல்லோரும் நியாயந்தீர்க்கப்படுவார்கள். இயேசு கிறிஸ்துவின் சிலுவையின்மீது அவர்களுக்கு எப்படி தொடர்பு இருக்கிறது என்பதை அடிப்படையாக வைத்து மனுஷருடைய சுபாவங்கள் நியாயந்தீர்க்கப்படும். இயேசுகிறிஸ்துவின் மரணத்தைக்குறித்து ஜனங்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை ஆதரமாக வைத்தே அவர்கள் நியாயம் விசாரிக்கப்படுவார்கள்.

இந்த உலகம் துன்மார்க்கமாக இருக்கிறது. தேவனோ நீதியுள்ளவராக இருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் சிலுவைமரணம் பரிசுத்தமான தேவனுக்கும் அசுத்தமான உலகத்திற்கும் நடுவிலே நடைபெறுகிறது. இயேசுகிறிஸ்துவினுடைய மரணத்தின் மூலமாக, இந்த உலகம் நியாயந்தீர்க்கப்படும்போது, யூதர்கள் மட்டுமல்லாமல் புறஜாதியாரும் நியாயந் தீர்க்கப்படுவார்கள். இயேசுகிறிஸ்துவின் மரணத்தை தங்களுடைய இரட்சிப்புக்காகப் பயன்படுத்திக்கொள்கிறவர்கள் நீதிமான்களாக தீர்க்கப்படுவார்கள். மற்றவர்கள் யூதர்களாகயிருந்தாலும், புறஜாதியாராக யிருந்தாலும் அவர்கள் அநீதியுள்ளவர்களாகவும் ஆக்கினைக்குட் பட்டவர்களாகவும் நியாயந்தீர்க்கப்படுவார்கள். இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் மூலமாக, ஜனங்கள் நியாயந்தீர்க்கப்படும்போது, இயேசுகிறிஸ்துவை தேவனுடைய குமாரனாகவும், தங்களுடைய ஆத்தும இரட்சகராகவும் விசுவாசித்து ஏற்றுக் கொள்கிறவர்கள் நீதிமான்களாக்கப்படுவார்கள்.

## அதிகாரம் - 12

இயேசுகிறிஸ்துவின் மரணத்தினால் இந்த உலகம் நியாயந்தீர்க்கப்படும்போது, அந்தகார வல்லமைகளெல்லாம் ஆக்கினைக்குட்படுத்தப்படும். இந்த உலகத்தின் அதிபதி நியாயந்தீர்க்கப்படுவான் (யோவா 16:11). சாத்தானுடைய உலகம் அந்தகார உலகமாகயிருக்கும். இதில் அந்தகாரத்தின் வல்லமைகள் ஆளுகை செய்யும். சாத்தானும் அவருடைய தூதர்களும், அவனுடைய ஆளுகையும் ஆக்கினைக்குட்படுத்தப்படும். இந்த உலகத்தை இயேசுகிறிஸ்துவே நியாயந்தீர்க்கப்போகிறவர். உலகத்தை நியாயத்தீர்க்கும் பொறுப்பு சாத்தானிடம் ஒப்புக்கொடுக்கப்படவில்லை. சாத்தான் நியாந்தீர்க்கப்படுவான். ஆக்கினைக்குட் படுத்தப்படுவான். இந்த உலகத்தின் அதிபதியாகிய சாத்தான் புறம்பாகத் தள்ளப்படுவான். சாத்தான் உலகத்து மனுஷர்களை இப்பிரபஞ்சத்தின் காரியங்களினால் ஆளுகைசெய்கிறான். ஆகையினால் இவன் உலகத்தின் அதிபதி என்று அழைக்கப்படுகிறான்.

இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையில் மரிப்பதன் மூலமாக, உலகத்தின் அதிபதி புறம்பாக தள்ளப்படுவான். அவன் எப்போதுமே தள்ளப்பட்டவன்தான். தம்முடைய மரணத்தின் மூலமாக இயேசுகிறிஸ்து இந்த உலகத்தையும் உலகத்திலுள்ள மனுஷரையும் தேவனோடு ஒப்புரவாக்குகிறார். மரணத்தின் வல்லமையை முறித்துப்போடுகிறார். சாத்தான் அழிக்கிறவனாக இருக்கிறான். இயேசு அவனை நியாந்தீர்த்து அவனைப் புறம்பே தள்ளிப்போடுகிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய சிலுவை உபதேசத்தின் மூலமாக இந்த உலகத்தைத் தேவனிடத்திற்கு வழிநடத்துகிறார். பாவத்தின் வல்லமையை முறித்துப்போடுகிறார். சாத்தான் வஞ்சிக்கிறவனாக அவனை நியாயந்தீர்த்து, இருக்கிறான். இயேசு அவனை அவியாத அக்கினிக்கடலிலே தள்ளிவிடுகிறார். சாத்தான்மீது தாம் பெற்றுள்ள வெற்றியை இயேசுகிறிஸ்து இங்கு நிச்சயமான வார்த்தைகளினாலும், உறுதியான வார்த்தைகளினாலும் வெளிப்படுத்துகிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய மரணத்திற்குத் தம்மை ஒப்புக்கொடுக்கும்போதே, சாத்தான்மீது அவர் வெற்றிபெற்றுவிடுகிறார்.

**இன்னவிதமான மரணம்**

**நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன் என்றார். தாம் இன்னவிதமான மரணமாய் மரிக்கப்போகிறாரென்பதைக் குறிக்கும்படி இப்படிச் சொன்னார் (யோவா 12:32,33).**

"பிதாவே உமது நாமத்தை மகிமைப்படுத்தும்" என்று இயேசுகிறிஸ்து ஜெபம்பண்ணியபோது, "மகிமைப்படுத்தினேன், இன்னமும் மகிமைப்படுத்துவேன்" என்கிற சத்தம் வானத்திலிருந்து உண்டாயிற்று. பிதாவாகிய தேவன் தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்துகிறார். தேவனுடைய நாமம் இரண்டுவிதங்களில் மகிமைப்படுகிறது. அவையாவன: 1. இயேசுகிறிஸ்துவின் மரணத்தின் மூலமாக சாத்தான் ஜெயிக்கப்படுவான். 2. இயேசுகிறிஸ்துவின் மரணத்தின் மூலமாக ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படும். சாத்தான் புறம்பே தள்ளப்படுவான்.

இயேசுகிறிஸ்து பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது எல்லோரையும் தம்மிடத்தில் இழுத்துக்கொள்வார். யூதர்களை மாத்திரம் என்று மட்டுப்படுத்தாமல், புறஜாதியாரையும் தம்மிடத்தில் இழுத்துக்கொள்வார். ஓர் ஆத்துமா இரட்சிக்கப்படும்போது இயேசுகிறிஸ்து தாமே எல்லாவற்றிற்கும் எல்லாமுமாக இருக்கிறார். கிறிஸ்து தாமே ஆத்துமாக்களைத் தம்மிடத்தில் இழுத்துக்கொள்கிறவர். பலவந்தத்தினால் அவர் யாரையும் இழுத்துக்கொள்வதில்லை. இயேசுகிறிஸ்து யாரையும் தம்மிடத்தில் வருமாறு கட்டாயப்படுத்துவதில்லை. அவர் மனுஷருடைய ஆத்துமாவில் கிரியை நடப்பிப்பார். அப்போது ஆத்துமாக்களெல்லாம் இயேசு கிறிஸ்துவிடத்தில் வரவேண்டுமென்று விருப்பமாயிருக்கும்.

நாம் எல்லோருமே இயேசு கிறிஸ்துவிடத்தில் இழுக்கப்பட்டிருக்கிறோம். இதுவரையிலும் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்காதவர்களும், இயேசுகிறிஸ்துவின் நாமத்தைக்குறித்து வெட்கப்பட்டவர்களும் இப்போது அவரிடத்தில் இழுக்கப்படுகிறார்கள். அவரை நேசிக்கிறார்கள். அவரிடத்தில் விசுவாசம் வைக்கிறார்கள். அவருடைய கரங்களினால் அவருடைய சித்தத்தைச் செய்வதற்கு ஜனங்களெல்லோரும் இழுக்கப்படுகிறார்கள்.

## அதிகாரம் - 12

ஜனங்கள் எல்லோரையும் தம்மிடத்தில் இழுத்துக்கொள்வதற்கு இயேசுகிறிஸ்து மிகவும் முக்கியமான உபாயத்தைக் கடைப்பிடிக்கிறார். இயேசுகிறிஸ்து பூமியிலிருந்து உயர்த்தப்படுவதே அவருடைய திட்டமும், வழியும், உபாயமும் ஆகும். தாம் இன்னவித மரணமாய் மரிக்கப்போவதைக் குறிக்கும்படிக்கு இயேசுகிறிஸ்து இப்படிச் சொல்லுகிறார். இயேசுகிறிஸ்துவின் மரணம் சிலுவை மரணம். இதுவே "பூமியிலிருந்து உயர்த்தப்படுவது" என்று அழைக்கப்படுகிறது. இயேசுகிறிஸ்துவை முதலாவதாக ஆணிகளினால் சிலுவையில் அறைகிறார்கள். அதன்பின்பு இயேசுகிறிஸ்துவோடு அந்த சிலுவை மரம் உயர்த்தப்படுகிறது. "உயர்த்தப்படுதல்" என்னும் வார்த்தைக்கு "மரியாதையோடும் கனத்தோடும் முன்னேறி வருதல்" என்று பொருள்.

"நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது" என்று இயேசுகிறிஸ்து கூறும்போது, அவர் தம்முடைய பாடுகளை மகிமையாகவே நோக்கிப் பார்க்கிறார். இயேசுகிறிஸ்துவின் சிலுவைப்பாடுகள் அவருக்கு மகிமையில் முன்னேறிப்போவது போலவே இருக்கிறது. தாம் உயர்த்தப்படுவதாக இயேசுகிறிஸ்து நினைக்கிறார். பூமியிலிருந்து இயேசுகிறிஸ்து உயர்த்தப்பட்டிருக்கும்போது அவர் எல்லா மனுஷரையும் தம்மிடத்தில் இழுத்துக்கொள்கிறார். இந்தச் சம்பவம் இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணத்திற்குப் பின்பு நடைபெறும் சம்பவமாகும். சபையின் வளர்ச்சி இயேசுகிறிஸ்துவின் மரணத்திற்குப் பின்பே வேகமாக அதிகரிக்கிறது. இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் விளைவினால், அவர் பூமியிலிருந்து உயர்த்தப்பட்ட பின்பு, சபைக்கு விரைவான வளர்ச்சி உண்டாயிற்று.

இயேசுகிறிஸ்துவின் சிலுவை ஒரு சிலருக்கு இடறுகிறதற்கு ஏதுவான தடைக்கல்லாக இருந்தாலும், மற்றவர்களுக்கு உயர முன்னேறிச்செல்வதற்குப் படிக்கற்களாக இருக்கிறது. "நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது" என்று இயேசுகிறிஸ்து கூறும் வாக்கியமானது, வனாந்தரத்தில் வெண்கல சர்ப்பம் உயர்த்தப்பட்டதற்கு அடையாளம் என்று சிலர் கூறுகிறார்கள். வனாந்தரத்தில் சர்ப்பத்தினால் கடிக்கப்பட்டவர்கள் எல்லோரையும் வெண்கல சர்ப்பம் தன் பக்கமாக இழுத்துக்கொண்டதற்கு இது அடையாளம் என்று இதற்கு வியாக்கியானம் கூறுகிறார்கள்.

இயேசுகிறிஸ்து தம்மிடத்தில் எல்லாரையும் இழுத்துக்கொள்கிறார். இயேசுகிறிஸ்துவின் மந்தை பெரிதாயிருக்கும். எல்லா தேசங்களிலும் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் பிரசங்கம்பண்ணப்படும்போது ஏராளமான ஜனங்கள் இரட்சிக்கப்பட்டு தேவனுடைய ராஜ்யத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். "சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்தில் உயர்த்தப்பட்டதுபோல, மனுஷகுமாரனும் தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு உயர்த்தப்படவேண்டும்" (யோவா 3:14,15).

இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்படும்போது, அவர் அறையப்பட்ட விதம், அவர் உயர்த்தப்படுவதுபோல இருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் இரண்டு கரங்களும் விரிவாய்த் திறக்கப்பட்டிருக்கிறது. எல்லா ஜனங்களையும் தம்மிடத்தில் வரவேற்கும் விதமாகவும், தம்மிடத்தில் வருகிற எல்லோரையும் அவர் ஏற்றுக்கொள்ளும் விதமாகவும், இயேசுகிறிஸ்துவின் கரங்கள் விரிவாய்த் திறக்கப்பட்டதாக இருக்கிறது.

### மனுஷகுமாரன் யார்

**ஜனங்கள் அவரை நோக்கி: கிறிஸ்து என்றென்றைக்கும் இருக்கிறார் என்று வேதத்தில் சொல்லியதை நாங்கள் கேட்டிருக்கிறோம், அப்படியிருக்க மனுஷகுமாரன் உயர்த்தப்பட வேண்டியதென்று எப்படிச் சொல்லுகிறீர்; இந்த மனுஷகுமாரன் யார் என்றார்கள் (யோவா 12:34).**

இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்கிற ஜனங்களுக்கு மனுஷகுமாரனைப் பற்றி அறிந்துகொள்ளும் ஆர்வம் உண்டாயிற்று. அவர்கள் வானத்திலிருந்து உண்டான சத்தத்தைக் கேட்டிருக்கிறார்கள். ஆனால் அந்த சத்தம் இயேசுகிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனாக விசுவாசிப்பதற்கு அவர்களுக்குப் போதுமானதாகயில்லை. இயேசுகிறிஸ்துவின் உபதேசத்திற்கு மறுப்பு தெரிவித்து அவரோடு வாக்குவாதம் பண்ணுகிறார்கள். இயேசுகிறிஸ்து தம்மை "மனுஷகுமாரன்" (யோவா 12:23) என்று அழைக்கிறார். மேசியாவுக்கு கொடுக்கப்படும் பெயர்களில் "மனுஷகுமாரன்" என்பதும் ஒன்றாகும். யூதர்களெல்லோரும் மேசியாவும் மனுஷகுமாரனும் ஒரே நபரைக்குறிக்கும் பெயர் என்பதை அறிந்திருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து தம்மைப்பற்றிச் சொல்லும்போது "மனுஷகுமாரன் உயர்த்தப்படவேண்டும்" என்றும் சொல்லுகிறார். இந்த வாக்கியம் அவருடைய மரணத்தைக் குறிக்கிறது என்பதை யூதர்கள் அறிந்திருக்கிறார்கள்.

## அதிகாரம் - 12

இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தையும் பழைய ஏற்பாட்டு வேதவாக்கியங்களையும் யூதர்கள் ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள். மேசியாவாகிய "கிறிஸ்து என்றென்றைக்கும் இருக்கிறார்" என்றும், அவர் மரணத்தைக் காணமாட்டார், அவர் மரிக்காமல் நித்திய காலமாக ஜீவிக்கிறவர் என்றும் யூதர்கள் வேதவாக்கியங்களின் அடிப்படையில் மேசியாவைப்பற்றி அறிந்திருக்கிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ மனுஷகுமாரன் மரிக்கவேண்டும் என்னும் பொருளில், "உயர்த்தப்பட வேண்டும்" என்று கூறுகிறார். இந்த உபதேசத்தை யூதர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

இயேசுகிறிஸ்து மனுஷகுமாரனாக அதாவது தேவகுமாரனாக இருப்பாரென்றால், அவர் கிறிஸ்துவாக அதாவது மேசியாவாக இருக்கிறார். கிறிஸ்து என்றென்றைக்கும் இருக்கிறார் என்று வேதத்தில் சொல்லியிருக்கிறதை யூதர்கள் கேள்விப்பட்டிருக்கிறார்கள். மேசியாவின் பாடுகள் மரணம் ஆகியவற்றைப் பற்றியும் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த யூதர்கள் அந்த வசனத்தைப்பற்றி ஒரு வார்த்தைகூட பேசவில்லை. "அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்தில் ஊற்றி" (ஏசா 53:12) என்னும் வேதவாக்கியத்தை அவர்கள் இதுவரையிலும் வாசிக்கவேயில்லை என்று தெரிகிறது. பழைய ஏற்பாட்டு வேதவாக்கியத்தில் கிறிஸ்துவின் கைகளும் கால்களும் ஆணிகளால் அறையப்படும் என்று எழுதப்பட்டிருக்கும் வாக்கியத்தைக்கூட அவர்கள் வாசித்ததில்லை.

இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிற ஜனங்களுக்கு வேதவாக்கியத்தைப்பற்றி சரியாகத் தெரியவில்லை. தங்களுக்குப் பிடித்தமான சத்தியத்தை உறுதிபண்ணுவதற்கு வேதவாக்கியத்தை ஆதாரமாகக் கூறுகிறார்கள். ஒரு சத்தியத்தைத் தங்களுக்கு விசுவாசிக்கப் பிடிக்கவில்லையென்றால், வேதவாக்கியத்தில் அதைப்பற்றி எழுதப்பட்டிருக்கும் வசனத்தைப் பேசாமலேயே விட்டுவிடுகிறார்கள். ஆகையினால் "மனுஷகுமாரன் உயர்த்தப்பட வேண்டியது" என்னும் வேதவாக்கியம் அவர்களுக்கு விநோதமாகத் தெரிகிறது.

இயேசுகிறிஸ்து மனுஷகுமாரனுடைய பாடுகளைப்பற்றியும் மரணத்தைப்பற்றியும் பேசும்போது யூதர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். அதேவேளையில் "மனுஷகுமாரன் மகிமைப்படும்படியான வேளை வந்தது" என்று பேசும்போது யூதர்கள் ஒன்றுமே சொல்லவில்லை. இயேசுகிறிஸ்துவின் உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்கு பைத்தியமாக இருக்கிறது. சிந்தையில் தெளிவில்லாமல், தீயசிந்தனையுடையவர்களுக்கு, இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகள் இடறுவதற்கு ஏதுவான தடைக்கற்களாக இருக்கிறது.

அவர்கள் இயேசுகிறிஸ்துவிடம் "இந்த மனுஷகுமாரன் யார்" என்று கேட்கிறார்கள். மேலும் "மனுஷகுமாரன் உயர்த்தப்பட வேண்டியது, அதாவது மனுஷகுமாரன் மரிக்கவேண்டும்" என்று ஏன் சொல்லுகிறீர் என்றும் இயேசுகிறிஸ்துவிடம் கேட்கிறார்கள். கிறிஸ்து மரிக்கமாட்டார், என்றென்றைக்கும் இருக்கிறார் என்பதுதான் வேதத்தின் உபதேசம் என்றும், அவர் மரித்துப்போனாரென்றால் அவர் எவ்வாறு கிறிஸ்துவாக இருக்கமுடியும் என்றும், இவர்கள் இயேசுவிடம் விவாதம் பண்ணுகிறார்கள். பாடுகளை அனுபவிக்கிற கிறிஸ்துவை அங்கீகரிப்பதைவிட, அப்படிப்பட்ட கிறிஸ்து தங்களுக்குத் தேவையேயில்லை என்னும் முடிவுக்கு இந்த யூதர்கள் வந்துவிடுகிறார்கள்.

**ஒளியில் நடவுங்கள்**

**அதற்கு இயேசு: இன்னும் கொஞ்சக்காலம் ஒளி உங்களிடத்தில் இருக்கும்; இருளில் நீங்கள் அகப்படாதபடிக்கு ஒளி உங்களோடிருக்கையில் நடவுங்கள்; இருளில் நடக்கிறவன் தான் போகிற இடம் இன்னதென்று அறியான் (யோவா 12:35).**

யூதர்கள் மேசியாவைப்பற்றி தங்களுக்கு இஷ்டமானபடி எதிர்பார்க்கிறார்கள். வேதவாக்கியத்தின் ஒரு பகுதியை மாத்திரம் பிடித்துக்கொண்டு, மற்றொரு பகுதியைப்பற்றிப் பேசாமல், கிறிஸ்து இப்படித்தான் இருப்பார் என்று விவாதம்பண்ணுகிறார்கள். அவர்களுக்கு இயேசுகிறிஸ்து தொடர்ந்து உபதேசம்பண்ணுகிறார். மனுஷன் மரித்துப்போகிறான். அதேவேளையில் அவன் நித்தியகாலமாகவும் ஜீவிக்கிறான். அதுபோலவே மனுஷகுமாரனும் மரித்துப்போகிறார். அவர் என்றென்றைக்கும் இருக்கிறார்.

## அதிகாரம் - 12

யூதர்கள் இந்த சத்தியத்தை விசுவாசிக்கவேண்டும். அவர்களுக்குக் கிடைத்திருக்கும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, பகலில் நடக்கிறவர்கள்போல வெளிச்சத்தில் நடக்கவேண்டும். "இன்னும் கொஞ்சகாலம் ஒளி அவர்களிடத்தில் இருக்கும், இருளில் நீங்கள் அகப்படாதபடிக்கு, ஒளி உங்களோடிருக்கையில் நடவுங்கள்" என்று இயேசுகிறிஸ்து அவர்களிடம் கூறுகிறார்.

இயேசுகிறிஸ்து மனுஷருடைய ஆத்துமாக்களைக்குறித்தும், அவர்களுடைய நன்மையைக் குறித்தும் மிகுந்த கரிசனையோடிருக்கிறார். ஆனால் ஜனங்களுக்கோ இயேசுகிறிஸ்துவின் அன்பும் கரிசனையும் புரியவில்லை. அவருக்கு ஆதரவு கொடுப்பதற்குப் பதிலாக அவருக்கு விரோதமாக எதிர்த்து நிற்கிறார்கள். எதிர்பேசுகிறவர்கள் சத்தியத்தை அறியும்படி அவர்களுக்கு சாந்தமாய் உபதேசிக்கவேண்டும் (2தீமோ 2:25). இயேசுகிறிஸ்து அவர்களுக்கு சாந்தமாய் உபதேசம்பண்ணுகிறார்.

இயேசுகிறிஸ்துவும் அவருடைய சுவிசேஷமும் இப்போது யூதர்கள் மத்தியில் பிரத்தியட்சமாக இருக்கிறது. இதனால் அவர்களுக்கு மிகப்பெரிய ஆசீர்வாதம் உண்டு. இயேசுகிறிஸ்துவோ இன்னும் கொஞ்சகாலம் மாத்திரமே அவர்களோடு கூடயிருப்பார். இயேசுகிறிஸ்து ஒளியாக இருக்கிறார். இன்னும் கொஞ்சகாலம் ஒளி அவர்களிடத்தில் இருக்கும். இயேசுகிறிஸ்து சிலுவையில் மரிப்பது, சூரியன் மாலையில் மறைவதுபோல இருக்கும். மாலையில் சூரியன் மறைந்தாலும் மறுபடியும் அது காலையிலும் உதிக்கும். ஒவ்வொரு நாள் மாலையிலும் சூரியன் மறைந்துகொண்டேயிருக்கும். காலையிலும் ஒவ்வொருநாள் உதித்துக்கொண்டேயிருக்கும். இது நித்தியமாக நடைபெறும் சம்பவம். நீதியின் சூரியனாகிய இயேசுகிறிஸ்துவும் நித்திய காலமாக ஜீவிக்கிறவர். கிறிஸ்து என்றென்றைக்கும் இருக்கிறார்.

ஒளியாகிய இயேசுகிறிஸ்து இப்போது யூதர்களிடத்தில் இருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் சரீரப்பிரகாரமான பிரத்தியட்சமான பிரசன்னம் அவர்களோடு கூடயிருக்கிறது. இந்த சிலாக்கியம் அவர்களுக்கு சிறிதுகாலம் மாத்திரமே இருக்கும். வெகுவிரைவில் இயேசுகிறிஸ்து அவர்களைவிட்டுக் கடந்துபோய்விடுவார். ஒளி நம்மோடு கொஞ்சகாலம் மாத்திரமே இருக்கும் என்னும் சிந்தனை நம்முடைய மனதில் பதிந்திருப்பது மிகவும் நல்லது. ஒளி நம்மோடு இருக்கும்போதே நாம் நடக்கவேண்டிய இடத்திற்கு நடந்துபோய்விடவேண்டும். நமக்கு நியமிக்கப்பட்டிருக்கும் ஊழியத்தைச் செய்து முடித்துவிடவேண்டும். கொஞ்சகாலம் மாத்திரமே நமக்கு இருக்கிறது. வாய்ப்பு எப்போதும் வருவதில்லை. வாய்ப்பு இருக்கும்போதே நம்முடைய ஊழியத்தை நிறைவேற்றவேண்டும்.

யூதர்களுக்கு மிகப்பெரிய சிலாக்கியம் இப்போது கிடைத்திருக்கிறது. அவர்கள் இயேசுகிறிஸ்துவை பிரத்தியட்சமாகப் பார்த்து, அவருடைய உபதேசங்களைத் தங்களுடைய காதுகளால் கேட்கவும், அவருடைய அற்புதங்களைத் தங்கள் கண்களால் பார்க்கவும் யூதர்களுக்கு விசேஷித்த சிலாக்கியம் கிடைத்திருக்கிறது. இதை இவர்கள் அனுபவிக்கிறார்கள். இந்த ஒளி அவர்களோடு இருக்கும்போது அவர்கள் நடக்கவேண்டும். ஒரு இடத்திற்கு பிரயாணம் பண்ணுகிறவர்கள் வெளிச்சம் இருக்கும்போது பிரயாணம் பண்ணுவார்கள். தங்களுக்கு அநுகூலமான சூழ்நிலைகள் இருக்கும்போது அதைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, தங்களுடைய பிரயாணத்தில் முன்னேறிச் செல்வார்கள். விசுவாசிகளாகிய நாம் இந்த பூமியில் இருக்கும்போது நமக்கும் ஒரு பிரயாணம் நியமிக்கப்பட்டிருக்கிறது. நாம் மோட்சப்பிரயாணத்தை மேற்கொண்டிருக்கிறோம். நம்மிடத்தில் ஒளி இருக்கும்போதே நாம் பரலோகத்தை நோக்கிப் பிரயாணம் செய்யவேண்டும். பகற்காலம் வேலைசெய்வதற்கு ஏற்றகாலமாகவும், இரவுகாலம் ஓய்வு எடுப்பதற்கு ஏற்றகாலமாகவும் இருக்கிறது. ஆகையினால் நமக்குக் கிடைத்திருக்கும் வாய்ப்புக்களை பிரயோஜனப்படுத்திக்கொள்ளவேண்டும்.

## அதிகாரம் - 12

நம்முடைய பகற்காலம் முடியும் முன்பாக நமக்கு நியமிக்கப்பட்டிருக்கும் ஊழியத்தை நிறைவேற்றவேண்டும். பகற்காலம் முடிந்துபோனால் நம்மால் ஒன்றும் செய்யமுடியாது. பகற்காலத்தில் நிறைவேற்றப்படாத ஊழியங்கள் நிறைவேற்றப்படாதவையாகவே இருக்கும். தேவன் நம்மிடத்தில் பொறுப்பாக ஒப்புக்கொடுத்திருக்கும் ஊழியத்தை நாம் நிறைவேற்றாதவர்களாகவே நியாயந் தீர்க்கப்படுவோம். ஆகையினால் இருளில் நாம் அகப்படாதபடிக்கு ஒளி நம்மோடிருக்கையில் நடக்கவேண்டும்.

இந்தப் பூமியிலுள்ள ஜனங்களில் சிலர் சுவிசேஷத்திற்குச் செவிகொடுக்காமல் பாவத்திற்குத் தங்களை ஒப்புக்கொடுக்கிறார்கள். பாவத்தில் ஜீவிக்கிறார்கள். இவர்கள் இருளில் நடக்கிறவர்கள். தாங்கள் போகிற இடம் இன்னதென்று இவர்களுக்குத் தெரியாது. தாங்கள் போகிறோமா என்பதும், அப்படியே போனாலும் தாங்கள் எங்கு போகிறோம் என்பதும் இவர்களுக்குத் தெரியாது. சுவிசேஷத்தின் சத்தியம் நம்முடைய இருதயத்தில் இல்லையென்றால், நன்மைக்கும் தீமைக்கும் நம்மால் வித்தியாசம் காணமுடியாது. இருளில் நடக்கிறவர்கள் அழிவை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் தங்களுக்கு முன்பாக இருக்கும் ஆபத்தை அறியாதவர்களாக இருக்கிறார்கள்.

**ஒளியின் பிள்ளைகள்**

**ஒளி உங்களோடிருக்கையில் நீங்கள் ஒளியின் பிள்ளைகளாகும்படிக்கு, ஒளியினிடத்தில் விசுவாசமாயிருங்கள் என்றார். இவைகளை இயேசு சொல்லி, அவர்களை விட்டு மறைந்தார் (யோவா 12:36).**

இயேசுகிறிஸ்துவின் உபதேசத்திலிருந்து நமக்கு மிகவும் முக்கியமான சத்தியம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. ஒளி நம்மோடிருக்கிறது. நாம் அந்த ஒளியினிடத்தில் விசுவாசமாயிருக்கும்போது ஒளியின் பிள்ளைகளாக ஆவோம். இயேசுகிறிஸ்து தம்மைப்பற்றிய சத்தியத்தை யூதர்களுக்கு வெளிப்படுத்திக் கூறுகிறார். சத்தியத்தைக் கேட்கிற அவர்கள் அதைத் தங்கள் இருதயத்தில் ஏற்றுக்கொள்ளாமல் போய்விடக்கூடாது. அவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கப்படும்போது, அந்த வாய்ப்பைத் தங்களுடைய ஆத்துமாவுக்கு ஆதாயம் உண்டாகத்தக்கதாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும். தற்காலத்தில் இயேசுகிறிஸ்துவின் சத்தியம் சுவிசேஷத்தின் மூலமாக எல்லா ஜனங்களுக்கும் அறிவிக்கப்படுகிறது. நாம் அந்த சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டால் நமக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதம் உண்டாகும். சுவிசேஷத்தை விசுவாசித்து நாம் சத்தியத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும். இயேசுகிறிஸ்துவின் வார்த்தை நம்முடைய கணக்களுக்கு வெளிச்சமாகயிருக்கிறது. நம்முடைய கால்களுக்குத் தீபமாகயிருக்கிறது. இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றி நம்முடைய ஆவிக்குரிய பிரயாணத்தில் முன்னேறிச் செல்லவேண்டும்.

நம்மிடத்தில் ஒளியிருக்கும்போதுதான் நம்மால் பிரயாணம்பண்ண முடியும். இந்த ஒளியினிடத்தில் விசுவாசமாகயிருந்து தேவனைப்பற்றிக்கொள்ளவேண்டும். அப்போது நாம் ஒளியின் பிள்ளைகளாகயிருப்போம். தேவன் நம்முடைய பிதாவாகயிருப்பார். தேவன் ஒளியாகயிருப்பதினால், தேவனுடைய பிள்ளைகள் "ஒளியின் பிள்ளைகள்" என்று இங்கு அழைக்கப்படுகிறார்கள்.

இயேசுகிறிஸ்து இந்த வார்த்தைகளைச் சொல்லி, அவர்களைவிட்டு மறைந்துபோகிறார். இவர்களுக்கு என்னென்ன சத்தியங்களையெல்லாம் உபதேசம்பண்ண வேண்டுமோ அவையெல்லாவற்றையும் இயேசுகிறிஸ்து உபதேசம்பண்ணியிருக்கிறார். இதற்குமேல் அவர்களுக்கு உபதேசம்பண்ண வேண்டிய தேவையில்லையென்று இயேசு தீர்மானித்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் சத்திய வசனங்களை அவர்கள் தியானித்துப் பார்த்து தங்களுடைய இருதயத்தில் உணர்த்தப்பட்டு, இயேசுவை கிறிஸ்துவாகவும், தேவனுடைய குமாரனாகவும் அங்கீகரிக்கவேண்டும். இயேசுகிறிஸ்து இவர்களோடு இதற்குமேல் விவாதம்பண்ண விரும்பவில்லை. அவர் வாக்குவாதம் பண்ணுகிறவரல்ல. இயேசுகிறிஸ்து அவர்களைவிட்டு மறைந்துபோகும்போது, தேவனுடைய கிருபையும் அவர்களைவிட்டு மறைந்துபோகிறது.

## அதிகாரம் - 12

இயேசுகிறிஸ்து தம்முடைய ஜீவனையும் குறித்து கவனமாயிருக்கிறார். ஏற்றவேளை வருவதற்கு முன்பாக அவர் மரித்துப்போக ஆயத்தமாயில்லை. யூதஜனங்கள் இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைக்கேட்டு அவர்மீது கோபமாகயிருக்கிறார்கள். அவரைக் கொலைசெய்து போடவேண்டுமென்று வகைதேடுகிறார்கள். ஆகையினால் இயேசுகிறிஸ்து அவர்களுடைய துன்மார்க்கமான சிந்தனைகளுக்கு இடங்கொடுக்காமல் அந்த இடத்தைவிட்டு மறைந்துபோய்விடுகிறார்.

### ஏசாயாவின் தீர்க்கதரிசனம்
### யோவா 12 : 37-41

**யோவா 12:37. அவர் இத்தனை அற்புதங்களை அவர்களுக்கு முன்பாகச் செய்திருந்தும், அவர்கள் அவரை விசுவாசிக்கவில்லை.**

**யோவா 12:38. கர்த்தாவே, எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது என்று ஏசாயா தீர்க்கதரிசி சொன்ன வசனம் நிறைவேறும்படி இப்படி நடந்தது.**

**யோவா 12:39. ஆகையால் அவர்கள் விசுவாசிக்கமாட்டாமல்போனார்கள். ஏனெனில் ஏசாயா பின்னும்:**

**யோவா 12:40. அவர்கள் கண்களினால் காணாமலும், இருதயத்தினால் உணராமலும், குணப்படாமலும் இருக்கும் படிக்கும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமல் இருக்கும்படிக்கும், அவர்களுடைய கண்களை அவர் குருடாக்கி, அவர்கள் இருதயத்தைக் கடினமாக்கினார் என்றான்.**

**யோவா 12:41. ஏசாயா அவருடைய மகிமையைக் கண்டு, அவரைக்குறித்துப் பேசுகிறபோது இவைகளைச் சொன்னான்.**

### இத்தனை அற்புதங்கள்

**அவர் இத்தனை அற்புதங்களை அவர்களுக்கு முன்பாகச் செய்திருந்தும், அவர்கள் அவரை விசுவாசிக்கவில்லை (யோவா 12:37).**

இயேசுகிறிஸ்து ஜனங்களுக்கு முன்பாக ஏராளமான அற்புதங்களைச் செய்திருக்கிறார். ஆனால் அவர்களோ அவரை விசுவாசிக்கவில்லை. இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தைப்பற்றிப் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் ஏற்கெனவே முன்னறிவித்திருக்கிறார்கள். ஜனங்கள் கிறிஸ்துவிடத்தில் விசுவாசம் வைக்கமாட்டார்கள் என்று தீர்க்கதரிசிகள் ஏற்கெனவே முன்னுரைத்து, ஜனங்களுடைய அவிசுவாசத்திற்காகப் புலம்பியிருக்கிறார்கள். பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளில் ஏசாயா ஜனங்களுடைய அவிசுவாசத்தைப்பற்றி அதிகமாகத் தீர்க்கதரிசனம் கூறியிருக்கிறார். கிறிஸ்துவை அவர்கள் விசுவாசிக்கவில்லையென்றும், அவர்களால் விசுவாசிக்கமுடியவில்லையென்றும் ஏசாயா முன்னறிவித்திருக்கிறார்.

இயேசுகிறிஸ்து ஏராளமான அற்புதங்களை யூதர்களுக்கு முன்பாகச் செய்திருக்கிறார். ஆனால் அவர்களோ அவரை விசுவாசிக்கவில்லை. தாமே தேவனுடைய குமாரன் என்பதை நிரூபிப்பதற்கு இயேசுகிறிஸ்து செய்த இத்தனை அற்புதங்கள் போதுமானது. அவை எண்ணிக்கையில் அதிகம். ஒவ்வொன்றும் பலத்த அற்புதம். அவர் பெரிய காரியங்களைச் செய்திருக்கிறார். இயேசுகிறிஸ்து செய்த அற்புதங்களைப்பற்றி யோவான் இரண்டு காரியங்களை விவரிக்கிறார். "இத்தனை அற்புதங்கள்" என்று கூறி இயேசுகிறிஸ்து செய்த அற்புங்களின் எண்ணிக்கையை எழுதுகிறார். ஒவ்வொரு அற்புதமும் இயேசுகிறிஸ்துவின் தெய்வத்துவத்தை உறுதிபண்ணுகிறது. இயேசுகிறிஸ்து செய்த அற்புங்களெல்லாம் இரக்கத்தின் அற்புதங்களாகும். அவர் எத்தனை அற்புதங்கள் செய்தாரோ அந்த அளவுக்கு ஜனங்களுக்கு நன்மை உண்டாயிற்று.

இயேசு செய்த எல்லா அற்புங்களையும் அவர்கள் தங்கள் கண்களால் கண்ட சாட்சிகளாகயிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்து தம்முடைய அற்புதங்களையெல்லாம் ஏதோ ஒரு மூலையில், யாருக்கும் தெரியாமல் இரகசியமாகச் செய்யவில்லை. அவர்களுக்கு முன்பாகவே இயேசுகிறிஸ்து இத்தனை அற்புங்களைச் செய்திருக்கிறார். அவர்களே அவற்றிற்குச் சாட்சிகளாகயிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து செய்த இத்தனை அற்புதங்களை அவர்கள் தங்கள் கண்களால் பார்த்திருந்தும், இயேசுவைக் கிறிஸ்து என்றும், மேசியா என்றும், தேவனுடைய குமாரனென்றும், தேவனால் அனுப்பப்பட்டவரென்றும் விசுவாசிக்கவில்லை.

## அதிகாரம் - 12

### விசுவாசிக்கமாட்டாமல் போனார்கள்

**கர்த்தாவே, எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது என்று ஏசாயா தீர்க்கதரிசி சொன்ன வசனம் நிறைவேறும்படி இப்படி நடந்தது. ஆகையால் அவர்கள் விசுவாசிக்கமாட்டாமல் போனார்கள். ஏனெனில் ஏசாயா பின்னும்: (யோவா 12:38,39).**

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் ஏசாயா கூறிய தீர்க்கதரிசனம் இயேசுகிறிஸ்துவின் காலத்தில் நிறைவேறுகிறது. ஏசாயா தீர்க்கதரிசி சொன்ன வசனம் நிறைவேறும்படி இப்படி நடந்தது என்று யோவான் எழுதுகிறார். நடைபெறுகிற சம்பவம் மிகவும் முக்கியமானதாக இருந்தாலும் ஒரு சிலர் அதற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் அதைச் சாதாரணமாக எடுத்துக்கொள்கிறார்கள். இயேசுகிறிஸ்து செய்கிற அற்புதங்கள் அவருடைய தெய்வத்துவத்தை உறுதிபண்ணுவதற்காக செய்யப்படுகிறது. ஆனால் இவர்களோ அவர் செய்கிற அற்புதங்களைத் தங்கள் கண்களால் பார்த்தும் அவரை விசுவாசியாமலிருக்கிறார்கள். தேவனுடைய ராஜ்யத்தை நிரூபிப்பதற்காக இப்படிப்பட்ட அற்புதங்கள் வரலாற்றில் இதுவரையிலும் நடைபெற்றதேயில்லை. அதே வேளையில் யூதர்கள் இயேசுகிறிஸ்துவுக்கும் அவருடைய அற்புத செய்கைகளுக்கும் எதிர்த்து நிற்பதுபோல வரலாற்றில் எந்த ஜனங்களும் தேவனுடைய அற்புத செய்கைகளுக்கு இதுவரையிலும் எதிர்த்து நின்றதுமில்லை. ஜனங்களுடைய அவிசுவாசம் "அற்புதமும் ஆச்சரியமுமானது" என்று ஏசாயா கூறுகிறார் "இதோ நான் அற்புதமும் ஆச்சரியமுமான பிரகாரமாக இந்த ஜனங்களுக்குள்ளே ஒரு அதிசயத்தைச் செய்வேன்" (ஏசா 29:14).

ஜனங்களுடைய விசுவாசம் இயேசுகிறிஸ்துவுக்கும் ஆச்சரியமாக இருக்கிறது. "எங்கள் மூலமாய் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார். கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது" (ஏசா 53:1) என்று ஜனங்களுடைய அவிசுவாசத்தைக்குறித்து ஏசாயா முன்னறிவித்திருக்கிறார். தேவனுடைய வார்த்தை தீர்க்கதரிசிகள் மூலமாய் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. தங்கள் மூலமாய் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார் என்று ஏசாயா கேட்கிறார். ஏராளமானோர் சுவிசேஷச் செய்தியைக் கேள்விப்படுகிறார்கள். ஆனால் ஒருசிலர் மாத்திரமே அந்தச் செய்தியைத் தங்களுடைய இருதயத்தில் ஏற்றுக்கொண்டு விசுவாசிக்கிறார்கள். இங்கு ஒருவரும், அங்கு ஒருவருமாக மாத்திரமே இரட்சிக்கப்படுகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை எல்லோரும் விசுவாசிப்பதில்லையென்பது ஒரு துக்ககரமான சம்பவம். ஜனங்கள் சத்தியத்தை ஏற்றுக்கொள்ள மனதில்லாதிருக்கிறார்கள். அவர்களுடைய அவிசுவாசத்திற்கான காரணத்தையும் ஏசாயா முன்னறிவித்துக் கூறியிருக்கிறார். அவர்களுக்குக் கர்த்தருடைய புயம் வெளிப்படுத்தப்படவில்லை. ஆகையினால் அவர்கள் மேசியாவை விசுவாசிக்கவில்லை. யூதர்கள் இயேசுகிறிஸ்து செய்கிற அற்புதங்களைப் பார்க்கிறார்கள். ஆனால் அந்த அற்புதங்களில் இயேசுகிறிஸ்துவின் புயம் வெளிப்படுத்தப்பட்டிருப்பதை அவர்கள் பார்க்கவில்லை.

### கண்களைக் குருடாக்கினார்

**அவர்கள் கண்களினால் காணாமலும், இருதயத்தினால் உணராமலும், குணப்படாமலும் இருக்கும்படிக்கும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமல் இருக்கும்படிக்கும், அவர்களுடைய கண்களை அவர் குருடாக்கி, அவர்கள் இருதயத்தைக் கடினமாக்கினார் என்றான் (யோவா 12:40).**

தேவன் அவர்களுடைய கண்களைக் குருடாக்கியிருப்பதினால் அவர்களால் இயேசுவைக் கிறிஸ்து என்று விசுவாசிக்க முடியவில்லை. இந்த வாக்கியம் மிகவும் கடினமானதாகயிருக்கிறது. இதை விவரிப்பது சற்று கடினம். தேவன் தம்முடைய தெய்வீக ஆதீனத்தில் யாருடைய கண்களையும் குருடாக்குவதில்லை. ஆனாலும் தாம் அற்புதம் செய்தும், தம்முடைய தெய்வீக வல்லமையை ஒருவர் விசுவாசிக்காவிட்டால், தேவன் அந்த நபருடைய கண்களைக் குருடாக்கிவிடுகிறார். ஆகையினால் அவர்கள் இயேசுவைக் கிறிஸ்து என்று விசுவாசிக்கமாட்டாமல் போய்விடுகிறார்கள். அவர்களுடைய கண்கள் குருடாக்கப்பட்டிருப்பதினால், அவர்களால் கிறிஸ்துவைக் காணவும் முடியாது, கிறிஸ்துவை விசுவாசிக்கவும் முடியாது.

## அதிகாரம் - 12

அவர்களால் விசுவாசிக்க முடியாது. ஆகையினால்அவர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கவில்லை. தங்களுடைய அவிசுவாசத்தில் தாங்கள் நிலைத்திருக்கவேண்டுமென்று அவர்கள் தீர்மானமாக இருக்கிறார்கள். கிறிஸ்துவை விசுவாசிக்கவேண்டும் என்னும் சிந்தனை அவர்களிடத்தில் சிறிதும் இல்லை. ஆவிக்குரிய ரீதியாக அவர்கள் செயலற்றுப்போய்விட்டார்கள். ஒரு சிலர் தீமையைச் செய்யவேண்டுமென்று விரும்பி, அதைச் செய்து, அதில் பழகிவிடுவார்கள். இப்படிப்பட்டவர்களால் தீமையை மாத்திரமே செய்யமுடியும். நன்மையைச் செய்யவே முடியாது. "எத்தியோப்பியன் தன் தோலையும், சிவிங்கி தன் புள்ளிகளையும் மாற்றக்கூடுமோ? கூடுமானால், தீமையை செய்யப்பழகின நீங்களும் நன்மை செய்யக்கூடும்" (எரே 13:23) என்று எரேமியா கூறுகிறார். அதுபோலவே அவிசுவாசத்தில் பழகிப்போன இவர்களால், கிறிஸ்துவை விசுவாசிக்கமுடியாது.

தேவன் இவர்களுடைய கண்களைக் குருடாக்கியிருக்கிறார். ஆகையால் இவர்கள் விசுவாசிக்கமாட்டாமல் போனர்கள். இவர்களால் கிறிஸ்துவை விசுவாசிக்க முடியாது. தேவன் பாவத்திற்கு காரண கர்த்தா அல்ல. ஆனாலும் ஒரு சிலர் பிடிவாதமாக, வேண்டுமென்றே அவிசுவாசத்தில் நிலைத்திருக்கும்போது, தேவன் தம்முடைய நீதியினால் அவர்களை அப்படியே விட்டுவிடுகிறார். அவர்களுடைய ஆவிக்குரிய குருட்டுத்தன்மையைத் தேவன் அங்கீகரிக்கிறார். தேவனுடைய வெளிச்சத்திற்கு வரமாட்டோம் என்று இவர்கள் வைராக்கியமாக இருக்கிறார்கள். தேவன் இவர்களை நீதியாகத் தண்டிக்கும் வண்ணமாக, இவர்களுடைய ஆவிக்குரிய கண்களைக் குருடாக்கிவிடுகிறார். ஆகையினால் இவர்களால் தேவனை விசுவாசிக்கமுடியாது.

அவிசுவாசிகள் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் தேவனுடைய கிருபையை அவமாக்கிப்போட்டிருக்கிறார்கள். தம்முடைய கிருபையை மதிக்காத அவிசுவாசிகளிடமிருந்து தேவன் தம்முடைய கிருபையை நீக்கிப்போடுகிறார். அவர்கள் விரும்பிய ஆசை இச்சைகளுக்கு அவர்களை ஒப்புக்கொடுத்துவிடுகிறார். அதன்பின்பு அவர்களுடைய கண்களைக் குருடாக்கி, அவர்களுடைய இருதயங்களை கடினப்படுத்திவிடுகிறார். இதுவே தேவன் அவர்கள்மீது காண்பிக்கும் ஆவிக்குரிய நியாயத்தீர்ப்பு ஆகும்.

ஒரு பாவி மனந்திரும்பும்போது ஒவ்வொரு நிலையாக அவன் கடந்து வரவேண்டும். முதலாவதாக பாவிகள் தங்கள் கண்களால் காணவேண்டும். தேவனுடைய காரியங்கள் உண்மையானவை என்பதை அவர்கள் பகுத்தறிந்து உணரவேண்டும். அதன்பின்பு பாவிகள் தேவனுடைய காரியங்களைத் தங்கள் இருதயங்களில் உணரவேண்டும். தேவனுடைய காரியங்களை அங்கீகரித்தால் மாத்திரம் போதாது. அவற்றை உணர்ந்து தங்கள் இருதயங்களில் ஏற்றுக்கொள்ளவும்வேண்டும். இதற்குப் பின்பு அவர்கள் குணப்படவேண்டும். இவர்களுடைய இருதயம் மனமாற்றமடைய வேண்டும். பாவத்தை வெறுத்து நீதிக்குத் திரும்பவேண்டும். மெய்யாகவே இவர்கள் பாவத்தைவிட்டு விலகி இயேசுகிறிஸ்துவிடம் திரும்பி வரவேண்டும். அப்போதுதான் தேவன் இவர்களை குணப்படுத்துவார். இவர்களுடைய பாவங்களை மன்னிப்பார். இவர்களிடத்தில் வியாதிகளைப் போலயிருக்கிற துன்மார்க்கமான சுபாவங்களை இவர்களைவிட்டு நீக்கிப்போடுவார்.

கண்களைக் குருடாக்குவது, இருதயங்களைக் கடினமாக்குவது ஆகியவை தேவன் துன்மார்க்கருக்குக் கொடுக்கும் தண்டனையாகும். இது மாம்சப்பிரகாரமான குருட்டுத்தன்மையோ அல்லது இருதயக்கடினமோ அல்ல. இது தேவனுடைய நீதியின் பிரகாரம் உண்டாகக்கூடிய ஆவிக்குரிய குருட்டுத்தன்மையும், ஆவிக்குரிய இருதயக்கடினமும் ஆகும். தங்களுடைய துன்மார்க்கத்தில் தொடர்ந்து துணிகரமாக ஈடுபட்டுக்கொண்டிருப்போருக்கு தேவன் தமது நீதியினால் இப்படிப்பட்ட தண்டனையைக் கொடுக்கிறார். நாம் தேவனுடைய காரியங்களைக் கண்டு உணரும்போது அவருடைய கிரியைகள் எல்லாவற்றையும் கண்டு உணருவோம். நம்முடைய கிரியைகளையும் நாம் ஆராய்ந்து பார்ப்போம். நம்முடைய காரியங்கள் எதுவும் தேவனுக்கு முன்பாக மறைவாகயிராது. தம்மை யார் காட்டிக்கொடுக்கப்போகிறவன் என்பதை இயேசுகிறிஸ்து ஏற்கெனவே அறிந்திருக்கிறார்.

## அதிகாரம் - 12

தேவன் முன்னறிவித்திருக்கும் காரியங்கள் நிச்சயமாகவே நிறைவேறும். ஆகையினால்தான் அவர்கள் தேவனை விசுவாசிக்கமாட்டாமல்போனார்கள். தேவன் சர்வஞானமுள்ளவர். எல்லாக் காரியங்களையும் அவர் முன்னறிந்திருக்கிறவர். எந்தக் காரியமும் அவருடைய முன்னறியும் ஆற்றலை வஞ்சிக்க முடியாது. அதே சமயத்தில் தேவன் எதை முன்னறிவிக்கிறாரோ அந்தச் சத்தியத்தை அவர் வஞ்சிப்பதோ அல்லது மாற்றுவதோ இல்லை.

ஏசாயா இந்தத் தீர்க்கதரிசனத்தைக் கூறும்போது, தான் இதை ஒரு குறிப்பிட்ட நபருக்குக் கூறுவதாக யாருடைய பெயரையும் குறிப்பிடவில்லை. யூததேசத்திற்கு ஏசாயாவின் தீர்க்கதரிசனம் அறிவிக்கப்படுகிறது. தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் அவரை விசுவாசிக்கிறார்கள். இஸ்ரவேலில் மீதமுள்ள ஜனங்கள் தேவனிடத்தில் பக்தியுள்ளவர்களாக இருக்கிறார்கள். இவர்களுக்குத் தேவனுடைய ஆசீர்வாதத்தின் வாசல்கள் திறந்தேயிருக்கிறது. ஆனாலும் ஒரு சிலர் குருட்டுக்கண்களோடு, இருதயத்தில் உணர்வில்லாமல் தேவனை விசுவாசியாமலிருக்கிறார்கள். இவர்களால் தேவனை விசுவாசிக்கவும் முடியாது.

**ஏசாயா அவருடைய மகிமையைக் கண்டார்**

**ஏசாயா அவருடைய மகிமையைக் கண்டு, அவரைக்குறித்துப் பேசுகிறபோது இவைகளைச் சொன்னான் (யோவா 12:41).**

ஏசாயா தான் கண்ட தரிசனத்தை இவ்வாறு எழுதுகிறார். "உசியா ராஜா மரணமடைந்த வருஷத்தில், ஆண்டவர் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கக் கண்டேன்; அவருடைய வஸ்திரத்தொங்கலால் தேவாலயம் நிறைந்திருந்தது. சேராபீன்கள் அவருக்கு மேலாக நின்றார்கள்; அவர்களில் ஒவ்வொருவனுக்கும் அவ்வாறு செட்டைகளிருந்தன; அவனவன் இரண்டு செட்டைகளால் தன் தன் முகத்தை மூடி, இரண்டு செட்டைகளால் தன் தன் கால்களை மூடி, இரண்டு செட்டைகளால் பறந்து; ஒருவரையொருவர் நோக்கி: சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது என்று கூப்பிட்டுச் சொன்னார்கள். கூப்பிடுகிறவர்களின் சத்தத்தால் வாசல்களின் நிலைகள் அசைந்து, ஆலயம் புகையினால் நிறைந்தது" (ஏசா 6:1-4).

"பின்பு: யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன். அதற்கு நான்: இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும் என்றேன். அப்பொழுது அவர்: நீ போய், இந்த ஜனங்களை நோக்கி, நீங்கள் காதாரக் கேட்டும் உணராமலும், கண்ணாரக்கண்டும் அறியாமலும் இருங்கள் என்று சொல். இந்த ஜனங்கள் தங்கள் கண்களினால் காணாமலும், தங்கள் காதுகளினால் கேளாமலும், தங்கள் இருதயத்தினால் உணர்ந்து குணப்படாமலும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமலுமிருக்க, நீ அவர்கள் இருதயத்தைக் கொழுத்ததாக்கி, அவர்கள் காதுகளை மந்தப்படுத்தி, அவர்கள் கண்களை மூடிப்போடு என்றார்" (ஏசா 6:8-10) என்றும் ஏசாயாதான் கண்ட தரிசனத்தைப் பற்றி எழுதுகிறார்.

ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தை யோவான் இங்கு மேற்கோளாகக் குறிப்பிட்டு எழுதுகிறார். கர்த்தருடைய நாளைப்பற்றி ஏசாயா தீர்க்கதரிசனமாக அறிவிக்கிறார். அவருடைய மகிமையைக் கண்டு அவரைக் குறித்து பேசுகிறபோது ஏசாயா இவைகளைச் சொன்னதாகவும் யோவான் எழுதுகிறார் (ஏசா 6:1-10)

ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகவே ஏசாயாவுக்குத் தேவன் தம்முடைய செய்தியை வெளிப்படுத்தியிருக்கிறார். தேவன் தங்களுக்குச் சொல்லாமல், தீர்க்கதரிசிகள் எந்தச் செய்தியையும் முன்னறிவிக்கமாட்டார்கள். ஏற்கெனவே முன்னறிவிக்கப்பட்ட தீர்க்கதரிசனத்தை அவர்கள் மாற்றியும் பேசமாட்டார்கள். தேவனுடைய மகிமையை ஏசாயா தீர்க்கதரிசி கண்டதை, யோவான் இயேசுகிறிஸ்துவின் மகிமையைக் கண்டதாக எழுதுகிறார். யூதர்கள் ஏசாயாவை விசுவாசிக்கிறார்கள். ஏசாயா பரலோகத்திலிருந்து செய்தியைப் பெற்றுக் கொண்டு தங்களுக்குத் தீர்க்கதரிசனமாக முன்னறிவித்திருப்பதையும் விசுவாசிக்கிறார்கள்.

## அதிகாரம் - 12

தேவனுடைய மகிமையை ஏசாயா கண்டதாக விசுவாசிக்கிற யூதர்களால், அவன் இயேசுகிறிஸ்துவின் மகிமையைக் கண்டான் என்பதை விசுவாசிக்க முடியவில்லை. ஏனெனில் இவர்கள் செவிகள் மந்தமாகயிருக்கிறது. திரளான யூதர்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசியாமலிருந்தாலும், அப்படிப்பட்ட ஜனங்களுக்கு மத்தியிலும் இயேசுகிறிஸ்து மகிமைப்படுத்தப்படுகிறார். இஸ்ரவேலில் மீதியாகயிருப்பவர்களுக்குத் தேவனுடைய இரட்சிப்பு வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. அவர்கள் கிறிஸ்துவை விசுவாசிப்பார்கள். அவர்கள் மூலமாகவே கிறிஸ்துவின் நாமம் மகிமைப்படும். ஏராளமான யூதர்கள் ஆவிக்குரிய குருடர்களாகயிருந்தாலும், முற்குறிக்கப்பட்டவர்களுடைய ஆவிக்குரிய கண்கள் பிரகாசமாகத் திறந்திருக்கிறது. இவர்களே கிறிஸ்துவை மகிமைப்படுத்துகிறார்கள்.

### அதிகாரிகளின் விசுவாசம்
### யோவா 12 : 42,43

**யோவா 12:42. ஆகிலும் அதிகாரிகளிலும் அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள். அப்படியிருந்தும் ஜெபஆலயத்துக்குப் புறம்பாக்கப்படாதபடி, பரிசேயர்நிமித்தம் அதை அறிக்கை பண்ணாதிருந்தார்கள்.**

**யோவா 12:43. அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்பினார்கள்.**

### அறிக்கைபண்ணாதிருந்தார்கள்

**ஆகிலும் அதிகாரிகளிலும் அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள். அப்படியிருந்தும் ஜெபஆலயத்துக்குப் புறம்பாக்கப்படாதபடி, பரிசேயர்நிமித்தம் அதை அறிக்கைபண்ணாதிருந்தார்கள் (யோவா 12:42).**

யூதமதத்தில் அதிகாரிகளாகயிருக்கிற அநேகர் இயேசுகிறிஸ்துவிடத்தில் விசுவாசம் வைத்திருக்கிறார்கள். இது இயேசு கிறிஸ்துவுக்குக் கிடைத்திருக்கும் கனமும் மகிமையும் ஆகும். ஆனால் இந்த அதிகாரிகளோ இயேசுவைக் கனப்படுத்தவில்லை. தாங்கள் இயேசுகிறிஸ்துவினிடத்தில் விசுவாசம் வைத்திருப்பதை அறிக்கைபண்ணுவதற்கு அதிகாரிகள் பயப்படுகிறார்கள். இக்காலத்தில் அநேக விசுவாசிகள் அதிகாரிகளுக்கு நேர்மாறாக இருக்கிறார்கள். தங்களுக்கு இயேசுகிறிஸ்துவிடத்தில் மெய்யாகவே இருக்கும் அன்பைவிட, தங்களுக்கு அவரிடத்தில் அதிக அன்பு இருப்பதாக அறிக்கை செய்கிறார்கள். அதுபோலவே கிறிஸ்துவின் ஊழியக்காரர்களில் அநேகர் தாங்கள் இயேசுகிறிஸ்துவுக்காக மெய்யாகவே செய்யும் ஊழியத்தைவிட, அதிகமாகச் செய்வதாக அறிக்கைபண்ணுகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் வார்த்தை வல்லமையும் அதிகாரமுமுள்ளது. மனுஷருடைய இருதயத்தை அவருடைய வார்த்தை உணர்த்துகிறது. பாவத்தைக்குறித்தும் நீதியைக்குறித்தும் இயேசுகிறிஸ்துவின் வார்த்தை மனுஷருடைய உள்ளத்தில் பேசுகிறது. அதிகாரிகளில் அநேகர் இயேசுகிறிஸ்துவினிடத்தில் விசுவாசம் வைத்திருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து தேவனிடத்திலிருந்து வந்திருக்கிற போதகரென்று, நிக்கொதேமுவைப்போல அநேக அதிகாரிகள் விசுவாசிக்கிறார்கள். ஆனாலும் இயேசுகிறிஸ்துவினிடத்தில் தாங்கள் வைத்திருக்கும் விசுவாசத்தை இவர்களால் வெளிப்படையாக அறிக்கை செய்ய முடியவில்லை. இவர்களுடைய இருதயத்தில் வெட்கமும் பயமும் நிரம்பியிருக்கிறது.

மனுஷரில் அநேகர் நல்லவராகவும் தீயவராகவும் இருப்பார்கள். அவர்கள் வெளிப்பழக்க வழக்கத்தில் எப்படிப் பேசுகிறார்கள் என்பதை வைத்து அவர்களுடைய சுபாவத்தை அறிந்துகொள்வது கடினம். ஒரு சிலரை நாம் நல்லவரென்று நினைப்போம். ஆனால் அவர்களோ நாம் நினைப்பதற்கும் அதிகமாக மிகவும் நல்லவர்களாக இருப்பார்கள். ஒரு சிலர் நம்முடைய பார்வைக்கு சாதாரண ஜனங்களாக இருப்பார்கள். ஆனால் மெய்யாகவே அவர்கள் மிகவும் நல்லவர்களாக இருப்பார்கள். மனுஷருடைய தவறுகள் வெளிப்படையாகத் தெரியும். ஆனால் அவர்கள் பாவத்திலிருந்து மனந்திரும்பியிருப்பது அவர்களுடைய இருதயத்திற்கு மாத்திரமே தெரியும். அவர்கள் அதை அறிக்கை செய்தால்தான் அவர்கள் மனந்திரும்பின அனுபவம் மற்றவர்களுக்கும் தெரியவரும்.

## அதிகாரம் - 12

மனுஷருடைய நற்குணம் பல சமயங்களில் அவர்களுடைய கூச்ச சுபாவங்களினால் மூடிமறைக்கப்படுகிறது. அவர்களிடத்தில் சில பலவீனங்கள் இருக்கலாம். இந்தப் பலவீனங்களை அவர்கள் பெரிதாக நினைத்து, தங்களிடத்திலுள்ள நற்குணத்தை வெளிப்படுத்தாமலேயே இருப்பார்கள். இவர்கள் மெய்யாகவே மனந்திரும்பியிருப்பார்கள். ஆனாலும் தாங்கள் மனந்திரும்பியிருப்பதைக் குறித்து இவர்களுக்குள் சந்தேகம் இருக்கும். வேறு சிலர் மனந்திரும்பாமலேயே தாங்கள் மனந்திரும்பியிருப்பதாக எல்லாரிடத்திலும் சொல்லுவார்கள். ஆனால் இவர்களுக்குள் பாவமான சிந்தனைகளும், பாவமான கிரியைகளும் நிரம்பியிருக்கும்.

மனுஷர் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்தாலும், இந்த உலகமானது மனுஷருடைய உள்ளத்தில் வல்லமையாகக் கிரியை செய்கிறது. சிலர் இயேசுவையும் நேசிக்கிறார்கள். உலகத்திற்கும் பயப்படுகிறார்கள். இங்கு இயேசு கிறிஸ்துவினிடத்தில் விசுவாசம் வைத்திருக்கிற அதிகாரிகள் அப்படித்தான் இருக்கிறார்கள். அதிகாரிகளில் அநேகர் இயேசுகிறிஸ்துவிடத்தில் விசுவாசம் வைத்திருக்கிறார்கள். அப்படியிருந்தும் ஜெபாலத்திற்குப் புறம்பாக்கப்படாதபடி, பரிசேயர் நிமித்தம் அதை அறிக்கை பண்ணாதிருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவைக் கர்த்தரும் ஆண்டவரும் என்று அறிக்கைப் பண்ணாதிருப்பதே பாவம்தான். இவர்களுடைய உள்ளத்தில் இயேசுகிறிஸ்துவைக்குறித்து வெட்கமோ அல்லது பயமோ நிரம்பியிருக்கிறது. இயேசுகிறிஸ்து மாத்திரமே நம்முடைய உள்ளத்தில் பூரணமாக நிரம்பியிருக்கவேண்டும். ஜெபாலயம் என்பது யூதருடைய மார்க்க வழிபாட்டு ஸ்தலம். யூதருடைய சமுதாய பழக்கவழக்கங்களில் ஜெபாலயம் முக்கியமான பங்கு வகிக்கிறது. ஒருவரை ஜெபாலத்திற்குப் புறம்பாக்கும் அதிகாரம் பரிசேயரிடத்தில் உள்ளது. ஜெபாலத்திற்கு புறம்பானவர்களால் சமுதாயத்தில் அங்கம் வகிப்பது மிகவும் கடினம்.

இயேசுகிறிஸ்துவிடத்தில் விசுவாசம் வைத்திருக்கிற அதிகாரிகள் கர்த்தருக்கும் பயப்படுகிறார்கள். பரிசேயருக்கும் பயப்படுகிறார்கள். தங்களைப் பரலோகத்திலிருந்து புறம்பாக்கிவிடுவாரோ என்று கர்த்தருக்கும், ஜெபாலத்திலிருந்து புறம்பாக்கிவிடுவார்களோ என்று பரிசேயருக்கும் இவர்கள் பயப்படுகிறார்கள். கர்த்தரிடத்தில் விசுவாசம் வைக்கும்போது நம்மிடத்தில் இருக்கும் மனுஷபயம் நம்மைவிட்டு நீங்கும். ஆனால் இவர்களிடத்திலோ தேவபயமும் மனுஷபயமும் இணைந்து காணப்படுகிறது. ஜெபாலயத்திலிருந்து தாங்கள் புறம்பாக்கப்பட்டால், அது தங்களுக்கு அவமானம் என்றும், தங்களுடைய குடும்ப வாழ்க்கையும் சமுதாய வாழ்க்கையும் இதனால் பாதிக்கப்படும் என்றும் அதிகாரிகள் பயப்படுகிறார்கள்.

### தேவனால் வருகிற மகிமை

**அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்பினார்கள் (யோவா 12:43).**

பரிசேயர்களுடைய பயத்திற்கு ஒரே ஒரு காரணம்தான் இருக்கிறது. இவர்கள் மனுஷரால் வருகிற மகிமையை விரும்புகிறார்கள். அதே வேளையில் தேவனால் வருகிற மகிமையையும் விரும்புகிறார்கள். தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்புகிறார்கள். இவ்விரண்டு மகிமையையும் சீர்தூக்கிப்பார்த்து, மனுஷரால் வருகிற மகிமையே சிறந்தது என்று தீர்மானித்திருக்கிறார்கள். மனுஷர்கள் தங்களைப் புகழவேண்டுமென்றும், மனுஷர் மத்தியில் தங்களுக்கு உயர்ந்த அந்தஸ்து வேண்டுமென்றும் அதிகாரிகள் விரும்புகிறார்கள். மனுஷரைப் புகழுவதும் மனுஷரிடத்திலிருந்து புகழ்ச்சியைப் பெற்றுக்கொள்வதும் இவர்களுக்கு முக்கியமானதாக இருக்கிறது. பரிசேயர் இவர்களைத் தேவாலயத்திலிருந்து புறம்பாக்கிவிட்டால், இவர்களால் மனுஷரோடு சமுதாய உறவுகொள்ள முடியாது. மனுஷரைப் புகழமுடியாது. மற்ற மனுஷரும் இவர்களைப் புகழமாட்டார்கள். ஆகையினால் இயேசுகிறிஸ்துவினிடத்தில் தாங்கள் வைத்திருக்கும் விசுவாசத்தை அறிக்கை பண்ணாதிருக்கிறார்கள்.

## அதிகாரம் - 12

இவர்கள் பரிசேயருக்குப் பயப்படுகிறார்கள். பரிசேயர் மூலமாக தங்களுக்குக் கிடைக்கும் சிலாக்கியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்களேயல்லாமல், தேவன் தங்களுக்குக் கொடுக்கும் சிலாக்கியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களுக்கு சமுதாயத்தில் நல்ல பெயர் இல்லை. பரிசேயர்கள் அவர்களை குற்றவாளிகளைப்போலத் தூஷிக்கிறார்கள். ஜெபாலயத்திற்கு வருகிற ஜனங்களும் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களை மதிப்பதில்லை. தங்களுக்கு மனுஷர் மூலமாக மதிப்பும் மரியாதையும் வேண்டும் என்று இந்த அதிகாரிகள் விரும்புவதினால், இவர்கள் கிறிஸ்துவை அறிக்கை பண்ணாதிருக்கிறார்கள்.

அதிகாரிகளுக்கு சமுதாயத்தில் நல்ல மதிப்பும் மரியாதையும் உண்டு. இதுவரையிலும் இவர்கள் இந்த மகிமையை நன்றாக அனுபவித்திருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுவதினால், மனுஷர் மூலமாக வரும் இந்த மகிமையை இவர்கள் இழந்துபோக ஆயத்தமாகயில்லை. இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றினால் யூதசமுதாயத்தில் தாங்கள் தனிமைப்படுத்தப்படுவோம் என்னும் பயம் அதிகாரிகளுடைய உள்ளத்தில் நிரம்பியிருக்கிறது.

பரிசேயருக்குப் பயந்தாலும், அதிகாரிகள் தேவனால் வரும் மகிமையையும் சிந்தித்துப் பார்க்கிறார்கள். இயேசுகிறிஸ்துவை அறிக்கை செய்யும்போது, இவர்களுக்குத் தேவனைத் துதிக்கும் சிலாக்கியம் கிடைக்கும். தேவனும் தம்மை மகிமைப்படுத்துகிறவர்களை கனப்படுத்துவார். ஆனாலும் தேவனால் வரும் மகிமையைவிட மனுஷரால் வரும் மகிமையையே இவர்கள் அதிகமாய் விரும்புகிறார்கள். மனுஷர் மூலமாக வரும் மகிமையை அதிகாரிகள் அதிகமாக விரும்புவதினால், இவர்கள் தேவமகிமையை இழந்துபோகிறார்கள்.

மனுஷர் நம்மைப் புகழவேண்டும் என்று எதிர்பார்த்து ஊழியம் செய்வோமென்றால், நம்முடைய ஊழியம் மாய்மாலமாக இருக்கும். மனுஷருடைய புகழ்ச்சி நமக்கு உண்டாகும் எல்லா தீங்குக்கும் காரணமாகிவிடும். இயேசு கிறிஸ்துவையும் அவருடைய மார்க்கத்தையும் நாம் கனப்படுத்தாமல், மனுஷர் மூலமாக வரும் புகழ்ச்சியை மாத்திரம் நாம் கனப்படுத்தினால் நம்முடைய முடிவு பரிதாபமாக இருக்கும்.

## இயேசு சத்தமிட்டுக் கூறியது
## யோவா 12 : 44-50

**யோவா 12:44. அப்பொழுது இயேசு சத்தமிட்டு: என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் என்னிடத்தில் அல்ல, என்னை அனுப்பினவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறான்.**

**யோவா 12:45. என்னைக் காண்கிறவன் என்னை அனுப்பினவரைக் காண்கிறான்.**

**யோவா 12:46. என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனெவனும் இருளில் இராதபடிக்கு, நான் உலகத்தில் ஒளியாக வந்தேன்.**

**யோவா 12:47. ஒருவன் என் வார்த்தைகளைக் கேட்டும் விசுவாசியாமற்போனால், அவனை நான் நியாயந்தீர்ப்பதில்லை; நான் உலகத்தை நியாயந்தீர்க்கவராமல், உலகத்தை இரட்சிக்கவந்தேன்.**

**யோவா 12:48. என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்.**

**யோவா 12:49. நான் சுயமாய்ப் பேசவில்லை, நான் பேசவேண்டியது இன்னதென்றும் உபதேசிக்கவேண்டியது இன்னதென்றும் என்னை அனுப்பின பிதாவே எனக்குக் கட்டளையிட்டார்.**

**யோவா 12:50. அவருடைய கட்டளை நித்திய ஜீவனாயிருக்கிறதென்று அறிவேன்; ஆகையால் நான் பேசுகிறவைகளைப் பிதா எனக்குச் சொன்னபடியே பேசுகிறேன் என்றார்.**

## அதிகாரம் - 12

**என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன்**

**அப்பொழுது இயேசு சத்தமிட்டு: என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் என்னிடத்தில் அல்ல, என்னை அனுப்பினவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறான். என்னைக் காண்கிறவன் என்னை அனுப்பினவரைக் காண்கிறான் (யோவா 12:44,45).**

இயேசுகிறிஸ்துவை நாம் மகிமைப்படுத்தினால்தான் அவருக்கு மகிமை உண்டாகும் என்பது தவறான சிந்தனை. அவர் தாமாகவே மகிமையுள்ளவராக இருக்கிறார். தம்முடைய ஊழியத்தைப்பற்றி இயேசுகிறிஸ்து எடுத்துக்கூறி தம்முடைய மகிமையை உறுதிபண்ணுகிறார். இயேசுகிறிஸ்து ஜனங்கள் மத்தியில் உபதேசம்பண்ணுகிற கடைசி உபதேசமாக, யோவான் இந்த சுவிசேஷத்தில் இதை எழுதுகிறார். இந்த சம்பவத்திற்குப் பின்பு இயேசுகிறிஸ்துவின் உபதேச ஊழியமெல்லாம் அவருடைய சீஷர்களுக்குத் தனிப்பட்ட முறையில் கொடுக்கப்படுகிறது.

இயேசுகிறிஸ்து தம்முடைய வார்த்தைகளை ஜனங்களுக்கு முன்பாகச் சொல்லும்போது "சத்தமிட்டுப்" பேசுகிறார். இயேசு சத்தமிட்டுப் பேசுவதினால் அவருடைய தைரியம் வெளிப்படுகிறது. சத்தியத்தைப் பேசுவதற்கு அவர் பயப்படவில்லை. தம்முடைய உபதேசத்தில் விசுவாசம் வைக்குமாறு ஜனங்களைத் தைரியமாக அழைக்கிறார். எல்லோருக்கும் முன்பாக வெளிப்படையாகப் பேசும் தைரியம் இயேசுகிறிஸ்துவிடம் உள்ளது. சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு இயேசுகிறிஸ்து வெட்கப்படவில்லை. இயேசுகிறிஸ்துவிடத்தில் தாங்கள் வைத்திருக்கிற விசுவாசத்தை அறிக்கைபண்ணுவதற்கு அதிகாரிகள் வெட்கப்படுகிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ தம்முடைய பிள்ளைகளை அங்கீகரித்து, அவர்களை எல்லோருக்கும் முன்பாக அறிக்கை செய்வதற்கு ஒருபோதும் வெட்கப்படுவதில்லை.

இயேசுகிறிஸ்து சத்தமிட்டு உபதேசம்பண்ணும்போது உபதேசத்தில் அவருக்கு இருக்கும் ஆர்வமும் உண்மையும் வெளிப்படுகிறது. தம்முடைய ஊழியத்தில் இயேசு உறுதியோடு இருக்கிறார். தம்முடைய வார்த்தைகள் ஜனங்களுக்கு நன்மையைக் கொடுக்கும் என்று விசுவாசத்தோடு அறிவிக்கிறார். தமக்கு நிச்சயமாகத் தெரிந்திருக்கிற சத்தியத்தையே ஜனங்களுக்கு உபதேசமாகப் பேசுகிறார்.

எல்லோரும் தம்முடைய உபதேசத்தைக் கவனித்துக் கேட்கவேண்டும் என்பதற்காகவே இயேசுகிறிஸ்து சத்தமிட்டுப் பேசுகிறார். இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில், தம்முடைய சரீரத்தில் செய்கிற ஊழியக்காலம் முடிவுக்கு வரப்போகிறது. அவருக்கு இன்னும் கொஞ்சக்காலம் மாத்திரமே நியமிக்கப்பட்டிருக்கிறது. அவர் பிரத்தியட்சமாக சுவிசேஷத்தை அறிவிக்கும் காலம் முடிவடையப்போகிறது. தம்முடைய உபதேசங்களையெல்லாம் இயேசுகிறிஸ்து மறுபடியும் சுருக்கமாக ஜனங்களுக்கு அறிவிக்கிறார். வனாந்தரத்தில் மோசே ஜனங்களுக்குப் பேசியதுபோல இயேசுகிறிஸ்து இங்கு இவர்களிடம் பேசுகிறார். "இதோ ஜீவனையும் நன்மையையும், மரணத்தையும் தீமையையும் இன்று உனக்கு முன்னே வைத்தேன்" (உபா 30:15) என்று மோசே இஸ்ரவேல் ஜனங்களிடம் தன்னுடைய வார்த்தையின் முடிவுரையாகப் பேசினார். அதுபோலவே இயேசுகிறிஸ்து தேவாலயத்தைவிட்டு புறப்பட்டுப்போகும்போது, தம்முடைய உபதேசத்தில் மூன்று காரியங்களைத் தெளிவுபடுத்துகிறார். அவையாவன: 1. இயேசு கிறிஸ்துவினிடத்தில் விசுவாசம் வைத்திருக்கிறவர்களுக்கு கிடைக்கும் சிலாக்கியம். 2. இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்காதவர்களுக்கு வரப்போகும் ஆபத்தும் அழிவும். 3. இயேசுகிறிஸ்துவின் உறுதியான அதிகாரம்.

இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைத்திருப்பதன் மூலமாக, பிதாவாகிய தேவனோடு நமக்கு மகிமையான ஐக்கியம் உண்டாகிறது. "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன், என்னை அனுப்பினவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறான்" என்று இயேசு கூறுகிறார். நாம் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற போது அவரைச் சாதாரண மனுஷனாக விசுவாசிக்கவில்லை. அவரைத் தேவனுடைய குமாரனாக விசுவாசிக்கிறோம். நம்முடைய விசுவாசம் இயேசுகிறிஸ்துவில் முடிவடைந்து விடுவதில்லை. இயேசுகிறிஸ்துவின் மூலமாக நம்முடைய விசுவாசம் நம்மைப் பிதாவாகிய தேவனிடத்திற்கு அழைத்துச் செல்கிறது. இயேசுகிறிஸ்துவின் மூலமாக நாம் பிதாவாகிய தேவனிடத்திற்குச் செல்லும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம்.

## அதிகாரம் - 12

"என்னைக் காண்கிறவன் என்னை அனுப்பினவரைக் காண்கிறான்" என்று இயேசு கூறுகிறார். நாம் இயேசுகிறிஸ்துவோடு ஐக்கியமாக இருக்கும்போது தேவனைப்பற்றிய அறிவுக்கு நேராக கடந்து வருகிறோம். இயேசுகிறிஸ்துவின் முகத்தில் தேவன் தம்மைத்தாமே வெளிப்படுத்துகிறார் "இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் சொன்ன தேவன் இயேசுகிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும்பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார்" (2கொரி 4:6) என்று அப்போஸ்தலர் பவுல் எழுதுகிறார். இயேசுகிறிஸ்துவை விசுவாசித்தினால் தரிசிக்கிறவர்களை, தேவனைப்பற்றி அறியும் அறிவுக்கு நேராக அவர் அழைத்துச் செல்கிறார். மனுக்குலம் பாவத்தில் விழுந்துவிட்டாலும் தேவன் தம்முடைய கிருபையினால் மனுக்குலத்திற்குத் தம்மை வெளிப்படுத்தச் சித்தமுள்ளவராகயிருக்கிறார். கிறிஸ்துவின் மூலமாகத் தம்மை வெளிப்படுத்துவது தேவனுக்குப் பிரியமாயிற்று.

### நான் உலகத்திற்கு ஒளியாக வந்தேன்

**என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறனெவனும் இருளில் இராதபடிக்கு, நான் உலகத்தில் ஒளியாக வந்தேன் (யோவா 12:46).**

இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் ஒளியாக வந்திருக்கிறார். அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிற எவனும் இருளில் இருக்கமாட்டான். இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற நமக்கு அவரில் ஆறுதலும் சந்தோஷமும் கிடைத்திருக்கிறது. இயேசுகிறிஸ்து தமது சுபாவத்தை இங்கு வெளிப்படுத்தியிருக்கிறார். இந்த உலகத்திற்கு கிறிஸ்துவே ஒளியாகயிருக்கிறார். அவர் ஒளியாகவே இந்த உலகத்தில் வந்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைத்திருக்கிற நாம் இருளில் இருக்கவேண்டியதில்லை. நமது பாவசுபாவத்தின் பிரகாரமாக நாம் இருளில் இருக்கவேண்டியவர்கள். நாம் இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைத்திருக்கிற படியினால், இந்த இருளில் தொடர்ந்து இருக்கவேண்டும் என்னும் அவசியமில்லை.

நாமும் இந்த உலகத்திற்கு ஒளியாகயிருப்போம். இயேசுகிறிஸ்து நமக்கு ஒளியாகயிருக்கிறார். அவர் மூலமாக நாம் இந்த உலகத்திற்கு ஒளியாகயிருப்போம். தேவன் நம்மை இந்த இருளிலிருந்து மீட்டுக்கொண்டார். நாம் தேவனோடு இருக்கும்போது இருளில் இராமல் வெளிச்சத்தில் இருக்கிறோம்.

### வார்த்தையைக் கேட்டும் விசுவாசியாமற்போனால்

**ஒருவன் என் வார்த்தைகளைக் கேட்டும் விசுவாசியாமற்போனால், அவனை நான் நியாயந்தீர்ப்பதில்லை; நான் உலகத்தை நியாயந்தீர்க்கவராமல், உலகத்தை இரட்சிக்கவந்தேன். என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும் (யோவா 12:47,48).**

இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்காதவர்களுக்கு ஆபத்தும் அழிவும் காத்திருக்கிறது. ஒருவன் இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளைக் கேட்டும் விசுவாசியாமற்போனால், அவர் அவனை நியாயந்தீர்ப்பதில்லை. ஆனாலும் அவனுக்கு நியாயத்தீர்ப்பு உண்டு. இயேசுகிறிஸ்து உலகத்தை நியாயந்தீர்க்க வரவில்லை. அவர் இந்த உலகத்தை இரட்சிப்பதற்காகவே வந்திருக்கிறார். இந்த உலகத்தில் ஏராளமானோர் இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளைக் கேட்டிருக்கிறார்கள். அவருடைய வசனங்களைக் கேட்பதே மனுஷருக்குக் கிடைத்திருக்கும் மிகப்பெரிய சிலாக்கியம். அவருடைய வார்த்தைகளைக்கேட்டும் சிலர் அவரை விசுவாசிப்பதில்லை. தம்மை விசுவாசிக்காதவர்களை இயேசுகிறிஸ்து நியாயந்தீர்ப்பதில்லையென்று கூறுகிறார்.

நாம் இப்போது ஒளியின் காலத்தில் இருக்கிறோம். சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளும் சிலாக்கியம் இப்போது நமக்குக் கிடைத்திருக்கிறது. ஒளியின் காலத்தில் நாம் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறோமா, அல்லது விசுவாசியாமற்போனோமா என்பதன் அடிப்படையில் நாம் நியாயந்தீர்க்கப்படுவோம். இயேசுகிறிஸ்து நம்மை நியாயந்தீர்க்கமாட்டார். அவருக்குப் பதிலாக அவர் சொன்ன வசனமே நம்மைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்.

## அதிகாரம் - 12

இயேசுகிறிஸ்துவின் வார்த்தையை ஏற்றுக்கொள்ளாதவர்கள் அவரிடத்தில் விசுவாசம் வைத்திருக்கமாட்டார்கள். அவர்கள் இயேசுகிறிஸ்துவைத் தள்ளிவிடுகிறார்கள். சுவிசேஷம் எங்கெல்லாம் அறிவிக்கப்படுகிறதோ அங்கெல்லாம் மனுஷர் தங்களுடைய விசுவாசத்தைக் குறித்துத் தீர்மானம்பண்ணவேண்டும். இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டுமா, அல்லது ஏற்றுக்கொள்ளவேண்டாமா என்று தீர்மானம்பண்ணவேண்டும். கிறிஸ்துவின் கொடி உயர்த்தப்படும்போது, நாம் கிறிஸ்துவின் பக்கமா அல்லது அவருடைய சத்துருவின் பக்கமா என்பதை தீர்மானம் பண்ண வேண்டும். இரண்டிற்கும் இடைப்பட்ட நிலை என்று எதுவுமில்லை. இயேசுகிறிஸ்துவைத் தள்ளிவிடுகிறவர்கள் உலகத்தை ஏற்றுக்கொள்கிறார்கள். உலகத்தைத் தள்ளிவிடுகிறவர்கள் இயேசுவை ஏற்றுக்கொள்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சத்திய வசனத்தை உபதேசம்பண்ணும்போது நீடியபொறுமையோடும் ஆத்தும பாரத்தோடு பேசுகிறார். அவர் யாரையும் நியாயந்தீர்ப்பதில்லை. உலகத்தை நியாயந்தீர்ப்பதற்குப் பதிலாக அவருக்கு வேறொரு முக்கியமான ஊழியம் இருக்கிறது. அவர் இந்த உலகத்தை இரட்சிக்கவேண்டும். உலகத்தை இரட்சிப்பதற்காகவே இயேசுகிறிஸ்து இந்த பூமிக்கு வந்திருக்கிறார். நாம் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாமல், இரட்சிக்கப்படாமல் இருப்போமென்றால் அது இயேசுகிறிஸ்துவின் தவறு அல்ல. நம்முடைய தவறினால்தான் நாம் இன்னும் இரட்சிக்கப்படாமல் இருக்கிறோம். நம்மை இரட்சிப்பதற்கு இயேசுகிறிஸ்து எப்போதுமே ஆயத்தமாகயிருக்கிறார். இதுவே இரட்சணியக்காலம். கிருபையின் காலம். இந்தக் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொண்டு இயேசுகிறிஸ்து கொடுக்கும் இரட்சிப்பை நாம் பெற்றுக்கொள்ளவேண்டும்.

இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாமல் அவரைத் தள்ளிவிடுகிறவர்கள் கடைசிநாளில் நியாயந் தீர்க்கப்படுவார்கள். அவிசுவாசிகளினால் இந்த நியாயத்தீர்ப்புக்குத் தப்பிப்போகமுடியாது. தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பு இந்தக் கடைசிநாளில் வெளிப்படுத்தப்படும். இயேசுகிறிஸ்து இவர்களை நியாயந்தீர்க்கமாட்டார். இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்காதவர்களை நியாயந்தீர்க்கிறது ஒன்று இருக்கிறது.

இயேசுகிறிஸ்துவின் நீடிய பொறுமையையும் கிருபையையும் நாம் அசட்டை செய்துவிடக்கூடாது. தேவனுடைய கிருபையை அசட்டைபண்ணுவது அவருடைய நாமத்தைத் தூஷிப்பதற்கு இணையான பாவமாகும். இவர்களுக்கான இறுதி நியாயத்தீர்ப்பு கடைசிநாளில் நியமிக்கப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்து சொன்ன வசனமே அப்போது அவர்களை நியாயந்தீர்க்கும். "நான் சொன்ன வசனமே அவனை கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்" என்று இயேசுகிறிஸ்து எச்சரித்துக் கூறுகிறார். அவிசுவாசிகளெல்லோரும் கடைசிநாளில் நியாயந்தீர்க்கப்படுவார்கள். கிறிஸ்துவின் வசனங்கள் அவிசுவாசிகளெல்லோரையும் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும். அவர்களுடைய துன்மார்க்கத்தின் நிமித்தமாக அவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பு உண்டாகும். இயேசுகிறிஸ்துவின் வசனம் அவர்களை ஆக்கினைக்குட்படுத்தும்.

**பிதா தமக்குச் சொன்னபடியே இயேசு பேசுகிறார்**

**நான் சுயமாய்ப் பேசவில்லை, நான் பேசவேண்டியது இன்னதென்றும் உபதேசிக்கவேண்டியது இன்னதென்றும் என்னை அனுப்பின பிதாவே எனக்குக் கட்டளையிட்டார். அவருடைய கட்டளை நித்திய ஜீவனாயிருக்கிறதென்று அறிவேன்; ஆகையால் நான் பேசுகிறவைகளைப் பிதா எனக்குச் சொன்னபடியே பேசுகிறேன் என்றார் (யோவா 12:49,50).**

## அதிகாரம் - 12

இயேசுகிறிஸ்து நம்முடைய விசுவாசத்தை எதிர்பார்க்கிறார். நம்மிடத்திலிருந்து எதிர்பார்ப்பதற்கு இயேசுகிறிஸ்துவுக்கு அதிகாரமுள்ளது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பிதாவாகிய தேவனிடத்திலிருந்து தம்முடைய தெய்வீக ஊழியத்தைப் பெற்றிருக்கிறார். ஆகையினால் அவர் எதையும் சுயமாய்ப் பேசவில்லை. அவர் பேசவேண்டியது இன்னதென்றும், உபதேசிக்க வேண்டியது இன்னதென்றும், அவரை அனுப்பின பிதாவே அவருக்குக் கட்டளையிட்டிருக்கிறார். இந்த சத்தியம் இதற்கு முன்னமே ஒரு முறை வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது (யோவா 7:16). இயேசுகிறிஸ்துவின் உபதேசம் அவருடையது அல்ல. ஏனெனில் அவர் சுயமாய் எதையும் உபதேசிப்பதில்லை. இயேசுகிறிஸ்துவின் உபதேசம் எல்லாமே அவரை அனுப்பின பிதாவின் உபதேசமாகயிருக்கிறது. பிதாவாகிய தேவனே இயேசுகிறிஸ்துவுக்கு இந்த தெய்வீக ஊழியத்தைக் கொடுத்திருக்கிறார்.

பிதாவின் ஆலோசனைகளை இயேசுகிறிஸ்து கட்டளை என்று குறிப்பிடுகிறார். இயேசுகிறிஸ்து நமக்குக் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொடுப்பதற்கு முன்பாகவே, அவர் தாமாகவே கீழ்ப்படிதலை கற்றுக்கொண்டிருக்கிறார். அவர் தேவனுடைய குமாரனாக இருக்கிறபோதிலும், பிதாவுக்குக் கீழ்ப்படிகிறார். இயேசுகிறிஸ்து நமக்கு எல்லா விஷயத்திலும் முன்மாதிரியாக இருக்கிறார். தேவன் முதலாவது ஆதாமுக்கு ஒரு கட்டளையைக்கொடுத்தார். ஆதாமோ அந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் போய்விட்டான். அவனுடைய கீழ்ப்படியாமையினால் நாம் எல்லோரும் அழிந்துபோனோம். தேவன் இரண்டாவது ஆதாமுக்கு இப்போது கட்டளை கொடுத்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவாகிய இரண்டாம் ஆதாம் தம்முடைய கீழ்ப்படிதலினாலே நம்மை இரட்சித்திருக்கிறார்.

தேவனுடைய கட்டளை மிகவும் முக்கியமானது. அவருடைய கட்டளை நித்திய ஜீவனாயிருக்கிறது. மனுப்புத்திரருக்கு நித்திய ஜீவனையும் நித்திய சந்தோஷத்தையும் கொடுப்பதற்காக இயேசுகிறிஸ்து தேவனிடத்திலிருந்து நித்திய கட்டளையைப்பெற்றிருக்கிறார். இயேசுகிறிஸ்து பிதாவின் கட்டளையைப்பற்றி அறிந்திருக்கிறார். அவருடைய கட்டளை நித்திய ஜீவனாயிருக்கிறது என்றும் அறிந்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியாமல் போகிறவர்கள் தங்களுடைய நித்திய ஜீவனை இழந்துபோகிறார்கள். கிறிஸ்துவை மறுதலிக்கிறவர்கள் நித்திய ஜீவனையும் மறுதலிக்கிறார்கள்.

தமக்குப் பிதாவினால் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டளையையும் ஊழியத்தையும் பற்றி இயேசுகிறிஸ்து அறிந்திருக்கிறார். இயேசுகிறிஸ்து பேசுவது எல்லாமே, தம்மை அனுப்பின பிதா தமக்குக் கட்டளையிட்ட பிரகாரமாகவே பேசுகிறார். அவர் சத்தியத்தைத் தவிர வேறு எதுவும் பேசுவதில்லை. விசுவாசமுள்ள சாட்சி ஆத்துமாவை இரட்சிக்கும். இயேசுகிறிஸ்து சத்தியத்தை பூரணமாகப் பேசுகிறார்.

இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களுக்கு ஆசீர்வாதம் உண்டு. கிறிஸ்துவின் உபதேசத்தை நாம் சரியாகப் புரிந்துகொள்ளும்போது பிதாவின் உபதேசத்தைப் புரிந்துகொள்கிறோம். நம்முடைய ஆத்துமாவை இயேசுகிறிஸ்துவிடம் ஒப்புக்கொடுக்கிறோம். கிறிஸ்துவின் வார்த்தையை நம்பி அவருடைய பாதபடியில் நம்மைச் சமர்ப்பிக்கிறோம். இது நம்முடைய கீழ்ப்படிதலுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். இயேசுகிறிஸ்துவின் ஒவ்வொரு வார்த்தையும் பிதாவின் கட்டளையாக இருக்கிறது.

பிதாவின் சித்தத்தை ஜனங்களுக்கு தெரியப்படுத்தும் சிலாக்கியம் இயேசு கிறிஸ்துவுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பிதா தமக்குச் சொன்னபடியே இயேசுகிறிஸ்து பேசுகிறார். ஆகையினால் அவருடைய பிள்ளைகளாகிய நாம் இயேசுகிறிஸ்து பேசுகிற ஒவ்வொரு வார்த்தையையும் விசுவாசிக்க வேண்டும். நம்முடைய முழு ஆத்துமாவையும் அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படுத்த வேண்டும். கிறிஸ்துவின் நாமத்திற்குக் கொடுக்கவேண்டிய துதி கனமகிமையை நாம் அவருக்குச் செலுத்தவேண்டும். அவர் துதிக்குப் பாத்திரராகயிருக்கிறார். ஆகையினால் நாம் தம்மைத் துதிக்கவேண்டுமென்று தேவனுடைய நியாயத்தின் பிரகாரம் இயேசுகிறிஸ்து நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார். நமக்கு அப்படிப்பட்ட கட்டளையையும் கொடுக்கிறார்.

## அதிகாரம் - 13

இயேசுகிறிஸ்து இதுவரையிலும் யூதஜனங்களிடத்தில் உபதேசம்பண்ணினார். இப்போது தம்முடைய சிநேகிதர்களிடத்தில் உரையாடுவதற்குத் தமது நேரத்தைச் செலவிடுகிறார். இந்த அதிகாரத்திலிருந்து இயேசுகிறிஸ்துவுக்கும் அவருடைய சீஷர்களுக்கும் இடையில் நடைபெற்ற உரையாடல் சம்பவம் அதிகமாக விவரிக்கப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களின் கால்களைக் கழுவுகிறார் (யோவா 13:1-17). தம்மை யார் காட்டிக்கொடுப்பானென்று இயேசுகிறிஸ்து முன்னறிவிக்கிறார் (யோவா 13:18-30). தம்முடைய மரணத்தைப்பற்றிய சத்தியத்தையும், சீஷர்கள் ஒருவருக்கொருவர் சகோதர சிநேகத்தோடு இருக்கவேண்டும் என்னும் சத்தியத்தையும் இயேசுகிறிஸ்து உபதேசம்பண்ணுகிறார் (யோவா 13:31-35). பேதுரு தம்மை மறுதலிக்கப்போவதை இயேசுகிறிஸ்து முன்னறிவிக்கிறார் (யோவா 13:36-38).

**இயேசுகிறிஸ்து சீஷருடைய கால்களைக் கழுவுகிறார்**
**யோவா 13 : 1-5**

**யோவா 13:1. பஸ்கா பண்டிகைக்கு முன்னே, இயேசு இவ்வுலகத்தைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போகும்படியான தம்முடைய வேளை வந்ததென்று அறிந்து, தாம் இவ்வுலகத்திலிருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்பு வைத்தபடியே, முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில் அன்புவைத்தார்.**

**யோவா 13:2. சீமோனின் குமாரனாகிய யூதாஸ்காரியோத்து அவரைக் காட்டிக்கொடுக்கும்படி பிசாசானவன் அவன் இருதயத்தைத் தூண்டினபின்பு, அவர்கள் போஜனம் பண்ணிக் கொண்டிருக்கையில்;**

**யோவா 13:3. தம்முடைய கையில் பிதா எல்லாவற்றையும் ஒப்புக் கொடுத்தாரென்பதையும், தாம் தேவனிடத்திலிருந்து வந்ததையும், தேவனிடத்திற்குப் போகிறதையும் இயேசு அறிந்து;**

**யோவா 13:4. போஜனத்தை விட்டெழுந்து, வஸ்திரங்களைக் கழற்றிவைத்து, ஒரு சீலையை எடுத்து, அரையிலே கட்டிக்கொண்டு,**

**யோவா 13:5. பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, சீஷருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார்.**

**பஸ்கா பண்டிகைக்கு முன்னே**

**பஸ்கா பண்டிகைக்கு முன்னே, இயேசு இவ்வுலகத்தைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போகும்படியான தம்முடைய வேளை வந்ததென்று அறிந்து, தாம் இவ்வுலகத்திலிருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்புவைத்தபடியே, முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில் அன்புவைத்தார் (யோவா 13:1).**

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களின் கால்களை கழுவும் சம்பவம், இதைத் தொடர்ந்து அவர் தம்முடைய சீஷருடனே உரையாடும் சம்பவம் ஆகியவற்றைப்பற்றி வேதபண்டிதர்கள் வெவ்வேறு விதமாக வியாக்கியானம் பண்ணுகிறார்கள். இயேசுகிறிஸ்து காட்டிக்கொடுக்கப்பட்ட அந்த இராத்திரியிலேயே இந்த சம்பவம் நடைபெற்றது என்று ஒரு சிலர் கருத்துக் கூறுகிறார்கள். இயேசுகிறிஸ்து பஸ்கா போஜனம்பண்ணும் இந்த சமயத்திலேயே கர்த்தருடைய பந்தியையும் ஸ்தாபிக்கிறார் என்றும் ஒரு சிலர் கருத்துக் கூறுகிறார்கள். மற்ற சுவிசேஷங்களில் இந்த சம்பவங்கள் விரிவாக எழுதப்படவில்லை. பஸ்கா போஜனம், கர்த்தருடைய பந்தி, இயேசுகிறிஸ்து எருசலேமில் செய்த ஊழியம் ஆகிய எல்லா செய்திகளையும் யோவான் மொத்தமாக சேகரித்து இந்த சுவிசேஷத்தில் எழுதியிருக்கிறார். இயேசுகிறிஸ்துவினுடைய வரலாற்று அட்டவணைப்பிரகாரம், இந்த சம்பவங்களில் எந்த சம்பவம் முதலாவது நடைபெற்றது என்று தீர்மானம்பண்ணுவது சற்று கடினமாக இருக்கிறது. "பஸ்கா பண்டிகைக்கு முன்னே" இந்த சம்பவம் நடைபெறுவதாக யோவான் எழுதுகிறார்.

இயேசுகிறிஸ்து இந்த உலகத்திலிருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்பு வைத்திருக்கிறார். முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில் அன்பு வைத்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவோடு பன்னிரண்டு சீஷர்கள் மிகவும் நெருக்கமாக இருக்கிறார்கள். அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றிக் கொண்டு வருகிறார்கள். இயேசுகிறிஸ்து மெய்யாகவே இவர்களிடத்தில் முடிவுபரியந்தம் அன்பு வைத்திருக்கிறார். இயேசு கிறிஸ்துவுக்கு சீஷர்களே அவருடைய சொந்த உலகமாக இருக்கிறார்கள். இவர்களே இயேசுவுக்கு நெருங்கிய சிநேகிதர்கள். இயேசுகிறிஸ்து இவர்களை நேசிக்கிறார். தம்மோடு ஐக்கியமாக இருக்குமாறு இவர்களை அழைத்திருக்கிறார். இவர்களோடு அதிகமாக நேரம் செலவுபண்ணுகிறார். அவர்களுடைய பலவீனங்களில் இயேசு கிறிஸ்து இவர்களைத் தாங்குகிறார். அவர்கள் தம்மோடு அதிகமாகப் பேசிப்பழகுவதற்கு வாய்ப்புக்களை உண்டுபண்ணிக் கொடுக்கிறார்.

## அதிகாரம் - 13

இயேசுகிறிஸ்து அவர்களிடத்தில் முடிவுபரியந்தம் அன்பு வைத்திருக்கிறார். தம்முடைய அன்பை அவர்களிடத்திலிருந்து அவர் ஒருபோதும் எடுத்துப்போடவில்லை. இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காலத்தில் பிரபுக்களும் அதிகாரிகளும் செல்வந்தர்களும் அவருடைய உபதேசத்தைக் கேட்டு அவரிடத்தில் விசுவாசம் வைத்திருக்கிறார்கள். பெரியவர்கள் எத்தனைபேர் தம்மிடத்தில் வந்தாலும் இயேசுகிறிஸ்து தம்முடைய பழைய சிநேகிதர்களை ஒருபோதும் விலக்கி வைத்துவிடவில்லை. இந்த ஏழை மீனவர்கள்மீது அவர் தொடர்ந்து அன்பாகவே இருக்கிறார். அவருடைய அன்பு அவர்களிடத்தில் முடிவுபரியந்தம் இருக்கும். இயேசுகிறிஸ்து பலசமயங்களில் தம்முடைய சீஷர்களைக் கடிந்துகொண்டார். ஆனாலும் அவர் இவர்கள்மீது அன்பு செலுத்தத் தவறவில்லை. இவர்களை எப்போதும் இயேசு ஆதரித்துப் பராமரிக்கிறார்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடத்தில் அன்பு வைத்திருப்பதுபோலவே, அவரை விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலும் அன்பு வைத்திருக்கிறார். இந்த உலகத்தில் நாமே அவருக்குச் சொந்தமானவர்கள். "இவ்வுலகத்திலிருக்கிற தம்முடையவர்களிடத்தில்" என்று குறிப்பிடப்பட்டிருப்பது நம்மைப்பற்றித்தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏனெனில் நாமே இந்த உலகத்தில் இயேசுகிறிஸ்துவினுடையவர்கள்.

யூதர்கள் தேவனுக்குச் சொந்தமானவர்களாக இருந்தார்கள். தமக்குச் சொந்தமானவர்களிடத்தில் இயேசுகிறிஸ்து முதலாவதாக வந்தார். ஆனால் அவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. பிரதான மேய்ப்பராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய ஆட்டுத்தொழுவத்திற்கு வருகிறார். தம்முடைய ஆடுகளைப்பார்ப்பதற்காக வருகிறார். ஆடுகள் அவருடையது. அவருக்குப் பிரியமான நேரத்தில் அவர் எப்போது வேண்டுமானாலும் தம்முடைய தொழுவத்திற்குள் அவர் வரலாம்.

ஒரு மனுஷனுக்கு அவனுடைய மனைவியும் அவனுடைய பிள்ளைகளும் அவனுடையவர்களாக இருக்கிறார்கள். அதுபோலவே நாமும் கிறிஸ்துவினுடையவர்களாக இருக்கிறோம். தம்முடையவர்களிடத்தில் இயேசுகிறிஸ்து விசேஷித்த அன்பு வைத்திருக்கிறார். நாம் இந்த உலகத்தில் இருக்கிறோம். இப்போது அவர் தமக்குச் சொந்தமானதாகிய பரலோகத்திற்குப் போகப்போகிறார். அவர் அங்கு போனாலும் இந்த உலகத்திலிருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்பாகவே இருக்கிறார். ஏனெனில் இவர்களுக்கு இயேசுகிறிஸ்துவின் பாதுகாப்பும் பராமரிப்பும் தேவைப்படுகிறது. ஒரு வீட்டில் வியாதியாக இருக்கிற குழந்தைக்கு அதிக கவனம் தேவைப்படுவதுபோல, விசுவாசத்தில் பலவீனமாகயிருக்கிற நமக்கு இயேசு கிறிஸ்துவின் உதவி அதிகமாய்த் தேவைப்படுகிறது. இயேசுகிறிஸ்து யாரிடத்தில் அன்பு வைத்திருக்கிறாரோ, அவர்களிடத்தில் முடிவுபரியந்தம் அன்பு வைத்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் அன்பைவிட்டு அவருடைய பிள்ளைகளை யாரும் பிரிக்க முடியாது. அவருடைய அன்பு பரிபூரணமானது. முடிவுபரியந்தம் நிலைத்திருக்கிறது.

இயேசுகிறிஸ்து இவ்வுலகத்திலிருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்பு வைத்திருப்பதற்கு இந்தக் காலத்தையே ஏற்றகாலமாகத் தெரிவு செய்திருக்கிறார். இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. அவையாவன: 1. தம்முடைய வேளை வந்ததென்று இயேசுகிறிஸ்து அறிந்திருக்கிறார். 2. இயேசுகிறிஸ்துவைக் காட்டிக்கொடுக்கும்படி பிசாசானவன் யூதாஸ்காரியோத்துடைய இருதயத்தைத் தூண்டுகிறான்.

இயேசுகிறிஸ்து இவ்வுலகத்தைவிட்டு பிதாவினிடத்திற்குப் போகும்படியான அவருடைய வேளை வந்திருக்கிறது. இந்த வேளையை அவரும் அறிந்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவுக்கு இப்போது மாற்றங்கள் கடந்து வந்திருக்கிறது. அவர் இந்த உலகத்தைவிட்டுப் புறப்பட்டுப் போகவேண்டும். இயேசுகிறிஸ்துவைப்போலவே அவருடைய விசுவாசிகளெல்லோரும் இந்த உலகத்தைவிட்டுப் புறப்பட்டுப் பிதாவினிடத்திற்குப் போகவேண்டும். அவர் நமக்காக வைத்திருக்கும் ஆசீர்வாதங்களைச் சுதந்தரித்துக்கொள்ள நாம் பரலோகத்திற்குப் போய்க்கொண்டிருக்கிறோம்.

## அதிகாரம் - 13

இயேசுகிறிஸ்துவின் ஜீவியத்தில் ஒரு மாற்றம் உண்டாயிருக்கிறது. மாற்றத்திற்கான அந்த வேளை இப்போது வந்திருக்கிறது. இதை இயேசுகிறிஸ்துவும் அறிந்திருக்கிறார். யோவான் இந்த வேளையைக் கிறிஸ்துவின் வேளை என்று குறிப்பிடுகிறார். லூக்கா எழுதின சுவிசேஷத்தில் இந்த வேளை "அவர்களுடைய வேளையும் அந்தகாரத்தின் அதிகாரமுமாயிருக்கிறது" என்று இயேசுகிறிஸ்து குறிப்பிடுகிறார் (லூக் 22:53). இயேசுகிறிஸ்துவின் வேளை அவர் ஜெயம் பெறுகிற வேளையாகவே இருக்கும். இயேசுகிறிஸ்து தம்முடைய வேளையை முன்னறிந்தவராக இருக்கிறார். தம்முடைய வேளை வந்தது என்று இயேசு அறிந்திருக்கிறார். இந்த வேளை வருவதற்கு முன்பாகவே, இந்த வேளையின் ஆரம்பத்திலிருந்தே, இயேசுகிறிஸ்து இந்த வேளையை அறிந்திருக்கிறார். இப்போது அந்த வேளை வந்துவிட்டது என்பதையும் இயேசுகிறிஸ்து அறிந்தவராக இருக்கிறார்.

**போஜனம்பண்ணிக்கொண்டிருக்கையில்**

**சீமோனின் குமாரனாகிய யூதாஸ்காரியோத்து அவரைக் காட்டிக்கொடுக்கும்படி பிசாசானவன் அவன் இருதயத்தைத் தூண்டினபின்பு, அவர்கள் போஜனம்பண்ணிக் கொண்டிருக்கையில்; (யோவா 13:2).**

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரோடு போஜனம்பண்ணிக் கொண்டிருக்கிறார். அப்போது அவர் தம்முடைய சீஷர்களின் கால்களைக் கழுவுகிற சம்பவம் இந்த வசனப்பகுதியில் எழுதப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்து சீஷர்களுடைய கால்களை ஏன் கழுவவேண்டும் என்பதற்கு வேதபண்டிதர்கள் பலவிதமாக வியாக்கியானங்கள் கூறுகிறார்கள். ஞானமுள்ள ஒரு மனுஷன் பொதுவாக அசிங்கமான காரியத்தையோ அல்லது விநோதமான காரியத்தையோ செய்யமாட்டான். அவன் எதைச்செய்தாலும் அதற்கு ஒரு முக்கிய காரணம் இருக்கும். எல்லாவற்றையும் சீர்தூக்கிப் பார்த்தபின்புதான், தெளிந்த சிந்தனையோடு செயல்படுவான்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களின் கால்களைக் கழுவுவது மிகவும் முக்கியமான சம்பவமாகும். அவர் தம்முடைய சீஷர்களின் கால்களைக் கழுவுவதற்கு நான்கு காரணங்களைக் கூறலாம். அவையாவன:

1. தம்முடைய சீஷர்களிடத்தில் தாம் வைத்திருக்கும் அன்பை இந்த சம்பவத்தின் மூலமாக இயேசுகிறிஸ்து சாட்சியாக வெளிப்படுத்துகிறார். 2. தம்முடைய தாழ்மையை இயேசுகிறிஸ்து தாமாகவே வெளிப்படுத்துகிறார். 3. ஆவிக்குரிய சுத்திகரிப்பைக் குறித்து இயேசுகிறிஸ்து இதன் மூலமாக விளக்குகிறார். 4. இந்த சம்பவத்தை நமக்கும் ஒரு முன்மாதிரியாக வைத்திருக்கிறார்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடத்தில் மிகுந்த அன்போடு இருக்கிறார். அவர் சீஷர்களின் கால்களைக் கழுவுவது அவருடைய அன்புக்கு எடுத்துக் காட்டாயிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் அன்பு நிலையானது. பெருமைப்படாதது. இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களைத் தமது பணிவிடையின் மூலமாக குணப்படுத்துகிறார். இயேசுகிறிஸ்துவின் செய்கை சீஷர்களுக்கு அதிர்ச்சியாக இருக்கலாம். சற்று நேரத்திற்கு முன்புதான் மரியாள் இயேசுகிறிஸ்துவின் தலையில் பரிமள தைலத்தை ஊற்றியபோது, சீஷர்கள் விசனமடைந்தார்கள். இது வீண் செலவு என்றார்கள் (மத் 26:8).

சீஷர்களுக்கு இயேசுகிறிஸ்துவின்மீது மெய்யான அன்பு இல்லை. ஆனால் இயேசு அவர்களிடத்தில் அன்பாயிருப்பதை தம்முடைய தாழ்மையான செய்கையின் மூலமாக நிரூபிக்கிறார். இயேசுகிறிஸ்துவின் அன்புக்கு முன்பாக நம்முடைய பலவீனங்களெல்லாம் நீங்கிப்போகும். அவர் நம்மை அன்போடு பார்க்கும்போது, நம்மிடத்திலுள்ள பலவீனங்கள் அவருடைய பார்வைக்குத் தெரியாது. அவருடைய தெய்வீக அன்பு நம்முடைய பலவீனங்களை மறைத்துவிடும்.

யூதாஸ்காரியோத்து இயேசு கிறிஸ்துவின் சீஷர்களில் ஒருவன். இயேசுவைக் காட்டிக்கொடுக்கும்படி பிசாசானவன் அவனுடைய இருதயத்தைத் தூண்டுகிறான். யூதாஸ்காரியோத்தின் காட்டிக்கொடுக்கும் வஞ்சக சுபாவம் இங்குதான் ஆரம்பமாகிறது. பிசாசு மனுஷனுடைய இருதயத்தை எப்படித் தூண்டுவான் என்று நம்மால் நிதானித்து அறியமுடியாது. தேவனுக்கு விரோதமாக நாம் சிந்திப்பது, செயல்படுவது எல்லாமே பாவமானதுதான். அதிலும் சில பாவங்கள் மற்ற பாவங்களைவிடத் துணிகரமான பாவங்களாக இருக்கும். இப்படிப்பட்ட துணிகரப்பாவங்கள் எல்லோருக்கும் முன்பாக பிரத்தியட்சமாகத் தெரியும். இந்தப் பாவங்களைச் செய்கிறவர்களின் இருதயத்தைச் சாத்தான் தூண்டி, அங்கு முட்டையிட்டுக் குஞ்சுபொறிப்பதுபோல, தன்னுடைய நயவஞ்சகத்தை விதைக்கிறான், பெருக்குகிறான்.

## அதிகாரம் - 13

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களின் கால்களைக் கழுவிக்கொண்டிருக்கிறார். ஆனால் யூதாசோ இயேசுகிறிஸ்துவைக் காட்டிக் கொடுக்கவேண்டுமென்று தீர்மானம்பண்ணிக் கொண்டிருக்கிறான். இயேசுகிறிஸ்து இந்த உலகத்தைவிட்டு புறப்பட வேண்டிய வேளை நெருங்கி வந்துகொண்டிருக்கிறது. இதைத் தள்ளிப்போட முடியாது. தமக்குச் சிறிது காலமே இருக்கிறது என்பதை இயேசுகிறிஸ்துவும் அறிந்திருக்கிறார். இந்தச் சிறிய காலத்தைப் பிசாசும் அறிந்திருக்கிறான். ஆகையினால் தனக்குக் கிடைத்திருக்கும் இந்தச் சிறிய காலத்தை எப்படியாவது பயன்படுத்தி, இயேசுவை அழித்துப்போடவேண்டுமென்று சாத்தான் தீவிரமாகச் செயல்படுகிறான். சாத்தானுடைய கண்ணியில் யூதாஸ் விழுந்துவிடுகிறான். யூதாசை மாத்திரமல்ல, சாத்தான் சீமோனையும் மற்ற சீஷர்களையும் தன்னுடைய வலையில் சிக்க வைக்கவேண்டுமென்று முயற்சிபண்ணினான். கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோல அவர்களைப் புடைக்கவேண்டுமென்று விரும்பினான் (லூக் 22:31).

இயேசுகிறிஸ்து தம்முடையவர்களை சாத்தானுடைய சதிஆலோசனைகளிலிருந்து வேலியடைத்துப் பாதுகாத்துக்கொள்கிறார். மந்தையிலுள்ள ஒரு ஆட்டை ஓநாய் திருடிச் சென்றுவிட்டால், மேய்ப்பன் மற்ற ஆடுகள்மீது அதிக கவனம் செலுத்துவான். ஆடுகளுக்குப் பாதுகாப்பை அதிகரிப்பான். மிகுந்த எச்சரிப்போடு இருப்பான். கிருமிகளினால் வியாதி வரும்போது அந்தக் கிருமிகளைக் கொல்லுவதற்கு மருத்துவர்கள் மருந்து கொடுப்பார்கள். அந்த வியாதி தொற்றுநோய்போல பரவிவிடாமல் இருப்பதற்கு எல்லா முன் எச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுப்பார்கள். இப்போது சாத்தான் யூதாசின் இருதயத்தைத் தூண்டியிருக்கிறான். பன்னிரண்டு சீஷர்களில் ஒரு சீஷன் சாத்தானுடைய வஞ்சக வலையில் விழுந்துவிடுகிறான்.

யூதாசினுடைய பிசாசுக் குணம் மற்ற சீஷர்களுக்கும் பரவிவிடக்கூடாது. ஒரு சீஷன் தவறு செய்ததினால் இயேசுகிறிஸ்து எல்லோரையும் வெளியே துரத்திவிடவில்லை.

யூதாசின் இருதயத்தில் சாத்தான் புகுந்திருக்கிறான். இயேசுவைக் காட்டிக்கொடுக்கிற வஞ்சக எண்ணம் அவனுடைய உள்ளத்தில் இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில்கூட இயேசுகிறிஸ்து யூதாசின்மீது அன்பாகவேயிருக்கிறார் மற்ற சீஷர்களை நேசிப்பதுபோலவே அவர் யூதாசையும் நேசிக்கிறார். இயேசுகிறிஸ்து சீஷர்களின் கால்களைக் கழுவும்போது யூதாசின் கால்களையும் கழுவுகிறார். இதுதான் இயேசுகிறிஸ்துவின் மெய்யான அன்பு. யூதாஸ் தம்மைக் காட்டிக்கொடுக்கப்போகிறான் என்பதை அறிந்திருந்தும் இயேசுகிறிஸ்து அவனிடத்தில் அன்பாகயிருக்கிறார்.

### இயேசு எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார்

**தம்முடைய கையில் பிதா எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்தாரென்பதையும், தாம் தேவனிடத்திலிருந்து வந்ததையும், தேவனிடத்திற்குப் போகிறதையும் இயேசு அறிந்து (யோவா 13:3)**

தமக்குச் சொந்தமானவர்களிடத்தில் இயேசுகிறிஸ்து மிகுந்த அன்பு வைத்திருக்கிறார். அவருடைய அன்பு பெரியது. தாழ்மையானது. தம்முடைய சீஷர்களின் கால்களைக் கழுவுவதன் மூலமாக இயேசுகிறிஸ்து தம்முடைய தாழ்மையையும் அன்பையும் வெளிப்படுத்துகிறார். தம்முடைய கையில் பிதா எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்திருக்கிறார் என்பதை இயேசுகிறிஸ்து அறிந்திருக்கிறார். போஜனம்பண்ணிக் கொண்டிருக்கையில், போஜனத்தைவிட்டு எழுந்து தம்முடைய சீஷர்களின் கால்களைக் கழுவுகிறார். அவரோடுகூட போஜனம்பண்ணிக் கொண்டிருக்கிறவர்களுக்குக் கூட இயேசுகிறிஸ்துவின் இந்தச் செய்கை மிகுந்த ஆச்சரியமாயிற்று.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமக்கு நியமிக்கப்பட்ட பிரகாரமாகவே முன்செல்லுகிறார். எல்லாவற்றையும் செய்ய பிதாவானவர் குமாரனுக்கு அதிகாரங் கொடுத்திருக்கிறார். சகலமும் தம்முடைய பிதாவினால் தமக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று இயேசுகிறிஸ்து அறிவிக்கிறார் (மத் 11:27). இந்தச் சத்தியத்தை அவர் மறுபடியும் சொல்லும்போது "தம்முடைய கையில் பிதா எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்திருக்கிறார்" என்று அறிவிக்கிறார்.

## அதிகாரம் - 13

தேவனுடைய எல்லாக் காரியங்களுக்கும் இயேசுகிறிஸ்துவே சுதந்தரவாளியாக இருக்கிறார். இயேசுகிறிஸ்து தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறவர். ஆதியிலிருந்தே பிதாவாகிய தேவனோடு, குமாரனாகிய இயேசுகிறிஸ்து கூடவே இருக்கிறார் என்பதை இந்த வாக்கியம் தெளிவுபடுத்துகிறது. இயேசுகிறிஸ்து தேவனிடத்திலிருந்து, தேவகுமாரனாக வந்திருக்கிறார். தேவனே இவரை அனுப்பியிருக்கிறார். இப்போது இயேசுகிறிஸ்து தேவனிடத்திற்குப் போகப்போகிறார். தேவனிடத்திலிருந்து வந்திருப்பது அவரிடத்திற்குத் திரும்பிப்போகும். பரலோகத்திலிருந்து பிறந்திருக்கிறவர்கள், பரலோகத்திற்குரியவர்கள். அவர்கள் பரலோகத்திற்குப் போவார்கள்.

இயேசுகிறிஸ்து இந்தச் சத்தியங்கள் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார். ஒரு ராஜாவுக்கு வாரிசு பிறக்கும்போது அது தொட்டிலில் படுத்திருக்கும். அந்த ராஜ்யத்தை ஆளுகை செய்யும் அதிகாரம் அந்தச் சிறிய குழந்தைக்குக் கொடுக்கப்படும். ஆனால் அந்தக் குழந்தையோ தனக்கு கிடைத்திருக்கும் அதிகாரம், கனம், மகிமை ஆகிய எதையும் அறிந்துகொள்ளாமல் சும்மா படுத்திருக்கும். இயேசுகிறிஸ்து இதைப்போல ஒன்றும் தெரியாதவராகத் தொட்டிலில் படுத்திருக்கிற குழந்தையல்ல. தாம் உயர்த்தப்படப்போவதையும், தமக்கு மகிமை கொடுக்கப்படப்போவதையும் இயேசுகிறிஸ்து தெளிவாக அறிந்திருக்கிறார். ஆனாலும் இப்போது தம்மைத்தாமே தாழ்த்தி, தம்முடைய சீஷர்களின் கால்களைக் கழுவுகிறார்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களின் கால்களை ஏன் கழுவவேண்டும் என்று பலரும் பலவிதமாகச் சிந்தித்துப் பார்க்கிறார்கள். இந்தச் சம்பவம் இப்போது ஏன் நடைபெறவேண்டும் என்றும் சிலர் யோசித்துப் பார்க்கிறார்கள். இயேசுகிறிஸ்து இப்போது தமக்கு நியமிக்கப்பட்டிருக்கும் பாடுகளை அனுபவிக்க ஆயத்தமாகயிருக்கிறார். இந்தப் பாடுகளுக்கு ஆரம்பமாக, இயேசுகிறிஸ்து தம்மைத்தாமே தாழ்த்துகிறார். இயேசுகிறிஸ்து பாடுகளை அனுபவிக்கும்போது அவருக்கு ஆதரவும், ஆறுதலும் தேவைப்படுகிறது.

யூதாஸ்காரியோத்து இப்போது இயேசுகிறிஸ்துவைக் காட்டிக்கொடுக்கப்போகிறான். எல்லாவற்றையும் அறிந்திருக்கிற இயேசுகிறிஸ்து, யூதாஸ்காரியோத்தையும், அவன் தம்மை காட்டிக்கொடுக்கப்போவதையும் அறிந்திருக்கிறார். அதேவேளையில் தாம் தேவனிடத்திலிருந்து வந்திருப்பதையும், தேவனிடத்திற்குப் போகிறதையும் அறிந்திருக்கிறார். தமக்கு மகிமை காத்துக்கொண்டிருக்கிறது என்பதற்காக, தமக்கு நியமிக்கப்பட்டிருக்கும் ஊழியத்தை இயேசுகிறிஸ்து மறந்துவிடவில்லை.

மனுஷர் எல்லோருமே இயேசுகிறிஸ்துவைவிட தாழ்ந்தவர்கள். அவர் மனுஷரிடத்தில் அன்புகூரும்போது, தம்மைவிட தாழ்ந்தவரிடத்தில் அன்புகூருகிறார். அன்புகூருகிற ஊழியத்திலிருந்து இயேசுகிறிஸ்து பின்வாங்கிவிடவில்லை. தாம் மகிமையடையப்போவதை நினைத்து, தம்மைவிட தாழ்மையானவர்களிடத்தில் அன்புகூராமல், தமது மகிமையையே அவர் நினைத்துப் பார்த்துக்கொண்டிருக்கவில்லை. தம்மைத் தாழ்மைப்படுத்துவதற்காகவே இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களின் கால்களைக் கழுவுகிறார்.

தேவனுடைய நினைவுகள் நம்முடைய நினைவுகள் ஆகாது. ஒருவேளை தம்முடைய சீஷர்களின் கால்களைக் கழுவுவதற்கு இயேசுகிறிஸ்துவுக்கு வேறு விசேஷித்த காரணம் இருந்திருக்கலாம். நமக்கு அது தெரியவில்லையென்றால், தெரியாத காரியங்கள் கர்த்தருக்கே உரியது என்று தீர்மானம் செய்து, அதைக் கர்த்தருடைய சமுகத்தில் அர்ப்பணித்துவிடவேண்டும்.

### போஜனத்தை விட்டெழுந்து

**போஜனத்தை விட்டெழுந்து, வஸ்திரங்களைக் கழற்றிவைத்து, ஒரு சீலையை எடுத்து, அரையிலே கட்டிக்கொண்டு, பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, சீஷருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார் (யோவா 13:4,5).**

இயேசுகிறிஸ்து தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறவர். தேவனிடத்திற்குப் போகப்போகிறவர். மகிமைக்குப் பாத்திரர். ஆனால் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்மைத்தாமே தாழ்த்துகிறார். மனுஷருக்குப் பரலோகமும் சந்தோஷமும் உறுதிபண்ணப்பட்டால், அவனுடைய உள்ளத்தில் பெருமை வந்துவிடும். ஆனால் இயேசுகிறிஸ்துவோ பரலோகத்திற்குச் சொந்தக்காரர். அப்படியிருந்தும் அவருடைய உள்ளத்தில் பெருமை எதுவுமில்லை. அவர் தம்மையே மரணபரியந்தம் தாழ்த்துகிறார். இயேசுகிறிஸ்துவோடு போஜனம் பண்ணுகிறவர்கள் சாதாரண சீஷர்கள். அவர்களுடைய கால்களைக் கழுவி இயேசுகிறிஸ்து தம்மையே தாழ்த்துகிறார்.

## அதிகாரம் - 13

ஒரு மனுஷனுடைய கால்களைக் கழுவுவது மிகவும் இழிவான வேலை. வேலைக்காரர்களிலும், கீழ்மட்டத்திலுள்ள வேலைக்காரர்கள்தான் இப்படிப்பட்ட வேலைகளைச் செய்வார்கள். இயேசுகிறிஸ்து அப்படிப்பட்ட தாழ்மையான வேலையைச் செய்வதற்குத் தம்மை ஒப்புக்கொடுக்கிறார். இயேசுகிறிஸ்து தம்மைவிட தாழ்ந்தவர்களிடத்திலும் அன்புகூர்ந்து, அவர்களுடைய கால்களைக் கழுவுகிறார். இதனால் அவருடைய சீஷர்களுக்கு மிகுந்த ஆச்சரியம் உண்டாயிற்று.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களின் கால்களைக் கழுவினாலும், இதைத் தம்முடைய சீஷர்களுக்காகவே செய்கிறார். அவர்களும் தம்மைப்போலவே, தங்களைவிட தாழ்ந்தவர்களிடத்திலும் அன்புகூரவேண்டும் என்பதை அவர்களுக்கு எடுத்துக்காண்பிக்கிறார். சீஷர்கள் தங்களைத் தாழ்த்தவேண்டும். தங்களுடைய சரீரத்தின் மூலமாக வரும் மகிமையை எதிர்பார்க்கக்கூடாது. சரீரத்தின் வசதிகளுக்கும், சொகுசுகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்காமல், தங்களுடைய சரீரங்களைத் தாழ்த்தி, ஊழியம் செய்யவேண்டும்.

மனுஷர் பொதுவாக தங்களுடைய சரீரத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்று விரும்புவார்கள். தண்ணீரினால் ஒருவேளை சரீரத்தை அடிக்கடி சுத்தப்படுத்தி அழகுபடுத்தலாம். ஆனால் மனுஷனுடைய கால்களோ அழுக்கு நிறைந்ததாகவே இருக்கும். தன்னுடைய முகத்தைச் சுத்தமாக வைத்திருக்கவேண்டும் என்று விரும்புகிற மனுஷன், தன் முகத்தைப்போல தன் கால்களையும் சுத்தமாக வைத்திருக்கவேண்டும் என்று பொதுவாக விரும்புவதில்லை. ஆகையினால் கால்கள் எப்போதுமே அழுக்கடைந்ததாகவும், அசுத்தமானதாகவும் இருக்கும்.

சீஷர்கள் இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரர்கள். இந்தச் சீஷர்கள்தான் தங்கள் எஜமானரும் ஆண்டவருமாகிய இயேசுகிறிஸ்துவின் கால்களைக் கழுவவேண்டும். இதுதான் உலகத்தின் நியதி. சில சமயங்களில் வேலைக்காரர்கள் தங்கள் எஜமான்களின் கால்களைக் கழுவும்போது, அவர்களிடத்திலிருந்து ஏதாவது சிறப்பான சலுகைகளை எதிர்பார்த்து இந்த வேலைகளைச் செய்வார்கள். எஜமானிடத்திலிருந்து தங்களுக்கு ஒன்றும் கிடைக்காது என்பது உறுதியாகத் தெரிந்தால், வேலைக்காரர்கள் இப்படிப்பட்ட தாழ்மையான வேலைகளைச் செய்யமாட்டார்கள். ஒருசிலர் தங்கள் எஜமானிடம் நல்ல பெயர் எடுக்கவேண்டும் என்பதற்காக அவரை முகஸ்துதி செய்வார்கள். அதிகமாகப் பணிந்து குனிந்து வேலை செய்வார்கள். அப்படிப்பட்டவர்கள் எப்போதாவது தங்கள் எஜமானனின் கால்களைக் கழுவுவார்கள்.

ஆனால், இங்கோ ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவே, தம்முடைய ஊழியக்காரராகிய சீஷரின் கால்களைக் கழுவுகிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடத்திலிருந்து எந்தச் சலுகையும் எதிர்பார்க்கவில்லை. அவர்களுடைய கால்களைக் கழுவுவதுபோல இயேசு நடித்துக் காண்பிக்கவில்லை. மெய்யாகவே அவர்களுடைய கால்களைக் கழுவுகிறார். உண்மையான மனத்தாழ்மையைத் தவிர இயேசுகிறிஸ்துவிடம் வேறு எதுவுமில்லை. ஒரு விளம்பரத்திற்காகவோ, மற்றவர்கள் தம்மை தாழ்மையுள்ளவரென்று புகழவேண்டும் என்பதற்காகவோ, வேறு ஏதாவது கட்டாயத்தின் பேரிலோ இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களின் கால்களைக் கழுவவில்லை. மனத்தாழ்மையுள்ளவர் தாழ்மையான ஊழியத்தைச் செய்கிறார்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களின் கால்களைக் கழுவுவதற்காகப் போஜனத்தைவிட்டு எழும்புகிறார். இந்த வாக்கியத்திற்கு வேதபண்டிதர்கள் வெவ்வேறு விதமாக வியாக்கியானம் கூறுகிறார்கள். "அவர்கள் போஜனம்பண்ணிக் கொண்டிருக்கையில்" (யோவா 13:2) என்னும் வாக்கியம் ஏற்கெனவே எழுதப்பட்டிருப்பதினால், இயேசுகிறிஸ்து போஜனம்பண்ணி முடித்துவிட்டார் என்றும், அதன்பின்பு அவர் எழுந்து தம்முடைய சீஷர்களின் கால்களைக் கழுவுகிறார் என்றும் ஒரு சிலர் வியாக்கியானம் கூறுகிறார்கள்.

"போஜனத்தை விட்டெழுந்து" என்னும் வாக்கியத்திற்கு மற்றொரு விதமாக வியாக்கியானம் கூறுகிறவர்கள், "இயேசுகிறிஸ்து போஜனம்பண்ணிக் கொண்டிருக்கிறார் என்றும், இன்னும் போஜனம்பண்ணி முடிக்கவில்லை என்றும், போஜனம்பண்ணும்போது, தம்முடைய சீஷர்களின் கால்களைக் கழுவுவதற்காக, பாதியிலேயே போஜனத்தைவிட்டெழும்புகிறார்" என்றும் கூறுகிறார்கள். ஏனெனில் "அவர் திரும்ப உட்கார்ந்து" (யோவா 13:12), "துணிக்கையைத் தோய்த்து" (யோவா 13:26) என்னும் வார்த்தைகள் வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது. ஆகையினால் இயேசுகிறிஸ்து போஜனம்பண்ணிக் கொண்டிருக்கும்போது, பாதியில் எழுந்து, தம்முடைய சீஷர்களின் கால்களைக் கழுவுகிறார் என்று இந்த வாக்கியத்திற்கு வியாக்கியானம் கூறுவது சிறப்பாக இருக்கும்.

## அதிகாரம் - 13

இயேசுகிறிஸ்து போஜனத்தைவிட்டு எழும்புவதன் மூலமாக நமக்கு சில ஆவிக்குரிய சத்தியங்களை வெளிப்படுத்துகிறார். அவையாவன: 1. தேவனுடைய ஊழியத்தை செய்வதற்கோ அல்லது மனுஷருக்கு உதவி செய்வதற்கோ, நம்முடைய போஜனத்தைவிட்டு பாதியில் எழும்பிச் செல்வது நமக்கு இடையூறாக இருக்கிறது என்று நினைக்கக்கூடாது. 2. நம்முடைய போஜனத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது.

நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையில் நமக்குப் பலவிதமான பொறுப்புக்கள் உண்டு. நமது ஆரோக்கியத்திற்காக நாம் புசிக்கிறோம். நமது ஜீவனுக்கு போஜனம் உதவியாக இருக்கும். போஜனத்திற்காக நாம் ஜீவிக்கக்கூடாது. கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கு ஊழியமே முக்கியமானதாக இருக்கவேண்டும். நாம் போஜனம்பண்ணிக்கொண்டிருக்கும் வேளையிலோ, அல்லது நாம் நித்திரையாக இருக்கும் வேளையிலோ, கர்த்தருடைய ஊழியத்தைச் செய்வதற்கு ஒரு வாய்ப்பு கிடைக்குமென்றால், அந்த ஊழிய வாய்ப்பைப் பயன்படுத்தி ஊழியம் செய்யவேண்டும். தம்முடைய உற்றார் உறவினர் மூலமாகக்கூட, தம்முடைய ஊழியம் தடைபடுவதை இயேசுகிறிஸ்து விரும்பவில்லை. ஊழியத்தை விட்டுவிட்டு இயேசுகிறிஸ்து உறவினரைப் பார்க்கப்போய்விடவில்லை (மாற் 3:33). இங்கு இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரோடு போஜனம்பண்ணிக்கொண்டிருக்கையில், பாதியிலேயே போஜனத்தைவிட்டு எழுந்து, தம்முடைய சீஷர்மீது தமக்கு இருக்கும் அன்பை வெளிப்படுத்துகிறார்.

ஒரு சிலர் போஜனத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள். போஜனப்பிரியராக இருப்பார்கள். போஜனம்பண்ணுவதற்காகவே தாங்கள் ஜீவிப்பதாக நினைத்துக்கொள்வார்கள். ஊழியத்தைவிட போஜனம்பண்ணுவதற்கு நாம் முக்கியத்துவம் கொடுத்தால் நம்முடைய நிலமை பரிதாபமாக இருக்கும். இயேசுகிறிஸ்துவும் அவருடைய சீஷர்களும் போஜனம்பண்ணும்போது, ஒருவேளை தங்கள் பசியை ஆற்றுவதற்காக போஜனம்பண்ணிக்கொண்டிருக்கலாம்.

போஜனம்பண்ணுவது எல்லோருக்கும் முக்கியமானதுதான். ஆனாலும் இயேசுகிறிஸ்து போஜனம்பண்ணுவதைவிட்டு எழும்பி ஊழியம் செய்கிறார். போஜனம்பண்ணும்போது நமது போஜனமும், சுற்றுப்புறமும் சுத்தமாக இருக்கவேண்டும் என்று விரும்புவோம். ஆனால் இயேசுகிறிஸ்துவோ போஜனம்பண்ணுவதை விட்டு எழுந்து, அசுத்தமான கால்களைத் தம்முடைய சுத்தமான கைகளினால் கழுவுகிறார். கால்களைச் சுத்தப்படுத்துகிறார். தேவபக்தியும் பரிசுத்தமும் எப்போதும் இணைந்தேயிருக்கும்.

ஒவ்வொன்றுக்கும் ஒரு வேளை உண்டு. போஜனம்பண்ணும்போது போஜனத்தின் ருசியைச் சுவைப்பதுதான் வழக்கம். போஜனம்பண்ணும் இடத்திற்கு உரிய மரியாதையை நாம் தரவேண்டும். இந்த சமயத்தில் நம்முடைய பேச்சும் செயல்களும் சுத்தமானதாகவும் கண்ணியமானதாகவும் இருக்கவேண்டும். போஜனம்பண்ணும்போது ஒரு சிலர் அதற்குரிய வஸ்திரம் தரித்திருக்கவேண்டும் என்று விரும்புவார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ போஜனம்பண்ணும் விருப்பதை சிலுவையில் அறைந்தவராக, போஜனத்தைவிட்டு எழும்புகிறார். தம்முடைய வஸ்திரங்களை கழற்றி வைத்து, ஒரு சீலையை எடுத்து அரையில் கட்டிக்கொள்கிறார். ஒரு வேலைக்காரரைப்போல அரையை கட்டிக்கொள்கிறார். இயேசுகிறிஸ்து நமக்காகத் தாழ்மையின் ரூபமெடுத்திருக்கிறார். அதிலும் விசேஷமாக ஒரு வேலைக்காரருடைய ரூபத்தையும் எடுத்திருக்கிறார். தம்முடைய வஸ்திரத்தைக் கழற்றி வைத்துவிட்டு ஒரு சேலையை எடுத்து, அரையில் கட்டிக்கொண்டு ஒரு வேலைக்காரரைப்போலவே பணிவிடை செய்கிறார்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களின் கால்களைக் கழுவும்போது, அவர் வஸ்திரம் தரித்திருப்பாரென்றால், அது அவருடைய ஊழியத்திற்கு இடையூறாக இருக்கும். தாம் செய்ய விரும்புகிற வேலையை நேர்த்தியாகச் செய்யவேண்டும் என்பதற்காக, இயேசு தம்முடைய அரையில் சீலையை கட்டிக்கொள்கிறார். கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நாம், நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஊழியத்தைச் செய்வதற்கு, ஏற்ற வஸ்திரத்தைத் தரித்துக்கொள்ளவேண்டும். நம்முடைய வஸ்திரம் நமது ஊழியத்தை நேர்த்தியாகச் செய்வதற்கு உதவிபுரியவேண்டும். ஊழியக்காரர்களுக்கு ஆடம்பரமோ, வெளிவேஷமோ தேவையில்லை.

## அதிகாரம் - 13

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களின் கால்களைக் கழுவும்போது, தம்மை எந்த அளவுக்குத் தாழ்த்தவேண்டுமோ அந்த அளவுக்குத் தாழ்த்துகிறார். ஒரு சீலையைக் எடுத்து அரையிலே கட்டிக்கொண்டு, பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, சீஷருடைய கால்களைக் கழுவி, தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினால் சீஷர்களின் கால்களைத் துடைக்கிறார். இயேசுகிறிஸ்து எல்லா சீஷர்களுடைய கால்களைக் கழுவி துடைப்பதுபோல, யூதாஸ்காரியோத்தின் கால்களையும் கழுவி, தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினால் அதைத் துடைக்கிறார். இயேசுகிறிஸ்து சீஷர்களின் கால்களைக் கழுவும்போது யூதாஸ்காரியோத்தும் அங்கு இருக்கிறான் (யோவா 13:26). தம்மை யூதாஸ்காரியோத்து காட்டிக்கொடுக்கப்போகிறான் என்பது இயேசுகிறிஸ்துவுக்குத் தெரியும். ஆனாலும் தம்முடைய அன்பை அவனுக்கும் வெளிப்படுத்துகிறார். அவனுடைய கால்களையும் கழுவுகிறார். இந்தக் கால்கள்தான் இயேசுகிறிஸ்துவைக் காட்டிக்கொடுப்பதற்காக, இன்னும் கொஞ்ச நேரத்தில் அவரைவிட்டு விலகி ஓடிப்போகப்போகிறது. ஆனாலும் இயேசு அவனுடைய கால்களைப் புறக்கணித்துவிடவில்லை. தம்முடைய அன்பை அவனுக்கும் காண்பிக்கிறார்.

### நீங்களெல்லாரும் சுத்தமுள்ளவர்கள் அல்ல
### யோவா 13 : 6-11

**யோவா 13:6. அவர் சீமோன் பேதுருவினிடத்தில் வந்தபோது, அவன் அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் என் கால்களைக் கழுவலாமா என்றான்.**

**யோவா 13:7. இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் செய்கிறது இன்னதென்று இப்பொழுது நீ அறியாய், இனிமேல் அறிவாய் என்றார்.**

**யோவா 13:8. பேதுரு அவரை நோக்கி: நீர் ஒருக்காலும் என் கால்களைக் கழுவப்படாது என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை என்றார்.**

**யோவா 13:9. அதற்குச் சீமோன் பேதுரு: ஆண்டவரே, என் கால்களைமாத்திரமல்ல, என் கைகளையும், என் தலையையுங்கூட கழுவவேண்டும் என்றான்.**

**யோவா 13:10. இயேசு அவனை நோக்கி: முழுகினவன் தன் கால்களைமாத்திரம் கழுவவேண்டியதாயிருக்கும், மற்றப்படி அவன் முழுவதும் சுத்தமாயிருக்கிறான்; நீங்களும் சுத்தமாயிருக்கிறீர்கள்; ஆகிலும் எல்லாரும் அல்ல என்றார்.**

**யோவா 13:11. தம்மைக் காட்டிக்கொடுக்கிறவனை அவர் அறிந்திருந்தபடியினால் நீங்களெல்லாரும் சுத்தமுள்ளவர்கள் அல்ல என்றார்.**

**என் கால்களைக் கழுவலாமா**

**அவர் சீமோன் பேதுருவினிடத்தில் வந்தபோது, அவன் அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் என் கால்களைக் கழுவலாமா என்றான் (யோவா 13:6).**

இயேசுகிறிஸ்து சீஷர்களுடைய கால்களைக் கழுவுவது, மனுஷருடைய ஆத்துமாவில் பாவத்தினால் உண்டாயிருக்கிற அசுத்தங்களைக் கழுவுவதற்கு ஒப்புமையாக இருக்கிறது. இயேசுகிறிஸ்து பேதுருவோடு நடத்துகிற உரையாடலில் இந்தச் சத்தியம் தெளிவுபடுத்தப்படுகிறது.

இயேசுகிறிஸ்து ஒவ்வொரு சீஷருடைய கால்களாக கழுவிக்கொண்டு, பேதுருவின் கால்களைக் கழுவுவதற்காக அவனிடத்திற்கு வருகிறார். ஒருவேளை அவனுடைய கால்களைக் கழுவுவதற்கு வசதியாக, இயேசுகிறிஸ்து பேதுருவின் கால்களை நீட்டுமாறு சொல்லியிருக்கலாம். ஒருவேளை சீஷருடைய கால்களைக் கழுவும்போது, பேதுரு முதல் ஆளாக, அவருக்கு அருகில் பந்தியில் அமர்ந்திருக்கலாம். மற்ற சீஷர்களைவிட பேதுரு அதிகமாகப் பேசக்கூடியவன். ஆகையினால் இயேசுகிறிஸ்து பேதுருவின் கால்களை முதலாவதாகக் கழுவுவதற்காக அவனிடத்தில் வந்திருக்கலாம்.

பேதுருவினுடைய சந்தேகம் தீர்ந்துவிட்டால் எல்லோருடைய சந்தேகமும் தீர்ந்ததுபோல இருக்கும். ஆகையினால் பேதுருவின் கேள்விகளுக்கு இயேசுகிறிஸ்து பிரதியுத்தரம் கூறுகிறார். பேதுரு இயேசுவை நோக்கி "ஆண்டவரே, நீர் என் கால்களைக் கழுவலாமா" என்று கேட்கிறான். பேதுரு இயேசுகிறிஸ்துவைத் தன்னுடைய கர்த்தராகவும் ஆண்டவராகவும் அங்கீகரித்திருக்கிறான். அவர் தேவனுடைய குமாரனென்பதை சீஷர்கள் அறிந்திருக்கிறார்கள். அவர் தேவனிடத்திலிருந்து வந்திருக்கிற கிறிஸ்து என்று சீஷர்கள் விசுவாசிக்கிறார்கள். தாங்களோ இந்தப் பூமியில் பாவியான மனுஷரென்றும், ஒன்றுக்கும் உதவாத புழுக்களைப்போல இருப்பதாகவும் சீஷர்கள் நினைக்கிறார்கள். அப்படிப்பட்ட பாவிகளாகிய தங்களுடைய கால்களை இயேசுகிறிஸ்து கழுவலாமா என்று அவரிடத்திலேயே பேதுரு கேட்கிறான்.

## அதிகாரம் - 13

இயேசுகிறிஸ்து தம்முடைய கைகளினால் பரிசுத்தமான குஷ்டரோகிகளைச் சொஸ்தமாக்கியிருக்கிறார். குருடருக்குப் பார்வை கொடுத்திருக்கிறார். மரித்தோரை மறுபடியும் உயிரோடு எழுப்பியிருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் கை பரிசுத்தமானது. வல்லமையுள்ளது. அப்படிப்பட்ட பரிசுத்தமான கையினால் இயேசுகிறிஸ்து தன்னுடைய கால்களைக் கழுவலாமா என்று பேதுரு கேட்கிறான். பேதுருவுக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்தால் அவன் இயேசுகிறிஸ்துவின் கால்களைச் சந்தோஷமாகக் கழுவுவான். பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, இயேசுகிறிஸ்துவின் கால்களைக் கழுவி, சீலையினால் அவருடைய கால்களைத் துடைத்து பெருமைப்பட்டிருப்பான். ஆனால் இயேசுகிறிஸ்து தன்னுடைய பேதுருவின் கால்களைக் கழுவுவதைப் பேதுருவினால் புரிந்துகொள்ள முடியவில்லை. அதை ஏற்றுக்கொள்ளவும் முடியவில்லை.

### இப்பொழுது நீ அறியாய்

**இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் செய்கிறது இன்னதென்று இப்பொழுது நீ அறியாய், இனிமேல் அறிவாய் என்றார் (யோவா 13:7).**

பேதுருவின் கேள்விக்கு இயேசுகிறிஸ்து பொறுமையோடு பிரதியுத்தரம் கூறுகிறார். "நான் செய்கிறது இன்னதென்று இப்பொழுது நீ அறியாய்" என்று கூறுகிறார். ஆனாலும் பேதுரு இதன் சத்தியத்தை நிரந்தரமாக அறியாமலேயே இருந்துவிடமாட்டான். இனிமேல் அறிவான். இயேசுகிறிஸ்து தன்னுடைய கால்களைக் கழுவுவதற்குப் பேதுரு இப்பொழுது இடங்கொடுக்கவேண்டும். இதன் காரணத்தைப் பேதுரு இப்பொழுது அறிந்து கொள்ளவில்லையென்றாலும், இனிமேல் அவன் இதை அறிந்துகொள்ளப்போவதினால், இப்பொழுது இயேசுகிறிஸ்து தன்னுடைய கால்களைக் கழுவுவதற்குப் பேதுரு இடங்கொடுக்கவேண்டும். இயேசுவின் கிரியைகளை இப்போது பேதுரு புரியாமலிருக்கிறான். சத்தியத்தைப் புரிந்துகொள்ள முடியாமல் இருளில் இருப்பவன்போல யோசிக்கிறான்.

இயேசுகிறிஸ்துவின் கட்டளை நமக்கு ஆரம்பத்தில் புரியவில்லையென்றாலும், நாம் அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிய எப்போதுமே ஆயத்தமாக இருக்கவேண்டும்.

இயேசு பேதுருவுக்கு சொன்னதுபோலவே, நம்மிடமும் "நான் செய்கிறது இன்னதென்று இப்பொழுது அறியாய், இனிமேல் அறிவாய்" என்று கூறுகிறார். ஆகையினால் இயேசுகிறிஸ்து செய்கிறது நமக்குப் புரியவில்லை என்பதற்காக, அதை விவாதம்பண்ணிக் கொண்டிருக்கக்கூடாது. நமக்குப் பிடிக்கவில்லையென்றால் இயேசுகிறிஸ்து செய்வது சரியல்ல என்று தீர்மானம்பண்ணிவிடக்கூடாது. இப்போது நமக்கு அவருடைய செய்கைகள் புரியாமற்போனாலும், ஏற்ற வேளை வரும்போது நாம் அதைப் புரிந்துகொள்வோம்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களின் கால்களைக் கழுவுவது ஏன் என்று பேதுருவுக்கு இப்போது தெரியவில்லை. ஆனால் இனிமேல் அறிந்துகொள்வான். ஆகையினால் அவருடைய செய்கை எப்போதுமே முக்கியமானதுதான். இயேசுகிறிஸ்து தம்முடைய ஊழியக்காலத்தில் பல காரியங்களைச் செய்திருக்கிறார். அவற்றின் மெய்யான பொருளை, அவருடைய ஊழியக்காரர்களே அப்போது அறிந்துகொள்ளவில்லை. ஆனாலும் ஏற்றவேளை வந்தபோது அவர்கள் அதை அறிந்துகொண்டார்கள். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில், கர்த்தருடைய சத்தியங்கள் ஒவ்வொன்றாக நமக்கு விளக்கிக் காண்பிக்கப்படும். ஒவ்வொரு சம்பவமும் நடைபெறும்போது, நாம் ஏற்கெனவே நடைபெற்ற சம்பவத்தைப் புரிந்துகொள்வோம். சில சமயங்களில் தற்காலத்துப் பாடுகள் நமக்கு அதிக வேதனையைத் தரலாம். ஏன் இந்தப் பாடுகள் என்று நமக்குப் புரியாமற்போகலாம். ஏற்றவேளை வரும்போது கர்த்தர் இதன் அவசியத்தை நமக்குத் தெரியப்படுத்துவார்.

இயேசுகிறிஸ்து நம்முடைய ஜீவியத்தில் கிரியை செய்யும்போது, நமக்குப் பிரியமானபடி, நம்முடைய சித்தத்தின் பிரகாரமாக அவர் கிரியை செய்யவேண்டும் என்று நாம் எதிர்பார்க்கக்கூடாது. கர்த்தர் தம்முடைய செய்கைகளை நிரூபித்தால்தான் அதை நம்மால் நம்பமுடியும் என்று விவாதம்பண்ணக்கூடாது. கர்த்தருக்குச் சித்தமான காரியம் நம்முடைய ஜீவியத்தில் நடைபெறவேண்டும் என்று எதிர்பார்க்கவேண்டும். கர்த்தர் நம்மை எந்தப் பாதையில் வழிநடத்தினாலும் அதுதான் சரியான பாதையென்று விசுவாசித்து அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்லவேண்டும். இயேசுகிறிஸ்துவே நமக்கு வழியாக இருக்கிறார். அவரே ஜீவனுள்ள வழி.

## அதிகாரம் - 13

**என் கால்களைக் கழுவப்படாது**

**பேதுரு அவரை நோக்கி: நீர் ஒருக்காலும் என் கால்களைக் கழுவப்படாது என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை என்றார் (யோவா 13:8).**

இயேசுகிறிஸ்து தன்னுடைய கால்களைக் கழுவுவதைப் பேதுரு அங்கீகரிக்கவில்லை. "நீர் ஒருக்காலும் என் கால்களைக் கழுவப்படாது" என்று கூறுகிறான். பேதுருவின் வார்த்தை ஒரு காரியத்தைத் தீர்மானமாக மறுக்கும் வார்த்தையாகும். இயேசுகிறிஸ்துவின் செய்கையைத் தன்னால் அனுமதிக்கவே முடியாது என்று மறுத்துவிடுகிறான். பேதுருவின் வார்த்தையிலும் தாழ்மை இருக்கிறது. மிகவும் கண்ணியமாகவும் மரியாதையாகவும் பேசுகிறான். பேதுரு தன் ஆண்டவரிடத்தில் மிகுந்த மரியாதை வைத்திருக்கிறான். அப்படிப்பட்ட ஆண்டவர் தன்னுடைய கால்களைக் கழுவுவதை பேதுருவினால்சகித்துக்கொள்ள முடியவில்லை.

இயேசுகிறிஸ்து தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாகப் பேதுருவின் கால்களைக் கழுவ வருகிறார். ஆனால் அவனோ மனத்தாழ்மை என்னும் பேரில் இயேசுவின் சித்தத்திற்கு எதிர்த்து நிற்கிறான். பேதுருவைப்போலத்தான் இக்காலத்தில் அநேக விசுவாசிகள், மனத்தாழ்மை என்னும் பேரில் இயேசுகிறிஸ்துவின் சித்தத்திற்கு எதிர்த்து நிற்கிறார்கள். சுவிசேஷத்தின் வார்த்தையை நாம் ஏற்றுக்கொள்ள மறுக்கும்போது, நம்மிடத்தில் மெய்யாகவே மனத்தாழ்மைக்குப் பதிலாக அவிசுவாசமே இருக்கும்.

தன்னுடைய கால்களைக் கழுவப்படாது என்று கூறும் பேதுருவிடம் "நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை" என்று இயேசுகிறிஸ்து கூறிவிடுகிறார். பேதுருவின் கீழ்ப்படியாமையை இயேசுகிறிஸ்து கடுமையான வார்த்தைகளினால் எச்சரிக்கிறார். "நான் உன்னைக் கழுவாவிட்டால்" என்னும் வாக்கியத்திற்கு "உன் கால்களைக் கழுவுவதற்கு எனக்கு நீ தொடர்ந்து அனுமதி மறுத்தால்" என்று பொருள் கூறவேண்டும். "என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை" என்று இயேசு கூறும் வாக்கியத்திற்கு "என்னுடைய சீஷரில் ஒருவனாக நான் உன்னை அங்கீகரிக்கமாட்டேன்" என்று பொருள்கூறவேண்டும்.

இயேசுகிறிஸ்துவின் கட்டளைக்குப் பேதுரு கீழ்ப்படியவேண்டும். அவருடைய வார்த்தையை விவாதம்பண்ணிக் கொண்டிருக்கக் கூடாது. இயேசுகிறிஸ்துவோடு தாங்கள் ஐக்கியமாக இருக்கவில்லை என்று சிந்திக்கிறவர்கள்தான், அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாமல், அவருடைய வார்த்தையை விவாதம்பண்ணிக் கொண்டிருப்பார்கள். இயேசுகிறிஸ்து பேதுருவின் கால்களைக் கழுவ வரும்போது, அவனுடைய கால்களிலுள்ள அசுத்தத்தை மாத்திரமல்ல, அவனுடைய ஆத்துமாவிலுள்ள அசுத்தத்தையும் கழுவ வருகிறார். இது ஆவிக்குரிய சுத்திகரிப்புக்கு ஒப்புமையாக இருக்கிறது.

"பாவத்தின் அசுத்தத்திலிருந்து நான் உன் ஆத்துமாவை கழுவாவிட்டால், உனக்கு என்னிடத்தில் பங்கில்லை" என்று பொருள்படுமாறு இயேசுகிறிஸ்து பேதுருவிடம் கூறுகிறார். யாரெல்லாம் இயேசுகிறிஸ்துவினால் ஆவிக்குரிய ரீதியாக கழுவப்படுகிறார்களோ, அவர்களுக்கு மாத்திரமே இயேசுகிறிஸ்துவிடத்தில் பங்கு உண்டு. இயேசுகிறிஸ்து நம்முடைய ஆத்துமாவின் அசுத்தத்தைக் கழுவுவதே நல்ல பங்கு. இதுவே தேவையான ஒன்று. நாம் இயேசுகிறிஸ்துவில் பங்கு வகிக்கும்போது அவர் நம்மைக் கழுவுவதும் அவசியமாக இருக்கிறது.

**என் தலையும்கூட கழுவவேண்டும்**

**அதற்குச் சீமோன் பேதுரு: ஆண்டவரே, என் கால்களைமாத்திரமல்ல, என் கைகளையும், என் தலையையும்கூட கழுவவேண்டும் என்றான் (யோவா 13:9).**

இயேசுகிறிஸ்து பேதுருவை எச்சரித்துக் கூறும்போது, அவன் அவருடைய வார்த்தையைப் புரிந்துகொண்டு, அவருக்கு முழுவதுமாகக் கீழ்ப்படிகிறான். இயேசுகிறிஸ்து தன்னைக் கழுவுவதற்கு ஒப்புக்கொடுக்கிறான். அவரோ அவனுடைய கால்களை மாத்திரமே கழுவுவதற்கு வந்திருக்கிறார். ஆனால் பேதுருவோ அவரிடம் "ஆண்டவரே, என் கால்களை மாத்திரமல்ல, என் கைகளையும் என் தலையையும்கூட கழுவவேண்டும்" என்று மிகுந்த பணிவோடு கூறுகிறான். பேதுருவின் மனம் வெகுவிரைவில் மாற்றமடைகிறது. நம்முடைய தீர்மானங்களில் நாமும் பிடிவாத குணத்தோடு இருக்கக்கூடாது. ஏனெனில் கர்த்தர் நம்மை மாற்றும்போது எல்லாமே மாறிப்போகும். எப்போதுமே நாம் தேவனுடைய சித்தத்திற்கு நம்மை ஒப்புக்கொடுக்கவேண்டும். கர்த்தருக்குச் சித்தமானால் நாம் மாறுவதற்கும் ஆயத்தமாக இருக்கவேண்டும்.

## அதிகாரம் - 13

கர்த்தருடைய வார்த்தைக்கு நாம் ஒருபோதும் எதிர்த்து நிற்கக்கூடாது. சற்று நேரத்திற்கு முன்பு "நீர் ஒருக்காலும் என் கால்களைக் கழுவப்படாது" என்று கூறிய பேதுரு, இப்போது "என் கால்களையும், என் கைகளையும், என் தலையையும் கழுவவேண்டும்" என்று தன்னை ஒப்புக்கொடுக்கிறான். இயேசுகிறிஸ்துவின் கிரியையை "அவருடைய தாழ்மையுள்ள கிரியை" என்று சிந்தித்துப் பார்த்ததினால், பேதுரு அவருடைய கிரியையை விரும்பவில்லை. அதன் பின்பு, இயேசுகிறிஸ்து தம்முடைய கிரியையை அவனுக்கு விளக்கிக் கூறியபின்பு, அவருடைய கிரியையானது "அவருடைய கிருபையின் கிரியை" என்று புரிந்துகொள்கிறான். அப்போதுதான் அவனுடைய மனக்கண்கள் திறக்கப்படுகிறது. இயேசுகிறிஸ்துவின் கிருபையுள்ள கிரியை தனக்குத் தேவையென்பதை அங்கீகரிக்கிறான். தான் செய்த தவற்றை உணர்த்துகொள்கிறான். திருந்துகிறான். நல்லவர்களிடத்தில் பிடிவாத குணம் இருக்காது. தாங்கள் செய்வது தவறு என்பது தெரியவந்தால், நல்லவர்கள் உடனே தங்கள் தவற்றைத் திருத்திவிடுவார்கள். துன்மார்க்கர்தான் விடாப்பிடியாக பிடிவாத குணத்தோடிருப்பார்கள்.

இயேசுகிறிஸ்துவின் கிருபையின் கிரியையை பேதுரு அதிகமாய் நேசிக்கிறான். கிறிஸ்துவின் கிருபை நம்மைச் சுத்திகரிக்கிறது. அவருடைய சுத்திகரிக்கும் கிருபை தன் கால்களுக்கு மாத்திரமல்ல, தன் கைகளுக்கும், தன் தலைக்கும் தேவையென்பதை உணர்ந்துகொள்கிறான். தன்னுடைய முழுசரீரத்தையும் இயேசுகிறிஸ்து சுத்திகரிக்கவேண்டுமென்று ஒப்புக்கொடுக்கிறான். கிறிஸ்துவின் சுத்திகரிக்கும் கிருபை பேதுருவுக்கு மாத்திரமல்ல, உலகத்திலுள்ள எல்லா ஜனங்களுக்குமே தேவைப்படுகிறது. நம்முடைய இருதயத்தை இயேசுகிறிஸ்துவினால் மாத்திரமே சுத்திகரிக்க முடியும்.

இயேசுகிறிஸ்து நம்மை சுத்திகரிக்கும் போதுதான், அவரிடத்தில் நமக்குப் பங்கு இருக்கும். துன்மார்க்கருக்கு இயேசு கிறிஸ்துவிடத்தில் பங்கில்லை. நாம் கழுவ வேண்டியவர்கள் என்பதையும், நாம் அசுத்தமானவர்கள் என்பதையும் புரிந்துகொண்டு, நம்மைக் கழுவுவதற்கு இயேசுகிறிஸ்துவிடம் ஒப்புக்கொடுக்கும்போது, அவர் நம்மைக் கழுவி சுத்திகரிப்பார். நம்முடைய அசுத்தத்தைக் குறித்து நமக்குள் பயம் இருக்கவேண்டும்.

பேதுருவைப்போல நாமும் பயபக்தியோடு "என் கால்களை மாத்திரமல்ல ஆண்டவரே, என்னை முழுவதுமாகக் கழுவும்" என்று ஜெபிக்கவேண்டும்.

நாம் இந்த உலகத்தில் ஜீவிக்கும்போது நம்முடைய கால்களும், அத்துடன் நம் சரீரத்தின் ஒவ்வொரு அவயவமும் பாவத்தினால் கறைபடுகிறது. நமது சுயமுயற்சியினாலோ அல்லது நமது சுயசக்தியினாலோ அல்லது நமது சுயபக்தியினாலோ நம்மை நாமே கழுவி நம்மைச் சுத்திகரித்துக்கொள்ள முடியாது. இயேசுகிறிஸ்துவின் கிருபை மாத்திரமே நம்மைச் சுத்திகரிக்கக்கூடியது. அவர் நம்மைக் கழுவினால் மாத்திரமே நம்மால் சுத்தமாக முடியும். ஆகையினால் நாம் நம்முடைய ஆவிக்குரிய அசுத்தங்களை உணர்ந்து, நம்மைச் சுத்திகரிக்குமாறு இயேசுகிறிஸ்துவிடம் பயபக்தியோடு விண்ணப்பம்பண்ணவேண்டும்.

**நீங்களும் சுத்தமாயிருக்கிறீர்கள்**

**இயேசு அவனை நோக்கி: முழுகினவன் தன் கால்களைமாத்திரம் கழுவவேண்டியதாயிருக்கும், மற்றப்படி அவன் முழுவதும் சுத்தமாயிருக்கிறான்; நீங்களும் சுத்தமாயிருக்கிறீர்கள்; ஆகிலும் எல்லாரும் அல்ல என்றார் (யோவா 13:10).**

இயேசு கிறிஸ்துவின் சீஷர்கள் அவரிடத்தில் உண்மையுள்ளவர்களாக இருக்கிறார்கள். கிறிஸ்துவை விசுவாசிக்கிறார்கள். கிறிஸ்து அவர்களிடம் "முழுகினவன் தன் கால்களை மாத்திரம் கழுவவேண்டியதாயிருக்கும்" என்று கூறுகிறார். அவனுடைய கைகளும் தலையும் கழுவப்பட்டிருக்கிறது. முழுகினவன் தன் வீட்டிற்கு நடந்துபோகும்போது அவனுடைய கால்களில் மாத்திரமே அசுத்தம்பட்டிருக்கும். ஆகையினால் முழுகினவன் தன் கால்களை மாத்திரம் கழுவினால் போதுமானது என்று இயேசுகிறிஸ்து கூறுகிறார்.

இயேசுகிறிஸ்து முதலில் பேதுருவின் கால்களைத்தான் கழுவுவதற்கு வந்தார். அவனோ ஆரம்பத்தில் இயேசு தன் கால்களை ஒருக்காலும் கழுவப்படாது என்று கூறிவிடுகிறான். இதே பேதுரு சிறிது நேரத்தில் "என் கால்களை மாத்திரமல்ல, என் கைகளையும் என் தலையையும்கூட கழுவவேண்டும்" என்று கூறுகிறான். இவ்விரண்டு வாக்கியமும் வெவ்வேறு விதமாக இருக்கிறது. ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல்இருக்கிறது. முதலாவதாகத் தன் கால்களைப்பற்றி மாத்திரம் பேசியவன், இப்போது தன் சரீரம் முழுவதையும் பற்றிப் பேசுகிறான். இயேசுகிறிஸ்து ஞானஸ்நானத்தின் மூலமாகப் பேதுருவை முழுவதுமாகக் கழுவியிருக்கிறார். இதை மறந்துவிட்டுத்தான், அவர் தன் கால்களைக் கழுவப்படாது என்று பேதுரு கூறுகிறான்.

## அதிகாரம் - 13

இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைக்கிறவர்கள் அவருடைய நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்கிறார்கள். நாம் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப் பட்டிருக்கிறோம். இயேசுகிறிஸ்துவினால் கழுவப்பட்டிருக்கிறோம். ஆகையினால் முழுவதும் சுத்தமாகயிருக்கிறோம். நம்முடைய இருதயத்தில் ஒருவேளை நாம் சாத்தானுக்கு இடங்கொடுத்திருக்கலாம். ஆனாலும் நம்முடைய இருதயத்தின் ஒரு பகுதியில் சாத்தான் வாசம்பண்ணலாம். என்றாலும் இயேசுகிறிஸ்து நம்மைக் கழுவும்போது, நம்முடைய இருதயம் இயேசுகிறிஸ்துவுக்கே சொந்தமானது. தமக்குச் சொந்தமான நம்முடைய இருதயத்தை, இயேசுகிறிஸ்து ஒருபோதும் சாத்தானுக்கு விட்டுக்கொடுக்கமாட்டார்.

இயேசுகிறிஸ்துவின் கிருபையினாலே நாம் சுத்திகரிக்கப்பட்டிருக்கிறோம். நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம். ஆனாலும் நாம் இந்தப் பூமியில் வாழும்போது, நம்முடைய இருதயம் அசுத்தத்தினால் அன்றாடம் கறைபடுகிறது. ஆகையினால் ஒவ்வொருநாளும் இயேசுகிறிஸ்து நம்முடைய இருதயத்தைச் சுத்திரிக்க வேண்டுமென்று விண்ணப்பம்பண்ண வேண்டும். இயேசுகிறிஸ்து "கால்களை மாத்திரம் கழுவ வேண்டியதாயிருக்கும்" என்று பொருள்படுமாறு சொல்லும்போது "இருதயத்தை மாத்திரம் சுத்தப்படுத்த வேண்டியதாயிருக்கும்" என்று சொல்லுகிறார். நம்முடைய இருதயம் ஒவ்வொரு நாளும் நம்முடைய மனந்திரும்புதலினால் புதுப்பிக்கப்பட வேண்டும். நம்முடைய இருதயத்தில் படிந்திருக்கும் பாவக்கறைகளை இயேசுகிறிஸ்து தம்முடைய இரத்தத்தினால் அன்றாடம் கழுவி சுத்தப்படுத்துவதற்கு நம்மை ஒப்புக்கொடுக்கவேண்டும்.

நாம் பாதையில் நடக்கும்போது, அசுத்தமானது ஒன்று நம்முடைய கண்களுக்குத் தெரிந்தால், மிகுந்த கவனமாக அதிலிருந்து விலகிச் சென்றுவிடுவோம். அதுபோலவே நம்முடைய இருதயத்தைத் தீட்டுப்படுத்தும் காரியம் எதுவாகயிருந்தாலும் அதிலிருந்து விலகி, நம்முடைய இருதயத்தை அசுத்தத்திலிருந்து காத்துக்கொள்ளவேண்டும். இயேசுகிறிஸ்து நம்மைக் கழுவுகிறார் என்பதற்காக, நாம் விரும்பியபடி நம்மை அசுத்தப்படுத்திக் கொள்ளலாம் என்று நினைக்கக்கூடாது. அவருடைய கிருபையை நாம் அசட்டை பண்ணக்கூடாது.

இயேசுகிறிஸ்து நம்மைத் தமது கிருபையினால் சுத்திகரிக்கும்போது, அவருடைய சுத்திகரிப்பை அசட்டை செய்துவிடாமல், மிகுந்த எச்சரிப்போடு அவருடைய சுத்திகரிப்பின் கிருபையைப் பெற்றுக்கொள்ளவேண்டும். சாத்தான் ஒவ்வொரு நாளும் நம்மைச் சோதிப்பான். இது சோதனைதானே என்று இறுமாப்பாக இருந்துவிடக்கூடாது. சிறிய அசுத்தமாகயிருந்தாலும், வெளியே தெரியாத மறைவான அசுத்தமாகயிருந்தாலும், வெளியே தெரிகிற பெரிய அசுத்தமாகயிருந்தாலும், இயேசுகிறிஸ்து தம்முடைய கிருபையினால் நம்மைக் கழுவுவதற்கு ஆயத்தமாக இருக்கும்போது, அவர் நம்மைக் கழுவுவதற்கு ஒப்புக்கொடுத்தால், நாம் சுத்தமாவோம்.

**காட்டிக்கொடுக்கிறவனை அறிந்திருந்தபடியால்**

**தம்மைக் காட்டிக்கொடுக்கிறவனை அவர் அறிந்திருந்தபடியினால் நீங்களெல்லாரும் சுத்தமுள்ளவர்கள் அல்ல என்றார் (யோவா 13:11).**

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் "நீங்களும் சுத்தமாயிருக்கிறீர்கள்" என்று கூறிவிட்டு, "ஆகிலும் எல்லாருமல்ல" என்றும் கூறுகிறார். யூதாஸ்காரியோத்து தம்மைக் காட்டிக்கொடுக்கப்போகிறான் என்பதை இயேசுகிறிஸ்து அறிந்திருக்கிறார். ஆகையினால் "நீங்களெல்லாரும் சுத்தமுள்ளவர்களல்ல" என்று கூறுகிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களின் கால்களைக் கழுவிவிட்டு "நீங்கள் சுத்தமாயிருக்கிறீர்கள்" என்று அறிவிக்கிறார். ஆனால் தம்முடைய வார்த்தையில் யூதாஸ்காரியோத்தைச் சேர்க்கவில்லை. ஆகையினால் "ஆகிலும் எல்லாருமல்ல" என்றும் கூறிவிடுகிறார்.

தாங்கள் எல்லோருமே சுத்தமானவர்களல்ல என்பதைச் சீஷர்கள் அறிந்திருக்கவேண்டும். ஒவ்வொருமுறை நாம் இயேசுகிறிஸ்துவின் சமுகத்திற்கு முன்பாக வரும்போது "ஆண்டவரே சுத்தமில்லாதவன் நான்தானா" என்று பணிவுடன் விண்ணப்பம்பண்ணவேண்டும். ஞானஸ்நானம் பெற்றதினால் யாரும் சுத்தமாகிவிடுவதில்லை. ஞானஸ்நானம் ஒருவனையும் பரிசுத்தப்படுத்தாது. இயேசுகிறிஸ்துவில் நாம் வைத்திருக்கும் விசுவாசத்தை ஞானஸ்நானத்தின் மூலமாக நாம் சாட்சியாக வெளிப்படுத்துகிறோம்.

## அதிகாரம் - 13

சில சமயங்களில் நம்முடைய பாவம் மற்றவர்களுக்குத் தெரியாது. நாம் ஒருவேளை பரிசுத்தவான்களோடு நெருங்கிய ஐக்கியத்தில் இருக்கலாம். அப்படியிருந்தாலும் நம்மிடத்திலும் பாவம் இருப்பதற்கு வாய்ப்புள்ளது. யூதாஸ்காரியோத்து இயேசுகிறிஸ்துவோடும், அவருடைய சீஷர்களோடும் நெருக்கமாக இருந்தான். வெளிப்பார்வைக்கு அவன் சுத்தமானவன்போலத்தான் காணப்பட்டான். ஆனால் அவன் இருதயத்தில் சுத்தமாகயில்லை. இயேசுகிறிஸ்துவினால் மாத்திரமே அவனுடைய இருதயத்திலிருக்கும் அசுத்தத்தைப் பார்க்க முடிகிறது. நாமும் இயேசுகிறிஸ்துவின் சமுகத்தில் வந்து, நம்முடைய இருதயத்தை ஆராய்ந்து பார்க்குமாறு பணிவோடு விண்ணப்பம்பண்ணவேண்டும்.

### இயேசுவின் முன்மாதிரி
### யோவா 13 : 12-17

**யோவா 13:12. அவர்களுடைய கால்களை அவர் கழுவினபின்பு, தம்முடைய வஸ்திரங்களைத் தரித்துக்கொண்டு, திரும்ப உட்கார்ந்து, அவர்களை நோக்கி: நான் உங்களுக்குச் செய்ததை அறிந்திருக்கிறீர்களா?**

**யோவா 13:13. நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள், நீங்கள் சொல்லுகிறது சரியே, நான் அவர்தான்.**

**யோவா 13:14. ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்.**

**யோவா 13:15. நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்.**

**யோவா 13:16. மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல, அனுப்பப்பட்டவன் தன்னை அனுப்பினவரிலும் பெரியவனல்ல.**

**யோவா 13:17. நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள்.**

**உங்களுக்குச் செய்ததை அறிந்திருக்கிறீர்களா**

**அவர்களுடைய கால்களை அவர் கழுவினபின்பு, தம்முடைய வஸ்திரங்களைத் தரித்துக்கொண்டு, திரும்ப உட்கார்ந்து, அவர்களை நோக்கி: நான் உங்களுக்குச் செய்ததை அறிந்திருக்கிறீர்களா? (யோவா 13:12)**

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களின் கால்களைக் கழுவுவது நமக்கு ஒரு முன்மாதிரியாக நியமிக்கப்பட்டிருக்கிறது. தாம் சீஷர்களின் கால்களைக் கழுவும்போது அதற்கான காரணத்தையும் இயேசுகிறிஸ்து அவர்களிடத்தில் விளக்கிக் கூறுகிறார். அவர்களுடைய கால்களை அவர் கழுவின பின்பு, அவர்களை நோக்கி "நான் உங்களுக்குச் செய்ததை அறிந்திருக்கிறீர்களா" என்று கேட்கிறார். அவர்களுடைய கால்களைக் கழுவி முடிக்கும் வரையிலும் இயேசுகிறிஸ்து அதன் விளக்கத்தை அவர்களுக்கு எடுத்துச் சொல்லவில்லை. தம்முடைய செய்கைக்கு அவர்கள் மனப்பூர்வமாக கீழ்ப்படிகிறார்களா என்பதை மாத்திரமே இயேசுகிறிஸ்து சோதித்துப் பார்க்கிறார். இயேசுகிறிஸ்துவின் சித்தத்திற்கு சரியான காரணம் தெரியவில்லையென்றாலும், அதன் காரணத்தை விவாதம்பண்ணிக் கொண்டிருக்காமல், அவருடைய சித்தத்திற்கு ஆரம்பத்திலேயே மனப்பூர்வமாகக் கீழ்ப்படியவேண்டும். இயேசுகிறிஸ்துவின் வார்த்தைக்கும் சித்தத்திற்கும் நாம் கீழ்ப்படியும்போது, அதன் இரகசியங்களை வேளை வரும்போது அவர் நமக்கு விவரித்துக் கூறுவார்.

சீஷர்களுடைய கால்களைத் தாம் கழுவுவதற்கான காரணத்தை இயேசு அவர்களிடம் விவரித்துக் கூறுவதற்கு முன்பாக, இதன் காரணத்தை அவர்கள் அறிந்திருக்கிறார்களா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறார். "நான் உங்களுக்குச் செய்ததை அறிந்திருக்கிறீர்களா" என்று இயேசுகிறிஸ்து அவர்களிடம் கேட்கும்போது, அவர்கள் தேவனுடைய ரகசியத்தை இன்னும் அறியாதிருக்கிறார்கள் என்பதை முதலாவதாக அவர்களுக்கு உணர்த்துகிறார். இதன் பொருளை அறிந்துகொள்ளவேண்டும் என்னும் ஆவலையும் எதிர்பார்ப்பையும் அவர்களுடைய மனத்திற்குள் தூண்டிவிடுகிறார். இயேசுகிறிஸ்து காரணமில்லாமல் எதையும் செய்யமாட்டார், எதையும் பேசமாட்டார்.

## அதிகாரம் - 13

### போதகரென்றும் ஆண்டவரென்றும்

**நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள், நீங்கள் சொல்லுகிறது சரியே, நான் அவர்தான் (யோவா 13:13).**

சீஷர்கள் இயேசுகிறிஸ்துவைப் போதகரென்றும் ஆண்டவரென்றும் சொல்லுகிறார்கள். அவர்கள் சொல்லுவது சரிதான் என்று இயேசு அங்கீகரிக்கிறார். அவர் மெய்யாகவே நம்முடைய மீட்பராகவும் இரட்சகராகவும் இருக்கிறார். அவர் நமக்கு போதகராகவும் ஆண்டவராகவும் இருக்கிறார். அவர் நம்முடைய போதகராக இருக்கிறபடியினால், நம்முடைய ஆசிரியராகவும், நம்முடைய உபதேசியாராகவும் இருக்கிறார். அவர் நம்முடைய ஆண்டவராக இருக்கிறபடியினால் அவர் நம்மை ஆளுகை செய்கிறவராகவும், நாம் அவருக்குச் சொந்தமானவர்களாகவும் இருக்கிறோம்.

சீஷர்கள் இயேசுகிறிஸ்துவைப் போதகரென்றும் ஆண்டவரென்றும் சொல்லுவதினால் அவருக்குப் பெருமை ஒன்றும் வந்துவிடப்போவதில்லை. அவர்கள் உள்ளதைத்தான் சொல்லுகிறார்கள். இவ்வாறு அழைப்பதினால் சீஷர்கள் இயேசுவை முகஸ்துதி பண்ணவில்லை. அவர்கள் உண்மையை எடுத்துக்கூட்டியோ, அல்லது மிகைப்படுத்தியோ பேசவில்லை. வருத்தத்தோடும் சொல்லவில்லை. சீஷர்கள் மிகுந்த சந்தோஷத்தோடு இயேசுகிறிஸ்துவை ஆண்டவரென்றும் போதகரென்றும் சொல்லுகிறார்கள்.

நாம் இயேசுகிறிஸ்துவை நம்முடைய போதகரென்றும் ஆண்டவரென்றும் சொல்லும்போது, அவர் நமக்குக் கொடுத்திருக்கிற ஆலோசனைகளுக்கும் கட்டளைகளுக்கும் கீழ்ப்படியவேண்டிய பொறுப்பு நமக்கு வந்திருக்கிறது. நாம் அவருடைய வார்த்தையின் பிரகாரம் ஜீவித்து, அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்ற வேண்டும். இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றும்போது நம்மிடத்தில் உண்மையும் விசுவாசமும் காணப்படவேண்டும்.

இயேசுகிறிஸ்துவைப்பற்றி நாம் கூறுகிற வார்த்தைகள் கண்ணியமுள்ளதாகவும், அவரை மகிமைப்படுத்தக் கூடியதாகவும் இருக்கவேண்டும்.

### நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்

**ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள் (யோவா 13:14).**

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களின் கால்களைக் கழுவுவதினால், நாமும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவவேண்டும். இயேசுகிறிஸ்து கூறும் இந்த வாக்கியத்திற்கு வேதபண்டிதர்கள் இரண்டுவிதமாகப் பொருள் கூறுகிறார்கள். அவையாவன: 1. நாம் மற்றவருடைய கால்களைக் கழுவவேண்டும். 2. நம்மிடத்தில் மனத்தாழ்மை இருக்கவேண்டும். நம்மைவிடத் தாழ்ந்தவரிடத்திலும் அன்புகூரவேண்டும்.

இயேசுகிறிஸ்து "நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்" என்று கூறுவதினால், நாம் அவருடைய வார்த்தைகளின் பிரகாரம் ஒருவருக்கொருவர் கால்களைக் கழுவிக்கொள்ளவேண்டும் என்று ஒரு சிலர் இதற்குப் பொருள் கூறுகிறார்கள். நாம் மற்றவர்மீது வைத்திருக்கும் அன்பை உறுதிபண்ணுவதற்காக நாம் அவர்களுடைய கால்களைக் கழுவவேண்டும். இது ஒரு ஆவிக்குரிய பிரமாணம் என்று இவர்கள் வியாக்கியானம் பண்ணுகிறார்கள்.

மிலான் நகரத்திலுள்ள திருச்சபைப் போதகர் அம்புரோஸ் என்பவர், இந்தப் பழக்கத்தைக் கடைப்பிடித்து, தன்னுடைய சபைக்கு வருகிற அங்கத்தினர்கள் எல்லோரும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவவேண்டும் என்னும் பிரமாணத்தை நடைமுறையில் செயல்படுத்தி வந்தார். நம்முடைய கைகளினால் சபைக்கு வருகிற மற்ற விசுவாசிகளின் கால்களைக் கழுவும்போது நம்முடைய இருதயம் தாழ்மையடையும் என்பது இவருடைய வியாக்கியானம். இயேசுகிறிஸ்து சீஷர்களுடைய கால்களைக் கழுவியதைச் சில சபையினர் அதிக முக்கியப்படுத்தி, அதை நடைமுறையில் விதவிதமாகச் செயல்படுத்துகிறார்கள்.

## அதிகாரம் - 13

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களின் கால்களைக் கழுவியதற்கு ஆவிக்குரிய அர்த்தம் கூறுகிறவர்கள் ஏராளமானோர் இருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து "நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்" என்று கூறும்போது அவர் ஆவிக்குரிய உபதேசம் பண்ணுகிறாரென்றும், அதில் மூன்று சத்தியங்களை உபதேசம் பண்ணுகிறாரென்றும் வேதபண்டிதர்களில் பலர் வியாக்கியானம் கூறுகிறார்கள். இயேசுகிறிஸ்துவின் உபதேச விவரம் வருமாறு; 1. தாழ்ந்தவரிடத்திலும் அன்புகூரும் மனத்தாழ்மை. 2. தாழ்ந்தவரிடத்திலும் அன்புகூரும் நற்குணத்தை நடைமுறையில் செயல்படுத்துவது. 3. ஒருவருக்கொருவர் பரிசுத்தமாயிருப்பதற்கு உதவிபுரிவது.

இயேசுகிறிஸ்து மனத்தாழ்மையுள்ளவர் (மத் 11:29). அவருடைய மனத்தாழ்மையை நாமும் கற்றுக்கொள்ளவேண்டும். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் உபதேசம்பண்ணும்போது, அவர்களிடத்தில் மனத்தாழ்மை இருக்கவேண்டும் என்று பல சமயங்களில் சொல்லியிருக்கிறார். ஆனால் சீஷர்களோ இயேசுகிறிஸ்துவின் இந்த முக்கியமான உபதேசத்தை அடிக்கடி மறந்துவிடுகிறார்கள். அவர்களுடைய கால்களை இயேசுகிறிஸ்து கழுவுவதன் மூலமாக, மனத்தாழ்மையைப்பற்றிய உபதேசத்தை சீஷர்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள்.

நாம் பிறர்மீது வைத்திருக்கும் அன்பை பலவிதங்களில் வெளிப்படுத்தலாம். மற்றவர்களுடைய கால்களைக் கழுவுவது அவற்றில் ஒரு வகை. பிறருடைய கால்களை நாம் கழுவும்போது, நம்மை அதிகமாகத் தாழ்த்தி நம்முடைய அன்பை வெளிப்படுத்துகிறோம். மற்றவருக்கு மெய்யாகவே நன்மை உண்டாவதற்கு நாம் பாடுபடுகிறோம். நாம் பிறருடைய கால்களைக் கழுவுவதினால், அவர்களுடைய கால்களிலுள்ள அசுத்தம் நீங்குகிறது. நாம் மற்றவர்களுடைய கால்களைக் கழுவும்போது நமக்கு சரீரவேதனை உண்டாகலாம். இதற்காக நேரம் செலவுசெய்யவேண்டும். ஆனால் இந்தத் தாழ்மையான ஊழியத்தைச் செய்யும்போது, நமக்கு வேதனை உண்டாகிறது என்றோ, நம்முடைய காலம் வீணாயிற்று என்றோ புலம்பக்கூடாது.

நம்மைவிட தாழ்ந்தவர்களுடைய கால்களைக் கழுவும்போது, நம்முடைய தாழ்மைக்குணம் மிகவும் விசேஷித்த வழியில் வெளிப்படும். ஏனெனில் நம்மைவிட தாழ்ந்தவர்களுக்குப் பொதுவாக நாம் கட்டுப்படமாட்டோம். அவர்களுடைய ஆலோசனைகளைக் கேட்கமாட்டோம். அவர்களுடைய சொற்படி நடக்கமாட்டோம். ஆனாலும் அவர்களுடைய கால்களை நாம் மனப்பூர்வமாக கழுவும்போது, அவர்கள்மீது நாம் வைத்திருக்கும் மெய்யான அன்பு வெளிப்படுகிறது. சில சமயங்களில் நம்மைவிடத் தாழ்ந்தவர்கள் நமக்கு ஏதாவது உதவி செய்தால்கூட அதை நாம் ஏற்றுக்கொள்ளமாட்டோம். நம்முடைய உள்ளத்தின் பெருமை, அந்தஸ்தின் பெருமை அவர்களோடு நம்மைப் பழகவிடாது. ஒருவருக்கொருவர் கால்களைக் கழுவும்போது நாம் பிறருடைய கால்களைக் கழுவுகிறோம். அவர்கள் நம்முடைய கால்களைக் கழுவுகிறார்கள். நம்முடைய கால்களை அவர்கள் கழுவுவதற்கு நாம் அனுமதி கொடுக்கிறோம். விசுவாசிகளாகிய நாம் மிகுந்த அன்போடு பிறருக்கு உதவிபுரியவேண்டும். அதேவேளையில் பிறர் நமக்கு செய்கிற உதவிகளையும் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளவும் வேண்டும்.

நாம் பிறருடைய கால்களைக் கழுவும்போது அவர்கள் சுத்தமடைவதற்கு உதவிசெய்கிறோம். ஒருவருக்கொருவர் கால்களைக் கழுவிக்கொள்ளும்போது, ஒருவருக்கொருவர் சுத்தமடைவதற்கு நாம் உதவியாயிருக்கிறோம். ஆகையினால்தான் இயேசுகிறிஸ்து "நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்" என்று கூறுகிறார். பாவத்தின் அசுத்தத்திலிருந்து நாம் ஒருவரையொருவர் கழுவிக்கொள்ளவேண்டும்.

பிறருடைய கால்களைக் கழுவுகிறவர்கள் தங்களுடைய கால்களையும் கழுவி சுத்தமாக வைத்திருக்கவேண்டும். உதவிபுரிவது முதலாவதாக நமது வீட்டில்தான் ஆரம்பமாக வேண்டும்.

மற்றவர்கள் பாவம் செய்வதற்கு நாம் தூண்டுதலாக இருக்கக்கூடாது. ஆனால் அவர்கள் தாங்கள் செய்த பாவங்களிலிருந்து சுத்தமாவதற்கு நாம் உதவிபுரியவேண்டும். இன்னும் அதிகமான பாவங்களை அவர்கள் செய்துவிடாதவாறு, அவர்களை சுத்தப்படுத்திக்கொண்டேயிருக்க வேண்டும். நம்முடைய அசுத்தம் பிறருக்குப் போய்விடக்கூடாது. ஆகையினால் நாம் சுத்தமாக இருக்கவேண்டியது மிகவும் அவசியம். பிறருடைய அசுத்தத்தைக் கழுவுவதற்கு முன்பாக நம்முடைய சுத்தத்தைப்பற்றி ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

## அதிகாரம் - 13

நம்மை நாமே சுத்தப்படுத்திக் கொண்டால் அது போதுமானதல்ல. சுத்திகரிப்பு நம்மோடு முடிந்துவிடுவதில்லை. நம்மோடு கூடயிருக்கும் சகவிசுவாசிகள் பாவத்தில் விழுந்துவிடும்போது, அவர்களுடைய அசுத்தங்களைச் சுத்தப்படுத்துவதற்கு நாம் முன்வரவேண்டும். அவர்களுடைய கால்களிலுள்ள அசுத்தத்தைத் தண்ணீரினால் கழுவுவதுபோல, அவர்களுடைய இருதயத்திலுள்ள அசுத்தத்தையும் நம்முடைய கண்ணீரினால் கழுவி சுத்தப்படுத்தவேண்டும்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களின் கால்களைக் கழுவியபின்பு "ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்" என்று கட்டளை கொடுக்கிறார். இயேசுகிறிஸ்து நம்முடைய போதகர். அவரிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டும். அவருடைய போதனைகளையும் உபதேசங்களையும் நாம் கற்றுக்கொண்டு அதன் பிரகாரம் ஜீவிக்கவேண்டும். அவர் நம்மைப் பார்த்து "நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்" என்று கட்டளை கொடுக்கிறார்.

**உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்**

**நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன் (யோவா 13:15).**

இயேசுகிறிஸ்துவே நமக்கு முன்மாதிரியாக இருக்கிறார். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் அவருடைய அடிச்சுவடுகளை நாம் பின்பற்றிச் செல்லவேண்டும். அவர் நமக்கு நல்ல போதகராகயிருக்கிறார். நமக்குச் சத்தியங்களை உபதேசம்பண்ணும்போது, சத்தியத்தை எடுத்துக்காட்டுக்கள் மூலமாகவும் நமக்கு விளக்கிக் காண்பிக்கிறார். இயேசுகிறிஸ்து உலகத்திற்கு வந்ததன் நோக்கமே நமக்கு அவர் முன்மாதிரியாக இருக்கவேண்டும் என்பதற்காகத்தான். இயேசுகிறிஸ்து நமக்கு முன்மாதிரியாக இல்லையென்றால் நம்முடைய ஜீவியம் தாறுமாறாக இருக்கும். இதை விளக்கும் விதமாக "நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படிக்கு உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்" என்று இயேசுகிறிஸ்து கூறுகிறார்.

இயேசுகிறிஸ்து நம்மீது அன்பாகயிருக்கிறார். நமக்குத் தேவையான ஞானத்தைக் கொடுக்கிறார். பல காரியங்களை நம்மால் செய்ய முடியுமென்று கிறிஸ்து எதிர்பார்க்கிறார். அவர் நமக்குச் செய்ததுபோல நாமும் செய்யவேண்டும். இயேசுகிறிஸ்து எதையெல்லாம் செய்திருக்கிறாரோ, அதையெல்லாம் நமக்கு ஒரு முன்மாதிரியாக நோக்கிப் பார்க்கவேண்டும். அவருடைய முன்மாதிரியின் பிரகாரமாக ஜீவிக்க நாம் கற்றுக்கொள்ளவேண்டும். இயேசுகிறிஸ்துவின் ஊழிக்காரர்கள் அவர் காண்பித்திருக்கும் மாதிரியைப் பின்பற்றவேண்டும். இயேசுகிறிஸ்துவின் தாழ்மையும், கிருபையும், பரிசுத்தமும் அவருடைய ஊழியர்களிடத்திலிருந்து வெளிப்பட வேண்டும்.

இயேசுகிறிஸ்து அப்போஸ்தலர் பவுலைப் பல இடங்களுக்கு ஊழியம் செய்வதற்காக அனுப்பினார். அவர் பலவிதமான ஜனங்கள் மத்தியில் இயேசுகிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்றி ஊழியம் செய்யும்போது "நான் எல்லாருக்கும் எல்லாமானேன்" (1கொரி 9:22) என்று கூறுகிறார். இயேசுகிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின்பற்றி ஜீவிக்கிறவர்களாகிய நாமும், எல்லோருக்கும் எல்லாமுமாக இருக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்து சீஷர்களின் அசுத்தமான கால்களைக் கழுவுவதுபோல, நாமும் பாவிகளுடைய கறைபடிந்துள்ள ஆத்துமாக்களைக் கழுவவேண்டும். சீஷர்களின் கால்களைக் கழுவுவதற்காக, இயேசுகிறிஸ்து அவர்களிடத்திலிருந்து ஊதியம் எதையும் பெற்றுக்கொள்ளவில்லை. அவர்கள்மீது இயேசுகிறிஸ்து வைத்திருக்கிற அன்பு மாறாத அன்பு. அவர்கள் இயேசுகிறிஸ்துவைவிட தாழ்ந்தவர்களாகயிருந்தாலும், அவர்களைத் தம்முடைய சிநேகிதராகவும், சகோதரராகவும் காண்கிறார். கிறிஸ்துவின் பிள்ளைகளாகிய நம்மிடத்திலும், கிறிஸ்துவின் அன்பு வெளிப்படவேண்டும். நம்மைவிட தாழ்ந்தவர்களிடத்திலும் அன்புகூர நாம் ஆயத்தமாக இருக்கவேண்டும். நம்முடைய அன்பு மாயமற்றதாகவும் மாய்மாலமில்லாததாகவும் இருப்பது மிகவும் அவசியம்.

**எஜமானிலும் பெரியவனல்ல**

**மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல, அனுப்பப்பட்டவன் தன்னை அனுப்பினவரிலும் பெரியவனல்ல (யோவா 13:16).**

## அதிகாரம் - 13

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களின் கால்களைக் கழுவுவதினால், அவர்கள் அவரை அலட்சியம்பண்ணிவிடக் கூடாது. அவர்களுடைய கால்களை இயேசுகிறிஸ்து கழுவினாலும், அவர் எப்போதுமே ஆண்டவராகவும், இரட்சகராகவும், போதகராகவுமே இருக்கிறார். சீஷர்கள் அவருடைய சீஷர்களாகத்தான் இருப்பார்கள். "ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல" என்று கூறி, இயேசுகிறிஸ்து தம்முடைய தாழ்மையையும், அதே வேளையில் தம்முடைய தெய்வீக அதிகாரத்தையும் தம்முடைய சீஷர்களுக்கு விவரிக்கிறார். இந்த சத்தியத்தை இயேசுகிறிஸ்து ஏற்கெனவே "சீஷன் தன் போதகனிலும், தன் எஜமானிலும் மேற்பட்டவனல்ல" என்று கூறியிருக்கிறார் (மத் 10:24,25).

இயேசுகிறிஸ்துவின் கட்டளையின் பிரகாரம், சீஷர்கள் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவும்போது, இதை ஒரு விநோத உபதேசம் என்று எடுத்துக்கொள்ளக் கூடாது. இயேசுகிறிஸ்துவைப்போல தங்களைத் தாழ்த்துவதற்கு சீஷர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். இயேசுகிறிஸ்துவைப்போலத் தங்களைத் தாழ்த்தி, பிறருடைய கால்களைக் கழுவுவது கடினமான காரியம் என்று சீஷர்கள் நினைக்கக்கூடாது. ஆகையினால்தான் இயேசுகிறிஸ்து அவர்களுக்கு ஒரு மாதிரியை இங்கு வைக்கிறார்.

சீஷர்கள் இயேசுகிறிஸ்துவைவிட தாழ்ந்தவர்கள். ஆனாலும் அவர்களிடத்திலும் இயேசுகிறிஸ்து அன்புகூர்ந்து, அவர்களுடைய கால்களைக் கழுவுகிறார். இதனால் இயேசுகிறிஸ்துவின் தாழ்மையுள்ள அன்பு மாத்திரமே வெளிப்படுமேயல்லாமல், அவர் ஒருபோதும் தாழ்ந்துவிடப்போவதில்லை. அவர் ஆண்டவராகவும் எஜமானராகவுமே இருப்பார். சீஷர்களும் பிறருடைய கால்களைக் கழுவும்போது, இது தங்களுடைய அந்தஸ்துக்கு இழுக்கான செய்கை என்று சிந்திக்கக்கூடாது. இவர்கள் இயேசு கிறிஸ்துவைவிட பெரியவர்களல்ல. ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல. இயேசுகிறிஸ்து அவர்களுடைய கால்களைக் கழுவினாலும், அவர்கள் இன்னும் அவருடைய ஊழியக்காரர்களாகவே இருக்கிறார்கள். இயேசு அவர்களுடைய கால்களைக் கழுவுவதினால், அவர்கள் இயேசு கிறிஸ்துவைவிட பெரியவர்களாகிவிடுவதில்லை.

நாம் கர்த்தருக்காக ஊழியம் செய்யும்போது, நம்முடைய ஊழியம் ஆசீர்வதிக்கப்பட்டால், உடனே நம்மைப் பெருமைப்படுத்தி, நாம் கர்த்தரைவிடப் பெரியவர்களென்று நினைத்துவிடக்கூடாது.

நாம் ஒருபோதும் நம்முடைய எஜமானராகிய இயேசுகிறிஸ்துவிலும் பெரியவர்களல்ல. இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களின் கால்களைக் கழுவுவதினால் அவர் தம்மைத்தாமே தாழ்த்துகிறார். இது சாதாரண தாழ்மையல்ல. கண்ணியமும் மகிமையும் நிறைந்த தாழ்மை.

நாம் பல சமயங்களில் நம்முடைய தகுதிக்குக் குறைந்த காரியங்களைச் செய்ய முன்வரமாட்டோம்.ஆனால் இயேசுகிறிஸ்துவோ, தாம் எஜமானராகயிருந்தாலும், தம்முடைய ஊழியக்காரரின் கால்களைக் கழுவி, தம்மையே தாழ்த்துகிறார். இயேசுகிறிஸ்து செய்வது அவருடைய தகுதிக்குக் குறைந்த செயலல்ல. இது மெய்யாகவே அவருடைய அன்பை வெளிப்படுத்துகிற செயல் மாத்திரமே ஆகும். நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவே தம்மைத் தாழ்த்தி, தம்மைவிடத் தாழ்ந்தவர்களுக்கு ஊழியம் செய்யும்போது, அவருடைய பிள்ளைகளாகிய நாமும், நம்முடைய இருதயத்தில் பெருமையில்லாமல், நம்மைவிடத் தாழ்ந்தவர்களுக்கும் கிறிஸ்துவின் தெய்வீக அன்பை வெளிப்படுத்தி ஊழியம் செய்யவேண்டும்.

**இவைகளைச் செய்வீர்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்**

**நீங்கள் இவைகளை அறிந்திருக்கிற படியினால், இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள் (யோவா 13:17).**

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களின் கால்களைக் கழுவி, அதைத் தொடர்ந்து உபதேசம்பண்ணும்போது, தம்முடைய உபதேசத்தின் முடிவுரையாக "நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்" என்று கூறுகிறார். பொதுவாக உலகப்பிரகாரமாகப் பேசும்போது, ஆளுகை செய்கிறவர்களும், அதிகாரத்திலுள்ளவர்களும், தங்களுக்குப் பணிவிடை செய்வதற்கு ஏராளமானோர் உள்ளவர்களும் பாக்கியவான்களென்று சொல்லுவார்கள். ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவுவது என்பது உலகப்பிரகாரமாக பெருமைக்குரிய காரியமல்ல. இதைச் செய்வதினால் யாரும் பெருமைப்படவும் முடியாது. ஆனால் இயேசுகிறிஸ்துவோ "இவைகளைச் செய்வீர்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்" என்று கூறுகிறார்.

## அதிகாரம் - 13

தம்முடைய சீஷர்களுக்கு இயேசுகிறிஸ்து தாழ்மையைப்பற்றி அற்புதமாக உபதேசம்பண்ணுகிறார். தாமே அதற்கு முன்மாதிரியாக இருந்து, அவர்களுடைய கால்களைக் கழுவி, தம்முடைய உபதேசத்தை அவர்களுக்கு விளங்கப்பண்ணுகிறார். சீஷர்களுக்குச் சந்தோஷம் வேண்டும். அந்த சந்தோஷம் பூரணமாக இருக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளைக் கேட்டு, அதை அறிந்துகொண்டு, அவைகளின்படி செய்தால் மாத்திரமே நமக்குப் பூரண சந்தோஷம் உண்டாகும். வேதவசனத்தைத் தெரிந்திருந்தால் மாத்திரம் போதாது. வசனத்தின்படி கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும். இயேசுகிறிஸ்து சொன்ன பிரகாரம், நாம் செய்தால் மாத்திரமே பாக்கியவான்களாகயிருப்போம்.

இயேசுகிறிஸ்துவின் எல்லா உபதேசங்களுக்குமே இதுவே அடிப்படைச் சத்தியம். அவருடைய உபதேசத்தை நாம் கேட்கவேண்டும். அத்துடன் நாம் அதன் பிரகாரம் கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும். நம்முடைய கடமை என்ன என்பதை அறிந்திருப்பது மிகவும் அவசியம். நம்முடைய கடமையை அறிந்திருந்து, நம்முடைய கடமையை நிறைவேற்றாமல் போனோமானால் நமக்கு சந்தோஷமோ, ஆசீர்வாதமோ கிடைக்காது. "ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும் அதைச் செய்யாமற்போனால் அது அவனுக்கு பாவமாயிருக்கும்" என்று யாக்கோபு எழுதுகிறார் (யாக் 4:17).

இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தை அறிந்திருந்து, அதன்பிரகாரம் செய்யும்போதுதான் இயேசுகிறிஸ்துவின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும். அப்போதுதான் நாம் புத்தியுள்ள வீடுகட்டுகிறவர்களைப்போல இருப்போம். இயேசுகிறிஸ்துவின் எல்லா உபதேசங்களையும் நாம் கேட்கவேண்டும். அவருடைய எல்லா கட்டளைகளுக்கும் நாம் கீழ்ப்படியவேண்டும். கிறிஸ்துவின் கட்டளைகளில் மனத்தாழ்மையைப்பற்றிய கட்டளையே மிகவும் பிரதானமானது. நம்மை நாமே தாழ்த்தவேண்டும். இயேசுகிறிஸ்து நம்மை இரட்சிப்பதற்காகத் தம்மை மரணபரியந்தம் தாழ்த்தினார். நம்மைத் தாழ்த்துவதைவிட பெரிதான ஊழியம் வேறொன்றுமில்லை.

ஒரு சிலர் இருதயத்தில் பெருமையோடிருப்பார்கள். பிறர்மீது பொறாமைப்படுவது, பிறரை வஞ்சிப்பது ஆகியவைபோல, இருதயத்தில் பெருமையோடிருப்பதும் பாவமான செயல்தான். சீஷர்கள் மனத்தாழ்மைக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. ஆகையினால் இயேசுகிறிஸ்து அவர்களுக்கு இது சம்பந்தமான உபதேசத்தை எடுத்துக்காட்டோடு உபதேசிக்க வேண்டியதாயிற்று. மற்றவர்கள் நம்முடைய கால்களைக் கழுவும்போது நமக்கு சந்தோஷமாக இருக்கும். இது நல்ல உபதேசமென்று நாம் ஏற்றுக்கொள்வோம். நாமும் மற்றவர்களுடைய கால்களைக் கழுவவேண்டும். அப்போதுதான் நம்முடைய மனத்தாழ்மையும், நம்மைவிட தாழ்வானவர்களிடத்தில் நாம் அன்புகூரும் சுபாவமும் வெளிப்படும்.

### இயேசுவைக் காட்டிக்கொடுக்கிறவன் யோவா 13 : 18-20

**யோவா 13:18. உங்களெல்லாரையுங் குறித்து நான் பேசவில்லை, நான் தெரிந்துகொண்டவர்களை அறிவேன்; ஆகிலும் வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக, என்னுடனே அப்பம் புசிக்கிறவன் என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான்.**

**யோவா 13:19. அது நடக்கும்போது நானே அவரென்று நீங்கள் விசுவாசிக்கும்பொருட்டு, இப்பொழுது அது நடப்பதற்கு முன்னமே அதை உங்களுக்குச் சொல்லுகிறேன்.**

**யோவா 13:20. நான் அனுப்புகிறவனை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான், என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறான் என்று, மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.**

#### குதிகாலைத் தூக்கினான்

**உங்களெல்லாரையுங்குறித்து நான் பேசவில்லை, நான் தெரிந்து கொண்டவர்களை அறிவேன்; ஆகிலும் வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக, என்னுடனே அப்பம் புசிக்கிறவன் என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான் (யோவா 13:18).**

## அதிகாரம் - 13

யூதாஸ்காரியோத்து இயேசு கிறிஸ்துவைக் காட்டிக் கொடுக்கவேண்டுமென்று சதி ஆலோசனைபண்ணுகிறான். இவனுடைய இருதயத்தின் தீயசிந்தனையை இயேசுகிறிஸ்து ஆரம்ப முதலே அறிந்திருக்கிறார். இயேசுகிறிஸ்து எல்லாக் காரியங்களையும், ஏற்றவேளை வரும்போதுதான் தம்முடைய சீஷர்களுக்கு அறிவிப்பார். இப்போது அந்த வேளை வந்தாயிற்று. ஆகையினால் யூதாஸ்காரியோத்து தம்மைக் காட்டிக்கொடுக்கப்போவதை இயேசுகிறிஸ்து தமது சீஷர்களுக்கு அறிவிக்கிறார்.

யூதாஸ்காரியோத்தின் வஞ்சக எண்ணத்தைப்பற்றிச் சொல்லும்போது, இயேசுகிறிஸ்து முதலாவதாக ஒரு பொதுவான செய்தியையே அவர்களுக்கு அறிவிக்கிறார். "உங்களெல்லோரையுங்குறித்து நான் பேசவில்லை, நான் தெரிந்துகொண்டவர்களை அறிவேன்" என்று கூறுகிறார். ஆனாலும் வேதவாக்கியம் நிறைவேற வேண்டியதாயிருக்கிறது. "என்னுடனே அப்பம் புசிக்கிறவன் தன் குதிகாலைத் தூக்கினான்" என்னும் வாக்கியம் சங்கீதம் 41:9-ஆவது வசனத்தில் இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது, "என் பிராண சிநேகிதனும், நான் நம்பினவனும், என் அப்பம் புசித்தவனுமாகிய மனுஷனும், என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான்".

தம்முடைய சீஷர்களெல்லோரும் எல்லா விஷயங்களிலும் சரியானவர்களல்ல என்பதை இயேசுகிறிஸ்து தெரிந்து வைத்திருக்கிறார். இயேசு அவர்களிடம் ஏற்கெனவே "நீங்களும் சுத்தமாயிருக்கிறீர்கள். ஆகிலும் எல்லாருமல்ல" (யோவா 13:10) என்று கூறியிருக்கிறார். சீஷர்களைப்பற்றி நாம் பல காரியங்களை உயர்வாகப் பேசலாம். ஆனாலும் சீஷர்கள் எல்லோருக்குமே அந்தப் பாராட்டு வார்த்தைகள் பொருந்தாது. சமுதாயத்தில் பொதுவாக நல்லவர்களும் தீயவர்களும் கலந்திருப்பார்கள். அதுபோலவே அப்போஸ்தலர்களில் யூதாசும் இருக்கிறான்.

யார் நல்லவர்களென்பதையும், யார் தீயவர்களென்பதையும் இயேசுகிறிஸ்து அறிந்திருக்கிறார். "நான் தெரிந்துகொண்டவர்களை அறிவேன்" என்று இயேசு கூறுகிறார். தெரிந்து கொள்ளப்பட்டவர்களை இயேசுகிறிஸ்து தாமே தெரிந்துகொண்டார். இயேசுகிறிஸ்து யாரைத் தெரிந்திருக்கிறாரோ, அவர்களைப்பற்றி அவர் அறிந்தும் இருக்கிறார்.

தெரிந்துகொண்டவர்களின் சுபாவங்களை இயேசுகிறிஸ்து ஒருபோதும் மறப்பதில்லை. "தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் நிலைத்திருக்கிறது. கர்த்தர் தம்முடையவர்களை அறிவார்" (2தீமோ 2:19).

வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக, இயேசுகிறிஸ்துவின் சீஷர்களில் ஒருவனே அவரைக் காட்டிக்கொடுக்கிறான். தம்முடைய குடும்பத்தில், தம்மைக் காட்டிக்கொடுக்கப்போகிற ஒருவனையும் இயேசுகிறிஸ்து சேர்த்திருக்கிறார். வேதவாக்கியம் நிறைவேற வேண்டும் என்பதற்காகவே யூதாஸ்காரியோத்து இயேசுகிறிஸ்துவின் சீஷர்களின் ஒருவனாக தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறான்.

"என்னுடனே அப்பம் புசிக்கிறவன் என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான்" என்று யூதாஸ்காரியோத்தைக்குறித்து இயேசுகிறிஸ்து பேசுகிறார். அப்போஸ்தலர்களில் ஒருவனாகிய யூதாஸ்காரியோத்திற்கு, இயேசுகிறிஸ்துவோடு அப்பம் புசிக்கிற மேன்மையான சிலாக்கியம் கிடைத்திருக்கிறது. இயேசுகிறிஸ்து இவனையும் நேசிக்கிறார். பல சமயங்களில் இயேசுகிறிஸ்து இவனோடு உரையாடியிருக்கிறார். இயேசுவோடு நெருங்கிய ஐக்கியத்தோடிருக்கும் சிலாக்கியம் யூதாஸ்காரியோத்திற்கும் கிடைத்திருக்கிறது. யூதாஸ் இயேசுவோடு அப்பமும் புசித்திருக்கிறான்.

தம்முடைய சீஷர்களுக்கு என்னென்ன சிலாக்கியங்களையெல்லாம் இயேசுகிறிஸ்து கொடுத்திருக்கிறாரோ, அவையெல்லாவற்றையும் யூதாசும் பெற்றிருக்கிறான். இயேசுகிறிஸ்து ஊழியம்செய்வதற்காக எங்கெல்லாம் பிரயாணம் பண்ணினாரோ அங்கெல்லாம் யூதாஸ்காரியோத்தும் அவரோடுகூடவே போயிருக்கிறான். போஜனபந்தியில் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவோடு யூதாசும் போஜனம்பண்ணியிருக்கிறான். இயேசுகிறிஸ்துவின் சீஷர்களுக்கு கிடைத்திருக்கிற எல்லா சிலாக்கியங்களும் யூதாசுக்கும் கிடைத்திருக்கிறது.

இயேசுகிறிஸ்து ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கொண்டு திரளான ஜனங்களுக்கு அற்புதமாகப் போஜனம் கொடுத்தபோது, யூதாஸ்காரியோத்தும் அவரோடு கூடயிருந்திருக்கிறான். சீஷர்கள் பந்தியில் அமர்ந்திருக்கும் ஜனங்களுக்கு அப்பத்தையும் மீனையும் பரிமாறியபோது, யூதாசும் அவர்களில் ஒருவனாக எல்லோருக்கும் அப்பமும் மீனும் கொடுத்திருக்கிறான். இயேசுகிறிஸ்துவோடு பஸ்கா போஜனத்தைப் புசித்திருக்கிறான்.

## அதிகாரம் - 13

இயேசுகிறிஸ்துவோடு அப்பம் புசிக்கிறவர்களெல்லோருமே இயேசுகிறிஸ்துவின் மெய்யான சீஷர்களல்ல. இயேசுகிறிஸ்துவோடு அப்பமும் புசித்துவிட்டு, அவரையே காட்டிக்கொடுக்கக்கூடிய யூதாசைப்போல துர்குணமுடையவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

யூதாஸ்காரியோத்து தன்னுடைய ஆண்டவரையே காட்டிக்கொடுக்கிறான். இவனுடைய பாவம் பயங்கரமானது. கிறிஸ்துவுக்கு எதிராகத் தன் குதிகாலைத் தூக்கினான். இயேசுகிறிஸ்துவை மறுதலித்ததால் அவருக்குச் சத்துருவானான். இக்காலத்து ஊழியக்காரர்களில் சிலர் பார்வைக்கு அப்போஸ்தலர்களைப்போல இருக்கிறார்கள். ஆனால் உள்ளத்திலோ யூதாஸ்காரியோத்தைப் போல வஞ்சிக்கிறவர்களாகக்கூட இருப்பார்கள். கர்த்தர் தம்முடைய பிள்ளைகள் ஒவ்வொருவரையும் சோதிக்கும்போது நம்முடைய உண்மையான குணம் வெளிப்படும். கர்த்தருக்கு மறைவானது ஒன்றுமில்லை.

**நீங்கள் விசுவாசிக்கும் பொருட்டு**

**அது நடக்கும்போது நானே அவரென்று நீங்கள் விசுவாசிக்கும்பொருட்டு, இப்பொழுது அது நடப்பதற்கு முன்னமே அதை உங்களுக்குச் சொல்லுகிறேன் (யோவா 13:19).**

யூதாஸ்காரியோத்து தம்மைக் காட்டிக்கொடுக்கப்போவதை இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு முன்னமே வெளிப்படுத்துவதற்கான காரணத்தையும் இங்கு தெளிவுபடுத்துகிறார். "அது நடக்கும்போது நானே அவரென்று நீங்கள் விசுவாசிக்கும் பொருட்டு" அதை அவர்களுக்குச் சொல்லுவதாகக் கூறுகிறார். வரப்போகிற காரியங்களை இயேசுகிறிஸ்து முன்னறிந்திருக்கிறார். தாமே மெய்யான தேவன் என்பதை தம்முடைய வார்த்தையின் மூலமாகவும், கிரியைகளின் மூலமாகவும் இயேசுகிறிஸ்து உறுதிபண்ணுகிறார். பழைய ஏற்பாட்டில் இயேசுகிறிஸ்துவைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிற தீர்க்கதரிசனங்கள் ஒவ்வொன்றாக நிறைவேறி வருவதையும், அவையெல்லாம் தாமே மேசியா என்பதை நிரூபிப்பதையும் இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்குத் தெளிவுபடுத்துகிறார்.

**என்னை ஏற்றுக்கொள்கிறான்**

**நான் அனுப்புகிறவனை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான், என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறான் என்று, மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் (யோவா 13:20).**

தம்மைக் காட்டிக்கொடுக்கப்போகிற யூதாஸ்காரியோத்தைக் குறித்து இயேசுகிறிஸ்து பேசும்போது, தம்முடைய சீஷர்கள் சோர்வடைந்து விடக்கூடாது என்பதற்காக அவர்களை உற்சாகப்படுத்தும் வார்த்தைகளையும் கூறுகிறார். "நான் அனுப்புகிறவனை ஏற்றுக்கொள்கிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்" என்று இயேசுகிறிஸ்து ஆறுதலாகக் கூறுவது, அவருடைய சீஷர்களுக்கும், அவருடைய ஊழியத்தைச் செய்கிற எல்லோருக்கும் ஆறுதலான வாக்கியமாகும். சீஷர்கள் தங்களைத் தாங்களே தாழ்த்தவேண்டும் என்பதே இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் வலியுறுத்தும் முக்கியமான செய்தி.

இயேசுகிறிஸ்துவின் பிள்ளைகள் தங்களைத் தாங்களே தாழ்த்தி, தங்களைவிட கீழானோருக்குத் தங்களுடைய அன்பை வெளிப்படுத்தும்போது, அந்த அன்பை அனுபவித்தவர்களில் சிலர் நமக்கு விரோதமாக எழும்பலாம். நாம் யாருக்கு நன்மை செய்தோமோ அவர்களே நமக்குச் சத்துருக்களாக மாறலாம். இப்படிப்பட்ட சத்துருக்கள் மத்தியில் நம்மை ஏற்றுக்கொண்டு, நம்மைக் கனப்படுத்துகிறவர்களும் இருப்பார்கள் என்பதை இயேசுகிறிஸ்து சோர்ந்துபோயிருக்கும் தம்முடைய சீஷர்களுக்கு ஆறுதலாகப் பேசுகிறார். கர்த்தருடைய பிள்ளைகளை ஏற்றுக்கொண்டு கனப்படுத்துகிறவர்களை கர்த்தர் கனப்படுத்துவார்.

இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்கிறவர்கள் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவார்கள். கிறிஸ்துவின் ஊழியம் கனமுள்ளது. இந்த உலகத்தில் பலவிதமான ஜனங்கள் இருக்கிறார்கள். அதுபோலவே கிறிஸ்துவின் ஊழியக்காரர்களும் பலவிதமாக இருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து தம்முடைய ஊழியத்தையும், தம்முடைய ஊழியக்காரர்களையும் கனப்படுத்தினாலும், இந்த உலகம் அவருடைய ஊழியத்தையோ அல்லது அவருடைய ஊழியக்காரர்களையோ கனப்படுத்தவில்லை.

## அதிகாரம் - 13

இயேசுகிறிஸ்து யூதாஸ்காரியோத்தைத் தம்முடைய சீஷராக அழைக்கும்போது, அவன் தம்மை காட்டிக்கொடுக்கப்போகிறான் என்பதும் அவருக்குத் தெரிந்திருக்கிறது. ஆனாலும் கிறிஸ்து அவனுடைய காட்டிக்கொடுக்கிற சுபாவத்தைப் பார்க்காமல், தம்முடைய சீஷர்களில் ஒருவனாக அவனை அங்கீகரித்து தம்மோடு சேர்த்துக்கொள்கிறார். மற்ற சீஷர்களுக்கு உபதேசம்பண்ணுவதுபோலவே யூதாசுக்கும் உபதேசம்பண்ணுகிறார். இயேசுகிறிஸ்துவின் சீஷர்களை ஏற்றுக்கொள்கிறவர்கள் அவரையே ஏற்றுக்கொள்கிறார்கள். சீஷர்கள் என்று சொல்லும்போது யூதாசும் அவர்களில் ஒருவனாக இருக்கிறான். ஆகையினால் யூதாசை கிறிஸ்துவால் அனுப்பப்பட்ட சீஷனாக ஏற்றுக்கொள்கிறவர்களும், இந்த வாக்கியத்தின் பிரகாரம் அவர்கள் கிறிஸ்துவையே ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால் இந்த யூதாசோ பின்பு இயேசுகிறிஸ்துவைக் காட்டிக்கொடுத்து தன்னுடைய துன்மார்க்கக் குணத்தை வெளிப்படுத்துகிறான். இந்த யூதாசும் இயேசுகிறிஸ்துவினால் அனுப்பப்பட்ட சீஷர்களில் ஒருவனாகத்தான் இருக்கிறான்.

கர்த்தருடைய பிள்ளைகள் அவரால் அனுப்பப்பட்டிருக்கிற ஊழியக்காரர்களை ஏற்றுக்கொள்ளும்போது, அவர்கள் கர்த்தரையே ஏற்றுக்கொள்கிறார்கள். யாரெல்லாம் இயேசுகிறிஸ்துவின் பெயரைச் சொல்லி ஊழியம் செய்கிறார்களோ அவர்களை நாம் ஏற்றுக்கொண்டு ஆதரிப்பதில் தவறில்லை. ஆனால் கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் நல்லவர்களாக இல்லையென்றால், அவர்கள் துன்மார்க்க குணமுடையவர்களாக யிருப்பார்களென்றால் நாம் மிகுந்த எச்சரிப்போடு இருக்கவேண்டும். ஏனெனில் சில சமயங்களில் இயேசுகிறிஸ்துவினால் அனுப்பப்பட்டவர்களை ஏற்றுக்கொள்கிறோம் என்னும் பெயரில், ஒரு சிலர் திருடர்களை ஏற்றுக்கொள்கிறார்கள். சிலர் தேவதூதர்களைக் கூட ஏற்றுக்கொண்டு உபசரிக்கிறார்கள். நம்மிடத்தில் வருகிறவர்கள் கர்த்தருடைய உண்மையான ஊழியக்காரர்களா, அல்லது திருட்டுக்குணமுடையவர்களா, அல்லது தேவதூதர்களா என்பது நமக்குத் தெரியாது.

ஒரு சில ஊழியக்காரர்கள் தவறு செய்கிறார்கள் என்பதற்காக எல்லா ஊழியக்காரர்களையும் ஒட்டுமொத்தமாகக் குறைகூறக்கூடாது.

ஒரு சில ஊழியக்காரர்கள் மோசமானவர்களாக இருக்கிறார்கள் என்பதற்காக, எல்லா ஊழியக்காரர்களையும் ஏற்றுக்கொள்ளாமல் புறகணித்துவிடக்கூடாது. நாம் பிறருக்கு உதவி செய்யும்போது, ஒரு சிலர் ஏமாற்றி உதவி பெற்றுக்கொள்கிறார்கள். இதற்காக, எல்லோருக்கும் உதவி செய்யாமல் போய்விடக்கூடாது. நாம் பிறருக்கு உதவி செய்யாமல் இருப்பதற்கு ஒரு சில ஏமாற்றுக்காரர்கள்தான் காரணம் என்று நம்முடைய செய்கையை நியாயப்படுத்தக்கூடாது. இப்படியெல்லாம் நியாயப்படுத்தினால் தேவனுடைய ஆசீர்வாதத்தை நம்மால் பெற்றுக்கொள்ள முடியாது.

இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரர்களை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். அவர்கள் தேவனால் அனுப்பப்பட்டிருக்கிறவர்கள் என்று விசுவாசித்து அவர்களை அங்கீகரிக்கவேண்டும். அப்போது இயேசுகிறிஸ்து கூறிய பிரகாரம் "நான் அனுப்புகிறவனை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்" என்னும் ஆசீர்வாதம் நமக்கு கிடைக்கும். கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் ஏழைகளாகயிருந்தாலும், சரீரத்தில் பலவீனமுள்ளவர்களாகயிருந்தாலும், அவர்கள் இயேசுகிறிஸ்துவின் நற்செய்தியை உபதேசம்பண்ணினால் நாம் அவர்களை ஏற்றுக்கொள்வதற்கு யோசிக்கக்கூடாது. அப்படிப்பட்டவர்களை ஏற்றுக்கொள்ளும்போது நாம் கிறிஸ்துவையே ஏற்றுக்கொள்கிறோம்.

இயேசுகிறிஸ்துவையும் தேவனால் அனுப்பப்பட்டவர் என்று விசுவாசித்து அவரை ஏற்றுக்கொள்ளவேண்டும். தம்மை ஏற்றுக்கொள்கிறவன் தம்முடைய பிதாவை ஏற்றுக்கொள்கிறான் என்று இயேசுகிறிஸ்து வாக்குப்பண்ணியிருக்கிறார். இயேசு கிறிஸ்துவை நம்முடைய இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொள்ளும்போது, பிதாவானவர் அவர் மூலமாக அனுப்பியிருக்கும் ஆசீர்வாதங்களுக்கும் நாம் பங்காளிகளாகயிருக்கிறோம்.

### ஒருவன் இயேசுவைக் காட்டிக்கொடுப்பான்

### யோவா 13 : 21-26

**யோவா 13:21. இயேசு இவைகளைச் சொன்னபின்பு, ஆவியிலே கலங்கி: உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என்று, மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேனென்று சாட்சியாகச் சொன்னார்.**

## அதிகாரம் - 13

**யோவா 13:22. அப்பொழுது யாரைக்குறித்துப் பேசுகிறாரோ என்று சீஷர்கள் ஐயப்பட்டு, ஒருவரையொருவர் நோக்கிப்பார்த்தார்கள்.**

**யோவா 13:23. அந்தச் சமயத்தில் அவருடைய சீஷரில் இயேசுவுக்கு அன்பானவனாயிருந்த ஒருவன் இயேசுவின் மார்பிலே சாய்ந்துகொண்டிருந்தான்.**

**யோவா 13:24. யாரைக்குறித்துச் சொல்லுகிறாரென்று விசாரிக்கும்படி சீமோன் பேதுரு அவனுக்குச் சைகைகாட்டினான்.**

**யோவா 13:25. அப்பொழுது அவன் இயேசுவின் மார்பிலே சாய்ந்துகொண்டு: ஆண்டவரே, அவன் யார் என்றான்.**

**யோவா 13:26. இயேசு பிரதியுத்தரமாக: நான் இந்தத் துணிக்கையைத் தோய்த்து எவனுக்குக் கொடுப்பேனோ, அவன்தான் என்று சொல்லி, துணிக்கையைத் தோய்த்து, சீமோன் குமாரனாகிய யூதாஸ்காரியோத்துக்குக் கொடுத்தார்.**

### இயேசு ஆவியிலே கலங்கி

**இயேசு இவைகளைச் சொன்னபின்பு, ஆவியிலே கலங்கி: உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என்று, மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேனென்று சாட்சியாகச் சொன்னார் (யோவா 13:21).**

தம்மைக் காட்டிக்கொடுக்கப் போகிறவனைப்பற்றி இயேசுகிறிஸ்து மிகுந்த பாரத்தோடு தம்முடைய சீஷர்களிடம் பேசிக்கொண்டிருக்கிறார். இயேசுகிறிஸ்து இந்த வார்த்தைகளைச் சொன்னபின்பு அவர் தம்முடைய ஆவியிலே கலங்குகிறார். "உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான்" என்று இயேசு தம்முடைய சீஷர்களிடம் சாட்சியாக அறிவிக்கிறார். இயேசுகிறிஸ்து இவ்வாறு பேசுவதினால் யூதாஸ்காரியோத்து இயேசுகிறிஸ்துவை கட்டாயம் காட்டிக்கொடுக்கவேண்டும் என்னும் அவசியமில்லை. அவன் இந்தப் பாவத்தை செய்தே ஆகவேண்டும் என்று இயேசுகிறிஸ்து தீர்மானம்பண்ணவில்லை.

இனிமேல் நடைபெறப்போகிற சம்பவத்தை இயேசுகிறிஸ்து முன்னறிந்திருக்கிறார். யூதாஸ்காரியோத்து இயேசுகிறிஸ்துவைக் காட்டிக்கொடுக்கப் போகிறான் என்பதை அவர் அறிந்திருப்பதினால்தான் இந்த வார்த்தைகளைச் சொல்லுகிறாரேயல்லாமல், அவன் தம்மைக் காட்டிக்கொடுக்க வேண்டுமென்று இயேசுகிறிஸ்து தீர்மானம்பண்ணவில்லை. ஏனெனில் அவர் ஒருபோதும் பாவத்திற்குக் காரணரல்ல.

யூதாஸ்காரியோத்து இனிமேல் செய்யப்போகிற பாவத்தை இயேசுகிறிஸ்து இப்பொழுதே முன்னறிந்திருக்கிறார். நமக்குள்ளே இருக்கிற சிந்தனைகளைப்பற்றி நமக்குத் தெரிவதைவிட இயேசுகிறிஸ்துவுக்கு நன்றாகத் தெரியும். நம்மை நாம் அறிந்து வைத்திருப்பதைவிட இயேசுகிறிஸ்து நம்மைப்பற்றி அதிகமாகவே அறிந்து வைத்திருக்கிறார். ஆகையினால் மனுஷருடைய செய்கைகள் எப்படியிருக்கும் என்பதை அவரால் முன்னறிந்து பார்க்க முடிகிறது.

"உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான்" என்று இயேசுகிறிஸ்து சொல்லும்போது, தம்முடைய முன்னறியும் ஆற்றலை வெளிப்படுத்துவதற்காகவோ, அல்லது வருங்காலத்தில் நடக்கப்போகும் சம்பவங்களை சீஷர்களிடத்தில் அறிவிக்க வேண்டும் என்பதற்காகவோ இந்த வாக்கியத்தைச் சொல்லவில்லை. யூதாஸ்காரியோத்தின் நிமித்தமாகவே இயேசு இந்த வாக்கியத்தை இருதய பாரத்தோடு பேசுகிறார். இதைப் பேசும்போது இயேசுகிறிஸ்து தம்முடைய ஆவியிலே கலங்குகிறார். தம்முடைய வார்த்தையைக் கேட்டு யூதாஸ்காரியோத்து தன்னுடைய துன்மார்க்கமான யோசனையிலிருந்து மனந்திரும்பமாட்டானா என்று அவனை ஏக்கத்தோடு பார்க்கிறார்.

பொதுவாக சதிகாரர்களுடைய சதித்திட்டம் எல்லோருக்கும் அம்பலமானால், அவர்கள் தங்களுடைய சதிஆலோசனையைத் தொடரமாட்டார்கள். தங்களுடைய சதித்திட்டம் எப்பொழுது கண்டுபிடிக்கப்படுகிறதோ அப்பொழுதே அந்தத் திட்டத்தை நிறுத்திவிடுவார்கள். யூதாஸ்காரியோத்தின் சதிஆலோசனையை இயேசுகிறிஸ்து அறிந்து, இப்போது அதை அவனுக்கு வெளிப்படுத்துகிறார். ஒருவேளை யூதாஸ் உடனே திருந்தவில்லையென்றாலும், சீக்கிரத்தில் அவன் திருந்திவிடுவான் என்று எதிர்பார்த்து அவனுடைய சதித்திட்டத்தை அவனுக்கு வெளிப்படுத்துகிறார்.

## அதிகாரம் - 13

"உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான்" என்று இயேசுகிறிஸ்து கூறும்போது, தம்முடைய இருதயத்தில் அவர் தம்முடைய சீஷர்களைக்குறித்து மிகுந்த கரிசனையோடிருக்கிறார். இதைப்பற்றி பேசும்போது இயேசுகிறிஸ்து தம்முடைய ஆவியில் கலங்குகிறார். தம்முடைய சீஷர்களில் ஒருவன் தம்மை விட்டுப்பிரிந்து, பாவத்திற்குத் தன்னை ஒப்புக்கொடுத்து விழுந்துவிடும்போது, இந்த வீழ்ச்சி கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் ஆவியைக் கலங்கச் செய்கிறது. யூதாஸ் பாவம் செய்யவேண்டுமென்று சதிஆலோசனை பண்ணியபோது இயேசுகிறிஸ்து தம்முடைய ஆவியிலே கலங்கியதுபோலவே, அவருடைய பிள்ளைகளாகிய நாம் பாவம் செய்யும்போது, இயேசுகிறிஸ்து இன்றும் தம்முடைய ஆவியிலேயே கலங்குகிறார். "உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான்" என்று ஏக்கத்தோடு, ஆவியில் கலங்கியவராக நம்மைப்பற்றியும் சாட்சிக்கொடுக்கிறார்.

இயேசுகிறிஸ்துவின் இந்த வார்த்தை யூதாஸ்காரியோத்துடைய இருதயத்தைத் தொடுகிறது. இயேசுகிறிஸ்து இவனை ஆவிக்குரிய ரீதியாகப் போஷித்து வளர்த்திருக்கிறார். இவனுக்கு ஏராளமான உபதேசங்களையும் கொடுத்திருக்கிறார். அப்படியிருந்தும் இவன் தம்மைக் காட்டிக்கொடுக்கப்போவதினால் இயேசு தம்முடைய ஆவியிலே கலங்குகிறார். நம்முடைய பிள்ளைகளை நாம் போஷித்து, பராமரித்து வளர்க்கும்போது அவர்கள் நமக்குக் கீழ்ப்படியாமல் போய்விட்டால் நமக்கு மிகுந்த வருத்தம் உண்டாகும். தங்களுடைய கடமைகளை அவர்கள் சரிவரச் செய்யவில்லையென்றால் நாமும் நம்முடைய ஆவியிலே கலங்குவோம். நம்முடைய ஜீவியம் இயேசுகிறிஸ்துவைப் பிரியப்படுத்துகிற ஜீவியமாக இருக்கவேண்டும்.

**சீஷர்கள் ஐயப்பட்டு**

**அப்பொழுது யாரைக்குறித்துப் பேசுகிறாரோ என்று சீஷர்கள் ஐயப்பட்டு, ஒருவரையொருவர் நோக்கிப்பார்த்தார்கள் (யோவா 13:22).**

"உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான்" என்று இயேசுகிறிஸ்து சொன்ன வார்த்தைகள் சீஷருடைய உள்ளத்தைத் தொடுகிறது. இந்த வார்த்தை அவர்களுக்கு எச்சரிப்பின் சத்தமாயிற்று. இயேசுவின் வார்த்தையைக்கேட்டு சீஷர்கள் உணர்வடைந்தவர்களாக "ஒருவரையொருவர் நோக்கிப் பார்க்கிறார்கள்". இயேசுகிறிஸ்து யாரைக்குறித்துப் பேசுகிறாரோ என்று சீஷர்களுடைய மனதில் ஐயம் உண்டாயிற்று. அவர்களுக்கு என்ன பேசவேண்டுமென்று தெரியவில்லை. யாரைப் பார்ப்பது என்று புரியவில்லை. அவர்களுக்குள் பயம் உண்டாயிற்று. இயேசுகிறிஸ்து தம்முடைய ஆவியிலே கலங்குவதை அவர்கள் பார்க்கிறார்கள். இதனால் சீஷர்களும் தங்களுடைய ஆவியிலே கலங்குகிறார்கள். இயேசுகிறிஸ்துவைத் துக்கப்படுத்துகிற காரியங்கள் நம்மையும் துக்கப்படுத்துவதாக இருக்கவேண்டும். அவரைக் கலங்கச் செய்கிற காரியங்கள் நம்மையும் கலங்கச் செய்வதாக இருக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்துவைத் தங்களில் யார் காட்டிக்கொடுக்கப்போகிறான் என்பதை அறிந்துகொள்வதற்கு சீஷர்கள் முயற்சிபண்ணுகிறார்கள். "உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான்" என்று இயேசுகிறிஸ்து கூறிவிட்டு சற்று அமைதியாக இருக்கிறார். தம்முடைய வார்த்தையைக் கேட்டு ஒவ்வொரு சீஷரும் தங்களைத் தாங்களே ஆராய்ந்து பார்க்கவேண்டுமென்று இயேசு விரும்புகிறார். சீஷர்கள் தங்களைத் தாழ்த்தவேண்டும். இயேசுகிறிஸ்துவைக் காட்டிக்கொடுக்கும் துர்க்குணம் தங்களிடத்தில் இல்லையென்பதை சீஷர்கள் நிரூபிக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவின்மீது பக்திவைராக்கியமாக இருக்கவேண்டும். இதற்காகவே இயேசுகிறிஸ்து இந்த வார்த்தைகளைச் சொன்னபின்பு ஆவியிலே கலங்கி அமைதியாக இருக்கிறார். நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையில்கூட, நம்மைப்பற்றி ஆராய்ந்து பார்ப்பதற்கு நேரம் செலவிடவேண்டும். இதற்காக நம்முடைய அன்றாட வேலைகளை ஒதுக்கிவைத்துவிட்டு தேவனுடைய சமுகத்தில் அமைதியாகக் காத்திருந்து பரிசுத்த ஆவியானவர் நம்மைச் சோதித்துப் பார்க்க அனுமதிக்கவேண்டும்.

**இயேசுவின் மார்பிலே சாய்ந்துகொண்டிருந்தான்**

**அந்தச் சமயத்தில் அவருடைய சீஷரில் இயேசுவுக்கு அன்பானவனாயிருந்த ஒருவன் இயேசுவின் மார்பிலே சாய்ந்துகொண்டிருந்தான் (யோவா 13:23).**

## அதிகாரம் - 13

"உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான்" என்று இயேசுகிறிஸ்து சொன்னதைக்கேட்டு சீஷர்கள் அதிர்ச்சியடைகிறார்கள். அவர் யாரைக் குறித்துப் பேசுகிறாரோ என்று சீஷர்கள் ஐயப்பட்டு ஒருவரையொருவர் நோக்கிப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். தங்களில் யார் இயேசுவைக் காட்டிக்கொடுப்பான் என்பதை அவரிடத்திலேயே கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டுமென்று சீஷர்கள் விரும்புகிறார்கள். இயேசுகிறிஸ்துவிடத்தில் இதைப்பற்றி யார் கேட்பது என்று அவர்களுக்குள் யோசனை உண்டாயிற்று.

இயேசுகிறிஸ்துவின் சீஷர்களில் யோவான் அவருக்கு மிகவும் அன்பானவனாக இருக்கிறான். இந்தக் கேள்வியைக் கேட்பதற்கு யோவானே சரியான நபர் என்று மற்ற சீஷர்கள் நினைக்கிறார்கள். யோவான் இயேசுவின் மார்பிலே சாய்ந்துகொண்டிருக்கிறான். அவருக்கு அருகாமையில் இருக்கிறான்.

இயேசுவுக்கு அன்பானவனும், அவருடைய மார்பிலே சாய்ந்துகொண்டிருக்கிறவனும் யார் என்பதற்கு வேதபண்டிதர்கள் பலவிதமாகக் கருத்துக் கூறுகிறார்கள். அது யோவான்தான் என்பது பலருடைய பொதுவானகருத்து. "பேதுரு திரும்பிப்பார்த்து, இயேசுவுக்கு அன்பாயிருந்தவனும், இராப்போஜனம் பண்ணுகையில் அவர் மார்பிலே சாய்ந்து: ஆண்டவரே, உம்மைக் காட்டிக்கொடுக்கிறவன் யார் என்று கேட்டவனுமாகிய சீஷன் பின்னே வருகிறதைக் கண்டான். அந்தச் சீஷனே இவைகளைக்குறித்துச் சாட்சிகொடுத்து இவைகளை எழுதினவன்; அவனுடைய சாட்சி மெய்யென்று அறிந்திருக்கிறோம்" (யோவா 21:20,24).

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களில் யோவான்மீது மிகுந்த அன்போடிருக்கிறார். ஆகையினால் யோவான் தன்னைப்பற்றி எழுதும்போது "அவனுடைய சீஷரில் இயேசுவுக்கு அன்பானவனாயிருந்த ஒருவன்" என்று குறிப்பிடுகிறான். இவ்வாறு எழுதப்பட்டிருப்பதினால் இயேசுகிறிஸ்து யோவான்மீது மாத்திரமே அன்பாகயிருந்தாரென்றும், மற்ற சீஷர்மீது அன்பாயிருக்கவில்லையென்றும் வியாக்கியானம் பண்ணக்கூடாது.

அவர் தம்முடைய எல்லா சீஷரிடத்திலும் அன்பாகவேயிருக்கிறார். "தாம் இவ்வுலகத்திலிருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்பு வைத்தபடியே முடிவுபரியந்தம் அவர்களிடத்தில் அன்பு வைத்தார்" (யோவா 13:1). இருப்பினும் யோவான் மற்றெல்லா சீஷரிலும் இயேசுவின்மீது மிகுந்த அன்பு வைத்திருந்தான். அவருக்கு அதிக நெருக்கமாகயிருந்தான். இயேசுகிறிஸ்துவும் யோவான்மீது மிகுந்த அன்போடிருக்கிறார். யோவான் என்னும் பெயருக்கு "கிருபையுள்ளவன்" என்று பொருள்.

இயேசுகிறிஸ்துவுக்கு பன்னிரண்டு சீஷர்கள் இருந்தாலும் ஒரு சில சீஷர்களைவிட வேறு சில சீஷர்கள் இயேசுகிறிஸ்துவுக்கு மிகவும் நெருக்கமாகயிருந்தார்கள். இயேசுகிறிஸ்து இந்த வாக்கியத்தைப் பேசிக்கொண்டிருக்கும்போது யோவான் "இயேசுவின் மார்பிலே சாய்ந்துகொண்டிருந்தான்". யோவான் இயேசுவின் மார்பிலே சாய்ந்துகொண்டிருப்பது, தன்னுடைய ஆண்டவரிடத்தில் அவன் வைத்திருக்கிற விசேஷித்த அன்பை வெளிப்படுத்துகிறது. யாரெல்லாம் இயேசுகிறிஸ்துவின் பாதபடியில் தங்களைத் தாழ்த்தி ஒப்புக்கொடுக்கிறார்களோ, அவர்களெல்லோரும் இயேசுவின் மார்பிலே சாய்ந்துகொண்டிருக்கிறார்கள்.

யோவான் இயேசுவின் மார்பிலே சாய்ந்துகொண்டிருந்தாலும், தன்னுடைய பெயரை இங்கு விளம்பரப்படுத்தவில்லை. தன்னுடைய பெயருக்குப் பதிலாக, தன்னைப்பற்றி எழுதும்போது "இயேசுவுக்கு அன்பானவனாயிருந்த ஒருவன்" என்று மாத்திரமே எழுதுகிறான். தன்னுடைய பெயருக்கு தனிப்பட்ட முறையில் எந்தவிதமான பெருமையோ, உயர்வோ வரவேண்டுமென்று யோவான் விரும்பவில்லை. தான் இயேசுவின்மீது வைத்திருக்கும் அன்பும், இயேசு தன்மீது வைத்திருக்கும் அன்பும் மாத்திரமே முக்கியமானது என்று யோவான் தன்னைத்தானே தாழ்த்துகிறான்.

### சீமோன் பேதுரு

**யாரைக்குறித்துச் சொல்லுகிறாரென்று விசாரிக்கும்படி சீமோன் பேதுரு அவனுக்குச் சைகைகாட்டினான் (யோவா 13:24).**

## அதிகாரம் - 13

இயேசுகிறிஸ்துவின் மற்ற சீஷர்களைவிட பேதுரு எல்லாக் காரியங்களிலும் முந்தி செயல்படுகிறவன். புதிதாக ஒரு காரியம் இருந்தால் அதை அறிந்துகொள்ளவேண்டுமென்று பேதுருதான் முதலில் முன்வருவான். யோவான் இயேசுவின் மார்பில் சாய்ந்துகொண்டிருக்கிறான். பேதுருவோ இயேசுவைவிட்டு சற்று தூரத்தில் இருந்திருக்கவேண்டும். "உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான்" என்று இயேசுகிறிஸ்து யாரைக் குறித்து சொல்லுகிறார் என்று விசாரிக்கும்படி, அவருடைய மார்பிலே சாய்ந்துகொண்டிருக்கிற யோவானுக்குப் பேதுரு சைகை காட்டுகிறான். பேதுரு பல சமயங்களில் இயேசுகிறிஸ்துவின் சீஷர்களை இதுபோல வழிநடத்துகிறான்.

நமக்குப் புரியாத காரியம் ஏதாவது இருக்குமென்றால், அந்த சந்தேகத்தை நம்முடைய மனத்திற்குள்ளே அடைத்து வைத்துக்கொள்ளாமல், வெளிப்படையாகக் கேட்டுவிடுவது நல்லது. கேள்வி கேட்பதற்குத் தைரியம் வேண்டும். ஆனாலும் சுயபெருமைக்காகக் கேள்விகளைக் கேட்கக்கூடாது. நாம் கேட்கிற ஒவ்வொரு கேள்வியிலும் நம்முடைய மனத்தாழ்மை வெளிப்படவேண்டும். சந்தேகத்தை நிவிர்த்தி செய்து ஞானத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பது மாத்திரமே நம்முடைய கேள்வியின் பிரதான நோக்கமாக இருக்கவேண்டும்.

தேவன் தம்முடைய வரங்களை ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாகக் கொடுத்திருக்கிறார். வரங்களில் வித்தியாசமுண்டு. சீஷர்களின் சந்தேகத்தை நிவிர்த்தி செய்வதற்காக எல்லோர் சார்பாகவும் பேதுருதான் கேள்வி கேட்கிறான். இது ஒரு வரம். ஆனாலும் பேதுருவை விட யோவானே இயேசுவுக்கு அன்பானவனாகயிருக்கிறான். யோவானிடத்தில் காணப்படுவதும் ஒரு வரம்தான். இயேசுகிறிஸ்துவிடம் இப்போது பேதுரு தானாக கேள்விகேட்காமல், இயேசுவின் அருகில் இருக்கும் யோவானை கேட்குமாறு சைகை காட்டுகிறான். யோவானால் இயேசுகிறிஸ்துவிடத்தில் இந்தக் கேள்வியைக் கேட்பது மிகவும் எளிது. இந்தக் கேள்வியைப்பற்றி யோவான் இயேசுவின் செவிகளில் மெதுவாகப் பேசமுடியும். இயேசு கொடுக்கும் மென்மையான பதிலை யோவானால் தனிப்பட்ட முறையில் பெற்றுக்கொள்ளவும் முடியும்.

இயேசுகிறிஸ்துவுக்கு சிலர் மிகவும் நெருக்கமாக இருக்கிறார்கள். அவர்களைப்பற்றி அறிந்துகொள்வதும், அவர்களிடத்தில் சிநேகமாகயிருப்பதும் விசுவாசிகளாகிய நமக்கு நல்லது. இயேசுகிறிஸ்துவின் மார்பில் யார் சாய்ந்துகொண்டிருக்கிறார்கள் என்பதைக் கண்டறிந்து, நமக்காக நல்ல வார்த்தைகளைப் பேசுமாறு அவர்களிடத்தில் கேட்கலாம். மற்றவர்களைவிட நாம் இயேசுவின் மார்பில் சாய்ந்திருந்து, அவருக்கு அருகாமையில் இருப்போமென்றால், மற்றவர்களுக்காகவும் நாம் இயேசுவிடத்தில் பரிந்து பேசவேண்டும்.

**ஆண்டவரே அவன் யார்**

**அப்பொழுது அவன் இயேசுவின் மார்பிலே சாய்ந்துகொண்டு: ஆண்டவரே, அவன் யார் என்றான் (யோவா 13:25).**

பேதுரு தனக்குச் சைகை காட்டியதை யோவான் புரிந்துகொள்கிறான். தான் இயேசுவின் மார்பிலே சாய்ந்துகொண்டு அவருக்கு அருகாமையிலிருக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி "ஆண்டவரே அவன் யார்" என்று யோவான் இயேசுவிடம் கேட்கிறான். இயேசுகிறிஸ்துவின் மற்ற சீஷர்களிடத்தில் யோவான் அன்பு வைத்திருக்கிறான். இயேசுகிறிஸ்துவின் மார்பிலே சாய்ந்திருக்கிறவர்கள், அவருடைய பாதபடியிலே கண்ணீர்விட்டு அமர்ந்திருப்பவர்களை மறந்துவிடக்கூடாது. தங்களுக்குத் தெரியாததும், தாங்கள் அறியாததுமான காரியங்கள் இயேசுவின் பாதத்தில் கண்ணீரோடு அமர்ந்திருக்கிறவர்களுக்கு தெரியும் என்பதை உணர்ந்துகொண்டு, அவர்களிடத்திலிருந்து கற்றுக்கொள்வதற்கு ஆயத்தமாகயிருக்க வேண்டும்.

யோவான் இயேசுவின் மார்பிலே சாய்ந்துகொண்டிருக்கிறான். அவருக்கு மிகவும் நெருக்கமாகயிருக்கிறான். இயேசுவுக்கு நெருக்கமாகயிருப்பதைத் தன்னுடைய சுயலாபத்திற்காக யோவான் பயன்படுத்திக் கொள்ளவில்லை. தன் ஆண்டவர்மீது பயபக்தியோடும் மரியாதையோடும் இருக்கிறான். இயேசுகிறிஸ்துவின் காதுகளில் மெதுவாகப் பேசினாலும், யோவான் இயேசுகிறிஸ்துவை "ஆண்டவரே" என்று பயபக்தியோடு அழைக்கிறான். ஒரு சிலருக்கு ஒருவரிடத்தில் நெருக்கமாகப் பழகும் வாய்ப்பு கிடைத்தால் அவர்கள் அவரை மதிக்கமாட்டார்கள். யோவான் இயேசுகிறிஸ்துவிடம் நெருக்கமாகயிருந்தாலும், அவர்மீது யோவான் வைத்திருக்கிற அன்பு குறைந்து போய்விடவில்லை.

## அதிகாரம் - 13

நாம் இயேசுகிறிஸ்துவிடம் அதிகமாக நெருங்கிச் சேர சேர, நாம் அவருடைய அன்புக்கு பாத்திரவான்களல்ல என்பதையும், அவருடைய சமுகத்திற்கு நெருங்கி வர நமக்கு எந்தத் தகுதியுமில்லை என்பதையும் நாம் உணர்ந்துகொள்ளவேண்டும். நம்மை நாமே தாழ்த்தி நம்முடைய மனப்பெருமைகளை நம்மைவிட்டு நீக்கிப்போடவேண்டும்.

### யூதாஸ்காரியோத்து

**இயேசு பிரதியுத்தரமாக: நான் இந்தத் துணிக்கையைத் தோய்த்து எவனுக்குக் கொடுப்பேனோ, அவன்தான் என்று சொல்லி, துணிக்கையைத் தோய்த்து, சீமோன் குமாரனாகிய யூதாஸ்காரியோத்துக்குக் கொடுத்தார் (யோவா 13:26).**

யோவானுடைய கேள்விக்கு இயேசுகிறிஸ்து காலதாமதம்பண்ணாமல் உடனடியாகப் பதில் கூறுகிறார். எல்லா சீஷர்களுக்கும் கேட்கும்விதமாகப் பேசாமல், யோவானுடைய காதுகளில் மெதுவாகப் பேசுகிறார்போன்று தெரிகிறது. ஏனெனில் யூதாஸ்காரியோத்தின் செய்கையை மற்றவர்கள் இன்னும் அறிந்துகொள்ளவில்லை. இயேசு யோவானிடம் "நான் இந்தத் துணிக்கையைத் தோய்ந்து எவனுக்குக் கொடுப்பேனோ அவன்தான்" என்று கூறுகிறார். இயேசுகிறிஸ்து இந்த வாக்கியத்தைச் சொல்லி, துணிக்கையைத் தோய்த்து, சீமோன் குமாரனாகிய யூதாஸ்காரியோத்துக்குக் கொடுக்கிறார்.

தம்மைக் காட்டிக்கொடுக்கப் போகிறவனை இயேசுகிறிஸ்து ஒரு அடையாளத்தினால் மற்றவர்களுக்கு அறிவிக்கிறார். யூதாஸ்காரியோத்தினுடைய பெயரை இயேசுகிறிஸ்து யோவானுக்கு சொல்லியிருக்க முடியும். ஆனால் அவர் அவனுடைய பெயரைச் சொல்லவில்லை. நம்மைச் சுற்றிலும் கள்ளச்சகோதரர்கள் இருப்பார்கள். அவர்களின் பெயர்கள் நமக்குத் தெரியாமல் போகலாம். ஆனாலும் அவர்களுடைய கனிகளை வைத்து நாம் அவர்களைப்பற்றி தெரிந்துகொள்ளவேண்டும். இயேசுகிறிஸ்து யூதாஸ்காரியோத்தைப்பற்றி குறிப்பிடுவதற்கு "ஒரு துணிக்கை" யை ஓர் அடையாளமாகப் பயன்படுத்துகிறார்.

தமக்குச் சத்துருக்களாக இருக்கிறவர்களுக்கு இயேசுகிறிஸ்து சில சமயங்களில் துணிக்கைகளைக் கொடுக்கிறார். துணிக்கை என்பது உலகப்பிரகாரமான ஐசுவரியமாகவோ, பதவியாகவோ, பட்டங்களாகவோ, உயர்பதவிகளாகவோ இருக்கலாம். மனுஷருக்கு இப்படிப்பட்ட ஆசீர்வாதங்களெல்லாம் வந்துவிட்டால் அவர்களுடைய இருதயங்களில் பெருமை வந்துவிடும். துன்மார்க்கமான சிந்தனைகள் அவர்களுடைய இருதயங்களை ஆளுகை செய்யும். துன்மார்க்கருடைய கரங்களில் ஐசுவரியங்களும், பதவிகளும் பெருமைகளும் ஏராளமாய் உள்ளன. இவையெல்லாமே இயேசுகிறிஸ்து யூதாஸ்காரியோத்திடம் துணிக்கையைக் கொடுத்ததுபோல இருக்கிறது.

யூதாஸ்காரியோத்து தம்மைக் காட்டிக்கொடுக்கப்போகிறான் என்பதை இயேசுகிறிஸ்து அறிந்திருந்தும், அவர் அவன்மீது அன்பாகவேயிருக்கிறார். தம்மோடுகூட பந்தியிலிருப்பதற்கு அனுமதிக்கிறார். அவனுடைய கால்களையும் கழுவுகிறார். தம்முடைய மரணத்திற்கு அவன் சதிஆலோசனைபண்ணுகிறான் என்பதைத் தெரிந்திருந்தும் இயேசு அவனோடு அன்பாகவேயிருக்கிறார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்மிடத்திலும் கிறிஸ்துவின் சுபாவம் காணப்படவேண்டும். நமக்கு விரோதமாகத் தீமை செய்கிறவர்கள்மீதும் நாம் அன்பாயிருக்கவேண்டும். நம்மைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதிக்கவேண்டும். நமக்கு விரோதமாகத் தீங்குசெய்கிறவர்களுக்கு நாம் நன்மை செய்யவேண்டும்.

### யூதாஸ் புறப்பட்டுப்போகிறான் யோவா 13 : 27-30

**யோவா 13:27. அந்தத் துணிக்கையை அவன் வாங்கினபின்பு, சாத்தான் அவனுக்குள் புகுந்தான். அப்பொழுது இயேசு அவனை நோக்கி: நீ செய்கிறதைச் சீக்கிரமாய்ச் செய் என்றார்.**

**யோவா 13:28. அவர் இப்படி அவனுடனே சொன்னதின் கருத்தைப் பந்தியிருந்தவர்களில் ஒருவனும் அறியவில்லை.**

**யோவா 13:29. யூதாஸ் பணப்பையை வைத்துக் கொண்டிருந்தபடியினால், அவன்போய், பண்டிகைக்குத் தேவையானவைகளைக் கொள்ளும்படிக்காவது, தரித்திரருக்கு ஏதாகிலும் கொடுக்கும்படிக்காவது, இயேசு அவனுடனே சொல்லியிருப்பார் என்று சிலர் நினைத்தார்கள்.**

## அதிகாரம் - 13

**யோவா 13:30. அவன் அந்தத் துணிக்கையை வாங்கினவுடனே புறப்பட்டுப்போனான்; அப்பொழுது இராக்காலமாயிருந்தது.**

**சாத்தான் அவனுக்குள் புகுந்தான்**

**அந்தத் துணிக்கையை அவன் வாங்கினபின்பு, சாத்தான் அவனுக்குள் புகுந்தான். அப்பொழுது இயேசு அவனை நோக்கி: நீ செய்கிறதைச் சீக்கிரமாய்ச் செய் என்றார் (யோவா 13:27).**

இயேசுகிறிஸ்துவின் எச்சரிப்பின் வார்த்தையைக் கேட்டு யூதாஸ்காரியோத்து மனந்திரும்பியிருக்கவேண்டும். ஆனால் அவனோ தன்னுடைய துன்மார்க்கமான செயலை உறுதியாகச் செய்யவேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறான். தன்னை இப்போது யூதாசு ஆளுகை செய்யவில்லை. அவனை சாத்தான் ஆளுகை செய்கிறான். "துணிக்கையை அவன் வாங்கினபின்பு சாத்தான் அவனுக்குள் புகுந்தான்". அவனை ஆளுகை செய்வதற்காக சாத்தான் அவனுக்குள் புகுந்திருக்கிறான். இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவதற்கு சாத்தான் யூதாசை தன் வசப்படுத்தியிருக்கிறான். சாத்தான் அவனுக்குள் புகும்போது சாத்தானுடைய குணம் அவனுடைய இருதயத்தை நிரப்புகிறது. பேராசை வந்துவிடுகிறது. அநீதியாகச் சம்பாத்தியம் பண்ணவேண்டும் என்னும் ஆசை வந்துவிடுகிறது. யூதாஸ்காரியோத்து தன்னுடைய ஆசையை நிறைவேற்றுவதற்கு எதை வேண்டுமானாலும் செய்ய ஆயத்தமாயிருக்கிறான். இதுதான் சாத்தானின் குணம்.

"சாத்தான் அவனுக்குள் புகுந்தான்" என்னும் வாக்கியத்திற்கு வேதபண்டிதர்கள் வெவ்வேறு விதமாக வியாக்கியானம்பண்ணுகிறார்கள். இதற்கு முன்பு சாத்தான் அவனுக்குள் இல்லையா என்று கேள்வி கேட்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து இதற்கு முன்னமே தம்முடைய சீஷர்களிடம் "உங்களுக்குள்ளும் ஒருவன் பிசாசாயிருக்கிறான்" என்று கூறியிருக்கிறார் (யோவா 7:70). அவர் யூதாஸ்காரியோத்தைக் குறித்துதான் இவ்வாறு சொன்னார். இப்போது சாத்தான் யூதாசை முழுமையாக ஆளுகை செய்ய அவனை அடிமைப்படுத்தியிருக்கிறான். துன்மார்க்கமான காரியங்களைச் செய்யும் ஒவ்வொரு பாவியினிடத்திலும் சாத்தான் இருக்கிறான். சாத்தானுடைய ஆளுகை ஒவ்வொருவரிடத்திலும் ஒவ்வொரு விதமாக இருக்கும். சாத்தான் ஒரு சிலர் மூலமாக மிகவும் பலத்த துன்மார்க்க கிரியைச் செய்வான். ஒரு சில நேரங்களில் ஒரு சில துன்மார்க்கர் மூலமாகச் சாத்தான் செய்கிற பாவமான கிரியைகளுக்கு அளவேயிருக்காது. சாத்தான் மிகவும் வல்லமையாக சாத்தான் அவர்கள் மூலமாகக் கிரியை செய்வான்.

"அந்தத் துணிக்கையை அவன் வாங்கினபின்பு சாத்தான் அவனுக்குள் புகுந்தான்". அவன் துணிக்கையை வாங்கினபின்பு ஏன் சாத்தான் அவனுக்குள் புகவேண்டுமென்று ஒரு சிலர் கேள்வி கேட்கிறார்கள். இயேசுகிறிஸ்து ஏற்கெனவே "நான் இந்தத் துணிக்கையைத் தோய்த்து எவனுக்குக் கொடுப்பேனோ அவன்தான் என்னைக் காட்டிக்கொடுப்பான்" என்று கூறியிருக்கிறார். யூதாஸ்காரியோத்து இயேசுகிறிஸ்துவின் கையிலிருந்து துணிக்கையை வாங்கும்போது, அவன்தான் இயேசுவைக் காட்டிக்கொடுக்கப்போகிறான் என்பது வெளிப்படையாகத் தெரிந்துவிடுகிறது. ஆகையினால் யூதாஸ் இனிமேலும் தாமதம் செய்யாமல் தன்னுடைய உள்ளத்திலுள்ள வஞ்சகமான எண்ணத்தைத் செயல்படுத்த வேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறான்.

இயேசுகிறிஸ்து ஒரு சிலரை அதிகமாக ஆசீர்வதிக்கிறார். மிகுந்த ஐசுவரியத்திற்கு அவர்கள் சொந்தக்காரராகிறார்கள். சில சமயங்களில் அதிகமான ஆசீர்வாதம் ஆசீர்வாதத்தைக் கொடுப்பதற்குப் பதிலாக, சாபத்தைக் கொடுத்துவிடும். தாங்கள் செய்யும் பாவங்களுக்கு இவர்கள் மனந்திரும்பமாட்டார்கள். தாங்கள் ஐசுவரியவான்களாயிருப் பதினால் தேவனுடைய ஆசீர்வாதம் தங்களிடத்தில் இருக்கிறது என்றும், தாங்கள் ஒரு பாவமும் செய்யவில்லையென்றும், தங்களிடத்தில் தேவன் அன்பாயிருக்கிறாரென்றும் இறுமாப்பாயிருப்பார்கள். தாங்கள் பாவம் செய்திருக்கிறோம் என்னும் உணர்வே இவர்களுக்குள் இருக்காது.

## அதிகாரம் - 13

சாத்தான் யூதாஸ்காரியோத்திற்குள் புகுந்தவுடன், இயேசுகிறிஸ்து அவனை அங்கிருந்து விரைவாக அனுப்புகிறார். "நீ செய்கிறதை சீக்கிரமாய்ச் செய்" என்று கூறுகிறார். யூதாஸ்காரியோத்து இயேசுகிறிஸ்துவின் பிரசன்னத்தைவிட்டு விலகிப்போகிறான். கிறிஸ்துவும் அவனைச் சாத்தானுடைய அதிகாரத்திற்கு ஒப்புக்கொடுத்துவிடுகிறார். சாத்தான் அவனுக்குள் புகுந்திருக்கிறான் என்பது இயேசுகிறிஸ்துவுக்குத் தெரியும். சாத்தான் மிகவும் அமைதியாக அவனுக்குள் வந்து, இப்போது அவனை முழுமையாக ஆளுகை செய்கிறான். இப்போது யூதாசுக்கு இயேசுகிறிஸ்துவிடத்தில் நம்பிக்கையில்லை. நம்பிக்கையற்றவனாக அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுப்போகிறான்.

இயேசுகிறிஸ்து பல சமயங்களில் நம்முடைய பாவங்களை உணர்த்துகிறார். பாவத்தை உணர்த்துவதற்கு அவர் பலவிதமான உபாயங்களைப் பயன்படுத்துகிறார். சில சமயங்களில் இயேசுகிறிஸ்துவின் உபாயங்கள் எதற்கும் நாம் செவிகொடுப்பதில்லை. பாவத்தைக் குறித்து உணர்வடைவதில்லை. துணிகரமாகப் பாவம் செய்கிறோம். அசுத்த ஆவிக்குக் கீழ்ப்படிந்து, மனப்பூர்வமாக அசுத்தமான காரியங்களைச் செய்கிறோம். அப்படிப்பட்ட பரிதாபமான சூழ்நிலையில் பரிசுத்த ஆவியானவர் நம்மைவிட்டு அகன்று போய்விடுகிறார். அப்போது நமக்குப் பரிசுத்த ஆவியானவருடைய ஒத்தாசையோ, உதவியோ கிடைப்பதில்லை.

யூதாசுக்குள் சாத்தான் புகுந்தபின்பு, அவன் பாவம் செய்யவேண்டுமென்று தீர்மானமாயிருக்கிறான். அவனுடைய உள்ளத்தை இயேசுகிறிஸ்து அறிந்தவராக அவனை அவ்விடத்தை விட்டு சீக்கிரமாய் அனுப்புகிறார். யூதாஸ்காரியோத்து தம்மைக் காட்டிக்கொடுக்கப்போகிறான் என்று இயேசு பயப்படவில்லை. அவர் எந்தப் பாடுகளையும் சந்திப்பதற்கும் தாங்கிக்கொள்வதற்கும் ஆயத்தமாயிருக்கிறார். ஆகையினால்தான் இயேசுகிறிஸ்து யூதாசை நோக்கி "நீ செய்கிறதைச் சீக்கிரமாய்ச் செய்" என்று கூறுகிறார்.

**ஒருவனும் அறியவில்லை**

**அவர் இப்படி அவனுடனே சொன்னதின் கருத்தைப் பந்தியிருந்தவர்களில் ஒருவனும் அறியவில்லை. யூதாஸ் பணப்பையை வைத்துக் கொண்டிருந்தபடியினால், அவன்போய், பண்டிகைக்குத் தேவையானவைகளைக் கொள்ளும்படிக்காவது, தரித்திரருக்கு ஏதாகிலும் கொடுக்கும்படிக்காவது, இயேசு அவனுடனே சொல்லியிருப்பார் என்று சிலர் நினைத்தார்கள் (யோவா 13:28,29).**

"இயேசுகிறிஸ்து இப்படி அவனுடனே சொன்னதின் கருத்தைப் பந்தியிருந்தவர்களில் ஒருவனும் அறியவில்லை". யூதாஸ் இயேசுகிறிஸ்துவைக் காட்டிக்கொடுக்கப் போகிறானென்று சீஷர்களில் யாரும் சந்தேகப்படவில்லை. தம்மை அவன் காட்டிக்கொடுக்கப் போவதினால் இயேசுகிறிஸ்து அவனைப்பார்த்து "நீ செய்கிறதைச் சீக்கிரமாய்ச் செய்" என்று அவனிடத்தில் சொன்னதாக யாரும் சிந்தித்துப் பார்க்கவில்லை. ஏனெனில் யூதாஸ் சீஷர்கள் மத்தியிலே நல்லவனைப்போலவே இருந்திருக்கிறான்.

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் நன்றாக உபதேசிக்கப்பட்டிருக்கிறார்கள். கிறிஸ்துவின் வார்த்தையின் பிரகாரமாக அவர்கள் ஒருவரையொருவர் நேசிக்கிறார்கள். யாரும் யாரையும் சந்தேகப்படுவதில்லை. தங்களில் ஒருவன் இயேசுகிறிஸ்துவைக் காட்டிக்கொடுக்கப் போகிறான் என்னும் சிந்தனையே அவர்களுக்கு ஆச்சரியமாகவும், அதிர்ச்சியாகவும் இருக்கிறது. அவர்களுடைய பணப்பைக்கு யூதாஸ் பொறுப்பாகயிருக்கிறான். இயேசுகிறிஸ்து அவனிடத்தில் கொஞ்சம் பணத்தைக்கொடுத்து பண்டிகைக்குத் தேவையானவைகளை வாங்கிக்கொண்டு வரும்படி அனுப்பியிருப்பார் என்று மற்ற சீஷர்கள் நினைக்கிறார்கள். ஏனெனில் யூதாஸ் பல சமயங்களில் அவர்களுக்குத் தேவையான பொருட்களை வாங்கிக்கொண்டு வருவது வழக்கம்.

சீஷர்கள் ஒருவரையொருவர் நேசிப்பதுபோலவே, தரித்திரரிடத்திலும் அன்புகூருகிறார்கள். தங்களுக்கு வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் தரித்திரருக்கு உதவிசெய்கிறார்கள். தரித்திரருக்கு உதவி செய்வதற்காக எதையாவது வாங்கிக்கொண்டு வருமாறு இயேசுகிறிஸ்து யூதாசிடம் சொல்லியிருப்பார் என்று சீஷர்கள் கள்ளம் கபடமில்லாமல் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவுக்கு ஒரு சிலர் தங்கள் ஆஸ்திகளால் ஊழியம் செய்கிறார்கள் (லூக் 8:3). மற்றவர்களிடமிருந்து உதவியைப் பெற்றுக்கொண்டுதான் இயேசுகிறிஸ்து, போஜனம்பண்ணுகிறார். ஆயினும் தம்மிடத்திலுள்ள சிறிது பொருட்களையும் தரித்திரருக்குக் கொடுத்து உதவிசெய்கிறார்.

## அதிகாரம் - 13

இயேசுகிறிஸ்து ஐசுவரிய சம்பன்னராக இருந்தாலும், அவர் நம்மை ஐசுவரியவான்களாக ஆக்குவதற்காகத் தாமே தரித்திரரானார். அவர் தரித்திரராகயிருக்கிற படியினால் பிறருக்கு உதவிபுரிய அவரிடத்தில் ஒன்றும் இல்லை. ஆனாலும் இயேசுகிறிஸ்து ஏதாவது ஒரு வழியில் பிறருக்கு உதவி செய்துகொண்டு வருகிறார். அவரால் பொருள் உதவி செய்யமுடியாமற் போனாலும் மற்ற நற்கிரியைகளைத் தரித்திரருக்குச் செய்கிறார். அவர்களுடைய வியாதிகளை சொஸ்தமாக்குகிறார். தரித்திரருக்கு பிசாசின் பிடியிலிருந்து விடுதலையைக் கொடுக்கிறார்.

யூதருக்கு இது பண்டிகைக் காலம். இதுபோன்ற பண்டிகைக்காலத்தில் யூதர்கள் தரித்திரருக்கு உதவிபுரிவது வழக்கம். இயேசுகிறிஸ்து பஸ்காவை ஆசரிக்கும்போது, ஒருவேளை தரித்திரருக்கு உதவி செய்வதற்காக எதையாவது வாங்கிக்கொண்டு வரச்சொல்லியிருக்கலாம். தம்மிடத்திலுள்ள கொஞ்சம் அளவு பொருளாதாரத்தை இயேசுகிறிஸ்து தமக்காக மாத்திரம் என்று வைத்துக்கொள்ளாமல், பிறருக்கும் உதவிபுரிய அதை செலவுபண்ணுகிறார். தேவன் நம்மிடத்தில் ஐசுவரியத்தைக் கொடுத்திருப்பாரென்றால், அவை முழுவதையும் நமக்காகவே செலவு பண்ணவேண்டுமென்று பேராசைப்படக்கூடாது. ஏழைகளுக்கு உதவிபுரிய கர்த்தர் நமக்கு ஒரு வாய்ப்புக்கொடுத்திருக்கிறார் என்று நினைத்து தரித்திரருக்கு சந்தோஷமாய் உதவிபுரியவேண்டும்.

### இராக்காலம்

**அவன் அந்தத் துணிக்கையை வாங்கினவுடனே புறப்பட்டுப்போனான்; அப்பொழுது இராக்காலமாயிருந்தது (யோவா 13:30).**

இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாக யூதாஸ்காரியோத்து விரைந்து செயல்படுகிறான். தன்னுடைய சதிஆலோசனையை நிறைவேற்றுவதற்கு முன்னேறிப்போகிறான். அவன் அந்தத் துணிக்கையை வாங்கினவுடனே புறப்பட்டுப்போகிறான். மற்ற சீஷர்கள் மத்தியில் தன்னுடைய காட்டிக்கொடுக்கும் சுபாவம் இன்னும் அதிகமாய் வெளிப்பட்டுவிடுமோ என்று பயந்து, ஒருவேளை அவன் விரைவாக அந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டுப்போயிருக்கலாம். இயேசுகிறிஸ்துவின் பிரசன்னத்தைவிட்டும், அப்போஸ்தலருடைய ஐக்கியத்தைவிட்டும் யூதாஸ்காரியோத்து விலகிப்போகிறான்.

இயேசுகிறிஸ்து யூதாஸ்காரியோத்தைத் தம்முடைய ஐக்கியத்திலிருந்து வெளியேற்றவில்லை. அவனை விலக்கி வைக்கவில்லை. அவன் தானாகவே விலகிக்கொள்கிறான். தன்னுடைய வஞ்சகமான எண்ணத்தைச் செயல்படுத்துவதற்காக புறப்பட்டுப்போகிறான். சாத்தான் ஒருவனுக்குள் புகும்போது அவன் அங்கு சும்மாயிருக்கமாட்டான். தன்னுடைய தீயசெயல்களைச் செயல்படுத்துவதற்கு அவனைத் தூண்டுவான். யூதாசுக்குள் சாத்தான் புகுந்திருக்கிறான். தன்னுடைய சதித்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அவனை அவசரப்படுத்துகிறான்.

இயேசு கிறிஸ்துவைவிட்டு யூதாஸ்காரியோத்து புறப்பட்டுப் போகும்போது அது இராக்காலமாயிருக்கிறது. அது இரவுவேளையாகயிருந்தாலும் யூதாசுக்கு அது பிரச்சனையாகயில்லை. இரவின் குளிரும் இருளும் அவனைப் பாதிக்கவில்லை. அவன் எப்படியாவது பாவம் செய்துவிட வேண்டுமென்று துணிகரமாகயிருக்கிறான். சாத்தானுடைய பிள்ளைகள் எதைப்பற்றியும் கவலைப்படாமல் பாவமான காரியங்களைச் செய்வார்கள். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் குளிருக்கும், இரவுக்கும் பயந்துவிடக்கூடாது. யூதாஸ்காரியோத்து சாத்தானுக்காக சுறுசுறுப்பாக செயல்படுகிறான். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், நம் ஆண்டவருக்காக சுறுசுறுப்பாக செயல்படவேண்டும். கிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்கிறவர்களிடத்தில் சோர்வும் கோழைத்தனமும் இருக்கக்கூடாது.

பிசாசின் பிள்ளைகள் தங்களுடைய பாவமான கிரியைகளில் ஆர்வமுள்ளவர்களாகவும் வேகமுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். கர்த்தருக்காக நாம் ஊழியம் செய்யும்போது நம்மிடத்திலும் ஆர்வமும் வேகமும் இருக்கவேண்டும். யூதாஸ்காரியோத்து புறப்பட்டுப்போவது இரவுவேளையாகயிருப்பதினால் அவனை யாரும் கண்டுபிடிக்க முடியாது. இரவு அவனை மூடிமறைத்துக்கொள்கிறது. யாருக்கும் தெரியாமல் தனியாகப் புறப்பட்டுப்போகிறான். துன்மார்க்கமான செய்கைகளைச் செய்கிறவர்கள் ஒளியைப் பகைப்பார்கள். இருளை நேசிப்பார்கள். தங்களுடைய கிரியைகள் வெளிப்பட்டுவிடும் என்று நினைத்து அவர்கள் ஒளியில் ஒன்றையும் செய்யமாட்டார்கள். அவர்கள் இருளின் பிள்ளைகளாகயிருக்கிறார்கள். இருளில் கிரியை செய்கிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமோ ஒளியின் பிள்ளைகளாகயிருக்கிறோம். வெளிச்சத்தில் கிரியை செய்கிறோம்.

## அதிகாரம் - 13

### தேவனுடைய மகிமை
### யோவா 13:31-35

**யோவா 13:31. அவன் புறப்பட்டுப் போனபின்பு இயேசு: இப்பொழுது மனுஷகுமாரன் மகிமைப்படுகிறார், தேவனும் அவரில் மகிமைப்படுகிறார்.**

**யோவா 13:32. தேவன் அவரில் மகிமைப்பட்டிருந்தால், தேவன் அவரைத் தம்மில் மகிமைப்படுத்துவார், சீக்கிரமாய் அவரை மகிமைப்படுத்துவார்.**

**யோவா 13:33. பிள்ளைகளே, இன்னும் கொஞ்சக்காலம் நான் உங்களுடனேகூட இருப்பேன்; நீங்கள் என்னைத் தேடுவீர்கள்; ஆனாலும் நான் போகிற இடத்துக்கு நீங்கள் வரக்கூடாதென்று நான் யூதரோடே சொன்னதுபோல இப்பொழுது உங்களோடும் சொல்லுகிறேன்.**

**யோவா 13:34. நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்.**

**யோவா 13:35. நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார்.**

**மனுஷகுமாரன் மகிமைப்படுகிறார்**

**அவன் புறப்பட்டுப்போனபின்பு இயேசு: இப்பொழுது மனுஷகுமாரன் மகிமைப்படுகிறார், தேவனும் அவரில் மகிமைப்படுகிறார் (யோவா 13:31).**

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரோடு பந்தியில் அமர்ந்திருக்கும்போது, அவர்களோடு உரையாடிக்கொண்டிருக்கிறார். இந்த வசனத்திலிருந்து, பதினான்காம் அதிகாரம் கடைசி வரையிலும் இந்த உரையாடல் தொடருகிறது. யூதாஸ்காரியோத்து இயேசுகிறிஸ்து கொடுத்த துணிக்கையை வாங்கினவுடனே பந்தியைவிட்டுப் புறப்பட்டுப்போகிறான். அவன்போன பின்பு இயேசுகிறிஸ்து இந்த உரையாடலை ஆரம்பிக்கிறார். ஜனங்கள் வரங்களை உடையவர்களுக்கும், உயர்ந்த அந்தஸ்தில் இருக்கிறவர்களுக்கும் செவிகொடுப்பார்கள். அப்படிப்பட்ட அந்தத்திலுள்ளவர்கள் தங்களுக்குக் கிடைத்திருக்கிற சிலாக்கியத்தைப் பயன்படுத்தி ஜனங்களுக்கு நன்மை செய்யவேண்டும். அவர்கள் பிறருக்கும் நன்மை செய்யுமாறு அவர்களை வழிநடத்தவேண்டும்.

இயேசுகிறிஸ்து தம்முடைய மரணத்தையும் பாடுகளையும் குறித்த இரகசியத்தைத் தம்முடைய சீஷர்களிடம் கூறுகிறார். இதுவரையிலும் இந்தச் சத்தியங்கள் சீஷருக்கு மறைபொருளாகவே இருந்திருக்கிறது. இதன் பொருளை அவர்கள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. யூதாஸ்காரியோத்து தம்மைவிட்டுப் புறப்பட்டுப்போகும் வரையிலும் இயேசுகிறிஸ்து தம்முடைய உரையாடலை ஆரம்பிக்கவில்லை. பொதுவாக நல்ல உரையாடல் நடைபெறுவதற்கு துன்மார்க்கர் தடையாகயிருப்பார்கள். அவர்கள் அந்த இடத்தைவிட்டுப் போனால்தான் அங்கு உரையாடல் நல்லமுறையில் நடைபெறும். யூதாஸ்காரியோத்து இயேசுகிறிஸ்துவை விட்டுப் புறப்பட்டுப்போகிறான். அவன் புறப்பட்டுப்போனபின்பு "இப்பொழுது மனுஷகுமாரன் மகிமைப்படுகிறார்" என்று இயேசு கூறுகிறார்.

இயேசுகிறிஸ்து தம்முடைய பிள்ளைகளைச் சுத்திகரிப்பதினால் மகிமைப்படுகிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய சபையிலுள்ள கறைகளையும் அழுக்கையும் பாவங்களையும் அகற்றிப்போடுவதினால் மகிமைப்படுகிறார். யூதாஸ்காரியோத்து இயேசுவைவிட்டு விரைவாகப் போகிறான். இயேசு கிறிஸ்துவை மரண ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்பதில் யூதாஸ் தன் பங்கை செய்வதற்கு விரைந்து போகிறான். ஆகையினால் "இப்பொழுது மனுஷகுமாரன் மகிமைப்படுகிறார்" என்று இயேசு கூறுகிறார். இந்த வாக்கியத்திற்கு "இப்பொழுது மனுஷகுமாரன் சிலுவையில் அறையப்படுகிறார்" என்று பொருள் கூறலாம்.

இயேசுகிறிஸ்து தம்முடைய பாடுகளைக் குறித்து சீஷர்களுக்கு உபதேசம்பண்ணுகிறார். அவர்களுக்கு ஆறுதல் கொடுக்கக்கூடிய வார்த்தைகளையே பேசுகிறார். இயேசுகிறிஸ்து தாமே தம்முடைய பாடுகளில் மகிமைப்படுகிறார். மனுஷகுமாரன் மிகப்பெரிய பாடுகளைச் சந்திக்கப்போகிறார். அவருடைய சிநேகிதர்களும் அவருக்கு விரோதமாக எழும்புகிறார்கள். அவருடைய சீஷரில் ஒருவனே அவரைக் காட்டிக் கொடுக்கப் போகிறான். அவருடைய சத்துருக்கள் அவரைக் கொலைசெய்ய வகைதேடிக் கொண்டிருக்கிறார்கள். ஆயினும் இவற்றுக்கு மத்தியிலும் "இப்பொழுது மனுஷகுமாரன் மகிமைப்படுகிறார்"

## அதிகாரம் - 13

இயேசுகிறிஸ்து இப்போது சாத்தான்மீதும், அவனுடைய அந்தகார சக்திகள் அனைத்தின்மீதும் ஜெயம்பெறப்போகிறார். தம்முடைய ஜனங்களை சாத்தானின் பிடியிலிருந்து மகிமையாக விடுதலைபண்ணுவதற்கு, என்னவெல்லாம் செய்யவேண்டுமோ அதையெல்லாம் செய்யப்போகிறார். தம்முடைய மரணத்தின் மூலமாக இயேசுகிறிஸ்து மனுஷரை தேவனோடு ஒப்புரவாக்கப்போகிறார். இதன் மூலமாக மனுஷருக்கு நித்திய நீதியும், நித்திய சந்தோஷமும் கிடைக்கப்போகிறது.

நீடிய பொறுமைக்கும், சுயவெறுப்புக்கும் இயேசுகிறிஸ்து தம்மைத்தாமே மகிமையுள்ள முன்மாதிரியாக ஏற்படுத்தியிருக்கிறார். அவர் சிலுவையின் பாடுகளை அனுபவிப்பது அவருடைய நீடியபொறுமைக்கு எடுத்துக் காட்டாயிருக்கிறது. அது மாத்திரமல்ல. மனுஷருடைய ஆத்துமாக்களின்மேல் அவர் பிரியம் வைத்திருக்கிறபடியினால், அந்த ஆத்துமாக்களை இரட்சிப்பதற்காகத் தம்முடைய ஜீவனையே மீட்பின் கிரயமாகச் செலுத்துகிறார். இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணமும் பாடுகளும் உலகத்தாருடைய மனதில் ஆச்சரியமாகயிருக்கிறது. இதைப் பார்க்கிறவர்களும், கேள்விப்படுகிறவர்களும் இயேசுகிறிஸ்துவைக்குறித்து பிரமிக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து பல அற்புதங்களையும் அதிசயங்களையும் செய்திருக்கிறார். இவற்றின் மூலமாக, இயேசுகிறிஸ்து ஏற்கெனவே மகிமையடைந்திருக்கிறார். ஆனாலும் இப்போதோ தம்முடைய பாடுகளின் மூலமாகவும் தாம் மகிமைப்படப்போவதாக இயேசுகிறிஸ்து சாட்சியாக அறிவிக்கிறார். இயேசுகிறிஸ்துவின் மற்ற மகிமைகள் எல்லாவற்றையும்விட, அவர் சிலுவை மரணத்தின் மூலமாகவும் தாம் அனுபவித்த பாடுகள் மூலமாகவும் அடைந்த மகிமையே பிரதான மகிமையாகயிருக்கிறது.

**தேவன் அவரை மகிமைப்படுத்துவார்**

**தேவன் அவரில் மகிமைப்பட்டிருந்தால், தேவன் அவரைத் தம்மில் மகிமைப்படுத்துவார், சீக்கிரமாய் அவரை மகிமைப்படுத்துவார் (யோவா 13:32).**

இயேசுகிறிஸ்துவின் பாடுகளில் பிதாவாகிய தேவனும் மகிமைப்படுகிறார். இயேசுகிறிஸ்துவின் பாடுகள் தேவனுடைய நீதியை உறுதிபண்ணுவதற்குப் போதுமானதாகயிருக்கிறது. கிறிஸ்துவின் சிலுவை மரணத்தினால் தேவன் தம்முடைய நீதியைக்குறித்து திருப்தியடைந்திருக்கிறார். ஆகையினால் கிறிஸ்துவின் பாடுகளில் தேவனும் அவரில் மகிமைப்படுகிறார். இயேசுகிறிஸ்துவின் பாடுகள் அவருடைய பரிசுத்தத்தையும் இரக்கத்தையும் வெளிப்படுத்துகிறது. தேவன் அன்பாகவேயிருக்கிறார். தம்முடைய அன்பினால் இயேசுகிறிஸ்து சிலுவைப்பரியந்தம் தம்மைத் தாழ்த்தி, தம்முடைய ஜீவனையே நமக்காக ஒப்புக் கொடுத்திருக்கிறார்.

இயேசுகிறிஸ்துவின் பாடுகளினால் பிதாவாகிய தேவன் அவரில் மகிமைப்படுகிறார். தேவன் அவரில் மகிமைப்பட்டிருப்பதினால், பிதாவாகிய தேவன் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை தம்மில் மகிமைப்படுத்துகிறார். பிதா தம்மை மகிமைப்படுத்துவார் என்று இயேசுகிறிஸ்து மிகுந்த நிச்சயத்தோடிருக்கிறார். பாதாளமும் பூமியும் இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாக எழும்பிற்று. ஆனால் தேவனோ இயேசுகிறிஸ்துவுக்கு மகிமை உண்டாகும் வண்ணமாக கிறிஸ்துவின் பாடுகளை அனுமதித்திருக்கிறார். இயேசுகிறிஸ்து பாடுகளை அனுபவிக்கும்போது அற்புதங்களும் அடையாளங்களும் அதோடுகூட நடைபெற்றன. இதைப்பார்த்த ஜனங்கள் ஆச்சரியமடைந்தார்கள். இயேசுகிறிஸ்துவை சிலுவையில் அறைந்தவர்கள்கூட "அவர் தேவனுடைய குமாரன்" என்று சாட்சியாக அறிவித்தார்கள். இவ்வாறாக இயேசு கிறிஸ்துவின் பாடுகளினால் பிதாவாகிய தேவன் அவரை மகிமைப்படுத்துகிறார்.

இயேசுகிறிஸ்து தம்மைத்தாமே மகிமைப்படுத்துகிறார். கிறிஸ்து தமக்குத் தாமே மகிமையுள்ளவராகயிருக்கிறார். தம்முடைய ஆள்தத்துவத்தை இயேசுகிறிஸ்து மகிமைப்படுத்துகிறார். இயேசுகிறிஸ்து மரித்து மூன்றாம் நாளில் விரைவாக உயிர்த்தெழுந்ததினால் அவருக்கு மகிமை உண்டாயிற்று. இயேசுகிறிஸ்து பாடுகளை அனுபவிக்கும்போதும், சிலுவையில் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுக்கும்போதும், அவர் தமக்கு முன்பாக நியமிக்கப்பட்டிருந்த சந்தோஷத்தையும் மகிமையையும் நோக்கிப்பார்க்கிறார். இந்த மகிமை பெரிதான மகிமையாகயிருக்கிறது. அது மாத்திரமல்ல. இந்த மகிமை வெகுதூரத்திலில்லை. மிகவும் அருகாமையிலிருக்கிறது. இயேசுகிறிஸ்து சீக்கிரமாய் மகிமையடையப்போகிறார். பிதாவானவர் சீக்கிரமாய் அவரை மகிமைப்படுத்துவார்.

## அதிகாரம் - 13

இந்த உலகத்தில் நாம் எவ்வளவுதான் நற்கிரியைகளைச் செய்தாலும், நம்மை அதற்காக யாரும் உடனடியாகப் பாராட்டமாட்டார்கள். நம்முடைய நற்செய்கைகளை பலர் மறந்தேவிடுவார்கள். இது உலகப்பிரகாரமான சுபாவம். ஆனால் பிதாவாகிய தேவனோ இயேசுகிறிஸ்துவின் பாடுகளுக்காகவும் மரணத்திற்காகவும் அவரை சீக்கிரமாய் மகிமைப்படுத்துவார். காலதாமதம் இருக்காது. பிதாவானவர் குமாரனை மகிமைப்படுத்த மறந்துபோய்விடமாட்டார்.

இயேசுகிறிஸ்துவுக்கு அவருடைய பாடுகளினாலும் மகிமை உண்டாயிற்று. அவருடைய பாடுகளிலும் மகிமை உண்டாயிற்று. பிதாவாகிய தேவன் தம்மில் மகிமைப்படுவதைக் குமாரனாகிய இயேசுகிறிஸ்து காண்கிறார். ஆகையினால் பிதாவானவர் குமாரனைத் தம்மில் சீக்கிரமாய் மகிமைப்படுத்துவார். தேவனுடைய நாம மகிமைக்காக ஊழியம் செய்கிறவர்களை கர்த்தர் கனப்படுத்துவார். அவர்கள் மகிமையின் சந்தோஷத்தைப் பெற்றுக்கொள்வார்கள். தாங்கள் பாடுகளை அனுபவித்தாலும், இதன் மூலமாகக் கர்த்தர் மகிமைப்படுகிறார் என்பதை நினைத்துப் பார்த்து, கர்த்தருடைய ஊழியக்காரர்கள் சந்தோஷமாயிருப்பார்கள். இதுவே கர்த்தர் இவர்களுக்குக் கொடுக்கிற ஆசீர்வாதம். கர்த்தரை மகிமைப்படுத்துகிறவர்கள் அவரோடுகூட மகிமைப்படுத்தப்படுவார்கள்.

### இன்னும் கொஞ்சக்காலம்

**பிள்ளைகளே, இன்னும் கொஞ்சக்காலம் நான் உங்களுடனேகூட இருப்பேன்; நீங்கள் என்னைத் தேடுவீர்கள்; ஆனாலும் நான் போகிற இடத்துக்கு நீங்கள் வரக்கூடாதென்று நான் யூதரோடே சொன்னதுபோல இப்பொழுது உங்களோடும் சொல்லுகிறேன் (யோவா 13:33).**

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரோடு உரையாடிக்கொண்டிருக்கும் போது அவர்களுடைய உள்ளத்தைத் தொடும்விதமாக ஒரு சத்தியத்தை அறிவிக்கிறார். ஆனாலும் சீஷர்களுடைய இருதயம் இயேசுகிறிஸ்துவின் வார்த்தையை உடனே புரிந்துகொள்ள முடியாதபடிக்கு மந்தமாயிருக்கிறது.

இயேசுகிறிஸ்து அவர்களை "பிள்ளைகளே" என்று அழைக்கிறார். இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் இன்னும் கொஞ்சக்காலம் மாத்திரமே தம்முடைய சீஷர்களோடு இருக்கப்போகிறார். அவர் தம்முடைய சீஷர்களைப் பார்க்கும்போது, அவர்களைச் சிறுபிள்ளைகளாகவே பார்க்கிறார். அவர்கள் விசுவாசத்தில் பலவீனமாகயிருக்கிறார்கள். அவர்கள் பிள்ளைகளாகயிருப்பதினால் இயேசுகிறிஸ்துவின் பாதுகாப்பும், பராமரிப்பும், ஆதரவும், அரவணைப்பும் அவர்களுக்கு இன்னும் தேவைப்படுகிறது. இதையெல்லாம் அறிந்திருக்கிறவராக இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களைப்பார்த்து "பிள்ளைகளே இன்னும் கொஞ்சகாலம் நான் உங்களுடனே கூடயிருப்பேன்" என்று கூறுகிறார்.

இயேசுகிறிஸ்து தங்களோடிருக்கிற காலத்தை சீஷர்கள் ஆதாயப்படுத்திக் கொள்ளவேண்டும். நம்முடைய ஆத்துமாக்களின் வளர்ச்சிக்கு ஆவிக்குரிய போஜனம் கிடைக்கும்போது அவற்றைப் பெற்றுக்கொள்ளவேண்டும். ஆவிக்குரிய உதவிகள் எப்போதெல்லாம் நமக்குக் கிடைக்கிறதோ அப்போதெல்லாம் அவற்றைப் பெற்றுக்கொண்டு, நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சியடையவேண்டும்.

சீஷர்கள் இதுவரையிலும் இயேசு கிறிஸ்துவோடு கூடவேயிருந்திருக்கிறார்கள். தம்முடைய பிரத்தியட்சமான சரீரத்தில் இயேசுகிறிஸ்துவும் சீஷர்களோடு கூடவேயிருக்கிறார். சீஷர்கள் பிள்ளைகளாகயிருப்பதினால், இயேசு கிறிஸ்துவின் சரீரப்பிரகாரமான பிரசன்னம் தங்களோடு எப்போதும் கூடவேயிருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கக் கூடாது. இயேசுகிறிஸ்து அவர்களைவிட்டுப் போனபின்பு இவர்கள் ஏமாந்துபோய்விடக் கூடாது. இயேசுகிறிஸ்துவின் சரீரப்பிரகாரமான பிரசன்னம் தங்களோடு கூடயிராவிட்டாலும், தாங்கள் எப்படி வாழவேண்டுமென்று சீஷருக்குத் தெரிந்திருக்கவேண்டும். இப்போது பிள்ளைகளாகயிருக்கிற சீஷர்கள், எப்போதுமே சிறுபிள்ளைகளாகயிருக்க முடியாது. பிள்ளைப்பருவத்தைக் கடந்து வாலிபப்பருவத்திற்கு வளர்ச்சி பெறுவதுபோல, இவர்களும் வளர்ச்சி பெறவேண்டும். இயேசுகிறிஸ்து தங்களோடு கூடயில்லாமலேயே, இந்த உலகத்தில் இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்வதற்கு சீஷர்கள் பயிற்சி பெற்றுக்கொள்ளவேண்டும்.

## அதிகாரம் - 13

சீஷர்கள் இப்போது இயேசுகிறிஸ்துவோடு கூடவேயிருக்கிறார்கள். அவர் எங்குபோனாலும் இவர்களும் அவரோடு கூடவே போகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் இயேசு இவர்களிடம் "நான் போகிற இடத்திற்கு நீங்கள் வரக்கூடாது" என்று அறிவிக்கிறார். இயேசுகிறிஸ்து இன்னும் கொஞ்சக்காலம் மாத்திரமே தம்முடைய சீஷர்களோடு கூடயிருப்பார். அதன் பின்பு அவர்களைவிட்டு பரமேறிப்போய்விடுவார். அப்போது அவர்கள் இயேசுவைத் தேடுவார்கள். ஆனாலும் அவர் போகிற இடத்திற்கு சீஷர்களால் போகமுடியாது. இந்த வாக்கியத்தை இயேசுகிறிஸ்து இப்போது தம்முடைய சீஷரோடு கூறுகிறார். இதே வாக்கியத்தை ஏற்கெனவே யூதர்களிடத்தில் கூறியிருக்கிறார் (யோவா 7:34).

இயேசுகிறிஸ்து சீஷர்களைவிட்டுக் கடந்துபோன பின்பு, அவர்கள் அவரை அதிகமாய்த் தேடுவார்கள். அவர் தங்களோடு கூடயிருக்கவேண்டுமென்று விரும்புவார்கள். இயேசு அவர்களோடு கூடயிருக்கும்போது அவருடைய முக்கியத்துவம் அவர்களுக்கு அதிகமாய்த் தெரியவில்லை. ஆனால் அவர் அவர்களைவிட்டுப் போனபின்போ, அவருடைய முக்கியத்துவத்தை சீஷர்கள் உணருவார்கள். அவரைத் தேடுவார்கள். நம்முடைய வாழ்வில் தேவனுடைய கிருபைகளும் இரக்கமும் அதிகமாய் காணப்பட்டால் அவற்றிற்கு நாம் அதிக முக்கியத்துவம் கொடுக்கமாட்டோம். நம்முடைய ஜீவியத்தில் தேவனுடைய கிருபையும் இரக்கமும் குறைந்துபோனால் அவற்றை அதிகமாய் வாஞ்சிப்போம். கருத்தாய்த் தேடுவோம்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சரீரத்தில் சீஷர்களோடு இருக்கும்போது அவர்களுக்கு திருப்தி உண்டாயிற்று. தேற்றரவாளர் அவர்கள் மத்தியிலே வரும்போது, இயேசுகிறிஸ்துவின் மூலமாக உண்டான திருப்தி போல, தேற்றரவாளர் மூலமாக உண்டாகாது. தேற்றரவாளர் வந்தாலும் அவர்கள் இன்னும் இயேசுகிறிஸ்துவின் சரீரப்பிரகாரமான பிரசன்னத்தையே தேடுவார்கள்.

இயேசுகிறிஸ்து யூதர்களிடத்தில் சொன்ன போது "நீங்கள் என்னைத் தேடுவீர்கள். ஆனாலும் என்னைக் காணமாட்டீர்கள்" என்று கூறினார் (யோவா 7:34). ஆனால் தம்முடைய சீஷர்களிடத்தில் இதைப்பற்றிச் சொல்லும் போதோ "நீங்கள் என்னைத் தேடுவீர்கள்" என்று மாத்திரமே சொல்லுகிறார். "நீங்கள் என்னைக் காணமாட்டீர்கள்" என்று இயேசு தம்முடைய சீஷரிடத்திலே சொல்லவில்லை.

இயேசுகிறிஸ்து எங்கே போகிறாரோ அந்த இடத்திற்கு அவருடைய சீஷர்களால் வரக்கூடாது. தாம் சிலுவையில் மரிக்கப்போகிறோம் என்பதை இயேசுகிறிஸ்து அறிந்திருப்பதினால், அந்த சிலுவைப்பாடுகளைத் தம்முடைய சீஷர்களுக்குக் கொடுக்க இயேசுவுக்கு மனமில்லை. அவர்களை அன்போடு பராமரிக்க வேண்டும் என்றுதான் இயேசுகிறிஸ்து விரும்புகிறார். கிறிஸ்துவின் பார்வைக்கு அவர்கள் இன்னும் பிள்ளைகளாகவே இருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து போகிற சிலுவையின் இடத்திற்கு சீஷர்களால் வரக்கூடாது. அங்கு வருவதற்குத் தேவையான தைரியமும், தீர்மானமும் சீஷர்களிடத்திலில்லை. இயேசுகிறிஸ்து சிலுவையின் மூலமாகத் தம்முடைய மகிமையான கிரீடத்தைப் பெற்றுக்கொள்ளப்போகிறார். அந்த மகிமையின் கிரீடம் இயேசுகிறிஸ்துவுக்கு மாத்திரமே கொடுக்கப்படும். கிறிஸ்துவின் கிரீடத்தைச் சீஷர்களால் பெற்றுக்கொள்ள முடியாது. சீஷர்களுக்கு அவர்களுக்குரிய கிரீடமே கொடுக்கப்படும். கிறிஸ்துவின் கிரீடம் வேறு. நம்முடைய கிரீடம் வேறு.

### ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்

**நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன் (யோவா 13:34).**

நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பது இயேசுகிறிஸ்துவின் பிரதான கற்பனைகளில் ஒன்றாகும். ஒவ்வொரு விசுவாசியும் தன் சகோதரனை சிநேகிக்கவேண்டும். சகோதர சிநேகம் விசுவாசிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கடமை. இயேசுகிறிஸ்து என்னென்ன பாடுகளையெல்லாம் அனுபவித்தாரோ, அந்தப் பாடுகளெல்லாம் சீஷர்களுக்கும் வருவதற்கு வாய்ப்புள்ளது. சீஷர்கள் பாடுகளை அனுபவிக்கும்போது ஒருவருக்கொருவர் ஆதரவாகயிருக்க வேண்டும். ஒருவருக்கொருவர் அன்பாயிருக்க வேண்டும். ஒருவர் பாரத்தை ஒருவர் சுமக்கவேண்டும். ஒருவருடைய தளர்ந்த கையை மற்றொருவர் பலப்படுத்தவேண்டும். சீஷர்களுக்குள் சகோதர சிநேகம் இருந்தால் மாத்திரமே,அவர்கள் பாடுகளை அனுபவிக்கும் போது அவர்களால் ஒருவருக்கொருவர் அன்பாகவும் ஆதரவாகவும் இருக்க முடியும்.

## அதிகாரம் - 13

ஒருவருக்கொருவர் அன்பாகயிருக்க வேண்டுமென்பது இயேசுகிறிஸ்துவின் பிரமாணம். இதைப்பற்றிச் சொல்லும்போது இதைப் "புதிதான கட்டளை" என்று குறிப்பிடுகிறார். "நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்" என்று இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு அறிவிக்கிறார். இது ஆலோசனையல்ல. இது கட்டளை. தேவனுடைய ராஜ்யத்தில் இந்தப் புதிதான கட்டளை அடிப்படைச் சட்டங்களில் ஒன்றாகயிருக்கிறது.

இது புதிதான கட்டளை. பழைய கட்டளையிலுள்ள திருத்தவேண்டிய பகுதிகளெல்லாம் திருத்தப்பட்டு, இந்தக் கட்டளை புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் புதிய கட்டளையின் எல்லைகள் விஸ்தாரம்பண்ணப்பட்டிருக்கிறது. இதற்கு முன்பிருந்த கட்டளை கெட்டுப்போயிற்று. ஆகையினால் இயேசுகிறிஸ்து இதை புதுப்பிக்க வேண்டியதாயிற்று. பழைய கட்டளை புதுப்பிக்கப்பட்டிருப்பதினால் இயேசுகிறிஸ்து இதை "புதிதான கட்டளை" என்று கூறுகிறார்.

பழைய ஏற்பாட்டுக் காலத்திலும் ஒருவருக்கொருவர் அன்பாயிருக்க வேண்டும் என்னும் பிரமாணம் இருந்தது. ஆனால் யூதர்களோ இந்தப் பிரமாணத்தை மறந்துவிட்டார்கள். இதைப் பழையது என்று கூறி இந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் போய்விட்டார்கள். யூதர் மத்தியிலே சகோதர சிநேகம் இல்லாமற்போயிற்று. ஆகையினால் இயேசுகிறிஸ்து இதைப் புதுப்பித்து, ஜனங்களுக்கு இதைப் புதிய கட்டளையாகக் கொடுக்கிறார்.

ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்னும் கட்டளை புதிதான கட்டளை மாத்திரமல்ல. இது நித்திய கட்டளையாயுமிருக்கிறது. இது இப்போது புதிதாக இருப்பதுபோலவே எப்போதுமே புதிதாகயிருக்கும். நித்திய காலமாக இந்தக் கட்டளை புதிதாகவேயிருக்கும். விசுவாசமும் நம்பிக்கையும் ஒழிந்துபோனாலும் அன்பு நிலைத்திருக்கும். இயேசுகிறிஸ்து இந்தக் கட்டளையைக் கொடுப்பதினால் இது புதிய கட்டளையாகயிருக்கிறது. இதற்கு முந்திய கட்டளை "உங்கள் அயலானை சிநேகியுங்கள்" என்று இருந்தது.

இந்தப் புதிய கட்டளையோ "நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்" என்று இருக்கிறது. நம்முடைய சிநேகத்தை நாம் பரிமாறிக்கொள்ளவேண்டும். நாம் ஒருவருக்கொருவர் அன்பாயிருக்கவேண்டும். பிறர் நம்மீது அன்பாயிருப்பதுபோல நாமும் அவர்கள்மீது அன்பாயிருக்கவேண்டும். அதுபோலவே நாம் பிறர்மீது அன்பாயிருப்பதுபோல அவர்களும் நம்மீது அன்பாயிருக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்து "நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்" என்கிற புதிதான கட்டளையை தம்முடைய சீஷர்களுக்குக் கொடுக்கும்போது "நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல" என்று கூறுகிறார். இந்த வாக்கியம்தான் இந்தக் கட்டளையைப் புதிய கட்டளை ஆக்கிற்று. இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடத்தில் எப்படி அன்பு வைத்திருந்தார் என்பதை தியானித்துப் பார்க்கும்போது "நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல" என்னும் வாக்கியத்திற்கு பொருள் நன்றாக விளங்கும். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடத்தில் எப்படி அன்பாயிருந்தாரோ, அப்படியே அவர்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும். இந்த அன்பு முடிவுபரியந்தம் நிலைத்திருக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்காக தமது ஜீவனையே ஒப்புக்கொடுக்கிறார். "ஒருவன் தன் சிநேகிதருக்காக தன் ஜீவனைக்கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை" (யோவா 15:13). நாம் பிறர்மீது வைத்திருக்கும் அன்பு, இயேசுகிறிஸ்து நம்மீது வைத்திருக்கும் அன்புபோலவே இருக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின்பற்றுகிறவர்களாகிய நாம், ஒருவரிலொருவர் அன்பாயிருக்கிறதிலும், அவருடைய முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டும். ஒருவருக்கொருவர் தங்கள் ஆத்துமாக்கள்மீதும் அன்பாயிருக்கவேண்டும். நம்முடைய ஆத்துமாவை நாம் நேசிப்பதுபோல பிறருடைய ஆத்துமாவையும் நேசிக்கவேண்டும். நாம் பிறரை நேசிக்கும்போது, இயேசுகிறிஸ்து நம்மை நேசித்திருக்கிறார், ஆகையினால் நாம் பிறரை நேசிக்கவேண்டும் என்னும் மனப்பக்குவம் நம்முடைய இருதயத்தில் காணப்படவேண்டும்.

### என்னுடைய சீஷர்கள்

**நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார் (யோவா 13:35).**

## அதிகாரம் - 13

சீஷர்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பது இயேசுகிறிஸ்து அவர்களுக்குக் கொடுத்திருக்கிற புதிய கட்டளையாகும். இவ்வாறு அவர்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் அவர்கள் இயேசுகிறிஸ்துவினுடைய சீஷர்கள் என்று எல்லோரும் அறிந்துகொள்வார்கள். நாம் பிறரிடத்தில் அன்புகூரும்போது, நம்முடைய அன்பை வெளிப்படுத்துவதற்காக மாத்திரமல்ல, இயேசுகிறிஸ்து நம்மிடத்தில் அன்புகூர்ந்திருக்கிறார், ஆகையினால் நாமும் பிறரிடத்தில் அன்புகூரவேண்டும் என்னும் அடிப்படை சுபாவம் நம்முடைய உள்ளத்தில் காணப்படவேண்டும்.

ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருக்கவேண்டும் என்பது இயேசுகிறிஸ்துவின் சீஷர்களிடத்தில் இருக்கவேண்டிய அடிப்படை குணாதிசயம். இயேசுகிறிஸ்துவின் குடும்பத்தில் நாம் அங்கத்தினர்களாக இருக்கவேண்டுமென்றால், ஒருவரிலொருவர் நாம் அன்பாயிருக்கவேண்டும். நம்முடைய அன்பை இந்த உலகத்திலுள்ள ஜனங்கள் பார்த்து, நம்மை இயேசுகிறிஸ்துவினுடைய சீஷர்கள் என்று இந்த உலகத்தார் புரிந்துகொள்வார்கள். நம்முடைய சுபாவங்கள் எல்லாவற்றையும்விட, ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும் என்னும் சுபாவத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.

நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடத்தில் அன்பாயிருந்து, தம்முடைய அன்பை வெளிப்படுத்திக் காண்பித்திருக்கிறார். அவர் தம்முடைய சீஷரிடத்தில் அன்பாயிருந்ததுபோலவே நாமும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும் என்னும் புதிதான கட்டளையை நமக்குக் கொடுக்கிறார். இயேசுகிறிஸ்துவின் பிள்ளைகளுக்கும், உலகப்பிரகாரமான பிள்ளைகளுக்கும் பிறரிடத்தில் அன்புகூருகிற விஷயத்தில் வித்தியாசம் இருக்கும். நாம் ஒருவருக்கொருவர் அன்பாயிருக்கிறதைப் பார்த்து, இந்த உலகத்திலுள்ள ஜனங்கள் "இவர்கள் கிறிஸ்துவின் சீஷர்கள்" என்று எல்லோரும் அறிந்துகொள்வார்கள். நம்மைக் குறித்து இவ்வாறாகவே சாட்சிகொடுப்பார்கள்.

நாம் ஒருவரிலொருவர் அன்புகூரும்போது, நம்முடைய அன்பின் மூலமாக இயேசுகிறிஸ்துவின் இருதயத்தை வெளிப்படுத்துகிறோம். அவருடைய முழு இருதயமும் நாம் ஒருவரிலொருவர் அன்புகூரவேண்டும் என்பதிலேயே நிலைத்திருக்கிறது. நாம் ஒவ்வொருவரிடத்திலும் தனிப்பட்ட முறையில், தனிநபராக அன்புகூரவேண்டும். இந்த உலகமோ எல்லாரும் தன்னிடத்தில் அன்புகூரவேண்டும் என்றும், எல்லோரும் தனக்குப் பணிவிடை செய்யவேண்டுமென்றும் எதிர்பார்பார்கள். இயேசுகிறிஸ்துவின் பிள்ளைகளாகிய நாமோ பிறரிடத்தில் அன்புகூருவதற்கு முந்திக்கொள்ளவேண்டும்.

"நீங்கள் அற்புதங்களையும் அதிசயங்களையும் செய்வதினால், நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லோரும் அறிந்துகொள்வார்கள்" என்று இயேசுகிறிஸ்து கூறவில்லை. ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டும் என்பதற்கே இயேசுகிறிஸ்து முக்கியத்துவம் கொடுக்கிறார்.

"நான் மனுஷர் பாஷைகளையும் தூதர்பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன். நான் தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்து, சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப்பேர்க்கத்தக்க சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும் அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை. எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம் பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை" (1கொரி 13:1-3).

சகோதர சிநேகத்தில் விசுவாசிகள் வளர்ச்சியடைய வேண்டும். கிறிஸ்துவின் சீஷர்களுக்கு இதுவே மெய்யான மகிமையாயிருக்கிறது. நாம் ஒருவரிலொருவர் அன்புகூருவதை வைத்தே, நாம் இயேசுகிறிஸ்துவின் பிள்ளைகள் என்பதை இந்த உலகம் அறிந்துகொள்ளவேண்டும். மற்ற சுபாவங்கள் மூலமாக நாம் கிறிஸ்துவின் பிள்ளைகள் என்பதை வெளிப்படுத்திக் காண்பிப்பதற்குப் பதிலாக, நாம் ஒருவரிலொருவர் அன்புகூருவதன் மூலமாக, நாம் கிறிஸ்துவின் பிள்ளைகள் என்பதை உலகத்திற்குக் காண்பிக்கவேண்டும்.

## அதிகாரம் - 13

இயேசுகிறிஸ்துவின் பிள்ளைகள் ஒருவரிலொருவர் அன்புகூரவில்லையென்றால், அவர்கள் மெய்யாகவே கிறிஸ்துவின் பிள்ளைகள்தானா என்பது சந்தேகத்திற்குரியதாகவே இருக்கிறது. நம்முடைய சத்துருக்களுக்கு உதவி தேவைப்பட்டாலும், இயேசுகிறிஸ்து நம்மிடத்தில் அன்புகூர்ந்து நமக்கு உதவிசெய்கிறதுபோல, நாமும் அவர்களுக்கு உதவிசெய்யவேண்டும். நம்முடைய சத்துருக்கள் நம்மை மன்னியாதவர்களாக இருக்கும்போது, நாம் அவர்களை மன்னிப்பதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்தால், அவர்களை மன்னிக்க முன்வரவேண்டும். கிறிஸ்து நம்மை மன்னித்ததை நினைவுகூர்ந்து நாமும் பிறரை மன்னிக்கவேண்டும். இப்படிப்பட்ட நற்கிரியைகளின் மூலமாகவே நாம் கிறிஸ்துவின் பிள்ளைகள் என்பதை இந்த உலகம் அறிந்துகொள்ளும்.

### பேதுருவின் ஆர்வம்
### யோவா 13 : 36-38

**யோவா 13:36. சீமோன்பேதுரு அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் எங்கே போகிறீர் என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் போகிற இடத்துக்கு இப்பொழுது நீ என் பின்னே வரக்கூடாது, பிற்பாடு என் பின்னே வருவாய் என்றார்.**

**யோவா 13:37. பேதுரு அவரை நோக்கி: ஆண்டவரே, நான் இப்பொழுது உமக்குப் பின்னே ஏன் வரக்கூடாது? உமக்காக என் ஜீவனையும் கொடுப்பேன் என்றான்.**

**யோவா 13:38. இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: எனக்காக உன் ஜீவனைக் கொடுப்பாயோ? சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாயென்று, மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.**

#### நீர் எங்கே போகிறீர்

**சீமோன்பேதுரு அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் எங்கே போகிறீர் என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் போகிற இடத்துக்கு இப்பொழுது நீ என் பின்னே வரக்கூடாது, பிற்பாடு என் பின்னே வருவாய் என்றார் (யோவா 13:36).**

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடம் "நான் போகிற இடத்திற்கு நீங்கள் வரக்கூடாது" என்று சொல்லுகிறார். இந்த வார்த்தை பேதுருவுக்கு மிகவும் ஆச்சரியமாகயிருக்கிறது. ஆண்டவர் எங்கே போகப்போகிறார் என்பதைத் தெரிந்துகொள்ள மிகவும் ஆர்வமாகயிருக்கிறான். சீமோன் பேதுரு இயேசுகிறிஸ்துவிடம் "ஆண்டவரே நீர் எங்கே போகிறீர்" என்று தைரியமாகவும் தெளிவாகவும் ஒரு கேள்வி கேட்கிறான். தாம் போகிற இடத்திற்கு சீஷர்களால் வரக்கூடாது என்று சொன்னதினால், அது எந்த இடம் என்பதை தெரிந்துகொள்வதில் பேதுருவுக்கு ஆர்வம் உண்டாயிற்று.

பல சமயங்களில் நம்முடைய மனச்சாட்சி ஒரு காரியத்தை நம்மிடத்தில் தெளிவாகப் பேசும். ஆனால் நம்முடைய ஆர்வமோ வேறு திசையில் நம்மை வழிநடத்தும். ஆர்வத்திற்கும் மனச்சாட்சியின் சத்தத்திற்கும் இடையில் போராட்டமே நடைபெறும். இந்தப் போராட்டத்தில் இறுதியாக நம்முடைய மனச்சாட்சி தோல்வியுற்று, நம்முடைய ஆர்வத்தின் பிரகாரம் நாம் செயல்படுவது அதிகமாகக் காணப்படுகிறது. இதுவும் ஒரு தவறுதான். பல சமயங்களில் இயேசுகிறிஸ்துவின் உபதேசம் மிகவும் எளிமையாகவும் தெளிவாகவும் இருக்கும். ஆனால் இந்தத் தெளிவான உபதேசத்தில் தேவையில்லாத விவாதங்களைச் செய்து, சத்தியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் நம்முடைய விவாதத் திறமைக்கு முக்கியத்துவம் கொடுத்துவிடுவோம். சிறிய காரியங்களைக்கூட பெரிதுபடுத்தி பிரச்சனைகளையும் பிரிவினைகளையும் உண்டுபண்ணிவிடுவோம்.

பேதுரு தம்மிடத்தில் தாம் போகும் இடத்தைப்பற்றி கேள்வி கேட்டாலும், இயேசுகிறிஸ்து அவனுக்குப் பொறுமையோடு பிரதியுத்தரம் கூறுகிறார். இதற்கு முன்பு தாம் சொன்ன அதே பதிலைச் சொல்லாமல், பேதுருவின் ஆர்வத்தைத் தணிக்கும் வகையில் அவனுக்கு ஆறுதலாகப் பதில் கூறுகிறார். "நான் போகிற இடத்திற்கு இப்பொழுது நீ என் பின்னே வரக்கூடாது. பிற்பாடு என் பின்னே வருவாய்" என்று கூறுகிறார். இதற்கு முன்பு "நான் போகிற இடத்திற்கு நீங்கள் வரக்கூடாது" என்று மாத்திரம் சொன்னவர், இப்போது பேதுருவிடம் "பிற்பாடு என் பின்னே வருவாய்" என்று ஆறுதலாகப் பேசுகிறார்.

## அதிகாரம் - 13

தம்முடைய சிலுவையைப் பேதுரு பின்பற்றப்போவதைப்பற்றி இயேசுகிறிஸ்து இங்கு குறிப்பிடுகிறார். இயேசுகிறிஸ்துவை யூதமார்க்கத்துத்தலைவர்கள் பிடித்து சிலுவையில் அறைய எத்தனமாயிருக்கும் போது, இயேசுகிறிஸ்துவோ தம்முடைய சீஷர்களின் பாதுகாப்பைக் குறித்து மிகுந்த கவனத்தோடிருக்கிறார். அவர் தம்முடைய சீஷர்களைப் பாதுகாத்துப் பராமரிக்கிறார். இப்போது சீஷர்களால் இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றி வரமுடியாது. ஆகையினால் அவர்களுடைய வழியில் அவர்கள் போவதற்கு இயேசுகிறிஸ்து அனுமதி கொடுக்கிறார். தம்முடைய சீஷர்களைக் குறித்து இயேசுகிறிஸ்து ஒரு திட்டம் வைத்திருக்கிறார். அந்தத் திட்டத்தின் பிரகாரம், அதற்கேற்ற வேளையில், அவர்கள் செயல்படவேண்டுமென்று இயேசுகிறிஸ்து சித்தங்கொண்டிருக்கிறார்.

வேளை வரும்போது இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படுவார்கள். பேதுரு இரத்தச் சாட்சியாக மரிக்கவேண்டுமென்பது தேவனுடைய சித்தமும் திட்டமுமாகும். ஆனாலும் இப்போது அவனால் இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றிப் போகமுடியாது. ஏற்ற வேளை வரும்போது அவன் இயேசுவுக்குப் பின்னால் வருவான். இயேசுகிறிஸ்துவைப்போலவே பேதுருவும் சிலுவையில் அறையப்பட்டு கொல்லப்படுவான்.

இயேசுகிறிஸ்து சிலுவைப்பாடுகளை அனுபவித்து, சிலுவையில் மரிக்கும்போது, சீஷர்கள் இந்தப் பாடுகளுக்கும் மரணத்திற்கும் தப்பித்துக்கொள்கிறார்கள். இப்போது அவர்களுக்குப் பாடுகள் இல்லை என்பதினால், இனிமேல் அவர்களுக்குப் பாடுகளே வராது என்று உத்திரவாதம் எதுவுமில்லை. இப்போது அவர்களால் இயேசுவின் பின்னே வரக்கூடாது. பிற்பாடு அவர்கள் இயேசுவின் பின்னே வருவார்கள். இப்போது அவர்கள் இயேசுவைப்போல பாடுகளை அனுபவிக்கவில்லை. பிற்பாடு அவர்கள் அவரைப்போலவே பாடுகளை அனுபவிப்பார்கள்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் இப்போது நமக்குப் பாடுகளில்லாமல் இருக்கலாம். இதனால் நம்முடைய ஆவிக்குரிய ஓட்டத்தில் பாடுகளே இருக்காது என்று சொல்லமுடியாது. ஒருவேளை மிகப்பெரிய பாடுகளும் வேதனைகளும் நமக்காகக் காத்துக்கொண்டிருக்கலாம். ஏற்றவேளை வரும்போது நமக்கு நியமிக்கப்பட்ட பாதையின் வழியாக நாம் கடந்து முன்னேறிச் செல்லவேண்டும். நாம் ஒவ்வொருவருமே விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடவேண்டும். ஒரு சிலருக்கு இப்பொழுது போராட்டம் இருக்கலாம். வேறு சிலருக்கு இனிமேல் போராட்டம் வரலாம். இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுவது என்பது அவருடைய சிலுவையைச் சுமந்துகொண்டு அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்வதாகும். இயேசு பின்பற்றும்போது, நமக்கு மேன்மையான சிலாக்கியம் வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவோடுகூட சிங்காசனத்தில் அமர்ந்திருப்போம். இயேசுகிறிஸ்து சிலுவைப்பாதையின் வழியாகத்தான் சிங்காசனத்தில் ஏறி அமர்ந்தார். சிலுவையில்லாமல் சிங்காசனமில்லை. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கும் சிலுவை நியமிக்கப்பட்டிருக்கிறது. ஒரு வேளை இப்போது இயேசுவின் பின்னால் நம்மால் சிலுவையை எடுத்துக்கொண்டு போகமுடியாமல் இருக்கலாம். ஆனாலும் பிற்பாடு இயேசுவின் பின்னே நம்முடைய சிலுவையை எடுத்துக்கொண்டு அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றிப்போவோம். இயேசுவைப்போலவே சிலுவைப்பாதையின் வழியாய்க் கடந்துசென்று சிங்காசனத்தின்மீது ஏறி அமருவோம். செங்கடலுக்கும் கானானுக்கும் இடையில் வனாந்தரம் இருக்கிறது. அதுபோலவே கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு வனாந்தர வாழ்க்கையும் நியமிக்கப்பட்டிருக்கிறது.

### என் ஜீவனையும் கொடுப்பேன்

**பேதுரு அவரை நோக்கி: ஆண்டவரே, நான் இப்பொழுது உமக்குப் பின்னே ஏன் வரக்கூடாது? உமக்காக என் ஜீவனையும் கொடுப்பேன் என்றான் (யோவா 13:37).**

பேதுரு இயேசுகிறிஸ்துவிடத்தில் விசுவாசம் வைத்திருக்கிறான். அவர்மீது அன்பாயிருக்கிறான். தன்னுடைய விசுவாசத்திலும், சுயபலத்திலும், சுயபக்தியிலும், சுயபுத்தியிலும் பேதுரு உறுதியாயிருக்கிறான். இயேசுகிறிஸ்து பேதுருவை நோக்கி "நான் போகிற இடத்திற்கு இப்பொழுது நீ என் பின்னே வரக்கூடாது" என்று கூறியவுடன், பேதுரு ஆண்டவரிடம் "ஆண்டவரே, நான் இப்பொழுது உமக்குப் பின்னே ஏன் வரக்கூடாது" என்று மிகவும் தைரியமாகக் கேட்கிறான். அத்துடன் "உமக்காக என் ஜீவனையும் கொடுப்பேன்" என்றும் பேதுரு உறுதியாகப் பேசுகிறான்.

## அதிகாரம் - 13

இயேசுகிறிஸ்து பல சமயங்களில் தம்முடைய பாடுகளைக் குறித்துப் பேசுகிறார். பேதுருவுக்கு இயேசுகிறிஸ்துவின் பாடுகளைப்பற்றி தெளிவான ஞானமில்லை. ஏதோ ஒரு வழியில் அவர் மரிக்கப்போகிறார் என்றுதான் நினைக்கிறான். இயேசுகிறிஸ்துவுக்கு நியமிக்கப்பட்டிருக்கும் பாடுகளும் சிலுவை மரணமும் பேதுருவுக்கு இன்னும் வெளிப்படுத்தப்படவில்லை. இயேசுகிறிஸ்து மரித்துப்போன லாசருவை உயிரோடே எழுப்புவதற்காகப் பெத்தானியாவுக்குப் போனார். அப்போது தோமா மற்ற சீஷர்களைப்பார்த்து "அவரோடேகூட மரிக்கும்படி நாமும் போவோம்" என்று பொதுவாகக் கூறுகிறான். இயேசுகிறிஸ்துவோடு மரிக்க சீஷர்கள் ஆயத்தமாகயிருக்கிறார்கள். பேதுருவும் தோமாவைப்போலவும், மற்ற சீஷர்களைப்போலவும் இயேசுகிறிஸ்துவின்மீது மிகுந்த அன்பு வைத்திருக்கிறான். இயேசுகிறிஸ்து இல்லாமல் ஜீவிப்பதைவிட அவரோடுகூட மரிப்பது மிகவும் நல்லது என்று தோமாவைப்போல பேதுருவும் நினைக்கிறான்.

பேதுரு இயேசுவின்மீது மெய்யாகவே மிகுந்த அன்பு வைத்திருக்கிறான். "உமக்காக என் ஜீவனையும் கொடுப்பேன்" என்று சொல்லுமளவுக்கு அவன் இயேசுவின்மீது அன்போடிருக்கிறான். தன்னுடைய உள்ளத்தின் சிந்தனையை பேதுரு அப்படியே வார்த்தையாகப் பேசிவிடுகிறான். மெய்யாகவே பேதுரு இயேசுவுக்காக ஜீவனைக்கொடுக்க ஆயத்தமாகயிருக்கிறானா என்பது அவனுக்கே தெரியாது. ஆகையினால்தான் உண்மையான சூழ்நிலையைப் புரிந்துகொள்ளாமல், தன்னைப்பற்றியும் சரியாக அறிந்துகொள்ளாமல், இயேசுகிறிஸ்துவிடம் "ஆண்டவரே நான் இப்பொழுது உமக்குப் பின்னே ஏன் வரக்கூடாது" என்று மாம்சப்பிரகாரமான தைரியத்தோடு கேட்கிறான். ஒருவேளை இயேசுகிறிஸ்து தன்னுடைய விசுவாசத்தைச் சந்தேகப்படுகிறாரோ என்னும் கவலை பேதுருவின் மனதிற்குள் வந்திருக்கலாம்.

பல சமயங்களில் நம்மால் எல்லாம் செய்யமுடியுமென்று நமக்குள் தீர்மானம்பண்ணுவோம். ஆனால் செயல்படவேண்டிய வேளை வரும்போது நம்மால் ஒன்றும் செய்யமுடியாமல் பரிதபித்துக்கொண்டிருப்போம். நம்முடைய சொந்த முயற்சியை நம்பினால் இப்படித்தான் தோல்வி உண்டாகும். கிறிஸ்து இல்லாமல் நம்மால் ஒன்றும் செய்யமுடியாது. இந்த சிந்தனையும், கிறிஸ்துவின் மூலமாய் நம்மால் எல்லாம் செய்யமுடியும் என்னும் விசுவாசமுள்ள சிந்தனையும் நமக்குள் இருக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களால் எல்லாம் ஆகும்.

### மறுதலிப்பாய்

**இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: எனக்காக உன் ஜீவனைக் கொடுப்பாயோ? சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாயென்று, மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார் (யோவா 13:38).**

பேதுரு தன்னைப்பற்றி மிகுந்த நம்பிக்கையோடிருக்கிறான். இயேசுகிறிஸ்துவுக்காகத் தன் ஜீவனையும் கொடுக்க தான் ஆயத்தமாகயிருப்பதாக பேதுரு பெருமையோடு பேசுகிறான். இயேசுகிறிஸ்துவுக்குப் பேதுருவைப்பற்றி நன்றாகத் தெரியும். அவனைப்பற்றி அவனுக்குத் தெரிவதைவிட, இயேசுகிறிஸ்துவுக்கு அவனைப்பற்றி நன்றாகத் தெரியும். அவன் தன்னுடைய விசுவாசத்தில் தோற்றுப்போவான் என்பதையும், அவன் தம்மை மறுதலிப்பான் என்பதையும் இயேசுகிறிஸ்து பேதுருவுக்கு முன்னறிவிக்கிறார்.

முதலாவதாக இயேசுகிறிஸ்து பேதுருவின் சுயநம்பிக்கையைப்பற்றிப் பேசுகிறார். "எனக்காக உன் ஜீவனைக்கொடுப்பாயோ" என்று இயேசு அவனிடம் பரிதாபமாகக் கேட்கிறார். தன்னுடைய வார்த்தையைப்பற்றி பேதுரு மறுபடியும் சிந்திக்கவேண்டும் என்பதற்காகவே அவனிடத்தில் இந்தக் கேள்வியைக் கேட்கிறார். பேதுரு தன்னைத்தானே சோதித்துப் பார்த்து, தன்னுடைய சுயபலத்தின்மேல் சார்ந்திராமல், இயேசுகிறிஸ்துவின் கிருபையின்மேல் சார்ந்திருக்கப் பழகிக்கொள்ள வேண்டும். "ஆண்டவரே உமக்காக என் ஜீவனையும் கொடுக்க நீர் எனக்குக் கிருபை தரவேண்டும்" என்று பேதுரு இயேசுகிறிஸ்துவிடம் பணிவோடு ஜெபம்பண்ணவேண்டும். "ஆண்டவரே உமக்குச் சித்தமானால், நீர் என்னை உமது கிருபையினால் பலப்படுத்தினால், உமக்காக என் ஜீவனையும் கொடுக்க ஆயத்தமாகயிருக்கிறேன்" என்று இயேசுகிறிஸ்துவின் கிருபைக்கு முக்கியத்துவம் கொடுத்துப்பேசவேண்டும்.

## அதிகாரம் - 13

இயேசுகிறிஸ்து ஒரு சமயம் கடலின்மீது நடந்துசென்றபோது, பேதுருவும் கடலின்மீது நடக்க விரும்பினான். சிறிது நேரம் நடந்தபின்பு அவிசுவாசத்தினால் பேதுரு கடலில் விழுந்து மூழ்கிப்போனான். பேதுரு விசுவாசத்தில் குறைவுள்ளவன், அதிகமாகப் பேசக்கூடியவன். இப்படிப்பட்டவன்தான் இப்போது இயேசுவிடம் "உமக்காக என் ஜீவனையும் கொடுப்பேன்" என்று தைரியமாகச் சொல்லுகிறான். இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுவதற்காக பேதுரு தன் படவையும் வலையையும் விட்டு வந்தான். அவற்றை விடுவது எளிதான காரியம். இயேசுகிறிஸ்துவுக்காகத் தன்னுடைய ஜீவனையே கொடுப்பது என்பது படகையும் வலையையும் விட்டு விடுவதுபோல எளிதான காரியமல்ல.

பல சமயங்களில் நம்மைக் குறித்து எண்ணவேண்டியதற்கு அதிகமாக நாம் எண்ணுகிறோம். நம்மீது அதிகமாக நம்பிக்கை வைக்கிறோம். பெரிய காரியங்களைப் பேசுகிறோம். பெரிதாகச் சிந்திக்கிறோம். இவையெல்லாமே நல்லதுதான். ஆனாலும் இயேசுகிறிஸ்துவின் கிருபையில்லையென்றால் நம்மால் ஒன்றும் செய்யமுடியாது என்பதை எப்போதும் மறந்துபோய்விடக்கூடாது. பேதுரு இங்கு தன்னைப்பற்றி அதிகமாகச் சிந்திக்கிறான். தன்மீது அதிக நம்பிக்கை வைத்திருக்கிறான். இயேசுவுக்காகத் தன்னுடைய ஜீவனையே கொடுக்க ஆயத்தமாயிருப்பதாகக் கூறுகிறான். ஆனால் சோதனை வரும்போது இயேசுவையே தனக்குத் தெரியாது என்று இந்தப் பேதுரு மறுதலித்துவிடுவான். அவன் தம்மை மறுதலிக்கப்போவது இயேசுவுக்குத் தெரியும். ஆகையினால் இயேசு அவனைப்பார்த்து "சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய்" என்று கூறுகிறார்.

பேதுரு இயேசுகிறிஸ்துவை மறுதலிப்பதற்கு சேவல் கூவவேண்டும் என்னும் அவசியமில்லை. சேவல் கூவுகிறதற்கு முன்னமே பேதுரு இயேசுவைத் திரும்ப திரும்ப மறுதலித்துக்கொண்டிருப்பான். அவன் தன்னுடைய தவற்றை உணர்ந்து கொள்வதற்காகவே சேவல் கூவுகிறது. சேவல் கூவுகிற சத்தத்தைக் கேட்டு, இயேசுகிறிஸ்து தனக்குச் சொன்ன வார்த்தையை நினைவுகூருகிறான்.

இயேசுகிறிஸ்துவுக்குத் தெரியாத இரகசியம் ஒன்றுமேயில்லை. யூதாஸ்காரியோத்து தம்மைக் காட்டிக்கொடுக்கப்போகிறான் என்பதும், பேதுரு தம்மை மறுதலிக்கப்போகிறான் என்பதும் இயேசுகிறிஸ்துவுக்கு ஏற்கெனவே தெரியும். இயேசுவை மறுதலிக்க வேண்டுமென்று பேதுரு திட்டமிடவில்லை. அவருக்காக தன்னுடைய ஜீவனையே கொடுக்கவேண்டும் என்றுதான் திட்டமிட்டிருந்தான். ஆனால் அவனால் தன்னுடைய ஜீவனை இயேசுவுக்காக கொடுக்க முடியவில்லை. ஜீவனைக் கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை. பேதுருவால் இயேசுகிறிஸ்துவை மறுதலிக்காமல்கூட இருக்க முடியவில்லை. இயேசுகிறிஸ்துவுக்கு பாவிகளுடைய துன்மார்க்கமான ஆலோசனைகளும் தெரியும், பரிசுத்தவான்களுடைய பலவீனங்களும் தெரியும்.

பேதுரு தம்மை மறுதலிப்பான் என்று இயேசுகிறிஸ்து அவனிடத்தில் கூறுகிறார். நாக்கு தடுமாறி, ஏதோ தவறுதலாக, அவன் இயேசுவை மறுதலிக்கப்போவதில்லை. திரும்பத் திரும்ப மூன்றுமுறை அவன் இயேசுகிறிஸ்துவை மறுதலிக்கப்போகிறான். இப்படி மறுதலிக்கப்போகிற பேதுருதான், இயேசுகிறிஸ்துவுக்காக தன்னுடைய ஜீவனையே கொடுப்பேனென்று உறுதியோடு கூறியவன். நம்முடைய சுயபுத்தியிலும் சுயதைரியத்திலும் எப்போதும் சார்ந்திருக்கக்கூடாது. இவை நமக்குப் பாதுகாப்பாக இருக்காது. தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன் (1கொரி 10:12).

## அதிகாரம் - 14

யூதாஸ்காரியோத்து இயேசுகிறிஸ்துவைக் காட்டிக்கொடுப்பதற்காக பந்தியைவிட்டு புறப்பட்டுப்போகிறான். அதன்பின்பு இயேசுகிறிஸ்து மற்ற சீஷர்களை ஆறுதல்படுத்துகிறார். சீஷர்களுடைய இருதயம் கலங்காதிருக்கவேண்டும். பரலோகமே அவர்களுக்கு நித்திய வாசஸ்தலம் (யோவா 14:2,3). இயேசுகிறிஸ்துவே அவர்களுக்கு வழியாகயிருக்கிறார் (யோவா 14: 4-11). சீஷர்கள் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஜெபிக்கும்போது, அவர்களுடைய ஜெபங்களுக்கு இயேசுகிறிஸ்து பதில்கொடுப்பார் (யோவா 14:12-14). வேறொரு தேற்றரவாளன் வரப்போகிறார் (யோவா 14:15-17). இயேசுகிறிஸ்து இவர்களைவிட்டுப் போனபின்பு சீஷர்களுக்கும் கிறிஸ்துவுக்கும் இடையில் இருக்கப்போகிற ஐக்கியம் (யோவா 14:18-24). பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளரின் ஊழியம் (யோவா 14:25,26). இயேசுகிறிஸ்து கொடுக்கிற சமாதானம் (யோவா 14:27). சீஷர்களைவிட்டு இயேசுகிறிஸ்து பிதாவினிடத்திற்குப் போவதினால் சந்தோஷப்படுகிறார் (யோவா 14:28-31).

### நான் மறுபடியும் வருவேன்
### யோவா 14 : 1-3

**யோவா 14:1. உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்.**

**யோவா 14:2. என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன்.**

**யோவா 14:3. நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்.**

**உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக**

**உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள் (யோவா 14:1).**

சீஷருடைய இருதயம் கலக்கமடையக்கூடாது என்று இயேசுகிறிஸ்து அவர்களுக்குப் பொதுவான எச்சரிப்பைக் கூறுகிறார். "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக" என்று இயேசு தம்முடைய சீஷர்களிடம் அறிவிக்கிறார். அவர்களுடைய இருதயம் கலங்கியிருப்பதை இயேசுகிறிஸ்து அறிந்திருக்கிறார். ஒருவேளை அவர்களுடைய முகத்தோற்றம் இருதயத்தின் கலக்கத்தை வெளிப்படுத்தியிருக்கலாம். மனுஷன் முகத்தைப்பார்த்தாலும் இயேசுகிறிஸ்து மனுஷனுடைய இருதயத்தைப்பார்த்து அவர்களுடைய உள்ளத்தை அறிகிறார். நம்முடைய மறைவான வருத்தங்களும், இருதயத்தின் வேதனைகளும், மனதின் பாரங்களும் இயேசுகிறிஸ்துவுக்கு மறைவாயிருப்பதில்லை.

இயேசுகிறிஸ்து சீக்கிரத்தில் தம்முடைய ஜீவனை சிலுவையில் ஒப்புக்கொடுக்கப்போகிறார். அவருக்கு பாடுகளும் வேதனைகளும் காத்துக்கொண்டிருக்கிறது. இதையெல்லாம் சிந்தித்துப் பார்த்து ஒருவேளை சீஷர்களின் இருதயம் கலங்கியிருக்கலாம். இவர்களுடைய மனதில் பலவிதமான எண்ணங்கள் உண்டாயிற்று. அவை அவர்களுடைய இருதயத்தைக் கலங்கச் செய்கிறது.

தம்முடைய சீஷர்களில் ஒருவன் தம்மைக் காட்டிக்கொடுக்கப்போகிறான் என்று இயேசுகிறிஸ்துச் சொன்னது சீஷர்களின் இருதயத்திற்குக் கலக்கமாயிருக்கிறது. அவர்களுடைய கலக்கத்தைப் பார்த்து இயேசு அவர்களுக்கு ஆறுதல் கூறுகிறார். நாம் ஒருவேளை பக்தியுள்ளவர்களாகவும் விசுவாசமுள்ளவர்களாகவும் இருக்கலாம். தேவனுக்கு முன்பாக தாழ்மையோடு ஜீவித்து நம்முடைய ஆத்துமாக்களைக் காத்துக்கொள்ளலாம். ஆனாலும் இவைகளுக்கு மத்தியிலும், நம்முடைய இருதயம் கலக்கமடைவதற்கு வாய்ப்புள்ளது. பரிசுத்தமான சந்தோஷத்திற்கும், இருதயத்தின் கலகக்கத்திற்கும் இடையே சில சமயம் போராட்டங்கள் உண்டாகலாம்.

## அதிகாரம் - 14

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களைவிட்டுக் கடந்துபோக வேண்டுமென்று இப்போது வெளிப்படுத்தியிருக்கிறார். சாதாரணமாக அவர் கடந்துபோவது மாத்திரமல்ல, பாடுகளின் வழியாகவும் இயேசுகிறிஸ்து கடந்துபோகவேண்டும். இயேசுகிறிஸ்துவைச் சத்துருக்கள் சிலுவையில் அறையும்போது, நாம் அதைப் பார்த்தால் நம்முடைய இருதயமும் கலங்கும். இயேசுகிறிஸ்துவின் வேதனையைப்பார்த்து நாம் கலங்குவதைத் தவிர நமக்கு வேறு வழி ஒன்றும் இல்லை. இயேசுவின் சிலுவை மரணத்தினால் நமக்கு ஆசீர்வாதம் உண்டு. ஆனாலும் அவருடைய மரணமும் பாடுகளும் நம்முடைய இருதயத்தை கலங்கச் செய்யும். நம்முடைய தரிசனம் குறுகியது. இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணத்தைத்தவிர, அதற்கு அப்பால் என்ன நடைபெறும் என்பதை நம்முடைய மனக்கண்களால் பார்க்க முடியாது.

இயேசுகிறிஸ்து தங்களைவிட்டுப் போய்விட்டால், அதன்பின்பு தங்களுக்கு என்ன ஆகுமோ என்று சீஷர்கள் கலங்குகிறார்கள். ஒருவேளை சீஷர்களுக்கு ஏமாற்றமும் அவமானமும் உண்டாகலாம். இயேசுகிறிஸ்து இஸ்ரவேல் தேசத்தை, ரோமப்பேரரசிடமிருந்து இரட்சிக்கப்போகிறார் என்று ஜனங்கள் எதிர்பார்க்கிறார்கள். அப்படிப்பட்ட இரட்சகரே சிலுவையில் மரித்துப்போனால், இஸ்ரவேலின் விடுதலையை எதிர்பார்க்கிற எல்லோருக்கும் ஏமாற்றமாகவே இருக்கும்.

இயேசுகிறிஸ்து சீஷர்களைவிட்டுப் பிரிந்துபோவது அவர்களுக்கு வருத்தமாக இருக்கும். அவர்களுடைய இருதயம் கலங்கும். தங்களோடு கூடவேயிருந்தவர் இப்போது தங்களைவிட்டுப் போகிறாரே என்று கலங்குவார்கள். இவையெல்லாவற்றையும் பார்த்துதான் இயேசுகிறிஸ்து அவர்களிடம் "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக" என்று கூறுகிறார். இந்த வாக்கியத்தில் வரும் மூன்று வார்த்தைகளும் மிகவும் முக்கியமானவை. "கலங்குதல்" என்னும் வார்த்தைக்கு "கடல் அமைதியில்லாமல் கொந்தளிப்பதுபோல தொடர்ந்து கொந்தளிப்பது" என்று பொருள். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் "உங்கள் இருதயம் உணர்ச்சிவசப்படவேண்டாம்" என்று கூறவில்லை.

இதற்குப் பதிலாக "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக" என்றே கூறுகிறார். பல சமயங்களில் நமக்குப் பலவிதமான இழப்புக்கள் உண்டாகலாம். நாம் எதை இழந்துபோனாலும் நம்முடைய ஆத்துமாவை இழந்துபோகக்கூடாது. அதைப் பத்திரமாகப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். ஆத்துமாவிற்கு இருதயமே பலத்த அரணாகயிருக்கிறது. நாம் எதைச் செய்தாலும் அது நம்முடைய இருதயத்தைப் பாதிக்கும். ஆகையினால் நம்முடைய கலக்கமும், வேதனையும், பாடுகளும், வருத்தங்களும் நம்முடைய இருதயத்தைக் கலங்கப்பண்ணக்கூடாது.

இயேசுகிறிஸ்து இங்கு கூறும் வாக்கியத்தில் முக்கியமான அடுத்த வார்த்தை "உங்கள்" என்னும் வார்த்தையாகும். இவர்களே இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள். இயேசுவை நெருக்கமாகப் பின்பற்றுகிறார்கள். இவர்களுக்கு இயேசுகிறிஸ்துவை நன்றாகத் தெரியும். மற்றவர்கள் இயேசுவைப்பற்றி அறிந்திருப்பதைவிட இவர்கள் அவரைக்குறித்து அதிகமாக அறிந்திருக்கிறார்கள். ஆகையினால் இயேசுகிறிஸ்து தாம் செய்கிற எல்லாவற்றையும், தேவனுடைய சித்தத்தின் பிரகாரமே செய்வார் என்னும் நம்பிக்கை இவர்களுடைய இருதயத்தில் காணப்படவேண்டும். சூழ்நிலைகள் கலக்கமாகயிருந்தாலும், இவர்களுடைய இருதயம் கலங்கக்கூடாது.

இருதயம் கலங்காதிருப்பதற்கு இயேசுகிறிஸ்து ஒரு உபாயத்தையும் கூறுகிறார். அவர்களிடத்தில் "விசுவாசம்" இருக்கவேண்டும். இதுவே இயேசுகிறிஸ்து கூறும் உபாயமாகும். "தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள். என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்" என்று இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடத்தில் கூறுகிறார். ஒரு சிலர் இவ்விரண்டு வாக்கியங்களுக்கும் மிகவும் முக்கியத்துவம் கொடுத்து வாசிப்பார்கள். "தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள்" என்னும் வாக்கியத்திற்கு, "தேவனுடைய பரிபூரணத்திலும் அவருடைய பராமரிப்பிலும் விசுவாசமாயிருங்கள்" என்று பொருள். "என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்" என்று இயேசுகிறிஸ்து கூறும் வாக்கியத்திற்கு "அவரிடத்திலும், அவருடைய மத்தியஸ்த ஊழியத்திலும் விசுவாசமாயிருங்கள்" என்று பொருள்.

## அதிகாரம் - 14

சீஷர்கள் தேவனிடத்தில் விசுவாசமாயிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவும் இவர்களுடைய விசுவாசத்தை அறிந்திருக்கிறார். சீஷர்களுடைய வாழ்க்கையில் கலக்கமான சூழ்நிலைகள் வரும்போது, அவர்கள் "இயேசுகிறிஸ்துவிடத்திலும் விசுவாசமாயிருக்க வேண்டும்". தேவனுக்கும் மனுஷனுக்கும் நடுவில் இயேசுகிறிஸ்து மத்தியஸ்தராகயிருப்பதினால், நாம் "இயேசுகிறிஸ்துவிலும் விசுவாசம் வைக்க வேண்டும். இதை நாம் விசுவாசிக்கும்போது தேவனிடத்தில் நாம் வைத்திருக்கும் விசுவாசம் நமக்கு ஆறுதலைத் தரும்.

தேவனிடத்திலும் இயேசு கிறிஸ்துவிடத்திலும் விசுவாசம் வைத்திருக்கிறவர்கள் பாக்கியவான்கள். நாம் இயேசுகிறிஸ்துவின் மூலமாகத் தேவனிடத்தில் விசுவாசம் வைக்கவேண்டும். தேவனிடத்தில் விசுவாசம் வைத்திருக்கிறவர்கள் இயேசுகிறிஸ்துவிடத்திலும் விசுவாசம் வைத்திருப்பார்கள். நம்முடைய இருதயம் கலங்காதிருக்க வேண்டுமானால், நாம் இயேசுகிறிஸ்துவின் மூலமாகத் தேவனிடத்தில் விசுவாசம் வைக்கவேண்டும். விசுவாசத்தின் சந்தோஷமே நம்முடைய துக்கங்களையும், கவலைகளையும், வேதனைகளையும், வருத்தங்களையும் நீக்குகிற நல்மருந்தாகயிருக்கிறது.

**பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள்**

**என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப் போகிறேன் (யோவா 14:2).**

இயேசுகிறிஸ்து நமக்கு நித்திய ஜீவனை வாக்குப்பண்ணியிருக்கிறார். இந்த வாக்குத்தத்தத்தின்மீது நாம் விசுவாசம் வைக்கவேண்டும். நித்திய ஜீவன்மீது நாம் விசுவாசம் வைக்கும்போது, நாம் தேவனிடத்திலும் இயேசுகிறிஸ்துவிடத்திலும் விசுவாசம் வைக்கவேண்டும். வரப்போகிற சந்தோஷத்திற்காக நாம் தேவனையும் இயேசுவையும் விசுவாசிக்கவேண்டும்.

ஏனெனில் இயேசுகிறிஸ்து வாக்குப்பண்ணியிருக்கும் சந்தோஷம் நித்திய சந்தோஷமாகும். நம்முடைய ஆத்துமா நித்திய காலமாக ஜீவிக்கும். பரலோகம் நித்திய காலமாகயிருக்கும். இயேசுகிறிஸ்து நமக்குக் கொடுக்கப்போகும் சந்தோஷமும் நித்திய காலமாகயிருக்கும்.

இயேசுகிறிஸ்து பாடுகளை அனுபவிக்கப்போகிறார் என்பதையும், தங்களைவிட்டுப் போகப்போகிறார் என்பதையும் நினைத்துப் பார்க்கும்போது சீஷர்களுடைய இருதயம் கலங்கும். இந்த இருதயக் கலக்கத்திலிருந்து இவர்கள் விடுதலை பெறவேண்டுமானால், தங்களுக்கு வாக்குப்பண்ணப்பட்டிருக்கும் நித்திய சந்தோஷத்தை விசுவாசத்தோடு தியானிக்கவேண்டும். பரிசுத்தவான்களுக்குப் பலவிதமான துன்பங்களும் பாடுகளும் வந்தபோதெல்லாம், அவர்கள் தங்களுக்கு வாக்குப்பண்ணப்பட்டிருக்கும் நித்திய ஜீவனையும், நித்திய சந்தோஷத்தையும் எதிர்பார்த்து, இந்தச் சோதனைகளைக் கடந்தார்கள். தங்களைத் தாங்களே வேதனைகளின் மத்தியிலும் உற்சாகப்படுத்திக் கொண்டார்கள். பரலோகம் எல்லாவற்றையும் மாற்றிப்போடும்.

நமக்கு நித்திய ஜீவனும், நித்திய சந்தோஷமும் நியமிக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் முழுநிச்சயத்தோடு நம்பவேண்டும். "என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு. அப்படி இல்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்" என்று இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடத்தில் கூறுகிறார். பரலோகத்தில் வாசம்பண்ணுகிற அனுபவம், வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணுகிற அனுபவம்போல இருக்காது. பரலோகத்தைப்பற்றி இயேசுகிறிஸ்து இங்கு குறிப்பிடும்போது, அதை "வாசஸ்தலம்" என்று குறிப்பிடுகிறார். வனாந்தரத்தில் வாசம்பண்ணுவது கூடாரக் குடியிருப்பைப் போன்றது.

பரலோகம் ஒரு கூடாரக் குடியிருப்பைப்போல் இருக்காது. அங்கு அநேக வாசஸ்தலங்கள் மாளிகைகளைப்போல இருக்கும். பரலோகம் என்பது பிதாவின் வீடு. இயேசுகிறிஸ்து பரலோகத்தைப்பற்றி சொல்லும்போது "என் பிதாவின் வீடு" என்று சொல்லுகிறார். இயேசுகிறிஸ்துவின் பிதாவானவர் நமக்கும் பிதாவாகயிருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் மெய்யான விசுவாசிகளெல்லோரும் பரலோகத்திலுள்ள தங்களுடைய பிதாவின் வீட்டிற்குள் பிரவேசிப்பதற்கு அன்போடு அழைக்கப்படுகிறார்கள்.

## அதிகாரம் - 14

பரலோகத்தில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு. ஒவ்வொரு விசுவாசிக்கும் ஒவ்வொரு வாசஸ்தலம் தனித்தனியாகக் கொடுக்கப்படும். இந்த பூமியில் நமக்குத் தனிநபர் ஆள்தத்துவம் இருக்கிறது. இந்தப் பண்பு பரலோகத்திற்குப் போனாலும் மாறிப்போய்விடுவதில்லை. அங்கும் நாம் தனித்தனி நபர்களாகயிருப்போம்.

பரலோகத்தில் நாம் குடியிருக்கப் போகிற வாசஸ்தலம் வலுவானதாகவும், நீடித்து உழைக்கக்கூடியதாகவும் இருக்கும். ஏனெனில் நாம் பரலோகத்தில் நித்திய காலமாக ஜீவிக்கப்போகிறோம். அங்கு விருந்தாளிகளைப்போல சிறிது நாட்கள் தங்கிவிட்டு, நாம் மறுபடியும் பூமிக்குத் திரும்பி வந்துவிடப்போவதில்லை. பரலோகமே நம்முடைய நித்திய வாசஸ்தலமாகயிருக்கும். நாம் நித்திய காலமாக பரலோகத்தில் இருக்கப்போவதினால், நம்முடைய வாசஸ்தலமும் நித்திய காலமாக உறுதியானதாகவும், வலுவானதாகவும் இருக்கும்.

நாம் இந்த பூமியில் ஜீவிக்கும்போது ஒரு பரதேசியைப்போலிருக்கிறோம். இந்த பூமியில் நாம் குடியிருக்கும் வீடுகள் சத்திரங்கள்போலத்தான் இருக்கிறது. சிறிது காலம் இந்தச் சத்திரங்களில் தங்கிவிட்டு, பின்பு பரலோகத்திற்குப் போய்விடுவோம். பரலோகத்தில்தான் நமக்கு மெய்யான நித்திய வாசஸ்தலம் இருக்கிறது. இயேசுகிறிஸ்து தம்முடைய பிதாவின் வீட்டிலுள்ள வாசஸ்தலங்களைப்பற்றிக் கூறும்போது, அங்கு அநேக வாசஸ்தலங்கள் இருப்பதாகக் கூறுகிறார். ஏராளமான விசுவாசிகள் பரலோகத்திற்கு வருவார்கள். அவர்களெல்லோரும் அங்கு வாசம்பண்ணுவதற்கு அவர்களுக்குத் தனித்தனியாக வாசஸ்தலங்கள் இருக்கும்.

இயேசுகிறிஸ்து நமக்கு வாக்குப் பண்ணியிருக்கும் நித்திய வாசஸ்தலத்தையும், நித்திய சந்தோஷத்தையும் இங்கு உறுதிபண்ணுகிறார். "அப்படியில்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்" என்று கூறுகிறார். நம்முடைய விசுவாசத்தையும், தம்முடைய உறுதியான வார்த்தையையும் இயேசுகிறிஸ்து கட்டியெழுப்புகிறார். தம்முடைய வார்த்தையின் பிரகாரமாக அனைத்தும் நடைபெறும் என்று உறுதிபண்ணுகிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடத்தில் அன்பாகயிருக்கிறார்.

அவருடைய அன்பு உறுதியானது. மெய்யானது. அவருடைய அன்பு மெய்யானது என்றால், அவருடைய வார்த்தையும் மெய்யாகவே இருக்கும். அவர் மெய்யானவராக இருக்கிறதுபோலவே அவருடைய வாக்குத்தத்தங்களும் மெய்யானதாகவே இருக்கும்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சுபாவத்தில் மென்மையானவர். தம்முடைய சித்தத்தை யார்மீதும் பலவந்தமாகத் திணிப்பதில்லை. பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் இருப்பதைப்பற்றிக் கூறும்போது, தம்முடைய சீஷர்கள் அதை விசுவாசிக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தவில்லை. அதற்குப் பதிலாக "அப்படியில்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேனே" என்று மென்மையாகப் பேசுகிறார். அவர் நம்மை அதிகமாய் நேசிக்கிறவர்.நம்மீது கரிசனையோடிருக்கிறவர். நாம் இயேசுகிறிஸ்துவின் வாக்குத்தத்தை எதிர்பார்த்து ஏமாந்து போவதற்கு அவர் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களைவிட்டு, தம் பிதாவின் வீட்டிற்குப் போவதற்குக் காரணத்தையும் கூறுகிறார். "ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன்" என்பதுதான் இயேசுகிறிஸ்து அவர்களைவிட்டு பரலோகத்திற்குப் போவதற்கான மெய்யான காரணம். அவர் நமக்காகப் பரிந்துபேசுகிறவர். நமக்காக வழக்காடுகிறவர். பரலோகத்தில் நமக்காக ஒரு ஸ்தலத்தை உறுதிபண்ணப்போகிறார். அந்த ஸ்தலம் நமக்கு நித்தியகாலமாக, நம்முடைய ஸ்தலமாக இருக்கவேண்டும் என்பதற்கு என்னென்ன காரியங்களையெல்லாம் செய்யவேண்டுமோ, அவையெல்லாவற்றையும் இயேசுகிறிஸ்து நமக்காகச் செய்துமுடிக்கப் போகிறார். நாம் பரலோகத்திற்குப் போகும்போது நமக்கு ஒரு ஸ்தலம் அங்கு ஆயத்தமாகயிருக்கும். பரலோகத்திற்கு எத்தனை விசுவாசிகள் வருகிறார்களோ, அத்தனைபேருக்கும் அங்கு தனித்தனியாக வாசஸ்தலங்கள் ஆயத்தமாகயிருக்கும்.

பரலோகத்தில் நமக்கு சந்தோஷமுண்டு. அது நித்திய சந்தோஷம். அந்த சந்தோஷம் நாம் அனுபவிக்கக்கூடியதாக இருக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவின் பிரசன்னம் பரலோகத்திலிருக்கும் என்பதே நம்மெல்லோருக்கும் மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடிய சத்தியம். அவரோடுகூட நாம் இருப்பதற்காகவே, அவர் நமக்கு வாசஸ்தலங்களை ஆயத்தம்பண்ணி வைத்திருக்கிறார். அதற்காகவே அவர் நமக்கு முன்பாகப்போகிறார். இயேசுகிறிஸ்து நமக்கு முன்பு பரலோகத்திற்குப் போகவில்லையென்றால், பரலோகம் நம்மை ஏற்றுக்கொள்வதற்கு ஆயத்தமாகயிராது.

## அதிகாரம் - 14

**உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்**

**நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன் (யோவா 14:3).**

பரலோகத்திற்குப் போகிற இயேசுகிறிஸ்து மறுபடியும் இந்த பூமிக்கு திரும்பி வருவார். இந்த சத்தியத்தை நாம் விசுவாசிக்க வேண்டும். "நான் இருக்கிற இடத்தில் நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து, உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்" என்று இயேசுகிறிஸ்து கூறுவது நமக்கு மிகுந்த ஆறுதலையும் சந்தோஷத்தையும் கொடுக்கிற வாக்கியமாகும். "மறுபடியும் வருவேன்" என்று கூறுகிறவர் நிச்சயமாகவே வருவார். அவர் வாக்குமாறாதவர். பரலோகத்தில் நமக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணின பின்பு அவர் நிச்சயமாகவே வருவார்.

இயேசுகிறிஸ்து தம்மிடத்தில் விசுவாசம் வைத்திருக்கிறவர்களைத் தம்மிடத்தில் சேர்த்துக்கொள்வதற்காக மறுபடியும் வருவார். தம்முடைய பிள்ளைகளெல்லோரையும் கூட்டிச் சேர்ப்பதற்காகவே அவர் மறுபடியும் இங்கு வரப்போகிறார். இயேசுகிறிஸ்து எங்கேயிருக்கிறாரோ அந்த இடத்திலே நாமும் இருப்போம். பரலோகத்தின் சந்தோஷம் நமக்கு வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. பரலோகத்தில் இயேசுகிறிஸ்து இருக்கும் இடத்தில் நாமும் இருப்போம் என்பது நம்முடைய சந்தோஷத்தைப் பரிபூரணமாக்குகிறது.

இயேசுகிறிஸ்து இப்போது, தம்முடைய சீஷர்களைவிட்டுப் பரலோகத்திற்குப் போகிறார். அங்கு சிறிதுகாலம் மாத்திரமே நமக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணிக் கொண்டிருப்பார். அதன்பின்பு அவர் திரும்பி வந்து, நம்மையும் அழைத்துக்கொண்டு பரலோகத்திற்குப் போவார். அங்கு அவர் நித்தியகாலமாகயிருப்பார். இயேசுகிறிஸ்துவோடு நாம் பரலோகத்திற்குப் போகும்போது, பரலோகத்தின் மகிமையைப் பார்க்கிறவர்களாக மாத்திரமல்ல, அந்த மகிமையில் பங்கு பெறுகிறவர்களாகவும் இருப்போம்.

இயேசுகிறிஸ்து ஆயத்தம்பண்ணுவது எதுவும் வீணாய்ப்போகாது. அவர் நமக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணுகிறார். ஆகையினால் நம்மை நிச்சயமாக அங்கு அழைத்துக்கொண்டு போவார் என்று நாம் உறுதியாக விசுவாசிக்கலாம். ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணி வைத்துவிட்டு, நம்மை அவர் அங்கு அழைத்துக்கொண்டு போகவில்லையென்றால், அந்த ஸ்தலத்தில் நாம் இருக்கமாட்டோம். அந்த ஸ்தலம் வெறுமையாக இருக்கும். அது வீணாய்ப்போகும். வீணாய்ப்போவதற்காக இயேசுகிறிஸ்து அங்கு ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணவில்லை. அவர் நமக்காகவே ஆயத்தம்பண்ணுகிறார். நம்மை நிச்சயமாகவே அங்கு அழைத்துச் செல்வார். ஏற்றவேளை வரும்போது நாம் இயேசுகிறிஸ்துவோடுகூட பரலோகத்திற்குப் போய், அங்கு அவர் நமக்காக ஆயத்தம் பண்ணி வைத்திருக்கும் வாசஸ்தலத்தில், நித்தியகாலமாக, நித்திய சந்தோஷத்தோடிருப்போம். நமக்குப் பாடுகள் வரும்போது தேவனுடைய ஆசீர்வாதமான இந்த வாக்குத்தத்தத்தை நினைத்து, நமது இருதயத்தின் கலக்கத்தை நீக்கி, சந்தோஷத்தினால் நமது இருதயத்தை நிரப்பவேண்டும்.

### இயேசுவே வழி
### யோவா 14 : 4-11

**யோவா 14:4. நான் போகிற இடத்தை அறிந்திருக்கிறீர்கள், வழியையும் அறிந்திருக்கிறீர்கள் என்றார்.**

**யோவா 14:5. தோமா அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் போகிற இடத்தை அறியோமே, வழியை நாங்கள் எப்படி அறிவோம் என்றான்.**

**யோவா 14:6. அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.**

**யோவா 14:7. என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள்; இதுமுதல் நீங்கள் அவரை அறிந்தும் அவரைக் கண்டும் இருக்கிறீர்கள் என்றார்.**

**யோவா 14:8. பிலிப்பு அவரை நோக்கி: ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும், அது எங்களுக்குப் போதும் என்றான்.**

**யோவா 14:9. அதற்கு இயேசு: பிலிப்புவே, இவ்வளவுகாலம் நான் உங்களுடனேகூட இருந்தும் நீ என்னை அறியவில்லையா? என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்; அப்படியிருக்க, பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று நீ எப்படி சொல்லுகிறாய்?**

## அதிகாரம் - 14

**யோவா 14:10. நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை நீ விசுவாசிக்கிறதில்லையா? நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்களை என் சுயமாய்ச் சொல்லவில்லை; என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்துவருகிறார்.**

**யோவா 14:11. நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை நம்புங்கள்; அப்படியில்லாவிட்டாலும் என் கிரியைகளினிமித்தமாவது என்னை நம்புங்கள்.**

**வழியை அறிந்திருக்கிறீர்கள்**

**நான் போகிற இடத்தை அறிந்திருக்கிறீர்கள், வழியையும் அறிந்திருக்கிறீர்கள் என்றார் (யோவா 14:4).**

பரலோகத்தின் சந்தோஷத்தை இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷருக்கு அறிவிக்கிறார். இதைச் சொல்லி முடித்தபின்பு தாம் போகிற இடத்தை அவர்கள் அறிந்திருக்கிறார்கள் என்றும், அதன் வழியையும் அவர்கள் அறிந்திருக்கிறார்கள் என்றும் கூறுகிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடத்தில் எந்தச் சத்தியத்தையும் இரகசியமாக மறைத்து வைக்கவில்லை. அவர்களுக்குரியதை ஏற்றவேளை வரும்போது அவர்களுக்கு வெளிப்படுத்திக் கூறுகிறார். ஆகையினால் "அறிந்திருக்கிறீர்கள்" என்று அவர்களிடத்தில் அறிவிக்கிறார்.

பரலோகத்தைப்பற்றிய சத்தியம் அவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் சீஷர்களுக்கு வீடு எது என்றும், வழி எது என்றும் தெரியும். இந்தச் சத்தியம் அவர்களுக்கு ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஒரு வேளை தங்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கும் சத்தியத்தை சீஷர்கள் அறியாதவர்களாக இருக்கலாம்.

**வழியை எப்படி அறிவோம்**

**தோமா அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் போகிற இடத்தை அறியோமே, வழியை நாங்கள் எப்படி அறிவோம் என்றான் (யோவா 14:5).**

தாம் போகிற இடத்தையும் வழியையும் சீஷர்கள் அறிந்திருக்கிறார்கள் என்று இயேசு கூறுகிறார். ஆனால் தோமாவோ, அவரிடத்தில் "ஆண்டவரே நீர் போகிற இடத்தை அறியோமே, வழியை நாங்கள் எப்படி அறிவோம்" என்று கேட்கிறான். சீஷர்களின் அறிவைப்பற்றி இயேசுகிறிஸ்து சாட்சி கூறும்போது, அவர்கள் தங்களுடைய அறியாமையை அறிந்துகொள்கிறார்கள். இயேசுகிறிஸ்து கூறும் சத்தியத்தைக் குறித்து மேலும் அதிகமாக அறிந்துகொள்ள வேண்டுமென்றும், தாங்கள் இதுபற்றி இதுவரையிலும் அறிந்துகொண்டது போதாது என்றும் அங்கீகரிக்கிறார்கள்.

பேதுருவைவிட தோமா மிகவும் கவனமாகவும் கண்ணியமாகவும் பேசுகிறான். பேதுரு இயேசுவிடம் "நீர் எங்கே போகிறீர்" என்று வெளிப்படையாகக் கேட்டான். இயேசுகிறிஸ்து போகும் இடத்தைக் குறித்துதான் பேதுருவுக்கு அக்கரையிருக்கிறது. ஆனால் தோமாவோ மிகவும் கண்ணியமாக, இயேசுகிறிஸ்து போகும் இடத்திற்கு வழியைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்று கவனமாகக் கேட்கிறான். தன்னுடைய அறியாமையை தோமா வெளிப்படுத்துகிறான். நமக்குத் தெரியாததை தெரியாது என்று சொல்லுவது நல்ல குணம்தான். தெரியாததைத் தெரிந்ததுபோலக் காண்பித்து நடிக்கக்கூடாது.

நல்லோர் இருளிலிருக்கும்போது, தங்களுக்குப் பாதைதெரியாமல் தத்தளிக்கும்போது, தாங்கள் இருளிலிருப்பதை அங்கீகரிப்பார்கள். தங்களுடைய தவறுகளை மனப்பூர்வமாக ஒப்புக்கொள்வார்கள். தோமாவிடத்தில் உண்மையை ஒப்புக்கொள்ளும் நற்குணம் காணப்படுகிறது. சீஷர்கள் இயேசுகிறிஸ்துவைப்பற்றி உண்மைக்கு அதிகமாக கற்பனை பண்ணுகிறார்கள். இவர்களுடைய அறியாமைக்கு இவர்களின் விநோதமான கற்பனையும் ஒரு காரணம். இயேசுகிறிஸ்து போகிற இடத்தைச் சீஷர்கள் அறிந்துகொள்ளவில்லை. அவர் இந்தப் பூமியில் ஒரு ராஜ்யத்தை ஸ்தாபிக்கப்போகிறார் என்று சீஷர்கள் கற்பனை பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். இதற்காக அவர் ஏதோ ஒரு நகரத்திற்குப்போய், அங்கு தம்மை ராஜாவாக அபிஷேகம்பண்ணிக்கொள்வார் என்று சீஷர்கள் ஆசையோடு எதிர்பார்க்கிறார்கள். ஒருவேளை இயேசுகிறிஸ்து ஒரு நகரத்தைக் கட்டுவார் என்றும், ஆனால் அந்த நகரம் எங்கு கட்டப்படுமென்று தங்களுக்குத் தெரியவில்லையென்றும் சீஷர்கள் நினைத்திருக்கலாம்.

## அதிகாரம் - 14

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணப்போவதாகக் கூறுகிறார். இந்த மாளிகையை அவர் எங்கு கட்டுவாரென்று சீஷர்களுக்குத் தெரியவில்லை. அவர் போகிற இடத்தையும் சீஷர்கள் அறிந்துகொள்ளவில்லை. அவரிடத்தில் போகவேண்டுமானால் எந்த திசையில் போகவேண்டுமென்றும் அவர்களுக்குச் சரியாகத் தெரியவில்லை. ஆகையினால்தான் தோமா "நீர் போகிற இடத்தை அறியோமே, வழியை எப்படி அறிவோம்" என்று கேட்கிறான். இயேசுகிறிஸ்து பரலோகத்திற்குப் போகிறார் என்னும் சத்தியம் தோமாவுக்குத் தெரிந்திருந்தால், "வழியை நாங்கள் எப்படி அறிவோம்" என்று மாத்திரமே இயேசுவிடத்தில் கேட்டிருக்கமாட்டான்.

**நானே வழியாயிருக்கிறேன்**

**அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் (யோவா 14:6).**

தோமா சத்தியத்தை அறியாதவனாகயிருந்தாலும், இயேசுகிறிஸ்து அவனுக்குத் தெளிவான பதிலைக்கூறி, அவனுடைய அறியாமையை நீக்குவதற்கு உதவிபுரிகிறார். தோமா இயேசுவிடம் இரண்டு கேள்விகளைக் கேட்கிறான். அவர் போகும் இடத்தைப்பற்றியும், அதற்கான வழியைப்பற்றியும் தோமா இயேசுவிடத்தில் கேட்கிறான். இயேசுகிறிஸ்து அவனுடைய இரண்டு கேள்விகளுக்குமே பதில் கூறுகிறார்.

சீஷர்கள் இயேசுகிறிஸ்துவை அறிந்திருக்கிறார்கள். அவரே வழியாகயிருக்கிறார். அவர்கள் பிதாவையும் அறிந்திருக்கிறார்கள். பிதாவே ஆதியும் அந்தமுமாகயிருக்கிறவர். ஆகையினால்தான் இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் "நான் போகிற இடத்தை அறிந்திருக்கிறீர்கள், வழியையும் அறிந்திருக்கிறீர்கள்" என்று கூறுகிறார். தேவனிடத்தில் விசுவாசம் வைக்கும்போது அவரே எல்லாவற்றிற்கும் ஆதியும் அந்தமுமாகயிருக்கிறார் என்று நாம் நம்பவேண்டும். இயேசுகிறிஸ்துவிடத்தில் நாம் விசுவாசம் வைக்கும்போது அவரே வழியாகயிருக்கிறார் என்று விசுவாசத்தோடு அவரை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

தாமே வழியாகயிருப்பதை இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷருக்கு வெளிப்படுத்திக் கூறுகிறார். "நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன் என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்று இயேசு சீஷர்களிடம் கூறுகிறார். இயேசுகிறிஸ்துவே நம்முடைய மத்தியஸ்தராகயிருக்கிறார். தம்முடைய மத்தியஸ்த ஊழியத்தில் இயேசுகிறிஸ்து வழியாகவும், சத்தியமாகவும், ஜீவனுமாகவும் இருக்கிறார்.

இயேசுகிறிஸ்துவே வழியாகயிருக்கிறார். இயேசுகிறிஸ்துவில் தேவனும் மனுஷரும் சந்திக்கிறார்கள். இருவரும் இணைக்கப்படுகிறார்கள். ஜீவவிருட்சத்திற்கு அறியாமையின் வழியில் நம்மால் போகமுடியாது. அந்த விருட்சத்திற்குப் போக இயேசுகிறிஸ்துவேறொரு வழியாகயிருக்கிறார். சீஷர்கள் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறார்கள். அவர்கள் தொடர்ந்து கிறிஸ்துவைப் பின்பற்றும்போது, சீஷர்கள் ஒருபோதும் வழிமாறிப்போய்விட மாட்டார்கள். இயேசுகிறிஸ்துவே வழியாகயிருப்பதினால், கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள், சரியான வழியிலேயே போய்க்கொண்டிருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவே சத்தியமாகயிருக்கிறார். சத்தியம் என்பது தவறுக்கும் பொய்க்கும் எதிரானது. நாம் சத்தியத்தைப்பற்றி விசாரிக்கும்போது, சத்தியத்தைத்தான் நாம் கற்றுக்கொள்ள வேண்டும். இயேசுகிறிஸ்துவில்தான் சத்தியத்தைக் கற்றுக்கொள்ள முடியும். சத்தியம் என்பது ஏமாற்றுத்தனத்திற்கும், மாய்மாலத்திற்கும் எதிராக உள்ளது. சத்தியம் என்பது சத்தியமாகவே இருக்கும். இயேசுகிறிஸ்து சத்தியமாகவே இருக்கிறார். அவரிடத்தில் பொய்யோ, மாய்மாலமோ இல்லை.

இயேசுகிறிஸ்துவேஜீவனாகயிருக்கிறார். இயேசுகிறிஸ்துவிலும், இயேசுகிறிஸ்து மூலமாகவும் மாத்திரமே நாம் தேவனுக்குள் ஜீவனுள்ளவர்களாகயிருக்கிறோம். கிறிஸ்துவின் மூலமாகவே நாம் தேவனில் பிழைத்திருக்கிறோம். இயேசுகிறிஸ்துவே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறார். அவரே ஆதியும், மத்தியமும், அந்தமுமாயிருக்கிறார். அவரே மெய்யான ஜீவனுள்ள வழியாகயிருக்கிறார். இந்த வழியில் சத்தியமும் ஜீவனும் இருக்கிறது. இந்த வழியின் அந்தத்திலும் சத்தியமும் ஜீவனும் இருக்கிறது. இயேசுகிறிஸ்துவே ஜீவனுக்குப்போகிற மெய்யான வழியாகயிருக்கிறார். மற்ற வழிகள் சில சமயங்களில் சரியான வழிகள் போலத் தெரியலாம். ஆனால் முடிவில் அந்த வழி நம்மை ஜீவனுக்கு வழிநடத்துவதற்குப் பதிலாக, மரணத்திற்கு வழிநடத்தும் மரணவழியாக இருக்கும்.

## அதிகாரம் - 14

இயேசுகிறிஸ்துவினாலே யல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரமுடியாது. பாவத்தில் விழுந்த மனிதன் தன்னுடைய சுயபக்தியினாலோ, சுயசித்தத்தினாலோ, சுயசுத்தத்தினாலோ பிதாவாகிய தேவனிடத்தில் வரமுடியாது. பாவியான மனுஷன் தேவனைத் தன்னுடைய பிதா என்று அழைக்க முடியாது. இயேசுகிறிஸ்துவே தேவனுக்கும் மனுஷனுக்கும் மத்தியஸ்தராகயிருக்கிறார். அவர் மூலமாக மாத்திரமே நம்மால் பிதாவினிடத்தில் வரமுடியும். இயேசுவினாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.

**என்னை அறிந்தீர்களானால்**

**என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள்; இதுமுதல் நீங்கள் அவரை அறிந்தும் அவரைக் கண்டும் இருக்கிறீர்கள் என்றார் (யோவா 14:7).**

பிதாவாகிய தேவனே ஆதியும் அந்தமுமாகயிருப்பதை இயேசுகிறிஸ்து தெளிவுபடுத்துகிறார். "என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள்" என்று தம்முடைய சீஷர்களிடத்தில் கூறுகிறார். இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் அவரோடுகூட சுமார் மூன்று வருஷமாக இருக்கிறார்கள். ஆனாலும் இயேசுகிறிஸ்துவுக்கும் தங்களுக்குமுள்ள ஐக்கியத்தை அவர்களால் இன்னும் சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. தங்களோடு கூடயிருக்கும் இயேசுகிறிஸ்துவையே அவர்கள் இன்னும் சரியாக அறிந்துகொள்ளவில்லை. ஆகையினால்தான் இயேசுகிறிஸ்து அவர்களிடத்தில் "என்னை அறிந்தீர்களானால்" என்று கேட்கிறார்.

சீஷர்கள் இயேசுகிறிஸ்துவை அறிந்திருக்கிறார்கள். ஆனால் அவரைப்பற்றி அவர்கள் அறிந்திருப்பது போதாது. இயேசுகிறிஸ்துவை எப்படி அறிந்துகொள்ள வேண்டுமோ அப்படி அவர்கள் இன்னும் அறிந்துகொள்ளவில்லை. அவர்களுடைய அறியாமை இயேசுகிறிஸ்துவுக்கு நன்றாகத் தெரிகிறது. ஆகையினால்தான் இயேசு அவர்களிடம் "என்னை அறிந்தீர்களானால்" என்று கூறுகிறார். யூதர்கள் இயேசுகிறிஸ்துவிடம் ஒரு சமயம் "உம்முடைய பிதா எங்கே" என்று கேட்டார்கள். இயேசுகிறிஸ்து அவர்களுக்குப் பிரதியுத்தரமாக "என்னையும் அறியீர்கள், என் பிதாவையும் அறியீர்கள்.

நீங்கள் என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிவீர்கள்" என்று கூறியிருக்கிறார் (யோவா 8:19). இயேசுகிறிஸ்து யூதர்களுக்குக் கூறிய அதே வாக்கியத்தையே, இப்போது இங்கு தம்முடைய சீஷர்களுக்கும் கூறுகிறார்.

இயேசுகிறிஸ்துவைப்பற்றி யூதர்களும் அறியவில்லை, அவருடைய சீஷர்களும் அறியவில்லை. யூதர்கள் ஒளியைப் பகைக்கிறார்கள். சத்தியத்தை வேண்டுமென்றே ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். அவர்கள் இருளின் பிள்ளைகள். ஆகையினால் ஒளியைப் பகைத்து வெளிச்சத்திற்கு வர மறுக்கிறார்கள்.

சீஷர்களோ வெளிச்சத்தின் பிள்ளைகள். சத்தியம் இவர்களுக்கு விளங்கும்படியாக அறிவிக்கப்பட்டால் அதை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வார்கள். இவர்கள் இப்போது சத்தியத்தைப் புரிந்துகொள்ளாமல் ஆவிக்குரிய பலவீனத்தில் இருக்கலாம். புரிந்துகொள்ள முடியாதபடி இவர்களுடைய அறிவு மந்தமாகயிருக்கலாம். சத்தியத்தைப் புரிந்துகொள்ளக்கூடாது என்னும் தீர்மானம் எதுவும் இவர்களிடத்தில் இல்லை. ஆகையினால் இயேசுகிறிஸ்து தம்மைப்பற்றி இன்னும் அதிகமாகத் தம்முடைய சீஷருக்கு வெளிப்படுத்துகிறார். "இது முதல் நீங்கள் அவரை அறிந்தும் அவரைக் கண்டும் இருக்கிறீர்கள்" என்று தம்முடைய சீஷர்களிடத்தில் கூறுகிறார்.

இயேசுகிறிஸ்துவின் முகத்தில் நாம் தேவனுடைய மகிமையைக் காணலாம். சீஷர்கள் தங்களுக்கு எல்லாம் தெரியுமென்று நினைக்கிறார்கள். ஆனால் தங்களோடு கூடவேயிருக்கும் இயேசுகிறிஸ்துவைப்பற்றி இவர்களால் இன்னும் சரியாக அறிந்துகொள்ள முடியவில்லை. தங்களிடத்தில் போதுமான கிருபையும் ஞானமும் இல்லையென்று சீஷர்கள் நினைக்கிறார்கள். ஆனால் மெய்யாகவே, அவர்கள் நினைப்பதற்கும் அதிகமாக, அவர்களிடத்தில் தேவனுடைய கிருபையும், தேவனைப்பற்றிய ஞானமும் நிரம்பியிருக்கிறது.

**பிதாவை எங்களுக்குக் காண்பியும்**

**பிலிப்பு அவரை நோக்கி: ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும், அது எங்களுக்குப் போதும் என்றான் (யோவா 14:8).**

## அதிகாரம் - 14

இயேசுகிறிஸ்து போகிற இடத்தையும் வழியையும் அறிந்துகொள்ள வேண்டுமென்று தோமா ஆர்வமாயிருக்கிறான். பிலிப்புவோ பிதாவைப்பற்றி அறிந்துகொள்ள வேண்டுமென்று ஆவலாகயிருக்கிறான். சத்தியத்தை இன்னும் அதிகமாக அறிந்துகொள்ள வேண்டும் என்றும், தனக்கு இன்னும் அதிகமான வெளிச்சம் வேண்டும் என்றும் பிலிப்பு விரும்புகிறான். தன்னுடைய ஆர்வத்தின் மிகுதியால் பிலிப்பு இயேசுவினிடத்தில் "ஆண்டவரே பிதாவை எங்களுக்குக் காண்பியும்" என்று கேட்கிறான். "அது எங்களுக்குப் போதும்" என்றும் கூறிவிடுகிறான். பிதாவைப் பார்க்கவேண்டும் என்னும் ஆர்வம் சீஷர்களிடத்தில் காணப்படுகிறது. பிதாவை ஒருமுறை பார்த்தால் மாத்திரம்கூட, அது தங்களுக்குப் போதுமென்று பிலிப்பு சொல்லுகிறான்.

தேவனைப்பற்றிய அறிவில், நாம் அவரை நம்முடைய பிதாவாகக் காணும்போது, நம்முடைய ஆத்துமா திருப்தியடையும். பிதாவைத் தரிசிப்பது இந்த பூமியின்மேல் பரலோகம் வந்து இறங்குவதுபோல இருக்கும். அந்தப் பிதாவைத் தங்களுடைய சரீரப்பிரகாரமான கண்களினால் பார்க்கவேண்டும் என்று பிலிப்பு விரும்புகிறான். பிலிப்புவின் கேள்வி அவனுடைய விசுவாசத்தின் பலவீனத்தையும், சுவிசேஷத்தை அவன் இன்னும் புரிந்துகொள்ளாமலிருக்கும் அறியாமையையும் காண்பிக்கிறது. பிதாவைப் பற்றி சுவிசேஷத்தில் தெளிவாக விவரிக்கப்பட்டிருக்கிறது. எழுதப்பட்டிருப்பதற்கு மிஞ்சி நாம் எண்ணவேண்டியதில்லை. நம்முடைய விசுவாசத்தை உறுதிபண்ணுவதற்கு தேவன் வெளிப்படுத்தியிருக்கும் சத்தியமே போதுமானது. மனுஷப்பிரகாரமாகச் சிந்தித்து, தேவையில்லாமல் விவாதம்பண்ணி, ஆராய்ச்சிபண்ணி, தேவனுடைய சத்தியத்தை உறுதிபண்ண வேண்டும் என்னும் அவசியமில்லை. இயேசுகிறிஸ்துவின் வார்த்தை சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறது. கிறிஸ்துவின் வார்த்தையை விசுவாசிக்கும்போது நம்முடைய ஆத்துமாவிற்குள் ஜீவன் உண்டாகும். நம்முடைய விசுவாசம் கிறிஸ்துவின் வார்த்தையினால் உறுதிபண்ணப்படும்.

**என்னைக் கண்டவன் பிதாவைக்கண்டான்**

**அதற்கு இயேசு: பிலிப்புவே, இவ்வளவுகாலம் நான் உங்களுடனேகூட இருந்தும் நீ என்னை அறியவில்லையா? என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்; அப்படியிருக்க, பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று நீ எப்படி சொல்லுகிறாய்? (யோவா 14:9)**

பிலிப்பு இயேசுவிடம் "ஆண்டவரே பிதாவை எங்களுக்குக் காண்பியும்" என்று கேட்கிறான். அதற்கு இயேசுகிறிஸ்து "பிலிப்புவே இவ்வளவு காலம் நான் உங்களுடனே கூடயிருந்தும் நீ என்னை அறியவில்லையா? என்னைக் கண்டவன் பிதாவைக்கண்டான். அப்படியிருக்க பிதாவை எங்களுக்குக்குக் காண்பியும் என்று நீ எப்படி சொல்லுகிறாய்"? என்று கேட்கிறார். இயேசுகிறிஸ்து பிலிப்புவிடம் பேசும்போது, அவனை இரண்டு காரியங்களுக்காக கடிந்துகொள்கிறார். அவையாவன: 1. இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுடனே இவ்வளவு காலம் இருந்தும், பிலிப்பு இயேசுவை அறியவில்லை. 2. பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று தகாதவிதமாய் ஜெபம்பண்ணுகிறான்.

பிலிப்பென்பவன் அந்திரேயா, பேதுரு என்பவர்களுடைய ஊராகிய பெத்சாயிதா பட்டணத்தான். இயேசுகிறிஸ்துவைப்பற்றி ஆரம்பத்தில் பிலிப்பு சொல்லும்போது "நியாயப்பிரமாணத்திலே மோசேயும் தீர்க்கதரிசிகளும் எழுதியிருக்கிறவரைக் கண்டோம், யோசேப்பின் குமாரனும் நாசரேத்து ஊரானுமாகிய இயேசுவே அவர்" என்று நாத்தான்வேலிடம் சாட்சியாக அறிவிக்கிறான் (யோவா 1:45). சீஷர்கள் இயேசுவைத் தேவனுடைய குமாரனென்றும், இஸ்ரவேலின் ராஜா என்றும் ஆரம்பத்திலேயே அறிக்கை செய்தார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவில் பிதா இருப்பதை பிலிப்புவும் மற்ற சீஷர்களும் இன்னும் அறியாதிருக்கிறார்கள்.

இக்காலத்தில்கூட இயேசுகிறிஸ்துவைப் பற்றி ஏராளமானோர் கேள்விப்பட்டு அறிந்திருக்கிறார்கள். ஆனால் அவரைப்பற்றி அறியவேண்டிய பிரகாரமாக இன்னும் அறியாதவர்களாகவே இருக்கிறார்கள். இயேசுவைப் பார்த்திருக்கிறார்கள். ஆனால் இயேசுவினிடத்தில் யாரைப் பார்க்கவேண்டுமோ அவரை இன்னும் பார்க்காதவர்களாக இருக்கிறார்கள்.

## அதிகாரம் - 14

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களோடு மூன்று வருஷங்களுக்கு மேலாக கூடவேயிருந்திருக்கிறார். நாம் எப்போதுமே குழந்தைகளாகயிருக்க முடியாது. சரீரப்பிரகாரமான ஜீவியத்திலும், ஆவிக்குரிய ஜீவியத்திலும் நமக்கு வளர்ச்சி இருக்கவேண்டும். இயேசுகிறிஸ்து சீஷர்களோடு இவ்வளவு காலம் கூடவேயிருப்பதினால், தம்மைப்பற்றி அவர்கள் நன்றாக அறிந்திருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்.

இயேசுகிறிஸ்துவிடத்தில் பிலிப்பு "பிதாவை எங்களுக்குக் காண்பியும்" என்று விண்ணப்பம்பண்ணுகிறான். இவனுடைய விண்ணப்பத்தில் ஆவிக்குரிய முதிர்ச்சி காணப்படவில்லை. சீஷர்கள் ஆவிக்குரிய வளர்ச்சியைப் பெற்றுக்கொள்ளாமல் குழந்தைகளைப் போல பலவீனராகயிருக்கிறார்கள். தாங்கள் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியது இன்னதென்று அறியாமலிருக்கிறார்கள் (ரோம 8:26). தாங்கள் வேண்டிக்கொண்டாலும் தகாதவிதமாய் விண்ணப்பம்பண்ணுகிறார்கள் (யாக் 4:3).

ஆவிக்குரிய ஜீவியத்திலே குழந்தைகளாக இருக்கும் தம்முடைய சீஷர்களிடத்தில் இயேசுகிறிஸ்து பிரதியுத்தரம் கூறுகிறார். பிலிப்பு இயேசுவிடம் "பிதாவை எங்களுக்குக் காண்பியும்" என்று கேட்கிறான். அதற்கு இயேசு அவனிடத்தில் "என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்" என்று பிரதியுத்தரமாகக் கூறுகிறார். பிதாவை அவனுக்குத் தெரியுமென்றும், தம்மில் பிதாவை அவன் காண்கிறான் என்றும் இயேசுகிறிஸ்து கூறுகிறார். மாம்சத்தில் இயேசுகிறிஸ்துவைக் காண்கிறவர்களெல்லோரும், அவரில் பிதாவைக் காண்பதற்கு வாய்ப்புள்ளது. அநேகர் கண்டும் இருப்பார்கள். அதுபோலவே இயேசுகிறிஸ்துவைத் தங்களுடைய விசுவாசத்தினால் காண்போரும் அவரில் பிதாவைக் காண்பதற்கு வாய்ப்புள்ளது. அநேகர் தங்கள் விசுவாசத்தினால் பிதாவைக் கண்டும் இருப்பார்கள்.

இயேசுகிறிஸ்துவைப் பார்க்கும்போது ஒருவேளை சீஷர்களால் அவரில் இருக்கும் பிதாவானவரை உடனடியாகப் பார்க்க முடியாமல் போகலாம். இயேசுகிறிஸ்துவின் கறைதிரையில்லாத பரிசுத்தமான ஜீவியத்தில் பிதாவானவரின் பரிசுத்தம் வெளிப்படுகிறது. அவருடைய கிருபை நிறைந்த கிரியைகளில் பிதாவாகிய தேவனுடைய கிருபை வெளிப்படுகிறது. இயேசுகிறிஸ்துவில்தான் நாம் பிதாவாகிய தேவனுடைய பரிசுத்தத்தையும் கிருபையையும் காணமுடியும்.

**நான் பிதாவிலும், பிதா என்னிலும்**

**நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை நீ விசுவாசிக்கிறதில்லையா? நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்களை என் சுயமாய்ச் சொல்லவில்லை; என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்துவருகிறார். நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை நம்புங்கள்; அப்படியில்லாவிட்டாலும் என் கிரியைகளினிமித்தமாவது என்னை நம்புங்கள் (யோவா 14:10,11).**

தாம் பிதாவிலும், பிதா தம்மிலும் இருக்கிறதை சீஷர்கள் விசுவாசிக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவைக் கண்டவன் பிதாவைக் கண்டிருக்கிறான். ஆகையினால் இயேசுகிறிஸ்து பிதாவிலும் பிதா அவரிலும் இருக்கிறதை சீஷர்கள் விசுவாசிக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவும் பிதாவும் ஒன்றாயிருக்கிறார்கள் (யோவா 10:9). நாம் கிறிஸ்துவை அறிந்துகொள்ளும்போது பிதாவை அறிந்துகொள்கிறோம். நாம் இயேசுகிறிஸ்துவைக் காணும்போது பிதாவைக் காண்கிறோம்.

பிதாவும் தாமும் ஒன்றாயிருப்பதை இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷருக்கு உறுதிபண்ணுகிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுடனே சொல்லுகிற வசனங்களை அவருடைய சுயமாய்ச் சொல்லவில்லை. அவரிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்து வருகிறார். இயேசுகிறிஸ்து தாம் சொல்லுகிற வசனங்களைச் சுயமாய்ச் சொல்லாவிட்டாலும், தேவனுடைய நித்திய ஆதீனத்தில், இயேசுகிறிஸ்து சர்வஞானமுள்ளவராகவே இருக்கிறார். பிதாவின் சிந்தையே இயேசுவின் சிந்தையாக இருக்கிறது.

## அதிகாரம் - 14

பிதாவானவர் இயேசு கிறிஸ்துவினிடத்தில் வாசமாயிருக்கிறார். ஆகையினால் இயேசுகிறிஸ்துவின் கிரியைகளெல்லாம் பிதாவின் கிரியைகளாயிருக்கிறது. பிதாவானவர் இயேசு கிறிஸ்துவில் வாசமாயிருக்கிறபடியினால், நாம் பிதாவை இயேசுகிறிஸ்துவில்தான் காணமுடியும். நாம் கர்த்தரைத் தேடும்போது அவரை இயேசுகிறிஸ்துவில் தான் தேடவேண்டும். அப்போது நாம் அவரைக் கண்டுகொள்வோம். ஏனெனில் கர்த்தர் இயேசுகிறிஸ்துவில் வாசமாயிருக்கிறார்.

பிதாவானவர் கிரியைகளைச் செய்கிறவர். இயேசுகிறிஸ்து பல அற்புதமான கிரியைகளையும், கிருபையும் இரக்கமும் மிகுந்த கிரியைகளையும் செய்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவினிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளையெல்லாம் செய்து வருகிறார். நாம் இயேசுகிறிஸ்துவையும் விசுவாசிக்கவேண்டும். அவரில் வாசமாயிருக்கிற பிதாவையும் விசுவாசிக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவின் வசனங்களை நாம் நம்பவேண்டும். அவருடைய வசனங்களை நம்பாமலிருக்கிறவர்கள், அவருடைய கிரியைகளினிமித்தமாவது அவரை நம்பவேண்டும். இயேசுகிறிஸ்துவின் தெய்வீக ஊழியத்திற்கு அவர் செய்கிற அற்புதங்களும் அடையாளங்களும் சான்றாக இருக்கிறது. அவிசுவாசிகளுக்கு இயேசுகிறிஸ்துவைப்பற்றி உணர்த்தவேண்டும் என்பதற்காக மாத்திரமல்ல, இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் அவரிடத்தில் வைத்திருக்கிற விசுவாசத்தை உறுதிபண்ணுவதற்காகவும் அவருடைய அற்புதங்களும் அடையாளங்களும் சாட்சியாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

### இயேசுவின் நாமத்தினால் கேட்கும்போது
### யோவா 14 : 12-14

**யோவா 14:12. மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான். இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்.**

**யோவா 14:13. நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன்.**

**யோவா 14:14. என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்.**

**பெரிய கிரியைகள்**

**மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான். இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான் (யோவா 14:12).**

தங்களுடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தங்களைவிட்டுப் போகப்போகிறார் என்பதை நினைத்து சீஷர்கள் வருத்தத்தோடிருக்கிறார்கள். அவர்களுடைய இருதயம் கலங்குகிறது. இயேசுகிறிஸ்து தங்களைவிட்டுப் போனபின்பு தங்களுடைய நிலமை எப்படியிருக்குமென்று சீஷர்கள் கவலையோடு யோசித்துப் பார்க்கிறார்கள். இயேசு சீஷர்களைவிட்டுப் போய்விட்டால், இவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போல இருப்பார்கள். இயேசுகிறிஸ்துவும் தம்முடைய சீஷர்கள்மீது அன்பாகவும் கிருபையாகவும் இருக்கிறார். தாம் அவர்களைவிட்டுப் போய்விட்டாலும் அவர்களுக்குத் தேவையான வல்லமையினால் அவர்களை நிரப்பப்போவதாக இயேசுகிறிஸ்து வாக்குப்பண்ணுகிறார்.

இயேசுகிறிஸ்து இந்தப் பூமியில் தம்முடைய சீஷர்களுக்கு அதிகாரத்தையும் வல்லமையையும் கொடுக்கப்போகிறார். இது இந்தப் பூமிக்குரிய அதிகாரமோ, வல்லமையோ அல்ல. இது ஆவிக்குரிய அதிகாரம். "என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான்" என்று இயேசுகிறிஸ்து வாக்குப்பண்ணுகிறார். இந்த வாக்கியம் இயேசுகிறிஸ்துவின் வல்லமையை அதிகரிக்கப்பண்ணுகிறது. இயேசுகிறிஸ்துவிடம் அற்புதம் செய்யும் வல்லமையுமுள்ளது. அதேவேளையில் மற்றவர்களை அற்புதம் செய்ய வைப்பதற்குத் தேவையான வல்லமையும் உள்ளது.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு இரண்டு காரியங்களை உறுதிபண்ணுகிறார். அவையாவன: 1. தாம் செய்கிற கிரியைகளை அவர்களும் செய்வார்கள். 2. இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வார்கள்.

## அதிகாரம் - 14

இயேசுகிறிஸ்து வியாதியஸ்தரை சொஸ்தமாக்கினார். குஷ்டரோகிகளை சுத்தப்படுத்தினார். மரித்தோரை மறுபடியும் உயிரோடு எழும்பச்செய்தார். இயேசுகிறிஸ்து செய்த இந்தக் கிரியைகளை அவருடைய சீஷர்களும் செய்வார்கள்.

இயேசுகிறிஸ்து மனுஷருடைய இருதயங்களிலே அவர்களுடைய பாவங்களை உணர்த்தினார். பாவிகளை மனந்திரும்புவதற்கு வழிநடத்தினார். திரளான ஜனங்களைத் தம்மிடத்தில் இழுத்துக்கொண்டார். இயேசுகிறிஸ்து செய்த இந்தக் கிரியைகளை அவருடைய சீஷர்களும் செய்வார்கள்.

இயேசுகிறிஸ்து அவர்களைவிட்டுப் போய்விட்டாலும், அவர் செய்யவேண்டிய கிரியைகள் அவருடைய சீஷரோடு கூடவேயிருக்கிறது. இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களைவிட்டுப் போனவுடன் அவருடைய ஊழியம் நின்றுபோய்விடவில்லை. இயேசுகிறிஸ்துவின் ஊழியம் தொடர்ந்து நடைபெறுகிறது. நடைபெறும்.

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் அவர் செய்கிற கிரியைகளைத் தாங்களும் செய்வதோடு, இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வார்கள். தேவனுடைய ராஜ்யத்தில் அவர்கள் மிகப்பெரிய அற்புதங்களைச் செய்வார்கள். எந்த அற்புதமும் சாதாரண அற்புதமோ அல்லது சிறிய அற்புதமோ அல்ல. ஆனாலும் ஒரு சில அற்புதங்கள் மற்ற அற்புதங்களைவிடப் பெரிதாகத் தெரியும்.

இயேசுகிறிஸ்து இந்தப் பூமியில் இரண்டு அல்லது மூன்று வருஷங்கள் மாத்திரமே அற்புதங்களைச் செய்தார். ஆனால் இயேசுகிறிஸ்துவின் சீஷர்களோ அவருடைய நாமத்தில் பல வருஷங்களுக்கு அற்புதங்களைச் செய்வார்கள். இயேசுகிறிஸ்து யூதேயாவிலும், கலிலேயாவிலும், சமாரியாவிலும் மாத்திரமே அற்புங்களைச் செய்தார். அவருடைய சீஷர்களோ ஏராளமான தேசங்களில் அற்புங்களைச் செய்தார்கள்.

இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற விசுவாசிகள் இப்போது உலகம் முழுவதிலும் இருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து செய்த அற்புதங்கள் இப்போது உலகம் முழுவதிலும் அவரை விசுவாசிக்கிறவர்களினால் செய்யப்படுகிறது. பல வருஷங்களாகச் செய்யப்படுகிறது. ஆகையினால்தான் இயேசுகிறிஸ்து "என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான். இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்" என்று கூறுகிறார்.

இயேசுகிறிஸ்து இந்தப் பூமியில் ஊழியம் செய்தபோது யூதர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. இயேசுகிறிஸ்து பல பாடுகளை அனுபவித்தார். அவருக்கு வேதனைகளும் உபத்திரவங்களும் உண்டாயிற்று. நாம் இப்போது கிருபையின் காலத்தில் இருக்கிறோம். இயேசுகிறிஸ்துவின் காலத்தில் அற்புதங்கள் நடைபெறுவதற்கு இருந்த சூழ்நிலைகளைவிட, இப்போதுள்ள சூழ்நிலைகள் அநேக அற்புதங்கள் நடைபெறுவதற்குச் சாதகமாக இருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் சத்திய வசனம் உலகம் முழுவதும் பிரசங்கிக்கப்படுகிறது. அவர் தம்முடைய வார்த்தையை அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் உறுதிபடுத்துகிறார். இதுவே அற்புங்களுக்கெல்லாம் பெரிய அறபுதமாக இருக்கிறது.

இயேசுகிறிஸ்து தம்முடைய பிதாவினிடத்திற்குப் போகவேண்டியதை உறுதிபண்ணுகிறார். இயேசுகிறிஸ்து அவர்களைவிட்டுப் போகிறபடியினால், சீஷர்களுக்கு வல்லமை தேவைப்படுகிறது. அவர் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், இயேசுகிறிஸ்துவால் தம்முடைய சீஷர்களுக்கு தேவையான வல்லமையைக் கொடுக்க முடியும். இயேசு பிதாவோடு இருக்கும்போது, அவரை விசுவாசிக்கிற பிள்ளைகளாகிய நாம், அவருடைய நாமத்தில் ஏராளமான அற்புதங்களைச் செய்கிறோம். சகலமும் அவருக்காகவும், அவர் மூலமாகவும், அவருடைய நாம மகிமைக்காகவும் நடைபெறுகிறது.

**என் நாமத்தினால்**

**நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன் (யோவா 14:13,14).**

## அதிகாரம் - 14

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்குப் பூமியின்மீதும் அதிகாரம் தருகிறார். பரலோகத்திலும் அதிகாரம் தருகிறார். ஆகையினால் அவர்களிடத்தில் "என் நாமத்தினால் நீங்கள் எதைக்கேட்டாலும் நான் அதைச் செய்வேன்" என்று உறுதியோடு கூறுகிறார். தேவனிடத்திலிருந்து இந்தத் தெய்வீக வல்லமையைப் பெற்றுக்கொள்வதற்கு இயேசுகிறிஸ்து ஒரு உபாயத்தைக் கூறுகிறார். அவர் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், சீஷர்கள் ஜெபத்தின் மூலமாக விண்ணப்பம்பண்ணி இயேசுகிறிஸ்துவோடு தொடர்புகொள்ளவேண்டும். இயேசுகிறிஸ்து பரலோகத்திலும், அவருடைய சீஷர்கள் பூமியிலும் இருந்தாலும், அவர்களைக் குறித்த கரிசனை இயேசுகிறிஸ்துவிடத்தில் எப்போதும் உள்ளது. ஆகையினால்தான் தாம் அவர்களோடு இல்லாவிட்டாலும், "நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்" என்று வாக்குப்பண்ணுகிறார்.

இரண்டு நண்பர்கள் ஓர் ஊரில் பல வருஷங்களாக இருந்துவிட்டு, அவர்கள் வேறு ஊருக்குப்பிரிந்துபோகும் போது, ஒருவருக்கொருவர் கடிதத்தொடர்பு வைத்துக்கொண்டு, தங்களுடைய நட்பை வளர்த்துக்கொள்கிறார்கள். இயேசுகிறிஸ்து இந்தப் பூமியிலிருந்து பரலோகத்திலிருக்கும் தம்முடைய பிதாவினிடத்திற்குப் போகும்போது, தம்முடைய சீஷர்கள் தம்மோடு ஐக்கியமாக இருக்கவேண்டும் என்று விரும்புகிறார். சீஷர்கள் தங்களுடைய ஒவ்வொரு சூழ்நிலையிலும் அவர்கள் தம்மோடு பேசவேண்டும் என்றும், அவர்களுடைய சந்தோஷத்தையும், துக்கத்தையும், தேவைகளையும் அவர்கள் தம்மோடு பகிர்ந்துகொள்ள வேண்டுமென்று இயேசுகிறிஸ்து விரும்புகிறார். அவர் இந்தப் பூமியில் இருந்தபோது, சீஷர்களின் தேவைகளைச் சந்தித்ததுபோலவே, இப்போது அவர் தம்முடைய பிதாவோடு இருக்கும்போதும், அவர்களுடைய தேவைகளைச் சந்தித்து, அவர்களைப் பராமரிக்கச் சித்தமுள்ளவராக இருக்கிறார்.

தம்முடைய சீஷர்கள் தம்மோடு பேசவேண்டும் என்று இயேசுகிறிஸ்து விரும்புகிறார். ஜெபத்தின் மூலமாக சீஷர்கள் தம்மிடத்தில் விண்ணப்பம் பண்ணுவதை இயேசுகிறிஸ்து கேட்கிறார். இயேசுகிறிஸ்து பேசுவதை சீஷர்களும் தங்களுடைய ஆவியினால் கேட்கிறார்கள். இயேசுகிறிஸ்து அன்று சீஷர்களுக்குக் கொடுத்த அதே வாக்குத்தத்தம், இன்று நமக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்து நம்மிடத்திலும் "என் நாமத்தினாலே நீங்கள் எதைக்கேட்டாலும் அதை நான் செய்வேன்" என்று வாக்குப்பண்ணுகிறார். இந்த வாக்குத்தத்தை நாம் பயன்படுத்தி, மிகுந்த பயபக்தியோடு நம்முடைய தேவைகளை இயேசுகிறிஸ்துவிடத்தில் ஜெபத்தோடு விண்ணப்பம்பண்ணிக் கேட்கவேண்டும்.

சீஷர்கள் இயேசுகிறிஸ்துவிடத்தில் ஜெபம்பண்ணிக் கேட்கும்போது, தாங்கள் கொடுத்த கடனைத் திருப்பிக் கேட்பதுபோல அதிகாரத் தோரணையோடு கேட்கக்கூடாது. மிகுந்த பணிவோடும், பயபக்தியோடும் தங்களுடைய தேவைகளை விண்ணப்பம்பண்ணவேண்டும். "ஆண்டவரே உம்முடைய கிருபை எங்களுக்குக் கிடைக்காவிட்டால், நாங்கள் நிர்மூலமாகிவிடுவோம்" என்பதுபோல பணிவோடு விண்ணப்பம்பண்ணவேண்டும்.

இயேசுகிறிஸ்து நம்மிடத்தில் கூறும்போது "என் நாமத்தினால் நீங்கள் எதைக் கேட்டாலும் நான் அதைச் செய்வேன்" என்று கூறுகிறார். அவர் நமக்கு ஒரு சுயதீன உரிமையைக் கொடுக்கிறார். "எதைக் கேட்டாலும்" என்னும் வாக்கியத்திற்கு, நமக்கு நன்மையானது எதுவோ, நமக்குரியது எதுவோ, நமக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது எதுவோ, நமக்கு தேவனுடைய சித்தம் எதுவோ அதையே கேட்கவேண்டும். நம்முடைய சூழ்நிலைகள் மாறலாம். நம்முடைய தேவைகள் மாறலாம். எல்லா சூழ்நிலைகளிலும், எல்லா தேவைகளிலும் நாம் இயேசுகிறிஸ்துவின் கிருபாசனத்திற்கு முன்பாக பணிவோடு வருவதற்கு நமக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவும் தம்மிடத்தில் நம்மை அன்போடு வரவேற்கிறார்.

சீஷர்கள் ஜெபம்பண்ணும்போது "என் நாமத்தினாலே" கேட்கவேண்டுமென்று இயேசுகிறிஸ்து அவர்களிடம் சொல்லுகிறார். இயேசுகிறிஸ்துவின் பரிந்து பேசுகிற குணாதிசயத்தினால், நம்முடைய ஜெபத்திற்குப் பதில் கிடைக்கும். அவர் பிதாவினிடத்தில் நமக்காகப் பரிந்து பேசுகிறார் என்று விசுவாசித்து, அதையே நாம் சார்ந்திருக்கவேண்டும்.

## அதிகாரம் - 14

நம்முடைய விண்ணப்பங்களை "நம்முடைய நாமத்தினால்" கேட்டால் நாம் ஒன்றும் பெற்றுக்கொள்ளமாட்டோம். ஏனெனில் இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசவில்லையென்றால், நாம் பிதாவின் சமுகத்தில் அந்நியராகவே இருப்போம். நாம் பாவிகளாகயிருக்கிறபடியினால் பரலோகத்தில் நம்முடைய பெயர்கூட எழுதப்பட்டிருக்காது. நம்முடைய பாவங்களும், நம்முடைய அக்கிரமங்களுமே பரலோகத்தில் குறிக்கப்பட்டிருக்கும்.

இயேசுகிறிஸ்து நமக்காக பரிந்து பேசினால்தான், நம்முடைய விண்ணப்பம் பரலோகத்தில் அங்கீகரிக்கப்படும். நாம் பாவிகளாகயிருந்தாலும் நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்து பரிசுத்தமுள்ளவராகவேயிருக்கிறார். நாம் பரலோகத்திற்கு அந்நியராகயிருந்தாலும் இயேசுகிறிஸ்து அதன் சொந்தக்காரராகயிருக்கிறார். ஆகையினால் இயேசுகிறிஸ்துவின் நல்ல நாமத்தில் ஜெபிக்கும்போது, நம்முடைய ஜெபம் கேட்கப்பட்டு, நமக்குப் பதில் கொடுக்கப்படுகிறது.

சீஷர்கள் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் கேட்கும்போது, தாங்கள் கேட்டதை அவர்கள் பெற்றுக்கொள்கிறார்கள். "என் நாமத்தினாலே நீங்கள் எதைக்கேட்டாலும் அதை நான் செய்வேன்" என்று இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு வாக்குப்பண்ணுகிறார் (யோவா 14:13). இந்த வாக்குத்தத்தத்தை மறுபடியுமாக உறுதிபண்ணுகிறார் (யோவா 14:14). இயேசுகிறிஸ்து வாக்குமாறாதவர். தாம் செய்வதாகச் சொன்னதை நிச்சயமாகவே செய்வார். ஒருவேளை செய்தாலும் செய்வாரென்று நாம் நிச்சயமில்லாமல் நினைக்கவேண்டியதில்லை. அவர் நிச்சயமாவே செய்வார். நாம் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஒரு காரியத்தை அவரிடத்தில் கேட்கும்போது, அவருடைய நாமத்தில் விசுவாசம் வைத்து, அவரிடத்தில் நாம் கேட்டுக்கொண்டதைப் பெற்றுக்கொள்வோம்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களின் விண்ணப்பத்திற்குச் செவிகொடுப்பதற்கு முக்கியமான காரணம் ஒன்று உள்ளது. குமாரனில் பிதா மகிமைப்படவேண்டும். அதற்காகவே தம்முடைய சீஷர்கள் தம் நாமத்தினாலே எதைக் கேட்கிறார்களோ, அதை அவர்களுக்குச் செய்கிறார். "உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக" என்பதே நம்முடைய ஜெபமாக இருக்கவேண்டும். இவ்வாறு ஜெபிக்கும்போது நம்முடைய ஜெபத்திற்குப் பதில் கிடைக்கும். நம்முடைய ஜெபத்தில் தேவைகளை முதலாவதாகச் சொல்லுவதற்குப் பதிலாக, தேவனுடைய நாமத்தைப் பரிசுத்தப்படுத்த வேண்டும், அவரை ஸ்தோத்தரிக்கவேண்டும்.

தேவனுடைய நாமத்தைப் பரிசுத்தப்படுத்துவதில் நம்முடைய இருதயம் உண்மையுள்ளதாக இருக்குமென்றால், நம்முடைய விண்ணப்பங்கள் எல்லாவற்றிற்கும் இயேசுகிறிஸ்து பதில் கொடுப்பார். நாம் எதைக் கேட்டாலும் அதை அவர் நமக்குச் செய்வார். தம்முடைய சித்தத்தில் இயேசுகிறிஸ்து உறுதியாயிருக்கிறார். குமாரனில் பிதா மகிமைப்படவேண்டும் என்பது கிறிஸ்துவின் சித்தம். நாம் இயேசுவின் நாமத்தினாலே எதைக் கேட்டாலும், அதை அவர் நமக்குச் செய்யும்போது, குமாரனில் பிதா மகிமைப்படுகிறார்.

தேவனுடைய ஞானம், வல்லமை, நன்மை ஆகியவையெல்லாமே மீட்பராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்திலே மகிமைப்படுகிறது. இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலர்களும் ஊழியர்களும், அவருடைய நாமத்தினாலே பெரிய காரியங்களைச் செய்யும்போது, கிறிஸ்துவின் உபதேசம் உறுதிபண்ணப்படுகிறது, வெற்றி பெறுகிறது. குமாரனில் பிதா மகிமைப்படுகிறார்.

### வேறொரு தேற்றரவாளர்
### யோவா 14 : 15-17

**யோவா 14:15. நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்.**

**யோவா 14:16. நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.**

**யோவா 14:17. உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்.**

## அதிகாரம் - 14

**என்னிடத்தில் அன்பாயிருந்தால்**

**நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள் (யோவா 14:15).**

பரிசுத்த ஆவியானவரை அனுப்புவதாக இயேசுகிறிஸ்து இங்கு வாக்குப்பண்ணுகிறார். ஆவியானவர் அவர்களுடைய தேற்றரவாளராக இருப்பார். நாம் இயேசுகிறிஸ்துவிடத்தில் அன்பாயிருப்போமென்றால், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளவேண்டும். நாம் நம்முடைய கடமையைச் செய்யும்போது, நாம் நம்முடைய இருதயம் கலக்கத்தோடிருந்தால், நம்மால் நம்முடைய கடமைகளைச் சரியாகச் செய்யமுடியாது. நமக்குப் பாடுகளும் வேதனைகளும் வரும்போது, நம்முடைய கடமை நமக்கு பெரியதாகத் தெரியாமல், நம்முடைய பாடுகளும் வேதனைகளுமே பெரிதாகத் தெரியும். இயேசுகிறிஸ்துவிடத்தில் சீஷர்கள் மிகவும் அன்பாயிருக்கிறார்கள். அவர் சீஷர்களைவிட்டுப் போகப்போவது அவர்களுடைய இருதயத்தைக் கலங்கப்பண்ணுகிறது. அவர்களுடைய இருதயங்களை வருத்தம் நிரப்புகிறது.

தம்முடைய சீஷர்கள் தம்மிடத்தில் அன்பாயிருப்பதை இயேசுகிறிஸ்து அறிந்திருக்கிறார். இருதயக் கலக்கத்தினாலும், வருத்தத்தினாலும், கண்ணீரினாலும், கவலையினாலும் இயேசுகிறிஸ்துவின்மீது தாங்கள் வைத்திருக்கும் அன்பை அவர்கள் வெளிப்படுத்துவதற்குப் பதிலாக, அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு, தங்களுடைய அன்பை வெளிப்படுத்த வேண்டும். பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதல் உத்தமமானது. கண்ணீரைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலோடு கடமையைச் செய்வது மேன்மையானது.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் "என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்" என்று வாக்குப்பண்ணுகிறார். அதைத் தொடர்ந்து இந்த வாக்குத்தத்தம் நிறைவேறுவதற்கு ஒரு நிபந்தனையையும் கொடுக்கிறார். சீஷர்கள் இயேசுகிறிஸ்துவின் கற்பனைகளைக் கைக்கொள்ளவேண்டும். அப்போதுதான் அவர்கள் இயேசுவின்மீது அன்பாயிருக்கிறார்கள் என்பது உறுதியாகும்.

**என்றென்றைக்கும் கூட இருக்கும்படி**

**நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார் (யோவா 14:16).**

சீஷர்களுக்கு வேறொரு தேற்றரவாளர் கொடுக்கப்படுவார். இது புதிய ஏற்பாட்டின் பிரதான வாக்குத்தத்தமாகும். சீஷர்கள் இப்போது இருதயக் கலக்கத்தோடிருக்கிறார்கள். கண்ணீரிலும் கவலையிலும் நிறைந்திருக்கிறார்கள். இவர்களுக்கு ஆறுதல் தேவைப்படுகிறது. இவர்களைத் தேற்றுவதற்கு ஒரு தேற்றரவாளர் தேவைப்படுகிறார். இதற்காக இயேசுகிறிஸ்து இவர்களுக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளரை தந்தருளுவதாக வாக்குப்பண்ணுகிறார். இந்தத் தேற்றரவாளர் என்றென்றைக்கும் அவர்களுடனேகூடவே இருப்பார்.

இயேசுகிறிஸ்து தாமே இந்த ஆசீர்வாதத்தை வாக்குப்பண்ணுகிறார். தேற்றரவாளர் என்னும் வார்த்தை இந்த வசனத்திலும் 1யோவா 2:1-ஆவது வசனத்தில் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. 1யோவான் 2:1-ஆவது வசனத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கும் வார்த்தை "பரிந்து பேசுகிறவர்" என்று மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. தேற்றரவாளரே பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராகவும் இருக்கிறார். வேறொரு தேற்றரவாளர் என்னும் வாக்கியத்தை, "வேறொரு பரிந்து பேசுகிறவர்" என்று வியாக்கியானம் பண்ணவேண்டும்.

பரிந்து பேசுவதே பரிசுத்த ஆவியானவருடைய ஊழியம். ஆவியானவர் சீஷர்களோடும் மற்றவர்களோடும் கிறிஸ்துவின் பரிந்து பேசுகிறவராகயிருக்கிறார். கிறிஸ்துவின் சித்தத்தையும், எண்ணத்தையும் பரிந்து பேசுவார். இந்தப் பூமியில் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பாதுகாத்துப் பராமரிப்பார். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களோடு இருந்தபோது, அவர் அவர்களுக்காகப் பேசினார். இப்போதோ இயேசுகிறிஸ்து அவர்களைவிட்டுத் தம்முடைய பிதாவினிடத்திற்குப் போகப்போகிறார். இனிமேல் பிதாவின் ஆவியானவரே அவர்களிலிருந்து பேசுவார். "பேசுகிறவர்கள் நீங்களல்ல, உங்கள் பிதாவின் ஆவியானவரே உங்களிலிருந்து பேசுகிறவர்" (மத் 10:19,20).

## அதிகாரம் - 14

நமக்காக ஒருவர் பரிந்து பேசும்போது, நம்முடைய எண்ணங்களையும் விருப்பங்களையும், இருதயத்தின் பாரங்களையும் குறித்துப் பேசுவார். அவர் நமக்காக சரியாகப் பரிந்து பேசுவாரா என்னும் சந்தேகம் நமக்குத் தேவையில்லை. அவர் நமக்கு வேறொரு போதகராகயிருப்பார். சத்தியத்தை நமக்கு உணர்த்துகிறவராகயிருப்பார். இயேசுகிறிஸ்துவைப்போலவே பரிசுத்த ஆவியானவரும் நமக்கு ஊழியம் செய்வார்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களோடு இருந்தபோது அவர் அவர்களுக்குச் சத்தியத்தை உபதேசம்பண்ணினார். அவர்களுடைய கடமைகளைக் குறித்து அவர்களுக்குப் புத்திமதி கூறினார். இப்போது இயேசுகிறிஸ்து அவர்களைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போகிறார். தாம் செய்த ஊழியத்தைத், தம்மைப்போலவே செய்வதற்காக, வேறொரு தேற்றரவாளரை அவர்களுக்குத் தந்தருளுகிறார்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களோடு இருந்தபோது, அவர்களுடைய இருதயம் கலங்கியபோதெல்லாம் அவர்களுக்கு ஆறுதல் சொன்னார். இப்போது இயேசு அவர்களைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போகிறார். தாம் போனாலும், அவர்களோடு எப்போதும் கூடயிருந்து, அவர்களுக்கு ஆறுதல் சொல்லுகிற வேறொரு தேற்றரவாளரை அவர்களுக்குத் தந்தருளுகிறார்.

பிதாவானவரே பரிசுத்த ஆவியானவரை நமக்குத் தருகிறார். இயேசுகிறிஸ்துவை நம்முடைய இரட்சகராக இந்தப் பூமிக்கு அனுப்பின பிதாவானவரே, நம்முடைய தேற்றரவாளரான சத்திய ஆவியானவரையும் அனுப்புகிறார். இந்த ஆசீர்வாதம் நமக்குக் கிடைத்திருக்கும் விதத்தையும் இயேசுகிறிஸ்து விவரிக்கிறார். "நான் பிதாவை வேண்டிக்கொள்வேன்" என்று இயேசுகிறிஸ்து சொல்லும்போது, பிதாவாகிய தேவனும் பரிசுத்த ஆவியானவரை அருளுவதற்கு சித்தமுள்ளவராகயிருக்கிறார் என்பது உறுதியாகிறது. நமக்கும் தேவனுக்கும் இடையே ஒரு மத்தியஸ்தர் வேண்டும்.

இயேசுகிறிஸ்துவினுடைய மத்தியஸ்தம் பண்ணும் ஊழியத்தின் கனியாக சத்திய ஆவியானவர் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறார். இயேசுகிறிஸ்து பிதாவை வேண்டிக்கொள்ளவில்லையென்றால், பிதாவானவர் நமக்கு வேறொரு தேற்றரவாளரை அனுப்பமாட்டார்.

தேற்றரவாளர் நம்மோடு சிறிது காலம் மட்டும் இருந்துவிட்டு அதன்பின்பு மறைந்துபோய்விடமாட்டார். அவர் என்றென்றைக்கும் நம்முடனேகூட இருப்பார். நமக்கு ஒரு தேற்றரவாளர் தேவையென்பதைக் கூட நாம் அறியாதவர்களாக இருக்கிறோம். ஆனாலும் இயேசுகிறிஸ்து நம்மீது கிருபையுள்ளவராக, பிதாவை வேண்டிக்கொள்கிறார். "அப்பொழுது என்றென்றைக்கும் நம்முடனே கூட இருக்கும்படிக்கு சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை பிதாவானவர் நமக்குத் தந்தருளுவார்".

நம்முடைய இருதயம் கலங்கும்போது, தேற்றரவாளர் நம்மை நித்திய காலத்திற்கும் தேற்றுகிறார். அவருடைய ஆறுதலும் தேற்றுதலும் நம்மோடுகூட எப்போதும் இருக்கும். நாம் எந்த இடத்தில் இருந்தாலும் நம்முடைய தேற்றரவாளர் நம்மோடு கூடவேயிருக்கிறார்.

**நீங்கள் அவரை அறிவீர்கள்**

**உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள் (யோவா 14:17).**

சத்திய ஆவியானவரே வேறொரு தேற்றரவாளராக இருக்கிறார். சீஷர்கள் அந்தச் சத்திய ஆவியானவரை அறிவார்கள். தேற்றரவாளர் ஆவிக்குரிய வழியில் ஆவிக்குரிய ரீதியாக கிரியை செய்வார். அவர் சத்திய ஆவியாக இருக்கிறார். அவர் சீஷர்களுக்கு உண்மையுள்ளவராக இருந்து, அவர்களைப் பாதுகாத்து பராமரிக்கும் ஊழியத்தை உண்மையோடு நிறைவேற்றுவார். அவர் அவர்களுக்குச் சத்தியத்தைப் போதிப்பார். சத்திய ஆவியானவர் அவர்களைச் சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துவார். அதோடுகூட அவர்களுடைய ஊழியத்தின் மூலமாக மற்றவர்களையும் சத்தியத்திற்குள் வழிநடத்துவார். இயேசுகிறிஸ்து சத்தியமாக இருக்கிறார். சத்திய ஆவியானவர் கிறிஸ்துவின் ஆவியானவராக இருக்கிறார்.

## அதிகாரம் - 14

உலகம் அந்தச் சத்திய ஆவியானவரை பெற்றுக்கொள்ளமாட்டாது. ஆனால் சீஷர்களோ அவரை அறிவார்கள். அவர்கள் சத்திய ஆவியானவரை அறிந்திருப்பதினால், அவர் அவர்களோடே வாசம்பண்ணி அவர்களுக்குள்ளே இருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் சீஷர்களும் இந்த உலகமும் இந்த வசனத்தில் வேறு பிரிக்கப்பட்டிருக்கிறது. சீஷர்கள் இந்த உலகத்திற்குரியவர்களல்ல. இவர்கள் மற்றொரு உலகத்திற்குரியவர்கள். தேவனுடைய சுதந்தரவாளிகள். கர்த்தருடைய பிள்ளைகள்.

ஒரு சிலர் இந்தப் பிரபஞ்சத்தைப் பற்றிக்கொண்டு இதில் ஆசை வைத்திருக்கிறார்கள். இவர்களால் சத்திய ஆவியானவரை பெற்றுக்கொள்ள முடியாது. இது இவர்களுடைய பரிதாபமான நிலமை. இந்த உலகத்தின் ஆவி எங்கே உயர்த்தப்படுகிறதோ அங்கே தேவனுடைய ஆவியானவர் இருக்கமாட்டார். உலகத்தின் ஆவிக்குரியவர்கள் தேவனுடைய ஆவியானவரை வெளியேற்றிவிடுவார்கள். ஆகையினால்தான் இந்த உலகம் சத்திய ஆவியானவரை பெற்றுக்கொள்ளமாட்டாமல் இருக்கிறது. அவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறது.

ஆவியானவருடைய ஆறுதல்கள் இந்த உலகத்திற்குப் பைத்தியமாகத் தோன்றுகிறது. கிறிஸ்துவின் சிலுவையும், சிலுவையைப்பற்றிய உபதேசமும் இந்த உலகத்திற்குப் பைத்தியமாகவே இருக்கிறது. இப்பிரபஞ்சத்தின் பிள்ளைகளிடம் சத்திய ஆவியானவரைப்பற்றியும், அவருடைய கிரியைகளைப்பற்றியும் நாம் பேசும்போது, அவர்கள் நம்மைப் பைத்தியக்காரரைப்போலப் பார்க்கிறார்கள். இப்பிரபஞ்சத்தின் ஜனங்களால் சத்திய ஆவியானவரைக் காணவும் முடியாது. அறியவும் முடியாது.

ஆவியானவரைப் பெற்று அனுபவித்தால்தான் அவரை அறியமுடியும். கிறிஸ்துவின் சீஷர்கள் சத்திய ஆவியானவரை அறிந்திருக்கிறார்கள். ஆகையினால் அவர் அவர்களுடனே வாசம்பண்ணி அவர்களுக்குள்ளே இருக்கிறார். இயேசுகிறிஸ்துவும் அவர்களோடு வாசம்பண்ணுகிறார். இயேசுகிறிஸ்துவோடு ஐக்கியமாக இருப்பதினால், சீஷர்களால் சத்திய ஆவியானவரை அறிந்துகொள்ள முடிகிறது. கிறிஸ்துவின் வாக்குத்தத்தங்களை நம்புகிற பரிசுத்தவான்கள் ஆவிக்குரிய அனுபவங்களில் வளர்ச்சி பெறுவார்கள்.

சத்திய ஆவியானவர் சீஷர்களுடனே வாசம்பண்ணுகிறார். அவர்களுக்குள்ளே இருக்கிறார். தம்முடைய வாசஸ்தலத்தை ஆவியானவர் மாற்றிக்கொள்வதில்லை. ஆவியானவரை அறிந்திருக்கிறவர்கள் அவரைத் தங்களுக்குள் எவ்வாறு வரவேற்க வேண்டும் என்பதையும் அறிந்திருப்பார்கள். அவரை அன்போடு வரவேற்று தங்களுடனே வாசம்பண்ணுமாறு அழைப்பார்கள். அவர்களுடைய அழைப்பை ஏற்று சத்திய ஆவியானவர் அவர்களுக்குள்ளே இருப்பார். செடியும் அதன் கொடியும் இணைந்திருப்பதுபோல சத்திய ஆவியானவரும் கிறிஸ்துவின் சீஷர்களும் இணைந்திருப்பார்கள். இந்த ஐக்கியத்தைப் பிரிக்க முடியாது.

பரிசுத்த ஆவியானவரின் வரம் ஒரு விசேஷித்த வரமாகும். கிறிஸ்துவின் சீஷர்கள்மீது ஆவியானவரின் வரம் விசேஷித்த விதமாக வந்து இறங்குகிறது. உலகத்தாருக்குக் கிடைக்காத ஆவியானவரின் வரம், கிறிஸ்துவின் சீஷர்களுக்கு மாத்திரமே வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. சத்திய ஆவியானவர் கொடுக்கும் ஆறுதல்களை வேறு எந்த ஆசீர்வாதத்தோடும் ஒப்பிட முடியாது. மிகவும் விசேஷித்த வழியில் ஆவியானவர் கிரியை செய்வார். காற்றின் சத்தத்தை நாம் கேட்க முடியாது. ஆனால் காற்று வீசுகிறதை நம்மால் உணரமுடியும். அதுபோலவே பரிசுத்த ஆவியானவரின் கிரியையும் இருக்கும். அதிக ஆரவாரமில்லாமல், சத்தமில்லாமல், அமைதியாகக் கிரியை செய்வார். அவருடைய கிரியை அற்புதமாகவும் பலத்ததாகவும் இருக்கும். சத்திய ஆவியானவர் பலத்த கிரியையைச் சீஷர்களுக்குள்ளே செய்கிறார்.

### இயேசுகிறிஸ்துவோடு ஐக்கியம்
### யோவா 14 : 18-24

**யோவா 14:18. நான் உங்களைத் திக்கற்றவர்களாகவிடேன், உங்களிடத்தில் வருவேன்.**

**யோவா 14:19. இன்னுங் கொஞ்சக்காலத்திலே உலகம் என்னைக் காணாது, நீங்களோ என்னைக் காண்பீர்கள்; நான் பிழைக்கிறபடியினால் நீங்களும் பிழைப்பீர்கள்.**

**யோவா 14:20. நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள்.**

## அதிகாரம் - 14

**யோவா 14:21. என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான், என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்; நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன் என்றார்.**

**யோவா 14:22. ஸ்காரியோத்தல்லாத யூதா என்பவன் அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் உலகத்துக்கு உம்மை வெளிப்படுத்தாமல் எங்களுக்கு உம்மை வெளிப்படுத்தப்போகிற காரணமென்ன என்றான்.**

**யோவா 14:23. இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்.**

**யோவா 14:24. என்னில் அன்பாயிராதவன் என் வசனங்களைக் கைக்கொள்ளமாட்டான். நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பின பிதாவினுடையதாயிருக்கிறது.**

**உங்களிடத்தில் வருவேன்**

**நான் உங்களைத் திக்கற்றவர்களாகவிடேன், உங்களிடத்தில் வருவேன் (யோவா 14:18).**

சிநேகிதர்கள் ஒருவரையொருவர் விட்டுப் பிரிந்துபோகும்போது பிரியாவிடை பெற்றுக்கொள்வார்கள். தங்களுக்காக ஜெபிக்குமாறும், தங்களோடு தொடர்பு கொள்ளுமாறும் ஒருவரையொருவர் கேட்டுக்கொள்வார்கள். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களைவிட்டுப்பிரிந்து இப்போது தமது பிதாவினிடத்திற்குப் போகப்போகிறார். இயேசுகிறிஸ்து சீஷர்களைவிட்டுப் போனாலும், அவர் அவர்களை மறந்துவிடமாட்டார். அவர்களைத் திக்கற்றவர்களாகவிடமாட்டார். ஒரு சிலர் தங்கள் பழைய சிநேகிதர்களை நீண்ட நாட்களாகப் பார்க்கவில்லையென்றால் அவர்களை மறந்துவிடுவார்கள். இயேசுகிறிஸ்து மனுஷரைப்போலத் தம்முடைய சிநேகிதரை மறந்துவிடமாட்டார்.

தாம் பிதாவினிடத்திற்குப் போனாலும், இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களைத் தொடர்ந்து பாதுகாத்து பராமரிப்பதாக வாக்குப்பண்ணுகிறார். "நான் உங்களை திக்கற்றவர்களாக விடேன். உங்களிடத்தில் வருவேன்" என்று ஆறுதலாகக் கூறுகிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களைவிட்டு முழுவதுமாகப் புறப்பட்டுப்போய்விடவில்லை. திரும்பி வரக்கூடாதவாறு அவர்களைவிட்டு நிரந்தரமாகப் பிரிந்துபோய்விடவில்லை. தம்முடைய பிரத்தியட்சமான சரீரத்தில் இயேசுகிறிஸ்து அவர்களைவிட்டுப் பிரியப்போகிறார். அவருடைய சரீரம் அவர்களைவிட்டுப் பிரிந்துபோனாலும், இயேசுகிறிஸ்துவின் கிருபையும், இரக்கமும், ஆறுதலும் அவர்களைவிட்டு ஒருபோதும் பிரிந்துபோவதில்லை.

இயேசுகிறிஸ்துவை மெய்யாகவே விசுவாசிக்கிறவர்களுக்குத் தங்கள் வாழ்க்கையில் பலவிதமான அனுபவங்கள் உண்டாகும். பலசமயங்களில் சந்தோஷத்தோடிருப்பார்கள் சில சமயங்களில் மிகவும் வருத்தத்தோடிருப்பார்கள். அந்த வருத்தத்தின் நடுவிலும் நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நமக்கு ஆறுதலைக் கொடுப்பார். நம்மைத் திக்கற்றவர்களாகக் கைவிட்டுவிடமாட்டார். தம்மை "அப்பா பிதாவே" என்று அழைக்கும் புத்திர சுவீகாரத்தின் ஆவியை நமக்குக் கொடுத்திருக்கிறார்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடத்தில் "உங்களிடத்தில் வருவேன்" என்று கூறுகிறார். ஆகையினால் அவர் தம்முடைய சீஷர்களைவிட்டு முற்றிலுமாகப் பிரிந்துபோய்விடவில்லை. இயேசுகிறிஸ்து சிலுவையில் மரித்தாலும், அவர் மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து தம்முடைய சீஷர்களிடத்திற்கு வருவார். உயிர்த்தெழுந்த இயேசு பரமேறிப்போனாலும், அவர் ஆவியானவராக, எப்பொழுதும் நம்மோடு கூடயிருக்கிறார். அவருடைய தெய்வீகப் பிரசன்னம் அவருடைய அன்புக்கு அடையாளமாக இருக்கிறது. தமது கிருபையினால் அவர் நம்மைச் சந்திக்கிறார். சந்தித்துக்கொண்டேயிருக்கிறார். அவர் மறுபடியும் நம்மைச் சந்திப்பதற்கு பிரத்தியட்சமாக வரப்போகிறார். இப்பிரபஞ்சத்தில் நாம் பாடுகளையும் வேதனைகளையும் அனுபவித்து கவலையோடிருந்தாலும், இயேசுகிறிஸ்து "உங்களிடத்தில் வருவேன்" என்று கூறியிருக்கிற வார்த்தையை அனுதினமும் தியானித்துப் பார்த்து ஆறுதலடைய வேண்டும். அவர் நம்மை திக்கற்றவர்களாக விட்டுவிட்டுப் போய்விடுகிறவரல்ல.

## அதிகாரம் - 14

**என்னைக் காண்பீர்கள்**

**இன்னும் கொஞ்சக்காலத்திலே உலகம் என்னைக் காணாது, நீங்களோ என்னைக் காண்பீர்கள்; நான் பிழைக்கிறபடியினால் நீங்களும் பிழைப்பீர்கள் (யோவா 14:19).**

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போனாலும், சீஷர்கள் அவரோடு தொடர்ந்து ஐக்கியமாயிருப்பார்கள். "இன்னும் கொஞ்சக்காலத்தில் உலகம் என்னைக் காணாது" என்று இயேசுகிறிஸ்து கூறுகிறார். இப்பிரபஞ்சம் இயேசுகிறிஸ்துவை அதிகமாகப் பார்த்துவிட்டதாக நினைத்து திருப்தியோடிருக்கிறது. இயேசுகிறிஸ்து தங்களுக்குத் தேவையில்லையென்று கூக்குரலிடுகிறது. "இயேசுவைச் சிலுவையிலறையும்" என்று ஓலமிடுகிறது. அவர்கள் கேட்டுக்கொண்ட பிரகாரமே இயேசுகிறிஸ்து அவர்களைவிட்டு அகன்றுபோய்விடுவார். அதன்பின்பு இந்த உலகம் அவரைக் காணாது. தங்களுடைய அழிவை இந்த உலகத்தார் தாங்களே தேடிக்கொண்டார்கள். இந்த உலகம் அவரைக் காணாவிட்டாலும், கிறிஸ்துவின் சீஷர்கள் அவரைக் காண்பார்கள். இயேசுகிறிஸ்து தமது சீஷர்களைவிட்டுக் கடந்துபோய்விட்டாலும் அவர்கள் அவரோடுகூட ஐக்கியமாகவே இருப்பார்கள்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடத்தில் "நீங்களோ என்னைக் காண்பீர்கள்" என்று கூறுகிறார். இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் ஊழியம் செய்த நாட்களில், சீஷர்கள் அவரை அவருடைய பிரத்தியட்சமான சரீரத்தில் கண்டார்கள். இயேசுகிறிஸ்துவை சிலுவையில் அறைந்தாலும், அவர் மூன்றாம் நாளில் மறுபடியும் உயிரோடு எழும்பினார். அவர் உயிர்த்தெழுந்த பின்பு சீஷர்கள் அவரை மறுபடியும் அவருடைய சரீரத்தில் கண்டார்கள். கர்த்தரைப் பார்த்தபோது சீஷர்கள் சந்தோஷப்பட்டார்கள். உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்து அவர்கள் மத்தியிலிருந்து பரமேறிப்போனார். அவர் பரமேறிப்போனபின்பும் சீஷர்கள் அவரைத் தங்கள் விசுவாசத்தின் கண்களால் கண்டார்கள். இந்த உலகத்தால் அவரைக் காணமுடியவில்லை. ஆனால் சீஷர்களோ அவரைக் கண்டார்கள்.

இயேசுகிறிஸ்து பிழைக்கிறபடியினால் அவருடைய சீஷர்களும் பிழைப்பார்கள். இயேசுகிறிஸ்து சிலுவையில் மரிக்கப்போகிறார் என்னும் கவலை சீஷர்களுடைய உள்ளத்தில் நிரம்பியிருக்கிறது. அவர் மரிக்கும்போது தாங்கள் என்ன செய்யவேண்டுமென்று சீஷர்களுக்குத் தெரியவில்லை. அவரோடுகூட மரிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து மரிக்கப்போகிறார் என்று கலங்கிக்கொண்டிருக்கும் சீஷர்களிடம், "நான் பிழைக்கிறேன்" என்று கூறுகிறார். அவர் பிழைக்கப்போவது மட்டுமல்ல, இப்போது பிழைக்கவராகவே இருக்கிறார்.

நமக்குப் பாடுகளும் வேதனைகளும் வரும்போது, "நம் மீட்பர் உயிரோடிருக்கிறார்" என்னும் சத்தியத்தை நினைவுகூரவேண்டும். அது நமக்கு ஆறுதலான சத்தியம். இயேசுகிறிஸ்து நம்மை திக்கற்றவர்களாக விட்டுவிடமாட்டார். அவர் பிழைக்கிறபடியினால் நாமும் பிழைப்போம். விசுவாசிகளின் ஜீவியம் இயேசுகிறிஸ்துவின் ஜீவியத்தோடு இணைந்திருக்கிறது. அவர் எது வரையிலும் ஜீவிக்கிறாரோ அது வரையிலும் நாமும் ஜீவிப்போம். நாம் நம்முடைய விசுவாசத்தினால் இயேசுகிறிஸ்துவோடு ஐக்கியமாக இருக்கும்போது அவரோடுகூட நாமும் பிழைப்போம். நம்முடைய ஜீவியம் இயேசுகிறிஸ்துவிடத்தில் மறைவாக இருக்கிறது. தலையும் வேரும் உயிரோடிருக்குமென்றால், அவயவங்களும் கிளைகளும் உயிரோடிருக்கும். தலையாகிய கிறிஸ்து உயிரோடிருக்கும்போது அவருடைய அவயவங்களாகிய நாமும் உயிரோடிருப்போம். செடியாகிய கிறிஸ்து உயிரோடிருக்கும்போது செடியின் கொடிகளாகிய நாமும் உயிரோடிருப்போம்.

**அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள்**

**நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள் (யோவா 14:20).**

## அதிகாரம் - 14

சீஷர்கள் கலங்கின இருதயத்தோடிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து தமது சீஷர்களுக்கு ஆறுதலான வார்த்தைகளைத் தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறார். தாம் அவர்களைவிட்டுப் போனபின்பு, உலகம் அவரைக் காணாது என்றும், சீஷர்கள் அவரைக் காண்பார்கள் என்றும் கூறி அவர்களை உற்சாகப்படுத்துகிறார். தாம் பிழைக்கிறபடியினால் அவர்களும் பிழைப்பார்கள் என்று அவர்களுக்கு விசுவாசமுள்ள வார்த்தைகளைக் கூறுகிறார். அதோடு "நான் என் பிதாவிடம், நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள்" என்றும் அவர்களிடத்தில் ஆறுதலாகச் சொல்லுகிறார். இது மகிமையின் இரகசியம். பரலோகத்தில்தான் இந்த இரகசியத்தின் வியாக்கியானம் நமக்குப் பூரணமாகக் கொடுக்கப்படும். இப்போது இதன் முழுமையான தாற்பரியம் நமக்கு வெளிப்படுத்தப்படவில்லை. இந்த வாக்கியத்தின் பிரகாரம் நாம் எப்போது ஆசீர்வதிக்கப்படுகிறோமோ, அப்போது இதன் இரகசியம் நமக்கு வெளிப்படுத்தப்படும்.

பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரி அப்போஸ்தலர்கள்மீது ஊற்றப்பட்டபோது, அவர்கள் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை விசேஷித்த வழியில் பெற்றுக்கொள்கிறார்கள். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்ட பிறகு சீஷர்களுடைய மனக்கண்கள் பிரகாசமுள்ளதாக திறக்கப்படுகிறது. அவர்கள் தங்களைத் தாங்களே பார்த்து தங்களைப்பற்றி புரிந்துகொள்வதோடு, தங்களுடைய பிரகாசமுள்ள மனக்கண்களினால் தேவனையும் அவருடைய சத்தியத்தையும், உபதேசத்தையும் விசுவாசத்தோடு பார்க்கிறார்கள்.

குருடனாகயிருந்தவனை இயேசு கிறிஸ்து இரண்டாந்தரம் தொட்டு, அவனுக்குத் தெளிவான பார்வையைக் கொடுத்ததுபோல, இயேசுகிறிஸ்து ஆவியானவரின் அபிஷேகத்தின் மூலமாகச் சீஷருக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களையும் தெளிந்த பார்வையையும் கொடுக்கிறார்.

இயேசுகிறிஸ்து அந்தக் குருடனை இரண்டாந்தரம் தொடுவதற்கு முன்பாக, அவன் நடக்கிற மனுஷரை மரங்கள் அசைவதைப்போல பார்த்தான். மரத்திற்கும் மனுஷனுக்கும் அவனால் வித்தியாசம் கண்டுபிடிக்க முடியவில்லை. சத்திய ஆவியானவரை சீஷர்கள் பெற்றுக்கொள்கிறார்கள். அப்போது இயேசுகிறிஸ்து பிதாவில் இருக்கிறதையும், இயேசுகிறிஸ்துவும் பிதாவும் ஒன்றாயிருப்பதையும் காண்கிறார்கள். தங்களுடைய ஆவிக்குரிய அனுபவத்தின் மூலமாக தாங்கள் கேள்விப்பட்ட உபதேசங்களை இப்போது அனுபவித்துப் புரிந்துகொள்கிறார்கள். தாங்கள் இயேசுகிறிஸ்துவில் இருப்பதையும் இயேசுகிறிஸ்து தங்களிலிருப்பதையும் அனுபவித்து அறிந்துகொள்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து அவர்களிலிருப்பதும், அவர்கள் இயேசுகிறிஸ்துவிலிருப்பதும் நெருங்கிய ஐக்கியத்தைக் காண்பிக்கிறது. இது பிரிக்க முடியாத ஐக்கியம். கிறிஸ்துவோடு ஐக்கியமாக இருப்பதே விசுவாசிகளுக்கு ஜீவன். இந்த ஐக்கியத்தைப்பற்றிய மெய்யான அறிவு விசுவாசிகளுக்குக் கிடைக்கும்போது, அதுவே அவர்களுக்கு ஆனந்த பாக்கியமாகவும் பூரண திருப்தியாகவும் இருக்கும்.

### கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவன்

**என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான், என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்; நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன் என்றார் (யோவா 14:21).**

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் அவருடைய கற்பனைகளைப் பெற்றிருக்கிறார்கள். இந்தக் கற்பனைகளை அவர்கள் கைக்கொள்ளவேண்டும். அவர்கள் மாத்திரமே இயேசுகிறிஸ்துவிடத்தில் அன்பாயிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவும் அவர்களிடத்தில் அன்பாயிருக்கிறார். இயேசுகிறிஸ்து கூறுகிற இந்தச் சத்தியம் அப்போஸ்தலர்களாகிய அவருடைய சீஷர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறதுபோல எல்லா காலத்திலும், எல்லா தேசங்களிலும் இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுகிற விசுவாசிகள் எல்லோருக்கும் இந்தச் சத்தியம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

## அதிகாரம் - 14

யாரெல்லாம் இயேசுகிறிஸ்துவின் சீஷர்களாகயிருக்கிறோம் என்று சொல்லுகிறார்களோ அவர்களெல்லோரையுமே இந்தக் கடமையை நிறைவேற்றுமாறு இயேசுகிறிஸ்து கூறுகிறார். இவையெல்லாம் இயேசுகிறிஸ்துவின் கற்பனைகளாக இருக்கிறபடியினால் நாம் இவைகளைக் கைக்கொள்ளவேண்டும். நம்முடைய தலைகளில் இயேசுவின் கற்பனைகளை பெற்றிருப்பதினால், அவற்றை நம்முடைய இருதயங்களிலும், ஜீவியங்களிலும் கைக்கொள்ளவேண்டும். இயேசுகிறிஸ்துவின் சீஷர்களாகயிருந்து அவருக்கு ஊழியம் செய்வது மிகப்பெரிய சிலாக்கியம். இந்த ஊழியத்தைக் கீழ்ப்படிதலோடு செய்யவேண்டும். இயேசுகிறிஸ்துவின் கட்டளைகளைக் கைக்கொள்ளாமல் யாராலும் அவருடைய சீஷராக இருக்கமுடியாது.

ஒரு சிலர் இயேசுகிறிஸ்துவைக் குறித்து நன்றாகப் பிரசங்கம்பண்ணுவார்கள். ஒரு சிலரிடத்தில் சாதுரிய வார்த்தைகள் அதிகமாக இருக்கும். சிலர் நகைச்சுவையோடு பிரசங்கம்பண்ணுவார்கள். ஒரு சிலர் இயேசுகிறிஸ்துவின் ஊழியத்திற்கு அதிகமாகக் காணிக்கைகளைக் கொடுப்பார்கள். தங்களுடைய வீடுகளைக்கூட ஊழியத்திற்கு எழுதி வைத்துவிடுவார்கள். இவையெல்லாம் செய்வதினால் இவர்களால் இயேசுகிறிஸ்துவின் சீஷராக இருக்கமுடியாது. அவருடைய கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு, அவைகளைக் கைக்கொள்ளுகிறவர்கள் மாத்திரமே இயேசுகிறிஸ்துவின் சீஷர்களாக இருக்கிறார்கள். இவர்களே இயேசு கிறிஸ்துவிடத்தில் அன்பாயிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவும் இவர்களிடத்தில் அன்பாயிருக்கிறார். நாம் இயேசு கிறிஸ்துவிடத்தில் அன்பாயிருக்கிறோம் என்பதை அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்துதான் நிரூபிக்க முடியும்.

தம்முடைய கற்பனைகளைக் கைக்கொண்டு, தம்மிடத்தில் அன்பாயிருக்கிறவர்களை இயேசுகிறிஸ்து ஆசீர்வதிக்கிறார். இயேசு கிறிஸ்துவினிடத்தில் அன்பாயிருக்கிறவர்கள் பிதாவுக்கு அன்பாயிருப்பார்கள்.

தேவனிடத்தில் அன்பாயிருப்பதற்கு நமக்குத் தேவகிருபை தேவை. தேவகிருபையில்லையென்றால் நம்மால் தேவனிடத்தில் அன்பாயிருக்க முடியாது. இந்தக் கிருபையை தேவனே நமக்கு முதலாவதாகக் கொடுக்கிறார்.

தேவன் நம்மிடத்தில் அன்பாயிருக்கிறார். தம்மிடத்தில் அவர் அன்பாயிருக்கிறதை நாம் அறிந்துகொள்ளவும் உதவிபுரிகிறார். பிதாவானவர் குமாரனிடத்தில் அன்பாயிருக்கிறார். குமாரனிடத்தில் அன்பாயிருக்கிறவர்கள் அவருடைய பிதாவுக்கும் அன்பாயிருப்பார்கள். இயேசு கிறிஸ்துவிடத்தில் அன்பாயிருக்கிறவர்களிடத்தில் அவரும் அன்பாயிருப்பார். இயேசுகிறிஸ்து பிதாவாகிய தேவனிடத்தில் அன்பாயிருக்கிறார். சீஷர்களும் இயேசுகிறிஸ்துவிடத்தில் அன்பாயிருக்கிறார்கள். எல்லாவற்றிற்கும் அன்பே பிரதானமாக இருக்கிறது. தேவன் அன்பாகவே இருக்கிறார்.

இயேசுகிறிஸ்து இப்போது தம்முடைய சீஷர்களைவிட்டு பிதாவினிடத்திற்குப் போகப்போகிறார். அங்கு போனபின்பும் அவர் தம்முடைய சீஷர்களிடத்தில் தொடர்ந்து அன்பாயிருப்பாரென்பதை இயேசுகிறிஸ்து வாக்குப்பண்ணுகிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய இருதயத்தில் தம்முடைய சீஷர்களைப் பெற்றிருக்கிறார். அவர்களுக்காக பிதாவினிடத்தில் எப்போதும் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார்.

தம்மிடத்தில் அன்பாயிருக்கிறவர்களுக்கு இயேசுகிறிஸ்து மற்றுமொரு சிலாக்கியத்தைக் கொடுக்கிறார். இயேசுகிறிஸ்து அவர்களுக்குத் தம்மை வெளிப்படுத்துவதே அந்தச் சிலாக்கியமாகும். இயேசுகிறிஸ்துவின் அன்பினால் நமக்கு ஆறுதலும் சந்தோஷமும் உண்டாகும். இந்தச் சிலாக்கியம் இயேசுகிறிஸ்துவிடத்தில் அன்பாயிருக்கிற எல்லோருக்குமே வாக்குப் பண்ணப்பட்டிருக்கிறது. இந்த வாக்குத்தத்தத்தில் ஒரு நிபந்தனையும் உண்டு. நாம் இயேசுகிறிஸ்துவிடத்தில் அன்பாயிருக்கிறோம் என்றால், அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ளவேண்டும்.

### ஸ்காரியோத்தல்லாத யூதா

**ஸ்காரியோத்தல்லாத யூதா என்பவன் அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் உலகத்துக்கு உம்மை வெளிப்படுத்தாமல் எங்களுக்கு உம்மை வெளிப்படுத்தப்போகிற காரணமென்ன என்றான் (யோவா 14:22).**

## அதிகாரம் - 14

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடத்தில் அன்பாயிருப்பதை வாக்குத்தத்தமாகக் கூறுகிறார். இயேசுகிறிஸ்துவின் சத்திய உபதேசத்தைக் கேட்கிற சீஷர்களுக்கு அவருடைய வார்த்தைகள் ஆச்சரியமாக இருக்கிறது. சீஷர்களின் சார்பாக யூதா என்பவன் தன்னுடைய ஆச்சரியத்தை வெளிப்படுத்துகிறான். இந்த சுவிசேஷத்தில் இவனுடைய பெயர் "ஸ்காரியோத்தல்லாத யூதா" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் இரண்டு சீஷர்களுக்கு யூதா என்னும் ஒரே பெயரே வழங்கப்படுகிறது. ஒருவன் இயேசுகிறிஸ்துவைக் காட்டிக்கொடுத்த யூதாஸ்காரியோத்து. மற்றொருவன் யாக்கோபின் சகோதரனாகிய யூதா (லூக் 6:16).

யூதா என்னும் பெயரில் இரண்டு பேர் இருக்கிறார்கள். ஒருவன் நல்லவன். மற்றொருவன் கெட்டவன். இரண்டு பேருக்குமே ஒரே பெயர்தான். தேவன் நம்முடைய பெயரை வைத்து நம்மை நியாயந்தீர்க்கமாட்டார். நம்முடைய குணத்தை வைத்துத்தான் அவர் நம்மை நியாயந்தீர்க்கப்போகிறார். மனுஷன் முகத்தைப் பார்க்கிறான். பெயரைப் பார்க்கிறான். ஆனால் இயேசுகிறிஸ்துவோ மனுஷனுடைய இருதயத்தைப் பார்க்கிறார்.

அப்போஸ்தலனாகிய யூதா, யூதாஸ்காரியோத்தைப் போலத் துணிகரமாக எந்தப் பாவமும் செய்யவில்லை. ஆனால் யூதாஸ்காரியோத்தோ இயேசுகிறிஸ்துவைக் காட்டிக்கொடுத்து, துணிகரமாகப் பாவம் செய்து, நான்றுகொண்டு செத்துப்போனான். இவ்விரண்டு பேருக்கும் வித்தியாசம் இருக்கவேண்டும் என்பதற்காக யோவான் இந்த சுவிசேஷத்தில் இவர்கள் இருவரையும் வித்தியாசம் பண்ணி காண்பிக்கிறார். நாம் மற்றவர்களைப்பற்றி அறிந்துகொள்ளும்போது நமக்குள் நிதானமும் தெளிவும் இருக்கவேண்டும். ஆவிகளைப் பகுத்தறியும் வரம் நம்மிடத்தில் கிரியை நடப்பிக்கவேண்டும். கெட்டவர்களை நல்லவர்களாகவும், நல்லவர்களைக் கெட்டவர்களாகவும் பார்த்து ஏமாந்து போய்விடக்கூடாது.

யூதாஸ்காரியோத்தல்லாத யூதா, இயேசுகிறிஸ்துவிடம் "நீர் உலகத்திற்கு உம்மை வெளிப்படுத்தாமல், எங்களுக்கு உம்மை வெளிப்படுத்தப்போகிற காரணமென்ன" என்று கேட்கிறான். இயேசுகிறிஸ்துவை இவன் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. இவனுடைய விசுவாசம் பலவீனமாக இருக்கிறது. மேசியா இந்தப் பூமியில் உலகப்பிரகாரமான ராஜ்யத்தை ஸ்தாபிக்கப்போகிறார் என்று யூதா நினைக்கிறான். உலகத்திற்குரிய ராஜ்யம் ஆரவாரமாகவும், வெளிப்படையான ஆடம்பரமாகவும் ஸ்தாபிக்கப்படும். ஆனால் இயேசுகிறிஸ்துவின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்போது ஆரவாரமோ, ஆடம்பரமோ காணப்படவில்லை. இதனால் சீஷர்கள் சற்று ஏமாந்து போய்விடுகிறார்கள். தாங்கள் எதிர்பார்க்கிற விதமாக இயேசுகிறிஸ்து இவர்களுக்குத் தம்மை வெளிப்படுத்திக் காண்பிக்கவில்லை. ஆகையினால்தான் யூதா இயேசுவிடம் "நீர் உலகத்திற்கு உம்மை வெளிப்படுத்தாமல் எங்களுக்கு உம்மை வெளிப்படுத்தப்போகிற காரணமென்ன" என்று கேட்கிறான்.

யூதா தன்னுடைய விசுவாசத்தில் பலவீனமுள்ளவனாக இருந்தாலும், இயேசுகிறிஸ்துவின்மீது மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறான். ஆகையினால் அவரை அழைக்கும்போது "ஆண்டவரே" என்று கூப்பிடுகிறான். தேவனுடைய தெய்வீகக் கிருபையை நினைத்து யூதா மிகவும் ஆச்சரியப்படுகிறான். இந்த உலகத்து ஜனங்களுக்குக் கிடைக்காத மிகப்பெரிய சிலாக்கியம் தங்களுக்குக் கிடைத்திருப்பதாக நினைத்து மிகுந்த சந்தோஷத்தோடிருக்கிறான். ஏனெனில் இயேசுகிறிஸ்து தம்மை இந்த உலகத்திற்கு வெளிப்படுத்தாமல், சாதாரண சீஷர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். இந்த சிலாக்கியத்திற்கு தாங்கள் பாக்கியவான்களல்ல என்று சீஷர்கள் நினைக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் அற்புதமான கிரியைகள் நமக்கு மிகுந்த ஆச்சரியத்தைத் தரும். அவர் நம்மை ஆசீர்வதிப்பதற்கு நாம் தகுதியானவர்கள் அல்ல என்று நினைப்போம். தேவனுடைய கிருபை நமக்கு இலவசமாகக் கொடுக்கப்படுகிறது. கிறிஸ்துவின் ஊழியம் முழுவதையும் அவருடைய கிருபையே ஆளுகை செய்கிறது.

## அதிகாரம் - 14

**என் வசனத்தைக் கைக்கொள்ளுவான்**

**இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம். என்னில் அன்பாயிராதவன் என் வசனங்களைக் கைக்கொள்ளமாட்டான். நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பின பிதாவினுடையதாயிருக்கிறது (யோவா 14:23,24).**

இயேசுகிறிஸ்து மறுபடியுமாகத் தம்முடைய வாக்குத்தத்தத்தின் நிபந்தனையைச் சீஷர்களிடத்தில் கூறுகிறார். அவர்கள் இயேசுகிறிஸ்துவிடத்தில் அன்பாயிருக்க வேண்டும். அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளவேண்டும். அவரிடத்தில் அன்பாயிருந்தால் மாத்திரமே அவருடைய வசனத்தைக் கைக்கொள்ள முடியும். அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவர்கள் மாத்திரமே அவரிடத்தில் அன்பாயிருக்கிறார்கள். இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று இணைந்தேயிருக்கிறது. ஒரு விருட்சத்தில் அன்பு வேராக இருக்குமென்றால், கீழ்ப்படிதல் அதன் கனியாக இருக்கிறது. நம்முடைய இருதயத்தில் இயேசுகிறிஸ்துவின்மீது உண்மையான அன்பு இருக்குமென்றால், அவருடைய வசனத்திற்குக் கீழ்ப்படியவேண்டும் என்னும் விருப்பமும் நம்மிடத்தில் இருக்கும். அன்பு இருக்கிற இடத்தில் கீழ்ப்படிதல் இருக்கும். கீழ்ப்படிதல் இருக்கிற இடத்தில் அன்பு இருக்கும். இயேசு யூதாவிடம் "ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான்" என்று கூறுகிறார்.

அன்பு எங்கே இருக்கிறதோ அங்கு கடமையும் இருக்கும். கடமை அன்பைப் பின்பற்றும். இது மிகவும் எளிமையான சத்தியம். இயேசுகிறிஸ்துவிடத்தில் அன்பாயிராதவன் அவருடைய வசனங்களைக் கைக்கொள்ளமாட்டான். ஒருவன் இயேசுகிறிஸ்துவை மெய்யாகவே நேசிக்கவில்லையென்றால், அவருக்குக் கீழ்ப்படியவேண்டும் என்னும் அக்கறையும் அவனுக்குள் இராது. இயேசுகிறிஸ்துவிடத்தில் அன்பாயிராதவர்கள் அவருடைய சத்தியங்களை விசுவாசிக்கமாட்டார்கள். அவருடைய பிரமாணங்களுக்குக் கீழ்ப்படியமாட்டார்கள். இயேசுகிறிஸ்துவின் வசனங்கள் அவர்களுக்குச் சத்திய வசனங்களாகத் தெரியாது. அவர் ஏதோ கட்டுக்கதைக்களைக் கூறுவதாக நினைப்பார்கள். அவருடைய வார்த்தைக்குச் செவிகொடுக்கமாட்டார்கள். அவருடைய உபதேசத்தைக் கடினமான உபதேசமென்று அலட்சியம் பண்ணுவார்கள். இப்படிப்பட்டவர்கள் இயேசுகிறிஸ்துவிடத்தில் அன்பில்லாதவர்கள் தம்மிடத்தில் அன்பு இல்லாதவர்களோடு இயேசுகிறிஸ்துவும் வாசம்பண்ணுவதில்லை.

இயேசுகிறிஸ்து தம்முடைய அன்பையும் சீஷர்களின் அன்பையும் கூறும்போது "ஒருவன் தம்மிடத்தில் அன்பாயிருந்தால், தாமும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்குத் தம்மை வெளிப்படுத்துவேன்" என்று கூறுகிறார். "தம்மிடத்தில் அன்பாயிருக்கிறவன் தம்முடைய பிதாவுக்கும் அன்பாயிருக்கிறான்" என்றும் கூறுகிறார் (யோவா 14:21). இயேசுகிறிஸ்து தாம் ஏற்கெனவே கூறிய சத்திய வார்த்தைகளை இங்கு மறுபடியுமாக உறுதிபண்ணுகிறார். நம்முடைய விசுவாசத்தை உறுதிபண்ணும் விதமாக இயேசுகிறிஸ்து இந்த வார்த்தைகளை இங்கு மறுபடியுமாகக் கூறுகிறார்.

இயேசுகிறிஸ்து தம்மை உலகத்திற்கு வெளிப்படுத்தாமல் சீஷர்களுக்கு வெளிப்படுத்தியிருப்பது ஸ்காரியோத்தல்லாத யூதாவுக்கு மிகுந்த ஆச்சரியமாக இருக்கிறது. தம்முடைய சித்தத்தை அவனுக்குத் தெளிவுபடுத்தும் விதமாக, தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்துவது மாத்திரமல்ல "நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்" என்றும் கூறுகிறார். ஒருவன் இயேசுகிறிஸ்துவினிடத்தில் அன்பாயிருந்தால், அவன் அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுவான் அவனிடத்தில் பிதாவானவர் அன்பாயிருப்பார். அவர்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவார்கள்.

இயேசுகிறிஸ்து இந்தச் சத்தியத்தைக் கூறும்போது "நான் வாசம்பண்ணுவேன்" என்று கூறாமல் "நாங்கள் வாசம்பண்ணுவோம்" என்று கூறுகிறார். "நாங்கள்" என்னும் வார்த்தைக்கு இயேசுகிறிஸ்துவும் பிதாவும் என்பது பொருள். இயேசுகிறிஸ்து எங்கெல்லாம் தம்மை வெளிப்படுத்துகிறாரோ, அங்கெல்லாம் தேவனுடைய சாயல் வெளிப்படுகிறது.

## அதிகாரம் - 14

தம்மிடத்தில் அன்பாயிருந்து, தம்முடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களிடத்தில், இயேசுகிறிஸ்து தூரத்திலிருந்து அவர்களுக்குத் தம்மை வெளிப்படுத்தாமல், அவர்களிடத்தில் வந்து, அவர்களோடே வாசம்பண்ணுவார். அவர்களுக்கு அருகாமையில், அவர்களோடே வாசம்பண்ணுவார். இயேசுகிறிஸ்து தம்மை வெளிப்படுத்தும்போது, தம்மைக் காணவிரும்புகிறவர்கள் தம்மைக் காணமுடியாதவாறு தூரத்திலிருந்து தம்மை வெளிப்படுத்தமாட்டார். ஒரு சில விநாடிகள் மாத்திரம் தம்முடைய தரிசனத்தைக் கொடுத்துவிட்டு அதன்பின்பு மறைந்துபோய்விடமாட்டார். தம்மிடத்தில் அன்பாயிருந்து, தம்முடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களிடத்தில், தம்மை வெளிப்படுத்தும்போது இயேசுகிறிஸ்து அவர்களிடத்தில் வந்து அவர்களோடே வாசம்பண்ணுவார். தமக்குக் கீழ்ப்படிகிற விசுவாசிகளிடத்தில் இயேசுகிறிஸ்து அன்பாயிருந்து, தம்முடைய அன்பில் அவர்களோடு வாசம்பண்ணவும் செய்கிறார்.

இயேசு கிறிஸ்துவின் வாக்குத்தத்தத்தைக் கேட்டு, அவர் கொடுக்கிற கற்பனைகளுக்கு நாம் கீழ்ப்படியவேண்டும். நாம் கேட்கிறவர்களாக மாத்திரமல்ல அதன்படி செய்கிறவர்களாகவும் இருக்கவேண்டும். ஏனெனில் இயேசுகிறிஸ்துவின் வசனம் அவருடையதாயிராமல், அவரை அனுப்பின பிதாவினுடையதாயிருக்கிறது. இந்தச் சத்தியத்தை இயேசுகிறிஸ்து பல சமயங்களில் யூதர்களிடத்தில் உபதேசம்பண்ணியிருக்கிறார். "என் உபதேசம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பினவருடையதாயிருக்கிறது. அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவன் எவனோ, அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்துகொள்ளுவான்" (யோவா 7:16,17) என்று இயேசுகிறிஸ்து ஏற்கெனவே கூறியிருக்கிறார்.

நம்முடைய ஜீவனை இயேசுகிறிஸ்துவே ஆளுகை செய்கிறவராக இருக்கவேண்டும். அவருடைய வசனமே நம்மை வழிநடத்துகிற பிரமாணமாக இருக்கவேண்டும். அவருடைய வார்த்தைக்குக் கீழ்படிவதே நம்முடைய சித்தமாகயிருக்கவேண்டும். கிறிஸ்து நம்மை ஆளுகை செய்யவேண்டும் என்று ஒப்புக்கொடுப்பது நம்முடைய கடமை. இயேசுகிறிஸ்துவின் வாக்குத்தத்தத்தை சார்ந்திருக்கும்போது நமக்குக் கிடைப்பது தேவனுடைய ஆறுதலும் சமாதானமும்.

இயேசுகிறிஸ்துவின் வாக்குத்தத்தம் நிச்சயமாக நிறைவேறுமா என்னும் சந்தேகம் சீஷர்களுக்கு வரவேண்டியதில்லை. இயேசுகிறிஸ்துவின் ஆசீர்வாதம் தங்களுக்குப் போதுமானதா என்றும் சீஷர்கள் யோசிக்க வேண்டியதில்லை. அவர் நம்மைச் சம்பூரணமாக ஆசீர்வதிக்கிறவர். இயேசுகிறிஸ்துவின் வாக்குத்தத்தம் அவருடைய சாதாரண வார்த்தைகளல்ல. சீஷர்கள் கேட்கிற வசனம் இயேசுகிறிஸ்துவினுடையதாயிராமல் அவரை அனுப்பின பிதாவினுடையதாயிருக்கிறது.

### பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளன் யோவா 14 : 25-27

**யோவா 14:25. நான் உங்களுடனே தங்கியிருக்கையில் இவைகளை உங்களுக்குச் சொன்னேன்.**

**யோவா 14:26. என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்.**

**யோவா 14:27. சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக.**

**உங்களுக்குப் போதித்து நினைப்பூட்டுவார்**

**நான் உங்களுடனே தங்கியிருக்கையில் இவைகளை உங்களுக்குச் சொன்னேன். என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார் (யோவா 14:25,26).**

## அதிகாரம் - 14

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போகப்போகிறார். தங்களைவிட்டு அவர் போகப்போவதினால் சீஷர்களுடைய இருதயம் கலங்கியிருக்கிறது. இந்த சூழ்நிலையில் இயேசுகிறிஸ்து அவர்களுக்கு ஆறுதலான வார்த்தைகளைப் பேசுகிறார். தாம் அவர்களைவிட்டுப்போனாலும் அவர்களுடைய ஆறுதலுக்காக, இயேசுகிறிஸ்து அவர்களுக்கு இரண்டு ஆசீர்வாதங்களைக் கொடுக்கிறார். அவையாவன: 1. பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளர் அவர்களுக்கு அருளப்படுவார். 2. தம்முடைய சமாதானத்தை இயேசுகிறிஸ்து அவர்களுக்கு வைத்துப்போகிறார்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களைவிட்டுப் போனபின்பு, அவர்களோடு பேசுவதற்கு ஒரு உபாயத்தை உண்டுபண்ணுகிறார். பிதாவானவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே, பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனை அவர்களுக்குத் தந்தருளுவார். அவர் எல்லாவற்றையும் சீஷர்களுக்குப் போதிப்பார். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் ஆவியானவர் அவர்களுக்கு நினைப்பூட்டுவார். தாம் கொடுத்த உபதேசத்தை இயேசுகிறிஸ்து ஒருபோதும் மாற்றிக்கொள்வதில்லை. தம்முடைய சத்திய வார்த்தையிலிருந்து அவர் பின்வாங்கிப்போவதில்லை. அவர் சொன்னது சொன்னதாகவே இருக்கும். அவர் என்றும் மாறாதவர். அவருடைய வார்த்தையும் மாறாதது. அவர் நம்மிடத்தில் சொல்லியிருக்கும் வசனத்தின் பிரகாரமாக கிரியை செய்வார். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போனபின்பு, அவர்களோடு பேசுவதற்கு ஒரு உபாயத்தை உண்டுபண்ணுகிறார்.

பிதாவானவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே பரிசுத்த ஆவியானவராகிய தேற்றரவாளனை அவர்களிடத்தில் அனுப்புவார். குமாரனாகிய இயேசுகிறிஸ்து பிதாவின் நாமத்தினால் இந்தப் பூமிக்கு வந்தார். பரிசுத்த ஆவியானவரோ இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால், இயேசுகிறிஸ்து செய்ய வேண்டிய ஊழியத்தைத் தொடர்ந்து செய்வதற்காக வருவார்.

பரிசுத்த ஆவியானவருக்கு விசேஷித்த ஊழியம் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர் எல்லாவற்றையும் இயேசுகிறிஸ்துவின் சீஷர்களுக்குப் போதிப்பார். சில சத்தியங்களைச் சீஷர்கள் தாங்களாகவே கற்றுக்கொள்ளவேண்டும். வேறு சில சத்தியங்களை மற்றவர்கள் அவர்களுக்குப் போதிக்கவேண்டும். தேவனுடைய சத்தியங்களை மற்றவர்களுக்குப் போதிக்கிறவர்கள், முதலாவதாக தேவனால் போதிக்கப்பட்டிருக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய சத்தியங்களெல்லாவற்றையும் நமக்குப் போதிப்பார். அத்துடன் இயேசுகிறிஸ்து நமக்குச் சொன்ன எல்லாவற்றையும் நமக்கு நினைப்பூட்டுவார்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு ஏராளமான உபதேசங்களைப் போதித்திருந்தார். முக்கியமான உபதேசங்கள் பலவற்றை சீஷர்கள் மறந்துவிட்டார்கள். பரிசுத்த ஆவியானவர் அவர்களிடத்தில் வந்து புதிய சுவிசேஷத்தை அவர்களுக்குப் போதிக்கமாட்டார். இயேசுகிறிஸ்து அவர்களிடத்தில் ஏற்கெனவே உபதேசித்திருந்த சுவிசேஷத்தையே அவர்களுக்கு நினைப்பூட்டுவார். இயேசுகிறிஸ்துவின் சத்திய வசனங்களைப் புரிந்துகொள்வதற்கு ஆவியானவர் சீஷர்களுக்கு உதவிபுரிவார். கர்த்தருடைய பரிசுத்தவான்களெல்லோருக்கும் கிருபையின் ஆவியானவருடைய ஊழியம் தேவையாயிருக்கிறது. இயேசுகிறிஸ்து நமக்குச் சொன்ன எல்லாவற்றையும் நாம் மறந்துவிடாதவாறு, நமக்கு நினைப்பூட்டுவதற்கு பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனின் ஊழியம் தேவைப்படுகிறது.

**என்னுடைய சமாதானம்**

**சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக (யோவா 14:27).**

## அதிகாரம் - 14

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களைவிட்டுப் போகப்போவதினால் அவர்களுடைய இருதயம் கலங்கியிருக்கிறது. அவர்களுக்குச் சமாதானத்தைக் கொடுப்பதற்காக, இயேசுகிறிஸ்து அவர்களிடம் "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன்" என்று கூறுகிறார். இயேசுகிறிஸ்து இந்த உலகத்தைவிட்டுப் புறப்பட்டுப்போகும் முன்பாக தம்முடைய சித்தத்தை உயில் எழுதுவதுபோல நிறைவேற்றி முடிக்கிறார். இயேசுகிறிஸ்து ஒன்றையும் விட்டுவிடாமல், எல்லாவற்றையும் சீராகக் கவனித்து, தம்மிடத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் ஊழியத்தை நேர்த்தியாக நிறைவேற்றுகிறார்.

தம்முடைய ஆத்துமாவைப் பிதாவினிடத்தில் ஒப்புக்கொடுக்கிறார். கல்வாரியில் மரிப்பதற்காக ஒப்புக்கொடுத்த தம்முடைய சரீரத்தை யோசேப்பிடம் அடக்கம் பண்ணுவதற்காக ஒப்புக்கொடுக்கிறார். இயேசுகிறிஸ்துவின் வஸ்திரங்கள் போர்ச்சேவகர்களுக்குக் கிடைக்கிறது. தம்முடைய தாயாகிய மரியாளைப் பராமரிக்கும் பொறுப்பை யோவானிடம் ஒப்புக்கொடுக்கிறார்.

எல்லோருக்கும் எல்லாவற்றையும் நேர்த்தியாகக் கொடுத்திருக்கும் இயேசுகிறிஸ்து, தம்மையே பின்பற்றி வந்திருக்கும் சீஷர்களுக்கும், அவர்களுக்குத் தேவையானதைக் கொடுக்கவேண்டுமென்று சித்தங்கொண்டிருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் தங்களுக்குள்ளவைகள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றி வந்திருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்க இயேசுகிறிஸ்துவிடம் பொன்னும் வெள்ளியும் இல்லை. தம்மிடத்திலுள்ள அதைவிட மேலானதை இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடத்தில் கொடுக்கிறார். "என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்" என்று தம்முடைய சீஷர்களிடத்தில் ஆறுதலாகக் கூறுகிறார். இயேசுகிறிஸ்து அவர்களைவிட்டுப்போனாலும், அவர் கொடுக்கிற அவருடைய சமாதானம் அவர்களிடத்தில் இருக்கும். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களைவிட்டு கோபத்தோடு அகன்று போகவில்லை. அன்புடன் அவர்களைவிட்டுப் போகிறார். தாம் போகும்போது, தம்முடைய சீஷர்களுக்குத் தேவையான சமாதானத்தை அவர்களுக்குக் கொடுத்துவிட்டுப் போகிறார்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்குக் கொடுக்கிற சமாதானம் உலகப்பிரகாரமான சமாதானமல்ல. அது இயேசுகிறிஸ்துவினுடைய சமாதானம். எல்லா ஆசீர்வாதங்களுக்கும், நன்மைகளுக்கும் இயேசுகிறிஸ்து கொடுக்கிற அவருடைய சமாதானமே போதுமானதாக இருக்கும். தேவனோடு நாம் ஒப்புரவாவதற்கு தேவனுடைய சமாதானம் நமக்கு பிரயோஜனமுள்ளதாக இருக்கும். தேவனுடைய அன்பை பெற்றுக்கொள்வதற்கும் கிறிஸ்துவின் சமாதானம் நமக்கு உதவிபுரியும். இயேசுகிறிஸ்துவின் சமாதானம் நமக்குக் கிடைப்பதினால் நாம் தேவனோடு சமாதானமாக இருப்போம். கிறிஸ்துவின் சமாதானம் நமக்குக் கொடுக்கப்படுவதினால், நம்முடைய மடிகளில் தேவனுடைய சமாதானம் தங்கியிருக்கும்.

இயேசுகிறிஸ்து இந்த பூமியில் பிறந்தபோது, தேவதூதர்கள் மனுஷரை ஆசீர்வதிக்கும்போது "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக" என்று கூறி தேவனைத் துதித்தார்கள் (லூக் 2:14). தூதர்கள் சொன்ன அந்த சமாதானத்தை இயேசுகிறிஸ்து இப்போது தம்முடைய சீஷர்களுக்குக் கொடுக்கிறார்.

இயேசுகிறிஸ்து கொடுக்கிற அவருடைய சமாதானம், அவருடைய சீஷர்களுக்கும் அவரை உண்மையாய்ப் பின்பற்றுகிற அவருடைய விசுவாசிகளெல்லோருக்கும் கொடுக்கப்படுகிறது. எல்லா காலங்களிலும், எல்லா தேசங்களிலும், இயேசுகிறிஸ்துவை உண்மையாக விசுவாசிக்கிற விசுவாசிகள் அனைவருக்கும் இயேசுகிறிஸ்து தம்முடைய சமாதானத்தையே கொடுக்கிறார்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சமாதானத்தை சீஷர்களுக்குக் கொடுக்கும்போது, அதை உலகம் கொடுக்கிற பிரகாரம் அவர் அவர்களுக்குக் கொடுக்கிறதில்லை. உலகத்தார் "உங்களுக்குச் சமாதானம்" என்று உதட்டளவிலும், வார்த்தை அளவிலும் சொல்லுவார்கள். இது சடங்கு முறைபோல் பயன்படுத்தப்படுகிற ஆசீர்வாதமான வார்த்தை. ஆனால் இயேசுகிறிஸ்து கொடுக்கிற அவருடைய சமாதானமோ நமக்கு மெய்யான ஆசீர்வாதமாக இருக்கும். இயேசுகிறிஸ்து தம்முடைய பிள்ளைகளுக்குக் கொடுக்கிற வரங்கள் எல்லாவற்றையும், இந்த உலகம் கொடுக்கிற பிரகாரமாக கொடுக்கிறதில்லை.

## அதிகாரம் - 14

இந்த உலகம் மனுஷருடைய சரீரத்திற்கே நன்மை உண்டாக வெகுமதி கொடுக்கும். இந்த உலகம் கொடுக்கிற வெகுமதியும் ஒரு குறிப்பிட்ட காலம் வரையில்தான் இருக்கும். ஆனால் இயேசுகிறிஸ்து கொடுக்கிற கிருபையின் வரங்களோ நம்முடைய ஆத்துமாவுக்கு ஆசீர்வாதமாக இருக்கும். இந்த ஆசீர்வாதம் நித்திய ஆசீர்வாதமாக நம்மோடு நித்திய காலமாக இருக்கும். ஆகையினால் இயேசுகிறிஸ்து கொடுக்கிற சமாதானம் நித்திய காலத்திற்கும் பிரயோஜனமுள்ளது. இந்த உலகம் கொடுக்கிற சமாதானத்திற்கும் இயேசுகிறிஸ்து கொடுக்கிற சமாதானத்திற்கும் வித்தியாசமுண்டு. இயேசுகிறிஸ்து கொடுக்கும் சமாதானம் மெய்யானது. நித்தியமானது.

இயேசுகிறிஸ்து தம்முடைய சமாதானத்தையே தம்முடைய சீஷர்களுக்குக் கொடுப்பதினால், அவர்களைப்பார்த்து "உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக" என்று கூறுகிறார். தம்முடைய உபதேசத்தின் முடிவுரையாக இயேசுகிறிஸ்து இந்த வாக்கியத்தைக் கூறுகிறார். தம்முடைய உபதேசத்தை ஆரம்பிக்கும்போது "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக" (யோவா 14:1) என்று கூறியவர், இதை முடிக்கும்போதும், முடிவுரையாக "உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக" என்று மறுபடியுமாக கூறி முடிக்கிறார். அவர்களுடைய இருதயம் ஏன் கலங்கக்கூடாது என்பதற்கான காரணத்தை இயேசுகிறிஸ்து தம்முடைய உபதேசத்தில் தெளிவுபடுத்துகிறார்.

### இயேசுகிறிஸ்துவின் சந்தோஷம் யோவா 14 : 28-31

**யோவா 14:28. நான் போவேன் என்றும், திரும்பி உங்களிடத்தில் வருவேன் என்றும் நான் உங்களுடனே சொன்னதைக் கேட்டீர்களே. நீங்கள் என்னில் அன்புள்ளவர்களாயிருந்தால் பிதாவினிடத்திற்குப் போகிறேனென்று நான் சொன்னதைக் குறித்துச் சந்தோஷப்படுவீர்கள், ஏனெனில் என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்.**

**யோவா 14:29. இது நடக்கும்போது நீங்கள் விசுவாசிக்கும்படியாக, நடப்பதற்குமுன்னமே இதை உங்களுக்குச் சொன்னேன்.**

**யோவா 14:30. இனி நான் உங்களுடனே அதிகமாய்ப் பேசுவதில்லை. இந்த உலகத்தின் அதிபதி வருகிறான், அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை.**

**யோவா 14:31. நான் பிதாவில் அன்பாயிருக்கிறேன் என்றும், பிதா எனக்குக் கட்டளையிட்டபடியே செய்கிறேன் என்றும், உலகம் அறியும்படிக்கு இப்படி நடக்கும். எழுந்திருங்கள், இவ்விடம்விட்டுப் போவோம் வாருங்கள் என்றார்.**

### போவேன், திரும்பி வருவேன்

**நான் போவேன் என்றும், திரும்பி உங்களிடத்தில் வருவேன் என்றும் நான் உங்களுடனே சொன்னதைக் கேட்டீர்களே. நீங்கள் என்னில் அன்புள்ளவர்களாயிருந்தால் பிதாவினிடத்திற்குப் போகிறேனென்று நான் சொன்னதைக் குறித்துச் சந்தோஷப்படுவீர்கள், ஏனெனில் என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார் (யோவா 14:28).**

சீஷர்களுடைய இருதயம் ஏன் கலங்கியிருக்கக்கூடாது என்பதற்கு இயேசுகிறிஸ்து மேலும் ஒரு காரணத்தைக் கூறுகிறார். சீஷர்களைவிட்டு இயேசுகிறிஸ்து போகப்போவதினால் அவருடைய இருதயம் கலங்கவில்லை. சீஷர்களுடைய இருதயம் மாத்திரமே கலங்கியிருக்கிறது. சீஷர்களை விட்டுப்போவது இயேசுகிறிஸ்துவுக்கு வருத்தமாக இருந்தாலும், இரண்டு காரியங்கள் அவருக்கு ஆறுதலாக இருக்கிறது. அவையாவன: 1. அவர் போனாலும் திரும்பி வருவார். 2. அவர் தம்முடைய பிதாவினிடத்திற்குப் போகிறார்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களைவிட்டு இப்போது புறப்பட்டுப்போனாலும் அவர் மறுபடியும் திரும்பி வரவேண்டும். "நான் போவேனென்றும், திரும்பி உங்களிடத்தில் வருவேனென்றும் நான் உங்களுடனே சொன்னதைக் கேட்டீர்களே" என்று இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடத்தில் கூறுகிறார். தம்முடைய பாடுகளிலும் மரணத்திலும் இயேசுகிறிஸ்துவுக்கு ஆறுதலாகயிருக்கிற சத்தியம், "அவர் திரும்பி தம்முடைய சீஷர்களிடத்தில் வருவார்" என்பதுதான். இந்த சத்தியம் நமக்கும் ஆறுதலாக இருக்கவேண்டும். நாம் மரிக்கும்போது, "நாம் மறுபடியும் வருவதற்காக போகிறோம்" என்னும் சிந்தனை விசுவாசிகளுக்குள் இருக்கவேண்டும். நாம் மரிக்கும்போது நம்முடைய உற்றார் உறவினர்களைவிட்டு நிரந்தரமாகப் பிரிந்துபோய்விடுவதில்லை. அவர்களைப் பார்ப்பதற்கு நாம் மறுபடியும் வருவோம்.

## அதிகாரம் - 14

இயேசுகிறிஸ்து தம்முடைய பிதாவினிடத்திற்குப் போகிறார். பிதா தம்மிலும் பெரியவராயிருக்கிறார் என்று இயேசுகிறிஸ்து அங்கீகரிக்கிறார். ஆகையினால் பிதாவினிடத்திற்குப் போவது இயேசு கிறிஸ்துவுக்குச் சந்தோஷமாகயிருக்கிறது. தாம் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், தம்மைப்போலவே சீஷர்களும் சந்தோஷப்படுவார்கள் என்று இயேசுகிறிஸ்து எதிர்பார்க்கிறார். "நீங்கள் என்னில் அன்புள்ளவர்களாயிருந்தால் பிதாவினிடத்திற்குப் போகிறேனென்று நான் சொன்னதைக் குறித்துச் சந்தோஷப்படுவீர்கள், ஏனெனில் என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்" என்று கூறுகிறார். இயேசுகிறிஸ்து சீஷர்களைவிட்டுப் போகும்போது வருத்தமும் இருக்கிறது. சந்தோஷமும் இருக்கிறது. பிதா இயேசுகிறிஸ்துவிலும் பெரியவராயிருப்பது சந்தோஷமான சத்தியம். இயேசுகிறிஸ்து இந்தப் பூமியில் தம்முடைய சீஷரோடு இருப்பதைவிட, பரலோகத்தில் அவருடைய பிதாவோடு இருப்பது அவருக்கு மகிமை நிறைந்ததாக இருக்கும். அது அவருக்கு உன்னத அனுபவமாக இருக்கும்.

சீஷர்கள் இப்போது இந்த உலகத்திற்குரிய காரியங்களை மாத்திரமே சிந்தித்துப்பார்க்கிறார்கள். உலகப்பிரகாரமான சந்தோஷத்தைக் குறித்தே அக்கரையோடிருக்கிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ அவர்களிடத்தில் உன்னத அனுபவத்தைப்பற்றியும், இதைவிட மேன்மையான சந்தோஷத்தைப்பற்றியும் பேசுகிறார். தேவனிடமிருந்து சீஷர்கள் பெரிய காரியங்களை எதிர்பார்க்கவேண்டும். பிதாவின் ராஜ்யம் இந்த பூமியின் ராஜ்யத்தைவிட பெரியது. இயேசுகிறிஸ்து இந்தப் பூமியின் ராஜ்யத்திலிருந்து தேவனுடைய ராஜ்யத்திற்கு உயர்த்தப்பட்டிருக்கிறார். அவர் மகிமையோடு உயர்த்தப்பட்டிருப்பதைப் பார்த்து, அவரிடத்தில் அன்புள்ளவர்களாயிருக்கிற சீஷர்கள் சந்தோஷப்படவேண்டும்.

இயேசுகிறிஸ்துவிடத்தில் அநேகர் அன்புள்ளவர்களாகயிருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய அன்பு தவறான உபதேசத்தின்மீது ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின்மீது அன்பாயிருந்தால், தங்களுடைய வாழ்க்கையே வேதனைகளும் பாடுகளும் நிறைந்ததாக இருக்குமென்றும், துக்கமும் துன்பமும் தங்களை நிரப்புமென்றும் நினைத்துப்பயந்துகொண்டிருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவினால் தங்களுக்கு வேதனை உண்டாகும் என்பது இவர்களுடைய எண்ணம். ஆனால் இயேசுகிறிஸ்துவின் மெய்யான அன்பு நம்மை வருத்தப்படச் செய்வதற்குப் பதிலாகச் சந்தோஷப்படச் செய்கிறது. இயேசுகிறிஸ்துவிடத்தில் அன்புள்ளவர்கள் அவரில் சந்தோஷமாக இருப்பார்கள்.

**நடப்பதற்கு முன்னமே சொன்னேன்**

**இது நடக்கும்போது நீங்கள் விசுவாசிக்கும்படியாக, நடப்பதற்குமுன்னமே இதை உங்களுக்குச் சொன்னேன் (யோவா 14:29).**

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களைவிட்டுப்போவது, அவருடைய சீஷர்களின் விசுவாசம் உறுதிப்படுவதற்கு ஓர் உபாயமாக இருக்கும். ஏனெனில் இது நடக்கும்போது அவர்கள் விசுவாசிக்கும்படியாக, இது நடப்பதற்கு முன்னமே, இயேசுகிறிஸ்து இதை அவர்களுக்குச் சொல்லுகிறார்.

"அது நடக்கும்போது நானே அவரென்று நீங்கள் விசுவாசிக்கும்பொருட்டு, இப்பொழுது அது நடப்பதற்கு முன்னமே அதை உங்களுக்குச் சொல்லுகிறேன்" (யோவா 13:19). "அந்தக் காலம் வரும்போது நான் இவைகளை உங்களுக்குச் சொன்னேனென்று நீங்கள் நினைக்கும்படி இவைகளை உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன்; நான் உங்களுடனேகூட இருந்தபடியினால் ஆரம்பத்திலே இவைகளை உங்களுக்குச் சொல்லவில்லை" (யோவா 16:4).

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் தாம் மரிப்பதற்கு முன்பாகவே தமது மரணத்தைப்பற்றிப் பேசுகிறார். இதனால் இயேசுகிறிஸ்து சிலுவையில் மரிக்கும்போது அவர்களுடைய விசுவாசம் உறுதியாகும். தம்மைப்பற்றிய காரியங்களை முன்னறிவிக்கிற இயேசுகிறிஸ்து சர்வ ஞானமுள்ளவர். தேவனுடைய இரகசியங்களெல்லாம் அவருக்குத் தெரிந்திருக்கிறது. தம்முடைய தெய்வீக நோக்கத்தின் பிரகாரமாகவே, தம்முடைய காரியங்கள் அனைத்தையும் இயேசுகிறிஸ்து முன்னறிவிக்கிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களைவிட்டுப் போவதினால், அவர்களுடைய விசுவாசம் உறுதிப்படும். ஆகையினால் அவர்கள் இருதயம் கலங்கவேண்டியதில்லை. இயேசுகிறிஸ்து பிதாவினிடத்திற்குப் போகிறார். ஆகையினால் சீஷர்கள் அதை நினைத்து சந்தோஷப்படவேண்டும்.

## அதிகாரம் - 14

### உலகத்தின் அதிபதி

**இனி நான் உங்களுடனே அதிகமாய்ப் பேசுவதில்லை. இந்த உலகத்தின் அதிபதி வருகிறான், அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை (யோவா 14:30).**

தமக்குச் சாத்தான்மீது வெற்றி கிடைக்குமென்று இயேசுகிறிஸ்து நிச்சயத்தோடிருக்கிறார். ஆகையினால் "இனி நான் உங்களுடனே அதிகமாய்ப் பேசுவதில்லை" என்று கூறுகிறார். ஆனாலும் இதன் பின்பும் இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களோடு உரையாடிய சம்பவம் யோவான் 15, யோவான் 16-ஆகிய இரண்டு அதிகாரங்களிலும் எழுதப்பட்டிருக்கிறது. ஆயினும், இயேசுகிறிஸ்து இதுவரையிலும் உபதேசம்பண்ணிய சத்தியங்கள் இனிமேல் உபதேசம்பண்ணப்போகும் சத்தியங்களைவிட அதிகமாகும். தம்முடைய சீஷர்களோடு பேசுவதைவிட இயேசுகிறிஸ்துவுக்கு வேறு முக்கியமான வேலை ஒன்று காத்துக்கொண்டிருக்கிறது. "இந்த உலகத்தின் அதிபதி வருகிறான்". பிசாசானவனே இந்த உலகத்தின் அதிபதியென்று அழைக்கப்படுகிறான் (யோவா 12:31). இயேசுகிறிஸ்து இந்த உலகத்தின் அதிபதியைச் சந்திக்கவேண்டும். இப்பிரபஞ்சத்தின் அதிபதியாயிருக்கிறவன் இயேசுகிறிஸ்துவுக்கு சத்துருவாகயிருக்கிறான். ஆனால் அவனுக்கு இயேசுகிறிஸ்துவிடத்தில் ஒன்றுமில்லை.

இயேசுகிறிஸ்துவுக்கு இந்த உலகத்தில் பாடுகளும் போராட்டங்களும் நியமிக்கப்பட்டிருக்கிறது. அவர் மனுஷரோடு மாத்திரமல்ல, இப்பிரபஞ்சத்தின் அந்தகார வல்லமைகளோடும் அவர் போராடவேண்டும். பிசாசானவன் இயேசுகிறிஸ்துவைச் சோதிக்கும்போது (மத் 4), இந்த உலகத்தின் ராஜ்யங்களை அவருக்குத் தருவதாகக் கூறினான். சோதனை முடிந்த பின்பு பிசாசானவன் அவரை விட்டுச் சிறிதுகாலம் விலகிப்போனான். இப்போது இயேசுகிறிஸ்து அந்தப் பிசாசானவனை மறுபடியும் சந்திக்கப்போகிறார். தமக்கு வரப்போகும் சோதனைகளை இயேசுகிறிஸ்து முன்னறிந்திருக்கிறார்.

நம்முடைய வாழ்க்கையிலும் நாம் சந்திக்கப்போகும் சோதனைகளை நாம் முன்னறியும்போது, அதை எதிர்கொள்வதற்கு நம்மால் ஆயத்தமாயிருக்க முடியும். பிசாசை எதிர்த்து நிற்கும்போது அவன் பிசாசு ஓடிப்போய்விடுவான்.

இயேசுகிறிஸ்து பிசாசானவனோடு யுத்தம்பண்ணும்போது அவன் தோற்று ஓடிப்போய்விடுவான். அவனுக்கு இயேசுகிறிஸ்துவினிடத்தில் ஒன்றுமில்லை. இயேசுகிறிஸ்துவிடத்தில் பாவமோ, குற்றமோ எதுவுமில்லை. இயேசுகிறிஸ்து ஒரு தீங்கும் செய்யாதவர். இயேசுகிறிஸ்துவை சிலுவையில் அறைந்ததினால் சாத்தான் வெற்றி பெற்றது போன்று இருக்கிறான். அது அவனுக்கு கிடைத்த மெய்யான வெற்றியல்ல. இயேசுகிறிஸ்து தாமே சிலுவையில் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்தார். இயேசுகிறிஸ்துவின் சித்தமும் அனுமதியுமில்லாமல் அவருடைய ஜீவனை அவருடைய கரத்திலிருந்து யாரும் பறித்துக்கொள்ளமுடியாது.

இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பாக, அவர் பல பாடுகளையும் போராட்டங்களையும், வேதனைகளையும் சந்திக்க வேண்டும். அவற்றையெல்லாம் பெரிதுபடுத்தி இயேசுகிறிஸ்துவைப் பயமுறுத்த வேண்டுமென்று சாத்தான் முயற்சிபண்ணினான். ஆனால் சாத்தானுடைய முயற்சி தோற்றுப்போயிற்று. இயேசுகிறிஸ்து தம்முடைய பாடுகளையும் வேதனைகளையும் சந்திப்பதற்காக முன்னேறிச் செல்கிறார். அவரிடத்தில் பயமில்லை. அவருக்கு விரைவில் மரணம் உண்டாயிற்று. இயேசுகிறிஸ்து அந்த மரணத்தை இயேசுகிறிஸ்து தாமாகவே முன்வந்து ஏற்றுக்கொண்டார். மரணத்தைப் பார்த்து அவர் பயப்படவில்லை.

நாம் எல்லோருமே பாவம் செய்து ஏகமாய் கெட்டுப்போயிருக்கிறோம். சாத்தான் நம்மைச் சோதித்து பல சமயங்களில் அவன் வெற்றியும் பெற்றிருக்கிறான். நாம் பல சம்பவங்களை நினைத்து நமக்குள் பயப்படுகிறோம். நம்முடைய உள்ளான மனுஷன் பலவீனமாக இருப்பதினால் நமக்குள் திகிலும் கலக்கமும், பயமும் உண்டாயிற்று. ஆனால் இயேசுகிறிஸ்துவோ தம்முடைய பிதாவின் சித்தத்தின்படி செய்வதற்கு எப்போதுமே ஆயத்தமாக இருக்கிறார். தமக்கு வரும் பாடுகளையும் வேதனைகளையும் சந்திப்பதற்கு ஆயத்தமாகயிருக்கிறார். சிலுவையில் மரிப்பதற்கும் தம்மை ஒப்புக்கொடுக்கிறார்.

## அதிகாரம் - 14

சாத்தானால் இயேசுகிறிஸ்துவை ஒன்றும் செய்யமுடியவில்லை. அவரை மேற்கொள்ள முடியவில்லை. இயேசுகிறிஸ்துவிடத்தில் பாவமோ, பாவத்தின் கறைகளோ எதுவுமில்லை. இயேசுகிறிஸ்து தமது சுபாவத்தில் பாவக்கறைகள் எதுவும் இல்லாத பரிசுத்தராகயிருக்கிறார். அவர் பாவம் செய்யாதவர் மாத்திரமல்ல, அவரால் பாவமே செய்ய முடியாது. அவர் பரிசுத்தமானவர். ஆகையினால் சாத்தானுக்கு இயேசுகிறிஸ்துவிடத்தில் ஒன்றுமில்லாமல் போயிற்று.

**பிதா எனக்கு கட்டளையிட்டபடியே**

**நான் பிதாவில் அன்பாயிருக்கிறேன் என்றும், பிதா எனக்குக் கட்டளையிட்டபடியே செய்கிறேன் என்றும், உலகம் அறியும்படிக்கு இப்படி நடக்கும். எழுந்திருங்கள், இவ்விடம்விட்டுப் போவோம் வாருங்கள் என்றார் (யோவா 14:31).**

இயேசுகிறிஸ்து தமது பிதாவின் சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து சீஷர்களைவிட்டுப் புறப்பட்டுப்போகிறார். தமக்கு நியமிக்கப்பட்டிருக்கும் பாடுகளையும் மரணத்தையும் சந்திப்பதற்குத் தாமாகவே முன்வருகிறார். இயேசுகிறிஸ்து பிதாவில் அன்பாயிருக்கிறார் என்றும், பிதா தமக்குக் கட்டளையிட்டபடியே செய்கிறாரென்றும், உலகம் அறியும்படிக்கு இப்படி நடக்கிறது. இயேசுகிறிஸ்து இந்தச் சத்தியத்தை இதற்கு முன்பு பல சமயங்களில் உபதேசம்பண்ணியிருக்கிறார். தாம் உபதேசம்பண்ணிய இந்தச் சத்தியத்தை நிரூபிக்க வேண்டிய வேளை இப்போது வந்திருக்கிறது. இயேசுகிறிஸ்து தேவனுக்கும் மனுஷருக்கும் நடுவே மத்தியஸ்தராகயிருக்கிறார். தாம் பிதாவுக்குக் கீழ்ப்படிவதை இயேசுகிறிஸ்து இந்த உலகத்திற்குக் காண்பிக்கவேண்டும். தாம் பிதாவில் அன்பாயிருப்பதையும், பிதா தமக்கு கட்டளையிட்டபடியே தாம் செய்வதையும் இயேசுகிறிஸ்து இந்த உலகுக்கு காண்பிக்க வேண்டும்.

இயேசுகிறிஸ்து மனுஷர்மீது அன்பாகயிருக்கிறார். ஆகையினால் மனுக்குலத்தின் இரட்சிப்புக்காக கல்வாரி சிலுவையில் தம்முடைய ஜீவனையே ஒப்புக்கொடுத்து மரித்தார். இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணம், மனுஷர்மீது அவர் வைத்திருக்கும் அன்புக்குச் சான்றாக இருக்கிறது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பிதாவாகிய தேவனிடத்தில் அன்பாகயிருக்கிறார். கல்வாரி சிலுவையில் இயேசுகிறிஸ்து மரித்து, பிதா தமக்குக் கட்டளையிட்டபடியே செய்கிறதை நிரூபிக்கிறார். மனுக்குலத்தின் இரட்சிப்புகாகத் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்த இயேசுகிறிஸ்து, தம்முடைய மகிமைக்காகவும் கல்வாரி சிலுவையில் தமது ஜீவனை ஒப்புக்கொடுக்கிறார். இயேசுகிறிஸ்துவின் மரணம் பிதாவின் கட்டளைக்கு அவர் கீழ்ப்படிவதற்கு எடுத்துக்காட்டாயிருக்கிறது. “பிதா எனக்குக் கட்டளையிட்டபடியே செய்கிறேன்” என்பதே இயேசுகிறிஸ்துவின் சத்தியப் பிரமாணம். பிதாவாகிய தேவனிடத்தில் நாமும் அன்பாக இருப்போமென்றால், அவர் நமக்குக் கட்டளையிட்டபடியே நாமும் செய்யவேண்டும். கீழ்ப்படிதல் மூலமாகத்தான் நம்முடைய அன்பை வெளிப்படுத்த முடியும்.

தேவனுடைய கட்டளைக்கு யூதர்கள் கீழ்ப்படியவில்லை. அதற்கு எதிர்த்து நின்றார்கள். இயேசுகிறிஸ்துவோடு விவாதம்பண்ணினார்கள். ஆனால் நாமோ தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, அவரிடத்தில் நாம் வைத்திருக்கும் அன்பை வெளிப்படுத்த வேண்டும். சில சமயங்களில் தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிவதே நமக்குக் கடினமாக இருக்கலாம். நீடிய பொறுமையோடு பாடுகளை சகித்துக்கொள்ளவேண்டும்.

இயேசுகிறிஸ்து பிதாவில் அன்பாயிருப்பதையும், பிதா தமக்குக் கட்டளையிட்டபடியே அவர் செய்கிறாரென்பதையும் இந்த உலகம் அறியவேண்டும். அதற்காக இயேசுகிறிஸ்து தமக்கு முன்பாக நியமிக்கப்பட்டிருக்கும் பாடுகளைச் சந்தோஷமாக ஏற்றுக்கொள்கிறார். இயேசுகிறிஸ்து சிலுவை மரணத்திற்குக் கீழ்ப்படிந்தால்தான், அவர் பிதாவில் அன்பாயிருப்பதையும், பிதா தமக்குக் கட்டளையிட்டபடியே செய்கிறாரென்பதையும் இந்த உலகம் அறிந்துகொள்ளும். அதை நிரூபிப்பதற்கான வாய்ப்பு இப்போது வந்திருக்கிறது. ஆகையினால் இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களைப் பார்த்து “எழுந்திருங்கள் இவ்விடம் விட்டுப்போவோம் வாருங்கள்” என்று கூறுகிறார். சிலுவை மரணத்தைச் சந்திப்பதற்கு இயேசுகிறிஸ்து விரைந்து செயல்படுகிறார்.

## அதிகாரம் - 14

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாமும் விசுவாசமான வார்த்தைகளைப் பேசுவோம். நமக்குப் பாடுகள் தூரத்திலிருக்கும்போது "ஆண்டவரே, நீர் எங்களை எங்கு வழிநடத்தினாலும் நாங்கள் உம்மை பின்பற்றி வருவோம்" என்று விசுவாசத்தோடு சொல்லுவோம். பாடுகள் தூரத்திலிருக்கும்போது இதுபோன்ற விசுவாச வார்த்தைகளைப் பேசுவது மிகவும் எளிது. அந்தப் பாடுகள் நமக்கு அருகாமையில் வரும்போது நம்முடைய விசுவாசம் குறைந்துபோகும். வார்த்தைகளும் மாறிப்போகும். ஆனால் இயேசுகிறிஸ்துவோ, தம்முடைய சிலுவை மரணமும் பாடுகளும் அருகாமையிலிருக்கிறது என்பதை அறிந்தவுடன், "எழுந்திருங்கள் இவ்விடம் விட்டுப் புறப்பட்டு, அதைச் சந்திப்பதற்குப் போவோம் வாருங்கள்" என்று உற்சாகத்தோடு கூறுகிறார். பாடுகளை விட்டு விலகி ஓடிவிடாமல் அதைச் சந்திப்பதற்கு முன்னேறிச் செல்கிறார். இந்தப் பாடுகளை இயேசுகிறிஸ்து அனுபவிக்கும்போதுதான், அவர் பிதாவில் அன்பாயிருக்கிறார் என்பதையும், பிதா அவருக்குக் கட்டளையிட்டபடியே செய்கிறாரென்பதையும் இந்த உலகம் அறிந்துகொள்ளும்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களோடு பேசும்போது வார்த்தைகளை மிகவும் கவனமாகப் பயன்படுத்துகிறார். "இவ்விடம் விட்டுப் போவேன்" என்றோ, "நான் போகவேண்டும்" என்றோ இயேசுகிறிஸ்து சொல்லவில்லை. அதற்குப் பதிலாக "இவ்விடம் விட்டுப் போவோம்" என்று தம்முடைய சீஷர்களையும் தம்மோடு சேர்த்துக்கொள்கிறார். தம்முடைய சீஷர்களுக்கு ஒரு பிரச்சனையும் வராது என்று இயேசுகிறிஸ்து எங்கும் வாக்குப்பண்ணவில்லை. சீஷர்களுக்கு இந்த உலகத்தில் உபத்திரவங்கள் உண்டு. ஆனாலும் அந்த உபத்திரவங்களைச் சந்திப்பதற்கு, இயேசுகிறிஸ்து அவர்களுக்கு முன்பாகப் போகிறார். எல்லாவற்றிற்கும் இயேசுகிறிஸ்து அவர்களுக்கு முன்மாதிரியாக இருக்கிறார்.

இதுவரையிலும் இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களோடு ஆறுதலாகப் பேசிக்கொண்டிருந்தார். அவர்களுக்கு சமாதானத்தையும் சந்தோஷத்தையும் தரும் காரியங்களைப்பற்றி இயேசுகிறிஸ்து விரிவாக வாக்குத்தத்தம்பண்ணினார். சீஷர்களுடைய கலங்கின இருதயம் இப்போது ஆறுதலாக இருக்கிறது. இப்படியே இருந்துவிட்டால் நன்றாக இருக்குமென்று சீஷர்கள் எதிர்பார்ப்பார்கள். ஏனெனில் நமக்கு ஓரிடத்தில் எல்லாம் வசதியாக இருக்கும்போது அங்கேயே தங்கிவிடவேண்டுமென்று விரும்புவோம். மறுரூபமலையில் இயேசுகிறிஸ்து மறுரூபமானபோது, அவரோடுகூட வந்த சீஷர்கள் "ஆண்டவரே நாம் இங்கே இருப்பது நல்லது" என்று கூறிவிட்டு, அங்கு கூடாரம் போடுவதைப்பற்றி அவரிடம் பேசினார்கள்.

இயேசுகிறிஸ்துவின் ஆறுதலான உபதேசத்தைக் கேட்டு, அந்த உபதேசத்தையே தொடர்ந்து கேட்டுக்கொண்டிருக்க வேண்டும் என்று சீஷர்கள் விரும்பியிருக்கலாம். ஆனால் இயேசுகிறிஸ்துவோ அவர்களிடம் "எழுந்திருங்கள் இவ்விடம் விட்டுப்போவோம் வாருங்கள்" என்று கூறி அவர்களை அழைத்துச் செல்கிறார். தமக்கு முன்பாக நியமிக்கப்பட்டிருக்கும் பாடுகளைச் சந்திப்பதற்காக இயேசுகிறிஸ்து முன்னேறிப்போகிறார். சீஷர்கள் எல்லா சூழ்நிலைகளிலும் அவரைப் பின்பற்றிச் செல்லவேண்டும். சில சமயங்களில் இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுவது மறுரூபமலைக்கு மலை ஏறிச் செல்லும் அனுபவமாக இருக்கலாம். வேறு சில சமயங்களில் மறுரூப மலையிலிருந்து, மகிமையான தரிசனத்தைப் பார்த்துவிட்டு, கீழே இறங்கி வரும் அனுபவமாக இருக்கலாம். நாம் மேலே ஏறிப் போனாலும், கீழே இறங்கி வந்தாலும் இயேசுகிறிஸ்துவோடு போகவேண்டும். அவரோடு வரவேண்டும். எப்போதுமே அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்லவேண்டும்.

## அதிகாரம் - 15

இயேசுகிறிஸ்து தம்முடைய இறுதி இராப்போஜனத்தின் முடிவில், தம்முடைய சீஷர்களோடு உரையாடிய சம்பவம் இந்த அதிகாரத்திலும், இதற்கு அடுத்த அதிகாரத்திலும் விவரமாக எழுதப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போகப்போகிறார். அங்கு போவதற்கு முன்பாக சீஷர்களிடம் விடைபெற்றுச் செல்வதுபோல இந்த உரையாடல் அமைந்திருக்கிறது. இந்த அதிகாரத்தில் இயேசுகிறிஸ்து தம்முடைய உரையாடலில் நான்கு முக்கியமான சத்தியங்களைக்குறித்து பேசுகிறார். அவையாவன: 1. கனி (யோவா 15:1-8). 2. அன்பு (யோவா 15:9-17). பகை (யோவா 15:18-25). 4. தேற்றரவாளர் (யோவா 15:26,27).

**கனி**
**யோவா 15 : 1-8**

**யோவா 15:1. நான் மெய்யான திராட்சச்செடி, என் பிதா திராட்சத்தோட்டக்காரர்.**

**யோவா 15:2. என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப்போடுகிறார்; கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார்.**

**யோவா 15:3. நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள்.**

**யோவா 15:4. என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாதது போல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள்.**

**யோவா 15:5. நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள் ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது.**

**யோவா 15:6. ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான்; அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள்; அவைகள் எரிந்துபோம்.**

**யோவா 15:7. நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்.**

**யோவா 15:8. நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்.**

**திராட்சச்செடி.**

**நான் மெய்யான திராட்சச்செடி, என் பிதா திராட்சத்தோட்டக்காரர் (யோவா 15:1).**

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் ஆவியின் கனியைக் குறித்துப் பேசுகிறார். இந்தச் சத்தியத்தை விளக்குவதற்கு செடியை ஓர் உவமையாகக் கூறுகிறார். "நான் மெய்யான திராட்சச்செடி" என்று இயேசுகிறிஸ்து தம்மைப்பற்றிக் குறிப்பிடுகிறார். அவர் தம்மைப்பற்றி ஒப்பிட்டுக் கூறும்போது மிகவும் சாதாரணமான, எளிமையான காரியங்களோடுதான் தம்மை எப்போதும் ஒப்பிடுவது வழக்கம். அவர் திராட்சச் செடியாகயிருக்கிறார். திராட்சத்தோட்டத்தில் நட்டப்பட்டிருக்கும் செடியாக இருக்கிறவர்தான் இயேசுகிறிஸ்து. அவர் யாரும் நட்டப்படாமல், தானாக முளைக்கிற களைகளைப் போன்றவரல்ல. இயேசுகிறிஸ்து பூமியில் நாட்டப்பட்டிருக்கிறார். அவரே வார்த்தை மாம்சமானவர்.

திராட்சச்செடியானது வளரும்போது அது படர்ந்து வளரும். இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் உலகம் முழுவதும் பிரசங்கிக்கப்படும்போது, அவருடைய இரட்சிப்பு முழு உலகத்தாருக்கும் படர்ந்து கிடைக்கும். திராட்சச்செடியின் கனி தேவனுக்கு மகிமையைக்கொடுக்கிறது. மனுஷருக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கிறது. இயேசுகிறிஸ்துவினுடைய மத்தியஸ்தம் பண்ணும் ஊழியத்தின் கனியும், இதுபோலவே தேவனுக்கு மகிமையாகவும், மனுஷருக்குப் பிரியமாகவும் இருக்கும்.

## அதிகாரம் - 15

இயேசுகிறிஸ்துவே மெய்யான திராட்சச்செடி. இந்த உலகத்தில் திராட்சச்செடியாக இல்லாதவர்கள்கூட, தங்களைத் திராட்சச்செடி என்று கூறி மாய்மாலம் பண்ணுகிறார்கள். அவர்களெல்லோரும் கள்ளக்கிறிஸ்துக்களாக இருக்கிறார்கள். இவர்கள் கனிகொடாத மரத்தைப்போன்றவர்கள். பொய்யின் பிள்ளைகள். பொய்யை மாத்திரமே பேசுகிறவர்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவாகிய திராட்சச்செடியோ மெய்யான திராட்சச்செடியாக இருக்கிறார். அவர் யாரையும் வஞ்சிப்பதில்லை. மாய்மாலம் பண்ணுவதில்லை. அவர் கனிகொடுக்கிறவராகவே இருக்கிறார்.

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் திராட்சச்செடியின் கொடிகளாக இருக்கிறார்கள். இந்தத் திராட்சச்செடிக்கு இயேசுகிறிஸ்துவே வேராக இருக்கிறார். "நாம் வேரைச் சுமக்கவில்லை. வேர் தான் நம்மைச் சுமக்கிறது" (ரோம 11:18). வேரானது பூமியிலிருந்து சத்தான ஆகாரத்தை உறுஞ்சி, தன் செடியிலுள்ள கொடிகளுக்கெல்லாம் கொடுக்கிறது. வேரோடு சார்ந்திருக்கும் எல்லா கொடிகளும் வளரும், கனி தரும். எல்லா கொடிகளுக்கும் வேரே ஆதாரமாக இருக்கிறது. இதுபோலவே இயேசுகிறிஸ்துவின் பிள்ளைகளாகிய நமக்கு, எல்லா ஆதரவுகளும், எல்லா ஆதாரங்களும் இயேசுகிறிஸ்துவிடமிருந்தே வருகிறது.

ஒரு திராட்சச் செடியில் ஏராளமான கொடிகள் இருக்கும். இந்தக் கொடிகள் எல்லாவற்றிற்குமே ஒரே ஒரு வேர்தான் இருக்கும். எல்லா கொடிகளும் சேர்ந்து ஒரே திராட்சச்செடியாக இணைக்கப்பட்டிருக்கிறது. அதுபோலவே, இயேசுகிறிஸ்துவின் பிள்ளைகளாகிய நாமோ வெவ்வேறு தேசத்தில் இருந்தாலும், நம்முடைய நிறங்களும் பாஷைகளும் வித்தியாசமாக இருந்தாலும், நம்முடைய கலாச்சாரங்கள் வெவ்வேறாக இருந்தாலும், நாம் எல்லோருமே இயேசுகிறிஸ்துவில் சங்கமமாக இருக்கிறோம். இயேசுகிறிஸ்துவே நம்முடைய ஐக்கியத்திற்கு மையமாகவும் ஆதாரமாகவும் இருக்கிறவர்.

பிதாவாகிய தேவன் திராட்சத் தோட்டக்காரராக இருக்கிறார். அவரே திராட்சத்தோட்டத்தில், திராட்சச்செடியை நட்டு, அதை வளர்க்கிறவர். பூமி கர்த்தருக்குரியது. ஆனாலும் நிலத்தைப் பண்படுத்தவில்லையென்றால், அதில் செடி வளராது. வளர்ந்தாலும் கனி தராது. நிலத்தைக் கொத்தி, செடியை நட்டு, எருப்போட்டு, நீர்ப் பாய்ச்சி பராமரித்தால்தான், மரம் வளர்ந்து கனிதரும். திராட்சத்தோட்டத்திற்குத் தேவனே சொந்தக்காரர். அவர் திராட்சத்தோட்டக்காரராக இருந்தாலும், அந்தத் தோட்டத்தில் திராட்சச்செடியை நட்டு, அதையும், அதன் கொடிகளையும் பராமரிக்கிற வேலைக்காரராகவும் இருக்கிறார். தேவனைப்போல தம்முடைய திராட்சத்தோட்டத்தை ஞானமாகவும் கவனமாகவும் பாதுகாத்துப் பராமரித்து வருகிற தோட்டக்காரர் வேறு யாருமேயில்லை. கர்த்தருடைய சபை அவருடைய திராட்சத்தோட்டமாக இருக்கிறது. சபை வளர்ந்து கனி தரவேண்டுமென்றால், தேவனாகிய திராட்சத்தோட்டக்காரரின் பாதுகாப்பும் பராமரிப்பும் சபைக்குத் தேவைப்படுகிறது.

### கனி கொடுக்கிற கொடி

**என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப்போடுகிறார்; கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார் (யோவா 15:2).**

இயேசுகிறிஸ்து தம்மைத் திராட்சச்செடியென்று உவமையால் கூறிவிட்டு, இந்த உவமையின் மூலமாக நம்முடைய கடமையையும் உபதேசம்பண்ணுகிறார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், திராட்சக் கொடிகளைப் போல இருக்கிறோம். நாம் கனி தரவேண்டும். திராட்சக்கொடியிலிருந்து திராட்சப்பழங்களை எதிர்பார்ப்பதுபோல, நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திலிருந்து, நாம் ஆவியின் கனிகளை எதிர்பார்க்க வேண்டும். நம்முடைய பேச்சிலும், சிந்தனையிலும், செயலிலும், ஜீவியத்திலும் நாம் ஆவியின் கனியை வெளிப்படுத்திக்கொண்டே இருக்கவேண்டும். நாம் கனிகொடுக்கும் ஜீவியம் ஜீவிப்பதன் மூலமாக தேவனை மகிமைப்படுத்துகிறோம். பிறருக்கு நன்மை செய்கிறோம். தேவன் நமக்கு நன்மை செய்கிறார். நாம் தொடர்ந்து கனிகொடுக்கிறோம்.

## அதிகாரம் - 15

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் பேசிக்கொண்டிருக்கும்போது, அவர்கள் ஒவ்வொருவரும் அதிக கனிகளைக் கொடுக்கவேண்டுமென்று கூறுகிறார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் நீதியின் கனிகளைக் கொடுக்கவேண்டும். நம்முடைய கனியில் கிறிஸ்துவைப்பற்றிய அறிவின் சாரம் இருக்கவேண்டும். விசுவாசிகள் ஒவ்வொருவரும் கனி கொடுக்கும்போது, அந்த ஆவியின் கனியில் நீதியின் சுவையும், கிறிஸ்துவைப்பற்றிய அறிவின் சுவையும் கலந்திருக்கவேண்டும்.

கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ அதைப் பிதாவாகிய தேவன் அறுத்துப் போடுகிறார். இது கனிகொடாதிருக்கிற கொடிகளுக்கு நியமிக்கப்பட்டிருக்கும் அழிவு. திராட்சச்செடியில் ஏராளமான கொடிகள் இருக்கும். அவையெல்லாமே கனிகொடுப்பதில்லை. ஒரு சில கொடிகள் கனி கொடுக்கும். வேறு சில கொடிகள் கனி கொடுக்காது. ஏராளமானோர் தாங்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதாக சொல்லுகிறார்கள். ஆனால் அவர்களெல்லோருமே ஆவியின் கனியைக் கொடுப்பதில்லை. ஏதோ ஒரு வகையில் இப்படிப்பட்ட கொடிகள் செடியோடு ஒட்டிக்கொண்டிருக்கிறது.

இதைப்போலவே, கனிகொடாத விசுவாசிகளும் ஊழியம் என்னும் பெயராலோ, அல்லது பாரம்பரியம் என்னும் பெயராலோ இயேசுகிறிஸ்துவோடு ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் பார்ப்பதற்கு செடியோடு ஒட்டிக்கொண்டிருக்கும் கொடிகளைப்போல இருப்பார்கள். ஆனால் விரைவில் உலர்ந்துபோவார்கள். இதைப்போலவே கனிகொடாத விசுவாசிகளும் இப்போது விசுவாசிகளைப்போல இருப்பார்கள். ஆனாலும் வெகுவிரைவில் இவர்கள் உலர்ந்த எலும்புகளைப்போல மாறிவிடுவார்கள்.

கனிகொடாத ஊழியக்காரர்கள் உண்மையில்லாத ஊழியக்காரர்கள். இவர்கள் பெயரளவில் ஊழியம் செய்கிறார்கள். இவர்களிடத்தில் கனி எதையும் எதிர்பார்க்க முடியாது. இப்படிப்பட்டவர்களுக்கு அழிவு நியமிக்கப்பட்டிருக்கிறது. கனிகொடாதிருக்கிற கொடிகள் எதுவோ அவற்றைப் பிதாவானவர் அறுத்துப்போடுகிறார் என்று இயேசுகிறிஸ்து எச்சரித்துக் கூறுகிறார்.

கனிகொடுக்கிற கொடி எதுவோ அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி பிதாவானவர் அதைச் சுத்தம்பண்ணுகிறார். ஒரு கொடி கனிகொடுக்கும்போது, அது அதிக கனிகொடுக்குமாறு ஆசீர்வதிக்கப்படுகிறது. கனி கொடுப்பதற்காக, அதிக கனிகொடுக்கிற சுபாவம், அதற்கு வெகுமதியாகக் கொடுக்கப்படுகிறது. ஒரு கொடி கனிகொடுத்தாலும், அது இன்னும் அதிகமான கனிகொடுப்பதற்காக, அந்தக் கொடிகள் சுத்தம்பண்ணப்படும். அந்தக் கொடியிலுள்ள கனிகொடுக்கும் சுபாவம் இதன் மூலமாக விருத்தியடையும்.

விசுவாசிகளாகிய நம்முடைய ஜீவியத்தில் நாம் கனிகொடுக்கும்போது, தேவன் நம்மை அதிக கனிகொடுக்கும் வண்ணமாக சுத்திகரிக்கிறார். நம்முடைய சிந்தனைகள், செயல்கள், பேச்சுக்கள் எல்லாவற்றையும் சுத்தம்பண்ணுகிறார். அதிக கனிகொடுப்பதற்கு தடையாக இருக்கும் எல்லா தீயசுபாவங்களையும் நம்மைவிட்டு அகற்றிப்போடுகிறார். ஏற்றவேளை வரும்போது கொடிகளையெல்லாம் தோட்டக்காரர் சுத்தம்பண்ணுவதுபோல, பிதாவாகிய தேவனும் அந்தந்த காலங்களில் நம்மைச் சுத்திகரித்துக்கொண்டேயிருக்கிறார். நம்முடைய ஜீவியத்தில் தேவன் நம்மை சுத்தம்பண்ணும்போது, கொடியிலிருந்து சில பகுதிகள் வெட்டப்படுவதுபோல, தேவனும் நம்முடைய ஜீவியத்தின் சில அம்சங்களை நீக்கிப்போடலாம். இவையெல்லாமே தோட்டக்காரராகிய தேவனுடைய பராமரிக்கும் கிரியை. நாம் அதிக கனிகொடுக்க வேண்டும் என்பதற்காகவே, நம்முடைய பிரதான தோட்டக்காரராகிய தேவன் நம்மைச் சுத்திகரிக்கிறார்.

**சுத்தமாயிருக்கிறீர்கள்**

**நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள் (யோவா 15:3).**

இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து அவருடைய உபதேசங்களைக் கேட்கிறவர்களுக்குத் தெய்வீக ஆசீர்வாதங்கள் உண்டு. இயேசுகிறிஸ்து நமக்குச் சொன்ன உபதேசத்தினாலே நாம் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறோம். இயேசுகிறிஸ்துவின் சீஷர்களும் அவருடைய உபதேசத்தினால் சுத்தமாயிருக்கிறார்கள். யூதாஸ்காரியோத்து இயேசுகிறிஸ்துவை விட்டும், சீஷர்களைவிட்டும் விலகிப்போய்விட்டான். ஆகையினால் சீஷர்களின் கூட்டம் இப்போது சுத்தமாயிருக்கிறது. யூதாஸ்காரியோத்து சீஷர்களைவிட்டு வெளியேறிப்போகும் வரையிலும் அவர்கள் சுத்தமாயில்லை.

## அதிகாரம் - 15

இயேசுகிறிஸ்துவின் ஒவ்வொரு சீஷரும் பரிசுத்தமாயிருக்கிறார்கள். கிறிஸ்துவின் சத்தியத்தினாலே அவர்கள் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறார்கள். அவருடைய வசனமே சத்தியம் (யோவா 17:17). இந்தச் சத்தியமும் சிலாக்கியமும் எல்லா விசுவாசிகளுக்கும் அருளப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவின் வார்த்தை நம்மெல்லோருக்கும் உபதேசிக்கப்படுகிறது. கிறிஸ்துவின் வார்த்தையில் சுத்திகரிக்கும் நீதி இருக்கிறது. அக்கினி தங்கத்தை உருக்கி புடமிட்டுச் சுத்தப்படுத்துவதுபோல கர்த்தருடைய வசனம் நம்மைப் புடமிட்டுச் சுத்தப்படுத்துகிறது.

நாம் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் பிதாவாகிய தேவன் மகிமைப்படுவார். நாமும் இயேசுகிறிஸ்துவுக்குச் சீஷர்களாயிருப்போம். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் மிகுந்த கனிகளைக் கொடுக்கும் வண்ணமாக பரிசுத்தமாயிருக்க வேண்டும். நம்முடைய நற்கிரியைகள் மூலமாகப் பரலோகத்திலிருக்கிற பிதாவின் நாமம் மகிமையடையவேண்டும். இயேசு கிறிஸ்துவின் சீஷர்களும் கனிகொடுக்க வேண்டும். அவருடைய விசுவாசிகளாகிய நாமும் கனிகொடுக்கவேண்டும்.

நாம் இயேசுகிறிஸ்துவில் நிலைத்திருக்கிறோம் என்பதை, கனிகொடுப்பதன் மூலமாகத்தான் நாம் நிரூபிக்க முடியும். நம்முடைய மிகுந்த கனியின் மூலமாக நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமம் துதிக்கப்படவேண்டும். நாம் எவ்வளவு அதிகமாக கனிகொடுக்கிறோமோ, அவ்வளவு அதிகமாகத் தேவனுடைய நாமம் மகிமைப்படும்.

**என்னில் நிலைத்திருங்கள்**

**என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாதது போல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள். நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள் ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது (யோவா 15:4,5).**

நாம் அதிக கனிகொடுக்க வேண்டுமென்றால், இயேசுகிறிஸ்துவில் நாம் நிலைத்திருக்கவேண்டும். "என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்" என்று இயேசுகிறிஸ்து வாக்குப்பண்ணுகிறார். இயேசுகிறிஸ்துவிடம் யாரெல்லாம் வருகிறார்களோ, அவர்களெல்லோரும் இயேசுகிறிஸ்துவில் நிலைத்திருக்கவேண்டும். அப்போது அவரும் அவர்களில் நிலைத்திருப்பார். நாம் இயேசுகிறிஸ்துவில் நிலைத்திருக்கும்போது, அவர் நம்மில் நிலைத்திருப்பாரோ அல்லது நிலைத்திருக்கமாட்டாரோ என்னும் சந்தேகமோ அல்லது பயமோ நமக்குத் தேவையில்லை. இயேசுகிறிஸ்துவுக்கும் அவருடைய விசுவாசிகளுக்கும் இடையிலுள்ள ஐக்கியம், அவரைப் பொறுத்தளவில் ஒருபோதும் மாறுவதில்லை. அவர் வாக்குமாறாதவர். தேவனோடுள்ள நம்முடைய ஐக்கியம் இயேசுகிறிஸ்துவினால் ஒருபோதும் முறிக்கப்படுவதில்லை.

திராட்சச்செடியில் கொடிகளைப்போல இருக்கும் நாம், திராட்சச்செடியாகிய இயேசுகிறிஸ்துவில் எப்போதும் நிலைத்திருக்கவேண்டும். அப்போதுதான் திராட்சச்செடியின் வேரிலிருந்து சத்தான ஆகாரம் கொடிகளுக்குக் கிடைக்கும். கொடிகள் செடியோடு நிலைத்திருந்தால்தான் அதற்குக் கிடைக்கும் ஆகாரம் தொடர்ந்து கிடைத்துக்கொண்டிருக்கும்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில், நாம் இயேசுகிறிஸ்துவில் நிலைத்திருந்தால் மாத்திரமே, நம்மால் கனிகொடுக்க முடியும். நிலைத்திருக்காவிட்டால் கனிகொடுக்க முடியாது. "கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால், அது தானாய் கனிகொடுக்கமாட்டாததுபோல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால் கனி கொடுக்கமாட்டீர்கள்" என்று இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் கூறுகிறார். நம்முடைய சந்தோஷமும், சமாதானமும் நிலைத்திருக்க வேண்டுமென்றால் நாம் இயேசுகிறிஸ்துவிலும் நிலைத்திருக்கவேண்டும். இயேசு கிறிஸ்துவில் நிலைத்திருக்கவில்லையென்றால் நாம் உலர்ந்த எலும்புகளைப்போல ஜீவனில்லாதவர்களாகவே இருப்போம். ஜீவனில்லாத கொடியினால் கனிதரமுடியாது. நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் நன்மை செய்யவேண்டுமானால் கிறிஸ்துவில் நிலைத்திருக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது.

## அதிகாரம் - 15

இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைத்து, அவரிடத்தில் நாம் தொடர்ந்து அன்புகூரும்போது, நம்மால் அதிக கனிகளைக் கொடுக்கமுடியும். நம்முடைய விசுவாசமும் நிலைத்திருக்கவேண்டும். அன்பும் நிலைத்திருக்கவேண்டும். தேவனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைத்து ஜீவிப்பதுதான் ஆசீர்வாதமான ஜீவியம். இந்த உலகத்தில் இதைவிட பெரிய ஆசீர்வாதம் வேறு எதுவுமில்லை. நாம் நன்மை செய்யவேண்டியது அவசியம். இயேசுகிறிஸ்துவில் நிலைத்திருந்தால் மாத்திரமே நம்மால் நன்மை செய்யமுடியும். ஏனெனில் நமக்கு நன்மை செய்யும் சுபாவமே இயேசுகிறிஸ்துவிடமிருந்துதான் வருகிறது.

"என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" என்று இயேசுகிறிஸ்து கூறுகிறார். எல்லா நன்மையையும் வேராக இருக்கும் இயேசுகிறிஸ்துவிடமிருந்துதான் பெற்றுக்கொள்கிறோம். இயேசுகிறிஸ்து அல்லாமல் நம்மால் பெரிய காரியங்களை மாத்திரமல்ல, எந்தக் காரியத்தையும் செய்யமுடியாது. நாம் செய்கிற எந்தக் கிரியையையும் தேவனுக்குப் பிரியமாகயிராது. நாம் கொடுக்கிற கனி தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்தாது. அது நமக்கும் பிரயோஜனமாகயிராது.

நம்முடைய ஜீவியத்தின் ஒவ்வொரு பகுதியிலும் நாம் இயேசுகிறிஸ்துவையே சார்ந்திருக்கவேண்டும். ஒரு கொடி படரும்போது அது சுவற்றிலோ, அல்லது வேறு மரத்தின் ஆதரவிலோ படரலாம். இந்த ஆதரவு நல்லதுதான். ஆனாலும் அந்தக் கொடியானது அதன் செடியோடு நிலைத்திருந்தால் மாத்திரமே, அதன் வேரிலிருந்து சத்தான ஆகாரத்தைப் பெற்றுக்கொண்டு, கனிதரமுடியும். செடியோடு இணைக்கப்படவில்லையென்றால் கொடி பட்டுப்போகும். அதுபோலவே விசுவாசிகளாகிய நாம் இயேசுகிறிஸ்துவில் நிலைத்திருக்கவில்லையென்றால் உலர்ந்த எலும்புகளைப்போல ஜீவனில்லாமல் பட்டுப்போவோம்.

**என்னில் நிலைத்திராவிட்டால்**

**ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான்; அப்படிப் பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள்; அவைகள் எரிந்துபோம் (யோவா 15:6).**

நாம் இயேசுகிறிஸ்துவில் நிலைத்திராமல், அவரைவிட்டு விலகிப்போய்விட்டால், நம்முடைய முடிவு பரிதாபமாக அழிந்துபோகும். "ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால் வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்துபோவான்" என்று இயேசுகிறிஸ்து, தம்மில் நிலைத்திராமல், தம்மைவிட்டு விலகிப்போகிறவர்களைக்குறித்து எச்சரித்துக் கூறுகிறார். ஒரு சிலர் இயேசுகிறிஸ்துவில் நிலைத்திராமலேயே, தாங்கள் அவரில் நிலைத்திருப்பதாக மாய்மாலம் பண்ணுகிறார்கள். மாய்மாலக்காரரின் முடிவு அழிவாகவே இருக்கும். செடியில் நிலைத்திராத கொடிகள் உலர்ந்துபோகும். அவைகளைச் சேகரித்து அக்கினியிலே போட்டு எரித்துவிடுவார்கள். ஏனெனில் உலர்ந்துபோன கொடிகள் செடிக்குப் பாரமாகவே இருக்கும்.

இயேசுகிறிஸ்துவில் நிலைத்திராமல், அவரைவிட்டு விலகிப்போய்விட்டால், அவரும் அவர்களை விலக்கிப்போடுவார். தம்மில் நிலைத்திராதவர்களை இயேசுகிறிஸ்து தம்மைவிட்டு வெளியேற்றிவிடுவார். ஒரு மரத்திலிருந்து பட்டுப்போன கிளை கீழே முறிந்து விழுவதுபோல, இயேசுகிறிஸ்துவை விட்டு விலகிப்போனவர்களும் தங்கள் ஜீவியத்தில் ஜீவனில்லாமல், ஆவிக்குரிய ரீதியாக மரித்துப்போய், அவரைவிட்டு நீங்கிப்போவார்கள். ஒரு சிலர் கிறிஸ்துவில் சிறிது காலம் நிலைத்திருப்பார்கள். அதன்பின்பு அவரைவிட்டு விலகிப்போவார்கள். இயேசுகிறிஸ்து தம்முடைய நீடிய பொறுமையினால் அவர்களைத் தம்மிடத்தில் சேர்த்துக்கொள்வதற்கு ஆவலாயிருப்பார். ஆனாலும் அவர்கள் துணிகரமாக இயேசுகிறிஸ்துவைவிட்டு விலகிப் போகும்போது, அவர் அவர்களுடைய ஆவியோடு தொடர்ந்து போராடுவதில்லை. கனிகொடுக்காத கொடிகள் இலையும் கொடுப்பதில்லை. பிரயோஜனமற்ற இப்படிப்பட்ட கொடிகளை மனுஷர் சேர்த்து அக்கினியிலே போடுகிறார்கள்.

## அதிகாரம் - 15

சாத்தானுடைய பிரதிநிதிகள்தான், கனிகொடாமல் உலர்ந்துபோன கொடிகளை பொறுக்கி எடுத்து, அவற்றைத் தங்களுக்கு எளிதில் இரையாக்கிப்போடுகிறார்கள். அதை அவர்கள் அக்கினியிலே போடுகிறார்கள். இயேசுகிறிஸ்து இந்த உவமையை மிகவும் சாதாரணமாகக் கூறினாலும், கிறிஸ்துவில் நிலைத்திராதோருக்கு எச்சரிப்பின் வார்த்தைகளாகவே இந்த உபதேசத்தைக் கூறுகிறார். கிறிஸ்துவில் நாம் நிலைத்திராவிட்டால் நமக்கு நிச்சயம் அழிவு வரும்.

**நிலைத்திருந்தால்**

**நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும். நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள் (யோவா 15:7,8).**

இயேசு கிறிஸ்துவில் நிலைத்திருப்போருக்குத் தேவனுடைய சமுகத்தில் சிலாக்கியமும் ஆசீர்வாதமும் கிடைக்கும். "நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்" என்று இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடத்தில் வாக்குப்பண்ணுகிறார். நாம் இயேசுகிறிஸ்துவில் நிலைத்திருப்பதைக் காத்துக்கொள்ளவேண்டும். "என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்" (யோவா 15:4) என்று இயேசுகிறிஸ்து ஏற்கெனவே கூறிய உபதேசத்தை இங்கு மறுபடியுமாகக் கூறுகிறார். "நீங்கள் என்னிலும்" என்று கூறிவிட்டு, தம்மைப்பற்றிக் கூறும்போது, "என் வார்த்தை உங்களிலும் நிலைத்திருந்தால்" என்று கூறுகிறார். இயேசுகிறிஸ்துவினுடைய வார்த்தையில்தான் நாம் அவரை ஏற்றுக்கொள்கிறோம், அவரில் நிலைத்திருக்கிறோம். இயேசுகிறிஸ்துவின் வார்த்தை நம்முடைய இருதயத்தில் அதிகமாக வாசம்பண்ணும்போது, கிறிஸ்து அங்கு அதிகமாக வாசம்பண்ணுகிறார்.

நாம் வீட்டில் வாசம்பண்ணுவதுபோல, கிறிஸ்துவின் வசனமும் நம்மிடத்தில் வாசம்பண்ணும்போது, நாம் கிறிஸ்துவில் வாசம்பண்ணுகிறோம். அவர் நம்மில் வாசம்பண்ணுகிறார். நாம் கிறிஸ்துவில் நிலைத்திருக்கிறோம். அவர் நம்மில் நிலைத்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவோடு நாம் வைத்திருக்கிற ஐக்கியம் நிலைத்திருக்க வேண்டும். நம்முடைய வேண்டுதல்களினாலும், விண்ணப்பங்களினாலும் நாம் அவரோடு தொடர்ந்து தொடர்பு கொள்ளவேண்டும். அப்போது அவர் "நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்" என்று நமக்கு வாக்குப்பண்ணுகிறார். நாம் தேவனிடத்தில் ஒரு காரியத்தைக் கேட்கும்போது, அதைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்னும் வாஞ்சை மாத்திரமே நம்மிடத்தில் நிரம்பியிருக்கும். நாம் கேட்டுக்கொண்டதை இயேசுகிறிஸ்துவிடமிருந்து பெற்றுக் கொள்ளும்போது நமக்கு மிகுந்த சந்தோஷம் உண்டாகும்.

நாம் இயேசுகிறிஸ்துவிலும், அவருடைய வார்த்தை நம்மிலும் நிலைத்திருந்தால் மாத்திரமே, நாம் கேட்டுக்கொள்வதைத் தேவனிடமிருந்து பெற்றுக்கொள்வோம். நாம் கிறிஸ்துவிலும், அவருடைய வார்த்தை நம்மிலும் நிலைத்திருக்கும்போது, நம்முடைய சுயஇஷ்டப்படி நாம் ஜெபிக்கமாட்டோம். தேவனுக்குச் சித்தமானதை மாத்திரமே அவரிடத்தில் கேட்டுக்கொள்வோம். தேவனுடைய வார்த்தை நம்மிடத்தில் நிலைத்திருக்கும்போது, அவருடைய வாக்குத்தத்தங்களும் நமக்குள் வாசம்பண்ணும். நாம் ஜெபிக்கும்போது தேவன் கொடுத்திருக்கும் வாக்குத்தத்தங்களை அவருடைய சமுகத்தில் பணிவோடும், பயபக்தியோடும் ஏறெடுப்போம். நமக்குள் வாசம்பண்ணுகிற இயேசுகிறிஸ்து, நம்முடைய ஜெபத்தின் வார்த்தைகளை, ஒழுங்குபடுத்தித் தருகிறார்.

**அன்பு**
**யோவா 15 : 9-17**

**யோவா 15:9. பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்; என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள்.**

**யோவா 15:10. நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறதுபோல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்.**

## அதிகாரம் - 15

**யோவா 15:11. என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும் படிக்கும், இவைகளை உங்களுக்குச் சொன்னேன்.**

**யோவா 15:12. நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது.**

**யோவா 15:13. ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை.**

**யோவா 15:14. நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள்.**

**யோவா 15:15. இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்லுகிறதில்லை, ஊழியக்காரன் தன் எஜமான் செய்கிறதை அறியமாட்டான். நான் உங்களைச் சிநேகிதர் என்றேன், ஏனெனில் என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்.**

**யோவா 15:16. நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்; நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன்.**

**யோவா 15:17. நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்றே இவைகளை உங்களுக்குக் கற்பிக்கிறேன்.**

**பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல**

**பிதா என்னில் அன்பாயிருக்கிறது போல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்; என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள் (யோவா 15:9).**

இயேசுகிறிஸ்து அன்பாகவேயிருக்கிறார். அன்பாகயிருக்கிற இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் அன்பைக்குறித்து உபதேசம்பண்ணுகிறார். இயேசுகிறிஸ்து அன்பைப்பற்றி கூறும் உபதேசத்தில் நான்கு அம்சங்கள் இடம்பெற்றுள்ளன. அவையாவன: 1. பிதா தம்மிடத்தில் அன்பாயிருப்பது. 2. தாம் தம்முடைய சீஷர்களிடத்தில் அன்பாயிருப்பது. 3. சீஷர்கள் தம்மிடத்தில் அன்பாயிருப்பது. 4. சீஷர்கள் ஒருவருக்கொருவர் அன்பாயிருப்பது.

பிதாவாகிய தேவன் இயேசுகிறிஸ்துவில் அன்பாயிருக்கிறார். இதைச் சொல்லும்போது "பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல" என்னும் வாக்கியத்தை இயேசுகிறிஸ்து பயன்படுத்துகிறார். ஒருவரும் கெட்டுப்போகாமல், எல்லோரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதற்காக, பிதாவானவர் தம்முடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை இந்த உலகத்திற்குத் தந்தருளி, இந்த உலகத்தின்மீது இவ்வளவாய் அன்புகூர்ந்திருக்கிறார். பிதாவாகிய தேவன் இந்த உலகத்து ஜனங்கள்மீது, ஒரு தகப்பன் தன் பிள்ளைகள்மீது அன்புகூருவதுபோல அன்புகூருகிறார். ஆனால் இந்த உலகமோ பிதாவாகிய தேவனிடத்தில் அன்புகூராமல் அவரைப் பகைக்கிறது.

இயேசுகிறிஸ்து தம்முடைய பிதாவின் அன்பிலே நிலைத்திருக்கிறார். இயேசு கிறிஸ்துவின் அன்பு நிலைத்திருக்கிற படியினால், தம்முடைய பாடுகள் வழியாக சந்தோஷமாகக் கடந்துசெல்கிறார். இதனால் பிதாவாகிய தேவன் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின்மீது அன்பில் நிலைத்திருக்கிறார்.

இயேசுகிறிஸ்து தம்முடைய பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறார். இயேசுகிறிஸ்து மீட்பின் பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்து நமக்கு மீட்பை இலவசமாகப் பெற்றுக்கொடுத்திருக்கிறார். குமாரன் பிதாவின் அன்பில் நிலைத்திருப்பதினால், நம்மையும் அந்த அன்புக்கு மறுபடியும்ஒப்புரவாக்கியிருக்கிறார்.

## அதிகாரம் - 15

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போகிறார். போகும்போது தாம் அவர்கள்மீது வைத்திருக்கும் தம்முடைய அன்பை உறுதிபண்ணுகிறார். தம்முடைய அன்பு எப்படிப்பட்டது என்பதை, இயேசுகிறிஸ்து விவரிக்கும்போது "பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்" என்று கூறுகிறார். பிதா இயேசுகிறிஸ்துவிடத்தில் அன்பாயிருக்கிறார். பிதாவின் அன்புக்கு இயேசுகிறிஸ்து பாத்திரராகயிருக்கிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடத்தில் அன்பாயிருக்கிறார். ஆனால் சீஷர்களோ இயேசுகிறிஸ்துவின் அன்புக்குப் பாத்திரராயில்லை.

பிதாவாகிய தேவன் இயேசுகிறிஸ்துவில் அன்புகூரும்போது, தம்முடைய குமாரனிடத்தில் அன்புகூருவதுபோல அன்புகூருகிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடத்தில் அன்புகூரும்போது, தம்முடைய பிள்ளைகளிடத்தில் அன்புகூருவதுபோல அன்புகூருகிறார். பிதாவாகிய தேவன் இயேசுகிறிஸ்துவிடத்தில் பிரியமாயிருக்கிறார். பிதாவாகிய தேவன் இயேசுகிறிஸ்துவில் நம்மிடத்திலும் பிரியமாயிருக்கிறார். கிறிஸ்துவுக்குப் பிரியமானவர்களாகிய நம்மைப் பிதாவாகிய தேவன் தம்முடைய குமாரனில் அங்கீகரிக்கிறார்.

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் அவருடைய அன்பிலே நிலைத்திருக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவில் யாரெல்லாம் அன்பாயிருக்கிறார்களோ, அவர்களெல்லோரும் அவருடைய அன்பில் நிலைத்திருக்கவும் வேண்டும். இயேசுகிறிஸ்துவில் தாங்கள் வைத்திருக்கும் அன்பைக் காத்துக்கொள்ளவேண்டும். அப்போதுதான் விசுவாசிகளுக்கு வரும் எல்லா பிரச்சனைகளும் நமக்குப் பாரமானவைகளாகயிராமல் இலகுவாகயிருக்கும். நாம் கிறிஸ்துவுக்காக பாடுகளையும் வேதனைகளையும் அனுபவிக்கும்போது, அவரிடத்தில் நாம் வைத்திருக்கும் அன்பு தணிந்துபோகாமல், பற்றியெரியவேண்டும்.

**என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்**

**நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறதுபோல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள் (யோவா 15:10).**

இயேசுகிறிஸ்து தம்முடைய பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறார். அதுபோல சீஷர்களும் அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கவேண்டும். அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டால் மாத்திரமே அவருடைய அன்பில் நிலைத்திருக்க முடியும். இது இயேசுகிறிஸ்து தம்முடைய பிள்ளைகளுக்குக் கொடுக்கும் வாக்குத்தத்தமாகும். இயேசுகிறிஸ்துவின் அன்பில் நமக்கு ஆறுதல் உண்டு. அடைக்கலம் உண்டு. அவர் நாம் தங்கியிருக்கும் தாபரிக்கிறஸ்தலமாக இருப்பார். கிறிஸ்துவின் அன்பில் நமக்குப் பாதுகாப்பு உண்டு. நாம் இயேசுகிறிஸ்துவின் அன்பில் நிலைத்திருக்கும்போது, இந்த அன்பில் நிலைத்திருப்பதற்குத் தேவனுடைய கிருபையும் பெலனும் நமக்குக் கொடுக்கப்படும். இவையெல்லாவற்றிற்கும், "நாம் இயேசுகிறிஸ்துவின் கற்பனைகளைக் கைக்கொள்ளவேண்டும்" என்பது நிபந்தனையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

கிறிஸ்துவின் சீஷர்கள் இயேசுகிறிஸ்துவின் கற்பனைகளைக் கைக்கொண்டு வருகிறார்கள். இந்த விஷயத்தில் அவர்கள் தங்களுக்குத் தாங்களே உறுதியோடிருக்கிறார்கள். அதேவேளையில் இந்தச் சத்தியத்தை மற்றவர்களுக்கும் உண்மையோடு அறிவிக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் கற்பனைகளை மற்றவர்களுக்கு அறிவிப்பதற்கு அவருடைய சீஷர்கள் உத்திரவாதம் பெற்றிருக்கிறார்கள்.

சீஷர்கள் தம்முடைய கற்பனைகளைக் கைக்கொள்ளவேண்டும் என்பதற்கு, இயேசுகிறிஸ்து தம்மையே முன் உதாரணமாகக் கூறுகிறார். "நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறதுபோல" என்று தம்முடைய அன்பைப்பற்றி சீஷருக்குச் சாட்சியாகக் கூறுகிறார். இயேசுகிறிஸ்து அவர்களுக்குக் கற்பிக்கிற யாவையும் அவர்கள் செய்வார்களானால் சீஷர்கள் இயேசுகிறிஸ்துவுக்குச் சிநேகிதராயிருப்பார்கள் (யோவா 15:14). இயேசுகிறிஸ்துவின் உண்மையுள்ள சிநேகிதர்கள் மாத்திரமே, அவருக்கு உண்மையும் கீழ்ப்படிதலுமுள்ள ஊழியக்காரர்களாக இருப்பார்கள். இயேசுகிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிதலே மெய்யான கீழ்ப்படிதலாகும்.

## அதிகாரம் - 15

### என்னுடைய சந்தோஷம்

**என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும், இவைகளை உங்களுக்குச் சொன்னேன் (யோவா 15:11).**

இயேசுகிறிஸ்துவின் சந்தோஷம் சீஷரில் நிலைத்திருக்கவேண்டும். அவர்களுடைய சந்தோஷம் நிறைவாயிருக்கவேண்டும். இதற்காகவே இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடம் அன்பைப்பற்றிப் போதகம்பண்ணுகிறார். சீஷர்கள் அதிக கனியைக்கொடுத்து, இயேசுகிறிஸ்துவின் அன்பில் நிலைத்திருக்கும்போது, இயேசுகிறிஸ்து அவர்களில் சந்தோஷமாயிருக்கிறார். சீஷர்கள் கனி கொடுக்கிறவர்களாகவும் உண்மையுள்ளவர்களாகவும் இருக்கும்போது அது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு மிகுந்த சந்தோஷமாயிருக்கும். அப்போது இயேசுகிறிஸ்துவின் சந்தோஷம் சீஷர்களிடத்தில் நிலைத்திருக்கும். அத்துடன் அவர்கள் சந்தோஷமும் நிறைவாயிருக்கும்.

கிறிஸ்துவின் சீஷர்கள் எப்பொழுதும் சந்தோஷமாயிருக்க வேண்டுமென்பது அவருடைய சித்தம். "கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்" (பிலி 4:4) என்று அப்போஸ்தலர் பவுல் எழுதுகிறார். இயேசுகிறிஸ்துவின் அன்பில் நிலைத்திருக்கிறவர்களுடைய சந்தோஷம், நித்திய விருந்து போஜனம்போல சந்தோஷமாயிருக்கும்.

சீஷர்களுடைய சந்தோஷம் நிறைவாயிருக்கவேண்டும் என்று இயேசுகிறிஸ்து விரும்புகிறார். அதற்காகவே அவர்களுக்கு இந்த உபதேசத்தைச் சொல்லுகிறார். சீஷர்களுடைய சந்தோஷம் நிறைவாகவும் இருக்கவேண்டும். அதேவேளையில் இயேசுகிறிஸ்துவிலும், அவருடைய அன்பிலும் சீஷர்கள் வைத்திருக்கிற சந்தோஷம் உன்னதமாக உயரவும்வேண்டும். இந்தச் சந்தோஷம் வளர்ந்து பரிபூரணமடையவேண்டும். நம்முடைய உள்ளத்தில் இயேசுகிறிஸ்துவின் சந்தோஷம் நிலைத்திருந்தால் மாத்திரமே, நம்முடைய சந்தோஷம் நிறைவாயிருக்கும். இயேசுகிறிஸ்துவினால் வரும் சந்தோஷமேயல்லாமல் வேறு எந்தச் சந்தோஷமும் நிறைவாயிருப்பதில்லை. உலகப்பிரகாரமாக நமக்குச் சந்தோஷம் கிடைக்கலாம். ஆனால் அந்தச் சந்தோஷம் நிறைவாயிராது. அது நம்மை பூரணமாய்த் திருப்திப்படுத்தாது. தம்முடைய வார்த்தையின் மூலமாகத், தம்முடைய பிள்ளைகளுடைய சந்தோஷம் நிறைவாயிருக்கவேண்டுமென்று இயேசுகிறிஸ்து சித்தமுள்ளவராகயிருக்கிறார்.

### ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டும்

**நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது (யோவா 15:12).**

சீஷர்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும். இதுவே இயேசுகிறிஸ்துவின் கற்பனையாயிருக்கிறது. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் அவரிடத்தில் அன்புள்ளவர்களாக இருப்போமென்றால் அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுவோம். "நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும்" என்பதே அவருடைய கற்பனையாயிருக்கிறது. இதே வாக்கியத்தை இயேசுகிறிஸ்து மறுபடியுமாக "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்று இவைகளை உங்களுக்குக் கற்பிக்கிறேன்" (யோவா 15:17) என்று கூறுகிறார்.

இயேசுகிறிஸ்துவின் உபதேசங்களில், நாம் தேவனிடத்திலும், மனுஷரிடத்திலும் அன்பாயிருக்கவேண்டுமென்பதே பிரதான கற்பனையாகயிருக்கிறது. தம்முடைய உபதேசங்களெல்லாவற்றிலும் இயேசுகிறிஸ்து அன்பைக்குறித்து வலியுறுத்திக் கூறுகிறார். நம்முடைய அன்பு சாதாரணமானதாக இருக்கக்கூடாது. இயேசுகிறிஸ்து நம்மில் அன்பாயிருக்கிறதுபோலவே, நாமும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டும். இயேசுகிறிஸ்து நம்மில் அன்பாயிருப்பதினால், நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும். "நீ போய் அப்படியே செய்" என்று கூறுவதுபோல இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம், நான் உங்களிடத்தில் அன்பாயிருப்பதுபோல, நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்று இயேசுகிறிஸ்து கூறுகிறார்.

## அதிகாரம் - 15

இயேசுகிறிஸ்துவின் இந்தப் பிரதான கற்பனை பல வசனங்களில் கூறப்பட்டிருந்தாலும், அதன் அடிப்படைக் கருத்து ஒன்றுதான். மற்ற எல்லா கற்பனைகளைவிட இந்தக் கற்பனைக்கு நாம் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்பதற்காக, இயேசுகிறிஸ்து இதை அதிகமாக வலியுறுத்துகிறார். தம்முடைய சீஷர்களும், விசுவாசிகளும் இனிமேல் எப்படியிருப்பார்கள் என்பதை இயேசுகிறிஸ்து முன்னறிந்திருக்கிறார். மனுஷர் மத்தியிலே அன்பு குறைந்துபோகும் என்பதையும், சபையில்கூட விசுவாசிகள் மத்தியிலே அன்பு குறைந்துபோகும் என்பதையும் இயேசுகிறிஸ்து முன்னறிந்தவராக, இந்தப் பிரமாணத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார். நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பது தம்முடைய பிரமாணமாயிருக்கிறது என்று கூறிய இயேசுகிறிஸ்து (யோவா 15:12), இந்தப் பிரமாணத்தை நமக்குக் கற்பிப்பதாகவும் கூறுகிறார் (யோவா 15:17). இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்குப் பல கற்பனைகளைக் கொடுத்தாலும், பல உபதேசங்களைக் கற்பித்தாலும், நாம் ஒருவருக்கொருவர் அன்பாயிருக்கவேண்டும் என்பதே இயேசுகிறிஸ்துவின் இருதய வாஞ்சையாக இருக்கிறது.

### ஜீவனைக்கொடுக்கிற அன்பு

**ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை (யோவா 15:13).**

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடத்தில் அன்பாயிருக்கிறார். அவருடைய அன்பு பெரியது. அவர்களுக்காக இயேசு தம்முடைய ஜீவனையே கொடுக்கிறார். "ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை" என்று அன்பின் பிரமாணத்தைத் தம்முடைய சீஷர்களுக்கு உபதேசம்பண்ணுகிறார். இயேசு கிறிஸ்துவிடத்தில் இப்படிப்பட்ட அன்புதான் காணப்படுகிறது. இயேசுகிறிஸ்துவினுடைய அன்பு நமக்காகத் தம்முடைய ஜீவனையே கொடுக்கிற அன்பு. இயேசுகிறிஸ்து நம்மில் அன்பாயிருக்கிறதுபோல நாமும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டும் என்பதே இயேசுகிறிஸ்துவின் பிரமாணம். அவருடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படியும்போது, நம்மிடத்திலும் நம்முடைய சிநேகிதருக்காக ஜீவனைக்கொடுக்கிற அன்பு காணப்படவேண்டும்.

இயேசுகிறிஸ்துவின் அன்பு உன்னதமானது. நாம் சாதாரண மனுஷராகயிருந்தாலும், தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்து, தம்முடைய ஜீவனையே நமக்காகக் கொடுத்து, நம்மிடத்தில் அன்புகூருகிறார். நாம் பிறரிடத்தில் அன்புகூரும்போது அவருடைய அன்பையே நினைத்துப் பார்க்கவேண்டும். நாம் பாவிகளாகயிருக்கும்போதே இயேசுகிறிஸ்து நமக்காகத் தம்முடைய ஜீவனைக்கொடுத்தார். அவருடைய அன்புக்கு நாம் எவ்வளவேனும் பாத்திரவான்களல்ல. இந்த உலகத்தில் ஒரு சிலர் தங்களுடைய சிநேகிதருக்காக ஜீவனையே கொடுக்கிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ, நாம் அவருக்குச் சத்துருக்களாக இருந்தபோதே அவர் நமக்காகத் தம்முடைய ஜீவனையே கொடுத்தார்.

"நாம் பெலனற்றவர்களாயிருக்கும் போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார். நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார் (ரோம 5:6-8). "நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப் பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்ட பின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே" (ரோம 5:10).

### சிநேகிதராயிருப்பீர்கள்

**நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள். இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்லுகிறதில்லை, ஊழியக்காரன் தன் எஜமான் செய்கிறதை அறியமாட்டான். நான் உங்களைச் சிநேகிதர் என்றேன், ஏனெனில் என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன் (யோவா 15:14,15).**

## அதிகாரம் - 15

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களோடு சிநேகத்தின் உடன்படிக்கையை ஏற்படுத்தியிருக்கிறார். இந்த உடன்படிக்கையின் அடிப்படையிலேயும் இயேசுகிறிஸ்து அவர்களிடத்தில் அன்பு வைத்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் அவருடைய சிநேகிதராகயிருக்கிறார்கள். பொதுவாக எஜமானுடைய வேலையைச் செய்கிறவர்கள் ஊழியக்காரர்களாகவே இருப்பார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ அவர்களை ஊழியக்காரர் என்னும் அந்தஸ்திலிருந்து உயர்த்தி, சிநேகிதர் என்னும் அந்தஸ்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்.

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் பல சமயங்களில் தங்களுடைய சிநேகத்தை அவரிடத்தில் வெளிப்படுத்தவில்லை. சில சமயங்களில் சிநேகிதர்களாகவும், சில சமயங்களில் சிநேகிதர்களல்லாத சாதாரண ஜனங்களைப்போலவும் இருந்திருக்கிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ எல்லா சமயங்களில் அவர்களைத் தம்முடைய சிநேகிதர்களாகப் பாவித்து அவர்களிடத்தில் அன்பு கூருகிறார். "இனி நான் உங்களை ஊழியக்காரர் என்று சொல்லுகிறதில்லை" என்று கூறிவிட்டு, "நான் உங்களை சிநேகிதர்" என்று சொல்லுகிறேன் என்று இயேசுகிறிஸ்து கூறுகிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடத்தில் அன்பாயிருப்பது மாத்திரமல்ல, தம்முடைய அன்பையும் அவர்களுக்குத் தெரியப்படுத்துகிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களை சிநேகிதர் என்று கூறினாலும், அவர்களோ இயேசுகிறிஸ்துவிடத்தில் தங்களைப் பற்றிக்கூறும்போது அவருடைய ஊழியக்காரர் என்றே கூறுகிறார்கள். பேதுரு தன்னை "இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலன்" (1பேது 1:1) என்றும், யாக்கோபு தன்னை "தேவனுக்கும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கும் ஊழியக்காரன்" (யாக் 1:1) என்றும் அழைத்துக்கொள்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து நம்மை தம்முடைய சிநேகிதராக அங்கீகரித்து, நம்மைக் கனப்படுத்தியிருக்கிறார். நம்முடைய பார்வை எப்போதும் அவரையே நோக்கிப் பார்க்கவேண்டும், நம்மை அதிகமாய் நோக்கிப் பார்க்காமல், தேவனையே அதிகமாய் நோக்கிப்பார்க்கும்போது, அவர் நம்மீது வைத்திருக்கும் அன்பு நமக்கு வெளிப்படுத்தப்படும்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடத்தில் அன்புகூரும்போது தம்முடைய மனதிலுள்ள சிந்தனைகள் எல்லாவற்றையும் அவர்களுக்குத் தெரியப்படுத்துகிறார். "என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்" என்று கூறுகிறார். பிதாவாகிய தேவனிடத்தில் தாம் பெற்றுக்கொண்டிருக்கிற எல்லாவற்றையும் இயேசுகிறிஸ்து நம்மிடத்தில் கொடுத்திருக்கிறார். சகலமும் அவருடைய பிதாவினால் அவருக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது (மத் 11:27). மனுஷனை மீட்பதற்காகத் தேவன் வகுத்திருக்கும் மீட்பின் திட்டத்தை இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடத்தில் அறிவிக்கிறார். இதை அவர் அறிவிப்பதற்கும் ஒரு தெய்வீக நோக்கமுண்டு. சீஷர்கள் மற்றவர்களிடத்திலும் அவர்களுடைய மீட்பைக் குறித்து அறிவிக்கவேண்டும்.

### நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்

**நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்; நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன் (யோவா 15:16).**

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடத்தில் அன்பாயிருக்கிறார். அவர் அவர்களைத் தெரிந்துகொண்டு, அவர்களை ஏற்படுத்தியிருக்கிறார். "ஏற்படுத்துதல்" என்னும் வார்த்தைக்கு "பிரதிஷ்டைபண்ணுதல்" அல்லது "ஊழியத்திற்கு நியமித்தல்" என்று பொருள். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களை தம்முடைய ஊழியத்தைச் செய்யும் அப்போஸ்தலர்களாக தெரிந்துகொண்டிருக்கிறார். இந்தத் தெரிந்துகொள்ளுதலை சீஷர்கள் முதலாவதாக ஆரம்பிக்கவில்லை. இயேசுகிறிஸ்துவிடத்திலிருந்தே இந்தத் தெரிந்துகொள்ளுதல் முதலாவதாக ஆரம்பமாயிற்று. இதை அறிவிக்கும் வண்ணமாக இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் "நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்" என்று கூறுகிறார்.

## அதிகாரம் - 15

தம்முடைய ஊழியக்காரர்களை இயேசுகிறிஸ்துவே தெரிந்துகொள்வதுதான் சரியானது. இயேசுகிறிஸ்து அன்று தம்முடைய சீஷர்களைத் தெரிந்துகொண்டார். அவர் இன்றும் தம்முடைய ஊழியக்காரர்களைத் தெரிந்துகொள்கிறார். ஊழியக்காரர்கள் சில சமயங்களில் தங்களை ஊழியத்திற்கு ஒப்புக்கொடுப்பதாகக் கூறுகிறார்கள். கர்த்தருக்காக ஊழியம் செய்யவேண்டுமென்று தாங்கள் தெரிந்துகொண்டதாகக் கூறுகிறார்கள். ஊழியக்காரர்கள் தங்களை ஊழியத்திற்கு ஒப்புக்கொடுப்பதற்கு முன்பாகவே, இயேசுகிறிஸ்து அவர்களைத் தெரிந்துகெண்டார். ஊழியத்தின் பாதையில் அவர்களை வழிநடத்தி, ஊழிய அழைப்புக்கு அவர்களை உறுதிப்படுத்துகிறார். ஊழியம் கர்த்தருடையது. ஊழியக்காரர்களெல்லோரும் கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களைத் தெரிந்துகொள்வது மாத்திரமல்ல, அவர் அவர்களைப் பிரதிஷ்டையும்பண்ணுகிறார். "நீங்கள் போய் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும் நான் உங்களை ஏற்படுத்தினேன்" என்று இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடத்தில் கூறுகிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுடைய உள்ளத்தில் வல்லமையான நம்பிக்கையை ஊற்றுகிறார். சுவிசேஷத்தின் ஐசுவரியம் சீஷர்களின் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுகிறது. அவர்கள் விசுவாசத்தோடும், கீழ்ப்படிதலோடும், உண்மையோடும் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை உலகம் முழுவதும் சென்று அறிவிக்கவேண்டும்.

சீஷர்கள் ஒவ்வொரு இடமாகப்போய் கனிகொடுக்கவேண்டும். அவர்கள் உலகம் முழுவதும் சென்று இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணவேண்டும். ஓரிடத்தில் ஓய்வெடுத்து அமர்ந்திருப்பதற்காக இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களைத் தெரிந்துகொள்ளவில்லை. அவர்கள் சும்மாயிருக்கவேண்டுமென்று இயேசுகிறிஸ்து அவர்களைப் பிரதிஷ்டைபண்ணவில்லை. அவர்கள் புறப்பட்டுப்போகவேண்டும். அவர்கள்போய் கனிகொடுக்கவேண்டும். அவர்கள் இருக்கும் இடத்திலேயே சோம்பேறிகளாக இருந்துகொண்டு கனிகளைப் புசித்துக்கொண்டிருக்கக்கூடாது. அவர்களுடைய கனிகளும் நிலைத்திருக்கவேண்டும். அவர்கள் போய் கனிகளும் கொடுக்கவேண்டும்.

ஆகாயத்தில் சிலம்பம் பண்ணுவதற்காக இயேசுகிறிஸ்து அவர்களை அனுப்பவில்லை. தேசங்கள் இயேசுகிறிஸ்துவின் வசனத்தைக் கேட்டு அவருக்குக் கீழ்ப்படியவேண்டும். ஜனங்களைக் கர்த்தரிடத்தில் அழைத்து வருவதற்குச் சீஷர்கள் கருவிகளாகப் பயன்படவேண்டும். தம்முடைய ஊழியத்தைச் செய்வதற்காகவே இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களைத் தெரிந்துகொண்டு, அவர்கள் போய் கனிகொடுக்கும்படி அவர்களை ஏற்படுத்தியிருக்கிறார்.

தம்முடைய ஊழியத்தைச் செய்யுமாறு இயேசுகிறிஸ்துவினால் பிரதிஷ்டை பண்ணப்பட்டிருக்கிறவர்கள் யாரும் வீணாகப் பிரயாசப்படுவதில்லை. இயேசுகிறிஸ்துவின் சபையானது இந்தப் பூமியிலே ஸ்தாபிக்கப்பட்டு, அதன்பின்பு சில நாட்களில் மறைந்துபோகிற ஸ்தாபனமல்ல. ஏதோ இரவில் தோன்றி இரவிலே மறைந்துபோகிற திருச்சபையல்ல. இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் கர்த்தருடைய சுவிசேஷ ஊழியத்தைச் செய்தார்கள். அவர்கள் மரித்துப்போன பின்பு சுவிசேஷ ஊழியம் அவர்களோடு நின்றுபோய்விடவில்லை. ஊழியம் தொடர்ந்தது. சீஷர்கள் மரித்துப்போனார்கள். கர்த்தர் தம்முடைய ஊழியத்தைச் செய்வதற்கு வேறு ஊழியக்காரர்களைத் தெரிந்துகொண்டார். அவர்களைப் பயன்படுத்தினார். இயேசுகிறிஸ்துவின் ஊழியம் அக்காலத்திலிருந்து இந்நாள் வரையிலும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு வருகிறது. இக்காலத்தில் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிற நாம் மரித்துப்போனாலும், கர்த்தருடைய ஊழியம் நின்றுபோகாமல் தொடரும். அவர்களுடைய கனி இந்நாளிலும் நிலைத்திருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் ஊழியம் இந்தப் பூமி நிலைத்திருக்கும் வரையிலும் நிலைத்திருக்கும்.

இயேசு கிறிஸ்துவின் கிருபாசனத்தண்டைக்கு முன்பாக சீஷர்கள் பலவிதமான வேண்டுதல்களோடும் விண்ணப்பங்களோடும் வருவார்கள். இயேசு கிறிஸ்து அவர்கள் மீது அன்பாகயிருக்கிற படியினால் அவர்கள் கேட்டுக்கொள்வதைக் கொடுப்பதற்குச் சித்தமுள்ளவராகயிருக்கிறார். "நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக் கொள்வதெதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுப்பார்" என்று இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷருக்கு வாக்குப்பண்ணுகிறார். ஒருவேளை அற்புதங்களைச் செய்யும் வல்லமையை சீஷர்கள் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று இயேசுகிறிஸ்து விருப்பமுள்ள வராகயிருக்கலாம். நம்முடைய ஜெபத்தினால், தேவனுடைய கிருபையினால், நாம் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே அற்புதங்களைச் செய்யும் வல்லமையைப் பெற்றுக்கொள்கிறோம்.

## அதிகாரம் - 15

கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிறவர்களுக்குப் பரலோகத்திலிருந்து உதவி தேவைப்படுகிறது. இந்த உதவியை இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நாம் கேட்டுக்கொள்ளும்போது, பிதாவானவர் அதைத் தம்முடைய நாம மகிமைக்காக நமக்குக் கொடுக்கிறார். பிதாவாகிய தேவனுக்கும் நமக்கும் இடையில் இயேசுகிறிஸ்து மத்தியஸ்தராகயிருக்கிறார். நாம் தேவனுடைய கிருபாசனத்தண்டையில் போகும்போது, இயேசுகிறிஸ்துவின் நல்ல நாமத்தில் போகிறோம். தேவனுடைய கிருபாசனத்தண்டைக்கு முன்பாக நாம் நிற்கும்போது நமக்குள் பாவங்கள் இருக்கலாம். குற்றவுணர்வு இருக்கலாம். நம்மிடத்தில் பாவக்கறைகள் இருக்கலாம். ஆனாலும் இவைகளுக்கு மத்தியிலும், இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால், கிருபாசனத்தண்டையில் தைரியமாக நிற்கும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். நம்மிடத்தில் பணிவும், பயபக்தியும், இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் உண்டாகும் தைரியமும் சேர்ந்து காணப்படும். இயேசுவின் நாமத்தினாலே நாம் பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்வதெதுவோ அதை அவர் நமக்குக் கொடுப்பார். கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நம்முடைய ஜெபத்திற்குப் பிதாவினிடத்திலிருந்து பதில் கிடைக்கும் என்பது நமக்குக் கொடுக்கப்படும் மிகப்பெரிய ஆசீர்வாதமும், சிலாக்கியமும், சந்தோஷமும், சமாதானமும் ஆகும்.

**இவைகளை உங்களுக்குக் கற்பிக்கிறேன்**

**நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்றே இவைகளை உங்களுக்குக்கற்பிக்கிறேன் (யோவா 15:17).**

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடத்தில் பல கற்பனைகளை உபதேசம் பண்ணியிருக்கிறார். இந்தக் கற்பனைகளெல்லாவற்றிலும் "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டும்" என்பதே பிரதான கற்பனையாயிருக்கிறது. வருங்காலத்தில் மனுஷர் மத்தியிலே அன்பு குறைந்துபோகும் என்பதையும், சபையிலே விசுவாசிகள் மத்தியிலேகூட அன்பு குறைந்துபோகும் என்பதையும், இயேசுகிறிஸ்து முன்னறிந்தவராக இந்தப் பிரமாணத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார். ஆகையினால் இந்தக் கற்பனையைக் கூறும்போது "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்றே இவைகளை உங்களுக்குக் கற்பிக்கிறேன்" என்று கூறுகிறார். "கற்பிக்கிறேன்" என்னும் வார்த்தைக்கு "கட்டளையிடுகிறேன்" என்று பொருள். இயேசுகிறிஸ்து நமக்குப் பல கட்டளைகளைக் கொடுத்திருக்கிறார். இந்தக் கட்டளைகளெல்லாவற்றிலும், நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டும்" என்பதே இயேசுகிறிஸ்து நமக்குக் கொடுக்கிற பிரதான கட்டளையாயிருக்கிறது.

**பகை**

**யோவா 15 : 18-25**

**யோவா 15:18. உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிறதற்குமுன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள்.**

**யோவா 15:19. நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும்; நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்துகொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது.**

**யோவா 15:20. ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்லவென்று நான் உங்களுக்குச் சொன்ன வார்த்தையை நினைத்துக்கொள்ளுங்கள். அவர்கள் என்னைத் துன்பப்படுத்தினதுண்டானால், உங்களையும், துன்பப்படுத்துவார்கள்; அவர்கள் என் வசனத்தைக் கைக்கொண்டதுண்டானால், உங்கள் வசனத்தையும் கைக்கொள்ளுவார்கள்.**

**யோவா 15:21. அவர்கள் என்னை அனுப்பினவரை அறியாதபடியினால் என் நாமத்தினிமித்தமே இவைகளையெல்லாம் உங்களுக்குச் செய்வார்கள்.**

**யோவா 15:22. நான் வந்து அவர்களிடத்தில் பேசாதிருந்தேனானால் அவர்களுக்குப் பாவமிராது; இப்பொழுதோ தங்கள் பாவத்தைக்குறித்துப் போக்குச்சொல்ல அவர்களுக்கு இடமில்லை.**

**யோவா 15:23. என்னைப் பகைக்கிறவன் என் பிதாவையும் பகைக்கிறான்.**

**யோவா 15:24. வேறொருவரும் செய்யாத கிரியைகளை நான் அவர்களுக்குள்ளே செய்யாதிருந்தேனானால், அவர்களுக்குப் பாவமிராது; இப்பொழுது அவர்கள் என்னையும் என் பிதாவையும் கண்டும் பகைத்துமிருக்கிறார்கள்.**

## அதிகாரம் - 15

**யோவா 15:25. முகாந்தரமில்லாமல் என்னைப் பகைத்தார்கள் என்று அவர்களுடைய வேதத்தில் எழுதியிருக்கிற வாக்கியம் நிறைவேறும்படிக்கு இப்படியாயிற்று.**

**உலகம் உங்களைப் பகைத்தால்**

**உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிறதற்குமுன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள் (யோவா 15:18).**

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் பகையைக்குறித்து உபதேசம்பண்ணுகிறார். பகை என்பது சாத்தானுடைய ராஜ்யத்தின் சுபாவமாயிருக்கிறது. கிறிஸ்துவின் ராஜ்யத்தில் அன்பு நிறைந்திருப்பதுபோல சாத்தானுடைய ராஜ்யத்தில் பகை நிறைந்திருக்கும். தேவனுடைய பிள்ளைகளுக்கும் இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகளுக்கும் வித்தியாசமிருக்கிறது. உலகம் நம்மைப் பகைக்கும். உலகம் என்பது இப்பிரபஞ்சத்தின் பிள்ளைகளைக் குறிக்கும் வார்த்தையாகும்.

இயேசுகிறிஸ்து இப்பிரபஞ்சத்தின் பிள்ளைகளை "உலகம்" என்று குறிப்பிடுவதற்கு மூன்று காரணங்கள் உள்ளன. அவையாவன: 1. அவர்களுடைய எண்ணிக்கை. 2. சதி ஆலோசனையில் ஒற்றுமை 3. அவர்களிடத்தில் காணப்படும் பகையின் ஆவி.

இப்பிரபஞ்சத்தின் ஜனங்கள் திரளான எண்ணிக்கையில் இருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவுக்கும் அவருடைய உபதேசத்திற்கும் எதிர்த்து நிற்கிற ஜனங்கள் எப்போதுமே அதிகம்தான். சாத்தானுடைய பிள்ளைகளுக்கும் இயேசுகிறிஸ்துவின் பிள்ளைகளுக்கும் வாக்கெடுப்பு நடத்தினால், நிச்சயமாகவே சாத்தானுடைய பிள்ளைகள்தான் அதிக எண்ணிக்கையுள்ளவர்களாக இருப்பார்கள். விசுவாசிகளாகிய நாம் கொஞ்சம் பேராகயிருந்தாலும் கர்த்தர் நம்மோடு கூடயிருப்பதினால்தான் நாம் ஜெயம் பெறுகிறோம்.

துன்மார்க்கர்கள் தங்களுடைய துன்மார்க்க சிந்தனையில் பிரிவினையில்லாமல் ஒற்றுமையாயிருப்பார்கள். பொதுவாக யூதரும் புறஜாதியாரும் ஒத்துப்போகமாட்டார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவையும் அவருடைய ஊழியக்காரர்களையும் துன்பப்படுத்த வேண்டும் என்னும் விஷயத்தில் யூதரும் புறஜாதியாரும் ஒத்துவருகிறார்கள். தங்களுக்கு இடையே இருக்கும் கருத்து வேறுபாடுகளையெல்லாம் மறந்துவிட்டு, கிறிஸ்துவையும் அவருடைய ஊழியக்காரர்களையும் துன்புறுத்த வேண்டுமென்று ஒற்றுமையோடும் முனைப்போடும் ஒருமித்து செயல்படுகிறார்கள்.

இப்பிரபஞ்சத்தின் பிள்ளைகளிடத்தில் பகைமையின் ஆவி வாசம்பண்ணுகிறது. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் பாவிகளின் பாவங்களை வெறுக்கவேண்டும். ஆனால் பாவிகளையோ சிநேகிக்கவேண்டும். எல்லோருக்கும் நன்மை செய்யவேண்டும். நல்லோருக்கும் பொல்லோருக்கும் சூரியன் வெளிச்சம் கொடுப்பதுபோல, கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், நம்மால் செய்ய முடிகிற உதவிகளை எல்லோருக்கும் செய்யவேண்டும். துன்மார்க்கத்தின் ஆவி, பொறாமையின் ஆவி, வஞ்சிக்கிற ஆவி, பிறரைக் கெடுக்கிற ஆவி இவையெல்லாமே இப்பிரபஞ்சத்தின் ஆவிகள்தான். கிறிஸ்துவின் ஆவியை உடையவர்களிடத்தில் இப்படிப்பட்ட துர்க்குணம் எதுவும் காணப்படக்கூடாது.

**உலகம் உங்களைப் பகைக்கிறது**

**நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும்; நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது (யோவா 15:19).**

இப்பிரபஞ்சத்தின் ஜனங்களிடம் பகையின் ஆவி வாசம்பண்ணுகிறது. அவர்கள் இயேசுகிறிஸ்துவின் சீஷர்களையும், இயேசுகிறிஸ்துவையும், பிதாவாகிய தேவனையும் பகைக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவும் தம்முடைய சீஷர்களிடத்தில் இதைப்பற்றிப் பேசும்போது "உலகம் உங்களைப் பகைக்கிறது" என்று ஒளிவு மறைவில்லாமல் வெளிப்படையாகப் பேசுகிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களை "ஊழியக்காரர்" என்று சொல்லாமல், "சிநேகிதர்" என்று சொல்லுகிறார். இயேசுகிறிஸ்து சிநேகிதரைப்போலவே தம்முடைய சீஷரை நேசிக்கிறார். அவர்கள்மீது மிகுந்த அன்போடிருக்கிறார். ஆனாலும் அவர்களுடைய சரீரத்திலும் ஒரு "முள்" கொடுக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் அவர்கள் வேதனைகளையும், பாடுகளையும், நிந்தைகளையும் அனுபவிக்கவேண்டும் என்பதே அந்த "முள்".

## அதிகாரம் - 15

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடத்தில், அவர்கள் செய்யவேண்டிய ஊழியத்தை ஒப்புக்கொடுத்திருக்கிறார். அவர்கள் அந்த ஊழியத்தைச் செய்யும்போது அவர்களுக்கு என்னென்ன தடைகளெல்லாம் உண்டாகும் என்றும், எப்படிப்பட்ட பிரச்சனைகளையெல்லாம் அவர்கள் சந்திக்கவேண்டுமென்றும் அவர்களுக்கு முன்னறிவிக்கிறார். சீஷர்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டும். தங்களை சிநேகிக்கும் மற்ற சீஷர்களிடத்தில் மாத்திரம் அன்பாயிருந்தால் போதாது. தங்களை விரோதிக்கும் இப்பிரபஞ்சத்தின் பிள்ளைகளையும் அவர்கள் சிநேகிக்க வேண்டும். சீஷர்கள் சத்துருக்களின் நடுவிலிருக்கிறார்கள். இவர்களை உபத்திரவப்படுத்த அவர்கள் ஒற்றுமையாயிருக்கிறார்கள். ஆகவே சீஷர்களும் கர்த்தரிடத்தில் நிலைத்திருக்க வேண்டும். ஒருவரிலொருவர் அன்புகூர்ந்து சிநேகமாயும் ஒற்றுமையாயும் ஊழியம் செய்யவேண்டும்.

இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களை இந்த உலகம் பகைக்கிறது. அவர்கள்மீது விரோதமாயிருக்கிறது. இயேசுகிறிஸ்து யாரை ஆசீர்வதிக்கிறாரோ, அவர்களை இந்த உலகம் சபிக்கிறது. பரலோகத்திற்குச் சொந்தக்காரர்களாகிய நாம் இந்த உலகத்தில் அந்நியராகவும் பரதேசிகளாகவும் இருக்கிறோம். பரலோகத்தில் நாம் வரவேற்கப்படுகிறோம். ஆனால் இந்த உலகத்திலிருந்தோ துரத்தப்படுகிறோம்.

இப்பிரபஞ்சத்தின் பிள்ளைகள் கர்த்தருடைய பிள்ளைகளைத் துன்பப்படுத்துவார்கள். இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து பயபக்தியோடு ஜீவிக்கிற எல்லோருக்குமே உபத்திரவம் உண்டு. நாம் இவ்வுலகத்தில் பாடுகளை அனுபவிப்பதற்கும் இயேசுகிறிஸ்து இந்தப் பிரபஞ்சத்தில் அனுமதிக்கிறார். ஆடுகளை ஓநாய்கள் மத்தியில் அனுப்புவதுபோலவே இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களை அனுப்புகிறார். இப்பிரபஞ்சத்தின் பிள்ளைகள் இயேசு கிறிஸ்துவுக்கும், அவருடைய ஊழியக்காரர்களுக்கும் சத்துருக்களாக யிருக்கிறார்கள். அது போதாதென்று, அவர்கள் இயேசுகிறிஸ்துவின் வசனத்தையும் பகைத்து, அதைக் கைக்கொள்ளாதிருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் "அவர்கள் என் வசனத்தைக் கைக்கொண்டதுண்டானால், உங்கள் வசனத்தையும் கைக்கொள்வார்கள்" என்று கூறுகிறார். ஆனால் இப்பிரபஞ்சத்தின் பிள்ளைகளோ இயேசுகிறிஸ்துவையும் ஏற்றுக்கொள்ளவில்லை, அவருடைய வசனத்தையும் கேட்கவில்லை. உலகத்தாருடைய இருதயத்தில் பகை வாசம்பண்ணுகிறதினால், அவர்களால் இயேசுவையும், அவருடைய சீஷரையும் நேசிக்க முடியவில்லை.

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் இந்த உலகத்தாரல்ல. இந்த உலகம் தன்னுடையதை சிநேகிக்கும். இந்த உலகத்தின் காரியங்களுக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்களை இந்த உலகம் சிநேகிக்கும். உலகத்துத்தலைவர்களை இந்த உலகம் தங்களுடைய சிநேகிதராக அங்கீகரிக்கும். கிறிஸ்துவின் பிள்ளைகளாகிய நம்மையோ இயேசுகிறிஸ்து இந்த உலகத்திலிருந்து தெரிந்து கொண்டிருக்கிறார். ஆகையினால் இந்த உலகம் நம்மைப் பகைக்கிறது. இந்த உலகத்திலிருந்து நாம் வேறு பிரிக்கப்பட்டிருப்பதினால் இந்த உலகத்தாருக்கு நாம் சத்துருக்களாகயிருக்கிறோம். நமக்கு இந்தப் பிரபஞ்சத்தின் காரியங்களில் பங்கும் இல்லை. பாத்தியமும் இல்லை.

இயேசுகிறிஸ்து இந்த உலகத்திலிருந்து நம்மைத் தெரிந்துகொண்டு, இதிலிருந்து நம்மைப் பிரித்தெடுத்து, நம்மை பரலோகத்திற்கு சுதந்தரவாளிகளாக உயர்த்தியிருக்கிறார். ஆனால் இந்த உலகமோ நம்மை இப்பிரபஞ்சத்திற்குரிய வர்களாக அடிமைப்படுத்தி வைத்திருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறது. இயேசுகிறிஸ்துவின் மகிமைக்கு முன்பாக இந்த உலகத்தால் எதிர்த்து நிற்க முடியவில்லை. ஆகையினால் இந்த உலகம் இயேசுவின் பிள்ளைகளைத் தன்னுடைய சத்துருக்களாகப் பாவித்து விரோதிக்கிறது.

இயேசுகிறிஸ்து தம்முடைய பிள்ளைகளைத் தமது கிருபையினால் நிரப்புகிறார். சீஷர்கள் இப்பிரபஞ்சத்தை நேசிக்காமல் அதை வெறுக்கிறார்கள். உலகத்தின் பாவங்களுக்கு ஒத்துப்போகாமல், உலகத்திற்கு ஒத்த வேஷம் தரிக்காமல், அதற்கு விரோதமாக உபதேசம் பண்ணுகிறார்கள். சீஷர்களின் உபதேசம் இந்த உலகத்திற்குப் பிடிக்கவில்லை. கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இவர்களை இவ்வுலகத்திலிருந்து தெரிந்து கொண்டபடியினாலும், இவர்கள் உலகத்தின் பாவங்களுக்கு விரோதமாக பிரசங்கிக்கிற படியினாலும், அவர்களை எப்படியெல்லாம் உபத்திரவப்படுத்த முடியுமோ, அப்படியெல்லாம் இந்த உலகம் உபத்திரவப்படுத்துகிறது. இந்த உலகம் இயேசுகிறிஸ்துவின் பிள்ளைகளைப் பகைப்பதற்கு நியாயமான காரணம் எதுவுமேயில்லை.

## அதிகாரம் - 15

மனுஷர் நம்மைப் பகைத்தாலும் நாம் அவர்களிடத்தில் அன்பாயும் மனதுருக்கமாயும் இருக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவின் சத்திய வசனங்களை நாம் ஜனங்களுக்குப் பிரசங்கிப்பதினால், ஜனங்கள் நமக்கு மதிப்பும் மரியாதையும் தரவேண்டும். அவர்கள் நம்மிடத்தில் அன்பாயிருக்கவேண்டும். ஏனெனில் நித்திய ஜீவனுக்குப் போகிற வழியை நாம் அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கிறோம். அவர்களுக்கு நன்மை செய்கிற நம்மை உலகம் பகைக்கும்போது, அவர்களைப் பார்த்து நாம் பரிதாபப்படவேண்டும். நம்மைப் பகைப்பதினால் இப்பிரபஞ்சத்தின் பிள்ளைகள் சந்தோஷமாயிருக்கிறார்கள். நம்மைப் பகைக்கிறவர்களெல்லாம் ஒன்று கூடியிருக்கும்போது, இயேசுகிறிஸ்துவோ அவர்களைப் பகைக்காமல் அவர்களையும் நேசிக்கிறார்.

**ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல**

**ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்லவென்று நான் உங்களுக்குச் சொன்ன வார்த்தையை நினைத்துக் கொள்ளுங்கள். அவர்கள் என்னைத் துன்பப்படுத்தினதுண்டானால், உங்களையும், துன்பப்படுத்துவார்கள்; அவர்கள் என் வசனத்தைக் கைக்கொண்டதுண்டானால், உங்கள் வசனத்தையும் கைக்கொள்ளுவார்கள் (யோவா 15:20).**

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடம் "நான் உங்களுக்குச் சொன்ன வார்த்தையை நினைத்துக்கொள்ளுங்கள்" என்று கூறுகிறார். இயேசுகிறிஸ்துவின் வார்த்தை மிகவும் தெளிவாகயிருக்கிறது. "ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல" கர்த்தருடைய ஊழியக்காரர்கள் கர்த்தரைவிட பெரியவர்களல்ல. அவரைவிடச் சிறியவர்கள்தான். இது மிகவும் எளிமையான தெளிவான சத்தியம். சில சமயங்களில் எளிமையான சத்தியங்கள்கூட நமக்கு முக்கியமான சத்தியமாக இருக்கும்.

"அவர்கள் என்னைத் துன்பப்படுத்தினதுண்டானால் உங்களையும் துன்பப்படுத்துவார்கள்" என்று இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் கூறுகிறார். இந்த உலகம் இயேசுகிறிஸ்துவைத் துன்பப்படுத்துகிறது. ஆகையினால் அது நம்மையும் துன்பப்படுத்துமென்று நாம் எதிர்பார்க்கவேண்டும்.

இயேசு கிறிஸ்து சத்தியத்தை உபதேசம் பண்ணியதினால் அவர் உலகத்தாருக்கு சத்துருவானார். அதே சத்தியத்தைத்தான் நாமும் உபதேசம்பண்ணுகிறோம். ஆகையினால் நாமும் இந்த உலகத்திற்கு சத்துருக்களாகவேயிருப்போம். இயேசுகிறிஸ்து இந்த உலகத்தாரின் பாவங்களைக் கண்டித்து உணர்த்தினார். பரிசுத்தமாக ஜீவிக்கவேண்டுமென்று உபதேசம்பண்ணினார். இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தை இந்த உலகத்தால் தாங்கிக்கொள்ளமுடியவில்லை. கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நாமும், அவர் சொன்ன அதே உபதேசத்தைத்தான் சொல்லுகிறோம். ஆகையினால் நம்முடைய உபதேசத்தையும் இந்த உலகம் தாங்கிக்கொள்ளாது.

இயேசுகிறிஸ்து சர்வவல்லமையுள்ளவர். அவர் சத்தியத்தை ஜனங்களுக்கு உபதேசம்பண்ணுகிறார். ஜனங்கள் தம்முடைய வசனத்திற்குக் கீழ்படியவேண்டுமென்று, தம்முடைய வார்த்தைகளை அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் உறுதிபண்ணுகிறார். இவையெல்லாவற்றிற்கும் மத்தியிலும் உலகத்தார் இயேசுகிறிஸ்துவின் உபதேசத்திற்குச் செவிகொடாமற்போனார்கள். நாமும் கிறிஸ்துவின் உபதேசத்தை ஜனங்களுக்குச் சொல்லும்போது, அந்த வார்த்தைகளுக்கும் அவர்கள் செவிகொடுக்கமாட்டார்கள். அவர்களுடைய உள்ளத்தில் சத்தியத்தை உணர்த்துவதற்கு இயேசுகிறிஸ்து பல காரியங்களைச் செய்தார். அவர் செய்ததைவிட பெரிய காரியங்களை அவருடைய ஊழியக்காரர்களாகிய நம்மால் ஒருபோதும் செய்யமுடியாது. ஏனெனில் நாம் ஊழியக்காரர்கள். நம்முடைய எஜமானராகிய இயேசுகிறிஸ்துவை விட நாம் பெரியவர்கள் அல்ல.

இயேசுகிறிஸ்து ஜனங்களுக்கு நன்மையே செய்தார். அவர் நன்மை செய்கிறவராகவே சுற்றி அலைந்தார். ஆனாலும் இந்த உலகம் அவருக்குத் தீமை செய்தது. நன்மை செய்கிறவர்களுக்கு இந்த உலகம் தீமை செய்வது புதுமையான காரியமல்ல. நாமும் இயேசுவின் நாமத்தினால் நன்மை செய்யும்போது, இந்த உலகம் நமக்குத் தீமை செய்யுமானால் அதைக் குறித்து நாம் ஆச்சரியப்படவேண்டியதில்லை. இது புதுமையான சம்பவமல்ல. "அவர்கள் என் வசனத்தைக் கைக்கொண்டதுண்டானால் உங்கள் வசனத்தையும் கைக்கொள்ளுவார்கள்" என்று இயேசுகிறிஸ்து கூறுகிறார். இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்டு ஒரு சிலர் மாத்திரமே மனந்திரும்பினார்கள். அதுபோலவே நம்முடைய உபதேசத்தைக் கேட்டும் ஒரு சிலர் மாத்திரமே மனந்திரும்புவார்கள். ஊழியக்காரன் தன் எஜமானிலும் ஒருபோதும் பெரியவனாயிருக்க முடியாது.

## அதிகாரம் - 15

**என் நாமத்தினிமித்தமே**

**அவர்கள் என்னை அனுப்பினவரை அறியாதபடியினால் என் நாமத்தினிமித்தமே இவைகளையெல்லாம் உங்களுக்குச் செய்வார்கள் (யோவா 15:21).**

இப்பிரபஞ்சத்தின் பிள்ளைகள் இயேசுகிறிஸ்துவை விசுவாசியாமல், தங்கள் பாவத்தில் ஜீவிக்கிறார்கள். அவர்களுடைய மனதில் சத்திய வசனத்தைக் குறித்து தப்பான அபிப்பிராயம் இருக்கிறது. வேதவசனத்தை அவமதிக்கிறார்கள். அவர்களால் வசனத்தை இதைவிட அவமதிக்க முடியாது. வசனத்தை வெறுப்பதோடு, வார்த்தையாகிய இயேசுகிறிஸ்துவையும் வெறுக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் சீஷர்களுக்குப் பாடுகள் வருவதற்குப் பல காரணங்கள் உண்டு. பல சமயங்களில் "இயேசு கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம்" அவர்களுக்குப் பாடுகள் வரும். கிறிஸ்துவின் சீஷர்கள் அவருடைய நாமத்தைத் தரித்திருக்கிறார்கள். இந்த உலகத்தில் இயேசுகிறிஸ்துவின் நாமத்தைப் பிரஸ்தாபம்பண்ணுகிறார்கள். இப்பிரபஞ்சத்தின் பிள்ளைகள் கிறிஸ்துவின் ஊழியக்காரர்களைப் பகைப்பதற்கு இதுவே காரணம். இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால்தான் அவருடைய ஊழியக்காரர்கள் ஊழியம் செய்ய முடியும். இயேசுவின் நாமம் இல்லையென்றால் நமக்கு ஊழியமும் இல்லை. இந்த உலகம் இயேசுவின் நாமத்தைப் பகைப்பதினால், அவருடைய நாமத்தினால் ஊழியம் செய்யும் நம்மையும் பகைக்கிறது. "நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள்" என்று பேதுரு எழுதுகிறார் (1பேது 4:14). நாம் இயேசுகிறிஸ்துவோடு பாடுகளை அனுபவிப்போமானால், அவரோடுகூட ஆளுகையும் செய்வோம்.

இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் கிறிஸ்துவின் சீஷர்களை விரோதிப்பதற்கு மற்றும் ஒரு காரணம் உண்டு. அவர்கள் இயேசுகிறிஸ்துவை அனுப்பினவரை அறியாதவர்களாகயிருக்கிறார்கள். அவர்கள் தேவனை அறியவில்லை. பிதாவாகிய தேவனை அறியாத இவர்கள், அவர் அனுப்பின குமாரனாகிய இயேசு கிறிஸ்துவையும் அறியாதவர்களாகயிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவில் மாத்திரமே நம்மால் தேவனை அறிந்துகொள்ள முடியும். இயேசுகிறிஸ்துவை அறிந்து கொள்ளவில்லையென்றால் தேவனையும் அறிந்துகொள்ள முடியாது. இவர்கள் இயேசுகிறிஸ்துவை அனுப்பின பிதாவானவரை அறியாதபடியினால், இயேசுகிறிஸ்துவின் நாமத்தினிமித்தம், இப்பிரபஞ்சத்தின் ஜனங்கள் கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்குப் பொல்லாப்புச் செய்கிறார்கள்.

**போக்குச் சொல்ல இடமில்லை**

**நான் வந்து அவர்களிடத்தில் பேசாதிருந்தேனானால் அவர்களுக்குப் பாவமிராது; இப்பொழுதோ தங்கள் பாவத்தைக்குறித்துப் போக்குச்சொல்ல அவர்களுக்கு இடமில்லை (யோவா 15:22).**

இப்பிரபஞ்சத்தின் பிள்ளைகளுக்கு இயேசுகிறிஸ்து தம்முடைய இரட்சிப்பின் நற்செய்தியை அறிவிக்கிறார். தங்களுடைய ஆத்துமாக்களை விடுவிக்கும் நற்செய்தியைக் கூறிய இயேசுகிறிஸ்துவினிடத்தில் ஜனங்கள் அன்பாயிருக்கவேண்டும். ஆனால் அவர்களோ அவரிடத்தில் அன்புகூருவதற்குப் பதிலாக, அவரைப் பகைக்கிறார்கள். இயேசுகிறிஸ்து அவர்களிடத்தில் நற்செய்தியை அறிவிக்காமல் இருந்திருந்தால், அவர்கள் அச்செய்தியைக் கேள்விப்பட்டிருக்கவேமாட்டார்கள். தங்களுக்கு அதைப்பற்றி ஒன்றும் தெரியாது என்று சொல்லிவிடுவார்கள். ஆனால் இப்போதோ அவர்களுக்கு இரட்சிப்பின் செய்தி அறிவிக்கப்பட்டிருப்பதினால், தங்கள் பாவத்தைக் குறித்துப் போக்குச்சொல்ல அவர்களுக்கு இடமில்லை.

"நான் வந்து அவர்களிடத்தில் பேசாதிருந்தேனானால் அவர்களுக்குப் பாவமிராது" என்று இயேசுகிறிஸ்து இப்பிரபஞ்சத்தின் ஜனங்களைப்பற்றிக் கூறுகிறார். ஆனால் இப்போதோ அவர்களுக்குப் பாவம் இருக்கிறது. அவர்களுக்குப் போக்குச் சொல்ல இடமில்லை. இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை அங்கீகரித்து, இயேசுகிறிஸ்துவைத் தங்களுடைய இரட்சராக ஏற்றுக்கொள்ளுகிறவர்களுக்கு ஆவிக்குரிய சிலாக்கியங்கள் ஏராளமாய்க் கொடுக்கப்படும். சுவிசேஷத்தின் மூலமாக இயேசுகிறிஸ்து ஜனங்களிடத்தில் பேசுகிறார். சீஷர்களோடு தம்முடைய சுவிசேஷத்தைப் பேசிய அதே ஆண்டவர், இக்காலத்தில் நம்முடனும் பேசிக்கொண்டிருக்கிறார்.

## அதிகாரம் - 15

இயேசுகிறிஸ்து பேசுகிற ஒவ்வொரு வார்த்தையிலும் தேவனுடைய கிருபை நிறைந்திருக்கிறது. சுவிசேஷம் மனுஷருடைய ஆத்தும வியாதியைக் குணப்படுத்துகிற ஔஷதமாகயிருக்கிறது. ஆனால் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டும், இன்னும் ஏராளமானோர் சுவிசேஷத்தின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளவில்லை. இயேசுகிறிஸ்து அவர்களைப்பற்றிப் பேசும்போது "நான் வந்து அவர்களிடத்தில் பேசாதிருந்தேனானால் அவர்களுக்குப் பாவமிராது" என்று கூறுகிறார். அவர்கள் பாவம் செய்தவர்கள்தான். அந்தப் பாவம் வேறு. இயேசுகிறிஸ்து இங்கு குறிப்பிடுகிற பாவம் வேறு. அவர்கள் இயேசுகிறிஸ்துவை அவமரியாதை செய்கிற பாவத்தைச் செய்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் வார்த்தையைக் கேட்டும், அந்த வார்த்தையை அவமதிக்கிற பாவத்தைச் செய்கிறார்கள்.

நியாயப்பிரமாணம் இல்லாத இடத்தில் பாவமென்றால் என்ன என்றே தெரியாது. அதுபோலவே சுவிசேஷமில்லாத இடத்தில் விசுவாசமென்றால் என்னவென்றே தெரியாது. இது சுவிசேஷத்தை அவமதிக்கிற பாவம். இவர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்படவில்லையென்றால், இவர்களுடைய பாவம் இவ்வளவு மோசமானதாகயிராது. சுவிசேஷம் அறிவிக்கப்பட்டும், அவர்கள் சுவிசேஷத்தையும் இயேசுகிறிஸ்துவையும் ஏற்றுக் கொள்ளவில்லையென்றால் இவர்களுடைய பாவம் பெரிதாயிருக்கும். இப்படிப்பட்டவர்களிடத்தில் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷப் பிரசங்கம் வீணாய்ப்போயிற்று. தங்களுடைய பாவத்தைக்குறித்து இவர்களுக்குப் போக்குச் சொல்ல இடம் இருக்காது. இயேசுகிறிஸ்துவின் வார்த்தை பாவத்தைக்குறித்து அவர்களுக்கு உணர்த்துகிறது. சுவிசேஷத்தின் மூலமாகப் பாவம் எது என்பது அவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. ஒரு காரியம் பாவம் என்று தெரிந்திருந்தும், அதை வேண்டுமென்றே செய்கிறவர்கள், துணிகரமாகப் பாவம் செய்கிறார்கள்.

**என்னைப் பகைக்கிறவன்**

**என்னைப் பகைக்கிறவன் என் பிதாவையும் பகைக்கிறான் (யோவா 15:23).**

இந்த உலகம் இயேசுகிறிஸ்துவைப் பகைக்கும்போது, பிதாவாகிய தேவனையும் பகைக்கிறது. இயேசுகிறிஸ்து இந்தச் சத்தியத்தை இரண்டுமுறை சொல்லுகிறார். "என்னைப் பகைக்கிறவன் என் பிதாவையும் பகைக்கிறான்" (யோவா 15:23). "அவர்கள் என்னையும் என் பிதாவையும் கண்டும் பகைத்துமிருக்கிறார்கள்" (யோவா 15:24). இயேசுகிறிஸ்துவையும் பிதாவையும் பகைக்கிறவர்கள் தேவனையும் அவருடைய தெய்வத்துவத்தையும் பகைக்கிறார்கள். தேவன் ஒருவர் இருக்கிறாரென்பதை இவர்களால் மறுக்க முடியாது. இது இவர்களுக்குத் தெரிந்திருக்கிற சத்தியம். ஆனாலும் தேவனென்று ஒருவர் இல்லாதிருந்தால் நன்றாயிருக்குமே என்று ஆசைப்படுகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவைப் பகைப்பது பிதாவைப் பகைப்பதாகத் தீர்மானிக்கப்படும். குமாரனுக்கு என்னென்ன காரியங்களெல்லாம் சம்பவிக்கிறதோ, அவையெல்லாம் பிதாவுக்கும் சம்பவிக்கிறது. ஆகையினால் இயேசுகிறிஸ்துவையும் அவருடைய சுவிசேஷத்தையும் பகைக்கிறவர்கள் மிகுந்த எச்சரிப்போடு இருக்கவேண்டும். அவர்கள் இயேசுகிறிஸ்துவைப் பகைப்பது பிதாவாகிய தேவனைப் பகைப்பதற்குச் சமமானதாகத் தீர்க்கப்படும். இயேசுகிறிஸ்துவுக்குச் சத்துருக்களாகயிருக்கிறவர்கள் தேவனுக்கும் சத்துருக்களாகயிருக்கிறார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளில் சிலர் நீதிநிமித்தம் துன்பப்படுகிறார்கள். இவர்களுக்கு இயேசுகிறிஸ்துவின் வாக்கியம் மிகுந்த ஆறுதலாகயிருக்கும். ஏனெனில் இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரர்களைப் பகைக்கிறவர்கள் இயேசுகிறிஸ்துவையே பகைக்கிறார்கள். அவர்கள் இயேசுகிறிஸ்துவைப் பகைக்கும்போது பிதாவாகிய தேவனையே பகைக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்குப் போக்குச்சொல்ல இடமில்லை. தேவனுடைய ஆக்கினைக்கு இவர்களால் தப்பிக்கவே முடியாது.

**கண்டும் பகைத்துமிருக்கிறார்கள்**

**வேறொருவரும் செய்யாத கிரியைகளை நான் அவர்களுக்குள்ளே செய்யாதிருந்தேனானால், அவர்களுக்குப் பாவமிராது; இப்பொழுது அவர்கள் என்னையும் என் பிதாவையும் கண்டும் பகைத்துமிருக்கிறார்கள் (யோவா 15:24).**

## அதிகாரம் - 15

இயேசுகிறிஸ்து சுவிசேஷச் செய்தியைப் பிரசங்கிப்பதோடு, தம்முடைய வார்த்தையை அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் உறுதிபண்ணுகிறார். இப்பிரபஞ்சத்தின் ஜனங்கள் இயேசுகிறிஸ்துவின் வார்த்தையைத் தங்கள் காதுகளினால் கேட்டதோடு, அவர் செய்த கிரியைகளையும் கண்டிருக்கிறார்கள். "வேறொருவரும் செய்யாத கிரியைகளை நான் அவர்களுக்குள்ளே செய்யாதிருந்தேனானால் அவர்களுக்குப் பாவமிராது" என்று இயேசுகிறிஸ்து இந்த உலகத்து ஜனங்களைப்பற்றிக் கூறுகிறார். அவர்கள் மத்தியில் அற்புங்களும் அடையாளங்களும் நடைபெறவில்லையென்றால், ஒருவேளை அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படலாம். ஆனால் இயேசுகிறிஸ்துவோ இப்பிரபஞ்சத்து ஜனங்கள் மத்தியில் தம்முடைய தெய்வத்துவத்தையும், தாம் தேவனால் அனுப்பப்பட்டிருக்கிற அவருடைய குமாரன் என்பதையும் நிரூபிப்பதற்குப் போதுமான கிரியைகளை நடப்பித்திருக்கிறார். இப்படிப்பட்ட கிரியைகளை இதுவரையிலும் வேறொருவரும் செய்யவில்லை.

இயேசுகிறிஸ்துவின் அற்புதங்களும், அவருடைய இரக்கங்களும், அவர் தேவனால் அனுப்பப்பட்டிருக்கிறவர் என்பதற்குச் சாட்சியாயிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் கிரியைகளெல்லாமே விசேஷித்தவை. வேறொருவராலும் அவர் செய்கிற கிரியையைச் செய்யமுடியாது. இயேசுகிறிஸ்து மாத்திரமே பரலோகத்திலிருக்கிற தேவனால் அனுப்பப்பட்டிருக்கிறவர். தேவன் இயேசுகிறிஸ்துவோடு கூடயிருக்கிறார். இயேசுகிறிஸ்துவைப்போல வேறு யாரும் பரலோகத்திலிருந்து அனுப்பப்படவில்லை.

இயேசுகிறிஸ்து தேவனிடத்திலிருந்து வந்த போதகரென்பதை நிக்கொதேமு அறிந்திருந்தார். அவர் இயேசுவினிடத்தில் வந்து "ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம். ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புங்களைச் செய்யமாட்டான்" *(யோவா 3:2)* என்று கூறுகிறார்.

இயேசு கிறிஸ்துவின் கிரியைகளெல்லாமே நற்கிரியைகள். அவை அனைத்தும் இரக்கத்தின் கிரியைகள். இயேசுகிறிஸ்துவின் கிரியைகள் அனைத்தும் பிரயோஜனமுள்ளவை. அவர் இவ்வளவு நற்கிரியைகளைச் செய்திருந்தும் இந்த உலகம் அவரைப் பகைக்கிறது. இயேசுகிறிஸ்துவின் நற்கிரியைகளைப் பார்த்து, பாவிகள் அவரிடத்தில் அன்புகூருவதற்குப் பதிலாக, அவரை மேலும் அதிகமாகப் பகைக்கிறார்கள். அன்புக்குப் பதிலாகப் பகை பெருகுகிறது.

ஒருவேளை இப்பிரபஞ்சத்தின் ஜனங்கள் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கேள்விப்பட்டு, அவருடைய அற்புத கிரியைகளைப் பார்த்திருக்காவிட்டால், ஒருவேளை இவர்களுக்குப் பாவமிராது. சத்தியத்தை விசுவாசிப்பதற்கு அவருடைய வார்த்தை அது இன்னும் நிரூபிக்கப்படவில்லையென்று சாக்குப்போக்குச் சொல்லுவார்கள். இயேசுகிறிஸ்துவை நன்மை செய்கிறவரென்று ஜனங்கள் அங்கீகரிக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் அவரைப் பகைக்கிறார்கள். இயேசுகிறிஸ்து நம்மை தெய்வீக அன்பினால் நேசிக்கிறார். ஆனால் உலகத்து ஜனங்களில் அநேகரை அவருடைய அன்பு ஆளுகை செய்யவில்லை. அவர்கள் சாத்தானின் பிள்ளைகளாக இருக்கிறார்கள். தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவில் அன்புகூருவதற்குப் பதிலாக அவரைப் பகைக்கிறார்கள்.

### முகாந்தரமில்லாமல் என்னைப் பகைக்கிறார்கள்

**முகாந்தரமில்லாமல் என்னைப் பகைத்தார்கள் என்று அவர்களுடைய வேதத்தில் எழுதியிருக்கிற வாக்கியம் நிறைவேறும்படிக்கு இப்படியாயிற்று (யோவா 15:25).**

பிரபஞ்சத்தின் ஜனங்கள் இயேசுகிறிஸ்துவைப் பகைப்பதற்கு நியாயமான காரணம் எதுவுமேயில்லை. இயேசுகிறிஸ்து இதைப்பற்றிச் சொல்லும்போது "முகாந்தரமில்லாமல் என்னைப் பகைத்தார்கள் என்று அவர்களுடைய வேதத்தில் எழுதியிருக்கிற வாக்கியம் நிறைவேறும்படிக்கு இப்படியாயிற்று" என்று சொல்லுகிறார். இயேசுகிறிஸ்துவைப் பகைக்கிறவர்கள் காரணமில்லாமல்தான் பகைப்பார்கள். ஏனெனில் அவரைப் பகைப்பதற்கு யாராலும் எந்தக் காரணத்தையும் கண்டுபிடிக்கமுடியாது.

## அதிகாரம் - 15

இயேசுகிறிஸ்து யூதேயா தேசத்தை ஆசீர்வதிப்பதற்காகவே வந்திருக்கிறார். ஆனால் யூதர்களோ அவரைப் பகைக்கிறார்கள். இயேசுகிறிஸ்து யூதர்களை நேசித்தாலும், "அவர்களுடைய கிரியைகள் பொல்லாதவைகளாகயிருக்கிறது" என்று உண்மையைப் பேசினார். அவர்களை அழிக்கவேண்டும் என்பதற்காக இயேசு இப்படிச் சொல்லவில்லை. அவர்கள் திருந்தி நன்மை செய்யவேண்டும் என்பதற்காகவே இயேசுகிறிஸ்து அவர்களுடைய குற்றத்தை வெளிப்படுத்தினார். ஆனால் அவர்களோ இயேசுகிறிஸ்துவின் வார்த்தையைக்கேட்டு மனந்திரும்புவதற்குப் பதிலாக, தங்களுக்குப் புத்திமதி சொன்ன இயேசுகிறிஸ்துவையே பகைக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவைப் பகைப்பதற்கு இது நியாயமான காரணமாகாது. ஆகையினால்தான் இயேசு அவர்களுடைய பகையைப்பற்றிச் சொல்லும்போது "முகாந்தரமில்லாமல் என்னைப் பகைத்தார்கள்" என்று கூறுகிறார்.

இயேசுகிறிஸ்துவைப் பகைக்கிறவர்கள் வேதத்தில் எழுதியிருக்கிற வாக்கியம் நிறைவேறவேண்டும் என்னும் நோக்கத்தோடு அவரைப் பகைப்பதில்லை. காரணமில்லாமல் பகைக்கிறவர்களுக்கு வேதத்தில் என்ன எழுதியிருக்கிறது என்பதும் தெரியாது. ஆனால் இயேசுகிறிஸ்துவோ, ஜனங்கள் தம்மைப் பகைப்பதை ஏற்றுக்கொள்கிறார். அவர்கள்மீது கோபப்படுவதற்குப் பதிலாக, வேதத்தில் எழுதியிருக்கிற வாக்கியம் நிறைவேறும்படிக்கு, அவர்கள் முகாந்தரமில்லாமல் தம்மைப் பகைப்பதாகக் கூறுகிறார்.

இயேசுகிறிஸ்து வேதத்தில் எழுதியிருக்கிற வாக்கியத்தைப்பற்றிச் சொல்லுவது, அவரை விசுவாசிக்கிற விசுவாசிகளுக்கு ஓர் ஆறுதலான செய்தியாகும். இதன் மூலமாக இயேசு கிறிஸ்துவில் நாம் வைத்திருக்கும் விசுவாசம் உறுதிபண்ணப்படும். வேதவாக்கியத்தில் இயேசுகிறிஸ்துவைப்பற்றி எழுதப்பட்டிருக்கிற காரியங்களெல்லாம் அவரில் நிறைவேறுகிறது. அவரைப்பற்றி முன்னறிவிக்கப்பட்டிருக்கிற எல்லா சம்பவங்களும் அவரில் நடைபெறுகிறது என்பது விசுவாசிகளுக்கு ஒரு சந்தோஷமான செய்தி. நம்முடைய ஜீவியங்களில்கூட இயேசுகிறிஸ்துவின் சித்தத்தின் பிரகாரமே ஒவ்வொரு காரியமும் நடைபெறும். அவருடைய சித்தமில்லாமல் நமக்கு ஒரு காரியமும் நடக்காது. வேதவாக்கியத்தில் கர்த்தருடைய ஊழியக்காரர்களைப்பற்றி என்ன எழுதப்பட்டிருக்கிறதோ அதுவே கிறிஸ்துவின் சித்தம். தேவனுடைய சித்தம் மாறுவதில்லை. அவர் நம்மீது வைத்திருக்கும் அன்பும் மாறுவதில்லை. பிரபஞ்சத்தின் ஜனங்கள் நம்மைப் பகைப்பதும் குறையப்போவதில்லை. ஏனெனில் எல்லாமே வேதவாக்கியத்தில் எழுதியிருக்கிற பிரகாரமாகவே நடைபெறுகிறது.

### தேற்றரவாளர்
### யோவா 15 : 26,27

**யோவா 15:26. பிதாவினிடத்தில் நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிற வருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக்குறித்துச் சாட்சி கொடுப்பார்.**

**யோவா 15:27. நீங்களும் ஆதிமுதல் என்னுடனேகூட இருந்தபடியால் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்.**

**என்னைக்குறித்துச் சாட்சி கொடுப்பார்**

**பிதாவினிடத்தில் நான் உங்களுக்கு அனுப்பப் போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிற வருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக்குறித்துச் சாட்சி கொடுப்பார் (யோவா 15:26).**

தம்முடைய சுவிசேஷத்திற்கு வரும் எதிர்ப்புக்களைக் குறித்து இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் முன்னறிவித்துக் கூறுகிறார். சீஷர்களுக்கு பாடுகளும் உபத்திரவங்களும் வந்தாலும் அவர்களுக்கு இயேசுகிறிஸ்துவின் பாதுகாப்பும் பராமரிப்பும் எப்போதும் கூடவேயிருக்கும். இயேசுகிறிஸ்து தம்மைக்குறித்துச் சாட்சிகொடுப்பதற்காக சத்திய ஆவியாகிய தேற்றரவாளரை அனுப்புவதாகக் கூறுகிறார். பரிசுத்த ஆவியானவருடைய சாட்சியோடு சேர்ந்து, சீஷர்களும் ஆதிமுதல் இயேசுகிறிஸ்துவுடனே கூடயிருந்தபடியால் அவருக்குச் சாட்சிகளாயிருப்பார்கள் (யோவா 15:27).

## அதிகாரம் - 15

இயேசுகிறிஸ்துவின் ஊழியம் இந்த உலகத்தில் "ஆசீர்வதிக்கப்பட்ட சத்திய ஆவியானவரால்" தொடர்ந்து நடைபெறும். "பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்பட்டு வருகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது அவர் என்னைக்குறித்து சாட்சிகொடுப்பார்" என்று இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடத்தில் வாக்குப்பண்ணுகிறார். பரிசுத்த வேதாகமத்தில் இந்த வசனத்தில்தான் பரிசுத்த ஆவியானவரின் ஊழியத்தைப்பற்றி மிகவும் தெளிவாக விவரிக்கப்பட்டிருக்கிறது.

இயேசுகிறிஸ்து தேற்றரவாளரைப்பற்றிக் கூறும்போது, அவருடைய சுபாவத்தைப்பற்றிக் கூறுகிறார். அவர் சத்திய ஆவியாகயிருக்கிறார். பிதாவினிடத்திலிருந்து புறப்பட்டு வருகிறார். இயேசுகிறிஸ்து பரிசுத்த ஆவியானவரைப்பற்றிப் பேசும்போது, அவரைத் தனி ஆள்தத்துவப் பண்புள்ள நபராகவே குறிப்பிடுகிறார். பரிசுத்த ஆவியானவர் தெய்வீக ஆள்தத்துவப் பண்புடையவராக, பிதாவினிடத்திலிருந்து புறப்பட்டு வருகிறார்.

மனுஷனுடைய ஆவி அல்லது மனுஷனுடைய சுவாசம் "ஜீவசுவாசம்" என்று அழைக்கப்படுகிறது. இது மனுஷனிடத்திலிருந்து புறப்பட்டு வருகிறது. சில சமயங்களில் மனுஷன் தன் சுவாசக்காற்றை பலமாக ஊதுகிறான். பெருமூச்சாக வெளியிடுகிறான். தான் ஆச்சரியப்படும்போது ஒருவிதமாகவும், அதிக முயற்சிபண்ணும்போது வேறொரு விதமாகவும் மூச்சுவிடுகிறான். பரிசுத்த ஆவியானவரும் தம்முடைய தெய்வீக வெளிச்சத்தையும் வல்லமையையும் வெவ்வேறு விதமாக வெளிப்படுத்துகிறார்.

இயேசுகிறிஸ்து பரிசுத்த ஆவியானவரின் ஊழியத்தைப்பற்றியும் கூறுகிறார். பரிசுத்த ஆவியானவர் இதுவரையிலும் தம்மை வெளிப்படுத்திய அளவுக்கு அதிகமாக, இப்போது தம்மை வெளிப்படுத்துகிறார். தம்முடைய வரங்களையும், கிருபைகளையும், வல்லமைகளையும் இதுவரையிலும் வெளிப்படுத்தாத அளவுக்கு இப்போது அதிகமாக வெளிப்படுத்துகிறார்.

இயேசு கிறிஸ்துவானவர் பிதாவினிடத்திலிருந்து பரிசுத்த ஆவியானவரை நமக்கு அனுப்பப்போகிறார். இதைப்பற்றி இயேசுகிறிஸ்து ஏற்கெனவே கூறும்போது "நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்கு சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்" (யோவா 14:16) என்று கூறியிருக்கிறார்.

நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்போது அவர் உங்களுக்கு பரிசுத்த ஆவியானவரைத் தந்தருளுவார் என்று கூறிய இயேசுகிறிஸ்து, இப்போது, "நான் உங்களுக்கு பரிசுத்த ஆவியானவரை அனுப்பப்போகிறேன்" என்று கூறுகிறார்.

பரிசுத்த ஆவியானவர் அனுப்பப்படுகிறவர். இயேசுகிறிஸ்து தேவனுக்கும் நமக்கும் மத்தியஸ்தராகயிருக்கிறார். இப்போது மனுஷருக்கு வரங்களை அருளும்படியாக உன்னதத்திற்குப் பரமேறிப்போயிருக்கிறார். பரிசுத்த ஆவியானவர் பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவர். இவர் பரலோகத்திலிருந்து மாத்திரமல்ல, பிதாவின் வீட்டிலிருந்து புறப்படுகிறவர். பிதாவின் சித்தத்தின் பிரகாரமாக, அவருடைய நியமனத்தின் பிரகாரமாக பரிசுத்த ஆவியானவர் அனுப்பப்படுகிறார். பரிசுத்த ஆவியானவருக்கு ஒரு விசேஷித்த ஊழியம் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆவியானவர் அப்போஸ்தலர்களுக்கு சத்தியத்தைப் அவர்களுக்குப் போதிப்பார்.

பரிசுத்த ஆவியானவர் "தேற்றரவாளர்" என்று அழைக்கப்படுகிறார். இந்த வார்த்தைக்கு "ஒருவர் சார்பாக வழக்காடுகிறவர்" என்று பொருள் கூறலாம். ஆவியானவர் எப்போதுமே இயேசுகிறிஸ்துவின் சார்பாக வழக்காடிக் கொண்டிருக்கிறார். துன்மார்க்கமான இந்த உலகத்தில், பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவின் சார்பாக அவிசுவாசத்திற்கு எதிராக வழக்காடிக்கொண்டிருக்கிறார். இந்த உலகம் கிறிஸ்துவின் ஊழியக்காரர்களைப் பகைக்கும்போது, பரிசுத்த ஆவியானவர் அவர்களைத் தேற்றுகிற தேற்றரவாளராக ஊழியம் செய்கிறார். ஆவியானவரின் முக்கியமான ஊழியம் இயேசுகிறிஸ்துவைக் குறித்து சாட்சிகொடுப்பதாகும்.

## அதிகாரம் - 15

பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவுக்காக வழக்காடுகிறவர் மாத்திரமல்ல, அவர் கிறிஸ்துவுக்காக சாட்சிகொடுக்கிறவராகவும் இருக்கிறார். ஊழியத்தின் வல்லமையை நாம் பரிசுத்த ஆவியானவரிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளவேண்டும். பரிசுத்த ஆவியானவரே கிறிஸ்துவின் ஊழியக்காரர்களைத் தகுதிப்படுத்துகிறார். நம்முடைய உபதேச வார்த்தைகளை அபிஷேகம்பண்ணுகிறார். கர்த்தருடைய பிள்ளைகளைப் பரிசுத்தப்படுத்துகிறார். இவையெல்லாவற்றிலும் அவர் கிறிஸ்துவைக்குறித்து சாட்சிகொடுக்கிறார். இயேசுகிறிஸ்துவின் சாட்சி நம்முடைய ஊழியத்தின் வல்லமையிலும், ஊழியக்காரரின் பரிசுத்தத்திலும் வெளிப்படுகிறது. பரிசுத்த ஆவியானவர் இவ்விரண்டிலும் கவனம் செலுத்தி, இப்பிரபஞ்சத்தின் ஜனங்களோடு இயேசுகிறிஸ்துவைக்குறித்து சாட்சிகொடுத்துக்கொண்டிருக்கிறார்.

**எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்**

**நீங்களும் ஆதிமுதல் என்னுடனேகூட இருந்தபடியால் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் (யோவா 15:27).**

இயேசு கிறிஸ்துவுக்கு சாட்சிகளாயிருக்கும் சிலாக்கியம் அப்போஸ்தலருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் "நீங்களும் ஆதிமுதல் என்னுடனேகூட இருந்தபடியால் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" என்று கூறுகிறார் பரிசுத்த ஆவியானவர் நம்மை அடக்கி ஆளுகை செய்யமாட்டார். ஆவியானவர் நமக்குள்ளே வாசம்பண்ணி நம்மை உற்சாகப்படுத்துகிறார். ஊழியத்தில் பயன்படுத்துகிறார். ஆவியானவர் நம்மை அமைதியாக இருக்க வைத்துவிட்டு தாமாகவே எல்லாக் கிரியைகளையும் செய்து முடித்துவிடுவதில்லை. அவர் நம்மைப் பெலப்படுத்தி கிரியை செய்ய செய்கிறார்.

பரிசுத்த ஆவியானவர் இயேசுகிறிஸ்துவைக் குறித்துச் சாட்சிகொடுக்கிறார். அதே வேளையில் கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நாமும் இயேசுகிறிஸ்துவுக்குச் சாட்சிகளாகயிருக்க வேண்டும். நாம் செய்ய வேண்டிய ஊழியம் நம்மிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. நாம் சத்தியத்திற்குச் சாட்சிகொடுக்க வேண்டும். இயேசுகிறிஸ்துவின் பூரண சத்தியத்திற்கு நாம் சாட்சிகொடுக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சத்தியத்திற்கு மாத்திரமே நாம் சாட்சிகொடுக்க வேண்டுமேயல்லாமல், வேறு எதற்கும் சாட்சிகொடுக்கவேண்டியதில்லை.

இயேசுகிறிஸ்து பிரதான ஆசாரியருக்கு முன்பாகவும் பிலாத்துவுக்கு முன்பாகவும் விசாரிக்கப்பட்டபோது, அவருடைய சீஷர்கள் அவரைவிட்டு ஓடிப்போய்விட்டார்கள். ஆனாலும், பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் அவர்கள்மீது ஊற்றப்பட்டபின்பு, சீஷர்கள் பெலனடைந்து கிறிஸ்துவுக்குத் தைரியமாய்ச் சாட்சிகொடுத்தார்கள். இயேசுகிறிஸ்துவைப் பற்றி சாட்சிகொடுக்கும்போது, அப்போஸ்தலர்கள் அவருடைய உயிர்த்தெழுதலுக்கு சாட்சிகொடுத்தார்கள், தாங்களும் சாட்சிகளாகயிருந்தார்கள். இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு தங்களுக்குப் பிரத்தியட்சமாக காட்சிகொடுத்ததாகவும் அப்போஸ்தலர்கள் சாட்சி கொடுக்கிறார்கள். இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த பின்பு, அவரோடே புசித்துக் குடித்தவர்களும் தேவனால் முன்பு நியமிக்கப்பட்ட சாட்சிகளுமாகிய எங்களுக்கே பிரத்தியட்சமாகும்படி செய்தார் என்று பேதுரு சாட்சியாக அறிவிக்கிறார் (அப் 10:41).

இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரர்களே அவருக்குச் சாட்சிகளாகயிருக்கிறார்கள். கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாகயிருப்பது சீஷர்களுக்குக் கிடைத்திருக்கிற மிகப்பெரிய சிலாக்கியம். அவர்கள் தேவனோடு உடன் வேலையாட்களாகயிருக்கிறார்கள். பரிசுத்த ஆவியானவர் இயேசுகிறிஸ்துவைக் குறித்து சாட்சிகொடுக்கிறார். கிறிஸ்துவின் சீஷர்கள் அவருக்குச் சாட்சிகளாகயிருக்கிறார்கள். சீஷர்கள் கிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்தபோது அவர்களுக்கு இந்தப் பிரபஞ்சத்திலிருந்து எதிர்ப்புக்களும், பாடுகளும் வேதனைகளும் உண்டாயிற்று. இவையெல்லாவற்றிற்கும் மத்தியில், தங்களுக்கு கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாகயிருக்கக்கூடிய சிலாக்கியம் கிடைத்திருக்கிறது என்பதை நினைவுகூர்ந்து, சீஷர்கள் ஆறுதலடைகிறார்கள். சந்தோஷப்படுகிறார்கள். ஊழியத்தை உற்சாகமாகச் செய்கிறார்கள். இந்த உலகம் சீஷர்களை வெறுத்தாலும் இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களைக் கனப்படுத்துகிறார்.

## அதிகாரம் - 15

இயேசு கிறிஸ்துவுக்கு சாட்சிகளாகயிருக்க சீஷர்களுக்கு ஒரே ஒரு தகுதி மாத்திரமே இருக்கிறது. அவர்கள் ஆதி முதல் இயேசுகிறிஸ்துவுடனேகூட இருந்திருக்கிறார்கள். இதுவே சீஷர்களிடத்தில் காணப்படுகிற தகுதி. இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைச், சீஷர்கள் திரளான ஜனங்களோடு, தாங்களும் கேட்டிருக்கிறார்கள். அதற்கும் அதிகமாக, இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களோடு தனிப்பட்ட முறையில் உபதேசம் பண்ணியிருக்கிறார். பலசமயங்களில் இயேசுகிறிஸ்து ஒவ்வொரு ஊராகப் பிரயாணம் செய்து, அங்கு அற்புங்களையும் அடையாளங்களையும் செய்திருக்கிறார். இந்த அற்புதங்களுக்கெல்லாம் அந்தந்த ஊர் ஜனங்கள் சாட்சிகளாகயிருக்கிறார்கள். சீஷர்கள் இயேசுவோடு எல்லா ஊர்களுக்கும் பிரயாணமாய்ப் போவதினால், எல்லா ஊர்களிலும் நடைபெற்ற அற்புதங்களுக்கு அவர்கள் சாட்சிகளாகயிருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவோடு சீஷர்கள் தங்கள் விசுவாசத்திலும், நம்பிக்கையிலும், அன்பிலும் கூடவே இருக்கிறார்கள். கிறிஸ்துவோடு கூடவே இருக்கிறவர்களால் மாத்திரமே அவருக்கு சாட்சிகளாகயிருக்க முடியும். கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் முதலாவதாக அவரைக் கற்றுக்கொள்ளவேண்டும். அதன் பின்புதான் அவரைப்பற்றிப் பிரசங்கம்பண்ண வேண்டும். தேவனுடைய காரியங்களைப் பிரசங்கம்பண்ணுகிறவர்கள், முதலாவதாக அவற்றைத் தங்கள் ஜீவியங்களில் அனுபவித்திருக்கவேண்டும். இயேசுகிறிஸ்து நல்லவரென்பதை ருசிபார்த்திருக்கிறவர்கள் மாத்திரமே "இயேசுகிறிஸ்து நல்லவர்" என்று சாட்சி கூறமுடியும்.

கிறிஸ்துவின் சீஷர்கள் அவருடனேகூட ஆதி முதல் இருந்திருக்கிறார்கள். சீஷர்களுக்கு கிறிஸ்துவோடு நல்ல ஐக்கியமும், கிறிஸ்துவின் மூலமாய் உபதேசமும், ஆவிக்குரிய அனுபவமும் கிடைத்திருக்கிறது. நாமும் சுவிசேஷத்தை நம்முடைய ஆரம்ப நாட்களிலேயே இருதயத்தில் பெற்றிருந்தால், நம்மாலும் இயேசுகிறிஸ்துவுக்கு நல்லமுறையில் ஊழியம் செய்யமுடியும். நீண்ட நாள் அனுபவம் எப்போதுமே பிரயோஜனமுள்ளது. தம்மோடுகூட நீண்டகாலமாக ஐக்கியமாக இருக்கிற தம்முடைய பிள்ளைகளை, இயேசுகிறிஸ்து தம்முடைய உக்கிராண ஊழியத்திற்குப் பொறுப்பானவர்களாக நியமிக்கிறார்.

## அதிகாரம் - 16

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் பாடுகளையும் உபத்திரவங்களையும் சந்திக்கவேண்டும். அவர்களுக்கு வரப்போகும் துன்பங்களைக்குறித்து இயேசுகிறிஸ்து அவர்களிடத்தில் முன்னறிவிக்கிறார் (யோவா 16:1-6). இயேசுகிறிஸ்து அவர்களுக்குத் தேற்றரவாளரை அனுப்பப் போவதாக வாக்குப்பண்ணுகிறார் (யோவா 16:7-15). இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு மறுபடியும் சீஷர்களுக்குத் தம்மை பிரத்தியட்சமாகக் காண்பிப்பார் (யோவா 16:16-22). சீஷர்களின் எல்லா ஜெபங்களுக்கும் பதில் கொடுக்கப்படுமென்று இயேசுகிறிஸ்து வாக்குப்பண்ணுகிறார் (யோவா 16:23-27). இயேசுகிறிஸ்து இப்போது பிதாவினிடத்திற்குத் திரும்பிப்போகிறார் (யோவா 16:28-32). இயேசுகிறிஸ்துவிடத்தில் சீஷர்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும் (யோவா 16:33).

### சீஷர்களுக்கு வரப்போகும் துன்பங்கள்
### யோவா 16 : 1-6

**யோவா 16:1. நீங்கள் இடறலடையாதபடிக்கு இவைகளை உங்களுக்குச் சொன்னேன்.**

**யோவா 16:2. அவர்கள் உங்களை ஜெபஆலயங்களுக்குப் புறம்பாக்குவார்கள்; மேலும் உங்களைக் கொலைசெய்கிறவன் தான் தேவனுக்குத் தொண்டு செய்கிறவனென்று நினைக்குங் காலம் வரும்.**

**யோவா 16:3. அவர்கள் பிதாவையும் என்னையும் அறியாதபடியினால் இவைகளை உங்களுக்குச் செய்வார்கள்.**

**யோவா 16:4. அந்தக் காலம் வரும்போது நான் இவைகளை உங்களுக்குச் சொன்னேனென்று நீங்கள் நினைக்கும்படி இவைகளை உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன்; நான் உங்களுடனேகூட இருந்தபடியினால் ஆரம்பத்திலே இவைகளை உங்களுக்குச் சொல்லவில்லை.**

**யோவா 16:5. இப்பொழுது நான் என்னை அனுப்பினவரிடத்திற்குப் போகிறேன்; எங்கே போகிறீரென்று உங்களில் ஒருவனும் என்னைக் கேட்கவில்லை.**

**யோவா 16:6. ஆனாலும் நான் இவைகளை உங்களுக்குச் சொன்னதினால் உங்கள் இருதயம் துக்கத்தால் நிறைந்திருக்கிறது.**

### நீங்கள் இடறலடையாதபடிக்கு

**நீங்கள் இடறலடையாதபடிக்கு இவைகளை உங்களுக்குச் சொன்னேன் (யோவா 16:1).**

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களை அனுப்பும்போது, அவர்களிடத்தில் எதையும் மறைக்காமல் உள்ளதை உள்ளபடியே சொல்லுகிறார். அவர்கள் சந்திக்க வேண்டிய துன்பங்களையும் அப்படியே சொல்லிவிடுகிறார். இதனால் தாங்கள் போகும் பாதையில், தாங்கள் சந்திக்க வேண்டிய பாடுகளையும் வேதனைகளையும் குறித்து அவர்கள் எச்சரிப்போடு இருப்பார்கள். மேலும் இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுவதற்கு செலுத்த வேண்டிய கிரயத்தைப்பற்றி, செல்லும் செலவை உட்கார்ந்து கணக்குப் பார்ப்பார்கள்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் அவர்களுக்கு வரப்போகும் துன்பங்களைப்பற்றிப் பேசுவதற்கு ஒரு காரணமுள்ளது. "நீங்கள் இடறலடையாதபடிக்கு இவைகளை உங்களுக்குச் சொன்னேன்" என்று இயேசுகிறிஸ்து கூறுகிறார். இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்படும்போது சீஷர்களுக்கு மிகவும் வேதனையாக இருக்கும். இயேசுகிறிஸ்துவில் இவர்கள் வைத்திருக்கும் விசுவாசம் அப்போது அசைக்கப்படும். சீஷர்கள் இடறலடைவதற்கு வாய்ப்புண்டாகும். இயேசுகிறிஸ்து சிலுவையில் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்து மரிக்கும்போது, சீஷர்களுக்குப் பயங்கரமான சோதனை உண்டாகும். இப்படிப்பட்ட சமயங்களில் பக்திமான்கள்கூட தேவனை விட்டுப் பின்வாங்கிப்போவதற்கு வாய்ப்புள்ளது. எல்லாம் நல்லபடியாக நடந்தால் நம்முடைய விசுவாசம் உறுதியாக இருக்கும். நாம் எதிர்பாராத பிரச்சனைகளும், துன்பங்களும் நமக்கு வந்தால் நம்முடைய விசுவாசம் ஆடிப்போய்விடும்.

## அதிகாரம் - 16

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு வரப்போகும் துன்பங்களை ஏற்கெனவே முன்னறிவித்து, அவருடைய உள்ளத்தில் திகிலும் பயமும் உண்டாகாதவாறு பாதுகாத்துக்கொள்கிறார். துன்பங்கள் வரும்போது அது நமக்கு ஆச்சரியமாகவோ, அதிர்ச்சியாகவோ இருக்கக்கூடாது. துன்பங்களை எதிர்பார்ப்போமென்றால், அதை தாங்கிக்கொள்வதற்கு நம்மை ஆயத்தப்படுத்திக்கொள்ளலாம். நம்முடைய வீட்டிற்கு திடீரென்று ஒரு விருந்தாளி வந்தால், அவரை எப்படி உபசரிப்பது என்று தெரியாமல் தவிப்போம். அதேவேளையில் நாம் எதிர்பார்க்கிற விருந்தாளி நம்முடைய வீட்டிற்கு வந்தால், அவரை வரவேற்று உபசரிப்பது நமக்கு எளிதாகயிருக்கும். அதுபோலத்தான் நாம் துன்பங்களை எதிர்பார்த்தால், அதை எளிதாகத் தாங்கிக்கொள்ளலாம். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளினால் முன்னெச்சரிப்பைப் பெற்றுக்கொள்ளவேண்டும். முன்னெச்சரிப்பானது, ஆவிக்குரிய யுத்தம்பண்ணுவதற்கு சர்வாயுதவர்க்கங்களை ஏற்கெனவே அணிந்திருந்து ஆயத்தமாகயிருப்பதுபோல இருக்கும்.

### புறம்பாக்குவார்கள்

**அவர்கள் உங்களை ஜெபஆலயங்களுக்குப் புறம்பாக்குவார்கள்; மேலும் உங்களைக் கொலைசெய்கிறவன் தான் தேவனுக்குத் தொண்டு செய்கிறவனென்று நினைக்குங் காலம் வரும் (யோவா 16:2).**

தம்முடைய சீஷர்களுக்கு எப்படிப்பட்ட துன்பங்களெல்லாம் வரும் என்று இயேசுகிறிஸ்து அவர்களிடம் முன்னறிவிக்கிறார். சீஷர்களை ஜெப ஆலயங்களுக்குப் புறம்பாக்குவார்கள். அவர்களைக் கொலை செய்வார்கள். இயேசுகிறிஸ்துவின் சீஷர்களுக்கு விரோதமாக இரண்டு பட்டயங்கள் யுத்தம்பண்ணிக் கொண்டிருக்கும். அவையாவன: 1. மார்க்க ரீதியான பட்டயம் 2. அதிகாரத்தின் பட்டயம்.

"அவர்கள் உங்களை ஜெப ஆலயங்களுக்குப் புறம்பாக்குவார்கள்" என்று இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் எச்சரித்துக் கூறுகிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களை இதற்கு முன்பு எச்சரித்தபோது "அவர்கள் உங்களை ஆலோசனைச் சங்கங்களுக்கு ஒப்புக் கொடுத்து, தங்கள் ஜெப ஆலயங்களில் உங்களை வாரினால் அடிப்பார்கள்" (மத் 10:17) என்று ஏற்கெனவே எச்சரித்துக் கூறியிருக்கிறார். இதன் தொடர்ச்சியாக அவர்கள் சீஷர்களை ஜெப ஆலயங்களுக்குப் புறம்பாக்கிவிடுவார்கள். இஸ்ரவேலின் காணியாட்சிக்கு இவர்கள் புறம்பே தள்ளப்படுவார்கள். இஸ்ரவேல் ஜனத்தாரோடு இவர்களுக்கு பங்கும் பாத்தியமும் இல்லாதவர்களைப்போல இவர்களைப் புறம்பாக்குவார்கள்.

சீஷர்கள் சத்தியத்தை உபதேசித்தாலும், ஜெப ஆலயத்தின் மூலமாக இவர்களுக்கு எதிர்ப்புக்களும் வேதனைகளும் உண்டாகும். தேவனுடைய மந்தையில் நல்ல ஆடுகளாக இருக்கும் இவர்களை, "நரிகள்" என்று கூறி, இவர்களை மந்தையிலிருந்து துரத்திவிடுவார்கள். பொதுவாக தேவனுடைய சத்தியத்திற்கு உலகத்திலிருந்து வரும் எதிர்ப்பைவிட, ஜெப ஆலயத்திலிருந்தே எதிர்ப்பு அதிகமாக வருகிறது.

சீஷர்களுக்கு ஜெப ஆலயத்திலிருந்து துன்பங்கள் வரும்போது, அதிகாரத்திலிருக்கிறவர்களும், தங்களுடைய அதிகாரத்தைத் துஷ்பிரயோகம்பண்ணி, இவர்களைத் துன்பப்படுத்துவார்கள். சத்தியத்தை உபதேசம் பண்ணுகிற சீஷர்கள் "தேவதூஷணம் சொல்லுகிறவர்கள்" என்று குற்றம் சாட்டப்படுவார்கள். ஜெப ஆலயத்தைவிட்டுப் புறம்பே தள்ளப்படுவார்கள். அவர்களைக் கொன்றுபோடுவார்கள். கிறிஸ்துவின் சீஷர்களைக் கொலை செய்கிறவன், "நான் தேவனுக்குத் தொண்டு செய்கிறேன்" என்று நினைப்பான். இப்படிப்பட்ட ஒரு காலம் வரப்போகிறது. இந்தக் காலத்தைச் சந்திப்பதற்கு சீஷர்கள் ஆயத்தமாகயிருக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்துவின் சீஷர்களைத் துன்பப்படுத்துகிறவர்கள் துன்மார்க்கர்களாக இருக்கிறார்கள். கொலைசெய்யக்கூடிய கொலை வெறியர்களாக இருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து இங்கு எச்சரித்துக் கூறியது போலவே சீஷர்களுடைய வாழ்க்கையில் சம்பவங்கள் நடைபெற்றது. யோவானைத்தவிர, இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் எல்லோரும் இரத்தசாட்சியாக மரித்தார்கள். இவர்களைக் கொன்றுபோட்டவர்களெல்லோரும், தாங்கள் தேவனுக்குத் தொண்டு செய்வதாகவே நினைத்தார்கள்.

## அதிகாரம் - 16

தேவனுக்குச் சத்துருக்களாக இருக்கிறவர்கள், துன்மார்க்கராகவும், இரத்த வெறிப்பிடித்தவர்களாகவும் இருக்கும்போது, தாங்கள் தேவன் மீதுள்ள பக்தியினால், இப்படி நடந்துகொள்வதாகக் காரணம் சொல்லுகிறார்கள். தங்களுடைய கொலை வெறியைத் தேவனுக்குச் செய்யும் தொண்டு என்று வியாக்கியானம் பண்ணுகிறார்கள். தேவன் மீதுள்ள பக்திவைராக்கியம் பரிசுத்தவான்களைக் கொலை செய்கிற அளவுக்கு இவர்களைத் தூண்டுகிறது.

பிசாசின் கிரியைகள் இதுபோல மிகவும் தந்திரமாக இருக்கும். தேவனுடைய ஊழியம், தேவனுக்குச் செய்யும் தொண்டு என்னும் பெயரில் பிசாசு தன்னுடைய கிரியைகளைச், சபைகள் மூலமாகவும், ஸ்தாபனங்கள் மூலமாகவும் நிறைவேற்றி வருகிறான். கர்த்தருடைய பிள்ளைகள் இதைக் குறித்து மிகுந்த எச்சரிப்போடு இருக்கவேண்டும். இயேசுகிறிஸ்து சொன்னதுபோல "விசுவாசிகளைக் கொலை செய்கிறவன் தான் தேவனுக்குத் தொண்டு செய்கிறவனென்று நினைக்குங்காலம் வரும்". அந்தக் காலம் இப்போதே வந்திருக்கிறது.

ஒரு சிலர் இயேசுகிறிஸ்துவின் உபதேசத்திற்கு எதிர்த்து நிற்கிறார்கள். சத்தியத்தை உபதேசம்பண்ணுகிறவர்களைப் பகைக்கிறார்கள். அவர்களைத் துன்பப்படுத்துகிறார்கள். இவர்களெல்லோருமே தாங்கள் தேவனுக்குத் தொண்டு செய்வதாகவும், தங்கள் சபைக்கு உதவிசெய்வதாகவும் நினைத்துக்கொண்டு, பரிசுத்தவான்களைத் துன்பப்படுத்துகிறார்கள். வரலாற்றுக் காலத்தில், கர்த்தருடைய பிள்ளைகளுக்கு உண்டான துன்பங்களையெல்லாம் நாம் அட்டவணையிட்டுப் பார்த்தால், இப்பிரபஞ்சத்திலிருந்து அவர்களுக்கு வந்த துன்பங்களைவிட, சபையிலிருந்து வந்த துன்பங்களே அதிகமாக இருக்கும்.

விசுவாசிகளைத் துன்பப் படுத்துகிறவர்களின் பாவம் தேவனுடைய சமுகத்திற்கு முன்பாக இருக்கும். அது மறைவாகயிராது. துன்பப்படுத்துகிறவர்களின் பாவம் ஒரு புறம் இருக்கும்போது, அவர்கள் பரிசுத்தவான்களைத் "தேவனுடைய சத்துருக்கள்" என்று கூறுகிறார்கள். இந்த வார்த்தையைக் கேட்கும்போது பரிசுத்தவான்களின் உள்ளம் மிகவும் வேதனையடையும். துன்மார்க்கர்கள் பக்தியுள்ளவர்களைத் "தேவனுடைய சத்துருக்கள்" என்று கூறுகிறார்கள். துன்மார்க்கர்கள் தங்களுடைய துன்மார்க்கமான கிரியைகளைத், "தேவனுக்குச் செய்யும் தொண்டு" என்று வியாக்கியானம் பண்ணுகிறார்கள்.

**பிதாவையும் என்னையும் அறியாதபடியினால்**

**அவர்கள் பிதாவையும் என்னையும் அறியாதபடியினால் இவைகளை உங்களுக்குச் செய்வார்கள் (யோவா 16:3).**

இந்த உலகம் இயேசுகிறிஸ்துவின் சீஷர்களைப் பகைக்கிறது. அவர்களைத் துன்பப்படுத்துகிறது. இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் இதற்கான காரணத்தையும் தெளிவுபடுத்துகிறார். "அவர்கள் பிதாவையும் என்னையும் அறியாதபடியினால் இவைகளை உங்களுக்குச் செய்வார்கள்" என்று கூறுகிறார். இயேசுகிறிஸ்துவைத் தங்களுக்குத் தெரியுமென்று ஏராளமானோர் கூறுகிறார்கள். இது வெறும் நடிப்புதான். மாய்மாலமான வார்த்தைதான். இவர்கள் மெய்யாகவே இயேசுகிறிஸ்துவை அறியவில்லை.

இயேசுகிறிஸ்துவைப் பற்றி அறியாதவர்களுக்கு தேவனைப்பற்றி ஞானம் இருக்காது. அவர்கள் தேவனை ஒருபோதும் அறிந்துகொள்ளமாட்டார்கள். இவர்களுக்குப் பிதாவைப்பற்றியும், இயேசுகிறிஸ்துவைப் பற்றியும் அறிவு இல்லாமல் இருப்பதினால்தான், இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரர்களைத் துன்பப்படுத்தி, அவர்களைக் கொலைசெய்து, தாங்கள் செய்கிற துன்மார்க்கமான கிரியைகளைத், "தேவனுக்குச் செய்கிற தொண்டு" என்று சொல்லுகிறார்கள். இவர்கள் கர்த்தருடைய ஊழியத்திற்கும் கொலைவெறிக்கும் வித்தியாசம் தெரியாத துன்மார்க்கராகயிருக்கிறார்கள். இவர்களுக்குத் தேவனைப்பற்றியும், கிறிஸ்துவைப்பற்றியும் மெய்யான அறிவுயில்லாமல் இருப்பதே, இவர்கள் பரிசுத்தவான்களைத் துன்பப்படுத்துவதற்கு அடிப்படை காரணமாயிற்று.

## அதிகாரம் - 16

**ஆரம்பத்திலே இவைகளை உங்களுக்குச் சொல்லவில்லை**

**அந்தக் காலம் வரும்போது நான் இவைகளை உங்களுக்குச் சொன்னேனென்று நீங்கள் நினைக்கும்படி இவைகளை உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன்; நான் உங்களுடனேகூட இருந்தபடியினால் ஆரம்பத்திலே இவைகளை உங்களுக்குச் சொல்லவில்லை (யோவா 16:4).**

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு வரப்போகும் பாடுகளை இப்போது சொல்லுகிறார். அதே வேளையில், இதற்கு முன்பே அவர்களுக்கு இவற்றைப்பற்றி ஏன் சொல்லவில்லை என்பதற்கான காரணத்தையும் கூறுகிறார். ஆரம்பத்திலேயே பிரச்சனைகளைப்பற்றிப் பேசி அவர்களைச் சோர்வடையச்செய்ய இயேசுகிறிஸ்து விரும்பவில்லை. எல்லாவற்றிற்கும் ஒரு காலமுண்டு. ஏற்றவேளை வரும்போது, இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷருக்கு ஒவ்வொரு சத்தியமாக வெளிப்படுத்துகிறார். "அந்தக்காலம் வரும்போது நான் இவைகளை உங்களுக்குச் சொன்னேன் என்று நீங்கள் நினைக்கும்படி இவைகளை உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன்" என்று தாம் இவற்றை இப்போது சொல்லுவதற்கான காரணத்தையும், இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷருக்குத் தெளிவுபடுத்துகிறார்.

சீஷர்களுக்குப் பாடுகளும் துன்பங்களும் வரும்போது, இயேசுகிறிஸ்து தங்களுக்கு இவற்றைப்பற்றி சொல்லிய வார்த்தைகளை நினைவுகூர்ந்து, ஆறுதலடைந்திருப்பார்கள். நமக்கு வரப்போகும் துன்பங்களைப்பற்றி நமக்கு ஏற்கெனவே சொன்னால், அந்தத் துன்பங்கள் வரும்போது அது நமக்கு மிகுந்த பாரமாகயிராது. அதைச் சந்திப்பதற்கும், தாங்கிக்கொள்வதற்கும் நாம் ஆயத்தமாகயிருப்போம். நமக்கு எப்படிப்பட்ட துன்பம் வரும் என்பது ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருப்பதினால், அவை வரும்போது அது நமக்கு அதிர்ச்சியாகவோ அல்லது ஆச்சரியமாகவோ இராது.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடத்தில் இப்போது அவர்களுக்கு வரப்போகும் துன்பத்தைப்பற்றிச் சொல்லுகிறார். ஆனால் இதற்கு முன்பே அவர்களிடம் அதைப்பற்றிச் சொல்லவில்லை. இயேசுகிறிஸ்து அவர்களுடனே கூடயிருந்தபடியால், ஆரம்பத்திலே அவர் அவர்களுக்கு இவைகளைச் சொல்லவில்லை. இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரோடு இருந்த காலத்தில், உலகத்தின் கோபத்தையும் விரோதத்தையும் தாமே தம்மீது ஏற்றுக்கொண்டார். ஆவிக்குரிய யுத்தத்தில் இயேசுகிறிஸ்து தாமே முன்னணியில் நின்று சத்துருவோடு யுத்தம்பண்ணினார். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு ஆரம்பத்திலிருந்து துன்பங்களைத் தாங்கிக்கொள்ள உபதேசம் பண்ணிக்கொண்டேயிருக்கிறார்.

**என்னை அனுப்பினவரிடத்திற்குப் போகிறேன்**

**இப்பொழுது நான் என்னை அனுப்பினவரிடத்திற்குப் போகிறேன்; எங்கே போகிறீரென்று உங்களில் ஒருவனும் என்னைக் கேட்கவில்லை. ஆனாலும் நான் இவைகளை உங்களுக்குச் சொன்னதினால் உங்கள் இருதயம் துக்கத்தால் நிறைந்திருக்கிறது (யோவா 16:5,6).**

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களைவிட்டுப்போகப்போகிறார். இதனால் சீஷர்கள் மிகுந்த துக்கத்தோடிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவும் தம்முடைய சீஷர்களின் துக்கத்தைக் குறித்து அதிக கரிசனையோடிருக்கிறார். "இப்பொழுது நான் என்னை அனுப்பினவரிடத்திற்குப் போகிறேன்; எங்கே போகிறீரென்று உங்களில் ஒருவனும் என்னைக் கேட்கவில்லை" என்று தம்முடைய சீஷரிடத்தில் பரிவோடு பேசுகிறார். தங்களுக்கு ஆறுதல் தரக்கூடிய விஷயங்களைப்பற்றி சீஷர்கள் இயேசுகிறிஸ்துவிடம் விசாரிக்கவில்லை. அதற்குப் பதிலாக தங்களுடைய துன்பங்களைப் பற்றியும், வேதனைகளைப் பற்றியும் நினைத்து அதிகமாய் துக்கப்படுகிறார்கள். நமக்கு துன்பம் வரும்போது, அதைப்பற்றியே நினைத்துக் கொண்டிருக்காமல், நமக்கு ஒத்தாசை கொடுக்கிற இயேசுகிறிஸ்துவையே நினைத்துக்கொள்ளவேண்டும்.

## அதிகாரம் - 16

இயேசுகிறிஸ்து இப்போது தம்மை அனுப்பின பிதாவினிடத்திற்குப் போகப்போகிறார். பிதாவினிடத்திற்குப் போகுமாறு இயேசுகிறிஸ்துவை யாரும் கட்டாயப்படுத்தவில்லை. இந்தப் பூமியிலிருந்து அவரை யாரும் துரத்திவிடவில்லை. இயேசுகிறிஸ்து தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக, சுயாதீனமாக தம்மை அனுப்பின பிதாவினிடத்திற்குத் தாமாகவே போகிறார். இந்தப் பூமியில் தாம் செய்த ஊழியத்தைக் குறித்து கணக்கு ஒப்புவிப்பதற்காக, இயேசுகிறிஸ்து தம்முடைய பிதாவினிடத்திற்குப் போகிறார்.

இயேசுகிறிஸ்து சீஷர்களைவிட்டுப் போனபின்பு அவர்களுக்கு என்னென்ன துன்பங்களெல்லாம் வரும் என்று முன்னறிவித்துக் கூறுகிறார். ஒருவேளை இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றி அவருடைய சீஷராகயிருப்பது தாங்கள் செய்த தவறான முடிவோ என்று நினைத்து அவர்கள் சோதிக்கப்படலாம். ஒருவேளை தங்களுடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து, பாதி வழியில், தங்களை கைவிட்டுப்போகிறாரோ என்றும் ஏக்கத்தோடு பார்க்கலாம். சீஷர்களின் உள்ளான மனதை இயேசுகிறிஸ்து அறிந்திருக்கிறார்.

தம்முடைய சீஷர்களின் துக்கத்தைப் போக்குவதற்காக இயேசுகிறிஸ்து அவர்களுக்கு ஆலோசனை கூறுகிறார். அவர்களுக்காக பரிதபிக்கிறார். அதே சமயத்தில் அவர்களுடைய அவிசுவாசத்தினிமித்தமாகவும், தெளிந்த சிந்தனையில்லாமல் அவர்கள் துக்கத்தோடிருப்பதற்காகவும், இயேசுகிறிஸ்து அவர்களைக் கடிந்துகொள்ளவும் செய்கிறார். "எங்கே போகிறீரென்று உங்களில் ஒருவனும் என்னைக் கேட்கவில்லை" என்று அவர்களிடத்தில் வருத்தத்தோடு பேசுகிறார். அவர்களுக்கு ஆறுதல் கொடுக்கக்கூடிய சம்பவத்தைப்பற்றி அவர்கள் அக்கறையில்லாதவர்களாக இருக்கிறார்கள்.

பேதுரு ஒரு சமயம் "நீர் எங்கே போகிறீர்" என்று இயேசுகிறிஸ்துவிடம் கேட்டான் (யோவா 13:36). தோமா கூட இயேசுகிறிஸ்துவிடம் "ஆண்டவரே நீர் போகிற இடத்தை அறியோமே. வழியை நாங்கள் எப்படி அறிவோம்" (யோவா 14:5) என்று கேட்டான். இவர்கள் "இயேசுகிறிஸ்து எங்கே போகிறார்" என்பதை அந்தந்த சமயத்தில் தெரிந்து கொள்ளவேண்டுமென்று ஆவலாகயிருந்தாலும், அதைத் தெரிந்துகொள்ள அவர்கள் தொடர்ந்து முயற்சிபண்ணவில்லை. அப்படியே மறந்துவிடுகிறார்கள். இயேசுகிறிஸ்துவோ நமக்கு நல்ல போதகராயிருக்கிறார். நாம் ஒரு சத்தியத்தை மறந்துபோனாலும், அதை நமக்குத் திரும்பவும் நினைவுபடுத்துகிறார். பொறுமையோடு உபதேசம்பண்ணுகிறார்.

சாதாரணமாக ஆசிரியர்களுக்குப் பொறுமையிருக்காது. மாணவர்கள் ஆசிரியரிடம் ஒரே கேள்வியை இரண்டு தரம் கேட்டால், ஆசிரியர்கள் பொறுமையோடு பதில் சொல்லமாட்டார்கள். புரிந்தால் புரியட்டும், புரியாமல்போனால் போகட்டுமென்று அக்கரையில்லாமல் சொல்லிக்கொடுப்பார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ ஒரு தாய் தன் குழந்தைக்குக் கொஞ்சம் கொஞ்சமாகக் கற்றுக்கொடுப்பதுபோல, நமக்குச் சத்தியத்தைக் கற்றுக்கொடுக்கிறார். நமக்கு அறியாத சத்தியங்களைக்கூட எடுத்துக்காட்டுகளினாலும், உவமைகளினாலும் விளக்கிக்கூறி நமக்குப் புரியவைக்கிறார்.

தேவனுடைய தெய்வீக திட்டத்தை அவரிடத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும். நமக்கு இந்த உலகத்தில் எப்படிப்பட்ட பிரச்சனைகள் வரும் என்பதைத் தேவனுடைய சமுகத்தில் அமர்ந்திருந்து, அவரிடத்தில் கற்றுக்கொள்ளவேண்டும். நம்முடைய உண்மையான நிலமை என்ன, நாம் எப்படிப்பட்ட சூழ்நிலையில் இருக்கிறோம் என்பதையெல்லாம் இயேசு கிறிஸ்துவிடத்திலிருந்துதான் கற்றுக்கொள்ள வேண்டும். நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவும் தம்மிடத்தில் நாம் கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டுமென்று சித்தமுள்ளவராகயிருக்கிறார். நாம் கேட்காமல் அமைதியாகயிருப்போமென்றால் ஒன்றையும் தெரிந்துகொள்ளமுடியாது. தேவனுடைய இரகசியத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது.

## அதிகாரம் - 16

நம்முடைய வாழ்க்கையில் எது நடந்தாலும் அது தேவனுடைய சித்தத்தின் பிரகாரமாகவே நடக்கும் என்னும் நிச்சயம் நம்மிடம் இருக்கவேண்டும். நாம் தேவனுடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்கள். தேவனிடத்தில் அன்புகூருகிறவர்கள். நமக்குச் சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறது என்று நாம் அறிந்திருக்கவேண்டும் (ரோம 8:28). நமக்குத் துன்பங்கள் வரும்போது, "ஆண்டவரே இது ஏன் எனக்குச் சம்பவிக்கிறது" என்று கேட்போமானால், அவர் நம்மிடத்தில் "தம்முடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறது" என்று பதில் கூறுவார்.

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் துக்கத்தில் நிறைந்திருக்கிறார்கள். இருதயத்தில் துக்கம் மிகுந்திருப்பதினால், அவர்களால் அந்தத் துக்கத்தைத்தாண்டி, தங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கும் ஆசீர்வாதத்தைப் பார்க்க முடியவில்லை. இயேசுகிறிஸ்து அவர்களைப்பார்த்து "உங்கள் இருதயம் துக்கத்தால் நிறைந்திருக்கிறது" என்று கூறுகிறார். தங்களுக்கு எதிராக வரப்போகும் பிரச்சனைகளை மாத்திரமே சீஷர்கள் சிந்தித்துப்பார்க்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் ஆறுதலான ஆலோசனைகளைப்பற்றி அவர்கள் சிறிதும் சிந்திக்கவில்லை. அவர்கள் இருதயம் துக்கத்தால் நிறைந்திருப்பதினால், அங்கு சந்தோஷத்திற்கு இடமில்லாமல் போயிற்று. மேகத்தின் ஒரு பகுதி துக்கமாகயிருந்தாலும், அதன் மறுபகுதி சந்தோஷமாகயிருக்கிறது. நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நமக்குத் துக்கம் வரும்போது, அதை மாத்திரமே பார்த்து சோர்ந்துபோகிறோம். துக்கத்தைத் தாண்டி இயேசுகிறிஸ்துவின் ஆறுதலான வார்த்தைகளை நாம் கேட்கவேண்டும்.

இயேசுகிறிஸ்துவினுடைய சீஷர்களின் இருதயம் துக்கத்தால் நிறைந்திருக்கிறது. அவர்கள் இப்போதுள்ள ஜீவியத்தின்மீது அதிக பற்றுதலாகயிருக்கிறார்கள். இனிமேல் வரப்போகிற ஜீவனைப்பற்றி அவர்கள் இன்னும் அதிகமாய் சிந்திக்கவில்லை. இயேசுகிறிஸ்து இந்தப் பூமியில், ஒரு உலகப்பிரகாரமான ராஜ்யத்தை ஸ்தாபிக்கப்போகிறார் என்னும் ஆர்வமே சீஷர்களிடத்தில் இருக்கிறது. அவர்கள் அந்த ராஜ்யத்தின் மேன்மையையும், மகிமையையும் மாத்திரமே சிந்தித்துப் பார்க்கிறார்கள். இப்போது இயேசுகிறிஸ்து தாங்கள் எதிர்பார்க்கும் ராஜ்யத்தை ஸ்தாபிக்காமல், பாதியிலேயே விட்டுவிட்டுப் போகிறாரே என்னும் கவலை சீஷர்களுடைய இருதயத்தில் நிரம்பியிருக்கிறது. தேவனுடைய சந்தோஷத்தையும் சமாதானத்தையும் பெற்றுக்கொள்வதற்கு உலகசிநேகம் எப்போதுமே தடையாகயிருக்கும். உலகத்தைப்பற்றிய கவலைகள் நமது இருதயத்தை நிரப்பும்போது அங்கு மெய்யான சந்தோஷத்திற்கு இடமில்லாமல் போய்விடும்.

### தேற்றரவாளர்
### யோவா 16 : 7-15

**யோவா 16:7. நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்.**

**யோவா 16:8. அவர் வந்து பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்.**

**யோவா 16:9. அவர்கள் என்னை விசுவாசியாத படியினாலே பாவத்தைக்குறித்தும்,**

**யோவா 16:10. நீங்கள் இனி என்னைக் காணாதபடிக்கு நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினாலே நீதியைக்குறித்தும்,**

**யோவா 16:11. இந்த உலகத்தின் அதிபதி நியாயந்தீர்க்கப்ப ட்டதினாலே நியாயத்தீர்ப்பைக் குறித்தும், கண்டித்து உணர்த்துவார்.**

**யோவா 16:12. இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள்.**

## அதிகாரம் - 16

**யோவா 16:13. சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்.**

**யோவா 16:14. அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்.**

**யோவா 16:15. பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள்; அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன்.**

**அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்**

**நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன் (யோவா 16:7).**

தேற்றரவாளர் வரவேண்டுமானால் இயேசுகிறிஸ்து அவர்களைவிட்டுப் போவது அவசியமாகயிருக்கிறது. "நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும். நான் போகாதிருந்தால் தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார். நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்" (யோவா 16:7) என்று இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடத்தில், தாம் அவர்களை விட்டுப் போவதன் முக்கியத்துவத்தை ஏற்கெனவே கூறியிருக்கிறார். சீஷர்களுடைய இருதயம் துக்கத்தில் நிறைந்திருந்தாலும், அவர்களிடத்தில் சத்தியத்தை அறிவிக்கவேண்டியது அவசியமாயிருக்கிறது. ஆகையினால் இயேசுகிறிஸ்து "நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்" என்று சொல்லி தம்முடைய வார்த்தையை ஆரம்பிக்கிறார்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களை விட்டுப்போவது, சீஷர்களுக்குத் தான் பிரயோஜனமாக இருக்கும். அது இயேசுவுக்குப் பிரயோஜனமாயிராது. இயேசுகிறிஸ்து எதைச் செய்தாலும் அதை நம்முடைய பிரயோஜனத்திற்காகவே செய்கிறவர். பல சமயங்களில் எது நமக்கு நன்மையாயிருக்கும் என்று நமக்கே தெரியாது. இயேசுகிறிஸ்து எல்லாவற்றையும் அறிந்திருப்பதினால், நமக்கு எது நன்மையாயிருக்குமோ அதை மாத்திரமே நமக்குச் செய்கிறார். நமக்கு எது பிரயோஜனமாகயிருக்குமோ அதை மாத்திரமே நம்மிடத்தில் பேசுகிறார், அதை மாத்திரமே நமக்குச் செய்கிறார்.

பரிசுத்த ஆவியானவரைத் தம்முடைய சீஷரிடத்தில் அனுப்புவதற்காகவே இயேசுகிறிஸ்து அவர்களைவிட்டுப் போகிறார். ஆகையினால் இயேசுகிறிஸ்து போகிறது அவர்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும். இயேசுகிறிஸ்து போகாதிருந்தால், தேற்றரவாளர் சீஷரிடத்தில் வரார். இயேசுகிறிஸ்து தாமே நமக்கு எல்லா வரங்களையும் அருளுகிறவர். நமக்கு வேறொரு வரத்தைக் கொடுப்பதற்கு முன்பாக, தாம் ஏற்கெனவே நம்மிடத்தில் கொடுத்திருக்கிற வரத்தை எடுத்துக்கொள்ளும் அதிகாரம் அவருக்கு உண்டு. நாமோ எல்லா வரங்களையும் நம்மிடத்தில் வைத்துக்கொள்ளவேண்டுமென்று விரும்புவோம். சில சமயங்களில் நம்முடைய விருப்பமும் தேவனுடைய சித்தமும் ஒன்றாயிருக்கும். வேறு சில சமயங்களில் இவை இரண்டும் வித்தியாசமாகக் கூடயிருக்கலாம். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் தேவன் எதைச் செய்தாலும், அதை அவர் நம்முடைய பிரயோஜனத்திற்காகவே செய்கிறார் என்று நாம் விசுவாசிக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையில் தம்முடைய இரத்தத்தையே கிரயமாகச் செலுத்தி நமக்கு இரட்சிப்பை உண்டுபண்ணியிருக்கிறார். கிறிஸ்து கிரயத்திற்கு வாங்கியிருப்பதன் கனியாக ஆவியானவர் அனுப்பப்படுகிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய மரணத்தினால் இந்தக் கிரயத்தைச் செலுத்தியிருக்கிறார். இந்தச் சத்தியம் இதுவரையிலும் நமக்கு மறை பொருளாகயிருந்திருக்கிறது. இயேசுகிறிஸ்து தம்முடைய பிதாவினிடத்தில் எப்படி ஜெபிக்கப்போகிறார் என்பதையும், அதனிமித்தமாக பிதாவானவர் நமக்கு பரிசுத்த ஆவியைத் தந்தருளுவார் என்பதையும் இயேசுகிறிஸ்து ஏற்கெனவே தம்முடைய சீஷரிடத்தில் சொல்லியிருக்கிறார். "நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்கு சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்" என்று இயேசு தம்முடைய சீஷரிடம் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்.

## அதிகாரம் - 16

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பரிசுத்த ஆவியானவரின் வரத்திற்காக ஜெபித்திருக்கிறார். அதற்கான கிரயத்தையும் செலுத்தியிருக்கிறார். சீஷர்கள் இப்போது இயேசுகிறிஸ்துவின் சரீரப்பிரகாரமான பிரசன்னத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால் அவர்களுக்கு மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் சரீரப்பிரகாரமான பிரசன்னத்தில் சீஷர்கள் சார்ந்திருக்கிறார்கள். அவர்களிடத்தில் ஆவிக்குரிய வளர்ச்சி உண்டாகவேண்டும். பால்மறக்கிற குழந்தையைப்போல, சீஷர்கள் இயேசுகிறிஸ்துவின் சரீரப்பிரகாரமான பிரசன்னத்தை மறக்கவேண்டும். அப்போதுதான் அவர்களால் பரிசுத்த ஆவியானவருடைய ஊழியத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களை ஓர் உன்னத அனுபவித்திற்கு அழைத்துச் செல்ல விரும்புகிறார். அங்கு அவருடைய சரீரப்பிரகாரமான பிரசன்னம் இருக்காது. பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னமே இருக்கும். இயேசுகிறிஸ்துவின் சரீரப்பிரகாரமான பிரசன்னத்தைச் சீஷர்கள் மறந்தால் மாத்திரமே, அவர்களால் தேற்றரவாளரின் ஆறுதலையும், ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொள்ள முடியும். அப்படிப்பட்ட உன்னதமான அனுபவத்திற்கு இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களைத் தகுதிப்படுத்துகிறார்.

"நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்" என்று இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடத்தில் வாக்குப்பண்ணுகிறார். அவர் சீஷர்களைவிட்டுப்போனாலும், அவர்களிடத்தில் பரிசுத்த ஆவியானவரை அனுப்புகிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்குப் பிரயோஜனம் உண்டாவதற்காகவே அவர்களைவிட்டுப் போகிறார். ஒரு நோக்கத்தோடு அவர் போகிறார். தம்முடைய சீஷர்களை அப்படியே விட்டுவிட்டு, அவர்களை வருத்தப்பட வைக்க வேண்டுமென்பது இயேசுகிறிஸ்துவின் சித்தம் இல்லை.

தற்காலத்தில் கர்த்தருடைய சபையில், இயேசுகிறிஸ்துவின் சரீரப்பிரகாரமான பிரசன்னத்திற்குப் பதிலாக, கிறிஸ்துவின் ஆவியானவருடைய பிரசன்னம் அசைவாடிக் கொண்டிருக்கிறது. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் ஆவியானவருடைய பிரசன்னத்தை அதிகமாய் நாடவேண்டும். அதில் பிரியமாயிருக்கவேண்டும். மெய்யாகவே அவர் நம்மைவிட்டுப்போனது நமக்குப் பிரயோஜனமாயிருக்கிறது, இதனால் பரிசுத்த ஆவியானவர் நமக்கு அருளப்பட்டிருக்கிறார் என்று விசுவாசித்து, ஆவியானவரின் ஊழியத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சரீரத்தில் இருந்தபோது, அவரால் ஒரே வேளையில் ஒரே இடத்தில் மாத்திரமே இருக்க முடிந்தது. இப்போதோ கிறிஸ்துவின் ஆவியானவர் சர்வவியாபகராகயிருக்கிறார். ஒரே வேளையில் எல்லா இடத்திலுமிருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் எங்கே இரண்டுபேர் அல்லது மூன்றுபேர் கூடியிருக்கிறார்களோ அங்கே ஆவியானவரின் பிரசன்னம் அவர்களோடு கூடயிருக்கிறது. இயேசுகிறிஸ்து தம்முடைய சரீரப்பிரகாரமான பிரசன்னத்தினால் மனுஷருடைய கண்களைத் தம்முடைய பக்கமாக இழுத்துக்கொண்டார். இப்போதோ கிறிஸ்துவின் ஆவியானவர் நம்முடைய இருதயங்களைத் தம்முடைய பக்கமாக இழுத்துக்கொள்கிறார்.

### கண்டித்து உணர்த்துவார்

**அவர் வந்து பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார் (யோவா 16:8).**

இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தை இந்த உலகத்தில் தொடர்ந்து நிறைவேற்றுவதற்குப் பரிசுத்த ஆவியானவரின் வருகை அவசியமாக இருக்கிறது. "அவர் வந்து பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்".

பரிசுத்த ஆவியானவரின் பிரதான ஊழியம் கண்டித்து உணர்த்துவதாகும். ஆவியானவர் வசனத்தினாலும், மனச்சாட்சியினாலும் கண்டித்து உணர்த்துகிறார். உணர்த்துவது என்பது நீதிமன்றத்தில் பயன்படுத்தப்படும் சொல்லாகும். நீதிபதி எல்லா ஆதாரங்களையும் கூட்டிச்சேர்த்து, தன்னுடைய தீர்ப்பை கூறுவது "உணர்த்துவது" என்று அழைக்கப்படுகிறது. பரிசுத்த ஆவியானவர் நியாயாதிபதியின் ஊழியத்தைச் செய்கிறார். இயேசுகிறிஸ்துவுக்கும் அவருடைய ஊழியத்திற்கும் சத்துருக்களாக இருக்கிறவர்களின் வாயை அடைத்து அவர்களை அமைதிப்படுத்துகிறார். அவர்களுக்கு எதிராகத் தீர்ப்புச் செய்கிறார்.

## அதிகாரம் - 16

"உணர்த்துவது" எப்போதுமே பரிசுத்த ஆவியானவரின் ஊழியமாகவே இருக்கும். நாம் ஒருவருக்கு சுவிசேஷத்தை அறிவிக்கலாம். சுவிசேஷத்தைக் கேட்பவர்களும் அதைத் தங்கள் காதுகளினால் கேட்கலாம். சுவிசேஷம் அவர்களுடைய இருதயத்தில் உணர்த்தப்படவேண்டுமானால், பரிசுத்த ஆவியானவரால் மாத்திரமே அதை அவர்களுக்கு உணர்த்த முடியும். பரிசுத்த ஆவியானவர் மாத்திரமே மனுஷருடைய இருதயங்களைத் திறக்கிறவர். மனுஷர்கள் செவிகளில் பேசும்போது, பரிசுத்த ஆவியானவர் மனுஷருடைய இருதயங்களில் உணர்த்துகிறார்.

பரிசுத்த ஆவியானவர் "தேற்றரவாளர்" என்று அழைக்கப்படுகிறார். இந்த வசனத்தில் அவர் "உணர்த்துகிறவர்" என்றும் அழைக்கப்படுகிறார். நமக்குள் ஆறுதல் வரவேண்டுமென்றால், பரிசுத்த ஆவியானவர் நம்மை உணர்த்தினால்தான் நமக்கு ஆறுதல் உண்டாகும். பரிசுத்த ஆவியானவர் நமக்குள் கிரியை செய்யும்போது முதலாவதாக நம்மை உணர்த்துகிறார். அதன் பின்பு நமக்கு ஆறுதலைக்கொடுக்கிறார். ஒரு மருத்துவர் காயத்திற்கு சிகிச்சைக் கொடுக்கும்போது, முதலாவதாகக் காயத்தைக் கழுவி சுத்தப்படுத்துகிறார். அதன்பின்பு காயத்திற்கு மருந்து கட்டுகிறார். இரண்டும் சேர்ந்து நடந்தால்தான் காயம் குணமாகும். அதுபோலவே பரிசுத்த ஆவியானவர் நம்மை உணர்த்தினால்தான், ஆவியானவர் மூலமாக நமக்கு ஆறுதல் உண்டாகும்.

பரிசுத்த ஆவியானவர் உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார் என்று எழுதப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்து இந்த உலகத்தை உணர்த்துவதற்கு சுவிசேஷத்தைக் கொடுத்திருக்கிறார். சுவிசேஷம் மெய்யானது என்று பூரணமாய் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. சுவிசேஷத்திற்கு விரோதமாக இந்த உலகத்தார் பல எதிர்ப்புக்களைக் கூறினார்கள். அவையெல்லாம் அவமாய்ப்போயிற்று. சுவிசேஷத்தின் ஒவ்வொரு வார்த்தையும் மெய்யானது என்று ஆவியானர் நிரூபிக்கிறார்.

இந்த உலகத்திலுள்ள ஏராளமானோரை பரிசுத்த ஆவியானவர் கண்டித்து உணர்த்தியிருக்கிறார். அவர்கள் பல காலங்களில் வாழ்ந்தவர்களாக இருக்கலாம். அவர்கள் பல தேசங்களில் வாழ்கிறவர்களாகவும் இருக்கலாம். எல்லோரையும் உணர்த்துவதுதான் பரிசுத்த ஆவியானவரின் ஊழியம். இந்த உலகம் பாவத்தில் ஜீவிக்கிறது. துன்மார்க்கத்தில் பிரியப்படுகிறது. இப்படிப்பட்ட உலகத்தையும் ஆவியானவர் கண்டித்து உணர்த்துகிறார். பரிசுத்த ஆவியானவர் பாவிகளை உணர்த்துவது, கர்த்தருடைய உண்மையுள்ள ஊழியக்காரர்களுக்கு ஆறுதலாக இருக்கிறது.

**பாவத்தைக்குறித்து**

**அவர்கள் என்னை விசுவாசியாத படியினாலே பாவத்தைக்குறித்தும், (யோவா 16:9)**

பரிசுத்த ஆவியானவர் பாவத்தைக் குறித்து இந்த உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார். இந்த உலகம் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கவில்லை. பாவிகளுடைய பாவங்கள் உணர்த்தப்படவேண்டும். அவர்களிடம் பாவங்களைப்பற்றிச் சொன்னால் மாத்திரம் போதாது. பாவங்களை உணர்த்துவது என்பது சாதாரணமாக வாயினால் சொல்வதைவிட வல்லமையுள்ளது. பரிசுத்த ஆவியானவர் பாவிகளுடைய பாவங்களை அவர்களுக்கு உணர்த்துகிறார். அவர்களுடைய பாவங்களை அவர்களுக்கு உறுதிபண்ணுகிறார். தாங்கள் பாவம் செய்திருக்கிற பாவிகளென்று அவர்களை ஒத்துக்கொள்ள வைக்கிறார்.

பாவத்தின் சுபாவத்தைக் குறித்தும், பாவத்தின் சாபத்தைக் குறித்தும், பாவத்தினால் உண்டாகும் பயங்கரமான விளைவுகளைக் குறித்தும், பாவத்தின் அசுத்தத்தைக் குறித்தும், இறுதியாகப் பாவத்தினால் வரப்போகிற எல்லாவிதமான பின்விளைவுகளைக் குறித்தும் பரிசுத்த ஆவியானவர் பாவிகளிடத்தில் உணர்த்துகிறார். பாவத்தின் சம்பளம் மரணம். இதைப் பாவிகள் புரிந்துகொள்ளவேண்டும். சாதாரணமாக இதை வாயினால் சொன்னால் அவர்கள் புரிந்துகொள்ளமாட்டார்கள். பரிசுத்த ஆவியானவர் பாவத்தின் விளைவினால் மரணம் உண்டாகும் என்பதை உலகத்திற்கு உணர்த்தினால்தான், பாவத்தின் விளைவு பயங்கரமானது என்பது அவர்களுக்குப் புரியும்.

## அதிகாரம் - 16

உலகத்தார் இயேசுகிறிஸ்துவைத் தேவன் என்று விசுவாசிக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைக்காமலிருப்பதே மிகப்பெரிய பாவம். பரிசுத்த ஆவியானவர் அவிசுவாசத்தின் பாவத்தை உலகத்திற்கு உணர்த்துகிறார். உலகத்தில் எல்லா இடங்களிலும் பாவம் ஆளுகை செய்கிறது. பாவத்தின் ஆளுகை மிகவும் பெரிதாயிருக்கிறது. இந்த உலகத்து ஜனங்கள், வரலாற்றுக் காலத்திலும், தற்காலத்திலும் இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைக்காமல் பாவம் செய்து வருகிறார்கள். இது ஒரு பாவம் என்பதுகூட அவர்களுக்குத் தெரியவில்லை. பரிசுத்த ஆவியானவர் உலகத்து ஜனங்களுடைய அவிசுவாசத்தை அவர்களுக்கு உணர்த்துகிறார். தேவன் தம்முடைய குமாரன் மூலமாக இந்த உலகத்து ஜனங்களிடம் பேசுகிறார். ஆனால் இந்த உலகத்து ஜனங்களோ இயேசுகிறிஸ்து மூலமாகத் தேவன் பேசுகிறார் என்பதைக்கூட அங்கீகரிக்காமல் பாவம் செய்கிறார்கள்.

பாவத்தின் விளைவு மிகவும் பயங்கரமாக இருக்கும். இதனால் மிகப்பெரிய அழிவு உண்டாகும். ஒவ்வொரு பாவமும் அதன் சுபாவத்தில் பாவமான விளைவுகளை ஏற்படுத்துகிறது. இயேசுகிறிஸ்துவின் மூலமாக பாவத்திற்கு பரிகாரம் இருக்கும்போது, உலகத்து ஜனங்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசியாமல், பாவத்தின் பரிகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் போகிறார்கள். உலகத்தாரின் பாவம் பாவமன்னிப்புக்கு விரோதமான பாவமாக இருக்கிறது. எல்லா பாவங்களுக்கும் அடிப்படையாக இருப்பது ஜனங்களுடைய அவிசுவாசமே. விசுவாசத்தில் ஒவ்வொரு ஆத்துமாவும் இயேசுகிறிஸ்துவிடத்தில் இணைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு மனுஷரையும் இயேசுகிறிஸ்து ஆளுகை செய்யவேண்டும். நம்மை இயேசுகிறிஸ்து ஆளுகை செய்யவில்லையென்றால், பாவம் நம்மை ஆளுகை செய்யும்.

**நீதியைக் குறித்து**

**நீங்கள் இனி என்னைக் காணாதபடிக்கு நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினாலே நீதியைக்குறித்தும், (யோவா 16:10)**

இயேசுகிறிஸ்து தம்முடைய பிதாவினிடத்திற்குப் போகிறார். சீஷர்கள் இனி அவரைக் காணமாட்டார்கள். ஆகையினால் பரிசுத்த ஆவியானவர் நீதியைக்குறித்து உணர்த்துகிறார். "நீதி" என்னும் வார்த்தைக்கு வேதபண்டிதர்கள் இரண்டுவிதமாகப் பொருள் கூறுகிறார்கள். அவையாவன: 1. இயேசுகிறிஸ்துவின் தனிப்பட்ட ஆள்தத்துவப்பண்பின் நீதி. 2. நம்முடைய இரட்சிப்புக்காகவும், நம்மை நீதிமான்களாக்கும்படியாகவும் நமக்கு அறிவிக்கப்பட்டிருக்கிற இயேசுகிறிஸ்துவின் நீதி.

நசரேத்து ஊராராகிய இயேசு நீதிபரராகிய கிறிஸ்து என்று பரிசுத்த ஆவியானவர் இந்த உலகத்திற்கு உணர்த்துவார். இயேசுகிறிஸ்து சிலுவையில் அறைப்பட்டபோது, சம்பவித்தவைகளைக் கண்ட நூற்றுக்கதிபதி "மெய்யாகவே இந்த மனுஷன் நீதிபரனாயிருந்தான்" என்று இயேசுகிறிஸ்துவைக்குறித்து சாட்சி கொடுத்தான் (லூக் 23:47).

பரிசுத்த ஆவியானவர் இந்த உலகத்திற்கு இயேசுகிறிஸ்துவின் நீதியைக்குறித்து உணர்த்துகிறார். இதற்கு அவர் தெரிந்தெடுத்திருக்கிற முக்கியமான உபாயம் "இனி இயேசுகிறிஸ்துவை அவர்கள் காணமாட்டார்கள்" என்னும் உபாயமே ஆகும். இயேசுகிறிஸ்து இதுவரையிலும் சீஷர்களோடு கூடவே இருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் சரீரப்பிரகாரமான பிரசன்னத்தினால் சீஷர்களும் பெருமைப்படுகிறார்கள். அவர் எப்போதும் தங்களோடு கூடவேயிருப்பார் என்று எதிர்பார்க்கிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ தம்முடைய பிதாவினிடத்திற்குப் போகப்போகிறார். அவர் தேவனிடத்திலிருந்து வந்தவர் என்பதற்கு, அவர் தேவனிடத்திற்குப் போகப்போவதும் ஓர் ஆதாரமாகயிருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பிரகாரம் வருகிறார். இயேசுகிறிஸ்து பிதாவின் வலதுபாரிசத்திற்கு உயர்த்தப்பட்டதற்கு இதுவும் ஒரு ஆதாரமாகயிருக்கிறது.

## அதிகாரம் - 16

பெந்தெகொஸ்தே நாளில் சீஷர்களெல்லோரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டார்கள். அந்த சமயத்தில் பேதுரு அங்கு கூடியிருந்த ஜனங்களிடம் பேசும்போது "அவர் தேவனுடைய வலதுகரத்தினாலே உயர்த்தப்பட்டு, பிதா அருளிய வாக்குத்தத்தத்தின்படி பரிசுத்த ஆவியைப்பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார்" (அப் 2:33) என்று பிரசங்கம்பண்ணுகிறார். இயேசுகிறிஸ்துவின் நீதியை பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் உறுதிபண்ணுகிறது.

பரிசுத்த ஆவியானவர் இயேசுகிறிஸ்துவின் நீதியைக்குறித்து ஜனங்களுக்கு உணர்த்துகிறார். நம்முடைய இரட்சிப்பைக்குறித்த கிறிஸ்துவின் நீதி நமக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதினால் நாம் நீதிமானாக்கப்படுகிறோம். மனுஷர் ஒவ்வொருவரும் நீதிமானாயிருக்க வேண்டுமென்று பரிசுத்த ஆவியானவர் நமக்கு உணர்த்துகிறார். இந்த நீதியை எங்கு பெற்றுக்கொள்ளவேண்டுமென்று ஜனங்கள் தெரிந்துகொள்ள விரும்பலாம். ஒருவேளை அந்த நீதியைத் தேடி அலையலாம்.

மனுஷர் தங்களுடைய சுயநீதியைத் தேடுகிறார்கள். சுயநீதியை ஸ்தாபிப்பதற்காக சுற்றி அலைகிறார்கள். தங்களுடைய சுயநீதிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் ஜனங்களிடம், பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவின் நீதியை உணர்த்துகிறார். மனுஷன் தன்னுடைய சுயஞானத்தினால் கிறிஸ்துவின் நீதியைப்பற்றி அறிந்துகொள்ள முடியாது. பரிசுத்த ஆவியானவரின் கிரியையினால் மாத்திரமே, மனுஷன் கிறிஸ்துவின் நீதியை உணர்ந்துகொள்ள முடியும். ஆவியானவர் உணர்த்தினால் மாத்திரமே மனுஷரால் உணர்ந்துகொள்ள முடியும்.

இயேசுகிறிஸ்து பரமேறி தம்முடைய பிதாவினிடத்திற்குப் போகிறார். இயேசுகிறிஸ்துவின் நீதியை உறுதி செய்வதற்கு, அவர் தமது பிதாவினிடத்திற்குப் பரமேறிப்போவதும் ஒரு சான்றாக இருக்கிறது. "நீங்கள் இனி என்னைக் காணாதபடிக்கு நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினாலே" என்று இயேசுகிறிஸ்து கூறுகிறார். இயேசுகிறிஸ்து பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், அவர் இப்போது பிதாவின் வலதுபாரிசத்தில் உட்கார்ந்திருக்கிறார் என்னும் நிச்சயம் நமக்குள் உண்டாயிற்று. ஆகையினால் இயேசுகிறிஸ்துவின் மூலமாக நாம் நீதிமானாக்கப்படுவோம் என்னும் நிச்சயமும் நமக்குள் உண்டாகும். பரிசுத்த ஆவியானவர் இந்த சத்தியத்தை நமக்கு உணர்த்தும்போது, நமக்குள் இந்த நிச்சயம் உண்டாகும்.

### நியாயத்தீர்ப்பைக் குறித்தும்

**இந்த உலகத்தின் அதிபதி நியாயந்தீர்க்கப் பட்டதினாலே நியாயத்தீர்ப்பைக் குறித்தும், கண்டித்து உணர்த்துவார் (யோவா 16:11).**

பிசாசானவன் இந்த உலகத்தின் அதிபதியாயிருக்கிறான். இயேசுகிறிஸ்து இந்த உலகத்தின் அதிபதியை நியாயந்தீர்க்கிறார். பிசாசானவன் ஏமாற்றுக்காரனென்றும், வஞ்சிக்கிறவனென்றும் கண்டுபிடிக்கப்பட்டு நியாயந்தீர்க்கப்பட்டிருக்கிறான். பிசாசானவன் மனுஷருடைய ஆத்துமாக்களில் வஞ்சகமாகக் குடியிருக்கிறான். இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தின் மூலமாக தேவனுடைய கிருபை மனுஷருடைய இருதயத்தில் கிரியை செய்கிறது. கிறிஸ்துவின் மூலமாக மனுக்குலத்திற்கு இரட்சிப்பு உண்டாயிற்று. மனுஷர் இரட்சிக்கப்படும்போது, அவர்களுடைய ஆத்துமாவிலிருந்து சாத்தான் வெளியேற்றப்படுகிறான்.

இந்த நியாயத்தீர்ப்பைக் குறித்து பரிசுத்த ஆவியானவர் உலகத்திற்கு உணர்த்துகிறார். இயேசுகிறிஸ்து உலகத்தின் அதிபதியை நியாயந்தீர்ப்பதினால், அவர் சாத்தானைவிட வல்லமையானவர் என்பது உறுதியாயிற்று. இந்த உலகத்திலிருக்கிற சாத்தானைவிட, நமக்குள் இருக்கிற இயேசுகிறிஸ்து பெரியவர். சாத்தானின் அந்தகார கிரியையின் மூலமாக இந்த உலகத்தின் காரியங்கள் தாறுமாறாயிற்று. எல்லாவற்றிலும் குழப்பம் உண்டாயிற்று. இந்த உலகத்தில் தாறுமாறாக இருக்கும் எல்லாவற்றையும் ஒழுங்கும் கிரமமுமாக வைப்பது இயேசுகிறிஸ்துவின் பிரதான ஊழியம். சாத்தானுடைய வல்லமையை முறியடிக்கும்போது அவனால் இந்த உலகத்தில் ஒரு குழப்பமும் உண்டுபண்ண முடியாது. சாத்தானுடைய அந்தகார கிரியைகளெல்லாம் முடிவுக்கு வரும். இயேசுகிறிஸ்து தம்முடைய சர்வ வல்லமையினால் சாத்தானை அடக்கித் தமக்குக் கீழ்ப்படுத்துகிறார். சாத்தானுடைய வல்லமை அடக்கப்பட்டிருப்பதினால், இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாக வேறு எந்த வல்லமையும் எதிர்த்து நிற்கமுடியாது.

## அதிகாரம் - 16

**தாங்கமாட்டீர்கள்**

**இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள் (யோவா 16:12).**

பரிசுத்த ஆவியானவர் வருவதினால் இயேசுகிறிஸ்துவின் சீஷர்களுக்கு மிகுந்த பிரயோஜனம் உண்டாயிருக்கும். பரிசுத்த ஆவியானவர் இயேசுகிறிஸ்துவின் சத்துருக்களை அழிப்பதோடு, கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களுக்கு நன்மை செய்யும் ஊழியத்தையும் செய்கிறார். ஆகையினால் இயேசுகிறிஸ்து அவர்களைவிட்டுப்போவது சீஷர்களுக்கு மிகுந்த பிரயோஜனமாயிருக்கும். அவர் போனால்தான் பரிசுத்த ஆவியானவர் சீஷர்களிடத்தில் அனுப்பப்படுவார்.

சீஷர்கள் இப்போது மிகவும் பலவீனமாக இருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து தங்களைவிட்டுப் போகப்போகிறார் என்னும் செய்தியினால் அவர்களுடைய இருதயம் வருத்தத்தினால் நிரம்பியிருக்கிறது. இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷருக்கு இன்னும் அநேக காரியங்களைச் சொல்லவேண்டுமென்று விரும்புகிறார். ஆனால் அவையெல்லாவற்றையும் சொன்னால் தம்முடைய சீஷர்கள் இப்போது தாங்கமாட்டார்கள் என்பதையும் இயேசு அறிந்திருக்கிறார். இயேசுகிறிஸ்து நல்ல போதகர். தம்முடைய சீஷர்களுக்குப் போதகம்பண்ணும்போது அவர்களால் எவ்வளவு தாங்கிக்கொள்ள முடியும் என்பதை அறிந்து வைத்திருக்கிறார். அவர்கள்மீது தாங்க முடியாத சுமையை ஒருபோதும் ஏற்றி வைக்கமாட்டார். இயேசுகிறிஸ்துவில் ஞானம், அறிவு ஆகிய பொக்கிஷங்கள் மறைந்திருக்கிறது. இயேசுகிறிஸ்துவைப்போல கிருபையுள்ளவர் வேறு ஒருவருமில்லை. அவர் தம்முடைய சீஷருக்காக மனதுருக்கமுள்ளவர்.

இயேசுகிறிஸ்து தேவனுடைய ராஜ்யத்தைப்பற்றி அநேக காரியங்களைத் தம்முடைய சீஷருக்குச் சொல்லவேண்டுமென்று விரும்புகிறார். சொல்லுவதற்கும் அநேக காரியங்கள் உண்டு. ஆனால் இப்போது சீஷர்கள் பலவீனமாக இருக்கிறார்கள். இதற்குமேல் அவர்களுக்குச் சொன்னால் அவர்கள் அதைத் தாங்கிக்கொள்ளமாட்டார்கள். இந்தச் சூழ்நிலையில் இயேசுகிறிஸ்து இன்னும் அதிகமாக அவர்களுக்கு உபதேசம் பண்ணினால், அது அவர்களுக்கு ஆசீர்வாதமாகயிராது. அவர்கள் இடறிப்போவதற்கு ஏதுவான தடைக்கற்களாகவே இருக்கும். இயேசுவின் உபதேசத்தினால் அவர்களுக்கு இப்போது ஆத்தும திருப்தி உண்டாகாது. அதற்குப் பதிலாக ஆத்தும வருத்தமே உண்டாகும்.

**சகல சத்தியத்திற்குள்ளும்**

**சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார் (யோவா 16:13).**

இயேசுகிறிஸ்து பரிசுத்த ஆவியானவரை இங்கு "சத்திய ஆவியானவர்" என்று அழைக்கிறார். சத்திய ஆவியானவர் வரும்போது அவர் சீஷர்களை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துவார். சத்திய ஆவியானவரிடம் இரண்டு ஊழியங்கள் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. அவையாவன: 1. சீஷர்களைச் சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தவேண்டும். 2. இயேசுகிறிஸ்துவை மகிமைப்படுத்த வேண்டும்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போகப்போகிறார். அவர் போனபின்பு சீஷர்கள் உபதேசத்தில் வழிவிலகிச் செல்வதற்கு வாய்ப்புள்ளது. தங்களுடைய இலக்கைக் காணமுடியாமல் ஒருவேளை இவர்கள் அலைந்து திரிந்துகொண்டிருக்கலாம். எது சரியான வழியென்றும், அந்த வழியில் எப்படிப்போவது என்றும் சீஷர்களுக்குத் தெரியவில்லை. அவர்களை வழிநடத்த வழிகாட்டுகிறவர் ஒருவர் தேவைப்படுகிறார். பரிசுத்த ஆவியானவர் நமக்கு வழிகாட்டியாகக் கொடுக்கப்படுகிறார். ஆவியானவர் நாம் போகவேண்டிய வழியை நமக்குக் காண்பித்து, அந்த வழியில் நம்மோடு கூட நடந்து வருகிறார். ஆவியானவர் அவர்களோடு கூடயிருப்பதினால் அவர்கள் வழிதப்பித் திரியவேண்டிய அவசியமில்லை. தங்களுடைய முடிவு எப்படியிருக்குமோ என்னும் குழப்பமும் சந்தேகமும் அவர்களுக்கு ஏற்படாது. ஏனெனில் சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் சீஷர்களை வழிநடத்துவார்.

## அதிகாரம் - 16

சத்தியத்தை அறிந்துகொள்வது என்பது வேறு. சத்தியத்திற்குள் வழிநடத்தப்படுவது என்பது வேறு. சத்தியத்தை அறிந்துகொண்டு, அதை நமக்கு சொந்தமாக்கிக் கொள்ளும்போது, நாம் சத்தியத்தில் நடக்கிறோம். பரிசுத்த ஆவியானவர் சத்தியத்தை நமக்கு விளக்கிக் காண்பிக்கும்போது, அந்த சத்தியத்திலுள்ள தெய்வீக வெளிச்சத்தை அதிகம் அதிகமாகக் கண்டுகொள்ளுவோம். தேவனுடைய வெளிப்பாடு நமக்கு அதிகம் அதிகமாய் வெளிப்படுத்தப்படும். விசுவாசிகளை ஒரு சத்தியத்திற்குள் வழிநடத்துவதே பெரிய ஊழியமாக இருக்கும். ஆனால் பரிசுத்த ஆவியானவரோ சீஷர்களைச் சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துகிறார்.

சீஷர்கள் தெரிந்துகொள்ள வேண்டிய சத்தியங்கள், அவர்களுக்குப் பிரயோஜனமுள்ள சத்தியங்கள், அவர்களுக்குத் தேவையான சத்தியங்கள், அவர்கள் மற்றவர்களுக்கு உபதேசம்பண்ண வேண்டிய சத்தியங்கள் ஆகிய எல்லா சத்தியங்களுக்குள்ளும் சத்திய ஆவியானவர் இயேசுகிறிஸ்துவின் சீஷர்களை வழிநடத்துவார். பரிசுத்த ஆவியானவர் சத்தியத்திற்குள் அல்லாமல் வேறு எதற்குள்ளும் வழிநடத்தமாட்டார். "சகல சத்தியம்" என்பது சீஷர்களை ஆளுகை செய்யவேண்டிய "எல்லா சத்தியங்கள்" என்று பொருள்படும். பரிசுத்த ஆவியானவர் நம்மை வழிநடத்துவது எல்லாமே சத்தியத்திற்குள்ளாகவே இருக்கும்.

சத்திய ஆவியானவர் சத்தியத்தைத் தவிர வேறு எதையும் உபதேசம் பண்ணமாட்டார். ஏனெனில் அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல் தாம் கேள்விப்பட்டவைகள் யாவையும் சொல்லுவார். தாம் கேள்விப்பட்டதை மாத்திரம் பேசுவார். பரிசுத்த ஆவியானவரின் வார்த்தைகள் அவருடைய சொந்த வார்த்தைகளாகயிராமல், இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைப்பற்றிய சாட்சியாகவே இருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் வசனம் பிரசங்கிக்கப்படும்போது ஆவியானவர் அதை உறுதிபண்ணுகிறார்.

அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் வசனத்தைப் பிரசங்கம்பண்ணும்போது, ஆவியானவர் அதை அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் உறுதிபண்ணுகிறார். பரிசுத்த ஆவியானவரின் ஊழியத்தை நாம் சார்ந்திருக்கும்போது, நாம் அசைக்கப்படுவதில்லை. ஆவியானவருடைய வார்த்தையின்மீது நம்முடைய ஆத்துமா சார்ந்திருக்கும்போது நமக்குள் மிகுந்த சமாதானம் உண்டாகும். ஆவியானவரின் சாட்சிகளெல்லாமே கிறிஸ்துவின் வார்த்தையோடு ஒத்திருக்கும். ஏனெனில் ஆவியானவர் தம்முடைய சுயமாய் ஒன்றும் பேசுவதில்லை. தாம் கேள்விப்பட்டவைகள் யாவையும் ஆவியானவர் சொல்லுவார்.

மனுஷனுடைய வார்த்தையும் அவனுடைய ஆவியும் எப்போதும் ஒத்துப்போவதில்லை. பல சமயங்களில் இவற்றிற்கு இடையே போராட்டம் உண்டாகும். பிரிவினை இருக்கும். ஆனால் தேவனுடைய நித்திய வார்த்தையும், நித்திய ஆவியானவரும் பிரிந்திராமல் எப்போதுமே ஒன்றாயிருக்கிறார்கள்.

பரிசுத்த ஆவியானவர் வரப்போகிற காரியங்களைச் சீஷருக்கு அறிவிப்பார். சீஷரிடத்திலிருக்கிற ஆவியானவர் தீர்க்கதரிசன ஆவியானவராகயிருக்கிறார். ஆவியானவரின் தீர்க்கதரிசனம் சீஷர்களுக்கு மிகுந்த சமாதானத்தைத் தரும். சீஷர்களை வழிநடத்த ஆவியானவரின் தீர்க்கதரிசன ஊழியம் அதிக பிரயோஜனமுள்ளதாக இருக்கிறது. சத்திய ஆவியானவர் வரப்போகிற காரியங்களை சீஷர்களுக்குச் சொல்லி, சகல சத்தியத்திற்குள்ளும் அவர்களை வழிநடத்துகிறார்.

நம்முடைய காலத்தில் வரப்போகிற காரியங்களை ஆவியானவர் நமக்கு விவரமாக அறிவிக்கவில்லையே என்று விசுவாசிகளில் சிலர் ஏமாற்றமடையலாம். உலகக்காரியங்களை நமக்கு அறிவிப்பதைவிட, பரலோகத்தின் காரியங்களை அறிவிப்பதே பரிசுத்த ஆவியானவரின் பிரதான ஊழியமாக இருக்கிறது. நம்முடைய கரிசனை இந்தப் பிரபஞ்சத்தின் மீது இருக்கக்கூடாது. நாம் போகப்போகிற பரலோகத்தின்மீது நாம் அதிக வாஞ்சையுள்ளவர்களாக இருக்கவேண்டும். பரலோகத்தின் காரியங்களைத் தெரிந்து கொள்ளவேண்டுமென்று ஆவலுள்ளவர்களாக காணப்படவேண்டும். தேவனுடைய வார்த்தையில் கூறப்பட்டிருக்கிற பரலோகத்தின் இரகசியங்களைப் பரிசுத்த ஆவியானவர் நமக்கு அறிவிக்கிறார்.

## அதிகாரம் - 16

**என்னை மகிமைப்படுத்துவார்**

**அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார். பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள்; அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன் (யோவா 16:14,15).**

பரிசுத்த ஆவியானவர் இயேசுகிறிஸ்துவை மகிமைப்படுத்தும் ஊழியத்தைச் செய்கிறார். இயேசுகிறிஸ்துவை மகிமைப்படுத்துவதற்காகவே பரிசுத்த ஆவியானவர் அனுப்பப்படுகிறார். மீட்பரின் மகிமைக்காகப் பரிசுத்த ஆவியானவர் அவருடைய நாமத்தினாலும், அவருடைய ஊழியத்தைச் செய்வதற்காகவும் அனுப்பப்படுகிறார். பரிசுத்த ஆவியானவரின் வருகையினால் இயேசுகிறிஸ்துவின் ஊழியம் பரிபூரணமடைகிறது. பரிசுத்த ஆவியானவரின் எல்லாக் கிருபைகளும், எல்லா வரங்களும், அப்போஸ்தலர்களின் எல்லாப் பிரசங்கங்களும், அவர்களுடைய எல்லா நிருபங்களும், அந்நிய பாஷைகளும், அற்புதங்களும் இயேசுகிறிஸ்துவை மகிமைப் படுத்துவதற்காகவே கிரியை செய்து கொண்டிருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களை கிறிஸ்துவிலுள்ள சத்தியத்திற்குள் வழிநடத்துகிறார். இதன் மூலமாக ஆவியானவர் கிறிஸ்துவின் நாமத்தை மகிமைப்படுத்துகிறார்.

இயேசுகிறிஸ்துவின் சத்தியத்தை நமக்கு அறிவிப்பதற்காக, ஆவியானவர் இரண்டு வழிகளில் ஊழியம் செய்கிறார். அவையாவன: 1. இயேசுகிறிஸ்துவின் காரியங்களை ஆவியானவர் நமக்கு அறிவிக்கிறார். 2. தேவனுடைய காரியங்களை ஆவியானவர் நமக்கு அறிவிக்கிறார்.

இயேசுகிறிஸ்துவின் காரியங்களை பரிசுத்த ஆவியானவர் நமக்கு அறிவிக்கும்போது, அவர் இயேசு கிறிஸ்துவினுடையதில் எடுத்து நமக்கு அறிவிக்கிறார். பரிசுத்த ஆவியானவர் நம்மைப் பெலப்படுத்துவதற்காகவும், உற்சாகப் படுத்துவதற்காகவும் கொடுக்கும் அனைத்துமே இயேசுகிறிஸ்துவினுடையவைகள் ஆகும். ஏனெனில் பரிசுத்த ஆவியானவர் இயேசுகிறிஸ்துவினுடையதில் எடுத்து நமக்கு அறிவிக்கிறார், அதையே நமக்குக் கொடுக்கிறார்.

இந்தப் பூமியில் ஒரு புதிய ராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்காக பரிசுத்த ஆவியானவர் அனுப்பப்படவில்லை. இயேசுகிறிஸ்து இந்தப் பூமியில் ஊழியம் செய்தபோது, அவர் ஸ்தாபித்த அதே ராஜ்யத்தையே, பரிசுத்த ஆவியானவரும் ஸ்தாபிக்கிறார். அதை விஸ்தரிக்கிறார்.

தேவனுடைய காரியங்களையெல்லாம் ஆவியானவர் நமக்கு அறிவிக்கிறார். பிதாவினுடையவைகள் யாவும் கிறிஸ்துவினுடையவைகள். தேவன் நமக்கு வெளிப்படுத்த வேண்டுமென்று சித்தங்கொண்டிருக்கிற எல்லா கிருபைகளும், சத்தியங்களும் இயேசுகிறிஸ்துவின் கரங்களில் ஒப்புக்கொடுக்கப்படுகிறது. பரலோகக் காரியங்களின் ஆவிக்குரிய எல்லா ஆசீர்வாதங்களையும், நமக்குக் கொடுப்பதற்காக, அவை பிதாவினால் குமாரனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தம்மிடத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் எல்லாவற்றையும் நமக்குக் கொடுக்கும் ஊழியத்தை குமாரனானவர் பரிசுத்த ஆவியானவரிடத்தில் ஒப்புக்கொடுத்திருக்கிறார்.

**மறுபடியும் உங்களைக் காண்பேன்**
**யோவா 16 : 16-22**

**யோவா 16:16. நான் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால் கொஞ்சக்காலத்திலே என்னைக் காணாதிருப்பீர்கள், மறுபடியும் கொஞ்சக்காலத்திலே என்னைக் காண்பீர்கள் என்றார்.**

**யோவா 16:17. அப்பொழுது அவருடைய சீஷரில் சிலர்: நான் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், கொஞ்சக்காலத்திலே என்னைக் காணாதிருப்பீர்கள் என்றும், மறுபடியும் கொஞ்சக்காலத்திலே என்னைக் காண்பீர்கள் என்றும் அவர் நம்முடனே சொல்லுகிறதின் கருத்தென்ன என்று தங்களுக்குள்ளே பேசிக்கொண்டதுமன்றி:**

**யோவா 16:18. கொஞ்சக்காலம் என்கிறாரே, இதென்ன? அவர் சொல்லுகிறது இன்னதென்று நமக்கு விளங்கவில்லையே என்றார்கள்.**

## அதிகாரம் - 16

**யோவா 16:19. அதைக்குறித்துத் தம்மிடத்தில் கேட்கும்படி அவர்கள் விரும்புகிறதை இயேசு அறிந்து, அவர்களை நோக்கி: கொஞ்சக்காலத்திலே என்னைக் காணாதிருப்பீர்கள், மறுபடியும் கொஞ்சக்காலத்திலே என்னைக் காண்பீர்கள் என்று நான் சொன்னதைக்குறித்து நீங்கள் உங்களுக்குள்ளே விசாரிக்கிறீர்களோ?**

**யோவா 16:20. மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: நீங்கள் அழுது புலம்புவீர்கள், உலகமோ சந்தோஷப்படும்; நீங்கள் துக்கப்படுவீர்கள், ஆனாலும் உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்.**

**யோவா 16:21. ஸ்திரீயானவளுக்குப் பிரசவகாலம் வந்திருக்கும்போது அவள் துக்கமடைகிறாள்; பிள்ளைபெற்றவுடனே ஒரு மனுஷன் உலகத்தில் பிறந்தானென்கிற சந்தோஷத்தினால் அப்புறம் உபத்திரவத்தை நினையாள்.**

**யோவா 16:22. அதுபோல நீங்களும் இப்பொழுது துக்கமடைந்திருக்கிறீர்கள்; நான் மறுபடியும் உங்களைக் காண்பேன், அப்பொழுது உங்கள் இருதயம் சந்தோஷப்படும், உங்கள் சந்தோஷத்தை ஒருவனும் உங்களிடத்திலிருந்து எடுத்துப்போடமாட்டான்.**

### கொஞ்சக்காலத்திலே என்னைக் காண்பீர்கள்

**நான் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால் கொஞ்சக்காலத்திலே என்னைக் காணாதிருப்பீர்கள், மறுபடியும் கொஞ்சக்காலத்திலே என்னைக் காண்பீர்கள் என்றார் (யோவா 16:16).**

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களோடு எப்போதுமே ஆறுதலான வார்த்தைகளைப் பேசுகிறார். இன்னும் கொஞ்சக்காலத்திலே சீஷர்கள் இயேசுவைக் காணாதிருப்பார்கள். இயேசுகிறிஸ்து தம்முடைய பிதாவினிடத்திற்குப் போகப்போகிறார். அவர் தம் சீஷரோடு கொஞ்சக்காலமாத்திரமே இருக்கப் போவதினால், சீஷர்கள் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளவேண்டும். இயேசுகிறிஸ்துவிடத்தில் தாங்கள் கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டிய நல்ல விஷயங்கள் இன்னும் இருக்குமானால், அவற்றை இந்தக் கொஞ்சக்காலத்திற்குள் கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டும். சீக்கிரமாய்ச் செயல்படவேண்டும்.

நாம் இப்போது கிருபையின் காலத்திலிருக்கிறோம். இந்தக் காலத்தைப் பயன்படுத்திக்கொண்டு நம்முடைய பரிசுத்த ஜீவியத்தில் வளர்ச்சியடையவேண்டும். விரைவில் கிருபையின் காலம் முடிந்துபோகும். அதன்பின்பு நியாயத்தீர்ப்பின் காலம் வந்து விடும். கிருபையின் காலமும் நியாயத்தீர்ப்பின் காலமும் ஒன்றுபோல் இருக்காது.

இயேசுகிறிஸ்து இப்போது தம்முடைய சீஷருடனே கூடயிருக்கிறார். சீக்கிரத்தில் அவர்களைவிட்டுக் கடந்துபோய்விடுவார். இயேசுகிறிஸ்து சீஷர்களோடு கூடயிருப்பதற்கும், அவர்களோடு அவர் கூடயில்லாமல் இருப்பதற்கும் நிறைய வித்தியாசம் உண்டு. கல்வாரி சிலுவையில் இயேசுகிறிஸ்து தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுக்கப்போகிறார். அவர் மரித்த பின்பு அவருடைய சரீரத்தை அவர்களால் காணமுடியாது. விசுவாசிகள் மரிக்கும்போது அவர்கள் நம்முடைய கண்களின் பார்வையைவிட்டு மறைந்துபோய்விடுகிறார்கள். ஆனாலும் அவர்கள் நம்முடைய சிந்தையின் எண்ணத்தைவிட்டு அவர்கள் மறைவதில்லை. இயேசுகிறிஸ்து பரமேறிப்போகும்போது, சீஷர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்தார்கள். இயேசுகிறிஸ்து அவர்கள் கண்களுக்கு மறைவாய் வானத்திற்கு உயர எடுத்துக்கொள்ளப்பட்டார். மேகத்தின் நடுவே கடந்துபோனார். அதன்பின்பு சீஷர்கள் இயேசுகிறிஸ்துவின் சரீரத்தைப் பிரத்தியட்சமாய் காணவில்லை.

இயேசுகிறிஸ்து பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், கொஞ்சக்காலத்திலே அவரைக் காணாதிருப்பார்கள். ஆனாலும் மறுபடியும் கொஞ்சக்காலத்திலே அவரைக் காண்பார்கள். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களைவிட்டு நிரந்தரமாகக் கடந்துபோய்விடவில்லை. கொஞ்சக்காலம் மாத்திரமே அவர்களைவிட்டு கடந்துபோகிறார். இயேசுகிறிஸ்து மரித்து மூன்றாம்நாளிலே உயிரோடு எழும்பினார். உயிர்த்தெழுந்த அவரை இயேசுகிறிஸ்துவின் சீஷர்களில் அநேகர் தங்கள் கண்களால் கண்டார்கள்.

இயேசுகிறிஸ்து வானத்திற்கு பரமேறிய பின்பு பரிசுத்த ஆவியானவர் சீஷர்கள்மீது ஊற்றப்படுகிறார். பரிசுத்த ஆவியானவரின் வருகை, இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களை வந்து சந்திப்பதாக இருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளோடு சிறிது காலம் மாத்திரம் இருந்துவிட்டு பின்பு மறைந்துபோய்விடமாட்டார். அவர் நம்மோடுகூட நித்திய காலமாக இருப்பார். நாம் இயேசுகிறிஸ்துவைப் பரிசுத்த ஆவியானவரில் காணலாம். இவ்விரண்டு சம்பவங்கள் தவிர இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போதும் நாம் அவரைக் காண்போம்.

## அதிகாரம் - 16

தம்முடைய சீஷர்கள் கொஞ்சக்காலத்தில் தம்மை ஏன் காணாதிருப்பார்கள் என்பதற்கான காரணத்தையும் இயேசுகிறிஸ்து அவர்களிடம் கூறுகிறார். "இயேசுகிறிஸ்து பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால்" என்பதே அந்தக் காரணம். வேதபண்டிதர்கள் இந்த வாக்கியத்திற்கு பலவிதமாக வியாக்கியானம் கூறுகிறார்கள். இந்த வார்த்தையானது இயேசுகிறிஸ்து பரமேறிப்போவதைக் குறிப்பதற்குப் பதிலாக, அவர் தமது சரீரத்தில் மரித்துப்போவதைக் குறிக்கும் என்பது ஒரு வியாக்கியானம். இயேசுகிறிஸ்து மரிக்கும்போது கொஞ்சக்காலத்திலே சீஷர்கள் அவரைக் காணாதிருக்கிறார்கள். அவர் மூன்றாம் நாளில் மறுபடியும் உயிரோடு எழும்பும்போது, சீஷர்கள் கொஞ்சக்காலத்திலே மறுபடியும் அவரைக் காண்கிறார்கள்.

இந்த வாக்கியம் இயேசுகிறிஸ்து பரமேறிப்போவதை குறிக்கும் என்று வியாக்கியானம் பண்ணும்போது, அவர் பரமேறிப்போனபின்பு, கொஞ்சக்காலத்திலே, சீஷர்கள் அவரைக்காணாதிருப்பார்கள். காலத்தின் முடிவில் இயேசுகிறிஸ்து மறுபடியும் இந்தப் பூமிக்கு வரும்போது, கொஞ்சக்காலத்திலே அவரை மறுபடியும் காண்பார்கள். விசுவாசிகளாகிய நாம் நம்முடைய சிநேகிதர்களைவிட்டுப் பிரிந்து போகும்போது, இயேசுகிறிஸ்துவைப்போலவே வாழ்த்துக் கூறவேண்டும். "கொஞ்சக்காலத்தில் என்னைக் காணாதிருப்பீர்கள்" என்று இயேசு கிறிஸ்துவைப்போல நாமும் சொல்லி விடைபெறவேண்டும். விசுவாசிகளாகிய நாம் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்துபோகவேண்டியது நிச்சயமாகவே நடைபெறும். ஆயினும் நம்முடைய பிரிவு நித்தியமான பிரியவாக இருக்காது. நாம் மரித்தாலும் மறுபடியும் சந்திப்போம்.

### நமக்கு விளங்கவில்லையே

**அப்பொழுது அவருடைய சீஷரில் சிலர்: நான் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், கொஞ்சக்காலத்திலே என்னைக் காணாதிருப்பீர்கள் என்றும், மறுபடியும் கொஞ்சக்காலத்திலே என்னைக் காண்பீர்கள் என்றும் அவர் நம்முடனே சொல்லுகிறதின் கருத்தென்ன என்று தங்களுக்குள்ளே பேசிக் கொண்டதுமன்றி: கொஞ்சக்காலம் என்கிறாரே, இதென்ன? அவர் சொல்லுகிறது இன்னதென்று நமக்கு விளங்கவில்லையே என்றார்கள் (யோவா 16:17,18).**

இயேசுகிறிஸ்துவின் வார்த்தையைக் கேட்டு சீஷர்கள் குழப்பமடைகிறார்கள். அவர் தங்களைவிட்டுப் போகப்போகிறாரே என்னும் வருத்தம் அவர்களுடைய இருதயத்தில் நிரம்பியிருக்கிறது. ஆகையினால் இயேசுகிறிஸ்து சொல்லுவது சீஷர்களுக்குச் சரியாகப்புரியவில்லை. சீஷர்களில் சிலர் "அவர் சொல்லுகிறது இன்னதென்று நமக்கு விளங்கவில்லையே" என்று தங்களுக்குள்ளே சொல்லிக்கொள்கிறார்கள். இந்தச் சத்தியத்தை இயேசுகிறிஸ்து ஏற்கெனவே தம்முடைய சீஷர்களுக்கு உபதேசம் பண்ணியிருக்கிறார். ஆனாலும் சீஷர்கள் அந்தச் சத்தியத்தை புரிந்துகொள்ளாமல் இன்னும் இருளிலிருக்கிறார்கள்.

சீஷர்களின் விசுவாசம் பலவீனமாகயிருக்கிறது. அவர்கள் வேதவாக்கியத்தை அறிந்துகொள்வதிலும் பலவீனமாகயிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து தம்முடைய பிதாவினிடத்திற்குப் போகப்போவதைப்பற்றி, சீஷர்களிடம் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். பலமுறை இதைப்பற்றி சொல்லியிருக்கிறார். தம்மைக் கொன்றுபோடுவார்களென்றும், ஆனாலும் மூன்றாம் நாளிலே தாம் மறுபடியும் உயிரோடு எழும்பப்போவதாகவும், இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷருக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். ஆனால் அவர் சொன்னதன் கருத்து அவர்களுக்குப் புரியவில்லை. "அவர் சொல்லுகிறது இன்னதென்று நமக்கு விளங்கவில்லையே" என்று தங்களுக்குள்ளே சொல்லிக் கொள்கிறார்கள். துக்கம் அவர்களுடைய இருதயத்தில் நிரம்பியிருக்கிறது. மிகுந்த துக்கத்தோடிருப்பதினால் அவர்களுக்கு ஆறுதல் தேவைப்படுகிறது.

தவறுகளினால் துக்கம் உண்டாகிறது. துக்கப்படும்போது தவறு உறுதிபண்ணப்படுகிறது. இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் துக்கத்தோடிருந்து சத்தியத்தைப் புரிந்துகொள்ள முடியாமலிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து இந்தப் பூமியில் உலகப்பிரகாரமான ஒரு ராஜ்யத்தை ஸ்தாபிப்பார் என்று சீஷர்கள் எதிர்பார்க்கிறார்கள். இந்த எண்ணம் அவர்களுடைய இருதயத்தின் ஆழத்தில் பதிந்திருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள் தங்களுடைய எதிர்பார்ப்புக்கு ஏற்றாற்போல் இல்லை என்று துக்கப்படுகிறார்கள்.

## அதிகாரம் - 16

இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற நாம் கூட பல சமயங்களில் இப்படிப்பட்ட தவறுகளைச் செய்வதற்கு வாய்ப்புள்ளது. நம்முடைய சிந்தனையில் சில எண்ணங்கள் இருக்கும். இயேசுகிறிஸ்துவின் வசனம் நம்முடைய எண்ணத்திற்கு ஒத்துப்போக வேண்டுமென்று எதிர்பார்ப்போம். ஆனால் நாம் எதிர்பார்த்த பிரகாரம் வேதவாக்கியம் இல்லாமற்போனால், அது நமக்கு கடினமான உபதேசமாகத் தெரியும். வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கும் சில சம்பவங்களை நம்முடைய சுயஎண்ணத்தின் பிரகாரமாக வியாக்கியானம் பண்ணுவோம். தேவனுடைய வெளிப்பாட்டிற்கு முக்கியத்துவம் தராமல், சுயசிந்தனைக்கு முக்கியத்துவம் கொடுத்தால் நமக்கு குழப்பமும் துக்கமும்தான் இருக்கும். சீஷர்களுக்கு இப்படிப்பட்ட பிரச்சனையே உண்டாயிற்று.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடத்தில் "கொஞ்சக்காலத்தில்" என்னும் வார்த்தையைப் பயன்படுத்துகிறார். கொஞ்சக்காலம் என்றால் எவ்வளவு காலம் என்று சீஷர்களுக்குப் புரியவில்லை. தங்களைவிட்டு அவர் ஏன் சீக்கிரத்தில் கடந்துபோகவேண்டுமென்று சீஷர்கள் யோசிக்கிறார்கள். இதற்கு சரியான காரணம் சீஷர்களுக்குக் கிடைக்கவில்லை. சில சமயங்களில் நமக்கு ஒரு காரியம் சம்பவிக்கும் என்று எதிர்பார்ப்போம். அது நிச்சயமாகவே நடைபெறுமென்று நமக்குத் தெரியும். ஆனால் அந்தச் சம்பவம் திடீரென்று சீக்கிரமாய் நடைபெற்றால் நமக்கு மிகவும் ஆச்சரியமாக இருக்கும். இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் துக்கம் கலந்த ஆச்சரியத்தோடிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து மரிக்கப்போகிறாரென்பது சீஷர்களுக்குத் தெரியும். ஆனால் அவர் சீக்கிரத்தில் மரிக்கப்போகிறார் என்பதை நினைக்கும்போது அவர்களுக்கு மிகுந்த துக்கமுண்டாயிற்று.

சீஷர்கள் குழப்பத்திலிருந்தாலும், அவர்கள் குழப்பத்திலேயே இருந்துவிடவேண்டுமென்று விரும்பவில்லை. ஆகையினால் தங்களிடத்திலுள்ள சந்தேகத்தை மற்றவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்கிறார்கள். "அவர் நம்முடனே சொல்லுகிறதன் கருத்து என்ன" என்று தங்களுக்குள்ளே பேசிக்கொள்கிறார்கள்.

"அவர் சொல்லுகிறது இன்னதென்று நமக்கு விளங்கவில்லையே" என்றும் சீஷர்கள் தங்களுக்குள்ளே கேட்டுக்கொள்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள் தங்களுக்குப் புரியவில்லையென்றால் அதன் அர்த்தத்தை மற்றவர்களிடத்தில் கேட்டு விசாரிக்கிறார்கள்.

ஆவிக்குரிய சத்தியங்கள் நமக்குப் புரியவில்லையென்றால், மற்ற விசுவாசிகளிடத்தில் அதைப்பற்றிக் கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டும். தேவனுடைய காரியங்களை ஒருவருக்கொருவர் விசாரித்துத் தெரிந்துகொண்டால், நமக்கு தேவனைப்பற்றிய ஞானம் விருத்தியாகும். சில சமயங்களில் தேவனுடைய இரகசியங்கள் நமக்குப் புரியாமற்போகலாம். மற்றவர்களாலும் அதைத் தெளிவாக விளக்க முடியாமல் போகலாம். இப்படிப்பட்ட சமயங்களில் நாம் கர்த்தருடைய சமுகத்தில் பொறுமையோடு காத்திருக்கவேண்டும். தேவன் தம்முடைய சத்தியத்தின் இரகசியத்தை நமக்கு வெளிப்படுத்துமாறு அவரிடத்தில் பயபக்தியோடு விண்ணப்பம்பண்ணவேண்டும்.

### நீங்கள் உங்களுக்குள்ளே விசாரிக்கிறீர்களோ

**அதைக்குறித்துத் தம்மிடத்தில் கேட்கும்படி அவர்கள் விரும்புகிறதை இயேசு அறிந்து, அவர்களை நோக்கி: கொஞ்சக்காலத்திலே என்னைக் காணாதிருப்பீர்கள், மறுபடியும் கொஞ்சக்காலத்திலே என்னைக் காண்பீர்கள் என்று நான் சொன்னதைக்குறித்து நீங்கள் உங்களுக்குள்ளே விசாரிக்கிறீர்களோ? (யோவா 16:19)**

இயேசுகிறிஸ்து "கொஞ்சக்காலம்" என்று சொன்னதைக்குறித்து, அவரிடத்தில் கேட்கும்படி சீஷர்கள் விரும்புகிறார்கள். அவர்கள் விரும்புவதை இயேசுகிறிஸ்துவும் அறிந்திருக்கிறார். நம்முடைய பிரச்சனைகளை இயேசுகிறிஸ்துவிடம் கொண்டு வந்தால்தான் பிரச்சனைகளுக்குத் தீர்வு உண்டாகும். அதை நமக்குள்ளேயே வைத்திருந்தால் நமக்கு வேதனையும் வருத்தமும்தான் உண்டாகும். இயேசுகிறிஸ்துவிடத்தில், அவர் "கொஞ்சக்காலம்" என்று கூறியதை, சீஷர்கள் கேட்கவேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆனால் கேட்க வெட்கப்படுகிறார்கள்.

## அதிகாரம் - 16

சீஷர்கள் தம்மிடத்தில், தாம் சொன்னதைப்பற்றி வெளிப்படையாகக் கேட்காவிட்டாலும், அவர்களுடைய உள்ளத்தை இயேசுகிறிஸ்து அறிந்திருக்கிறார். கேட்கவேண்டுமென்று விருப்பம் இருக்கிறவர்களோடு இயேசுகிறிஸ்து பேசுகிறார். இயேசுவின் உபதேசத்தைக் கேட்கவேண்டும் என்னும் ஆர்வம் நம்மிடத்தில் இருந்தால் மாத்திரமே அவர் நமக்கு உபதேசம்பண்ணுவார். நம்முடைய அறியாமையை நாம் அறிக்கை செய்து, இயேசுகிறிஸ்துவின் சமுகத்தில் மிகுந்த மனத்தாழ்மையோடு இருக்கும்போது அவர் நம்மை ஆதரிப்பார். இயேசுகிறிஸ்து அவர்களிடம் "நான் சொன்னதைக்குறித்து நீங்கள் உங்களுக்குள்ளே விசாரிக்கிறீர்களோ" என்று கேட்கிறார். நாம் இயேசுகிறிஸ்துவிடத்தில் விசாரிக்கும்போது, அவர் நமக்குப் போதகம்பண்ணுவார்.

**உங்கள் துக்கம் சந்தோஷமாகமாறும்**

**மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: நீங்கள் அழுது புலம்புவீர்கள், உலகமோ சந்தோஷப்படும்; நீங்கள் துக்கப்படுவீர்கள், ஆனாலும் உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும் (யோவா 16:20).**

சீஷர்களுக்கு துக்கமும் சந்தோஷமும் உண்டாகும். ஒரு காரியம் நமக்கு சம்பவிக்கும்போது, அது நம்மை எப்படி பாதிக்கிறது என்பதன் அடிப்படையிலேயே, அது நமக்கு சந்தோஷமாகவோ அல்லது துக்கமாகவோ இருக்கும். இயேசுகிறிஸ்து சீஷர்களிடம் சொன்னதைக் குறித்து, அவர்கள் தங்களுக்குள்ளே விசாரிக்கிறதை அறிந்து, தாம் சொன்னதைக் குறித்து அவர்களுக்கு விளக்கம் கொடுக்கிறார்.

"நீங்கள் அழுது புலம்புவீர்கள், உலகமோ சந்தோஷப்படும்; நீங்கள் துக்கப்படுவீர்கள், ஆனாலும் உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்" என்று இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடத்தில் கூறுகிறார். இயேசுகிறிஸ்துவின் தரிசனம் நம்மிடத்தில் இருக்கிறதா அல்லது இல்லையா என்பதைப் பொறுத்தே விசுவாசிகளுக்கு சந்தோஷமோ அல்லது துக்கமோ உண்டாகும்.

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் இப்போது துக்கமாகவும் இருக்கிறார்கள். சந்தோஷமாகவும் இருக்கிறார்கள். அவர்களுக்குத் துக்கம் உண்டாகும் என்று இயேசுகிறிஸ்து முன்னறிவிக்கிறார். "நீங்கள் அழுது புலம்புகிறீர்கள், நீங்கள் துக்கப்படுவீர்கள்" என்று இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடத்தில் முன்னறிவித்துக் கூறுகிறார். சீஷர்கள் இயேசுகிறிஸ்துவின்மீது அன்பாயிருக்கிறார்கள். ஆகையினால் அவருக்காக அழுது புலம்புகிறார்கள். நம்முடைய சிநேகிதருக்கு உண்டாகும் வேதனை நமக்கே உண்டாவதுபோல இருக்கும்.

சீஷர்கள் தங்களுக்காகவும் அழுகிறார்கள். இயேசுகிறிஸ்து சீஷர்களைவிட்டுப் போகப்போகிறார். இதனால் அவர்களுக்கு வேதனையும் இழப்பும் உண்டாயிற்று. இதற்காக சீஷர்கள் அழுது புலம்புகிறார்கள். தம்முடைய சீஷர்கள் துக்கத்தை எதிர்பார்க்க வேண்டும் என்று இயேசுகிறிஸ்து அவர்களிடத்தில் ஏற்கெனவே முன்னறிவித்து எச்சரித்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் முன்னெச்சரிப்பான வார்த்தையின் பிரகாரம், தங்களை ஆறுதல்படுத்திக்கொள்ள சீஷர்கள் ஆயத்தமாகயிருக்கவேண்டும். பிரச்சனை வருமென்று நமக்கு முன்பே அறிவிக்கப்பட்டிருப்பதினால், அதைச் சந்திக்கவும், தாங்கிக்கொள்ளவும், எதிர்கொள்ளவும் நாம் ஆயத்தமாயிருக்கவேண்டும்.

சீஷர்கள் அழுது புலம்பும்போது, உலகம் சந்தோஷப்படும். பரிசுத்தவான்களுக்குத் துக்கமாயிருப்பது பாவிகளுக்குச் சந்தோஷமாயிருக்கும். கிறிஸ்துவுக்கு அந்நியராகயிருக்கிறவர்கள் தங்களுடைய மாம்சப்பிரகாரமான சிந்தையில் தொடர்ந்து ஜீவித்துக்கொண்டிருப்பார்கள். உலகமே இவர்களுக்குப் பெரியதாயிருக்கும். இயேசுகிறிஸ்துவின் சத்துருக்கள் சந்தோஷப்படுவார்கள். இயேசுகிறிஸ்து சீஷர்களைவிட்டும், இந்த உலகத்தைவிட்டும் புறப்பட்டுப்போவதினால், தாங்கள் அவரை வெற்றிகொண்டதாக நினைப்பார்கள். இந்தப் பிரபஞ்சத்தின் ஜனங்கள் அநியாயத்தில் சந்தோஷப்படுகிறார்கள். இவர்களுடைய எண்ணங்களும் மாயை. இவர்களுடைய சந்தோஷமும் மாயை.

## அதிகாரம் - 16

நாம் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டிக்கு முன்பாக சாஷ்டாங்கமாகப் பணிந்து விழுந்து கிடக்கும்போது, நாம் தோற்றுப்போய் தரையில் படுத்திருப்பதாக உலகம் நினைத்து சந்தோஷப்படுகிறது. மற்றவர்கள் நம்மைக்குறித்துச் சந்தோஷப்படும்போது நாம் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. தேவனுடைய சமுகத்தில் நாம் கண்ணீரோடு நிற்கும்போது, அவர் நம்முடைய கண்ணீரைத் துடைப்பார். நம்முடைய துக்கம் சந்தோஷமாய் மாறும். நம்முடைய துக்கம் நமக்குள் நிரந்தரமாகயிராது. கொஞ்சக்காலம் மாத்திரமே இருக்கும். நாம் சிறிது நேரம் அழுது புலம்புவோம். சிறிது நேரம் துக்கப்படுவோம். ஆனாலும் நம்முடைய துக்கம் சந்தோஷமாக மாறும். சீஷர்கள் தங்களுடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை மறுபடியும் பார்த்தபோது சந்தோஷப்பட்டார்கள். இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதல், செத்தவர்களைப்போல இருந்த சீஷர்களுக்கு உயிர் கிடைத்ததுபோல ஆயிற்று. இயேசுகிறிஸ்துவின் பாடுகளைக்குறித்து சீஷர்கள் துக்கத்தோடிருந்தார்கள். அவர் உயிர்த்தெழுந்ததினால் அவர்களுடைய துக்கம் சந்தோஷமாய் மாறிற்று.

அப்போஸ்தலர் பவுல் தன்னையும், மற்ற அப்போஸ்தலரையும் எப்படி விளங்கப்பண்ணுகிறார் என்பதைக்குறித்து கொரிந்தியருக்கு எழுதின இரண்டாவது நிருபத்தில் இவ்வாறு எழுதியிருக்கிறார். "இந்த ஊழியம் குற்றப்படாதபடிக்கு, நாங்கள் யாதென்றிலும் இடறல் உண்டாக்காமல், எவ்விதத்தினாலேயும் எங்களை தேவஊழியக்காரராக விளங்கப்பண்ணுகிறோம். மிகுந்த பொறுமையிலும், உபத்திரவங்களிலும், நெருக்கங்களிலும், இடுக்கண்களிலும், அடிகளிலும், காவல்களிலும், கலகங்களிலும், பிரயாசங்களிலும், கண்விழிப்புகளிலும், உபவாசங்களிலும், கற்பிலும், அறிவிலும், நீடிய சாந்தத்திலும், தயவிலும், பரிசுத்தஆவியிலும், மாயமற்ற அன்பிலும், சத்தியவசனத்திலும், திவ்விய பலத்திலும்; நீதியாகிய வலதிடதுபக்கத்து ஆயுதங்களைத் தரித்திருக்கிறதிலும், கனத்திலும், கனவீனத்திலும், துர்க்கீர்த்தியிலும், நற்கீர்த்தியிலும்; எத்தரென்னப்பட்டாலும் நிஜஸ்தராகவும், அறியப்படாதவர்களென்னப் பட்டாலும் நன்றாய் அறியப்பட்டவர்களாகவும், சாகிறவர்கள் என்னப்பட்டாலும் உயிரோடிருக்கிறவர்களாகவும், தண்டிக்கப் படுகிறவர்கள் என்னப்பட்டாலும் கொல்லப் படாதவர்களாகவும், துக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் எப்பொழுதும் சந்தோஷப்படுகிறவர்களாகவும், தரித்திரர் என்னப்பட்டாலும் அநேகரை ஐசுவரியவான்களாக்குகிற வர்களாகவும், ஒன்றுமில்லாதவர்களென்னப் பட்டாலும் சகலத்தையுமுடையவர்களாகவும் எங்களை விளங்கப்பண்ணுகிறோம்" (2கொரி 6:3-10).

நம்முடைய ஜீவியம் துக்கம் நிறைந்ததாக இருக்கலாம். துக்கத்திற்கு மத்தியிலும் நம்முடைய இருதயத்தில் சந்தோஷம் நிறைந்திருக்கவேண்டும். ஆட்டுக்குட்டியானவரைப் பின்பற்றுகிற விசுவாசிகளெல்லோருமே, அப்போஸ்தலர் பவுலைப்போல சிந்தனையுடையவர்களாக இருக்கவேண்டும். நம்முடைய சூழ்நிலை அழுது புலம்புவதாக இருக்கலாம். நம்முடைய இருதயம் துக்கப்படலாம். ஆனால் இயேசுகிறிஸ்துவோடு நாம் நிலைத்திருப்பதினால் நம்முடைய துக்கம் சந்தோஷமாக மாறும். சகவிசுவாசிகள் அழுது புலம்பி, துக்கப்படும்போது நாமும் அவர்களோடு துக்கப்படவேண்டும். அழுகிறவர்களுக்காக அழவேண்டும். புலம்புகிறவர்களாகப் புலம்பவேண்டும். தங்களுடைய பாவங்களைக்குறித்து புலம்பாத பாவிகளுக்காகவும், நாம் கர்த்தருடைய சமுகத்தில் அழுது புலம்பவேண்டும். அதேவேளையில் பாடுகளினிமித்தமாக அழுது புலம்புகிற பரிசுத்தவான்களுக்காகவும் நாம் அழுது புலம்பவேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் அழுது புலம்பி, துக்கப்படும்போது இந்த உலகமோ சந்தோஷப்படுகிறது. இவர்களுடைய சந்தோஷம் மாயை. இது நிலைத்து நிற்பதில்லை. இப்பிரபஞ்சத்தின் சந்தோஷமே பிரதான சந்தோஷமென்று உலகத்தார் நினைக்கிறார்கள். உலகம் கொடுக்கிற சந்தோஷம் பொய்யான சந்தோஷம். இந்த சந்தோஷத்தைப் பிறரோடு பகிர்ந்துகொள்ள முடியாது. துன்மார்க்கரால் தங்களுடைய துன்மார்க்கத்தைத்தான் பிறருக்குப் பகிர்ந்து கொடுக்க முடியும். இவர்கள் எப்படித்தான் சந்தோஷமாக இருந்தாலும், பரலோகத்திற்கு பாத்திரவான்களாக இருக்கிற பரிசுத்தவான்கள், இவர்களுக்கு அந்நியராகவே இருப்பார்கள்.

## அதிகாரம் - 16

கர்த்தருடைய பிள்ளைகளிடத்தில் உலகப்பிரகாரமான துக்கம் இருக்கக்கூடாது. நாம் ஆவிக்குரிய ரீதியாக மாத்திரமே துக்கப்படவேண்டும். நம்முடைய ஆவிக்குரிய துக்கம் நித்திய சந்தோஷமாக மாறும். நம்முடைய துக்கத்தைச் சந்தோஷம் தொடர்ந்து வருவது மாத்திரமல்ல, நம்முடைய துக்கமே சந்தோஷமாக மாற்றப்படும். தம்முடைய பிள்ளைகளெல்லோரும் தேவனுடைய ஆறுதலைப் பெற்றிருக்க வேண்டும் என்பது கிறிஸ்துவின் சித்தமாகயிருக்கிறது.

**பிரசவகாலம்**

**ஸ்திரீயானவளுக்குப் பிரசவகாலம் வந்திருக்கும்போது அவள் துக்கமடைகிறாள்; பிள்ளைபெற்றவுடனே ஒரு மனுஷன் உலகத்தில் பிறந்தானென்கிற சந்தோஷத்தினால் அப்புறம் உபத்திரவத்தை நினையாள் (யோவா 16:21).**

பரிசுத்தவான்களின் துக்கத்தை விவரிப்பதற்காக இயேசுகிறிஸ்து ஸ்திரீயின் பிரசவகாலத்தை உவமையாகக் கூறுகிறார். "ஸ்திரீயானவளுக்குப் பிரசவகாலம் வந்திருக்கும்போது அவள் துக்கமடைகிறாள்; பிள்ளைபெற்றவுடனே ஒரு மனுஷன் உலகத்தில் பிறந்தானென்கிற சந்தோஷத்தினால் அப்புறம் உபத்திரவத்தை நினையாள்". ஏதேன் தோட்டத்தில் ஸ்திரீயானவள் தேவன் தடைபண்ணியிருந்த கனியைப் புசித்தாள் (ஆதி 3:16). அதற்கு நியாயத்தீர்ப்பாக, தேவன் ஸ்திரீயிடம் "நீ கர்ப்பவதியாயிருக்கும்போது உன் வேதனையை மிகவும் பெருகப்பண்ணுவேன். வேதனையோடே பிள்ளை பெறுவாய்" என்று கூறினார். ஏதேன் தோட்டத்தில் தேவன் ஸ்திரீக்குக் கொடுத்த சாபம் இன்றும் தொடர்ந்து வருகிறது. இந்த உலகம் ஆதாம் ஏவாள் மூலமாக சபிக்கப்பட்டிருக்கிறது. பூமியில் மலரைச் சுற்றிலும் முள் முளைத்திருக்கிறது.

வருத்தத்திற்கும் சாபத்திற்கும் மத்தியில், தேவன் இந்த மனுக்குலத்திற்கு ஒரு ஆசீர்வாதத்தையும் சந்தோஷத்தையும் கொடுத்திருக்கிறார். ஸ்திரீயானவள் பிள்ளை பெற்றவுடனே, ஒரு மனுஷன் உலகத்தில் பிறந்தான் என்கிற சந்தோஷத்தினால் அப்புறம் உபத்திரவத்தை நினையாள். உலகத்தில் ஒரு மனுஷன் பிறந்தான் என்பதே சந்தோஷமான செய்தி. ஆசீர்வாதத்தின் கனி எப்போதுமே சந்தோஷத்தைத் தரும். ஒரு குழந்தை உயிரோடு பிறப்பது அந்தக் குழந்தையின் பெற்றோருக்குச் சந்தோஷமாயிருக்கும். பிறந்த குழந்தையின் வருங்கால வாழ்க்கை எப்படியிருக்கும் என்பது நமக்குத் தெரியாது. அவர்களுக்கு என்ன பிரச்சனைகள் வரும், அது எப்படிப்பட்ட ஆபத்துக்களையெல்லாம் சந்திக்கும் என்பதும் அதன் பெற்றோருக்குத் தெரியாது. ஆனாலும் ஒரு குழந்தை பிறந்திருக்கிறது என்பதை நினைத்து அதன் பெற்றோர் சந்தோஷப்படுகிறார்கள்.

ஒரு மனுஷன் உலகத்தில் பிறந்தான் என்கிற சந்தோஷத்தினால், பிள்ளைபெற்ற ஸ்திரீயானவள் அப்புறம் உபத்திரவத்தை நினையாள் என்பதை உவமையாகக் கூறி, இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களின் வேதனைகளை விளக்குகிறார். கிறிஸ்துவின் சீஷர்களுக்கு இந்த உலகத்தில் உபத்திரவங்கள் உண்டு. நிச்சயமாகவே உபத்திரவங்கள் வேதனையாகத்தான் இருக்கும். ஆனாலும் இந்த உபத்திரவம் நிரந்தரமானது அல்ல. இந்த உபத்திரவத்தின் முடிவில் ஒரு சந்தோஷம் உண்டாகப்போகிறது. பிரசவகாலம் வேதனை நிறைந்ததாக இருந்தாலும், பிள்ளை பெற்றவுடன், பிள்ளையைப்பார்த்து தாய் தன் வேதனையை மறந்து சந்தோஷப்படுகிறாள். இந்த சந்தோஷம் அவளுடைய துக்கத்தை மாற்றுகிறது. வேதனையை நீக்குகிறது. கண்ணீரை அகற்றுகிறது. துக்கத்திற்குப் பின்பு சந்தோஷம் உண்டாகிறது.

கர்த்தருடைய பிள்ளைகளுக்கும் இந்த உலகத்தில் இப்படிப்பட்ட வேதனைகளும் துக்கங்களும் வரும். தங்களுடைய ஊழியத்தின் கனிகளைச் சீஷர்கள் அறுவடை செய்யும்போது, அவர்களுடைய துக்கமெல்லாம் சந்தோஷமாய் மாறும். இந்த உலகத்தில் தாங்கள் வீணாய்ப் பிரயாசப்படவில்லை என்பதை நினைத்து சந்தோஷப்படுவார்கள். இந்த உலகத்தில் தாங்கள் பட்ட பாடுகளையும், வேதனைகளையும், துன்பங்களையும், துக்கங்களையும் இனிமேல் நினைக்கமாட்டார்கள். சந்தோஷம் வரும்போது துக்கம் மறைந்துபோகும்.

## அதிகாரம் - 16

**உங்கள் இருதயம் சந்தோஷப்படும்**

**அதுபோல நீங்களும் இப்பொழுது துக்கமடைந்திருக்கிறீர்கள்; நான் மறுபடியும் உங்களைக் காண்பேன், அப்பொழுது உங்கள் இருதயம் சந்தோஷப்படும், உங்கள் சந்தோஷத்தை ஒருவனும் உங்களிடத்திலிருந்து எடுத்துப்போடமாட்டான் (யோவா 16:22).**

ஸ்திரீயானவளுக்குப் பிரசவகாலத்தின் துக்கத்தையும், பிள்ளை பெற்றவுடன் அவளுக்கு உண்டாகிற சந்தோஷத்தையும் இயேசுகிறிஸ்து உவமையாகக் கூறி, தம்முடைய சீஷருக்கு உண்டாயிருக்கும் துக்கத்தையும், அது இனிமேல் சந்தோஷமாக மாறப்போவதையும் விவரிக்கிறார். சீஷர்கள் இப்போது துக்கமடைந்திருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து மறுபடியும் அவர்களைக் காண்பார். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களைவிட்டுப்போவதினால் அவர்களுக்குத் துக்கம் உண்டாயிற்று. சூரியன் மாலையில் மறைந்தவுடன், சூரியகாந்திப்பூ தன் தலையை கவிழ்த்துவிடும். அதுபோல, இயேசுகிறிஸ்து தங்களைவிட்டுப் போகப்போகிறார் என்பதை நினைத்து, சீஷர்கள் தங்கள் தலைகவிழ்ந்து துக்கத்தோடிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து தமது சீஷர்களைவிட்டுப் போகப்போவதினால், அவர்கள் துக்கமாயிருப்பது நியாயமான காரணமே.

சீஷர்கள் இப்போது துக்கமாயிருந்தாலும் இயேசுகிறிஸ்து அவர்களுக்குச் சந்தோஷத்தை திரும்பக் கொடுப்பதாக வாக்குப்பண்ணுகிறார். அவர்களுடைய சந்தோஷத்தை உறுதிபண்ணுவதற்கு இயேசுகிறிஸ்து மூன்று காரியங்களைக் கூறுகிறார். அவையாவன:

1. நான் மறுபடியும் உங்களைக் காண்பேன்.
2. உங்கள் இருதயம் சந்தோஷப்படும்.
3. உங்கள் சந்தோஷத்தை ஒருவனும் உங்களிடத்திலிருந்து எடுத்துப்போடமாட்டான்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரை மறுபடியும் மெய்யாகவே காண்பார். தமக்காகக் காத்திருக்கிறவர்களுக்காக இயேசுகிறிஸ்து தமது கிருபையினால், மறுபடியும் அவர்களை வந்து சந்திப்பார். உலகப்பிரகாரமான மனுஷர் உயர்த்தப்படும்போது, தங்களைவிட தாழ்ந்தவர்களைத் திரும்பிக்கூட பார்க்கமாட்டார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ சாதாரண மனுஷரைப் போன்றவரல்ல. அவர் பரலோகத்திற்கு உயர்த்தப்பட்டிருக்கிறார். பிதாவின் வலது பாரிசத்தில் அமர்ந்திருக்குமாறு உயர்த்தப்பட்டிருக்கிறார். இயேசுகிறிஸ்து உன்னதத்திற்கு உயர்த்தப்பட்டாலும் தம்முடைய சீஷர்களை அவர் மறந்துவிடவில்லை. அவர்களை மறுபடியும் காண்பதற்கு வருவார். இயேசுகிறிஸ்து மறுபடியும் வருவது சீஷர்களுக்கெல்லாம் மறுபடியும் சந்தோஷம் வருவதாக இருக்கும்.

சீஷர்கள் இயேசுகிறிஸ்துவை மறுபடியும் பார்க்கும்போது அவர்கள் இருதயம் சந்தோஷப்படும். இருதயத்திலுள்ள சந்தோஷம் கெட்டியாக இருக்கும். இயேசுகிறிஸ்து கொடுக்கிற சந்தோஷம் மெய்யானது. அது அலைபாயும் சந்தோஷமல்ல. கிறிஸ்துவின் சந்தோஷம் ஒரு இரகசியம். இது நிச்சயமும் இனிமையுமானது. தேவன் தம்முடைய பிள்ளைகளுக்குக் கொடுக்கும் சந்தோஷத்தை எளிதில் உடைத்துப்போட முடியாது. சீஷர்களிடத்தில் இயேசுகிறிஸ்து கொடுக்கும் சந்தோஷம் நிலைத்திருக்கும்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களை மறுபடியும் காணும்போது, அவர்கள் இருதயம் சந்தோஷப்படும். அந்த சந்தோஷத்தை ஒருவனும் அவர்களிடத்திலிருந்து எடுத்துப் போடமாட்டான். கர்த்தருடைய பிள்ளைகளின் சந்தோஷத்தை சத்துருவால் எடுத்துப்போட முடியுமென்றால், அவன் நிச்சயமாகவே அதை எடுத்துப்போடுவான். ஆனால் அவனால் நம்முடைய சந்தோஷத்தை எடுத்துப்போட முடியாது. இயேசுகிறிஸ்து "உங்கள் சந்தோஷத்தை ஒருவனும் உங்களிடத்திலிருந்து எடுத்துப் போடமாட்டான்" என்று கூறுவதற்கு வேதபண்டிதர்கள் இவ்வாறு விளக்கம் கூறுகிறார்கள். கிறிஸ்துவில் மகிமையடைந்திருக்கிற வர்களுடைய சந்தோஷம் நித்திய சந்தோஷமாக இருக்கும். ஆகையினால் யாராலும் இந்த சந்தோஷத்தை எடுத்துப்போட முடியாது என்று வியாக்கியானம் கூறுகிறார்கள்.

## அதிகாரம் - 16

இந்த உலகத்தில் நம்முடைய சந்தோஷம் நிலைத்திருப்பதில்லை. உலகப்பிரகாரமான பல காரணங்களினால் நம்முடைய சந்தோஷம் துக்கமாக மாறிப்போகிறது. இது உலகத்தின் சந்தோஷம். ஆனால் பரலோகத்தின் சந்தோஷமோ நித்திய சந்தோஷமாக இருக்கும். ஆகையினால் இயேசுகிறிஸ்து இந்த வசனத்தில் கூறுகிற சந்தோஷம், பரிசுத்தவான்களுக்குக் கர்த்தர் கொடுத்திருக்கிற ஆவிக்குரிய சந்தோஷமென்று விளக்கம் கூறுவது சிறப்பாக இருக்கும்.

இந்த உலகத்தால் கர்த்தருடைய பிள்ளைகளின் சந்தோஷத்தை திருடிக்கொண்டு போகமுடியாது. ஏனெனில் இயேசுகிறிஸ்துவின் அன்பை விட்டு அவருடைய பிள்ளைகளை யாராலும் பிரிக்கமுடியாது. கர்த்தருடைய கரத்திலிருந்து அவருடைய பிள்ளைகளை யாராலும் பறித்துக்கொள்ள முடியாது. அவர்களை மாத்திரமல்ல பரலோகத்தில் அவர்கள் சேர்த்து வைத்திருக்கும் பொக்கிஷத்தையும் யாராலும் திருடிக்கொண்டு போகமுடியாது.

### கேளுங்கள்.... பெற்றுக்கொள்வீர்கள் யோவா 16 : 23-27

**யோவா 16:23. அந்த நாளிலே நீங்கள் என்னிடத்தில் ஒன்றுங் கேட்கமாட்டீர்கள். மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார்.**

**யோவா 16:24. இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை; கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்.**

**யோவா 16:25. இவைகளை நான் உவமைகளாய் உங்களுடனே பேசுகிறேன்; காலம் வரும், அப்பொழுது நான் உவமைகளாய் உங்களுடனே பேசாமல், பிதாவைக்குறித்து வெளிப்படையாக உங்களுக்கு அறிவிப்பேன்.**

**யோவா 16:26. அந்த நாளில் நீங்கள் என் நாமத்தினாலே வேண்டிக்கொள்வீர்கள். உங்களுக்காகப் பிதாவை நான் கேட்டுக்கொள்வேனென்று உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை.**

**யோவா 16:27. நீங்கள் என்னைச் சிநேகித்து, நான் தேவனிடத்திலிருந்து புறப்பட்டுவந்தேனென்று விசுவாசிக்கிறபடியினால் பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார்.**

**என் நாமத்தினாலே பிதாவினிடத்தில்**

**அந்த நாளிலே நீங்கள் என்னிடத்தில் ஒன்றுங் கேட்கமாட்டீர்கள். மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார் (யோவா 16:23).**

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் அவரிடத்தில் கேட்கும்போது, கேட்டவைகளெல்லாவற்றையும் பெற்றுக் கொள்வார்கள். "கேட்பது" இருவகைப்படும். அவையாவன: 1. அறியாமலிருக்கிறவர்கள், ஒரு காரியத்தைப்பற்றி அறிந்து கொள்ளவேண்டுமென்று கேட்பது. 2. தேவைகளைச் சந்திக்குமாறு பணிவோடு கேட்பது. இயேசுகிறிஸ்து இந்த வசனத்தில் இவ்விரண்டு விதமான கேட்பதைப்பற்றியும் குறிப்பிடுகிறார்.

இயேசுகிறிஸ்துவிடத்தில் சீஷருக்கு மறைவான காரியம் ஒன்றுமில்லை. அவர் தமது சீஷர்களுக்கு எல்லாவற்றையும் போதித்திருக்கிறார். "அந்த நாளிலே நீங்கள் என்னிடத்தில் ஒன்றும் கேட்கமாட்டீர்கள்" என்று இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடத்தில் கூறுகிறார். அப்போஸ்தலர்களுடைய நடபடிகள் புஸ்தகத்தில், அப்போஸ்தலர்கள் தங்களுடைய அறியாமையை நீக்கி, சத்தியத்தை அறிவிக்குமாறு இயேசுகிறிஸ்துவிடம் கேட்கவில்லை. அவர்கள் எப்போதுமே தெய்வீக வழிநடத்துதலின் கீழிருக்கிறார்கள். ஆகையினால் இயேசுகிறிஸ்துவிடம் கேட்பதற்கு அவர்களுக்கு ஒன்றுமில்லாமல் போயிற்று. நாம் ஒரு காரியத்தைப்பற்றி இயேசுகிறிஸ்துவிடம் கேட்கும்போதே, பாதை தவறி காணாமல் போய்விட்டோம் என்பதுதான் பொருள். அல்லது எந்த வழியில் போவது என்று தெரியாமல் திகைத்து நடுவழியில் நின்றுகொண்டிருப்போம் என்று பொருள். திகைப்பதைவிடவும், காணாமல்போய்விடுவதை விடவும், இயேசுகிறிஸ்துவிடம் கேட்டு அவருடைய வழியில் நடப்பது மிகவும் மேன்மையானது.

## அதிகாரம் - 16

சீஷர்கள் இயேசுகிறிஸ்துவிடம் கேட்கும்போது, அவர்கள் கேட்பது எதுவும் வீணாய்போகாது. இயேசுகிறிஸ்துவின் சீஷர்களெல்லோருமே அதிகமாய் ஜெபம்பண்ணுகிறவர்கள். தேவனுடைய ஆலோசனைகளையும், வழிநடத்துதலையும், பெலத்தையும், வெற்றியையும் அவர்கள் ஜெபத்தின் மூலமாகவே பெற்றுக் கொள்கிறார்கள்.

தம்மிடத்தில் சீஷர்கள் ஜெபம்பண்ணும்போது அவர்கள் கேட்டுக்கொள்வது கொடுக்கப்படுமென்று இயேசுகிறிஸ்து உறுதிபண்ணுகிறார். இதற்காக "மெய்யாகவே மெய்யாகவே, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்னும் வாக்கியத்தை இயேசுகிறிஸ்து இங்கு பயன்படுத்துகிறார். இயேசுகிறிஸ்துவின் கிருபையின் கரம் நம்மீது நீட்டப்பட்டிருக்கிறது. அவருடைய பொற்செங்கோல் நமக்கு நேராக நீட்டப்பட்டிருப்பதினால், நாம் அவரிடத்திலிருந்து கிருபையும் தயவும் பெற்றுக்கொள்கிறோம். "நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார்" என்று இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடத்தில் வாக்குப் பண்ணுகிறார்.

இயேசுகிறிஸ்துவின் வாக்குத்தத்தம் எல்லாமே நிச்சயமாய் நிறைவேறும். வாக்குத்தத்தத்தை உறுதிபண்ணுவதற்கு அவருடைய வார்த்தையைவிட நமக்கு வேறு எதுவும் தேவையில்லை. இயேசுகிறிஸ்து தம்முடைய வாக்குத்தத்தத்தைச் சீஷரிடத்தில் சொல்லும்போது, அதில் அவர் இரண்டு காரியங்களைத் தெளிவுபடுத்துகிறார். அவையாவன: 1. எப்படித் தேடவேண்டும். 2. எவ்வளவு விரைவாகத் தேடவேண்டும்.

நாம் ஜெபிக்கும்போது இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே பிதாவினிடத்தில் ஜெபிக்கவேண்டும். பிதாவினிடத்தில் ஜெபம்பண்ணுவது என்பது, நம்முடைய ஆவிக்குரிய தேவைகளையும், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் அவரிடத்தில் வாஞ்சையோடு கேட்பதைக் குறிப்பிடும். ஏனெனில் நம்முடைய ஆவிக்குரிய தேவைகளையும் ஆசீர்வாதங்களையும், பிதாவாகிய தேவனிடத்திலிருந்து மாத்திரமே நாம் பெற்றுக்கொள்ள முடியும். நம்முடைய தேவைகளைப் பிதாவினிடத்தில் கேட்கும்போது, அவரிடத்தில் நேரடியாகக் கேட்காமல், இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே கேட்கவேண்டும். இயேசுவின் நாமத்தினால் கேட்கும்போது நாம் பூரணமாக கிறிஸ்துவைச் சார்ந்திருக்கிறோம் என்பதையும், பிதாவின் சமுகத்தில் வருவதற்கு நமக்கு எந்தத் தகுதியுமில்லை என்பதையும் நாம் அங்கீகரிக்கிறோம்.

நாம் பிதாவினிடத்தில் இயேசுவின் நாமத்தினாலே கேட்கும்போது, நாம் கேட்டுக்கொள்வதெதுவோ அதை அவர் நமக்குத் தருவார். நாம் கேட்டுக்கொள்வது நமக்கு உடனடியாகக் கொடுக்கப்படும். ஆகையினால் நம்முடைய தேவைகளை, நம்முடைய மனதில் பூட்டி வைத்திருக்காமல், அவற்றைப் பிதாவின் சமுகத்தில், இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே கேட்கவேண்டும். அப்போது அவற்றை நாம் பெற்றுக்கொள்வோம். கர்த்தருடைய பிள்ளைகளுக்கு இது மிகப்பெரிய சிலாக்கியமாகும்.

பரிசுத்த ஆவியானவர் கர்த்தருடைய பிள்ளைகளைச் சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துகிறார். இயேசுகிறிஸ்து நமக்கு பரிசுத்த ஆவியானவரைக் கொடுப்பதாக வாக்குப்பண்ணுகிறார். நம்முடைய ஜீவியத்தில் இந்த வாக்குத்தத்தம் நிறைவேற வேண்டுமானால் நாம் அதற்காக ஜெபிக்கவேண்டும். நம்முடைய ஜெபத்தில் நாம் தொடர்ந்து தரித்திருக்கவேண்டும். சீஷர்கள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்வதற்காக இயேசுகிறிஸ்துவின் சமுகத்தில் ஜெபிக்கிறார்கள். தொடர்ந்து காத்திருந்து ஜெபிக்கிறார்கள். கானான் தேசமே நாம் ஒய்வு எடுக்கப்போகிற தேசம். அந்த தேசத்தில் மாத்திரமே கனிகள் பரிபூரணமாக இருக்கும். கானான் தேசத்திற்குப் பிரயாணம்பண்ணுகிற பரதேசிகளைப்போல நாம் இந்த உலகத்தில் ஜீவித்துக்கொண்டிருக்கிறோம். நாம் இயேசுகிறிஸ்துவிடத்தில் கேட்பதும், பெற்றுக்கொள்வதும், நம்முடைய யாத்திரையில் நமக்குக் கிடைக்கும் ஆறுதலும் சமாதானமும் ஆகும்.

**உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி.**

**இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை; கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள் (யோவா 16:24).**

## அதிகாரம் - 16

தம்மிடத்தில் கேட்குமாறு இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் சொல்லுகிறார். நம்முடைய விண்ணப்பங்களையும் வேண்டுதல்களையும் நாம் இயேசுகிறிஸ்துவின் சமுகத்தில் கொண்டுவரவேண்டும். இந்தப் பிரபஞ்சத்தின் ராஜாக்களோடும், உயர்பதவி வகிக்கிறவர்களோடும், நாம் நம்முடைய தேவைகளை விண்ணப்பம்பண்ணலாம். அதற்கு அவர்கள் அனுமதி மாத்திரமே கொடுப்பார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ தம்மிடத்தில் நாம் விண்ணப்பம்பண்ணவேண்டுமென்று நம்மை அழைக்கிறார்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களின் கடந்தகால வாழ்க்கையைத் திரும்பிப் பார்க்கிறார். இது வரைக்கும் அவர்கள் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை. இயேசுகிறிஸ்து சொல்லும் இந்த வாக்கியத்திற்கு வேதபண்டிதர்கள் இரண்டுவிதமாக வியாக்கியானம் கூறுகிறார்கள். அவையாவன: 1. சீஷர்கள் இதுவரையிலும் எப்படிக் கேட்கவேண்டுமோ அப்படி கேட்கவில்லை. 2. சீஷர்கள் எந்த நாமத்தினால் ஜெபிக்கவேண்டுமோ அந்த நாமத்தினால் ஜெபிக்கவில்லை.

சீஷர்கள் இயேசுகிறிஸ்துவின் சமுகத்தில் வந்து ஜெபம்பண்ணுகிறார்கள். தங்களுடைய வேண்டுதல்களையும், விண்ணப்பங்களையும் அவரிடத்தில் சொல்லுகிறார்கள். ஆனால் அவர்களுடைய ஜெபத்தில் குறைவுள்ளது. தாங்கள் எப்படிக் கேட்கவேண்டுமோ அப்படிக் கேட்கவில்லை. அவர்கள் இயேசுகிறிஸ்துவிடத்தில் பெரிய காரியங்களைக் கேட்டுப்பெற்றுக்கொள்ள முடியும். ஆனால் சீஷர்களோ மிகவும் சாதாரணமான உலகப்பிரகாரமான காரியங்களை மாத்திரமே அவரிடத்தில் கேட்கிறார்கள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோ தயாள குணமுள்ளவர். தம்மிடத்தில் இன்னும் அதிகமாய் கேட்குமாறு தம்முடைய சீஷரை அன்போடு அழைக்கிறார்.

அவர்கள் இதுவரைக்கும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் எதையெல்லாம் கேட்கவேண்டுமோ அதையெல்லாம் கேட்காமலேயே இருக்கிறார்கள். சீஷர்கள் இயேசு கிறிஸ்துவிடத்தில் ஜெபிக்கும்போது ஆவிக்குரிய வரங்களை அவரிடத்தில் கேட்டுப்பெற்றுக்கொள்ள வேண்டும். அவர்கள் மாத்திரமல்ல, நாமும் ஆவியின் வரங்களைக் கேட்டுப்பெற்றுக் கொள்ளவேண்டும்.

சீஷர்கள் பல சமயங்களில் ஜெபம்பண்ணியிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் வெளிப்படையாக ஒருபோதும் "இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால்" ஜெபிக்கவில்லை. ஆகையினால் இயேசுகிறிஸ்து அவர்களிடம் "நீங்கள் என்நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை என்று கூறுகிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய ஜீவனை இன்னும் சிலுவையில் ஒப்புக்கொடுக்கவில்லை. அவர் தம்முடைய பிதாவின் கரங்களில், தம்மை ஜீவபலியாக இன்னும் அர்ப்பணிக்கவில்லை.

இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையில் தம்முடைய இரத்தத்தைச் சிந்தி, நம்மை மீட்பதற்காகத் தம்முடைய சுயஇரத்தத்தையே மீட்பின் கிரயமாகச் செலுத்தியிருக்கிறார். இயேசுகிறிஸ்து சிலுவையில் நமக்காக மரித்திருப்பதினால், நாம் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் எதைக் கேட்கிறோமோ, அதை, நம்முடைய சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வோம். இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் ஜெபிக்கும்போது நம்முடைய ஜெபம் பிதாவின் சமுகத்தில் அங்கீகரிக்கப்படும். இயேசுகிறிஸ்து பிதாவின் வலதுபாரிசத்தில் அமர்ந்திருந்து, நமக்காகப் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் பிரசன்னம் பரலோகத்திலிருப்பதினால் நாம் அங்கு அந்நியராகவோ அல்லது ஆதரவற்றவராகவோ இருக்கமாட்டோம். இயேசுகிறிஸ்துவின் மூலமாகப் பரலோகத்தில் நமக்கு வரவேற்பும் அங்கீகாரிப்பும் கிடைக்கும்.

இயேசுகிறிஸ்து சீஷர்களைவிட்டுப் போனபின்பு, அவர்கள் தம்முடைய நாமத்தினாலே பிதாவினிடத்தில் தொடர்ந்து ஜெபிக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறார். அவர்கள் கேட்கும்போது பெற்றுக் கொள்வார்கள். "கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்" என்று இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷருக்கு வாக்குப்பண்ணுகிறார். சீஷர்களுக்கு என்னனென்ன தேவைகள் இருக்கிறதோ அவையெல்லாவற்றையும் அவர்கள் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்கலாம். அப்படிக் கேட்கும்போது அது அவர்களுக்குக் கொடுக்கப்படும் என்று இயேசுகிறிஸ்து வாக்குப்பண்ணுகிறார்.

## அதிகாரம் - 16

கிருபையுள்ள தேவனிடத்தில் நம்முடைய வேண்டுதல்களையும் விண்ணப்பங்களையும் ஏறெடுக்கும்போது, தேவன் தம்முடைய கிருபையினால், நாம் அவரிடத்தில் கேட்டதை அவர் நமக்குத் தருகிறார். இதனால் நம்முடைய சந்தோஷம் நிறைவாயிருக்கும். விசுவாசமுள்ள ஜெபம் மிகுந்த வல்லமையுள்ளது. இந்த ஜெபம்தான் நம்முடைய விசுவாசத்தின் சந்தோஷத்தை நமக்கு நிறைவாய்த் தருகிறது. நாம் எப்போதும் சந்தோஷமாயிருக்க வேண்டுமென்றால், நாம் தொடர்ந்து இடைவிடாமல் ஜெபிக்கிறவர்களாக இருக்கவேண்டும்.

நாம் இயேசுகிறிஸ்துவிடத்தில் ஜெபிக்கும்போது, நம்முடைய நோக்கம் உன்னதமானதாக இருக்கவேண்டும். சமாதானத்திற்காக மாத்திரம் ஜெபிக்காமல், சந்தோஷத்திற்காகவும் ஜெபிக்கவேண்டும். நாம் ஜெபிக்கும்போது நமக்கு சமாதானமும் கிடைக்கும். நம்முடைய சந்தோஷமும் நிறைவாயிருக்கும்.

**உவமைகளாய் உங்களுடனே பேசுகிறேன்**

**இவைகளை நான் உவமைகளாய் உங்களுடனே பேசுகிறேன்; காலம் வரும், அப்பொழுது நான் உவமைகளாய் உங்களுடனே பேசாமல், பிதாவைக்குறித்து வெளிப்படையாக உங்களுக்கு அறிவிப்பேன் (யோவா 16:25).**

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடத்தில் உவமைகளாய்ப் பேசுகிறார். அவர்களுக்குச் சத்தியத்தை உபதேசம்பண்ணுகிறார். தேவனைப்பற்றிய அறிவுக்கு நேராக அவர்களை வழிநடத்துகிறார். பிதாவைக்குறித்து வெளிப்படையாக அவர்களுக்கு அறிவிப்பதே இயேசுகிறிஸ்துவின் சித்தம். ஆகையினால் இயேசு அவர்களிடத்தில் இதைப்பற்றிச் சொல்லும்போது "இவைகளை நான் உவமைகளாய் உங்களுடனே பேசுகிறேன்; காலம் வரும், அப்பொழுது நான் உவமைகளாய் உங்களுடனே பேசாமல், பிதாவைக்குறித்து வெளிப்படையாக உங்களுக்கு அறிவிப்பேன்'' என்று சொல்லுகிறார்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு மிகப்பெரிய சிலாக்கியத்தைக் கொடுக்கிறார். பிதாவைக்குறித்து இயேசு வெளிப்படையாகச் சீஷருக்கு அறிவிப்பது, அவர்களுக்குக் கொடுக்கப்படும் மிகப்பெரிய சிலாக்கியம். பிதாவை அறிந்திருப்பதே பரலோகத்தின் சந்தோஷமாகும். இயேசுகிறிஸ்துவின் மூலமாக அவருடைய சீஷர்களுக்குப் பிதாவைக்குறித்து வெளிப்படையாக அறிந்துகொள்ளும் சிலாக்கியம் கிடைத்திருக்கிறது. அவர்கள் நித்தியகாலமாகப் பிதாவைக் காண்பார்கள். அந்தச் சிலாக்கியம் இப்போதே சீஷருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இயேசுகிறிஸ்து தேவனுடைய சத்தியங்களை, தம்முடைய சீஷரிடத்தில் இதுவரைக்கும் உவமைகளாகவே பேசியிருக்கிறார். தம்முடைய உவமைகளின் கருத்துக்களை இயேசு தம்முடைய சீஷரோடு தனித்திருக்கும்போது, அவர்களுக்கு விளக்கிக் கூறுவது வழக்கம். ஆனால் சீஷர்களோ தேவனுடைய இரகசியத்தை உடனடியாக அறிந்துகொள்ள முடியாத மந்தபுத்தியுள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆகையினால் இயேசுகிறிஸ்து அவர்களோடு உவமைகளாய் பேசவேண்டியதாயிற்று. முத்திரையிடப்பட்ட ஒரு புஸ்தகத்தைப்பற்றிப் பேசுவதுபோல, இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் உவமைகள் மூலமாகத் தேவனுடைய சத்தியங்களைப் பேசுகிறார்.

காலம் வரும், அப்பொழுது இயேசுகிறிஸ்து அவர்களுடனே உவமைகளாய் பேசாமல், வெளிப்படையாகப் பேசுவார். இயேசுகிறிஸ்து வெளிப்படையாக அறிவிப்பது எல்லாமே பிதாவைக்குறித்த சத்தியமாகவே இருக்கும். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடத்தில் ஏற்கெனவே பிதாவைக்குறித்து உபதேசம் பண்ணியிருக்கிறார். ஆனால் அந்தச் சத்தியத்தை சீஷர்கள் தெளிவாகப் புரிந்துகொள்ளவில்லை. அவர்களுடைய வேதஅறிவு இருளடைந்ததுபோல இருக்கிறது. இனிமேல் இயேசு அவர்களுக்குப் பிதாவைக்குறித்து வெளிப்படையாக அறிவிக்கும்போது, தேவனுடைய இரகசியங்கள் அவர்களுக்கு வெளிச்சத்தில் விவரிக்கப்படும்.

## அதிகாரம் - 16

இயேசுகிறிஸ்து பிதாவைக்குறித்து தம்முடைய சீஷரிடத்தில் இனிமேலும் மறைபொருளாகப் பேசமாட்டார். வெளிப்படையாகவே அவர்களுக்கு அறிவிப்பார். பரிசுத்த ஆவியானவர் சீஷர்கள்மீது ஊற்றப்பட்டபோது, தேவனுடைய காரியங்களைக் குறித்து அவர்கள் விசேஷித்த ஞானத்தைப் பெற்றுக்கொண்டார்கள். அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்ட பின்பு இதுவரையிலும் இல்லாத அளவுக்கு, தேவனுடைய வார்த்தையிலும், சித்தத்திலும், இரகசியத்திலும் தெளிவடைந்திருந்தார்கள்.

நாம் இந்தப் பூமியில் இருக்கும்வரையிலும் பிதாவைப்பற்றிய காரியங்களில் ஒரு சில பகுதிகள் நமக்கு இன்னும் மறைபொருளாகவே இருக்கும். நாம் பரலோகத்திற்குப் போகும்போது பிதாவை முகமுகமாகத் தரிசிப்போம். அப்பொழுது இயேசுகிறிஸ்து இங்கு கூறும் வாக்குத்தத்தம் நமக்குப் பூரணமாய் நிறைவேறும். நாம் இந்தப் பூமியில் இருக்கும்போது, இயேசுகிறிஸ்துவிடம் பிதாவைக்குறித்து பல கேள்விகளைக் கேட்போம். நாம் பரலோகத்தில் அவரை முகமுகமாகத் தரிசிக்கும்போது, பிதாவைக்குறித்துக் கேட்பதற்கு நம்மிடத்தில் ஒன்றுமேயிராது. அந்நாளில் நாம் இயேசுகிறிஸ்துவிடத்தில் ஒன்றும் கேட்கமாட்டோம்.

### பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார்

**அந்த நாளில் நீங்கள் என் நாமத்தினாலே வேண்டிக்கொள்வீர்கள். உங்களுக்காகப் பிதாவை நான் கேட்டுக்கொள்வேனென்று உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. நீங்கள் என்னைச் சிநேகித்து, நான் தேவனிடத்திலிருந்து புறப்பட்டு வந்தேனென்று விசுவாசிக்கிறபடியினால் பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார் (யோவா 16:26,27).**

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடத்தில் பேசும்போது, பிதா தாமே அவர்களைச் சிநேகிப்பதாகக் கூறுகிறார். அவர்கள் இயேசுகிறிஸ்துவைச் சிநேகிப்பதாலும், அவர் தேவனிடத்திலிருந்து புறப்பட்டு வந்தவர் என்று விசுவாசிப்பதினாலும் பிதா தாமே இயேசுகிறிஸ்துவின் சீஷர்களைச் சிநேகிக்கிறார். இயேசுகிறிஸ்து நமக்காக செய்யும் ஊழியத்தைப்பற்றி அப்போஸ்தலர் யோவான் நிருபத்தில் எழுதும்போது "நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்" (1யோவா 2:1) என்று எழுதுகிறார்.

இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறார். அவர் தம்முடைய சீஷரிடத்தில் இதைப்பற்றிச் சொல்லும்போது "உங்களுக்காக பிதாவை நான் கேட்டுக்கொள்வேன் என்று உங்களுக்குச் சொல்லவேண்டியதில்லை" என்று கூறுகிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு இதுவரையிலும் கொடுத்திருக்கிற சிலாக்கியமே போதுமானது. பரிசுத்த ஆவியானவர் மூலமாகக் கிடைக்கும் உதவியைத் தவிர இயேசுகிறிஸ்துவின் சீஷர்களுக்கு வேறு உதவி எதுவும் தேவைப்படாது. இயேசுகிறிஸ்து தம்முடைய பிதாவினிடத்தில் பரிந்து பேசி, அவர்களுக்காகப் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொடுத்திருக்கிறார். இயேசுகிறிஸ்து நமக்காக என்ன செய்வதாகச் சொல்லுகிறாரோ அதைவிட அதிகமாகவே அவர் நமக்கு நன்மை செய்கிறார்.

பிதாவாகிய தேவன் இயேசுகிறிஸ்துவின் சிநேகிதர்களைச் சிநேகிக்கிறார். இவர்கள் தேவனுக்குப் பிரியமானவர்களாக இருக்கிறார்கள். இந்தச் சத்தியத்தை இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடத்தில் சொல்லும்போது "பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார்" என்று உறுதியோடு வலியுறுத்துகிறார். பிதாவினிடத்தில் நமக்காகப் பரிந்து பேசுவதற்குப் பரிசுத்த ஆவியானவர் தேவைப்படுகிறார். அப்படிப்பட்ட சூழ்நிலையில், பிதாவாகிய தேவன் தாமே சீஷர்களைச் சிநேகிப்பது அவர்களுக்குக் கிடைத்திருக்கும் மிகப்பெரிய சிலாக்கியமாகும்.

பிதாவாகிய தேவன் இயேசுகிறிஸ்துவின் சீஷர்களைச் சிநேகிப்பதற்கு ஒரு காரணமுள்ளது. அவர்கள் இயேசுகிறிஸ்துவைச் சிநேகிக்கிறார்கள். இயேசுகிறிஸ்து தேவனிடத்திலிருந்து புறப்பட்டு வந்தவர் என்று விசுவாசிக்கிறார்கள். அவர்கள் மெய்யாகவே இயேசு கிறிஸ்துவின் சீஷர்களாகயிருக்கிறார்கள். இதுவே சீஷர்களின் சுபாவம். இயேசுகிறிஸ்து தேவனிடத்திலிருந்து புறப்பட்டு வந்திருக்கிறவர் என்று விசுவாசித்து, சீஷர்கள் அவரைச் சிநேகிக்கிறார்கள். நாம் இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைக்கும்போது, நாம் அவரிடத்தில் அன்புகூர்ந்து கிரியை நடப்பிக்கிறோம். நாம் இயேசுகிறிஸ்துவை நம்முடைய இரட்சகர் என்று விசுவாசிக்கும்போது, "அவர் நம்மீது கிருபையாகவும் இரக்கமாகவும் இருக்கிறார்" என்று விசுவாசித்து அவரிடத்தில் அன்புகூருவோம்.

## அதிகாரம் - 16

தம்மிடத்தில் சீஷர்கள் சிநேகமாகயிருக்கிறார்கள் என்பதை இயேசுகிறிஸ்து மிகுந்த சந்தோஷத்தோடு சொல்லுகிறார். இதனால் பிதாவின் சமுகத்திலும் சீஷர்களுக்குக் கிருபை கிடைத்திருக்கிறது. பிதா தாமே அவர்களைச் சிநேகிக்கிறார். இயேசுகிறிஸ்துவுக்கு மெய்யான சீஷர்களாகயிருக்கும்போது, அவர்களுக்கு மெய்யான ஆசீர்வாதங்களும், மெய்யான சிலாக்கியங்களும் கிடைக்கும். சீஷர்கள் இயேசுகிறிஸ்துவைச் சிநேகிப்பதினால், பிதாவானவர் அவர்களைச் சிநேகிக்கிறார்.

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் அவருடைய நாமத்தினால் ஜெபம்பண்ணுவார்கள். ஜெபம்பண்ணும்போது தங்களுடைய ஜெபத்திற்குப் பதில் கிடைக்குமோ, கிடைக்காதோ என்னும் சந்தேகம் அவர்களுக்குத் தேவையில்லை. தங்கள்மீது சிநேகமாகயிருக்கும் தேவனிடத்தில்தான் சீஷர்கள் ஜெபம்பண்ணுகிறார்கள். ஆகையினால் தேவனுடைய கிருபாசனத்தண்டைக்கு வரும்போது, சீஷர்கள் நிச்சயத்தோடும் தைரியத்தோடும் வரலாம். தேவன் நம்மீது சிநேகமாயிருப்பதினால் நம்முடைய உள்ளத்தில் தேவையில்லாத பயம் இருக்கவேண்டியதில்லை. தேவனிடத்தில் பயபக்தி இருக்கவேண்டும். தேவனுடைய சிநேகத்தை நாம் பெற்றுக்கொண்டு, அவருக்குப் பிரியமான பிள்ளைகளாக ஜீவிக்கவேண்டும்.

நாம் தேவனிடத்தில் ஜெபிக்கும்போது, இயேசுகிறிஸ்து நமக்காகப் பரிந்து பேசுவதினால், நம்முடைய ஜெபத்திற்குப் பதில் கிடைக்கிறது. இயேசுகிறிஸ்து நம்மை சிநேகிப்பதினால் நமக்காகப் பரிந்து பேசுகிறார். இப்போது "பிதாவானவரும் நம்மை சிநேகிக்கிறார்" என்னும் சத்தியத்தை இயேசுகிறிஸ்து நமக்கு வெளிப்படுத்துகிறார். இதன் மூலமாக நாம் தேவனிடத்தில் ஜெபிக்கும்போது நமக்கு இரண்டு சிலாக்கியங்கள் கிடைத்திருக்கிறது. அவையாவன: 1. இயேசுகிறிஸ்து நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறார். 2. பிதாவானவர் தாமே நம்மை சிநேகிக்கிறார்.

நாம் இயேசுவின் நாமத்தில் பிதாவினிடத்தில் ஜெபிக்கும்போது, பிதாவானவரும் நம்மீது அன்பாயிருக்கிறார். அதே சமயத்தில் இயேசுகிறிஸ்துவும் பிதாவினிடத்தில் நமக்காகப் பரிந்து பேசுகிறார். நமக்கு இவ்விரண்டு சிலாக்கியமும் இருப்பதினால், நாம் இயேசுவின் நாமத்தினால் பிதாவினிடத்தில் வேண்டிக்கொள்வதெதுவோ அது நமக்குக் கொடுக்கப்படும் என்னும் நிச்சயம் நம்மிடத்தில் உள்ளது. நாம் ஜெபிக்கும்போது நம்முடைய உள்ளத்தில் தேவனுடைய இந்த நல்ல சுபாவத்தைப்பற்றிய சிந்தனை நமக்குள் நிரம்பியிருக்கவேண்டும். இந்தச் சிந்தனையை நமக்குள் உறுதிபண்ணிக் கொள்ளவேண்டும். விசுவாசிகள் இயேசுகிறிஸ்துவினிடத்தில் அன்பாயிருக்கும் போது, பிதாவானவரும் நம்மீது அன்பாயிருக்கிறார் என்னும் சத்தியத்தை நாம் அறிந்திருக்கவேண்டும்.

### மறுபடியும் பிதாவினிடத்திற்குப் போகிறேன்
### யோவா 16 : 28-33

**யோவா 16:28. நான் பிதாவினிடத்திலிருந்து புறப்பட்டு உலகத்திலே வந்தேன்; மறுபடியும் உலகத்தைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போகிறேன் என்றார்.**

**யோவா 16:29. அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: இதோ, இப்பொழுது நீர் உவமையாய்ப் பேசாமல், வெளிப்படையாய்ப் பேசுகிறீர்.**

**யோவா 16:30. நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர் என்றும், ஒருவன் உம்மை வினாவவேண்டுவதில்லையென்றும், இப்பொழுது அறிந்திருக்கிறோம்; இதினாலே நீர் தேவனிடத்திலிருந்து வந்தீரென்று விசுவாசிக்கிறோம் என்றார்கள்.**

**யோவா 16:31. இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: இப்பொழுது நீங்கள் விசுவாசிக்கிறீர்கள்.**

**யோவா 16:32. இதோ, நீங்கள் சிதறுண்டு, அவனவன் தன்தன் இடத்துக்குப் போய், என்னைத் தனியே விட்டுவிடுங்காலம் வரும்; அது இப்பொழுது வந்திருக்கிறது; ஆனாலும் நான் தனித்திரேன், பிதா என்னுடனேகூட இருக்கிறார்.**

## அதிகாரம் - 16

**யோவா 16:33. என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும்பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார்.**

**நான் பிதாவினிடத்திலிருந்து புறப்பட்டு**

**நான் பிதாவினிடத்திலிருந்து புறப்பட்டு உலகத்திலே வந்தேன்; மறுபடியும் உலகத்தைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போகிறேன் என்றார் (யோவா 16:28).**

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரைவிட்டுப் போகும்போது அவர்களிடத்தில் இரண்டு ஆறுதலான காரியங்களைச் சொல்லுகிறார். அவையாவன: 1. இயேசுகிறிஸ்து மறுபடியும் உலகத்தைவிட்டு பிதாவினிடத்திற்குப் போகிறார். 2. இயேசுகிறிஸ்துவினிடத்தில் சீஷருக்குச் சமாதானம் உண்டாயிருக்கும்.

இயேசுகிறிஸ்துவின் ஊழியம் பிதாவினால் நியமிக்கப்பட்டிருக்கிறது. அவர் பிதாவினிடத்திலிருந்து புறப்பட்டு இந்த உலகத்திற்கு வந்திருக்கிறார். இப்போது மறுபடியும் உலகத்தைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போகிறார். இயேசுகிறிஸ்துவின் உபதேசத்திற்கு இந்த வாக்கியம் ஒரு முடிவுரையைப்போல் அமைந்திருக்கிறது.

இயேசுகிறிஸ்து தம்முடைய ஊழியத்தை இங்கு சுருக்கமாகக் கூறுகிறார். கிறிஸ்தவ உபதேசத்தைச் சுருக்கமாகச் சொல்லும்போது, புதிய விசுவாசிகளும் அதைப் புரிந்துகொள்வதற்கு எளிதாக இருக்கும். புதிய விசுவாசிகளிடத்தில் ஆழமான சத்தியங்களைச் சொன்னாலோ, அல்லது சாதாரண சத்தியங்களை மிகவும் விரிவாகச் சொன்னாலோ அவர்களால் அதை விளங்கிக்கொள்ளமுடியாது. அவர்கள் பாலை உண்ணத்தக்க குழந்தைகளைப்போல இருக்கிறார்கள். தேவனுடைய சத்தியத்தைச் சுருக்கமாகவும் நாம் சொல்லவேண்டும். ஏற்றவேளையில் அதை நாம் விரிவாகச் சொல்லலாம்.

கர்த்தருடைய சத்தியத்தை விவரிக்கும்போது, ஒரு சத்தியத்தை மற்றொரு சத்தியத்தோடு ஒப்பிட்டுச் சொல்லவேண்டும். தேவனுடைய சத்தியங்கள் அனைத்திலும் ஒரு ஒற்றுமையுள்ளது. ஒவ்வொரு சத்தியமும் ஒன்றுக்கொன்று இசைவாயிருக்கிறது. தேவனுடைய பொதுவான சத்தியத்தை விவரிப்பதற்கு, இவை ஒன்றுக்கொன்று உதவியாயிருக்கிறது. இயேசுகிறிஸ்து பிதாவினிடத்திலிருந்துப் புறப்பட்டு இந்த உலகத்திற்கு வந்ததும் ஒரு சத்தியம் தான். அதுபோலவே அவர் மறுபடியும் உலகத்தைவிட்டு பிதாவினிடத்திற்குப் போவதும் ஒரு சத்தியம்தான். சீஷர்கள் இவ்விரண்டையும் விசுவாசிக்கவேண்டும். இயேசுகிறிஸ்து தேவனிடத்திலிருந்து வந்தவர் என்பதையும் விசுவாசிக்கவேண்டும். அவர் மறுபடியும் தேவனிடத்திற்குப் போகிறார் என்பதையும் விசுவாசிக்கவேண்டும். தேவனிடத்திலிருந்து வந்திருக்கும் இயேசுகிறிஸ்து, மறுபடியும் தேவனிடத்திற்குப் போவது அவசியமாயிற்று.

இயேசுகிறிஸ்து தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறவர் என்னும் சத்தியம் நமக்குத் தெரியவில்லையென்றால், அவர் தேவனிடத்திற்குப் போகிறார் என்னும் சத்தியத்தை நம்மால் சரியாகப் புரிந்துகொள்ள முடியாது. இயேசுகிறிஸ்துவின் சத்தியத்தை நாம் தியானம்பண்ணும்போது, ஒவ்வொரு சத்தியமாகத் தியானம்பண்ணவேண்டும். எல்லா சத்தியங்களையும் பூரணமாகத் தியானம்பண்ணவேண்டும். ஒரு சத்தியத்தைப் புரிந்துகொள்வதற்கு மற்றொரு சத்தியம் உதவிபுரியும். இயேசுகிறிஸ்துவின் சகல சத்தியங்களையும் நம்புவதற்கு ஒவ்வொரு சத்தியமும் நமக்கு உதவியாயிருக்கும். ஒரு சத்தியம் புரிந்துகொள்வதற்கு கடினமாயிருக்கும்போது, மற்றொரு சத்தியம் அதை நமக்கு எளிதாக்கும்.

இயேசுகிறிஸ்து எங்கேயிருந்து வந்தார், அவர் எங்கே போகிறார் என்னும் கேள்விக்கு, அவர் தாமே சீஷருக்குப் பதில்கொடுக்கிறார். இயேசுகிறிஸ்து பிதாவினிடத்திலிருந்து புறப்பட்டு வந்திருக்கிறார். இந்த உலகத்திலே வந்திருக்கிறார். இந்த உலகத்திலுள்ள மனுக்குலத்தாருக்காக வந்திருக்கிறார். இந்த உலகத்தில் இயேசுகிறிஸ்துவுக்கு ஒரு ஊழியம் நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஊழியத்தை நிறைவேற்றுவதற்காக இயேசுகிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்திருக்கிறார்.

## அதிகாரம் - 16

இயேசுகிறிஸ்து பரலோகத்திற்குரிய வராகயிருந்தாலும், நம்மீதுள்ள அன்பினால், நம்மோடுகூட வாசம்பண்ணவேண்டும் என்னும் தீர்மானத்தோடு, அவர் இந்த உலகத்திலே வந்திருக்கிறார். தமக்கு நியமிக்கப்பட்டிருக்கும் ஊழியத்தை நிறைவேற்றி முடித்த பின்பு, இயேசுகிறிஸ்து இப்போது மறுபடியும் இந்த உலகத்தைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போகிறார். அவர் தம்முடைய சரீரத்தில் இந்த உலகத்தைவிட்டுப்போனாலும் அவருடைய ஆவிக்குரிய பிரசன்னம் விசுவாசிகளாகிய நம் மத்தியிலே இன்றும் இருக்கிறது. அவருடைய பிரசன்னம் அவருடைய சபையின் நடுவிலிருக்கிறது. முடிவுபரியந்தம் அவருடைய ஆவிக்குரிய பிரசன்னம் நம்மோடும், இந்த உலகத்தோடும் இருக்கும்.

### வெளிப்படையாய்ப் பேசுகிறீர்

**அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: இதோ, இப்பொழுது நீர் உவமையாய்ப் பேசாமல், வெளிப்படையாய்ப் பேசுகிறீர். நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர் என்றும், ஒருவன் உம்மை வினாவவேண்டுவதில்லையென்றும், இப்பொழுது அறிந்திருக்கிறோம்; இதினாலே நீர் தேவனிடத்திலிருந்து வந்தீரென்று விசுவாசிக்கிறோம் என்றார்கள் (யோவா 16:29,30).**

இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தில் சீஷர்கள் திருப்தியோடிருக்கிறார்கள். அவருடைய வார்த்தையைத் தெளிவாகப் புரிந்துகொள்கிறார்கள். "இதோ இப்பொழுது நீர் வெளிப்படையாய் பேசுகிறீர்" என்று அவரிடத்தில் கூறுகிறார்கள். தெய்வீகச் சத்தியங்களை வெளிப்படையாகப் பேசவேண்டும். அதைக் கேட்பவர்களுக்குப் புரியும் வண்ணமாக எளிமையாகப் பேசவேண்டும். அப்போதுதான் சத்தியத்தைக் கேட்கிறவர்களுக்கு நன்மை உண்டாகும். நாம் பேசும்போது கேட்கிறவர்களுக்குப் புரியவில்லையென்றால் அவர்களுக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகாது. இயேசுகிறிஸ்து நம்முடைய ஆத்துமாக்களோடு வெளிப்படையாகப் பேசப் பிரியப்படுகிறார். ஆகையினால் நாம் கர்த்தரிடத்திலும் அவருடைய வார்த்தையிலும் சந்தோஷப்பட்டுக் களிகூரவேண்டும்.

இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்ட சீஷர்கள் அவரிடத்தில் "இப்பொழுது அறிந்திருக்கிறோம்" என்று கூறுகிறார்கள். இயேசுகிறிஸ்து தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறாரென்பதை சீஷர்கள் இப்பொழுது அறிந்திருக்கிறார்கள். இந்தச் சத்தியத்தை சற்று நேரத்திற்கு முன்பு, இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடத்தில் சொல்லும்போது "நான் தேவனிடத்திலிருந்து புறப்பட்டு வந்தேன்" (யோவா 16:27) என்று சொன்னார். சீஷர்களும் அதை விசுவாசித்தார்கள். இப்பொழுது சீஷர்கள் தங்களுடைய விசுவாசத்தை உறுதிபண்ணும்விதமாக "விசுவாசிக்கிறோம்" என்று அறிக்கை பண்ணுகிறார்கள்.

இயேசுகிறிஸ்து சர்வஞானமுள்ளவர். சீஷர்கள் இந்தச் சத்தியத்தைத் தியானம்பண்ணுவதினால் அவர்களுடைய ஆத்துமாவுக்குள் விசுவாசம் உண்டாயிற்று. இயேசுகிறிஸ்து அவர்களுக்கு உபதேசம் பண்ணுகிறார். அவர் தேவனிடத்திலிருந்து வந்திருக்கிற போதகரென்பதை அவருடைய சர்வஞானம் நிரூபிக்கிறது. அவர் தீர்க்கதரிசியைவிட மேலானவர். எல்லாக் காரியங்களையும் அறிந்திருக்கிறவர். இயேசுகிறிஸ்துவைப்பற்றி நன்றாக அறிந்திருக்கிறவர்கள், தங்களுடைய அனுபவங்களின் மூலமாகவே அவரை அதிகமாய் அறிந்துகொள்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் வல்லமை தங்களுடைய ஜீவியத்தில் கிரியை செய்வதினால், அவருடைய வல்லமையைப்பற்றி அவர்களால் பேசமுடிகிறது. இயேசுகிறிஸ்து அவர்களிடத்தில் அன்பாயிருப்பதினால் அவருடைய அன்பைப்பற்றி சீஷர்களால் பேசமுடிகிறது. சீஷர்கள் இயேசுகிறிஸ்துவிடத்தில் விசுவாசம் வைத்திருக்கிறார்கள். அந்த விசுவாசம் அவர்களிடத்தில் உறுதிபண்ணப்படுகிறது. ஆகையினால் "நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர் என்றும், ஒருவன் உம்மை வினாவவேண்டுவதில்லை" என்றும் சீஷர்கள் இயேசுவிடம் சொல்லுகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் உபதேசம் எப்போதுமே தெளிவாகவும் முழுமையாகவும் இருக்கும். நமக்குச் சந்தேகம் உண்டாகாதவாறு எல்லா சத்தியங்களையும் இயேசுகிறிஸ்து நமக்குத் தெளிவுபடுத்துகிறார். நமக்கு ஆலோசனைகளையும் கட்டளைகளையும் கூறுகிறார். சீஷர்களின் கேள்விகளுக்கு இயேசுகிறிஸ்து பதில் சொல்லுகிறார். பல சமயங்களில் சீஷர்களுடைய இருதயத்தின் நினைவுகளையும் அறிந்து, அவர்களுக்குப் பதில் சொல்லுகிறார். மாணவர்களுடைய கேள்விகளுக்குப் பதில் சொல்லும் ஆசிரியரை நாம் நல்ல ஆசிரியர் என்று கூறுவோம். ஆனால் இயேசுகிறிஸ்துவோ நம்முடைய இருதயத்தின் நினைவுகளுக்கும் பதில் சொல்லுகிற பிரதான ஆசிரியராகயிருக்கிறார்.

## அதிகாரம் - 16

**பிதா என்னுடனேகூட இருக்கிறார்**

**இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: இப்பொழுது நீங்கள் விசுவாசிக்கிறீர்கள். இதோ, நீங்கள் சிதறுண்டு, அவனவன் தன்தன் இடத்துக்குப் போய், என்னைத் தனியே விட்டுவிடுங்காலம் வரும்; அது இப்பொழுது வந்திருக்கிறது; ஆனாலும் நான் தனித்திரேன், பிதா என்னுடனேகூட இருக்கிறார் (யோவா 16:31,32).**

சீஷர்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதாகக் கூறுகிறார்கள். அவரை அறிந்திருப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ அவர்களை மென்மையான வார்த்தைகளினால் கடிந்துகொள்கிறார். "இப்பொழுது நீங்கள் விசுவாசிக்கிறீர்கள்'' என்று இயேசுகிறிஸ்து கூறும் வாக்கியத்திற்கு "இப்பொழுது நீங்கள் விசுவாசிக்கிறீர்களா" என்று, இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடத்தில் கேட்பதாக, வேதபண்டிதர்கள் விளக்கம் கொடுக்கிறார்கள். சீஷர்களுக்கு அவர்களுடைய பலவீனம் தெரியவில்லை. இன்னும் கொஞ்சநேரத்தில் அவர்கள் சிதறுண்டு, அவனவன் தன் தன் இடத்திற்குப்போய், இயேசுகிறிஸ்துவைத் தனியே விட்டுவிடுவார்கள்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களின் வார்த்தைகளையும் அறிந்திருக்கிறார். அவர்களுடைய இருதயத்தின் எண்ணத்தையும் அறிந்திருக்கிறார். ஆகையினால்தான் இயேசு அவர்களிடம் "இப்பொழுது நீங்கள் விசுவாசிக்கிறீர்களா" என்று கேட்கிறார். ஒருவேளை சீஷர்கள் இயேசுகிறிஸ்துவை இப்போது விசுவாசிக்கலாம். தங்களுடைய விசுவாசத்தையும் சீஷர்கள் வெளிப்படையாக அறிவிக்கிறார்கள். ஆனாலும் காலம் வரும்போது, இவர்கள் சிதறுண்டு, அவனவன் தன் தன் இடத்திற்குப்போய், இயேசுகிறிஸ்துவைத் தனியே விட்டுவிடுவார்கள். இயேசுகிறிஸ்து இதையும் அறிந்திருக்கிறார்.

விசுவாசிகளுக்குப் பாடுகளும் சோதனைகளும் வரலாம். அப்போதும் நாம் விசுவாசத்தில் நிலைத்திருக்கவேண்டும். சந்தோஷமாக இருக்கும்போது கர்த்தரைத் துதித்துவிட்டு, கஷ்டம் வரும்போது கர்த்தரை மறந்துவிடக்கூடாது. நம்முடைய விசுவாசம் இயேசுகிறிஸ்துவில் நிலைத்திருக்கவேண்டும். சீஷர்கள் இப்போது இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதாக அறிக்கை செய்கிறார்கள். இவர்களுடைய விசுவாசம் நிலைத்திருக்கவேண்டும். தங்களுடைய விசுவாசத்தைச் சீஷர்கள் இப்போது அறிக்கை செய்தாலும், காலம் வரும் போது, இவர்கள் தம்மைத் தனியே விட்டு விட்டுப் போய்விடுவார்களென்று இயேசுகிறிஸ்து இவர்களைப்பற்றி அறிக்கை செய்கிறார்.

தம்முடைய சீஷர்களின் வீழ்ச்சியை இயேசுகிறிஸ்து இங்கு முன்னறிவிக்கிறார். இன்னும் சிறிதுநேரத்தில் அவர்கள் இயேசுகிறிஸ்துவைத் தனியே விட்டுவிட்டுப் போய்விடுவார்கள். இயேசுகிறிஸ்து முன்னறிவித்த சம்பவம் அன்று இராத்திரியிலேயே நிறைவேறிற்று. அவர்கள் இயேசுகிறிஸ்துவைத் தனியே விட்டுவிட்டு சிதறிப்போனார்கள். தங்களுக்கு எங்கே பாதுகாப்பு கிடைக்கும் என்று தேடி ஓடினார்கள். விசுவாசிகளாகிய நமக்கோ இயேசுகிறிஸ்துவோடு கூடயிருப்பதுதான் பாதுகாப்பு.

சீஷர்கள் இயேசுகிறிஸ்துவைத் தனியே விட்டுவிட்டு ஓடிவிடுவார்கள். அவர்கள் இயேசுகிறிஸ்துவோடு ஊழியம் செய்ய விரும்பினார்கள். அற்புதங்களையும் அடையாளங்களையும் சந்தோஷமாக அனுபவித்தார்கள். ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டார்கள். இயேசுகிறிஸ்துவைப் பற்றி சாட்சியாக அறிவித்தார்கள். அவரிடத்தில் விசுவாசம் வைத்திருப்பதாக அறிக்கைபண்ணினார்கள். ஆனால் அவருடைய கட்டுக்களைக் குறித்து சீஷர்கள் வெட்கப்படுகிறார்கள். அவருடைய பாடுகளில் பங்குபெறுவதற்குப் பயப்படுகிறார்கள். இயேசுகிறிஸ்துவோடு கூட இருந்தால் தங்களுக்கு ஆபத்து வருமென்று நினைத்து, அவரைத் தனியே விட்டுவிட்டு, அவனவன் தன் தன் இடத்திற்கு ஓடிப்போகிறார்கள்.

## அதிகாரம் - 16

கர்த்தருடைய பிள்ளைகள் சூழ்நிலைகள் நன்றாகயிருக்கும் போது ஐக்கியமாகயிருப்பார்கள். சத்துரு இந்த ஐக்கியத்தைத் தாக்கும்போது, சிநேகிதர்கள் பிரிந்துபோய்விடுவார்கள். தங்களுடைய பாதுகாப்பும், தங்களுடைய நலனும் முக்கியமென்று நினைத்து, சகவிசுவாசிகளுக்கு உதவிசெய்வதற்குப் பதிலாக, தங்களைக் காத்துக்கொள்ளவே விரும்புகிறார்கள். ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து உதவிசெய்வதற்குப் பதிலாக, தங்களுடைய சுயபாடுகளை மாத்திரம் பார்த்து, சுயநலமாக இருக்கிறார்கள். நமக்கு உதவி தேவைப்படும்போது நம்முடைய சிநேகிதர்கள் நம்மோடுகூட இருக்கவேண்டுமென்று விரும்புவோம். அப்படிப்பட்ட வேளையில்தான் சாத்தான் அவர்களுடைய உள்ளத்தில் கிரியை செய்து, அவர்களை நம்மிடத்திலிருந்து பிரித்துவிடுவான்.

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் இப்போது அவரோடு கூடவேயிருக்கிறார்கள். அவருக்குப் பாடுகளும், அவமானமும், நிந்தையும், மரணமும் வரும்போது, அவருடைய சீஷர்கள் அவரோடு கூடயிருந்து, அவருக்கு ஆதரவாகயிருப்பதற்குப் பதிலாக அவரைத் தனியே விட்டுவிட்டு ஓடிப்போய்விடுகிறார்கள். சீஷர்களின் விசுவாசம் சோதிக்கப்படுகிறது. சோதிக்கப்படுகிற எல்லோருமே நம்பிக்கைக்குரியவர்களாக இருப்பார்கள் என்னும் நிச்சயமில்லை. புடமிடப்படுவது எல்லாமே பொன்னாக விளங்குவதில்லை. பொன் மாத்திரமே புடமிடப்பட்ட பின்பு பசும்பொன்னாக விளங்கும்.

நம்முடைய ஆவிக்குரிய அனுபவத்தில், நம்முடைய சிநேகிதர்கள் சிலர், சில சமயங்களில், நம்முடைய நம்பிக்கைக்குப் பாத்திரவான்களாக இருக்கமாட்டார்கள். நாமும், நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்கு, பல சமயங்களில் நம்பிக்கைக்குப் பாத்திரவான்களாக இல்லை என்பதை அப்போது நினைவுகூரவேண்டும். சீஷர்கள் இயேசுகிறிஸ்துவைத் தனியே விட்டுவிட்டு, அவர்கள் சிதறுண்டு, அவனவன் தன் தன் இடத்திற்குப் போய்விடுகிறான். ஒவ்வொருவனும் தன்னுடைய சொந்த வழியின் வழியாகப் போய்விடுகிறான். தனக்குப் பிடித்த வழியின் வழியாகவும், தனக்கு எந்த வழி பாதுகாப்பானது என்று நினைக்கிறானோ அந்த வழியின் வழியாகவும், ஒவ்வொருவனும் ஓடிப்போகிறான். தம்மை இப்படித் தனியேவிட்டுவிட்டு, தம்முடைய சீஷர்களெல்லோரும் ஓடிப்போய் விடுவார்களென்பது இயேசுகிறிஸ்துவுக்கு முன்பே தெரியும். அவர் எல்லாவற்றையும் முன்னறிந்திருக்கிறவர். இயேசுகிறிஸ்து பாடுகளை அனுபவிக்க வேண்டிய வேளைகளில், சீஷர்கள் அவரோடு கூடயிருந்திருந்தால் அவருக்கு ஆறுதலாக இருந்திருக்கும். ஆனால் அவர்களோ அவரோடுகூடயிருக்க வேண்டிய நேரத்தில், அவரைத் தனியாக விட்டுவிட்டு ஓடிப்போய்விடுகிறார்கள். சீஷர்கள் தம்மைவிட்டு ஓடிப்போனாலும் இயேசுகிறிஸ்து இன்னும் அவர்கள்மீது அன்பாகவே இருக்கிறார்.

மனுஷருடைய சுபாவங்களைப்பற்றி நமக்கு முன்பே தெரிந்திருந்தால், நாம் அவர்களோடு மிகுந்த எச்சரிக்கையோடு பழகுவோம். நமக்கு சிலர் தீங்கு செய்வார்கள் என்பது நமக்கு ஏற்கெனவே தெரிந்திருக்குமானால், அவர்களோடு பழகுவதையே நிறுத்திக்கொள்வோம். நமக்கு உதவி செய்யாதவர்களுக்கு உதவி செய்யமாட்டோம். ஆபத்து வேளைகளில் நம்மைவிட்டு ஓடிப்போய்விடுவார்கள் என்பது நமக்கு ஏற்கெனவே தெரியுமானால், நாம் அவர்களைவிட்டு அதற்கு முன்பாகவே விலகிப்போய்விடுவோம். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களின் சுபாவங்களை ஏற்கனவே அறிந்திருக்கிறார். அவர்கள் தம்மைத் தனியே விட்டு ஓடிப்போய் விடுவார்கள் என்பதையும் அறிந்திருக்கிறார். ஆனாலும் தம்முடைய சீஷர்களிடத்தில் இயேசுகிறிஸ்து வைத்திருக்கும் அன்பு சிறிதும் குறைந்து போகவில்லை. அவர்களிடத்தில் இன்னும் அன்பாகவே இருக்கிறார்.

தம்முடைய சீஷர்களின் சுபாவம் இயேசுகிறிஸ்துவுக்கு நன்றாகத் தெரிந்திருந்தாலும், இயேசு அவர்களிடம் "இப்பொழுது நீங்கள் விசுவாசிக்கிறீர்களா" என்று கேட்கிறார். இயேசுகிறிஸ்துவினிடத்தில் சீஷர்கள் விசுவாசத்தோடிருப்பதாக அறிக்கை செய்கிறார்கள். ஆனால் இன்னும் சற்று நேரத்தில் அவர்களுடைய வார்த்தைக்கும் செய்கைக்கும் சம்பந்தமே இருக்காது. நாம் கர்த்தரிடத்தில் விசுவாசம் வைத்திருப்பது தேவனுடைய கிருபை. தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் கிருபையினால் நமக்கு ஆறுதலும் ஆசீர்வாதமும் கிடைக்கிறது.

## அதிகாரம் - 16

இந்தக் கிருபைகளைப்பற்றி நாம் பேசிக்கொண்டிருக்கும்போது, நம்முடைய துன்மார்க்கமான செய்கைகளினால் உண்டாகப்போகும் ஆபத்துக்களைக் குறித்தும் நாம் நினைவுகூரவேண்டும். நம்முடைய விசுவாசம் வலுவாகயிருக்கலாம். நம்முடைய அன்பு பற்றியெரியக்கூடியதாக இருக்கலாம். இன்று நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் பரிசுத்தமுள்ளதாக இருக்கலாம். ஆனாலும் நாளைய தினமானது இன்றுபோல் இருக்கும் என்னும் நிச்சயமில்லை. இன்று நடக்கக்கூடிய சம்பவங்களை வைத்து, நாளைக்கும் இப்படித்தான் நடக்கும் என்று உறுதியாகக் கூறமுடியாது.

நாம் இன்று கர்த்தருக்குள் நிலைத்து நிற்போம். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் சுத்தமாக இருக்கும். ஆனாலும் நாம் விழுந்துவிடாதவாறு எச்சரிக்கையோடிருக்க வேண்டும். தன்னை நிற்கிறவனாக எண்ணுகிறவன் விழுந்துவிடாதவாறு மிகுந்த எச்சரிப்போடிருக்கவேண்டும். தம்முடைய சீஷர்களைப்பற்றி இயேசுகிறிஸ்து கடிந்து கூறுகிற சம்பவம் வெகுசீக்கிரத்தில் வரப்போகிறது. "என்னைத் தனியே விட்டுவிடும் காலம் வரும். அது இப்பொழுது வந்திருக்கிறது" என்று இயேசுகிறிஸ்து கூறுகிறார். இயேசுகிறிஸ்துவின்மீது சீஷர்கள் இப்போது மிகுந்த அன்போடிருக்கிறார்கள். இதே சீஷர்கள் சீக்கிரத்தில், இயேசுகிறிஸ்துவைக் குறித்து வெட்கப்பட்டு, அவரை விட்டு ஓடிப்போய்விடுவார்கள்.

சீஷர்கள் இயேசுகிறிஸ்துவைத் தனியேவிட்டு ஓடிப்போனாலும், இயேசுகிறிஸ்து தனித்திருப்பதில்லை. பிதாவானவர் அவருடனே கூடயிருக்கிறார். பிதாவானவருக்கும் இயேசுகிறிஸ்துவுக்கும் இடையிலிருக்கும் ஐக்கியம் குமாரனுக்குக் கிடைத்திருக்கும் விசேஷித்த சிலாக்கியமாகும். இயேசுகிறிஸ்துவின் மாம்ச சுபாவத்தைவிட்டு, தேவனுடைய சுபாவம் ஒருபோதும் பிரிந்திருப்பதில்லை. "பிதாவே ஏன் என்னைக் கைவிட்டீர்" என்று இயேசுகிறிஸ்து ஜெபித்தாலும், அவர் தேவனை நோக்கிக் கூப்பிடும்போது "என் தேவனே" என்றுதான் கூப்பிடுகிறார். தேவனுடைய பிரசன்னம் தம்மோடிருக்கிறது என்னும் நிச்சயம் இயேசுகிறிஸ்துவிடம் உறுதியாக இருக்கிறது.

ஆகையினால் தம்முடைய ஆவியை இயேசுகிறிஸ்து பிதாவின் கைகளில் ஒப்புக்கொடுக்கிறார். தாம் தனியாக இருப்பதில்லை என்பது இயேசுகிறிஸ்துவுக்கு மிகுந்த ஆறுதலாக இருக்கிறது. "என்னை அனுப்பினவர் என்னுடனே கூடயிருக்கிறார். பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால் அவர் என்னைத் தனியே இருக்கவிடவில்லை" (யோவா 8:29). என்னும் சத்தியமே இயேசுகிறிஸ்துவுக்கு ஆறுதலைத் தருகிறது.

இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களாகிய நாமும் ஒருபோதும் தனியாக இருப்பதில்லை. இந்தச் சிலாக்கியம் விசுவாசிகளெல்லோருக்கும் பொதுவானது. நாம் தனியே இருக்கும்போதுகூட, நாம் மெய்யாகவே தனியாக இருக்கவில்லை. பிதாவாகிய தேவன் நம்மோடு கூடயிருக்கிறார். தேவன் ஒருபோதும் நம்மைத் தனியாக இருக்கவிடமாட்டார். அத்திமரத்தின் கீழ் நாத்தான்வேல் இருந்தபோது, அங்கும் தேவன் அவரோடு கூடயிருந்தார். பேதுரு மேல்வீட்டரையில் ஜெபித்துக்கொண்டிருந்தபோது, அங்கும் தேவன் அவரோடு கூடயிருந்தார். நாம் தனிமையாக, வீட்டின் அறையின் கதவைப்பூட்டி ஜெபித்துக்கொண்டிருந்தாலும், அங்கும் நாம் தனிமையாயிருப்பதில்லை. தேவனுடைய பிரசன்னம் நம்மோடு கூடயிருக்கிறது.

நம்முடைய இருதயம் சுத்தமாயிருக்கவேண்டும். நல்ல இருதயமும், நல்ல தேவனும் எல்லா வேளைகளிலும் ஐக்கியமாக இணைந்திருக்கும். விசுவாசிகளாகிய நாம் தனியாகப் பாடுகளை அனுபவித்துக்கொண்டிருந்தாலும், அப்போதும் தேவன் நம்மோடு கூடயிருக்கிறார். இந்த உலகம் நம்மைக் கைவிடலாம். வெறுத்து ஒதுக்கலாம். ஆனால் தேவனோ நம்மைத் தனியேவிட்டுவிடுவதில்லை. தேவனுடைய கிருபையின் பிரசன்னம் நம்மோடு கூடவே இருக்கிறது. அதற்காகக் கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்தி, அவருடைய பரிசுத்த பிரசன்னத்தில் மகிழ்ந்து களிகூரவேண்டும்.

**நான் உலகத்தை ஜெயித்தேன்**

**என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும்பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார் (யோவா 16:33).**

## அதிகாரம் - 16

சீஷர்களுக்கு இந்த உலகத்தில் உபத்திரவம் உண்டு. ஆனாலும் அவர்கள் திடன்கொண்டு சமாதானமாக இருக்கவேண்டும். இயேசுகிறிஸ்து இந்த உலகத்தை ஜெயித்திருக்கிறார். தம்முடைய சீஷர்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இயேசுகிறிஸ்து இந்த உபதேசத்தை அவர்களுக்குச் சொல்லுகிறார். தம்முடைய உபதேசத்தின் முடிவுரையாக, இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடத்தில் சொல்லும்போது "என்னிடத்தில் உங்களுக்கு சமாதானம் உண்டாயிருக்கும்" என்று கூறுகிறார்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களைவிட்டுப் புறப்பட்டுப்போவது, மெய்யாகவே அவர்களுக்குப் பிரயோஜனமுள்ளதாக இருக்கும். தம்முடைய சீஷர்களுக்கு சமாதானம் உண்டாயிருக்கவேண்டும் என்பது இயேசுகிறிஸ்துவின் சித்தமாயிருக்கிறது. அவர்கள் எப்படிப்பட்ட பாடுகளின் வழியாகச் சென்றாலும், எப்படிப்பட்ட வேதனைகளையும் உபத்திரவங்களையும் அனுபவித்தாலும், இயேசுகிறிஸ்துவில் அவர்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவில் உண்டாயிருக்கும் சமாதானமே மெய்யான சமாதானம். இயேசுகிறிஸ்துவின் மூலமாக நாம் தேவனிடத்தில் சமாதானமாக இருக்கிறோம். நமக்கு இயேசுகிறிஸ்துவில் சமாதானம் உண்டாயிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளெல்லாம் நமக்குச் சமாதானத்தைக் கொடுக்கிறது. இயேசுகிறிஸ்து நமக்குச் சொல்லுகிற ஒவ்வொரு உபதேசமும், அவரிடத்தில் நமக்கு சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டே சொல்லப்பட்டிருக்கிறது.

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் அவரைத் தனியே விட்டுவிட்டு சிதறுண்டு ஓடிப்போய்விடுவார்கள் தங்களுடைய பாதுகாப்புக்காக அவர்கள் தப்பித்து ஓடுவார்கள். ஆனால் உலகத்தில் அவர்களுக்கு உபத்திரவம் உண்டு என்று இயேசுகிறிஸ்து தெளிவுபடுத்துகிறார். இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் எல்லோருக்குமே இந்த உலகத்தில் உபத்திரவம் உண்டு. ஒரு சிலருக்கு உபத்திரவம் குறைவாகவும், வேறு சிலருக்கு உபத்திரவம் அதிகமாகவும் இருக்கலாம்.

கிறிஸ்துவின் சீஷர்கள் நல்லவர்களாக இருப்பதினால் இப்பிரபஞ்சத்தின் மனுஷர் அவர்களை உபத்திரவப்படுத்துகிறார்கள். அதே வேளையில் இப்பிரபஞ்சத்தின் ஜனங்கள் துன்மார்க்கராயிருப்பதினால், தேவன் அவர்களைத் திருத்துகிறார். இது உலகத்து ஜனங்களுக்குப் பிடிக்கவில்லை. இதற்காகவும் உலகத்தார் சீஷர்களை உபத்திரவப் படுத்துகிறார்கள். சீஷர்கள் நல்லவர்களாக இருப்பதினாலும், இயேசுகிறிஸ்து துன்மார்க்கரைத் திருத்தி நல்லவர்களாக ஆக்குவதினாலும், இந்த உலகத்தாருக்கு சீஷர்களைப் பிடிக்கவில்லை. இவ்விரண்டு காரியங்களுக்கும் நடுவில் உலகத்தில் நமக்கு உபத்திரவம் வருகிறது.

சீஷர்களுக்கு உபத்திரவம் வந்தாலும், இயேசுகிறிஸ்து அவர்களிடத்தில் ஆறுதலாகத் "திடன்கொள்ளுங்கள்" என்று கூறுகிறார். அந்த உபத்திரவத்திலும் சீஷர்களின் இருதயம் சுத்தமாகயிருக்கவேண்டும். கர்த்தரை விசுவாசிக்கிறவர்களுக்கு சகலமும் நன்மைகேதுவாக நடக்கும் என்று சீஷர்கள் விசுவாசிக்கவேண்டும். இந்த உலகத்தில் நமக்கு உபத்திரவங்கள் வரும்போது, அந்த உபத்திரவங்களுக்கு மத்தியிலும் கிறிஸ்துவின் பிள்ளைகளாகிய நாம் திடன்கொண்டிருப்பது நம்முடைய கடமை. இப்படிப்பட்ட உபத்திரவக்காலத்திலும் திடமனதோடிருந்து இயேசுகிறிஸ்துவுக்கு நாம் சாட்சிகளாகப் பாடுகளை அனுபவிக்கவேண்டும். உபத்திரவம் நமக்கு வேதனையைத் தரலாம். உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையும் உண்டாக்குகிறதென்று நாம் அறிந்திருந்து, உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டவேண்டும் (ரோம 5:3,4).

தம்முடைய சீஷர்களிடம் இயேசுகிறிஸ்து "திடன்கொள்ளுங்கள்" என்று ஆலோசனை கூறும்போது, "நான் உலகத்தை ஜெயித்தேன்" என்றும் கூறுகிறார். இயேசுகிறிஸ்துவின் வெற்றி, அவரை விசுவாசிக்கிற நமக்கும் வெற்றியாக இருக்கிறது. இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடத்தில் உலகமெங்கும் சென்று சுவிசேஷத்தை அறிவிக்குமாறு கட்டளை கொடுத்தார். அப்போதும், "திடன்கொள்ளுங்கள், நான் உலகத்தை ஜெயித்தேன்" என்று கூறியே அவர்களை ஊழியத்திற்கு அனுப்புகிறார். இயேசுகிறிஸ்து இந்த உலகத்தின் எல்லா தீமைகளையும் தம்முடைய பாதபடிக்குக்கீழ் அடக்கிப்போட்டு, அவைகளை ஜெயித்திருக்கிறார். அவர் சிலுவையைச் சகித்துக்கொண்டு அதில் வெற்றி சிறந்தார். சிலுவையின் அவமானத்தையும் பாடுகளையும் நோக்கிப் பார்க்காமல், தம்முடைய பரலோகத்தின் மகிமையை மாத்திரம் நோக்கிப் பார்த்து, சிலுவையை ஜெயித்தார். இந்த உலகத்திலுள்ள தீமைகளைத் தம்முடைய நன்மையினால் ஜெயித்தார்.

## அதிகாரம் - 16

இந்த உலக வரலாற்றில் பல யுத்தங்கள் நடைபெற்றுள்ளன. பலர் ஜெயம் பெற்றிருக்கிறார்கள். ஆனாலும் இயேசுகிறிஸ்துவைப்போல இந்த உலகத்தை ஜெயித்தவர் வேறு ஒருவருமில்லை. இயேசுகிறிஸ்து நமக்கு முன்பாகவே இந்த உலகத்தை ஜெயித்திருக்கிறார். ஆகையினால் இந்த உலகத்தில் நாம் யுத்தம்பண்ணும்போது, நாம் புதிய சத்துருவோடு யுத்தம்பண்ணவில்லை. இயேசுகிறிஸ்துவிடம் ஏற்கெனவே தோற்றுப்போன சத்துருவிடம்தான் யுத்தம்பண்ணுகிறோம். நமக்கு உபத்திரவத்தைக் கொடுக்கிற இந்த உலகம், இயேசுகிறிஸ்துவிடம் ஏற்கெனவே தோற்றுப்போயிற்று. இதை நினைத்து நாம் திடன்கொள்ளவேண்டும்.

நமக்காக இயேசுகிறிஸ்து இந்த உலகத்தை ஜெயித்திருக்கிறார். யுத்தம் கர்த்தருடையது. யுத்தத்தில் தேவனே நம்முடைய தளபதியாக இருக்கிறார். இயேசுகிறிஸ்துவினால் இந்த உலகம் நமக்கு சிலுவையில் அறையப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்து இந்த உலகத்தை முழுவதுமாக ஜெயித்திருக்கிறார். இயேசுகிறிஸ்து இந்த உலகத்தை ஏற்கெனவே ஜெயித்திருப்பதினால், நாம் இந்த உலகத்தோடு மறுபடியும் யுத்தம்பண்ண வேண்டிய அவசியமில்லை. இந்த உலகத்தின்மீது இயேசுகிறிஸ்து பெற்றுக்கொடுத்திருக்கிற வெற்றியை நாம் சுதந்தரித்துக்கொள்ளவேண்டும். வெற்றியின் பாதையில் விசுவாசத்தோடு முன்னேறிச் செல்லவேண்டும். "இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோம்" (ரோம 8:37).

## அதிகாரம் - 17

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் ஜெபம் இந்த அதிகாரத்தில் விவரமாக எழுதப்பட்டிருக்கிறது. ஜெபம் பண்ணுவது என்பது இயேசுகிறிஸ்துவின் விசேஷித்த சுபாவம். இயேசுகிறிஸ்துவைப்போலவே நாமும் ஜெபிக்கவேண்டும். ஜெபத்தைப்பற்றி நமக்கு உபதேசம்பண்ணுவதற்காகவும், ஜெபிக்க வேண்டுமென்று நம்மை உற்சாகப்படுத்துவதற்காகவும் இந்த அதிகாரம் நமக்கு பிரயோஜனமுள்ளதாக எழுதப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரத்தில் இரண்டு பகுதிகள் உள்ளன. அவையாவன: 1. ஜெபத்தின் சூழ்நிலைகள் 2. ஜெபம். இயேசுகிறிஸ்து பிதாவினிடத்தில் நமக்காக வேண்டிக்கொள்கிறார் (யோவா 17:1-5). இயேசுகிறிஸ்து தம்முடையவர்களுக்காக வேண்டிக்கொள்கிறார். பிதாவானவர் தமக்குத் தந்தவர்களுக்காக இயேசுகிறிஸ்து வேண்டிக்கொள்கிற பொதுவான ஜெபம் (யோவா 17:6-10). அவர்களுக்காக இயேசுகிறிஸ்து வேண்டிக்கொள்கிற விசேஷித்த ஜெபம். தம்முடையவர்களைத் தீமையினின்று காக்கும்படி இயேசுகிறிஸ்து பிதாவிடம் வேண்டிக்கொள்கிறார் (யோவா 17:11-16). சீஷர்கள் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களாக வேண்டும் (யோவா 17:17-19). சீஷர்கள் ஒன்றாயிருக்கவேண்டும் (யோவா 17:11,20-23). சீஷர்கள் மகிமையடையவேண்டும் (யோவா 17:24-26).

### இயேசுகிறிஸ்துவின் ஜெபம் யோவா 17 : 1-5

**யோவா 17:1. இயேசு இவைகளைச் சொன்னபின்பு தம்முடைய கண்களை வானத்துக்கு ஏறெடுத்து:**

**யோவா 17:2. பிதாவே, வேளை வந்தது, நீர் உம்முடைய குமாரனுக்குத் தந்தருளின யாவருக்கும் அவர் நித்தியஜீவனைக் கொடுக்கும்பொருட்டு மாம்சமான யாவர்மேலும் நீர் அவருக்கு அதிகாரங்கொடுத்தபடியே, உம்முடைய குமாரன் உம்மை மகிமைப்படுத்தும்படிக்கு நீர் உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும்.**

**யோவா 17:3. ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்.**

**யோவா 17:4. பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன்.**

**யோவா 17:5. பிதாவே, உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்.**

### தம்முடைய கண்களை வானத்துக்கு ஏறெடுத்து

**இயேசு இவைகளைச் சொன்னபின்பு தம்முடைய கண்களை வானத்துக்கு ஏறெடுத்து (யோவா 17:1)**

இயேசுகிறிஸ்து தம்முடைய பிதாவினிடத்தில் வேண்டிக்கொண்ட ஜெபம் இந்த அதிகாரத்தில் விவரமாக எழுதப்பட்டிருக்கிறது. வேதாகமத்தில் பல அதிகாரங்களில் இயேசுகிறிஸ்துவின் ஜெபம் எழுதப்பட்டிருந்தாலும், இந்த அதிகாரத்தில் விவரிவாக எழுதப்பட்டிருப்பதுபோல வேறு எந்த அதிகாரத்திலும் எழுதப்படவில்லை. இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு உபதேசம்பண்ணிக் கொண்டிருக்கிறார். தம்முடைய சீஷர்களைவிட்டு அவர் பிதாவினிடத்திற்குப் போகப்போவதைப்பற்றியும், சீஷர்களுடைய இருதயம் கலங்கக்கூடாது என்றும், இந்த உலகத்தில் அவர்களுக்கு உபத்திரவம் உண்டு என்றும் தம்முடைய சீஷர்களுக்கு உபதேசம்பண்ணுகிறார். இயேசு இவைகளைச் சொன்னபின்பு தம்முடைய கண்களை வானத்துக்கு ஏறெடுத்து பிதாவினிடத்தில் ஜெபிக்கிறார்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போகப்போகிறார். இந்த சமயத்தில் அவர்களிடத்தில் விடைபெற்றுக்கொள்ளும் விதமாக இயேசுகிறிஸ்து அவர்களுக்கு ஆறுதலான சத்தியங்களை உபதேசம்பண்ணுகிறார். இந்த ஜெபம் அவருடைய உபதேசத்திற்குப் பின்பு வரும் ஜெபமாகும். தேவனிடத்திலிருந்து வார்த்தைகளைப் பெற்றுக்கொண்டு, அவற்றை சீஷர்களிடத்தில் உபதேசம்பண்ணுகிறார். அதன் பின்பு தம்முடைய சீஷர்களுக்காக இயேசுகிறிஸ்து தேவனிடத்தில் பேசுகிறார்.

## அதிகாரம் - 17

இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளைப் பிரசங்கம்பண்ணுகிற ஊழியக்காரர்களாகிய நாமும் ஜெபிக்கவேண்டும். பிரசங்கம்பண்ணும் முன்பும், பின்பும் ஜெபிக்கவேண்டும். நாம் பிரசங்கம்பண்ணுகிற வார்த்தைகளுக்காகவும் ஜெபிக்கவேண்டும் அந்த வார்த்தைகளைக் கேட்கிற ஜனங்களுக்காகவும் ஜெபிக்க வேண்டும். நாம் பிரசங்கம்பண்ணுவதற்கு முன்பாக, நாம் பேசவேண்டிய வார்த்தைகளுக்காக ஜெபிக்கும்போது, தேவன் அந்த வார்த்தைகளை ஆசீர்வதிப்பார். வார்த்தைகள் அபிஷேகம்பண்ணப்படும். கேட்போருக்கு மிகுந்த பிரயோஜனமுள்ளதாக இருக்கும். நல்ல பலன் தரும்.

தம்முடைய உபதேசத்தைப் பிரசங்கம்பண்ணி முடித்த பின்பு இயேசுகிறிஸ்து இந்த ஜெபத்தை ஏறெடுக்கிறார். தேவன் தமக்குக் கொடுத்த ஊழியத்தை இயேசுகிறிஸ்து ஒவ்வொன்றாக நிறைவேற்றிக்கொண்டு வருகிறார். இயேசுகிறிஸ்துவின் ஊழியமெல்லாமே தேவனால் நியமிக்கப்பட்டிருக்கிறது. தம்முடைய உபதேசம் ஆசீர்வதிக்கப்பட வேண்டுமென்பதற்காகவும், தம்முடைய உபதேசத்தைக் கேட்கிற சீஷர்கள், சத்திய வசனங்களை தங்கள் இருதயங்களில் ஏற்றுக்கொண்டு, ஆவிக்குரிய ஜீவியத்தில் அவர்கள் வளர்ச்சி பெறவேண்டும் என்பதற்காகவும் இயேசுகிறிஸ்து இப்போது ஜெபிக்கிறார்.

இயேசுகிறிஸ்துவின் ஜெபம் ஒரு குடும்பத்தில் ஏறெடுக்கப்படுகிற குடும்ப ஜெபம்போலிருக்கிறது. கிறிஸ்துவின் சீஷர்களே அவருடைய குடும்பத்தாராகயிருக்கிறார்கள். நம்முடைய குடும்பம் எப்படியிருக்கவேண்டும் என்பதற்கு இயேசுகிறிஸ்துவின் ஜெபம் ஒரு முன்மாதிரியாக இருக்கிறது. இயேசுகிறிஸ்து தம்முடைய குடும்பத்தாரை ஆசீர்வதிக்கிறார். அவர்களுக்காக ஜெபிக்கிறார். அவர்களோடு ஜெபிக்கிறார். நாமும் நம்முடைய குடும்பத்தாரோடு சேர்ந்து தேவனிடத்தில் ஜெபிக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்து ஏறெடுக்கிற ஜெபம், ஓரிடத்திலிருந்து கடந்துபோகும்போது விடைபெறுகிறதற்காக ஏறெடுக்கிற ஜெபம்போலிருக்கிறது. நாமும் நம்முடைய சிநேகிதர்களும் விடைபெற்றுப் பிரியும்போது, ஜெபம்பண்ணிவிட்டு பிரிந்துபோவது நல்லது. அப்போஸ்தலர் பவுல் மிலேத்துவில் ஊழியம் செய்த பின்பு, முழங்கால் படியிட்டு அவர்களெல்லோரோடும் கூட ஜெபம்பண்ணினார். அதன்பின்பு அவர்களிடத்தில் விடைபெற்றுக்கொண்டு கடல் பிரயாணம்பண்ணினார் (அப் 20:36-38).

இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையில் தம்மையே ஜீவபலியாக ஒப்புக்கொடுத்து மரிக்கப்போகிறார். இயேசுகிறிஸ்து இப்போது ஏறெடுக்கிற ஜெபம் அவருடைய பாடுகளுக்கும் வேதனைகளுக்கும், அவர் தம்மையே பலியாகச் செலுத்தப்போவதற்கும் ஒரு முன்னுரையாக இருக்கிறது. அவர் மனுக்குலத்தின் இரட்சிப்புக்காக அவர் தம்முடைய ஜீவனையே பலியாக ஒப்புக்கொடுக்கப்போகிறார். தேவாலயத்தில் ஆசாரியர் பலிபீடத்தில் பலிசெலுத்துவதற்கு முன்பாக ஜெபம்பண்ணுவதுபோல, இயேசுகிறிஸ்து தம்மையே பலியாக ஒப்புக்கொடுக்கும் முன்பாக ஜெபம் பண்ணுகிறார். நம்முடைய ஜெபங்களெல்லாமே இப்படித்தான் இருக்கவேண்டும். இயேசு கிறிஸ்துவின் சமுகத்தில் ஜெபம்பண்ணிவிட்டு, நம்மை ஜீவபலியாக அவருடைய கரங்களில் ஒப்புக்கொடுக்க வேண்டும்.

இயேசுகிறிஸ்து பிதாவாகிய தேவனிடத்தில் நமக்காகப் பரிந்துபேசுகிறார். அவருடைய பரிந்து பேசும் ஜெபத்திற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகயிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் பலியினால் தேவாலயத்திலுள்ள திரைச்சீலை இரண்டாகக் கிழிந்தது. தேவனுடைய பரிசுத்த சமுகத்திற்கும் நமக்கும் இடையிலுள்ள பிரிவினையாகிய நடுச்சுவர் அகன்றுபோயிற்று. இயேசுகிறிஸ்துவின் ஜெபத்தின் மூலமாக நாம் அவருடைய கிருபாசனத்திற்கு முன்பாகத் தைரியமாகக் கிட்டிச்சேரும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம்.

இயேசுகிறிஸ்து தம்முடைய பிதாவினிடத்தில் ஜெபம்பண்ணும்போது, மிகவும் பயபக்தியோடு ஜெபம்பண்ணுகிறார். அவர் தம்முடைய கண்களை வானத்துக்கு ஏறெடுத்து ஜெபிக்கிறார். நாமும் ஜெபம்பண்ணும்போது, இயேசுகிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின்பற்றி, தேவனுடைய சமுகத்தில் பயபக்தியோடு நின்று, நம்முடைய கண்களை வானத்துக்கு ஏறெடுத்து ஜெபிக்கவேண்டும். நாம் ஜெபிப்பதைப் பார்த்து இப்பிரபஞ்சத்தின் ஜனங்கள் நம்மைப் பரியாசம்பண்ணலாம். ஆனால் இதுதான் இயேசுகிறிஸ்து ஜெபிப்பதற்கு நமக்கு நியமித்திருக்கிற ஒழுங்கும் நியதியுமாகும். மனுஷரைப் பிரியப்படுத்துவதற்குப் பதிலாக தேவனைப் பிரியப்படுத்துவது நமக்கு ஆசீர்வாதமானது. யூதர்கள் தங்கள் ஜனத்தாரை ஜெபம்பண்ண அழைக்கும்போது, "உங்கள் இருதயங்களை வானத்துக்கு ஏறெடுக்க வாருங்கள்" என்று கூறி அழைப்பது வழக்கம்.

## அதிகாரம் - 17

### பிதாவே வேளை வந்தது

**பிதாவே, வேளை வந்தது, நீர் உம்முடைய குமாரனுக்குத் தந்தருளின யாவருக்கும் அவர் நித்தியஜீவனைக் கொடுக்கும்பொருட்டு மாம்சமான யாவர்மேலும் நீர் அவருக்கு அதிகாரங்கொடுத்தபடியே, உம்முடைய குமாரன் உம்மை மகிமைப்படுத்தும்படிக்கு நீர் உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும் (யோவா 17:2).**

இயேசுகிறிஸ்து பிதாவினிடத்தில் ஜெபிக்கும்போது, முதலாவதாகத் தமக்காக ஜெபிக்கிறார். தேவனைப் "பிதாவே" என்று அழைக்கிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய கண்களை ஏறெடுத்து, "பிதாவே" என்று அழைத்து, தம்முடைய ஜெபத்தை ஆரம்பிக்கிறார். தேவன் நம்முடைய பிதாவாகயிருக்கும்போது, அவருடைய சமுகத்தில் நெருங்கி வருகிற சிலாக்கியத்தை நாம் பெற்றிருக்கிறோம். அவர் நம்முடைய பிதாவாகயிருப்பதினால், அவரிடத்தில் பெரிய எதிர்பார்ப்புக்களோடு, அவரை நோக்கிப் பார்க்கிறோம்.

இயேசுகிறிஸ்து தேவனை அழைக்கும்போது "பரிசுத்த பிதாவே" (யோவா 17:11) என்றும் "நீதியுள்ள பிதாவே" (யோவா 17:25) என்றும் அழைக்கிறார். இயேசுகிறிஸ்து பிதாவைக் கனம்பண்ணி அழைப்பதுபோல, நாமும் அப்படியே அழைக்கவேண்டும். அவரைத் தேடும்போது நாம் கண்டுகொள்வோம். அவரைப் பெயர்சொல்லி அழைக்கும்போது, அவருடைய குணாதிசயங்களை அவருடைய பெயரோடு சேர்த்து, "பரிசுத்த பிதாவே" என்றும், "நீதியுள்ள பிதாவே" என்றும் அழைக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்து தேவனாகவே இருக்கிறார். ஆனாலும் பிதாவினிடத்தில் தம்முடைய ஜெபத்தை ஏறெடுக்கும்போது, முதலாவதாக அவர் தமக்காக ஜெபிக்கிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய தெய்வத்துவத்தில் இருக்கும்போது, அவரிடத்தில் ஜெபம் ஏறெடுக்கப்படுகிறது. அவர் தம்முடைய மனுஷத்துவத்திலிருக்கும் போது, அவரே தேவனிடத்தில் ஜெபிக்கிறார். தேவன் எதை வாங்குவதற்காக கிரயம் செலுத்தியிருக்கிறாரோ, அதை அவர் கேட்டுப்பெற்றுக்கொள்கிறார். நாம் தேவனிடத்தில் பெற்றுக்கொள்வது எதற்கும், நாம் ஒரு கிரயமும் செலுத்துவதில்லை.

அவரிடத்தில் பெற்றுக்கொள்வதற்கு நமக்கு ஒரு தகுதியுமில்லை. இயேசுகிறிஸ்து கிரயம் செலுத்தி பெற்றுக்கொண்டதை, தமது கிருபையினால் நமக்கு இலவசமாகத் தருகிறார். நாம் அவற்றை அவருடைய கையிலிருந்து ஒரு கிரயமும் செலுத்தாமல் இலவசமாகப் பெற்றுக்கொள்கிறோம். நாம் ஜெபிக்கும்போது, இயேசுகிறிஸ்து நம்முடைய வேண்டுதல்களை அங்கீகரித்து, தம்முடைய கிருபையினால் நம்முடைய ஜெபங்களுக்குப் பதில் கொடுக்கிறார். ஆகையினால்தான் விசுவாசிகளாகிய நாம் இடைவிடாமல் ஜெபம்பண்ணவேண்டும் என்று வேதவசனம் கூறுகிறது.

தேவனுடைய சமுகத்தில் நாம் ஜெபிக்கும்போது நமக்கு ஆசீர்வாதம் உண்டாகும். நாம் கேட்டுக்கொள்வதை அவரிடத்திலிருந்து பெற்றுக்கொள்கிறோம். நமக்காகப் பரிந்து பேசுகிறவராகிய இயேசுகிறிஸ்து, இப்போது தமக்காகவே ஜெபிக்கிறார். தம்முடைய வேண்டுதல்களைப் பிதாவினிடத்தில் சமர்ப்பிக்கிறார். இயேசுகிறிஸ்து பிதாவினிடத்தில் ஜெபிப்பது போலவே, நாமும் தேவனிடத்தில் ஜெபிக்க வேண்டும். இயேசுகிறிஸ்து மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி வேண்டுதல் செய்தார் (எபி 5:7). நம்முடைய வேண்டுதல்களும் விண்ணப்பங்களும் இயேசுகிறிஸ்துவின் ஜெபத்தைப்போலவே இருக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்து பிதாவினிடத்தில் ஜெபிக்கும்போது முதலாவதாகத் தமக்காகவும், அதன் பின்பு தம்முடைய சீஷர்களுக்காகவும் ஜெபிக்கிறார். நன்மை செய்வது முதலாவதாக நம்முடைய குடும்பத்தில் ஆரம்பமாகவேண்டும். அதேவேளையில் நம்முடைய நன்மை நம்முடைய குடும்பத்திற்குள் அடங்கிப் போய்விடக் கூடாது. முதலாவதாக குடும்பத்தினருக்கும், அதன் பின்பு மற்றவர்களுக்கும் நாம் நன்மை செய்யவேண்டும். இயேசுகிறிஸ்து தமக்காக பிதாவினிடத்தில் ஜெபிப்பது மிகவும் சிறிய ஜெபமாகவே இருக்கிறது. தமக்காக ஜெபிப்பதைவிட, இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷருக்காக அதிகமாய் ஜெபிக்கிறார்.

நம்முடைய ஜெபங்களை நாம் நமக்காகவும் ஜெபிக்கிறோம். சபைக்காகவும் ஜெபிக்கிறோம். நமக்காக அதிகமாக ஜெபித்துவிட்டு, சபைக்காக ஒரு வார்த்தையில் ஜெபித்து முடித்துவிடக்கூடாது. நமக்காக ஏறெடுக்கும் ஏராளமான விண்ணப்பங்களுக்கு நடுவில், சபைக்காக நாம் ஏறெடுக்கும் விண்ணப்பம் அவற்றிற்கு நடுவில் மறைந்துவிடக்கூடாது.

## அதிகாரம் - 17

இயேசுகிறிஸ்து தமக்காக ஜெபிக்கும்போது இரண்டு காரியங்களை விண்ணப்பம்பண்ணுகிறார். அவையாவன: 1. நீர் உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும். 2. உம்முடைய குமாரன் உம்மை மகிமைப்படுத்தும்படி செய்யும். "நீர் என்னை மகிமைப்படுத்தும்" என்று இயேசுகிறிஸ்துதம்முடைய பிதாவினிடத்தில் வேண்டுதல்பண்ணும்போது, இந்த வாக்கியத்தை இரண்டுமுறை கூறுகிறார். இதற்கான காரணத்தை வேதபண்டிதர்கள் இவ்வாறு கூறுகிறார்கள். "உம்முடைய குமாரன் உம்மை மகிமைப்படுத்தும்படிக்கு நீர் உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும்" (யோவா 17:1-3) என்றும், "நீர் என்னை உம்மிடத்தில் மகிமைப்படுத்தும்" (யோவா 17:4,5) என்று இயேசுகிறிஸ்து பிதாவினிடத்தில் வேண்டிக்கொள்கிறார்.

இயேசுகிறிஸ்து பிதாவினிடத்தில் ஜெபிக்கும்போது "நீர் உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும்" என்று கூறி ஜெபிக்கிறார். பிதாவாகிய தேவன் குமாரனை மகிமைப்படுத்தும்போது, குமாரன் மகிமையடைவார். குமாரன் மகிமைப்படும்போது, குமாரன் பிதாவை மகிமைப்படுத்துவார். இந்த உலகத்தில் தாம் மகிமைப்படுத்தப்படவேண்டும் என்று இயேசுகிறிஸ்து பிதாவிடத்தில் ஜெபிக்கிறார். பூமியிலே தேவன் இயேசுகிறிஸ்துவை மகிமைப்படுத்தியிருக்கிறார். இயேசுகிறிஸ்து இந்தப் பூமியில் பாடுகளை அனுபவிக்கும்போதும் அவர் மகிமைப்படுத்தப் படுகிறார். அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் இயேசுகிறிஸ்து மகிமைப்படுத்தப்படுகிறார். இயேசுகிறிஸ்து அனுபவித்த பாடுகளினால் பிதாவாகிய தேவனுடைய நீதி விளங்கிற்று. அதேவேளையில் குமாரனும் மகிமைப்படுத்தப்படுகிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய பாடுகள் மூலமாகவும், சிலுவை மரணத்தின் மூலமாகவும், அவர் உயர்த்தப்படுகிறார். அவர் மகிமைப் படுத்தப்படுகிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய சிலுவையில் சாத்தானையும் மரணத்தையும் ஜெயித்தார். இயேசுகிறிஸ்துவின் சிரசில் சூட்டப்பட்ட முள்முடி மெய்யாகவே அவருக்கு மகிமையின் கிரீடமாயிற்று. இயேசுகிறிஸ்து பாடுகளை அனுபவித்த பின்பும், பிதாவானவர் அவரைத் தொடர்ந்து மகிமைப்படுத்திக் கொண்டேயிருக்கிறார். இயேசுகிறிஸ்துவை மரணத்திலிருந்து மறுபடியும் உயிரோடு எழுப்பும்போது, பிதாவானவர் குமாரனை மகிமைப்படுத்துகிறார்.

இயேசுகிறிஸ்து பிதாவினிடத்தில் ஜெபிக்கும் போது தம்முடைய வேண்டுதல்களையும் விண்ணப்பங்களையும் பயபக்தியோடு ஏறெடுக்கிறார். இயேசுகிறிஸ்துவின் பிரதான ஜெபம் "உமது குமாரனை மகிமைப்படுத்தும்" என்பதாகும். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், விசுவாசத்தினால் தேவனுடைய பிள்ளைகளாகயிருக்கிறோம். அவர் நம்மை சுவீகார புத்திரராக அங்கீகரித்திருக்கிறார். புத்திர சுவீகாரத்தின் ஆசீர்வாதங்களையும் சிலாக்கியங்களையும் நாம் பிதாவாகிய தேவனிடத்திலிருந்து கேட்டுப்பெற்றுக்கொள்ள வேண்டும். நாம் பரிசுத்தமாக்கப்பட்டால் மகிமையடையவும் செய்வோம்.

இயேசுகிறிஸ்து பிதாவிடத்தில் ஜெபிக்கும்போது "வேளை வந்தது" என்று கூறி ஜெபிக்கிறார். இதற்கு முன்பு தம்முடைய சீஷரிடத்தில் உபதேசம்பண்ணும்போது, "என் வேளை இன்னும் வரவில்லை" என்று கூறினார், இப்போது "வேளை வந்தது" என்று கூறுகிறார். இயேசுகிறிஸ்து இந்த வேளையை "இந்த வேளை" (யோவா 12:17) என்று கூறியவர், இப்போது "வேளை" என்று கூறுகிறார். "இந்த வேளை" என்பது மீட்பரின் மரணத்தைக் குறிக்கும் வார்த்தையாகும். இந்த வார்த்தை மீட்பருடைய பிறப்பின் வேளையையும் குறிக்கும். "வேளை" என்பது மிகவும் முக்கியமான, விசேஷித்த வேளை. இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காலத்தில், பல சம்பவங்கள் நடைபெற்றாலும், இயேசுகிறிஸ்து இங்கு குறிப்பிடுகிற "வேளை" யில், நடைபெறும் சம்பவம் மிகவும் முக்கியமானதாகும். இந்தவேளையில் நடைபெறும் சம்பவம் இதற்கு முன்பும் நடைபெறவில்லை. இதற்கு பின்பும் நடைபெறாது. இந்த உலகத்தின் வரலாற்றில், "இந்த வேளை" மிகவும் முக்கியமானது. ஏனெனில் இந்த உலக வரலாற்றில், இந்த வேளையில் நடைபெறும் சம்பவத்தைப்போல, இதற்கு முன்பும் நடைபெறவில்லை. இதற்கு பின்பும் நடைபெறாது.

இயேசுகிறிஸ்து இந்த வேளையின் முக்கியத்துவத்தை உணர்ந்தவராக "வேளை வந்தது" என்று கூறுகிறார். இது யுத்தம்பண்ணுகிற வேளை. பரலோகத்திற்கும் நரகத்திற்கும் இடையே இறுதியான யுத்தம் இப்போது நடைபெறுகிறது. இந்த யுத்தத்தில் தமக்கு வெற்றியைக் கொடுத்து "நீர் உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும்" என்று இயேசுகிறிஸ்து ஜெபிக்கிறார். இந்த யுத்தத்தில் குமாரனுக்கு தோல்வியும் சோர்வும் உண்டாகக்கூடாது என்றும் ஜெபிக்கிறார். தேவன் தம்முடைய குமாரனை சிலுவையில் மகிமைப்படுத்துகிறார். இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டாலும், அந்தச் சிலுவை மரம், அவரை மேன்மைப்படுத்தி அழைத்துச் செல்கிற வெற்றியின் இரதமாக இருக்கிறது.

## அதிகாரம் - 17

தாம் மகிமைப்படும்படியான "வேளை வந்தது" என்று இயேசுகிறிஸ்து இங்கு அறிவிக்கிறார். கர்த்தருடைய பிள்ளைகளுக்கு சோதனைகள் வரலாம். வேதனைகள் வரலாம். மரணம் வரும். இப்படிப்பட்ட துன்பமான நேரங்களில், நாமும் இயேசுகிறிஸ்துவைப்போல "வேளை வந்தது" என்று கூறி ஜெபிக்கவேண்டும். "ஆண்டவரே, எனக்கு வந்திருக்கும் இந்த வேளையில் நீர் என்னோடு கூடயிரும், உம்முடைய உதவி எனக்கு இந்த வேளையில் அதிகமாய்த் தேவைப்படுகிறது" என்றும் கூறி நாம் ஜெபிக்கவேண்டும். "பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்துபோனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம்" (2கொரி 5:1).

இயேசுகிறிஸ்து பிதாவினிடத்தில் தமக்காக ஜெபிக்கும்போது "உம்முடைய குமாரன் உம்மை மகிமைப்படுத்தும்படிக்கு நீர் உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும்" என்று கூறி ஜெபிக்கிறார். இயேசுகிறிஸ்து பிதாவை மகிமைப்படுத்த விரும்புகிறார். தம்முடைய பாடுகளில் பிதாவானவர் தம்மைத் தாங்கவேண்டுமென்றும், இந்தப் பாடுகள் மூலமாக தாம் பிதாவை மகிமைப்படுத்த வேண்டும் என்றும் இயேசுகிறிஸ்து ஜெபிக்கிறார். இயேசுகிறிஸ்து இந்த ஜெபத்தை ஏறெடுத்த சிறிது காலத்திற்குப் பின்பு, சிலுவையின் உபதேசம் இந்த உலகம் முழுவதும் பிரசங்கிக்கப்படும்.

தேவன் சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவை மகிமைப்படுத்துவார். மரித்த இயேசுகிறிஸ்துவை பிதாவானவர் மறுபடியும் உயிரோடு எழுப்பி குமாரனை மகிமைப்படுத்துவார். சிலுவையில் மரித்த இயேசுகிறிஸ்து மறுபடியும் உயிரோடு எழும்பவில்லையென்றால், சிலுவையின் உபதேசமே ஒன்றுமில்லாமல் போய்விடும். ஆகையினால் இயேசுகிறிஸ்து பிதாவினிடத்தில் "உம்முடைய குமாரன் உம்மை மகிமைப்படுத்தும்படிக்கு நீர் உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும்" என்று கூறி ஜெபிக்கிறார்.

நாம் எப்படி ஜெபிக்க வேண்டுமென்பதற்கு, இயேசுகிறிஸ்து தம்முடைய பிதாவினிடத்தில் ஏறெடுத்த ஜெபம் நமக்கு ஒரு முன்மாதிரியாக இருக்கிறது.

நாம் ஜெபிக்கும்போது எதற்காக ஜெபிக்கவேண்டும், எப்படி ஜெபிக்கவேண்டும், நம்முடைய ஜெபத்தின் நோக்கம் எப்படி இருக்கவேண்டும் என்பதை இயேசுகிறிஸ்து நமக்கும் கற்றுத்தருகிறார். தேவனை மகிமைப்படுத்த வேண்டும் என்பதற்காகவே நாம் ஜெபிக்கவேண்டும். "ஆண்டவரே உம்முடைய ஊழியக்காரராகிய எனக்கு இந்தக் காரியத்தைச் செய்யும், இதன் மூலமாக நான் உம்மை மகிமைப்படுத்தும்படிக்கு இந்தக் காரியத்தை எனக்குத் தயவாய் செய்தருளும்" என்று கூறி ஜெபிக்கவேண்டும். நாம் வியாதியில் இருக்கும்போது, "ஆண்டவரே நான் உம்மை மகிமைப்படுத்தும்படிக்கு இந்த வியாதியிலிருந்து என்னைக் குணப்படுத்தியருளும்" என்று கூறி ஜெபிக்கவேண்டும். நாம் தொழில் செய்பவர்களாக இருப்போமென்றால், "ஆண்டவரே நான் உம்மை மகிமைப்படுத்தும்படிக்கு, இந்தத் தொழிலில் எனக்கு வெற்றியைத் தாரும்" என்று கூறி ஜெபிக்கவேண்டும்.

"உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக" என்பதே நம்முடைய ஜெபத்தின் பிரதானமான வாக்கியமாக இருக்கவேண்டும். ஜெபத்தின் முதல் வார்த்தையும் "உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக" என்றுதான் இருக்கவேண்டும். ஜெபத்தின் கடைசி வார்த்தையும் "உம்முடைய நாமம் மகிமைப்படுவதாக" என்றுதான் இருக்கவேண்டும். "எல்லாவற்றிலேயும் இயேசுகிறிஸ்து மூலமாய் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக. அவருக்கே மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக" (1பேது 4:11) என்று அப்போஸ்தலர் பேதுரு நிருபத்தில் எழுதுவதுபோல, நம்முடைய ஜெபமும் செயலும் அமைந்திருக்கவேண்டும்.

நாம் ஜெபிக்கும்போது தேவனிடத்தில் எதை எதிர்பார்க்கவேண்டும் என்றும், எதை நம்பவேண்டுமென்றும் இயேசுகிறிஸ்து நமக்கு உபதேசம்பண்ணுகிறார். தேவனை மகிமைப்படுத்த வேண்டுமென்பது நம்முடைய பிரதான நோக்கமாக இருக்குமென்றால், அவர் நமக்குப் போதுமான கிருபைகளைத் தருவார். தமக்குச் சித்தமான வாய்ப்புக்களை நமக்குக் கொடுத்து உதவிசெய்வார். நம்முடைய இருதயத்தில் தேவனை மகிமைப்படுத்த வேண்டும் என்னும் எண்ணத்திற்குப் பதிலாக, நம்மை நாமே மகிமைப்படுத்தவேண்டும் என்னும் எண்ணம், நம்முடைய இருதயத்தின் ஓரத்தில் எங்காவது ஒளிந்துகொண்டிருக்குமானால், தேவன் நம்மை மேன்மைப்படுத்தமாட்டார். நாம் நம்மையே அவமானப்படுத்திவிடுவோம்.

## அதிகாரம் - 17

இயேசுகிறிஸ்து பிதாவினிடத்தில் ஜெபிக்கும்போது தம்முடைய ஊழியத்தைப்பற்றியும் அறிக்கை செய்கிறார். பிதாவை மகிமைப்படுத்தவேண்டும் என்பது இயேசுகிறிஸ்துவின் விருப்பம். தமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஊழியம் நிறைவேறுவதன் மூலமாக தாம் பிதாவை மகிமைப்படுத்துவதாக, இயேசுகிறிஸ்து அறிக்கை செய்கிறார். தேவனுக்கும் மனுஷருக்கும் நடுவில் இயேசுகிறிஸ்து மத்தியஸ்தராக இருக்கிறார். அவருடைய மத்தியஸ்தம்பண்ணும் ஊழியத்தின் வல்லமை இங்கு வெளிப்படுத்தப்படுகிறது.

மத்தியஸ்தராகிய இயேசுகிறிஸ்து சர்வவல்லமையுள்ளவர். சகல அதிகாரமும் உள்ளவர். இந்த அதிகாரத்தைப் பிதாவாகிய தேவனே குமாரனாகிய கிறிஸ்துவுக்குக் கொடுத்திருக்கிறார். பிதாவானவரே சர்வ அதிகாரத்திற்கும் சொந்தக்காரர். நம்முடைய திருச்சபைகளின் ராஜாதி ராஜாவாக இருக்கும் இயேசுகிறிஸ்து அதிகாரமில்லாத பொம்மை ராஜா அல்ல. அவர் பிதாவினிடத்திலிருந்து எல்லா அதிகாரத்தையும் தம்மிடத்தில் பெற்றிருக்கிறவர். இந்த உலகத்தின் அதிபதி தன்னிடத்தில் அதிகாரம் இருப்பதுபோல மாய்மாலம் பண்ணுகிறான். ஆனால் அவனிடத்தில் ஒரு அதிகாரமும் இல்லை. சர்வலோகத்தையும் ஆளுகை செய்யும் அதிகாரம் இயேசுகிறிஸ்துவிடம் மாத்திரமே ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரத்தைப் பிதாவானவர் இயேசுகிறிஸ்துவுக்குக் கொடுத்திருக்கிறார்.

பிதாவானவர் இயேசுகிறிஸ்துவுக்கு "மாம்சமான யாவர்மேலும்" அதிகாரம்கொடுத்திருக்கிறார். எல்லா மனுஷர்மேலும் இயேசுகிறிஸ்துவுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது இயேசுகிறிஸ்து தேவனுக்கும் மனுஷருக்கும் நடுவே மத்தியஸ்த ஊழியம் செய்துகொண்டிருக்கிறார். "மாம்சமான யாவர்மேலும்" தேவன் தமக்கு அதிகாரம் கொடுத்திருப்பதாக இயேசுகிறிஸ்து தம்முடைய ஜெபத்தில் குறிப்பிடுகிறார். "மாம்சமான யாவர்" என்பது தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிற ஜனத்தைக் குறிப்பிடும் வார்த்தையாகும். இயேசுகிறிஸ்து இந்த ஜனங்களைத் தம்முடைய ஆளுகைக்குட்படுத்தி இரட்சிக்கப்போகிறார். இந்த உலகத்திலுள்ள மனுக்குலத்தாரில், இயேசுகிறிஸ்துவிடம் ஒரு கூட்டம் ஜனத்தார் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் எல்லா தேசங்களிலும், எல்லா இனத்தாரிலும் இருக்கிறார்கள். இவர்களெல்லோருமே இயேசுகிறிஸ்துவின் பாதபடியில் அவரைப் பணிந்து கொள்வார்கள்.

ஏதேன் தோட்டத்தில் ஆதாம், ஏவாள் ஆகியோரின் பாவத்தினிமித்தமாக, மனுக்குலம் பாவம் செய்து வீழ்ச்சியடைந்திருக்கிறது. மனுஷன் தன் மாம்சத்தில் பாவம் செய்து வீழ்ச்சியடைந்தவனாக இருக்கிறான். மனுஷனுக்குப் பாவமான மாம்ச சுபாவம் இல்லையென்றால், அவனுக்கு ஒரு இரட்சகர் தேவைப்படமாட்டார். ஆனால் எல்லா மனுஷரும் பாவம் செய்து ஏகமாய்க் கெட்டுப்போயிருக்கிறார்கள். இந்த மனுக்குலத்தாரின்மீது இயேசுகிறிஸ்துவுக்கு சர்வ அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. எல்லா நீதியும் இயேசுகிறிஸ்துவிடம் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. தமக்குக் கீழ்ப்படியாதவரை, தமக்குக் கீழ்ப்படிய வைக்கும் அதிகாரமும் இயேசுகிறிஸ்துவுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இயேசு கிறிஸ்துவுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் இந்த அதிகாரத்திற்கு ஒரு தெய்வீக திட்டமும் நோக்கமும் உள்ளது. பிதாவானவர் தம்முடைய குமாரனுக்குத் தந்தருளின யாவருக்கும் இயேசுகிறிஸ்து நித்திய ஜீவனைக் கொடுக்கும் பொருட்டாகவே, மாம்சமான யாவர்மேலும் தேவன் அவருக்கு அதிகாரங் கொடுத்திருக்கிறார். மீட்கப்படும்படியாக தெரிந்துகொள்ளப்பட்டோரைப் பிதாவானவர் இப்போது மீட்பரிடம் ஒப்புக்கொடுக்கிறார். இரட்சிக்கப்படுகிறவர்கள் இயேசு கிறிஸ்துவுக்குக் கிரீடமாக கொடுக்கப்படுகிறார்கள். அவர்கள் இயேசுகிறிஸ்துவினுடைய ஊழியத்தின் கனியாக இருக்கிறார்கள். தம்மிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கும் மனுஷருக்கு சந்தோஷத்தைக் கொடுக்கும் வண்ணமாக, இயேசுகிறிஸ்து அவர்களுக்கு நித்திய ஜீவனைக்கொடுக்கிறார்.

இயேசுகிறிஸ்துவிடம், தம்மிடத்தில் பிதா தந்தருளின யாவருக்கும் கொடுப்பதற்கு ஜீவனும் இருக்கிறது, கிரீடங்களும் இருக்கிறது. இயேசுகிறிஸ்து தம்முடைய பிள்ளைகளுக்குக் கொடுப்பது நித்திய ஜீவன். இந்த ஜீவன் ஒருபோதும் மரிப்பதில்லை. அதுபோலவே இயேசு தம்முடைய பிள்ளைகளுக்குக் கொடுப்பது நித்திய கிரீடங்கள். இவை ஒருபோதும் மங்கிப்போவதில்லை. இயேசுகிறிஸ்து சர்வ வல்லமையுள்ளவர். நித்திய ஜீவனையும் நித்திய கிரீடத்தையும் தம்முடைய பிள்ளைகளுக்கு, தம்முடைய வல்லமையினாலும், தம்முடைய கிருபையினாலும் கொடுக்கிறார்.

## அதிகாரம் - 17

பிதாவானவர் தம்பிடத்தில் ஒப்புக்கொடுத்த ஜனங்களை, இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் பரிசுத்தப்படுத்துகிறார். அவர்களுக்கு ஆவிக்குரிய ஜீவனைக்கொடுக்கிறார். இதுவே அவர்களுக்கு நித்திய ஜீவனாக இருக்கும். மனுஷருடைய ஆத்துமாவுக்குக் கொடுக்கப்படும். தேவகிருபையானது, அந்த ஆத்துமாவிலுள்ள பரலோக அனுபவமாகயிருக்கும். பிதாவானவர் தம்பிடத்தில் ஒப்புக்கொடுத்திருக்கும் ஜனங்களை, இயேசுகிறிஸ்து பரலோகத்தில் மகிமைப்படுத்துவார். அங்கு அவர்களுடைய சந்தோஷம் நிறைவாயிருக்கும். அவர்களுடைய கனி பரிபூரணமாக இருக்கும்.

நாம் தேவனுடைய ராஜ்யத்திலும், அவருடைய மகிமையிலும் பங்குபெறுமாறு அழைக்கப்பட்டிருக்கிறோம். அவருடைய ஆசீர்வாதத்தை நாம் சுதந்தரிக்கும் வண்ணமாக அவர் நம்மைத் தம்முடைய புத்திரராக சுவீகாரம்பண்ணியிருக்கிறார். நம்முடைய ஆவிக்குரிய அனுபவத்தில் நமக்கு கடைசியாகக் கிடைக்கப்போகும் ஆசீர்வாதம், நம்முடைய நித்திய ஜீவன் ஆகும். அந்த ஜீவனைப்பற்றி இயேசுகிறிஸ்து தம்முடைய பிள்ளைகளிடம் இப்போதே உபதேசம்பண்ணுகிறார். மனுபுத்திரர்மீது இயேசுகிறிஸ்துவுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்து தம்பிடத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி, அவர்களுக்கு இரட்சிப்பைக்கொடுத்து, அவர்களைத் தேவனுடைய பிள்ளைகளாக மாற்றுகிறார். தேவனுடைய ராஜ்யத்தின் பராமரிப்புக்களும், ஆசீர்வாதங்களும், கிருபையும் இயேசுகிறிஸ்துவிடம் மாத்திரமே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கேதுவாக நடைபெறுகிறது.

**நித்திய ஜீவன்**

**ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன் (யோவா 17:3).**

தேவனுடைய தெய்வீகத் திட்டம் இங்கு வெளிப்படுத்தப்படுகிறது. ஒன்றான மெய்த்தேவனாகிய பிதாவையும், அவர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் ஒரு பிரயாணம் போலிருக்கிறது. இதற்கு துவக்கமும் முடிவும் உண்டு. நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தின் முடிவு நித்திய ஜீவன். இந்த ஜீவன் நமக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்து இந்த நித்திய ஜீவனைத் தம்முடைய பிள்ளைகளெல்லோருக்கும் வெளிப்படுத்துகிறார். பிதாவானவர் தமக்குத் தந்தருளின யாவருக்கும் இயேசுகிறிஸ்து நித்திய ஜீவனைக்கொடுப்பதாக உறுதிபண்ணுகிறார். சுவிசேஷத்தின் மூலமாக நித்திய ஜீவன் அறிவிக்கப்படுகிறது. இதன் இரகசியம் வெளிப்படுத்தப்படுகிறது. இதுவரையிலும் நமக்கு தெரியாமலிருந்த நித்திய ஜீவன், இப்போது இயேசுகிறிஸ்துவின் மூலமாக நம்முடைய கரத்தில் கொடுக்கப்படுகிறது.

நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதே நம்முடைய ஜீவியத்திற்கு ஆசீர்வாதமான முடிவாக இருக்கும். இந்த ஆசீர்வாதத்தைப் பற்றிய நிச்சயம் நமக்குள் இருக்கவேண்டுமென்றால், நமக்கு தேவனைப்பற்றியும், இயேசுகிறிஸ்துவைப் பற்றியும் மெய்யான அறிவு இருக்கவேண்டும். ஆகையினால்தான் இயேசுகிறிஸ்து இதைப்பற்றிச் சொல்லும்போது "உம்மை அறிவதே, நித்திய ஜீவன்" என்று வெளிப்படுத்துகிறார்.

ஒன்றான மெய்த்தேவனாகிய பிதாவையும், அவர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன். தேவனையும் இயேசுகிறிஸ்துவையும் பற்றி அறிந்துகொள்வதில்தான் நித்திய ஜீவன் இருக்கிறது. நாம் இயேசுகிறிஸ்துவோடு ஐக்கியமாக இருக்கும்போது, அதே வேளையில் இயேசுகிறிஸ்துவில் தேவனோடு ஐக்கியமாகயிருக்கும்போது, நமக்கு நித்திய ஜீவனைப்பற்றிய சத்தியம் வெளிப்படுத்தப்படும். தேவனோடு ஐக்கியமாக இருப்பது மிகவும் இனிமையான அனுபவமாக இருக்கும். இதுவே பரலோகத்தின் அனுபவம்.

தேவனைப்பற்றிய அறிவும், கிறிஸ்துவைப்பற்றிய அறிவும் நித்திய ஜீவனைப்பெற்றுக்கொள்வதற்கு நம்மை வழிநடத்துகிறது. இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தை நாம் பெற்றுக்கொள்ளும்போது, அது நமக்குப் பரலோகத்திற்குச் செல்லும் பாதையைக் காண்பிக்கிறது. கிறிஸ்துவின் சுவிசேஷம் நம்மை தேவனிடத்திற்கு வழிநடத்திச் செல்கிறது. தேவனிடத்தில் நம்மை அழைத்து வருவதற்காகவே இயேசுகிறிஸ்து தம்முடைய ஜீவனைக் கல்வாரி சிலுவையில் ஒப்புக்கொடுத்தார். அவரே மெய்யான தேவனாக இருக்கிறார். அவரே ஒன்றான மெய்த்தேவனாகவும் இருக்கிறார். இயேசுகிறிஸ்துவை ஆராதிப்பதே மெய்யான ஆராதனையாக இருக்கிறது.

## அதிகாரம் - 17

பிதாவாகிய தேவன் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை இந்தப் பூமிக்கு அனுப்பியிருக்கிறார். கிறிஸ்துவின் சுவிசேஷம் நம்மை அவரிடத்திற்கு அழைத்துச் செல்கிறது. ஏதேன் தோட்டத்தில் தேவன் தடைபண்ணின கனியை மனுஷன் புசிக்காமலிருந்திருந்தால், நமக்கு இயல்பாகவே ஒன்றான மெய்த்தேவனைப்பற்றிய அறிவு நமக்குள் இருந்திருக்கும். நாம் அப்போதே நித்திய ஜீவனைப்பெற்றிருப்போம். ஆனால் மனுஷனோ தேவன் தடைபண்ணின கனியைப் புசித்து பாவம் செய்ததினால், பாவத்தில் வீழ்ந்துபோனான். இதனால் ஒன்றான மெய்த்தேவனைப்பற்றி, நாமாகவே அறிந்துகொள்ளும் சிலாக்கியத்தை நாம் இழந்துவிட்டோம். பாவத்தில் வீழ்ந்துபோன நமக்கு, ஒன்றான மெய்த்தேவனே, தம்மைப்பற்றி அறிவிக்கவேண்டியதாயிற்று.

இயேசுகிறிஸ்துவை நம்முடைய இரட்சகராக அறிந்துகொள்ளும்போது, நம்முடைய ஆவிக்குரிய கண்கள் திறக்கப்படுகிறது. இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதே நித்திய ஜீவன். இந்த நித்திய ஜீவனை மனுஷருக்குக் கொடுப்பதாக இயேசுகிறிஸ்து வாக்குப்பண்ணுகிறார். தேவனோடும் இயேசுகிறிஸ்துவோடும் ஐக்கியமாக இருக்கிறவர்கள், ஏற்கெனவே நித்திய ஜீவனின் காணியாட்சியில் பிரவேசித்திருக்கிறார்கள். அவர்கள் அதன் ஆசீர்வாதத்தைப் பரலோகத்தில் அவர்கள் முழுமையாக அனுபவிப்பார்கள். அவர்கள் இந்தப் பூமியிலும் நித்திய ஜீவனுடைய ஆசீர்வாதத்தின் ஆரம்பத்தை இப்போதே பெற்றுக்கொள்கிறார்கள்.

**உம்மை மகிமைப்படுத்தினேன்**

**பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன் (யோவா 17:4).**

இயேசுகிறிஸ்து இந்தப் பூமியில் பிதாவாகிய தேவனை இதுவரையிலும் மகிமைப்படுத்தியிருப்பதாக ஜெபிக்கிறார். இதற்கு முன்பு "நீர் உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும்" என்று ஜெபித்தவர், இப்போது "தாம் பிதாவை இதுவரையிலும் மகிமைப்படுத்தியதாகக் கூறி" ஜெபிக்கிறார். இயேசுகிறிஸ்து மறுபடியுமாக "நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்" என்று கூறி ஜெபிக்கிறார்.

இவ்விரண்டு வாக்கியங்களுக்கும் ஒரு வித்தியாசமுள்ளது. "நீர் உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும்" என்னும் வாக்கியத்திற்குப், பிதாவாகிய தேவன் இந்தப் பிரபஞ்சத்தில் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை மகிமைப்படுத்துவாராக என்பது பொருள். இரண்டாவதாக ஜெபிக்கும்போது, பிதாவானவர் இயேசுகிறிஸ்துவை பரலோகத்திலே மகிமைப்படுத்துவராக என்பது பொருளாகும். இந்தப் பூமியில் தம்மை மகிமைப்படுத்துமாறு ஜெபிக்கிற இயேசுகிறிஸ்து, பரலோகத்திலும் தம்மை மகிமைப்படுத்துமாறு ஜெபிக்கிறார்.

இயேசுகிறிஸ்து இந்தப் பூமியில் ஜீவித்ததினால் அவருடைய இருதயத்திற்குள் ஆறுதலும் சந்தோஷமும் உண்டாயிற்று. பூமியிலே இயேசுகிறிஸ்து பிதாவாகிய தேவனை மகிமைப்படுத்தியிருக்கிறார். தாம் செய்யும்படி பிதாவானவர் தமக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்திருக்கிறார். இதுவே இயேசுகிறிஸ்துவுக்குச் சந்தோஷத்தையும் சமாதானத்தையும் கொடுக்கிறது. பிதா தமக்கு நியமித்த ஊழியத்தை இயேசுகிறிஸ்து கணக்குப் பார்க்கிறார். தம்முடைய ஊழியம் நிறைவுபெற்றதைக் கண்டு இயேசுகிறிஸ்துவுக்குச் சந்தோஷம் உண்டாயிற்று.

தம்முடைய மகிமையைப்பற்றி இயேசுகிறிஸ்து இங்கு குறிப்பிடுகிறார். இந்தப் பூமியில் இயேசுகிறிஸ்துவின் ஜீவியம் முழுவதுமே, வரப்போகிற பரலோக ராஜ்யத்தைப் பிரதிபலிப்பதாகவே இருக்கிறது. இந்த உலகத்தில் மறுபடியும் இயேசுகிறிஸ்து வரப்போகிறார். பிதாவாகிய தேவன் குமாரனுக்கு ஒரு ஊழியத்தை ஒப்புக்கொடுத்திருக்கிறார். ஊழியத்தைக் கொடுப்பதோடு, அந்த ஊழியத்தை நிறைவேற்றுவதற்கும் பிதாவானவர் இயேசுகிறிஸ்துவுக்கு உதவிசெய்கிறார்.

பிதாவானவர் தமக்கு நியமித்த கிரியையை இயேசுகிறிஸ்து செய்து முடித்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் ஊழியம் நேர்த்தியாக செய்து முடிக்கப்பட்டிருக்கிறது. தமக்கு நியமிக்கப்பட்ட ஊழியத்தை எந்தவிதக் குறைவுமில்லாமல் இயேசுகிறிஸ்து பூரணமாக நிறைவேற்றியிருக்கிறார். தம்முடைய ஊழியம் நிறைவடைந்ததினால் இயேசுகிறிஸ்து பிதாவை மகிமைப்படுத்துகிறார். இயேசுகிறிஸ்துவின் ஊழியம் பரிபூரணமாக நிறைவடைந்திருப்பதினால் பிதாவுக்கு மகிமை உண்டாயிற்று. இதே மகிமை மீட்பராகிய இயேசுகிறிஸ்துவுக்கும் உண்டாகும். இயேசுகிறிஸ்து எதைத் துவக்குகிறாரோ அதை முடிக்கிறவராகவும் இருக்கிறார்.

## அதிகாரம் - 17

நாம் இயேசுகிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின்பற்றவேண்டும். தேவன் நமக்கு நியமித்திருக்கும் கிரியையைச் செய்து முடிக்கவேண்டும். நம்முடைய ஊழியங்களெல்லாவற்றிலும் தேவனுடைய மகிமைக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். அவருடைய மகிமைக்காகவே ஊழியம் செய்யவேண்டும். நம்முடைய வாழ்நாளில் கர்த்தருக்காகச் செய்யும் ஊழியத்தைப் பாதியிலேயே விட்டுவிடக்கூடாது. நம்முடைய ஜீவிய காலம் முழுவதும் நாம் கர்த்தருடைய ஊழியக்காரர்களாக இருக்கவேண்டும். நம்முடைய ஊழியத்தை நாம் நிறைவேற்றும் வரையிலும் நாம் சும்மாயிருக்கக்கூடாது. ஊழியம் செய்துகொண்டேயிருக்கவேண்டும்.

நம்முடைய ஆறுதல் கர்த்தரிடத்தில்தான் இருக்கிறது. சும்மாயிருந்து ஓய்வெடுப்பதினால் உண்டாகும் ஆறுதல் சோம்பேறித்தனமாகவே இருக்கும். பிதாவானவர் தாம் செய்யும்படி தமக்கு நியமித்த கிரியையைத் தாம் செய்து முடித்ததாக இயேசுகிறிஸ்து சாட்சி கொடுக்கிறார். இயேசுகிறிஸ்து இரட்சிப்பின் கிரியையைப் பூரணமாக நிறைவேற்றியிருக்கிறார். ஆகையினால் உலக இரட்சகராகிய இயேசுகிறிஸ்து பூரண இரட்சகராகவும் இருக்கிறார். தாம் செய்யும் எந்த வேலையையும் இயேசுகிறிஸ்து அறையும் குறையுமாகச் செய்து பாதியிலேயே விட்டுவிடுவதில்லை.

**என்னை மகிமைப்படுத்தும்**

**பிதாவே, உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும் (யோவா 17:5).**

இயேசுகிறிஸ்து தம்முடைய பிதாவினிடத்தில் ஜெபிக்கும்போது ஒரு நிச்சயத்தோடு ஜெபிக்கிறார். தமக்கு முன்பாக ஒரு சந்தோஷம் நியமிக்கப்பட்டிருக்கிறது என்று எதிர்பார்க்கிறார். ஆகையினால் "இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்" என்று கூறி ஜெபிக்கிறார். இயேசுகிறிஸ்து இதே வார்த்தையை "நீர் உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும்" (யோவா 17:2) என்று கூறி ஏற்கெனவே ஜெபித்திருக்கிறார்.

பிதாவானவர் குமாரனுக்கு வாக்குத்தத்தைக் கொடுத்திருந்தாலும், இயேசுகிறிஸ்து அந்த வாக்குத்தத்ததிற்காக ஜெபிக்கிறார். ஜெபத்தில் அதைக் கேட்டுப்பெற்றுக்கொள்கிறார்.

தேவன் நமக்குப் பல வாக்குத்தத்தங்களைக் கொடுத்திருந்தாலும், அவற்றையெல்லாம் நம்முடைய ஜெபத்தில் கேட்டுப்பெற்றுக்கொள்ள வேண்டும். ஜெபிக்காமல் வாக்குத்தத்தம் நமக்குச் சித்திக்காது. ஜெபிக்காமலேயே வாக்குத்தத்தம் தானாக நிறைவேறும் என்று எதிர்பார்க்கக்கூடாது. நம்முடைய நம்பிக்கைக்கு ஜெபமே ஆதாரமாக இருக்கவேண்டும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவனை ஜெபமே வழிநடத்தவேண்டும்.

தம்முடைய மகிமையைப்பற்றி இயேசுகிறிஸ்து ஜெபிக்கும்போது, "பிதாவானவர் தம்மைப் பூமியிலே மகிமைப்படுத்த வேண்டும் என்று மாத்திரம் ஜெபிக்காமல், "பிதாவானவர் தம்மை அவரிடத்தில் மகிமைப்படுத்த வேண்டும்" என்றும் ஜெபிக்கிறார். நாம் இந்தப் பூமியிலிருந்து பிதாவினிடத்தில் விண்ணப்பங்களை ஏறெடுக்கும்போது நமக்குத் தேவனுடைய கிருபையும் சமாதானமும் கிடைக்கும். பிதாவாகிய தேவனும், குமாரனாகிய இயேசுகிறிஸ்துவும் இணைந்து நம்முடைய ஜெபத்திற்குப் பதில் கொடுப்பார்கள். அவர்களிடமிருந்து தேவகிருபையையும், தேவசமாதானத்தையும் நாம் பெற்றுக்கொள்கிறோம். இவ்வாறாக பிதாவானவர் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவைத் தம்மில் மகிமைப்படுத்தியிருக்கிறார்.

உலகம் உண்டாகிறதற்கு முன்னே பிதாவினிடத்தில் குமாரனுக்கு மகிமை உண்டாயிருந்தது. அந்த மகிமையினாலே இப்பொழுது, பிதாவானவர் தம்மை, அவரிடத்தில் மகிமைப்படுத்துமாறு இயேசுகிறிஸ்து ஜெபிக்கிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய தெய்வத்துவத்தில் உலகம் உண்டாகிறதற்கு முன்னே இருந்தவர். சகலமும் சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்பாக, சிருஷ்டிகராகிய இயேசுகிறிஸ்து இந்த உலகத்திலிருந்தார். அவர் மூலமாகவே சகலமும் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்து இந்தப் பூமிக்கு வந்ததினால் மாத்திரம் அவருக்கு மகிமை வந்துவிடப்போவதில்லை. அவர் ஏற்கெனவே மகிமையுள்ளவர். உலகம் உண்டாகிறதற்கு முன்னே அவர் மகிமையோடிருந்தவர். எப்போதும் மகிமையோடிருக்கிறவர்.

## அதிகாரம் - 17

இயேசுகிறிஸ்து பிதாவாகிய தேவனோடு நித்திய காலமாக இருக்கிறார். நித்திய காலமாகவே குமாரனுக்குப் பிதாவினிடத்தில் மகிமை உண்டாயிருக்கிறது. தமக்கு மகிமை உண்டாகவேண்டும் என்பதற்காக, இயேசுகிறிஸ்து மனுக்குலத்தை மீட்டு இரட்சிக்கும் ஊழியத்தைச் செய்யவில்லை. நமக்கு மகிமை உண்டாகவேண்டும் என்பதற்காகவே, இயேசு நம்மை இரட்சிக்கிறார். நித்திய மகிமையுள்ள இயேசுகிறிஸ்து, நம்மை மீட்பதற்காகத் தம்முடைய ஜீவனையே ஒப்புக்கொடுத்திருக்கிறார். ஏனெனில் உலகம் உண்டாகிறதற்கு முன்னே குமாரனாகிய இயேசுகிறிஸ்துவுக்குப், பிதாவினிடத்தில் மகிமை உண்டாயிருக்கிறது.

இயேசுகிறிஸ்து இந்தப் பூமிக்கு வந்தபோது, தம்முடைய தெய்வீக மகிமையைவிட்டு, தம்மையே தாழ்த்தி, மனுஷரூபமெடுத்து, இந்த உலகத்திற்கு வந்திருக்கிறார். தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டிருக்கிறார். தம்முடைய மகிமையில் அவர் மாம்சமாக வெளிப்படவில்லை. இந்தப் பூமியில் இயேசுகிறிஸ்துவின் மனுஷத்துவத்தில், தேவனுடைய மகிமை வெளிப்படவில்லை. இயேசுகிறிஸ்து மறுபடியும் உயர்த்தப்படும்போது, அவர் தம்முடைய மகிமையைத் திரும்பப் பெற்றுக்கொள்வார்.

இந்தப் பூமியிலுள்ள பெரிய தலைவர்களைப்போலவும், இராஜாக்களைப்போலவும் தமக்கு மகிமை உண்டாகவேண்டுமென்று இயேசுகிறிஸ்து ஒருபோதும் ஜெபிக்கவில்லை. இயேசுகிறிஸ்துவுக்கு இந்த உலகத்தைப்பற்றியும் தெரியும். வரப்போகிற பரலோகத்தைப்பற்றியும் தெரியும். ஆகையினால் இயேசுகிறிஸ்து இப்பிரபஞ்சத்தின் மகிமையைத்தேடாமல், வரப்போகிற பரலோகத்தின் மகிமையையே தேடுகிறார். பரலோகத்தின் மகிமையே எல்லா மகிமையிலும் சிறந்தது. கிறிஸ்துவினிடத்தில் பரலோகத்தின் மகிமையைப்பற்றிய சிந்தையேயிருந்தது. கிறிஸ்துவிலிருந்த சிந்தையே நம்மிலும் இருக்கவேண்டும். நாமும் ஜெபிக்கும்போது "பிதாவாகிய தேவனே, நீர் என்னை உம்மிடத்தில் மகிமைப்படுத்தும்" என்று கூறி ஜெபிக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்து பிதாவினிடத்தில் ஜெபிக்கும்போது "நான் உம்மை மகிமைப்படுத்தினேன்" என்றும், "இப்போது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்" என்றும் கூறி ஜெபிக்கிறார். இவ்விரண்டு வாக்கியங்களும் ஒன்றுக்கொன்று பின்னிப்பிணைந்திருக்கிறது. இயேசு கிறிஸ்துவைப் பிதாவானவர் மகிமைப்படுத்துகிறாரென்றால், அவர் தம்மில்தாமே மகிமையுள்ளவராக இருக்கிறார். அவர் தம்மில்தாமே, தம்மையே மகிமைப்படுத்திக்கொள்கிறார்.

குமாரனாகிய இயேசுகிறிஸ்து தம்மைத் தாழ்த்துவதினால் அவருக்கு மகிமை உண்டாயிற்று. அவருடைய மகிமையில் பிதாவானவர் சந்தோஷப்படுகிறார். இயேசுகிறிஸ்து தம்மைத் தாழ்த்தும்போது அவருக்கு எந்த ஒரு இழப்பும் உண்டாகாது. அவருடைய மகிமை எப்போதுமே அவருடைய மகிமையாகவே இருக்கும். இயேசுகிறிஸ்துவின் மகிமை நித்தியமகிமை. பிதாவுக்கும் குமாரனுக்கும் இடையிலுள்ள உடன்படிக்கையின் பிரகாரம், குமாரனுக்குப் பிதாவினிடத்தில் நித்திய மகிமை உண்டாயிருக்கிறது. இயேசுகிறிஸ்து தமக்கு முன்பாக நியமிக்கப்பட்டிருக்கும் சந்தோஷத்தை நினைத்துப் பார்த்து, தம்முடைய சிலுவையைத் தாங்கிக்கொண்டார். இயேசுகிறிஸ்து பிதாவினிடத்தில் ஜெபிக்கும்போது, தாம் உயர்த்தப்படுவதும், தாம் மகிமைப்படுத்தப்படுவதும் பரிபூரணமாகும் என்று எதிர்பார்க்கிறார். ஏனெனில் பிதாவானவர் தமக்கு நியமித்த கிரியையை இயேசுகிறிஸ்து செய்து முடித்திருக்கிறார்.

இயேசுகிறிஸ்துவின் மகிமையினால் பிதாவானவர் திருப்தியடைந்திருக்கிறார். நமக்கும் திருப்தி உண்டாயிருக்கிறது. ஆகையினால்தான் பிதாவானவர் தம்முடைய குமாரனைப்பற்றி சாட்சிகொடுக்கும்போது, "இவரில் நான் பிரியமாயிருக்கிறேன்" என்று கூறி சாட்சி சொல்லுகிறார். இதன் மூலமாக ஒரு சத்தியம் தெளிவாகிறது. இந்தப் பூமியில் யாரெல்லாம் தேவனை மகிமைப் படுத்துகிறார்களோ, அவர்கள் மாத்திரமே பிதாவினிடத்தில் மகிமைப் படுத்தப்படுவார்கள்.

### பிள்ளைகளுக்காக ஜெபம்
### யோவா 17 : 6-10

**யோவா 17:6. நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த மனுஷருக்கு உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன். அவர்கள் உம்முடையவர்களாயிருந்தார்கள், அவர்களை எனக்குத் தந்தீர், அவர்கள் உம்முடைய வசனத்தைக் கைக்கொண்டிருக்கிறார்கள்.**

## அதிகாரம் - 17

**யோவா 17:7. நீர் எனக்குத் தந்தவைகளெல்லாம் உம்மாலே உண்டாயினவென்று இப்பொழுது அறிந்திருக்கிறார்கள்.**

**யோவா 17:8. நீர் எனக்குக் கொடுத்த வார்த்தைகளை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்; அவர்கள் அவைகளை ஏற்றுக்கொண்டு, நான் உம்மிடத்திலிருந்து புறப்பட்டுவந்தேன் என்று நிச்சயமாய் அறிந்து, நீர் என்னை அனுப்பினீர் என்று விசுவாசித்திருக்கிறார்கள்.**

**யோவா 17:9. நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்; உலகத்துக்காக வேண்டிக்கொள்ளாமல், நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்; அவர்கள் உம்முடையவர்களாயிருக்கிறார்களே.**

**யோவா 17:10. என்னுடையவைகள் யாவும் உம்முடையவைகள், உம்முடையவைகள் என்னுடையவைகள்; அவர்களில் நான் மகிமைப்பட்டிருக்கிறேன்.**

**எனக்குத் தந்த மனுஷர்**

**நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த மனுஷருக்கு உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன். அவர்கள் உம்முடையவர்களாயிருந்தார்கள், அவர்களை எனக்குத் தந்தீர், அவர்கள் உம்முடைய வசனத்தைக் கைக்கொண்டிருக்கிறார்கள் (யோவா 17:6).**

இயேசுகிறிஸ்து பிதாவினிடத்தில் ஜெபிக்கிற போது, முதலாவதாகத் தமக்காக ஜெபித்துவிட்டு, அதன்பின்பு தம்முடைய பிள்ளைகளுக்காக ஜெபிக்கிறார். அவர் உலகத்தாருக்காக ஜெபிக்கவில்லை. "உலகத்திற்காக வேண்டிக்கொள்ளாமல், நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக்கொள்கிறேன்" (யோவா 17:9) என்று கூறி ஜெபிக்கிறார். இதனால் இயேசுகிறிஸ்து இந்த உலகத்திலுள்ள மனுஷருக்காக எந்த ஜெபமும் ஏறெடுக்கவில்லை என்று சொல்ல முடியாது. அவர் மனுக்குலத்தார் எல்லோருக்காகவும் ஜெபிக்கிறார்.

"நீர் என்னை அனுப்பினதை, உலகம் விசுவாசிக்கிறதற்காக.... வேண்டிக்கொள்கிறேன்" (யோவா 17:21) என்பதே இயேசுவின் ஜெபம். உலகத்திலுள்ள ஜனங்கள் போரடிக்கப்படாத தானியக்கதிர்களைப்போல குவித்து வைக்கப்பட்டிருந்தாலும், இயேசுகிறிஸ்து அவர்களுக்காகவும் ஜெபிக்கிறார். அவர்களை நேசிக்கிறார். அவர்களுக்காக தம்முடைய ஜீவனை கல்வாரி சிலுவையில் பலியாக ஒப்புக்கொடுக்கிறார்.

போரடிக்கப்படாத தானியக்குவியலில், கோதுமை மணிகளும் இருக்கும், பதர்களும் இருக்கும். இவை இரண்டையும் பிரிக்கும்போது கோதுமை மணிகள் களஞ்சியத்தில் தனியாக சேர்த்துவைக்கப்படும். பதர்கள் சுட்டெரிக்கப்படும். இந்தப் பதர்களைப் போல பிரயோஜனமில்லாதர்களுக்காக இயேசுகிறிஸ்து ஜெபிப்பதில்லை. இரண்டும் கலந்திருக்கும்போது, கோதுமை மணியைப் பிரித்தெடுக்கவேண்டும் என்பதற்காக, அதற்காகவே ஜெபிக்கிறார். அதுபோலவே இந்த உலகத்தில் கர்த்தருடைய பிள்ளைகளும், பிசாசின் பிள்ளைகளும் இருக்கிறார்கள். உலகத்தார் என்பது பிசாசின் பிள்ளைகளைக்குறிக்கும் வார்த்தையாகும். இயேசு அவர்களுக்காக ஜெபிக்கவில்லை. ஆனால் இந்த உலகத்தில் அவர்களோடு சேர்ந்திருக்கும், தம்முடைய பிள்ளைகளுக்காக ஜெபிக்கிறார். தம்முடைய பிள்ளைகளுக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறார்.

தோட்டக்காரர் திராட்சச்செடியைச் சுத்தப்படுத்தும்போது, கனிதரும் கொடியைப் பராமரித்து, கனிதராத காய்ந்துபோயிருக்கும் சருகுகளை வெட்டிப்போடுவார். கனிதரும் கொடியின்மீது கரிசனையோடிருப்பார். அதுபோலவே இயேசுகிறிஸ்து தம்முடைய பிள்ளைகளுக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறார். இயேசுகிறிஸ்து ஒருபோதும் இந்த உலத்திற்கு எதிராக ஜெபிக்கவில்லை. ஆனால் அவர் இந்த உலகத்தாருக்காக ஜெபிக்காமல், இந்த உலகத்திலுள்ள தம்முடைய பிள்ளைகளுக்காகவே ஜெபிக்கிறார். இந்த உலகத்தின் பிள்ளைகளை இயேசுகிறிஸ்து சத்துருவின் கைகளிலேயே விட்டுவிடுகிறார்.

## அதிகாரம் - 17

இயேசுகிறிஸ்து இந்த உலகத்திலிருந்து யாரைத் தெரிந்தெடுத்திருக்கிறார் என்பது நமக்குத் தெரியாது. தெரிந்துகொள்ளப்பட்டவர் யாரென்று நமக்குத் தெரியாததினால், நாம் எல்லா மனுஷருக்காகவும் ஜெபிக்கவேண்டும். "நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்; நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம்பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்ய வேண்டும். நம்முடைய இரட்சகராகிய தேவனுக்குமுன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது. எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்" (1தீமோ 2:1-4). யாருக்கெல்லாம் ஜீவன் இருக்கிறதோ அவர்களெல்லாம் இரட்சிக்கப்படுவதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆகையினால் அவர்களுக்காக நாம் ஜெபிப்பது நமக்கு நியமிக்கப்பட்டிருக்கு தேவநியதி.

இயேசுகிறிஸ்து மனுபுத்திரருக்காக ஜெபிக்கிறார். பிதாவானவர் தமக்குத் தந்த மனுஷருக்காக இயேசுகிறிஸ்து ஜெபம்பண்ணுகிறார். அவர்கள் தம்முடைய வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றும், அவற்றை விசுவாசிக்கவேண்டுமென்றும் இயேசுகிறிஸ்து ஜெபிக்கிறார். இவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் தம்மை விசுவாசிக்கிறவர்களுக்காகவும், இயேசுகிறிஸ்து பிதாவினிடத்தில் வேண்டிக்கொள்கிறார். இயேசுகிறிஸ்துவின் வேண்டுதல்களும் விண்ணப்பங்களும், இனிமேல் நடைபெறப்போகும் சம்பவங்களுக்காக மாத்திரமல்ல, ஏற்கெனவே நடைபெற்ற சம்பவங்களுக்கும் பிரயோஜனமாயிருக்கிறது. எல்லா இடங்களிலும், எல்லா காலத்திலுமுள்ள எல்லா விசுவாசிகளுக்காகவும் இயேசுகிறிஸ்து ஜெபிக்கிறார்.

தெரிந்து கொள்ளப்பட்டவர்களை, பிதாவானவர் இந்த உலகத்தில் தெரிந்தெடுத்து, இயேசுகிறிஸ்துவிடத்தில் தந்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் பிதாவினால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை அவர்கள் பிரசங்கம்பண்ணவேண்டும் என்பதற்காகவும், கிறிஸ்துவின் சபையை அவர்கள் ஸ்தாபிக்கவேண்டும் என்பதற்காகவும், பிதாவானவர் அவர்களை உலகத்தில் தெரிந்தெடுத்து, இயேசுகிறிஸ்துவுக்குத் தந்திருக்கிறார்.

சீஷர்கள் எல்லாவற்றையும் விட்டு இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுகிறார்கள். சீஷர்களின் வாழ்க்கையில் இது ஒரு முக்கியமான தீர்மானம். கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவித்து, அவருடைய சபையை ஸ்தாபிக்கவேண்டுமென்பதே, சீஷர்கள் இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுவதற்கு அடிப்படைக் காரணமாகும். இதுவே சீஷத்துவத்தின் இரகசியம். பிதாவானவர் சீஷர்களை இயேசுகிறிஸ்துவிடம் தரவில்லையென்றால், சீஷர்கள் தங்களை இயேசுகிறிஸ்துவிடம் ஒப்புக்கொடுக்கமாட்டார்கள். எல்லாவற்றையும் விட்டுவிட்டு அவர்கள் இயேசுவைப் பின்பற்றிச் செல்லவுமாட்டார்கள்.

அப்போஸ்தலர்களும், அப்போஸ்தல ஊழியமும், இயேசுகிறிஸ்து சபைக்குத் தந்திருக்கும் வரமாகும். இயேசுகிறிஸ்து இந்த வரத்தைச் சபைக்குத் தருவதற்கு முன்பாகவே, பிதாவானவர் இந்த வரத்தை இயேசுகிறிஸ்துவுக்குக் கொடுத்திருக்கிறார். இயேசுகிறிஸ்து மனுஷருக்காகவே இந்த வரத்தைப் பிதாவினிடத்திலிருந்து பெற்றுக்கொண்டார். இதை மனுஷருக்குக் கொடுக்கவேண்டும் என்பதற்காகவே பெற்றுக்கொண்டார். இயேசுகிறிஸ்துவுக்காக ஊழியம் செய்கிறவர்கள், இதைத் தியானித்துப்பார்த்து, இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்ய நம்மைப் பூரணமாக அர்ப்பணிக்கவேண்டும்.

கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நாம் எல்லோருமே இந்த உலகத்தில் பிதாவினால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். பிதாவானவர் நம்மை இயேசுகிறிஸ்துவிடம் கொடுத்திருக்கிறார். "பிதாவானவர் எனக்குக் கொடுக்கிற யாவும் என்னிடத்தில் வரும். என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை. அவர் எனக்குத் தந்தவைகளில் ஒன்றையும் நான் இழந்துபோகாமல், கடைசிநாளில் அவைகளை எழுப்புவதே என்னை அனுப்பின பிதாவின் சித்தமாயிருக்கிறது" (யோவா 6:37,39).

## அதிகாரம் - 17

தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை, குமாரனுக்குக் கொடுக்க, பிதாவுக்கு அதிகாரமுள்ளது. "அவர்கள் உம்முடையவர்களாயிருந்தார்கள்" என்று இயேசுகிறிஸ்து பிதாவிடம் கூறுகிறார். மனுஷரெல்லோருமே சிருஷ்டிக்கப்பட்ட சிருஷ்டிகள். மனுக்குலத்தார் தேவனிடத்திலிருந்தே தங்களுடைய ஜீவனைப்பெற்றுக்கொள்கிறார்கள். மனுபுத்திரர் தேவனால் சிருஷ்டிக்கப்பட்டவர்களாக இருந்தாலும், மனுஷருடைய இருதயம் துன்மார்க்கம் நிறைந்ததாக இருக்கிறது. தேவனை வஞ்சிக்கிற சுபாவம் மனுஷரிடத்தில் காணப்படுகிறது.

மனுஷரெல்லோரும் தேவனைவிட்டு வீழ்ந்துபோனாலும், இந்த மனுக்குலத்திலிருந்து தேவன் தமக்குரியவர்களைத் தெரிந்துகொள்கிறார். அவர்கள் இரட்சிக்கப்படவேண்டும் என்பதற்காகப் பிதாவானவர் அவர்களை இயேசுகிறிஸ்துவிடம் ஒப்புக்கொடுக்கிறார். கல்வாரி சிலுவையில் இயேசுகிறிஸ்து சிந்திய இரத்தத்தினால், பிதாவினால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் தங்களுடைய ஆத்தும இரட்சிப்பைப் பெற்றுக்கொள்கிறார்கள். மனுஷருடைய இரட்சிப்பு இயேசுகிறிஸ்துவின் கிருபாதாரபலியினால் உண்டாயிற்று. இது தேவனுடைய சுத்தகிருபை. மனுஷனுடைய சுயமுயற்சியினாலோ, சுயபக்தியினாலோ ஒருவனும் இரட்சிக்கப்படுவதில்லை. மனுக்குலத்தாரின் இரட்சிப்பு தேவனுடைய கிருபைக்கு எடுத்துக்காட்டாயிருக்கிறது.

இரட்சிக்கப்படுகிறவர்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். இவர்கள் தேவனுக்காக வேறுபிரிக்கப்பட்டிருக்கிறார்கள். பிதாவானவர் தமக்குத் தந்தவைகளெல்லாம் அவராலே உண்டாயின என்று இயேசுகிறிஸ்து அறிக்கையிடுகிறார். பிதாவானவர் தமக்குத் தந்தவர்களெல்லோருமே அவருடையவர்களாயிருக்கிறார்கள். பிதா அவர்களைக் கிறிஸ்துவுக்குத் தந்தார். பிதாவானவர் தம்மிடத்தில் தந்தவர்களை, இயேசுகிறிஸ்து பிதாவினிடத்தில் கொண்டு வருகிறார். அவர்களெல்லோருமே பிதாவினுடையவர்களாக இருக்குமாறு, இயேசுகிறிஸ்து அவர்களைப் பிதாவின் சமுகத்தில் ஒப்புக்கொடுக்கிறார்.

பிதாவானவர் குமாரனிடத்தில், தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களைத் தந்தார். ஒரு மேய்ப்பனிடத்தில் ஆடுகளைத் தருவதுபோல, அவைகளை மேய்ப்பதற்கும், மேய்ச்சலைக் கண்டடையச்செய்வதற்கும், பாதுகாப்பதற்கும், பிதாவானவர் தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களைக் குமாரனிடத்தில் கொடுத்திருக்கிறார். குணமடைவதற்காக நோயாளிகளை வைத்தியரிடம் ஒப்புக்கொடுப்பது போலவும், கற்றுக்கொள்ள வேண்டுமென்பதற்காக மாணவர்களை ஆசிரியர்களிடம் ஒப்புக் கொடுக்கப்படுவது போலவும், பிதாவானவர் தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களைக் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவிடம் ஒப்புக் கொடுத்திருக்கிறார்.

இந்த உலகத்திலிருந்து தேவன் நம்மைத் தமக்குரியவர்களாகத் தெரிந்தெடுப்பது அவருடைய சுத்தகிருபை. தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் உலகத்தால் அழிந்துபோய்விடக்கூடாது. கனியில்லாதவர்களாகப் பிரயோஜனமற்ற ஜீவிக்கக்கூடாது. அவர்கள் இயேசுகிறிஸ்துவின் பாதுகாப்புக்கும் பராமரிப்புக்கும் உட்படுத்தப்படவேண்டும். அப்போது அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியம் கனிகொடுக்கக்கூடியதாக வளம் பெறும். அவர்கள் நிறைவான பலனைத் தருவார்கள்.

"கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி; அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார்; அவருடைய ஆத்துமா தன்னைக் குற்றநிவாரணபலியாக ஒப்புக்கொடுக்கும்போது, அவர் தமது சந்ததியைக் கண்டு, நீடித்தநாளாயிருப்பார், கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினால் வாய்க்கும். அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்; என் தாசனாகிய நீதிபரர் தம்மைப்பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்; அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்துகொள்வார்" (ஏசா 53:10,11).

பிதாவானவர் இந்த உலகத்தில் தெரிந்தெடுத்து, தம்மிடத்தில் தந்தவர்களிடம், இயேசுகிறிஸ்து பிதாவின் வசனத்தை உபதேசம்பண்ணும் ஊழியத்தைப் பொறுப்பேற்றுக்கொள்கிறார். "நீர் எனக்குக் கொடுத்த வார்த்தைகளை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்" (யோவா 17:8). இதுவே கிறிஸ்துவினுடைய உபதேசத்தின் பிரதான திட்டமாகும். தேவனுடைய நாமத்தைப் பிரஸ்தாபம்பண்ணுவதே கிறிஸ்துவின் உபதேசம். தேவனுடைய நாமத்தை ஜனங்களுக்கு அறிவிக்கவேண்டும். அவருடைய வசனத்தை ஜனங்களுக்குச் சொல்லவேண்டும். அவர்கள் அவற்றை ஏற்றுக்கொண்டு தேவன்மீது இன்னும் அதிகமாய் அன்புகூரவேண்டும். தேவனை இன்னும் அதிகமாய் ஆராதிக்கவேண்டும். இதுவே கிறிஸ்துவின் சித்தம்.

## அதிகாரம் - 17

பிதாவானவர் தமக்குக் கொடுத்த ஊழியத்தை இயேசுகிறிஸ்து முழுமையாக நிறைவேற்றியிருக்கிறார். அவர் தமக்குத் தந்த மனுஷருக்குப் பிதாவின் நாமத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தில் விசுவாசம் நிரம்பியிருக்கிறது. பிதாவானவர் தம்மிடத்தில் எப்படிப்பட்ட ஊழியத்தைக் கொடுத்தாரோ, அதைக் குமாரனானவர் அப்படியே செய்து முடித்திருக்கிறார். பிதாவானவர் தமக்குக் கொடுத்த வார்த்தைகளைக், குமாரன் அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்.

கிறிஸ்துவின் ஊழியக்காரர்களாகிய நாமும், கர்த்தருடைய வார்த்தையைப் பிரசங்கம்பண்ணும்போது, இயேசுகிறிஸ்துவின் இந்த முன்மாதிரியைப் பின்பற்றவேண்டும். பரிசுத்த ஆவியானவர் நமக்குக் கொடுக்கும் வார்த்தைகளை மாத்திரமே நம்முடைய பிரசங்கத்தில் பயன்படுத்த வேண்டும். நம்முடைய பிரசங்கத்தின் முக்கியமான பகுதி தேவனுடைய நாமத்தை வெளிப்படுத்துவதாகவே இருக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் ஊழியம் செய்யும்போது, தம்முடைய நாம மகிமையைத் தேடாமல், பிதாவையே மகிமைப்படுத்தினார். மனுபுத்திரருக்கு தேவனுடைய நாமத்தை வெளிப்படுத்த வேண்டும் என்பது மாத்திரமே இயேசுகிறிஸ்துவின் ஊழியமாக இருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளும், அவர் செய்த அற்புதங்களும் அடையாளங்களும், தேவனுடைய நாமத்தை வெளிப்படுத்துவதற்காகவே கிரியை செய்கிறது.

பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தைக் குமாரன் மாத்திரமே பெற்றிருக்கிறார். ஆகையினால் தேவனுடைய இரகசியங்களையும் தெய்வீக சத்தியத்தையும் மனுக்குலத்திற்கு வெளிப்படுத்தும் சிலாக்கியம் இயேசுகிறிஸ்துவுக்கு மாத்திரமே உண்டு. இயேசுகிறிஸ்து மாத்திரமே மனுஷருடைய ஆவிகளில் பிரவேசிக்கக்கூடியவர். இயேசுகிறிஸ்துவினால் மாத்திரமே மனுஷருடைய இருதயங்களில் கிரியை செய்து, தேவனுடைய இரகசியங்களைப் புரிந்துகொள்வதற்கு உதவிபுரிய முடியும்.

கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நம்மால் கர்த்தருடைய நாமத்தை அறிவிக்க மாத்திரமே முடியும். ஆனால் இயேசுகிறிஸ்துவால் மாத்திரமே அந்த நாமத்தை வெளிப்படுத்தவும் முடியும். ஊழியக்காரர்கள் தேவனுடைய வார்த்தையை மனுஷரிடத்தில் பேசலாம். ஆனால் இயேசுகிறிஸ்துவோ தம்முடைய வார்த்தைகளை நம்மோடு பேசுவது மாத்திரமல்ல, அந்த வார்த்தைகளை நம்முடைய இருதயத்திற்குள்ளும் பதியச்செய்கிறார். மெய்யாகவே பிதாவானவர் இந்த உலகத்தில் தெரிந்தெடுத்து, தமக்குத் தந்த மனுஷரெல்லோருக்கும், இயேசுகிறிஸ்து அவருடைய நாமத்தைச் சீக்கிரமாய் வெளிப்படுத்துவார். சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை அறிவிக்கும் கட்டளையை, இயேசுகிறிஸ்து தம்முடைய ஊழியக்காரருக்குக் கொடுத்திருக்கிறார். நாம் விசுவாசத்தோடும் உண்மையோடும் சுவிசேஷத்தை அறிவிக்கும்போது, தெரிந்துகொள்ளப்பட்ட மனுஷருக்கு இயேசுகிறிஸ்து தேவனுடைய நாமத்தை வெளிப்படுத்துவார்.

### நீர் எனக்கு கொடுத்த வார்த்தைகள்

**நீர் எனக்குத் தந்தவைகளெல்லாம் உம்மாலே உண்டாயினவென்று இப்பொழுது அறிந்திருக்கிறார்கள். நீர் எனக்குக் கொடுத்த வார்த்தைகளை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்; அவர்கள் அவைகளை ஏற்றுக்கொண்டு, நான் உம்மிடத்திலிருந்து புறப்பட்டுவந்தேன் என்று நிச்சயமாய் அறிந்து, நீர் என்னை அனுப்பினீர் என்று விசுவாசித்திருக்கிறார்கள் (யோவா 17:7,8).**

பிதாவானவர் தம்மிடத்தில் தந்தவர்களை இயேசுகிறிஸ்து பாதுகாக்கிறார், பராமரிக்கிறார். அவர்களுக்குப் பிதாவின் நாமத்தை வெளிப்படுத்துகிறார். அவர்கள் பிதாவின் வசனத்தைக் கைக்கொள்கிறார்கள். பிதாவானவர் இயேசுகிறிஸ்துவுக்குத் தந்தவைகளெல்லாம் அவரால் உண்டாயின என்று இப்போது அறிந்திருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து அவர்களுக்குக் கொடுத்த வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு, அவர் பிதாவினிடத்திலிருந்து புறப்பட்டு வந்திருக்கிறார் என்பதை நிச்சயமாய் அறிந்துகொள்கிறார்கள். பிதாவானவர் குமாரனை அனுப்பியிருக்கிறாரென்றும் விசுவாசிக்கிறார்கள்.

## அதிகாரம் - 17

பிதாவானவர் இந்த உலகத்தில் தெரிந்தெடுத்து, குமாரனிடத்தில் தந்த மனுஷர் மத்தியில், இயேசுகிறிஸ்துவின் உபதேசம் வல்லமையாய் கிரியை செய்கிறது. கிறிஸ்துவின் வார்த்தை வெற்றி பெறுகிறது. பிதாவானவர் தமக்குக் கொடுத்த வார்த்தைகளை இயேசுகிறிஸ்து அவர்களுக்குக் கொடுக்கிறார். அவர்கள் அவைகளை ஏற்றுக்கொள்கிறார்கள். ஒரு விதையை ஏற்றுக்கொள்ளும் நிலத்தைப்போல, தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் கர்த்தருடைய வசனத்தை ஏற்றுக்கொள்கிறார்கள். பூமியானது மழை நீரை ஏற்றுக்கொள்வதுபோல, கர்த்தருடைய பிள்ளைகள் சத்திய வசனத்தை ஏற்றுக்கொள்கிறார்கள். தண்ணீரைப் பூமி உறிஞ்சிக் குடிப்பதுபோல, விசுவாசிகள் வசனத்தின் சாரத்தைத் தங்கள் ஆத்துமாவிற்குள் உறிஞ்சி குடித்து, ஆத்தும தாகத்தைத் தணித்துக்கொள்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் வசனம் சத்திய வசனமாக இருக்கிறது. இயேசுகிறிஸ்து தேவனுடைய வசனத்தை அவர்களுக்குக் கொடுக்கும்போது அவர்கள் அதை ஏற்றுக்கொள்கிறார்கள். வசனத்தின் பிரகாரமாக ஜீவிக்க தங்களை ஒப்புக்கொடுக்கிறார்கள். கிறிஸ்துவின் கட்டளைக்கு நாம் கீழ்ப்படிந்தால் மாத்திரமே, அந்தக் கட்டளைகளை நமக்குப் பெற்றுக்கொள்ள முடியும். இயேசுகிறிஸ்து தங்களுக்குக் கொடுத்த வார்த்தைகளை, விசுவாசிகள் ஏற்றுக்கொள்ளவேண்டும். இந்த வசனம் ஒரு சில விசுவாசிகளுக்கு மாத்திரம் புதிதாய்க் கொடுக்கப்படும் வசனமல்ல. எல்லா தேசங்களிலுமுள்ள எல்லா பிள்ளைகளுக்கும், எல்லா காலங்களிலும் வாழும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட அனைவருக்கும், பிதாவின் வசனம் கொடுக்கப்படுகிறது.

பிதாவானவர் தமக்குக் கொடுத்த வார்த்தைகளை, இயேசுகிறிஸ்து அவர்களுக்குக் கொடுக்கும்போது, அவர்கள் அதை ஏற்றுக்கொள்கிறார்கள். வார்த்தையின் அர்த்தத்தைப் புரிந்துகொள்கிறார்கள். இந்த வார்த்தையை ஏற்றுக்கொண்டதினால், இயேசுகிறிஸ்து பிதாவினிடத்திலிருந்து புறப்பட்டு வந்தவர் என்பதை நிச்சயமாய் அறிந்துகொள்கிறார்கள். அத்தோடு பிதாவானவர் குமாரனை அனுப்பியிருக்கிறார் என்பதையும் விசுவாசிக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் எல்லா ஊழியங்களும், எல்லா வல்லமைகளும், ஆவியானவரின் எல்லா வரங்களும், எல்லா கிருபைகளும், எல்லா ஆறுதல்களும் தேவனிடத்திலிருந்தே வருகிறது. தேவனுடைய கிருபையினால் இவை அனைத்தும் திட்டமிடப்பட்டிருக்கிறது. தேவனுடைய நாம மகிமைக்காகவே இவை அனைத்தும் மனுஷருக்குக் கொடுக்கப்படுகிறது. மனுஷனுடைய இரட்சிப்பில் தேவனுடைய நாமம் மகிமைப்படுகிறது. நம்முடைய ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் வேண்டுமானால் நாம் தேவனுடைய வார்த்தையைத் தியானம்பண்ண வேண்டும். அவர் கொடுக்கும் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளவேண்டும். வார்த்தைகளின் கருத்தை அறிந்து அதை விசுவாசிக்கவேண்டும்.

நாம் நீதிமான்களாக இருக்கவேண்டுமென்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறபடியினால், தேவன் நிச்சயமாகவே நம்மை நீதிமானாக்குவார். தேவனுடைய சுபாவம் கிருபை நிறைந்ததாக இருக்கிறபடியினால் அவர் நிச்சயமாகவே நம்மை பரிசுத்தப்படுத்துவார். தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள், தேவனுடைய வார்த்தையைக் கேட்டு, அதை விசுவாசித்து, அதை உறுதியோடு ஏற்றுக்கொள்கிறார்கள். இயேசுகிறிஸ்து தேவனிடத்திலிருந்து புறப்பட்டு வந்தவர் என்பதை நிச்சயமாய் அறிந்துகொள்கிறார்கள்.

நாம் விசுவாசிப்பது என்ன என்பதை, நாம் நிச்சயமாக அறிந்துகொள்ளவேண்டும். சத்தியமாவது என்ன என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். எல்லா சத்தியங்களையும் நம்மால் பூரணமாக அறிந்துகொள்ள முடியாமல் போகலாம். பரிசுத்த ஆவியானவர் நமக்கு உபதேசம்பண்ணும்போது, சத்தியத்தை அறிந்துகொள்ள அவர் நமக்கு உதவிபுரிவார். சகல சத்தியத்திற்குள்ளும் ஆவியானவர் நம்மை வழிநடத்துவார். நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம். ஆகையினால் நம்முடைய விசுவாசம் எப்போதுமே உறுதியுள்ளதாக இருக்கவேண்டும். இயேசுகிறிஸ்து தேவனிடத்திலிருந்து புறப்பட்டு வந்திருக்கிறவர் என்பதை நாம் நிச்சயமாக அறிந்துகொள்ளவேண்டும். இந்த சத்தியத்தை நாம் நிச்சயமாக விசுவாசிக்கவேண்டும்.

## அதிகாரம் - 17

இயேசுகிறிஸ்து தேவனிடத்திலிருந்து புறப்பட்டு வந்திருக்கிறார் என்பதை நாம் நிச்சயமாக அறிந்துகொண்டு, தேவன் அவரை அனுப்பியிருக்கிறார் என்பதை நாம் விசுவாசிக்கும்போது அவருடைய உபதேசங்களையெல்லாம் நாம் தெய்வீக சத்தியங்களாக ஏற்றுக்கொள்வோம். இயேசுகிறிஸ்து கொடுக்கும் வாக்குத்தத்தங்களெல்லாம் நிறைவேறும் என்பதற்கு தெய்வத்துவமே அச்சாரமாக இருக்கிறது.

இயேசுகிறிஸ்து பிதாவினிடத்தில் ஜனங்களுக்காக ஜெபிக்கும்போது, அவர் மிகுந்த சந்தோஷத்தோடு ஜெபிக்கிறார். ஒவ்வொரு வார்த்தையிலும் பிதாவை மகிமைப்படுத்துகிறார். பிதாவின் ஊழியத்தை மனுஷர் மத்தியில் செய்து முடித்திருப்பதாக அறிக்கை செய்கிறார். தேவனுடைய நாமம் இதனால் மகிமைப்படுவதைக் கண்டு இயேசுகிறிஸ்து சந்தோஷப்படுகிறார். நம்முடைய கர்த்தரும் ஆண்டவருமாகிய இயேசுகிறிஸ்து மிகுந்த சந்தோஷத்தோடு பிதாவினிடத்தில் ஜெபிப்பதுபோல நாமும் ஜெபிக்கவேண்டும்.

மனுஷருடைய விசுவாசத்தை இயேசுகிறிஸ்து அங்கீகரிக்கிறார். நம்முடைய விசுவாசத்தில் சில குறைகள் காணப்படலாம். ஆனாலும் குறைகளை அதிகமாகப் பார்க்காமல், நம்முடைய பலவீனங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், ஜனங்கள் வார்த்தைகளை ஏற்றுக்கொள்கிறார்கள் என்றும், அவர்கள் நிச்சயமாய் அறிந்துகொள்கிறார்கள் என்றும், அவர்கள் வார்த்தையை விசுவாசிக்கிறார்கள் என்றும் இயேசுகிறிஸ்து பிதாவினிடத்தில் மனுஷரைக் குறித்து சாட்சி கொடுக்கிறார். பிதாவாகிய தேவனிடத்தில் இயேசுகிறிஸ்து நமக்காகப் பரிந்து பேசுகிறார். பிதாவானவர் தமக்குத் தந்த மனுஷருக்காக இயேசுகிறிஸ்து அவரிடத்தில் வேண்டிக்கொள்கிறார். இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளை யாரெல்லாம் ஏற்றுக்கொண்டு, அவர் பிதாவினிடத்திலிருந்து புறப்பட்டு வந்திருக்கிறவர் என்பதை நிச்சயமாய் அறிந்துகொண்டு, பிதாவானவர் அவரை அனுப்பியிருக்கிறாரென்று விசுவாசிக்கிறார்களோ, அவர்களெல்லோருக்காகவும் இயேசுகிறிஸ்து பிதாவினிடத்தில் பரிந்து பேசி ஜெபிக்கிறார்.

**அவர்கள் உம்முடையவர்கள்**

**நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்; உலகத்துக்காக வேண்டிக்கொள்ளாமல், நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறேன்; அவர்கள் உம்முடையவர்களாயிருக் கிறார்களே. என்னுடையவைகள் யாவும் உம்முடையவைகள், உம்முடையவைகள் என்னுடையவைகள்; அவர்களில் நான் மகிமைப்பட்டிருக்கிறேன் (யோவா 17:9,10).**

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்காகப் பிதாவினிடத்தில் விசேஷமாக வேண்டிக்கொள்கிறார். "அவர்கள் உம்முடையவர்களாயிருக்கிறார்கள்" என்று கூறி ஜெபிக்கிறார். பிதாவானவர் இந்த உலகத்தில் தமக்குரியவர்களைத் தெரிந்தெடுத்து இயேசுகிறிஸ்துவினிடத்தில் தந்திருக்கிறார். அவர்கள் இப்போது இயேசுகிறிஸ்துவின் உபதேசத்திலும், பாதுகாப்பிலும் பராமரிப்பிலும் இருக்கிறார்கள். பிதாவானவர் தம்மிடத்தில் தந்தவர்களை இயேசுகிறிஸ்து மீட்டுக்கொள்கிறார். நம்மை அவர் தமக்காக மீட்டுக்கொள்ளாமல் தேவனுக்காகவே மீட்டுக்கொள்கிறார்.

இயேசுகிறிஸ்து தம்முடைய ஜெபத்தில் "அவர்கள் உம்முடையவர்களாயிருக்கிறார்கள்" என்று கூறி ஜெபித்து, தம்முடைய சீஷர்களை பிதாவின் கரத்தில் ஒப்புக்கொடுக்கிறார். நாமும் தேவனிடத்தில் ஜெபிக்கும்போது "நான் உம்முடையவனாயிருக்கிறேன், என்னை இரட்சித்துக்கொள்ளும்" என்று கூறி ஜெபிக்கவேண்டும். நாம் மற்றவர்களுக்காக ஜெபிக்கும்போது "அவர்கள் உம்முடையவர்களாயிருக்கிறார்கள், அவர்களை இரட்சித்துக்கொள்ளும்" என்று கூறி ஜெபம்பண்ணவேண்டும்.

தேவன் நம்மைப் பாதுகாக்கவில்லையென்றால், சாத்தான் நம்மை அபகரித்துக் கொள்வான். நாம் இந்த உலகத்தில் சிக்கி உலகத்தாரைப்போல மாறிவிடுவோம். ஆகையினால் தேவனிடத்தில் நாம் ஜெபிக்கும்போது "நான் உம்முடையவன், என்னைக் காத்துக்கொள்ளும்" என்று கூறி ஜெபிக்கவேண்டும். நம்மைத் தேவனிடத்தில் ஒப்புக்கொடுக்கும்போது, தேவன் தம்முடையவர்களைக் காத்துக்கொள்கிறார்.

## அதிகாரம் - 17

இயேசுகிறிஸ்து பிதாவினிடத்தில் வேண்டிக்கொள்கிறபோது "நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக்கொள்கிறேன், அவர்கள் உம்முடையவர்களாயிருக்கிறார்களே" என்று கூறி ஜெபிக்கிறார். இவ்வாறு வேண்டிக்கொள்வதற்கு ஒரு ஆதாரமுள்ளது". இயேசுகிறிஸ்து பிதாவினிடத்தில் ஜெபிக்கும்போது "என்னுடையவைகள் யாவும் உம்முடையவைகள், உம்முடையவைகள் என்னுடையவைகள்" என்று கூறுகிறார். இயேசுகிறிஸ்துவின் இருதயத்தில் இந்த சிந்தையே இருக்கிறது. ஆகையினால்தான் இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷருக்காக ஜெபிக்கிறபோது "அவர்கள் உம்முடையவர்களாயிருக்கிறார்கள்" என்று பிதாவினிடத்தில் சொல்லுகிறார்.

இயேசுகிறிஸ்து கூறும் வாக்கியத்தின் மூலமாக, பிதாவும் குமாரனும் ஒன்றாயிருக்கிறார்கள் என்னும் சத்தியம் உறுதிபண்ணப்படுகிறது. இருவருக்கும் ஒரே சாரமும் ஒரே நோக்கமும் இருக்கிறது. சிருஷ்டிகராகிய பிதாவானவர், தம்முடைய சிருஷ்டிகளைக் குமாரனிடத்தில் ஒப்புக்கொடுக்கிறார். "சகலமும் என் பிதாவினால் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது" (மத் 11:27) என்று இயேசுகிறிஸ்து அறிக்கை செய்கிறார். சகலமும் இயேசுகிறிஸ்துவின் பாதபடியில் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்து தம்முடைய பிதாவின் சித்தத்தின் பிரகாரமாக மனுக்குலத்தை மீட்கும் ஊழியத்தைச் செய்கிறார்.

மனுக்குலத்தை இரட்சிப்பதற்காக இயேசுகிறிஸ்து தம்முடைய இரத்தத்தையே மீட்பின் கிரயமாகச் செலுத்தினார். இந்தக் கிரயத்தினால் வரும் எல்லா சகாயங்களையும் பிதாவினிடத்தில் ஒப்புக்கொடுக்கிறார். இயேசுகிறிஸ்துவின் வார்த்தையும் செயலும் பிதாவை மகிமைப்படுத்துகிறது. ஆகையினால் "என்னுடையவைகள் யாவும் உம்முடையவைகள்" என்று சொல்லி, தம்முடைய இரத்தத்தினால் கழுவப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு இரட்சிக்கப்பட்டுள்ள எல்லோரையும், இயேசுகிறிஸ்து தம்முடைய பிதாவின் கையில் ஒப்புக்கொடுக்கிறார்.

இயேசுகிறிஸ்து யாரையும் நமக்காக இரட்சிக்கவில்லை. தம்மால் இரட்சிக்கப்பட்டவர்களை அவர் தமக்குச் சொந்தமாக்கிக் கொள்ளவில்லை. இயேசுகிறிஸ்து இரட்சிக்கப்பட்டவர்கள் ஒவ்வொருவரையும் பிதாவின் ஊழியத்திற்காக அர்ப்பணிக்கிறார். இயேசுகிறிஸ்துவின் சிந்தையே நம்மிடத்திலும் காணப்படவேண்டும். இயேசுவைப்போலவே நாமும் ஜெபிக்கவேண்டும். நம்முடைய ஜெபத்தில் "என்னுடையவைகள் யாவும் உம்முடையவைகள்" என்னும் வார்த்தை வெளிப்படவேண்டும். இந்த ஜெபத்தை நாம் ஏறெடுத்து, நம்முடையவைகள் அனைத்தையும் தேவனுடைய பாதபடியில் அர்ப்பணிஉப் வேண்டும். நம்முடையவைகள் அனைத்தையும் தேவனுடைய ஊழியத்திற்காகப் பயன்படுத்த வேண்டும். "ஆண்டவரே என்னுடையவைகள் யாவும் உம்முடையவைகள். ஆகையினால் என்னிடத்தில் உள்ளவைகள் யாவையும் நீர் காத்துக்கொள்ளும்" என்று நாம் தேவனிடத்தில் ஜெபிக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்து தம்முடையவைகளைப் பற்றிய கரிசனையோடிருக்கிறார். "அவர்களில் நான் மகிமைப்பட்டிருக்கிறேன்" என்று இயேசுகிறிஸ்து கூறுகிறார். இயேசுகிறிஸ்துவுக்கு இந்த உலகத்தில் பூரண மகிமை உண்டாகவில்லை. சிறிது மகிமை மாத்திரமே உண்டாயிற்று. இயேசுவுக்கு இந்த மகிமையும் அவருடைய சீஷர்கள் மத்தியிலே உண்டாயிற்று. ஆகையினால் இயேசுகிறிஸ்து அவர்களுக்காக வேண்டிக்கொள்கிறார்.

தாம் அவர்களில் மகிமைப்படுவதாக இயேசு கூறுகிறார். அவர்கள் இயேசுகிறிஸ்துவின் நாமத்தைச் சுமந்துகொள்கிறார்கள். அவர்களில் இயேசுகிறிஸ்துவுக்கு மகிமை உண்டாயிருக்கிறது. இயேசுகிறிஸ்து அவர்களில் மகிமைப்படுகிறார். ஆகையினால் அவர்களைக்குறித்துக் கரிசனையோடிருக்கிறார். அவர்களைப் பிதாவினிடத்தில் ஒப்புக்கொடுக்கிறார். பிதாவானவர் குமாரனை மகிமைப்படுத்த வேண்டுமென்று சித்தமுள்ளவராக இருக்கிறபடியினால், அவர் கிறிஸ்துவின் சீஷர்களைக் காத்துக்கொள்வார். ஏனெனில் இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களில் மகிமைப்படுகிறார். இயேசுகிறிஸ்து யார் மூலமாக மகிமைப்படுகிறாரோ, அவர்களெல்லோரும் பிதாவின் கரத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவுக்குரியவர்களாகிய நாம் பிதாவுக்கும் உரியவர்களாக இருக்கிறோம்.

## அதிகாரம் - 17

### உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும் யோவா 17 : 11-16

**யோவா 17:11. நான் இனி உலகத்திலிரேன், இவர்கள் உலகத்திலிருக்கிறார்கள்; நான் உம்மிடத்திற்கு வருகிறேன். பரிசுத்த பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல் ஒன்றாயிருக்கும்படிக்கு, நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும்.**

**யோவா 17:12. நான் அவர்களுடனேகூட உலகத்திலிருக்கையில் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொண்டேன்; நீர் எனக்குத் தந்தவர்களைக் காத்துக் கொண்டுவந்தேன்; வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக, கேட்டின் மகன் கெட்டுப்போனானேயல்லாமல், அவர்களில் ஒருவனும்கெட்டுப்போகவில்லை.**

**யோவா 17:13. இப்பொழுது நான் உம்மிடத்திற்கு வருகிறேன்; அவர்கள் என் சந்தோஷத்தை நிறைவாய் அடையும்படி உலகத்தில் இருக்கையில் இவைகளைச் சொல்லுகிறேன்.**

**யோவா 17:14. நான் உம்முடைய வார்த்தையை அவர்களுக்குக் கொடுத்தேன்; நான் உலகத்தானல்லாததுபோல அவர்களும் உலகத்தாரல்ல; ஆதலால் உலகம் அவர்களைப் பகைத்தது.**

**யோவா 17:15. நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.**

**யோவா 17:16. நான் உலகத்தானல்லாததுபோல, அவர்களும் உலகத்தாரல்ல.**

**காத்துக்கொள்ளும்**

**நான் இனி உலகத்திலிரேன், இவர்கள் உலகத்திலிருக்கிறார்கள்; நான் உம்மிடத்திற்கு வருகிறேன். பரிசுத்த பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல் ஒன்றாயிருக்கும்படிக்கு, நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும் (யோவா 17:11).**

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்காகப் பிதாவினிடத்தில் ஜெபிக்கிறார். ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை அவர்கள் பெற்றுக்கொள்ளவேண்டுமென்பதே இயேசுகிறிஸ்துவின் பொதுவான ஜெபமாகும். இப்பிரபஞ்சத்தின் ஆசீர்வாதங்களைவிட பரலோகத்தின் ஆசீர்வாதங்களைத் தம்முடைய சீஷர்கள் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று இயேசுகிறிஸ்து சித்தமுள்ளவராகயிருக்கிறார். நம்முடைய ஆத்துமா செழிப்பாகயிருப்பதே நமக்கு மெய்யான செழிப்பாக இருக்கும். நம்முடைய ஆத்துமா வாழ்வதுபோலவே நாம் செழித்து வாழுவோம்.

நாம் இந்த பூமியில் இப்போது ஜீவிக்கிறோம். இயேசுகிறிஸ்து தம்முடைய பிதாவினிடத்தில் நமக்காகப் பரிந்து பேசுகிறார். இந்தப் பூமியில் நம்முடைய தேவைகளும், வேதனைகளும் இயேசுகிறிஸ்துவுக்குத் தெரியும். பரலோகத்தின் ஆசீர்வாதங்களை நாம் பெற்றுக்கொண்டாலும், நாம் இந்தப் பூமியில் இருக்கும் வரையிலும், இந்தப் பூமிக்குரிய காரியங்களும் நமக்குத் தேவைப்படுகிறது. நம்முடைய தேவைகளைப் பிதா தாமே சந்திக்கவேண்டுமென்று இயேசுகிறிஸ்து நமக்காக விண்ணப்பம்பண்ணுகிறார்.

இயேசுகிறிஸ்துவின் ஜெபம் விரிவாகவும் பூரணமாகவும் இருக்கிறது. நம்முடைய ஜெபத்திற்கு இயேசுகிறிஸ்துவின் ஜெபம் முன்மாதிரியாக அமைந்திருக்கிறது. இயேசுகிறிஸ்து இடைவிடாமல் ஜெபிக்கிறார். பிதாவினிடத்தில் தாம் கேட்பதைப் பெற்றுக்கொள்வேண்டுமென்று, அதைப் பெற்றுக்கொள்ளும் வரையிலும் போராடி ஜெபிக்கிறார். யாக்கோபு கர்த்தருடைய தூதரோடு போராடியபோது, "நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய நான் உம்மைப் போகவிடேன்" என்று போராடி ஜெபித்தான். நாமும் அதுபோல போராடி ஜெபிக்கவேண்டும். நம்முடைய ஜெபத்திற்குப் பதில் கிடைக்கும் வரையிலும் தொடர்ந்து ஜெபிக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்காக ஜெபிக்கும்போது, "பிதாவானவர் அவர்களை காத்துக்கொள்ள வேண்டும்" என்பதே முதலாவது ஜெபமாக இருக்கிறது. சீஷர்களுக்கு வரப்போகிற ஆபத்துக்களிலிருந்து தேவன் அவர்களைக் காத்துக்கொள்ளவேண்டும். அவர்கள் உலகத்திலிருக்கிறார்கள். இந்த உலகம் சீர்கெட்டுப்போயிருக்கிறது. துன்மார்க்கமான கிரியைகளைச் செய்கிறது. இயேசுகிறிஸ்துவின் சீஷர்களுக்கு இந்த உலகத்தின் மூலமாக ஆபத்துக்கள் வரும். தம்முடைய சீஷர்களைப் பிதாவானவர் இந்த உலகத்தின் ஆபத்துக்களிலிருந்து காத்துக் கொள்ளவேண்டுமென்று இயேசுகிறிஸ்து ஜெபிக்கிறார்.

## அதிகாரம் - 17

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்காக ஜெபிக்கும்போது, அவர்களை "நீர் எனக்குத் தந்தவர்கள்" என்று பிதாவினிடத்தில் கூறுகிறார். இயேசுகிறிஸ்து இனிமேல் உலகத்தில் இருக்கமாட்டார். தம்முடைய சீஷர்களைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போகப்போகிறார். இந்த உலகத்திலிருக்கும் தம்முடைய சீஷர்களை இயேசுகிறிஸ்து பிதாவானவரின் பாதுகாப்புக்கும் பராமரிப்புக்கும் ஒப்புக்கொடுக்கிறார். நாம் தேவனுடைய பாதுகாப்பிலும் பராமரிப்பிலும் இருப்பது விசுவாசிகளெல்லோருக்கும் ஆறுதலான செய்தியாகும். நாம் கர்த்தருடைய பலத்த கரத்திற்குள் இருக்கும்போது, நம்மை அவருடைய கரத்திலிருந்து யாரும் பறித்துக்கொள்ளமுடியாது. நாம் அசைக்கப்படுவதில்லை. நாம் தேவனுடைய பாதுகாப்பிலும் பராமரிப்பிலும் இல்லையென்றால் நமக்கு வேறு மெய்யான பாதுகாப்பு எதுவுமில்லை.

இயேசுகிறிஸ்து தம்முடைய பிள்ளைகளை நேசிப்பதினால், தாம் இந்த உலகத்தில் இனிமேல் இராவிட்டாலும், தம்முடைய சீஷருக்கு இந்த உலகத்தில் எந்த ஆபத்தும் வரக்கூடாது என்று சித்தமுள்ளவராகயிருக்கிறார். தம்முடைய சீஷரிடத்தில் அன்பாயிருப்பதினால் அவர்களைப் பாதுகாக்கவேண்டுமென்று விரும்பி, அவர்களைத் தம்முடைய பிதாவினிடத்தில் ஒப்புக்கொடுக்கிறார். பிதாவினிடத்தில் ஒப்புக்கொடுப்பதற்கு, "தெய்வீக பாதுகாப்பில் ஒப்புக்கொடுப்பது" என்று பொருள்.

பிதாவானவர் இயேசுகிறிஸ்துவின் ஜெபத்தைக்கேட்டு, இந்நாள் வரையிலும் விசுவாசிகளைப் பாதுகாத்து வருகிறார். சுவிசேஷ ஊழியமும், சுவிசேஷ சபைகளும் இந்நாள் வரையிலும் இந்த உலகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இயேசுகிறிஸ்துவின் ஜெபத்தைக்கேட்டு, பிதாவானவர் இந்தப் பாதுக்காப்பைத் தருகிறார். இயேசுகிறிஸ்து நம்மைப் பிதாவினிடத்தில் ஒப்புக்கொடுக்கும்போது, அவருடைய தெய்வீக உபதேசத்திற்கும், போதனைக்கும் நம்மை ஒப்புக்கொடுக்கிறார். நாம் தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால் நமக்குத் தேவனுடைய வல்லமை தேவை. தேவகிருபையை பெற்றுக்கொள்ளுவதற்கு மாத்திரமல்ல, நாம் தேவகிருபையில் நிலைத்திருப்பதற்கும் தேவனுடைய கிருபை நமக்குத் தேவை.

இயேசுகிறிஸ்து பிதாவினிடத்தில் ஜெபிக்கும்போது, பிதாவைப், "பரிசுத்தப் பிதாவே" என்று அழைக்கிறார். தம்முடைய சீஷர்களைப்பற்றி குறிப்பிடும்போது, "நீர் எனக்குத் தந்தவர்கள்" என்று குறிப்பிடுகிறார். தேவன் பரிசுத்தப்பிதாவாக இருக்கிறபடியினால் அவர் பாவத்தை வெறுக்கிறார். தம்முடையவர்களைப் பரிசுத்தப்படுத்துகிறார். அவர்களைப் பாவத்திலிருந்து விலக்கிக் காத்துக்கொள்கிறார். தேவனுக்குரியவர்களும் பாவத்தை வெறுக்கவேண்டும். தீமையைவிட்டு விலகி ஜீவிக்கவேண்டும். பிதாவாகிய தேவன், நம்முடைய பரலோகப் பிதாவாகயிருக்கிறபடியினால், அவருடைய பிள்ளைகளாகிய நம்மைப் பாதுகாக்கிறார், பராமரிக்கிறார், காத்துக்கொள்கிறார்.

நாம் தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொள்வது அனைத்தையும், பிதாவானவருடைய ஈவாகவே பெற்றுக்கொள்கிறோம். இயேசுகிறிஸ்துவின் மூலமாகப் பிதாவுக்கும் நமக்கும் ஐக்கியம் உண்டாயிருக்கிறது. ஆகையினால் இயேசுகிறிஸ்து பிதாவின் பாதுகாப்புக்கு நம்மைப் பாதுகாப்பாக ஒப்புக்கொடுக்கிறார். இயேசுகிறிஸ்து நம்மைப்பற்றிப் பிதாவினிடத்தில் ஜெபிக்கும்போது "நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும்" என்று கூறி ஜெபிக்கிறார். நாம் பிதாவினிடத்தில் ஜெபிக்கும்போது, "நம்முடைய ஆசைகளை நிறைவேற்றும்" என்றும், "நம்முடைய தேவைகளை சந்தியும்" என்றும் ஜெபிப்பதற்குப் பதிலாக, "நீர் எங்களை உம்முடைய நாமத்தினிமித்தம் காத்துக்கொள்ளும், ஆசீர்வதியும்" என்று ஜெபிக்கவேண்டும். அப்போது பிதாவானவர் தம்முடைய நாமத்தினாலே நம்மைக் காத்துக்கொள்வார்.

நமக்கு தேவனைப்பற்றிய அறிவும், தேவனிடத்தில் பயமும் இருக்கவேண்டும். பிதாவின் நாமத்தினால், நமக்குள் தெய்வீக ஞானமும், தெய்வீக பயபக்தியும் இருக்குமாறு, பிதாவானவர் நம்மைக் காத்துக்கொள்ள வேண்டும். இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நாம் செய்யும் ஊழியங்களைப், பிதாவானவர் தம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளவேண்டும். கிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்வதற்கு நாம் எப்படிப்பட்ட கிரயத்தைச் செலுத்த வேண்டியதாகயிருந்தாலும், அந்தக் கிரயத்தைச் செலுத்தி கிறிஸ்துவின் ஊழியத்தை நாம் தொடர்ந்து செய்யுமாறு, பிதாவானவர் தம்முடைய நாமத்தினாலே நம்மைக் காத்துக்கொள்ளவேண்டும்.

## அதிகாரம் - 17

பிதாவானவர் நம்மைக் காத்துக்கொள்ளும்போது, அவர் நம்மைத் தம்முடைய நாமத்தினாலும், தம்முடைய நாமத்தின் மூலமாகவும் காத்துக்கொள்கிறார். தம்முடைய தெய்வீக பலத்தினாலும், வல்லமையினாலும், அதிகாரத்தினாலும், பலத்த கரத்தினாலும் நம்மைத் தம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்கிறார். தேவனுடைய நாமம் நமக்கு பலத்த துருகமாயிருக்கிறது.

இயேசுகிறிஸ்து இனிமேல் உலகத்தில் இரார். அவருடைய சீஷர்கள் உலகத்திலிருக்கிறார்கள். அவர்களும் பிதாவையும் குமாரனையும்போல் ஒன்றாய் இருக்கவேண்டும். அதற்காகப் பிதாவானவர் அவர்களை அவருடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும்படி இயேசுகிறிஸ்து வேண்டிக்கொள்கிறார்.

இயேசுகிறிஸ்து இனிமேல் உலகத்தில் இருக்கமாட்டாரென்பதே அவருக்குச் சந்தோஷமான செய்தியாகும். இயேசு தம்முடைய பிதாவினிடத்திற்குத் திரும்பிப் போகப்போகிறார். தம்முடைய ஊழியத்தை நிறைவேற்றிவிட்டுப் பரலோகத்திற்குப் போகப்போகிறார். இயேசுகிறிஸ்து அவருடைய சீஷர்களைவிட்டுப் புறப்பட்டுப்போவது, அவர்களுக்கு வருத்தமாகயிருக்கலாம். ஆனால் இயேசுகிறிஸ்துவுக்கோ இந்த உலகத்தைவிட்டுப் பரலோகத்திற்குப் போவது பூரண வெற்றியை அறிவிக்கும் சம்பவமாகும்.

இந்த உலகத்தில் துன்பம் மிகுந்திருக்கிறது. பிரச்சனைகள் நிறைந்திருக்கிறது. இப்படிப்பட்ட உலகத்தைவிட்டு இயேசுகிறிஸ்து இப்போது புறப்பட்டுப்போகப்போகிறார். இந்த உலகத்தில் இனிமேல் கிறிஸ்து இருக்கமாட்டார். இந்தஉலகத்தைவிட்டு அவர் போகும் வேளையானது, பரலோகத்தில் அவர் வரவேற்கப்படும் வேளையாகவும் இருக்கிறது.

நாம் இந்த உலகத்திலிருக்கும்போது, நம்மிடத்திலும் இயேசுகிறிஸ்துவின் சிந்தையே காணப்படவேண்டும். நாம் இந்த உலகத்தில் அதிககாலம் இருக்கமாட்டோம் என்னும் எண்ணம் நமக்குள் எப்போதும் காணப்படவேண்டும். இந்த உலகம் நமக்கு நித்தியமான வாசஸ்தலமல்ல. நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது. ஆகையினால் இப்பிரபஞ்சத்தைவிட்டு, நம்முடைய நித்திய குடியிருப்பான பரலோகத்திற்குப்போவது நமக்குச் சந்தோஷமான அனுபவமாக இருக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்து இனி இந்த உலகத்தில் இருக்கமாட்டார். அவர் பிதாவினிடத்தில் ஜெபிக்கும்போது "நான் உம்மிடத்திற்கு வருகிறேன்" என்று கூறுகிறார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் மரிக்கும்போது நமக்கு ஆறுதல் கிடைக்கும். நாம் கிறிஸ்துவுக்காக ஜீவிக்கிறோம். அவருக்காகவே மரிக்கிறோம். இந்த உலகத்தைவிட்டுக் கடந்துபோவதினால் நமக்கு ஆறுதலும் சந்தோஷம் உண்டாகும். நம்முடைய மரணத்தினால் நமக்குப் பாதி ஆறுதல் மாத்திரமே கிடைக்கும். மீதி ஆறுதல் கிடைக்கவேண்டுமென்றால், நாம் இந்த உலகத்தைவிட்டுப் பிதாவாகிய தேவனிடத்திற்குப் போகிறோம் என்னும் சிந்தனை நமக்குள் வரவேண்டும். அப்போதுதான் நம்முடைய சமாதானமும் சந்தோஷமும் பூரணமாயிருக்கும்.

தேவனை நேசிக்கிறவர்களுக்கு, அவருடைய சமுகத்திற்கு முன்பாக வருவது மிகுந்த சந்தோஷமாக இருக்கும். மரணத்தின் பள்ளத்தாக்கு வழியாகத்தான், இந்த உலகத்தைவிட்டுக் கடந்து பரலோகத்திற்குப் போகமுடியும். மரணத்தின் பள்ளத்தாக்கு வருத்தமும் துக்கமும், கண்ணீரும் நிறைந்ததாக இருக்கும். ஆனாலும் நாம் பிதாவினிடத்திற்குப் போகப்போகிறோம் என்னும் சிந்தனை, மரணத்தின் துக்கத்திலும் நமக்கு சந்தோஷத்தையும் ஆறுதலையும் தரும். பள்ளிக்கூடத்தில் பிள்ளைகள் படித்துவிட்டு, மாலை வேளையில் வீட்டிற்குப் பெற்றோரைப்பார்க்க சந்தோஷமாக வருவதுபோல, நாமும் இந்த உலக வாழ்வை முடித்துவிட்டு, நம்முடைய பரலோகப்பிதாவைப் பார்ப்பதற்கு, மிகுந்த சந்தோஷமாக பரலோகத்திற்கு வரவேண்டும்.

இயேசுகிறிஸ்து இனிமேல் இந்த உலகத்தில் இருக்கமாட்டார். ஆனாலும் உலகத்திலிருக்கிற தம்முடைய சீஷர்களைக்குறித்து மிகுந்த கரிசனையோடிருக்கிறார். "இவர்கள் உலகத்திலிருக்கிறார்கள். நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும்" என்று மிகுந்த கரிசனையோடு ஜெபிக்கிறார். சீஷர்கள் இயேசுகிறிஸ்துவின் சரீரப்பிரகாரமான பிரசன்னத்தை விரும்புகிறார்கள். இயேசுகிறிஸ்துவோ அவர்களைப் பிதாவின் பிரசன்னத்திற்கு ஒப்புக்கொடுக்கிறார். அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டுமானால், அவர்களை இப்போது அதிகமாய் காத்துக்கொள்ளவேண்டும். பிதாவானவர் தம்முடைய நாமத்தினாலே அவர்களைக் காத்துக் கொள்ளவில்லையென்றால், அவர்கள் வழிவிலகிக் காணாமல் போய்விடுவார்கள்.

## அதிகாரம் - 17

இயேசுகிறிஸ்து இந்த உலகத்தைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போகும்போது, இந்த உலகத்தில் விட்டு வந்திருக்கும் தம்முடைய சீஷர்களைப்பற்றிய கரிசனையோடு பரலோகத்திற்குப் போகிறார். பிதா தமக்குத் தந்தவர்கள் இப்போது உலகத்திலிருக்கிறார்கள் என்னும் சிந்தனையும், தாம் இனி உலகத்தில் இருக்கமாட்டோம் என்னும் சிந்தனையும் இயேசுகிறிஸ்துவின் இருதயத்தில் நிறைந்திருக்கிறது. பொதுவாக நாம் ஒருவரை அதிக நாட்களாகக் காணவில்லையென்றால் அவர்களை மறந்துவிடுவோம். ஆனால் இயேசுகிறிஸ்துவோ தம்முடைய சீஷர்களைவிட்டுப் பிரிந்துபோனாலும், அவர்களைப்பற்றி மறந்துவிடாமல், அவர்களுக்காகப் பிதாவினிடத்தில் ஜெபிக்கிறார். இயேசுகிறிஸ்துவின் சிந்தனையில் சீஷர்களைப்பற்றிய எண்ணம் நிரம்பியிருக்கிறது.

சீஷர்களின் ஆவிக்குரிய தேவைகளைக் குறித்து இயேசுகிறிஸ்து மிகுந்த கரிசனையோடிருக்கிறார். அவர்களுக்குத் தெய்வீக பாதுகாப்பு தேவைப்படுகிறது. "இவர்கள் உலகத்திலிருக்கிறார்கள்" என்று இயேசுகிறிஸ்துவால் மாத்திரமே பிதாவினுடைய சமுகத்தில் மிகுந்த கரிசனையோடு வேண்டிக்கொள்ள முடிகிறது. இவர்களும் பரலோகத்திற்கு வரவேண்டியவர்கள். இப்போது இவர்கள் உலகத்திலிருக்கிறார்கள். இவர்களுக்கு ஆவிக்குரிய ஆபத்துக்கள் பல இருப்பதினால், பிதாவானவர் இவர்களைக் காத்தருளவேண்டுமென்று இயேசுகிறிஸ்து விண்ணப்பம்பண்ணுகிறார்.

**காத்துக்கொண்டேன்**

**நான் அவர்களுடனேகூட உலகத்திலிருக்கையில் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொண்டேன்; நீர் எனக்குத் தந்தவர்களைக் காத்துக் கொண்டுவந்தேன்; வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக, கேட்டின் மகன் கெட்டுப்போனானேயல்லாமல், அவர்களில் ஒருவனுங்கெட்டுப் போகவில்லை (யோவா 17:12).**

தம்முடைய சீஷர்களைப் பிதாவானவர் இந்த உலகத்தில் காத்துக்கொள்ள வேண்டுமென்று இயேசுகிறிஸ்து ஜெபம்பண்ணுகிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுடனே உலகத்திலிருக்கையில், அவர் அவர்களைப் பிதாவினுடைய நாமத்தினாலே காத்துக்கொண்டார். அவர்களெல்லோரையும் பிதாவானவர் இயேசுகிறிஸ்துவுக்குத் தந்திருக்கிறார். அவர்களெல்லோரும் ஆவிக்குரிய ரீதியாகப் பாதுகாக்கப்பட்டிருக்கிறார்கள். தேவனைவிட்டு ஒருவனும் விலகிப்போய்விடவில்லை. ஆனாலும் கேட்டின் மகன் மாத்திரம் கெட்டுப்போயிருக்கிறான். அவனேயல்லாமல் அவர்களில் ஒருவனும் கெட்டுப்போகவில்லை. இயேசுகிறிஸ்து தம்மிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட ஊழியத்தை நேர்த்தியாக நிறைவேற்றுகிறார். "நான் அவர்களுடனே உலகத்திலிருக்கையில் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொண்டேன்" என்று இயேசுகிறிஸ்து பிதாவினிடத்தில் அறிக்கைபண்ணுகிறார்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களைக் காத்துக்கொண்டது வீணாய்ப் போய்விடவில்லை. இயேசுகிறிஸ்து இந்த உலகத்திலிருந்தபோது ஏராளமானோர் அவரைப் பின்பற்றினார்கள். அவர்களில் அநேகர் ஏதாவது சாக்குப்போக்குகளைச் சொல்லி அவரைவிட்டு விலகிப்போய்விட்டார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ தம்முடைய பன்னிரண்டு சீஷர்களும் தம்மைவிட்டுப்போய்விடாதவாறு அவர்களைக் காத்துக்கொண்டார். இயேசுகிறிஸ்து அவர்களுடனே உலகத்திலிருக்கையில், அவர்களைப் பிதாவின் நாமத்தினாலே, பிரத்தியட்சமான வழிகளில் காத்துக்கொண்டார். இயேசுகிறிஸ்து அவர்களைவிட்டுப் புறப்பட்டுப்போகும்போது, அவர்களை ஆவிக்குரிய ரீதியாக இன்னும் அதிகமாய்க் காத்துக்கொள்ளவேண்டும். அவர்களைப் பிதாவானவர் தம்முடைய நாமத்தினால் காத்துக்கொள்ளுமாறு இயேசுகிறிஸ்து விண்ணப்பம்பண்ணுகிறார்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு ஆறுதல்களும் ஆதரவுகளும் சில சமயங்களில் கொடுக்கப்படும். வேறு சில சமயங்களில் அவை நம்மைவிட்டு எடுத்துக்கொள்ளப்படும். அவை நம்மைவிட்டு எடுத்துக் கொள்ளப்பட்டாலும், நமக்குத் தேவனுடைய ஆறுதலும் அவருடைய ஆதரவும் உள்ளது. இயேசுகிறிஸ்து நம்மோடு கூடயிருப்பதினால் நாம் ஒருபோதும் கைவிடப்படுவதில்லை. இயேசுகிறிஸ்து பிதாவினிடத்தில் ஜெபிக்கும் போது "நான் அவர்களை உம்முடைய நாமத்தினால் காத்துக் கொண்டேன்" என்று கூறுவது, அவருடைய பன்னிரண்டு சீஷர்களைப்பற்றிக் கூறுகிறார். அதேவேளையில் இயேசுகிறிஸ்து இவ்வாறு ஜெபிப்பது அவருடைய பிள்ளைகளாகிய நம் எல்லோருக்கும் ஏற்றெடுக்கிற ஜெபமாக இருக்கிறது. நாம் இந்த உலகத்திலிருக்கும் போது, கிறிஸ்துவானவர் நம்மைத் தேவனுடைய நாமத்தினால் காத்துக்கொள்கிறார்.

## அதிகாரம் - 17

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் பலவீனமாகயிருக்கிறார்கள். அவர்களால் தங்களைத் தாங்களே காத்துக்கொள்ள முடியவில்லை. அவர்கள் தேவனுக்குரியவர்கள். கிறிஸ்துவுக்குள் விசேஷித்தவர்கள். இயேசுகிறிஸ்துவுக்கு அவருடைய சீஷர்களே விலையுயர்ந்த பொக்கிஷமாகவும் முத்துக்களாகவும் இருக்கிறவர்கள். தேவனுடைய பார்வையில் ஒவ்வொரு ஆத்துமாவும் விலையேறப்பெற்றதாக இருக்கிறது. அவர்களுடைய இரட்சிப்பு முற்குறிக்கப்பட்டிருக்கிறது. தேவனால் திட்டமிடப்பட்டிருக்கிறது. ஆகையினால்தான் பிதாவானவர் அவர்களைக் காத்துக் கொள்கிறார்.

“கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்தரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது” (1பேது 1:5) என்று பேதுரு தன்னுடைய நிருபத்தில் எழுதுகிறார். இரட்சிக்கப்பட வேண்டியவர்களெல்லோரையும் பிதாவானவர் இயேசுகிறிஸ்துவிடத்தில் தந்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவும், தாம் அவர்களுடனேகூட உலகத்திலிருக்கையில், அவர்களைப் பிதாவின் நாமத்தினாலே காத்துக்கொண்டார். “நீர் எனக்குத் தந்தவர்களைக் காத்துக்கொண்டு வந்தேன்” என்று இயேசுகிறிஸ்துவும் பிதாவிடத்தில் ஜெபிக்கிறார். இயேசுகிறிஸ்து தம்மை ஒரு நல்ல மேய்ப்பராக வெளிப்படுத்துகிறார். நல்ல மேய்ப்பர் தன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட ஆடுகளை மிகுந்த அக்கறையோடு காத்துக்கொள்வார்.

பிதாவானவர் தமக்குத் தந்தவர்களை இயேசுகிறிஸ்து காத்துக்கொண்டு வந்திருக்கிறார். அவர்களில் ஒருவரும் கெட்டுப்போகவில்லை. தம்மிடத்தில் பிதாவானவர் ஒப்புக்கொடுத்த ஊழியத்தைப்பற்றி இயேசுகிறிஸ்து சாட்சியாக அறிவிக்கிறார். ஒருவேளை கிறிஸ்துவின் பிள்ளைகள் பல சமயங்களில் தாங்கள் கர்த்தரைவிட்டு விலகிப்போய்விட்டதாக நினைக்கலாம். மிகுந்த சோதனைகளும் உபத்திரவங்களும் வரும்போது கர்த்தர் தங்களைக் கைவிட்டுவிட்டாரோ என்னும் சிந்தனைகூட அவர்களை ஆளுகை செய்யலாம்.

ஆனால் இயேசுகிறிஸ்துவோ பிதாவானவர் தமக்குத் தந்தவர்களைக் காத்துக்கொண்டதாகவே சாட்சி கூறுகிறார். நாம் ஒருவரும் கெட்டுப்போகாமலிருக்க வேண்டும் என்பதே தேவனுடைய சித்தம்.

பிதாவானவர் இயேசுகிறிஸ்துவுக்குத் தந்தவர்களை அவர் காத்துக்கொண்டார். ஆனாலும் கேட்டின் மகன் கெட்டுப்போனான். இந்த வார்த்தை யூதாஸ்காரியோத்தைப்பற்றிக் குறிப்பிடுகிறது. இயேசுகிறிஸ்துவின் பன்னிரண்டு சீஷர்களில் யூதாஸ்காரியோத்தும் இருக்கிறான். பிதாவானவர் இந்தப் பன்னிரண்டு பேரையும் கிறிஸ்துவிடம் ஒப்புக்கொடுத்திருக்கிறார். இவர்களில் ஒருவனும் கெட்டுப்போகவில்லை. ஆனாலும் கேட்டின் மகன் மாத்திரமே கெட்டுப்போயிருக்கிறான். யூதாஸ்காரியோத்து இயேசுகிறிஸ்துவைவிட்டு விலகிப்போய்த் தன்னுடைய ஆத்துமாவைக் கெடுத்துக்கொண்டான்.

யூதாஸ்காரியோத்தின் அழிவினால் இயேசுகிறிஸ்துவுக்கோ, மற்ற சீஷர்களுக்கோ எந்தவிதமான பாதிப்பும் ஏற்படவில்லை. அவன் கேட்டின் மகன். வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக கேட்டின் மகன் கெட்டுப்போனான். இயேசுகிறிஸ்துவிடம் கொடுக்கப்பட்டவர்களில் இவன் மாத்திரமே கெட்டுப்போனான்.

இயேசுகிறிஸ்துவின் சீஷர்களில் ஒருவன் கெட்டுப்போனது கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்மெல்லோருக்குமே மிகுந்த எச்சரிப்பாக இருக்கிறது. நாம் எல்லோருமே கெட்டுப்போவதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால் “நிற்கிறேன்” என்னும் எண்ணுகிற நாம் யாரும், விழாதிருக்குமாறு எச்சரிக்கையோடு இருக்கவேண்டும். தேவனோடு நம்முடைய இருதயம் சரியான ஐக்கியத்திலிருக்கவேண்டும். இல்லையென்றால் தேவனுடைய ஜீவபுஸ்தகத்திலிருந்து நம்முடைய பெயரும் கிறுக்கிப்போடப்படும். சபையில் நம்முடைய பெயர் எழுதப்பட்டிருக்கலாம். அதேவேளையில் தேவனுடைய புஸ்தகத்திலும் நம்முடைய பெயர் எழுதப்பட்டிருக்கவேண்டும். இதற்கு நம்முடைய இருதயம் தேவனோடு சரியான ஐக்கியத்திலிருப்பது அவசியமாயிருக்கிறது.

## அதிகாரம் - 17

யூதாஸ்காரியோத்தின் பாவமும் வீழ்ச்சியும் ஏற்கெனவே முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது. கேட்டின் மகன் கெட்டுப்போன சம்பவம் வேதவாக்கியத்தின் நிறைவேற்றமாக இருக்கிறது. வேதவாக்கியத்தின் பிரகாரமாகவே கேட்டின் மகனாகிய யூதாஸ்காரியோத்து பாவம் செய்திருக்கிறான். தேவன் முன்னறிவித்த பிரகாரமே ஒவ்வொருவருக்கும் சம்பவிக்கும். ஆனாலும் ஒருவரும் அழிந்துபோவது தேவனுடைய சித்தமல்ல. நாம் தேவனுடைய கிருபையைக் கேட்டுப்பெற்றுக்கொண்டு, அந்தக் கிருபையில் நிலைத்திருக்கும்போது, தேவன் தம்முடைய கிருபையினால் நம்மைக் காத்துக்கொள்வார். இயேசுகிறிஸ்து பிதாவின் நாமத்தினால் தம்முடைய பிள்ளைகளெல்லோரையும் காத்துக்கொள்வார்.

**சந்தோஷத்தை நிறைவாய் அடையும்படி**

**இப்பொழுது நான் உம்மிடத்திற்கு வருகிறேன்; அவர்கள் என் சந்தோஷத்தை நிறைவாய் அடையும்படி உலகத்தில் இருக்கையில் இவைகளைச் சொல்லுகிறேன் (யோவா 17:13).**

இயேசுகிறிஸ்து இனி உலகத்திலிரார். அவருடைய சீஷர்கள் உலகத்திலிருக்கிறார்கள். தங்களைப் பிதாவானவர் காத்துக்கொள்வார் என்னும் நிச்சயம் சீஷர்களுடைய உள்ளத்தில் காணப்படவேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு ஆறுதலாகவும் சந்தோஷமாகவும் இருக்கும். இயேசுகிறிஸ்து இப்போது பிதாவினிடத்திற்குப்போகிறார். இயேசுகிறிஸ்துவின் சரீரப்பிரகாரமான பிரசன்னம் இனிமேல் சீஷர்களோடிராது. இதனால் அவர்களுக்கு வருத்தம் உண்டாகும். ஆனாலும் "பிதாவானவர், தம்முடைய நாமத்தினால், அவர்களைக் காத்துக்கொள்ளுவார்" என்னும் நிச்சயம் அவர்களுடைய உள்ளத்தில் உண்டானால், அவர்களுக்குச் சந்தோஷம் உண்டாகும். இயேசுகிறிஸ்து இதைப்பற்றிச் சொல்லும்போது "அவர்கள் என் சந்தோஷத்தை நிறைவாய் அடையும்படி உலகத்திலிருக்கையில் இவைகளைச் சொல்லுகிறேன்" என்று கூறுகிறார்.

தம்முடைய சீஷர்களின் சந்தோஷம் எப்போதும் நிறைவாயிருக்கவேண்டும் என்று இயேசுகிறிஸ்து விரும்புகிறார். அவர்கள் எப்போதும் சந்தோஷமாயிருக்க வேண்டுமென்பதும், அவர்களுடைய சந்தோஷம் பரிபூரணமாயிருக்கவேண்டும் என்பதும். இயேசுகிறிஸ்துவின் சித்தமாயிருக்கிறது. இயேசுகிறிஸ்து இந்த உலகத்தைவிட்டுப் போவதினால் தங்களுடைய சந்தோஷம் முடிவுக்கு வந்துவிட்டதோ என்று நினைத்து சீஷர்கள் கவலையோடிருக்கிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ அவர்களுடைய சந்தோஷம் முடிவடையாது என்றும், அதற்குப் பதிலாக அவர்களுடைய சந்தோஷம் பரிபூரணமடையும் என்றும் கூறுகிறார். சீஷர்கள் இயேசுகிறிஸ்துவின் சந்தோஷத்தை நிறைவாய் அடைந்துகொள்வார்கள். கிறிஸ்துவின் சந்தோஷம் அவர்களைவிட்டு நீங்கிப்போவதில்லை.

நம்முடைய சந்தோஷம் எப்போதுமே கிறிஸ்துவில் நிலைத்திருக்கவேண்டும். உலக சந்தோஷத்தைவிட கிறிஸ்துவின் சந்தோஷமே நமக்கு நிறைவான சந்தோஷத்தைத் தரும். கிறிஸ்துவின் சந்தோஷமே நிலைத்திருக்கும். கிறிஸ்துவே நமக்குச் சந்தோஷமாயிருக்கிறார். அவருடைய சந்தோஷமே நமக்கும் சந்தோஷமாக இருக்கவேண்டும். உலக சந்தோஷம் திடீரென்று வரும், திடீரென்று மறைந்துபோகும். உலக சந்தோஷம் நிலைத்திருப்பதில்லை. ஆனால் இயேசுகிறிஸ்துவின் சந்தோஷமோ, அவரைப்போலவே நித்தியமாய் நிலைத்திருக்கும். ஆகையினால் நம்முடைய சந்தோஷத்திற்கு இயேசுகிறிஸ்துவே ஆதாரமாகவும் அஸ்திபாரமாகவும் இருக்கவேண்டும்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் பலவிதமான சம்பவங்கள் நடைபெறும். நமக்குச் சோதனைகள் வரும். வேதனைகள் வரும். கிறிஸ்துவினிமித்தமாக நாம் சில காரியங்களை இழந்துபோகவேண்டியது வரும். நாம் எதை இழந்துபோனாலும், கிறிஸ்துவில் நம்முடைய சந்தோஷத்தை மாத்திரம் இழந்துபோய்விடக்கூடாது. "என் சகோதரரே, கர்த்தருக்குள் சந்தோஷப்படுங்கள்" (பிலி 3:1) என்றும், "கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள். சந்தோஷமாயிருங்களென்று மறுபடியும் சொல்லுகிறேன்" (பிலி 4:4) என்றும் அப்போஸ்தலர் பவுல் நிருபத்தில் எழுதுகிறார்.

## அதிகாரம் - 17

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களைப் பயபக்தியோடு பிதாவின் கரங்களில் ஒப்புக்கொடுக்கிறார். பிதாவின் பாதுகாப்புக்கும் பராமரிப்புக்கும் அவர்களை ஒப்புக்கொடுக்கிறார். "நாம் உலகத்திலிருக்கையில் இவைகளைச் சொல்லுகிறேன்" என்று இயேசுகிறிஸ்து குறிப்பிடுகிறார். சீஷர்கள் இந்த உலகத்திலிருக்கையில் இயேசுகிறிஸ்துவின் வார்த்தை அவர்களுக்கு ஆறுதலையும் சந்தோஷத்தையும் தரும். அவர்களுக்கு எப்பேற்பட்ட வேதனைகளும் சோதனைகளும், வருத்தங்களும், பாடுகளும் வந்தாலும், அவைகளுக்கு நடுவிலும் அவர்கள் சந்தோஷமாயிருப்பார்கள். கிறிஸ்துவின் சந்தோஷம் அவர்களுக்குள் நிறைவாய் தங்கியிருக்கும். இயேசுகிறிஸ்து தம்முடைய பிள்ளைகளுக்காகச் சந்தோஷத்தையும் ஆறுதலையும் சேமித்து வைத்திருக்கிறார். சேமித்து வைத்திருப்பது மாத்திரமல்ல, அந்த சந்தோஷத்தையும் ஆறுதலையும் தம்முடைய பிள்ளைகளுக்குக் கொடுக்கவும் செய்கிறார்.

இயேசுகிறிஸ்து பிதாவினிடத்தில் ஜெபிக்கும்போது தம்முடைய சித்தத்தையும், உடன்படிக்கையும் இங்கு வெளிப்படுத்துகிறார். தம்முடைய சிந்தனைகள் சீஷர்களுக்குத் தெரிந்திருக்கவேண்டுமென்று விரும்புகிறார். ஆகையினால்தான் "அவர்கள் என் சந்தோஷத்தை நிறைவாய் அடையும்படி உலகத்திலிருக்கையில் இவைகளைச் சொல்லுகிறேன்" என்று சொல்லி ஜெபிக்கிறார். சீஷர்களுக்கு மறைவான இரகசியம் எதுவுமில்லை. அவர்கள் தெரிந்துகொள்ளவேண்டிய எல்லா சத்தியங்களையும் இயேசுகிறிஸ்து வெளிப்படுத்துகிறார்.

இயேசுகிறிஸ்து இனி உலகத்திலிரார். சீஷர்கள் உலகத்திலிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து தங்களோடில்லாமற்போவது சீஷர்களுக்கு வருத்தமாக இருக்கும். ஆனால் வருத்தத்திற்குப் பதிலாக, இயேசுகிறிஸ்து தம்முடைய சந்தோஷத்தையே சீஷர்களுக்குக் கொடுக்கிறார். தம்முடைய சித்தத்தை அவர்களுக்கு எடுத்துச் சொல்லுவதன் மூலமாக, சீஷர்கள் கிறிஸ்துவின் சந்தோஷத்தை நிறைவாய் அடைவார்கள். இயேசுகிறிஸ்து தங்களைவிட்டுக் கடந்துபோனாலும், தாங்கள் இன்னும் பிதாவின் பாதுகாப்பிலும் பராமரிப்பிலும் இருப்பதை நினைத்து ஆறுதலும் சந்தோஷமும் அடைவார்கள்.

சீஷர்கள் எப்போதுமே தங்களுடைய சுயபாதுகாப்பில் இல்லை. அவர்கள் தேவனுடைய தெய்வீக பாதுகாப்பிலும், பராமரிப்பிலும் இருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார். நம்முடைய சந்தோஷத்தை நாம் நிறைவாய் அடையும்படிக்கு அவர் நமக்காகப் பரிந்து பேசுகிறார். நம்முடைய பயங்களும், கவலைகளும், வேதனைகளும், அவிசுவாசங்களும் நம்மைவிட்டு நீங்கவேண்டுமென்றும், நமக்குள் அவருடைய சந்தோஷம் நிறைவாக தங்கியிருக்க வேண்டுமென்று இயேசுகிறிஸ்து நமக்காகப் பரிந்துபேசிக்கொண்டிருக்கிறார். " மேலும், தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்" (எபி 7:25).

**உலகம் அவர்களைப் பகைத்தது**

**நான் உம்முடைய வார்த்தையை அவர்களுக்குக் கொடுத்தேன்; நான் உலகத்தானல்லாததுபோல அவர்களும் உலகத்தாரல்ல; ஆதலால் உலகம் அவர்களைப் பகைத்தது (யோவா 17:14).**

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள், அவருடைய நாமத்தினிமித்தமாக, இந்த உலகத்தில் பல பாடுகளை அனுபவிப்பார்கள். இயேசுகிறிஸ்து பிதாவின் வார்த்தையை அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார். இயேசுகிறிஸ்து இந்த உலத்தாரல்ல. அவரைப்போலவே அவருடைய சீஷர்களும் இந்த உலகத்தாரல்ல. ஆதலால் இந்த உலகம் அவர்களைப் பகைக்கிறது.

இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் தம்முடைய சீஷரோடிருந்தபோது, இந்த உலகம் அவர்களைப் பகைத்தது. இயேசுகிறிஸ்து சீஷர்களைவிட்டுத் தம்முடைய பிதாவினிடத்திற்குப் போனபின்பு, சீஷர்மீது இந்த உலகத்தின் பகை குறைந்துபோய்விடவில்லை. இயேசுகிறிஸ்துவின் பிரதான கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, அவருடைய சீஷர்கள் உலகமெங்கும் சென்று இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுகிறார்கள். இவர்கள் செல்லுமிடங்களிலெல்லாம், "உலகத்தைக் கலக்குகிறவர்கள் இங்கேயும் வந்திருக்கிறார்கள்" என்று சொல்லி அவர்களைப் பகைக்கிறார்கள். ஏற்கெனவே பகைத்ததைவிட இப்போது இந்த உலகம் சீஷர்களை இன்னும் அதிகமாகவே பகைக்கிறது.

## அதிகாரம் - 17

உலகம் அவர்களைப் பகைப்பதினால், பிதாவானவர் அவர்களைச் சிநேகிக்கவேண்டுமென்று இயேசுகிறிஸ்து வேண்டிக்கொள்கிறார். உலகத்தின் பகை அவர்களை நெறுக்குகிறபோது, பிதாவின் சிநேகமும் அன்பும் அவர்களுக்குத் தேவைப்படுவதாக இயேசுகிறிஸ்து வேண்டிக்கொள்கிறார். பலவீனமானவர்களைப் பலப்படுத்துவது தேவனுடைய சித்தம். இதனால் தேவனுக்கு மகிமை உண்டாகும். உதவியற்றவர்களுக்கு இயேசுகிறிஸ்து உதவி செய்ய விரும்புகிறார். அதுபோலவே உபத்திரவப்படுகிறவர்களுக்கு இயேசுகிறிஸ்து சந்தோஷத்தையும் சமாதானத்தையும் கொடுக்கவிரும்புகிறார். இந்த உலகம் சீஷர்களைப் பகைக்கும்போது, பிதாவானவர் அவர்களைச் சிநேகிக்கிறார்.

இந்த உலகம் சீஷர்களை ஒரே காரணத்திற்காகத்தான் பகைக்கிறது. அவர்கள் இந்த உலகத்திலிருந்தாலும், இந்த உலகத்தாரல்ல. அவர்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரிக்கவில்லை. இயேசுகிறிஸ்துவின் கரங்களிலிருந்து அவர்கள் பிதாவின் வார்த்தையைப் பெற்றிருக்கிறார்கள். இந்த உலகமோ தேவனுடைய வார்த்தையைத் ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. கர்த்தருடைய வார்த்தையை இந்த உலகம் புறக்கணித்துவிட்டது. ஆனால் கிறிஸ்துவின் சீஷர்களோ தேவனுடைய வார்த்தையை தங்களுடைய இருதயத்தில் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். தேவனுடைய வார்த்தை உலகத்திற்குப் பிடிக்கவில்லை. சீஷருக்குப் பிடித்திருக்கிறது. ஆகையினால் இந்த உலகம் அவர்களைப் பகைக்கிறது.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் இந்த உலகத்தில் தேவனுடைய வார்த்தையைப் பெற்றிருக்கிறோம். அவருடைய சித்தத்தின் பிரகாரமாக ஊழியம் செய்கிறோம். இந்த உலகம் கிறிஸ்துவின் சீஷர்களைப் பகைத்ததுபோல நம்மையும் பகைக்கும். நாமும் இந்த உலகத்திலிருந்தாலும், இந்த உலகத்தாரல்ல. கர்த்தருக்காக ஊழியம் செய்கிற நாம், இந்த உலகத்தில் நமக்கு உபத்திரவம் உண்டு என்பதை மறந்துவிடக்கூடாது. பாடுகள் வழியாகவும், உபத்திரவங்கள் வழியாகவும் நாம் கடந்துசெல்லும்போது, மது தேவனுடைய உதவியும் ஒத்தாசையும் நம்மோடு கூடயிருக்கும்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் இந்த உலகத்திலிருந்து தெரிந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள். இவர்கள் இந்த உலகத்திலிருந்தாலும் இந்த உலகத்திற்கு ஒத்த வேஷம் தரிப்பதில்லை. இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஊழியக்காரர்கள் உலகத்தாரிடம் பிரசங்கம்பண்ணும்போது, அவர்களை உலகத்தின் பிடியிலிருந்து விடுவித்து, கர்த்தருடைய பிரசன்னத்திற்குக் கொண்டு வருகிறார்கள். இரட்சிக்கப்படுகிற ஜனங்கள் தங்களைவிட்டு நீங்கிப்போய் விட்டதினால், இந்த உலகம் இரட்சிக்கப் படுகிறவர்களையும்பகைக்கிறது, அவர்களுக்கு இரட்சிப்பின் சுவிசேஷத்தை அறிவிக்கும் ஊழியக்காரர்களையும் பகைக்கிறது.

கர்த்தருடைய பிள்ளைகள் உலகத்துக்கும், உலகத்தின் பாவங்களுக்கும் எதிராகப் பிரசங்கம்பண்ணுகிறார்கள். இந்தப் பிரசங்கத்தை உலகம் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகையினால் தங்களுக்கு விரோதமாகப் பிரசங்கம்பண்ணும் கர்த்தருடைய ஊழியக்காரர்களை இந்த உலகம் பகைக்கிறது. நம்முடைய பிரசங்க வார்த்தை நம்முடைய சொந்த வார்த்தையல்ல. கர்த்தருடைய சுவிசேஷத்தை நாம் பிரசங்கம்பண்ணுகிறோம். இயேசுகிறிஸ்துவே தேவனுடைய வார்த்தையை நமக்குக் கொடுத்திருக்கிறார். நம்மிடத்தில் தேவனுடைய வார்த்தை இருப்பதினால் இந்த உலகம் நம்மைப் பகைக்கிறது. நமக்குத் தீங்கு செய்ய முயற்சிபண்ணுகிறது இந்த உலகத்தின் தீமையிலிருந்து பிதாவானவர் நம்மைக் காக்கும்படி, இயேசுகிறிஸ்து நமக்காக வேண்டிக்கொள்கிறார்.

கிறிஸ்துவின் வார்த்தையைப் பெற்றிருக்கிற ஊழியக்காரர்கள், அதைத் தங்களுடைய இருதயங்களில் காத்துக்கொள்ள வேண்டும். கர்த்தருடைய பிரதான கட்டளைக்குக் கீழ்ப்படிந்து பயபக்தியோடும் பொறுமையோடும் உலக ஜனத்தாருக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணவேண்டும். இந்த உலகம் நம்மைப் பகைத்தாலும் இந்த உலகத்தின் மூலமாக நமக்குத் தீமை வந்தாலும், இவையெல்லாவற்றிற்கும் நடுவில் தேவனுடைய விசேஷித்த பாதுகாப்பும் பராமரிப்பும் நமக்கு வாக்குப்பண்ணப் பட்டிருக்கிறது.

கர்த்தருடைய பிள்ளைகளில் சிலர் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுவதின் நிமித்தமாக இரத்த சாட்சியாக மரித்திருக்கிறார்கள். இவர்கள் கர்த்தருக்காக சந்தோஷமாகப் பாடுகளை அனுபவித்திருக்கிறார்கள். கர்த்தருடைய சந்தோஷம் இவர்களுக்குள் நிறைவாகயிருப்பதினால் மரணம் இவர்களைப் பயப்படுத்தவில்லை. தேவனுடைய நாம மகிமைக்காக, இவர்கள் தங்களையே மரணத்திற்குச் சந்தோஷமாக ஒப்புக்கொடுக்கிறார்கள்.

## அதிகாரம் - 17

இந்த உலகம் கர்த்தருடைய பிள்ளைகளைப் பகைக்கிறது. ஏனெனில் இவர்கள் உலகத்தாரல்ல. கர்த்தருடைய ஊழியக்காரர்களிடத்தில்தான், கர்த்தருடைய வார்த்தை மிகுந்த வல்லமையோடு வருகிறது. அவர்கள் தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கம்பண்ணும்போது, தேவன் தம்முடைய வார்த்தையை அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் உறுதிபண்ணுகிறார். கர்த்தருடைய பிள்ளைகள் உலகத்திற்கும், உலகத்தின் பாவங்களுக்கும் விரோதமாக இயேசுவின் நாமத்தினால் பிரசங்கம்பண்ணும்போது, உலகத்தார் கர்த்தருடைய வார்த்தையைக்கேட்டு மனந்திரும்பி இரட்சிக்கப்படுவதற்குப் பதிலாக, கர்த்தருடைய வார்த்தையைப் புறக்கணித்து, அதைத் தங்களுக்குப் பிரசங்கம்பண்ணும் கர்த்தருடைய ஊழியக்காரர்களைப் பகைக்கிறது. அவர்களுக்கு தீங்கு செய்ய நினைக்கிறது.

**தீமையினின்று காக்கும்படி.**

**நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன் (யோவா 17:15).**

பிதாவானவர் தமது நாமத்தினாலே சீஷர்களை காத்துக்கொள்ளுமாறு இயேசுகிறிஸ்து விண்ணப்பம்பண்ணுகிறார். சீஷர்கள் இந்த உலகத்தாரல்ல. ஆகையினால் இந்த உலகம் அவர்களைப் பகைக்கிறது. இந்த உலகத்தில் சீஷர்களுக்குப் பிரச்சனை உண்டாகக்கூடாது என்றால் அதற்கு இரண்டு வழிகள் உள்ளன. அவையாவன: 1. சீஷர்களை இந்த உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளவேண்டும். 2. பிதாவானவர் சீஷர்களை தீமையினின்று காத்துக்கொள்ளவேண்டும். இவ்விரண்டில் எது நடந்தாலும் சீஷர்களை இந்த உலகத்திலிருந்து காத்துக்கொள்ளலாம்.

இயேசுகிறிஸ்துவோ தம்முடைய சீஷர்களுக்காக ஜெபிக்கும்போது, பிதாவானவர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி வேண்டிக் கொள்ளவில்லை. அவர்கள் உலகத்தில்தான் இருக்கிறார்கள். உலகத்திலிருந்து அவர்களைக் காப்பதற்காக, அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளவேண்டாம் என்று இயேசுகிறிஸ்து விண்ணப்பம்பண்ணுகிறார். உலகத்திலிருந்து எடுத்துக்கொள்வது என்பதற்கு "அவர்களுக்கு சரீர மரணம் உண்டாவது" என்று பொருள். தம்முடைய சீஷர்களுக்கும் சரீர மரணம் விரைவில் உண்டாகவேண்டும் என்று இயேசுகிறிஸ்து ஜெபிக்கவில்லை.

இந்த உலகம் கிறிஸ்துவின் சீஷர்களைப் பகைக்கிறது. இந்தப் பகையிலிருந்து சீக்கிரமாக விடுதலைபெறவேண்டுமென்றால், இந்த உலகத்தைவிட்டுக் கடந்துபோய்விடுவது ஒரு வழி. பிதாவானவர் வானத்திலிருந்து இரதங்களையும் குதிரைகளையும் அனுப்பி, இந்தப் பூமியில் தீமைகளை அனுபவித்துக்கொண்டிருக்கும் இயேசுகிறிஸ்துவின் சீஷர்களைப், பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளலாம். ஆனால் இப்படிப்பட்ட சம்பவம் தம்முடைய சீஷர்களுக்கு நடைபெறவேண்டுமென்று இயேசுகிறிஸ்து ஜெபிக்கவில்லை.

இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் ஜெயம் கொள்ளுகிறவராக வந்திருக்கிறார். சோதனைகளைச் சகித்துக்கொள்கிறவராக, நீடிய பொறுமையுள்ளவராக இயேசுகிறிஸ்து அவர்கள் மத்தியிலே இருக்கிறார். பொதுவாக மனுஷனுக்குப் பிரச்சனைகள் அதிகமாகும்போது அவனுடைய பொறுமை அவனைவிட்டு நீங்கிப்போகும். தன்னுடைய ஜீவன் எப்போது முடியுமென்று காத்துக்கொண்டிருப்பான். சில சமயங்களில் பிரச்சனையின் வேதனை தாங்காமல் அவன் தன்னையே மாய்த்துக்கொள்வான். ஆனால் இயேசுகிறிஸ்துவோ எல்லா பாடுகளின் வழியாகச் சென்றாலும், அவர் பொறுமையுள்ளவராக அவையெல்லாவற்றையும் சகித்துக்கொள்கிறார்.

இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் ஒவ்வொருவரும் தன்னுடைய சிலுவையை எடுத்துக்கொண்டு அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றவேண்டும். சிலுவையைக் கீழே இறக்கிவைத்துவிட்டு, அதைச் சுற்றி விலகிப் போய்விடலாம் என்று நினைக்கக்கூடாது. இது இயேசுகிறிஸ்துவின் உபதேசமல்ல.

## அதிகாரம் - 17

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு, இந்த உலகத்திலே உன்னதமான ஊழியத்தை நியமித்திருக்கிறார். இந்த உலகம் அவர்களைப் பகைக்கலாம். இந்தப் பகைகளுக்கு மத்தியிலும் கிறிஸ்துவின் சீஷர்கள் தங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கும் ஊழியத்தைத் தொடர்ந்து செய்யவேண்டும். இந்த உலகம் தேவனை அறியாமல் ஆவிக்குரிய இருளிலிருக்கிறது. இயேசுகிறிஸ்து இந்த உலகத்திற்கு வெளிச்சமாகயிருக்கிறார். கிறிஸ்துவின் சீஷர்களும் இந்த உலகத்திற்கு வெளிச்சத்தைக் கொடுக்கிறார்கள். உலகத்தாரின் கிரியைகள் அந்தகாரமும், பாவமும், துன்மார்க்கமும் நிறைந்ததாக இருக்கிறது. கிறிஸ்துவின் வெளிச்சத்தில் உலகத்தாரின் பாவம் வெளிப்படையாகத் தெரிகிறது. ஆகையினால் இந்த உலகத்தார் கிறிஸ்துவின் வெளிச்சத்தையும், சீஷர்களின் வெளிச்சத்தையும் அகற்றிவிடவேண்டுமென்று தீர்மானமாயிருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் பிரதான கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, உலகம் முழுவதும் சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுகிறார்கள். இவர்களுடைய ஊழியத்தின் மூலமாக ஏராளமான ஜனங்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறார்கள். இவர்கள் ஒரு காலத்தில் இந்த உலகத்திற்குரியவர்களாகயிருந்தார்கள். இப்போதோ இயேசு கிறிஸ்துவுக்குரியவர்களாகயிருக்கிறார்கள். ஆகையினால் இந்த உலகம் அவர்களையும் பகைக்கிறது. இயேசுகிறிஸ்துவின் பிள்ளைகள், எல்லோருமே கர்த்தருக்குச் சித்தமானால், இரத்தசாட்சியாக மரிக்க ஆயத்தமாயிருக்கிறார்கள். ஆனால் நாமே முன்வந்து மரணத்தைத் தேடிப்போகக்கூடாது. நமக்கு நியமிக்கப்பட்ட காலத்தில் மரணம் நம்மைத்தேடி வரும். அது வரும்போது அதைச் சந்திப்பதற்கு ஆயத்தமாகயிருக்கவேண்டும். அதுவரையிலும் இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் நமக்குக் கொடுத்திருக்கும் ஊழியத்தைப் பயபக்தியோடும், உண்மையோடும், உத்தமமாகவும் செய்து நிறைவேற்றவேண்டும். தேவன் நமக்கு நியமித்து வைத்திருக்கும் ஓட்டத்தை ஓடி முடிக்காமல், பாதிவழியிலேயே ஓட்டத்தை விட்டு விலகிப்போய் செத்துப்போய்விடக்கூடாது. பிதாவானவர் தம்முடைய சீஷர்களை இந்த உலகத்தின் தீங்குகளிலிருந்து காத்துக்கொள்ள வேண்டுமாறு இயேசுகிறிஸ்து விண்ணப்பம்பண்ணுகிறார்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடத்தில் அன்பாகயிருக்கிறார். ஆனாலும் தாம் பரலோகத்திற்குப் போகும்போது, தம்முடைய சீஷர்களையும் தம்மோடுகூட, இப்போது பரலோகத்திற்கு அழைத்துச்செல்வது இயேசுகிறிஸ்துவின் சித்தமல்ல. நல்லவர்கள் இந்த உலகத்தின் பாடுகளை அனுபவிக்காமல், அவர்களை இந்த உலகத்திலிருந்து எடுத்துக்கொள்வது நல்லதுதான். சரீர மரணம் குடும்பத்தில் வேதனையை உண்டாக்கினாலும், பரிசுத்தவானின் மரணம் சந்தோஷமான அனுபவமே. ஆனாலும் நம்முடைய விருப்பத்தின் பிரகாரம் இயேசுகிறிஸ்து நமக்கு மரணத்தைக் கொடுப்பதில்லை. தம்முடைய சித்தத்தின் பிரகாரம், தமக்கு ஏற்றவேளையில்தான், நமக்கு மரணத்தைக் கொடுக்கிறார். அதுவரையிலும் இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தை நாம் உண்மையாகச் செய்யவேண்டும்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களை அதிகமாக நேசித்தாலும், அவர்களைத் தம்மோடுகூட உடனடியாக பரலோகத்திற்கு அழைத்துச்செல்லாமல், அவர்களை இந்த உலகத்தில் சிறிது காலம் விட்டுச்செல்கிறார். அவர்கள் பரலோகத்திற்குள் பிரவேசிப்பதற்கு பக்குவப்படவேண்டும். சீஷர்களைப்போலவே இன்னும் ஏராளமான பரிசுத்தவான்கள் தங்கள் மரணத்தைச் சந்திக்காமல் இந்தப் பூமியில் உயிரோடிருக்கிறார்கள். இவர்கள்மீதுள்ள அன்பினால் இயேசுகிறிஸ்து இவர்களை மரணத்திற்குப் பக்குவப்படுத்துகிறார். அதேவேளையில் அவர்கள் பரலோகத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவர்களைப் பக்குவப்படுத்துகிறார்.

சீஷர்கள்இந்த உலகத்திலிருக்கும்போது, அவர்களுக்கு இந்த உலகத்தின் மூலமாக பிரச்சனைகள் வரும். அவர்களுக்கு ஒரு பிரச்சனையும் வரக்கூடாது என்று இயேசுகிறிஸ்து அவர்களுக்காக ஜெபிக்கவில்லை. இந்த உலகத்தில் நமக்குப் பிரச்சனைகள் வந்தாலும், அந்தப் பிரச்சனைகள் நம்மை மேற்கொள்ளக்கூடாது. நாம் பாடுகளுக்கும், பிரச்சனைகளுக்கும் வேதனைகளுக்கும் கண்ணீர்களுக்கும் அடிமைகளாகிவிடக்கூடாது. இந்த உலகம் நம்மை ஜெயிக்கக்கூடாது. நாம் இந்த உலகத்தை ஜெயிக்கிறவர்களாக இருக்கவேண்டும். இந்த உலகத்தின் பிரச்சனைகளிலிருந்து விலகி ஓடிப்போவதைவிட, இயேசுகிறிஸ்துவின்மேல் விசுவாசம் வைத்து, அந்தப் பிரச்சனைகளைச் சந்தித்து, அவற்றை மேற்கொள்வதன் மூலமாகவே, இயேசுகிறிஸ்துவின் நாமம் அதிகமாய் மகிமைப்படும்.

## அதிகாரம் - 17

உலகத்தின் பிரச்சனைகளுக்குப் பயந்து, தனிமையான இடத்திற்கு ஓடிப்போய், அங்கு தனிமையில் ஜீவித்து, இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியம் செய்வதைவிட, ஜனங்கள் இருக்குமிடத்தில், அவர்கள் மத்தியில், அவர்கள் மூலமாகப் பாடுகள் வந்தாலும், அங்கு இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியம் செய்வதுதான் மேன்மையான ஊழியம்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு ஜெபம்பண்ணுவதைப்பற்றிக் கற்றுக்கொடுக்கிறார். "தீமையினின்று எங்களைக் காத்துக்கொள்ளும்" என்று சீஷர்கள் அனுதினமும் ஜெபம்பண்ணவேண்டும். தீமையினின்று காத்துக்கொள்ளும் என்பதற்கு தீமை செய்கிறவனிடத்தினின்று காத்துக்கொள்ளும் என்று பொருள்கூறலாம். சோதிக்கிறவனாகிய சாத்தானிடத்தினின்று காத்துக்கொள்ளும் என்றும் இந்த வார்த்தைக்குப் பொருள் சொல்லலாம். தீமை செய்கிறவன் அதிக தீமை செய்வதினால் சீஷர்களுடைய விசுவாசம் பலவீனமாய்ப் போய்விடக்கூடாது. ஆகையினால் "நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்கிறேன்" என்று இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்காக பிதாவினிடத்தில் ஜெபிக்கிறார்.

சீஷர்கள் தீங்குசெய்யாதவாறு அவர்களைக் காத்துக்கொள்ளவேண்டும். இந்த உலகத்தின் தீங்குகளிலிருந்தும், இந்த உலகத்திலிருந்து வரும் உபத்திரவங்களிலிருந்தும் பிதாவானவர் கிறிஸ்துவின் சீஷர்களைக் காத்துக்கொள்ளவேண்டும். இந்த உலகத்தின் மூலமாக சீஷர்களுக்கு வரும்பாடுகள், அவர்களைக் குத்துகிற முள்ளைப்போல இருக்கக்கூடாது. சீஷர்களுக்கு ஒரு தீமையும் வராது என்னும் உத்திரவாதம் இல்லை. அவர்கள் இந்த உலகத்தில் இருக்கும் வரையிலும் இந்த உலகத்தின் மூலமாக அவர்களுக்குத் தீங்குகள் உண்டாகும். தீங்குகள் வந்தாலும், சீஷர்கள் தீங்குகள் வழியாகக் கடந்துபோக வேண்டும்.

அதற்காகப் பிதாவானவர் அவர்களைப் பலப்படுத்தவேண்டுமென்றும், தீங்குகளை மேற்கொண்டு, தங்களுடையஇலக்கை நோக்கி முன்னேறிச்செல்ல அவர்களைப் பலப்படுத்த வேண்டுமென்றும், இயேசுகிறிஸ்து விண்ணப்பம்பண்ணுகிறார்.

**அவர்கள் உலகத்தாரல்ல**

**நான் உலகத்தானல்லாததுபோல, அவர்களும் உலகத்தாரல்ல (யோவா 17:16).**

இயேசுகிறிஸ்து இந்த உலகத்தாரல்ல. அவரைப்போலவே அவருடைய சீஷர்களும் இந்த உலகத்தாரல்ல. இவர்கள் இந்த உலகத்திற்கு ஒத்த வேஷம் தரிக்கவில்லை. இந்த விஷயத்தில் இயேசுகிறிஸ்துவும் அவருடைய சீஷர்களும் ஒன்றாயிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து இந்த உலகத்திலிருந்தபோது பிதாவானவரும் பாதுகாப்பும் பராமரிப்பும், வழிநடத்துதலும் அவரோடு கூடயிருந்தது. அதுபோலவே நாமும் இந்த உலகத்திலிருக்கும்போது, இயேசுகிறிஸ்துவின் பாதுகாப்பும் பராமரிப்பும் வழிநடத்துதலும் நமக்குத் தேவை. இவற்றை ஜெபத்தின் மூலமாக, விசுவாசத்தில் பெற்றுக்கொள்ளவேண்டும். தேவனுடைய பாதுகாப்புக்கும், பராமரிப்புக்கும், நம்மை விசுவாசத்தோடு தேவனுடைய கரங்களில் ஒப்புக்கொடுக்கவேண்டும். பிதாவானவர் இயேசுகிறிஸ்துவில் அன்பாயிருப்பதுபோல நம்மிடத்திலும் அன்பாயிருக்கிறார். நாம் இயேசுகிறிஸ்துவின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, அவருக்குப் பிரியமாக ஜீவிக்கும்போது, பிதாவானவரின் அன்பும் பாதுகாப்பும் நமக்குக் கொடுக்கப்படும்.

இயேசுகிறிஸ்து இந்த உலகத்திற்குரியவரல்ல. இயேசுகிறிஸ்து ஒருபோதும் தம்மை இந்த உலகத்தாராகக் காண்பித்துக்கொள்ளவில்லை. அவர் இந்த உலகத்திற்கு ஒத்த வேஷம் தரிக்கவுமில்லை. இந்த உலகத்தின்மீதோ அல்லது இந்த உலகத்தின் காரியங்கள்மீதோ இயேசுகிறிஸ்துவுக்குப் பிரியமோ, பற்றுதலோ இல்லை. இந்த உலகத்தின் சம்பத்து எதுவும் அவரிடத்திலில்லை. அவர் இந்த உலகத்தில் இருந்தகாலத்தில் அவருக்கென்று இப்பிரபஞ்சத்தில் அசையும் சொத்துக்களோ, அசையா சொத்துக்களோ எதுவுமில்லை. அவர் தலைசாய்க்க இடமில்லாதவராகவே இந்த உலகத்திலிருந்தார். இந்த உலகத்தின் அரசியல் அதிகாரம், அரசியல் செல்வாக்கு எதுவும் அவரிடத்திலில்லை.

## அதிகாரம் - 17

இயேசுகிறிஸ்துவின் ஆவி இந்த உலகத்திற்கு மரித்தப்போனதாகவே இருந்தது. இந்தப் பிரபஞ்சத்தின் பிரபுவுக்கு இயேசுகிறிஸ்துவின் ஆவியில் பங்குமில்லை பாத்தியமுமில்லை. கிறிஸ்துவின் ஆவியில் கிரியை செய்ய இப்பிரபஞ்சத்தின் பிரபுவுக்கு ஒரு காரியமுமில்லை. இயேசுகிறிஸ்துவைப்போலவே, அவரை விசுவாசிக்கிறவர்களாகிய நாமும், இந்த உலகத்திலிருந்தாலும், இந்த உலகத்தாராக இருக்கக்கூடாது. இந்த உலகத்தின் காரியங்களுக்கு நம்மை ஒப்புக்கொடுத்து, உலகத்தின் ஆசாபாசங்களில் நாம் சிக்கிக்கொள்ளக்கூடாது. உலகத்திற்கு ஒத்த வேஷம் தரிக்கக்கூடாது. இயேசுகிறிஸ்துவை சிநேகிப்பதைவிட, இந்த உலகத்தை அதிகமாக சிநேகித்து அவஸ்தைப்படக்கூடாது. இந்த உலகத்தின் சிறைசாலையில் அடைக்கப்பட்டு, உலககாரியங்களினால் நாம் ஆளுகை செய்யப்படக்கூடாது.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்மை தேவன் இந்த உலகத்திலிருந்து விடுதலை செய்திருக்கிறார். இது நமக்குக் கிடைத்திருக்கும் சிலாக்கியம். நமக்கு விடுதலை வாக்குப்பண்ணப்பட்டிருக்கும்போது, நாம் இந்த உலகத்தின் அடிமைகளாகவே இருப்போமென்று அடம்பிடிக்கக்கூடாது. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் எல்லோருமே இந்த உலகத்திற்கு மரிக்கவேண்டும். இது விசுவாசிகளின் கடமை. இது விசுவாசிகளின் சுபாவமாக இருக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் விசுவாசத்தில் பலவீனமாக இருந்தார்கள். அவர்களிடத்தில் பல குறைகள் காணப்பட்டன. இருந்தாலும் இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களைப்பற்றிச் சொல்லும்போது "அவர்கள் உலகத்தாரல்ல" என்று அவர்களைப்பற்றி சாட்சியாக அறிவிக்கிறார். தம்முடைய சீஷர்கள் உலகத்தார் அல்லாமல் இருப்பதினால், இயேசுகிறிஸ்து அவர்களைப் பரலோகத்தின் பராமரிப்புக்கு ஒப்புக்கொடுத்து, பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறார்.

### உம்முடைய வசனமே சத்தியம்
### யோவா 17 : 17-19

**யோவா 17:17. உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப்பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்.**

**யோவா 17:18. நீர் என்னை உலகத்தில் அனுப்பினது போல, நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன்.**

**யோவா 17:19. அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகும் படி, அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன்.**

**அவர்களைப் பரிசுத்தமாக்கும்**

**உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப்பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம் (யோவா 17:17).**

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் இந்த உலகத்தில் தீமையினின்று காக்கப்பட்டால் மாத்திரம் போதாது. "அவர்கள் பரிசுத்தமாக்கப்படவும்வேண்டும்" என்று இயேசுகிறிஸ்து விரும்புகிறார். இதற்காக இயேசுகிறிஸ்து பிதாவினிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார். "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்" என்பதே இயேசுகிறிஸ்துவின் விண்ணப்பம். அப்போஸ்தலர் பவுல் விசுவாசிகளுக்காக ஜெபிக்கும்போது "சமாதானத்தின் தேவன் தாமே உங்களைமுற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவிஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக" (1தெச 5:23) என்று கூறி ஜெபிக்கிறார்.

தேவனுடைய கிருபையினால் மாத்திரமே நாம் பரிசுத்தமாக்கப்படுகிறோம். எல்லா விசுவாசிகளும் பரிசுத்தமாக்கப்படவேண்டும். ஆகையினால்தான் இயேசுகிறிஸ்து "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்" என்று விண்ணப்பம்பண்ணுகிறார். அவர் தம்முடைய சீஷர்களுக்காகவும், நமக்காகவும் ஜெபிக்கிறார். பிதாவானவர் நமக்குள் பரிசுத்தமாக்கும் கிரியை நடப்பிக்கிறவர். பரிசுத்தமாக்கும் கிரியை நமக்குள் பரிபூரணமாக நடைபெறவேண்டுமென்றும், அதனால் நல்ல விளைவுகள் உண்டாகவேண்டும் என்றும் இயேசுகிறிஸ்து விரும்புகிறார். பிதாவானவர் நமக்குள் செய்கிற தம்முடைய நற்கிரியையை இன்னும் அதிகமாக செய்யவேண்டுமென்று இயேசுகிறிஸ்து விண்ணப்பண்ணுகிறார். இதன் விளைவாக நம்மிடத்தில் வெளிச்சம் இன்னும் அதிகப் பிரகாசமாக இருக்கும். பிதாவானவர் தம்முடைய பரிசுத்தமாக்கும் கிரியையை நமக்குள் நிறைவேற்ற வேண்டுமென்றும், நம்முடைய ஜீவியகாலம் முழுவதும், முற்றும் முழுவதுமாகப் பிதாவானவர் நம்மை பரிசுத்தப்படுத்த வேண்டுமென்றும் இயேசுகிறிஸ்து பிதாவினிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்.

## அதிகாரம் - 17

இயேசுகிறிஸ்து தமக்குரியவர்களைப் பரிசுத்தப்படுத்தவேண்டுமென்று விரும்புகிறார். இப்போது நம்மிடத்தில் அவர் எதிர்பார்க்கிற பரிசுத்தம் காணப்படாவிட்டாலும், அவர் நம்மை தமக்குச் சொந்தவமானவர்கள் என்று அறிவிக்க வெட்கப்படவில்லை. நாம் பாவிகளாகயிருக்கையிலேயே இயேசுகிறிஸ்து நம்மைத் தேடி இந்தப் பூமிக்கு வந்திருக்கிறவர். நம்மீது கிருபையும் இரக்கமும் இருப்பதினால், இயேசுகிறிஸ்து நம்மைப் பிதாவின் கரங்களில் ஒப்புக்கொடுத்து, நம்மைப் பரிசுத்தப்படுத்துமாறு விண்ணப்பம்பண்ணுகிறார். தேவனுடைய கிருபையினால் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறவர்கள் இன்னும் அதிகமாகப் பரிசுத்தமாக்கப்பட வேண்டும். நம்முடைய பரிசுத்தத்தில் முன்னேற்றம் காணப்படவில்லையென்றால், நாம் பின்னோக்கிப் போய்க்கொண்டிருக்கிறோம் என்றுதான் பொருள். முன்செல்லவில்லையென்றால் பின்செல்கிறோம் என்பதே அர்த்தமாம். பரிசுத்தமாயிருக்கிறவன் இன்னும் பரிசுத்தமாயிருக்கட்டும் என்பதுதான் கிறிஸ்துவின் உபதேசம். நம்மைப் பரிசுத்தப்படுத்துகிற தேவனே, நம்மை நீதிமானாக்குகிறார்.

பிதாவானவர் தம்முடைய சத்தியத்தினாலே, சீஷர்களைப் பரிசுத்தப்படுத்த வேண்டுமென்று இயேசுகிறிஸ்து விண்ணப்பம்பண்ணுகிறார். பிதாவின் வசனமே சத்தியம். அந்தச் சத்தியத்தினால் மாத்திரமே நாம் பரிசுத்தப்படுத்தப்படுகிறோம். தேவனுடைய தெய்வீக வெளிப்பாடு, இப்போது எழுதப்பட்டிருக்கிற வார்த்தையாக நம்முடைய கரங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது. வசனம் முழுவதும் பரிசுத்தமானது. இதில் எந்தவிதப் பொய்யின் கலப்புமில்லை. தேவனுடைய வார்த்தையில் பிழை எதுவுமில்லை. குறைவு எதுவுமில்லை. சத்திய வசனம் பரிபூரணமாக இருக்கிறது. தேவனுடைய சத்தியத்தைப் பரிசுத்த வேதாகமம் பரிபூரணமாக வெளிப்படுத்துகிறது. சத்திய வசனமே நம்மை உள்ளாகவும் புறம்பாகவும் சுத்தப்படுத்த வேண்டும். நம்முடைய புதிய பிறப்புக்கு சத்திய வசனமே வித்தாகயிருக்கிறது. நம்முடைய புதிய ஜீவனுக்கு சத்திய வசனமே போஜனமாகயிருக்கிறது.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்காக ஜெபிக்கும்போது, அவர்களைத் தம்முடைய விசுவாசிகளாகவும், ஊழியக்காரர்களாகவும் காண்கிறார். இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் அப்போஸ்தல ஊழியத்தைச் செய்வதற்கு பிதாவானவர் அவர்களைப் பரிசுத்தப்படுத்தவேண்டும். அவர்களுடைய ஊழியம் பரலோகத்தில் அங்கீகரிக்கப்பட வேண்டும். அப்போஸ்தல ஊழியத்தைச் செய்வதற்கு சீஷர்கள் தகுதியுள்ளவர்களாக இருக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவின் கிருபையும், பரிசுத்த ஆவியானவரின் ஊழியவரங்களும் சீஷர்களுக்கு அருளப்பட வேண்டும்.

இயேசுகிறிஸ்து தாமே தம்முடைய சீஷர்களை அழைத்து, அவர்களைத் தம்முடைய ஊழியத்திற்காகப் பிரித்தெடுத்து, தம்முடைய ஊழியத்தைச் செய்வதற்குப் பிரதிஷ்டைபண்ணி அபிஷேகம்பண்ணுகிறார். தாம் அழைத்த ஊழியத்திற்கு அவர்களைத் தகுதிப்படுத்துகிறார். அவர்கள் எல்லா தேசங்களுக்கும் சுவிசேஷத்தை அறிவிக்கப் புறப்பட்டுப்போகும்போது, பிதாவின் பரிசுத்தமான கரம் அவர்களோடு கூடயிருக்க வேண்டுமென்று இயேசுகிறிஸ்து விண்ணப்பம்பண்ணுகிறார். அவர்கள் இந்த உலகத்திற்கு தேவனுடைய சத்திய வசனத்தைப் பிரசங்கம்பண்ணும்போது, பிதா தம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கவேண்டுமென்று ஜெபிக்கிறார். பரிசுத்தமில்லாமல் தேவனுக்குப் பிரியமாகயிருப்பது கூடாதகாரியம். பரிசுத்தமில்லாமல் தேவனுடைய ஊழியத்தை யாரும் செய்யமுடியாது. நம்முடைய சுயமுயற்சியினால் யாரும் பரிசுத்தவானாக ஆகமுடியாது. பிதாவானவர் தாமே தம்முடைய சத்தியத்தினால் நம்மைப் பரிசுத்தமாக்க வேண்டும்.

தம்முடைய சீஷர்கள் பரிசுத்தமாக்கப்பட வேண்டுமென்பதில் இயேசுகிறிஸ்து மிகுந்த கரிசனையோடிருக்கிறார். இதற்காக அவர் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறார். பிதாவின் கிருபை தம்முடைய சீஷர்களோடு கூடயிருக்கவேண்டுமென்று இயேசுகிறிஸ்து விண்ணப்பம்பண்ணுகிறார். சுவிசேஷ ஊழியர்கள் தங்களுக்காக ஜெபிக்கவேண்டும். விசுவாசிகளும் ஊழியர்களுக்காக ஜெபிக்க வேண்டும். மற்றவர்களுக்குப் பிரயங்கம் பண்ணுகிற ஊழியக்காரர்களைப் பிதாவானவர் தம்முடைய சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கும்படியாக நாம் ஜெபிக்கவேண்டும். ஊழியக்காரர்கள் தேவனிடத்தில் தங்களைப் பூரணமாக அர்ப்பணிக்க வேண்டுமென்று ஜெபிக்க வேண்டும். அவர்கள் பிரசங்கிக்கிற சுவிசேஷ வார்த்தை முதலாவதாக அவர்களுடைய இருதயத்திற்குள் கிரியை நடப்பிக்கவேண்டும். கர்த்தர் நல்லவரென்பதை ருசிபார்த்தவர்களால் மாத்திரமே, மற்றவர்களிடம் கர்த்தர் நல்லவரென்பதை உண்மையான இருதயத்தோடு பிரசங்கம்பண்ண முடியும். நம்மிடத்தில் பரிசுத்தமில்லாமல் மற்றவர்களிடத்தில் பரிசுத்தத்தைப்பற்றிப் பேசிப் பிரயோஜனமில்லை.

## அதிகாரம் - 17

### நீர் என்னை உலகத்தில் அனுப்பினதுபோல

**நீர் என்னை உலகத்தில் அனுப்பினது போல், நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன் (யோவா 17:18).**

இயேசுகிறிஸ்து தம்முடைய ஊழியத்தைப்பற்றிச் சொல்லும்போது, பிதாவானவர் தம்மை இந்த உலகத்தில் அனுப்பினதாக உறுதிபண்ணுகிறார். இயேசுகிறிஸ்து தாமாக இந்த உலகத்திற்கு வரவில்லை. பிதாவானவர் தாமே அவரை இந்த உலகத்திற்கு அனுப்பியிருக்கிறார். அதுபோலவே சீஷர்களும் இந்த உலகத்தில் தாங்களாக ஊழியம் செய்யப்போகவில்லை. இயேசுகிறிஸ்து தாமே அவர்களை இந்த உலகத்தில் அனுப்பியிருக்கிறார். இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் சொன்ன உபதேச வார்த்தைகளைப் பிதாவானவர் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்திருந்தார். பிதாவானவர் தம்மிடத்தில் சொன்ன வார்த்தைகளை மாத்திரமே இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் உபதேசம்பண்ணினார். இயேசுகிறிஸ்து செய்த அற்புதங்களெல்லாமே பிதாவினால் நியமிக்கப்பட்டிருந்தது. இயேசுகிறிஸ்து என்ன செய்யவேண்டுமென்று பிதாவானவர் அவரிடத்தில் சொல்லியிருந்தாரோ, அதை மாத்திரமே இயேசுகிறிஸ்து இந்தப் பூமியில் செய்தார். கர்த்தருடைய ஊழியக்காரர்களும் இயேசுகிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின்பற்றி ஊழியம் செய்யவேண்டும். அவர் நம்மிடத்தில் கொடுக்கும் வார்த்தையை மாத்திரமே பிரசங்கம்பண்ணவேண்டும். நாம் செய்யவேண்டுமென்று அவர் நமக்குச் சொல்லும் காரியத்தை மாத்திரம் நாம் செய்யவேண்டும்.

தாம் உபதேசம்பண்ணின அதே சத்தியத்தை உபதேசம்பண்ணுவதற்காகவே இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களை இந்த உலகத்தில் அனுப்பியிருக்கிறார். இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்தபின்பு தம்முடைய சீஷர்களிடத்தில் "பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன்" (யோவா 20:21) என்று மறுபடியுமாகக் கூறுகிறார்.

தம்முடைய சீஷர்களின் ஊழியத்தைப்பற்றிச் சொல்லும்போது, தம்முடைய தெய்வீக ஊழியத்தையும் வெளிப்படுத்திப் பேசுகிறார். இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் பிதாவினால் அனுப்பப்பட்டவர். சீஷர்கள் இந்த உலகத்தில் இயேசுகிறிஸ்துவினால் அனுப்பப்பட்டவர்கள்.

இயேசுகிறிஸ்துவின் ஊழியம் மகிமையுள்ளதுபோலவே, சீஷர்களின் ஊழியமும் மகிமையுள்ளது. சீஷர்கள் இயேசுகிறிஸ்துவினிடமிருந்தே சுவிசேஷ ஊழியத்தைப்பெற்றிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து பிதாவுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தராகயிருக்கிறார். சீஷர்கள் செய்யும் ஊழியத்திற்கும், மத்தியஸ்தராகிய இயேசுகிறிஸ்து செய்யும் ஊழியத்திற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. பிதாவானவர் இயேசுகிறிஸ்துவை இந்த உலகத்திற்கு குமாரனாக அனுப்பியிருக்கிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களை இந்த உலகத்தில் ஊழியக்காரராக அனுப்பியிருக்கிறார்.

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் இந்த உலகத்தில் ஊழியம் செய்யும்போது அவர்களுக்குப் பல தீங்குகள் உண்டாகலாம். பாடுகளும் வேதனைகளும் உண்டாகலாம். ஏனெனில் இயேசுகிறிஸ்து ஊழியம் செய்தபோது அவருக்கும் பாடுகளும் வேதனைகளும் உண்டாயிற்று. கிறிஸ்துவின் சீஷர்கள் அவருடைய ஊழியத்தையே இந்தப் பூமியில் தொடர்ந்து செய்கிறார்கள். ஆகையினால் அவர்களுக்கும் பிரச்சனைகள் உண்டாகலாம். இந்த சூழ்நிலையில் இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களைக் குறித்து மிகுந்த கரிசனையோடிருக்கிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களை கடினமான ஊழியத்திற்கு ஒப்புக்கொடுத்து அனுப்புகிறார். இந்த ஊழியத்தைச் செய்வதற்குச் சீஷர்களுக்குத் தெய்வீக வல்லமையும் தெய்வீக கிருபையும் தேவை.

இயேசுகிறிஸ்து தம்முடைய ஊழியமாக யாரை அனுப்புகிறாரோ, அவர்களோடு கூடயிருக்கிறார். அவர்களைப் பாதுகாக்கிறார். அவர்களைப் பராமரிக்கிறார். அவர்களைத் தாங்குகிறார். தேவன் நம்மை எந்த ஊழியத்திற்காக அழைத்திருக்கிறாரோ அந்த ஊழியத்தைச் செய்வதற்கு அவர் நம்மைத் தகுதிப்படுத்துவார். நாம் அந்த ஊழியத்தைச் செய்யும்போது அவர் நம்மோடு கூடயிருந்து நம்மைப் பலப்படுத்துவார். காத்துக்கொள்வார். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களைப் பிதாவினிடத்தில் ஒப்புக்கொடுக்கிறார். இயேசுகிறிஸ்துவின் ஊழியம் பிதாவினால் நியமிக்கப்பட்டிருக்கிறது.

## அதிகாரம் - 17

கிறிஸ்துவின் சீஷர்களும் அவருடைய ஊழியத்தையே தொடர்ந்து செய்கிறார்கள். ஆகையினால் பிதாவானவர் கிறிஸ்துவின் சீஷர்மீது மிகுந்த அக்கறையோடும் கரிசனையோடும் இருக்கிறார். இயேசுகிறிஸ்து பிதாவினால் பரிசுத்தமாக்கப்பட்டும், உலகத்தில் அனுப்பப்பட்டவராகவும் இருக்கிறார் (யோவா 10:36). இயேசுகிறிஸ்துவைப்போலவே சீஷர்களும் பிதாவினால் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகவும், கிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்வதற்காக உலகத்தில் அனுப்பப்பட்டவர்களாகவும் இருக்கவேண்டுமென்பது இயேசுகிறிஸ்துவின் சித்தம்.

**என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன்**

**அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகும்படி, அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன் (யோவா 17:19).**

பிதாவானவர் தம்முடைய சத்தியத்தினாலே சீஷர்களைப் பரிசுத்தமாக்கவேண்டுமென்று இயேசுகிறிஸ்து விண்ணப்பம்பண்ணிவிட்டு, இப்போது "அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன்" என்று மேலும் விண்ணப்பம்பண்ணுகிறார். இயேசுகிறிஸ்து மத்தியஸ்த ஊழியம் செய்கிறார். தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தராகயிருக்கிறார். இந்த உன்னதமான ஊழியத்தைச் செய்வதற்காக இயேசுகிறிஸ்து தம்மைத்தாமே பரிசுத்தமாக்குகிறார். மத்தியஸ்த ஊழியத்திற்குத் தம்மைப் பரிபூரணமாக அர்ப்பணிக்கிறார். இந்த ஊழியத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் இயேசுகிறிஸ்து தம்மைப் பிரதிஷ்டைபண்ணுகிறார்.

இயேசுகிறிஸ்து தமக்கு நியமிக்கப்பட்ட ஊழியத்தை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறார். இயேசுகிறிஸ்து தம்மை, நித்திய ஆவியினால், கறைதிரையில்லாத, பழுதற்ற பலியாகப் பிதாவினிடத்தில் ஒப்புக்கொடுக்கப்போகிறார். தம்முடைய பரிசுத்தத்தைப்பற்றி இயேசுகிறிஸ்து பிதாவினிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார். தம்முடைய சீஷர்களுக்காகப் பிதாவினிடத்தில் ஜெபிக்கும்போது, அவர்களுக்காக தாம் தம்மைத்தாமே பரிசுத்தமாக்கியிருப்பதைக் குறிப்பிடுகிறார்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடத்தில் அன்புள்ளவராக இருக்கிறார். தம்முடைய அன்பின் திட்டத்தின் பிரகாரமாக, இயேசுகிறிஸ்து, தம்முடைய சீஷர்களுக்காகத், தம்மைத்தாமே பரிசுத்தமாக்குகிறார். அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகும்படி இயேசுகிறிஸ்து அவர்களுக்காகத் தம்மைத்தாமே பரிசுத்தமாக்குகிறார். தம்முடைய சீஷர்கள் தேவனால் அங்கீகரிக்கப்பட்டவர்களாகவும், தேவனுடைய ஊழியத்தைச் செய்வதற்கு தகுதிபெற்றவர்களாகவும் இருக்கவேண்டும் என்பது இயேசுகிறிஸ்துவின் தெய்வீக சித்தமாகும். இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் அவருடைய பரிசுத்தவான்களாகவும், ஊழியக்காரர்களாகவும் இருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் ஊழியம் அவருடைய இரத்தத்தினால் கிரயத்திற்கு வாங்கப்பட்டிருக்கிறது. தம்முடைய சுயஇரத்தத்தினால் இயேசுகிறிஸ்து மனுக்குலத்திற்கு மீட்பைச் சம்பாதித்திருக்கிறார். மீட்பின் கனியாக, இரட்சிக்கப்பட்டவர்களுக்குத் தேவனுடைய ஊழியம் பகிர்ந்துகொடுக்கப்படுகிறது. விசுவாசிகளுடைய பரிசுத்தம் இயேசுகிறிஸ்துவினுடைய மரணத்தினால் உண்டான கனியாகும். சபையைப் பரிசுத்தப்படுத்துவதற்காக, இயேசுகிறிஸ்து தம்மைத்தாமே சபைக்குக் கொடுத்திருக்கிறார். சீஷர்களின் பரிசுத்தத்தை இயேசுகிறிஸ்து திட்டமிடுகிறார். அதே வேளையில் அவர்களைப் பரிசுத்தமாக்கும் உபாயத்தையும் இயேசுகிறிஸ்து வெளிப்படுத்தியிருக்கிறார். அவர்கள் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களாக இருப்பார்கள்.

சத்திய வசனத்திற்கு மனுஷருடைய ஆத்துமாவைப் பரிசுத்தப்படுத்தும் வல்லமை உள்ளது. இயேசுகிறிஸ்துவின் மரணத்தின் மூலமாக சத்திய வசனத்திற்கு வல்லமை உண்டாயிற்று. தம்முடைய சீஷர்களின் பரிசுத்தத்திற்காக இயேசுகிறிஸ்து ஜெபம்பண்ணுகிறார். சீஷர்களோடு, அவரை விசுவாசிக்கிற விசுவாசிகளெல்லோரும் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கவேண்டும் என்பது இயேசுகிறிஸ்துவின் விருப்பமாகும். விசுவாசிகளாகிய நாமும் நம்முடைய பரிசுத்தத்திற்காக ஜெபம்பண்ணவேண்டும். நாம் பரிசுத்தமுள்ளவர்களாக இருக்கவேண்டும் என்பதே நம்மைக் குறித்து இயேசுகிறிஸ்துவின் சித்தமாயிருக்கிறது.

## அதிகாரம் - 17

### ஒருமைப்பாடு
### யோவா 17 : 20-23

**யோவா 17:20. நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன்.**

**யோவா 17:21. அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக் கொள்ளுகிறேன்.**

**யோவா 17:22. நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்.**

**யோவா 17:23. ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும், என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி, வேண்டிக்கொள்ளுகிறேன்.**

### என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும்

**நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன் (யோவா 17:20).**

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களின் பரிசுத்தத்திற்காகப் பிதாவினிடத்தில் ஜெபித்துவிட்டு, இப்போது அவர்களுடைய ஒருமனப்பாட்டிற்காக ஜெபிக்கிறார். இயேசுகிறிஸ்து இந்த ஜெபத்தில் தம்முடைய சீஷர்களுக்காக மாத்திரம் என்று வேண்டிக்கொள்ளாமல், "இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன்" என்று கூறுகிறார்.

இயேசுகிறிஸ்துவினுடைய மத்தியஸ்த ஊழியத்தில் ஆர்வமுள்ளவர்கள் மாத்திரமே அவரிடத்தில் விசுவாசம் வைப்பார்கள்.

இயேசுகிறிஸ்துவின் காலத்தில் வாழ்ந்த சீஷர்களும், மற்ற விசுவாசிகளும் அவரைக் கண்டு விசுவாசித்தார்கள். இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு, இக்காலம் வரையிலும் இயேசுகிறிஸ்துவை அவருடைய சரீரத்தில் பிரத்தியட்சமாகக் காணமுடியவில்லை. இக்காலத்தில் விசுவாசிகளாகிய நாம், அவரைக் காணாதிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்திருக்கிறோம். வசனத்தின் மூலமாகவே, இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைக்குமாறு ஆத்துமாக்கள் அழைக்கப்படுகிறார்கள்.

இயேசுகிறிஸ்து பிதாவினிடத்தில் ஜெபிக்கும்போது, தாம் யாருக்காக ஜெபிக்கிறோம் என்பதை அவர் அறிந்து வைத்திருக்கிறார். இயேசுகிறிஸ்து பிரசித்திப்பெற்ற விசுவாச வீரர்களுக்காகவும் ஜெபிக்கிறார், விசுவாசத்தில் பலவீனமாக இருக்கும் சாதாரண விசுவாசிகளுக்காகவும் ஜெபிக்கிறார். நல்ல மேய்ப்பர் தன்னுடைய மந்தையிலுள்ள நசலான ஆடுகள்மீதும் கவனமாயிருப்பார்.

இயேசுகிறிஸ்துவின் மத்தியஸ்த ஊழியத்தில், அவர் இப்போது இருக்கிறவர்களுக்காகவும் பரிந்து பேசுகிறார். இனிமேல் பிறக்கப்போகிறவர்களுக்காகவும் பரிந்து பேசுகிறார். ஏனெனில் இயேசுகிறிஸ்துவின் மந்தையில் சேராத ஆடுகள் இன்னும் உள்ளன. அவற்றையும் தேடிக்கண்டுபிடித்து தம்முடைய மந்தையில் சேர்ப்பதே இயேசுகிறிஸ்துவின் ஊழியம்.

### நம்மில் ஒன்றாயிருக்கவும்

**அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும்நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன் (யோவா 17:21).**

"அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும்" என்று இயேசுகிறிஸ்து பிதாவினிடத்தில் வேண்டிக்கொள்கிறார். இந்த வாக்கியத்தை இயேசுகிறிஸ்து தம்முடைய ஜெபத்தில் ஏற்கெனவே பயன்படுத்தியிருக்கிறார். "பரிசுத்த பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல் ஒன்றாயிருக்கும்படிக்கு, நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும்" (யோவா 17:11) என்பது இயேசுகிறிஸ்து ஏற்கெனவே ஏறெடுத்திருக்கிற ஜெபமாகும். இப்போது இதே ஜெபத்தை இங்கு மறுபடியும் ஏறெடுக்கிறார்.

## அதிகாரம் - 17

இயேசுகிறிஸ்துவின் இருதயம் தம்முடைய பிள்ளைகளின் ஒருமனப்பாட்டைப்பற்றிய சிந்தனையினால் நிறைந்திருக்கிறது. அவர்களெல்லோருக்கும் ஒரே இருதயம் இருந்தால் மாத்திரம் போதாது. அவர்களுக்கு ஒரே வாயும் இருக்கவேண்டும். ஒரே சத்தியத்தையே அவர்கள் அறிக்கை செய்யவேண்டும். இயேசுகிறிஸ்து இங்கு ஏறெடுக்கிற ஜெபம் எல்லா விசுவாசிகளுக்கும் பொதுவாக ஏறெடுக்கப்படுகிற ஜெபமாகும். ஆகையினால்தான் "அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்கிறேன்" என்று கூறுகிறார். பிதாவும் குமாரனும் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கவேண்டும். அவர்கள் ஒருமைப்பாட்டில் தேறினவர்களாகயிருக்கவேண்டும்.

தம்முடைய விசுவாசிகளெல்லோரும் ஒரே சரீரமாக இணைக்கப்படவேண்டுமென்று இயேசுகிறிஸ்து விரும்புகிறார். பிதாவானவர் தம்முடைய சீஷர்களெல்லோரையும் பார்க்கிறபோது, அவர்கள் பிரிந்திராமல் ஒற்றுமையாக இருக்கிறவர்களாகப் பார்க்கவேண்டும். அவர்கள் பல தேசங்களில் வாழ்கிறவர்களாக இருந்தாலும், பல காலத்தில் வாழ்கிறவர்களாக இருந்தாலும், அவர்களெல்லோருமே ஒன்றாயிருக்குமாறு கிறிஸ்துவில் தலையாகிய தலையினால் இணைக்கப்பட்டிருக்கிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகள் உலகமெங்கும் சிதறியிருக்கிறார்கள். அவர்களெல்லோரையும் கூட்டிச் சேர்த்து ஒன்றாக இணைப்பதற்காக இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையில் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்திருக்கிறார்.

இயேசு கிறிஸ்துவின் சீஷர்களெல்லோரும் ஒரே ஆவியினாலே உயிரடைந்திருக்கிறார்கள். அவர்களெல்லோரும் பிதாவிலும் குமாரனிலும் ஒன்றாயிருக்கிறார்கள். அவர்களெல்லோருக்குமே ஒரே சாயல் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரே ஆவியானவரே அவர்களை நிரப்புகிறார். ஒரே அதிகாரமே அவர்களை ஆளுகை செய்கிறது. சீஷர்களெல்லோரும் அன்பிலும் ஊழியத்திலும் ஒன்றாய் இணைக்கப்பட்டிருக்கிறார்கள்.

அவர்களெல்லோருக்கும் ஒரே இருதயமே இருக்கிறது. அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்குமாறு பிதாவானவர் அவர்களை இணைத்திருக்கிறார். சீஷர்களுக்குள் சிறிய சிறிய காரியங்களில் கருத்து வேறுபாடு இருக்கலாம். ஆனாலும் தேவனுடைய பிரதான காரியங்களில் அவர்கள் ஒன்றாக இணைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் ஒன்றாயிருக்க வேண்டுமென்பதே இயேசுகிறிஸ்துவின் பிரதான ஜெபமாகும்.

இயேசுகிறிஸ்துவின் சீஷர்களெல்லோரும் புதிய இருதயத்தைப் பெற்றிருக்கிறார்கள். அந்த இருதயம் ஒன்றாகவே இருக்கிறது. அவர்களுடைய திட்டங்களிலும் நோக்கங்களிலும் அவர்கள் ஒன்றாக இணைந்திருக்கிறார்கள். அவர்களுடைய விருப்பங்களிலும் ஜெபங்களிலும் ஒன்றாயிருக்கிறார். அவர்களுடைய வார்த்தைகள் மாறலாம், அவர்களுடைய உச்சரிப்புக்கள் மாறலாம். அவர்கள் ஜெபம்பண்ணுகிறவிதம் மாறலாம். இப்படி சில மாற்றங்கள் இருந்தாலும் அவர்களெல்லோரும் ஒரே காரியத்திற்காகவே தேவனிடம் ஒருமனப்பட்டு ஜெபிக்கிறார்கள்.

சீஷர்களெல்லோரும் அன்பிலும் பிரியத்திலும் ஒன்றாயிருக்கிறார்கள். பரிசுத்தவான்களின் ஐக்கியத்திற்காக இயேசுகிறிஸ்து ஜெபம்பண்ணுகிறார். இதே ஜெபத்தை நாமும் ஏறெடுக்கவேண்டும். இப்பிரபஞ்சத்தில் நாம் ஜீவிக்கும் வரையிலும் பரிசுத்தவான்களின் ஐக்கியத்தில் குறைபாடுகள் இருக்கும். விசுவாசிகளுக்குள் சிலபிரிவினைகள் காணப்படலாம். ஆனாலும் நாமெல்லோரும் பரலோகத்திற்குப் போகும்போது, அங்கு நமக்குள் பிரிவினை இராது. நாமெல்லோரும் ஒன்றாயிருப்போம். கர்த்தருடைய பிள்ளைகளெல்லோரும் பரிபூரணமுள்ளவர்களாக கூட்டி இணைக்கப்படுவோம்.

இயேசுகிறிஸ்து பிதாவினிடத்தில் ஜெபிக்கும்போது, தாமும் பிதாவும் ஒன்றாயிருப்பதாகப் பலமுறை குறிப்பிடுகிறார். "நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல் ஒன்றாயிருக்கும்படி" (யோவா 17:11), "நீர் என்னிலும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல" (யோவா 17:21), "நாம் ஒன்றாயிருக்கிறதுபோல" (யோவா 17:22) என்னும் வாக்கியங்களை இயேசுகிறிஸ்து தம்முடைய ஜெபத்தில் பயன்படுத்துகிறார். பிதாவும் குமாரனும் ஒன்றாயிருக்கிறார்கள் என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிற சத்தியம். அவர்கள் இருவருக்குமே ஒரே நோக்கமும், ஒரே சித்தமும் இருக்கிறது.

## அதிகாரம் - 17

பிதாவானவர் குமாரனிடத்தில் அன்பாயிருக்கிறார். குமாரனானவர் பிதாவை எப்போதுமே பிரியப்படுத்துகிறார். இவர்கள் இருவருக்குமே ஒரே திட்டமே இருக்கிறது. தாமும் பிதாவும் ஒன்றாயிருப்பதைப்பற்றி இயேசுகிறிஸ்து சொல்லும்போது, "நீர் என்னிலேயும் நாம் உம்மிலேயும் இருக்கிறதுபோல" என்று குறிப்பிடுகிறார். தம்முடைய சீஷர்கள் ஒன்றாயிருக்கவேண்டும் என்று இயேசுகிறிஸ்து ஜெபிக்கும்போது, அவர்கள் பிதாவையும் தம்மையும்போல ஒன்றாயிருக்கவேண்டும் என்று விரும்புகிறார்.

தம்முடைய சீஷர்கள் எப்படி ஒன்றாயிருக்கவேண்டும் என்பதையும் இயேசுகிறிஸ்து தம்முடைய ஜெபத்தில் தெளிவுபடுத்துகிறார். பிதாவும் இயேசுகிறிஸ்துவும் ஒன்றாயிருப்பதுபோல, சீஷர்களும் அதுபோலவே ஓரளவு ஒன்றாயிருக்கிறார்கள். தெய்வீக சுபாவத்தினாலும், தெய்வீக கிருபையின் வல்லமையினாலும், தெய்வீக ஆலோசனைகளினாலும் அவர்கள் ஒன்றாய் இணைக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் ஒன்றாய் இணைக்கப்பட்டிருப்பது ஓர் பரிசுத்த இணைப்பாகும். பரிசுத்த நோக்கத்திற்காக இவர்கள் பரிசுத்தமாக இணைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த ஒருமைப்பாட்டிற்கு உலகப்பிரகாரமான நோக்கம் எதுவுமில்லை. உலக ஆதாயத்திற்காக சீஷர்கள் ஒன்றாய் இணைக்கப்படவில்லை. தேவனுடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாகவும், அவருடைய தெய்வீக திட்டமும் நோக்கமும் நிறைவேற வேண்டுமென்பதற்காகவும் சீஷர்கள் ஒன்றாய் இணைக்கப்பட்டிருக்கிறார்கள்.

தம்முடைய சீஷர்கள் "நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்கிறேன்" என்று இயேசுகிறிஸ்து ஜெபிக்கிறார். அவர்கள் பிதாவிலும் குமாரனிலும் ஒன்றாயிருக்கவேண்டும். ஒரே தேவனும் ஒரே மத்தியஸ்தரும் இருக்கிறார்கள். நம்முடைய ஒற்றுமைக்கு இயேசுகிறிஸ்துவே மெய்யான வழியாக இருக்கவேண்டும். ஒற்றுமையின் முடிவு தேவனிடத்தில் சேர்வதாகவே இருக்கவேண்டும். பிதாவினிடத்திலும் இயேசுகிறிஸ்துவினிடத்திலும் ஒன்றாக இணைக்கப்பட்டிருக்கிறவர்கள், சீக்கிரத்தில் அவர்களும் ஒருவருக்கொருவர் ஒன்றாக இணைக்கப்படுவார்கள். அவர்களிடத்தில் ஒருமைப்பாடு காணப்படும்.

சிருஷ்டிகருக்கும் மீட்பருக்கும் ஒரே திட்டமும் ஒரே ஆர்வமும் உள்ளது. விசுவாசிகளெல்லோரும் கிறிஸ்துவில் ஒரே சரீரமாக இணைக்கப்படவேண்டும். அப்போதுதான் தேவனுடைய கிருபையை அவர்கள் தாராளமாகப் பெற்றுக்கொள்வார்கள். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்காகப் பிதாவிடத்திலிருந்து தேவகிருபையைப் பெற்றிருக்கிறார். சீஷர்கள் ஒன்றாயிருக்கும்போது இயேசு கிறிஸ்துவிடத்திலிருந்துப் அந்தக் கிருபையை பெற்றுக்கொள்வார்கள்.

"நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல" அவர்களெல்லோரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்கிறேன் என்று இயேசுகிறிஸ்து விண்ணப்பம்பண்ணுகிறார். பிதாவுக்கும் குமாரனுக்கும் ஐக்கியம் அவசியமாயிருக்கிறது. அவர்கள் இருவரும் தங்கள் சுபாவத்தில் ஒன்றாயிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் சபை கிறிஸ்துவோடு ஐக்கியமாக இருக்கிறது. குமாரனாகிய இயேசுகிறிஸ்து பிதாவில் இருக்கிறார். பிதாவாகிய தேவன் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவில் இருக்கிறார். நாமும் இயேசுகிறிஸ்துவின் மூலமாக பிதாவோடு ஐக்கியமாக இருக்கிறோம். நாம் தேவனோடு ஐக்கியமாக இருக்கும்போது, விசுவாசிகளாகிய நாமும் ஒன்றாக இணைக்கப்பட்டிருப்போம். இயேசுகிறிஸ்துவில் நாம் பரிபூரணமடைந்திருப்போம்.

**மகிமை**

**நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன் (யோவா 17:22).**

இயேசுகிறிஸ்து தம்முடைய ஊழியத்தின் மூலமாகவும், பிரசங்கத்தின் மூலமாகவும் தேவனுடைய வெளிச்சத்தையும், கிருபையையும் சீஷர்களுக்குக் கொடுக்கிறார். இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தில் ஒரு தெய்வீக திட்டம் இருக்கிறது. பிதாவானவர் தமக்குத் தந்த மகிமையை, குமாரனாகிய இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்திருக்கிறார். இதனால் பிதாவும் குமாரனும் ஒன்றாயிருப்பதுபோல சீஷர்களும் ஒன்றாயிருப்பார்கள். சீஷர்கள் ஒன்றாயிருக்கவில்லையென்றால், அவர்களிடத்தில் ஆவியின் வரங்கள் வல்லமையாய் கிரியை செய்யாது.

## அதிகாரம் - 17

இயேசுகிறிஸ்து தம்முடைய அப்போஸ்தலருக்கு ஊழிய வரங்களைக் கொடுத்திருக்கிறார். இவர்கள் இந்த உலகத்தில் தேவனுடைய ஸ்தானிகர்களாக இருக்கிறார்கள். இது சீஷர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் விசேஷித்த சிலாக்கியமும் மகிமையும் ஆகும். மனுஷர் மத்தியிலே இவர்கள் தேவனுடைய ராஜ்யத்தை ஸ்தாபிக்கிறார்கள். தேவனுடைய ராஜ்யத்தில் தேவனுடைய சிங்காசனத்தையும் ஸ்தாபிக்கிறார்கள். இந்த மகிமை இயேசுகிறிஸ்துவுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களை இந்த உலகத்திற்கு ஊழியம் செய்ய அனுப்பியபோது, தம்முடைய மகிமையின் ஒருபகுதியை கிறிஸ்துவானவர் தம்முடைய சீஷருக்குக் கொடுக்கிறார்.

இயேசுகிறிஸ்துவின் மகிமை எல்லா விசுவாசிகளுக்கும் பொதுவாகக் கொடுக்கப்படுகிறது. இயேசுகிறிஸ்து பிதாவோடு உடன்படிக்கையில் ஐக்கியமாக இருக்கிறார். உடன்படிக்கையின் இந்த மகிமையைப் பிதாவானவர் மீட்பருக்குக் கொடுத்திருக்கிறார். இந்த மகிமையை மீட்பராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய ஊழியக்காரர்களுக்குக் கொடுத்திருக்கிறார். ஊழியக்காரர்கள் ஒன்றாயிருக்கவேண்டும் என்பதற்காகவே இயேசுகிறிஸ்து, பிதாவானவர் தமக்குத்தந்த மகிமையை, அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் மூலமாக மகிமையைப் பெற்றுக்கொண்ட பின்பு, சீஷர்கள் ஒன்றாயிருக்கும் சிலாக்கியத்தைப் பெற்றுக்கொள்வார்கள்.

பிதாவானவர் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவுக்கு ஆவியின் வரத்தைக் கொடுத்திருக்கிறார். இது பிதாவானவர் குமாரனுக்குக் கொடுக்கும் பெரிய மகிமையாகும். பிதா தமக்குத்தந்த இந்த மகிமையை இயேசுகிறிஸ்து எல்லா விசுவாசிகளுக்கும் கொடுக்கிறார். இதனால் அவர்கள் எல்லோரும் ஒன்றாயிருக்கிறார்கள். ஒன்றாயிருக்கவேண்டும் என்னும் கடமை உணர்வு அவர்களுக்குள் உண்டாயிற்று. இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரர்களாகிய நமக்கு ஒரே தேவனும், ஒரே கிறிஸ்துவும் இருக்கிறார்கள்.

நம்மெல்லோருக்குமே ஒரே பரலோகத்தைப்பற்றிய நம்பிக்கையிருக்கிறது. நமக்குள் ஒரே சிந்தையே இருக்கவேண்டும். நாமெல்லோரும் சேர்ந்து ஒரே வாயாக, ஒரே நாவாக தேவனுடைய சத்தியத்தை அறிவிக்கவேண்டும். உலகப்பிரகாரமான மகிமை மனுஷரைப் பிரித்துவிடும். இப்பிரபஞ்சத்தில் ஒருவர் முன்னேறும்போது மற்றொருவர் கீழே தள்ளப்படுவார். ஒருவருக்கு மேன்மை உண்டாகும்போது மற்றவரின் மேன்மை மங்கிப்போகும். ஆனால் கிறிஸ்துவின் மகிமை உலகப்பிரகாரமான மகிமையைப் போன்றதல்ல. இயேசுகிறிஸ்து தம்முடைய மகிமையையெல்லா விசுவாசிகளுக்கும் கொடுத்தாலும், அவர்களெல்லோருடைய மகிமையும் பிரகாசமாகவே இருக்கும். விசுவாசிகளுக்குள் கிறிஸ்துவின் மகிமை அதிகமாகக் கொடுக்கப்படும்போது, அவர்களுக்குள் பிரிவினை நீங்கும், போட்டி பொறாமைகள் அகன்றுபோகும். தேவனுடைய மகிமை விசுவாசிகளிடத்தில் அதிகரிக்கும்போது, அவர்களுக்குள் ஒற்றுமையும் அதிகரிக்கும்.

**ஒருமைப்பாட்டில் தேறினவர்கள்**

**ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும், என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன் (யோவா 17:23).**

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் ஒருமைப்பாட்டில் தேறினவர்களாக இருக்கவேண்டும். இதனால் "பிதாவானவர் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை அனுப்பியிருக்கிறார்" என்பதை உலகம் அறிந்துகொள்ளவேண்டும். இயேசுகிறிஸ்து இந்தச் சத்தியத்தை இரண்டுமுறை தம்முடைய ஜெபத்தில் குறிப்பிட்டிருக்கிறார். "நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக" (யோவா 17:21), "என்னை நீர் அனுப்பினதை உலகம் அறியும்படிக்கு" (யோவா 17:23) என்று இயேசு ஜெபிக்கிறார். தாங்கள் எதை விசுவாசிக்கிறோம் என்பதை விசுவாசிகள் அறிந்துகொள்ளவேண்டும். சத்தியத்தை ஏன் விசுவாசிக்கிறோம் என்பதை விசுவாசிகள் புரிந்துகொள்ளவேண்டும். நாம் சத்தியத்தை விசுவாசித்து தேடும்போது அதைக் கண்டுகொள்ளலாம். இயேசுகிறிஸ்து தம்முடைய சத்தியத்தை இங்கு விவரித்துக் கூறுகிறார்.

## அதிகாரம் - 17

இயேசுகிறிஸ்து இந்த உலகத்திலுள்ள மனுக்குலத்தார் மீது அன்புள்ளவராக இருக்கிறார். அவர்களுக்குப் பொதுவான நன்மையைத் தருகிறார். எல்லா மனுஷரும் இரட்சிக்கப்பட வேண்டுமென்பது பிதாவின் சித்தம். குமாரனாகிய இயேசுகிறிஸ்துவிடம் இதே சிந்தையே காணப்படுகிறது. ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லோரும் இரட்சிக்கப்பட வேண்டுமென்பதே இயேசுகிறிஸ்துவின் சித்தமாக இருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரர்களாகிய நாமும் பிதாவின் சித்தம் நிறைவேறுவதற்காக ஊழியம் செய்யவேண்டும். மனுஷரை இரட்சிப்புக்குள் வழிநடத்துவதே நம்முடைய பிரதான ஊழியமாக இருக்கவேண்டும்.

சபையில் விசுவாசிகள் மத்தியில் ஒருமைப்பாடு இருக்கும்போது, அதினால் மிகுந்த பிரயோஜனம் உண்டாகும். விசுவாசிகளின் ஐக்கியமே கிறிஸ்துவின் சத்தியத்திற்கு வெளிப்படையான சான்றாகவும், மேன்மையாகவும் இருக்கிறது. விசுவாசிகள் ஒற்றுமையாக இருந்தால்தான், உலகப்பிரகாரமான ஜனங்கள் நம்மைத் தேடி வருவார்கள். இயேசுகிறிஸ்துவின் சத்தியத்தைப்பற்றி நம்மிடத்தில் விசாரிப்பார்கள். விசுவாசிகளின் ஒற்றுமை, கிறிஸ்துவின் உபதேசத்தை இந்த உலகத்திற்குத் தெளிவாக அறிவிக்கும்.

விசுவாசிகள் ஒற்றுமையாக இருந்தால்தான் அவர்களிடத்தில் ஆவியின் கனி வெளிப்படும். உலகத்தார் நம்மைப் பார்க்கும்போது, அவர்கள் நம்மிடத்தில் இயேசுகிறிஸ்துவைக் காண்பார்கள். நம்முடைய அன்பிலும், ஊழியத்திலும் நாம் ஒருமைப்பாடு உள்ளவர்களாக இருக்கவேண்டும். ஒற்றுமைதான் ஊழியக்காரர்களுக்கு அழகு. நாம் ஒற்றுமையாக இருக்கும்போது மற்றவர்களும் நம்மோடு வந்து இணைந்துகொள்வார்கள். கிறிஸ்தவ உபதேசம் பிரிவினையைப் போக்கவேண்டும். நமக்குள் பிரிவினை இருந்தால் நம்மால் ஒருபோதும் "பிரிவினையை நீக்கும்" ஊழியத்தைச் செய்யமுடியாது.

நாம் சமாதானம் பண்ணுகிறவர்களாக இருக்கவேண்டும். சமாதானம் உள்ளவர்களால் மாத்திரமே சமாதானம்பண்ணமுடியும். விசுவாசிகளுக்குள் ஒற்றுமை இருந்தால் மாத்திரமே அவர்களில் சமாதானம் இருக்கும். ஆகையினால்தான் இயேசுகிறிஸ்து ஒருமைப்பாட்டைப்பற்றி இங்கு வலியுறுத்திக் குறிப்பிடுகிறார். தம்முடைய சீஷர்கள் ஒருமைப்பாட்டில் தேறினவர்களாக இருக்கவேண்டும் என்று ஜெபம்பண்ணுகிறார்.

சீஷர்களிடத்தில் ஒருமைப்பாடு இருக்கும்போது, அவர்களிடத்தில் நல்ல சிந்தனைகள் உண்டாகும். கிறிஸ்துவின் சிந்தனை அவர்களிடத்தில் காணப்படும். பிதாவானவர் இயேசுகிறிஸ்துவை அனுப்பியிருக்கிறார் என்பதை சீஷர்கள் அறிந்துகொள்வார்கள். இந்தச் சத்தியத்தை விசுவாசிப்பார்கள்.

விசுவாசிகளுக்குள் வித்தியாசம் இருக்கலாம். அறிவிலும், ஆற்றலிலும், விவேகத்திலும், வேகத்திலும் நமக்குள் வேறுபாடு காணப்படலாம். ஆனாலும் நாமெல்லோருமே விசுவாசத்தினால் ஒரே சரீரமாக இணைக்கப்பட்டிருக்கிறோம். அன்பினால் ஒரே இருதயமாக மாற்றப்பட்டிருக்கிறோம். விசுவாசிகள் ஒருமைப்பாட்டில் தேறினவர்களாக இருக்கும்போது, பிதாவானவர் குமாரனில் அன்பாயிருக்கிறபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதை உலகம் அறிந்துகொள்ளும்.

பிதாவானவர் விசுவாசிகளிடத்தில் அன்பாயிருப்பது விசுவாசிகளுக்குக் கிடைத்திருக்கும் மிகப்பெரிய சிலாக்கியம். பிதாவானவர் தாமே விசுவாசிகளிடத்தில் அன்பாயிருக்கிறார். பிதாவின் அன்பு விசேஷித்த அன்பு. பிதா தம்முடைய குமாரனிடத்தில் அன்பாயிருப்பதுபோல விசுவாசிகளிடத்தில் அன்பாயிருக்கிறார். பிதாவின் அன்பு நித்திய அன்பு. இந்த நித்திய அன்பினாலேயே பிதாவானவர் விசுவாசிகளிடத்தில் அன்பாயிருக்கிறார்.

விசுவாசிகளாகிய நாம் ஒருவருக்கொருவர் சுத்த இருதயத்தோடு அன்பாக இருக்கவேண்டும். அப்போதுதான் "பிதாவானவர் நம்மீது அன்பாகயிருக்கிறார்" என்பது மெய்யான சத்தியமாக இருக்கும். நாம் ஒருவருக்கொருவர் அன்பாயிருப்பதை இந்த உலகம் பார்க்கும். பிதாவானவர் நம்மில் அன்பாயிருக்கிறதை உலகம் அறிந்துகொள்ளும். யாரிடத்திலெல்லாம் தேவனுடைய அன்பு அதிகமாகயிருக்கிறதோ, அவர்களெல்லோருமே மற்ற விசுவாசிகளிடத்தில் அதிக அன்போடிருப்பார்கள்.

## அதிகாரம் - 17

**மகிமை**
**யோவா 17 : 24-26**

**யோவா 17:24. பிதாவே, உலகத்தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்தபடியினால், நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக, நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனே கூட இருக்க விரும்புகிறேன்.**

**யோவா 17:25. நீதியுள்ள பிதாவே, உலகம் உம்மை அறியவில்லை, நான் உம்மை அறிந்திருக்கிறேன்; நீர் என்னை அனுப்பினதை இவர்களும் அறிந்திருக்கிறார்கள்.**

**யோவா 17:26. நீர் என்னிடத்தில் வைத்த அன்பு அவர்களிடத்திலிருக்கும்படிக்கும், நானும் அவர்களிலிருக்கும்படிக்கும், உம்முடைய நாமத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன்; இன்னமும் தெரியப்படுத்துவேன் என்றார்.**

**என்னுடனேகூட**

**பிதாவே, உலகத்தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்தபடியினால், நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக, நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனே கூட இருக்க விரும்புகிறேன் (யோவா 17:24).**

பிதாவானவர் தம்முடையவர்களை இயேசுகிறிஸ்துவிடம் தந்திருக்கிறார். அவர்களெல்லோரும் மகிமையடைய வேண்டுமென்று இயேசுகிறிஸ்து பிதாவினிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார். "நான் எங்கே இருக்கிறானோ அங்கே அவர்களும் என்னுடனேகூட இருக்க விரும்புகிறேன்" என்று இயேசுகிறிஸ்து பிதாவினிடத்தில் தமது விருப்பத்தைத் தெரியப்படுத்துகிறார்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்காகப் பிதாவினிடத்தில் ஜெபிக்கிற போது, ஒவ்வொரு காரியமாக விண்ணப்பம்பண்ணுகிறார். முதலாவதாக பிதாவானவர் அவர்களைப் பரிசுத்தப்படுத்தவேண்டும் என்று விண்ணப்பம்பண்ணினார். இப்போதோ தம்முடைய சீஷர்களெல்லோரும் மகிமைப்படும் வண்ணமாக, தம்முடைய வரங்களெல்லாவற்றையும் அவர்களுக்குக் கொடுக்க விரும்புகிறார். நாம் ஜெபிக்கும்போது, நம்முடைய ஜெபம் இயேசுகிறிஸ்துவின் ஜெபத்தைப்போலவே இருக்கவேண்டும். முதலாவதாக தேவனுடைய கிருபைக்காக ஜெபிக்கவேண்டும். அதன்பின்பு அவருடைய மகிமைக்காக ஜெபிக்கவேண்டும். தேவன் நம்முடைய ஜெபத்திற்குப் பதில்கொடுக்கும்போது, முதலாவதாக தமது கிருபையையும், அதன் பின்பு தமது மகிமையையும் நமக்குக் கொடுக்கிறார்.

இயேசுகிறிஸ்து பிதாவினிடத்தில் ஜெபம்பண்ணும்போது "பிதாவே... நான் விரும்புகிறேன்" என்று விண்ணப்பம்பண்ணுகிறார். இதற்கு முன்பு பிதாவினிடத்தில் ஜெபித்தது போலவே, இப்போதும் அவரை "பிதாவே" என்றே அழைக்கிறார். இயேசுகிறிஸ்துவைப்போலவே நாமும் தேவனை "பிதாவே" என்று அழைத்து ஜெபிக்கவேண்டும்.

இயேசு ஜெபிக்கும்போது "விரும்புகிறேன்" என்னும் வார்த்தையைப் பயன்படுத்துகிறார். அந்த வார்த்தையை விசுவாசிகளாகிய நாம் பயன்படுத்துவது சரியல்ல. பிதாவுக்கும் குமாரனுக்கும் நெருங்கிய ஐக்கியம் இருப்பதினால், இயேசுகிறிஸ்து "விரும்புகிறேன்" என்னும் வார்த்தையைப் பயன்படுத்துகிறார். இயேசுகிறிஸ்து மத்தியஸ்தம்பண்ணும் ஊழியத்தின் அதிகாரத்தைப் பெற்றிருக்கிறார். ஆகையினால் அவரால் "விரும்புகிறேன்" என்னும் வார்த்தையைப் பயன்படுத்த முடிகிறது.

இயேசுகிறிஸ்துவின் வார்த்தை பரலோகத்திலும் பூமியிலும் வல்லமையுள்ளது, அதிகாரமுள்ளது. இயேசுகிறிஸ்து இந்த ஜெபத்தை ஏறெடுக்கும்போது, "நான் விரும்புகிறேன்" என்னும் வார்த்தையைப் பயன்படுத்துவதினால், இந்த விஷயத்தில் இயேசுகிறிஸ்துவின் அதிகாரம் தெளிவுபடுத்தப்படுகிறது. இயேசு கிறிஸ்துவுக்கு நித்திய ஜீவனைக்கொடுக்கும் அதிகாரம் உள்ளது (யோவா 17:2). தம்முடைய அதிகாரத்தை அடிப்படையாக வைத்து, இந்த விஷயத்தைப்பற்றி பிதாவினிடத்தில் ஜெபிக்கும்போது, "பிதாவே... நான் விரும்புகிறேன்" என்று கூறி ஜெபிக்கிறார்.

## அதிகாரம் - 17

தெரிந்தெடுக்கப்பட்டவர்களெல்லோரும், தம்மோடுகூட பரலோகத்தில் இருக்கவேண்டுமென்று இயேசுகிறிஸ்து பிதாவினிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார். நாம் பரலோகத்திற்குப்போவோம் என்னும் நம்பிக்கை நமக்கு உண்டு. பரலோகத்தில் நமக்கு நித்திய சந்தோஷம் நியமிக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்து எங்கே இருக்கிறாரோ அங்கேதான் நம்முடைய பரலோகம் இருக்கிறது. இயேசுகிறிஸ்து இதைத் தெளிவுபடுத்தும் வண்ணமாக "நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனேகூட இருக்க விரும்புகிறேன்" என்று விண்ணப்பம்பண்ணுகிறார். இயேசுகிறிஸ்து பரலோகத்திற்குப் போகப்போகிறார். அங்கு நித்தியகாலமாக இருப்பார்.

நாம் இந்த உலகத்தில் இருக்கிறவரையிலும் பரதேசிகளைப்போல இந்தப் பூமியிலே கொஞ்சகாலம் மாத்திரம் தங்கியிருப்போம். நாம் நித்தியகாலமாக இருக்கவேண்டிய ஸ்தலம் இந்தப் பூமியல்ல. பரலோகமே நம்முடைய நித்திய வாசஸ்தலம். பரலோகத்தில் நாம் இயேசுகிறிஸ்துவோடுகூட நித்திய காலமாக இருப்போம். அவருடைய பிரசன்னத்தில் இருப்பதினால் நமக்கு நித்திய சந்தோஷம் உண்டாயிருக்கிறது. இயேசுகிறிஸ்துவோடு கூடயிருக்கும் ஸ்தலம்தான் நம்முடைய பரலோகம்.

பிதாவானவர் இயேசுகிறிஸ்துவுக்கு அவருடைய மகிமையைத் தந்திருக்கிறார். அந்த மகிமையைப் "பிதாவானவர் அவருக்குத் தந்தவர்கள்" காணவேண்டுமென்று விரும்புகிறார். மீட்பரின் மகிமையே பரலோகத்தில் வெளிச்சமாகப் பிரகாசிக்கும். ஆட்டுக்குட்டியானவரே புதிய எருசலேமில் விளக்காக இருப்பார் (வெளி 21:23). தேவன் தம்முடைய மகிமையைப் பரலோகத்தில் வெளிப்படுத்துகிறார். இந்தப் பூமியில் பிதாவானவர் இயேசுகிறிஸ்து மூலமாக தம்முடைய கிருபையை வெளிப்படுத்துகிறார். இயேசு கிறிஸ்துவினால் இரட்சிக்கப்பட்டிருக்கிறவர்கள் அவருடைய மகிமையைக் காண்பார்கள். இது அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சிலாக்கியம். இதுவரையிலும் பூமியிலுள்ள விசுவாசிகள் இயேசுகிறிஸ்துவின் கிருபையை மாத்திரமே பார்த்திருக்கிறார்கள். நாம் பரலோகத்திற்குப்போகும் போது இயேசுகிறிஸ்துவின் மகிமையைக் காண்போம். அந்த சாயலாகத்தானே, நாமும் பரலோகத்தில், மகிமையின் மேல் மகிமையடைவோம்.

நாம் மரித்தபின்பு பரலோகத்திற்குப்போவோம் என்பதற்கு இயேசுகிறிஸ்துவின் மூலமாக நமக்கு நம்பிக்கையும் நிச்சயமும் உண்டாயிற்று. இயேசுகிறிஸ்து பிதாவினிடத்தில் நமக்காக ஜெபிக்கிற போது "அவர்களும் என்னுடனே கூடயிருக்க விரும்புகிறேன்" என்று ஜெபிக்கிறார். நாம் பரலோகத்திற்குப் போகவேண்டுமென்பது இயேசுகிறிஸ்துவின் விருப்பமும் சித்தமும் ஆகும். நாம் பரலோகத்திற்குப் போகவில்லையென்றால் இயேசுகிறிஸ்துவின் விருப்பம் பூரணமாகாது. ஆகையினால்தான் இயேசு பிதாவினிடத்தில் ஜெபிக்கிறபோது, தம்முடைய விருப்பத்தைக் கூறி ஜெபிக்கிறார். இயேசுகிறிஸ்துவின் ஜெபம் நிறைவேறினால்தான், அவருடைய விருப்பம் நிறைவேறும். பூரணமடையும். "நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனேகூட இருக்கவேண்டும்" என்பதுதான் இயேசுகிறிஸ்துவின் விருப்பமாகும்.

தம்முடைய விருப்பத்தைப் பிதாவானவர் நிறைவேற்றுவார் என்று இயேசுகிறிஸ்து நிச்சயமாய் நம்புகிறார். ஏனெனில் உலகத்தோற்றத்திற்கு முன் பிதாவானவர் இயேசுகிறிஸ்துவில் அன்பாயிருந்தார். பிதாவானவர் குமாரனில் அன்பாயிருந்தபடியினால், அவர் இயேசுகிறிஸ்துவுக்கு அவருடைய மகிமையைத் தந்தார். இயேசுகிறிஸ்துவின் பேச்சிலும் செய்கையிலும் பிதாவானவர் பிரியப்படுகிறார். ஆகையினால்தான் பிதாவானவர் எல்லாவற்றையும் இயேசுகிறிஸ்துவின் கரங்களில் ஒப்புக்கொடுத்திருக்கிறார். பிதாவானவர் இயேசுகிறிஸ்துவில் அன்பாயிருக்கிறபடியினால், அவருடைய மகிமையை அவருக்குக் கொடுத்திருக்கிறார். உலகத்தோற்றத்திற்கு முன்பே பிதாவானவர் இயேசுகிறிஸ்துவை மத்தியஸ்தராக அங்கீகரித்து அவரிடத்தில் அன்பாயிருக்கிறார்.

தம்முடைய மகிமையில், சீஷர்களும் பங்குபெறவேண்டுமென்று இயேசுகிறிஸ்து விரும்புகிறார். பிதாவானவர் இவர்களை இயேசுகிறிஸ்துவுக்குத் தந்திருக்கிறார். பிதாவானவர் இயேசுகிறிஸ்துவில் அன்பாயிருக்கிறபடியினால், அவருடைய விண்ணப்பம் எதையும் தேவன் மறுக்க மாட்டார். அவர் கேட்டுக்கொள்வதையும் விரும்புவதையும் பிதாவானவர் கொடுப்பார். இந்த ஐக்கியம் அன்பினால் உண்டாயிற்று. இந்த அன்பு தெய்வீக அன்பு. நித்திய அன்பு. உலகத்தோற்றத்திற்கு முன்னே இருக்கிற அன்பு.

## அதிகாரம் - 17

**நீதியுள்ள பிதாவே**

**நீதியுள்ள பிதாவே, உலகம் உம்மை அறியவில்லை, நான் உம்மை அறிந்திருக்கிறேன்; நீர் என்னை அனுப்பினதை இவர்களும் அறிந்திருக்கிறார்கள் (யோவா 17:25).**

இயேசுகிறிஸ்து இப்போது பிதாவினிடத்தில் ஜெபிக்கிறபோது, அவரை "நீதியுள்ள பிதாவே" என்று அழைக்கிறார். தம்முடைய சீஷர்களை அவர் பரிசுத்தப்படுத்த வேண்டுமென்று ஜெபம்பண்ணியபோது, "பரிசுத்த பிதாவே" என்று அழைத்தார். இப்போது தம்முடைய சீஷர்கள் மகிமைப்படுத்தப்படவேண்டும் என்று ஜெபிக்கும்போது, இயேசுகிறிஸ்து பிதாவை, "நீதியுள்ள பிதாவே" என்று அழைக்கிறார்.

தம்முடைய ஜெபத்தில் இயேசுகிறிஸ்து இந்த உலகத்தைப்பற்றிக் குறிப்பிடுகிறார். "உலகம் உம்மை அறியவில்லை" என்பதுதான் இயேசுகிறிஸ்து இந்த உலகத்தைப்பற்றிக் கொடுக்கும் சாட்சியாகும். இப்பிரபஞ்சத்தின் மக்கள் தேவனைப்பற்றிய அறியாமையிலிருக்கிறார்கள். அந்தகார இருளில் அமர்ந்திருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் சீஷர்களுக்கு விசேஷித்த கிருபை தேவைப்படுகிறது. சீஷர்கள் இந்த உலகம் முழுவதும் சென்று சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை அறிவிக்கவேண்டும். சுவிசேஷ ஊழியம் மிகவும் அத்தியாவசியமான ஊழியம். அதேவேளையில் இது கடினமான ஊழியம். இந்த உலகம் தேவனை அறியவில்லை. அவர்களுக்கு மத்தியில் சீஷர்கள் தேவனை அறிவிக்கவேண்டும். அவர்களுக்குக் கடினமான ஊழியம் கொடுக்கப்பட்டிருப்பதினால், பிதாவானவர் அவர்களைக் காத்துக்கொள்ளவேண்டுமென்று இயேசுகிறிஸ்து ஜெபம்பண்ணுகிறார்.

இப்பிரபஞ்சத்தில் தேவனுடைய ஊழியத்தைச் செய்ய, சீஷர்களுக்கு விசேஷித்த சிலாக்கியங்கள் தேவைப்படுகிறது. இதனால் அவர்கள் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்ய தகுதியடைவர்கள் ஆவார்கள். இந்த உலகம் தேவனை அறியவில்லை.

இயேசுகிறிஸ்து பிதாவை அறிந்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள், "பிதாவானவர் அவரை அனுப்பியிருக்கிறார்" என்பதை அறிந்திருக்கிறார்கள். ஆகையினால் அவர்கள் தேவனை அறிந்திருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து பிதாவினிடத்தில் ஜெபிக்கும்போது, அவர் தம்மைப்பற்றிசொல்லும்போது, "நான் உம்மை அறிந்திருக்கிறேன்" என்று கூறுகிறார். இயேசுகிறிஸ்து பிதாவை அறிந்திருக்கிறார். பிதாவை இயேசுகிறிஸ்து அறிந்திருப்பதுபோல, வேறு யாரும் அறிந்திருக்கவில்லை. ஆகையினால் "நான் உம்மை அறிந்திருக்கிறேன்" என்று இயேசுகிறிஸ்து ஜெபிக்கும்போது, இந்த வாக்கியத்தை முழுநிச்சயத்தோடு சொல்லுகிறார். நாமும் தேவனை அறிந்திருக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்து பிதாவை அறிந்திருக்கிறார். அவருடைய சீஷர்களும் பிதாவை அறிந்திருக்கிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்து பிதாவை அறிந்திருப்பதுபோல, அவருடைய சீஷர்கள் பிதாவை அறிந்திருக்கவில்லை. ஆகையினால் சீஷர்கள் தேவனைப்பற்றிய தங்கள் அறிவில் பெருமைப்பட முடியாது. தேவனுடைய சமுகத்தில் நெருங்கிச் சேருவதற்கு நமக்கு ஒரு தகுதியுமில்லை. நம்முடைய சுயபக்தியோ, சுயசக்தியோ, சுயயுக்தியோ ஒன்றுக்கும் உதவாது. இயேசுகிறிஸ்து நம்மீது கிருபையாகயிருப்பதினாலும், அவர் நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறதினாலும், தேவனுடைய சமுகத்தில் நெருங்கிச் சேரும் சிலாக்கியம் நமக்குக் கிடைத்திருக்கிறது. தேவனைப்பற்றி அறிந்துகொள்ளும் பாக்கியமும் நமக்கு உண்டாயிருக்கிறது. நாம் எப்போதுமே அபாத்திரராகவே இருக்கிறோம். தேவன் மாத்திரமே பாத்திரராக இருக்கிறார்.

இயேசுகிறிஸ்து பிதாவினிடத்தில் ஜெபிக்கிற போது, தம்முடைய சீஷர்களைப்பற்றியும் ஜெபத்தில் குறிப்பிடுகிறார். "நீர் என்னை அனுப்பினதை இவர்களும் அறிந்திருக்கிறார்கள்" என்று அறிவிக்கிறார். இதனால் இயேசுகிறிஸ்துவின் சீஷர்களுக்கும் இப்பிரபஞ்சத்தின் ஜனங்களுக்கும் ஒரு வித்தியாசம் தெரிகிறது. இவர்கள் தேவனை அறிந்திருக்கிறார்கள். அவரை விசுவாசிக்கிறார்கள். உலகத்தாரோ தேவனை அறிந்திருக்கவில்லை, அவரை விசுவாசிக்கவில்லை.

## அதிகாரம் - 17

தேவனை அறியாத, தேவனை விசுவாசியாத இந்த உலகத்தார் மத்தியில், இயேசுகிறிஸ்துவை அறிந்து, அவரில் விசுவாசமாயிருப்பது தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் கிருபையும் சிலாக்கியமும் ஆகும். தேவனுடைய மகிமை நமக்குக் கொடுக்கப்பட்டதினாலேயே, உலகத்தாருக்கும் நமக்கும் இடையே வித்தியாசம் உண்டாயிற்று. இயேசுகிறிஸ்து பிதாவினிடத்தில் ஒரு குறிப்பிட்ட காரியத்தை மாத்திரமே கேட்கிறார். தாம் கேட்பதைப் பிதாவானவர் கொடுப்பார் என்னும் நிச்சயம் அவருக்குள் இருக்கிறது. ஏனெனில் அவர் பிதாவை அறிந்திருக்கிறார். பிதாவானவர் குமாரனை அனுப்பியிருக்கிறார் என்பதை அவருடைய சீஷர்களும் அறிந்திருக்கிறார்கள். "பிதாவானவர் இயேசுகிறிஸ்துவை அனுப்பியிருக்கிறார்" என்பதை அறிந்துகொள்வது, "பிதாவானவரையே" அறிந்துகொள்வதாகும்.

**அன்பு**

**நீர் என்னிடத்தில் வைத்த அன்பு அவர்களிடத்திலிருக்கும்படிக்கும், நானும் அவர்களிலிருக்கும்படிக்கும், உம்முடைய நாமத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன்; இன்னமும் தெரியப்படுத்துவேன் என்றார் (யோவா 17:26).**

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடத்தில் மிகுந்த அன்பு வைத்திருக்கிறார். தேவனைப்பற்றி அறியும் அறிவில் இயேசு தம்முடைய சீஷரை வழிநடத்தியிருக்கிறார். பிதாவானவர் தம்மிடத்தில் வைத்த அன்பு அவர்களிடத்தில் இருக்கும்படிக்கும், இயேசுகிறிஸ்துவும் அவர்களில் இருக்கும்படிக்கும், பிதாவானவருடைய நாமத்தை இயேசுகிறிஸ்து அவர்களுக்குத் தெரியப்படுத்தியிருக்கிறார். அந்த நாமத்தை "இன்னும் தெரியப்படுத்துவேன்" என்றும் அறிவிக்கிறார்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடத்தில் பிதாவின் நாமத்தைத் தெரியப்படுத்தியிருக்கிறார். இயேசுகிறிஸ்துவோடு மிகவும் நெருக்கமாக இருந்து அவரைப் பின்பற்றிய சீஷர்களிடத்தில், அவர் பிதாவின் நாமத்தைத் தெரியப்படுத்தியிருக்கிறார்.

இப்போது இந்தச் சத்தியத்தை விசுவாசிகளாகிய நமக்கும் தெரியப்படுத்துகிறார். பிதாவின் நாமம் நமக்குத் தெரியப்படுத்தப்பட்டிருப்பதற்காக, நாம் இயேசுகிறிஸ்துவுக்கு துதிகளையும் ஸ்தோத்திரங்களையும் ஏறெடுக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவின் மூலமாக மாத்திரமே நமக்குத் தேவனைப்பற்றி அறிவு உண்டாயிற்று. நாம் தேவனுடைய ஐக்கியத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று இயேசுகிறிஸ்து நமக்காக ஜெபிப்பதற்கு முன்பாக, அவர் நம்மைத் தேவனைப்பற்றி அறியும் அறிவில் வழிநடத்துகிறார்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடத்தில் பிதாவின் நாமத்தைத் தெரியப்படுத்துகிறார். "இன்னும் தெரியப்படுத்துவேன்" என்று அறிவிக்கிறார். இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு அவர் தம்முடைய சீஷருக்கு இன்னும் அதிகமான காரியங்களை வெளிப்படுத்த வேண்டுமென்று சித்தமுள்ளவராக இருக்கிறார். "தேவனுடைய ராஜ்யத்திற்குரியவைகளை அவர்களுடனே பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராக காண்பித்தார்" (அப் 1:3). இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்து பரமேறிப்போனபின்பு, பரிசுத்த ஆவியானவர் சீஷர்கள்மீது வந்திறங்கினார். அவர்கள் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டார்கள். பரிசுத்த ஆவியானவர் சீஷர்களைச் சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துகிறார். பரிசுத்த ஆவியானவரின் ஊழியம் எல்லா விசுவாசிகளுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய இருதயம் இயேசுகிறிஸ்துவில் பிரகாசமாக இருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் அதை மேலும் அதிகமாகப் பிரகாசம்பண்ணச் செய்கிறார்.

இயேசுகிறிஸ்துவின் விண்ணப்பத்தை ஏற்று பிதாவானவர் அவருக்குச் செவிகொடுக்கும்போது, நித்திய சந்தோஷம் உண்டாகும். அந்தச் சந்தோஷமே மெய்யான சந்தோஷமாக இருக்கும். நாம் தேவனோடு ஐக்கியமாக இருப்பதினாலும், இயேசு கிறிஸ்துவோடு ஐக்கியமாக இருப்பதினாலும் நமக்கு மெய்யான சந்தோஷம் உண்டாயிருக்கிறது. இந்தச் சந்தோஷத்தை நமக்குக் கொடுக்கவேண்டுமென்பதற்காகவே, அவர் பிதாவின் நாமத்தை நமக்குத் தெரியப்படுத்தியிருக்கிறார். இதன் மூலமாக பிதாவானவர் இயேசுகிறிஸ்துவில் வைத்த அன்பு நம்மிடத்தில் இருக்கும். இயேசுகிறிஸ்துவும் நம்மில் இருப்பார். பிதாவானவர் இயேசுகிறிஸ்துவைத் தம்முடைய அன்பின் ஆவியினால் நிரப்பியிருக்கிறார். அதே ஆவியினால் விசுவாசிகளாகிய நாமும் நிரப்பப்பட்டிருப்போம்.

## அதிகாரம் - 17

இயேசுகிறிஸ்து தம்முடைய பிதாவின் நாமத்தை விசுவாசிகளுக்குத் தெரியப்படுத்தியிருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தினால் தெய்வீக வெளிச்சம் நமக்கு அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய அன்பு நம்முடைய இருதயத்தில் நிரம்பியிருக்கிறது. தேவனுடைய நாமம் நமக்குத் தெரிந்திருப்பதினால், நாமும் இயேசுகிறிஸ்துவோடுகூட தெய்வீக காரியங்களில் பங்குள்ளவர்களாக இருப்போம். தேவனுடைய அன்பு நமக்கு வரும்போது, அது நம்மில் நிலைத்திருக்கும்படியாகவே வருகிறது. தேவனுடைய அன்பு நம்முடைய ஆத்துமாவில் நிரம்பியிருக்கும்போது, நம்முடைய ஆத்துமா தேவனை நோக்கி முன்னேறிச்செல்கிறது. நாம் தேவனுடைய அன்பில் ஆர்வமாயிருக்கும்போது, அந்த அன்பின் மூலமாக நமக்குக் கிடைக்கப்போகும் ஆறுதலையும் நாடவேண்டும்.

நாம் தேவனை அறிந்திருக்கிறோம். அதேவேளையில் "நாம் தேவனை அறிந்திருக்கிறோம்" என்பதையும் அறிந்திருக்கிறோம். தேவனைப்பற்றிய அறிவு நமக்குள் இருக்கும்போதுதான் நமக்குச் சந்தோஷமும், ஆறுதலும் உண்டாகும். நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவஅன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது (ரோம 5:3). நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியானவருக்காகவும், நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிற தேவனுடைய அன்புக்காகவும், நாம் இயேசுகிறிஸ்துவுக்கு நன்றியுள்ளவர்களாக இருக்கவேண்டும். பரிசுத்த ஆவியானவரையும், தேவனுடைய அன்பையும் அதிகமாய் வாஞ்சித்து, அதை மேலும் அதிகமாய்ப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

இயேசுகிறிஸ்து தம்முடைய அன்பினால் நம்மிலிருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் மூலமாக மாத்திரமே நாம் தேவனுடைய அன்பைப் பெற்றுக்கொள்கிறோம். நாம் இயேசுகிறிஸ்துவில் நிலைத்திருந்தால் மாத்திரமே, தேவனுடைய அன்பு நம்மில் நிலைத்திருக்கும்.

ஆகையினால் இயேசுகிறிஸ்து பிதாவினிடத்தில் ஜெபிக்கும்போது "நீர் என்னிடத்தில் வைத்த அன்பு அவர்களிடத்திலிருக்கும்படிக்கும், நானும் அவர்களிலிருக்கும்படிக்கும், உம்முடைய நாமத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன்" என்று ஜெபிக்கிறார். "புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று, தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்தச் சித்தமானார்; கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்" (கொலோ 1:27) என்று அப்போஸ்தலர் பவுல் தன் நிருபத்தில் எழுதுகிறார்.

நாம் தேவனோடு ஐக்கியமாகயிருப்பதும், தேவனுடைய அன்பைப் பெற்றுக்கொள்வதும் விசுவாசிகளாகிய நமக்கு மிகுந்த ஆசீர்வாதத்தைக் கொடுக்கும். தேவனுடைய கரத்திலிருந்து அவருடைய அன்பைப் பெற்றுக்கொண்ட நாமும் அவரிடத்தில் அன்பு கூரவேண்டும். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கரங்களின் மூலமாகவே தேவனுடைய அன்பு நமக்குக் கடந்துவருகிறது. ஏனெனில் அவர் நம்மிலிருக்கிறார். பிதாவானவர் விசுவாசிகளிடத்திலும் அன்பாகயிருக்கிறார். இயேசுகிறிஸ்து விசுவாசிகளிடத்தில் இருக்கிறார். இவையெல்லாமே ஒரு தெய்வீக ஐக்கியமாக இருக்கிறது.

இயேசுகிறிஸ்து நம்மிலிருப்பதே நமக்கு பெரிய ஆசீர்வாதம். இதைத் தவிர வேறு எந்தக் காரியத்தையும் நாம் விரும்பக்கூடாது. நம்முடைய பிரியம் இயேசுகிறிஸ்துவில் மாத்திரமே இருக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவோடு ஐக்கியமாகயிருப்பதே நமக்கு கிடைத்திருக்கும் சிலாக்கியம் என்று நினைத்து அதில் திருப்தியோடிருக்கவேண்டும். இயேசுகிறிஸ்து நமக்காகப் பரிந்துபேசிக்கொண்டிருக்கிறார். இதுவே நமக்கு தெய்வீக ஆறுதலைத் தருகிறது. இயேசுகிறிஸ்துவின் ஜெபம் இங்கு முடிவுபெறுகிறது. ஆனாலும் கிறிஸ்துவானவர் நமக்காக, இப்போதும் பிதாவின் சமுகத்தில் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார்.

## அதிகாரம் - 18

யோவான் எழுதின சுவிசேஷத்தில் இயேசுகிறிஸ்துவின் வரலாறு மிகவும் சுருக்கமாகவே எழுதப்பட்டிருக்கிறது. அவருடைய உபதேசங்களுக்கும் ஜெபத்திற்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, இந்த சுவிசேஷத்தில் அவை விரிவாக எழுதப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்து அனுபவித்த பாடுகள், சூழ்நிலைகள் ஆகியவற்றை யோவான் இந்த அதிகாரத்தில் விரிவாக எழுதியிருக்கிறார். இயேசுகிறிஸ்து தோட்டத்தில் கைதுபண்ணப்படுகிறார் (யோவா 18:1-12). பிரதான ஆசாரியரின் அரண்மனையில் இயேசுகிறிஸ்து விசாரிக்கப்படுகிறார். பேதுரு இந்த சமயத்தில் இயேசுகிறிஸ்துவை மறுதலிக்கிறான் (யோவா 18:13-27). பிலாத்துவுக்கு முன்பாக இயேசுகிறிஸ்து விசாரிக்கப்படுகிறார். ஜனங்கள் பரபாசை விடுவித்து இயேசுவை சிலுவையில் அறையவேண்டுமென்று சத்தமிடுகிறார்கள் (யோவா 18:28-40).

### தோட்டத்தில் இயேசு
### யோவா 18 : 1-12

**யோவா 18:1. இயேசு இவைகளைச் சொன்னபின்பு, தம்முடைய சீஷருடனேகூட கெதரோன் என்னும் ஆற்றுக்கு அப்புறம் போனார்; அங்கே ஒரு தோட்டம் இருந்தது, அதிலே அவரும் அவருடைய சீஷரும் பிரவேசித்தார்கள்.**

**யோவா 18:2. இயேசு தம்முடைய சீஷருடனேகூட அடிக்கடி அங்கே போயிருந்தபடியினால், அவரைக் காட்டிக்கொடுக்கிற யூதாசும் அந்த இடத்தை அறிந்திருந்தான்.**

**யோவா 18:3. யூதாஸ் போர்ச்சேவகரின் கூட்டத்தையும் பிரதான ஆசாரியர் பரிசேயர் என்பவர்களால் அனுப்பப்பட்ட ஊழியக்காரரையும் கூட்டிக்கொண்டு, பந்தங்களோடும் தீவட்டிகளோடும் ஆயுதங்களோடும் அவ்விடத்திற்கு வந்தான்.**

**யோவா 18:4. இயேசு தமக்கு நேரிடப்போகிற எல்லாவற்றையும் அறிந்து, எதிர்கொண்டுபோய், அவர்களை நோக்கி: யாரைத் தேடுகிறீர்கள் என்றார்.**

**யோவா 18:5. அவருக்கு அவர்கள் பிரதியுத்தரமாக: நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறோம் என்றார்கள். அதற்கு இயேசு: நான்தான் என்றார். அவரைக் காட்டிக்கொடுத்த யூதாசும் அவர்களுடனேகூட நின்றான்.**

**யோவா 18:6. நான்தான் என்று அவர் அவர்களிடத்தில் சொன்னவுடனே, அவர்கள் பின்னிட்டுத் தரையிலே விழுந்தார்கள்.**

**யோவா 18:7. அவர் மறுபடியும் அவர்களை நோக்கி: யாரைத் தேடுகிறீர்கள் என்று கேட்டார். அவர்கள்: நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறோம் என்றார்கள்.**

**யோவா 18:8. இயேசு பிரதியுத்தரமாக: நான்தானென்று உங்களுக்குச் சொன்னேனே; என்னைத் தேடுகிறதுண்டானால், இவர்களைப் போகவிடுங்கள் என்றார்.**

**யோவா 18:9. நீர் எனக்குத் தந்தவர்களில் ஒருவனையும் நான் இழந்துபோகவில்லையென்று அவர் சொல்லிய வசனம் நிறைவேறத் தக்கதாக இப்படி நடந்தது.**

**யோவா 18:10. அப்பொழுது சீமோன்பேதுரு, தன்னிடத்திலிருந்த பட்டயத்தை உருவி, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனை வலதுகாதற வெட்டினான்; அந்த வேலைக்காரனுக்கு மல்குஸ் என்று பெயர்.**

**யோவா 18:11. அப்பொழுது இயேசு பேதுருவை நோக்கி: உன் பட்டயத்தை உறையிலே போடு; பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம்பண்ணாதிருப்பேனோ என்றார்.**

**யோவா 18:12. அப்பொழுது போர்ச்சேவகரும், ஆயிரம் போர்ச்சேவகருக்குத் தலைவனும், யூதருடைய ஊழியக்காரரும் இயேசுவைப்பிடித்து, அவரைக் கட்டி,**

**கெதரோன் என்னும் ஆறு**

இயேசு இவைகளைச் சொன்னபின்பு, தம்முடைய சீஷருடனேகூட கெதரோன் என்னும் ஆற்றுக்கு அப்புறம் போனார்; அங்கே ஒரு தோட்டம் இருந்தது, அதிலே அவரும் அவருடைய சீஷரும் பிரவேசித்தார்கள். இயேசு தம்முடைய சீஷருடனேகூட அடிக்கடி அங்கே போயிருந்தபடியினால், அவரைக் காட்டிக்கொடுக்கிற யூதாசும் அந்த இடத்தை அறிந்திருந்தான். (யோவா 18:1,2).

## அதிகாரம் - 18

இயேசுகிறிஸ்து மனுக்குலத்தின் பாவங்களை மன்னித்து, நம்மை இரட்சிப்பதற்காக, கல்வாரி சிலுவையில் தம்மையே பலியாக ஒப்புக்கொடுக்கிறார். தம்முடைய பாடுகள் மூலமாக இயேசுகிறிஸ்து பூரணப்படுத்தப்பட்டு, அவருடைய பலி பிதாவின் சமுகத்தில் பரிபூரணமாக அங்கீகரிக்கப்படுகிறது. கல்வாரியில் மரிப்பதற்கு முன்பாக இயேசுகிறிஸ்து சத்துருவாகிய சாத்தானை சந்திக்கிறார். ஆவிக்குரிய யுத்தம் நடைபெறும் யுத்தக்களத்தில், இயேசுகிறிஸ்துவே முதலாவதாக களத்திற்குள் பிரவேசிக்கிறார். விசுவாசிகளாகிய நமக்கும் ஆவிக்குரிய போராட்டம் உண்டு. நம்முடைய ராஜாதி ராஜாவாகிய இயேசுகிறிஸ்து சத்துருவோடு யுத்தம்பண்ணி வெற்றி பெற்றதினால், நாமும் வெற்றி பெறுவோம் என்னும் நிச்சயம் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

பிதாவானவர் இயேசுகிறிஸ்துவுக்கு இந்தப் பூமியில் ஒரு குறிப்பிட்ட காலத்தை நியமித்திருக்கிறார். இயேசுகிறிஸ்து இந்தக் காலத்தில் சிறிய பகுதியைக்கூட வீணாக்காமல், தம்முடைய பிதாவின் சித்தத்தைத் தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறார். "இயேசு இவைகளைச் சொன்னபின்பு" என்று இந்த அதிகாரத்தின் முதல் வாக்கியம் ஆரம்பமாகிறது. இயேசுகிறிஸ்து சிறிது நேரமும் வீணாக்காமல், ஜெபத்தைக்குறித்து தம்முடைய சீஷரிடத்தில் உபதேசம்பண்ணிவிட்டு, இப்போது தம்முடைய சீஷருடனேகூட கெதரோன் என்னும் ஆற்றுக்கு அப்புறம் போகிறார்.

இயேசுகிறிஸ்து தம்முடைய உபதேசங்களைச் சொன்னபின்பு, தம்முடைய பாடுகளை அனுபவிப்பதற்காகப் புறப்பட்டுப்போகிறார். இயேசுகிறிஸ்து ஒரு தீர்க்கதரிசியாக எதையெல்லாம் சொல்லவேண்டுமோ அவையெல்லாவற்றையும் தம்முடைய சீஷரிடத்திலும் ஜனங்களிடத்திலும் சொல்லி முடித்துவிட்டார். இவ்வாறாக இயேசுகிறிஸ்துவின் தீர்க்கதரிசின ஊழியம் நிறைவுபெறுகிறது. இப்போது இயேசுகிறிஸ்து தம்மை ஆசாரிய ஊழியத்திற்கு ஆயத்தப்படுத்துகிறார். பாவத்தை மன்னிப்பதற்கு ஆசாரியன் பாவநிவாரண பலியைச் செலுத்தவேண்டும். இயேசுகிறிஸ்து நம்முடைய பிரதான ஆசாரியர். நம்முடைய பாவங்களுக்காக அவர் தம்மையே பலியாகச் செலுத்துகிறார்.

தம்முடைய உபதேச ஊழியத்தின் மூலமாக, இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களை ஆயத்தப்படுத்துகிறார். அவர்கள் மனம் கலங்கிவிடாதவாறு அவர்களைத் திடப்படுத்துகிறார். தாம் பாடுகள் வழியாகப் பிரவேசிக்கும்போது சீஷர்களை அதற்காக ஆயத்தப்படுத்துகிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய ஜெபத்தின் மூலமாக, பாடுகள் வழியாகக் கடந்துசெல்ல தம்மையே ஆயத்தப்படுத்துகிறார். இதன்பின்பு, இயேசுகிறிஸ்து தமக்கு நியமிக்கப்பட்டிருக்கும் பாடுகளைச் சந்திப்பதற்காக இயேசுகிறிஸ்து தைரியமாக முன்னேறிச்செல்கிறார்.

இயேசுகிறிஸ்து தம்முடைய யுத்தத்திற்காக தம்மைத் தகுதிப்படுத்தும்போது, அவர் சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்கிறார். இயேசுகிறிஸ்துவுக்குத் தமக்குரியவர்களோடு ஒருபோதும் போராட்டமில்லை. இயேசுகிறிஸ்து பிசாசாகிய சத்துருவோடும், அவனுடைய பிசாசுக் கூட்டத்தோடும்தான் யுத்தம்பண்ணுகிறார். இந்த யுத்தத்தில் கிறிஸ்துவின் சீஷர்களும் அவரோடுகூட சேர்ந்து சத்துருவின்மீது யுத்தம்பண்ணுகிறார்கள். இந்த யுத்தம்பண்ணுவதற்கு சீஷர்களை முதலாவதாக ஆயத்தம்பண்ணுவது அவசியமாயிற்று. சீஷர்களின் மனது திடப்படவேண்டும். அவர்களுடைய விசுவாசம் ஸ்திரப்படவேண்டும்.

நம்முடைய கடமைகளை நாம் செய்யும்போது நமக்குச் சில பிரச்சனைகள் உண்டாகலாம். சில தடைகள் ஏற்படலாம். நம்முடைய கடமைகளை நிறைவேற்றவேண்டுமென்று நாம் உறுதியோடிருக்கும்போது, நமக்கு முன்பாக இருக்கும் பிரச்சனைகளையும் தடைகளையும் சந்திப்பது நமக்கு எளிதாக இருக்கும்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுடனே கூடப்போகிறார். பிதாவானவர் தமக்கு நியமித்தபடியே இயேசுகிறிஸ்து ஒவ்வொரு காரியமாகச் செய்கிறார். சிலுவையைச் சந்திக்கும்போதும், தம்முடையசத்துருக்களின் கைகளில் பிடிபடாமல் அவர்களைவிட்டு விலகி மறைந்துபோனபோதும், இயேசுகிறிஸ்து தமக்கு நியமிக்கப்பட்டபடியே ஒவ்வொரு காரியத்தையும் செய்கிறார். அவருடைய வேளை வருவதற்கு முன்பாக அவரை யாரும் பிடிக்க முடியவில்லை. அவருடைய வேளை வந்தபோது, இயேசுகிறிஸ்து தாமாகவே முன்சென்று தம்முடைய சத்துருக்களின் கைகளில் தம்மை ஒப்புக்கொடுக்கிறார்.

## அதிகாரம் - 18

இயேசு கிறிஸ்து எருசலேமிலிருக்கிற போது, பகல்வேளையில் நகரத்தில் ஊழியம் செய்துவிட்டு, இரவுவேளையில் ஒலிவமலையில் ஓய்வெடுப்பது வழக்கம். தமக்குப் பாடுகள் சீக்கிரத்தில் வரப்போகிறது என்பதை இயேசு காண்கிறார். ஆனாலும் அவருடைய வழக்கத்தில் மாற்றம் எதுவும் உண்டாகவில்லை. வழக்கத்தின் பிரகாரமாகவே இரவுவேளையில் ஒலிவமலைக்குப்போகிறார். பாடுகள் வரும்போது நாம் பதறிப்போய், நமக்கு நியமித்திருக்கும் பாதையைவிட்டு தாறுமாறாக விலகி ஓடிவிடக்கூடாது.

இயேசுகிறிஸ்துவைப் பிடிக்கிறவர்கள், அவரை நகரத்தில் பிடித்தால், ஜனங்களுக்குள் குழப்பங்கள் உண்டாகும். இயேசுகிறிஸ்துவின்மீது விசுவாசம் வைத்திருக்கிற ஜனங்கள் அவருடைய சத்துருக்களுக்கு விரோதமாக கலகம்பண்ணுவார்கள். தம்முடைய நாமத்தினிமித்தமாக எருசலேமில் கலகமுண்டாக இயேசுகிறிஸ்து விரும்பவில்லை. ஆகையினால் சத்துருக்கள் தம்மைப் பிடிக்க வரப்போகிறார்கள் என்பதை இயேசுகிறிஸ்து அறிந்தவுடன், அவர் நகரத்திலிராமல், ஒலிவமலைக்குப்போகிறார். நகரத்தில் கலகமுண்டானால் இரத்தம் சிந்துதல் உண்டாகும். உயிர்ச்சேதமும் ஏற்படலாம். இயேசுகிறிஸ்து நகரத்தில் இல்லையென்றால் அங்கு ஒரு பிரச்சனையும் வராது. ஆகையினால்தான் இயேசுகிறிஸ்து, இவைகளைச் சொன்னபின்பு, தம்முடைய சீஷர்களுடனேகூட கெதரோன் என்னும் ஆற்றுக்கு அப்புறம் போகிறார்.

நம்முடைய வாழ்க்கையில் நமக்குச் சில பிரச்சனைகள் வரலாம். முடிந்தவரையிலும் கர்த்தருடைய கிருபையினால் நாமாகவே பிரச்சனைகளைச் சமாளித்துக் கொள்ளவேண்டும். தேவையில்லாமல் மற்றவர்களையும் பிரச்சனையில் இழுத்துப்போட்டு, அவர்களையும் உபத்திரவப்படுத்தக்கூடாது. மனுஷர் நம்மை அவமானப்படுத்தினாலும், நாம் பொறுமை காக்கவேண்டும். நம்மீது உலகத்தார் அவதூறான வார்த்தைகளைப் பேசும்போது, நம்முடைய வாயிலிருந்து ஆசீர்வாதமான வார்த்தைகள் மாத்திரமே புறப்பட்டு வரவேண்டும். உலகத்தாரைப்போல நாம் சண்டைபோடக் கூடாது. ஒருவேளை பிரச்சனையில் நாம் தோற்றுப்போனவர்கள்போலக் காணப்படலாம். ஆனாலும் கர்த்தருக்காகப் பாடுகளைச் சகித்துக்கொள்ள வேண்டும். இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் பிரச்சனையில் கீழே விழுந்தாலும், கர்த்தர் அவர்களைத் தூக்கி நிறுத்துவார்.

நாம் மனுஷரிடத்திலிருந்து கனத்தையும், மகிமையையும், பெருமையையும், புகழ்ச்சியையும் எதிர்பார்க்கக்கூடாது. மனுஷருடைய புகழ்ச்சியை நாடுகிறவர்கள். தங்களுடைய ஜீவனையே புகழ்ச்சியான வார்த்தைகளுக்கு விற்றுப்போடுகிறார்கள். இந்த உலகத்தின் பார்வையில் நாம் சாதாரணமானவர்களாக இருக்கலாம். ஆனால் இயேசுகிறிஸ்துவுக்கோ நாம் விசேஷித்தவர்கள்.

நம்மிடத்திலுள்ள இரத்தம் விலையேறப்பெற்றது. ஏனெனில் இயேசுகிறிஸ்து நம்முடைய இரத்தத்தைத் தம்முடைய பரிசுத்தமான இரத்தத்தினால் சுத்தப்படுத்தியிருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் சித்தமில்லாமல் நமக்கு இரத்தம் சிந்துதலோ, இரத்தச் சேதாரமோ உண்டாகாது.

நாம் விசேஷித்தவர்கள் என்னும் எண்ணமும், நம்முடைய இரத்தத்தை இயேசுகிறிஸ்து சுத்தப்படுத்தியிருக்கிறார் என்னும் எண்ணமும் நம்முடைய மனத்திற்குள் இருக்கவேண்டும். அப்போதுதான் நாம் தேவையில்லாமல் பிரச்சனைகளில் சிக்கிக்கொள்ளமாட்டோம். மற்றவர்களையும் நம்முடைய பிரச்சனைகளில் சிக்கவைக்கமாட்டோம். ஏனெனில் நம்மைப்போலவே, மற்ற விசுவாசிகளும் கிறிஸ்துவுக்கு விசேஷித்தவர்களாகவே இருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து அவர்களுடைய இரத்தத்தையும், தம்முடைய பரிசுத்தமான இரத்தத்தினால் கழுவிச் சுத்தப்படுத்தியிருக்கிறார்.

இயேசுகிறிஸ்து நமக்கு எல்லாக் காரியத்திலும் முன்மாதிரியாக இருக்கிறார். இந்த உலகத்தார் மத்தியில் நாம் எப்படியிருக்கவேண்டுமென்றும், இந்த உலகத்தாரைவிட்டு எப்போது, எப்படி, விலகிச்செல்லவேண்டும் என்றும் இயேசுகிறிஸ்து நமக்கு முன்மாதிரியாக இருந்து உபதேசம்பண்ணுகிறார். நம்முடைய சிலுவையை நாம் சந்தோஷமாக சுமக்கவேண்டுமானால், இயேசுகிறிஸ்துவைப் போல நாமும் கூட்டத்தைவிட்டு வெளியேறி வரவேண்டும். பட்டணத்தின் ஆறுதல்கள், ஆடம்பரங்கள், பகட்டுக்கள், பராமரிப்புக்கள், கரிசனைகள் ஆகியவற்றையெல்லாம் விட்டுவிட்டு வந்தால்தான், நம்முடைய சிலுவையை நம்மால் சுமக்க முடியும். இல்லையெனில் சிலுவையின் பாரத்தோடு உலகத்தின் பாரமும் சேர்ந்து, நம்மைச் செயலிழக்கச் செய்துவிடும்.

## அதிகாரம் - 18

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷருடனேகூட கெதரோன் என்னும் ஆற்றுக்கு அப்புறம் போகிறார். ஒலிவமலைக்கு கெதரோன் ஆற்றின் வழியாகச் செல்லவேண்டும். ஆயினும் இந்த வசனத்தில் கெதரோன் ஆற்றின் பெயர் ஒரு விசேஷித்த நோக்கத்திற்காகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த ஆற்றிற்கு "கருப்பு ஆறு" என்னும் மறுபெயருமுள்ளது. ஒருவேளை இந்த ஆறு பாய்ந்தோடும் பள்ளத்தாக்கு இருட்டாக இருப்பதினால், இதற்கு கருப்பு ஆறு என்னும் பெயர் வந்திருக்கலாம். அல்லது இந்த ஆற்றுத்தண்ணீரின் நிறம் கருப்பாக இருக்கலாம். எருசலேம் நகரத்திலுள்ள அசுத்தங்களெல்லாம் கெதரோன் ஆற்றில் கலப்பதினால், இந்த ஆற்றின் தண்ணீர் கருப்பு நிறத்திலிருப்பதற்கு வாய்ப்புள்ளது.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் கெதரோன் ஆற்றைப்பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. யூதா தேசத்தில் விக்கிரகாராதனை அதிகமாக நடைபெற்றபோது, யூதாவின் பக்தியுள்ள ராஜாக்கள் யூதாவிலுள்ள சிலைகளையெல்லாம் அக்கினியினால் சுட்டெரித்து அதன் சாம்பலை கெதரோன் ஆற்றில் கலந்தார்கள். அப்படிப்பட்ட சிலைகள் இந்த ஆற்றில் காணப்படுகிறது. சிலைகள் தவிர எருசலேமில் காணப்பட்ட அருவருப்பான காரியங்களும் கெதரோன் ஆற்றில் தான் கொட்டப்படும். இயேசுகிறிஸ்து ஒலிவமலைக்குப்போகும்போது அப்படிப்பட்ட கெதரோன் ஆற்றின் வழியாகத்தான் போகிறார்.

கெதரோன் ஆற்றிற்கு அப்புறத்தில் ஒரு தோட்டம் இருக்கிறது. யோவான் மாத்திரமே இந்த சுவிசேஷத்தில் இந்தத் தோட்டப்பற்றிக் குறிப்பிடுகிறார். இயேசுகிறிஸ்துவின் பாடுகள் இந்தத் தோட்டத்தில் ஆரம்பமாயிற்று. ஏதேன் தோட்டத்தில் பாவம் ஆரம்பமாயிற்று. அந்தத் தோட்டத்தில் மீட்பர் வாக்குப்பண்ணப்பட்டார். இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையில் மரித்தபின்பு அவருடைய சரீரம் ஒரு தோட்டத்தில்தான் அடக்கம்பண்ணப்பட்டது.

நம்முடைய ஆவிக்குரிய பிரயாணத்தில் நமக்கு சந்தோஷமான காரியங்களும் நடைபெறலாம். நன்மையான காரியங்களும் நடைபெறலாம். வருத்தம் வரலாம். தீமைகளும் வரலாம். சந்தோஷமாக இருக்கும்போது, நமக்கு வருத்தம் வருவதற்கும் வாய்ப்புள்ளது என்பதை மறந்துவிடாமல் எச்சரிப்போடு இருப்பது நல்லது. கெதரோன் ஆறு அருவருப்பானதாக இருந்தாலும் அதற்கு அருகில் இயேசுகிறிஸ்து தங்கி ஓய்வெடுக்கிற தோட்டம் இருக்கிறது. அங்கு அவர் பிதாவோடு தனித்து ஜெபம்பண்ணுவது வழக்கம். அதுபோலவே நம்முடைய வாழ்க்கையில் கெதரோன் ஆற்றைப்போல, நாம் பாடுகள் வழியாகக் கடந்துபோனாலும், கண்ணீரின் பள்ளத்தாக்குகள் வழியாகக் கடந்துபோனாலும், இந்த ஆற்றிற்கு அப்புறத்தில் கர்த்தர் நமக்கும் ஒரு தோட்டத்தை ஸ்தாபித்திருக்கிறார்.

இயேசுகிறிஸ்து கெதரோன் ஆற்றைக் கடந்து தோட்டத்திற்குப்போகும்போது, அவருடைய சீஷர்களும் அவரோடு கூடப்போகிறார்கள். இயேசுகிறிஸ்துவின் பாடுகளுக்கும், அவருடைய நீடிய பொறுமைக்கும் சீஷர்கள் சாட்சிகளாகயிருக்கிறார்கள். இந்த உலகத்தில் அவர்கள் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணும்போது, இயேசுகிறிஸ்து அனுபவித்த பாடுகளெல்லாம் அவர்களைப் பக்குவப்படுத்தும். கிறிஸ்துவின் ஊழியத்திற்கு அவர்களை ஆயத்தப்படுத்தும். தாங்கள் கண்டு நிச்சயமாகவே விசுவாசிக்கிற சத்தியங்களை, சீஷர்கள் வல்லமையோடு பிரசங்கம்பண்ணுவார்கள். இயேசுகிறிஸ்துவின் பாடுகளைத் தங்கள் கண்களால் பார்த்து, சீஷர்களும் தங்களுடைய பாடுகளை அனுபவிப்பதற்குத் தங்களை ஆயத்தப்படுத்திக்கொள்வார்கள்.

சீஷர்கள் விசுவாசத்தில் பலவீனமாக இருக்கிறார்கள். அவர்களுடைய பலவீனத்தை அவர்களுக்குக் காண்பிப்பதற்காக, இயேசுகிறிஸ்து இந்த ஆபத்தான பகுதிக்கு அவர்களை அழைத்து வருகிறார். இயேசுகிறிஸ்து சில சமயங்களில் தம்முடைய ஜனங்களைப் பாடுகளின் வழியாக வழிநடத்துகிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய பிள்ளைகளைப் பாடுகளிலிருந்து விடுதலை செய்யும்போது, அவருடைய நாமம் மகிமைப்படும்.

## அதிகாரம் - 18

இயேசுகிறிஸ்துவைக் காட்டிக் கொடுக்கிற யூதாசும் இந்த இடத்தை அறிந்திருக்கிறான். இது அமைதியான தோட்டம். இயேசுகிறிஸ்து இங்கு வந்து பிதாவினிடத்தில் தனியாக ஜெபம்பண்ணுவார். தியானம்பண்ணுவார். பிதா தமக்கு நியமித்திருக்கும் ஊழியத்தை உறுதிபண்ணி, இயேசுகிறிஸ்து தம்முடைய ஊழியத்திற்குத் தம்மைப் பிதாவினிடத்தில் மறுபடியும் அர்ப்பணித்து, தம்மைப் புதுப்பித்துக்கொள்கிறார். நாமும் தேவனுடைய சமுகத்தில் ஜெபிக்கும்போது நம்முடைய பொருத்தனைகளை மறுபடியும் புதுப்பித்துக்கொள்ளவேண்டும். தேவன் நமக்கு நியமித்து வைத்திருக்கும் பாதையில் முன்னேறிச் செல்வதற்குப் பரிசுத்த ஆவியானவரின் பலத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

யூதாஸ்காரியோத்து இந்த இடத்தை அறிந்திருக்கிறான். இதனால் யூதாவின் பாவம் இங்கு பெரிதாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இவன் இயேசுகிறிஸ்துவோடு கூடவே இருந்தவன். இயேசுகிறிஸ்து ஜெபிக்கிற இடத்தை அறிந்திருக்கிறவன். இயேசுகிறிஸ்துவோடு நெருக்கமாக பழகியிருக்கிறான். ஆனால் யூதாசோ, தான் இயேசுவோடு நெருக்கமாகப் பழகியிருப்பதை, தன்னுடைய சுயஆதாயத்திற்காகப் பயன்படுத்திக்கொண்டு, தன்னுடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைக் காட்டிக்கொடுக்கிறான். ஜெபம்பண்ணுகிற இடத்தில் நம்முடைய இருதயம் புதுப்பிக்கப்படவேண்டும். நம்முடைய ஆத்துமா பரிசுத்தமடையவேண்டும். ஆனால் யூதாசோ ஜெபம்பண்ணுகிற இடத்தை அசுத்தப்படுத்துகிறான். இயேசுகிறிஸ்துவைக் காட்டிக்கொடுப்பதற்கு அவர் ஜெபம்பண்ணுகிற இடத்தையே தனக்குச் சாதகமாகப் பயன்படுத்துகிறான்.

யூதாசு இயேசுவைக் காட்டிக்கொடுக்க சதிஆலோசனைபண்ணுகிறான். ஆனால் இயேசுகிறிஸ்துவோ அவனிடத்தில் அன்பாகவே இருக்கிறார். தன்னைக் காட்டிக்கொடுக்கப்போகிற யூதாசு, தன்னைத்தேடி இந்தத் தோட்டத்திற்கு வருவான் என்பது இயேசுவுக்குத் தெரியும். தெரிந்திருந்தும் இயேசுகிறிஸ்து அந்தத் தோட்டத்திற்குத்தான் போகிறார். சத்துருக்களிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்காக இயேசுகிறிஸ்து அந்தத் தோட்டத்திலிருந்து வேறு இடத்திற்குப் போய்விடவில்லை. யூதாஸ்காரியோத்து தன்னைக் காட்டிக்கொடுப்பதற்காக இந்தத் தோட்டத்திற்கு வரும்போது, இயேசுகிறிஸ்து இந்தத் தோட்டத்திலேயே இருக்கச் சித்தமுள்ளவராகயிருக்கிறார். அவர் பாடுகளை அனுபவிக்கவும், நமக்காக மரிக்கவும் ஆயத்தமாகயிருக்கிறார்.

இயேசுகிறிஸ்து தோட்டத்திற்கு இரவுவேளையில் வருகிறார். இது இரவு சுமார் எட்டு அல்லது ஒன்பது மணி வேளையாக இருக்குமென்று வேதபண்டிதர்கள் கூறுகிறார்கள். எருசலேம் நகரத்திலுள்ளவர்கள் இந்த இரவுவேளையில் தங்கள் படுக்கையில் தூங்கச்செல்வார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ விழித்திருந்து ஜெபம்பண்ணுவதற்காகவும், பாடுகளை அனுபவிப்பதற்காகவும் இந்தத் தோட்டத்திற்குப்போகிறார்.

**பந்தங்களோடும் தீவட்டிகளோடும்**

**யூதாஸ் போர்ச்சேவகரின் கூட்டத்தையும் பிரதான ஆசாரியர் பரிசேயர் என்பவர்களால் அனுப்பப்பட்ட ஊழியக்காரரையும் கூட்டிக்கொண்டு, பந்தங்களோடும் தீவட்டிகளோடும் ஆயுதங்களோடும் அவ்விடத்திற்கு வந்தான் (யோவா 18:3).**

நம்முடைய இரட்சிப்பின் அதிபதியாகிய இயேசுகிறிஸ்து, யுத்தகளமாகிய இந்தத் தோட்டத்திற்குள் பிரவேசிக்கிறபோது, சத்துரு அவரைத் தாக்குவதற்கு ஆரம்பிக்கிறான். யூதாசு தன்னுடைய மனுஷரோடு அந்தத் தோட்டத்திற்கு வருகிறான். யூதாசோடு போர்ச்சேவகரின் கூட்டமும், பிரதான ஆசாரியர், பரிசேயர் என்பவர்களால் அனுப்பப்பட்ட ஊழியக்காரரும் வருகிறார்கள். ஏராளமான மனுஷர் இயேசுவைப் பிடிப்பதற்கு வருகிறார்கள். சத்துரு இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாகத் திரளான ஜனங்களை எழுப்பிவிடுகிறான். இயேசுகிறிஸ்துவின் சிநேகிதர்கள் கொஞ்சம். ஆனால் அவருடைய சத்துருக்களோ அநேகம்.

## அதிகாரம் - 18

இயேசுகிறிஸ்துவைப் பிடிக்க யூதாசோடு வருகிறவர்கள், வெவ்வேறு விதமாக இருக்கிறார்கள். புறஜாதியாரும், ரோமப்போர்ச்சேவகரும், பிரதான ஆசாரியரும் ஊழியக்காரரும் இயேசுகிறிஸ்துவைப் பிடிக்க வருகிறார்கள். பிரதான ஆசாரியரின் ஊழியக்காரர்கள் எல்லோருமே யூதர்கள். பொதுவாக யூதர்களும் புறஜாதியாரும், ரோமப்போர்ச்சேவகரும் ஒத்துப்போவதில்லை. அவர்கள் தங்களுக்குள் சண்டை போட்டுக்கொள்வார்கள். ஆனாலும் இயேசுகிறிஸ்துவைப் பிடிக்க வேண்டுமென்பதற்காக, தங்களுக்குள் சத்துருக்களாக இருக்கும் இவர்கள், இப்போது ஒன்றுசேர்ந்து அவரைப் பிடிக்கத் தோட்டத்திற்கு வருகிறார்கள்.

பிரதான ஆசாரியருடைய கட்டளைப்படியே இவர்களெல்லோரும் இயேசுகிறிஸ்துவைப் பிடிக்க வருகிறார்கள். இவர்கள் ஜனங்களுக்குப் பயப்படுவதினால், ஜனக்கூட்டத்திற்கு நடுவே இயேசுவைப் பிடிக்காமல், அவர் தனியாக இருக்கும்போது அவரைப் பிடிக்கவேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவைப் பிடிப்பதற்கு பிரதான ஆசாரியன் கட்டளை கொடுத்திருக்கலாம். இயேசுகிறிஸ்துவின் சத்துருக்களில் புறஜாதியாரும் இருக்கிறார்கள், ரோமப்பேரரசின் போர்ச்சேவகரும் இருக்கிறார்கள், யூதமார்க்கத்தின் ஊழியக்காரர்களும் இருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவுக்கும், அவருடைய சுவிசேஷத்திற்கும் எதிராக வரும் சத்துருக்கள் இப்படித்தான் இருப்பார்கள். அவர்கள் எண்ணிக்கையில் அதிகமாயிருப்பார்கள். பலமிக்கவர்களாக இருப்பார்கள். மார்க்கத்தலைவர்களும் அரசியல் தலைவர்களும் கூட்டாகச் சேர்ந்து இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்வோருக்கு விரோதமாக எழும்பி வருவார்கள்.

யூதாஸ்காரியோத்து இந்தக் கூட்டத்தையெல்லாம் கூட்டிக்கொண்டு வருகிறான். துன்மார்க்கனான யூதாசு இவர்களை வழிநடத்துகிறான். ஒரு குருடன் மற்ற குருடரை வழிநடத்துவதுபோல வழிநடத்துகிறான். யூதாஸ் இயேசுவோடு இருக்கும்போது அவன் பன்னிரண்டு சீஷர்களில் ஒருவனாகத்தான் இருந்தான். பன்னிரண்டு பேருக்கும் யூதாசு தலைவனாகயிருந்தான் என்னும் குறிப்பு வேதவாக்கியத்தில் காணப்படவில்லை. ஆனால் இப்போதோ நூற்றுக்கணக்கான பாவிகளுக்கு அவர் தலைவனாகயிருக்கிறான். அவர்களெல்லோரையும் யூதாசு வழிநடத்துகிறான்.

ஒருவேளை கர்த்தருடைய சமுகத்தில் அவருக்குக் கீழ்ப்படிந்திருப்பதற்குப் பதிலாக, சாத்தானுடைய கருவியாக, பலருக்குத் தலைவனாக இருக்கவேண்டுமென்று யூதாசு ஆசைப்பட்டிருக்கலாம். நம்முடைய கூட்டம் சிறு கூட்டமாக இருந்தாலும், நம்முடைய கூட்டத்திற்கு கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே தலைவராக இருக்கவேண்டும். சாத்தானுடைய கூட்டம் திரளாக இருந்தாலும், வெகு ஜனத்திரட்சியின்மீது ஆசைப்பட்டு, சாத்தானுக்கு அடிமையாகிவிடக்கூடாது. சாத்தானைப் பிரியப்படுத்தும் ஊழியத்தைச் செய்யக்கூடாது.

இயேசுகிறிஸ்துவைப் பிடிக்க வருகிறவர்கள் பந்தங்களோடும், தீவட்டிகளோடும், ஆயுதங்களோடும் தோட்டத்திற்கு வருகிறார்கள். ஒருவேளை இயேசுகிறிஸ்து தங்கள் கைகளில் பிடிபடாமல் தப்பி ஓடிவிட்டால், பந்தங்கள், தீவட்டிகள் ஆகியவற்றின் வெளிச்சத்தில் அவரைப் பிடிக்கலாமென்று ஆயத்தமாக வருகிறார்கள். நீதியின் சூரியனாகிய இயேசுகிறிஸ்துவின் வெளிச்சத்திற்கு முன்பாக, பந்தங்களும் தீவட்டிகளும் ஒன்றுமில்லாமல் போய்விடும்.

இயேசுவைப் பிடிக்கும்போது, ஒருவேளை அவர் எதிர்த்து நின்றால், ஆயுதங்களைப் பயன்படுத்தவேண்டுமென்று நினைத்து, தங்களோடு ஆயுதங்களையும் எடுத்துவந்திருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து தாம் பண்ணுகிற ஆவிக்குரிய யுத்தத்தில் ஆவிக்குரிய ஆயுதங்களையே பயன்படுத்துகிறார். இருபுறமும் கருக்குள்ள சத்திய வசனமே இயேசுகிறிஸ்துவின் ஆயுதம். இந்த ஆயுதத்தினால் இயேசுகிறிஸ்து பலமுறை தம்முடைய சத்துருக்களை அடித்திருக்கிறார். இயேசுவின் சத்துருக்களிடம் ஆவிக்குரிய பட்டயமில்லை. ஆகையினால் அவர்கள் இயேசுவைப் பிடிக்க ஆயுதங்களையும் தடிகளையும் தங்களோடு கொண்டு வருகிறார்கள்.

**யாரைத் தேடுகிறீர்கள்**

**இயேசு தமக்கு நேரிடப்போகிற எல்லாவற்றையும் அறிந்து, எதிர்கொண்டுபோய், அவர்களை நோக்கி: யாரைத் தேடுகிறீர்கள் என்றார் (யோவா 18:4).**

## அதிகாரம் - 18

இயேசுகிறிஸ்துவைப் பிடிக்க, அவருடைய சத்துருக்கள் தீவட்டிகளோடும் ஆயுதங்களோடும் அவ்விடத்திற்கு வருகிறார்கள். இயேசுகிறிஸ்துவோ எந்தவிதமான பயமும் பதட்டமுமில்லாமல் இருக்கிறார். தமக்கு நேரிடப்போகிறது எல்லாவற்றையும் இயேசுகிறிஸ்து அறிந்திருக்கிறார். தம்மைப் பிடிக்க வருகிறவர்களை எதிர்கொண்டு போய், அவர்களை நோக்கி "யாரைத் தேடுகிறீர்கள்" என்று மிகவும் அமைதியாகக் கேட்கிறார். தமக்குச் சம்பவிக்கப்போவதை இயேசுகிறிஸ்து அறிந்திருப்பதினாலும், அதை எதிர்கொள்ள தாம் ஆயத்தமாயிருப்பதினாலும், இயேசுகிறிஸ்துவினால் பதட்டமில்லாமல், பயமில்லாமலும், அமைதியாகப் பேசமுடிகிறது.

நமக்கு என்னவெல்லாம் சம்பவிக்கும் என்பதைத் தெரிந்துகொள்ள நாம் ஆசைப்படக்கூடாது. இதைத் தெரிந்துகொண்டால் நம்முடைய வேதனைகள் அதிகரிக்கும். தன்னுடைய மரணநாள் என்றைக்கு என்று தெரிந்தால், அதைத் தெரிந்த நாளிலிருந்து மனுஷனால் நிம்மதியாக இருக்கமுடியாது. அந்தந்த நாளுக்கு அதினதின் பாடுகள் போதும் என்று அமைதியாக ஒவ்வொரு பாடுகளையும் எதிர்கொள்ளவேண்டும். இனிமேல் நடைபெறப்போகிற காரியங்களைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்னும் ஆவல் நம்மிடத்தில் இல்லாவிட்டாலும், நமக்கு இந்த உலகத்தில் பாடுகளும் உபத்திரவங்களும் வருமென்பதை மறந்துவிடக்கூடாது. அதைச் சந்திப்பதற்கு நாம் ஆயத்தமாக இருக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுகிறபோது, ஒவ்வொரு நாளும் நாம் அமர்ந்து, செல்லும் செலவைக் கணக்குப் பார்த்துக்கொண்டிருக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்து தமக்கு நியமிக்கப்பட்டிருக்கும் பாடுகளைச் சந்திப்பதற்காக, தம்மைப் பிடிக்க வந்திருக்கிறவர்களை எதிர்கொண்டு போகிறார். இயேசுகிறிஸ்துவை ராஜாவாக்கவேண்டுமென்று ஜனங்கள் முயற்சி பண்ணினார்கள். அவருடைய சிரசின்மீது கிரீடத்தை சூட்டவேண்டுமென்று விரும்பினார்கள். அப்போதெல்லாம் இயேசுகிறிஸ்து அதை ஏற்றுக்கொள்ளாமல், அவர்களைவிட்டு மறைந்துபோனார் (யோவா 6:15).

ஆனால் இப்போதோ தம்மைப்பிடித்து துன்பப்படுத்த வந்திருக்கிறவர்களைப்பார்த்து, அவர்களை எதிர்கொள்ள இயேசுதாமே முன்னேறிப்போகிறார். பாடுகளை அனுபவிப்பதற்காகவே இயேசுகிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்திருக்கிறார். அதே இயேசுகிறிஸ்து ஆளுகை செய்வதற்காகப் பரலோகத்திற்குப் போகப்போகிறார்.

இயேசுகிறிஸ்து பாடுகளைச் சந்திக்க எதிர்கொண்டு போனதினால், அவருடைய முன்மாதிரியைப் பின்பற்றுவதாக நினைத்துக்கொண்டு, நாமும் தேவையில்லாத பிரச்சனைகளை நம்மீது வரவழைத்துக்கொள்ளக்கூடாது. நமக்கு வராத பிரச்சனைகளையெல்லாம் நாம் நேரடியாகப் போய் அதைப்பெற்றுக்கொள்ளக்கூடாது. பாடுகள் அனுபவிப்பதற்குத் தேவன் நம்மை அழைக்கிறார். பாவம் செய்வதைத்தவிர வேறு எந்தவழியிலும், அந்தப் பாடுகளிலிருந்து நாம் விடுதலையாவதற்கு வழியில்லை என்பது நமக்கு நிச்சயமாகத் தெரியுமென்றால், அந்தப் பாடுகளை எதிர்கொண்டு சந்தித்து, அவற்றைச் சகித்துக்கொள்ளவேண்டும்.

### நசரேயனாகிய இயேசு

**அவருக்கு அவர்கள் பிரதியுத்தரமாக: நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறோம் என்றார்கள். அதற்கு இயேசு: நான்தான் என்றார். அவரைக் காட்டிக்கொடுத்த யூதாசும் அவர்களுடனேகூட நின்றான் (யோவா 18:5).**

இயேசுகிறிஸ்து தம்மைப் பிடிக்கவருகிறவர்களிடம் மிகவும் அமைதியாகப் பேசுகிறார். "யாரைத் தேடுகிறீர்கள்" என்று அவர்களிடம் கேட்கிறார். அவர்களும் அவருக்குப் பிரதியுத்தரமாக, "நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறோம்" என்று மிகவும் அமைதியாகப் பதில் சொல்கிறார்கள். இயேசுகிறிஸ்து தங்களுக்கு முன்னால் நிற்கும்போதே, "அவர்தான் இயேசு" என்பது அவரைப் பிடிக்க வந்திருக்கிறவர்களுக்குத் தெரியவில்லை. இயேசுகிறிஸ்து தேவாலயத்தில் பல சமயங்களில் பிரசங்கம்பண்ணியிருக்கிறார். ஆகையினால் தேவாலயத்தின் ஊழியக்காரர்கள் இயேசுகிறிஸ்துவை இதற்கு முன்பு பார்த்திருப்பதற்கு வாய்ப்புள்ளது. ஒருவேளை இயேசுவை அவர்கள் பல தடவை பார்த்திருக்கலாம். யூதாஸ்காரியோத்து இந்தக் கூட்டத்தாரோடு இருக்கிறான். அவனுக்கு இயேசுவை நன்றாகத் தெரியும். ஆனாலும் இயேசுவைப் பிடிக்க வந்திருக்கிற கூட்டத்தாரில் யாரும், தைரியமாக, இயேசுவிடம் வந்து "உம்மைத்தான் தேடுகிறோம்" என்று சொல்லவில்லை.

## அதிகாரம் - 18

அவர்கள் இயேசுகிறிஸ்துவைப்பற்றிச் சொல்லும்போது, "நசரேயனாகிய இயேசு" என்று சொல்லுகிறார்கள். "நசரேயன்" என்னும் வார்த்தை அவருடைய பெயரை அவமானப்படுத்துவதற்காக சொல்லப்படுகிற வார்த்தையாகும். இயேசுகிறிஸ்து யூதர்கள் எதிர்பார்க்கிற மேசியாகவாக இருக்கிறார். இயேசுவை "கிறிஸ்து" என்று அழைப்பதற்குப் பதிலாக, அவரை "நசரேயனாகிய இயேசு" என்று மாத்திரமே அழைக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் தெய்வத்துவத்தை அவர்கள் அங்கீகரியாமல், அவரை சாதாரண மனுஷனாகவே பாவிக்கிறார்கள்.

இயேசுவைப் பிடிக்க வருகிறவர்களுக்கு, அவர்தான் மேசியா என்பது தெரியவில்லை. ஆகையினால்தான் அவர்கள் இயேசுவிடமே, "நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறோம்" என்று சொல்லுகிறார்கள். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக, "நான் தான்" என்று சொல்லுகிறார். இயேசுகிறிஸ்துவை அவர்கள் "நசரேயனாகிய இயேசு" என்று சொல்லி, அவரை நிந்தித்தாலும், இயேசுகிறிஸ்து அந்த நிந்தையைத் தாங்கிக்கொண்டு, அவர்களுக்குப் பதில் சொல்கிறார். "நான் தான்" என்று தம்மை வெளிப்படுத்துகிறார்.

இயேசுகிறிஸ்து விரும்பியிருந்தால், "நசரேனாகிய இயேசுவைத்தேடுகிறோம்" என்று சொன்னவர்களுக்கு, "நான் அவரல்ல" என்று பதில் சொல்லியிருக்க முடியும். ஏனெனில் இயேசுகிறிஸ்து நாசரேத் ஊரில் பிறந்தவரல்ல. அவர் பெத்லகேம் ஊரில் பிறந்தவர். இயேசுகிறிஸ்துவின் மனுஷத்துவத்தை சரியாகச் சொல்லவேண்டுமென்றால், அவரை "பெத்லேகேமியனாகிய இயேசு" என்று தான் அழைக்கவேண்டும். ஆனால் இயேசுகிறிஸ்துவோ தம்முடைய பெயரைப்பற்றி தேவையில்லாமல் விவாதம்பண்ணவில்லை.

இயேசுகிறிஸ்து தம்மைப்பற்றியோ, தம்முடைய வார்த்தையைப்பற்றியோ அறிக்கை செய்ய வெட்கப்படவில்லை. தம்முடைய சிலுவையைச் சுமப்பதற்கு இயேசுகிறிஸ்து ஆயத்தமாகயிருக்கிறார்.

அதற்காக எந்தக் கிரயத்தையும் செலுத்துவதற்கு இயேசுகிறிஸ்து முன்வருகிறார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும் இயேசுகிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின்பற்றி, நமக்கு நியமிக்கப்பட்டிருக்கும் ஓட்டத்தைப் பொறுமையோடும், நிதானமாகவும், தெளிவாகவும் ஓடவேண்டும். நம்முடைய சிலுவையைச் சுமக்க நாம் ஆயத்தமாக இருக்கவேண்டும். செலுத்த வேண்டிய கிரயத்தைச் செலுத்துவதற்கு நம்மை ஒப்புக்கொடுக்கவேண்டும். பிரச்சனைகள் வரும்போது, சாதுரிய வார்த்தைகளைப் பேசி, தேவனுடைய சித்தத்தைவிட்டு விலகி ஓடிப்போய்விடக்கூடாது.

தம்மைப் பிடிக்க வருகிறவர்களிடம், இயேசுகிறிஸ்து "நான் தான்" என்று சொல்லுகிறார். அப்போது இயேசுகிறிஸ்துவைக் காட்டிக்கொடுத்த யூதாசும் அவர்களுடனே கூட நிற்கிறான். ஒரு காலத்தில் இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுகிற அவருடைய சீஷரோடு கூடயிருந்தவன், இப்போது இயேசுகிறிஸ்துவைப் பிடிக்க வந்திருக்கிற கூட்டத்தாரோடு நிற்கிறான். இயேசுகிறிஸ்துவோடு சேர்ந்து, அவருடைய சத்துருவுக்கு எதிராக யுத்தம்பண்ண வேண்டியவன், இப்போது இயேசுவுக்கு எதிராகவே யுத்தம்பண்ண வந்திருக்கிறான்.

இயேசுகிறிஸ்துவைக் காட்டிக்கொடுக்க யூதாசு வெட்கப்படவில்லை. அவன் இப்பிரபஞ்சத்தின்மீது ஆசை வைத்திருக்கிறான். ஒரு காலத்தில் இயேசுகிறிஸ்துவின் சீஷனாகயிருந்தாலும், இப்போது யூதாசு அவரைக் காட்டிக்கொடுக்க தானாகவே முன்வந்திருக்கிறான். தேவனால் வரும் மகிமையைவிட, இந்த உலகத்தினால் வரும் பெருமையையும் புகழையும் யூதாசு விரும்புகிறான். ஆனால் இயேசுகிறிஸ்துவோ மனுஷருடைய இருதயத்தை அறிந்திருக்கிறவர். யூதாசு அவர்களோடு கூடயிருந்தாலும், இயேசு அவர்களிடம் மிகவும் அமைதியாக "நான் தான்" என்று கூறுகிறார்.

### தரையிலே விழுந்தார்கள்

**நான்தான் என்று அவர் அவர்களிடத்தில் சொன்னவுடனே, அவர்கள் பின்னிட்டுத் தரையிலே விழுந்தார்கள் (யோவா 18:6).**

## அதிகாரம் - 18

இயேசுகிறிஸ்து தம்மைப் பிடிக்க வருகிறவர்களிடத்தில், மிகவும் அமைதியாக, "நான் தான்" என்று சொல்லுகிறார். ஆனால், "நான் தான்" என்று அவர் அவர்களிடத்தில் சொன்னது அவர்களுக்குப் பேரதிர்ச்சியாயிற்று. இயேசுவின் வார்த்தையைக் கேட்டவுனே அவர்கள் பின்னிட்டுத் தரையிலே விழுந்தார்கள். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடத்தில், "நான் தான் அவர்" என்று சொன்னபோது, அவர்கள் புத்துணர்ச்சிப் பெற்றார்கள். உற்சாகமடைந்தார்கள். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடத்தில் சொன்ன அதே வார்த்தையைத்தான், தம்மைப் பிடிக்க வருகிறவர்களிடத்திலும் சொல்லுகிறார். ஆனால் அந்த வார்த்தையைக் கேட்டவுடனே, அவர்கள் அதிர்ச்சியடைந்து பின்னிட்டுத் தரையிலே விழுகிறார்கள். இயேசுகிறிஸ்துவின் வார்த்தை அவரை விசுவாசிக்கிறவர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கிறது. அதே வார்த்தை அவிசுவாசிகளுக்கோ சாபமாக இருக்கிறது.

இயேசுவைப் பிடிக்க வந்திருக்கிறவர்கள் தரையிலே விழுந்தவுடனே, அவர் தம்முடைய தெய்வீக வல்லமையினால் அவர்களைச் சங்காரம்பண்ணியிருக்கலாம். ஆனால் இயேசுகிறிஸ்துவோ அவர்களைக் கொன்றுபோடவில்லை. இயேசுகிறிஸ்துவின் ஜீவனை அவர்களால் பலவந்தமாகப் பறித்துக்கொள்ளமுடியாது என்பதையே இந்த சம்பவம் தெளிவுபடுத்துகிறது. இயேசுகிறிஸ்து தம்முடைய ஜீவனைத் தாமாகவே ஒப்புக்கொடுக்கவேண்டும். அவருடைய அனுமதியில்லாமல், அவருடைய ஜீவனை அவரிடத்திலிருந்து யாராலும் எடுக்க முடியாது.

இயேசுகிறிஸ்து தம்முடைய சத்துருக்களையும் சிநேகிக்கிறார். தம்மைப் பிடிக்க வந்திருக்கும் இவர்களிடத்தில் நீடிய பொறுமையோடிருந்து, தம்முடைய தெய்வீக அன்பை வெளிப்படுத்துகிறார். அவருடைய சத்துருக்களைத் தரையிலே விழச் செய்ததினால், அவர்களுக்கும் இயேசுகிறிஸ்துவின் வல்லமையை அனுபவிப்பதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

அவர் சர்வவல்லமையுள்ள தேவன் என்பதைப் புரிந்துகொண்டு, இயேசுவைப் பிடிக்க வந்தவர்கள் மனந்திரும்பவேண்டும். அவர்கள் மனந்திரும்ப வேண்டுமென்பதற்காகவே, இயேசுகிறிஸ்து அவர்களைப் பின்னிட்டுத் தரையிலே விழச்செய்தார். அவர்கள் தரையில் படுத்து சற்று நேரம் ஓய்வெடுக்க வேண்டுமென்பது இயேசுகிறிஸ்துவின் விருப்பமல்ல. ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லோரும் மனந்திரும்பவேண்டுமென்பதே இயேசுகிறிஸ்துவின் விருப்பமாயிருக்கிறது.

### நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறோம்

**அவர் மறுபடியும் அவர்களை நோக்கி: யாரைத் தேடுகிறீர்கள் என்று கேட்டார். அவர்கள்: நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறோம் என்றார்கள் (யோவா 18:7).**

இயேசுகிறிஸ்துவைப் பிடிக்க வந்திருக்கிறவர்கள், பின்னிட்டுத் தரையிலே விழுந்துகிடக்கிறார்கள். இயேசுகிறிஸ்து விரும்பியிருந்தால், இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, அவர்கள் நடுவிலிருந்து மறைந்து போயிருக்கலாம். ஆனால் தப்பித்துச் செல்லவேண்டும் என்னும் எண்ணம் இயேசுகிறிஸ்துவிடம் இல்லை. பாடுகளுக்குத் தம்மை ஒப்புக்கொடுக்கிறார். தரையிலே விழுந்துகிடக்கிற அவர்கள் மறுபடியும் எழுந்திருந்தபோது, இயேசுகிறிஸ்துவின் வல்லமையைப் புரிந்துகொண்டார்கள். ஆனாலும் அவர்கள் இயேசுகிறிஸ்துவை விட்டுத் தப்பித்து ஓடிப்போக முயற்சிபண்ணவில்லை. இயேசுகிறிஸ்துவும் அந்த இடத்தை விட்டுப்போகவில்லை. அவர்களும் அந்த இடத்தை விட்டுப்போகவில்லை.

தாங்கள் ஏன் தரையிலே விழுந்தோம் என்பது அவர்களுக்குத் தெரியாமலிருக்கலாம். இப்போது அவர்களுடைய இருதயத்தில் பயத்தோடு ஆச்சரியமும் சேர்ந்திருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் வல்லமை எப்படிப்பட்டதோ என்று ஆச்சரியத்தோடு யோசித்துப் பார்க்கிறார்கள். ஆனாலும் இதற்கு மத்தியிலும், அவர்கள் இயேசுகிறிஸ்துவைப் பிடிக்க வேண்டுமென்றுதான் விரும்புகிறார்கள். தரையிலே விழுந்து கிடந்த அவர்களிடம் இயேசுகிறிஸ்து "யாரைத் தேடுகிறீர்கள்" என்று மறுபடியும் கேட்கிறார். அவர்களோ இயேசுவைவிட்டுப் பயந்து ஓடிப்போய்விடவில்லை. அவரிடத்தில் ஏற்கெனவே சொன்னதுபோல, இப்போதும் "நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறோம்" என்றுதான் பதில்சொல்லுகிறார்கள்.

## அதிகாரம் - 18

ஒரே பதிலை திரும்பச் சொல்லுவதினால், அவர்கள் துணிகரமாகத் தங்களுடைய துன்மார்க்கத்தைச் செய்கிறார்கள் என்பது தெளிவாகிறது. தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவை, அவர்கள் சாதாரண மனுஷனாகப் பாவித்து "நசரேயனாகிய இயேசு" என்று சொன்னபோதிலும், இயேசு அவர்களிடத்தில் பொறுமையாகப் பேசுகிறார். பிதா தமக்கு நியமித்து வைத்திருக்கும் ஊழியத்தையே குமாரன் நிறைவேற்றுகிறார்.

**இவர்களைப் போகவிடுங்கள்**

**இயேசு பிரதியுத்தரமாக: நான்தானென்று உங்களுக்குச் சொன்னேனே; என்னைத் தேடுகிறதுண்டானால், இவர்களைப் போகவிடுங்கள் என்றார் (யோவா 18:8).**

இயேசுகிறிஸ்துவைப் பிடிக்க யூதாஸ்காரியோத்து ஏராளமானோரைக் கூட்டிக்கொண்டு வருகிறான். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களை அவர்களிடமிருந்து பாதுகாப்பாகத் தப்புவிக்கவேண்டுமென்று விரும்புகிறார். ஏராளமானோர் தம்மைப் பிடிக்க வந்தாலும், இயேசுகிறிஸ்துவிடம் பயமோ, பதட்டமோ காணப்படவில்லை. இயேசு மிகவும் தெளிவாகவும், தைரியமாகவும் அவர்களிடம் பேசுகிறார். "நான் தானென்று உங்களுக்குச் சொன்னேனே" என்று அவர்களுக்குப் பிரதியுத்தரம் கூறுகிறார். அத்தோடு தம்முடைய சீஷர்களையும் அவர்களிடமிருந்து பாதுகாக்க விருப்பமுள்ளவராக, "என்னைத் தேடுகிறதுண்டானால் இவர்களைப் போகவிடுங்கள்" என்று அவர்களிடம் கூறுகிறார்.

தமக்கு ஆபத்து வந்தாலும், தம்முடைய சீஷர்களுக்கும் ஒரு ஆபத்தும் வரக்கூடாது என்று இயேசுகிறிஸ்து அவர்கள்மீது மிகுந்த கரிசனையோடிருக்கிறார். சீஷர்கள் இயேசுகிறிஸ்துவை விட்டு ஓடிப்போகும்போது, அவர்கள் இந்த சம்பவத்தையெல்லாம் நினைத்துப்பார்ப்பார்கள். பேதுரு இயேசுகிறிஸ்துவை மறுதலித்தபோது, அவனுடைய உள்ளத்தில் இந்த சம்பவம் நிச்சயமாகவே அவனுடைய நினைவுக்கு வரும். "இவர்களைப் போகவிடுங்கள்" என்று இயேசுகிறிஸ்து கூறும்போது, இந்த வாக்கியத்தை அவர் தம்முடைய இருதயத்தின் ஆழத்திலிருந்து, மெய்யாகவே கூறுகிறார்.

மனுக்குலத்தின் இரட்சிப்புக்காக இயேசுகிறிஸ்து தம்முடைய ஜீவனையே பலியாக ஒப்புக்கொடுக்கிறார். தம்முடைய சீஷரிடத்தில் மிகுந்த அன்புள்ளவராக இருக்கிறார். அவர்களுக்கு எந்த ஆபத்தும் வந்துவிடக்கூடாது என்று அவர்கள்மீது மிகுந்த கரிசனையோடிருக்கிறார். பாடுகளை அனுபவிக்க இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் இன்னும் ஆயத்தமாக இல்லை. ஆகையினால் தம்மைப் பிடிப்பதற்கு போர்ச்சேவகரின் கூட்டத்தார் வரும்போது, அவர்கள் தம்முடைய சீஷர்களையும் பிடித்துக்கொள்ளக்கூடாது என்பதில் இயேசுகிறிஸ்து மிகுந்த கவனத்தோடிருக்கிறார்.

இயேசுகிறிஸ்துவைப் போர்ச்சேவகர்கள் பிடித்துக்கொள்வதினால் அவருக்குப் பாடுகள் உண்டாகும். இந்தப் பாடுகளினிமித்தமாக சீஷர்களுக்கும் பாடுகள் வரும். அவர்களுக்கு வருவது சரீரப்பிரகாரமான பாடுகளாக இருக்கக்கூடாது என்பதில் இயேசுகிறிஸ்து சித்தமுள்ளவராக இருக்கிறார். அவர்களோடு இயேசுகிறிஸ்து இல்லாமற்போவதினால் அவர்களுடைய ஆத்துமாக்களுக்குப் பாடுகள் வரும். வருத்தங்களும் வேதனைகளும் வரும். தங்கள் ஆத்துமா வாழ்வது போலவே அவர்கள் வாழ்வார்கள். அவர்களுடைய ஆத்துமாவில் இயேசுகிறிஸ்துவைப் பிரிந்திருப்பதினால் வருத்தம் உண்டாயிருக்கும். ஆத்துமாவின் வருத்தம் அவர்களுடைய ஜீவியத்திலும் வெளிப்படும். தற்சமயத்திற்கு அவர்கள் இந்தப் பாடுகளை மாத்திரம் அனுபவித்தால் போதுமானது என்று இயேசுகிறிஸ்து சித்தமுள்ளவராக இருக்கிறார். வேளை வரும்போது இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் ஒவ்வொருவரும், தங்களுடைய சிலுவைகளை எடுத்துக்கொண்டு இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றிச் செல்வார்கள்.

தம்மோடுகூட தம்முடைய சீஷர்களும் இப்போது மரிக்கவேண்டுமென்பது இயேசுகிறிஸ்துவின் சித்தமல்ல. ஏனெனில் இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு வேறொரு ஊழியத்தை நியமித்து வைத்திருக்கிறார். போர்ச்சேவகர்களின் கூட்டத்தார் அவர்களை இப்போது பிடிக்கக்கூடாது. அவர்களைப் போகவிட்டுவிடவேண்டும். அவர்கள் உலகம் முழுவதும் சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவேண்டும். இந்த ஊழியத்தைச் செய்வதற்காகத்தான் இயேசுகிறிஸ்து "இவர்களைப் போகவிடுங்கள்" என்று போர்ச்சேவகரின் கூட்டத்தாரிடம் சொல்லுகிறார்.

## அதிகாரம் - 18

இயேசுகிறிஸ்து தம்முடைய தெய்வீக ஞானத்தினால் நம்மை வழிநடத்துகிறார். தம்முடைய சீஷர்களை இப்போது போகவிடுமாறு கூறுவது, அவரை விசுவாசிக்கிற நமக்கு ஆறுதலான வார்த்தையாக இருக்கிறது. நம்முடைய ஜீவன் இயேசுகிறிஸ்துவின் கரத்திலிருக்கிறது. தேவன் நமக்கு நியமிக்கும் ஒவ்வொரு காரியத்தையும் அதற்கு ஏற்றவேளையில் நாம் செய்யவேண்டுமென்று விரும்புகிறார். நம்முடைய சிலுவையை நாம் எப்போது சுமக்கவேண்டுமென்பது இயேசுவுக்குத் தெரியும். நம்முடைய பலமும் அவருக்குத் தெரியும். நம்முடைய பலவீனமும் அவருக்குத் தெரியும்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களைப் போகவிடுமாறு கூறுவது, அவர்கள் மீது வைத்திருக்கும் அன்புக்கு அடையாளமாக இருக்கிறது. நாமும் நம்மை நேசிப்பதுபோலவே பிறரையும் நேசிக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின்பற்றி மற்ற விசுவாச சகோதரர்களிடத்தில் நாம் அன்புகூரவேண்டும். நம்முடைய பாதுகாப்பையும், நம்முடைய வசதிகளையும் மாத்திரம் நாம் பார்த்துக்கொண்டிருந்தால் அது நல்லதல்ல. நம்முடைய நலனைப் பார்ப்பதுபோலவே மற்றவர்களின் நலனையும் பார்க்கவேண்டும். இயேசுகிறிஸ்து தம்முடைய ஜீவனை பலியாக ஒப்புக்கொடுத்து, நமக்கு இரட்சிப்பைக் கொடுத்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிற நாமும், நமக்குப் பிரச்சனைகள் வந்தாலும் நம்மால் மற்றவர்களுக்குப் பிரச்சனைகள் வந்துவிடக்கூடாது என்பதில் கவனமாயிருக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்து தேவனுக்கும் நமக்கும் மத்தியஸ்தராகயிருக்கிறார். நம்முடைய பாவத்திலிருந்தும், சாபத்திலிருந்தும், பாவத்திற்கான நியாயத்தீர்ப்பிலிருந்தும் நாம் தப்பித்துக்கொள்ளவேண்டும் என்பதற்காக இயேசுகிறிஸ்து தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்திருக்கிறார். நமக்காக இயேசு தம்முடைய ஜீவனையே ஒப்புக்கொடுத்திருக்கிறார்.

**வசனம் நிறைவேறத்தக்கதாக**

**நீர் எனக்குத் தந்தவர்களில் ஒருவனையும் நான் இழந்து போகவில்லையென்று அவர் சொல்லிய வசனம் நிறைவேறத் தக்கதாக இப்படி நடந்தது (யோவா 18:9).**

இயேசுகிறிஸ்து சற்று நேரத்திற்கு முன்பு பிதாவினிடத்தில் இவ்வாறாக கூறி ஜெபம்பண்ணினார். "நான் இனி உலகத்திலிரேன், இவர்கள் உலகத்திலிருக்கிறார்கள்; நான் உம்மிடத்திற்கு வருகிறேன். பரிசுத்த பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படிக்கு, நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும். நான் அவர்களுடனேகூட உலகத்திலிருக்கையில் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொண்டேன்; நீர் எனக்குத் தந்தவர்களைக் காத்துக் கொண்டுவந்தேன்; வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக, கேட்டின் மகன் கெட்டுப்போனானேயல்லாமல், அவர்களில் ஒருவனும்கெட்டுப்போகவில்லை. இப்பொழுது நான் உம்மிடத்திற்கு வருகிறேன்; அவர்கள் என் சந்தோஷத்தை நிறைவாய் அடையும்படி உலகத்தில் இருக்கையில் இவைகளைச் சொல்லுகிறேன்" (யோவா 17:11-13). இப்பொழுது இங்கு நடைபெறும் சம்பவம் "நீர் எனக்குத் தந்தவர்களில் ஒருவனையும் நான் இழந்துபோகவில்லை" என்று அவர் சொல்லிய இந்த வசனம் நிறைவேறத்தக்கதாக இப்படி நடைபெறுகிறது.

இயேசுகிறிஸ்துவின் பிரதான ஊழியம் மனுஷருடைய ஆத்துமாக்களை பாவத்திலிருந்து விலக்கி பாதுகாப்பதுதான். தம்முடைய சீஷர்களின் ஆத்துமாக்களை இயேசுகிறிஸ்து பாதுகாக்க விரும்புகிறார். அவர்களுடைய ஆத்துமாக்களின் மீது கரிசனையுள்ள இயேசுகிறிஸ்து, அவர்களுடைய இயற்கையான ஜீவன்களின்மீதும் கரிசனையுள்ளவராக இருக்கிறார். தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு ஊழியத்தை ஒப்புக்கொடுத்திருக்கிறார். தம்முடைய தெய்வீக திட்டத்தின் பிரகாரமாக தேவனுடைய ஊழியம் நிறைவேறும் வகையில், இயேசுகிறிஸ்து தம்முடைய ஊழியக்காரர்களின் ஜீவனைப் பாதுகாக்கிறார். நம்முடைய ஜீவன் நமக்குள் இருக்கும் வரையிலும் நாம் ஊழியம் செய்யவேண்டும். நம்முடைய ஜீவனைத் தேவனுடைய ஊழியத்திற்குப் பிரயோஜனமுள்ளதாக அர்ப்பணிக்க வேண்டும். கர்த்தருடைய கரத்தில் நம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுக்கவேண்டும். தமது சித்தத்தின் பிரகாரமாக அவர் நம்மைப் பாதுகாப்பார். தம்முடைய தீர்மானத்தின் பிரகாரமாக நமக்கு ஜீவியகாலத்தைக் கொடுப்பார்.

## அதிகாரம் - 18

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களை ஆவிக்குரிய ரீதியாகப் பாதுகாக்கிறார். சீஷர்கள் இப்போது தங்களுடைய விசுவாசத்தில் குழந்தைகளைப்போல பலவீனமாக இருக்கிறார்கள். இந்த வேளையில் அவர்கள் பாடுகளை அனுபவிக்கவேண்டிய சூழ்நிலை வந்தால், ஒருவேளை அவர்களுடைய பலவீனமான விசுவாசம் மேலும் பலவீனமடையலாம். ஒருவேளை அவர்கள் இயேசுகிறிஸ்துவை விட்டே ஓடிப்போய்விடுவதற்கும் வாய்ப்புள்ளது. பிதாவானவர் தமக்குத் தந்தவர்களில் ஒருவரையும் இழந்துபோகக்கூடாது என்று இயேசுகிறிஸ்து சித்தமுள்ளவராக இருக்கிறார். ஆகையினால் இந்த வேளையில் போர்ச்சேவகர்கள் அவர்களைப் பிடித்து, அவர்களைத் துன்புறுத்தக்கூடாது என்று விரும்புகிறார். ஆகையினால்தான் இயேசு சேவகரின் கூட்டத்தாரிடம், "இவர்களைப் போகவிடுங்கள்" என்று கூறுகிறார்.

**வலது காதறவெட்டினான்**

**அப்பொழுது சீமோன்பேதுரு, தன்னிடத்திலிருந்த பட்டயத்தை உருவி, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனை வலதுகாதற வெட்டினான்; அந்த வேலைக்காரனுக்கு மல்குஸ் என்று பெயர் (யோவா 18:10).**

பேதுரு முன்கோபமுள்ளவன். அவனிடத்தில் ஒரு பட்டயம் இருக்கிறது. சீஷர்கள் எல்லாரிடத்திலும் சேர்ந்து மொத்தம் இரண்டு பட்டயங்கள் உள்ளன (லூக் 12:38). அந்த இரண்டு பட்டயங்களில் ஒன்று பேதுருவினிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. பேதுரு தன்னிடத்திலிருந்த பட்டயத்தை உருவி, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனை வலது காதற வெட்டுகிறான். அந்த வேலைக்காரனின் பெயரும் இங்கு குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவனுக்கு மல்குஸ் என்று பெயர்.

பேதுரு ஒருவேளை தன்னுடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மீதுள்ள அன்பினால் இந்தக் காரியத்தைச் செய்திருக்கலாம். பக்திவைராக்கியத்தினால் தீவிரவாதம் பண்ணக்கூடாது. பேதுருவுக்கு இயேசுகிறிஸ்துவின்மீது பக்திவைராக்கியம் இருக்கிறது.

ஆனால் இந்த வைராக்கிய வாஞ்சையை பேதுரு தவறாகப் பயன்படுத்துகிறான். சற்று நேரத்திற்கு முன்பு, பேதுரு தன்னுடைய ஆண்டவருக்காகத் தன் ஜீவனையே கொடுப்பேன் என்று வாக்குப்பண்ணினான். தன்னுடைய வார்த்தைக்கு உண்மையுள்ளவனாக நடந்துகொள்கிறான். ஆகையினால் பேதுரு செய்தது தவறில்லை என்பதுபோல விவாதம்பண்ணினாலும், அவன் செய்த காரியம் மெய்யாகவே தவறானதுதான்.

பேதுருவின் மனதில் கள்ளம் கபடம் எதுவுமில்லை. தன்னுடைய ஆண்டவரைப் போர்ச்சேவகர் பிடிக்க வந்திருப்பதினால் பேதுருவுக்கு கோபம் உண்டாயிற்று. இந்த வேளையில் அவனிடத்தில் ஒரு பட்டயமும் இருக்கிறது. இந்த ஆயுதத்தை இந்த வேளையில் சும்மா வைத்திருக்க அவன் விரும்பவில்லை. ஆகையினால் அதைப் பயன்படுத்தி பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனை வலது காதற வெட்டிவிடுகிறான். ஒரு விவாதத்திற்காக பேதுரு செய்தது பெரிய தவறில்லை என்று அவனை மன்னித்துவிட்டாலும், அவன் செய்த இந்தச் செயல் சரியானதுதான் என்று நியாயப்படுத்த முடியாது.

இயேசுகிறிஸ்து, சத்துருவின் காதை வெட்ட பேதுருவுக்கு அனுமதி கொடுக்கவில்லை. தன்னுடைய தலைவரின் உத்தரவு இல்லாமலேயே பேதுரு சுயமாகச் செயல்படுகிறான். கிறிஸ்துவின் போர்ச்சேவகர்களாகிய நாம், நம்முடைய ஆண்டவரும் கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துவின் கட்டளைக்குக் காத்திருக்க வேண்டும். அவருடைய கட்டளையைப் பெற்றுக்கொண்டு அதற்கு நம்மை முழுவதுமாகக் கீழ்ப்படுத்தவேண்டும். தலைவரிடத்திலிருந்து கட்டளை வருவதற்கு முன்பாகவே நாம் அவசரப்பட்டு எதையும் செய்துவிடக்கூடாது.

தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டும் என்பது இயேசுகிறிஸ்துவின் உபதேசமல்ல. "தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம். ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு மறுகன்னத்தையும் திருப்பிக்கொடு" (மத் 5:39) என்பதுதான் இயேசுகிறிஸ்துவின் தெளிவான உபதேசம். இயேசுகிறிஸ்துவின் சத்துருக்கள் தங்களுடைய அதிகாரத்தினாலும், பலத்தினாலும், அவரைப் பிடிக்க வந்திருக்கும்போது, பட்டயத்தை உருவி அவர்களோடு சண்டைபோடவேண்டுமென்பது இயேசுகிறிஸ்துவின் உபதேசமல்ல. நம்முடைய சத்துருக்களையும் மன்னிக்கவேண்டும் என்பதும், நாம் தீமையோடு எதிர்த்து நிற்கக்கூடாது என்பதுமே இயேசுகிறிஸ்துவின் உபதேசமாகும்.

## அதிகாரம் - 18

தன்னுடைய ஆண்டவர் பாடுகளை அனுபவிப்பதை பேதுரு ஏற்றுக்கொள்ளவில்லை. இயேசுவுக்கு ஒரு பாடும், ஒரு துன்பமும் வரக்கூடாது என்று பேதுரு விரும்புகிறான். ஆனால் இயேசுகிறிஸ்துவோ, "மனுஷகுமாரன் பாடுகளை அனுபவிக்கவேண்டும் என்றும், சிலுவையில் மரிக்கவேண்டும் என்றும்" ஏற்கெனவே தம்முடைய சீஷர்களிடத்தில் சொல்லியிருக்கிறார். தமக்கு நியமிக்கப்பட்ட பிரகாரமாகவே இயேசுகிறிஸ்துவுக்கு ஒவ்வொரு காரியமும் சம்பவிக்கிறது. தேவனுடைய சித்தத்திற்கு யாரும் எதிர்த்து நிற்கக்கூடாது. ஆனால் பேதுருவோ அதையெல்லாம் நினைத்துப் பார்க்காமல், கிறிஸ்துவுக்காக யுத்தம்பண்ணுவதாக நினைத்து, அவருடைய சித்தத்திற்கு எதிராக யுத்தம்பண்ணுகிறான்.

இயேசுகிறிஸ்து தம்மைப் பிடிக்க வந்திருக்கிற போர்ச்சேவகரின் கூட்டத்தாரிடம் "இவர்களைப் போகவிடுங்கள்" என்று தம்முடைய சீஷர்களின் சார்பாக பேசுகிறார். அவர்கள் ஒரு குற்றமும் செய்யவில்லையென்றும், அவர்கள் நல்லவர்களென்றும், அவர்களுடைய நன்னடத்தைக்குத் தாம் உத்திரவாதம் கொடுப்பதாகவும் பொருள்படும் விதத்தில், இயேசுகிறிஸ்து போர்ச்சேவகரின் கூட்டத்தாரிடம் தம்முடைய சீஷர்களைப் போகவிடுமாறு கூறுகிறார். ஆனால் பேதுருவோ இயேசுகிறிஸ்துவின் நல்லவார்த்தைக்குத் தக்க பிராகாரம் நடந்துகொள்ளவில்லை. தங்களைப்பற்றி தங்கள் ஆண்டவர் நல்ல வார்த்தைகளைக் கூறுவதை பேதுரு தன் காதுகளால் கேட்கிறான். ஆனால் அந்த வார்த்தைக்குத் தக்க பிரகாரம் நடந்துகொள்ள அவன் தன்னை ஒப்புக்கொடுக்கவில்லை.

இயேசுகிறிஸ்துவும் அவரோடுகூட பதினொரு சீஷர்களும் தோட்டத்திலிருக்கிறார்கள். அவரைப் பிடிப்பதற்கு யூதாஸ்காரியோத்து போர்ச்சேவகரின் கூட்டத்தையும், பிரதான ஆசாரியர் பரிசேயர் என்பவர்களால் அனுப்பப்பட்ட ஊழியக்காரரையும் கூட்டிக்கொண்டு வருகிறான். சத்துருக்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. அவர்கள் மிகுந்த கோபத்தோடிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில், பேதுரு தன்னுடைய கோபத்தை அடக்கமுடியாமல், பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனை வலது காதற வெட்டுகிறான். இதனால் பேதுருவுக்கும் பிரச்சனை உண்டாயிற்று. அவன் மூலமாக மற்ற சீஷர்களுக்கும் பிரச்சனை உண்டாயிற்று. போர்ச்சேவகரின் கூட்டத்தாருடைய கோபம் பற்றியெறிகிறது. பேதுருவைப்போலத்தான் இன்று சிலர் தங்களைக் காத்துக்கொள்ளவேண்டும் என்று வைராக்கியமாக இருந்து, அதனால் தங்களைக் கெடுத்துக்கொள்கிறார்கள். சுயபாதுகாப்புக்கு முக்கியத்துவம் கொடுத்தால் சுயஅழிவுதான் வரும்.

பேதுரு இங்கு ஒரு பெரிய வீரன் போல செயல்படுகிறான். ஆனால் அவனிடத்தில் கோழைத்தனம் தான் இருக்கிறது. இந்த சம்பவம் நடந்த சிறிது நேரத்திற்கு பின்பு பேதுரு தன்னுடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை மறுதலித்துவிடுகிறான். அவனுடைய வீரமெல்லாம் அவனைவிட்டுப் போய்விட்டது. அவனுக்குள் கோழைத்தனம் வந்துவிடுகிறது. இயேசுகிறிஸ்துவின் போர்ச்சேவகர்களாகிய நாம் கிறிஸ்துவின் பக்கமாக நின்று சத்துருவோடு யுத்தம்பண்ணுகிறோம். கிறிஸ்துவுக்காக ஊழியம் செய்கிறவர்கள், தாங்கள் செய்கிற ஊழியம் தேவனுடைய ஊழியமென்றும், அது நீதியும் சத்தியமும் நிறைந்த ஊழியம் என்றும் நிச்சயமாக நம்பவேண்டும். யுத்தத்தில் எப்போதுமே ஏற்றத்தாழ்வுகள் வரும். வெற்றியும் தோல்வியும் உண்டாகும். வெற்றி பெறும்போது மாத்திரம் வீரத்தைக் காண்பித்துவிட்டு, தோல்விவரும்போது கோழைத்தனமாக ஓடிப்போய்விடுவது நல்ல போர்வீரனுக்கு உகந்ததல்ல.

கிறிஸ்துவின் ஊழியக்காரர்களாகிய நமக்கு, ஊழியத்தில் ஏற்றத்தாழ்வுகள் வரலாம். ஊழியத்தில் வேகமான வளர்ச்சியும் வரலாம். சில சமயங்களில் ஏற்கெனவே உள்ள வளர்ச்சிகூட வேகமாக குறைந்துபோகலாம். நாம் இரண்டு சூழ்நிலைகளிலும் இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரர்களாக, விசுவாசத்தில் நிலைத்து நிற்கவேண்டும். நம்முடைய ஊழியம் வேகமாக வளர்ச்சி பெறுகிறதா அல்லது வேகமாக குறைந்துபோகிறதா என்பது முக்கியமல்ல. நம்முடைய ஊழியம் கர்த்தருடைய ஊழியம் என்பதுதான் முக்கியம். நம்முடைய ஊழியம் வளர்ச்சி பெறாவிட்டாலும், ஊழியத்தில் அதிக வெற்றி காணப்படவில்லையென்றாலும், கிறிஸ்துவுக்காக ஊழியம் செய்ய நாம் ஆயத்தமாக இருக்கவேண்டும். நம்முடைய ஊழியம் தேவனுடைய ஊழியமென்றும், அது சத்தியமும் நீதியும் நிறைந்தது என்றும் விசுவாசித்து, தேவனுக்காகத் தொடர்ந்து ஊழியம் செய்ய வேண்டும். பாடுகளும் தோல்விகளும் வரும்போது ஊழியத்தைவிட்டு ஓடிப்போய்விடக்கூடாது.

## அதிகாரம் - 18

**பட்டயத்தை உறையிலே போடு**

**அப்பொழுது இயேசு பேதுருவை நோக்கி: உன் பட்டயத்தை உறையிலே போடு; பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம்பண்ணாதிருப்பேனோ என்றார் (யோவா 18:11).**

மனுஷருடைய வேதனைகளை நீக்குவதிலும், வியாதியஸ்தரை சொஸ்தமாக்குவதிலும் இயேசுகிறிஸ்து தம்முடைய தெய்வீக வல்லமையையும், நன்மை செய்கிற தம்முடைய சுபாவத்தையும் வெளிப்படுத்துகிறார். இந்த சம்பவத்தைப்பற்றி லூக்கா சுவிசேஷத்தில் "அப்போது இயேசு: இம்மட்டில் நிறுத்துங்கள் என்று சொல்லி, அவனுடைய காதைத்தொட்டு, அவனைச் சொஸ்தப்படுத்தினார்" (லூக் 22:51) என்று எழுதப்பட்டிருக்கிறது.

சீமோன் பேதுரு பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனை வலது காதற வெட்டுகிறான். தன்னிடத்திலிருந்த பட்டயத்தை உருவி அதை வெட்டுகிறான். இயேசுகிறிஸ்து அவனைக் கடிந்து கொள்கிறார். "உன் பட்டயத்தை உறையிலே போடு" என்று அவனிடத்தில் சொல்லுகிறார். பேதுரு தன்னுடைய ஆண்டவர்மீது அன்பாகவும் வைராக்கியமாகவும் இருக்கிறான். ஆனாலும் இயேசுகிறிஸ்து அவனுடைய செய்கையை மென்மையாகக் கடிந்துகொள்கிறார். பேதுரு தன்னுடைய கட்டுப்பாட்டை மீறிவிடுகிறான். இயேசுகிறிஸ்துவின் மீதுள்ள பக்திவைராக்கியத்தினால், அவன் தனக்கு நியமிக்கப்படாத காரியத்தைச் செய்கிறான்.

பேதுருவைப்போலவே இக்காலத்திலும் அநேகர் தங்களுடைய கோபமான வார்த்தைகளுக்கும், செய்கைகளுக்கும் நியாயம் கற்பிக்கிறார்கள். அதிக வேதனை உண்டானதினால் தாங்கள் கோபப்பட்டதாகச் சொல்கிறார்கள். துன்பம் மிகுதியானதினால் தாங்கள் அவசரப்பட்டு செயல்பட்டுவிட்டதாகச் சொல்லுகிறார்கள். இவையெல்லாம் நம்முடைய பாவமான காரியங்களை நியாயப் படுத்துவதற்காக நாம் சொல்லுகிற சாக்குப் போக்குகள்தான். எல்லா சூழ்நிலையிலும் நாம் இயேசுகிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்த வேண்டும். இயேசுகிறிஸ்துதான் நமக்குமுன்மாதிரியாக இருக்கிறவர். அவருக்கு பலவிதமான பாடுகள் வந்தபோதிலும், அதன் வேதனைகள் மத்தியிலும், அவர் மிகுந்த மனத்தாழ்மையோடும், நீடிய பொறுமையோடும் இருந்து, தம்முடைய நற்சாட்சியை வெளிப்படுத்தினார். விசுவாசிகளாகிய நமக்கு மனத்தாழ்மையும் நீடிய பொறுமையும் தேவைப்படுகிறது. அவசரப்பட்டு கர்த்தருக்குச் சித்தமில்லாத காரியத்தைச் செய்துவிடக்கூடாது. செய்தால், இயேசுகிறிஸ்து பேதுருவைக் கண்டித்தது போலவே நம்மையும் கண்டிப்பார்.

இயேசுகிறிஸ்து பேதுருவைக் கண்டித்தத்தற்கு ஒரு காரணமுண்டு. "பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம்பண்ணாதிருப்பேனோ" என்று இயேசுகிறிஸ்து இதற்கான காரணத்தையும் கூறுகிறார். பிதாவின் சித்தத்திற்கு இயேசுகிறிஸ்து தம்மை முற்றிலுமாக கீழ்ப்படுத்துகிறார், ஒப்புக்கொடுக்கிறார். பேதுருவின் செய்கையினால் அங்கு குழப்பம் உண்டாயிற்று. ஆனாலும் தம்முடைய வேளை வந்திருக்கிறது என்பதை இயேசுகிறிஸ்து அறிந்திருக்கிறார். இந்தக் குழப்பங்கள் எதுவும் இயேசுகிறிஸ்துவின் சிந்தையைப் பாதிக்கவில்லை. தம்முடைய பாடுகளை அனுபவிப்பதற்கு இயேசுகிறிஸ்து ஆயத்தமாயிருக்கிறார்.

இயேசுகிறிஸ்துவுக்குக் கொடுக்கப் பட்டிருக்கிற பாத்திரம் வேதனையும் உபத்திரவமும் நிறைந்தது. இது கசப்பான பாத்திரம். ஆயினும் தம்முடைய பிதாவின் சித்தத்தின் பிரகாரம், இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணுவதற்கு இயேசுகிறிஸ்து ஆயத்தமாயிருக்கிறார். நம்முடைய கரங்களில் இரட்சிப்பின் பாத்திரத்தைக் கொடுப்பதற்காக, இயேசுகிறிஸ்து இந்த உபத்திரவத்தின் பாத்திரத்தில் பானம்பண்ணுகிறார். இந்தப் பாத்திரத்தில் அவர் மனப்பூர்வமாக பானம்பண்ணுகிறார். ஏனெனில் இந்தப் பாத்திரத்தைப் பிதாவானவர் தாமே தமக்குக் கொடுத்திருப்பதாக இயேசுகிறிஸ்து விசுவாசிக்கிறார்.

இயேசுகிறிஸ்து தம்முடைய பிதாவின் சித்தத்திற்குக் கீழ்ப்படிகிறதுபோல, நாமும் தேவனுடைய சித்தத்திற்கு முழுவதுமாகக் கீழ்ப்படியவேண்டும். இயேசுகிறிஸ்துவின் பாத்திரத்தில் நாமும் குடிப்பதற்கு நம்மை ஒப்புக்கொடுக்கவேண்டும் (மத் 20:21). பாடுகளையும், துன்பங்களையும், வேதனைகளையும் குறிப்பிடுவதற்கு, "பாத்திரம்" என்னும் வார்த்தையே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மற்ற பெரிய தொட்டிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, "பாத்திரம்" என்பது அளவில் சிறியது. தேவன் நமக்கு "பாத்திரத்தையே" கொடுத்திருக்கிறார். அவர் கொடுத்திருக்கும் பாத்திரத்தில் மாத்திரம் பானம்பண்ணினால் போதுமானது. அந்தப் பாடுகள் நமக்கு வரங்களாக இருக்கும்.

## அதிகாரம் - 18

பிதாவானவர் தாமே நமக்கு இந்தப் பாத்திரத்தைக் கொடுத்திருக்கிறார். இதை அவர் நமக்குக் கொடுக்கும்போது பிதாவானவர் நம்மீது அன்பும், பாசமும், பராமரிப்பும் காண்பிக்கிறார். நம்மைத் துன்பப்படுத்த வேண்டுமென்பதோ, நம்மை அழித்துப்போட வேண்டுமென்பதோ பிதாவின் நோக்கமல்ல. நம்மை ஆசீர்வதிக்கவேண்டுமென்பதே பிதாவின் சித்தமாயிருக்கிறது. ஆகையினால் பிதாவானவர் நமக்குக் கொடுக்கும் பாத்திரத்தில் பானம்பண்ண நாம் ஆயத்தமாயிருக்கவேண்டும்.

### இயேசுவைப் பிடித்து

**அப்பொழுது போர்ச்சேவகரும், ஆயிரம் போர்ச்சேவகருக்குத் தலைவனும், யூதருடைய ஊழியக்காரரும் இயேசுவைப்பிடித்து, அவரைக் கட்டி, (யோவா 18:12)**

இயேசுகிறிஸ்து தம்மைக் கைதுபண்ணுவதற்கு ஒப்புக்கொடுக்கிறார். தம்மைப் பிடிக்க வந்தவர்களிடமிருந்து தப்பித்துச் செல்ல அவர் எந்த முயற்சியும் எடுக்கவில்லை. அவர் அதில் பிரியப்படவுமில்லை. தம்முடைய வேளை வந்துவிட்டது என்பது இயேசுகிறிஸ்துவுக்குத் தெரியும். ஆகையினால் தம்மைப் பிடிப்பதற்கும், கட்டுவதற்கும் இயேசுகிறிஸ்து தம்மைத்தாமே ஒப்புக்கொடுக்கிறார். இயேசுகிறிஸ்து அனுமதி கொடுப்பதினால் மாத்திரமே, அவரைப் பிடிக்க வந்தவர்கள் அவரைப் பிடித்துக் கட்டுகிறார்கள். இயேசுகிறிஸ்துவைப் பிடிக்கும்போது ஒரு சிலர் மாத்திரமே அவர்மீது கைபோட்டுப் பிடித்து அவரைக் கட்ட முடியும். ஒரே வேளையில் எல்லோரும் தங்களுடைய கைகளை இயேசுவின்மீது போட்டு அவரைப் பிடிக்கமுடியாது. ஆனால் அவரைப் பிடிப்பதற்கு ஏராளமான போர்ச்சேவகரும் ஆயிரம் போர்ச்சேவகருக்குத் தலைவனும் யூதருடைய ஊழியக்காரனும் இயேசுவைப் பிடித்துக் கட்டுகிறார்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது. இயேசுவை ஒரு சிலரே பிடித்தாலும், இவர்களெல்லாம் அவர்களுக்கு உதவியாக இருக்கிறார்கள்.

ஜனங்கள் மத்தியில் குழப்பம் உண்டாகும்போது இதுபோலத்தான் நடைபெறும். ஒரு சிலர் மாத்திரமே குழப்பம் செய்வார்கள். மற்றவர்களெல்லாம் அவர்களுக்குத் துணையாக இருப்பார்கள். இயேசுகிறிஸ்துவைப் பிடிக்க இவர்கள் பலமுறை முயற்சி செய்திருக்கிறார்கள். ஆனால் அவரோ ஒவ்வொரு முறையும் அவர்கள் நடுவிலிருந்து மறைந்து சென்றுவிடுகிறார். இயேசுகிறிஸ்துவைச் சாதாரணமாகப் பிடிக்க முடியாது என்பது இவர்களுக்குத் தெரிந்திருக்கிறது. ஆகையினால் அவர் தப்பித்துச் செல்லக் கூடாத படிக்கு ஏராளமானோர் கூடிவந்து, அவர்மீது விழுந்து, அவரை எப்படியாவது பிடித்துக் கட்டவேண்டுமென்று தீர்மானத்தோடு வந்திருக்கிறார்கள். தேவைப்பட்டால் ஆயுதங்களையும் பயன்படுத்த வேண்டும் என்னும் நோக்கத்தோடு, பட்டயங்களையும் தடிகளையும் தங்களோடு எடுத்து வந்திருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவைப் பிடித்தவர்கள் அவரைக் கட்டுகிறார்கள். "அவரைக் கட்டுகிற சம்பவம்" யோவான் எழுதின சுவிசேஷத்தில் மாத்திரமே எழுதப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவைப் பிடித்தவுடன் அவரைக் கட்டுகிறார்கள். கைதுபண்ணுகிறார்கள். அவரைத் துன்பப்படுத்துகிறவர்கள் அவர்மீது மிகுந்த கோபத்தோடிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவைக் கட்டியிருப்பதினால், தங்கள் இஷ்டப்படி அவரைத் துன்பப் படுத்தலாம் என்பது இவர்களுடைய எண்ணம். அவருக்கு வேதனை உண்டாக்கவும், அவமானம் உண்டாக்கவும் என்னவெல்லாம் செய்யவேண்டுமோ அதையெல்லாம் செய்வதற்கு அவர்கள் ஆயத்தமாகயிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து தம்மைக் கைதுபண்ணுவதற்கு ஒப்புக்கொடுக்கிறார். அவர் தப்பித்துப்போகமாட்டார். ஆனால் சேவகர்கள் அவரைக் கட்டுவதன் மூலமாக, அவர் தப்பித்துப்போகிறவர் போலவும், ஆகையினால் அவரைக் கட்டியிருப்பதாகவும், மற்றவர்களுக்குக் காண்பிக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து இன்னும் விசாரிக்கப்படவேயில்லை. அதற்குள்ளாகவே அவரை விசாரித்து தீர்ந்ததுபோலவும், அவருக்கு மரணதண்டனை கொடுக்கப்பட்டு விட்டதுபோலவும் பாவித்து, அவரைப் பிடித்துக் கட்டி கைதுபண்ணுகிறார்கள். யூதமார்க்கத்துத் தலைவர்கள் இயேசுவைக் கொலைசெய்ய வேண்டுமென்று ஏற்கெனவே தீர்மானம் பண்ணிவிட்டார்கள். விசாரிக்கப்படும் முன்பாகவே தீர்ப்பு எழுதப்பட்டாயிற்று. இயேசுகிறிஸ்து தம்முடைய வார்த்தையின் அதிகாரத்தினால், தம்மைத் துன்பப் படுத்துகிறவர்களுடைய மனச்சாட்சிகளைக் கட்டிப்போட்டிருக்கிறார். அவர்களுடைய மனச்சாட்சி மழுங்கிப்போயிற்று. அதனால் அவர்கள் இயேசுகிறிஸ்துவை பழிவாங்க வேண்டுமென்றும், கொலைசெய்ய வேண்டுமென்றும் வெறியோடிருக்கிறார்கள். இதனிமித்தமாகவே அவர்கள் இயேசுவைப் பிடித்துக் கட்டுகிறார்கள்.

## அதிகாரம் - 18

இயேசுகிறிஸ்து கட்டப்பட்டிருப்பது மிகவும் விசேஷமான சம்பவம். அவர்கள் இயேசுவைக் கட்டுவதற்கு முன்பாகவே, இயேசுகிறிஸ்து மத்தியஸ்த ஊழியத்திற்கு தம்மைத்தாமே கட்டியிருக்கிறார். இயேசுகிறிஸ்து பிதாவின் சித்தத்தைச் செய்வதற்கு தம்மைத்தாமே கட்டியிருக்கிறார். மனுஷர்மீதுள்ள தம்முடைய அன்பின் கயிறுகளினால், இயேசுகிறிஸ்து பலிபீடத்திலுள்ள கொம்புகளோடு தம்மை ஏற்கெனவே கட்டியிருக்கிறார். பிதாவானவர் தமக்குக் கொடுத்திருக்கும் ஊழியத்தை நிறைவேற்ற வேண்டுமென்று இயேசுகிறிஸ்து ஏற்கெனவே தம்மைக் கட்டிப்போட்டிருக்கிறார்.

மனுஷருடைய குற்றவுணர்வு அவர்களுடைய ஆத்துமாக்களோடு கட்டப்பட்டிருக்கிறது. இதனால் தேவனுடைய நியாயத்தீர்ப்பைப்பற்றிய எச்சரிப்போடு நாம் கட்டப்படுகிறோம். நம்முடைய துன்மார்க்கமும் நம்முடைய ஆத்துமாக்களோடு கட்டப்படுகிறது. சாத்தானுடைய அந்தகார வல்லமையே நம்முடைய துன்மார்க்கத்தை நம்முடைய ஆத்துமாவோடு கட்டியிருக்கிறது. இந்தக் கட்டுக்களிலிருந்து இயேசுகிறிஸ்து தாமே நம்மை விடுவிக்க முடியும். அவர் நமக்காகத் தம்மைக் கட்டுவதற்கு, ஒப்புக்கொடுத்ததினிமித்தமாக, நம்முடைய கட்டுக்களிலிருந்து நாம் விடுவிக்கப்படுகிறோம்.

இயேசு கிறிஸ்துவினுடைய கட்டுக்களினிமித்தம் நாம் விடுவிக்கப்படுகிறோம். நம்முடைய விடுதலை இயேசுகிறிஸ்துவின் கட்டுக்களினால் உண்டாயிற்று. இயேசுகிறிஸ்து பாவத்தின் கட்டுக்களிலிருந்து நம்மை விடுவித்திருக்கிறார். நாம் விடுவிக்கப்பட்டாலும், தேவனுக்குக் கீழ்படிந்து ஜீவிக்கவேண்டும் என்னும் கட்டுக்களினால் நம்மைக் கட்டுவதற்கு விரும்புகிறார். பாவத்திற்குக் கட்டப்பட்டிருந்த நம்மை, இயேசுகிறிஸ்து விடுவித்து, இப்போது நீதிக்குக் கட்டிப்போடுகிறார்.

இயேசுகிறிஸ்து நமக்காகவே கட்டப்படுகிறார். அந்தக் கட்டுகள் நம்மீது விழவேண்டிய கட்டுக்களாகும். நாம் கட்டப்படக்கூடாது என்பதற்காகவே, இயேசுகிறிஸ்து நமக்கு வரவேண்டிய கட்டுகளை, தம்மீது ஏற்றுக்கொள்கிறார். இந்தச் சத்தியத்தை விசுவாசிகளாகிய நாம் தியானித்துப் பார்த்து, அவர் நம்மீது வைத்திருக்கும் அன்பின் கயிறுகளினால் அவர் நம்மைக் கட்டுவதற்கு ஒப்புக்கொடுக்கவேண்டும். அவருக்குக் கீழ்ப்படிந்து அவருடைய சித்தத்தின்படி ஊழியம் செய்ய நாம் கட்டப்படவேண்டும். அவர்மீது அன்புகூர நாம் கட்டப்படவேண்டும்.

இயேசுகிறிஸ்து நமக்காக கட்டப்பட்டதினால், அவருக்காக நாம் கட்டப்படுவது மிகவும் எளிமையான கட்டுக்களாக இருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் கட்டுக்கள் நம்மைப் பரிசுத்தப்படுத்துகிறது. நம்மை சுகந்தவாசனையுள்ளதாக மாற்றுகிறது. இயேசுகிறிஸ்துவுக்காக நாம் கட்டப்படும்போது நமக்கு வருத்தமோ வேதனையோ உண்டாகாது. சந்தோஷமும் சமாதானமும் பெருகும். பவுலும், சீலாவும் சிறைச்சாலையில் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினிமித்தமாக கட்டப்பட்டிருந்தார்கள். அந்தக் கட்டுக்கள் அவர்களுடைய ஆத்துமாவில் வேதனை உண்டாக்கவில்லை. அவர்களுடைய உள்ளத்தில் சந்தோஷம் நிரம்பிற்று. ஆகையினால்தான் அவர்களால் சிறைச்சாலையில், கட்டுக்கள் மத்தியிலும், கர்த்தரைத் துதித்துப் பாடமுடிந்தது.

### பிரதான ஆசாரியனுக்கு முன்பாக இயேசு
### யோவா 18:13-27

**யோவா 18:13. முதல்வது அவரை அன்னா என்பவனிடத்திற்குக் கொண்டுபோனார்கள்; அவன் அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனாகிய காய்பாவுக்கு மாமனாயிருந்தான்.**

**யோவா 18:14. ஜனங்களுக்காக ஒரே மனுஷன் சாகிறது நலமாயிருக்குமென்று யூதருக்கு ஆலோசனை சொன்னவன் இந்தக் காய்பாவே.**

**யோவா 18:15. சீமோன்பேதுருவும் வேறொரு சீஷனும் இயேசுவுக்குப் பின்சென்றார்கள். அந்தச் சீஷன் பிரதான ஆசாரியனுக்கு அறிமுகமானவனாயிருந்ததினால், இயேசுவுடனேகூடப் பிரதான ஆசாரியனுடைய அரமனைக்குள் பிரவேசித்தான்.**

**யோவா 18:16. பேதுரு வாசலருகே வெளியே நின்றான். அப்பொழுது பிரதான ஆசாரியனுக்கு அறிமுகமானவனாயிருந்த மற்றச் சீஷன் வெளியே வந்து, வாசல் காக்கிறவர்களுடனே பேசி, பேதுருவை உள்ளே அழைத்துக்கொண்டு போனான்.**

## அதிகாரம் - 18

**யோவா 18:17. அப்பொழுது வாசல்காக்கிற வேலைக்காரி பேதுருவை நோக்கி: நீயும் அந்த மனுஷனுடைய சீஷரில் ஒருவனல்லவா என்றாள். அவன்: நான் அல்ல என்றான்.**

**யோவா 18:18. குளிர்காலமானபடியினாலே ஊழியக்காரரும் சேவகரும் கரிநெருப்புண்டாக்கி, நின்று குளிர்காய்ந்து கொண்டிருந்தார்கள்; அவர்களுடனேகூடப் பேதுருவும் நின்று குளிர்காய்ந்துகொண்டிருந்தான்.**

**யோவா 18:19. பிரதான ஆசாரியன் இயேசுவினிடத்தில் அவருடைய சீஷரைக்குறித்தும் போதகத்தைக்குறித்தும் விசாரித்தான்.**

**யோவா 18:20. இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் வெளியரங்கமாய் உலகத்துடனே பேசினேன்; ஜெபஆலயங்களிலேயும் யூதர்களெல்லாரும் கூடிவருகிற தேவாலயத்திலேயும் எப்பொழுதும் உபதேசித்தேன்; அந்தரங்கத்திலே நான் ஒன்றும் பேசவில்லை.**

**யோவா 18:21. நீர் என்னிடத்தில் விசாரிக்கவேண்டியதென்ன? நான் சொன்னவைகளைக் கேட்டவர்களிடத்தில் விசாரியும்; நான் பேசினவைகளை அவர்கள் அறிந்திருக்கிறார்களே என்றார்.**

**யோவா 18:22. இப்படி அவர் சொன்னபொழுது, சமீபத்தில் நின்ற சேவகரில் ஒருவன்: பிரதான ஆசாரியனுக்கு இப்படியா உத்தரவு சொல்லுகிறது என்று, இயேசுவை ஒரு அறை அறைந்தான்.**

**யோவா 18:23. இயேசு அவனை நோக்கி: நான் தகாதவிதமாய்ப் பேசினதுண்டானால், தகாதது இன்னதென்று ஒப்புவி; நான் தகுதியாய்ப் பேசினேனேயாகில், என்னை ஏன் அடிக்கிறாய் என்றார்.**

**யோவா 18:24. பின்பு அன்னா என்பவன் பிரதான ஆசாரியனாகிய காய்பாவினிடத்திற்கு அவரைக் கட்டுண்டவராக அனுப்பினான்.**

**யோவா 18:25. சீமோன்பேதுரு நின்று குளிர்காய்ந்துகொண்டிருந்தான். அப்பொழுது சிலர் அவனை நோக்கி: நீயும் அவனுடைய சீஷரில் ஒருவனல்லவா என்றார்கள். அவன்: நான் அல்ல என்று மறுதலித்தான்.**

**யோவா 18:26. பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரரில் பேதுரு காதறவெட்டினவனுக்கு இனத்தானாகிய ஒருவன் அவனை நோக்கி: நான் உன்னை அவனுடனேகூடத் தோட்டத்திலே காணவில்லையா என்றான்.**

**யோவா 18:27. அப்பொழுது பேதுரு மறுபடியும் மறுதலித்தான்; உடனே சேவல் கூவிற்று.**

**காய்பா**

**முதல்லவது அவரை அன்னா என்பவனிடத்திற்குக் கொண்டுபோனார்கள்; அவன் அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனாகிய காய்பாவுக்கு மாமனாயிருந்தான் (யோவா 18:13).**

இயேசுகிறிஸ்துவைப் பிடிக்க வந்தவர்கள் அவரைப் பிடித்து, அவரைக் கட்டி, அவரை பிரதான ஆசாரியனுடைய அரமனைக்குக் கொண்டு வருகிறார்கள். இந்த சம்பவம் யோவான் எழுதின சுவிசேஷத்தில் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது. மற்ற சுவிசேஷங்களில் எழுதப்பட்டிராத சில சம்பவங்கள் யோவான் எழுதின சுவிசேஷத்தில் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது. சீமோன் பேதுரு இயேசுகிறிஸ்துவை மறுதலித்த சம்பவம் மற்ற சுவிசேஷங்களில், ஒரு கோர்வையாக, தொடர்ச்சியாக எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் யோவான் எழுதின சுவிசேஷத்திலோ, பேதுரு இயேசுவை மறுதலித்த சம்பவம், சிறிது சிறிதாக, மற்ற வசனங்களுக்கு நடுவில் இணைக்கப்பட்டு எழுதப்பட்டிருக்கிறது.

இயேசுகிறிஸ்துவை முதலாவதாக மார்க்க ரீதியாக விசாரிக்கிறார்கள். யூதமார்க்கத்துத் தலைவர்கள் இயேசுகிறிஸ்துவின்மீது தங்களுடைய மார்க்கத்தின் பிரகாரமாக குற்றம் சுமத்தி விசாரிக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவை மார்க்க ரீதியாக விசாரிப்பதற்கு பிரதான ஆசாரியரும் ஆலோசனைச்சங்கத்தாரும் நியாயாதிபதிகளாக இருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவை முதலாவதாக யூதருடைய பிரதான ஆசாரியரிடத்தில் கொண்டு வந்தபோதிலும், யூதரும் புறஜாதியாரும் சேர்ந்தே அவரைப்பிடித்து, அவரைக் கட்டி, அவரைப் பிரதான ஆசாரியனுடைய அரமனைக்குள் கொண்டு வந்திருக்கிறார்கள். இதன் மூலமாக யூதரும் புறஜாதியாரும் இயேசுகிறிஸ்துவை விசாரித்து அவரைக் குற்றப்படுத்துகிறார்கள் என்பது உறுதியாயிற்று. இயேசுகிறிஸ்துவை யூதரும் புறஜாதியாரும் விசாரித்துக் குற்றப்படுத்திய, இந்த சம்பவம் ஆவிக்குரிய ரீதியாக மிகவும் முக்கியமானதாகும். ஏனெனில் இயேசுகிறிஸ்து யூதருடைய பாவங்களுக்காகவும், புறஜாதியாருடைய பாவங்களுக்காகவும் கல்வாரி சிலுவையிலே தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்தார்.

## அதிகாரம் - 18

இயேசுகிறிஸ்துவைப் பிடிக்க வந்தவர்கள், அவரைப்பிடித்து அவரைக்கட்டி, முதலாவது அவரை அன்னா என்பவனிடத்திற்குக் கொண்டுபோகிறார்கள். இயேசுகிறிஸ்துவோடு நடைபெற்ற யுத்தத்தில் தாங்கள் வெற்றிபெற்றதுபோலவும், இயேசுகிறிஸ்து தோற்றுப்போனதுபோலவும், அவரைப்பிடித்துக் கட்டி, வெற்றிக் களிப்போடும் ஆணவத்தோடும், அவர்கள் இயேசுவை அன்னா என்பவனிடத்திற்குக் கொண்டுபோகிறார்கள். இயேசுகிறிஸ்துவை ஒரு கொடிய குற்றவாளியைப்போல நடத்துகிறார்கள். சிறிதுநேரம்கூட தாமதம்பண்ணாமல், கொடூரமான குற்றவாளியைக் கைதுபண்ணி உடனே அழைத்துச்செல்வதுபோல, இயேசுகிறிஸ்துவைப் பிடித்துக் கட்டியவுடன், அவரை அன்னாவிடத்தில் கொண்டுபோகிறார்கள்.

சாத்தான் நம்மைத் தன்னுடைய பாவஇச்சைகளினால் கட்டி, தன்னுடைய சித்தத்தின் பிரகாரம் நம்மைச் செயல்பட வைப்பதற்கு, நம்மை அடிமைப்படுத்தி கட்டியிழுத்துச்செல்கிறான். சாத்தானுடைய அந்தகார வல்லமையிலிருந்தும், அவனுடைய பாவகட்டுக்களிலிருந்தும், நம்மை விடுதலைபண்ணுவதற்காக, இயேசுகிறிஸ்து தம்மையே கட்டுவதற்கு ஒப்புக்கொடுக்கிறார். சாத்தானின் பிடியிலிருந்து நம்மை விடுதலைபண்ணுவதற்காக, இயேசுகிறிஸ்து சத்துருக்களின் கைகளில் தம்மையே ஒப்புக்கொடுக்கிறார். அவர்களோ அவரைப்பிடித்து, அவரைக்கட்டி, அவரைத் தண்டிப்பதற்காக இழுத்துக்கொண்டு போகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவைப் பிடிப்பதற்கு போர்ச்சேவகரையும், யூதருடைய ஊழியக்காரரையும் அன்னா என்பவன்தான் கட்டளைக்கொடுத்து அனுப்பினான். அவர்கள் அவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, இயேசுவைப்பிடித்து, அவரைக்கட்டி, அவரை அன்னாவினிடத்திற்குக் கொண்டுபோகிறார்கள். இந்த வேளை நடு இரவுவேளையாக இருக்கிறது. பொதுவாக இரவு வேளையில் சேவகர்கள் யாரையாவது பிடித்து வந்தால், அவர்களை விடியும் வரையிலும் தங்களுடைய சிறைச்சாலையில் வைத்திருந்துவிட்டு, விடிந்தபின்பு அவர்களை விசாரிப்பதற்காக அழைத்து வருவது வழக்கம். ஆனால் இயேசுகிறிஸ்துவைப் பொறுத்தவரையில், நலமான எந்த வழக்கமும் பின்பற்றப்படவில்லை.

இயேசுகிறிஸ்துவைத் தோட்டத்தில் இரவுவேளையில் பிடிக்கிறார்கள். அவரைக்கட்டி அதே இரவுவேளையில், அவசரம் அவசரமாக, பிடித்து இழுத்து வருகிறார்கள். நியாயம் விசாரிக்கிறவர்கள் சமாதானத்திற்கு ஏதுவாக தீர்ப்புச்செய்யவேண்டும். சமாதானத்தை உண்டுபண்ணுவதே நியாயாதிபதிகளின் கடமை. ஆனால் இயேசுகிறிஸ்துவை விசாரிக்கிற நியாயாதிபதிகளோ நியாயமில்லாதவர்களாக இருக்கிறார்கள். நியாயப்படி செய்யவேண்டிய எந்தக் காரியத்தையும் அவர்கள் செய்யவில்லை. அநியாயக்காரருடைய கைகளில் அதிகார பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால் தங்களை எதிர்க்காத இயேசுகிறிஸ்துவை எப்படி வேண்டுமானாலும் துன்பப்படுத்தலாம் என்று நினைத்து, அவரைப் பாடாய்ப் படுத்துகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவைப் பிடித்து பிரதான ஆசாரியனுடைய அரமனைக்கு அழைத்துக்கொண்டு வருகிறார்கள். வழியில் அன்னாவின் வீடு இருக்கிறது. ஆகையால் முதலாவது அவரை அன்னா என்பவனிடத்திற்குக் கொண்டுபோகிறார்கள். இயேசுகிறிஸ்துவைப்பிடித்து தாங்கள் வெற்றி பெற்றதை சீக்கிரத்தில் உறுதிப்படுத்த வேண்டும் என்பதற்காகவும், பிரதான ஆசாரியனுடைய பாராட்டுதலைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதற்காகவும், அவர்கள் இயேசுவை அன்னாவிடத்திற்குக் கொண்டுபோகிறார்கள்.

தேவாலயத்தில் பலிசெலுத்துவதற்கு முன்பாக, ஆசாரியன் பலிசெலுத்தப்படும் ஆட்டைச் சோதித்துப் பார்ப்பது வழக்கம். பலி செலுத்தப்படும் ஆடு பழுதற்றது என்பதையும், பலிசெலுத்தப்படுவதற்கு தகுதியானது என்பதையும் ஆசாரியன் உறுதிபண்ணவேண்டும். இயேசுகிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக பலியாகச் செலுத்தப்படுகிறார். அவர் தம்மைப் பலிபீடத்தில் பலியாக ஒப்புக்கொடுப்பதற்கு முன்பாக, அன்னா என்பவன் ஆட்டைச் சோதித்துப் பார்ப்பதுபோல, அவரைச் சோதித்துப்பார்த்து, இயேசுகிறிஸ்துவைப் பலியாகச் செலுத்தலாம் என்று அங்கீகரிக்கிறான். ஆட்டுக்குட்டியானவராகிய இயேசுகிறிஸ்து கட்டப்பட்டவராக அன்னாவுக்கு முன்பு நிறுத்தப்படுகிறார். அன்னா அவரை அங்கீகரித்து, பலிபீடத்தில் அவரை பலியாகச் செலுத்துவதற்கு அனுமதிக்கிறான்.

## அதிகாரம் - 18

இந்த அன்னா அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனாகிய காய்பாவுக்கு மாமனாயிருக்கிறான். பெரிய இடத்தில் சம்பந்தம் வைத்திருக்கிறான். அவர்கள் பெரிய இடமாக இருந்தாலும், துன்மார்க்கராக இருக்கிறார்கள். துன்மார்க்கரோடு சேரும்போது அவர்களுடைய சிந்தனையும் செயல்களும் துன்மார்க்கம் நிறைந்ததாவே இருக்கும். தங்களுடைய துன்மார்க்கக் கிரியைகளை நிறைவேற்றுவதற்கு ஒருவருக்கொருவர் துணையாக நிற்பார்கள். அதுபோலவே இயேசுகிறிஸ்துவைச் சிலுவையில் அறைவதற்கு அன்னாவும் காய்பாவும் துணை நிற்கிறார்கள்.

**காய்பா**

**ஜனங்களுக்காக ஒரே மனுஷன் சாகிறது நன்மையாயிருக்குமென்று யூதருக்கு ஆலோசனை சொன்னவன் இந்தக் காய்பாவே (யோவா 18:14).**

பிரதான ஆசாரியனையும், யூதமார்க்கத்தின் மற்ற தலைவர்களையும் போலவே, அன்னாவும் இயேசுகிறிஸ்துவைப்பிடித்து கொலை செய்யவேண்டுமென்று வெறியோடிருக்கிறான். இயேசுவுக்குச் சீக்கிரமாய் தண்டனை கொடுக்கப்படவேண்டும் என்று விரும்பி, கட்டப்பட்டிருக்கும் இயேசுவைப் பிரதான ஆசாரியனாகிய காய்பாவினிடத்திற்கு அனுப்புகிறான்.

காய்பா இந்த வருஷத்து பிரதான ஆசாரியன். பொதுவாக பிரதான ஆசாரியர்கள், அவர்கள் உயிரோடிருக்கும் நாள்வரையிலும்பிரதான ஆசாரியர்களாகவே இருப்பார்கள். ஆசாரியப்பட்டம் அவர்களுடைய ஜீவயகாலம் முழுவதற்கும் அவர்கள்மீது பிரதிஷ்டை பண்ணப்படும். இதுதான் பழைய ஏற்பாட்டுக்கால ஒழுங்கு. ஆனால் யூதமார்க்கத்தில், காலப்போக்கில் பல மாற்றங்கள் உண்டாயிற்று. பிரதான ஆசாரியப் பட்டத்திற்கு போட்டியும் பொறாமையும் ஏற்பட்டது. மார்க்கத்தலைவர்கள் எல்லோருமே பிரதான ஆசாரியராக வரவேண்டுமென்று ஆசைப்பட்டார்கள். ஆகையினால் ஆசாரியப் பட்டம் ஒவ்வொரு வருஷத்திற்கும் வெவ்வேறு நபர்களுக்குப் பிரதிஷ்டைப்பண்ணப்பட்டது. இந்தப் பிரகாரம் காய்பா இந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனாயிருக்கிறான்.

பதவிகளுக்காக யூதமார்க்கத்துத் தலைவர்கள் தங்களுக்குள் போட்டி போடுகிறார்கள். தங்களைப்போலவே மற்றவர்களையும் நினைப்பதற்குப் பதிலாக, ஒருவருக்கொருவர் பொறாமைப்படுகிறார்கள். சகோதர சிநேகத்தைப் பிறருக்குக் காண்பிக்காமல் கோபத்தோடும், பொறாமையோடும் ஜீவிக்கிறார்கள். ஜனங்கள் தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் ஜீவிக்கும்போது, தேவனோ அவர்களெல்லோரையும் தம்மைவிட்டு விலக்கிவிடுகிறார். காய்பா பிரதான ஆசாரியனாகயிருக்கும் இந்த வருஷத்தில்தானே, தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்து சிலுவையில் அறைப்படுகிறார்.

பிரதான ஆசாரியனுடைய பட்டத்திலிருக்கிறவர்கள் தேவனுக்குப் பயந்து பக்திவிருத்திக்கேதுவான நன்மையான காரியங்களைச் செய்யவேண்டும். தீமையான காரியத்தைப் பிரதான ஆசாரியனுடைய ஆசனத்திலிருந்து நிறைவேற்ற வேண்டுமென்றால், அந்த ஆசனத்தில் துன்மார்க்கன் ஒருவன் அமர்ந்திருக்கவேண்டும். காய்பா பிரதான ஆசாரியனாகயிருந்தாலும், இவன் துன்மார்க்கனாகயிருக்கிறான். இந்த வருஷத்தில் இவன் தனக்கு அழிவு உண்டாகப் பிரதான ஆசாரியனாக நியமிக்கப்பட்டிருக்கிறான். இயேசுகிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்து கொல்லவேண்டும் என்று சதிஆலோசனைபண்ணும் துன்மார்க்கக் கூட்டத்தாருக்கு தலைவனாகயிருக்கிறான்.

ஒருவன் எத்தனை நன்மைசெய்தாலும், ஜனங்கள் அவன் செய்த நன்மைகளை மறந்துவிடுவார்கள். ஆனாலும் அவன் செய்த தீமைகளை ஜனங்கள் ஒருபோதும் மறப்பதில்லை. நன்மை செய்கிறவர்கள் தொடர்ந்து நன்மை செய்துகொண்டேயிருக்கவேண்டும். தீமை செய்தால் நமக்கு அழிவு வரும் . ஆகையினால் தீமையைவிட்டு விலகியிருக்கவேண்டும். நமக்கு அழிவு உண்டாகும் என்பது தெரிந்தும் தீமை செய்வது துணிகரமான பாவம். காய்பா துணிகரமாகப் பாவம் செய்கிறான். இயேசுகிறிஸ்துவைச் சிலுவையில் அறைய ஒப்புக்கொடுத்தால் தனக்கு அழிவும் சாபமும் வரும் என்று தெரிந்திருந்தும், அவன் இயேசுவை சிலுவையில் அறைய ஒப்புக்கொடுக்கிறான். காய்பா தன்னுடைய அழிவைத் தானே தேடிக்கொள்கிறான்.

## அதிகாரம் - 18

காய்பாவின் துன்மார்க்கமான ஆலோசனை இந்த வசனத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன்பு இவன் இயேசுகிறிஸ்துவைப்பற்றி விரோதமாகப் பேசினான். "ஜனங்களுக்காக ஒரே மனுஷன் சாகிறது நலமாயிருக்கும்" என்று இவன் யூதருக்கு ஆலோசனை சொன்னான். இவன் ஏற்கெனவே சொன்ன வார்த்தை இந்த வசனத்தில் மறுபடியும் எழுதப்பட்டிருக்கிறது. இதுவே காய்பாவின் நீதியும் தீர்ப்புமாயிருக்கிறது. நியாயத்தின்படி பேசாமல், தன்னுடைய சுயவிருப்பத்தின்படி பேசுகிறான். அதிகார ஆசனத்திலிருக்கிறவர்கள் கர்த்தருக்குப் பயந்தவர்களாக, வேத வாக்கியத்தின் பிரகாரம் தீர்ப்புச்செய்யவேண்டும். நம்முடைய நீதியும் தீர்ப்பும் தேவனுடைய நீதியாகவும் தீர்ப்பாகவும் இருக்கும் என்று நினைத்து, நம்முடைய மனதிற்குத் தோன்றியதையெல்லாம் தீர்ப்பாக அறிவித்து விடக்கூடாது.

காய்பா இயேசுகிறிஸ்துவை விசாரிக்கும் முன்பாகவே அவருக்குத் தீர்ப்புச் சொல்லிவிடுகிறான். "ஜனங்களுக்காக ஒரே மனுஷன் சாகிறது நலமாயிருக்கும்" என்பது காய்பாவின் தீர்ப்பு. இயேசுகிறிஸ்து இன்னும் விசாரிக்கப்படவே இல்லை. அவர் என்ன குற்றம் செய்தாரென்பது இன்னும் கேட்டு அறியப்படவே இல்லை. அதற்குள் இயேசு மரிக்கவேண்டுமென்று காய்பா பேசுகிறான். நீதியின் ஆசனத்தில் அமர்ந்திருக்கிறவன் அநீதியாக நடந்துகொள்கிறான்.

காய்பா சத்துருவாக இருந்தாலும், அவன் மூலமாகவும் சத்தியம் வெளிப்படுகிறது. இயேசுகிறிஸ்து மனுக்குலத்தின் பாவங்களை மன்னித்து அவர்களை இரட்சிப்பதற்காகத் தம்மையே பலியாக ஒப்புக்கொடுக்கிறார். கல்வாரி சிலுவையில் அவர் நமக்காக மரிக்கிறார். இயேசுகிறிஸ்து மரிக்கவேண்டுமென்பது நீதியாக இல்லையென்றாலும், அவர் தாமாக தம்முடைய ஜீவனையே நமக்காக ஒப்புக்கொடுக்கிறார். இது தேவனுடைய பார்வையில் நீதியாகயிருக்கிறது. காய்பாவுக்குத் தேவனுடைய சித்தம் தெரியவில்லை. அவன் தன் சுயவிருப்பத்தைப் பேசுகிறான். இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சாட்சி காய்பாவின் வாயிலிருந்தும் அறிவிக்கப்படுகிறது.

இயேசுகிறிஸ்துவை ஆக்கினைக்குட் படுத்துவதில் காய்பாவும் முக்கிய பங்கு வகிக்கிறான். இந்தப் பாவத்தில் அவனுக்கும் பங்குண்டு. தேவாலயத்தின் சேவகருக்கும், யூதருடைய ஊழியக்காரருக்கும் பிரதான ஆசாரியனே தலைவனாகயிருக்கிறான். அவனுடைய ஊழியக்காரர் இயேசுகிறிஸ்துவைப்பிடித்துக் கட்டி இழுத்து வந்திருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவை விசாரிக்கும்போது அவருடைய கட்டுக்களை அவிழ்த்துவிடவேண்டும். இயேசுகிறிஸ்துவின் கட்டுக்களை அன்னாவும் அவிழ்த்துவிடவில்லை. காய்பாவும் அவிழ்த்துவிடவில்லை. அவரைக் கட்டப்பட்டவராகவே வைத்திருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவைப் பிரதான ஆசாரியரும் ஆலோசனைச்சங்கத்தாரும் விசாரிக்கவேண்டும். அன்னா அவர்களில் ஒருவனல்ல. இயேசுகிறிஸ்து விசாரிக்கப்படும்போது அன்னா அவர்களோடு கூடயில்லை. ஆனாலும் அவர்களுடைய துன்மார்க்கமான கிரியைகளில் அன்னாவுக்கும் பங்குள்ளது. இயேசுகிறிஸ்துவைப் பிடித்துக் கட்டி முதலாவது அவரை அன்னாவினிடத்தில்தான் கொண்டுவந்தார்கள். போர்ச்சேவகர்களும், யூதருடைய ஊழியக்காரர்களும் இயேசுகிறிஸ்துவைப் பிடித்துக் கட்டி தவறுசெய்திருந்தாலும், அன்னா அந்தத் தவற்றை சரிசெய்து, அவருடைய கட்டுக்களை அவிழ்த்துவிட்டிருக்கவேண்டும். ஆனால் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோ, நாம் கட்டப்படாமல் விடுதலையாயிருக்க வேண்டும் என்பதற்காக, அவரே கட்டப்பட்டவராகயிருக்கிறார்.

### சீமோன் பேதுருவும் வேறொரு சீஷனும்

**சீமோன்பேதுருவும் வேறொரு சீஷனும் இயேசுவுக்குப் பின்சென்றார்கள். அந்தச் சீஷன் பிரதான ஆசாரியனுக்கு அறிமுகமான வனாயிருந்த தினால், இயேசுவுடனேகூடப் பிரதான ஆசாரியனுடைய அரமனைக்குள் பிரவேசித்தான். பேதுரு வாசலருகே வெளியே நின்றான். அப்பொழுது பிரதான ஆசாரியனுக்கு அறிமுகமானவனாயிருந்த மற்றச் சீஷன் வெளியே வந்து, வாசல் காக்கிறவர்களுடனே பேசி, பேதுருவை உள்ளே அழைத்துக்கொண்டு போனான் (யோவா 18:15,16).**

## அதிகாரம் - 18

பிரதான ஆசாரியனாகிய காய்பாவின் அரமனையில், சீமோன் பேதுரு ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை மறுதலிக்க ஆரம்பிக்கிறான். சேவகர்கள் இயேசுகிறிஸ்துவைப் பிரதான ஆசாரியனுடைய அரமனைக்குக் கொண்டுபோகிறார்கள். சீமோன் பேதுருவும், வேறொரு சீஷனும் இயேசுவுக்குப் பின் செல்கிறார்கள். அரமனைக்குள் பிரவேசிக்கிறார்கள். சீமோன் பேதுரு இயேசுவின்மீது அன்பாகவேயிருக்கிறான். இயேசுவின் சத்துருக்கள் அவரைப்பிடித்தபோது, எல்லா சீஷரும் அவரைவிட்டு ஓடிப்போய்விட்டார்கள். பேதுருவும் அவர்களோடு சேர்ந்து இயேசுவைவிட்டு ஓடிப்போய்விடுகிறான். ஆனாலும் இப்போதோ அவன் இயேசுவுக்குப் பின்செல்கிறான்.

சேவகர்கள் இயேசுவைப்பிடித்து கட்டியபோது, மற்ற சீஷர்களோடு சேர்ந்து பேதுருவும் ஓடிப்போகிறான். சிறிது தூரம் போனபின்பு அவனுடைய இருதயத்தில் மனமாற்றம் உண்டாயிற்று. இதுவரையிலும் இயேசுவுக்கு நெருக்கமாக இருந்தவன், இப்போது அவரைத் தூரத்தில் பின்பற்றுகிறான். என்ன வந்தாலும் இயேசுவைப் பின்பற்றப்போவதாக பேதுரு ஏற்கெனவே சொல்லியிருந்தான். தன்னுடைய வார்த்தையின் பிரகாரமாக இப்போது இயேசுவைப் பின்பற்றிப்போகிறான். அவரோடுகூட நெருக்கமாகப் போகவில்லையென்றாலும், சற்று தூரத்தில் அவரைப் பின்பற்றுகிறான்.

இயேசுகிறிஸ்துவின்மீது மெய்யான அன்பு வைத்திருக்கிறவர்கள், அவரோடுகூட எல்லா வழிகளிலும் அவரைப் பின்பற்றிச் செல்வார்கள். எல்லா சூழ்நிலைகளிலும் அவரைப் பின்பற்றுவார்கள். தங்களுக்கு ஆபத்து வரும்போது இயேசுகிறிஸ்துவைவிட்டு விலகிப்போய்விடமாட்டார்கள். அவரை நெருக்கமாகப் பின்பற்றுவார்கள்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சத்துருக்களுக்கு நடுவிலே நிற்கிறார். பேதுருவோ அவரோடு கூட நின்று அவருக்கு உதவிசெய்யவில்லை. அதற்குப் பதிலாக வாசலருகே வெளியே நிற்கிறான். இயேசுகிறிஸ்துவுக்கு அருகில் வரவேண்டும் என்னும் விருப்பம் அவனுக்குள் இருந்தாலும், சூழ்நிலையைப்பார்த்து, பயந்துபோய், இயேசுகிறிஸ்துவைவிட்டு விலகியே இருக்கிறான். ஆனாலும் இயேசுவின்மீதுள்ள அன்பினால், அவரை விட்டு விலகி ஓடிப்போய்விடாமல், அவர் இருக்கும் இடத்தில், வாசலருகே வெளியே நிற்கிறான். வாய்ப்புக் கிடைக்கும்போது ஒருவேளை பேதுரு இயேசுவுக்கு அருகில் போவதுபோலத் தெரிந்தாலும், அவனுடைய உள்ளத்தில் அவரைவிட்டு விலகியே இருக்கவேண்டும் என்னும் தீர்மானமே இருக்கிறது.

கர்த்தருடைய பிள்ளைகளுக்கு இயேசுகிறிஸ்துவோடு கூடயிருப்பதுதான் பாதுகாப்பானது. அவரைவிட்டு விலகியிருப்பது ஒரு கண்ணியைப்போல நமக்கு ஆபத்தாயிருக்கும். பேதுருவுக்குத் தன்னைப்பற்றி தெரிவதைவிட, இயேசுவுக்கு அவனைப்பற்றி நன்றாகத் தெரியும். ஒரு சமயம் சீமோன் பேதுரு இயேசுவை நோக்கி "ஆண்டவரே, நீர் எங்கே போகிறீர்" என்று கேட்டான். அதற்கு இயேசு அவனிடத்தில் "நான் போகிற இடத்திற்கு இப்பொழுது நீ என் பின்னே வரக்கூடாது" என்று கூறினார். பேதுருவின் பலவீனத்தைப்பற்றியும், பலத்தைப்பற்றியும் இயேசுவுக்கு நன்றாகத் தெரியும். ஆகையினால் இயேசு "இப்பொழுது நீ என் பின்னே வரக்கூடாது" என்று சொன்னாலும், "பிற்பாடு என் பின்னே வருவாய்" என்றும் சொன்னார். ஆனால் பேதுருவோ இயேசுவிடம் "ஆண்டவரே, நான் இப்பொழுது உமக்குப் பின்னே ஏன் வரக்கூடாது? உமக்காக என் ஜீவனையும் கொடுப்பேன்" (யோவா 13:36-38) என்று சொன்னான். இயேசுவுக்காக தன் ஜீவனையே கொடுப்பதாகச் சொன்ன பேதுரு, இப்போது தன் ஜீவனுக்குப் பயந்து, இயேசுவைவிட்டு விலகி அவருக்குத் தூரமாக வாசலருகே வெளியே நிற்கிறான்.

பேதுரு தம்மை மறுதலிக்கப்போகிறான் என்பதை இயேசுகிறிஸ்து ஏற்கெனவே அவனிடத்தில் முன்னறிவித்திருக்கிறார். தமக்காகத் தன் ஜீவனையும் கொடுப்பதாகச் சொன்ன பேதுருவிடம் "எனக்காக உன் ஜீவனைக் கொடுப்பாயோ? சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய்" என்று இயேசுகிறிஸ்து கூறினார் (யோவா 13:38). தம்மைப் பேதுரு மறுதலிக்கப்போகிறான் என்பதை இயேசுகிறிஸ்து அவனுக்கு வெளிப்படுத்தியபோதிலும், கிறிஸ்துவின் வார்த்தையை அவன் புரிந்துகொள்ளவில்லை. தன்னுடைய சுயபலத்தையும், சுயபக்தியையும் நம்பினான். இப்போதோ பேதுரு தன்னுடைய பலவீனத்தைப் புரிந்துகொண்டவனாக, பிரதான ஆசாரியனுடைய அரமனையின் வாசலருகே வெளியே நிற்கிறான்.

## அதிகாரம் - 18

சீமோன் பேதுருவுக்குப் பிரச்சனை வந்தபோது, வேறொரு சீஷன் அவனுக்கு உதவி செய்கிறான். இந்த சீஷனுடைய பெயர் சுவிசேஷத்தில் குறிப்பிடப்படவில்லை. ஆயினும் இந்த சுவிசேஷத்தை எழுதிய யோவான், தன்னைப்பற்றி குறிப்பிடும்போது, "வேறொரு சீஷன்" என்று குறிப்பிடுகிறார். ஆகையினால் இந்த வசனத்தில் "வேறொரு சீஷன்" என்று குறிப்பிடப்பட்டிருப்பது யோவானைக் குறிக்கலாம் என்று வேதபண்டிதர்கள் கூறுகிறார்கள்.

ஒருவேளை இயேசுகிறிஸ்துவின் பதினொரு சீஷர்கள் தவிர, அவருக்குச் சீஷர்களாகயிருந்த வேறு எழுபது பேரில், யாராவது ஒருவர் இங்கு குறிப்பிடப்பட்டிருக்கலாம். இயேசுகிறிஸ்துவுக்கு இந்த மந்தையிலில்லாத வேறே ஆடுகளும் உண்டு. வேறொரு சீஷன் என்பது அந்த ஆடுகளில் ஒன்றாக இருக்கலாம்.

ஒரு சிலர் இயேசுவின் சீஷரைப்போலத் தங்களைக் காண்பித்துக்கொள்வார்கள். ஆனால் அவர்கள் உண்மையில் இயேசுவின் சீஷராக இருக்கமாட்டார்கள். வேறு சிலர் தங்களை இயேசுவின் சீஷராக காண்பித்துக்கொள்ளமாட்டார்கள். ஆனால் அவர்கள் மெய்யாகவே இயேசுவின் சீஷராக இருப்பார்கள். ராஜாக்களின் அரமனையில்கூட இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் உலகத்தாருக்கு விளம்பரமில்லாமல் தங்களை மறைத்துக்கொண்டிருக்கிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகளில் அநேகர் விளம்பரமில்லாமல் உலகத்து ஜனங்கள் மத்தியில், கூட்டத்தோடு கூட்டமாக மறைவாயிருக்கிறார்கள்.

இந்த வசனத்தில் "வேறொரு சீஷன்" என்று கூறப்பட்டிருப்பது, இயேசுவை நேசிக்கிற, யாரோ ஒரு விளம்பரமில்லாத விசுவாசியாக இருக்கலாம். இந்தச் சீஷன் பேதுருவினிடத்தில் அன்பும் மரியாதையும் வைத்திருக்கிறான். பேதுருவுக்கு தன்னுடைய அன்பை வெளிப்படுத்தவேண்டுமென்று விரும்புகிறான். அதே வேளையில் இயேசுகிறிஸ்துவுக்கும் ஊழியம் செய்ய விரும்புகிறான். இயேசுகிறிஸ்து பாடுகளை அனுபவிக்கும்போது பேதுரு அவரோடு கூடயிருந்தால் நன்றாக இருக்குமென்று நினைத்து, பேதுருவைப் பிரதான ஆசாரியனுடைய அரமனைக்குள் எப்படியாவது அழைத்துச்சென்று, இயேசுவிடம் ஒப்படைத்துவிடவேண்டுமென்று இந்த "வேறொரு சீஷன்" பேதுருவுக்கு உதவி செய்கிறான்.

ஆனால் இந்த "வேறொரு சீஷன்" பேதுருவுக்கு செய்த காரியம், உபகாரமாகயிருப்பதற்குப் பதிலாக அவனுக்கு உபத்திரவமாயிற்று. பிரதான ஆசாரியனுடைய அரமனைக்குள் பேதுரு அழைத்து வரப்பட்டதினால், அவன் சோதனைக்குட்படுத்தப்படுகிறான். இதன் விளைவாக அவன் தன் ஆண்டவரையே மறுதலித்துவிடுகிறான்.

### சீஷரில் ஒருவனல்லவா

**அப்பொழுது வாசல்காக்கிற வேலைக்காரி பேதுருவை நோக்கி: நீயும் அந்த மனுஷனுடைய சீஷரில் ஒருவனல்லவா என்றாள். அவன்: நான் அல்ல என்றான் (யோவா 18:17).**

பேதுரு பிரதான ஆசாரியனுடைய அரமனைக்குள் பிரவேசித்த உடனேயே அவனுக்கு ஒரு சோதனை வருகிறது. வாசல்காக்கிற வேலைக்காரி மூலமாய் இந்தச் சோதனை வந்திருக்கிறது. யூதமார்க்கத்தில் இவளுக்கு உயர்ந்த பதவியோ, அதிகாரமோயில்லை சாதாரணமாக வாசல்காக்கிற வேலைக்காரிதான். ஆனாலும் இவள்கூட பேதுருவுக்கு எதிர்த்து நின்று, அவனைக் கேள்விகேட்டு, அவனைச் சோதனைக்குட்படுத்துகிறாள். மிகவும் சாதாரணமாக இந்த வேலைக்காரி பேதுருவை நோக்கி "நீயும் அந்த மனுஷனுடைய சீஷரில் ஒருவனல்லவா" என்று கேட்கிறாள்.

பேதுரு ஏற்கெனவே மல்குஸ் என்பவனுடைய வலது காதற வெட்டியிருக்கிறான். ஒருவேளை அந்த மல்குஸ் வந்து பேதுருவிடம் பேசினால், பேதுருவுக்குப் பயம் வந்திருக்கும். "நீ தான் என் காதை வெட்டினாய், அதற்குப் பழிக்குப் பழியாக நான் உன் தலையை வெட்டப்போகிறேன்" என்று மல்குஸ் சொல்லியிருந்தால், அது பேதுருவுக்கு மெய்யாகவே பெரிய சோதனையாக இருந்திருக்கும். ஆனால் இங்கு மல்குஸ் வரவில்லை. வாசல்காக்கிற வேலைக்காரி தான் வந்து பேதுருவைக் கேள்விகேட்கிறாள்.

## அதிகாரம் - 18

வேலைக்காரி பேதுருவினிடத்தில் கேள்விகேட்டவுடன் அவனுக்குப் பயமும் பதட்டமும் உண்டாயிற்று. இயேசுவை உடனடியாக மறுதலித்துவிடுகிறான். அவள் என்ன கேட்கிறாள், அவளுக்கு எப்படி பதில் சொல்லவேண்டும் என்பதையெல்லாம் சிறிதும் சிந்தித்துப் பார்க்காமல், அவனுடைய வாயிலிருந்து வார்த்தைகள் சரளமாகப் புறப்பட்டு வருகிறது. "நான் அல்ல" என்று பேதுரு பதில் சொல்லுகிறான். தன்னுடைய சொந்தப் பாதுகாப்பில் பேதுரு கவனம் செலுத்துகிறான். இயேசுகிறிஸ்துவை மறுதலித்தால் தனக்கு பாதுகாப்பு உண்டு என்று நினைக்கிறான். இது ஒருவேளை தற்காலிகமான பாதுகாப்பாக இருக்கலாம். ஆனால் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு, அவருடைய சமுகத்திலிருப்பதுதான் மெய்யான பாதுகாப்பு.

**குளிர்காய்ந்துகொண்டிருந்தான்**

**குளிர்காலமான படியினாலே ஊழியக்காரரும் சேவகரும் கரிநெருப்புண்டாக்கி, நின்று குளிர்காய்ந்து கொண்டிருந்தார்கள்; அவர்களுடனனே கூடப் பேதுருவும் நின்று குளிர்காய்ந்துகொண்டிருந்தான் (யோவா 18:18).**

வாசல்காக்கிற வேலைக்காரி மூலமாக பேதுருவுக்குச் சோதனை உண்டாயிற்று. உடனே பேதுரு இயேசுகிறிஸ்துவை மறுதலித்துவிடுகிறான். ஆனால் அவனுடைய மனச்சாட்சியோ இன்னும் குணப்படாமலிருக்கிறது. சோதனையைவிட்டு விலகிச் செல்வதற்குப் பதிலாக, இன்னும் அதிக சோதனைக்கு நேராக பேதுரு கடந்து செல்கிறான். பிரதான ஆசாரியருடைய ஊழியக்காரரும் சேவகரும் குளிர்காய்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடனேகூட பேதுருவும் நின்று குளிர்காய்ந்து கொண்டிருக்கிறான்.

பிரதான ஆசாரியரின் ஊழியக்காரர் இயேசுகிறிஸ்துவை ஆசாரியனுடைய அரமனைக்கு இரவுவேளையில் கூட்டிக்கொண்டு வருகிறார்கள். இது குளிர்காலம். இரவில் குளிர் அதிகமாகயிருக்கிறது. தாங்கள் குளிர்காயவேண்டுமென்பதற்காக அரமனை முத்தத்திலே கரி நெருப்புண்டாக்கி, அதைச் சுற்றிலுமாக நின்று குளிர்காய்ந்துகொண்டிருக்கிறார்கள். இவர்கள் தங்களுடைய பாடுகளைத்தான் பார்க்கிறார்கள். தாங்கள் அழைத்துக்கொண்டு வந்திருக்கும் இயேசுகிறிஸ்துவின்மீது இவர்களுக்குச் சிறிதும் அக்கரையில்லை. கரி நெருப்பு உண்டாக்குவதும், அதைச் சுற்றிலும் நின்று குளிர்காய்ந்துகொண்டிருப்பதும் மாத்திரமே இவர்களுக்கு அவசியமான தேவையாயிற்று.

இயேசுகிறிஸ்துவின் சீஷனாகிய பேதுருகூட இயேசுகிறிஸ்துவினிடத்தில் அக்கரையோடில்லை. அவனும் அவர்களுடனேகூட நின்று குளிர்காய்ந்து கொண்டிருக்கிறான். இயேசுகிறிஸ்து பிரதான ஆசாரியனுடைய அரமனையில் கைகள் கட்டப்பட்டவராக, பாடுகளை அனுபவித்துக்கொண்டு நிற்கும்போது, பேதுரு அவருக்கு ஆறுதலாக உதவிபுரியவேண்டும். இயேசுகிறிஸ்து இருக்குமிடத்தில் பேதுருவும் அவருக்குச் சாட்சியாக நிற்கவேண்டும். மற்றவர்கள் மத்தியில் பேதுரு தன்னுடைய சாட்சியை வெளிப்படுத்தவில்லை யென்றாலும், இயேசுவுக்கு முன்பாக நின்று தன்னுடைய சாட்சியை அவருக்குக் காண்பித்திருக்கவேண்டும். ஆனால் பேதுருவோ இயேசுவின் பக்கத்தில்கூட போகாமல், அவரைவிட்டு விலகியே இருந்து, அவருடைய சத்துருக்களுக்கு அருகாமையில் நிற்கிறான்.

இயேசுகிறிஸ்து நமக்காகப் பாடுகளையும் துன்பங்களையும் அனுபவிக்கிறார். நமக்காகவே எல்லா வேதனைகளையும் சகித்துக்கொள்கிறார். ஆனால் பேதுருவின் மனச்சாட்சி இதைப்பற்றி சிந்தித்துப்பார்க்கவில்லை. இயேசுகிறிஸ்துவுக்கு என்ன ஆயிற்றோ என்னும் வருத்தத்தில் பேதுரு அரமனைக்கு வந்ததாகத் தெரியவில்லை. இயேசுவின்மீது பேதுருவுக்கு அக்கரையிருந்திருக்குமானால், அவன் இயேசுவுக்கு அருகிலேயே இருந்திருப்பான். ஆனால் பேதுருவோ துன்மார்க்கரோடுகூட நிற்கிறான். இயேசுகிறிஸ்துவின் சத்துருக்களோடு நின்று, அவர்களோடுகூட இவனும் குளிர்காய்ந்துகொண்டிருக்கிறான்.

## அதிகாரம் - 18

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திலும் நாம் யாருடன் கூடயிருக்கிறோம் என்பதைக்குறித்து எச்சரிக்கையோடிருக்க வேண்டும். சில சமயங்களில் சிறிய காரியங்கள்கூட நம்மைத் துன்மார்க்கருடைய கூட்டத்திற்குள் சேர்த்துவிடும். பேதுரு கரிய நெருப்பின் உஷ்ணத்தை விரும்பினான். இதற்காக அவன் துன்மார்க்கருடைய கூட்டத்தாரோடு சேர்ந்துகொள்கிறான். நெருப்பின் உஷ்ணத்தின் மீதுள்ள அன்பு, இயேசுகிறிஸ்துவின் மீதுள்ள அன்பைத் தணித்துப்போடுகிறது.

இயேசுகிறிஸ்துவின்மீது பேதுரு வைத்திருக்கும் பக்திவைராக்கியம் உறைந்துபோய்விடவில்லை. சிறிது நேரத்திற்கு முன்புகூட, பேதுரு தன் ஆண்டவருக்காகப் பக்தி வைராக்கியம் காண்பித்து, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனின் வலது காதற வெட்டிப்போட்டான். ஆனால் அந்தப் பக்தி வைராக்கியமெல்லாம் இப்போது பேதுருவினிடத்திலில்லை. இவனுடைய பக்தியும் குளிர்ந்துபோயிற்று. இவனும் குளிர்ந்துபோனான். ஆகையினால் பேதுருவுக்கு குளிர்காய வேண்டிய அவசியமுண்டாயிற்று.

பேதுரு இயேசுகிறிஸ்துவின் சீஷர்களில் ஒருவனாக இருந்தாலும், அவனும் ஒரு சில தவறுகளைச் செய்கிறான். துன்மார்க்கரோடு பேதுரு கூட்டுச் சேருவது மிகப்பெரிய தவறு. இந்தக் கூட்டத்தார் இயேசுகிறிஸ்துவைப் பரியாசம்பண்ணுகிறார்கள். கர்த்தரைப் பரியாசம்பண்ணுகிறவர்களோடு நாமும் கூட்டுச் சேர்ந்தால், நம்முடைய நிலமை பரிதாபமாகயிருக்கும். நாம் நியாயத்தில் சந்தோஷப்படாமல், அநியாயத்தில் சந்தோஷப்பட வேண்டியதாயிருக்கும்.

ஒருவேளை சோதனைகளைச் சந்திக்க முடியாதபடி பேதுரு இன்னும் பலவீனமாகயிருக்கலாம். அதனால் இயேசுவுக்கு நெருக்கமாயிராமல் தூரமாக இருக்கவேண்டுமென்று முடிவு செய்திருக்கலாம்.

இயேசு கிறிஸ்துவோடு கூடயில்லையென்றால், துன்மார்க்கரோடு கூடயிருக்கவேண்டும் என்னும் அவசியம் ஏதுவுமில்லை. பிரதான ஆசாரியனுடைய அரமனையின் ஓர் ஓரத்தில் போய், ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் பாடுகளினிமித்தமாக அழுது ஜெபம்பண்ணலாம். இயேசுகிறிஸ்துவை மறுதலித்த தன் பாவத்திற்காக மனந்திரும்பி அழுது ஜெபிக்கலாம். தன்னுடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்குப் பிரயோஜனமுள்ள காரியங்களைச் செய்வதற்குப் பதிலாக, பேதுரு தன்னுடைய ஆத்துமாவைக் கெடுத்துப்போடுவதற்கு ஏதுவான காரியங்களைச் செய்கிறான்.

இயேசுகிறிஸ்துவின் சீஷர்களில் ஒருவனாகிய பேதுரு, இப்போது அவருடைய சத்துருக்களின் கூட்டத்தாரோடு சேர்ந்து, அவர்களில் ஒருவனைப்போலிருக்கிறான். தங்களுடைய பாவத்தினால் ஒரு சிலர், நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தையே அழித்துப்போடுவார்கள். அப்படிப்பட்டவர்களோடு சகவாசம் வைத்து நம்முடைய ஆத்துமாவை அழித்துப்போடாதபடி எச்சரிக்கையாயிருக்கவேண்டும். குளிர்காய்வதற்காக அவர்களோடு கூட்டுச் சேர்ந்தால், நாம் குளிர்காய்வதற்குப் பதிலாக, நித்திய நரக அக்கினியில் அவிக்கப்படுவோம்.

### பிரதான ஆசாரியன்

**பிரதான ஆசாரியன் இயேசுவினிடத்தில் அவருடைய சீஷரைக்குறித்தும் போதகத்தைக்குறித்தும் விசாரித்தான் (யோவா 18:19).**

இயேசுகிறிஸ்துவின் சிநேகிதனாகிய பேதுரு அவரை மறுதலிக்க ஆரம்பிக்கிறான். கிறிஸ்துவின் சத்துருவாகிய பிரதான ஆசாரியன் அவரைக் குற்றப்படுத்த ஆரம்பிக்கிறான். யூதமார்க்கத்துத் தலைவர்கள் இயேசுகிறிஸ்துவின்மீது பலவிதமான குற்றச்சாட்டுக்களைக் கூறுகிறார்கள். அவர் தவறான உபதேசங்களைப் போதிக்கிறவர் என்பதே அவர்மீது கூறப்படும் பிரதான குற்றச்சாட்டாகும். ஆனால் இந்தக் குற்றச்சாட்டை அவர்களால் நிரூபிக்க முடியவில்லை. தங்கள் முயற்சியில் தோல்வியடைந்ததினால், அவர்கள் இயேசுவின்மீது குற்றம்சுமத்த வேறு உபாயத்தைத் தேடுகிறார்கள். இயேசுகிறிஸ்து தேவதூஷணம் சொல்லுவதாக அவரைக் குற்றப்படுத்துகிறார்கள். மற்ற சுவிசேஷங்களிலும் இந்தச் சம்பவம் எழுதப்பட்டிருக்கிறது.

## அதிகாரம் - 18

பிரதான ஆசாரியன் இயேசுவினிடத்தில் அவருடைய சீஷரைக்குறித்தும், போதகத்தைக் குறித்தும் விசாரிக்கிறான். இயேசுகிறிஸ்து விசாரிக்கப்படும் விசாரணையே முறையற்று நடைபெறுகிறது. யூதருடைய சட்டதிட்டங்களுக்கு விரோதமாகவே இயேசுகிறிஸ்து விசாரிக்கப்படுகிறார். இயேசுகிறிஸ்துவைப் பிடித்துக் கட்டியிருக்கிறார்கள். ஆனால் அதற்கான காரணம் என்ன என்பது அவரைக் கட்டியவர்களுக்கே தெரியவில்லை. என்ன குற்றத்திற்காக அவரைக் கட்டியிருக்கிறோம் என்பது தெரியாமல், கட்டப்பட்டிருக்கும் இயேசுகிறிஸ்துவிடமே, அவர் செய்த குற்றத்தைப்பற்றி, அவரிடத்தில் விசாரிக்கிறார்கள். இயேசுவின்மீது குற்றம் நிரூபிக்கப்படவேண்டுமென்றால், இப்போது அவர் தம்மீதே குற்றம் சுமத்திக்கொள்ளவேண்டும். ஏனெனில் பிரதான ஆசாரியருக்கு இயேசுகிறிஸ்துவின்மீது குற்றம் சுமத்த ஒரு குற்றமும் இல்லை.

பிரதான ஆசாரியனால் இயேசுகிறிஸ்துவின்மீது குற்றம் கண்டுபிடிக்கமுடியவில்லை. ஆகையினால் அவருடைய வாழ்க்கையிலும், அவருடைய சிநேகிதரிடத்திலும் ஏதாவது குற்றம் கண்டுபிடிக்கமுடியுமா என்று எதிர்பார்க்கிறான். கிறிஸ்துவின் சீஷரைக் குறித்து விசாரிக்கிறான். கிறிஸ்துவின் சீஷர்கள் யாரும் எப்போதும் அவரோடு கூடயில்லை என்று பரியாசம்பண்ணுகிறான். கிறிஸ்துவின் சீஷர்கள் கோழைகள் என்றும், அவர்கள் இயேசுவோடு கூடயிருப்பதற்குப் பயப்படுகிறார்கள் என்றும் பரியாசம்பண்ணுகிறான். பிரதான ஆசாரியன் தம்முடைய சீஷர்களைப்பற்றி பரியாசம்பண்ணுவது இயேசுகிறிஸ்துவின் வேதனையை அதிகரித்திருக்கும்.

இயேசுகிறிஸ்துவின் சீஷரைக்குறித்து விசாரிக்கிறவன், அவருடைய போதகத்தைக் குறித்தும் விசாரிக்கிறான். இயேசுகிறிஸ்து தேவதூஷணம் சொல்லுகிறாரென்றும், யூதருடைய சத்தியத்திற்கு விரோதமாகப் போதகம்பண்ணுகிறாரென்றும் அவர்மீது குற்றம் சுமத்த முயற்சிபண்ணுகிறான்.

இயேசுகிறிஸ்து செய்த அற்புதங்களைப்பற்றி பிரதான ஆசாரியன் ஒன்றும் பேசவில்லை. அவர் செல்லுமிடங்களிலெல்லாம் நன்மை செய்கிறவராகவே சுற்றி அலைந்தார். அற்புங்களையும், அதிசயங்களையும் பற்றிப் பேசினால் இயேசுகிறிஸ்துவைக் குற்றப்படுத்த முடியாது. ஆகையினால் பிரதான ஆசாரியன் இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமான காரியங்களைப்பற்றி மாத்திரமே அவரிடத்தில் பேசுகிறான்.

**வெளியரங்கமாய்**

**இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் வெளியரங்கமாய் உலகத்துடனே பேசினேன்; ஜெப ஆலயங்களிலேயும் யூதர்களெல்லாரும் கூடிவருகிற தேவாலயத்திலேயும் எப்பொழுதும் உபதேசித்தேன்; அந்தரங்கத்திலே நான் ஒன்றும் பேசவில்லை (யோவா 18:20).**

பிரதான ஆசாரியனுடைய கேள்விகளுக்கு இயேசுகிறிஸ்து பொறுமையோடு பதில் சொல்லுகிறார். தம்முடைய சீஷரைக்குறித்து அவன் கேட்ட கேள்விக்கு இயேசுகிறிஸ்து ஒரு பதிலும் சொல்லவில்லை. தம்முடைய சீஷரைப்பற்றி கேட்பது, தேவையற்ற கேள்வியென்று இயேசுகிறிஸ்து தீர்மானம்பண்ணிவிடுகிறார். தம்மைப் பிடிக்க வந்தவர்களிடம், "அவர்களைப் போகவிடுங்கள்" என்று இயேசுகிறிஸ்து கூறினார். அவர் தம்முடைய சீஷரிடத்தில் அன்புடனும் கரிசனையுடனும் இருக்கிறார். அவர்களுக்கு ஒரு தீங்கும், பாடுகளும், வேதனைகளும் இப்போது வரக்கூடாது என்பது இயேசுகிறிஸ்துவின் சித்தமாயிருக்கிறது.

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் அவருடைய உபதேசத்தைக் கேட்டு, அவர் தங்களுக்குச் சொன்ன வசனத்தை மாத்திரமே ஜனங்களுக்குப் போதித்தார்கள். இயேசுகிறிஸ்து அற்புங்களை நடப்பிக்கும்போது சீஷர்கள் கூடயிருந்தார்கள். பிரதான ஆசாரியனாகிய காய்பா இயேசுகிறிஸ்துவின் சீஷர்களையும் கண்ணியில் சிக்க வைக்க முயற்சிபண்ணுகிறான். ஆனால் "அவர்களைப் போகவிடுங்கள்" என்பதே இயேசுகிறிஸ்துவின் பதிலாக இருக்கிறது.

## அதிகாரம் - 18

கிறிஸ்துவின் சீஷர்கள் கோழைகளென்று காய்பா குற்றம் சொல்லியிருக்கலாம். ஆனால் இயேசுகிறிஸ்துவோ தம்முடைய சீஷர்களைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. அவர்களைக் குற்றப்படுத்தவுமில்லை. அவர்களை நியாயப்படுத்தவுமில்லை. தம்முடைய உபதேசத்தைப்பற்றி இயேசுகிறிஸ்து கூறும்போது, பிரதான ஆசாரியனிடம் அதைப்பற்றி விசேஷமாக எதையும் கூறவில்லை. தம்முடைய உபதேசத்தைக்கேட்ட ஜனங்களைப்பற்றி மாத்திரமே இயேசுகிறிஸ்து பொதுவாகக் கூறுகிறார்.

**நீர் என்னிடத்தில் விசாரிக்க வேண்டியதென்ன**

**நீர் என்னிடத்தில் விசாரிக்கவேண்டியதென்ன? நான் சொன்னவைகளைக் கேட்டவர்களிடத்தில் விசாரியும்; நான் பேசினவைகளை அவர்கள் அறிந்திருக்கிறார்களே என்றார் (யோவா 18:21).**

இயேசுகிறிஸ்து பிரதான ஆசாரியனிடத்தில் மிகவும் ஞானத்தோடு பேசுகிறார். இயேசுகிறிஸ்துவை அவன் யூதருடைய சட்டத்திற்குப் புறம்பாக விசாரித்துக்கொண்டிருக்கிறான். "நீர் என்னிடத்தில் விசாரிக்க வேண்டியதென்ன" என்று கூறி, பிரதான ஆசாரியனுக்கு தம்மிடத்தில் விசாரிக்க அதிகாரம் எதுவுமில்லை என்பதை இயேசுகிறிஸ்து வெளிப்படுத்துகிறார். இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைக் குறித்து பிரதான ஆசாரியன் ஏற்கெனவே குற்றம் கூறியிருக்கிறான். அப்படியிருக்கும்போது, அவருடைய உபதேசத்தைக் குறித்து அவன் அவர்களிடத்தில் கேட்க வேண்டிய அவசியம் எதுவுமில்லை.

இயேசுவைக் கிறிஸ்து என்று எவனாவது அறிக்கைபண்ணினால் அவனை ஜெபாலயத்திற்குப் புறம்பாக்க வேண்டுமென்று யூதர்கள் ஏற்கெனவே கட்டுப்பாடு செய்திருக்கிறார்கள் (யோவா 9:22). ஏற்கெனவே தீர்மானித்து கட்டுப்பாடு செய்திருக்கும் விஷயத்தைப்பற்றி மறுபடியும் விசாரிக்க வேண்டிய அவசியமில்லை. தீர்ப்பு வழங்கிய பின்பு விசாரணை தேவையில்லை. விசாரித்த பின்புதான் தீர்ப்பு வழங்குவது வழக்கம். ஆனால் பிரதான ஆசாரியனுடைய அரமனையில் எல்லாமே முறையில்லாமல் தாறுமாறாக நடைபெறுகிறது.

பிரதான ஆசாரியன் இயேசுகிறிஸ்துவின் போதகத்தைக் குறித்து விசாரிக்கிறான். ஆனால் இயேசுவோ "நீர் என்னிடத்தில் விசாரிக்க வேண்டியதென்ன" என்று கூறுகிறார். இயேசுகிறிஸ்து தம்மைத்தாமே குற்றப்படுத்த விரும்பவில்லை. தம்மை அனுப்பினவர் இன்னாரென்பதையும், தாம் செய்கிற ஊழியம் எப்படிப்பட்டது என்பதையும் பற்றி இயேசுகிறிஸ்து தெளிவோடிருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் ஊழியம் உன்னதமான ஊழியம். தம்மைக் குற்றப்படுத்துவது, தம்மை அனுப்பின பிதாவைக் குற்றப்படுத்துவதற்கு சமமமானது என்று இயேசுகிறிஸ்து கருதுகிறார். ஆகையினால் அவர் ஒருபோதும் தம்மைக் குற்றப்படுத்தமாட்டார்.

இயேசுகிறிஸ்து உபதேசம்பண்ணும்போது அந்தரங்கத்தில் ஒன்றும் பேசவில்லை. ஜெபாலயங்களிலேயும், யூதர்களெல்லாரும் கூடிவருகிற தேவாலயத்திலேயும் அவர் உபதேசம்பண்ணினார். அவர் மறைவாக எதையும் செய்யவில்லை. அவருடைய பிரசங்கமும், உபதேசமும், போதனையும் வெளிப்படையாகவே கொடுக்கப்பட்டது. இயேசுகிறிஸ்துவின் உபதேச வார்த்தைகள் தெளிவானவை. எளிதில் புரிந்துகொள்ளக்கூடியவை. சத்தியத்தைப் பூரணமாக விளக்கும் வார்த்தைகளையே இயேசுகிறிஸ்து உபதேசம்பண்ணினார்.

இயேசுகிறிஸ்து ஒவ்வொரு முறை உபதேசம்பண்ணும்போதும், "மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்னும் வாக்கியத்தைப் பயன்படுத்தி தம்முடைய உபதேசத்தை உறுதிபண்ணுகிறார். முதலாவதாகத் தம்முடைய உபதேசம் எப்படிப்பட்டது என்பதை இயேசுகிறிஸ்து விளக்கிச் சொல்லிவிட்டு, அதன்பின்பு தம்முடைய உபதேசத்தைக் கேட்பவர்களைப்பற்றி பொதுவாகச் சொல்லுகிறார். இயேசுகிறிஸ்து உலகத்துடனே பேசினார். காதுள்ளவர்கள் எல்லோரும் கேட்கக்கடவர்கள் என்பதுதான் இயேசுகிறிஸ்துவின் விருப்பம். சமுதாயத்தில் அவர்கள் உயர்ந்தவர்களாக இருந்தாலும், தாழ்ந்தவர்களாக இருந்தாலும், படித்தவர்களாக இருந்தாலும், படிக்காதவர்களாக இருந்தாலும், யூதர்களாக இருந்தாலும், புறஜாதியாராக இருந்தாலும், நண்பர்களாக இருந்தாலும் சத்துருக்களாக இருந்தாலும் இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைக் காதுள்ளவர்கள் எல்லோருமே கேட்கலாம்.

## அதிகாரம் - 18

இயேசுகிறிஸ்து தம்முடைய பிரசங்கத்தைப்பற்றியும், பிரசங்கத்தைக் கேட்பவர்களைப்பற்றியும் சொல்லிவிட்டு, அதன்பின்பு தாம் பிரசங்கம்பண்ணிய ஸ்தலங்களைப்பற்றிக் குறிப்பிடுகிறார். அவர் கிராமங்களிலிருக்கும்போது ஜெபாலயங்களில் பிரசங்கம்பண்ணுவது வழக்கம். அவர் எருசலேமுக்கு வருகிறபோதோ தேவாலயத்தில் உபதேசம்பண்ணுவது வழக்கம். பல சமயங்களில் அவர் ஜனங்களுடைய வீடுகளிலும், மலைகளிலும், கடற்கரை ஓரங்களிலும் பிரசங்கம்பண்ணியிருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் பிரசங்கம் ஒருபோதும் மாறுவதில்லை. அவர் வாக்குமாறாதவர். தனி இடங்களில் பிரசங்கம்பண்ணுவதுபோலவே அவர் பொது இடங்களிலும் பிரசங்கம்பண்ணுவார். திரளான ஜனங்கள் மத்தியில் பிரசங்கம் செய்தாலும், இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள் அதைக் கேட்கிறவர்களெல்லோருக்குமே பிரயோஜனமுள்ளதாக இருக்கும். இயேசுவின் பிரசங்கத்தைக் கேட்கிறவர்கள் கொஞ்சம் பேராகயிருந்தாலும், அநேகம் பேராகயிருந்தாலும் அவர்களெல்லோமே அவருடைய வார்த்தையினால் ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

தம்முடைய பிரசங்கத்தைப்பற்றி ஒவ்வொன்றாகச் சொல்லிவிட்டு, இயேசுகிறிஸ்து தம்முடைய உபதேசத்தைப்பற்றியும் சொல்லுகிறார். அவர் உலகத்துடனே வெளியரங்கமாய்ப் பேசினார். அந்தரங்கத்திலே அவர் ஒன்றும் பேசவில்லை. ஒளிப்பிடங்களில் அவர் சத்தியத்தை அறிவிக்கவில்லை. இயேசுகிறிஸ்துவின் பிரசங்கமும், அற்புதங்களும் ஏதோ ஒரு மூலையில் நடைபெற்ற சம்பவமல்ல. அவர் யாருக்கும் பயப்படவில்லை. சத்தியத்தைப் பிரசங்கம்பண்ண அவர் வெட்கப்படவில்லை. இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு இருளிலே சொல்லுகிறதை அவர்கள் வெளிச்சத்திலே சொல்லவேண்டும் (மத் 10:27).

பிரதான ஆசாரியனுடைய கேள்விக்கு இயேசுகிறிஸ்து நேரடியாகப் பதில்சொல்லாமல், தாம் சொன்னவைகளைக் கேட்டவர்களிடத்தில் விசாரிக்குமாறு கூறுகிறார். இயேசுகிறிஸ்துவின் சீஷர்களிடத்தில் அவரைப்பற்றிக் கேட்டால் அவரை நல்லவரென்றுதான் சொல்லுவார்கள். இயேசுகிறிஸ்து பிரதான ஆசாரியனிடம், தம்மைப்பற்றி தம்முடைய சிநேகிதரிடத்திலோ, சீஷரிடத்திலோ கேட்குமாறு கூறவில்லை. பொதுநிலை வகிக்கிறவர்களிடம் கேட்குமாறு கூறுகிறார். அவர்கள் பாரபட்சமில்லாமல், பட்சபாதம் காண்பிக்காமல் நியாயமாய் தீர்ப்புச் செய்வார்கள். கிறிஸ்துவின் சுவிசேஷம் அதை ஏற்றுக்கொண்டோர் உள்ளத்தில் கிரியை செய்கிறது. சுவிசேஷத்தைப் பெற்றிருக்கிறவர்கள் அதற்கு சாட்சி கூறுகிறார்கள்.

### இயேசுவை அறைந்தான்

**இப்படி அவர் சொன்னபொழுது, சமீபத்தில் நின்ற சேவகரில் ஒருவன்: பிரதான ஆசாரியனுக்கு இப்படியா உத்தரவு சொல்லுகிறது என்று, இயேசுவை ஒரு அறை அறைந்தான் (யோவா 18:22).**

பிரதான ஆசாரியன் இயேசுகிறிஸ்துவை விசாரித்துக் கொண்டிருக்கும்போதே, அவருக்குச் சமீபத்தில் நின்ற சேவகரில் ஒருவன் அவரை கன்னத்தில் அறைகிறான். இயேசுவை அறையும்போது "பிரதான ஆசாரியனுக்கு இப்படியா உத்தரவு சொல்லுகிறது" என்றும் கேட்கிறான். இயேசுகிறிஸ்து எந்தக் குழப்பமும் பண்ணவில்லை. அவர் யாருக்கும் எந்தத் தீங்கும் செய்யவில்லை. அப்படியிருக்கும்போது அவரை அறைவது அநீதியான செயல். இயேசுகிறிஸ்துவின் கைகள் கட்டப்பட்டிருக்கிறது. பொதுவாக கட்டப்பட்டிருக்கிறவனை அடிப்பது கோழைத்தனமாகவே கருதப்படும்.

கைதுபண்ணப்பட்டிருப்பவரை, விசாரித்துக் குற்றத்தை நிரூபிப்பதற்கு முன்பாக, தண்டிக்கக்கூடாது. அப்படித் தண்டிப்பது நீதியான செயல் அல்ல. நீதிமன்றத்தில் நீதி காக்கப்படவேண்டும். அமைதி வாசம்பண்ணவேண்டும். ஆனால் பிரதான ஆசாரியனுடைய அரமனையிலோ நீதி காக்கப்படவில்லை. சகலமும் அநீதியாகவே நடைபெறுகிறது. ஆனாலும் இந்த அநீதியான செய்கைகளைப் பிரதான ஆசாரியனோ, அல்லது அவனுடைய அரமனையிலுள்ள வேறு அதிகாரிகளோ கண்டுகொள்ளவே இல்லை.

சேவகரில் ஒருவன் இயேசுவை அறையும்போது "பிரதான ஆசாரியனுக்கு இப்படியா உத்தரவு சொல்லுகிறது" என்று கோபத்தோடு கேட்கிறான். குமாரனாகிய இயேசுகிறிஸ்து பிதாவாகிய தேவனிடத்திலேயே பேசக்கூடியவர். யாருக்கு எப்படி உத்தரவு சொல்லவேண்டும் என்று அவருக்கு நன்றாகத் தெரியும். இயேசுவுக்கு யாரும் உபதேசம்பண்ண வேண்டிய அவசியமில்லை. ஆனால் இந்தச் சேவகனோ இயேசுகிறிஸ்துவுக்கு உத்தரவு சொல்ல கற்றுக்கொடுக்க முன் வருகிறான்.

## அதிகாரம் - 18

இயேசுகிறிஸ்துவை அறைவதினால் இந்தச் சேவகன் பிரதான ஆசாரியனிடம் நல்ல பெயர் எடுக்க ஆசைப்படலாம். அவனிடத்தில் சில சலுகைகளை எதிர்பார்த்து, அவன் பிரியப்படும்படியாக இயேசுவை அறைந்திருக்கலாம். "பிரதான ஆசாரியனுக்கு இப்படியா உத்தரவு சொல்லுகிறது" என்று கேட்பதன் மூலமாக, இந்தச் சேவகன் ஆசாரியன்மீது தனக்கிருக்கும் மரியாதையையும் வைராக்கியத்தையும் வெளிப்படுத்தலாம்.

ஆட்சிபுரிகிறவர்கள் துன்மார்க்கராகவும், அவருடைய வேலைக்காரரும் துன்மார்க்கராக இருக்கும்போது, அங்கு துன்மார்க்கத்தைத் தவிர வேறு நல்மார்க்கம் எதையும் காணமுடியாது. தங்களுடைய மேலதிகாரிகள் யாரைத் துன்புறுத்தவேண்டுமென்று விரும்புகிறார்களோ, அவர்களுடைய விருப்பத்தை இப்படிப்பட்ட அதிகாரிகள் பணிந்து செய்வார்கள். நீதி நியாயத்தைப்பற்றிக் கவலைப்படமாட்டார்கள். இவர்கள் மூலமாக இயேசுகிறிஸ்துவின் பாடுகள் இன்னும் அதிகரிக்கிறது.

**என்னை ஏன் அடிக்கிறாய்**

**இயேசு அவனை நோக்கி: நான் தகாதவிதமாய்ப் பேசினதுண்டானால், தகாததை ஒப்புவி; நான் தகுதியாய்ப் பேசினேனேயாகில், என்னை ஏன் அடிக்கிறாய் என்றார் (யோவா 18:23).**

தம்மை அறைவதை இயேசுகிறிஸ்து சகித்துக்கொள்கிறார். அதே வேளையில் மிகுந்த பொறுமையோடும் மனத்தாழ்மையோடும், தன்னை அறைந்தவனிடத்தில் மிகவும் நிதானமாகப் பேசுகிறார். "நான் தகாதவிதமாய் பேசினதுண்டானால் தகாததை ஒப்புவி. நான் தகுதியாய் பேசினேனேயாகில் என்னை ஏன் அடிக்கிறாய்" என்று அவனிடத்தில் கேட்கிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய உபதேசத்தில், "ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு மறுகன்னத்தையும் திருப்பிக்கொடு" (மத் 5:39) என்று சொல்லியிருக்கிறார். ஆனால் இங்கோ தம்மை அறைந்தவனுக்கு, இயேசுகிறிஸ்து தம்முடைய மறுகன்னத்தைத் திருப்பிக்கொடுப்பதற்குப் பதிலாக, அவனிடத்தில் "என்னை ஏன் அடிக்கிறாய்" என்று கேட்கிறார்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்குப் பாடுகளும், வேதனைகளும், துன்பங்களும் வரலாம். அவற்றை நாம் சகித்துக்கொள்ளவேண்டும். நம்மிடத்தில் நீடிய பொறுமை காணப்படவேண்டும். நாம் துன்பப்படுத்தப்படும்போது நம்மை நாமே நியாயந்தீர்த்துக்கொள்ளக்கூடாது. நாம் துன்பப்படுவதற்கான காரணம் என்னவென்பது நமக்குத் தெரியவில்லையென்றால், நம்மைத் துன்பப்படுத்துகிறவர்களிடம் அதற்கான காரணத்தைக் கேட்டுத்தெரிந்துகொள்ளலாம். அதில் தவறு ஒன்றுமில்லை. இயேசுகிறிஸ்துவுக்கு நேரிட்ட இந்த சம்பவம் நமக்கு முன்மாதிரியாக நியமிக்கப்பட்டிருக்கிறது.

நீதியினிமித்தமாக நாம் துன்பப்படும்போது பாக்கியவான்களாக இருப்போம். வேதனைகளையும் பாடுகளையும் நாம் சகித்துக்கொள்ளவேண்டும். பிசாசைச் சகித்துக்கொள்ளக்கூடாது. பிசாசுக்கு எதிர்த்து நிற்கவேண்டும் என்பதுதான் வேதாகம உபதேசம்.

**நான் அல்ல**

**பின்பு அன்னா என்பவன் பிரதான ஆசாரியனாகிய காய்பாவினிடத்திற்கு அவரைக் கட்டுண்டவராக அனுப்பினான். சீமோன்பேதுரு நின்று குளிர்காய்ந்து கொண்டிருந்தான். அப்பொழுது சிலர் அவனை நோக்கி: நீயும் அவனுடைய சீஷரில் ஒருவனல்லவா என்றார்கள். அவன்: நான் அல்ல என்று மறுதலித்தான் (யோவா 18:24,25).**

பிரதான ஆசாரியரின் சேவர்கள் இயேசுகிறிஸ்துவை அறைந்து துன்புறுத்த ஆரம்பிக்கும்போது, பேதுரு ஆண்டவர் இயேசுகிறிஸ்துவை மறுதலிக்க ஆரம்பிக்கிறான். குளிர்காலமாக இருக்கிறபடியினால் ஊழியக்காரரும் சேவகரும் கரிநெருப்பு உண்டாக்கி குளிர்காய்ந்து கொண்டிருக்கிறார்கள். பேதுருவும் அவர்களுடனே கூட நின்று குளிர்காய்ந்து கொண்டிருக்கிறான். அப்பொழுது அவர்களில் சிலர் பேதுருவை நோக்கி "நீயும் அவனுடைய சீஷரில் ஒருவனல்லவா" என்று கேட்கிறார்கள். அவர்களிடம் "ஆம்" என்று பதில் சொன்னால், தன்னையும் பிடித்துக்கொண்டு போய்விடுவார்களோ என்று பேதுரு பயப்படுகிறான். ஆகையினால் "நான் அல்ல" என்று மொத்தமாக மறுதலித்துவிடுகிறான்.

## அதிகாரம் - 18

துன்மார்க்கரோடு கூட்டுச் சேருவது எப்போதுமே ஆபத்தானது. அதனால் சோதனைகளும் வேதனைகளும் வரும். பேதுரு துன்மார்க்கருடைய கூட்டத்தாரோடு சேர்ந்து குளிர்காய்ந்து கொண்டிருக்கிறான். சோதனையின் வலைக்குள் இவன் தானாகவே பிரவேசித்து, அதில் சிக்கிக்கொள்கிறான். துன்மார்க்கரோடு தொடர்ந்து கூடயிருக்கும்போது, அவர்களுடைய துன்மார்க்கமான கிரியைகள் நம்மைப் பாதிக்கும். துன்மார்க்கரின் கூட்டத்தாரோடு குளிர்காய நினைக்கிறவர்கள் நல்லவர்களின் கூட்டத்தோடு சேரமாட்டார்கள். நல்லவர்களிடத்தில் ஆவியுமில்லை, அனலுமில்லை, அக்கினியுமில்லை என்று கூறி, துன்மார்க்கர் உண்டாக்கியிருக்கும் கரிநெருப்பில் குளிர்காயவே விரும்புவார்கள். துன்மார்க்கரோடு குளிர்காய்ந்தால், முடிவில் நரகத்தின் அக்கினியில் அவியவேண்டிய ஆபத்து உண்டாகிவிடும்.

பேதுரு இப்போது இயேசுகிறிஸ்துவை இரண்டாம் முறையாக மறுதலிக்கிறான். ஏற்கெனவே வாசல்காக்கிற வேலைக்காரி பேதுருவிடம் "நீயும் அந்த மனுஷனுடைய சீஷரில் ஒருவனல்லவா" என்றாள். அவன் "நான் அல்ல" என்று அவளிடத்தில் பதில் கூறினான் (யோவா 18:17). ஏற்கெனவே பேதுரு தன்னுடைய ஆண்டவரை மறுதலித்துவிட்டான். இப்போது தன்னோடுகூட நிற்கிறவர்கள் தன்னிடம் "நீயும் அவனுடைய சீஷரில் ஒருவனல்லவா" என்று கேட்டபோது, பேதுரு அவர்களிடத்தில் "நான் அல்ல" என்று மறுபடியும் மறுதலிக்கிறான்.

பேதுருவுக்குச் சோதனைக்குமேல் சோதனை உண்டாயிற்று. பிசாசு ஒருவனைச் சோதிக்கும்போது, அவன் பிசாசுக்கு எதிர்த்து நிற்காமல், தள்ளாடி கீழே விழுகிறவன்போல் காணப்பட்டால், பிசாசு அவனை மேலும் மேலும் சோதிப்பான். பேதுருவுக்கு முதலாவது ஒரு வேலைக்காரி மூலமாக மாத்திரமே சோதனை உண்டாயிற்று. அந்தச் சோதனையில் அவன் தடுமாறினான். பிசாசு இப்போது ஒரு வேலைக்காரிக்குப் பதிலாக பலரைப் பயன்படுத்தி பேதுருவைச் சோதிக்கிறான். நாம் ஒரு சோதனைக்கு ஒப்புக் கொடுக்கும்போது மேலும் சோதனை வரும். முந்திய சோதனையைவிட பிந்திய சோதனை வலுவாக இருக்கும். நாம் சாத்தானுக்கு இடம் கொடுக்கும்போது அவன் நம்மைத் தாக்கிக்கொண்டேயிருப்பான். அவனுக்கு எதிர்த்து நின்றால் அவன் நம்மைவிட்டு ஓடிப்போய்விடுவான்.

பேதுரு இப்போது துன்மார்க்கருடைய கூட்டத்தாரோடு கூடயிருக்கிறான். இந்தக் கூட்டம் எப்போதுமே ஆபத்தான கூட்டம். நமக்குத் தெரிந்தவர்கள், நமக்கு அறிமுகமானவர்கள் எல்லோருமே நமக்கு நல்லவர்களாகத்தான் தெரிவார்கள். அவர்களை விட்டுக்கொடுக்கமாட்டோம். அவர்களைப்பற்றி ஆதரவாகப் பேசுவோம். நம்மைப் புகழுகிறவர்களை விரும்புவோம். நம்மைக் கண்டித்து உணர்த்துகிறவர்களை வெறுப்போம். மற்றவர்களோடு பேசும்போது நமக்குச் சந்தோஷம் உண்டாகவேண்டும் என்பதே நம்முடைய பிரதான விருப்பமாக இருக்கும். அவர்கள் யார், எப்படிப்பட்டவர்கள் என்பதைப்பற்றியெல்லாம் ஆராய்ச்சி பண்ணமாட்டோம்.

பேதுரு இப்போது தன்னோடு கூடயிருக்கிறவர்களைப்பற்றி யோசித்துப் பார்க்காமல், அவர்களோடு சேர்ந்து குளிர்காய்ந்து கொண்டிருக்கிறான். குளிர்காய்வதினால் சரீரத்திற்கு உண்டாகும் சுகத்தை மாத்திரமே பேதுரு பார்க்கிறான். தன்னோடு கூடயிருக்கிறவர்கள் தன்னிடம் "நீயும் அவனுடைய சீஷரில் ஒருவனல்லவா" என்று கேட்பார்கள் என்பதை எதிர்பார்க்கவில்லை. அப்போதுகூட பேதுரு உண்மை பேசாமல், அவர்களோடுகூட பிரச்சனையில்லாமல் குளிர்காய்ந்து, சுகமாயிருக்கவேண்டும் என்று விரும்பி, "நான் அல்ல" என்று மறுதலித்துவிடுகிறான். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் யாரோடு ஐக்கியமாக இருக்கிறோம் என்பதில் மிகுந்த கவனமாகவும் எச்சரிப்பாகவும் இருக்கவேண்டும்.

பேதுரு இப்போது இயேசுகிறிஸ்துவை விட்டு விலகியிருப்பதினால், அவனுடைய விசுவாசம் பலவீனமாயிற்று. பிசாசின் சோதனைக்குத் தன்னை ஒப்புக்கொடுப்பது பேதுருவின் பலவீனமான கிரியை. சிறிதும் வெட்கப்படாமல் "நான் அல்ல" என்று மறுதலித்துவிடுகிறான். இயேசுகிறிஸ்துவின் சீஷர்களில் ஒருவனாக இருப்பது பேதுருவுக்குக் கிடைத்திருக்கிற மிகப்பெரிய சிலாக்கியம். அப்போஸ்தல ஊழியம் உன்னதமான ஊழியம். ஆனால் பேதுருவோ இங்கே, தன்னுடைய மேன்மையை மறுதலிக்கிறான், தன்னுடைய அப்போஸ்தல ஊழியப் பட்டத்தை மறுதலிக்கிறான். சிறிதும் வெட்கப்படாமல் பொய்சொல்லி மறுதலிக்கிறான்.

## அதிகாரம் - 18

இயேசுகிறிஸ்துவின் ஊழியகாலத்தில் ஏராளமானோர் அவர்களிடத்தில் வந்து தங்கள் சரீரத்தில் சுகமடைந்தார்கள். அப்போதெல்லாம் இயேசுவோடு கூட திரளான ஜனங்கள் கூடியிருந்தார்கள். இதனால் அவருடைய சீஷருக்கும் பேரும் புகழும், மகிழ்ச்சியும் உண்டாயிற்று. அப்போதெல்லாம் பேதுரு "நானும் அவருடைய சீஷர்களில் ஒருவன்" என்று சந்தோஷத்தோடு தலையை உயர்த்திப் பேசியவன், இப்போது "நான் அவருடைய சீஷரில் ஒருவனல்ல" என்று மறுதலித்துவிடுகிறான்.

பேதுருவுக்கு வருகிற சோதனை விசுவாசிகளுக்கும் வருவதற்கு வாய்ப்பிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தினிமித்தமாக நமக்குப் பேரும் புகழும் வரும்போது நாம் சந்தோஷப்படுகிறோம். அதை விரும்புகிறோம். ஆனால் ஊழியத்தினிமித்தமாக பாடுகள் வரும்போது வேதனைப்படுகிறோம், வெட்கப்படுகிறோம். சில சமயங்களில் ஊழியமே வேண்டாமென்று ஊழியத்தைவிட்டுப் போய்விடுகிறோம்.

**உன்னை தோட்டத்திலே காணவில்லையா**

**பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரரில் பேதுரு காதறவெட்டினவனுக்கு இனத்தானாகிய ஒருவன் அவனை நோக்கி: நான் உன்னை அவனுடனேகூடத் தோட்டத்திலே காணவில்லையா என்றான் (யோவா 18:26).**

பேதுருவுக்கு மூன்றாம் முறையும் சோதனை வருகிறது. இந்த முறையும் அவன் மறுதலித்துப் பாவம் செய்கிறான். இப்போது பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனுக்கு இனத்தானாகிய ஒருவன் மூலமாகப் பேதுருவுக்குச் சோதனை உண்டாயிற்று. சேவகர்கள் இயேசுகிறிஸ்துவைப் பிடிக்கத் தோட்டத்திற்கு வந்தபோது, சீமோன் பேதுரு தன்னிடத்திலிருந்து பட்டயத்தை உருவி, மல்குஸ் என்பவனுடைய வலது காதற வெட்டினான். இவன் பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரரில் ஒருவன். இப்போது பேதுருவினிடத்தில் "நான் உன்னை அவனுடனே கூட தோட்டத்திலே காணவில்லையா" என்று கேட்பவன் மல்குசின் இனத்தான். பேதுரு மறுபடியும் மறுதலிக்கிறான்.

இதற்கு முன்பு பேதுருவிடம் கேட்டவர்கள், "நீயும் அந்த மனுஷனுடைய சீஷரில் ஒருவனல்லவா" என்று சந்தேகத்தோடுதான் கேட்டார்கள். ஆனால் இங்கோ சோதனை வித்தியாசமாக இருக்கிறது. இயேசு கிறிஸ்துவோடு பேதுரு தோட்டத்திலிருந்ததை தான் கண்டதாக ஒருவன் கூறுகிறான். இவன் சந்தேகப்படவில்லை. தான் கண்டதை நிரூபிக்க விரும்புகிறான். பாவத்தில் விழுகிறவர்கள் தங்கள் சுயமுயற்சியினால் அதிலிருந்து விடுதலை பெறலாம் என்று நினைத்தால், இப்படித்தான் பாவத்தில் மூழ்கிப்போய்விடுவார்கள். சாத்தான் தந்திரம் மிகுந்தவன். எவனை விழுங்கலாமென்று சுற்றித் திரிகிறவன். பேதுரு ஒருமுறை தவறு செய்ததினால், இப்போது திரும்பத் திரும்ப தவறு செய்துகொண்டேயிருக்கிறான். பொய் ஒருபோதும் நிலைத்து நிற்பதில்லை. சத்தியமே நிலைத்து நிற்கும். சத்தியமே ஜெயிக்கும்.

மல்குசின் இனத்தாரில் ஒருவன் இப்போது பேதுருவினிடத்தில் பேசுகிறான். அவனைப்பார்க்கும்போது பேதுருவுக்குப் பயமுண்டாயிற்று. இந்தச் சூழ்நிலையினால் அவன் மல்குசையும், அவனுடைய இனத்தானையும் ஒரு சத்துருவைப்போலவே பார்க்கிறான். நாம் யாரோடும் பகையை வளர்க்கக்கூடாது. யாரையும் சத்துருவாகப் பாவிக்கக்கூடாது. முடிந்தவரையிலும் எல்லோரோடும் சிநேகமாகவும் சமாதானமாகவும் பழகவேண்டும். நமக்குச் சிநேகிதர்கள் தேவை என்று விரும்புவோமானால் நாம் யாரையும் பகைக்கமாட்டோம்.

பேதுருவுக்குச் சோதனைக்குமேல் சோதனை வந்தாலும் அவனை யாரும் துன்புறுத்தவில்லை. வாசல் காக்கிற வேலைக்காரியிடம் பேதுரு உண்மை பேசினாலும், அவள் அவனை ஒன்றும் செய்யப்போவதில்லை. ஆனால் பேதுருவின் இருதயத்திலோ பயம் மிகுந்திருக்கிறது. தனக்கு எல்லா ஆபத்தும் வருமென்று கற்பனை பண்ணிக்கொண்டு பயந்து நடுங்குகிறான். பாவம் செய்கிறவர்கள் பேதுருவைப்போலத்தான் காரணமில்லாமல் பயப்படுவார்கள். கர்த்தர் நமக்குப் பாதுகாப்பாக இல்லையென்றால் நமக்குப் பயமுண்டாகும். நாம் தேவையில்லாமல் பயப்படவேண்டிய அவசியமில்லை. கர்த்தரைவிட்டு தூரம் விலகிப்போகும்போது நமக்கு அவருடைய பாதுகாப்பு கிடைக்காது. ஆகையினால் நம்முடைய ஜீவியம் கர்த்தருடைய கரத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டதாக இருக்கவேண்டும். நாம் தெளிவாகச் சிந்திப்போமானால் நமக்கு பயமில்லை.

## அதிகாரம் - 18

### உடனே சேவல் கூவிற்று

**அப்பொழுது பேதுரு மறுபடியும் மறுதலித்தான்; உடனே சேவல் கூவிற்று (யோவா 18:27).**

பேதுருவுக்கு எப்போதும் போல் சோதனை உண்டாயிற்று. அவனும் எப்போதும் போல் மறுதலித்துப் பாவம் செய்கிறான். பாவத்தின் வஞ்சனையினால் இருதயம் கடினப்பட்டுப்போகும் (எபி 3:13). இதுவே பாவத்தின் பொதுவான சுபாவம். நாம் நம்மை பாவத்திற்கு ஒருமுறை ஒப்புக்கொடுத்துவிட்டால், தொடர்ந்து பாவம் செய்துகொண்டேயிருப்போம். பாவத்திற்கு விரோதமாக, நம்முடைய மனச்சாட்சி ஆரம்பத்தில் நம்மை எச்சரிக்கும். நாம் தொடர்ந்து பாவம் செய்துகொண்டிருந்தால், அதன்பின்பு நம்முடைய மனச்சாட்சி நம்மை எச்சரிக்காமல் அமைதியாகிவிடும். பாவம் கர்ப்பம் தரித்து மேலும் அநேக பாவங்களை உற்பத்திபண்ணும். ஒரு பாவத்தை நிலைநிறுத்துவதற்கு மேலும் பல பாவங்கள் தேவைப்படும். ஒரு பாவத்தின் துணையோடும் ஆதரவோடும் தான் மற்ற பாவங்கள் எழுந்து நிற்கும்.

பேதுரு மறுதலித்தவுடனே சேவல் கூவிற்று. பேருதுவின் மனந்திரும்புதலைப்பற்றி, யோவான் சுவிசேஷத்தில், இந்தச் சம்பவம் மாத்திரமே எழுதப்பட்டிருக்கிறது. மற்ற சுவிசேஷங்களில் பேதுரு மனந்திருந்தி அழுத சம்பவமெல்லாம் எழுதப்பட்டிருக்கிறது. அங்கு கூடியிருந்த மற்றவர்களுக்கு சேவல் கூவியது ஒரு சாதாரண சம்பவமாகவும், சாதாரண சத்தமாகவும் இருக்கலாம். சேவல் கூவுவது அவர்களுக்கு ஒன்றும் முக்கியமானதல்ல. அது அவர்களுக்கு விசேஷமானதுமல்ல. ஆனால் பேதுருவுக்கோ இது ஒரு முக்கியமான சத்தமாகயிருக்கிறது. சேவல் கூவுவதை பேதுரு, தன் காதுகளால் கேட்கிற போது தன்னுடைய ஆண்டவர் தனக்குச் சொன்னதைத் தன் இருதயத்தில் கேட்கிறான்.

### பிலாத்துவின் அரமனையில் இயேசு
### யோவா 18 : 28-40

**யோவா 18:28.** அவர்கள் காய்பாவினிடத்திலிருந்து இயேசுவைத் தேசாதிபதியின் அரமனைக்குக் கொண்டுபோனார்கள்; அப்பொழுது விடியற்காலமாயிருந்தது. தீட்டுப்படாமல் பஸ்காவைப் புசிக்கத்தக்கதாக, அவர்கள் தேசாதிபதியின் அரமனைக்குள் பிரவேசியாதிருந்தார்கள்.

**யோவா 18:29.** ஆதலால் பிலாத்து அவர்களிடத்தில் வெளியே வந்து: இந்த மனுஷன்மேல் என்ன குற்றஞ்சாட்டுகிறீர்கள் என்றான்.

**யோவா 18:30.** அவர்கள் அவனுக்குப் பிரதியுத்தரமாக: இவன் குற்றவாளியாயிராவிட்டால், இவனை உம்மிடத்தில் ஒப்புக்கொடுக்கமாட்டோம் என்றார்கள்.

**யோவா 18:31.** அப்பொழுது பிலாத்து அவர்களை நோக்கி: இவனை நீங்களே கொண்டுபோய், உங்கள் நியாயப்பிரமாணத்தின் படி நியாயந்தீருங்கள் என்றான். அதற்கு யூதர்கள்: ஒருவனையும் மரண ஆக்கினை செய்ய எங்களுக்கு அதிகாரமில்லை என்றார்கள்.

**யோவா 18:32.** தாம் இன்னவிதமான மரணமாய் மரிக்கப்போகிறாரென்பதைக் குறித்து இயேசு குறிப்பாய்ச் சொல்லியிருந்த வார்த்தை நிறைவேறத்தக்கதாக இப்படிச் சொன்னார்கள்.

**யோவா 18:33.** அப்பொழுது பிலாத்து மறுபடியும் அரமனைக்குள் பிரவேசித்து, இயேசுவை அழைத்து: நீ யூதருடைய ராஜாவா என்று கேட்டான்.

**யோவா 18:34.** இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நீராய் இப்படிச் சொல்லுகிறீரோ? அல்லது மற்றவர்கள் என்னைக்குறித்து இப்படி உமக்குச் சொன்னார்களோ என்றார்.

**யோவா 18:35.** பிலாத்து பிரதியுத்தரமாக: நான் யூதனா? உன் ஜனங்களும் பிரதான ஆசாரியரும் உன்னை என்னிடத்தில் ஒப்புக்கொடுத்தார்கள், நீ என்ன செய்தாய் என்றான்.

**யோவா 18:36.** இயேசு பிரதியுத்தரமாக: என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல, என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே; இப்படியிருக்க என் ராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல என்றார்.

**யோவா 18:37.** அப்பொழுது பிலாத்து அவரை நோக்கி: அப்படியானால் நீ ராஜாவோ என்றான். இயேசு பிரதியுத்தரமாக: நீ சொல்லுகிறபடி நான் ராஜாதான்; சத்தியத்தைக்குறித்துச் சாட்சிகொடுக்க நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்; சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான் என்றார்.

## அதிகாரம் - 18

**யோவான் 18:38. அதற்கு பிலாத்து: சத்தியமாவது என்ன என்றான். மறுபடியும் அவன் யூதர்களிடத்தில் வெளியே வந்து: நான் அவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன்.**

**யோவான் 18:39. பஸ்காபண்டிகையில் நான் உங்களுக்கு ஒருவனை விடுதலைபண்ணுகிற வழக்கமுண்டே; ஆகையால் யூதருடைய ராஜாவை நான் உங்களுக்காக விடுதலைபண்ண உங்களுக்கு மனதுண்டா என்றான்.**

**யோவான் 18:40. அப்பொழுது அவர்களெல்லாரும் இவனையல்ல, பரபாசை விடுதலைபண்ணவேண்டும் என்று மறுபடியும் சத்தமிட்டார்கள்; அந்தப் பரபாசென்பவன் கள்ளனாயிருந்தான்.**

### தேசாதிபதியின் அரமனை

**அவர்கள் காய்பாவினிடத்திலிருந்து இயேசுவைத் தேசாதிபதியின் அரமனைக்குக் கொண்டுபோனார்கள்; அப்பொழுது விடியற்காலமாயிருந்தது. தீட்டுப்படாமல் பஸ்காவைப் புசிக்கத்தக்கதாக, அவர்கள் தேசாதிபதியின் அரமனைக்குள் பிரவேசியாதிருந்தார்கள் (யோவான் 18:28).**

ரோமப்பேரரசின் தேசாதிபதியாகிய பிலாத்துவுக்கு முன்பாக இயேசுகிறிஸ்து விசாரிக்கப்படுகிறார். இதற்காக காய்பாவின் அரமனையிலிருந்து தேசாதிபதியின் அரமனைக்குள் இயேசுகிறிஸ்துவைக் கொண்டுபோகிறார்கள். ரோமப்பேரரசுக்கு மாத்திரமே குற்றவாளிக்கு மரணதண்டனை கொடுக்கும் அதிகாரமுள்ளது. இயேசுகிறிஸ்துவின்மீது குற்றம்சுமத்தி, ரோமப்பேரரசின் அதிகாரத்தைப் பயன்படுத்தி, இயேசுகிறிஸ்துவுக்கு மரணதண்டனை கொடுக்கவேண்டுமென்று யூதமார்க்கத்துத் தலைவர்கள் வேகவேகமாகச் செயல்படுகிறார்கள்.

யூதமார்க்கத்துத் தலைவர்கள் வஞ்சக எண்ணத்தோடு இயேசுவைத் தண்டிக்க விரும்புகிறார்கள். யூதமார்க்கத்தின் ஆலோசனைச்சங்கத்தாருக்கு, ஒருவனைக் கல்லெறிந்து கொல்லும் அதிகாரமுள்ளது. ஸ்தேவானை அவர்கள் அப்படித்தான் கொன்றுபோட்டார்கள்.

ஆனால் இயேசுகிறிஸ்துவை தங்களுடைய ஆலோசனைச்சங்கத்தின் அதிகாரத்திற்குட்படுத்தி, கல்லெறிந்து கொல்ல விரும்பவில்லை. தங்கள் இஷ்டப்படி செய்தால் ஜனங்கள் மத்தியில் குழப்பம் உண்டாகும் என்று பயந்து, ஆலோசனைச்சங்கத்தார் சதிஆலோசனை பண்ணுகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவைத் தண்டிக்கும் விஷயத்தில், ரோமப்பேரரசையும் யூதமார்க்கத்துத் தலைவர்கள் தங்கள் பக்கமாக இழுக்கிறார்கள். இயேசுவைத் தண்டிக்கும்போது, அதற்கு ரோமப்பேரரசின் அனுமதி கிடைத்தால், ஒரு கலகமும் உண்டாகாது. ஜனங்கள் ரோமப்பேரரசின் அதிகாரத்திற்குப் பயந்து அமைதியாக இருந்துவிடுவார்கள். ஆகையினால் தேசாதிபதியின் ஆணைப்படி இயேசுவைக் கொன்றுபோட வேண்டுமென்று யூதமார்க்கத்துத் தலைவர்கள் தீவிரமாக யோசனைபண்ணுகிறார்கள்.

ஒரு குற்றவாளியை ரோமப்பேரரசார் தண்டிக்கும்போது, அந்தக் குற்றவாளியை சிலுவை மரத்தில் அறைந்து கொன்று போடுவது வழக்கம். சிலுவை மரணம் மிகவும் வேதனையுள்ளது. அக்காலத்தில் சிலுவை மரம் ஒரு அவமானச் சின்னமாக கருதப்பட்டது. சிலுவை மரணமும் அவமானம் நிறைந்த மரணமாகும். இயேசுகிறிஸ்துவுக்கு எப்படிப்பட்ட மரணதண்டனை கொடுத்தால், அது அவருக்கு வேதனை நிறைந்ததாகவும், அவமானம் மிகுந்ததாகவும் இருக்கும் என்று யோசித்துப்பார்த்து, இயேசுகிறிஸ்துவை தேசாதிபதியினிடத்தில் ஒப்புவிக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவை அவமானப்படுத்த வேண்டுமென்பது யூதருடைய விருப்பம்.

இயேசுகிறிஸ்துவைக் கொலைசெய்வதன் மூலமாக தங்களுக்கு ஒரு பிரச்சனையும் வந்துவிடக்கூடாது என்று யூதமார்க்கத்துத் தலைவர்கள் மிகுந்த எச்சரிப்போடிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து செல்லுமிடங்களிலெல்லாம் நன்மை செய்திருக்கிறார். ஒரு நல்லவரைக் கொல்லுவது யூதமார்க்கத்தார் மத்தியில் நியாயமாக இருக்காது. யூதருடைய ஆலோசனைச் சங்கத்தாரால் இயேசுகிறிஸ்துவின்மீது எந்தக் குற்றத்தையும் நிரூபிக்க முடியவில்லை. ஆகையினால் இயேசுவைத் தாங்கள் தண்டிப்பதற்குப் பதிலாக, ரோமப்பேரரசார் தங்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தித் தண்டித்தால், தங்களுக்குப் பிரச்சனை வராது என்று யூதமார்க்கத்துத் தலைவர்கள் நினைக்கிறார்கள்.

## அதிகாரம் - 18

இவர்களைப் போலத்தான் இக்காலத்திலும் அநேகர் தவறு செய்யப் பயப்படுகிறார்கள். தவறு செய்வது பாவம் என்னும் உணர்வு இவர்களிடத்தில் காணப்படவில்லை. இதற்குப் பதிலாக, “தவறு செய்தால் கெட்டப் பெயர் உண்டாகுமே” என்று பயந்தே தவறு செய்யாமலிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் தப்பிதங்களை இரகசியமாகச் செய்யப்பயப்படமாட்டார்கள்.

இயேசுகிறிஸ்துவை விசாரிப்பதற்கு, யூதர்கள் தங்களுக்குச் சாதகமான சமயத்தைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அதிகாலை நேரத்தில் இயேசுவைத் தேசாதிபதியின் அரமனைக்குக் கொண்டுபோகிறார்கள். இந்த வேளையில் எருசலேம் நகரத்து ஜனங்கள் பொதுவாக தங்கள் படுக்கைகளில் தூங்கிக்கொண்டிருப்பார்கள். ஆனால் யூதமார்க்கத்துத் தலைவர்களோ இந்த வேளையில் இயேசுகிறிஸ்துவைத் தங்கள் கைகளில் பிடித்துக்கொண்டு தேசாதிபதியின் அரமனைக்குக் கொண்டுபோகிறார்கள். இயேசுகிறிஸ்துவைச் சிலுவையில் அறையும் வரையிலும் சிறிது நேரத்தையும் வீணாக்கிவிடக்கூடாது என்பதில் இவர்கள் மிகுந்த கருத்தோடிருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவைக் கொலைசெய்ய வேண்டுமென்னும் கொலைவெறி இவர்களுக்குள் இருந்தாலும், இவர்கள் யூதமார்க்கத்தின் பிரகாரமாக தங்களைப் பக்தியுள்ளவர்கள்போலக் காண்பிக்கிறார்கள். தீட்டுப்படாமல் பஸ்காவை புசிக்கத்தக்கதாக அவர்கள் தேசாதிபதியின் அரமனைக்குள் பிரவேசியாதிருக்கிறார்கள். பஸ்காவைப் புசிக்கும் முன்பாக புறஜாதியாரைத் தொட்டு தங்களைத் தீட்டுப்படுத்தக்கூடாது என்பது இவர்களுடைய சிந்தனை. மோசேயின் பிரமாணத்தில் இப்படியெல்லாம் சொல்லவில்லை. இவர்கள் தங்களுடைய முன்னோர்களின் பாரம்பரியத்தைப் பின்பற்றி, புறஜாதியாரைவிட்டு விலகியே இருக்கிறார்கள். முன்னோர்களின் பாரம்பரியத்தைக் கைக்கொள்ள விரும்புகிறார்கள், தேவனுடைய நீதியைக் கைக்கொள்ள விரும்பவில்லை. ஒரு பாவமும் அறியாத இயேசுகிறிஸ்துவைக் கொலைசெய்யவேண்டுமென்று துணிகரமாகத் தீர்மானம்பண்ணுகிறார்கள். தாங்கள் பக்தியுள்ளவர்கள்போல வெளிவேஷம் போடுகிறார்கள். ஆனால் இவர்களுடைய இருதயமோ துன்மார்க்கத்தினாலும், கொலைவெறியினாலும் நிறைந்திருக்கிறது.

### பிலாத்து வெளியே வந்து

**ஆதலால் பிலாத்து அவர்களிடத்தில் வெளியே வந்து: இந்த மனுஷன்மேல் என்ன குற்றஞ்சாட்டுகிறீர்கள் என்றான் (யோவா 18:29).**

யூதர்கள் இயேசுகிறிஸ்துவைப் பிடித்துக்கொண்டு தேசாதிபதியின் அரமனைக்கு வருகிறார்கள். ஆனால் அவருடைய அரமனைக்குள்ளே பிரவேசியாதிருக்கிறார்கள். ஆதலால் தேசாதிபதியாகிய பிலாத்துவே அவர்களிடத்தில் வெளியே வருகிறான். இந்தவேளை விடியற்காலமாக இருக்கிறது. மற்ற ஜனங்களைப்போலவே தேசாதிபதியும் தன்னுடைய படுக்கையில் உறங்கும் வேளை. ஆனாலும் தனக்கு ஒரு கடமை வரும்போது, தன்னுடைய தூக்கத்தைப் பாராமல், கடமையை நிறைவேற்ற வருகிறான். பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிறவர்கள் தங்களுடைய சுகத்தை மாத்திரம் விரும்பக்கூடாது. மற்றவர்களுடைய நன்மையையும் பார்க்கவேண்டும். தன்னுடைய அரமனைக்கு உள்ளே பிரவேசிக்க மனதில்லாமல், வெளியே இருக்கும் ஜனங்களைப் பிலாத்து தேடி வெளியே வருகிறான்.

யூதர்கள் தன்னுடைய அரமனைக்குள் பிரவேசியாமலிருப்பது பிலாத்துவுக்கும் ஆச்சரியமாக இருந்திருக்கும். ஒருவேளை அவனுக்கு அவர்கள்மீது கோபம் வந்திருக்கலாம். அரமனைக்குள் வந்து தன்னைப் பார்க்காதது, தன்னை அவமதிக்கும் செயல் என்று நினைத்திருக்கலாம். அவர்களிடம் “அரமனைக்குள்ளே வராத நீங்கள் அப்படியே உங்களிடங்களுக்குப் போய்விடுங்கள். எப்பொழுது அரமனைக்குள் வருகிறீர்களோ, அப்பொழுது உங்கள் வழக்கை விசாரிக்கலாம்” என்று சொல்லி, பிலாத்து அவர்களை அரமனையைவிட்டுத் துரத்தியிருக்கலாம். ஆனால் பிலாத்து அப்படியெல்லாம் சிந்திக்கவில்லை. அவர்கள் அரமனைக்குள் வரவில்லையென்றாலும், அவன் அவர்களிடத்தில் வெளியே வந்து, அவர்களுடைய வழக்கை விசாரிக்கிறான்.

ஒரு வழக்கை விசாரிப்பதற்கு முன்பாக, குற்றம் சுமத்தப்பட்டவர்மீது, சொல்லப்படும் குற்றச்சாட்டுக்களைத் தெரிந்துகொள்ளவேண்டும். அப்போதுதான் பாரபட்சமில்லாமல் நீதியாக வழக்கை விசாரிக்க முடியும். பிலாத்து அவர்களிடத்தில் வெளியே வந்து, “இந்த மனுஷன்மேல் என்ன குற்றஞ்சாட்டுகிறீர்” என்று கேட்கிறான். சாட்டப்படும் குற்றத்திற்கு என்ன அத்தாட்சி என்று பொருள்படும் விதமாக பிலாத்து அவர்களிடத்தில் கேட்கிறான்.

# அதிகாரம் - 18

## இவன் குற்றவாளி

**அவர்கள் அவனுக்குப் பிரதியுத்தரமாக: இவன் குற்றவாளியாயிராவிட்டால், இவனை உம்மிடத்தில் ஒப்புக்கொடுக்கமாட்டோம் என்றார்கள் (யோவா 18:30).**

யூதர்கள் இயேசுவின்மீது குறிப்பிட்டு எந்தக் குற்றமும் சுமத்தவில்லை. அவர் ஒரு குற்றவாளி என்று தாங்கள் சொல்லுவதை, மற்றவர்கள் பொதுவாக நம்பவேண்டும் என்று யூதர்கள் எதிர்பார்க்கிறார்கள். இதே கருத்தையே அவர்கள் பிலாத்துவிடமும் சொல்லுகிறார்கள். "இவன் குற்றவாளியாயிராவிட்டால் இவனை உம்மிடத்தில் ஒப்புக்கொடுக்கமாட்டோம்" என்று பொதுவாகச் சொல்லுகிறார்கள்.

யூதர்கள் பிலாத்துவிடம் இவ்வாறு பேசுவதினால், அவர்கள் தேசாதிபதிக்குக் கொடுக்கவேண்டிய மரியாதையை முறைப்படி கொடுக்கவில்லை. மிகவும் ஆணவமாகப் பேசுகிறார்கள். பிலாத்துவின் கேள்விக்கு முறைப்படி ஒரு பதிலும் சொல்லவில்லை. பிலாத்து மிகவும் நியாயமாக, யதார்த்தமாக, "இந்த மனுஷன்மேல் என்ன குற்றஞ்சாட்டுகிறீர்கள்" என்று கேட்கிறான். அவன் என்ன கேட்கிறான் என்பது யூதர்களுக்குத் தெரியும். ஆனாலும் அவனுடைய கேள்விக்கு சரியான பதிலைச் சொல்லாமல், மிகவும் ஆணவமாகப் பேசுகிறார்கள்.

யூதர்களுடைய வார்த்தையில் ஆணவமும், இயேசுவின்மீதுள்ள கோபமும் வெளிப்படுகிறது. இயேசுகிறிஸ்துவை விசாரிப்பதற்கு முன்பாகவே, அவரைக் குற்றவாளியென்று தீர்மானித்துவிடுகிறார்கள். அதற்கான காரணம் எதையும் யூதர்கள் சொல்லவில்லை. அவர் குற்றவாளியென்பதை நிரூபிப்பதற்கு யூதர்கள் எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை. தாம் குற்றமற்றவர் என்பதை இயேசுகிறிஸ்து தாமே நிரூபிக்கவேண்டுமென்று, அவர்மீது காரணமில்லாமல் குற்றம் சுமத்துகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவை "குற்றவாளி" என்று சொல்லுகிறார்கள். ஆனால் அவரோ செல்லுமிடங்களிலெல்லாம் நன்மை செய்கிறவராகவே சுற்றித் திரிந்தவர். அவர்களுடைய பார்வைக்கு நன்மை செய்கிறவர் குற்றவாளியாகத் தெரிகிறார். நன்மை செய்கிறவர்களைத் தீமை செய்கிறவர்களென்று பொல்லாதவர்கள் தீர்ப்புச் சொல்லுகிறார்கள். இது ஒரு புதுமையல்ல. யூதமார்க்கத்துத் தலைவர்கள் தங்களைக்குறித்தும், தங்களுடைய நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் பெருமைப்படுகிறார்கள். ஆகையினால்தான் இயேசுகிறிஸ்துவின்மீது சாட்டப்படும் குற்றத்தைப் பிலாத்துவுக்கு அறிவிக்க வேண்டியதில்லையென்று ஆணவத்தோடு பேசுகிறார்கள்.

## மரண ஆக்கினை

**அப்பொழுது பிலாத்து அவர்களை நோக்கி: இவனை நீங்களே கொண்டுபோய், உங்கள் நியாயப்பிரமாணத்தின்படி நியாயந்தீருங்கள் என்றான். அதற்கு யூதர்கள்: ஒருவனையும் மரண ஆக்கினை செய்ய எங்களுக்கு அதிகாரமில்லை என்றார்கள் (யோவா 18:31).**

தான் கேட்ட கேள்விக்கு யூதர்கள் கூறிய பிரதியுத்தரம் பிலாத்துவுக்கு வேடிக்கையாகவும் விநோதமாகவும் இருந்திருக்கும். தன்னிடத்தில் முறைப்படி பதில் பேசாத இவர்களுடைய வழக்கை பிலாத்து விசாரிக்க விரும்பவில்லை. ஆகையினால் பிலாத்து அவர்களிடம் "இவனை நீங்களே கொண்டுபோய் உங்கள் நியாயப்பிரமாணத்தின்படி நியாயந்தீருங்கள்" என்று சொல்லிவிடுகிறான். யூதர்களுடைய அதிகாரத்தைப் பிலாத்து அங்கீகரிக்கிறான் என்றும், அவர்களுடைய நியாயப்பிரமாணத்தின் பிரகாரம் அவர்கள் இயேசுகிறிஸ்துவை நியாயந்தீர்க்க அனுமதி கொடுக்கிறானென்றும் ஒரு சிலர் இந்த வாக்கியத்திற்கு வியாக்கியானம் சொல்லுகிறார்கள்.

யூதர்களுடைய நியாயப்பிரமாணம் என்ன சொல்லுகிறதோ அதன்படி மாத்திரமே அவர்கள் இயேசுகிறிஸ்துவை நியாயந்தீர்க்க வேண்டும். நியாயப்பிரமாணத்திற்கு மீறி அவர்கள் நியாயந்தீர்ப்பார்களென்றால் அவர்கள்மீது குற்றம் சுமரும். தன்னுடைய வார்த்தையின் மூலமாக பிலாத்து யூதரைச் சந்தோஷப்படுத்த விரும்புகிறான். அதே வேளையில் அவர்கள் விரும்புகிற பிரகாரம் அவர்களுக்கு உதவிபுரிய மறுத்துவிடுகிறான்.

## அதிகாரம் - 18

யூதர்கள் ரோமப்பேரரசுக்கு அடிமைப்பட்டவர்களாக இருக்கிறார்கள். யூதர்கள்மீது ரோமருக்கு அதிகாரமுண்டு. யூதர்களோ பலவீனமானவர்களாகவும், அடிமைகளாகவும் இருக்கிறார்கள். பிலாத்து அவர்களைப் பார்த்து, "உங்களுடைய நியாயப்பிரமாணத்தின்படி உங்களால் முடிந்தால் நியாயந்தீர்த்துப் பாருங்கள், உங்களுக்கு உண்மையிலேயே தைரியமிருந்தால் நீங்கள் விரும்புகிற பிரகாரம் செய்து பாருங்கள்" என்று ஆணவத்தோடு சொல்வதாக ஒரு சிலர் இந்த வார்த்தைக்கு வியாக்கியானம் சொல்லுகிறார்கள்.

ஒரு மனுஷனை மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி நியாயந்தீர்க்க வேண்டுமா, அல்லது, ரோமரின் நியாயப்பிரமாணத்தின்படி நியாயந்தீர்க்க வேண்டுமா என்பதே இங்கு விவாதத்திற்குரியதாக இருக்கிறது. பிலாத்து ரோமருடைய நியாயப் பிரமாணத்திற்குட்பட்டவன். யூதர்களோ மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கும் அதோடு சேர்ந்து ரோமருடைய நியாயப் பிரமாணத்திற்குட்பட்டவர்கள். ரோமருடைய நியாயப்பிரமாணத்திற்கு மீறி, யூதர்களால் எந்த மனுஷனையும் நியாயந்தீர்க்க முடியாது.

பிலாத்து அவர்களிடம் "நீங்களே நியாயந்தீருங்கள்" என்று சொன்ன வாக்கியம் யூதருடைய உள்ளத்தைத் தொடுகிறது. தங்களுக்கு எல்லா அதிகாரமுமில்லை என்பதை அங்கீகரித்து, "ஒருவனையும் மரண ஆக்கினை செய்ய எங்களுக்கு அதிகாரமில்லை" என்று யூதர்கள் பிலாத்துவிடம் சொல்லுகிறார்கள். ரோமப்பேரரசில் யூதருக்குச் சில குறிப்பிட்ட அதிகாரம் மாத்திரமே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒருவருக்கு மரணதண்டனை கொடுக்கும் அதிகாரம் யூதரிடத்தில் இல்லை. ரோமப்பேரரசார் மரணதண்டனை கொடுக்கும் அதிகாரத்தை யூதரிடமிருந்து பறித்துக்கொண்டார்கள். ஒருவேளை யூதரிடத்தில் மரணதண்டனை கொடுக்கும் அதிகாரம் இதற்கு முன்பு இருந்திருக்கலாம். ஆனால் அதை அவர்கள் முறைப்படியும் நியாயப்படியும் பயன்படுத்தாமல் போனதினால், அந்த அதிகாரத்தை ரோமப்பேரரசு அவர்களைவிட்டு நீக்கியிருக்கவேண்டுமென்று வரலாற்று ஆசிரியர்கள் கருத்து சொல்லுகிறார்கள்.

பிலாத்து அவர்களிடத்தில் "இந்த மனுஷன்மேல் என்ன குற்றஞ்சாட்டுகிறீர்கள்" என்று கேட்டான். அதற்கு அவர்கள் ஆணவமாக "இவன் குற்றவாளியாயிராவிட்டால் இவனை உம்மிடத்தில் ஒப்புக்கொடுக்கமாட்டோம்" என்று பதில் சொன்னார்கள். ஆனால் இப்போதோ தங்களுடைய தவறைத் திருத்திக்கொள்ளும் விதமாக, தங்களுடைய ஆணவமான பேச்சுக்குப் பரிகாரம் தேடும் விதமாக, "ஒருவனையும் மரண ஆக்கினை செய்ய எங்களுக்கு அதிகாரமில்லை" என்று யூதர்கள் பிலாத்துவிடம் சொல்லுகிறார்கள்.

### இன்னவிதமான மரணம்

**தாம் இன்னவிதமான மரணமாய் மரிக்கப்போகிறாரென்பதைக் குறித்து இயேசு குறிப்பாய்ச் சொல்லியிருந்த வார்த்தை நிறைவேறத்தக்கதாக இப்படிச் சொன்னார்கள் (யோவா 18:32).**

இயேசுகிறிஸ்துவின் சத்துருக்கள் பேசுகிற வார்த்தைகள்கூட, சில சமயங்களில் தேவனுடைய வார்த்தை நிறைவேறத்தக்கதாக இருக்கிறது. அவர்கள் "ஒருவனையும் மரண ஆக்கினை செய்ய எங்களுக்கு அதிகாரமில்லை" என்று கூறினார்கள். தாம் இன்னவிதமான மரணமாய் மரிக்கப்போகிறார் என்பதைக் குறித்து இயேசு குறிப்பாய் சொல்லியிருந்தார். அந்த வார்த்தை நிறைவேறத்தக்கதாக அவர்கள் இப்படிச் சொன்னார்கள். இயேசுகிறிஸ்துவின் சத்துருக்கள் தங்களுடைய சுயபலத்தினால் தேவனுக்கு விரோதமாக என்ன செய்தாலும், தேவனுடைய சித்தமே முடிவில் நிறைவேறும்.

இயேசுகிறிஸ்து தம்முடைய மரணத்தைப்பற்றி ஏற்கெனவே முன்னறிவித்திருக்கிறார். யூதர்கள் இயேசுகிறிஸ்துவைத் தங்களுடைய நியாயப்பிரமாணத்தின்படி நியாயந்தீர்க்க மனதில்லாதவர்களாக இருக்கிறார்கள்.

தம்முடைய மரணத்தைக்குறித்து இயேசுகிறிஸ்து சொன்ன இரண்டு காரியங்கள் இங்கு நிறைவேறுகிறது. அவையாவன: 1. தாம் புறஜாதியார் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுவார் என்றும், அவர்கள் அவரைக் கொலை செய்வார்களென்றும் இயேசுகிறிஸ்து தமது மரணத்தைப்பற்றி கூறியிருக்கிறார் (மத் 20:19; மாற் 10:33; லூக் 18:32,33). 2. இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்படுவார் (மத் 10:19; 26:2), உயர்த்தப்படுவார் (யோவா 3:14; 12:32).

## அதிகாரம் - 18

யூதர்கள் இயேசுகிறிஸ்துவைத் தங்களுடைய நியாயப்பிரமாணத்தின்படி நியாயந்தீர்த்தால், அவர்கள் அவரைக் கல்லெறிந்து கொல்லவேண்டும். ஆனால் தம்முடைய மரணம் இன்னவிதமாய் நடைபெறும் என்பதை இயேசுகிறிஸ்து ஏற்கெனவே முன்னறிவித்திருக்கிறார். தாம் கல்லெறிந்து கொல்லப்பட வேண்டுமென்பது இயேசுகிறிஸ்துவின் சித்தமல்ல. தாம் சிலுவையில் அறையப்பட வேண்டுமென்பதே கிறிஸ்துவின் சித்தமாகும். ஆனால் யூதருக்கு இயேசுகிறிஸ்துவைச் சிலுவையில் அறைவதற்கு அதிகாரமில்லை. ஆகையினால்தான் இயேசுகிறிஸ்து புறஜாதியாராகிய ரோமருடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுவது அவசியமாயிற்று. ரோமர்கள் இயேசுவுக்கு மரண ஆக்கினை செய்யும்போது, அவரைச் சிலுவையில் அறைவார்கள். ரோமப்பேரரசின் அதிகாரத்தின் பிரகாரமாக இயேசுகிறிஸ்து பெத்லகேமிலே பிறக்கவேண்டியதாயிற்று. இப்போது அதே ரோமப்பேரரசின் அதிகாரத்தினாலே இயேசுகிறிஸ்து சிலுவையில் மரிக்கப்போகிறார். இவை இரண்டுமே தேவனுடைய வார்த்தை நிறைவேறத்தக்கதாக இவ்வாறு நடைபெறுகிறது.

### நீ யூதருடைய ராஜாவா

**அப்பொழுது பிலாத்து மறுபடியும் அரமனைக்குள் பிரவேசித்து, இயேசுவை அழைத்து: நீ யூதருடைய ராஜாவா என்று கேட்டான் (யோவா 18:33).**

தேசாதிபதியாகிய பிலாத்து இதுவரையிலும் பிரதான ஆசாரியரோடு, அரமனைக்கு வெளியே பேசிக்கொண்டிருந்தான். இப்போது அவர்களால் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் இயேசுகிறிஸ்துவோடு அரமனைக்குள் பேசுகிறான். இயேசுகிறிஸ்து பிரதான ஆசாரியரோடு அரமனைக்கு வெளியே இருந்தார். பிலாத்து அவரை உள்ளே அழைத்து " நீ யூதருடைய ராஜாவா" என்று அவரிடத்தில் கேட்கிறான். பிலாத்து இயேசுகிறிஸ்துவை நியாயந்தீர்ப்பதினால், தேவன் நம்மை நியாயந்தீர்க்காதவாறு நாம் நியாயத்தீர்ப்பிலிருந்து தப்புவிக்கப்பட்டிருக்கிறோம். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்குத் தேவனுடைய நியாயத்தீர்ப்பை நீக்குவதற்காக, இயேசு கிறிஸ்து தாமே நியாயந்தீர்க்கப்படுகிறார். மற்ற சுவிசேஷங்களில் இயேசுகிறிஸ்துவின்மீது கூறப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்கள் எழுதப்பட்டிருக்கிறது. அவர் ரோமப்பேரரசுக்கு விரோதமாகக் கலகம்பண்ணினாரென்றும், இராயனுக்கு வரிகொடுக்கவேண்டாமென்று சொன்னாரென்றும், யூதருடைய ஆலோசனைச்சங்கத்தார் அவர்மீது குற்றம் சுமத்துகிறார்கள். யோவான் எழுதின சுவிசேஷத்தில் அந்தக் குற்றச்சாட்டுக்கள் எதுவும் எழுதப்படவில்லை. பிலாத்து இயேசுகிறிஸ்துவிடத்தில் ஒரு கேள்வியைக் கேட்கிறான். அவர்மீது கூறப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்கு ஏதாவது ஆதாரம் உண்டா என்பதை கண்டுபிடிப்பதற்காக, பிலாத்து இயேசுவிடம் "நீ யூதருடைய ராஜாவா" என்று கேட்கிறான்.

இயேசுகிறிஸ்துவைப் பரியாசம் பண்ணுவதற்காக பிலாத்து அவரிடம் இந்தக் கேள்வியைக் கேட்டான் என்று ஒரு சிலர் வியாக்கியானம் கூறுகிறார்கள். யூதர்கள் இயேசுகிறிஸ்துவை விரோதிக்கிறார்கள். அவரைத் துன்பப்படுத்துகிறார்கள். அப்படிப்பட்ட யூதருக்கு இயேசுகிறிஸ்து ராஜாவா என்று பிலாத்து அவரிடத்தில் பரியாசமாகக் கேட்கிறான். இயேசுகிறிஸ்து ஒருபோதும் தம்மை யூதருடைய ராஜா என்று பிரகடனம் பண்ணவில்லை. ஆனால் இப்போதோ இயேசுகிறிஸ்து தம்முடைய ராஜ்யத்தைப்பற்றிப் பேசுவதற்கு சித்தமுள்ளவராக இருக்கிறார். தம்முடைய வாயின் வார்த்தையினாலேயே தாம் நியாயந்தீர்க்கப்படுவதற்கு இயேசுகிறிஸ்து வாய்ப்புக்களை உண்டுபண்ணுகிறார்.

### நீராய் இப்படிச் சொல்லுகிறீரோ

**இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நீராய் இப்படிச் சொல்லுகிறீரோ? அல்லது மற்றவர்கள் என்னைக்குறித்து இப்படி உமக்குச் சொன்னார்களோ என்றார் (யோவா 18:34).**

பிலாத்து இயேசுகிறிஸ்துவிடம் "நீ யூதருடைய ராஜாவா" என்று கேட்கிறான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: "நீராய் இப்படிச் சொல்லுகிறீரோ? அல்லது மற்றவர்கள் என்னைக்குறித்து இப்படி உமக்குச் சொன்னார்களோ" என்று கேட்கிறார். பிலாத்து தன் சுயபுத்தியினால் இப்படிக் கேட்பதற்கு வாய்ப்பில்லை. இந்தக் கேள்வியை கேட்கவேண்டிய அவசியமும் அவனுக்கில்லை. ரோமப்பேரரசின் சார்பாக பிலாத்துதேசாதிபதியாக ஆளுகை செய்கிறான். ரோமப்பேரரசுக்கு அவன் உண்மையுள்ளவனாக நடந்துகொள்ள வேண்டும். இயேசுகிறிஸ்து யூதருடைய ராஜாவாக இருந்தாலும் அதனால் பிலாத்துவுக்கு ஒரு பாதிப்பும் வரப்போவதில்லை. இயேசுகிறிஸ்துவின் மூலமாக ரோமப்பேரரசுக்கும் எந்த அச்சுறுத்துதலும் இல்லை. இயேசு இதுவரையிலும் பிலாத்துவுக்கும், ரோமப்பேரரசுக்கும் விரோதமாக ஒன்றும் சொல்லவில்லை.

## அதிகாரம் - 18

இயேசுகிறிஸ்துவைப்பற்றி அவருடைய சத்துருக்கள் பிலாத்துவிடம் பிராது பண்ணியிருப்பார்கள். இயேசுகிறிஸ்து ராயனுக்குச் சத்துரு என்று பிலாத்துவிடம் தவறாகச் சொல்லியிருப்பார்கள். பிலாத்து இதைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்று விரும்பினால், அவன் இயேசுகிறிஸ்துவிடம் இதைப்பற்றி நேரடியாகக் கேட்கலாம். ரோமப்பேரரசுக்கு இயேசுகிறிஸ்து சத்துரு அல்ல. ரோமப்பேரரசுக்கு விரோதமாக இயேசுகிறிஸ்து தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபிக்கப்போகிறாரென்று பிரதான ஆசாரியர் அவர்மீது குற்றம் சுமத்தியிருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் ராஜ்யத்தைப்பற்றியும் அதன் வல்லமையைப்பற்றியும், அந்த ராஜ்யத்தினால் ரோமப்பேரரசுக்கு எப்படிப்பட்ட பாதிப்பு உண்டாகும் என்பது பற்றியும் பிலாத்து தெரிந்துகொள்ள விரும்புகிறான். இயேசுகிறிஸ்துவின் ராஜ்யம் ரோமப்பேரரசின் ராஜ்யத்திற்கு விரோதமானது என்பது இயேசுவின்மீது கூறப்படும் முக்கியமான குற்றச்சாட்டாகும்.

பிலாத்து இயேசுகிறிஸ்துவின் ராஜ்யத்தைப்பற்றி ஒன்றும் கேட்காமல், "நீ யூதருடைய ராஜாவா" என்று மாத்திரமே கேட்கிறான். ரோமப்பேரரசுக்கு விரோதமாக இயேசுகிறிஸ்து சதிஆலோசனை பண்ணுகிறாரென்றும், கலகம்பண்ணுகிறாரென்றும் பிரதான ஆசாரியர் அவர்மீது குற்றம் சுமத்துகிறார்கள். இயேசுகிறிஸ்துவை எப்படியாவது குற்றவாளியாக்கி, அவரைச் சிலுவையில் அறைந்து கொன்றுவிடவேண்டுமென்று பிரதான ஆசாரியர் வைராக்கியமாக இருக்கிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவை விசாரிக்கிற பிலாத்துவோ, அவர்களுடைய ஆலோசனையின்படியெல்லாம் அவரை விசாரியாமல், ரோமப்பேரரசின் நியாயப்பிரமாணத்தின்படியே விசாரிக்கிறான்.

**நான் யூதனா**

**பிலாத்து பிரதியுத்தரமாக: நான் யூதனா? உன் ஜனங்களும் பிரதான ஆசாரியரும் உன்னை என்னிடத்தில் ஒப்புக்கொடுத்தார்கள், நீ என்ன செய்தாய் என்றான் (யோவான் 18:35).**

பிலாத்து இயேசுவிடம் "நீ யூதருடைய ராஜாவா" என்று கேட்கிறான். அதற்கு இயேசு "நீராய் இப்படிச் சொல்லுகிறீரோ அல்லது மற்றவர்கள் என்னைக்குறித்து இப்படி உமக்கு சொன்னார்களோ" என்று கேட்கிறார். இயேசுகிறிஸ்து பிலாத்துவின் கேள்விக்கு நேரடியாகப் பதில் கூறவில்லை. இயேசுகிறிஸ்து அவனுக்குப் பதில் சொல்லுவதற்குப் பதிலாக அவனிடத்திலேயே கேள்வி கேட்கிறார். இதனால் பிலாத்துவுக்கு கோபமுண்டாயிற்று. இயேசுகிறிஸ்துவின் கேள்விக்கு, "ஆம்" அல்லது "இல்லை" என்று பதில் கூறுவதற்குப் பதிலாக, "நான் யூதனா" என்று கோபத்தோடு கேட்கிறான்.

பிலாத்துவின் உள்ளத்தில் யூதர்களைப்பற்றி நல்ல அபிப்பிராயம் இல்லை. யூதர்கள் உண்மைக்குப் புறம்பாக நடக்கிறவர்களென்றும், காரணமில்லாமல் மற்றவர்கள்மீது குற்றம் சுமத்துகிறவர்களென்றும், நியாயமில்லாமல் தங்களுடைய ஜனத்தாரை தண்டிக்கிறவர்களென்றும் பிலாத்து யூதரைப்பற்றி நினைத்துக்கொண்டிருக்கிறான். ஆகையினால்தான் இயேசுகிறிஸ்துவின் கேள்விக்கு, தவறு செய்ய "நான் யூதனா" என்று கேள்வி கேட்டு அதையே தன் பதிலாகச் சொல்லுகிறான்.

இயேசுகிறிஸ்து அவனிடம் தம்மைக்குறித்து மற்றவர்கள் அவனுக்குச் சொன்னார்களா என்று கேட்கிறார். அதற்கு அவன் "ஆம்" என்று பொருள்படுமாறு சொல்லுகிறான். "உன் ஜனங்களும் பிரதான ஆசாரியரும் உன்னை என்னிடத்தில் ஒப்புக்கொடுத்தார்கள்" என்று அவன் இயேசுவிடம் கூறுகிறான். ஆகையினால் இயேசுகிறிஸ்துவை விசாரிப்பதைத் தவிர தனக்கு வேறு வழியில்லாமல், அவர் என்ன செய்தாரென்று அறிந்துகொள்ள விரும்புகிறான்.

பிலாத்து இயேசுவிடம் "நீ யூதருடைய ராஜாவா" என்று கேட்கிறான். அதற்கு இயேசு நேரடியாக எந்தப் பதிலும் சொல்லவில்லை. இப்போது பிலாத்து சுற்றி வளைத்து இயேசுகிறிஸ்துவிடம் மற்றொரு கேள்வியை கேட்கிறான். "நீ என்ன செய்தாய்" என்பது பிலாத்துவின் அடுத்த கேள்வி. நெருப்பில்லாமல் புகையாது. காரணமில்லாமல் இயேசுகிறிஸ்துவை தன்னிடத்தில் ஒப்புக்கொடுக்கமாட்டார்கள் என்று நினைத்து, இயேசு என்ன செய்தார் என்பதை விசாரிக்க விரும்புகிறான்.

## அதிகாரம் - 18

### என் ராஜ்யம்

**இயேசு பிரதியுத்தரமாக: என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல, என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே; இப்படியிருக்க என் ராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல என்றார் (யோவா 18:36).**

இயேசுகிறிஸ்து தம்முடைய ராஜ்யத்தைப்பற்றி பிலாத்துவிடம் பேசுகிறார். இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள், பிலாத்து அவரிடத்தில் கேட்ட கேள்விக்கு பதில் சொல்வதுபோல அமைந்திருக்கிறது. இயேசு அவனிடம் "என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல" என்று கூறுகிறார். இவ்வுலகப்பிரகாரமான ராஜ்யம் வேறு. தேவனுடைய ராஜ்யம் வேறு. இயேசுகிறிஸ்து மெய்யாகவே ராஜா தான். அவருக்கு ஒரு ராஜ்யம் உண்டு. ஆனால் அவருடைய ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல. இயேசுகிறிஸ்துவின் ராஜ்யம் இந்த உலகத்திலிருந்து தோன்றிதல்ல. இது உலகப்பிரகாரமானதுமல்ல. இயேசுகிறிஸ்துவின் ராஜ்யம் மனுஷருக்குள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. மனுஷருடைய இருதயங்களிலும் அவர்களுடைய மனச்சாட்சிகளிலும் தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

தேவனுடைய ராஜ்யத்தைப் பாதுகாக்கிறவர்களும், ஆதரிக்கிறவர்களும் இந்த உலகப்பிரகாரமான போர்வீரர்களல்ல. கிறிஸ்துவின் ராஜ்யத்தினுடைய ஆயுதங்கள் இவ்வுலகத்திற்குரிய ஆயுதங்களல்ல. தேவனுடைய ராஜ்யம் ஆவிக்குரியது. இந்த ராஜ்யத்தின் ஆயுதங்களும் ஆவிக்குரியது. தேவனுடைய ராஜ்யத்தின் திட்டமும் செயலும் இவ்வுலகத்திற்குரியதல்ல. தேவனுடைய ராஜ்யத்தில் அங்கம் வகிக்கிறவர்கள் இந்த உலகத்திலிருந்தாலும் அவர்கள் இந்த உலகத்திற்குரியவர்களல்ல. தேவனுடைய ராஜ்யம் இந்த உலகத்தின் ஞானத்தினால் ஆளுகை செய்யப்படவில்லை. உலகத்தின் சம்பத்துக்களினால் தேவனுடைய ராஜ்யத்தில் ஐசுவரியமுண்டாவதில்லை.

இயேசுகிறிஸ்து தம்முடைய ராஜ்யத்தின் ஆவிக்குரிய சுபாவத்தைப்பற்றி பிலாத்துவிடம் பேசுகிறார். "என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால், நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே" என்று சொல்லுகிறார். இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் யுத்தம்பண்ணவில்லை. பிரதான ஆசாரியரின் சேவகர்கள் இயேசுகிறிஸ்துவைப் பிடித்தபோது சீஷர்கள் கலகம் எதுவும் செய்யவில்லை. அவர்களுடைய கைகளிலிருந்து இயேசுகிறிஸ்துவை விடுவிப்பதற்கு அவர்கள் போராடவில்லை. தம்முடைய சீஷர்கள் போராடவேண்டுமென்று இயேசுகிறிஸ்து அவர்களுக்குக் கட்டளை கொடுக்கவுமில்லை.

தேவனுடைய ராஜ்யத்திற்கு விரோதமாக இந்த உலகத்தின் ராஜ்யங்களினால் எதிர்த்து நிற்கமுடியாது. தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதையும், அது விஸ்தரிக்கப்படுவதையும் இந்த உலகத்தின் எந்த சக்தியாலும், வல்லமையினாலும் தடைபண்ண முடியாது. இயேசுகிறிஸ்துவின் ராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல. தேவனுடைய ராஜ்யம் இந்த உலகத்திலிருந்தாலும் அது இந்த உலகத்திற்குரியதல்ல.

### நீ ராஜாவோ

**அப்பொழுது பிலாத்து அவரை நோக்கி: அப்படியானால் நீ ராஜாவோ என்றான். இயேசு பிரதியுத்தரமாக: நீ சொல்லுகிறபடி நான் ராஜாதான்; சத்தியத்தைக்குறித்துச் சாட்சிகொடுக்க நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்; சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான் என்றார் (யோவா 18:37).**

பிலாத்து இயேசுகிறிஸ்துவிடம் தொடர்ந்து கேள்வி கேட்டுக்கொண்டேயிருக்கிறான். முதலில் "நீ யூதருடைய ராஜாவா" என்று கேட்டவன், இப்போது "நீ ராஜாவோ" என்று மறுபடியும் கேட்கிறான். பிலாத்துவின் கேள்விக்கு இயேசுகிறிஸ்து இப்போது நேரடியாகவே பதில் சொல்லுகிறார். இயேசுகிறிஸ்து அவனிடத்தில் தம்முடைய ராஜ்யத்தைப்பற்றிப் பேசுகிறார். ராஜ்யம் ஒன்று இருக்கும்போது அதற்கு ஒரு ராஜா ஒருவரும் இருப்பார். ராஜா இல்லாமல் ராஜ்யமில்லை. ஆகையினால் பிலாத்து இயேசுகிறிஸ்துவிடம் "நீ ராஜாவோ" என்று கேட்கிறான்.

## அதிகாரம் - 18

இயேசுகிறிஸ்து பிலாத்துவுக்கு எந்த சத்தியத்தையும் மறைக்காமல், மிகவும் தெளிவாக "நீர் சொல்லுகிறபடி நான் ராஜாதான்" என்று அவனுக்குப் பிரதியுத்தரம் சொல்லுகிறார். "இயேசு ராஜா" என்று பிலாத்துதான் சொல்லுகிறான். பிலாத்து உலகத்திற்குரிய ராஜாவைப்பற்றி பேசுகிறான். அவனுடைய சிந்தனையில் உலகத்திற்குரிய ராஜ்யமும், உலகத்திற்குரிய ராஜாவும்தான் இருக்கிறார்கள். அவன் ஆவிக்குரிய ராஜ்யத்தைப்பற்றியோ, ஆவிக்குரிய ராஜாவைப்பற்றியோ சிந்தித்துப் பார்க்கவில்லை. ஆனாலும் இயேசுகிறிஸ்து, தம்முடைய ராஜ்யத்திற்குத் தம்மை ராஜாவாக அங்கீகரிக்கிறார்.

இயேசுகிறிஸ்து ஒரு ஊழியக்காரரைப்போல இந்த உலகத்தில் பணிவிடை செய்தாலும், அவர் தம்முடைய ராஜ்யத்திற்கு ராஜாவாகவே இருக்கிறார். ராஜாவுக்குரிய கனமும், மகிமையும், அதிகாரமும் அவருக்கு உண்டு. இயேசுகிறிஸ்து தம்முடைய ராஜ்யத்தைப்பற்றியும், தாம் எப்படி ராஜாவாக இருக்கிறாரென்பதைப்பற்றியும் பிலாத்துவுக்கு விவரமாகச் சொல்லுகிறார். இயேசுகிறிஸ்து சத்தியத்தைக் குறித்து சாட்சிகொடுக்கப் பிறந்த ராஜாவாக இருக்கிறார். அவர் சத்தியத்தின் வல்லமையினால் மனுஷருடைய மனதை ஆளுகை செய்கிறார்.

இயேசுகிறிஸ்து சத்தியத்தைக்குறித்து சாட்சி கொடுக்கப் பிறந்திருக்கிறவர். அதற்காகவே இந்த உலகத்திற்கு வந்திருக்கிறவர். அவர் தேவனுக்காகச் சாட்சியாக வந்திருக்கிறார். இந்த உலகத்தைச் சிருஷ்டித்த தேவனைப்பற்றி, இந்த உலகத்திற்கு சாட்சி சொல்வதே இயேசுகிறிஸ்துவின் ஊழியம். இயேசுகிறிஸ்து பாவத்திற்கு விரோதமாக சாட்சிகொடுத்து, பாவத்தின் மூலமாக இந்த உலகம் அழியப்போவதை எச்சரித்துக் கூறுகிறார். தம்முடைய சாட்சியின் வார்த்தைகள் மூலமாக இயேசுகிறிஸ்து தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபிக்கிறார். அதைப் பாதுகாத்துப் பராமரிக்கிறார்.

இயேசுகிறிஸ்துவுக்கு இந்த உலகத்தில் ஒரே ஒரு ஊழியம் மாத்திரமே இருக்கிறது. சத்தியத்தைக் குறித்து சாட்சி கொடுக்கவேண்டுமென்பதே அந்த ஊழியம். இந்த உலகத்திற்கு இயேசுகிறிஸ்து சத்தியத்தைக்குறித்து சாட்சி சொல்லி, சத்தியத்தை வெளிப்படுத்த வேண்டும். இயேசுகிறிஸ்து சத்தியத்தை வெளிப்படுத்தவில்லையென்றால் இந்த உலகத்திற்குச் சத்தியத்தைப்பற்றியே தெரியாது. இயேசுகிறிஸ்து தேவனைப்பற்றி வெளிப்படுத்தவில்லையென்றால் இந்த உலகத்தால் தேவனைப்பற்றி அறிந்துகொள்ளவே முடியாது. தேவனுடைய நாமத்தை இந்த உலகத்திற்குத் தெரியப்படுத்துவதும், இன்னும் தெரியப்படுத்துவதும் இயேசுகிறிஸ்துவின் பிரதான ஊழியமாகும்.

இயேசுகிறிஸ்து சத்தியத்தைக் குறித்து சாட்சி கொடுக்கும்போது, அதை எல்லோரும் விசுவாசிக்கவேண்டும் என்பதற்காக, தம்முடைய வார்த்தைகளை அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் உறுதிபண்ணுகிறார். இயேசுகிறிஸ்து இந்த உலகத்திற்கு சத்தியத்தைக் குறித்து சாட்சி கொடுக்கும் ஊழியத்தைச் செய்வதற்காக, தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபித்து, அதற்கு ராஜாவாகயிருந்து ஊழியம் செய்துகொண்டு வருகிறார். கிறிஸ்துவின் ராஜ்யத்தில் சத்தியம் மாத்திரமே இருக்கிறது. இது மனுஷருடைய சத்தியமல்ல. இது தேவனுடைய தெய்வீக சத்தியம். சத்திய ஆவியானவரே கிறிஸ்துவின் ராஜ்யத்தில் ஆளுகை செய்கிறார். இயேசுகிறிஸ்து "நானே சத்தியமாகயிருக்கிறேன்" என்று சொல்லும்போது, "நானே ராஜாவாகயிருக்கிறேன்" என்று பொருள்படுமாறு கூறுகிறார்.

சத்தியத்தின் வல்லமையினால் இயேசுகிறிஸ்து ஆளுகை செய்கிறார். நிரூபிக்கப்பட்ட சத்தியத்தினால் தம்முடைய ராஜ்யத்திற்கு விரோதமாக எழும்பியிருக்கும் அந்தகார சக்திகளை முறியடிக்கிறார். இயேசுகிறிஸ்து இந்த உலகத்திற்கு ஒளியாக வந்திருக்கிறவர். சூரியன் இந்த உலகத்திற்கு பகல்வேளையில் வெளிச்சம் தருவதுபோல, இயேசுகிறிஸ்துவே தம்முடைய ராஜ்யத்திற்கு வெளிச்சத்தைத் தரும் நீதியின் சூரியனாக இருக்கிறார்.

இயேசு கிறிஸ்துவின் ராஜ்யத்தில் இருக்கிறவர்களெல்லோருமே சத்தியவான்களாக இருக்கிறார்கள். சத்தியவான் எவனும் இயேசுகிறிஸ்துவின் சத்தத்தைக் கேட்கிறான். தேவனுடைய சத்தியத்தை இயேசுகிறிஸ்துவிடமிருந்து மாத்திரமே கேட்க முடியும். இந்தச் சத்தியத்தைக் குறித்து சாட்சி கொடுக்கிற இயேசுகிறிஸ்துவிடமிருந்து, சத்தியவான் அவருடைய சத்தத்தை ஆவலாய் விரும்பிக் கேட்கிறான். இயேசுகிறிஸ்துவின் மூலமாகவே கிருபையும் சத்தியமும் உண்டாயிற்று.

# அதிகாரம் - 18

**சத்தியமாவது என்ன**

**அதற்கு பிலாத்து: சத்தியமாவது என்ன என்றான். மறுபடியும் அவன் யூதர்களிடத்தில் வெளியே வந்து: நான் அவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன் (யோவா 18:38).**

பிலாத்து தன் வாழ்நாளிலேயே முதன்முறையாக தனக்குப் பிரயோஜனமான நல்ல கேள்வியை கேட்கிறான். "சத்தியமாவது என்ன" என்று சத்தியபரரிடமே கேட்கிறான். ஆனால் அவனுடைய கேள்விக்கு இயேசுகிறிஸ்து பதில் சொல்லுவதற்கு முன்பாகவே, அவன் அந்த இடத்திவிட்டுப் போய்விடுகிறான். இயேசுகிறிஸ்துவிடம் எதையாவது கேட்டால், அவருடைய சமுகத்தில் பொறுமையாக இருந்து, அவர் கொடுக்கிற ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும். கேட்டுவிட்டு அவசரமாக ஓடிப்போய்விட்டால் நம்மால் ஒன்றும் பெற்றுக்கொள்ள முடியாது. "சத்தியமாவது என்ன" என்று கேட்டுவிட்டு, உடனே பிலாத்து அவரைவிட்டு, யூதர்களிடத்தில் வெளியே வருகிறான்.

பிலாத்து கேட்டது மெய்யாகவே நல்ல கேள்விதான். சத்தியம் என்பது விலைமதிப்புள்ள முத்தைப்போன்றது. இந்த முத்தை நாம் தேடிக்கண்டுபிடிக்க வேண்டும். அவசரப்படுகிறவர்களால் முத்தைக் கண்டுபிடிக்கமுடியாது. வாஞ்சையாய்த் தேடுகிறவர்களால் மாத்திரமே முத்தைக் கண்டுபிடிக்க முடியும். அதுபோலவே சத்தியத்தை வாஞ்சிக்கிறவர்கள் மாத்திரமே அதைக் கண்டுபிடிப்பார்கள்.

இக்காலத்தில் ஏராளமான ஜனங்கள் இயேசுகிறிஸ்துவைப்பற்றியும், அவருடைய சுவிசேஷத்தைப்பற்றியும், ஆத்தும இரட்சிப்பைப்பற்றியும் நம்மிடத்தில் கேள்வி கேட்கிறார்கள். ஆனால் நம்முடைய பதிலைக் கேட்பதற்குக்கூட அவர்கள் பொறுமையாகக் காத்திருப்பதில்லை. நீடிய பொறுமையோடு, மனத்தாழ்மையோடு தேவனுடைய சமுகத்தில் எதிர்பார்ப்போடு அமர்ந்திருந்தால் மாத்திரமே தேவனிடத்திலிருந்து ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். நம்மிடத்தில் தாழ்மையில்லையென்றால் நமக்கு ஒருபோதும் மேன்மை வராது. சத்தியத்தை நாம் மிகுந்த அக்கரையோடு தேடவேண்டும். சத்தியத்தைக் குறித்து ஏனோதானோவென்று அக்கரையில்லாமல் இருப்போமென்றால், நம்மால் சத்தியத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது.

பிலாத்து ஒருவேளை இப்போதுதான் இயேசுகிறிஸ்துவைப்பற்றியும் அவருடைய வார்த்தையைப்பற்றியும் சிந்திக்க ஆரம்பித்திருக்கவேண்டும். இயேசு நல்லவர் என்னும் எண்ணம் பிலாத்துவின் மனதிற்குள் உண்டாயிருக்கிறது. அவன் ஒரு நியாயாதிபதியைப்போலப் பேசுகிறான். இயேசுகிறிஸ்து சத்தியத்தைப்பற்றியும், சத்தியவானைப்பற்றியும் பேசும்போது, அதைப்பற்றி விசாரிக்கும் வண்ணமாக, பிலாத்து "சத்தியமாவது என்ன" என்று கேட்கிறான்.

சத்தியத்தைப்பற்றி பேசுகிற இயேசுகிறிஸ்துவைப் பரியாசம் பண்ணும்விதமாக, பிலாத்து இவ்வாறு பேசுவதற்கும் வாய்ப்புள்ளது. "இயேசுகிறிஸ்து சத்தியத்தைப்பற்றி பேசுகிறார், ஆனால் அவருக்கு சத்தியமாவது என்ன என்று சொல்லத் தெரியவில்லை, சத்தியத்திற்கு அவரால் விளக்கம் கொடுக்கமுடியவில்லை" என்று அவரைப் பரியாசம்பண்ணுவதுபோல பேசுகிறான்.

நாஸ்திகர்கள் எந்த மார்க்கத்தையும் பின்பற்றமாட்டார்கள். கடவுளே இல்லையென்று சொல்லுகிறவர்கள், எல்லா மார்க்கத்தையும் பரியாசம்பண்ணுவார்கள். பிலாத்து இப்போது அப்படிப்பட்ட நிலமையில்தான் இருக்கிறான். இயேசுகிறிஸ்துவைப் பரியாசம்பண்ணும்விதமாக, சத்தியபரரிடமே, சத்தியமாவது என்ன என்று கேட்கிறான்.

பிலாத்துடைய உள்ளத்தின் யோசனையை இயேசுகிறிஸ்து அறிந்திருக்கிறார். அவனிடத்தில் சத்தியமில்லை. சத்தியத்தை அறிந்து கொள்ளவேண்டும் என்னும் மெய்யான வாஞ்சை அவனிடத்தில் இல்லை. ஆகையினால் இயேசுகிறிஸ்து அவனுடைய கேள்விக்கு பிரதியுத்தரம் ஒன்றும் கூறாமல் அமைதியாக இருக்கிறார்.

இயேசுகிறிஸ்து பிலாத்துவிடம் சத்தியமாவது என்ன என்று சொல்லாவிட்டாலும், அதை தம்முடைய சீஷரிடம் விவரமாகக் கூறியிருக்கிறார். அவர்கள் மூலமாக அந்த உபதேசம் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" (யோவா 14:6) என்பதே இயேசுகிறிஸ்து "சத்தியமாவது என்ன" என்னும் கேள்விக்கு கூறும் பிரதியுத்தரமாகும்.

## அதிகாரம் - 18

பிலாத்து மறுபடியும் யூதர்களிடத்தில் வெளியே வந்து, "நான் அவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன்" என்று கூறுகிறான். இயேசுகிறிஸ்து குற்றமற்ற நிரபராதி என்பதை வெளிப்படையாக எல்லோருக்கும் முன்பாக அறிவிக்கிறான். இயேசுகிறிஸ்து ஒரு பாவமும் செய்யாதவர். அவர் நீதியும் சத்தியமுமுள்ளவர். இயேசுகிறிஸ்துவின் சத்துருக்கள் அவரைக் குற்றவாளியென்று கூறி, பிலாத்துவினிடத்தில் ஒப்புக்கொடுத்த போதிலும், அவரிடத்தில் ஒரு குற்றமும் காணமுடியவில்லை. அவரைப் பலவிதமாக உபத்திரவப்படுத்தித் துன்பப்படுத்தினாலும், அதற்குரிய குற்றம் எதையும் அவர் செய்யவில்லை. ஒரு நிரபராதியை அவர்கள் உபத்திரவப்படுத்துகிறார்கள்.

கல்வாரி சிலுவையில் இயேசுகிறிஸ்து மரிக்கவேண்டுமென்பது தேவனுடைய சித்தம். ஆனால் அவர் தம்முடைய சொந்தப் பாவத்திற்காக கல்வாரியில் மரிக்கவில்லை. நம்முடைய பாவங்களுக்குப் பலியாகவே இயேசுகிறிஸ்து கல்வாரியில் மரிக்கிறார். "ஜனங்களெல்லாரும் கெட்டுப்போகாதபடிக்கு ஒரே மனுஷன் ஜனங்களுக்காக மரிப்பது நலமாயிருக்கும்" (யோவா 11:50) என்னும் வார்த்தையின் பிரகாரமாக இயேசுகிறிஸ்து நமக்காக மரிக்கிறார்.

இயேசு கிறிஸ்துவின்மீது குற்றம்சுமத்தி, அவரைத் துன்பப்படுத்துகிற யூதர்களே மெய்யான குற்றவாளிகளாகயிருக்கிறார்கள். துணிகரமான பாவங்களைச் செய்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் பாடுகள் மூலமாக, யூதருடைய பாவங்கள் பெரிதாயிற்று. இயேசுகிறிஸ்து ஒரு குற்றமும் செய்யாதவர். ஆனால் அவர் ஒரு குற்றவாளியென்று யூதர்கள் தீர்மானம் செய்து, அவரைக் கொன்றுபோட வேண்டுமென்று கொலைவெறியோடு கூடியிருக்கிறார்கள்.

**விடுதலைபண்ணுகிற வழக்கம்**

**பஸ்காபண்டிகையில் நான் உங்களுக்கு ஒருவனை விடுதலைபண்ணுகிற வழக்கமுண்டே; ஆகையால் யூதருடைய ராஜாவை நான் உங்களுக்காக விடுதலைபண்ண உங்களுக்கு மனதுண்டா என்றான் (யோவா 18:39).**

இயேசுகிறிஸ்துவை விடுதலைசெய்ய பிலாத்து மனதாயிருக்கிறான். யூதருடைய பாரம்பரிய வழக்கத்தின் பிரகாரமாக இயேசுவை விடுதலைபண்ணிவிடலாமென்று பிலாத்து அவர்களிடம் பேசுகிறான். "பஸ்கா பண்டிகையில் நான் உங்களுக்கு ஒருவனை விடுதலைபண்ணுகிற வழக்கமுண்டே" என்று அவர்களிடம் தாங்கள் பின்பற்றி வரும் வழக்கத்தைப்பற்றிக் கூறுகிறான். அந்த வழக்கத்தின் பிரகாரம், இந்தப் பஸ்கா பண்டிகையில் யூதருடைய ராஜாவாகிய இயேசுகிறிஸ்துவை பிலாத்து அவர்களுக்காக விடுதலை பண்ண விரும்புகிறான். அந்த விடுதலையை ஏற்றுக்கொள்ள யூதர்களுக்கு மனதுண்டா என்று அவர்களிடத்தில் விசாரிக்கிறான்.

யாரை விடுதலையாக்கவேண்டுமென்று ஜனங்கள்தான் கேட்டுக்கொள்ளவேண்டும். அதுதான் அவர்களுடைய வழக்கம். "காவல்பண்ணப்பட்டவர்களில் எவனை விடுதலையாக்கவேண்டுமென்று ஜனங்கள் கேட்டுக்கொள்வார்களோ, அவனை அவர்களுக்காக விடுதலையாக்குவது பண்டிகைதோறும் தேசாதிபதிக்கு வழக்கமாயிருந்தது" (மத் 27:15).

சில நாளைக்கு முன்பு தான் இயேசுகிறிஸ்து எருசலேமுக்குள் பவனியாக வந்தார். ஜனங்களெல்லோரும் திரளாய் கூடிவந்து, "கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்" என்று கூறி இயேசுவை வரவேற்றார்கள். "ஓசன்னா" என்று கூறி ஆர்ப்பரித்தார்கள். இந்த சம்பவத்தைப்பற்றி பிலாத்து கேள்விப்பட்டிருக்கிறான். ஆகையினால் இந்தப் பஸ்கா பண்டிகையில் யூதஜனங்கள் இயேசுகிறிஸ்துவை விடுதலைபண்ண வேண்டுமென்று கேட்டுக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறான்.

யூதருடைய பழக்கவழக்கத்தை பிலாத்து அனுமதிக்கிறான். பஸ்கா பண்டிகைக்கு மதிப்புக் கொடுக்கும் விதமாக யூதருக்கு இந்தச் சிலாக்கியம் கொடுக்கப்பட்டிருக்கிறது. யூதர்கள் எகிப்து தேசத்தில் அடிமையாயிருந்து விடுதலை பண்ணப்பட்டதை நினைவுகூரும் வண்ணமாக, அவர்கள் பஸ்கா பண்டிகையை ஆசரிக்கிறார்கள். இந்தப் பண்டிகைதோறும் அவர்களுக்காக ஒருவனை விடுதலைபண்ணுவதை பிலாத்து வழக்கமாகக் கடைபிடித்து வருகிறான்.

## அதிகாரம் - 18

யூதருடைய பண்டிகை நாளிலே பிலாத்து இயேசுவை விடுதலையாக்க வேண்டுமென்று அவர்களிடத்தில் பேசிப்பார்க்கிறான். பிலாத்து இயேசுவினிடத்தில் ஒரு குற்றமும் காணவில்லை. இயேசுகிறிஸ்துவின் கள்ளம் கபடமற்ற குணத்தை பிலாத்து தன்னுடைய மனச்சாட்சியில் உணருகிறான். மனச்சாட்சியின் சத்தத்திற்குக் கீழ்ப்படிந்து இயேசுகிறிஸ்துவை விடுதலைபண்ண வேண்டுமென்று விரும்புகிறான். ஒரு பக்கத்தில் அவனுடைய மனச்சாட்சி இயேசுகிறிஸ்துவை விடுதலை பண்ணவேண்டுமென்று விரும்பினாலும், அவன் யூதர்களையும் சந்தோஷப்படுத்த வேண்டும் என்றும் விரும்புகிறான்.

யூதா தேசம் பிலாத்துவின் ஆளுகைக்குட்பட்டிருக்கிறது. யூதர்களிடத்தில் நல்ல பெயர் வாங்கவேண்டுமென்று பிலாத்து விரும்புகிறான். உலக ஞானத்தின் பிரகாரமாக ஜனங்களை ஆளுகை செய்ய விரும்பி, எல்லா பிரிவினரையும் சந்தோஷப்படுத்த முயற்சிபண்ணுகிறான். தேவஞானத்திற்கு முன்பாக உலகஞானம் ஒன்றுமில்லாமல் போய்விடும். பிலாத்து தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி, ஒரு குற்றத்தையும் செய்யாத இயேசுகிறிஸ்துவை விடுதலைபண்ணவேண்டும். ஆனால் அவனோ இயேசுவின்மீது குற்றம் சுமத்திய ஜனங்களையும் பிரியப்படுத்த வேண்டும் என்று ஆசைப்பட்டு, தடுமாறுகிறான்.

**இவனையல்ல**

**அப்பொழுது அவர்களெல்லாரும் இவனையல்ல, பரபாசை விடுதலைபண்ண வேண்டும் என்று மறுபடியும் சத்தமிட்டார்கள்; அந்தப் பரபாசென்பவன் கள்ளனாயிருந்தான் (யோவா 18:40).**

யூதஜனங்களோ இயேசுகிறிஸ்துவுக்குச் சத்துருக்களாக இருக்கிறார்கள்.

பிலாத்து அவர்களிடத்தில் "யூதருடைய ராஜாவை நான் உங்களுக்காக விடுதலைபண்ண உங்களுக்கு மனதுண்டா" என்று கேட்டபோது, அவர்களெல்லாரும் "இவனையல்ல, பரபாசை விடுதலைபண்ண வேண்டும்" என்று சத்தமிடுகிறார்கள். பிலாத்து மிகவும் அமைதியாக யூதர்களிடம் பேசுகிறான். ஆனால் யூதர்களுடைய கோபமோ பற்றியெறிகிறது. சத்தமிட்டு பேசுகிறார்கள். தங்களுடைய எதிர்ப்பை உரத்த சத்தத்தினால் வெளிப்படுத்துகிறார்கள்.

நியாயம் விசாரிக்கப்படும்போது நியாயத்தை மாத்திரமே பார்க்கவேண்டும். ஜனங்களுடைய திரள் கூட்டத்தையும், அவர்கள் எவ்வளவு உரத்த சத்தமாய் கூக்குரலிடுகிறார்கள் என்பதையும் கவனித்துப் பார்த்தால் வழக்கை நியாயமாய் விசாரிக்க முடியாது. இயேசுவின் மீதுள்ள கோபத்தினால், யூதர்கள் "இயேசுவை சிலுவையில் அறையவேண்டும்" என்று உரத்த சத்தமாய் சொல்லுகிறார்கள். இந்தக் குழப்பத்தில் எதைப் பேசவேண்டுமென்று அவர்களுக்குத் தெளிவாய்த் தெரியவில்லை. இயேசுவை சிலுவையில் அறையவேண்டும் என்று சொன்னவர்கள், இப்போது, "பரபாசை விடுதலைபண்ணவேண்டும்" என்றும் சத்தமிடுகிறார்கள். இந்தப் பரபாஸ் என்பவன் ஒரு கள்ளன்.

நீதிபரரைக் கொலைசெய்யவேண்டும் என்று சொல்லுகிறவர்கள், இப்போது ஒரு கள்ளனை விடுதலைபண்ணவேண்டும் என்றும் சொல்லுகிறார்கள். களவு செய்யாதிருப்பாயாக என்பது பத்துக் கட்டளைகளில் ஒன்று. பரபாஸ் தேவனுடைய பிரமாணத்தை மீறியவன். ஆனால் யூதஜனங்களோ, தேவனுடைய பிரமாணத்தை மீறிய கள்ளனை விடுதலைபண்ண வேண்டுமென்று சத்தமிடுகிறார்கள்.

ஜனங்களுடைய பாதுகாப்புக்கும், சொத்துக்கும், உடமைகளுக்கும் கள்ளன் எப்போதுமே சத்துருவாகயிருப்பான். நகரத்திலுள்ள ஜனங்கள் பொதுவாகவே கள்ளர்களுக்கு சத்துருவாகத்தான் இருப்பார்கள். கள்ளர்களை விரட்டிப் பிடித்து தண்டிக்கவேண்டுமென்பதே அவர்களுடைய நோக்கமாக இருக்கும். ஆனால் இங்கோ தாங்களே பிடித்துக்கொடுத்திருக்கும் ஒரு கள்ளனை விடுதலைபண்ணவேண்டுமென்று கேட்கிறார்கள். இயேசுகிறிஸ்துவுக்குச் சத்துருவாக இருக்கவேண்டுமென்பதற்காக, ஒரு கள்ளனுக்கு சிநேகிதராயிருக்கிறார்கள்.

## அதிகாரம் - 18

இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாக இவர்கள் தங்களுடைய பாவங்களை அறிக்கை செய்யவேண்டும். தாங்கள் பாவிகள் என்பதை அங்கீகரிக்கவேண்டும். ஆனால் இவர்களோ பாவத்திற்கும் பாவிகளுக்கும் பங்காளிகளாகயிருக்கிறார்கள். மனுஷருடைய பாவம் ஒரு கள்ளனைப்போலவே இருக்கிறது. பாவம் நம்முடைய ஆத்துமாவை தேவனிடமிருந்து திருடி அபகரித்துக் கொள்கிறது. ஆனால் இந்த யூதஜனங்களோ தங்களுடைய மதியீனத்தினால் கள்ளனை விடுதலைபண்ணுவதற்கு தெரிந்து கொள்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து ஐசுவரிய சம்பன்னராக இருக்கிறார். நாம் இயேசுகிறிஸ்துவைப்பற்றிக் கொள்ளும்போது அவர் நம்மை எல்லாவிதமான ஐசுவரியங்களினாலும் ஆசீர்வதிப்பார். ஆனால் யூதர்களோ கள்ளனைத் தெரிந்துகொள்கிறார்கள். அந்தக் கள்ளன் அவர்களிடத்திலுள்ள அனைத்தையும் திருடிக்கொண்டுபோவான். கள்ளன் திருடவும், அழிக்கவும், கொல்லவுமே வந்திருக்கிறான். ஆனால் இயேசுகிறிஸ்துவோ நமக்கு ஜீவனைக்கொடுக்கவும், அந்த ஜீவன் நமக்குள் பரிபூரணப்படவும் வந்திருக்கிறார்.

## அதிகாரம் - 19

இயேசுகிறிஸ்துவின் பாடுகளும் சிலுவை மரணமும் மற்ற சுவிசேஷங்களிலும் எழுதப்பட்டிருக்கிறது. யோவான் எழுதின சுவிசேஷத்தில், மற்ற சுவிசேஷங்களில் எழுதப்பட்டிருக்கும் சம்பவங்களோடு, மேலும் சில சம்பவங்கள் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவையும், அவர் சிலுவையில் அறையப்படுவதையும் தெளிவாக எடுத்துச் சொல்லுவதே இந்த சுவிசேஷத்தின் நோக்கம்.

இயேசுகிறிஸ்து பிலாத்துவுக்கு முன்பாக விசாரிக்கப்படுகிறார் (யோவா 19:1-15). இயேசுகிறிஸ்துவுக்குத் தீர்ப்பு வழங்கப்படுகிறது. அவர் சிலுவையில் அறையப்படுகிறார் (யோவா 19:16-18). இயேசுகிறிஸ்துவினுடைய சிலுவையின்மேல் ஒரு மேல்விலாசம் எழுதிப்போடப்படுகிறது (யோவா 19:19-22). இயேசுகிறிஸ்துவின் வஸ்திரங்களைப் போர்ச்சேவகர்கள் பங்கிடுகிறார்கள் (யோவா 19:23,24). இயேசுகிறிஸ்துவின் தாயார் (யோவா 19:25-27). இயேசுகிறிஸ்துவுக்கு கடற்காளனை காடியிலே தோய்த்துக் குடிக்கக் கொடுக்கிறார்கள். (யோவா 19:28,29). இயேசுகிறிஸ்து "முடிந்தது" என்று சொல்லி தம்முடைய ஆவியை ஒப்புக்கொடுக்கிறார் (யோவா 19:30). இயேசுகிறிஸ்துவின் விலாவில் ஈட்டியினால் குத்துகிறார்கள் (யோவா 19:31-37). இயேசுகிறிஸ்துவின் சரீரத்தை அடக்கம்பண்ணுகிறார்கள் (யோவா 19:38-42).

### பிலாத்துவுக்கு முன்பாக இயேசு யோவா 19:1-15

**யோவா 19:1 அப்பொழுது பிலாத்து இயேசுவைப் பிடித்து வாரினால் அடிப்பித்தான்.**

**யோவா 19:2 போர்ச்சேவகர் முள்ளுகளினால் ஒரு முடியைப் பின்னி அவர் சிரசின்மேல் வைத்து, சிவப்பான ஒரு அங்கியை அவருக்கு உடுத்தி:**

**யோவா 19:3 யூதருடைய ராஜாவே, வாழ்க என்று சொல்லி, அவரைக் கையினால் அடித்தார்கள்.**

**யோவா 19:4 பிலாத்து மறுபடியும் வெளியே வந்து: நான் இவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன் என்று நீங்கள் அறியும்படிக்கு, இதோ, உங்களிடத்தில் இவனை வெளியே கொண்டுவருகிறேன் என்றான்.**

**யோவா 19:5 இயேசு, முள்முடியும் சிவப்பங்கியும் தரித்தவராய், வெளியே வந்தார். அப்பொழுது பிலாத்து அவர்களை நோக்கி: இதோ, இந்த மனுஷன் என்றான்.**

**யோவா 19:6 பிரதான ஆசாரியரும் சேவகரும் அவரைக் கண்டபோது: சிலுவையில் அறையும் சிலுவையில் அறையும் என்று சத்தமிட்டார்கள். அதற்குப் பிலாத்து: நீங்களே இவனைக் கொண்டுபோய்ச் சிலுவையில் அறையுங்கள், நான் இவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன் என்றான்.**

**யோவா 19:7 யூதர்கள் அவனுக்குப் பிரதியுத்தரமாக: எங்களுக்கு ஒரு நியாயப்பிரமாணமுண்டு, இவன் தன்னை தேவனுடைய குமாரனென்று சொன்னபடியினால், அந்த நியாயப்பிரமாணத்தின்படியே, இவன் சாகவேண்டும் என்றார்கள். யோவா 19:8 பிலாத்து இந்த வார்த்தையைக் கேட்டபொழுது அதிகமாய்ப் பயந்து,**

**யோவா 19:9 மறுபடியும் அரமனைக்குள்ளே போய், இயேசுவை நோக்கி: நீ எங்கேயிருந்து வந்தவன் என்றான். அதற்கு இயேசு மாறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை.**

**யோவா 19:10 அப்பொழுது பிலாத்து: நீ என்னோடே பேசுகிறதில்லையா? உன்னைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகாரமுண்டென்றும், உன்னை விடுதலைபண்ண எனக்கு அதிகாரமுண்டென்றும் உனக்குத்தெரியாதா என்றான்.**

**யோவா 19:11 இயேசு பிரதியுத்தரமாக: பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது; ஆனபடியினாலே என்னை உம்மிடத்தில் ஒப்புக் கொடுத்தவனுக்கு அதிக பாவமுண்டு என்றார்.**

**யோவா 19:12 அதுமுதல் பிலாத்து அவரை விடுதலைபண்ண வகைதேடினான். யூதர்கள் அவனை நோக்கி: இவனை விடுதலை பண்ணினால் நீர் இராயனுக்குச் சிநேகிதனல்ல, தன்னை ராஜாவென்கிறவனெவனோ அவன் இராயனுக்கு விரோதி என்று சத்தமிட்டார்கள்.**

## அதிகாரம் - 19

**யோவா 19:13 பிலாத்து இந்த வார்த்தையைக் கேட்டபொழுது, இயேசுவை வெளியே அழைத்துவந்து, தளவரிசைப்படுத்தின மேடையென்றும், எபிரெயு பாஷையிலே கபத்தா என்றும் சொல்லப்பட்ட இடத்திலே, நியாயாசனத்தின்மேல் உட்கார்ந்தான்.**

**யோவா 19:14 அந்த நாள் பஸ்காவுக்கு ஆயத்த நாளும் ஏறக்குறைய ஆறுமணி நேரமுமாயிருந்தது; அப்பொழுது அவன் யூதர்களை நோக்கி: இதோ, உங்கள் ராஜா என்றான்.**

**யோவா 19:15 அவர்கள்: இவனை அகற்றும் அகற்றும், சிலுவையில் அறையும் என்று சத்தமிட்டார்கள். அதற்குப் பிலாத்து: உங்கள் ராஜாவை நான் சிலுவையில் அறையலாமா என்றான். பிரதான ஆசாரியர் பிரதியுத்தரமாக: இராயனேயல்லாமல் எங்களுக்கு வேறே ராஜா இல்லை என்றார்கள்.**

### வாரினால் அடிப்பித்தான்

**அப்பொழுது பிலாத்து இயேசுவைப் பிடித்து வாரினால் அடிப்பித்தான். (யோவா 19:1)**

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பிலாத்துவுக்கு முன்பாக இன்னும் நின்றுகொண்டிருக்கிறார். எந்தவிதமான நீதியும் நியாயமுமில்லாமல் அவர் அநியாயமாகத் தண்டிக்கப்படுகிறார். இயேசுகிறிஸ்துவின்மீது குற்றம் சுமத்துகிற யூதர்கள் நிம்மதியில்லாமல் குழப்பத்தோடிருக்கிறார்கள். உரத்த சத்தத்தோடே கூக்குரலிடுகிறார்கள். தேசாதிபதியாகிய பிலாத்துவுக்கோ மனச்சாட்சியில் குழப்பம் உண்டாயிற்று. அவனும் தன் உள்ளத்தில் அமைதியில்லாமல், என்ன செய்வது என்று தெரியாமல் தவித்துக்கொண்டிருக்கிறான்.

பிலாத்து இயேசுகிறிஸ்துவை விசாரித்துவிட்டு, அவரிடத்தில் ஒரு குற்றமும் காணவில்லை என்றும், அவர் கள்ளம் கபடமற்றவரென்றும் யூதர் மத்தியிலே சாட்சியாக அறிவிக்கிறான். அதன் பின்பு அவனுடைய மனம் மாறிற்று. யூதருக்கு சகாயம்பண்ண விரும்பி இயேசுகிறிஸ்துவைக் குற்றவாளியென்று தீர்க்கிறான். இயேசுவைப் பிடித்து வாரினால் அடிக்குமாறு கட்டளைகொடுக்கிறான்.

பஸ்கா பண்டிகையின்போது யூதருடைய வழக்கத்தின் பிரகாரம் இயேசுவை விடுதலைபண்ணிவிடலாமென்று பிலாத்து யோசனையாயிருந்தான். ஆனால் அவனுடைய யோசனை நிறைவேறவில்லை. யூதர்கள் இயேசுவைவிடுதலைபண்ணவேண்டாமென்றும், அவருக்குப் பதிலாக பரபாஸ் என்னும் கள்ளனை விடுதலைபண்ண வேண்டுமென்றும் சத்தமிட்டுக் கூறுகிறார்கள். யூதஜனங்களின் விருப்பத்தை நிறைவேற்றும் வண்ணமாக பிலாத்து இயேசுவைப்பிடித்து வாரினால் அடிப்பிக்கிறான்.

இயேசுகிறிஸ்து குற்றவாளியென்று தீர்க்கப்பட்டபின்பு, அவர் வாரினால் அடிக்கப்படுவதாக மத்தேயு, மாற்கு ஆகிய சுவிசேஷங்களில் எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் யோவான் எழுதின சுவிசேஷத்திலோ, இயேசு குற்றவாளியென்று தீர்க்கப்படுவதற்கு முன்பாகவே, அவர் வாரினால் அடிக்கப்படுவதாக எழுதப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவை வாரினால் அடித்துவிட்டு அவரை விடுதலைபண்ணி விடலாமென்று பிலாத்து மனதாயிருந்ததாக லூக்கா எழுதின சுவிசேஷத்தில் எழுதப்பட்டிருக்கிறது. ஆகையினால் இயேசுவை வாரினால் அடிப்பது, அவரைக் குற்றவாளியென்று தீர்க்கப்படுவதற்கு முன்பாக நடைபெற்ற சம்பவமாக இருக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்துவின்மீது குற்றம் சுமத்துகிற யூதர்களைச் சந்தோஷப்படுத்த வேண்டுமென்பதற்காகவே, பிலாத்து இயேசுவைப் பிடித்து வாரினால் அடிக்கச் சொல்லுகிறான். ரோமப்பேரரசின் உத்தரவுப்படி வாரினால் அடிப்பது மிகவும் கொடூரமான தண்டனையாக இருக்கும். எத்தனை அடிகள் அடிக்கவேண்டும் என்னும் கட்டுப்பாடு எதுவுமில்லை. எத்தனை அடிகள் வேண்டுமானாலும் அடிக்கலாம். ஆனால் யூதருடைய நியாயத்தீர்ப்பின்படி, அதிகபட்சம் நாற்பது அடிகள் மாத்திரமே வாரினால் அடிக்கமுடியும். இயேசுகிறிஸ்துவை வாரினால் அடிக்கும்போது அதனுடைய வேதனைகளையும், அதனால் உண்டாகும் அவமானத்தையும் அவர் நமக்காகத் தம்மீது ஏற்றுக்கொள்கிறார்.

"நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமத்தினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். நமக்கு சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்" (ஏசா 53:5) என்னும் வேத வாக்கியம் நிறைவேறத்தக்கதாக, இயேசுகிறிஸ்து நமக்காக வாரினால் அடிக்கப்படுகிறார். தாம் பாடுகளை அனுபவிக்கப்போகும் சம்பவத்தை இயேசுகிறிஸ்து தாமே முன்னறிவித்திருக்கிறார் (மத் 20:19; மாற் 10:34; லூக் 18:33).

## அதிகாரம் - 19

ஏசாயா தீர்க்கதரிசி இயேசுகிறிஸ்துவின் பாடுகளைப்பற்றி தீர்க்கதரிசனமாகச் சொல்லும்போது "அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்" (ஏசா 53:5) என்று முன்னறிவிக்கிறார். பிரதான வைத்தியராகிய இயேசுகிறிஸ்து, பிணியாளிகளாகிய நாம் குணமடைய வேண்டுமென்பதற்காக, அவரே வாரினால் அடிக்கப்படுகிறார். இயேசுகிறிஸ்துவின் தழும்புகளினால் அவரைப் பின்பற்றுகிற விசுவாசிகளாகிய நாம் பரிசுத்தமாக்கப்படுகிறோம். நமக்குக் கிடைக்கவேண்டிய அடிகளை இயேசுகிறிஸ்து தாமே ஏற்றுக்கொண்டதினால், அவரைப் பின்பற்றுவது நமக்கு இலகுவாயிற்று. நம்முடைய சரீரங்களில் தழும்புகள் உண்டாகதவாறு இயேசுகிறிஸ்து தாமே எல்லா தழும்புகளையும் தம்மீது ஏற்றுக்கொள்கிறார்.

### யூதருடைய ராஜாவே, வாழ்க

**போர்ச்சேவகர் முள்ளுகளினால் ஒரு முடியைப் பின்னி அவர் சிரசின்மேல் வைத்து, சிவப்பான ஒரு அங்கியை அவருக்கு உடுத்தி: யூதருடைய ராஜாவே, வாழ்க என்று சொல்லி, அவரைக் கையினால் அடித்தார்கள் (யோவா 19:2,3).**

பிலாத்து இயேசுகிறிஸ்துவைப் பிடித்து வாரினால் அடிப்பித்து, அதன்பின்பு அவரைத் தம்முடைய போர்ச்சேவகரிடம் ஒப்புக் கொடுக்கிறான். அவர்கள் இயேசுகிறிஸ்துவைப் பரியாசம்பண்ணி, ஒரு விளையாட்டுப்பொருளைப் பயன்படுத்துவது போல அவரைப் பாடாய்ப் படுத்துகிறார்கள். முள்ளுகளினாலே ஒரு முடியைப் பின்னி அவர் சிரசின்மேல் வைக்கிறார்கள். சிவப்பான ஒரு அங்கியை அவருக்கு உடுத்துகிறார்கள். "யூதருடைய ராஜாவே வாழ்க" என்று சொல்லுகிறார்கள். அவரைக் கையினால் அடிக்கிறார்கள்.

பிலாத்து இயேசுகிறிஸ்துவை மிகவும் அநியாயமாக நடத்துகிறான். நியாயம் விசாரிக்கவேண்டிய பிலாத்துவிடத்தில் நீதி நியாயம் எதுவுமில்லை. இயேசுகிறிஸ்து பாடுகளை அனுபவிப்பதைப் பார்த்து தானும் சந்தோஷப்படவேண்டும், தன்னுடைய போர்ச்சேவகரும் சந்தோஷப்படவேண்டும் என்று விரும்புகிறான். பிலாத்துவைப்போலவே ஏரோதுவும் இயேசுகிறிஸ்துவை துன்புறுத்துகிறான். "ஏரோது தன் போர்ச்சேவகரோடே அவரை நிந்தித்து பரியாசம்பண்ணி, மினுக்கான வஸ்திரத்தை அவருக்கு உடுத்துகிறான்" (லூக் 23:11).

யூதருக்கு இது பண்டிகைக்காலம். திருவிழா காலங்களில் மேடையில் வேடிக்கைகளும் விளையாட்டுக்களும் நடத்துவதுபோல, இயேசுகிறிஸ்துவை விளையாட்டுப் பொருளாகப் பாவித்து, அவரை பாடாய்ப்படுத்துகிறார்கள். இதைப்பார்த்து போர்ச்சேவகர்கள் சந்தோஷமாயிருக்கிறார்கள். யூதர்களும் சந்தோஷப்படுகிறார்கள். யூதர்களுடைய இருதயம் பாவத்தினால் நிறைந்திருக்கிறது. ஆகையினால் அவர்கள் நியாயத்தில் சந்தோஷப்படாமல் அநியாயத்தில் சந்தோஷப்படுகிறார்கள்.

இயேசு கிறிஸ்துவைத் துன்புறுத்துகிறவர்கள் தேசாதிபதியின் போர்ச்சேவகர்கள். ரோமப்படை வீரர்கள் முரட்டுத்தனமாக இருப்பார்கள். இயேசுகிறிஸ்துவோ தம்முடைய சரீரத்திலும் சுபாவத்திலும் மென்மையானவர். புறாவைப்போன்றவர். இயேசுகிறிஸ்து தம்முடைய ஆவிக்குரிய ராஜ்யத்தைப்பற்றிச் சொல்லி, அந்த ராஜ்யத்திற்கு தாம் ஆவிக்குரிய ராஜாவாயிருப்பதாகப் பிலாத்துவிடம் சொன்னார். தம்முடைய ராஜ்யம் பூமிக்குரியதல்ல என்பதையும் தெளிவுபடுத்தினார். ஆனால் அவர்களோ இயேசுகிறிஸ்துவின் பரிசுத்தமான உபதேசத்தைத் தவறாக வியாக்கியானம் பண்ணுகிறார்கள். தங்களுடைய சந்தோஷத்திற்காக அவர்கள் கிறிஸ்துவுக்கு சிவப்பான ஒரு அங்கியை உடுத்துகிறார்கள். அவரைப் பரியாசம்பண்ணுகிறார்கள்.

இயேசு கிறிஸ்துவின் உபதேசங்களெல்லாமே ஆவிக்குரிய சத்தியங்களை வெளிப்படுத்துகிறது. போர்ச்சேவகர்கள். அவருக்குச் சிவப்பான அங்கியை உடுத்துகிறார்கள். சிவப்பான அங்கி ராஜ வஸ்திரத்திற்கு ஒப்புமையானது. இயேசுகிறிஸ்துவை ராஜாவைப்போலப் பாவனைபண்ணி வேஷம் போடுவதுபோல அவருக்கு சிவப்பான அங்கியை உடுத்துகிறார்கள். இயேசுகிறிஸ்து தம்முடைய ராஜ்யத்தைப்பற்றிச் சொல்லும்போது, அது இந்த உலகத்திற்குரியதல்ல என்பதை ஆரம்பத்திலேயே தெளிவுபடுத்துகிறார். தேவனுடைய ராஜ்யமும் ஆவிக்குரியது. இந்த ராஜ்யத்தின் ராஜாவாகிய தேவனும் ஆவிக்குரியவர். மனுஷருடைய ஆத்துமாக்களே தேவனுடைய ராஜ்யத்தில் பிரஜைகளாயிருக்கிறவர்கள். இயேசுகிறிஸ்து ஆவிக்குரிய ரீதியாகச் சொல்லுகிற உபதேசங்களை, ரோமருடைய போர்ச்சேவகர்களால் ஆவிக்குரிய ரீதியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. அவர்கள் உலகப்பிரகாரமாகச் சிந்தித்துப் பார்த்து, இயேசுகிறிஸ்துவுக்கு ராஜாவைப்போல வஸ்திரம் உடுத்தி அவரைப் பரியாசம்பண்ணுகிறார்கள்.

## அதிகாரம் - 19

போர்ச்சேவகர்கள் முள்ளுகளினால் ஒரு முடியைப் பின்னி அவர் சிரசின்மேல் வைக்கிறார்கள். ரோமப்பேரரசின் ராஜாக்கள் கிரீடம் சூட்டியிருப்பார்கள். அவருக்குப் போர்ச்சேவகர்கள் கீழ்ப்படிவார்கள். அது போலவே இயேசுவுக்கும் ஒரு கிரீடத்தைப் பின்னி, அதை அவர் சிரசின் மேல் வைக்கிறார்கள். ஆனால் இது பொற்கிரீடமோ, ராஜகிரீடமோ அல்ல, இது முள்கிரீடம். பரியாசம்பண்ணுகிற கிரீடம். இயேசுவினுடைய சிரசின்மேல் முள்கிரீடத்தைச் சூட்டி தேவனுடைய அதிகாரத்திற்குத் தாங்கள் கீழ்ப்படிகிறவர்கள் போல நடிக்கிறார்கள். ஆனால் இவர்களுடைய மனச்சாட்சியோ சீர்கெட்டுப்போயிருக்கிறது. ஒருகுற்றமும் செய்யாத இயேசுகிறிஸ்துவின் தலையின்மேல் முள்கிரீடம் சூட்டுமளவுக்கு இவர்களுடைய மனச்சாட்சி செயலற்றுப்போயிருக்கிறது. பரியாசக்காரரின் பாதைகளில் முட்களும் கண்ணிகளும் இருக்கும்.

போர்ச்சேவகர்கள் இயேசுகிறிஸ்துவைத் துன்புறுத்தினாலும், அவர் எல்லா வேதனைகளையும் அவமானங்களையும் பொறுமையோடு சகித்துக்கொள்கிறார். பரிசுத்தமான இயேசுகிறிஸ்து நமக்காகவே இந்தப் பாடுகளைத் தம்மீது ஏற்றுக் கொள்கிறார். போர்ச்சேவகர்கள் இயேசு கிறிஸ்துவைப் பார்த்து பரியாசம் பண்ணும்போது, முள்முடி சூட்டப்பட்டிருக்கிற இயேசுகிறிஸ்துவை நம்முடைய மனக் கண்களினால் பார்த்து, அவர் நமக்காகவே இத்தனை பாடுகளையும் அனுபவிக்கிறார் என்பதை நம்முடைய உள்ளத்தில் உணரவேண்டும். இயேசுகிறிஸ்து நம்மீது வைத்திருக்கும் அன்பும் கிருபையும் பெரிது.

இயேசுகிறிஸ்து நமக்காகத் தம்முடைய ஜீவனையே ஒப்புக்கொடுக்கிறார். போர்ச் சேவகர்கள் தம்மைப் பரியாசம்பண்ணினாலும், இயேசுகிறிஸ்து நமக்காக அதையும் சகித்துக்கொள்கிறார். இயேசுகிறிஸ்துவின் மரணம் வேதனையும் அவமானமும் நிறைந்த மரணமாகயிருக்கிறது.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திலும், சில சமயங்களில் நமக்குப் பாடுகளும் வேதனைகளும் வரலாம். நம்முடைய சரீரத்தில் முள்குத்தப்பட்டிருக்கலாம். நமக்கு வேதனைகள் உண்டாகலாம். சிறிய வேதனைகளைக்கூட தாங்கிக்கொள்ள முடியாமல் நாம் முறுமுறுக்கலாம். இப்படிப்பட்ட வேளைகளில், நமக்காகத் தம்முடைய சிரசின் மீதுமுள் முடி சூட்டப்பட்ட இயேசுகிறிஸ்துவையே நினைத்துப்பார்க்கவேண்டும். நமக்காக வேதனைகளையும், அடிகளையும், அவமானத்தையும் சகித்துக்கொண்ட இயேசுகிறிஸ்துவையே நோக்கிப் பார்க்கவேண்டும்.

நம்மை இரட்சிப்பதற்காகவும், நமக்கு உபதேசம்பண்ணுவதற்காகவும் இயேசுகிறிஸ்து தம்முடைய சிரசின்மீது முள்முடியை ஏற்றுக்கொள்கிறார். அவமானத்தைச் சகித்துக்கொள்கிறார். அவர்கள் "யூதருடைய ராஜாவே வாழ்க" என்று பரியாசம்பண்ணி வாழ்த்தியபோது, இயேசுகிறிஸ்து நமக்காகவே அந்தப் பரியாசத்தையும் சகித்துக்கொள்கிறார்.

இயேசுகிறிஸ்துவுக்கு உடுத்தப்பட்ட சிவப்பு அங்கி ஒரு ராஜாவுக்கு உடுத்தவேண்டிய அங்கியாகயிருக்கிறது. ஆயினும் ரோமப்பேரரசின் போர்ச்சேவகர்களுக்கு நடுவில் இந்த சிவப்பு அங்கியானது ஒரு கோமாளிக்கு உடுத்தப்படுகிற அங்கியாகத் தெரிகிறது. ரோமப்போர்ச்சேவகர்கள் யுத்தம்பண்ணி எதிரியை ஜெயித்து, எதிரி தேசத்து ராஜாவைப் பிடித்து வரும்போது, அந்த ராஜாவுக்கு சிவப்பு அங்கியை உடுத்தி அவரைப் பரியாசம்பண்ணுவது வழக்கம். அதுபோலவே போர்ச்சேவகர்கள் இயேசுகிறிஸ்துவுக்கும் சிவப்பு அங்கியை உடுத்தி அவரைப் பரியாசம்பண்ணுகிறார்கள்.

நமக்கு மேன்மை உண்டாக வேண்டுமென்பதற்காக இயேசுகிறிஸ்து அவமானத்தையும் பரியாசத்தையும் தம்மீது ஏற்றுக்கொள்கிறார். போர்ச்சேவகர்கள் இயேசுகிறிஸ்துவை பரியாசம்பண்ணுவதற்காக "யூதருடைய ராஜாவே வாழ்க" என்று சொன்னாலும், கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமோ, நம்முடைய உள்ளதின் ஆழத்திலிருந்து, நன்றியுள்ள இருதயத்தோடு "எங்களுடைய ராஜாவே வாழ்க" என்று ஆர்ப்பரிக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவை மெய்யாகவே மகிமைப்படுத்தவேண்டும். நமக்காகப் பாடுகளையும் வேதனைகளையும் சகித்துக்கொண்ட இயேசுகிறிஸ்துவுக்காகவும், அவருடைய சுவிசேஷத்திற்காகவும், நாமும் பாடுகளையும் வேதனைகளையும் நீடிய பொறுமையோடு சகித்துக்கொள்ளவேண்டும்.

**இதோ, இந்த மனுஷன்**

**பிலாத்து மறுபடியும் வெளியே வந்து: நான் இவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன் என்று நீங்கள் அறியும்படிக்கு, இதோ, உங்களிடத்தில் இவனை வெளியே கொண்டுவருகிறேன் என்றான். இயேசு, முள்முடியும் சிவப்பங்கியும் தரித்தவராய், வெளியே வந்தார். அப்பொழுது பிலாத்து அவர்களை நோக்கி: இதோ, இந்த மனுஷன் என்றான் (யோவா 19:4,5).**

## அதிகாரம் - 19

இயேசுகிறிஸ்துவின்மீது குற்றம் சுமத்திய யூதர்களைப் பிரியப்படுத்தவேண்டுமென்று பிலாத்து விரும்புகிறான். இயேசுகிறிஸ்து பிலாத்துவின் அரமனைக்குள் வாரினால் அடிக்கப்பட்டு, முள்முடி சூட்டப்பட்டவராக, சிவப்பு அங்கி உடுத்தப்பட்டவராக இருக்கிறார். இயேசுகிறிஸ்துவை இந்தக் கோலத்தில் பார்த்தால், யூதர்கள் மகிழ்ச்சியடைவார்கள் என்று எதிர்பார்த்து, இயேசுகிறிஸ்துவை அலங்கோலமான அந்தக் கோலத்தில் தன் அரமனையிலிருந்து வெளியே கொண்டுவருகிறான்.

இயேசுகிறிஸ்துவிடத்தில் பிலாத்து ஒரு குற்றமும் காணவில்லை. ரோமப்பேரரசின் பிரமாணத்தின்படி, குற்றம் நிரூபிக்கப்பட்டால்தான் குற்றவாளிக்குத் தண்டனை கொடுக்க முடியும். பிலாத்துவின் மனச்சாட்சி குழப்பத்திலிருக்கிறது. பிலாத்து இயேசுகிறிஸ்துவிடத்தில் ஒரு குற்றமும் காணவில்லையென்றால், அவரை யூதரிடத்தில் அழைத்துக்கொண்டு வரவேண்டிய அவசியமில்லை. தன்னுடைய மனச்சாட்சியின்படி தீர்ப்பு செய்து, இயேசு குற்றமற்றவர் என்று சொல்லி, அவரை விடுதலைபண்ணிவிடலாம். ஆனால் பிலாத்துவோ தன்னுடைய மனச்சாட்சியையும் சந்தோஷப்படுத்த விரும்புகிறான். அதேவேளையில் இயேசுகிறிஸ்துவின்மீது குற்றம் சுமத்துகிற யூதரையும் சந்தோஷப்படுத்த விரும்புகிறான்.

இயேசுகிறிஸ்துவினிடத்தில் பிலாத்து ஒரு குற்றமும் காணவில்லை. ஆகையினால் அவரைச் சிலுவையில் அறைந்து கொல்லுவதற்குப் பிலாத்துவிற்கு மனமில்லை. அதேவேளையில் இயேசுகிறிஸ்துவின்மீது குற்றம் சுமத்துகிற யூதர்கள் மிகுந்த கோபத்தோடிருக்கிறார்கள். அவர்களுடைய கோபத்தைத் தணித்து, அமைதிப்படுத்துவதற்காக இயேசுகிறிஸ்துவை வாரினால் அடிப்பித்து, பரியாசம்பண்ணி அவர்களுக்கு முன்பாக நிறுத்துகிறான். இந்தச் செய்கையினால் யூதர்களும் சந்தோஷப்படுவார்கள் என்றும், தன்னுடைய மனச்சாட்சிக்கும் சந்தோஷம் உண்டாகும். இயேசுவையும் விடுதலைபண்ணிவிடலாமென்று பிலாத்து யோசிக்கிறான்.

இக்காலத்தில் பிலாத்துவைப்போலவே ஒரு சில விசுவாசிகள் நடந்துகொள்கிறார்கள். பெரிய பாவங்களைச் செய்யக்கூடாது என்று நினைத்து சிறிய பாவங்களைச் செய்கிறார்கள். முடிவில் சிறிய பாவம் அவர்களைப் பெரியபாவத்திற்கு வழிநடத்துகிறது. இதன் முடிவில் சிறிய பாவத்தையும் பெரிய பாவத்தையும் சேர்ந்து ஒட்டுமொத்தமாகச் செய்துவிடுகிறார்கள். ஒரு காரியம் பாவம் என்று நம்முடைய மனத்திற்கு உணர்த்தப்பட்டால், உடனடியாக நாம் அதை விட்டு விலகிவிட வேண்டும். நம்முடைய சுயசாமர்த்தியத்தைப் பயன்படுத்தி, ஒரு பாவத்தை மற்றொரு பாவத்தினால் நீக்கிப்போட முயற்சிபண்ணக்கூடாது. நம்முடைய சுயமுயற்சியினால் நம்முடைய பாவங்களிலிருந்து நம்மால் ஒருபோதும் இரட்சிப்படைய முடியாது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மாத்திரமே நம்முடைய ஆத்துமாவின் பாவங்களை இரட்சிக்கிற இரட்சகராகயிருக்கிறார்.

பிலாத்து தன்னுடைய ஆட்சி அதிகாரத்தைப்பற்றியும் கவலைப்படுகிறான். யூதர்களெல்லோரும் பிலாத்துவுக்கு விரோதமாகக் கலகம்பண்ணினால், பிலாத்துவின் தேசாதிபதி பதவிக்கு ராயன் மூலமாக ஆபத்து உண்டாகும். ஆகையினால் பிலாத்து யூதர்களையும் பிரியப்படுத்த வேண்டுமென்று விரும்புகிறான். இதற்காக பிலாத்து மறுபடியும் வெளியே வந்து "நான் இவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன் என்று நீங்கள் அறியும்படிக்கு, இதோ உங்களிடத்தில் இவனை வெளியே கொண்டு வருகிறேன்" என்று இயேசுவை யூதருக்கு முன்பாக நிறுத்துகிறான். இயேசுவைப்பற்றிப் பிலாத்து அவர்களிடத்தில் சொல்லும்போதோ, "இதோ இந்த மனுஷன்" என்றே சொல்லுகிறான்.

இயேசுகிறிஸ்துவோ முள்முடியும், சிவப்பு அங்கியும் தரித்தவராய், வெளியே வருகிறார். பிலாத்து இயேசுவை ஒரு அடிமையைப்போல நடத்துகிறான். அவர்மீது குற்றம் சுமத்தியவர்களுக்கு முன்பாக இயேசுவைக் காயப்படுத்தி, அவமானப்படுத்தி நிறுத்துகிறான். இயேசுவுக்கு இவ்வளவு அவமானம் உண்டானதினால், இனிமேல் அவருக்கு மனுஷர் மத்தியில் ஒரு மரியாதையும் கிடைக்காது என்று நினைக்கிறான். பிலாத்துவின் சிந்தனை உலகப்பிரகாரமான சிந்தனையாகும். ஏனெனில் பிலாத்து இயேசுவை அவமானப்படுத்தினாலும், இக்காலத்தில் ஏராளமான விசுவாசிகள் இயேசுமகறிஸ்துவைக் கனப்படுத்துகிறார்கள். இயேசுகிறிஸ்துவின் பாடுகளையும் அவமானங்களையும், நிந்தைகளையும் தியானித்துப் பார்த்து, இயேசுகிறிஸ்துவைப் போற்றிப் புகழுகிறார்கள்.

## அதிகாரம் - 19

பிலாத்து இயேசுவை அடித்துத் துன்புறுத்துவதோடு, அவருக்கு சிவப்பான அங்கியையும் உடுத்தி அவரை அவமானப்படுத்துகிறான். ஒரு வேடிக்கைப் பொருளைப்போல இயேசுகிறிஸ்துவை காட்சிப்பொருளாக யூதருக்கு முன்பாக நிறுத்துகிறான். இயேசுகிறிஸ்துவோ நமக்காக எந்த அவமானத்தையும் சகித்துக்கொள்ள சித்தமுள்ளவராயிருக்கிறார். பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதே கிறிஸ்துவுக்குப் பிரியமாயிருக்கிறது. நம்முடைய ஜீவியத்தில் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினிமித்தமும், அவருடைய சுவிசேஷத்தினிமித்தமும் நமக்கு அவமானமும் நிந்தைகளும் வரும்போது, நமக்காக நிந்தைகளையும் அவமானங்களையும் சகித்துக்கொண்ட இயேசுகிறிஸ்துவையே நோக்கிப்பார்க்க வேண்டும். நிந்தைகளையும் அவமானங்களையும் சுமக்க நாம் ஆயத்தமாயிருக்க வேண்டும்.

பிலாத்து யூதஜனங்களைப் பிரியப்படுத்தும் விதமாக, இயேசுவை அவர்களுக்கு முன்பாக நிறுத்தி, அவர்களை நோக்கி "இதோ இந்த மனுஷன்" என்று கூறுகிறான். தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவை பிலாத்து "மனுஷன்" என்று கூறுகிறான். யூதஜனங்களும் இயேசுகிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அங்கீகரிக்கவில்லை. அவர்களைப் பிரியப்படுத்தும் வண்ணமாக, பிலாத்துவும் இயேசுவை மனுஷனென்று அவர்களிடத்தில் சொல்லுகிறான்.

இயேசுகிறிஸ்து சாதாரண மனுஷன்தான் என்றும், இப்போது அவர் இருக்கிற நிலமையைப்பார்த்து அவர்மீது யூதர்கள் பரிதாபப்படுவார்களென்றும் பிலாத்து எதிர்பார்க்கிறான். இயேசு சாதாரணமான மனுஷனாயிருப்பதினால், அவருக்குப் பெரிய தண்டனை எதுவும் கொடுக்கவேண்டியதில்லை என்றும் யோசித்துப் பார்க்கிறான்.

இயேசுகிறிஸ்து தம்முடைய பாடுகளை அனுபவிக்கும்போது மெய்யாகவே அவர் தம்முடைய மனுஷத்துவத்திலிருக்கிறார். பிலாத்து தன்னுடைய உள்ளத்தில் எப்படி நினைத்து, இயேசுவை "இதோ இந்த மனுஷன்" என்று கூறினான் என்பது சரியாக வெளிப்படுத்தப்படவில்லை. ஆனால் இயேசுகிறிஸ்துவோ, தம்முடைய மனுஷத்துவத்தில் நமக்காகப் பாடுகளையும் வேதனைகளையும் அனுபவிக்கிறார்.

நாமும் இயேசுகிறிஸ்துவை நோக்கிப்பார்க்கும்போது, தம்முடைய மனுஷத்துவத்தில் நமக்காகப் பாடுகளையும் வேதனைகளையும் அனுபவித்து, நமக்காக இரத்தம் சிந்திய இயேசுகிறிஸ்துவின் மனுஷத்துவத்தை நோக்கிப்பார்க்கவேண்டும். அவரையே நோக்கிப்பார்த்து அவரிடத்தில் அன்புகூரவேண்டும்.

### சிலுவையில் அறையும்

**பிரதான ஆசாரியரும் சேவகரும் அவரைக் கண்டபோது: சிலுவையில் அறையும் சிலுவையில் அறையும் என்று சத்தமிட்டார்கள். அதற்குப் பிலாத்து: நீங்களே இவனைக் கொண்டுபோய்ச் சிலுவையில் அறையுங்கள், நான் இவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன் என்றான் (யோவா 19:6).**

இயேசுகிறிஸ்துவின் மீது ஜனங்களுக்கு இரக்கமும் பரிதாபமும் உண்டாகும் என்று நினைத்து பிலாத்து இயேசுவை வெளியேகொண்டு வருகிறான். அவர் முள்முடியும் சிவப்பங்கியும் தரித்தவராய் வெளியே வருகிறார். ஆனால் பிரதான ஆசாரியரும் சேவகரும் இயேசுகிறிஸ்துவின்மீது சிறிதும் பரிதாபப்படவில்லை. இயேசுவைக் கண்டபோது அவர்கள் "சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும்" என்று சத்தமிடுகிறார்கள்.

அங்கு கூடியிருக்கிற திரளான ஜனங்களில் பொதுவான யூதர்கள் ஒருவேளை அமைதியாக இருந்திருக்கலாம். அவர்களுக்கு இயேசுகிறிஸ்துவின்மீது அனுதாபமும் பரிதாபமும் உண்டாயிருக்கலாம். இயேசுகிறிஸ்துவிடத்தில் ஒரு குற்றமும் காணவில்லை என்று பிலாத்து கூறியதை இவர்களும் அங்கீகரித்திருக்கலாம். இப்படிப்பட்ட அமைதியான சூழ்நிலையில் பிரதான ஆசாரியரும் சேவகரும் சத்தமிட்டுப் பேசுகிறார்கள். இயேசுவைச் சிலுவையில் அறையுமென்று கூக்குரலிடுகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாக பிரதான ஆசாரியர் மிகுந்த கோபத்தோடிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து ஒரு பாவமும் அறியாதவர் என்பதை ஏற்றுக்கொள்ள அவர்கள் ஆயத்தமாயில்லை. அவர் ஒருவேளை ஒரு குற்றமும் செய்யாதவராயிருந்தாலும், அவர் சிலுவையில் அறையப்படவேண்டுமென்பதே பிரதான ஆசாரியரின் விருப்பம், நீதியும் நியாயமும் எப்படியிருந்தாலும், இவர்கள் தங்களுடைய மனதின் விருப்பத்தை நிறைவேற்றியே தீரவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட சுபாவம் தேவனுடைய நீதிக்கும் நியாயத்திற்கும் விரோதமானது.

## அதிகாரம் - 19

இயேசுகிறிஸ்து ஒரு குற்றமும் செய்யாதவராக இருந்தாலும், அவரை வாரினால் அடிக்கிறார்கள். முள்முடியைப் பின்னி அவருடைய சிரசின்மேல் வைக்கிறார்கள். அவருக்கு சிவப்பான அங்கியை உடுத்துகிறார்கள். இவை அனைத்தையும் இயேசுகிறிஸ்து நீடிய பொறுமையோடு சகித்துக்கொள்கிறார். பிலாத்து இயேசுகிறிஸ்துவைக் கவனமாகக் கவனித்துக்கொண்டிருக்கிறான். அவர் ஒரு குற்றமும் செய்யாதவர் என்பது அவனுடைய மனச்சாட்சிக்குத் தெரிகிறது. ஆனால் பிரதான ஆசாரியரோ சத்தியத்தைக் காணக்கூடாதவாறு தங்களுடைய கண்களை மூடிக்கொள்கிறார்கள்.

பிரதான ஆசாரியர் நீதியின் பாதையில் நடப்பதற்குப் பதிலாக தங்களுடைய சுயவிருப்பத்தின் பாதையில் நடக்கத் தீர்மானித்திருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவை எப்படியாவது கொன்றுபோடவேண்டுமென்று கொலைவெறியிலிருக்கிறார்கள். ஜனங்கள் அமைதியாக இருந்தாலும், பிரதான ஆசாரியர் சேவகரைத் தங்களுடன் சேர்த்துக்கொண்டு இயேசுவை "சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும்" என்று சத்தமிடுகிறார்கள்.

பிரதான ஆசாரியரும் சேவகரும் இயேசுவைக்கண்டபோது, அவரை "சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும்" என்று சத்தமிடுக்கிறார்கள். பிலாத்துவோ அவர்களிடத்தில் "நீங்களே இவனைக் கொண்டுபோய் சிலுவையில்அறையுங்கள்'' என்று கோபத்தோடு கூறுகிறான். இயேசுகிறிஸ்துவை யூதர்களால் சிலுவையில் அறைய முடியாது என்பது பிலாத்துவுக்குத் தெரியும். ஒருவரை சிலுவையில் அறையும் அதிகாரம் யூதருக்குக் கொடுக்கப்படவில்லை. அந்த அதிகாரம் ரோமப்பேரரசிடம் மாத்திரமே உள்ளது. "தேவையில்லாமல் இங்கு சத்தமிடாதீர்கள், உங்களால் முடிந்ததை நீங்கள் செய்து கொள்ளுங்கள்'' என்று பொருள்படுமாறு பிலாத்து கூறுவது போல இருக்கிறது.

பிலாத்து இயேசுகிறிஸ்துவினிடத்தில் ஒரு குற்றமும் காணவில்லை. ஆனால் பிரதான ஆசாரியரோ இயேசுவைச் சிலுவையில் அறையவேண்டுமென்று சத்தமிடுகிறார்கள். பிலாத்து இதற்கு மேலும் பிரதான ஆசாரியருடைய கூக்குரலைக் கேட்க விரும்பவில்லை. அவர்களுடைய வாயை அடக்கும் விதமாக பிலாத்து அவர்களோடு கோபத்துடன் பேசுகிறான். நாமும் பாவத்திலிருந்து விடுதலை பெற வேண்டுமானால், சோதனைக்கு நம்முடைய செவிகளை அடைத்துக் கொள்ளவேண்டும்.

பிரதான ஆசாரியர் இயேசுகிறிஸ்துவின் மீதுள்ள கோபத்தினால், அவரை பிலாத்துவினிடம் அழைத்து வந்திருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின்மீது பொய்யாய் குற்றம் சுமத்துகிறார்கள். பிலாத்துவுக்குப் பிரதான ஆசாரியரின் சதிஆலோசனை நன்றாகத் தெரிகிறது. இயேசுகிறிஸ்து குற்றமற்றவரென்று பிலாத்துவினுடைய மனச்சாட்சி அவனிடத்தில் பேசுகிறது. ஆனால் பிலாத்துவுக்கோ தன்னுடைய மனச்சாட்சிக்குச் செவிகொடுக்க, அதன் பிரகாரம் செயல்பட தைரியமில்லை.

### நியாயப்பிரமாணமுண்டு

**யூதர்கள் அவனுக்குப் பிரதியுத்தரமாக: எங்களுக்கு ஒரு நியாயப்பிரமாணமுண்டு, இவன் தன்னை தேவனுடைய குமாரனென்று சொன்னபடியினால், அந்த நியாயப்பிரமாணத்தின்படியே, இவன் சாகவேண்டும் என்றார்கள் (யோவா 19:7).**

பிலாத்துவின் கோபமான வார்த்தையைக் கேட்டு பிரதான ஆசாரியரும் சேவகரும் பயந்துவிடவில்லை. பிலாத்துவினிடத்தில் மேலும் விவாதம்பண்ணுகிறார்கள். "எங்களுக்கு ஒரு நியாயப் பிரமாணமுண்டு, இவன் தன்னை தேவனுடைய குமாரனென்று சொன்னபடியினால், அந்த நியாயப்பிரமாணத்தின்படியே, இவன் சாகவேண்டும்" என்று பிலாத்துவினிடத்தில் பிரதியுத்தரமாகக் கூறுகிறார்கள். யூதர்கள் தங்களுடைய நியாயப் பிரமாணத்தை மேன்மைப்படுத்துகிறார்கள். மெய்யாகவே யூதருடைய நியாயப்பிரமாணம் மிகவும் மேன்மையானது. ஆனால் யூதர்களோ தங்களுடைய நியாயப்பிரமாணத்தை வீணாக மேன்மை பாராட்டுகிறார்கள். நியாயப்பிரமாணத்தை நன்மைக்கு ஏதுவாக பயன்படுத்தாமல் தீமைக்கு ஏதுவாகப் பயன்படுத்துகிறார்கள்.

இயேசு கிறிஸ்துவுக்கு விரோதமாகப் பிரதானஆசாரியர் ஒவ்வொரு குற்றச்சாட்டாக கூறிக்கொண்டே போகிறார்கள். இயேசுகிறிஸ்து தம்மை தேவனுடைய குமாரன் என்று சொன்னபடியினால், அந்த வார்த்தை நியாயப்பிரமாணத்திற்கு விரோதமானது என்பது பிரதான ஆசாரியரின் விவாதம். இயேசுகிறிஸ்து மெய்யாகவே தேவனுடைய குமாரனாகவே இருக்கிறார். ஆனால் இந்தச் சத்தியத்தைப் புரிந்துகொள்ள முடியாதபடி பிரதான ஆசாரியரின்மனக்கண்கள் குருடாயிருக்கிறது.

## அதிகாரம் - 19

யூதருடைய நியாயப்பிரமாணம் மிகவும் மேன்மையானது. ஆனால் பிரதான ஆசாரியரோ நியாயப்பிரமாணத்தைப் புரட்டுகிறார்கள். தங்களுக்குச் சாதகமாக நியாயப்பிரமாணத்திற்கு வியாக்கியானம் தருகிறார்கள். தேவதூஷணம் சொல்லுகிறவர்கள் கொல்லப்படவேண்டுமென்பது நியாயப்பிரமாணத்தின்படி சரியானதே. யாராவது ஒருவர் தன்னை தேவனுடைய குமாரன் என்று தவறாகச் சொல்வாரென்றால், அவர் தேவதூஷணம் சொல்லுகிற குற்றதைச் செய்கிறார். ஆனால் இயேசுகிறிஸ்துவோ தம்மை தேவகுமாரன் என்று சொல்லுவது பொய்யான வார்த்தையல்ல. அது மெய்யான வார்த்தை. இயேசுகிறிஸ்து மெய்யாகவே தேவனுடைய ஒரே பேறான குமாரனாகவே இருக்கிறார்.

இயேசுகிறிஸ்து தம்மை தேவனுடைய குமாரனென்று அழைப்பது சரியான சத்தியம். இந்தச் சத்தியத்தைக் கேட்டு யூதர்கள் சந்தோஷப்படவேண்டும். அவரைக் கனப்படுத்த வேண்டும். ஆனால் பிரதான ஆசாரியரோ சத்தியத்தைக் கேட்டு சந்தோஷப்படுவதற்குப் பதிலாக கோபப்படுகிறார்கள். சத்தியத்தைச் சொன்ன இயேசுகிறிஸ்துவைக் கொலைசெய்து விடவேண்டுமென்று கோபத்தோடிருக்கிறார்கள். இயேசுவைச் சிலுவையில் அறைந்து கொலைசெய்யவேண்டுமென்பது பிரதான ஆசாரியருடைய விருப்பம். ஆனால் யூதருடைய நியாயப்பிரமாணத்தின்படி தேவதூஷணம் சொன்னவரை சிலுவையில் அறைந்து கொல்லவேண்டுமென்று எங்கும் எழுதப்படவில்லை. தம்முடைய நியாயப்பிரமாணத்தைப்பற்றி பெருமையோடு பேசுகிறார்கள். ஆனால் நியாயப்பிரமாணத்தில் எழுதியதற்கும் மிஞ்சி தவறுசெய்கிறார்கள்.

**பிலாத்து**

**பிலாத்து இந்த வார்த்தையைக் கேட்டபொழுது அதிகமாய்ப் பயந்து, (யோவா 19:8)**

இயேசுகிறிஸ்து இராயனுக்கு விரோதமாகவும் ரோமப்பேரரசுக்கு விரோதமாகவும் கலகம்பண்ணினார் என்று தான், பிரதான ஆசாரியர் இயேசுவின்மீது முதலாவது குற்றம் சுமத்தினார்கள். ஆனால் இப்போதோ அவர் தேவதூஷணம் சொன்னாரென்றும், அவர் தம்மை தேவனுடைய குமாரனென்று அழைத்துக்கொண்டாரென்றும் குற்றம் சுமத்துகிறார்கள். இதையெல்லாம் கேட்டும்போது பிலாத்துவுக்கு கலக்கமும், குழப்பமும், பயமும் உண்டாயிற்று. ராஜதுரோகம்பற்றிய வழக்கை தான் விசாரித்து தீர்ப்புக்கொடுக்கலாமென்று பிலாத்து நினைக்கிறான். ஆனால் இப்போதோ இயேசுவின்மீது தெய்வக்குற்றம் சுமத்தப்படுகிறது. ஆகையினால் யூதருடைய இந்த வார்த்தையைக் கேட்டபோது பிலாத்து அதிகமாய் பயப்படுகிறான்.

இயேசுகிறிஸ்துவை விடுதலை செய்வதை ஏராளமான யூதர்கள் விரும்பவில்லையென்பது பிலாத்துவுக்குத் தெரியவருகிறது. இயேசுகிறிஸ்துவை விடுதலை செய்வதன் மூலம் அநேகருடைய கோபத்திற்கு ஆளாக பிலாத்து விரும்பவில்லை. இயேசுகிறிஸ்து தம்மை ராஜா என்று சொன்னால் அது குற்றம்தான் என்றும், இயேசுவின்மீது இந்தக் குற்றத்தைச் சுமத்திய யூதர்களை சமாதானப்படுத்திவிடலாம் என்றும் பிலாத்து எதிர்பார்க்கிறான். ஆனால் இப்போதோ இயேசு தம்மை தேவனுடைய குமாரனென்று சொன்னதாக இயேசுவின்மீது குற்றம் சுமத்துகிறார்கள். தெய்வம் சம்பந்தப்பட்ட காரியத்தில் பிலாத்து தன்னை ஈடுபடுத்திக்கொள்ளப் பயப்படுகிறான்.

இயேசுகிறிஸ்துவினிடத்தில் பிலாத்து ஒரு குற்றமும் காணவில்லை. இது பிலாத்துவின் மனச்சாட்சிக்கு நன்றாகத் தெரிகிறது. இயேசுகிறிஸ்துவுக்குத் தண்டனை கொடுத்தால் பிலாத்து தன்னுடைய மனச்சாட்சியோடு போராடவேண்டியதிருக்கும். இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரனாக இருப்பாரென்றால், சாதாரண மனுஷனாகிய தான், அவரை எப்படி தண்டிக்க முடியுமென்று பிலாத்து பயப்படுகிறான். அரசு சம்பந்தமான வழக்கு இப்பொழுது மார்க்க சம்பந்தமான வழக்காயிற்று. குற்றச்சாட்டுக்கள் திசை திரும்புகிறது. இவையெல்லாவற்றிலும் குற்றம் சாட்டப்படுகிறவர் இயேசுகிறிஸ்து ஒருவரே.

## அதிகாரம் - 19

**நீ எங்கேயிருந்து வந்தவன்**

**மறுபடியும் அரமனைக்குள்ளே போய், இயேசுவை நோக்கி: நீ எங்கேயிருந்து வந்தவன் என்றான். அதற்கு இயேசு மாறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை (யோவா 19:9).**

பிலாத்து இயேசுகிறிஸ்துவை மறுபடியும் அரமனைக்குள் கூட்டிக்கொண்டு போகிறான். இயேசுகிறிஸ்துவிடம் "நீ எங்கேயிருந்து வந்தவன்" என்று கேள்வி கேட்கிறான். இந்தக் கேள்வியை யூதருக்கு முன்பாகக் கேட்காமல், இயேசுவைத் தன்னுடைய அரமனைக்கு அழைத்துச் சென்று, அவரிடத்தில் தனியாகக் கேட்கிறான். சத்தியம் வெளிப்படவேண்டுமென்றால் சந்தடி குறையவேண்டும். அநியாயத்திற்கு சாதகமாக அநேகர் குரல் கொடுக்கும்போது நியாயம் மங்கிப்போவது போன்று தெரியும். இதை அறிந்த பிலாத்து, இயேசுகிறிஸ்துவை யூதர்களுக்கு மத்தியில் விசாரியாமல், அவரைத் தன்னுடைய அரமனைக்கு தனியாக அழைத்துச்சென்று "நீ எங்கேயிருந்து வந்தவன்" என்று இயேசுவிடத்தில் கேட்கிறான். "நீ பரலோகத்திலிருந்து வந்தவனா அல்லது இந்தப் பூமியிலிருந்து வந்தவனா" என்பதே பிலாத்து கேட்ட கேள்வியின் பொருளாகும்.

இயேசுகிறிஸ்துவோ பிலாத்துவின் கேள்விக்கு பிரதியுத்தரம் ஒன்றும் சொல்லாமல் அமைதியாக இருக்கிறார். விசாரணையை அவமதிக்கும் வண்ணமாக இயேசுகிறிஸ்து பிலாத்துவின் கேள்விக்கு பதில் சொல்லாமல் அமைதியாக இருக்கவில்லை. அல்லது பிலாத்துவின் கேள்விக்கு பதில் சொல்ல இயேசுவுக்கு தெரியாது என்பதும் இதன் பொருளல்ல. இது பொறுமையின் அமைதியாகும். இயேசுகிறிஸ்து பிலாத்துவின் கேள்விக்கு பிரதியுத்தரம் சொல்லாமல் அமைதியாக இருந்தாலும், அவருடைய அமைதி பிதாவின் சமுகத்தில் சப்தமாகப் பேசுகிறது. இந்தப் பாடுகளுக்கு மத்தியிலும் தாம் பிதாவின் சித்தத்திற்குக் கீழ்ப்படிவதை இயேசுகிறிஸ்து பிதாவின் சமுகத்தில் தெளிவாகவும் சப்தமாகவும் அறிவிக்கிறார்.

தமக்கு நியமிக்கப்பட்டிருக்கும் பாடுகளை இயேசுகிறிஸ்து ஏற்றுக்கொள்ள ஆயத்தமாகயிருக்கிறார். தம்முடைய பிரதியுத்தரத்தினால் தாம் அனுபவிக்க வேண்டிய பாடுகளில் மாற்றம் எதுவும் வந்துவிடக்கூடாது என்று இயேசு விரும்புகிறார். இயேசுகிறிஸ்துவின் அமைதி பக்தியுள்ள அமைதியாகும். இது விசுவாசமுள்ள அமைதியாகவும் இருக்கிறது. பிரதான ஆசாரியர் ஒரு சமயம் இயேசுகிறிஸ்துவிடம் "நீ தேவனுடைய குமாரனா, நீ கிறிஸ்துவா" என்று கேட்டபோது, இயேசுகிறிஸ்து அவர்களுக்கு "ஆம்" என்று பிரதியுத்தரம் சொன்னார்.

தாங்கள் கேட்கும் கேள்வியின் பொருளை பிரதான ஆசாரியர் அறிந்திருக்கிறார்கள். ஆகையினால் இயேசுகிறிஸ்து அவர்களுக்கு பிரதியுத்தரம் சொன்னார். ஆனால் பிலாத்துவுக்கோ தான் கேட்கிற கேள்வியின் அர்த்தம் தெரியாது. அவனுக்கு மேசியா என்றால் யாரென்றே தெரியாது. மேசியாவைப்பற்றி சத்தியத்தையும் அவன் கேள்விப்பட்டதில்லை. அவனுக்குத் தேவனையும் தெரியாது. தேவனுடைய குமாரனையும் தெரியாது. தனக்குத் தெரியாத ஒரு காரியத்தை, தனக்குத் தெரிந்ததுபோல நினைத்துக்கொண்டு பிலாத்து கேள்வி கேட்கிறான். அவனுடைய இருதயம் முழுவதிலும் புறஜாதியாரின் மார்க்க சிந்தையே நிறைந்திருக்கிறது. ஆவிக்குரிய காரியங்களில் குருடனாகயிருக்கும் பிலாத்துவிடம் பிரதியுத்தரம் கூறி பிரயோஜனமில்லை என்று தீர்மானம் செய்து, இயேசுகிறிஸ்து பிலாத்துவுக்கு பிரதியுத்தரம் கூறாமல் அமைதியாகயிருக்கிறார்.

**எனக்கு அதிகாரமுண்டு**

**அப்பொழுது பிலாத்து: நீ என்னோடே பேசுகிறதில்லையா? உன்னைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகாரமுண்டென்றும், உன்னை விடுதலைபண்ண எனக்கு அதிகாரமுண்டென்றும் உனக்குத்தெரியாதா என்றான் (யோவா 19:10).**

இயேசுகிறிஸ்து பிலாத்துவின் கேள்விக்கு பிரதியுத்தரம் கூறாமல் அமைதியாகயிருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் அமைதி பிலாத்துவுக்கு மிகவும் ஆச்சரியமாயிற்று. ஏனெனில் அவன் கேள்வி கேட்கும்போது யாரும் அவனுக்குப் பிரதியுத்தரம் சொல்லாமல் அமைதியாக இருக்கமுடியாது. அப்படி அமைதியாகயிருந்தால், அந்த அமைதி தேசாதிபதியை அவமதிக்கிற செயலாக தீர்மானிக்கப்படும். இயேசுகிறிஸ்து அமைதியாக இருப்பதைப் பார்த்து, பிலாத்து தன்னுடைய அதிகாரத்தை யோசித்துப் பார்க்கிறான். தன்னையும் தன்னுடைய அதிகாரத்தையும் பெருமையாக நினைத்துப் பார்க்கிறான்.

## அதிகாரம் - 19

பிலாத்து இயேசுகிறிஸ்துவிடம், தன் உள்ளத்தின் பெருமையோடு "நீ என்னோடே பேசுகிறதில்லையா? உன்னைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகாரமுண்டென்றும், உன்னை விடுதலைபண்ண எனக்கு அதிகாரமுண்டென்றும் உனக்குத்தெரியாதா" என்று கேட்கிறான். அதிகாரத்திலிருக்கிறவர்களுடைய கண்களை அவர்களுடைய அதிகாரம் குருடாக்கிவிடும். தங்களுக்கு அதிகாரமில்லாத காரியங்களிலெல்லாம் தலையிட்டு, அதிலும் தங்களுக்கு அதிகாரம் இருப்பதாக பெருமைப்படுவார்கள்.

பிலாத்து இயேசுகிறிஸ்துவிடம் "நீ என்னோடே பேசுகிறதில்லையா" என்று கேட்கிறான். தன்னையும், தன்னுடைய அதிகாரத்தையும் இயேசுகிறிஸ்து அவமதிப்பதாக பிலாத்து நினைக்கிறான். தான் இதுவரையிலும் இயேசுகிறிஸ்துவுக்குச் சாதகமாகப் பேசியும், இப்போது அவர் தன்னுடைய கேள்விக்குப் பிரதியுத்தரம் சொல்லாமல், தன்னை அவமானப்படுத்துவதாக நினைக்கிறான். தன்னிடத்தில் பட்சமாக நடந்துகொண்டால், தன்னால் இயேசுகிறிஸ்துவுக்கு அதிக சலுகைகளைக் காண்பிக்க முடியும் என்று பிலாத்து ஆணவமாக நினைக்கிறான். இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரனாகயிருக்கிறார். தம்முடைய ஜீவனைக் காத்துக்கொள்ள அவருக்கு எந்த மனுஷனுடைய உதவியும் தேவைப்படாது. பிதாவின் சித்தத்தின் பிரகாரமாக இயேசுகிறிஸ்து தாமே, மனுக்குலத்தை இரட்சிப்பதற்காக, தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுக்க சித்தமுள்ளவராகயிருக்கிறார். இந்தச் சத்தியம் பிலாத்துவுக்கு தெரியவில்லை. ஆகையினால் பிலாத்து தன் மனதில் தோன்றியபடியெல்லாம் இயேசுவினிடத்தில் பேசுகிறான்.

### ஒரு அதிகாரமுமிராது

**இயேசு பிரதியுத்தரமாக: பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது; ஆனபடியினாலே என்னை உம்மிடத்தில் ஒப்புக்கொடுத்தவனுக்கு அதிக பாவமுண்டு என்றார் (யோவா 19:11).**

பிலாத்துவின் மனப்பெருமையை இயேசுகிறிஸ்து தெளிவான வார்த்தைகளினால் கடிந்துகொள்கிறார். "பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது" என்று அவனிடத்தில் உறுதியாகப் பேசுகிறார். பிலாத்துவுக்கு தாம் பிரதியுத்தரம் சொல்லவேண்டிய அவசியமில்லையென்றும், தம்முடைய பிரதியுத்தரத்தைக் கேட்பதற்கு அவன் தகுதியற்றவனென்றும், இயேசுகிறிஸ்து தீர்மானம் செய்திருந்தாலும், இப்போது அவன் தன்னுடைய அதிகாரத்தைப்பற்றி பேசுவதினால், அவனோடு பேச இயேசு சித்தங்கொண்டிருக்கிறார்.

பிலாத்து தேசாதிபதியாகயிருந்து இயேசுகிறிஸ்துவை விசாரிக்கிறான். தேசாதிபதிக்குரிய அதிகாரத்திற்கு இயேசுகிறிஸ்து தம்மை உட்படுத்திக்கொள்கிறார். அங்கு நடைபெறும் விசாரணைக்கும் தம்மை உட்படுத்துகிறார். ஆனால் பிலாத்துவோ தன்னுடைய அதிகாரத்தைப்பற்றி பெருமைப்பட்டபோது, இயேசுகிறிஸ்து அவனுக்கு எதிர்த்துப் பேசுகிறார். பரத்திலிருந்து பிலாத்துவுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டால்தான், அவனுக்கு இயேசுவின்மீது அதிகாரமுண்டாயிருக்கும். கொடுக்கப்படவில்லையென்றால் அவனுக்கு இயேசுவின்மீது ஒரு அதிகாரமும் இருக்காது.

பிலாத்து யூதேயா தேசத்திற்குத் தேசாதிபதியாக இருக்கிறான். இது மாத்திரமே அவனுடைய அதிகாரம். பிலாத்துவின் அதிகாரம் ஒரு வரம்புக்குட்பட்டது. தன்னுடைய அதிகாரத்தை மீறி பிலாத்துவினால் ஒன்றும் செய்யமுடியாது. இந்த அதிகாரம்கூட தேவனே அவனுக்குக் கொடுத்திருக்கிறார். ஆனால் பிலாத்துவோ தனக்கு சர்வ அதிகாரமும் இருப்பதாக தவறாக நினைத்து பெருமைப்படுகிறான்.

பிலாத்துவைப் போல பெருமைப்படுகிறவர்கள், தங்களுக்கும் மேலான அதிகாரம் பரலோகத்திலுள்ளது என்பதை நினைவுகூரவேண்டும். மனப்பெருமையை நீக்கிவிட்டு, மனத்தாழ்மையடையவேண்டும். பிரதான ஆசாரியரும் சேவகரும், தங்களுக்கு பெரிய அதிகாரம் இருப்பதாக நினைத்துக் கொள்கிறார்கள். தாங்கள் நினைத்ததைச் சாதிக்கமுடியும் என்று பெருமைப்படுகிறார்கள். ஆனால் அவர்களுக்குச் சுயமாக எந்த அதிகாரமுமில்லை. தேவன் அவர்களுக்குக் கொடுத்திருக்கும் அதிகார அளவின்படியே அவர்களால் செயல்படமுடியும். தேவன் அனுமதித்ததற்கு மிஞ்சி அவர்களால் ஒன்றும் செய்யமுடியாது.

## அதிகாரம் - 19

பிலாத்து தன்னுடைய அனுபவித்தில் பல குற்றவாளிகளை விசாரித்திருப்பான். ஆனால் இப்போதோ தம்மை தேவகுமாரனென்று சொல்லும் இயேசுகிறிஸ்துவையே விசாரிக்கிறான். இந்த விசாரணையின் மூலமாக தான் தேவனையே விசாரிக்கும் நியாயாதிபதியாக இருக்கிறோம் என்னும் பெருமை அவனுக்குள் உண்டாயிற்று. ஜனங்கள் இயேசுவை தேவனுடைய குமாரனென்றும், இஸ்ரவேலின் ராஜா என்றும் சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட பெரியவரை விசாரிப்பதினால், தான் அவரைவிட பெரியவர் என்னும் பெருமை அவனுக்குள் உண்டாயிற்று. இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான், பிலாத்து தேவனால் பயன்படுத்தப்படுகிற ஒரு கருவி மாத்திரமே என்பதை அவனுக்கு விளங்கச் செய்கிறார்.

பிலாத்து இயேசுகிறிஸ்துவிடம் பெருமையோடு பேசுகிறான். இயேசுகிறிஸ்துவோ அவனுடைய பாவத்தை கிருபையாக மன்னிக்கிறார். மற்றவர்களுடைய பாவத்தை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இவனுடைய பாவம் குறைவு என்று சொல்லிவிடுகிறார். "என்னை உம்மிடத்தில் ஒப்புக்கொடுத்தவனுக்கு அதிக பாவமுண்டு" என்பதே இயேசுகிறிஸ்துவின் தீர்ப்பாகும்.

பிலாத்து செய்கிறது மெய்யாகவே பாவமாகவே இருக்கிறது. இயேசுகிறிஸ்துவை இவன் காரணமில்லாமல் தண்டிக்கிறான். இது மிகப்பெரிய பாவம். யூதர்கள் பிலாத்துவைக் கட்டாயப்படுத்தினாலும், பிலாத்து நியாயமாக நடந்துகொள்ளவேண்டும். தான் செய்கிற தவறுக்குப் பிலாத்து யூதர்களைக் குறைசொல்லக்கூடாது. மற்றவர்கள் செய்கிற பாவம் நாம் செய்கிற தவறுகளை ஒருபோதும் நீதியாகாது. மகாநாளின் நியாயத்தீர்ப்பின்போது மற்றவர்கள் நம்மைவிட மோசமானவர்களென்று சொல்லி தண்டனைக்குத் தப்பித்துக்கொள்ள முடியாது. நாம் செய்த பாவத்திற்கு நாமே பொறுப்பு வகிக்கவேண்டும். பிலாத்து பெரிய பாவம் செய்திருந்தாலும், இயேசுகிறிஸ்துவை அவனிடத்தில் ஒப்புக்கொடுத்தவன், பிலாத்துவைவிட அதிக பாவம் செய்கிறான்.

பாவங்களில் வித்தியாசமுண்டு. ஒரு சில பாவம் பெரிதாகவும், வேறு சில பாவம் சிறிதாகவும் இருக்கும். அதே வேளையில் பாவம் எல்லாமே பாவமாகத்தான் இருக்கிறது. இயேசுகிறிஸ்துவை பிலாத்துவினிடத்தில் ஒப்புக்கொடுத்தவன் யார் என்பதைக் குறித்து வேதபண்டிதர்கள் பலவிதமாக கருத்துக் கூறுகிறார்கள். அவர்கள் 1. யூத ஜனங்கள், 2. காய்பா 3. யூதாஸ்காரியோத்து ஆகிய இவர்களில் ஒருவனாக இருக்கவேண்டும் என்று வேதபண்டிதர்கள் கூறுகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவை "சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும்" என்று யூதஜனங்கள் சத்தமிடுகிறார்கள். இயேசுகிறிஸ்து செய்த அற்புதங்களையெல்லாம் இவர்கள் பார்த்திருக்கிறார்கள். பிலாத்துவோ இயேசுவின் அற்புதம் ஒன்றையும் பார்க்கவில்லை. ஆகையினால் பிலாத்துவின் பாவத்தைவிட யூதரின் பாவம் அதிகமாயிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் தெய்வீகவல்லமையைப்பற்றி பிலாத்துவுக்கு ஒன்றும் தெரியாது. ஆனால் யூதர்களோ அவருடைய அற்புத வல்லமையை தங்கள் கண்களால் பார்த்திருந்தும், அவரை தேவனுடைய குமாரனென்று அங்கீகரியாமல், பிலாத்துவினிடத்தில் ஒப்புக்கொடுக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவை விசாரிப்பதற்கு முன்பாகவே காய்பா அவருக்கு மரணதண்டனை கொடுத்துவிடுகிறான். "அப்பொழுது அவர்களில் ஒருவனும் அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனுமாகிய காய்பா என்பவன் அவர்களை நோக்கி: உங்களுக்கு ஒன்றுந்தெரியாது; ஜனங்களெல்லாரும் கெட்டுப்போகாதபடிக்கு ஒரே மனுஷன் ஜனங்களுக்காக மரிப்பது நமக்கு நலமாயிருக்குமென்று நீங்கள் சிந்தியாமலிருக்கிறீர்கள் என்றான்" (யோவா 11:49,50). ஆகையினால் பிலாத்துவின் பாவத்தைவிட காய்பாவின் பாவம் அதிகமாயிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின்மீது காய்பா விரோதமாகயிருப்பதினாலும், அவரைப் பகைப்பதினாலும், அவரை கொன்றுபோடவேண்டுமென்று விரும்புகிறான். பிலாத்துவோ ஜனங்களுக்குப் பயந்ததினால் இயேசுகிறிஸ்துவை சிலுவையில் அறைவதற்கு ஒப்புக்கொடுக்கிறான். பிலாத்து அவசரப்பட்டு தீர்ப்பு சொல்லிவிடுகிறான். இயேசுகிறிஸ்து ஒரு குற்றமும் செய்யாதவர் என்று அவனுடைய மனச்சாட்சி சொன்னபோதிலும், தன்னுடைய மனச்சாட்சியின் சத்தத்தை பொறுமையோடு கேட்காமல், ஜனங்கள் கூக்குரலிடுவதைப் பார்த்து பயந்துவிடுகிறான்.

## அதிகாரம் - 19

இயேசுகிறிஸ்து இந்த சம்பவத்தில் யூதாஸ்காரியோத்தைப்பற்றிக் குறிப்பிடுவதாக வேதபண்டிதர்களில் சிலர் கூறுகிறார்கள். இந்தச் சம்பவமெல்லாவற்றையும் யூதாஸ்காரியோத்துதான் ஆரம்பித்து வைக்கிறான். இவனுடைய பாவமே எல்லா பாவங்களுக்கும் முன்பாகப் போகிறது. மற்ற பாவங்களெல்லாம் இவனுடைய பாவத்தைப் பின்பற்றி வருகிறது. இயேசுகிறிஸ்வைப் பிடிப்பதற்கு யூதாஸ்காரியோத்துதான் ஜனங்களை வழிநடத்திவந்தான்.

**இராயனுக்கு விரோதி**

**அதுமுதல் பிலாத்து அவரை விடுதலைபண்ண வகைதேடினான். யூதர்கள் அவனை நோக்கி: இவனை விடுதலைபண்ணினால் நீர் இராயனுக்குச் சிநேகிதனல்ல, தன்னை ராஜாவென்கிறவனெவனோ அவன் இராயனுக்கு விரோதி என்று சத்தமிட்டார்கள் (யோவா 19:12).**

இயேசு கிறிஸ்துவை விடுதலைபண்ணுவதற்குப் பிலாத்து வகைதேடுகிறான். யூதர்களிடமிருந்து இயேசுகிறிஸ்துவை எப்படியாவது விடுவித்துவிடவேண்டும் என்று முயற்சிபண்ணுகிறான். ஆனால் பிலாத்துவின் முயற்சியெல்லாம் வீணாயிற்று. பிலாத்து ஏற்கெனவே இயேசுகிறிஸ்துவிடம் ஒரு குற்றமும் காணவில்லை. அவரை விடுதலை பண்ணவேண்டுமென்று ஏற்கெனவே விரும்பினான். இப்போது பிலாத்துவின் விருப்பம் அதிகமாயிற்று. இயேசுகிறிஸ்து பிலாத்துவைக் குற்றப்படுத்தினாலும், அவன் இயேசுகிறிஸ்துவினிடத்தில் ஒரு குற்றமும் காணவில்லை. அவரை விடுதலை பண்ணுவதற்குத்தான் வகைதேடுகிறான். பிலாத்து சத்தியத்திற்குக் கீழ்ப்படிகிறவனாயிருந்தால், அவன் எப்போதோ இயேசுவை விடுதலை பண்ணியிருக்கலாம். இவ்வளவு விவாதமும், காலதாமதமும் தேவையில்லை. ஆனால் பிலாத்துவோ யூதமனுஷரை பிரியப்படுத்த வேண்டும் என்றும் விரும்புகிறான்.

பிலாத்து இயேசுவை விடுதலைபண்ண வேண்டுமென்று வகைதேடும்போது, யூதர்கள் இயேசுவைச் சிலுவையில் அறையவேண்டுமென்று வைராக்கியமாக இருக்கிறார்கள். அவருடைய கோபமும் வேகமும் அதிகரிக்கிறது. இதற்கு முன்பு சத்தமிட்டதைவிட இப்போது அவர்களுடைய சத்தம் அதிகரிக்கிறது. பிலாத்துவின் ஆலோசனை கேட்கப்படாதவாறு, யூதர்கள் தங்களுடைய சத்தத்தை உயர்த்துகிறார்கள். திரளான கூட்டத்தார் கூக்குரலிடும்போது, அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்பது அவர்களுக்கும் தெரியாது. மற்றவர்களுக்கும் புரியாது. தாங்கள் சத்தமிட்டுப் பேசுவதை ஏன் பேசுகிறோம் என்பதற்கான காரணமும் அவர்களுக்குத் தெரியாது. யூதர்கள் கூட்டத்தோடு கூட்டமாகச் சேர்ந்து கத்துகிறார்கள். மனுஷருடைய சத்தம் அதிகரிக்கும்போது நீதியின் வல்லமை குறைந்துபோகிறது.

சில சமயங்களில் அநியாயக்காரரின் உரத்த சத்தம் நீதிமானுடைய சத்தத்தை கேட்கப்படாமல் செய்துவிடும். யூதர்கள் தேசபக்தியுள்ளவர்கள் போல நடிக்கிறார்கள். இயேசுவைச் சிலுவையில் அறைவதற்காக எல்லா சதிஆலோசனையையும் செய்கிறார்கள். தாங்கள் இராயனுக்குச் சிநேகிதரென்றும், இராயனுடைய தேசாதிபதியாகிய பிலாத்து இராயனுக்கு விரோதியென்றும் சொல்லுகிறார்கள். இயேசுகிறிஸ்து தேவதூஷணம் சொன்னவர் என்று யூதர்கள் அவரை இதுவரையிலும் குற்றப்படுத்தினார்கள். இப்போதோ அவர் இராயனுக்கு விரோதியென்று சொல்லுகிறார்கள். பிலாத்து இயேசுகிறிஸ்துவுக்குச் சாதகமாகப் பேசும் ஒவ்வொரு வார்த்தையும், இராயனுக்கு விரோதமாகப் பேசும் வார்த்தையென்று எல்லாவற்றையும் திசை திருப்புகிறார்கள்.

இயேசுகிறிஸ்து யூதர்களுக்கு முன்பாக பெரிய குற்றவாளியைப்போல இருக்கிறார். அவர் தேவதூஷணம் சொன்னாரென்று அவர்மீது குற்றம் சுமத்தி, அவரை தேவனுக்கு விரோதியாக்குகிறார்கள். தம்மை ராஜா என்று இயேசு சொன்னாரென்று சொல்லி, அவரை இராயனுக்கும் விரோதியாக்குகிறார்கள். தவறான மார்க்கங்களைப் பின்பற்றுகிறவர்கள் தங்களுக்கு ஆதரவாக ராஜாக்களையும், அதிகாரிகளையும் தங்கள் பக்கமாகச் சேர்த்துக்கொள்கிறார்கள். யூதர்கள் பிலாத்துவிடம் "இவனை விடுதலைபண்ணினால் நீர் இராயனுக்குச் சிநேகிதனல்ல" என்று அவனுக்கு விரோதமாகவே பேசுகிறார்கள்.

## அதிகாரம் - 19

பிலாத்து இயேசுகிறிஸ்துவை விடுதலைபண்ணினால், இராயனிடம் பிலாத்துவைப்பற்றிப் பிராதுபண்ணப்போவதாக மிரட்டுகிறார்கள். இராயன்மீதும், ரோமப்பேரரசின் ஆளுகையின்மீதும் தங்களுக்கு அக்கரையிருப்பதுபோல காண்பித்துக்கொள்கிறார்கள். ஆனால் மெய்யாகவே பிலாத்துதான் ரோமப்பேரரசின் தேசாதிபதியாக யூதேயா தேசத்தை ஆளுகை செய்கிறான். ரோமப்பேரரசின் சட்டதிட்டங்களை யூதஜனத்தார் மத்தியில் நிறைவேற்றும் பொறுப்பு பிலாத்துவிடமே ஒப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பிலாத்துவுக்குக் கீழ்ப்பட்டிருக்கும் யூதஜனங்கள், இப்போது இராயனுடைய பெயரைச் சொல்லி, தங்களுடைய தேசாதிபதியாகிய பிலாத்துவையே மிரட்டுகிறார்கள்.

**நியாயாசனம்**

**பிலாத்து இந்த வார்த்தையைக் கேட்டபொழுது, இயேசுவை வெளியே அழைத்துவந்து, தளவரிசைப்படுத்தின மேடையென்றும், எபிரெயு பாஷையிலே கபத்தா என்றும் சொல்லப்பட்ட இடத்திலே, நியாயாசனத்தின்மேல் உட்கார்ந்தான் (யோவா 19:13).**

பிலாத்து இயேசுவை விடுதலைபண்ண வேண்டுமென்று வகைதேடினாலும், யூதஜனங்கள் இயேசுவின்மீதும் தன்மீதும் மிகவும் கோபமாகயிருப்பதினால், யூதரை பிரியப்படுத்தலாமென்று தீர்மானம்பண்ணுகிறான். தன்னை ராஜா என்கிறவன் எவனோ அவன் இராயனுக்கு விரோதியென்றும், பிலாத்து இயேசுவை விடுதலைபண்ணினால் அவன் இராயனுக்குச் சிநேகிதனல்ல என்றும் யூதர்கள் சத்தமிடுகிறார்கள். இந்த வார்த்தையைக் கேட்டபோது தன்னுடைய தேசாதிபதியின் பதவிக்கு ஆபத்து வந்துவிடுமோ என்று பிலாத்து பயப்படுகிறான். இயேசுகிறிஸ்துவைப் பாதுகாத்தால் மாத்திரம் போதாது, தன்னுடைய பதவியையும் பாதுகாத்துக்கொள்ளவேண்டும் என்று பிலாத்து விரும்புகிறான்.

மனுஷரைச் சந்தோஷப்படுத்த விரும்புகிறவன் பொதுவாக நீதிக்கும் நியாயத்திற்கும் கீழ்ப்படியமாட்டான். இப்படிப்பட்டவர்களுக்குத் தங்களுடைய சந்தோஷமும், தங்களுடைய பாதுகாப்புமே முக்கியமாகத் தெரியும். இதற்காக இவர்கள் நீதியையும் நியாயத்தையும் கண்டுகொள்ளாமல் விட்டுவிடுவார்கள். மனுஷரைப் பிரியப்படுத்த விரும்புகிறவர்கள் சாத்தானுடைய சோதனைக்கு எளிதாக உட்படுத்தப்படுவார்கள்.

இயேசுகிறிஸ்துவுக்கு மரணதண்டனை கொடுக்க பிலாத்து ஆயத்தமாகிறான். இயேசுவை வெளியே அழைத்துவந்து, தன் நியாயாசனத்தின் மேல் உட்காருகிறான். இயேசுகிறிஸ்து நியாயப்படி விசாரிக்கப்படவில்லையென்றாலும், அவருக்கு ரோமப்பேரரசின் வழக்கத்தின் பிரகாரம் தண்டனை கொடுக்கப்படுகிறது. ஏதோ ஒரு இடத்தில் நின்றுகொண்டு பிலாத்து இயேசுவுக்கு மரணதண்டனை கொடுப்பதற்குப் பதிலாக, தன்னுடைய நியாயசனத்தின்மேல் உட்கார்ந்து அவருக்குத் தண்டனை கொடுக்கிறான். பிலாத்துவைப்போல சிலர் நியாயசனத்தின்மேல் உட்கார்ந்துகொண்டு, நியாயத்தின்படி தீர்ப்புச் செய்யாமல், தங்கள் சுயலாபத்திற்காகவும், சுயசந்தோஷத்திற்காகவும், சுயஇஷ்டப்படி தீர்ப்புபண்ணுகிறார்கள். தளவரிசைப்படுத்தின மேடையென்றும், எபிரெயு பாஷையிலே கபத்தா என்றும் சொல்லப்பட்ட இடத்திலுள்ள நியாயசனத்தின்மேல் பிலாத்து உட்கார்ந்திருக்கிறான். பிலாத்து இந்த நியாயசனத்தின்மேல் உட்கார்ந்துதான் குற்றவாளிகளை விசாரித்து தண்டிப்பது வழக்கம்.

**இதோ உங்கள் ராஜா**

**அந்த நாள் பஸ்காவுக்கு ஆயத்த நாளும் ஏறக்குறைய ஆறுமணி நேரமுமாயிருந்தது; அப்பொழுது அவன் யூதர்களை நோக்கி: இதோ, உங்கள் ராஜா என்றான் (யோவா 19:14).**

இயேசுகிறிஸ்துவை விடுதலை பண்ணுவதற்கு பிலாத்து மேற்கொண்ட எல்லா முயற்சிகளும் தோல்வியடைந்தது. யூதர்கள் இயேசுவின்மீது மிகுந்த கோபத்தோடிருக்கிறார்கள். அப்போது பிலாத்து யூதர்களை நோக்கி "இதோ உங்கள் ராஜா" என்று கூறுகிறான். ரோமப்பேரரசின் இராயனுக்கு விரோதமாகக் கலகம்பண்ணி, ஆட்சியைப் பறித்துக்கொள்ளவேண்டுமென்று இயேசுகிறிஸ்து சதிஆலோசனை பண்ணினதாக யூதர்கள் அவர்மீது குற்றம் சுமத்தினார்கள். பிலாத்து இயேசுவை அவர்களிடத்தில் ஒப்புக்கொடுக்கும்போது அவர்களுடைய வார்த்தையின் பிரகாரமாக, "இதோ உங்கள் ராஜா" என்று சொல்லுகிறான்.

## அதிகாரம் - 19

இயேசுகிறிஸ்துவோ ஒரு பாவமும் செய்யாதவராக, முள்முடி சூட்டப்பட்டவராக, வாரினால் அடிக்கப்பட்டவராக பரிதாபமாக நின்றுகொண்டிருக்கிறார். இப்படிப்பட்ட இயேசுவை ரோமப்பேரரசுக்கு ஆபத்து விளைவிக்கக்கூடியவர் என்று பொருள்படும் விதத்தில் பிலாத்து பேசுகிறான். தன்னுடைய மனதில் தோன்றியதை பிலாத்து பேசினாலும், அவனுடைய பேச்சு தேவனுடைய சத்தமாகவே இருக்கிறது. தேவன் அவனுக்குக் கொடுத்த வார்த்தையையே அவன் யூதர்களிடத்தில் பேசுகிறான். முள்முடி சூட்டப்பட்டவராக இருக்கும் இயேசுகிறிஸ்து, கிரீடம் சூட்டப்பட்ட ராஜாவைப்போல ஜனங்களிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படுகிறார்.

**சிலுவையில் அறையும்**

**அவர்கள்: இவனை அகற்றும் அகற்றும், சிலுவையில் அறையும் என்று சத்தமிட்டார்கள். அதற்குப் பிலாத்து: உங்கள் ராஜாவை நான் சிலுவையில் அறையலாமா என்றான். பிரதான ஆசாரியர் பிரதியுத்தரமாக: இராயனேயல்லாமல் எங்களுக்கு வேறே ராஜா இல்லை என்றார்கள் (யோவான் 19:15).**

முள்முடி சூட்டப்பட்டவராக இயேசுகிறிஸ்து பிலாத்துவுக்கு முன்பாகவும், யூதருக்கும் முன்பாகவும் நிறுத்தப்படுகிறார். பிலாத்து இயேசுவை "இதோ உங்கள் ராஜா" என்று கூறுகிறான். ஆனால் யூதஜனங்களோ "இவனை அகற்றும், அகற்றும், சிலுவையில் அறையும்" என்று சத்தமிடுகிறார்கள். இயேசுகிறிஸ்துவை அகற்றும் என்று சொல்வதினால், அவர்கள் இயேசுவைத் தங்களுடைய சமுதாயத்திலிருந்து புறம்பே தள்ளுகிறார்கள். தங்களுடைய பார்வையிலிருந்து அவரை வெளியேற்ற வேண்டுமென்று சத்தமிடுகிறார்கள். இயேசுகிறிஸ்துவும் அவர்களைப்போலவே ஒரு யூதராகயிருக்கிறார். ஆனால் அவர்களோ இயேசுவைத் தங்களில் ஒருவராக ஏற்றுக்கொள்ளாமல், அவரை அகற்றுமாறு கூறுகிறார்கள்.

யூதர்கள் இயேசுகிறிஸ்துவை மறுதலிக்கிறார்கள். அவரை அகற்றவேண்டுமென்று சத்தமிடுகிறார்கள். இயேசுகிறிஸ்து நமக்காகவே இந்தப் பாடுகளைச் சகித்துக்கொள்கிறார். அன்று இயேசுகிறிஸ்துவை அவர்கள் அகற்றியிருக்கவில்லையென்றால், தேவன் நம்மை நித்தியமாகவே புறக்கணித்திருப்பார். தேவனுடைய சமுகத்திலிருந்து நாம் நித்தியமாகவே அகற்றப்பட்டிருப்போம்.

நம்மிடத்திலுள்ள பாவங்களை நாம் எப்படி அகற்றிப்போடவேண்டுமென்று வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய பாவங்களை நாம் சிலுவையில் அறையவேண்டும். இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டதுபோல நம்முடைய பாவங்களும் சிலுவையில் அறையப்படவேண்டும். கிறிஸ்துவின் மரணத்திற்கு ஒப்பாக, நம்முடைய பாவங்களும் மரிக்கவேண்டும். கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, பயபக்தியோடு, நம்மிடத்திலுள்ள பாவங்களை அகற்றி நம்மைப் பரிசுத்தப்படுத்தவேண்டும். இயேசுகிறிஸ்து நமக்காகப் பாவமானார். யூதர்களோ தங்களுடைய பாவங்களை அகற்றுவதற்குப் பதிலாக, இயேசுகிறிஸ்துவை "அகற்றும், அகற்றும்" என்று சத்தமிடுகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவை எப்படியாவது விடுதலை பண்ணிவிடவேணண்டுமென்று பிலாத்து இன்னும் ஆர்வமாயிருக்கிறான். அவர்களோ இயேசுவைச் சிலுவையில் அறையவேண்டுமென்று சத்தமிடுகிறார்கள். அப்போது பிலாத்து யூதர்களைப்பார்த்து "உங்கள் ராஜாவை நான் சிலுவையில் அறையலாமா" என்று கேட்கிறான். யூதர்களுடைய வாயை எப்படியாவது அடக்கவேண்டுமென்று பிலாத்து முயற்சி பண்ணுகிறான். இயேசுகிறிஸ்து யூதர்களுடைய ராஜாவாகயிருக்க தம்மையே ஒப்புக்கொடுத்திருக்கிறார். அப்படிப்பட்ட இயேசுவைச் சிலுவையில் அறையலாமா என்று பிலாத்து யூதர்களிடத்தில் கேட்கிறான்.

பிலாத்து யூதர்களைப் பார்த்துப் பயப்படவில்லை. தன்னுடைய தேசாதிபதியின் பதவிக்கு இயேசுகிறிஸ்து போட்டிக்கு வந்துவிடுவாரோ என்று அவரைப்பார்த்தும் பயப்படவில்லை. ஆனாலும் பிலாத்து இயேசுவை "யூதருடைய ராஜா" என்று அறிவிக்கிறான். இப்படிச் சொன்னதினால், யூதர்கள் மனமாறி, ஒருவேளை இயேசுகிறிஸ்து தங்களுக்கு ராஜாவாக வந்து, நன்மை செய்யமாட்டாரா என்று எதிர்பார்க்கலாம். இயேசுகிறிஸ்துவே தங்களுக்கு நம்பிக்கையென்று யூதர்கள் ஒருவேளை அவரை விடுதலை பண்ணச் சொல்லலாம்.

## அதிகாரம் - 19

யூதர்கள் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவில்லையென்றால், அவரைத் தங்களுடைய ராஜாவாக அங்கீகரிக்கவில்லையென்றால், பிலாத்துவுக்கு ஒரு இழப்பும் ஏற்படப்போவதில்லை. யூதர்களுக்குத்தான் பெரிய இழப்பு உண்டாகும். ஏனெனில் தங்களை இரட்சிப்பதற்கு மேசியா வருவாரென்று யூதர்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து தம்மை மேசியாவாக வெளிப்படுத்துகிறார். இயேசுவின் மூலமாக யூதருக்கு இரட்சிப்பு உண்டாகும். ஆனால் அவர்களோ மேசியாவையும் அவருடைய இரட்சிப்பையும் ஏற்றுக்கொள்ளாமல், அவரை "அகற்றும், அகற்றும்" என்று சத்தமிடுக்கிறார்கள்.

யூதர்கள் பிலாத்துவின் பேச்சுக்குச் செவிகொடுக்கவில்லை. பிரதான ஆசாரியர்கள் ஜனங்களைத் தூண்டிவிடுகிறார்கள். பிரதான ஆசாரியர் பிலாத்துவிடம் "இராயனேயல்லாமல், எங்களுக்கு வேறே ராஜா இல்லை" என்று கூறுகிறார்கள். தாங்கள் கூறும் இந்த வார்த்தை பிலாத்துவைப் பிரியப்படுத்துமென்று எதிர்பார்க்கிறார்கள். இதன் மூலமாக பிலாத்து தங்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுவானென்றும் நினைக்கிறார்கள். ஏனெனில் இக்காலத்தில் யூதர்கள் இராயனுக்கும் அவனுடைய ஆட்சிக்கும் சத்துருக்களாகவே இருக்கிறார்கள். யூதர்கள் யாரும் இராயனை நேசிப்பதில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான், பிரதான ஆசாரியர் "இராயனேயல்லாமல் எங்களுக்கு வேறே ராஜா இல்லை" என்று இராயனுக்குச் சாதகமாகப் பேசுகிறார்கள்.

பிரதான ஆசாரியர் வஞ்சகமாகப் பேசினாலும், தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவருடைய வார்த்தையின் பிரகாரமே உண்டாயிற்று. ரோமப்பேரரசின் மூலமாகவே யூதருக்கு அழிவு உண்டாயிற்று. இந்த சம்பவம் நடைபெற்ற சிறிது காலத்தில் இராயன் எருசலேமையும், யூதரையும் அழித்துப்போட்டான். அவர்கள் இராயனைத் தங்களுடைய ராஜா என்று சொன்னார்கள். அந்த இராயனிடம்தான் யூதர்கள் போகவேண்டும். யூதருடைய வார்த்தையின் பிரகாரமாகவே தேவன் அவர்களை இராயனுடைய கரங்களில் ஒப்புக்கொடுத்தார்.

இந்தச் சம்பவம் நடைபெற்ற பின்பு யூதர்கள் இராயனுக்கு முன்பாகக் கலகம்பண்ணினார்கள். இராயனும் அவர்களைக் கடினமாக நடத்தி ஒடுக்கினான். அவர்களுடைய கலகத்தின் விளைவினால், இராயன் யூதர்களையும் யூததேசத்தையும் அழித்துப்போட்டான். தேவனைத் தெரிந்துகொள்வதற்குப் பதிலாக யூதர்கள் இராயனைத் தெரிந்துகொண்டார்கள். தேவனிடத்திலிருந்து இரட்சிப்பு வரும். இராயனிடத்திலிருந்து அழிவு வரும். தம்மைப் புறக்கணித்த யூதர்களைத் தேவனும் புறக்கணித்துவிட்டார். அவர்களுக்கு கொள்ளைநோயும், பாடுகளும் வேதனைகளும் இராயன் மூலமாய் உண்டாயிற்று.

### சிலுவையில் அறைந்தார்கள்
### யோவா 19 : 16-18

**யோவா 19:16. அப்பொழுது அவரைச் சிலுவையில் அறையும்படிக்கு அவர்களிடத்தில் ஒப்புக்கொடுத்தான். அவர்கள் இயேசுவைப் பிடித்துக்கொண்டுபோனார்கள்.**

**யோவா 19:17. அவர் தம்முடைய சிலுவையைச் சுமந்துகொண்டு, எபிரெயு பாஷையிலே கொல்கொதா என்று சொல்லப்படும் கபாலஸ்தலம் என்கிற இடத்திற்குப் புறப்பட்டுப்போனார்.**

**யோவா 19:18. அங்கே அவரைச் சிலுவையில் அறைந்தார்கள்; அவரோடேகூட வேறிரண்டுபேரை இரண்டு பக்கங்களிலும் இயேசுவை நடுவிலுமாகச் சிலுவைகளில் அறைந்தார்கள்.**

**சிலுவையில் அறையும்படிக்கு**

**அப்பொழுது அவரைச் சிலுவையில் அறையும்படிக்கு அவர்களிடத்தில் ஒப்புக்கொடுத்தான். அவர்கள் இயேசுவைப் பிடித்துக்கொண்டு போனார்கள் (யோவா 19:16).**

## அதிகாரம் - 19

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு பிலாத்து மரணதண்டனை கொடுக்கிறான். யூதர்கள் அந்தத் தண்டனையை நிறைவேற்றும் வண்ணமாக இயேசுகிறிஸ்துவை சிலுவையில் அறைகிறார்கள். இயேசுகிறிஸ்துவிடத்தில் பிலாத்து ஒரு குற்றமும் காணவில்லை. ஆகையினால் அவரை விடுதலைபண்ண வேண்டுமென்று வகைதேடிக்கொண்டிருந்தான். யூதர்கள் இயேசுவின்மீது மிகவும் கோபமாகயிருந்தபடியினால், அவர்களையும் பிரியப்படுத்த வேண்டுமென்று பிலாத்து விரும்பினான். பிலாத்துவின் மனதில், அவனுடைய மனச்சாட்சிக்கும், யூதரைப் பிரியப்படுத்த வேண்டும் என்னும் விருப்பத்திற்கும் இடையே போராட்டம் உண்டாயிற்று. முடிவில் யூதரைப் பிரியப்படுத்த வேண்டும் என்னும் விருப்பமே வெற்றிபெற்றது. அவனுடைய மனச்சாட்சி தோற்றுப்போயிற்று. தேவனுக்குப் பயப்படுவதைப் பார்க்கிலும் மனுஷருக்குப் பயப்படுவதையே பிலாத்து தெரிந்துகொண்டான்.

பிலாத்து இயேசுகிறிஸ்துவைச் சிலுவையில் அறையும்படிக்கு ஒப்புக்கொடுக்கிறான். இயேசுவுக்கு மரணதண்டனை கொடுக்கும் சாசனத்தில் பிலாத்து கையொப்பமிடுகிறான். பிலாத்து தன்னுடைய மனச்சாட்சிக்கு விரோதமாகப் பாவம்செய்கிறான். இயேசுகிறிஸ்து ஒரு பாவமும் செய்யாதவர் என்று திரும்பத் திரும்ப அறிக்கையிட்டான். ஆனால் முடிவிலோ இயேசுகிறிஸ்து குற்றவாளியென்று தீர்ப்புச் செய்துவிடுகிறான். பிலாத்துவுக்குள் உண்மையில்லை. அவனுடைய மனச்சாட்சி சத்தியத்திற்காகப் போராடவில்லை. அவசரப்பட்டு தீர்ப்புச் செய்கிறான். யூதர்கள் தன்னைப்பற்றி இராயனிடத்தில் பிராது செய்வார்களோ என்று பயப்படுகிறான். இதற்காக யூதரைப் பிரியப்படுத்த வேண்டும் என்று விரும்பி, இயேசுவை யூதருடைய இஷ்டத்தின் பிரகாரம் தண்டிக்கிறான்.

பிலாத்து தேசாதிபதியாக இருப்பதினால் நியாயாசனத்தில் அமர்ந்து நீதியின் பிரகாரம் தீர்ப்புச் செய்யவேண்டும். நியாயத்தின்படி ஜனங்களை ஆளுகை செய்யவேண்டும். அவன் நல்லவனாக இருக்கவேண்டும். முகத்தாட்சணியம் பாராமல் தீர்ப்புச் செய்யவேண்டும். ஆனால் பிலாத்துவோ இதுவரையிலும் இயேசுவைப் பார்த்தவன், இப்போது தன்னையே பார்க்க ஆரம்பிக்கிறான். தனக்கும் தன் பதவிக்கும் ஆபத்து வந்துவிடுமோ என்று பயப்படுகிறான். இயேசுவை சிலுவையில் அறையும்படிக்கு அவர்களிடத்தில் ஒப்புக்கொடுக்கிறான். மனச்சாட்சியின்படி நடக்க மனதில்லாதவனாய், தன் சுயவிருப்பத்தின்படி நடக்கிறான். நல்லவனாகயிருந்த பிலாத்துவைச் சாத்தான் தீயவனாக மாற்றிவிடுகிறான்.

பிலாத்து இயேசுவைச் சிலுவையில் அறையும்படி தீர்ப்புச் செய்தாலும், அந்தத் தண்டனையை அவன் நிறைவேற்ற விரும்பவில்லை. இதனால் குற்றம் தன்மீது சுமரும் என்று பயந்து இயேசுகிறிஸ்துவை யூதர்களிடத்தில் ஒப்புக்கொடுக்கிறான். பிரதான ஆசாரியரும் மூப்பரும் இயேசுவைச் சிலுவையில் அறையவேண்டுமென்று வைராக்கியமாகயிருக்கிறார்கள். பிலாத்து அப்படிப்பட்டவர்களிடம் இயேசுவை ஒப்புக்கொடுத்துவிடுகிறான்.

இயேசுவைச் சிலுவையில் அறையக்கூடாது என்று பிலாத்துவின் மனச்சாட்சி சொல்லுகிறது. அவன் தன் மனச்சாட்சிக்கு விரோதமாகப் பாவம் செய்யவிரும்பவில்லை. இயேசுவைச் சிலுவையில் அறைந்து தான் பாவம் செய்யக்கூடாது என்று நினைத்து, இயேசுவைச் சிலுவையில் அறையும்படி அவரை யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கிறான். இயேசுவைத் தான் சிலுவையில் அறையவில்லையென்றும், யூதர்கள்தான் சிலுவையில் அறைந்தார்களென்றும் தன்னுடைய மனச்சாட்சியைத் தேற்றிக்கொள்ள விரும்புகிறான்.

பிலாத்து இயேசுவைச் சிலுவையில் அறையும்படிக்குச் சொன்ன தீர்ப்பை, அவன் மாற்றிவிடுவானோ என்று யூதர்கள் பயப்படுகிறார்கள். ஆகையினால் அவரைச் சிலுவையில் அறையும்படி தங்களிடத்தில் ஒப்புக்கொடுத்தவுடனே அவர்கள் இயேசுவைச் சிலுவையில் அறைய பிடித்துக்கொண்டு போகிறார்கள். சிறிது நேரமும் வீணாக்கவில்லை. காலத்தை விரயம் செய்தால் ஜனங்கள் மத்தியில் கலகமுண்டாகிவிடுமோ என்று பயந்துவிடுகிறார்கள். தாங்கள் செய்வது தீமையென்று தெரிந்திருந்தும் அதைச் செய்வதற்கு யூதர்கள் விரைந்தோடுகிறார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், நன்மையான காரியங்களைச் செய்வதற்கு விரைந்து செயல்படவேண்டும். காலத்தை விரயம்பண்ணக்கூடாது. காலதாமதம் பண்ணினால், நன்மை செய்வதற்கு இடையூறு உண்டாகும். இதை நினைத்து, காலதாமதம் செய்யாமல் நன்மை செய்வது கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு ஏற்றதாகயிருக்கிறது.

## அதிகாரம் - 19

யூதர்கள் இயேசுகிறிஸ்துவைச் சிலுவையில் அறைவதற்கு உடனடியாகப் பிடித்துக்கொண்டு போகிறார்கள். இயேசுவைச் சிலுவையில் அறையவேண்டுமென்று பிரதான ஆசாரியர் பல நாட்களாகச் சதிஆலோசனை பண்ணினார்கள். தங்களுடைய கண்ணியில் இயேசுகிறிஸ்து விழுந்துவிட்டார் என்று நினைத்து, அவரைக் காலதாமதம்பண்ணாமல் கொன்று போடவேண்டுமென்று விறுவிறுப்பாகக் கிரியை நடப்பிக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவை ஆசாரியரும் சேவகரும் சிலுவையில் அறையப் பிடித்துக்கொண்டு போகிறார்கள்.

மோசேயின் பிரமாணத்தின்படி குற்றம் சுமத்துகிறவர்களே குற்றம் சுத்தப்பட்டவர்மீது தண்டனையை நிறைவேற்றவேண்டும். பிரதான ஆசாரியர் இயேசுகிறிஸ்துவுக்குத் தண்டனையை நிறைவேற்றுவதில் மிகுந்த பெருமையடைகிறார்கள். நாம் தப்பிக்க வேண்டுமென்பதற்காக, இயேசுகிறிஸ்துவை நமக்காகப் பிடித்துக்கொண்டு போகப்படுகிறார்.

**கொல்கொதா**

**அவர் தம்முடைய சிலுவையைச் சுமந்துகொண்டு, எபிரெயு பாஷையிலே கொல்கொதா என்று சொல்லப்படும் கபாலஸ்தலம் என்கிற இடத்திற்குப் புறப்பட்டுப்போனார் (யோவா 19:17).**

இயேசுகிறிஸ்துவை சிலுவையில் அறையும்படிக்கு பிலாத்து அவரை யூதர்களிடத்தில் ஒப்புக்கொடுக்கிறான். அவர்கள் இயேசுவைப் பிடித்துக்கொண்டு போகிறார்கள். அவருடைய வேதனையை அதிகரிக்கச் செய்யும் வண்ணமாக, அவருடைய சிலுவையை அவர்மீது சுமத்தி, அதைச் சுமந்துகொண்டு போகச்செய்கிறார்கள். சிலுவையில் அறையப்படுகிறவர் தன்னுடைய சிலுவையைச் சுமந்துகொண்டு போவது ரோமர் மத்தியில் வழக்கமாயிருக்கிறது. அந்த வழக்கத்தின் பிரகாரமாக இயேசுகிறிஸ்து தம்முடைய சிலுவையைச் சுமந்துகொண்டு போகிறார்.

சிலுவையில் அறையப்படும் இடத்தில், ஒரு சிலுவை மரத்தை நட்டி வைத்து, அதில் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் எல்லோரையும் ஒரே சிலுவையில் அறைவது ரோமருடைய வழக்கமல்ல. ஒரே சிலுவை மரத்தில் எல்லோரையும் சிலுவையில் அறையமாட்டார்கள். ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக சிலுவை மரம் இருக்கும். அந்த மரத்தில்தான் அவரைச் சிலுவையில் அறைவது வழக்கம். அந்த வழக்கத்தின் பிரகாரமாக இயேசுகிறிஸ்துவை சிலுவையில் அறையும்படிக்கு பிலாத்து ஒப்புக்கொடுத்தபோது, அவர் தம்முடைய சிலுவையைச் சுமந்துகொண்டு போகிறார்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சிலுவையைச் சுமந்துகொண்டு போவது அவருடைய பாடுகளின் ஒரு பகுதியாக இருக்கிறது. அவர் மெய்யாகவே தம்முடைய சிலுவையை நமக்காகச் சுமந்துசெல்கிறார். இயேசுகிறிஸ்துவின் சரீரம் மென்மையானது. சற்று நேரத்திற்கு முன்பு பிலாத்து அவரை வாரினால் அடிப்பித்தான். இதனால் அவருக்குச் சோர்வும் வேதனையும் உண்டாயிற்று. வாரினால் அடிக்கப்பட்டதினால் அவருடைய சரீரம் முழுவதும் காயமும் தழும்பும் உண்டாயிற்று. இதோடு சேர்ந்து அவருடைய சிலுவையின் பாரமும் அவரை வேதனைக்குட்படுத்துகிறது. அவருடைய தலையில் முள்முடி சூட்டப்பட்டிருப்பதினால் அதுவும் அவரை வேதனைப்படுத்துகிறது. இந்த வேதனைகளெல்லாவற்றையும் இயேசுகிறிஸ்து பொறுமையோடு சகித்துக்கொள்கிறார்.

இயேசுகிறிஸ்து நமக்காகச் சாபமானார். ஆகையினால் அவர் மீது சிலுவை சுமத்தப்படுகிறது. அவர் நமக்காகச் சிலுவையைச் சுமக்கிறார். இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாகிய நாமெல்லோரும், நம்முடைய சிலுவைகளைச் சுமந்துகொண்டு அவரைப் பின்பற்றவேண்டும். நாம் சுமப்பதற்கு எப்படிப்பட்ட சிலுவை கொடுக்கப்பட்டாலும் அந்தச் சிலுவையை சுமப்பதற்கு நாம் ஆயத்தமாகயிருக்கவேண்டும். எல்லா வேளையிலும் நம்முடைய சிலுவையைச் சுமந்துகொண்டு செல்லவேண்டும். இயேசுகிறிஸ்து தம்முடைய சிலுவையை, அவர் முதலாவதாக சுமந்ததை நாம் எப்போதுமே நினைவுகூரவேண்டும்.

இயேசுகிறிஸ்து நமக்காகச் சாபமனார். சாபசிலுவையின் கடினமான பகுதியை அவர் தம்மீது சுமந்துகொண்டார். கடினமான பகுதி இயேசுகிறிஸ்துவின் தோள்மீது சுமத்தப்பட்டிருப்பதினால், நாம் சுமக்கவேண்டிய சிலுவையின் சுமை இலகுவாயிற்று. பாடுகளையும் வேதனைகளையும் இயேசுகிறிஸ்து நமக்காகத் தாங்கிக்கொண்டதினால், நம்மீது சுமத்தப்படும் பாடுகளும் வேதனைகளும் இலகுவாயிற்று.

## அதிகாரம் - 19

இயேசுகிறிஸ்து தம்முடைய சிலுவையைச் சுமந்துகொண்டு கபாலஸ்தலம் என்கிற இடத்திற்குப் புறப்பட்டுப்போகிறார். எபிரெய பாஷையிலே இந்த இடம் கொல்கொதா என்று சொல்லப்படுகிறது. இயேசுகிறிஸ்துவை அவருடைய விருப்பத்திற்கு மாறாக யாரும் கட்டாயப்படுளத்தி, அவரை அவருடைய சிலுவையைச் சுமப்பதற்கு வற்புத்தவில்லை. அவர் தாமே தம்முடைய பாடுகளைத் தம்மீது மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறார். பிரதான ஆசாரியனுடைய அரமனையில் கபத்தா என்று சொல்லப்படும் இடத்திலிருந்து கொல்கொதா என்று சொல்லப்படும் இடத்திற்கு இயேசுகிறிஸ்து தம்முடைய சிலுவையைச் சுமந்துகொண்டு செல்கிறார். இந்த இடம் நகர வாசலுக்குப் புறம்பேயிருக்கிறது. இயேசுகிறிஸ்து தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தைப் பரிசுத்தம் செய்யும்படியாக நகர வாசலுக்குப் புறம்பே பாடுபடுகிறார் (எபி 13:12).

இயேசுகிறிஸ்துவைக் கொல்கொதா என்னுமிடத்திற்கு அழைத்து வருகிறார்கள். சிலுவையில் அறையப்பட வேண்டிய குற்றவாளிகளை இந்த இடத்தில் சிலுவையில் அறைந்து கொலைபண்ணுவது வழக்கம். ஒரு சாதாரண குற்றவாளியைச் சிலுவையில் அறைந்து கொல்லுவதுபோல, தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவை கொல்கொதா என்னுமிடத்திற்கு அழைத்து வருகிறார்கள். அவர் நமக்காகப் பாவமானபடியினால், இயேசுகிறிஸ்து கொல்கொதா என்னுமிடத்தில், நமக்காகச் சிலுவையில் பாடுகளை அனுபவிக்கிறார்.

**சிலுவையில் அறைகிறார்கள்**

**அங்கே அவரைச் சிலுவையில் அறைந்தார்கள்; அவரோடேகூட வேறிரண்டுபேரை இரண்டு பக்கங்களிலும் இயேசுவை நடுவிலுமாகச் சிலுவைகளில் அறைந்தார்கள் (யோவா 19:18).**

இயேசுகிறிஸ்துவைக் கொல்கொதா என்னுமிடத்தில் சிலுவையில் அறைகிறார்கள். அவரோடே கூட வேறு இரண்டு கள்ளரையும், இரண்டு பக்கங்களிலும் சிலுவைகளில் அறைகிறார்கள்.

இயேசுகிறிஸ்து அவர்களுக்கு நடுவே சிலுவையில் அறையப்படுகிறார். சிலுவை மரணம் வேதனையுள்ளது, அவமானத்திற்குரியது, சாபத்திற்குரியது. வெண்கல சர்ப்பம் உயர்த்தப்பட்டதுபோல இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையில் உயர்த்தப்படுகிறார். சிலுவை மரத்தில் இயேசுகிறிஸ்துவின் இரண்டு கைகளையும் விரித்து ஆணிகளால் அறைகிறார்கள். நம்மை அன்போடு அழைக்கும் வண்ணமாக, நம்மை அரவணைக்கும் வண்ணமாக இயேசுகிறிஸ்து தம்முடைய இரண்டு கைகளையும் விரித்தவராக சிலுவையில் அறையப்படுகிறார்.

இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்படும்போது அவரோடேகூட இரண்டுபேரையும் சிலுவையில் அறைகிறார்கள். அவர்கள் இரண்டு பேரும் கள்ளர்கள். இயேசுகிறிஸ்து கள்ளர்கள் மத்தியில், ஒரு சாதாரண குற்றவாளியைப்போல சிலுவையில் அறையப்படுகிறார். அவ்விரண்டு கள்ளர்களும் இயேசுகிறிஸ்துவின் சிலுவைக்கு இரண்டு பக்கங்களிலும் அறைப்படுகிறார்கள். இயேசுவோ அவர்கள் இருவருக்கும் நடுவில் சிலுவையில் அறையப்படுகிறார். சிலுவையில் அறையப்பட்டிருக்கும் இந்த மூன்று பேரில், இயேசுகிறிஸ்துவைப் பிரதான குற்றவாளிபோலக் காண்பிப்பதற்காக, அவரை நடுவே சிலுவையில் அறைகிறார்கள். அவர் அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டார் என்று எழுதப்பட்டிருக்கும் வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக, இயேசுகிறிஸ்து இரண்டு கள்ளர்களுக்கு நடுவில் சிலுவையில் அறையப்படுகிறார்.

இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையில் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுக்கிறார். சிலுவையில் மற்ற குற்றவாளிகள் மரிப்பதுபோலவே, இயேசுகிறிஸ்துவும் அவர்களுக்கு நடுவே மரிக்கிறார். அவ்விரண்டு கள்ளர்களும் தாங்கள் செய்த பாவத்தினிமித்தமாக தங்கள் இரத்தத்தைச் சிந்தினார்கள். இயேசுகிறிஸ்துவோ ஒரு பாவமும் செய்யாதவர். நாம் செய்த பாவங்களினிமித்தமாக, நம்மைச் சுத்திகரிப்பதற்காக, இயேசுகிறிஸ்து தம்முடைய இரத்தத்தையே சிந்துகிறார். இரண்டு கள்ளர்களுக்கு நடுவில் இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டதினால், அவர் சிந்திய இரத்தமும், இரண்டு கள்ளர்களும் சிந்திய இரத்தமும் தரையிலே ஒன்றாகக் கலக்கிறது.

## அதிகாரம் - 19

கல்வாரி சிலுவையில் நமக்காக இரத்தம் சிந்திய இயேசுகிறிஸ்துவை நம்முடைய மனக்கண்கள் மூலமாக எப்போதும் நோக்கிப்பார்க்கவேண்டும். இயேசுகிறிஸ்து நமக்காகப் பாடுகளை அனுபவித்ததுபோல, நாம் யாரும் அவருக்காகப் பாடுகளை அனுபவிப்பதில்லை. அவர் நமக்காக இரத்தம் சிந்தினார். கல்வாரி சிலுவையில் எல்லா வேதனைகளையும் பாடுகளையும் அனுபவித்தார். கல்வாரியில் அவர் நமக்காகவே தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்தார். இந்தக் காட்சியை நம்முடைய மனக்கண்களினால் தரிசிக்கும்போது, இயேசுகிறிஸ்துவின்மீது நாம் வைத்துள்ள அன்பு அதிகரிக்கவேண்டும். நாம் அவருக்காக ஜீவிக்கவேண்டுமென்று நம்மை ஒப்புக்கொடுக்கவேண்டும். நம்முடைய இருதயத்தில் இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சிந்தனையே நிரம்பியிருக்கவேண்டும்.

### மேல் விலாசம்
### யோவா 19 : 19-22

**யோவா 19:19. பிலாத்து ஒரு மேல்விலாசத்தை எழுதி, சிலுவையின்மேல் போடுவித்தான். அதில் நசரேயனாகிய இயேசு யூதருடைய ராஜா என்று எழுதியிருந்தது.**

**யோவா 19:20. இயேசு சிலுவையில் அறையப்பட்ட இடம் நகரத்திற்குச் சமீபமாயிருந்தபடியினால், யூதரில் அநேகர் அந்த மேல்விலாசத்தை வாசித்தார்கள்; அது எபிரேயு கிரேக்கு லத்தீன் பாஷைகளில் எழுதியிருந்தது.**

**யோவா 19:21. அப்பொழுது யூதருடைய பிரதான ஆசாரியர் பிலாத்துவை நோக்கி: யூதருடைய ராஜா என்று நீர் எழுதாமல், தான் யூதருடைய ராஜா என்று அவன் சொன்னதாக எழுதும் என்றார்கள்.**

**யோவா 19:22. பிலாத்து பிரதியுத்தரமாக: நான் எழுதினது எழுதினதே என்றான்.**

#### நசரேயனாகிய இயேசு யூதருடைய ராஜா

**பிலாத்து ஒரு மேல்விலாசத்தை எழுதி, சிலுவையின்மேல் போடுவித்தான். அதில் நசரேயனாகிய இயேசு யூதருடைய ராஜா என்று எழுதியிருந்தது (யோவா 19:19).**

இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையில் மரித்த சம்பவம் யோவான் எழுதின சுவிசேஷத்தில் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது. பிலாத்து ஒரு மேல்விலாசத்தை எழுதுகிறான். அந்த விலாசத்தை இயேசுகிறிஸ்துவின் சிலுவையின்மேல் போடுமாறு உத்தரவிடுகிறான். இயேசுகிறிஸ்து என்ன காரணத்திற்காக சிலுவையில் அறையப்பட்டாரென்பதை பிலாத்து மேல்விலாசமாக எழுதுகிறான். அந்த மேல்விலாசத்தில் "நசரேயனாகிய இயேசு யூதருடைய ராஜா" என்று எழுதியிருந்தது. இயேசுகிறிஸ்துவை பிலாத்து "நசரேயனாகிய இயேசு" என்று எழுதுகிறான். அவர் தம்மை "யூதருடைய ராஜா" என்று அழைத்துக்கொண்டதாகவும், இராயனுக்குப் போட்டியாகத் தம்மை உயர்த்தியதாகவும் பொருள்படும் வண்ணமாக, பிலாத்து இவ்வாறு ஒரு மேல்விலாசத்தை எழுதுகிறான்.

பிலாத்துவின் மனதில் இப்படிப்பட்ட எண்ணம் இருந்தாலும், தேவனோ தம்முடைய சித்தத்தையே எப்போதும் நிறைவேற்றுகிறார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஒரு பாவமும் செய்யாதவர் என்பதற்கு சாட்சியாக பிலாத்து எழுதிய மேல்விலாசம் அமைந்திருக்கிறது. இயேசுகிறிஸ்துவின்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு மாத்திரமே இந்த மேல்விலாசத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இயேசு குற்றம் செய்தார் என்று இதில் எழுதப்படவில்லை. இயேசுகிறிஸ்துவின் கண்ணியத்தையும் மகிமையையும் இந்த மேல்விலாசம் ஜனங்களுக்குத் தெரியப்படுத்துகிறது. இரட்சகராகிய இயேசுகிறிஸ்து ஜனங்களுடைய நன்மைக்காக மரிக்கிறார். எல்லாருக்காகவும் ஒரே மனுஷன் மரிப்பது நலமாயிருக்குமென்று காய்பா சொன்ன பிரகாரமாக இயேசுகிறிஸ்து ஜனங்களுக்காக மரிக்கிறார்.

#### மேல் விலாசத்தை வாசித்தார்கள்

**இயேசு சிலுவையில் அறையப்பட்ட இடம் நகரத்திற்குச் சமீபமாயிருந்தபடியினால், யூதரில் அநேகர் அந்த மேல்விலாசத்தை வாசித்தார்கள்; அது எபிரேயு கிரேக்கு லத்தீன் பாஷைகளில் எழுதியிருந்தது (யோவா 19:20).**

## அதிகாரம் - 19

பிலாத்து ஒரு மேல்விலாசத்தை எழுதி இயேசுகிறிஸ்துவின் சிலுவையின்மேல் போடுமாறு உத்தரவிடுகிறான். யூதரில் அநேகர் அந்த மேல்விலாசத்தை வாசிக்கிறார்கள். எருசலேமிலுள்ள யூதர்கள் மாத்திரமல்ல, பல ஊர்களிலிருந்து வந்திருக்கும் யூதர்களும் அந்த மேல்விலாசத்தை வாசிக்கிறார்கள். இது பண்டிகைக் காலமாக இருக்கிறபடியினால், ஏராளமான யூதர்கள் பல ஊர்களிலிருந்தும் எருசலேமுக்கு வருகிறார்கள். இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட இடம் எருசலேம் நகரத்திற்கு சமீபமாயிருக்கிறது. ஆகையினால் யூதரில் அநேகர் அந்த மேல்விலாசத்தை வாசிக்கிறார்கள்.

மேல்விலாசத்தை வாசித்தபோது யூதர்களுடைய மனதில் பலவிதமான எண்ணங்களும், குழப்பங்களும் உண்டாயிற்று. இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட சம்பவத்தை அவர்கள் தங்களுக்குள் விவாதம் பண்ணிக்கொள்கிறார்கள். இயேசுகிறிஸ்துதாமே அவர்களுக்கு ஒரு அடையாளமாகயிருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் தலையின்மீது ஒரு மேல்விலாசம் எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. எல்லோரும் எளிதாக வாசித்துப் புரிந்துகொள்ளும் வண்ணமாக இந்த விலாசம் எழுதப்பட்டிருக்கிறது.

இயேசுகிறிஸ்து நகரத்திற்குச் சமீபமாய் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறார். நகரவாசலுக்குப் புறம்பே அவர் சிலுவையில் அறையப்பட்டாலும், அவர் சிலுவையில் அறையப்பட்ட இடம் நகரத்திற்குச் சமீபமாயிருக்கிறது. இயேசுகிறிஸ்துவை அறியும் சிலாக்கியம் யூதர்களுக்கு மிகவும் அருகாமையில் கிட்டியிருக்கிறது. இயேசுகிறிஸ்துவினுடைய சிலுவை மரணம் அவர்களுடைய நகரத்திற்கு அருகாமையில், நகரவாசலுக்குப் புறம்பே நடைபெற்றிருக்கிறது.

பிலாத்து அந்த மேல்விலாசத்தை எபிரெயு, கிரேக்கு, லத்தீன் ஆகிய மூன்று பாஷைகளிலும் எழுதியிருக்கிறான். எருசலேம் நகரத்திற்கு வருகிறவர்கள் அநேகமாக இந்த மூன்று பாஷைகளில் ஒரு பாஷையை பேசுகிறவர்களாகயிருப்பார்கள். ஆகையினால் பிலாத்து எழுதிய மேல்விலாசம் எல்லோரும் வாசிக்கும் வண்ணமாக எழுதப்பட்டிருக்கிறது தங்களுக்குத் தெரிந்த பாஷையில் இது எழுதப்பட்டிருப்பதினால், இந்த மேல்விலாசத்தை வாசிக்கிறவர்களெல்லோரும் இதன் அர்த்தத்தைப்பற்றி விவாதிக்கிறார்கள். மற்றவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறார்கள். இம்மூன்று பாஷைகளிலுமே "இயேசு ராஜா" என்றே எழுதப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்து ராஜாவாகவே அறிவிக்கப்பட்டிருக்கிறார்.

இயேசுகிறிஸ்து யூதருக்கு மாத்திரம் இரட்சகரென்று அவர் தம்மை பிரகடனப்படுத்தவில்லை. அவரோ எல்லா ஜாதியாருக்கும், எல்லா தேசத்தாருக்கும் இரட்சகராகயிருக்கிறார். அவர் உலக இரட்சகர். எல்லா தேசத்தாரும், எல்லா பாஷைக்காரரும் இயேசுகிறிஸ்துவை அறிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக, கல்வாரி சிலுவையில் அவருடைய சிலுவையின்மேல் போடப்பட்ட மேல்விலாசம், அக்காலத்தில் பிரபல்யமாயிருந்த இம்மூன்று பாஷைகளிலும் எழுதப்பட்டிருக்கிறது. இரட்சகரின் அற்புதமான கிரியைகளை ஒவ்வொரு தேசத்தாரும் தங்களுடைய சொந்த பாஷைகளில் கேட்கவேண்டுமென்பது தேவனுடைய திட்டமாகும்.

இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் ஒவ்வொரு பாஷைக்காரருக்கும், அவரவர்களுடைய பாஷையிலேயே அறிவிக்கப்படவேண்டும். தங்களுடைய அயலகத்தாரோடும், உற்றார் உறவினரோடும் தாராளமாகப் பேசுவதற்குப் பயன்படுத்தும் பாஷையிலேயே இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் அவர்களிடத்தில் அறிவிக்கப்பட வேண்டும்.

**தான் யூதருடைய ராஜா**

**அப்பொழுது யூதருடைய பிரதான ஆசாரியர் பிலாத்துவை நோக்கி: யூதருடைய ராஜா என்று நீர் எழுதாமல், தான் யூதருடைய ராஜா என்று அவன் சொன்னதாக எழுதும் என்றார்கள் (யோவா 19:21).**

பிலாத்து எழுதிய மேல்விலாசத்தை யூதருடைய பிரதான ஆசாரியர்களும் வாசிக்கிறார்கள். ஆனால் அதில் எழுதப்பட்டிருக்கும் வார்த்தைகளைப் அவர்கள் அங்கீகரிக்கவில்லை. அவர்கள் பிலாத்துவினிடத்தில்போய் "யூதருடைய ராஜா" என்று அவன் எழுதியதற்கு தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கிறார்கள். அப்படி எழுதுவதற்குப் பதிலாக "தான் யூதருடைய ராஜா" என்று இயேசு சொன்னதாக எழுதும் என்று பிலாத்துவினிடத்தில் கூறுகிறார்கள். பிரதான ஆசாரியருக்கு இயேசுகிறிஸ்துவின் மீதுள்ள கோபம் இன்னும் குறையவில்லை. இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையில் மரித்துக்கொண்டிருந்தாலும், பிரதான ஆசாரியர் இன்னும் கொலைவெறியோடிருக்கிறார்கள்.

## அதிகாரம் - 19

இயேசுகிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்ததன் மூலமாகத் தாங்கள் செய்வது நியாயமானது என்பதை அவர்கள் நியாயப்படுத்த விரும்புகிறார்கள். பிலாத்து "நசரேயனாகிய இயேசு யூதருடைய ராஜா" என்று ஒரு மேல்விலாசத்தை எழுதி, இயேசுகிறிஸ்துவினுடைய சிலுவையின்மேல் போடுமாறு கட்டளையிடுகிறான். இந்த வார்த்தையினால் இயேசுகிறிஸ்துவுக்கு கனமும் மதிப்பும் உண்டாகும் என்று பிரதான ஆசாரியர் நினைக்கிறார்கள். அவர்கள் இயேசுகிறிஸ்துவுக்கு எந்த மரியாதையையும் கொடுக்க ஆயத்தமாயில்லை. முடிந்தவரையிலும் அவரை எப்படியெல்லாம் அவமானப்படுத்த வேண்டுமோ, அப்படியெல்லாம் அவரை அவமானப்படுத்துவதற்கு முயற்சி பண்ணுகிறார்கள். யூததேசத்தில் தங்களுக்கு மாத்திரமே மதிப்பும் மரியாதையும் உள்ளது என்று பிரதான ஆசாரியர் நினைக்கிறார்கள். தாங்கள் மாத்திரமே கனத்திற்கும் மகிமைக்கும் பாத்திரவான்களென்றும் பெருமையோடிருக்கிறார்கள்.

பிரதான ஆசாரியர் தங்கள் இருதயத்தில் பெருமையோடிருக்கிறார்கள். அவர்கள் இயேசுகிறிஸ்துவை தங்களுடைய ராஜா என்று அங்கீகரிக்க விரும்பவில்லை. இயேசுகிறிஸ்துவைச் சிலுவையில் அறையுமாறு யூதர்கள் மிகுந்த சத்தமிட்டு, கலகம்பண்ணி, பிலாத்துவை சம்மதிக்கவைத்தார்கள். அதுபோலவே இப்போது பிலாத்து எழுதியுள்ள மேல்விலாசத்தின் வார்த்தைகளையும் மாற்றிவிட முடியுமென்று அவனிடத்தில் வருகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவை அவமானப்படுத்த வேண்டுமென்பது யூதமார்க்கத்துத் தலைவர்களுடைய விருப்பம். தங்களுடைய விருப்பத்திற்கு ஏற்றபிரகாரம் பிலாத்துவும் செயல்படவேண்டுமென்று பிரதான ஆசாரியர் எதிர்பார்க்கிறார்கள். இயேசுகிறிஸ்து தம்மை யூதருடைய ராஜா என்று அறிவித்தார் என்பது இயேசுகிறிஸ்துவின்மீது பிரதான ஆசாரியர் கூறிய குற்றச்சாட்டு. ஆனால் இந்தக் குற்றச்சாட்டை அவர்களால் இன்னும் நிரூபிக்க முடியவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் அவர்கள் இன்னும் "நான் யூதருடைய ராஜா" என்று இயேசுகிறிஸ்து சொன்னதாக எழுதச் சொல்லுகிறார்கள். தாங்கள் இயேசுவின்மீது கூறிய குற்றச்சாட்டை நிரூபிப்பதற்கு வழிவகை தேடுகிறார்கள்.

### நான் எழுதினது எழுதினதே

**பிலாத்து பிரதியுத்தரமாக: நான் எழுதினது எழுதினதே என்றான் (யோவா 19:22).**

பிலாத்துவோ பிரதான ஆசாரியருடைய விண்ணப்பத்திற்கு இணங்க மறுத்துவிடுகிறான். அவர்களிடத்தில் "நான் எழுதினது எழுதினதே" என்று அறிவித்துவிடுகிறான். இதுவரையிலும் பிரதான ஆசாரியர் தங்களுடைய கூட்டத்தைக்கூட்டி, பிலாத்துவைத் தங்களுடைய விருப்பத்திற்கு சம்மதிக்கவைத்தனர். ஆனால் இப்போதோ அவர்களால் தாங்கள் விரும்பினதை சாதிக்க முடியவில்லை. பிலாத்து எழுதின மேல்விலாசத்தில், பிரதான ஆசாரியர் விரும்புகிற வார்த்தைகள் எதுவும் இடம்பெறவில்லை. அவர்கள் தங்களை இராயனுக்குச் சிநேகிதராகவும், ரோமப்பேரரசுக்கு ஆதரவாளர்களாகவும் காண்பித்தார்கள். ஆனால் இது வெறும் வேஷமாகவும் நடிப்பாகவும் ஆயிற்று.

இயேசுகிறிஸ்து யூதருடைய ராஜா என்றால், பிரதான ஆசாரியர் அவருக்கு மதிப்புக்கொடுக்கவேண்டும். ஆனால் அவர்களோ இயேசுவைச் சிலுவையில் அறைந்து கொன்றுவிடுகிறார்கள். இயேசுகிறிஸ்துவினிடத்தில் ஒரு குற்றமும் இல்லாதிருந்தும் அவரைச் சிலுவையில் அறைகிறார்கள். இவர்களுடைய துர்குணம் பிலாத்துவுக்குத் தெரிகிறது. அவர்களுடைய வஞ்சக யோசனையை வெளிப்படுத்தும் விதமாக, பிலாத்து இந்த மேல்விலாசத்தை எழுதியிருக்கிறான். பிலாத்து எழுதின வார்த்தையினால் இயேசுகிறிஸ்துவுக்கு கனமும் மகிமையும் உண்டாயிற்று. பிலாத்து இயேசுவை யூதருடைய ராஜா என்று அங்கீகரிக்கிறான். யூதஜனங்கள் இயேசுகிறிஸ்துவைப் புறக்கணித்தாலும், புறஜாதியானாகிய பிலாத்துவோ, அவரை ராஜாவாக அங்கீகரிக்கிறான். சாதாரண யூதஜனங்கள் இயேசுகிறிஸ்துவை மறுதலிக்கிறார்கள். யூதேயா தேசத்தின் தேசாதிபதியாகிய பிலாத்துவோ இயேசுகிறிஸ்துவை யூதருடைய ராஜாவாக அங்கீகரிக்கிறான்.

## அதிகாரம் - 19

இரட்சகராகிய இயேசுகிறிஸ்து மனுக்குலத்தை இரட்சிப்பதற்காக கல்வாரி சிலுவையில் தம்முடைய இரத்தத்தைச் சிந்தி மரிக்கிறார். அவர் யூதருக்கு மாத்திரம் இரட்சகரென்று தம்மை மட்டுப்படுத்திக்கொள்ளவில்லை. அவர் எல்லா தேசத்தாருக்கும் இரட்சகராகயிருக்கிறார். அவர் உலக இரட்சகர். இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பான புறஜாதியாரும் இயேசுகிறிஸ்துவின் ராஜ்யத்தில் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள்.

### இயேசுவின் வஸ்திரங்களும் அங்கியும் யோவா 19 : 23-24

**யோவா 19:23. போர்ச்சேவகர் இயேசுவைச் சிலுவையில் அறைந்தபின்பு, அவருடைய வஸ்திரங்களை எடுத்து, ஒவ்வொரு சேவகனுக்கு ஒவ்வொரு பங்காக நாலு பங்காக்கினார்கள்; அங்கியையும் எடுத்தார்கள், அந்த அங்கி, தையலில்லாமல் மேலே தொடங்கி முழுவதும் நெய்யப்பட்டதாயிருந்தது.**

**யோவா 19:24. அவர்கள்: இதை நாம் கிழியாமல், யாருக்கு வருமோ என்று இதைக்குறித்துச் சீட்டுப்போடுவோம் என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள். என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின்மேல் சீட்டுப்போட்டார்கள் என்கிற வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாகப் போர்ச்சேவகர் இப்படிச் செய்தார்கள்.**

இயேசுகிறிஸ்துவை சிலுவையில் அறையும் வேலை நான்கு போர்ச்சேவகர்களிடம் ஒப்புக்கொடுக்கப்படுகிறது. அந்தப் போர்ச்சேவகர் இயேசுகிறிஸ்துவைச் சிலுவையில் அறைகிறார்கள். அவரைச் சிலுவை மரத்தில் ஆணிகளால் அறைந்து, சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவோடு சிலுவை மரத்தைத் தூக்கி நிறுத்துகிறார்கள். இயேசுகிறிஸ்து சிலுவையில் தொங்கிக்கொண்டிருக்கிறார்.

இயேசுகிறிஸ்து மரிக்கும் வரையிலும் போர்ச்சேவர் காத்துக்கொண்டிருக்கவேண்டும். அவர் மரித்துவிட்டார் என்னும் செய்தியைக் கேட்கும் வரையிலும் அவர்களுக்கு வேறு வேலையில்லை. பொழுதுபோக்குவதற்காகவும், அந்த நேரத்தைச் சந்தோஷமாகச் செலவு பண்ணுவதற்காகவும் அவர்கள் இயேசுகிறிஸ்துவின் வஸ்திரங்களை எடுத்து ஒவ்வொரு சேவகனுக்கும் ஒவ்வொரு பங்காக நாலு பங்காக்குகிறார்கள். நாலு பங்கையும் சமபங்காகப் பிரிக்கிறார்கள்.

இயேசு கிறிஸ்துவின் அங்கி தையலில்லாமலிருக்கிறது. அது மேலே தொடங்கி முழுவதும் நெய்யப்பட்டதாகயிருக்கிறது. அந்த அங்கியை அவர்கள் கிழித்துப் பங்கிட விரும்பவில்லை. ஆகையினால் அந்த அங்கியைக் கிழியாமல், அது யாருக்கு வருமோ என்று பார்ப்பதற்காக, போர்ச்சேவகர்கள் அதைக் குறித்து சீட்டுப்போடுகிறார்கள்.

இயேசுகிறிஸ்து சிலுவையில் தொங்கிக்கொண்டிருக்கிறார். அவர் நமக்காகப் பாவமும் சாபமுமானார். தம்முடைய மரணத்தில் வேதனையையும் அவமானத்தையும் சுமக்கிறார். அவருடைய வஸ்திரமும் அங்கியும் அவரைவிட்டு எடுத்துக் கொள்ளப்படுவதினால், நிர்வாணத்தினால் உண்டாகும் அவமானமும் அவருக்கு உண்டாயிற்று. நமக்காகப் பாவமானவர், நமக்காக அவமானத்தையும் தம்மீது ஏற்றுக்கொள்கிறார்.

இயேசுகிறிஸ்துவைச் சிலுவையில் அறைவதற்காக போர்ச்சேவகர்கள் தங்களுடைய கூலியைப்பெற்றுக் கொள்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் வஸ்திரம் விலையுயர்ந்ததல்ல. அது பழைய வஸ்திரம்தான். ஆனாலும் அந்த பழைய வஸ்திரத்திற்காகக்கூட அவர்கள் இயேசுகிறிஸ்துவை சிலுவையில் அறைய சம்மதம் தெரிவிக்கிறார்கள். கிரயம் சிறியதாகயிருந்தாலும், அவர்கள் ஜீவாதிபதியையே சிலுவையில் அறைவதற்கு சம்மதிக்கிறார்கள்.

## அதிகாரம் - 19

இயேசுகிறிஸ்துவின் தையலில்லாத அங்கியைக் குறித்து சீட்டுப்போட்டு போர்ச்சேவர்கள் விளையாடுகிறார்கள். கல்வாரி சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும் இயேசுகிறிஸ்துவிடம் விலையுயர்ந்த பொருள் எதுவுமில்லை. அவரிடத்திலிருப்பது ஒரே ஒரு அங்கி மாத்திரமே. இயேசுவைச் சிலுவையில் அறைந்தவர்கள் இந்த அங்கியைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த அங்கியைக்கூட இயேசுகிறிஸ்துவுக்குக் கொடுக்க அவர்களுக்கு இஷ்டமில்லை. அதைத் தாங்கள் வைத்துக்கொள்ளவேண்டுமென்றும், அதைக் கிழிக்கக்கூடாது என்றும், அதைச் சீட்டுப்போட்டு தங்களில் ஒருவர் வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் பேசிக்கொள்கிறார்கள். இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையில் மரணவேதனையை அனுபவித்துக்கொண்டிருக்கும்போது, இந்தப் போர்ச்சேவகர்களோ சீட்டுப்போட்டு விளையாடிக்கொண்டிருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் அங்கி சபைக்கு அடையாளமாகயிருக்கிறது. சபையைக் கிழித்துவிடக்கூடாது. நம்முடைய சுயலாபத்திற்காக சபைக்குள் பிரிவினையை உண்டாக்கி, சபையைப் பிரித்துவிடக்கூடாது. கல்வாரி சிலுவையில் இயேசுகிறிஸ்துவுக்கு நடைபெற்ற ஒவ்வொரு சம்பவமும் வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக நடைபெறுகிறது. "என் வஸ்திரங்களை தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின் பேரில் சீட்டுப்போடுகிறார்" (சங் 22:18) என்று தாவீது எழுதியிருக்கிறார், அவர் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு இயேசுகிறிஸ்துவின் பாடுகளை முன்னறிவித்திருக்கிறார்.

### இயேசுவின் தாயார்
### யோவா 19 : 25-27

**யோவா 19:25. இயேசுவின் சிலுவையினருகே அவருடைய தாயும், அவருடைய தாயின் சகோதரி கிலெயோப்பா மரியாளும், மகதலேனா மரியாளும் நின்றுகொண்டிருந்தார்கள்.**

**யோவா 19:26. அப்பொழுது இயேசு தம்முடைய தாயையும் அருகே நின்ற தமக்கு அன்பாயிருந்த சீஷனையும் கண்டு, தம்முடைய தாயை நோக்கி: ஸ்திரீயே, அதோ, உன் மகன் என்றார்.**

**யோவா 19:27. பின்பு அந்த சீஷனை நோக்கி: அதோ, உன் தாய் என்றார். அந்நேரமுதல் அந்தச் சீஷன் அவளைத் தன்னிடமாய் ஏற்றுக்கொண்டான்.**

### இயேசுவின் சிலுவையினருகே

**இயேசுவின் சிலுவையினருகே அவருடைய தாயும், அவருடைய தாயின் சகோதரி கிலெயோப்பா மரியாளும், மகதலேனா மரியாளும் நின்றுகொண்டிருந்தார்கள் (யோவா 19:25).**

இயேசுகிறிஸ்து சிலுவையில் மரித்துக்கொண்டிருக்கும்போது, அவருடைய சிலுவையினருகே, அவருடைய தாயாரும் நின்று கொண்டிருக்கிறாள். மரியாளோடு அவருடைய உறவினரும் சிநேகிதரும் நின்றுகொண்டிருக்கிறார்கள். இந்த வசனத்தில் குறிப்பிட்டிருக்கிற பிரகாரம், முதலாவதாக இந்த ஸ்திரீகள் இயேசுவின் சிலுவையின் அருகே நின்று கொண்டிருக்கிறார்கள். அதன்பின்பு அவர்கள் இயேசுவின் சிலுவைக்கு சற்று தூரத்தில் நின்று கொண்டிருப்பதாக மத்தேயு, மாற்கு ஆகிய சுவிசேஷங்களில் எழுதப்பட்டிருக்கிறது. ஒருவேளை இயேசுகிறிஸ்துவின் சிலுவைக்கருகே இருந்த இவர்களை போர்ச்சேவர்கள் அங்கிருந்து துரத்திவிட்டிருக்கலாம்.

இந்த ஸ்திரீகள் இயேசுகிறிஸ்துவின்மீது அன்பாகவும் பக்தியாகவும் இருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் சீஷர்களில் யோவானைத்தவிர, மற்ற எல்லோருமே அவரைவிட்டு ஓடிப்போய்விடுகிறார்கள். ஆனால் இந்த ஸ்திரீகளோ இயேசுகிறிஸ்துவோடு கூடவே இருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவினுடைய சத்துருக்களைப் பார்த்து இந்த ஸ்திரீகள் பயப்படவில்லை. இயேசுகிறிஸ்து சிலுவையில் மரித்துக்கொண்டிருக்கும் கோரகாட்சியை காண்பதற்கு இவர்கள் தயங்கவில்லை. இயேசுகிறிஸ்துவை இவர்களால் சிலுவை மரணத்திலிருந்து விடுவிக்க முடியாது. ஆனாலும் அவருக்கு பணிவிடை செய்வதற்கு ஆயத்தமாக, அவர்கள் அவருக்கு அருகிலேயே நின்றுகொண்டிருக்கிறார்கள்.

## அதிகாரம் - 19

இயேசுகிறிஸ்து ஒரு பாவமும் செய்யாதவர். இயேசுவின் தாயாராகிய மரியாளுக்கு இயேசுவைப்பற்றி நன்றாகத் தெரியும். ஆனாலும் யூதர்கள் அவர்மீது கோபங்கொண்டு, அவரைச் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள். இதைக் காணும்போது இந்த ஸ்திரீகளின் உள்ளம் உடைந்துபோயிருக்கும். இயேசுகிறிஸ்து குழந்தையாக இருந்தபோது, சிமியோன் மரியாளிடத்தில் "உன் ஆத்துமாவையும் ஒரு பட்டயம் உருவிப்போகும்" (லூக் 2:35) என்று தீர்க்கதரிசனமாகக் கூறினான். அந்த முன்னறிவிப்பு இப்போது மரியாளிடத்தில் நிறைவேறுகிறது. இயேசுகிறிஸ்து சிலுவையில் மரித்துக்கொண்டிருப்பதைப் பார்க்கும்போது, மரியாளுடைய இருதயம் பட்டயத்தால் குத்தப்பட்டதுபோன்று ஆயிற்று.

இயேசுகிறிஸ்து சிலுவையில் இரத்தம் சிந்துகிறபோது, அதைப் பார்த்துக்கொண்டிருக்கிற மரியாளுடைய இருதயத்திலும் இரத்தம் சிந்துகிறது. இயேசுகிறிஸ்து சிலுவையில் அனுபவிக்கும் பாடுகளையும் வேதனைகளையும் காணும்போது மரியாளுடைய உள்ளம் உடைந்துபோயிற்று. தேவனுடைய கிருபையில்லையென்றால் மரியாளால் இந்தக் காட்சியை பார்க்க அவளுக்கு ஜீவன் இருக்காது. பார்த்தவுடனேயே மரியாள் மரித்துப்போயிருப்பாள். தேவன் தம்முடைய கிருபையினால் மரியாளைப் பலப்படுத்துகிறார். இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு தொங்கிக்கொண்டிருப்பதை, இருதய பாரத்தோடு மரியாள் பார்த்துக்கொண்டிருக்கிறாள்.

இயேசுகிறிஸ்து சிலுவையில் தொங்கிக்கொண்டிருக்கும்போது, மரியாளோ அல்லது அவளோடு கூடயிருக்கும் ஸ்திரீகளோ அழுது புலம்பினார்களென்று வேதத்தில் எழுதப்படவில்லை. அவர்கள் இயேசுவின் சிலுவையினருகே அமைதியாக நின்றுகொண்டிருக்கிறார்கள். தேவன் இவர்களுடைய இருதயத்தைப் பலப்படுத்தியதினால், இவர்களால் இந்த வேதனையைத் தாங்கிக்கொள்ள முடிகிறது.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கும் சோதனைகளும் பாடுகளும் வரலாம். இவை வரும்போதுதான் இதன் வேதனை எப்படியிருக்கும் என்பது நமக்குத் தெரியும். அப்போது "என் கிருபை உனக்குப் போதும்" என்று சொன்ன இயேசுவின் வார்த்தையை நாம் நினைத்துக்கொள்ள வேண்டும்.

### அதோ உன் மகன்

**அப்பொழுது இயேசு தம்முடைய தாயையும் அருகே நின்ற தமக்கு அன்பாயிருந்த சீஷனையும் கண்டு, தம்முடைய தாயை நோக்கி: ஸ்திரீயே, அதோ, உன் மகன் என்றார் (யோவா 19:26).**

உலக இரட்சகராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய தாயாரிடத்தில் அன்பும் தயவுமுள்ளவராயிருக்கிறார். மரியாளை அன்போடு பராமரிக்கிறார். மரியாளின் புருஷனாகிய யோசேப்பு இதற்கு முன்பே இறந்திருக்கவேண்டுமென்று சரித்திர ஆசிரியர்கள் கூறுகிறார்கள். குடும்பத்தில் மூத்த மகனாகிய இயேசுகிறிஸ்து, தம்முடைய தாயாராகிய மரியாளைப் பராமரித்து ஆதரிக்கிறார். இப்போது அவர் சிலுவையில் மரித்துக்கொண்டிருப்பதினால், மரியாளுக்கு இருக்கும் ஒரே ஆதரவும் மரித்துக்கொண்டிருக்கிறது.

இயேசுகிறிஸ்து சிலுவையில் தொங்கி வேதனைகளை அனுபவித்துக்கொண்டிருந்தாலும், தம்முடைய சிலுவைக்கு அருகாமையில் நின்று கொண்டிருக்கும் தம்முடைய தாயாராகிய மரியாளை அன்போடு நோக்கிப் பார்க்கிறார். இயேசுவினுடைய சிலுவைக்கருகில் அவருடைய சீஷரில் ஒருவனாகிய யோவானும் நின்று கொண்டிருக்கிறான். தமக்கு அன்பான சீஷனுக்கும், அன்பான தாயாருக்கும் இடையே இயேசுகிறிஸ்து ஒரு புதிய உறவை ஸ்தாபிக்கிறார். இயேசு தம்முடைய தாயை நோக்கி "ஸ்திரீயே அதோ உன் மகன்" என்று கூறுகிறார். அந்த சீஷனை நோக்கி "அதோ உன் தாய்" என்று கூறுகிறார். அந்நேரம் முதல் அந்த சீஷன் மரியாளை தன்னிடமாய் ஏற்றுக்கொள்கிறான். தன்னுடைய வீட்டிற்கு அழைத்துச் செல்கிறான். இயேசுகிறிஸ்துவுக்குத் தாயாயிருந்தவள், இப்போது அந்த சீஷனுக்கும் தாயாயிருக்கிறாள்.

## அதிகாரம் - 19

இயேசுகிறிஸ்து தமக்குப் பிரியமான தாயாரிடத்தில் மிகுந்த அன்பு வைத்திருக்கிறார். அவளைப் பராமரிக்கிறார். இயேசுகிறிஸ்துவின் சீஷர்களெல்லோரும் அவரைவிட்டு ஓடிப்போய்விடுகிறார்கள். தம்முடைய தாயாரை பராமரிக்க முடியதாவாறு இயேசுகிறிஸ்துவும் சிலுவையில் மரித்துக்கொண்டிருக்கிறார். இப்படிப்பட்ட சூழ்நிலையில் தம்முடைய தாயாரைப் பராமரிப்பதற்கு, அவரைத் தமக்குப் பிரியமான ஒரு சீஷனுடைய கையில் ஒப்புக்கொடுப்பதுதான் நலமாகயிருக்குமென்று இயேசுகிறிஸ்து தீர்மானம்பண்ணுகிறார்.

இயேசுகிறிஸ்து மரியாளை அழைக்கும்போது, "தாயே" என்று அழைக்காமல், அவளை "ஸ்திரீயே" என்று அழைக்கிறார். மரியாளின் ஆத்துமாவை ஏற்கெனவே ஒரு பட்டயம் உருவக் குத்தியிருக்கிறது. அவள் மிகுந்த வேதனையிலும் துயரத்திலுமிருக்கிறாள். இப்படிப்பட்ட வருத்தமான சூழ்நிலையில் இயேசுகிறிஸ்து அவளை, "தாயே" என்று அழைத்து, அவளுடைய வேதனையை அதிகரிக்கச் செய்ய விரும்பவில்லை. தம்முடைய சீஷரில் ஒருவனாகிய யோவானை, மரியாள் தன்னுடைய மகனாக அங்கீகரிக்குமாறு அவளிடத்தில் கூறுகிறார். தேவன் யாரையும் கைவிடாமல் தம்முடைய தெய்வீக அன்பினால் பராமரிக்கிறார் என்பதற்கு இந்தச் சம்பவம் ஓர் எடுத்துக்காட்டாகயிருக்கிறது.

சில சமயங்களில் தேவன் நமக்கு ஆதரவாகயிருக்கும் சில காரியங்களை நம்மைவிட்டு நீக்கிப்போகலாம். அப்படிப்பட்ட சூழ்நிலையில்கூட இயேசு நம்மைக் கைவிட்டுவிடுவதில்லை. ஒரு ஆதரவு நம்மைவிட்டு எடுத்துக்கொள்ளப்பட்டாலும், தேவன் தம்முடைய கிருபையினால் நமக்கு வேறொரு ஆதரவைத் தருவார். ஒருவேளை இந்த ஆதரவை நாம் எதிர்பார்த்திருக்கமாட்டோம். அந்த ஆதரவு எப்படியிருக்குமென்றும், அது எங்கிருந்து வருமென்றும் நமக்குத் தெரியாமலிருக்கலாம். தேவனுக்குத் தெரியாத காரியம் ஒன்றுமேயில்லை.

நம்முடைய வாழ்க்கையில் நாம் எல்லாவற்றையும் இழந்துபோனாலும், தேவன்மீது நாம் வைத்திருக்கும் நம்பிக்கையை மாத்திரம் இழந்துவிடக்கூடாது. நம்முடைய விசுவாசமே நமக்குப் பெலன். நமக்கு வந்துகொண்டிருக்கும் ஆசீர்வாதத்தின் ஒரு ஊற்று நின்றுபோனாலும், தேவன் நமக்கு வேறொரு ஊற்றைத் திறந்துகொடுப்பதற்கு சித்தமுள்ளவராகயிருக்கிறார்.

இயேசுகிறிஸ்து சிலுவையில் தொங்கிக்கொண்டிருக்கும்போது தம்முடைய தாயாரைப்பற்றிச் சிந்தித்து, அவரைப் பராமரிப்பதற்கு யோவானிடத்தில் ஒப்புக்கொடுக்கிறார். இயேசுகிறிஸ்துவின் இந்தச் செய்கை கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு ஒரு முன்மாதிரியாக எழுதப்பட்டிருக்கிறது. நாமும் நம்முடைய வயதான பெற்றோரை பராமரிக்கவேண்டும். நம்மால் முடிந்தவரையிலும் அவர்களுடைய ஆறுதலுக்குத் தேவையான எல்லா காரியங்களையும் செய்யவேண்டும். பெற்றோர் மரிக்கும் தருவாயிலிருக்கும்போது, நம்மால் முடிந்தவரையிலும் அவர்களிடத்தில் அன்புகூர்ந்து, அவர்களுக்கு உதவிபுரியவேண்டும். நம்முடைய பெற்றோரை நாம் நேசிக்கிறோம் என்னும் உணர்வு அவர்களுடைய உள்ளத்தில் வரவேண்டும். எப்பொழுதெல்லாம் வாய்ப்பு கிடைக்கிறதோ அப்பொழுதெல்லாம், நம்முடைய பெற்றோருக்கு விசேஷித்த உதவிகளைச் செய்து, அவர்களைச் சந்தோஷப்படுத்தவேண்டும்.

### அதோ உன் தாய்

**பின்பு அந்த சீஷனை நோக்கி: அதோ, உன் தாய் என்றார். அந்நேரமுதல் அந்தச் சீஷன் அவளைத் தன்னிடமாய் ஏற்றுக்கொண்டான் (யோவா 19:27).**

இயேசுகிறிஸ்து தமக்கு அன்பான சீஷனிடத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறார். தாம் அவனிடத்தில் எதைச் சொன்னாலும், தம்முடைய வார்த்தையை அவன் தட்டிக் கழிக்கமாட்டானென்று இயேசு அவனை நம்புகிறார். அந்த நம்பிக்கையில்தான் இயேசு அந்தச் சீஷனை நோக்கி "அதோ உன் தாய்" என்று கூறுகிறார். அந்தச் சீஷன் யோவானே . இயேசுகிறிஸ்துவின் தாயாரை, தன்னுடைய தாயாராகப் பெற்றுக்கொள்வது யோவானுக்குக் கிடைத்திருக்கும் பெரிய சிலாக்கியமாகும். அவனுடைய பக்தியையும் விசுவாசத்தையும் இயேசுகிறிஸ்து அங்கீகரித்து, அவனுக்கு தம்முடைய தாயாரை பராமரிக்கும் ஆசீர்வாதத்தைப் பொறுப்பாக ஒப்புக்கொடுக்கிறார்.

## அதிகாரம் - 19

இயேசுகிறிஸ்து நமக்குச் சொல்லும் ஊழியத்தைச் செய்வது நமக்குக் கொடுக்கப்படும் சிலாக்கியம். இந்த உலகத்தில் இயேசுகிறிஸ்து தம்முடைய ஊழியத்தை நம்மிடம் நம்பி ஒப்புக்கொடுத்திருக்கிறார். அவருடைய நம்பிக்கைக்கு நாம் பாத்திரவான்களாகயிருப்பது நமக்கு உண்டாயிருக்கும் மேன்மை. கிறிஸ்துவுக்காக இந்த உலகத்தில் அவருடைய ஊழியத்தைச் செய்வது நம்முடைய பாக்கியம். இயேசுகிறிஸ்து யோவானிடம் "அதோ உன் தாய்" என்று சொல்லுகிறார். தம்முடைய தாயாராகிய மரியாளை யோவானிடத்தில் பொறுப்பாக ஒப்புக்கொடுக்கிறார். யோவான் இயேசுகிறிஸ்துவின் வார்த்தைக்கு கீழ்ப்படிகிறான். அந்நேரமுதல் யோவான் மரியாளைத் தன்னிடத்தில் ஏற்றுக்கொள்கிறான். தன்னுடைய வீட்டிற்கு அழைத்துச் செல்கிறான்.

நாம் இயேசுகிறிஸ்துவை மெய்யாகவே நேசிப்போமென்றால், இயேசுகிறிஸ்து நம்மை நேசிக்கிறார் என்னும் உணர்வு நமக்குள்ளிருக்குமென்றால், நாமும் இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்வதற்கு ஆயத்தமாயிருப்போம், சந்தோஷப்படுவோம். அப்படிப்பட்ட வாய்ப்புக்களை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருப்போம்.

**வேதவாக்கியம்**
**யோவா 19 : 28,29**

**யோவா 19:28. அதன்பின்பு, எல்லாம் முடிந்தது என்று இயேசு அறிந்து, வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக: தாகமாயிருக்கிறேன் என்றார்.**

**யோவா 19:29. காடி நிறைந்த பாத்திரம் அங்கே வைக்கப்பட்டிருந்தது; அவர்கள் கடற்காளானைக் காடியிலே தோய்த்து, ஈசோப்புத்தண்டில் மாட்டி, அவர் வாயினிடத்தில் நீட்டிக்கொடுத்தார்கள்.**

**தாகமாயிருக்கிறேன்**

**அதன்பின்பு, எல்லாம் முடிந்தது என்று இயேசு அறிந்து, வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக: தாகமாயிருக்கிறேன் என்றார் (யோவா 19:28).**

இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையில் தொங்கிக்கொண்டிருக்கிறார். அப்போது அவருக்கு ஏற்படும் சம்பவம் ஒவ்வொன்றும், வேதவாக்கியம் நிறைவேறுவதாகவே இருக்கிறது. இயேசுகிறிஸ்து வேதவாக்கியத்திற்கு அதிக மதிப்பு கொடுக்கிறார். தாம் சிலுவையில் தொங்கிக்கொண்டிருக்கும்போது, தம்முடைய தாயாரை யோவானிடத்தில் ஒப்புக்கொடுத்த பின்பு, "எல்லாம் முடிந்தது" என்று இயேசுகிறிஸ்து அறிகிறார். அப்போது வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக "தாகமாயிருக்கிறேன்" என்று கூறுகிறார்.

இயேசுகிறிஸ்து சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும்போது தாகமாயிருப்பது ஒரு விநோத சம்பவமல்ல. இயேசுகிறிஸ்துவின் சரீரத்திலிருந்து இரத்தம் கசிந்து கொண்டிருக்கிறது. தம்முடைய சிலுவையை அவர் சுமந்து வந்திருக்கிறார். பல வேதனைகளை அனுபவிக்கிறார். இந்த வேதனைகளினால் இயேசுவுக்கு தாகம் உண்டாயிற்று. இயேசுகிறிஸ்து இப்போது மரணத்தின் வேதனையை அனுபவித்துக் கொண்டிருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் சரீரத்திலிருந்து இரத்தம் வெளியேறுவதினாலும், அவருடைய சரீரத்தில் மிகுந்த வேதனை உண்டாவதினாலும் அவர் மரித்துக்கொண்டிருக்கிறார்.

இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையில் தொங்கிக்கொண்டிருக்கும் போது "தாகமாயிருக்கிறேன்" என்று கூறியது அங்கு கூடியிருந்த சிலருக்கு மிகுந்த ஆச்சரியமாக இருக்கிறது. இயேசு ஒருபோதும் தாம் அனுபவிக்கும் பாடுகளைக் குறித்து முறுமுறுத்ததில்லை. இப்போது "தாகமாயிருக்கிறேன்" என்று சொன்ன வார்த்தை மாத்திரமே அவர் தம்முடைய பாடுகளைப் பற்றி பேசுவதுபோல இருக்கிறது.

இயேசுகிறிஸ்து "தாகமாயிருக்கிறேன்" என்று சொல்லி, தம்முடைய ஆத்தும தாகத்தை வெளிப்படுத்துகிறார். நம்முடைய மீட்பு நிறைவேறவேண்டும் என்னும் தாகம் இயேசுகிறிஸ்துவின் இருதயத்திலிருக்கிறது. ஆகையினால் வேதவாக்கியம் ஒவ்வொன்றும் நிறைவேறவேண்டுமென்பதில் இயேசுகிறிஸ்து கவனம் செலுத்துகிறார். இயேசுகிறிஸ்துவின் தாகத்தைப்பற்றிச் வேதவாக்கியம் முன்னறிவித்திருக்கிறது. வேதவாக்கியங்களெல்லாம் நிறைவேறும் என்பது இயேசுவுக்குத் தெரியும். ஆகையினால் தம்முடைய தாகத்தைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிற வேதவாக்கியமும் நிறைவேறவேண்டுமென்று இயேசுகிறிஸ்து கரிசனையுள்ளவராகயிருக்கிறார்.

## அதிகாரம் - 19

தம்முடைய சித்தத்தினாலேயே இயேசுகிறிஸ்து "தாகமாயிருக்கிறேன்" என்று சிலுவை மரத்தில் தொங்கிக்கொண்டு பேசுகிறார். "என் ஆகாரத்தில் கசப்பு கலந்துகொடுத்தார்கள் என் தாகத்திற்கு காடியைக் குடிக்கக்கொடுத்தார்கள்" (சங் 69:21) என்று வேதவாக்கியத்தில் முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது.

**காடி நிறைந்த பாத்திரம்**

**காடி நிறைந்த பாத்திரம் அங்கே வைக்கப்பட்டிருந்தது; அவர்கள் கடற்காளானைக் காடியிலே தோய்ந்து, ஈசோப்புத்தண்டில் மாட்டி, அவர் வாயினிடத்தில் நீட்டிக்கொடுத்தார்கள் (யோவா 19:29).**

இயேசுகிறிஸ்துவை சிலுவையில் அறைகிறவர்கள் அவருக்கு எந்தவிதமான மதிப்போ மரியாதையோ கொடுக்கவில்லை. இயேசுகிறிஸ்து சிலுவையில் தொங்கிக்கொண்டிருக்கும் போது "தாகமாயிருக்கிறேன்" என்று கூறுகிறார். சிலுவை மரத்திற்கு அருகே காடி நிறைந்த பாத்திரம் வைக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக ஒருவரை சிலுவையில் அறைந்து கொல்லும்போது, காடி நிறைந்த பாத்திரத்தை அங்கு வைத்திருப்பது ரோமப்போர்சேவகரின் வழக்கமாகயிருக்கலாம்.

சேவகர்கள் கடற்காளை காடியிலே தோய்த்து, ஈசோப்புத்தண்டில் மாட்டி, அவர் வாயினிடத்தில் நீட்டிக்கொடுக்கிறார்கள். இயேசுகிறிஸ்து தாகமாகயிருக்கும்போது ஒரு சொட்டு தண்ணீர்கூட அவருடைய தாகத்தைத் தணித்துவிடும். அவருக்குப் பாத்திரம் நிறைய காடி தேவையில்லை. ஒரு சொட்டு தண்ணீர் மாத்திரமே போதுமானது. இயேசுகிறிஸ்து சிலுவையில் மரிக்கும்போது வானம் ஒளிகொடாதிருக்கிறது. பூமி ஒரு சொட்டு தண்ணீர்கூட கொடுக்காமலிருக்கிறது. தண்ணீருக்குப் பதிலாக இயேசுகிறிஸ்துவுக்கு காடி கொடுக்கப்படுகிறது.

**முடிந்தது**

**இயேசு காடியை வாங்கினபின்பு, முடிந்தது என்று சொல்லி, தலையைச் சாய்த்து, ஆவியை ஒப்புக்கொடுத்தார் (யோவா 19:30).**

இயேசுகிறிஸ்து மரிப்பதற்கு முன்பாக, அவர் சொன்ன கடைசி வார்த்தை "முடிந்தது" என்பதாகும். இயேசு காடியை வாங்கினபின்பு, "முடிந்தது" என்று சொல்லி, தலையைச் சாய்த்து, தம்முடைய ஆவியை ஒப்புக்கொடுக்கிறார். இயேசுகிறிஸ்து "முடிந்தது" என்று சொல்லும் வார்த்தை அவருடைய வெற்றியைப் பிரகடனம்செய்கிறது. யுத்தம் முடிந்தது, வெற்றி உண்டாயிற்று என்பதே இந்த வார்த்தையின் பொருளாகும்.

இயேசுகிறிஸ்துவைப் பிரதான ஆசாரியரும் ஜனத்தின் மூப்பரும் உபத்திரவப்படுத்தினார்கள். அவர்கள் அவர்மீது விரோதமாகயிருந்தார்கள். அவரைச் சிலுவையில் அறைந்தார்கள். அவர்களுடைய விரோதம் இப்போது முடிந்தது. இயேசுகிறிஸ்து பாடுகளை அனுபவிக்க வேண்டுமென்பது பிதாவின் சித்தம். அதன் பிரகாரமாக இயேசுகிறிஸ்து சிலுவையில் மரிப்பதற்கு தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுக்கிறார். இப்போது தேவனுக்குக் கீழ்ப்படிந்து இயேசுகிறிஸ்து பாடுகளை அனுபவிப்பது முடிந்துபோயிற்று. தம்முடைய பாடுகளின் ஆரம்பத்தில் "பிதாவே உம்முடைய சித்தம் நிறைவேறுவதாக" என்று சொல்லி ஜெபித்தார். இப்போது அந்தப் பாடுகள் முடிவு பெறுகையில், மிகுந்த சந்தோஷத்தோடு "முடிந்தது" என்று கூறுகிறார்.

இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையில் மரிக்கும்போது, பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களும், அடையாளங்களும் முடிந்தது. அவையெல்லாம் மேசியாவின் பாடுகளைப்பற்றி முன்னறிவித்தது. முன்னறிவிக்கப்பட்டவைகள் இப்போது இயேசுகிறிஸ்துவின் மரணத்தின் மூலமாக முடிவுபெற்றிருக்கிறது. யூதமார்க்கத்தின் சடங்காச்சாரங்களெல்லாம் இயேசுகிறிஸ்துவின் மரணத்தினால் முடிந்துபோயிற்று. இதுவரையிலும் நிழலாகயிருந்தவைகள் முடிந்துபோயிற்று. மெய்யான நிஜம் வந்திருக்கிறது. பாவம் முடிந்து போயிற்று. மீறுதல் முடிந்துபோயிற்று. உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்ப்பதற்காக தேவ ஆட்டுக்குட்டியானவராகிய இயேசுகிறிஸ்து பலியாக செலுத்தப்பட்டிருக்கிறார். பலிசெலுத்துவது முடிந்துபோயிற்று.

கல்வாரி சிலுவையில் இயேசுகிறிஸ்து அனுபவித்த பாடுகள் முடிந்தது. தமக்கு முன்பாக நியமிக்கப்பட்டிருக்கும் சந்தோஷத்திற்குள் இயேசுகிறிஸ்து இப்போது பிரவேசிக்கிறார். நாம் ஒருவேளை இயேசுகிறிஸ்துவுக்காகப் பாடுகளை அனுபவிக்கலாம். நமக்கு வேதனைகள் வரலாம். இவற்றிற்கு மத்தியில், நம்முடைய பாடுகளெல்லாம் கொஞ்சகாலம் மாத்திரமே இருக்கும். அதன்பின்பு இந்தப் பாடுகள் முடிந்துபோகும் என்று தியானம்செய்து நம்மை ஆறுதல்படுத்த வேண்டும்.

## அதிகாரம் - 19

இயேசுகிறிஸ்துவின் மனுஷ ஜீவன் முடிந்துபோயிற்று. அவர் தம்முடைய சரீரத்தில் மரணமடைகிறார். இயேசுகிறிஸ்துவின் சரீரத்திற்கு மரணம் வந்ததுபோலவே நமக்கும் மரணம் வரும். இயேசுகிறிஸ்துவின் உலகப்பிரகாரமான ஜீவன் முடிந்ததுபோலவே நம்முடைய ஜீவனும் முடிந்துபோகும். மனுஷருடைய மீட்புக்கு செய்யவேண்டிய மீட்பின் கிரியைகள் அனைத்தும் செய்து முடிந்தது. மனுஷருடைய இரட்சிப்பு பூரணமாயிற்று.

இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணம் சாத்தானுடைய வல்லமைக்கு தோல்வியை உண்டாக்கிற்று. தேவனுடைய கிருபையின் ஊற்றானது இப்போது திறக்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்து கர்த்தருடைய ஆசீர்வாதத்தின் ஊற்றுத்தண்ணீர் எப்போதும் பொங்கி வழியும். இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணத்தினால் தேவனுடைய ரகசியம் முடிந்தது. மறைபொருள் வெளியரங்கமாயிற்று. நமக்குள் நற்கிரியையை ஆரம்பித்து வைக்கிற தேவன் அதை நிறைவேற்றுவதற்கு வல்லவராகயிருக்கிறார்.

இயேசுகிறிஸ்து சிலுவையில் மரிக்கும்போது, அவர் தம்முடைய தலையைச் சாய்த்து, தம்முடைய ஆவியை ஒப்புக்கொடுக்கிறார். இயேசுகிறிஸ்துவின் ஜீவனை அவரிடத்திலிருந்து யாரும் பலவந்தமாகப் பறித்துக்கொள்ளவில்லை. அவர் தாமே தம்முடைய ஜீவனை தாமாகவே ஒப்புக்கொடுக்கிறார். "பிதாவே உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புக்கொடுக்கிறேன்" என்று இயேசுகிறிஸ்து ஜெபம்பண்ணினார். தாம் ஜெபம்பண்ணிய வண்ணமாக, இயேசுகிறிஸ்து இப்போது தம்முடைய ஆவியை ஒப்புக்கொடுக்கிறார். மனுக்குலத்தை மீட்கும் மீட்பின் கிரயமாக, இயேசுகிறிஸ்து தம்முடைய ஆவியைப் பிதாவின் கரத்தில் ஒப்புக்கொடுக்கிறார்.

இயேசுகிறிஸ்து தம்முடைய ஆவியை ஒப்புக்கொடுக்கும்போது, தம்முடைய தலையைச் சாய்க்கிறார். சிலுவையில் அறையப்படுகிறவர்கள் பொதுவாக வேதனையைத் தாங்கமுடியாமல், மூச்சுவிடுவதற்காக தங்களுடைய தலைகளை மேலே உயர்த்துவார்கள். மூச்சு நின்ற பின்பு அந்தத் தலை தானாகவே கீழே சாய்ந்துவிடும். ஆனால் இயேசுகிறிஸ்துவோ தம்முடைய மூச்சு நிற்பதற்கு முன்பாகவே, தம்முடைய தலையைச் சாய்க்கிறார்.

அதன் பின்பே தம்முடைய ஆவியை ஒப்புக்கொடுக்கிறார். இயேசுகிறிஸ்துவின் சரீர மரணம் அவருடைய சித்தத்தின் பிரகாரமாகவே நடைபெறுகிறது.

### விலாவிலே குத்தி
### யோவா 19 : 31-37

**யோவா 19:31. அந்த நாள் பெரிய ஓய்வுநாளுக்கு ஆயத்தநாளாயிருந்தபடியினால், உடல்கள் அந்த ஓய்வுநாளிலே சிலுவைகளில் இராதபடிக்கு, யூதர்கள் பிலாத்துவினிடத்தில் போய், அவர்களுடைய காலெலும்புகளை முறிக்கும்படிக்கும், உடல்களை எடுத்துப்போடும்படிக்கும் உத்தரவு கேட்டுக்கொண்டார்கள்.**

**யோவா 19:32. அந்தப்படி போர்ச்சேவகர் வந்து, அவருடனேகூடச் சிலுவையில் அறையப்பட்ட முந்தினவனுடைய காலெலும்புகளையும் மற்றவனுடைய காலெலும்புகளையும் முறித்தார்கள்.**

**யோவா 19:33. அவர்கள் இயேசுவினிடத்தில் வந்து, அவர் மரித்திருக்கிறதைக் கண்டு, அவருடைய காலெலும்புகளை முறிக்கவில்லை**

**யோவா 19:34. ஆகிலும் போர்ச்சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவில் குத்தினான்; உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது.**

**யோவா 19:35. அதைக் கண்டவன் சாட்சிகொடுக்கிறான், அவனுடைய சாட்சி மெய்யாயிருக்கிறது; நீங்கள் விசுவாசிக்கும்படி, தான் சொல்லுகிறது மெய்யென்று அவன் அறிந்திருக்கிறான்.**

**யோவா 19:36. அவருடைய எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை என்கிற வேதவாக்கியம் நிறைவேறும்படி இவைகள் நடந்தது.**

**யோவா 19:37. அல்லாமலும் தாங்கள் குத்தினவரை நோக்கிப்பார்ப்பார்கள் என்று வேறொரு வேதவாக்கியம் சொல்லுகிறது.**

**பெரிய ஓய்வுநாளுக்கு ஆயத்தநாள்**

**அந்த நாள் பெரிய ஓய்வுநாளுக்கு ஆயத்தநாளாயிருந்தபடியினால், உடல்கள் அந்த ஓய்வுநாளிலே சிலுவைகளில் இராதபடிக்கு, யூதர்கள் பிலாத்துவினிடத்தில் போய், அவர்களுடைய காலெலும்புகளை முறிக்கும்படிக்கும், உடல்களை எடுத்துப்போடும்படிக்கும் உத்தரவு கேட்டுக்கொண்டார்கள் (யோவா 19:31).**

## அதிகாரம் - 19

இயேசுகிறிஸ்துவின் விலாவிலே போர்ச்சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே குத்திய சம்பவம் யோவான் சுவிசேஷத்தில் மாத்திரமே எழுதப்பட்டிருக்கிறது. யூதர்கள் துன்மார்க்கராகயிருந்து இயேசுகிறிஸ்துவை சிலுவையில் அறைகிறார்கள். ஆகிலும் தங்களுக்கு யூதமார்க்கத்தில் அதிக பக்தியிருப்பதுபோல காண்பித்துக் கொள்கிறார்கள். இயேசுகிறிஸ்துவைச் சிலுவையில் அறையப்பட்ட அந்தநாள் பெரிய ஓய்வுநாளுக்கு ஆயத்தநாளாகயிருக்கிறது. அந்த ஓய்வுநாளில் உடல்கள் சிலுவைகளில் இருக்கக்கூடாது என்று யூதர்கள் விரும்புகிறார்கள். அதற்காக அவர்கள் பிலாத்துவினிடத்திற்குப்போய், அவர்களுடைய கால் எலும்புகளை முறிக்கும்படிக்கும், உடல்களை எடுத்துப்போடும்படிக்கும் உத்தரவு கேட்டுக்கொள்கிறார்கள். தங்கள் கண்களில் தென்படாதவாறு இயேசுகிறிஸ்துவின் சரீரத்தை வெளியே எங்கேயாவது புதைத்துவிட வேண்டுமென்று விரும்புகிறார்கள்.

பெரிய ஓய்வுநாள் சமீபித்திருக்கிறது. இந்தநாள் அந்தப் பெரிய ஓய்வுநாளுக்கு ஆயத்த நாளாகயிருக்கிறது. ஒவ்வொரு ஓய்வு நாளுமே பரிசுத்த நாள்தான். ஒவ்வொரு ஓய்வு நாளும் யூதருக்கு நல்ல நாள். ஆனால் இந்த ஓய்வுநாளோ பெரிய ஓய்வுநாளாக இருக்கிறது. யூதருக்கு இது பிரதான ஓய்வுநாள். ஆகையினால் சாதாரண ஓய்வுநாளுக்குத் தங்களை ஆயத்தம்பண்ணுவதைவிட, இந்தப் பெரிய ஓய்வுநாளுக்குத் தங்களை அதிகமாய் ஆயத்தபண்ணவேண்டுமென்று யூதர்கள் விரும்புகிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு எல்லா நாளுமே பரிசுத்த நாள்தான். அதிலும் சில நாட்களை நாம் விசேஷித்த நாட்களாக பாவிக்கிறோம். சபையில் திருவிருந்து நடைபெறும் நாள், விசேஷித்த அபிஷேகக் கூட்டங்கள் நடைபெறும் நாள் ஆகிய நாட்களெல்லாம் முக்கியமான விசேஷித்த நாட்களாகும். இந்த நாட்களுக்காக நாம் விசேஷித்த வழியில் ஆயத்தமாயிருக்கவேண்டும்.

பெரிய ஓய்வுநாளின்போது சிலுவையில் மரித்துப்போன சரீரம் தொங்கிக் கொண்டிருக்கக்கூடாது என்று யூதர்கள் நினைக்கிறார்கள். அது ஓய்வுநாளை அசுத்தப்படுத்தும் என்பது அவர்களுடைய நம்பிக்கை. மரித்துப்போன சரீரங்களை உடனே அடக்கம்பண்ணிவிடவேண்டும். அதை அப்படியே வைத்திருப்பது நல்லதல்ல.

எருசலேமில் இப்போது பண்டிகைக்காலமாக இருக்கிறது. பஸ்கா பண்டிகைக்காக தேசத்தின் எல்லா பகுதியிலிருந்தும் யூதர்கள் எருசலேமுக்கு வருவது வழக்கம். அவர்கள் எருசலேமின் வழியாக வரும்போது, நகரத்திற்கு வெளியே, நகரவாசலுக்கு அருகே இயேசுகிறிஸ்துவின் சரீரம் சிலுவையில் தொங்கிக்கொண்டிருப்பதை ஜனங்கள் பார்த்தால் அவர்களுடைய மனது மிகவும் புண்படும். உள்ளத்தில் வேதனையும் பயமும் உண்டாகும். மரித்துப்போன சரீரத்தை யாரும் பார்க்க விரும்பமாட்டார்கள். அதிலும் பெரிய ஓய்வுநாளாக இருக்கிறபடியினால், மரித்த சரீரத்தைத் தொடுவதும், பார்ப்பதும்கூட தீட்டு என்று நினைப்பார்கள்.

சிலுவையில் அறையப்பட்டிருக்கும் இயேசுகிறிஸ்துவின் சரீரம் மரித்துப்போயிற்று. கள்ளர்களும் ஓரளவு மரித்துப் போயிருக்கிறார்கள். அவர்களுக்கு சிறிது உயிர் இருந்தாலும், அவர்களுடைய கால் எலும்புகளை முறித்து, அவர்களை பெரிய ஓய்வுநாளுக்கு முன்பாக கொன்றுபோட வேண்டுமென்று யூதர்கள் விரும்புகிறார்கள். இதற்காக பிலாத்துவினிடத்தில் அனுமதி கேட்கிறார்கள். இயேசுகிறிஸ்து ஏற்கெனவே சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கிறார். மரணவேதனையை அனுபவித்துக் கொண்டிருக்கிறார். அவர் மரித்துப் போய்விட்டார். அவர் மரித்துப் போனது யூதருக்குத் தெரியாது. ஆகையினால் அந்த மரண வேதனையோடு அவருடைய கால்களை முறித்தும் அவருக்கு வேதனை உண்டாக்கவேண்டுமென்று யூதர்கள் விரும்புகிறார்கள்.

யூதர்கள் தங்களுடைய துன்மார்க்கத்திற்கு மார்க்கக் காரியங்களை காரணமாகச் சொல்லுகிறார்கள். ஓய்வுநாளையும், பரிசுத்தத்தையும், தீட்டையும் காரணமாகச் சொல்லி அவர்கள் இயேசுகிறிஸ்துவை மேலும் அதிகமாய் துன்பப்படுத்த வகைதேடுகிறார்கள். ஒரு பாவமும் செய்யாத இயேசுகிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்ததற்காக அவர்கள் சிறிதும் மனவேதனைப்படவில்லை. ஆனால் ஓய்வுநாளின்போது அவருடைய சரீரம் சிலுவையில் தொங்கிக்கொண்டிருக்குமோ என்று வேதனைப்படுகிறார்கள்.

### கால்எலும்புகள்

**அந்தப்படி போர்ச்சேவகர் வந்து, அவனுடனேகூடச் சிலுவையில் அறையப்பட்ட முந்தினவனுடைய கால்எலும்புகளையும் மற்றவனுடைய கால்எலும்புகளையும் முறித்தார்கள் (யோவா 19:32).**

## அதிகாரம் - 19

காலெலும்புகளை முறிக்கும்படிக்கு யூதர்கள் உத்தரவு கேட்டுக்கொண்டதற்கு, பிலாத்து உத்தரவு கொடுக்கிறான். பிலாத்துவின் உத்தரவுப் பிரகாரம் போர்ச்சேவகர் வந்து சிலுவையில் அறையப்பட்டிருக்கும் கள்ளர்களுடைய கால் எலும்புகளை முறிக்கிறார்கள். யூதர்கள் விரும்பிய பிரகாரமாகவே பிலாத்து அவர்களுக்கு உத்தரவு கொடுக்கிறான். சிலுவையில் அறையப்பட்ட இரண்டு கள்ளர்களில் ஒருவன் மனந்திரும்பியிருக்கிறான். மற்றொருவனோ இன்னும் மனந்திரும்பவில்லை.

இயேசுகிறிஸ்து மனந்திரும்பிய கள்ளனைப்பார்த்து "இன்றைக்கு நீ என்னுடனேகூட பரதீசிலிருப்பாய்" என்று வாக்குப்பண்ணியிருக்கிறார். இவனுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் ஆசீர்வாதமானதாக இருந்தாலும், இவனும் மற்ற கள்ளனைப்போலவே மிகுந்த வேதனையோடு மரிக்கிறான். இவனைப்போலத்தான் இந்த உலகத்தில் நல்லோருக்கும் பொல்லாருக்கும் மரணம் வரும். நன்மையும் தீமையும் ஒன்றுபோலவே சம்பவிக்கும். நாம் மரித்த பின்பு பரலோகம் போவதற்கு ஆயத்தமாகயிருக்கிறோம். என்றாலும் நமக்கும் வேதனையான மரணம் வருவதற்கு வாய்ப்புள்ளது.

### இரத்தமும் தண்ணீரும்

**அவர்கள் இயேசுவினிடத்தில் வந்து, அவர் மரித்திருக்கிறதைக் கண்டு, அவருடைய காலெலும்புகளை முறிக்கவில்லை. ஆகிலும் போர்ச்சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவில் குத்தினான்; உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது (யோவா 19:33,34).**

சிலுவையில் தொங்கிக்கொண்டிருக்கும் இயேசுகிறிஸ்து மரித்துப்போய்விட்டாரா அல்லது இன்னும் உயிரோடிருக்கிறா என்பதை போர்ச்சேவகர்கள் சோதித்தறிகிறார்கள். அவர்கள் இயேசுவினிடத்தில் வந்து அவர் மரித்துப்போயிருக்கிறதைக் காண்கிறார்கள். ஆகையினால் அவருடைய காலெலும்புகளை அவர்கள் முறிக்கவில்லை. சாதாரணமாக ஒருவர் சிலுவையில் அறையப்படும்போது, அவர் எவ்வளவு சீக்கிரத்தில் மரிப்பாரோ, அதைவிட சீக்கிரமாகவே இயேசுகிறிஸ்து சிலுவையில் மரித்துப்போகிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய ஜீவனையே ஒப்புக்கொடுத்தாரென்பதை பிரத்தியட்சமாகக் காண்பிப்பதற்காகவே அவருக்கு மரணமுண்டாயிற்று. அவர் தம்மை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்தார். ஆனாலும் மரணம் அவரை ஜெயிக்கவில்லை. இயேசுகிறிஸ்து தம்முடைய சரீரத்தில் மெய்யாகவே மரித்துப்போனார். இதைப் பார்த்தபோது அவருடைய சத்துருக்களுக்கு சந்தோஷமும், சமாதானமும், திருப்தியும் உண்டாயிற்று.

இயேசுகிறிஸ்து மெய்யாகவே சிலுவையில் மரித்துப்போய்விட்டாரா என்னும் சந்தேகம் போர்ச்சேவகரில் ஒருவனுக்கு உண்டாயிற்று. ஆகையினால் அவன் இயேசுகிறிஸ்துவினுடைய விலாவில் ஈட்டியினாலே குத்துகிறான். உடனே அவருடைய சரீரத்திலிருந்து இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டு வருகிறது.

தங்களுடைய சந்தேகத்தைப் போக்குவதற்காகவே, போர்ச்சேவகரில் ஒருவன் இயேசுகிறிஸ்துவின் விலாவிலே ஈட்டியால் குத்துகிறான். மற்ற இரண்டு கள்ளரையும் போர்ச்சேவகர்கள் ஈட்டியினால் அவர்களுடைய விலாவில் குத்தவில்லை. இயேசுகிறிஸ்துவுக்கு மாத்திரமே இந்த விசேஷித்த காயம் உண்டாயிற்று. கள்ளர்களுடைய காலெலும்புகள் முறிக்கப்பட்டது. இயேசுகிறிஸ்துவின் காலெலும்புகளோ முறிக்கப்படவில்லை. யூதமார்க்கத்து வரலாற்றின் பிரகாரம், இயேசுகிறிஸ்துவின் விலாவில் குத்திய போர்ச்சேவகனுக்கு "லாங்கினஸ்" என்பது பெயராகும்.

தேவனுடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாகவே, போர்ச்சேவகரில் ஒருவன் இயேசுகிறிஸ்துவின் விலாவிலே ஈட்டியினால் குத்துகிறான். அவர் மெய்யாகவே தம்முடைய சரீரத்தில் மரித்துப்போனார் என்பதை உறுதிபண்ணுவதற்காகவே இந்தச் சம்பவம் நடைபெறுகிறது. மூன்றாம் நாளில் இயேசுகிறிஸ்து மறுபடியும் உயிரோடு எழும்பப்போகிறார். அவர் உயிர்த்தெழுவதற்கு முன்பாக, அவருடைய மரணம் உறுதிபண்ணப்படுகிறது. அவர் மெய்யாகவே தம்முடைய சரீரத்தில் மரித்துப்போனார். அவரை விலாவிலே ஈட்டியினால் குத்தியதினால் அவருடைய சரீரத்திலிருந்து ஜீவஊற்றுப் புறப்பட்டு வருகிறது. இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணம் தேவனுடைய தெய்வீக திட்டமாகும். அவருடைய மரணத்தில் தேவனுடைய ரகசியம் அடங்கியிருக்கிறது.

## அதிகாரம் - 19

இயேசுகிறிஸ்துவின் மரணம் பிரத்தியட்சமாக நடைபெற்ற ஒரு சம்பவம். அவருடைய மரணமே ஒரு அற்புதம். இயேசுகிறிஸ்துவின் மரணம் மிகவும் விசேஷித்த மரணமாகும். இயேசுகிறிஸ்துவின் மரணத்தைப்பற்றி யோவான் தன்னுடைய நிருபத்தில் எழுதுகிறபோது "இயேசுகிறிஸ்துவாகிய இவரே ஜலத்தினாலும் இரத்தத்தினாலும் வந்தவர்; ஜலத்தினாலே மாத்திரமல்ல, ஜலத்தினாலும் இரத்தத்தினாலும் வந்தவர். ஆவியானவர் சத்தியமாகையால், ஆவியானவரே சாட்சிகொடுக்கிறவர். பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர், பிதா, வார்த்தை, பரிசுத்தஆவி என்பவர்களே, இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்; பூலோகத்திலே சாட்சியிடுகிறவைகள் மூன்று, ஆவி, ஜலம், இரத்தம் என்பவைகளே, இம்மூன்றும் ஒருமைப்பட்டிருக்கிறது" (1யோவா 5:6-8) என்று எழுதியிருக்கிறார்.

இயேசுகிறிஸ்துவின் விலா எலும்பு குத்தப்படுவதும் ஒரு விசேஷித்த சம்பவமாகும். பல சமயங்களில் நம்முடைய இருதயத்தின் சிந்தனை நமக்கே தெரியாமலிருக்கும். நம்முடைய மனச்சாட்சிக்குள் போராட்டம் உண்டாகும். நம்முடைய இருதயத்தின் சிந்தனையை நோக்கிப் பார்த்தால் நமக்கு நலமாகயிருக்குமே என்று நாம் எதிர்பார்ப்போம். நம்முடைய இருதயம் மற்றவர் பார்க்கும் வண்ணமாக, அதில் ஒரு திறப்பு இருக்குமென்றால், நம்முடைய இருதயத்தின் சிந்தனைகளை எல்லோரும் பார்த்துக்கொள்ளலாம். அப்படிப்பட்ட திறப்பு மனுஷருடைய இருதயத்திற்குக் கொடுக்கப்படவில்லை.

ஆனால் இயேசுகிறிஸ்துவின் விலாவில் ஈட்டியினாலே குத்தப்பட்டிருப்பதினால், அவருடைய இருதயத்திற்கு ஒரு திறப்பு உண்டாயிருக்கிறது. அந்தத் திறப்பின் வழியாக இயேசுகிறிஸ்து நம்மீது வைத்திருக்கும் அன்பை நாம் காணலாம். கல்வாரி சிலுவையில் அவர் அனுபவித்த மரண வேதனையை அந்தத் திறப்பின் வழியாக நாம் பார்த்துப் புரிந்துகொள்ளலாம். இயேசுவின் விலாவில் ஈட்டியால் குத்தினவுடனே, அதிலிருந்து இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டு வருகிறது.

இரத்தமும் தண்ணீரும் கர்த்தரை விசுவாசிக்கிற நமக்கு மிகவும் விசேஷமானதாகும். இயேசுகிறிஸ்துவின் மூலமாக தேவனுடைய சமுகத்திற்கு வந்திருக்கும் விசுவாசிகளாகிய நம்மை கர்த்தர் தம்முடைய இரத்தத்தினாலும் தண்ணீரினாலும் ஆசீர்வதிக்கிறார். இரத்தம் பாவநிவாரணத்திற்காகச் சிந்தப்படுகிறது. தண்ணீர் சுத்திகரிப்புக்காகப் பயன்படுத்தப்படுகிறது. நம்முடைய மனச்சாட்சியிலுள்ள அசுத்தங்களையும் குற்றவுணர்வுகளையும் இரத்தத்தினால் கழுவி சுத்திகரிக்கவேண்டும். நம்முடைய பாவக்கறைகளெல்லாம் தண்ணீரினால் கழுவி சுத்திகரிக்கவேண்டும். இவை இரண்டுமே சேர்ந்து நடைபெறவேண்டும். பாவமன்னிப்பும் சுத்திகரிப்பும் இணைந்து கிரியை செய்தால்தான் நம்முடைய ஜீவியம் பரிசுத்தமாகயிருக்கும்.

இயேசுகிறிஸ்து இவ்விரண்டு சம்பவங்களையும் ஒன்றாக இணைக்கிறார். ஆகையினால்தான் அவருடைய விலாவில் ஈட்டியால் குத்தியவுடனே இரத்தமும் தண்ணீரும் சேர்ந்து புறப்பட்டு வருகிறது. நம்முடைய இரட்சகரின் சரீரத்தில், குத்தப்பட்ட இடத்திலிருந்து இவை இரண்டும் புறப்பட்டு வருகிறது. இரத்தமும் தண்ணீரும் கர்த்தருடைய பந்திக்கும், தண்ணீர் ஞானஸ்நானத்திற்கும் அடையாளமாகும். வெண்கலத் தொட்டியிலுள்ள தண்ணீரினால் நாம் சுத்தரிகப்படவில்லை. மறுஜென்ம முழுக்கினால் சுத்திகரிப்படுகிறோம். இயேசுகிறிஸ்துவின் விலாவிலிருந்து புறப்பட்டு வருகிற தண்ணீரினாலே நாம் சுத்திகரிப்படுகிறோம். நமக்கு இந்தத் தண்ணீரினால் மறுஜென்ம முழுக்கு கொடுக்கப்படுகிறது. கர்த்தருடைய பந்தியின்போது திராட்சரசத்தினால் நம்முடைய ஆத்துமா சுத்திகரிகப்படுவதில்லை. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் விலாவிலிருந்து புறப்பட்டு வருகிற இரத்தத்தினாலே நம்முடைய ஆத்துமா சுத்திகரிக்கப்படுகிறது.

**கண்டவன் சாட்சி கொடுக்கிறான்**

**அதைக் கண்டவன் சாட்சிகொடுக்கிறான், அவனுடைய சாட்சி மெய்யாயிருக்கிறது; நீங்கள் விசுவாசிக்கும்படி, தான் சொல்லுகிறது மெய்யென்று அவன் அறிந்திருந்தான் (யோவா 19:35).**

## அதிகாரம் - 19

இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட சம்பவத்தை அப்போஸ்தலனாகிய யோவான் தன்னுடைய கண்களால் கண்டவன். அவன் அதைக்குறித்து சாட்சிகொடுக்கிறான். இவனுடைய சாட்சி மெய்யாயிருக்கிறது. தான் கண்டதைக் குறித்து மாத்திரமே அவன் சாட்சியாய் அறிவிப்பதினால் அவனுடைய சாட்சி மெய்யாயிருக்கிறது. அவனுடைய சாட்சியை நாம் விசுவாசிக்கும்படி, அவன் சொல்லுகிறது மெய்யென்று அவன் அறிந்திருக்கிறான். தான் கண்டதின் ஒரு பகுதியை மாத்திரம் யோவான் சொல்லாமல், தான் கண்டதை முழுவதுமாகச் சொல்லுகிறான். முழுசத்தியத்திற்கும் சாட்சிகொடுக்கிறான்.

சத்திய ஆவியானவர் ஏவுகிற பிரகாரம் யோவான் இந்த சுவிசேஷத்தை எழுதியிருக்கிறான். ஆகையினால் இவனுடைய வார்த்தைகள் மெய்யாயிருக்கிறது. தான் சொல்லுவது மெய்யென்று யோவான் அறிந்திருக்கிறான். நாம் சுவிசேஷத்தை விசுவாசிக்க வேண்டுமென்பதற்காகவே யோவான் தான் கண்டதைச் சாட்சியாக அறிவிக்கிறான்.

இயேசுகிறிஸ்து சிலுவையில் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்ததையும், மூன்றாம் நாளில் அவர் உயிரோடு எழும்பினதையும் ஒரு சிலர் விசுவாசிப்பதில்லை. அவர்கள் தங்கள் விசுவாசத்தில் பலவீனராக இருக்கிறார்கள். அவர்களுடைய விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணும்விதமாக யோவான் தான் கண்டதை சாட்சியாக அறிவிக்கிறான். இயேசுகிறிஸ்துவின் விலாவிலிருந்து இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டு வருகிறது. நம்மை நீதிமான்களாக்குவதற்கும் பரிசுத்தப்படுத்துவதற்கும் இயேசுகிறிஸ்துதாமே தம்முடைய இரத்தத்தையும் தண்ணீரையும் சிந்துகிறார். இந்தச் சத்தியத்தை நாம் நம்பவேண்டும். இந்தச் சம்பவத்தைக் கண்டவன் சாட்சி கொடுப்பதினால், அவன் சாட்சியை ஏற்றுக்கொண்டு, நாம் இந்தச் சம்பவத்தை நம்பும்போது நமது ஆத்துமாவுக்கும் ஆவிக்கும் ஆசீர்வாதமாயிருக்கும்.

**எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை**

**அவருடைய எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை என்கிற வேதவாக்கியம் நிறைவேறும்படி இவைகள் நடந்தது (யோவா 19:36).**

சிலுவையில் தொங்குகிறவர்களுடைய காலெலும்புகளை முறிக்கும்படிக்கு யூதர்கள் பிலாத்துவினிடத்தில் உத்தரவு கேட்டுக்கொள்கிறார்கள். அந்தப்படி போர்ச்சேவகர் இரண்டு கள்ளரின் காலெலும்புகளை முறித்துப் போடுகிறார்கள். ஆனால் அவர்கள் இயேசுகிறிஸ்துவின் காலெலும்புகளை முறிக்கவில்லை. வேதவாக்கியம் நிறைவேறும்படியாகவே இயேசுகிறிஸ்துவினுடைய காலெலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படாமலிருக்கிறது. நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும். கர்த்தர் அவர்களெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார். அவனுடைய எலும்புகளையெல்லாம் காப்பாற்றுகிறார். அவைகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை (சங் 34:19,20).

எண்ணாகமம் புஸ்தகத்தில் பஸ்கா ஆட்டுக்குட்டியைப்பற்றி "அதில் ஒரு எலும்பையும் முறிக்காமலும், பஸ்காவினுடைய சகல முறைமைகளின்படியும் அதை ஆசரிக்கக்கடவர்கள்" (எண் 9:12) என்று எழுதப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவே நம்முடைய பஸ்கா ஆட்டுக்குட்டியாக இருக்கிறார். அவரே உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவஆட்டுக்குட்டி (யோவா 1:29). வேதவாக்கியத்தில் எழுதியிருக்கிற பிரகாரமாக, தேவ ஆட்டுக்குட்டியான இயேசுகிறிஸ்துவின் எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படாமலிருக்கிறது.

இயேசுகிறிஸ்துவின் எலும்புகள் முறிக்கப்படாமலிருப்பதில் ஆவிக்குரிய சத்தியம் இருப்பதாக வேதபண்டிதர்கள் வியாக்கியானம் சொல்லுகிறார்கள். சரீரத்திற்கு எலும்புகளே பெலனாயிருக்கிறது. அவர் தம்முடைய பலவீனத்தில் சிலுவையில் அறையப்பட்டாலும், அவருடைய பெலன் முறிக்கப்படவில்லை. நம்மை இரட்சிக்கும் தேவவல்லமை அவரிடத்திலிருந்து முறித்துப்போடப்படவில்லை. பாவம் நம்முடைய எலும்புகளை முறிக்கிறது. இயேசுகிறிஸ்துவிடமோ ஒரு பாவமுமில்லை. ஆகையினால் பாவத்தினால் இயேசுகிறிஸ்துவின் எலும்புகளை முறிக்கமுடியவில்லை. இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்தாலும், அவருடைய சரீரத்திலிருந்து இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டு வந்தாலும், அவர் எலும்புகள் முறிக்கப்படாதவராக, நம்மை இரட்சிப்பதற்கு பெலமுள்ளவராக இருக்கிறார்.

## அதிகாரம் - 19

**தாங்கள் குத்தினவரை நோக்கிப்பார்ப்பார்கள்**

**அல்லாமலும் தாங்கள் குத்தினவரை நோக்கிப்பார்ப்பார்கள் என்று வேறொரு வேதவாக்கியம் சொல்லுகிறது (யோவா 19:37).**

கல்வாரி சிலுவையில் இயேசுகிறிஸ்து தொங்கிக்கொண்டிருக்கும்போது, வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக அவருக்கு ஒவ்வொரு சம்பவமாக நடைபெறுகிறது. இயேசுகிறிஸ்துவின் எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை என்பது வேதவாக்கியத்தின் நிறைவேற்றமாகும். வேறொரு வேதவாக்கியமும் இந்த சமயத்தில் நிறைவேறுகிறது. "தாங்கள் குத்தினவரை நோக்கிப்பார்ப்பார்கள்" என்னும் வேதவாக்கியம் நிறைவேறுவதாக யோவான் எழுதுகிறார். இந்த வாக்கியத்தை சகரியா தீர்க்கதரிசி இவ்வாறு முன்னறிவிக்கிறார். "நான் தாவீது குடும்பத்தாரின் மேலும் எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன்; அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து, ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்" *(சக 12:10)*.

இயேசுகிறிஸ்து குத்தப்படுகிறாரென்பது இந்த வாக்கியத்திலிருந்து தெளிவாகிறது. இயேசுகிறிஸ்து தம்முடைய விலாவிலே ஈட்டியினால் குத்தப்படுகிறார். அது மாத்திரமல்ல அவருடைய கைகளிலும் கால்களிலும் ஆணிகளால் குத்தப்படுகிறார். பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்படும்போது, அவர்கள் தாங்கள் குத்தினவரை நோக்கிப்பார்ப்பார்கள். அதைப் பார்த்துப் புலம்புவார்கள். இயேசுகிறிஸ்துவைக் காட்டிக்கொடுத்தவர்களும், அவரைச் சிலுவையில் அறைவதற்கு துணைபோனவர்களும், இயேசுகிறிஸ்துவை நோக்கிப்பார்த்து தங்கள் இருதயத்தில் குத்தப்படுவார்கள். இயேசுகிறிஸ்துவை மேசியா என்று விசுவாசிப்பார்கள்.

தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்கிற நாமும் இயேசுகிறிஸ்துவைக் கல்வாரி சிலுவையிலே குத்துகிற குற்றத்தைச் செய்கிறோம். நாம் குத்திய இயேசுகிறிஸ்துவை நோக்கிப்பார்த்து மனந்திரும்பவேண்டும். நமக்காகத் தம்முடைய ஜீவனையே ஒப்புக்கொடுத்த இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவினிடத்தில் அன்புகூரவேண்டும்.

**இயேசுவின் கல்லறை**
**யோவா 19 : 38-42**

**யோவா 19:38. இவைகளுக்குப்பின்பு அரிமத்தியா ஊரானும், யூதருக்குப் பயந்ததினால் இயேசுவுக்கு அந்தரங்க சீஷனுமாகிய யோசேப்பு இயேசுவின் சரீரத்தை எடுத்துக்கொண்டுபோகும்படி பிலாத்துவினிடத்தில் உத்தரவு கேட்டான்; பிலாத்து உத்தரவு கொடுத்தான். ஆகையால் அவன் வந்து, இயேசுவின் சரீரத்தை எடுத்துக்கொண்டுபோனான்.**

**யோவா 19:39. ஆரம்பத்திலே ஒரு இராத்திரியில் இயேசுவினிடத்தில் வந்திருந்த நிக்கொதேமு என்பவன் வெள்ளைப்போளமும் கரியபோளமும் கலந்து ஏறக்குறைய நூறு இராத்தல் கொண்டுவந்தான்.**

**யோவா 19:40. அவர்கள் இயேசுவின் சரீரத்தை எடுத்து, யூதர்கள் அடக்கம்பண்ணும் முறைமையின்படியே அதைச் சுகந்தவர்க்கங்களுடனே சீலைகளில் சுற்றிக் கட்டினார்கள்.**

**யோவா 19:41. அவர் சிலுவையில் அறையப்பட்ட இடத்தில் ஒரு தோட்டமும், அந்தத் தோட்டத்தில் ஒருக்காலும் ஒருவனும் வைக்கப்பட்டிராத ஒரு புதிய கல்லறையும் இருந்தது.**

**யோவா 19:42. யூதருடைய ஆயத்தநாளானபடியினாலும், அந்தக் கல்லறை சமீபமாயிருந்தபடியினாலும், அவ்விடத்திலே இயேசுவை வைத்தார்கள்.**

**அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு**

**இவைகளுக்குப்பின்பு அரிமத்தியா ஊரானும், யூதருக்குப் பயந்ததினால் இயேசுவுக்கு அந்தரங்க சீஷனுமாகிய யோசேப்பு இயேசுவின் சரீரத்தை எடுத்துக்கொண்டுபோகும் படி பிலாத்துவினிடத்தில் உத்தரவு கேட்டான்; பிலாத்து உத்தரவு கொடுத்தான். ஆகையால் அவன் வந்து, இயேசுவின் சரீரத்தை எடுத்துக்கொண்டுபோனான் (யோவா 19:38).**

## அதிகாரம் - 19

இயேசுகிறிஸ்துவின் சரீரம் கல்லறையில் அடக்கம்பண்ணப்படும் சம்பவம் இந்த வசனப்பகுதியில் எழுதப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்து கல்லறையில் அடக்கம்பண்ணப்பட்டாலும் மூன்றாம் நாளில் உயிரோடு எழும்புகிறார். கல்லறையினால் அவரை காவல்வைத்திருக்க முடியவில்லை. அவருடைய கல்லறை வெறுமையாகவே இருக்கிறது. இயேசுகிறிஸ்து அடக்கம்பண்ணப்பட்ட கல்லறை அவருக்குச் சொந்தமானதல்ல. அரிமத்தியா ஊரானாகிய யோசேப்புக்குச் சொந்தமானது. இரவலாக வாங்கப்பட்ட அந்தக் கல்லறையில் இயேசுகிறிஸ்துவின் சரீரம் தற்காலிகமாக அடக்கம்பண்ணப்படுகிறது.

அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பைப்பற்றி, இயேசுகிறிஸ்து அடக்கம்பண்ணப்படுவதைப் பற்றி எழுதப்பட்டிருக்கும் வசனப்பகுதியில் மாத்திரமே எழுதப்பட்டிருக்கிறது. புதிய ஏற்பாட்டில் வேறு எங்கும் இவனைப்பற்றிய குறிப்பு காணப்படவில்லை. இவன் இயேசுகிறிஸ்துவுக்கு அந்தரங்க சீஷனாகயிருக்கிறான். இயேசுகிறிஸ்துவுக்கு சிநேகிதன்தான். ஆனால் தன்னை இயேசுவின் சீஷனென்று இவன் வெளிப்படுத்திக் கொள்ளவில்லை. இயேசுகிறிஸ்துவின் சீஷனாகயிருப்பது இவனுக்குக் கிடைத்திருக்கும் சிலாக்கியம். ஆனால் இந்தச் சிலாக்கியத்தை அனுபவிக்காமல் இவன் இயேசுகிறிஸ்துவுக்கு அந்தரங்க சீஷனாகவே இருக்கிறான்.

ஒரு சிலர் சமுதாயத்தில் நல்லவர்களாக இருப்பார்கள். ஆனால் தீயவர்களோடு கூட்டுச் சேர்ந்திருப்பார்கள். இது அவர்களுடைய பலவீனம். வேறு வழியில்லாமல் இவர்கள் தீயவர்களோடு சேர்ந்திருப்பார்கள். அரிமத்தியா ஊரானாகிய யோசேப்போ இயேசுகிறிஸ்துவின் சீஷர்களில் ஒருவனாகயிருக்கிறான். ஆனால் அவருக்கு அந்தரங்க சீஷனாகயிருக்கிறான். இயேசுகிறிஸ்துவைவிட்டு விலகியிருப்பதைவிட, அவருக்கு அந்தரங்க சீஷனாகயிருப்பது பரவாயில்லை. ஆயினும் வெளிப்படையான சீஷனாகயிருந்தால்தான் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை முழுமையாகப் பெற்று அனுபவிக்கமுடியும். யோசேப்பைப்போல அந்தரங்க சீஷராகயிருக்கிறவர்கள், தங்களுடைய விசுவாசத்தில் நாளுக்குநாள் வளர்ச்சிப்பெற்று, ஏற்றவேளை வரும்போது தங்களை இயேசுவின் சீஷரென்று எல்லோருக்கும் முன்பாக வெளிப்படுத்துவார்கள்.

ஒரு சில விசுவாசிகளுக்கு சிறிய சோதனை வந்தாலே பயந்துவிடுவார்கள். ஆனால் வேறுசிலரோ எவ்வளவு பெரிய சோதனை வந்தாலும் அதைத் தாங்கிக்கொண்டு கிறிஸ்துவுக்குத் தைரியமாக சாட்சிகளாயிருப்பார்கள். யோசேப்பு யூதருக்குப் பயந்ததினால் இயேசுகிறிஸ்துவின் அந்தரங்க சீஷனாகயிருக்கிறான். ஆனாலும் அவன் பிலாத்துவுக்குப் பயப்படவில்லை. பிலாத்துவினிடத்தில் தைரியமாகப் பேசுகிறான்.

யோசேப்பைப்போலவே ஒரு சிலர் பயம் நிறைந்தவர்களாகவும், கூச்ச சுபாவமுள்ளவர்களாகவும் இருப்பார்கள். ஆனால் இப்படிப்பட்டவர்கள்கூட வேளைவரும்போது எழும்பிப் பிரகாசிப்பார்கள். ஒரு சிலர் ஒன்றுமே பேசாமல் மறைந்திருப்பார்கள். வேளை வரும்போது தைரியமாகப் பேசுவார்கள்.

அரிமத்தியா ஊரானாகிய யோசேப்புக்கு பிலாத்துவினிடத்தில் போய் பேசக்கூடிய வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் சரீரத்தை சிலுவை மரத்திலிருந்து இறக்கி அடக்கம் பண்ணுவதற்கு, தன்னால் என்ன செய்யமுடியுமோ அதைச் செய்யவேண்டுமென்று இந்த யோசேப்பு விரும்புகிறான். இயேசுகிறிஸ்துவின் சீஷர்களெல்லோரும் அவரைவிட்டு ஓடிப்போய்விடுகிறார்கள். இயேசுகிறிஸ்துவின் சரீரத்தைச் சிலுவை மரத்திலிருந்து இறக்கி, கல்லறையில் அடக்கம்பண்ணுவதற்கு ஒருவரும் முன்வரவில்லையென்றால், போர்ச்சேவகர்களோ அல்லது யூதர்களோ, கள்ளர்களின் சரீரங்களோடு சேர்த்து இயேசுவின் சரீரத்தையும் அடக்கம் பண்ணுவார்கள்.

தேவன் ஒரு காரியத்தைச் செய்ய தீர்மானித்திருக்கும்போது, அதை அவர் நேர்த்தியாகவும் முறையாகவும் செய்து முடிக்கிறவர். யூதமார்க்கத்துத் தலைவர்கள் இயேசுகிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனாக அங்கீகரியாமல்போனாலும், அவர் மெய்யாகவே தேவனுடைய குமாரனாகவே இருக்கிறார். யூதர்கள் அவரைக் கனப்படுத்தவில்லையென்றாலும், இயேசுகிறிஸ்து கனத்திற்கும் மகிமைக்கும் பாத்திரராகவே இருக்கிறார். தம்முடைய தெய்வீக திட்டத்தின் பிரகாரமாக, சிலுவையில் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்த இயேசுகிறிஸ்துவின் சரீரத்தை, மிகுந்த கண்ணியத்தோடு அடக்கம்பண்ணுவதற்கு பிதாவாகிய தேவன் ஆவனசெய்கிறார்.

## அதிகாரம் - 19

இயேசுகிறிஸ்துவின் சரீரம் சிலுவை மரத்திலிருந்து இறக்கப்படுகிறது. நூறு ராத்தல் வெள்ளைப்போளமும் கரியபோளமும் கலந்து அவருடைய சரீரத்தில் சேலையினால் சுற்றிக்கட்டப்படுகிறது. இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரனாகயிருந்தாலும், அவருடைய சரீரத்தைச் சிலுவையிலிருந்து இறக்குவதற்கு தேசாதிபதியின் அனுமதி தேவைப்படுகிறது. அவன் ஒரு புறஜாதியான். அவன் இரக்கப்பட்டு அனுமதிகொடுத்தால் மாத்திரமே, இயேசுவின் சரீரத்தை சிலுவையிலிருந்து இறக்கமுடியும். இயேசுகிறிஸ்துவின் சரீரத்தை அடக்கம்பண்ணுவதற்கு முன்பாக, தேசாதிபதியினிடத்தில் கிறிஸ்துவின் சரீரத்தைக் கெஞ்சி விண்ணப்பம்பண்ணி கேட்டுப்பெற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று.

### நிக்கொதேமு

**ஆரம்பத்திலே ஒரு இராத்திரியில் இயேசுவினிடத்தில் வந்திருந்த நிக்கொதேமு என்பவன் வெள்ளைப்போளமும் கரியபோளமும் கலந்து ஏறக்குறைய நூறு இராத்தல் கொண்டுவந்தான் (யோவா 19:39).**

இயேசுகிறிஸ்துவின் சரீரத்தைச் சிலுவையிலிருந்து இறக்குவதற்கு அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு உதவி செய்கிறான். அவருடைய சரீரத்தில் சுகந்த வர்க்கமிடுவதற்கு நிக்கொதேமு என்பவன் உதவிபுரிகிறான். இவன் யூதருடைய ஆலோசனைச்சங்கத்தில் ஒருவன். ஆரம்பத்தில் ஒரு இராத்திரியில் இவன் இயேசுவினிடத்தில் வந்து நித்திய ஜீவனைப்பற்றி விவரம் கேட்டான். இவன் வெள்ளைப்போளமும் கரியபோளமும் கலந்து ஏறக்குறைய நூறு ராத்தல் கொண்டு வருகிறான். நிக்கொதேமுவும் அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பும் இயேசுவுக்கு அந்தரங்க சீஷர்களாகவே இருக்கிறார்கள்.

ஆரம்பத்தில் நிக்கொதேமு இயேசுகிறிஸ்துவைப் பார்ப்பதற்காக இராத்திரியிலே வந்தான் (யோவா 7:50,51). யூதருக்குப் பயப்பட்டதினால் யாருக்கும் தெரியாமல் அவன் ரகசியமாக இயேசுவினிடத்தில் வந்தான்.

ஆனால் இப்போதோ எல்லோருக்கும் முன்பாக வெளிப்படையாக இயேசுகிறிஸ்துவின் சரீரத்தை அடக்கம்பண்ணுவதற்கு முன்வருகிறான். ஆரம்பத்தில் இவனுடைய விசுவாசம் பலவீனமாகயிருந்தது. இப்போது பலப்பட்டிருக்கிறது. நெரிந்த நாணலைப்போல இருந்த இவனுடைய விசுவாசத்தை கர்த்தர் முறித்துப்போடவில்லை. இப்போதோ கேதுரு மரத்தைப்போல விசுவாசத்தில் பலமுள்ளவனாகயிருக்கிறான்.

அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பும் நிக்கொதேமுவும், இதற்கு முன்பு இயேசுகிறிஸ்துவுக்காகப் பிலாத்துவினிடத்தில் பரிந்துபேச முன்வரவில்லை. பிலாத்து இயேசுகிறிஸ்துவை விசாரித்துக் கொண்டிருக்கும்போது இவர்கள் இருவரும் எங்கே இருந்தார்களென்று தெரியவில்லை. இயேசுகிறிஸ்துவின் சரீரத்தைப் பிலாத்துவினிடத்தில் கேட்டுப்பெற்றுக் கொள்வதற்குப் பதிலாக, கிறிஸ்துவின் ஜீவனை பிலாத்துவினிடத்திலிருந்து விடுவிப்பதற்கு முன்வந்திருந்தால் அது இவர்களுக்கு மேன்மையாக இருந்திருக்கும்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும் யாருக்காவது உதவிபுரியவேண்டுமென்றால், அவர்கள் உயிரோடிருக்கும்போதே அந்த உதவியை அவர்களுக்குச் செய்யவேண்டும். அவர்கள் செத்துப்போனபின்பு அவர்களுடைய அடக்க ஆராதனைக்கு உதவி செய்வதைவிட, அவர்கள் உயிரோடிருக்கும்போது அவர்களுக்கு உதவிபுரிந்தால் அது நலமாயிருக்கும்.

அரிமத்தியா ஊரானாகிய யோசேப்புக்கு பிலாத்துவினிடத்தில் செல்வாக்கு இருக்கிறது. தன் செல்வாக்கைப் பயன்படுத்தி அவன் இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியம் செய்கிறான். இயேசுகிறிஸ்துவின் சரீரத்தைச் சிலுவையிலிருந்து இறக்கி எடுத்துக்கொண்டுபோய் அடக்கம் பண்ணுவதற்கு, பிலாத்துவினிடத்தில் தன் செல்வாக்கைப் பயன்படுத்தி உத்தரவு பெற்றுக்கொள்கிறான்.

நிக்கொதேமுவோ தன்னுடைய பணத்தினால் இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியம் செய்தான். ஒருவேளை இவ்விரண்டு பேரும் சேர்ந்து, இயேசுகிறிஸ்துவின் சரீரத்தை அடக்கம்பண்ணுவதற்கு, கூட்டாகச் செயல்படலாம். தாங்கள் ஒவ்வொருவரும் என்ன செய்யவேண்டுமென்று இவர்கள் ஏற்கெனவே பேசி தீர்மானம் செய்திருக்கலாம். ஏனெனில் இயேசுவின் சரீரத்தை அடக்கம்பண்ணுவதற்கு இவர்களுக்கு சொற்ப காலமே இருக்கிறது.

## அதிகாரம் - 19

இயேசுகிறிஸ்துவின் சரீரத்தை அடக்கம்பண்ணுவதில் இவர்கள் இருவரும் ஆர்வமாயிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து மரித்தாலும் மூன்றாம் நாளில் உயிரோடு எழும்பப்போகிறார். அவரை அடக்கம்பண்ணினாலும், அடக்கம்பண்ணாமல் அப்படியே விட்டுவிட்டாலும் அவர் உயிரோடு எழும்பிவிடுவார். ஆகையினால் அவரை அடக்கம்பண்ணவேண்டிய அவசியமில்லை என்று ஒரு சிலர் கூறுகிறார்கள்.

இயேசு இந்த உலகத்தில் ஒரு வழிப்போக்கரைப்போல சிறிதுகாலம் வந்திருந்தார். இப்போது தம்முடைய பரலோகத்திற்குத் திரும்பிப்போகப்போகிறார். அப்படிப்பட்டவருக்கு கல்லறை தேவையில்லையென்றும், சிலர் சொல்லுகிறார்கள். ஒரு இரவு அல்லது இரண்டு இரவுகள் அவருடைய சரீரத்தை எங்காவது விட்டு வைத்திருந்தால்கூட, அவர் உயிர்த்தெழுந்துவிடுவார் என்றும் இவர்கள் சொல்லுகிறார்கள். ஆகையினால் யோசேப்பும் நிக்கொதேமுவும் இயேசுகிறிஸ்துவின் சரீரத்தை அடக்கம்பண்ணுவதற்கு செய்த முயற்சிகள் தேவையற்றது என்பது இவர்களுடைய கருத்து.

யோசேப்பும் நிக்கொதேமுவும் மெய்யாகவே இயேசுகிறிஸ்துவின்மீது தங்கள் அன்பை வெளிப்படுத்துகிறார்கள். இவர்களுடைய அன்பு பெலமுள்ளது. இயேசுகிறிஸ்துவின் வார்த்தைக்கும், அவருடைய ஆள்தத்துவத்திற்கும் இவர்கள் அதிகமுக்கியத்துவம் கொடுக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவுக்குத் தங்களால் என்ன செய்யமுடியுமோ அதைச் செய்ய முன்வருகிறார்கள். கிறிஸ்துவுக்கு தங்களுடைய மதிப்பையும் மரியாதையும் காண்பிக்கிறார்கள். இவர்கள் செய்தது மெய்யாகவே இயேசுகிறிஸ்துவின் குடும்பத்தாருக்குப் பேருதவியாக இருக்கிறது. அவர் கள்ளர்களில் ஒருவரைப்போல சிலுவையில் அறையப்பட்டாலும், இப்போது அவர் ஒரு பெரிய மனிதரைப்போல அடக்கம்பண்ணப்படுகிறார்.

யோசேப்பும் நிக்கொதேமுவும் இயேசுகிறிஸ்துவை அடக்கம்பண்ணினாலும், அவர் உயிர்த்தெழுவாரென்றும் அவர்கள் விசுவாசிக்கிறார்கள். பிதாவாகிய தேவன் தம்முடைய குமாரனுடைய சரீரத்தைக் கனப்படுத்த சித்தங்கொண்டிருக்கிறார். தேவனுடைய தெய்வீக தீர்மானத்தின் பிரகாரமாக இவர்கள் இருவரும் கிறிஸ்துவின் சரீரத்தை மகிமைப்படுத்துகிறார்கள்.

**சுகந்தவர்க்கங்கள்**

**அவர்கள் இயேசுவின் சரீரத்தை எடுத்து, யூதர்கள் அடக்கம்பண்ணும் முறைமையின்படியே அதைச் சுகந்தவர்க்கங்களுடனே சீலைகளில் சுற்றிக் கட்டினார்கள் (யோவா 19:40).**

யோசேப்பும் நிக்கொதேமுவும் பிலாத்துவின் உத்தரவைப்பெற்று, இயேசுகிறிஸ்துவின் சரீரத்தைச் சிலுவையிலிருந்து இறக்குகிறார்கள். அவருடைய சரீரம் முழுவதும் இரத்தமாகயிருக்கிறது. அதைக் கழுவி சுத்தப்படுத்துகிறார்கள். அதன்பின்பு அவருடைய சரீரத்தை சீலைகளில் சுற்றிக்கட்டுகிறார்கள். யூதர்கள் அடக்கம்பண்ணும் முறைமையின்படியே, இயேசுகிறிஸ்துவின் சரீரத்தில் சுகந்தவர்க்கங்களுடனே சீலைகளில் சுற்றிக்கட்டுகிறார்கள்.

மணவாளனாகிய இயேசுகிறிஸ்துவுக்கு அடக்கம்பண்ணப்படுவதற்கான கல்லறையின் வஸ்திரம் தரிக்கப்படுகிறது. நாம் கலியாண வஸ்திரத்தைத் தரித்துக்கொள்வதற்காக, அவர் கல்லறையின் வஸ்திரத்தைத் தரித்துக்கொள்கிறார். நம்முடைய பாவங்களினிமித்தமாக நாமே மரிக்கவேண்டியவர்கள். நாமே கல்லறையில் அடக்கம்பண்ணப்பட வேண்டியவர்கள். கல்லறையின் வஸ்திரம் நமக்குத்தான் தரிப்பிக்கப்படவேண்டும். ஆனால் இயேசுகிறிஸ்துவோ கல்லறையின் வஸ்திரத்தைக்கூட தம்மீது ஏற்றுக்கொள்கிறார்.

மரித்த சரீரங்களையும் கல்லறைகளையும் ஜனங்கள் பார்க்கக்கூட விரும்பமாட்டார்கள். சிலர் இவற்றைப் பார்ப்பதற்குப் பயப்படுவார்கள். சிலர் இவற்றைத் தீட்டென்று சொல்லி விலகிவிடுவார்கள். மரித்த சரீரத்தின்மீது எவ்வளவுதான் சுகந்த வர்க்கங்களைக் கொட்டினாலும், அந்தச் சரீரம் மறுபடியும் உயிர்பெறாது. மரித்தோரின் பிரிவினால் வருத்தத்தோடிருக்கிறவர்களுக்கு, சுகந்தவர்க்கங்கள் சந்தோஷத்தையோ சமாதானத்தையோ தராது.

## அதிகாரம் - 19

இயேசுகிறிஸ்துவின் கல்லறையைப்பற்றி தியானம்பண்ணும்போது, நமக்கு சந்தோஷமும் சமாதானமும் உண்டாகவேண்டும். ஏனெனில் அவர் நமக்காகவே மரித்திருக்கிறார். நாம் அவருடைய மரணத்தையோ, அல்லது அவருடைய கல்லறையையோ பார்த்து அசிங்கப்படக்கூடாது அதைத் தீட்டாகவும் நினைக்கக்கூடாது. இயேசுகிறிஸ்துவின் மரித்துப்போன சரீரத்தைத் தியானித்துப் பார்க்கும்போது, அந்தச் சரீரம் மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்ததையும் விசுவாசத்தோடு பார்க்கவேண்டும்.

விசுவாசிகள் மரிக்கும்போது, அவர்களுடைய சரீரங்களை அடக்கம்பண்ணுவதற்கு ஆடம்பரமான அடக்க ஆராதனை அவசியமில்லை. அந்தச் சரீரத்தை மண்ணுக்கு மண்ணாக கர்த்தருடைய கரத்தில் ஒப்புக்கொடுக்கிறோம். இயேசுகிறிஸ்துவின் வருகையின் நாளின்போது மரித்துப்போய் அடக்கம்பண்ணப்பட்டிருக்கும் அந்தச் சரீரம் உயிர்த்தெழும் என்று விசுவாசித்து, அந்த நாளைக்காண நாம் வாஞ்சியாயிருக்கவேண்டும்.

பரிசுத்தவான்களின் சரீரங்கள் இயேசுகிறிஸ்வோடு ஐக்கியமாயிருக்கிறது. இயேசுகிறிஸ்து தம்முடைய மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்த நீதியினால், மரித்துப்போன பரிசுத்தவான்களும் உயிர்த்தெழுவார்களென்னும் நிச்சம் உண்டாயிருக்கிறது. ஆகையினால் பரிசுத்தவான்களின் சரீரங்களை அடக்கம்பண்ணும்போது, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சரீரம் அடக்கம்பண்ணப்பட்ட சம்பவத்தையும் விசுவாசித்து நினைவுகூரவேண்டும். அதோடு அவர் உயிர்த்தெழுந்ததையும் விசுவாசித்து அறிக்கைபண்ணவேண்டும்.

**புதிய கல்லறை**

**அவர் சிலுவையில் அறையப்பட்ட இடத்தில் ஒரு தோட்டமும், அந்தத் தோட்டத்தில் ஒருக்காலும் ஒருவனும் வைக்கப்பட்டிராத ஒரு புதிய கல்லறையும் இருந்தது (யோவா 19:41).**

இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட இடத்தில் ஒரு தோட்டம் இருக்கிறது. இந்தத் தோட்டம் அரிமத்தியா ஊரானாகிய யோசேப்புக்குச் சொந்தமானது. இந்தத் தோட்டத்தில் ஒரு புதிய கல்லறையும் இருக்கிறது. இந்தக் கல்லறையில் இதுவரையிலும் யாருடைய சரீரத்தையும் வைத்து அடக்கம்பண்ணவில்லை.

இயேசுகிறிஸ்துவின் சரீரம் நகரத்திற்குப் புறம்பே அடக்கம்பண்ணப்படுகிறது. இது யூதர்களின் வழக்கம். யூதர்கள் தங்களில் மரித்தோரை நரகத்திற்கு புறம்பேதான் அடக்கம்பண்ணுவார்கள். யூதர்களில் யாராவது கல்லறையைத் தொட்டால் அது அவர்களுக்குத் தீட்டாகக் கருதப்படும். ஆகையினால் யூதர்கள் யாரும் கல்லறைக்கு அருகாமையில் போகமாட்டார்கள். கல்லறையைத் தொடமாட்டார்கள். தொட்டால் யூதருடைய மார்க்கச் சடங்குகளின் பிரகாரம் அவர்கள் தங்களைச் சுத்திகரிப்புச் செய்யவேண்டும்.

ஒரு சாதாரண மனுஷரைப்போலவே இயேசுகிறிஸ்துவின் சரீரமும் கல்லறையில் அடக்கம்பண்ணப்படுகிறது. சாதாரண ஜனங்களுடைய சரீரங்கள் கல்லறைகளில் அடக்கம்பண்ணப்படும்போது, அந்தச் சரீரங்கள் கல்லறையிலேயே இருக்கும். ஆனால் அடக்கம்பண்ணப்பட்ட இயேசுகிறிஸ்துவின் சரீரம் கல்லறையில் நித்தியமாக இருக்கப்போவதில்லை. மரித்த இயேசுகிறிஸ்து மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்திருக்கிறார். ஆகையினால் இயேசுகிறிஸ்துவின் கல்லறையைத் தொடுவதினால் யாருக்கும் தீட்டுவந்துவிடாது. ஏனெனில் அவர் உயிரோடிருக்கிறவர்.

நாமும் பரிசுத்தவான்களின் கல்லறைகளைப் பார்க்கும்போது அதைத் தீட்டானதாக எண்ணக்கூடாது. இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்ததினால் மரித்துப்போன பரிசுத்தவான்களும் அவருடைய வருகையின்போது உயிர்த்தெழுவார்கள். அதுவரையிலும் பரிசுத்தவான்களின் சரீரங்கள் அவர்களுடைய கல்லறைகளில் வைக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால் கல்லறைக்கு அருகாமையில் போவதற்கு நாம் பயப்படவேண்டியதில்லை. அங்கு அசுத்த ஆவிகள் சுற்றிக்கொண்டிருக்குமோ என்று பயப்படவேண்டியதில்லை. இப்பிரபஞ்சத்திலிருக்கும் சந்தடிகளைவிட கல்லறை அமைதியாகத்தான் இருக்கும். நாம் விசுவாசத்தோடு பரிசுத்தவான்களின் கல்லறைகள் இருக்கும் இடத்திற்குப்போகலாம். அதனால் நமக்கு ஒரு தீட்டுமில்லை.

## அதிகாரம் - 19

இயேசுகிறிஸ்து ஒரு தோட்டத்தில் அடக்கம்பண்ணப்படுகிறார். இந்தத் தோட்டத்திற்குச் சொந்தக்காரனாகிய யோசேப்பு, தனக்காக ஒரு கல்லறையை வெட்டி வைத்திருக்கிறான். தான் மரித்துப்போன பின்பு தன்னை அந்தக் கல்லறையில் அடக்கம்பண்ண வேண்டுமென்றும், அது ஒரு நினைவுச்சின்னமாக இருக்கவேண்டும் என்றும் தீர்மானித்து, யோசேப்பு தனக்காக அந்தக் கல்லறையைச் செய்திருந்தான். யோசேப்பு தான் உயிரோடிருக்கும்போதே, மரித்துப்போனபின்பு தன் சரீரத்தை அடக்கம்பண்ணுவதற்கு, ஒரு கல்லறையை ஆயத்தம்பண்ணுகிறான்.

பொதுவாக தோட்டத்திற்குள் போனால் அங்கு தேவனைப்பற்றியும், அவருடைய வார்த்தையைப்பற்றியும் தியானிப்பதற்கு வசதியாக இருக்கும். அதிலும் அந்தத் தோட்டத்தில் கல்லறை இருக்குமென்றால், நம்முடைய மரணத்தைப்பற்றியும், நித்திய ஜீவனைப்பற்றியும் தியானிப்பதற்கு மிகவும் வாய்ப்பாக இருக்கும். யோசேப்பு மரித்தபின்பு, அவனுடைய சந்ததியார் அவனுடைய தோட்டத்திற்கு வந்து, தியானம்பண்ணுவதற்காக ஒருவேளை தன்னுடைய கல்லறையை தோட்டத்தில் உண்டுபண்ணியிருக்கலாம்.

நம்முடைய முன்னோர்களின் கல்லறைகளைப் பார்ப்பது தவறல்ல. நல்லதுதான். அந்தக் கல்லறைகளுக்குப்போய், அவர்கள் உயிரோடிருக்கும்போது, அவர்கள் நமக்குச் செய்த நன்மைகளையெல்லாம் நினைவுகூரவேண்டும். அவர்கள் நமக்கு முன்மாதிரியாக ஜீவித்த நல்ல பழக்க வழக்கங்களையெல்லாம் நாம் நினைவுகூர்ந்து, நம்மிடத்திலும் நல்ல பழக்கங்களை உண்டுபண்ணிக்கொள்ள வேண்டும். மரித்தோரை வழிபடுவது தவறு. ஆனாலும் மரித்துப்போனவர்களின் நலமான ஆலோசனைகளை நாம் பின்பற்றலாம். அதில் தவறில்லை.

தோட்டத்திலுள்ள கல்லறையில் இயேசுகிறிஸ்துவின் சரீரம் அடக்கம்பண்ணப்படுகிறது. ஏதேன் தோட்டத்தில் ஆதாமும் ஏவாளும் தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்தார்கள். இதனால் மனுக்குலத்திற்கு மரணமுண்டாயிற்று. ஏதேன் தோட்டத்தில்தான் மரணமும் கல்லறையும் முதன்முதலாக வல்லமையடைந்தது. இப்போது இயேசுகிறிஸ்து அடக்கம்பண்ணப்பட்டிருக்கும் இந்தத் தோட்டத்தில் மரணம் தன்னுடைய வல்லமையை இழந்துவிடுகிறது. இயேசுகிறிஸ்து மரணத்தை ஜெயித்தவர்.

இயேசுகிறிஸ்துவை ஒரு புதிய கல்லறையில் அடக்கம்பண்ணுகிறார்கள். இயேசுகிறிஸ்துவுக்கு கனமும் மகிமையும் உண்டாகும் வண்ணமாக அவருடைய சரீரம் புதிய கல்லறையில் அடக்கம்பண்ணப்படுகிறது. கன்னிகையினிடத்தில் பிறந்தவர், புதிய கல்லறையிலிருந்து உயிர்த்தெழுகிறார். ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் அவன் புதுசிருஷ்டியாகிறான். எல்லாம் புதிதாகிறது. பழையவைகள் ஒழிந்துபோகிறது. இயேசுகிறிஸ்துவே எல்லாவற்றையும் புதிதாக்குகிறவர். புதிதாக்குகிற இயேசுகிறிஸ்து புதிய கல்லறையில் அடக்கம்பண்ணப்படுகிறார்.

**கல்லறை சமீபமாயிருந்தது**

**யூதருடைய ஆயத்தநாளான படியினாலும், அந்தக் கல்லறை சமீபமாயிருந்த படியினாலும், அவ்விடத்திலே இயேசுவை வைத்தார்கள் (யோவா 19:42).**

இயேசுகிறிஸ்து பெரிய ஓய்வுநாளுக்கு ஆயத்தநாளிலே மரித்திருக்கிறார். அந்த ஓய்வுநாளிலே கிறிஸ்துவின் சரீரம் சிலுவையில் இருக்கக்கூடாது என்று யூதர்கள் விரும்புகிறார்கள். அந்த ஆயத்த நாளிலேயே, இயேசுகிறிஸ்துவின் சரீரத்தை அடக்கம்பண்ணுவதற்கு, அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பும், நிக்கொதேமுவும் தேவையான எல்லா காரியங்களையும் செய்து, அவருடைய சரீரத்தை தோட்டத்திலுள்ள கல்லறையில் வைக்கிறார்கள்.

யூதர்கள் ஓய்வுநாளைப் பரிசுத்தமாக ஆசரிக்க விரும்புகிறார்கள். ஆனால் அதற்கு ஆயத்தநாளிலோ எல்லா அநியாயங்களையும் அக்கிரமங்களையும் செய்கிறார்கள். ஆயத்தநாளை பிரதான ஆசாரியர் சரியாகக் கடைப்பிடிக்கவில்லை. தேவாலயத்தில் நடைபெறும் எல்லா ஆராதனைகளுக்கும் தாங்களே பிரதிஷ்டைபண்ணப் பட்டிருக்கிறவர்கள் என்று பிரதான ஆசாரியர்கள் கூறுகிறார்கள். தங்களைப் பரிசுத்தவான்களாகக் காண்பித்துக் கொள்கிறார்கள். தேவாலயத்திற்குத் தங்களைப் பொறுப்பானவர்கள்போல பிரகடனம் செய்கிறார்கள். ஆனால் தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவையோ சிலுவையில் அறைந்து கொன்றுபோடுகிறார்கள்.

## அதிகாரம் - 19

தேவாலயத்தின் ஆராதனையைக் கவனிக்கிறார்கள். ஆனால் தேவாலயத்தில் ஆராதனை செய்யவேண்டிய தேவகுமாரனையே கொன்றுபோடுகிறார்கள். இயேசுகிறிஸ்துவை அவருடைய சீஷர்களையும் தேவனுக்கும் தேவாலயத்திற்கும் சத்துருக்கள் என்று கூறுகிறார்கள். ஓய்வுநாள் பரிசுத்தமான நாளும், மனமகிழ்ச்சியின் நாளும், ஓய்வு எடுக்கவேண்டிய நாளுமாயிருக்கிறது. இந்த ஓய்வுநாளில் இயேசுகிறிஸ்துவின் சரீரத்தை அடக்கம்பண்ண பிரதான ஆசாரியர் விரும்பவில்லை. ஆகையினால் தாமதம்பண்ணாமல் ஓய்வுநாளுக்கு ஆயத்த நாளிலேயே இயேசுகிறிஸ்துவின் சரீரத்தை அவசரம் அவசரமாக அடக்கம்பண்ணுமாறு வற்புறுத்துகிறார்கள்.

யூதமார்க்கத்துத் தலைவர்கள் அவசரப்படுத்துவதினால், யோசேப்பும் நிக்கொதேமுவும், இயேசுகிறிஸ்துவின் சரீரத்தை, அவர் சிலுவையில் அறையப்பட்ட இடத்திற்கு சமீபமாயிருந்த ஒரு கல்லறையில் அடக்கம்பண்ணுகிறார்கள். இயேசுகிறிஸ்துவின் சரீரம் அவர் சிலுவையில் அறையப்பட்ட இடத்தில் சிறிது நேரம் இறக்கி வைக்கப்பட்டிருக்கிறது. பிரதான ஆசாரியர் அவசரப்படுத்தியதினால், இயேசுவின் சரீரத்தை வேறு இடத்திற்கு கொண்டுபோக முடியவில்லை. ஆகையினால் அவசரம் அவசரமாக இயேசுகிறிஸ்துவின் சரீரத்தை அந்த இடத்திற்கு அருகாமையிலுள்ள ஒரு கல்லறையிலேயே அடக்கம் பண்ணிவிடுகிறார்கள். அந்தக் கல்லறை புதிய கல்லறையாக இருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் சரீரத்தை அடக்கம்பண்ணுவதற்கு இந்த இடமே தேவனுக்குச் சித்தமான இடமாயிற்று.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும் சில காரியங்களை எப்படிச் செய்வது என்று தெரியாமல் தவித்துக்கொண்டிருப்போம். கர்த்தருக்குச் சித்தமான காரியம் அவருடைய கையினால் நமக்கு வாய்க்கும். நாம் ஜீவனோடிருக்கும்போதும், மரிக்கும்போதும் கர்த்தருடைய சித்தத்தின்படிதான் எல்லாம் நடைபெறும். ஆகையினால் எல்லாக் காரியங்களைக் குறித்தும் நாம் அதிகமாய் கவலைப்பட்டுக்கொண்டிருக்கக்கூடாது.

அதிலும் நாம் உயிரோடிருக்கும்போதே, நம்முடைய அடக்க ஆராதனை எப்படி நடைபெறுமென்றும், நாம் எங்கு அடக்கம் பண்ணப்படுவோமென்றும் தேவையில்லாமல் சிந்தித்து க்கொண்டிருக்கக்கூடாது.

தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவை எங்கு அடக்கம்பண்ணவேண்டுமென்று யோசிக்கக்கூட அவர்களுக்கு நேரமில்லை. அது ஆயத்தநாளாக இருந்தபடியினால், பிரதான ஆசாரியர் அவசரப்படுத்தியதினால், இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட இடத்திற்குச் சமீபமாயிருந்த ஒரு கல்லறையிலேயே அவருடைய சரீரத்தை அடக்கம்பண்ணுகிறார்கள். கர்த்தருடைய கிருபையினால் அந்தக் கல்லறை புதிய கல்லறையாக இருக்கிறது.

ஆடம்பரமான அடக்க ஆராதனை எதுவும் நடைபெறாமல் இயேசுகிறிஸ்துவின் சரீரம் மிகவும் அமைதியாக, சமீபமாகயிருந்த ஒரு கல்லறையில் வைக்கப்படுகிறது. மரணத்தை ஜெயித்தவர் இந்தப் புதிய கல்லறையில் வைக்கப்படுகிறார். தேவனுடைய வல்லமையினால் மூன்றாம் நாளில் அவர் மறுபடியும் உயிரோடு எழும்புகிறார். தேவன் அவரை உயிரோடு எழுப்புகிறார். மரணம் தோற்றுப்போயிற்று. ஜெயம் கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.

## அதிகாரம் - 20

யோவான் எழுதின சுவிசேஷம், மற்ற சுவிசேஷங்களிலிருந்து அமைப்பு முறையில் சற்று மாறுபட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் பிறப்பு, அவருடைய வம்ச வரலாறு, அவருடைய இளமைப்பருவம் ஆகிய சம்பவங்கள் மற்ற சுவிசேஷங்களில் முன்னுரையாக எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் யோவான் எழுதின சுவிசேஷத்தின் முன்னுரையில் இந்தச் சம்பவம் எழுதப்படவில்லை. ஆனாலும் முடிவுரையானது மற்ற சுவிசேஷங்களைப்போலவே இந்தச் சுவிசேஷத்திலும் எழுதப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணம், அவருடைய உயிர்த்தெழுதல் ஆகிய சம்பவங்கள் மற்ற சுவிசேஷங்களில் வரலாற்று ரீதியாக விவரிக்கப்பட்டிருக்கிறது. யோவான் எழுதின சுவிசேஷத்தில் இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு சாட்சிகளும் ஆதாரங்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

இயேசுகிறிஸ்துவின் கல்லறையில் நடைபெற்ற சம்பவம் (யோவா 20:1-10). கல்லறையில் இரண்டு தேவதூதர்கள் மகதலேனா மரியாளுக்கு முன்பாகத் தோன்றுகிறார்கள் (யோவா 20:11-13). இயேசுகிறிஸ்து தாமே மகதலேனா மரியாளுக்கு காட்சி தருகிறார் (யோவா 20:14-18). இயேசுகிறிஸ்து தம்முடைய மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்த பின்பு, உயிர்த்தெழுந்த அதே நாள் மாலையில் கல்லறையைவிட்டு வெளியேறி தம்முடைய சீஷர்களைச் சந்திக்கிறார். அப்போது தோமா மற்ற சீஷரோடு இல்லை (யோவா 20:19-25). இயேசுகிறிஸ்து மறுபடியும் எட்டு நாளைக்குப் பின்பு தோமாவுக்கு தரிசனம் கொடுக்கிறார் (யோவா 20:26-31).

### இயேசுவின் கல்லறை
### யோவா 20 : 1-10

**யோவா 20:1. வாரத்தின் முதல்நாள் காலையில், அதிக இருட்டோடே, மகதலேனா மரியாள் கல்லறையினிடத்திற்கு வந்து கல்லறையை அடைத்திருந்த கல் எடுத்துப்போட்டிருக்கக்கண்டாள்.**

**யோவா 20:2. உடனே அவள் ஓடி, சீமோன்பேதுருவினிடத்திலும் இயேசுவுக்கு அன்பாயிருந்த மற்றச் சீஷனிடத்திலும் போய்: கர்த்தரைக் கல்லறையிலிருந்து எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள், அவரை வைத்த இடம் எங்களுக்குத் தெரியவில்லை என்றாள்.**

**யோவா 20:3. அப்பொழுது பேதுருவும் மற்றச் சீஷனும் கல்லறையினிடத்திற்குப் போகும்படி புறப்பட்டு, இருவரும் ஒருமித்து ஓடினார்கள்.**

**யோவா 20:4. பேதுருவைப்பார்க்கிலும் மற்றச் சீஷன் துரிதமாய் ஓடி, முந்திக் கல்லறையினிடத்தில் வந்து,**

**யோவா 20:5. அதற்குள்ளே குனிந்துபார்த்து, சீலைகள் கிடக்கிறதைக் கண்டான்; ஆனாலும் அவன் உள்ளே போகவில்லை.**

**யோவா 20:6. சீமோன்பேதுரு அவனுக்குப் பின்னே வந்து, கல்லறைக்குள்ளே பிரவேசித்து,**

**யோவா 20:7. சீலைகள் கிடக்கிறதையும், அவருடைய தலையில் சுற்றியிருந்த சீலை மற்றச் சீலைகளுடனே வைத்திராமல் தனியே ஒரு இடத்திலே சுருட்டி வைத்திருக்கிறதையும் கண்டான்.**

**யோவா 20:8. முந்திக் கல்லறையினிடத்திற்கு வந்த மற்றச் சீஷனும் அப்பொழுது உள்ளே பிரவேசித்து, கண்டு விசுவாசித்தான்.**

**யோவா 20:9. அவர் மரித்தோரிலிருந்து எழுந்திருக்க வேண்டும் என்ற வேதவாக்கியத்தை அவர்கள் இன்னும் அறியாதிருந்தார்கள்.**

**யோவா 20:10. பின்பு அந்தச் சீஷர்கள் தங்களுடைய இடத்திற்குத் திரும்பிப்போனார்கள்.**

**மகதலேனா மரியாள்**

வாரத்தின் முதல்நாள் காலையில், அதிக இருட்டோடே, மகதலேனா மரியாள் கல்லறையினிடத்திற்கு வந்து கல்லறையை அடைத்திருந்த கல் எடுத்துப் போட்டிருக்கக்கண்டாள் (யோவா 20:1).

## அதிகாரம் - 20

இரட்சகராகிய இயேசுகிறிஸ்து மனுக்குலத்தை இரட்சிப்பதற்காக கல்வாரி சிலுவையில் தம்முடைய ஜீவனையே ஒப்புக்கொடுக்கிறார். சிலுவையில் மரித்த அவரை கல்லறையில் அடக்கம்பண்ணுகிறார்கள். அவர் மூன்றாம் நாளில் மறுபடியும் உயிரோடு எழும்புகிறார். அவர் உயிர்த்தெழுந்த சம்பவம் சுவிசேஷங்களில் விவரமாய் எழுதப்பட்டிருக்கிறது. ஆயினும் அவர் உயிர்த்தெழுந்ததற்கு ஆதாரத்தைக்கொடுத்து, அதை நிரூபித்து எழுதுவதும் அப்போஸ்தலருக்கு அவசியமாயிற்று.

இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரன். அவரே மேசியா. அவர் உயிரோடு எழும்புவதே, அவர் மேசியா என்பதற்கு அடிப்படை ஆதாரமாக இருக்கிறது. இந்த ஆதாரத்தை அழிப்பதற்கு கிறிஸ்துவின் சத்துருக்கள் அதிகமாய் பிரயாசப்படுகிறார்கள். இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்தது மெய்யானது அல்ல என்றால், அவர் தேவனுடைய குமாரனென்பதும் மெய்யானது அல்ல என்று பிரதான ஆசாரியரும் யூதமார்க்கத்துத் தலைவர்களும் பொய்பிரசாரம் பண்ணுவார்கள். ஆகையினால் இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை ஆதாரங்களோடு நிரூபிக்க வேண்டுமென்பதில் அப்போஸ்தலர்கள் மிகுந்த கவனமாயிருக்கிறார்கள்.

மனுக்குலத்தின் மீட்புக்கு இயேசுகிறிஸ்து கல்வாரியில் மரிப்பது அவசியமாகயிருப்பதுபோல, அவருடைய உயிர்த்தெழுதலும் அவசியமாகயிருக்கிறது. மரணத்திலிருந்து இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்ததினால், நாமும் அவரோடுகூட உயிர்த்தெழுவோம் என்னும் நம்பிக்கை நமக்கு உண்டாயிற்று. மனுஷரின் இரட்சிப்புக்கும் மீட்புக்கும் இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலே ஆதாரமாகும்.

இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு தம்மை எல்லா ஜனங்களுக்கும் ஜீவனுள்ளவராகப் பிரத்தியட்சமாக வெளிப்படுத்திக் காண்பிக்கவில்லை. அப்போஸ்தலருக்கும், அவருடைய சீஷரில் சிலருக்கும் மாத்திரமே இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு தரிசனமானார்.

இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்ததையும், அவர் உயிர்த்தெழுந்த பின்பு தரிசனங்கொடுத்ததையும் பற்றி பேதுரு இவ்வாறு குறிப்பிடுகிறார். "மூன்றாம் நாளிலே தேவன் அவரை எழுப்பிப் பிரத்தியட்சமாய்க் காணும்படி செய்தார். ஆயினும் எல்லா ஜனங்களுக்கும் பிரத்தியட்சமாகும்படி செய்யாமல், அவர் மரித்தோரிலிருந்து எழுந்தபின்பு அவரோடே புசித்துக் குடித்தவர்களும் தேவனால் முன்பு நியமிக்கப்பட்ட சாட்சிகளுமாகிய எங்களுக்கே பிரத்தியட்சமாகும்படி செய்தார். அன்றியும் அவரே உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட நியாயாதிபதியென்று ஜனங்களுக்குப் பிரசங்கிக்கவும், சாட்சியாக ஒப்புவிக்கவும், அவர் எங்களுக்குக் கட்டளையிட்டார்" (அப் 10:41-43).

இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு, தம்மால் தெரிந்துகொள்ளப்பட்ட ஒரு சில சிநேகிதர்களுக்கு மாத்திரமே, அவர் ஜீவனுள்ளவராகப் பிரத்தியட்சமாகத் தரிசனங்கொடுத்தார். உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவைத் தரிசித்தவர்கள் இந்த உலகம் முழுவதும் சென்று இந்த சம்பவத்தையும், இந்த சத்தியத்தையும் பிரகடனம் பண்ணவேண்டும். உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவை ஏராளமானோர் தரிசிக்கவில்லை. அவர்களுக்கு அந்த ஆசீர்வாதம் கிடைக்கவில்லை. ஆயினும் அவர்களும் "இயேசு உயிர்த்தெழுந்தார்" என்று விசுவாசிக்கிறார்கள். அவர்களுடைய விசுவாசம் உறுதிபண்ணப்படும் பொருட்டு, உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவைத் தரிசித்தவர்கள், அவர்களிடத்தில் தாங்கள் தரிசித்ததைச் சாட்சியாக அறிவித்து, ஜனங்களை ஆசீர்வதிக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்ததற்கு முதலாவது ஆதாரம் இங்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் கல்லறை வெறுமையாக இருக்கிறது. மகதலேனா மரியாள் கல்லறையினிடத்திற்கு வருகிறாள். கல்லறையை அடைத்திருந்த கல் எடுத்துப்போட்டிருக்கிறதை அவள் காண்கிறாள். கல்லறைக்கு இந்த மரியாள் மாத்திரமே வந்ததாக யோவான் இந்த சுவிசேஷத்தில் குறிப்பிடுகிறார். மற்ற சுவிசேஷத்தில் மகதலேனா மரியாளோடு, மற்றொரு ஸ்திரீயும் கல்லறையினிடத்திற்கு வந்ததாக எழுதப்பட்டிருக்கிறது.

## அதிகாரம் - 20

மகதலேனா மரியாளுக்கு இயேசுகிறிஸ்து அநேக நன்மைகளைச் செய்திருக்கிறார். அவளுடைய பாவங்கள் அனைத்தையும் மன்னித்திருக்கிறார். எவர்களுடைய பாவங்கள் அதிகமாய் மன்னிக்கப்படுகிறதோ, அவர்கள் இயேசுகிறிஸ்துவிடத்தில் அதிகமாய் அன்புகூருவார்கள். இதன்பிரகாரமாக மகதலேனா மரியாள், இயேசுகிறிஸ்துவினிடத்தில் அதிகமாய் அன்புகூர்ந்து, இயேசுகிறிஸ்துவின் சரீரத்தைப் பார்ப்பதற்காக கல்லறையினிடத்திற்கு வருகிறாள்.

இயேசுகிறிஸ்து உயிரோடிருந்த காலத்திலே மகதலேனா மரியாள் அவர்மீது அன்பாகயிருந்தாள். அவருடைய உபதேசத்தைக் கவனத்தோடு கேட்டாள். தன்னுடைய பொருட்களினால் அவருக்கு பணிவிடை செய்தாள். லூக்கா இவளைப்பற்றி குறிப்பிடும்போது இவள் ஏழு பிசாசுகள் நீங்கின மகதலேனாள் என்னப்பட்ட மரியாள் என்று குறிப்பிடுகிறார். இவளும் மேலும் அநேக ஸ்திரீகளும் இயேசுகிறிஸ்துவுக்கு தங்கள் ஆஸ்திகளால் ஊழியம் செய்து வந்தார்கள் (லூக் 8:2,3).

இயேசுகிறிஸ்து உயிரோடிருக்கும்போது அவருக்கு ஊழியம்செய்த மகதலேனாள் என்னப்பட்ட மரியாள், அவர் மரித்துப்போன பின்பும் அவருக்குப் பணிவிடை செய்வதற்காக வருகிறாள். இயேசுவின்மீது இவள் வைத்திருக்கும் அன்பு உறுதியாயிருக்கிறது. நாம் இயேசுகிறிஸ்துவிடத்தில் மெய்யான அன்பு வைத்திருப்போமென்றால், நம்முடைய அன்பு எல்லா சூழ்நிலைகளிலும் மாறாமல் உறுதியாக இருக்கும். சூழ்நிலைகளுக்குத் தக்கபடி நம்முடைய அன்பு மாறாது. மகதலேனா மரியாளின் அன்பு மாறாத அன்பாக இருக்கிறது. இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு மரித்ததும், மூன்றாம் நாளில் உயிரோடு எழும்பியதும் எப்படி மெய்யாயிருக்கிறதோ, அப்படியே மகதலேனாள் என்னப்பட்ட மரியாள் இயேசுவின் மீது வைத்திருக்கும் அன்பும் மெய்யாயிருக்கிறது.

மகதலேனா மரியாள் காலையில் அதிக இருட்டோடே கல்லறையினிடத்திற்கு வருகிறாள். இயேசுகிறிஸ்துவின் சரீரத்தைத் தன் கண்ணீரினால் கழுவுவதற்காக இவள் அங்கு வந்திருக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவின் சரீரத்தில் சுகந்தவர்க்கமிடுவதற்காக பரிமளதைலங்களை ஆயத்தப்படுத்தி அவள் அங்கு வந்திருக்கிறாள். விசுவாசத்தில் பலவீனமுள்ளவர்கள் கல்லறை பக்கமே போகமாட்டார்கள். அங்குபோகப் பயப்படுவார்கள். ஸ்திரீகள் பலவீன பாண்டமாக இருக்கிறபடியினால், அவர்கள் பொதுவாக கல்லறையினிடத்திற்குப் போவதில்லை. ஆனால் மகதலேனாள் என்னப்பட்ட மரியாளோ இயேசுகிறிஸ்துவின் கல்லறையினிடத்திற்கு வந்து, அவர்மீது தான் வைத்திருக்கும் அன்பை வெளிப்படுத்துகிறாள்.

நாம் இயேசுகிறிஸ்துவினிடத்தில் மெய்யான அன்பு வைத்திருக்கும்போது, அந்த அன்பு மரணபயத்தையும், கல்லறையின் பயத்தையும் நம்மைவிட்டு நீக்கிப்போடும். நாம் இயேசுகிறிஸ்துவை மெய்யாக நேசிப்போமென்றால், அவரைக் கிட்டிச் சேருவதற்கு, எத்தனை தடைகள் வந்தாலும், அவையெல்லாவற்றையும் தாண்டி, இயேசுவின் சமுகத்தில் சேருவோம். பள்ளத்தாக்குகளோ, பாடுகளோ, வருத்தமோ, கல்லறைத்தோட்டமோ, எதுவும் நமக்கு ஒரு பொருட்டாயிராது.

மகதலேனா மரியாள் எவ்வளவு சீக்கிரமாக இயேசுகிறிஸ்துவின் கல்லறையினிடத்திற்கு வரமுடியுமோ, அவ்வளவு சீக்கிரமாக அங்கு வருகிறாள். வாரத்தின் முதல்நாள் காலையில் அதிக இருட்டோடே அவள் கல்லறையினிடத்திற்கு வருகிறாள். ஓய்வுநாள் முடிந்தவுடன் வாரத்தின் முதலாம் நாள் ஆரம்பமாகிறது. இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களுக்கு வாரத்தின் முதல்நாள்தான் ஓய்வுநாளாகும். வாரத்தின் முதல்நாளில் அவள் கர்த்தரைத் தேடிவருகிறாள். காலையில் அதிக இருட்டோடே வருகிறாள். வாரத்தின் முதல்நாள் நமக்கு கர்த்தரைத் தேடுகிற ஓய்வுநாளாக இருக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்துவைத் தேடுகிறவர்கள் அதிகாலையிலே, அதிக இருட்டோடே, அந்தநாளின் ஆரம்ப மணி வேளையிலேயே, அவரைத் தேடவேண்டும். காலம் தாமதித்தால், அவரைக் கண்டுபிடிக்க முடியுமோ முடியாதோ என்னும் பயமும் பக்தியும் நமக்குள் வரவேண்டும். ஆகையினால் அதிகாலையிலே கர்த்தரைத் தேடுகிறவர்கள் அவரை நிச்சயமாகவே கண்டுபிடிப்பார்கள். இயேசுவை வாஞ்சையோடு தேடவேண்டும். அவரைக் காலையிலும் தேடவேண்டும். இரவிலும் தேடவேண்டும். இரவில் நம்முடைய படுக்கைக்குப் போவதற்கு முன்பாக, அந்தநாளில் அவர் நமக்கு செய்த நன்மைகளையும், அவர் நம்மை பாதுகாத்து பராமரித்ததையும் நினைவுகூர்ந்து, அவரைத் துதித்து விட்டுப் படுக்கைக்குச் செல்லவேண்டும். ஒவ்வொரு நாளையும் கர்த்தரே நமக்கு ஆரம்பித்துத் தரவேண்டும். கர்த்தரே நமக்கு முடித்துத் தரவேண்டும்.

## அதிகாரம் - 20

இயேசுகிறிஸ்துவை காலையில் அதிக இருட்டோடே தேடுகிறவர்கள் கிறிஸ்துவின் வெளிச்சத்தைக் காண்பார்கள். இயேசுகிறிஸ்துவைப்பற்றிய வெளிப்பாடு அவர்களுக்கு அதிகமாய் வெளிப்படுத்தப்படும். அவர்களுடைய முகமும் கிறிஸ்துவின் மகிமைப் பிரகாசத்தினால் பிரகாசமடையும்.

மகதலேனா மரியாள் கல்லறையினிடத்திற்கு வந்து கல்லறையை அடைத்திருந்த கல் எடுத்துப்போட்டிருக்கக் காண்கிறாள். இது அவளுக்கு மிகுந்த ஆச்சரியமாயிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணம் ஜீவஊற்றாகயிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் கல்லறை இரட்சிப்பின் ஊற்றுக்களில் ஒன்றாகும். நாம் இயேசுகிறிஸ்துவை விசுவாசத்தோடு தேடிவரும்போது, அவரைக் கிட்டிச் சேருவதற்கு தடையாக இருக்கும் எல்லா கற்களும் எடுத்துப்போடப்பட்டிருக்கும். இயேசுகிறிஸ்துவின் சந்தோஷத்திற்குள்ளும், சமாதானத்திற்குள்ளும், ஆசீர்வாதத்திற்குள்ளும் தாராளமாகப் பிரவேசிக்கும் சிலாக்கியம் நமக்கு உண்டாகும். இயேசுகிறிஸ்துவை நாம் அதிகாலையில் தேடும்போது நமக்கு ஆச்சரியமான ஆறுதல்கள் அதிக அளவில் உண்டாகும். இவை நம்முடைய விசுவாசத்தை உற்சாகப்படுத்தும்.

இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்திருக்கிறார். மகதலேனா மரியாளுக்கு இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்தது தெரியவில்லை. இயேசுகிறிஸ்து தாம் சொன்ன பிரகாரம் உயிர்த்தெழுந்தார் என்பதை நினைத்து அவள் இயேசுவைத் துதிக்கவில்லை. இயேசுகிறிஸ்துவை அக்கரையோடும், இடைவிடாமலும் தேடுகிறவர்கள் தேவனுடைய கிருபைகளை ஆரம்பத்திலேயே பெற்றுக்கொள்வார்கள். இயேசுகிறிஸ்து பாடுகளை அனுபவித்தபோது, மகதலேனா மரியாள் அவரைக் கடைசியாகப் பின்பற்றினாலும், அவர் உயிர்த்தெழுந்தபோது அவரை முதலாவதாகத் தேடிவரும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறாள்.

**எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள்**

**உடனே அவள் ஓடி, சீமோன்பேதுருவினிடத்திலும் இயேசுவுக்கு அன்பாயிருந்த மற்றச் சீஷனிடத்திலும் போய்: கர்த்தரைக் கல்லறையிலிருந்து எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள், அவரை வைத்த இடம் எங்களுக்குத் தெரியவில்லை என்றாள் (யோவா 20:2).**

மகதலேனா மரியாள் இயேசுகிறிஸ்துவின் கல்லறையினிடத்திற்கு வந்து, கல்லறையை அடைத்திருந்த கல் எடுத்துப்போட்டிருக்கிறதைக் காண்கிறாள். உடனே அவள் சீமோன் பேதுருவினிடத்திலும், யோவானிடத்திலும் ஓடுகிறாள். அவர்களிடத்தில் "கர்த்தரைக் கல்லறையிலிருந்து எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள், அவரை வைத்த இடம் எங்களுக்குத் தெரியவில்லை" என்று கூறுகிறாள். கல்லறையை அடைத்திருந்த கல் எடுத்துப்போடப்பட்டிருப்பதைக் காண்கிறாள். கல்லறைக்குள் பார்க்கிறாள். ஆனால் கல்லறையோ வெறுமையாக இருக்கிறது.

இயேசுகிறிஸ்துவின் கல்லறை வெறுமையாகத்தான் இருக்கும். கல்லறையினால் இயேசுகிறிஸ்துவை அடைத்து வைக்கமுடியாது. இயேசுகிறிஸ்து தம்முடைய சிலுவை மரணத்தைப்பற்றிச் சொல்லிய போதெல்லாம், தாம் மூன்றாம் நாளில் மறுபடியும் உயிர்த்தெழப்போவதையும் சேர்த்தே சொல்லியிருக்கிறார். இயேசுகிறிஸ்து சிலுவையில் மரித்தது மெய்யான சம்பவமாக இருக்கிறதுபோல, அவர் உயிர்த்தெழுந்ததும் மெய்யான சம்பவமாக இருக்கிறது.

இயேசுகிறிஸ்துவின் கல்லறை வெறுமையாக இருக்கிறதை மகதலேனா மரியாள் காண்கிறாள். ஆனால் இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்துவிட்டார் என்னும் சிந்தனை அவளுடைய மனதில் தோன்றவில்லை. அவள் குழப்பத்திலும் பயத்திலும் நிறைந்திருக்கிறாள். நம்முடைய சுபாவத்திலும் குழப்பமும், கலக்கமும், பயமும் இருக்கும்போது, நாம் தேவனுடைய கிருபையையும், அவருடைய வாக்குத்தத்தத்தையும் மறந்துவிடுவோம். கவலையும் பயமும் நம்மை மேற்கொள்ளும். நம்மை ஆறுதல் படுத்தும் சத்திய வசனம் நம்முடைய நினைவுக்கு வராது. நம்முடைய மனதில் பயமே பிரதானமாக இருக்கும். மகதலேனா மரியாளும் கலக்கத்துடன் இருப்பதினால் கர்த்தருடைய வார்த்தையை நினைவுகூராமலிருக்கிறாள்.

## அதிகாரம் - 20

அவள் சீஷரிடத்தில் வந்து, கர்த்தரைக் கல்லறையிலிருந்து எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள் என்று கூறுகிறாள். அவளுடைய உள்ளத்தில் பெரிய சந்தேகம் உண்டாயிற்று. கல்லறையில் இயேசுகிறிஸ்துவின் சரீரம் இல்லாமற்போனது அவளுடைய மனதைக் கலக்கிற்று. இயேசுகிறிஸ்துவின் வார்த்தை அவளுடைய நினைவுக்கு வந்திருக்குமானால், கல்லறையில் இயேசுவின் சரீரம் இல்லாமல் போனதைப்பார்த்து, மிகுந்த சந்தோஷமடைந்திருப்பாள். இயேசுகிறிஸ்து சொன்ன பிரகாரமாய் அவர் உயிர்த்தெழுந்துவிட்டார் என்னும் நிச்சயம் அவளுக்குள் உண்டாயிருக்கும்.

மகதலேனா மரியாளைப்போலத்தான், இக்காலத்தில் ஒரு சிலர் விசுவாசத்தில் பலவீனராகயிருந்து, எப்பொழுதும் புலம்பிக்கொண்டிருக்கிறார்கள். தங்களுக்குச் சந்தோஷத்தையும் சமாதானத்தையும் உண்டாக்குகிற சம்பவங்கள்கூட, பலவீனமான விசுவாசிகளுக்குத் துக்கத்தையும் குழப்பத்தையும் உண்டாக்குகிற சம்பவங்களாகத் தெரியும். நம்முடைய உள்ளத்தில் தெளிந்த சிந்தனையும், ஆழமான விசுவாசமும் வேண்டுமென்று நமக்காக கர்த்தரிடம் விசேஷமாக ஜெபிக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்துவைக் கல்லறையில் காணவில்லை என்பதினால் மகதலேனா மரியாளுக்கு மிகுந்த கலக்கமாகவும் துக்கமாகவும் இருக்கிறது. இந்தத் துக்கத்தை இவள் மாத்திரம் தனியாகச் சுமக்காமல், இயேசுகிறிஸ்துவின் சீஷர்களிடம் பகிர்ந்துகொள்கிறாள். பரிசுத்தவான்கள் தங்களுடைய துக்கங்களையும் கவலைகளையும் மற்ற பரிசுத்தவான்களோடு பகிர்ந்துகொள்ளவேண்டும். அப்போதுதான் இந்தப் பிரபஞ்சத்தில் நம்முடைய துக்கம் குறையும்.

சீமோன்பேதுரு இயேசுகிறிஸ்துவைத் தனக்குத் தெரியாது என்று மூன்றுமுறை மறுதலித்துவிட்டான். அதன்பின்பும் அவன் இயேசுகிறிஸ்துவின் சீஷருடைய ஐக்கியத்தை விட்டுவிலகிப்போய்விடவில்லை. அவர்களோடு சேர்ந்துகொள்கிறான். இயேசுகிறிஸ்து தன்னைப்பார்த்தபோது, தான் அவரை மறுதலித்ததற்காக பேதுரு மனங்கசந்து அழுதான். அவனுடைய மனமாற்றம் மெய்யாயிருக்கிறது. ஆகையினால்தான் மனம் திரும்புதலின் கனியாக, மற்ற சீஷரோடு ஐக்கியமாகயிருக்கிறான். மற்ற சீஷர்களும் பேதுருவிடம் இதற்கு முன்பு அன்புகூர்ந்ததுபோலவே, இப்போதும் அன்புகூர்ந்து, அவனைத் தங்களிடமாகச் சேர்த்துக்கொள்கிறார்கள். நாமும் விசுவாசத்தில் பலவீனமானவர்களை வெறுத்து ஒதுக்கிவிடாமல், அவர்களையும் நம்முடைய ஐக்கியத்தில் சேர்த்துக்கொள்ளவேண்டும். விழுந்துபோன ஒருவரை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே அன்போடு சேர்த்துக்கொள்ளும்போது, அந்த நபரை ஒதுக்கி வைப்பதற்கும், விலக்கி வைப்பதற்கும் நமக்கு அதிகாரமில்லை.

**மற்ற சீஷன் துரிதமாய் ஓடி**

**அப்பொழுது பேதுருவும் மற்றச் சீஷனும் கல்லறையினிடத்திற்குப் போகும்படி புறப்பட்டு, இருவரும் ஒருமித்து ஓடினார்கள். பேதுருவைப்பார்க்கிலும் மற்றச் சீஷன் துரிதமாய் ஓடி, முந்திக் கல்லறையினிடத்தில் வந்து, (யோவா 20:3,4)**

மகதலேனா மரியாள் இயேசுகிறிஸ்துவின் சரீரத்தைப்பற்றிச் சொன்ன செய்தியைக்கேட்டு, பேதுருவும் யோவானும் கல்லறையினிடத்திற்கு வேகமாய் ஓடுகிறார்கள். மகதலேனா மரியாள் தான் கல்லறையில் பார்த்த சங்கதிகளெல்லா வற்றையும் பதினொருவருக்கும் மற்றெல்லாருக்கும் அறிவித்தாள் (லூக் 24:9). ஆனாலும் பேதுருவையும் யோவானையும் தவிர வேறு யாரும் இயேசுகிறிஸ்துவை வைத்த கல்லறைக்குப் போகத் துணியவில்லை. இயேசுகிறிஸ்து தம்முடைய ஊழியக்காலத்தில் இவ்விரண்டு சீஷர்மீது விசேஷித்த அன்பு காண்பித்தார். மற்றவர்களைவிட இவர்கள் இருவருக்கும் அதிக சிலாக்கியம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால் இவ்விரண்டு சீஷர்களும் மற்ற சீஷர்களைவிட இயேசுகிறிஸ்துவுக்காகப் பாடுகளையும் வேதனைகளையும் தாங்கிக்கொள்ள ஆயத்தமாகயிருக்கிறார்கள். மற்ற சீஷர்களைவிட இவர்கள் விரைந்து செயல்படுகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் சரீரத்தைப்பற்றி மரியாள் சீஷருக்குச் சொன்னாலும், இவ்விரண்டு சீஷர்களும் அவள் சொன்ன செய்தியைத் தங்கள் கண்களால் கண்டு, அதை உறுதிபண்ணிக்கொள்ளவேண்டும் என்று விரும்புகிறார்கள். சுவிசேஷத்தின் ஆறுதலையும் ஆசீர்வாதத்தையும் மற்றவர்கள் நமக்கு அறிவித்தாலும், நாம் அவற்றை அனுபவிக்கவேண்டும். அதுதான் நமக்கு ஆசீர்வாதம். கர்த்தர் நல்லவரென்பதை நாமே ருசித்துப்பார்த்து அறிந்துகொள்ள வேண்டும். அதுதான் நமக்கு மேன்மையான சிலாக்கியம்.

## அதிகாரம் - 20

நம்முடைய ஆவிக்குரிய சிநேகிதர்களிடத்தில் நாம் ஐக்கியமாயிருக்கவேண்டும். நம்முடைய பயங்களையும் கவலைகளையும் அவர்களிடத்தில் பகிர்ந்துசொல்ல வெட்கப்படக்கூடாது. மகதலேனாள் என்னப்பட்ட மரியாள் தன்னுடைய கவலைகளை இயேசுவின் சீஷரிடத்தில் சொல்லுகிறாள். பேதுருவும் யோவானும் உடனே கல்லறையினிடத்திற்குப் போகும்படி ஓடுகிறார்கள். நன்மை செய்வதற்கு நாம் சோம்பேறியைப்போல நடக்கக்கூடாது. வேகமாக ஓடவேண்டும். ஊழியத்தில் நிதானம் இருக்கவேண்டும். அதேவேளையில் வேகமும் இருக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்துவின் சரீரத்தைப்பற்றிய செய்தியைக் கேட்டவுடன் பேதுருவும் யோவானும் அந்தச் செய்தியைப்பற்றி யாரிடமும் கலந்து பேசவில்லை. யாரிடமும் விவாதம்பண்ணவில்லை. தங்களால் கல்லறைக்குப் போகமுடியுமா என்று யோசித்துப் பார்க்கவில்லை. செய்தியைக் கேட்டவுடன் இவர்கள் இருவரும் கல்லறையினிடத்திற்கு ஒருமித்து ஓடுகிறார்கள்.

ஒரு நல்ல காரியம் செய்யும்போது நாம் நல்லவரோடு சேர்ந்து கொள்வது மிகவும் நன்மையாக இருக்கும். இயேசுகிறிஸ்துவின் சீஷர்களுக்கு அவருடைய சரீரத்தைப்பற்றிய செய்தி அறிவிக்கப்பட்டவுடன், அவர்களுக்குள் கருத்து வேறுபாடு உண்டாகவில்லை. அதைப்பற்றி விவாதம்பண்ணவில்லை. இரண்டு சீஷர்களும் கல்லறையினிடத்திற்கு ஒருமித்து ஓடுகிறார்கள். பேதுருவைப் பார்க்கிலும் யோவான் துரிதமாய் ஓடி முந்தி கல்லறையினிடத்தில் வருகிறான்.

கர்த்தருடைய ஊழியத்தைச் செய்யும்போது நாம் துரிதமாய் செயல்படவேண்டும். அதே வேளையில் நம்மைவிட துரிதமாய் ஊழியம் செய்கிறவர்களைப் பார்த்து நாம் பொறாமைப்படவும் கூடாது.

ஒரு சிலருடைய ஊழியம் அதிக கனியைத் தரும். ஒருவேளை நம்முடைய ஊழியம் கொஞ்சம் கனியைத்தரலாம். இதற்காக சோர்ந்துபோய்விடக்கூடாது. ஊழியத்தையோ, விசுவாச ஓட்டத்தையோ விட்டு விலகிப்போய்விடக்கூடாது. தொடர்ந்து ஊழியம் செய்யவேண்டும். நமக்குப் பின்னாக மெதுவாக ஓடி வருகிறவர்களை நாம் அசட்டைபண்ணவும் கூடாது. அவர்களும் நம்மோடுகூட ஒருமித்து ஓடிவருகிறவர்கள் என்னும் எண்ணமே நமக்குள் காணப்படவேண்டும்.

பேதுருவும் யோவானும் இயேசுகிறிஸ்துவின் கல்லறையினிடத்திற்குப் போகும்படி புறப்பட்டு, இருவரும் ஒருமித்து ஓடுகிறார்கள். பேதுருவைப் பார்க்கிலும் யோவான் துரிதமாய் ஓடி முந்தி கல்லறையினிடத்திற்கு வருகிறான். இதைப்பார்த்து பேதுரு யோவான்மீது பொறாமைப்படவில்லை. யோவானும் தான் முந்தி கல்லறையினிடத்திற்கு வந்ததற்காகப் பெருமைப்படவில்லை.

இயேசுகிறிஸ்துவின் அன்பு நம்முடைய இருதயத்தில் பொங்கி வழியவேண்டும். அவருடைய ஊழியத்தைச் செய்யுமாறு அவருடைய தெய்வீக அன்பே நம்மை இயக்கவேண்டும். பயபக்தியினாலும் அன்பினாலும் செய்கிற காரியம் தேவகிருபையினால் வாய்க்கும்.

பிந்தி ஓடிவருகிற பேதுரு இயேசுகிறிஸ்துவை ஏற்கெனவே மூன்றுமுறை மறுதலித்தவன். அவனுடைய உள்ளத்தில் இயேசுவை மறுதலித்ததற்காக வருத்தமும் வெட்கமும் நிரம்பியிருக்கலாம். அவனுடைய மனச்சாட்சி அவனைக் குத்தலாம். இந்தப் பிரச்சனையினால் பேதுருவால் ஒருவேளை யோவானோடுகூட வேகமாக ஓடமுடியாமல் போயிருக்கலாம். நம்முடைய மனச்சாட்சியும் சுத்தமாகயிராமல், குற்றமுள்ளதாகயிருக்கு மென்றால், ஆவிக்குரிய யுத்தத்தில் நம்மால் ஆர்வத்தோடு ஈடுபட முடியாது.

### குனிந்து பார்த்து

**அதற்குள்ளே குனிந்துபார்த்து, சீலைகள் கிடக்கிறதைக் கண்டான்; ஆனாலும் அவன் உள்ளே போகவில்லை (யோவா 20:5).**

## அதிகாரம் - 20

பேதுருவும் யோவானும் கல்லறையினிடத்திற்கு வருகிறார்கள். மகதலேனா மரியாள் செய்ததைப்போலவே, யோவானும் கல்லறையினிடத்திற்கு வருகிறான். கல்லறைக்குள் எட்டிப்பார்க்கவேண்டும் என்னும் ஆர்வம் யோவானுக்குள் உண்டாயிற்று. கல்லறைக்குள் இயேசுகிறிஸ்துவின் சரீரத்தைக் காணவில்லை. கல்லறை வெறுமையாயிருக்கிறதைக் காண்கிறான். கல்லறைக்குள்ளே குனிந்து பார்க்கிறான். இயேசுகிறிஸ்துவைப்பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்றால், நாமும் நம்மைத் தாழ்த்தி அவருடைய சமுகத்திற்கு முன்பாக பணிந்து குனியவேண்டும். நம்முடைய மனக்கண்கள் தேவனுடைய சமுகத்திற்கு முன்பாக தாழ்மையோடு அவரை நோக்கிப்பார்க்கவேண்டும்.

யோவான் கல்லறைக்குள் குனிந்து பார்த்தாலும், அவன் அதற்குள்ளே போகவில்லை. கல்லறைக்குள்போக அவனுக்குள் தைரியமில்லை. இயேசுகிறிஸ்துவின்மீது யோவான் அதிக அன்பாகத்தான் இருக்கிறான். ஆனாலும் இயேசுகிறிஸ்துவுக்காகத் தைரியமாகச் செயல்பட முன்வரவில்லை. பல சமயங்களில் அன்பும் தைரியமும் இணைந்து செயல்படாது. அதிக அன்பு இருக்குமிடத்தில் தைரியமிருக்காது. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்மிடத்தில் அன்பும் தைரியமும் சேர்ந்திருப்பதே நமக்கு ஆசீர்வாதம்.

### கல்லறைக்குள்ளே பிரவேசித்து

**சீமோன்பேதுரு அவனுக்குப் பின்னே வந்து, கல்லறைக்குள்ளே பிரவேசித்து, சீலைகள் கிடக்கிறதையும், அவருடைய தலையில் சுற்றியிருந்த சீலை மற்றச் சீலைகளுடனே வைத்திராமல் தனியே ஒரு இடத்திலே சுருட்டி வைத்திருக்கிறதையும் கண்டான்.(யோவா 20:6,7)**

பேதுருவும் யோவானும் கல்லறையினிடத்திற்கு ஒருமித்து ஓடிவருகிறார்கள். பேதுருவைப் பார்க்கிலும் யோவான் துரிதமாய் ஓடி முந்திக் கல்லறையினிடத்திற்கு வருகிறான். கல்லறைக்குள் குனிந்து பார்க்கிறான். ஆனாலும் அவன் உள்ளே போகவில்லை. சீமோன் பேதுருவோ அவனுக்குப் பின்னே வந்தாலும், கல்லறைக்குள்ளே பிரவேசிக்கிறான். யோவானைவிட அதிக தைரியமாகச் செயல்படுகிறான். யோவான் கல்லறைக்குள் எட்டிப்பார்க்கும்போது மிகுந்த எச்சரிப்போடு பார்க்கிறான். பேதுருவோ ஒன்றுக்கும் கவலைப்படாமல், வந்த வேகத்தில் கல்லறைக்குள்ளே பிரவேசித்து விடுகிறான்.

யோவான் பேதுருவைவிட வேகமாக ஓடிவந்தாலும், பேதுரு யோவானைவிட தைரியமாகச் செயல்படுகிறான். தேவன் தம்முடைய வரத்தைத் தம்முடைய பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு அளவின் பிரகாரமாகத் தருகிறார். யோவானுக்குத் துரிதமாய் ஓடும் வரத்தையும், பேதுருவுக்கு கல்லறைக்குள் தைரியமாய்ப் பிரவேசிக்கும் வரத்தையும் கொடுக்கிறார். யோவானால் பேதுருவைவிட வேகமாக ஓடமுடிகிறது. பேதுருவால் யோவானைவிட தைரியமாகக் கல்லறைக்குள் பிரவேசிக்க முடிகிறது.

விசுவாசிகளில் சிலர் துரிதமாகச் செயல்படுவார்கள். இவர்கள் மெதுவாகச் செயல்படும் மற்ற விசுவாசிகளை உற்சாகப்படுத்தி, அவர்களும் துரிதமாகச் செயல்படுவதற்கு அவர்களுக்கு உதவிபுரியவேண்டும். ஒரு சில விசுவாசிகள் கர்த்தருக்காகத் தைரியமாக ஊழியம் செய்வார்கள். இப்படிப்பட்ட வரத்தை உடையவர்கள் ஊழியத்தின் பிரச்சனையான பகுதிகளில் முன்னின்று மற்றவர்களை உற்சாகப்படுத்த வேண்டும். திறப்பின் வாசலில் நிற்கிறவர்களுக்கு அதிக தைரியம் தேவை. இவர்கள் எப்பொழுதும் விழிப்புடன் இருக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்துவை வாஞ்சையாய்த் தேடுகிறவர்கள் தேவையில்லாத காரியங்களுக்காகத் தங்களுக்குள்ளே பயப்படக்கூடாது. வீண் கட்டுக்கதைகளையும் கற்பனைப் பிரச்சனைகளையும் எண்ணிப்பார்த்து, விசுவாசத்தில்சோர்ந்துபோய் மனபயத்தில் மூழ்கிவிடக்கூடாது. பேதுரு வேறு யாருடைய கல்லறைக்குள்ளும் பிரவேசிக்கவில்லை. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கல்லறைக்குள்ளேதான் பிரவேசித்தான். அங்கே நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் சரீரம்தான் வைக்கப்பட்டிருந்தது. கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக நாம் வரும்போது நமக்குள் பயபக்தி இருக்கவேண்டும். ஆனால் தேவையில்லாத பயம் இருக்கக்கூடாது.

## அதிகாரம் - 20

நம்முடைய ஆவிக்குரிய யுத்தத்தில் நாம் தோற்றுப்போவதில்லை. வெற்றி பெறுவதற்காகவே தேவன் நம்மை அழைத்திருக்கிறார். மரித்துப்போன ஒரு சரீரத்தைப்பார்த்து நாம் பயப்படக்கூடாது. கல்லறையில் தனியாக இருப்பதற்கும் நாம் பயப்படக்கூடாது. கல்லறை வழியாகத்தான் இயேசுகிறிஸ்துவிடம் சொல்லவேண்டுமென்றாலும், நாம் அந்த வழியாகவும் செல்ல ஆயத்தமாயிருக்கவேண்டும். இயேசுகிறிஸ்து எந்த வழியாகச் சென்று தம்முடைய மகிமைக்குள் பிரவேசித்தாரோ, நாமும் அந்த வழியாகவே சென்று நம்முடைய மகிமைக்குள் பிரவேசிக்கவேண்டும்.

பேதுரு கல்லறைக்குள்ளே பிரவேசித்தபோது அங்கு இயேசுகிறிஸ்துவின் சரீரத்தைக் காணவில்லை. சீலைகள் கிடக்கிறதையும், அவருடைய தலையில் சுற்றியிருந்த சீலை மற்றச் சீலைகளுடனே வைத்திராமல் தனியே ஒரு இடத்திலே சுருட்டி வைத்திருக்கிறதையும் கண்டான். இயேசுகிறிஸ்து கல்லறையைவிட்டுப் புறப்படும்போது தம்முடைய தலையில் சுற்றியிருந்த சீலையைத் தம்மோடு எடுத்துச்செல்லவில்லை. அவருடைய சரீரம் கல்லறையில் அடக்கம்பண்ணப்பட்டபோது, அது கல்லறையின் வஸ்திரத்தினால் சுற்றி அடக்கம்பண்ணப்பட்டது. ஆனால் அவர் உயிர்த்தெழுந்தபோதோ அவருக்கு கல்லறையின் வஸ்திரம் தேவைப்படவில்லை. உயிரோடிருக்கிறவருக்கு மரித்தோரின் வஸ்திரம் தேவையில்லை. இயேசுகிறிஸ்து மறுபடியும் மரிக்கப்போவதில்லை. ஆகையினால் அவருக்கு மரணவஸ்திரம் தேவையில்லை. தம்முடைய தலையிலே சுற்றியிருந்த சீலையை தனியே ஒரு இடத்திலே சுருட்டி வைத்துவிட்டு, இயேசுகிறிஸ்து கல்லறையைவிட்டு உயிரோடு போய்விட்டார்.

மரித்துப்போன லாசருவை இயேசுகிறிஸ்து உயிரோடு எழுப்பினார். அவன் கல்லறையிலிருந்து உயிரோடு எழும்பியபோது, தன்னைச் சுற்றியிருந்த சேலைகளோடு தான் எழும்பி வந்தான். கல்லறையின் வஸ்திரத்தோடு வெளியே வந்தான். உயிரோடு எழும்பி வந்த லாசரு மறுபடியும் தன் சரீரத்தில் மரிப்பான். ஆகையினால் அவனுக்கு கல்லறையின் வஸ்திரம் மறுபடியும் தேவைப்படும்.

நாம் பாவத்திற்கு மரித்து நீதிக்குப் பிழைக்கும்போது, நம்முடைய பாவமான வஸ்திரங்களையெல்லாம் தனியே சுருட்டி வைத்துவிடவேண்டும். நீதியின் வஸ்திரத்தைத் தரித்துக்கொள்ளவேண்டும். நீதிக்குப் பிழைத்திருக்கிற நாம் மறுபடியும் பாவத்திற்கு மரிக்கமாட்டோம். ஆகையினால் பாவமரண வஸ்திரம் நமக்குத் தேவைப்படாது என்னும் நிச்சயம் நமக்குள் காணப்படவேண்டும். பாவவஸ்திரங்களோடு நம்முடைய பழைய பாவசுபாவங்களையும் களைந்து வைத்துவிடவேண்டும்.

இயேசுகிறிஸ்து தம்முடைய தலையில் சுற்றியிருந்த சீலையை தனியே ஒரு இடத்தில் வைத்திருப்பதற்கு, வேதபண்டிதர்களில் சிலர் வியாக்கியானம் சொல்லுகிறார்கள். பரிசுத்தவான்களுக்கு அவர்களுடைய கல்லறை இளைப்பாறும் படுக்கையைப்போன்றது. இயேசுகிறிஸ்து தம்முடைய பரிசுத்தவான்களுக்காகத் தம்முடைய தலையில் சுற்றியிருந்த சீலையையே படுக்கையாக விரித்துவிட்டுப் போயிருக்கிறார். பரிசுத்தவான்களாகிய நமக்கு நம்முடைய கல்லறையில் படுக்கை ஆயத்தமாக விரிக்கப்பட்டிருக்கிறது. நாம் மறுபடியும் உயிர்த்தெழும் வரையிலும் அந்தப் படுக்கையில் படுத்திருந்துவிட்டு, உயிர்த்தெழுதலின்போது உயிரோடு எழும்புவோம்.

கல்லறையின் சீலைகள் ஒழுங்கும் கிரமமுமாக வைக்கப்பட்டிருக்கிறது. காவல் காக்கிறவர்கள் தூங்கும்போது, இயேசுகிறிஸ்துவின் சரீரத்தை யாராவது திருடிச்சென்றிருந்தால், கல்லறை அலங்கோலமாக இருந்திருக்கும். சீலைகள் ஒழுங்கும் கிரமமுமாகச் சுருட்டி வைக்கப்பட்டிருக்காது. இயேசுகிறிஸ்து மெய்யாகவே உயிர்த்தெழுந்ததினால், தாம் அடக்கம்பண்ணப்பட்ட கல்லறையில்கூட, தாம் செய்ய வேண்டிய வேலைகளை ஒழுங்கும் கிரமமுமாகச் செய்து முடித்துவிட்டு வெளியேறிப்போகிறார்.

பேதுரு கல்லறைக்குள் தைரியமாகப் பிரவேசிக்கிறான். அவனுடைய தைரியத்தைப் பார்த்து யோவானுக்கும் தைரியம் வருகிறது. யோவானும் கல்லறைக்குள் பிரவேசித்து, கண்டு விசுவாசிக்கிறான். இயேசுகிறிஸ்து மறுபடியும் உயிரோடு எழுந்திருக்கிறாரென்பதை விசுவாசிக்க ஆரம்பிக்கிறான். கண்டு கலங்குவதைவிட கண்டு விசுவாசிப்பது மிகவும் பிரயோஜனமாக இருக்கும்.

## அதிகாரம் - 20

**கண்டு விசுவாசித்தான்**

**முந்திக் கல்லறையினிடத்திற்கு வந்த மற்றச் சீஷனும் அப்பொழுது உள்ளே பிரவேசித்து, கண்டு விசுவாசித்தான். அவர் மரித்தோரிலிருந்து எழுந்திருக்க வேண்டும் என்ற வேதவாக்கியத்தை அவர்கள் இன்னும் அறியாதிருந்தார்கள் (யோவா 20:8,9).**

இயேசு கிறிஸ்துவின் கல்லறையினிடத்திற்கு பேதுருவும் யோவானும் ஓடிவருகிறார்கள். யோவான் முந்தியும், பேதுரு பிந்தியும் வருகிறார்கள். ஆயினும் பேதுருவே கல்லறைக்குள்ளே முதலாவதாகப் பிரவேசிக்கிறான். முந்தி வந்த யோவானோ கல்லறைக்கு வெளியிலேயே தயக்கத்தோடு நிற்கிறான். பேதுரு கல்லறைக்குள்ளே பிரவேசித்த பின்பு, கல்லறைக்குள் பிரவேசிக்கும் தைரியம் யோவானுக்கும் உண்டாயிற்று. பேதுருவைத் தொடர்ந்து யோவானும் கல்லறைக்குள் பிரவேசிக்கிறான். ஒருவேளை பேதுரு கல்லறைக்குள் பிரவேசித்திருக்கவில்லையென்றால், யோவானும் அதிலே பிரவேசித்திருப்பதற்கு வாய்ப்பில்லை.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் பெலத்தினால், கர்த்தருடைய ஊழியத்தை மற்றவர்களுக்கு முன்மாதிரியாக தைரியமாகச் செய்யவேண்டும். அப்போது மற்ற விசுவாசிகளும் நம்மைப் பார்த்து, கர்த்தருக்காக ஊழியம் செய்ய முன்வருவார்கள். ஒரு சிலர் விசுவாசத்தில் பலவீனமாக இருப்பார்கள். ஊழியம் செய்யப் பயப்படுவார்கள். தங்களுக்குப் பாடுகளும், வேதனைகளும், ஆபத்துக்களுமோ வருமோ என்று தயங்கிக்கொண்டிருப்பார்கள். மற்றவர்கள் ஊழியத்தைத் தைரியமாகச் செய்து முடிப்பதைப் பார்க்கும்போது, இவர்களுக்கும் தைரியமுண்டாகும்.

இயேசு கிறிஸ்துவின் கல்லறையினிடத்திற்கு பேதுருவும் யோவானும் ஒருமித்து ஓடுகிறார்கள். யோவான் பேதுருவைவிட வேகமாக ஓடுகிறான். யோவானின் வேகத்தைப்பார்த்து, மெதுவாக ஓடுகிற பேதுரு தன்னுடைய வேகத்தைக் கூட்டுகிறான். இப்போது பேதுரு கல்லறைக்குள் தைரியமாகப் பிரவேசிக்கிறான். அவனுடைய தைரியத்தைப்பார்த்து தயங்கி நிற்கிற யோவானும், தைரியமாக அதற்குள் பிரவேசிக்கிறான். கர்த்தருடைய பிள்ளைகள் இவர்களைப்போலவே ஒருவருக்கொருவர் உதவியாயிருந்து, ஒருவரிடத்திலொருவர் கற்றுக்கொள்ளவேண்டும். நமக்கு எல்லோரும் தேவையென்று நினைக்கவேண்டும். கற்றுக்கொடுக்கவும் ஆயத்தமாகயிருக்க வேண்டும். கற்றுக்கொள்ளவும் ஆயத்தமாகயிருக்கவேண்டும்.

இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்திருக்கிறார் என்னும் விசுவாசம் யோவானுக்குள்ளே முதலாவது உண்டாயிற்று. விசுவாசத்தில் யோவான் பேதுருவைவிட முந்தியிருக்கிறான். பேதுரு கண்டு ஆச்சரியப்படுகிறான் (லூக் 24:12). யோவானோ கண்டு விசுவாசிக்கிறான். ஆச்சரியப்படுவதைவிட, விசுவாசிப்பது மேன்மையானது. தேவனுடைய தெய்வீக சத்தியங்களை யோவான் விரைவாகப் புரிந்துகொள்கிறான். சில சமயங்களில் தயங்கி நிற்கிறவர்களிடத்தில்கூட, அதிக விசுவாசம் இருக்கும். அவசரப்பட்டு செயல்படுகிறவர்களைவிட, நிதானமாகச் செயல்படுகிறவர்கள் தேவனுக்குச் சிறப்பாக ஊழியம் செய்வார்கள்.

கல்லறைக்குள்ளே இயேசுகிறிஸ்துவின் சரீரம் இல்லை. அவர் உயிர்த்தெழுந்துவிட்டார். ஆனால் இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்து விட்டாரென்பதை சீஷர்களுடைய இருதயம் உடனே விசுவாசிக்கவில்லை. சீஷர்கள் விசுவாசத்தில் மந்தமாகயிருக்கிறார்கள். அவர்கள் வேதவாக்கியத்தை இன்னும் அறியாதிருப்பதே அவர்களுடைய விசுவாசம் மந்தமாயிருப்பதற்குக் காரணமாகும். இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவேண்டும் என்று வேதவாக்கியம் சொல்லுகிறது. ஆனால் சீஷர்களோ அந்த வேதவாக்கியத்தை இன்னும் அறியாதிருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் உலகம் முழுவதும் சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவேண்டும். இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த சம்பவம் சுவிசேஷத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது. இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்ததை அறியாதவர்களினால், அவர் உயிர்த்தெழுந்தார் என்னும் சத்தியத்தைப் பிரசங்கிக்க முடியாது. ஆரம்பத்தில் இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்ததை சீஷர்கள் அறியாதிருந்தாலும், அதன்பின்பு அந்தச் சத்தியத்தை அறிந்துகொள்கிறார்கள். தாம் உயிர்த்தெழுந்திருப்பதை இயேசுகிறிஸ்து தாமே அவர்களுக்குப் பிரத்தியட்சமாகக் காண்பித்து உறுதிபண்ணுகிறார்.

## அதிகாரம் - 20

சீஷர்கள் இயேசுகிறிஸ்துவையும் அவருடைய உபதேசத்தையும் விசுவாசிக்கிறார்கள். அவருடைய வார்த்தைகளையெல்லாம் விசுவாசிக்கிறார்கள். ஆனாலும் கல்லறையில் இயேசுகிறிஸ்துவின் சரீரம் இல்லாமல் போனது அவர்களுக்கு ஆச்சரியமாயிற்று. இதுவரையிலும் அவர்களுக்கு ஏற்பட்ட அனுபவத்தைவிட இந்த அனுபவம் புதிதாயிருக்கிறது. நிரூபிக்கப்படாத ஒரு சத்தியத்தை, பேதுருவும் யோவானும் ஆரம்பத்தில் விசுவாசிப்பதற்குத் தயங்குகிறார்கள். இந்தச் சத்தியம் உறுதிபண்ணப்பட்ட பின்போ, இவர்களும் மற்ற சீஷர்களும் இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த சத்தியத்தை மெய்யாய் நம்புகிறார்கள். இந்தச் சத்தியத்தைக் குறித்து மற்றவர்களுக்கு உறுதியாய் அறிக்கை செய்கிறார்கள்.

பேதுருவும் யோவானும் கண்ணியமுள்ளவர்களாகயிருக்கிறார்கள். இவர்கள் மற்றவர்களை வஞ்சிக்க விரும்பவில்லை. தங்களுக்கு உறுதியாகத் தெரியாத ஒரு சம்பவத்தை மற்றவர்களிடம் தெரிந்ததுபோல சொல்ல இவர்கள் விரும்பவில்லை. மிகவும் எச்சரிக்கையோடிருக்கிறார்கள். உறுதிபண்ணப்படாத ஒரு சம்பவத்தைச் சத்தியமென்று நம்புவதற்கு இவர்கள் ஆயத்தமாகயில்லை.

இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்திருக்கிறாரென்பதை இவர்கள் விசுவாசியாமலிருப்பதற்கு மற்றும் ஒரு காரணமுமுள்ளது. அவர்கள் வேதவாக்கியத்தை அறியாதவர்களாகயிருக்கிறார்கள். வேதத்தை அறியாதவர்களினால் சத்தியத்தை அறிந்துகொள்ள முடியாது. இந்தச் சுவிசேஷத்தை எழுதிய யோவான், "தானும் சத்தியத்தை அறியவில்லை" என்பதை மனத்தாழ்மையோடு ஒப்புக்கொள்கிறான்.

**திரும்பிப்போனார்கள்**

**பின்பு அந்தச் சீஷர்கள் தங்களுடைய இடத்திற்குத் திரும்பிப்போனார்கள் (யோவா 20:10).**

கல்லறையினிடத்தில் பிரவேசித்த பேதுருவுக்கும் யோவானுக்கும் குழப்பமுண்டாயிற்று. அவர்களுடைய இருதயத்தில் விசுவாசமும் அவிசுவாசமும் கலந்திருக்கிறது. இரண்டிற்கும் நடுவில் அவர்களுடைய மனது அலைபாய்ந்து கொண்டிருக்கிறது. இவர்கள் இருவரும் இந்தச் சம்பவத்தைப்பற்றி மேலும் விவாதம்பண்ணாமல் திரும்பிப்போகிறார்கள். தாங்கள் எங்கிருந்து வந்தார்களோ அந்த இடத்திற்கே அவர்கள் திரும்பிப்போகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் சரீரத்தை அவருடைய சீஷர்கள் திருடிக்கொண்டு போய்விடுவார்களென்றும், இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்தாரென்று சீஷர்கள் பிரசங்கம்பண்ணுவார்களென்றும் பிரதான ஆசாரியரும் யூதமார்க்கத்துத் தலைவர்களும் பொய் பிரச்சாரம் பண்ணுகிறார்கள். பேதுருவும் யோவானும் இயேசுகிறிஸ்துவின் கல்லறையில் அதிக நேரம் இருந்தால், இவர்கள்தான் இயேசுவின் சரீரத்தைத் திருடிக்கொண்டு போய்விட்டார்கள் என்னும் சந்தேகம் உண்டாகும். தங்களால் பிரச்சனை வரக்கூடாது என்று நினைத்து, இவ்விரண்டு சீஷர்களும் அந்த இடத்தைவிட்டுத் தங்களுடைய இடத்திற்கு சீக்கிரமாகத் திரும்பிப்போயிருக்கலாம்.

இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு, அவருடைய சரீரம் அடக்கம்பண்ணப்பட்டிருக்கிற வேளை, அவருடைய சீஷருக்கு மிகவும் ஆபத்தான வேளையாகயிருக்கிறது. அவர்களுடைய உயிருக்கும் அச்சுறுத்துதல் உண்டாயிற்று. அவர்களோ பயந்துகொண்டு வீட்டின் அறைக்கதவைப் பூட்டி உள்ளே இருக்கிறார்கள். நல்லவர்கள்கூட ஆபத்தான வேளைகளில் செயலிழந்துபோவார்கள். என்ன செய்வது என்று அவர்களுக்குத் தெளிவாகத் தெரியாது. அவர்களைப் போலத்தான் சீஷர்களும் கலங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

பிரதான ஆசாரியர் தாங்கள் விரும்பிய பிரகாரமாகவே இயேசுகிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்து கொன்று போட்டார்கள். இதனால் தாங்கள் தோற்றுப்போய்விட்டோமோ என்னும் பயமும், வெட்கமும், அவமானமும் சீஷர்களுடைய உள்ளத்தில் உண்டாயிற்று. தோற்றதினால் உண்டான பயம் அவர்களை நிரப்பினதினால், அடுத்து என்ன செய்வது என்று அவர்கள் அறியாதிருக்கிறார்கள். தோல்வியுற்ற காயம் சீஷர்களின் இருதயத்தை வேதனைப்படுத்துகிறது. இன்னும் பலவீனமாகயிருக்கிறார்கள். தாங்கள் கல்லறையினிடத்தில் கண்டதை எப்படிச் சொல்வது என்று கூட தெரியாமல் குழப்பத்திலிருக்கிறார்கள்.

## அதிகாரம் - 20

பேதுருவும் யோவானும் ஒரு வேளை மற்ற சீஷர்களிடத்தில் திரும்பிப்போயிருக்கவேண்டும். தாங்கள் கல்லறையில் கண்டதை அவர்களிடத்தில் சொல்லுவதற்காகப் போயிருக்கலாம். பேதுருவும் யோவானும் கல்லறைக்கு வருவதற்கு முன்பாகவே, ஒரு தூதன் கல்லறையை அடைத்திருந்த கல்லை எடுத்துப்போட்டிருக்கிறான். கல்லறையை காவல்காத்த சேவகர்கள் அதைப்பார்த்துப் பயந்துபோயிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் சரீரத்தைப் பார்க்க வந்த ஸ்திரீகளை அந்த தூதன் ஆறுதல்படுத்தியிருக்கிறான். பேதுருவும் யோவானும் கல்லறையைவிட்டுப் புறப்பட்டுப்போனபின்பு மகதலேனா மரியாள் அங்கு இரண்டு தூதரைக் காண்கிறாள். ஆனால் பேதுருவும் யோவானும் கல்லறைக்கு வந்து, அதற்குள்ளே பிரவேசித்த போதோ, அவர்கள் அங்கு ஒருவரையும் காணவில்லை.

தேவதூதர்கள் தங்களுடைய விருப்பத்தின் பிரகாரமாக வருவார்கள். போவார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கட்டளையின் பிரகாரம் செயல்படுவார்கள். பல சமயங்களில் தேவதூதர்களைப் பிரத்தியட்சமாகக் காணமுடியாது. அவர்கள் மறைவாகப் வருவார்கள். மறைவாகக் கிரியை செய்வார்கள். மறைவாகப் போய்விடுவார்கள். இயேசுகிறிஸ்துவை நாம் கருத்தாய் தேடும்போது, அவரைப்பற்றிய வெளிப்பாடு நமக்குக் கொடுக்கப்படும். கர்த்தருடைய சமுகத்தில் தொடர்ந்து தரித்திருக்கும்போது நாம் தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வோம். கர்த்தருடைய சமுகத்தில் முந்தி வருகிறவர்களுக்கு எப்போதுமே மேன்மையான ஆசீர்வாதங்கள் காத்திருக்கும். கர்த்தரைத் தேடுவதில் நாம் சோம்பேறிகளாக இருந்தால், அவரை நம்மால் கண்டுபிடிக்கமுடியாது. கர்த்தர் தம்மை நமக்கு வெளிப்படுத்தினாலும், அவரைக் காணக்கூடாதவாறு நம்முடைய கண்கள் சோர்ந்துபோயிருக்கும்.

### மரியாளும் இரண்டு தேவதூதரும்
### யோவா 20 : 11-13

**யோவா 20:11. மரியாள் கல்லறையினருகே வெளியே நின்று அழுதுகொண்டிருந்தாள்; அப்படி அழுதுகொண்டிருக்கையில் அவள் குனிந்து கல்லறைக்குள்ளே பார்த்து,**

**யோவா 20:12. இயேசுவின் சரீரம் வைக்கப்பட்டிருந்த இடத்திலே வெள்ளுடை தரித்தவர்களாய் இரண்டு தூதர்கள், தலைமாட்டில் ஒருவனும் கால்மாட்டில் ஒருவனுமாக, உட்கார்ந்திருக்கிறதைக் கண்டாள்.**

**யோவா 20:13. அவர்கள் அவளை நோக்கி: ஸ்திரீயே, ஏன் அழுகிறாய் என்றார்கள். அதற்கு அவள்: என் ஆண்டவரை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள் அவரை வைத்த இடம் எனக்குத் தெரியவில்லை என்றாள்.**

**மரியாள்**

**மரியாள் கல்லறையினருகே வெளியே நின்று அழுதுகொண்டிருந்தாள்; அப்படி அழுதுகொண்டிருக்கையில் அவள் குனிந்து கல்லறைக்குள்ளே பார்த்து, (யோவா 20:11)**

மகதலேனா மரியாள் இயேசுகிறிஸ்துவினிடத்தில் மெய்யான அன்பு வைத்திருக்கிறாள். தன்னுடைய இருதயத்தின் ஆழத்திலிருந்து, இயேசுகிறிஸ்துவைத் தேடிக்கொண்டிருக்கிறாள். பயபக்தியாகவும் இடைவிடாமலும் தேடுகிறாள். பேதுருவும் யோவானும் கல்லறைக்கு வந்து, கல்லறைக்குள் பிரவேசித்துவிட்டு, அங்கு ஒருவரையும் காணாமல், திரும்பிப்போனபின்பும், மகதலேனா மரியாள் கல்லறையினிடத்திலேயே இருக்கிறாள். ஏனெனில் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சரீரத்தை இந்தக் கல்லறையில்தான் அடக்கம் பண்ணியிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து எங்கேயிருக்கிறாரோ அங்கு இருக்கவேண்டுமென்று மகதலேனா மரியாள் விரும்புகிறாள்.

இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையில் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்துவிட்டார். அவருடைய சரீரம் இந்தக் கல்லறையில் அடக்கம்பண்ணப் பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்து மரித்துப்போனாலும், மகதலேனா மரியாளுக்கு இயேசுவின்மீதுள்ள அன்பு சிறிதும் குறையவில்லை. அவர் அடக்கம்பண்ணப்பட்டிருக்கும் கல்லறைக்கு அருகே நின்றுகொண்டு கண்ணீர் வடிக்கிறாள். இயேசுகிறிஸ்து இருக்கும் இடத்தில்தான் தனக்கு ஆறுதல் உண்டு என்னும் நிச்சயத்தோடு இங்கு நின்றுகொண்டிருக்கிறாள். மெய்யாகவே மகதலேனா மரியாள் இயேசுகிறிஸ்துவின்மீது வைத்திருக்கும் அன்பு பெரிது.

## அதிகாரம் - 20

மரியாள் கல்லறையினிடத்தில் இயேசு கிறிஸ்துவுக்காக அழுதுகொண்டிருக்கிறாள். அவள் விடுகிற கண்ணீர், அவள் இயேசுவின்மீது வைத்திருக்கும் அன்பைத் தெளிவாகவும் சத்தமாகவும் வெளிப்படுத்துகிறது. இயேசுகிறிஸ்து நம்மைவிட்டுப்போய்விட்டால் நமக்கு கண்ணீர் வரத்தான் செய்யும். இயேசு நம்மோடிருக்கும்போது நமக்குச் சந்தோஷமும், அவர் நம்மைவிட்டுப்போய்விடும்போது, நமக்கு துக்கமும் வருத்தமும் கண்ணீரும் உண்டாகும். இயேசுகிறிஸ்துவைத் தேடுகிறர்கள் கண்ணீரோடு தேடவேண்டும். அவர்கள் இயேசுவுக்காக அழவேண்டியதில்லை. ஆனால் தங்களுக்காக கண்ணீர்விட்டு அழுது தேடவேண்டும்.

மரியாள் கல்லறையின் அருகே வெளியே நின்று அழுதுகொண்டிருக்கிறாள். அப்படி அழுதுகொணடிருக்கையில் அவள் குனிந்து கல்லறைக்குள்ளே பார்க்கிறாள். நாம் ஒரு பொருளைத் தேடிப்பார்க்கும்போது, அது கிடைக்கவில்லையென்றால், நம்முடைய முயற்சியைக் கைவிட்டுவிடக்கூடாது. தொடர்ந்து தேடவேண்டும். எந்த இடத்தில் நாம் தேடுவதை நிறுத்தினோமோ, அந்த இடத்தில் நாம் மறுபடியும் தேட ஆரம்பிக்கவேண்டும். திரும்பத் திரும்பத் தேடவேண்டும். பெற்றுக்கொள்வோம் என்னும் நம்பிக்கையில் தேடவேண்டும். நாம் அழுவது, நாம் தேடுவதற்குத் தடையாக இருக்கக்கூடாது. கண்ணீர் வரும்போது செயலிழந்து போகக்கூடாது. கண்ணீர் வந்தாலும் கடமை செய்யவேண்டும். மரியாள் அழுதுகொண்டிருந்தாலும், அவள் அழுதுகொண்டிருக்கையில் குனிந்து கல்லறைக்குள்ளே மறுபடியும் பார்க்கிறாள்.

### இரண்டு தூதர்கள்

**இயேசுவின் சரீரம் வைக்கப்பட்டிருந்த இடத்திலே வெள்ளுடை தரித்தவர்களாய் இரண்டு தூதர்கள், தலைமாட்டில் ஒருவனும் கால்மாட்டில் ஒருவனுமாக, உட்கார்ந்திருக்கிறதைக் கண்டாள் (யோவா 20:12).**

மரியாள் குனிந்து கல்லறைக்குள்ளே பார்த்தபோது, இயேசுவின் சரீரம் வைக்கப்பட்டிருந்த இடத்திலே வெள்ளுடை தரித்தவர்களாய் இரண்டு தூதர்கள், தலைமாட்டில் ஒருவனும் கால்மாட்டில் ஒருவனுமாக, உட்கார்ந்திருக்கிறதைக் காண்கிறாள். இவர்கள் இருவரும் தூதர்கள். இவர்கள் பரலோகத்திலிருந்து ஒரு செய்தியோடு வந்திருக்கிறார்கள். இவர்கள் தேவகுமாரனை மகிமைப்படுத்துவதற்காக வந்திருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து பிறந்தபோது, தேவதூதர்கள் அவருடைய பிறப்பில் ஊழியம் செய்ததுபோல, இப்போது அவர் மரித்து உயிர்த்தெழுந்திருக்கிற போதும், அவருக்கு ஊழியம் செய்வதற்காக வந்திருக்கிறார்கள். பரிசுத்தவான்களை ஆறுதல் பண்ணுவதற்காகவும், இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்திருக்கிறார் என்பதை அறிவிப்பதற்காகவும், இயேசுகிறிஸ்துவை மறுபடியும் தரிசிப்பதற்கு அவர்களை ஆயத்தப்படுத்துவதற்காகவும் இவ்விரண்டு தூதர்களும் அங்கு வந்திருக்கிறார்கள்.

சில சமயங்களில் தேவதூதரின் திரள்கூட்டம் நம் நடுவே வரும். இயேசுகிறிஸ்து பிறந்தபோது, தேவசேனையின் திரள் தேவனைப்போற்றிப் புகழ்ந்தார்கள். ஆனால் இப்போதோ இரண்டு தூதர்கள் மாத்திரமே, இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறித்துச் சாட்சி சொல்லுவதற்காக வந்திருக்கிறார்கள். அவர்கள் இருவரும் வெள்ளுடை தரித்தவர்களாக உட்கார்ந்திருக்கிறார்கள். வெண்மை நிறம் தூய்மைக்கும் பரிசுத்தத்திற்கும் அடையாளமாகும். உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்கள் தேவதூதர்களைப்போல இருப்பார்கள். அவர்கள் வெள்ளுடை தரித்தவர்களாக இயேசுகிறிஸ்துவோடு கூட நடப்பார்கள்.

தூதர்கள் இருவரும் இயேசுகிறிஸ்துவின் கல்லறையில் உட்கார்ந்திருக்கிறார்கள். விசுவாசிகளாகிய நாம் கல்லறையைப் பார்த்துப் பயப்படக்கூடாது. இந்தச் சத்தியத்தை நமக்கு உணர்த்துவதற்காகவே, இரண்டு தூதர்களும் கல்லறையில் உட்கார்ந்திருக்கிறார்கள். நாம் பரலோகத்திற்குப் போகும் பாதையில் கல்லறையும் நியமிக்கப்பட்டிருக்கிறது. பரலோகத்திற்குப் போக ஆசைப்படுகிற நாம், கல்லறையின் வழியாகப் போவதற்குப் பயப்படவேண்டியதில்லை.

## அதிகாரம் - 20

தேவதூதர்கள் இப்போது இயேசுகிறிஸ்துவின் கல்லறையைக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் அங்கு வந்தவுடனேயே, கல்லறையைக் காவல்காத்துக் கொண்டிருந்த போர்ச்சேவகர்கள் பயந்து நடுங்கிவிடுகிறார்கள். கர்த்தருடைய பிரசன்னம் வரும்போது, அங்கு துன்மார்க்கருடைய ஆளுகை நீக்கப்படும். கர்த்தருடைய ஆளுகை ஸ்தாபிக்கப்படும். பிரதான ஆசாரியருடைய போர்ச்சேவகர்கள் நீக்கப்படுகிறார்கள். இப்போது அந்த இடத்தில் கர்த்தருடைய தூதர்கள் காவலுக்கு நியமிக்கப்படுகிறார்கள்.

இவ்விரண்டு தூதர்களும் ஒருவருக்கொருவர் எதிர்எதிராக, ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கிறவர்களாக உட்கார்ந்திருக்கிறார்கள். தலைமாட்டில் ஒரு தூதரும், கால்மாட்டில் ஒரு தூதருமாக உட்கார்ந்திருக்கிறார்கள். இவர்கள் இருவரும் இப்படி அமர்ந்திருப்பது, உடன்படிக்கைப் பெட்டியின்மீது இரண்டு கேருபின்கள் இருப்பதைப்போல இருக்கிறது. இரண்டு கேருபின்களும் ஒன்றையொன்று பார்த்துக்கொண்டு கிருபாசனத்திற்குமேல் நிற்கும்.

சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவின் சரீரம் அடக்கம்பண்ணப்பட்ட இடமும், கர்த்தருக்கு முக்கியமான இடமாகயிருக்கிறது. ஆகையினால்தான் கேருபின்களைப்போல இரண்டு தேவதூதர்கள் இங்கு உட்கார்ந்திருக்கிறார்கள். அந்த இடத்தை காவல்காப்பதற்குத் தூதர்களிடத்தில் சுடர்ஒளி பட்டயமில்லை. சுடர்ஒளி பட்டயம் தேவனுடைய பிரசன்னத்தில் நம்மை வரவிடாமல் தடைபண்ணும். இவர்கள் நம்மை விரட்டுகிற தேவதூதர்களல்ல. நம்மை வரவேற்கிற தேவதூதர்கள். இவர்களுடைய கையில் பட்டயமில்லை. இவர்களுடைய வாயில் நம்மை வரவேற்கும் வார்த்தை மாத்திரமே இருக்கிறது. நம்மை வழிநடத்தும் வார்த்தை இவர்களிடத்தில் இருக்கிறது. ஜீவப்பாதைக்கு நேராக இந்தத் தூதர்கள் இருவரும் நம்மை வழிநடத்துகிறார்கள்.

**ஸ்திரீயே ஏன் அழுகிறாய்**

**அவர்கள் அவளை நோக்கி: ஸ்திரீயே, ஏன் அழுகிறாய் என்றார்கள். அதற்கு அவள்: என் ஆண்டவரை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள் அவரை வைத்த இடம் எனக்குத் தெரியவில்லை என்றாள் (யோவா 20:13).**

தேவதூதர்கள் இருவரும் மிகுந்த அன்போடும் கரிசனையோடும் அழுது கொண்டிருக்கிற மகதலேனா மரியாளிடம் ஆறுதலாகப் பேசுகிறார்கள். அவர்கள் அவளை நோக்கி "ஸ்திரீயே ஏன் அழுகிறாய்" என்று கேட்கிறார்கள். ஒருவேளை மரியாள் அழுவதற்காக, அவளை கடிந்துகொள்ளும் வண்ணமாக இந்தத் தூதர்கள் இந்த வார்த்தையைப் பேசியிருக்கலாம். "சந்தோஷப்பட்டு களிகூருவதற்குப் பதிலாக, ஸ்திரீயே நீ ஏன் அழுகிறாய்" என்று பொருள்படும் வண்ணமாக தூதர்கள் பேசுகிறார்கள்.

துக்கத்தினால் நம்முடைய கண்ணீர் நீரோடைபோல ஓடலாம். ஆனாலும் ஜீவஊற்றாகிய இயேசுகிறிஸ்துவினிடத்தில் வரும்போது நம்முடைய துக்கத்தின் கண்ணீரெல்லாம் ஆனந்தக் கண்ணீராக மாறும். பரிசுத்தவான்கள் வருத்தப்படும்போது தேவதூதர்களும் அவர்களை கரிசனையோடு விசாரிக்கிறார்கள். மற்ற விசுவாசிகள் துயரப்படும்போது, நாம் அவர்களுக்கு ஆறுதல் சொல்லவேண்டும். மரியாளின் துக்கத்தைச் சந்தோஷமாக மாற்றவேண்டும் என்னும் நோக்கத்தில் தேவதூதர்கள் அவளிடத்தில் பேசுகிறார்கள்.

மகதலேனா மரியாள் அழுவதற்கு ஒரு காரணமுண்டு. தன் ஆண்டவரை எடுத்துக்கொண்டு போய்விட்டார்களென்றும், அவரை வைத்த இடம் தனக்குத் தெரியவில்லையென்றும் வருத்தப்பட்டு மரியாள் அழுதுகொண்டிருக்கிறாள். மரியாளின் விசுவாசம் பலவீனமாயிருக்கிறது. தேவையில்லாத காரியங்களை வீணாகக் கற்பனைபண்ணிக்கொண்டு மரியாள் வருத்தப்படுகிறாள். இவளைப்போலவே நாமும் பல சமயங்களில், சில காரியங்களை மனதிற்குள் கற்பனைபண்ணிக்கொண்டு, வருத்தப்படுவோம். நமக்கு ஆசீர்வாதமான காரியங்களைக்கூட, புரிந்துகொள்ள முடியாமல், அது நமக்கு வருத்தமான காரியம் என்று நினைத்து துக்கப்படுவோம். நம்முடைய விசுவாசம் பலவீனமாகயிருக்கும்போது, நன்மையும் நமக்குத் தீமையாகத் தெரியும். சந்தோஷமும் துக்கமாகத் தெரியும். உள்ளதை உள்ளபடி பார்க்கவேண்டுமென்றால் நம்முடைய விசுவாசம் பெலமுள்ளதாகயிருக்கவேண்டும்.

மகதலேனா மரியாள் இயேசுகிறிஸ்துவின்மீது உறுதியான அன்பு வைத்திருக்கிறாள். அவள் தேவதூதரை தரிசித்தபின்பும், இயேசுவைக் காணவேண்டும் என்னும் ஆவல் அவளுக்குள் குறையவில்லை. தன்னுடைய நோக்கத்தில் உறுதியாக இருக்கிறாள். தனக்கு எது தேவையோ அதை தேவதூதரிடம் கேட்கிறாள். அவளுடைய இருதயம் முழுவதும் இயேசுகிறிஸ்துவைப் பற்றிய நினைவே நிறைந்திருக்கிறது.

## அதிகாரம் - 20

"என் ஆண்டவரை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள்" என்று தேவதூதரிடம் சொல்லுகிறாள். தேவதூதரின் தரிசனமும், அவர்களுடைய பிரகாசமான முகமும் மகதலேனா மரியாளைப் பிரியப்படுத்தவில்லை. அது அவளுக்குப் போதுமானதாகயில்லை. இயேசுகிறிஸ்துவின் சரீரத்தைத் தரிசித்தால் மாத்திரமே மரியாளுக்குச் சந்தோஷம் உண்டாகும். தேவதூதரின் பிரகாசமான முகத்தைப் பார்ப்பதற்குப் பதிலாக, இயேசுகிறிஸ்துவின் மகிமையுள்ள முகத்தைப் பார்த்தால்தான் மரியாளுக்குச் சந்தோஷம் உண்டாகும். தான் தேவதூதரைத் தரிசித்ததைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்கிறாள். இயேசுகிறிஸ்துவைப்பற்றி அவர்களிடத்திலேயே விசாரிக்கிறாள்.

தேவதூதர்கள் மகதலேனா மரியாளிடத்தில் "ஸ்திரீயே ஏன் அழுகிறாய்" என்று கேட்கிறார்கள். தான் அழுவதற்கு காரணமுண்டு என்றும், தன்னுடைய ஆண்டவரை எடுத்துக்கொண்டு போய்விட்டதால் தான் அழுவதாகவும் மரியாள் தேவதூதரிடத்தில் கூறுகிறாள். நம்முடைய ஆத்துமாவில் இயேசுகிறிஸ்து வாசம்பண்ணும்போது நமக்கு மெய்யான சந்தோஷம் உண்டாகும். அவருடைய பிரசன்னம் நம்மைவிட்டு எடுத்துக்கொள்ளப்படும்போது, நமக்கு மிகுந்த வேதனை உண்டாகும். இருளில் நடப்பதுபோல நடப்போம். ஒன்றும் நமக்குத் தெளிவாக இராது. மிகுந்த குழப்பத்திலிருப்போம். இயேசுகிறிஸ்துவின் பிரசன்னத்தினால் மாத்திரமே நம்முடைய துக்கத்தைச் சந்தோஷமாக மாற்றமுடியும். மகதலேனா மரியாள் தன் அழுகையை நிறுத்தவேண்டுமென்றால், அவள் இயேசுவின் சரீரத்தை மறுபடியும் காணவேண்டும்.

### இயேசுவும் மகதலேனா மரியாளும் யோவா 20 : 14-18

**யோவா 20:14. இவைகளைச் சொல்லிப் பின்னாகத் திரும்பி, இயேசு நிற்கிறதைக் கண்டாள்; ஆனாலும் அவரை இயேசு என்று அறியாதிருந்தாள்.**

**யோவா 20:15. இயேசு அவளைப் பார்த்து: ஸ்திரீயே, ஏன் அழுகிறாய், யாரைத் தேடுகிறாய் என்றார். அவள், அவரைத் தோட்டக்காரனென்று எண்ணி: ஐயா, நீர் அவரை எ த்துக்கொண்டு போனதுண்டானால், அவரை வைத்த இடத்தை எனக்குச் சொல்லும், நான் போய் அவரை எடுத்துக்கொள்ளுவேன் என்றாள்.**

**யோவா 20:16. இயேசு அவளை நோக்கி: மரியாளே என்றார். அவள் திரும்பிப் பார்த்து: ரபூனி என்றாள்; அதற்குப் போதகரே என்று அர்த்தமாம்.**

**யோவா 20:17. இயேசு அவளை நோக்கி: என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை; நீ என் சகோதரரிடத்திற்குப் போய், நான் என் பிதாவினிடத்திற்கும், உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன் என்று அவர்களுக்குச் சொல்லு என்றார்.**

**யோவா 20:18. மகதலேனா மரியாள் போய், தான் கர்த்தரைக் கண்டதையும், அவர் தன்னுடனே சொன்னவைகளையும் சீஷருக்கு அறிவித்தாள்.**

### இயேசு என்று அறியாதிருந்தாள்

**இவைகளைச் சொல்லிப் பின்னாகத் திரும்பி, இயேசு நிற்கிறதைக் கண்டாள்; ஆனாலும் அவரை இயேசு என்று அறியாதிருந்தாள் (யோவா 20:14).**

மகதலேனா மரியாள் தேவதூதருடனே பேசிக்கொண்டிருக்கும்போது, இயேசுகிறிஸ்து தாமே அவளுக்குத் தரிசனங்கொடுக்கிறார். அந்த இடத்திற்கு இயேசுகிறிஸ்து தாமாகவே வந்து நிற்கிறார். இயேசுவை வைத்த இடம் தனக்குத் தெரியவில்லை என்று மரியாள் தேவதூதரிடம் சொல்லுகிறாள். ஆனால் இயேசுவோ மரியாளுக்குப் பின்னாக நின்றுகொண்டிருக்கிறார். மரியாளும் பின்னாகத் திரும்பி, இயேசுகிறிஸ்து நிற்கிறதைக் காண்கிறாள். ஆயினும் அவரை இயேசு என்று அறியாதிருக்கிறாள். நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்கு கர்த்தர் சமீபமாயிருப்பார் (சங் 34:18). ஆனால் இயேசுகிறிஸ்து தங்களுக்கு இவ்வளவு சமீபமாயிருப்பார் என்பதே அவர்களுக்குத் தெரியாது.

## அதிகாரம் - 20

இயேசுகிறிஸ்துவைத் தேடுகிறவர்கள் ஒருவேளை அவரைக் காணாமலிருக்கலாம். ஆனாலும் அவர் தங்களுக்கு மிகவும் அருகாமையிலிருக்கிறார் என்பதை அவர்கள் உணரவேண்டும். இயேசுகிறிஸ்துவைக் கருத்தோடு தேடுகிறவர்கள், அவர் இயேசுகிறிஸ்து இருக்கிற பக்கமாகத் திரும்பிப் பார்க்கவேண்டும். தங்களுடைய சொந்த வழியை விட்டு விலகி இயேசுவின் வழியில் திரும்பி வரவேண்டும். மரியாள் எதையோ பார்ப்பதற்காக பின்னாகத் திரும்புகிறாள். அவளுடைய உள்ளம் முழுவதிலும் இயேசுவைக் காணவேண்டும் என்னும் வாஞ்சையிருக்கிறது. இயேசுகிறிஸ்து அவளுடைய இருதய வாஞ்சையை அறிந்திருக்கிறார்.

தேவதூதர்களால் மரியாளின் கண்ணீரை மாத்திரமே பார்க்க முடிகிறது. ஆனால் இயேசுகிறிஸ்துவோ மரியாளின் கண்ணீரைப் பார்ப்பதோடு, அந்தக் கண்ணீர் புறப்பட்டுவரும் அவளுடைய இருதயத்தையும் பார்க்கிறார். கர்த்தரைத் தேடுகிற நமக்கு அவர் மிகவும் சமீபமாயிருக்கிறார். ஒருவேளை அவர் நமக்குச் சமீபமாயிருப்பதைக்கூட நாம் அறியாதவர்களாக, அவரை எங்கெல்லாமோ தேடிக்கொண்டிருப்போம். இயேசுகிறிஸ்து மரியாளுக்கு அருகில் நின்றுகொண்டிருந்தாலும், அவரை இயேசு என்று அவள் அறியாதிருக்கிறாள்.

**ஸ்திரீயே ஏன் அழுகிறாய்**

**இயேசு அவளைப் பார்த்து: ஸ்திரீயே, ஏன் அழுகிறாய், யாரைத் தேடுகிறாய் என்றார். அவள், அவரைத் தோட்டக்காரனென்று எண்ணி: ஐயா, நீர் அவரை எடுத்துக்கொண்டு போனதுண்டானால், அவரை வைத்த இடத்தை எனக்குச் சொல்லும், நான் போய் அவரை எடுத்துக்கொள்ளுவேன் என்றாள் (யோவா 20:15).**

இயேசுகிறிஸ்து மரியாளுக்கு அருகில் நின்று அவள் அழுகிறதைப் பார்க்கிறார். அவளிடத்தில் "ஸ்திரீயே ஏன் அழுகிறாய்" என்றும், "யாரைத் தேடுகிறாய்" என்றும் கேட்கிறார். இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு, அவர் பேசுகிற முதல் வாக்கியம் இந்த வாக்கியமாகத்தான் இருக்கவேண்டும். "ஸ்திரீயே ஏன் அழுகிறாய்" என்பதுதான் உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்து பேசுகிற முதலாவது வாக்கியம். நம்முடைய அழுகை அவருக்குத் தெரியும். நம்முடைய கண்ணீர் அவருக்கு மறைவானதல்ல. அவர் நம்மீது கரிசனையுள்ளவர். அவர் நம்மை விசாரிக்கிற கர்த்தர். ஆகையினால்தான் அவர் நம்மிடம் "ஏன் அழுகிறாய்" என்று அன்போடு கேட்கிறார்.

இயேசுகிறிஸ்து நம்மிடத்தில் கேட்கிற அடுத்த கேள்வி "யாரைத் தேடுகிறாய்" என்பதாகும். நம்மிடத்தில் என்ன இருக்கிறது என்பதையும், நாம் யாரைத் தேடுகிறோம் என்பதையும் நாம் புரிந்துகொள்ளவேண்டும். நம்மைப்பற்றிய எல்லா காரியங்களும் இயேசுகிறிஸ்துவுக்குத் தெரியும். நமக்கு நம்மைப்பற்றி தெரிந்தால்தான், நம்மால் விசுவாசத்தில் நிலைத்து நிற்கமுடியும். மரியாள் தம்மைத்தான் தேடுகிறாள் என்பது இயேசுவுக்குத் தெரியும். ஆனாலும் அதை அவள் புரிந்துகொள்ளவேண்டுமென்பதற்காக, இயேசுகிறிஸ்து அவளிடமே "ஸ்திரீயே யாரைத் தேடுகிறாய்" என்று கேட்கிறார்.

தம்மிடத்தில் பேசுகிறது இயேசுகிறிஸ்துதான் என்பது மகதலேனா மரியாளுக்குத் தெரியவில்லை. அவரைத் தோட்டக்காரரென்று எண்ணுகிறாள். அவரைத் தோட்டகாரரென்று எண்ணி, "ஐயா, நீர் அவரை எடுத்துக்கொண்டு போனதுண்டானால், அவரை வைத்த இடத்தை எனக்குச் சொல்லும். நான்போய் அவரை எடுத்துக்கொள்வேன்" என்று சொல்லுகிறாள்.

மரியாள் இயேசுகிறிஸ்துவைத் தேடுகிறாள். இயேசுகிறிஸ்துவும் அவளுக்கு அருகிலேயே நிற்கிறார். ஆயினும் அவர் இயேசுதான் என்று அறியாதிருக்கிறாள். இயேசுவைத் தோட்டக்காரரென்று நினைக்கிறாள். கலங்கிய இருதயமும் கலங்கிய ஆவியும் தெளிவாகச் சிந்திக்காது. நம்முடைய ஆவி கலக்கத்திலிருக்கும்போது அனைத்தும் மந்தாரமாகவும் இருளாகவும் இருக்கும். இயேசுகிறிஸ்துவின் மெய்யான சுபாவம் நமக்கு வெளிப்படாது. இயேசுகிறிஸ்துவையும் அவருடைய சுபாவத்தையும் தவறாகப் புரிந்துகொள்வோம்.

## அதிகாரம் - 20

மகதலேனா மரியாள் இயேசுவின்மீது உறுதியான அன்பு வைத்திருக்கிறாள். இயேசுகிறிஸ்துவைக் காணவேண்டும் என்று அவளுடைய இருதயம் வாஞ்சையோடிருக்கிறது. அவள் யாரைப் பார்த்தாலும் இயேசுவைப்பற்றித்தான் கேட்கிறாள். இயேசுகிறிஸ்துவைப் பற்றி மரியாள் பேசும்போது, அவள் அவருடைய பெயரைச் சொல்லவில்லை. "நீர் அவரை எடுத்துக்கொண்டு போனதுண்டானால்" என்றுதான் இயேசுவிடத்தில் கேட்கிறாள். ஒருவேளை தோட்டக்காரருக்கு இயேசுவைப்பற்றித் தெரியும் என்று நினைத்திருக்கலாம். தாம் இயேசுவின்மீது அக்கறையோடிருப்பதுபோல, தோட்டக்காரரும் அவர்மீது அக்கறையோடிருப்பார் என்று மரியாள் எதிர்பார்த்திருக்கலாம்.

இயேசுகிறிஸ்து வைத்த இடம் தெரிந்தால், அந்த இடத்திற்குத் தானே போய், அவரை எடுத்துக்கொள்வதாகச் சொல்லுகிறாள். தன்னால் இயேசுவின் சரீரத்தைச் சுமக்க முடியுமா என்று அவளுக்குத் தெரியவில்லை. அன்பு அவளுடைய கண்களை மூடுகிறது. அன்பு அதிகமாயிருக்கும்போது, தன்னால் செய்ய முடியாததைக் கூட, தன்னால் செய்யமுடியுமென்று சிந்திக்க வைக்கிறது. அன்பு இருக்கும்போது எதுவும் கஷ்டமாகயிருக்காது.

**மரியாளே**

**இயேசு அவளை நோக்கி: மரியாளே என்றார். அவள் திரும்பிப் பார்த்து: ரபூனி என்றாள்; அதற்குப் போதகரே என்று அர்த்தமாம் (யோவா 20:16).**

உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்து தம்மை மகதலேனா மரியாளுக்கு வெளிப்படுத்துகிறார். எந்தவிதமான சந்தேகமுமில்லாமல் அவள் தம்மை புரிந்துகொள்ளவேண்டுமென்று இயேசுகிறிஸ்து சித்தமுள்ளவராகயிருக்கிறார். இயேசுகிறிஸ்து அவளை நோக்கி "மரியாளே" என்று அழைக்கிறார்.

இயேசுகிறிஸ்துவின் வார்த்தையில் அன்பு மிகுந்திருக்கிறது. இயேசுவைத் தோட்டக்காரரென்று மரியாள் நினைத்தாள். இயேசு மரியாளிடம் "ஸ்திரீயே ஏன் அழுகிறாய்" என்று கேட்டபோது, அவருடைய பேச்சு ஒருவேளை தோட்டக்காரருடைய பேச்சைப்போல இருந்திருக்கவேண்டும். இப்போது இயேசுகிறிஸ்து தம்முடைய பேச்சை மாற்றிக்கொள்கிறார். அவர் தம்மைப்போலவே பேசுகிறார். ஆடுகள் மேய்ப்பனின் சத்தத்தை அறிந்துகொள்ளும் (யோவா 10:4). இயேசுகிறிஸ்து ஒரே ஒரு வார்த்தைதான் சொல்லுகிறார். "மரியாளே" என்று இயேசு சொன்னவுடனே அவளுடைய மனக்கண்கள் திறக்கப்படுகிறது. சீஷர்கள் கடலில் புயல்காற்றில் தத்தளித்தபோது, இயேசுகிறிஸ்து அவர்களிடத்தில் வந்து, "நான்தான்" என்று சொன்னார். சீஷர்கள் இயேசுவின் சத்தத்தை அறிந்துகொள்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து "மரியாளே" என்று சொன்னவுடனே, அந்த அன்பான வார்த்தை தன் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் வார்த்தைதான் என்பதை மரியாள் புரிந்துகொள்கிறாள். அவள் இயேசுவிடம் "ரபூனி" என்று சொல்லுகிறாள். இந்த வார்த்தைக்குப் "போதகரே" என்று அர்த்தமாம். மரியாள் இயேசுகிறிஸ்துவை, அவருடைய பெயரைச் சொல்லி அழைக்காமல், மிகவும் மரியாதையாக, "போதகரே" என்று அழைக்கிறாள். "ரபீ" என்னும் வார்த்தையைவிட, "ரபூனி" என்னும் வார்த்தை மிகவும் மரியாதைக்குரிய வார்த்தையாகும். தன்னுடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்கு அதிக மரியாதைக் கொடுக்கவேண்டுமென்பதற்காக, மரியாள் இயேசுவை "ரபூனி" என்று அழைக்கிறாள்.

மரியாளுக்கு இயேசுகிறிஸ்துவோடு முகம் முகமாக பேசுகிற சிலாக்கியம் கிடைத்திருக்கிறது. இந்தச் சிலாக்கியத்தை மரியாள் தவறாகப் பயன்படுத்தவில்லை. இந்தச் சிலாக்கியம் கிடைத்தாலும், இயேசுகிறிஸ்துவைத் தன்னுடைய போதகராகவே மரியாள் பார்க்கிறாள். இதுவரையிலும் தேவதூதரோடு பேசிக்கொண்டிருந்தவள், இப்போது இயேசுகிறிஸ்துவிடமாக திரும்பிப் பேசுகிறாள். இயேசுவுக்குக் கொடுக்கவேண்டிய மரியாதையை அவள் தேவதூதருக்குக் கொடுக்க விரும்பவில்லை.

## அதிகாரம் - 20

விசுவாசிகளாகிய நாமும் கர்த்தரிடத்தில் மாத்திரமே பக்தியாயிருக்கவேண்டும். தேவனுக்குக் கொடுக்கவேண்டிய துதி கன மகிமையை வேறு எந்த சிருஷ்டிக்கும் கொடுத்துவிடக்கூடாது. சிருஷ்டிகள் எவ்வளவு பிரகாசமாகவும், சாதுரியன்களப்பேசக் கூடியவர்களாகவும் இருந்தாலும், கர்த்தரே நம்முடைய துதிகளுக்குப் பாத்திரராக இருக்கவேண்டும். மரியாள் இயேசுகிறிஸ்துவைத் தோட்டக்காரரென்று நினைத்தபோது, அவளுடைய பார்வை வேறு பக்கமாக இருந்திருக்கவேண்டும். ஆனால் மரியாள் இயேசுவின் சத்தத்தைக் கேட்டபோதோ, அவள் இயேசுவின் பக்கமாகத் திரும்புகிறாள். நாமும் தேவனுடைய சத்தத்தைக் கேட்கவேண்டுமானால், அவர் பக்கமாகத் திரும்பவேண்டும். நம்முடைய பார்வை இப்பிரபஞ்சத்தின்மீது திரும்பியிருக்கும்போது, பரலோகத்திலிருந்து பேசும் தேவனுடைய சத்தத்தைத் தெளிவாகக் கேட்கமுடியாது.

**என்னைத் தொடாதே**

**இயேசு அவளை நோக்கி: என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை; நீ என் சகோதரரிடத்திற்குப் போய், நான் என் பிதாவினிடத்திற்கும், உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன் என்று அவர்களுக்குச் சொல்லு என்றார் (யோவா 20:17).**

இயேசுகிறிஸ்து மகதலேனா மரியாளை நோக்கி "என்னைத் தொடாதே" என்று கூறுகிறார். அதே வேளையில் தாம் உயிர்த்தெழுந்திருக்கும் செய்தியையும், பரமேறிப்போகப்போகும் செய்தியையும் தம்முடைய சீஷரிடத்தில் கூறுமாறு மரியாளுக்குக் கூறுகிறார்.

மகதலேனா மரியாள் இயேசுகிறிஸ்துவின்மீது அன்பாயிருக்கிறாள். இயேசுகிறிஸ்து இப்போது மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்து அவளுக்கு முன்பாக நிற்கிறார். தன்னுடைய சந்தோஷத்தை வெளிப்படுத்தும் விதமாக, மரியாள் இயேசுவைத் தொடவேண்டுமென்று அவருக்கு அருகில் வந்திருக்கலாம். ஆனால் இயேசுகிறிஸ்துவோ இந்த வேளையில் தம்மைத் தொடக்கூடாது என்று அவளைத் தடைபண்ணுகிறார். "என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை" என்று அவளிடத்தில் தெரிவிக்கிறார்.

யூதமார்க்கத்து வழக்கத்தின் பிரகாரம், மகதலேனா மரியாள் ஒருவேளை தன்னுடைய அன்பை வெளிப்படுத்தும் விதமாக, அவரைக் கட்டிப்பிடிக்க முயற்சிசெய்திருக்கலாம். ஆனால் இயேசுகிறிஸ்துவோ இந்த சமயத்தில் அதைத் தடைபண்ணிவிடுகிறார். தாம் இன்னும் தம்முடைய பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லையென்றும், ஆகையினால் தம்மைத் தொடக்கூடாது என்றும் மரியாளுக்குக் கூறுகிறார். அதேவேளையில் இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடத்தில், தம்மைத் தொட்டுப் பார்க்குமாறும் கூறுகிறார். அவர்களுடைய விசுவாசத்தை உறுதிபண்ணும்விதமாக அவர்களைத் தம்மைத் தொடுமாறு கூறுகிறார்.

மகதலேனா மரியாள் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கவேண்டும். அவரை ஆராதிக்கவேண்டும். அதேவேளையில் இயேசு தம்முடைய சரீரத்தில் பிரத்தியட்சமாக இருந்தபோது, மரியாள் அவரிடத்தில் எப்படி அந்நியோன்னியமாக இருந்தாளோ, அதைப்போல, அவர் உயிர்த்தெழுந்த பின்பும், அவரோடு அந்நியோன்னியமாக இருக்கவேண்டுமென்று எதிர்பார்க்கக்கூடாது. தம்முடைய சரீரப்பிரகாரமான பிரசன்னம் மகதலேனா மரியாளுக்கு இனிமேல் கொடுக்கப்படாது. ஆகையினால் அவள் அவருடைய சரீரப்பிரகாரமான பிரசன்னத்தில் விசுவாசம் வைப்பதற்குப் பதிலாக, அவருடைய ஆவிக்குரிய பிரசன்னத்தில் விசுவாசம் வைப்பதற்கு கற்றுக்கொள்ளவேண்டும். இயேசுகிறிஸ்து தம்முடைய பிதாவினிடத்திற்குப் பரமேறிப்போனபின்பு, மகதலேனா மரியாளால் இயேசுகிறிஸ்துவோடு ஆவிக்குரிய ஐக்கியம் மாத்திரமே வைத்திருக்க முடியும்.

"நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை; நீ என் சகோதரரிடத்திற்குப் போய், நான் என் பிதாவினிடத்திற்கும், உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன் என்று அவர்களுக்குச் சொல்லு" என்று இயேசுகிறிஸ்து மரியாளிடம் கூறுகிறார். இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையில் மரிப்பதற்கு முன்பாக, தம்மைப்பற்றிச் சொன்ன அதே சத்தியத்தை இப்போது மறுபடியும் உறுதிபண்ணுகிறார். கிறிஸ்துவின் சீஷர்கள் அவருடைய சரீரப்பிரகாரமான பிரசன்னத்தைவிட, ஒரு மேன்மையான பிரசன்னத்தை நாடவேண்டும். இப்போதுள்ள காரியங்களைவிட இன்னும் அதிக மேன்மையான காரியங்களை நாடவேண்டும்.

## அதிகாரம் - 20

இயேசுகிறிஸ்து மகதலேனா மரியாளிடம் "என்னைத் தொடாதே" என்று கூறுகிறார். தம்மிடத்தில் அவள் இன்னும் அதிகமான கேள்விகளைக் கேட்கக்கூடாது என்றும், தாம் இன்னும் தம்முடைய பிதாவினிடத்திற்கு ஏறிப்போகாதபடியினால், அவளுடைய சந்தோஷம் இன்னும் பூரணமடையமலேயே இருக்கும் என்றும் பொருள்படுமாறு பேசுகிறார்.

மகதலேனா மரியாள் இயேசுகிறிஸ்துவின் சரீரத்திற்கு ஊழியம் செய்வதற்குப் பதிலாக, அவர் அவளுக்கு வேறொரு ஊழியத்தைக் கொடுக்கிறார். அப்போஸ்தலருக்கு நற்செய்தி அறிவிக்கும் ஊழியம் மரியாளுக்கு கொடுக்கப்படுகிறது. தாம் மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்த நற்செய்தியையும், தாம் தம்முடைய பிதாவினிடத்திற்கு ஏறிப்போகப்போகிற நற்செய்தியையும் மகதலேனா மரியாள் இயேசுகிறிஸ்துவின் சீஷரிடத்தில் அறிவிக்கவேண்டும். மரியாள் சிறிதும் காலதாமதம் பண்ணாமல், இயேசுகிறிஸ்து சொன்ன செய்தியை விரைந்தோடிப்போய், அவருடைய சீஷரிடத்தில் அறிவிக்கவேண்டும். இந்த நாள் நற்செய்தியை அறிவிக்கும்நாள். ஆகையினால் மரியாள் இயேசுகிறிஸ்துவின் சமுகத்திற்கு முன்பாக விவாதம்பண்ணிக் கொண்டிருக்காமல், அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, உடனடியாக கிறிஸ்துவின் சீஷரிடத்தில் நற்செய்தியை அறிவிப்பதற்காகப் போகிறாள்.

தம்முடைய சீஷரிடத்தில் சொல்ல வேண்டிய நற்செய்தியையும் இயேசுகிறிஸ்து மரியாளிடத்தில் கூறுகிறார். "நீ என் சகோதரரிடத்திற்குப்போய், தேவனிடத்திற்கு ஏறிப்போகிறேன் என்று சொல்லு" என்பதே இயேசுகிறிஸ்து கூறுகிற நற்செய்தியாகும். இந்த நற்செய்தி இயேசுகிறிஸ்துவினுடைய சீஷர்களுக்கே முதன்முதலாவதாக அறிவிக்கப்படுகிறது. இயேசுகிறிஸ்து இப்போது தம்முடைய மகிமைக்குள் பிரவேசிக்கப்போகிறார். தம்முடைய சீஷரை, தம்முடைய சகோதரராகப் பாவிக்கிறார். இதற்கு முன்பு இயேசுகிறிஸ்து அவர்களை "சிநேகிதர்" என்று அழைத்தார். இப்போதோ அவர்களை "சகோதரர்" என்று அழைக்கிறார்.

இயேசுகிறிஸ்து தம்முடைய மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்து, தம்முடைய மகிமைக்குள் பிரவேசிக்கிறபோது, அவருக்குள் பெருமையில்லை. தாம் பரலோகத்திற்கு உயரே ஏறிப்போனாலும், இந்தப் பூமியிலுள்ள தம்முடைய சாதாரண சீஷர்களை அவர் மறந்துவிடவில்லை. அவர்களை கைவிட்டு ஒதுக்கிவிடவில்லை. தோட்டத்திலே இயேசுகிறிஸ்துவைக் கைதுபண்ணியபோது சீஷர்களெல்லோரும் அவரைவிட்டு ஓடிப்போய்விட்டார்கள். அதன்பின்பு இயேசு அவர்களெல்லோரையும் ஒரே இடத்தில் மொத்தமாக இதுவரையிலும் பார்த்ததில்லை. அவர்களுடைய பலவீனங்களையும், தப்பிதங்களையும் இயேசுகிறிஸ்து மன்னித்து மறந்துவிடுகிறார். அவர்களைப் பழிவாங்கவேண்டும் என்னும் எண்ணம் இயேசுகிறிஸ்துவிடம் சிறிதுமில்லை. தம்மைக் கைவிட்டுவிட்டு ஓடிவிட்டதற்காக, இயேசுகிறிஸ்து அவர்களைக் கைவிடவில்லை.

தம்மைப்பற்றிய நற்செய்தியை தம்முடைய சீஷருக்கு மகதலேனா மரியாள் மூலமாக சொல்லியனுப்புகிறார். இயேசுகிறிஸ்து இவளிடத்திலிருந்து ஏழு பிசாசுகளை ஏற்கெனவே துரத்தியிருக்கிறார். இயேசு தனக்குச்செய்த நன்மைகளை மரியாள் மறக்காமல் அவருக்கு ஊழியம் செய்ய வருகிறாள். அவரோடு கூடவே இருக்கிறாள். அவளுடைய அன்பை அங்கீகரிக்கும்விதமாக, தம்மைப்பற்றி நற்செய்தியை தம்முடைய சீஷருக்கு அறிவிக்கும் சிலாக்கியத்தை, இயேசுகிறிஸ்து மகதலேனாள் என்னப்பட்ட மரியாளுக்குக் கொடுக்கிறாள். இவள் அப்போஸ்தலர்களுக்கெல்லாம் அப்போஸ்தலராகயிருந்து, இயேசுகிறிஸ்துவின் நற்செய்தியை அப்போஸ்தலர்களுக்குச் சொல்லப்போகிறாள். "இயேசுகிறிஸ்து தம்முடைய பிதாவினிடத்திற்கு ஏறிப்போகிறார்" என்பதே இயேசுகிறிஸ்துவைப்பற்றிய நற்செய்தியாகும்.

பிதாவாகிய தேவனுக்கும், குமாரனாகிய இயேசுகிறிஸ்துவுக்கும் இருக்கிற ஐக்கியத்தைப்போலவே, நமக்கும் தேவனுக்கும் இடையே ஐக்கியம் உண்டாயிருக்கிறது. இந்த ஐக்கியம் நாம் இயேசுகிறிஸ்துவோடு ஐக்கியமாயிருப்பதினால் உண்டாயிற்று. இயேசுகிறிஸ்து தம்முடைய பிதாவாகிய தேவனைப்பற்றி இங்கு குறிப்பிடும்போது, "என் பிதாவினிடத்திற்கும், உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும், உங்கள் தேவனிடத்திற்கும்" என்று சொல்லுகிறார். இந்த ஐக்கியம் விசுவாசிகளுக்குக் கொடுக்கப்படும் சிலாக்கியமாகும். இயேசுகிறிஸ்துவின் பிதாவாகயிருக்கிறவர், கிறிஸ்துவில் விசுவாசிகளாக இருக்கிற, நம்முடைய பிதாவாகவும் இருக்கிறார். கிருபையுள்ள புத்திர சுவீகாரத்தின் மூலமாகப் பிதாவாகிய தேவனானவர் நம்முடைய பிதாவாகயிருக்கிறார்.

## அதிகாரம் - 20

இயேசுகிறிஸ்து பரலோகப் பிதாவை "அப்பா பிதாவே" என்று அழைக்கிறார். இயேசுகிறிஸ்துவின் மூலமாய், பிதாவாகிய தேவனை நாமும் "அப்பா பிதாவே" என்று அழைக்கும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். விசுவாசிகளாகிய நம்முடைய தேவனை, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய தேவனென்று சொல்லுகிறார். பிதாவானவரைப்பற்றிச் சொல்லும்போது, அவரை "என் தேவன்" என்றும், "உங்கள் தேவன்" என்றும் குறிப்பிடுகிறார். பிதாவாகிய தேவனானவர் மீட்பரின் தேவனாகயிருக்கிறார். தேவன் மீட்பருடைய மீட்பின் ஊழியத்தில் அவருக்கு ஆதரவாகயிருக்கிறார். இயேசுகிறிஸ்துவினுடைய மீட்பின் ஊழியத்தின் மூலமாக, மீட்கப்பட்டிருக்கிற நமக்கும், பிதாவானவர் தேவனாகயிருக்கிறார். அவர் நம்மை இரட்சிக்கிற தேவனாகயிருக்கிறார்.

இயேசுகிறிஸ்து பரலோகத்திற்கு ஏறிப்போவது அவருக்கு மிகுந்த ஆறுதலைத் தருகிறது. இயேசுகிறிஸ்து இன்னும் கொஞ்ச நேரத்தில் தேவனிடத்திற்கு ஏறிப்போகப்போகிறார் என்னும் நற்செய்தி அறிவிக்கப்படுகிறது. இந்தச் செய்தி சீஷர்களுக்கு எச்சரிப்பின் செய்தியாகவும் இருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் சரீரப்பிரகாரமான பிரசன்னத்தை, இந்தப் பிரபஞ்சத்தில், சீஷர்கள் நித்தியகாலமாக எதிர்பார்த்துக்கொண்டிருக்கக்கூடாது. இயேசுகிறிஸ்து தம்முடைய சரீரத்தில், தம்முடைய சீஷரோடு கூடயிராமல், இப்போது பரமேறி, பரலோகத்திலுள்ள தம்முடைய பிதாவினிடத்திற்குப் போகப்போகிறார்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியமும் இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்து பரமேறிப்போவதுபோலவே இருக்கிறது. நம்முடைய உலகப்பிரகாரமான ஜீவியத்தில் நாம் இப் பிரபஞ்சத்திற்குரியவர்களாகயிருந்தாலும், நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் பரலோகத்திற்குரியவர்களாயிருப்போம். ஆகையினால் இந்தப் பூமியானது நமக்கு நித்தியமான வாசஸ்தலமென்று நாம் நினைக்கக்கூடாது. நாம் பரலோகத்திலிருந்து மறுபடியும் பிறந்திருக்கிறவர்கள் பரலோகத்திற்கு ஏறிப்போகப்போகிறவர்கள்.

இயேசுகிறிஸ்து பரமேறிப்போவது, சீஷர்களுக்கு ஆறுதலின் செய்தியாக இருக்கிறது. அவர் பரமேறிப்போவதினால், அவர் பரலோகத்தின் காரியங்களைப்பார்க்கிறார். இயேசுகிறிஸ்து பரமேறினதுபோலவே, விசுவாசிகளாகிய நாமும் பரமேறிப்போவோம் என்னும் நம்பிக்கை நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால் நாமும் இந்தப் பிரபஞ்சத்திற்குரிய காரியங்களில் மாத்திரம் கவனம் செலுத்தாமல், பரலோகத்திற்குரிய காரியங்களையும் நோக்கிப் பார்க்கவேண்டும்.

இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கையின் மூலமாக சீஷர்களுக்கு அவரிடத்தில் விசுவாசம் உண்டாயிற்று. தங்களோடு கூடவே இருந்தவர், இப்போது பரமேறிப்போகிறார் என்று சீஷர்கள் விசுவாசிக்கிறார்கள். அவர் தம்முடைய பிதாவினிடத்திற்கும், நம்முடைய பிதாவினிடத்திற்கும் ஏறிப்போகிறார்.

இயேசுகிறிஸ்துவின் வார்த்தை ஜெயதொனியாகயிருக்கிறது. இயேசுகிறிஸ்துவை நேசிக்கிறவர்களெல்லோரும் இந்த வார்த்தையைக்கேட்டு ஆனந்த சந்தோஷமடைவார்கள். அவர் நமக்கு ஒரு ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணுவதற்காக, அவர் நமக்கு முன்பாகவே பரலோகத்திற்கு ஏறிப்போகிறார். நாம் பரலோகத்திற்கு ஏறிப்போகும்போது, அங்கு நம்மை வரவேற்பதற்காக, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமக்கு முன்பாகவே பரலோகத்திற்கு ஏறிப்போகிறார்.

இயேசுகிறிஸ்து "என் தேவனிடத்திற்கும், உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன்" என்று சொன்ன வாக்கியத்தில், நம்முடைய உயிர்த்தெழுதலின் வாக்குத்தத்தமும் இருப்பதாக வேதபண்டிதர்கள் வியாக்கியானம் சொல்லுகிறார்கள். ஏனெனில் இயேசுகிறிஸ்து ஜீவனுள்ளவராக இருக்கிறதுபோல, அவரை விசுவாசிக்கிறவர்களாகிய நாமும் ஜீவனுள்ளவர்களாயிருப்போம்.

**சீஷருக்கு அறிவித்தாள்**

**மகதலேனா மரியாள் போய், தான் கர்த்தரைக் கண்டதையும், அவர் தன்னுடனே சொன்னவைகளையும் சீஷருக்கு அறிவித்தாள் (யோவா 20:18).**

## அதிகாரம் - 20

மகதலேனா மரியாள் இயேசுகிறிஸ்துவுக்கு உண்மையுள்ள ஊழியக்காரியாக இருக்கிறாள். இயேசுகிறிஸ்து சொன்னபிரகாரமாகவே, அவர் சொன்ன செய்தியை அறிவிக்க சீஷர்களிடத்தில் உடனடியாகப் புறப்பட்டுப்போகிறாள். தான் கர்த்தரைக் கண்டதையும், அவர் தன்னுடனே சொன்னவைகளையும் மரியாள் சீஷருக்கு அறிவிக்கிறாள். மதகலேனா மரியாள் ஏற்கெனவே கர்த்தரைக் கல்லறையிலிருந்து எடுத்துக் கொண்டுபோய்விட்டார்களென்றும், அவரை வைத்த இடம் எங்களுக்குத் தெரியவில்லையென்றும் சீமோன் பேதுருவிடத்திலும், யோவானிடத்திலும் மற்ற சீஷரிடத்திலும் சொன்னாள். அதைக் கேட்டவுடனே, பேதுருவும் யோவானும் அவளை அங்கே விட்டுவிட்டு கண்ணீரோடு இயேசுகிறிஸ்துவின் கல்லறைக்கு ஓடினார்கள். மரியாளும் அங்கு போனாள். மகதலேனா மரியாளோ அங்கு இயேசுவைக் கண்டாள். ஆனால் இவ்விரண்டு சீஷர்களுமோ இயேசுவை அங்கு காணவில்லை. அவரைக் காணும் வரையிலும் பொறுமையோடு காத்திருக்கவில்லை.

மகதலேனா மரியாள் இயேசுகிறிஸ்துவைத் தேடினாள். தேடினவள் கண்டுகொண்டாள். மரியாள் இயேசுகிறிஸ்துவை ஜீவனுள்ள சரீரத்தில் கண்டாள். அந்தச் சரீரம் மகிமையுள்ளதாகயிருக்கிறது. இயேசுகிறிஸ்துவைக் கண்ட சந்தோஷம் அவளுடைய இருதயத்தில் நிரம்பியிருக்கிறது. இதற்கு முன்பு அவள் இயேசுகிறிஸ்துவின் சாதாரண சரீரத்தைத்தான் பார்த்திருக்கிறாள். இப்போதோ அவருடைய மகிமையடைந்த சரீரத்தைக்கண்டு சந்தோஷமடைகிறாள்.

இயேசுகிறிஸ்து நம்மை ஆசீர்வதிக்கிறார். ஆறுதல்பண்ணுகிறார். இயேசுகிறிஸ்துவின் ஒவ்வொரு செய்கைக்கும் ஒரு தெய்வீக திட்டமிருக்கும். நாம் மற்றவர்களை ஆசீர்வதிக்கவேண்டும் என்பதற்காகவே அவர் நம்மை ஆசீர்வதிக்கிறார். நாம் மற்றவர்களை ஆறுதல் பண்ணவேண்டுமென்பதற்காகவே அவர் நம்மை ஆறுதல்பண்ணுகிறார். மகதலேனா மரியாள் தான் கண்டதையும், தான் கேட்டதையும் சீஷருக்கு அறிவிக்கிறாள். இயேசுகிறிஸ்து மகதலேனா மரியாள் மூலமாக சொல்லியனுப்பிய செய்தி, அவளுக்கும், அந்தச் செய்தியைக்கேட்ட சீஷருக்கும் நற்செய்தியாயிற்று.

### இயேசுவும் சீஷரும்
### யோவா 20 : 19-25

**யோவா 20:19. வாரத்தின் முதல்நாளாகிய அன்றையத்தினம் சாயங்காலவேளையிலே, சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார்.**

**யோவா 20:20. அவர் இப்படிச் சொல்லித் தம்முடைய கைகளையும் விலாவையும் அவர்களுக்குக் காண்பித்தார். சீஷர்கள் கர்த்தரைக் கண்டு சந்தோஷப்பட்டார்கள்.**

**யோவா 20:21. இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி: உங்களுக்குச் சமாதானமுண்டாவதாக; பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன் என்று சொல்லி,**

**யோவா 20:22. அவர்கள்மேல் ஊதி: பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்;**

**யோவா 20:23. எவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படும், எவர்களுடைய பாவங்களை மன்னியாதிருக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதிருக்கும் என்றார்.**

**யோவா 20:24. இயேசு வந்திருந்தபோது பன்னிருவரில் ஒருவனாகிய திதிமு என்னப்பட்ட தோமா என்பவன் அவர்களுடனேகூட இருக்கவில்லை.**

**யோவா 20:25. மற்றச் சீஷர்கள்: கர்த்தரைக் கண்டோம் என்று அவனுடனே சொன்னார்கள். அதற்கு அவன்: அவருடைய கைகளில் ஆணிகளினாலுண்டான காயத்தை நான் கண்டு, அந்தக் காயத்திலே என் விரலைவிட்டு, என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்கமாட்டேன் என்றான்.**

**வாரத்தின் முதல்நாள்**

**வாரத்தின் முதல்நாளாகிய அன்றையத்தினம் சாயங்காலவேளையிலே, சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார் (யோவா 20:19).**

## அதிகாரம் - 20

கல்வாரி சிலுவையில் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்து மரித்த இயேசுகிறிஸ்து, மறுபடியும் உயிரோடு எழும்பியிருக்கிறார். அவர் தம்மை அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே, சீஷருக்கு தம்மை உயிரோடிருக்கிறவராக காண்பித்தது, (அப் 1:1). அவர் உயிரோடு எழும்பியதற்கு பரிபூரணமான சாட்சியாயிற்று. இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த அதே நாளில், அவர் தம்முடைய சீஷருக்குத் தரிசனங்கொடுக்கிறார்.தாம் உயிர்த்தெழுந்த செய்தியை மகதலேனா மரியாள் மூலமாக இயேசுகிறிஸ்து சொல்லியனுப்பினார். அவர்களுடைய விசுவாசத்தை உறுதிபண்ணும்விதமாக, இயேசுகிறிஸ்து தாமே அவர்களுக்குத் தம்மைப் பிரத்தியட்சமாகக் காண்பித்து தரிசனங்கொடுக்கிறார். மற்றவர்கள் மூலமாக இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த செய்தியை சீஷர்கள் கேட்டாலும், அவர் உயிரோடிருப்பதை இந்தச் சீஷர்கள் கண்ணாரக்கண்ட சாட்சிகளாகயிருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து வாரத்தின் முதல்நாளாகிய அன்றையதினம் சாயங்காலவேளையிலே, சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், அவர்களுக்கு நடுவே வந்து நிற்கிறார்.

இயேசுகிறிஸ்து இரண்டு நியமங்களை ஸ்தாபனம்பண்ணியிருக்கிறார். அவை 1. தண்ணீர் ஞானஸ்நானம், 2. திருவிருந்து என்பவையாகும். அத்துடன் மேலும் மூன்று துணை நியமங்களையும் சபைக்குக் கொடுத்திருக்கிறார். அவையாவன: 1. கர்த்தருடைய நாள் 2. சபை கூடிவருதல் 3. கர்த்தருடைய ஊழியம். இம்மூன்று நியமங்களும் இந்த வசனப்பகுதியில் தெளிவாக விவரிக்கப்பட்டிருக்கிறது. அதிலும் விசேஷமாகக் கர்த்தருடைய நாளையும், சபைகூடிவருதலையும் இந்த வசனத்தில் விசேஷமாகக் காண்கிறோம். சபையின் ஊழியத்தைப்பற்றிய நியமத்தை யோவான் 20:21-ஆவது வசனத்தில் "பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன்" என்று சொன்னதின் மூலமாக நம்மால் காணமுடிகிறது.

யூதர்கள் வாரத்தின் கடைசிநாளாகிய சனிக்கிழமையை ஓய்வுநாளாக அனுசரித்து வருகிறார்கள். இயேசுகிறிஸ்துவின் சீஷர்களோ வாரத்தின் முதல்நாளாகிய ஞாயிற்றுக்கிழமையை ஓய்வுநாளாக அனுசரிக்கிறார்கள். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் இந்த நாளையே தம்முடைய நாளாக அங்கீகரிக்கிறார். வாரத்தின் முதல்நாளில் சீஷர்கள் கூடியிருக்கிறார்கள். இந்த நாளில்தானே இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களைச் சந்திப்பதற்காக வந்து, அவர்கள் நடுவிலே நிற்கிறார். புதிய ஏற்பாட்டில் இந்த வசனத்தில் மாத்திரமே, "வாரத்தின் முதல்நாள்" என்று இந்த நாளானது "முதல்நாள்" என்று எண்ணிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்து வாரத்தின் முதல்நாளாகிய ஞாயிற்றுக்கிழமையை ஆசீர்வதிக்கிறார். பரிசுத்தப்படுத்துகிறார்.

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் வாரத்தின் முதல்நாளில் கூடிவருகிறார்கள். இதுவே சபைகூடிவருதலாயிற்று. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் இந்த நாளை அங்கீகரித்து, தம்முடைய சீஷர்களைச் சந்திப்பதற்கு அவர் நடுவிலே வருகிறார். இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் ஒருமனப்பட்டு ஜெபிப்பதற்காக வாரத்தின் முதலாம் நாளில் கூடிவந்திருக்கவேண்டும். ஒருவருடைய மனதை ஒருவர் அறிந்துகொள்வதற்காகவும், ஒருவருடைய கரத்தை ஒருவர் பலப்படுத்துவதற்காகவும், இந்தப் பிரச்சனையான சூழ்நிலையில் தாங்கள் மேற்கொண்டு என்ன செய்வதென்று கலந்து ஆலோசனைபண்ணுவதற்காகவும் சீஷர்கள் கூடிவந்திருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் வாரத்தின் முதல்நாளில், அவர்கள் மாத்திரமே ரகசியமாக கூடிவந்திருக்கிறார்கள். எருசலேமிலுள்ள ஜனங்கள் மத்தியில் சீஷர்கள் தங்களை இன்னும் வெளிப்படுத்திக்கொள்ளவில்லை. அவர்கள் ரகசியமாக ஒரு வீட்டில் கூடிவந்திருக்கிறார்கள். கதவுகள் பூட்டியிருக்கிறது. சீஷர்கள் யூதர்களுக்குப் பயந்ததினால் தாங்கள் இருக்கிற வீட்டின் கதவுகளை பூட்டியிருக்கிறார்கள். சீஷர்களெல்லோரும் இந்த இடத்தில் கூடியிருக்கிறார்களென்பது மற்றவர்களுக்குத் தெரியக்கூடாது என்பதற்காக இவர்கள் கதவுகளைப் பூட்டியிருக்கிறார்கள். தாங்கள் கூடியிருக்கிற வீட்டில் தங்களுக்கு அறிமுகமானவர்கள் மாத்திரமே உள்ளே வரவேண்டுமென்றும், வேறு அறிமுகமில்லாதவர்கள் யாரும் உள்ளே வந்துவிடக்கூடாது என்றும், சீஷர்கள் இந்த வீட்டின் கதவுகளைப் பூட்டியிருக்கிறார்கள். இவர்களுடைய உள்ளத்தில் யூதர்களைக்குறித்த பயம் நிரம்பியிருக்கிறது.

## அதிகாரம் - 20

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் இப்போது சிதறடிக்கப்பட்ட ஆடுகளைப்போல இருக்கிறார்கள். ஆடுகள் சிதறடிக்கப்பட்டாலும் ஆடுகள் ஒவ்வொன்றும் மற்ற ஆடுகளைத் தேடிப்பார்த்து கண்டுபிடித்து, மறுபடியும் ஒன்றுகூடி மந்தையாக கூடிச்சேரும். அதுபோலவே இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் சிதறி ஓடினாலும், அவர்கள் ஒருவரையொருவர் கண்டுபிடித்து, இப்போது இந்த வீட்டில், கதவுகளைப் பூட்டிக்கொண்டு உள்ளே கூடிவந்திருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவை ஆராதிக்கிறவர்கள், பட்டணங்களில் இடமில்லாமல் இதுபோல ஊருக்கு வெளியே ஆராதிப்பது புதுமையல்ல. நகர்புறங்களில் ஆராதனை செய்ய இடமில்லாமல், காடுகளிலும், தோட்டங்களிலும், மணல் வெளிகளிலும் ஆராதனை செய்வதும் புதுமையல்ல. இப்பிரபஞ்சத்தின் ஜனங்கள் விடுதலையோடு தைரியமாக சுற்றித்திரிகிறார்கள். இயேசுகிறிஸ்துவை சிலுவையில் அறைந்து கொன்ற கொலைப்பாதகர்கள், தேவபயமில்லாமல் எருசலேம் நகரத்தின் வீதிகளில் பெருமையோடு வலம்வருகிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவின் சீஷர்களோ, யூதர்களுக்குப் பயந்தவர்களாக, கதவுகளைப் பூட்டிக்கொண்டு வீட்டிற்குள் ஒளிந்திருக்கிறார்கள்.

சீஷர்கள் இருக்கிற இடத்திலே, இயேசு வந்து அவர்கள் நடுவிலே நிற்கிறார். இரண்டுபேர் அல்லது மூன்றுபேர், இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இருக்கிறார். தம்முடைய வார்த்தையின் பிரகாரமாக இயேசுகிறிஸ்து அவர்கள் நடுவிலே நிற்கிறார். கதவுகள் பூட்டப்பட்டிருக்கிறது. பூட்டியிருக்கிற கதவுகள் இயேசுகிறிஸ்துவின் வருகையைத் தடைபண்ணவில்லை. தம்முடைய சீஷர்களை ஆறுதல்படுத்துவதற்காகவே இயேசுகிறிஸ்து அங்கே வருகிறார். யூதர்களுக்குப் பயந்து கதவுகளைப் பூட்டிக்கொண்டு சீஷர்கள் ரகசியமாகக் கூடியிருந்தாலும், இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்கள் மத்தியிலே வருவதை எந்த சக்தியினாலும் தடைபண்ண முடியவில்லை. இயேசுகிறிஸ்து பூட்டியிருக்கிற கதவுகள் வழியாகவும் வருகிறவர். இயேசுகிறிஸ்துவின் பிரசன்னத்தை எந்த வல்லமையினாலும் பூட்ட முடியாது. இயேசுகிறிஸ்துவே ஒருவரும் பூட்டக் கூடாதபடிக்கு திறக்கிறவர். ஒருவரும் திறக்கக்கூடாதபடிக்கு பூட்டுகிறவர்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு நடுவே நின்று "உங்களுக்கு சமாதானம்" என்று சொல்லுகிறார். இயேசுகிறிஸ்து கூறுகிற இந்த வாக்கியம், பொதுவானதாக இருந்தாலும், இப்போது அவர் இந்த வாக்கியத்தைச் சொல்லும்போது, வீட்டிற்குள் கதவுகளைப் பூட்டிக்கொண்டு பயத்தோடிருக்கும் சீஷர்களுக்கு மிகுந்த ஆறுதலாகயிருக்கிறது. சூழ்நிலை எப்படியிருந்தாலும் உங்களுக்குச் சமாதானம் உண்டாகும் என்று பொருள்படுமாறு இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடத்தில் "உங்களுக்குச் சமாதானம்" என்று கூறுகிறார்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு தம்முடைய சமாதானத்தையே கொடுக்கிறார். "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக" (யோவா 14:27) என்று தாம் சொன்ன வாக்குத்தத்தத்தை நிறைவேற்றும் வண்ணமாக, இப்போது சீஷரிடத்தில் "உங்களுக்குச் சமாதானம்" என்று கூறுகிறார்.

நம்முடைய சமாதானம் நமக்குள் நிலைத்திருக்கவேண்டுமென்றால், நாம் தேவனோடு சமாதானமாயிருக்கவேண்டும். நம்முடைய மனச்சாட்சியில் சமாதானம் இருக்கவேண்டும். பிறரோடு சமாதானமாக இருக்கவேண்டும். இந்தச் சமாதானங்களெல்லாம் தம்முடைய சீஷருக்கு உண்டாகுமென்று இயேசுகிறிஸ்து வாக்குப்பண்ணுகிறார். இயேசுகிறிஸ்து சொல்லுகிற சமாதானம் இந்த உலகத்திற்குரிய சமாதானமல்ல. இந்த உலகத்தோடு சீஷருக்குச் சமாதானம் உண்டாகாது. ஆனால் இயேசுகிறிஸ்துவில் அவர்களுக்குச் சமாதானம் உண்டாகும்.

சீஷர்கள் கதவுகளைப் பூட்டிக்கொண்டு, பயத்தோடிருக்கையில் இயேசுகிறிஸ்து அவர்கள் நடுவே திடீரென்று வந்து நிற்கிறார். அவர்களை பயமுறுத்தவேண்டுமென்பது இயேசுகிறிஸ்துவின் நோக்கமல்ல. அவர்களுடைய அமைதியை சீர்குலைக்க வேண்டுமென்றோ, ஒழுங்கும் கிரமமாகவும் நடக்கும் அவர்களுடைய ஜெபத்தில் குழப்பம் உண்டாக்கவேண்டும் என்றோ இயேசுகிறிஸ்து அவர்கள் நடுவில் திடீரென்று வந்து நிற்கவில்லை. உலகம் சந்தடியில் இருக்கிறது. யூதர்கள் இயேசுகிறிஸ்துவின் சீஷருக்கு விரோதமாகப் பகையோடிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் "உங்களுக்குச் சமாதானம்" என்று இயேசுகிறிஸ்து அவர்களிடத்தில் ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லுவதற்காகவே, அவர்கள் நடுவிலே வந்து நிற்கிறார்.

## அதிகாரம் - 20

**கைகளையும் விலாவையும்**

**அவர் இப்படிச் சொல்லித் தம்முடைய கைகளையும் விலாவையும் அவர்களுக்குக் காண்பித்தார். சீஷர்கள் கர்த்தரைக் கண்டு சந்தோஷப்பட்டார்கள் (யோவா 20:20).**

இயேசுகிறிஸ்து தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பிக்கிறார். தாம் மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்திருக்கும் சத்தியத்தை இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு நிரூபிக்கிறார். அவருடைய கைகளிலும் சரீரத்திலும் ஏற்பட்டிருக்கும் காயங்களும் தழும்புகளுமே, அவரை இயேசுகிறிஸ்து என்று நிரூபிப்பதற்குப் போதுமானது. இயேசுகிறிஸ்து உயிரோடு எழும்பிய பின்பும் அவருடைய காயங்களும் தழும்புகளும் அவருடைய உயிர்த்தெழுந்த சரீரத்திலிருக்கிறது. தாம் உயிர்த்தெழுந்த சத்தியத்தை, இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷருக்கு நிரூபிப்பதற்காக, தம்முடைய காயங்களை அவர்களுக்குக் காண்பிக்கிறார்.

இயேசுகிறிஸ்துவின் காயங்கள் அவரை இந்த உலகத்திற்கு வெளிப்படுத்தி நிரூபிக்கிறது. அவர் சார்பாக அவருடைய காயங்களே பேசுகிறது. தம்முடைய உயிர்த்தெழுந்த சரீரத்தை நிரூபிப்பதற்காக, இயேசுகிறிஸ்து தம்முடைய காயங்களோடு உயிர்த்தெழுகிறார். இந்தக் காயங்கள் பூமியில் பேசுவதுபோல பரலோகத்திலும் பேசும். பிதாவின் சமுகத்தில் இயேசுகிறிஸ்து நமக்காகப் பரிந்துபேசும்போது அவருடைய காயங்களும் அவருடைய சரீரத்திலிருக்கும். அவருடைய தழும்புகளால் நாம் குணமாகிறோம். அவருடைய பரிந்து பேசும் ஜெபத்தினால் நாம் நித்திய ஜீவனைப்பெற்றுக்கொள்கிறோம். நமக்கு நன்மை உண்டாயிருக்கவேண்டுமென்பதற்காக இயேசுகிறிஸ்து தம்முடைய காயங்களோடு உயிர்த்தெழுந்து, அந்தக் காயங்களோடு பரமேறுகிறார்.

இயேசுகிறிஸ்து தம்முடைய காயங்களைத் தம்முடைய சீஷருக்குக் காண்பிக்கிறார். தாமே உயிர்த்தெழுந்த கிறிஸ்து என்பதை அவர்கள் நம்பவேண்டுமென்பதற்காக, காயம்பட்ட அவருடைய கைகளையும் விலாவையும் அவர்களுக்குக் காண்பிக்கிறார்.

சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பாக இயேசுகிறிஸ்துவின் முகரூபம் எப்படியிருந்ததோ அப்படியே இப்போதும் இருக்கிறது. இதற்கு முன்பு சீஷர்கள் அவரை எப்படிப் பார்த்தார்களோ அப்படியே இப்போதும் பார்க்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் தொனியும் மாறவில்லை. இதற்கு முன்பு இயேசுகிறிஸ்து தங்களோடு பேசியபோது எப்படிப் பேசினாரோ, அப்படியே இப்போதும் பேசுகிறார். தங்களுக்கு முன்பாக நிற்கிறவர் இயேசுகிறிஸ்துதான் என்பதற்கு இந்த அடையாளங்களே அவர்களுக்குப் போதுமானதாயிற்று.

ஆகிலும் இந்த அடையாளங்களைவிட, இன்னும் ஒரு விசேஷித்த அடையாளத்தை இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷருக்குக் காண்பிக்கிறார். தம்முடைய காயம்பட்ட கைகளையும் விலாவையும் இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடத்தில் காண்பிக்கிறார். இந்தக் கைகளிலும் விலாவிலும் விசேஷித்த தழும்பு உண்டாயிருக்கிறது. தம்முடைய கைகளை இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷருக்கு முன்பாக திறந்து காண்பிக்கிறார். தம்முடைய கைகளில் சீஷர்கள் காயங்களைக் காணவேண்டும் என்பதற்காக தம்முடைய கைகளை விரித்துக் காண்பிக்கிறார். தம்முடைய விலாவையும் இயேசுகிறிஸ்து சீஷரிடத்தில் காண்பிக்கிறார். ஈட்டியினால் குத்தப்பட்ட தழும்பு அந்த விலாவிலிருக்கிறது. சீஷர்கள் அதைக் காணும்படியாக தம்முடைய விலாவை அவர்களுக்குத் திறந்து காண்பிக்கிறார்.

உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்து இப்போது உயர்த்தப்பட்ட மீட்பராகயிருக்கிறார். அவரைப் பின்பற்றுகிற யாவருக்கும், இரட்சராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய திறந்த கைகளோடும், திறந்த இருதயத்தோடும் தரிசனம் கொடுக்கிறார். சீஷர்கள் கர்த்தரைக் கண்டு சந்தோஷப்படுகிறார்கள். தங்களுக்கு முன்பாக நிற்கிறவர் இயேசுகிறிஸ்துதான் என்பதை அவர்கள் உறுதிபண்ணிக்கொள்கிறார்கள். அவர்களுடைய விசுவாசம் உறுதிப்படுகிறது.

இயேசு கிறிஸ்துவின் சீஷர்களைப்போலவே இக்காலத்தில் ஏராளமான விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தில் பலவீனமாகயிருக்கிறார்கள். சூழ்நிலைகளைக் கண்டு பயப்படுகிறார்கள். தேவையில்லாமல் கற்பனைபண்ணிக்கொண்டு ஆறுதலில்லாமல் இருக்கிறார்கள். தேவனுடைய கிருபையினால் தங்களுக்கு ஆறுதல் உண்டாயிருக்கிறது என்பதைக் காணும்போது அவர்களுக்குச் சமாதானம் உண்டாகிறது. கிருபை வரும் வரையிலும் குழப்பமிருக்கும். கிருபை வந்தபின்போ தெளிவு பிறக்கும்.

## அதிகாரம் - 20

இயேசுகிறிஸ்துவின் கைகளையும் விலாவையும் பார்த்த பின்பு சீஷர்கள் சந்தோஷப்படுகிறார்கள். சீஷர்களுக்கு எப்போது சந்தோஷம் உண்டாயிற்று என்பதை யோவான் மிகவும் தெளிவாக எழுதுகிறார். சீஷர்கள் கர்த்தரைக் கண்டு சந்தோஷப்பட்டார்கள். அதுவரையிலும் அவர்கள் யூதர்களுக்குப் பயந்துகொண்டிருந்தார்கள். சீஷர்களுடைய இருதயம் இப்போது மறுபடியும் உயிர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்து ஜீவிக்கிறார் என்பதை அவர்கள் தங்கள் காதுகளால் கேட்டும், தங்கள் கண்களால் கண்டும் சந்தோஷப்படுகிறார்கள்.

இயேசுகிறிஸ்து சிலுவையில் மரித்துப்போனதினால், அவர்களுடைய சீஷர்களும் மரித்துப்போனதுபோல செயலற்றவர்களாக இருந்தார்கள். இப்போதோ இயேசுகிறிஸ்துவை மறுபடியும் உயிரோடு பார்க்கும்போது, செத்துப்போன தாங்கள் மறுபடியும் உயிர்பிழைத்தது போன்ற சந்தோஷம் அவர்களுக்குள் உண்டாயிற்று. "நான் மறுபடியும் உங்களைக் காண்பேன். அப்பொழுது உங்கள் இருதயம் சந்தோஷப்படும். உங்கள் சந்தோஷத்தை ஒருவனும் உங்களிடத்திலிருந்து எடுத்துப்போடமாட்டான்" (யோவா 16:22) என்று இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷருக்கு ஏற்கெனவே வாக்குப்பண்ணியிருந்தார். அந்த வாக்குத்தத்தம் இப்போது நிறைவேறிற்று. இயேசுகிறிஸ்துவின் தரிசனம் அவர்களுடைய கண்களிலுள்ள எல்லா கண்ணீரையும் நீக்கிப்போட்டது.

**நானும் உங்களை அனுப்புகிறேன்**

**இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி: உங்களுக்குச் சமாதானமுண்டாவதாக; பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன் என்று சொல்லி, (யோவா 20:21)**

தம்முடைய சபையை இந்த உலகத்தில் ஸ்தாபிக்கவேண்டுமென்பது இயேசுகிறிஸ்துவின் சித்தமாகும். சபையை ஸ்தாபிக்கும் ஊழியம் இப்போது ஆரம்பமாயிற்று. இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷருக்கு சபையை ஸ்தாபிக்கும் கட்டளையைக் கொடுக்கிறார். அதற்கு முன்பாக "உங்களுக்குச் சமாதானமுண்டாவதாக" என்று தம்முடைய சீஷரிடத்தில் மறுபடியும் கூறுகிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்கள் நடுவில் வந்தபோது அவர்கள் யூதர்களுக்குப் பயந்திருந்தார்கள். அந்தப் பயத்தைப் போக்குவதற்காக இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடத்தில் "உங்களுக்குச் சமாதானம்" என்று கூறினார். பயத்திலிருந்த அவர்கள், இயேசுகிறிஸ்துவின் வார்த்தையினால் சமாதானமடைந்தார்கள். உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவைக் கண்டு சந்தோஷப்பட்டார்கள்.

இயேசுகிறிஸ்து இப்போது தம்முடைய சீஷரிடம் மறுபடியும் "உங்களுக்குச் சமாதானமுண்டாவதாக" என்று கூறுகிறார். அவர்களுடைய சந்தோஷத்தை உறுதிபண்ணும் விதமாகவும், அதிகரிக்கச் செய்யும் விதமாகவும் இயேசுகிறிஸ்து அவர்களிடத்தில் மறுபடியும் "சமாதானம் உண்டாவதாக" என்று கூறுகிறார். இப்போது சீஷருடைய பயம் நீங்கிற்று. அவர்களுடைய உள்ளத்தில் சந்தோஷம் உண்டாயிற்று. இனிமேல் இயேசுகிறிஸ்து தங்களுக்குச் சொல்லப்போவதை அவர்கள் கவனித்துக் கேட்பார்கள். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷருக்குக் கொடுக்கும் கட்டளையைத் தங்கள் உள்ளத்தில் ஏற்றுக்கொண்டு அதற்குக் கீழ்ப்படிவார்கள்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்குச் சமாதானத்தைக் கொடுக்கிறார். இந்தச் சமாதானத்தைச் சீஷர்கள் உலகம் முழுவதும் சென்று அறிவிக்கவேண்டும். "உங்களுக்குச் சமாதானமுண்டாவதாக" என்று சொல்லி இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களை உலகம் முழுவதும் அனுப்புகிறார். இந்தச் சமாதானம் அவர்களுக்கும் உரியது. உலகத்திலுள்ள மனுக்குலத்தார் எல்லாருக்கும் உரியது. ஆகையினால், இந்தச் சமாதானத்தை அவர்கள் உலகம் முழுவதும் பகிர்ந்து கொடுக்கவேண்டும். சமாதானத்தை அறிவிக்கும் ஊழியத்தை இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடத்தில் நம்பி ஒப்புக்கொடுத்திருக்கிறார்.

## அதிகாரம் - 20

தம்முடைய சீஷர்களை அனுப்பும்போது " பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன்" என்று சொல்லி இயேசுகிறிஸ்து அவர்களை அனுப்புகிறார். இயேசுகிறிஸ்து அவர்களை எவ்வாறு அனுப்பினார் என்பதைப் புரிந்து கொள்வது எளிது. இந்தப் பூமியில் தம்முடைய ஊழியத்தை நிறைவேற்றுமாறு, அவர்களைப் பிரதிஷ்டைபண்ணி அனுப்புகிறார். தெய்வீக அதிகாரத்தினால் அவர்களுடைய ஊழியத்தை உறுதிபண்ணுகிறார். அவர்களுக்கு தெய்வீக வல்லமையைக் கொடுத்து தம்முடைய ஊழியத்தைச் செய்ய அவர்களைப் பெலப்படுத்துகிறார். ஆகையினால் அவர்கள் அப்போஸ்தலர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். "அப்போஸ்தலர்" என்னும் வார்த்தைக்கு "அனுப்பப்பட்டவர்கள்" என்று பொருள். இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் அவருடைய அப்போஸ்தலர்கள். அவர்களை இயேசுகிறிஸ்து அனுப்புகிறார்.

பிதாவானவர் தம்மை அனுப்பினதுபோல, இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களை அனுப்புவதாகக் கூறும் வாக்கியத்தைப் புரிந்துகொள்வது அவசியம். ஏனெனில் இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தையும், அவருடைய வல்லமையையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, சீஷர்களுடைய ஊழியமும் வல்லமையும் இயேசுகிறிஸ்துவைவிட குறைவானதேயாகும்.

இயேசு கிறிஸ்துவைப்போலவே சீஷர்களும் ஊழியம் செய்யவேண்டும். தம்முடைய ஊழியத்தை இயேசுகிறிஸ்து எங்கே விட்டாரோ, அங்கிருந்து சீஷர்கள் அவருடைய ஊழியத்தை ஆரம்பிக்கவேண்டும். இயேசுகிறிஸ்து சத்தியத்திற்குச் சாட்சிகொடுப்பதற்காக இந்த உலகத்திற்கு அனுப்பப்பட்டார். இயேசுகிறிஸ்துவைப்போலவே அவருடைய சீஷர்களும் சத்தியத்திற்குச் சாட்சி கொடுப்பதற்காகவே அனுப்பப்பட்டிருக்கிறார்கள்.

சீஷர்கள் ஒப்புரவாகுதலின் ஊழியத்திற்கு மத்தியஸ்தர்களல்ல. அவர்கள் ஒப்புரவாகுதலைப் பிரசங்கம்பண்ணவேண்டும். பாவியான மனுஷர் இயேசுகிறிஸ்துவின் மூலமாக தேவனோடு ஒப்புரவாகவேண்டும் என்னும் சத்தியத்தை சீஷர்கள் உலகம் முழுவதும் பிரசங்கம்பண்ணவேண்டும். பிதாவாகிய தேவன் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவைக் காணாமல்போன இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பினார். அதுபோலவே இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களை உலகம் முழுவதற்கும் அனுப்புகிறார்.

பிதாவானவர் தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை இந்த உலகத்திற்கு அனுப்பியபோது, தம்முடைய வல்லமையினால் அவரை அனுப்பினார். பிதாவின் வல்லமையும் குமாரனின் வல்லமையும் ஒன்றாயிருக்கிறது. பிதாவானவர் இயேசுகிறிஸ்துவை எந்த அதிகாரத்தினால் அனுப்பினாரோ, அதே அதிகாரத்தினால் இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரை இந்த உலகத்திற்கு அனுப்புகிறார். இயேசுகிறிஸ்துவின் அதிகாரம் சர்வவல்லமையுள்ளது. எத்தனை தடைகள் வந்தாலும் இயேசுகிறிஸ்துவினால் அவற்றை எதிர்த்து நிற்கமுடிந்தது. சீஷர்களுக்கும் ஊழியத்தில் தடைகளும் போராட்டங்களும் உண்டாயிற்று. அவைகளை எதிர்த்து நின்று ஊழியம் செய்யும் அதிகாரத்தை இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷருக்குக் கொடுத்து அவர்களை அனுப்புகிறார்.

பிதாவாகிய தேவன் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை இந்த உலகத்திற்கு மத்தியஸ்தராக அனுப்பினார். அவர் தேவனுக்கும் மனுஷருக்கும் நடுவே மத்தியஸ்த ஊழியம் செய்கிறார். மத்தியஸ்தராகிய இயேசுகிறிஸ்துவே தம்முடைய சீஷரை இந்த உலகத்திற்கு அனுப்பி, தம்முடைய மத்தியஸ்த ஊழியத்திற்காக, அவர்களையும் ஊழியம் செய்யுமாறு அனுப்புகிறார். இவர்கள் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஊழியம் செய்யவேண்டும். இயேசுகிறிஸ்துவுக்காக ஊழியம் செய்யவேண்டும்.

சீஷர்களை ஏற்றுக்கொள்கிறவர்கள் இயேசுகிறிஸ்துவையும் அவரை அனுப்பினவரையும் ஏற்றுக்கொள்கிறார்கள். இவர்களை ஏற்றுக்கொள்ளாதவர்கள் இயேசுகிறிஸ்துவையும் அவரை அனுப்பினவரையும் ஏற்றுக்கொள்ளாமல் போகிறார்கள். "நான் அனுப்புகிறவனை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான், என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறான் என்று, மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் (யோவா 13:20).

## அதிகாரம் - 20

**பரிசுத்த ஆவி**

**அவர்கள்மேல் ஊதி: பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்; (யோவா 20:22)**

பிதா தம்மை அனுப்பினதுபோலவே, இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரை அனுப்புகிறார். தம்முடைய ஊழியத்திற்கு அவர்களைத் தகுதிப்படுத்துவதற்கு அடையாளமாக, அவர்கள்மேல் ஊதி "பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்" என்று கூறுகிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய ஜீவசுவாசத்தையே அவர்கள்மீது ஊதுகிறார். இயேசுகிறிஸ்து மெய்யாகவே ஜீவனுள்ளவராக இருக்கிறார். தம்மிடமிருந்து ஆவிக்குரிய ஜீவனையும் வல்லமையையும் பெற்றுக்கொள்வதற்கு அடையாளமாக, இயேசுகிறிஸ்து அவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுக்கிறார்.

சர்வவல்லவரின் சுவாசம் மனுஷருக்கு ஜீவனைக்கொடுக்கிறது. சர்வவல்லமையுள்ள இரட்சகரின் சுவாசம் கிறிஸ்துவின் ஊழியக்காரருக்கு ஜீவனைக்கொடுக்கிறது. சர்வவல்லவரின் சுவாசம் பழைய உலகத்தைச் சிருஷ்டித்தது. இரட்சகரின் சுவாசம் புதிய உலகத்தைச் சிருஷ்டிக்கிறது. பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவின் சுவாசமாகயிருக்கிறார். இந்தச் சுவாசம் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினிடத்திலிருந்து வருகிறது. தேவனுடைய சுவாசம் அவருடைய கோபாக்கினையின் வல்லமையாக வெளிப்படுகிறது. கிறிஸ்துவின் சுவாசமோ அவருடைய கிருபையின் வல்லமையாக வெளிப்படுகிறது. அச்சுறுத்தும் சுவாசமானது இயேசுகிறிஸ்துவின் மத்தியஸ்த ஊழியத்தின் மூலமாக, அன்பின் சுவாசமாக மாற்றப்படுகிறது.

இயேசுகிறிஸ்து பரிசுத்த ஆவியானவரை வரமாகக் கொடுக்கிறார். அப்போஸ்தலர்கள் தங்கள் கரங்களை விசுவாசிகள்மீது வைப்பதன் மூலமாக, பரிசுத்த ஆவியானவர் அவர்கள்மீது ஊற்றப்படுகிறார். சீஷர்கள் இயேசுகிறிஸ்துவின் நற்செய்தியை மாத்திரமே தங்களோடு சுமந்து செல்ல முடியும். கிறிஸ்துவானவரே எல்லா வரங்களையும் கொடுக்கிறவர். அவரே தம்முடைய சீஷர்கள்மேல் ஊதி, பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுமாறு கூறுகிறார்.

சீஷர்களுடைய ஊழியத்தில் பரிசுத்த ஆவியானவருடைய உதவியும் ஒத்தாசையும் அவர்களுக்கு உறுதிபண்ணப்படுகிறது. இயேசுகிறிஸ்து தாமே தம்முடைய சீஷர்களை ஊழியத்திற்காக அனுப்புகிறார். அவர்கள் போகும்போது அவர்களோடு கூட பரிசுத்த ஆவியானவரும் கூடபோகிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய ஊழியமாக யாரை அனுப்புகிறாரோ அவர்களைத் தம்முடைய பரிசுத்த ஆவியினால் பெலப்படுத்துகிறார். அவர்களுக்குத் தேவையான எல்லா வரங்களையும் வல்லமையையும் கொடுக்கிறார்.

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளை இப்போது தங்கள் ஜீவியத்தில் அனுபவிக்கிறார்கள். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடத்தில் தமது கைகளையும் விலாவையும் காண்பித்தார். தம்முடைய உயிர்த்தெழுதலை நிரூபிக்கும் விதமாக இயேசுகிறிஸ்து இவைகளைக் காண்பித்தார். இப்போதோ அவர் அவர்களுக்கு பரிசுத்த ஆவியைக் கொடுக்கிறார். பரிசுத்த ஆவியானவர் அவர்களுடைய உள்ளத்தில் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணுவார். சீஷர்கள் யூதர்கள் நிமித்தமாக இப்போது பயப்படுகிறார்கள். இந்தப் பயத்தை விட்டு நீங்கி சீஷர்கள் தைரியம் பெறவேண்டும். பரிசுத்த ஆவியானவர் இவர்களுக்குள் வரும்போது, அவர் அவர்களுக்குள் தைரியத்தை உண்டு பண்ணுவார். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்கள்மேல் ஊதி, "பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்" என்று சொன்ன வாக்கியம், சீஷர்களுக்கும் அவரை விசுவாசிக்கிற எல்லோருக்கும் சொல்லிய வாக்கியமாகயிருக்கிறது. நாமும் இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்போமானால் அவர் நமக்கும் பரிசுத்த ஆவியை அருளுவது நிச்சயம்.

**எவர்களுடைய பாவங்களை**

**எவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படும், எவர்களுடைய பாவங்களை மன்னியாதிருக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதிருக்கும் என்றார் (யோவா 20:23).**

## அதிகாரம் - 20

பரிசுத்த ஆவியானவர் வரும்போது சீஷர்கள் பெலனடைவார்கள். வல்லமையைப் பெற்றுக்கொள்வார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்படும் வல்லமையின் ஒரு பகுதியை இயேசுகிறிஸ்து இங்கு விவரிக்கிறார். "எவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படும், எவர்களுடைய பாவங்களை மன்னியாதிருக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதிருக்கும்". சீஷர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டதினால், அவர்கள் இந்த அதிகாரத்தையும் பெற்றுக்கொள்கிறார்கள். ஆவிகளைப் பகுத்தறியும் வரம் சீஷர்களிடத்தில் இல்லையென்றால், இப்படிப்பட்ட தெய்வீக அதிகாரத்தை அவர்களால் பயன்படுத்தவே முடியாது. ஆவியானவரின் வல்லமையைப் பயன்படுத்துவதற்கும் ஆவியானவரின் வரம் நமக்குத் தேவைப்படுகிறது.

சபையும் விசுவாசிகளும் இயேசுகிறிஸ்துவின் உக்கிராண ஊழியக் காரர்களாகயிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து தாமே தம்முடைய சுவிசேஷத்தை அறிவிக்குமாறு நம்மை இந்த உலகத்திற்கு அனுப்பியிருக்கிறார். நாம் தேவனுடைய ரகசியங்களுக்கு உண்மையுள்ள உக்கிராணக் காரர்களாயிருக்கிறோம். இயேசுகிறிஸ்து தாமே தம்முடைய சுவிசேஷ வார்த்தைகளை அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் உறுதிபண்ணுகிறார். நம்மை நீதிமான்களாக்கும் படியாக இயேசுகிறிஸ்து உயிரோடு எழும்பியிருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிக்கும் ஊழியத்தை நம்பிடத்தில் ஒப்புக்கொடுத்து, நம்மை பரிசுத்த ஆவியினால் அபிஷேகம்பண்ணி இந்த உலகத்திற்கு அனுப்புகிறார். இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் பாவிகளை பாவத்தின் கட்டுக்களிலிருந்து விடுவிக்கிற நற்செய்தியாகும்.

சுவிசேஷம் யாரை விடுவிக்கிறதோ அவர்கள் விடுவிக்கப்படுவார்கள். சுவிசேஷம் யாரை ஆக்கினைக்குட்படுத்துகிறதோ அவர்கள் ஆக்கினைக்குட்படுத்தப்படுவார்கள். இதுவே இயேசுகிறிஸ்து நமக்குக் கொடுத்திருக்கும் ஊழியத்தின் மேன்மையும், மகிமையும், சிலாக்கியமும் ஆகும். இயேசுகிறிஸ்து நமக்குக் கொடுத்திருக்கும் தெய்வீக வல்லமையினால், அவருடைய ஊழியத்தைச் செய்கிற ஊழியக்காரர்கள் தைரியத்தோடு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறார்கள்.

நாம் பிரசங்கிக்கிற சுவிசேஷம் வல்லமையுள்ளது. நம்முடைய உபதேசம் கிறிஸ்துவின் உபதேசமாக இருக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவின் மூலமாக மாத்திரமே மனுக்குலத்திற்கு இரட்சிப்பு உண்டு என்றும், வேறு எந்த வழியிலும் மனுக்குலத்திற்கு இரட்சிப்பு இல்லையென்றும் மனுஷரிடம் தெளிவாகவும், உறுதியாகவும் வல்லமையாகவும் பிரசங்கம்பண்ணவேண்டும். இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் தங்களுடைய ஜீவியத்தைச் சுவிசேஷத்தின் உபதேசத்திற்கேற்ற பிரகாரமாக மாற்றி அமைத்துக்கொள்ளவேண்டும். சுவிசேஷத்தின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நாம் ஜீவிக்கும்போது நமக்கு தெய்வீக ஆசீர்வாதம் கிடைக்கும்.

### திதிமு என்னப்பட்ட தோமா

**இயேசு வந்திருந்தபோது பன்னிருவரில் ஒருவனாகிய திதிமு என்னப்பட்ட தோமா என்பவன் அவர்களுடனேகூட இருக்கவில்லை (யோவா 20:24).**

தோமாவைப்பற்றிக் குறிப்பிடும்போது அவன் "பன்னிருவரில் ஒருவனாகிய திதிமு என்னப்பட்ட தோமா" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவன் இப்போது பதினொருவரில் ஒருவனாகவே இருக்கிறான். பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ்காரியோத்து சீஷர்களின் கூட்டத்தை விட்டுப் பிரிந்துபோய்விடுகிறான். மகாநாளின்போது கர்த்தருடைய பிள்ளைகளெல்லோரும் ஒன்றாகக் கூடியிருப்பார்கள். அதுவரையிலும் பரிசுத்தவான்கள் ஒரே இடத்தில் கூடுவதில்லை. தோமா மற்ற சீஷர்களோடு இப்போது இல்லை. ஆகையினால் உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவை காணும் சிலாக்கியத்தை இழந்துபோகிறான். ஆனாலும் இயேசுகிறிஸ்து அவனைக் கைவிடவில்லை. மற்றொரு சமயத்தில் இயேசுதாமே தோமாவுக்குத் தம்மை பிரத்தியட்சமாக வெளிப்படுத்துகிறார்.

எல்லா சீஷர்களும் கிறிஸ்துவுக்குள் சந்தோஷமாகயிருக்கும்போது தோமாவுக்கு மாத்திரம் இந்தச் சந்தோஷம் கிடைக்கவில்லை. மற்ற சீஷர்களோடு தோமா இல்லாமல் போனதுதான் அவனுடைய இழப்புக்குக் காரணம். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் சந்தோஷங்களையும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால் பரிசுத்தவான்களின் ஐக்கியம் நமக்கு அவசியமாக இருக்கிறது. சபை கூடிவருவதை ஒரு சிலர் விட்டுவிடுவது போல, நாமும் விட்டுவிடாமல் சபை கூடிவருவதில் பங்குபெறவேண்டும். பரிசுத்தவான்களின் ஐக்கியத்தில் கிடைக்கும் தெய்வீக ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

## அதிகாரம் - 20

**கர்த்தரைக் கண்டோம்**

**மற்றச் சீஷர்கள்: கர்த்தரைக் கண்டோம் என்று அவனுடனே சொன்னார்கள். அதற்கு அவன்: அவருடைய கைகளில் ஆணிகளினாலுண்டான காயத்தை நான் கண்டு, அந்தக் காயத்திலே என் விரலைவிட்டு, என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்க மாட்டேன் என்றான் (யோவா 20:25).**

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்குத் தரிசனம் கொடுத்துவிட்டு அவர்களைவிட்டுப் போய்விடுகிறார். அப்போது திதிமு என்னப்பட்ட தோமா அவர்களோடு கூடயில்லை. உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவை அவன் காணவில்லை. இயேசுகிறிஸ்து போனபின்பு தோமா மற்ற சீஷர்களிடத்தில் வருகிறான். அப்போது அவர்கள் தாங்கள் கர்த்தரைக் கண்டதாகக் கூறுகிறார்கள். தோமா மற்ற சீஷர்களைவிட்டு வெகு தூரத்திற்குப் போயிருக்க வாய்ப்பில்லை. ஏதோ ஒரு காரியமாக அவன் அருகில்தான் போயிருக்கவேண்டும். ஒருவர் ஏதோ ஒரு காரணத்திற்காக சில சமயங்களில் பரிசுத்தவான்களோடு ஐக்கியமில்லாமல் போய்விட்டால், அதை தேவதூஷணம் என்றோ, கர்த்தரைவிட்டு அவர் பின்வாங்கிப் போய்விட்டாரென்றோ குற்றப்படுத்திவிடக் கூடாது. தோமா இயேசுகிறிஸ்துவைக் காட்டிக்கொடுத்த யூதாஸ்காரியோத்தல்ல. தோமா இயேசுவுக்கு அன்பாயிருந்த சீஷன்.

தோமா மற்ற சீஷர்களிடத்தில் வந்தபோது அவர்கள் மிகுந்த சந்தோஷமாக "கர்த்தரைக் கண்டோம்" என்று கூறுகிறார்கள். நாங்கள் கர்த்தரைக் கண்டதுபோல, நீயும் எங்களோடுகூட இங்கு இருந்திருந்தால், நீயும் கர்த்தரை கண்டிருக்கலாம் என்று பொருள்படுமாறு தோமாவிடம் மற்ற சீஷர்கள் கூறுகிறார்கள். சீஷர்கள் ஒவ்வொருவரும் மற்றவர்களுடைய விசுவாசத்தைக் கட்டியெழுப்புவதற்கு உதவிசெய்கிறார்கள். தோமா தங்களோடு இல்லாதபோது இயேசுகிறிஸ்து தங்களுக்குச் சொன்ன வார்த்தைகளை அவனிடத்தில் சொல்லுகிறார்கள். அத்தோடு இயேசுகிறிஸ்துவைத் தாங்கள் கண்டதையும், தங்களுடைய அனுபவத்தையும் சீஷர்கள் தோமாவிடம் பகிர்ந்துகொள்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவை விசுவாசத்தினால் கண்டவர்கள் அதை மற்றவர்களுக்கு விசுவாசத்தோடு அறிவிக்கவேண்டும். அதுபோலவே இயேசுகிறிஸ்துவின் கிருபையை ருசித்துப் பார்த்தவர்களும் அதை மற்றவர்களுக்குத் தெரியப்படுத்தவேண்டும். நம்முடைய ஆத்துமாக்களுக்குக் கர்த்தர் செய்த நன்மைகளை நாம் மற்றவர்களுக்குச் சாட்சியாக அறிவிக்கவேண்டும். நம்முடைய ஆத்துமாவில் பெருமைப்படுவது தவறு. ஆயினும் நம்முடைய ஆவிக்குரிய அனுபவத்தை மற்றவர்களிடத்தில் சொல்லாமல் மறைத்து வைப்பதும் தவறுதான்.

மற்ற சீஷர்கள் தன்னிடத்தில் சொன்ன வார்த்தையைத் தோமா உடனடியாக அங்கீகரிக்கவில்லை. "அவருடைய கைகளில் ஆணிகளினாலுண்டான காயத்தை நான் கண்டு, அந்தக் காயத்திலே என் விரலைவிட்டு, என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்க மாட்டேன்" என்று அவர்களிடத்தில் கூறிவிடுகிறான். கடின மனதுள்ளவன் போல் பேசுகிறான். உணர்ச்சிவசப்பட்டு பேசுகிறான். ஒரு சிலர் நல்லவர்களாக இருந்தாலும் தோமாவைப்போலவே உணர்ச்சிவசப்பட்டுப் பேசிவிடுவார்கள். தோமாவின் பேச்சில் அவிசுவாசமும் குழப்பமும் சேர்ந்து காணப்படுகிறது.

தாம் மறுபடியும் உயிர்த்தெழுவதைப்பற்றி இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடத்தில் பலமுறை கூறியிருக்கிறார். தோமாவும் அந்த நற்செய்தியைத் தன்னுடைய காதுளால் கேட்டிருக்கிறான். அவர் கல்வாரி சிலுவையில் மரித்தாரென்பது அவனுக்குத் தெரியும். மூன்றாம் நாளில் அவர் மறுபடியும் உயிரோடு எழும்புவாரென்று இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடத்தில் சொன்னதும் அவனுக்குத் தெரியும். ஆனால் தோமாவோ இயேசுவின் வார்த்தையையும் விசுவாசிக்கவில்லை. மற்ற சீஷர்களின் வார்த்தையையும் விசுவாசிக்கவில்லை.

இயேசுகிறிஸ்துவின் சீஷர்களில் பத்துபேர்களும் ஒரே குரலில் "கர்த்தரைக் கண்டோம்" என்று கூறுகிறார்கள். தாங்கள் கண்டதற்குச் சாட்சி கொடுக்கிறார்கள். ஆனால் தோமாவோ ஒருவனாகயிருந்தாலும் பத்துபேர் சொன்னதையும் நம்பவில்லை. அவர்களுடைய விசுவாசத்தைத் தோமா சந்தேகப்படுகிறான். இயேசுகிறிஸ்துவின்மீது அவர்கள் அதிக விசுவாசம் வைத்திருப்பதினால், தாங்கள் காணாததைக்கூட கண்டதாகக் கூறுகிறார்களோ என்னும் சந்தேகம் தோமாவுக்குள் வந்துவிடுகிறது. அவர்கள் சொன்ன வார்த்தையை தானும் கண்டு விசுவாசிக்கவேண்டும் என்று தோமா விரும்புகிறான். தன்னுடைய விசுவாசம் உறுதிபண்ணப்பட வேண்டுமென்று தோமா எதிர்பார்க்கிறான். பதினொரு சீஷர்களில் பத்துபேர் உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவைக் கண்டதாகக் கூறினாலும், தோமா ஒருவனாகயிருந்து, தான் விசுவாசிக்கமாட்டேன் என்று கூறுகிறான்.

## அதிகாரம் - 20

விசுவாசிகளின் கூட்டத்தில் தோமாவைப்போல் ஒரு சிலர் இருப்பார்கள். அவர்களிடத்திலுள்ள அவிசுவாசத்தினால் மற்றவர்களையும் கெடுத்துவிடுவார்கள். இவர்களுடைய அவிசுவாசத்தினால் நன்றாக விசுவாசிக்கிறவர்கள்கூட சந்தேகப்பட ஆரம்பித்துவிடுவார்கள். ஆவிக்குரிய யுத்தத்தில் ஒருசிலர் கோழைகளாகயிருப்பார்கள். இவர்கள் தைரியமாக யுத்தம்பண்ணுகிற மற்றவர்களையும் கோழைகளாக்கிவிடுவார்கள். நம்முடைய விசுவாசத்தை நாம் காத்துக்கொள்ளவேண்டும். நாம் மற்றவர்களுடைய விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணுவதற்கு உதவிபுரியவேண்டும். நம்முடைய வார்த்தைகளினாலும் செய்கைகளினாலும் மற்றவர்களின் விசுவாசத்திற்கு தடைக்கல்லாக மாறிவிடக்கூடாது. விசுவாசிகளின் கூட்டத்தில் அவிசுவாசமும், பயமும் எப்போதுமே ஆபத்தானதுதான். அதைக்குறித்து நமக்கு கவனமும் எச்சரிப்பும் தேவை.

### இயேசுவும் தோமாவும்
### யோவா 20 : 26-31

**யோவா 20:26. மறுபடியும் எட்டுநாளைக்குப்பின்பு அவருடைய சீஷர்கள் வீட்டுக்குள்ளே இருந்தார்கள்; தோமாவும் அவர்களுடனேகூட இருந்தான்; கதவுகள் பூட்டப்பட்டிருந்தது. அப்பொழுது இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார்.**

**யோவா 20:27. பின்பு அவர் தோமாவை நோக்கி: நீ உன் விரலை இங்கே நீட்டி, என் கைகளைப் பார், உன் கையை நீட்டி, என் விலாவிலே போடு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார்.**

**யோவா 20:28. தோமா அவருக்குப் பிரதியுத்தரமாக: என் ஆண்டவரே! என் தேவனே! என்றான்.**

**யோவா 20:29. அதற்கு இயேசு: தோமாவே, நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார்.**

**யோவா 20:30. இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார்.**

**யோவா 20:31. இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது.**

**எட்டுநாளைக்குப் பின்பு**

**மறுபடியும் எட்டுநாளைக்குப்பின்பு அவருடைய சீஷர்கள் வீட்டுக்குள்ளே இருந்தார்கள்; தோமாவும் அவர்களுடனேகூட இருந்தான்; கதவுகள் பூட்டப்பட்டிருந்தது. அப்பொழுது இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார் (யோவா 20:26).**

இயேசுகிறிஸ்து எட்டு நாளைக்குப் பின்பு மறுபடியும் தம்முடைய சீஷருக்குத் தரிசனம்கொடுக்கிறார். இப்போது தோமா சீஷர்களோடு கூடயிருக்கிறான். "எட்டு நாளைக்குப் பின்பு" என்னும் வார்த்தையானது "வாரத்தின் முதலாம் நாளைக்" குறிக்கிற வார்த்தையாகும். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு முதலாவது தரிசனத்தைக் கொடுத்துவிட்டு, அதன் பின்பு எட்டுநாளைக்குப் பின்பே அவர்களுக்கு மறுபடியும் தரிசனம் கொடுக்கிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய சரீரத்தில் பிரத்தியட்சமாக ஜீவித்தபோது அவர் அவர்களோடு கூடவே இருந்தார். ஆனால் இப்போதோ அவர் உயிர்த்தெழுந்தவராக, தம்முடைய உயிர்த்தெழுந்த சரீரத்திலிருக்கிறார். இனிமேல் அவர் இப்பிரபஞ்சத்திற்குரியவரல்ல. பரலோகத்திற்குரியவர். எப்போதாவது ஒரு தடவைதான் இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்குத் தரிசம்கொடுப்பார். முன்புபோல அவர் எப்போதும் அவர்களோடு கூடவே இருக்கமாட்டார். இந்தச் சத்தியத்தை தம்முடைய சீஷருக்குத் தெளிவுபடுத்துவதற்காக, இயேசுகிறிஸ்து ஒருவேளை தம்முடைய முதலாவது தரிசனத்திற்கும், இந்தத் தரிசனத்திற்கும், எட்டு நாள் கால இடைவெளி கொடுத்திருக்கலாம்.

## அதிகாரம் - 20

இயேசுகிறிஸ்துவின் ஆரம்பகால ஊழியத்தில், அவர் நாற்பது நாட்கள் வனாந்தரத்தில் உபவாசம்பண்ணிக் கொண்டிருந்தார். பிசாசானவன் அவரைச் சோதித்தான். அந்த நாற்பது நாட்களில் சீஷர்கள் அவரைக் காணவில்லை. இப்போது இயேசுகிறிஸ்து தம்முடைய மகிமையின் ஆரம்ப நாட்களிலிருக்கிறார். உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்து இந்தப் பூமியில் நாற்பது நாட்கள் தம்முடைய உயிர்த்தெழுந்த சரீரத்திலிருப்பார். இந்தக் காலத்தில், அவர் பல சமயங்களில் தம்முடைய தரிசனத்தைச் சீஷருக்குக் கொடுக்கவில்லை. நாற்பது நாட்களிலும் சீஷர்கள் உயிர்த்தெழுந்த இயேசுவோடு கூடவே இருந்தார்கள் என்று வேதாகமத்தில் எழுதப்படவில்லை. தேவதூதர்கள் இக்காலத்தில் அவருக்குப் பணிவிடை செய்தார்கள்.

இயேசுகிறிஸ்து எட்டு நாளைக்குப்பின்பு மறுபடியும் தம்முடைய சீஷர்களைச் சந்திப்பதற்கு வருகிறார். இதற்கு முன்பு அவர் சீஷர்களைப் பார்க்கவந்தபோது, தோமா அவர்கள் மத்தியிலில்லை. மற்ற சீஷர்கள் தாங்கள் இயேசுகிறிஸ்துவைக் கண்டதை தோமாவிடம் சொன்னார்கள். ஆனால் அவனோ அவர்கள் வார்த்தையை விசுவாசிக்கவில்லை. தோமாவின் அவிசுவாசத்திற்காக இயேசுகிறிஸ்து அவனைக் கடிந்துகொள்ளவதற்காக இப்போது வந்திருக்கலாம். பல நாட்களாக தோமாவுக்கு இயேசுகிறிஸ்துவைத் தரிசிக்கும் சிலாக்கியம் கிடைக்கவில்லை.

நமக்கு வரும் ஒரு வாய்ப்பைத் தவறவிட்டுவிட்டால், அடுத்து வரும் வாய்ப்பை அக்கறையோடு பயன்படுத்திக்கொள்ளவேண்டும். நாம் ஒரு ஆபத்தில் சிக்கிக் கஷ்டப்பட்டால், மறுபடியும் அதுபோன்ற ஆபத்து வரும்போது மிகுந்த எச்சரிப்போடிருக்கவேண்டும். தோமா இயேசுகிறிஸ்துவைத் தரிசிக்கும் முதலாவது வாய்ப்பை தவறவிட்டுவிடுகிறான். ஆனால் இப்போதோ அடுத்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறான்.

இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்தபின்பு தம்முடைய சீஷர்களை முதன்முதலாகப் பார்க்கவந்தபோது அவர்களுக்கு மிகுந்த சந்தோஷமுண்டாயிற்று. அந்த வாரம் முழுவதும் தாங்கள் இயேசுகிறிஸ்துவைப் பார்த்ததைப்பற்றி மிகுந்த சந்தோஷத்தோடு பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் தோமாவால் அவர்களுடைய சந்தோஷத்தில் பங்குபெற முடியவில்லை. மற்ற சீஷர்களுக்குச் சந்தோஷம். தோமாவுக்கோ துக்கம். அவர்களுடைய வார்த்தையை நம்பி தோமாவும் சந்தோஷமாயிருந்திருக்கலாம். ஆனால் தோமாவோ அவர்களுடைய வார்த்தையை நம்பவில்லை.

ஒவ்வொரு நாளும் தோமா விசுவாசத்தோடும் பொறுமையோடும் இருக்கிறான். கர்த்தரைக் காண்பதற்கு தனக்கு மற்றும் ஒரு வாய்ப்புக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறான். மற்ற சீஷர்கள் இயேசுகிறிஸ்துவைக் கண்டதினால் சந்தோஷமாயிருக்கிறார்கள். ஆனால் தோமாவுக்கு இயேசுவைக் காணும் சிலாக்கியம் கிடைக்கவில்லை. அவரைக் காணாமலேயே விசுவாசிக்கும் மனமுமில்லை. தோமா இயேசுகிறிஸ்துவின் சரீரப்பிரகாரமான பிரசன்னத்தை அதிகமாகச் சார்ந்திருக்கிறான். இயேசுகிறிஸ்து இனிமேல் அவர்களோடு தம்முடைய சரீரத்தில் எப்போதும் கூடவே இருக்கமாட்டார். சரீரத்தில் இயேசு கிறிஸ்துவின் சரீரப்பிரகாரமான பிரசன்னத்தை விட்டுப் பிரிந்திருப்பதற்கு சீஷர்களெல்லோரும் தங்களை ஆயத்தப்படுத்திக்கொள்ளவேண்டும்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களை வாரத்தின் முதலாம் நாளில் சந்திக்க வந்ததினால், அந்த நாள் விசேஷித்த நாளாகயிருக்கிறது. இயேசுகிறிஸ்து அந்த நாளை பரிசுத்தப்படுத்தியிருக்கிறார். கர்த்தருடைய விசுவாசிகளுக்கு வாரத்தின் முதலாம் நாளே ஓய்வுநாளாகும். இயேசுகிறிஸ்துவும் இந்த நாளை சபை கூடிவரும் நாளாக அனுமதித்திருக்கிறார். இந்த நாளிலிருந்து கர்த்தருடைய பிள்ளைகள், வாரத்தின் முதலாம் நாளாகிய ஞாயிற்றுக்கிழமையில் சபையாகக் கூடி கர்த்தரை ஆராதிக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் எருசலேமிலுள்ள ஒரு வீட்டிலிருக்கிறார்கள். வீட்டின் கதவுகள் பூட்டப்பட்டிருக்கிறது. எட்டு நாளைக்கு முன்பும் சீஷர்கள் யூதருக்குப் பயந்ததினால், கதவுகளைப் பூட்டி வீட்டிற்குள் இருந்தார்கள். இன்னும் அவர்களுடைய பயம் தெளியவில்லை. ஆகையினால் கதவுகள் பூட்டப்பட்ட வீட்டிலேயே இன்னும் பயத்தோடிருக்கிறார்கள். எட்டு நாளைக்கு முன்பு தோமா இவர்களோடு இல்லை. இயேசுகிறிஸ்து அவர்களுக்கு முதலாவதாகக் கொடுத்த தரிசனத்தை தோமா பார்க்கவில்லை. ஆனால் இப்போதோ தோமா அவர்களோடு கூட இருக்கிறான். இயேசுவைத் தரிசிக்கும் சிலாக்கியத்தைப் பெற்றுக்கொள்கிறான்.

## அதிகாரம் - 20

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நமக்கு வருகிற ஒரு வாய்ப்பைப் பயன்படுத்தத் தவறிவிடுவோமென்றால், அடுத்த வாய்ப்பை ஆவலோடு எதிர்பார்த்து, அந்த வாய்ப்பு வரும்போது அதை அக்கறையோடு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் தோமாவை இன்னும் நேசிக்கிறார்கள். அவர்கள் இயேசுகிறிஸ்துவைப் பார்த்ததை தோமா விசுவாசிக்காவிட்டாலும், அவர்கள் தோமாவை விலக்கி வைத்துவிடவில்லை. தங்களோடு சேர்த்துக்கொள்கிறார்கள். அவனோடு தேவையில்லாமல் விவாதம்பண்ணவில்லை. இயேசுகிறிஸ்து தங்களைப் பார்க்க வரும்போது, தோமாவும் தங்களோடு கூட இருக்கவேண்டுமென்று விரும்பி, அவனைத் தங்களிடத்தில் சேர்த்துக்கொள்கிறார்கள்.

எட்டு நாளைக்கு முன்பு இயேசுகிறிஸ்து சீஷர்களைப் பார்க்க வந்தபோது தோமா அங்கு இல்லை. அதற்காக இயேசு அவன் இருக்கும் இடத்தைத் தேடிப்பார்த்து, அவனுக்குத் தனியாக தரிசனம் கொடுக்கவில்லை. மற்ற சீஷர்களோடு அவன் சேர்ந்து ஐக்கியமாக இருக்கும் வரையிலும், அவனுக்கு இயேசுகிறிஸ்துவின் தரிசனம் கிடைக்கவில்லை. இயேசுகிறிஸ்து எப்போதுமே நமக்கு மாத்திரம் விசேஷமாக ஏதாவது செய்வாரென்று நாம் எப்போதும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கக்கூடாது. மற்ற விசுவாசிகளை ஆசீர்வதிப்பதுபோலவே நம்மையும் ஆசீர்வதிப்பார்.

எட்டு நாளைக்குப் முன்பு, தோமாவைத் தவிர மற்ற எல்லா விசுவாசிகளும் இயேசுவைத் தரிசித்தார்கள். தாங்கள் தரிசித்ததை அவர்கள் தோமாவுக்குச் சொன்னார்கள். ஆனால் அவனோ அவர்கள் வார்த்தையை விசுவாசிக்கவில்லை. இதற்காக அவர்கள் தோமாவை ஒருவேளை கடிந்து சொல்லியிருக்கலாம். ஆனால் இயேசுகிறிஸ்துவோ தோமாவின்மீது அன்பாகவும் கிருபையாகவும் இருக்கிறார். தன்னை விசுவாசிக்காத தோமாவைப் பார்க்கக்கூடாது என்று இயேசுகிறிஸ்து முடிவு பண்ணிவிடவில்லை. அவனும் மற்ற சீஷர்களோடிருக்கும்போது இயேசுகிறிஸ்து அவர்கள் நடுவே வந்து நிற்கிறார்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களை ஒருபோதும் கைவிடவில்லை. சீஷர்களோ யூதர்களுக்குப் பயப்படுகிறார்கள். சாதாரண ஒரு வீட்டில், கதவுகளைப் பூட்டிக்கொண்டு பயத்தோடிருக்கிறார்கள். அவர்களை ஆறுதல் படுத்துவதற்காகவும், பெலப் படுத்துவதற்காகவும் இயேசுகிறிஸ்து அவர்கள் நடுவிலே வந்து நிற்கிறார். இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் எங்கெல்லாம் கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவில் அவர் வந்து நிற்கிறார். ஏற்கெனவே இயேசு தம்முடைய சீஷர்களைச் சந்தித்தபோது "உங்களுக்குச் சமாதானம்" என்று சொன்னவர், இப்போது மறுபடியும் அவர்களைப் பார்க்கும்போது "உங்களுக்குச் சமாதானம்" என்று கூறுகிறார்.

இயேசுகிறிஸ்து இரண்டுமுறை தம்முடைய சீஷருக்குச் சமாதானம் சொன்னதினால், அவருடைய வார்த்தை வீணாய்போய்விடவில்லை. இயேசுகிறிஸ்துவின் சமாதானம் சீஷர்களுடைய உள்ளத்தில் பரிபூரணமடைகிறது. நிரம்பி வழிகிறது. இயேசுகிறிஸ்து தம்முடைய பிள்ளைகளை ஆசீர்வதிக்கும்போது, அவர் அவர்களைத் தொடர்ந்து ஆசீர்வதித்துக்கொண்டிருக்கிறார்.

**விசுவாசியாயிரு**

**பின்பு அவர் தோமாவை நோக்கி: நீ உன் விரலை இங்கே நீட்டி, என் கைகளைப் பார், உன் கையை நீட்டி, என் விலாவிலே போடு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார் (யோவா 20:27).**

இயேசுகிறிஸ்துவுக்கும் தோமாவுக்கும் இடையில் நடைபெற்ற இந்தச் சம்பவம், யோவான் எழுதின இந்த சுவிசேஷத்தில் மாத்திரமே எழுதப்பட்டிருக்கிறது. தோமா மற்ற சீஷர்களோடு கூடயிருந்தாலும், இயேசுகிறிஸ்து அவனிடத்தில் தனியாகப் பேசுகிறார். "நீ உன் விரலை இங்கே நீட்டி, என் கைகளைப் பார், உன் கையை நீட்டி, என் விலாவிலே போடு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு" என்று தோமாவிடத்தில் கூறுகிறார்.

தாங்கள் இயேசுவைக் கண்டதாகச் சீஷர்கள் சொன்னபோது, அதற்குத் தோமா "அவருடைய கைகளில் ஆணிகளினால் உண்டான காயத்தை நான் கண்டு, அந்தக் காயத்திலே என் விரலையிட்டு, என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்கமாட்டேன்" என்று கூறினான். இயேசுகிறிஸ்துவோடு கூடவே இருந்தவன், இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்னும் சத்தியத்தை மறந்துவிடுகிறான். தோமா இந்த வார்த்தைகளைச் சொன்னபோது இயேசுகிறிஸ்து அங்கேயில்லை. இயேசு கிறிஸ்துவுக்கு யாரும் இந்த வார்த்தைகளைச் சொல்லவுமில்லை. இயேசுகிறிஸ்து சர்வஞானமுள்ளவர். அவருக்கு மறைவான காரியம் ஒன்றுமில்லை. தோமாவின் வார்த்தைகளுக்குப் பிரதியுத்தரம் கூறும் விதமாக இயேசுகிறிஸ்து அவனிடத்தில் "நீ உன் விரலை நீட்டி, என் கைகளைப் பார். உன் கையை நீட்டி என் விலாவிலே போடு" என்று சொல்லுகிறார்.

## அதிகாரம் - 20

தோமா தன்னுடைய விசுவாசத்தில் பலவீனமாயிருக்கிறான். எதுவும் நிரூபிக்கப்பட்டால்தான் தோமா விசுவாசிப்பான். காணாமல் விசுவாசிப்பதற்கு தோமா ஆயத்தமாகயில்லை. இயேசுகிறிஸ்துவைக் காணாவிட்டால் விசுவாசிக்கமாட்டேன் என்று தோமா கூறினாலும், இயேசு அவன்மீது அன்பாகவே இருக்கிறார். அவனுடைய அவிசுவாசத்தில் அவனை அப்படியே விட்டுவிடாமல், அவனுடைய அவிசுவாசம் நீங்கி அவன் விசுவாசத்தைப் பெற்றுக்கொள்வதற்கு உதவிபுரிகிறார். தம்முடைய காயங்களை அவனுக்குக் காண்பிக்கிறார். அவனுடைய விரலை நீட்டி தம்முடைய கைகளை பார்க்குமாறு கூறுகிறார். மேலும் அவனுடைய கையை நீட்டி தம்முடைய விலாவிலே போடுமாறும் கூறுகிறார். இப்படிச் சோதித்துப் பார்த்தாவது அவன் தன்னை விசுவாசிக்கமாட்டானா என்று இயேசுகிறிஸ்து எதிர்பார்க்கிறார்.

இயேசுகிறிஸ்து நம்முடைய விசுவாசத்தையும் பெலப்படுத்த விரும்புகிறார். அவருடைய மரணத்தை நினைவுகூரும் வண்ணமாக நமக்கு திருவிருந்து ஆராதனையைச் சபையின் நியமமாக ஸ்தாபனம்பண்ணியிருக்கிறார். நாம் ஒவ்வொருமுறை கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறும்போதும், அவருடைய மரணத்தை நினைவுகூருகிறோம். நம்முடைய விரலை நீட்டி அவருடைய சரீரத்திற்கு அடையாளமாக இருக்கும் அப்பத்தைத் தொடுகிறோம். இயேசுகிறிஸ்து தோமாவிடம் அவனுடைய விரலை நீட்டி தம்முடைய கைகளைப் பார்க்குமாறு கூறினார். தோமாவுக்குச் சொன்ன வார்த்தையை இயேசுகிறிஸ்து நமக்கும் சொல்லுகிறார். நம்முடைய கைகளை எப்போதுமே இயேசுகிறிஸ்துவுக்கு நேராக நீட்டவேண்டும். அவரும் தம்முடைய கைகளை நம் ஆசீர்வதிக்கும் வண்ணமாகவும், நம்மை வரவேற்கும் வண்ணமாகவும், நமக்கு உதவிபுரியும் வண்ணமாகவும் நீட்டுகிறார். இயேசுகிறிஸ்துவின் கரங்களில் நாம் அடைக்கலம் பெறும்போது அதுவே நமக்கு மெய்யான பாதுகாப்பாக இருக்கும்.

இயேசுகிறிஸ்து தோமாவிடம் அவருடைய கையை நீட்டி தம்முடைய விலாவிலே போடு என்று சொன்ன பின்பு, அவனிடத்தில் "அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு" என்று கூறுகிறார். இந்த எச்சரிப்பு தோமாவுக்கு மாத்திரமல்ல, நம் எல்லோருக்குமே கொடுக்கப்படுகிறது. நாம் அவிசுவாசிகளாயிருக்கக் கூடாது. விசுவாசிகளாயிருக்க வேண்டும். நாம் அவிசுவாசிகளாயிருப்போமென்றால், நாம் கிறிஸ்து இல்லாதவர்களாகவும், நம்பிக்கையில்லாதவர்களாகவும், கிருபையில்லாதவர்களாகவும், சந்தோஷமும் சமாதானமும் இல்லாதவர்களாகவும் இருப்போம். நம்முடைய நிலைமை மிகவும் பரிதாபமாக இருக்கும்.

**என் ஆண்டவரே! என் தேவனே!**

**தோமா அவருக்குப் பிரதியுத்தரமாக: என் ஆண்டவரே! என் தேவனே! என்றான் (யோவா 20:28).**

இயேசுகிறிஸ்துவின் வார்த்தையைக் கேட்டபோது, தோமா தன்னுடைய அவிசுவாசத்திற்காக வெட்கப்படுகிறான். வேதனைப்படுகிறான். தன் உள்ளத்தின் ஆழத்திலிருந்து இயேசுகிறிஸ்துவை "என் ஆண்டவரே! என் தேவனே!" என்று அழைக்கிறான். இயேசுகிறிஸ்து சொன்ன பிரகாரமாக தோமா தன் கையை நீட்டி இயேசுகிறிஸ்துவின் விலாவிலே போட்டானா என்று நமக்குத் தெரியவில்லை. சுவிசேஷத்தில் அதைப்பற்றி எழுதப்படவுமில்லை. ஆனால் இயேசுகிறிஸ்துவோ அவனிடம் "நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய்" (யோவா 20:29) என்று கூறுகிறார்.

இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த சத்தியத்தை தோமா இப்போது முழுமையாக விசுவாசிக்கிறான். விசுவாசித்து திருப்தியோடு இருக்கிறான். ஆரம்பத்தில் அவன் இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை உடனடியாக விசுவாசிக்கவில்லை. நம்முடைய விசுவாசத்தை வலுப்படுத்துவதற்கு, அவனுடைய அவிசுவாசம் நமக்கு எச்சரிப்பாகவும் பாடமாகவும் இருக்கவேண்டும். நாம் அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிருக்கவேண்டும். தோமா இயேசுகிறிஸ்துவைத் தன்னுடைய ஆண்டவராகவும் தன்னுடைய தேவனாகவும் விசுவாசிக்கிறான். தோமாவைப்போலவே நாமும் இயேசுகிறிஸ்துவை நம்முடைய ஆண்டவராகவும் நம்முடைய தேவனாகவும் விசுவாசிக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவின் தெய்வத்துவத்தை நாம் விசுவாசிக்கவேண்டும். இயேசுகிறிஸ்து தேவனாகவே இருக்கிறார். அவர் மனுஷனால் உருவாக்கப்பட்ட தேவனல்ல. தேவனே மனுஷனை சிருஷ்டித்தவர்.

## அதிகாரம் - 20

தோமா இயேசுகிறிஸ்துவைப் பார்க்கும்போது அவரைத் தன்னுடைய ஆண்டவராக அங்கீகரித்து விசுவாசிக்கிறான். அவர் மாத்திரமே நமக்கு ஆண்டவராகயிருக்கிறார். தேவனுக்கும் மனுஷனுக்கும் இடையிலுள்ள பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதற்கு, இயேசுகிறிஸ்துவால் மாத்திரமே முடியும். இயேசுகிறிஸ்துவே மத்தியஸ்தர். அவரால் மாத்திரமே தேவனுக்கும் மனுஷருக்கும் நடுவே மத்தியஸ்தராகயிருந்து, மனுஷரைத் தேவனோடு ஒப்புரவாக்க முடியும். நம்முடைய சந்தோஷம் நிறைவாயிருக்கவேண்டுமென்றால், இயேசுகிறிஸ்துவை நம்முடைய ஜீவியத்திற்கு ஆண்டவராக ஏற்றுக்கொண்டு, அவருடைய கற்பனைகளுக்கு நாம் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவை நம்முடைய தேவனாக அங்கீகரித்து அவரைத் துதித்து ஸ்தோத்திரம் பண்ணவேண்டும்.

தோமா இயேசுகிறிஸ்துவைத் தன்னுடைய ஆண்டவராகவும், தன்னுடைய தேவனாகவும் அங்கீகரித்து விசுவாசிக்கிறான். தோமாவைப்போலவே நாமும் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கவேண்டும். பிதாவாகிய தேவன் குமாரனாகிய தேவனை இந்தப் பூமிக்கு அனுப்பியிருக்கிறார். இயேசுகிறிஸ்து குமாரனாக இருந்தாலும், அவர் தேவனாகவும் இருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் தெய்வத்துவத்தை நாம் அங்கீகரிக்கவேண்டும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவிய இந்த விசுவாசமே மிகவும் முக்கியமானது.

தன் மனதிற்குள் உண்டான எண்ணத்தைத் தோமா விசுவாசத்தோடு அறிக்கை செய்கிறான். அவன் இயேசுகிறிஸ்துவை நோக்கி "என் ஆண்டவரே, என் தேவனே" என்று அறிக்கை செய்கிறான். ஒருவேளை தோமா அங்கு கூடியிருக்கிற மற்ற சீஷரிடத்தில், "இவர் என்னுடைய ஆண்டவர், இவர் என்னுடைய தேவன்" என்று அறிக்கை செய்திருக்கலாம். நாம் இயேசுகிறிஸ்துவை நம்முடைய ஆண்டவராகவும், தேவனாகவும் அங்கீகரித்து விசுவாசிக்கும்போது, நாம் அவருடைய சமுகத்திற்கு முன்பாக நின்று "நீர் என் ஆண்டவர், நீர் என் தேவன்" என்று அறிக்கை செய்யவேண்டும்.

இயேசுகிறிஸ்துவுக்கும் நமக்குமுள்ள இந்த ஐக்கியத்தை, அவரிடத்தில் விசுவாசத்தோடு அறிக்கை செய்வதுபோல, பிறரிடத்திலும் அறிக்கைசெய்யவேண்டும். தோமா இப்போது இயேசுகிறிஸ்துவை தன் முழுஇருதயத்தோடும், முழுபலத்தோடும், முழுமனதோடும் விசுவாசிக்கிறான்.

### காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள்

**அதற்கு இயேசு: தோமாவே, நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார் (யோவா 20:29).**

இயேசுகிறிஸ்து தோமாவை ஒரு விசுவாசியாக அங்கீகரிக்கிறார். அவன் தன் விசுவாசத்தில் பலவீனமாகயிருந்தாலும், விசுவாசிப்பதில் தாமதமாக இருந்தாலும், இயேசுகிறிஸ்து தம்முடைய கிருபையினால் அவனுடைய விசுவாசத்தை அங்கீகரிக்கிறார். "தோமாவே, நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்" என்று அவனிடத்தில் கூறுகிறார்.

கடந்த எட்டு நாட்களாக தோமாவின் உள்ளத்தில் சந்தோஷமும் சமாதானமும் இல்லாமற்போயிற்று. இதற்கு அவனுடைய அவிசுவாசமே காரணம். இப்போது தோமா இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதினால் அவனுக்குச் சந்தோஷமும் சமாதானமும் உண்டாயிற்று. நாமும் இயேசுகிறிஸ்துவை மெதுவாக விசுவாசித்தால், தேவஆசீர்வாதம் நமக்கு மெதுவாகக் கிடைக்கும். உடனே விசுவாசித்தால் தேவஆசீர்வாதம் உடனே கிடைக்கும். தோமா ஒருவேளை, "நான் இயேசுகிறிஸ்துவை முன்னமேயே விசுவாசியாமல் போய்விட்டேனே" என்று வருத்தப்பட்டிருக்கலாம்.

இக்காலத்திலும் சிலர் இயேசுகிறிஸ்துவைத் தங்களுடைய இரட்சகராக, உடனடியாக ஏற்றுக்கொள்ளாமல் காலதாமதம் பண்ணுகிறார்கள். வயதான காலத்தில் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, தங்களுடைய நாட்களை வீணாக்கிவிட்டதாக வருத்தப்படுகிறார்கள். எப்படியோ இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்னும் ஆறுதல் அவர்களுடைய உள்ளத்தில் இருந்தாலும், இரட்சிக்கப்படாமல் இருந்த காலத்தில் அவர்கள் சந்தோஷமும் சமாதானமும் ஜீவனும் பண்ணியிருக்கிறார்கள்.

## அதிகாரம் - 20

கண்டால்தான் விசுவாசிக்க முடியும் என்னும் தத்துவம் நமக்குள் வரக்கூடாது. காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள். நாம் கண்ணாரக் கண்டதை மாத்திரமே விசுவாசிப்போமென்று பிடிவாதமாகயிருந்தால், இந்த உலகத்தில் ஏராளமான ஜனங்கள் விசுவாசிகளாகயிருக்கவே முடியாது. நாம் கேள்விப்படுகிற சுவிசேஷத்தை விசுவாசிக்கவேண்டும். விசுவாசம் என்பது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணாப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. தோமா இயேசுகிறிஸ்துவின் விலாவிலே தன்னுடைய கையைப் போட்டாலொழிய விசுவாசிக்கமாட்டேன் என்று கூறினான். ஆகையினால்தான் இயேசு அவனைக் கடிந்துகொள்ளும் விதமாக “நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்” என்று கூறுகிறார்.

தோமா இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறான். ஆகையினால் இவன் மெய்யாகவே பாக்கியவான்தான். ஆனால் இவனோ இயேசுகிறிஸ்துவைக் கண்டு விசுவாசித்தவன். இயேசுகிறிஸ்துவைக் காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்களாகிய நாம், தோமாவைவிடப் பாக்கியவான்கள். இயேசுகிறிஸ்து செய்த அற்புதங்களையும், அவருடைய உயிர்த்தெழுதலையும் காணாதிருந்தும், அவரைத் தங்கள் ஆண்டவராகவும், இரட்சகராகவும், தேவனாகவும் விசுவாசிக்கிறவர்கள் மெய்யாகவே பாக்கியவான்கள்.

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் அவருடைய சுவிசேஷச் செய்தியை உலகமெங்கும் பிரசங்கம்பண்ணவேண்டும். அவர்கள் புறஜாதியாரிடத்தில் இயேசுகிறிஸ்துவைப்பற்றியும் அவருடைய சுவிசேஷத்தைப்பற்றியும் அறிவிக்கவேண்டும். புறஜாதியார்கள் இயேசுகிறிஸ்துவை அவருடைய மாம்சத்தில் தரிசிக்கவில்லை. காணாதிருந்தும் அவர்கள் இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைக்கிறார்கள். ஆகையினால்தான் இயேசுகிறிஸ்து “காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்” என்று கூறுகிறார்.

நாம் நம்புகிற காரியங்கள் உறுதிபண்ணப்படும்போது நமக்கு, சந்தோஷமாகவும் ஆறுதலாகவும், ஆசீர்வாதமாகவும் இருக்கும். நம்முடைய உள்ளத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாகும். தேவனுடைய கிருபையினாலேயே, காணாதவற்றை நம்மால் விசுவாசிக்க முடியும். ஆகையினால் நாம் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணும்போது, அதைக் கேட்கிற ஜனங்கள் விசுவாசிக்கும் வண்ணமாக, தேவனுடைய கிருபை அவர்கள்மீது வந்து இறங்கவேண்டும் என்று ஜெபிக்கவேண்டும்.

### வேறு அநேக அற்புதங்கள்

**இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவன் அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது (யோவா 20:30,31).**

ஒரு வரலாற்று ஆசிரியர் தன்னுடைய வரலாற்று நூலுக்கு முடிவுரை எழுதுவதுபோல, அப்போஸ்தலனாகிய யோவான் இந்த சுவிசேஷத்திற்கு முடிவுரை எழுதியிருக்கிறார். இயேசுகிறிஸ்து வேறு அநேக அற்புதங்களைச் செய்ததாகவும், அவைகள் இந்தப் புஸ்தகத்தில் எழுதப்படவில்லையென்றும் குறிப்பிட்டிருக்கிறார். நம்முடைய விசுவாசத்தை உறுதிபண்ணுவதற்காகவே இந்த அடையாளங்களோடு, மேலும் பல அடையாளங்களும் அற்புதங்களும் நடைபெற்றுள்ளன. இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின்போது நடைபெற்ற சம்பவம், அவர் செய்த அற்புதங்களில் ஒரு பகுதி மாத்திரமே ஆகும். இவை தவிர இயேசுகிறிஸ்து இன்னும் அநேக அற்புங்களையும் செய்திருக்கிறார்.

இயேசுகிறிஸ்து தாம் செய்த அற்புதங்களை எல்லாம் தம்முடைய சீஷருக்கு முன்பாகச் செய்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் அவருடைய உயிர்த்தெழுதலை மற்றவர்களுக்கு முன்பாக சாட்சியாக அறிவிக்கவேண்டும். ஆகையினால் எந்தவிதமான சந்தேகமுமில்லாமல் இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை சீஷர்களுக்கு நிரூபிப்பது அவசியமாயிற்று.

## அதிகாரம் - 20

இயேசுகிறிஸ்து செய்த வேறு அநேக அற்புங்கள் சுவிசேஷப் புஸ்தகத்தில் ஏன் எழுதப்படவில்லை என்று நாம் கேள்வி கேட்கவேண்டிய அவசியமில்லை. இயேசுகிறிஸ்துவும் மெய்யானவர். அவர் உயிர்த்தெழுந்ததும் மெய்யானது. அவருடைய சரித்திரம் தெய்வீக வரலாறு. அவர் மனுஷன் என்பதும், தேவனென்பதும் மெய்யான சத்தியம். ஒரு உண்மையை நிரூபிப்பதற்கு ஏராளமான சான்றுகள் தேவையில்லை. இரண்டு சாட்சிகளே போதும். சுவிசேஷத்தில் எழுதப்பட்டிருக்கும் அற்புதங்களே, இயேசுகிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நாம் வாசித்து விசுவாசிப்பதற்குப் போதுமானது.

இயேசுகிறிஸ்து செய்த இந்த அற்புதங்களை விசுவாசித்து, அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாக இவைகள் எழுதப்பட்டிருக்கிறது. நம்மிடத்தில் அவிசுவாசம் காணப்படுமானால் அதைக் கடிந்துகொள்வதற்காகவும், நம்மிடத்தில் காணப்படும் விசுவாசத்தை வர்த்திக்கப் பண்ணுவதற்காகவும் இயேசுகிறிஸ்து செய்த அற்புதங்கள் சுவிசேஷத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இந்த அற்புங்களே நமக்குப் போதுமானவை. இந்த அற்புதங்களை வாசித்து, இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நாம் விசுவாசிக்க வேண்டும். விசுவாசிக்காவிட்டால், இதற்குமேல் அற்புங்களை எழுதினாலும் அவற்றை நாம் வாசிக்கப்போவதுமில்லை, வாசித்தாலும் இயேசுவைத் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று விசுவாசிக்கப்போவதுமில்லை.

வரலாற்று ஆசிரியர்கள் தாங்கள் சொல்ல விரும்புகிறதையெல்லாம் சொல்லுவார்கள். தங்களிடத்திலுள்ள செய்திகளையெல்லாம் எழுதுவார்கள். இதனால் அவர்களுக்கு நற்பெயர் உண்டாகும். ஆனால் தேவனோ மனுஷரைப்போல தம்முடைய சத்தியத்தை எழுதுவதில்லை. நமக்கு விசுவாசத்தைக் கொடுக்கவேண்டுமென்பதே தேவனுடைய சித்தம். நாம் வாசித்து பரவசமடையவேண்டும் என்பதற்காகவோ அல்லது சிரித்து மகிழ வேண்டுமென்பதற்காகவோ இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் எழுதப்படவில்லை. இதை வாசித்து, "இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்று நாம் விசுவாசிக்கவேண்டும். இதற்காகவே சுவிசேஷம் எழுதப்பட்டிருக்கிறது. நமது விசுவாசத்திற்கு எவ்வளவு எழுதப்படவேண்டுமோ அவ்வளவு எழுதப்பட்டிருக்கிறது.

சுவிசேஷத்தில் எழுதப்பட்டிருக்கும் அற்புதங்களையும் அடையாளங்களையும் நாம் வாசிக்கும்போது நம்முடைய விசுவாசம் விருத்தியடையவேண்டும். இயேசுகிறிஸ்து செய்த அற்புங்களையெல்லாம் வாசிக்கும்போது, அவரே தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்னும் விசுவாசம் நமக்குள் உண்டாகவேண்டும். இதுவே சுவிசேஷம் எழுதப்பட்டிருப்பதன் அடிப்படை நோக்கம். இதுவே தேவனுடைய திட்டம். ஒரு சிலருக்கு காலத்திற்கேற்ற பிரயோஜனமுண்டாகவேண்டும் என்னும் நோக்கத்தில் சுவிசேஷகர்கள் சுவிசேஷப் புஸ்தகங்களை எழுதவில்லை. ஜனங்களை இயேசுகிறிஸ்துவிடம் அழைத்து வரவேண்டுமென்பதற்காகவும், அவர்களைப் பரலோகத்திற்குள் பிரவேசிப்பதற்கு வழிநடத்தவேண்டுமென்பதற்காகவும், ஜனங்கள் இயேசுகிறிஸ்துவை தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று விசுவாசிப்பதற்கு உதவிபுரியவதற்காகவும் சுவிசேஷங்கள் எழுதப்பட்டிருக்கிறது.

நாம் சுவிசேஷத்தை வாசிக்கும்போது உலகப்பிரகாரமான ஒரு வரலாற்றுப் புஸ்தகத்தைப்போலவோ, ஒரு நாவல் புஸ்தகத்தைப்போலவோ, ஒரு கதைப் புஸ்தகத்தைப்போலவோ வாசிக்கக்கூடாது. சுவிசேஷத்தை வாசிப்போருக்கும் கேட்போருக்கும் ஒரு கடமையுள்ளது. சுவிசேஷத்தை வாசித்து நாம் விசுவாசிக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தை வாசித்து அதை அங்கீகரிக்கவேண்டும். அவருடைய வார்த்தையின் பிரகாரமாக ஜீவிக்கவேண்டும்.

இயேசுவே கிறிஸ்து என்பதும், அவரே தேவனுடைய குமாரனென்பதும் சுவிசேஷத்தில் சொல்லப்பட்டிருக்கும் பிரதான சத்தியமாகும். இயேசுகிறிஸ்து தேவனால் அபிஷேகம்பண்ணப்பட்டிருக்கிற உலக இரட்சகர். அவர் தேவனுடைய குமாரன். தேவனுடைய வல்லமையைப் பெற்றிருக்கிறவர். தேவனுடைய மகிமைக்குப் பாத்திரர். அவர் ராஜாதி ராஜா. அவர் கர்த்தாதி கர்த்தா. சுவிசேஷங்களில் இந்தச் சத்தியமே எழுதப்பட்டிருக்கிறது. இவற்றை நாம் வாசித்து விசுவாசிக்கவேண்டும். தேவனுடைய சத்தியத்தை இருதயத்தில் ஏற்றுக்கொண்டு, அதன் பிரகாரமாக நம்முடைய ஜீவியம் அமையவேண்டும்.

## அதிகாரம் - 20

சுவிசேஷத்தை நாம் வாசிக்கும்போது நமக்கு நம்பிக்கையும் ஆசீர்வாதமும் கிடைக்கிறது. இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நாம் நித்திய ஜீவனையடைவோம் என்பதே நம்முடைய நம்பிக்கை. இயேசுகிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனென்று நாம் விசுவாசிக்கும்போது, அவருடைய நாமத்தினாலே நாம் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்கிறோம். இயேசுகிறிஸ்துவின் மூலமாக நாம் பெற்றுக்கொள்கிற ஜீவியம் நமக்கு நிறைவான சந்தோஷத்தைக்கொடுக்கும். அதுவே நித்திய ஜீவன். அதுவே பரிபூரண ஜீவன். நித்திய ஜீவன் நமக்குக் கிடைப்பதினால், இயேசுகிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்குமாறு நாம் உற்சாகப்படுத்தப்படுகிறோம்.

எல்லா மனுஷருமே எதையாவது சாதிக்க வேண்டுமென்று விரும்புவார்கள். மனுஷன் எதைச்செய்தாலும் அதனால் தனக்கு லாபம் என்ன என்று கணக்குப் பார்ப்பான். மனுஷனுடைய சுபாவம் மாறாது. அவன் சுவிசேஷத்தை வாசித்தாலும், இயேசுவைக் கிறிஸ்து என்றும், தேவனுடைய குமாரனென்றும் விசுவாசித்தாலும், அதனால் தனக்கு என்ன லாபம் என்றுதான் கணக்குப் பார்ப்பான். விசுவாசத்தினால் மனுஷருக்குக் கிடைக்கும் லாபத்தைப்பற்றி சுவிசேஷம் தெளிவுபடுத்துகிறது. நாம் இயேசுவைக் கிறிஸ்து என்றும், தேவனுடைய குமாரனென்றும் விசுவாசிக்கும்போது, அவருடைய நாமத்தினாலே நாம் நித்திய ஜீவனை அடைவோம். இந்த நித்திய ஜீவனே நமக்குக் கிடைக்கும் ஆசீர்வாதம். இதுவே நமக்குக் கிடைக்கும் லாபம்.

சுவிசேஷத்தின் மூலமாக நமக்கு ஆவிக்குரிய ஜீவனும் கிடைக்கிறது. நித்திய ஜீவனும் கிடைக்கிறது. இவை இரண்டுமே இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலேயே நமக்குக் கிடைக்கிறது. இயேசுகிறிஸ்துவை உண்மையாய் விசுவாசிக்கிற எல்லா விசுவாசிகளுக்கும் ஆவிக்குரிய ஜீவனும் நித்திய ஜீவனும் கிடைக்குமென்பது மாறாத சத்தியமாகும்.

## அதிகாரம் - 21

அப்போஸ்தலனாகிய யோவான் இந்த அதிகாரத்தோடு இந்தச் சுவிசேஷத்தை நிறைவுசெய்கிறார். இயேசுகிறிஸ்துவின் வரலாற்றை இந்த அதிகாரத்தோடு எழுதி முடிக்கிறார். உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்து தொடர்ந்து அற்புதங்களைச் செய்கிறார். யோவான் அவற்றை மறுபடியுமாக எழுதுகிறார். இயேசுகிறிஸ்து செய்த வேறு அநேக அற்புதங்களும் உண்டு என்று யோவான் எழுதியிருக்கிறார். அவற்றில் ஒன்றை யோவான் இந்த அதிகாரத்தில் எழுதியிருக்கிறார்.

திபேரியா கடற்கரையில் இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரில் சிலருக்குத் தரிசனம் கொடுக்கிறார். சீஷர்கள் மீன் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். அப்போது இயேசுகிறிஸ்து தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்திக் காண்பிக்கிறார். அவர்கள் இயேசுகிறிஸ்து செய்த அற்புதத்தினால் திரளான மீன்களைப் பிடிக்கிறார்கள். இயேசுகிறிஸ்து அவர்களோடுகூடப் புசிக்கிறார் (யோவா 21:1-14) போஜனம் பண்ணி முடித்தபின்பு இயேசுகிறிஸ்து பேதுருவோடு உரையாடிய சம்பவம். இயேசுகிறிஸ்து பேதுருவிடம் தம்மைப்பற்றி கூறியது (யோவா 21:15-19). இயேசுகிறிஸ்து பேதுருவிடம் யோவானைப்பற்றிக் கூறியது (யோவா 21:20-23). சுவிசேஷத்தின் முடிவுரை (யோவா 21:24,25).

### இயேசுவும் சீஷரும்
### யோவா 21 : 1-14

**யோவா 21:1. இவைகளுக்குப்பின்பு இயேசு திபேரியா கடற்கரையிலே மறுபடியும் சீஷருக்குத் தம்மை வெளிப்படுத்தினார்; வெளிப்படுத்தின விவரமாவது:**

**யோவா 21:2. சீமோன்பேதுருவும், திதிமு என்னப்பட்ட தோமாவும், கலிலேயா நாட்டிலுள்ள கானா ஊரானாகிய நாத்தான்வேலும், செபதேயுவின் குமாரரும், அவருடைய சீஷரில் வேறு இரண்டுபேரும் கூடியிருக்கும்போது,**

**யோவா 21:3. சீமோன்பேதுரு மற்றவர்களை நோக்கி: மீன்பிடிக்கப்போகிறேன் என்றான். அதற்கு அவர்கள்: நாங்களும் உம்முடனேகூட வருகிறோம் என்றார்கள். அவர்கள் புறப்பட்டுப்போய், உடனே படவேறினார்கள். அந்த இராத்திரியிலே அவர்கள் ஒன்றும் பிடிக்கவில்லை.**

**யோவா 21:4. விடியற்காலமானபோது, இயேசு கரையிலே நின்றார்; அவரை இயேசு என்று சீஷர்கள் அறியாதிருந்தார்கள்.**

**யோவா 21:5. இயேசு அவர்களை நோக்கி: பிள்ளைகளே, புசிக்கிறதற்கு ஏதாகிலும் உங்களிடத்தில் உண்டா என்றார். அதற்கு அவர்கள்: ஒன்றுமில்லை என்றார்கள்.**

**யோவா 21:6. அப்பொழுது அவர்: நீங்கள் படவுக்கு வலதுபுறமாக வலையைப் போடுங்கள், அப்பொழுது உங்களுக்கு அகப்படும் என்றார். அப்படியே அவர்கள் போட்டு, திரளான மீன்கள் அகப்பட்டதினால், அதை இழுக்க மாட்டாதிருந்தார்கள்.**

**யோவா 21:7. ஆதலால் இயேசுவுக்கு அன்பாயிருந்த சீஷன் பேதுருவைப் பார்த்து: அவர் கர்த்தர் என்றான். அவர் கர்த்தர் என்று சீமோன்பேதுரு கேட்டவுடனே, தான் வஸ்திரமில்லாதவனாயிருந்த படியினால், தன் மேற்சட்டையைக் கட்டிக்கொண்டு கடலிலே குதித்தான்.**

**யோவா 21:8. மற்றச் சீஷர்கள் கரைக்கு ஏறக்குறைய இருநூறுமுழத் தூரத்தில் இருந்தபடியினால் படவிலிருந்துகொண்டே மீன்களுள்ள வலையை இழுத்துக்கொண்டு வந்தார்கள்.**

**யோவா 21:9. அவர்கள் கரையிலே வந்திறங்கினபோது, கரிநெருப்புப் போட்டிருக்கிறதையும், அதின்மேல் மீன் வைத்திருக்கிறதையும், அப்பத்தையும் கண்டார்கள்.**

**யோவா 21:10. இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் இப்பொழுது பிடித்த மீன்களில் சிலவற்றைக் கொண்டுவாருங்கள் என்றார்.**

**யோவா 21:11. சீமோன்பேதுரு படவில் ஏறி, நூற்றைம்பத்துமூன்று பெரிய மீன்களால் நிறைந்த வலையைக் கரையில் இழுத்தான்; இத்தனை மீன்கள் இருந்தும் வலை கிழியவில்லை.**

**யோவா 21:12. இயேசு அவர்களை நோக்கி: வாருங்கள், போஜனம்பண்ணுங்கள் என்றார். அவரைக் கர்த்தரென்று சீஷர்கள் அறிந்தபடியினால் அவர்களில் ஒருவனும்: நீர் யார் என்று கேட்கத் துணியவில்லை.**

**யோவா 21:13. அப்பொழுது இயேசு வந்து, அப்பத்தையும் மீனையும் எடுத்து, அவர்களுக்குக் கொடுத்தார்.**

## அதிகாரம் - 21

**யோவா 21:14. இயேசு மரித்தோரிலிருந்தெழுந்த பின்பு தம்முடைய சீஷருக்கு அருளின தரிசனங்களில் இது மூன்றாவது தரிசனம்.**

### இயேசு தம்மை வெளிப்படுத்தினார்

**இவைகளுக்குப்பின்பு இயேசு திபேரியா கடற்கரையிலே மறுபடியும் சீஷருக்குத் தம்மை வெளிப்படுத்தினார்; வெளிப்படுத்தின விவரமாவது: (யோவா 21:1)**

இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு திபேரியா கடற்கரையிலே மறுபடியும் சீஷருக்குத் தம்மை வெளிப்படுத்துகிறார். இதற்கு முன்பு இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு நடுவே நின்றபோது, அங்கு அவருடைய சீஷர்களெல்லோரும் கூடியிருந்தார்கள். அது வாரத்தின் முதலாம் நாளாகிய கர்த்தருடைய நாள். இப்போதோ வாரத்தில் ஒரு நாளில் இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷருக்குத் தம்மை வெளிப்படுத்துகிறார். எல்லா சீஷர்களும் இங்கு இல்லை. சீஷர்களில் ஏழுபேர் மாத்திரமே இப்போது இங்கே கூடியிருக்கிறார்கள். இவர்களெல்லோரும் மீன்பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து தம்முடைய பிள்ளைகளுக்குத் தம்மை வெவ்வேறு வழிகளில் வெளிப்படுத்திக் காண்பிக்கிறார். அவர்கள் தாங்கள் செய்யவேண்டிய பொதுவான தொழில்களைச் செய்துகொண்டிருக்கும்போது, இயேசுகிறிஸ்து தம்முடைய ஆவியிலே அவர்களுக்குத் தம்மை வெளிப்படுத்துகிறார்.

இயேசுகிறிஸ்து இதன் பின்பு தம்முடைய சீஷர்களைக் கலிலேயாவிலுள்ள மலைக்கு வருமாறு கூறினார். அப்போது சீஷர்களெல்லோரும் அங்கு கூடிவந்திருந்தார்கள். அங்கு இயேசுகிறிஸ்து அவர்களுக்கு நடுவே தம்மை வெளிப்படுத்தினார் (மத் 28:16). சீஷர்கள் இயேசுகிறிஸ்துவுக்காக காத்துக் கொண்டிருந்தார்கள். இயேசுகிறிஸ்துவுக்காக நாம் காத்துக்கொண்டிருக்கும்போது நமக்குச் சோர்வோ, களைப்போ உண்டாகக்கூடாது. கர்த்தருக்காகக் காத்திருக்கிறவர்கள் புதுப்பெலனைப் பெற்றுக்கொள்வார்கள்.

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் அவர் சொன்ன பிரகாரமாக, கலிலேயாவிலுள்ள மலைக்குப் போகப்போகிறார்கள். அந்த நாள் வரும் வரையிலும் அவர்கள் திபேரியா கடற்கரையிலே, கர்த்தரைக் காணவேண்டும் என்னும் வாஞ்சையோடு காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

### சீஷர்கள் கூடியிருக்கும் போது

**சீமோன்பேதுருவும், திதிமு என்னப்பட்ட தோமாவும், கலிலேயா நாட்டிலுள்ள கானா ஊரானாகிய நாத்தான்வேலும், செபதேயுவின் குமாரரும், அவருடைய சீஷரில் வேறு இரண்டுபேரும் கூடியிருக்கும்போது, (யோவா 21:2)**

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் திபேரியா கடற்கரையிலே கூடியிருக்கிறார்கள். அவருடைய பன்னிரண்டு சீஷர்களும் இங்கு கூடியிருக்கவில்லை. அவர்களில் ஏழுபேர் மாத்திரமே இங்கு கூடிவந்திருக்கிறார்கள். அவர்களில் நாத்தான்வேலும் ஒருவன். யோவான் சுவிசேஷம் முதல் அதிகாரத்தில் நாத்தான் வேலைப்பற்றிக் குறிப்பிடப் பட்டிருக்கிறது. அதன்பின்பு இவனுடைய பெயர் இந்த அதிகாரத்தில்தான் இந்த வசனத்தில்தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

நாத்தான்வேலும் பார்த்தொலோமேயுவும் ஒரே நபர்தான் என்று ஒரு சிலர் நினைக்கிறார்கள். கிறிஸ்துவின் சீஷர்கள் ஒன்றுகூடியிருப்பது மிகவும் நல்லது. அவர்கள் ஆவிக்குரிய பொதுவான காரியங்களைத் தங்களுக்குள் பகிர்ந்து பேசிக்கொள்ள வேண்டும். கர்த்தருடைய காரியங்களைப் பற்றியும், கர்த்தருடைய ஊழியங்களைப் பற்றியும் கர்த்தருடைய பிள்ளைகள் கலந்து பேசிக்கொள்வது மிகவும் நல்லது.

சீஷர்கள் கூடியிருக்கும்போது, இயேசுகிறிஸ்து தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்த வேண்டுமென்று சித்தமுள்ளவராகயிருக்கிறார். அவர்கள் கூடியிருக்கும் வேளையையே இயேசுகிறிஸ்து அவர்களுக்குத் தம்மை வெளிப்படுத்த தெரிவுசெய்திருக்கிற வேளையாகும். இதன் மூலமாக இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு, அவர்களெல்லோரும் ஒருமித்து சாட்சிகளாயிருப்பார்கள். தோமா அவர்களில் ஒருவர். தோமாவின் பெயர் பேதுருவின் பெயருக்குப் பின்பு குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதற்கு முன்பு தோமா சீஷர்களோடில்லை. அப்போது தோமா இயேசுவைக் காணும் சிலாக்கியத்தை இழந்துவிட்டான். அதுபோன்ற இழப்பு தனக்கு மறுபடியும் வந்துவிடக்கூடாது என்பதற்காக, தோமா இப்போது சீஷர்களோடு கூடவே இருக்கிறான்.

## அதிகாரம் - 21

**மீன்பிடிக்கப்போகிறேன்**

**சீமோன்பேதுரு மற்றவர்களை நோக்கி: மீன்பிடிக்கப்போகிறேன் என்றான். அதற்கு அவர்கள்: நாங்களும் உம்முடனேகூட வருகிறோம் என்றார்கள். அவர்கள் புறப்பட்டுப்போய், உடனே படவேறினார்கள். அந்த இராத்திரியிலே அவர்கள் ஒன்றும் பிடிக்கவில்லை (யோவா 21:3).**

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் மீன்பிடிக்கப் போவதற்குச் சம்மதம் தெரிவிக்கிறார்கள். மீன்பிடிக்கப் போவதைப்பற்றி சீமோன் பேதுருவே முதலாவதாக, மற்றவர்களை நோக்கி "மீன்பிடிக்கப்போகிறேன்" என்று கூறுகிறான். அதற்கு அவர்கள் "நாங்களும் உம்முடனேகூட வருகிறோம்" என்று கூறுகிறார்கள். பொதுவாக கூட்டாகத் தொழில்செய்யும்போது, கூட்டுச் சேர்பவர்களுக்கு மத்தியில் ஒற்றுமையிருக்காது. ஆனால் இங்கோ இயேசுகிறிஸ்துவின் சீஷர்களில் ஏழுபேரும், ஒற்றுமையாக மீன்பிடிக்கப்போகிறார்கள்.

இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு சீஷர்கள் சும்மாயிருக்க விரும்பவில்லை. வீணாகப் பொழுதுதைப் போக்க அவர்கள் நினைக்கவில்லை. ஏதாவது தொழில்செய்து ஜீவனம்பண்ணவேண்டும் என்று தீர்மானம் பண்ணுகிறார்கள். இப்போது அதற்குரிய நேரம் வந்திருக்கிறது. இதுவரையிலும் அவர்கள் இயேசுகிறிஸ்துவோடு கூடவே இருந்தார்கள். இப்போதோ இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்திருக்கிறார். ஆகையினால் சீஷர்களால் அவரோடுகூட எப்போதும் கூடவே இருக்கமுடியவில்லை. இயேசுகிறிஸ்து இல்லாமல், சும்மாயிருப்பதற்குப் பதிலாக, மீன்பிடிக்கப்போகலாமென்று சீஷர்கள் தீர்மானம்பண்ணுகிறார்கள். மீன்பிடிப்பது இவர்களுக்குப் பொழுதுபோக்கல்ல. இது இவர்களுடைய தொழில்.

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் சோம்பேறிகளல்ல. அவர்கள் சுறுசுறுப்பாக வேலை செய்யக்கூடியவர்கள். தங்களுக்குக் கிடைத்திருக்கும் ஒவ்வொரு நேரத்தையும் அவர்கள் ஏதாவது ஒருவழியில் பிரயோஜனமாகச் செலவுபண்ணுகிறார்கள். இயேசுகிறிஸ்து சொன்னபிரகாரம் கலிலேயாவிலுள்ள மலைக்குப் போய் அவரைச் சந்திப்பதற்கு ஆயத்தமாகயிருக்கிறார்கள். அந்த நாளுக்காகக் காத்திருக்கிறார்கள். காத்திருந்தாலும் அவர்கள் சும்மாயிருக்கவில்லை.

கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கும் நேரத்திற்கு நாம் அவருக்கு கணக்கு ஒப்புவிக்கவேண்டும். நாம் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளவேண்டும். நமக்கு நியமிக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு வேலையையும் நேர்த்தியாகச் செய்து முடிக்கவேண்டும். சும்மாயிருந்தால் சோம்பேறித்தனம் வந்துவிடும். ஆகையினால் பிரயோஜனமுள்ள ஏதாவது ஒரு வேலையைச் சுறுசுறுப்பாகச் செய்யவேண்டும். நம்முடைய கைகளினால் நாம் வேலை செய்து பிழைக்கும்போது, மற்றவர்களுக்குப் பாரமாகயிருக்கமாட்டோம். அப்போஸ்தலர் பவுல் கூடாரம்பண்ணுகிற தொழிலைச் செய்து, தனக்கும் தன்னோடிருந்த வர்களுக்கும் ஆதரவாகயிருந்தான். அதேவேளையில் அவன் கர்த்தருடைய ஊழியத்தையும் சிறப்பாகச் செய்தான்.

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் மீன்பிடிப்பதற்காகப் புறப்பட்டுப்போய், உடனே படவிலே ஏறுகிறார்கள். கடலிலே வலைகளைப் போடுகிறார்கள். ஆனால் அந்த இராத்திரியிலே அவர்கள் ஒன்றும் பிடிக்கவில்லை. இவர்களுடைய கைகள் சுறுசுறுப்பாக வேலை செய்யும். விசுவாசத்தோடு வலைகளைப் போடுகிறார்கள். ஆனால் வெறுமையாகவே இழுக்கிறார்கள். ஒரு மீனும் அகப்படவில்லை.

சீஷர்கள் வலைகளைப்போட்டு ஒரு மீனையும் பிடிக்காததினால் ஏமாற்றமடைந்திருப்பார்கள். இவர்களிடத்தில் ஒரு தவறுமில்லை. தாங்கள் செய்யவேண்டிய வேலைகளை முறைப்படி செய்கிறார்கள். கடலுக்குப் போய் வலைகளைப் போடுகிறார்கள். இவர்களைப்போலத்தான் இக்காலத்தில் நல்லவர்கள் பலர் நேர்மையாக உழைக்கிறார்கள். அவர்களுடைய உழைப்பு கடினமாகவும் இருக்கிறது. ஆனால் ஒரு பிரயோஜனமும் அவர்களுக்கு உண்டாவதில்லை. எவ்வளவு முயற்சி பண்ணினாலும் தொழிலில் முன்னேற்றமும் வியாபாரத்தில் லாபமும் கிடைப்பதில்லை.

## அதிகாரம் - 21

சீஷர்கள் கடலிலே வலைகளைப் போடுகிறபோது அவர்கள் ஒன்றும் பிடிக்கவில்லை. நம்முடைய வலைகளில் மீன்கள் விழுவதும், விழாமற்போவதும் கர்த்தருடைய சித்தம். நாம் விசுவாசத்தோடு வலைகளைப் போடவேண்டும். இயேசுகிறிஸ்துவின் தெய்வீக சித்தத்தின் பிரகாரம், சீஷர்கள் வலைகளைப்போட்டபோது அவர்களுக்கு மீன்கள் கிடைக்கவில்லை. அவர்களுடைய சுயமுயற்சியினாலும், சுயபிரயாசத்தினாலும் அவர்களுக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகவில்லை. இதுவும் தேவனுடைய சித்தமாகவே இருக்கிறது. இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களைக் கைவிட்டுவிடவில்லை. அவர்களுடைய சொந்தப் பிரயாசத்தினால் அவர்களுக்கு மீன்கள் கிடைக்காமல் போனாலும், தம்முடைய கிருபையினாலும், அற்புத வல்லமையினாலும், இயேசுகிறிஸ்து அவர்களுக்கு ஏராளமான மீன்களைக் கிடைக்கச் செய்கிறார்.

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் கடலிலே இரவு முழுவதும் வலைகளைப்போடுகிறார்கள். ஆனால் அவர்கள் ஒன்றும் பிடிக்கவில்லை. விடியற்காலமாயிற்று. சீஷர்கள் ஏமாற்றத்தோடிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவோ விடியற்காலத்தில் அவர்களுக்கு அற்புதமாக மீன்களைக் கொடுக்கிறார். நம்முடைய வாழ்க்கையில் ஏமாற்றங்கள் வரும்போது நமக்கு மிகுந்த வேதனையாக இருக்கும். அதே வேளையில் தேவனுடைய கிருபையினால் நாம் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளும்போது நமக்கு மிகுந்த சந்தோஷமாக இருக்கும்.

**இயேசு கரையிலே நின்றார்**

**விடியற்காலமானபோது, இயேசு கரையிலே நின்றார்; அவரை இயேசு என்று சீஷர்கள் அறியாதிருந்தார்கள் (யோவா 21:4).**

சீஷர்கள் இரவு முழுவதும் வலைகளைப்போட்டு ஒன்றையும் பிடிக்காமல், விடியற்காலமானபோது ஏமாற்றத்தோடு கரைக்கு வருகிறார்கள். இயேசுகிறிஸ்து அங்கு அவர்களுக்குத் தம்மை வெளிப்படுத்துகிறார். இயேசுகிறிஸ்து தம்மை வெளிப்படுத்தும்போது, அவருடைய வெளிப்பாட்டின் நான்கு பகுதிகளை நாம் காண்கிறோம். அவையாவன:

1. இயேசுகிறிஸ்து ஏற்ற வேளை வரும்போது தம்மை வெளிப்படுத்துகிறார்.
2. இயேசுகிறிஸ்து கொஞ்சம் கொஞ்சமாக தம்மை வெளிப்படுத்துகிறார்.
3. இயேசுகிறிஸ்து தம்முடைய கிருபையுடனும் இரக்கத்துடனும் தம்மை வெளிப்படுத்துகிறார்.
4. இயேசுகிறிஸ்து தம்முடைய வல்லமையினால் தம்மை வெளிப்படுத்துகிறார்.

விடியற்காலமாயிற்று அப்போது இயேசு கரையிலே நிற்கிறார். சீஷர்கள் மிகுந்த ஏமாற்றத்திலிருக்கிறார்கள். அவர்களுடைய கைகளின் பிரயாசத்திற்குப் பலன் ஒன்றும் கிடைக்காமல் கவலையோடிருக்கிறார்கள். இப்படிப்பட்ட வேளையில்தான் இயேசுகிறிஸ்து அவர்களை ஆறுதல்பண்ணுவதற்காக அவர்களைத் தேடி வருகிறார். தங்களுக்கு ஒரு நம்பிக்கையுமில்லை, எல்லாம் தங்களுக்கு நஷ்டமாகிவிட்டது என்று சீஷர்கள் ஏமாற்றத்தோடிருக்கும்போது, தாமே அவர்களுக்கு நம்பிக்கையாக இருப்பதாக இயேசு தம்மை வெளிப்படுத்துகிறார். இயேசுகிறிஸ்து இதற்கு முன்பு கடலில் நடந்து தம்முடைய சீஷர்களிடத்தில் வந்தார். ஆனால் இப்போதோ அதுபோல கடலில் நடக்காமல், கரையிலே நிற்கிறார். இதுவரையிலும் இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்கள் இருக்குமிடத்திற்குச் தேடிச்சென்றவர், இப்போது அவர்கள் தம்மிடத்தில் வருவதற்குக் கற்றுக்கொள்ளவேண்டும் என்று சித்தமுள்ளவராகயிருக்கிறார்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் செல்லுகிற பாதை கடினமாகவும் பிரச்சனை நிறைந்ததாகவும் இருக்கும்போது, இயேசுகிறிஸ்து கரையிலே நமக்காக எதிர்பார்த்துக்கொண்டு நின்றுகொண்டிருக்கிறார். அவரிடத்தில் நாம் விரைந்து சேரவேண்டும். இயேசு கிறிஸ்துவிடத்தில் நாம் சேர்ந்துவிட்டால் நமக்குச் சமாதானமும், நிம்மதியும், பாதுகாப்பும் ஆசீர்வாதமும் உண்டு. அதுவரையிலும் பிரச்சனைதான். ஆகையினால் இயேசுகிறிஸ்துவிடம் வராமல் கவலையிலும் துக்கத்திலும் தத்தளித்துக் கொண்டிருக்கிறவர்கள், எவ்வளவு சீக்கிரமாக இயேசுகிறிஸ்துவிடம் வரமுடியுமோ, அவ்வளவு சீக்கிரமாக அவரிடத்தில் வந்துவிடவேண்டும்.

# அதிகாரம் - 21

இயேசுகிறிஸ்து கரையிலே நிற்கிறார். ஆனால் சீஷர்களோ அவரை இயேசு என்று அறியாதிருக்கிறார்கள். பல சமயங்களில் நாமும் சீஷர்களைப்போலவே இருக்கிறோம். இயேசு நமக்கு அருகாமையிலிருக்கிறார். ஆனால் அவர் நமக்கு அருகாமையிலிருப்பதை நாம் அறியாதிருக்கிறோம். நாம் ஆராதிக்கிறவர் இன்னாரென்பதையும், அவர் நமக்கு அருகாமையிலிருக்கிறார் என்பதையும் நாம் அறிந்திருப்போமென்றால், நம்முடைய பாரங்களெல்லாவற்றையும் அவர்மீது வைத்துவிடலாம். அவருடைய தெய்வீக ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்டு, நம்முடைய ஆவிக்குரிய பிரயாணத்தில் சந்தோஷமாக முன்னேறிச் செல்லலாம். இயேசுகிறிஸ்து தம்மை வெளிப்படுத்தும்போது, தம்முடைய சீஷர்களுக்குத் தம்மை முழுவதுமாக வெளிப்படுத்தாமல், கொஞ்சம் கொஞ்சமாக வெளிப்படுத்துகிறார்.

## பிள்ளைகளே

**இயேசு அவர்களை நோக்கி: பிள்ளைகளே, புசிக்கிறதற்கு ஏதாகிலும் உங்களிடத்தில் உண்டா என்றார். அதற்கு அவர்கள்: ஒன்றுமில்லை என்றார்கள் (யோவா 21:5).**

இயேசுகிறிஸ்து கிருபையும் இரக்கமும் நிறைந்தவர். தம்முடைய சீஷர்களைக் கிருபையினாலும் இரக்கத்தினாலும் சந்திக்க வருகிறார். இரவு முழுவதும் வலைகளைப்போட்டு, அவர்கள் ஒரு மீனும் பிடிக்கவில்லை. அவர்களுடைய உள்ளத்தில் ஏமாற்றமும் கவலையும் நிறைந்திருக்கிறது. அவர்களுக்கு உதவி செய்வதற்காகவும், அவர்களை ஆசீர்வதிப்பதற்காகவும் இயேசுகிறிஸ்து அவர்களைத் தேடி வந்திருக்கிறார்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களை நோக்கி "பிள்ளைகளே, புசிக்கிறதற்கு ஏதாகிலும் உங்களிடத்தில் உண்டா" என்று மிகவும் கரிசனையோடு கேட்கிறார். இயேசுகிறிஸ்துவின் கரிசனை சீஷர்களுக்குத் தெரியும். ஒரு தகப்பன் தன் பிள்ளைகளிடம் அன்போடும் ஆதரவோடும் பேசுவதுபோல, இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடத்தில் பேசுகிறார். சீஷர்கள் வயதில் சிறுபிள்ளைகளல்ல. ஆனாலும் அவர்கள் இயேசுகிறிஸ்துவின் பிள்ளைகளாகவே இருக்கிறார்கள். பிதாவாகிய தேவன் இவர்களை இயேசுவினிடத்தில் பிள்ளைகளாக ஒப்புக்கொடுத்திருக்கிறார்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடத்தில் பேசும்போது அவருடைய அன்பும், கிருபையும், கரிசனையும் வெளிப்படுகிறது. "பிள்ளைகளே, புசிக்கிறதற்கு ஏதாகிலும் உங்களிடத்தில் உண்டா" என்று அன்போடு கேட்கிறார். கர்த்தர் நம்முடைய சரீரத்திற்குரியவர் (1கொரி 6:13). தம்முடைய பிள்ளைகளின் சரீரப்பிரகாரமான தேவைகளையும் இயேசுகிறிஸ்து மிகுந்த கரிசனையோடு சந்திக்கிறார். தேவனுடைய கிருபை நமக்குப்போதுமானது. அந்தக் கிருபையோடு அவர் நமக்குப் போஜனமும் கொடுத்து குறைவில்லாமல் போஷிக்கிறார்.

இயேசுகிறிஸ்துவின் பிள்ளைகளில் சிலர் போஜனமில்லாமல் பசியோடிருக்கலாம். இயேசுகிறிஸ்துவோ அவர்கள் இருக்கும் இடத்திற்கே வந்து, அவர்களிடத்தில் "புசிக்கிறதற்கு ஏதாகிலும் உங்களிடத்தில் உண்டா" என்று ஆதரவோடும் கரிசனையோடும் கேட்கிறார். இயேசுகிறிஸ்துவே நம்மைப் போஷித்துப் பராமரிக்கிறவர். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களைக் கரிசனையோடு விசாரித்ததுபோல, நாமும் சகவிசுவாசிகளைக் கரிசனையோடு விசாரிக்கவேண்டும். விசுவாசிகள் பசியிலிருந்தால் அவர்களுக்குப் போஜனம்கொடுத்து உதவிபுரியவேண்டும். ஒரு சிலர் வேலை செய்ய முடியாமல் வியாதிலிருப்பார்கள். அவர்களுடைய குடும்பமே கஷ்டப்படும். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், கர்த்தர் நமக்கு உதவிபுரிவதுபோல, நாமும் அவர்களுக்கு உதவிபுரிய முன்வரவேண்டும். அவர்களுடைய நன்மைகளை விசாரிக்கவேண்டும். புசிப்பதற்கு அவர்களிடத்தில் போஜனமுண்டா என்று விசாரித்தறிந்து அவர்களுக்கு உதவி செய்யவேண்டும்.

## அதிகாரம் - 21

பல சமயங்களில் நம்முடைய தேவைகள் பிறருக்கு வெளிப்படையாகத் தெரியாது. நாம் பசியோடிருப்பதை மற்றவர்களால் புரிந்து கொள்ளமுடியாது. மற்றவர்களின் கஷ்டங்களை நாம் கேட்டுத்தான் தெரிந்து கொள்ளவேண்டும். சீஷர்கள் பசியோடிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து அவர்களிடத்தில் "புசிப்பதற்கு ஏதாகிலும் உண்டா" என்று கேட்கிறார். அவர்கள் மிகவும் சுருக்கமாக "ஒன்றுமில்லை" என்று பதில் கூறுகிறார்கள்.

சீஷர்களின் தேவை இயேசுகிறிஸ்துவுக்குத் தெரியும். அவர்களைப் பார்க்கும்போதே அவர்கள் பசியாகயிருக்கிறார்கள் என்பது இயேசுவுக்குத் தெரிந்திருக்கிறது. அவருக்குத் தெரியாத இரகசியம் ஒன்றுமேயில்லை. அவருக்கு மறைவாக நம்மால் எதையும் மூடிமறைக்க முடியாது. சீஷர்களின் தேவைகளைத் தெரிந்திருந்தும், இயேசுகிறிஸ்து அவர்களிடத்தில் "புசிக்கிறதற்கு ஏதாகிலும் உங்களிடத்தில் உண்டா" என்று கேட்கிறார். தங்களுடைய தேவைகளை சீஷர்கள் உணர்ந்து, தம்மிடம் விண்ணப்பம் பண்ணவேண்டுமென்று இயேசுகிறிஸ்து எதிர்பார்க்கிறார். சீஷர்கள் தங்களை வெறுமையாக்க வேண்டுமென்றும், தங்களுடைய சுயபலத்தை சார்ந்திராமல், தம்மையே சார்ந்திருக்கவேண்டுமென்றும் இயேசுகிறிஸ்து எதிர்பார்க்கிறார். நாம் தேவனிடமிருந்து எதையாவது பெற்றுக் கொள்ளவேண்டுமென்று விரும்பினால், முதலாவதாக நம்மையே நாம் வெறுமையாக்க வேண்டும். நம்மிடத்தில் ஒன்றுமில்லை என்று அங்கீகரிக்கவேண்டும்.

**வலதுபுறமாக வலையைப்போடுங்கள்**

**அப்பொழுது அவர்: நீங்கள் படவுக்கு வலதுபுறமாக வலையைப் போடுங்கள், அப்பொழுது உங்களுக்கு அகப்படும் என்றார். அப்படியே அவர்கள் போட்டு, திரளான மீன்கள் அகப்பட்டதினால், அதை இழுக்க மாட்டாதிருந்தார்கள் (யோவா 21:6).**

இயேசுகிறிஸ்து கரையிலே கிருபையுள்ளவராகவும் வல்லமையுள்ளவராகவும் நிற்கிறார். "ஒன்றுமில்லை" என்று சொன்ன தம்முடைய சீஷர்களுக்கு, இயேசுகிறிஸ்து அற்புதமாக உதவி செய்யச் சித்தமாயிருக்கிறார். அவர்களிடத்தில் "நீங்கள் படவுக்கு வலதுபுறமாக வலையைப்போடுங்கள்" என்று சொல்லுகிறார். சீஷர்கள் இயேசுகிறிஸ்துவின் வார்த்தையின் பிரகாரமாக படகுக்கு வலதுபுறமாகத் தங்கள் வலையைப்போடுகிறார்கள். "அப்பொழுது உங்களுக்கு அகப்படும்" என்று இயேசு சொன்னார். அவர் சொன்ன பிரகாரமாகவே சீஷர்களுக்கு மீன்கள் அகப்பட்டது.

சீஷர்கள் இரவு முழுவதும் கடலில் வலையைப்போட்டும், ஒன்றும் பிடிக்காமல், வெறும் கையோடு வீட்டிற்குத் திரும்பி வந்துகொண்டிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து வெறுமையாகவும் பசியாகவும் இருக்கும் சீஷர்களை சந்தித்து, அவர்களை நிறைவாக அனுப்புகிறார்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு கட்டளைகொடுக்கும்போது, அந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தால் அவர்களுக்கு கிடைக்கப்போகும் ஆசீர்வாதத்தையும் சேர்த்துச் சொல்லுகிறார். "நீங்கள் படவுக்கு வலதுபுறமாக வலையைப்போடுங்கள், அப்பொழுது உங்களுக்கு அகப்படும்" என்பதே இயேசுகிறிஸ்துவின் கட்டளையும் வாக்குத்தத்தமும் ஆகும். எந்த இடத்தில் வலையைப்போடவேண்டும் என்று இயேசுகிறிஸ்து மிகவும் தெளிவாகச் சொல்லுகிறார். படவுக்கு வலதுபுறமாக வலையைப்போடவேண்டும். தேவனுடைய கட்டளை எப்போதுமே மிகவும் தெளிவாக இருக்கும். சிறிய காரியமானாலும், பெரிய காரியமானாலும் நாம் இயேசுகிறிஸ்துவின் வார்த்தைக்கு அப்படியே கீழ்ப்படியவேண்டும். கிறிஸ்துவின் வார்த்தையை மிகவும் கவனமாகக் கேட்கவேண்டும். இயேசுகிறிஸ்து சொன்னபடியே சீஷர்கள் படவுக்கு வலதுபுறமாக வலையைப்போடுகிறார்கள். அப்போது அவர்களுக்கு ஆசீர்வாதம் உண்டாயிற்று.

## அதிகாரம் - 21

சீஷர்கள் இயேசுகிறிஸ்துவின் கட்டளைக்குக் கீழ்ப்படிகிறார்கள். அதனால் அவர்களுக்கு மிகுந்த ஆசீர்வாதம் உண்டாயிற்று. கரையில் நிற்கிறவர் இயேசு என்பதை சீஷர்கள் அறியாதிருக்கிறார்கள். ஆனாலும் அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிகிறார்கள். ஒருவருக்கு ஒன்றுமில்லையென்றால் அவர் யார் சொன்னாலும் கேட்பார். எல்லோருடைய ஆலோசனைக்கும் கீழ்ப்படிவார். அதேவேளையில் அவரிடத்தில் எல்லாம் இருக்குமென்றால், அவர் யார் சொன்னாலும் கேட்கமாட்டார். யாருடைய கட்டளைக்கும் உடனே கீழ்ப்படியமாட்டார். யார் சொன்னாலும் எதிர்த்துப் பேசுவார். முடியாது என்றும் மறுத்துவிடுவார். சீஷர்கள் இப்போது ஒன்றுமில்லாமல் இருக்கிறார்கள். ஆகையினால் தங்களுக்குக் கட்டளையிடுவது இயேசுகிறிஸ்துதான் என்று அறியாதிருந்தாலும், அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, அவர் சொன்னபடியே படவுக்கு வலதுபுறமாக வலையைப்போடுகிறார்கள்.

தங்களுக்கு உதவி செய்ய விரும்புகிற யாரோ அந்நியர் ஒருவருக்கு தாங்கள் கீழ்ப்படிவதாக நினைத்து, தங்களுடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கே, தங்களையும் அறியாமல் கீழ்ப்படிகிறார்கள். இந்தச் சம்பவம் அற்புதமாகவும், ஆசீர்வாதமாகவும் முடிவடைகிறது. இரவு முழுவதும் வலைகளைப்போட்டு சரீர வேதனையோடிருக்கிறார்கள். ஒரு மீனும் பிடிக்காததினால் இருதயத்திலும் வேதனையடைந்திருக்கிறார்கள். இப்போதோ இயேசுகிறிஸ்துவின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து செயல்பட்டபோது, அவர்களுக்கு மிகுந்த பலன் உண்டாயிற்று. இது அவர்களுடைய பிரயாசத்தின் பலனல்ல. விசுவாசித்து செயல்பட்டதினால் உண்டான பலன்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாமும் கிறிஸ்துவின் வார்த்தைக்குக் கீழ்ப்படியவேண்டும். அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவதினால் நமக்கு ஒரு நஷ்டமும் உண்டாகிவிடப்போவதில்லை. நம்மை நஷ்டப்படுத்த வேண்டுமென்பதோ, வேதனைப்படுத்த வேண்டுமென்பதோ, ஒன்றுமில்லாமல் வெறுமையாக அனுப்பிவிட வேண்டுமென்பதோ இயேசுகிறிஸ்துவின் நோக்கமல்ல. அது அவருடைய சித்தமுமல்ல. நாம் ஜீவன் பெறவேண்டுமென்பதும், நம்முடைய ஜீவன் பரிபூரணமடைய வேண்டுமென்பதுமே இயேசுகிறிஸ்துவின் சித்தமாயிருக்கிறது.

சீஷர்கள் இயேசுகிறிஸ்துவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து படவுக்கு வலதுபுறமாக வலையைப்போடுகிறார்கள். அப்பொழுது அவர்களுக்குத் திரளான மீன்கள் அகப்படுகிறது. அதை இழுக்கமாட்டாதிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து கரையில் நிற்கிறார். சீஷர்களும் கரைக்கு அருகாமையில் படவிலிருக்கிறார்கள். நடுக்கடலில் தங்கள் வலையைப்போடுவதற்குப் பதிலாக, இயேசுகிறிஸ்து சொன்ன பிரகாரமாக, கடற்கரைக்கு அருகில், தாங்கள் இருக்குமிடத்திலேயே, தங்கள் படவுக்கு வலதுபுறமாக வலையைப்போடுகிறார்கள். இந்த இடத்தில் திரளான மீன்கள் அகப்படுவது மிகப்பெரிய அற்புதம். இப்படிப்பட்ட காரியத்தை மனுஷனால் செய்ய முடியாது. மனுஷனால் கூடாதது தேவனால் கூடும். சீஷர்களின் சுயபலத்தினாலோ, சுயமுயற்சியினாலோ திரளான மீன்கள் அகப்படவில்லை. இயேசுகிறிஸ்துவின் கிருபையினாலேயே திரளான மீன்கள் அவர்களுக்கு அகப்பட்டது.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடத்தில் கிருபையாகவும் இரக்கமாகவும் இருக்கிறார். சீஷர்கள் கடலில் இரவு முழுவதும் வலைகளைப்போட்டார்கள். அவர்களுக்கு ஒன்றும் அகப்படவில்லை. அவர்களுடைய முயற்சிகளும் பிரயாசமும் வீணாயிற்று. தோற்றுப்போன நிலமையில் தங்களுக்கு ஒன்றுமேயில்லை என்னும் நிலமை வரும்போது, இயேசுகிறிஸ்து தம்முடைய அற்புத வல்லமையினால் அவர்களை ஆசீர்வதிக்கிறார். இயேசுகிறிஸ்துவின் வல்லமை அவர்களுடைய வெறுமையிலிருந்து அவர்களை விடுவித்து, அவர்களைத் தேவனுடைய ஆசீர்வாதங்களினால் நிரப்புகிறது.

## அதிகாரம் - 21

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷருக்கு இதற்கு முன்பே இப்படிப்பட்ட அதிசயத்தைச் செய்திருக்கிறார். சீமோன் பேதுருவின் படவில் இயேசுகிறிஸ்து அமர்ந்து திரளான ஜனங்களுக்குப் பிரசங்கம்பண்ணினார் (லூக் 5:4). பேதுரு தன்னுடைய படவை ஆண்டவருக்கு இரவலாகக் கொடுத்தான். அதற்காக இயேசுகிறிஸ்து திரளான மீன்களினால் அவனை ஆசீர்வதித்தார். அவன் ஒரு மீனும் பிடிக்காமல் கரையில் ஏமாற்றத்தோடு இருந்தபோது, இயேசுகிறிஸ்து அவனை ஆழத்திற்கு அழைத்துச் சென்று, அங்கு வலைகளைப்போடுமாறு கூறுகிறார். இயேசுகிறிஸ்து சொன்ன பிரகாரமாகவே சீமோன் பேதுரு ஆழத்தில் வலையைப்போட்டு திரளான மீன்களைப் பிடித்தான்.

சீமோன் பேதுரு தனக்கு இயேசுகிறிஸ்து ஏற்கெனவே செய்த அற்புதத்தையும், இப்பொழுது செய்கிற இந்த அற்புதத்தையும் நினைத்துப்பார்க்கிறான். இவை சீமோன் பேதுருவின் உள்ளத்தில் பதிகிறது. தன்னுடைய சுயமுயற்சியினால் ஒரு பிரயோஜனமுமில்லை என்பதை பேதுரு உணர்ந்துகொள்கிறான். ஒவ்வொரு முறை போஜனம்பண்ணும்போதும், இந்தப் போஜனம் கர்த்தருடைய கிருபையினால் தனக்குக் கிடைத்திருக்கிறது என்பதை நினைவுகூருகிறான் கர்த்தரைத் துதிக்கிறான். விசுவாசிகளாகிய நாமும் போஜனம் பண்ணும்போது, இந்தப் போஜனம் கர்த்தர் தம்முடைய கிருபையினால் நமக்குக் கொடுத்திருக்கிற போஜனம் என்பதை நினைவுகூர்ந்து, அவரைத் துதிக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களை உலகம் முழுவதும் அனுப்பப்போகிறார். அவர்கள் சர்வசிருஷ்டிகளுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கப்போகிறார்கள். அவர்களுக்கு இயேசுகிறிஸ்துவின் அற்புத வல்லமை தெரிந்திருக்கவேண்டும். ஆபத்து வேளையில் அவர் தங்களுக்கு உதவிபுரிய வருவார் என்பதை சீஷர்கள் புரிந்துகொள்ளவேண்டும். இயேசுகிறிஸ்து சொன்ன பிரகாரமாகவே செயல்பட்டால், ஊழியத்தில் ஆசீர்வாதம் உண்டாகும். இதைச் சீஷர்கள் புரிந்துகொள்ளவேண்டும். இந்தச் சம்பவத்திற்கு பின்பு பேதுரு பிரசங்கம்பண்ணியபோது, ஒரே நாளில் மூவாயிரம் பேர் இரட்சிக்கப்படுகிறார்கள். அப்போது இயேசுகிறிஸ்து சொன்னபிரகாரமாக, தாங்கள் படவுக்கு வலதுபுறமாக வலையைப்போடுகிறோம் என்பதை சீஷர்கள் புரிந்துகொள்கிறார்கள்.

கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நாம், தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் ஊழியத்தை உண்மையாகவும், உத்தமமாகவும் செய்யவேண்டும். சோம்பலில்லாமல் சுறுசுறுப்பாகவும் செய்யவேண்டும். சுவிசேஷம் என்னும் வலையை நாம் பல வருஷங்களாக வீசியிருக்கலாம். நம்முடைய வலையில் ஒரு ஆத்துமா கூட வந்து விழாமல் போயிருக்கலாம். ஆனாலும் சோர்ந்து போய்விடவேண்டிய அவசியமில்லை. இயேசுகிறிஸ்துவின் வார்த்தையின் பிரகாரமாக நாம் தொடர்ந்து சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணும்போது, இரட்சகருடைய இரட்சிப்பின் வல்லமையினால், ஏராளமான ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படுவதற்கு வாய்ப்புள்ளது.

**அவர் கர்த்தர்**

**ஆதலால் இயேசுவுக்கு அன்பாயிருந்த சீஷன் பேதுருவைப் பார்த்து: அவர் கர்த்தர் என்றான். அவர் கர்த்தர் என்று சீமோன்பேதுரு கேட்டவுடனே, தான் வஸ்திரமில்லாதவனாயிருந்த படியினால், தன் மேற்சட்டையைக் கட்டிக்கொண்டு கடலிலே குதித்தான் (யோவா 21:7).**

இயேசுகிறிஸ்துவின் சீஷர்களில் யோவான் அவருக்கு மிகவும் அன்பானவன். சாதுரிய ஞானமுள்ளவன். எதையும் சீக்கிரத்தில் புரிந்துகொள்ளும் விவேகமுள்ளவன். இயேசுகிறிஸ்துவுக்கு மிகவும் அன்பானவனாக இருக்கிறபடியினால், யோவானிடத்தில் இதுபோன்ற விசேஷித்த குணாதிசயம் காணப்படுகிறது. கரையில் நிற்பது இயேசுகிறிஸ்துதான் என்பது யோவானுக்குத் தெரிகிறது. அவன் கர்த்தரென்பதை யோவான் அறிந்துகொள்கிறான். தன் அருகில் இருக்கும் சீமோன் பேதுருவிடம் "அவர் கர்த்தர்" என்று சொல்லுகிறான்.

## அதிகாரம் - 21

இயேசுகிறிஸ்துவைப்பற்றித் தனக்குத் தெரிந்ததை யோவான் மறைக்காமல் தனக்கு அருகிலுள்ளவர்களிடம் வெளிப்படுத்துகிறான். விசுவாசிகளாகிய நாமும் யோவானைப் போலவே, இயேசுகிறிஸ்துவைப்பற்றி நமக்குத் தெரிந்திருப்பதை, மற்றவர்களுக்கு விசுவாசத்தோடு அறிவிக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவை பிறருக்கு அறிமுகம் செய்து வைக்கவேண்டும். நம்முடைய கருத்தை மற்றவர்களிடம் பலவந்தமாகத் திணிக்கவேண்டும் என்னும் அவசியமில்லை. இயேசுவைப்பற்றி மற்றவர்களிடம் சொன்னாலே போதுமானது.

படவிலே மொத்தம் ஏழு சீஷர்கள் இருக்கிறார்கள். யோவான் மற்ற ஆறுபேரிடம் இயேசுவைப்பற்றிச் சொல்லுவதற்குப் பதிலாக, சீமோன் பேதுருவிடம் குறிப்பாகச் சொல்லுகிறான். இயேசுகிறிஸ்துவைப்பற்றி அறிந்துகொள்ளும்போது, மற்றவர்களைவிட சீமோன்பேதுருவுக்கு அதிக சந்தோஷம் உண்டாகும் என்பது யோவானுக்குத் தெரியும்.

சீமோன் பேதுரு இயேசுகிறிஸ்துவிடம் பக்தி வைராக்கியமாகயிருக்கிறான். அவருக்காக எழும்பிப் பிரகாசிக்கிறவன். "அவர் கர்த்தர்" என்னும் செய்தியைக் கேட்டவுடன், அவனால் படவில் இருக்கமுடியவில்லை. உடனே கடலில் குதித்துவிடுகிறான். படவு கரைக்கு வருவதற்கு முன்பாக, கடலில் குதித்து, நீந்தி, இயேசுகிறிஸ்துவிடம் வரவேண்டுமென்று ஆர்வத்தோடு செயல்படுகிறான்.

பேதுரு வஸ்திரமில்லாதவனாக இருக்கிறான் என்று எழுதப்பட்டிருக்கிறது. இவன் நிர்வாணமாகயில்லை. கடலில் மீன்பிடிக்கிறவர்கள் அணிந்திருக்கும் அரைகுறை ஆடையை அணிந்திருக்கிறான். கர்த்தருக்கு முன்பாக இந்த ஆடையோடு நிற்பது கண்ணியமாக இருக்காது என்று நினைக்கிறான். ஆகையினால் தன் மேற்சட்டையைக் கட்டிக்கொண்டு கடலில் குதித்து இயேசுவினிடத்தில் வருகிறான். தன்னிடத்திலுள்ள நல்ல வஸ்திரத்தை அணிந்துகொண்டு இயேசுவுக்கு முன்பாக வரவேண்டுமென்று பிரயாசப்படுகிறான்.

இயேசு கிறிஸ்துவிடம் வரவேண்டுமென்றால் படவில்தான் வரவேண்டும் என்னும் அவசியமில்லை. சீமோன் பேதுருவோ படவை சார்ந்திருக்கவில்லை. கடலுக்குள் குதித்து நீந்தியோ அல்லது நடந்தோ வருகிறான். கடலில் குதித்தால் நீந்தவேண்டும். இல்லாவிட்டால் மூழ்கிவிடுவோம். பேதுருவுக்கோ இயேசுகிறிஸ்துவிடம் எப்படியாவது வந்து சேர்ந்துவிடவேண்டும் என்னும் ஆவல் இருக்கிறது. ஆகையினால் கடலில் மூழ்கிவிடும் ஆபத்து இருந்தாலும், இயேசுகிறிஸ்துவைக் காணவேண்டுமென்னும் வைராக்கியத்தினால், எந்த ஆபத்தையும் எதிர்கொள்ள ஆயத்தமாகயிருக்கிறான். படவைவிட அவனுக்கு இயேசுகிறிஸ்துவோடு கூடயிருப்பதே சந்தோஷமாகவும், சமாதானமாகவும், பாதுகாப்பாகவும் இருக்கிறது.

பேதுரு இயேசுகிறிஸ்துவை மூன்று முறை மறுதலித்திருக்கிறான். இயேசுகிறிஸ்து இவனுடைய பாவத்தை மன்னித்திருக்கிறார். மற்றவர்களைவிட பேதுருவுக்கு அதிகமாக மன்னிக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால் மற்ற சீஷர்களைவிட பேதுரு இயேசுவின்மீது அதிக அன்பாயிருக்கிறான். இயேசுகிறிஸ்துவோடு கூடயிருக்கிறவர்கள், அவரோடு கூடயிருக்க வேண்டுமென்பதற்காகவும், அவரிடத்தில் வரவேண்டுமென்பதற்காகவும் எதையும் செய்ய ஆயத்தமாகயிருப்பார்கள். கடலில் நீந்தவேண்டியதானாலும், கடும் புயலில் பயணம் செய்யவேண்டியதானாலும், அவர்கள் இயேசுவுக்காக எதையும் செய்ய ஆயத்தமாகயிருப்பார்கள்.

**மற்ற சீஷர்கள்**

**மற்றச் சீஷர்கள் கரைக்கு ஏறக்குறைய இருநூறுமுழத் தூரத்தில் இருந்தபடியினால் படவிலிருந்துகொண்டே மீன்களுள்ள வலையை இழுத்துக்கொண்டு வந்தார்கள் (யோவா 21:8).**

சீமோன் பேதுருவைப்போல மற்ற சீஷர்கள் கடலில் குதிக்கவில்லை. அவர்கள் மிகவும் கவனமாகயிருக்கிறார்கள். எதையும் சிந்தித்துச் செயல்படுகிறார்கள். படவைக் கரைக்கு வலித்துவருகிறார்கள். எவ்வளவு விரைவாக வரமுடியுமோ அவ்வளவு விரைவாக கரைக்கு வருகிறார்கள்.

## அதிகாரம் - 21

தேவன் தம்முடைய வரங்களை ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு அளவின்படி கொடுத்திருக்கிறார். ஒரு சிலர் பேதுருவையும் யோவானையும்போல மிகவும் நேர்த்தியாகக் காரியங்களைச் செய்கிறார்கள். இவர்களிடத்தில் வரங்களும் கிருபைகளும் அதிகமாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்ற சீஷர்களோ இயேசுகிறிஸ்துவிடத்தில் விசுவாசமாயிருக்கிறார்கள். ஆனால் இவர்கள் பேதுருவையும் யோவானையும்போல விசேஷித்த சீஷர்களாகயில்லை. சாதாரண சீஷர்களாகவே இருக்கிறார்கள். தங்களுடைய கடமைகளில் கவனமாகயிருக்கிறார்கள்.

நாம் இயேசுகிறிஸ்துவுக்கு விசேஷமானவர்களா அல்லது சாதாரணமானவர்களா என்பது முக்கியமல்ல. நாம் இயேசுகிறிஸ்துவை உண்மையுள்ள மனதோடு விசுவாசிக்கவேண்டும். இயேசு கிறிஸ்துவின் மகிமையில் நாமெல்லோரும் ஒன்றுபோலவே பிரவேசிப்போம். ஒன்றுபோலவே அவருடைய சமுகத்தில் இளைப்பாறுதல் அடைவோம். பரலோகத்தில் முந்தினோர் பிந்தினோராகவும், பிந்தினோர் முந்தினோராகவும் இருப்பார்கள்.

ஒரு சில விசுவாசிகள் யோவானைப் போல அறிவில் சிறந்தவர்களாகியிருப்பார்கள். தேவனுடைய ஞானம் இவர்களுக்கு அதிகமாய் கொடுக்கப்பட்டிருக்கும். சபை ஊழியங்களில் ஞானமாய் செயல்படுவார்கள். ஒரு சிலர் பேதுருவைப்போல சுறுசுறுப்பான வர்களாகவும் தைரியமுள்ளவர்களாகவும் இருப்பார்கள். மற்ற விசுவாசிகள் மத்தியிலும், சபையிலும் இப்படிப்பட்டவர்கள் சுறுசுறுப்பாக ஊழியம் செய்வார்கள். எந்த ஊழியத்தையும் தைரியமாகச் செய்வார்கள். ஒரு சிலர் சபையின் கண்களைப் போல பிரயோஜனமுள்ளவர்களாகயிருப்பார்கள். மற்றவர்களோ சபையின் கைகளைப்போல செயல்படுவார்கள்.

சரீரத்திற்கு கண்ணும் தேவை. கையும் தேவை. சரீரத்தில் அநேக அவயவங்கள் இருந்தாலும், சரீரம் சீராகச் செயல்படுவதற்கு எல்லா அவயவங்களும் தேவைப்படுகிறது. அதுபோலவே சபையானது சிறப்பாக ஊழியம் செய்வதற்கு எல்லாவிதமான விசுவாசிகளும் தேவை.

விசுவாசிகளெல்லோரும் இயேசு கிறிஸ்துவை மகிமைப்படுத்துகிறார்கள். ஆயினும் அவர்கள் இயேசுவை மகிமைப்படுத்தும் அளவில் வித்தியாசமுண்டு. இயேசுகிறிஸ்துவோ தம்மை மகிமைப்படுத்துகிற வர்களெல்லோரையும் அங்கீகரிக்கிறார். இயேசுகிறிஸ்துவை அதிகமாக மகிமைப்படுத்துகிறவர்களும், குறைவாக மகிமைப்படுத்துகிறவர்களும் அவருக்குப் பிள்ளைகளாகவே இருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவிடத்தில் வருவதற்கு பேதுரு கடலில் குதித்துத்தான் வரவேண்டும் என்னும் அவசியமில்லை. அவன் மற்றவர்களைப்போல படவிலேயே வரலாம். ஆனாலும் கடலில் குதித்து வருவது, மீனையும் இயேசுவின்மீது அவன் வைத்திருக்கும் பக்திவைராக்கியத்தைக் காண்பிக்கிறது. இயேசுகிறிஸ்துவுக்காக பேதுரு எதையும் செய்வான் என்னும் தைரியத்தையும் காண்பிக்கிறது. இயேசுகிறிஸ்துவோ கடலில் குதித்து தம்மிடத்தில் வரும் பேதுருவையும் ஏற்றுக்கொள்கிறார், படவில் நிதானமாக வரும் மற்ற சீஷர்களையும் ஏற்றுக்கொள்கிறார்.

விசுவாசிகளெல்லோருமே இயேசு கிறிஸ்துவின்மீது அன்புகூருகிறார்கள். ஆயினும் அவர்கள் அன்புகூரும் அளவிலும் வித்தியாசமுண்டு. ஒரு சிலர் மரியாளைப்போல இயேசுகிறிஸ்துவின் பாதத்தில் அமர்ந்து அவருடைய உபதேசத்தைக் கேட்கிறார்கள். உலககாரியங்களில் ஈடுபடாமல் இயேசுவின் பாதம் ஒன்றே போதும் என்று நினைக்கிறார்கள். வேறு சிலரோ உலகக்காரியங்களில் பணிசெய்கிறார்கள், அவர்களும் இயேசுவின்மீது அன்புகூருகிறார்கள்.

வேலையோ, தொழிலோ அல்லது வியாபாரமோ செய்கிறவர்கள் இந்த உலகத்தில் தாங்கள் செய்யவேண்டிய வேலைகளையும் செய்வார்கள். இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியமும் செய்வார்கள். இவர்கள் படவிலிருக்கும் மற்ற சீஷர்களைப்போன்றவர்கள். மற்ற சீஷர்கள் படவில் இருந்துகொண்டே, மீன்களுள்ள வலையை இழுத்துக்கொண்டு கரைக்கு வருகிறார்கள்.

## அதிகாரம் - 21

கரையில் இயேசு நிற்கிறார். பேதுருவைப்போன்றவர்களோ படவில் இருக்காமல், கடலில் குதித்து இயேசு கிறிஸ்துவிடம் வருகிறார்கள். பேதுருவைப் போலவும் பலர் ஊழியம் செய்கிறார்கள். உலகப்பிரகாரமாக இவர்கள் எந்த வேலையும் செய்யாமல், தங்கள் முழுநேரத்தையும் இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்வதற்கு அர்ப்பணிக்கிறார்கள்.

நாம் எங்கிருந்தாலும் இயேசுகிறிஸ்துவுக்கு உண்மையுள்ள ஊழியக்காரர்களாக இருக்கவேண்டும். நம்முடைய விசுவாசத்தில் உண்மையும் நேர்மையும் இருக்கவேண்டும். நாம் படவிலிருந்தாலும், கடலில் குதித்தாலும் கர்த்தருடைய பிள்ளையாக இருக்கவேண்டும். படவிலிருக்கிறவர்கள், படவிலிருந்துகொண்டே மீன்களுள்ள வலையை உண்மையோடு இழுத்துவரவேண்டும். கடலில் குதிக்கிறவர்கள் வேகமாக நீந்தி வரவேண்டும். நாம் எந்த ஸ்தலத்திலிருந்தாலும் இயேசுகிறிஸ்துவுக்கு உண்மையுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்து தச்சனுடைய குமாரனாகயிருந்து, தம் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து, தமக்குக் கொடுக்கப்பட்ட வேலையை நேர்த்தியாகச் செய்தார். அதேவேளையில் பிதாவாகிய தேவன் தம்மிடத்தில் ஒப்புக்கொடுத்த ஊழியத்தையும் நேர்த்தியாகச் செய்து முடித்தார். இயேசுகிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின்பற்றுகிறவர்களாகிய நாமும், நம்மிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கும் வேலைகளை நேர்த்தியாகச் செய்து முடிக்கவேண்டும்.

**கரையிலே வந்திறங்கினபோது**

**அவர்கள் கரையிலே வந்திறங்கினபோது, கரிநெருப்புப் போட்டிருக்கிறதையும், அதின்மேல் மீன் வைத்திருக்கிறதையும், அப்பத்தையும் கண்டார்கள் (யோவா 21:9).**

சீஷர்கள் கரையிலே வந்து இறங்குவதற்கு முன்பாகவே, இயேசுகிறிஸ்து அவர்களைப் போஷிப்பதற்கு ஆயத்தமாயிருக்கிறார். சீஷர்கள் கரைக்கு வரும்போது கடல் நீரில் நனைந்தவர்களாகவும், குளிரில் நடுங்குகிறவர்களாகவும், களைப்படைந்தவர்களாவும், பசியுள்ளவர்களாகவும் வருகிறார்கள். அவர்கள் கரையிலிருந்து வந்திறங்கினவுடனே, அவர்களுடைய குளிரைப்போக்குவதற்கு, அங்கு இயேசுகிறிஸ்து கரிநெருப்புப் போட்டிருக்கிறார். குளிருக்கு நடுங்குகிறவர்கள் இப்போது கரிநெருப்பின் உஷ்ணத்தில் தங்களைச் சூடுபடுத்திக்கொள்ளலாம்.

இயேசுகிறிஸ்து கரிநெருப்பின்மீது மீனையும் அப்பத்தையும் வைத்திருக்கிறார். பசியோடிருக்கிறவர்கள் மீனையும் அப்பத்தையும் புசித்து தங்கள் பசியைப் போக்கிக்கொள்ளலாம். இந்தக் கரிநெருப்பு எங்கேயிருந்து வந்தது? எப்படி வந்தது? என்னும் கேள்வி நமக்குத் தேவையற்றது. அப்பமும் மீனும் இயேசுகிறிஸ்துவுக்கு எப்படி கிடைத்தது? என்பதும் நமக்கு தேவையற்ற கேள்விதான். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களைப் பராமரிக்கிறார். போஷிக்கிறார்.

இயேசுகிறிஸ்து பசியோடிருக்கும் சீஷர்களுக்கு பெரிய விருந்து பரிமாறவில்லை. சாதாரணமான மீனையும் அப்பத்தையுமே அவர்களுக்குக் கொடுக்கிறார். சீஷர்களோ பசியோடிருக்கிறார்கள். அவர்களுக்கு ருசியைவிட, பசி நீங்கவேண்டும் என்பதே முக்கியம். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும் ருசியுள்ள பதார்த்தத்திற்கு ஆசைப்படக்கூடாது. கர்த்தர் எதைக்கொடுத்தாலும் அது நமக்குப் போதும் என்னும் மனப்பாங்கு நம்மிடத்தில் காணப்படவேண்டும். இயேசுகிறிஸ்து நமக்குப்போதுமானவர். அவருடைய கிருபை நமக்குப் போதுமானது. அவருடைய பாதுகாப்பும் பராமரிப்பும் நமக்குப் போதுமானது.

இயேசுகிறிஸ்து சீஷர்களுக்கு சாதாரணமான மீனும் அப்பமும் கொடுத்ததுபோல, இயேசுகிறிஸ்து நமக்கு சாதாரணமான வாழ்க்கைத்தரத்தையே கொடுத்திருக்கலாம். இருப்பதில் திருப்தியடைய நாம் கற்றுக்கொள்ளவேண்டும். போதுமென்ற பக்தியே மிகுந்த ஆதாயம். இயேசுகிறிஸ்துவும் தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக நினையாமல், தாழ்மையின் ரூபமெடுத்து, நம் மத்தியிலே ஊழியம் செய்தார்.

## அதிகாரம் - 21

இயேசுகிறிஸ்து நமக்கு எப்படிப்பட்ட ஆசீர்வாதங்களைக் கொடுக்கிறார் என்பதைவிட, அவர் நம்முடைய தேவைகளை ஏற்றவேளையில் சந்திக்கிறார் என்பதே நமக்கு முக்கியம். சீஷர்கள் பசியோடிருக்கும்போது அவர்களுக்குப் போஜனம்கொடுக்கிறார். அவர்கள் குளிரோடிருக்கும்போது அவர்களுக்கு கரிநெருப்பு கொடுக்கிறார்.

சீஷர்கள் இராமுழுவதும் கடலில் வலைகளைப்போட்டு, படவைச் செலுத்தி வருகிறார்கள். களைப்பாய் வருகிறார்கள். பசியோடு வருகிறார்கள். இவர்கள் இயேசுகிறிஸ்துவின் பிள்ளைகள். இயேசுகிறிஸ்துவே இவர்களைப் போஷித்துப் பராமரிக்கிறார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும் இந்த உலகத்தில் கர்த்தருக்காக ஊழியம் செய்கிறோம். நம்முடைய தேவைகள் சந்திக்கப்படவேண்டும் என்று நாம் நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவையே சார்ந்திருக்கவேண்டும். அவரே நம்முடைய ஊழியத்திற்கு எஜமான். அவர் நமக்குக் கொடுக்கும் ஆசீர்வாதங்களில் நாம் திருப்தியோடிருக்கவேண்டும். மேன்மையான ஆசீர்வாதங்கள் பரலோகத்தில் நமக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிறது.

**மீன்களில் சிலவற்றை**

**இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் இப்பொழுது பிடித்த மீன்களில் சிலவற்றைக் கொண்டுவாருங்கள் என்றார் (யோவா 21:10).**

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடம் "படவுக்கு வலதுபுறமாக வலையைப்போடுங்கள். அப்பொழுது உங்களுக்கு அகப்படும்" என்று சொன்னார். சீஷர்களும் அப்படியே வலையைப் போட்டார்கள். திரளான மீன்கள் அகப்பட்டது. அந்த மீன்களில் சிலவற்றைக் கொண்டுவருமாறு இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடத்தில் கூறுகிறார். அவர்கள் தங்கள் கைகளின் பிரயாசங்களினால் கிடைத்த ஆசீர்வாதங்களில் போஜனம் பண்ணவேண்டும். தேவனுடைய கிருபையினால் நாம் வேலை செய்கிறோம். நம்முடைய கைகளின் பிரயாசங்களை அவர் ஆசீர்வதிக்கிறார். நாம் கடினமாக உழைத்து, நேர்மையாக சம்பாதிக்கும்போது, அந்தச் சம்பாத்தியம் நமக்கு மிகுந்த ஆசீர்வாதத்தைத் தரும். அந்தச் சம்பாத்தியமே இன்பமானது. துன்மார்க்கமான சம்பாத்தியம் நமக்குச் சாபமாகவே இருக்கும்.

கிறிஸ்துவின் சீஷர்கள் இயேசுகிறிஸ்துவின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, படவுக்கு வலதுபுறமாக வலையைப்போட்டு, மீன்களைப் பிடித்திருக்கிறார்கள். இது அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஆசீர்வாதம். இந்த ஆசீர்வாதத்தை அவர்கள் சந்தோஷமாக அனுபவிக்கவேண்டும். வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரவானாக இருக்கிறான். இயேசுகிறிஸ்துவின் ஆசீர்வாதத்தை சீஷர்கள் ருசித்துப் பார்க்கவேண்டும்.

நம்மிடத்திலுள்ளதைப் பயன்படுத்த வேண்டுமென்று இயேசுகிறிஸ்து நமக்குக் கற்றுத்தருகிறார். சீஷர்கள் பிடித்த மீன்களில் சிலவற்றை அவர்கள் புசிக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவின் ஆசீர்வாதத்தின் ஒரு பகுதியை சீஷர்கள் அனுபவிக்கவேண்டும். இயேசுகிறிஸ்து கொடுக்கும் ஆசீர்வாதங்களைப் பூமியில் புதைத்து வைக்கக்கூடாது. அவற்றை ஸ்தோத்திரத்தோடே பயன்படுத்தவேண்டும். இயேசுகிறிஸ்து விசுவாசிகளாகிய நமக்கு பல ஆசீர்வாதங்களைக் கொடுத்திருக்கிறார். இவற்றை நாம் ஸ்தோத்திரத்தோடே அனுபவிக்கவேண்டும்.

உலகப் பிரகாரமான ஆசீர்வாதங்களையும், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும், கர்த்தர் நமக்குக் கொடுக்கும் அளவுக்குத்தக்கதாக, ஸ்தோத்திரம்பண்ணி அனுபவிக்கவேண்டும். அப்போது இயேசுகிறிஸ்து நம்மோடு போஜனம்பண்ணுவார். நாமும் அவரோடு போஜனம்பண்ணுவோம். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் மனுஷரைப்பிடிக்கிறவர்களாக இருக்கிறார்கள். ஊழியக்காரர்கள் தாங்கள் பிடித்திருக்கும் மனுஷர்களை இயேசுகிறிஸ்துவிடத்தில் கொண்டு வரவேண்டும். இயேசுகிறிஸ்துவே ஊழியக்காரர்களுக்கு எஜமானாக இருக்கிறவர்.

**சீமோன் பேதுரு**

**சீமோன்பேதுரு படவில் ஏறி, நூற்றைம்பத்துமூன்று பெரிய மீன்களால் நிறைந்த வலையைக் கரையில் இழுத்தான்; இத்தனை மீன்கள் இருந்தும் வலை கிழியவில்லை (யோவா 21:11).**

## அதிகாரம் - 21

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் அவர்கள் பிடித்த மீன்களில் சிலவற்றை கொண்டுவருமாறு கூறுகிறார். சீஷர்கள் இயேசுவின் கட்டளைக்குக் கீழ்ப்படிகிறார்கள். அவர்களுடைய வலையில் திரளான மீன்கள் அகப்பட்டதினால் அதை இழுக்கமாட்டாதிருக்கிறார்கள். அவர்களுடைய சொந்த முயற்சியினால் வலையை இழுக்க முடியவில்லை. இயேசுகிறிஸ்து அவர்களுக்குக் கட்டளையிட்ட பின்போ அவர்களால் மீன்களால் நிறைந்த வலையை கரையில் இழுக்க முடிகிறது.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் சுவிசேஷம் என்னும் வலையில் திரளான ஆத்துமாக்களைப் பிடிக்கிறார்கள். அந்த ஆத்துமாக்களை அவர்களால் சபைகளுக்குக் கொண்டு வந்து சேர்க்க முடியவில்லை என்றால், அவர்கள் ஆரம்பித்த நற்கிரியையை அவர்களால் செய்து முடிக்க முடியவில்லை என்றே பொருள். தேவனுடைய கிருபை இல்லையென்றால் ஊழியம் பாதியிலேயே அரைகுறையாக நின்றுவிடும். ஊழியத்தின் ஒவ்வொரு பகுதியும் நல்லமுறையில் நடைபெறவேண்டுமென்றால் அதற்குத் தேவனுடைய கிருபையும், உதவியும், ஒத்தாசையும் தேவை.

இயேசுகிறிஸ்துவின் சீஷர்களில் சீமோன் பேதுரு முன்னின்று செயல்படுகிறான். இயேசுகிறிஸ்துவிடம் வருவதற்காக அவன் படவிலிருந்து கடலில் குதித்தவன். இப்போது எல்லோரும் கரையிலிருக்கிறார்கள். சீமோன் பேதுருவோ படவில் ஏறுகிறான். எல்லோரும் படவிலிருந்தபோது சீமோன் பேதுரு கடலில் குதித்தான். எந்தக் காரியமாக இருந்தாலும் சீமோன் பேதுரு முதல் ஆளாக நின்று கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிகிறான்.

பேதுரு இயேசுவின்மீது பக்தி வைராக்கியமாக இருக்கிறான். கர்த்தரின் கட்டளைக்கு மற்ற சீஷர்களைவிட முன்னின்று கீழ்ப்படிகிறான். எப்போதுமே கீழ்ப்படிவதற்கு ஆயத்தமாகயிருக்கிறான். எல்லாரும் சீஷர்கள்தான். எல்லாரும் விசுவாசிகள்தான். ஆனாலும் எல்லோரும் ஒன்றுபோல் கீழ்ப்படிவதில்லை. எல்லோரும் ஒருமித்து முன்செல்வதில்லை. வேகத்தில் வித்தியாசமிருக்கிறது.

வலையிலிருந்த மீன்கள் எண்ணப்பட்டிருக்கிறது. அந்த வலையில் நூற்றுஐம்பத்து மூன்று பெரிய மீன்கள் இருக்கிறது. இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடத்தில் கிருபையுள்ளவராகயிருக்கிறார். அவருடைய கிருபையும் பெரிது. வலையில் நிறைந்திருக்கும் மீன்களும் பெரிது. வலையில் இத்தனை மீன்கள் இருந்தும் வலை கிழியவில்லை. இதுவே இயேசுகிறிஸ்துவின் பாதுகாப்பும் பராமரிப்பும். தங்களுக்குக் கிடைத்த மீன்களில் சீஷர்கள் ஒன்றையும் இழந்துபோகவில்லை. அவர்களுடைய வலையும் கிழியவில்லை.

சுவிசேஷத்தின் வலையில் ஏராளமான ஆத்துமாக்கள் வந்து சேருவார்கள். ஒரே நாளில் மூவாயிரம்பேர் சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். அதனால் சபை உடைந்துபோகவில்லை. இன்னும் எத்தனை ஆத்துமாக்கள் வேண்டுமானாலும் சபையில் வந்து சேரலாம். சபை உடைந்துபோகாது. ஏனெனில் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே சபையைக் கட்டுகிறவர். அவரே தமது சபைக்கு அஸ்திபாரமாக இருக்கிறவர். நாம் சுவிசேஷத்தின் வலையைத் தொடர்ந்து பயன்படுத்தி ஆத்துமாக்களைப் பிடிக்கலாம். நமது வலையும் கிழியாது. ஆத்துமாக்களும் தப்பித்துப்போகாது. ஊழியம் கர்த்தருடையது. கர்த்தர் பார்த்துக்கொள்வார்.

**கேட்கத்துணியவில்லை**

**இயேசு அவர்களை நோக்கி: வாருங்கள், போஜனம்பண்ணுங்கள் என்றார். அவரைக் கர்த்தரென்று சீஷர்கள் அறிந்தபடியினால் அவர்களில் ஒருவனும்: நீர் யார் என்று கேட்கத் துணியவில்லை (யோவா 21:12).**

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களைப் போஜனம்பண்ண வருமாறு அழைக்கிறார். தங்களை அழைக்கிறவர் கர்த்தரென்பதை சீஷர்கள் அறிந்துகொள்கிறார்கள். ஆகையினால் அவர்களில் ஒருவனும் "நீர் யார்" என்று அவரிடத்தில் கேட்கத் துணியவில்லை. "வாருங்கள், போஜனம் பண்ணுங்கள்" என்று இயேசுகிறிஸ்து மிகவும் சிநேகமாகவும், அந்நியோன்னியமாகவும் தம்முடைய சீஷர்களை அழைக்கிறார்.

## அதிகாரம் - 21

இயேசுகிறிஸ்து தேவாதி தேவனாகவும், கர்த்தராதி கர்த்தராகவும் இருக்கிறபோதிலும், தம்முடைய சீஷர்களை சிநேகிதராகவே பாவித்து, அவர்களிடத்தில் பழகுகிறார். தம்முடைய சிநேகிதர்களாகிய சீஷர்களைத் தம்மோடு போஜனம்பண்ண வருமாறு அழைக்கிறார். தம்மோடு ஐக்கியமாயிருக்குமாறு இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களை அழைக்கிறார். இந்த அழைப்பு அவருடைய கிருபையின் அழைப்பாகும். இயேசுகிறிஸ்து சீஷர்களுக்கும் சிநேகிதராயிருக்கிறார். அவர்கள் அவரோடுகூட போஜனம்பண்ணவேண்டும். இயேசுகிறிஸ்துவின் அழைப்பை சீஷர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இயேசுகிறிஸ்து இப்போது உயிர்த்தெழுந்த சரீரத்திலிருக்கிறார். இன்னும் சிறிது நாட்களில் அவர் பரமேறிப்போவார். தம்முடைய மகிமையில் பிரவேசிப்பார். அப்போது அவருடைய சீஷர்களுக்கும், அவரை விசுவாசிக்கிற எல்லோருக்கும், பரலோகத்திலே அவரோடு பந்தியில் அமர்ந்து போஜனம்பண்ணும் சிலாக்கியம் கிடைக்கும். இயேசுகிறிஸ்துவின் பந்தியிலே எல்லோரும் அமர்ந்து போஜனம்பண்ணுவதற்கு அங்கு போதுமான இடமுள்ளது. பந்தியில் இடமில்லையென்று அவர் யாரையும் வெளியே அனுப்பிவிடமாட்டார்.

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் அவரிடத்தில் அதிக பக்தியோடிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து தங்களை அன்போடு அழைத்தாலும், சீஷர்கள் முன்பு போல அவரிடத்தில் அந்நியோன்னியமாகப் பழக முன்வரவில்லை. வெட்கப்படுகிறார்கள். அவருடன் பேசுவதற்குக் கூடப் பயப்படுகிறார்கள். அவர் கர்த்தர் என்பதை சீஷர்கள் அறிந்திருக்கிறார்கள். ஆன படியினால் அவர்களில் ஒருவனும் "நீர் யார்" என்று அவரிடத்தில் கேட்கத் துணியவில்லை.

சீஷர்கள் அவரை கர்த்தரென்று அறிந்திருக்கிறார்கள். ஆகையினால் அவரிடத்தில் "நீர் யார்" என்று கேட்கவேண்டிய அவசியமில்லாமல் போயிற்று. அவர் கர்த்தரைத் தவிர வேறு யாருமாக இருக்கமுடியாது என்று சீஷர்கள் உறுதியாக நம்புகிறார்கள்.

இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு, சீஷர்களால் அவருடைய சரீரத்தைப் பிரத்தியட்சமாகப் பார்க்கமுடியவில்லை. அவர்களுக்குள் குழப்பமுண்டாயிற்று. இந்தக் குழப்பத்தின் மத்தியில், இயேசுகிறிஸ்துவினிடத்தில் "நீர் யார்" என்று கேட்டால், தங்களுடைய குழப்பம் வெளியே தெரிந்துவிடும் என்று சீஷர்கள் யோசித்திருக்கலாம்.

இயேசுகிறிஸ்துவை கர்த்தரென்று அறிந்திருந்தும், அவரிடத்தில் "நீர் யார்" என்று கேட்பார்களானால், அவருடைய கேள்வி அவிசுவாசத்தின் கேள்வியாகவே இருக்கும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் அவிசுவாசத்தை நீக்கிப்போட வேண்டும். நம்முடைய அவிசுவாசத்திற்காக நாம் வெட்கப்படவேண்டும். நம்முடைய உள்ளத்தில் காரணமில்லாத சந்தேகங்கள் வந்துவிடக்கூடாது. அதற்கு நம்மிடத்தில் இடம் தரக்கூடாது.

### அப்பத்தையும் மீனையும்

**அப்பொழுது இயேசு வந்து, அப்பத்தையும் மீனையும் எடுத்து, அவர்களுக்குக் கொடுத்தார் (யோவா 21:13).**

இயேசுகிறிஸ்துவே பந்தி விசாரிப்புக்காரராக தலைவராகவும் இருக்கிறார். தம்முடைய சீஷர்களை "வாருங்கள், போஜனம்பண்ணுங்கள்" என்று அழைக்கிறார். சீஷர்களும் இயேசுகிறிஸ்துவின் அழைப்பை ஏற்று அவரிடத்தில் வந்திருக்கிறார்கள். பந்தியில் இயேசுகிறிஸ்துவே, அப்பத்தையும் மீனையும் எடுத்து அவர்களுக்குக் கொடுக்கிறார். இது மிகவும் சாதாரணமான போஜனம்தான். அப்பமும் மீனும் மாத்திரமே போஜனமாகப் பரிமாறப்படுகிறது. சீஷர்கள் பசியோடிருக்கிறார்கள். அவர்கள் ருசித்துச் சாப்பிடவேண்டும் என்று எதிர்பார்க்கவில்லை. தங்கள் பசி நீங்கினாலே போதுமென்றிருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவும் அவர்களோடு போஜனம் பண்ணுகிறார். போஜனம் பண்ணுவதினால் அவர் தம்மை ஜீவனுள்ளவராக வெளிப்படுத்துகிறார். இயேசுகிறிஸ்து தம்மை இந்தப் பந்திக்குப் பிரபுவாக வெளிப்படுத்தவில்லை. பந்தியை இயேசுகிறிஸ்து தாமே ஆரம்பித்து வைக்கிறார். அவரே துவக்குகிறவர் அவரே முடிக்கிறவர். தாம் உயிர்த்தெழுந்த பின்பு தமக்கு மெய்யான சரீரம் இருக்கிறது என்பதை இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷருக்கு முன்பாக நிரூபிக்கிறார். தம்முடைய சரீரத்தினால் போஜனம்பண்ண முடியும் என்பதை அவர்களுக்கு தெளிவுபடுத்துகிறார்.

## அதிகாரம் - 21

இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த சத்தியத்தைப் பிரசங்கிக்கிற அப்போஸ்தலர்கள், இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு, இந்தச் சம்பவத்தையும் ஒரு சாட்சியாகப் பயன்படுத்துகிறார்கள். தாங்கள் இயேசுகிறிஸ்துவோடே புசித்துக் குடித்தவர்கள் என்று தங்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள் (அப் 10:41). இயேசுகிறிஸ்து தம்முடைய விருந்தினர்களெல்லோருக்கும் மீனைக் கொடுக்கிறார். அவர் தாமே அவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கிறார். அவர்களுடைய கரங்களில் கொடுக்கிறார். இயேசுகிறிஸ்து தாமே நம்முடைய இரட்சிப்பை கிரயத்திற்கு வாங்கியிருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் திருஇரத்தம் மனுக்குலத்தின் இரட்சிப்புக்காக கிரயமாகச் செலுத்தப்பட்டிருக்கிறது. நம்முடைய இரட்சிப்பின் ஆசீர்வாதங்களை இயேசுகிறிஸ்து நம்முடைய கரங்களில் கொடுக்கிறார்.

**மூன்றாவது தரிசனம்**

**இயேசு மரித்தோரிலிருந்தெழுந்த பின்பு தம்முடைய சீஷருக்கு அருளின தரிசனங்களில் இது மூன்றாவது தரிசனம் (யோவா 21:14).**

யோவான் இந்தச் சுவிசேஷத்தை எழுதும்போது, இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷருக்கு அப்பத்தையும் மீனையும் எடுத்துக்கொடுத்த சம்பவத்தை எழுதிவிட்டு, அதன்பின்பு " இயேசு மரித்தோரிலிருந்தெழுந்த பின்பு தம்முடைய சீஷருக்கு அருளின தரிசனங்களில் இது மூன்றாவது தரிசனம்" என்று எழுதுகிறார். இயேசுகிறிஸ்து மரியாளுக்கும், ஸ்திரீகளுக்கும், இரண்டு சீஷர்களுக்கும், கேபாவுக்கும் தரிசனம் கொடுத்திருக்கிறார். ஆனாலும் தம்முடைய சீஷர்களுக்கு மொத்தமாக இப்போது தரிசனம் கொடுப்பதுபோல, இதற்கு முன்பு அவர்களுக்கு இரண்டு தரம் தரிசனம் கொடுத்திருக்கிறார். இது மூன்றாவது தரிசமானகும்.

இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்தெழுந்த பின்பு, தம்முடைய சீஷருக்குத் தரிசனம் கொடுத்ததினால் அவர்களுடைய விசுவாசம் உறுதியாயிற்று. இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்திருக்கிறார் என்னும் சத்தியம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. சீஷர்களின் தரிசனம் தெளிவடைந்திருக்கிறது. இனிமேல் அவர்கள் தாங்கள் உறுதியாய் நம்புகிற சத்தியத்தை ஜனங்களிடத்தில் பிரசங்கம்பண்ணுவார்கள். இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த சம்பவம் அவருடைய சீஷர்கள் மத்தியில் மூன்றுமுறை நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இனிமேல் கிறிஸ்துவின் சீஷர்களுக்கு அவருடைய உயிர்த்தெழுதலைக்குறித்துச் சந்தேகம் வர வாய்ப்பில்லை.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடத்தில் தொடர்ந்து அன்புடன் இருக்கிறார். மூன்றுமுறை அவர் தம்முடைய சீஷருக்குத் தரிசனம் கொடுத்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் கிருபையுள்ள தரிசனத்தைப் பார்க்கும்போது சீஷர்களுக்கு மிகுந்த ஆசீர்வாதம் உண்டாகும். இது மூன்றாவது தரிசனம் என்று யோவான் எழுதுவதினால், ஒருவேளை இது இயேசு மரித்தோரிலிருந்தெழுந்தபின்பு, தம்முடைய சீஷருக்கு அருளின தரிசனங்களில், இது கடைசி தரிசனமாகவும் இருக்கலாம்.

## இயேசுகிறிஸ்துவும் பேதுருவும்
## யோவா 21 : 15-19

**யோவா 21:15. அவர்கள் போஜனம் பண்ணினபின்பு, இயேசு சீமோன் பேதுருவை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்றார். அதற்கு அவன்: ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றான். அவர்: என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக என்றார்.**

**யோவா 21:16. இரண்டாந்தரம் அவர் அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்றார். அதற்கு அவன்: ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றான். அவர்: என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார்.**

**யோவா 21:17. மூன்றாந்தரம் அவர் அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னை நேசிக்கிறாயா என்றார். என்னை நேசிக்கிறாயா என்று அவர் மூன்றாந்தரம் தன்னைக் கேட்டபடியினாலே, பேதுரு துக்கப்பட்டு: ஆண்டவரே, நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர், நான் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் நீர் அறிவீர் என்றான். இயேசு: என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார்.**

## அதிகாரம் - 21

**யோவா 21:18. நீ இளவயதுள்ளவனாயிருந்தபோது உன்னை நீயே அரைகட்டிக்கொண்டு, உனக்கு இஷ்டமான இடங்களிலே நடந்து திரிந்தாய்; நீ முதிர் வயதுள்ளவனாகும்போது உன் கைகளை நீட்டுவாய்; வேறொருவன் உன் அரையைக் கட்டி, உனக்கு இஷ்டமில்லாத இடத்துக்கு உன்னைக் கொண்டுபோவான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.**

**யோவா 21:19. இன்னவிதமான மரணத்தினாலே அவன் தேவனை மகிமைப்படுத்தப் போகிறானென்பதைக் குறிக்கும்படியாக இப்படிச் சொன்னார். அவர் இதைச் சொல்லியபின்பு, அவனை நோக்கி: என்னைப் பின்பற்றிவா என்றார்.**

**என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா**

**அவர்கள் போஜனம்பண்ணினபின்பு, இயேசு சீமோன்பேதுருவை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்றார். அதற்கு அவன்: ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றான். அவர்: என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக என்றார் (யோவா 21:15).**

சீமோன் பேதுரு இயேசு கிறிஸ்துவினிடத்தில் அன்பாயிருக்கிறான். ஆனாலும் அவனுடைய அன்பை இயேசுகிறிஸ்து சோதித்தறிய விரும்புகிறார். தம்முடைய ஆடுகளையும், ஆட்டுக் குட்டிகளையும் மேய்க்கும் ஊழியத்தை இயேசுகிறிஸ்து பேதுருவினிடத்தில் பொறுப்பாக ஒப்புக்கொடுக்கிறார். இயேசுவும் சீஷர்களும் போஜனம்பண்ணி முடித்து விடுகிறார்கள். இயேசுகிறிஸ்து போஜனம்பண்ணின பின்பு சீமோன் பேதுருவிடம் தனியாகப் பேசுகிறார்.

பேதுரு தன்னைப்பற்றி மிகுந்த அக்கரையோடிருக்கிறான். இயேசு கிறிஸ்துவைத் தான் ஏற்கெனவே மறுதலித்து பாவம் செய்தததுபோல, இனிமேலும் தவறு செய்துவிடக்கூடாது என்று எச்சரிப்போடிருக்கிறான். இயேசுவின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, அவருடைய சித்தத்தைச் செய்வதற்கு ஆயத்தமாகயிருக்கிறான். பேதுருவின் அன்பை இயேசுகிறிஸ்து உறுதிபண்ண விரும்புகிறார்.

இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு பேதுரு அவரை மூன்றுமுறை தரிசித்திருக்கிறான். இது மூன்றாவது சம்பவம். பேதுருவின் அன்பைப்பற்றி இயேசுகிறிஸ்து அவனிடத்தில் இதுவரையிலும் ஒன்றும் பேசவில்லை. தனக்கும் தன் ஆண்டவருக்கும் இடையிலுள்ள உறவையும் ஐக்கியத்தையும்பற்றி பேதுரு ஒருவேளை சந்தேகப்பட்டிருக்கலாம். தான் அவரை மறுதலித்ததினால், அவர் தன்மீது இன்னும் அன்பாயிருக்கிறாரா என்னும் சந்தேகம் அவனுக்குள் வந்திருக்கலாம். அவன் இயேசுகிறிஸ்துவோடு மறுபடியும் ஐக்கியத்தை எதிர்பார்க்கிறான். ஆயினும் அவனுக்குள் பயமும் இருக்கிறது.

இயேசுகிறிஸ்து பேதுருவின் உள்ளத்திலிருக்கும் சந்தேகத்தையும் பயத்தையும் நீக்கிப்போட சித்தங்கொள்கிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களோடு போஜனம்பண்ணுகிறார். அவர்களுக்குள் ஒப்புரவாதல் உண்டாயிற்று என்பதற்கு இதுவும் ஒரு அடையாளம். ஒற்றுமையாக இருக்கிறவர்களால் மாத்திரமே சேர்ந்து போஜனம்பண்ண முடியும். பேதுருவும் இயேசுவோடு சேர்ந்து போஜனம் பண்ணுகிறான். ஆகையினால் இயேசுகிறிஸ்து அவனுடைய பாவத்தை மன்னித்து, அவனைத் தன்னோடு ஒப்புவாக்கியிருக்கிறார்.

இயேசுகிறிஸ்து பேதுருவிடம் பேசும்போது ஒரு சிநேகிதனிடம் பேசுவதுபோல பேசுகிறார். இயேசுகிறிஸ்துவை மறுதலித்ததற்காக பேதுருவின் மனச்சாட்சி அவனைக் குற்றப்படுத்துகிறது. ஆனால் இயேசுகிறிஸ்துவோ அவனைக் குற்றப்படுத்தவில்லை. அவனைச் சிநேகிக்கிறார். அவனுடைய பாவங்களை நினைக்கிறார். மன்னிப்பதோடு அவற்றை மறந்தும்விடுகிறார். அவனுடைய உண்மையிலும் நேர்மையிலும் இயேசுகிறிஸ்து பிரியமாயிருக்கிறார். பேதுரு எப்போதும் போல தமக்குப் பிரியமான சீஷனென்பதை அவனுக்குத் தெளிவுபடுத்துகிறார். இயேசுகிறிஸ்து பேதுருவினிடத்தில் பேசும்போது அவருடைய அன்பும் கரிசனையும் வெளிப்படுகிறது.

## அதிகாரம் - 21

இயேசுகிறிஸ்து பேதுருவினிடத்தில் பேசும்போது, ஒரே கேள்வியையே மூன்றுமுறை திரும்பத் திரும்பக் கேட்கிறார். பேதுருவும் தான் முதலில் சொன்ன பதிலையே மூன்று முறையும் சொல்லுகிறான். ஒரே கேள்வியை இயேசுகிறிஸ்து மூன்றுமுறை பேதுருவினிடத்தில் கேட்டதினால், அவனுடைய உள்ளத்தில் வருத்தம் உண்டாயிருக்கலாம். ஒருவேளை அவனுக்கு உண்மையை உணர்த்த வேண்டுமென்பதற்காக இயேசுகிறிஸ்து ஒரே கேள்வியை மூன்றுமுறை கேட்டிருக்கலாம். ஊழியக்காரர்கள் கர்த்தருடைய செய்தியைப் பிரசங்கம்பண்ணும்போது, ஒரே சத்தியத்தைத் திரும்பத் திரும்ப கூறுவார்கள். அந்தச் சத்தியம் நம்முடைய உள்ளத்தில் பதியவேண்டும் என்பதற்காக அவர்கள் திரும்பத் திரும்ப சொல்லுவது வழக்கம். அதுபோலவே இயேசுகிறிஸ்து பேதுருவினிடத்தில் தாம் முதலில் கேட்ட கேள்வியையே மறுபடியும் கேட்கிறார்.

"நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா" என்பதே இயேசுகிறிஸ்து பேதுருவினிடத்தில் கேட்கும் அடிப்படைக் கேள்வி. இதே பொருளில்தான் மூன்று முறையும் கேள்வி கேட்கிறார். முதல்தடவை இயேசு அவனிடத்தில் கேட்டபோது "யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா" என்று கேட்கிறார். பேதுருவை அழைக்கும்போது "யோனாவின் குமாரனாகிய சீமோனே" என்று அழைக்கிறார். அவனைப் பெயர் சொல்லி அழைக்கிறார். அவனிடத்தில் தனிப்பட்ட முறையில் பேசவேண்டுமென்பதற்காகவும், தாம் பேசுவது அவனுடைய உள்ளத்தில் பதிய வேண்டுமென்பதற்காகவும், இயேசுகிறிஸ்து அவனைப் பெயர்சொல்லி அழைக்கிறார். இதற்கு முன்பு ஒருமுறை, "சீமோனே சீமோனே" (லூக் 22:17) என்று இயேசு அவனைப் பெயர்சொல்லி அழைத்தார்.

இயேசுகிறிஸ்து பேதுருவை அழைக்கும்போது, "கேபா" என்றோ, அல்லது "பேதுரு" என்றோ பெயர் சொல்லி அழைக்கவில்லை. இந்தப் பெயர்களை இயேசுகிறிஸ்துவே அவனுக்குக் கொடுத்திருக்கிறார். அவனுடைய பூர்வத்துப் பெயர் "சீமோன்". தாம் அவனுக்குக் கொடுத்த பெயரைச்சொல்லி அழைக்காமல், அவனுடைய பூர்வத்துப் பெயராகிய "சீமோன்" என்னும் பெயரையே இயேசுகிறிஸ்து இங்கு குறிப்பிடுகிறார்.

இயேசுகிறிஸ்து பேதுருவைப் பெயர்சொல்லிக் கூப்பிடும்போது கடினமான வார்த்தை எதையும் பயன்படுத்தவில்லை. "யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்" (மத் 16:17) என்று அவனை ஆசீர்வதிக்கும் வண்ணமாகவே, இயேசுகிறிஸ்து அவனைக் கூப்பிடுகிறார். சீமோனும் ஆண்டவரிடம் "ஆம் ஆண்டவரே உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர்" என்று கூறுகிறான். அதற்கு இயேசுகிறிஸ்து அவனிடத்தில் "என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக" என்று சொல்லி, அவனுக்கு ஊழியப்பொறுப்பையும் ஒப்புக்கொடுக்கிறார்.

இயேசுகிறிஸ்து பேதுருவினிடத்தில் "நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா" என்று கேட்கிறார். நாம் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறோமா, இயேசுவினிடத்தில் அன்பாயிருக்கிறோமா என்பதை, நாம் சோதித்தறிய வேண்டுமென்றால், நாமே நம்மிடத்தில் இப்படிப்பட்ட கேள்வியைக் கேட்டுக்கொள்ளவேண்டும். "நாம் இயேசு கிறிஸ்துவிடத்தில் அன்பாயிருக்கிறோமா" என்னும் நம்முடைய கேள்விக்கு, நம்முடைய இருதயமும் மனச்சாட்சியும் உண்மையான பதிலைத் தரவேண்டும்.

பேதுரு இயேசுகிறிஸ்துவை மூன்றுமுறை மறுதலித்திருக்கிறான். அதனால் அவன் இயேசுவின்மீது வைத்திருக்கும் அன்பில் சந்தேகம் உண்டாயிற்று. "பேதுரு உன்னுடைய அன்பை நான் சந்தேகப்படும் விதத்தில் நீ நடந்துகொண்டாய். நீ இப்போது என்மீது உண்மையாய் அன்பாயிருக்கிறாயா, என்னைப் பார்த்து நீ வெட்கப்படாமலிருக்கிறாயா, பாடுகள் வந்தாலும் என்னை உன் ஆண்டவராக ஏற்றுக்கொள்ள நீ பயப்படாமலிருக்கிறாயா" என்று பொருள்படும் விதமாக இயேசுகிறிஸ்து பேதுருவிடம் கேட்கிறார்.

## அதிகாரம் - 21

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நம்முடைய ஆவிக்குரிய பழைய அனுபவங்களையெல்லாம் நினைத்துப் பார்க்கவேண்டும். நாம் இயேசுவின்மீது அன்பில்லாதவர்களாகவும், விசுவாசமில்லாத வர்களாகவும், ஜீவித்ததுண்டானால், நம்முடைய நேர்மையும் கேள்விக்குரியதே. நம்முடைய வாயினால் "ஆண்டவரே உம்மை நேசிக்கிறேன், உம்மை விசுவாசிக்கிறேன்" என்று சொல்லலாம். ஆனாலும் நம்முடைய உள்மனது இயேசுவைப்பற்றி என்ன நினைக்கிறது என்பதே முக்கியம்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் ஏற்கெனவே பின்வாங்கிப்போயிருந்தால், அவர் நம்மை இப்போது சோதித்துப் பார்க்க விரும்புகிறார். இயேசுகிறிஸ்து நம்மைச் சோதித்துப்பார்க்கும்போது, அவருடைய சோதனைக்கு நம்மை உட்படுத்திக் கொள்ளவேண்டும். சோதிக்கப்படும்போது நாம் வெட்கப்படக்கூடாது. இயேசுகிறிஸ்து நம்முடைய பழைய குறைகளையெல்லாம் மன்னித்து, இப்போது நம்மை நிறைவாக ஆசீர்வதிக்க விரும்புகிறார்.

இயேசுகிறிஸ்து பேதுருவிடம் "என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா" என்று கேட்கிறார். அதற்கு பேதுரு "ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன்" என்று பதில் சொல்லுகிறான். கண்ணீரோடு பதில் சொல்லுகிறான். பேதுருவின் விசுவாசம் இப்போது சோதிக்கப்படுகிறது. பேதுரு இயேசுகிறிஸ்துவை மறுதலித்தபின்பு, தன்னுடைய தவறை உணர்ந்து, மனங்கசந்து அழுதான். இயேசுகிறிஸ்து பேதுருவிடம் "நீ எவ்வளவு அழுதாய்" என்று கேட்கவில்லை. அதற்குப் பதிலாக "நீ என்னிடத்தில் எவ்வளவு அன்பாயிருக்கிறாய்" என்றுதான் கேட்கிறார்.

நாம் இயேசுகிறிஸ்துவிடத்தில் அதிகமாய் அன்புகூரும்போது, நம்முடைய பாவம் அதிகமாய் மன்னிக்கப்படும். நாம் அதிகமாய் அழுவதினாலல்ல, நாம் இயேசுவினிடத்தில் அதிகமாய் அன்புகூருவதினாலேயே, நம்முடைய பாவம் அதிகமாய் மன்னிக்கப்படுகிறது. மகதலேனா மரியாள் இயேசுவின்மீது அதிகமாய் அன்புகூர்ந்தாள். ஆகையினால் அவளுடைய பாவங்கள் அவளுக்கு அதிகமாய் மன்னிக்கப்பட்டது.

பேதுரு இயேசுகிறிஸ்துவின்மீது அன்பாயிருப்பானென்றால், அவன் தன்னுடைய அன்பை நிரூபிக்கவேண்டும். இயேசுகிறிஸ்து தம்முடைய ஆடுகளை பேதுருவினிடத்தில் ஒப்புக்கொடுப்பதற்கு முன்பாக, "நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா" என்று கேட்கிறார். தம்முடைய ஆடுகளைக் குறித்து இயேசுகிறிஸ்து மிகுந்த கரிசனையோடிருக்கிறார். இயேசுவின்மீது அன்பில்லாதவர்களிடத்தில், தம்முடைய ஆடுகளை மேய்க்கும் ஊழியத்தைக் கொடுக்கமாட்டார். இயேசுகிறிஸ்துவை உண்மையாய் நேசிக்காதவர்கள், மனுஷருடைய ஆத்துமாக்களையும் உண்மையாய் நேசிக்கமாட்டார்கள். நம்முடைய ஆண்டவரை நாம் நேசிக்கவில்லையென்றால், அவருடைய ஊழியத்தையும் நாம் நேசிக்கமாட்டோம். ஆத்துமாக்களையும் நேசிக்கமாட்டோம்.

நம்முடைய விசுவாசப் பாதையிலும், ஊழியப் பாதையிலும் நமக்குப் பலவிதமான பிரச்சனைகளும், வேதனைகளும், தடைகளும் வரலாம். நாம் சோர்ந்துபோகலாம். இவையெல்லாவற்றையும் நாம் சந்தித்து முன்னேறிச்செல்ல வேண்டுமென்றால், நாம் இயேசுகிறிஸ்துவை நேசிக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவின் மீது நமக்கு அன்பில்லையென்றால், பிரச்சனைகள் வரும்போது ஊழியத்தைவிட்டே ஓடிப்போய்விடுவோம். எதையும் சகித்துக் கொள்ளமாட்டோம்.

நாம் இயேசுகிறிஸ்துவின் மீது அன்புள்ளவர்களாகயிருப்போமென்றால் இயேசுகிறிஸ்துவின் ஊழியம் நமக்குக் கடினமாகயிராது. அது எளிதாகயிருக்கும். கிறிஸ்துவின் ஊழியம் நமக்குக் கசப்பாகயிராது. அது நமக்கு இனிப்பாகயிருக்கும். இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களாகிய நாம், ஒவ்வொரு வேளையிலும் அவர்மீது நாம் வைத்திருக்கும் அன்பை உறுதிபண்ணிக்கொள்ளவேண்டும். இயேசுகிறிஸ்துவும் நம்மீது அன்பாகவே இருக்கிறார்.

**இரண்டாந்தரம்**

**இரண்டாந்தரம் அவர் அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்றார். அதற்கு அவன்: ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றான். அவர்: என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார் (யோவா 21:16).**

## அதிகாரம் - 21

இயேசுகிறிஸ்து இரண்டாந்தரமும் சீமோன் பேதுருவிடம் "யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா" என்று கேட்கிறார். மற்ற சீஷர்களைவிட பேதுரு தம்மிடம் அன்பாகயிருக்கிறானா என்று இயேசு அவனிடம் கேட்கிறார். யாக்கோபு, யோவான் அல்லது அந்திரேயா ஆகிய இவர்களைவிட "நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா" என்று பொருள்படுமாறு இயேசுகிறிஸ்து பேதுருவிடம் கேட்கிறார். இந்த உலகத்தில் நமக்குப் பல சிநேகிதர்கள் இருக்கலாம். உலக சிநேகிதர்மீது நாம் வைத்திருக்கும் அன்பைவிட இயேசுகிறிஸ்துவின்மீது நாம் வைத்திருக்கும் அன்பு அதிகமாயிருக்க வேண்டும். அப்படியில்லையென்றால் நம்முடைய அன்பு சரியான அன்பல்ல.

பேதுருவைத் தவிர மற்ற சீஷர்களும் இயேசுகிறிஸ்துவிடத்தில் அன்பாயிருக்கிறார்கள். அவர்கள் தம்மீது வைத்திருக்கும் அன்பைவிட பேதுரு தம்மீது அதிகமாக அன்பு வைத்திருக்கிறானா என்பதை இயேசுகிறிஸ்து தெளிவுபடுத்த விரும்புகிறார். பேதுரு தன்னுடைய இருதயத்தில் வீண்பெருமையோடிருக்கிறான். "எல்லோரும் மறுதலித்தாலும் நான் உம்மை மறுதலிக்கமாட்டேன்" என்று பேதுரு இயேசுவிடம் பெருமையோடு பேசினான். ஆனால் பேதுருவோ சேவல் இரண்டுமுறை கூவுகிறதற்கு முன்னே, தன் ஆண்டவரை மூன்றுமுறை மறுதலித்துவிடுகிறான். இப்படிப்பட்ட வீண்பெருமையான பேச்சுக்களும், பெருமையான சுபாவங்களும் பேதுருவைவிட்டு நீங்கவேண்டும்.

மற்ற சீஷர்களைவிட பேதுரு இயேசுவினிடத்தில் அதிகமாய் அன்புகூர வேண்டும். யாருக்கு அதிகமாய் மன்னிக்கப்படுகிறதோ அவர்கள் இயேசுவினிடத்தில் அதிகமாய் அன்பு கூருவார்கள். இயேசுகிறிஸ்து பேதுருவுக்கு அதிகமாய் மன்னித்திருக்கிறார். ஆகையினால் இயேசு பேதுருவினிடத்தில் அதிகமாய் எதிர்பார்க்கிறார். இயேசுகிறிஸ்துவின்மீது நாம் மற்றவர்களைவிட மிகவும் அதிகமாய் அன்புகூரவேண்டும். இது பொறாமையினால் உண்டாகும் போட்டியல்ல. நம்முடைய அன்பை வெளிப்படுத்திக் காண்பிக்கும் ஆரோக்கியமான போட்டி. அன்பான போட்டி.

இரண்டாந்தரமும் மூன்றாந்தரமும் இயேசுகிறிஸ்து பேதுருவிடம் இதே கேள்வியையே கேட்கிறார். "இவர்களிலும் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா" என்று இயேசுகிறிஸ்து பேதுருவிடம் இரண்டு முறை கேட்கிறார். பேதுருவின் அன்பையும் மற்ற சீஷர்களின் அன்பையும் இயேசுகிறிஸ்து ஒப்பிட்டுப் பார்க்கிறார். ஏனெனில் பேதுரு மற்ற சீஷர்களைப்போல அமைதியாயிராமல், அவரை மூன்றுமுறை மறுதலித்திருக்கிறான். ஆயினும் அவன் எப்போதுமே மற்ற சீஷர்களைவிட "தான்தான் பெரியவன்" என்று காண்பித்துக்கொள்ள ஆசைப்படுகிறவன். இயேசுகிறிஸ்துவுக்காகத் தன் ஜீவனையே கொடுப்பதாகக் கூறினான். எல்லோருக்கும் முன்பாக தான் முன்செல்ல விரும்புவதாகச் சொன்னவன். அப்படிப்பட்டவன் மற்ற சீஷர்களைவிட இயேசுவினிடத்தில் அதிகமாய் அன்புகூரவேண்டும்.

இயேசுகிறிஸ்துவின்மீது நாம் வைத்திருக்கும் அன்பு, மற்றவர்கள் அவர்மீது வைத்திருக்கும் அன்பைவிட அதிகமில்லாமல் போகலாம். ஆனாலும் இயேசுகிறிஸ்துவை நாம் இரட்சகராக ஏற்றுக்கொண்டால், அவர் மீது நாம் வைத்திருக்கும் அன்பு உண்மையானதாகவும், மாய்மாலமில்லாததாகவும் இருக்கவேண்டும். அவரிடத்தில் நாம் மெய்யான அன்புகூரவேண்டும்.

இயேசுகிறிஸ்து சீமோன் பேதுருவினிடத்தில் "என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா" என்று கேட்டபோது, பேதுரு "ஆம் ஆண்டவரே உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர்" என்று இரண்டுமுறை பதில் கூறுகிறான். மூன்றாம் முறையும் "ஆண்டவரே நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர், நான் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் நீர் அறிவீர்" என்று கூறுகிறான்.

**மூன்றாந்தரம்**

**மூன்றாந்தரம் அவர் அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னை நேசிக்கிறாயா என்றார். என்னை நேசிக்கிறாயா என்று அவர் மூன்றாந்தரம் தன்னைக் கேட்டபடியினாலே, பேதுரு துக்கப்பட்டு: ஆண்டவரே, நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர், நான் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் நீர் அறிவீர் என்றான். இயேசு: என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார் (யோவா 21:17).**

## அதிகாரம் - 21

சீமோன் பேதுரு இயேசு கிறிஸ்துவினிடத்தில் அன்பாயிருக்கிறான். ஆனாலும் மற்றவர்களைவிட, தான் இயேசு கிறிஸ்துவிடம் அதிக அன்பாயிருப்பதாகக் கூறுவதற்குப் பேதுரு தயங்குகிறான். இப்போது பேதுருவினிடத்தில் பெருமையில்லை. ஆகையினால் "நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர்" என்று கூறிவிட்டு, "நான் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் நீர் அறிவீர்" என்று கூறுகிறான்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் மேன்மையான அனுபவங்களையே நாடவேண்டும். அதே வேளையில் நம்முடைய மனதில் தாழ்மையும் இருக்கவேண்டும். மற்ற விசுவாசிகளைவிட நாம் உயர்ந்தவர்கள் என்னும் பெருமை நம்மிடத்தில் காணப்படக்கூடாது. நம்மிடத்தில் என்னென்ன குறைகள் உள்ளது என்பது, மற்றவர்களைவிட நமக்குத்தான் நன்றாகத் தெரியும். நம்மை நாம் அறிந்திருப்பதுபோல, மற்றவர்கள் நம்மை அறிந்திருப்பதற்கு வாய்ப்பில்லை. பெருமை எப்போதுமே தேவனுக்கு விரோதமான பகை.

சீமோன் பேதுரு இயேசுகிறிஸ்துவிடம் மெய்யாகவே அன்பாயிருக்கிறான். ஒருவேளை மற்ற சீஷரிலும் தான் அவர்மீது அதிக அன்பாயிருப்பதை, பேதுருவால் சொல்ல முடியாமல் போனாலும், தான் இயேசுவின்மீது அன்பாயிருப்பதை திரும்பத் திரும்ப உறுதிபண்ணுகிறான். "ஆம் ஆண்டவரே உம்மை நேசிக்கிறேன்" என்று மூன்றுமுறையும் கூறுகிறான். பேதுரு இயேசுகிறிஸ்துவின்மீது மெய்யாகவே அன்புகூருகிறான். இயேசுகிறிஸ்து தன்மீது வைத்திருக்கும் அன்புக்கு பேதுரு நன்றியுள்ளவனாக இருக்கிறான். இயேசு தனக்குக் காண்பிக்கும் கிருபையையும் இரக்கத்தையும் பேதுரு நன்றியுள்ள இருதயத்தோடு அங்கீகரிக்கிறான். இயேசுகிறிஸ்துவில் மகிழ்ச்சியாக இருக்கிறான். அவருக்குள் சந்தோஷப்பட்டு களிகூருகிறான். இயேசுகிறிஸ்துவிடத்தில் அன்பாயிருப்பதே அவனுக்குச் சந்தோஷமாயிருக்கிறது.

சீமோன் பேதுரு இயேசுகிறிஸ்துவை மறுதலித்து பாவம் செய்தான். அவனுடைய பாவம் அவனுடைய மனச்சாட்சியைக் குற்றப்படுத்தியது. மனதில் வேதனையுண்டாயிற்று. இப்போதோ பேதுரு தன் பாவங்களுக்கு மனந்திரும்பியிருக்கிறான். இயேசுகிறிஸ்துவும் அவனுடைய பாவங்களை மன்னித்திருக்கிறார். பேதுருவின் இருதயத்தில் அவனுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்ட சந்தோஷம் நிரம்பி வழிகிறது. பேதுரு இயேசுவை அதிகமாக நேசித்தான். ஆனாலும் அவரை மறுதலித்துவிட்டான். அந்த வேதனையிலிருந்து இப்போதுதான் பேதுரு விடுதலைபெற்று, கிறிஸ்துவுக்குள் சந்தோஷமாகயிருக்கிறான். இயேசு கிறிஸ்துவைத் தான் இப்போது நேசிப்பதாகவும், இனிமேலும் நேசிக்கப்போவதாகவும் பேதுரு வாக்குப்பண்ணுகிறான். பேதுருவின் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு இயேசுகிறிஸ்து அவனுக்காக வேண்டிக்கொள்கிறார் (லூக் 22:32). பேதுருவின் விசுவாசம் ஒழிந்துபோகவில்லை. பேதுரு இயேசுவின்மீது வைத்திருக்கும் அன்பு குறைந்துபோகவில்லை. விசுவாசம் அன்பினால் கிரியை நடப்பிக்கிறது.

இயேசுகிறிஸ்து பேதுருவின் அன்பைச் சோதிக்கிறார். "என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா" என்று அவனிடத்தில் கேட்கிறார். பேதுருவும் இயேசுகிறிஸ்துவுக்கு எந்தவிதத் தயக்கமுமில்லாமல் "ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன்" என்று தன்னுடைய உள்ளத்தின் ஆழத்திலிருந்து பதில் சொல்லுகிறான்.

பேதுரு இயேசுகிறிஸ்துவை நேசிப்பதற்கு அவரையே சாட்சியாக வைக்கிறான். "உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர்" என்று கூறுகிறான். தன்னுடைய அன்புக்கு சாட்சியாக இருக்குமாறு இயேசு கிறிஸ்துவையே அழைக்கிறான். இயேசு கிறிஸ்துவுக்கு எல்லாம் தெரியும். அவர் பேதுருவின் பேச்சையும், இருதயத்தையும் அறிந்திருக்கிறார். ஆகையினால் இயேசுகிறிஸ்துவே தனக்குச் சாட்சியாக இருக்கவேண்டுமென்று பேதுரு விரும்புகிறான்.

பேதுரு இயேசுகிறிஸ்துவின்மீது எப்படிப்பட்ட அன்பு வைத்திருக்கிறான் என்பது இயேசுவுக்குத் தெரியும். பேதுரு இயேசுவின்மீது வைத்திருக்கும் அன்பில் திருப்தியோடிருக்கிறான். பேதுருவின் அன்பு மெய்யானது. மாய்மாலமில்லாதது. தன்னைப்பற்றி இயேசுவுக்கு எல்லாம் தெரியும் என்பதினால் பேதுருவுக்குச் சந்தோஷமாகயிருக்கிறது. தங்களைப்பற்றிய ரகசியம் வெளியரங்கமாகி விடுமோ என்று துன்மார்க்கர் பயப்படுவார்கள். ஆனால் பேதுருவோ தன்னைப்பற்றிய ரகசியம் இயேசுவுக்குத் தெரியுமென்று ஆறுதலாகயிருக்கிறான்.

## அதிகாரம் - 21

இதே ஆறுதல் விசுவாசிகளாகிய நம் எல்லோரிடத்திலுமிருக்க வேண்டும். இயேசுகிறிஸ்து நம்மையும், நம்முடைய சுபாவத்தையும், நம்முடைய விசுவாசத்தையும் அறிந்திருக்கிறார். நமக்கு நம்மைப்பற்றி தெரிவதைவிட, இயேசுகிறிஸ்துவுக்கு நம்மைப்பற்றி நன்றாய்த் தெரியும். நம்முடைய சுபாவமும், நம்முடைய இருதயத்தின் சிந்தனைகளும், நம்முடைய வெற்றிகளும், தோல்விகளும் இயேசுகிறிஸ்துவுக்கு நன்றாய்த் தெரியும்.

இயேசுகிறிஸ்து மூன்றாந்தரம் சீமோன் பேதுருவை நோக்கி "நீ என்னை நேசிக்கிறாயா" என்று கேட்கிறார். "என்னை நேசிக்கிறாயா" என்று இயேசுகிறிஸ்து மூன்றாந்தரம் தன்னைக் கேட்டபடியினாலே பேதுரு துக்கப்படுகிறான். தான் இயேசுகிறிஸ்துவை மூன்றுதரம் மறுதலித்ததை இப்போது நினைத்துப் பார்க்கிறான். நாம் உண்மையாக மனந்திரும்பியிருந்தாலும், நம்முடைய பழைய பாவங்களை நினைத்துப்பார்க்கும்போது, நமக்குள் மனவருத்தமுண்டாகும். நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டிருந்தாலும், பழைய பாவங்கள் நம்முடைய இருதயத்தை வேதனைப்படுத்தும்.

இயேசுகிறிஸ்து பேதுருவிடம் ஒரே கேள்வியை திரும்பத் திரும்பக் கேட்பதினால் அவனுக்குள் துக்கமுண்டாயிற்று. ஏற்கெனவே இயேசுகிறிஸ்துவை மறுதலித்ததுபோல, மறுபடியும் அவருக்கு விரோதமாக ஏதாவது பாவம் செய்து விடுவோமோ என்னும் பயம் அவனுக்குள் உண்டாயிற்று. இயேசுகிறிஸ்து எல்லாவற்றையும் முன்னறிந்திருக்கிறார். ஒருவேளை தன்னுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் தான் இனிமேல் தோல்வியடையப் போவதை இயேசுகிறிஸ்து முன்னறிந்திருக்கிறாரோ என்றும் நினைத்து பேதுரு பயப்படுகிறான். ஆகையினால் மூன்றாம்முறையாக இயேசுகிறிஸ்துவுக்குப் பதில் கூறும்போது "ஆண்டவரே நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர்" என்று இயேசுகிறிஸ்துவின் சர்வஞானத்தை அங்கீகரிக்கிறான்.

தன்னை ஆளுகை செய்கிறவரும், தன்னை ஆட்கொண்டவரும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே என்றும், அவர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறாரென்றும் பேதுரு அங்கீகரிக்கிறான். இயேசுகிறிஸ்துவை மறுதலித்தபோது பேதுருவுக்கு சோதனை உண்டானதுபோல, மறுபடியும் அவனுக்குச் சோதனை உண்டானால், அவன் எப்படியிருப்பான் என்பது பேதுருவுக்குத் தெரியாது. ஆனாலும் இயேசுகிறிஸ்து எல்லாவற்றையும் அறிந்திருக்கிறாரென்று பேதுரு அங்கீகரிக்கிறான்.

இயேசுகிறிஸ்து பேதுருவிடம் ஒவ்வொரு முறையும் "என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா" என்று கேட்ட பின்பு, அவனிடத்தில் "என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக" என்று ஒரு தடவையும், "என் ஆடுகளை மேய்ப்பாயாக" என்று இரண்டு தடவையும் சொல்லுகிறார். இயேசுகிறிஸ்து பேதுருவின் பராமரிப்பில் ஏராளமான ஆத்துமாக்களையும் ஒப்புக்கொடுக்கிறார். அந்த ஆத்துமாக்கள் பேதுருவுக்கு ஆட்டுக்குட்டிகளாகவும், ஆடுகளாகவும் இருக்கிறார்கள். பேதுரு அவற்றிற்கு மேய்ப்பனாக இருக்கிறான்.

பேதுருவின் மந்தையில் ஒரு சில வெள்ளாடுகளும் இருக்கும், ஒரு சில செம்மறியாடுகளும் இருக்கும். மேய்ப்பன் வெள்ளாடுகளையும் செம்மறியாடுகளையும் மேய்க்கவேண்டும். ஆட்டுக்குட்டிகள்மீது அதிக கவனம் செலுத்தவேண்டும். அவற்றை மென்மையாக நடத்தவேண்டும். மேய்ப்பன் ஆடுகளை மேய்க்கவேண்டும்.

யோவான் 21:15, 21:17 ஆகிய இரண்டு வசனங்களிலும் "மேய்ப்பாயாக" என்று இயேசுகிறிஸ்து கூறும் வார்த்தைக்கு "போஜனம்கொடுப்பாயாக" என்பதே பொருளாகும். யோவான் 21:16-ஆவது வசனத்தில் சொல்லப்படும் "மேய்ப்பாயாக" என்னும் வார்த்தைக்கு "ஆடுகளைப் பொதுவாக மேய்ப்பது" என்பது பொருள். ஒரு மேய்ப்பன் தன்னுடைய ஆடுகளை எப்படி மேய்க்கவேண்டுமோ அப்படி மேய்ப்பது என்பதே இந்த வார்த்தையின் பொதுவான பொருள்.

# அதிகாரம் - 21

கிறிஸ்தவ ஊழியக்காரர்களெல்லோருமே இயேசுகிறிஸ்துவின் ஆட்டுக்குட்டிகளையும், ஆடுகளையும் மேய்க்கவேண்டும். செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் மேய்க்கவேண்டும். ஆடுகளுக்குப் போஜனம் கொடுப்பது என்னும் வார்த்தைக்கு, விசுவாசிகளுக்கு உபதேசம்பண்ணுவது, போதிப்பது என்று பொருள். அவர்களுக்கு ஆவிக்குரிய ஆகாரத்தைக் கொடுக்கவேண்டும். மேய்ப்பன் ஆடுகளைப் பசுமையான புல் தரையில் மேய்ப்பான். கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் விசுவாசிகளை, பசுமையான புல் தரைபோல் இருக்கும், எல்லா பிரமாணங்களையும் உபதேசம்பண்ணி, அவர்களுக்கு ஆவிக்குரிய போஜனம் கொடுக்கவேண்டும்.

மேய்ப்பன் தன் ஆடுகளை மேய்க்கும்போது, அவற்றின் ஜீரண சக்திக்கு ஏற்றவாறு அவற்றிற்குப் போஜனம் கொடுப்பான். அவற்றின் உடல் நலத்திற்கு ஏற்றவாறு அவற்றை மேய்ப்பான். அதுபோலவே கர்த்தருடைய ஊழியக்காரர்களும் விசுவாசிகளுக்கு எந்த அளவுக்கு உபதேசம்பண்ணவேண்டுமோ அந்த அளவுக்கு உபதேசம்பண்ணவேண்டும். அவர்களுக்கு ஊழியக்காரர்கள் முன்மாதிரியாக ஜீவிக்கவேண்டும்.

சில சமயங்களில் ஆடுகளுக்கு முன்பாகப் போஜனத்தை வைத்தால் அவை தானாகவே மேய்ந்துவிடும். சில சமயங்களில் ஆடுகள் ஒன்றும் சாப்பிடாது. அப்போது அவற்றின் மேய்ப்பன் ஆடுகளின் போஜனத்தை அவற்றின் வாயில் ஊட்டுவான். அவை சாப்பிட்டாலும் சாப்பிடாவிட்டாலும், கட்டாயப்படுத்தி ஊட்டுவான். சில சமயங்களில் ஆடுகள் குட்டிகளாகயிருக்கும். அவற்றால் தானாக மேயமுடியாது. மேய்ப்பன் அவற்றின்மீது விசேஷித்த கவனம் செலுத்தி அவற்றிற்குப் போஜனம்கொடுப்பான். விசுவாசிகள் பலவீனமானவர்களாகவும், புதிய விசுவாசிகளாகவும் இருப்பார்களென்றால், ஊழியக்காரர்கள் அவர்களிடத்தில் விசேஷித்த கவனம் செலுத்தவேண்டும்.

இயேசுகிறிஸ்து தம்முடைய ஆடுகளை மேய்க்கும் ஊழியத்தை சீமோன் பேதுருவிடம் ஒப்புக்கொடுக்கிறார். இந்த ஊழியத்தை மற்ற சீஷர்களிடம் ஒப்புக்கொடுக்காமல், பேதுருவினிடத்தில் விசேஷமாக ஒப்புக்கொடுக்கிறார். பேதுருவின் அப்போஸ்தல ஊழியத்திற்கு இயேசுகிறிஸ்து நியமித்திருக்கும் ஊழியம் இதுதான். இயேசுகிறிஸ்துவை மறுதலித்த பாவத்திற்காக பேதுரு இப்போது மனந்திரும்பியிருக்கிறான். ஆகையினால் இயேசுகிறிஸ்து அவனுக்கு மறுபடியும் அப்போஸ்தல ஊழியத்தைப் புதுப்பித்துக் கொடுக்கிறார்.

எல்லா அப்போஸ்தலர்களுமே இயேசுகிறிஸ்துவின் ஆடுகளை மேய்க்கவேண்டும். பேதுருவோ இயேசுவை மறுதலித்து, அவரை விட்டு விலகிப்போனதினால், அப்போஸ்தல ஊழியத்திலிருந்து இயேசு தன்னை விலக்கி வைத்துவிட்டாரோ என்னும் சந்தேகம் பேதுருவின் உள்ளத்தில் எழும்பிற்று. அந்தச் சந்தேகத்தை நீக்குவதற்காகவும், பேதுருவின் அப்போஸ்தல ஊழியத்தை மறுபடியும் உறுதிபண்ணுவதற்காகவும், இயேசுகிறிஸ்து அவனிடத்தில் "என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக" என்றும், "என் ஆடுகளை மேய்ப்பாயாக" என்றும் மூன்றுமுறை கூறி உறுதிபண்ணுகிறார். இயேசுகிறிஸ்து பேதுருவை மன்னித்துவிட்டார் என்பதற்கு, இந்தச் சம்பவம் ஒரு சாட்சியாக இருக்கிறது. இயேசுகிறிஸ்து பேதுருவை மன்னிக்கவில்லையென்றால், தம்முடைய ஆடுகளை மேய்க்கும் ஊழியத்தை அவனிடத்தில் பொறுப்பாக நம்பி ஒப்புக்கொடுக்கமாட்டார்.

இயேசுகிறிஸ்து பேதுருவை மன்னித்தபோது அவனை நம்புகிறார். இந்தப் பூமியில் பேதுரு தனக்கு நம்பிக்கைக்குரிய, பிரயோஜனமுள்ள பாத்திரமாக இருப்பானென்று இயேசுகிறிஸ்து எதிர்பார்க்கிறார். இந்தப் பூமியில் பேதுரு இயேசுவுக்கு ஒரு பொக்கிஷமாக இருக்கிறான். பேதுருவின் அப்போஸ்தல ஊழியத்தைப் பிரதிஷ்டைபண்ணி, இந்த உலகத்தில் அவனுக்கு நியமிக்கப்பட்டிருக்கும் ஊழியத்தை நிறைவேற்ற, அவனை அனுப்பவேண்டுமென்பதே இயேசுகிறிஸ்துவின் சித்தமாகயிருக்கிறது.

## அதிகாரம் - 21

பேதுரு மற்ற சீஷர்களைவிட அதிகமாய் பேசக்கூடியவன். அதிகமாய் செயல்படக்கூடியவன். "ஆண்டவரே உம்மை நேசிக்கிறேன்" என்று பேதுரு தன் வாயினால் சொன்னால் மாத்திரம் போதாது. தன்னுடைய அன்பை செய்கையினாலும் நிரூபிக்க வேண்டும். இயேசுகிறிஸ்துவின் வார்த்தைக்குக் கீழ்ப்படிவதே அவரிடத்தில் மெய்யாய் அன்புகூருவதாகும். பேதுரு இயேசுவின்மீது மெய்யாகவே அன்புகூருவானென்றால், இயேசுகிறிஸ்துவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, அவருடைய ஆட்டுக்குட்டிகளையும், ஆடுகளையும் உண்மையாய் மேய்க்கவேண்டும். மாய்மாலம் பண்ணக்கூடாது. இயேசுகிறிஸ்து பேதுருவுக்குக் கொடுத்த ஊழியத்தை அவன் உண்மையோடு செய்யவேண்டும். இயேசுகிறிஸ்துவின் ஆடுகளை பேதுரு மேய்க்கவில்லையென்றால், அவன் இயேசுகிறிஸ்துவைத் தன் செய்கையினால் நேசிக்கவில்லை என்பதே அர்த்தமாகும்.

இயேசுகிறிஸ்து சீமோன் பேதுருவுக்குச் சொல்லும் இதே சத்தியத்தை, மற்ற சீஷர்களெல்லோருக்குமே சொல்லுகிறார். அவர்களெல்லோரும் மனுஷரைப் பிடிக்கிறவர்களாகயிருக்கிறார்கள். பாவிகளை மனந்திரும்புமாறு வழிநடத்துவது மனுஷரைப் பிடிப்பதாகும். அவர்கள் மனுஷரைப் பிடிப்பதோடு ஆடுகளை மேய்க்கிறவர்களாகவும் இருக்கவேண்டும். பரிசுத்தவான்களுக்குச் சத்தியத்தை உபதேசம் பண்ணுவதும் போதிப்பதுமே ஆடுகளை மேய்ப்பதாகும். இயேசுகிறிஸ்துவின் உண்மையுள்ள ஊழியக்காரன் மனுஷரைப் பிடிக்கிறவனாகவும் ஆடுகளை மேய்க்கிறவனாகவும் இருக்கவேண்டும்.

**உனக்கு இஷ்டமில்லாத இடம்**

**நீ இளவயதுள்ளவனாயிருந்தபோது உன்னை நீயே அரைகட்டிக்கொண்டு, உனக்கு இஷ்டமான இடங்களிலே நடந்து திரிந்தாய்; நீ முதிர்வயதுள்ளவனாகும்போது உன் கைகளை நீட்டுவாய்; வேறொருவன் உன் அரையைக் கட்டி, உனக்கு இஷ்டமில்லாத இடத்துக்கு உன்னைக் கொண்டுபோவான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார் (யோவா 21:18).**

இயேசுகிறிஸ்து சீமோன் பேதுருவைத் தம்முடைய அப்போஸ்தலரில் ஒருவராக அங்கீகரித்து பிரதிஷ்டை பண்ணுகிறார். பேதுரு இரத்தசாட்சியாக மரிக்க வேண்டுமென்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. "நீ முதிர் வயதுள்ளவனாகும் போது உன் கைகளை நீட்டுவாய்; வேறொருவன் உன் அரையைக் கட்டி, உனக்கு இஷ்டமில்லாத இடத்துக்கு உன்னைக் கொண்டுபோவான்" என்று இயேசு சொல்கிறார். பேதுரு இரத்தசாட்சியாக மரிக்கப்போவதைப்பற்றி இயேசுகிறிஸ்து முன்னறிவிக்கிறார். பேதுருவினால் அவனுடைய அரையைக்கட்ட முடியாது. ஏனெனில் அவனுடைய கைகள் விலங்கிடப்பட்டிருக்கும். ஆகையினால் அவனுக்குப் பதிலாக வேறொருவன் பேதுருவின் அரையைக்கட்டுவான்.

இயேசுகிறிஸ்து பேதுரு அனுபவிக்கப்போகிற பாடுகளை வெளிப்படுத்தும்போது "மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" என்னும் வாக்கியத்தைப் பயன்படுத்துகிறார். பேதுரு ஒருவேளை இரத்தசாட்சியாக மரித்தாலும் மரிப்பான் என்னும் பொருளில் இயேசுகிறிஸ்து இதைச் சொல்லவில்லை. தாம் சொல்லுவது அவனுக்கு நிச்சயமாகவே நடைபெறும் என்னும் உறுதியோடு இயேசுகிறிஸ்து இந்தச் சம்பவத்தை முன்னறிவிக்கிறார்.

தாம் அனுபவித்த பாடுகளை இயேசுகிறிஸ்து முன்னறிந்திருந்தார். அதுபோலவே தம்முடைய சீஷர்களின் எல்லா பாடுகளையும் இயேசுகிறிஸ்து முன்னறிந்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் ஆடுகளைப் பேதுரு மேய்க்கவேண்டும். இதுவே பேதுருவின் ஊழியம். இந்த ஊழியத்தைச் செய்யும்போது பேதுருவுக்கு உலகப்பிரகாரமான மகிமையோ, கனமோ, மரியாதையோ கிடைக்காது. பேதுரு இயேசுகிறிஸ்துவின் ஆடுகளை மேய்க்கும்போது உபத்திரவங்கள், பாடுகள் ஆகியவற்றின் வழியாக கடந்து வரவேண்டும்.

## அதிகாரம் - 21

பேதுருவுக்கு எப்படிப்பட்ட மரணம் சம்பவிக்கும் என்பதையும் இயேசுகிறிஸ்து முன்னறிவிக்கிறார். பேதுருவைக் கைதுபண்ணுகிறவர்களின் கைகளினால் அவனுக்கு மரணமுண்டாகும். சபை வரலாற்றின்படி, நீரோ மன்னனுடைய காலத்தில், ரோமாபுரியில், பேதுரு சிலுவையில் அறையப்பட்டான். மரணம் பயங்கரமானது. அதிலும் துன்பப்படுத்தி, உபத்திரவப்படுத்தி மரணத்தைக் கொடுப்பது மிகவும் பயங்கரமாக இருக்கும். பேதுருவுக்கு சாதாரண மரணமுண்டாகாமல் சிலுவையில் மரிக்கும் பயங்கர மரணமுண்டாயிற்று. இயேசு கிறிஸ்துவுக்காக இரத்த சாட்சியாக மரிக்கும் சிலாக்கியத்தைப் பேதுருவும் பெற்றுக்கொள்கிறான்.

ஆதித்திருச்சபைக் காலத்தில், பேதுருவைப்போலவே ஏராளமான பரிசுத்தவான்கள் இயேசுகிறிஸ்துவுக்காக இரத்தசாட்சிகளாக மரித்தார்கள். பேதுரு சிலுவையில் மரிக்குமளவுக்கு ஒரு பாவமும் செய்யவில்லை. அவனுடைய இரத்தம் சுபடமற்றது. ஆனாலும் இயேசுகிறிஸ்துவுக்காகப் பேதுரு இரத்தம் சிந்தி மரிக்கப்போகிறான். பேதுருவின் மரணம் சாதாரண இயற்கை மரணமாகயில்லாமல், மற்றவர் கையினால் உண்டாகும் மரணமாயிருக்கும்.

இயேசுகிறிஸ்துவுக்கு சிலுவை மரணத்தின் பயங்கரமும் கசப்பும் தெரியும். ஆகையினால்தான் அவர் சிலுவையில் மரிக்கும் முன்பாக, பிதாவினிடத்தில் ஜெபிக்கும்போது "பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்" என்று ஜெபித்தார். தேவனுடைய சித்தத்திற்குப் பரிபூரணமாகக் கீழ்ப்படிகிறவர்கள் மாத்திரமே, அவருடைய நாமத்திற்காக மரிக்க ஆயத்தமாகயிருப்பார்கள். மரணத்தின் வேதனைகளை தாங்கிக்கொள்வார்கள். இரத்தசாட்சியாக மரிப்பதற்கு தங்களை உட்படுத்திக்கொள்வார்கள். அன்பு சகலத்தையும் சகிக்கும். சகலத்தையும் தாங்கும்.

சீமோன் பேதுரு இதுவரையிலும் சுதந்தரமாக எல்லா இடங்களிலும் சுற்றி நடந்துகொண்டிருக்கிறான். தனக்கு இஷ்டமான இடங்களுக்கெல்லாம் போகிறான். இது இப்போதுள்ள காலம். ஆனால் பேதுரு முதிர்வயதுள்ளவனாகும்போது, அவனுக்கு இஷ்டமில்லாத இடத்திற்கு, அவனைக் கட்டுகிறவன், அவனைக் கட்டிக்கொண்டு போவான்.

நமக்கு பாடுகளும் துன்பங்களும் வரும்போது மிகுந்த வேதனையுண்டாகும். சரீரத்திலும் மனதிலும் வேதனை இருக்கும். வியாதிகளும் தரித்திரமும் வரும்போது, அதை தாங்கிக்கொள்ள முடியாமல் தவிப்போம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் நம்மால் சுயாதீனமாக எதையும் செய்யமுடியாது. நாம் ஓரிடத்திற்குப் போகவேண்டுமென்று விரும்புவோம் . ஆனால் நம்முடைய சரீரத்தில் ஆரோக்கியமும் பெலமும் இருக்காது. ஒரு காரியத்தைச் செய்யவேண்டுமென்று விரும்புவோம். ஆனால் நமக்கு பொருளாதார வசதியிருக்காது. பேதுருவுக்கு இப்படிப்பட்ட சூழ்நிலை வருமென்று இயேசுகிறிஸ்து முன்னறிவிக்கிறார். பேதுருவுக்கு இஷ்டமில்லாத இடத்திற்கு ஒருவன் அவனைக் கட்டிக்கொண்டுபோவான்.

நமக்குப் பிரச்சனைகளும், கட்டுக்களும், வியாதிகளும், தரித்திரமும் வரும்போது, நம்முடைய பழைய வாழ்க்கையை நினைத்துப் பார்ப்பது நல்லது. நாம் அனுபவித்த விடுதலைகள், நாம் பெற்றிருந்த சரீர ஆரோக்கியம், நம்மிடமிருந்த பொருளாதார செழிப்பு ஆகியவற்றையெல்லாம், நாம் கஷ்டப்படும் நாளில் நினைத்துப் பார்க்கவேண்டும். அவையெல்லாவற்றையும் கர்த்தரே நமக்குக்கொடுத்தார். இப்போதும் கர்த்தரே இந்தக் கஷ்டங்களை நமக்கு அனுமதிக்கிறார் என்று நினைத்து ஆறுதலடையவேண்டும். தேவனுடைய கரத்திலிருந்து நன்மையைப் பெற்றுக்கொண்ட நாம், அவருடைய கரத்திலிருந்து தீமையையும் பெற்றுக்கொள்ளவேண்டாமோ என்று யோபு கூறுவதுபோல நாமும் சொல்லவேண்டும்.

## அதிகாரம் - 21

இந்தப் பிரபஞ்சத்தில் நாம் வாழும் வாழ்க்கை நித்தியமானதல்ல. நம்முடைய வசதிகளும் நிரந்தரமல்ல. பிரபஞ்சம் வேகமாக மாறுகிறது. நம்முடைய வாழ்க்கைத் தரமும் வேகமாக மாறுகிறது. நாம் இன்று இருப்பதுபோலவே நாளையும் இருப்போம் என்னும் நிச்சயம் நமக்கில்லை. இயேசுகிறிஸ்து மாத்திரமே மாறாதவர். நாம் எல்லாவற்றையும் விட்டுவிட்டு இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றிச் செல்லும்போது நமக்கு ஒரு இழப்பும் உண்டாகாது. நாம் மாறாத இயேசுவோடு கூடவே இருப்போம். இயேசுவைப் பின்பற்றுகிறவர்கள் தங்களுடைய சுயசித்தத்தின் பிரகாரமாக நடக்காமல், இயேசுகிறிஸ்துவின் சித்தத்தின் பிரகாரமாகவே நடப்பார்கள். இயேசுகிறிஸ்துவுக்குப் பிரியமானது அவரைப் பின்பற்றுகிறவர்களுக்கும் பிரியமானதாயிருக்கும்.

இயேசுகிறிஸ்து பேதுருவின் பாடுகளைப்பற்றி முன்னறிவிக்கும்போது, அவன் முதிர்வயதுள்ளவனாகும்போது, அது அவனுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறார். பேதுரு இந்த உலகத்தில் இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தை தன்னுடைய முதிர்வயதுவரையிலும் தொடர்ந்து செய்துகொண்டிருப்பான். தன்னுடைய ஜீவன் சமாதானமாக முடியப்போகிறது என்று தான் மரிக்கும் நாளை ஆவலோடு காத்துக்கொண்டிருப்பான். ஆனால் அவனுடைய சத்துருக்களோ அவனைச் சமாதானமாக மரிக்கவிடமாட்டார்கள். பேதுரு இயற்கையாக மரிப்பதற்கு முன்பாக, அவனைப் பிடித்து, துன்புறுத்தி, கொன்றுபோடுவார்கள். இயற்கையாக மரிக்கவேண்டிய முதிர்வயதில் பேதுரு இயேசுகிறிஸ்துவுக்காக இரத்தசாட்சியாக மரிப்பான். பேதுரு முதிர்வயதாகும் வரைக்கும், இயேசுகிறிஸ்து அவனை அவனுடைய சத்துருக்களின் கைகளிலிருந்து விலக்கிப் பாதுகாத்து வருவார். தன்னுடைய பாடுகளை அனுபவிப்பதற்கு அவன் தன்னை ஆயத்தப்படுத்திக்கொள்ளும் வரையிலும், அவனுக்குப் பாடுகள் வராமல் காத்துக்கொள்வார். பேதுரு தன்னுடைய முதிர்வயது வரையிலும் ஊழியம் செய்ததினால் ஆதித்திருச்சபைக்கு அவன் மூலமாய் மிகுந்த ஆசீர்வாதமுண்டாயிற்று.

### இன்னவிதமான மரணம்

**இன்னவிதமான மரணத்தினாலே அவன் தேவனை மகிமைப்படுத்தப் போகிறானென்பதைக் குறிக்கும்படியாக இப்படிச் சொன்னார். அவர் இதைச் சொல்லியபின்பு, அவனை நோக்கி: என்னைப் பின்பற்றிவா என்றார் (யோவா 21:19).**

பேதுரு தன்னுடைய மரணத்தினால் தேவனை மகிமைப்படுத்தப்போகிறான். அவனுடைய மரணம் இன்னவிதமான மரணமாக இருக்குமென்பதை இயேசுகிறிஸ்து அவனிடத்தில் முன்னறிவிக்கிறார். ஒரு தரம் பிறப்பதும் ஒரு தரம் மரிப்பதும் மனுஷரெல்லோருக்கும் நியமிக்கப் பட்டிருக்கிறது. மரிப்பது மாத்திரமல்ல மனுஷருக்கு எப்படிப்பட்ட மரணமுண்டாகும் என்பதும் நியமிக்கப்பட்டிருக்கிறது. பேதுருவின் மரணம் தேவனை மகிமைப்படுத்தும் மரணமாயிருக்கும்.

நாமெல்லோருமே இந்த உலகத்திற்குள் ஒரே வழியாகவே பிரவேசிக்கிறோம். ஆனால் இந்த உலகத்தைவிட்டு நாம் புறப்பட்டுப்போகும்போது நமக்குப் பலவிதமான வழிகள் இருக்கும். நாம் எந்த வழியாக வெளியேறிச் செல்லவேண்டுமென்பதை தேவனே தீர்மானிக்கிறவர். விசுவாசிகளாகிய நாம் நம்முடைய மரணத்திற்காகவும் ஜெபிக்கவேண்டும். நம்முடைய மரணம் எப்படிப்பட்ட மரணமாகயிருந்தாலும், நம்முடைய மரணத்தின் மூலமாக நாம் தேவனை மகிமைப்படுத்தவேண்டும் என்று ஜெபம்பண்ணவேண்டும். நாம் பொறுமையாக மரிப்போமென்றால், சந்தோஷமாக மரிப்போமென்றால், பிரயோஜனமுள்ள விதத்தில் மரிப்போமென்றால், நாம் மெய்யாகவே நம்முடைய மரணத்தின் மூலமாக தேவனை மகிமைப்படுத்துவோம்.

இரத்தசாட்சிகளாக மரிக்கிற பரிசுத்தவான்களின் மரணம் தேவனை விசேஷித்த வழியில் மகிமைப்படுத்துகிறது. பரிசுத்தவான்கள் சிந்திய இரத்தமே இந்தப் பூமியில் சபையின் விதையாக விதைக்கப்பட்டிருக்கிறது. இரத்த சாட்சியாக மரித்து தேவனைக் கனப்படுத்துகிறவர்களைத், தேவனும் கனப்படுத்துவார்.

## அதிகாரம் - 21

பேதுரு இன்னவிதமான மரணத்தினாலே தம்மை மகிமைப்படுத்தப் போகிறான் என்பதை இயேசுகிறிஸ்து முன்னறிவித்தபின்பு, அவனை நோக்கி "என்னைப் பின்பற்றி வா" என்று கூறுகிறார். இயேசுகிறிஸ்து பேதுருவிடம் கூறும் இந்த வார்த்தை, தம்முடைய ஊழியத்தைச் செய்வதற்கு அவர் பேதுருவை அனுமதிப்பதையும் அங்கீகரிப்பதையும் உறுதிபண்ணுகிறது. இயேசுகிறிஸ்து பேதுருவை முதன்முதலில் பார்த்தபோது "என்னைப் பின்பற்றி வா" என்றுதான் கூறினார். அதே வார்த்தையையே இப்போது கூறுகிறார்.

இயேசுகிறிஸ்து பேதுருவிடம் "என்னைப் பின்பற்றி வா" என்று கூறும்போது, தம்முடைய பாடுகளின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி வா என்று பொருள்படுமாறு கூறுகிறார். பேதுருவுக்கு வரப்போகிற பாடுகளையும் வேதனைகளையும் இயேசுகிறிஸ்து முன்னறிவிக்கிறார். யூதர்கள் இயேசுகிறிஸ்துவை எப்படி நடத்தினார்களோ அப்படியே பேதுருவையும் நடத்துவார்கள். அவரை எப்படி துன்பப்படுத்தினார்களோ அப்படியே பேதுருவையும் துன்பப்படுத்துவார்கள் வேலையாள் தன் எஜமானைவிட பெரியவனல்ல. இயேசுகிறிஸ்து அனுபவித்த உபத்திரவங்களை பேதுருவும் அனுபவிக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்து பேதுருவிடம் எதையும் மறைக்காமல் வெளிப்படையாகப் பேசுகிறார். பேதுரு இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலனாக ஊழியம் செய்யப்போகிறான். அவனுடைய ஊழியப்பாதை எப்படியிருக்குமென்பதை இயேசுகிறிஸ்து பேதுருவிடம் முன்னறிவிக்கிறார். ஆகையால் தன்னுடைய அப்போஸ்தல ஊழியப்பாதையில் பேதுரு உண்மையுள்ளவனாகவும், விசுவாசமுள்ளவனாகவும், தன்னிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கும் ஊழியத்தை நேர்த்தியாகச் செய்கிறவனாகவும் முன்னேறிச் செல்லுவான்.

இயேசுகிறிஸ்து பேதுருவிடம் "என் ஆடுகளை மேய்ப்பாயாக" என்று கூறுகிறார். இயேசுகிறிஸ்து தாமே நம்முடைய பிரதான மேய்ப்பராகயிருக்கிறார். எல்லா மேய்ப்பர்களுக்கும் அவரே முன்மாதிரியான பிரதான மேய்ப்பர். சீஷர்கள் பிரதான மேய்ப்பரைப் பின்பற்றிச் செல்கிறார்கள். இது இவர்களுக்குக் கிடைத்திருக்கும் சிலாக்கியம். பிரதான மேய்ப்பரைப் பின்பற்ற எந்த விசுவாசியும் வெட்கப்பட வேண்டியதில்லை. இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் இப்போது அவரைப் பிரத்தியட்சமாகப் பின்பற்றுவதுபோலவே, இனிமேலும் தங்கள் விசுவாசத்தில் அவரைப் பின்பற்றுவார்கள். இதுவே ஊழியக்காரர்களுக்கு கிடைக்கும் மிகப்பெரிய சந்தோஷம். இயேசுகிறிஸ்துவை உண்மையாய் பின்பற்றுகிறவர்கள், மெய்யாகவே அவருடைய மகிமைக்குள் பிரவேசிப்பார்கள்.

### யோவான்
### யோவா 21 : 20-23

**யோவா 21:20. பேதுரு திரும்பிப்பார்த்து, இயேசுவுக்கு அன்பாயிருந்தவனும், இராப்போஜனம்பண்ணுகையில் அவர் மார்பிலே சாய்ந்து: ஆண்டவரே, உம்மைக் காட்டிக்கொடுக்கிறவன் யார் என்று கேட்டவனுமாகிய சீஷன் பின்னே வருகிறதைக் கண்டான்.**

**யோவா 21:21. அவனைக் கண்டு, பேதுரு இயேசுவை நோக்கி: ஆண்டவரே, இவன் காரியம் என்ன என்றான்.**

**யோவா 21:22. அதற்கு இயேசு: நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால், உனக்கென்ன, நீ என்னைப் பின்பற்றிவா என்றார்.**

**யோவா 21:23. ஆகையால் அந்தச் சீஷன் மரிப்பதில்லையென்கிற பேச்சு சகோதரருக்குள்ளே பரம்பிற்று. ஆனாலும், அவன் மரிப்பதில்லையென்று இயேசு சொல்லாமல், நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால் உனக்கென்னவென்று சொன்னார்.**

### இயேசுவுக்கு அன்பாயிருந்தவன்

**பேதுரு திரும்பிப்பார்த்து, இயேசுவுக்கு அன்பாயிருந்தவனும், இராப்போஜனம் பண்ணுகையில் அவர் மார்பிலே சாய்ந்து: ஆண்டவரே, உம்மைக் காட்டிக்கொடுக்கிறவன் யார் என்று கேட்டவனுமாகிய சீஷன் பின்னே வருகிறதைக் கண்டான் (யோவா 21:20).**

## அதிகாரம் - 21

இயேசுகிறிஸ்து பேதுருவிடம் அவனுடைய மரணத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிற போது, யோவான் அவர்களுக்குப் பின்னே வருகிறான். இப்போது இவர்களுடைய உரையாடல் யோவானைப்பற்றி நடைபெறுகிறது.

இயேசு கிறிஸ்துவோடு பேசிக்கொண்டிருக்கும் போது பேதுரு திரும்பிப்பார்க்கிறான். இயேசுகிறிஸ்துவின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, பேதுரு அவரைப் பின்பற்றிப்போகிறான். ஆனாலும் திரும்பியும் பார்க்கிறான். அப்போது இயேசுவுக்கு அன்பாயிருந்த சீஷனாகிய யோவான் தனக்குப் பின்னே வருகிறவனைப் பேதுரு காண்கிறான். யோவானுடைய பெயர் இந்த வசனத்தில் குறிப்பிடப்படவில்லை. ஆனால் இந்த சீஷனைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கும் விளக்கம், அவன் யோவானென்பதை உறுதிபண்ணுகிறது. இவனே இயேசுவுக்கு அன்பாயிருந்தவன். இராப்போஜனம் பண்ணுகையில் யோவான் இயேசுவின் மார்பிலே சாய்ந்து "ஆண்டவரே உம்மைக் காட்டிக்கொடுக்கிறவன் யார்" என்று கேட்டவன். பேதுருதான் யோவானிடம் இயேசுவைக் காட்டிக்கொடுக்கப் போகிறவனைப்பற்றி கேட்கச் சொன்னான் (யோவா 13:24).

இயேசுகிறிஸ்து பேதுருவின் வருங்காலத்தைப் பற்றி முன்னறிவித்திருக்கிறார். தன்னைப்பற்றித் தெரிந்துகொண்ட பேதுரு யோவானைப்பற்றியும் தெரிந்துகொள்ள விரும்புகிறான். அவனுடைய வருங்காலம் எப்படியிருக்குமென்றும், அவனுக்கு எப்படிப்பட்ட மரணம் வருமென்றும் பேதுரு அறிந்துகொள்ள ஆவலாயிருக்கிறான். யோவான் இயேசுவுக்கு அன்பாயிருக்கிறவன். இயேசுவுக்கு மிகவும் நெருக்கமாயிருக்கிறவன். இயேசுகிறிஸ்துவிடத்தில் பேதுரு எதையாவது கேட்கவேண்டுமென்றால், அவன் யோவான் மூலமாகத்தான் கேட்பான். இப்போதோ பேதுரு இயேசுகிறிஸ்துவுக்கு அருகாமையிலிருக்கிறான். அவரைப் பின்பற்றிச் செல்கிறான். இயேசுவுக்குப் பிரியமானவனாகயிருக்கிறான். இதற்கு முன்பு யோவான் தனக்கு உதவிசெய்ததுபோல, இப்போது யோவானுக்கு உதவிசெய்யவேண்டுமென்று பேதுரு விரும்புகிறான்.

நாம் தேவனுடைய கிருபாசனத்திற்கு முன்பாக நிற்கும்போது, நமக்காகவும் விண்ணப்பம்பண்ணவேண்டும். மற்றவர்களுக்காகவும் விண்ணப்பம் பண்ணவேண்டும். நம்முடைய ஜெபத்தில் ஒருவரையொருவர் தாங்கவேண்டும். பிறருடைய நன்மையையும் நாம் விசாரிக்கவேண்டும். இதுவே பரிசுத்தவான்களின் ஐக்கியமும் ஆறுதலுமாகயிருக்கிறது.

இயேசுகிறிஸ்து பேதுருவை நோக்கி "என்னைப் பின்பற்றி வா" என்று கூறுகிறார். அவருடைய வார்த்தையின் பிரகாரமாக பேதுரு அவருக்குப் பின்செல்கிறான். இந்தச் சமயத்தில் இயேசு யோவானைத் தம்மைப் பின்பற்றி வருமாறு சொல்லவில்லை. ஆனால் யோவானும் இயேசுவைப் பின்பற்றுகிறான். பேதுருவுக்குப் பின்னாக வருகிறான். இயேசுகிறிஸ்து எங்கேயிருக்கிறாரோ அங்கே அவருடைய ஊழியக்காரர்களும் இருப்பார்கள். இயேசுகிறிஸ்து பேதுருவுக்குச் சொன்ன கட்டளையை, அவர் தனக்கும் சொல்வதாக யோவான் தன் இருதயத்தில் ஏற்றுக்கொள்கிறான். "என்னைப் பின்பற்றி வா" என்று இயேசுகிறிஸ்து கூறுகிற கட்டளை, பேதுருவுக்கு மாத்திரமல்ல, இந்தக் கட்டளை எல்லா சீஷர்களுக்கும் கொடுக்கப்படுகிறது. இயேசுகிறிஸ்து தம்முடைய ஊழியக்காரர்கலெல்லோருக்கும், விசுவாசிகளெல்லோருக்கும் இந்தக் கட்டளையைக் கொடுக்கிறார்.

சீமோன் பேதுரு இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றிப்போகிறான். அதே வேளையில் திரும்பியும் பார்க்கிறான். இயேசுவைப் பின்பற்றுகிறவர்கள் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்லவேண்டும். நம்முடைய கவனத்தை வேறு திசையில் சிதறவிடக்கூடாது. ஆனாலும் பரிசுத்தவானாகிய பேதுருவால்கூட, திரும்பிப்பார்க்காமல் இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றிச் செல்லமுடியவில்லை. இயேசுகிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதற்கு நமக்கு பல காரியங்கள் இடையூறாக இருக்கும். பல காரியங்கள் நம்மைத் திசை திருப்பும். பொதுவாக நம்முடைய சிநேகிதர், குடும்பத்தார், உற்றார் உறவினர் ஆகியோர்மீது நாம் வைத்திருக்கும் அன்பும் பாசமும், நம்மை இயேசுகிறிஸ்துவின் பாதையிலிருந்து திசை திருப்பும். கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பார்ப்பதற்குப் பதிலாக இவை நம்மை வேறு பக்கமாகத் திரும்பிப் பார்க்க வைக்கும்.

## அதிகாரம் - 21

சீமோன் பேதுரு ஒருவேளை தன்னோடுகூட இருக்கும் சகசீஷனாகிய யோவான்மீது அதிக அன்பும் கரிசனையும் வைத்திருக்கலாம். தனக்குக் கிடைத்திருக்கும் சிலாக்கியத்தைப் பேதுரு தான் மாத்திரம் அனுபவிக்க விரும்பவில்லை. மற்ற சீஷரும் அந்தச் சிலாக்கியத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறான். சில நாட்களுக்கு முன்பு இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுவதாகச் சொல்லிவிட்டு, சீமோன் பேதுரு அவரை மூன்றுமுறை மறுதலித்துவிட்டான். அதுபோல இனிமேலும் தனக்கு நேரிடக்கூடாது என்று எச்சரிப்போடிருக்கிறான். தன்னோடு கூட ஒரு சீஷனிருந்தால், தனக்கு ஆலோசனை சொல்லுவானென்றும், இயேசுகிறிஸ்துவை மறுதலித்துவிடாதவாறு தனக்குத் துணையாக இருப்பானென்று எதிர்பார்த்து, பேதுரு ஒருவேளை யோவனைத் திரும்பிப் பார்த்திருக்கலாம். இயேசுகிறிஸ்து கூட தம்முடைய சீஷரை ஊழியத்திற்கு அனுப்பியபோது இரண்டு இரண்டு பேராகவே அனுப்பினார்.

**இவன் காரியம் என்ன**

**அவனைக் கண்டு, பேதுரு இயேசுவை நோக்கி: ஆண்டவரே, இவன் காரியம் என்ன என்றான் (யோவா 21:21) .**

பேதுரு யோவானைத் திரும்பிப் பார்க்கிறான். பேதுருவின் மரணத்தைப்பற்றி இயேசுகிறிஸ்து அவனிடத்தில் முன்னறிவித்திருக்கிறார். யோவானுடைய முடிவு எப்படியிருக்குமென்று பேதுரு அறிந்துகொள்ள விரும்புகிறான். அதற்காக பேதுரு இயேசுவிடம் "ஆண்டவரே இவன் காரியம் என்ன" என்று கேட்கிறான். யோவானுக்கு என்ன ஊழியம் கொடுக்கப்படுகிறது. அவனுக்கு எப்படிப்பட்ட மரணம் சம்பவிக்கும். அவனுடைய வருங்காலம் எப்படியிருக்கும் என்பதையெல்லாம் பேதுரு அறிந்துகொள்ள விரும்புகிறான். ஆகையினால் அவனுடைய காரியம் என்ன என்று இயேசுவிடம் கேட்கிறான்.

பேதுரு மெய்யாகவே யோவான்மீது அன்போடும் கரிசனையோடும் இருப்பதினால், இயேசுவிடம் "இவன் காரியம் என்ன" என்று கேட்கிறான். யோவான் இயேசுவுக்கு அன்பாயிருந்தவன். ஆனால் இயேசுகிறிஸ்துவோ அவனைப்பற்றி ஒன்றுமே சொல்லவில்லை. அவனுக்கு எப்படிப்பட்ட மகிமையுண்டாகும் என்பதையும், அவன் எப்படிப்பட்ட ஊழியத்தைச் செய்யப்போகிறானென்பதையும் அறிந்து கொள்ள பேதுரு ஆவலாயிருக்கிறான்.

ஒருவேளை பேதுரு இயேசுவிடம் "இவன் காரியம் என்ன" என்று யோவானைப்பற்றி கேட்டது, அவனுடைய உள்ளத்தின் குழப்பத்தினால் கேட்ட கேள்வியாகயிருக்கலாம். பேதுரு இன்னவிதமான மரணத்தினால் மரிக்கப்போகிறான் என்பதை இயேசுகிறிஸ்து அவனுக்கு முன்னறிவித்திருக்கிறார். அவனுக்கு வரப்போகும் பாடுகளையும், வேதனைகளையும் முன்னறிவிக்கிறார். இந்த உபத்திரவங்கள் தனக்கு மாத்திரம் நியமிக்கப்பட்டிருக்கிறதா அல்லது மற்ற சீஷர்களுக்கும் நியமிக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிந்துகொள்ள பேதுரு ஆவலாயிருக்கிறான். சிலுவையைத் தான் மாத்திரம் சுமக்கவேண்டுமா, இதைச் சுமப்பதற்கு வேறு யாரும் உதவிக்கு வரமாட்டார்களா, எல்லா பாடுகளையும் வேதனைகளையும் தான் மாத்திரம் அனுபவிக்கவேண்டுமா, இந்த வேதனைகளைப் பகிர்ந்துகொள்ள வேறு யாரும் வரமாட்டார்களா என்று பொருள்படுமாறு, பேதுரு இயேசுவிடம் "இவன் காரியம் என்ன" என்று யோவனைப்பற்றிக் கேட்டிருக்கலாம்.

இயேசுகிறிஸ்து பேதுருவின் வருங்காலத்தை அவனுக்கு முன்னறிவிக்கிறார். தன்னைப்பற்றித் தெரிந்துகொண்டவன், ஒருவேளை மற்றவர்களைப் பற்றியும் தெரிந்து கொள்ளவேண்டுமென்று ஆவலாயிருக்கலாம். பேதுருவுக்குப் பின்னாக யோவான் வந்துகொண்டிருக்கிறான். அவன் காரியம் எப்படியிருக்கும் என்பதை தெரிந்துகொள்ளவேண்டும் என்னும் ஆவலில், பேதுரு இயேசுவிடம் "இவன் காரியம் என்ன" என்று கேட்டிருக்கலாம். இயேசுகிறிஸ்து யோவானுடைய காரியத்தைப்பற்றி பேதுருவினிடத்தில் அறிவித்திருந்தாலும், அவனுக்கு அதில் திருப்தி உண்டாயிருக்காது. மற்ற சீஷர்களுடைய காரியம் எப்படியிருக்கும் என்பதையும் அறிந்துகொள்ள ஆசைப்பட்டிருப்பான். மற்றவர்களைப்பற்றித் தெரிந்துகொள்வதில் சிலருக்கு அதிக ஆர்வமிருக்கும்.

## அதிகாரம் - 21

பேதுரு தன்னைவிட மற்றவரைப்பற்றி அதிக கரிசனையோடிருக்கிறான். மற்றவர்களுடைய காரியங்களில் அதிகமாய் தலையிடுகிறான். சீமோன் பேதுருவைப்போலவே நம்மில் சிலர் நம்முடைய காரியங்களில் கவனம் செலுத்தாமல் பிறருடைய காரியங்களில் அதிகமாய் கவனம் செலுத்துகிறோம். நம்முடைய ஆத்துமாக்களைப் பரிசுத்தப்படுத்தாமல், மற்றவர்களுடைய ஆத்துமாக்களைப் பரிசுத்தப்படுத்துவதற்கு ஆலோசனை சொல்லுகிறோம். நம்முடைய வீட்டுக்காரியங்களைச் சரியாகக் கவனிக்காமல், பிறருக்கு உதவி செய்யவேண்டுமென்று மற்றவர்களுடைய காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறோம்.

இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுகிற ஒவ்வொருவரும், அவரவர்களுடைய சிலுவையைச் சுமந்துகொண்டு அவருக்குப் பின்செல்லவேண்டும். அதேவேளையில் ஒருவர் பாரத்தை ஒருவர் தாங்கவும் வேண்டும். நம்முடைய சிலுவையைக் கீழே இறக்கி வைத்துவிட்டு, மற்றவருடைய சிலுவையைச் சுமப்பதற்கு நாம் முயற்சிபண்ணக்கூடாது.

விசுவாசிகளாகிய நாம் பல சமயங்களில் நமக்குச் சம்பந்தமில்லாத காரியங்களில் தலையிடுகிறோம். நமக்குப் பிரயோஜனமில்லாத காரியங்களைப் பிறரிடத்தில் கேட்டுத் தெரிந்துகொள்கிறோம். மற்றவர்களுடைய சுபாவங்கள் அவர்களுக்குத்தான் பிரயோஜனமாக இருக்கும். பிறருடைய சுபாவங்களினால் நமக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகப்போவதில்லை. நம்முடைய இரட்சிப்புக்கு நாம்தான் மனந்திரும்பவேண்டும். மற்றவர் மனந்திரும்புவதினால் நாம் இரட்சிக்கப்பட முடியாது. அதுபோலவே நம்முடைய ஆசீர்வாதத்திற்கு நாம் தான் ஜெபம்பண்ணவேண்டும். மற்றவர் நமக்காக ஜெபம்பண்ணுவார்களா என்று விசாரித்துக்கொண்டிருக்கக்கூடாது.

பிறரை நியாயந்தீர்ப்பது நமக்கு தகுதியானதல்ல. இயேசுகிறிஸ்துவே எல்லாரையும் நியாயந்தீர்க்கிறவர். நம்முடைய விசுவாசப் பிரயாணத்தில் பிறருடைய காரியங்கள் நமக்குத் தடையாக இருக்கக்கூடாது. "அவன் எப்படியிருக்கிறான்", "இவன் எப்படியிருக்கிறான்" என்று பிறரிடத்தில் ஆசையோடு விசாரிப்பதற்குப் பதிலாக, "நாம் எப்படியிருக்கிறோம்" என்று நம்மிடத்திலும், நம்மைப்பற்றி பிறரிடத்திலும் விசாரித்துத் தெரிந்துகொள்வது நமக்கு நல்லது.

ஒரு சில ஊழியக்காரர்கள் தங்கள் சபை ஊழியங்களில் கவனம் செலுத்தாமல் வெளிஊழியங்களில் அதிகக் கவனம் செலுத்துவார்கள். ஸ்தல ஊழியத்தையும் செய்யவேண்டும், வெளிஊழியத்தையும் செய்யவேண்டும். சீமோன் பேதுருவோ தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஊழியத்தில் அக்கரை செலுத்துவதற்குப் பதிலாக, மற்றவர்களுடைய முடிவு எப்படியிருக்கும் என்பதை அறிந்துகொள்ள அக்கரை செலுத்துகிறான். இயேசுகிறிஸ்து நம்முடைய ஆத்துமாவையும் மனச்சாட்சியையும் சோதித்தறிகிறார். நம்முடைய ஆசைகளெல்லாவற்றையும் இயேசுகிறிஸ்து நிறைவேற்றுவாரென்று, எதிர்பார்க்கக்கூடாது. தேவன் ஏற்றவேளை வரும்போது நம்முடைய தேவைகளைச் சந்திப்பார். அதில் நாம் திருப்தியடைய வேண்டும்.

**நான் வருமளவும் இவனிருக்க**

**அதற்கு இயேசு: நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால், உனக்கென்ன, நீ என்னைப் பின்பற்றிவா என்றார் (யோவா 21:22).**

பேதுரு இயேசுகிறிஸ்துவிடம் "இவன் காரியம் என்ன" என்று கேட்கிறான். அதற்கு இயேசுவோ "நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால், உனக்கென்ன" என்று பேதுருவினிடத்தில் கூறுகிறார். ஒருவேளை பேதுரு யோவான்மீது அதிக கரிசனையோடிருக்கலாம். பேதுருவின் மரணம் எப்படியிருக்கும் என்பதை இயேசுகிறிஸ்து அவனுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். பேதுரு இயேசுகிறிஸ்துவுக்காக இரத்த சாட்சியாக மரிக்கப்போகிறான். மிகுந்த வேதனைகளையும், பாடுகளையும், உபத்திரவங்களையும் அனுபவித்து பேதுரு மரிக்கப்போகிறான். இப்படிப்பட்ட வேதனை நிறைந்த மரணம் யோவானுக்கு வரக்கூடாது என்று பேதுரு நினைத்திருக்கலாம். அவனுக்கு இயற்கையான மரணம் வந்தால் நல்லது என்று பேதுரு விரும்பியிருந்திருக்கலாம்.

## அதிகாரம் - 21

இயேசுகிறிஸ்துவின் சீஷர்களில், யோவானைத்தவிர மற்ற எல்லோருமே இரத்த சாட்சிகளாக மரித்தார்கள் என்று சபை வரலாறு கூறுகிறது. யோவான் மாத்திரமே இரத்த சாட்சியாக மரிக்கவில்லை. பூரண ஆயுசுள்ளவனாய் யோவான் தன் முதிர்வயதில் மரித்தான். இரத்த சாட்சியின் கிரீடம் மகிமையுள்ளது. ஆனால் இயேசுவுக்கு அன்பாயிருந்த சீஷனுக்கோ இந்த மகிமையுள்ள கிரீடம் கிடைக்கவில்லை.

பேதுரு இயேசுகிறிஸ்துவிடம் "இவன் காரியம் என்ன" என்று யோவானைப்பற்றிக் கேட்கிறான். மற்றவர்கள் விஷயத்தில் தலையிடுவதற்காக, இயேசுகிறிஸ்து பேதுருவைக் கடிந்துகொள்ளும் வண்ணமாக "நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால் உனக்கென்ன" என்று கூறுவதுபோலுள்ளது. பேதுருவின் மரணம் எப்படியிருக்கும் என்பதை இயேசு அவனுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். பேதுரு தன்னுடைய காரியத்தை மாத்திரம் தெரிந்துகொண்டால் போதுமானது. மற்றவர்களைப்பற்றி அவன் கவலைப்படாமல் இயேசுகிறிஸ்துவைப் பின்பற்ற வேண்டும். ஆகையினால் இயேசு அவனிடம் "நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால், உனக்கென்ன, நீ என்னைப் பின்பற்றி வா" என்று அவனிடத்தில் கூறிவிடுகிறார்.

யோவான் இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றினாலும், அவரை விட்டு பின்வாங்கிப்போனாலும், அது அவனுக்கும் இயேசுகிறிஸ்துவுக்கும் இடையிலுள்ள காரியம். அறியாத காரியங்கள் கர்த்தருக்கே உரியது. அது நமக்குரியதல்ல. தேவன் நமக்கு நியமித்திருக்கும் ஊழியத்தை நாம் செய்யவேண்டும். நம்முடைய எஜமான் நமக்கு வேலையைக் கொடுக்கிறார். நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வேலையை நாம் உண்மையாகவும், முழுமனதோடும் செய்யவேண்டும். கடமை நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நாம் கடமையைச் செய்கிறவர்கள். தேவனே நாம் செய்யும் கடமைகளைத் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக நிறைவேற்றுகிறவர்.

இயேசுகிறிஸ்து நமக்கு ஒரே ஒரு கடமையைத்தான் கொடுத்திருக்கிறார். அவரைப் பின்பற்றி வரவேண்டுமென்பதே அவர் நமக்குக்கொடுத்திருக்கும் பிரதான கடமை. நாம் இயேசுகிறிஸ்துவை முழுமனதோடும், முழுஇருதயத்தோடும், முழுபெலத்தோடும் பின்பற்றும்போது, நாம் எந்தத்திசையிலும் திரும்பிப் பார்க்கமாட்டோம். இயேசுகிறிஸ்துவின் சிந்தை மாத்திரமே நம்முடைய இருதயத்தில் நிரம்பியிருக்கும். வேறு சிந்தைக்கு நம்முடைய இருதயத்தில் இடம் இருக்காது. நமக்குச் சம்பந்தமான காரியத்தையும், நமக்குப் பிரயோஜனமான காரியத்தையும் மாத்திரமே நாம் செய்வோம். நமக்குச் சம்பந்தமில்லாத காரியத்தில், நாம் தேவையில்லாமல் தலையிடமாட்டோம்.

### அந்த சீஷன் மரிப்பதில்லை

**ஆகையால் அந்தச் சீஷன் மரிப்பதில்லையென்கிற பேச்சு சகோதரருக்குள்ளே பரம்பிற்று. ஆனாலும், அவன் மரிப்பதில்லையென்று இயேசு சொல்லாமல், நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால் உனக்கென்னவென்று சொன்னார் (யோவா 21:23).**

சீமோன் பேதுரு இயேசுகிறிஸ்துவிடம், யோவானைப்பற்றி விசாரிக்கும்போது "இவன் காரியம் என்ன" என்று கேட்கிறான். அதற்கு இயேசு "நான் வருமளவும் இவனிருக்க சித்தமானால் உனக்கென்ன" என்று இயேசு கூறுகிறார். இயேசுகிறிஸ்து கூறிய இந்த வாக்கியத்தைச் சீஷர்கள் தவறாகப் புரிந்துகொள்கிறார்கள். இயேசுகிறிஸ்து இப்படிச் சொன்னதினால் அந்தச் சீஷன் மரிப்பதில்லையென்கிற பேச்சு சகோதரருக்குள்ளே பரம்பிற்று.

இயேசுகிறிஸ்துவின் வார்த்தையை நாம் தெளிவாகப் புரிந்துகொண்டு, சரியாக வியாக்கியானம் பண்ணவேண்டும். இல்லையென்றால் நமக்குள் குழப்பம் உண்டாகிவிடும். சபையில் உபதேச பேதம் ஏற்படும். யோவான் இரத்தசாட்சியாக மரிக்கப்போவதில்லை என்று மாத்திரமே இயேசுகிறிஸ்து சொன்னார். அப்படிச் சொன்னதற்கு "யோவான் மரிக்கவே மாட்டான்" என்பது பொருளல்ல. ஆனால் மற்ற சீஷர்களோ "யோவான் மரிப்பதில்லையென்று" இயேசுவின் வார்த்தைக்கு வியாக்கியானம் சொல்லிவிடுகிறார்கள்.

## அதிகாரம் - 21

சீஷர்கள் தங்கள் மனதில் எதை விரும்புகிறார்களோ அதன் பிரகாரமாக இயேசுகிறிஸ்துவின் வார்த்தைக்கு வியாக்கியானம் பண்ணுகிறார்கள். இயேசுகிறிஸ்துவின் வார்த்தையைக் கேட்டு, அதற்கு வியாக்கியானம் சொல்லும்போது, கிறிஸ்துவின் சிந்தையைப் புரிந்துகொள்ளவேண்டும். இயேசுகிறிஸ்துவின் சிந்தையின் பிரகாரமாகவும், சித்தத்தின் பிரகாரமாகவும் அவருடைய வார்த்தைகளை வியாக்கியானம்பண்ணவேண்டும். நம்முடைய மனவிருப்பத்தின் பிரகாரம் இயேசுகிறிஸ்துவின் வார்த்தையை வியாக்கியானம் பண்ணிவிடக்கூடாது.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் ஊழியக்காரர்களுக்கும், ஊழியத்தில் அவர்கள் பயன்படுத்துகிற கருவிகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறோம். இயேசுகிறிஸ்து பயன்படுத்துகிற பாத்திரங்களுக்கும், ஊழியத்திற்கு அவர் கொடுக்கிற உதவிகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறோம். ஆனால் இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தில் இயேசுகிறிஸ்து மாத்திரமே முக்கியமானவர். தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக இயேசுகிறிஸ்து தம்முடைய ஊழியக்காரர்களை மாற்றினாலும், அவருடைய ஊழியம் தடைபடாமல் தொடர்ந்து நடைபெறும். ஊழியம் கர்த்தருடையது.

சபையின் ஊழியத்திற்கு ஊழியக்காரர்களே வழிகாட்டிகளாக இருக்கவேண்டும் என்னும் அவசியமில்லை. பரிசுத்த ஆவியானவரே சபையின் வழிகாட்டியாகயிருக்கிறார். ஆவியானவரே சபையை ஆளுகை செய்கிறவர். அவரே விசுவாசிகளை ஆட்கொள்கிறவர்.

இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களெல்லோரும் ஒவ்வொருவராக இரத்தசாட்சியாக மரித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் யோவான் மாத்திரம் இரத்த சாட்சியாக மரிக்கவில்லை. நீண்ட நாட்களுக்கு உயிரோடிருக்கிறான். இதைப் பார்க்கும்போது "அவன் மரிப்பதில்லை" என்னும் பேச்சு சகோதரருக்குள் அதிகமாய் பரம்பியிருக்கும்.

இவர்களைப்போலவே விசுவாசிகளாகிய நாமும் சில சமயங்களில் இயேசுகிறிஸ்துவின் வசனத்தை தவறுதலாக வியாக்கியானம் பண்ணிவிடுகிறோம். ஏதாவது ஒரு காரியம் இயற்கையாக நடக்கும்போது, அதற்கு ஆவிக்குரிய முக்கியத்துவம் கொடுத்து, நம்முடைய மனவிருப்பத்தின் பிரகாரம், கர்த்தருடைய வார்த்தையை வியாக்கியானம் பண்ணுகிறோம்.

யோவான் அதிகநாள் உயிரோடிருந்தான் என்பதினால், "அவன் மரிக்கமாட்டான்" என்பது பொருளல்ல. ஒரு தரம் பிறப்பதும் அதன் பின்பு மரிப்பதும் எல்லோருக்கும் நியமிக்கப்பட்டிருப்பதுபோலவே யோவானுக்கும் நியமிக்கப்பட்டிருக்கிறது. அவனுடைய வேளை வந்தபோது யோவானும் மரித்துப்போனான். அப்போது தங்களுடைய வியாக்கியனம் தவறு என்பதை ஜனங்கள் புரிந்துகொண்டார்கள்.

இயேசுகிறிஸ்துவின் சத்திய வசனமே மெய்யான உபதேசம். வசனத்தின் அடிப்படையில்தான் உபதேசம் அமைந்திருக்கவேண்டும். பாரம்பரியத்தையும், கட்டுக்கதைகளையும் ஆதாரமாக வைத்து சபையின் உபதேசத்தைக் கட்டியெழுப்பக்கூடாது. ஆதித்திருச்சபையில் "அந்தச் சீஷன் மரிப்பதில்லை என்கிற பேச்சு சகோதரருக்குள்ளே பரம்பிற்று". இதுபோலவே உண்மையில்லாத செய்தி விசுவாசிகள் மத்தியில் பரவுவதற்கு வாய்ப்புள்ளது. ஒரு செய்தி திரளான ஜனங்கள் மத்தியில் பேசப்படுகிறது என்பதற்காக, அது இயேசுகிறிஸ்துவின் வார்த்தையாகிவிடாது. யோவான் மரிப்பதில்லையென்று எல்லோரும் பேசுகிறார்கள். ஆனாலும் இந்தச் செய்தி தவறானது.

சத்திய வசனத்தை சத்திய வசனத்தினால்தான் வியாக்கியானம் பண்ணவேண்டும். சத்திய வசனமே சத்திய வசனத்திற்கு விளக்கம் கொடுக்கும். மனுஷன் தன் சுயமுயற்சியினாலும், சுயஞானத்தினாலும் வேதவசனத்திற்கு வியாக்கியானம் கொடுத்தால், அவனுடைய வியாக்கியானம் மெய்யாயிராது. வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினாலே அருளப்பட்டிருக்கிறது. ஆவியானவர் தாமே தாம் அருளிய வேதவாக்கியங்களுக்கெல்லாம் வியாக்கியானம் கொடுக்கவேண்டும்.

## அதிகாரம் - 21

"அந்த சீஷன் மரிப்பதில்லை" என்கிற பேச்சு சகோதரருக்குள்ளே பரம்பினாலும், அப்போஸ்தலனாகிய யோவான் அந்தத் தவற்றை தன் எழுத்துக்களினால் திருத்துகிறான். இயேசுகிறிஸ்து சொன்ன வார்த்தையை யோவான் மறுபடியுமாக எழுதுகிறான். "அவன் மரிப்பதில்லையென்று இயேசு சொல்லாமல், நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால் உனக்கென்ன" என்று மாத்திரமே இயேசுகிறிஸ்து சொன்னதாக யோவான் தெளிவாக எழுதுகிறான்.

இயேசுகிறிஸ்துவின் வார்த்தை தெளிவாக எழுதப்பட வேண்டும். கிறிஸ்துவின் வசனம் அவருடைய சிந்தையின் பிரகாரமாக வியாக்கியானம் பண்ணப்பட வேண்டும். மனுஷருடைய சுயபுத்தியினால் இயேசுவின் வசனத்தை வியாக்கியானம் பண்ணும்போது, மனுஷருக்குள் கருத்து வேறுபாடுகளும் உபதேச பேதமும் உண்டாகும். இவையெல்லாவற்றையும் நீக்கிப்போட வேண்டுமென்றால், வேதவாக்கியத்தை சரியாக வியாக்கியானம் பண்ணினால் மாத்திரமே முடியும்.

வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கும் பாஷை பரிசுத்தமானது. வேதத்தில் புதைந்திருக்கும் சத்தியத்தை வேதாகம மூலபாஷைகள் தெளிவாக வெளிப்படுத்துகிறது. வேதவசனமே இருபுறமும் கருக்குள்ள பட்டயமாக இருக்கிறது. அழிக்கவும், ஆக்கவும் இந்தப் பட்டயம் பயன்படுகிறது. இந்தப் பட்டயத்தினால் ஆபத்தான எல்லா தவறுகளையும் அழித்துப்போடலாம். இந்தப் பட்டயம் காயங்களைக் கட்டுகிறதற்கும் உதவிபுரிகிறது.

வேதாகமத்தில் ஒரே சத்தியமானது பலவிதமாகச் சொல்லப்பட்டிருக்கும். வெளிப்படுத்தப்பட்டிருக்கும் முறைமைகள் வேறுபட்டிருந்தாலும் சத்தியம் ஒன்றே. சத்தியத்திற்கு ஆதாரமாகயிருக்கும் இயேசுகிறிஸ்துவும் ஒருவரே. நாம் வேதவசனங்களை சரியாக வியாக்கியானம் பண்ணினால், நமக்குள் கருத்து வேறுபாடு இருக்காது. பிரிவினைகள் இருக்காது. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் ஒருவருக்கொருவர் வேறுபாடில்லாமல், ஒருவர்மீது ஒருவர் அன்புகூரமுடியும்.

### முடிவுரை
### யோவா 21 : 24,25

**யோவா 21:24. அந்தச் சீஷனே இவைகளைக்குறித்துச் சாட்சிகொடுத்து இவைகளை எழுதினவன்; அவனுடைய சாட்சி மெய்யென்று அறிந்திருக்கிறோம்.**

**யோவா 21:25. இயேசு செய்த வேறு அநேக காரியங்களுமுண்டு; அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புஸ்தகங்கள் உலகம் கொள்ளாதென்று எண்ணுகிறேன். ஆமென்.**

**அவனுடைய சாட்சி மெய்**

**அந்தச் சீஷனே இவைகளைக் குறித்துச் சாட்சிகொடுத்து இவைகளை எழுதினவன்; அவனுடைய சாட்சி மெய்யென்று அறிந்திருக்கிறோம் (யோவா 21:24) .**

யோவான் இந்த சுவிசேஷத்திற்கு முடிவுரையாக இந்த வசனங்களை எழுதுகிறான். "அந்த சீஷனே இவைகளைக் குறித்து சாட்சிகொடுத்து இவைகளை எழுதினவன்" என்று தன்னைப்பற்றி எழுதுகிறான். பல நூறு வருஷத்திற்கு முன்பாக இந்தச் சுவிசேஷம் எழுதப்பட்டிருந்தாலும், கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு இக்காலத்திலும் இது மிகுந்த ஆசீர்வாதமாயிருக்கிறது. சத்திய வசனத்தை வாசிக்கிற எல்லோருக்குமே வேதவசனங்கள் பிரயோஜனமாயிருக்கிறது.

இயேசுகிறிஸ்துவின் வரலாற்றை எழுதியவர்கள், அதில் தங்களுடைய பெயரை எழுதுவதற்கு வெட்கப்படவில்லை. யோவான் இந்தச் சுவிசேஷத்தை தானே எழுதியதாக இதில் குறிப்பிடுகிறான். இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றையும், அவருடைய மரணத்தையும் மனுஷர்கள் எழுதினாலும், இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் இந்த வார்த்தைகளெல்லாம் முத்திரையிடப் பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றை எழுதியவர்கள், தங்களுக்குத் தெரிந்த சம்பவங்களை, பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலினால் எழுதியிருக்கிறார்கள்.

## அதிகாரம் - 21

இந்தச் சுவிசேஷத்தை எழுதின யோவான், இயேசுகிறிஸ்துவின் சீஷரில் ஒருவன். இயேசுகிறிஸ்துவுக்கு மிகவும் அன்பாயிருந்தவன். இராப்போஜனத்தின்போது அவருடைய மார்பில் சாய்ந்திருந்தவன். இயேசுகிறிஸ்துவின் உபதேசங்களை இவன் தன் சொந்த செவிகளினால் கேட்டவன். அவர் செய்த அற்புதங்களை தன் சொந்தக் கண்களால் கண்டவன். உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவைத் தன் சொந்தக் கண்களால் கண்டு, அவருடைய உயிர்த்தெழுதலுக்குச் சாட்சியாயிருக்கிறவன். இவனுடைய சாட்சி மெய்யாயிருக்கிறது. தனக்கு நிச்சயமாய்த் தெரிந்த சம்பவங்களை மாத்திரமே யோவான் இந்த சுவிசேஷத்தில் எழுதியிருக்கிறான்.

இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றை எழுதியிருக்கிறவர்கள், தாங்கள் கண்டதைச் சாட்சியாக எழுதியிருக்கிறார்கள். தாங்கள் எதற்கு சாட்சியாகயிருக்கிறார்களோ அதையே சாட்சியாக எழுதியிருக்கிறார்கள். சுவிசேஷம் எழுதப்படுவதற்கு முன்பாக, சுவிசேஷத்திலுள்ள வார்த்தைகளெல்லாம் வாய்மொழியாக அறிவிக்கப்பட்டது. அதன்பின்பே சுவிசேஷம் எழுதப்படலாயிற்று. சீஷர்கள் எதை எழுதினார்களோ, அவை சத்தியமானது என்பதற்கு அவர்களே சாட்சிகளாகவும் இருக்கிறார்கள். அவர்கள் இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைத் தங்களுடைய ஜீவியத்தில் ஏற்றுக்கொண்டு அதன்பிரகாரமாக ஜீவித்தார்கள்.

இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கை வரலாறு எழுத்து வடிவில் எழுதப்பட்டிருப்பது தேவனுடைய கிருபை. இதனால் கிறிஸ்துவின் சுவிசேஷம் எல்லா தேசங்களுக்கும் பரவுகிறது. பல நூற்றாண்டுகளாக சுவிசேஷம் நிலைத்து நிற்கிறது.

இந்தச் சுவிசேஷத்தை தானே எழுதியதாக குறிப்பிட்டுவிட்டு, தன்னுடைய சாட்சி மெய்யென்பதையும் யோவான் அறிவிக்கிறான். யோவான் தான் கண்டதற்குச் சாட்சியாக இருக்கிறான். அவனுடைய சாட்சியில் தவறு எதுவுமில்லை. தான் கண்டதை உறுதிபண்ணும்விதமாக, அந்தச் சாட்சியை எழுத்துவடிவத்தில் எழுதியிருக்கிறான். இயேசுகிறிஸ்துவின் ஜீவியத்திற்கும், அவருடைய ஊழியத்திற்கும், அவர் உயிர்த்தெழுந்ததற்கும் யோவான் எழுதின சுவிசேஷம் சாட்சியாக இருக்கிறது. உலகம் முழுவதுமுள்ள விசுவாசிகள் யோவான் எழுதின சுவிசேஷத்தை மெய்யென்று அங்கீகரிக்கிறார்கள்.

சுவிசேஷத்தின் சத்தியம் மெய்யென்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. சத்தியத்தை எப்படியெல்லாம் நிரூபிக்கவேண்டுமென்று மனுஷர் எதிர்பார்க்கிறார்களோ, அப்படியெல்லாம் சுவிசேஷம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. வரலாற்றுச் சான்றுகள் மூலமாகவும், புதைபொருள் ஆய்வுகள் மூலமாகவும், சுவிசேஷம் நிரூபிக்கப்பட்டிருப்பதினால் "யோவானுடைய சாட்சி மெய்யென்று இந்த உலகம் அறிந்திருக்கிறது".

சுவிசேஷத்தில் எழுதப்பட்டிருக்கும் அற்புதங்களெல்லாவற்றையும் இயேசுகிறிஸ்து தாமே, தமது அற்புத வல்லமையினால் செய்திருக்கிறார். இயேசுகிறிஸ்து தேவனால் அனுப்பப்பட்டவரென்பதையும், அவர் தேவனென்பதையும் அவர் செய்த அற்புதங்கள் நிரூபிக்கிறது. திருச்சபையில் இயேசுகிறிஸ்துவின் சத்தியங்களை உபதேசம்பண்ணப்படுகிறது. இந்தச் சத்தியங்களெல்லாமே நிரூபிக்கப்பட்டுள்ள உண்மைகள். பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்டிருக்கும் சத்தியம் மெய்யானது. இதை நிரூபிக்க மனுஷருடைய சான்றிதழ் தேவையில்லை. பரிசுத்த ஆவியானவரே தேவனுடைய சத்தியத்தை நிரூபிக்கிறவர். அவரே நம்முடைய இருதயத்தில் பேசுகிறவர்.

யோவான் இந்தச் சுவிசேஷத்தை எழுதும்போது, தான் எழுதுவது மெய்யென்பதை அறிந்திருக்கிறான். அப்போஸ்தலர்கள் மெய்யான சத்தியத்தையே ஜனங்களுக்கு உபதேசம்பண்ணினார்கள். இயேசுகிறிஸ்துவின் உபதேசத்திற்காக சீஷர்கள் தங்கள் ஜீவனையும் ஒப்புக்கொடுக்கத் துணிந்தார்கள். இந்த உலகப் பிரகாரமான ஆசீர்வாதங்களையெல்லாம் அற்பமாக எண்ணி, பரலோகத்தின் ஆசீர்வாதங்களையே மேன்மையாக எண்ணினார்கள்.

**வேறு அநேக காரியங்களுமுண்டு**

**இயேசு செய்த வேறு அநேக காரியங்களுமுண்டு; அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புஸ்தகங்கள் உலகம் கொள்ளாதென்று எண்ணுகிறேன். ஆமென் (யோவா 21:25).**

## அதிகாரம் - 21

அப்போஸ்தலனாகிய யோவான் இந்தச் சுவிசேஷத்தின் முடிவுரையில், கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வேறு அநேக காரியங்களையும் செய்திருப்பதாக எழுதுகிறான். அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால் ஏராளமான புஸ்தகங்கள் எழுதவேண்டுமென்றும், அந்தப் புஸ்தகங்களையெல்லாம் உலகம் கொள்ளாதென்று தான் எண்ணுவதாகவும் குறிப்பிடுகிறான். சுவிசேஷப் புஸ்தங்கள் விரிவாக எழுதப்படாமல் ஏன் சுருக்கமாக எழுதப்பட்டிருக்கிறது என்பதற்கு, யோவான் இங்கு எழுதியிருக்கும் காரணம் ஏற்ற பதிலாக இருக்கிறது.

இயேசுகிறிஸ்து அநேக அற்புதங்களைச் செய்திருக்கிறார். அவர் செய்த அற்புதங்களில் ஒரு சில மாத்திரமே சுவிசேஷப் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. மற்றவை சுவிசேஷங்களில் எழுதப்படவில்லை. இவை முக்கியமானதல்ல என்பது காரணமல்ல. இதற்காக இவை சுவிசேஷத்தில் எழுதப்படாமல் இல்லை. இயேசுகிறிஸ்து செய்த எல்லா அற்புங்களுமே முக்கியமானதுதான். சில சமயங்களில் இயேசுகிறிஸ்து ஒரே மாதிரியான அற்புதத்தைத் திரும்பத் திரும்ப செய்திருப்பார். இவை அனைத்தையும் அடிக்கடி எழுதுவதற்குப் பதிலாக, ஒரே ஒரு தரம் மட்டும் எழுதினால் போதுமானது என்று ஒரு அற்புதம் மாத்திரமே எழுதப்பட்டிருக்கும் மற்ற அற்புதங்கள் எழுதப்பட்டிருக்காது.

இயேசுகிறிஸ்து ஒரே மாதிரியான அற்புதங்களைத் திரும்பத் திரும்ப செய்திருக்கும்போது, அந்த அற்புதங்களை வெவ்வேறு இடங்களிலுள்ள வெவ்வேறு விதமான ஜனங்கள் கண்டு சாட்சிகளாகயிருப்பார்கள். அவர்கள் எல்லோருக்குமே இயேசுகிறிஸ்து செய்த அற்புதங்கள் மிகுந்த பிரயோஜனமுள்ளதாக இருக்கும். இயேசுகிறிஸ்துவின் அற்புதங்களெல்லாம் அவர்கள் மனதில் உறுதிபண்ணப்படும். சுவிசேஷத்தில் புதிய அற்புதங்கள் எழுதப்படும்போது, அது இதற்கு முன்பு இயேசுகிறிஸ்து செய்த மற்ற அற்புதங்களை மேன்மைப்படுத்தும். இயேசுகிறிஸ்து செய்த அநேக அற்புதங்களை வாசிக்கும்போது, அவருடைய மகத்துவம் நமக்கு அதிகமதிகமாய் வெளிப்படுத்தப்படும்.

நாம் இயேசுகிறிஸ்துவைப்பற்றிப் பேசும்போது, அவருடைய குணாதிசயங்கள் ஒவ்வொன்றையும் விளக்கமாகச் சொல்லலாம். சுவிசேஷங்களில் எழுதப்பட்டிருப்பதைவிட இயேசுகிறிஸ்து மெய்யாகவே அநேக அற்புங்களைச் செய்திருக்கிறார். இவையெல்லாம் சுவிசேஷங்களில் எழுதப்படவில்லை. "வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்" என்று இயேசுகிறிஸ்து சொன்னதாக அப்போஸ்தலர் பவுல் எழுதியிருக்கிறார் (அப் 20:35). ஆனால் இயேசுகிறிஸ்து இந்த வாக்கியத்தைச் சொன்னதாக எந்த சுவிசேஷப் புஸ்தகத்திலும் எழுதப்படவில்லை. ஆனாலும் இயேசு இந்த வாக்கியத்தைச் சொன்னதாகவே பவுல் எழுதியிருக்கிறார். இதுபோன்ற சம்பவங்கள் ஏராளம் உண்டு.

இயேசுகிறிஸ்து செய்த எல்லா காரியங்களையும் எழுதவேண்டும் என்னும் அவசியமில்லை. சுவிசேஷத்தில் எழுதப்பட்டிருப்பது மாத்திரமே போதுமானது. இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை சுவிசேஷத்தில் எழுதப்பட்டுள்ள வசனங்களே பரிபூரணமாக விவரிக்கிறது. ஏற்கெனவே எழுதப்பட்டிருப்பதை நாம் வாசித்து, அவற்றை விசுவாசிக்கவில்லையென்றால், இதற்கு மேலும் எழுதுவதினால் ஒரு பிரயோஜனமுமில்லை. கொஞ்சத்தில் உண்மையில்லாதவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்க மாட்டான். கொஞ்சத்தில் விசுவாசமில்லாதவன் அநேகத்திலும் விசுவாசமில்லலாதவனாகவே இருப்பான். சுவிசேஷத்தில் எழுதப்பட்டிருப்பதை வாசித்து நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி பெறவேண்டும்.

இயேசுகிறிஸ்து செய்த எல்லா காரியங்களையும் எழுதவேண்டுமென்பது நடைமுறையில் சாத்தியப்படாது. இவையெல்லாவற்றையும் எழுதினால் ஏராளமான புஸ்தகங்களை எழுதவேண்டும். பெரிய வரலாற்றுப் புஸ்தகம் போல விரிவாக எழுதவேண்டும். இதற்கு ஒரு முடிவே இருக்காது.

இயேசுகிறிஸ்து செய்த எல்லா காரியங்களையும் எழுதவேண்டுமானால், எழுதப்படும் புஸ்தகங்கள் உலகம் கொள்ளாது என்பது யோவானுடைய கருத்து. "என் உபதேசம் உங்களுக்குள்ளே இடம் பெறவில்லை" (யோவா 8:37) என்று இயேசுகிறிஸ்து குறிப்பிடுகிறார். இயேசு கிறிஸ்துவின் உபதேசத்தைப்போல வேறு அநேக காரியங்கள் ஜனங்களுக்குள்ளே இடம்பெற்றிருக்கிறது. விசுவாசிகள் ஒவ்வொரு நாளும் இருபத்துநான்கு மணி நேரமும் வேதத்தை வாசித்துக்கொண்டிருப்பது என்பது நடைமுறைக்கு ஒத்துவராது. அவர்களுக்கு வேறு அன்றாட அலுவல்கள் இருக்கும்.

## அதிகாரம் - 21

இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றில் நாம் எதையெல்லாம் அறிந்து கொள்ளவேண்டுமோ அவையெல்லாவற்றையும் சுவிசேஷத்தில் எழுதுமாறு பரிசுத்த ஆவியானவர் வழிநடத்தியிருக்கிறார். ஜனங்கள் அவற்றை வாசிக்கிறார்கள். வாசித்ததில் சிலவற்றை மறந்துவிடுகிறார்கள். சிலவற்றை ஏற்றுக்கொள்கிறார்கள். சிலவற்றை ஏற்றுக்கொள்ளாமல் சந்தேகப்படுகிறார்கள். சில சத்தியங்களை விவாதம்பண்ணுகிறார்கள். நான்கு சுவிசேஷங்களை வாசிக்கும் போது, அதன் தொடர்ச்சியாக இத்தனை காரியங்கள் நடைபெறுகிறது.

இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றைப்பற்றி ஏராளமான புஸ்தகங்கள் எழுதப்படுமானால், அவையெல்லாவற்றையும் வாசித்துப் புரிந்துகொள்வதற்கு ஜனங்களுக்கு நேரம் இருக்காது. நாம் வாசிக்கும் வேதவசனத்தை, ஒரு கதைப் புஸ்தகத்தை வாசிப்பதுபோல வாசிக்கக்கூடாது. பயபக்தியோடு வாசித்து அதைத் தியானம்பண்ணவேண்டும். வேதவசனத்தைத் தியானம்பண்ணுவதற்கு நம்முடைய உள்ளத்தில் இடம் இருக்க வேண்டும். வியாக்கியானங்களை தியானம் பண்ணுவதற்கும் நம்முடைய மனதில் இடம் இருக்க வேண்டும். இவையெல்லாவற்றிற்கும் இடம் வேண்டும் என்பதைத் தெரிந்துதான், பரிசுத்தஆவியானவர் சுவிசேஷங்களைச் சுருக்கமாக எழுதுமாறு ஏவியிருக்கிறார்.

எழுதப்பட்டிருக்கும் சுவிசேஷப் புஸ்தகங்களுக்காக நாம் கர்த்தருக்கு நன்றி சொல்லவேண்டும். சுவிசேஷங்கள் விரிவாக எழுதப்படவில்லையே என்று மனக்குறையோடு இருக்கக்கூடாது. நம்மால் எந்த அளவுக்குப் புரிந்துகொள்ள முடியும் என்று பரிசுத்த ஆவியானவருக்குத் தெரியும். அந்த அளவுக்கு மாத்திரமே தேவன் தம்முடைய ரகசியங்களை நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்.

யோவான் இந்தச் சுவிசேஷத்தை எழுதும்போது, முடிவாக "ஆமென்" என்று சொல்லி முடிக்கிறார். இந்தச் சுவிசேஷத்தை இந்த வார்த்தையோடு முத்திரையிடுகிறார். யோவான் "ஆமென்" என்று சொல்லும்போது, நாமும் இந்தச் சுவிசேஷம் மெய்யானது என்று உள்ளத்தின் ஆழத்தில் நினைத்து, "ஆமென்" என்று சொல்லுவோமாக. நம்முடைய விசுவாசத்திற்கும், சத்தியத்திற்கும் இந்தச் சுவிசேஷம் "ஆமென்" என்று இருக்கிறது. நம்முடைய இரட்சிப்புக்கு உதவிபுரியும் விதத்திலும், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளும் விதத்திலும் சுவிசேஷத்தை வாசித்து, அதை நமக்குப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளவேண்டும்.